ஸ்ரீ

திருக்குறள்

அறத்துப்பால் மூலமும்

பரிமேலழகருரையும்

கும்பகோணம் கவர்ன்மெண்ட்காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்து

காலஞ்சென்ற

வை. மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள்

இயற்றிய

குறிப்புரையுடன்

மலைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரால்

பார்வையிடப்பெற்று

மலைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஆர். ஜி. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1937

விலை. 1 - 8 - 0.

பொருளடக்கம்.

1. முகவுரை III

2. திருவள்ளுவர் வரலாறு V

3. திருக்குறள் வரலாறு XI

4. பரிமேலழகர் வரலாறு XVIII

5. அறத்துப்பாலின் இயல்அதிகாரம் என்பவற்றின் அட்டவணை XXII

6. திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும் க

7. செய்யுண் முதற்குறிப்பகராதி உஎஎ

8. அறத்துப்பால்மூலம் பரிமேலழகருரை என்றவற்றின் அரும்பதம் முதலியவற்றின் அகராதி உஅ0

9. பிழைத்திருத்தம் உகஙு

வை. மு. சடகோபராமாநுஜாசார்யர்.

முகவுரை.

தமிழ்மொழி சிறப்புற்றதாக மதிக்கப்படுவதற்குரிய பல காரணங்களுள் திருக்குறளைப்பெற்றிருப்பதென்பது முதன்மையான காரண மெனின், அது மிகையாகாது. இதன் சிறப்பினைக் கருதியே, இது, பலமொழிகளிலும் உருப் பெயர்க்கப்பட்டுப் பலராலும் அவாவோடு கற்கப்பட்டுவருகின்றது.

ஆயினும், மூலத்தைப் படித்த மாத்திரத்திலேயே எங்கும் இந்நூல் எளிதிற் பொருள் விளங்குவதன்று. ஆகவே, இதற்கு உரை இன்றியமை யாத தாகும். இந்நூற்குப் பழமையாகவே பல உரைகள் இருக்கின்றன என்று ஏற்படினும், பரிமேலழகருரையும் மணக்குடியருரையுமே அச்சாகி வெளிவந் திருக்கின்றன. மற்றைய உரைகள் இப்போது கிடைப்பதும் அரியன.

வெளிவந்துள்ள இருவுரைகளுள்ளும் பரிமேலழகருரையே யாவராலும் பாராட்டப்படுகின்றது. அவ்வுரை, நூலாசிரியருடைய கருத்துக்கு ஏற்பப் பதப்பொருளே விளக்குவதோடு பல இடங்கட்கும் விசேடமான பதசாரம் இன்றியமையா இலக்கணக்குறிப்பு அணி வேறுவகையானபொருள் பிற வாறுரைகூறுவதில்நேர்படும்மாறுபாடு முதலிய பலவிஷயங்களையும் கொண் டது: அவ்வுரையைப் படித்தறிவோர் பலவிஷயங்களையு மூணர்ந்த புலவ ராவ ரென்பது, திண்ணம்.

ஆயினும், படிக்கின்ற நிலையிலிருப்பவர்க்கு அவ்வுரைப்பொருள் முழுவ தையும் உள்ளபடியறிதல், முடியாது.அதற்குத்தக்க ஒருகுறிப்புரை யிருப்பின் நலம். பிற்காலத்தில் உரையெழுதிப் பொருளைத் தெரிவிப்பதில் ஒத்தாரு மிக்காரும் இல்லாது தலைசிறந்து விளங்கியவரும் அடியேனுக்குத் தமையன் முறையாகுபவரும் என்ஆசிரியருமான ஸ்ரீ - உ - வே. வை - மு - சடகோப ராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் திருக்குறளில் அவ்வப்போது யூனிவர்ஸிடி யார் பரீட்சைக்குப்பாடமாகவைத்த பகுதிகளைப் பரிமேலழகருரையோடும் அதற்குத் தாமாக எழுதிய குறிப்புரையோடும் வெளியிட்டிருந்ததுண்டு: அப்பகுதிகள் அறத்துப்பால் முழுதுக்கும், பொருட்பாலில் இறுதியில் இரண்டொருஅதிகாரங்கட்குத் தவிர மற்றைப் பகுதிகட்கும் உள்ளன. அந்தக்குறிப்புரையை அப்பெரியார் எழுதி வெளியிடுதற்குத் துணையாயிருந் தவர், அடியேனுக்குத் தமிழிலக்கணவாசிரியரான் ஸ்ரீ - உ - வே. சே - கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் ஆவர். சில சமயத்து நானும் உடனிருந்த துண்டு.

அப்பெரியாரின் குறிப்புரையோடு பரிமேலழக ருரையைப் பதிப்பித் தால், தமிழ்கற்போர்க்கு மிகவும் பயன்படுமென்று, வித்துவான் - வேங்கட ராயுலுரெட்டியாரும் மற்றும் சிலஅறிஞர்களும் வற்புறுத்திக் கூறிய தண்டு. அவர்கள் கூறியதைக் கடைப்பிடித்து, திருக்குறளைப் பரிமேலழக ருரையோடும், (கிடைக்கும் பகுதிவரைக்கும்) அப்பெரியாரின் குறிப்புரை யோடும் (கிடையாதபகுதிக்கு எனது சிற்றறிவிற்குஏற்ப ஒருகுறிப்புரை யெழுதி அதனோடும்) நூல்முழுவதையும் பூர்த்திசெய்து வெளியிடும் நோக்கத் தோடு முதன்முதலில் இந்த அறத்துப்பாலை வெளியிடுகின்றேன்.

இந்தப்பதிப்பை நடத்தும்போது, தமிழ்லெக்ஷிகன் தலைமைப் பண்டித ராகிய ஸ்ரீ. உ. வே. மு-இராகவையங்கார்ஸ்வாமிகள் பார்வையிட்டு வெளி யிட்டுள்ள திருக்குறட் பிரதியையும் வேறு சில பிரதிகளையும் வைத்து ஒப்பு நோக்கிப் பாடபேதங்களைக்குறித்துள்ளேன்.குறிப்புரையில் இலக்கணப்பகுதி மிகுதியாகஇருந்ததனால்,சிலவற்றைஅடித்துவிட்டும்,விளங்காதிருக்குமென்று தோன்றிய சில விடங்களை விளக்கியும் இங்ஙனம் சில மாறுதல்கள் செய் துள்ளேன். அங்ஙனம் யான் கைவைத்ததனால் ஒருகால் எதேனும் இப்பதிப் பிற் பிழைவந்திருக்குமோ என்று அஞ்சுகின்றேன். என்னுடைய கருத்துக் குறைவினால் பிழை நேர்ந்திருப்பின், அறிஞர் தாம் பொறுத்துக்கொள்வ தோடு அப்பிழையை அடியேனுக்கும் தெரிவித்தால், அவர்கள்திறத்து நன்றி யறிதலோடு அப்பிழைகளைத் திருத்திக்கொள்வேன்.

எனது இம்முயற்சியைக் கற்கும் நிலையிலுள்ளோர் ஆதரிப்பின், அஃது மேன்மேலும் யான் முயற்சிசெய்வதற்கு ஊன்றுகோலாகு மென்பதை இங் குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனதுகாலத்தையெல்லாம் வீணுக்காமல் கல்வித்துறையிற் செலுத்தி, எனக்குத் தோன்றுத்துணையாய்நின்று திருவருள்புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

ஈசுவரஹ
ஜப்பசிமீ 15உ

இங்ஙனம்
வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யன்.

திருவள்ளுவர் வரலாறு.

திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் அகத்தியமகாமுனிவரது மரபில் தோன்றியவரென்றும், இவரது தாய் ஆதிபிற்கருவூரிற்புலையனுல்வளர்க்கப் பட்டவ ளென்றும், ஒளவை உப்பை உருவை வள்ளி என்னும் நால்வர் மகளிரும், அதிகமான் கபிலர் என்னும் இருவர் ஆடவரும் இவர்க்கு முன்பிறந்த சகோதரிகளும் சகோதரரு மாவ ரென்றும், இவர்களைத் தாயாகிய ஆதி, தந்தையாகிய திருவாரூர்ப் பகவனது கட்டளைப்படி பெற்ற அவ்விடத்திலேயே விட்டுச்சென்றன ளென்றும், ஒளவை சரசுவதியமிசமானவ ளென்றும், இவராற் சங்கப்புலவர்கள் கருவபங்கப்பட்டன ரென்றும், இவர் ஏலேலசிங்கனைப் பலவாறு சோதித்து அவனது பக்குவநிலையைக் கண்டு அவனை முதற்சீடனுகக் கொண்டன ரென்றும், இடைக்காடர் விஷ்ணுவின் அமிச மென்றும், வள்ளுவர்க்கு மனைவியாகிய வாசுகி அவர்சொற்படி கற்புமகிமையால் மணலை அன்னமாக்கிப் படைத்தன ளென்றும், ஏலேலசிங்கன்மகனுகிய அழகானந்தன் சிவனது அமிசமென்றும், கரைதட்டிச்சாய்ந்துபோன ஏலேலசிங்கனது வர்த்தகக்கப்பல் திருவள்ளுவர்கையால் தொட்டமாத்திரத்திற் சரிப்பட்டு நின்ற தென்றும், இவர் பொதியமலைக்குச் சென்று அகத்தியரைக் கண்டு அவர்க்கு இந்நூலைக் காட்டி அங்கீகரிப்பித்தன ரென்றும், இங்ஙனம் பலவாகச் சரித்திரத்தை விரித்துக் கூறுவர். இவற்றுள், சில, கபிலரகவலென வழங்குவதிலுங் காணப்படுகின்றன. ஆதிபகவராலே விடப்பட்ட ஏழாவது குழந்தையாகிய இவரை ஒருவேளாளன் கொண்டுபோய்த் தன் மனைவிகையிற் கொடுத்து வளர்த்து வாசுகியென்பவளை மணஞ்செய்வித்துப் பரலோகஞ்சென்றன ரென்றும், அக்குமாரர் மயிலாப்பூரில் "உள்ளூரொடுவாழாமல் ஊர்ப்புறஞ்சேரிசார்ந்து, தெள்ளுசொற் புலமைவாய்ந்து சேலேநெய்திருந்தவாற்றல், வள்ளுவனென்னூர் பல்லோர் வளமையோனென லோராரே" என்றும் கூறுப.

திருக்குறள் செய்தருளிய தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் வரலாறு இங்ஙனெல்லாம் கூறப்படினும் இவற்றில் எம்மாத்திரம் உண்மையென்பது ஆராய்ச்சி செய்யவேண்டுவதாகவே யுள்ளது.

கபிலரகவலில் ஆதியென்பவட்கும் பகவனென்பவனுக்கும் புத்திரராகப் பிறந்தவர் திருவள்ளுவ ரென்று இவர் பிறப்புக் கூறப்படாநிற்க, யாளிதத்த னென்பானுக்கும் பார்ப்பினியென அவனுற்கருதப்பட்ட ஒரு புலைச்சிக்கும் பிறந்தவர் இவ ரென்று ஞானமிருதம் என்ற தமிழ்நூல் கூறுகின்றது. இங்ஙனம் ஒன்றோடொன்று மாறுபட எழுதி வைக்கப்பட்டிருத்தலால், இன்னதுதான் வாய்மையானது என்று துணிந்துசொல்லத்தக்க பேராதாரம் எதுவும் இன்று.

இங்ஙன் இவருடைய பிறப்பைப்பற்றியானபோது இவருடையகுலந் தான் இன்னதெனத் துணிய வியலுமோ? இனி, ஒருசாரார் வள்ளுவ ரென்று இவர்க்குள்ளபெயரைக் கொண்டு இப்புலவரை வள்ளுவக்குலத்

தின ரென்பர்: அன்னூர் "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமக் நான்கின், திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும், வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற், கொள்ளா ரறிவுடையார்" என்ற திருவள்ளுவமாலையையும், "மெய்த்திரு வள்ளுவனுர் வென்றுயர்ந்தார் கல்வி நலந், துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா - உய்த்தறியின், மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்ரு ரனைத்திலர் பாடு" என்ற சோமேசர்முதுமொழிவெண்பாவையும் தம்கூற்றுக்கு மேற்கோளாகக் காட்டுவர்: அவருரையைமறுப்பார் திருவள்ளுவமாலையிற் கூறிய "வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்கொள்ளாரீ அறிவுடையாரீ" என்பதே அன்னூரை வள்ளுவக்குலத்தினரென்பது கொள்ளத்தக்கதன்று என மறுக்கின்ற தென்றும், சோமேசர்முதுமொழிவெண்பாவினுரிரியர் தாம் கர்ணபரம்பரையிற் கேட்டதுமாத்திரத்தைக்கொண்டு சரித்திரவுண்மை யை யாராயாது குறளுக்குக் காட்டாக ஒருசரிதையைக் கூறுவதென்று அம் மாத்திரமே கருதிக் கூறிரு ரென்றும், கல்விநலந்துய்த்த என்று அடை மொழிகொடுத்த சங்கத்தாரைக் கல்லாதாரென்று மாறுபடுபொருண்மொழி யென்னும் வழுப்படக் கூறியதும் அவர் ஆராய்ந்துகூருமையைப் புலப்படுத் தும்என்றும் கூறுவர். (இது வழுவன்று என்று சாதிக்கவேண்டுவார் பெரும் புலவரான திருவள்ளுவரோடு ஒப்பிட்டுப்பார்க்கின் சங்கத்தார் கல்லாதவராவ ரென்ற கருத்தாற் கூறியதென்ப.) இனி, மற்றொருசாரார் யானைமேல் மூவசறைந்துஅரசாணைதெரிவிக்கும்வள்ளுவக்குலத்தாரால் வளர்க்கப்பெற்றுச் சிறப்படைத்தவ ராதலால், இவர்க்கு வள்ளுவரென்ற அப்பெயர் நிலைத்த தென்பர். வேறுசிலர் வண்மைக்குணமுடையவராதல்பற்றிவந்த பெயரென் பர்: சில உரையாசிரியர்களோ திருவள்ளுவரென்ற பெயரைக் காரணப்பெய ராகக் கொள்ளாது இயற்பெயரென்று கூறியுள்ளனர். இங்ஙன் கர்ணபரம் பரையில் தாம் கேள்வியுற்ற வகையாகவும் அவரவர்கட்குத் தோன்றியபடி கற்பனையாகவும் வழங்குவதுகொண்டு, இந்தத் திருவள்ளுவருடைய பிறப் பைப்போலவே இவருடைய குலத்தைப்பற்றியும் யாதொன்றும் துணிந்து எழுத இயலாது.

இனி இவர் பிறந்துவளர்ந்த ஊரைப்பற்றிச் சற்று ஆராய்வோம்: "உப்பக்கநோக்கி * உபகேசிதோண்மணந்தா, னுத்தரமாமதுரைக்கச்சென்ப - இப்பக்கம், மாதானுபங்கி மறுவில்புலச்செங்காப், போதார்புனற்கூடற்கச்சு"

---

* உபகேசிஎன்பது - நப்பின்னையைக் காட்டுமென்று நேமிநாதவுரை யால் விளங்குவதால், இதற்கு வேறு வகையாகப் பொருள்கூறுதல் சிறவாது: கண்ணபிரானே உபகேசி தோண்மணந்தானென்று கூறியதற்கு எற்பத் திரு வள்ளுவரை மாதானுபங்கிமருவி என்று கூறியிருக்கின்ற தென்றும், இத் தொடர்-மாதானுபங்கி யென்பாரே மனைவியாகப்பொருந்தியவனென்று திரு வள்ளுவனுர்க்கு அடைமொழியாக வந்துள்ள தென்றும், ஆகவே இவருடைய மனைவியார்பெயர் மாதானுபங்கி என்பதாகவேணும் என்றும், 'மாதானுபங்கி மறுவில்' என்ற பாடம் தவறுனதாக இருக்குமென்றும் ஒருசாரார் ஊகித்துக் கூறுகின்றனர்.

(இதன்பொருள்:—வடதிசையைக்குறித்து நப்பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானே வடமதுரைக்கு அச்சுஎன்பர்: இப்பக்கத்தை [தென் திசையை] நோக்கி மாதானுபங்கியும் குற்றமற்ற செங்நாப்போதாருமாகிய திருவள்ளுவர் தென்மதுரைக்கு அச்சுஆவர் என்பது. அச்சு-ஆதாரம்.) என்று கூறியிருப்பதை நோக்குமிடத்து இவர் பிறந்துவாழ்ந்த இடம் தென்மதுரை யென்று துணியலாகும். ஆனாலும், ஒருசாரார், இப்புலவர் பிறந்த ஊர் மயிலேயென்று சாதிக்கின்றனர்: ஆயினும், அதனை நாட்டுதற்குக் காட்ட லாகும் பழஞ்சான்று யாதொன்றும் தக்கதாகக் காணப்படவில்லை.

இவரதுதொழில் நெய்தற்றொழி லென்பர். தமிழ்நாவலர்சரிதையில், 'திருவாலங்காட்டுத் திருநடனங் கண்டீரோ? என்று முனிவர் கேட்க, வள்ளுவர்பாடியது' என்று "பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத், தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி, விழைநக்கி நூல்நெருடு மேழை யறிவேனே, தழைநக்குஞ் பிஞ்ஞகன்றன் கூத்து" என்ற வெண்பா எழுதப்பட்டுள்ளது. இச்செய்யுளில் 'நாவிவிழைநக்கி நூனெருடுமேழை' என்று தம்மையே கூறிய தாக வருதலாலும், கர்ணபரம்பரைச் செய்தியிலும் இவர் ஆடைநெய்தற் றொழிலைக்கொண்டவ ரென்று கூறப்படுதலாலும், நெய்தற்றொழிலே இவர் கொண்டிருந்த தொழிலாயிருக்கலாம். இப்பாட்டின் வரலாறு வேறுவகை யாக இக்காலத்து வழங்கப்படும்.

இவரது மதம் இன்ன தென்று எவ்வித்தத்திலும் நன்கு விளங்கவில்லை. இவர் இந்நூலின் முதலிற் கூறிய கடவுள்வாழ்த்தும், பல சமயங்கட்கும் பொதுவாகவே யுள்ளது; மற்ற விஷயங்களும் பெரும்பாலும் இப்படியே: இவரைச் சைவரென்றுவது வைஷ்ணவரென்றுவது ஒருசார்பாகக் கூறி யாவரும் ஒத்துக்கொள்ளும்படி நிலைநிறுத்துதற்குத் தக்கஆதாரமொன்று மில்லை. இவர்க்கு நாயனா ரென்று வழங்குகிற பெயர்மாத்திரத்தைக் கொண்டு இவரைச் சைவ ரென்று சாதிக்க லாகாது; நாயனா ரென்னும் அச் சொல் சைவசமயத்தில்மாத்திரமேயன்றி வைஷ்ணவசமயத்திலும் ஜைநசமய த்திலும் கடவுளுக்கும் அடியார்கட்கும் பெயராக வழங்குதல் உணர்க: திருக் கோவையாருரையிற் பேராசிரியர் கடவுளை 'நாயனார்' என்றதும், சீவகசிந்தா மணியுரையில் நச்சினார்க்கினியர் தந்தையை 'நாயனார்' என்றதும் பிறவுங் காண்க. இது நிற்க: இவரது மதம் ஜைநமா யிருக்கலா மென்று சிலர் ஊகிக் கிறார்கள்; அதற்குக்காரணம்-திருக்குறளில், கடவுள்வாழ்த்தில் 'பகவன், அறி வன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், அறவாழியந்தணன், எண்குணத்தான்' என அருகக்கடவுளுக் குப்பெயராக வழங்குஞ் சொற்களை உபயோகித்திருத்தலும், அருகசரணம் சித்தசரணம் * சாதுசரணம் தர்மசரணம் என்ற ஜைநசமயக்கடவுள்வணக்கம்

* வான்சிறப்புச் சித்தசரணத்துக்கு அறிகுறியாதல், உய்த்துணரத்தக் கது; எல்லாவுலகத்துக்கும் மேலிடத்திலுள்ளவன் சித்தனென்பது ஜைநசம் பிரதாயம்.

நான்கிற்கும் ஈடாகக் கடவுள்வாழ்த்து வான்சிறப்பு நீத்தார்பெருமை அறன்வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களைப் பாயிரமாக நூலின் முதலில் முறையே கூறியிருத்தலும், ஜைநர்க்குச் சிறப்பாகவுள்ள புலால்மறுத்தல் கொல்லாமை என்ற ஒழுக்கங்களை மிகவற்புறுத்திக் கூறுதலும், அதிலும் "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற, னுயிர்செகுத்துண்ணாமை நன்று" எனயாகத்தை மறுத்தலும் முதலியன. அந்தத் திருக்குறளில் "உலகியற்றியான்," "அந்தணர்நூல்," "மறப்பினுமோத்துக் கொளலாகும்பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்," "அறுதொழிலோர் நூன்மறப்பர்" "அவியுணவி னொன்மேற்" என்பவை முதலாகக் கூறியனகொண்டு இக் கொள்கை மறுக்கப்படும். இவர் வேதம், கடவுள், உயிர், பூதமைத்து, புலால் மறுத்தல், தவம் முதலியன கொண்டிருத்தலால், பௌத்தருமாகார். இனி, "மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான், தாஅய தெல்லாம் ஒருங்கு," என்று கூறியிருத்தலாலும், "தாமரைத்தண்ணீர்மன்னுமலர்தாட் டுயிலி னினிதுகொல், தாமரைக்கண்ணானுலகு" என்று சிற்றின்பத்தை எல்லாவற்றினுஞ்சிறந்த மோட்சலோகத்துப் பேரின்பத்தினும் சிறந்தது என்று சொல்லவேண்டிய விடத்துத் தாமரைக்கண்ணானுலகு என்று திருமாலினது ஸ்ரீவைகுண்ட லோகத்தினின்பத்தையே குறித்தலாலும், இவ்வுலகமாகிய லீலாவிபூதிக்கும் ஸ்ரீவைகுண்டமென்கிற நித்தியவிபூதிக்கும் இறைவன் திருமாலே யென்று தெரிவித்த ஆசிரியர் திருமாலுக்குரிய அகாரத்தையே முதன் மொழியாகத் தொடங்குதலாலும், இங்ஙன் அகச்சான்று பல இருத்தலால் இவரை வைஷ்ணவர், தம்மதத்தவரென்று சாதிக்கலாம். ஆயினும், தாமரைக்கண்ணானென்பது "மலர்மிசையேகினான்" என்றுற்போன்று அடியார்களின் இதயகமலத்தின்கணுள்ளானென்ற பொருளைக் காட்டலாமாதலால் திருமாலையே சிறப்பாகக்காட்டுவ தென்று கொள்ளவேண்டியதில்லையென்றும், "அடியளந்தான்றோற்றம்" என்று கூறியமாத்திரத்தானே திருமாலினிடத்துப் பக்தியினுற்றான் கூறினு ரென்று கொள்ளமுடியாதென்றும், பாணினி பகவான் "அ இ உண்" என்று தொடங்கினுற்போல இந்நூலாசிரியர் மங்கள வெழுத்தாக அகரத்தைத் தொடங்கியிருக்கலாமென்றும், ஆகவே, இந்த அகச்சான்றுகள் இவரை வைணவரென்று நிலைநாட்டப்போதாதென்று வைணவர் கூறுவதற்கு மறுப்புக்கூறவியலும்: இங்ஙனிருத்தலால், இந்நூலாசிரியரை வேதவேள்விகளையும் சாதிகளையும் உடன்பட்ட வைதிகக் கொள்கையினரென்றுசொல்லலாவதன்றி, இன்ன மதத்தவர்தாம் என்று உறுதியாகச்சொல்லிநாட்டுதற்குஏற்ற சிதந்தவது ஒன்றும் காணப்பட்டிலது. இங்ஙன் இருப்பதுகருதியே திருவள்ளுவரின் திருக்குறளைப்பற்றி "ஒன்றேபொருளெனின் வேறென்பவேறெனின், அன்றென்பவாறுசமயத்தார்-நன்றென்ன, எப்பாலவ ருமியையவே வள்ளுவனார், முப்பால்மொழிந்தமொழி" என்று கூறியதுமென்க.

இவர் காலம்:—இத்திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றி மணிமேகலையிலும் கல்லாடத்திலும் கூறியிருத்தலாலும், இறையனாரகப்பொருளினது உரையில் திருக்குறட்பாக்கள் எடுத்து ஆளப்பட்டிருத்தலாலும், மணி

மேகலை, அதனோடு சமகாலத்ததாகிய சிலப்பதிகாரம், இறையனாரகப்பொரு ளுரை, கல்லாடம் என்னும் இவற்றிற்கு முந்தியது இந்நூலென நன்கு அறி யப்படுகின்றது. இன்னும் சங்கத்துநூல்கள் பலவற்றிலும் திருக்குறளின் கருத்துக்களும் சொற்பொருள்களும் காணப்படுதலால், திருவள்ளுவராற் சங்கம் அழிக்கப்பட்டதென்பதும், சங்கத்து அரங்கேறிய நூல்களெல்லா வற்றுள்ளும் திருக்குறளே இறுதியான தென்பதும் பொருந்தாவாம். இனி ஒருசாரார், ஆசிரியர் தொல்காப்பியனார் மொழிக்குமுதலாகெழுத்தைக் கூறுமிடத்து "சகரக்கிளவியுமவற்றோரற்றே, அ ஔ ளவெனுமூன்றலங் கடையே" என்று கூறியதற்கு ஏற்ப, இத்தத் திருக்குறளில் வடமொழியல் லாது அகரத்தை முதலிற்பெற்ற சகரத்தை ஆதியாகக்கொண்ட தமிழ்ச் சொல்லைத் திருக்குறளாசிரியர் தமது நூலகத்து எடுத்தாளாமையால், இந்நூல் தொல்காப்பியர்காலத்தை ஒட்டியதாக இருக்கலா மென்கின்றனர்: அது பொருந்துவதாகத் தோன்றவில்லை: அகரத்தை முதலிற்பெற்ற சகரத்தைக் கொண்ட சொல் தமிழ்மொழியிலில்லாமையால் அவ்வாறானசொல் வட சொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருக்குமன்றி எவராலும் தம்அறி யாமையானன்றித் தமிழ்மொழிச்சொல்லாகப் பிரயோகிக்கமுடியாதன்றே! இனி, ஐயப்பொருளொன்றே கூறிய கொல் என்னும் இடைச்சொல்லை "என் கொல்"(2)என்று அசைநிலையாகவும்,உருவுவமத்தில்உருபாகவரவேண் டிய 'போல'என்ற சொல்லை"வெயில்போலக்காயும்" (77)என்று வினையுவம வுருபாகவும், மற்று என்னுஞ்சொல்லை "மற்றின்பம்" (173) என்று மற்றை யென்னுஞ் சொற்போலப் பிரிது என்ற பொருள்படவும் பிரயோகித்தும், "அதுணர்வார்" (257) என்று குற்றியலுகரம்போல முற்றியலுகரத்தின் மீது உயிரெழுத்தேற்றியும் இங்ஙன் தொல்காப்பியத்திற்குமுரணாக இத்தத் திருக்குறளிற் பல வந்துள்ளதனால், இந்நூலாசிரியர் தொல்காப்பியனுர்க்குப் பலநூற்றாண்டுகள் காலத்தினுற் பிற்பட்டவரா யிருக்கவேண்டும். ஆனால், "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சுமுண்பர்கனிகாகரிகர்" என்ற நற்றிணையடிகளும், "என்றும், பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி அறனறிதல், சான்றவர்க்கெல்லாங் கடனால்", "நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவா, நெஞ்சத்திற்குறுகிய கரியில்லையாகலின்" என்ற கலித்தொகையடிகளும்,முறையே "பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டுபவர்", "அறிவினுளுவ துண்டோ பிறிதினோய், தந்நோய் போற் போற்றுக்கடை", "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்ற திருக்குறள்களே அடியொற்றியன: இங்ஙனெல்லாம் வருதலின் நற்றிணைப்பாடல் கலித்தொகைப்பாடல் என்ற இவற்றிற்கெல்லாம் முந்தித் திருக்குறள் தோன்றிப் பரவியிருக்கவேண்டும். இக்ஙனகவும், கடைச்சங்கநூல்கட்கெல்லாம் குறள் காலத்தாற் பிந்தியது என்று சாதிக்கவேண்டுவோர் நற்றிணை முதலியவற்றிலிருந்தே குறளாசிரியர் கூறினுரென்று சொல்லவுங் கூடும்: என்றாலும்,"நிலம்புடை பெயர்வதாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தியில்லென, அறம்பாடிற்றே

ஆயிழைகணவ" என்று வரும் புறநானூறு "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லே, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக் குறளைக் கருதியே கூறியது எனத் தெற்றென விளங்குதலால், தொகைநூல் களிலும் எடுத்தாளும்படி அத்துணைப் பழமை பொருந்தியது இத்தத் திருக் குறள் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லே: ஆதலால், கடைச்சங்ககாலத்தில் முற்பட்டிருந்தவர் திருவள்ளுவரென்று கூறுவதன்றி, திருவள்ளுவருடைய காலத்தைக் குறித்து இன்ன நூற்றாண்டினரென்று திண்ணமாகக் குறிப் பிடமுடியாது.

திருவள்ளுவர் பெயர்களும் பெயர்க்காரணங்களும்:—(1) திருவள்ளு வர், (2) தேவர், (3) முதற்பாவலர், (4) மாதானுபங்கி, (5) தெய்வப்புலவர், (6) செந்நாப்போதார், (7) பெருநாவலர், (8) நான்முகனார், (9) புலவர், (10) பொய்யில்புலவர், (11) நாயனார் என்பன இவர்க்கு வழங்கும் பெயர்கள்.

(1) **திருவள்ளுவ** ரென்ற பெயரைக் குறித்து முன்னரே எழுதப்பட்டது. (2) **தேவர்** - தெய்வத்தன்மையையுடையவர்; மனிதரினும் மேலாக நன்கு மதித்துத் தேவர்போல உயர்த்திக் கொண்டாடப்படுபவர்; ஞான அநுட் டானங்களால் விளங்குபவர். "தேவிற் சிறந்த திருவள்ளுவர்" என்று திருவள் ளுவமாலையில் வருவது காண்க. (3) **முதற்பாவலர்**-முதன்மையுடைய பாவலர்; என்றது, கவிகளுட் சிறந்தவ ரென்றபடி; [பா வலர் - பாடல்பாட வல்லவர்: பா - செய்யுள்.] அன்றி, முதற்பா வலர் எனப் பிரித்து, நால்வகைப்பாக்க ளுள்ளும் 'முதற்பா' எனப்படுகின்ற வெண்பாவால் நூல்செய்த வல்லமை யுடையவர் என்றுமாம்; பலவகை வெண்பாக்களுள்ளுங் குறள்வெண்பா முத லாதலுங் காண்க. (4) **மாதானுபங்கி** யென்பது இவரது மனைவிக்குப் பெய ரென்று கொள்ளுதலுண்டு என்று முன்னர்க் காட்டப்பட்டது. இனி, இவ் வாசிரியர்க்கே பெயரெனக் கொள்ளின், இது, தாயை நிகராகக்கொண்டு நடக்கின்ற ஒழுங்கின ரென்று பொருள்படுதலால், தாய் பிள்ளையினிடத்து அன்புசெய்தல்போல இவர் உயிர்களிடத்து அருள்செய்பவ ரென்க; ("தாயொக்கு மன்பின்" என்றார் பிறரும்.) மாத்ரநுபங்கி எனப் புணராது மாதானுபங்கி என நின்றது, பிராகிருதவிலக்கணத்தா லென்ப. இனி, தாயோ வென்னத்தக்கவரென்றும் பொருள்படும். "பெற்றவரு நற்குருவும் பேணி யொருபொருளே, யுற்றிருகா லன்றியுரை செய்யார்—பற்றி, யொரு பொருளைப் பத்துப் பொருளாகச் செப்பித், தருகையால் வள்ளுவரே தாய்" என்பது காண்க. (5) **தெய்வப்புலவர்** - தெய்வத்தன்மையையுடைய அறிவையுடையவர். அறிவுக்குத் தெய்வத்தன்மை-எல்லாப்பொருள்களையும் உள்ளது உள்ளபடி அறிதல். "சிறப்பி னுகிய பெயர்கிலக் கிளவிக்கும், இயற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையிலே சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், கல்லியாலாகிய பெயர்க் குப்பின்னே இயற்பெயர் வருதற்கு 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என

உதாரணங்காட்டி யிருத்தலால், திருவள்ளுவர்க்கு 'தெய்வப்புலவர்' என்பது கல்விபற்றிவந்த சிறப்புப்பெய ரென்று தெரிகிறது. (6) செந்நாப்போதார் - கவிக ளாகிய தேனைச் சொரிகிற செவ்விய நாவாகிய மலரை யுடையவ ரென்று பொருள்: "மாதாநுபங்கி மருவிபுலச் செந்நாப்போதார்" என்று வழங்கியிருத்தலும் "என்றும் புலராது" என்ற இறையனூர் பாசுரத் தில் திருவள்ளுவர்வாய்ச்சொற்குக் கற்பகத்திருமலர் உவமை கூறப்பட்ட வாறும் உணர்க; அன்றி, (திருவள்ளுவமாலையில்) "வள்ளுவன்வாய தென் வாக்கு"என்று நாமகள்தானே கூறியதாக வந்திருத்தற்கு ஏற்பச் (சரசு வதிக்கு இருப்பிடமான) சிவந்த நாவாகிய மலரை யுடையவ ரென்றுங் கொள்ளலாம். (போது - மலர்.) (7) பெருநாவலர்-பெருமையுடைய புலவர்; நாவலருட் பெரியவ ரென்க. நாவலர் - கவநசக்தியும், போதநாசக்தியும், பிரசங்கசக்தியும் முதலிய நாவின் வல்லமை யுடையவர். இப்பெயர், திருவள்ளுவமாலையில் தொடித்தலைவிழுத்தண்டினூர்செய்யுளில் வந்துள்ளது. (8) நான்முகனார் - பிரமதேவனது அமிசமாகப் பிறந்தவர்; (திருவள்ளுவ மாலையில்) "நான்மறையின் மெய்ப்பொருளை மூப்பொருளா நான்முகத் தோன், தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை, வந் திக்க சென்னி வாய் வாழ்த்துக நன்னெஞ்சே, சிந்திக்க கேட்க செவி" எனவும், "ஐயாறு நூறு மதிகார மூன்றுமா, மெய்யாய வேதப் பொருள் விளங்கப்—பொய்யாது, தந்தா னுலகிற்குத் தான் வள்ளுவனாகி, அந்தாமரை மே லயன்" எனவும் கூறியன காண்க. (9) புலவர் - புலம் அல்லது புலமை உடையவர்; புலம் - தேர்ந்த அறிவு: புலமை - கல்வித்தேர்ச்சி; அதாவது-பல வேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறி வுடைமை, பாண்டித்யம். இப்பொதுப்பெயர், திருவள்ளுவர்க்குச் சிறப்பாக வழங்கும். (திருவள்ளுவமாலையில்) "புலவர் திருவள்ளுவ ரன்றிப் பூமேற், சிலவர் புலவ ரெனச் செப்பல்—சிலவு, பிறங்கொளிமாலைக்கும் பெயர் மாலை மற்றும், கறங்கிருண்மாலைக்கும் பெயர்" என மதுரைத் தமிழாசிரியர் செங் குன்றூர்க்கிழார் கூறியதுகொண்டு அறிக. (10) பொய்யில்புலவர் - பொய்ம்மையில்லாதபுலவர்; பொருள்களை உள்ளபடி உணரவும், உணர்ந்த படி உரைக்கவும் வல்ல அறிவை யுடையவரென்றபடி. சித்தலைச்சாத்தனார் மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை தேறுய்" என்றனர். (11) நாயனார் - தலைமையானவர்: இப்பெயர், நச்சினார்க்கினியருரையிற் பயின்றுள்ளது.

திருக்குறள் வரலாறு.

திருக்குறளென்ற அரிய பெரிய நூலினது சொற்செறிவு பொருட் பொலிவு முதலிய பெருமைகளை இத்தன்மையன வென்று எடுத்து உரைக்க இயலாமல் "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" எனவும், "பழுததமிழ்ச்சொல்லருமை நாலிரண்டி" எனவும், "கடு

கைத் தலைத்தேழ்கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" எனவும் முன்னோர் வியந்து கூறியிருத்தலின், இதன்பெருமை இத்துணைத்தென அளவிடுதற்கு அருமையானது. கபிலர், பரணர், கக்கீரர், மாமூலர், கல்லாடர், நல்லந்துவனர், பாரதம்பாடிய பெருந்தேவனர் முதலிய சங்கப்புலவர் இந்நூலைக் குறித்துச் சிறப்பித்துச் செய்யுள் செய்தன ரென்றால், இதன் சிறப்பை எடுத்து உரைக்க வல்லார் யார்? அன்றியும், கடைச்சங்கப் புலவரி லொருவரும், மணிமேகலை நூலாசிரியரும், சங்கத்தி லரங்கேற்றுதற் பொருட்டு வரும் நூல்களிற் குற்றங்காணுந்தோறும் மனம்பொறாது அப் பிழையைக் கேட்கும்படிநேர்ந்த தம் தலைவிதியை மிகநொந்து தமதுதலையி லறைந்துகொண்டேவருகையால் எப்பொழுதும் தலை புண்பட்டுச் சீயோ டிருக்கிற காரணம்பற்றி 'சித்தலைச்சாத்தனர்' என்று பெயர்பெற்றவருமாகிய மதுரைக்கூலவாணிகன்சாத்தனர், இத்திருக்குறளைக் கேட்டபொழுது, இவ்வொருநூலுமே யாதொருகுற்றமுமில்லா திருந்த தென்று மிகவுவந்து "மும்மலியு முக்நாடு முந்நதியு முப்பதியு, மும்முரசு முத்தமிழு முக்கொடியு— மும்மாவுந், தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே, பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்" என்று கொண்டாடிப் பாடினர். இம்மகிமை, அவருடனிருந்த மருத்துவன் தாமோதரனர் இந்நூலைச்சிறப்பித்து "சீர்திரீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய், மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி, மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால், தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்றதனால் தெரிகிறது. "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்" எனப் பிற்காலத்தாரும் இதன்பெருமையை ஓதியிருத்தல் காண்க. "ஆலும்வேலும் பல்லுக்குஉறுதி, நாலும்இரண்டும் சொல்லுக்குஉறுதி" (இதில், ஆல் - ஆலம் விழுது. வேல் - கருவேலங்கொம்பு. நால் - நாலடியார். இரண்டு - குறள்) என்ற பழமொழியையும் உணர்க.

இத்திருக்குறள் "நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைக்கிலையொ டாங் கீழ்க்கணக்கு"

எனக் கூறப்பட்ட சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று மென அறிக. பதினெண்கீழ்க்கணக்குக்களாவன:—க. நாலடியார், உ. நான்மணிக்கடிகை, [நானூற்பது—] ங. இனியவைநாற்பது, ச. இன்னாநாற்பது, ஞ. கார்நாற்பது, ஃ. களவழிநாற்பது, [நால்ஐந்திணை—] எ. ஐந்திணையைம்பது, அ. ஐந்திணையெழுபது, கூ. திணைமொழியைம்பது, கo. திணைமாலைநூற்றைம்பது, கக. மூப்பால் [—திருக்குறள்], கஉ. திரிகடுகம், கங. கோவை [—ஆசாரக்கோவை], கச. பழமொழி, கஞ. மாமூலம் [—சிறுபஞ்சமூலம்], கஃ. காஞ்சி [—முதுமொழிக்காஞ்சி], கஎ. ஏலாதி, கஅ. கைக்கிலை என்பன. ('நானூற்பது' என்பதிலுள்ள நால் என்பதை 'ஐந்திணை'

என்பதனோடுங் கூட்டுக; கூட்டவே, 'நால்ஐந்திணை' என்பது - ஐந்திணைப் பொருளுணர்த்தும் ஐந்திணையைம்பது முதலிய நான்குநூல்களின்மேல் நிற்கும்.)

கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என இருவகை; அவற்றில், மேற்கணக்காவது - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப்பாக்களாலும் நாற்பதுமுதல் ஆயிரத்துமுந்நூற்றுமூப்பதாக வருவது: கீழ்க்கணக்காவது - அறம்பொருளின்பங்களைப் பற்றிய வெண்பாக்களினாலும் வெண்பாவினினங்களாலும் அத்தொகைபட வருவது; இதனை, பன்னிருபாட்டியற் சூத்திரங்களால் அறிக. மிக்க அடிகளையுடைய பலவகைப் பாக்களால் வருவதுபற்றி மேற்கணக் கென்றும், குறைந்த அடிகளையுடைய ஒருவகைப்பாவால் வருவதுபற்றிக் கீழ்க்கணக்கென்றுங் காரணக்குறியமைந்தன வென உணர்க.

திருக்குறளின் பெயர்கள்:—(1) திருக்குறள், (2) முப்பால், (3) பொய்யாமொழி, (4) வாயுறைவாழ்த்து, (5) உத்தரவேதம், (6) தெய்வநூல், (7) திருவள்ளுவர், (8) தமிழ்மறை, (9) பொதுமறை, (10) திருவள்ளுவப் பயன், (11) பொருளுரை, (12) முதுமொழி என்பன.

திருக்குறள் என்ற பெயரீக் காரணம்:—(1) திருக்குறள் - சிறந்த குறள் வெண்பாக்களினாலாகிய நூல்; அடையடுத்த ஆகுபெயர். கலிப்பாவினாலாகிய நூல் கலி யென வழங்குதல்போல, குறட்பாவினாலாகிய நூல் குறள் என வழங்குகின்றது. (2) முப்பால் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையுடைய நூல்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பால் - பகுப்பு. (3) பொய்யாமொழி - பொய்யில்லாத சொற்களையுடைய நூல்: உண்மைப் பொருளையுணர்த்தும் நூல்; பயன்விளைவிலே தவறுதநூல். "பொய்ப்பால பொய்யேயாய்ப்போயின பொய்யல்லாத, மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே-முப்பாலின், தெய்வத் திருவள்ளுவர் செப்பிய குறளால், வையத்து வாழ்வார் மனத்து" என்றதனால், இந்நூலின் மெய்யுணர்வுபயத்தற்சிறப்பை அறிக. பொய்யாமொழியென்பது - நூலுக்கு, அடையடுத்த கருவியாகுபெயர். (4) வாயுறைவாழ்த்து—வாயுறை - மருந்து, வாழ்த்து - வாழ்வித்தல்; உடம்புக்குஉறுதிசெய்யும் மருந்துபோல, உயிர்க்கு உறுதிசெய்து உலகத்தை வாழ்விக்கும் நூலென்க: நீதிகளை வற்புறுத்திக்கூறுவ தென்றவாறு. "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த விருவினைக்கு மாமருந்து - முந்திய, நன்னெறி காமறிய நாப்புலமை வள்ளுவனார், பன்னிய வின்குறள் வெண்பா" என்ற பாடலில் இந்நூலை மருந்தென்றவாறு உணர்க. "வாயுறைவாழ்த்தே வயங்கு நாடின், வேம்பும் கடுவும் போல வெஞ்சொல், தாங்குதலின்றி வழிநனியபயக்குமென்று, ஓம்படைக்கிளவியின் வாயுறுத் தற்றே" என்றார் தோல்காப்பியனார். 'வாய் - வாய்மொழி, உறை - மருந்து: வாயுறை யென்பது - சொல்மருந்தெனப் பண்புத்தொகையாம். இனி,

வாய்க்கண் தோன்றிய மருந்து என வேற்றுமைத்தொகையுமாம். மருந்து போறலின், மருந்தாயிற்று' என்றது, தொல்காப்பியவுரை. (5) உத்தர வேதம்-வடமொழிவேதத்தின்பின் தோன்றிய வேதம்; வேதத்தின் பிற்பகுதி யெனப்படுகிற உபநிஷத்துக்களின் கருத்துஅமைந்தது. (6) தெய்வநூல் - தெய்வத்தன்மையுடைய நூல்; சங்கமேறியது. (7) திருவள்ளுவர்-திருவள்ளுவராற் செய்யப்பட்ட நூல்; ஆசிரியர் பெயர் நூலை யுணர்த்தினமையால், கருத்தாவாகுபெயர். "வள்ளுவர் தொல்காப்பியமே", "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார்" என்பன காண்க. (8) தமிழ்மறை - தமிழ்வேதம்; வடமொழிவேதத்தின் பொருளைத் தமிழில் உரைத்தது: வடமொழியில் வேதம்போலத் தமிழ்மொழியில் எல்லாப் பொருள்களுக்கும் சிறந்த பிரமாணமாக யாவராலும் அங்கீகரிக்கப்படுவது; "ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி, வேதப்பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோர், உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே, வள்ளுவர் வாய்மொழி மாண்பு" எனவும், "வேதப்பொருளை விரகால் விரித்துலகோர், ஓதத் தமிழா லுரைசெய்தார் - ஆதலால், உள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப, வள்ளுவர் வாய்மொழிமாட்டு" எனவும், "அற முப்பத்தெட்டுப் பொரு ளெழுபதின்பத், திற மிருபத்தைந்தாற் றெளிய - முறைமையால், வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனு, ரோத வழுக்கற்ற துலகு" எனவும் கூறியன காண்க. (9) பொது மறை-வடமொழி வேதம்போ லன்றி எல்லாச்சாதியார்க்கும் எல்லாச்சமயத்தார்க்கும் பொதுவான வேதம்; "செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த, பொய்யா மொழிக்கும் பொருளென்றே - செய்யா, அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை, இதற்குரிய ரல்லாதா ரில்" எனவும், "அரு மறைக, ளைந்துஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனார், புந்தி மொழிந்த பொருள்" எனவும் கூறியன காண்க. 'எல்லாநூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பு' என்பர் பரிமேலழகரும். (10) திருவள்ளுவப்பயன்-திருவள்ளுவராற் செய்யப்பட்டதும் "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்றபடி எல்லார்க்கும் எல்லாப் பயனையும் அளிப்பது மான தொரு நூல். "அறனறிந்தோம் ஆன்ற பொருளறிந்தோம் அன்பின், திறனறிந்தோம் வீடுதெளிந்தோம் - மறனெறிந்த, வாளார்நெடுமாற! வள்ளுவனார் தம்வாயாற், கேளாதன வெல்லாங் கேட்டு" என்றதனாலும், இந்நூல் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்துதலை அறிக. "எல்லாப்பொருளு மிதன்பா லுளஇதன்பா, லில்லாத வெப்பொருளு மில்லையால்-சொல்லாற், பரந்த பாவாலென்பயன் வள்ளுவனார், சுரந்தபா வையத் துணை" என்றதும் காண்க. (நச்சினார்கினியர் முதலிய உரையாசிரியர்களும், திருக்குறளை 'திருவள்ளுவப்பயன்' என்பர்.) (11) பொருளுரை - பொருள்நிரம்பிய சொல். கபிலர், பெரிய பனைமரத்தின் சாயையையும் தன்னுள் அடக்கிக்காட்டுஞ் சிறு புல்நுனிநீரையும்; பரணரும், பொன்முடியாரும், இரண்டு அடிகளால் உலக முழுதையுந் தாவியளந்த திருமாலின் வாமநவடிவத்தையும் இந்நூலுக்கு உவமை கூறியதனால், இந்நூற்பாக்கள்

சூத்திரம்போலச் சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனே செறித்து இனிதுவிளக்கித் திட்பநுட்பஞ் சிறந்தனவாதல் விளங்கும். "பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்து திறந்தொறுஞ் சேரச்-சுருங்கிய, சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல், வல்லா ரார் வள்ளுவ ரல்லால்" என்றதும் காண்க. (12) முதுமொழி - பழமையான சொல். பின் னிரண்டடியில் ஒவ்வொரு திருக்குறளையும் மூன்னிரண்டடியில் அக்குற ளின் நீதிக்குத் திருஷ்டாந்தமாக ஒவ்வொருசரித்திரத்தையும் இடையில் 'சோமேசர்' எனச் சிவபிரான்பெயர் முன்னிலையையும் அமைத்துப் பாடப் பெற்றதாகிய 'சோமேசர் முதுமொழிவெண்பா' என்ற தூலின்பெயரில் 'முதுமொழி' என்ற தொடர் திருக்குறளின்மேல் நிற்றல் காண்க.

இங்ஙன் முப்பால் முதலிய சிறப்புப்பெயர்பெற்ற இத்திருக்குறள் இன்னநூல்வழியே தோன்றிய தென்று கொள்ள இடமில்லாமையால், முதனூலின்பாற்படு மென்பர். இனி, தருமசாஸ்திரம் அர்த்தசாஸ்திரம் காமசாஸ்திரம் முதலியவற்றின் கருத்தைத் தழுவியது இக்நூலென்பதை நோக்குமிடத்து வழிநூலெனக் கொள்ளுதலே பொருந்தும். "எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பு," "வியாழவெள்ளிகள் துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்", "ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்பு புலவி என நால்வகைத் தாக்கிக் கூறினர்" எனப் பரிமேலழகர் கூறியன இங்குக் கருதத்தக்கன.

இந்தத் திருக்குறள், அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் எனு மூன்றுபால்களையுடையது: புருஷார்த்தமாகிய அறம்பொருளின்பங்கள் மூன்றினையும் வழுவாதொழுகவே மோட்ச மடையலா மாதலால், அதற்காக வேறுவகுத்துக்கூறவில்லை. அறத்துப்பால்தானும், (1)பாயிரம், (2)இல்லறவி யல், (3)துறவறவியல், (4)ஊழ்என்று நான்குபிரிவினையுடையது: இனி, ஒருசா ரார் பிரமசரியம் காருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் நால்வகை நிலையுள், பிரமசரியம் சீடனுய் நின்றுகுருவைத்தல்லது செய்வது பிறிதின் மையின் அதனைப் புதல்வரைப்பெறுதல் என்பதனு ளடக்கி, காருகத்தம் இருபததிகாரத்தானும், வானப்பிரத்தம் பத்ததிகாரத்தானும், சந்நியாசம் மூன்றதிகாரத்தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானு மாக இங்ஙன் பாயிரம் நான்கதிகாரங்களோடு சேர்த்து முப்பத்தெட்டதி காரத்தால் அறத்துப்பாலை முடித்தா ரென்ப. (இவ்வாறுன திருக்குறளின், பொருட்பால் காமத்துப்பால்களின் அதிகாரங்கள் முதலியன குறித்து அவ் வப்பாலின் தொடக்கத்திற் கூறப்படும்.)

இத்திருக்குறள் திருவள்ளுவரால் வடநூற்பொருளை மேற்கொண்டு தமிழா லுரைப்படுகின்றமையான் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப் பால் எனப் பகுக்கப்பட்டன. தமிழ்முறையாற் பகுக்கப்பட்டுக் கூறப்படின், புறம் அகம் என்று பகுத்துக்கொண்டு கூறப்பட்டிருக்குமென்ப. இனி, தமி

முழுவும் 'அறம்பொருளின்பம்' என்று கூறப்படுவதுண்டு ஆதலால், அறத்துப் பால் பொருட்பால் காமத்துப்பால் என்று பகுத்துக்கொண்டு கூறினும், இந் நூல் தமிழ்முறையால்தான் கூறப்படுகின்றது என்று வாதித்தாலும், "அறம் பொருளின்பமுயிரெச்சநான்கின், றிறந்தெரிந்து கூறப்படும்" என்னுங் குற ளில் உபதைகளைப்பற்றிக் கூறியவை, ஆசிரியர் வடநூற்பொருளே மேற்கொ ண்டு கூறினரென்பதை வற்புறுத்தும். இந்நூல், தமிழிற்குப் பொருந்தக் கூறப்பட்டுள்ளதென்பதை "அகரமுதல" என்று அகரமுதலாகத்தொடங்கி "கூடி முயங்கப்பெறின்" என்று னகரவிறுதியால் முற்றியது குறிப்பிக்கும்.

இனி, கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலி யுறுத்தல் என்ற நான்கதிகாரமும் பாயிரமாக அமையுமாறு என்னையோ எனின்?—இதற்கு லெக்ஸிகன்ஆபீஸ் தலைமைப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. மு. இராகவயங்கார் ஸ்வாமிகள் தொல்காப்பியப்பொருளதிகார வாராய்ச்சி யென்னும் நூலிற் கூறியிருப்பது வருமாறு:—"தெய்வப்புலமைத் திருவள்ளு வனர், தம் பெருநூற்றொடக்கத்தே கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கதிகாரங்களைப் பாயிரமாகத் தனியே நிறுத்திக் கூறினரன்றே? இங்ஙனம் இந் நான்கதிகாரங்களை மட்டும் பாயிரமாக வள்ளுவனர் தனியே கொண்டது எக்காரணம்பற்றி என்ற கேள்வி நெடுக நிகழ்ந்து வருவதுண்டு. இதற்குத் தக்கவிடை இது காறும் பெறப்பட்டதில்லை. ஆயினும், தொல்காப்பியனர்கூறிய "கொடி நிலை கந்தழி" என்ற இச்சூத்திரம் அக்கேள்விக்கு ஏற்ற விடை தரவல்ல தென்பதே எங்கொள்கை. அஃதாவது - இச்சூத்திரத்திற் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள்வாழ்த்தொடு வரும் என, உயர் பின்வழிவரும் ஒருவினையொடுச்சொல்லைக் கடவுள்வாழ்த்துக்குக் கூறு தலால் அவ்வாழ்த்து முதற்கட்கூறுஞ் சிறப்புடைய தென்பதும், மற்றவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்கு உரிய வென்பதும் அறியத்தக் கன. இவற்றுட் 'கொடிநிலை' என்பது மேகத்தை உணர்த்தும்; கீழ்த்தி சைக்கண்ணே நிலைபெறுதலுடையது, நீடுநிலையுடையது என்பன இதன் பொருளாம். [கொடி - கீழ்த்திசை *] நச்சினர்க்கினியரும் இவ்விரு பொருள்களைபற்றிச் சூரியனுக்கு இப்பதத்தை இணக்குதல் காண்க. மேக வாகனனாகிய இந்திரனது திசை கிழக்காதலின் அத்திசையே மேகத்துக் கும் உரிய தென்பதும், அங்குநின்றெழுந்த கொண்டல்களே உலக தாபந்தீரப் பெய்வன என்பதும் அறியத்தக்கன. குணக்கினின்று எழுவது பற்றியே மேகம் கொண்டலெனப் பெயர்பெற்றதென்க. "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு-காலத்திற்றோன்றியகொண்மூப்போல்" என்பதனுல்

* கொடி-கீழ்த்திசையாதல், 'குன்றிவர்ந்து கொடிக்கொண்ட கோடை யால்' (கநo), 'கொடிமிசை மையறு மண்டிலம்' (கசக) என வரும் கலித் தொகையடிகளானும், 'கொடிமுதலா வீங்கிவற்றைக் கொண்டெண்ணுங் காலே' என்னுஞ் சினேந்திரமாலைத்தொடரானும் (ஙஎ) அறிக.

(கலித். அஉ) கிழக்கிலெழும் கொண்டல்களே பெயலிற் சிறந்ததாதல் அறியப்படும். இவ்வாறன்றி மின்னற்கொடிக்கு நிலைக்களமாதல்பற்றி மேகம் 'கொடிநிலை' எனப்பட்டதெனினும் அமையும். இவற்றுல், கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்கவல்லதாதல் தெளியலாம். இரண்டாவது கந்தழி என்பது: கந்து - பற்று, அழி-அழிவு; அஃதாவது பற்றழிந்தார் ஆகிய நீத்தாரதுதன்மை என்றபடியாம். மூன்றுவதான வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும். என்னே? அவ்வறம் சிறப்பாக வண்மைபற்றியே நிகழ்வதாகலின்; 'ஈதலறம்' என்றுர் ஔவையாரும். நச்சினர்க்கினியர் தங்கொள்கைக்கியையச் சந்திரனுக்கு இப்பதத்தை இணக்குமிடத்து, "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம்வழங்கலான் வள்ளியென்பதூஉமாம்" என்று கூறுதலினின்று, வண்மையடியாகவே வள்ளி என்ற சொல் வழங்கியதென்பது அவர் கருத்தாதல் தெளியப்படும். படவே, வண்மையாகிய அறத்துக்குரியகடவுள் வள்ளி யெனப்பட்ட தென்க. இங்ஙனம் மேகம் நீத்தார் அறக்கடவுள் என்ற மூன்றும், முதற்கடவுளே முதலாகக்கொண்டு வாழ்த்தப்படுதலும் இப் பாடாண்பகுதியாம் என்பது, சூத்திரப்பொருளாதல் கண்டுகொள்க. எனவே வள்ளுவனுர்கூறிய பாயிரமும் இவ்விலக்கணம்பற்றியே அமைந்த தென்பது விளக்கமாம்."

இனி, பாயிரமென்பது - கடவுள்வாழ்த்தும் சொலப்படு பொருளும் எய்த வுரைப்பதாகும்; அவ்விலக்கணத்திற்கு ஏற்ப முதலதிகாரத்திற் கடவுள்வாழ்த்துக் கூறினர்: இந்நூலுட் கூறப்படுவது அறமே யாதலாலும் அந்தஅறத்தை வெளிப்படுத்தியவர் நீத்தாரேயாதலாலும் அந்நீத்தாரின் நல்லொழுக்கத்திற்குத் தான் துணையாயிருத்தலோடு கடவுள் தன்மையும் வாய்ந்திருப்பது வான்ஆதலாலும், கடவுள்வாழ்த்துக்குப்பின் வான் சிறப்பையும் நீத்தார் பெருமையையும் கூறி, அதன் பின்னர் அறன் வலியுறுத்தலைக் கூறினரென்னலாம்: இந்நூலுள் அறம்பொருளின்பம் என்ற மூன்றும் கூறப்படாநிற்கக் கூறப்படும்பொருள் அறமொன்றே போலப் பாயிரத்தில் அறன்வலியுறுத்தலைமாத்திரம் கூறியது குன்றக் கூறலாகாதோ? எனின்,—இந்நூலாசிரியர் அறத்தோடுபொருந்திய பொருளின்பங்களேயன்றி அறத்திற்குமாருன பொருளின்பங்களே வேண்டாராதலாலும், "சிறப்புடைமரபின்பொருளும் இன்பமும், அறத்தின் வழிப்படுஉந் தோற்றம்போல" என்றபடி பொருளின்பங்கள் அறத்தின் வழிப்பட்டே நிற்பன ஆதலாலும் சொல்லப்படுபொருளைத் தொகுத்துக் கூறும் பாயிரத்தில் அறத்தினைக் கூறி, மற்றைப்பொருளின்பங்களைக் கூறுதல் குன்றக்கூறலாகாதென்க.

இத்திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் - தருமர், மணக்குடியர், தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், நச்சர், பரிமேலழகர் எனப் பதின்மர். இதனை, "தருமர் மணக்குடியர் தாமத்தர் நச்சர் பரிதி பரிமேலழகர்—திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்

ளுவர் நூற்கு, எல்லியுரை செய்தா ரிவர்'' என்ற செய்யுளினுல் அறிக. 'மணக்குடியர்' என்ற பெயர் 'மணக்குடவர்' என்றும், 'மணக்குடையர்' என்றும் வழங்கும். இதில், 'நச்சர்' என்பது நச்சினார்க்கினியரையெனக் கொள்ளுதல், தகுதியுடையதாகத் தோன்றவில்லை; ஏனெனில்:—''பாற்கடல் போலப்பரந்த நன்னெறி'' என்று தொடங்குகிற நச்சினார்க்கினியருரைச் சிறப்புப்பாயிரச் செய்யுளில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையில் (பேராசிரியர் உரையெழுதாதுவிட்ட) இருபதுபாட்டு என்னும் இவற்றிற்கு நச்சினார்க்கினியர் உரையெழுதினரெனக் கூறப்பட்டிருத்தலே யன்றி, திருக்குறளுக்கு உரையெழுதினரெனக் கூறப்படாமையா லென்க. ''பாரத் தொல்காப்பியமும் பத்துப்பாட்டுங் கலியும், ஆரக் குறுந்தொகையு ஞான்றும்—சாரத், திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும், விருத்தி நச்சினார்க்கினியமே'' என்றதும் காண்க. இப்பதின்மருரையுள்ளும் பின்னர்ச்செய்யப்பட்டதும் மிகச்சிறந்ததும் பரிமேலழகருரையே யாதலின், அதுவே இக்காலத்து மேலாக வழங்கிவருகின்றது. அவ்வுரையாசிரியராகிய

பரிமேலழகர் வரலாறு.

இவர், தொண்டைநாட்டிற் சிறந்த காஞ்சீபுரத்திற் பிறந்தவர்: இது ''திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன், வள்ளுவனார்க்கு வழிகாட்டினுன் தொண்டை மண்டலமே'' என்ற தொண்டைமண்டலசதகத்தால் அறியப்படும். இவர் அந்நகரிலுள்ள ஸ்ரீஉலகளந்தப்பெருமாள் கோயில் அருச்சக பரம்பரையிற்சேர்ந்தவர்: இதனை, ''நீணிலமளந்தோன் தாடொழுமரபின்'' என்ற இவர் உரைச்சிறப்புப்பாயிரத்தால் தெளியலாம். இவர் இளமையிலே வடமொழியில் தருக்கம் வியாகரணம் சாங்கியம் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைக் கரைகண்டு உணர்ந்து, தென்மொழியிலும் தொல்காப்பியம் முதலிய நூல்களிற் பல்காற்பயின்று புலவர்திலகராய்ப் புகழ்பெற்றிருந்தனர். இவர் திருக்குறளுரையை யியற்றி யரங்கேற்றியதுகுறித்து வழங்குவதொரு வரலாறு வருமாறு:—புலவர்திலகரான பரிமேலழகர், தமதுபுலமை புலப்படுமாறு பெரியதோருரை யியற்றக்கருதி, அதற்குத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளே ஏற்ற தென நன்குஅறிந்து, முன்னரே அந்நூலுக்குத் தருமர்முதலியோர் ஒன்பதின்மரும் இயற்றியுள்ள உரைகளை உற்று நோக்கி, அவற்றின்கண் உளவாய குற்றங் களைந்து குறைபெய்து சிறந்ததோருரை யியற்றி, அதனைப் பாண்டியனவைக்களத்து அரங்கேற்றச் சென்று, தமதுகருத்தை அரசனுக்கு அறிவிக்க, 'மற்றையோருரைக்கும் உமது உரைக்கும் உள்ள வாசி விளங்குமாறு அற்புதமொன்று காட்டுவீராயின் உமது உரை ஏற்றமுடையதாக அங்கீகரிக்கப்படும்' என வேந்தன் கூறியதற்கு, இவர் 'அங்ஙனமே ஆகுக' எனச் சம்மதிக்க, அரசன் 'மற்றையுரைகள்போ லன்றி நுமதுஉரையே நூலாசிரியரது கருத்துக்கு இணங்கி ஏற்றமுடைய தென்பீராயின், நீர் இவ்வெண்கலப்பரியின்மேல் ஏறியிருந்து

அரங்கேற்றுவீராக: அப்பொழுது, இப்பரி இடம்பெயர்ந்து இயங்குமாயின், நும் உரை மெய்யுரையாக மெச்சப்படும்' என்று தனது சபையில் இருந்த தோர் வெண்கலக் குதிரையைக் காட்ட, இவர் அவ்வாறே அப்பரிமேல் இருந்து தமது உரையை அரங்கேற்றின ரெனவும், அப்பொழுது அப்பரி இருப்பிடம்விட்டு இயங்கிய தெனவும், அதனால் இவர்க்கு 'பரிமே லழகர்' எனச் சிறப்புப்பெயர் அமைந்த தெனவும் கூறுகின்றனர். (இப் பெயர், 'பரிமேலழகியார்' என்றும், பரிமேலழகரையன்' என்றும் வழங்கும்.) இவர் திருக்கோவையாரென்கிற சைவநூலினின்று இலக்கிய இலக்கண விஷயத்திற்கு மேற்கோள் எடுத்து ஆண்டமைபோல வன்றித் திருவாய்மொழியென்னும் வைஷ்ணவதிவ்வியப்பிரபந்தத்தினின்று தத்துவ விஷயத்திற்குப் பிரமாணமாக "அற்றது பற்றெனில், உற்றதுவீடு," "நன்று ஞானங் கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா மீர்த்து, ஒன்றுய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனே யுணர்ந்துணர்ந்து, சென்றுங் கின்ப துன்பங்கள் செற்றுக் கலைந்து பசையற்றால், அன்றே அப்போதே வீடு அதுவே வீடுவீடாமே" என்ற பாசுரங்களே எடுத்துக்காட்டினமையும், அரசனே இறையென்ற கடவுட்பெயராற் குறித்ததற்குத் திருவாய்மொழியி லிருந்து ஆதாரங் காட்டுமிடத்து "திருவுடைமன்னரைக் காணில் திருமா லைக் கண்டேனே யென்னும்" என்று "பெரியாரும் பணித்தார்" என்றதும், பிறநூலாசிரியர்களே அவ்வாறு 'பெரியார்' என்ற சொல்லால் எங்கும் குறி யாமையும், "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல், தாமரைக் கண்ணு னுலகு" என்ற குறளில் நிரதிசயப்பேரின்பத்தைக்குறிக்கிற 'தாம ரைக்கண்ணு னுலகு' என்பதற்கு - 'துறந்த யோகிகள் எய்துஞ் செங்கண் மாலுலகம்' என்று உரைகூறி, 'இந்திரனுலகென்று உரைப்பாருமுளர்: தாம ரைக்கண்ணுனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன் மையறிக' எனப் பிறர்மதம்மறுத்ததும், "நீணிலங் கடந்தோன் தாள்தொழு மரபிற், பரிமேலழக னுரிமையினுணர்ந்தே" என்ற பரிபாடலுரைச் சிறப்புப் பாயிரமும், இதற்குஏற்ப இவரைக் காஞ்சீபுரத்து உலகளந்தபெருமாள் கோவில் அர்ச்சகர் மரபினரென்பதும், "மடியிலாமன்னவன்"என்ற குறளில் 'அடியளந்தான்' என்பதற்கு 'தன் அடியளவானே எல்லாவுலகையும் அளந்த இறைவன்' என உரைகூறியதும் இவர் வைணவரென்பதை வற்புறுத்தும்.

இவ்வுரைச் சிறப்பை

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள்ளுவர்தம்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்சேர் பரிமே லழகனெனும்
மன்னு முயர்நாமன் வந்து"

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ ரூரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி"

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக ரேற்று"

"திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவ ளுய்த்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விமுப்பாலுக்கு
ஓருரை யன்றி யொன்பது சென்றும்
ஐயுற வாகக் கையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்தில் வேதாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
இதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தான்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பருள் ளாளெனப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி யீச னருளால்
உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே."

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுத்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்ற பழஞ்செய்யுட்கள் தெரிவிக்கும்.

காலம்:—இவர் காமத்துப்பாலின் முதலில் 'இச்சிறப்புப்பற்றி வட நூலுட் போசராசனும்.....இதனையே மிகுத்துக்கூறினன்' என்று போசராசனை மேற்கோள்காட்டியிருத்தலால், இவர்காலம் போஜராஜன் காலத்துக்குப் பின் என்பது தெளிவாம். போஜராஜன் காலம் 11-ஆம் நூற்றாண்டென்பர். மேற்காட்டிய பாடல்களுள் "வள்ளுவர்சீர்" என்ற பாடல் உமாபதிசிவாசார்யர் செய்த தென்பது நிச்சயமானால், அவர் பதினான்காம்

நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தவரென்பது திண்ணமாதலால், இவர் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவரென்பது, தேற்றம். சிலாசாசனவாராய்ச்சியாலும் மற்றும் சில காரணத்தாலும் சேனாவரையருடைய சமகாலத்தவரும், அவருக்குப் பிராயத்தினால் சிறிது குறைந்தவருமாகி கி. பி. 1272 இல் வாழ்ந்திருந்தவர் இவரென்று லெக்விகன்தலைமைப்பண்டிதர் ழ. ராகவய்யங்கார்ஸ்வாமிகள் சாஸனத்தமிழ்க்கவிசரிதம் என்ற நூலில் எழுதியுள்ளனர்.

எட்டுத்தொகையுள் ஒன்றான பரிபாடலுக்கும் இவர் உரையெழுதியுள்ளார். திருமுருகாற்றுப்படைக்குப் பரிமேலழகருரை யென ஒருரை வழங்குகிறது: அது திருக்குறள் பரிமேலழகருரை நடையினும் மிக்க வேறுபாடுடையது; ஆதலின் அது இவர் செய்ததன் றென்பர்.

குடிமையென்ற அதிகாரத்தில், "பழங்குடி"என்றஇடத்தில்,'தொன்று தொட்டு வருதல் - சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டுவருதல்' என்று இவர் தமிழ்நாட்டு மூவேந்தர்களைச் சிறப்பித்துக் கூறியிருத்தலால், இவர்க்கு உள்ள தேசாபிமானமும், பாஷாபிமானமும், ராஜாபிமானமும் வெளியாம்.

இந்தப் பரிமேலழகருடைய உரைநடை, செய்யுளுக்குப் * பொழிப்புரையாக அமைந்துள்ளது; ஓரதிகாரத்திற்கும் மற்றோரதிகாரத்திற்குமுள்ள இயைபை எடுத்துக்காட்டுவது; ஒவ்வோரதிகாரத்துமுள்ள பத்துப்பாடல்களும் இன்ன இன்ன பொருளன என்று சில இடத்துத் தொகுத்தும், சில விடத்துத் தனிப்படவும் எடுத்துக்காட்டுவது; பதசாரத்தை விளக்கிச் செல்வது; பண்டையநூல்களின் சொற்பொருளே ஆங்காங்குத் தழுவியெழுதப்படுவது; வேறுபொருள் தக்கதாயின் அதனை எடுத்துக் காட்டுவதோடு தகாதாயின் அதனைக் காரணங்காட்டி மறுப்பது; நுண்ணிய இலக்கணப் பொருளைத் தெரிவிப்பது; பலஅரிய வடநூற் பொருள்களைத் தமிழர் உணருமாறு தெள்ளிய இனியநடையிற் றெரிப்பது; கற்போர்க்கு விளங்கும் பொருட்டு ஔவையுண்டநெல்லிக்கனி இந்திரன்பிறர்மனைநயந்துபெருமையிழந்தமை என்றாற் போன்றவைகளை உதாரணமாகக் கொண்டது; நுண்ணிதாயாராய்ந்து செல்வதால், மதிநுட்பமுடையவர்க்கே எளிதில் விளங்குவது.

திருக்குறளுக்கு இவர் செய்த இவ்வுரை 'பரிமேலழகியார்விருத்தி' என்ற பெயரால் வழங்கப்பட்ட தென்று எட்டுப்பிரதிகளினால் தெரிகிறது.

---

* அப்பொழிப்புரை, இடையிடையே பதங்களையமைத்து, பதவுரையாக இப்பதிப்பில் அச்சிடப்பட்டிருக்கிறது.

அறத்துப்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின் அட்டவணை.

பாயிரம்.

1. கடவுள்வாழ்த்து 4
2. வான்சிறப்பு 15
3. நீத்தார்பெருமை 21
4. அறன்வலியுறுத்தல் 30

இல்லறவியல்.

5. இல்வாழ்க்கை 37
6. வாழ்க்கைத்துணைநலம் 42
7. புதல்வரைப்பெறுதல் 47
8. அன்புடைமை 53
9. விருந்தோம்பல் 59
10. இனியவைகூறல் 64
11. செய்ந்நன்றியறிதல் 70
12. நடுவுநிலைமை 77
13. அடக்கமுடைமை 84
14. ஒழுக்கமுடைமை 90
15. பிறனில்விழையாமை 96
16. பொறையுடைமை 102
17. அழுக்காறாமை 107
18. வெஃகாமை 113
19. புறங்கூறாமை 119
20. பயனிலசொல்லாமை 125
21. தீவினையச்சம் 130
22. ஒப்புரவறிதல் 139
23. ஈகை 146
24. புகழ் 155

துறவறவியல்.

விரதம்:—

25. அருளுடைமை 164
26. புலான்மறுத்தல் 172
27. தவம் 179
28. கூடாவொழுக்கம் 185
29. கள்ளாமை 193
30. வாய்மை 202
31. வெகுளாமை 208
32. இன்னாசெய்யாமை 215
33. கொல்லாமை 223

ஞானம்:—

34. நிலையாமை 233
35. துறவு 242
36. மெய்யுணர்தல் 251
37. அவாவறுத்தல் 261
38. ஊழ் 269

திருக்குறள்.

'திரு' என்பது சிறப்புப்பொருளுணர்த்தும். சிறுமையுணர்த்துங் குறளென்னும் பண்புப்பெயர் - ஆகுபெயராய், வெண்பாவிற் சிறுமையையுடையதாகிய இரண்டடிப்பாவை உணர்த்தி, பின் கருவியாகுபெயராய், அக்*குறள் வெண்பாவாலாகிய நூலை உணர்த்தி, இந்நூற்குக் காரணப்பெயராயிற்று; இது - இருமடியாகுபெயர்.

தொல்காப்பியத்திற் செய்யுளியலில் ஆசிரியர், பா நான்கென்றும் அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறி, பின்பு அம்மை முதலிய எட்டும் [அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன] தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கண மென்று கூறுகின்ற இடத்து, "வனப்பியல்தானே வகுக்குங் காலைச், சின்மென் மொழியால் தாய பனுவலோடு, அம்மை தானே அடிநிமிர் பின்றே" என்ற சூத்திரத்தால், 'சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம்' என்று கூறினமையின், இந்நூல் அங்ஙனங்கூறிய அம்மையா மென்று உணர்க. இன்னும் அச்சூத்திரவுரையில், பேராசிரியர், 'அடிநிமிராது என்றது, ஐந்தடியின் ஏறாது என்றவாறு. தாயபனுவலோடு என்றது, அறம்பொருளின்பமென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப: வேறு இடையிடை அவை யன்றியுந் தாய்ச் செல்வது என்றவாறு. அஃதாவது - பதினெண் கீழ்க்கணக்கு என உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம்பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்றுவருமாறும், கார்காற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டுகொள்க' என்றதும் அறியற்பாலது.

---

* குறள் வெண்பாவாவது-இரண்டு அடியாய், ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் வரப்பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையுங் கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெருமல், காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளில் ஒன்றில் முடிந்து, ஒருவிகற்பத்தாலாயினும், இருவிகற்பத்தாலாயினும் வருவதாம். [அகவற்சீர் என்றது, ஈரசைச் சீர்களை. வெண்சீர் வெண்டளையாவது - காய்முன் நேர் வருவது: இயற்சீர்வெண்டளையாவது - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது; "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை." ஒருவிகற்பமாவது - ஓர் எதுகையாய் வருவது; இருவிகற்பமாவது - இரண்டு எதுகை வருவது.]

திருக்குறள்.

பரிமேலழகருரை.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை - அறம், பொருள், இன்பம், வீடு என்பன: அவற்றுள், வீடென்பது - * சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது, இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன, எனை மூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது - மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலுமாம்; அஃது - ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள், ஒழுக்கமாவது - அந்தணர் முதலிய வருணத்தார் தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று அவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்; வழக்காவது - ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் செல்வது: அது - கடன்கோடல்முதற் பதினெட்டுப் பதத்ததாம்; தண்டமாவது - அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினுரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு † ஒப்பதாடி அதற்குத்தக ஒறுத்தல். இவற்றுள், வழக்குந் தண்டமும் உலகநெறிநிறுத்தற்பயத்தவாவது அல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பில வாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டு, தெய்வப்புலமைத் திருவள்ளுவரால், சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான் நால்வகைநிலைத்தாய் வருணந்

---

* தொல்காப்பியச்சிறப்புப்பாயிர உரையில் நச்சினார்க்கினியர் 'வீடுகூறாரோ வெனின்?—அகத்தியனுரும் தொல்காப்பியனுரும் வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறு ரென்று உணர்க: அஃது, "அந்நிலை மருங்கி னறமுத லாகிய, மும்முதற் பொருட்கு முரிய வென்ப"[3] என்பதனுன் உணர்க: இக்கருத்தானே வள்ளுவநாயனுரும் மும்பாலாகக்கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்' என உரைத்ததனால், நச்சினார்க்கினியரது கருத்து இவ்விஷயத்தில் வேறுதல் விளங்கும். தொல்காப்பியப் பொருளதிகார வுரைத் தொடக்கத்தில் 'இந்நிலையாமையானும் இவற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்' என்றதுங் காண்க.

† புறநா—10.

தோறும் வேறுபாடுஉடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி,இல்லறம் துறவறம் என இருவகைநிலையாற் கூறப்பட்டது;அவற்றுள், இல்லறமாவது - இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவது ஆதலின், அதனை முதற்கண் கூறுவான் தொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

(குறிப்புரை.) அறத்துப்பால்-தருமத்தையுணர்த்தும் பாகம்; இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இந்திரன் முதலிய இறையவர் பதங்கள் - போகஸ்தானங்கள்; இறையவர் - தேவர்கள், பதம் - இடம். அந்தமில் இன்பத்து அழிவுஇல் வீடு - நலமந்தமில்லாதோர் நாடு; அந்தம்-முடிவு; அந்தம்இல் இன்பம் - எல்லையில்லாத இன்பம். எய்துதல்-அடைதல். மாந்தர் - மனிதர். உறுதி - நிலையான நன்மை; உறுதிதருவதனை 'உறுதி' என்றது-காரியவாகுபெயர். பொருள்-புருஷார்த்தம்; ஜீவனுல் வேண்டப்படும் பயன். அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை, முறையே, வடநூலார், தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்பர். சிக்ஷையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்து-மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாததன்மையது. நூல்-சாஸ்திரம்.' அறம்-(இன்னது செய்யத் தக்கது என நூல்களினுல்) வரையறுக்கப்பட்டது: அறு - பகுதி, அம் - செயப்படுபொருள் விகுதி; இதற்கு எதிர்மொழி - மறம்: அதருமம்; அதற்கு - (இன்னது செய்யத்தகாதது என நூல்களினுல்) மறுக்கப்பட்ட தென்பது பொருள். ஒழுக்கம் வழக்கு தண்டம் என்பவற்றை, வடநூலார், முறையே, ஆசாரம் வியவகாரம் பிராயச்சித்தம் என்பர். அந்தணர் - பிராமணர். வருணம் -சாதி. 'முதலிய' என்றதனுல், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலியோரைக் கொள்க. பிரமசரியம்-ஆசிரியனிடத்து ஓதிக் கற்று விரதங்காத்து விவாகமின்றி யிருக்கும் நிலை; நிலை-ஆச்சிரமம். 'முதலிய' என்றதனுல், கிருகஸ்தம், வாநப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன கொள்க. கிருகஸ்தம் - இல்லறத்தின் வழுவாது மனைவியோடும் இல்லத்திற் கூடி வாழும் நிலை. வாநப்பிரஸ்தம்-இல்லந்துறந்து மனைவியோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ்செய்யும் நிலை. சந்நியாசம்-முற்றத்துறந்த நிலை. கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்தது-கடன்வாங்குதல், அடைக்கலமாகவைத்த பொருள், உடையனல்லாதவன் விற்றல், கூடிமேம்படுதல்,கொடுத்ததை மீண்டுங்கொடாமை, கூலிகொடாமை, கட்டுப்பாடுகடத்தல், விற்றுங்கொண்டும் உள்ளம் ஒப்பாமை, ஒப்பிப் பணிசெய்யாமை, எல்லை வழக்கு, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, திருடு, வன்செய்கை, மாதரைக் கவர்தல், மாதர் ஆடவர் தருமம், தாயபாகம், சூது எனப் பதினெட்டு வகையது. வழீஇயினுர் - தவறிநடந்தவர். ஒப்பீநாடி-பக்ஷபாதமில்லாமல் ஆராய்ந்து. ஒப்ப-சமமாக, நடுவுநிலைமையாக. அதற்குத் தக ஒறுத்தல்-அத்தக்க குற்றத்திற்குத் தக்கபடி தண்டித்தல். உலகநெறி நிறுத்தற்பயத்த ஆவது

அல்லது - இவ்வுலகவழியிலே உயிர்களை நிலைநிறுத்துதலாகிய பிரயோசனத்தைக் கொண்டிருப்பனவாவது அல்லாமல். உறுதிபயத்தற்சிறப்பில - நன்மை தருஞ் சிறப்பை யுடையனவல்ல. தேய இயற்கை - நாட்டுநடத்தை. ஈண்டு - இங்கே. புலமை - அறிவு. முதற்கண் - முதலில். கூறுவான் - சொல்ல. இலக்கியம் - லக்ஷ்யம்.

அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் இல்வாழ்க்கைநிலை முந்திய தாதலின் முன்பும், அதனைத் துறக்கும்நிலை பிந்தியதாதலின் அதன்பின்பும் வைக்கப்பட்டன வென்க.

"மூன்றுறுப்படக்கிய தன்மைத்தாயின், தோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப" என்னுந் தொல்காப்பியத்துச் செய்யுளியற் சூத்திரத்தின் படி, திருக்குறள், பால் இயல் அதிகாரம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கியதொருபிண்டமா மென்று உணர்க.

பாயிரம்.

முதல் அதிகாரம்.—கடவுள் வாழ்த்து.

அஃதாவது-கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல்; அவற்றுள், இவ்வாழ்த்து-ஏற்புடைக்கடவுளே யென அறிக: என்னே?—சத்துவம்முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளரோடு இயைபு உண்டாகலான், அம்மூன்றுபொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறிஞ ரென உணர்க.

(கு - ரை.) வழிபடுகடவுள்-குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கப்படுகிற கடவுள்; வைஷ்ணவர்க்கு விஷ்ணுவும், சைவர்க்குச் சிவனும், ஜைநர்க்கு ஜிநனும், பௌத்தர்க்குப் புத்தனும் போல்வன. எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுள்-தான் செய்யத்தொடங்கிய நூலிற் சொல்லப்படும் விஷயத்திற்குத் தகுதியுடைய கடவுள்; இராமாயணத்திற்கு இராமனும், பாரத பாகவதங்களுக்குக் கண்ணனும், கந்தபுராணத்துக்குச் சுப்பிரமணியனும் போல்வன. என்னே-என்னவென்றால். சத்துவம் முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப்பொருள்-சாத்துவிக குணத்தால் அறமும், இராஜசகுணத்தாற் பொருளும், தாமசகுணத்தால் இன்பமு மாகிய புருஷார்த்தங்கள். அவற்றான் மூவராகிய முதற் கடவுள்-அக்குணங்களால் விஷ்ணு பிரமன் சிவன் என்னுந் திரிமூர்த்திகளின் சொரூபியதாகிய பரபிரஹ்மம். இயைபு - சம்பந்தம்.

அதிகாரம்-அதிகரித்தல்; அது இருவகைப்படும்: அவற்றுள் ஒன்று-அரசன் தான் இருந்த இடத்திலே இருந்து தன் நாடு முழுவதும் தன் கட்டளை

யில் கடக்கச் செய்தல்போல, ஒருசொல் நின்றஇடத்தே நின்று பல செய்யுட் கள் தன் பொருளையே சொல்லிவரும்படி செய்வது; மற்றொன்று-அங்கங்குச் சென்று கட்டளை நிறைவேற்றும் அதிகாரிகள் போல ஓரிடத்து நின்ற சொல் பல செய்யுட்களோடுஞ் சென்று இயைந்து தன் பொருளையே கூறுவிப்பது: [இவற்றை முறையே வடநூலார் யதோத்தேசபக்ஷ மென்றும், காரியகால பக்ஷ மென்றுங் கூறுவர்.] அவற்றுள் இங்கு அதிகாரம் என்றது, முதலிற் கூறியவாறு ஒரு பொருளையே குறித்துவரும் பல செய்யுட்களின் தொகுதி யாகிய நூற்கூறுபாட்டை. பால் இயல் என்பவற்றிற்கும் இதுவே பொருளா யினும், இந்நூலில் சங்கேதத்தால், பால் என்றது-பெரும்பிரிவுக்கும், இயல் என்றது-அதற்கு உட்பட்ட சிறு பிரிவுக்கும், அதிகாரம் என்றது-அதன் உட் பிரிவுக்குமாகக் கொள்ளப்பட்டது. அதிகாரம்-வடசொல். இதற்கு-முறைமை யென்று பொருள்கூறுவர் நச்சினார்க்கினியர்.

கடவுள் - மனமொழிமெய்களைக் கடந்த பரம்பொருள்; கடவுள்-தொழிற் பெயர்: கட - பகுதி, உள் - விகுதி; கடத்தலையுடைய பொருளுக்குத் தொழி லாகுபெயர். வாழ்த்து - பிறவினை முதனிலைத்தொழிற்பெயர். கடவுள்வாழ் த்து நூலிற்கு முதலிலிருத்தல் அதிகாரமுறைமை என்று அறிக.

பாயிரம், முகவுரை, நூன்முகம், புறவுரை என்பன ஒருபொருட்சொற் கள். பொதுப்பாயிரமென்றும், சிறப்புப்பாயிர மென்றும் பாயிரம் இருவகைப் படும். தன்னூலுரைக்கப்படும் ஒரு நூலுக்கு மாத்திரமே உரியதன்றிப் பலநூல் களுக்கும் பொதுப்பட உரைக்கப்படுவது பொதுப்பாயிரம். அங்ஙனமன்றித் தன்னூலுரைக்கப்படும் ஒருநூலுக்கே உரியதாம்படி உரைக்கப்படுவது சிறப் புப்பாயிரம். இந்நூலின் முதல் நான்கு அதிகாரங்களைச் சிற்சில காரணங்க ளால் இருவகையாகவுங் கொள்ள இடமுண்டாதல்பற்றி, அவை,பாயிரமெனப் பொதுப்படக் கூறப்பட்டன. இப்பாயிரத்தை அறத்துப்பாலினுட்பட்ட தென் பர் ஒருசாரார்; மற்றொருசாரார் அதற்கு வெளிப்பட்ட தென்பர். திருவள் ளுவமாலையில் தொடித்தலை விழுத்தண்டினார் ''அறநான்கு'' என்றதனால், அறத்துப்பாலி னுட்பிரிவுகள் நான்கு என விளங்கும்; அவை இன்னவை யென்பதை அத்திருவள்ளுவமாலையில் ''பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன் மூன்றே, தூயதுறவறம் ஒன்று ஊழ் ஆக—ஆய, அறத்துப்பால் நால்வகை யாஆய்த்துரைத்தார் நூலின், திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து'' என்று எறிச்சலூர் மலாடனார் கூறியதனால் விளங்கும். இவை, 'அறத்துப்பாலி னுட் பட்டது பாயிரம்' என்பதற்கு ஆதாரமாம். அதற்கு வெளிப்பட்ட தென்ப தற்கு ஆதாரம் - அத்திருவள்ளுவமாலையில், ''வீடொன்று பாயிரம் நான்கு விளங்கு அறம், நாடிய மூப்பத்துமூன்று ஒன்று ஊழ்'' என்று சிறுமேதாவி யார் கூறியது காண்க; அதன் உரையில்'அறத்துப்பாலுள் அடங்காதுஅதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின், 'வீடொன்று பாயிரம்' என்று கூறினார்' என்றதும் இங்கு அறியத்தக்கது. ஆகவே, இருவகையும் தொன்று தொட்டு வழக்க மென விளங்கும்.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன்பொருள்.) அகரம் முதல - அகரமாகிய முதலெழுத்தையுடையன, எழுத்து எல்லாம் - எழுத்துக்க ளெல்லாம்; (அதுபோல), ஆதி பகவன் முதற் று - ஆதிபகவனுகிய முதலே யுடைத்து, உலகு—; (என்றவாறு.)

இது, தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை - விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை - செயற்கையுணர்வா னன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கே யன்றி வடவெழுத்திற் கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லாம்' என்றார். 'ஆதிபகவன்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வடநூல்முடிபு. 'உலகு' என்றது, ஈண்டு உயிர்கள்மேல் நின்றது. காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என உலகின் மேல் வைத்துக் கூறினார்: கூறினுரேனும், 'உலகிற்குமுதல் ஆதிபகவன்' என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் - தேற்றத்தின்கண் வந்தது.

இப்பாட்டான், முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஆதி பகவன் - முதற் கடவுள். பகவன் - பகவாக் என்னும் வடமொழியின் விகாரம்; நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐசுவரியம், ஞானம், வைராக்கியம் என்கிற ஆறுகுணங்களுக்கும் 'பகம்' என்று பெயராதலால், பகவானென்பதற்கு, இந்த ஆறுகுணங்களையு முடையவனென்று பொருள். ஆதிபகவன் என்பது-வடமொழிப் புணர்ச்சி யாதலால், வலி மிகவில்லை. உடைத்து - உடையது. எடுத்துக்காட்டுவமையாவது - உபமானத்தையும் உபமேயத்தையும் வேறு வேறு வாக்கியங்களாக நிறுத்தி இன்னது உபமானம்- இன்னது உபமேயம் என்பது தோன்ற இடையில் உவமவுருபு கொடாமற் கூறும் அணி: இதனை உவமையணியில் அடக்குதல் தமிழ்நூலார் கொள்கை: வடநூலாருள் ஒருசாரார் த்ருஷ்டாந்தாலங்கார மென வேறு கக்கூறுவர்; ஆசிரியர் தொல்காப்பியனுர் வேறுபடவந்தஉவமத்தோற்றத்தில் அடக்குவர். எடுத்துக்காட்டுவமையில் உபமான உபமேயவாக்கியங்களைத் தனித்தனி நிறுத்தும்போது பொதுத்தன்மை வேறுபட்டிருக்கவேண்டுமாதலாலும், இச்செய்யுளில் பொதுத்தன்மையாகிய முதன்மையாதலென்பது அங்ஙன் வேறுபட்டிராமையாலும், இது எடுத்துக்காட்டுவமையணியன்று: தொடரீழதுவமையணி யாகுமென்பர், ஒருசாரார்: தண்டியாசிரியர் இதனை, மறுபோருஞவமையென்பர். தலைமை-முதன்மை. விகாரத்தான் அன்றி நாத மாத்திரையான இயல்பாற் பிறத்தல் - ஒலியின் வேறுபாட்டினுற் பிறவாமல் வாய்திறத்தலும் ஒலிமாத்திரமாகிய இயற்கையாற் பிறத்தல். இதுபற்றியே, "மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில், கடவுள்எல்லாச் சராசரப் பொருள்களிலும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு போல அகரம் எல்லா எழுத்துக்களிலுங் கலந்து அவற்றின் தன்மை

யாய் நிற்கும் என்றது; ஸ்ரீபகவத்கீதையில் கண்ணன் "எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே" எனக் கூறியவாறுங் காண்க. அன்றியும், பாஷையை அமைத்தற்குத் தொடுத்த ஒலிகளுள் அகரம் முதல்நாதம் என்பது, அனுபவ சித்தம். வாமந புராணத்தில் 'அகரம் எல்லாச்சொற்களுக்கும் மூல மாதலாலும், பிரஹ்மம் எல்லாப் பொருள்களுக்கும் மூல மாதலாலும், அ என்று பரபிரஹ்மத்துக்குப் பெயர்' என்று கூறியிருக்குமாறு அறிக. நாதம் - உயிர்முயற்சியா லெழுகிற சமாநவாயுவினால் ஆவது. செயற்கை யுணர்வான் அன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தல்-(கல்வி கேள்வி முதலியவற்றால் ஆகுஞ்) செயற்கை யறிவினை லல்லாமல் இயற்கை யறிவினால் எல்லாம் அறிதல். இருபெயரொட்டுப்பண்புத்தொகை யாவது - 'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே தொக்கு நிற்கச் சிறப்புப்பெயரும் பொதுப்பெயருமாய் ஒருபொருளைக் குறிக்கிற இருசொற்கள் தொடர்ந்து நிற்பது. ஈண்டு - இங்கே. உலகு என்பது லோகமென்னும் வடமொழியின் திரிபு என்று சேனாவரையர் கொள்கை; தமிழ்ச்சொல்லேயாகு மென்பது, நச்சினார்க்கினியர் மதம்: இது இடத்தை யுணர்த்தும்பொழுதிற் போல உயிர்களை யுணர்த்தும்பொழுதும் ஆகுபெயர் என்று இயற்பெயரே என்பது, இருவர்க்கும் ஒப்பமுடிந்தது: வடநூலார் கொள்கையும் இதுவே. உலகு என்னும் பலபொருளொருசொல் ஜீவாத்மாக்களை உணர்த்துதலை "உலக மூவப்ப வலனேர்பு திரிதரு" என்னுந் திருமுருகாற்றுப் படையிலுங் காண்க. இனி, இங்கே, உலகு என்பது - இரட்டிற மொழிதலால், உலகங்களையும் அவ்வுலகத்துப் பொருள்களையும் உணர்த்திற் றென்று கொள்ளுதலு மாம். உண்மை - இருப்பு. காணப்படும் புகையைக் கொண்டு நெருப்பு உண்டு என அறிவுப் அநுமாநப் பிரமாணத்தால், காணப்படும் உலகத்தோற்றத்தைக் கொண்டு அதற்குக் காரணமாகிய கடவுளொருவ ருண்டென்று கொள்ள வேண்டுமென்க: இது, நையாயிகர் மதம். தேற்றம் - உறுதி. எல்லா நூல்களும் மங்கலமொழி முதல்வகுத்துக் கூறவேண்டுதலால், 'அகரம்' என்று தொடங்கினார்; காத்தற்றொழிற்கு உரிய கடவுளாகிய திருமாலின் திருநாமங்களில் அகரம் முதன்மையான நாம மாதலால், மங்கலச்சொல்லாமென்று அறிக. அகரமுதல், பகவன்முதல் - இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். முதல - பலவின்பாற் குறிப்பு முற்று; முதல்-பகுதி. இதன் ஒருமை-முதற்று. எழுத்து - எழுதப்படுவதென்னும் பொருளில் செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர்: இனி, பகவன்-ஐந்து ஞானத்துள்ளுஞ் சிறந்த நிரிகால உணர்ச்சியாகிய கேவலஞான முடையவனென்று கூறி, அருகக்கடவு ளென்று உரைப்பாருமுளர்; "செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்" என்பர். சிலப்பதிகாரத்தும். இனி, "அந்தமி லாதியம் பகவன்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்திருத்தலால், பகவன் - திருமால் என்றும் பொருள்கொள்ளலாம். (க)

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

(இ - ள்.) கற்றதனால் ஆய பயன் என் - (எல்லாநூல்களையுங் கற்ற வர்க்கு) அக்கல்வியறிவான் ஆய பயன் யாது? வால் அறிவன்-மெய்யுணர் வினையுடையவனது, நல் தாள்-நல்ல தாள்களை, தொழாஅர் எனின்-தொழா ராயின்; (எ - று.)

எவன் என்னும் வினுப்பெயர் - என் என்று ஆய், ஈண்டு, இன்மை குறித்துநின்றது. கொல்என்பது - அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந் தாகலின், 'நற்றாள்' என்றார்.

ஆகமவறிவிற்குப்பயன் அவன்தாளைத்தொழுது பிறவியறுத்த லென்பது இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்யுணர்வு-உண்மையறிவு; ஐயம் திரிபு இல்லாத அறிவு: தத்துவஞானம். 'எவன்' என்பது வினுப்பெயர்:இது, அஃறிணை யிருபாலுக் கும் பொது;உயர்திணை யன்று;இதனை, வினுப்பொருளைத் தரும் குறிப்புவினை முற்றுவினையுமாம். 'எவன்'என்பது என் என்று ஆனது,தொகுத்தல் விகாரம். இன்மை-இல்லாமை. கொல்-இடைச்சொல். அசைநிலை யாவது-ஒருபொருளை யும் உணர்த்தாமற் பெயர்ச்சொல்லோ டாயினும் வினைச்சொல்லோ டாயினுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றல். பிறவிப் பிணிக்கு மருந்து - பிறப்புத்துன் பங்களாகிற நோயை ஒழித்தற்கு மருந்து போல்வது. ஆகம அறிவு - சாஸ்தி ரங்களைக் கற்றதனு லாகிய அறிவு. இதனால் - இப்பாட்டால். ஆய - பெய ரெச்சம். தொழாஅர் - அளபெடை, செய்யு ளோசை நிறைக்க வந்தது. இனி, "அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்" எனச் சிலப்பதிகாரத்து வருத லால், வா லறிவன்-எல்லாப் பொருளையும் அறியுந் தூய அறிவை யுடையவ னென்று, அருகக்கடவு ளென்பாரு முளர். இனி, "அடலாழி கொண்ட அறி வன்" என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், அறிவன் - திருமா லென் றுங் கொள்ளலாம். (உ)

கூ. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ - ள்.) மலர்மிசை ஏகினான் - மலரின்கண்ணே சென்றவனது, மாண் அடி - மாட்சிமைப்பட்ட அடிகளை, சேர்ந்தார்—, —மிசை நிலம்-(எல்லாஉல கிற்கும்)மேலாய வீட்டுலகின்கண், நீடு வாழ்வார்-அழிவின்றிவாழ்வார்;(எ-று.)

அன்பான் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடி வோடு விரைந்துசேறலின், 'ஏகினான்' என இறந்தகாலத்தாற் கூறினார்; என்னை?—"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வருஉம் வினைச் சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்த பொருள வென்மனார் புலவர்" என்பது ஒத்தாகலின். இதனை, 'பூமேல் நடந்தான்'என் பதோர் பெயர் பற்றிப் பிறிதொருகடவுட்கு ஏற்றுவாரும் உளர். சேர்தல்- இடைவிடாது நினைத்தல்.

(கு - ரை.) மலரின்கண் - மலரில்: என்றது, இருதய கமலத்தை. மலர்போலும் வடிவமுடைய நெஞ்சை 'மலர்' என்றது, உவமையாகுபெயர். மிசை - ஏழனுருபு. சென்றவன் - விரைந்துவந்துவீற்றிருப்பவன். மாட்சிமைப்பட்ட - பெருமை பொருந்திய. அடி - பாதம். சேர்ந்தார் - மனத்தாற் கிட்டினவர். நிலமிசை - மிசை நில மென மாறுக. நீடு - நீடித்து; நெடுங்காலம்: பகுதியே வினையுரியாய் நின்றது. நினைவார்-தியானிப்பவர். சேறலின் - செல்லுதலினால். ''வாராக் காலத்து'' என்னும் தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துக்குப் பொருள் - எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒரு படியாக வருகிற வினைச்சொல்லாகிய சொல்லின்பொருளே இறந்தகாலத்தாற் குறிப்போடு சொல்லுதல் விரைவுப்பொருளே யுடையன என்று சொல்லுவர் ஆசிரியர் என்பது; நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் விரைவுபற்றி இறந்தகாலமாகச் சொல்லலாமென்பது கருத்து: இது, காலவழுவமைதி;[நன். பொது. ஈஈ.] ஒத்து - இலக்கணம். அருகக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக்கொண்டு அதனை ஊர்ந்து சென்றனனென்று ஜைநநூல்களிற் சொல்லப்படுதலால், 'பூமேல் நடந்தான்' என்று அக்கடவுளுக்கு ஒருபெயர்: அதனை, ''தேனவிழ்த் தளிக ளெல்லாஞ் செவ்வழி பாடா நின்ற, பூநகைத் திலங்கு கஞ்சப் பொகுட்டின்மீதே யொதுங்கும், நான்முகக் கடவுள்,'' ''மடலவிழ் கமலவூர்தி வந்த வாமன்,'' ''நாண்மலர்வான்,மீயகத்தே வர மேற்கொள்ளுந் தேவர்,'' ''மலரேந்து சேவடிய மால்,'' ''செய்ய தாமரையி,னங்க ணடிவைத் தருளு மாதியாய்,'' ''மலர்மிசை நடந்த மலரடி'' என்பன காண்க. எல்லா மலர்களினும் தாமரை சிறத்தல் பற்றி, 'மலர்' எனப்பட்டது; ''பூவெனப்படுவது பொறி வாழ் பூவே'' என்பது காண்க; (பொறி - இலக்குமி.) ''மணனக மலமற மலர்மிசை யெழுதரு, மணனுணர் வளவிலன்'' என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், மலர்மிசை ஏகினான்-திருமால் என்றுமாம்.

சு. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ - ள்.) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி - (ஒருபொருளையும்) விழைதலும்வெறுத்தலும் இல்லாதவன் அடியை,சேர்ந்தார்க்கு—,யாண்டுமும்-எக்காலத்தும், இடும்பை - பிறவித்துன்பங்கள், இல - உளவாகா; (எ - று.)

பிறவித்துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிற வுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வருந் துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

(கு - ரை.) விழைதல் - விரும்புதல். உளவாகா-இல்லையாம். தன்னைப்பற்றி வருவன - சரீரத்தைப்பற்றி வருந் தலைநோய் முதலியவும், மனத்தைப்பற்றிய காமம் கோபம் முதலியவும்; இவை, ஆத்யாத்மிகம் எனப்படும். பிறவுயிர்களைப்பற்றி வருவன - மனிதர் விலங்கு பிசாசு முதலியவற்றால் நேர்பவை; இவை, ஆதிபௌதிகம் எனப்படும். தெய்வத்தைப்பற்றிவருவன -

காற்று மழை இடி வெயில் முதலியவற்றால் சேர்பவை; இவை, ஆதிதைவிகம் எனப்படும். இவற்றை, வடநூலார் தாபத்திரயமென்பர். அவ்விரண்டும் - வேண்டுதலும் வேண்டாமையும். வேண்டுதல்வேண்டாமை-உம்மைத்தொகை. சேர்ந்தார்க்கியாண்டும் - சூத்தியவிகாரம், அலகு பெற்றுநின்றது. யாண்டும், உம்மை - முற்றுப்பொருளது. 'யாண்டு மில' என்றதனால், கடவுளைத் தியானித்து மனஞ்சலிப்பின்றி நல்லொழுக்கத்தில் நிற்பவர் இம்மையில் தமக்கு நேருந் துன்பங்களை மனந் தளராமல் பொறுப்பாரென்பதும்; மறுமையில் வீடுபெறுதலால் அத்துன்பம் விட்டகலும் என்பதும் பெற்றும். ''பகை ணண்பொ டில்லான்'' என்று சீவகசிந்தாமணியில் அருகக்கடவுளைக் கூறியிருத்தலால், வேண்டுதல் வேண்டாமையிலான் என்பதற்கு - அருகக்கடவுளென்று கூறுவாரு மூளர். ''கொள்கை கொளாமை யிலாதான், எள்கலிராக மிலாதான்'' என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், வேண்டுதல் வேண்டாமையிலான் - திருமாலாகவுமாம். (ச)

ரு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ - ள்.) இருள் சேர்-மயக்கத்தைப்பற்றி வரும், இரு வினைஉம்-(நல்வினை தீவினை என்னும்) இரண்டுவினையும், சேரா - உளவாகா : இறைவன்-இறைவனது, பொருள் சேர் புகழ் - மெய்ம்மைசேர்ந்த புகழை, புரிந்தார் மாட்டு - விரும்பினாரிடத்து; (எ - று.)

இன்னதன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலான் 'இருவினையுஞ் சேரா' என்றுங் கூறினார். இறைமைக்குணங்கள் இலராயினுரை உடைய ரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேரா ஆகலின், அவை முற்றும் உடைய இறைவன் புகழே 'பொருள்சேர் புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்.

(கு - ரை.) மயக்கமாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லை யெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் பொய்ந்நூல் வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல்; குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றைப் பிறிதொன்றுகத்துணிதலும், அது: மயக்கம், அவித்யை, விபரீத ஞானம், மருள், இருள் என்பன-ஒருபொருட்சொற்கள். கருமங்களுக்கு அவித்யை காரணமாதலை ''பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும், மருளானும் மாணாப் பிறப்பு'' என மேல் மெய்யுணர்த லென்னும் அதிகாரத்துட் கூறுவதனாலும் உணர்க. இங்கே 'நல்வினை' என்றது, அழியுந் தன்மையனவாகிய சுவர்க்க இன்பம் முதலிய காமியங்களைத் தருவனவாகிய யாகம்முதலியவற்றின் பயனை; இவை, முத்திக்கு நேரே காரணமாகிய தத்துவஞானத்தை உண்டாக்காமை மாத்திரமேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாமல் தடை செய்து நிற்றலு முடையனவாம்; ஆதலால், இந் நல்வினை தீவினை இரண்டும் ஒரு

வனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துவதிற் பொன்விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தம்முள் ஒப்பனவா மென்க; ஆனது பற்றியே, 'இரு வினையுஞ் சேரா' என்றார். இறைவன்-தலைவன். இறைமைக் குணங்கள் - தலைவனுதற்கு ஏற்ற முற்றுமறிதல் முதலிய நற்குணங்கள். உடையர்-அக்குணங்களை யுடையவர். சேரா-அஃறிணைப் பன்மை எதிர்மறை முற்று. மாட்டு - ஏழனுருபு. இரு வினையும், உம் - இனைத்தென் றறிபொருளில் வந்தது. சிலப்பதிகாரத்திலே அருகக்கடவுளின் நாமாவளியில் ''இறைவன்'' என்று ஒரு பெயர் கூறப்பட்டிருத்தலால், இங்கே அருகனென்று உரைப் பாரு முளர். "இருந்தா னென்னுள்ளத் திறைவன்" என்று ஆழ்வார் அருளிச்செய்தலால், இறைவன் - திருமாலாகவுமாம். (இ)

கூ. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ - ள்.) பொறி-(மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும்ஐம்)பொறிகளை, வாயில் - வழியாகவுடைய, ஐந்து - ஐந்து அவாவினையும், அவித்தான்-அறுத்தானது, பொய் தீர் ஒழுக்கம் நெறி - மெய்யான ஒழுக்கநெறியின் கண், நின்றார் - வழுவாதுநின்றார்,—நீடு வாழ்வார் - (பிறப்பின்றி) எக்காலத்தும் (ஒருதன்மையராய்) வாழ்வார்; (எ - று.)

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கண்செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழிக்கநெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின், ஆண்டை ஆறனுருபு - செய்யுட்கிழமைக்கண் வந்தது; 'கபிலரது பாட்டு' என்பதுபோல.

இவை நான்குபாட்டானும், இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலுஞ் செய்தார் வீடுபெறுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பொறி - பஞ்சேந்திரியம். அவா - பொருள்களின் மேலே தோன்றும் பற்றுள்ளம். அறுத்தான்-ஒழித்தவன். பொய் தீர் நெறி எனவே, மெய்யான நெறியாயிற்று. அறுத்தானது ஒழுக்க நெறி : அறுத்த கடவுளாற் சொல்லப்பட்ட வேதம் முதலிய நூல்களிற் கூறப்பட்ட நல்லொழுக்க முறைமை;என்றது,இங்கு, விதிப்படி அருச்சித்தல் பூசித்தல் முதலியவற்றை. புலன்கள் ஐந்து - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன; வடநூலில் ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் எனப்படும். ஆண்டை ஆறனுருபு - ஐந்தவித்தான் என்ற அவ்விடத்துத் தொக்கு நின்ற ஆறும் வேற்றுமை யுருபு. செய்யுட் கிழமை, பொருட்பிறிதின்கிழமைப்பொருளில் அடங்கும்; இதனைத் தொல்காப்பியனார் 'தெரிந்து மொழிச் செய்தி' என்பர். மூன்று நான்காம் பாட்டுக்களால் கடவுளை நினைத்தவர் வீடுபெறுவ ரென்றும், ஐந்தாம்பாட்டால் அவனை வாழ்த்தியவர் வீடுபெறுவ ரென்றும், ஆறும்பாட்டால் அவன் நெறிநின்றவர் வீடுபெறுவ ரென்றுங் கூறப்பட்டது. ஐந்து - அவாவுக்கு, எண்ணலளவையாகுபெயர். அவித்தான், நின்றார் - பெயர்கள். ஒழுக்கம்-தொழிற்பெயர். 'ஐந்தவித்தான்,' 'பொய்தீர்' என்பன - இயற்கையைச்

சொன்னவை. சிலப்பதிகாரத்து "ஐவரைவென்றோன்" என்று அருக னைக் கூறியிருத்தலால், ஐந்தவித்தான் - அருகக்கடவுள் என்பாரு முளர். 'இருடீகேசன்' என்னுந் திருநாமத்தின் கருத்தால், ஐந்தவித்தான் - திரு மால் என்றுங் கொள்ளலாம்; ஹ்ருஷீக ஈசன்-இந்திரியங்கட்குத் தலைவன்.

எ. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ - ள்.) தனக்கு உவமை இல்லாதான்-(ஒருவாற்றானுந்) தனக்கு நிக ரில்லாதவனது, தாள் - தாளை, சேர்ந்தார்க்கு அல்லால் - சேர்ந்தார்க்கு அல் லது, மனம் கவலை மாற்றல் - மனத்தின்கண் நிகழுந் துன்பங்களை நீக்குதல், அரிது - உண்டாகாது; (எ - று.)

"உறற்பால, தீண்டா விடுத லரிது" என்றாற்போல, ஈண்டு அருமை - இன்மைமேல் நின்றது. தாள்சேராதார் பிறவிக்கு ஏதுவாய காமவெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து இறந்து அவற்றான்வருந் துன் பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

(கு - ரை.) ஒருவாற்றானும் - ஒருவகையாலும். நிகர் - ஒப்பு. தாள் - திருவடி. நிகழும்-உண்டாகிற. "உறற்பால, தீண்டா விடுத லரிது" என்னும் மேற்கோள், நாலடியார் - பழவினை-கூ ஆம் செய்யுளில் உள்ளது; ஊழ்வினை யால் வரத்தக்க நன்மைதீமைகள் அடையாமல் விடுவதில்லை என்று பொருள். அரிது - இல்லை. அவற்றான் - காமம்முதலியவற்றால். உவமை=உபமா: வடமொழி. தனக்கு உவமையில்லாதான் - அருகக்கடவுள் என்பாரும் உளர். "ஓதாதார் மிக்காரை யியலாயமாமாயா" என்றும், "தன்னெப்பாரில்லப் பன்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்தலால், தனக்கு உவமையில்லாதான்-திருமா லென்றுங் கொள்ளலாம். ஒப்பில்லாதவனெனவே, உயர்வில்லாதவ னென்பது பெறப்படும். (எ)

அ. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(இ - ள்.) அறம் ஆழி அந்தணன்-அறக்கடலாகிய அந்தணனது, தாள்-தாளாகிய புணையை, சேர்ந்தார்க்கு அல்லால் - சேர்ந்தார்க்கு அல்லது, பிற ஆழி நீந்தல்-(அதனிற்) பிறவாகிய கடல்களை நீந்தல், அரிது—; (எ - று.)

அறம் பொருள் இன்பம் என உடன் எண்ணப்பட்ட மூன்றனுள் அறத் தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் 'பிற' எனப் பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடி வாக உடையனாகலின், 'அறவாழியந்தணன்' என்றார். அறவாழி என்பத னைத் தருமசக்கரமாக்கி, அதனையுடைய அந்தணன் என உரைப்பாரு முளர். அப்புணையைச்சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவ ராகலின், 'நீந்தலரிது' என்றார். இஃது, ஏகதேசவுருவகம்.

(கு - ரை.) அறக்கடல் என்பது, நீர்நிரம்பிய கடல்போலத் தருமம் நிரம்பியவை னென்றபடி. அந்தணன் - அழகாகிய தண்மையை யுடையவன்; தண்மை-அருள். பூணை-உதப்பம். பிறவாகிய கடல்கள் - பொருளும் இன்பமுமாகிய கடல்கள்; அவை, அளவில்லாதனவாதலால், கடலெனப்பட்டன. நீந்தல் - கடத்தல். ஏனை - மற்றை. தருமசக்கரத்தையுடைய அந்தணன் - அருகக்கடவுள். அப் பூணையை - தாளாகிய பூணையை. அவற்றுள் பொருளின்பங்களுள். பொருளின்பங்களாகிய கடத்தலே ஆழிநீந்த லென்றதற்கு ஏற்பத் தாளைப் பூண யென்ஞமையால், ஏகதேசநபகாலங்காரம்; அதாவது - ஒருபதுதியை உருவகப்படுத்தி மற்றொருபதுதியை உருவகப்படுத்தாமல்விடுவது: உருவகப்படுத்தல் என்பது, உவமானத்தையும் உபமேயத்தையும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென்பது தோன்ற வைப்பது. ஆழி - கடலை உணர்த்தும்பொழுது, ஆழ்ந்திருப்பதென்று பொருள்; இ - வினைமுதற் பொருள் விகுதி: சக்கரத்தை உணர்த்தும்பொழுது, ஆழி - வட்டம்: அதனை யுடையதென்று பண்பாகுபெயர்; (பகைவரை) அழிப்பதென்றும் பொருளாம். அறம் என்பதை - அரம்என்பதன் திரிபாகக் கொண்டால், ஆயிரம் அரங்களையுடைய சுதரிசனம்என்னுஞ் சக்கரத்தையுடைய திருமால் என்று பொருள்படும்; "அறவனை யாழிப்படையந்தணனை" என ஆழ்வார் அருளிச்செய்தலால், தருமஸ்வரூபியுஞ் சக்கரபாணியுமான திருமா லென்றுமாம். பிற ஆழி - அறத்தின் வேறுபட்டனவான பாவங்களாகிய கட லென்றுங் கொள்ளலாம். பிற என்பதை முதனிலைத்தொழிற்பெயராகக் கொண்டால், பிறப்புத்துன்பங்களாகிய கடலென்று ஆகும். (அ)

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளை வணங்காத் தலை.

(இ - ள்.) கோள் இல் - (தத்தமக்கு ஏற்ற புலன்களைக்) கொள்கையில்லாத, பொறியின் - பொறிகள்போல, குணம் இல - பயன்படுதலுடைய வல்ல: எண் குணத்தான் - எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது, தாளை - தாள்களை, வணங்கா - வணங்காத, தலை - தலைகள்; (எ - று.)

எண்குணங்களாவன - தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றும்உணர்தல், இயல்பாகவேபாசங்களின்நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை; இவ்வாறு, சைவாகமத்திற் கூறப்பட்டது. அணிமாவை முதலாகவுடையன எனவும், கடையிலா அறிவை முதலாகவுடையன எனவும் உரைப்பாரு முளர். 'காணுத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில' எனத் தலைமேல்வைத்துக் கூறினார்: கூறினுரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில என்பதாஉங் கொள்க.

இவை மூன்றுபாட்டானும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(சு - சை.) தன்வயத்தனுதல்-சுவதந்திரத்வம். தூய உடம்பின் ஞுதல்-விசுத்த தேகத்வம். இயற்கை யுணர்வின ஞுதல் - அநாதிபோதம். முற்றும் உணர்தல் - சர்வஜ்ஞத்வம். இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் - நிராமயத்வம். பேரருளுடைமை - அலுப்தசக்தி. முடிவிலாற்றலுடைமை-அநந்தசக்தி. வரம்பிலின்பமுடைமை-த்ருப்தி. அணிமாவைமுதலாக உடையன - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என இவை. அவற்றுள், மிகவும் நுண்ணியத்தால்-அணிமா. மிகவும் பருத்தல்-மகிமா. மிகவும்கனத்தல்-கரிமா. மிகவும்நொய்தாதல் - லகிமா. வேண்டுவனஅடைதல்-பிராப்தி. குறைவின்றி நிறைவுள்ளவனுதல் - பிராகாம்யம். யாவர்க்கும்மேம்பட்டிருத்தல் - ஈசத்வம். எல்லாவற்றையும் தன்வசமாக்க வல்லவனுதல் - வசித்வம். இவை, அஷ்டஐசுவரியங்களெனப்படும். கடையிலா அறிவை முதலாக உடையன - கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுஇன்மை, அழியாஇயல்பு என இவை; வடமொழியில் முறையே அநந்தஞாநம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்கோத்ரம், நிராயுஷ்யம், நிர்நாசம் எனப்படும்: இவ்வாறு ஆருகத நூலிற் கூறப்பட்டது. இனி, அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விசிகித்ஸத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம் என்றும்; வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஜ்ஞாநம், சக்தி; பிராப்தி, பூர்த்தி என்றும் வைணவ நூல்களுள் எட்டுக் குணங் கூறப்பட்டிருத்தலால், எண்குணத்தான்-திருமா லென்றுங் கொள்ளலாம். வணங்காத தலை என்றது - வாழ்த்தாத நாவிற்கும் உபலக்ஷணம்; உபலக்ஷணமாவது - ஒருமொழி, ஒழிந்த தன் இனத்தையுங் குறிப்பது. கீழிரண்டுபாட்டுக்களால் கடவுளே நிலையாமையா லுண்டாங் குற்றமும், இப்பாட்டால் அவனே வாழ்த்தாமையாலும் வணங்காமையாலு முண்டாங் குற்றமும் கூறப்பட்டன. கோள்-கொள்கை; விகுதிபுணர்ந்துகெட்டு முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பொறியின், இன் - ஐந்தாம்வேற்றுமையுருபு; ஒப்புப் பொருள். ஏ - தேற்றம். உத்தம அங்க மாதலால், தலை என்று சிரசுக்குப் பெயர். பார்வைமுதலிய புலன்களில்லாமற் கண்முதலிய உறுப்புக்கள் இருந்தும் பயன்படாதவாறு போல, கடவுளைவணங்காதவர்கள் மனிதவுடம் பெடுத்திருந்தும் அதன்பயன் பெறாதவரென்பது, இதன்கருத்து. இல் பொறி - பண்புத்தொகை. (க)

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

(இ - ள்.) இறைவன் அடி - இறைவன் அடியென்னும்புணையை, (சேர்ந்தார்), பிறவி பெரு கடல்-பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர்—; சேராதார் - (அதனைச்) சேராதார், நீந்தார்-நீந்தமாட்டாராய் (அதனுள் அழுந்துவர்); (எ - று.)

காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். 'சேர்ந்தார்' என்பது, சொல்லெச்சம்.

உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறிநினைப்பார்க்கு அஃதறுமையும் ஆகிய இரண்டும் இதனுல் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) அதனை - அடியென்னும் புணையை. அதனுள்-பிறவிப்பெருங்கடலுள். சொல்லெச்சமாவது - பாட்டில் சொல் குறைந்துநிற்பது. காரண காரியத் தொடர்ச்சியாய் - ஒருபிறப்பு மற்றொருபிறப்புக்குக் காரணமாதலும், மற்றொருபிறப்பு அதன்காரியமாதலு மாகிச் சம்பந்தப்பட்டு. உலகியல்பு - இவ்வுலக நடத்தை.

"பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா, நிறைவனடி சேராதார்"—'இது, சேர்ந்தார்நீந்துவ ரென எதிர்மறைகொண்டு முடிதலின், எதிர்மறை யெச்சமாயிற்று' என்பது, நன்னூற் பழைய வுரை. இனி, சேராது ஆர் எனப்பிரித்து, இறைவனடி சேராது ஆர் பிறவிப்பெருங்கடல் நீந்துவர்? (எவரும்) நீந்தார் என்று பொருள்கொண்டால், 'சேர்ந்தார்' என்ற எதிர்நிலை யெழுவாய் வருவிக்கவேண்டிய அவசியம் இல்லையாம். இவ்வுரையில், ஆர் நீந்துவர், நீந்தார் என இரண்டு வந்தது, வற்புறுத்துதற்கு என்க; 'உண்டோ உணர்ச்சி மற்றில்லாரும்",'வளம்படவேண்டாதார் யார் யாருமில்லை",'முனிவர் சொற் பொய்க்குமோ பொய்யாதே" என்றுற் போலக் கொள்க. ஆர்-யார் என்பதன் மரூஉ. இறைவன்-எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாய்த் தங்குகிறவன்; இறுத்தல் - தங்குதல். "எங்குமுளன் கண்ணன்" என்றும், "உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்றும் ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், இறைவன்-திருமால் என்றுங் கொள்ளலாம். பிறவி-'வி'விகுதி பெற்ற தொழிற்பெயர். (கo)

உ-ஆம் அதிகாரம்.—வான்சிறப்பு.

அஃதாவது - அக்கடவுளதுஆணையான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம்பொருள்இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகாரமுறைமையும், இதனுனே விளங்கும்.

(கு - ரை.) ஆணை - ஆஞ்ஞை; கட்டளை. அதற்கு உறுதியாகிய - உலகத்துக்கு நன்மையைத் தருவதான. கடவுள்வாழ்த்தின் பின் கடவுளின் கட்டளையினுலாகிய மழையினது சிறப்பைக் கூறுதலே, அதிகாரமுறைமை.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ - ள்.) வான் - மழை, நின்று - இடையறுதுநிற்ப, உலகம்—, வழங்கி வருதலான் - நிலைபெற்று வருதலான், தான்-அம்மழைதான், அமிழ்தம் என்று - (உலகத்திற்கு) அமிழ்தமென்று, உணரற் பாற்று - உணரும் பான்மையையுடைத்து; (எ - று.)

'நிற்ப' என்பது, 'நின்று' எனத் திரிந்துநின்றது. 'உலகம்' என்றது, ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்றுவருதலாவது - பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தம்உண்டார் சாவாது நிலைபெறுதலின், 'உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்று உணர்க' என்றார்.

(கு - ரை.) இடை-நடுவில். அறுதல் நீங்காமல். அமிழ்தம்-அம்ருதமென்னும் வடமொழியின் திரிபு: மரணமில்லாமற்செய்வதென்ற பொருள். நின்று-செய வெனெச்சத்திரிபு: 'வழங்கிவருதலால்' என்னும் பிறகர்த்தாவின் வினையைக் கொண்டுமுடிதற்கு ஏலாமையால், 'நின்று' என்பதனை, அதற்கு ஏற்ற செய வெனெச் சத்தின் திரிபாகக் கொண்டார்: [நன் - வினை - உள.] எஞ்ஞான்றும்-எப்பொழுதும். பாற்று - ஒன்றன்பாற்குறிப்புமுற்று; பால்-பகுதி. இனி, இக் குறளில், 'வான்' என்பதில் மூன்றும்வேற்றுமையுருபு தொக்குநின்றதாக்கி, வானினுல் உயிர்கள் நிலைபெற்றுத் தொழில்கள் நடந்துவருதலால் அது அமிழ்தமென்று உரைபாற்று என்றுங்கொள்ளலாம். 'நின்று' என்பதை ஏழாம்வேற்றுமை யுருபாகக்கொண்டு உரைத்தல் வேண்டு மென்பது, வீர சோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனுரது கொள்கை. (க)

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பா யதூஉ மழை.

(இ - ள்.) துப்பார்க்கு-உண்பார்க்கு, துப்பு ஆய துப்பு-நல்லவுணவுகளை, ஆக்கி - உளவாக்கி, துப்பார்க்கு - (அவற்றை) உண்கின்றார்க்கு, துப்பு ஆய தூஉம் - (தானும்) உணவாய் நிற்பதூஉம், மழை—; (எ - று.)

தானும்உணவாதலாவது - தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃது ஒக்கும்; இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை, வழங்கிவருதலுடையவாயின என்பதாம்.

(கு - ரை.) துப்பு ஆய-நன்மையாகிய. உயர்திணைமேல் வைத்துக்கூறின மையின் - துப்பார்க்கு என உயர்திணைச் சொல்லாற் சொன்னதனுல். உயர் திணை - உயர்வாகிய பகுப்பு. அஃறிணை - அல்திணை; அதுவல்லாத [தாழ்வா கிய] பகுப்பு. நீர்வேட்கை - தாகம். அவை - உயிர்கள். துப்பார், துப-பகுதி. துப்பு-நன்மையென்னும் பொருளில், பண்புப்பெயர்; உணவு என்னும் பொரு ளில், தொழிலாகுபெயர். அளபெடை, ஓசை நிறைத்தது. சொற்பொருட்பின் வருநிலையணி. (உ)

கஊ. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று உடற்றும் பசி.

(இ - ள்.) விண்-மழை, இன்று - வேண்டுங்காலத்துப் பெய்யாது, பொய்ப்பின் - பொய்க்குமாயின், விரி நீர் - கடலாற் சூழப்பட்ட, வியன்-அக ன்ற, உலகத்துள் - உலகத்தின்கண், நின்று - நிலைபெற்று, உடற்றும்-(உயிர் களை) வருத்தும், பசி—; (எ - று.)

கடலுடைத்தாயினும் அதனைப் பயனில்லை யென்பார், 'விரிநீர் வியனுல கத்து' என்றார். உணவின்மையின் பயமான் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

(கு - ரை.) இன்றி - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம், இன்று எனத் திரிந்துநின்றது; [ஈன்-உயிர்ப்பித்தற்புணரியல் - உரூ.] வியன் - அகலமுணர்த் தும் உரிச்சொல்; "வியனென் கிளவி யகலப் பொருட்டே". உடற்றும்-உடல் என்பதன் பிறவினையாகிய உடற்று - பகுதி. வின் என்னும் ஆகாயத்தின் பெயர் - அங்குப் பொருந்திய மழைக்கு ஆகுபெயர்: கீழ் 'வான்' என்றதும், மேல் 'விசும்பு' என்பதும் இவ்வாறே.கடலாற் பயனில்லாமை, உவர்நீருடைத் தாதலால் என்க. பொய்ப்பின் - எதிர்காலவினையெச்சம். உடற்றுமென்பதற் குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. (கூ)

கசு. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ - ள்.) உழவர்—, ஏரின் - ஏரான், உழாஅர் - உழுதலைச்செய்யார்: புயல் என்னும் - மழையென்னும், வாரி-வருவாய், வளம் - (தன்)பயன், குன் றிக்கால் - குன்றின்; (எ - று.)

'குன்றியக்கால்' என்பது, குறைந்து நின்றது. உணவின்மைக்குக் கார ணங் கூறியவாறு.

(கு - ரை.) உழவர் - உழுதுபயிர்செய்பவர். உழு-பகுதி, அ - சாரியை, வ் - சுட்டி, அர் - விகுதி. ஏர் - கலப்பை; இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருள். உழார்-எதிர்மறைப்பலர்பால்முற்று. அளபெடை, செய்யுளோசை நிறைக்க வந்தது. வருவாய் - வரவுகளுக்கு ஆன ஏது. வாரி - வரவுக்குக் கருவியானது; இ - கருவிப்பெருன் விகுதி. குன்றிக்கால்-காலீற்று எதிர்காலவினையெச்சத் தின் தொகுத்தல். வருவாயினது வளம் குன்றினால் என ஆறும்வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளலாம். (சு)

கஎ. தெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(இ - ள்.) கெடுப்பதூஉம் - (பூமியின்கண்வாழ்வாரைப் பெய்யாது நின்று) கெடுப்பதூஉம், கெட்டார்க்கு-(அவ்வாறு)கெட்டார்க்கு, சார்வு ஆய் - துணையாய்(ப் பெய்து), மற்று ஆங்கே - முன் கெடுத்தாற் போல, எடுப்ப தூஉம்—, எல்லாம் - இவையெல்லாம் (வல்லது), மழை—; (எ - று.)

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கு என்பது-மறுதலைத்தொழி லுவமத்தின்கண்வந்த உவமச்சொல். கேடும்ஆக்கமும் எய்துதற்கு உரியார் மக்களாதலின், 'கெட்டார்க்கு' என்றார். 'எல்லாம்' என்றது - அம்மக்கள் முயற்சிவேறுபாடுகளாற் கெடுத்தல்எடுத்தல்கள்தாம் பல வாதல் நோக்கி. 'வல்லது' என்பது, அவாய்நிலையான் வந்தது. மழையினது ஆற்றல் கூறியவாறு.

(கு - ரை.) எடுப்பது - காப்பது. மற்று, ஆங்கு - இடைச்சொற்கள். 'பெய்யாமற் கெடுத்து' என்ற வினையை 'பெய்து கெடுக்காமல்' என மாற்றியதனால், வினைமாற்று. ஆங்கு என்பது - கெடுத்தாற்போல என எடுத்தற்கு எதிர்த்தொழிலாகிய கெடுத்தலென்னும் உவமைக்கு உருபாய் வந்தது. கேடு - வறுமை. ஆக்கம் - செல்வம். மக்கள்-மனிதர். கெட்டார்க்கு என்றூர் - உயர்திணையாகக்கூறினர். எல்லாம் என்றது-இரண்டும் என்னுமல் எல்லாமென்று சொன்னது. அவாயீநிலை - ஒருசொல் மற்றொருசொல்லை வேண்டிநிற்றல்; இவ்வாறு வருவித்துமுடிப்பதை வடநூலார் அத்தியாஹாரமென்பர். ஆற்றல் - வல்லமை. கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாயினும், இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தது. உம் - எண்ணும்மைகள். எல்லாம் என்றது, வியப்புப்பற்றிக் கூறியதாகவுமாம். ஆங்கே, ஏ - அசை. (கூ)

கசு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ - ள்.) விசும்பின் - மேகத்தின், துளி—, வீழின் அல்லால் - வீழின் காண்பதல்லது, மற்று ஆங்கே - வீழாதாயின் அப்பொழுதே, பசு புல் தலை - பசும்புல்லினது தலையையும், காண்பு - காண்டல், அரிது—; (எ - று.)

விசும்பு - ஆகுபெயர். மற்று - வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பு உம்மை, விகாரத்தால் தொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம்.

- (கு - ரை.) விசும்பின், ஐக்தனுருபு நீக்கப்பொருளது. மேகத்தின்-மேகத்தினின்றும், துளி வீழின் - மழைத்துளிவிழுந்தால். ஆகுபெயர் - இடவாகுபெயர்; விசும்புஎன்பது அங்குள்ள மேகத்துக்கு ஆகிவந்தது காண்க. ஆகுபெயராவது, ஒரு பொருளின்பெயர் அப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு வழங்குவது. 'வீழின்' என்ற வினையை 'வீழாதாயின்' என மாற்றியதனால், மற்று-வினைமாற்று. உம்மை, செய்புள்விகாரத்தால் தொக்கது, 'பசும்புற்றலை' என்னுமிடத்தில்; அது, அப்புல்லினது ஸ்பரிசத்தை அறியும் அறிவைமாத்திரம் உடைத்தாயிருக்குந் தன்மையைத் தெரிவித்ததனால், இழிவுசிறப்பாயிற்று; "புல்லு மரனு மோரறி வினவே" என்றூர் தொல்காப்பியனார். காண்பு - தொழிற்பெயர்; பு - விகுதி. (கூ)

கஎ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ-ள்.)நெடு கடல்உம் - அளவில்லாத கடலும், தன் நீர்மை குன்றும் - தன் இயல்பு குறையும்: எழிலி தான் - மேகந் தான், தடிந்து - (அதனைக்) குறைத்து, நல்காது ஆகிவிடின்-(அதன்கண்)பெய்யாதுவிடுமாயின்; (எ-று.)

உம்மை - சிறப்பும்மை. தன் இயல்பு குறைதலாவது - நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணிமுதலாயின படாமையுமாம். ஈண்டு 'குறைத்தல்' என்

றது, முகத்தலே; அது "கடல்குறைபடுத்தநீர் கல்குறைபட வெறிந்து" என் பதனாலும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும் என்பதாம்.

இவையேழுபாட்டானும், உலகம் நடத்திற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) நெடு - நீண்ட. குன்றும்-குறையும். அதனை-கடலின் நீரை. குறைத்து - மொண்டு. அதன்கண் - கடலில். சிறப்பு - உயர்வுசிறப்பு; மழைக் குக் காரணமாதலாகிய கடலினது உயர்வை விளக்கியதனால். மணி - முத் தும், பவளமும்: "வைகாசியிலே ஞாயிற்றுச்சோதியின் மழையிலே முத் துக்குக் கரு: ஐப்பசிப்பூசத்து மழையிலே பவளத்துக்குக் கரு" என்பர். படா மை - உண்டாகாமை. முகத்தல் - மொள்ளுதல். "கடல்குறைபட" என்ற மேற்கோள் பரிபாடலில் உ0-ஆம் பாடலிலுள்ளது: இதன்பொருள்—கடல் குறைபடுத்த - கடலினின்று முகந்துகொண்ட, நீர் - நீரை, கல் - மலையின் கற்கள், குறைபட - தூளிபட, எறிந்து - சிதறி என்பது. முதலாய - காரண மாகிய. எழிலி - எழுச்சியையுடையதென மேகத்துக்குக் காரணப்பெயர். ஆகிவிடின், விடு - தூவுப்பொருளுணர்த்திவந்த தூவினை. தடிந்து - குறையச்செய்து; தன்வினை பிறவினைப்பொருளில் வந்தது: இதனை வட நூலார் 'அந்தர்ப்பாவித ணிச்' என்பர்; தடித்து என்பதன் மெலித்தல் விகாரமாகவுங்கொள்ளலாம். (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ - ள்.) வானோர்க்குமும் - தேவர்கட்கும், ஈண்டு - இவ்வுலகில், சிறப் பொடு-(மக்களாற் செய்யப்படும்) விழவொடுகூடிய, பூசனை-பூசையும், செல் லாது - நடவாது: வானம் - மழை, வறக்கும் எல் - பெய்யாதாயின்; (எ-று.)

நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்ற ராகலின், 'செல்லாது'என் றார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது நைமித்திக மாதலின், அதனை முற் கூறினார். உம்மை - சிறப்பும்மை.

(கு - ரை.) விழவு - திருவிழா: உற்சவம். நைமித்திகம் - யாதாயினு மொரு நிமித்தம்பற்றிச் செய்வது. செல்லாதென்றார் - ஒருமையாக்கூறினார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது - நாள்தோறுஞ் செய்யப்படுவதனினும் விசேஷமாகச் செய்யப்படுவது; பவித்திரஉத்ஸவம் முதலியன. அதனை 'சிறப்பு' என்றதும், இதுபற்றியே. எல் - என்னில் என்பதன் மரூஉ. வா னோர் - வானுலகத்துள்ளவர். சிறப்பு - உயர்வுசிறப்பு. (அ)

கக. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ - ள்.) வியன் உலகம் - அகன்ற உலகின்கண், தானம் தவம் இர ண்டுமும்-தானமுந் தவமும் ஆகிய இரண்டுஅறமும், தங்கா - உளவாகா: வா னம் - மழை, வழங்காது எனின் - பெய்யாதாயின்; (எ - று.)

தானமாவது - அறநெறியான்வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகை யோடுங் கொடுத்தல். தவமாவது - மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கல்முதலாயின. பெரும்பான்மைபற் றித் தானம் இல்லறத்தின்மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன.

(கு - ரை.) அகன்ற-விசாலமான. அற நெறியான் வந்த - தருமமார்க் கத்தில் நின்று சம்பாதித்த. தக்கார் - அறிவொழுக்கங்களினால் தகுதியான வர். உவகை - மனமகிழ்ச்சி. தவமாவது - மனம் ஐம்பொறிகளின்வழியே போகாமல் ஒருவழியில் நிற்கும்பொருட்டு நீர்பருகியும் காற்று நுகர்ந்தும் காய் கனிகிழங்குசருகுவருக்கங்களேயுண்டும் விரதங்களால் உணவைச் சுருக்கலும், கோடைக்காலத்தில் வெயிலிலும் பஞ்சாக்கினிமத்தியிலும் நிற்றலும், மாரிக் காலத்தும் பனிக்காலத்தும் நீர்நிலையிற் பாயியேற நிற்றலும் முதலிய செயல் களே மேற்கொண்டு அவற்றால் வருந் துன்பங்களைப் பொறுத்து உடம்பை யொறுத்துப் பிறவுயிர்களை ஓம்புதல்; தபஸ்என்னும் வடமொழித்திரிபு. இல் லறமும் துறவறமும் நடவா வென்பது கருத்து. (கூ)

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(இ - ள்.) யார் யார்க்குமும்-எவ்வகை மேம்பாட்டார்க்கும், நீர் இன்று-நீரைஇன்றி, உலகு - உலகியல், அமையாது எனின் - அமையாதாயின், ஒழுக்கு - (அந்நீர் இடையறாது ஒழுகும்) ஒழுக்கும், வான் இன்று - வானை யின்றி, அமையாது—; (எ - று.)

பொருளின்பங்களை 'உலகியல்' என்றார், அவை இம்மைக்கண்ணவாக லின். இடையறாது ஒழுகல் - எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின் றமையாதுலகென்பது எல்லாராலும் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக் கும் வானின் றமையாமை தெளியப்படு மென்பார், 'நீரின்றமையாதுலகெ னின்' என்றார். இதனை, நீரையின்றி அமையாது உலகாயின் எத்திறத்தார்க் கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாது என உரைப்பாரும் உளர்.

இவை மூன்றுபாட்டானும், அறம் பொருள் இன்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.)எவ்வகைமேம்பாட்டார்க்கும்-எவ்வளவுபெருமையுடையவர்க் கும். உலகுஇயல் - உலகநடத்தை. அமையாது - நடவாது. இம்மைக் கண்ண - இப்பிறப்புக்கே பயன்படுவன. முதலருத்தத்தில், ஒழுக்கு - ஏரி குளம் முதலியவற்றில் நீர் ஓடி ஒழுகுதல். இரண்டாமருத்தத்தில், ஒழுக்கு- வருணாசிரம தருமத்தில் வழுவாதுநடத்தல். முதலருத்தத்தின் கருத்து - உலகவாழ்க்கைக்கு நீர் அவசியமாதல்போல அந்நீர்ப்பெருக்கிற்கு மழை அவசிய மென்பது; மழையின்றி நீரூறு, நீரின்றி உலகுஇயலா என்றதாம். இரண்டாமருத்தத்திற்குக் கருத்து - உலகவாழ்க்கைக்கெல்லாம் நீர் அவ சியமாதலால் உலகத்தவரொழுக்கத்திற்கெல்லாம் மழை அவசிய மென்பது,

"யழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றார் கான்மணிக்கடிகையிலும். எனின் என்பது, என்றால் என்னும் பொருளைத் தராமல் தேற்றப்பொருளைத் தந்தது. உம்மை - முற்றப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளது. ஒழுக்கு - இருபொருளிலும், முதனிலை திரிந்த தொழிற்பெயர். கீழிரண்டு வாக்கியங்களால் அறம் நடத்தற்கு ஏதுவாதலும், இப்பாட்டால் பொருளின் பங்கள் நடத்தற்கு ஏதுவாதலும் கூறப்பட்டது. (கo)

க - ஆம் அதிகாரம்.— நீத்தார்பெருமை.

அஃதாவது - முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின், இது, வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) முற்றத்துறத்தல் - (உலகியலையும் இல்லறவாழ்க்கையின் நிலையில்லாமையையும் அறிந்து கடவுளின் தன்மையைத் தெரிந்து மோட்சத்தையடையும் பொருட்டுத் தேகாபிமானம் முதலிய எல்லாவற்றையும்) முழுவதும்விடுதல். முனி என்னும் வடசொல்லுக்கு-கடவுளையே எப்பொழுதுந் தியானஞ்செய்பவன், அல்லது திரிகால ஞானமுடையவன் என்று பொருள். அவ்வறமுதற்பொருள்கள் - கீழ் 'வான்சிறப்பு' என்னுமிடத்திற் சொல்லப்பட்டபடி உலகத்திற்கு உறுதியாகிய அறம் பொருளின்பங்கள். உலகிற்கு-உயிர்களுக்கு. உள்ள ஆறு உணர்த்துவார் - உள்ளபடி தெரிவிப்பவர். அவர்-துறந்தவர். இது - நீத்தார்பெருமை. உயிர்களும் உயிர்களுக்கு உறுதியான அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவான மழையின் சிறப்பைக் கூறியபின், அறம்பொருளின்பங்களை உயிர்களுக்கு உணர்த்துதற்கு உரிய துறந்தவரது மகிமையைக் கூறுதல், அதிகாரமுறையென்க. நீத்தவர் முக்திமார்க்கத்திற்கு உரிய வழிகளைத் தேடித் தமது இன்பத்தைப் பார்ப்பதேயன்றி, ஜீவகாருண்யத்தால் யாவரும் நல்லொழுக்கத்தில் நிற்குமாறு அவரவர்கள் செய்யவேண்டுங் கடமைகள் முதலியவற்றை விவரித்துப் பலநூல்களியற்றுவதும், பிறர்க்கு ஞானோபதேசஞ் செய்வதும் எங்கும் வழக்கமென்க. இனி, மழைக்குக்காரணம் தவம் முதலிய நல்வினைகளாதலால், முனிவரின் பெருமையை மழைச்சிறப்பின்பின் வைத்தா ரென்றுங் கொள்ளலாம்; "மழையுந் தவமிலா நிலவுழி யில்லை" என்பது காண்க.

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ - ள்.) ஒழுக்கத்து (தமக்கு உரிய) ஒழுக்கத்தின்கண்ணே (நின்று), நீத்தார் - துறந்தாரது, பெருமை - பெருமையை, விழுப்பத்து - விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும், வேண்டும் - (இதுவே விழுமிது என) விரும்பும், பனுவல் துணிவு - நூல்களது துணிவு; (எ - று.)

தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது - தத்தம்வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுகி, அறம்களாரும்;

அறம்வளர, பாவந்தேயும்; பாவந்தேய, அறியாமை நீங்கும்; அறியாமைநீங்க, நித்தஅநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன்மாலையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும், பிறவித்துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாக, பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி உண்டாம்; அஃது உண்டாக, மெய்யுணர்வு பிறந்து, புறப்பற்றுகிய எனதென்பதும், அகப்பற்றுகிய யானென்பதும் விடும்: ஆகலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதல் எனக் கொள்க. 'பனுவல்' எனப் பொதுப்படக் கூறிய அதனுன், ஒன்றையொன்று ஒவ்வாத சமயநூல்க ளெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவு என்பது பெற்றும். செய்தாரது துணிவு, பனுவல்மேல் ஏற்றப்பட்டது.

(கு - ரை.) விழுமிய-சிறப்புடைய. விழுமிது-சிறந்தது. துணிவு-சித்தாந்தம். நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வு - என்றும் நிலையாயுள்ள பொருள்கள் இவை, நில்லாத பொருள்கள் இவை, இரண்டுக்கும் உள்ள பேதம் இப்படிப்பட்டது என்று பகுத்தறியும் விவேகம். அழிதன்மாலைய வாய - அழியுந்தன்மையை யுடையனவாகிய. உவர்ப்பு - வெறுப்பு. மெய்யுணர்வாவது - பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் அறிதல். புறப்பற்றுகிய எனதென்பது - தன்னோடு இயைபில்லாத புறமாகிய பொருளை எனதென்றுகருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல்; மமகாரம். அகப்பற்றுகிய யானென்பது - தானல்லாத அகமாகிய உடம்பை யானென்று கருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல்; அகங்காரம். ஒவ்வாத - ஒத்திராத. சமயநூல்கள் - மதக்கிரந்தங்கள். 'நூல்செய்தார் வேண்டுவர்' என்று சொல்லாமல் அவரது சித்தாந்தத்தை நூலின்மே லேற்றி 'வேண்டும் பனுவற்றுணிவு' எனப்பட்டது. துணிவு - துணியப்பட்டபொருளுக்குத் தொழிலாகுபெயர். நூல்கள்சொல்லும் பெருமையான பொருள்களுள் மீத்தார்பெருமை சிறந்ததென்பதாம். (க)

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ - ள்.) துறந்தார் - (இருவகைப் பற்றினையும்) விட்டாரது, பெருமை-பெருமையை, துணை கூறின்-(இவ்வளவென்று) எண்ணுற் கூறியறியலுறின், (அளவுபடாமையான்), வையத்து இறந்தாரை - இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை, எண்ணி கொண்டு அற்று - எண்ணி (இத்துணையர் என) அறியலுற்றாற் போலும்; (எ - று.)—முடியாது என்பதாம்.

கொண்டால் என்னும் வினையெச்சம்,'கொண்டு' எனத்திரிந்துநின்றது.

(கு - ரை.) எண்ணுற் கூறியறியலுறின் - அளவிட்டுச்சொல்லி அவ்வழியால் அறியத்தொடங்கினால். இத்துணையரென - இத்தனைபேரென்று. பிறந்து இறந்தவர்களையெல்லாம் எண்ணி அளவிடுதல் முடியாததுபோல,

மூனிவர்களது மகிமையையெல்லாம் எண்ணி அளவிடுதல் முடியா தென்ற படி. வையம் - எல்லாப்பொருள்களையும் வைக்கும் இடமென்று பூமிக்குக் காரணப்பெயர். கொண்டு - கொண்டால்; எச்சத்திரிபு. அற்று - அன் என்னும் உவமவுருபிடைச் சொல்லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று; று - விகுதி. பெருமை துணைக் கூறின் - பெருமையது அளவைக் கூறலுறின் என்றுமாம். (உ)

உகூ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(இ - ள்.) இருமை - (பிறப்பு வீடு என்னும்) இரண்டினது, வகை - தன்ப இன்பக் கூறுபாடுகளை, தெரிந்து - ஆராய்ந்து அறிந்து, (அப்பிறப்பு அறுத்தற்கு), ஈண்டு - இப்பிறப்பின்கண், அறம்-துறவறத்தை, பூண்டார் - பூண்டாரது, பெருமை - பெருமையே, உலகு - உலகின்கண், பிறங்கிற்று - உயர்ந்தது; (எ - று.)

*"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல, 'இருமை' என்பது ஈண்டு எண்ணின்கண் நின்றது. பிரிநிலை ஏகாரம், விகாரத்தால் தொக்கது. இதனால், திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்றுபாட்டானும், நீத்தாரதுபெருமையே எல்லாப் பெருமை யினும் மிக்கதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறப்பினது துன்பக்கூறுபாடென்றும், வீட்டினது இன்பக் கூறுபாடென்றும் முறையே கூட்டுக. அறுத்தற்கு - ஒழிப்பதற்காக. பூண் டார் - மேற்கொண்ட முனிவர். அறம் பூண்டார் - கல்லொழுக்கத்தை ஆப ரணமாகக்கொண்டவர். "தெரிமாண்" என்றுதொடங்கும் மேற்கோளின் பொருள்:—தெரி - ஆராயப்பட்ட, மாண் - மாட்சிமையையுடைய, தமிழ் மும்மை-இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழையுடைய, தென்-தெற் கின்கணுள்ள, அம்-அழகிய, பொருப்பன் - பொதியமலையையுடையவனென் பது. இங்கு, மும்மை-மூன்றின் தன்மையையுணர்த்தாமல் மூன்றை உணர்த் தியதுபோல, இருமை - இரண்டின் தன்மையையுணர்த்தாமல் இரண்டென் னும் எண்ணையே உணர்த்திற்று. இருமையென்பதில், மை விகுதி - தன் மையை உணர்த்தாமல் தன்மையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகு திப்பொருள்விகுதி யென்னும் ஸ்வார்த்தபாவதத்திதப் பிரத்தியயமாம். 'பெரு மையே' என்று இருக்கவேண்டிய ஏகாரம், தொகுத்தல்விகாரமாயிற்று. திகிரி உருட்டி-ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்தி. ஆணையைச் சக்கரமென்றுங் குடை யென்றுங்கூறுதல், கவிசமயம். அரசர்முதலிய எல்லோர்பெருமையினுந் துறந்தவர்பெருமையே சிறந்துவிளங்கிற்று உலகத்திலே என்பதாம். (கூ)

உச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

* இம்மேற்கோள் பரிபாடலிலுள்ளதென்கின்றனர்.

(இ - ள்.) உரன் என்னும் தோட்டியான்-திண்மையென்னுந் தோட்டியால், ஓர் ஐந்தும் - (பொறிகளாகிய யானை) ஐந்தனையும், காப்பான் - (தத்தம் புலன்கள்மேற் செல்லாமற்) காப்பான்,—வரன் என்னும் வைப்பிற்கு - (எல்லாநிலத்தினும்) மிக்கதென்று சொல்லப்படும் வீட்டுநிலத்திற்கு, ஓர் வித்து - ஓர் வித்தாம்; (எ - று.)

இஃது, ஏகதேசவுருவகம். திண்மை-ஈண்டு, அறிவின்மேற்று. அந்நிலத்திற் சென்று முளைத்தலின், 'வித்து' என்றார்; ஈண்டுப் பிறந்து இறந்துவரும் மகனல்ல னென்பதாம்.

(கு - ரை.) திண்மை - வலிய அறிவு; மனவுறுதி. தோட்டி-மாவெட்டி, அங்குசம். காப்பான் - அடக்கித் தடுத்து ஆளுபவன். "மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க், கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான், விலங்காது வீடு பெறும்" என்னும் நாலடியாரினுங் காண்க. புலன் - விஷயம். மிக்கது - சிறந்தது. வித்து-விதை. நல்லறிவைத் தோட்டியாக உருவகப்படுத்தினதற்கு எற்ப, பஞ்சேந்திரியங்களே யானைகளென்னுமையால், ஏகதேசவுருவகவணி. அறிவின்மேற்று-அறிவென்னும் பொருளின்மேலது. முத்தியுலகத்திற்போய் முளைப்பதனால், 'வித்து' என உருவகப்படுத்தினர். ஈண்டு - இவ்வுலகத்தில். மகன்-மனிதன். உரனென்னும் பண்புப்பெயர், அறிவுக்கு ஆகுபெயர். தோட்டியான், ஆன்-மூன்றனுருபு, கருவிப்பொருள். ஐந்தும், உம்மை - முற்று. வரன் - வரமென்னும் வடமொழியின் ஈற்றுப்போலி. வைப்பு - வைக்குமிடமாகிய உலகத்துக்குத் தொழிலாகுபெயர். (அ)

உரி. ஐந்தவித்தா னூற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(இ-ள்.) ஐந்து அவித்தான்-(புலன்களிற் செல்கின்ற) அவா ஐந்தனையும் அடக்கினனது, ஆற்றல் - வலிக்கு, அகல் விசும்பு ளுளார் கோமான் - அகன்ற வானத்துவுள்ளார் இறைவனுகிய, இந்திரனே--, சாலும் கரி-அமையுஞ்சான்று.

ஐந்தும் என்னும் முற்றும்மையும், ஆற்றற்கு என்னும் நான்கனுருபுஞ் செய்யுள்விகாரத்தால் தொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்திநின்று அவித்தானது ஆற்றலுணர்த்தினு ஞகலின், 'இந்திரனே சாலுங் கரி' என்றார்.

(கு - ரை.) அவா-ஆசை. வலி-சக்தி. அகன்ற வானத்துள்ளா ரிறைவன்-பரந்த மேலுலகத்தி லுள்ள தேவர்களுக்குத் தலைவன். அமையுஞ் சான்று-தகுந்த சாக்ஷி. ஐந்து-இனைத்தென்று அறிபொரு ளாதலால், அதில் முற்றும்மை அவசியம் வேண்டியதாயிற்று. 'இந்திரனேசாலுங்கரி' என்பதிலுள்ள கதை:-கௌதமமுனிவரது மனைவியாகிய அகலியையின்மீது பலகாலாகக் காதல்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுராத்திரியிலே பொழுதுவிடியுங்காலத்துக் கோழிகூவுவதுபோலக் கௌதமராச்சிரமத்துக்கு அருகேவந்துகூவ, அது கேட்ட முனிவர் எழுந்து சந்தியாகாலஞ் சமீபித்ததெனகருதிக் காலைக்கடன்

கழிந்தற்கு யாற்றிற்கு விரைந்து செல்ல, அப்பொழுது இந்திரன் இதுவே சமயமென்று அம்முனிவருருக்கொண்டு ஆச்சிரமத்துட்சென்று அவளோடு கலக்க, அவளும், 'முனிவரல்லர்: இந்திரன்'என்று உணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக்கண்ணினால் அறிந்து உடனேமீண்டுவந்த அம்முனிவர் அவளைக் கருங்கல்வடிவமாம்படி சபித்து, இந்திரனையும் உடம்பு முழுவதும் பெண்குறியுடையனும்படியும் ஆண்குறியிழக்கும்படியுஞ் சபித்தன ரென்பதாம். ஸாபம் - வெகுண்டு கூறும் மொழி. கோமான், மான் - பெயர்விகுதி. இந்திரனே, ஏகாரம் - உயர்வுசிறப்பு; இதனால் வேறுகூறுவது அவசியமில்லை யென்பதும் விளங்கும். (இ)

உசு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ - ள்.) (ஒத்த பிறப்பினராய மக்களுள்), செயற்கு அரிய செய்வார்-செய்தற்கு (எளியவற்றைச் செய்யாது) அரியவற்றைச் செய்வார், பெரியர்-; செயற்கு அரிய செய்கலாதார் - (அவ்வெளியவற்றைச் செய்து) அரியவற்றைச் செய்யமாட்டாதார், சிறியர்—; (எ - று.)

செயற்கு எளியவாவன - மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்தலும் வெஃகலும் வெகுளலும் முதலாயின. செயற்கு அரியவாவன - இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புக்கள். மீசிற் பலகால் மூழ்கல் முதலாய "காலிரு வழக்கிற் ரூபதபக்கம்" என் பாருமுளர்; அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரதுபெருமைக்கு ஏலாமை அறிக.

(கு-ரை.) ஒத்த பிறப்பினராய மக்கள்-பிறப்பு ஒத்த மனிதர்கள். அதனை-மனத்தை. வெஃகல் - ஆசையைக்கொள்ளுதல். வெகுளல் - கோபித்தல். எண்வகை யோகஉறுப்புக்கள் - எட்டுவகையோகஅங்கங்கள்; அவை - இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றுள், இயமம்-கொல்லாமை, வாய்மை முதலியன. நியமம் - தத்துவதூலாராய்ச்சி, தெய்வவழிபாடு முதலியன. ஆசனம் - இருப்பு: அது, ஸ்வஸ்திகம்முதலாக எண்வகைப்படும். பிராணயாமம்-உயிர்நிலை; வளிநிலையெனவும்படும்: அதாவது-பிராணவாயுவை ரேசக பூரக கும்பகஞ்செய்தல். பிரத்தியாகாரம்-மனவொருக்கம்; தொகைநிலையெனவும்படும்: அது, உபாதியைநீக்கி உன்நோக்கல். தாரணை-கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுள் ஒன்றில் எப்பொழுதுஞ் சித்தையைவைத்தல்; இது, பொறைநிலையெனப்படும். தியானம்-ஐம்புலனடக்கி யோகஞ்சேர்தல்; இது, நிலையெனப்படும். சமாதி-இந்திரியம்முதலிய தத்துவங்களின் சேஷ்டைகளுக்கு ஏதுவாகிய உடம்பினுள் நின்று அவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றின்றியிருக்கும் ஆத்மாவாகிய தன்னைத் தான் காண்டல். இவற்றின் பரப்பெல்லாம் இற்கு உரைப்பின் பெருகும்; ஆதலால், யோகதூல்களுட் கண்டுகொள்க.

*"பொய் கொலை களவே காமம் பொருணசை,யிவ்வகையைந்து மடக்கியதிய மம்," "பெற்றதற் குவத்தல் பிழம்புகனி வெறுத்தல்,கற்பன கற்றல் கழிகடுத் தூய்மை, பூசனைப்பெரும்பயம் ஆசாற்களித்தலொடு, நயனுடை மாபின் நியம மைந்தே", 'நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்று, ஒத்த நான்கினெல்கா நிலைமையோடு, இன்பம் பயக்குஞ் சமய முதலிய, அந்தமில் சிறப்பி னுசன மாகும்," "உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுக், தந்த மியக்கத் தடுப்பது வளிநிலை," "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை, ஒருவழிப்படுப் பது தொகைநிலை யாமே," "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறை நிலை," "நிறுத்திய வம்மன நிலைநிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத் தல் நினைவே," "ஆங்ஙனங் குறித்த அம்முதற் பொருளொடு, தான்பிற ஞகாத் தகையது சமாதி" என்னுஞ் சூத்திரங்களே யுணர்க. நீரிற் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கின் தாபதபக்கம் - தண்ணீரிற் காலத்தோறும் முழுகுதல், நிலக்கிடைகிடத்தல், தோலுடை உடுத்தல், எரி ஓம்புதல், ஊர் அடையாமை, சடைதரித்தல், காட்டிலுண்ணுதல், கடவுட்பூசை என்னும் எட்டுவகை மார்க்கத்துத் தவம்புரியுங் கூறு; † "நீர்பலகான் மூழ்கி நிலத்த சையித்தோலுடையாச், சோர்சடை தாழச் சுடரோம்பி-ஊரடையார், கான கத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் துய்க்கும் வழி," *"நீஇ ராடல் நிலக்கிடை கோடல்,தோஒ லுடுத்தல் தொல்லெரி யோம்பல், ஊரடை யாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட்பூசை, ஏற்ற தவத்தி னியல்பென மொழிப" என்பன காண்க. இவையெல்லாம், தவஞ் செய்து யோகஞ்செய்வார்க்கு உரியன. இனி, தவஞ்செய்வார்க்கு உரியன - ஊண்நசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத் தல், இடம்வரையறுத்தல், ஆசனம்வரையறுத்தல், இடையிட்டுமொழிதல், உரையாடாமை என எட்டுவகைப்படும். "நாலிருவழக்கிற் றுபதபக்கம்" என் பது, தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தில் புறத்திணையியலில் உ0-ஆம் சூத்திரத்தில் உள்ளது. எலாமை - பொருந்தாமை. செயற்கு - 'கு' விகுதி காலங்காட்டும் எதிர்காலவினையெச்சம்; அல் - சாரியை. அனிய - பலவின் பால் வினையாலணையும்பெயர். இத்திருக்குறளே "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" என்னுந் திருக் குறளோடு ஒப்பிடுக. (சு)

உஎ. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ - ள்.) சுவை - சுவையும், ஒளி - ஒளியும், ஊறு - ஊறும், ஓசை - ஓசையும், நாற்றம் - நாற்றமும், என்ற - என்று சொல்லப்பட்ட, ஐந்தின் - (தன்மாத்திரைகள்) ஐந்தனது, வகை - கூறுபாட்டையும், தெரிவான்கட்டு எ - ஆராய்வான் அறிவின்கண்ணதே, உலகு - உலகம்; (எ - று.)

*இச்சூத்திரங்கள்-தொல். பொ. புறத். உ0-உரையிற்காட்டப்பட்டவை.
† புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப், கக.

அவற்றின் கூறுபாடாவன-பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும்' அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும்,அவற்றின்கூறுகியஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். 'வகை தெரிவான் கட்டு' என உடம்பொடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும்.*தத்துவமும் இருபத்தைந்தனையுந் தெரிதலாவது-மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையின் பகுதியேயாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கண் தோன்றிய மானும் அதன்கண் தோன்றிய அகங்காரமும் அதன்கண் தோன்றிய தன்மாத்திரைகளும் ஆகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும்,அவற்றின்கண்தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களும் ஆகிய பதினொன்றும் தங்கண்தோன்றுவன இன்மையின் விகுதியேயாவதல்லது பகுதியாகாதெனவும், புருடன் தான் ஒன்றில்தோன்றுமையானும் தன்கண்தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும் சாங்கியநூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்துமல்லது உலகு எனப் பிறிதொன்றில்லையென உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின் கண்ணதாயிற்று.

இவை நான்கு பாட்டானும், பெருமைக்கு ஏது ஐந்தவித்தலும் யோகப் பயிற்சியுந் தத்துவவுணர்வும் என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பஞ்சபூதங்களின் காரணம், பஞ்ச தன்மாத்திரைக ளெனப் படும்: அவை, ஐம்புலன். தன்மாத்திரை - பூதங்களின் ஸூக்ஷ்மாவஸ்தை என்பர், தத்துவத்ரயத்தில். அறிவின் கண்ணது-அறிவினிடத்தது. பூதங்கள் ஐந்து - நிலம், நீர், தீ, காற்று, வானம். ஞானேந்திரியம்-அறிகருவி; அவை-மெய், வாய், கண், மூக்கு, செவி. கர்மேந்திரியம்-கிரியைக்கு உரிய பொறி; அவை-உபத்தம், பாணி, பாதம், பாயு, வாக் என்பன. உடம்பொடுபுணர்த்தல் என்பது ஒரு தந்திரவுத்தி; அதாவது - (இலக்கணத்திற்)சொல்லவேண்டும் விதியை வெளிப்படையாகச்சொல்லாமல் ஆசிரியன் பிரயோகத்தின் மூலமாகத் தெரிவித்தல்; அது - நன்னூலில் 'குற்றியலுகரஞ் சிறுபான்மை உயிர்முதல்மொழிவரும்போது கெடாமல்நிற்கும்' எனச் சொல்லவேண்டியவர் அவ்வாறு விதித்துச்சொல்லாமல் ''தன்முக மாகத் தானழைப்பதுவே'' எனத் தாம் பிரயோகித்ததன் குறிப்பினால் அவ்விதியைப் பெறவைத்தாற் போல்வது: இங்கே 'ஐந்தின்வகை' என்றதனால் இருபதுதத்துவங்களையுங் கூறினற்போல, புருஷனும் அவன் தெரிதற்குக் கருவியாகிய மானங்கார மனங்களும் அவற்றிற்குக் காரணமாகிய மூலப்பிரகிருதியும் ஆகிய மற்ற ஐந்தையும் வெளிப்படையாக் கூறாமல் 'தெரிவான்' என உயர்திணை

* திருவாய்மொழி, 10, 7, 10-இல் வருகின்ற ''பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானங் காரமனங்களே'' என்ற அடிகளைக் காண்க.

யாண்பாலாகப் பிரயோகித்ததன் குறிப்பினுற் பெறவைத்ததனால், உடம் பொடுபுணர்த்தலாயிற்று: இது, தொல்காப்பியத்து மரபியலின் இறுதிச் சூத்திரத்தில் 'ஒருதலைமொழிதல்' என்ற உத்திக்கு இனமாகப் பேராசிரிய ராற் கூறப்பட்டுள்ளது; இதனை வடநூலார் 'ஞாபகம்' என்றுகூறியுள்ளார்: பிரயோகவிவேகத்தின் (சூத். 50.) உரையில் வடநூலார் 'உடம்பொடுபுணர்த் தலே நிபாதமென்பர்' என்று எழுதியுள்ளது. நிபாதமென்பது - சொல்லிய இலக்கணத்தால் அமையாத சொல்லை 'இது அமைக' என்ற குறிப்போடு ஆசிரியன் உச்சரிப்பது. அது, சுழற்சியென்றபொருளில் தெருமரல் அலமரல் என்ற இச்சொற்கள் எவ்வாறு வந்தன என்று காரணம் அறியப்படாம லிருக்கவும், அவை யப்பொருளில் வருக என்றகருத்தோடு ஆசிரியன் "தெரு மரலலமரலாயிரண்டுஞ் சுழற்சி" என்று கூறினுற்போல்வது. இங்குக் கூறிய வாற்றால் நிபாதமென்பது உடம்பொடுபுணர்த்தலாகாதென்பது பெறப்படும். புருடன் - ஆத்மா. தெரிதற்கருவி - தெரிவதற்குக் காரணம். மான் - மஹத் தத்துவம்; மஹத் என்னும் வடமொழி எழுவாயொருமையில் 'மஹான்' என நிற்கும்: அது,தமிழில் மான் எனத் தற்பவமாயிற்று. சாங்கிய நூலிலே'மான்' என்றது, புத்தியை. மான் அகங்கார மனங்கள் - மஹான் அஹங்காரம் மநஸ் என்னும் மூன்றுதத்துவங்கள். மூலப்பகுதி - மூலப்பிரகிருதி; இது, பிரபஞ் சத்திற்குக்காரணம். பகுதி-பிரகிருதி;காரணம். விகுதி-விகிருதி;காரியம். ஒன் றின் தோன்றியது அன்மையின் - ஒன்றினிடத்திலிருந்து தோன்றியதல் லாததனால். முதலாயது - காரணமாகியது. தங்கண்தோன்றுவன-தம்காரிய மாகியவை. சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் - சாங்கியசாஸ்திரத்திற் சொன் னபடியே. நான்கு ஐந்தாம் பாட்டுக்களால் நீத்தார்பெருமைக்கு ஏது ஐந்த வித்தல் என்றும், ஆறும்பாட்டால் யோகப்பயிற்சி என்றும், ஏழாம்பாட் டால் தத்துவஞானம் என்றும் கூறப்பட்டது. என்று என்னும் எண்ணி டைச்சொல்லைச் சுவையென்று, ஒளியென்று, ஊறென்று, ஓசை யென்று, நாற்றமென்று என எல்லாவற்றோடுங் கூட்டுக; [நன். இடையி யல் - சூ0.] அவ்வியலில் சூ-ஆம்சூத்திரத்து விதியினுல், இது தொகைபெற்று வந்தது. இனி, என்ற என்னும் பெயரெச்சத்து அகரவீறு விகாரத்தால் தொக்கதென்றுங் கொள்ளலாம். கட்டு - கண் என்னும் பெயரடியாகப் பிற ந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; டு - விகுதி. எல்லாவற்றையுங் காணுத லால், அறிவை 'கண்' என்றார். ஏகாரம் - தேற்றம். இங்கே "மூலப்ரக்ருதி ரவிக்ருதிர் மஹதாத்யாஃப்ரக்ருதிவிக்ருதயஸ் ஸப்த, ஷோடஶகஸ்து விகாரோ நப்ரக்ருதிர் நவிக்ருதிஃ புருஷஃ" என்னும் வடநூல்மேற்கோளின் பொருளை விசாரித்து அறிக. இனி, இக்குறளுக்கு-ஐம்புலன்களை இன்ன இன்ன இடத் திற் செலுத்தல்கூடும் இன்னஇன்ன இடத்திற் செலுத்தல்கூடாது என்று உய்த்துணர்ந்துதேர்ந்த ஞானிகளது சொற்படி நடப்பர் உலகத்தார் என் றும் பொருள்கொள்ளலாம். (எ)

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ - ள்.) நிறை மொழி மாந்தர்-நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது, பெருமை - பெருமையை, நிலத்து-நிலவுலகத்தின்கண், மறைமொழி - (அவர் ஆணையாகச் சொல்லிய) மந்திரங்களே, காட்டிவிடும் - (கண் கூடாகக்) காட்டும்; (எ - று.)

'நிறை மொழி' என்பது, அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் - பயனை உணர்த்துதல்.

(கு - ரை.) நிறைந்த மொழி - பழுதுபடாத மொழி; பொருள் நிரம்பிய சொற்கள். ஆணை - கட்டளை. கண்கூடாக - பிரத்தியட்சமாக. அருளி - கருணைகொண்டு. வெகுண்டு - கோபங்கொண்டு. அருளிக்கூறும்மொழி - அனுக்கிரகவார்த்தை. வெகுண்டுகூறும்மொழி - சாபவார்த்தை. பயந்தேவிடும் - தந்தேவிடுகிற. முனிவரது சாப அநுக்கிரகங்களைக் கடவுளரும் தடுக்கும் வன்மையுடையரல்ல ரென அறிக. மறைமொழி - புறத்தார்க்குப் புலனுகாமல் மறைத்துக் கூறப்படுஞ் சொற்களுடன்; எனவே, மந்திரமாயிற்று. மாந்தர் - ஒருமையில்லாமல் எப்பொழுதும் பன்மையிலேயே வருஞ் சொல்; தொல் காப்பியத்துச் சொல்லதிகாரத்தில் ''ஆண்மையடுத்த'' என்ற சூத்திரத்தில் ''மாந்தர் மக்களென்னும் பெயரும்,...,அப்பதினேந்துமவற்றோரன்ன'' என்று கூறியதனாலும் இது அறியப்படும். இவ்வாறு வருவதை வடநூலார் 'நித்யபகுவசனம்' என்பர். துணிவுப்பொருள்தோன்ற, 'காட்டிவிடும்' என்றார். நிறை மொழி மாந்தர் - சொல்லியசொல்லின்பொருள் எங்கும் குறைவில்லாமற் பயன்தரும்படி சொல்லும் ஆற்றலுடையார். தொல்காப்பியனார் ''நிறைமொழி மாந்த ராணைபிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப'' (செய்-179) என்றதுங் காண்க. (அ)

உக. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(இ - ள்.) குணம் என்னும் குன்று ஏறி நின்றார் - (துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய) நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது, வெகுளி—, கணம்ஏஉம்-(தான் உள்ள அளவு)கணமே யாயினும், காத்தல் - (வெகுளப்பட்டாரால்) தடுத்தல், அரிது—; (எ - று.)

சலியாமையும் பெருமையும் பற்றி, குணங்களைக் குன்றாக உருவகஞ் செய்தார். குணம்-சாதியொருமை. அஞ்சியாய் வருகின்றவாறுபற்றி ஓரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்கு மாகலின் 'கணமேயும்' என்றும், நிறைமொழிமாந்தராகலின் 'காத்தலரிது' என்றுங் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும், அவராணை கூறப்பட்டது.

(கு - ரை.) கணமேயாயினும் - கூணப்பொழுதாகவேயிருந்தாலும். சலியாமை - அசையாதிருத்தல். குன்று - மலை. சாதியொருமையாவது - ஒரு சொல் ஒருமையிலே தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின் ஒருமை பன்மை விகுதியுருக மேல்வந்து முடிக்குஞ்சொல்லைப்பெற்றும் பொருளுணர்

தானே பன்மைப்பொரு ளுணர்த்துவது; இதனே வடநூலார், 'ஜாத்யேக வசனம்' என்பர். ஒரோவழி - ஒவ்வொருசமயத்தில். 'காத்தலரிது' என்றார், அவர்கள்சாபத்தைச் சகித்தல் கூடாமையால். (கூ)

கூ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(இ - ள்.) எ உயிர்க்குஉம்-எல்லா வுயிர்கள்மேலும், செம் தண்மை-செவ்விய தண்ணளியை, பூண்டு ஒழுகலான்—, அந்தணர் என்போர்-அந்தண ரென்று சொல்லப்படுவார், அறவோர் - துறவறத்தில்நின்றவர்; (எ - று.)

பூணுதல் - விரதமாகக் கோடல். 'அந்தணர்' என்பது - அழகிய தட்பத் தினே யுடையார் என ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மே லன்றிச் செல்லா தென்பது கருத்து.

அவ்வாறு ஆணையுடைய ராயினும் உயிர்கள்மாட்டு அருளுடைய ரென் பது, இதனைற் கூறப்பட்டது.

(கு - ரை.) செவ்விய தண்ணளி-நல்ல குளிர்ந்த கருணை. துறந்தவர்க்கு அருளுடைமை சிறந்த விரதமாம். தட்பம் - தண்மை. ஏதுப்பெயர்-ஒருகார ணத்தால் வந்தபெயர். அந்தணர்—அம் - அழகு; தண் - குளிர்ச்சி; இப்பண் படி, ஆகுபெயராய், அருளே உணர்த்திற்று: அர் - விகுதி. (கo)

சு-ஆம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது - அம்முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளும் இன்பமும் போலாது அறன் இம்மை மறுமை வீடு என்னும்மூன் றனையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்ப மும், அறத்து வழிப்படூஉத் தோற்றம் போல" என்றார் பிறரும்.

(கு - ரை.) போலாது - போலாகாமல். முனிவர் பெருமையைக் கூறிய பின் அவர்களால் தெரிவிக்கப்பட்ட புருஷார்த்தங்களுள் முதலதாகிய தரு மத்தின் வலிமையை உறுதியாகக்கூறுதல் அதிகாரமுறைமை என்க. "சிறப் புடைமரபின்" என்னும் மேற்கோள், புறநானூற்றில் கூக-ஆம் செய்யுளில் உள்ளது; இதற்குப் பொருள் - சிறப்பாகிய தன்மையையுடைய அருத்தமுங் காமமுந் தருமத்துக்குப் பிற்படுந் தன்மைபோலஎன்பது. அறன் - அறமென் பதன்போலி.

கூக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(இ - ள்.) சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந் தரும்; செல்வம்உம் ஈனும்-(துறக்கம் முதலிய) செல்வத்தையுந் தரும்; (ஆதலான்), உயிர்க்கு - உயிர் கட்கு, அறத்தின் கூஉங்கு - அறத்தின் மிக்க, ஆக்கம்—, எவனோ - யாது?

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு 'சிறப்பு' எனப்பட்டது. ''சிறப்பென்னுஞ் செம்பொருள்'' 358)என்ற திருக்குறளிலும் சிறப்புஎன்பது வீடுஎன்னும்பொருளில் வந்தது: ''சிறந்ததுபயிற்றல்'' (கற்-51)எனத் தொல் காப்பியத்து வருதலுங் காண்க. ஆக்கந்தருவதனை 'ஆக்கம்'என்றார். ஆக்கம்-மேன்மேல்உயர்தல். ஈண்டு 'உயிர்' என்றது, மக்களுயிரை; சிறப்புஞ் செல்வமும் எய்துதற்கு உரியது அதுவே யாகலின்.

இதனால், அறத்தின்மிக்க உறுதி யில்லை யென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) துறக்கம்-சுவர்க்கபதவி. ஆக்கம்-உயர்ச்சிதருவது. சிறப்பு-சிறந்த வீட்டுலகத்துக்கு, பண்பாகுபெயர். அறத்தின் - ஐந்தனுருபு, உறழ் பொருவு; இது. எல்லாப்பொருளில் அடங்கும். அளபெடை, இன்னிசை தருதற்பொருட்டு. ஆக்கம் - காரியவாகுபெயர். ஓ - அசை. 'சிறப்பீனும், செல்வமுமீனும்' என்னும் வாக்கியங்களுக்கு அறமென்பது, தோன்று எழுவாய். இனி, ஈனுமென்பதைப் பெயரெச்சமாக்கொண்டு, ஒருவாக்கியமாக முடிப்பினும் இழுக்காது. ஊங்கு-உயர்வு இழிவு எல்லாப்பொருளில் வரும் இடைச்சொல். எவன்-இன்மைகுறித்தது. (க)

ஈஉ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), அறத்தின் ஊஉங்கு - அறஞ்செய்தலின் மேற்பட்ட, ஆக்கமும்—,இல்லை—; அதனை—, மறத்தலின் ஊங்கு - (மயக்கத்தால்) மறத்தலின் மேற்பட்ட, கேடு - கேடும், இல்லை—; (எ - று.)

'அறத்தினூஉங் காக்கமு மில்லை' என மேற்சொல்லியவதனையே அனுவதித்தார்; அதனைத் கேடு வருதல் கூறுதற் பயன் நோக்கி.

இதனால், அது செய்யாவழிக் கேடு வருதல் கூறப்பட்டது.

(கு - ரை.) கேடு - தீமைதருவது. அனுவதித்தல் எனினும், வழிமொழிதல் எனினும் ஒக்கும்; அநுவாதமாவது - முன்சொல்லப்பட்டதொன்றையே வேறொன்றுவிதித்தற்பொருட்டுப் பின்னுஞ் சொல்லுதல்: அதனால் அது கூறியதுகூற லென்னுங் குற்றமாகாது வழிமொழித லென் றுமியிற்று; வழி மொழிதற்கு முன் கூறப்பட்டதைப் புரோவாதமென்பர் வடநூலார்: இங்கே, புரோவாதம்-''அறத்தினூஉங் காக்க மெவனே'' என்பது. அது-அறம். (உ)

ஈஊ. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) ஒல்லும் வகையான் - (தத்தமக்கு) இயலுந் திறத்தான், அறம் வினை - அறமாகிய நல்வினையை, ஓவாதே - ஒழியாதே, செல்லும் வாய் எல்லாம்-(அஃது) எய்தும்இடத்தனெல்லாம், செயல்-செய்க; (எ-று.)

இயலுந் திறமாவது - இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கு ஏற்பவுஞ் செய்தல். ஓவாமை - இடைவிடாமை. எய்தும்

இடமாவன - மனம் வாக்குக் காயம் என்பன. அவற்றுற்செய்யும் அறங்களாவன - முறைமே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலும் என இவை.

இதனுன், அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

(சு - ரை.) தத்தமக்கு இயலுந் திறத்தான்-தங்கள் தங்களுக்குக் கூடிய மட்டினுல். ஒழியாதே - இடைவிடாமல். அஃது எய்தும் இடத்தானெல்லாம் அவ்வறம் பொருந்துமிடங்களெல்லாவற்றாலும். செய்க - செய்யக் கடவன். யாக்கைநிலை - சரீரத்தின்நிலைமை. மனமொழிமெய்கள் - திரிகரணமெனப்படும். திரிகரணங்களாலும் அறஞ்செய்தல் - மனத்தால் நல்லவற்றை நினைத்தலும், வாயால் நல்லவற்றைச் சொல்லுதலும், உடம்பினுல் நற்கருமங்களைச் செய்தலுமாம். ஆறு - விதம். ஓவாது - எதிர்மறைவினையெச்சம். செயல் - வியங்கோள். (கூ)

கூசு. மனத்துக்கண் மாசில னுதல லனைத்தற
னுகுல நீர பிற.

(இ - ள்.) (அவ்வாற்றுன் அறஞ்செய்வான்), மனத்துக்கண் - (தன்) மனத்தின்கண், மாசு இலன் ஆதல் - குற்றமுடையனல்லனாக; அனைத்து அறன்-அவ்வளவே அறமாவது; பிற - அஃதொழிந்த சொல்லும் வேடமும், ஆகுலம் நீர-(அறமெனப்படா,) ஆரவார நீர்மைய; (எ - று.)

குற்றம் - தீயன சிந்தித்தல். பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்றனவாகலின், 'ஆகுலநீர' என்றார். மனத்து மாசுடையனுயவழி அதன் வழிய வாகிய மொழிமெய்களாற் செய்வன பயனில வென்பதாஉம் பெறப்பட்டது.

(சு - ரை.) அவ்வாற்றுன்-அவ்விதத்தால்: ஒல்லும்வகையாலென்றபடி. வேடம் - வேஷம்; மனத்தில் தருமசிந்தை யில்லாமலே வெளிக்குத் தருமஞ் செய்பவன்போலக் காட்டுவது. ஆரவார நீர்மைய-பலரும் அறியச் செய்யும் ஆடம்பரத்தன்மையையுடையனவாம். அதன் வழியவாகிய - மனத்தின் வழியே நடப்பனவாகிய. ஆதல் - உடன்பாட்டுவியங்கோள். நீர - பலவின் பால் முற்று: நீர்மை-பகுதி. இக்குறள், மூன்று முடிபு. முதல்வாக்கியத்துக்கு, ஒருவன் - தோன்று எழுவாய். இனி, ஆதல் என்பதைத் தொழிற் பெயராக வைத்து, 'மனத்தில் மாசில்லுத லாகிய அதுவே அறன்: பிற இடம்பத்தன்மையன' என இரண்டுமுடிபாகவுங் கொள்ளலாம். பிற - இடைச்சொல்லடியாப் பிறந்த பெயர். (சு)

கூடு. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(இ - ள்.) அழுக்காறு - (பிறராக்கம்) பொறுமையும், அவா-(புலன்கண் மேற் செல்கின்ற) அவாவும், வெகுளி-(அவை ஏதுவாகப் பிறர்பால்வரும்) வெகுளியும், இன்னு சொல் - (அதுபற்றி வருங்) கடுஞ்சொல்லும், (ஆகிய), நான்குமாம் - இந்நான்கினையும், இழுக்கா-கடிந்து, இயன்றது-இடையறாது நடந்தது,—அறம் - அறமாவது; (எ - று.)

இதனுன், 'இவற்றோடுவிரவி இயன்றது அறமெனப்படாது' என்பதூஉங் கொள்க.

இவை இரண்டுபோட்டானும், அறத்தினது இயல்பு கூறப்பட்டது.

(கு-ரை.) பிறராக்கம் பொறுமை-அயலார்க்கு உண்டாகும்நன்மைகளைக் கண்டு மனம் பொறுதிருத்தல். கடிந்து - நீக்கி. இவற்றோடு விரவிஇயன்றது - அழுக்காறுமுதலியவற்றோடு கலந்து நடந்தது. அருத்தாபத்தியால், 'பொறுமை முதலியவற்றோடுகூடியது அதருமம்' என்றுங்கொண்டார். அழுக்காறு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; அழுக்கறு-பகுதி: இது-ஒருசொல்; இனி, அழுக்கு அறு என்னும் இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்டு, எதிர்மறையிலக்கணையால், குற்றத்தைநீக்கு என்னும்பொருளைத் தராமல் குற்றத்தையுடையவனுகு எனப்பொருள்பட்டு, பொறுமையைக் குறித்ததென்றுங் கொள்ளலாம். அழுக்காறுமுதலியன பெயர்ச்செவ்வெண்ணுதலால், அது, ஈற்றில் 'ஙான்கு'என்னுஞ் தொகைபெற்றுவந்தது. இழுக்கா-இறந்தகால வினையெச்சம்; ஆ-விகுதி, காலங்காட்டிற்று. இயன்றது - வினையாலணையும் பெயர். இயன்றதே அறம் என்னும் பிரிநிலையேகாரம் தொக்கது.

(ஈடு)

ஈசு. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(இ - ள்.) அன்று அறிவாம் என்னுது - (யாம் இது பொழுது இளைய மாகலின்) இறக்கும் ஞான்று செய்து மெனக் கருதாது, அறம்-அறத்தினை, செய்க - (நாள்தோறுஞ்) செய்க; அது-அவ்வாறு செய்த அறம், பொன்றும் கால் - (இவ்வுடம்பினின்றும் உயிர்) போங்காலத்து, (அதற்கு), பொன்று-அழிவில்லாத, துணை - துணையாம்; (எ - று.)

'மற்று' என்பது, அசைநிலை. 'பொன்றுத்துணை' என்றார், செய்த உடம்பு அழியவும் உயிரோடு ஒன்றி ஏனையுடம்பினுஞ் சேறலின்.

இதனுன், இவ்வியல்பிற்றய அறத்தினை, நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இதுபொழுது இளையமாகலின் - இப்பொழுது இளமைப் பருவத்தை யுடையவராயிருக்கிறோ மாதலால். இறக்கும் ஞான்று செய்தும் - (மூதுமைப்பருவம்வந்து) சாம்பொழுது தருமஞ் செய்வோம். பொன்றுதல் - இறத்தல். அதற்கு - உயிருக்கு. செய்த உடம்பு-தருமத்தைச்செய்த சரீரம். ஒன்றி - கூடிநின்று. ஏனை உடம்பினும் சேறலின் - மற்றொரு பிறப்பின் உடம்பிலும் அவ்வறத்தின்பயன் செல்லுதலால். இவ்வியல்பிற்று-இப்படிப்பட்டதன்மையையுடையது. நிலையின - இருக்கிற. அன்று - அக்காலத்தில். அறிவாம் - தனித்தன்மைப் பன்மைமுற்று; பார்த்துக்கொள்வோ மென்று பொருள். கால் - காலம் என்பதன் கடைக்குறை. வயதுமுதிர்ந்தவர் மாத்திரமேயன்றி இளையவர்களும் இறத்தலுண் டாதலாலும், மரணம்நேரிடுங் காலம் இன்னதென்று எவர்க்கும் ஒருதலையாக அறிதல் கூடாமையாலும்,

'அன்றறிவாமென்னு தறஞ்செய்க' என்றார். "மற்றறிவா நல்வினை யாமி னைய மென்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின், மூற்றி யிருந்த கனியொழியத் தீவளியால், நற்கா யுதிர்தலு முண்டு" என்றார், காலடியாரிலும். 'பொன்றுத்துணை' என்றது, உடம்பு அழிந்தபின்னும் தான் அழியாததனால். (சு)

நூ எ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானெ ரேர்ந்தா னிடை.

(இ - ள்.) அறத்து ஆறு இது என - அறத்தின்பயன் இதுவென்று (யாம் ஆகமஅளவையான்) உணர்த்தல், வேண்டா—; சிவிகை பொறுத்தானெடு ஊர்ந்தானிடை - சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை(க் காட்சியளவைதன்னானே உணரப்படும்); (எ - று.)

பயனை 'ஆறு' என்றார், பின்னதாகலின். 'என' என்னும் எச்சத்தால் சொல்லாகிய ஆகமவளவையும், 'பொறுத்தானெ ரேர்தானிடை' என்றதனால் காட்சியளவையும் பெற்றும். 'உணரப்படும்' என்பது, சொல்லெச்சம்.

இதனான், பொன்றுத்துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

(கு - ரை.) ஆகமஅளவை - சாஸ்திரப்பிரமாணம். சிவிகை - பல்லக்கு; ஸிபிகா என்னும் வடமொழியின் திரிபு. காவுவான்-சுமப்பவன். செலுத்துவானிடை - அதில் ஏறிநடத்துபவனிடத்தில். காட்சியளவை-பிரதியக்ஷப்பிரமாணம். அறஞ்செய்தால் அவ்வழியே அதன்பயன் அதன்பின் உண்டாதலால், பயன் 'ஆறு' எனப்பட்டது; ஆறு-வழி. வேண்டா - வேண்டுமென்பதன் எதிர்மறை. இதற்குஎழுவாய் - 'என' என்பது. 'என' என்பதற்கு - என்று சொல்ல லென்பது பொருளாதலால் ஆகமப்பிரமாணமும், 'சிவிகை பொறுத்தானெ ரேர்தானிடை' எனக் குறித்துச் சொன்னதனைப் பிரதியக்ஷப்பிரமாணமும், பெற்றுக்கொண்டோம். பொருள்முடியாததனால் 'உணரப்படும்' என்று எஞ்சிய சொல் வருவிக்கப்பட்டது: இங்ஙனம்வருவிப்பது, சொல்லெச்சம். தருமத்தின்பயன் இப்படிப்பட்டதென்று நூல் கலோக்கொண்டு அரிதின் தெரிவிக்கவேண்டிய தில்லை; உலகத்தில் ஒருவன் பல்லக்கைத் தூக்க மற்றொருவன் அதன்மேலேறி வீற்றிருப்பதைக் கண்கூடாகக் காணுதலினாலேயே அறஞ்செய்தவன் இன்பமனுபவிப்பானென்றும், அதுசெய்யாதவன் துன்பமனுபவிப்பா னென்றும் எளிதில் தெரிந்து கொள்ளலாமே யென்பது, கருத்து. இனி, இத்திருக்குறளுக்கு-'துறவறத்தின்பயனுகிய ஆத்மசொரூபஞானம் இப்படிப்பட்டதென்று யாம் இப்பொழுது புதிதாக வகுத்துச் சொல்லவேண்டுவதில்லை; சவ்வீரமகாராஜனுக்குப் பல்லக்கைச்சுமந்த ஜடபரதயோகிக்கும் அந்த ரகூகணமகாராஜனுக்கும் நடந்த சம்பாஷணையாலே அறியப்படும்' என்றும் உரைக்கலாம்; ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாம்அம்சத்தில் இருநிலான்கு அத்தியாயங்களிற் காண்க.

நூ அ. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(இ - ள்.) வீழ் நாள் - செய்யாது கழியும் நாள், படாஅமை-உளவாகாமல், ஒருவன்—,நன்று ஆற்றின் - அறத்தைச் செய்யுமாயின், அஃது - அச்செயல், வாழ் நாள் வழி அடைக்கும் கல் - (அவன் யாக்கையோடு) கூடும் நாள்வரும் வழியை (வாராமல்) அடைக்குங் கல்லாம்; (எ - று.)

ஐவகைக்குற்றத்தான் வரும் இருவகைவினையும் உள்ள துணையும் உயிர் யாக்கையோடுங்கூடி நின்று அவ்வினைகளது இருவகைப் பயனையும் நுகரு மாகலின், அந்நாள் முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது. குற்றங்கள் ஐந்தாவன - அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன; இவற்றை வடநூலார் 'பஞ்சகிலேசம்' என்ப. வினை இரண்டாவன-நல்வினை, தீவினை என்பன. பயன் இரண்டாவன - இன்பம், துன்பம் என்பன.

இதனான், அறம் வீடுபயக்கு மென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) செய்யும் - செய்வான். யாக்கை - உடம்பு. ஐவகைக் குற்றம்-அனாதியாகிய அவித்யையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளிடத்துச் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலையிடத்துச் செல்லுங் கோபமும் என்பன. இவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால், தமிழ்நூலார் "காமம்வெகுளி மயக்கம்" எனக் குற்றம் மூன்றென்பர். விழைவு-ஆசை. வெறுப்பு கோபம். கிலேசம்-துன்பந் தருவன. படாமை - எதிர்மறைவினையெச்சம். நன்று-நல்ல அறத்துக்கு, பண்பாகுபெயர். அஃதொருவன் - ஆய்தவெழுத்து மெய்போல ஒலித்து அலகு பெறாதுநின்றது. படாஅமை - அளபெடை ஓசைநிறைத்தது. வாழ்நாள்வழி - பிறப்படையும் வழி. (அ)

௩௯. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ - ள்.) அறத்தான் வருவதுஎ - இல்லறத்தோடு பொருந்தி வருவதே, இன்பம் - இன்பமாவது; மற்று எல்லாம் - அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம், புறத்த - (இன்பமாயினுந்) துன்பத்தினிடத்த; புகழ்உம் இல - (அதுவேயுமன்றிப்) புகழும் உடையவல்ல; (எ - று.)

ஆனுருபு, ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது; "தூங்கு கையா னோங்கு நடைய" என்புழிப்போல. இன்பம் - காம நுகர்ச்சி; அஃதாமாறு, காமத்துப் பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புற மெனவே, துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய்விளைதலின், 'புறத்த' என்றார்; அறத்தோடு வாராதன புகழுமில எனவே, 'வருவது புகழுமுடைத்து' என்பது பெற்றாம்.

இதனான், அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) "தூங்கு கையான்" என்னும் மேற்கோள் - புறநானூறு உஉ-ஆம் செய்யுளில் உள்ளது; இதற்கு-தொங்குகிறகையோடு கம்பீரமான நடை

யையு முடைய வென்று பொருள். என்புழி - என்றவிடத்தில். மூன்றும் வேற்றுமையின் உருபுகளுள் ஆனுருபு, பெரும்பாலும் கருவிகருத்தாப்பொருள்களில் மாத்திரமே வரும். காமத்துப் பாலின் முதலில் 'ஈண்டு இன்பமென்றது - ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை' எனக் கூறுவர், பரிமேலழகர். பிறனில்விழைவு - அயலான்மனையாளை விரும்புதல். பின் துன்பமாய்விளைதல் - பழியும் பாவமும் ராஜதண்டனையுமாய் முடிதல். அறத்தோடு கூடிவருவது புகழுடையது எனக் கொண்டது, அருத்தாபத்தி. இம்மையின்பம் - இவ்வுலகத்தின்பம். மற்றுஎன்னும் இடைச்சொல், இங்கே, சுட்டியதற்கு இனமான பொருளில் வந்தது. புறத்த - பலவின்பாற் குறிப்புமுற்று; புகழும், உம்மை - இறந்தது தழுவிய எச்சம். (சு)

சஂ. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, செயல்பாலது - செய்தற்பான்மையது, அறனே - நல்வினையே; உயல் பாலது - ஒழிதற்பான்மையது, பழி(ஏ) - தீவினையே; (எ - று.)

'ஓரும்' என்பன இரண்டும் - அசைநிலை. தேற்றேகாரம், பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனை 'பழி' என்றார்.

இதனுள், செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) செய்தற்பான்மையது - செய்யப்படும் உரிமையையுடையது. ஒழிதல் - செய்யாது விடுதல். ஓரும் - இடைச்சொல். 'அறனே' என்பதிலுள்ள ஏகாரம், 'பழி' என்பதனோடுங் கூட்டப்பட்டது. பாவத்தைத் தருவதாய்ப் பழிக்கப்படுதல்பற்றி, அதருமத்தை 'பழி' என்றார்; காரணக்குறி. (கஂ)

பாயிரம் மூற்றிற்று.

இல்லறவியல்.

(கு - ரை.) அறஞ்செய்தற்குரிய இல்லறம் துறவறம் என்ற இருவகை நிலையுள் இல்லறம் முதல நூதலால், இல்லறவியல் முதலில் வைக்கப்பட்டது: இல்லறத்திலிருந்து துறவறத்திற்குச் செல்லலர் மாதலால், இல்லறம் முதலதாம்: இனி, "இல்லற மல்லது நல்லற மன்று" என்று ஔவையார் கூறினபடி இருவகை அறத்துள் இல்லறம் தலைமையானதாதலால், அதை முதலில்வைத்தா ரென்றலும் ஒன்று. இந்த இல்லறவியல், இல்வாழ்க்கையென்பது முதல் புகழ் ஈறாகவுள்ள இருபது அதிகாரங்களைக் கொண்டதாகும்.

ரு - ஆம் அதிகாரம்—இல்வாழ்க்கை.

அஃதாவது - இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ் செய்தற்கு உரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃது, அறன் வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல் - அதற்குரிய மனையாளுக்கு, ஆகுபெயர். வாழ்க்கை - தொழிற்பெயர். இன்னிலை-இல்நிலை எனப் பிரிக்க; இல்லறநிலைமை யென்று பொருள். அறன்வலியுறுத்தலைக் கூறிய பின், அறஞ்செய்வார்க்கு உரிய இருவகைநிலையுள் முதலதான இல்லறநிலைக்கு மனையாளோடுகூடிவாழ்தல் முக்கியமாதல், அதிகாரமுறைமையென்க.

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

(இ - ள்.) இல் வாழ்வான் என்பான் - இல்லறத்தோடுகூடு வாழ்வா னென்று சொல்லப்படுவான், இயல்பு உடைய மூவர்க்குமும் - அறவியல்பினை யுடைய ஏனைமூவர்க்கும், நல் ஆற்றின்-(அவர்செல்லும்) நல்லொழுக்க நெறிக்கண், நின்ற - நிலைபெற்ற, துணை - துணையாம்; (எ - று.)

'இல்' என்பது, ஆகுபெயர். 'என்பான்' என, செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது. ஏனையமூவராவார் - ஆசாரியனிடத்தினின்று ஓதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லிவிட்டுத் தீயோடு வனத்தின்கட் சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத் துறந்த யோக ஒழுக்கத்தானும் என இவர். இவருள் முன்னையிருவரையும் பிறர்மதம்மேற்கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச் செல்லுமளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றுன் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வந்நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், 'நல்லாற்றி னின்ற துணை' என்றார்.

(கு - ரை.) வினைமுதல் - கருத்தா. 'எனப்படுவான்' என்பது அகரச்சாரியையும் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் 'படு' விகுதியும் தொக்கு 'என்பான்' என நின்றதாகக் கொண்டார், பிரயோகவிவேகநூலாரும், தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரரும். இல்லிற் செய்யுந் தருமத்தை 'இல்' என்றது - இடவாகுபெயர். தீ - நித்தியாக்கினி. வழிபட - உபசரிக்க. அவ்வாறு தவஞ்செய்யும் ஒழுக்கத்தான் - வாநப்பிரஸ்தன். யோக ஒழுக்கத்தான் - சந்யாசி. திருவள்ளுவர் 'இல்லறம்,' 'துறவறம்' என இருவகை ஆச்சிரமமாகவே வகுத்துக்கொண்டா ராதலால், மற்றையிரண்டாச்சிரமத்தாரையுங் கூட்டி 'மூவர்க்கும்' என்றது - பிறர்மதத்தை அங்கீகரித்ததாயிற்று; இது 'உடன்படல்' என்னும் மதம். இவர்-மூன்றுச்சிரமத்தார். முடியச்செல்லுமளவும் - நிறைவேற்றுமளவும். அச்செலவுக்கு - அவ்வொழுக்கத்திற்கு. இடையூறு - தடை, உண்டி - உணவு. உறையுள் - இடம். அவ்வந்நெறி - அந்தந்த வழிகள்.

சஉ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(இ - ள்.) துறந்தார்க்குஉம் (கலைகணைவரால்) துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்குஉம்-கல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்குஉம்-(ஒருவரும் இன்றித் தன்பால்வந்து) இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், துணை—; (எ - று.)

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர் கலைகளைந்தின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவுமுதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன்முதலியசெய்து கல்லுலகின்கட் செலுத்தலானும், 'துணை' என்றார்.

இவை இரண்டுபொட்டானும், இன்னிலை எல்லாஉபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) கலைகணைவரால் துறக்கப்பட்டார் - தஞ்சமாக இருந்தவர்களால் விடப்பட்டுக் கதியற்றவராயினவர். கல்கூர்ந்தார் - தரித்திரர். துவ்வாதவர்-அனுபவிக்கப்படும் பொருளொன்றையும் அனுபவிக்கப்பெறாதவர்: எனவே, தரித்திரராயிற்று. தன்பால் - தன்னிடத்தில். பாவம் ஒழிய - தீவினைக்குக் காரணமாகிய வழிகள் தவிர மற்றவழிகளால். நீர்க்கடன் - தருப்பணம். இங்கே, துறந்தார் - சன்னியாசிகளல்ல ரென அறிக. (உ)

சஊ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றுங்
கைம்புலத்தா றோம்ப றலை.

(இ - ள்.) தென்புலத்தார் - பிதிரர், தெய்வம் - தேவர், விருந்து-விருந்தினர், ஒக்கல் - சுற்றத்தார், தான்—, என்ற - என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து - ஐந்திடத்துஞ் செய்யும், ஆறு - அறநெறியை, ஓம்பல் - வழுவாமற் செய்தல்,—தலை - (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய அறமாம்; (எ - று.)

பிதிரராவார் படைப்புக்காலத்துஅயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்திசையாதலின், 'தென்புலத்தார்' என்றார். 'தெய்வம்' என்பது, சாதியொருமை. 'விருந்து' என்பது - புதுமை: அஃது ஈண்டு ஆகுபெயராய், புதியராய்வந்தார்மேல் நின்றது; அவர் இருவகையர்; பண்டு அறிவு உண்மையின் குறித்து வந்தாரும், அஃது இன்மையின் குறியாது வந்தாரும் என. ஒக்கல் - சுற்றத்தார். எல்லா அறங்களும் தான் உளனாய் நின்று செய்யவேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனுயிற்று. என்ற என்பது, விகாரமாயிற்று. ஆங்கு - அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனாகலின், 'ஐம்புலம்' என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று, இவ்வைவம் புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலான் என்பது அறிக.

(கு - ரை.) பிதிரர் - பிதிருக்கள். அயன் - பிரமன். கடவுட்சாதி - தேவசாதி. தென்புலத்தார் - தெற்குத்திக்கிலுள்ளவர். விருந்து - விருந்தினர்க்குப் பண்பாகுபெயர். பண்டறிவு - முன்பரிசயம்; அறிமுகம். ஓம்பல் - காத்தல். ஈண்டுங்கு - அகரம், தொகுத்தல் விகாரம். இறைப்பொருள் - வரிப்பணம்.

'ஐம்புலத்து' என்றஇடத்தில் மூற்றும்மை விகாரத்தால் தொக்கது. தெய்வம்-தைவம். ஒக்கல் - மனம் ஒருமித்திருக்கும் பந்துக்களுக்குத் தொழிலாகுபெயர். தலைமையான அறத்தை 'தலை' என்றது, பண்பாகுபெயர். தெய்வம் - பித்ரு தேவரொழிந்த மற்றைத்தேவர். (ஈ)

சசு. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழிபெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(இ - ள்.) பழி அஞ்சி - (பொருள்செய்யுங்கால்) பாவத்தை அஞ்சி (ஈட்டி), பாத்து - (அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும் தென் புலத்தார் முதலிய நால்வர்க்கும்) பகுத்து, ஊண் - (தான்) உண்டலை, வாழ்க்கை - (ஒருவன்) இல்வாழ்க்கை, உடைத்து ஆயின்—, வழி - அவன்வழி, (உலகத்து), எஞ்ஞான்றும்—, எஞ்சல் இல் - (நிற்றலல்லது) இறத்தலில்லை.

பாவத்தான்வந்த பிறன்பொருளைப் பகுத்துஉண்ணின், அறம் பொருளுடையார்மேலும் பாவம் தன்மேலுமாய்நின்று வழி எஞ்சுமாகலின், 'பழியஞ்சி' என்றார். வாழ்வானது உடைமை, வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

(சு - ரை.) பொருள் செய்யுங்கால் - பணஞ் சம்பாதிக்கும்பொழுது. ஈட்டி - சம்பாதித்து. அவன்வழி - அவனுடைய சந்ததி பகுத்து உண்ணின்-(பிறர்க்குப்) பகுத்துக்கொடுத்துத் தானும் உண்டால். அறம்-பகுத்துக் கொடுத்தலாலுண்டாகிற அறம்; அது, அப்பணத்துக்கு உடையவரிடஞ் செல்லும். பாவம் - தீய வழியால் அப்பொருளைச் சம்பாதித்ததனாலுண்டான தீவினை. வாழ்வானுக்கும் வாழ்க்கைக்கு மூள்ள ஒருமைப்பாடுபற்றி, வாழ்பவனதுடைமையை வாழ்க்கையின்மேலேற்றி, 'வாழ்க்கை உடைத்தாயின்' எனக் கூறப்பட்டது. ஒருவனுக்குப் பின் நிற்பதாதலால், 'வழி' என்று சந்ததிக்குப்பெயராயிற்று. உடைத்தாதலின் அருமை தோன்ற, 'உடைத்தாயின்' என்றார். இனி, இக்குறளுக்கு - இல்வாழ்வானெருவனது செல்வம் லோபியென்பதனல்வரும்பழிக்குப் பயந்து பிறர்க்குப்பங்கிட்டுக்கொடுத்துத் தானும்உண்ணுதலையுடையதாமாயின், அச்செல்வம், அவனுக்கு மாத்திரமேயன்றி அவன் சந்ததியார்க்கும் எப்பொழுதுங் குறைவுபடுதலில்லையாம் என்றும் உரைக்கலாம். பாத்து, பகுஎன்பதன் மரூஉவாகிய பா - பகுதி. ஊண்-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். உடைத்து - குறிப்புமுற்று. இல் - இல்லையென்பதன் விகாரம்.

சநி. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(இ - ள்.) இல்வாழ்க்கை - (ஒருவன்) இல்வாழ்க்கை, அன்புஉம்-(தன் துணைவிமேற் செய்யத்தகும்) அன்பினையும், அறன்உம் - (பிறர்க்குப்பகுத்து உண்டலாகிய) அறத்தினையும், உடைத்து ஆயின்—, அது - அவ்வுடைமை, பண்புஉம் பயன்உம் - (அதற்குப்) பண்பும் பயனுமாம்; (எ - று.)

கிரனிறை. இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சு ஒன்றுகாவழி இல்லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனுயிற்று.



இவைமூன்றுபாட்டானும், இன்னிலையில் நின்றான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) துணைவி-மனைவி. அவ்வுடைமை-அந்த உடைத்தாயிருத்தல். இல்வாழ்க்கைக்கு மனைவிமேலன்பு குணமும், பிறர்க்குப் பகுத்துஉண்பது பிரயோசனமுமா மென முறையே சென்று இயைதலால், முறைநிரல்நிறைப் பொருளோரோ; அதாவது - வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவற்றையும் அம்முறையே சொல்வது. கடைபோகாமை-முடியாமை; அதனை "மருவிய காதன் மனையாளுந் தானும், இருவரும்பூண்டார்ப்பி னல்லால் - ஒருவரால், இல்வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகடஞ், செல்வாது தெற்றிற்று நின்று" என்னும் அறநெறிச்சாரத்துப் பாட்டினாலும் அறிக. (நி)

சஉ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(இ - ள்.) (ஒருவன்), இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையை, அறத்து ஆற்றின் - அறத்தின்வழியே, ஆற்றின் - செலுத்துவானாயின், புறத்து ஆற்றில் - (அவன் அதற்குப்) புறமாகிய நெறியில், போஒய் - போய், பெறுவது-பெறும் பயன், எவன் - யாது? (எ - று.)

'அறத்தாறு' என்பது - பழியஞ்சிப் பகுத்து உண்டலும், அன்புடைமையும் என மேற்சொல்லிய ஆறு. 'புறத்தாறு'-இல்லிலிருந்துவிட்டு வனத்துச்செல்லும் நிலை. அந்நிலையின் இது பயனுடைத் தென்பார், 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

(கு - ரை.) அதற்குப் புறமாகிய நெறி - வாசப்பிரஸ்தம். எவன் என்றதனால், போய்ப் பயனில்லை யென்பதும், அதனிலுஞ் சிறந்தபயன் இல்லிலேயே எய்தும் என்பதும் பெற்றாம். அளபெடை - அசைநிறைக்க வந்தது. (சு)

சஎ. இயல்பிலா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(இ - ள்.) இல் வாழ்க்கை - இல்வாழ்க்கைக்கண்நின்று, இயல்பிலான்-(அதற்கு உரிய) இயல்போடு கூடி, வாழ்பவன் என்பான்-வாழ்பவ னென்று சொல்லப்படுவான்,—முயல்வாருள் எல்லாம் - (புலன்களை விட) முயல்வாரெல்லாருள்ளும், தலை - மிக்கவன்; (எ - று.)

முற்றத்துறந்தவர் விட்டமையின், 'முயல்வார்' என்றது மூன்றாம்நிலையில் நின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் 'எல்லாருள்ளும்' எனவும், முயலாதவைத்துப் பயன்எய்துதலின் 'தலை' எனவுங் கூறினார்.

(கு-ரை.) விட்டமையின்-ஐம்புலன்களை விட்டதனால். மூன்றாம்நிலையில் நின்றார் - வாசப்பிரஸ்தர். மனைவியோடு வனஞ்செல்லுதலும், மனைவியின்றி அங்குச் செல்லுதலும், வனத்தில்தானே குறித்த ஓரிடம் செல்லுதலும், இன்னவிடஞ் செல்வதென்று குறித்தலின்றிச் செல்லுதலும் என வானப்

பிரஸ்தாபிலை பலவகைப்படுதலின், 'அந்நிலைதான் பலவகைப்படுதலின்' என்ரு ரென்னலாம். முயலாதுவைத்துப் பயனெய்துதலின் - முயற்சி செய்யாமல் ஐம்புலன்களோடு கூடிநின்றே மேலான பிரயோசனத்தை அடைவதனால். இயல்பினுன், ஆன் - உடனிகழ்ச்சி. தலை-ஆகுபெயர். (எ)

ஈஅ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

(இ - ள்.) ஆற்றின் ஒழுக்கி - (தவஞ்செய்வாரையும் தத்தம்) நெறியின் கண் ஒழுகப்பண்ணி, அறன் இழுக்கா - (தானும் தன்) அறத்தின் தவருத, இல்வாழ்க்கை—,—நோற்பாரின் - அத் தவஞ்செய்வார் நிலையினும், நோன்மைஉடைத்து - பொறையுடைத்து; (எ - று.)

பசிமுதலிய இடையூறு நீக்கலின், 'ஆற்றினெழுக்கி' என்ரூர். 'நோற்பார்' என்பது,ஆகுபெயர். நோற்பார்நிலைக்கு அவர்தம்மை உற்றநோயல்லது இல்வாழ்வார்நிலைபோற் பிறரை உற்ற நோயும் பொறுத்தல் இன்மையின், 'நோற்பாரி னேன்மையுடைத்து' என்ரூர்.

(கு - ரை.) பொறை-பொறுமை. நோற்பார் என்பது-நோற்பாரின் நிலைமைக்கு ஆனது, பொருளாகுபெயர். துறந்ததவஞ்செய்பவர் தமக்குவருந் துன்பங்களே மாத்திரமே பொறுத்துக்கொள்ளுகிறூர்கள்; இல்லறத்தவரோ, தமக்குவருந்துன்பங்களைப் பொறுத்துப் பிறர்க்குவருந்துன்பங்களையும் நீக்குகின்றனர்: ஆதலால், இல்லறஞ் சிறந்தது என்றபடி. (அ)

ஈகூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(இ - ள்.) அறன் எனப்பட்டது - (இருவகை அறத்தினும் தூல்களான்) அறனென்று சிறப்பித்துச்சொல்லப்பட்டது, இல்வாழ்க்கை ஏ - இல்வாழ்க்கையே; அஃது உம்-எனைத்துறவறமோஎனின் அதுவும், பிறன் பழிப்பது இல் ஆயின் - பிறஞற்பழிக்கப்படுவதில்லையாயின், நன்று - (அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக) நன்று; (எ - று.)

ஏகாரம், பிரிநிலைக்கண் வந்தது. இதனுற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், 'அஃது' என்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேல் நின்றது. 'பிறன் பழிப்பது' என்றது, கூடாவொழுக்கத்தை. துறவறம் மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றை ஒறுக்கவேண்டாது ஐம்புல இன்பங்கள் ஆரத்துய்க்கும் * எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கு எண்ணப்படுவது என்றவாருயிற்று.

இவைநான்குபாட்டானும், இன்னிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) துறவறத்தைப் பிரித்தலினுல், ஏகாரம் - பிரிநிலையாயிற்று. இதனுல் - ஏகாரத்தால். அதன்மேல்-துறவறத்தின்மேல். கூடாவொழுக்கம்-

* மேன்மையுடைய என்று பிரதிபேதம்.

தவத்தோடு பொருந்தாததாகிய தீய ஒழுக்கம். ஒறுத்து-வருத்தி. ஆரத் துய்க்கும்-நிரம்ப அனுபவிக்கிற. எண்மை-எளிமை, சௌகரியம். ஒருங்கு-ஒருசேர. இனி, இக்குறளுக்கு-அறமெனப்பட்டது இல்வாழ்க்கையே; அவ்வில்வாழ்க்கையும் பிறனுற்பழிக்கப்படுவனவான பிறனில்விழைதல் அழுக்காறு பேராசை புறங்கூறல் முதலிய தீக்குணங்களில்லாததாயின் நன்று என்றும் உரைக்கலாம். (கூ)

நிo. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(இ - ள்.) வாழ்வாங்கு - (இல்லறத்தோடுகூடி) வாழும் இயல்பினால், வையத்துள் - வையத்தின்கண், வாழ்பவன்—, வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - (வையத்தானே யெனினும்) வானின்கண் உறையுந் தேவருள் (ஒருவனாக) வைத்து நன்குமதிக்கப்படும்; (எ - று.)

பின் தேவனுய் அவ்வறப்பயன்நுகர்தல் ஒருதலை யாகலின், 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார்.

இதனால், இன்னிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது; இம்மைப் பயன், புகழ்: அதனை இறுதிக்கட் கூறுப.

(கு - ரை.) வையத்தின்கண் - பூலோகத்தில். நன்குமதித்தல்-கௌரவித்தல். அறப்பயனுகர்தல் - தருமத்தின்பயனை அனுபவித்தல். ஒருதலை-நிச்சயம். இறுதிக்கட் கூறுப-இவ்வியலின் முடிவில் உச-ஆம் அதிகாரத்திற் கூறுவர். உள் இரண்டும் - எழனுருபு. வைக்கப்படும் - செய்யுமென்முற்று ஆண்பாலிற் சென்றது. இல்லறத்தில் முறைதவறுமல்வாழ்பவன் மறுமையில் தேவகதியைப் பெறுவான்; அன்றியும், இம்மையில் தேவரைப்போலக் கொண்டாடப்படுவான் என்பது கருத்து. (கo)

கூ-ஆம் அதிகாரம்—வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது - அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) துணை - துணைவிக்குப் பண்பாகுபெயர். நலம்-பண்புப்பெயர்.

நிக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(இ - ள்.) மனை தக்க - மனையறத்திற்குத் தக்க, மாண்பு - நற்குண நற்செய்கைகளை, உடையள்ஆகி-உடையளாய், தன் கொண்டான் வளம் தக்காள்-தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை யுடையாள், வாழ்க்கை துணை - அதற்குத் துணை; (எ - று.)

நற்குணங்களாவன - துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டு அருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன - வாழ்க்கைக்கு வேண்டும்பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மை

யும், ஒப்புரவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது-முதலை அறிந்து அதற்கு இயைய அழித்தல்.

இதனுன், இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) மனையறம் - இல்லறம். மனை - மனையறத்திற்கு, ஆகுபெயர். மாண்பு - மாட்சிமை; சிறப்பு: இங்கே நற்குணங்களும், நற்செய்கைகளும். கொண்டவன் - விவாகஞ்செய்துகொண்டபுருஷன். வருவாய்க்குத் தக்க வாழ்க்கை - வரும்பொருளளவுக்குத் தகுந்தபடி சம்சாரகாரியங்களைச் செய்தல். துறந்தார்ப்பேணல் - முனிவர்களை உபசரித்தல். விருந்தயர்தல் - விருந்தாளிகளை உண்பித்தல். வறியார்மாட்டு - தரித்திரரிடத்தில். அருளாவது - ஒருசம்பந்தமுமில்லாமல் இயல்பாகவுண்டாகுங் கருணை. கடைப்பிடித்தல் - அப்பொருள்களை மறவாமற் செவ்வையாய்ச் சேர்த்தல். அட்டில் தொழில் வன்மை - போஜநபதார்த்தங்களை இனியசுவைபடச் சமையல்செய்யுந் திறம்; அட்டில் - சமையலிடம். ஒப்புரவுசெய்தல் - உலகநடையையறிந்து அதற்கு ஏற்பச் செய்தல். அழித்தல்-செலவிடுதல். இரண்டுநன்மை-மனைத் தக்கமாண்புடையளாதலும், தற்கொண்டான்வளத்தக்காளாதலும். மாண்பு - பண்புப்பெயர். தற்கொண்டான் - இரண்டனுருபு தொக்கது. (க)

நிஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(இ - ள்.) மனை மாட்சி - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண் - (ஒருவன்) இல்லாளிடத்து, இல் ஆயின்-இல்லையாயின், வாழ்க்கை - அவ்வில்வாழ்க்கை, எனை மாட்சித்து ஆயின்உம்-(செல்வத்தான்) எத்துணைமாட்சிமைத்தாயினும், இல் - (அஃது) உடைத்தன்று; (எ - று.)

'இல்' என்றூர், பயன்படாமையின்.

(கு - ரை.) எத்துணை மாட்சிமைத்து - எவ்வளவு பெருமையையுடையது. அஃதுஉடைத்தன்று - சிறப்புடையதன்று: அவ்வில்வாழ்க்கை மனையாளது தீக்குணந் தீச்செயல்களோடு கூடிநின்று பயன்படாததனுல், 'இல்' எனப் பட்டது. மாட்சி - பண்புப்பெயர். எனை - எத்தனை யென்பதன் மரூஉ. மனை மாட்சி - நான்காம்வேற்றுமை யுருபும்பயனும் உடன்தொக்க தொகை. ஆயினும், உம்மை - உயர்வுசிறப்பு. (உ)

நிங. இல்லதெ னில்லவண் மாண்பாரு ளுள்ளதெ
னில்லவண் மாணுக் கடை.

(இ - ள்.) (ஒருவனுக்கு), இல்லவள் - இல்லாள், மாண்பு ஆனால் - நற்குண நற்செய்கையளாயினக்கால், இல்லது - இல்லாதது, என் - யாது? இல்லவள் - அவள், மாணுக்கடை - அன்னளல்லாக்கால், உள்ளது—, என்-யாது? (எ று.)

'மாண்பு' எனக் குணத்தின்பெயர், குணிமேல்நின்றது.

இவை இரண்டு பாட்டானும், இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாள்து மாட்சியே பிறவில்ல லென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அன்ன ளல்லாக்கால்-நற்குண நற்செய்கைகளே யுடையவ ளல்லாவிட்டால், இரண்டுவாக்கியங்களிலும்'ஒருவனுக்கு' என்பது வருவிக்க. வினை, இன்மைகுறித்தது. மாண்பு - பண்பாகுபெயர். குணி-குணத்தையுடை யது. குணம் - பண்பென்றும், குணி - பண்பியென்றுங் கூறப்படும். மா ணாக்கடை - கடைஎன்ற விகுதி பெற்ற எதிர்மறையெதிர்காலவினையெச்சம்.

நிசை. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) (ஒருவன் எய்தும் பொருள்களுள்),பெண்ணின் பெருந் தக்க-இல்லாளின் மேம்பட்ட பொருள்கள், யா உள - யாவை உள? (அவள்மாட்டு), கற்பு என்னும் திண்மை - கற்பு என்னுங் கலங்காநிலைமை, உண்டாகப்பெ றின் —; (எ - று.)

கற்புடையாள்போல அறம் முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன் மையின், 'யாஉள' என்றார்.

இதனால், கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) அவள்மாட்டு - அவளிடத்தில். கற்பாவது - தன்கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; பாதிவிரத்தியம்; கொண்டானிற் சிறந்த தெய்வ மில்லை யென்றும் அவனுக்கு இன்னவாறு தீ குற்றேவல்செய்து தொழுகுஎன்றும் தாய்தந்தையராலும் பிறராலுங் கற்பிக்கப்படுதலால், கற்பு எனப் பெயர்பெற்றது. 'பெருந்தக்க' என்பதில், தக்க - இறந்தகாலப்பலவின் பால்வினையாலணையும் பெயர்;'தகு'என்ற பகுதி ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டிற்று.யா - அஃறிணைப் பன்மை வினுப்பெயர். திண்மை - உறுதி. (சு)

நிஎ. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(இ - ள்.) தெய்வம் தொழாஅள் - பிறதெய்வந் தொழாது, கொழுநன் தொழுது - (தன் தெய்வமாகிய) கொழுநனைத் தொழாநின்று, எழுவாள் - துயிலெழுவாள், பெய் என-பெய்யென்றுசொல்ல, மழை பெய்யும்—;(எ-று.)

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங் காலத் தாகலின், 'தொழுதெழுவாள்' என்றார். 'தொழாநின்று' என்பது, 'தொழுது' எனத் திரிந்து நின்றது. தெய்வந் தான் ஏவல்செய்யும் என்பதாம்.

இதனால், கற்புடையவளது ஆற்றல் கூறப்பட்டது.

(கு - ரை.) கொழுநன் - கணவன். தொழாநின்று - தொழுதுகொண்டு. துயிலெழுவாள் - தூக்கத்தினின்று எழுந்திருப்பவள். தொழுது - நிகழ்கால வினையெச்சத்தின் திரிபு. தொழுதெழுவாள் என்றது - *துயிலெழுங்காலத் தல்லது முன்உணர்வு இன்மையான் உணர்வுஉறுங்காலத்து மறவாதுநினை வாள் என்றவாறு. 'பெய்யெனப்பெய்யுமழை' என்றது - கற்புடையவ

* திருக்கோவையார், 118, உரை. துயில்வதற்குமுன் கணவனைத் தொழுமுணர்வே இருத்தலால், கற்புடையார்க்குத் துயிலெழிய உணர்வுண் டாங்காலத்தும் அந்தத்தொழுமுணர்வேயுடனுண்டாகுமென்பர்.

ளிட்டகட்டளையைத் தெய்வஞ்செய்யுமென்றபடி; தெய்வத்திற்குந்தெய்வம் கற்புடையாளென்றவாறு. "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன, செய்வகை செய்வான் தவசி கொடிதோரீ, நல்லவை செய்வகை செய்வா னரச னிவர்மூவர், பெய்யெனப் பெய்யு மழை" என்றூர், திரிகடுகத்தும். ஆற்றல் - மகிமை. இனி, கொழுநற் றொழு தெழுவா ளென்பது - எழுந்துகொழுநற்றொழுவாளென முன்பின்னுகப் பொருள் படு மென்றூர், பிரயோகவிவேகநூலார்; அவர்கூறுமாறு:—"கொழுநற்றொழு தெழுவாள்,' 'தொழுதெழுவார்விளைவள நீறெழ' என்னுந் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் 'தொழாநின்றெழு வாள்,' 'தொழாநின்றெழுவார்' என எச்சத்திரிபாய் உரைப்பர்: எழுதல்-துயி லொழிதலாதலின், 'எழுந்து தொழுவாள்,' 'எழுந்துதொழுவார்' என முன் பின்னுகப் பொருள்படுத லன்றி 'நகுபுவந்தான்,' 'ஓடிவந்தான்' என்பனபோ லத் தொழாநின்று துயிலெழுதல் கூடாதென்க. "வைகறை யாமந்துயிலெ ழிந்து தான் செய்யும், நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதின், தந் தையுந் தாயுந் தொழுதெழுக" என்பது துயிலெழிந்து பின் தந்தையுந்தாயுந் தொழுது பின்காரியத்திற் செல்க எனப் பொருள்பட்டு வருதலானும், அவருரை அசம்பாவித மென்க' என்பது. தெய்வந்தொழாளென்பது-கண வனையே தெய்வமாகத்தொழுதலேக் காட்டுவதன்றித் தெய்வந்தொழுதலே விலக்கியதன் றென்றது, ஈண்டுக் கருதத்தக்கது. தொழாள் - முற்றெச்சம். அளபெடை, அசைநிறைத்தது. கொழுநற் றொழுது-உயர்திணையில் இரண்ட னுருபு தொக்கது. (கூ)

நிகூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(இ - ள்.) தன் காத்து - (கற்பினின்றும் வழுவாமல்) தன்னைக் காத்து, தன் கொண்டான் பேணி - தன்னைக் கொண்டவனையும் (உண்டி முதலிய வற்றால்) பேணி, தகை சான்ற சொல் காத்து - (இருவர்மாட்டும்) நன்மை யமைந்த புகழ் நீங்காமற் காத்து, சோர்வு இலாள் - (மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினும்) கடைப்பிடியுடையாளே, பெண்-பெண்ணெனப்படுவாள்;(எ-று.)

தன்மாட்டுப் புகழாவது-வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி.

இதனுன், * கற்புடையாளது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பேணி - உபசரித்து. இருவர்மாட்டும்-கணவன் தான் என்னும் இருவரிடத்தும். இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் என்றது - இவளைக்கொள்வதற்கு இவள்கணவன் என்ன தவஞ்செய்தானே எனக் கொண்டவனையும், பதிவிரதைத்தன்மையைக்கண்டு அவன்மனைவியையும் அவர்கள்வாழ்மூரிலுள்ளார் யாவரும் புகழ்வது. கடைப்பிடியுடையாள் -

* தற்புகழ்தற்சிறப்பு என்று பிரதிபேதம். தற்புகழ்தற்சிறப்பு - கற் புடையாளாகிய தன்னைப் புகழ்தலின் சிறப்பு என்று பொருள்.

மறவாமல் உறுதியாகப்பற்றுதலே யுடையவள். மறவி-மறத்தல். கொண்டான்-பெயர். தகை - தகுதி: இது, தொழிலடியாப்பிறந்ததாயினும் பொருளாற் பண்புப்பெயர். சான்ற - சால்என்னும் உரிச்சொலடியாப் பிறந்த இறந்த காலப் பெயரெச்சம். சொல்-புகழாதலே "சொன்மாண்பமைந்த குழு" எனச் சிந்தாமணியிலுங் காண்க. சோர்வு - தொழிற்பெயர். இனி, தகை சான்ற சொற் காத்து என்பதற்கு - (கணவனது) நன்மைநிறைந்த சொல்லே (எப் பொழுதும் கடவாமற்) காத்து என்றும் பொருள்கொள்ளலாம். (சு)

நிஎ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(இ - ள்.) சிறை காக்கும் காப்பு - (மகளிரைத் தலைவர்) சிறையாற்காக்குங் காவல், எவன் செய்யும்-என்ன பயனைச் செய்யும்? மகளிர்-அவர், நிறை காக்கும் காப்பே - (தமது) நிறையாற் காக்குங் காவலே, தலை - தலையாய காவல்; (எ - று.)

சிறை - மதிலும் வாயில்காவலும் முதலாயின. நிறை - நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவல் இல்வழி ஏனைச் சிறைக்காவலாற் பயனில்லை யென்பார், 'நிறைகாக்குங் காப்பே தலை' என்றார். ஏகாரம் - பிரிநிலைச்சுண் வந்தது.

இதனுன், தற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மகளிர் - மனைவிமார். தலைவர்-கணவர். வாயில்காவல்-காவலாளர்களால் வாயிலைக் காக்கச்செய்தல். என்பார்-என்றுசொல்லவந்தவர். சிறைக்காவலைப் பிரித்ததனால், ஏகாரம் - பிரிநிலையாயிற்று. தற்காத்தல்-தன்னைத் தானே கற்பிற் காத்துக்கொள்ளுதல். காப்பு-தொழிற்பெயர். (எ)

நிஅ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(இ - ள்.) பெண்டிர்—, பெற்றான் - (தம்மை) எய்திய கணவனை, பெறின் - (வழிபடுதல்) பெறுவராயின், புத்தேளிர் வாழும் உலகு - புத்தேளிர் வாழும் உலகின்கண், பெரு சிறப்பு பெறுவர்-(அவராற்) பெருஞ்சிறப்பினைப் பெறுவர்; (எ - று.)—'வழிபடுதல்' என்பது - சொல்லெச்சம்.

இதனுன், தற்கொண்டாற்பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பெண்டிர் - மனைவிமார். வழிபடுதல்-வணங்கி உபசரித்தல். புத்தேளிர் - தேவர்கள். அவரால் - தேவர்களால். பெருஞ்சிறப்பு - மேன்மைப்பாடு. பேணப்படுவர் - மரியாதை செய்யப்படுவர். பெற்றாற்பெறின் - இரண்டனுருபு உயர்திணையில் தொக்கது. புத்தேளிர், இர் - பலர்பால்விகுதி.(அ)

நிகூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(இ - ள்.) புகழ் - புகழை, புரிந்த - விரும்பிய, இல்-இல்லாளே, இலோர்க்கு - இல்லாதார்க்கு, இகழ்வார் முன் - (தம்மை) இகழ்ந்துரைக்கும் பகைவர்முன், ஏறு போல் பீடு நடை - சிங்கவேறுபோல நடக்கும் பெருமிதநடை, இல்லே—; (எ - று.)

புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம், விகாரத்தால் தொக்கது. பெருமிதமுடையானுக்குச் சிங்கவேறு நடையான் உவம மாகலின், 'ஏறுபோல்' என்றார்.

இதனுன், தகைசான்ற சொற் காவாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) இகழ்ந்து உரைக்கும் - நிந்தித்துப்பேசுகிற. சிங்கவேறு-ஆண் சிங்கம். ஏறு - ஆண்மைப்பெயர். பெருமிதநடை - கம்பீரமானநடை. பெருமிதம் - வீரத்தனம். 'முன்' என்னும் இடைச்சொல், இங்கே இடப்பொருள் குறித்தது. நடை - தொழிற்பெயர்; நட - பகுதி, ஐ - விகுதி. (கூ)

சூ0. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
கல னன்மக்கட் பேறு.

(இ - ள்.) மங்கலம் என்ப-(ஒருவற்கு) நன்மை யென்று சொல்லுவர் (அறிந்தோர்), மனை மாட்சி - மனையாளது நற்குண நற்செய்கைகளே; அதன் நன் கலன் (என்ப) - அவைதமக்கு நல்ல அணிகல மென்று சொல்லுவர், நல் மக்கள் பேறு - நல்ல புதல்வரைப் பெறுதலே; (எ - று.)

'அறிந்தோர்' என்பது, எஞ்சிநின்றது. மற்று - அசைநிலே.

இதனுன், வாழ்க்கைத்துணைக்கு ஆவதோர் * அணிகலங் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

(கு - ரை.) அவைதமக்கு - நற்குணங்களுக்கும் நற்செய்கைகளுக்கும். அணிகலம் - ஆபரணம். புதல்வர் - பிள்ளைகள். எஞ்சி - குறைந்து. வாழ்க்கைத்துணைக்கு ஆவதோர் அணிகலம் - மனைவிக்கு ஆபரணம்போலச் சிறந்த ஒரு நன்மையை. வருகின்ற அதிகாரம் - புதல்வரைப்பெறுதல். தோற்றுவாய்-தொடக்கம். 'என்ப' என்னும் எதிர்காலப் பலர்பால்வினைமுற்று, பின்வாக்கியத்திலும் கூட்டி யுரைக்கப்பட்டது; என் - பகுதி, ப - விகுதி: இவ்விகுதியே எதிர்காலமுணர்த்திற்று; [நன். பதவியல்-கஅ.] 'அதன்' எனச்சுட்டினது, மாட்சியை. 'நல்மக்கள்' என்றது, குறிப்பால் ஆண்பிள்ளைகளைத் தெரிவித்தது. 'தனிமரந் தோப்பாகாது, தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்பது பழமொழியாதலால், 'மக்கள்'எனப் பன்மைப்பாலாற்கூறினர்; மேல் அதிகாரத்திற்கு 'புதல்வரைப்பெறுதல்' எனப் பெயர் வைத்ததும், இதுபற்றியே. பேறு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். (கo)

எ - ஆம் அதிகாரம்—புதல்வரைப் பெறுதல்.

அஃதாவது - இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும் தேவர்கடன் வேள்வியா

* அணிகலம் என்று பிரதிபேதம்.

ஞும் தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலானும் அல்லது இறுக்கப் படாமையின், அக்கடனிறுத்தற்பொருட்டு நல்மக்களைப் பெறுதல். அதிகார முறைமை, மேலே பெறப்பட்டது.

(கு - ரை.) இருபிறப்பாளர் மூவர்-உபநயனத்திற்குமுன்பு தேகஉற்பத்தி யாகிய ஒருபிறப்பும், உபநயனத்திற்குப்பின்பு அதன் ஸம்ஸ்காரங்களா லாகிய தொருபிறப்பும் ஆகிய இரண்டுபிறப்புக்களை யுடைய பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் முதல்மூன்றுவருணத்தவர். இயல்பாக இறுக்கப்படுஉங் கடன்மூன்று-சுபாவமாகக் கொடுத்துக் கழிக்கவேண்டும் மூன்றுகடமைகள். கேள்வி - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார்கூறக்கேட்டல். வேள்வி - யாகம். பித்ருதேவதைகளுக்குக் கொடுக்கப்படுங் கடமைகளைச் செலுத்தும்பொருட்டு நல்லபுத்திரரைப்பெறுதல் அவசிய மென்றபடி. பிள்ளை யில்லாதவர்கள் அடையத்தக்க 'புத்'என்னும் நரகத்தினின்றுதம் தாய்தந்தை யரைப் புதல்வர் காப்பதனாலும், புதல்வர்ப்பேறு இன்றியமையாததாயிற்று. மேலே - "மங்கலமென்ப" என்னும் பாட்டில்.

சுக. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ - ள்.) பெறுமவற்றுள் - (ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவு அறிந்த மக்கள் பேறு அல்ல-அறியவேண்டுவன அறிதற்கு உரிய மக்களைப் பெறுதலல்லது, பிற - பிற பேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் மதிப்ப தில்லை; (எ - று.)

'அறிவது' என்பது-அறிதலைச்செய்வது என, அத்தொழின்மேல் நின் றது. காரணமாகிய உணமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடு மாதலான், அத்துணிவுபற்றி, 'அறிந்த' என இறந்தகாலத்தாற் கூறினார். 'அறிவறிந்த' என்ற அதனான், 'மக்கள்' என்னும்பெயர் பெண்ணெழித்து நின்றது.

இதனான், புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பேறு - பாக்கியம். அறிவது-தொழிற்பெயர்; வினையாலணை யும்பெயராகக் கொள்ளலாகாது: பிறவென்னும் பன்மையோடு மாறுபடு மாத லால். அறிவதற்குரிய மக்களை, 'அறிந்த மக்கள்' என இறந்தகாலத்தாற் சொன்னது, துணிவுபற்றிவந்த காலவழுவமைதி. அறிவறிந்தமக்கள்-ஒன் றெழி பொதுச்சொல். அறிவு - அறியவேண்டு மவற்றிற்குத் தொழிலாகு பெயர். இனி, 'அறியவேண்டுமவற்றை' என வருவித்து 'அறிவினால் அறி ந்த' என்றும் பொருள் கொள்ளலாம். "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே," "பேதைமை யென்பதுமாதர்க்கணிகலம்" என்பனபற்றி, 'அறிவறிந்தமக்கள்' என்றது - பெண்மக்களை விலக்கிற் றென்னை. புதல்வர்ப்பேறு-புதல்வரைப்பெறுதல்.

சுஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
புண்புடை மக்கட் பெறின்.

(இ - ள்.) எழு பிறப்புஉம் - (வினைவயத்தாற் பிறக்கும்) பிறப்பு ஏழின் கண்ணும், தீயவை தீண்டா - (ஒருவனைத்) தின்பங்கள் சென்று அடையா: பழி பிறங்கா - (பிறரால்) பழிக்கப்படாத, பண்பு உடை - நற்குணங்களை யுடைய, மக்கள்-புதல்வரை, பெறின் - பெறுவானுயின்; (எ - று.)

* அவன் தீவினைவளராது நேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனுயின் என்றவாறுயிற்று. பிறப்பு ஏழாவன - ''ஊர்வ பதினெண்ரு மொன்பது மானிடம், நீர்பறவை நாற்காலோர் பப்பத் தாஞ்-சீரிய, பத்தமாந் தேவர் பதினெ லயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவர காலந்து''. தந்தைதாயர்தீவினை நேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தான தருமங்கட்கு அவர்நற்குணங் காரணமாகலின், 'பண்பு' என்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது.

(கு - ரை.) வினைவயத்தால் - கருமவசத்தினுல், அவன் தீவினை-தந்தை யது பாவம். ''ஊர்வ பதினெண்ரும்'' என்னும் பாட்டிற்குப் பொருள் - ஊர் கிற ஜந்துக்களின் பிறப்புவகைகள் பதினெரு லட்சமாம்: மனிதப்பிறப்புக் கள் ஒன்பதுலட்சமாம்: நீர்வாழ்ஜாதியும் பறவைகளும் மிருகங்களும் தனித் தனி பத்துப்பத்துலட்சமாம்: சிறந்தமுறையையுடைய தேவர்கள் பதினெலு லட்சமாம்: பிரமனுற் படைக்கப்பட்ட முடிவில்லாததன்மையையுடைய அசையாப்பொருள்கள் இருபதுலட்சம் எனப்படும் என்பது; 'அயன்படைத்த' என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக. இவை - எண்பத்துநான்கு நூறு யிரம் யோனிபேத மெனப்படும். இவ்வெழுவகைத்தோற்றத்துள் தேவர்களை விலக்கிப் பருவதத்தைக் கூட்டி "மக்கள் விலங்கு பறவை யூர்வன, நீருட்டிரிவன பருப்பதம் பாதவம், எனவிவை யெழுபிறப் பாகு மென்ப" என வழங்கும் பழம்பாட்டும் ஒன்று உண்டு. 'பண்புடை மக்கள்' என்பதற்கு - தந்தைதாயரை நோக்கிச் செய்யும் நல்வினைகளையுடைய புத்திரர் என்பது, கருத்து. காரியத்தின்மேல் நின்றது - காரியமாகிய நல்வினையைக் குறித்து நின்றது. உடை - உடைய என்பதன் விகாரம். இனி, இக்குறளுக்கு - ஒரு வம்சத்தில் ஒருவன் நல்லபிள்ளைகளைப் பெற்றுல் அவ்வம்சத்தில் மூன்னேழு பின்னேழு நடுவேழு என்னும் இருபத்தொருதலைமுறையார்க்குந் தீவினைகள் தொடரா வென்றும் பொருள்கொள்ளலாம். (உ)

கூஉ. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(இ - ள்.) தம் மக்கள் - தம்புதல்வரை, தம் பொருள் என்ப-தம் பொருளென்று சொல்லுவர் (அறிந்தோர்): அவர் பொருள் - அப்புதல்வர் செய்த பொருள், தம் தம் வினையான் - தம்மைநோக்கி (அவர்) செய்யும் நல்வினையானே, வரும் - (தம்பால்) வரும் (ஆதலான்); (எ - று.)

'தந்தம்வினை' என்புழித் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை-'முருகனது குறிஞ்சிநிலம்' என்புழிப்போல, உரிமைப்பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களை 'பொருள்' என உபசரித்தார்.

* இத்தவாக்கியம், ஒருபிரதியிலில்லை.

இவை இரண்டுபாட்டானும், நன்மக்கட்பெற்றூர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) தம்பால்-தம்மிடம். செய்த-சம்பாதித்த. 'என்ப'என்பதற்கு 'அறிந்தோர்'என்னும் எழுவாய் வருவிக்க. தம்தம்வினை-தம்தமக்குரியனவாக மக்கள்செய்த வினை. (ஈ)

சுசு. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(இ - ள்.) அமிழ்தின்உம் ஆற்ற இனிது - (சுவையான்) அமிழ்தத்தினும் மிக இனிமையுடைத்து: தம் மக்கள்-தம் மக்களது, சிறு கை - சிறு கையான், அளாவிய - அளாவப்பட்ட, கூழ் - சோறு; (எ - று.)

சிறுகையான் அளாவ லாவது-"இட்டுத் தொட்டுங் கவ்வியுந் தழந்தும், நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்"தல்.

(கு - ரை.) சுவை-ருசி. அளாவப்பட்ட-அளையப்பட்ட. "இட்டுத் தொட்டும்" என்னும் மேற்கோள் - புறநானூற்றில் கஅ - இல் உள்ளது; நெய்யோடுகூடிய சோற்றைக் கையாலெடுத்தெறிந்தும் பரிசித்தும் வாயினுற் கௌவியுங் கையால் அளைந்தும் உடம்பின்கட் படச்சிதறுதல் என்று இதன் பொருள். கூழ் - இங்கே உணவுப்பொதுவாய் நின்றது; இழிந்த உணவாகக் கொண்டு, மக்கள் தம்கையாலளைந்த கூழும் அமிழ்தினுமினியதா மெனினும் அமையும். "பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற், றென்னுடைய ரேனு முடையரோ - இன்னடிசில், புக்கிளையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய், மக்களோயிங் கில்லாதவர்" என்றூர் புகழேந்திப்புலவரும். (சு)

சுருி. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(இ - ள்.) உடற்கு - (ஒருவன்) மெய்க்கு, இன்பம் - இன்பமாவது, மக்கள் - மக்களது, மெய்-மெய்யை, தீண்டல்-தீண்டுதல்; செவிக்கு—, இன்பம்-இன்பமாவது, அவர் சொல் கேட்டல் - அவரது சொல்லைக் கேட்டல்; (எ-று.)

மற்று-வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லே யன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்பட 'சொல்' என்றூர். 'தீண்டல்', 'கேட்டல்' என்னுங் காரணப்பெயர்கள் - ஈண்டுக் காரியங்களின்மேல் நின்றன.

(கு - ரை.) மெய் - உடம்பு. 'மெய்தீண்டல்' என்னும் வினையை ஒழித்து 'சொற்கேட்டல்' என்னும் வினையைக் கூறியிடத்து வந்ததனால், மற்ற-வினை மாற்றுப் பொருளதாயிற்று. தீண்டல், கேட்டல் என்னுங் காரணப்பெயர்கள், அவற்றாலுண்டாகும் இன்பமாகக் கூறப்பட்டன. வினையில்லாமையாற் பொய்யாகிய உடம்பை 'மெய்' என்பது, மங்கலவழக்கு. இனி, மக்கள் மெய் தீண்டல் - மக்கள் தமதுடம்பைத் தழுவுத லென்னுமாம். (ரு)

சுசு. குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

(இ - ள்.) குழல் இனிது - குழலிசை இனிது, யாழ் இனிது - யாழிசை இனிது, என்ப - என்று சொல்லுவர்: தம் மக்கள் - தம் புதல்வருடைய, மழலை சொல் - குதலைச் சொற்களை, கேளாதவர்—; (எ - று.)

குழல், யாழ் என்பன - ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிதென்பர் என்பது, குறிப்பெச்சம். இனிமையிருதிறத்தி, மழலைச் சொல்லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு.

இவை மூன்றுபாட்டானும், இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) குழலிசை-ஊதப்படுகிற வேய்ங்குழலின் ஒலி. யாழ் வீணை. 'குழல்,' 'யாழ்' என்னும் இரண்டும் - அவற்றின்ஒலிக்குப் பொருளாகுபெயர். தெறிப்பேச்சமாவது-சொல்லலி பொருள்வலிகளாற் குறிக்கப்படுஞ் சொற்கள் குறைந்துநிற்பது; இது, வடநூலில் அருத்தாபத்தியின்பாற்படும். கீழ்ப்பாட்டில் 'சொற்கேட்டலின்பஞ்செவிக்கு' எனப் பொதுவகையாகச் சொல்லப்பட்டவற்றுள் அடங்கினின்ற மழலைச்சொல்லை, மிகுந்த இன்பந்தருதல்பற்றித் தனியே இப்பாட்டிற் சிறப்பித்துக் கூறினர். "சொன்ன கலியின் துறைய னெத்துந்தோய்ந்தாலும், என்ன பயனுடைத்தா மின்முகத்து-முன்னங், குறு குதலைக்கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச், சிறுகுதலை கேளாச் செவி" என்றார் புகழேந்தியாரும். (சு)

சுஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(இ - ள்.) தந்தை—, மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யும், நன்றி-நன்மையாவது,-அவையத்து - (கற்றோர்) அவையத்தின்கண், முந்தி இருப்ப-(அவரினும்) மிக்கிருக்குமாறு, செயல் - கல்வியுடையனாக்குதல்; (எ - று.)

பொருளுடையனாக்குதல் முதலாயின, துன்பம்பயத்தலின் நன்மையாகா என்பது கருத்து.

இதனுள், தந்தைகடன் கூறப்பட்டது.

(கு - ரை.) அவையத்தின்கண் - சபையில். அவரினும் மிக்கிருக்குமாறு - அங்குள்ள படித்தவர்களெல்லாரைக்காட்டிலும் மேம்பட்டிருக்கும்படி. தந்தை கடன் - பிதா புத்திரர்க்குச்செய்யவேண்டிய கடமை. தந்தை, தாம் - பகுதி, தை - முறைப்பெயர்விகுதி. நன்றி - பண்புப்பெயர்; றி - விகுதி. அவை - கற்றறிவுடையோர்கூட்டம்;ஸபா என்னும்வடமொழியின் திரிபு. முந்தியிருப்ப-முதன்மைபெற்றிருக்கும்படி; அதாவது - தேர்ந்தகல்விகற்பித்து, அவர்களெல்லாம் மதிக்கும்படி. செல்வப்பொருள் நிலையில்லாததாதலால், அதனை ஒழித்தார். "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றார் புறநானூற்றிலும்.

சுஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ - ள்.) தம் மக்கள் - தம் மக்களது, அறிவு உடைமை—, மா நிலத்து மன் உயிர்க்கு எல்லாம் - பெரிய நிலத்து மன்னுகின்ற உயிர்கட்கெல்லாம், தம்மின் - தம்மிலும், இனிது - இனிதாம்; (எ - று.)

ஈண்டு 'அறிவு' என்றது, இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியறிவினை. 'மண்ணுயிர்' என்றது, ஈண்டு, அறிவுடையார்மேல் நின்றது: அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின்.

இதனுள் தந்தையினும் அவையத்தார் உவப்ப ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) நிலத்து - பூமியில். மன்னுகின்ற - நிலைபெற்ற. ஒருவன் அறிவுடையனாயிருத்தல் அவன் தந்தைக்கு எவ்வளவு இனிமையைத் தருமோ அதனினும் பலமடங்கு பிறர்க்கும் இனிமையைத் தரு மென்பது கருத்து. பிறர் கல்வியைக்கண்டு பொறாமைப்படுபவனும் தன்மைந்தன் கல்விமிகுதியைக்கண்டு களித்தலும், கல்வியறிவில்லாதவனும் தன்மகனுக்குக் கல்விகற்பித்தலும் காண்க. 'தம், மின்' என்பது, 'இனிது' என்னுங் குறிப்புவினை கொண்டது. உடம்பிற்கேயன்றி உயிர்க்கு எப்போதும் அழிவில்லையாதலால், 'மன்னுயிர்க்கு' என்றார். இன்புறுதல் - மகிழ்தல். அவையத்தார் உவப்பர் - சபையிலுள்ளோர் மகிழ்வர். இனி, இக் குறளுக்கு - தமது புத்திரர் தம்மைக்காட்டிலும் அறிவுடையராயிருப்பது பெரிய நிலவுலகத்தி லுள்ளார் யாவர்க்கும் இனிமையைத்தரும் என்றும் பொருள்கொள்ளலாம். (அ)

சுகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(இ - ள்.) ஈன்ற பொழுதின் - (தான்)பெற்ற பொழுதைமகிழ்ச்சியினும், பெரிது உவக்கும் - மிக மகிழும்: தன் மகனை—, சான்றோன் என - (கல்வி கேள்விகளால்) நிறைந்தா னென்று (அறிவுடையார்) சொல்ல, கேட்ட—, தாய்—; (எ - று.)

* கவானின்கட் கண்ட பொதுவகையினும் சால்புடைய னெனக் கேட்ட சிறப்புவகை பெரிதாகலின்'பெரிதுவக்கும்'எனவும்,பெண்ணியல்பால் தானுக அறியாமையின் 'கேட்டதாய்' எனவும் கூறினர். 'அறிவுடையார்' என்பது வருவிக்கப்பட்டது; சான்றோ னென்றற்கு உரியவர் அவராகலின். தாயுவகைக்கு அளவின்மையின் அஃது இதனுட் பிரித்துக் கூறப்பட்டது.

(கு - ரை.) பெற்றபொழுதை மகிழ்ச்சி - பிள்ளையைப்பெற்றகாலத்திலுண்டான சந்தோஷம். கேட்ட - கேள்விப்பட்ட. கவானின்கண் - மடியில். சால்பு - கல்வி கேள்விகளாலாகிய நிறைவு. தாயுவகை - தாயின்மகிழ்ச்சி. 'பிரித்துக்கூறப்பட்டது' என்றது, கீழ்ப்பாட்டில் 'தம்மின்' என்றதில் தாயுவகையும் அடங்கலாமாதலால். பொது உவகை - பிள்ளைபிறந்தது என்பதனாற் பொதுப்பட உண்டாகும் மகிழ்ச்சி. சிறப்புவகை-நமதுமகன் அறிவுமிக்கவனானென்று சிறப்பாக உண்டாகும் மகிழ்ச்சி. உவக்கும் - செய்யுமென்முற்று, பெண்பாலிற் சென்றது. பெரிது - ஒன்றன்பாற்குறிப்புமுற்று, வினையுரியாய் நின்றது.சான்றோன் - னகரவீற்றயல் ஆகாரம் ஓவாயிற்று. (கூ)

எ0. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

* கவானின்மகற்கண்டபொழுதை யுவகையினும்என்று பிரதிபேதம்.

(இ - ள்.) தந்தைக்கு (கல்வியுடையனுக்கிய) தந்தைக்கு, மகன்—, ஆற்றும் - செய்யும், உதவி - கைம்மாறுவது,—இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் - (தன் அறிவும் ஒழுக்கமும் கண்டார்) 'இவன் தந்தை (இவனைப் பெறுதற்கு) என்ன தவஞ் செய்தான்கொல்லோ?' என்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல்; (எ - று.)

'சொல்' என்பது, நிகழ்த்துதலாகிய தன்காரணந் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் - அங்ஙனஞ் சொல்ல ஒழுகுதல்.

இதனுன், புதல்வன்கடன் கூறப்பட்டது.

(கு - ரை.) கைம்மாறு - பிரதியுபகாரம். நிகழ்த்துதல் உண்டாகச்செய்தல்; அதாவது - நல்லறிவும் நல்லொழுக்கமு முடையவனுதல். ஒழுகுதல் - நடத்தல். நிகழ்த்துதலாற் சொல் பிறக்குமென்க. புதல்வன்கடன்-புத்திரனது கடமை. கொல் - வியப்பிடைச்சொல். தவத்தின் அளவு தெரியாமையால் ஐயவிடைச்சொல்லாகவுமாம். உதவி - தொழிற்பெயர். நோற்றான், கொல் - பகுதி. "உன்னேக்கண்டார், என்ன நோன்பு நோற்றுள்கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள், என்னும் வார்த்தை யெய்துவித்த இருடீகேசா", "செம்மலைப்பயந்த நற்றாய் செய்தவ முடைய ளென்பார், எம்மலைத் தவஞ் செய்தாள்கொ லெய்துவம் யாமுமென்பார்" என்பன காண்க. (கo)

அ - ஆம் அதிகாரம்—அன்புடைமை.

அஃதாவது - அவ் வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர் புடையார்கண் காதல் உடையனுதல். அதிகாரமுறைமையும் இதனுனேவிளங்கும். இல்லறம் இனிதுநடத்தலும், பிறவுயிர்கள்மேல் அருள்பிறத்தலும் அன்பு பின்பய ஞதலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பு இல்வழி இல்லறம் இனிதுநடவாமை, "அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை" என்பதனுலும், அதனுன் அருள்பிறத்தல் "அரு ளென்னு மன்பீன் குழவி" என்பதனுலும் அறிக.

(கு - ரை.) தொடர்புடையார்கண் - பந்துக்களிடத்தில். காதல் - ஆசை. புதல்வரைப்பெறுதலின்பின் அப்புதல்வர்முதலியோரிடத்து அன்புடைமை யை வைத்தார். ஒருசம்பந்தமுமில்லாமலே வருத்தமுற்றவர்களின்மேற்செல்வ தாகிய அருள் யாதாயினுமொருசம்பந்தம்பற்றிச்செல்லும் அன்பு முதிர்ந்த விடத்து உண்டாவதை, மேல் 'பொருள்செயல்வகை' என்னும் எசு-ஆம் அதி காரத்தில் "அருளென்னும் அன்பீன் குழவி" என்பதனுல் அறிக; இம்மேற் கோளுக்கு - அன்பினுற் பெறப்பட்ட அருளென்னுங் குழந்தை யென்று பொருள். "அறவோர்க் களித்தல்" என்னும் மேற்கோள் - சிலப்பதிகாரத்துக் கொலைக்களக்காதையில் உள்ளது; இதற்கு - பிரமசாரிகளுக்கு வேண்டுவன கொடுத்தலும், வாநப்ரஸ்தரைக் காத்தலும், சந்நியாசிகளை எதிர்கொண்டு உப சரித்தலும், தொன்றுதொட்டுவருஞ் சிறப்பினையுடைய விருந்தினரை எதிர் சென்றழைத்துவந்து உண்பித்தலும் என்னுமிவற்றை இழந்த என்னை என்று

பொருள்: இது, கண்ணகியென்பவள் தன்கணவனுகியகோவலன் தன்னிடத்து முன்னம் அன்பில்லாதிருந்ததனைக் கூறியது. 'அளியாவது - அன்பு காரணத்தால் தோன்றும் அருள்; அன்பாவது - மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின் கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்துநிற்கும் நேயம்' என்பது, பொருளதிகாரவுரை.

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(இ - ள்.) அன்பிற்குமும்—, அடைக்கும்-(பிறர் அறியாமல்) அடைத்து வைக்கும், தாழ்—, உண்டுஓ - உளதோ? ஆர்வலர் புல் கண் நீர் - (தம்மால்) (அன்புசெய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி) அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே, பூசல் தரும்-(உள்ளின்ற அன்பினை எல்லாரும் அறியத்) தூற்றும், (ஆதலான்); (எ - று.)

உம்மை, சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை, கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கு எய்தாதாயினும் அனுமானவளவையான் வெளிப்படு மென்பதாம்.

இதனுன், அன்பினது உண்மை * உணர்த்தப்பட்டது.

(கு - ரை.) அடைத்து வைக்கும் - மறைத்துப் பூட்டிவைக்கும். தாழ் - தாழக்கோல். உளதோ - இல்லையென்றபடி; ஓ - எதிர்மறை. ஆர்வலர் - அன்புடையவர்; இதில்: ஆர்வு - பகுதி: அல் - சாரியை: அர் - விகுதி. கண்டுழி - பார்த்தபொழுது. புல்லிய - துன்பமான; புன்மை - இங்கே, துன்பம். தூற்றும் - வெளிப்படுத்தும். சிறப்பு - உயர்வுசிறப்பு. அனுமான அளவை - அநுமாநப்ரமாணம்; இது, முதல்திருக்குறளின் குறிப்பில் இன்னதென்று கூறப்பட்டது. இன்பத்தினுல் உண்டாகும் ஆனந்தக்கண்ணீரை விலக்குதற்கு, 'புன்கணீர்' எனப்பட்டது. தாழ் என்பதற்கு - சினேயாகுபெயராய், தாளிடப்படுங் கதவு என்றும் பொருள்கொள்ளலாம். உண்மை - இருத்தல். அன்பென்பது இன்னதென்று பிரதியட்சமாகக் காணப்படுவதன்று, அதனையுடையவரிடத்து உண்டாகுங் கண்ணீர்பெருகல் முதலிய குணங்களால் ஊகித்து அறியத்தக்க தொரு பொருளா மென்பது, கருத்து; இதுபற்றியே தொல்காப்பியனரும் "ஒப்பு முருவும் வெறுப்பு மென்ரு, கற்பு மேரு மெழிலு மென்ரு, சாயலுநாணு மடனு மென்ரு, நோயும் வேட்கையு நுகர்வு மென்ரும், காவியின் வரூஉங் கிளவி யெல்லா, நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது, காட்ட லாகாப் பொருள வென்ப" என்ரார். பொருளதிகாரவுரையில் 'அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தில்நிகழும் நேயம்; அஃது அடையார்க்குப் பிறர்கண் துன்பங்கண்டழிக் கண்ணீர் விழு மாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்கு மென்பது; இவையெல்லாம் தத்தம் மனத்தினிகழ்ச்சியை வெளிப்படுப்பனவாகலின் மெய்ப்பாடெனப்பட்டன' என்றும். இறையனரகப்பொருளுரையில் நக்கீரர் 'குடக்துள் விளக்கும் † தடம்

* கூறப்பட்டதுஎன்று பிரதிபேதம். † தடம் - வாளிடும்உறை.

றுள் வாளும் போல இதுகாண் அன்பென்று தக்து காட்டலாகாது; அன்புடையரான குணங் கண்ட இடத்து இவைஉண்மையான், ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக்கொள்ளற்பாற்று' என்றுங் கூறியவாறு காண்க. (க)

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(இ - ள்.) அன்பு இலார் - அன்பிலாதார், எல்லாம் தமக்கு உரியர் - (பிறர்க்குப் பயன்படாமையின்) எல்லாப்பொருளானும் தமக்கே உரியர்; அன்பு உடையார்—, என்புஉம் பிறர்க்கு உரியர் - (அவற்றுனேயன்றித் தம்) உடம்பானும் பிறர்க்கு உரியர்; (எ - று.)

ஆனுருபுகளும், பிரிநிலேயேகாரமும்-விகாரத்தால் தொக்கன. 'என்பு' - ஆகுபெயர். என்பும்உரியராதல், ''தன் அகம் புக்க குறுகடைப்புறவின், தபுதி கண்டு அஞ்சிச் சீரைபுக்''கோன் முதலாயினுர்கட் காண்க.

(கு - ரை.) அவற்றுனேயன்றி - அப்பொருள்களாலேயல்லாமல். ஆனுருபுகள் - 'எல்லாம்,' 'என்பும்' என்னுமிடங்களில்; எல்லாவற்றினும், என்பினும் என விரிக்க. பிரிநிலே ஏகாரம் - 'தமக்கு' என்பதில். என்பு - அதனேயுடைய உடம்புக்குச் சினேயாகுபெயர். உம்மை - இறக்கதழுவியஎச்சப்பொருளது. ''தன்னகம்புக்க குறுகடைப்புறவின்'' என்பது-புறநானூறு சங-இல் உள்ளது; இதற்குப் பொருள் - தன்னிடம் வந்து சரணமடைந்த தளர்ந்த நடையையுடையபுறவினதுகேட்டைக் கண்டு பயந்து (அதனேக்காக்கும்பொருட்டுத் தான்) தராசுத்தட்டில் ஏறின சிபிச்சக்கரவர்த்தி என்பது. சிபிஎன்னுஞ் சக்கரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக்குணத்தைப் பரீட்சிக்கும் படி இந்திரன் பெரும்பருந்தாகவும் யமன் சிறுபுறுவாகவும் வடிவமெடுத்துப் புறுவைப் பருந்து துரத்திவர, அப்புறு சக்கரவர்த்தியைச் சரணமடைய, அரசன் அதற்கு அபயமளிக்க, பின்னேவந்த பருந்து 'என் இரையைக் கொடுத்துவிடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம்புகுந்தவரை ஆதரியாதுவிடுதல் அதிபாதகமாதலால் இதையன்றி எதுகேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப்புறுவின் எடையளவு தசை உன்உடம்பில் அரிந்துகொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே உடம்பிலுள்ள உறுப்புக்களே யெல்லாம் ஒவ்வொன்றுக அறுத்து வைத்தும் எடைகுறைந்தமையால் தானே தராசுதட்டில் ஏறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் பிரதியக்ஷமாகி மிகவியந்து வேண்டின வரங்களே அளித்துப்போயின என்பது கதை. 'முதலாயினுர்' என்றது - தமது முதுகெலும்பை இந்திரனுக்கு வச்சிராயுதத்துக்காகக் கொடுத்த கதிசிமுனிவரும், தன்னுடன்பிறந்த கவசகுண்டலங்களே இந்திரனுக்குத் தானஞ்செய்த கர்ணனும் முதலியோரை உட்கொண்டு. என்பு - எலும்பு. (உ)

எங. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ - ள்.) ஆர் உயிர்க்கு - (பெறுதற்கு) அரிய மக்களுயிர்க்கு, என்போடு இயைந்த - உடம்போடு உண்டாகிய, தொடர்பு-தொடர்ச்சியினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப-அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பய னென் றறு சொல்லுவர், (அறிந்தோர்); (எ - று.)

பிறப்பினது அருமை, பிறந்தஉயிரின்மேல் ஏற்றப்பட்டது. 'இயைந்த' என்பது, உபசாரவழக்கு. வழக்கு - ஆகுபெயர். உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அதுசெய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி உளதா யிற்று என்பதாம்: ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன், அன்புடைமை யென் றாயிற்று.

(கு - சை.) நெறி-வழி. மனிதப்பிறப்பு அரியதாதலே "அரிதரிது மானி டராத லரிது" என ஔவையார் கூறியதனாலும் அறிக. 'அன்போடு இயைய வந்த' என்னும் அருத்தத்தில் 'அன்போடு இயைந்த' என்றது, உபசாரவழக்கு; இதனை வடநூலார் 'ஔபசாரிகப்ரயோகம்' என்பர். வழக்கு - அதன்பயனைக் குறித்ததனால், ஆகுபெயர். அதுசெய்தற்பொருட்டு - அன்புசெய்யுநிமித்தம். இத்தொடர்ச்சி உயிர்க்கு மனிதவுடம்போடு உண்டான சம்பந்தம். இனி, இக் குறளுக்கு - அரிய உயிர்களுக்கு மானிட உடம்புகளோடு உண்டான சம்பந்தத் தைக் முற்பிறப்புக்களில் அவ்வுயிர்கள் அன்போடு பொருந்திவந்த நெறியின் பயனென்று சொல்வர் அறிந்தோர் என்று உரைப்பாரு முளர். (சு)

எசு. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), அன்பு - (தொடர்புடையார்மாட்டுச் செய்த) அன்பு, ஆர்வம் உடைமை ஈனும் - (அத்தன்மையாற் பிறர்மாட்டும்) விருப்ப முடைமையைத் தரும்; அது - அவ்விருப்பமுடைமைதான், நண்பு என்னும் நாடா சிறப்பு ஈனும்-(இவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய்) யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்; (எ - று.)

உடைமை - உடையனாந்தன்மை. யாவரும் நண்பாதல் எல்லாப்பொரு ளும் எய்துதற்கு ஏதுவாகலின், அதனை, 'நாடாச்சிறப்பு' என்றார்.

(கு - சை.) தொடர்புடையார்மாட்டு-உறவினரிடத்தில். நொதுமல் - விரோதமுஞ் சிநேகமு மில்லாதிருக்குந் தன்மை; உதாஸீநதை. நாடாச் சிறப்பு - இவ்வளவென்று மதிக்கக்கூடாத செல்வம். (சு)

எடு. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

(இ - ள்.) அன்பு உற்று - அன்புடையராய், அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - நெறியின்பயன், என்ப - என்று சொல்லுவர் (அறிந் தோர்):வையகத்து-இவ்வுலகத்து,இன்பு உற்றார்-(இல்வாழ்க்கைக்கண்ணின்று) இன்பம் நுகர்ந்து, எய்தும் - (அதன்மேல் துறக்கத்துச் சென்று) எய்தும்,சிற ப்பு - பேரின்பத்தினை; (எ - று.)

வழக்கு - ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங் கூடி இன்புற்றூர் தாம்செய்த வேள்வித்தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவ ராகலின், 'இன்புற்றூரெய்துஞ் சிறப்பு' என்றூர். தவத்தால் துன்புற்று எய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டும் இன்புற்று எய்துதல் அன்பானன்றி இல்லை யென்பதாம்.

(கு - ரை.) துறக்கத்து - சுவர்க்கத்தில். ஆண்டும் - அவ்விடத்தும்; மறுமையிற் சுவர்க்கத்தும். ஈண்டும் இன்புற்றுஎய்துதல்-இவ்வுலகத்தும் இன்பத்தையனுபவித்து அடைதல். வழக்கு, நீதி, நெறி, முறைமை என்பன - ஒரு பொருட்சொற்கள். (கூ)

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(இ - ள்.) அன்பு—, சார்பு-துணையாவது, அறத்திற்கே—,என்ப-என்று சொல்லுவர், அறியார் - அறியார் (சிலர்); மறத்திற்குஉம் - ஏனை மறத்திற்கும், அஃதுஎ - அவ்வன்பே, துணை - துணையாவது; (எ - று.)

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறம்நிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையா மென்பார், 'மறத்திற்கு மஃதே துணை' என்றூர்; ''துன்பத்திற்கியாரே துணையாவார்'' என்புழிப்போல.

இவையைந்துபாட்டானும், அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மறம் - அதருமம். உள்ளத்து மறம் நிகழ்ந்துழி-மனத்திற் கோபம் உண்டானபொழுது. ''துன்பத்திற்கு'' என்னும் மேற்கோள், திருக்குறள் - கஉ0-ஆம் அதிகாரம் - கூ-இல் உள்ளது; இதற்கு-ஒருவர்க்குத் துன்பம்வந்தவிடத்து அதனைநீக்குதற்கு வேறுதுணையாவா ரொருவருமில்லை யென்று பொருள். 'மறத்திற்கு அன்புதுணை' என்றதை'பித்தத்துக்கு இஞ்சி நல்லது' என்பதுபோலக் கொள்க. அறியார்-பெயர். என்ப - பயனிலை. 'அறத்திற்கே' என்பதில், ஏ - பிரிநிலை. மறத்திற்கும், உம் - இறந்தது தழுவிய எச்சம். அஃதே, ஏ - தேற்றம். அஃதே - ஆய்தம், மெய்போல ஒலித்தது.

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(இ - ள்.) என்பு இலதனை - என்பில்லாத உடம்பை, வெயில் போல-வெயில் காய்ந்தாற்போல, காயும்—: அன்பு இலதனை-அன்பில்லாத உயிரை, அறம் - அறக்கடவுள்; (எ - று.)

'என்பிலது' என்றதனுன் உடம்பு என்பதூஉம், 'அன்பிலது' என்றதனுன் உயிர் என்பதூஉம் பெற்றும். *வெறுப்பின்றி எங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன் இயல்பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடு

* வேறுபாடின்றி என்று பிரதிபேதம்.

மென்பதாம்: அதனை, 'காயும்' என வெயில் அறங்களின்மேல் ஏற்றினர், அவற் றிற்கும் அவ்வியல்பு உண்மையின். இவ்வாறு ''அல்லவை செய்தார்க் கறங் கூற்றம்'' எனப் பிறருங் கூறினர்.

(கு - ரை.) என்பில்லாத உடம்பு - புழு உடம்பு. காய்தல்-காய்ந்து கொல்லுதல். அறக்கடவுள் - தருமதேவதை. அத்தன்மைத்தாகிய - வெறுப்பில் லாத. அவ்வியல்பு - காய்தற்றன்மை. ''அல்லவை'' என்னும் மேற்கோள், நான்மணிக்கடிகை - அதி-இல் உள்ளது; இதற்கு - அதருமங்களைச் செய்தவர் களுக்குத் தருமதேவதை யமனைப்போலத் துன்புஞ்செய்யும் என்பதுபொருள். உவமையணி. ஏகாரம்-கருணையோகூடிய இரக்கத்தைக் காட்டும். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(இ - ள்.) அகத்து - மனத்தின்கண், அன்பு இல்லா - அன்பில்லாத, உயிர்—, வாழ்க்கை - (இல்லறத்தோடுகூடி)வாழ்தல்,—வன்பாற்கண் - வன் பாலின்கண், வற்றல் மரம் - வற்றலாகிய மரம், தளிர்த்தற்று - தளிர்த்தாற் போலும்; (எ - று.)—கூடாதென்பதாம்.

வன்பால் - வன்னிலம். வற்றல் என்பது - பால்வினங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

(கு - ரை.) வன் பால் - கடினமாகிய பூமி; பாலைநிலம். 'வன்பார்க்கண்' என்றும் பாடமுண்டு. வற்றலாகிய மரம் - ஈரம் வற்றியதாகிய மரம். 'வற்றல்' என்பதில், அல் - கருத்தாப்பொருள் விகுதி. வற்றல்மரம் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை. பால்வினங்கா அஃறிணைப்படர்க்கைப் பெயராவது- ஒன்றன்பாலைக்காட்டுகிற'து' என்கிற விகுதியையாவது, பலவின்பாலைக் காட்டுகிற 'வை, அ, கள்' என்னும் விகுதிகளு ளொன்றையாவது பெறுமல் அவ்விருபால்களுக்கும் பொதுவாய் வருகிற அஃறிணைப் பெயர். தளிர்த்தற்று - தளிர்த்தாலற்று என்பதன் விகாரம். வற்றல் மரம் - ஒருஜாதிமரமுமாம். (அ)

எக. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(இ - ள்.) யாக்கை யகத்து - யாக்கையகத்தின்கண் (நின்று), உறுப்பு - (இல்லறத்திற்கு) உறுப்பாகிய, அன்பு—, இலவர்க்கு - உடையரல்லாதார்க்கு, புறத்து உறுப்பு எல்லாம் - ஏனைப் புறத்தின்கண் நின்று உறுப்பாவன வெல் லாம், எவன் செய்யும்-(அவ்வறஞ்செய்தற்கண்) என்ன உதவியைச் செய்யும்?

புறத்துறுப்பாவன - இடனும், பொருளும், ஏவல்செய்வாரும் முதலா யின. துணையோடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின், 'எவன் செய்யும்' என்றார். உறுப்புப் போறலின், 'உறுப்பு' எனப்பட்டன. யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்னபயனைச் செய்யும்? மனத்தின்கண் உறுப்பாகிய அன்பு இலாதார்க்கு என்று உரைப்பாருமுளர்; அதற்கு இல் லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக.

(கு - ரை.) யாக்கை யகத்தின்கண் நின்று - உடம்பினுள்ளேயிருந்து. உறுப்பு - அங்கம். புறத்தின்கண் - வெளியிலே. எவன் செய்யும் - ஒன்றையுஞ் செய்யாதென்பது கருத்து. துணைபோடு கூடாதவழி - இல்லறத்திற்குத் துணையாகிய அன்போடு கூடாதவிடத்து; இல்லறவாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியோடு கூடாதவிடத்து எனினுமாம். அவற்றுல்-இடம்பொருள் ஏவல்களால். முதலடியில் உறுப்பு - உவமவாகுபெயர். போறலின் - ஒத்திருத்தலால். "இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவல்மற், றெல்லா மிருந்தமவற் கென்செய்யும் - நல்லாய், மொழியிலார்க் கேது முது நூல் தெரியும், விழியிலார்க் கேது விளக்கு" என்பது காண்க. அதற்கு-அவ்வுரைக்கு. இயைபு - சம்பந்தம். (கூ)

அ0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ - ள்.) அன்பின் வழியது - அன்பு முதலாக அதன்வழிநின்ற உடம்பே, உயிர் நிலை - உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு - அவ்வன்பில்லாதார்க்கு (உளவான), உடம்பு - உடம்புகள், என்பு தோல் போர்த்த - என்பினைத் தோலாற் போர்த்தனவாம்: (உயிர்நின்றனவாகா); (எ - து)

இல்லறம் பயவாமையின், அன்னவாயின.

இவை நான்குபாட்டானும், அன்பில்வழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) அதன்வழிநின்ற - அதன்பின்நின்ற. அன்பில்லாத உடம்புகள் இல்லறத்தைத் தாமாட்டாமையால், இவ்வாறு கூறினர்; "நெட்டுயிர்ப் போடுற்றபிணம்" என்றுற்போல. அன்ன - அப்படிப்பட்டவை. போர்த்த - பலவின்பால் முற்று. அஃதிலார்க்கு - ஆய்தம் மெய்போல ஒலித்தது. அன்பில்லாவிடின் உடம்பு எடுத்தது பயனற்ற தென்பதாம். (க0)

கூ - ஆம் அதிகாரம்.—விருந்தோம்பல்.

அஃதாவது - இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனுகாதாரை நினைந்துசெய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்குரு லன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறு காத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது, அன்புடைமையின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இருவகைவிருந்தினர் - கூஉ-ஆம் குறளின் உரையிற் கூறப்பட்டவர். புறந்தருதல் - காத்தல். முன்னைய இரண்டும் - பிதிருக்களே ஓம்பலும், தேவரை ஓம்பலும். கட்புலனுகாதார் - பிரதியக்ஷமாகாதவர். பின்னைய இரண்டும் - சுற்றத்தாரை ஓம்பலும், தன்னே ஓம்பலும். இடை - அந்நான்கிற்கும் நடுவில். அன்புடையிருவர்-கணவனும் மனைவியும். அன்பில்லாமல் விருந்தோம்புதல் கூடாததனுல், இதனை அன்புடைமையின்பின் வைத்தார்.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) இல் இருந்து - (மனைவியோடும் வனத்திற் செல்லாது) இல்லின்கண் இருந்து, ஓம்பி - (பொருள்களைப்) போற்றி, வாழ்வது எல்லாம் - வாழுஞ்செய்கையெல்லாம்,—விருந்து ஓம்பி - விருந்தினரைப் பேணி, வேளாண்மை செய்தற்பொருட்டு - (அவர்க்கு) உபகாரஞ் செய்தற்பொருட்டு.

எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும், பொருள் * போற்றலுங் காரணமாக வருந் துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம்.

(கு - ரை.) போற்றி - காத்து. பேணி - உபசரித்து. வாழ்வதெல்லாம்- ஒருமைப்பன்மைமயக்கம். பொருட்டு - நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு. விருந்தோம்பாவழி இல்வாழ்க்கை பயனற்றதென்பதாம். (க)

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ - ள்.) சாவா மருந்து எனின்உம் - (உண்ணப்படும் பொருள்) அமுதமே யெனினும், விருந்து - (தன்னே நோக்கி வந்த) விருந்து, புறத்தது ஆ - (தன் இல்லின்) புறத்ததாக, தான் உண்டல் - தானே உண்டல், வேண்டல் பாற்று அன்று - விரும்புதல் முறைமை யுடைத் தன்று; (எ - று.)

சாவா மருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகால் தான் உண்டலைச் சாவாமருந் தென்பார் உளராயினும் அதனை ஒழிக என்று உரைப்பினும் அமையும்.

இவை இரண்டுபாட்டானும், விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) இப்பாட்டுக்கு இரண்டுரை. முதல் உரையில் 'சாவாமருந்து' என்பது - அம்ருதம் என்பதன் மொழிபெயர்ப்பு; கிடைப்பதற்கரியதும் மிகவினியசுவையுடையது மாகிய அமிருதங் கிடைத்தாலும் அதனையும்விருந்தாளிகளுருக்குக் கொடுத்து உண்ணவேண்டுமே யன்றி விருந்தினரைத் தன் வீட்டு வாயிலில் வைத்துவிட்டுத் தான் உண்ணலாகா தென்பது கருத்து. இரண்டாம்உரையில், சாவாமருந்து - ம்ருதசஞ்சீவிநீ என்பதன் மொழிபெயர்ப்பு; விருந்தினரை வாயிலில் வைத்துவிட்டு ஒருதரம் ஒருவன் உண்டால் அது இறவாமற்சிரஞ்சீவியாயிருத்தற்குரியமருந்தாம் என்று எவராயினுஞ் சொல்லி நிலைநிறுத்தினாலும் அவ்வாறு உண்ணலாகாது என்பது கருத்து: விருந்தினரை உண்பியாமல் தானுண்பது சாதலினும் இன்னாதது என்பதாம். புறத்ததா; ஆ - ஆக என்பதன் தொகுத்தல். வேண்டற்பாற்று-விரும்பப்படுதலாகிய தன்மையையுடையது. பாற்று-ஒன்றன்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர். 'விரும்பத்தக்கதன்று' என்று சொன்னதனாலே, செய்யத் தக்கதன்றென்று சொல்லவேண்டாதாயிற்று. (உ)

* செய்தல் என்று பிரதிபேதம்: செய்தல் - சம்பாதித்தல்.

அஉ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ - ள்.) வரு விருந்து - (தன்னேநோக்கி) வந்த விருந்தை, வைகல்உம்-நாள்தோறும், ஓம்புவான் - புறந்தருவானது, வாழ்க்கை - இல்வாழ்க்கை,—பருவந்து - (நல்குரவான்) வருந்தி, பாழ் படுதல்-கெடுதல், இன்று - இல்லை.

நாள்தோறும் விருந்தோம்புவானுக்கு அதனைப் பொருள்தொலையாது மேன்மேற் கிளைக்கும் என்பதாம்.

(கு - ரை.) புறந்தருவான்-(உணவுமுதலியகொடுத்துப்) போற்றுபவன். நல்குரவு - வறுமை. பொருள் தொலையாது - பணஞ் செலவழிந்து விடாமல். கிளைக்கும் - வளரும். வைகலும், உம்மை - தொறுப்பொருளது. பருவந்து, பருவா-பகுதி. இப்பாட்டான், விருந்தோம்புதலாற் பொருளழியுமே யென்று ஏக்கங்கொள்ளலாகாது எனத் துணிவு கூறினர். (கூ)

அசு. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(இ - ள்.) செய்யாள் - திருமகள், அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, உறையும் - வாழாநிற்கும்: முகன் அமர்ந்து - முகம் இனியனுய், நல் விருந்து-தக்க விருந்தினரை, ஓம்புவான்-பேணுவானது, இல்-இல்லின்கண்; (எ-று.)

மனம் மகிழ்தற்குக் காரணம், தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி - ஞானஒழுக்கங்களான்உயர்தல். பொருள்கிளைத்தற்குக் காரணம் கூறியவாறு.

(கு - ரை.) திருமகள் - இலக்குமி. ஞானஒழுக்கங்களான் உயர்தல்-அறிவினலும் ஆசாரத்தாலும் சிறத்தல். அகம் என்னும் உள்ளிடத்தின் பெயர், அங்குஉள்ள மனத்துக்கு இடவாகுபெயர். அமர்ந்து-பொருந்தி யென்றுமாம். செய்யாள் - செம்மையையுடையவள்; செம்மை என்பது ஈறுபோய் முன் நின்றமெய்திரிந்த செய் - பகுதி. (ச)

அடு. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(இ - ள்.) விருந்து ஓம்பி - (முன்னே) விருந்தினரை மிசைவித்து, மிச்சில் மிசைவான் - (பின்) மிக்கதனை(த் தான்) மிசைவானது, புலம் - விளை புலத்துக்கு, வித்து இடல்உம் வேண்டும் ஓ - வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா; (எ - று.)

கொல்என்பது - அசைநிலை. 'தானே விளையும்' என்பது, குறிப்பெச்சம்.

இவை மூன்றுபாட்டானும், விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) மிசைவித்து - உண்பித்து. மிசைவான்-உண்பவன். விளை புலம் - கழனி. வித்திடுதல் - விதைவிதைத்தல். வித்து இடலும் என உம்மை மாறுக. ஓ-எதிர்மறை. மிச்சில்-மிஞ்சு என்னும் பகுதியிலிருந்து வந்தது.

அஉ. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பர்
நல்விருந்து வானத் தவர்க்கு.

(இ -ள்.) செல் விருந்து - (தன்கண்) சென்ற விருந்தை, ஓம்பி - பேணி, வரு விருந்து-(பின்) செல்லக்கடவ விருந்தை, பார்த்து—, இருப்பான் - (தான் அதனேடு உண்ண) இருப்பான்,—வானத்தவர்க்கு நல் விருந்து -(மறு பிறப்பில் தேவனுய்) வானினுள்ளார்க்கு நல்விருந்தாம்; (எ - று.)

வருவிருந்து என்பது - இடவழுவமைதி. நல்விருந்து - எய்தாவிருந்து. இதனுன், மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) சென்ற - வந்த. செல்லக்கடவ - வரத்தக்க. பார்த்து-எதிர் பார்த்து. அதனேடு உண்ண இருப்பான்-அவ்விருந்தாளியோடு புசிக்கக் காத்திருப்பவன். வானினுள்ளார் - தேவர். "தருசொல் வருசொல் லாயிருஞிள வியுங், தன்மை முன்னிலை யாயீ ரிடத்து" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின்படி தன்மைமுன்னிலைகளுக்கு உரிய வருசொல், அதற்கு மாருக இங்கே படர்க்கையிடத்திற்கு வந்தமையால் இடவழுவாகி, "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்துப் பொதுவிதியால் அமைக்கப்படுதலால் வழுவமைதியாயிற்று. எய்தா விருந்து - பெறுதற்கு அரிய விருந்து. (சு)

அஎ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(இ - ள்.) வேள்வி பயன் - (விருந்தோம்பலாகிய) வேள்வியின் பயன், இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - இன்னளவிற்று என்பதோர் அளவுடைத்தன்று: விருந்தின் துணை துணை-(அதற்கு) அவ்விருந்தின் தகுதியளவே அளவு: (எ - று.)

ஐம்பெருவேள்வியின் ஒன்ருகலின் 'வேள்வி' என்றும், பொருளளவு "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" ஆகலின், 'இனைத்துணைத்தென்பதொன்றில்லை' என்றும் கூறினர்.

இதனுன், இருமையும் பயத்தற்குக் காரணம் கூறப்பட்டது.

(கு -ரை.) வேள்வி - யாகம். அளவிற்று - அளவையுடையது. அதற்கு - அப்பயனுக்கு. தகுதி - பெருமை. ஐம்பெருவேள்வி - பிரமயஜ்ஞம், தேவயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம் என்னும் பஞ்ச மஹாயஜ்ஞங்கள். அவற்றுள், பிரமயஜ்ஞம் - வேதமோதுதல்; தேவயஜ்ஞம் - ஓமம்வளர்த்தல்; மநுஷ்யயஜ்ஞம் - விருந்தோம்புதல்; பித்ருயஜ்ஞம்-தருப்பணஞ்செய்தல்; பூதயஜ்ஞம் - பலியீதல். "தான்சிறி தாயினும்" என்னும் மேற்கோள்-காலடியாரில் நான்காமதிகாரத்தில் எட்டாம் பாட்டிலுள்ளது. இதற்குப்பொருள் - தானஞ்செய்யப்படும்பொருள் தான் மிகச் சிறியதாயிருந்தாலும், தகுதியையுடைய சற்பாத்திரங்களின் கையிற் சேர்ந்தால்,மிகப்பெரியஆகாயமுஞ் சிறியதென்னும்படி தருமத்தின் மேலானபயனைப் பரப்பிவிடும் என்பது. இருமையும் - இம்மைமறுமையிரண்டையும். இனை என்பதை இத்தனையென்பதன் மரூஉ என்பர். விருந்தின் துணைத் துணை என்பதற்கு - தான் விருந்தினர்க்

குச்செய்யும் உபசாரத்தின் அளவே அளவாம் என்று பொருள்கொள் வாருமுளர். (எ)

அஅ.பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(இ - ள்.) பரிந்து ஓம்பி - (நிலையாப்பொருளை) வருந்திக் காத்து(ப் பின் அதனை இழந்து), பற்று அற்றேம் என்பர் - (இதுபொழுது யாம்) பற்றுக்கோ டிலமாயினேம் என்று இரங்குவர்: விருந்து ஓம்பி - (அப்பொருளான்) விருந் தினரை ஓம்பி, வேள்வி தலைப்படாதார் - வேள்விப்பயனை எய்தும் பொறி யிலாதார்; (எ - று.)

"ஈட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன்பம்" ஆக லின், 'பரிந்தோம்பி' என்றார். வேள்வி - ஆகுபெயர்.

(கு - ரை.) நிலையாப் பொருள் - நிலையில்லாதசெல்வம். இதுபொழுது - இப்பொழுது. பற்றுக்கோடிலமாயினேம் - ஆதரவில்லாதவராஞேம். இரங்கு வர் - பச்சாத்தாபப்படுவர். பொறியிலாதார் - விதியில்லாதவர். "ஈட்டிய" என்னும் மேற்கோள் - காலடியாரில் உஅ - ஆம் அதிகாரத்தில் கo - ஆம் பாட்டிலுள்ளது; இதற்கு, சம்பாதித்த நல்லபொருளைக் காப்பாற்றுவதும் அப்படியே மிகுந்த துன்பம் என்பதுபொருள். வேள்வி - அதனாற் பெறப்படும் பயனுக்குக் காரணவாகுபெயர். விருந்தோம்பாதவர் பொருளையிழந்து பரித விப்பர் என்க. (அ)

அசு. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(இ - ள்.) உடைமையுள் - உடைமைக்காலத்து, இன்மை - இன்மை யாவது,—விருந்து ஓம்பல் ஓம்பா மடமை - விருந்தோம்பலை இகழும் பேதை மை; மடவார்கண் உண்டு - (அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது,) பேதை யார்மாட்டே உளதாம்; (எ - று.)

உடைமை - பொருளுடையனுந்தன்மை. பொருளாற்கொள்ளும் பயனை இழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக உப சரித்தார். பேதைமையான் விருந்தோம்பலை இகழின், பொருள் நின்றவழியும் அதனாற் பயனில்லை யென்பதாம்.

இவை யிரண்டு பாட்டானும், விருந்தோம்பா வழிப் படுங் குற்றம் கூறப் பட்டது.

(கு - ரை.) உடைமைக்காலம் - பொருளுடையனாயிருக்குங்காலம். இன் மை - வறுமை. இகழும் - இகழ்ந்து செய்யாமல்விடும். பேதைமை - அறியா மை. அஃது - அப்பேதைமை. பேதையார் - அறிவில்லாதவர். செல்வத்தால் அடையப்படும் பிரயோசனத்தை அடையாமல் இழக்கச்செய்து அச்செல்வத் தை இல்லாததாக்குதலால் இன்மைக்குக்காரணமாகிய விருந்தோம்பா மடமை யை அதன்காரியமாகிய இன்மையாகச் சொன்னது, உபசாரவழக்கு. பொருள் நின்றவழியும் - செல்வம் இருந்தபோதிலும். அஃது என்னுஞ் சுட்டுப்பெயர்,

வருவித்து உரைக்கப்பட்டது. 'மடவார்கண்' என்பதில் பிரிநிலவேகாரம் தொக்கது. மடவார் - மடமையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் பெயர். (கூ)

கூ0. மோப்பக் குழையு மனிச்ச மூகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(இ - ள்.) அனிச்சம் - அனிச்சப்பூ, மோப்ப குழையும் - மோந்துழியன்றிக் குழையாது; விருந்து - விருந்தினர், முகம் திரிந்து நோக்க குழையும் - முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்; (எ - று)

அனிச்சம் - ஆகுபெயர். சேய்மைக்கட் கண்டிழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், அவைபற்றி உடன்பட்டவழி நன்றூற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், நீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

இதனுன், விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டு மென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அனிச்சம் - ஓர்மரம்; அது, அதன்மலர்க்கு முதலாகுபெயர். மோந்துழியன்றிக் குழையாது - மோந்துபார்த்தாலன்றி வாடாது. தூரத்தில் விருந்தினனைப் பார்த்த பொழுதே இனியமுகமும், அதனுல் அவன் கிட்டிய பொழுது இனியசொல்லும், அவ்விரண்டினுலும், அவன் இணங்கினபொழுது அவனுக்கு நல்லஉபசாரஞ்செய்தலு மாகிய மூன்றும் விருந்தோம்புவார்க்கு அவசியமானவையாம்; இவற்றுள் முதலதாகிய இனியமுக மில்லாவீடின், வந்தவிருந்தினன் தூரத்திலிருந்தே வாடி விலகிப்போவன்: ஆதலால், முகக்கினுல் தொட்டு மோந்தாலல்லது வாடாத அனிச்சப்பூவைக்காட்டிலும் கண்டமாத்திரத்தில் வாடும் விருந்தினர் மிகமென்மையானவ ரென்பதாம். இது, குறிப்பினுல், உபமானத்தினும் உபமேயம் உயர்ந்ததென்று உயர்வுதோன்ற நின்ற வேற்றுமையணி. (கo)

கo - ஆம் அதிகாரம்.—இனியவைகூறல்.

அஃதாவது - மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய-மனத்திலுள்ளமகிழ்ச்சியை வெளியில் தெரிவிப்பனவாகிய. இதுவும் - இனியவை கூறலும். இன்றியமையாது - இல்லாமல்முடியாதது; அதியவசியமானது. கீழ் அதிகாரத்தின் இறுதியிற் கூறப்பட்ட இன்முகத்துக்கு இன மாதலால், இன் சொல்லை இங்கே கூறுகிறார்.

கூக. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ - ள்.) இன் சொல்-இன்சொலாவன,—ஈரம் அளை இ - அன்போடு கலந்து, படிறு இல ஆம் - வஞ்சனையிலவாயிருக்கின்ற, செம் பொருள்-அறத்தினை, கண்டார் - உணர்ந்தார், வாய் சொல் - வாயிற்சொற்கள்; (எ - று.)

ஆல் - அசைநிலை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாய்மை. மெய்யுணர்ந்தார்நெஞ்சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், 'செம்பொருள்' எனப்பட்டது. இலவாஞ் சொல் என இயையும். 'வாய்' என வேண்டாது கூறினர், தீயசொற் பயிலா என்பது அறிவித்தற்கு.

இதனுன், இன்சொற்கு இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) ஆல் - 'இன்சொலால்' என்பதில். வாய்மை - உண்மை; சத்தியம். மெய்யுணர்ந்தார் - தத்துவஞானிகள். செம்மை-நன்மை. செம்மையுடையதாய்த் தோன்றுவது - அறம். ஆம் என்னும் பெயரெச்சம்-'செம்பொருள்' என்பதனோடு சேராமல், 'சொல்' என்பதனோடு முடிந்தது. 'சொல்'என்பது - பால்பகா அஃறிணைப்பெய ராதலால், 'இலவாஞ்சொல்' எனப் பன்மை விசேஷணங்கொடுத்துக் கூறினர். தீயசொற்பயிலா-தருமமறிந்தவர் வாய்கள் ஒருபொழுதும் கெட்டசொற் சொல்லுதலைப் பழகினவல்ல. 'வாய்' என வேண்டாதுகூறினர் - 'செம்பொருள்கண்டார்சொல்' எனவே அமையவும், வாய் என்று அவசியமில்லாமற் சொன்னர். சொன்னதற்குக் காரணம் - விதப்புச் சொல் வேண்டியபொருளை விளக்கு மென்பது. அளை இ - அளைந்து என்னும் வினையெச்சம் விகாரப்பட்டு அளபெடுத்தது; இது, சொல்லிசையளபெடை.

கூஉ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
இன்சொல னாகப் பெறின்.

(இ - ள்.) அகன் அமர்ந்து - நெஞ்சு உவந்து, ஈதலின் - (ஒருவர்க்கு வேண்டியபொருளைக்)கொடுத்தலினும், நன்று—: முகன் அமர்ந்து - (கண்ட பொழுதே) முகம் இனியனாய், இன்சொலன் ஆக பெறின் - (அதனோடு) இனியசொல்லையும் உடையனாகப்பெறின்; (எ - று.)

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன்வயத்த தாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாக இன்மையின், அதனினும் அரிது என்னுங் கருத்தான், 'இன்சொல னாகப்பெறின்' என்றார்.

(கு - ரை.) பொருள்வயத்ததன்றித் தன்வயத்ததாயினும் - செல்வத்தின் வசத்திலுள்ளதல்லாமல் தன்வசத்திலுள்ளதாயிருந்தாலும்;தானஞ் செய்தல் பொருளுள்ளவர்க்கே கூடும், இன்சொல் அப்படியன்றிப் பொருளில்லாதவர்களுக்குங் கூடியதாயிருந்தாலும். அறநெஞ்சு - தருமசிந்தை. அதனினும் அரிது - தானத்தினும் அருமையானது. 'பெறின்' என்பது - பெறுதலின் அருமையை விளக்கிற்று. 'நன்று' என்னுங் குறிப்புமுற்றுக்கு 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. எகாரம் - தேற்றம். (உ)

கூஙு. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
* மின்சொ லினதே யறம்.

(இ - ள்.) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - (கண்டபொழுதே) முகத்தான்விரும்பி இனிதாகநோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினது எ - (பின் நண்ணியவழி) மனத்துடன் ஆகிய இனியசொற்களைச் சொல்லுதலின் கண்ணதே, அறம்—; (எ - று.)

'நோக்கி'என்னும்வினையெச்சம், 'இன்சொல்'என அடையடுத்து நின்ற முதனிலைத்தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்ணதன்று என்றவாறு.

இவை இரண்டுபாட்டானும், இன்முகத்தோடுகூடிய இன்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்தது என்பது கூறப் பட்டது.

(கு - பை.) நோக்கி - பார்த்து. நண்ணியவழி-கிட்டிச்சென்றபொழுது. அகத்தான், ஆன் - உடனிகழ்ச்சி. அடை - அடுத்துநிற்பது: விசேஷணம். இன்சொல் - இனியசொற்களைச் சொல்லுதல் என விரிக்க. ஈதலின்கண்ணதன்று - தானத்தினிடத்திலுள்ளதன்று. இப்பொருளோத் தந்ததனால், எகாரம்-பிரிநிலை. முன்னரே பிணித்துக் கோடலின் - முன்னே விருந்தாளியை அன்புகாட்டித் தழுவுதலால். சொலினது - குறிப்புவினையாலணையும்பெயர்; முற்றுமாம். (ஙு)

கூசு. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

(இ - ள்.) யார்மாட்டும் - எல்லார்மாட்டும், இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு - இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லே யுடையார்க்கு, துன்பு உறூஉம் துவ்வாமை - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு, இல் ஆகும் - இல்லையாம்; (எ - று.)

ஈ முதலிய பொறிகள் சுவைமுதலிய புலன்களே நுகராமை யுடைமையின், 'துவ்வாமை' எனப்பட்டது. யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்குப் பகையும் தொகுமலும் இன்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவர் என்பது கருத்து.

(கு - பை.) மிகுவிக்கும் - அதிகப்படுத்துகிற. நுகராமை-அனுபவியாமை. துவ்வாமை-உண்ணுதல் முதலியன செய்யப்பெறுமை; எனவே, வறுமையாயிற்று; இது, எதிர்மறைத்தொழிற்பெயர்; து - பகுதி. உறூஉம் - இன்னிசையளபெடை. (சு)

கூஙி. பணிவுடைய னின்சொல னதை லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - அணியாவது,—பணிவுடையன் - (தன்னுல் தாழப்படுவார்கண்) தாழ்ச்சியுடையனும், இன்சொலன்

* இன்சொலினஃதே என்று பிரதிபேதம்.

ஆதல் - (எல்லார்கண்ணும்) இனியசொல்லையும் உடையனாதல்; பிற-(இவை யிரண்டு மன்றி மெய்க்கு அணியும்)பிறஅணிகள், அல்ல-அணியாகா; (எ-று.)

இன்சொலனாதற்கு இனமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினார். மற்று - அசைநிலை. வேற்றுமையுடைமையான் 'பிற' எனவும், இவைபோலப் பேரழகு செய்யாமையின் 'அல்ல' எனவும் கூறினார்.

இவை இரண்டுபாட்டானும், இனியவைகூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) அணி - அணியப்படும் ஆபரணம். தாழப்படுவார் - கீழ்ப் படிந்திருக்கத்தக்க பெரியோர். தாழ்ச்சி - வணக்கம். இவையிரண்டு-தாழ்ச்சி யும், இன்சொல்லும். மெய்க்கு - உடம்புக்கு. உடன் - கூட. பிறஎன்பது இனங்குறித்ததனால், மற்று - அசையாயிற்று. வேற்றுமையுடைமை - வணக் கமும் இன்சொல்லும் போலத் தன்னோடு ஐக்கியப்பட்டிராமல் வேறுபட்டி ருத்தல். அணி - மத்திமதீபம். உடம்புக்கே அழகு செய்யும் புறத்தணியாற் பயனில்லை, உயிர்க்கும் அழகுசெய்யும் அகத்தணியே பயனுடையதென்பது கருத்து. (கூ)

கூசு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(இ - ள்.) நல்லவை - (பொருளாற் பிறர்க்கு) நன்மைபயக்குஞ்சொற் களே, நாடி - (மனத்தான்) ஆராய்ந்து, இனிய சொலின் - இனியவாக (ஒரு வன்) சொல்லுமாயின், (அவனுக்கு), அல்லவை தேய - பாவங்கள் தேய, அறம்—, பெருகும் - வளரும்; (எ - று.)

தேய்தல் - தன்பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலைஇன்றி மெலிதல். "தவத்தின்முன்னில்லாதாம்பாவம்" என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங் காலும் கடியவாகச்சொல்லின் * அறனுகாது என்பதாம்.

இதனுன், மறுமைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) தேய - குறைக்துவர. தன்பகையாகிய - பாவத்திற்குப்பகை யான. நிலையின்றிமெலிதல் - நிற்குமிடமில்லாமல்வாடுதல். "தவத்தின்முன்" என்னும் மேற்கோள், நாலடியார், துறவு முதற்பாட்டில் உள்ளது. இப் பொருட்டு - 'அல்லவை தேய அறம்பெருகும்' என்பதன் பொருளுடையது. கடியவாக - கடிஞ்சொல்லாக. அறமல்லாதவையெனவே, பாவங்களாம். (கூ)

கூஎ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(இ - ள்.) நயன் ஈன்று - (ஒருவனுக்கு இம்மைக்கு) நீதியையும் உண்டா க்கி, நன்றி பயக்கும் - (மறுமைக்கு) அறத்தையும் பயக்கும்: பயன் ஈன்று - (பொருளாற் பிறர்க்கு) நன்மையைக் கொடுத்து, பண்பின் தலைப்பிரியா - இனிமைப்பண்பின் நீங்காத, சொல்—; (எ - று.)

* அறனுகாதென்று பிரதிபேதம்.

நீதி - உலகத்தோடு பொருந்துதல். 'பண்பு' என்பது, ஈண்டு அதிகாரத்தான் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல் - ஒருசொல்நீர்மைத்து.

(கு - ரை.) இனிமைப்பண்பு - இனிமையாகியகுணம். இங்கே 'நயன், நீறு' என்றது - உலகத்தாரெல்லாரோடும் உண்டாகும் ஒற்றுமையை. 'பண்பு' என்னும் பொதுப்பெயர் - இங்கே 'இனியவைகூறல்' என்னும் அதிகாரத்திற்கு ஏற்ப, சிறப்பாய் இனிமையைக்குறித்தது. ஒருசொல்நீர்மைத்து-தலை பிரிதல் என இரண்டுசொற்போலத் தோன்றினாலும் ஒருசொல்லின்தன்மையையுடையது; தலையென்பது - பொருளில்லாமல் வினைச்சொல்லை அடுத்து வந்த உபசர்க்கம். நன்றி - அறத்துக்குப் பண்பாகுபெயர். (எ)

கூஅ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(இ - ள்.) சிறுமையுள் நீங்கிய - (பொருளாற் பிறர்க்கு) நோய் செய்யாத; இன்சொல் - இனிய சொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - (ஒருவனுக்கு) இருமையிலும் இன்பத்தைப் பயக்கும்; (எ - று.)

மறுமையின்பம் பெரிதாகலின், முற் கூறப்பட்டது. இம்மையின்பமாவது - உலகம் தன்வயத்ததாகலான் கல்லனவெய்தி இன்புறுதல்.

இவையிரண்டுபோட்டாலும்; இருமைப்பயனும் ஒருங்கு எய்துதல் வலியுறுத்தப்பட்டது.

(கு - ரை.) நோய்செய்யாத - துன்பத்தை உண்டாக்காத. பெரிது-இம்மையின்பத்தினுஞ் சிறந்தது. உலகம்தன்வயத்ததாகலான்-உலகத்தவரெல்லாந் தன்வசப்படுதலால். கல்லன எய்தி இன்புறுதல் - நல்ல பொருள் புகழ் முதலியவற்றை அடைந்து இன்பப்படுதல். ஒருங்கு எய்துதல் - ஒருசேரப் பெறுதல். வலியுறுத்தப்பட்டது - இன்சொற்சொல்லுதலாற் கிடைக்குமென்று துணிவாகச்சொல்லப்பட்டது. சிறுமை - துன்பம்; அது வன்சொல்லின் பயனுதலால் அதனை விலக்கி, 'சிறுமையுணீங்கிய இன் சொல்' என்றார். உள் - ஐந்தனுருபு, கீக்கப்பெருளது. (அ)

கூகூ. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(இ - ள்.) இன்சொல் - (பிறர்கூறிய) இன்சொல், இனிது ஈன்றல் - (தனக்கு) இன்பம் பயத்தலை, காண்பான்-அனுபவித்து அறிகின்றவன்;—வல்சொல் வழங்குவது - (அதுநிற்கப் பிறர்மாட்டு) வன்சொல்லைச் சொல்வது, எவன் - என்னபயன் கருதி? (எ - று.)

இனிது என்றது - வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகா தென்பது கருத்து.

(கு - ரை.) அதுநிற்க-அவ்வின்சொல்லைப் பேசுதலைத்தவிர்ந்து. இனிது - இனிமை யென்னும்பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். இன்னாது - இனியதன்று. கொல், ஓ - அசைகள். வழங்குவது - எதிர்காலத்தொழிற்பெயர்; வினையாலணையும்பெயரன்று. (கூ)

கoo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(இ - ள்.) இனிய - (அறம்பயக்கும்) இனிய சொற்களும், உள ஆக - (தனக்கு) உளவாயிருக்க, (அவற்றைக் கூறுது), இன்னாத - (பாவம்பயக்கும்) இன்னாத சொற்களை, கூறல் - (ஒருவன் கூறுதல்,—கனி - (இனிய) கனிகளும், இருப்ப - (தன் கைக்கண்) உளவாயிருக்க, (அவற்றை நுகராது), காய் - (இன்னாத) காய்களை, கவர்ந்து அற்று - நுகர்ந்ததனைடு ஒக்கும்; (எ - று.)

'கூறல்' என்பதனால், 'சொற்கள்' என்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற பண்புகள், உவமைக்கண்ணுஞ் சென்றன. இனிய கனிகள்என்றது, ஒளவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை. இன்னாத காய்கள் என்றது, காஞ்சிரங்காய்போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னாது என்பதாம்.

இவைஇரண்டுபாட்டானும், இன்னாதகூறலின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) நுகராது - உண்ணுமல். பொருள் - உபமேயம். உபமேயமாகியசொற்களை விசேடித்துநின்ற 'இனிய', 'இன்னாத' என்னும் குணத்தைக் குறித்த விசேஷணங்களை, உபமானமாகிய 'கனி', 'காய்' என்பவற்றோடும் முறையே கூட்டுக. காஞ்சிரங்காய்போல நஞ்சாவன - எட்டிக்காய்போல விஷமாய்க்கொல்லத்தக்கவை. 'இனிய', 'இன்னாத' என்னும் இரண்டுபெயரெச்சங்களும் கொண்டு முடியுஞ்சொல்லை அவாவிநின்றன வாதலால், 'சொற்கள்' என வருவித்தார்; இனி, இவற்றைப் பலவின்பால்வினையாலணையும்பெயராகக் கொள்ளுதலுமாம். ஒளவையார் அதிகமானென்னும் வள்ளலிடத்தினின்று அமிருதத்தின் தன்மையையுடைய இனியதொரு கருநெல்லிப்பழத்தைப் பெற்று உண்டு அவனைப் பாடி அதனாற் பலகாலஞ்சீவித்திருந்தா ளென்பது, கதை: இதனை "மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த, வரவுச் சினங்கனலு மொளிதிகழ் நெடுவே, லரவக் கடற்றானை யதிகன்" என்னுஞ் சிறுபாணாற்றுப்படையடிகளாலும், "அதியர் கோமான், *** பெருமை யீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே" என்று ஒளவையாரே பாடிய புறநானூற்றுச்செய்யுளாலும் அறிக. (இதற்கு - நாகலோகஞ்சென்று ஆதிசேஷன்மகளை மணந்து அவனிடத்தினின்று, போர்த்துக்கொண்டால் இளமைமாறாதிருக்கச் செய்வதொரு பொற்படாமும், உண்டால் நீடிழிகாலம் உயிர்வாழத்தக்கதொரு நெல்லிக்கனியும் பெற்றுத் தனதுகாவிரிப்பூம்பட்டினத்துக்கு மீண்டுவந்த பந்தனென்னும் வணிகன்மீது ஒளவை ஒருதவமணிமாலையும் அந்தாதியும் பாடி அவ்விரண்டையும்பெற்றுப் பழத்தை உண்டு வாழ்ந்தா ளென்று ஒருகதை கூறுவாரு மூளர்; அது பொருந்துமாயிற் கொள்க.) (கo)

௯௯ - ஆம் அதிகாரம்—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது - தனக்குப் பிறர்செய்தநன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில்குற்றம் செய்ந்நன்றிகோறலே யாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃது, இனியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) செய்ந்நன்றியறிதல் - வடமொழியில் 'க்ருதஜ்ஞதா' எனப் படும். செய்ந்நன்றி - இறந்தகாலவினைத்தொகை. நன்றி - பண்புப்பெயர்; உபகாரம். அறிதல், மறவாமை என்பன - ஒருபொருட்சொற்கள். இன் சொற்களைச்சொல்லிக்கொண்டு கிருகஸ்தாச்சிரமதருமத்தினின்று தவறுதலுவர் களுக்குப் பாவத்தை நீக்கும் பிராயச்சித்தமொன்றில்லாத குற்றமாவது செய்த நன்றியைமறத்தலே யாதலால், அக்குற்றத்தைப் பாதுகாத்து விலக்கும் பொருட்டு, செய்ந்நன்றியறிதலென்னும் அதிகாரம் இனியவைகூறலென் னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்ட தென்றவாறு. இல்லறத்தார்க்கு இனியவை கூறல்போலச் செய்ந்நன்றியறிதலும் மிகவும் அவசிய மென்க. உய்தி - பாவத்தினின்றுநீங்கும்வழி; இவ்வதிகாரத்தின் பத்தாம்பாட்டைப் பார்க்க. கோறல் - கொல்லுதல்; என்றது - மறத்தல் என்றபடி. அதனைப் பாதுகாத்து - அக்குற்றத்தைத் தம்மிடஞ்சேரவொட்டாமல் தடுத்து; இதனை "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்பதுபோலக் கொள்க. கடி தற்பொருட்டு - விலக்குதலினிமித்தம்.

௯0௯. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(இ - ள்.) செய்யாமல் - (தனக்கு முன் ஓர்உதவி) செய்யாதிருக்க, செய்த - (ஒருவன் பிறனுக்குச்) செய்த, உதவிக்கு —, வையகம்உம் - மண் ணுலகும், வானகம்உம் - விண்ணுலகும், (கைம்மாறுகக்கொடுத்தாலும்), ஆற் றல் - ஒத்தல், அரிது —; (எ - று.)

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையன வாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. 'செய்யாமைச் செய்த வுதவி' என்று பாடமோதி, மறித்துஉதவமாட்டாமையுள்ளவிடத்துச்செய்த உதவி யென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) மண்ணுலகு - பூலோகம். விண்ணுலகு - தேவலோகம். கைம்மாறு - பிரதியுபகாரம். ஆற்றுதல் - நிறையொத்தல், ஈடாதல். ஒரு காரணத்தைப்பற்றிச் செய்யப்படுகிற பிரதியுபகாரங்கள் ஒருகாரணமுமில் லாமற்செய்யப்பட்ட முதலுபகாரத்துக்கு ஈடாகா வென்பதாம். 'செய்யா மைச் செய்தவுதவி'என்ற பாடத்துக்கு - பிரதியுபகாரஞ்செய்தற்கு இயலாத வறியவர்கள் விஷயத்திற் செய்த உபகார மென்று பொருள்; அப்பாடத்தில், செய்யாமையென்னும் எதிர்மறைத் தொழிற்பெயர், ஆகுபெயராய்நின்றது. செய்யாமல் - எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சம். வையகம்-(பொருள்களை) வைக்கும் இடம் எனப் பூமிக்குக் காரணப்பெயர். அரிது - ஒன்றன்பாற்

குறிப்புமுற்று: அருமை - பகுதி. முதலிலே தானுகப் பிறனொருவனுக்குச் செய்த உபகாரத்துக்கும், பிரதியுபகாரத்தைவிரும்பாமல் மிகுந்த ஏழைகளுக்குச் செய்த உபகாரத்துக்கும் எதுவும் ஈடாகாதென்பது, இத்திருக்குறளின் கருத்து. இங்கே "ஏற்றகைமாற்றுமை யென்னுஞ் தாம்வரையா, ராற்றுதார்க் கீவதா மாண்கட - ஞற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல், பொலிகட னென்னும் பெயர்த்து" என்னும் நாலடியார்ச் செய்யுள் அறியத்தக்கது. (க)

கஙஉ. காலத்தி னஞ்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(இ - ள்.) காலத்தினால்-(ஒருவனுக்கு இறுதிவந்த) எல்லைக்கண், செய்த-(ஒருவன்) செய்த, நன்றி - உபகாரம், சிறிது எனின்உம் - (தன்னை நோக்கச்) சிறிதாயிருந்ததாயினும், ஞாலத்தின் மாண பெரிது - (அக்காலத்தை நோக்க) நிலவுலகத்தினும் மிகப்பெரிது; (எ - று.)

அக்காலம்நோக்குவதல்லது பொருள்நோக்கலாகா தென்பதாம். 'காலத்தினால்' என்பது - வேற்றுமைமயக்கம்.

(கு - ரை.) இறுதி - முடிவு, அழிவு; ஆபத்து என்றபடி. எல்லைக்கண் - சமயத்தில். தன்னைநோக்க - அந்தஉபகாரத்தின் அளவைப் பார்க்குமிடத்து. உபகாரஞ்செய்யப்பட்ட சமயத்தினது அருமைபெருமைகளை நோக்கி அவ்வுபகாரத்தை நன்குமதிக்கவேண்டுமேயல்லாமல் உபகாரஞ்செய்யப்பட்ட பொருளினது சிறுமையை நோக்கி அவ்வுபகாரத்தை அவமதிக்கலாகா தென்பது, கருத்து. 'காலத்தினால்' என்பதில், ஆல்என்னும் மூன்றனுருபு-தனக்குரிய பொருள்களில் வாராமல் காலத்தில் என ஏழாம்வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்ததனால், வேற்றுமைமயக்கம்: வேற்றுமைமயக்கம் எனினும், உருபுமயக்கம் எனினும் ஒக்கும்; இதற்கு "யாத னுருபிற் கூறிற்றுமி னும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரம், விதி. எனினும், உம் - இழிவுசிறப்பு. ஞாலத்தின், இன் - ஐந்தனுருபு, உறழ்பொருவு; ஞாலத்தைக்காட்டிலுமென்ற பொருள்: இது, எல்லைப் பொருளின்பாற்படும்; (ஞாலத்தைப்போல என உரைத்தால் உவமப்பொருவு என்னும் ஒப்புப்பொருளாம்.) "பெரிது பெரிது புவனம் பெரிது" ஆதலால், பெருமைக்கு நிலவுலகம் எடுத்துக்கூறப்பட்டது. (உ)

கஙக. பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(இ - ள்.) பயன் தூக்கார் - (இவர்க்குஇதுசெய்தால்) இன்னது * பயக்குமென்று ஆராய்தலிலராய், செய்த—, உதவி - உதவியாகிய, நயன் - ஈரமுடைமையை, தூக்கின் - ஆராயின்,—நன்மை - (அதன்)நன்மை, கடலின் - கடலினும், பெரிது - பெரிதாம்; (எ - று.)

* பயப்பரென்று என்று பிரதிபேதம்.

இவைமூன்றுபாட்டானும், முறையே, காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினுற் செய்ததூஉம், பயன்தூக்காராய்ச்செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பயன் தூக்கார்-(இன்னுரக்கு இன்னவுதவிசெய்தால் நமக்கு இன்னநற்பயனுண்டாகுமென்று தமக்கு) ஒருபயனே நோக்காதவர்களாய். நயன் - அன்புள்ள செய்கை. ஈமுமுடைமை - அன்புடைமை. அதன்நன்மை-அவ்வுதவியின் நலம். முறையே - வரிசையாய். பயன், நயன் - பயம், நயம் என்பவற்றின் ஈற்றுப்போலிகள்; [நன். எழுத். சூஎ.] தூக்கார் - எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றெச்சம்; [நன். வினை. கூஉ.] தூக்கின் - எதிர்காலவினையெச்சம். நிலத்தினும் பெரிய தாதலால், இங்கே கடலை எடுத்துக்கூறினர்.

கஅசை. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(இ - ள்.) தினை துணை நன்றி செயின்உம்-(தமக்குத்) தினையளவிற்றாய உபகாரத்தை (ஒருவன்) செய்தானாயினும், பனை துணை ஆ கொள்வர்-(அதனை அவ்வளவிற்றாகக்கருதாது) பனையளவிற்றாகக் கருதுவர், பயன் தெரிவார்-(அக்கருத்தின்) பயன் தெரிவார்; (எ - று.)

தினை, பனை என்பன - சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை. அக்கருத்தின் பயனாவது - அங்ஙனங்கருதுவார்க்கு வரும் பயன்.

(கு - ரை.) தினை - ஒருவகைச்சிறுதானியம். தினையளவிற்று-தினையவ்வளவு சிறியது. கருதாது - நினையாமல். அக்கருத்தின்பய னென்றது - அவ்வாறு நினைப்பதனு லுண்டாகும் புகழ்புண்ணியங்களை. தினை - சிறுமைக்கும், பனை - பெருமைக்கும் எடுத்துக்காட்டப்படும் அளவென்று முறைகிரணி றைப்பொருள்கோளாகக் கொள்க. அளவை - இங்கே, உபமான அளவை. ஆ - ஆகவென்பதன் தொகுத்தல். பனையை எடுத்துக்கூறியது, தினையினது எதுகைக்கு ஏற்றிருத்தலை நோக்கிப்போலும். "தினையனைத்தேயாயினுஞ் செய்தநன் றுண்டாற், பனையனைத்தா வள்ளுவர் சான்றோர் - பனையனைத், தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னுட, நன்றில நன்றறியார் மாட்டு" என்னும் நாலடியார்ச்செய்யுளோடு இதனை ஒப்பிடுக. பனை - பனைமரத்தின் உயர்ச்சி. "நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்கு, என்று முறுதியே சூழ்க வெறிதிரை, சென்றுலாஞ் சேர்ப்ப வதுபோல நீர்போயும், ஒன்றிரண் டாம் வாணிக மில்" என்னும் பழமொழிப்பாட்டையும் பார்க்க. (சு)

கஅநி. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(இ - ள்.) உதவி - (கைம்மாறாக) உதவி, உதவி வரைத்து அன்று - (காரணத்தானும் பொருளானும் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன் செய்த) உதவியளவிற்றன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து-அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதியளவிற்று; (எ - று.)

'சால்புஎவ்வளவுபெரிதாயிற்று, உதவியும் அவ்வளவு பெரிதாம்' என்பார், 'சால்பின் வரைத்து' என்றார்.

இவையிரண்டுபோட்டானும், மூன்றுமல்லாத உதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறரொருவரால் உதவிசெய்யப்பட்டவர் அவ்வுதவிசெய்தவர்க்குத் தமது மேன்மைக்கு ஏற்றபடி பிரதியுபகாரத்தைச் செய்யவேண்டுமேயன்றி அவ்வுதவியினது காரணம் பொருள் காலம் என்பவற்றிற்கு ஏற்றபடி கைம்மாறு செய்யலாகா தென்பது, கருத்து. மாற்றுதவிக்கு அளவில்லையென்றவாறு. சால்பு, அமைதி, மேன்மை, தகுதி என்பன - ஒருபொருட் சொற்களென அறிக. 'உதவிவரைத்தன்று' என்றதனால், எழுவாயாகிய மற்றொரு 'உதவி' என்னுஞ் சொல் பிரதியுதவியாயிற்று. மூன்றுமல்லாத - காரணமில்லாமற் செய்ததும் தக்ககாலத்திற்செய்ததும் பயனெதிர்பாராமற் செய்தது மல்லாத. செய்தவழி - செய்தவிடத்து. வரைத்து - பெயரடியாகப் பிறந்த அஃறிணை யொன்றன்பாற் குறிப்புப்பெயர். சால்பு - பண்புப்பெயர்; இன் - சாரியை. உதவி என வந்த சொல்லும் பொருளும் அடுத்தடுத்து வந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணி. (கூ)

கஅசு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(இ - ள்.) துன்பத்துள் - துன்பக்காலத்து, துப்பு ஆயார் - (தனக்குப்) பற்றுக்கோடாயினோரது, நட்பு - நட்பை, துறவற்க - விடாதொழிக; மாசு அற்றார் - (அறிவு ஒழுக்கங்களில்) குற்றமற்றோரது, கேண்மை - கேண்மையை, மறவற்க - மறவாதொழிக; (எ - று.)

கேண்மை - கேளாந்தன்மை. இம்மைக்கு உறுதிகூறுவார், மறுமைக்கு உறுதியும் உடன் கூறினர்.

(கு - ரை.) துன்பக்காலம் - துன்பம் வந்த காலம். பற்றுக்கோடாயினர் - ஆதாரமானவர்கள்; தளர்ச்சிவந்த சமயத்தில் ஊன்றுகோல்போல உதவியவர்கள் என்றபடி. நட்பு - சினேகம்; பண்புப்பெயர்: நள் - பகுதி, பு - விகுதி. கேளாந்தன்மை - சினேகிதனுந்தன்மை. இம்மை - இப்பிறப்பு. மறுமை-மரணத்தின்பின்வருநிலை. ஞான அனுட்டானங்களையுடையவர்களது நட்பு மறுமைக்கு நன்மைதருவதுபோல ஆபத்காலத்திலுதவுபவர்களதுநட்பு இம்மைக்கு நன்மைதருவதென்பது, இத்திருக்குறளின் கருத்து. இங்கு 'மறவற்க மாசற்றார் கேண்மை' என்றதற்கு ஏற்ப, மேல் நட்பாராய்தலென்னும் அதிகாரத்தில் ''மருவுக மாசற்றார் கேண்மை''எனக் கூறுதல் காண்க. மாசற்றார் கேண்மை மறுமைக்கு உறுதிதருவதாதலை ''இம்மையடக்கத்தைச்செய்து புகழாக்கி, உம்மை யுயர்கதிக் குய்த்தலான்—மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டார் ரெனப்படு வார்'' என்ற அறநெறிச்சாரத்தாலும் அறிக. மறவற்க, துறவற்க - எதிர்மறைவியங்கோள். அற்றார் என்னும் வினையாலணையும்பெயரில், அறுஎன்னும் குறிலிணைப்பகுதி ஒற்று

இரட்டி இறந்தகாலங் காட்டிற்று. ஒருவர்க்கொருவர் கூமசமாசாரங்களைக் கேட்பதனால், கேண்மையென்று நட்புக்குப் பெயர். துப்பு என்பதற்கு-துணையென்றாயினும், வலியென்றாயினும் பொருள்; "அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும், நுணையும் வலியும் பொலிவும் நெய்யும், அனுபவமும் தூய்மையும் துப்பென லாகும்" என்பது நிகண்டாதலின். துன்பத்துள், உள்-ஏழனுருபு.

கoஎ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(இ - ள்.) தங்கண் விழுமம் துடைத்தவர் - தங்கண் (எய்திய) துன்பத்தை நீக்கினவருடைய, நட்பு - நட்பினை, எழுமை எழு பிறப்புமும் - எழுமையினையுடைய (தம்) எழுவகைப்பிறப்பினும், உள்ளுவர் - நினைப்பர், (நல்லோர்); (எ - று.)

'எழுமை' என்றது, வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை; அது வாளாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு, மேலேஉரைத்தாம். விரைவு தோன்ற, 'துடைத்தவர்' என்றார். நினைத்தலாவது - துன்பந்துடைத்தலான் அவர்மாட்டுளதாகியஅன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்துஅன்புடையராதல்.

இவையிரண்டுபாட்டானும், நன்றிசெய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) தங்கண் எய்திய - தம்மிடத்து நேர்ந்த. எழுமை - ஏழின்தன்மை. ஒருயிர் ஒருபிறப்பிற்செய்த புண்ணியபாவங்களாகிய வினைகள் பின்பு ஏழுபிறப்புவரையில் அவ்வுயிரை விடாமல் தொடர்ந்து தத்தம்பயனை அனுபவிப்பிக்கு மென்கிற கொள்கை, வாளாபதியென்னுங்காப்பியத்துள் விவரித்துக்கூறப்பட்டிருக்கிற தென்றவாறு. வாளாபதி-பஞ்சகாவியங்களிலொன்று; மற்றவை - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி. மேலே உரைத்தாம் - முன் புதல்வரைப்பெறுதலென்னும் ஏழாமதிகாரத்தில் "எழுபிறப்புந் தீயவை தீண்டா" என்னும் இரண்டாவதுதிருக்குறளின் உரையிற் கூறினேம். துடைப்பவர் என எதிர்காலமாகவாயினும் துடைக்கின்றவர் என நிகழ்காலமாகவாயினுங் கூறுமல், 'துடைத்தவர்'என இறந்தகாலத்தாற்கூறியது - விரைவுபற்றியதென்க; "வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி, இறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார் புலவர்"என்பது தொல்காப்பியம். துன்பந்துடைத்தலான் அவர் மாட்டுஉளதாகிய அன்பு - தமது துன்பத்தை நீக்கினதுகாரணமாக அந்நீக்கினவரிடம் உண்டான அன்பு. தங்கண், தம் - தாம் என்பதன் விகாரம்; கண் - ஏழனுருபு. "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தால், விழுமமென்பது - துன்பமென்னும் பொருளையுமுணர்த்துவதோர் உரிச்சொல்லாம். இனி, தம் கண் விழும் அம் துடைத்தவர் எனப் பதம்பிரித்து - (துன்பத்தால்) தமது கண்களினின்று பெருகுகின்ற நீரை (அத்துன்பம்நீக்குதலாற்) போக்கினவ ரென்று உரைகூறுதலும் அமையும். உள்ளுவர், உ -

சாரியை. கஉசு-ஆம் திருக்குறளை இங்கே நோக்குக. "ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற்கு, எழுமையு மேமாப் புடைத்து" என்ற குறளையுங் காண்க.

கo அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(இ - ள்.) நன்றி மறப்பது - ஒருவன் (முன்செய்த) நன்மையை மறப்பது, நன்று அன்று - (ஒருவற்கு) அறனன்று; நன்று அல்லது அன்றுஎ மறப்பது - (அவன்செய்த) தீமையைச் செய்தபொழுதே மறப்பது, நன்று - அறன்; (எ - று.)

இரண்டும் ஒருவனுற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

(கு - ரை.) அறனன்று - தருமமன்று. இரண்டும் - உபகாரமும், அபகாரமும். மறப்பதும் - மறக்கப்படுவதும். மறவாததும் - மறக்கப்படாததும். வகுத்து - பிரித்துஎடுத்து. மறப்பது - எதிர்காலத்தொழிற்பெயர். நன்று என்னுஞ்சொல் மூன்றனுள், முதலன இரண்டும் - நல்ல தன்மையை யுடையதாகிய தரும மென்னும் பொருளைத் தந்ததனால், பண்படியாப்பிறக்க குறிப்புவினையாலணையும் பெயர்; பண்பாகுபெயரெனவுமாம். மூன்றுவது-முற்று. அன்று என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - எதிர்மறைக் குறிப்புமுற்று; பின்னது - சுட்டடியாப்பிறக்து ஏழாம்வேற்றுமையிடப் பொருளுணரநின்ற இடைச்சொல். ஏகாரம் - தேற்றமும் விரைவுங் குறித்தது. அல்லது-எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர்; அ-சாரியை. நன்மை யல்ல தெனவே, தீமை யாயிற்று. (அ)

கo கூ. கொன்றன்ன வின்ன செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(இ - ள்.) கொன்று அன்ன இன்ன செயின்உம் - (தமக்கு முன் ஒரு நன்மைசெய்தவர் பின்) கொன்றாலொத்த இன்னதவற்றைச் செய்தாராயினும், (அவையெல்லாம்), அவர் செய்த நன்று ஒன்றுஉம் உள்ள கெடும்-அவர் செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம்; (எ - று.)

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்கு மென்பதாம்.

இதனுன், நன்றல்லது அன்றே மறக்குந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) இன்னதவற்றை - இனிமையல்லாத பலவற்றை; வெறுக்கத்தக்க பல துன்பங்களை. ஒருவர்செய்த உபகாரம் தினையளவுசிறியதாயினும் பனையளவுபெரியதாகப் பயன்தெரிபவராற் கொள்ளப்படுதலால், ஒருவர் தமக்கு ஒருகாலத்திற் செய்த உபகாரமொன்றுதானே பின் அவர் தமக்குச் செய்த அபகாரங்களையெல்லாம் மறக்கச்செய்யும் என்பது, கருத்து.- "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்தெரிவார்" என்பதை இங்கேயறிக. நன்றல்லது அன்றே மறக்குந் திறம் -

அபகாரத்தை அப்பொழுதே மறந்துவிடுவதற்கு உபாயம்; அதாவது - அவர்செய்த உதவியை நினைக்கவேண்டுமென்பது. "ஒருநன்றிசெய்தவர்க் கொன்றி யெழுந்த, பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் - கயவர்க்கு, எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின், எழுநூறுந் தீதாய்விடும்" என்ற நாலடியாரைக் காண்க. கொன்று - கொன்றல் என்னும் எதிர்காலவினை யெச்சத்தின் திரிபு; [நன். வினை. உஎ.] இனி, கொன்றன்ன என்பதை - கொன்றதன்ன எனத் தொழிற்பெயர் விகாரமாகவுங் கொள்ளலாம். "சாதலி னின்னுத தில்லை" ஆதலால், 'கொன்றன்னவின்னு செயினும்' எனப்பட்டது. அன்ன - அன்னென்னும் உவமவுருபிடைச்சொல் லடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இன்னு - இன்னுமையென்னும் எதிர்மறைப்பண்படியாப்பிறந்த பலவின்பால்வினையாலணையும்பெயர். உம்-இழிவுசிறப்பு. ஒன்றும் என இருந்த உம்மையின்மகரவொற்று "மவ்வீறொற்றழிந்து" என்பதனாற் கெட்டது: இனி, ஒன்று நன்று - வினைத்தொகையாக, பெருந்தியஉபகாரமென உரைத்தலும் ஒன்று. உள்ள - செயவெனெச்சம்; காரணப்பொருளாதலால், இறந்தகாலம். (கூ)

கஉ0. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ - ள்.) எ நன்றி கொன்றார்க்குஉம் - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும், உய்வு உண்டு ஆம் - பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம்; செய்நன்றி கொன்ற மகற்கு - (ஒருவன்) செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு, உய்வு இல்லை - அஃது இல்லை; (எ - று.)

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது - ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவுசிதைத்தலும், பார்ப்பார்த்தப்புதலும் முதலிய பாதகங்களைச்செய்தல்.

இதனால், செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது.

(கு - ரை.) எந்நன்றி என்பதில், எகரவினா - சிறப்பை உணர்த்திற்று; எஞ்சாமையுணர்த்தினதாக்கி, எல்லாத்தருமங்களையும் என்றும் உரைகூறலாம். நன்றி - உபகாரத்துக்குப் பண்பாகுபெயர். சிதைத்தல் - அழித்தல். உம்மை - இழிவுசிறப்பு. வாயில் - வழி, உபாயம். பாவத்தின் நீங்கும் வாயில்-பிராயச்சித்தம். மகன் - மனிதன். அஃது - தீவினையொழிவு. ஆன் முலையறுத்தல் - பசுவின் முலையை அறுத்தல். மகளிர்கருவு சிதைத்தல் - பெண்களது கருப்பத்தை விச்சேதப்படுத்தல். பார்ப்பார்த் தப்புதல் - பிராமணர்க்குப் பிழைசெய்தல். இவை - முறையே கோஹத்தி, சிசுஹத்தி, பிரமஹத்தி என்பனவாம். முதலிய பாதகங்கள் என்றது - பெண்கொலை முதலியவற்றை. "ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்திகொன் றோர்க்குய்தி யில்லென, அறம்பா டிற்றே ஆயிழை கணவ" என்னும் புறநானூற்று(34)ச் செய்யுளின் பொருளை இங்கே நோக்குக. 'நோவதை முத

லாயின வாக்காற் சொல்லவும் படாமையின், ஆன்மூலையறுத்த வெனவும், மகளிர்கருச்சிதைத்தவெனவும், பார்ப்பார்த்தப்பியவெனவும் மறைத்துக் கூறப்பட்டன' என்பது, புறநானூற்றின் உரை. உய்வு - பிராயச்சித்தத்துக் குத் தொழிலாகுபெயர். உண்டு, இல்லை - இருதிணையைம்பான் மூவிடத்துக் கும் பொதுவான குறிப்பு முற்றுக்கள்; [நன். வினை. உ0.] ஆம்-அசை. (கo)

கஉ - ஆம் அதிகாரம்—நடுவுநிலைமை.

அஃதாவது-பகை நொதுமல் நண்புஎன்னும் மூன்றுபகுதியினும் அறத் தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை. இது, நன்றிசெய்தார்மாட்டு அந்நன்றி யினை நினைத்தவழிச் சிதையுமன்றே? அவ்விடத்துஞ் சிதையலாகா தென் றற்கு, செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) நடுவுநிலைமை - வடமொழியில் 'மத்யஸ்த்ததா' எனப்படும்; அதாவது - பகைவர், அயலார், சினேகிதர் என்ற இம்மூவகையோரிடத்தும் தருமத்தில் தவறுமல் சமமாகநிற்குந்தன்மை: பக்ஷபாதமில்லாமையென்றபடி. நடுவு, உ - சாரியை. நிலைமை - பண்புப்பெயர். இது - நடுவுநிலைமை. நன்றியைச் செய்தவரிடத்து அன்புபாராட்டவேண்டுவது கடமையாயினும், அவரிடத்தும் பக்ஷபாதமாக ஒழுகுதல்கூடாது என்பதைவிளக்கும்பொருட்டு, நடுவுநிலைமை யென்னும் அதிகாரம் செய்ந்நன்றியறிதலென்னும் அதிகாரத் தின்பின் வைக்கப்பட்ட தென்க. நொதுமல் - விருப்பு வெறுப்பு இன்மை, உதாசீநதை. இங்கு, பகை நொதுமல் நண்பு என்ற மூன்றும் - ஆகுபெயராய், பகைவர்முதலியோரைக் காட்டும். மூன்றுபகுதி - மூன்றுவகுப்பானவர்.

கஙக. தகுதியென வொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(இ - ள்.) தகுதி என ஒன்றுஉம்ஏ - நடுவுநிலைமை யென்று சொல்லப் படும் ஓ ரறமுமே, நன்று—: பகுதியான் - (பகை நொதுமல் நண்பு என்னும்) பகுதிதோறும், பால் பட்டு ஒழுக பெறின் - தன் முறைமையை விடாது ஒழு கப்பெறின்; (எ - று.)

தகுதியுடையதனை 'தகுதி' என்றார். 'ஊராளுநர் தேவகுலம்' என்பது போல, 'பகுதியான்' என்புழி ஆறுருபு - தோறுமென்பதன் பொருட்டாய் நின்றது. 'பெறின்' என்பது, அவ்வொழுக்கத்து அருமை தோன்றநின்றது.

இதனுன், நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒழுகப்பெறின் - நடக்கப் பெற்றால். தகுந்த தன்மையை யுடைய நடுவுநிலைமையைத் தகுதியென்றது, பண்பாகுபெயர். ஊராளுநர் தேவகுலம் என்பதற்கு-ஊர்தோறும் ஒருதேவாலய மென்று பொருள். என் புழி - என்னுமிடத்து. ஆறுருபு - மூன்றுமுருபு. பொருட்டு - பொருளது. 'நன்றே' என்னும் பிரிநிலையேகாரம், பிரித்து 'ஒன்றும்' என்பதனோடு கூட்டப்பட்டது. ஒன்றும்நன்று என்றவிடத்து, "மவ்வீறொற்றழிந்துயிரீ றொப்பவும்" என்பதனால், மகரவொற்றுக் கெட்டது. 'ஒன்று' - ஓரறத்தை

உணர்த்தியதனால், எண்ணலளவாகுபெயர்; இது போல்வன்வற்றை எண்ணுக்கும் எண்ணுடைப்பொருளுக்கும் பொது வென்பாரு முளர். உம் - இழிவுசிறப்பு. பாற்பட்டு - முறைமைப்பட்டு. (க)

ககஉ. செப்ப முடையவ னக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(இ - ள்.) செப்பம் உடையவன் - நடுவுநிலைமையுடையவனது, ஆக்கம்-செல்வம்,—சிதைவு இன்றி - (பிறர்செல்வம்போல்) அழிவின்றி, எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து-(அவன்)வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து.

விகாரத்தால்தொக்க எச்சவும்மையான், இறக்குந்துணையும் அவன்தனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றும். அறத்தோடு வருதலின், அன்னதாயிற்று. தான் இறந்துழி எஞ்சிநிற்பதாகலின், 'எச்சம்' என்றார்.

(கு - ரை.) வழியினுள்ளார் - சந்ததியார். இறந்தது தழுவிய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது, 'எச்சத்திற்கு'என்ற விடத்தில். இறக்குந்துணையும் அவன்தனக்கும் ஏமாப்புடைத்து-சாகிறவரையிலும் அந்நடுவுநிலைமையையுடையவனுக்கும் வலியாதலையுடையது. நடுவுநிலைமையையுடையவனது செல்வம் அவனுக்கும் அவன்சந்ததியார்க்கும் இன்பந்தருவதாதற்குக்காரணம் தருமத்தோடுபொருந்திவருதலென்றபடி. அன்னதாயிற்று - தனக்கும் சந்ததிக்கும் ஏமாப்புடையதாயிற்று. தகப்பன் இறந்ததன்பின் மிகுந்து நிற்பதாதலால், எச்சம் என்று சந்ததிக்குப் பெயர்; எஞ்சு-பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி, மெல்லெழுத்துவல்லெழுத்தானது - விகாரம். நடுவுநிலைமையையுடையவனது செல்வம் எப்பொழுதும் அழியாதென்பது, இத்திருக்குறளின் கருத்து. செப்பம் - 'பம்' விகுதிபெற்றபண்புப்பெயர். உடையவன் - குறிப்பு வினையாலணையும்பெயர். ஆக்கம் - சம்பாதிக்கப்பட்டதெனக் காரணப்பெயர்; ஆக்கு - பிறவினைப்பகுதி, அம் - செயப்படு பொருள்விகுதி. சிதைவு-தொழிற்பெயர். ஏமாப்பு - தொழிற்பெயர்; ஏமா-பகுதி: இது - அலமா, இறுமா, சோகா என்பனபோல, ஒருசொல். (உ)

ககஙூ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(இ - ள்.) நன்று ஏ தரின்உம் - (தீங்கன்றி) நன்மையே பயந்ததாயினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை-நடுவுநிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை, அன்றுஏ ஒழிய விடல் - அப்பொழுதே ஒழியவிடுக; (எ - று.)

நன்மைபயவாமையின், 'நன்றேதரினும்' என்றார். இகத்தலான் என்பது, 'இகந்து' எனத் திரிந்துநின்றது.

இவையிரண்டுபாட்டானும், முறையே, நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மைபயத்தலும், ஏனைச்செல்வம் தீமைபயத்தலும் கூறப்பட்டன.

(கு - ரை.) தீங்கன்றி - தீமையைத்தராமல் என்றபடி. பயந்தது-தந்தது. ஒழிய - நீங்கும்படி. 'நன்றேதரினும்' என்ற உம்மை - நன்மையைத்

தாராமையைத் தெரிவித்ததனால், எதிர்மறைப்பொருளாம்; உயர்வுசிறப்பு மாம். விடுக - விடக்கடவன். காரணப்பொருளதாகிய இகக்களன்னும் செய வெனெச்சம், இகந்து என இறந்தகாலவினையெச்சமாகத் திரிந்தது; தன் கருத்தாவின் வினையைக்கொண்டுமுடிதற்குஏற்ற 'இகந்து' என்னுஞ்செய்தெ னெச்சம் 'ஆம்' என்னும் வேறுகருத்தாவின்வினையைக் கொண்டுமுடிந்ததனால், அதனை வேறுகருத்தாவின்வினையையுங்கொண்டு முடிதற்குஏற்ற செய வெனெச்சத்தின் திரிபாகக்கொள்ளவேண்டியதாயிற்று; [நன். வினை. உரு, உஎ.] நடுவுநிலைமையை விட்டதனால் வருஞ் செல்வமானது நன்மைதருவதே யில்லை: அப்பொழுது நன்மைதருவதுபோலத் தோன்றினும் பின்பு அனுபவ த்தில் தீமையையே தரும்: ஆதலால், அதனை விரும்பலாகா தென்பது, இதன் கருத்து. ஏனைச்செல்வம் - நடுவுநிலைமையொழிதலால்வந்தசெல்வம். நன்றே: ஏகாரம் - பிரிநிலை. ஆம் - ஆகுமென்னுஞ் செய்யுமெ னெச்சத்து ஈற்று உயிர்மெய் சென்றது: [நன். வினை. உஉ.] ஒழியவென்னுஞ் செயவெனெச் சம் - காரியப்பொருள தாதலால், எதிர்காலம். விடல் - 'அல்' விகுதிபெற்று வந்த உடன்பாட்டுவியங்கோள். (கூ)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(இ - ள்.) தக்கார் - (இவர்) நடுவுநிலைமையுடையவர், தகவு இலர் - (இவர்) நடுவுநிலைமையிலர், என்பது-என்னும் விசேடம்,—அவர் அவர் எச்சத் தால் - அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும், கா ணப்படும் - அறியப்படும்; (எ - று.)

தக்கார்க்கு எச்சமுண்டாதலும், தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை யாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின.

இதனுன், தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) விசேடம் - வேறுபாடு. ஒருதலை - நிச்சயம். அவை - நன்மக் கள் உண்டாதலும், இல்லையாதலும். குறி - அடையாளங்கள். அறியுமாறு - அறியும்விதம். நடுவுநிலைமையுடையவர்க்கு நல்லசந்ததியுண்டாகும்; நடுவுநிலை மையில்லாதார்க்குச் சந்ததியே உண்டாகாது: ஒருகால்உண்டாயினும் நற் குணஞ்செய்கையுடையதாயிராது என்பது, இதன்கருத்து. தக்கார் - பகுதி ஒற்றிரட்டியது; இறந்தகாலத்தின்குறி. "மகனுரைக்குந் தந்தை நலத்தை," "பழியின்மை மக்களாற் காண்க" என்னும் நான்மணிக்கடிகையையும், "நன் றிப் பயன்தூக்கா ஞாலியும் சான்றோர்முன், மன்றிற் கொடும்பா டுரைப்பா னும் - நன்றின்றி, வைத்த தடைக்கலங் கொள்வானு மிம்மூவர், எச்ச மிழ ந்து வாழ்வார்" என்ற திரிகடுகத்தையும், "மகனறிவு தந்தையறிவு" என்ற பழமொழியையும் நோக்குக. எச்சம் என்பதற்கு - புகழ் என்று பொருள்கூறி னுரு முளர். (ச)

ககநி. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ-ன்.) கேடுஉம்-(தீவினையாற்) கேடும், பெருக்கம்உம்-(நல்வினையாற்) பெருக்கமும், இல் அல்ல - (யாவர்க்கும்) முன்னே அமைந்துகிடந்தன: நெஞ்சத்து கோடாமை - (அவ்வாற்றை அறிந்து அவைகாரணமாக)மனத்தின்கட் கோடாமையே,சான்றோர்க்கு (அறிவான்) அமைந்தார்க்கு, அணி-அழகாவது.

அவைகாரணமாகக் கோடுதலாவது - அவை இப்பொழுதுவருவனவாகக்கருதிக் கேடுவாராமையைச்குறித்தும் பெருக்கம்வருதலைக்குறித்தும் ஒருதலைக்கண் நிற்றல். 'அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று' என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகுசெய்தலின், 'சான்றோர்க்கணி' என்றார்.

(கு - ரை.) கேடு-கெடுதல்; மூதனிலைதிரிந்த தொழிற்பெயர்: தொழிற்பெயர்விகுதி புணர்ந்து கெட்டது. உம்மைகள்-எண்ணுப்பொருளன. தீவினை நல்வினைகள் - முற்பிறப்புக்களிற் செய்துவைத்த பாவமும் புண்ணியமும். பெருக்கம் - பெருகுதல், தொழிற்பெயர்: பெருகு - பகுதி, அம் - விகுதி, பகுதி ஒற்றிரட்டினது - விகாரம். இல் - இல்லை யென்பதன் விகாரம். அல்ல - பலவின்பாற்குறிப்புமுற்று. இல்லல்ல - இரண்டு எதிர்மறை சேர்ந்து உடன்பாடாயிற்று; உண்டாயுள்ளன என்று பொருள். அவ்வாற்றையறிந்து அவைகாரணமாக மனத்தின்கட் கோடாமை - கேடும்பெருக்கமும் முன்னே வினைப்பயனென்கிற அவ்விதத்தை அறிந்து கேட்டைவிலக்கும்பொருட்டும் பெருக்கத்தையடையும்பொருட்டும் மனத்திற் பக்ஷபாதஞ்செய்யாமை. கோடாமை - கோணுமை; எதிர்மறைத்தொழிற்பெயர். அமைந்தார் - நிறைந்தவர். சான்றோர் என்னும் வினையாலணையும்பெயரில், சால்என்னும் உரிச்சொல் - பகுதி. அழகுசெய்வதை அழகென்றது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. ஒருதலைக்கண் நிற்றல் - ஒருபக்கத்தில் அன்பு கொண்டு நிற்பது. கோடுதலன்று என உண்மையுணர்ந்து - கெடுதிவாராதிருப்பதற்கும் நன்மைவருதற்கும் நடுவுநிலைமைதவறுதல் காரணமன்றென்று உண்மையறிந்து. சால்பினை - அறிவினதுநிறைவை. 'கேடும் பெருக்கமும் இல்லல்ல' என்பதன் உண்மையை ''பல்லாவு ளூய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்னதகைத்தே தற்செய்த, கிழவனே நாடிக் கொளற்கு'' என்னும் நாலடியார்ச்செய்யுளால் அறிக. மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களுட் சிறந்ததாகிய மனத்தினது கோணுதல் மற்றைமொழிமெய்கள் கோணுதற்குக் காரண மாதலால், 'நெஞ்சத்துக் கோடாமை' என்றார். (டு)

ககசு. கெடுவலியா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின்.

(இ - ள்.) (ஒருவன்), தன் நெஞ்சம்—, நடுவு ஒரீஇ-நடுவுநிற்றலை ஒழிந்து, அல்ல செயின் - நடுவல்லவற்றைச் செய்யநினைக்குமாயின், (அந்நினைவை), யான் கெடுவல் என்பது அறிக - யான் கெடக்கடவே னென்று உணரும் உற்பாதமாக அறிக; (எ - று.)

நினைத்தலும் செய்தலோடு ஒக்கு மாகலின், 'செயின்' என்றார்.

(கு - ரை.) நெஞ்சம் - மனம். 'நெஞ்சம்' என்றதற்கு ஏற்ப, 'செயின்' என்பதற்கு - 'செய்யநினைக்குமாயின்' என்று உரைக்கப்பட்டதென்க. உற்பாதம் - பின்நிகழக்கடவதாகிய தீமையை முன்னர்த் தெரிவிக்குந் தூர்நிமித்தம். கெடுவல் - தன்மையொருமை எதிர்காலமுற்று; அல் - தன்மையொருமை விகுதி, வ் - இடைநிலை. கெடுவல் + யான் = கெடுவலியான்; தன்னெழி மெய்ம்முன் யகரம்வர இகரந்தோன்றிற்று: [ந்ன். மெய். ஈ.] ஒருவியென்னும் இறந்தகாலவினையெச்சம், 'ஒரீஇ' என விகாரப்பட்டு அளபெடுத்தது. மனத்திற்பகூபாதங்கொள்ளுதல் விரைவிற்கெடுதியடைதற்குக் காரணமாம் என்பது, இதன் கருத்து. என்பது - எதிர்காலவினையாலணையும்பெயர். தன்-தான் என்பதன் விகாரம். (சு)

கஙஎ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் ஞெழ்வு.

(இ - ள்.) நடு ஆக - நடுவாகநின்று, நன்றிக்கண் - அறத்தின்கண்ணே, தங்கியான் - தங்கினவனது, தாழ்வு - வறுமையை, கெடு ஆக வையாது - வறுமையென்று கருதார், உலகம் - உயர்ந்தோர்; (எ - று.)

'கெடு' என்பது - முதனிலைத்தொழிற்பெயர். 'செல்வமென்று கொள்ளுவர்' என்பது, குறிப்பெச்சம்.

இவைமூன்றுபாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா வென்பதூஉம், கோடுதல் கேட்டிற்கு ஏதுவா மென்பதூஉம், கோடாதவன்தாழ்வு * கேடன் றென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) தங்கினவன்-நிலைபெற்றவன். வறுமை - ஏழைமை. முதனிலைத்தொழிற்பெயராவது - விகுதிபுணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரமாய்த் தொழிலையுணர்த்துஞ்சொல்; முதனிலை - பகுதி, பகுபதங்களின் முதலில் நிற்பது. கெடு - கெடுதல்: இது - இலக்கணையால், வறுமையை உணர்த்திற்று. "உலக மென்ப துயர்ந்தோர் மாட்டே" என்பதனை இங்கே உணர்க. உலகம் - இது பொருளால் உயர்திணையாயினும், சொல்லால் அஃறிணையாதலால், வையாதென்னும் அஃறிணைமுற்றைக் கொண்டது. குறிப்பெச்சமாவது - வெளிப்படையாகவன்றி மறைத்துநின்று வேறொருசொல்லின் குறிப்பினால் தோன்றும் பொருள்; 'வறுமையென்று கருதார்' என்றதனால், 'செல்வமென்று கொள்ளுவர்' என்பது குறிப்பிக்கப்பட்டது: குறிப்பெச்சத்தை வடநூலார் அர்த்தாபத்தி யென்பர். நன்றி - அறத்துக்குப் பண்பாகுபெயர். நடுவுநிலைமை தவறுமையால் வறுமைவந்த பொழுதிலும் அது உயர்ந்தோராற் செல்வத்தோடொப்ப நன்குமதிக்கப்படும் என்பது, இதன் கருத்து. (எ)

கஙஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

* செல்வமென்பதூஉம் என்று பிரதிபேதம்.

(இ - ள்.) சமன் செய்து -(முன்னே தான்) சமஞ்செய்து, சீர்தூக்கும்-(பின் தன்கண்வைத்த பாரத்தை) வரையறுக்கும், கோல் போல் - துலாம் போல, அமைத்து - (இலக்கணங்களான்) அமைந்து, ஒரு பால் கோடாமை-ஒருபக்கத்துக் கோடாமை, சான்றோர்க்கு—, அணி - அழகாம்; (எ - று.)

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது-* தொடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறு உணர்த லாகவும், ஒருபாற்கோடாமையாவது - அவ்வுள்ளவாற்றை மறையாது பகை தொதுமல் நட்பு என்னும் மூன்றுதிறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களான் அமைதல் - இருவழியும், ஏற்பன கொள்க.

(கு - ரை.) வரையறுத்தல் - இவ்வளவென்று அளவிட்டுக்காட்டுதல். துலாம் - தராசுகோல். உபமானமாகிய தராசுகோலினது விசேஷணமாகிய சமன்செய்தலேயும் சீர்தூக்கலேயும் உபமேயத்தினிடத்தும், உபமேயமாகிய சான்றோரின் விசேஷணமாகிய அமைதலேயும் ஒருபாற்கோடாமையையும் உபமானத்தினிடத்தும் கூட்டி, சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைத்து ஒருபாற்கோடாத துலாக்கோல்போல, சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைத்து ஒருபாற்கோடாதவர் சான்றோ ரெனப் பொருள் கொள்க. உவமை யடை - உபமானத்தின் விசேஷணம். பொருள் - உபமேயம். பொருளடை - உபமேயத்தின் விசேஷணம். சீர்தூக்கல் - ஆராய்தல். சான்றோர் ஆராய்தலாவது - ஆக்ஷேபசமாதானங்களால் வாதிப்பிரதிவாதிகளிடங் கேட்ட விஷயங்களே முறைப்படியே உள்ளவிதமாக அறிதல். தொடை - ஆட்சேபம், வினு. ஊழான் - முறைமையால். "தொடைவிடை யூழாத்தொடைவிடைதுன்னி" என்பது, புறப்பொருள்வெண்பாமாலை (வாகை, 19). இலக்கணங்களான் அமைதல் - தராசுக்கும் சான்றோர்க்கும் இருக்கவேண்டிய லக்ஷணங்களோடு பொருந்தியிருத்தல்: அதிவியாப்தி அவியாத்தி அசம்பவம் என்னும் மூக்குற்றங்களினும்நீங்கிய தன்மைகளால் அமைதல் என்றுருமூளர். இருவழியும் - உபமானம் உபமேயம் என்னும் இரண்டிடத்தும்; கோல் சான்றோர் என்னும் இரண்டிடத்தும். ஏற்பன - ஏற்பவற்றை. "துலைகா வன்ன சமநிலை," "துலாக்கோலியல்பே தூக்குங்காலை, மிகினுங் குறையினு நில்லா தாகலும், ஐயத்தீர்த்தலும் நடுவுநிலைமையோ, டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே," "ஐயந் தீரப் பொருளுணர்த்தலு, மெய்ந் நடு நிலையும் மிகும் நிறைகோற்கே" என்பவற்றை இங்கே அறிக. முற்றுவமையணி. சமன் - ஸமம்: வடசொல். 'சமஞ்செய்து' என்றும் பாடம். (அ)

ककक. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

---

* தடை என்று பிரதிபேதம்.

(இ - ள்.) செப்பம் - நடுவுநிலைமையாவது,—சொல் கோட்டம் இல்லது - சொல்லின்கட் கோடுதலில்லாததாம்; (அஃது அன்னதாவது), உள் கோட்டம் இன்மை - மனத்தின்கட் கோட்டமின்மையை, ஒருதலை ஆ பெறின் - திண்ணிதாகப் பெறின்; (எ - று.)

சொல் - ஊழான் அறுத்துச்சொல்லுஞ் சொல்.

* இவையிரண்டு பாட்டானும், காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடு மாயின், அறங்கிடந்தவாறுசொல்லுதல் நடுவுநிலைமையாம்: எனவே,அதனோடு கூடாதாயின், அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்று என்பது † கூறப்பட்டது.

(கு - ரை.) அஃது அன்னதாவது - சொல்லிலேகோணலில்லாமல் நிற்பது நடுவுநிலைமை யாவது. கோட்டமின்மை - கோணுதலில்லாமை. திண்ணிதாக - உறுதியுடையதாக; நிச்சயமாக என்றபடி. ஊழான் அறுத்துச் சொல்லுஞ் சொல் - தருமசாஸ்திரமுறைப்படியே வரையறுத்துச் சொல்லுந் தீர்ப்பு. தருமசாஸ்திரவிதிப்படியே தீர்ப்புச்சொன்னாலும், சொல்பவனது மனத்திற் பக்ஷபாதத்தோடுகூடிய எண்ண மிருக்குமானால்,அது நடுவுநிலைமை யாக அங்கீகரிக்கப்படா தென்பது, கருத்து. கோட்டம்—கோடு - பகுதி, அம் - தொழிற்பெயர்விகுதி. மத்தியஸ்தனுயிருப்பவன் சொல்லுந் தீர்ப்பு, நீதி நூலுக்கு ஒத்ததாகவும் பக்ஷபாதமில்லாததாகவும் இருக்கவேண்டுமென்பதாம்.

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(இ - ள்.) பிறஉம்-பிறர்பொருளையும், தம போல் - தம்பொருள்போல, பேணி—, செயின் - செய்யின், வாணிகம் செய்வார்க்கு—, வாணிகம் - (நன்றாய) வாணிகமாம்; (எ - று.)

பிறவும் தமபோற் செய்தலாவது - கொள்வது மிகையும் கொடுப்பது குறையு மாகாமல் ஒப்ப நாடிச் செய்தல்.

இப்பாட்டு மூன்றனுள், முன்னைய இரண்டும் - அவையத்தாரை நோக்கின; ஏனையது - வாணிகரை நோக்கிற்று: அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின்.

‡ இதனுல் நடுவுநிலைமை வகை கூறப்பட்டது.

(கு - ரை.) பேணிச்செய்தல் - பாதுகாத்து வர்த்தகஞ் செய்தல். வாணிகம் - வாணிஜ்யம் என்னும் வடமொழியின் திரிபு; வர்த்தக மென்று பொருள். வாணிகம் என்னுஞ் சொல் இரண்டனுள், பின்னது - பெயர்ப்பயனிலையாய் நின்றது. பிற - இடைச்சொல். உம்மை - எச்சம். தம - சுறிப்புவினையாலணையும்பெயர்; தாம்-பகுதி, சுறுகினது-விகாரம், அ-பலவின்பால் விகுதி. கொள்வது மிகை - தாம் கொள்ளுஞ் சரக்குத் தாம் கொடுக்கும்பொருட்கு

* இவையிரண்டுபாட்டானும் என்பது சிலபிரதியிலில்லை. † பெறப்பட்டதுஎன்று பிரதிபேதம். ‡ இத்தவாக்கியம், ஒருபிரதியிலுள்ளது.

மிகுதியாவது. கொடுப்பதுகுறை - தாம் கொடுக்குஞ்சரக்குத் தாம் வாங்கிக் கொள்ளும்பொருட்குக் குறைத்திடுவது: "கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉங்குறைகொடாது" என்பது, பட்டினப்பாலை(உக0). முன்னைய இரண்டும் - "சுமன்செய்து" என்னுங் குறளும், "சொற்கோட்டமில்லது" என்னுங் குறளும். அவையத்தார் - நியாயசபையார். ஏனையது - மற்றது: என்றது, "வாணிகஞ்செய்வார்க்கு" என்ற இக்குறளை. அவ்விரு திறத்தார்க்கும் - அவையத்தார் வாணிகர் என்ற இரண்டுபகுப்பார்க்கும். இவ்வதம்-நடுவுநிலைமை. வாணிகர் - வர்த்தகஞ்செய்யும் வைசியரும், சூத்திரரும்; தொல் காப்பியத்துப் பொருளதிகாரத்தில் "அறுவகைப் பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுஞ் சூத்திரத்தில் "இருமூன்று மரபி னேனோர் பக்கமும்" என்றதன் உரையில், ஆசிரியர்நச்சினார்க்கினியர் இத்திருக்குறளை 'வாணிகச்சிறப்பு இருவர்க்கும் கூறியது' என வரைந்திருத்தல் காண்க. இக்குறளுக்கு - பண்டங்களை மிகக்குறைத்தவிலைக்குவாங்கி மிகஉயர்த்தவிலைக்குவிற்று வியாபாரஞ் செய்வது வர்த்தகலக்ஷணமன் றென்பதும், அயலார்பொருளையும்வாங்கித் தம்பொருளைப்போலக் கருதி வியாபாரத்தால் விருத்திசெய்துதருவது தருமமென்பதும் கருத்தாகக் கொள்ளலுமாம். (க0)

கஙு - ஆம் அதிகாரம்.—அடக்கமுடைமை.

அஃதாவது - மெய்ம்மொழிமனங்கள் நீநெறிக்கட் செல்லாது அடங்குத லுடையனுதல். அஃது எதிலார்குற்றம்போல் தங்குற்றமுங்காணும் நடுவுநிலைமையுடையார்க்கு ஆதலின், இது, நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) மெய் மொழி மனங்கள் - மனோ வாக் காயங்கள்; இவை, திரிகரண மெனப்படும். நீநெறிக்கண் செல்லாது - பழியையும் பாவத்தையுந் தருகிற கெட்டவழியிற் செல்லாமல்; எனவே, அடக்கம் - மெய்யடக்கம், மொழியடக்கம், மனவடக்கம் என மூவகையாயிற்று. மெய்யடக்கமாவது - தீயதொழில்களைச் செய்யாமை; மொழியடக்கமாவது - தீயசொற்களைச் சொல்லாமை; மனவடக்கமாவது - தீயஎண்ணங்களை எண்ணுமை. அஃது - அவ்வடக்கமுடைமை: இது, நடுவுநிலைமையையுடையவருக்கே உரியதொரு குணமாதலால், அடக்கமுடைமையென்னும் அதிகாரம் நடுவுநிலைமை யென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்ட தென்க. எதிலார்குற்றம்போல் தம் குற்றமுங்காணும் நடுவுநிலைமையுடையார்-அயலாரிடத்துள்ள குற்றத்தைப் போலவே தம்மிடத்துள்ள குற்றத்தையும் ஒப்பஅறிகின்ற பக்ஷபாதமில்லாத தன்மையுடையவர். அடக்கம் - தொழிற்பெயர். உடைமை - பண்புப்பெயர்.

கஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(இ - ள்.) (ஒருவனை), அடக்கம்-அடக்கமாகிய அறம், அமரர் உள்உய்க்கும்-(பின்)தேவருலகத்து உய்க்கும்; அடங்காமை அடங்காமையாகிய பாவம், ஆர் இருள் உய்த்துவிடும்-(தங்குதற்கு)அரிய இருளின்கட் செலுத்தும்;(எ-று.)

'இருள்' என்பது - ஓர்நரகவிசேடம். "எல்லாம், பொருளிற் பிறந்து விடும்" என்பதுபோல, 'உய்த்துவிடும்' என்பது - ஒருசொல்லாய்நின்றது.

(கு ரை.) ஒருவனை - தன்னையுடைய ஒருவனை. பின் மறுமையில். உய்க்கும் - செலுத்தும். தங்குதல் - தரித்திருத்தல். ஓர்நரகவிசேடம் என்றது - எப்பொழுதும் மிக்க இருள்நிறைந்துள்ள அந்ததாமிஸ்ரம் என்னும் நரகவகையை. "எல்லாம், பொருளிற்பிறந்துவிடும்" என்னும் மேற்கோள், நான்மணிக்கடிகை - எ - ஆஞ் செய்யுளில் உள்ளது; எல்லாம் பொருளினால் உண்டாகும் என்பது, இதன்பொருள்; 'உய்த்துவிடும்' என்பதை - உய்த்து விடும் என இரண்டுசொல்லாகக்கொள்ளாமல், நின்றுவிடும், ஆகிவிடும் என்பனபோல ஒருசொல்லாகக் கொள்ளவேண்டுமென்க; இதில் விடுஎன்பது துணிவுப்பொருளைக் காட்டிற்று. அமரரென்னும் வடசொல்லுக்கு-(அமிருதத்தையுண்டதனால்) மரணமில்லாதவரென்றுபொருள். இனி, அமர் அருள் எனப் பிரித்து, சிறந்த (கடவுளினது) கருணையிடத்தே செலுத்துமென்றும் பொருள்கொள்ளலாம். ஆரிருள்-அருமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு இடைநின்ற உகரமும்கெட்டு, இருள்என்பதனோடு புணர்ந்தது. அடக்கமாகிய புண்ணியத்தையுடையார் அக்நல்வினையின் பயனாற் சுவர்க்கவின்பம் பெறுவர்: அடங்காமையாகிய பாவத்தையுடையார் அத்தீவினையின்பயனால் நரகத்துன்பம் நுகர்வர் என்பது, கருத்து. (க)

கஉஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதணினூங் கில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) உயிர்க்கு - உயிர்கட்கு, அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - அடக்கத்தின் மிக்க செல்வமில்லை; (ஆகலான்), அடக்கத்தை - அவ்வடக்கத்தை, பொருள் ஆ - உறுதிப்பொருளாகக்கொண்டு, காக்க - அழியாமற் காக்க; (எ - று.)

'உயிர்' என்பது - சாதியொருமை: அஃது - ஈண்டு, மக்களுயிர்மேல் நின்றது; அறிந்து அடங்கிப் பயன்கொள்வது அதுவே யாகலின்.

(கு - ரை.) ஈண்டு - இவ்விடத்தில். மக்கள் - மனிதர். அடக்கத்தாலுண்டாகும் நன்மையை அறிந்து அதனால் தான் அடங்கிச் சுவர்க்கமாகிய நல்லபயனைப் பெறுவதற்குரியது மனிதருயிரே யாதலால், இக்குறளில் 'உயிர்' என்பதற்கு - மனிதருயிர்எனப் பொருள் கொள்க. ஒருவனுக்குச் செல்வம்போல அடக்கம் இம்மைமறுமையின்பங்கட்கு ஏதுவாமென்பது, இதன் கருத்து. (உ)

கஉஊ. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(இ - ள்.) அறிவு அறிந்து - (அடங்குதலே நமக்கு) அறிவாவதென்று அறிந்து, ஆற்றின் - நெறியானே, (ஒருவன்), அடங்கப் பெறின்—, செறிவு - அவ்வடக்கம், அறிந்து - (நல்லோரான்) அறியப்பட்டு, சீர்மை பயக்கும்-(அவனுக்கு) விழுப்பத்தைக் கொடுக்கும்; (எ - று.)

அறிதலிரண்டனுள், முன்னது-செயப்பாட்டுவினை. இல்வாழ்வானுக்கு அடங்கும்நெறியாவது - மெய்ம்முதல் மூன்றும் தன்வயத்த வாதல்.

(கு - ரை.) அறிவாவது - அறிவின்பயனுகுவது; உபசாரவழக்கு. நெறியான்-நல்வழியால். 'செறிவறிந்து' என்பதிலுள்ள 'அறிந்து' என்னும் வினையெச்சம் - அகரச்சாரியையும் செயப்படுபொருளுணர்த்தும் படுவிகுதியுமொக்குமின்ற தென்றுயினும், செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினையென்றுயினுங் கொள்ளத்தக்கது. விழுப்பம் - புகழ். மெய்ம்முதல்மூன்றும் தன்வயத்தவாதல் - மெய் மொழி மனம் என்னும் மூன்றுகாரணங்களும் தனக்கு வசப்பட்டிருப்பன வாகுதல். செறிவு - தொழிற்பெயர். சீர்மை - சீரினது தன்மை. அறிவறிந்து என்பதற்கு - தன் அறிவினுல் தான் அறியவேண்டுவனவற்றை அறிந்து என்றும் பொருள்கொள்ளலாம். அடக்கம் புகழுக்குக் காரணமா மென்பது, இதன்கருத்து. பயக்கும், பய - பகுதி. (கூ)

கஉசு. நிலையிற் றிரியா தடங்கியான் நோற்றம்
மலையினு மாணப் பெரிது.

(இ - ள்.) நிலையின் - (இல்வாழ்க்கையாகிய தன்) நெறியின், திரியாது - வேறுபடாது நின்று, அடங்கியான்-அடங்கினவனது, தோற்றம்-உயர்ச்சி,—மலையின்உம் - மலையின் உயர்ச்சியினும், மாண - மிக, பெரிது—; (எ - று.)

திரியாது அடங்குதல் - பொறிகளாற் புலன்களே நுகராதின்றே அடங்குதல். மலை - ஆகுபெயர்.

(கு - ரை.) தன்நெறி - தனக்கு உரியநிலைமை. பொறிகளாற் புலன்களே நுகராதின்றே அடங்குதல் - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து இந்திரியங்களாலும், ஸ்பரிசம் ரசம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் ஐந்து விஷயங்களேயும் அனுபவித்துக்கொண்டே அடங்கியிருத்தல். ஐம்புலன்களே அனுபவிக்கவொட்டாமல் ஐம்பொறிகளே அடக்கித் துறவறத்திலேநின்று திரிகரணங்கள் அடங்குதலினும், இல்லறத்திலேயிருந்து எல்லாவின்பங்களேயும் அனுபவித்துக்கொண்டே அடங்குதல் மிகச்சிறந்த தென்பதாம். இது பற்றியே, திருமாலேயென்னுந் திவ்வியப்பிரபந்தத்தில் "காவலில் புலனே வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து" என்னும் பாசுரத்துக்கு 'காவலில்லாதபடி இந்திரியங்களே வைத்துப் பாபராசியை வாஸனையோடே போக்கி' என்று வியாக்கியானமருளிச்செய்திருத்தல் காண்க. மலை - அதனது உயர்ச்சியைக் குறித்தலால், பொருளாகுபெயர். நிலையின், ஐந்தனுருபு - எல்லைப் பொருளது. தோற்றம் - தொழிற்பெயர். உம்மை - உயர்வுசிறப்பு. (ச)

கஉநி. எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ - ள்.) பணிதல் - (பெருமிதமின்றி) அடங்குதல், எல்லார்க்கும்—, நன்று ஆம் - (ஒப்ப) நன்றே: (எனினும்), அவருள்உம் - அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்குஎ - செல்வமுடையார்க்கே, செல்வம் தகைத்து - வேறொரு செல்வமாஞ் சிறப்பினை யுடைத்து; (எ - று.)

பெருமிதத்தினைச்செய்யும் கல்வியும் குடிப்பிறப்பும் உடையார் அஃதின்றி அவைதம்மானே அடங்கியவழி அவ்வடக்கம் சிறந்துகாட்டாதாகலின், 'செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்றார். 'செல்வத்தகைத்து' என்பது, மெலிந்துநின்றது. பொதுவென்பாரையும் * உடம்பட்டுநின்றே சிறப்பாதல் கூறியவாறு.

இவையைந்துபாட்டானும், பொதுவகையான், அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(சு - ரை.) பெருமிதம் - செருக்கு, கருவம். ஒப்ப நன்றேயெனினும் - ஒருதன்மையாக நல்லதேயானாலும். வேறொருசெல்வம் - அச்செல்வத்தின் மேம்பட்டதொருசெல்வம். உடைத்து - உடையது. கல்வி, குடிப்பிறப்பு, செல்வம் இவற்றால் ஆகுஞ் செருக்குக்களே வித்யாமதம், குலமதம், தனமதம் என்னும் முக்குறும்பு என்பர். அஃது இன்றி - செருக்கில்லாமல். அவைதம்மானே-கல்வி குடிப்பிறப்புக்களால். செல்வத்தகைத்து-மெலித்தல் விகாரம். பொது என்பாரையும் உடம்பட்டு நின்றே சிறப்பாதல் கூறியவாறு - 'கல்வியுடையோர், குடிப்பிறப்புடையோர், செல்வமுடையோர் என்னும் மூன்று திறத்தார்க்கும் அடக்கமென்பது பொதுவானநற்குணம்' என்பவர்களின் கருத்தையும் ஒப்புக்கொண்டே, செல்வமுடையோர்க்கே அடக்கம் இன்றியமையாச்சிறப்புடையதெனத் தமதுகருத்தை வெளியிட்டபடி. பொருளில்லாத இடத்தில் செருக்கு மிகுதற்குஏது நிரம்பவில்லையாதலால், செருக்கு நிரம்புவதற்கு ஏதுவான பொருளையுடையோரிடத்தே அடக்கம் மேம்பட்டுத் தோன்றுமென்க. இனி, கல்வியும் செல்வமெனப்படுதலால், செல்வர்க்குஎன்பதற்கு - கல்வி பொருள் என்னும் இரண்டுசெல்வமும் முடையோர்க்கு எனப் பொருள் கூறுதலும் அமையும். ''கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார், குறைபிரக்து தம்முன்னர் நிற்பபோல் தாமும், தலைவணங்கித் தாழப் பெறின்,'' ''ஆக்கம் பெரியார் சிறியாரிடைப்பட்ட, மீச்செலவு காணி னணிதாழ்ப்'' என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுட்களை இங்கே அறிக. செல்வர்க்கே, எ - பிரிநிலை. (கு)

கஉசு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஆமை போல் - ஆமைபோல, (ஒருவன்), ஒருமையுள் - ஒரு பிறப்பின்கண், ஐந்து - ஐம்பொறிகளையும், அடக்கல் ஆற்றின் - அடக்கவல்லனாயின், (அவ்வன்மை அவனுக்கு), எழுமையும் - எழுபிறப்பின் கண்ணும், ஏமாப்பு உடைத்து - அரணுதலை யுடைத்து; (எ - று.)

ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கவேண்டுமென்பார், 'ஆமைபோல்' என்றார். ஒருமைக்கட் செய்த வினையின் பயன், †எழுமைக்கண்ணுந்தொடருமென்பது இதனுண் அறிக.

---

* பி - மீ: உடம்பட்டுச்சிறப்பாதல். † பி - மீ: எழுமையும்.

இதனுன், மெய்யடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) அரணதலையுடைத்து - துன்பம்வாராமற் காத்து இன்பந் தருதலையுடையது. ஐந்துஉறுப்பு - கால்கள்நான்கு, தலை ஒன்று ஆக ஐந்து அவயவங்கள். இடர்புகுதாமல் - தனக்குத் துன்பம் நேராமல். ஒருமைக்கண் - ஒருபிறப்பில். எழுமைக்கண்ணும் - பின்பு ஏழுபிறப்புக்களிலும். ஐந்து - எண்ணலளவாகுபெயர். எழுமையும், உம்மை - முற்று. இங்கே "ஆமை தன்னுறுப்போ ரைந்துந் தன்னுளே யடக்கு மாபோற், றீமைசெய் புலன்க ளைந்துந் தன்னுளே செறியச் சேர்த்தின், வாய்மையுண் ணிகழு மென்னே வழுத்தவும் படுகின் றனேற், றூய்மைசெய்தவர்க ளுளருஞ் சொல்லுவதவன்றன் சொல்லே" என்னுஞ் செய்யுளே உணர்க. "யதாஸம்ஹரதேசாயம் கூர்மோங்காநீவ ஸர்வஶः | இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ் தஸ்யப்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா" என்ற கீதை காணத்தக்கது. (சு)

கஉஎ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ - ள்.) யா காவார் ஆயின் உம் - (தம்மாற் காக்கப்படுவன) எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும், நா காக்க - நாஒன்றனையும் காக்க; காவாக்கால் - (அதனைக்) காவாராயின், சொல் இழுக்கு பட்டு - சொற்குற்றத்தின் கட் பட்டு; சோகாப்பர் - (தாமே) துன்புறுவர்; (எ - று.)

'யா' என்பது - அஃறிணைப்பன்மைவினுப்பெயர்; அஃது, ஈண்டு, எஞ்சாமையுணர்கின்றது. முற்றும்மை, விகாரத்தால் தொக்கது. சொற்குற்றம் - சொல்லின்கண் தோன்றும் குற்றம். 'அல்லாப்பர்,' 'செம்மாப்பர்' என்பனபோல, 'சோகாப்பர்' என்பது - ஒருசொல்.

(கு - ரை.) காக்கப்படுவன எல்லாவற்றையும் என்றது - ஐம்பொறிகளையும், மனத்தையும். முற்றும்மை, 'யா' என்பதன் பின்தொக்கது. நா - நாக்கு. அதனைக் காத்தலாவது - தீயசொற்களைச் சொல்லாதிருத்தல். பட்டு - அகப்பட்டு. எஞ்சாமை - குறையாமை. 'சோகாப்பர்' என்பதில் உள்ள சோகா என்னும் பகுதியை அலமா, செம்மா, இறுமா என்பனபோல ஒரு சொல்லாகக்கொள்ளவேண்டு மென்பது, பரிமேலழகர்மதம்; இனி, சோகம்ஆ அல்லது சோகம்யா என்பதன் விகாரமாகக் கொள்ளுதலும்ஒன்று. காவாக்கால் - எதிர்மறைவினையெச்சம். "ஆக்கப்படுக்கு மருந்தளவாய்ப் பெய்விக்கும், போக்கப்படுக்கும் புலநரகந் தூய்ப்பிக்கும், காக்கப் படுவனவும் இந்திரிய மைந்தினு, நாக்கல்லதில்லை நனிவெல்லுமாறே" என்பது, வளையாபதி. (எ)

கஉஅ. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

(இ - ள்.) தீ சொல் பொருள் பயன் - தீயவாகிய சொற்களின்பொருள்களால் (பிறர்க்கு) வரும் துன்பம், ஒன்று ஆன்உம் - ஒன்றாயினும், உண்டு ஆயின் - (ஒருவன் பக்கல்) உண்டாவதாயின்,—(அவனுக்கு), நன்று - (பிற அறங்களான் உண்டான) நன்மை, ஆகாது ஆகிவிடும் - தீதாய்விடும்;(எ - று.)

தீச்சொல்ஆவன - தீங்குபயக்கும் பொய், குறளே, கடுஞ்சொல் என்பன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின் கண்ணே ஒன்றுயினும் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டாவதாயின் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) இக்குறளுக்கு இரண்டு உரை. முதலுரைக்குக் கருத்து- பொய், கோள், கடுஞ்சொல் என்னும் மூன்றுவகைத் தீயசொற்களில் யாதாயினும் ஒன்றை ஒருவன் சொல்லி அதனாற் பிறர்க்கு ஒருதுன்பத்தை விளைவிப்பானுயின், அவன் எவ்வளவுதருமசீலனுயிருந்தாலும், அவனுக்கு அத்தருமங்களினுலுண்டாகிற நன்மையெல்லாம் தீமையாய்முடியுமென்பது; இரண்டாமுரைக்குக் கருத்து - ஒருவன் தான்சொல்லுகிற மெய்யாகியசொல், புறங்கூறுதசொல், இன்சொல் என்னும் இந்நல்ல சொற்களினிடையே பொய், கோள், கடுஞ்சொல் என்கிற தீயசொற்களுள் ஒன்றைக் கலந்து சொல்வானுனாலும், முன்னும்பின்னுஞ் சொல்கிற அந்நல்லசொற்களால் வரும் நன்மை முழுவதும் தீமையா மென்பது. நல்லசொல்லையுந் தீயபயன்தராமற்சொல்க என்றவாறு. குறளே, கோள் என்பன - ஒருபொருட் சொற்கள்; அது-ஒருவன்மேற் புறத்தே பழிமொழிகூறுதல். ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம். ஆகிவிடும் - ஒருசொல். நன்று - பண்புப்பெயர். ஆகாது - எதிர்மறை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். முன்னே 'நன்று' என வந்ததனுல், பின்னே 'ஆகாது' என்பது தீயதாயிற்று. (அ)

கஉசு. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே
நாவினுற் சுட்ட வடு.

(இ - ள்.) தீயினுல் சுட்ட புண் - (ஒருவனே ஒருவன்) தீயினுற் சுட்ட புண், உள் ஆறும் - (மெய்க்கட் கிடப்பினும்) மனத்தின் கண் (அப்பொழுதே) ஆறும்; (அவ்வாறன்றி), நாவினுல் சுட்ட வடு - (வெவ்வுரையுடைய)நாவினுற் சுட்ட வடு, ஆறாது-(அதன்கண்ணும் எஞ்ஞான்றும்) ஆறாது; (எ-று.)

ஆறிப்போதலால் தீயினுற் சுட்டதனை 'புண்' என்றும், *ஆறாது கிடத்தலான் நாவினுற்சுட்டதனை 'வடு' என்றும் கூறினுர். தீயும் வெவ்வுரையும் சுடுதற் றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையால் தீயினும் வெவ்வுரைகொடிதென்பது போதரலின், இது - குறிப்பான்வந்த வேற்றுமையணியலங்காரம்.

இவைமூன்றுபாட்டானும், மொழியடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்க்கட் கிடப்பினும் - உடம்பிலே காணப்பட்டிருந்தாலும். வெவ்வுரை - கொடுஞ்சொல். புண் - வீரணம். வடு - தழும்பு. அதன் கண்ணும்-மனத்தினிடத்தும். எஞ்ஞான்றும்-எக்காலத்தும். என்பது போதரலின் - என்னும்பொருள் தோன்றுதலினுல். வேற்றுமையலங்காரத்தினது இலக்கணம்-உபமான உபமேயங்களுள் யாதாயினு மொன்றை வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது விசேஷமுடையதாகச் சொல்வது; இதனை வடநூலார் வ்யதிரேகாலங்கார மென்பர்: இங்கே உபமானமாகிய

* ஆறுமையின்என்று பிரதிபேதம்.

தீயினும் உபமேயமாகிய கடுஞ்சொல்லுக்கு எப்பொழுதும் உள்ளாறுமையாகிய விசேடம் சொல்லப்பட்டது காண்க. தீயினும் கடுஞ்சொல் கொடியது என்னும் கருத்தை 'ஆறுதே, நாவினுற்சுட்ட வடு' என்னும் வாக்கியத்தினது குறிப்பினுற் பெறவைத்ததனால், 'குறிப்பான்வந்த வேற்றுமையணியலங்காரம்' எனப்பட்டது. சுட்ட என்பது - சுட்டதனை யாகிய எனப் பொருள்படுதலால், இறந்தகாலப் பெயரெச்சம் காரணப்பொருளது. ஏகாரம் - தேற்றம். "வாயினுற் சுட்ட வடு" எனப் பாடங் கொள்ளுதல், எதுகைத்தொடை மோனைத்தொடைகளுக்கு நன்குபொருந்து மென அறிக. (கூ)

கஙூo. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(இ - ள்.) கதம் காத்து - (மனத்தின்கண்) வெகுளி (தோன்றுமல்) காத்து, கற்று - கல்வியுடையனுய், அடங்கல் - அடக்குதலை, ஆற்றுவான் - வல்லவனது, செவ்வி - செவ்வியை, அறம் - அறக்கடவுள், பார்க்கும்-பாராகிற்கும்; ஆற்றின் - (அவனை அடையும்) நெறியின்கண், நுழைந்து-சென்று.

அடங்குதல் - மனம் புறத்துப்பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி-தன் குறைகூறுதற்கு ஏற்ற மனம்மொழிமெய்களினியனுங்காலம். இப்பெற்றியானே அறம் தானே சென்று அடையு மென்பதாம்.

இதனுன், மனவடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) வெகுளி-கோபம். செவ்வி - சமயம். அறக்கடவுள் - தருமதேவதை. பாராகிற்கும் - பார்க்கும். அடையும் நெறி - அடைவதற்கு ஏற்ற வழி. புறத்துப்பரவாது - தருமமல்லாதவழிகளிற் செல்லாமல். இப்பெற்றியானே - இக்குணமுடையவனே; மனவடக்கமுடையவனே. "தினமிறக்கக் கற்றலுஞ் சித்தியெல்லாம் பெற்றலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபராயே" என்பதை நோக்குக. கற்று, கல் - பகுதி. (கo)

கச - ஆம் அதிகாரம்—ஒழுக்கமுடைமை.

அஃதாவது - தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய்ம்முதலிய அடங்கினர்க்கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அடக்கமுடைமையின்பின் ஒழுக்கமுடைமையைவைத்தது, காரணகாரியசம்பந்தத்தா லென்க. ஒழுக்கம்-தொழிற்பெயர்; ஒழுகு - பகுதி.

கஙூக. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(இ - ள்.) ஒழுக்கம்—,விழுப்பம் தரலான் - (எல்லார்க்கும்) சிறப்பினைத் தருதலான், ஒழுக்கம் - அவ்வொழுக்கம்,—உயிரினும்—,ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்; (எ - று.)

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின்,பொதுப்படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது: அதனால், அங்ஙனம் விழுப்பந்தருவதா

யது ஒழுக்கமென்பது பெற்றும். உயிர் எல்லாப்பொருளினும் சிறந்ததாயினும் ஒழுக்கம்போலவிழுப்பந்தாராமையின், 'உயிரினுமோம்பப்படும்'என்றார்.

(கு - ரை.) ஒப்ப - சமமாக. சுட்டு வருவிக்கப்பட்டது, இரண்டாவது ஒழுக்கம் என்பதில். அவ்வொழுக்கம் என்பது - எல்லார்க்குஞ் சிறப்பைத் தருவதாகிய நல்லொழுக்கம் என்றபடி. விழுப்பம் - உரிச்சொல். உயிரினுஞ் சிறந்தது ஒழுக்க மென்பது, கருத்து; உயிரைவிட்டாலும் விடலாம், ஒழுக்கத்தை விடலாகா தென்க: உயிர் நல்வினைக்குப்போலவே தீவினைக்கும் ஏதுவாம்; ஒழுக்கமோ ஒருபொழுதுந் தீவினைக்கு ஏதுவாகாது எப்பொழுதும் நல்வினைக்கே ஏதுவா மென்க. (க)

கஙஉ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) ஒழுக்கம் - ஒழுக்கத்தினை, ஓம்பி - (ஒன்றானும் அழிவு படாமல்) பேணி, பரிந்து காக்க - வருந்தியும் காக்க: தெரிந்து - (அறங்கள் பலவற்றையும்) ஆராய்ந்து, ஓம்பி - (அவற்றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை) ஒருக்கி, தேரின்உம் - தேர்ந்தாலும், துணை-துணையாய் முடிவது, அஃதே - அவ்வொழுக்கமே, (ஆகலான்); (எ - று.)

'பரிந்தும்' என்னும் உம்மை, விகாரத்தால் தொக்கது.

இவையிரண்டு பாட்டானும், ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்றானும் - ஒன்றினாலும். பேணி - விரும்பி. ஆதலால் குச்சாலே, ஒதுவார்க்குணவு முதலியவாக மூப்பத்திரண்டுஅறங்கள் கூறப்படுவதனால் 'அறங்கள்பலவற்றையும்' என்றார். இருமை - இம்மை மறுமை என்னும் இரண்டு. ஒருக்கி - அடக்கி. தேர்ந்தாலும் - ஆலோசித்தாலும். பரிந்தும் என்ற உம்மை - உயர்வுசிறப்புப்பொருளது. அஃது என்பதில், ஆய்தம் மெய்போல ஒலித்துநின்றது. ஏ - பிரிநிலை. (உ)

கஙஊ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(இ - ள்.) (எல்லார்க்கும்), ஒழுக்கம் உடைமை - (தத்தம் வருணத்திற்கு ஏற்ற) ஒழுக்க முடைமை, குடிமை - குலனுடைமையாம்; இழுக்கம் - (அவ்வொழுக்கத்தில்) தவறுதல், இழிந்த பிறப்பு ஆய்விடும் - (அவ்வருணத்தில்) தாழ்ந்த வருணமாய்விடும்; (எ - று.)

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்த ராவ ராகலின் 'குடிமையாம்' என்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில்தவறத் தாழ்ந்தவருணத்த ராவ ராகலின் 'இழிந்தபிறப்பாய்விடும்' என்றுங் கூறினார். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிது என்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ்விரைவுபற்றி, அவ்வேதுவாகிய வினைகளே பயனுக ஓதப்பட்டன.

(கு - ரை.) தத்தம் - தங்கள் தங்களுடைய. வருணம் - சாதி. உள்வழிப் படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிது - ஒழுக்கம் உண்டான பொழுது உண்டாகுங் குணத்தைக்காட்டிலும் ஒழுக்கம் இல்லாதபொழுது உண்டாகுங் குற்றம் அதிகமானது; ஒழுக்கமிருந்தாற் குலம் மேலாம்; ஒழுக் கங்கெட்டாற் சாதியே கீழாம் எனக் காண்க. பயன் இடையீடின்றி எய்து தலின் - குலனுடைமையும் தாழ்ந்த வருணமு மாகிய பிரயோஜனங்கள் கால தாமதமில்லாமல் உடனே உண்டாவதனால். அவ்வேதுவாகிய வினைகளே பய னாக ஓதப்பட்டன - குடிமைக்கும் இழிந்தபிறப்புக்குங் காரணமாகிய ஒழுக்க முடைமையும் இழுக்கமும் ஆகிய தொழில்கள் தாமே குடிமையும் இழிந்த பிறப்பு மாகச் சொல்லப்பட்டன: உபசாரவழக்கு. இனி, இத்திருக்குறளினை - இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடு மாதலால் ஒழுக்கமுடைமை குடிமை என அந்வயித்து, உயர்ந்தசாதியிற் பிறந்தவராயினும் அச்சாதிக்குரியஒழுக்கத்தைக் கைவிட்டால், அது உடனே அச்சாதி தாழ்ந்தசாதியாவதற்குக் காரணமாகு மாதலால், ஒழுக்கமுடைமையே உயர்குடிப்பிறப்பாம் எனப் பொருள்கொள் ளினும் அமையும். இழுக்கம் என்னுந்தொழிற்பெயரில், இழுக்கு-பகுதி. (௩)

கஙச. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(இ - ள்.) ஓத்து - (கற்ற) வேதத்தினை, மறப்பின்உம் - மறந்தானாயி னும், கொளல் ஆகும் - (வருணம் கெடாமையின் பின்னும் அஃது) ஓதிக் கொளலாம்; பார்ப்பான் - அந்தணனது, பிறப்பு - (உயர்ந்த) வருணம், ஒழு க்கம் குன்ற - (தன்) ஒழுக்கம் குன்ற, கெடும்—; (எ - று.)

மறந்தவழி இழிகுலத்தனா மாகலின், 'மறக்கலாகாது' என்னுங் கருத் தான், 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது, ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.

(கு - ரை.) வருணம் - பிராமணசாதி. குன்ற - குறைய. மறந்தவழி - மறந்தால். சிறப்புடை வருணம்-நான்குசாதிகளுள்ளுஞ் சிறந்ததான பிராமண சாதி. ஏனைய வருணம் - மற்றை க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிகள். ஓதப்படுவதனால் வேதத்துக்கு 'ஓத்து' என்றும், அவ்வேதங்களின் பொருள் களையே மேற்கொண்டு பார்ப்பதனால் பிராமணர்க்கு 'பார்ப்பார்' என்றும் பெயர். ஓது என்னும் பகுதி செயப்படுபொருள்விகுதிபுணர்ந்துகெட்டுத் தன் ஒற்றுஇரட்டி 'ஓத்து' என நின்றது. குன்ற என்னும் செயவெனெச்சம் - காரணப்பொருளதாதலின், இறந்த காலம். கல்வியினும் ஒழுக்கம் சிறந்தது என்றவாறும். (௪)

கஙரு. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(இ - ள்.) அழுக்காறு உடையான் கண் - அழுக்காறுடையான் மாட்டு, ஆக்கம் போன்று - ஆக்கம் (இல்லாதாப்) போல, ஒழுக்கம் இலான்கண் - ஒழுக்கமில்லாதவன் மாட்டும், உயர்வு - உயர்ச்சி, இல்லை—; (எ - று.)

உவமையான், ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சிஇல்லையென் பது பெற்றும்; என்னை? ‘‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற’’ மும் நல்கூர் தலின். உயர்வு - உயர்குலமாதல்.

(கு - ரை.) அழுக்காறுடையான்மாட்டு ஆக்கமில்லாதாப்போல-பொறு மையுடையவனிடத்துச் செல்வமில்லாதவாறுபோல. உவமையான் - அழுக் காறுடையான்கண் ஆக்கம் போன்று என்ற உபமானத்தால். ‘‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ, முண்பதூஉ மின்றிக் கெடும்’’ என்னும் கசுசு-வது திருக்குறளால், பொறுமையுடையவண்மாத்திரமேயன்றி அவ னது பந்துவர்க்கமும் உடுக்கஉடையும் உண்ண உணவு மில்லாமல் வறுமை யடையு மென்பதை அறிக. இங்ஙன் தானேயன்றித் தன்னுடைய சுற்றத் தாரும் உண்ணஉணவும் உடுக்க உடையும் இன்றிக்கெடும் பொறுமைப்படு பவனே உவமைகூறியதனால், ஒழுக்கமில்லாதவனே யன்றி அவனுடைய சுற்றத்தாரும் உயர்ச்சியின்றிக் கெடுவ ரென்பது பெறப்படு மென்க. என்னை-ஏனென்றால். நல்கூர்தலின் - வறுமையடைதலால். அழுக்காறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அழுக்கறு - பகுதி: இது - ஒருசொல்; இனி, அழுக்கு அறுஎன்னும் இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்டு, எதிர்மறையிலக்கணையால், குற்றத்தை நீக்கு என்னும் பொருளைத் தராமல் குற்றத்தையுடையவனுகு எனப் பொருள்பட்டு, பொறுமையைக்குறித்த தென்றுங் கொள்ளலாம். உடையான்கண், இலான்கண்—கண் - ஏழனுருபு. போன்று, போல் - இடைச்சொல், முதனிலை. (இ)

கஙூசு. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) ஒழுக்கத்தின் ஒல்கார் - (செய்தற்குஅருமைநோக்கி)ஒழுக்கத் திற் சுருங்கார், உரவோர் - மனவலியுடையார்: இழுக்கத்தின் - அவ்விழுக் கத்தால், ஏதம் படுபாக்கு - (தமக்கு இழிகுலமாகிய) குற்றம் உண்டாம் ஆற் றை, அறிந்து—; (எ - று.)

ஒழுக்கத்திற்சுருக்கம், அதனை உடையார்மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, ‘உரவோர்’ என்றார்.

(கு - ரை.) செய்தற்கு அருமைநோக்கி - செய்வதற்கு அருமையாயிருக் கிறதென்று நினைத்து. அவ்விழுக்கத்தால் - அவ்வாசாரங் குறைதலால். உண் டாம் ஆறு - உண்டாகும்விதம். ஒழுக்கத்தினது சுருக்கத்தை அதனை உடை யவர்மேல் ஏற்றி, எதிர்மறையாக ‘ஒழுக்கத்தி னெல்கா ருரவோர்’ என்றார். விரதங்களாவன - இன்ன அறம் செய்வேனெனவும், இன்னபாவம் ஒழிவே னெனவும் தமதுசக்திக்குஏற்றபடி ஏற்படுத்திக் கொள்வன. உரவோர் என்ப தில், உரம் அல்லது உரவு - வலிமை. படுபாக்கு - படுதல்; தொழிற்பெயர்; பாக்கு - விகுதி. (சு)

கஙூஎ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

(இ - ள்.) (எல்லாரும்), ஒழுக்கத்தின் - ஒழுக்கத்தானே, மேன்மை - மேம்பாட்டை, எய்துவர்—; இழுக்கத்தின்-(அதனினின்று)இழுக்குதலானே, எய்தா பழி-(தாம்) எய்துதற்கு உரித்தல்லாத பழியை, எய்துவர்—; (எ-று.)

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்கு மென்று கொள்ளு மாகலின், 'எய்தாப்பழியெய்துவர்' என்றார்.

இவையைந்துபாட்டானும், ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும், இல் வழிப்படுங் குற்றமும் கூறப்பட்டன.

(கு - சை.) இழுக்குதல் - தவறுதல். எய்துதற்கு உரித்தல்லாத பழி- அடையத்தகுதியுடைய தல்லாத நிந்தை. ஒழுக்கத்திலே தவறினவர்மேல் பகைமையினாலே ஒருவன் அடாதபழியைச் சொல்வானாயினும், அதனையும் உலகத்தார் அவரது அநாசாரத்தைநோக்கி அவரிடத்து அடுக்குமென்று கொள்ளுவரென்க. எய்தா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். (எ)

கஉஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(இ - ள்.) (ஒருவனுக்கு), நல் ஒழுக்கம் - நல்ல ஒழுக்கம், நன்றிக்கு வித்து ஆகும் - அறத்திற்குக்காரணமாய் இருமையினும் இன்பம்பயக்கும்; தீ ஒழுக்கம் - தீயஒழுக்கம், என்றும் இடும்பை தரும்-(பாவத்திற்குக்காரண மாய்) இருமையினும் துன்பம் பயக்கும்; (எ - று.)

'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரண மாதலும், 'இடும்பைதரும்' என்றதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்றாம்; ஒன்றுரின்றே வேனயதை முடிக்கு மாகலின்.

இதனால், பின்விளைவு கூறப்பட்டது.

(கு - சை.) அறம் - புண்ணியம். பயக்கும் - உண்டாக்கும். 'நன்றிக்கு வித்தாகும்' என்ற காரணத்தால் 'இருமையினும் இன்பம்பயக்கும்' என்கிற காரியமும், 'இடும்பைதரும்'என்ற காரியத்தால் 'பாவத்திற்குக் காரணமாய்' என்கிற காரணமும் வருவித்து உரைக்கப்பட்டன. வேனயதை-மற்றொன்றை. முடிக்கும் - சித்திக்கச்செய்யும். பின்விளைவு - நல்லொழுக்கத்தினாலும் தீயொழுக்கத்தினாலும் மறுமையில்விளையும் பயன். வித்து - விதை; இங்கே, காரணமென்னும்பொருளில் வந்தது. என்றும் - எப்பொழுதும்; இம்மையி லும் மறுமையிலும். (அ)

கஉஆ. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(இ - ள்.) வழுக்கியும் - மறந்தும், தீய - தீயசொற்களை, வாயால்-(தம்) வாயால், சொலல் - சொல்லுந்தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு—, ஒல்லா - முடியா; (எ - று.)

தீயசொற்களாவன - பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்ம்முதலியனவும், வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பண்மையால், சொல்லுதற்

ருழில் பலவாயின. சொலல் - சாதியொருமை. 'சொலல்' எனவே அமைந் திருக்க 'வாயால்' என வேண்டாது கூறினர், 'நல்லசொற்கள் பயின்றது' எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; இதனை வடநூலார், தாற்பரி யம் என்ப.

(கு - ரை.) பொய்ம்முதலியன என்றது - கோட்சொல்லையும் கடுஞ் சொல்லையும் குறித்து. அவற்றது - சொற்களது. சொலல் என்பது - சொல் லால் ஒருமைபோலத் தோன்றினும், பொருளாற் பன்மையாதலால், பால் பகாவஃறிணையின்பாற்பட்டு, 'ஒல்லா' என்னும் அஃறிணை யெதிர்மறைப் பன்மை வினைமுற்றைக் கொண்டது. ஏகாரம் - தேற்றம். தீய - பண்படியா ப்பிறந்த பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். 'வழுக்கியும்' என்ற இழிவுசிறப்புஉம்மையால், நினைத்துச்சொல்லுதல் கூடாதென்பது தானே விளங்கும். ஒழுக்கமுடையவர் மறந்து சொன்னலும் பிறர்க்கு நன்மைதருஞ் சொற்களையே சொல்லுவர் என்பது, கருத்து. 'வாயால்' என்னும் அவசிய மில்லாதபதத்தைப் பிரயோகித்ததற்கு, நல்லசொற்கள்பயின்றதென்றலா கிய கருத்தைக் கூறினர்; கருக - ஆம் குறளிலும் இங்ஙனங் காண்க. தாற் பரியம்=தாத்பரியம். என்ப - என்றுசொல்லுவர். (கூ)

கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(இ - ள்.) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் - உலகத்தோடு பொருந்த ஒழு குதலை, கல்லார் - கல்லாதார்,—பல கற்றஉம் - பலநூல்களையும் கற்ற ராயினும், அறிவு இலாதார்—; (எ - று.)

உலகத்தோடுபொருந்த ஒழுகுதலாவது - உயர்ந்தோர்பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல். அறநூல்சொல்லியவற்றுள் இக்காலத்திற்குஏலாதன வொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையும் அடங்க 'உலகத்தோடுஒட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமு மாகலின் 'அவ்வொழுகுதலைக்கல்லாதார் பலகற்றும் அறி விலாதார்' என்றும் கூறினர். ஒழுகுதலைக்கற்றலாவது - அடிப்படுதல்.

இவையிரண்டுபாட்டானும், சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்க ங்களெல்லாம் ஒருவாற்றால் தொகுத்துக்கூறப்பட்டன.

(கு - ரை.) இங்கே, உலக மென்றது-உயர்ந்தவரை. கல்லாதார் - அறி யாதவர். ஒழுகிய ஆற்றான் - நடந்தவிதத்தால். ஏலாதன ஒழிந்து - பொருந் தாதவற்றை விட்டு. கொண்டு - ஏற்றுக்கொண்டு. அடிப்படுதல் - அப்பியசித் தல். ஒருவாற்றால் - ஒருவகையால். பல - வினையாலணையும்பெயர். "பழை யன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" ஆதலால், காலத்துக்கு ஏற்றபடி உலகநடையை அனுசரித்து ஒழுகவேண்டு மென்பது, இதன் கருத்து. "உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்,கூம்பலு மில்ல தறிவு" "எவ்வ துறைவ துலக முலகத்தோடு, அவ்வ துறைவ தறிவு" என மேல் அறி வுடைமையென்னும் அதிகாரத்திலும், "உலகத்தா ருண்டென்ப தில்லென்

பான் வையத்து, அலகையா வைக்கப் படும்" எனப் புல்லறிவாண்மையென் னும் அதிகாரத்திலும் வருதல் காண்க. (கo)

கரு - ஆம் அதிகாரம்.—பிறனில் விழையாமை.

அஃதாவது - காமமயக்கத்தாற் பிறனுடையஇல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வ தாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல் - இல்லாளுக்கு ஆகுபெயர். காமமயக்கத்தால் - சிற் றின்பத்தை விரும்புதலிலுள்ள புத்தியாரூட்டத்தினால். இஃது - பிறனில் விழையாமையென்ற இந்தக்குணம். ஒழுக்கமுடையார்மாட்டே - ஒழுக்க முடையாரிடத்திலேயே.

கசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத் தறம்பொருள் கண்டார்க ணில்.

(இ - ள்.) பிறன் பொருளாள் - பிறனுக்குப் பொருளாந்தன்மையை யுடையாளை, பெட்டு - காதலித்து, ஒழுகும், ஒழுகுகின்ற, பேதைமை - அறி யாமை,—ஞாலத்து - ஞாலத்தின்கண், அறம் பொருள் கண்டார்கண் - *அற நூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டு, இல் - இல்லை; (எ - று.)

பிறன்பொருள் - பிறனுடைமை. அறம் பொருள் என்பன-ஆகுபெயர். செவ்வெண்ணின்தொகை, † விகாரத்தாற் றொக்குநின்றது. இன்பம் ஒன் றையேநோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் 'பரதீயம்' என்று கூறுவராகலின், 'அறம்பொருள் கண்டார்க ணில்' என்றார்: எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையென்பது பெறப் பட்டது.

(கு - ரை.) மனைவி புத்திரர் பசு வீடுஎல்லாவற்றையும் தலைவனுடைய உடைமையென்றும், தலைவனே உடையவனென்றும் கூறுவது நூல்வழக்கு ஆதலால், மனைவியை 'பொருளாள்' என்றது: ஸ்வாமியென்றும் ஸ்வம்அல் லது ஸொத்துஎன்றும் வழங்குமாறுங் காண்க. பிறன்பொருளாள்-பிறனுக்கு உடைமையானவள்: எனவே, பிறனுடையமனைவியாவள். அறம் பொருள் என்ற காரியப்பெயர்கள் - அவற்றையுணர்த்தற்குக் கருவியாகிய நூல்களுக்கு ஆகிவந்தமையால், காரியவாகுபெயர்கள்: அறமும் பொருளும் என்று உம்மையை விரித்துக்கூறாது உம்மைதொக அறம்பொருள் எனக் கூறியது செவ்வெண்ணும். (செவ்வெண்ணுவது - எண்ணிடைச்சொற்கள் தொக்கு நிற்ப வருவது.) பெயர்ச்செவ்வெண் ணுதலால், அறம்பொருளிரண்டும்என்று இது தொகைபெற்றே வரவேண்டு மாதலால், அத்தொகை 'அறம்பொருள்' என்ற விடத்துச் செய்யுள்விகாரத்தால் தொக்குவந்ததென்க. இன்பநூல் - காமநூல்: வாத்ஸ்யாயநம் கொக்கோகம் போல்வன: இன்பம் ஒன் றையேநோக்கும் இன்பநூலுடையார் என்றதனால், அவர்கள் அறம்பொருள்

* பி - மீ: அறநூலும் பொருணூலுமாகிய இரண்டையும்.

† தொக்குநின்றதுஎன்று பிரதிபேதம்.

களைச் சிறிதுங் கருதாதவ ரென்றவாறாயிற்று. இத்தீயொழுக்கத்தைஎன்றது பிறனில்விழைதலே. பரகீயம்-பிறருக்குரியதுஎன்றுபொருள். பெண்டிஸ்வகீயா பரகீயா ஸாதாரணஸ்திரீஎன்று மூன்றுவகையாகப்பிரித்தலேயும், பிறர் மனைநயத்தலேப்பற்றி * பாரதாரிகபிரகரணத்திற் கூறியிருத்தலேயும் வாத்ஸ்யாயநசூத்திரத்திற் காணலாம். அப்பேதைமை - பிறர்மனைநயப்பதாகிய அந்தஅறியாமைக்குணம். பிறர்மனைவியை விரும்புவார் அறம்பொருள்களேயிழப்ப ரென்றவாறு. (க)

கசஉ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(இ - ள்.) அறன்கடை நின்றாருள் எல்லாம் - (காமம் காரணமாகப்) பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும், பிறன் கடை நின்றாரின் - பிறனில் லாளைக்காதலித்து அவன்வாயின்கட்சென்று நின்றார்போல, பேதையார்—, இல் - இல்லை; (எ - று.)

அறத்தினின்றீக்கப்பட்டமையின், 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்ற பெண்வழிச்செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பநுகர்வாரும் போல, அறமும் பொருளும் இழத்தலே யன்றி, பிறன்கடைநின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், 'பேதையாரில்' என்றார்; எனவே, இன்பமும் இல்லை யென்பது பெறப்பட்டது.

(கு - ரை.) காமங்காரணமாகப் பாவத்தின்கண்நின்றாரெனப்பட்டவர்-பெண்வழிச்செல்வாரும், வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பநுகர்வாரும், பிறனில்விழைவாரும். இக்நால்வருள் முதலிற்கூறிய மூவரும் காமங்காரணமாக அறம்பொருள்களேயே முக்கியமாகஇழக்கின்றார்கள்: பிறர்மனைவிழைவாரோ அந்தஇன்பத்தையும் அச்சத்தால் இழக்கின்றார்: இங்ஙன் இவர் பாவத்தைக் கட்டிக்கொள்வதோடு தாம் கருதிய இன்பத்தையும் பெறாதுஇழக்கின்றதனால், இவரைப்பற்றி, 'பிறன்கடைநின்றாரிற் பேதையாரில்' என்றார். ''காணிற்குடிப்பழியாங் கையுறிற்கால்குறையும், மாணின்மைசெய்யுங்கா லச்சமாம்—ணீரியத்,துன்பம் பயக்குமாற் றுச்சாரிதீண்ட, இன்பமெனைக்கெனைத்தாற்கூறு'', ''புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சம், தூய்க்குமிடத்தச்சம் தோன்றுமற்காப்பச்சம், எக்காலு மச்சந்தருமாலெவன்கொலோ,உட்கான்பிறனில்புகல்''என்ற நாலடிச்செய்யுள்கள் இங்குக் கருதத்தக்கன. அறன்கடை-பாவம்: அறத்தினின்று நீக்கப்பட்டு அறத்தின்பின்னே நிற்பதாதலின், பாவம் இப்பெயர் பெற்ற தென்க. 'அறன்கடைநின்ற' என்ற அடைமொழி, பெண்வழிச்செல்வார்முதலிய மூன்றிற்கும் சேர்த்தற்குரியது. பெண்வழிச்செல்வார் - தமதுவழியில் நடக்கவேண்டியவளான மனைவி செல்லும் வழியே தாம் நடப்பவர். வரைவின்மகளிர் -

* பாரதாரிகம் - பிறர்மனைவியைப்பற்றியது.

தம் இன்பத்தை இன்னுர்க்குத்தான் விற்பது என்று ஓர்வரம்புகொண்டுநட வாத மகளிர்: வேசையர். (உ)

கசஙூ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(இ - ள்.) மன்ற தெளிந்தார் இல் - (தம்மை) ஐயுறுதாரில்லாள் கண்ணே, தீமை புரிந்து ஒழுகுவார் - பாவஞ்செய்தலே விரும்பியொழுகு வார்,—விளிந்தாரின் வேறு அல்லர் - உயிருடையரேனும் இறந்தாரே யாவர்; (எ - று.)

அறம்பொருளின்பங்களாகிய பயன் உயிர் எய்தாமையின் 'விளிந்தாரின் வேறல்லர்'என்றும், அவர் தீமைபுரிந்தொழுகுவது இல்லுடையவரதுதெளிவு பற்றியாகலின் 'தெளிந்தாரில்' என்றும் கூறினர்.

(கு - ரை.) ஐயுறுதார் - சந்தேகியாதவர். இல்லாள்கண் - மனைவியி னிடத்து. பாவஞ்செய்தல் - பிறர்மனைவியைச்சேர்தலாகிய பாவச்செய லைச்செய்தல். பிறனில்லவிரும்பிப்பாவஞ்செய்வோர் தாம் உயிருள்ளவராக இருந்தும் தம்முயிர் பெறவேண்டிய அறம்பொருளின்பங்களாகிய பயனை அடையாமையால், 'விளிந்தாரின் வேறல்லர்' என்றது. மன்றதெளிந்தார் - சிறிதும்ஐயுறுமல் தம்மை நல்லவரென்று நம்பியவர். பிறனில்விழைவார் தாம் தீமைபுரிவது இல்லுடையவரது தெளிவுபற்றியே யென்பதைப் புலப் படுத்த 'தெளிந்தாரில்' என்றார்: ஆகவே, நம்பிக்கைத்துரோகஞ்செய்பவர் இந்தப்பிறனில்விழைவார் என்றுகூறியவாறுமாயிற்று. மன்றஎன்பது நிச்சய மென்னும் பொருளுணர்த்தும் உரிச்சொல்: "மன்றவெண்திங்களவி தேற்றஞ் செய்யும்" என்பது, தொல்காப்பியம். இது, தெளிந்தார்க்கு அடையாய் [விசேஷணமாய்] வந்தது: மன்றவிளிந்தார் என்று கூட்டுவாரு முளர். (ஙூ)

கசஙூ. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

(இ - ள்.) எனை துணையர் ஆயின் உம்-எத்துணைப்பெருமையுடையரா யினும், என்ஆம் - (ஒருவர்க்கு) யாதாய்முடியும்? (காமமயக்கத்தால்), தினை துணை உம் - தினையளவும், தேரான் - (தம் பிழையை) ஓராது, பிறன் இல் புகல் - பிறனுடைய இல்லின்கட் புகுதல்; (எ - று.)

இந்திரன்போல எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்தல்நோக்கி, 'என்னும்' என்றார். "என்னீரதியாதீர்போல விவைகூறின், நின்னீர வல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மையொருமை மயங்கிற்று. 'தேரான்பிறன்' என்பதனைத் தம்மை யையுறுத பிறன் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) பிறனுடையஇல்லின்கட்புகுதல் - பிறர்மனைவியைச்சேர்தல் என்றபடி. பிறர்மனையின்கட்சேர்ததனால் இந்திரன் எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்திய வரலாறு, "ஐந்தவித்தாஞற்றல்" என்ற குறளினுரை யிற் காட்டப்பட்டது. என்ஆம் என்பது - என்னநற்பயனைத்தரும்? நற்பய

னைத்தராது மிக்கதீப்பயனைத்தரும் என்பதைக் காட்டிற்று. "என்னீரறியாதீர்" என்ற மேற்கோள் கலித்தொகையில் பாலைக்கலியில் 5-ஆம்பாட்டிலுள்ளது: இத்தமேற்கோளுக்குப்பொருள்:—(என்னை உடனழைத்துக்கொண்டு செல்லாமற்போனால் யான் உயிர்தாங்கியிருத்தலாற்றாது இறந்துபடுதலை) நீர் அறியாதிருந்தீர்போல (உடன்அழைத்துக்கொண்டு செல்லுதலைமறுத்த) இம் மொழிகளைக் கூறுதலாற் பெற்றதென்? நெடுந்தகாய்! (இம்மொழிகள்) நினக்கு உரிய நன்றாகியநீர்மைகளையுடையன அல்ல என்பது. இம்மேற்கோளுள், 'அறியாதீர்போல' என்று உயர்த்துச்சொல்லுதற்பொருட்டுவந்த பன்மை 'நீ' என்ற ஒருமையோடு மயங்கிநின்றாற்போன்று, இக்குறளில், 'எனைத்தூணையர்' என்று உயர்த்துச்சொல்லுதற்பொருட்டுவந்த பன்மை தேரான் என்னும் ஒருமையோடு மயங்கிநின்றதென்க. இவ்வாறுவருவதனை ஒருமைப்பன்மைமயக்கமெனக் கூறாமல் பால்வழுவமைதியென்பர்: நன்னூல்விருத்தியுரைகாரர் "எனைத்தூணைய ராயினு மென்னுந் தினைத்தூணையும், தேரான்பிறனில் புகல்—என்பது, செறலின் [கோபத்தினால்] பலர்பால் ஒருமைப்பாலாயிற்று" என்று கூறியுள்ளார். தேரான் - எதிர்மறையாண்பால் வினைமுற்று, எச்சப்பொருளில்வந்தது. இரண்டாமுரைக்கு—தேரான் (நீயகுணத்தை) அறிந்து (தன்னை) ஐயுறுதலனுகிய, பிறன் என்று பொருள்: இவ்வுரைக்கு, தேரான்என்பது வினையாலணையும்பெயர்: பிறன்என்பதற்கு அடைமொழியாய்நின்றதென்க. (சு)

கசடு. எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(இ - ள்.) எளிது என - (எய்துதல்) எளிதுஎன்றுகருதி, (பின்விளைவு கருதாது), இல் இறப்பான் - பிறனில்லின்கண்இறப்பான், விளியாது-மாய்தலின்றி, எஞ்ஞான்றும்—, நிற்கும் - நிலைநிற்கும், பழி - குடிப்பழியினை, எய்தும்—; (எ - று.)

இல்லின்கணிறத்தல் - இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

(கு - ரை.) எய்துதல் - பிறன்மனைவியையடைதல். பின்விளைவு - பிறன்தாரத்தை எய்தியபின்உண்டாகும் பகை பாவம் அச்சம் பழி என்பன: மேற்குறளைக் காண்க. இல்லாள்கண் நெறிகடந்துசேறல் - பிறன் மனைவியினிடத்து நீதிவரம்பிற்குக் கட்டுப்படுதலின்றி மீறிச்செல்லுதல். இறத்தல் - வரம்புமீறிச்செல்லுதல். (கு)

கசகசு. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ - ள்.) இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறிகடந்துசெல்வானிடத்து, பகை பாவம் அச்சம் பழி என நான்குஉம் - பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியுமென்னும் இந்நான்குகுற்றமும், இகவாஆம் - (ஒருகாலும்) நீங்காவாம்: (எ - று.)

எனவே, இருமையுமிழத்தல் பெற்றாம்.

இவைஆறுபாட்டானும், பிறனில்விழைவான்கட் குற்றம்கூறப்பட்டது.

(கு - ரை.) "பிறன்மூரம், நச்சுவார்ச்சேரும் பகைபழிபாவமென்று, அச்சத்தோடிங்நாற்பொருள்" என்றது, நாலடி. இருமை - இம்மைமறுமை என்ற இவற்றின் பயன். பகை அச்சம் குடிப்பழிஎன்பனவீளைதலால் இம்மைப்பயனேயிழத்தலும், பாவம்வீளைதலால் மறுமைப்பயனேயிழத்தலும் நேரு மென்பதை அறிந்தோ மென்க. பிறனில்விழைவான்கட் குற்றம் - பிறன் மனைவியைவிரும்பிச்செல்வோனிடம் நேர்படுங் குற்றம். (கூ)

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(இ - க்.) அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அறஞ்சிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்,—பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக்குரிமைபூண்டு அவனுடையஇயல் பின்கண்ணேநிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன்; (எ - று.)

ஆனுருபு, ஈண்டு உடனிகழ்ச்சிக்கண்வந்தது. இல்லறஞ்செய்வானென்னப்படுவான், அவனே யென்பதாம்.

(கு - ரை.) ஆனுருபு, 'இயலான்' என்ற இடத்திலுள்ளது. இலட்சுமணனேடு இராமன்வந்தான் என்றஇடத்து இராமனுடைய வருதல்தொழிலில் இலட்சுமணனுக்கும் உடனிகழ்ச்சி யேற்படுதல்போல, இங்கும் பிறனியலாள் பெண்மைநயவாதவனுடைய வாழ்த்தல்தொழிலில் அறனியலுக்கும் உடனிகழ்ச்சி யேற்படுதல் காண்க. ஆகவே, பிறனியலாள் பெண்மைநயவாதவன் வாழ்க்கையிலேயே அறன் இயலும்: பிறனியலாள் பெண்மைநயப்பவன் வாழ்க்கையிலோ அறன் இயலாதென்க: இவ்வாறுஎற்படுவதனால், இல்லறத்தை நடத்துபவனென்பான், பிறனில்விழையாதவனே யென்பது பெறப்படும். (எ)

கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றே வான்ற வொழுக்கு.

(இ - ள்.) பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை, சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனுமாம், நிரம்பிய ஒழுக்கமுமாம்; (எ - று.)

புறப்பகைகளையடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனை அடக்கிய ஆண்மையைப் பேராண்மை யென்றார். 'ஒன்றே' என்பது - எண்ணிடைச்சொல். செய்தற்கு அரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்கு மென்பதாம்.

(கு - ரை.) உட்கொள்ளாத - மனத்திலுல் விரும்பாத. புறப்பகையை வெல்வது ஆண்மை: அகப்பகையாகிய காமத்தை வெல்வதோ பேராண்மை யென்க. உட்பகை - வெளிப்படையாகவுள்ள பகைவர்க்குப் புகுதற்கு இடனை யுண்டாக்கிக்கொடுத்து அப்பகைவெல்லும் வரையிலும் நட்புப்போன்று உடனுய்நிற்கும் பகை: அவை காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் மானம் உவகை

மதம் என்று ஆறுவகைப்படும்: இவ்வாறனுள் மற்றவற்றிற்குங் காரணமாய் ஒழித்தற்கு அரிய தாதலால், 'உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின்' எனப்பட்டது. அறவினென்றே என்ற இடத்துள்ள ஒன்றே என்பது - அறனுமாம் ஒழுக்கமுமாம் என்று எண்ணுப்பொருள்பட்டு வந்ததனால், எண்ணிடைச்சொல். ஆன்ற - பெயரெச்சம்: இது, சான்ற என்பதன் மரூஉ. இதனை - பிறன்மனையாளை நயத்தலை. பிறர்மனைநயவாமையே அறனையும் ஒழுக்கத்தையும் உண்டாக்கு மென்பதாம். (அ)

கசகூ. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(இ - ள்.) நாம நீர் வைப்பின் - அச்சந்தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து, நலக்கு உரியார் யார் எனின் - எல்லாநன்மைகளும் எய்துதற்கு உரியார் யாவரெனின்,—பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனெருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்; (எ - று.)

அகலம் ஆழம் பொருளுடைமை முதலியவற்றுள் அளவிடப்படாமையின், 'நாமநீர்' என்றார். உரிச்சொல்லீறு திரிந்து நின்றது. நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. இருமையினும் நன்மையெய்துவ ரென்பதாம்.

(கு - ரை.) பொருளுடைமை - சங்கு பவழம் முத்து முதலிய பொருள்களையுடைமை. கடல், அகலம் ஆழம் சங்குமுதலியபலவகைப்பொருள்என்ற இவற்றையுடைமையால் அச்சத்தைத் தரு மென்க. ''பேராமுருமென வரூஉங்கிளவி, ஆமுறைநான்கும் அச்சப்பொருள'' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி 'நாம்'என்று மகரவீறுனசொல்'நாம'என அகரவீறாக வந்ததனால், 'உரிச்சொல்லீறு திரிந்து நின்றது'என்றார். நலம் என்ற மகரவீற்றுச்சொல் வேற்றுமையுருபில் ''மஃகான்புள்ளிக்கத்தேசாரியை'' என்ற தொல்காப்பியத்தால், நலத்துக்கு என்று அத்துச்சாரியை பெற்று வரவேண்டியதாக இருக்க, அங்ஙன் வராது 'நலக்கு'என வந்ததனால், சாரியை செய்யுள்விகாரத்தால் தொக்கதாகும். 'நலக்குரியார்'எனப் பொதுப்படக் கூறியதனால், பிறன்மனைநயவாதார் இருமையின்பமும் பெறுவ ரென்று கூறியவாறாயிற்று. (கூ)

கரிo. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(இ - ள்.) அறன் வரையான் அல்ல செயின்உம் - (ஒருவன்) அறத்தை(த் தனக்கு) உரித்தாகச்செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—(அவனுக்கு), பிறன் வரையாள் - பிறனெல்லைக்கண் நிற்பாளது, பெண்மை - பெண்மையை, நயவாமை - விரும்பாமை (உண்டாயின்), (அது), நன்று—.

இக்குணமே மேற்பட்டுத் தோன்று மென்பதாம்.

இவை நான்குபாட்டானும் பிறனில்விழையாதான்கட் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) வரையான் - 'வரை' என்ற பகுதியினடியாப்பிறந்த எதிர்மறை முற்றெச்சம். 'அறன்' என்று முதலிற்கூறி, பிறகு 'அல்ல' எனக்

கூறியதனால், அச்சொல் அறனல்லாதவற்றை [பாவச்செயல்களை]க் காட்டும்: அஃறிணைப்பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். செயினும், உம்மை - இழிவுசிறப்பு. பிறர்மனைநயவாமை யென்ற குணமொன்றுமே பாவச்செயல்களைச் செய்வானுடைய தீக்குணங்களை யெல்லாம் அடக்கித் தான் மேற்பட்டுத்தோன்று மென்றவாறு. விழையாதான்கண் - விரும்பாத வனிடத்தில். (கo)

கசு - ஆம் அதிகாரம்—பொறையுடைமை.

அஃதாவது - *காரணம்பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல். † நெறியினீங்கியசெய்தாரையும் பொறுக்கவேண்டு மென்றற்கு, இது, பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மடமையானுதல் - அறியாமையாலாவது. மிகை செய்த வழி - குற்றஞ்செய்தவிடத்து. பொறை - தொழிற்பெயர்; பொறு - பகுதி, ஐ - விகுதி. நெறியின் நீங்கிய - வரம்புகடந்த செயல்களை. 'பிறர்மனைநயவாதவர் தீயதொழில்களைச் செய்யார்:ஒருகால்செய்யினும் அதனைப் பொறுத்தல் வேண்டும்'என்ற கருத்தால், பிறனில் விழையாமையின்பின் பொறையுடைமையை வைத்தா ரென்றலும் ஒன்று.

கநிக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(இ - ள்.) அகழ்வாரை தாங்கும் நிலம் போல - (தன்னை) அகழ்வாரை (வீழாமல்) தாங்கும் நிலம்போல, தம்மை இகழ்வார் பொறுத்தல் - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல், தலை - தலையாய அறம்; (எ - று.)

இகழ்தல் - மிகையாயின செய்தலும், சொல்லுதலும்.

(கு - ரை.) அகழ்வார் - தோண்டுகிறவர். தாங்கும் - தரிக்கும். தலையாய - சிறந்த; உத்தமமான. மிகையாயின - குற்றமானவற்றை. 'அகழ்வாரைத் தாங்கு நிலம்போல' என்ற உவமையால், தம்மைக் கொலைசெய்வதையொத்த குற்றங்களைச் செய்பவர்களையும் பொறுத்துப் பாதுகாத்தல்வேண்டுமென அறிக. எல்லாவற்றையும் பொறுத்தலில் பூமி மிகச்சிறந்த தாதலை "ஸர்வம்ஸஹா" என்னும் அதன்வடமொழிப்பெயரானும் உணர்க; "க்ஷமயா ப்ருதிவீஸமஃ" என ஸ்ரீவால்மீகிபகவான் அருளிச்செய்திருத்தலுங் காண்க. உவமையணி. 'இகழ்வார்ப்பொறுத்தல்' என்றதில், உயர்திணையிடத்து ஐயுருபு தொக்கது. "மலை நீலம் பூவே துலாக்கோலென் றின்னர், உலவி லுணர்வுடையோர்," "நிலத்தி னியல்பே நினைக்குங் காலைப், பொறையுடைமையொடு செய்பாங்கமைந்தபின், வினைதல்வண்மையும் போய்ச்சார்ந்தோ

---

* பி - மீ: அறிந்தாதல். † பி - மீ: பிறனில்விழையாமைபோல, ஒரு தலையாகவேண்டுதலின் இதுவும் அதன்பின் வைக்கப்பட்டது.

ரை, இடுதலு மெடுத்தலு மின்னண மாக, இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே,'' ''தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும், பருவ முய ற்சி யளவிற் பயத்தலும், மருவிய நன்னில மாண்பாகும்மே'' என்பவையும் உணரத்தக்கன. 'பொறுத்தா ரென்று இகழ்வாரில்லை: அதனைத் தலைமையா கக்கொள்வார் உலகத்தார்' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (க)

கரு௨. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(இ - ள்.) என்றும் இறப்பினை பொறுத்தல் - (பொறை நன்றாகலான்) தாம் ஒறுத்தற்கு இயன்றகாலத்தும் (பிறர்செய்த) மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனின்உம் நன்று - அதனை (உட்கொள்ளாது அப் பொழுதே) மறத்தல் (பெறின்) அப்பொறையினும் நன்று; (எ - று.)

'மிகை' என்றது, மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை 'அதனினும் நன்று' என்றார்.

(கு - ரை.) ஒறுத்தற்கு இயன்றகாலத்தும் - தண்டிக்கக்கூடியகாலத் திலும். அதனை உட்கொள்ளாது - அப்பிழையை மனத்திலே வையாமல். மேற்சொல்லிய இரண்டு - குற்றஞ்செய்தலும், குற்றஞ்சொல்லுதலும். பொறுக்குங்காலும் - பொறுக்கும் போதும். பொறுக்கும்போதும் குற்றத்தை மனத்திலெண்ணிப்பொறுக்கவேண்டும்: மறந்திட்டாலோ குற்றத்தை மனத் திலும் கொள்ளவேண்டிய தில்லை: ஆதலால், பொறுத்தலினும் மறத்தல் நன்றென்றார். இறப்பு - முறைமையைக்கடந்த ஒழுக்கம்: தொழிலாகு பெயர். பொறுத்தல் - உடன்பாட்டுவியங்கோள். இங்கு 'அதனை, மறத்த லதனினு நன்று' என்பதை, கீழ் கo௮-ஆம் குறளில் ''நன்றல்லது, அன்றே மறப்பது நன்று'' என்றதனோடு ஒப்பிடுக. (உ)

கரு௩. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(இ - ள்.) இன்மையுள் இன்மை - (ஒருவனுக்கு) வறுமையுள்வைத்து வறுமையாவது,—விருந்து ஓரால் - விருந்தினரை (ஏற்றுக்கொள்ளாது) நீக் குதல்; வன்மையுள் வன்மை - (அதுபோல) வன்மையுள்வைத்து * வன்மை யாவது,—மடவார் பொறை - † அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல்; (எ - று.)

இஃது, எடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொரு ளுடைமை யாகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் ‡மென்மையாகாதென் பது, கருத்து.

---

* பி - ம்: வலிமை.

†பி-ம்: அறியார்மாட்டுக்குற்றம்நிகழ்ந்துழிஅக்குற்றத்தைப்பொறுத்தல்.

‡ பி - ம்: மென்மையாகாதே வன்மையா மென்பது கருத்து.

(கு - ரை.) வறுமையுள்வைத்து - தரித்திரஞ்யிருக்குந்தன்மை பலவற்றுள்ளும். வைத்து - வாக்கியாலங்காரமாய்வரும் சொல்லிழுக்காடு. வறுமையென்பது ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களுள் ஒன்றும் இல்லாமை யாதலால், இன்மையெனப்பட்டது. வன்மை - வல்லமை. விருந்தொராால் - விருந்தினர்களே ஈக்குதல். பொருளுடைமைக்குப் பயன் விருந்தோம்புதலாதலாலும், வந்தவிருந்தினரை ஒருவுதல் அறனல்லாததாம் ஆதலாலும், அறனல்லாததான விருந்தொராலேப்புரிபவனுடைய செல்வ மூடைமை பொருளுடைமை யெனப்படா: வறுமை யெனப்படும். அது போலவே, மடவார்ப்பொறையும் மென்மையெனப்படா: வன்மையெனப் படும் என்பது கருத்து. இதனால், விருந்துவிலக்குதலின் மேற்பட்ட வறுமையும், ஒருவர்செய்த குற்றத்தைப் பொறுத்து அவரைப் பாதுகாத்தலின் மேற்பட்ட வல்லமையும் உலகத்தில் இல்லை யென்பதாம். விருந்தோம்பினவன் வேறுபொருளிலனாயினும் பொருளுடையனாக மதிக்கப் படுவன்; அதுபோலவே, பிழைசெய்தாரைப் பொறுத்தவன் ஐம்பொறியடக்கல் முதலிய வேறுவல்லமைகள் இல்லாதவனாயினும் எல்லாவல்லமைகளும் உடையவனாகவே நன்குமதிக்கப்படுவ னென்க. ஓரால் - தொழிற்பெயர்; ஒருவுஎன்பதன் மரூஉவாகிய ஒரு - பகுதி: ஆல் - தொழிற்பெயர்விகுதி: 'சுற்றந்தழால்' என்பதிற்போல. மடவார் - மடமையுடையார். இன்மையுள் இன்மை விருந்தொரால்—கீழ் விருந்தோம்பலென்னும் அதிகாரத்தில் "உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை மடவார்க ணுண்டு" என்றதையும் நோக்குக. இன்மையுள் இன்மை-மிக்கவறுமை; வன்மையுள்வன்மை-மிக்கவன்மை; "செல்வத்துட் செல்வம்," "இன்பத்துள் இன்பம்," "துன்பத்துள் துன்பம்" என்பனபோலக் கொள்க. (கூ)

கநிசை. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ - ள்.) நிறை உடைமை நீங்காமை வேண்டின்-(ஒருவன்)சால்புடைமை (தன்கணின்று) நீங்காமை வேண்டுவனாயின், பொறை உடைமை போற்றி ஒழுகப்படும் - (அவனால்) பொறையுடைமை (தன்கண் அழியாமல்) காத்து ஒழுகப்படும்; (எ - று.)

பொறையுடையாற் கல்லது சால்பில்லை யென்பதாயிற்று.

இவை நான்குபாட்டானும்,பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நிறையுடைமை - எல்லா நற்குணங்களுங் குறைவுபடாமல் நிறைந்திருத்தலேயுடைமை. நிறை - முதனிலைத்தொழிற்பெயர்; குணபூர்த்தி. பொறுமையுடையவனே எல்லாநற்குணங்களும் நிறைந்தவ னென்றுகருத்து. நிறை - உறுதிப்பாடு என்றும் பொருள்கொள்ளலாம். 'நிறையென்பது, காப்பன காத்துக் கடிவனகடிந்து ஒழுகும் ஒழுக்கம்' என்பது, மணக்குடியருரை.

கநிநி. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ - ள்.) ஒறுத்தாரை - (பிறன் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறாது அவனை) ஒறுத்தாரை, ஒன்றுஆக வையார் - (அறிவுடையார்) ஒருபொருளாக மனத்துக்கொள்ளார்; பொறுத்தாரை - (அதனைப்) பொறுத்தாரை, பொன் போல் பொதிந்து வைப்பர் - பொன்போற் பொதிந்து கொள்வர்; (எ-று.)

ஒறுத்தவர் தாமும் அத்தீங்குசெய்து அவனை டொத்தலின், 'ஒன்றுக வையார்' என்றார். பொதிந்துவைத்தல் - சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல்.

(கு - ரை.) ஒறுத்தார் - கண்டித்தவர். ஒன்றுகவையார்-ஒருபொருளாக மதியார். பொதிந்து கொள்வர் - பத்திரமாய் மனத்தில் வைப்பர். அவனைடு-முதலில்தீங்குசெய்தவனைடு. ஏ - தேற்றம். (டு)

கருஙூ. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(இ - ள்.) ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்குசெய்தவனை) ஒறுத்தார்க்கு (உண்டாவது), ஒரு நாளை இன்பம் - அவ்வொருநாளையின்பமே; பொறுத் தார்க்கு - (அதனைப்)பொறுத்தார்க்கு, பொன்றும் துணைஉம் புகழ் - (உலகம்) அழியுமளவும் புகழ் (உண்டாம்); (எ - று.)

ஒருநாளையின்பம் - அந்நாளொன்றினும் 'கருதியதுமுடித்தேம்' எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்று மாகலின், ஏற்புடைய 'உலகு' என்னுஞ் சொல் வருவித்து உரைக் கப்பட்டது.

(கு - ரை.) தருக்கியிருக்கும்-களித்திருக்கின்ற. 'பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்' என்றதனால், 'ஒறுத்தார்க்கொருநாளை யின்பம்' என்ற விடத்து 'பழியொடு பட்ட இன்பம்' என்க. நாளை—ஐ - சாரியை. ''ஒன்று வுலகத் தியற்கை புகழல்லாற், பொன்றுது நிற்பதொன் றில்'' ஆதலால், 'உல கம் பொன்றுந் துணையும் புகழ்'எனப்பட்டது. உண்டாமென்னும் வினை வரு விக்க, இரண்டு வாக்கியங்களையும் முடித்தல்வேண்டும். பொன்றுந்துணையும் என்பதற்கு-தாம் இறக்குமளவும் என்று பொருள்கூறுதல் சிறவாமை அறிக. 'ஒருநாளை யின்பம்' என்பதும், 'பொன்றுந் துணையும் புகழ்' என்பதும்-மணக் குடிய ருரையின்பாடம். 'இது, புகழுண்டாம் என்றது' என்பது, மணக் குடியருரை. (சு)

கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோதொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(இ - ள்.) திறன் அல்ல - செய்யத்தகாத கொடியவற்றை, தன் பிறர் செய்யின்உம்-தன்கட் பிறர் செய்தாராயினும், நோ தொந்து-(அவர்க்கு அதனால் வருந்) துன்பத்திற்கு நொந்து, அறன் அல்ல செய்யாமை - (தான்) அறனல் லாத செயல்களைச் செய்யாதிருத்தல், நன்று - (ஒருவனுக்கு) நன்று; (எ-று.)

உம்மை - சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது - ''உம்மை, யெரி வாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்று பரிதல்.

(கு - ரை.) செய்யாமை - அவரிடத்துச் செய்யாதிருப்பது. சிறப்பும்மை-இழிவுசிறப்பும்மை. ''உம்மை, யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்னும் மேற்கோள் - நாலடியாரில் ''தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை, யெரிவாய்நிரயத்து வீழ்வர் கொலென்று, பரிவதூஉஞ் சான்றோர்கடன்'' என்ற செய்யுளில் உள்ளது; இச் செய்யுளுக்கு-ஒருதீங்குஞ்செய்யாத தம்மைப் பிறர் இகழ்ந்ததைத் தாம் பொறுப்பதுமாத்திரமேயல்லாமல் 'தம்மை நிந்தித்ததனாலாகிய தீவினையின் வினைவினால் மறுமையில் இவர் தீநிரம்பிய நரகத்தில்வீழ்வரே!' என்று இரங்குவதுஞ் சால்புடையோர்க்குக் கடமையாம் என்று பொருள். தோ - தொ என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'தோ நொந்து' என்பதற்கு - (தான் செய்யுந் தீங்குகளால் அவர்க்கு உண்டாகுந்) துன்பத்திற்கு வருந்தி என்றும் பொருள்கொள்ளலாம். தன் - ஏழாம் வேற்றுமைத்தொகை. (எ)

கறிஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

(இ - ள்.) மிகுதியான் - மனச்செருக்கால், மிக்கவை செய்தாரை - (தங்கண்) தீயவற்றைச்செய்தாரை, தாம் தம் தகுதியான் வென்றுவிடல் - தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக; (எ - று.)

தாமும் அவர்கண் தீயவற்றைச்செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க வென்பதாம்.

இவைநான்குபாட்டானும், பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

(கு - ரை.) வென்றுவிடுக-ஜயித்துவிடக்கடவர். தோலாது - தோற்றுப் போகாமல். மிகுதி - முறைமைகடந்தது. மிக்கவை - முறைமை கடந்தவை. வென்றுவிடல் - 'அல்' ஈற்று உடன்பாட்டு வியங்கோள். தகுதி-தக்ககுணம். தமக்குத் தீங்குசெய்தவர்களுக்குத் தாமுந் தீங்குசெய்தால் தாமும் அவர்களோ யொத்துக்கீழ்ப்படுவர்; ஆதலால், அங்ஙனஞ்செய்யாமல் பொறுமையால் அவரினும் மேற்பட்டு அவரைவெல்லவேண்டு மென்பது கருத்து; ''வெல்வது, வேண்டின் வெகுளி விடல்'' என்றநான்மணிக்கடிகையையுங் காண்க. 'இது, பொறுத்தானென்று தோல்வியாகாது அதுதானேவெற்றியாமென்றது' என்பது, மணக்குடிய ருரைவாக்கியம். (அ)

கறிஆ. துறந்தாரிற் றூய்மை யுடைய நிறந்தார்வா
யின்னுச்சொ லோற்கிற் பவர்.

(இ - ள்.) துறந்தாரின் தூய்மை உடையர் - (இல்வாழ்க்கைக்கண் நின்றேயும்) துறந்தார்போலத் தூய்மையுடையார்: இறந்தார் வாய் இன்னுசொல் நோற்கிற்பவர் - நெறியைக்கடந்தார்வாய் இன்னுதசொல்லைப் பொறுப்பவர்.

தூய்மை - மனமாசின்மை. 'வாய்' என வேண்டாது கூறினார், 'தீய சொற்கள் பயின்றது' எனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு.

(கு - ரை.) துறந்தார்-உலகியல்பையும் இல்லறவாழ்க்கையின் நிலையில் லாமையையும் அறிந்து கடவுளின்தன்மையைத்தெரிந்து வீடுஅடையும்பொருட்டுத் தேகஅபிமானம்முதலிய எல்லாவற்றையும் முழுவதும் விட்ட முனிவர். தூய்மை - பரிசுத்தகுணம்; மனத்தில் காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங்கள் இல்லாத தன்மை. நெறியைக்கடந்தார்வா யின்ஞதசொல் - முறைமைதவறினவரது வாயாற் சொல்லப்படுகிற இனிமையல்லாத சொல். நோற்கிற்பவர் - பலர்பால்வினையாலணையும் பெயர். 'இது, பற்றறத்துறந்தவரோடொப்பரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். துறந்தாரின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது: எல்லேப்பொருளதாகக் கொண்டு, துறந்தவரினுந் தூய்மையுடையரென்றலும் ஒன்று. வாய்ச்சொல் - கஙக - ஆம் குறளிலும் காண்க. (கூ)

ககூo. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

(இ - ள்.) உண்ணாது நோற்பார் - (விரதங்களான்) ஊணைத்தவிர்ந்து (உற்றநோயைப்) பொறுப்பார், பெரியர் - (எல்லாரினும்) பெரியர்; பிறர் சொல்லும் இன்னாசொல் நோற்பாரின் பின் - (அவர் பெரியராவது தம்மைப்) பிறர்சொல்லும் இன்னாதசொல்லைப் பொறுப்பாரிற் பின்; (எ - று.)

பிறர் - அறிவிலாதார். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற்றொடுகின்றே நோற்றலின், 'இன்னாச்சொல்நோற்பாரிற் பின்' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், பிறர்மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

(கு - ரை.) ஊணைத்தவிர்ந்து - போஜனத்தைவிட்டு. உற்ற நோயை - பசி, தாகம் முதலியவற்றால் தம்மையடைந்த நோயை. துறந்தவர் யாவரினுஞ் சிறந்தவராதலை "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலா தார்" என்பது முதலிய நீத்தார்பெருமையென்னு மதிகாரத்துத் திருக்குறள்களால் அறிக. பொறுப்பாரிற்பின் - பொறுப்பவர்களின்பின். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற்று - பொறுக்கமாட்டாமைக்குக் காரணமான அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப்பற்றுக்கள். அகப்பற்று - அகங்காரம். புறப்பற்று -மமகாரம். நோற்றலின் - பொறுத்தலால். மிகைக்கச் சொல்லியன - வரம்புகடக்கச் சொன்னவற்றை. இல்லறத்திலிருந்தே பற்றுக்கோவிடாமற் பொறுமையுடையவர், பற்றுக்களே விட்டுத் துறவறத்தையடைந்து பொறுமையுடையவரினும் மேம்பட்டவ ரென்று கருத்து. "ஆக்கவினைக்குறிப்பு ஆக்கமின்றியலா" என்னும் விதியினால், 'பெரியர்' என்னும் ஆக்கவினைக்குறிப்பு, 'ஆவர்' என்னும்ஆக்கச்சொல்வருவித்துமுடிக்கப்பட்டது. 'இது, தவம்பண்ணுவாரினும் பெரிய ரென்றது' என்பது, மணக்குடியருரை.

கள - ஆம் அதிகாரம்—அழுக்காறுமை.

இதனுள் 'அழுக்காறு' என்பது, ஒருசொல். அதற்குப்பொருள் மேலே உரைத்தாம். அச்சொல் - பின், அழுக்காற்றைச் செய்யாமை யென்னும்

பொருள்பட, எதிர்மறைஆகாரமும் மகரஒற்கார விகுதியும் பெற்று, 'அழுக்காறுமை' என நின்றது. இப்பொறுமையும் பொறைக்குமறுதலே யாகலின், இதனை விலக்குதற்கு, இது, பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அழுக்காறு என்பதை - அழுக்கு ஆறு என இரண்டுசொல் லாகக் கொள்ளாமல், அழுக்கறு என்னும் முதனிலை திரிந்துவந்த தொழிற் பெயராகவாயினும் பண்புப்பெயராகவாயினும் கொள்ளவேண்டு மென்பார், 'ஒருசொல்' என்றார். மேலே உரைத்தாம் - "அழுக்கா றவாவெகுளி' என் னும் சூத்திரவாது குறளிற் கூறினேம்; அங்குக் கூறியபொருள் - பிறராக்கம் பொறுமை யென்பது. ஆக்கம் - செல்வம் முதலியன. அழுக்காறுமை - எதிர் மறைத்தொழிற்பெயர். அழுக்கறுமை யென்றிருப்பது, நலம். மறுதலை - எதிராயுள்ளது.

கசுக. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(இ - ள்.) ஒருவன்—,தன் நெஞ்சத்து - தன் நெஞ்சத்தின்கண், அழுக் காறு இலாத - அழுக்காறென்னுங்குற்றம் இல்லாத, இயல்பு - இயல்பினை, ஒழுக்கு ஆறு ஆகொள்க-(தனக்கு ஓதிய) ஒழுக்கநெறியாகக் கொள்க;(எ-று.)

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மைபயத்த லின், ஒழுக்கநெறிபோல உயிரினும் ஓம்புக வென்பதாம்.

(கு - ரை.) இயல்பு - குணம்: ஓதிய-கசை-ஆம் அதிகாரத்திற் சொன்ன. பயத்தலின் - தருதலால். "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம், உயிரினு மோம்பப் படும்" என்பதனை உட்கொண்டு, ஒழுக்கநெறியைப்போல் உயிரைக் காட்டிலுஞ் சிறந்ததாகக்கொண்டு பாதுகாக்க வேண்டு மென்றார். ஒழுக்கு ஆறு என்பதை - ஒழுக்கமாகியவழி எனப் பண்புத்தொகையாகவாயினும் ஒழுக்கத்தினதுவழியென ஆறும்வேற்றுமைத்தொகையாகவாயினுங்கொள்க. 'இது, அழுக்காறு தவிரவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரை. (க)

கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

(இ - ள்.) யார்மாட்டும்-யாவர்மாட்டும், அழுக்காற்றின் அன்மை - அழுக் காற்றினின்று நீங்குதலே, பெறின்-(ஒருவன்) பெறுமாயின்,—விழு பேற்றின் அஃது ஒப்பது இல்லை - (மற்றுஅவன்பெறும்) சீரியபேறுகளுள் அப்பேற் றினை ஒப்பது இல்லை; (எ - று.)

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற் றென்பார், 'யார்மாட்டும்' என்றார். அன்மை - வேறுதல்.

இவையிரண்டுபாட்டானும், அழுக்காறின்மையதுகுணம் கூறப்பட்டது.

(கு - ரை.) பெறும் - பெறுவான். மற்று - பின்பு. சீரியபேறுகளுள்- நல்ல பாக்கியங்களுள். அப்பேற்றினை - அழுக்காறில்லாமையை. பகைவர் மாட்டும் - பகைவரிடத்தும். ஒழிதற்பாற்று-நீங்கத்தக்கது. அன்மை - ஒரு

பொருளே மறுத்து அதற்கு இனமானதைச் சொல்வதென்றும், இன்மை-இல்லாததைச்சொல்வ தென்றும் வேறுபாடறிக. சீர்மையென்னும் பொருளுணர்த்துகிற விழுமமென்னும்உரிச்சொல், ஈறுதொக்கு 'பேறு' என்பதனோடு புணர்ந்தது. பேறு - பெறப்படுவது; செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்டுமுதனிலைதிரிந்தபெயர்; இன் - ஏழனுருபு. அஃதொப்பது-ஆய்தம், மெய்போல ஒலித்தது. ஒப்பது-பெயர். 'இது அழுக்காறு செய்யாமை எல்லா நன்மையினும் மிக்கது என்றது' என்பது, மணக்குடியருரை. (உ)

கசுஙூ. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

(இ - ள்.) அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - (மறுமைக்கும் இம்மைக்கும்) அறமும் செல்வமும் ஆகிய உறுப்புக்களே(த் தனக்கு) வேண்டா தாவெனன்று சொல்லப்படுவான்,—பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான்-பிறன்செல்வங் கண்டவழி (அதற்கு) உவவாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்கறுத்த லெனினும், அழுக்கா றெனினும் ஒக்கும். அழுக்காறு செய்யின், தனக்கே ஏதமா மென்பதாம்.

(கு - ரை.) பொருமைக்காரன், மறுமைக்குப்புண்ணியமும் இம்மைக்குச் செல்வமும் ஆகிய புருஷார்த்தங்களே விரும்பாதவ னென்க. பொருமைப் படுபவனுக்கு மறுமையிற் பாவமுண்டாவதனோடு இம்மையிற் செல்வமுமழியும் என்பது கருத்து. உவவாது-மகிழாமல். ஏதமாம் - கெடுதியாகும். 'இது, அழுக்காறுடையார்க்குப் புண்ணியமில்லையா மென்று கூறிற்று' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (ஙூ)

கசுசு. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) அழுக்காற்றின் - அழுக்காறுஎதுவாக, அல்லவை செய்யார் - அறனல்லவற்றைச் செய்யார் (அறிவுடையார்); இழுக்கு ஆற்றின் - அத்தீநெறியால், ஏதம் படுபாக்கு - (தமக்கு இருமையினும்) துன்பம் வருதலை, அறிந்து—; (எ - று.)

அறனல்லவையாவன - செல்வம் கல்வி முதலியன உடையார்கண் நீங்குசினேத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(கு - ரை.) அழுக்காற்றின், இழுக்காற்றின்என்ற சொற்களிலுள்ள ஐந்தனுருபுகள், ஏதுப்பொருளன. அறனல்லவை-பாவங்கள். அறிவுடையா ரென்பது - தோன்றுஎழுவாய். இழுக்காகியஆறுஎன்க; இழுக்கு - குற்றம், ஆறு - வழி. இருமையினுந் துன்பம் வருதல் - மறுமையில் நரகவேதனையும் இம்மையில் வறுமைத்துன்பமும் உண்டாதல். உடையார்கண் - உடையவரிடத்தில். படுபாக்கு, பாக்கு - தொழிற்பெயர்விகுதி. முதலியன என்ற தனால், செல்வாக்கு ஆண்மை அதிகாரம் முதலியன கொள்க. (ச)

கசுஞ. அழுக்கா றுடையார்க் கதுசா லுமொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ - ள்.) (அழுக்காறு), ஒன்னூர் வழுக்கியும் - பகைவரை ஒழிந்தும், கேடு ஈன்பது - கேடு பயப்ப தொன்று; (ஆகலின்), அழுக்காறு உடையார்க்கு - அவ்வழுக்காறுடையார்க்கு, அது சாலும் - (பகைவர்வேண்டா, கேடு பயத்தற்கு) அதுதானே அமையும்; (எ - று.)

'அதுவே' என்னும் பிரிநிலையேகாரம், விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) அழுக்காறு பகைவரையொழித்துங் கேடுபயப்பதொன்று - பொருமையானது பகைவர்களில்லாமலே கெடுதியைத்தருவதொரு துர்க்குணமாம். அதுதானே அமையும் - அவ்வழுக்காறொன்றே போதும். பிரிநிலை ஏகாரம், பகைவர்களைப் பிரித்துநின்றது. ஒன்னூர்-ஒன்னூர் என்பதன் மரூஉ; எதிர்மறைவினையாலணையும்பெயர்: சேராதவ ரென்று பொருள்; எனவே, பகைவராயிற்று. உம்மை - சிறப்பு. ஈன்பது - எதிர்காலவினையாலணையும்பெயர்; தொழிற்பெயராக்கி, ஈன்பதற்கு அதுசாலு மெனினுமாம். 'இது, உயிர்க்கேடுவருமென்றுகூறிற்று' என்பது, மணக்குடிய ருரை. (நி)

ககசுசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற மூடுப்பதூஉ
மூண்பதூஉ மின்றிக் கெடும்.

(இ - ள்.) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - (ஒருவன் பிறர்க்குக்) கொடுப்பதன்கண் அழுக்காற்றைச்செய்வானது சுற்றம், உடுப்பது உம் உண்பதூஉம் இன்றி கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் இன்றிக் கெடும்; (எ - று.)

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது - கொடுக்கப்படும்பொருள்களைப் பற்றிப் பொருமைசெய்தல். 'சுற்றம் கெடும்' எனவே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறுபொருமை தன்பேற்றையெயன்றித் தன்சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

(கு - ரை.) சுற்றம்-பந்துவர்க்கம்; (சுப அசுப காலங்களில் ஒருவனைச்) சுற்றிநிற்பது: அம் - கருத்தாப்பொருள்விகுதி. உடுக்கப்படுவது - உடை. உண்ணப்படுவது - உணவு. இவ்விரண்டுமில்லாம லெனவே, மற்றைச் செல்வங்களை யிழத்தல் கூறவேண்டாதாயிற்று. ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு பொருள் கொடுப்பதைக்குறித்துப் பொருமைப்படுபவனது சுற்றங் கெடு மெனவே, அவன்கெடுதல் அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. கொடுப்பது-செயப்பாட்டுவினைப்பொருளில்வந்தசெய்வினைவினையாலணையும்பெயர்; உடுப்பது, உண்பது என்பனவும் இவ்வாறே: இவையெல்லாம் - சாதியொருமை. உடுப்பதூஉ முண்பதூஉமென்ற இடத்து இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில்நெடிலாய் அளபெடுத்தது; இன்னிசையளபெடை. இக்குறளின் கருத்தைப்பின்பற்றி, கம்பராமாயணத்தில் வேள்விப்படலத்தில் "எடுத்தொருவ ருக்கொருவ ரீவதனின் மூன்னே, தடுப்பதுநி னைக்கழகி தோதகைவில் வெள்ளி, கொடுப்பது விலக்குகொடியோயுனது சுற்ற, முடுப்பதுவு முண்பதுவுமின்றிவிடுகின்றாய்" என்றது. "ஈவது விலக்கேல்"

என்னும் ஒளவையார் வார்த்தையையும் அறிக. 'இது, 'நல்குரவுதருமென்றது' என்பது, மணக்குடிய ருரைவாக்கியம். (சு)

ககூஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(இ - ள்.) அழுக்காறு உடையானை - (பிறராக்கங்கண்டவழிப்) பொறுமையுடையானை, செய்யவள் - திருமகள், அவ்வித்து - (தானும்) பொறுது, தவ்வையை காட்டி விடும் - (தன்)தவ்வைக்குக் காட்டிநீங்கும்; (எ · று.)

தவ்வை - மூத்தவள். 'தவ்வையைக்காட்டி' என்பது, "அறிவுடையந் தண ணவரைக்காட் டென்றலே" என்பதுபோல, உருபுமயக்கம். மனத்தைக் கோடுவித்து அழுக்காறுடையனாயினானை யென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) திருமகள் - இலக்குமி. தன்தவ்வை - தனது தமக்கை. திருப்பாற்கடல் கடைந்தகாலத்து மூதேவி இலக்குமிக்கு முன்னே பிறந்தாள்; அதனால், இவர்களுக்கு முறையே மூத்தவளென்றும், இளையவளென்றும் பெயர். "அறிவுடையந்தண ணவரைக்காட் டென்றலே" என்னும் மேற்கோள் - கலித்தொகை, மருதம், எ - இல் உள்ளது; இதற்கு - அறிவுடைய அந்தணன் அவருக்குக் காண்பியென்று கூறினளேவென்று பொருள். 'தவ்வையைக் காட்டி' என்பதில், ஐயென்னும் இரண்டனுருபு - தனக்குரிய செயப்படுபொருளைத் தராமல், நான்காம்வேற்றுமைக்குரிய கோடற்பொருளைத் தந்ததனால், உருபுமயக்கம். அவ்வித்து - அவ்வியமென்னும் பெயர்ச் சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம்; பொறாமல் என்று பொருள். அவ்வியம் - ஔவியம்என்பதன்போலி அவ்வியம் என்பதற்கு - மனக்கோட்டமென்றும் பொருள் உண்டு ஆதலால், இரண்டாம்உரையில் அவ்வித்து - தன்மனத்தைக் கோணச்செய்து எனப்பட்டது. 'ஔவித்து' என்றும், 'தெளவை' என்றும் போலியில்லாமலும் பாடமுண்டு. செய்யவள் - செம்மைநிறமுடையவள்; செம்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் முன்நின்றமெய்திரிந்த செய் - பகுதி. காட்டிவிடும் என்பன - இருசொல். உடையானை என்பதை உருபுமயக்கமாக்கி, பொறுமையுடையவனுக்கு இலக்குமி தன்னைக்காட்டாமல் மூதேவியைக் காட்டிவிடுவ ளென்றும் பொருள்கொள்ளலாம். 'தவ்வையைக் காட்டி விடும்' என்பதற்கு - 'தன் தவ்வையாகிய மூதேவியைக் காட்டி இவன்பாற்செல்லென்று போம்' என்பதும், 'இது, நல்குரவிற்குக் காரணங் கூறிற்று' என்பதும் - மணக்குடிய ருரைவாக்கியங்கள். (எ)

ககூஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(இ - ள்.) அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறென்று (சொல்லப்பட்ட) ஒப்பில்லாத பாவி, திரு செற்று - (தன்னை உடையானை இம்மைக்கண்) செல்வத்தைக் கெடுத்து, தீ உழி உய்த்து விடும் - (மறுமைக்கண்) நரகத்திற் செலுத்திவிடும்; (எ - று.)

பண்பிற்குப் * பண்பு இல்லையேனும், தன்னை ஆக்கினானை இருமையும் கெடுத்தற்கொடுமைபற்றி, அழுக்காற்றினை 'பாவி' என்றார்; கொடியானை 'பாவி' என்னும் வழக்கு உண்மையின்.

இவை ஆறுபாட்டானும், அழுக்காறுடைமையதுகுற்றம் கூறப்பட்டது

(கு - ரை.) பாவியென்பது - கொடியதென்ற கருத்தைக் கொண்டது. பாவமுடையதெனப் பொருள் கூற லாகாது: ஏனெனில்?—அழுக்காறென்பது - பண்பு: அப்பண்பை 'பாவம்' எனப் பண்பாகக் கூறவேண்டும்: 'பாவி' எனப் பண்பியாகக்கூறின் அதற்கு ஒருபண்பு இருப்பதாய்விடும்: அங்ஙன் பண்புக்குஒருபண்பு ஒப்புக்கொள்வது நூல்வழக்கில் இல்லை யென்க. பண்புக்கும் ஒரு பண்பு உண்டு எனக் கொள்ளின், முடிவின்மை [அநவஸ்தா] என்ற குற்றம் வரு மென்பது, நூற்கொள்கை. எனஎன்னுஞ் செயவெனெச்சத்துக்கு-சொல்லப்பட்ட என முடிக்குஞ்சொல் வருவிக்கப்பட்டது. சாதாரணமான பாவம் இம்மையிற் பயனைப் பயவாது: மிகக்கொடியபாவமோ இம்மையில்தானே பயனைப் பயக்கும்: ஆதலால், 'ஒருபாவி' என்றதற்கு-'ஒப்பில்லாத பாவி' என்றார்; அழுக்காறு இம்மையிலும் செல்வத்தைக் கெடுக்குந் தீவினையாதலால். "அத்யுத்கடைஃ புண்யபாபைஃ இஹைவபலமஶ்நுதே" என்ற வடநூல்மேற்கோள் இங்குக் காணத்தக்கது. பண்பு - குணம். தன்னை ஆக்கினானை - பொருமையைச் செய்தவனை. உண்மையின் - இருத்தலால். பாவி - பாபீஎன்னும் வடமொழியின் திரிபு. செற்று - செறுஎன்னும் பகுதியடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம். தீயுழி - கொடியஇடம்; எரிவாய் வெம்மைகூர் நரகம். 'இது, செல்வங் கெடுத்தலேயன்றி நரகம்புகுவிக்கு மென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

ககஊ. அவ்வியங் நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(இ - ள்.) அவ்வியம் நெஞ்சத்தான் ஆக்கம்உம் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும், செவ்வியான் கேடுஉம் - ஏனைச் செம்மையுடையவனது கேடும், (உளவாயின்), நினைக்கப்படும் - (அவை) ஆராயப்படும்; (எ - று.)

கோட்டம் - ஈண்டு அழுக்காறு. 'உளவாயின்' என்பது, எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் 'இதற்கு ஏதுவாகிய பழவினை யாது?' என்று ஆராயப்படுதலின், 'நினைக்கப்படும்' என்றார். "இம்மைச் செய்தன யானறி நல்வினை, யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்திந், திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" என நினைக்கப்பட்டவாறு அறிக.

(கு - ரை.) கோட்டம் - கோணுதல். ஆக்கம்-ஐசுவரியம். ஏனை - மற்றை. செம்மையுடையவன் - மனத்திற் கோணலில்லாமையையுடையவன். கேடு -

* பி - ம்: பண்பி.

கெடுதி. ஈண்டு - இவ்விடத்தில். உளவாயின் - உள்ளனவானால். எஞ்சி - குறைத்து. இது, சொல்லெச்சம். பொருமையுடையவனுக்கு ஐசுவரியமும், அது இல்லாத நடுவுநிலைமையுடையவனுக்குத் தீமையும் உண்டாகாவாம்: ஒரு கால் உண்டாயின், முற்பிறப்பிற்செய்த ஊழ்வினையால் உண்டானவையாக அறியவேண்டு மென்பது, கருத்து. "இம்மைச் செய்தன" என்னும் மேற் கோள், சிலப்பதிகாரத்தில் மதுரைக்காண்டத்தில் அடைக்கலக்காதையில் 91-93 அடிகளாக உள்ளது; இதற்கு - யானறிய இப்பிறப்பில் நீ செய்தன வெல்லாம் நல்வினையாயிருக்கவும், அழகு மிக்க சிறந்த மாணிக்கக்கொழுந்து போன்ற மனைவியுடனே நீ இங்கே வந்து ஒருதுணையுமில்லாமல் தனியே அலைந்தது முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயன்தானே? என்று பொருள்: உழந்து போந்ததுஎன்பன, போந்து உழந்ததுஎன விகுதி பிரித்துக் கூட்டப் பட்டன. இது, மாதவியென்னும் வேசியைக் கூடிச் செல்வமனைத்தையும் இழந்து மனைவியாகிய கண்ணகியுடனே காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் மதுரைக்குவந்த கோவலனை நோக்கி அவனதுகண்பழகிய மாடலனென் னும் அந்தணன் கூறியது. "இந்த வூனைடுத்த, பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு, முன்செய்த தீவினையோ விங்ஙன்வந்து மூண்டதுவே" என்ற பட்டணத்துப் பிள்ளையார்பாடலையுங் காண்க. இவை யிரண்டும், செவ்வியான்கேடு ஆராயப்பட்டதற்கு உதாரணமாம்; அவ்விய நெஞ்சத்தானுக்கம் ஆராயப்பட்டதற்கு உதாரணம் வந்தவிடத்துக் காண்க. செவ்வி - பண்புப்பெயர். நினைக்கப்படும் என்பதற்கு - 'விசாரிக்கப்படும்' என்பது, மணக்குடியருரை. (கூ)

கஎ0. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(இ - ள்.) அழுக்கற்று - அழுக்காற்றைச்செய்து, அகன்றார்உம் - பெரிய ராயினரும், இல்லை—; அஃது இல்லார் - அச்செயலிலாதார், பெருக்கத் தின் தீர்ந்தார்உம் - பெருக்கத்தின் நீங்கினரும், இல் - இல்லை; (எ - று.)

இவையிரண்டுபாட்டானும், கேடும் ஆக்கமும் வருதற்கு ஏது ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) அச்செயல் - அழுக்காறு. பெருக்கத்தின் - அபிவிருத்தியினி ன்றும். பொறுமையுடையவர் அழிவர், அது இல்லாதவர் விருத்தியடைவர் என்பது, கருத்து. உம்மைகள்இரண்டும் - முறையே உயர்வுசிறப்பு இழிவு சிறப்புக்களோடு எச்சப்பொருளன. : "அழுக்காறுடையான்கண்" என்று ஆராய்தலின் முன்புசொன்னதே பொருள்: இப்பொருள் கேடுண்டாகா தென்றது' என்பது, மணக்குடியருரை. (கo)

கஅ-ஆம் அதிகாரம் - வெஃகாமை.

அஃதாவது - பிறர்க்கு உரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடை மை கண்டவழிப் பொறுமையேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலும் குற்ற மென்றற்கு, இஃது, அழுக்காறுமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வெளவ - கைக்கொள்ள; அபகரிக்க. வெஃகல் - ஆசைப்பெருக்கம். 'வெஃகாமையாவது பிறர்பொருளை விரும்பாமை' என்பது, மணக்குடியருரை.

களக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ - ள்.) நடு இன்றி - (பிறர்க்கு உரியனகோடல் நமக்கு அறனன் றென்னும்) நடுவுநிலைமை இன்றி, நல் பொருள் வெஃகின்-(அவர்) நன்பொருளை (ஒருவன்) வெஃகுமாயின், (அவ்வெஃகுதல்),—குடி பொன்றி-(அவன்) குடியைக் கெடச்செய்து, குற்றம் உம் ஆங்கு எ தரும் - பலகுற்றங்களையும் அப்பொழுதே (அவனுக்குக்) கொடுக்கும்; (எ - று.)

குடியைவளரச்செய்து பலநன்மையும் பயக்கும் இயல்புபற்றிப் பொருள் வெஃகின்என்பார், 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்ற என்பது, 'பொன்றி'எனத் திரிந்துநின்றது; 'செய்து' என்பது, சொல்லெச்சம்.

(கு - ரை.) பிறர்க்குஉரியனகோடல் - அயலார்க்குஉரிய பொருள்களைக் கொள்ளுதல். நன்பொருள் - தருமவழியாற் சம்பாதிக்கப்பட்ட பொருளுமரம். பொன்ற - எச்சத்திரிபு; [நன். வினை. உள.] இதன்பின் 'செய்து' என்பது எஞ்சிநின்றது. சொல்லெச்சமாவது - சொல் குறைந்துநிற்பது. இங்கே, 'பொன்றுவித்து' என்பது-பிறவினைப்பொருளுணர்த்தும் வினவிகுதிதொக்கு 'பொன்றி'என நின்றதாகக்கொண்டார்,தொல்காப்பியச்சூத்திர விருத்திகாரர்; பிறவினைப்பொருளில்வந்த தன்வினை யென்க: இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் 'அந்தர்ப்பாவிதணிச்' எ ர்பர். 'இது, சந்தானநாசமூண்டா மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (க)

களஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்பார்
நடுவன்மை நாணு பவர்.

(இ - ள்.) படு பயன் வெஃகி - (பிறர்பொருளை வௌவினால் தமக்கு) வரும் பயனை விரும்பி, (அது வௌவுதற்கு), பழி படுவ செய்யார் - பழியின் கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார்; நடு அன்மை நாணுபவர் - நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர்; (எ - று.)

நடு - ஒருவன்பொருட்குப் பிறன் உரியனல்ல னென்னும் நடுவு.

(கு - ரை.) பயன்-சுகானுபவம் முதலியன. பழியின்கண்ணேபடுஞ் செயல்கள் - நிந்திக்கப்படுவனவற்றின்பாற் சேரும் தொழில்கள். நாணுதல்-அஞ்சுதல், செய்யக்கூசுதல். படுபயன் - எதிர்காலவினைத்தொகை. படுவ-பலவின்பால் வினையாலணையும்பெயர். 'இது, நடுவுநிலைமை வேண்டுபவர் செய்யாரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (உ)

களங. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ - ள்.) சிறு இன்பம் வெஃகி - (பிறர்பால் வௌவிய பொருளால் தாம் எய்தும்) நிலையில்லாத இன்பத்தை விரும்பி, அறன் அல்ல செய்யார்எ-

(அவர்மாட்டு) அறனல்லாத செயல்களைச் செய்யார்: மற்று இன்பம் வேண்டு பவர் - (அறத்தான்வரும்) நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர்; (எ - று.)

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியு மென்பார், சிற்றின்பம்' என்றார். 'மற்றையின்பம்' என்பது, 'மற்றின்பம்' என நின்றது.

(கு - ரை.) இங்கே, நிலையுடைய இன்பம் - சுவர்க்க சுகஅநுபவம்; தாம் உள்ள அளவும் அழியாத ஸம்ஸாரசுகமுமாம். காதலிப்பவர் - விரும்புபவர். இக்குறளுக்கு - பேரின்பமாகிய மோக்ஷசுகத்தை அடைய விரும்புபவர் சிற் றின்பமாகிய காமசுகத்தைப் பெற விரும்பிப் பாவத்தொழில்களைச் செய்யார் எனப் பொருள்கொண்டால், 'பிறனில்விழையாமை,' 'வரைவின்மகளிர்', 'அ வாவறுத்தல்' என்னும் அதிகாரங்களுள் ஒன்றுக்கு உரியதாகி, இவ்வதிகாரத் தோடு பொருந்தா தாகலின், அங்ஙனம் பொருள்கூறலாகா தென அறிக. "மற்றென் கிளவி விஜமாற் றசைகிலை, யப்பாலிரண்டென மொழிமஞர் புலவர்," "மற்றைய தென்னுங் கிளவி தானே, சுட்டுகிலையொழிய வினங்குறித் தன்றே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களினால், மற்றுஎன்னும் இடைச் சொல்லுக்குப் பிறிதென்னும் பொருள் இல்லை யென்றும், அப்பொருள் மற்றை யென்னும் இடைச்சொல்லுக்கே உண்டென்றுந் தெரிதலால், 'மற்றையின்ப மென்பது மற்றின்பமென நின்றது' என்றார்; பின் னூல்செய்தவராகிய சென்னூ லாசிரியர் "விஜமாற் றசைகிலை பிறிதெனு மற்றே" எனச் சூத்திரஞ்செய்தது புதியனபுகுதலா மென்று உணர்க. ஏ-தேற்றம்; அசையுமாம். 'இது, வீடுபெற வேண்டுவார் செய்யா ரென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம்.(கூ)

களச. இலமென்று வெஃ்குதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(இ - ள்.) இலம் என்று - (யாம்) வறியம் என்று கருதி, வெஃ்குதல் செய்யார் - (அது தீர்த்தற்பொருட்டுப் பிறர்பொருளை) விரும்புதல் செய்யார்: புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்ற மில்லாத காட்சியினையுடையார்; (எ - று.)

வெல்லுதல்-பாவநெறிக்கட் செல்லவிடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமை இன்மையின், வெஃ்குதலும் இல்லையாயிற்று. புன்மை யில் காட்சி - பொருள்களைத் திரிபின்றி உணர்தல்.

(கு - ரை.) யாம் வறியம்-நாம் ஏழைமையுடையோம்; நுகரப்படும் பொரு ளொன்றும் உடையோமல்லோம். அது - வறுமை. காட்சி - அறிவு; தொழிற் பெயர். ஐம்புலன்களையும் பாவவழியிற்செல்லவிடாமல் அடக்கியவர்க்கு, அப் புலன்கள் அனுபவிக்கும்பொருள்கள் இல்லாமையாகிய வறுமை தோன்றா தென்க. திரிபின்றி-மாறுபாடில்லாமல்; மாறுபாடாவது,பழுதையைப் பாம்பென் றும், கானலை நீரென்றும், ஈப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றை மற்றொன்றாக அறிதல். ஐம்புலன்கள்-சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம்; இவை, முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப்படும்: இவை - செவி, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளின் விஷயங்களாம்.

இங்கே பொறி புலனெனப்பட்டது. இலம் - எதிர்மறைத் தன்மைப்பன்மை முற்று. புலம்வென்றகாட்சி,புன்மையில் காட்சி யென்க. புலம்வென்ற காட்சி என்னுமிடத்து, புன்மையில் என்றது - இடைப்பிறவரல். இனி, புலம் வென்ற புன்மையில் காட்சி என்பதற்கு - ஐம்புலன்களாலும் வெல்லப்படுத லாகிய இழிவை உடைத்தாகாத அறிவென்றும் பொருள் கொள்ளலாம். 'இது, தெளிவுடையார் செய்யா ரென்றது' என்பது, மணக்குடியருரை.

களரி. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ - ள்.) அஃகி-நுண்ணிதாய், அகன்ற-எல்லாநூல்களினுஞ் சென்ற, அறிவு - (தம்) அறிவு, என் ஆம்.- என்னபயத்ததாம்? வெஃகி - (பொருளே) விரும்பி, யார்மாட்டும் - யாவர்மாட்டும், வெறிய-அறிவோடுபடாத செயல் களே, செயின் - (அறிவுடையார்) செய்வராயின்; (எ - று.)

யார்மாட்டும் வெறியசெய்தலாவது - தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமை யாகலின், 'அறிவென்னும்' என்றார்.

(கு - பை.) நுண்ணிதாய் - நுட்பமானதாய்; சூட்சுமமாய். நூல்கள் - சாஸ்திரங்கள். சென்ற - சென்றுவிசாலித்த. என்ன பயத்ததாம் - என்ன பயனை உடையதாகும்? படாத - பொருந்தாத. வெறிய - வெறுமையுடை யவை: அறிவுடன் கூடாதவை. இனி மயக்கத்தோடுகூடியவையெனினுமாம்: வெறி - மயக்கம். தக்கார் - மேன்மக்கள், யோக்கியர். தகாதார் - கீழ்மக்கள், அயோக்கியர். கடியன - வெறுக்கத்தக்கவை. யார்மாட்டு, மாட்டு - ஏழனுருபு. உம்மை - முற்று. வெறிய - பெயர். நுண்ணிதாகிப் பரந்த அறிவுடையா னெனினும் அதனைப் பயன் யாதாம்? எல்லார்மாட்டும் பொருளே விரும்பி ஈரமில்லாதனசெய்வனெயின் என்றவாறு. 'இது, அறிவுடையார் செய்யா ரென்றது' என்பது, மணக்குடியருரை. (கு)

களசு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(இ - ள்.) அருள் வெஃகி - அருளாகிய அறத்தை விரும்பி, ஆற்றின் கண் - (அதற்கு) வழியாகிய இல்லறத்தின்கண், நின்றான் - நின்றவன்,— பொருள் வெஃகி - (பிறர்) பொருளே அவாவி, பொல்லாத சூழ - (அதனை வருவிக்கும்) குற்றநெறிகளே எண்ண, கெடும்—; (எ - று.)

இல்லறநெறியால் அறிவுமுதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு 'ஆறு' என்றார். கெடுதல் - இரண்டுஅறமும் சேர இழத்தல். சூழ்ந்ததுணையானே கெடு மெனவே, செய்தாற்கெடுதல் சொல் லாமையே பெறப்பட்டது.

(கு - பை.) அருளாவது - ஒருசம்பந்தமுமில்லாமல் இயல்பாக எல்லா வுயிர்களின் மேலும் செல்வதாகிய கருணை. அருளாகியஅறம் என்றது; துற வறத்தை. துறவறத்திற்கு அருளுடைமை மிகச்சிறந்த விரத மாதலால், துற

வ்றம் 'அருள்' எனப்பட்டது; மேல் துறவறவியலின் முதலில் அருளுடைமை கூறப்படுமாறு அறிக. அதற்கு வழியாகிய - துறவறத்தையடைதற்கு மார்க்க மாகிய. அவாவி - விரும்பி. வருவிக்கும் - அபகரிக்கிற. கெடும்-கெடுவான். முதிர்த்துழியல்லது - முதிர்த்தாலல்லாமல். துறக்கப்படாமையின் - பொருட் பற்றைவிடமுடியாதாதலால். அதனை-இல்லறத்தை. இரண்டுஅறமுஞ் சேர இழத்தல் - துறவறம் இல்லறம் என்னும் இரண்டுதருமங்களையும் ஒருங்கே இழப்பது. சூழ்ந்த தூணையானே - ஆலோசித்த மாத்திரத்திலுலே. இனி, அருள்வெஃ்கி யாற்றின்கண்நின்றுன் என்பதற்கு - (கடவுளின்) கருணையை விரும்பி அதனைப் பெறும் வழியாகிய அறநிலையில் நின்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். பொல்லாத - பெயர். சூழ - காரணப்பொருளில் வந்த செய வெனெச்சம். 'இது, அருளுடையானுங் கெடுவ னென்றது' என்பது.மணக் குடியருரைவாக்கியம். (ஈ)

கஎஎ. வேண்டற்க வெஃ்கியா மாக்கம் விளவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(இ - ள்.) வெஃ்கி ஆம் ஆக்கம் - (பிறர்பொருளை) அவாவி(க்கொண்டி) அதனுலாகின்ற ஆக்கத்தை, வேண்டற்க - விரும்பாதொழிக: விளை வயின் - (பின்) அனுபவிக்குங்கால், பயன் - (அவ்வாக்கத்தின்) பயன், மாண்டற்கு அரிது ஆம் - நன்முத லில்லை யாகலான்; (எ - று.)

விளை, என்பது - முதனிலைத்தொழிற்பெயர்.

இவையேழுபாட்டானும் வெஃ்குதலின் குற்றம் கூறப்பட்டது.

(கு - பை.) அவாவி - விரும்பி. கொண்டி - கவர்ந்து. கால்-காலத்தில். மாண்டற்கு அரிதாம் - மாட்சிமைப்படுவதற்கு அரியதாம். விளை-பயன்விளை தல்; தொழிற்பெயர். விளை வயின் - நான்காம் வேற்றுமையுருபும் பயனு முடன்றொக்கதொகை: பயன் விளைதற்கு உரிய காலத்தில் எனவிரியும். இனி, விளைவயின் என்பது - விளையும்வயின் என எதிர்காலவினைத்தொகை யாகவுமாம். வேண்டற்க - எதிர்மறைவியங்கோள். அரிதுஎன்பதில், அரு மை - இன்மை குறித்தது; "உறற்பால, தீண்டா விடுத லரிது" என்ற இடத் திற்போல. காரணங்காட்டி விலக்கியதனுல், இப்பாட்டு 'ஏதுவிலக்கு' என் னும் அலங்காரத்தின்பாற் படு மென்பர். (எ)

கஎஅ. அஃ்காமை செல்வத்திற் கியாதெனின் வெஃ்காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(இ - ள்.) செல்வத்திற்கு - (சுருங்கன்மாலத்தர்கிய) செல்வத்திற்கு, அஃ்காமை - சுருங்காமைக்காரணம், யாது எனின் - யாதென்று (ஒருவன்) ஆராயின், பிறன் வேண்டும் கை பொருள் வெஃ்காமை - (அது) பிறன்வேண் டுங் கைப்பொருளை (த் தான்) வேண்டாமையாம்; (எ - று.)

அஃ்காமை-ஆகுபெயர். வெஃ்காதான்செல்வம் அஃ்காதென்பதாயிற்று.

(கு - பை.) சுருங்கன்மாலத்தாகிய-குறையுந்தன்மையையுடையதான. சுருங்காமைக்காரணம் - குறையாதிருத்தற்கு ஏது. அது - அக்காரணம்.

பிறன்வேண்டும் கைப்பொருளை - அயலானது அதீனமாயுள்ளதும் அதுபற்றி அவனுல் விரும்பப்படுவதுமான திரவியத்தை. அஃகாமைஎன்னும் எதிர் மறைத்தொழிற்பெயர், அதன்காரணமென்னும்பொருளைத் தந்ததனுல், காரிய வாகுபெயர். வெஃகாதான்செல்வம் அஃகாது - பிறன்பொருளைவிரும்பாதவ னது செல்வம் குறையாது. இனி, இக்குறளுக்கு - ஒருவன் தனதுசெல்வம் சுருங்காமலிருக்கும்பொருட்டுச் செய்யவேண்டுவது என்னவென்றுல் அயலா னுக்கு உரிய பொருளைத் தான் விரும்பாதிருத்தல்வேண்டும் என்று உரை கூறினுமாம். செல்வத்திற்கு + யாது = செல்வத்திற்கியாது; குற்றியலிகரம்; [நன். எழுத்து. ஈஅ, உயிரீறு. கச.] 'இது, செல்வமழியாது என்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

களக. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தங்கே திரு.

(இ - ள்.) அறன் அறிந்து - (இஃது) அறமென்று அறிந்து, வெஃகா- (பிறர்பொருளை) விரும்பாத, அறிவு உடையார் - அறிவுடையாரை, திரு - திருமகள், திறன் அறிந்து - (தான் அடைதற்கு ஆங்) கூற்றினை அறிந்து, ஆங்கே - அக்கூற்றுனே, சேரும் - சென்று அடையும்; (எ - று.)

அடைதற்கு ஆம் கூறு - காலமும் இடனும் செல்வியும் முதலாயின.

இவையிரண்டுபாட்டானும் வெஃகாமையின் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) இஃது - விரும்பாமை. அடைதற்கு ஆம் கூறு - அடைவ தற்குஏற்ற உபாயம். அக்கூற்றுனே சென்றுஅடையும் - அவ்வுபாயத்தாலே போய்ச் சேர்வள். செல்வி - மனமகிழ்ச்சியும், முகமலர்ச்சியும், இன்சொல் லும் உடையளு யிருக்குஞ் சமயம். ஆங்கே - அப்பொழுதே யென்றும் பொருள்கொள்ளலாம். 'இது, செல்வமுண்டாமென்றது' என்பது, மணக் குடியருரைவாக்கியம். (கூ)

கஅ0. இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) எண்ணுது - (பின்விளைவது) அறியாது, வெஃகின் - (ஒரு வன் பிறன்பொருளை) வௌவக்கருதின்,—(அக்கருத்து),—இறல் ஈனும் - (அவனுக்கு) இறுதியைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு - (அப் பொருளை) வேண்டாமை யென்னுஞ் செல்வம், விறல் ஈனும் - வெற்றியைப் பயக்கும்; (எ - று.)

பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனும்' என்றும், அப்பொருளை வேண்டி உழல்வோர்யாவரையுங் கீழ்ப்படுத்தலின் 'விறலீனும்' என்றுங் கூறி னுர். செருக்கு - ஆகுபெயர்.

இதனுன், அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

(கு - ரை.) பின்விளைவது-பின்புஉண்டாகும் பயனுகிய தீமை. இறுதி- நாசம்; இம்மையிற் பகைவராலும், மறுமையிற் பாவத்தாலும் எனக் காண்க.

பயக்கும் - தரும். உழல்வோர் - அலைபவர். செருக்கு - மனக்களிப்புக்குக் காரணமான செல்வத்தைக் குறித்ததனால், காரியவாகுபெயர். அவ்வீருமையும் - வெஃகுதலின்குற்றமும், வெஃகாமையின்குணமும். ஒருங்கு-ஒருசேர. இறல் - தொழிற்பெயர்; இறு - பகுதி. 'வேண்டாமையென்னுஞ் செருக்கு' என்றது, காரியத்தைக் காரணமாக உபசரித்தபடி. 'இது, உயிர்க்கேதுதரு மென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கo)

ககூ - ஆம் அதிகாரம்—புறங்கூறுமை.

அஃதாவது - காணுதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது, அழுக்காறுமைவெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) காணுதவழி - காணுதஇடத்தில். அழுக்காறும், வெஃகாமையும் - மனக்குற்றம். புறங்கூறல் - மொழிக்குற்றம். மனக்குற்றங் காரணமாகச் சொற்குற்றம் உண்டாவது, அதிகாரமுறைமைக்குக் காரணம்.

கஅக. அறங்கூ றல்ல செயினு மொருவன்
புறங்கூ றனென்ற லினிது.

(இ - ள்.) ஒருவன்—, அறம் கூறான் - அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது, அல்ல செயின் உம் - பாவங்களைச் செய்யுமாயினும், புறங்கூறான் என்றல் இனிது - (பிறனைப்) புறங்கூறுனென்று (உலகத்தாராற்) சொல்லப்படுதல் நன்று; (எ - று.)

புறங்கூறுமை, அக்குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத்தோன்று மென்பதாம்.

இதனுன், அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) அக்குற்றங்கள் - தருமமென்பதை வாயினுற் சொல்லுவதுஞ் செய்யாமற் பாவஞ்செய்தலினு லாகிய குற்றங்கள். இழிக்கப்படாது - கீழ்ப்படுத்தப்படாமல். அவ்வறம் - புறங்கூறுமை. புறங்கூறுமை எல்லாக்குற்றங்களையும் அடக்கிவிடும் என்பது, கருத்து. அறங்கூறான் என்பதில்,கூறன்-வினைமுற்றுவினையெச்சம். என்றல் - செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. 'இது, பாவஞ்செய்யினும் நன்மை பயக்கு மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். இனி, நல்ல எனப் பதம்பிரித்து, இக்குறளுக்கு-ஒருவன் (எவராலும்) ஒருதருமமும் (தனக்குச்) சொல்லவேண்டாதவனுய்(த் தானே எல்லாத்தருமங்களையும் அறிந்து) நல்வினைகளையே செய்துவந்தானுயினும் (அவனுக்கும் பிறனைப்) புறங்கூறனென்பது (அவ்வெல்லாத் தருமங்களினும்) நன்மைதருவதாம் என்றும் உரைகூறவும்இடமுண்டு: "தீய, புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும், அறங்கூற வேண்டா வவற்கு" என்னும் நாலடியார்ச்செய்யுளை நோக்குக. (க)

கஅஉ. அறனழீஇ இயல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(இ - ள்.) அறன் அழீஇ - அறமெனப்படுதான்று (இல்லையென) அழித்துச்சொல்லி, அல்லவை செய்தலின் - (அதன்மேற்) பாவங்களைச் செய்தலினும், தீது - தீமையுடைத்து: புறன் அழீஇ - (ஒருவனைக்) காணுதவழி (இகழ்ந்துரையால்) அழித்துச்சொல்லி, பொய்த்து நகை-(கண்டவழி அவனெதி) பொய்த்து நகுதல்; (எ - று.)

உரழ்ச்சி - நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல்-ஒளியைக்கோறல்.

(கு - ரை.) இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லி - நிந்தைமொழியால் அவன்புகழைக்கெடுத்துப்பேசி. பொய்த்துநகுதல்-பொய்யாய்நகைத்து வெளியன்பு பாராட்டுதல். செய்தலின் என்பதிலுள்ள இன்என்னும் ஐந்தனுருபு-காட்டிலும்என்னும் உறழ்ச்சிப்பொருள்பட நின்றது. அறனையழித்துச்சொல்லுதலினும் ஒருவனைப்புறங்கூறுதல் தீயதென்றும், அதன்மேற்பாவஞ்செய்தலினும் அதன்மேல் அவனெதி பொய்த்துநகுதல் தீயதென்றும் முறையே இயைத்துக் கருத்துக்கொள்க: முறைநிரல்நிறைப்பொருள்கோள்: அதனிலக்கணம் - வரிசையாகச்சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவற்றையும் முறையே சொல்லுதலாம். ஒளியைக்கோறல் - பெருமையைக்கெடுத்தல். அழியென்னும் பகுதி, அழித்து என்னும் வினையெச்சத்தின் பொருளைத் தரும்பொருட்டு, ஈண்டு அளபெடுத்ததனால், சொல்லிசையளபெடை. எ - தேற்றம். நகை - தொழிற்பெயர்; நகு - பகுதி, ஐ - விகுதி: நகை - பகுதியாயின், முதனிலைத்தொழிற்பெய ரென்க. அறனழீஇ என்பதற்கு - (பிறர்செய்யுந்) தருமங்களை அழித்து என்றும் பொருள் கொள்ளலாம். 'இது, பாவத்தினும் மிக்கபாவ மென்றது'என்பது, மணக்குடியருரை.

கஅஈ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(இ - ள்.) புறம் கூறி - (பிறனைக்) காணுதவழி இகழ்ந்துரைத்து, பொய்த்து - (கண்டவழி அவற்கு இனியனைப்) பொய்த்து, உயிர் வாழ்தலின்-(ஒருவன்) உயிர்வாழ்தலின், சாதல் - (அதுசெய்யாது) சாதல்,—அறம் கூறும் ஆக்கம் தரும் - (அவனுக்கு) அறநூல்கள்சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

பின், புறங்கூறிப்பொய்த்தல் ஒழிதலின், 'சாதல் ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம் - அஃதெதிர்ந்தார் மறுமைக்கண் எய்துப் பயன். அறம்-ஆகுபெயர். தருமென்பது, இடவழுவமைதி.

(கு-ரை.) உயிர்வாழ்தலின்-ஜீவித்தலைக்காட்டிலும். பின்-இறந்தபின்பு. ஆக்கமாவது - புறங்கூறுமவிறந்தவர் மறுமையில் அடையும் இன்பம். அறம்-தருமசாஸ்திரத்தை உணர்த்தலால், காரியவாகுபெயர். 'அவனுக்குக் கொடுக்கும்' என்னுமல், "அவனுக்குத்தரும்" என்றது, இடவழுவமைதி; தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்தில் "அவற்றுள், தருசொல்வரு சொல் லாயிரு கிளவியுந், தன்மைமுன்னிலை யாயிரிடத்த"என்னுஞ் சூத்திரத்தின்படி தன்மைமுன்னிலைகளுக்கு உரிய தருசொல், அதற்குமாறாக இங்கே படர்க்கையிடத்துக்கு வந்தமையால் இடவழுவாகி, "செலவினும் வர

வினுந்தரலினுங் கொடையினும், நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம்மூ விடத்து மூரிய வென்ப'' என்னும் பொதுவிதியால் அமைக்கப்படுதலால், வழுவமைதியாயிற்று:''எனை யிரண்டு மேனை யிடத்த''என்னுஞ் சூத்திரத்தால், 'செல்'என்னும்வினையோடு 'கொடு' என்னும் வினையே, படர்க்கைக்கு உரியதாமாறு உணர்க. வழுவமைதியாவது - இலக்கணக்குற்றமுள்ளதாகக் காணப்பட்டாலும் முன்னோரால் அங்கீகரித்து அமைக்கப்பட்டது. அது செய்யாது-அங்ஙனம்வாழாமல். இனி, இக்குறளுக்கு - தற்கொலை செய்தலினும் புறங்கூறுதல் தீயதென்று கருத்து உரைத்தலுமாம். (ரு)

கஅசு. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ - ள்.) கண் நின்று-(ஒருவன்) எதிரே நின்று, கண் அற சொல்லின் உம் - கண்ணோட்டமறச் சொன்னலையினும், முன் இன்று-அவனெதிரின்றி, பின் நோக்கா சொல் - பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க - சொல்லாதொழிக; (எ - று.)

பின் - ஆகுபெயர். சொல்வான்தொழில், சொல்மேல் ஏற்றப்பட்டது.

இவை மூன்றுபாட்டானும், புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

(கு - ரை.) கண்ணோட்டமறச் சொன்னலையினும் - தாட்சிணியமில்லாமற் பேசினலும். பின்னோக்காச்சொல் - நிந்தைமொழி. பின் என்பது - பின் காலத்தில் உண்டாகுங் குற்றத்தைக் குறித்தலால், காலவாகுபெயர். பிற்பயனைநோக்காதவனது சொல்லை 'பின்னோக்காச்சொல்' என்றது - உபசார வழக்கு; 'பின்னோக்காச்சொல் என்பது-ஒருபொருளின்வினை மற்றோர்பொருளின்வினையான இலக்கணை' என்று பிரயோகவிவேகநூலாசிரியர்கூறியிருக்குமாறு அறிக. புறங்கூற்று - புறங்கூறுதல். கண் - ஒருவர்மேற் கண் சென்ற விடத்து உண்டாகிற முகதாட்சிணியத்தை இலக்கணையாற் குறித்தது. தன்னைவைபவனைப் பொருமல் தான் வைவதாயிருந்தாலும் எதிரிலே வைய வேண்டுமேயன்றிப் புறத்தே வசைகூறலாகா தென்பது, இதன்கருத்து. இன்று - எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம், ஈறுதிரிந்தது. இனி, இக்குறளுக்கு, முன் நின்று - தன்எதிரில் நின்று, (ஒருவன்), கண் இன்று - தாட்சிணியம் இல்லாமல், கண்அற - (தன்) பெருமை கெடும்படி, சொல்லின் உம் - பேசினலும், பின் - (அவனது எதிரிலேயன்றிப்) புறத்தே, நோக்கா சொல் - ஆராய்ச்சியில்லாதசொற்களை, சொல்லற்க-சொல்லாதொழிக என்று உரை கூறினும் அமையும். ஒருவன்கண்ணெதிரிலேநின்று தாட்சிணியமின்றிக் கடிஞ்சொற் கூறினலுங் கூறலாம்: அவனெதிரிலேயன்றிப் புறத்திலே பழிச்சொற் கூறலாகாது என்று இக்குறட்குப் பொருள்கூறவும் இடமுண்டு. 'இது, புறங்கூறுதல் தவிர்கவென்றது. இதனுல், கடியசொற்கூறலும் ஆகாதென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (ச)

கஅநி. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னண்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ - ள்.) அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - (புறஞ்சொல்லு வானொருவன்) அறனே (நன்றென்று சொல்லினும் அது தன்மனத்தானுய்ச்) சொல்லுகின்றனல்ல னென்பது, புறம் சொல்லும் புன்மையால் காணப் படும் - (அவன்) புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும்; (எ - று.)

மனம் தீதாகலின், அச்சொல் கொள்ளப்படா தென்பதாம்.

(கு - ரை.) மனப்புன்மை - மனக்குற்றம். ஒருவனைக் கண்டவிடத்துப் புகழ்ந்துபேசிக் காணுதவிடத்து இகழ்ந்துபேசுபவன் 'தருமம் நல்லது' என்று பிரசித்தமான விஷயத்தைப் பிறனொருவனுடு எடுத்துச்சொன்னலும், கேட் பவன் இவனதுதன்மையை உள்ளபடி தெரிந்தவனுக இருந்தால், அவ்வார் த்தையைத் தனது முகமலர்ச்சியின்பொருட்டுக் கூறுவதாக நினைப்பானே யன்றி மனப்பூர்வமாகச்சொன்ன தென்று நினைக்கமாட்டா னென்பது, கரு த்து. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் - தருமத்தை நல்லதெனச் சொல்ல வேண்டுமென்னும் மனமுடையவன். இதனை 'நெஞ்சொ டறஞ்சொல் வான்' என வீருதிபிரித்துக் கூட்டுவர், பிரயோகவிவேகநூலார். இனி, இக் குறளுக்கு, புறங்கூறுபவனைத் தரும சிந்தையில்லாதவனுக அறியவேண்டு மென்று கருத்துப்பட உரைத்தலுமாம். 'இதனைச்சொல்லுவார் அறம் அறி யா ரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (நி)

கஅசு. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுங்
திறன்றெரிந்து கூறப் படும்.

(இ - ள்.) பிறன் பழி கூறுவான் - பிறனொருவன்பழியை (அவன்புற த்து)க் கூறுமவன்,—தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திறமுடையவற்றைத் தெரிந்து (அவனுக்) கூறப் படும்; (எ - று.)

'புறத்து' என்பது, அதிகாரத்தாற் பெற்றும்; இது, வருகின்றவற்றிற் கும் ஒக்கும். திறன் - ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவன் இறந்துபட்டுஉளையுந்திறத்தனவாகிய பழிகளே நாடி எதிரேகூறுமாகலின், 'திறன்றெரிந்து கூறப்படும்' என்றார்.

(கு - ரை.) உளையுந்திறமுடையவை - வருத்தப்படுத்தும் வலிமையுடை யவை. தெரிந்து - ஆராய்ந்தறிந்து எடுத்து. புறங்கூறுமையென்னும் அதி காரத்துக்கு ஏற்ப, கூறுவான் என்றவிடத்து 'புறத்து' என்னுஞ்சொல் வரு விக்கப்பட்டது; அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனே 'ஆநுஷங்கிகம்' என் பர், வடநூலார். வருகின்றவற்றிற்கும் என்றது, மேல் "பகச் சொல்லி", "தூற்றுமரபினர்" என்றவை முதலிய இடங்களுக்கும். திறன் - வலிமையு டைய பழிச்சொற்களுக்குப் பண்பாகுபெயர். ஒருவனை மற்றொருவன் ஒரு

காற் புறங்கூறினால் அக்கூறப்பட்டவன் கூறியவன்மேல் பெரும்பழிகள் பல கூறி அவனுக்குப் பெருந்துன்பங்களை உண்டாக்கிவிடுவானாதலாற் புறங்கூறலாகாதென்பது, கருத்து. இனி, இக்குறளுக்கு - பிறன்பழியைப் புறங்கூறுபவன் (அப்புறங்கூறுதலாகிய) தன்பழியை(ப் பெரியோர்யாவரும்) நினைக்குந்தன்மையை ஆராய்ந்து கூறவேண்டுமென்றும் உரைகூறலாம்; இவ்வாறு தன்பழியை ஆராய்வானாயின் தானே புறங்கூறானாகி நிற்பானென்பது, கருத்து: புறங்கூறுதலாகிய தன்பழியைத் தானறிவானாயின் அவனுக்குத் தன்பழியே உயர்ந்துகாணப்படுமாதலாற் பிறன்பழியைக் கூறவேமாட்டானென்க; இவ்வுரையில், உள்ளுமென்பது - எதிர்காலப்பெயரெச்சம். இக்குறளில், எதிர்மறைமுகத்தால், பிறனைப் புறத்தேபழிகூறாதவன் தானும் பிறராற் பழிகூறப்படான் என்னுங் கருத்துத் தோன்றுதல் காண்க. (சு)

கஅஎ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

(இ - ள்.) பக சொல்லி - (தம்மைவிட்டு) நீங்குமாற்றாற் புறங்கூறி, கேளிர் பிரிப்பர் - (தம்) கேளிரையும் பிரியப்பண்ணுவர்: நக சொல்லி நட்பு ஆடல் தேற்றாதவர் - கூடிமகிழுமாறு (இனியசொற்களைச்) சொல்லி (அயலாரோடும்) நட்பாடலை அறியாதார்; (எ - று.)

சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. 'கேளிரையும் பிரிப்பர்' என்ற கருத்தான், 'அயலாரோடும்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது. அறிதல்-தமக்கு உறுதியென்று அறிதல். "கடியு,மிடந்தேற்றாள் சோர்ந்தனள்கை" என்புழிப்போல, தேற்றாமை - தன்வினையாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

(கு - ரை.) நீங்குமாற்றால் - பிரியும்படி. கேளிர்-சிநேகிதரும், சுற்றத்தாரும்: க்ஷேமசமாசாரங்களைக் கேட்பவராதலால், 'கேளிர்' என்றுபெயர்: கேள்-பகுதி; இதனைக் கேண்மையென்னும் பண்புப்பெயரின் அடியென்றுங் கொள்ளலாம்; இர் - பலர்பாற்பெயர்விகுதி. நட்பாடல் - சிநேகஞ் செய்தல். கேளிர் என்றவிடத்துத் தொகுத்தல்விகாரம் பெற்ற உம்மை - உயர்வு சிறப்புப்பொருளது. உறுதியென்று - நன்மையென்று. "கடியு, மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை"என்னும் மேற்கோள் கலித்தொகை, மருதக்கலி, உஎ-இல் உள்ளது; இதற்கு - (வண்டுகளை) ஓட்டுமிடம் அறியாளாய்க் கைசோர்ந்தாளென்று பொருள். தேற்றாமை யென்பதைத் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது வென்றாயினும், தன்வினைப்பொருளில்வந்த பிறவினை யென்றாயினும், தேறாமை யென்பதன் விரித்தல்விகார மென்றாயினுங் கொள்க; "தேற்றாய் பெரும நின்பொய்யே"எனப் புறநானூற்றிலும், "வாளினாற் பேசினல்லால் வாயினாற்பேசல் தேற்றேன்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. இது 'நட்டவரையிழப்பரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (எ)

கஅஅ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(இ - ள்.) துன்னியார் குற்றம்உம் தூற்றும் மரபினர் - (தம்மொடு) செறிந்தாரது குற்றத்தையும் (அவர்புறத்துத்) தூற்றும் இயல்பினையுடையார், எதிலார்மாட்டு என்னை கொல்-அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ?

தூற்றுதல் - பலரும்அறியப் பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணுமையின், 'என்னைகொல்' என்றார். செய்வது என்பது, சொல்லெச்சம். 'என்னர்கொல்' என்று பாடமோதி, எவ்வியல்பினராவ ரென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) செறிந்தார் - கலந்தவர்; நண்பரும், உறவினரும். அதனிற் கொடியது பிறிதொன்று காணுமையின் - புறத்தே பழிகூறுதலினுங் கொடுமையுடையது வேறொன்று காணப்படாமையால். அயலாரிடத்திற் செய்யத்தகாதது இதுவென்று அவரால் நினைக்கப்படுவ தொன்றும் இல்லையென்பார் 'என்னைகொல்' என்ரு ரென்றுங் கொள்ளலாம். எவ்வியல்பினராவர் - எந்தக்குணத்தை யுடையவராவர்? குற்றமும், உம்மை - உயர்வுசிறப்பு. 'என்னர்' என்ற பாடத்திற்கு, அச்சொல் விளிவடியாப்பிறந்த பலர்பாற் குறிப்புமுற்று; ன் - சாரியை, மற்றொரு ன் - சந்தி: அன்னர், இன்னர்என்பவற்றிற்போல. எதிலார் - யாதொருசம்பந்தமுமில்லாதவர். புறங்கூறுபவர் மற்றெந்தத் தீவினைக்கும் அஞ்சா ரென்க. 'இது, யாவரோடும்பற்றில ரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

கஅகூ. அறனேக்கி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(இ - ள்.) புறன் நோக்கி - (பிறர்) நீங்கினஅளவு பார்த்து, புல் சொல் உரைப்பான் - (அவர்)*பழிப்புரையை உரைப்பானது, பொறை-உடற்பாரத்தை, வையம் - நிலம், அறன் நோக்கி-(இக்கொடியதுபொறுத்தலே எனக்கு) அறமாவதென்று கருதி, ஆற்றும் கொல் - பொறுக்கின்றதுபோலும்; (எ-று.)

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும் இது பொறுத்தற்கரிது என்னுங் கருத்தால், 'அறனேக்கி யாற்றுங்கொல்' என்றார்.

இவை யைந்துபாட்டானும், புறங்கூறுவார்க்கு எய்துங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) நீங்கினஅளவு - நீங்கியசமயமாத்திரத்தை. அவர் பழிப்புரை - அவர்களுடையகுற்றங்களேக்காட்டுகிறநிந்தைச்சொல். உடற்பாரம் - உடம்பின்சுமை. இயல்பு - ஸர்வம்ஸஹாபான பூமிக்குச் சுபாவகுணம். கருக - ஆம் திருக்குறள் காண்க. பாவிகளுடைய உடம்பைப் பூமிதேவிக்குப் பார மென்பது, நூற்கொள்கை; ''தேமிசேர் தடங்கையினனே நினேப்பிலாவலிநெஞ்சுடைப், பூமிபாரங்கள்'' என்பது முதலியவற்றுல் அறிக. கொல் என்னும் இடைச்சொல், இங்கே தற்குறிப்பேற்றவணிக்கு உறுப்பாய் நின்றது. பொறை - பொறுக்கப்படுவது: பொறுத்தல் - சுமத்தல், ஐ - செயப்படுபொருள்விகுதி. புறங்கூறுவானுடம்பு பூமிக்குப் பாரமென்க.

* பி - மீ: பழித்துரையை.

ககூ0. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(இ - ள்.) ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் - (ஏதிலாரைப்புறங்கூறுவார் அதற்கு) அவர்குற்றம் (காணுமாறு) போல(ப் புறங்கூறலாகிய)தம் குற்றத்தையும் காணவல்லராயின், மன்னும் உயிர்க்கு (அவர்) நிலேபேறுடைய உயிர்க்கு, தீது உண்டு ஓ - வருவதொரு துன்பமுண்டோ?

நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமைநோக்கி 'காண்கிற்பின்' என்றும், கண்டவழிஒழிதலின் டாவம்இன்மை மாகவே வரும் பிறவிகளிலுந் துன்பமில்லே யென்பதுநோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' என்றும் கூறினர்.

இதனுன், புறங்கூற்றொழிதற்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமை - நடுவுநிலேமையிலே நின்று சமனுகக்காண்பதன் அருமை. ஒழிதலின்-புறங்கூறுதலே நீங்குதலால். 'காண்கிற்பின்' என்னும் எதிர்காலவினேயெச்சம், 'உண்டோ' என்கிற ஓகாரத்தைஈற்றிலேகொண்ட குறிப்புவினேகையக் கொண்டுமுடிந்தது. ஜீவாத்மாவும் பரமாத்மாவைப்போல நித்தியமாதலால், 'மன்னுமுயிர்' எனப்பட்டது.

உ0-ஆம் அதிகாரம்—பயனிலசொல்லாமை.

அஃதாவது - தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களேச் சொல்லாமை. பொய், குறளே, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம்நான்கனுள், பொய் - துறந்தார்க்கல்லது ஒருதலேயாகக் கடிய லாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனேமூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளே புறங்கூறுமையானும் விலக்கி, நின்ற பயனில்சொல் இதனுன் விலக்குகின்ற ராகலின், இது, புறங்கூறுமையின்பின் வைக்கப்பட்டது.

(கு-ரை.) பயவாத-தராத. நிகழும் - உண்டாகும். சொல்லிற்றேன்றும் தீவினே பொய்முதலாக நான்குவகைப்படு மென்பது, "பொய்யேகுறளேகடுஞ் சொற்பயனில், சொல்லெனச் சொல்லிற் றேன்றுவ நான்கும்" என்னும் மணிமேகலேயிலுங் காணலாம்.பொய் துறந்தார்க்கல்லது ஒருதலேயாகக்கடியலாகாமையின்-பொய்யானது துறவறத்தார்க்கேயல்லாமல் இல்லறத்தார்க்கு முழுவதும்விலக்கப்படாமையால்; மணங்கூட்டுவிக்கும் பொருட்டும், ஊடலேத்தீர்த்தற்பொருட்டும், உயிர்க்கொலேயைவிலக்கும் பொருட்டும், எல்லாப்பொருளேயும் இழத்தலினின்றும் நீங்கும் பொருட்டும், மற்றுஞ்சில நன்மையின்பொருட்டும் இல்லறத்தவர் பொய்சொன்னலுஞ் சொல்லலாமென்பது, நூல்துணிபு. இதுபற்றியே இந்நூலாசிரியர் வாய்மையென்னும் அதிகாரத்தை இல்லறவியலில் வையாமல் துறவறவியலில்வைத்தது. ஏனேமூன்று - குறளே, கடுஞ்சொல், பயனில்சொல். இனியவைகூறல் - கீழ்ப் பத்தாமதிகாரம். இது - இவ்வதிகாரம். மொழிக்குற்றங்களுள் பயனில சொல்லுதல் புறங்கூறுதலுக்கு இனமாதலால், அதன்பின் வைக்கப்பட்டதென்க. பயன் பயம் என்பதன் ஈற்

றுப்போலி. இல - எதிர்மறைப் பலவின்பாற் பெயர். பயனில்லாத என்றுல், இன்மை - செயப்படுபொருள் குன்றியதும், பயனையுடைத்தாகாத என்றுல், இன்மை - செயப்படுபொருள் குன்றுததுமாம். பயனில்லாத சொற்களைச் சொல்லுங் காலத்திலே, பயனுடையசொற்களைச்சொல்லுதலும் பயனுடைய தொழில்களை யியற்றுதலுஞ் செய்தால், மிக்க புகழ்புண்ணியங்களை அடையலா மாதலால், அதற்கு விலக்கான பயனிலசொல்லுதல் குற்றமாயிற் றென்க.

ககூக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ - ள்.) பல்லார் முனிய - (அறிவுடையார்)பலருங்கேட்டு வெறுப்ப, பயன் இல சொல்லுவான் - பயனிலவாகியசொற்களைச் சொல்லுவான், எல்லார்உம் எள்ளப்படும் - எல்லாராணும் இகழப்படும்; (எ - று.)

அறிவுடையார்பலரும் * வெறுப்பவே, ஒழிந்தாராணும் இகழப்படுதலின், 'எல்லாருமெள்ளப்படும்' என்றுர். மூன்றனுருபு, விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) பயனே ஆராய்தற்குரியவர் அறிவுடையவராதலால், இங்கே 'பல்லார்' என்றது, அவர்மேல்நின்றது. ஒழிந்தாராணும் - அறிவில்லாதவர்களாலும். ஆன் என்னும் மூன்றுமுருபு தொக்கது, 'எல்லாரும்' என்றவிடத்தில். 'இது, பிறரால்இகழப்படுவனென்றது' என்பது, மணக்குடியருரை.

ககூஉ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(இ - ள்.) பயன் இல-பயனிலவாகிய சொற்களை, பல்லார் முன் சொல்லல் - (அறிவுடையார்) பலர் முன்பே (ஒருவன்) சொல்லுதல்,—நயன் இல - விருப்பமிலவாகிய செயல்களை, நட்டார்கண் செய்தலின் - (தன்) நட்டார் மாட்டுச் செய்தலினும், தீது—; (எ - று.)

விருப்பமில - வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக இகழற்பாடு பயக்கு மென்பதாம்.

(கு - ரை.) நட்டார் - நண்பர்; நள் - பகுதி. பயனில்லாதவற்றைச் சொல்லுதல் நண்பர்க்குத் தீங்குசெய்தலினும் அதிகதீங்கையைத் தரு மென்பது, கருத்து. இல - பெயர். முன் என்னும் இடைச்சொல் - இங்கே, இடப் பொருளது. 'இம்மை மறுமை யிரண்டின்கண்ணும் நீமைபயக்குமாறுயிற்று' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (உ)

ககூங. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு மூரை.

(இ - ள்.) பயன் இல - பயனிலவாகிய பொருள்களை, பாரித்து உரைக்கும் - (ஒருவன்) விரித்து உரைக்கும், உரை - உரைதானே,—நயன் இலன் என்பது சொல்லும் - (இவன்) தீதிலில னென்பதனை † உரைக்கும்; (எ - று.)

* பீ - மீ: கேட்டு வெறுப்பவே. † பீ - மீ: உணர்த்தும்.

உரையால் இவன் பயனிலனென்பது அறியலா மென்பார், அதனை உரைமே லேற்றி 'உரைசொல்லும்' என்றார்.

(கு - ரை.) பொருள்கள் - விஷயங்கள். விரித்து உரைக்கும் உரை - விவரித்துச் சொல்லுஞ் சொல். சொல்லும் - அறிவிக்கும். 'இம்மையின்கட் பிறரால் விரும்பப்படா ரென்று கூறப்பட்டது' என்பது, மணக்குடியருரை.

ககூச. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(இ - ள்.) பயன் சாரா - பயனெடுபடாத, பண்பு இல் சொல் - பண்பில் சொற்களை, பல்லாரகத்து - (ஒருவன்) பலரிடை(ச் சொல்லுமாயின்), (அவை), நயன் சாரா - (அவர்மாட்டு) நீதியோடுபடாவாய், நன்மையின் நீக்கும் - (அவனை) நற்குணங்களின் நீக்கும்; (எ - று.)

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். 'சொல்லுமாயின்' என்பதும், 'அவர்மாட்டு' என்பதும் எச்சமாகவருவிக்கப்பட்டன.

(கு - ரை.) பயனெடுபடாத - பிரயோஜனத்தோடு கூடாத. பண்பில் சொற்கள் - குணமில்லாத வார்த்தைகள். பலரிடை-பலபேர்கடுவில். நீதி-முறைமை. படாஆய்-பொருந்தாதவையாய். மெய்ம்மை-உண்மை. 'முதலாய' என்றதனால், நீமைபயவாமை கேட்டாரைத்தன்வசப்படுத்தல் முதலியன கொள்க. எச்சம் - சொல்லெச்சம். சாரா என்னுஞ்சொல் இரண்டனுள் முன்னதை - எதிர்மறைப்பலவின்பால் முற்றெச்சமாகவாயினும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகவாயினுங் கொள்க. பின்னது - பெயரெச்சம். 'பல்லா ரகத்து' என்பதில் 'அகத்து' - ஏழனுருபு; "உள் அகம் புறம் இல் இடப்பொரு ளுருபே" என்பது காண்க. 'இது விரும்பப்படாமையுமன்றி நன்மையும் பயவாது என்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கூ)

ககூடு. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(இ - ள்.) பயன் இல - பயனிலவாகிய சொற்களை, நீர்மை உடையார் - இனியநீர்மையுடையார், சொலின் - சொல்லுவராயின்,—சீர்மை - (அவரது) விழுப்பமும், சிறப்பொடு - (அதனால்வரும்) நன்குமதிக்கற்பாடும், நீங்கும் - (உடனே) நீங்கும்; (எ - று.)

நீர்மை - நீரின்தன்மை. 'சொலின்' என்பது, சொல்லாமையை விளக்கிற்று.

(கு - ரை.) விழுப்பம் - புகழ். நன்கு மதிக்கற்பாடு - நன்றாகமதிக்கப் படுதல்: கௌரவம். "விழுமம் சீர்மையும் சிறப்பு மிடும்பையும்" என்னுஞ் சூத்திரத்தைக்கொண்டும், சீர்மையும் சிறப்பும் வேறுதலை அறிக. 'சிறப் பொடு' என்பதிலுள்ள 'ஒடு' என்னும் எண்ணிடைச்சொல்லை எடுத்துச் சீர்மையென்பதனோடுங் கூட்டுக. 'இது, நீர்மையுடையராயினும் எல்லாநன் மையும் பேரம்என்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். 'நீர்மை-நீரின்

தன்மை' என்றவிடத்து "தாழ்ந்து,சொற்படு சீதத்தொடு சுவையுடைத்தாய், இழிநிலஞ்சேர்ந் தாழ்வது நீர்" என்ற மணிமேகலையும், "நீ மூரணிய நீரும் என்ரூங், கைம்பெரும் பூதத் தியற்கைபோல,.....அளியு முடையோய்" என்ற புறநானூறும் அறியத்தக்கன. தண்மைக்கும், இனிமைக்கும், மிக வுதவுதற்கும் நீர் எடுத்துக்காட்டாம். (சு)

ககூசு. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனன்
மக்கட் பதடி யெனல்.

(இ - ள்.) பயன் இல் சொல் பாராட்டுவானை - பயனில்லாத சொற்க ளைப் பலகாலுஞ்சொல்லுவானை, மகன் எனல் - மகனென்று சொல்லற்க; மக்கள் பதடி எனல் - மக்களுட் பதரென்று சொல்லுக; (எ - று.)

'அல்' விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டி னும் வந்தது. அறிவு என்னும் உள்ளீடு இன்மையின், 'மக்கட்பதடி' என்றார்.

இவையாறுபாட்டானும், பயனில்லாதசொற்களைச் சொல்லுதலின் குற் றம் கூறப்பட்டது.

(கு - ரை.) பாராட்டுதல்-மிகப்பயிலுதல். பலகாலும்-பலதரமும். மக னென்று சொல்லற்க - மனிதனென்று சொல்லவேண்டாம். மக்களுள்-மனி தர்களுள். பதர்-உள்ளீடில்லாத தானியம்; இங்கே, அதுபோலச் சாரமான அறிவு இல்லாதவன். எனல் என்னும் சொல்லெச்சம் - என்று சொல்ல என, சொல்என்னும் தன்னெச்சத்தைக் கொண்டது. இனி, ஒருவன் பேசும் பய னில்லாத சொற்களைக் கொண்டாடுபவனை மனிதனென்று எண்ணவேண் டா என்றும் உரைக்கலாம். 'இது, மக்கட்பண்பில னென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (சு)

ககூஎ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(இ - ள்.) நயன் இல - நீதியோடு படாத சொற்களை, சான்றோர்—, சொல்லின்உம் - சொன்னராயினும், சொல்லுக-அஃது அமையும்;பயன் இல சொல்லாமை - (அவர்) பயனில்லவற்றைச் சொல்லாமை (பெறின், அது), நன்று—; (எ - று.)

'சொல்லினும்' எனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றி னும் பயனில தீய வென்பதாம்.

(கு - ரை.) அமையும் - பொருத்தும். அநீதியானவார்த்தைகளினும் பய னில்லாதவார்த்தைகள் கொடியன என்பது கருத்து. இனி, இதற்கு, கடிஞ் சொற் சொல்லினும் பயனில்சொல் தீயதென்றுங் கருத்துக்கொள்ளலாம்; கடிஞ்சொல்லுஞ் சிறுபான்மை நன்மைபயக்கு மாதலின். 'இது, சான்றோர்க்கு ஆகா தென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (எ)

ககூஅ. அரும்பய னுய *மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

* பி - மீ:—அறிவுளர்.

(இ - ள்.) அரு பயன்-(அறிதற்கு) அரிய பயன்களே, ஆயும்-ஆராயவல்ல அறிவினர் - அறிவினையுடையார்,—பெரு பயன் இல்லாத சொல் - மிக்க பயனுடைய வல்லாத சொற்களே, சொல்லார்—; (எ - று.)

அறிதற்கு அரிய பயன்களாவன :- வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. 'பெரும்பயனில்லாத' எனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன.

(கு - ரை.) மிக்கபயனுடையவல்லாத - பெரும்பிரயோசனத்தை உடைத்தானவையல்லாத. வீடுபெறு - முத்திபெறுதல். மேற்கதிச்செலவு - சுவர்க்கம் முதலிய மேலானபதவிகளிற் செல்லுதல். முதலாயின என்றது, புகழ் முதலியவற்றை. 'வேறு கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், இதனை அறிவுடையார் கூறுரென்றது' என்பது, மணக்குடியருரை. (அ)

கஉஉ. பொருளுர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருளுர்ந்த
மாசறு காட்சி யவர்.

(இ - ள்.) பொருள் தீர்ந்த - பயனின் நீங்கிய சொற்களே, பொச்சாந்து உம் - மறந்தும், சொல்லார்—; மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தின் நீங்கிய தூய அறிவினையுடையார்; (எ - று.)

தூயஅறிவு - மெய்யறிவு. 'மருளுர்ந்த' என்னும் பெயரெச்சம், 'காட்சியவர்' என்னுங் குறிப்புப்பெயர் கொண்டது.

இவைமூன்றுபாட்டானும், பயனிலசொல்லாமையின் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) தூய - குற்றமற்ற. மெய்யறிவாவது - பிறப்பு முத்திகளையும் அவற்றின்காரணங்களையும் சந்தேக விபரீதங்களின்றி உண்மையாக அறிதல்; இதனை வடநூலார் 'தத்வஜ்ஞாநம்' என்பர். மயக்காவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குகளை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும், இவ்வாறே ஒன்றைப் பிறிதொன்முகத்துணிதலும், அது; மயக்கம், மருள், விபரீதவுணர்வு, அவித்தை என்பன - ஒருபொருட்சொற்கள். மாசு அறு காட்சி என்றது, கேவல அறிவை. மேல் மெய்யுணர்தலென்னும் அதிகாரத்தில் "மருணீங்கி, மாசறு காட்சி யவர்க்கு" என வருதலுங் காண்க. தீர்ந்த காட்சியவர் என்க. தீர்ந்த என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - பெயர். பின்னது - பெயரெச்சம். தீர்ந்த என்பது காட்சியவர்க்கு விசேஷணமே யன்றி, காட்சிக்கு விசேஷணமன் றென்க. குறிப்புப்பெயர் - குறிப்புவினையாலணையும் பெயர். பொச்சாந்து, பொச்சா - பகுதி; ஒருசொல். 'இது, தெளிவுடையார் கூறுரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கூ)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(இ - ள்.) சொல்லில் - சொற்களில், பயன் உடைய - பயனுடைய சொற்களை, சொல்லுக—; சொல்லில் - சொற்களில், பயன் இலா சொல் - பயனில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லா தொழிக; (எ - று.)

'சொல்லில்' என்பது - இருவழியும் மிகையாயினும், சொற்போருட்பிற் வருநிலை யென்னும் அணியாகக்கி வந்தது; "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பதுபோல.

இதனுல், சொல்லப்படுவனவும், படாதனவும் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) இருவழியும் மிகையாயினும் - இரண்டுவாக்கியங்களிலும் அவசியமில்லாமல் அதிகமாயிருப்பதாலுலும்: ஓரிடத்து இருந்தாற்போது மாலுலும் என்றபடி. வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலமுறை வருதல், சொற்பொருட்பின்வருநிலையணியாம்; "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற் றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" என்னும் காலடியார்ச்செய்யுளில், வைகலென்னுஞ்சொல் பலதரம்வருதல் காண்க. நியமிக்கப்பட்டன-வரையறுத்துச்சொல்லப்பட்டன. இனி, சொல்லின் என்று எடுத்து - சொல்லவேண்டுமாயின் என்றும், சொல்லுதலினுல் என்றும் பொருள் கூறினும் அமையும். உடைய-பெயர். படாதன-சொல்லப்படாதவை. 'சொல்லின்' என்பதற்கு - 'சொல்லுவதனுயின்' என்பது, மணக்குடியருரைவாக்கியம்.

உக - ஆம் அதிகாரம்— தீவினையச்சம்.

அஃதாவது - பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன், மெய்யின்கண்ணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்ற ராகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வினை - தொழில், கருமம்; அது - நல்வினை, தீவினை என இருவகைப்படும்: தீவினையச்சம் - பாபபயம். பாவங்களாயின - பாவத்தைத் தரக்கூடிய கொடுந்தொழில்களை. "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும், எச்சமிலவேபொருள்வயினுன" என ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறிய விதி பற்றி, தீவினையச்சம் என்பதை - தீவினையினின்று அஞ்சுதல் என ஐந்தாம் வேற்றுமையாகவேனும், தீவினையைஅஞ்சுதல்என இரண்டாம்வேற்றுமையாகவேனும் விரிக்கலாம்; தீவினைக்குஅஞ்சுதல் என நான்காம்வேற்றுமையாகவிரித்தல்,உலகவழக்காம். தீவினை-தீமையாகிய செயலெனப் பண்புத்தொகை. இதனுன் - இவ்வதிகாரத்தால். மெய்யின்கண் நிகழும் - உடம்பினுற் செய்யப்படுகின்ற. பயனிலசொல்லாமை, கீழ் இருபதாம் அதிகாரம். பயனிலசொல்லாமையென்னும் அதிகாரத்தின்பின் தீவினையச்சமென்னும் அதிகாரத்தை வைத்ததற்குக் காரணம்,மனத்தின்குற்றத்தைக் கீழ் அழுக்காறுமை வெஃகாமை என்னும் இரண்டுஅதிகாரங்களாற் கூறி, அதன்பின் வாக்கின் குற்றத்தைப் புறங்கூறுமை, பயனிலசொல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களாற் கூறியவர், அதன்பின் மிச்சமாய்நின்ற காயத்தின்குற்றத்தைக் கூறவேண்டுவது முறைமை யாதலா லென்க.

உ0க. தீவினையார் ரஞ்சார் விழுமியார் ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) தீவினை என்னும் செருக்கு - தீவினையென்றுசொல்லப்படும் மயக்கத்தை, தீவினையார் - (முன்செய்த) தீவினையுடையார், அஞ்சார்—; விழுமியார் - (அஃதுஇலராகிய) சீரியார், அஞ்சுவர்—; (எ - று.)

'தீவினையென்னுஞ்செருக்கு' என, காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய் தறியாமையான் 'அஞ்சுவர்' என்றும் கூறினர்.

(கு - ரை.) 'தீவினையென்னுஞ்செருக்கு' என்பதற்கு - பாவமாகிய அவித்யை யென்று பொருள்; இதிலே, தீவினை - அவித்யையின் பயனுதல் லால், காரியம். செருக்கு - அவிச்சை [மனமயக்கம்]; இது-காரணம்: காரிய மாகிய தீவினை, காரணமாகிய செருக்காகக் கூறப்பட்டது. இனி, தீவினை யென்னுஞ் செருக்கு என்பதற்கு - கொடுந்தொழில்செய்தலினுல் வருங் களிப்பு எனப் பொருள்கொண்டு, தீவினையென்னுங் காரணம் செருக்கென் னுங் காரியமாகக் கூறப்பட்டதென்றுரை, பிரயோகவிவேகநூலுடையார்; அதனை, அந்நூலில் ''மருளறு காரணம்'' என்னுஞ் செய்யுளின் உரையிற் காண்க. இவையெல்லாம் இலக்கணநூலில் உபசாரவழக்கு எனப்படும். (உப சாரவழக்காவது - காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும்,குணி குணமாகவும்,ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாகவும், இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேலாகவும், சினைவினை முதல்வினையாகவும், முதல்வினை சினைவினையாகவும் இவ்வாறு ஒன்றன்தன்மை மற்றொன்றில் ஏற்றிக் கூறப்படுதல்: இது, ஆகுபெயரென் கிற இலக்கணைக்கு இனமாம்;) இதனை வடநூலார் ஔபசாரிகப்ரயோகம் என்பர். அஃது இலர்-முன்செய்த தீவினையில்லாதவர். சீரியர்-சிறப்புடை யவர். மேல்தொட்டுச் செய்து கைவந்தமையான்-முற்பிறப்புக்களில் தொடங் கிச்செய்து பழக்கமாயிருத்தலால். விழுமியார் - விழுமம் என்னும் உரிச்சொல் லடியாகப்பிறந்த பலர்பாற்பெயர்: பகுதி, அம் கெட்டு 'விழும்'என நின்றது; இ - சாரியை, ய் - சந்தி, ஆர் - விகுதி. அஞ்சார், அஞ்சுவர் என்னும் இர ண்டுமுற்றுக்களுக்கும் செருக்கு என்னுஞ் செயப்படுபொருளை எடுத்துத் தனித்தனிச் சேர்த்துக்கொள்க. இது, கடைநிலைத்தீவகம். ஒருவன் ஒருபிறப் பிற் செய்யும் கல்வினைக்கு அவன் முற்பிறப்பிற்செய்துள்ள கல்வினையே காரணமாவதுபோல, ஒருவன் ஒருபிறப்பில் தீவினைசெய்தற்கும் அவன் முற் பிறப்பிற்செய்துள்ள தீவினையே காரணமாம்; கல்வினை செய்தற்கு முன்னைத் தீவினை காரணமாகாதவாறுபோல, தீவினைசெய்தற்கும் முன்னை கல்வினை காரணமாகாது என்பது கருத்து. இது, நூல்வழக்குக் கூறியது. இனி, இக் குறளுக்கு - 'கொடுந்தொழில்செய்பவர் பாவத்துக்கு அஞ்சார்; நற்றொழில் செய்பவர் அதற்கு அஞ்சுவர்' என, உலகவழக்கைக் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம். இதனால், விழுமியாரது குணமாகிய தீவினையச்சமே சிறப்பு

டைய தென்றதாயிற்று. முதலடியில் 'தீவினையார்' 'வீழுமியார்' எனவும், அஞ்சார்' 'அஞ்சுவர்' எனவும் மாறுபட்டசொற்கள் வந்தது, முரணேதோடை.

உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ - ள்.) தீயவை - (தனக்கு இன்பம்பயத்தலைக் கருதிச் செய்யுந்) தீவினைகள், தீய பயத்தலான் - (பின் அஃது ஒழித்துத்) துன்பமே பயத்தலான்,—தீயவை-(அத்தன்மையவாகிய) தீவினைகள், தீயின்உம் அஞ்சப்படும்-(ஒருவனுல்) தீயினும் அஞ்சப்படும்; (எ - று.)

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கு இன்மையின், *'தீயினும் அஞ்சப்படும்' என்றார்.

(கு - ரை.) தீவினைகள் - கொடுஞ்செயல்கள். தீய-கெட்டபயன்களை. பயத்தல் - தருதல். பின் - மறுமையில். அஃது - இன்பம். தீயினும்-அக்கினியினும் அதிகமாக. நெருப்பு எந்தக்காலத்தில் எந்த இடத்தில் எந்த உடம் பிற் படுமோ, அந்தக்காலத்தில் அந்த இடத்தில் அந்த உடம்பில்மாத்திரமே சுடும்; தீவினையோ, மறுமைக்காலத்திலும் வேறோர்உலகத்திலும் மற்றொரு சரீரத்திலும்போய் உயிரை வருத்தும்: ஆதலால், தீவினை தீயினுங் கொடிது என்பது கருத்து. இனி, அகமாகிய உயிரை வருத்துகின்ற தீவினைகள் புற மாகிய உடம்பை வருத்துகின்ற நெருப்பினும் பயங்கரமானவை என்றுங் கருத்துக்கொள்ளலாம். 'தொடிற்சுடுமென்று தீக்குஅஞ்சுதலினும் மிக அஞ் சப்படும்' என்பர் மணக்குடியர். உம்மை - இழிவுசிறப்பு. அஞ்சப்படும் - செய்யுமென்னும்வாய்பாட்டுச் செயப்பாட்டுவினைமுற்று; இது - இங்குப் பலவின்பாலுக்கு வந்தது. இரண்டாவதாய்நின்ற 'தீயவை' என்பது, அவ சியமில்லாமல் அதிகமாயிருப்பதாயினும், வந்த சொல்லும் பொருளும் பின் னும் பலமுறை வருகிற சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணியை நோக்கி வந்தது. 'தீயவை தீயினு மஞ்சப்படும்' என்பது, பிரதான வாக்கி யம்; 'தீயவைதீயபயத்தலான்' என்பது, காரணவாக்கியம்: ஏதுவணி. (உ)

உ0ங. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ - ள்.) அறிவினுள் எல்லாம் - (தமக்கு உறுதிநாடும்) அறிவுகளெல் லாவற்றுள்ளும், தலை என்ப - தலையாய அறிவென்று சொல்லுவர், (நல் லோர்): செறுவார்க்குஉம் - (தம்மைச்) செறுவார்மாட்டும், தீய தீவினைகளை, செய்யா விடல் - செய்யாது விடுதலை; (எ - று.)

விடுதற்குக்காரணமாகிய அறிவை 'விடுதல்' என்றும், 'செய்யத்தக்குழி யுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராது' என உய்த்துணர்த லின், அதனை 'அறிவினுளெல்லாந் தலை' என்றுங் கூறினர். 'செய்யாது' என் பது, கடைக்குறைந்து நின்றது.

---

* பி - மீ: தீயினுமஞ்சப்படுவதாயிற்று.

இவைமூன்றுபாட்டானும், தீவினைக்கு அஞ்சவேண்டு மென்பது கூறப் பட்டது.

(கு ரை.) உறுதிநாடும்-நன்மையைத்தேடுகின்ற; 'எல்லாவற்றையும் அறியும்' என்பர் மணக்குடியர். தலைஆய - முதன்மையான. செறுவார் மாட்டும் - வருத்துபவரிடத்திலும்; தமக்குத் தீமைசெய்தார் விஷயத்திலும் என்ற படி. செய்யாதுவிடுதலை என்பது-செய்யாது விடுதற்குக்காரணமாகிய அறிவை என்றபடி; இங்கே காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது: ஆனதுபற்றியே, செய்யாதுவிடுதலை 'சிறந்த அறிவின்பயன்' என்னுமல் 'அறிவினுளெல்லாந் தலை' என்றார். செய்யத்தக்குழி - செய்யத்தக்க இடம்; அதாவது - தம்மை வருத்துபவர்பக்கல். செய்யா-ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; (இவ் வாய்பாட்டுச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமும், அஃறிணை யெதிர்மறைப் பலவின்பால்முற் றும், அத்தன்மைய வினையாலணையும்பெயரும், அம்முற்றெச்சமும், ஈறு கெட்ட எதிர்மறை ஒன்றன்பால்முற்றும் ஆகவும் வரும்: இங்குக்காட்டிய ஏழுவகைகளுள் முதல்மூன்றிலும் வருமொழிமுதல்வலி மிகும்; மற்றையவற் றில் மிகாது: இவையெல்லாம் இடம்நோக்கியும் பொருள்நோக்கியும்உணர்க.) தலைமையானதைத் தலையென்றது - பண்பாகுபெயர். தலை - உத்தமம்; உத் தம அங்கமாகிய சிரசுபோலச் சிறந்த தென்றுங் கொள்ளலாம். தீய-பெயர். நான்காம்வேற்றுமையின் பொருளாகிய ஏற்றுக்கொள்ளுதலும் ஏழாம்வேற் றுமையின் பொருளாகிய இடனுய்நிற்றலும் ஒருசாரொத்திருத்தலை நோக்கி, செறுவார்க்கும் என்னும் நான்காம்வேற்றுமையை 'செறுவார்மாட்டும்' என ஏழாம்வேற்றுமையாக விரித்தார்; இதனை உருபுமயக்கமெனினும் அமையும்: கொடைப்பொருளில் அல்லது பகைப்பொருளில் வந்த நான்காம்வேற்றுமை யெனினும் இழுக்காகாது. உம் - இழிவுசிறப்பு: இறந்ததுதழுவிய எச்சவும் மையாகக் கொண்டு, தம்மை வருத்துபவரல்லாதார்க்குச் செய்யாதொழிதலை யும் உடனமைத்தலும் ஒன்று. 'நல்லோர்' என்றது, தருமநூலுணர்ச்சியோடு உலகவழக்கறிதலு முடையாரை; இது, தோன்றா எழுவாய். (கூ)

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ - ள்.) (ஒருவன்), பிறன் கேடு - பிறனுக்குக் கேடுபயக்கும் வினை யை, மறந்துஉம்—, சூழற்க - எண்ணுதொழிக; சூழின் - எண்ணுவனுயின்,— சூழ்ந்தவன் கேடு - தனக்குக் கேடுபயக்கும்வினையை, அறம் - அறக்கடவுள், சூழும் - எண்ணும்; (எ - று.)

'கேடு' என்பன - ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட் டது. அறக்கடவுள் எண்ணுதலாவது - அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை யெண்ணலும் ஆகா தென்பதாம்.

(கு - ரை.) கேடுபயக்கும் வினை - கெடுதியைத்தருந் தீத்தொழில். தனக்கு - எண்ணினவனுக்கு. அறக்கடவுள் - தருமதேவதை. கேடு-கெடுதியைத் தரும் வினைகளைக் குறித்தலால், காரியவாகுபெயர். ஒருமனிதன் மற்றொருவனுக்குத் தீங்குசெய்யநினைத்தால், நினைத்த அம்மனிதனுக்குத் தீங்குசெய்யத் தருமதேவதை கூடவே நினைக்கும்; இவற்றுள் மனிதனதுமுயற்சி இடையூற்றின் மிகுதியால் நிறைவேறுதாயினும், அல்லது நிறைவேறக் காலஞ்செல்லுமாயினும், தேவதையினது முயற்சி அங்ஙனந் தடைப்படாமல் உடனேநிறைவேறிவிடும். ஆதலால், ஒருவன் பிறனுக்குத் தீங்குநினைத்தமாத்திரத்திற் பாவம் உண்டாகி அதனால் தான் தீங்கையடைவா னென்பது தாற்பரியம். அவன் கெடத் தான் தீங்க - எண்ணியவன் கெடும்படி அவனைவிட்டுத் தான் விலக. எண்ணலுமாகாது என்றதனால், சொல்லுதலும் செய்தலு மாகாமை பெறப்பட்டது. 'மறத்தும்' என்றதனால், மறவாதிருக்கையில் எண்ணுதொழிய வேண்டுமென்பது தானே பெறப்படும். மறத்தும், உம் - இழிவுசிறப்பு. 'சூழ்' என்ற வினை, ஒருபொருளிலேயே பலமுறை வந்தது, சொற்பொருட்பின்வருநிலை. 'கெடுவான் கேடுநினைப்பான்' என்ற பழமொழி, இங்குக் கருதத்தக்கது. 'சூழ்வனுயின், அவனுற்சூழப்பட்டவன் அதன்மாறுகக் கேடுசூழ்வதன் முன்னே சூழ்ந்தவனுக்குக்கேட்டைத் தீமைசெய்தார்க்குத் தீமையபத்தலாகிய அறம் தானே சூழும் என்றவாறு; இது, தீமைநினையினும் கேடுதருமென்றது' என்பது, மணக்குடியருரை. (ச)

உ0நு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) இலன் என்று - (யான்) வறியன் என்று கருதி, தீயவை செய்யற்க-(அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத்) தீவினைகளை (ஒருவன்) செய்யாதொழிக; செய்யின் - செய்வனுயின், பெயர்த்துமம் இலன் ஆகும் - பெயர்த்தும் வறியனுமாம்; (எ - று.)

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனு மென்பதாம். 'அன்'விகுதி-முன்தனித்தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை - "உளனு வெண்ணுயிரை யுண்டி" என்பதனுனும் அறிக. மற்று - அசைநிலை. 'இலம்' என்று பாடமோதுவாரும் உளர். 'பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின், அப்பொருளானேயன்றி நற்குணநற்செய்கைகளானும் வறியனும்' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) வறியன் - தரித்திரன். அது - வறுமை. பெயர்த்தும்-மறுபடியும். பிறவிதோறும் - அடுத்துவருகிற சன்மங்களிலெல்லாம்; ஒருபிறப்பிலே செய்த வினை ஏழேழு பிறப்புந் தொடரு மென்க. 'இலன்' என்னும் எதிர்மறைக்குறிப்பு வினைப்பகுபதங்கள் இரண்டனுள், முன்னது - தன்மையொருமை: 'அன்'விகுதி தன்மையொருமைக்குவருதல், புதியனபுகுதல்; இதற்கு விதி, தொல்காப்பியத்தில் இல்லை: உரையாசிரியர்கள் எதிரதுபோற்றலென்னும் உத்தியால் அமைத்திருக்கிறார்கள்; அவர்கருத்துப்பற்றி, பின்

னூலாராகிய நன்னூலார் விதி கூறினார்: அருமையாகவருவதற்கு இலக்கியத்தினின்று உதாரணங்காட்டுகிறார், "உளனு" என்று தொடங்கி; இம்மேற்கோள் - கலித்தொகை, குறிஞ்சிக்கலி, உஉ - ஆம் செய்யுளில் உள்ளது: இதற்குப் பொருள் - 'யான் சிறிது உயிருடனேயிருக்கும்படி என் உயிரை வாங்கிக்கொண்டு'என்று உரைத்தார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். உளனு-உள்ளேனுக; 'இலன்' என்று எதிர்மறையில் தன்மையொருமையில்'அன்'வந்தது போல, உடன்பாட்டில்வந்ததற்கும் ஆசிரியவசனம் எடுத்துக்காட்டியவாறு. இலன் ஆகும் - இல்லாதவனுவன்; இங்கே இலன் என்பது - ஆண்பாற் படர்க்கையொருமை. பெயர்த்து என்பது - மீண்டு என்னும் பொருளைத் தந்ததனால், மற்று என்பது அசைநிலையாயிற்று; 'மற்று' என்றதிலுள்ள உம்மையை எடுத்து 'பெயர்த்து' என்பதனோடு கூட்டுக. மற்றும்பெயர்த்து என்பதை ஒருபொருட்பன்மொழி யாகவுங் கொள்ளலாம். 'மற்றும் - மீண்டும், பெயர்த்து - வேறுபட்டு, இலன்ஆகும்' என்று பொருளுரைத்தார், இராமானுசகவிராயர். 'தனித்தன்மை' என்ற வாக்கியத்தின்பின் எழுதாமல் :மற்று-அசைநிலை' என்றதன்பின் 'இலம்என்று பாடமோதுவாருமுளர்' என்றெழுதியதனால், இரண்டடியிலும் 'இலம்' என்றுபாடமெனஅறிக. (இத்தப்பாடம் மணக்குடவருரையிலுள்ளது.) அப்பாடத்தில் முதலடியில் 'இலம்' என்பதற்கு - யாம் பொருளில்லோம் என்று பொருள்; இலம் - தனித்தன்மைப் பன்மை: ஒவ்வொருவனும் தன்னைப்பற்றித் தான் நினைக்கும்பொழுது பன்மையாக நினைத்தல் இயல்பு; இதனை நினைத்துப்பார்த்து அறிக. இரண்டாம் அடியில், இலம் ஆகும் என்பதற்கு - வறுமை உண்டாம் என்று பொருள்; இலம் - வறுமையுணர்த்தும் உரிச்சொல்: "இலம்பாடொற்க மாயிரண்டும் வறுமை" என்றார் தொல்காப்பியனார்; இச்சூத்திரத்தில் 'இலம்' என்பது உரிச்சொல்லேயொழிய 'இலம்பாடு' என்பது உரிச்சொல்லன்று என்பதை, இச்சூத்திரத்தின் உரையைக்கொண்டும், எழுத்ததிகாரத்தில் 'இலமென் கிளவிக்குப் படவரு காலை" என்ற சூத்திரத்தைக்கொண்டும் உணர்க. பெயர்த்து-இறந்தகால வினையெச்சம். இனி, 'இலனென்று' என்பதையும் படர்க்கையொருமையாகவே கொண்டு, இவன் பொருளில்லாதவனென்று அலட்சியஞ் செய்து வறியவனுக்குத் தீயவை செய்யற்க என்று உரைத்தலும் அமையும்.

உ0சு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னையடல் வேண்டா தான்.

(இ - ள்.) நோய் பால - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள், தன்னை—, அடல் - (பின் வந்து) வருத்துதலை, வேண்டாதான் - வேண்டாதவன்,—தீ பால - தீமைக்கூற்றவாகிய வினைகளை, தான்—, பிறர்கண் - பிறர்மாட்டு, செய்யற்க - செய்யாதொழிக; (எ - று.)

செய்யின், அப்பாவங்கள் அடுதல் ஒருதலை யென்பதாம்.

(கு - ரை.) கூற்ற - பகுதியுடையன. பின் - மறுமையில். அடுதல்-வருத்துதல். ஒருதலை - நிச்சயம். பால - பால் என்னும் பகுதியின் மேற் பிறந்த

பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். "மூழ்த்த பிணிகலிய மூன் செய்த வினையென்றே முனிவார் தாமும்" என்னும் இலக்கியத்தை நோக்கி, நோய்ப்பால என்பதற்கு - 'வியாதிபின்பகுதியிலுளாந் துன்பங்கள்' என்று பொருள்கொள்ளுதலும் அமையும்; 'இது, நோயுண்டா மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். அடல் - தொழிற்பெயர். வேண்டாதான் - எதிர் மறை வினையாலணையும்பெயர்; இதுவும், மேல் ஒன்பதாங்கவியும் ஒருகருத்தின் வகைப்பட்டன. (சு)

உ0ள. எனைப்பகை யுற்றூரு மூய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ - ள்.) எனை பகை உற்றூர்உம் - எத்துணைப் பெரிய பகையுடையாரும், உய்வர்-(அதனை ஒருவாற்றால்) தப்புவர்; (அவ்வாறன்றி), வினை பகை - தீவினையாகிய பகை, வீயாது - நீங்காது, பின் சென்று அடும் - புக்குழிப் புக்குக் கொல்லும்; (எ - று.)

"வீயா, தடம்பொதி நின்ற வுயிரு மில்லை" என்புழியும், வீயாமை - நீங்காமைக்கண் வந்தது.

(கு - ரை.) அதனை - அப்பகையை. ஒருவாற்றால் - ஒருவிதத்தால்; ஒரு ஆறு எனப்பிரிக்க. புக்குழிப்புக்கு - சென்றவிடத்திற் சென்று; சன்மந் தோறும் பின்தொடர்ந்து. வீயாது பின்சென்றடுதற்கு மேற்பாட்டில் உவமை கூறுவர். 'பல்லாவுளுப்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்காடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்னதகைத்தே தற்செய்த, கிழவனை நாடிக்கொளற்கு" என்னும் காலடியாரையும் அறிக. 'வீயாது' என்றுதொடங்கிய மேற்கோள் - புறநானூறு, நூசுஉ - ஆஞ் செய்யுளில் உள்ளது; அதற்கு நீங்காமல் உடம்புடனே எப்பொழுதுங்கூடிநின்ற உயிர் ஒன்றும்இல்லை என்று பொருள். நீங்காமைக்கண் - நீங்காமையென்னும் பொருளில். எனை - எத்தனை யென்பதன் மரூஉ. பகுதல் மனம்வேறுபடுதல் என்ற காரணத்தால் பகை என வந்த தென்பர். உற்றூர் - பெற்றவர்; உறு என்னுங் குறிவினைப் பகுதி, ஒற்றிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. உம் - இழிவுசிறப்பு. வீயாது - வீ என்னும் வினைப்பகுதியடியாப்பிறந்த எதிர்மறைவினையெச்சம். புறப் பகைகளினும் உட்பகையாகிய வினைக்கு உள்ள உறுதியை இதனுற் கூறினர். அடும் - வருத்து மென்றபடி. (எ)

உ0அ. தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(இ - ள்.) தீயவை செய்தார் - (பிறர்க்குத்) தீவினைகளைச் செய்தார், கெடுதல் - (தாம்) கெடுதல், (எத்தன்மைத்தெனின்),—நிழல் - (ஒருவன்) நிழல், தன்னை வீயாது-(தொடர்தாகப்போயும்) அவன்தன்னை விடாது (வந்து), அடி உறைந்தற்று - அடியின்கண் தங்கிய தன்மைத்து; (எ - று.)

இவ்வுவமையைத் தன்காலம்வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழி உருப்பதாய தீவினையைச்செய்தார் பின் அதனுற் கெடு

தற்கு உவமையாக்கி உரைப்பாரு மூளர்; அஃது உரையன் றென்பதற்கு, 'அடியுறைந்த நிழல் தன்னை வீந்தற்று' என்னுது 'வீயாதடியுறைந்தற்று' என்ற பாடமே கரியாயிற்று. மேல் ''வீயாது பின்சென் றடும்'' என்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினார்.

(சு - ரை.) அடியின்கண் - (நிழலுக்குரியவனது) பாதத்தில். ஒருவனது நிழல் அவன் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவுதூரஞ்சென்றாலும் அவனைவிடாமல் அவன்சென்றவிடமெல்லாந் தானுஞ்சென்றுகொண்டே வந்து அவனடியில்தங்குதல் தவறுதலுபோல, ஒருவன்செய்ததீவினை அவனுயிர் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவுவிலகியதாகத் தோன்றினாலும் அவ்வுயிரைவிடாமல் அதுசென்றவிடமெல்லாஞ் சென்றுகொண்டே வந்து அவ்வுயிரைவருத்துதல் தவறுது என்பது, பரிமேலழகருரையின் கருத்து. வருந்துணையும் - வருமளவும். புலனுகாது - வெளிப்படாமல். அது வந்துழி - அக்காலம் வந்தவிடத்து. உருப்பது ஆய - வெளித்தோன்றுவதாகிய. பிறருரையின் கருத்து:—ஒருபொருளினது நிழல், வெயில் நிலா விளக்கொளி முதலியன வருமளவும் வெளிப்படாமல் அப்பொருளின் அடியைப் பற்றியிருந்து அச்சுடர்கள் வந்தவளவில் அதனைவிட்டு வெளிப்பட்டுத் தோன்றுதல்போல, ஒருவன் செய்த தீவினை பலித்தற்கு உரிய காலம் வருமட்டும் வெளிப்படாமல் உயிரைப்பற்றியிருந்து அக்காலம் வந்தபொழுது வெளிப்பட்டு அழிக்குமென்பதாம்; இங்ஙனம் உரைப்பதற்கு 'அடியி, லுறைந்த நிழல் தன்னை வீந்தற்று' எனப் பாடமிருந்தாலொழியப் பொருந்தாதென்று மறுத்தார் பரிமேலழகர்; 'அடியுறைந்தநிழல் தன்னைவீந்தற்று' என்பதற்கு - ஒருவனது பாதத்தின்கண் தங்கிய நிழல் அப்பாதத்தைவிட்டு வெளிப்பட்ட தன்மையது என்று பொருளாம். கரி - சாட்சி. 'மேல்' என்றுதொடங்கிய வாக்கியம், முதலுரைக்குச் சாதகமானது. உறைந்தற்று - உறைந்த அற்று எனப் பெயரெச்சவிகாரமாக வாயினும், உறைந்தால் அற்று என வினையெச்சத்திரிபாகவாயினும், உறைந்ததற்று எனத் தொழிற்பெயர்விகாரமாகவாயினுங் கொள்க. இத்திருக்குறளைத் தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப்போலிக்கு உதாரணமாகக்காட்டினர், வீரசோழியவுரையாசிரியர். கீழ்வந்த ''எனைப் பகை'' என்ற குறளில்''தீவினை வீயாது பின்சென்றடும்''என்றதனை, இத்திருக்குறளில் உவமையால் விளக்கினரென்க. உவமையணி. (அ)

உ0கூ. தன்னைத்தான் காதல னுயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(இ - ள்.) (ஒருவன்), தன்னைத் தான் காதலன் ஆயின் - தன்னைத் தான் காதல் செய்த னுடையனுயின், தீவினை பால் - தீவினையாகிய பகுதி, எனைத்து ஒன்றுமும் - எத்துணையுஞ் சிறிதொன்றுயினும், துன்னற்க - (பிறர்மாட்டுச்) செய்யாதொழிக; (எ - று.)

நல்வினை, தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின், 'தீவினைப்பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம்பயத்தல் விளக்கினுராகலின், 'தன்னைத்தான் காதலனுயின்' என்றார்.

இவை ஆறுபாட்டானும், பிறர்க்குத் தீவினைசெய்யின் தாம் கெடுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) காதல்செய்தல் - விரும்புதல். 'தன்னேத்தான்காதலனாயின்' என்றது - தனக்கு ஒன்றுந் துன்பம்வராமல் இன்பமே வந்தடைய விரும்புவ னாயின் என்றபடி. பகுதி - பகுப்பு. தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கி யமை, கீழ் ஐந்துபாட்டுக்களிற் காண்க. காதலன் - குறிப்புவினையாலணை யும் பெயர்; காதலன் என்பது, விரும்புபவனெனப் பொருள்பட்டு, 'தன்னே' என்பதற்கு முடிக்குஞ்சொல்லாய் நின்றது. தன்னேக்காக்கவிரும்பினுற் பிற னுக்குத் தீமைசெய்யலாகாது என்பது கருத்து. (கூ)

உகo. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ - ள்.) மருங்கு ஓடி தீவினை செய்யான் எனின் - (ஒருவன் செந் நெறிக்கண் செல்லாது) கொடுநெறிக்கண் சென்று (பிறர்மாட்டுத்) தீவினை களைச் செய்யானாயின்,—அருங் கேடன் என்பது அறிக-(அவனை) அரிதாகிய கேட்டை யுடைய னென்ப தறிக; (எ - று.)

அருமை - இன்மை. அருங்கேடன் என்பதனை 'சென்று * சேக் கல்லாப் புள்ள வுள்ளி, லென்றூழ் வியன்குளம்" என்பதுபோலக் கொள்க. 'ஓடி' என்னும் வினையெச்சம், 'செய்யான்' என்னும் எதிர்மறைவினையுட் செய்த லோடு முடிந்தது.

இதனுன், தீவினைசெய்யாதவன் கேடில னென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) செந்நெறிக்கண் செல்லாது கொடுநெறிக்கண் சென்று சன் மார்க்கத்திற்போகாமல் துன்மார்க்கத்திற் போய்; 'மருங்கு'என்பதற்கு - 'பக் கத்திலே' என்று பொருளாதலால், 'நேர்வழியைவிட்டு விலகிக் கோணல் வழியிற் சென்று'என்று இங்ஙனம் உரைத்தார். நடுவுநிலை தவறி ஒருசார்பிற் சென்று என்றும் உரைக்கலாம்; 'ஒருமருங்கு ஓடி' என்பர் மணக்குடியர். ஓடுதல் - விரைந்து செல்லுதல். மருங்கோடுதல் தீவினைசெய்தற்குக்காரண மாதலின், 'ஓடி' என்பதற்கு 'செய்' என்னும் பகுதி முடிக்குஞ்சொல்லாம். என்பது அறிக - என்பதாக அறிக: என்று அறிக என்றபடி. அரிதாகிய - இல்லாத; அருமை - இன்மையாதலை "உறற்பால, தீண்டாவிடுத லரிது" என்ற நாலடியாரிலுங் காண்க. "சென்றுசேக்கல்லா" என்னும் மேற்கோள்- அகநானூறு சஉ-ஆம்செய்யுளி லுள்ளது; அதற்கு நீரில்லாமையாற் சென்று தங்காத பறவைகளையுடையவையாய் வெயிலினுல் உள்ளேஒன்றுமில்லாத பெரிய குளங்க ளென்று பொருள் காண்க; என்றூழ் - வெயில். 'அருங் கேடன்,' 'சென்றுசேர்கல்லாப் புள்ள' இவை-வடமொழிநடை. ('வீதராகः,' 'ஜிதேந்த்ரியः' என்றவற்றைக் காண்க.) இனி, இதனை 'கேடரியன்' என விகுதி பிரித்துக்கூட்டுவர், பிரயோக விவேகநூலார். (கo)

* பி - மீ: சேர்கல்லாப்.

உஉ - ஆம் அதிகாரம்—ஒப்புரவறிதல்.

அஃதாவது-உலகநடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்துசெய்யுந் தன்மைத் தாகலின், 'ஒப்புரவறிதல்' என்றார். மேல் மனமொழிமெய்களால் தவிரத்தகுவன கூறினர், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) உலகநடை - லோகத்திலுள்ள சனங்களினது நடத்தையின் இயற்கை: லௌகிகவியவகாரம். செய்தல் - உபகாரஞ்செய்தல். வேதநடை - வேதங்களிற்கூறிய வழிகளிலே நடத்தல்; வைதிகவொழுக்கம். அறநூல்களுள்-தருமசாஸ்திரங்களில். 'ஒப்புரவுசெய்தல்' என்னுமல் 'ஒப்புரவு அறிதல்' என்றதற்குக் காரணங் கூறுகிறார், 'உலகநடை வேதநடைபோல' என்று தொடங்கி. ஒப்புரவு என்பதை ஒப்பு உரவு எனப்பிரிக்க; உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழி லென்றபடி. மனம்மொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினர் - மனோவாக்குக் காயமென்னும் மூன்றுகரணங்களாலுஞ் செய்யத்தகாத [விலக்கத்தக்க] தொழில்களைக் கீழ் ஐந்து அதிகாரங்களாற் சொல்லியவர். எஞ்சிநின்றன - மிகுந்துநின்றவை; சொல்லவேண்டியவையாய்ச் சேஷித்தவை: மிச்சம். விதி விலக்கு என்னும் இரண்டில், மூன்றே விலக்கைக்கூறிவிட்டுப் பின்பு விதியைக் கூறுதல், அதிகாரமுறைமைக்குக் காரணம். 'ஒப்புரவறிதலாவது-இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றலிலரெனினும் தம் அளவிற்கும் தம் வருவாயளவிற்கும் ஒக்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்' என்பர் மணக்குடியர்.

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டெண்ணுற்றுங் கொல்லோ வுலகு.

(இ - ள்.) மாரிமாட்டு - (தமக்கு நீர் உதவுகின்ற) மேகங்களினிடத்து, உலகு - உயிர்கள், என் ஆற்றும் - என்ன கைம்மாறு செய்யாகின்றன? (ஆகலான்), கடப்பாடு - (அம்மேகங்கள்போல்வார் செய்யும்)ஒப்புரவுகளும், கைம்மாறு வேண்டா - கைம்மாறு நோக்குவனவல்ல; (எ - று.)

'என் ஆற்றும்' என்ற வினு 'யாதும்ஆற்றா'என்பதுதோன்ற நிற்றலின், அது வருவித்து உரைக்கப்படும். தவிருந்தன்மையஅல்ல என்பது, 'கடப்பாடு' என்னும் பெயராலே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப் படுவனமேல் ஏற்றினர்.

(கு - ரை.) கைம்மாறு செய்யாகின்றன - பிரதியுபகாரம் பண்ணுகின்றன. கைம்மாறுநோக்குவனவல்ல - எதிருதவியை விரும்பாவாம். யாதும் ஆற்றா - ஒன்றையுஞ்செய்கின்றனவில்லை. அது - யாதும்ஆற்றாஎன்பது. தவிருந்தன்மைய அல்ல-ஒழிக்கத்தக்கனவல்ல;அவசியஞ்செய்யவேண்டும் கடமையுடையவை. கடப்பாடு கைம்மாறுவேண்டா என்றது - பிறர்க்கு உபகாரஞ்செய்பவர்கள் தாம் பிரதியுபகாரத்தைப்பெற அபேக்ஷியார் என்றபடி; இது, உபசாரவழக்கு. கடப்பாடு - கடமைப்படுதல்; கடம்படு என்னும் இர

ண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்ட 'கடப்படு' என்னும் பகுதி விகாரமடைந்த தொழிற்பெயர். கைம்மாற்றை எதிர்பார்த்துச்செய்யும் உதவியைக் கடப்பாடென்று பெயரிட்டுவழங்குதல் கூடாதென்க. கைம்மாறு- தாம் ஒருவர்க்குச்செய்த உபகாரம் அவர்கையினின்று மீண்டுந் தம்கைக்கு மாறுவது என்பதுபற்றி வந்த பெயர். 'என்' - இது வினுப்பொருளைக் காட்டிவிட்டதனால், கொல் ஓ என்னும் இரண்டும் - அசைநிலை. உலகு என்னும் பலபொருளொருசொல் சீவான்மாக்களை உணர்த்துதலை "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு" என்ற திருமுருகாற்றுப்படையினுங் காண்க. கைம்மாறு வேண்டாகடப்பாடு என்ற பொதுப்பொருளை, மாரிமாட்டென்ஞற்றுங் கொல்லோவுலகுஎன்ற சிறப்புப்பொருள் சமர்த்தித்து நின்றதனால், இது, **வேற்றுப்பொருள்வைப்பணி**. ஒப்புரவுசெய்யுங்கால் கைம்மாறுகருதிச் செய்யவேண்டா: எல்லார்க்கும் நல்வழிசுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தலுண்டோ? என்றவாறு; 'கடப்பாடு-ஒப்புரவு. ஒப்புரவாவது - கைம்மாறுகருதாத கொடை என்றுகூறிற்று' என்பது, மணக்குடியருரை. (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) தக்கார்க்கு - தகுதியையுடையார்க்குஆயின், தாள் ஆற்றி தந்த பொருள் எல்லாம் - முயறலைச்செய்து ஈட்டிய பொருள்முழுதும், வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம்; (எ - று.)

பிறர்க்குஉதவாதார்பொருள்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்து இழத்தற்பொருட்டும் அன்றென்ப தாயிற்று.

(கு - ரை.) தகுதி - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களினுலாகிய யோக்கியதை. ஆயின்-ஆனுல்: இது வருவிக்கப்பட்டது. முயறல் - முயற்சி: பிரயத்தினம்; தொழிற்பெயர். ஈட்டிய - சேர்த்துவைத்த. பொருள் - செல்வம். வேளாண்மை, ஒப்புரவு, உதவி, உபகாரம் என்பன - ஒருபொருட் சொற்கள். செய்தற்பயத்தவாம் - செய்தலாகிய பிரயோசனத்தை யுடையனவாம். 'பொருட்டு' - பொருள் என்னும் பகுதியின்மேல் வந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று: நான்காம்வேற்றுமைச் சொல்லுருபாக வைத்து, செய்தலினிமித்தம் என்றலுமாம். பாடுபட்டுத்தேடியபொருளைப் புதைத்து வைத்து இழந்துபோகாமலும், தாம் மாத்திரமே அனுபவியாமலும் பிறர்க்கு உபகரிப்பவரே மேலோ ரென்று கருத்து. இனி, தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு என இயைத்து, ஒருவன் முயற்சியைச்செய்து தொகுத்த பொருள் முழுவதும் சான்றோர்க்கு உதவி செய்தற்காகவே என்றும் ஓர் உரை கூறலாம்: 'ஒருவன் முயன்று பொருளீட்டியதெல்லாம் தகுதியுடையார்க்கு உபகரித்தற்காக என்றவாறு; பொருளுண்டானுல், ஒப்புரவு செய்க என்றது' என்பது, மணக்குடியருரை. வேளாண்மை - பண்புப்பெயர்.

உகஊ. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ - ள்.) புத்தேள் உலகத்துஉம் - தேவருலகத்தும், ஈண்டுஉம் - இவ்வுலகத்தும், ஒப்புரவின் - ஒப்புரவுபோல, நல்ல பிற - நல்லன பிறசெயல்களோ, பெறல் - பெறுதல், அரிது—; (எ - று.)

ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லாரும் ஒருதன்மைய ராகலின், புத்தேளுலகத்து அரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. 'பெறற்கரிது' என்று பாடமோதி, 'பெறுதற்குக்காரணமரிது' என்று உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும், ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பெறுதல் - (ஒருவன்) அடைதல். அரிது - அருமையானது. ஈவாரும் ஏற்பாரும் இன்றி-தானஞ்செய்பவர்களும் அதனைப் பெற்றுக்கொள்பவர்களும் இல்லாமல். யாவர்க்கும் - எல்லார்க்கும். ஒப்பது - உடன்படத்தக்கதாயிருப்பது. இதுபோல் - ஒப்புரவுபோல. ஈண்டு - சுட்டுநீண்டபெயர். ஒப்புரவின், இன் - ஐந்தனுருபு: உவமப்பொருவு; உறழ்பொருவாயின், ஒப்புரவினும் நல்ல என்று பொருள்படும். ஒப்புரவுக்கு ஒப்பில்லை யெனவே, உயர்வில்லையென்பது தானே விளங்கும். நல்ல-பலவின்பால்வினையாலணையும்பெயர். பிற - சுட்டடியாப்பிறந்த பலவின்பாற்பெயர்; விகுதிபுணர்ந்து கெட்டது. உம்மைகள் - எண்ணுப் பொருளன. தேவலோகத்திற் கொடுப்பவரும் வாங்குபவரும் இல்லாமல் எல்லாரும் ஒருதன்மையராதலை "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" எனப் பிறர் கூறியவாற்றாலும் அறிக. இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் ஒப்புரவின் நல்லபிறவில்லையென்பது, கருத்து. பெறற்கரிதுஎன்ற பாடத்திற்கும் கருத்து இதுவே. பெறற்குஎன்ற நான்கனுருபிற்குப் பொருட்டுப் பொருள் என்பார் 'பெறுதற்குக்காரணம்' எனப் பொருள் விரித்தார்: இலக்கணக்கொத்துக்காரர், இவ்வாறுவருமிடங்களிலெல்லாம் கருத்தாப்பொருள் என்று கொண்டு "ஒன்று மூன்று நான்காறெனு முருபொடு, வருமே வினைமுத லென வகுத்தனரே" என்று சூத்திரஞ்செய்துள்ளார். (கூ)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ - ள்.) உயிர் வாழ்வான் - உயிரோடுகூடி வாழ்வானுவான், ஒத்தது அறிவான் - உலகநடையினை அறிந்து செய்வான்; மற்றையான் - அஃது அறிந்து செய்யாதவன், செத்தாருள் வைக்கப்படும் - (உயிருடையனேயாயினும்) செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும்; (எ - று.)

உயிரின் அறிவுஞ் செயலுங் காணுமையின், 'செத்தாருள்வைக்கப்படும்' என்றார்.

இதனுன், உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) வாழ்வான் - வாழ்பவன். ஒத்தது - உலகத்தார் சம்மதித்து ஒழுகும் ஒழுக்கம்; "ஒப்புரவொழுகு", "தேசத்தோடொத்துவாழ்" என்றார்

ஔவையாரும்: "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலாதார்", "உலகந் தழீஇய தொட்பம்" என்ற திருக்குறளையும் காண்க. அறிதல் - அறிந்து செய்தலைக் குறிக்கும்; காரணம் காரியத்தின்மேல் நின்ற உபசாரவழக்கு. வைதிககாரியங்களில் வழுவினுல் அவ்வழுத்தீர்த்து உய்தற்கு யாதாயினும் ஒருபிராயச்சித்தம் உண்டு; உலகநடையை வழுவினாலோ அவ்வழுத்தீர்தற்கு ஒருவழியுமில்லை என்பது தாற்பரியம். உயிரின் அறிவும் செயலும் - உயிர்க்கு உரிய உணர்வும் செய்கையும். தீர்திறன் - தீரும் வழி. அறிவான், வாழ்வான், மற்றையான் - பெயர்கள். செத்தார், சா - பகுதி; உள் - ஏழனுருபு. 'ஒப்புரவறிபாதார் பிணத்தோடு ஒப்பரென்றது' என்பது, மணக்குடியருரை வாக்கியம். (சு)

உகரு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ - ள்.) உலகு அவாம் - உலகநடையை விரும்பிச் செய்யும், பேர் அறிவு ஆளன்-பெரிய அறிவினை யுடையவனது, திரு-செல்வம்,—ஊருணி-ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம், நீர் நிறைந்து அற்று - நீர்நிறைந் தாற்போலும்; (எ - று.)

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவு மென்பதாம்.

(கு - ரை.) உலகு - உலகநடைக்குப் பொருளாகுபெயர். அவாம்-அவாவும் என்னும் செய்யுமெனெச்சம், ஈற்றுயிர்மெய்கெட்டு நின்றது; [நன். வினை. உஉ.] அறிவாளன் - அறிவையாள்பவன். ஊருணி - காரணப்பெயர்; 'ஊர்' - ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர்: உண் என்பது - உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பிரித்துக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அங்ஙனங்கூறுதவிடத்துப் பசி தாகந் தீர வாயால் உண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாதலின் பொதுவினையுமா மாதலால், 'ஊர்பருகி' என்னுமல் 'ஊருணி' எனப்பட்டது: உண்ணப்படுவது என்று பொருளாதலால், இ - செயப்படுபொருள்விகுதி. 'ஊருணியில்நிறைந்த நீ ரற்று' என்னுது 'ஊருணிநீர்நிறைந்தற்று' என்றதில், குளமென்னும் இடத்து நிகழ்கின்ற நீரென்னும்பொருளின் நிறைதலாகிய தொழில் அதற்குஇடமாகிய குளத்தின்மேல் நின்றது காண்க. நெடிதுநின்று - நெடுங்காலம் நிலைபெற்று. பெருமை + அறிவு=பேரறிவு. உபமானம் உபமேயம் உவமவுருபு பொதுத்தன்மை என்னும் நான்கனுள் பொதுத்தன்மை தொக்கு வந்ததனால், தொகை யுவமையணி; வருமிரண்டுபாட்டுக்களும் இவ்வணியே. 'ஊருண்கின்றகேணி நீர்நிறைந்தாலொக்கும் உலகத்தாரெல்லாராலும் நச்சப்படுகின்ற பெரிய ஒப்புரவறிவானது செல்வம் என்றவாறு. இது, ஒப்புரவறிவார்க்கு உளதாகிய செல்வம் நச்சிச்சென்றூர்க்கு வேண்டியவாறு முகக்கலாமென்றது' என்பது, மணக்குடியருரை. (கு)

உகசு. பயன்மரா முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—,நயன் உடையான்கண் படின் - ஒப்புரவுசெய்வான்கண்ணே படுமாயின், (அது),—பயன் மரம் - பயன்படுமரம், உள்ஊர்-ஊர்நடுவே, பழுத்து அற்று - பழுத்தாற்போலும்; (எ - று.)

உலகநீதிபலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கு மென்பதாம்.

(கு - ரை.) படுமாயின் - உண்டானால். பயன் - பிரயோசனம். 'நயன்' என்பது, இங்கே ஒப்புரவை உணர்த்திற்று. ஊருள் என்பது உள்ளூர் என முன்பின்னாகத்தொக்குவந்த ஆறும்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி யென்பர். ஆல் - ஈற்றசை. நயனுடையான் என்பதற்கு - நீதியை யழியான் என்றும் பொருள்கொள்ளலாம். "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபேய் மன்னர் பலர்நச்சவாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத் தூண்ணு மாக்க, ளிடுகாட்டுளேற்றைப் பேய்" என்னும் நாலடியார்ச் செய்யுளிலும் இக்கருத்துக் காண்க. இவ்வதிகாரத்தில் முதல் ஐந்து ஆறு இம் மூன்றுபாட்டுக்களின் கருத்தைத் தொகுத்துக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் "ஊருணி நிறையவு முதவுமாபோல், பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவுங், கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி, வார்புனல் பெருகவு மறுக்கின் றார்களியார்" எனக் கூறியவாறு உணர்க. "கற்றையுஞ் சுடர்மணி கனக மேனைய, பிற்றையென் னுதருள் பெரியர் வண்மைபோன், மற்றவ ணுள்ள பன்மரமுந் தம்பய, னெற்றையு முலப்புறு தீகை சான்றவே" என்னுங் கந்தபுராணச்செய்யுளையும் அறிக. (சு)

உகள. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—, பெருந்தகையான்கண் - (ஒப்புரவுசெய்யும்) பெரியதகைமையையுடையான்கண்ணே, படின் - படுமாயின், (அஃது),—மருந்து ஆகி தப்பா மரத்து அற்று - (எல்லாவுறுப்பும் பிணிகட்கு) மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்; (எ - று.)

தப்புதலாவது - கோடற்கு அரியஇடங்களில்நின்றுதல், மறைத்து நின்றுதல், காலத்தான்வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது எல்லார்வருத்தமுந் தீர்க்கு மென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) தகைமை - தன்மை. எல்லாவுறுப்பும் - கொழுந்து, இலை, பூ, பட்டை, வேர், காய், கனி, கொட்டை, கட்டை முதலியன. எல்லாவுறுப்பும் பிணிகட்குமருந்தாம் மரம் - வேம்புமுதலியன சில. தப்புதல்-பயன்படுவதில் தவறுதல். கோடற்கு அரிய இடங்களில் நிற்றல் - சென்று கொள்ளுதற்கு அருமையான செங்குத்தான மலை முதலிய இடங்களில் இருத்தல்.

மறைத்துநிற்றல் - சென்று கொள்ளுதற்கு அரியதல்லாத புழைக்கடைமுத லிய இடங்களிலிருந்தும் வேறுபொருள்கள் மறைக்க மறைந்துநிற்றல். காலத்தான் வேறுபடுதல் - ஒருகாலத்திலிருந்து மற்றொருகாலத்தில் இல்லா மற்போதல். யாதொருமாறுபாடுமில்லாமல் வெளிப்பட்டுநின்று, யாவரும் தனது கிளை இலை முதலிய உறுப்புக்களை முறித்தும் பறித்துஞ் செய்கின்ற தனதுகுறையையும் வருத்தத்தையும் நோக்காமலே அவர்களது நோய்களை மருந்துமரம் தீர்ப்பதுபோல, பெருந்தகையாளனுடைய செல்வமும் மாறுபா டொன்றும் இல்லாமல் எளிதாகவெளிப்பட்டுநின்று, கொடுக்கக்குறைவுபடுத லும் வருத்தமும் நோக்காமலே அனுபவித்தற்குரிய பற்பலபொருள்களை யும் உதவுதலில் தப்பாமல் அடைந்தவர்வருத்தங்களை யொழிக்கு மென்க. கடப் பாட்டாளன் - பிறர்க்கு உதவிசெய்பவன். பெருந்தகை - பெருமையாகிய தகையென விரியும்; பண்புத்தொகை. தகை - தகுதி, சற்குணம்: தகு-பகுதி, ஐ - விகுதி; இது - தொழிலடியாகப் பிறந்ததாயினும், பொருளாற் பண்புப் பெயர். ''அல்லலொருவர்க் கடைந்தக்கான் மற்றவர்க்கு, நல்லகிளைக ளெனப் படுவார் நல்ல, வினைமரபின் மற்றதனை கேக்குமதுவே, மனைமரமாய மருந்து'' என்ற பழமொழிச்செய்யுள் இங்கு உணரத்தக்கது. ஆல் - அசை. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ - ன்.) இடன் இல்பருவத்துஉம் - செல்வம் சுருங்கியகாலத்தும், ஒப் புரவிற்கு - ஒப்புரவு செய்தற்கு; ஒல்கார்-தளரார்: கடன் அறி காட்சியவர் - செய்யத்தகுவனவற்றை அறிக்த இயற்கையறிவுடையார்; (எ - று.)

பிறவெல்லாம் ஒழியினும் இஃது ஒழியார் என்பதாம்.

(கு - ரை.) பிறவெல்லாம் ஒழியினும் இஃது ஒழியார் - இடம்பொரு ளேவல்கள்யாவும் ஒழிந்தாலும் ஒப்புரவுசெய்தலை ஒழியார். கடன்-முறைமை. இடம் - செல்வம்; அது, 'இடன்' என நின்றது. இடமென்பது - செல்வ மென்னும் பொருளதாதலை மேல் இரவச்சமென்னும் அதிகாரத்தில் 'இடமில் லாக், காலு மிரவொல்லாச் சால்பு'' என்றவிடத்தும் காண்க. இல்பருவம் - பண்புத்தொகை. பருவத்தும், உம் - இழிவுசிறப்பு. ஒல்கார், ஒல்கு - பகுதி. கண் பொருள்களை எதிரிற் பார்த்தல்போல, அறிவு பொருள்களை ஊகித்துப் பார்த்தலால், 'காட்சி' யெனப்பட்டது. 'செல்வம் விரிவில்லாத காலத்தினும் ஒப்புரவுசெய்யவேண்டு மென்றது' என்பது, மணக்குடிய ருரை. (அ)

உகக. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ - ள்.) நயன் உடையான் - ஒப்புரவுசெய்தலை யுடையான், நல்கூர் ந்தான் ஆதல் - நல்கூர்ந்தானுதலாவது,—செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - (தவிராது) செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்ய ப்பெறுது வருந்துகின்ற இயல்பாம்; (எ - று.)

தான் நுகர்வன நுகரப்பெறுமை யன்று என்பதாம்.

இவையிரண்டொட்டானும், வறுமையான் ஒப்புரவு ஒழிதற்பாற்றன்று என்பது கூறப்பட்டது.

(சு - ரை.) நல்கூர்ந்தாளுதல் - தரித்திரப்பட்டவனுதல்; நல்கு ஊர் என்னும் இரண்டுசொற்கள் நல்கூர் என ஒருசொல்லின்தன்மைப்பட்டுப் பகுதியாய் நின்று, பிறன் கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளச்செல் என்னும் பொருளதாய், வறுமைப்படுஎன்ற பொருளோக் குறித்தது. தவிராதுசெய்யும் நீர்மையையுடைய - தவறுமற்செய்யப்படுக் தன்மையையுடைய. அமைகலாஆறு - மனம் திருப்திப்பட்டிராத தன்மை. தான் நுகர்வன நுகரப்பெறுமையன்று - ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களுள் ஒன்றையுந் தான் அனுபவிக்கப்பெறுமை அவனுக்கு வறுமையன்று. ஒழிதற்பாற்று அன்று - நீங்குந் தன்மையையுடையதன்று. பிறர்க்கு உதவிசெய்பவன் அதனால் தனக்கு வறுமைநேர்ந்தாலும் அதற்கு வருந்தான்; பிறர்க்கு மீண்டும் உதவிசெய்தற்கு இல்லையேயென்று வருந்துவான் என்று கருத்து. 'இது, செல்வம் குறைபடினும் ஒப்புரவுசெய்வரென்றது' என்பது, மணக்குடியருரை வாக்கியம். செயும் - தொகுத்தல். நீர - பலவின்பாற்பெயர்; நீர்மை - பகுதி. நீரசெய்யாது - இரண்டாம்வேற்றுமைத்தொகை. அமைகலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (கூ)

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ - ள்.) ஒப்புரவினால் - ஒப்புரவுசெய்தலான், (ஒருவனுக்கு) கேடு வரும் - பொருட்கேடு வரும், எனின் - என்பா ருளராயின், அஃது - அக்கேடு, ஒருவன் விற்று கோள் தக்கது உடைத்து - தன்னை விற்றுயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து; (எ - று.)

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொருபொருள் இல்லையன்றே: இஃதாயின் அதுவுஞ் செய்யப்படும்: என்றது, புகழ்பயத்தல் நோக்கி.

இதனால், ஒப்புரவினாற் கெடுவது கேடன்று என்பது கூறப்பட்டது.

(சு - ரை.) என்பார் உளராயின் - என்று சொல்பவர் உண்டானால். விற்றாயினும் - விலையாகக் கொடுத்தாயினும். கொள்ளும் - வாங்கும். இல்லையன்றே, அன்றே - தேற்ற முணர்த்திற்று. இஃதாயின் - ஒப்புரவினால் வருங் கேடாயின். அதுவும் செய்யப்படும் - தன்னை விற்றுங் கொள்ளப்படும். இங்ஙனங்கூறியது, அவ்வொப்புரவுசெய்தலினாலுண்டாகும் பெரும் புகழைக் கருதி யென்க. 'விற்று' என்பதற்கு ஏற்ப, ஒருவன் என்பதற்கு - 'தன்னை' எனச் செயப்படுபொருளாக உரைகூறினார்: தன்னினுஞ் சிறந்த தொருபொருள் இல்லை யாதலின்; இதனால், பிறவற்றைவிற்றல் கூறாதே பெறப்பட்டது. ஈழ் ''கெடுவாகவையா துலகம் நடுவாக, நன்றிக்கட் டங்கியான் றாழ்வு'' என்றது, இங்கு உணரத்தக்கது. 'எனின்' என்றதனால், ஒப்புரவினாற் கெடுதிவாரா தென்பதும், அதனாற் கெடுதிவரு மென்பார் உலகத்தில் இல ரென்பதும் பெறப்படும். 'கேடன்று' என்றதனால், செல்வ

மென்று கருதப்படும் என்க. 'அஃதொருவன்' என்றவிடத்து - ஆய்தம் மெய் போல் ஒலித்தது. கோட்டக்கது - கொள்ளுதற்குத் தக்கதுஎன நான்காமுருபு விரிக்க. தக்கது - இறந்தகாலத்தொழிற்பெயர். 'ஒப்புரவுசெய்து அதனாலே பொருட்கேடு வந்ததென்றுசொல்லினும் அக்கேட்டைக் கேடாகச் சேர்த்துக் கொள்ளப்படாது: ஒன்றைவிற்று ஒன்றைக்கொள்கின்ற வாணிகமாகக்கொள்ளுந் தகுதியுடைத்து என்றவாறு. கெட்டானெயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளப்படும்: என்றது, பிற்பயப்பன நன்மையாதலான்' என்பது, மணக்குடியருரை. (கo)

உக - ஆம் அதிகாரம்—ஈகை.

அஃதாவது - வறியராய் எற்றூர்க்கு மாற்றுதுகொடுத்தல். இது மறுமை நோக்கிய தாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வறியராய் - தரித்திரராய். எற்றூர்க்கு-யாசித்தவர்களுக்கு. மாற்றுது - இல்லையென்று சொல்லாமல்; கைம்மாறுநோக்கியல்லாமல் என்றும் பொருள்படும். இம்மையைக் குறித்த ஒப்புரவறிதலின்பின் மறுமையைக்குறித்த ஈகையைவைத்தல், அதிகார அடைவுக்கு ஏது. ஈகை - தொழிற்பெயர்; ஈ - பகுதி, கை - விகுதி. ''ஈ தா கொடு வெனு மூன்று முறையே, இழிந்தோ னெப்போன் மிக்கோ னிரப்புரை'' என்றதனாலும், ஈதல் - தன்னிணுமிழிந்த பொருளில்லாதவனுக்கு அவனினுமுயர்ந்த பொருளுடையோன் ஒன்றைத் தானஞ்செய்தலாம் என்றறிக; 'ஈகையாவது - இல்லென இரந்து வந்தார்யாவர்க்கும் வரையாதுகொடுத்தல்' என்பர், மணக்குடியர்.

உஉக. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ - ள்.) வறியார்க்கு - ஒருபொருளும் இல்லாதார்க்கு, ஒன்று-(அவர் வேண்டியது) ஒன்றை, ஈவதுஎ - கொடுப்பதே, ஈகை - (பிறர்க்குக்) கொடுத்தலாவது; மற்று எல்லாம் - அஃது ஒழிந்த எல்லாக்கொடையும், குறி எதிர்ப்பை நீரது உடைத்து - குறியெதிர்ப்பைகொடுக்கும் நீர்மையை யுடைத்து.

ஒழிந்தகொடைகளாவன - வறியரல்லாதார்க்கு ஒருபயன்நோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது-அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. 'நீரது'என்புழி, 'அது'என்பது-பகுதிப்பொருள்விகுதி. பின்னும் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பை நீரது உடைத்து' என்றார்.

இதனால், ஈகையது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்றை - ஒருபொருளை. அஃது ஒழிந்த - அங்ஙனங் கொடுத்தல் தவிர்ந்த. நீர்மை - தன்மை. நீர் - நீர்மையென்னும் பண்புப் பெயரின் விகாரம்: 'அது' என்பது, வேறுபொருளைத்தாராமல், மைவிகுதி போல அப்பகுதியின்பொருளையே தந்ததனால், பகுதிப்பொருள்விகுதியாம். பின்னும் தன்பால் வருதலின் - மீண்டும் தன்னிடத்து வருதலால். ''குறியெதிர்ப்பையென்பது - இறந்தகால வினைத்தொகைத்தொடர்மொழி. எதிர் காலத்திலே பெறும்படியாகக் குறித்த எதிர்ப்பை என விரியும்; எதிர்ப்பை

என்பதனுள், எதிர்-எதிர்காலம்: அது தொழிற்பெயராங்கால் இறப்பு, நிகழ்பு என்றாற்போலப் பகுதிப்பொருள்விகுதியோடுநின்று விகாரப்பட்டு "ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே" என்னுஞ் சூத்திரத்தால் ஐகாரத்தை ஈற்றிலே பெற்று, எதிர்காலத்திலே பெறும்படியாகக் குறித்து நிகழ்காலத்திலே இடப் படுகின்றதற்குப் பெயராய் வழங்கிவருகின்றது; 'அவன் எதிர்ப்பையிட்டு உறவாடினான்' என வழங்கிவருவதைச் செந்தமிழ்நாட்டு வழக்குநோக்கிக் காண்க: இது - கடன்கொடுத்தலினின்றும் வேறுபாடுடையது; இதனை இக்காலத்து 'வரிசை' என்றும் வழங்குவர்"—இது, இராமாநுசகவிராய ருரை. இரவல், கடன், எதிர்ப்பை என்பன ஒன்றோடொன்று பொருளிற் சிறிது வேறுபாடுடையன வென அறிக. செய்த உபகாரத்துக்குப் பிரதியுப காரம் வரவேண்டுமென்று நினைத்தால், கடன்கொடுத்து வாங்குகிறதுபோலே யாகுமென்க. 'இது, கொடுக்குங்கால் இல்லாதார்க்குக் கொடுக்கவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். இத்திருக்குறளிற்கூறிய கருத்தை "ஏற்றகை மாற்றுமை யென்னுனுந் தாம் வரையா, ராற்றுதார்க் கீவதாமாண்கடன் - ஆற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாரிவார்க் கீதல், பொலிகடனென்னும் பெயர்த்து" என நாலடியாரிலுங் காண்க. வறியார் - பண்படியாகப்பிறந்த பலர்பாற்பெயர். ஒன்று-எண்ணலளவாகுபெயர். ஈவது-எதிர்காலத்தொழிற்பெயர். ஏ - பிரிநிலை. மற்றையெல்லாம் என்பது, மற் றெல்லாம் என விகாரப்பட்டுநின்றது. எல்லாம் உடைத்து - பன்மையொரு மைமயக்கம்; [நன். பொது. 29.] வறியரல்லாதார் - செல்வமுடையோர். குறியெதிர்ப்பை நீர் - குறியெதிர்ப்பையினது நீர்மை; ஆறும்வேற்றுமைத் தொகை. குறியெதிர்ப்பையென்பது - குறித்த எதிர்ப்பையென இப்பொரு ளில்வருதலை "நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும், எல்லோர்க்குங் கொடு" எனப் புறநானூற்றிலுங் காண்க. (க)

உஉஉ. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(இ - ள்.) கொளல்-ஏற்றல், நல் ஆறு எனின்உம் - (வீட்டுலகிற்கு) நல்ல நெறி யென்பா ருளராயினும், ஈது - (அது) நீதி; மேல் உலகம் இல் எனின்உம் - (ஈந்தார்க்கு)அவ்வுலகெய்துதல் இல்லையென்பா ருளராயினும், ஈதலே நன்று—; (எ - று.)

'எனினும்' என்பது, இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கி நின்றது. பிரிநிலையேகாரத்தால், பிறவறங்களின் ஈதல் சிறந்த தென்பது பெற்றும். நல்லதுகூறுவார் நீயதும் உடன்கூறினர்.

(கு - ரை.) ஏற்றல் - யாசித்தல். அவ்வுலகு எய்துதல் - முக்தியுலக மடைதல். இருவழியும் - இரண்டிடத்தும்; இரண்டு வாக்கியங்களிலும். பிரி நிலையேகாரம் - பலவற்றினின்று ஒன்றைப் பிரித்துக்காட்டிநிற்றற்பொருள தான ஏகாரம். நீயதை விளக்கினு லல்லது நல்லது விளங்கா தாதலால், இரண்டையும் உடன் கூறினர். யாசித்தல் நீயதாதலை, மேல் 'இரவச்சம்'

என்னும் அதிகாரத்தில் விரித்துக்கூறுவர். ஈதலே என்ற பிரிநிலை யேகாரத்தை எடுத்து 'கொளல்' என்பதனோடும் இயைத்தால், கொடியவையெல்லாவற்றினும் இரத்தல் கொடியதா மென்பதும் பெறப்படும்; "இன்னாமை வேண்டி னிரவெழுக," "இலமென்னும், வன்மையின் வன்பாட்டதில்," "இரத்தலி னின்னாத தில்லை" என்பன காண்க. 'இச்செய்யுளில் தீதென்றும் நன்றென்றும் வந்தமையான் முரணென்னும் அலங்காரமாயிற்று' என்பது, வீரசோழியவுரை. "இன்னுயிரேனுங், கொள்ளுதல்தீது கொடுப்பது நன்றால்" என்பது கம்பராமாயணம். (உ)

உஉ௩. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ - ள்.) இலன் என்னும் எவ்வம் உரையாமை - '(யான்) வறியன்' என்று (இரப்பான்) சொல்லும் இளிவரவை(த் தான் பிறர்கட்) சொல்லாமையும், ஈதல் - (அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது) ஈதலும், (இவையிரண்டும்), உள - உளவாவன,—குலன் உடையான்கண்ஏ - குடிப்பிறந்தான்கண்ணே; (எ - று.)

மேல் "தீது" என்றது ஒழிதற்கும், "நன்று" என்றது செய்தற்கும் உரியவனை உணர்த்தியவாறு. இனி, 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு - அவ்விளிவரவை (ஒருவன் தனக்குச்) சொல்வதற்கு முன்னே (அவன்குறிப்பறிந்து) கொடுத்தல் எனவும், அதனை(ப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவன்)உரையாவகையாற் கொடுத்தல் எனவும், (யான் இதுபொழுது) பொருளுடையேனல்லேனென(க் கரப்பார்)சொல்லும் இளிவரவைச் சொல்லாதுகொடுத்தல் எனவும் உரைப்பாருமுளர்; அவர், 'ஈதல்' என்பதனைப் பொருட்பன்மைபற்றிவந்த பன்மையாக உரைப்பர்.

(கு - ரை.) இப்பாட்டிற்கு நான்கு உரை. இளிவரவு - துயரமொழி. அதனை - அவ்விழிமொழியை. குடிப்பிறந்தான்கண்ணே - உயர்குடியிற் பிறந்தவனிடத்தே. முந்தினபாட்டில் 'தீது'என்ற யாசகத்தை நீங்குதற்கும், 'நன்று'என்ற தானத்தைச் செய்தற்கும் உரியவன் யாரெனில்?—உயர்குடிப்பிறந்தவ னென இதிற் கூறினார். இலன் என்பதற்கு இலக்கணம் - கீழ் உ௦௫-ஆங்கவியின் கீழ்க் காண்க. எவ்வம்-துன்பம்; அதனை உணர்த்தும்மொழிக்கு ஆகுபெயர். உரையாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். உரையாமை, ஈதல் என்பன, உள என்னும் அஃறிணைப்பன்மைக்குறிப்புமுற்றைக்கொண்டன. குலன் - குலம்என்பதன்போலி: னகரமே மகரத்தோடு மயங்கிவருமென்பது ஒருசாரார்கொள்கை. பொதுப்படக் கூறியதனால், நல்லகுலத்தை உணர்த்திற்று; (குணம், ஒழுக்கம், அறிவு முதலியவை பொதுப்படக்கூறினால், பெரும்பாலும் நல்லவற்றையே குறிக்கும்.) ஏகாரம்-பிரிநிலை: ஆதலால், உயர்குடிப்பிறவாதானிடத்து இவ்விரண்டுகுணங்களுள் ஒன்று உண்டாயினும் உண்டாகுமேயன்றி இரண்டு முண்டாவது அருமை யென்பது கருத்தாம்.

குலனுடையான் - சாதியொருமை. இரண்டாவது உரைகீது-இல்லேனென்னும் வார்த்தையைத் தன்முன் ஒருவன்சொல்லாதபடி அவன்சொல்லுதற்கு முன்னே அவன்கருத்தைக் குறிப்பாலறிந்து கொடுத்த லென்றும், முன்ற முரைகீது - இல்லேனென்னும்வார்த்தையை யாசகன் தன்னிடந் தானம் வாங்கினபின்பும் வேறொருவனிடம்போய்ச் சொல்லாதபடி அவனது வறுமை நீங்கவும் அவனுக்குச் செல்வம்நிரம்பவுந் திருப்தியுண்டாகவுங் கொடுத்த லென்றும், நான்காமுரைகீது - இல்லே னென்று (இயல்வது கரப்பாராய) உலோபிகள் சொல்லும் வார்த்தையைத் தான் சொல்லாமற் கொடுத்த லென்றும் பொருள்; இவ்வுரைகளுக்கு, ஈதல் என்பது - பலர்க்குப் பலபொருளீத் தானஞ்செய்தல் பற்றிவந்த பன்மையை யுணர்த்தும் பால்பகாவஃறிணைப் பெய ராதலால், உள என்னும் பன்மைமுற்றைக் கொண்ட தென்க. உரையாமை - எதிர்மறைவினையெச்சம். இதுபொழுது - இப்பொழுதில். கரப்பார்-கொடுக்கக்கூடியபொருளைக் கொடாமல்மறைப்பவர். தன்னிடம் வந்து யாசித்தவன் இல்லேன் என்னும் இழிமொழியை அவனிடம்வந்து யாசிப்பவர்க்குச்சொல்லாமல் அவர்வேண்டுவனவெல்லாம் கொடுக்கும்படி அவனுக்கு நிரம்பப்பொருள்கொடுத்த லெனவும் பொருள்கொள்ளலாம். இனி, 'இலன்' என்பதை ஆண்பாற்படர்க்கை யொருமைவினைமுற்றாகக் கொண்டால், இவன் இல்லாதவ னென்னும் நிந்தைச்சொல்லே யாசகனுக்குறித்துத் தான் சொல்லாம லீதலென்றும், இவன் இல்லாதவனென்னும் இகழ்சொல்லைத் தன்னைக்குறித்து யாசகனுவது பிறராவது சொல்லாதபடி யீதலென்றும், தன்னிடம் வந்துபோன யாசகனைக்குறித்துப் பிறர் இவன் இல்லாதவ னென்று சொல்லாமற் பொருளால்மிக்கவனென்று சொல்லும்படி யீத லென்றும், இவன் நமது இல்லிடத்தே [வீட்டில்] வந்துள்ளானென்று இகழ்ந்து கூறாம லீத லென்றும் பொருள்படும். இன்னோரன்ன விசேஷார்த்தங்கள் பலவற்றையும் ஒருங்கே தருகின்ற சிறப்புப்பற்றி யன்றே, "கடுகைத்துளைத் தேழ்கடலைப்புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என இந்நூலின் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் விளங்கச் சிறப்பித்துக் கூறியது. குலனுடையான்என்பதில் - குலத்தையுடைமையாகப் பெற்றவ னென்னும் பொருளுந் தோன்றும். ஈதல்தொழில் ஒன்றுயினும் ஈயப்படும் பொருள்கள் பல வாதலால், அப்பொருளின்பன்மைபற்றி ஈதலும் இங்கே பலவாயின; அன்னதானம், கன்னிகாதானம், சொன்னதானம், பூதானம், கோதானம், வித்யாதானம் முதலிய பலவகைத்தானங்க ளென்றபடி. இலன் என்னுஞ் சொல்லே எவ்வமென்றது, அதனைச்சொல்வோருங் கேட்போருந் துன்புறுதலா லெனக் காண்க. முதலுரைக்கு 'உரைபாமையீதல்' என்னுஞ் செவ்வெண்ணின்ஈற்றில் 'இரண்டும்'என்னுந் தொகை விகாரத்தால் தொக்கது. "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில், லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கு ளுள்ள படி" என்னும் ஔவையார்பாடலுக்கும் இக்குறளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களை உய்த்து உணர்க.

இவ்வருமைத்திருக்குறளினது கருத்தின்பெருக்கத்தைத் தொகுத்துத் திருவாவடுதுறையாதீனத்துக் கச்சியப்பமுனிவர் விநாயகபுராணத்தில் அரசியற்கைப்படலத்திற் கூறியுள்ள செய்யுட்களைக் கீழே காண்க:—

கூஅ. ''இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங் கூரு
திரப்பினை நிரப்ப னன்ரு மதனினன் ரூவ தாகு
மிரப்பவ னிலனென் ரூர வியம்பிய வெவ்வஞ் சொல்லென்
நிரப்பினும் பிறர்பாற் கூரு நிரக்கமோ டுதன் மைந்தா.

கூக. அருத்தியி னிலனென் ஞமு னளித்தலு மிலனென் றப்பா
லுரைத்தில னுகச் சால வுதவலு மேற்கின் ரூனும்
வருத்துற விலனென் ஞமை வழங்கிட வரைவில் செல்வம்
பொருத்தலு மொன்றி னென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.

சo. நலமிகு செல்வம் பெற்றும் நல்குர வினரைக் காத்த
லிலனென மாதி சீர்த்தி யிலனெனைப் பிறர்சொ லெவ்வ
வலனுரைக் கஞ்சி யேனும் வறியனை யிலனென் றெள்ளா
தலர்புகழ் பயனும் வேண்டி னுக்கையு மளிக்க மைந்தா.'' (கூ)

உஉச. இன்ன திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

(ஐ - ள்.) இரக்கப்படுதல் - (இரத்தலேயன்றி) இரக்கப்படுதலும்; இன்னது - இனிதன்று; இரந்தவர் இன் முகம் காணும் அளவு - (ஒருபொருளே) இரந்தவர் (அதுபெற்றதனால்) இனிதாகிய (அவர்) முகங் காணுமளவும்.

எச்சவும்மையும் முற்றும்மையும், விகாரத்தால் தொக்கன. இரக்கப்படுதல் - இரப்பார்க்கு ஈவலென்று இருத்தல். அதனை 'இன்னது' என்றது, ''எல்லா, மிரப்பார்க்கொன் றீயாமை'' கூடுங்கொல்லோ என்னும் அச்சம் நோக்கி: எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டு மென்பது பெறப்பட்டது.

(கு - ரை.) 'இரக்கப்படுதலும்' என்கிற இறந்ததுதழுவிய எச்சவும்மையும், 'காணுமளவும்' என்கிற முற்றும்மையுந் தொக்கது - விகாரம். ஈவல் - (அவர்வேண்டுவதைக்) கொடுப்பேன். அதனை - இரக்கப்படுதலை. எல்லா மிரப்பார்க்கு ஒன்றீயாமை கூடுங்கொல்லோ என்னும் அச்சம் - 'தமக்கு வேண்டும் பலபொருள்களை இரப்பவர்கட்கு அப்பொருள்கள்பலவற்றுள் யாதானுமொன்றைக் கொடுக்கக்கூடாதிருக்கும்படியாய்விடுமோ?' என்று அதற்குக் குடிப்பிறந்தார் அஞ்சுதல். இம்மேற்கோள் - நாலடியாரில் ''கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம், சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம், இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம், மாணக் குடிப்பிறந்தார்'' என்பதி லுள்ளது. திருப்தியுண்டாகக் கொடுத்தல்வேண்டு மென்பது இதன்கருத்து. 'இது கொடுக்குங்கால் தாழாது கொடுக்கவேண்டு மென்றது' என்பர் மணக்குடியர். இப்பாட்டில் 'இரக்கப்படுதல்' என்பதைச் செயப்பாட்டுவினைத்தொழிற்பெயர்க்கு உதாரணங்காட்டினர் இலக்கணக் கொத்துநூலாசிரியர். (சு)

உஉடு. * ஆற்றுவா ராற்றல் பகியாற்ற லப்பகியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ - ள்.) ஆற்றுவார் ஆற்றல் - (தவத்தான்) வலியார்க்கு வலியாவது, பசி ஆற்றல் - (தம்மைஉற்ற) பசியைப் பொறுத்தல்: (அவ்வலிதான்), அ பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை (ஈகையான்) ஒழிப்பாரது வலிக்குப் பின்; (எ - று.)

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதா ராற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பா ராற்றல் நன்று என்பதாம்.

(கு - ரை.) வலி - பலம்; வல்லமை. உற்ற - அடைந்த. அது - பசியை. ஆற்றலின் - வலிமையினும். ஆற்றல் - ஆற்றுஎன்னும் பகுதியின்மேல் வந்த தொழிற்பெயர். தவஞ்செய்பவர் உண்டிசுருக்கல் முதலியவற்றால் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலை, மேல் "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறு கண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" என்பதனாலும், துறவறத்தார்க்கு இல்லறத்தார் உண்டிமுதலியன உதவிப் பசிமுதலிய இடையூற்றினை ஒழித்தலை, மேல் "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை" என்றதனாலும் அறிக. "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற் றுலகு" என்றது முதலாகக் கீழ் 'நீத்தார்பெருமை' என்னும் அதிகாரத்திற் கூறிய முற்றத்துறந்தமுனிவரது பெருமையினும் தானஞ்செய்வாரதுபெருமையே மிக்கது என்பது கருத்து; எனவே, எல்லாப்பெருமையினும் இது சிறந்த தென்பதாம். 'நான்கு ஆச்சிரமிகளுள் வேதம்முதலியவற்றிற் சொல்லுகிற கர்மானுஷ்டானஞ்செய்கிற கிருகஸ்தன் மற்றை மூவரையும் பிக்ஷாகொடுத்துக்காக்கிறபடியால் உயர்ந்தவனென்று சொல்லப்படுகிறான்' என்பது மநுதருமசாஸ்திரம். இது, புனைந்துரைவகையால் ஈகைச்சிறப்புரைத்த தாதலின், "துறந்தார்பெருமை துணைக்கூறின் வையத்து, இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று", "செயற்கரிய செய்வார் பெரியர்", "தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்", "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல், மற்றையவர்கள்தவம்" என முன்னும் பின்னும் கூறுகிற நீத்தார்பெருமையோடு மாறுகொளக்கூறலாகாது. (நி)

உஉசு. அற்றூ ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றூன் பொருள்வைப் புழி.

(இ - ள்.) அற்றூர் - வறியாரது, அழி பசி - மிக்க பசியை, தீர்த்தல் - (அறன்நோக்கித்) தீர்க்க: பொருள் பெற்றூன் ஒருவன் - பொருள் பெற்றூனொருவன், வைப்பு உழி - (அதனைத் தனக்கு உதவு)வைக்கும்இடம், அஃது - அவ்வறம், (ஆகலான்); (எ - று.)

எல்லாநன்மைகளும் அழியவருதலின், 'அழிபசி' என்றூர். 'அறன்நோக்கி' என்பது, எஞ்சிநின்றது. அற்றூரழிபசிதீர்த்த பொருள் பின் தனக்கே வந்து உதவு மென்பதாம்.

---

* ஆற்றுவார்க்காற்றல்.

(கு - ரை.) அற்றார் - பொருள்களில்லாதவர். அழி பசி - எல்லா நன்மைகளையும் அழிக்கின்ற பசி: வினைத்தொகை; இங்கே பிறவினைப்பொருளது; அன்றிக்கே, எல்லாநன்மைகளும் அழிதற்குக்காரணமான பசியென்று காரியப்பொருளில்வந்த வினைத்தொகையெனவுங் கொள்ளலாம். பசி எல்லாநன்மைகளையும் அழித்தலே "மானங் குலம் கல்வி வண்மை யறிவுடைமை, தானச் தவ முயர்ச்சி தாளாண்மை - தேனின், கசிவுண்ட சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசி வந்திடப் பறந்து போம்" என்பதனாலும் அறிக. அழிக்கும்பசி எனவே, மிக்கபசியென் றுயிற்று; அழித்தல் - வருத்துதலுமரம்; தொடும்பசி யென்க. அறன் நோக்கி - தருமத்தைப்பார்த்து; இது தருமமென்று எண்ணி. தீர்க்க - நீக்குக. தீர்த்தல் - வியங்கோள் வினைமுற்று. அதனை - அப்பொருளை. 'அறனெனக்கி' என்ற சொல்லெச்சம், வருவித்து முடிக்கப்பட்டது. பின் - மறுமையில். எழைகட்குப் பொருளைத் தானஞ் செய்தவன் அதன்பயனால் மறுமையில் இன்பமும் வருபிறப்பிற் பொருளுந் தவறுமற்பெறுவா னென்பது கருத்து. அஃதொருவன் - ஆய்தம் உயிர்போல ஒலித்தது. வைப்பு - வைத்தல்; தொழிற்பெயர். வைப்புழி என்பதை-வைத்தற்குரிய இடம் என நான்காம்வேற்றுமைத்தொகையாக விரிக்க. இனி, இக்குறளை ஒருவாக்கிய மாகக்கொண்டு,வறியவரதுபசியை யொழித்தலாகிய அத்தருமத்தை ஒருவன் பெற்றாலுயின் அவன் பொருளைச்சேமித்துவைக்கும் இடம்பெற்றான் என்றும் உரைக்கலாம். "வைத்தநனை வைப்பென் றுணரற்க தாமதனைத், துய்த்து வழங்கி யிருபாலும்—அத்தகத், தக்குழிநோக்கி யதஞ் செய்யினஃதன்றே, எய்ப்பினில் வைப்பென்பது" என்ற பழமொழிச்செய்யுளோடு இத்திருக்குறளை ஒப்பிடுக. 'பொருளற்றாரது குணங்களையழிக்கும் பசியைப்போக்குவதுசெய்யா ஒருவன் தான் தேடினபொருளை வைத்தற்குஇடம் பெற்றாலும் என்றவாறு: இது, பசுத்துண்ணப் பொருளழியா தென்றது' என்பர், மணக்குடியர். (கூ)

உஉஎ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுங்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ - ள்.) பாத்து ஊண் மரீஇயவனை - (எஞ்ஞான்றும்) பகுத்துஉண்டல் பயின்றவனை, பசி என்னும் தீ பிணி - பசி யென்று சொல்லப்படும் தீய நோய், தீண்டல் அரிது - தீண்டுதல் இல்லை; (எ - று.)

இவ்வுடம்பில்நின்று ஞானஒழுக்கங்களை அழித்து அதனால் வருமுடம்பு கட்குத் துன்பஞ் செய்தலின், 'தீப்பிணி' எனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானாகலின், பசிப்பிணி தணுகாது என்பதாம்.

இவை யாறுபாட்டானும், ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) எஞ்ஞான்றும் - எப்பொழுதும். பகுத்து உண்டல் - பிரமசாரி வானப்பிரஸ்தன் சன்னியாசி என்னும் மூன்று ஆச்சிரமத்தார்க்கும், அதிதி தரித்திரன் முதலானவர்க்கும், பித்ருக்கள் தேவர் விருத்தாளிகள் உற்வினர் முதலியோர்க்கும் தான் சம்பாதித்த பொருளைப் பங்கிட்டுக்கொடுத்துத் தானும் உண்ணுதல்; கீழ் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் "பழியஞ்

சிப் பாத்து ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" என்ரூர். பயிலுதல் - பழகுதல். தீய - கொடிய. பசியென்கிற நோய்க்குத் தீமை - பலவன்மைகளையும் அழித்து, இம்மை மறுமை என்னு மிரண்டுக்குந் துன்பஞ்செய்வதாதல். மருத்துவன் - வைத்தியன்; மருந்தின்தன்மையை அறிந்து கொடுப்பவன். பிறர்க்கு இட்டு உண்ணும் ஈகையுடையாளுக்கு எப்பொழுதும் வறுமைநோய் சேரா தென்பது கருத்து. பாத்து - இறந்தகாலவினையெச்சம்: பகு என்பதன் மரூஉவாகிய பா - பகுதி. ஊண் - உண் என்னும் முதனிலைதிரிந்ததொழிற்பெயர். மருவியவன் என்பது, மரீஇயவன் என விகாரப்பட்டு அளபெடுத்தது; செல்லிசையளபெடை. தீப் பிணி - பண்புத்தொகை; தீமையாகிய பிணியென விரியும்: தீயோடொத்த பிணி யென விரித்து, உவமைத்தொகையெனவுங் கொள்ளலாம்: ஜாடராக்கினி எனப் பசிக்குப் பெயராதலால். தன்பசிநோயை எப்பொழுதும் ஒழித்தற்கு வேறொருவைத்தியனைத் தேடாமல் தானே ஒழித்துக்கொள்ளுதலால், கொடையாளியைக்குறித்து 'தனக்கு மருத்துவன் தானுகலின்' என்ரூர். "பிறர்க்குப் பிறர்செய்வதுண்டோ மற்றில்லை, தமக்கு மருத்துவர் தாம்" என்பது, பழமொழி. பிறர்பசியை ஒருபிறப்பில்ஒழித்தல், தன்பசியை எப்பிறப்பிலும் ஒழிக்கும் மருந்தா மென்க. (எ)

உஉஅ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுகடமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ - ள்.) தாம்—, உடைமை - உடைய பொருளை, வைத்து - (ஈயாது) வைத்து, இழக்கும் - (பின்) இழந்துபோம், வன்கணவர் - அருளிலாதார், ஈத்து - (வறியார்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து, உவக்கும் - (அவர்) உவத்தலான் (அருளுடையார்) எய்தும், இன்பம் - இன்பத்தினை, அறியார் கொல் - (கண்டு) அறியார்கொல்லோ? (எ - று.)

'உவக்கும்' என்பது, காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது, 'இன்பம்' என்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிதாராயின், தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்திழவார் என்பது கருத்து.

(கு - ரை.) வன்கண்மை-கொடுமை, அருளின்மை: அதனையுடையவர்-வன்கணவர். அவர் உவத்தலான் - யாசகர் மகிழ்தலால். எய்தும் - அடைகிற. உவக்கும் இன்பம் - உவத்தலாற்பெறும் இன்பம்; பெயரெச்சம் - காரணப் பொருளது. உடைமை - உடைத்தாயிருக்கும் பொருளுக்குப் பண்பாகு பெயர். பொருளைத் தேடி வைத்து இழப்பவர் கொடுத்தலாகிய இன்பத்தை அறியாரென்பது கருத்து; இதனால், திரவியஞ் சம்பாதித்தற்குப்பயன் பிறர்க்குக் தானஞ்செய்தலே யென்றும், அதனலாகுமின்பம் மற்றையெல்லாவின்பங்களினுஞ் சிறந்த தென்றும், தானஞ்செய்யாதவர்கட்கு ஈட்டல் காத்தல் முதலிய துன்பங்கள்மாத்திரம் உள்ளனவேயன்றி இன்பமென்பது சிறிதும் இல்லை யென்றும் அறிக. தாம் உடைமைவைத்து இழக்கும் வன்கணவர்—"உடாஅது முண்ணுதுந் தம்மூடம்பு செற்றுங், கெடாஅத கல்லறமுஞ் செய்யார் - கொடா அது, வைத்தீட்டிஞ ரிழப்பர் வான்றேய்மலே

நாட, வுய்த்தீட்டுந் தேனீக் கரி," "ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்" என்பன காண்க. 'இது, இடார் இழப்பர் என்றது' என்பர் மணக்குடியர். (அ)

உஉகூ. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(இ - ள்.) நிரப்பிய - (பொருட்குறை) நிரப்பவேண்டி, தாம்ஏ தமியர் உணல் - (வறியார்க்கு ஈயாது) தாமே தனித்துண்டல்,—இரத்தலின் இன்னாது - (ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று) இரத்தலினும் இன்னாது: மன்ற - ஒருதலையாக; (எ - று.)

பொருட்குறை நிரப்பலாவது - ஓரோ எண்களைக் குறித்து அத்துணை ஈட்டும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல்- பிறரை ஒழித்தல். இரத்தற்குஉன்னது அப்பொழுதைஇளிவரவே, பின் நல்குரவு இல்லை: தமியருண்டற்கு அவையிரண்டும் உளவாம் ஆகலின், 'இரத்தலின் இன்னாது' என்றார். 'நிரப்பிய' என்பதற்கு 'தேடிய உணவுகளை' என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) பிறர்பால் - அயலாரிடத்தில். இன்னாது - துன்பந்தருவது; இனிதாகாதது. ஒருதலையாக - நிச்சயமாக. ஓரோ எண்கள் - சிலதொகைகள்; ஆயிரம், பதினாயிரம், லட்சம் முதலிய கணக்குக்கள். அத்துணை ஈட்டும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்கூட்டுதல் - அவ்வளவு சம்பாதிப்போமென்று சம்பாதித்தலையேமுக்கியமாகக்கொண்டு பேராசைப்பட்டுப் பிறர்க்குக்கொடுக்கக்கூடியதையுங் கொடாமல் உலோபஞ்செய்து பொருள் சேர்த்தல். இளிவரவு - ஈனத்தனம். நல்குரவு - வறுமை. அவைஇரண்டும்- ஈனத்தனமும், வறுமையும். 'இரத்தல் போல மெய்யாக இன்னாதாம், தேடின உணவைத் தாமே தமியராயிருந்து உண்டல் என்றவாறு' என்பர் மணக்குடியர். நிரப்பிய-செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; நிரம்பு என்பதன் பிறவினையாகிய நிரப்பு - பகுதி, இய - வினையெச்ச விகுதி. சம்பாதித்து நிறைத்துவைத்த உணவுகளை என்கிற இரண்டாவது உரையில், நிரப்பிய - இறந்தகாலப்பலவின்பால்வினையாலணையும்பெயர் நிரப்பியவுணல்- இரண்டாம்வேற்றுமைத்தொகை. இனி, நிரப்பிய - இறந்தகாலப்பெயரெச்சமெனக்கொண்டு, பொருள்களைநிறைத்துவைத்த தாம்மாத்திரமேஎன்றும் உரைக்கலாம். 'தாமே' - பிறரையொழித்தலால், ஏ - பிரிநிலை. தமியர் - தமி என்பதனடியாப் பிறந்த பலர்பாற்குறிப்புமுற்றெச்சம். மிகத் துன்பந்தருவதாகிய யாசித்தலினுந் துன்பந்தருவது; தானஞ்செய்யாமல் தானே தனித்துண்பது என்று கருத்து. "மருந்தே யாயினும் விருந்தோ டுண்" என்றதனாலும் தனித்து உண்பது தவறுதல் பெறப்படும். இரப்பவர்க்குச் செல்வமில்லையாயினும் சுற்றத்தா ருண்டு; பொருள்தேடிப் புதைப்பவர்க்குச் செல்வமுளதாயினும் இல்லாமையேற்படுவதோடு சுற்றத்தாருமில்லை யென்பது காண்க.

உஙo. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதழி யியையாக் கடை.

(இ - ள்.) சாதலின் இன்னாதது இல்லை - (ஒருவர்க்குச்) சாதல்போல இன்னாதது (ஒன்று) இல்லை; அதனும்-அத்தன்மைத்தாகிய சாதலும், ஈதல் இயையாக்கடை-(வறியார்க்கு ஒன்று) ஈதல் முடியாதவழி, இனிது—; (எ-று.)

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், 'இனிது' என்றார்.

இவை மூன்றுபாட்டானும், ஈயாமையின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) உடற் பொறை - உடம்பாகிய பாரம். பாவிகளுடைய உடம்பைப் பூமிபாரமென்பது, தூற்கொள்கை; "முற்றுமற்றொரோவழி" என்ற விதியால் அதுவென்னும் முற்றியலுகரத்தின்மேல் இழிவுசிறப்பும்மையின் உயிர் ஏறி அதும் என நின்று, பின் இன்னிசை நிறைக்கவேண்டிக் குறில் நெடிலாய் 'அதூஉம்' என அளபெடுத்தது. இயையாக்கடை-'கடை' என்னும் விகுதிபெற்றஎதிர்மறையெதிர்காலவினையெச்சம்: இயையா கடை என இருசொல்லாகவைத்து ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தொடராகக் கொள்ளலும் ஒன்று. ஒருபொருளைக் கேட்டவர்க்கு வைத்துக்கொண்டே கொடாமற்போவது மரணவேதனையினும் மிகக்கொடிதென்பது தாற்பரியம். 'ஈயாது வாழ்தலிற் சாதல் நன்று என்றது' என்பர், மணக்குடியர். (கo)

உச - ஆம் அதிகாரம்—புகழ்.

அஃதாவது - 'இல்வாழ்க்கை' முதல் 'ஈகை' ஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல்வாழ்க்கை என்பது, இந்நூலின் ஐந்தாம் அதிகாரம்: அதுமுதல் இதுவரையிற் பத்தொன்பது அதிகாரங்களில் இல்லறவொழுக்கம் கூறப்பட்டது. வழுவாதார் - தவறுமல் நடந்தவர்கள். இம்மைப்பயன் - இப் பிறப்பிலடையும் பிரயோசனம். இவ்வுலகின் கண் நிகழ்ந்து - இந்தவுலகத்திற் பொருந்தி. இறவாதுநிற்கும் - என்றும் அழியாமலிருக்கிற.

உகக. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) ஈதல் - (வறியார்க்கு) ஈக; இசைபட வாழ்தல் - (அதனால்) புகழ் உண்டாக வாழ்க: அது அல்லது - அப்புகழல்லது, உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம்-பயன், இல்லை (பிறிதொன்று) இல்லை,(ஆகலான்); (எ-று.)

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும், "உணவின் பிண்டம் உண்டி முதற்று" ஆகலின், ஈதல் சிறந்தது என்பதற்கு ஞாபகமாக, 'ஈதல்' என்றார். 'உயிர்க்கு' என்பது, பொதுப்படக் கூறினுரேனும் விலங்குயிர்கட்கு எலாமையின், மக்களுயிர்மேல் நின்றது.

(கு - ரை.) ஆண்மை - வீரத்தன்மை, பராக்கிரமம், பௌருஷம். "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" என்பது, புறநானூறு - கஅ - ஆஞ் செய்யுளில் உள்ளது; பரிமேலழகர், அந்வயத்தின்படி மாற்றிக்கூறினர். உட

வில் உயிர்நிலைத்திருத்தற்குக் காற்று முதலியவாகப் பலகாரணங்களிருப்பினும், சோறும் நீருமே சிறப்பானவை: "உண்டிகொடுத்தோ ருயிர்கொடுத்தோரே", "உணவெனப்படுவது நிலத்தொடுநீரே" என்பன காண்க: ஆகவே, அவ்வுண்டிக்குத் தட்டுதலுண்டாகாதபடி பொருளீட்டலே, கல்விமுதலிய மற்றையவற்றைக் காட்டிலும், புகழுண்டாதற்குச் சிறந்தகாரணமா மென்க. ஞாபகம் - நினைப்பு ஊட்டுவது. விலங்கு - மிருகம். ஏலாமையின் - ஈதலும் இசைபடவாழ்தலும் பொருந்தாமையால். மனிதசன்மத்திற் பிறந்ததற்குப் பயன் ஈந்துபுகழ்பெறுதலேயா மென்பது இதன்கருத்து. 'இது, புகழுண்டா மாறு கூறிற்று' என்பர் மணக்குடியர். ஈதல், வாழ்தல் - 'தல்' ஈற்று உடன் பாட்டு வியங்கோள்கள். இவற்றுக்கு - 'மனிதர்' எனத் தோன்ருஎழுவாய் வருவிக்க. இப்பாட்டு, பரிமேலழகர்கருத்தின்படி மூன்றுவாக்கியம். இதனை ஒரேவாக்கியமாகக்கொண்டு, பிறர்க்கு ஈதலினும் புகழ்பெறவாழ்தலாகிய அத்தொழிலல்லது உயிர்க்கு லாபம் வேறில்லையென்றும் உரைக்கலாம். (க)

உகூ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(இ - ள்.) (உலகத்து), உரைப்பார் - (ஒன்று) உரைப்பார், உரைப்பவை எல்லாம் - உரைப்பனவெல்லாம், — இரப்பார்க்கு - (வறுமையான்) இரப் பார்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒன்றை, ஈவார்மேல் - ஈவார்கண், நிற்கும் —, புகழ் - புகழாம்; (எ - று.)

புகழ்தான், உரையும் பாட்டும் என இருவகைப்படும்; அவற்றுள் 'உரை ப்பாருரைப்பவை' என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாராயினும், இனம்பற்றி, புலவர்க்கே உரிய செய்யுளும் கொள்ளப்படும்: படவே, 'பாடு வார்பாடுவனவெல்லாம் புகழாம்' என்பதுஉம் பெற்றும். ஈதற்காரணஞ்சிறந் தமை, இதனுள்ளுங் காண்க. இதனை 'பிறர்மேலும் நிற்குமென்பார்தாம் எல் லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மேல் நிற்கும்' என்று உரைப்பாரு மூளர்; அது புகழதுசிறப்பு நோக்காமை யறிக.

(கு - ரை.) உரைப்பார் உரைப்பவை - சொல்லுவார் சொல்லுவன. வழக்கு - உலகவழக்கு; அதாவது உரை. இனம் - ஒருவருக்கமாயிருத்தல். "ஒருமொழி யொழி தன்னினங் கொளற்குரித்தே" என்ற உபலக்ஷண விதியை இங்கே அறிக. ஈதற்காரணம் சிறந்தமை-புகழின்காரணமாகிய கல்வி முதலிய பலவற்றுள் ஈதலாகியகாரணம் சிறந்ததாதல். இதனுள்ளும்-மேற் பாட்டில்மாத்திரமேயன்றி இப்பாட்டிலும். இரண்டாமுரையில்-'உரைப்பாரு ரைப்பவையெல்லாம்' என்றது வரையில் ஒருவாக்கியமும், மற்றது ஒருவாக் கியமு மெனக் காண்க: சொல்லுகஎன்று முற்றுவருவிக்க. பிறர்மேலும் - கல்வி ஆண்மைமுதலியனவுடைய மற்றையார்மீதும். அவ்வுரை புகழின்சிறப் பைக் குறியாமல் ஈகையின்சிறப்பையே குறித்தலாற் பொருந்தா தென்ருர். 'உரைப்பவையெல்லாம் புகழ்' என்பதில் புகழுக்குச் சிறப்பும், 'ஈவார்மேல் தான் புகழ் நிற்கும்' என்ற உரையில் ஈவாரின்மேன்மையைத் தெரிவித்தல்

மூலமாக ஈகைக்குச் சிறப்பும் தோன்றுதல் காண்க. 'இரப்பார்க்கொன் றீவார்மேனின்றும்' என்ற இடைப்பிறவரல், புகழ்க்குச் சிறந்தகாரண மின்ன தென்பதை நன்குவிளக்க வந்தது. உலகத்தில் பேசுவார் பேசுபவையும், பாடுவார் பாடுபவையும், கொடையாளிகளின் புகழே என்பது கருத்து. புகழ் உரையும் பாட்டுமென இருவகைப்படுதலை "வேற்றுமை யில்லா விழுத் தினைப் பிறந்து, வீற்றிருந்தோரை யெண்ணுங் காலை, உரையும் பாட்டு முடையோர் சிலரே, மரையிலைபோல மாய்ந்தினேர் பலரே" என்னும் புறநானூற்றைக்கொண்டும் அறிக. (உ)

உஉ. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு தநிற்பதொன் றில்.

(இ - ள்.) ஒன்று ஆ - (தனக்கு) இணை இன்றாக, உயர்ந்த - ஓங்கிய, புகழ் அல்லால் - புகழல்லது, உலகத்து—, பொன்றாது நிற்பது - இறவாது நிற்பது, ஒன்று - பிறிதொன்று, இல் - இல்லை; (எ- று.)

இணை இன்றாக ஓங்குதலாவது - கொடுத்தற்கு அரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னைஒப்பதின்றித் தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவ தென்பதாம். இனி, 'ஒன்ரு' என்பதற்கு - ஒருவார்த்தையாக(ச் சொல்லின்) எனவும், ஒரு தலையாகப்பொன்றாது நிற்பது எனவும் உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும், புகழது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்ரு - ஒப்பற்றதாக. ஆ - ஆகவென்பதன்விகாரம். இறவாது - அழியாமல். உயிரைக்கொடுத்ததற்குத் தகீசிமுனிவரும், உறுப் பைக்கொடுத்ததற்குச் சிபிசக்கரவர்த்தியும், பொருளைக்கொடுத்ததற்குக் கர்ண னும் முதலியோரை உதாரணமாகக்கொண்டு, அவர்கள்புகழ் இப்பொழுதும் எங்கும் பிரசித்தமாய் வழங்கிவருவதைக் காண்க. செய்யப்படுவது - சம்பா திக்கத்தக்கது. உலகத்து அழியாதுநிற்பது புகழே என்று கூறியதனால் அதுவே தேடுதற்கு உரியதாமென்றவாறு: "சாதல்வந் தடுத்தகாலுந் தனக் கொருசாதலின்றிப், பூதலமிறக்குங்காறும் புகழுடம்பிருக்கும்" என்றது காண்க. இரண்டாம்உரையில் சொல்லின் என்பது - இசையெச்சம். மூன் றும்உரையில், ஒன்ரு - நிச்சயமாக என்று பொருள். முதலுரைகீத, ஒன்ரு உயர்ந்த என இயையும். ஒன்று - ஏகம், அத்விதீயம். இனி, ஒன்ரு என் பதை - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக்கொண்டு, உலக மென்பதனோடு இயைத்து, எப்பொருள்களும் நிலைத்தலில்லாத இவ்வுலகத்திலே புக ழல்லது நிலைத்துநிற்பது வேறில்லை யென்றும் உரைக்கலாம். ஆதாரமாகிய உலகம் அழிய ஆதேயமாகிய புகழும் அழிதல் கூடு மாதலால், 'உலகத்துநிற் பது' என்ரார். புகழினது அழிவின்மையை "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக" எனப் பிறர்கூறியவாற்ரலும் அறிக. அல்லால்-எதிர் மறைவினையெச்சம். நற்கருமங்களின் பயனுய் மறுமையிலுண்டாகின்ற இன் பங்கள் அழிந்தாலும் இம்மையிலுண்டாகிற புகழ் அழியாமை காண்க. உயர்

ந்த புகழல்லது இவ்வுலகத்துக் கெடாது நிற்பது பிறிதில்லை என்ற வாறு. இது, மற்றுள்ள பொருள்போலன்றி அழியாது நிற்கு மென்றது' என்பது, மணக்குடியருரை. (கூ)

உகூச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

(இ - ள்.) (ஒருவன்), நிலம் வரை - நிலவெல்லைக்கண்ணே, நீள் புகழ்- பொன்றுதல் நிற்கும் புகழை, ஆற்றின் - செய்யுமாயின், புத்தேள் உலகு - புத்தேளுலகம், புலவரை போற்றுது - (அவனையல்லது) தன்னை எய்தினின்ற ஞானிகளைப் பேணுது; (எ - று.)

புகழுடம்பான் இவ்வுலகும், புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே எய்தாமையின், 'புலவரைப்போற்றுது' என்றார். அவன் இரண்டு உலகும் ஒருங்கு எய்துதல், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி, யெய்துபவென்ப தஞ் செய்வினை முடித்து" எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

(கு - ரை.) நிலவரை - நிலஎல்லைக்கண்: நிலத்தின் எல்லையென உடைமையும் உடையதும் வேறுகாத ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறும் வேற்றுமைத்தொகை: பூமியினிடத்தில். நீள்புகழ் - நீளும்புகழ் என எதிர்காலவினைத்தொகை; நெடுங்காலம் நிற்கும் புகழ் என்றவாறு: இனி, நீட்சியாகிய புகழ்எனப் பண்புத்தொகையாகக் கொண்டால், பெருங்கீர்த்தியென்று ஆகும். செய்யுமாயின் - உண்டாக்குவனுளனால், சம்பாதித்தால். புத்தேள் உலகு - தேவலோகம். ஞானிகளைப் பேணுது - தத்துவஞானமுடையவரை விரும்பிநன்குமதியாது; என்றது - இம்மையிற் புகழையீட்டாமல் அறிவை மாத்திரம்பெற்று யோகமுயற்சியால் மறுமையில் தேவசரீரத்தைப் பெற்றவர்களினும் இம்மையிற் புகழையும் ஈட்டித் தானம்முதலியவற்றின்பயனால் மறுமையில் தேவசரீரத்தையும் பெற்றவர்கட்குச் சுவர்க்கலோகத்தில் மிக்க சிறப்பு நடக்கு மென்பது கருத்து. இம்மையில், உடம்பு இரண்டு: பூதவுடம்பும் புகழுடம்பும்என: பூதவுடம்பாவது - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையா லுண்டான சரீரம்; புகழுடம்பாவது- கீர்த்தியால் என்றும் பெயர்நிலைபெற்றிருத்தல்: பூதவுடம்புக்கு அழிவு உண்டு; புகழுடம்புக்கோ அது இல்லை. தேவவுடம்பு - தேஜோமயமானது; இதற்கும் அழிவுண்டு. இவற்றுள் பூதவுடம்பைமாத்திரம் பெற்றுநின்ற மண்ணுலகத்தாரினும், தேவவுடம்பை மாத்திரம் பெற்றுநின்ற விண்ணுலகத்தாரினும், புகழுடம்பு தேவவுடம்பு என்னும் இரண்டையும் இரண்டுலகத்திலே ஏககாலத்திற் பெற்றவர்களின் பெருமை சிறந்ததாதல் காண்க.ஒருங்கே எய்தாமையின் - தத்துவஞானிகள் ஒருசேர அடையாமையால். "புலவர்பாடும்" என்னும் மேற்கோள் - புறநானூறு, உள - ஆம் பாட்டில் உள்ளது: 'புலவராற்பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின்கண் பாகனைச் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவர்' என்று சொல்லுவர் அறிவுடையோர்,

தாம்செய்யும் நல்வினையை முடித்து' என்று உரை; தாஞ்செய்வினை முடித்து வானவூர்தியெய்துப என்று அன்வயம். இதனால், புகழுடையவன் தேவலோகத்தையும் அடைதல் விளங்குகின்றது. பிறர்என்றது - அப்பாட்டுப்பாடிய உறையூர் முதுகண்ணன்சாத்தனாரை. புலம் அல்லது புலமை - அறிவு; அதனையுடைய ஞானிகள், புலவர்; இது - விபுதர் என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. 'புலவர் என்றார், தேவரை; அவர் புலனுடையராதலால். இது தேவருலகம் போற்றுமென்றது' என்பது, மணக்குடியருரை.(ச)

உரு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
விழுத்தகர்க் கல்லா லரிது.

(இ - ள்.) நத்தம் (ஆகும்) கேடுஉம் - (புகழுடம்பிற்கு) ஆக்கமாகும் கேடும், உளது ஆகும் சாக்காடுஉம் - (புகழுடம்பு) உளதாகுஞ் சாக்காடும்,—விழுத்தகர்க்கு அல்லால் - சதுரப்பாடுஉடையார்க்கல்லது, அரிது - இல்லை; (எ-று.)

நத்து என்னுந் தொழிற்பெயர், விகாரத்தால் 'நத்து' என்று ஆய், பின் 'அம்' என்னும் பகுதிப்பொருள்விகுதிபெற்று, 'நத்தம்' என்று ஆயிற்று. 'போல்' என்பது - ஈண்டு உரையசை. 'ஆகும்' என்பதனை மூன்றும் கூட்டி, 'அரிது' என்பதனைத் தனித்தனிக் கூட்டி உரைக்க. ஆக்கமாகும் கேடாவது-புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது-புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுன் நிலையின எய்துவார் விழுத்தகராகலின், 'விழுத்தகர்க்கு அல்லால் அரிது' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடு-கீர்த்தி விருத்தியடைதற்குக் காரணமான செல்வச்செலவு. புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடு - கீர்த்தி நிலைத்திருக்க மரணமடைதல். சாக்காடு - சாவு; தொழிற்பெயர்: காடு-விகுதி. சதுரப்பாடு உடையார் - சாமர்த்தியமுடையவர். தொழிற்பெயர் - வினைப் பகுதி யென்றபடி; விகாரம் - இங்கே, வலித்தல். பொருத்து திருத்து என்னும் பகுதிகள் பொருத்தம் திருத்தம் என நிற்றல்போல, நத்து என்னும் பகுதி நத்தம் என நின்றது: பகுதியே தொழிற்பெயர்ப்பொருளதாதலால், அம் - பகுதிப்பொருள்விகுதி யென்றார். ஈண்டு - இங்கே. 'போல்' - ஒப்பில்போலி; உவமைப்பொருளுணர்த்தாத 'போல்' என்னுஞ் சொல்; "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்" என்னுந் தொல்காப்பியத்தால் இது உரையசைப்பொருளாய்நின்றது: உரையசையாவது-சிறிதுபொருளுணர்த்தி வாக்கியத்தை அலங்கரித்துநிற்பது: வாக்கியாலங்கார மென்பர் வடநூலார். "நெருப்பழற்சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம், எரிப்பச்சுட் டெவ்வ நோயாக்கும்" என்பது காண்க. நத்தம்போற் கேடு - வளர்தல்போலக் கெடுதல்; புகழ்வளரச் செல்வங்குறைதல் என்றபடி. செல்வமெய்த - சிறப்பையடைய. நல்கூர்தல் - வறுமைப்படுதல். நிலையில்லாத செல்வத்தையும் உடம்பையுங் கொண்டு நிலையான புகழைப் பெறுவது மிக்க சாம

ர்ததிய மென்பது கருத்து. "வீந்தவரென்பவர் வீந்தவரேனும், ஈந்தவரல்ல திருந்தவர் யாரே" என்பர் கம்பரும். வித்து - ஞானம்; அது - வித் என்னும் வடமொழியின் திரிபு: அதனை மனத்தி லுடையவர், வித்தகர்: வித்தகத்தர் என்ற வடசொல்லின் திரிபு என்பாரு முளர். (இ)

உருக. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ - ள்.) தோன்றின் - (மக்களாய்ப்) பிறக்கின், புகழொடு தோன்றுக - புகழ்க்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் - அக்குணம் இலாதார், தோன்றலின் - (மக்களாய்ப்) பிறத்தலின், தோன்றாமை - விலங்காய்ப் பிறத்தல், நன்று—; (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். 'அஃதிலார்' என்றமையின் 'மக்களாய்,' என்பதூஉம், 'மக்களாய்ப்பிறவாமை' என்ற அருத்தாபத்தியான் 'விலங்காய்ப் பிறத்தல்' என்பதூஉம் பெற்றும். இகழ்வார் இன்மையின், 'நன்று' என்றார்.

(கு - ரை.) பிறக்கின் - பிறந்தால். புகழ் என்பது - இங்கே, புகழ்க்குக் காரணமான நற்குணத்தைக் குறித்தலினால், காரியவாகுபெயர். 'அஃதிலார்' என உயர்திணைப்பலர்பாலாற் கூறினமையால், 'தோன்றின்' என்றவிடத்து 'மக்களாய்' என வருவித்து உரைக்கப்பட்டது. அருத்தாபத்தியாவது-இன்ன படியில்லாவிட்டால் இன்னபடிகூடாது என்ற வாய்பாடுதோன்ற, வெளிப் படையாகவன்றிச் சொல்லின் குறிப்பினால் பொருள் தோன்றுவது: இது குறிப்பெச்சத்தி லடங்கும். 'மக்களாய்ப்பிறவாமை' என்றதனால் மக்களினும் வேறான 'விலங்காய்ப்பிறத்தல்' என்பது குறிப்பிக்கப்பட்டவாறு காண்க. தொல்காப்பியனார் "எடுத்த மொழியினுஞ் செப்பலுமுரித்தே" என்று கூறியதில் இது அடங்குமென்பர், சிலர். 'பிறக்கின் புகழுண்டாகப் பிறக்க, அஃதிலார் பிறக்குமதிற் பிறவாமை நன்று என்றவாறு. இது, புகழ்படவாழவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரை. அஃதிலார் என்றதில், ஆய்தம் மெய்போ லொலித்தது. மனிதனை நற்குணமில்லாவிட்டால் இகழ்ந்து பேசுவார்கள்; விலங்குசாதியாய்ப்பிறந்தால் இகழார்களென்றவாறு.

உருஎ. புகழ்படவாழாதார் தம்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(இ - ள்.) புகழ் பட வாழாதார் - (தமக்குப்) புக ழுண்டாக வாழமாட்டாதார், (அதுபற்றிப் பிறர் இகழ்ந்தவழி), தம் நோவார் - (இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்ததென்று) தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது—, எவன் - என்கருதி? (எ - று.)

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்தல் ஒருதலை யாகலின், 'இகழ்வாரை' என்றார்.

(கு - ரை.) புகழ்படவாழாதார் - தருமமார்க்கத்திலேநின்று முயற்சி செய்து தொகுத்துவைத்த நற்பொருளினாலே தென்புலத்தார்முதல் இறந்தார் கடையாக மேலே சொல்லப்பட்டவர்களைப் பாதுகாத்து அதனாலே

தமக்குப் புகழுண்டாக இல்லறத்திலே இனிதுவாழாதவர். பிறர் இகழ்ந்த வழி - அப்படிவாழ்வார் கண்டு நிந்தித்தபொழுது. இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே - இந்நிந்தை நாம் புகழ்படவாழாததனாலே வந்ததென்று தம்மை நொந்துகொள்ளாதவர்களாய்.நோவது-வெறுப்பது. என்கருதி - யாதுபயனே யுத்தேசித்து? என்றது, பேதைமையென்றபடி. நோவார் - எதிர்மறைமுற்றெச்சம். இகழ்வார் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமாகவந்த வழுவமைதி. புகழ்பெறுதவர் தம்மைப் பிறர் இகழ்ந்தால் அவர் இகழ்ந்தது பிழையன்றுஎனக் கருதி அதற்கு எது தமது குற்றமேயென அறிந்து தம்மைத் தாம் வெறுத்துக்கொள்ளவேண்டும்; அதனைவிடு, அவர் தம்மைநிந்தித்தது தாம் இனியாயினும் புகழ்படவாழ்தற்கு ஏதுவாகிய உபதேசமாமெனக் கொள்வது, விசேஷம்: அங்ஙனங்கருதாது அவரையிகழ்வது, தாம் புகழ்படவாழாத குற்றத்தின்மேலும் தம்மை நிந்தித்துப்புத்திசொன்னவரை நொந்துகொண்ட குற்றமும் வருதற்கு ஏதுவென்க. 'புகழ்படவாழமாட்டாதார் இகழப்படுவர் என்றவாறு' என்பர் மணக்குடியர்.

உஉஅ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறுஅ விடின்.

(இ - ள்.) இசை என்னும் எச்சம் பெறுஅ விடின் - புகழென்னும் எச்சம் (பெறலாயிருக்க, அது) பெறுதொழிவாராயின், வையத்தார்க்கு எல்லாம் - வையகத்தோர்க்கெல்லாம், வசை என்ப - (அதுதானே) வசையென்று சொல்லுவர், (நல்லோர்); (எ - று.)

'எச்சம்' என்றார், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாதுநிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டா வென்பது கருத்து.

(சு - ரை.) புகழ் என்னும் - புகழென்று சிறப்பித்துச்சொல்லப்படும். எச்சம் - சேஷித்திருப்பது; எஞ்சு - பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி, வலித்தல் - விகாரம். வையகத்தோர்க்கெல்லாம் - நிலவுலகத்திலுள்ளவரெல்லார்க்கும். வசை - நிந்தை. புகழ்ச்சியைப் பெறுமற்போலுலும் இகழ்ச்சியைப்பெறுதிருத்தல் கூடாதோ எனின், ஒளியின்மையே இருளாய் முடிதல் போலப் புகழ்ச்சியின்மையே பெரியஇகழ்ச்சியாதலின் கூடாது என்பது கருத்து. பெறுஅ - மொழியிறுதியிற் செய்யுளோசை நிறைத்தற்கு வந்த அளபெடை; ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம். இனி, இசை யென்னு மெச்சம் பெறுவிடின் என்பதற்கு - (இல்வாழ்க்கையென்னும் மனைவியைத் தழுவிப்) புகழ் என்னும் பிள்ளையைப் பெறுவிட்டால் என்னும் பொருளுரைக்கலாம். வையத்தார்க்கெல்லாம்வசை யென்பதற்கு - உலகத்தார்க்கெல்லாம் கேரும் நிந்தை யென்றும், உலகத்தாரெல்லாராலுஞ் சொல்லப்படும் நிந்தை யென்றுங் கருத்துக்கொள்க. 'உலகத்தார்க்கெல்லாம் புகழாகியவழிபடு பெறுவிடின் அப்பெறுமைதானே வசையா மென்றுசொல்வர் என்றவாறு. மேல் 'புகழில்லாதாரை இகழ்ப' என்றார்; 'அவர் குற்றமில்லாராயின் இகழப்படுவரோ?'என்றார்க்கு, 'வேறு குற்றம் வேண்டா: புகழின்மைதானே அமையும்' என்றது' என்பது, மணக்குடியருரை. (அ)

உருகூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(இ - ள்.) இசை - புகழ், இலா - இல்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம்—,—வசை இலா - பழிப்பில்லாத, வள் - வளப்பத்தையுடைய, பயன் - விளையுள், குன்றும்—; (எ - று.)

உயிர் உண்டாயினும் அதனாற் பயன்கொள்ளாமையின் 'யாக்கை' எனவும், அது நிலத்திற்குப் பொறை யாகலின் 'பொறுத்த' எனவுங் கூறினார். விளையுள் குன்றுதற்கு ஏது, பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. 'குன்றும்' என, இடத்துங்கிழப்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது.

இவை நான்குபாட்டானும், புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - சை.) விளையுள்-நெல் முதலியவற்றின் விளைவு. குன்றும்-குறையும். பொறை - பாரம். நிலமென்னும் இடத்திற் பொருந்திய பயனென்னும் பொருளினது குன்றுதல் என்னுந் தொழிலை அந்த நிலமென்னும் இடத்தின்மே லேற்றி 'நிலம் பயன்குன்றும்' எனப்பட்டது; நிலத்திற் பயன் குன்றும் என்று சொல்வது, நேர். வண்பயன் - வண்மையாகிய பயன் எனப் பண்புத்தொகை. யாக்கை - ரஸம், ரக்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை என்னும் ஏழுதாதுக்களாலும் யாக்கப்பட்டது என உடம்புக்குக் காரணப்பெயர்; யாத்தல் - கட்டுதல். புகழ்க்குக் காரணமான நற்குணநற் செய்கைகளில்லாதவர்க ளுள்ளவிடத்தில் பூமி வளங்குறைவுபடுதலை "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந், தவமிலா ரில்வழி யில்லை," "நிலத்தியல்பு, வானமுரைத்து விடும்" என்பன கொண்டும் அறிக. 'இது புகழில்லாதான் இருந்த விடம் விளைவு குன்றும் என்றது' என்பர் மணக்குடியர்.(கூ)

உசூ. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(இ - ள்.) வசை ஒழிய வாழ்வார்எ - (தம்மாட்டு) வசை உண்டாகாமல் வாழ்வாரே, வாழ்வார் - உயிர்வாழ்வாராவார்; இசை ஒழிய வாழ்வார்எ - புகழ் உண்டாகாமல் வாழ்வாரே, வாழாதவர் - இறந்தாராவார்; (எ - று.)

'வசையொழிதலாவது - இசையென்னும் எச்சம் பெறுதல்' ஆயினமையின், இசை யொழிதலாவது - வசைபெறுதலாயிற்று. மேல் 'இசையிலா யாக்கை' என்றதனை விளக்கியவாறு.

இதனுள், இவ்விரண்டும் உடன்கூறப்பட்டன.

மறுமைப்பயன், "வானுறையுந், தெய்வத்துள் வைக்கப்படும்" என மேலே கூறப்பட்டது. படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும், தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி, மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம், இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்; ஆராய்ந்து அறிந்து அடக்கிக்கொள்க: யாம் உரைப்பிற் பெருகும்.

(கு - ரை.) வசை - இகழ்ச்சிச்சொல். 'இசைபெற', 'வசைபெற' என்றுசொல்லவந்தவர் அருத்தாபத்தியால் 'வசையொழிய', 'இசையொழிய' என்றுரல்லது அவையிரண்டும் முன்புஉளவாய்ப் பின்புஇங்க என்றுரல்லர். 'வசையொழிதலாவது' என்ற வாக்கியத்தின் கருத்தைக் கீழ் "வசையென்ப வையத்தார்க் கெல்லாம்" என்னுந் திருக்குறளைக்கொண்டு அறிக; புகழ் பெறுதலே பழியின்மை, புகழ்பெறுமையே பழி என்றவாறும். "இசையொ ழிய வாழ்வாரே வாழாதவர்" என்றதனால், 'புகழில்லாதவர் உற்றறிபுலனென் றுமில்லாத ஜடப்பொருளோடி ஒப்பர்' என்று கூறி, கீழ்ப்பாட்டில் 'இசையிலராயாக்கை' என்றதன் இகழ்ச்சியை வெளிப்படுத்தினர். 'இது, புகழில்லார் பிணத்தோடொப்பர் என்றது' என்பர் மணக்குடியர். இவ்வி ரண்டும் - புகழுடையாரதுமேன்மையும், புகழில்லாதாரது கீழ்மையும்.

இவ்வதிகாரத்தால், இல்லறத்திற்கு இம்மைப்பயன் புகழ் எனப்பட்டது; இல்லறத்திற்கு மறுமையிலடையும் பயன், கீழ் இல்வாழ்க்கையென்னும் அதிகாரத்தில் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய் வத்துள் வைக்கப்படும்" என்றதனால், இல்லறத்தோடுகூடிவாழுமியல்பினால் நிலவுலகத்தில் வாழ்பவன் பின் அவ்வறப்பயனைச் சுவர்க்கத்தில் அனுபவித் தல் நிச்சயமாதலின் தேவலோகத்தில் வசிக்குந்தேவரு ளொருவனுக வைத்து ணன்குமதிக்கப்படுவா ணென்று கூறப்பட்டது: அப்பாட்டின் உரையில் 'இதனுன் இல்லிலேயது மறுமைப்பயன் கூறப்பட்டது; இம்மைப்பயன் புகழ்: அதனை இறுதிக்கட் கூறுப' என்று கூறிப்போந்ததை இங்கே அநுவதித் தார். போகம் - சுகானுபவம்.

மனு - அவராற் செய்யப்பட்ட தருமசாஸ்திரத்துக்குக் கருத்தாவாகு பெயர். அறநூல்-தருமசாஸ்திரம். இல்லறங்கள்-கிருகஸ்தாச்சிரமதருமங்கள். மற்றொன்றுவிரித்தல்என்னுங்குற்றம் நேருமென்றுஅஞ்சி இங்ஙனங்கூறினர்.

இல்லறவியல் முற்றிற்று.

இரண்டாவது

துறவறவியல்.

இனி, முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது - மேற்கூறிய இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்காரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுன் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞான மும் என இருவகைப்படும்.

வி ர த ம்.

அவற்றுள் விரதங்களாவன - இன்ன அறம் செய்வல் எனவும், இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம்ஆற்றலுக்குஏற்ப வரைந்துகொள்வன. அவை காம வரம்பிலவாகலின் பெருகு மென்று அஞ்சி, அவைதம்முள்ளே பலவற்

றையும் அகப்படித்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றற் ஈண்டுக் கூறுவர்ன் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

(கு - ரை.) முறையானே - இல்லறம் துறவறம் என முன்னேசொல்லி நிறுத்திய கிரமத்தின்படியே. கூறிய - சொல்ல. அறிவுடையாராய் - உலகியலையும் இல்லறவாழ்க்கையின் நிலையில்லாமையையும் கடவுளின் தன்மையையும் அறிந்து. பிறப்பினை அஞ்சி - மீண்டும் சன்மமெடுத்தற்குப் பயப்பட்டு. வீடுபேற்றின் பொருட்டு - முத்தியையடையும்பொருட்டு. துறந்தார் - தேக அபிமானம் முதலிய எல்லாப்பற்றுக்களையும் முழுவதுமாய்விட்டவர். வினைமாசு தீர்ந்து-கருமசம்பந்தத்தாலாகிய குற்றம் நீங்கி; விரதங்களின் பயன், கருமந் தொலைத்தலும் ஞானம்உதித்தலு மென்க. அந்தக்கரணம் - அகத்து உறுப்பு; அது, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என நால்வகைப்படுதலால், பன்மையாகக்கூறினர். தூயவாதற்பொருட்டு-பரிசுத்தியுடையனவாதற்கு. காக்கப்படும்-தவறுமலதுட்டிக்கப்படும். அவற்றுள்-விரதங்களால். அவை-அந்தக் கரணங்கள். தூயவாயவழி-பரிசுத்தியுடையனவானபோது. உதிப்பது-உண்டாவது.

செய்வல் - செய்வேன். ஒழிவல் - நீங்குவேன். தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வன - தமதுசக்திக்குத் தக்கபடி ஏற்படுத்திக்கொள்பவை. வரம்புஇல - அளவில்லாதன. பெருகும் - அவற்றையெல்லாங்கூறின் நூல் விரிந்துபோம். அகப்படித்து - உள்ளடக்கி. கூறுவான் - சொல்ல. முதற்கண் - முதலில். இதுமுதற் பதின்மூன்று அதிகாரங்களில் துறவறம் கூறப்படுகின்றது; அவற்றில் இதுமுதல் ஒன்பது அதிகாரங்களில் விரதங்களும், அடுத்த நான்கு அதிகாரங்களில் ஞானமும் கூறப்படும்.

உரு - ஆம் அதிகாரம்—அருளுடைமை.

அஃதாவது - தொடர்புபற்றுது இயல்பாக எல்லா வுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் * சிறத்தலின், முற்படக் கூறப்பட்டது.

(கு - ரை.) தொடர்பு (மனைவி மக்கள் பந்து மித்திரர் என்றாற்போன்ற) சம்பந்தம். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்த குணமாதலே முன்கூறிப் போந்தா ராதலால், அதனை இங்கு உவமையாக்கினர். இது-அருளுடைமை. முன் - முதலில். 'அருளுடைமையாவது - யாதானும் ஓர் உயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்திலுல் வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை' என்பர் மணக்குடியர்.

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(இ - ள்.) செல்வத்துள் செல்வம் - செல்வங்கள்பலவற்றுள்ளும் (ஆராய்ந்தெடுக்கப்பட்ட) செல்வமாவது,—அருள் செல்வம்-அருளான்வருஞ் செல்வம்: பொருள் செல்வம் - (அஃது ஒழிந்த) பொருளான்வருஞ் செல்வங்கள், பூரியார்கண்உம் - இழிந்தார்கண்ணும், உள - உளவாம், (ஆகலான்); (எ-று.)

* பி - ம்: சிறந்தமையின், முன்.

அருளான்வருஞ் செல்வமாவது - உயிர்களேஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனைநீசர்கண்ணும் உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்.

(கு - ரை.) அருளான்வருஞ் செல்வம் - அருள் காரணமாகத்தோன்றும் மேம்பாடு. இழிந்தார்கண்ணும் - கீழ்மக்களிடத்தும். ஓம்பி - பாதுகாத்து. அவ்வறத்தான்மேம்படுதல் - அங்ஙனம்பாதுகாத்தலாகிய தருமத்தாற் சிறப் படைதல். நீசர் - தாழ்ந்தவர். அருளாகிய செல்வம் அறிவுமுதலியவற்றால் உயர்ந்தோரிடத்துமாத்திரமே உண்டாகி அவருயிரையும் பிறவுயிர்களனைத் தையும் பாதுகாத்தற்கு ஏதுவாம்; பொருளாகிய செல்வம் அறிவுமுதலியன இல்லாத தாழ்ந்தோரிடத்தும் உண்டாகி அவர்களுயிரையும் பிறவுயிர்களை யும் பாதுகாக்க உதவாமற்போம்; ஆதலால், பொருளினும் அருளே சிறந்தது என்பது கருத்து. உம் - இழிவுசிறப்பு. இத்திருக்குறளை 'இன்னதல்லதிது வெனமொழிதல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமாகக்காட்டினர், வீர சோழியவுரைகாரர். (க)

உசஉ. நல்லாற்று ணுடி யருளாள்க பல்லாற்றுந்
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) நல் ஆற்றான் நாடி - (அளவைகளானும் பொருந்துமாற்று னும்) நன்றான நெறியிலே (சின்று நமக்குத்துணையாம் அறம் யாதென்று) ஆராய்ந்து, அருள் ஆள்க - அருளுடையராக; பல் ஆற்றான் - (ஒன்றை ஒன்று ஒவ்வாத) சமயநெறிகள் எல்லாவற்றானும், தேரின்உம் - ஆராய்ந்தா லும், துணை - துணையாவது, அஃதுஎ - அவ்வருளே, (பிறிதில்லை); (எ - று.)

அளவைகளாவன - பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அநுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று; ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம்அன்றியின் இதுகூடாது என்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையும் என இவற்றையுங் கூட்டி ஆறென்பாரும் உளர்: இவையும் ஒருவாற்றான் அவற் றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறுவது - 'இது கூடும், இதுகூடாது' எனத் தன்கண்ணே தோன்றுவது; இதனை வட நூலார் 'யுக்தி' என்ப. 'ஆற்றான்' என்பது - வேற்றுமைமயக்கம். ஒன்றை ஒன்று ஒவ்வாமையாவது - மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள்மாறுகோடல். அன்னவாயினும், அருள்துணை யென்றற்கண் ஒக்கு மென்பதாம். உயிரைவிட்டுநீங்காது இருமையினும் உதவலின், 'துணை' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நன்றான நெறி - சன்மார்க்கம். அளவைகளானும் பொருந் மாற்றானும் ஆராய்ந்து என இயையும். ஆராய்தல் - ஆலோசித்து அறிதல். நமக்குத் துணையாம் அறம் - நமது உயிர்க்கு உதவியாகுந் தருமம். அருள் ஆள்க - அருளுடைமையென்னும் விரதத்தையே உறுதிப்பொருளாகத்

கொண்டு காக்க. சமயநெறிகள் - மதவழிகள். அளவைகள் - ஒருபொருளின் உண்மையை அளவிட்டறிதற்குக் கருவியான பிரமாணங்கள்: அவை எட்டுவகைப்படும்; அவையாவன - பிரதியட்சம், அநுமானம், உபமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகியம், சம்பவம் என்பன. அவற்றுள், காணல் - பிரதியட்சம்; புகையைக் கண்டு நெருப்பு உண்டெனல் - அநுமானம்; மரை பசுப்போல் எனல் - உபமானம்; பெரியோர்வாய்ச்சொல் - ஆகமம்; 'பகலுண்ணுன் பருத்திருப்பான்' என்றவிடத்து 'இரவில் ஒளித்துஉண்பான்' என உணர்தல் - அருத்தாபத்தி; 'மூன்னுமில்லை, பின்னுமில்லை, ஒன்றினுன்றில்லை, ஒருகாலத்தும்இல்லை' எனல் - அபாவம்; இம்மரத்திற் பேயுளதென்பது - ஐதிகியம்; ஆயிரத்தில் நூறு உண்டெனல் - சம்பவம்; இவற்றுள் ஐதிகியம், சம்பவம் என்பவற்றைப் பலர் வேறுபிரமாணங்களாகக் கொள்ளார். இவைஎட்டையும் காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் மூன்றில் அடக்குவர்; உபமானம் பிரதியட்சத்திலும், அருத்தாபத்தியும் சம்பவமும் அநுமானத்திலும், ஐதிகியம் ஆகமத்திலும், அபாவம் மூன்றிலும் அடக்கப்படும்: இதன்விரிவைத் தருக்கநூல்களிற் காணலாம். பொறிகளாற் காணுங் காட்சி - மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் பஞ்சஇந்திரியங்களினுலும் அறியும் அறிவு; இது, பிரதியட்சமெனப்படும். குறிகளான் உய்த்து உணர்தல் - அடையாளங்களால் ஆராய்ந்து அறிதல். கருத்தாமொழி - கடவுளின் வாக்கியம். ஆகமம் என்றது - கடவுளால் நேரேவெளிவிடப்பட்ட வேதங்களும், அவனருள்வழிப்பட்டோரால் வெளிவிடப்பட்ட ஸ்மிருதி இதிகாச புராணங்களும் முதலியவற்றை; இது, சப்தப்பிரமாணமெனவும் படும். மாறுஆய - எதிரான. இன்மை-அபாவம். ஒருவாற்றுன் - ஒருவகையால். கருத்து - சித்தாந்தம். ஆற்றுன் - ஆற்றில்என்று பொருள்: மூன்றும்வேற்றுமையுருபு ஏழாம்வேற்றுமையிடப்பொருளில்வந்ததனுல் உருபுமயக்கம். பொருள்கள் - பதார்த்தங்கள்; இவை, பிரமாணங்களைக்கொண்டு அளவிட்டு அறியப்படுதலால், பிரமேயமெனப்படும். மாறுகோடல் - பேதங்கொள்ளுதல். அன்னவாயினும் - அப்படிப்பட்டவையாஞலும். இருமையினும் - இம்மை மறுமை யென்னும் இரண்டிடத்தும். எவ்வளவு ஆலோசித்துப்பார்த்தாலும் எல்லாச்சமயத்தாராலும் உயிர்க்கு இம்மைமறுமைகளில் உறுதிதருவதாகவிரும்பி யொப்புக்கொள்ளப்படுவது அருளே யாதலால், உயிர்க்கு உறுதி வேண்டுபவர் அருளுடையராக என்பது கருத்து. 'நல்வழியாலேநாடி அருளேயுண்டாக்குக: பல்வழியினும் ஓடி ஆராயினும் தமக்கு அருளேதுணையாம் என்றவாறு. 'நல்வழியால்' என்றது, அருளுடைமையுண்டாகப் பலஅறங்களேயுஞ் செய்க என்றவாறு. இது அருளுடைமை வேண்டுமென்றது' என்பது, மணக்குடியுரை. 'அஃதே' என்னும் பிரிநிலையேகாரத்தால், வேறில்லையென்பது பெறப்பட்டது. அஃது - ஆய்தம் இங்கு மெய்போல நின்றது. (உ).

உசாத. அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னு வுலகம் புகல்.

(இ - ள்.) இருள் சேர்ந்த-இருள்செறிந்த, இன்னா உலகம் - துன்பவுலகத்துள், புகல் - சென்றுபுகுதல்,—அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு-அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு, இல்லை—; (எ - று.)

'இருள்செறிந்த துன்பவுலகம்' என்றது, திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின் 'உலகம்' எனப்பட்டது.

(கு - ரை.) செறிந்த - நிறைந்த. துன்பவுலகம் - நரகம். திணிதல்-நிறைந்து அடர்தல். இருள்செறிந்த இன்னாவுலகம் - எப்பொழுதும் மிக்க இருள் நிறைந்து அதிபயங்கரமாகவுள்ள அந்ததாமிஸ்ரம் என்னும் நரகபேதம். கீழ் அடக்கமுடைமை யென்ற அதிகாரத்தில் "ஆரிருளுய்த்துவிடும்" என்பதற்கு—'தங்குதற்கரிய இருளின்கண் செலுத்தும்' என்று பொழிப்புரையும், 'இருள் என்பது - ஓர்நரகவிசேடம்' என்று விசேடவுரையும் உரைத்தவாறும் காண்க. அருளுடையார்க்கு நரகவேதனையில்லை யென்பது கருத்து. 'இது, நரகம்புகார் என்றது' என்பர். மணக்குடியர். (௩)

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ - ள்) மன் - நிலைபேறுடைய, உயிர் - உயிர்களை, ஓம்பி - பேணி, அருள் ஆள்வாற்கு - (அவற்றின்கண்) அருளுடையனாவானுக்கு, தன் உயிர் அஞ்சும் வினை - தன்உயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள், இல்-உளவாகா, என்ப - என்று சொல்லுவர், (அறிந்தோர்); (எ - று)

உயிர்களெல்லாம் நித்த மாகலின், 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல் - துன்பம்நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்தினோன் கொலைமுதலிய பாவங்கள் செய்யா னெனவே, மறுமைக்கண் நரகம்புகாமைக்கு ஏது கூறியவாறாயிற்று.

(கு - ரை.) பேணி - பாதுகாத்து. நித்தம் - நித்தியம்; என்றும் ஒருபடிப்பட இருப்பது. பரமாத்மாவைப் போலவே ஜீவாத்மாவும் நித்தியமென்பது நூல்துணிபு. வினையென்னும் பொதுமொழி, 'தன்னுயி ரஞ்சும்' என்ற விசேஷணத்தால், தீவினையெனச் சிறப்பை யுணர்த்திற்று. அஞ்சும் வினை - அஞ்சுதற்குக் காரணமாகிய வினை யெனப் பொருள்படுதலால், பெயரெச்சம் காரியப்பொருளது. தன்னுயிர் - உடைமையும் உடையதும் வேறாகாத ஒற்றுமைக் கிழமைப்பொருளில் வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை. அன்ன அறத்தினோன் - அருளுடைமையாகிய அந்தத்தருமத்தை யுடையவன். மன்உயிர் - இரண்டனுருபும் பயனுந் தொக்கதொகை. நிலைபெற்றஉயிர் என வினைத்தொகையுமாம். 'என்ப' என்னும் பலர்பால்முற்றுக்கு, 'அறிந்தோர்' என்பது, தோன்றாஎழுவாய். அருளுடையார் தீவினைசெய்யா ரென்பது இதன்கருத்து. கீழ்ப்பாட்டிற் கூறிய சித்தாந்தத்துக்கு இப்பாட்டு ஏது. இவை யிரண்டு பாட்டுக்களாலும், அருளுடையார்க்கு மறுமையில் துன்பமின்மை கூறப்பட்டது; இம்மையில் துன்பமின்மை அடுத்தபாட்டாற் கூறப்படும். 'இது, தீமைவாரா தென்றது' என்பர் மணக்குடியர். (௪)

உசநு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ - ள்.) அருள் ஆள்வார்க்கு - அருளுடையார்க்கு, அல்லல் இல்லை - (இம்மையினும்) ஒருதுன்பம் உண்டாகாது; (அதற்கு), வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் - காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார், கரி - சான்று; (எ - று.)

சான்றுவார் - தாம் கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லல் உண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவார் இன்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்று என்பார், 'வளிவழங்கு மல்லன் மா ஞாலங் கரி' என்றார்: எனவே, 'இம்மைக்கண் என்பது' பெற்றும். ஞாலம் - ஆகுபெயர்.

இவை மூன்றுபாட்டானும், அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது.

(கு - ரை.) அதற்கு-இம்மையினும் ஒருதுன்பம் உண்டாகாதென்பதற்கு. ஞாலம் - நிலவுலகம். இயங்குகின்ற - சஞ்சரித்தற்கிடமான. சான்று - சாட்சியாவர். தேறிய - ஐயந்திரிபில்லாமல் அறிந்த. தேற்றுதல் - அங்ஙனம் அறிவித்தல். இன்மைமுகத்தான் - இல்லாமையாயிலாக: அருளுடையார் (துன்பமடைந்ததாக எப்போதும் எங்கும்காணப்படாமையையே) காரணமாகக் கொண்டு, ஞாலம் கரியென்ற ரென்க. ஞாலம் - பூமியில் வாழ்வார்க்கு இடவாகுபெயர். ஞாலம் கரியாவது, இம்மைக்கண்ணேயா மென்க. அத்துணையுடையார்க்கு - அருளாகிய துணையையுடையவர்களுக்கு. வளிவழங்கும் ஞாலம் - பெயரெச்சம் இடப்பெயர்கொண்டது. வழங்கும் மல்லல் மா என்னும் மூன்றும் ஞாலத்துக்கு அடைமொழி. அத்துணை - அருளாகிய அந்தத்துணை. 'அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார்மாட்டே காணப்படுமென்றது' என்பர், மணக்குடியர். (ங)

உசசு. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ - ள்.) அருள் நீங்கி - (உயிர்கள்மாட்டுச் செய்யப்படும்) அருளைத் தவிர்ந்து, அல்லவை செய்து ஒழுகுவார் - (தவிரப்படுங்) கொடுமைகளைச் செய்து ஒழுகுவாரை, பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பர் - (முன்னும்) உறுதிப்பொருளைச் செய்யாது (தாம் துன்புறுகின்றமையை) மறந்தவர் என்று சொல்லுவர், (நல்லோர்); (எ - று.)

உறுதிப்பொருள் - அறம். துன்புறுதல் - பிறவித்துன்பம் மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின் அவ்வாறு ஒழுகாரென்பது கருத்து.

(கு - ரை.) உயிர்கள்மாட்டு - பிராணிகளிடத்து முன்னும் - முற்பிறப்பிலும். உறுதிப்பொருள் - புருஷார்த்தம்; இங்கே, அவைநான்கனுள் முதலாவதான தருமம். துன்புறுகின்றமையை - வருத்தமடைகின்றதை. பிறவித்துன்பம் மூன்று முன்னர்க்கூறப்பட்டன. மறந்திலராயின் - உறுதிப்பொருளைச்

செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறவாதவரா யிருத்தல். அவ்வாறு ஒழுகார் - அருளைத்தவிர்ந்து தவிரப்படுங் கொடுமைகளைச்செய்யார். பொச்சாந்தார், பொச்சா - பகுதி. 'முன்னே அருள்' என்றதனால், பின்னே 'அல்லவை' என்றது -கொடுந்தொழில்களாயிற்று. தாம் அனுபவிக்கும் பிறவித்துன்பத்தை அறியாதவர்களே பிறவுயிர்களிடத்து அருளின்றியொழுகுவார்: அறிந்தவர்களோ அத்துன்பம் ஒழியும்பொருட்டு அருளுடையராவரென்றதாம். 'என்பர்' என்னும்வினைமுற்றுக்கு, 'நல்லோர்' என்பது தோன்றுஎழுவாய்; 'ஒழுகுவார்' என்பது, செயப்படுபொருள்: இதில் உயர்திணையில் இரண்டாம்வேற்றுமையுருபு இறுதியில் தொக்கது. இனி, 'என்பர்' என்பதைச் செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செப்வினையாகக் கொண்டு, அருளினின்று நீங்கி அறமல்லவற்றைச் செய்தொழுகுபவர் முற்பிறப்பிலும் உறுதிப்பொருளினின்று நீங்கி மறந்தவரெனப்படுவர் என்றும் உரைக்கலாம். 'முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகின் அவர்கள் இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியுமுடையவ ரென்று சொல்லுக என்றவாறு. இது, பொருளில்லையா மென்றது' என்பது, மணக்குடியருரை. (சு)

உசள. அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக * மில்லாகி யாங்கு.

(இ - ள்.) அருள் இலார்க்கு - (உயிர்கள்மேல்) அருளில்லாதார்க்கு, அ உலகம் - வீட்டுலகத்து இன்பம், இல்லை—; பொருள் இலார்க்கு - பொருளில்லாதார்க்கு, இ உலகம் - இவ்வுலகத்து இன்பம், இல் ஆகி ஆங்கு - இல்லையாயினுற்போல; (எ - று.)

'அவ்வுலகம்,' 'இவ்வுலகம்' என்பன - ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள் காரணமானுற்போல, அவ்வுலகத்து இன்பங்கட்கு அருள் காரண மென்பதாயிற்று.

(கு - ரை.) பொருள் - செல்வம். அவ்வுலகம் இவ்வுலகம் என்பவை - அந்தந்த வுலகத்து அனுபவிக்கப்படும் இன்பங்களைக் குறித்தலால், இடவாகுபெயர்; அ, இ என்னும் சுட்டிடைச்சொற்கள்-முறையே தூரத்திலும் சமீபத்திலு முள்ள பொருள்களைக் குறிப்பனவாதலால், முத்தியையும் பூமியையும் உணர்த்தின. ''பொருளுடையான் கண்ணதே போகம் அறனும், அருளுடையான் கண்ணதே யாகும்'' என்றதனோடு இக்குறளினை ஒப்பிடுக. 'ஆனல்' என்னும் எதிர்காலவினையெச்சம், 'ஆகி' என இறந்தகாலவினையெச்சமாகத் திரிந்தது: எச்சத்திரிபு. ஆங்கு - உவமவுருபு. 'இல்லாகியாங்கு, என்பதுவே சரியான பாடமாதலே, இலக்கணக்கொத்தில் ''பகுபதத்திலக்கணம்'' என்னுஞ்சூத்திரத்தில் 'ஆகியாங்கு' என இதனையேஉதாரணமெடுத்துக்காட்

*'இல்லாகியாங்கு' என்று சிலர் கூறும் பாடத்துக்கு - இல்லையாயினுற் போல என்று பொருள்படாமையும், நிலைமொழிவருமொழிகள் ஏற்படாமையும் முதலிய குற்றங்களை உய்த்து உணர்ந்து அதனை விலக்குக.

டியிருத்தலாலறியலாம். இத்திருக்குறளினைப் பொருட்படலத்தில் முதுமை யென்னுங் காஞ்சித்திணைப்பொருள்துறைக்கும், அலங்காரப்படலத்தில் தற்கத்திலெடுத்துக்காட்டுப்போலிக்கும் உதாரணங் காட்டினர் வீரசோழியவுரை காரர். உவமையணி. 'அருளில்லாதார் சுவர்க்கம்புகார் என்றது' என்பர் மணக்குடியர். (எ)

உசஅ. பொருளற்றூர் பூப்ப தொருகா லருளற்று
ரற்றூர்மற் றூத லரிது.

(இ - ள்.) பொருள் அற்றூர் - (ஊழான்) வறியராயினர், ஒரு கால் பூப்பர் - (அது நீங்கிப் பின்) ஒருகாலத்துச் செல்வத்தாற்) பொலிவர்; (அவ்வாறன்றி), அருள் அற்றூர் அற்றூர் - அருளிலாதார் (பாவம் அருமையின்) அழிந்தாரே; மற்று ஆதல் அரிது - பின் ஒருகாலத்தும் ஆதல் இல்லை; (எ - று.)

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. மேல் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமைகூறினு ராகலின், அதுமறுத்து, பிறவாற்றான் அதனினும் கொடிதென்பது கூறியவாறு.

(கு - சை.) ஊழான்-விதியால். ஊழாவது-நல்வினையின்பயனுகிய இன்பமும், தீவினையின்பயனுகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. அது - வறுமை. பொலிவர் - விளங்குவர். அவ்வாறன்றி - வறியராயினர் வறுமைநீங்கி ஒருகாலத்திற் செல்வத்தாற் பொலிவதுபோலல்லாமல். அருமையின் - நீங்காமையால். ஆதல் இல்லை - விருத்தியடைதல் இல்லை. 'மற்று' என்னும் இடைச்சொல், 'அற்றூர்' என்னும் வினையை மாற்றி 'அழியாமல்' என்னும் பொருளைத் தந்ததனால், வினைமாற்றுயிற்று. மேல் - மூன்றினகுறளில். 'அற்றூர்' என்னுஞ் சொல்மூன்றனுள், முன்னது இரண்டும்-வினையாலணையும்பெயர்; பின்னது-வினைமுற்று. வினைமுற்றாகிய 'அற்றூர்' என்பது - தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி: [நன். பொது. நூ.] முன்செய்த தீவினையால் தரித்திரரானவர்கள் அந்தத்தரித்திரம்போய்ப் பிறகு ஒருகாலத்திலே ஐசுவரியவான்களாகக்கூடும்; அருளில்லாதவர்களோ, பாவம் தொலையாமல் அழிந்து நரகத்திலே போகிறதல்லாமல் பின்னையொருகாலத்தும் பாவம்போய்ப் புண்ணியவான்களாகிற தில்லை யென்றவாறு. ஒருகால் மீண்டும் ஆக்கம்பெறும் பொருளின்மையினும், எக்காலமும் ஆக்கம்பெறுத அருளின்மை மிகக்கொடிய தென்க: வேற்றுமையணி. பொருளில்லாதார் ஒருகாலத்தே பொருளுடையவராகவுங் கூடும்; அருளில்லாதார் கெட்டால் பின்பு ஆக்கமுண்டாகாது என்றவாறு. 'இது' பொருளின்மையே யன்றி எல்லாக்கேடும் உண்டாம் என்றது' என்பது மணக்குடியருரை. (அ)

உசக. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூற் றேறி
னருளாதான் செய்யு மறம்.

(இ - ள்.) அருளாதான் செய்யும் அறம் - (உயிர்கள்மாட்டு) அருள்செய்யாதவன் செய்யும் அறத்தை, தேறின் - ஆராயின், தெருளாதான் மெய்

பொருள் கண்டு அற்று - ஞானமில்லாதவன் (ஒருகால்) மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும்; (எ - று.)

மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற்சொல்லும் பொருள். நிலைபெற்றஞான மில்லாதவன் இடையே மெய்ப்பொருளை யுணர்ந்தால் அதனைத் தன்ஞான மின்மையால் தானே அழித்துவிடும்; அதுபோல, அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன் அருளாமையால் தானே அழித்துவிடுமென்ப தாயிற்று: ஆகவே, பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றும்.

இவை நான்குபாட்டானும், அத்துணையில்லாதார்க்கு வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்ப்பொருள் - தத்துவசாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட உண்மையான விஷயம். நிலைபெற்ற - நிடமான. இடையே - நடுவிலே. அருளாதான் - அருளில்லாதான். அத்துணை - அருளாகியதுணை. நூற்பொ ருளை அறிதற்கு அறிவுபோல, அறஞ்செய்தற்கு அருள் இன்றியமையாக் காரண மென்பது கருத்து. உவமையணி. 'அறஞ்செய்யவும் மாட்டார் என் றது' என்பர், மணக்குடியர். (கூ)

உரு0. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ - ள்.) வலியார்முன் தன்னை நினைக்க - (தன்னின்) வலியார் (தன் னைநலியவரும்பொழுது) அவர்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க: தன்னின் மெலியார்மேல் தான் செல்லும் இடத்து - (அருளில்லாதவன்) தன் னின் எளியார்மேல் தான் (நலியச்) செல்லும்பொழுது; (எ - று.)

'மெலியார்' எனச் சிறப்புடைய * உயர்திணைமேற் கூறினு ராயினும், ஈனை அஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே, இவ்வுயிர்க்கும் அவ் வாறே அச்சமாமென்று அறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து.

இதனால், அருள்பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) தன்னின் வலியார் - தன்னைக்காட்டிலும் பலசாலிகள். நலிய - வருத்துதற்கு. "ஒருமொழி யொழி தன் னினங் கொளற்கு உரித்தே" என்ற சூத்திரத்திற் கூறிய உபலக்ஷணவித்தியால், 'மெலியார்மேல்' என்பதற்கு, "மெலியவற்றின்மேல் என்றுங் கருத்துக்கொண்டார்; இதனால், மேல் 'புலான் மறுத்தல்' என்னும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்கிறார். எவ்வுயிர்க் குந் தீங்குசெய்யாமையே அருள் என்றபடி. அதனை-வலியார்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையை. அதன்மேல் - அந்தப்பிராணியினிடத்து. இவ்வுயிர்க் கும் - நாம் வருத்தப்புகும் இந்தப்பிராணிக்கும். முன் - இடமுன். (கo)

* பி-மீ: உயர்திணையே.

உசு - ஆம் அதிகாரம்.—புலான்மறுத்தல்.

அஃதாவது - ஊனுண்டலை ஒழிதல். * கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனுல் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்கு உடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றுதலின், அதனை விலக்குதற்கு, இஃது, அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) ஊனுண்டல்-மாமிசபோசனம். ஒழிதல்-நீக்குதல்; செய்யாதிருத்தல்: விலக்குதல். கொலைப்பாவம் - பிராணிகளைக்கொல்லுதலால் வருந் தீவினை. அதற்கு - கொலைப்பாவத்துக்கு. அதனுல் - கொலைப்பாவத்தால். அதன் - கொலைப்பாவத்தின். ஒருங்கு உடைத்தாய - ஒருசேர உடைய தான. இயைவதன்று - பொருந்துவதன்று. ஒருவன் இறைச்சியை யுண்ணுவானுயின் அது, மீண்டும் பலபிராணிகளை வதைத்தற்குக் காரணமும், முன்னே சில பிராணிகளை வதைத்ததனுலாகிய காரியமும் ஆமெனக் காண்க. இவ்வதிகாரத்தை அருளுடைமையின்பின் வைத்ததற்குக் காரணம் - அருளுடையவர் பிராணிகளைக்கொன்று ஊன்தின்னுர்; அருளில்லாதவரோ கொன்றுதின்பர்: ஆதலால், அருளுடைமையின் பயன் புலான்மறுத்தல் என்பதுபற்றியாகும். புலால் - ஊன். மறுத்தல் - உண்ணுதவிர்தல்.

உறுக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ணுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(இ - ள்.) தன் ஊன் பெருக்கற்கு - தன் உடம்பை வீக்குதற்பொருட்டு, தான் பிறிது ஊன் உண்பான் - தான் பிறிதோருயிரின் (உடம்பைத்) தின்பவன்,—எங்ஙனம் - எவ்வகையான், ஆளும் - நடத்தும், அருள் - அருளினை?

பயனில்லாத ஊன்பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமைசெய்வானே அறிவில்லாதகொடியோன் என்றவாருயிற்று. 'எங்ஙன மாளு மருள்' என்பது, ஆளானென்பது பயப்ப நின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

(சு - ரை.) வீக்குதல் - பருக்கச்செய்தல். ஊன் - உடம்பு. எங்ஙனம் என்னும் வினு, இங்கு எதிர்மறை குறித்துநின்றது. ஊன், ன் - சாரியை; "ஊவெ னெருபெயர் ஆவொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. பெருக்கற்கு - 'ரு' விகுதிகாலங்காட்டும் எதிர்காலவினையெச்சம்; பெருக்கல் என்னுந் தொழிற்பெயரின்மேல் வந்த நான்காம்வேற்றுமை யெனினும் தவருகாது. "ஆத்மவத் ஸர்வபூதாநி" என்றபடி தன்னுயிரைப்போலவே எல்லாவுயிர்களையுங் கருதவேண்டுவது கடமையாயிருக்க அது செய்யாமல், தன்னுயிரையே தான் விரும்பி அதனைப்போஷித்தற்காகப் பிறவுயிரை வதைப்பவன் ஒருகாலும் அருளுடையவனென்று சொல்லத்தக்கவனல்ல னென்பது கருத்து. 'ஊனுண்ண அருள்கெடுமோ? என்றூர்க்குக் கூறப்பட்

* பி - மீ: அருளுடைமைக்கு மாருங் கொலைபிறத்தலுந் தூய்தன்மையும் நோக்கிப் புலாலுணவு மறுத்தல் கூறினர்; அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

டது' என்பர், மணக்குடியர். ''ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே'' என்றது, இனியவைகூற்பது. (க)

உறிஉ. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ - ள்.) பொருள் ஆட்சி - பொருளாற் பயன்கோடல், போற்றாதார்க்கு - (அதனைப்) பாதுகாவாதார்க்கு, இல்லை—; ஆங்கு - அதுபோல, அருள் ஆட்சி - அருளாற் பயன்கோடல், ஊன் தின்பவர்க்கு - ஊன் தின்பவர்க்கு, இல்லை—; (எ - று.)

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயன் இழத்தற்கு ஊன்தினல் காரண மென்பதாயிற்று.

* ஊன்தின்றூராயினும் உயிர்கட்கு ஒருதீங்கும்நினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லை யென்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவை யிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - சை.) கோடல் - கொள்ளுதல். அதனை - பொருளை. பொருட்பயன் - பொருளாலடையும் பயன். அருட்பயன் - அருளாலடையும் பயன். அருளாடற்கு இழுக்குஇல்லை - அருளுடையராதற்குக் தடையில்லை. அஃது - இழுக்கு; குறைவு. மாமிசபோசனஞ்செய்பவர் பிறவுயிர்களிடத்து அருளுடையவராக வெளிக்குக் காட்டினலும் உண்மையாக உள்ளோக்குமிடத்து அவர்கட்கு அருளென்பது சிறிதுமில்லை யென்பது கருத்து. உவமையணி. ஆங்கு - உவமவுருபு. 'ஊனுண்ண அருட்கேடு வரு மென்றூர்' என்பர், மணக்குடியர். பிராணிகளைக் கொல்லாமல் மாமிசம் டையாது: பிராணிகளைக் கொல்லுகிறவர்கட்குத் தயையில்லை: தயையில்லாதவன் என்ன தருமஞ்செய்தாலும் தவஞ்செய்தாலும் ஒருபயனுமில்லாமல் சாம்பலிலேவார்த்த நெய்போலவா மென்க. (உ)

உறிஊ. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தொன்ற
றுடல்சுவை யுண்டார் மனம்.

(இ - ள்.) படை கொண்டார் நெஞ்சம் போல் - கொலைக்கருவியை (த் தம் கையிற்) கொண்டவர்மனம் (அதனுற்செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறு) போல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் - பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம், நன்று ஊக்காது - (அவ்வூனையே நோக்குவதல்லது) அருளை நோக்காது; (எ - று.)

சுவைபட உண்டல் - காயங்களான் இனியசுவைத்தாக்கி உண்டல்.

இதனுல், ஊன்தின்றூர்மனம் தீங்குநினைத்தல் உவமவளவையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு - சை.) கொலைக்கருவி - ஆயுதம். சுவைபட - இனியருசிஉண்டாக. காயங்கள் - இன்சுவையை உண்டாக்கித்தரும்பொருட்டுச் சேர்க்கப்படுகிற பலபொருள்கள்; காரசாரங்கள். உவம வளவை - உபமானப் பிரமாணம்; மேலது - முன்னே சொன்ன அருளில்லாமை. படை-படுத்தற்குக்கருவி

* பி-ம்: இவை யிரண்டுபாட்டானும், அருளுக்குமாறுதல் கூறப்பட்டது.

யானது; படுத்தல் - கொல்லுதல்; ஐ - கருவிப்பொருள்விகுதி. ஈன்று - நல்ல குணமாகிய அருள்: ஒன்றன்பாற்குபிப்பு வினையாலணையும்பெயர். ஊக்குதல் - முக்கியமாகக்கருதுதல். ஒன்று - எண்ணலளவாகுபெயர்; ஒருபிராணியைக் குறித்தலால். மனம் - மகஸ். வடசொற்றிரிபு. ஊன்தின்பவரதுமனம் அருளை நினைத்தலுஞ் செய்யாதென்பது கருத்து. உவமையணி. (ஈ)

உரிசை. அருளல்லதி யாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ - ள்.) அருள் யாது எனின் கொல்லாமை—; (அருள்) அல்லது (யாது எனின்) கோறல்—; (ஆகலான்), அ ஊன் தினல் - அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை, பொருள் அல்லது - பாவம்; (எ - று.)

உபசாரவழக்கால் 'கொல்லாமை, கோறல்' ஆகியகாரியங்களை 'அருள், அல்லது' எனக் காரணங்களாக்கியும், 'ஊன்தின்கை' ஆகிய காரணத்தை 'பாவம்' எனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது - கொடுமை. சிறப்பு பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் 'பொருளல்லது' எனப்பட்டது. 'கோறல்' என முன் நின்றமையின், 'அவ் வூன்' என்றார். இனி, இதனை இவ்வாறன்றி 'அருளல்லது' என்பதனை ஒன்றாக்கி, 'கொல்லாமை கோறல்' என்பதற்கு, 'கொல்லாமையென்னும் விரதத்தை அழித்தல்' என்று உரைப் பாரு மூளர்.

(கு - ரை.) அருளல்லது - கருணைப்பண்பல்லாதது. கோறல் - கொல்லுதல். யாதெனின் என்னும் வினாவைப் பின்னும் எடுத்துக்கூட்டுக; அன்றி, அருளும் அல்லதும் யாதெனில், முறையே கொல்லாமையும் கோறலுமாம் என இயைக்கவுமாம்: இது, முறைநிரனிறைப்பொருள்கோளாம். 'அருளின் காரியம் - கொல்லாமை; அருளில்லாமையின் காரியம் - கொல்லுதல்: ஆதலால், மாமிசபோசனம் பாவத்துக்குக் காரணம்' என்று சொல்லவேண்டியவர் இங்ஙனஞ் சொன்னது, காரியத்தைக் காரணமாகவும் காரணத்தைக் காரியமாகவுங் கூறுவதோர் உபசாரவழக்கென்னும் இலக்கணம்பற்றியென்க. அறம்பொருளின்பம்வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கும் உறுதிப்பொருளெனப்படுமாதலால், இங்கே அறத்தைப் பொருளென்றுரைனைக் கொள்ளினும் அமையும்; கீழ் அதிகாரத்தின் ஆரும்பாட்டிலுங் காண்க. பொருளல்லது - தருமமல்லாதது; எனவே, தீவினையாயிற்று. அவ்வூன் என்பது - அந்தக்கோறலான்வந்த ஊன்என்ற பொருளை யுணர்த்திற்று. அல்லதியாது குற்றியலிகரம். கோறல் தொழிற்பெயர். 'அருளல்லது யாதெனில் கொல்லாமையைச் சிதைத்தல்: பொருளல்லது யாதெனில் அவ்வூனைத் தின்றல் என்றவாறு: இது, அருள்கெடுத்தலேயன்றி அதனையுண்டதனாற் பெறுவ தொரு பயனுமில்லை என்றவாறு' என்பது, மணக்குடியருரை. (உ)

உரிரி. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு.

(இ - ள்.) உயிர் நிலை - ஒருசாருயிர் (உடம்பின்கண்ணே) நிற்றல், (ஊன்) உண்ணுமை உள்ளது - ஊனுண்ணுமையென்கின்ற அறத்தின்கண்

ணது; ஊன் உண்ணை - (அங்ஙிலேகுலேய ஒருவன்) அதனை உண்ணுமாயின், அளறு அண்ணுத்தல் செய்யாது - (அவனை வீழுங்கிய) நிரயம் (பின்உமிழ்தற்கு) அங்காவாது; (எ - று.)

உண்ணப்படும்விலங்குகள் அதனுல் தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாய் வருதலின், 'உண்ணுமையுள்ள துயிர்ஙிலே' என்ருர். 'உண்ணின்' என்பது, 'உண்ண' எனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்து மென்பதாம்.

'கொலேப்பாவம் கொன்ருர்மேல் நிற்றலின், பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லே' என்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருசார்உயிர் - மிருகங்கள், பட்சிகள், நீர்வாழ்வன என்ற இவற்றுட் சிலவகைகள். அங்ஙிலேகுலேய - அங்ஙனம் உயிர் உடம்பில்நிற்றல் அழியும்படி. அதனை - அவ்வுடம்பை. வீழுங்கிய-மறுமையிலுட்கொண்ட. நிரயம் - நரகம். பின்உமிழ்தற்கு அங்காவாது - பின்பு அவனை வெளிவிடுதற்கு வாய் திறவாது. ஊன்தின்பவன், ஆழ்வயிற்றடக்கி மீட்டுமிழ்தலா வெரிவாய் வெம்மைகூர்நரக மகடவனென்பது கருத்து. தேவர்,மக்கள், விலங்கு, நரகர் என்னும் நால்வகைக்கதிகளுள் விலங்ஙிலே பறவைகளும் நீர்வாழ்வனவும் அடங்குதலால், 'உண்ணப்படும் விலங்குகள்' என்ருர். ஏனைய பலவாய் வருதல் - மற்றையனவாகிய மனிதருடம்புகள் அதிகமாய்வளர்ந்து மிகுதல். உண்ணுமையுள்ள துயிர்ஙிலே யென்பதற்குக் கருத்து, மாமிசபோசனஞ்செய்தல் கொலேத்தொழிலின்றி முடியா தென்பது; உயிர் நற்கதியடையும் நிலேமை ஊனுண்ணுமையினுலுள்ளது என்றும் உரைக்கலாம். உண்ண - எச்சத் திரிபு; [ஙன். வினை. உஎ.] தாவேகொன்றுதின்னுமற்போனலும் பிறன் கொன்று தந்ததை யுண்பதும் பாவமே; அவன்கொல்லுதற்கு இவன்போலியர் தின்பரென்னும் உறுதியானஎண்ணமே காரண மாதலின், என்பது இதன் பயன். இது பற்றியே "அலேப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம், வீலேப்பாலிற் கொண்டீன் மிசைதலுங் குற்றஞ், சொலற்பால வல்லாத சொல்லுகலுங் குற்றங், கொலேப்பாலுங் குற்றமே யாம்" என்ருர், நான்மணிக்கடிகையிலும். அஃது - கொலேப்பாவம். நிலே - தொழிற்பெயர்; நில் - பகுதி. ஐ - விகுதி. இப் பாட்டில் இடையிலேநின்ற 'ஊன்' என்ற சொல் 'ஊனுண்ணுமை, என முன்னும் 'ஊனுண்ண' எனப் பின்னுஞ் சென்றுகூடுதலால், தாப்பிசைப்பொருள்கோள்; இதனை மத்திமதீப மென்றுங் கூறுவர். அண்ணுத்தல், அண்ணு - பகுதி; இது, ஒருசொல்: இறுமா, சோகா என்பன போல. அளறு - நரகக்குழி. (டு)

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலேப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ - ள்.) தினல் பொருட்டால் - (பேதைமைகாரணமாக வல்லது) ஊன்தின்கைகாரணமாக, உலகு - உலகம், கொல்லாது எனின் - கொல்லா

தாயின், வீலை பொருட்டால் ஊன் தருவார் - பொருள் காரணமாக ஊன் விற்பார், யார்உம் - யாவரும், இல் - இல்லை; (எ - று.)

'உலகு' என்பது - ஈண்டு, உயிர்ப்பண்மைமேல் நின்றது.

'பின்நிகழுந் தின்னை முன்நிகழுவ் கொலைக்குக் காரண மாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை' என்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு - ரை.) பேதைமை காரணமாகவல்லது ஊன்தின்னை காரணமாக உலகம் கொல்லாதாயின் - அறிபாமைபற்றிக் கொன்றுற்கொன்ற தல்லது மாமிசபோசனத்திற்காக உலகத்திலுள்ளோர் பலஉயிர்களைக் கொலைசெய்யா ராயின். வீலைப்பொருட்டு - கிரயமாகக்கொடுக்குந் திரவியத்திற்காக. உயிர்ப் பண்மைமேல் - பலஉயிர்களென்னும்பொருளில். 'காரணம் காரியம் என் னும் இரண்டனுள் காரணம் முற்பட்டிருப்பதுங் காரியம் பிற்பட்டிருப்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளு மிலக்கணமா மாதலால், ஒருவன் முன்னே செய் கிற கொலைத்தொழிலுக்கு மற்றொருவன் பின்னே ஊன்தின்பது கர்ணமா காது; ஆதலால், கொலைப்பாவம் கொன்றவனைச் சேருமே யல்லது பின்பு அதனிறைச்சியைத் தின்றவனைச் சேராது: ஆதலின், தானே கொன்றுதின் னக்கூடாதேயல்லது பிறன் கொன்று விற்றதை வீலைகொடுத்துவாங்கித் தின் னத் தடையில்லை' என்று வாதஞ்செய்பவனை நோக்கி, 'இவன்வாங்குவான் என்னும் நம்பிக்கையே கொலைஞன் கொல்வதற்குக் காரணமாதலால், கொலைப் பாவம் ஊன்தின்பவனையுஞ் சேரும்' என்று நியாயங்காட்டித் தம்கருத்தை நிலைநிறுத்தினர். இவன் தின்னுதற்கு வாங்குவா னல்ல னுயின் அவன் கொன்றுவிற்றல்செய்யான் என்றது, அருத்தாபத்திப் பிரமாணம். 'ஆல்' இர ண்டும் - அசைகள். யாரும், உம் - முற்றப்பொருளது. மேலது - முன்னிர ண்டு பாட்டுக்களிற் சொன்னது; பாவமுண்டென்பது. ஊனை வாங்குவா னில் லையாயின் விற்பாரில்லை யென்று கருத்து. 'கொன்றுதின்னுது வீலைக்குக் கொள்வார்க்குக் குற்றமென்னை? என்றார்க்கு, 'அதனாலும் கொலைப்பாவம் வரும்' என்று கூறப்பட்டது' என்பர், மணக்குடியர். (சு)

உரை. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) புலால் - புலாலாவது, பிறிது ஒன்றன் புண் - பிறிதோருடம் பின் புண்; அது உணர்வார் பெறின் - அது (தூய்து அன்மை) அறிவா ரைப் பெறின், உண்ணுமை வேண்டும்-(அதனை) உண்ணுதொழியல்வேண்டும்.

'அஃது' என்னல்வேண்டும் ஆய்தம், விகாரத்தால் தொக்கது. அம் மெய்ம்மை உணராமையின் அதனை உண்கின்றாரென்பதாம்.

பொருத்துமாற்றாலும் புலாலுண்டல் இழிந்ததென்பது, இதனுற் கூறப் பட்டது.

(கு - ரை.) அது தூய்து அன்மை - அவ்விறைச்சி சுத்தமுடையதல்லா மை. அறிவாரைப்பெறின் என்றதனால், அவ்வுண்மையையறிந்தால் உண்

ணுரென்பது கருத்து. அறிதலின் அருமை தோன்ற, 'பெறின்' என்றார். அஃது இஃது உஃது என ஆய்தத்தொடர்க்குற்றியலுகரமாகவருஞ் சுட்டுப் பெயர் வேறென்றும், அது இது உது என முற்றியலுகரமாகவருஞ் சுட்டுப் பெயர் வேறென்றும், அவற்றுள் அது என்பது அதனை அதனெடு என இவைமுதலாக அன்சாரியை வருமிடத்துமாத்திரமே உகரங்கெடு மென்றும், சிறப்புவிதியிற்சொல்லாத மற்றை உயிர்முதல்மொழிகள் வந்து புணரும் போது உகரங்கெடாமல் உடம்படுமெய்பெற்றேவரு மென்றும், அஃது என் பது குற்றியலுகரமாதலால் வருமொழிமுதலிலுயிர்வரும்பொழுது ஆய்தங் கெடாது குற்றியலுகரம் வருமொழியுயிரேற இடங்கொடுக்குமென்றும், வரு மொழிமுதலில் மெய்யெழுத்து முதன்மொழி வரும்பொழுது மாத்திரமே ஆய்தங்கெட்டு அது என நிற்கு மென்றும், தொல்காப்பியத்தின் எழுத்ததி காரச் சூத்திரங்களிலும் அவற்றின்உரையிலும் விளங்குதலால், இங்கே 'அதுணர்வார்'என்னுந் தொடரில் அஃதென்பது அதுவெனநின்றது,தொகுத் தல் என்னுஞ் செய்யுள்விகாரம் எனக் கொண்டார்; இங்ஙனன்றி அது என்று முற்றியலுகரமாகக்கொண்டால் 'அதுவுணர்வார்' என வரவேண்டுதலாலும், அஃதென்பது உயிர்முதல்மொழிப்புணர்ச்சியில் ஆய்தங்கெடுதற்கு விதி யின்மையாலும், இது, புணர்ச்சிவிகாரத்தில் அடங்காதாகும்: இனி, "மூன் னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான" என்னுஞ் சூத்திரத்து இலேசினுல் அஃது என்பது அது என நின்றதென்று கொள்ளு தலும் ஒன்று. பொருத்துமாற்றலும் - யுக்தியினுலும். அளபெடை, செய்யு ளோசைநிறைக்க வந்தது. 'இது, புலால்மறுத்தல்வேண்டு மென்பதூஉம், அது தீயதாமென்பதூஉம் கூறிற்று' என்பர் மணக்குடியர். (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ - ள்.) செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தின், தலைப்பிரிந்த - நீங் கிய, காட்சியார் - அறிவினையுடையார்,—உயிரின் தலைப்பிரிந்த ஊன் - ஓர் உயிரின் நீங்கிவந்த ஊனை, உண்ணுர்—; (எ - று.)

தலைப்பிரிவு என்பது - ஒருசொல். பிணம் என ஊனின்மெய்ம்மை தானே உணர்தலின், 'உண்ணுர்' என்றார்.

(கு - சை.) மயக்கம் - விபரீதஞானம். மெய்ம்மை - உண்மையானதன் மை. ஐயம் திரிபு அறியாமை யென்னும் மூன்றுகுற்றங்களும் நீங்கிய பரி சுத்தமான புத்தியையுடையவர்கள் பிணந்தின்னுரென்பது இதன் கருத்து. 'தலை' என்பது - உபசர்க்கமாய், 'பிரி' என்னும் வினைச்சொல்லோடு வந்தது; கைகூடல், கால்சித்தல், கண்ணுறுதல், மேற்கொள்ளுதல் என்பனவற்றில் கை, கால், கண், மேல் என்பனபோல. 'மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்த லின், அதனைத் தெளிவுடையா ருண்ணு ரென்றது' என்பர் மணக்குடியர்.

உருக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

(இ - ள்.) அவி சொரிந்து - (தீயின்கண் செய்யும்முதலிய) அவிகளைச் சொரிந்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம்வேள்விவேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை - ஒருவிலங்கின் உயிரைப் போக்கி (அதுகின்ற ஊனை) உண்ணுமை, நன்று—; (எ - று.)

அவ்வேள்விகளான்வரும் பயனினும் இவ்விரதத்தான்வரும் பயனே பெரிது என்பதாம்.

(கு - ரை.) தீயின்கண் - நெருப்பிலே. அவி - மந்திரபூர்வமாகத் தேவர்க்கு இடும் உணவு; ஹவிஸ்என்னும் வடமொழியின் திரிபு. சொரிந்து - பெய்து; போகட்டு. வேள்வி - யாகம். ஆயிரம் என்பது, பலவென்னுமாத்திரையாய் நின்றது; இவ்வெண்ணுப்பெயர், இவ்வெண்ணுடைய யாகங்களைக் குறித்தலால், எண்ணலளவாகுபெயர். வேட்டலினும் - ஓமஞ்செய்தலினும். செகுத்தல் - உடம்பினின்று ஒழித்தல். 'நூறுவருஷகாலம் வருஷந்தோறும் அசுவமேதயாகஞ்செய்த பயனும் மாமிசபோசனஞ் செய்யாத பயனும் சமம்' என்றும், 'காய் கிழங்கு முதலியவற்றை உண்டு விரதங்காக்கிறதனலும் அடையப்படமாட்டாது, புலால்மறுத்தலாலுளதாம்பயன்' என்றும் மநுதருமசாஸ்திரத்திற் கூறியுள்ளவற்றைக் கருதி இங்ஙனங் கூறினர். 'நன்றுகிய வேட்டலினும் உயிர்செகுத்துண்ணுமை நன்று' என்று கூறியதனால், இவ்வாசிரியர் வேள்வியை உடன்பட்டவரேயன்றி, விலக்கியவராகார்: வேள்வி நன்று என்று உடன்படாராயின், ஆயிரம்வேட்டலின் உயிர்செகுத்துண்ணுமை நன்று என்று கூறுரென்க. நல்லதொன்றைக் கூறி அதைக்காட்டிலும் இது நன்று என்று கூறுதல் முறையே யன்றி, தீயதொன்றைக் கூறி அதைக் காட்டிலும் இது நன்று என்று கூறுதல் வழக்கமில்லை யென்பதறிக. (கூ)

உசுo. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ - ள்.) கொல்லான் - (ஒருயிரையும்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும்—, கைகூப்பி - கைகுவித்து, தொழும்—; (எ - று.)

இவ்விரண்டு அறமும் ஒருங்கு உடையார்க்கு அல்லது ஒன்றே உடையார்க்கு அதனாற் பயனில்லை யாகலின், கொல்லாமையும் உடன்கூறினர். இப்பேரருளுடையான் மறுமைக்கண் தேவரின்மிக்கானு மென அப்பயனது பெருமை கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், ஊனுண்ணுமையது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) தொழும் - வணங்கும். இவ்விரண்டறம்-கொல்லாமையும், புலான்மறுத்தலும். தானே கொன்று தானே தின்னுதல், பிறர்கொன்றதைத் தான்தின்னுதல், தான்தின்னுமல் பிறர்க்குத் தின்னக்கொன்று கொடுத்தல் என்னும் இம்மூன்றும் குற்றமா மென்பதை இதனா லறிக. தேவரின்மிக்கான் - தேவர்களினுஞ் சிறந்தவன். பிறவுயிர்களுக்குத் தீங்குசெய்யாதவனை அந்தன்றியைக்கருதி அவ்வுயிர்கள் தொழவேண்டுவது முறைமையேயாம். கூப்பு - கும்பு என்பதன் பிறவினை; குவியச்செய் என்று பொருள்.

கீழ்ப்பாட்டில் புலான்மறுத்தல் என்னும் விரதத்துக்குத் தேவர்களோநோக்கிச் செய்யுங் கருமத்தினுஞ் சிறப்புக்கூறி, இப்பாட்டில் அவ்விரதமுடையானுக்கு அக்கருமத்தைப்பெறுந் தேவர்களினுஞ் சிறப்புக் கூறுகின்ரு ரென்க. எல்லாவுயிரில் தேவரும் சேர்வ ராதலால், தேவரும் புலாலுண்ணுனைத் தொழுவ ரென்பது, கூறியவாருயிற்று. (கo)

உஎ - ஆம் அதிகாரம்—தவம்.

அஃதாவது - மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலைநிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றுல் தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறஉயிர்களை ஓம்புதல். புலால்மறுத்து உயிர்கள்மேல் அருள்முதிர்ந்துழிச் செய்யப்படுவ தாகலின், இது, புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தவம் - தபஸ்: வடமொழி. பொறிவழி - மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சஇந்திரியங்களின் வழியாக ஸ்பர்சம் ரஸம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் பஞ்சவிஷயங்களிலே. உண்டி-உணவு. கோடைக்கண் - கிரீஷ்மகாலத்தில்; அணிமாதமும் ஆடிமாதமுமாகிய முதுவேனிற்பருவத்தில். கோடை - கடுவெயிற்காலம். வெயில்நிலை - சூரியகிரணம் படுமிடம். மாரி - மழை. நீர்நிலை - ஏரி, ஆறு, குளம், மடு, கிணறு, வாவி முதலியன. ஓம்புதல் - பாதுகாத்தல்; துன்பஞ்செய்யாதிருத்தல். அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவது - கருணைமிகுந்தபொழுது தவம் செய்தற்குரியது. உண்டிசுருக்கல் - காய் கனி கிழங்கு சருகுவருக்கங்களை உண்டும், ஒருகா லன்னம்புசித்தும், நீர்பருகியும், காற்றுநுகர்ந்தும், ஒன்றும் உண்ணுமலும் எனக் காண்க.

உசுக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(இ - ள்.) தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு, உற்ற நோய் நோன்றல் - (உண்டிசுருக்கல் முதலியவற்றுல் தம்உயிர்க்கு) வருந் துன்பங்களைப் பொறுத்தலும், உயிர்க்கு உறுகண் செய்யாமை - (தாம் பிற) உயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையும், (ஆகிய), அற்று - அவ்வளவிற்று; (எ - று.)

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், 'அற்றே' எனத் தேற்றேகாரங் கொடுத்தார். 'தவத்திற்கு உரு அற்று' என்பது, 'யாஅயது கோடுகூரிது' என்பதனை 'யாஅைக்குக் கோடு கூரிது' என்ருற்போல ஆருவ தன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்.

இதனுல், தவத்தினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) உரு=ரூபம்: வடமொழி. மற்றுள்ளன-தவத்தின் அங்கங்கள். தேற்றேகாரம் - நிச்சயப்பொருளைத்தரும் ஏ என்னும் இடைச்சொல்.

கோடி-தந்தம். ஆறும்வேற்றுமையுருபுக்கு நான்காம்வேற்றுமையுருபு வந்தது; உருபுமயக்கம். ஆறுவதன்பொருள் - கிழமைப்பொருளென்னுஞ் சம்பந்தப் பொருள். நோன்றல், நோல் அல்லது நோன் - பகுதி. (க)

உசுஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(இ - ள்.) தவம்உம் தவம் உடையார்க்கு ஆகும் - (பயனேயன்றித்) தவம்தானும் உண்டாவது முன்தவமுடையார்க்கே; (ஆகலான்), அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் (ஆகும்) - அத்தவத்தை அம் முற்றவ மில்லாதார் முயல்வது பயனில்முயற்சியாம்; (எ - று.)

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் 'தவ முடையார்க்கு ஆகும்' என்றும், அஃது இலாதார்க்கு அவை இன்மையான் முடிவுபோகாமையின் 'அவமாம்' என்றுங் கூறினர்.

(கு - பை.) பயனே அன்றி-பலனேயல்லாமல். முன்தவம் உடையார்க்கே-முற்பிறப்பிற்செய்த தவத்தை யுடையவர்கட்குமாத்திரமே. முற்பிறப்பில் தவஞ்செய்யாமல் இப்பிறப்பில் தவத்திற்கு உரிய முயற்சிசெய்யத் தொடங் கியவர்கட்குத் தவம் கைகூடாது. உண்டாவது - இடையூறில்லாமல் நிறைவேறுவது. மேற்கொள்வது - பூண்டுகொள்வது. அவம்-வீண். முயல் வது - யத்தனிப்பது. பரிசயத்தால் - முற்பழக்கத்தினால். அறிவு - ஞானம். ஆற்றல் - வல்லமை. முடிவு போக்கலின் - (தவத்தை) நிறைவேறச் செய்தலி னால். அஃது இலாதார்க்கு - அத்தமுன்தவமில்லாதவர்கட்கு. அவை இன் மையான் - அறிவு ஆற்றல் என்னும் இரண்டும் இல்லாமையால். முடிவு போகாமையின் - தவம் நிறைவேறுமையால். அஃதிலார் - ஆய்தம் மெய் போல ஒலித்தது. பயனேயன்றித் தவந்தானும் என நிற்றலால் தவமும் என்ற உம்மை - இறந்ததுதழுவியது; இழிவுசிறப்புமாம். நன்மைசெய்தற் குப் பாவம் காரணமாகமாட்டாமையால், நன்மையே காரணம் என்பதாம். (உ)

உசுங. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(இ - ள்.) மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றிநிற்பார்,—துறந் தார்க்கு துப்புரவு வேண்டி - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலே விருப்பி, தவம் மறந்தார் கொல் - (தாம்) தவஞ்செய்தலே மறந்தார் போலும்; (எ - று.)

துப்புரவு - அனுபவிக்கப்படுவன. வேண்டியவேண்டியாங்கு எய்தற் பயத்த தாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தை, தாஞ் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலும்: எனவே, தானத்தின் தவம் மிக்க தென்பது பெற்றாம்.

(கு - பை.) பற்றி - விடாமற்பிடித்து. துறந்தார்க்கு - புறமாகிய செல்வ த்தினிடத்து உண்டாகிற எனதென்னும் புறப்பற்றையும் [மகாரத்தை யும்] அகமாகிய உடம்பினிடத்து உண்டாகிற யானென்னும் அகப்பற்றையும்

[அகங்காரத்தையும்] விட்டவர்கட்கு; சன்னியாசிகட்கு. உண்டியும் - உணவும். மருந்தும் - ஔஷதமும். உறையுளும் - இருப்பிடமும். உதவல் - கொடுக்கவேண்டுதல். தூப்புரவு-பஞ்சஇந்திரியங்களிஞலுங் கொள்ளப்படுபவை. வேண்டியவேண்டியாங்கு எய்தற் பயத்ததாகலின் - விரும்பினவையெல்லாவற்றையும் விரும்பியபடியே பெறுதலாகிய பயனையுடையதாதலால். ''வேண்டியவேண்டியாங்கெய்தலால்'' என்பது - இவ்வதிகாரத்தில் ஐந்தாம்பாட்டு. மறந்தார்கொல், கொல் - தற்குறிப்பேற்றவணியின் உருபு. பலவகைக் கைங்கரியங்களைச் செய்து உபசரிப்பவர் இல்லறத்தாரும், அங்ஙனம் உபசரிக்கப்படுபவர் துறவறத்தாரு மாதலால், இல்லறத்தினும் துறவறம் சிறந்தது என்பது இதன்கருத்து. உபகாரஞ்செய்வது இல்லறத்தார்க்குக் கடமையாதல்போலத் துறவறத்தார்க்குத் தவஞ்செய்வது கடமையா மென அறிக. (ஈ)

உசுச. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(இ - ள்.) ஒன்னுர் தெறல்உம் - (தம் அறத்திற்குப்) பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கல்உம் - (அதனை) உவந்தாரை உயர்த்தலும், (ஆகிய இவ்விரண்டையும்), எண்ணின் - (தவஞ்செய்வார்) நினைப்பாராயின்,—தவத்தான் வரும் - (அவர்) தவவலியான் (அவை அவர்க்கு) உளவாம்; (ஈ - று.)

முற்றத்துறந்தார்க்கு ஒன்னுரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனுன், அவர்க்கு அவை எண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னுர் பெரியராயினும் உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைந்த துணையானே வந்துதிற்கு மெனத் தவஞ்செய்வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

(கு - ரை.) தம்அறம் - துறவறத்தின் அங்கங்கள். பகை-விரோதம். அதனைஉவந்தார் - துறவறமாகிய தமதுஒழுக்கத்தைக் கண்டு மகிழ்ந்தவர். உயர்த்தல் - விருத்திசெய்தல். தவவலி - தபோபலம். அவை - ஒன்னுர்த் தெறல் உவந்தாரையாக்கல் ஆகிய அவ்விரண்டும். ஒன்னுர் - பகைவர். உவந்தார் - நண்பர். உண்மை - இருத்தல். ஒன்னுர்என்பதற்கு - தமக்குப் பகைவரென்று பொருள்கூருமல் தம் அறத்திற்குப்பகைவ ரென்றும், உவந்தார்என்பதற்கு - தமக்குஉதவியரென்று பொருள்கூருமல் தம்அறத்தை உவந்தா ரென்றும் பொருள்கூறியதற்குக் காரணங் கூறியது, 'முற்றத்துறந்தார்க்கு' என்று தொடங்கிய வாக்கியம். அவர்க்கு - துறந்தவர்க்கு. அவை எண்ணுமை - சாபஅநுக்கிரகங்களைக் கருதாமை. ஆற்றல் - பெருமை. எண்ணின் - ஆலோசிக்குமிடத்து, இவ்விரண்டும் தவத்தால் வரும் என்றும் உரைக்கலாம். தன்னினும் மிகமேம்பட்டவர்களைச் சினந்து வேரோடழித்தலும் தன்னினும் மிகக்கீழ்ப்பட்டவர்களை விரும்பி மிகவிருத்திசெய்தலும் ஆகிய மேன்மை துறவறத்தார்க்கே யன்றி இல்லறத்தார்க்குக் கிடையா தென்பது கருத்து. (உ)

உசுரு. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ - ள்.) வேண்டிய வேண்டியஆங்கு எய்தலால் - (முயன்றால் மறுமைக்கண் தாம்) வேண்டியபயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய் தவம் - செய்யப்படுவதாய தவம், ஈண்டு முயலப்படும் - இம்மைக்கண் (அறிவுடையோரான்) முயலப்படும்; (எ - று.)

'ஈண்டு' என்பதனான், 'மறுமைக்கண்' என்பது பெற்றாம். மேற்கதி வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம்.

இவை ஈரன்கு பாட்டானுங், தவத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) முயன்றால் - தவத்தைத்தொடங்கிச்செய்தால். ஈண்டு-இவ்வுலகத்தில். மேற்கதி - சுவர்க்கம்முதலிய உயர்ந்த பதவிகள். வீடுபேறு - முத்தியடைதல். எய்தப்படா - அடையப்படமாட்டா. வேண்டிய - பலவின்பாலிறந்தகால வினையாலணையும்பெயர். வேண்டியவாங்கு - வேண்டியாங்கு எனப் பெயரெச்சவீறு தொகுத்தல்விகாரம். செய்தவம் - செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த வினைத்தொகை. இல்லறத்தார்க்கு இம்மைப் பயனுகிய புகழ் எளிதிற் கைகூடுமே யல்லது மறுமைப்பயன்கள் துறவறத்தார்க்குப்போல நினைத்தபடி பெறமுடியா வென்பது இதன்கருத்து. "ஆக்கமுங் திறலுஞ் சீரு மாயவு நலனு மேலா, மூக்கமும் வீடு மெல்லாங் தவத்தினு தூற்ற மன்றே, நோக்குறுமிந்நாள் காறு நோற்கலா தினைய வெல்லாம், போக்குவ தென்னை கொல்லோ புகலுதி யிகலும் வேலோய்" என்னுங் கந்தபுராணச்செய்யுளை இங்கே அறிக. இத்திருக்குறள், இறையனாரகப்பொருளுரையில் முதற் சூத்திரவுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது. (டு)

உசுசு. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(இ - ள்.) தம் கருமம் செய்வார் - தங்கருமஞ் செய்வாராவார், தவம் செய்வார் - (துறந்து) தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் - அவரை ஒழிந்த பொருளின்பங்களைச் செய்வார், ஆசையுள் பட்டு - (அவற்றின்கண்) ஆசையாகிய வலையுட்பட்டு, அவம் செய்வார் - (தமக்குக்) கேடுசெய்வார்.

அஃதாமாய் மூவகைத்துன்பத்தினாய் உயிரின்வேறுய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாதுதவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணிமூப்பு இறப்புக்களான் அஞ்சியாகத் துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம்பிறந்து வீடுபெறு மாகலின் தவஞ்செய்வாரை 'தங்கருமஞ் செய்வார்' என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ் செய்துகோடலின் அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் கூறினர். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) கருமம் - தொழில். பொருளின்பங்கள் - அர்த்தகாமங்கள். வலையுட்பட்டு - வலையிலே அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு. தமக்குக் கேடுசெய்வார் - தங்கட்குத் தாங்களே கெடுதி செய்துகொள்பவர்கள். அஃதாம் -

நிலையில்லாதது; நித்யம் என்பதன் எதிர்மறை. மூவகைத் துன்பத்தகாய் - தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றிவருவனவும், தெய்வத்தைப் பற்றிவருவனவும் என்ற மூன்றவகைப்பட்டதுன்பங்களையுடையதாகி. ஒழியாது - விடாமல். பிணி - நோய். மூப்பு - முதுமை, கிழத்தனம். இறப்பு - மரணம். அஞ்தியாக - முதலில்லாமல்; நெடுங்காலமாக. ஞானம் பிறந்து - தத்துவஞானம் உண்டாகப்பெற்று. கணத்துள் - கூணப்பொழுதிலே. சிற்றின்பம் - மானவியர்முதலியோரால் இம்மைமறுமைகளில் வருகிற அற்பசுகம்; பரமபதத்துப் பெறும் நிரதிசயப்பேரின்ப மல்லாதது. டல பிறவியும் - அனேகம்பிரப்புக்களிலெல்லாம். செய்துகோடலின் - செய்து கொள்ளுதலால். அல்லாதார் - தவஞ்செய்யாதவர். பிறவித்துன்பத்தை யொழித்துப் பேரின்பத்தைத் தருதலால் தவஞ்செய்தலைத் தங்கருமஞ்செய்த லென்றும், மற்றைப் பொருளின்பங்களைக்குறித்த முயற்சிகளெல்லாம் அத்துன்பத்தை மிகுமாறுசெய்து கேடுதருதலால் தவஞ்செய்யாமையை அவஞ் செய்தலென்றங் கூறினர். கருமம் - கர்மம்; வடசொல். தவஞ்செய்தலென்னும் வினையை மாற்றித் தவஞ்செய்யாதனென்னும்வினையைத் தந்ததனால், மற்று என்னும் இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளது. ஆசையுள், உள் - எழுவாய். தவஞ்செய்பவர் நித்தியப்பொருளையடைவ ரென்பது கருத்து.

உசுஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ - ள்.) சுட (சுட) சுடரும் பொன் போல் (தீயின்கண் ஓடும்) பொன்னுக்கு (அது) சுடச்சுட (த் தன்னைநெகவந்த குற்றம் நீங்கி) ஒளிமிகுமாறு போல,—நோற்கிற்பவர்க்கு - தவஞ்செய்யவல்லார்க்கு, துன்பம் - (அதனால் வருந்) துன்பம், சுட சுட - வருத்த வருத்த, ஒளி விடும் - (தம்மோடுகலந்த பாவம் நீங்கி) ஞானம் மிகும்; (எ - று.)

'சுடச்சுடரும் பொன்போல்' என்றாராயினும், கருத்துநோக்கி, இவ்வாறு உரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின், 'ஒளி' * என்றார்.

(கு - சை.) ஓடும்-உருக்கிப் புடம்வைக்கப்படுகிற. அது சுடச்சுட-நெருப்புத் தபிக்கத் தபிக்க. குற்றம் - மாசு. அதனால்வருந் துன்பம் - உண்டி சுருக்கல் முதலியன. சுடச் சுடரும் பொன்போல் - நெருப்புத் தபிக்க அதனல்விளங்குஞ் சுவர்ணம்போல. ஒளி - ஞானவொளி. விடுதல் - வெளிவீசுதல்; விளங்குதல். ஒளி - பிரகாசம். பொருள்கள் - பதார்த்தங்கள். 'சுடச்சுட' எனப் பின் உபமேயத்திலே அடுக்கிநிற்பதனால், முன் உபமானத்திலும் 'சுட' என ஒன்று வருவித்து 'சுடச்சுட' என அடுக்காக உரைக்கப்பட்டது. நோற்கிற்பவர், இல் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை. புடம் அதிகமாக அதிகமாகப் பொன் மாற்றுயர்ந்து பிரகாசிப்பதுபோலத் தவவருத்தம் அதிகமாக அதிகமாகப் பெருமையுயர்ந்து மனிதர் ஞானம்பெறுவ ரென்பது இதன்கருத்து. உவமையணி; ஒளி என்பதிற் சிலேடையை அங்கமாகக் கொண்டு

* பி - மீ: எனப்பட்டது.

வந்தது. மநுஸ்மிருதியில் ஆறாவது அத்தியாயத்தில் எக - வது சுலோகத்தில் 'நெருப்பிலெரிக்கப்படுகிற பொன் முதலியவற்றின் மாசுகள் ஒழிவது போல இந்திரியங்களின் குற்றங்கள் பிராணயாமத்தால் ஒழிகின்றன' என இக்கருத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. (எ)

உசுஅ. தன்னுயிர் தானறப் பெற்றூனே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ - ள்.) தன் உயிர் - தன் உயிரை, தான் —, அற-(தனக்கு) உரித்தாக, பெற்றூனே - பெற்றவனே, ஏனைய மன் உயிர் எல்லாம் - அது பெறாதனவாகிய மன்னுயிர்களெல்லாம், தொழும் —; (எ - று.)

தனக்கு உரித்தாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். அதனினூங்கும் பெறுதற்கரியது இன்மையின், 'பெற்றூனே' என்றார். 'அதுபெறாதன' என்றது, ஆசையுட்பட்டு அவஞ்செய்யும் உயிர்களே. சாபமும் அருளும் ஆகிய இரண்டு ஆற்றலும் உடைமையின், 'தொழும்' என்றார்.

(கு - ரை.) அறப் பெறுதல் - ஸ்வாதந்திரியம் நீங்கி ஐம்பொறி முதலியபிறவற்றுக்கு அதீனமாகாமல் முழுவதும் தனக்கே அதீனமாகப் பெறுதல். உரித்தாக - உரியதாக. அது பெறாதனவாகிய - தன் னுயிரைத் தான் அறப்பெறாத. ஏனைய - மற்றைய. மன் உயிர்-நிலைபெற்ற பிராணிகள். அதனின் ஊங்கு - அத்தவஞ்செய்தலினும் மேலாக. பாவஞ்செய்த எல்லாவுயிர்களையும் வீரூத்த அதிகாரிகள் உளராதலால், அந்த உயிர்களெல்லாம் அவ்வதிகாரிகட்கு உரிமைபூண்டிகிற்கும்; தன்கருமஞ்செய்யுந் துறவறத்தானுக்கோ பாவமில்லை யாதலால், தன்உயிர் தனக்கேஉரிமைபூண்டுகிற்கு மென்க. எல்லாவுயிர்களும் தன்னைபேதொழத்தக்க சாபாநுக்கிரக சக்தி தவமுடையானுக்கு உண்டா மென்பதாம். (அ)

உசுஉ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட்ட வர்க்கு.

(இ ள்.) கூற்றம் - கூற்றத்தை, குதித்தல்உம் - கடத்தலும், கைகூடும் - உண்டாவதாம்: நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான்வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு; (எ - று.)

சிறப்பும்மை, அதுகூடாமை விளக்கிற்று; 'மன்னுயி ரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடும்' என, எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். ஆற்றல் - சாப அருள்கள்.

இவை நான்குபாட்டானும், தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) கூற்றத்தைக் கடத்தலும் - யாவராலுங் கடக்கமுடியாத யமனையும் அதிக்கிரமித்து விடுதலும். ஆற்றல் - திறமை. தலைப்பட்டார்-மேற்கொண்டவர்; கூடியவர். 'குதித்தலும்' என்ற உயர்வுசிறப்பும்மை, கூற்றங் கடத்தல் கைகூட லரி தென்பதை விளக்கிநின்றது. கூற்றம் - பிராணிகளுடைய உயிரையும் உடலையும் வேறுபிரித்துக் கூறுபடுத்துங் கடவுள். எச்சவும்மை - எஞ்சிநின்ற [சொல்லப்படாமற் குறைந்துநின்ற] பொருளைத் தரு

கிற 'உம்' என்னும் இடைச்சொல்; இது - இங்கே, இறந்ததுதழுவிய எச்சம். சாப அருள்கள் - சபிக்கவும் அநுக்கிரகிக்கவும் உள்ள சக்திகள். தவத்தில் தலைமைபெற்றவர்க்கு யமனேவெல்லுதலுங் கூடுதலே, மார்க்கண்டேயன் சுவேதன் முதலியோரது வரலாறுகளிற் காண்க. (கூ)

உஎ0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ - ள்.) இலர் பலர் ஆகிய காரணம் - (உலகத்துச் செல்வர்கள்சில ராக) நல்கூர்வார் பலராதற்குக் காரணம் (யாதெனின் அது),—நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - தவஞ்செய்வார்சிலராக அதுசெய்யாதார் பல ராதல்; (எ - று.)

செல்வம் நல்குரவு என்பன - ஈண்டு, அறிவினது உண்மை இன்மை களேயுங் குறித்துநின்றன; என்னே? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றுராகலின். 'நோற்பார் சிலர்' எனக் காரணங்கூறிணையான், காரியம் வருவித்துரைக்கப்பட்டது.

தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமும் இல்லை எனை, இதனுன் அவ ரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - ரை.) நல்கூர்வார் - வறுமையாளர். இப்பாட்டினுரையிற் காட் டிய மேற்கோள் - நாலடியாரில் அறிவின்மையென்னும் அதிகாரத்தில் முதற்பாட்டி லுள்ளது; நுட்பமான அறிவில்லாமையானது தரித்திரமாம்: அப்படிப்பட்டஅறிவை யுடைமைமிகவும் வளர்ந்த பெரிய சம்பத்தாம் என்பது இதன்பொருள். 'நோற்பார் சிலர்' என்றதனுல், செல்வர்சில ரென்பது வருவிக்கப்பட்டது. ஆகிய - செய்யியவென்னும் வினையெச்சம். இக்குறள் ஏதுவின்முடித்தலென்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமா மென்பது, வீர சோழியவுரை. ஒருபிறப்பில் தவஞ்செய்தவர்களே மறுபிறப்பிற் செல்வ முடையவ ராவர்: அப்பிறப்பில் தவஞ்செய்யாதவரோ மறுபிறப்பிற் செல்வ முடையவராகாரென்பது கருத்து. மறுமைப்பேரின்பத்தைமாத்திரமேயன்றி இம்மைச்சிற்றின்பத்தையுந் தரவல்ல பெருமை தவத்திற்கு உண்டுஎன்பது, இதனுற் கூறப்பட்டது. (கo)

உஅ - ஆம் அதிகாரம்—கூடாவொழுக்கம்.

அஃதாவது - தாம் விட்ட காமஇன்பத்தை * உரணின்மையின் பின் னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந் தாததாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு, இது, தவத்தின்பின் வைக் கப்பட்டது.

(கு - ரை.) கூடாவொழுக்கம்-தகாதநடத்தை. விட்ட-நீக்கின. உரண் இன்மையின் - மனவுறுதி யில்லாமையினுல். பின்னும்விரும்புமாறு தோன்ற-மீண்டும் விரும்பும்படிதோன்ற. இக்கெட்டவொழுக்கம் தவத்திற்குத் தகாத தாதலால், இவ்வதிகாரம் தவமென்பதன்பின் வைக்கப்பட்டது.

* பி - மீ: வாதனையின்.

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(இ - ள்.) வஞ்சம் மனத்தான் - வஞ்சம்பொருந்திய மனத்தையுடைய வனது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும்-(உடம் பாய் அவனுெடுகலந்து நிற்கின்ற) பூதங்களைந்தும், (கண்டு), அகத்துஎ நகும் - தம்முள்ளே நகும்; (எ - று.)

காமம் தன்கண்ணேதோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமனம்' என்றும், அந்நலிவு பொறுக்க மாட்டாது ஒழுகுங் களவொழுக்கத்தை 'படிற்றொழுக்கம்' என்றும், உல கத்துக் களவுடையார் பிறர்அறியாமற்செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங் கள் சான்றுகலின் அவ்வொழுக்கத்தையும் அவன்மறைக்கின்ற ஆற்றையும் அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே நகுதலின் 'அகத்தேநகும்' என்றுங் கூறினர். செய்த குற்றம் மறையா தாகலின், அவ்வொழுக்கம் ஆகாது என் பது கருத்து.

(கு - ரை.) வஞ்சம் - தன்னே உண்மையான தவவொழுக்கமுடைய வனைப் பிறரை யெண்ணுவிக்கவேண்டுமென்னும் எண்ணம். படிற்றொழுக் கம்-படிறுகிய வொழுக்க மென இருபெயரொட்டு; திருட்டுத்தனமான நடத் தை யென்க: படிற்றோடுகூடிய வொழுக்கமென்றல், மூன்றும் வேற்றுமை யுருபும்பயனுமுடன்தொக்க தொகையாம். பூதங்கள் ஐந்து - நிலம், நீர் முதலியன. "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த, எங்கு முளனெருவன் காணுங்கொ லென்றஞ்சி, அங்கங் குலைவ தறிவு" எனப் பின்னேர் கூறியவாறுங் காண்க. நலியாநிற்கவும் - வருத்தவும். அதனது இன்மை - அவ்வாசையினது இல்லாமை. அந்நலிவு - காமவருத்தம். களவுடையார் - வஞ்சகர். ஐம்பெரும் பூதங்கள் - பஞ்சமகாபூதங்கள். நகும் - பரிகசித்துச்சிரிக்கும். ஐந்தும், உம் - முற்றும்மை; இறந்ததுதழுவியஎச்சவும்மையாகக்கொண்டு, புறத்துள்ளார் வெளிப்படையாக நகைசெய்வதுமன்றி யென்பது குறைந்துநின்ற தெனி னும் அமையும். பஞ்சபூதங்களும் அறிந்திடச் செய்யுந் தீமையைப் பிற ரறியாரென்று கருதும் பேதைமையை நோக்கி அப்பஞ்சபூதங்கள் அவன் தானும் அறியாவகை தமக்குள்ளே நகுமென்க. 'அஞ்சும்'என்று போலியான பாடம், எதுகைநயத்துக்குச் சிறக்கும். (க)

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(இ - ள்.) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - (ஒருவனுக்கு) வான்போல் உயர்ந்த தவவேடம் என்னபயனைச் செய்யும்? தான் அறி குற் றம் - தான் குற்றமென்று அறிந்த அதன்கண்ணே, தன் நெஞ்சம் - தன் நெஞ்சு, படின் - தாழுமாயின்; (எ - று.)

'வானுயர்தோற்றம்' என்பது, "வான்றோய்குடி" என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாதுசெய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றம் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) வான்போல் உயர்ந்த - ஆகாயம்போல உயர்ச்சிபெற்ற. தவ வேடம் - தவத்துக்கு உரிய வேஷம்; வேடம் - வெளிக்கோலம். அதன்கண் - கூடாவொழுக்கத்தில்; காம வின்பத்தில். தாழும்-இறங்கும்: தங்கும்; இழிவு பெறும். இலக்கணவழக்கு-லக்ஷணப்ரயோகம்; அஃதாவது-ஒருசொல் உரிய பொருளைவிட்டு அப்பொருளுக்கு இனமானபொருளை உணர்த்துவது: இங்கே 'வானுயர்தோற்றம்' என்பது - ஆகாயத்தின்உயர்ச்சிபோல மேன்மைபெற்ற காட்சி யெனப் பொருள்பட்டதனால், இங்ஙனங் கூறப்பட்டது. "வான்தோய்குடி" என்னும் மேற்கோள், நாலடியாரில் குடிப்பிறப்பு என்னும் அதிகாரத்தில் இரண்டாஞ்செய்யுளில் உள்ளது; அதற்கு - உயர்ச்சியால் ஆகாயத்தை அளாவிய நற்குலமென்று பொருள்; கீர்த்தியால் மேலுலகத்தை அளாவிய குடியென்றும் பொருள்கொள்ளலாமாதலால், இங்கே 'வானுயர் தோற்றம்' என்பதற்கும் - புகழினால் தேவலோகமட்டுமுயர்ந்த துறவறவடிவ மென்றுமாம். கழுவப்படாமையின் - பிராயச்சித்தம் முதலியவற்றால் ஒழித்துப் பரிசுத்தமாகச் செய்யப்படாமையால். புறத்தார் - அயலார். வெருட்டுதல் - அஞ்சச்செய்தல். 'தெரியாமற்செய்த குற்றத்திற்குமாத்திரமே பரிகாரம் உண்டு; தெரிந்துசெய்ததற்கோ அது இல்லை' என்பது, தருமசாஸ்திரக் கொள்கை. அறிகுற்றம், உயர்தோற்றம் - வினைத்தொகைகள். (உ)

உஎந. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ - ள்.) வலி இல் நிலைமையான் வல் உருவம் - (மனத்தைத் தன் வழிப்படுத்தும்) வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார்வேடத்தைக்கொண்டு (தான்) அதன் வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்து அற்று - பசு(காவலர் கடியாமல்)புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்; (எ - று.)

இல்பொருளுவமை. "வலியினிலைமையான்' என்ற அடையானும், 'மேய்ந்தற்று' என்னுந் தொழிலுவமையானும், 'வல்லுருவத்தோடு மனவழிப்படுதல்' என்றது பெற்றமும். காவலர் கடியாமை - 'புலி புல் தின்னாது' என்பதனாலும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன், அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமை யாயிற்று. இவ்வாறு தனக்கு உரிய இல்லாளையுந் துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது - தன்மனம் ஓடியவழியே ஓடி ம்றைந்து பிறர்க்குஉரிய மகளிரை விழைதலாம்; அவ்வாறுதல், 'பெற்றம் தனக்கு உரிய புல்லே விட்டுப் பிறர்க்கு உரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும்' என்ற உவமையான் அறிக.

(கு - ரை.) வலி - இந்திரியங்கிரகசக்தி. இல்நிலைமை - பண்புத் தொகை. அதன் வழிப்படுதல் - (தவநெறியைவிட்டு விலகி) மனம் போன வழியிலே நடத்தல். வலியையுடையாரது உருவம், இங்கு 'வல்லுருவம்' எனப்பட்டது. உருவம் - ரூபம் என்ற வடமொழியின் திரிபு. பசு, இயற்கையில் வலிமையில்லாதது. காவலர் கடியாமல்-பயிரைக்காத்துக்கொண்டிருப்பவர்கள் தன்னை அதட்டி ஓட்டாமல் அஞ்சிஓடிப்போம்படி. புலி, இயற்கையில் வலிமையுடையது. அடை - விசேஷணம்; அடுத்துவருவது: இதனால் அடுக்கப்படும் மொழி, அடைகொளி எனப்படும்; அது - விசேஷ்யம். தொழிலுவமை - செய்கை பற்றிவந்த உபமானம். 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது' என்பது, பழமொழி; "பல்பொறிய, செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம், பைங்கட் புனத்த பைங்கூழ்", "இடுக்கண் தலைவந்தக் கண்ணு மரிமா, கொடிப்புற் கறிக்குமோ மற்று" என்பனவுங் காண்க. அன்ன-அத்தன்மையனவான. அயிராமை - (தவத்தவர் காமம்முதலான சென்பதனாலும், அவர்களிடத்துப் பயத்தாலும் அவர்களது ஒழுக்கவிஷயத்திற்) சந்தேகப்படாமை. இல்லாள் - மனைவி. விழைதல் - விரும்புதல். இவ்வாறுகூறவே, மனமடங்கப்பெறாதவன் மனமடங்கினவர்வேடத்தைப் பூண்டு அவர்க்குரிய விரதாநுஷ்டானங்களை விட்டு இல்லறத்தார்க்கு உரிய சிற்றின்பங்களை அநுபவித்தல், பசு புலித்தோலைப்போர்த்து அதற்குரியஊனைத் தின்னுமல், பிறர்க்குரிய பயிரை மேய்ந்ததுபோலு மென்பதாம். பசுவை 'பெற்றம்' என்பது - கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டனுள் தென்பாண்டிநாட்டினின்று செந்தமிழில்வந்துவழங்கிய திசைச்சொல். இவ்வுவமையை மாற்றி வில்லிபுத்தூராழ்வார் "நின்று பெருந் தவமுயல்வோர் தாங்கள் கொண்ட நினைவொழியப் புறத்தொன்று நினைவ ரோசொல், பொன்றிடினு மீயறியப் பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வரோ புரிவி லாதார்" எனக் கூறியிருக்குமாற்றையும் அறிக. (கூ)

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ - ள்.) தவம் மறைத்து அல்லவை செய்தல் - (அவ் வலியில்நிலைமையான்) தவவேடத்தின்கண்ணே மறைத்துநின்று தவமல்லவற்றைச் செய்தல்,—வேட்டுவன் புதல் மறைத்து புள் சிமிழ்த்து அற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைத்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும்; (எ - று.)

தவம் - ஆகுபெயர். தவமல்லவற்றைச்செய்தலாவது - பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்து ஆக்குதல்; இதுவும், இத்தொழிலுவமையான் அறிக.

(கு - ரை.) வலியில்நிலைமையான் - மனமடங்காதவன். தவமல்லவற்றை - பாவத்தொழில்களை. வேட்டுவன் - வேடன்; வேடுஎன்னுந் தொழிலையுடையவன்: வேடு, வேட்டை, வேட்டம் என்பன - ஒருபொருளன; அஃதாவது - மிருகங்களையும் பறவைகளையும் பிடித்தலும் கொல்லுதலும். புதல்-செடியடர்த்தி; இதுவே ஈற்றுப்போலியாய்ப் புதர் எனவும் வழங்கும். புட்

கள் - பறவைகள். பிணித்தல் - பிடித்தல். தவம் - தவவேடத்தை யுணர்த்தியதனால், ஆகுபெயர்; ஒன்றன்பெயர் மற்றொன்றற்கு ஆகுகிற பெயர், ஆகுபெயர். தன் வயத்து ஆக்குதல் - தன்வசப்படுத்திக்கொள்ளுதல். "கேட்டியா லத்தணை கேடிலா வெம்பி ரான்றன், மாட்டொருசிறிதமன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை, காட்டுறு புள்ளின் சூழல் கவருவான் புதன்மேற் கொண்ட, வேட்டுவ னியல்போன் மேலோன் வேடநீகொண்டதன்மை" என்னுங் கந்தபுராணச்செய்யுளுக்கு ஏற்ப, புதல் மறைத்து என்பதற்கு - தான் மேற்கொண்ட புதரிலே மறைந்திருந்து என்றுங் கருத்துக்கொள்ளலாம்; தழைகளை அடர்த்தியாகக் கூண்டுபோலக் கட்டி அதனுள்ளே தான் மறைந்து நின்று அதனைச்சுமந்துசென்று அதனை உண்மையான புதலென்று கருதி அதில்வந்துசேரும் பறவைகளைப் பிடித்தல் வேடனியல்பு. (சு)

உஎடு. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) (தம்மைப் பிறர் நன்குமதித்தற்பொருட்டு), பற்று அற்றேம் என்பார் - (யாம்) பற்று அற்றேம் என்று சொல்வாரது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கம்,—(அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும்), எற்று எற்று என்று - (பின்) 'என்செய்தேம்! என்செய்தேம்!!' என்று(தாமே) இரங்கும்வகை, (அவர்க்கு), ஏதம் பலவும் தரும் - பலதுன்பங்களையும் கொடுக்கும்; (எ - று.)

சொல்லளவல்லது பற்று அறுமையின் 'பற்றற்றே மென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன்விளைவின்கண் 'அந்தோ! வினையே' என்று * அழுவா ராகலின் 'எற்றெற்று' என்றுங் கூறினர்.

இவையைந்துபாட்டானும், கூடாவொழுக்கத்தின் இழுக்கங்கூறப்பட்டது.

(கு - ரை.) பற்று அற்றேம் - ஆசைகளை முழுதும் நீங்கினேம். படிற்றொழுக்கம் - திருட்டுநடத்தை. எற்று - எப்படிப்பட்டது; வினைவடியாப் பிறந்த ஒன்பன்பாற்குறிப்புமுற்று; அடுக்கு, இரங்கல்பற்றியது. அதன்விளைவின்கண் - அப்பாவத்தின்பயனை அநுபவிக்கநேருங்காலத்து. அந்தோ - ஐயோ! வினையே - கருமமே. "அந்தோவினையேயென் றழுவாட்கண்டும், நண்ணன்மின்செல்வ நமரங்காணல்லறமே நினைமின்கண்டீர்" என்பது,சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உள. இழுக்கம் - குற்றம். கூடாவொழுக்கம் தாமே அநுதாபப்படுவதற்குக்காரணமாமாதலால், விலக்கத்தக்கது என்றவாறு.

உஎசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு ரில்.

(இ - ள்.) நெஞ்சின் துறவார்-நெஞ்சால் பற்றறுதுவைத்து, துறந்தார் போல் - பற்றற்றார்போன்று, வஞ்சித்து - (தானஞ்செய்வாரை) வஞ்சித்து,

* பி - மீ: அழுங்குவார்.

வாழ்வாரின் - வாழுமவர்போல, வன்கணர் - வன்கண்மையை யுடையார், இல் - (உலகத்து) இல்லை; (எ - று.)

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது - 'யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதும்' என்று அறியாதுஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பின ராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் ''அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினு லலறு முந்நீர்த், தடங்கட னடுவுட் டீவு பல வுள வவற்றுட் டோன்றி, யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்தனி மாந்தி வாழ்வர், மடங்கலஞ் சீற்றத்துப்பின் மானவேன்மன்னரேறே'' என்பதனுன் அறிக. தமக்குஆவனசெய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், 'வன்கணரில்' என்றார்.

(கு - ரை.) நெஞ்சின் - ஐந்தாம்வேற்றுமை, கருவிப்பொருள்; கருவிப் பொருளும் ஏதுப்பொருளி லடங்கும்: இனி, ஏழாம்வேற்றுமைச் சினையிடமான பிறிதின்கிழமையாக்கொள்ளினும் அமையும். தானஞ்செய்வார் - இல்லறத்தார். வஞ்சித்து - மயக்கி. வன்கண்மை - கொடுமை. இவ்வருந்தவர் - பிறர்செய்தற்குஅருமையான தவத்தைச் செய்துள்ள இவர்கள். இன்னது ஈதும் - இப்பொருளைத் தானஞ் செய்வோம். அதுகொண்டு - அதனுல்; அல்லது, அவர்கொடுத்த அப்பொருளைத் தாம் பெற்றுக் கொண்டு. இழிபிறப்பினராக்குதல் - அவர்கட்கு ஒருநற்பயனுமில்லாமற்செய்தலுமன்றி அவர்களை இழிவான பிறப்பை அடைபவராகவுஞ் செய்தல். ''அடங்கலர்க்கு'' என்னும் மேற்கோள் - சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், தானப்பயன், பதினுன்காம்பாட்டு: இது, கொடியவர்க்கீந்த தானத்திற்குப் பயன்கூறுகிறது: இதற்குப் பொருள் - சிங்கம்போன்ற கோபத்தையும் வலிமையையும் பெருமையையுடைய வேலாயுதத்தையு முடைய அரசர்கட்குச் சிங்கம்போன்றவனே! ஐம்பொறிகளுமடங்காதவர்கட்கு ஒருவர் தானஞ்செய்தால் அவர்கள் கொடுத்த தானத்தின் பயனுலே ஒலிக்கின்ற மூன்று நீரையுடைய பெரிய கடலினிடையே யுள்ள பலதீவுகளிலே மக்களுடம்பும் விலங்கின்முகமுமாய் உருவேறுபட்டுத் தோன்றி உதிர்கிறகனியையுண்டு வாழ்வ ரென்பதாம். ஆவனசெய்தார்-உபகாரஞ்செய்தவர்கள். ஆகாதன விளைத்தல் - அபகாரஞ்செய்தல். ''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு''என்றதில் நன்றிமறத்தலின் கொடுமை கூறப்பட்டுள்ளது: 'அந்நன்றிமறத்தலோடு ஈன்மைசெய்தார்க்குத்தீமையுஞ் செய்கின்ற இவர்கள்கொடுமைக்கு எல்லையில்லை'என்பார் 'வன்கணரில்' என்றார்.

உளை. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ - ள்.) குன்றி புறம் கண்டு அனையர் ஏன்னும்-குன்றிமணியின் புறத்தைக் கண்டாற்போல வேடத்தாற் செம்மையுடைய ராயினும், குன்றி மூக்கின் அகம் கரியார் - அதன்மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை, உடைத்து—, (உலகம்); (எ - று.)

குன்றி - ஆகுபெயர். செம்மை, கருமை என்பன - பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றன வாயினும், பண்பாதல் ஒத்தலின், இவை பண்புவமை; ''கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமே'' என்பதும் அது.

(கு - ரை.) புறம் மேலிடம். குன்றியென்னுங் கொடியின்பெயர், அதன் மணியைக் குறித்ததனால், பொருளாகுபெயர். பொருளின்கண்-உபமேயத்தில்; தவநெறிநின்றவர்கள்பக்கல். செப்பம் - நல்லொழுக்கம். பண்பு - குணம். ''கூழின்மலிமனம்'' என்னும் மேற்கோள் - திருச்சிற்றம்பலக்கோவையார், ஊஉ - ஆஞ் செய்யுளி லுள்ளது; (பரமசிவனது திருச்சிற்றம்பலத்தை விரும்பாத) உணவாற் செருக்கும் மனம்போல ஒருகாலக்கொருகால் நிறம் பெற்று இருளுகின்றகுயில்களென்று பொருள். மேற்கோளில்'இருளாகின்ற' என்பது-உபமானத்திற்கு அஜ்ஞானமடைகின்ற என்றும், உபமேயத்திற்குக் கறுக்கின்ற என்றுஞ் சிலேடையாகப் பொருள் தந்ததுபோல, இப்பாட்டில் 'காரியார்' என்பது - உபமானத்துக்குக் கருநிறமடைத்தவரென்னும் பொருளையும், உபமேயத்துக்கு அஜ்ஞானமடைந்தவரென்னும் பொருளையுங் கொடுத்தது; சிலேடைபற்றி வந்த உவமையணி. உலகத்தில் உள்ளும் புறமும் ஒத்த துறவறத்தவர் சிலரே, வெளியிற் காஷாய தண்டமுதலிய வேஷங்களோடு கூடி மனத்திற் கெட்ட எண்ணமுடையவர்களோ பலர் என்பது இதன் கருத்து. எனும் - எனினும் என்பதன் மரூஉ. (எ)

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ - ள்.) மாசு மனத்தது ஆக-மாசு (தம்) மனத்தின்கண்ணதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தான்) மாட்சிமையுடையராய், நீர் ஆடி - நீரின் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் - (தாம் அதன்கண்ணே) மறைந்து செல்லும், மாந்தர்—, பலர் - (உலகத்துப்) பலர்; (எ - று.)

மாசு - காம வெகுளி மயக்கங்கள்: அவைபோதற்கு அன்றி மாண்டா ரென்று பிறர்கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர்மறைதற்கு இடனாக்கினார். இனி, 'மாண்டார்நீராடி' என்பதற்கு, மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையராய் என்று உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும் அவ்வொழுக்கமுடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல்வேண்டு மென்பதும் கூறப்பட்டன.

(கு - ரை.) மாசு - குற்றம். மாண்டார்-மாட்சிமையுடையோர் என்னும் பொருளில், மாண் என்னும் பண்படி - பகுதி. நீர் ஜலத்தைக்குறிக்கும் போது, நீரம் என்னும் வடமொழியின் திரிபென்ப; குணத்தைக் குறிக்கும் போது, நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம். அதன்கண்ணே - அத்தவவேஷத்திலே. மயக்கம் - அவித்யை. அவை போதற்கு அன்றி - அக்குற்றங்கள் நீங்குதற்கு அல்லாமல். மாண்டாரென்று - சிறந்ததவவொழுக்கத்தாரென்று. மாட்சிமை - பெருமை. நீர்மை - குணம். மனத்தது - ஒன்றன்பாற்

குறிப்புவினையாலணையும்பெயர். உள்ளத்திலழுக்கிருக்க அதனை யொழிக்கா மல் மறைக்கும்பொருட்டு உடலழுக்கைக் கழுவி வெளிவேஷம் போடுஞ் சங்கியாசிகள் பலரென்பது, இதன்பொருள்: அன்னாரையறிந்து நீக்கவேண்டு மென்பது, கருத்து. (அ)

உஎக. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ - ள்.) கணை - அம்பு, கொடிது - (வடிவாற் செவ்விதாயினும் செய லாற்) கொடிது: யாழ் கோடு செவ்விது - யாழ் கோட்டால் (வளைந்ததாயி னும் செயலாற்) செவ்விது; ஆங்கு அன்ன - அவ்வகையே தவஞ்செய்வா ரையும் கொடியர் செவ்வியர் என்பது, வினை படு பாலால் கொளல் - (வடி வாற் கொள்ளாது அவர்)செயல் பட்ட கூற்றானே அறிந்து கொள்க; (எ-று.)

கணைக்குச் செயல் - கொலை. யாழுக்குச் செயல் - இசையால் இன்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயின் கொடியரெனவும், அறமாயின் செவ்வியரெனவும் கொள்க என்பதாம்.

இதனுள், அவரை அறியுமாறு கூறப்பட்டது.

(கு - பை.) அம்பு - பாணம். வடிவால்-உருவத்தினால். செவ்விது நே ர்மையுடையது; கோணுதலில்லாதது. கொடிது - பிறர்க்குத்துன்பத்தருவது. யாழ் - வீணை. கோடு - வீணைதண்டம். செவ்விது - பிறர்க்குஇன்பத்தருவது. அன்ன - கொடுமையுடையராதலும் செம்மையுடையராதலு மாகியவற்றை. அவர்செயல்பட்டகூற்றான் - அவர்களது தொழில்நடந்தவகையால். உலகத் தில் வேஷத்தால் நல்லவர்களாய் ஒழுக்கத்தால் தீயவர்களும், வேஷத்தால் தீயவர்களாய் ஒழுக்கத்தால் நல்லவர்களும் இருத்தல் கூடும்; ஆதலால், அவ ரவரது செய்கையைக்கொண்டல்லாமல் வேஷத்தைக்கொண்டே உயர்வு தாழ்வுகளை நிச்சயிக்கலாகாது என்பது, இதன்கருத்து. இதனை 'கணைகொ டிது யாழ்கோடு செவ்விது' என்னும் உவமையால் விளக்கினர். கொடிது, செவ்விது என்பவற்றில் இரண்டுபொருள் கொள்ளப்பட்டன: சிலேடை. கொடியாழ்-குற்றியலிகரம். செவ்விது-ஒன்றன்பாற்குறிப்புமுற்று. ஆங்கு-உவமவுருபு; இடைச்சொல். அன்ன - பலவின்பாற்குறிப்புவினையாலணை யும்பெயர். கொளல் - உடன்பாட்டு வியங்கோள். (கூ)

உஅ0. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ - ள்.) (தவஞ்செய்வார்க்கு),—மழித்தல்உம் - (தலைமயிரை) மழித்த லும், நீட்டல்உம் - சடையாக்கலும், (ஆகிய வேடமும்), வேண்டா—: உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் (தவத்திற்கு ஆகாது என்று) குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்; (எ - று.)

* பறித்தலும் மழித்தலுள் அடங்கும். 'மழித்தல்' என்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர்.

* பறித்தலும் மழித்தலுளடங்குமென்றவாக்கியம் சிலபிரதியிலில்லை.

இதனுன், கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மழித்தல் - மொட்டையடித்தல்; சிரைத்தல். உலகம்பழித்தது - காமம். கடிந்துவிடின் - நீக்கிவிடுவாராயின். துறவடையுங்காலத்துத் தலைமயிரைச் சிரைப்பித்துக்கொள்ளாமல் ஒவ்வொன்றுகப்பிடுங்கியெடுக்கச் செய்தல், ஜைநமதசம்பிரதாயம்; இதனையும் அடக்கும்பொருட்டு, 'பறித்தலும் மழித்தலுள் அடங்கும்' என்றார். அவர்கள் மயிர்பறித்தலை ''மணியியல் ஈப்பிடச் சிவக்கும் வாணுத, லணியிருங் கூந்தலை யளவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னரூற், றுணிபொருள் சித்தியாத் துறத்தல் மேயினர்'' என்னுஞ் சீவகசிந்தாமணியாலும் அறிக. வேண்டா - வேண்டும் என்னும் வியங்கோளின் எதிர்மறை; செய்வினை செயப்பாட்டு வினைப் பொருளில்வந்த எதிர்மறைப்பலவின்பால் வினைமுற்றெனவுங் கொள்ளலாம். பழித்தது - இறந்தகாலவினையாலணையும்பெயர். தவவிரோதமானசெயல் கனா அகத்தில் விட்டிட்டவர்க்குப் புறத்தில் வேடம் வேண்டுவதில்லை யென்பது, இதன் கருத்து. மழித்தலும் நீட்டலும் என்பன - காஷாயம் தண்டம் முதலிய மற்றைத்தவவேடங்கட்கும் உபலக்ஷணம். (கo)

உக - ஆம் அதிகாரம்—கள்ளாமை.

அஃதாவது - பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடொத்தலின், 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையான் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின், அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காம் ஆகலின், இது, துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தேபோந்து * பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி அதுதன்னையும் வஞ்சித்துக் கொள்ள்க்கருதுதல் அவர்க்குப் பெரியதோர் இழுக்காதல் அறிக. இவ்வாறு 'வாய்மை' முதல் 'கொல்லாமை' ஈறுய நான்குஅதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றிநிகழுங்குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது, காமம்பற்றிநிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு-ரை.) கள்ளாமை-திருடினையாமை. தமரோடு-தம்மவர்களுடன்; சுற்றத்தார் நண்பர் முதலியோருடனே. கோடற்கு - கொள்ளுதற்கு. அங்ஙனங் கொள்ளினும்-வஞ்சித்துப்பெற்றாலும். அதனை-களவை. புறத்து-வெளியில்; தவத்தையொழிந்த விஷயாந்தரங்களில். ஒருதலைப்பட்டு-ஒன்றினிடத்தேபற்றியிருந்து. நோக்கற்பாலதாய-கருதவேண்டுவதான. அஃது ஒழிந்து - அந்நல் நெறியைவிட்டு. புறத்தே போந்து - வெளியிலே சென்று. பஃறலைப்பட்டு -

* பி - மீ: பலதலைப்பட்டு.

பலவிஷயங்களிலும் அகப்பட்டுக்கொண்டு. உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதல் - தம்முடலைப்பாதுகாக்கும்பொருட்டுச் செல்வத்தை வேணுமென்று கருதுதல்: இங்ஙன்பொருளை வேண்டுமென்று கருதுதலே, இழுக்காம். அதுதன்னையும் - தம்முடம்பைக் காக்கும்பொருட்டு வேணுமென்று கருதவுங் கூடாத அப்பொருளையும். பெரியதோர் இழுக்கு - பெருங்குற்றம். வாய்மைமுதல் கொல்லாமையீறாய - வாய்மை வெகுளாமை இன்னாசெய்யாமை கொல்லாமை என்கிற. களவு, பொய்பேசுதல், வெகுளுதல், கொடுந்தொழில், கொல்லுதல் என்னுமிவற்றைச் செய்தவிடத்து இல்லறத்தார்க்குக் குற்றமுண்டாம்; துறவறத்தார்க்கோ இவற்றை நினைத்தமாத்திரத்தில்தானே பெருங்குற்றம் நேரும்; அதனால், கள்ளாமைமுதலிய இவ்வதிகாரங்கள் இல்லறவியலில் வைக்கப்படாமல் துறவறவியலில் வைக்கப்பட்டன என்றும், இவற்றுக்கு இக்குற்றங்களைச் செய்ய நினையாமையென்று பொருள்கொள்ளவேண்டியதாயிற்று என்றுங் கூறியதாயிற்று. ஒருவன் உறவினருடனே சண்டையிட்டு விடமுண்டுசாவேன் என்னும் மனமுடையவனாய் நஞ்சுகூட்டி வைத்து விலக்குவாரில்லாதபொழுது உண்பேனென்று நின்றவிடத்து அருளுடையானொருவன் அதனைக்கண்டு இவன் இதனையுண்டு இறவாதபடி கொண்டுபோய்க் கொட்டிவிடுவேனென்று அவன்காணாமல் கொண்டுசொரிந்திட, அவனும் ஜனநீக்கத்தில்நஞ்சுண்டுசாகச்சென்றவன் அதுகாணானாய்ச் சாவுநீங்கினானாகு மாதலால், அவன் அக்களவினாற் பிறனைப்பிழைப்பித்தமையால் நற்கதியிற் செல்வான்; இதுபோன்ற களவுகள் இல்லறத்தார்க்காயின் நன்மை பயப்பனவாம்: ஆதலால், கள்ளாமை துறவறத்தில் வைக்கப்பட்டதென்க.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ - ள்.) எள்ளாமை வேண்டுவான் என்பான் - (வீட்டினை) இகழாது விரும்புவான் (இவன்) என்று (தவத்தோரான்) நன்குமதிக்கப்படுவான்,— எனைத்து ஒன்றுஉம் கள்ளாமை - யாதொருபொருளையும் (பிறரை) வஞ்சித்துக் கொள்ளக்கருதாவகை, தன் நெஞ்சு காக்க-தன் நெஞ்சினைக் காக்க;(எ-று.)

'எள்ளாது' என்னும் எதிர்மறைவினையெச்சம், 'எள்ளாமை' எனத் திரிந்துநின்றது. வீட்டினை இகழ்தலாவது - காட்சியே அளவையாவது என்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டு அழியுமென்றும், இறந்த உயிர் பின்பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப்படுவனவென்றுஞ் சொல்லும் உலோகாயதம் முதலிய சமயத்து மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு ஏதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டுஅன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின், 'எனைத்தொன்றும்' என்றார். 'நெஞ்சு கள்

ளாமற் காக்க' எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்றாம்.

(கு - ரை.) வீட்டினை - முத்தியுலகத்தை. காக்க - பாதுகாக்கக்கடவன்: அடக்கக்கடவன். 'இப்பாட்டில் எள்ளாமை யென்பதை, தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின்வினையையும் கொண்டு முடிதற்கு ஏற்ற முக்காலத்துக்கும்பொதுவான எள்ளவென்னுஞ் செயவெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளலாகாது; தன்கருத்தாவின் வினையைமாத்திரமே கொண்டு முடிதற்கு ஏற்ற இறந்தகால மாகிய எள்ளி என்னுஞ் செய்தெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளவேண்டும்: ஏனெனில், வேண்டுவா னென்னும் தன்கருத்தாவின்வினையைக் கொண்டுமுடிதலால்' என்பார், 'எள்ளாது என்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமை யெனத் திரிந்துநின்றது' என்றார்; இதனை ''பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியும், எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா'' என்னுந் தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துச் சேனாவரையருரையை நோக்கி உணர்க: இதனால், எள்ளாமை யென்பது தன்வினைமுதல்வினையையும், கள்ளாமை யென்பது பிறவினைமுதல்வினையையுங் கொண்டு முடிதலாகிய வேறுபாட்டையுங் காண்க. இனி, இவற்றை எதிர்மறைத் தொழிற் பெயராகக் கொண்டு, பிறராலிகழப்படாமையைவிரும்புபவனென்பவன் யாதொன்றையுங் களவுசெய்யாமையாகிய அறத்திலே தன்மனத்தை நிலைநிறுத்துக என்று பொருள்கொள்ளலுமாம். எள்ளாமை என்னும் வினைக்கு, வீட்டினை என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொண்டார். வேண்டுவான் - வகரவிடைநிலை, காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்று. என்பான் என்ற பெயர், சிறப்புத்தோன்ற நின்றது. காக்க - வியங்கோள். 'காட்சியே' என்பதுமுதல் 'சொல்லும்' என்றதுவரையில் லோகாயதமதசித்தாந்தம். லோகாயதம் என்பது, புறச்சமயங்களுள் ஒன்று. அம்மதத்தார்க்குச் சார்வாகர் என்றும், பார்ஹஸ்பத்யர் என்றும் பெயர்கள் உண்டு. அவர்கள் மதத்தில் பிரதியக்ஷமொன்றே பிரமாணமாக அங்கீகரிக்கப்படுகிறது; மற்றை அநுமானம்முதலியன ஒப்புக்கொள்ளப்படுகின்றனவில்லை. அவர்களுட்பெரும் பாலார் ஆகாயத்தைத் தனியே ஒருபூதமாக எண்ணுவதில்லை; மற்றைநான்கு பூதங்களின் அபாவத்தையே ஆகாசமாகக்கருதுவர். வெற்றிலைபாக்குச் சுண்ணும்புகளின் சேர்க்கையால் ஒருவகைச்செம்மைநிறம் உண்டாவது போலப் பிருதிவிமுதலிய நான்குபூதங்களின் சேர்க்கையாலே அவற்றின் காரியமாகிய உடம்பில் உணர்ச்சி உதிக்கு மென்பார்கள்; அதுவே அவர்கட்கு ஆத்மாவாகும். இங்ஙனம் உயிர் உடம்பினின்றும் வேறுபட்டதாதையாலே, பிராணவாயு பிரிதலா லிறந்து எரிக்கப்பட்டாவது புதைக்கப்பட்டாவது அழிந்துபோன உடம்பு மீண்டும் பிறக்கமாட்டாது என்று கூறி, மறுபிறப்பைமறுப்பார்கள்;மயில்கள் இயற்கையிலே அழகியனவாயிருப்பனபோலவும், குயில்கள் இயல்பிலே இனிமையாகக்கூவுவனபோலவும் பிராணிகட்குச் சுவபாவத்திலேயே இன்பம் ஏற்படுகின்றது என்பதும், தன்பழமும் இப்

படிப்பட்டதேயென்பதும்அவர்கொள்கை. அவர்கள்சித்தாந்தத்தில் சுவர்க்கம் நரகம் பரமபதம் முதலிய பரலோகங்கள் கிடையா; இவையெல்லாம் மூடர் களாற் பிறரை மயக்கும்பொருட்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன என்பர். வயிறுநிரம்பத் திருப்தியாக நல்லுணவுகளே உண்பதும், பதினாறு பிராய முள்ள இளமங்கையரைச் சேர்தலும், மூடிப்பமூடித்துப் பூசுபூசி உடுப்ப உடுத்தலுமே அவர்கட்குச் சுவர்க்கம்; சத்துருக்களாலும் வியாதி முதலியவற் றாலும் வருந்துவதே நரகம்; மரணமே மோக்ஷம். இவ்வாறு யாவரும் எளிதில் இனியதென்று ஒப்புக்கொள்ளும்படி சொல்லி லோகத்திற் பரவிய மதமா னதுபற்றியே, இதற்கு, லோகாயத மென்று பெயர். 'முதலிய' என்றதனால், ஜைநம், பௌத்தம், நையாயிகம், வைசேடிகம், சாங்கியம், மாயாவாதம், பாஸ் கரம், ஏகாநயம் முதலியன கொள்க. இம்மதங்களின் சொரூபம் இத்தன்மை யதென்பதை வடமொழியிற் பிரஸ்தாநத்ரயபாஷ்யங்களிலும், சங்கராசாரியரால் இயற்றப்பட்ட ஸர்வஸித்தாந்தஸங்க்ரஹமென்னும் நூலிலும் பரக்கக்காண லாம். தமிழிற் சிவஞானசித்தியாரும், அதனுரையும் முதலியவற்றிற் சுருக்க மாகக் கூறப்பட்டுள்ளன. நம்பிள்ளையென்கிற பூர்வாசாரியர் மூப்பத்தாறாயிரப் படியென்கிற திருவாய்மொழியியாக்கியானத்தின் முதலில் "லோகாயதிகன், 'ப்ருதிவ்யாதிபூதங்கள் நாலினுடைய கூட்டாவாலேசைதந்யமென்று ஒரு தர்மம் பிறக்கும்; அதுக்கு உண்டான சுகதுக்கங்கள் ஸ்வர்க்கநரகங்கள்; அவற் றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும்; அவ்வருகு ஒன்றுமில்லை' (என்றான்) என்பது அவனுடையசித்தாந்தம்" என்று தொடங்கிச் சுருக்கமாகவும் தெளி வாகவும் அருளிச்செய்திருக்கிறார். காட்சியே அளவையாவது - பிரதியக்ஷம் ஒன்றே பிரமாணமாகுவது. வளி - காற்று. அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றி - பூதங்களின் ஒருவகைக்கூட்டத்தா லுண்டாகி. பிரிவால் மாய்வ தாய - அவை தனித்தனிபிரிதலினால் ஒழிவதான. மதுவின்கண் களிப்புப் போல - கள்ளினிடத்தே மதர்ப்புத்தன்மை போல. "கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்புகா, உடைந்தசங்கி லோசையும் உயிர்களும் மூடல்புகா, வடிந்தவேரடியினி லுதிர்ந்தபூ மரம் புகா, இறந்துபோன மானிட ரினிப்பிறப்ப தில்லையே" என்னும் பாட்டு, இறந்தஉயிர் பின்பிறவாமை யைக் கூறும். ஒருவனுற் செய்யப்படுவது - தெய்வத்தாற்செய்யப்படுவதன்று. தெளிந்த-மெய்ந்நூல் வழக்கென்று நம்பி. மெய்ந்நூற்பொருள் - தத்துவசாஸ் திரஅர்த்தம். ஆசிரியன் - குரு. வழிபட்டு அன்றி - உபசரித்தல்லாமல். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் * கொள்வே மெனல்.

(இ-ள்.) உள்ளத்தால் உள்ளல்உம்-(குற்றங்களைத் தன்) நெஞ்சால் கருது தலும், தீது - (துறந்தார்க்குப்) பாவம்; (ஆதலால்), பிறன் பொருளை - பிறனொருவன்பொருளை, கள்ளத்தால் - (அவன்) அறியாவகையால், கொள் வேம்எனல் - வஞ்சித்துக்கொள்வேம் என்று கருதற்க; (எ - று.)

* பி - ம்: கள்வேமெனல்.

'உள்ளத்தால்' என வேண்டாதுகூறினர், அவருள்ளம் ஏனையோருள் ளம்போலாது சிறப்புடைத்து என்பது முடித்தற்கு. 'உள்ளலும்' என்பது, இழிவுசிறப்புஉம்மை. 'அல்' விகுதி-வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது.

இவை யிரண்டுபாட்டானும், இக்நடைக்குக் களவாவது இதுவென்ப தூஉம், அது கடியப்படுவ தென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) கருதற்க - எண்ணுதொழிக. ஏனையோருள்ளம் போலாது - மற்றை இல்லறத்தார்மனம்போ லாகாமல். 'உள்ளத்தால்' என்னும் அவசிய மில்லாத பதத்தைப் பிரயோகித்ததற்கு, 'அவருள்ளம் ஏனையோருள்ளம் போலாது சிறப்புடைத்து' என்றலாகிய கருத்தைக் கூறினர். உள்ளம் - ஒன்றை நினைத்தற்குக் கருவியாதலால், மூன்றுமுருபு - கருவிப்பொருளது. "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்" என்பதிற்போல, எனல் - எதிர்மறைவியங்கோள். இக்நடை - துறவறநடத்தை. கடியப்படுவது-விலக் கத்தக்கது. நினைத்தற்கருவியாதலாலும், அகத்துறுப்பாதலாலும், உள்ள மென்று மனத்திற்குப் பெயர். ஏ - தேற்றம். கள்ளம்-தொழிற்பெயர்: வஞ் சனை. இனி, இத்திருக்குறளுக்கு—பிறன்பொருளை யென்பதை மத்திம தீபமாகக்கொண்டு, தவஞ்செய்வோர் தம்உயிரை நாடாமல் பிறன்பொருளை நினைப்பதுங் குற்றம்; அதன்மேலும் அதனை வஞ்சனையாற் கவர்தற்கு உடன்பட்டு வாயாற்சொல்லுதல் பெருங்குற்றம்: ஆதலால் அவ்வாறு சொல் லாதொழிக என்று பொருள்கொள்ளினும் அமையும். இனி, இதனை ஒரு வாக்கியமாகவே கொண்டு, 'எனல்'என்பதைத் தொழிற்பெயராகவைத்து, பிறன்பொருளைக் கள்ளத்தாற்கொள்ளவே மென்பதை உள்ளத்தால் எண்ணு தலுந் தீது என்று முடித்தலும் ஒன்று. (உ)

உஅசு. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ - ள்.) களவினுல் ஆகிய ஆக்கம்-களவினுல் உளதாகிய பொருள்,—ஆவது போல - வளர்வதுபோலத் தோன்றி, அளவு இறந்து - (தன்)எல்லை யைக்கடந்து, கெடும்—; (எ - று.)

ஆக்கத்திற்கு ஏதுவாகலின், 'ஆக்கம்' எனப்பட்டது. எல்லையைக்கட ந்து கெடுதலாவது - தான் போங்கால், பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன்கொண்டு போதல். 'அளவறிந்து' என்று பாட மோதி, (அவர் பயன்கொள்ளும்)அளவு அறிந்து (அவ்வளவிற்கு உதவாது) கெடும் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) களவினுல் - திருடுதலால். பொருள் - செல்வம். ஆக்கம்-ஆகுதல், அபிவிருத்தி, மேன்மைபெறுதல்; அதற்குக் காரணமான செல் வத்தை ஆக்கமென்றது, காரியவாகுபெயர். இனி, சம்பாதிக்கப்பட்டதுஎனச் செல்வத்திற்கு ஆக்கமென்பது காரணப்பெயரெனினும் அமையும். போங் கால் - அழியும்பொழுது. நிறுத்தி - வைத்துவிட்டு. செய்த - முன்செய் துள்ள. அவர் - களவுசெய்தவர். (ஈ)

உஅச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ - ள்.) களவின்கண்-(பிறர்பொருளை) வஞ்சித்துக் கோடற்கண்ணே, கன்றிய - மிக்க, காதல் - வேட்கை,—(அப்பொழுது இனிதுபோலத் தோன்றி), விளைவின்கண் - (தாள்) பயன்கொடுக்கும்பொழுது, வீயா விழுமம் தரும் - தொலையாத இடும்பையைக் கொடுக்கும்; (எ - று.)

* கன்றியகாதல் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனுற் பாவமும் பழியும் பயந்தே விடுதலின், 'வீயாவிழுமந்தரும்' என்றார்.

இவையிரண்டுபோட்டானும், அது கடியப்படுதற்குக் காரணங் கூறப் பட்டது.

(கு - சை.) கோடல் - கொள்ளுதல். மிக்க வேட்கை - மிகுந்த ஆசை. தொலையாத இடும்பை - நீங்காத துன்பம். பயில்வித்து - பழகச்செய்து. அது கடியப்படுதற்கு - களவு நீக்கப்படுதற்கு. விளைவு - விளைதல்: விளையுங் காலத்துக்கு ஆகுபெயர். அவனுக்குக் கொடுக்கும் என்னுது அவனுக்குத் தரும் என்றது, இடவழுவமைதி யென்னலாம்; இது, கீழ்ப் புறங்கூறுமை என்ற அதிகாரத்தில் "அறங்கூறுமாக்கந்தரும்" என்றதன் விசேடவுரையில் விவரிக்கப்பட்டது. (சு)

உஅடு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ - ள்.) அருள் கருதி - அருளினது உயர்ச்சியை அறிந்து, அன்பு உடையர் ஆதல் - (அதன்மேல்) அன்புடையராய் ஒழுகுதல்,—பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்கண் இல் - பிறர்பொருளை (வஞ்சித்துக்கொள்ள)க்கருதி (அவரது) சோர்வுபார்ப்பார்மாட்டு உண்டாகாது; (எ - று.)

தமக்குஉரியபொருளையும் அதனதுகுற்றம்நோக்கித் துறந்துபோந்தவர் பின் பிறர்க்குஉரியபொருளை நன்குமதித்து அதனைவஞ்சித்துக்கோடற்குஅவரதுசோர்வுபார்க்கும் மருட்சியராஞல், அவர்மாட்டு, உயிர்கள்மேல் அருள் செய்தல் நமக்குஉறுதி யென்றுஅறிந்து அவ்வருளின்வழுவாதுஒழுகுந் தெருட்சி கூடாதென்பதாம்.

(கு - சை.) உயர்ச்சி - மேன்மை. அதன்மேல்-அருளின்மேல். சோர்வு-மறந்திருக்குஞ் சமயம். பார்ப்பார் - எதிர்பார்ப்பவர்கள். அதனதுகுற்றம்-நிலையாமை, ஈட்டுதல்முதலியதொழில்களினுல்துன்பமுடைமை முதலிய அந்தச்செல்வத்தினிடமுள்ள குறைகள். மருட்சியர் - அறிவு மயக்கமுடையவர். வழுவாது - நீங்காமல். தெருட்சி - தெளிந்த அறிவு. பொச்சாப்பு என்னுந் தொழிற்பெயரில், பொச்சா - பகுதி, பு - விகுதி. (டு)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

---

* பி - ம்: கன்றுதலான். (ஆசை) அதிகப்படுதலினுல் என்று இதன் பொருள்.

(இ - ள்.) அளவின்கண் நின்று - (உயிர்முதலியவற்றை) அளத்தலாகிய நெறியின்கணின்று, ஒழுகல் ஆற்றார் - (அதற்குஏற்ப) ஒழுகமாட்டார், களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார்; (எ - று.)

உயிர்முதலியவற்றை அளத்தலாவது - காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான், உயிர்ப்பொருளையும், அதற்கு அணுகியாய்வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றுள் அது நாற்கதியுட் பிறந்து இறந்து * வருந்தலையும், அதுசெய்யாமல் அவற்றைக்கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றுள் ஆஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல்; ‡ இதனை ஆருகதர் 'தருமத்தியானம்' என்ப. அதற்குஏற்பஒழுகுதலாவது - அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

(கு - ரை.) அளத்தல் - ஆராய்ந்துவரையறுத்துஅறிதல். நெறியின் கண் - ஞானவழியில். அதற்குஏற்ப - ஞானநெறிக்குப் பொருந்த. ஒழுகல் - நடத்தல். அளவைகளான் - பிரமாணங்களைக்கொண்டு. உயிர்ப்பொருளையும் - ஆத்மாவாகியபதார்த்தத்தையும். நல்வினைதீவினைக் குற்றவிளைவு- புண்ணியபாவங்களாகிய கொடிய கருமங்களின் நிகழ்ச்சி; நல்வினை தீவினைக்கு உற்ற விளைவு என்றும் பிரிப்பர். அது - அவ்வுயிர். நாற்கதி - மக்கள், தேவர், நரகர், விலங்கு என்னும் நால்வகைப்பிறப்புக்கள். எழுவகைப் பிறப்புக்களுள் ஒழிந்த மூன்றும் விலங்குகதியில் அடங்குமென அறிக. அது செய்யாமல் - பிறந்திறந்துவருந்தாமல். அவற்றை - கருமங்களை. யோகம் - யமம் நியமம் முதலிய எட்டு உறுப்புக்களோடு கூடிய தவம். அவற்றுள் - யோகஞானங்களால். அஃது - உயிர். எய்தும் - அடையும். ஆருகதர் - அருகனைத்தெய்வமாகக்கொண்டமதத்திலிருப்பவர்; சமணர்: ஜைநர். என்ப - என்று சொல்வர். களவில் கருத்துடைய துறவறத்தார் ஞானநெறியிலொழுகாரென்பது இதன்கருத்து. (சு)

உஅள. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ - ள்.) களவு என்னும்-களவு என்று சொல்லப்படுகின்ற, கார் அறிவு ஆண்மை - இருண்ட அறிவினையுடையராதல்,—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்-(உயிர் முதலிபவற்றை) அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கண் இல்லை; (எ - று.)

இருள் - மயக்கம். கரியத்தைக் காரணமாக உபசரித்து 'களவென்னுங் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினர்.

களவும் துறவும் இருளும்ஒளியும்போலத் தம்முள் மாறுகலின் ஒருங்கு நில்லா என்பது, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

---

* பீ-மீ: வருதல். ‡ 'இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப' என்ற இவ்வாக்கியம், சிலஏட்டுப்பிரதிகளி லில்லை.

(கு - ரை.) காரறிவாண்மை - அஞ்ஞாநத்தை ஆளுகை. ஆண்மை - ஆளுந்தன்மை. அளத்த லென்னும் பெருமை - ஆராய்தலென்கிற வல்லமை. 'களவென்னுங் காரறிவு' என்றதில், காரறிவு - காரணம்: களவு - காரியம்; அளவென்னு மாற்றல் என்றதில், அளவு - காரணம்; ஆற்றல் - காரியம்: எவ்வாறெனில், காரறிவினுற் களவுசெய்தலும், அளத்தலினுற் பெருமையுண்டாதலுங் கூடுதலா லென்க. களவுக்குக்காரணமான காரறிவாண்மையைக் களவென்னுங்காரறிவாண்மை யென்றும், அளத்தலினுலாகிய ஆற்றலை அளவென்னுமாற்ற லென்றுங் கூறியது, உபசாரவழக்கு. தம்மூள் மாறு - தமக்குள் விரோதி. ஒருங்குகில்லா - ஓரிடத்திற் சேர்ந்துநிற்கமாட்டா. (எ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ - ள்.) அளவு அறிந்தார் நெஞ்சத்து - அவ் வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து, அறம் போல - அறம் (நிலைபெற்றுற்) போல, நிற்கும் - நிலைபெறும்: களவு அறிந்தார் நெஞ்சில் - களவையே பயின்றவர் நெஞ்சத்து, கரவு வஞ்சனை; (எ - று.)

உயிர்முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறஞ் சலியாதுநிற்கு மென்பது இவ்வுவமையாற் பெற்றும்.

களவோடு மாறின்றி நிற்பது, இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்வளத்தலையேபயின்றவர்நெஞ்சத்து - தத்துவஆராய்ச்சியையே பழகியவரது மனத்தில். அறம் - துறவறம். சலியாது - அசையாமல்; மாறுபடாமல். இவ்வுவமையால் - அறம்போல என்ற உவமையால். மாறின்றி நிற்பது - வேறுபடாமற் கூடியிருப்பது; அது, வஞ்சனை. உவமையணி. (அ)

உஅசு. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர்.

(இ - ள்.) அளவு அல்ல-அவ் வள வல்லாத தீயநினைவுகளை, *செய்துநினைத்து, ஆங்கே - அப்பொழுதே, வீவர் - கெடுவர்: களவு அல்ல மற்றைய தேற்றாதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர்; (எ - று.)

தீய நினைவுக ளாவன - பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலும் செய்த லாகலின் 'செய்து' என்றும், அஃது உள்ள அறங்களைப்போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் 'ஆங்கேவீவர்' என்றுங் கூறினர். மற்றையவாவன - துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும் இல்வாழ்வார்செய்யுந் தானங்களுமாம். தேற்றாமை-அவற்றையே நுகர்ந்து அவ்வளவால் நிறைந்திருத்தலை அறியாமை.

---

* செய்தாங்கேஎன்பதற்கு, நினைத்தபொழுதேஎன்று ஒருபிரதியிலுரை காண்கின்றது.

இதனுன், கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்வளவல்லாத - காட்சிமுதலியஅளவைகளான் உயிர்முத லியவற்றை ஆராய்ந்து உள்ளாவாறுஅறிதலே ஒழிந்த. பிறவற்றை - மற்றை நல்வழிகளை. அது - அப்பொருளை. கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் - அப்படிக் கொள்ளையிடப்பட்டபொருளினுல் தாம் பஞ்சேந் திரியவிஷயசுகங்களை அனுபவிக்கும் விதமும். நினைத்தலென்பது சிறப்பு வினையும் செய்தலென்பது பொதுவினையுமாதல்பற்றி நினைத்தலிலும் செய்த லுள்ளதனுல், 'நினைத்தலும் செய்தலாகலின்' என்றார்: இனி, நினைத்த லும் செய்தலாகலின் என்பதற்கு - நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின் என்று பொருள் விரிப்பாருமுளர். அஃது-அந்தத் தீயநினைப்பு. கரந்த சொற் செயல்களைப் புகுவித்து - வஞ்சனையான சொல்லையுந் தொழிலையும் உண்டா கச்செய்து. கெடுக்கும் - அந்நினைவுடையாரை அழிக்கும். அவற்றையே நுக ர்ந்து - காய்கனிமுதலியவற்றையேயுண்டு. அவ்வளவால் - காட்சிமுதலியன கொண்டு உயிர்முதலியவற்றை ஆராய்ந்தறிதலாகிய நல்வழியால்: அம்மாத் திரத்தால் என்றலுமுண்டு நிறைந்திருத்தல் - திருப்தியடைந்திருத்தல். கள்வார் - திருடுபவர். களவல்ல மற்றைய தேற்றாதவர் - களவொன்றையே அறிந்தவ ரென்றபடி. அளவல்ல என்றது - அக்களவின் உபாயம் வழி பலன் முதலிய வகைகளை. ஆங்கே என்ற ஏகாரம், தவறுமல் வீவரென்பதை விளக்கிற்று. அல்ல என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - வினையா லணையும்பெயர்; பின்னதைக் குறிப்புப் பெயரெச்சமாகவேனும், வினையா லணையும்பெயராகவேனுங் கொள்ளலாம். (கூ)

உகூ0. கள்வார்க்குத் தள்ளு மூயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ - ள்.) கள்வார்க்கு-களவினைப் பயில்வார்க்கு, உயிர்நிலை - (தம்மின் வேறல்லாத)உடம்பும், தள்ளும் - தவறும்; கள்ளார்க்கு - அதுசெய்யாதார்க்கு, புத்தேள் உலகு - (நெடுஞ்சேணதாகிய) புத்தேளுலகும், தள்ளாது - தவறுது.

உயிர் நிற்றற்கு இடனுகலின், 'உயிர்நிலை' எனப்பட்டது. சிறப்பு உம் மைகள் இரண்டும், விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரசனுல் ஒறு க்கப்படுதலின் 'உயிர்நிலையுந் தள்ளும்' என்றும், மறுமையினும் தேவராதல் கூடுதலின் 'புத்தேளுலகுந் தள்ளாது' என்றுங் கூறினர். "மற்றது, தள்ளி னுந் தள்ளாமை நீர்த்து" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல் அறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாரு முளர்.

இதனுன், இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) களவினைப்பயிலும் அஜ்ஞானிகட்கு ஆன்மா வேறு உடல் வேறு என்கிற உணர்ச்சி யில்லாமையால், 'தம்மின்வேறல்லாத உடம்பும்' என்றார். தவறும் - பயனின்றிஒழியும். அது - களவு. நெடுஞ்சேணதாகிய - (தம்மின்வேறுபட்டு) வெகுதூரத்திலிருக்கிற. புத்தேளுலகு - தேவலோகம். உயிர்நிலை - உடம்பு. சிறப்பு உம்மைகள் - உயிர்நிலையும், புத்தேளுலகும் என

முறையே இழிவுஉயர்வுசிறப்புப்பொருள்களோத் தரும் உம்மைகள். அவை தொக்கது, செய்யுள்விகாரம். இம்மையினும் - இப்பிறப்பிலும். ஒறுக்கப் படுதலின் - தண்டிக்கப்படுதலால். ''மற்றது'' என்னும் மேற்கோள் - இந் நூலின் அறுபதாம்அதிகாரத்தில் ஆரும்பாட்டி லுள்ளது; உயர்ச்சி (விதி வசத்தால் கைகூடாமல்) தவறிப்போனலும், (அவ்வுயர்ச்சியைப் பெறவேண்டு மென்னும் எண்ணம்) தவருமைத்தன்மையுடையது என்று பொருள். என் புழியும் - என்னுமிடத்தும். இப்பொருட்டு - தவறுதலென்னும் இப்பொருளே யுடையது. இருவர்பயன் - கள்வரது பயனும், கள்ளாதவரது பயனும். களவு செய்யக்கருதுபவர் இம்மையில் இராசதண்டனையையும் மறுமையில் நரக வேதனையையும் பெறுவர்; கள்ளாதவர் அவற்றைப்பெறுமல் இராசமரியாதை யையும் சுவர்க்க வின்பத்தையும் பெறுவ ரென்பது இதன்கருத்து. 'கள்வார்க் குத் தள்ளும் உயிர்நிலை' என்றதனுல் 'கள்ளார்க்கு உயிர்நிலை தள்ளாது'என்ப தும், 'கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு' என்றதனுல் 'கள்வார்க்குப் புத் தேளுலகு தள்ளும்' என்பதும் அருத்தாபத்திவகையால் அமைக்கப்பட்டன. 'இதற்குப் பிறவாறு உரைப்பாரு முளர்' என்றதனுல், கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் என்பதற்கு - திருடுமவர்கட்குப் புகழுடம்பு விட்டுவிலகு மென்றும், திருடர்க்குப் பிராணயாமமுதலிய யோகவுறுப்புக்கள் கைகூடாவென்றும், கள்ளர்க்கு இம்மையிற் சீவனம்மாத்திரமே இயலினும் இயலும் [மறுமை யின்பமோ இயலாது] என்றும், கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு என்ப தற்கு - திருடாதவர்கட்குப் புண்ணியம் ஒழியாதாதலால் அவர்களோத் தேவ லோகம் ஒருபொழுதும் நீக்காது என்றும் உரைகொள்ளலாம். (கo)

கூo - ஆம் அதிகாரம்—வாய்மை.

அஃதாவது-மெய்யினதுதன்மை. பெரும்பான்மையும் காமமும் பொரு ளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது, கூடாவொழுக்கங் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வாய்மை-பண்புப்பெயர்: சத்தியம். நிகழ்வது-உண்டாவது. காமம்பற்றிய கூடாவொழுக்கமும் பொருள்பற்றிய களவும் ஆகிய இரண்டின் குற்றத்தையுங் கூறியபின், அந்தக் காமம் பொருள் என்னும் இரண்டுபற்றி யும் உண்டாகிற பொய்யின் குற்றத்தைக் கூறுவது அதிகாரமுறைமை.

உகூக. வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ - ள்.) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், (அது),—தீமை யாது ஒன்றுமும் இலாத சொலல் - (பிறிதோருயிர்க்குத்) தீங்கு சிறிதும்பயவாத சொற்களைச் சொல்லுதல்; (எ - று.)

தீமை யாதொன்றும் இலாத என இயையும். 'எனப்படுவது' என்பது, ''ஊரெனப்படுவது உறையூர்''என்றுற்போல நின்றது. இதனுன், நிகழ்ந்தது

கூறலென்பது நீக்கப்பட்டது; அதுதானும், தீங்குபயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையா மென்பது கருத்து.

(கு - ரை.) வினவின் - கேள்விகேட்டால். பயவாத - தராத. நின்றது - சிறப்புத்தோன்றநின்றது. பயப்பின் - தீங்குவிளைத்தால். உள்ளதை உள்ளபடி சொல்லுதல் மாத்திரமே மெய்ம்மையாகாது; பிறர்க்கு நன்மைபயக்கும் நிகழ்ந்ததுகூறலும் தீங்குதராத நிகழாததுகூறலுமே மெய்ம்மையா மென்றபடி. இலாத - பெயர். நிகழ்ந்ததுகூறல் - யதார்த்தவாதம். (க)

உகூஉ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ - ள்.) (பிறர்க்கு), புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்கு மாயின், பொய்ம்மையும் - பொய்ம்மைச் சொற்களும், வாய்மை இடத்த - மெய்ம்மைச்சொற்களின்பாலவாம்; (எ - று.)

குற்றந்தீர்ந்த நன்மை - அறம். அதனைப்பயத்தலாவது - கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோர் உயிர்*சொற்களின் பொய்ம்மையானே அதனின்நீங்கி இன்புறுதல். நிகழாததுகூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து.

இவையிரண்டுபோட்டானும், 'தீங்குபயவாத நிகழ்ந்தது கூறலும்,நன்மை பயக்கும் நிகழாததுகூறலும்-மெய்ம்மை' எனவும், 'நன்மைபயவாத நிகழாதது கூறலும், தீங்குபயக்கும் நிகழ்ந்ததுகூறலும்-பொய்ம்மை' எனவும் அவற்றது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) குற்றந்தீர்ந்த நன்மையைப்பயக்கும்-பழிபாவங்களைத் தராத தருமத்தைக் கொடுக்கும். மெய்ம்மைச்சொற்களின்பால - சத்தியவார்த்தைகளிற் சேர்ந்தன. கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றது-கெடுதியையாவது மரணத்தையாவது அடையநின்றதாகிய. அதனின் - அத்துன்பத்தினின்றும். நிகழாததுகூறல் - நடவாததைச்சொல்லுதல். நிகழாததுகூறுதல்மாத்திரமே பொய்ம்மையாகாது; பிறர்க்குத் தீமைபயக்கும் நிகழ்ந்தது கூறலும், நன்மைபயவாத நிகழாததுகூறலுமே பொய்ம்மையா மென்றபடி: இவற்றிற்கு மாறுனை மெய்ம்மையென்க. இங்ஙனங் கூறியது, 'மணங்கூட்டுவித்தல் முதலிய சில நன்மையின்பொருட்டுப் பொய்சொன்னலுஞ் சொல்லலாம்' என்னும் நூற்றுணிபை யுட்கொண்டு. "மெய்ம்மையே யொருவர்க் குற்ற விபத்தினை மீட்கு மாயிற், பொய்ம்மையு மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்குமாதோ" என்னும் மகாபாரதத்தையும் அறிக. இறையனாரகப்பொருளுரையில் நக்கீரர், பழியும்பாவமும் பயவாத பொய் பொய் யாகா தென்பதற்கு இத்திருக்குறளையே மேற்கோளாகக் காட்டினார். பொய்ம்மையென்னும் பால்பகாவஃறிணைப்பெயர், 'இடத்த' என்னும் பலவின்பால்முற்றைக் கொண்டது. (உ)

உகூங. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

* பி - மீ: அச்சொற்களின்.

(இ - ள்.) (ஒருவன்), தன் நெஞ்சு அறிவது - தன்நெஞ்சு அறிவது ஒன்றனே, பொய்யற்க - (பிறர் அறிந்திலரென்று) பொய்யாதொழிக; பொய்த்த பின் - பொய்த்தானுயின், தன் நெஞ்சுஎ-(அதனே அறிந்த) தன்நெஞ்சே, தன்னே சுடும்-(அப்பாவத்திற்குக் காரியாய்நின்று) தன்னே (அதன்பயனுய) துன்பத்தை எய்துவிக்கும்; (எ - று.)

நெஞ்சுகரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினேகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம், நெஞ்சத்திற் குறுகிய காரியில்லே யாகலின்" என்பதனு லும் அறிக.

பொய் மறையாமையின் அதுகூறலாகாதென்பது, இதனுற்கூறப்பட்டது.

(கு - ரை.) பொய்யாது - பொய்சொல்லாமல். பொய்த்தானுயின் - பொய்சொன்னுல். காரி - சாட்சி. எய்துவிக்கும் - அடையச்செய்யும். சுடும்- வருத்து மென்றபடி. "கண்டவரில்லென" என்னும் மேற்கோள் - கலித் தொகை, நெய்தற்கலி, அ-ஆம் பாட்டிலுள்ளது; (இதற்குப்பொருள்):—உணராதார் - அறியாதவர்கள்,—தங்காது - (தம்மனம் இது செய்யலாகாதென்று) மீளாதே, தகைவு இன்றி - வேறுவிலக்குவாருமில்லாமல், உலகத்துள் கண்டவர் இல் என - உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதி, தாம் செய்யும் - தாங்கள் செய்கிற, வினைகளுள் - தீவினைகளுள், நெஞ்சு அறிந்த கொடியவை - (தாம்) நெஞ்சறியவேசெய்த கொடிய தீவினைகளே, மறைப்பவும் - (பின்பு பிறரறியாமல்) மறைத்தார்களாயினும், மறையாஆம் - (அவை) மறையமாட்டாவாகும்: (ஏனெனின்),—நெஞ்சத்தின் குறுகிய காரி இல்லை - (தாம்செய்தமையை அறிந்திருக்கின்ற தம்முடைய) நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சாட்சி வேறு இல்லே, ஆகலின்-ஆகையினுல்; (என்றவாறு.)'மறையாவாம்' என்றவிடத்து 'அறிபவர்' என்று கலித்தொகை நச்சினுர்க்கினியருரையின் பாடம். ஒருவன் தன் மனச்சாட்சிக்கு மாறுகப் பொய் கூறலாகாது; கூறினுல், பின்பு தானே பச்சாத்தாபமடைதற்குக் காரணமாகுமென்பது கருத்து. "தன்னேத் தானெஞ்சங்காரியாகத்தானடங்கின், பின்னேத் தானெய் தாப்பயனில்லே" என்றது, பழமொழி. (ங)

உகூச. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா மூளன்.

(இ - ள்.) (ஒருவன்), உள்ளத்தால் - (தன்) உள்ளத்திற்குஎற்ப, பொய்யாது - பொய்கூருது, ஒழுகின் - ஒழுகுவனுயின், (அவன்),—உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் - உயர்ந்தோர் உள்ளத்தின்க ணெல்லாம், உளன் - உளனும்; (எ - று.)

'உள்ளத்தால்' என்பது, வேற்றுமைமயக்கம். பொய்கூருது ஒழுகுதலாவது-மெய்கூறி ஒழுகுதல். அவனது அறத்தினது அருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனேயே நினேப்ப ரென்பதாம்.

இதனுன், இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளம் - மனம். உள்ளத்தால் என்பதில், கருவிகருத்தாப் பொருள்களில் வருதற்குரிய'ஆல்'என்னும்மூன்றும்வேற்றுமையுருபு,கொள்ளுதற்பொருட்குரிய நான்காம்வேற்றுமையின் பொருளில் வந்ததனால், வேற்றுமைமயக்கம். மெய்ம்மையே பேசுபவன் உயர்ந்தோரெல்லாராலும் நன்கு மதிக்கப்படுவானென்பது இதன்கருத்து. இம்மைப் பயன் - இம்மையிலடையும் பயன். 'உள்ளத்தாற் பொய்யாது' என்றதனால், துறவறத்தார்க்கு வாய்மை பொய்சொல்லக்கருதாமை யென்று ஆகும். (சு)

உகூடு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ - ள்.) மனத்தொடு வாய்மை மொழியின் - (ஒருவன் தன்)மனத்தோடு (பொருந்த) வாய்மையைச் சொல்வானாயின், (அவன்),—தவத்தொடு தானம் செய்வாரின் தலை - தவமும் தானமும் (ஒருங்கு)செய்வாரினுஞ் சிறப்புடையன்: (எ - று.)

மனத்தொடு பொருந்துதல் - மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்து என்பதாம்.

(கு - ரை.) ஏறுதல்-ஒத்திருத்தல். புறமாகிய மெய்யால் செய்யுமவை - வெளியாகிய உடம்பினுற்செய்யப்படுவனவாகிய தவமும் தானமும். அகமாகிய - உள்ளுறுப்பாகிய. செய்யுமது-மெய்யைப் பொருந்தப் பேசுவது. துறவறத்திற்குச் சிறத்தலால் தவமும், இல்லறத்திற்குச் சிறத்தலால் தானமும் கூறினுரென்று கொண்டு, மனப்பூர்வமாக மெய்யையே பேசுபவன் இல்லறத்தார் யாவரினும் துறவறத்தார் யாவரினும் உத்தம னென்பது கருத்தென்னலுமாம். (ரு)

உகூசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ - ள்.) பொய்யாமை அன்ன புகழ் இல்லை - (ஒருவனுக்கு இம்மைக்குப்) பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை;ஈய்யாமை எல்லா அறமும் தரும் - (மறுமைக்கு) மெய்வருந்தாமல் (அவனுக்கு) எல்லா அறங்களையும் (தானே) கொடுக்கும்: (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றினும், துறவறத்திற்கு உண்மைமை முதலியவற்றினும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள்புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானே தரு மென்பார், 'எய்யாமை யெல்லாவறமுந் தரும்' என்றார்.

(கு - ரை.) புகழ்க்காரணம் - புகழுக்கு ஏது. புகழ் என்பது - அதன் ஏதுவாகிய பொய்பேசாமையைக் குறித்தலால், காரியவாகுபெயர். மெய் - உடம்பு. ஈண்டு - இங்கே. பொருள்கூட்டல் - திரவியசம்பாதனம். அன்றே - தேற்றம். பொய்யாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். எய்யாமை - எதிர்மறைவினையெச்சம். உம்மை - முற்றுப்பொருளது. இனி, ''எய்யாமையே

அறியாமையே" என்று தொல்காப்பியனுர் 'எய்யாமையென்னும் உரிச்சொல் அறியாமையையுணர்த்தும்' எனக் கூறியிருத்தலால், பொய்யாமையாகிய அறம் ஒன்றுதானே ஒருவனுக்கு மற்றைஅனைத்தறங்களின் பயனையும் எவரு மறியாதபடி தானே கொணர்ந்துகொடுக்கு மென்றுமாம். (சு)

உகூஎ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ - ள்.) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - (ஒருவன்) பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனுயின், பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - (அவன்) பிறஅறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று; (எ - று.)

அடுக்கு இரண்டனுள், முதலது - இடைவிடாமைமேற்று; ஏனையது - தணிவின் மேற்று. 'பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையாற் சிலதவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின்பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவருமற்செய்தல் நன்று' என்பார், 'செய்யாமைசெய்யாமை நன்று' என்ருர். இதனை இவ்வாறு அன்றி, 'பொய்யாமையைப் பொய்யாமற்செய்யின் பிறஅறஞ்செய்கை நன்று' எனப் பொழிப்பாக்கி, 'பொய்கூறிற் பிறஅறஞ்செய்கை நன்ருகாது' என்பது அதனுற்போந்த பொருளாக்கி உரைப்பாரு முளர்.

பிறஅறங்களெல்லாந் தரும் பயனைத் தானேதரும் ஆற்றலுடைத்து எனமறுமைப்பயனது மிகுதி, இவைமூன்றுபாட்டானும் கூறப்பட்டது.

(கு - ரை.) பொய்யாமை - பொய்கூருமை. முதலது - பொய்யாமை பொய்யாமை என்றஅடுக்கு. மேற்று - அப்பொருளின் மேலது. ஏனையது - மற்றையது; செய்யாமைசெய்யாமை என்பது. மேற்கொண்டு - செய்யத் தலைப்பட்டு. தரவற்றாய - கொடுக்கவல்லதான. பொய்யாமல் - தவருமல். இரண்டாமுரைக்கு: செய்யாமை செய்யாமை-செய்யாமையைச் செய்யாமை: செய்தல் என்று பொருள்: இரண்டுஎதிர்மறை, உடன்பாடுஉணர்த்தின. பொழிப்பு - தொகுதிப்பொருள். போந்த - கிடைத்த. (எ)

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ - ள்.) புறம் தூய்மை - (ஒருவனுக்கு) உடம்பு தூய்தாந்தன்மை, நீரான் அமையும் நீரானேஉண்டாம்: (அதுபோல), அகம் தூய்மை - மனம் தூய்தாந்தன்மை, வாய்மையான் காணப்படும்-வாய்மையான் உண்டாம்; (எ-று).

காணப்படுவது உள்ளதாகலின், 'உண்டாம்' என்று உரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் - வாலாமைநீங்குதல். மனம்தூய்தாதல் - மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லாதாப்போல அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லே * யென்பதாம். இதனுனே, துறந்தார்க்கு இரண்டுதூய்மையும் வேண்டு மென்பதூஉம் பெற்ரும்.

* பி - மீ: என்றவாருயிற்று.

(கு - ரை.) தூய்தாந்தன்மை - பரிசுத்தமாகுதல். உள்ளதே காணப்படுவ தன்றி இல்லாதது காணப்படாதாதலால், உளதாமென்னவேண்டியஇடத்துக் காணப்படுமென்றார். வாலாமை - அசுத்தி; அழுக்கு. மனம் தூய்தாதல் - அறி யாமை நீங்குதல். மெய்யுணர்தல் - தத்துவஞானம். இரண்டு தூய்மை-புறந் தூய்மையும், அகந்தூய்மையும். எடுத்துக்காட்டுவமையணி. "சேய்மையண் மையிலுயிர்க்கொருதுணையெனச் சிறந்த, வாய்மையா லகந்தூய்மையா மற்றி லேபுறத்தைத், தூய்மைசெய்வது நீரலாற்சொல்லின் வேறுளதோ" என்று இச் செய்யுளையொட்டி அரிச்சந்திரபுராணச் செய்யுள் வந்துள்ளது. (அ)

கூகூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ - ள்.) எல்லா விளக்குமும் - (புறத்திருள்கடியும்) உலகத்தார்விளக் குக்களெல்லாம், விளக்கு அல்ல - விளக்காகா; சான்றோர்க்கு - (துறவான்) அமைந்தார்க்கு, விளக்கு - விளக்காவது,—பொய்யா விளக்குஏ - (மனத்து இருள்கடியும்) பொய்யாமையாகிய விளக்கே; (எ - று.)

உலகத்தார்விளக்காவன - ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்கு' என்றார். அவ்விரு ளாவது - அறியாமை. 'பொய்யாதவிளக்கு' என்பது, குறைந்துநின்றது; பொய்கூறுமையாகிய விளக்கு என்றவாறு. இனி, இதற்கு - கல்வி முதலிய வற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு விளக்க மாவது, பொய்யாமையான்வரும் * விளக்கமே என்று உரைப்பாருமுளர்.

(கு - ரை.) புறத்து இருள் கடியும் - வெளியிருளைப்போக்குகின்ற. உல கத்தார் விளக்குக்கள்-சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் மூச்சுடர்கள்; பொருள்களை விளங்கச்செய்வதனால், விளக்கு என்று பெயர். துறவான் அமைந்தார் - துறவறவொழுக்கத்தான் மிக்கவர். மனத்து இருள் - அஜ்ஞா னம். ஞாயிறு - சூரியன். திங்கள் - சந்திரன். மனத்திருளை 'அவ்விருள்' என்று சுட்டினார். பொய்யா-ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். விளக்கம்- ஒளி, புகழ், தெளிவு. வீரசோழியவுரையில், இடையினவெதுகைக்கு இக் குறள் உதாரணம். (கூ)

கூ00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ - ள்.) யாம் மெய் ஆ கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், எனைத்து ஒன்றுமும் - யாதொருதன்மையானும், வாய்மை யின் நல்ல பிற - வாய்மையின் மிக்கனவாகச்சொல்லப்பட்ட பிற அறங்கள், இல்லை—; (எ - று.)

மெய் உணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன - தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை உள்ளவாறுணரவல்லராய்க் காம வெகு ளிகளின்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும்வல்லராய இறைவர்

* பி - மீ: விளக்கமே விளக்கம்.

அருளான் உலகத்தார் உறுதியெய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது என்பதாம்.

இவை மூன்றுபாட்டானும், இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

(கு - ரை.) தத்துவமுணர்த்தும் நூல்களே 'மெய்' என்றது, காரியவாகு பெயர். அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய்என்றஇடத்து, தீத்தார்பெருமையென்ற அதிகாரத்திலே 'அவ்வறமுதற்பொருளே உள்ளவா றுணர்த்துவார் அவராகலின்' என்று பரிமேலழகருரைத்தது காணத்தக்கது. இறைவர் - கடவுள்போல்வார்: தத்துவஞானிகள். உறுதியெய்துதற்பொருட்டு - நன்மைபெறும்பொருட்டு. அவை எல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது - அந்த ஆகமங்களெல்லாவற்றிலும் வாய்மையே மிக்கநலமுடையதென்பது ஒத்திருந்தது. இவ்வறம் - மெய்ம்மை. தலைமை - உயர்வு. (கo)

ஙக - ஆம் அதிகாரம்—வெகுளாமை.

அஃதாவது - சினத்தைச்செய்தற்குக்காரணம் ஒருவன்மாட்டு உளதாய விடத்தும் அதனைச் செய்யாமை. இது, *பொய்ம்மை முதலியனபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வெகுளாமை - கோபியாமை; எதிர்மறைதொழிற்பெயர். சினம் - கோபம். அதனை - கோபத்தை. பொய்ம்மைமுதலியனபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின் - பிறரிடத்துப் பொய் முதலிய குற்றங்களைக் கண்டபொழுது அவைகாரணமாக அவர்மேலுண்டாகுங் கோபத்தை நீக்கவேண்டுமென்று கூறுதலால். இது - இவ்வதிகாரம். பிறனொருவன் சத்தியம் முதலிய விரதங்களைத் தவறக் கண்டாலும் அக்குற்றங்காரணமாக அவன்மேற் கோபித்து அதனால் தனது சாந்தகுணத்தைத் தவிரக்கூடாதென்பதற்கு, இவ்வதிகாரம் வாய்மையின்பின் வைக்கப்பட்டதென்க. இங்கே வெகுளாமை என்பதற்கு - கோபங்கொள்ளக்கருதாமையென்றுபொருள் கொள்க; மேலதிகாரங்களாகிய 'இன்னாசெய்யாமை', 'கொல்லாமை' என்பவற்றிற்கும் - துன்பந்தருங்காரியங்களைச் செய்யக்கருதாமை, கொல்லக்கருதாமை என்றே பொருள். கள்ளாமை என்னும் அதிகாரத்தில் அதன் பொருளை விவரிக்குமிடத்துப் பரிமேலழகர் கூறியிருப்பது காண்க. களவு, பொய்பேசுதல், வெகுளுதல், கொடுந்தொழில், கொல்லுதல் என்னும் இவற்றைச்செய்தவிடத்தே இல்லறத்தார்க்குக் குற்றமுண்டாம்: துறவறத்தார்க்கோ இவற்றை நினைத்தமாத்திரத்திலும் பெருங்குற்றம் நேரும்; அதனால், கள்ளாமை முதலிய இவ்வதிகாரங்கள் இல்லறவியலில் வைக்கப்படாமல் துறவறவியலில் வைக்கப்பட்டன வென்க. இதனால், கீழ் இல்லறவியலிற் கூறப்பட்ட 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தோடு, இவ்வதிகாரத்துக்கு, கோபஞ் செய்யாமையும் சினத்தையே அடியோடு நினையாமையுமாகிய பொருள்வேறுபாடு காண்க. கீழ் 'அறன்வலியுறுத்தல்' என்னும்அதிகாரத்தில் "அழுக்கா

---

* பி - மீ: பொய்ம்மைபற்றி.

றவா வெகுளி யின்னுச்சொல் நான்கும், இழுக்காவியன்ற தறம்'' என்ற தனால், இருவகையறத்திற்கும் பொதுப்பட வெகுளி பெருங்குற்றமாத லறிக.

ஈ0க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

(இ - ள்.) சினம் செல் இடத்து காப்பான் - (தன்) சினம் பலிக்கு மிடத்து (அதனை எழாமல்) தடுப்பானே,—காப்பான்-(அருளால்) தடுப்பானுவான்; அல் இடத்து - (ஏனைப்) பலியாதவிடத்து, காக்கின் என் - (அதனைத்) தடுத்தாலென்? காவாக்கால் என் - தடாதொழிந்தாலென்? (எ - று.)

'செல்லிடம்', 'அல்லிடம்' என்றது - தவத்தால் தன்னின்மெலியாரையும், வலியாரையும். 'வலியார்மேற் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர்தீங்கு இன்மையின், காத்தவழியும் அறனில்லை' என்பார், 'காக்கினென் காவாக்காலென்' என்றார்.

இதனுன், வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

(கு - ரை.) எழாமல் - உண்டாகவொட்டாமல். ஏனை - மற்றை. செல்லிடம் - எதிர்காலங்கருதிய வினைத்தொகை. காப்பான் என்னும் வினையாலணையும்பெயர் இரண்டனுள், முன்னது - எழுவாய்; பின்னது - பயனிலை. அல்லிடம் - பண்புத்தொகை. முன் 'செல்லிடம்' என வந்ததனுல், அல்லிடம் - செல்லுதலல்லாதவிட மென்றபடி. 'காக்கினென் காவாக்காலென்' என்பதிலுள்ள 'என்' என்னும் பயனிலைகளுக்கு, முறையே, வருவதோர்அறமும், வருவதொருதீங்கும் என எழுவாய் வருவிக்க. (க)

ஈ0உ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

(இ - ள்.) சினம் - (ஒருவன்) வெகுளி, செல்லா இடத்து - தன்னின் வலியார்மேல், (எழின்), தீது-(தனக்கே) தீதாம்; செல் இடத்துஉம்-(மற்றை) எளியார்மேல் எழினும், அதனின் தீய பிற இல் - அதனின்தீயன பிறஇல்லை.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான்வரும் ஏதமே: ஏனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலின், 'அதனிற்றீயனபிறஇல்லை' என்றார். ஓரிடத்தும் ஆகாது என்பதாம்.

(கு - ரை.) தீதாம் - கொடியபயனே விளைப்பதாம். இம்மைக்கண் - இப்பிறப்பில். அவர் - தன்னின் வலியார். ஏதம் - தண்டனைமுதலிய துன்பம். ஏனையது - மற்றது; மெலியாரிடத்துச்செய்த கோபம். மறுமைக்கட் பாவமும்பயத்தலின் - இவ்வுடம்புநீங்கினபின்வரும்நிலையில் அனுபவிக்குமாறு பாவத்தையுந் தருதலால். செல்லிடத்தும், உம்மை - இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. இல்என்னும்பயனிலைக்குத் தீயஎன்பது - எழுவாய்; பிற என்பதுஎழுவாய்எனின், தீயஎன்பதைப் பெயரெச்சமாக்கொள்ளலாம். (உ)

ஈ0ஊ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனுன் வரும்.

(இ-ள்.) யார்மாட்டுஉம்-யாவர்மாட்டும், வெகுளியை மறத்தல்-வெகுளியை ஒழிக: (ஒருவனுக்கு), தீய பிறத்தல் - தீயன (எல்லாம்) உளவாதல், அதனான் வரும்—: (ஆகலான்); (எ - று.)

வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர்மாட்டும் ஆகாமையின் 'யார் மாட்டும்' என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் 'தீயபிறத்தல் அதனான் வரும்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) யாவர்மாட்டும் - எல்லோரிடத்தும். மறத்தல் - நினையாதொழிக; 'தல்'விகுதிபெற்ற வியங்கோள். அதனான் - அக்கோபங்காரணமாக. மூவர்மாட்டும் - முத்திறத்தாரிடத்தும். சிந்தை - நினைப்பு. "பெரியவர்தம்மைக்காய்ந்தான் பிறங்கல்கல்லியகோலொப்பான், புரிவனபுரியப்பட்டுப்புலம்புவன் ஒத்தார்க்காய்ந்தான், எரிநரகத்தில்வீழ்வன் இழிந்தவர்க்காய்ந்தானென்றால், ஒருவர்தம்மிடத்துஞ் சீற்றமுறாமையே நன்றுமாதோ" என்பதனால், வலியார் ஒப்பார் எளியார் என்னும் மூவரிடத்துஞ் செய்யுங் கோபத்தா லுண்டாகும் பலன்களை அறிக. முன்வாக்கியத்துக்குப் பின்வாக்கியம் காரணம். (௩)

௩௦௪. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(இ - ள்.) (துறந்தார்க்கு), நகைஉம் உவகைஉம் கொல்லும் சினத்தின்-(அருளான்உளவாய முகத்தின்கண்) நகையையும் (மனத்தின்கண்) உவகையையும் கொன்றுகொண்டெழுகின்ற சினமேயல்லது, பிற பகைஉம் உள ஓ - (அதனிற்) பிறவாய பகைகளும் உளவோ? [இல்லை]; (எ - று.)

துறவால் புறப்பகையிலராயினும் உட்பகையாய்நின்று அருள்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகை இல்லையாயிற்று.

இவைமூன்றுபாட்டானும், வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) உளவாய - உள்ளனவான. முகத்தின்கண் நகை-முகமலர்ச்சி. உவகை - மகிழ்ச்சி. கொன்றுகொண்டு - அழித்துக்கொண்டு. புறப்பகை-வெளியேசூழ்ந்துநிற்கும்பகைவர். காமம், கோபம் முதலிய ஆறுதீக்குணங்களும் உட்பகையெனப்படும். உட்பகை - மனத்தில்நிகழுங் கொடுங்குணம். நட்பு - சினேககுணம். எய்துவித்தல் - அடைவித்தல். பகையுமுளவோ, உம்மை - இழிவுசிறப்பு. ஓ - எதிர்மறை. (௪).

௩௦௫. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(இ - ள்.) தன்னை தான் காக்கின்-தன்னைத் தான் (துன்பம்எய்தாமல்) காக்கநினைத்தானாயின், சினம் காக்க - (தன்மனத்துச்) சினம் (வாராமல்) காக்க; காவாக்கால் - காவானாயின், சினம் - அச்சினம், தன்னைஏ கொல்லும் - தன்னையேகெடுக்கும் கடுந்துன்பங்களை எய்துவிக்கும்; (எ - று.)

வேண்டிய வேண்டியாங்குஎய்தற்பயத்ததாய தவத்தைப் பிறர்மேற்சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கு எய்துதலின், 'தன்னையே கொல்லும்' என்றார். ''கொல்லச் சுரப்பதாங்கீழ்''என்புழிப்போல, கொலைச்சொல்-ஈண்டு, துன்பமிகுதிஉணர்த்திநின்றது.

(கு - ரை.) எய்தாமல் - அடையாமல். காக்க - காக்கக்கடவன்; வியங்கோள் வினைமுற்று. ''வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ, மீண்டு முயலப்படும்'' என்றார், கீழ் 'தவம்' என்னும் அதிகாரத்தில்: ''ஆக்கமுங் கிறலுஞ்சீரு மாயுவு நலனு மேலா, மூக்கமும் வீடு மெல்லாந் தவத்தின தூற்ற மன்றே'' என்பது கந்தபுராணம். கோபங்கொண்டு சாபங்கொடுத்தால் செய்த தவம் அழிந்துபோ மென்பது நூற்றுணிபு: ''தீபமொத்தொளிர் தபோதனர்களுஞ் சினமெனும், பாவமுற்றயலுளோர் பதைபதைத்துயிரிறச், சாபமிட்டனையர் தம்தவமும் விட்டிடுவரே'' என்ற பிரபோதசந்திரோதயம் இங்குக் காணத்தக்கது. 'அத்தவத்துன்பம் எய்துதலின்' என்றது, தவஞ் செய்கையில் பசிமுதலியவற்றைப் பொறுத்து அடைந்த துன்பமெல்லாம் வீணாதலின். 'பழையபிறவித்துன்பமும் எய்துதலின்' என்றது, பிறவித் துன்பத்தை யொழிக்கக்கூடிய தவத்தைப் பிறன்மேற்சாபமிட்டதனால் இழந்துவிடவே, அப்பிறப்புத்துன்பம் ஒழிக்கப்படாமையின். ஒருங்கு - ஒருசேர. ''கொல்லச்சுரப்பதாங்கீழ்'' என்பது - நாலடியாரில் ஈயாமையென்ற அதிகாரத்தில் ''இரவலர்கன்றுக'' என்ற செய்யுளில் உள்ளது: தன்னை மிகவுந்துன்பப்படுத்தப் பயன்தருவது கீழ்மக்களின்தன்மையாமென்பது, இம்மேற்கோளின் பொருள். தன்னையே - சினத்தைச்செய்த தன்னையே; ஏ - உயர்வுசிறப்பு. (இ)

கூ0சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

(இ - ள்.) சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி-சினமென்னும் நெருப்பு, இனம் என்னும் ஏமம் புணையை சுடும் - (தனக்குஇடமானவரையேயன்றி) அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும்; (எ - று.)

'சேர்ந்தாரைக்கொல்லி' என்பது - எதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந்தொழிலது என்றவாறு. 'சேர்ந்தாரை' என உயர்திணைப் பன்மைமேல்வைத்து, ஏனைநான்குபாலும் தம்கருத்தோடுகூடிய பொருளாற்றலாற் கொண்டார்; ஈண்டு உருவகஞ்செய்கின்றது துறந்தார்சினத்தையேயாகலின். 'சினமென்னும்நெருப்பு' என்ற விதப்பு - 'உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த இடத்தையே: இந்நெருப்புச் சேராத இடத்தையுஞ் சுடும்'என்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு 'இனம்' என்றது-முற்றத் துறந்த தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிபயக்கும் மொழிகளே இனியவாகச்சொல்லுவாரை. உருவகமே கோக்கி 'சுடும்' என்னுந் தொழில் கொடுத்தாராயினும், 'அகற்றும்' என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை-ஏமத்தையுபதேசிக்கும் புணை. 'இனமென்னு மேமப்புணை' என்ற

ஏகதேச வுருவகத்தால், 'பிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங்கரை ஏற்று கின்ற' என வருவித்து உரைக்க. எச்ச வும்மை, விகாரத்தால் தொக்கது; தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் அகற்றும் என்பதாம்.

(கு - ரை.) இடமானவரையேயன்றி - தனக்குஆதாரமாக இருப்பவ ரான கோபங்கொண்டவரை(ச் சுடுவது)மாத்திரமே யல்லாமல். இனம் - சுற்றவருக்கம். ஏமப்புணை - இரட்சகத்தோணி. சேர்ந்தாரைக்கொல்லி என் பது-'ஆஸ்ரயாஸன்' என்னும் (அக்கினியின்) வடமொழிப்பெயரின் பொருள் கொண்டது. எதுப்பெயர் - காரணம்பற்றிவரும்பெயர். சேர்ந்தாரை'என்ற பலர்பால், மற்றை நான்குபால்களுக்கும் உபலக்ஷணம். செய்பவன்கருவி", "செய்வதாதி," 'நஞ்சுண்டவன் சாவான்' என்றவிடங்களிலும், ஒருபால் ஒழிந்த தன் இனமாகிய பால்களைக் கொள்வது காண்க: [நன். பொது. எ.] உயர்திணைப்பன்மை - பலர்பால். ஏனைநான்குபால் - ஆண் பெண் ஒன்று பல என்னும் மற்றைப்பால்கள். தம்கருத்தோடுகூடியபொருளாற்றல் - தம் மனத்திற்கொண்ட பொருளைக் குறிப்பிக்குஞ் சக்தி உருவகஞ்செய்தல் - ஒரு பொருளினிடத்து மற்றொரு பொருளின் தன்மையை ஏற்றிக்கூறுதல். 'ஈண்டு உருவகஞ்செய்கின்றது துறத்தார்எனத்தையே யாகலின்' என்பது, உயர்தி ணைப்பன்மைமேல்வைத்து 'சேர்ந்தாரை'என்று கூறியதற்குக்காரணம்: இனி 'இனமென்னும்நெருப்பு' என்று தொடங்கும் பின்வாக்கியத்திற்குக் காரணம் என்றும், 'சேர்ந்தாரை' என்று தொடங்கின முன்வாக்கியத்துக்குக் காரண மன்று என்றுங் கொள்வாருமுளர். விதப்பு - புதுமைதோன்ற எடுத்துக் கூறு வது. வேற்றுமை - வேறுபாடு. முற்றத் துறந்து - எல்லாப்பற்றுக்களையும் அற விட்டு. உருவகம் - ரூபகாலங்காரம். அகற்றும் - நீக்கும், விலக்கும். ஏமத்தை - இதமான பொருள்களை; பேரின்ப நிலையைப்பற்றியவற்றை. புணை - தெப் பம். ஞானோபதேசிகளைமட்டும் புணையென்று உருவகப்படுத்தி, பிறவியைக் கடலாகவும், மோட்சத்தைக் கரையாகவும் உருவகப்படுத்தாதது, ஏகதேச வுருவகம்; இதனால் வருவிக்கப்பட்ட தொடர் - 'ஏமப்புணை' என்பதற்கு அடைமொழி. இறந்ததுதழுவிய எச்சவும்மை தொகுத்தலென்னுஞ்செய்யுள் விகாரப்பட்டது, 'ஏமப்புணையை' என்பதன் இறுதியில். கோபம், தன்னைக் கொண்டவரை இம்மை மறுமைத் துன்பங்களில் அடைவித்து அழிப்ப தோடு, அவர்க்கு இதமொழியெடுத்துக்கூறி அவரையீடேற்றவல்ல நல் லோரை அவரிடத்தினின்று நீங்குவித்தலுஞ் செய்யு மென்பது கருத்து. நெருப்பிற்குச் சேராதவிடத்தையுஞ் சுடுதலையும், மரக்கலத்திற்கு இதோப தேசஞ்செய்தலையும் அதிகமாகச்சொல்லுதலால், மிகையோற்றுமையுநவிற் வணி. சேர்ந்தாரைக்கொல்லி என்பதில், இ - கருத்தாப்பொருள்விகுதி; "நூற்றுவரைக்கொல்லி" என்னுஞ் சிந்தாமணியிற்போல. ஏமம் - இன்பம்; இன்பத்தைத்தரும் மொழிக்குக் காரியவாகுபெயர்: இதனை ஹேமம் என்னும் வடசொல்லின் திரிபாகக் கொண்டு, உவமவாகுபெயராய், பொன்போலரிய மொழி யென்றுங் கொள்ளலாம். புணை - மரப்பலகைகளைக்கொண்டு புணை க்கப்படுவ தெனக் காரணப்பெயர். இனமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி,

இனமென்னு மேமப்புணை என, உருவகப்பொருளே விளக்கும் 'என்னும்' என்கிற உருபு விரிந்துநின்றமையின், இது - விரியுருவகமெனப்படும். (சு)

ங0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(இ - ள்.) சினத்தை பொருள் என்று கொண்டவன் - சினத்தை(த் தன் ஆற்றல் உணர்த்துவதோர்) குணம் என்று (தன்கட்) கொண்டவன், கேடு - (அவ்வாற்றல்) இழத்தல், நிலத்து அறைந்தான் கைபிழையாத அற்று - நிலத்தின்கண் அறைந்தவன்கை (அந்நிலத்தையுறுதல்) தப்பாத ஆறுபோலத் தப்பாது.

வைசேடிகர்-பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என் பனவற்றை 'அறுவகைப்பொருள்' என்றாற்போல, ஈண்டு, குணம் 'பொருள்' எனப்பட்டது. * 'பிழையாதவற்று' என்பது, குறைந்து நின்றது.

இவைமூன்றுபாட்டானும், வெகுண்டார்க்குவருந் தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) ஆற்றல் உணர்த்துவது - வல்லமையைத் தெரிவிப்பதாகிய. கேடு - (பின்பு அதனாற்) கெடுதல். அறைந்தவன்கை - அடித்தவனது கை. உறுதல் - அடைதல். வைசேடிகர் - தர்க்கநூலார். வைசேடிகம் - வைதிக சாஸ்திரம் ஆறனுள் ஒன்று; அவை - மீமாம்ஸை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் எனப்படும். பொருள்-வஸ்து. பண்பு-குணம். தொழில்-செய்கை. சாதி - இனம், பொதுமை. விசேடம்-சிறப்பு. இயைபு - ஒற்றுமை, சம்பந்தம். 'திரவியம், குணம், கருமம், சாமாந்தியம், விசேடம், சமவாயம் எனப் பதார்த்தங்கள் ஆறு' என்பது வைசேடிகர் கொள்கை; (இவ்வாறனையே பொருள்முதலிய என இங்குக்குறித்தது.) இனி, இவற்றின் எதிராகிய இன்மையென்கிற அபாவத்தையுங் கூட்டிப் பதார்த்தங்கள் ஏழென்பர், ஒருசார் நியாயநூலார். பொருளெனினுந் திரவியமெனினும், தொழிலெனினுங் கருமமெனினும், சாதியெனினுஞ் சாமாந்தியமெனினும், இயைபெனினுஞ் சமவாயமெனினும் ஒக்கும். ஈண்டு - இங்கே. குணம் - இனமாகிய பண்பு. பிழையாதற்று - பிழையாதவற்று: தொகுத்தல்விகாரம்; இனி, பிழையாது அற்று என்றே கொண்டு, பிழையாது என்பதை எதிர்மறைத் தொழிற்பெயராகவைத்து, தவறுமைபோலும்என்று உரைத்தலும்பொருந்தும்.

ங0அ. இணரெரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ - ள்.) இணர் எரி தோய்வு அன்ன - பலசுடரையுடைத்தாய பேரெரி (வந்து) தோய்ந்தாலொத்த, இன்னு-இன்னுதவற்றை, செயின்-உம்-(ஒருவன்) செய்தானாயினும், வெகுளாமை - (அவனை) வெகுளாமை, புணரின் - (ஒருவற்குக்) கூடுமாயின், நன்று - (அது) நன்று; (எ - று.)

இன்னுமையின்மிகுதி தோன்ற 'இணரெரி' என்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்னு' என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்கு மென்பது தோன்ற 'புணரின்' என்றும் கூறினர்.

* பி - ம்: 'பிழையாததற்று'

இதனுன், வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) இணர் - பூங்கொத்து; இங்கே சுவாலைத்தொகுதியை இலக்கணையால் உணர்த்திற்று. உடைத்தாய - உடையதான. தோய்ந்தால்-மேற் படிந்தால். இன்னுதவற்றை - துன்பங்களே. அச்செயல் - கொடுஞ்செய்கைகள். மூனிவரையும் வெகுள்விக்கும் - பொறுமைமிகுந்த தவத்தோரையும் கோபிக்கச்செய்யும். எரிவது, எரி; வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்ட காரணப்பெயர். செயினும், உம்மை - இழிவுசிறப்பு. புணரின்என்பது, அப்பெருங்குணம்பொருந்துதலின் அருமைதோன்ற நின்றது. (அ)

ஈ0கூ. உள்ளிய வெல்லா முடனெய்து மூள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(இ - ள்.) (தவஞ்செய்யுமவன்), உள்ளத்தால் - (தன்) மனத்தால், வெகுளி - வெகுளியை, உள்ளான் எனின் - (ஒருகாலும்) நினையாஞையின், உள்ளிய எல்லாம் - (தான்) கருதிய பேறுஎல்லாம், உடன் எய்தும்-ஒருங்கே பெறும்; (எ - று.)

'உள்ளத்தால்' என வேண்டாது கூறிய அதனுன், அருளுடையுள்ள மென்பது முடிந்தது. அதனுன் உள்ளாமையாவது - அவ்வருளாகியபகையை வளர்த்து அதனுன் முற்றக்கடிதல். இம்மை, மறுமை, வீடு என்பன வேறு வேறு திறத்தனவாயினும் அவையெல்லாம் இவ்வொன்றுனே எய்து மென்பார், * 'உள்ளியவெல்லா முடன்எய்தும்' என்றார்.

இதனுன், வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருகாலும் - ஒருபொழுதிலும். பேறு எல்லாம் - பாக்கியங்களேயெல்லாம். பெறும் - பெறுவான். வேண்டாதுகூறிய அதனுன் - அவசியமில்லாமற்சொன்ன அக்காரணத்தால். பொருள்நிரம்பினபாடல்களில் ஏதாவது ஒரு அவசியமில்லாத பதம் காணப்பட்டால், அதனுல் யாதாயினும் ஒருவிசேஷஅருத்தங் கொள்ளுதல், மரபு; அந்தப்படி 'உள்ளுதல்' என்ற வினைக்கு அவசியமில்லாது மூன்வந்த 'உள்ளத்தால்'என்ற சொல்லுக்கு - அருளுடையஉள்ளமென்ற விசேஷப்பொருள் கொண்டார்; கீழ் "தீய, வழுக்கியும்வாயாற்சொலல்", "இறந்தார்வா, யின்னுச்சொல்நோற்கிற் பவர்" என்ற விடங்களில், 'வாய்' என்றதற்கு இங்ஙனமே விசேடப் பொருள் கொண்டவாறு காண்க. முடிந்தது - எற்பட்டது. அதனுன் உள்ளாமை - அம்மனத்தால்நினையாமை. பகை - சினத்திற்குப் பகையாயுள்ளது. அதனுன் முற்றக் கடிதல் - அவ்வருளால் அச்சினம்முழுவதையும் நீக்கிவிடுதல். வேறுவேறுதிறத்தன - வெவ்வேறுவகைபையுடையன. இவ்வொன்றுனே எய்தும் - வெகுளாமையென்னும் இவ்வொருகுணத்தாலே அடைவான். வெகுளாதார் - கோபியாதவர். எய்தும் - செய்யுமென்முற்று ஆண் பாலுக்குவந்தது. உள்ளம்என்பது - உள்ளிடத்தேயுள்ள உறுப்பென்றுவது,

* பீ - மீ: உள்ளியதெல்லாம்.

உள்ளுதற்குக் கருவியான தென்ருவது, காரணப்பெயராம்; உள்ளுதல் - நினைத்தல். உள்ளான் - எதிர்மறையாண்பால்வினைமுற்று. (கூ)

ஈகஂ. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(இ - ள்.) இறந்தார் - (சினத்தின்கண்ணே) மிக்கார், இறந்தார் அனையர் - (உயிருடையராயினும்)செத்தாரோடு ஒப்பர்; சினத்தை துறந்தார்—, துறந்தார் துணை - (சாதல்தன்மையராயினும் அதனை)ஒழிந்தாரளவினர்; (எ - று.)

மிக்கசினத்தையுடையார்க்கு ஞானம்எய்துதற்குஉரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அஃது எய்தாமை ஒருதலையாகலின், அவரை 'இறந்தாரனையர்' என்றும்; சினத்தைவிட்டார்க்குச் சாக்காடெய்துதற்குஉரியபாக்கை நின்றதாயினும் ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலை யாகவின், அவரை * 'வீடுபெற்ருரோடொப்பர்' என்றுங் கூறினர். துறந்தார்துணை - பன்மை யொருமைமயக்கம்.

இதனுன், அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) அதனை ஒழிந்தாரளவினர் - மரணத்தை ஒழிந்தவர் [முத்தி பெற்றவர்] போன்றவர். கலக்கத்தான் அஃது எய்தாமை ஒருதலையாகலின் - மனக்கலக்கத்தால் அந்தஞானத்தை அடையாமை நிச்சயமாதலால். அவரை - நினைம்மிக்கவரை. சாக்காடு - மரணம். யாக்கை - உடம்பு. சாக்காடெய்துதற்குரியயாக்கை - நிலையில்லாதஉடம்பு. வீடுபெறுதல் - முத்தியடைதல். முத்திபெற்றவர்க்குப் பிறப்பு இறப்புக்கள் இல்லை யாதலின், அவரை '(இறத்தலைத்)துறந்தார்' என்றது. துறந்தார்துணையென்பதன்கருத்துப்பொருள், வீடுபெற்றவரோடொப்பரென்பது. இவ்வுடம்பு இருக்கையிலேயே வீடுபெற்றவரோடொப்பரென்றது, ஜீவன்முக்திநிலைய ராவர் என்றவாறு. துறந்தார்என்னும் பன்மைவினையாலணையும்பெயரோடு துணைஎன்னும் ஒருமைப்பெயர் தழுவக்கூறப்பட்டது,பன்மையொருமைமயக்கம் என்க; [நன். பொது. உக.] அவ்விருவர்பயனும்-வெகுண்டவர்பயனும், வெகுளாதார் பயனும். செய்யுளிலுள்ள இறந்தார் என்ற சொல் இரண்டனுள், முன்னது-மிக்காரென்றபொருளது. அனையர்என்னுங் குறிப்புமுற்றில், ஐ -சாரியை. இத்திருக்குறளை "அடுக்கல்லவையு மடுக்கவைபோல்வரும், அவ்வடுக்கணியி னுளளவிலையென்க" என்றதற்கு உதாரணமெடுத்துக்காட்டினர், இலக்கணக் கொத்துநூலுடையார். (கஂ)

ஈஉ - ஆம் அதிகாரம்—இன்ஞசெய்யாமை.

அஃதாவது - தனக்கு ஒருபயன்நோக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்ஞதவற்றைச் செய்யாமை. இன்ஞசெய்தல் வெகுளியொழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு, இது, வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

---

* பி - மீ: 'துறந்தார்துணை'

(கு - ரை.) இன்னுசெய்யாமை - இரண்டனுருபுத்தொகை. கீழ் இருபத்தொன்பதாம் அதிகாரத்தின் முதலில் பரிமேலழகர் கூறியபடி, இதற்கு-ஒருபிராணிக்குந் தீயவற்றைச்செய்ய நினையாமை யென்று பொருள். கோபத்தைவிட்ட முனிவர்களும் யாதாயினும் ஒருபிரயோசனத்தைக் கருதியாவது, முன்னே மனத்திற்பொருந்தியுள்ள வைரத்தைப்பற்றியாவது, அஜாக்கிரதையினுலாவது பிறிதோருயிர்க்குத் துன்பத்தைச்செய்தல் கூடும்; அதனை விலக்கும்பொருட்டு இவ்வதிகாரம் 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தின் பின் நிறுத்தப்பட்டது. இன்ன துன்பம் எனக் குறியாமையின், 'இன்னு' எனப் பன்மையாக்கூறினது; ஒன்றைத்துணியாதவிடத்துப் பன்மையாக் கூறுதல், ஒருமரபு: இதனைச் சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையாரிலம்பகத்தில் "செருநிலத்திவனேவென்றீர் திருவினுக்குரியீரென்றான்" என்றதன்பின் "தனிக்கயத்துழக்கிவென்றீர் தையலேச்சார்மினென்றான்" என்றவிடத்து 'துணியலாகாமையின் பன்மையாற் கூறினான்'என ஆசிரியர் நச்சினார்க்கினியருரைத்ததனு லறிக. செற்றம் - வைரம். சோர்வு - மறதி.

ஙகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றூர் கோள்.

(இ - ள்.) சிறப்பு ஈனும் - (யோகமாகிய) சிறப்புத் தரும், செல்வம்-(அணிமா முதலிய) செல்வங்களை, பெறின்உம் - (பிறர்க்குஇன்னுசெய்து) பெறலாமாயினும், பிறர்க்கு இன்னு செய்யாமை - அதனைச்செய்யாமை, மாசு அற்றூர் கோள்-(ஆகமங்கள்கூறியஆற்றான்) *மனந்தூயாரது துணிவு; (எ-று.)

உம்மை, பெருமைமேற்று. சிறப்புடையதனை 'சிறப்பு' என்றும், அதன் பயிற்சியான் வாயுவைவென்று எய்தப்படுதலின் எட்டுச்சித்திகளையும் 'சிறப்பீனுஞ்செல்வம்' என்றும், காமம் வெகுளி மயக்கம் என்னுங் குற்றங்கள் அற்றமையான் 'மாசற்றூர்' என்றுங் கூறினர்.

இதனுன், தமக்குஒருபயன்நோக்கிச்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) யோகமாகிய சிறப்புத் தரும் - சிறப்பையுடைய யோக நிலையிற் பயில்வதனுற் கொடுக்கப்படுகிற. பிராணவாயுவையடக்கி வசப்படுத்திச் சிறத்தலையுடைய யோகத்தைச் சிறப்பென்றது, தொழிலாகுபெயர். அணிமாமுதலிய எட்டுச்சித்திகள் இவையென்பதும், அவை இன்னபடியின என்பதும், "எண்குணத்தான்" என்றதன்குறிப்பிற் கூறப்பட்டன. இவை - யோகத்தின்பயனுக வருவன வாதலால், சிறப்பீனுஞ்செல்வமெனப்பட்டன. ஆகமங்கள் கூறிய ஆற்றான் - சாஸ்திரங்கள் சொன்ன வழியால். மனந்தூயார் - நெஞ்சம் பரிசுத்தியடைந்தவர். துணிவு - சித்தாந்தம்; தேர்ந்த கருத்து. கோள் - கொள்கை. பெறினும் என்றதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்பு; அது - இன்னுசெய்தலால் சிறப்பீனுஞ் செல்வங்களைப் பெறுதல் முடியா தென்ற எதிர்மறைக்கருத்தை விளக்கும். அதன்பயிற்சி - யோகப் பழக்கம். வாயுவைவென்று - பிராணயாமத்தால் சுவாசபந்தஞ்செய்து.

* பி - ம்: மாசற்றூர்யாவர்க்கும்.

சிறப்பு ஈனும் செல்வம் - சிறப்பைத்தருஞ் செல்வ மென்றுமாம். எய்தப் படுதலின் - அடையப்படுதலால். மாசு அற்றூர் - குற்றம்நீங்கியவர். செய்தல் - தீங்குசெய்தல். ஈனும்என்ற எதிர்காலப்பெயரெச்சத்தில், ஈன் - பகுதி. பிறர்க்குஎனச் சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக்கூறினாராயினும், உபலக்ஷணத்தால், மற்றைய அஃறிணையுயிர்களுங் கொள்ளப்படும். (க)

ஈகஉ. கறுத்தின்ஞ செய்தவக் கண்ணு மறுத்தின்ஞ
செய்யாமை மாசற்றூர் கோள்.

(இ - ன்.) கறுத்து - *(தம்மேல்) செற்றங்கொண்டு, இன்ஞ செய்த அக் கண்உம் - (ஒருவன்) இன்ஞதவற்றைச் செய்தவிடத்தும், மறுத்து - மீண்டு, இன்ஞ செய்யாமை - (தாம் அவனுக்கு) இன்ஞதவற்றைச் செய்யாமையும், மாசு அற்றூர் கோள் - அவரது துணிவு; (எ - று.)

இறந்ததழீஇயஎச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. அவ்வின்ஞதவற்றை உட்கொள்ளாதுவிடுதல் செயற்பாலதென்பதாம்.

(கு - ரை.) செற்றம் - கோபம். கறுத்து - கோபித்து: கறுத்தல்-கோபமாகிய குறிப்புப்பொருளேயுணர்த்தும் உரிச்சொல்: நிறவேறுபாட்டையுணர்த்துங் கருமைசெம்மையென்னும் பண்புப்பெயர்கள் விகாரப்பட்டுக் கறுத்தல் சிவத்தல் எனத் தொழிற்படும்பொழுது அக்குணப்பொருளோடு இக்கோபப் பொருளேயுங் குறிக்கு மென அறிக. அவரது - ஆகமங்கள் கூறியவாற்றுன் மனந்தூயாரது. உம்மை தொகுத்தல்விகாரப்பட்டது, 'மறுத்தின்ஞ செய்யாமை' என்றதன்பின்; அது, "சிறப்பீனுஞ் செல்வம்பெறினும் பிறர்க்கின்ஞ செய்யாமை"யேன்றி, எனக் கீழ்க்கவியை நோக்கியதனால், இறந்தது தழுவியஎச்சவும்மையாயிற்று. "நன்றல்ல, தன்றேமறப்பது ஈன்று" என்றபடி அவன் செய்த தீங்குகளே மனத்தில்வையாமல் மறந்துவிடுதலே செய்யத்தக்க தென்க. செய்த அக்கண்ணும் - பண்ணின அவ்விடத்தும்; உம்மை - இழிவுசிறப்பு. இதனால், கறுத்து இன்ஞ செய்யாதவிடத்து இன்ஞ செய்யாமை மாசற்றூர்கோளென்பது தானே விளங்கும். மறுத்து - செய்ததீங்கிற்கு எதிர்த்தீங்காய். "உபகாரஞ் செய்ததனையோராதே தங்கண், அபகார மாற்றச்செயினும்—உபகாரம், தாஞ்செய்வதல்லால் தவற்றினால் தீங்கூக்கல், வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்" என்றது காலடியார்.

ஈகஈ. செய்யாமற் செற்றூர்க்கு மின்ஞத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ - ன்.) செய்யாமல் செற்றூர்க்கு உம் - (தான் முன்பு ஓர்இன்ஞமை) செய்யாதிருக்க(த் † தன்மேல்) செற்றங்கொண்டவர்க்கும், இன்ஞத செய்தபின் - இன்ஞதவற்றை(த் துறந்தவன்) செய்யுமாயின், (அச்செயல், அவனுக்கு), உய்யா விழுமம் தரும் - கடக்கமுடியாதஇடும்பையைக்கொடுக்கும்.

அவ்விடும்பையாவது - தவம்இழந்து பழியும் பாவமும் எய்துதல்.

* பீ - மீ: தம்மொடு † பீ - மீ: தன்னைச்செற்றூர்க்கும்

(கு - ரை.) துறந்தவன் - துறவறத்தான். அச்செயல் - தீங்குசெய்த அச்செயல். அவனுக்கு - துறந்தவனுக்கு. கடக்கமுடியாத இடும்பை - நீக்கக்கூடாத துன்பம். செற்றார்க்கும், உம்மை - இழிவுசிறப்பு. இதனால், செறுதவர்க்கு இன்னுதசெய்தல் உய்யாவிழுமந்தரு மென்பது தானே விளங்கும். இன்னுத - எதிர்மறைப் பலவின்பால் வினையாலணையும்பெயர். செய்த பின் - எதிர்காலவினையெச்சம்; பின் - காலங்காட்டும்விகுதி. தரும் என்பது - இடைவழுவமைதி. செற்றார் - இறந்தகாலப்பலர்பால்வினையாலணையும் பெயர்; செறுஎன்ற பகுதி யொற்றிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. 'தரும்' என்னும்பயனிலைக்கு 'இன்னுசெயல்' என்பது தோன்றுழிவாய். (கூ)

நகச. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ - ள்.) இன்னு செய்தாரை - (தமக்கு) இன்னுதவற்றைச்செய்தாரை, ஒறுத்தல் - (துறந்தோர்) ஒறுத்தலாவது, அவர் நாண நல் நயம் செய்து விடல் - அவர்தாமே நாணுமாறு (அவர்க்கு) இனியஉவகைகளைச் செய்து (அவ்விரண்டனையும்) மறத்தல்; (எ - று.)

மறவாவழிப் பின்னும்வந்து இலைக்கு மாகலின், மறக்கற்பால வாயின. அவரை வெல்லும்உபாயம் கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், செற்றம்பற்றிச்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) ஒறுத்தல் - தண்டித்தல். அவர் தாமே நாணுமாறு - அவ்வின்னு செய்தவரே வெட்கம் அடையும்படி. உவகைகள் - சந்தோஷகரமான செய்கைகள். அவ்விரண்டனையும் - அவர்செய்த இன்னுதன, தாம் செய்தஇனிய என்னும் இரண்டையும். இவ்விரண்டையும் மறவாவிட்டால் மறுபடி மறுபடி கோபம் மூண்டு வளரும். மறக்கற்பால - மறக்கத்தக்கவை. இந்தநீதிபற்றியே நான்மணிக்கடிகையில் "வெல்வது, வேண்டின் வெகுளி விடல்" என்றது. அவரை - இன்னுசெய்தவரை. நாணஎன்னுஞ் செயவெனெச்சம் - காரியப்பொருளதாதலின், எதிர்காலத்தது; நாணுதல் - காரியமும், நன்னயஞ்செய்தல் - காரணமுமாம். நயம் - நன்மை; நல்லனவற்றிற்குப் பண்பாகுபெயர். செய்துவிடல் என்ற தொடர் - செய்து விடல் என இரண்டாகக் கொள்ளப்பட்டது. ஒறுத்தல், விடல் என்னுந் தொழிற்பெயர்களுள், முன்னது - எழுவாயும், பின்னது - பயனிலையுமாம். விடல் - நெஞ்சினின்று போகுமாறு செய்தல். (கூ)

நகந. அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றுக் கடை.

(இ - ள்.) (துறந்தார்க்கு), அறிவினுள் ஆகுவது உண்டோ - (உயிர் முதலியவற்றை உள்ளவாறுஅறிந்த) அறிவினுள் ஆவதொருபயன் உண்டோ? பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றுக்கடை - பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்உயிர்க்குவந்தன போலக் (குறிக்கொண்டு) காவாவிடத்து; (எ - று.)

குறிக்கொண்டுகாத்தலாவது - நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தம்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்கள் உறுவனவற்றை முன்னேயறிந்து உறாமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியஉடம்புடையவற்றைப்பற்றி வருதலின் பொதுப்பட 'பிறிதினோய்' என்றும், மறப்பான் அது துன்புஉறினும் நமக்கு இன்னாசெய்தலாம் என்று அறிந்து காத்தல்வேண்டு மாகலின் 'அதுசெய்யாவழி அறிவாற் பயனில்லை' என்றுங் கூறினார்.

இதனான், சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) உயிர்முதலியவற்றை - சீவான்மா பரமான்மா முதலிய தத்துவப்பொருள்களை. உள்ளவாறு - உள்ளபடி, ஐயந்திரிபில்லாமல். அறிந்த அறிவு-தத்துவஞானம். குறிக்கொண்டு - கவனம்வைத்து. பிறவாற்றானும்-வேறுவகைகளாலும்; வேறுவகைகள் - அவ்வவ்வுயிர்களின் பகையுயிர்கள் முதலியவற்றால் ஆகுவன. உறுவனவற்றை - அடையுந் தீங்குகளை. உறாமல்-அடையாதபடி. காத்தல் - இரட்சித்தல். அஃறிணைக்கண் - விலங்கு பறவை முதலிய தாழ்ந்த பகுப்புஉயிர்களுள். நுண்ணியஉடம்பு உடையவற்றை-சிறியவுடம்புள்ள எறும்பு, ஈ புழு முதலிய பிராணிகளை. மறப்பான்-நமதுசோர்வால். நமக்கு இன்னாசெய்தலாம் - இன்னாசெய்தலாலாம் பழிபாவங்கள் நமக்கு நேரும். அறிவினான், ஆன் - மூன்றனுருபு, இன் - சாரியை. ஆகுவது-எதிர்காலவினையாலணையும்பெயர்: இதில், ஆகு - பகுதியென்றாவது: ஆ - பகுதி, கு - சாரியை யென்றாவது கொள்க. ஓ - எதிர்மறை. பிறிது - பிறஎன்னும் இடைச்சொல்லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்: இது சாதியொருமை. பிறிதினோய் - ஆறாம்வேற்றுமைத் தொகை; இன் - சாரியை. போற்றாக்கடை - எதிர்மறை யெதிர்காலவினையெச்சம். "என்றும், பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றியறனறிதல், சான்றவர்க்கெல்லாங் கடன்" என்ற கலித்தொகையில் இக்குறளின்பொருள் காணத்தக்கது. (௫)

௩௧௬. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(இ - ள்.) இன்னா என தான் உணர்ந்தவை-(* இவை மக்கட்கு) இன்னாதன என (அனுமானத்தால்) தான் அறிந்தவற்றை, பிறன்கண் செயல்-பிறன்மாட்டுச் செய்தலை, துன்னாமை - மேவாமை, வேண்டும் - (துறந்தவனுக்கு) வேண்டும்; (எ - று.)

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை † காட்சியளவையான் அறியப்படாமை அறிக. அறமும் பாவமும் உளவாவது மனம்உளனாயவழியாகலான், 'உணர்ந்தவை' என்றார்.

(கு - ரை.) அனுமானம் - புகையைக்கண்டு நெருப்புஉண்டென்பது போல, ஒன்றைக்கொண்டு ஊகித்தறிதல். பிறன்மாட்டு - அயலானிடத்தில்.

---

* பி - ம்: மக்கள்தமக்கு இன்னாதனஎன மனத்தாற் றானறிந்தவற்றை.

† பி - ம்: காட்சியளவையானறிக.

மேவாமை - பொருந்தாமை. காட்சியளவை - பிரதியட்சப்பிரமாணம்; அதர் வது - கண்ணற் காணுதல். உயிரினது குணமாகிய இன்பமும் துன்பமும் பிரதியட்சத்தி லறியப்படாதனவாதலால், துன்பந்தருந் தீவினைச்செயல்களை 'உணர்ந்தவை' என்றார். அறமும் பாவமும் - நல்வினை தீவினைகள். உளவா வது - உள்ளனவாவது. மனம் உளுறுயவழி என்பதற்கு - நெஞ்சறிந்து செய்தவிடத்து என்று கருத்துக்கொள்க. உணர்ந்தவை - பலவின்பால் வினையாலணையும்பெயர். துன்னுமை - எழுவாய்; வேண்டும் - பயனிலை. (சு)

ஈகள. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணுசெய் யாமை தலை.

(இ - ள்.) மனத்தான் ஆம் மாணு - மனத்தோடு உளவாகின்ற இன்னுத செயல்களை, எ ஞான்றும்-எக்காலத்தும், யார்க்குமும்-யாவர்க்கும், எனைத்து ஆன்றும் - சிறிதாயினும், செய்யாமை—, தலை - தலையாயஅறம்; (எ - று.)

ஈண்டு, மனத்தான் ஆகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்ற லுண்டாயகாலத்தும் ஆகாமையின் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் ஆகாமையின் 'யார்க்கும்' என்றும், செயல்சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் 'எனைத்தானும்' என்றும் கூறினார்.

(கு - ரை.) மனத்தோடு உளவாகின்ற - நெஞ்சறிந்துசெய்யப்படுகிற. தலையாய அறம் - முதன்மையானதருமம். ஈண்டு - இவ்விடத்தில்: 'மனத் தானுமாணு' என்றதில். ஆற்றல் - வல்லமை. ஆகாமையின் - செய்யலா காமையின். ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம்; உம் - இழிவுசிறப்பு. எஞ்ஞான்றும், யார்க்கும் என்றவற்றில், உம்மைகள் - முற்றுப்பொருளன; இச்சொற்களில், எகரவினவும், யாவினவும் - எஞ்சாமையுணர்த்தும். மனத் தான், ஆன் - மூன்றனுருபு. மாணு - எதிர்மறைப்பலவின்பால்வினையா லணையும்பெயர். மனத்தானும் மாணுதனசெய்பலாகாதெனக் கருத்துக் காண்டலும்ஒன்று. (எ)

ஈகஅ. தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

(இ - ள்.) தன் உயிர்க்கு இன்னுமை அறிவான் - (பிறர்செய்யும் இன் னுதன) தன்உயிர்க்கு இன்னுவாந்தன்மையை அனுபவித்து அறிகின்றவன், மன் உயிர்க்கு தான் இன்னு செயல் - நிலைபேறுடைய (பிற) உயிர்கட்குத் தான் அவற்றைச்செய்தல், என்கொல்ஓ - என்னகாரணத்தான்? (எ - று.)

இவ்வாறே இவை பிறஉயிர்க்கும்இன்னு என்பது * அனுமானத்தான் அறிந்தவைத்துச் செய்கின்ற † பாவம் கழுவப்படாமையின், 'இன்னுதன யான் வருந்தப் பின்னேவந்து ‡ வருத்தும்' என்பது ஆகமத்தானும் அறிந்து ஒழியற்பாலன் என்பது தோன்ற 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழியா மைக்குக் காரணம் மயக்கம் என்பதுதோன்ற 'என்கொலோ' என்றுங் கூறினார்.

---

* பி - மீ: அனுமானத்தானும். † பி - மீ: இப்பாவம்.
‡ பி - மீ: உருத்தரும்.

இவைமூன்றுபாட்டானும், பொதுவகையான் விலக்கப்பட்டது.

(கு - ரை.) இன்ஞவாந்தன்மை-துன்பந்தருதல். நிலைபேறு-நிலைபெறுதல். அவற்றை - இன்ஞதவற்றை. அறிந்துவைத்துச் செய்கின்ற - அறிந்தும் செய்யப்படுகிற. கழுவப்படாமையின் - பிராயச்சித்தங்களாற் போக்கப்படாமையால்; அபுத்திபூர்வமாகச்செய்த தீவினைக்குப் பிராயச்சித்தம் உண்டு, புத்திபூர்வமாகச் செய்ததற்குப் பிராயச்சித்தமில்லை யென்க. பிராயச்சித்தத்திற்குக் கழுவாய் என்று ஒருபெயர் உள்ளதாதலின், 'கழுவப்படாமையின்' எனப்பட்டது. இன்ஞதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் - யான் பிறர்க்குச்செய்த தீங்குகள் யானே வருந்தும்படி மறுமையில்வந்து என்னை வருத்தப்படுத்தும். ஆகமத்தானும் - சாஸ்திரக்கொள்கையாலும். ஆகமம் - பிரமாணங்களில் ஒன்று. ஒழியற்பாலன்-நீங்கத்தக்கவன். மயக்கம்-நல்லுணர்வின்மை, அவித்யை. பொதுவகையான் - பயன்நோக்கிச்செய்தல், வைரம்பற்றிச் செய்தல், சோர்வாற்செய்தல் என்னும் மூவகைக்கும் பொதுப்பட. அறிவான் - வினையாலணையும்பெயர். என்-எவன்என்னும் அஃறிணைப் பொதுக்குறிப்புமுற்றின் விகாரம்; இதுவே விஞப்பொருளுணர்த்தியதனால், கொல் ஓ இரண்டும் - அசை: ஓகாரத்தை இரக்கப்பொருளதாகவுங் கொள்ளலாம். மன்னுயிர் - வினைத்தொகை; நிலைபெறும் உயிரென்க. "இன்சொலினிதீன்றல் காண்பானெவன்கொலோ, வன்சொல்வழங்குவது" என்றதனோடு இதனை ஒப்பிடுக. தன்னுயிரைப்போலவே பிறவுயிர்களையும் பாவிக்கவேண்டுமென்பது, தூற்றுணிபு. இத்திருக்குறளை நவரசங்களுள் சாந்தமென்னும் ரசத்திற்கு உதாரணமெடுத்துக்காட்டினர் வீரசோழிய வுரையாசிரியர். "தன்னுயிர்தான்பரிந்தோம்புமாறுபோன், மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமே, லின்னுயிர்க்கிறைவனு யின்பமூர்த்தியாய்ப், பொன்னுயி ராய்ப் பிறந்துயர்ந்துபோகுமே" என்னுஞ் சீவகசிந்தாமணியை இங்கே அறிக.

ஈகஈ. பிறர்க்கின்ஞ மூற்பகற் செய்யிற் றமக்கின்ஞ
பிற்பகற் ரூமே வரும்.

(இ - ள்.) (துறந்தவர்), பிறர்க்கு இன்ஞ முன் பகல் செய்யின் - பிறர்க்கு இன்ஞதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின், தமக்கு இன்ஞ பின் பகல் தாமே வரும் - தமக்கு இன்ஞதன அதன்பிற்கூற்றின்கண் (அஃதுசெய்யாமல்) தாமே வரும்; (எ - று.)

'மூற்பகல்', 'பிற்பகல்' என்பன - பின்முன்ஞகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. தவம் * அழிதலின், அங்ஙனம் கடிதினும் எளிதினும் வரும்; அதனுன் அவைசெய்யற்க என்பதாம். இனி, 'தானேவரும்' என்பது பாடமாயின் அச்செயல்தானே தமக்கு இன்ஞதனவாய்வரும் என உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்து உரைக்க.

(கு - ரை.) மூற்கூற்றின்கண் - முன்பாகத்தில். பகல்முன், பகற்பின் என்னும் ஆறும்வேற்றுமைத்தொகைகள் - மூற்பகல் பிற்பகல் என முன்பின்

* பி - ம்: இழத்தலின்.

ஞைத் தொக்கன; இது, இலக்கணப்போலியெனப்படும். இங்கு முற்பகல் பிற்பகல் என்பன - சரியாக அத்தக்காலத்தையே குறிப்பனவல்லாமல் பக லென்பதுபோலுது குறிப்பது: என்றாலும், முன் பின்என்பன ஒன்ற னுடைய முற்கூறு பிற்கூறுஎன்றே பொருள்படுதலறிக. "முற்பகற் செய் யிற் பிற்பகல் விளையும்" என்பது ஔவையார் அமுதமொழி; "நெடியது காண்கலாய் நீயினியை நெஞ்சே, கொடியதுகூறினுப் மன்ற - அடியுளே, முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்பது பழமொழி: "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற் பகற்காண்குறூஉம்" என்பது சிலப்பதிகாரம். தவம் அழிதலின் - இன்னுதன செய்தகாரணத்தால் தன்னுடையதவம் அழிந்துவிடுதலால். கடிதினும் வரும் - விரைவிலும்வரும். அதனுன் அவைசெய்யற்க-ஆதலாற் பிறன்கேடு செய்யாதிருக்க. 'தானேவரும்' என்ற பாடத்துக்கு - பிறர்க்கு இன்னு முற்பகலிற் செய்யின் அச்செயல்தானே பிற்பகலில் தமக்கு இன்னு தனவாய் வரு மென்க. இங்கே 'தானேவரும்' என்ற பாடத்துக்கு உபசார வழக்கு என்றது - பிறர்க்கு இன்னுசெய்தல் தனக்கு இன்னுதவற்றிற்குக் காரணமா மென்று சொல்லவேண்டியதை அங்ஙனஞ் சொல்லாமல், பிறர்க் கின்னு செய்தல்தானே தமக்கு இன்னுதனவாய் வரு மெனக் காரணத்திடத் தில் காரியத்தின்தன்மையை ஏற்றிக்கூறியதை. ஆக்கம் வருவித்தல் - 'தமக்கின்னு' என்றதில்; [நன் - வினை - உரு]: ஆய் என்பது - ஆக்கச் சொல். இனி, முன் உரைக்கு - "தமக்கின்னு" என்பதிலுள்ள இன்னு - எழுவாய்; வரும் - பயனிலை. பின் உரைக்கு - செய்யின் என்கிற எச்சத்தி னின்று கொள்ளப்பட்ட செய்தல் - எழுவாய்; இன்னுவாய்வரும்என்பது - பயனிலை. இக்குறளை 'பிறதூன்முடித்தது தானுடன்படுதல்' என்னுந் தந்திரவுத்தி யென்பர் வீரசோழியவுரைகாரர். 'பகலினுடைய முன் - முன் பகல்; இது - முன்பதம் எழுவாய்வேற்றுமையாதலின், எழுவாய் வேற் றுமைத் தற்புருடனும்' என்பதும் அவ்வுரையிற் கண்டது. இக்குறளில் 'இன்னு தாமேவரும் எனச் செயப்படுபொருள் தேற்றத்தோடு வினை முதலாய்ச் செயப்படுபொருள்குன்றியவினைகொண்டது' என்பது இலக்க ணக்கொத்துரை. இதில் 'இன்னு தாமே வரும்' எனச் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச்சொல்லோடு வருங் கருமத்தைக் கருமகர்த்தாவென் பர், என்பது பிரயோகவிவேகவுரைகாரர்: முற்பகல், பிற்பகல் என்பன - பிரதமாதற்புருட னெனவும் அதில் வரும். (கூ)

கூஉ0. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

(இ - ள்.) நோய் எல்லாம் - இன்னுதன எல்லாம், நோய் செய்தார்மேல ஆம் - (பிறிதோருயிர்க்கு) இன்னுதனசெய்தார்மேலவாம்; (அதனுல்), நோய் இன்மை வேண்டுபவர் - (தம்உயிர்க்கு) இன்னுதன வேண்டாதார், நோய் செய்யார் - (பிறிதோருயிர்க்கு) இன்னுதன செய்யார்; (எ - று.)

உயிர்நிலத்து வினைவித்து இட்டபார்க்குவிளைவும் அதுவேயாகலின், 'நோ யெல்லா நோய்செய்தார்மேலவாம்'என்றார். இது-சொற்பொருட்பின்வருநிலை.

இவையிரண்டுபோட்டானும், அதுசெய்தார்க்குவருந்தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) இன்னுதனஎல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னுதனசெய்தார் மேலவாம் - வேறொருபிராணிக்குத் தீங்குசெய்தவர்க்கே பலவகைத்தீங்கு களும் வரும். உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும்அதுவே - உயிராகியநிலத்தில் வினையாகிய விதையை இட்டார்க்கு அதற்குஏற்ற விளைவே விளையும் என்பது பொருள்; உவர்நிலத்து விளைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே என்ற பிரதிபேதத்துக்கு - உவர்க்களத்தில் உப்புவிளையமுயற்சி செய்தவர்க்குப் பயன் உப்பாகவேயிருக்கும்; இவ்வாறே பிறர்க்குத் தீங்கு செய்தவர்க்குப்பயனும் தீங்காகவேயிருக்கும் என்பது, பொருள். சீவகசிந்தா மணியில் முத்தியிலம்பகத்தில் ''வெவ்வினை செய்யுமாந்த ருயிரெனு நிலத்து வித்தி,யவ்வினை விளையு ளுண்ணு மவ்விடத்தவர்கள் துன்பம்''என 'தீவினை யைச் செய்யும் மாந்தர் தமது உயிரென்னும் நிலத்தே அத்தீவினையை விதைத்து அத்தீவினையின் பயனை நுகரும் அந்நரகத்திடத்தே அந்நரகர் ப்படுந் துன்பம்' என்று கூறியுள்ளதனால், 'உவர்நிலத்துவிளைவித்திட்டார்க்கு' என்றதனினும் 'உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு' என்பது சிறக்கு மென அறிக. சோற்போருட்பின்வந்நிலையணியாவது - பொருள்வேறுபடாது ஒரு சொல் மீண்டும் மீண்டும் ஒருசெய்யுளில் வருவது; இதனை வடநூலார் உபயாவ்ருத்திதீபக மென்பர்: இக்குறளில் நோய் என்ற ஒரு சொல், இன்னுதன என்ற பொருளிற் பலகால்வந்தது காண்க. அது செய் தார்க்கு - தீங்குசெய்தவர்க்கு. நோய் என்பது - பால்பகா வஃறிணைப்பெய ராதலால், எல்லாம் என்னும் பன்மைப்பெயரோடு தொடர்ந்தது. மேல - பலவின்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். பின்வாக்கியத்திற்கு முன் வாக்கியம் காரணம். மேற் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் ''தீயவை தீய பயத்தலாற்றீயவை, தீயினுமஞ்சப்படும்'', ''தீப்பாலதான்பிறர்கட் செய் யற்கநோய்ப்பால, தன்னையடல்வேண்டாதான்'', 'தன்னைத்தான் காதலனு யினைனைத் தொன்றும், துன்னற்க தீவினைப்பால்'' என்ற குறள்களோடு இதனை ஒப்பிடுக. (கo)

நூநூ - ஆம் அதிகாரம்—கொல்லாமை.

அஃதாவது - ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையனஈறுய உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்களெல்லா வற்றினுஞ் சிறப்புடைத்தாய், கூறுதஅறங்களையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(கு - ரை.) ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையன ஈறுய உயிர்கள்- ஐயறிவுடையனவும், நாலறிவுடையனவும்,மூவறிவுடையனவும், ஈரறிவுடை யனவும், ஓரறிவுடையனவும் ஆகிய பிராணிகள். ஓரறிவுயிர்கள்-முறையே மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிய ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை ஆகிய ஐம்புலன்களில் ஸ்பரிச அறிவை மாத்திரமுடைய புல், மரம், புதல், கொடி, புழு முதலியன. ஈரறிவுயிர்கள்-

ஸ்பரிசம், ரசம் என்னும் இரண்டு அறிவையுடைய சிப்பி, சங்கு, கிளிஞ்சில் முதலியன. மூவறிவுயிர்கள் - ஸ்பரிசம், ரசம், கந்தம் என்னும் மூன்று அறிவையுடைய செல், எறும்பு, ஈசல், அட்டை முதலியன. நாலறிவுயிர்கள் - ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம் என்னும் நான்கு அறிவையுடைய தும்பி, வண்டு, நண்டு, தேனீ முதலியன. ஐயறிவுயிர்கள் - கீழ்க்கூறிய நான்கோடு சப்தமும் ஆகிய ஐந்து அறிவையுமுடைய தேவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, பாம்பு முதலியன. "ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே, இரண்டறிவதுவே யதனெடு நாவே, மூன்றறிவதுவே யவற்றெடுமூக்கே, நான்கறிவதுவே யவற்றெடு கண்ணே, ஐந்தறிவதுவே யவற்றெடுசெவியே, ஆறறிவதுவே யவற்றெடு மனனே, நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே", "புல்லுமரனு மோரறி வினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே", "நத்துமுரணுமீரறிவினவே, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே", "சிதலுமெறும்பு மூவறிவினவே, பிறவு முளவே யக்கிளைப்பிறப்பே", "நண்டுந்தும்பியு நான்கறிவினவே, பிறவு முளவேயக்கிளைப் பிறப்பே", "மாவுமாக்களுமையறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே", "மக்கள்தாமேயாறறிவுயிரே, பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனார். ஓரறிவுடையன முதலாக வன்றி ஐயறிவுடையன முதலாகக் கூறினார், சிறப்புநோக்கி. சோர்ந்தும் - மறந்தும்; துறவறத்துக்குரிய விரதங்க ளெல்லாவற்றுள்ளுஞ் சிறப்புடைய தாதலின், கொல்லாமையை இறுதியில் வைத்தார். கூறுத அறங்களையும் அகப்படுத்துநிற்றலின் என்றது - இந்தக் கொல்லாமை யென்னுங் அற மொன்று ஒருவனிடத்து உள்ளதாயின் அவனிடத்து மற்றையதருமங்கள் இல்லாவிடினும் குற்றமில்லை யென்பதும், இவ்விரதமொன்று இல்லையாயின் மற்றையறங்கள் இருந்தும் பயனில்லை என்பதும் தூற்றுணிபாதலால். இன்ஞதசெயல்களுள் கொலை முதன்மையான தாதலின், இன்ஞசெய்யாமை என்னும் அதிகாரத்தின்பின் கொல்லாமையென்னும்அதிகாரம் வைக்கப் பட்டதென்றுங் கூறலாம்.

ஈஉக. அறவிணை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவிணை யெல்லாந் தரும்.

(இ - ள்.) அறம் வினை யாது எனின்-அறங்களெல்லா மாகிய செய்கை யாதென்று வினவின், கொல்லாமை - (அஃது ஓருயிரையும்) கொல்லாமை யாம்; கோறல் - (அவற்றைக்)கொல்லுதல், பிற வினை யெல்லாம் தரும் - பாவச்செய்கைகளெல்லாவற்றையும் (தானே) தரும் (ஆதலான்;) (எ - று.)

அறம் - சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலு மாகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார். ஈண்டு 'பிறவினை' என்றது, அவற்றின் வினைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பம், ஏனைப்பாவங்க ளெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா * என்பதாம். கொல்லாமைதானே பிற அறங்களெல்லாவற்றின்பயனையுந்தரும் என்று மேற்கோள் கூறி, அதற்கு எது எதிர்மறைமுகத்தாற் கூறியவா ருயிற்று.

* பி - ம்: என்றவாறு.

(கு - ரை.) அறம்என்பது - ஈறுதோன்றாத சாதியொருமை. 'அறமாவது - மனுமுதலியநூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்' என்று உரைப்பாயிரத்தில் அறத்திற்கு இலக்கணங்கூறியதற்கு ஏற்ப, 'விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின்' என்றார். கீழ் அறவினை என வந்ததனால், பிறவினையென்றது - நல்வினையினும் வேறாகிய தீவினைகளையுணர்த்தும். அவற்றின்விளைவை - அந்தத்தீயகாரியங்களின்பயனாகிய பாவங்களை: பிறவினையென்றது - அவற்றின்விளைவுக்கு, ஆகுபெயர். எனைப் பாவங்கள் - கொலையொழிந்த மற்றையனவான பிறர்மனைநயத்தல், கள் பருகுதல், திருடுதல், சூதாடல் முதலிய பாவச்செயல்கள். அறவினை கொல்லாமை யென்பதற்கு - கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று கருத்தாதலால், 'கொல்லாமை தானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந்தருமென்று மேற்கோள்கூறி' என்றது. மேற்கோள் - சித்தாந்தம்: பட்சமெனினுமாம். 'அறவினையென்பது கொல்லாமை' என்ற இந்தக்கொள்கையைச் சாதிக்கும்படி ஏது கூறவேண்டுமிடத்து, 'கோறல் பிறவினையெல்லாந் தரும்' என்று, கொல்லாமைக்கு எதிர்மறையான கோறலென்பது தீவினைப்பயனை விளைத்தலைக் கூறியது காண்க; பட்சத்தை ஏதுவால் சாதித்தல், தருக்கநூல்முறை. எதிர்மறையேது - வியதிரேகவேது எனப்படும். "ஆனையடியுளடங்காவடியில்லை, தானதுபோனிற்கின்றதன்மைதான்—ஊனுயிரைக், கொல்லாவறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு, மெல்லாவறமுமிசைத்து" என்றது காண்க. 'கோறல் பிறவினையெல்லாந்தரும் - இது, பாவகருத்தா' என்பது பிரயோகவிவேகம். இக்குறளை 'தொகுத்துக்காட்டல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணங் காட்டினார், வீரசோழியவுரைகாரர். 'கொல்லாமை அறவினையெல்லாந் தரும், கோறல் பிறவினையெல்லாந்தரும் - இவை, தொழிற்பெயர்க் கருத்தா' என்பது - இலக்கணக்கொத்துரை. (க)

கூஉஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(இ - ள்.) பகுத்து உண்டு - (உண்பதனைப் பகித்தஉயிர்கட்குப்) பகுத்துக் கொடுத்து உண்டு, பல் உயிர் ஓம்புதல்-ஐவகையுயிர்களையும் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் (துறந்தார்க்குத்) தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறம்; (எ - று.)

'பல்லுயிரும்' என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. ஓம்புதல் - சோர்ந்தும் கொலைவாராமற் குறிக்கொண்டுகாத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையாவுறுப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற அதனை இறந்தகாலவினையெச்சத்தாற் கூறினர். எல்லாநூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்'என்றும்; அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான், 'இது தலையாய அறம்' என்றுங் கூறினர்.

(கு - ரை.) ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங், கைம்புலத்தாறோம்பல்தலை'' என்கிற நீதி இல்லறத்தார்க்கே யாதலின், இங்கே 'பகுத்துஉண்டு' என்பதற்கு - துறவறவியலுக்குஏற்ப 'பசித்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துஉண்டு' என்று உரைக்கப்பட்டது. பல்லுயிர் - ஐவகை யுயிர்: ஓரறிவுயிர்முதல் ஐயறிவுயிரீறுனவை; ஈற்றில், முற்றும்மைதொக்கது விகாரம். ஓம்புதல் - காத்தல். அறநூலுடையார் - தருமசாஸ்திரத்துக் குரியவர். தொகுத்த - திரட்டிக்கூறின. அதற்கு - காத்தற்கு. இன்றியமை யாஉறுப்பு - இல்லாமல்முடியாத [இருந்தேதீரவேண்டிய] அவயவம்; அவசிய மானஅங்கம். ''உண்பொழுது நீராடி யுண்டலும்'' என்னுமிடத்து 'நீராடி' என்னும் இறந்தகாலவினையெச்சம் 'உண்டல்'என்னும்வினைக்கு அவசியமான அங்கமாவதுபோல, இங்கே 'பகுத்துண்டு' என்னும் இறந்தகாலவினையெச் சம் பல்லுயிரோம்புதல் என்னும்வினைக்கு அவசியமான அங்கமென அறிக. எல்லார்க்கும் - எல்லாமதத்தார்க்கும். ''ஒன்றே பொருளென்பவேறென்ப வேறெனின், அன்றென்ப வாறுசமயத்தார்-நன்றென, வெப்பாலவருமியை பவேவள்ளுவனார், முப்பால்மொழிந்தமொழி''என்னுந் திருவள்ளுவமாலைச் செய்யுளாலும், எல்லார்க்கும்பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பாதல் அறிக. அவர்எல்லார்க்கும் ஒப்ப மூடிதலான்-வெவ்வேறுவகைப்பட்ட அந்த எல்லாமதத்தார்க்கும் இக்கொல்லாமையாகியவிரதம் வேறுபாடின்றி உடன் பாடாயிருத்தலால். (உ)

உஉங. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(இ - ள்.) ஒன்று ஆக நல்லது கொல்லாமை - (நூலோர்தொகுத்த அறங்களுள் தன்னோடு இணையொப்பதின்றித்) தானேயாக நல்லது கொல் லாமை; மற்று பொய்யாமை அதன்பின் சார நன்று - அஃது ஒழிந்தால் பொய்யாமை அதன்பின்னே நிற்க நன்று; (எ - று.)

'நூலோர்தொகுத்த அறங்களுள்' என்பது, அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும், மேல் ''பொய்யாமை பொய்யாமை யாற் றின்'' எனவும், ''யாமெய்யாக் கண்டவற்று ளில்லே'' எனவும் கூறினராக லின், இரண்டுஅறத்துள்ளும் யாதுசிறந்தது என்று ஐயம் நிகழுமன்றே: அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன்பின்சாரப் பொய்யாமைநன்று'என்றார்; மூற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனே 'பின்சாரநன்று' என்றது, நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும் தீமைபயக்கும்வழி மெய்யும் * பொய்யாயும் இதனேப்பற்ற அது திரிந்துவருதலான் எனஉணர்க.

இவைமூன்றுபாட்டானும், இவ்வறத்தினதுசிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நூலோர் - தருமசாஸ்திரமுடையோர். தன்னோடு இணை யொப்பது இன்றி - தனக்குச் சமானமாகச்சொல்லுமாறு ஒத்திருப்பது வேறொன்று மில்லாமல். அஃது ஒழிந்தால் · அதனைவிட்டு இரண்டாவதை

* பி - மீ: பொய்யாயும் திரிந்துவருதலான்.

ஆர்ய்த்தெர்டங்கினுல். பொய்யாமை - பொய்கூறுமை. தீழ்ச்செய்யுளில் வந்த தொடரே இங்கே வருவிக்கப்பட்டதனுல், 'நூலோர்தொகுத்த அறங்க ளென்பது அதிகாரத்தான் வந்தது' என்றூர். "பொய்யர்மை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று", "யாமெய்யாக்கண்ட வற்றுளில்லை யெனைத்தோன்றும், வாய்மையினல்லபிற" என்பன - முன் வாய்மையென்னும் அதிகாரத்திற் கூறியவை. இரண்டு அறத்துள்ளும் - கொல்லாமை, பொய்யாமை என்னும் இரண்டுதருமங்களுள். ஐயம் நிகழு மன்றே - சந்தேகந் தோன்றுமன்றே? மாறுகொளக்கூறலென்னுங் குற்றம் நூலில்வாராதிருக்குமாறு இங்ஙனங் கூறினரென்க. முன்சொன்ன விதியி னும் பின்சொல்லும் விதி சிறப்புடைய தென்பது நூற்கொள்கை. "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்," "பொய்ம்மையும்வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்" என்ற படி நிகழாதது கூறுதலும் நன்மைதந்தால் உண்மையாகவும், நிகழ்ந்ததுகூறு தலுந் தீமைதந்தால் பொய்ம்மையாகவும் பயனேநோக்கி இங்ஙனம் வாய்மை யின்தன்மை மாறுபடும்; கொல்லாமையோ, அங்ஙனம் மாறுபடாது: ஆதலின், பொய்யாமையினுங் கொல்லாமை மேலானது எனக் காண்க. பொய்போலக் கொலை நன்மைபயந்தாலும் குணமாகாது, குற்றமேயாம்; கொல்லாமை தீமை தந்தாலுங் குற்றமாகாது, குணமேயா மென்க. இதனைப்பற்ற அதுநிரித்து வருதலான் - கொல்லாமையோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துப் பொய்யாமை மாறுபட்டுவருதலால்: பயனேநோக்கக் காரணத்தின்தன்மை மாறுபடுதலா லென்றலும் உண்டு. இவ்வறத்தினது - கொல்லாமையினது. ஒன்று - ஒப் பற்றது. மற்று - வினைமாற்று. "கொல்லா நலத்தது நோன்மை" என்பர், மேல் 'சான்றாண்மை' என்னும் அதிகாரத்தும். (ங)

ஙஉச. நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(இ - ள்.) நல் ஆறு எனப்படுவது யாது எனின் - (மேற்கதி வீடுபேறு கட்கு) நல்லநெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், (அஃது), யாது ஒன்றுமெம் கொல்லாமை சூழும் நெறி-யாதோருயிரையுங் கொல்லாமை யாகிய அறத்தினைக் காக்கக்கருதும் நெறி; (எ - று.)

'யாதொன்றும்' என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் - வழுவாமற் காத்தல்.

இதனுன், இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) மேற்கதி - சுவர்க்கம் முதலிய மேலான பதவிகள். வீடு பேறு - முத்தியையடைதல். நெறி - வழி. வினவின் - கேட்டால். அஃது - நல்லநெறி. கருதும் - எண்ணும். ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு-புல் மரம் முதலியவற்றையும் உள்ளிடுதற்பொருட்டு. வழுவாமல் - தவருமல். எனப் படுவது + யாது = எனப்படுவதியாது; குற்றியலிகரம்: அலகுபெறவில்லை. யாதொன்றும், உம்மை - இழிவுசிறப்பு. (ச)

நூஉடு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(இ - ள்.) நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - (பிறப்புநின்ற) நிலையை அஞ்சி(ப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையை)த் துறந்தாரெல்லாருள்ளும், கொலை அஞ்சி கொல்லாமை சூழ்வான் - கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன், தலை - உயர்ந்தவன்; (எ - று.)

பிறப்புநின்றநிலையாவது - இயங்குவ நிற்பவென்னும் இருவகைப்பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டாற் பலவா மாகலின், 'நீத்தாரெல்லாம்' என்றார்.

இதனால், இவ்வறம்மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) மனைவாழ்க்கை - இல்லறவாழ்வு. இயங்குவ - சஞ்சரிக்குமுயிர்கள்; இவை - ஜங்கமமெனவும், சரமெனவும்படும். நிற்ப - சஞ்சரித்தலில்லாத உயிர்கள்; இவை - ஸ்தாவரமெனவும், அசரமெனவும்படும். நால்வகைத்தோற்றத்து எழுவகைப் பிறப்பின் ஐவகை யுயிர்களும் இத்தச் சரம் அசரம் என்னும் இருவகையில் அடங்குதலால், 'இருவகைப்பிறப்பு' என்றார். "தேவரேதாமுமாகித் தேவரால் தெழிக்கப்பட்டும், ஏவல்செய்திறைஞ்சிக் கேட்டு மணிகமாப்பணிகள்செய்தும், நோவதுபெரிதுந்துன்பம் நோயினுட் பிறத்தல் துன்பம், யாவதுந்துன்பம் மன்னுயாக்கைகொண்டவர்கட்கென்றான்" என்ற சிந்தாமணிச்செய்யுளாலும் எல்லாப்பிறப்புந் துன்பமேதருவனவாதல் காண்க. சமயவேறுபாடு - மதபேதம். குடீசகம் வெகூதகம் ஹம்ஸம் பாமஹம்ஸம் என்று ஏகதண்ட சந்நியாசம் திரிதண்ட சந்நியாசமென்று துறவில் பலவகைக் கூறப்படுவதால், துறவு ஒன்றேயாயினும் சமயவேறுபாட்டாற் பலவா மென்றார் ரென்னலாம். (நு)

நூஉசு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

(இ - ள்.) கொல்லாமை - கொல்லாமையை, மேற்கொண்டு - (விரதமாக) மேற்கொண்டு, ஒழுகுவான் - ஒழுகுவானது, வாழ்நாள்மேல் - வாழ்நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்று செல்லாது—; (எ - று.)

மிகப்பெரியஅறஞ்செய்தாரும் மிகப்பெரியபாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பாரென்னும் அறநூல் துணிபுபற்றி, இப்பேரறஞ்செய்தான்தானும் கொல்லப்படான்; படாஞ்சுகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றியெய்து மென்பார், 'வாழ்நாள்மேற் கூற்றுச் செல்லாது' என்றார்; செல்லாதாகவே, காலம் நீட்டிக்கும்: நீட்டித்தால், ஞானம்பிறந்து உயிர் வீடுபெறும் என்பது கருத்து.

இதனால், அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஒழுகுவானது - நடப்பவனுடைய. வாழ்நாள் - ஆயுள்நாள். உயிர்உண்ணும்கூற்று செல்லாது - உயிரை உடம்பினின்று கவருந்தன்மை

யுள்ள யமன் கொலைகுறித்துச் செல்லான். 'தேவர்களே இருதிணையாலுஞ் சொல்லலாம்' என்பது இலக்கணமாதலால், 'கூற்று செல்லாது' என இங்கு அஃறிணையாற்கூறினர். முறையானன்றி என்பதற்கு - மறுமையிலல்லாமல் என்று கருத்து. 'அதிக நல்வினையாலும், அதிகதீவினையாலும் இம்மையிலேயே பயன் அனுபவிக்கப்படும்' என்பது-தருமசாஸ்திரக்கொள்கை. இப்பேரறஞ்செய்தான் தானும்-கொல்லாவிரதம்மேற்கொண்டவனும். கொல்லாமையைச்செய்தல் - நிவ்ருத்திதர்மம். அடியிற்கட்டியவாழ்நாள் - படைப்புக்காலத்தில் இவ்வளவென்று வரையறுத்த ஜீவகாலம். இடையூறின்றி எய்தும் - தடையின்றி [நடுவிற்குறைதலில்லாமல்] நிலைபெறும். காலம் - ஆயுட்காலம். நீட்டிக்கும் - வளரும். அவர்க்கு - கொல்லாவிரதத்தார்க்கு. "வேள்வி வாய்க்கண்படுத்தும் வெவ்வினைசெயாடவர்கை, வாளின்வாய்க்கண்படுத்தும் வாரணத்தினீருரிபோல், கோளிமிழ்புநீள்வலைவாய்க் கண்படுத்து மின்னணமே, நாளுலப்பித்திட்டார் நமரலாதாரெல்லாம்" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளிலும் இக்கருத்து விளங்குதல் காண்க. (சு)

நூஉள. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(இ - ள்.) தன் உயிர் நீப்பின்உம் - (அதுசெய்யாவழித்) தன்உயிர் (உடம்பின்) நீங்கிப்போமாயினும், தான் பிறிது இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோர்இன்னுயிரை (அதனுடம்பின்) நீக்குந்தொழிலைச் செய்யற்க; (எ - று.)

'தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க'என்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனி, 'தன்உயிர்நீப்பினும்' என்றதற்கு - (சாந்தியாகச்செய்யாதவழித்) தன்உயிர் போமாயினு மென்று உரைப்பாரு முளர்; பிறர்செய்தலும் ஆகாமையின், அஃது உரையன்மை அறிக.

(கு - ரை.) அது செய்யாவழி - கொலையைச் செய்யாதபொழுது. உடம்பின் - உடம்பினின்று. பிறிதோர் இன்னுயிரை - மற்றொருபிராணியின் இனியஉயிரை. எந்தப்பிராணிக்கும் உயிரினும்இனியது வேறின்மைதலால், இன்னுயி ரென்றார். அது - பிறிதொருபிராணி. கொலையுண்டவழி-தான் ஒன்றினாற்கொல்லப்பட்டு இறக்தவிடத்து. தேய்தல் - குறைதல். கொன்றவழி - தான் ஒருபிராணியைக் கொன்றபொழுது. தன்னைக்கொல்லவரும் உயிரையுந் தான் கொல்லலாகா தென்பது, முதலுரைக்குக்கருத்து. இரண்டாமுரைக்குக்கருத்து - தன்உயிரை இறவாமற் காக்கும்பொருட்டுத் தோஷசாந்தியாக வேறொருபிராணியைக்கொன்று பலியிடுதலும் ஆகா தென்பதாம்; இங்ஙனம் பொருள்படவேண்டுமாஞல், 'தான்' என்ற சொல் இருத்தல்கூடாது. ஏனென்றால், 'தன்னுயிர்போகாதிருத்தற்காகத் தானே பிறிதின்னுயிர்நீக்கும் வினைசெய்யற்க' என்ற இதில், தன்னுயிர்போகாதிருத்தற்காகப் பிறர் பிறிதின்னுயிர்நீக்கும் வினைசெய்யலா மென்பது ஏற்படுமன்றே? அங்

ஈனம் தன்பொருட்டாகப் பிறர் பிறிதின்னுயிர்கீக்கும் வினைசெய்தலும் ஆசிரியர்க்கு உடன்பாடு அன்று: ஆதலால், அங்ஙனம் பொருள்கூறுதல் ஆசிரியர்க்கு உடம்பாடன்று என்று மறுத்தார், பரிமேலழகர். பீப்பின்என்னும் எதிர்காலவினையெச்சத்தில், நீ - பகுதி. உம்மை - இழிவு சிறப்பு. இத்திருக்குறளை 'மறுத்தல்' என்னும் மதத்திற்கு உதாரணங்காட்டினர் வீர சோழியவுரைகாரர். (எ)

நூஉ அ. நன்றுகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை.

(இ - ள்.) நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனின்உம் - (தேவர்பொருட்டு வேள்விக்கட் கொன்றால்) இன்பம்மிகுஞ் செல்வம் பெரிதா மென்று (இல்வாழ்வார்க்குக்) கூறப்பட்டதாயினும், சான்றோர்க்கு கொன்று ஆகும் ஆக்கம் கடை - (துறவான்) அமைந்தார்க்கு (ஓருயிரைக்) கொல்ல வருஞ் செல்வம் கடை; (எ - று.)

இன்பம்மிகுஞ் செல்வ மாவது - தாமுந் தேவராய்த் துறக்கத்துச் சென்று எய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கு ஏதுவாகலானும், வீடாகிய ஈறில்இன்பமெய்துவார்க்குக் கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகா தென்றமையின், விதிவிலக்குக்கள் தம்முள் மலையாமை விளக்கியவா றுயிற்று. இஃது, இல்லற மன்மைக்குக் காரணம்.

இவையிரண்டுபோட்டானும், கொலையது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) வேள்விக்கண் - யாகத்தில். இன்பம்மிகுஞ் செல்வம் - சிற்றின்பவனுபவம் மிகுதற்கிடமான செல்வம். துறவான் அமைந்தார் - துறவறத்துக்குரிய இலக்கணத்தால் நிறைந்தவர். கொல்லவரும்செல்வம்-கொல்லுதலால் உளதாகுஞ் செல்வம். கடை - இழிவானது. துறக்கத்துச்சென்று எய்தும் - சுவர்க்கத்திற் போயடையும். அது சிறிதாகலானும் - அச்செல்வம் சிற்றின்பத்தையே தருவதாய் அற்பமாதலாலும். பின்னும் - மறுபடி. ஏது-காரணம். இருவினையுமற்று முத்திபெற்றவர்க்குமாத்திரம் பிறப்புஇன்றே யொழிய வினைப்பயன்களால் சுவர்க்க நரக மடைபவர்க்கு மீண்டும் இங்குப் பிறத்தல் உண்டுஆதலால், 'பின்னும்பிறத்தற்கு ஏதுவாகலானும்' எனப்பட்டது. இங்குச்செய்த புண்ணியத்தால் மேலுலகஞ்சென்று தேவகதியையடைந்து இன்பமனுபவிப்பவர், அப்புண்ணியம் முடிந்தவாறே தேவகதியையிழந்து மீண்டும் இங்குப் பிறப்ப ரென்க. வீடாகிய ஈறில்இன்பம் எய்துவார்க்கு - முத்தியாகிய அழிதலில்லாதபேரின்பத்தை அடையுந் துறவறத்தார்க்கு. 'எவ்வுயிரையுங் கொல்லுதலாகாது' என்ற பொதுவிதியின்மேற் சிறப்புவிதியாக 'யாகத்திற் பசுவைக் கொல்லலாம்' என்று தருமசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பதோடு, இங்குத் துறவறவியலில் 'எவ்வுயிரையுங் கொல்லலாகாது' என்ற விலக்குப் பொருந்துமாறு என்னையெனின்,—யாகத்திற் பசுவைக்கொல்லுதல் சுவர்க்கச்சிற்றின்பமடையக்கருதும் இல்லறத்தார்

க்கு ஒக்குமாயினும், முத்திப்பேரின்பமடையக்கருதுந் துறவறத்தார்க்கு ஒவ்வாது என ஒன்றோடொன்று மாறுபடாதபடி கூறியவாறு. இது, இக்குறளில் 'சான்றோர்க்கு' என்ற சொல்லால் விளக்கப்பட்டது. இஃது - கொல்லாமை. கீழ்க்குறித்த காரணம்பற்றியே இக்கொல்லாமை யென்னும் அதிகாரம், இல்லறவியலில் வைக்கப்படாது துறவறவியலில் வைக்கப்பட்டது. நன்று - நல்லது; இன்பம்: ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். நன்றாகும் ஆக்கம் - பெயரெச்சம் காரியப்பொருளது; 'நோய்தீருமருந்து' என்றவிடத்துப்போல. காரணப்பொருளதாகிய கொல்லவென்னுஞ் செயவெனெச்சம், கொன்றனைத் நிரிந்து நின்றது. (அ)

ஈஉஊ. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(இ - ள்.) கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலையுடைய ராகிய மாந்தர், புன்மை தெரிவார் அகத்து புலை வினையர் - (அத்தொழிலின்) கீழ்மையை (அறியாத நெஞ்சத்தராயினும்) அறிவார்நெஞ்சத்துப் புலைத்தொழிலினர்; (எ - று.)

'கொலைவினையர்' என்றதனுன், வேள்விக்கட் கொலையன்மை அறிக. 'புலைவினையர்' என்றது - தொழிலாற் புலைய ரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவர் என்பதாம்.

(கு - ரை.) கீழ்மை - இழிவானதன்மை. புலைத்தொழிலினர் - சண்டாளர்க்குரிய இழிதொழி லுடையவர். இங்கேகுறித்தது யாகத்தில் ஒவ்வொரு சமயத்தில்நேரும் கொலையன்று என்பதை 'கொலைவினையர்' என அதனையே தொழிலாகவுடையவ ரென்பதனுல் விளக்கினர். தொழிலாற்புலையர்-கருமசண்டாளர். கொல்லுதல்செய்பவர் மறுமையில் நரகத்தன்பமடைவரென்பது மாத்திரமே யன்றி இம்மையிலுங் கீழ்ச்சாதிப்பண்படைவர் என்பது, இக்குறளில் விளக்கப்பட்டது. 'மாக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வு மாத்திரமேயுடையராய் மனவுணர்ச்சியில்லாத விலங்குபோன்ற அவிவேகிகளான ஒருசார் மானிடங்கள்' என்பதனுலால் 'கொலைவினையராகியமாக்கள்' எனப்பட்டது. (கூ)

ஈஉO. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(இ - ள்.) செயிர் உடம்பின் செல்லா தீ வாழ்க்கையவர் - (நோக்கலாகா) நோயுடம்புடனே வறுமைகூர்ந்த இழிதொழில்வாழ்க்கையினையுடையாரை, உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - (இவர் முற்பிறப்பின்கண்) உயிர்களை (அவை நின்ற)உடம்பினின்று நீக்கினவ ரென்றுசொல்லுவர் (வினைவிளைவுகளை அறிந்தோர்); (எ - று.)

செல்லாவாழ்க்கை, தீவாழ்க்கை எனக் கூட்டுக. செயிருடம்பினராதல் "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித், துக்கத்தொழுநோ யெழுபவே" என்பதனுனும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவ ரென்பதாம்.

இவையிரண்டுபோட்டானும், கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதற்கொல்லாமை ஈறுகச்சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

(கு - ரை.) நோக்கலாகா - பார்க்கவுங்கூடாமல் அருவருப்பைத்தருகிற. நோயுடம்பு - வியாதியையுடைய சரீரம். வறுமைகூர்ந்த - தரித்திரத் தன்மைமிகுந்த. இழிதொழில்வாழ்க்கையினை யுடையார் - இழிவான வேலை செய்து சீவிப்பவர். செயிர் - குற்றம்; நோய். இங்கு, செயிருடம்பின் என்பதை மூன்றும்வேற்றுமையுடனிகழ்ச்சிப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமையென்றுவது, இன்சாரியையைபெற்ற மூன்றும்வேற்றுமைத் தொகையென்றுவது கொள்க; இது-'வாழ்க்கையவர்' என்பதில் விரிக்கப்பட்ட'உடையார்' என்பதைக் கொண்டுமுடியும். செல்லாமை என்றது-வறுமையையும், இதனுடன்பாடாகியசெல்லுதல்என்பது - செல்வத்தையும் உணர்த்தும்; இதனை "செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்" என நாலடியாரிலுங் காண்க. தீவாழ்க்கை - தீமையைத் தருமவாழ்வு. "அக்கேபோல்" என்னும் மேற்கோள் - நாலடியார் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் உள்ளது; இதன்பிற்பாகம் "அக்கால், அலவனைக்காதலித்துக்கான் முரித்துத்தின்ற, பழவினைவந்தடைந்தக்கால்" என்பது: முற்பிறப்பில்கண்டைவிரும்பிக் காலையொடித்து அதனைத் தின்றதலுவாகிய பழையகருமம் வந்துசேர்ந்தால் அதன்பயனுல் அவர் பிற்பிறப்பில் சங்குமணிபோல உள்ளங்கைமாத்திரம்நிற்க விரல்களெல்லாம் அழுகிவிழுந்து இவ்வாறு துக்கத்தைத்தருகிற குட்டநோயுண்டாகப்பெறுவர் என்பது-பொருள். என்பர் என்பதற்கு - 'வினைவிளைவுகளையறிந்தோர்' என்ற எழுவாய் வருவிக்க; இனி, என்பர் என்பதைச் செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினையாக் கொண்டு, செயிருடம்பிற்செல்லாத் தீவாழ்க்கையவர் உயிருடம்பினீக்கியார் எனப்படுவர் எனினுமாம். ஈண்டு உரைப்பிற் பெருகுமென விடுத்தது, 'மிகைபடக்கூறல்' என்னுங் குற்றத்திற்கு அஞ்சி யென்க. (கo)

ஞானம்.

இனி, அவற்றின் பயனுகிய ஞானங் கூறிய தொடங்கினுர். ஞானமாவது - வீடுபயக்கும்உணர்வு. அது, நிலையாமை முதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது.

(கு - ரை.) ஐஞ்ஞாகம் - வடசொல். அவற்றின் - கள்ளாமை முதலிய அந்த விரதங்களின். கூறிய - சொல்ல. நான்கு அதிகாரம்-நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்பன. விரதங்களால் வினைமாசு தீர்ந்து அந்தக்காரணங்கள் பரிசுத்தமானவிடத்து ஞானம் உதிப்பதாதலால், இது விரதத்தின்பின் வைக்கப்பட்டது; விரதம் காரணமாய்முந்தினதும், ஞானம் காரியமாய்ப் பிந்தினதுமாம்.

நச - ஆம் அதிகாரம்—நிலையாமை.

அவற்றுள், நிலையாமையாவது - தோற்றமுடையன யாவும் நிலையுதலில வாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற்புனல்போலத்தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டுவருதலாற் கணக்தோறும் பிறந்து இறக்கு மென்பாரும், ஒருவாற்றான்வேறுபடுதலும் ஒருவாற்றான்வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும்நிலையாமையும் ஒருங்கேயுடைய வென்பாரும் எனப் பொருட்பெற்றிகூறுவார் பலதிறத்தாரவர்; அவரெல்லார்க்கும் அவற்றதுநிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடா தாகலின், இது முன் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தோற்றமுடையன யாவும் - கண்ணுக்குத்தோன்றும் பொருள்களெல்லாம்; அவை செல்வம், உடம்புமுதலியன. தோற்றம் - உண்டாதலுமாம். நிலையுதல் இலவாம் - நிலைபெறுதலில்லாதனவாம்: அழியுந்தன்மையனவாகும். "இளமையுநில்லா யாக்கையுநில்லா, வளமையவான் பெருஞ் செல்வமுநில்லா" என்பது மணிமேகலை. மயங்கியவழி - அவித்தையினால் அறிவுமயக்கமடைந்தவிடத்து. பேய்த்தேரிற் புனல்போலத் தோன்றி-கானலினிடத்து நீரின்தன்மைபோலப் பிரமத்தினுற் காணப்பட்டு; கானல் - நீர் போலுதலை "கானகத்தியங்கிய கழுதின் தேர்க்தலும், தானகத்தெழுதலால் தலைக்கொண் டோடிப்போய், மேனியிர்ந் தெழுந்திடின் விசும்பும் வேமெனு, வானவர்க்கிரங்கிநீர்வளைந்த தொத்ததே" என்னுங் கம்பராமாயணத்தாலு மறிக: சிலப்பதிகாரத்தில் கானலை "நிறைநீர்வேலி" எனக் கூறியிருத்தலுங் காண்க. மெய்யுணர்ந்தவழி - தத்துவஞானமுண்டானவிடத்து. கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் - கயிற்றினிடத்தில் பிரமத்தால்தோன்றும் பாம்பின்தன்மைபோல அழிதலால். மதிமயக்கத்தால் கானல் நீராகக்காணப்படுவதுபோல, அவித்தையினாலே பரமான்மா ஒன்றே பலசீவான்மாக்களும் அவற்றுக்கு ஆதாரமான பிரபஞ்சமு மாகக் காணப்பட்டு, விபரீதஞானத்தாற் கயிற்றினிடத்துத் தோன்றிய பாம்பின்தன்மை அவ்விபரீதஞானமொழிந்து ஆய்ந்து நோக்கியவிடத்து மாறிக் கயிறு கயிறேயாய் விளங்குவதுபோல, அவித்தை யொழிந்து தத்துவஞானம்பெற்றவிடத்துப் பிறதோற்றங்கள்மறைந்து பரமான்மாவொன்றே இயற்கையாய்க் காணப்படுதலின், கட்புலப்படும் பிரபஞ்சத்தோற்றங்கள்யாவும் பொய் யென்பது - அத்துவைதசமயக்கோட்பாடு; "நீர்பூத்தபரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை, நீர்பூத்ததென வுலகம் நிறைந் தொளிர் தன்பாற் றோன்ற" என்றார் பாகவதநூலுடையாரும். வளர்ச்சி முதலிய நிலைமைகள் பேதப்படுதலால் எல்லாப்பொருளும் ஒவ்வொருகணத்திலும் பிறந்து இறந்துவரு மென்பது - பௌத்தசமயத்துள் ஒருசாரார் கொள்கை. ஒருவாற்றான் - ஒருவகையால்; ஒரு ஆறு எனப்பிரிக்க. மண் குடமாகுந்தன்மையால் வேறுபடுதலையும் நிலையாமையையும், மண்ணுபிருக்குந் தன்மையால் வேறுபடாமையையும் நிலத்தலையும் தன்னில் ஒருங்கே

யுடையதாம்; இங்ஙனமே எல்லாப் பொருள்களும் என்பது - ஒருசார் ஆருகத சமயக்கொள்கை. பொருட்பெற்றிகூறுவார் - பொருள்களின் தன்மையைச் சொல்லுபவர். பலதிறத்தர் - பலவகையர். அவற்றது - அப்பொருள்களின். இஃது உணர்ந்துழி அல்லது - இந்நிலையாமையை அறிந்தவிடத்தல்லாமல். பற்றுவிடாது - ஆசைநீங்காது. இறுதிவாக்கியம் - ஞானமென்னுந்தலைப்பின் முதலில் துறவு என்னும் அதிகாரத்தின் முன் நிலையாமையென்னும் இவ்வதிகாரத்தை வைத்ததற்குக் காரணம்;இங்ஙனமே நாலடியாரிலும் அறத்துப் பாலில் துறவறவியலின் முதலில் செல்வம் இளமை உடம்பு இவற்றின் நிலையாமையைக்கூறும் அதிகாரங்களை வைத்தவாறுங் காண்க. உடம்பாடெனினும், உடன்பாடெனினும் ஒக்கும்; சம்மதமென்று பொருள்.

நஙக. நில்லா தவற்றை நிலையின வென்றுணருந்
புல்லறி வாண்மை கடை.

(இ - ள்.) நில்லாதவற்றை-நிலையுதலிலவாகியபொருள்களை, நிலையின என்று-நிலையுதலுடையவென்று,உணரும்-கருதுகின்ற, புல் அறிவு ஆண்மை-புல்லிய அறிவினை யுடையராதல், கடை - (துறந்தார்க்கு) இழிபு; (எ - று.)

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற்கு ஏதுவாகலின், அது வீடெய்துவார்க்கு இழுக்கென்பது இதனுற்கூறப்பட்டது. இனி, புல்லறிவாளர் பெரும் பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை அனுபவிக்கும் யாக்கையின்கண்ணு மாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றதுநிலையாமையை விதந்துகூறுப.

(கு - ரை.) புல்லிய-இழிவான. இழிபு-தாழ்வு. தோற்றம் - உண்டாகை. இழுக்கு-குற்றம். யாக்கை - உடம்பு. வருகின்ற பாட்டுக்களான் - இவ்வதிகாரத்தின் மற்றையொன்பதுபாடல்களாலும். அவற்றுள் முந்தியஇரண்டுபாடல்கள் செல்வநிலையாமையையும், பிந்திய ஏழுபாடல்கள் யாக்கைநிலையாமையையுங் கூறும். உடம்புக்கு வயது இவ்வளவென்று ஒருகாலநியமமுள்ளதனாலும், அப்படிப்பட்டநியமமுஞ் செல்வத்திற்கு இல்லாமையினாலும், செல்வநிலையாமை முன்னும், யாக்கைநிலையாமை பின்னுங் கூறப்படும். விதந்துகூறுப-பிரித்தெடுத்துக்கூறுவர். புல்லறிவு - சிற்றுணர்வு, அற்பபுத்தி. (க)

நஙஉ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(இ - ள்.) பெருஞ் செல்வம் - (ஒருவன்மாட்டுப்)பெரிய செல்வம் (வருதல்), கூத்து ஆட்டு அவை குழாத்து அற்று - கூத்தாடுதல்செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்; போக்குஉம் - (அதனது) போகலும், அது விளிந்து அற்று - (அக்கூத்தாட்டு முடிந்தவழி) அக்குழாம் போயினாற்போலும்; (எ - று.)

பெருஞ்செல்வ மெனவே, துறக்கச்செல்வமும் அடங்கிற்று. 'போக்கும்' என்ற எச்ச வும்மையான், வருதலென்பது பெற்றாம். அக்குழாம் கூத்தாட்டுக்

காரணமாக அரங்கின்கண் பஃறிறத்தால் தானே வந்து அக்காரணம் போய வழித் தானும் போமாறுபோல, செல்வமும் ஒருவன்நல்வினைகாரணமாக அவன்மாட்டுப் பஃறிறத்தால் தானே வந்து அக்காரணம்போயவழித் தானும் போ மென்றதாயிற்று.

(கு - ரை.) ஒருவன்மாட்டு - ஒருவனிடத்து. கூத்தாடுதல்செய்கின்ற அரங்கின்கண் - நாடகசாலையில். குழாம் - கூட்டம். அதனதுபோகலும் - செல்வம் அவனைவிட்டு ஒழிதலும். அக்குழாம் போயினாற் போலும் - அவ்விடத்தைவிட்டு அக்கூட்டம் கலைந்தாற்போலும். எச்சவும்மை - இறந்தது தழுவிய எச்சப்பொருள் தரும் 'உம்' என்னும் இடைச்சொல். பஃறிறத்தால்- பலவழியால்: பல் திறம் எனப்பிரிக்க. அக்காரணம் - கூத்தாட்டு. பஃறிறத்தால் - பலவகையால். அக்காரணம் - நல்வினை. கூத்து - தொழிலுணர்த்தும் பகாப்பதமாகிய பெயர். ஆட்டு - ஆடுஎன்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். அவை - ஸபா: வடமொழித் திரிபு. ஆட்டவை - ஆடுதலையுடைய அவை யென இரண்டனுருபும்பயனுமுடன் தொக்கதொகையாகப் பொருட்புணர்ச்சியுரைக்க; ஆடுதற்குஇடமான அவை யென்பது கருத்து. குழாம் + அத்து = குழாத்து; "அத்தினகரமகரமுனையில்லை" என்றதன் உபலட்சணத்தால், மவ்வீறொற்றழிந்துநின்ற ஆகாரத்தின்முன்னும் அத்துச்சாரியையின் முதல்அகரங் கெட்ட தென்க. ஏ - தேற்றம்; அசையுமாம். விளிந்தற்று - விளிந்தால்என்னும் எதிர்காலவினையெச்சம் விளிந்துஎன இறந்த காலவினையெச்சமாத்திரிந்தது; விளிந்ததற்று எனத் தொழிற்பெயர் தொகுத்தல்விகாரப்பட்டதாகவுங் கொள்ளலாம். இக்கவி - உவமையணி. (உ)

௩௩௩. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

(இ - ள்.) அற்கா இயல்பிற்று செல்வம் - நில்லாத இயல்பினையுடைத்துச் செல்வம்; அது பெற்றால் - அதனைப் பெற்றால், அற்குப - (அதனாற்) செய்யப்படும் அறங்களை, ஆங்கே - அப்பெற்றபொழுதே, செயல் - செய்க.

அல்கா என்பது, திரிந்துநின்றது. ஊழ் உள்வழியல்லது துறந்தாராற் பெறப்படாமையின் 'அதுபெற்றால்' என்றும், அஃதுஇல்வழி நில்லாமையின் 'ஆங்கே' என்றுங் கூறினார். அதனாற்செய்யப்படும் அறங்களாவன - பயன்நோக்காது * செய்யப்படுங் கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடு பயத்தலின், அவற்றை 'அற்குப' என்றும், 'செய்க' என்றுங் கூறினார்.

இவையிரண்டுபாட்டானும், செல்வநிலையாமை கூறப்பட்டது.

(கு - ரை.) அப்பெற்றபொழுதே-செல்வம்பெற்ற அப்பொழுதே. 'ஊழ் உள்வழியல்லது துறந்தாராற் பெறப்படாமையின்' என்றது - துறந்தவர்க்குப் பொருள்வருவாய்க்கு வேண்டும் முயற்சி யின்றாதல்பற்றி விதிவசத்தால் மாத்திரமே அவர்க்குச் செல்வம்வருதல் கூடு மாதலின். அதுபெற்றால் என்

* பி - ம்: செய்யும்.

றது, செல்வம்பெறுதலின் அருமை தோன்றநின்றது. அஃது இல்வழிநில்லாமையின் - அந்நல்வினைப்பயன் நீங்கியவிடத்துப் பொருள் நில்லாதுநீங்குமாதலின். பயன்நோக்காது - காமியமாக வல்லாமல். கடவுட்பூசை - தேவதாராதநம். அற்கா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; அல்குஎன்பது திரிந்த அற்கு - பகுதி. அற்குப - அல்குப: நிலைத்திருப்பவை: பலவின்பாலெதிர்காலவினையாலணையும்பெயர்; ஆங்கே, ஏகாரம் - தாமதிக்கக்கூடாமையைக் குறிக்கும். செயல் - உடன்பாட்டுவியங்கோள். (கூ)

கூகூ. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) நாள் என ஒன்று போல் காட்டி - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோல (த் தன்னை)க் காட்டி, ஈரும் - ஈர்ந்துசெல்கின்ற, வாளது - வாளினதுவாயது, உயிர்—:உணர்வார் பெறின் - (அஃது) உணர்வாரைப் பெறின்; (எ - று.)

காலமென்னும் அருவப்பொருள் உலகியல் * நடத்தற்பொருட்டு ஆதித்தன்முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுங்கூறுபடாமையின் 'நாளெனவொன்றுபோல்' என்றும், அதுதன்னை வாளென்றுணர்மாட்டாதார் †தமக்குப்பொழுதுபோகாகின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் 'காட்டி' என்றும், இடைவிடாது ஈர்தலான் 'வாளின் வாயது' என்றும், அஃதுஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப்பெறின்' என்றுங் கூறினார். 'உயிர்' என்னுஞ் சாதியொருமைப்பெயர், ஈண்டு உடம்பின்மேல்நின்றது: ஈரப்படுவது அதுவேயாகலின். வாள் என்பது, ஆகுபெயர். இனி, இதனை - நாளென்பது ஒருபொருள்போலத்தோன்றி உயிரைஈர்வதொருவாளாம் என்று உரைப்பாரு மூளர்; என என்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற்காட்டி யென்பதற்கு ஓர்பொருட்சிறப்பு இன்மையானும், அதுவென்பது குற்றியலுகரமன்மையானும், அஃதுஉரையன்மை அறிக.

(கு - ரை.) அறுக்கப்படுவது - பிரித்துஎண்ணப்படுவது. ஈர்ந்துசெல்கின்ற - அறுத்துக்கழிகின்ற. வாளினதுவாயது - வாளின்வாயிலுள்ளது. அஃது - அந்நிலைமையை. அருவப்பொருள் - ரூபமில்லாத பதார்த்தம். உலகியல்நடத்தற்பொருட்டு - உலகத்துநிகழ்ச்சிகள்நடக்கும்பொருட்டு. ஆதித்தன்முதலிய அளவைகளால் - சூரியன்முதலான அளக்குங்கருவிகளால்.. சூரியன்காலத்தையளக்குங்கருவியாதலே "வாழ்நாட்கலகாவயங்கொளிமண்டிலம், வீழ்நாட்படாஅதெழுதலால்", "தோற்றஞ்சால்ஞாயிறு நாழியாவைகலுங், கூற்றமளக்குநாளுண்ணும்" என்றவற்றிலுங் காண்க. ஒருசூரியோதயந்தொடங்கிப் பின்வருஞ் சூரியோதயமளவிற் கழிந்த காலம் ஒருநாளென்றும், அப்படிப்பட்டநாள் மூப்பதுகொண்டது ஒருமாதமென்றும், அம்

* பி - மீ: நடாத்தற்பொருட்டு † பி - ம்: நமக்கு

மாதம்பன்னிரண்டுகொண்டது ஓர்வருடமென்றும் இவ்வாறு சூரியன்கருவி யாக எண்ணி நாள்கணக்கிட்டு அகண்டமாகியகாலத்தைக் கூறுபடுத்திவழங்கு மாறு காண்க. முதலிய என்றது - மற்றைக்கிரகங்களையும், நட்சத்திரங்களை யும். கூறுபட்டது - பகுப்புக்கொண்டது. இனி, நாளென்னவொன்றுபோற் காட்டி என்பதற்கு - நாளென்று ஒன்றைத் தன்னைக்காட்டி யென்று உரைத்து, போல் என்பதை ஒப்பில்போலியாய் உரையசையெனவுங் கொள் ளலாம். அதுதன்னை - காலத்தை. அவிவேகிகள் நாட்கழிவுக்குவருந்தாமல் மகிழ்தலே "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாள் மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" என்னும் நாலடியாராலும் உணர்க. ஈர்தல்- அறுத்தல். அஃது - காலமாகிய வாள். உடம்புக்கு அழிவு உண்டே யொழிய உயிருக்கு அழிவுஇல்லையாதலால், இங்கு உயிர் என்றது - உடம்பிற்கு இலக் கணையென்க; இது-தானியாகுபெயர்: "அச்சேத்யோயம் [இந்தஆன்மா அறு க்கமுடியாதது]" என்றது, ஸ்ரீபகவத்கீதை. ஈரப்படுவது அதுவே-அறுக்கப் படுவது உடம்பே. வாள் என்பது - வாளின்வாய்க்கு, முதலாகுபெயர். முத லுரைகித்து, உயிர்-எழுவாய்; வாளதுஎன்னும் ஒன்றன்பாற்குறிப்புமுற்று - பய னிலை; என என்னும் இடைச்சொல், காட்டியென்னும் வினையெச்சத்தைக் கொண்டது. பிற்றினைஉரைக்கு, எனஎன்பது-எழுவாயும்,வாள்என்பது-வினை முற்றுமாதல்வேண்டும். அவ்வுரையைப் பல காரணங்காட்டி மறுக்கிறார்: என என்பது-இடைச்சொல்லாதலால், பெயர்ச்சொல்போல வாள்என்பதற் குக் கருத்தாவாகநில்லாதென்பது, முதற்காரணம். இரண்டாவது காரணம் - முதலுரையில் நாளெனவொன்றுபோற்காட்டி என்பதற்கு விசேடவுரை இருப்பதுபோல் விசேடவுரையில்லாமை: இது,வெளிப்படை. ஞான்றவதுகார ணம் - அதுஉணர்வார்ப்பெறின் என எடுத்து, அதனையறிவாரைப்பெற்றால் என்னவேண்டும்: 'அது உணர்வார்'என்று எடுக்குமிடத்து அது என்பது முற்றியலுகரமாதலின், உயிர்முதல்மொழிப்புணர்ச்சியில் அதுவுணர்வார் என உடம்படுமெய்பெற்றுவரவேண்டுமேயன்றி அதுணர்வார் என வருதற்கு விதி யில்லாமை என்பது. முதலுரைகித்து-வாளது என்பது ஒருசொல்லாய் உயிர்த் தொடர்க்குற்றியலுகரமாதலால்,உயிர்வரக்குற்றியலுகரத்தின்மேல் அவ்வுயிர் சேர்ந்திடுதற்குத் தடையில்லையென்க. ஒன்று-ஒருகாலவரையறையைக் குறித் தலால், எண்ணலளவையாகுபெயர். உணர்வார்ப்பெறின்-உயர்திணையிடத்து இரண்டனுருபு தொக்கது. ஆராய்ந்து உண்மைநோக்குமிடத்து, காலத்துக்கு வசப்பட்டுள்ளது உயிருடம்பின்வாழ்க்கையென்பது விளங்கும்என்று கருத்து. திருச்சந்தவிருத்தத்தில் திருமழிசையாழ்வாரும் "வாள்களாகி நாள்கள் செல்ல" என இங்ஙனம் நாளே வாளாக உருவகப்படுத்தி அருளிச்செய்திருத் தல் காண்க. இக்குறளால், உடம்புகளுக்கு அளவுசெய்யப்பட்ட நாள் கழி கிற விதம் சொல்லப்பட்டது. (க)

ஊஊடு. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(இ - ள்.) நா செற்று - (உரையாடாவண்ணம்)நாவை அடக்கி, விக்குள் மேல்வாரா முன் - விக்குள் எழுவதற்கு முன்னே, நல் வினை - (வீட்டிற்கு ஏதுவாகிய) அறம், மேற்சென்று செய்யப்படும் - விரைந்து செய்யப்படும்.

மேல்நோக்கிவருதல் ஒருதலையாகலானும் வந்துழிச் * செய்தலேயன்றிச் சொல்லலும்ஆகாமையானும் 'வாராமுன்' என்றும், அதுதான் இன்னபொழுது வரு மென்ப தின்மையின் 'மேற்சென்று' என்றுங் கூறினர். மேற்சேறல் - மண்டுதல். நல்வினைசெய்யுமாற்றின்மேல்வைத்து நிலையாமை கூறியவாறு.

(கு - பை.)உரையாடாவண்ணம்-வார்த்தையெழாதபடி. நாவை-நாக்கை. விக்குள் - விக்கல்; தொழிற்பெயர். எழுதல்-மேல்நோக்கிவருதல். வீட்டிற்கு ஏதுவாகிய அறம் - துறவறம். ஒருதலை - நிச்சயம். வந்துழி - விக்கல்வந்த பொழுது. செய்தலேயன்றிச் சொல்லலும் ஆகாமையானும் - அறஞ்செய்தல் அசாத்தியமென்பதுமாத்திரமே யன்றி அறஞ்செய்யவேண்டுமென்று வாயாற்சொல்லுதலும் அசாத்தியமாதலாலும். நாச்செற்று விக்குள் மேல்வாரா முன் - மரணவேதனை வருதற்குமுன் என்றபடி. அதுதான் - அம்மரண வேதனைதான். இன்மையின் - தெரியாதாதலால் என்றபடி. மேற்சேறல், மண்டுதல் - தூரிதப்படுதல். இங்கே நல்வினையென்றது, அழியுந்தன்மையன வான சுவர்க்கவின்பம் முதலிய காமியபலன்களைத் தரும் யாகம்முதலிய வற்றை யன்று; முத்தியடைதற்கு நேரேவழியாகிய யோகஞானங்களை யென்க. செய்யும்ஆறு - செய்யும்விதம். நிலையாமை - யாக்கைநிலையாமை. "மேலெழுந்தோர் வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினை யுள்ளெழவாங்கிக், காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக்கண்ணுறக்கமதாவதன்முன்னம்,மூலமாகிய வொற்றையெழுத்தை மூன்றுமாத்திரையுள்ளெழ வாங்கி, வேலைவண்ணனை மேவுதிராகில்விண்ணகத்தினில்மேவலுமாமே" என்றார் பெரியாழ்வாரும்.இக் குறளால்,ஆயுள்நாள்கழியுங்காலத்து உண்டாகும் நிலைமை சொல்லப்பட்டது.

குகூ. நெருநல் உளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(இ - ள்.) 'ஒருவன் நெருநல் உளன்-ஒருவன் † நெருநல்உளனாயினன், (அவனே) இன்று இல்லை - இன்று இல்லையாயினன்', என்னும் - என்றுசொல்லும், பெருமை - நிலையாமைமிகுதி, உடைத்து—: இ உலகு - இவ்வுலகம்.

ஈண்டு, உண்மை பிறத்தலையும், இன்மை-இறத்தலையும் உணர்த்தினின்றன. அவை பெண்பாற்கும் ‡ உளவாயினும், சிறப்புப்பற்றி § ஆண்பாற்கே கூறினர். இந்நிலையாமையே உலகின் மிக்க தென்பதாம்.

(கு - பை.) நெருநல் - நேற்றைத்தினம். இன்று - இன்றைத்தினம். 'உளனொருவன்' என்ற ஆண்பால் - மற்றைப்பால்களுக்கும் உபலக்ஷணம். பெருமையென்பது அதிகாரத்தால், நிலையாமைமிகுதியைக் குறித்தது.

---

* பி - ம்: செயலே
† பி - ம்: நெருநற்றுளனாயினன்,
‡ பி - ம்: உரிய
§ பி - ம்: ஆண்பாலையே.

உண்மை - உளன்என்பதன் பகுதி. இன்மை - இல்லைஎன்பதில் உள்ளது. அவை - பிறத்தலும் இறத்தலும். நெருநல், இன்று - ஏழாம்வேற்றுமைப் பொருளுணரநின்ற இடைச்சொற்கள். "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி, இன்னினியேசெய்க வறவினை - இன்னினியே, நின்ரு னிருந்தான்கிடந்தான் தன்கேளலறச், சென்ரு னெனப்படுதலான்" என்னும் காலடியையும், "காலைச்செய்வோமென்றதைக் கடைப்பிடித்துச், சாலச்செய்வாரேதலைப்படுவார் - மாலை, கிடந்தானெழுதலரிதான்மற்றன் கொ, லறங்காலைச்செய்யாதவாறு" என்னும் அறநெறிச்சாரத்தையும் இங்கே அறிக. யாக்கைநிலையாமைகூறியது, இது. "மின்னின்னிலையில, மன்னுயி ராக்கைகள்" என்ரூர் பெரியாரும். (சு)

நூகள. ஒருபொழுதும் வாழ்ல கறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(இ - ள்.) ஒரு பொழுதுஉம் - ஒருபொழுதளவும், வாழ்வது - (தம்உடம்பும் உயிரும்)இயைந்திருத்தலை, அறியார் - தெளியமாட்டார்; (மாட்டாதுவைத்தும்), கோடிஉம் அல்ல பல - கோடியளவுமன்றி அதனினும்பலவாய நினைவுகளை, கருதுப - நினையாநிற்பர், (அறிவிலாதார்); (எ - று.)

இழிவுசிறப்பும்மையால், பொழுதென்பது - ஈண்டுக் கணத்தின்மேல் நின்றது. காரணமாகியவினையின் அளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃது அறியப்படாதாயிற்று. பலவாயநினைவுகளாவன - பொறிகளால் நுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்குவரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப்பிறர்கொள்ளாமற்காக்குமாறும், அதனுன் நட்டாரை ஆக்குமாறும், கள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின்மேல்வைத்து நிலையாமைகூறியவாறு. இனி,'கருதுப'என்பதனை அஃறிணைப்பன்மைப்பெயராக்கி உரைப்பாருமுளர்.

(கு - ரை.) இயைந்திருத்தல் - கூடியிருத்தல். வாழ்வது - சீவித்திருப்பது. தெளியமாட்டார் - உண்மையாய் அறியமாட்டார். கோடி - நூறுலட்சம். "எண்பதுகோடிநினைந்தெண்ணுவன"என்ரூர் ஔவையாரும். கணம்-கூணம். வினை - ஊழ்வினை. அஃது - வாழ்நாளின்அளவு. "வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினைதானுழிந்தால், தினைப்போதளவு நில்லாதுகண்டாய்" என்ற பட்டினத்தடிகள்வாக்கு இங்கே காணத்தக்கது. பொருள் - செல்வம். அவற்றைத் தாம் முயலும் ஆறும் - அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும். இடையூறு-தடை, விக்கினம். பொருள் கடைக்கூட்டும் ஆறும்-செல்வத்தைச் சேர்க்கும்விதமும். அதனுன் நட்டாரை ஆக்கும் ஆறும் - அச்செல்வத்தால் நினைகிதர்களை வளர்க்கும் விதமும். நள்ளாரை - பகைவர்களை. பரிமேலழகருரைக்கு 'அறிவிலாதார்' - தோன்ரு எழுவாய்; அறியார், கருதுப - உயர்திணைப்பலர்பால்முற்றுக்கள்; பயனிலை; வாழ்வது, பல - செயப்படுபொருள்.

பிறருரைக்கு, எதிர்காலப்பலவின்பால்வினையாலணையும்பெயரான கருதுப - எழுவாய்; பல - வினைமுற்று. கருதுப - எண்ணுவன என்க. கோடியும், உம்மை - உயர்வுசிறப்பு; எண்ணின்பெருமையைக் குறித்தலால். அல்ல, பல - பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்கள். இக்குறளால், உடம்புகள் ஒருகணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொல்லப்பட்டது. (எ)

கூகூ அ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றேறு
யுடம்போ டுயிரிடை நட்பு.

(இ - ள்.) குடம்பை தனித்து ஒழிய-(முன் தனியாத) முட்டை தனித்துக்கிடப்ப, புள் - (அதனுள்இருந்த) புள்ளு, பறந்து அற்று - (பருவம்வந்துழிப்) பறந்துபோந் தன்மைத்து: உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு; (எ - று.)

'தனித்தொழிய' என்றதனுன்;முன்தனியாமை பெற்றும்: அஃதாவது-கருவுக் தானும் ஒன்றுரூய்ப்பிறந்து வேறுந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்: அதனுல், அஃது உடம்பிற்கு உவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற் போகலின், புள் உயிர்க்கு உவமையாயிற்று. மூட்டையுட்பிறப்பன பிறவும் உளவேனும்,புள்ளேயே கூறினுர்,பறந்துபோதற்கிழிலான் உயிரோடுஒப்புமையெய்துவது அதுவேயாகலின். 'நட்பு' என்பது - ஈண்டுக் குறிப்புமொழியாய், நட்பின்றிப்போதலுணர்த்திநின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின், வினைவயத்தாற்கூடிய தல்லது நட்பிலவென்பது அறிக. இனி, 'குடம்பை' என்பதற்கு - கூடென்று உரைப்பாரு முளர்; அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டுபுகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக.

(கு - ரை.) முன் தனியாத - முன்னேதனித்திராத. அதனுள் - முட்டையினுள். புள்ளு-பறவை. பருவம் - காலம். கரு - முட்டையினுட்பொருள். அஃதாவது - தனியாமையாவது. தானும் என்றது-முட்டையை. கரு ஜந்துவாகவெளிப்படும் வரையும் அந்தக்கருவுக்கு முட்டை யாதாரமாகு மென்க. அதற்கு - கருவிற்கு. உள்ளிருக்கும் கரு - உடம்பினுள்ளிருக்கும் உயிருக்கும், கருவுக்கு ஆதாரமாகும் முட்டை-உயிருக்குஆதாரமான உடம்புக்கும் உவமையாம். அதனுள்வேற்றுமைஇன்றிநின்றே - அம்முட்டையினுள் பேதமில்லாமல் வாழ்ந்திருந்தே. பின் புகாமற்போகலின் - பின்பு பறவை முட்டையினுள் நுழையாமற் போவதனுல். பிறவும் - வேறுபிராணிகளும். அதுவே - பறவையே. நட்பு என்பது - ஈங்கு நட்பில்லாமையைக் குறிப்பித்தல், முதலடியில்வந்த உபமானத்தினுற் பெறப்படு மென்க; இது - எதிர்மறையிலக்கணை. சேதனம் - அறிவுடையது. அரு - அரூபம்; வடிவில்லாதது. நித்தம் - நித்யம்: என்றும் ஒருபடியாய் அழிவில்லாம லுள்ளது. அசேதனம்-அறிவில்லாதது. உரு - ரூபம்; வடிவுள்ளது. அநித்தம் - அநித்யம்; நிலையில்லாதது. தம்முள் மாறு - ஒன்றுடொன்று மாறுபாடுடையது. வினைவயத்

தால் - விதிவசத்தால். அது - கூடு. அதன்கண் - கூட்டினுள். அது-பறவை. மீண்டுபுகுதல் - மறுபடிநுழைதல். "குடம்பை முட்டையுங் கூடுமாகும்" என்ற பிங்கலந்தையால், குடம்பையென்பது இருபொருளதாதல் பெறப்படும். ஒருசாரார், முட்டையின்கீங்கிய பார்ப்பு உடனே பறவாமையாலும், யாக்கை உருச்சிதையாததுபோலாது முட்டை உருச்சிதைதலாலும், சாவித் திரியின்வரத்தாற் சத்தியவானுயிர்போலச் சிறுபான்மை கீங்கியவுயிர் யாக்கையிற் சேர்தலாலும், "கூடுவிட்டிங்காவிதான் போயினபின்" என்றவிடத்துக் கூடுஎன்று யாக்கையையே வழங்கியிருத்தலாலும் இங்குக் குடம்பையென்பதற்குக் கூடு என்றே பொருளென்றுசாதிப்பர்; அன்னூர், "கேளாதே வந்து கிளைகள்யிற்றேன்றி, வாளாதேபோவரான் மாந்தர்கள் - கேளாதே, சேக்கைமரஞ்ஞெழியச் சேணீங்குபுட்போல, யாக்கைதமர்க்கொழியநீத்து" என்ற நாலடியாரைத் தம்முரைக்கு மேற்கோளாகக் காட்டுவர். உவமையணி. இக்குறளால், உடம்புகள் உயிர்கீங்கியவிடத்துக் கிடக்குமாறு சொல்லப்பட்டது. (அ)

கூகூ. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(இ - ன்.)சாக்காடு - (ஒருவனுக்குச்) சாக்காடு(வருதல்), உறங்குவது போலும் - உறக்கம்வருதலோடு ஒக்கும்; பிறப்பு - (அதன்பின்) பிறப்பு (வருதல்), உறங்கி விழிப்பது போலும் - உறங்கிவிழித்தல் வருதலோடு ஒக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்குஇயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றுற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன்கூறப்பட்டது.

(கு - பை.) சாக்காடு-இறத்தல். கடிதின் - விரைவில். நிலையாமையென்னும் இவ்வதிகாரத்திற் கூறத்தக்க இறத்தலோடு பிறத்தலையும் உடன்கூறியது, நிலையாமையே நிச்சயமாகுந்தன்மையை அறிவித்தற்பொருட்டு. உவமையணி. இக்குறளால், இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருதல் சொல்லப்பட்டது. இக்குறளை "பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு, முறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்" என்ற மணிமேகலையடிகளோடு ஒப்பிடுக. (கூ)

கூசo. புக்கில மைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சில் லிருந்த வுயிர்க்கு.

(இ - ன்.) உடம்பினுள் - (வாதம்முதலியவற்றின்இல்லாய) உடம்புகளுள், துச்சில் இருந்த-ஒதுக்கிருந்தேபோந்த, உயிர்க்கு,—புக்கில் அமைந்தின்று கொல்-(எஞ்ஞான்றும்) இருப்பதோரில் (இதுகாறும்) அமைந்ததில்லைபோலும்.

அந்நோய்கள் இருக்கஅமைந்தஞான்று இருந்தும் வெகுண்டஞான்று போயும் ஒருடம்பினும் நிலைபெறுது வருதலால், 'துச்சிலிருந்த' என்றார். பின் புறப்படாது புக்கேவிடும்இல் அமைந்ததாயின் பிறரிற்களுள் * ஒதுக்கிரா

* பி - ம்: துச்சில்.

தென்பதாம்; ஆகவே, உயிரோடுகூடிநிற்பது ஒருடம்புமில்லை யென்பது பெறப்பட்டது.

இவையேழுபாட்டானும், முறையே, யாக்கைகட்கு வரைந்தகாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாம் நிலைமையும், அவை ஒரோவழிப் பிறந்த வளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருமாறும், அவைதாம் உயிர்க்கு உரியஅன்மையும் என்றிவற்றால் யாக்கைநிலையாமை கூறியவாறு கண்டுகொள்க.

(கு - ரை.) வாதம் - வாயு. முதலிய என்றது - பித்தம், சிலேட்டுமம் என்றவற்றை; மேல் 'மருந்து'என்னும் அதிகாரத்தில் "தூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்று" என்றது காண்க. இல் - இடம். துச்சில் - ஒதுக்கிடம். இதுகாறும் - இதுவரையிலும். அந்நோய்கள் இருக்க அமைந்தஞான்று இருந்தும் - வாதம் பித்தம் முதலியவற்றாலாகும் நோய்கள் தான் உடம்பினுளிருக்க உடன்பட்டிருக்குமளவும் உயிராகிய தான் அங்குக் குடியிருந்தும். வெகுண்டஞான்று போயும் - அந்நோய்கள் அங்கிருக்க உடன்படாமற் கோபித்தபொழுது தான் அங்கிருந்து குடிநீங்கிப்போயும். வெகுண்டஞான்றுதத்தம் நிலையில்நில்லாதனவாய் வருத்தும்பொழுது. பின் புறப்படாது புக்கேவிடும் இல் - பின்புகுடிநீக்கவேண்டாமல் எப்பொழுதுங் குடிபுகுந்தேயிருக்கத்தக்கதொரு வீடு. பிறர் இற்கள் - வாதம்முதலியவற்றின் வீடுகள். இக்குறளால், எவ்வுடம்பும் உயிருக்குச்சொந்தமானதன் றென்பது சொல்லப்பட்டது.

ஏழுபாட்டானும் - "நாளெனவொன்றுபோல்"என்ற செய்யுள்முதல் முறையே இச்செய்யுள்வரையில். யாக்கைகட்குவரைந்தநாள் - உடம்புகளுக்கு இவ்வளவென்று அளவுசெய்யப்பட்ட நாள். ஒரோவழி - சிலவிடத்து. தெளியப்படாமை - நம்பப்படாமை. கிடக்கும்ஆறு-இருக்கும் நிலைமை. அவை தாம் உயிர்க்குரிய அன்மை-உடம்புகள்தாம் உயிருக்குச் சொந்தமானவையல்ல என்பது. புக்கில்என்பதைப் புக்கவில் என்பதன் தொகுத்தலாகவாயினும், புகில்என்பதன் விரித்தலாகவாயினுங் கொள்க. அமைந்தின்று-அமைந்தின்று என்பதன் விகாரம். "கொல்லே ஐயம்"என்ற சூத்திரத்தின் ஒன்றென முடித்தலால் "இதனளவுண்டுகொல் மதிவல்லோர்க்கே" எனத் தூணிவின் கண்ஐயம்சிறிதுநினைத்தலும் கொல்என்னும் இடைச்சொற்குக் கொள்ளப்பட்டவாறு காண்க; இங்கு, கொல் - அப்பொருளது. ஓ - அசை. துச்சில் - துச்சவில்: துச்சம் - அற்பம், நிலையற்றது: வடசொல். துஞ்சுஇல் என்பதன். வலித்தலாகக்கொண்டு, அழியுந்தன்மையதானவீடெனினும் அமையும். (கo)

நடு - ஆம் அதிகாரம்—துறவு.

அஃதாவது-புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாய பற்றினை அவற்றதுநிலையாமைநோக்கி விடுதல். அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

(கு - ரை.) புறமாகிய செல்வத்தின் கண்ணும்-வெளிவளமாகிய செல்வத்தினிடத்தும். அகமாகிய யாக்கையின் கண்ணும் - உள்வளமாகிய உடம்பினிடத்தும். பற்று - ஆசை. முன்னது-புறப்பற்றென்றும், மமகாரமென்றும்; பின்னது - அகப்பற்றென்றும், அஹங்காரமென்றும் கூறப்படும். அவற்றது - செல்வம் யாக்கைகளின். நிலையாமையையுணர்ந்தால் பற்றுவிடுதல் கூடுமாதலின், நிலையாமை யென்னும் அதிகாரத்தின்பின் துறவுஎன்னும் அதிகாரம் நிறுத்தப்பட்டது.

கூசக. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(இ - ள்.) யாதனின் யாதனின் நீங்கியான் - (ஒருவன்) யாதொரு பொருளின் யாதொருபொருளின் நீங்கினான்: அதனின் அதனின் ஓதல் இலன் - (அவன்) அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துத லிலன்.

அடுக்குக்கள் பன்மைகுறித்துநின்றன. நீங்குதல் - துறத்தல். ஈண்டு 'துன்பம்' என்றது - இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும் காத்தலானும் இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையும் ஒருங்கேவிடுதல் *தலைமை: அஃதன்றி ஒரொன்றுகவிடினும் அவற்றான் வருந் துன்பம் இலனுமென்பது கருத்து.

(கு - ரை.) யாதொருபொருளின் - எந்தப்பொருளினின்றும். யாதனின் என்றவிடத்து, இன்னுருபு - நீக்கப்பொருளையும், அதனின் என்றவிடத்து, இன்னுருபு - ஏதுப்பொருளையும் உடையது. அடுக்குக்கள் - யாதனின் யாதனின், அதனின் அதனின் என்றவிடத்து உள்ளவை. அவற்றை - அப்பொருள்களை. "ஈட்டலுந் துன்பமற்றீட்டியவொண்பொருளைக், காத்தலுமாங் கே கடுந்துன்பம்—காத்தல், குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக், குறை பதிமற்றைப்பொருள்" என்றார் பிறரும். விடுதல் - துறத்தல். அஃதன்றி - அவ்வாறல்லாமல். இவ்வதிகாரத்தில் முதல்நான்குகவிகள், பொருளிற் பற்றுவிடுதலைக் கூறும். (க)

கூசஉ. வேண்டிணுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(இ - ள்.) துறந்தபின் - (எல்லாப் பொருள்களையுந்) துறந்தால், ஈண்டு இயல் பால - (ஒருவர்க்கு) இம்மைக்கண்ணே உளவரம்முறைமையையுடைய இன்பங்கள், பல—; வேண்டின் - (அவ்வின்பங்களை) வேண்டின், உண்டாக துறக்க - (அவற்றைக் காலம்) பெறத் துறக்க; (எ - று.)

அவ்வின்பங்களாவன - அப்பொருள்கள்காரணமாக மனமொழிமெய்கள் அலையாது நிற்றலானும், அவை கண்ணெறிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கண் துறந்தான் அவற்றைநெடுங்காலம்எய்துமாகலின், 'உண்டாகத் துறக்க' என்றார். இன்பங்களென்பதும், கால மென்பதும், வருவிக்கப்

* தலை: அஃதன்றி ஒரோவொன்றுக.

பட்டன. இம்மைக்கண் துன்பங்களிலவாதலேயன்றி இன்பங்களுளவாதலு முண்டி என்பதாம்.

(கு - ரை.) துறந்தபின் - பற்றறவிட்டால்; இது - ஒருவகை எதிர் காலவினையெச்சம். உளவாம்முறைமையையுடைய - உண்டாகுங் கிரமத்தை யுடைய. வேண்டின் - விரும்பினால். காலம்பெற - இளமையிலேயே. துறக்க - விடக்கடவன். அவை நன்னெறிக்கட்சேறலானும் - அம்மூன்றுகரணங்களும் சன்மார்க்கத்திலே செல்லுதலாலும். இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்தும் - இளம்பிராயத்திலேயே பொருள்களிற் பற்றுவிட்டுத் துற வறத்தை யடைந்தவன் அவ்வின்பங்களை வெகுகாலம் அடைவான். இன்பங் கள் என்பது வேண்டின்என்பதன் முன்பும், காலம்என்பது - உண்டாக என்ப தன் முன்பும் வருவிக்கப்பட்டன. இயற்பால - இயலும்பான்மையுடையன; இய லுதல் - உண்டாதல். பால - பலவின்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். "கரைவருமென்றெண்ணி நல்லறிவாளர், குழவியிடத்தேதுறந்தார்," "மற் றறிவாநல்வினை யாமிளையமென்னாது, கைத்துண்டாம்போழ்தே கரவாதறஞ் செய்மின்" என்னும் காலடியாரினாலும் இளமையில்துறத்தல் சிறப்பென்ப தறிக. துறவினால் துன்பம் நீங்குவதன்றி இம்மையிலும் இன்பங்களுளவா மென்றவாறு. (உ)

ஈசஈ. அடல்வேண்டு * மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ - ள்.) ஐந்தின் புலத்தை அடல் வேண்டும் - (வீடெய்துவார்க்குச் செவிமுதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசைமுதலிய) ஐம்புலன்களையுங் கெடுத்தல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும் - (கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத்) தாம் படைத்தபொருள் முழுதையும் ஒருங்கேவிடுதல் வேண்டும்; (எ - று.)

'புலம்' என்றது, அவற்றைநுகர்தலே. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள்மேலல்லது வீட்டுநெறியாகியயோக ஞானங்களிற் செலுத்தாமையின், அதனை அடல்வேண்டுமென்றும்; அஃது அப்பொருள்கள்மேற் செல்லின் அத்துகர்ச்சி விறகுபெற்றதழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லாமொருங்குவிடல் வேண்டுமென்றுங் கூறினார்.

(கு - ரை.) வீடெய்துவார்க்கு - முத்திபெறவேண்டுபவர்களுக்கு. செவி முதலிய ஐம்பொறிகள் - செவி, மெய் (தோல்), கண், வாய், மூக்கு என்னும் பஞ்சேந்திரியங்கள். இவற்றிற்கு உரியவாய ஓசைமுதலிய ஐம்புலன்கள் - முறையே சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. கெடுத்தல்வேண் டும் - அடக்குதல்தகுதி. கெடுக்குங்கால் - அங்ஙனம் அடக்கும்பொழுது. அவ் வற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் - அந்த ஓசைமுதலிய ஐம்புலன்களையும் அனுபவிப்பதற்காகத் தாம் விரும்பிச்சேர்த்த

* பி - மி: ஐந்தின்.

எல்லாப்பொருள்களையும். அது-அந்தவிஷயானுபவம். அது, மனத்தை, பிறர்க்குத்துன்பஞ்செய்தலாலும் தீவினைகளாலுமே அடையக்கூடிய பொருள்களின்மேலே செலுத்துமே யொழிய, மூத்திரவழியாகிய யோகப்பயிற்சியிலும் ஞானநிலையிலுஞ் செலுத்தாது. அதனை - ஐம்புலநுகர்ச்சியை. அஃது - மனம். அந்நுகர்ச்சி - அவ்விஷயானுபவம். மூலுகுவ தல்லது-மேன்மேல் வளர்வதேயொழிய. அடப்படாமையின் பின்பு அழிக்கப்படாமையால். ஐக்து - ஐம்பொறிக்கு எண்ணலளவையாகுபெயர்; ஒருங்கு - எஞ்சாமைப்பொருள் குறிக்கும் இடைச்சொல். விறகை எடுத்துவிட்டால் நெருப்புத் தானே அடங்குதல்போல, பொருள்களைத் துறந்தால் ஐம்புலநுகர்ச்சி தானே அழியுமென்ற கருத்து விளங்கும். வீடுபெறவிரும்புவார்க்கு ஐம்புலநுகர்ச்சியொழியவேண்டுமென்றது, இது. (கூ)

கூசஅ. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) ஒன்று இன்மை - (பற்றப்படுவது) ஒருபொருளும் இல்லாமை, நோன்பிற்கு - தவஞ்செய்வார்க்கு, இயல்பு ஆகும் - இயல்பாம்; உடைமை பெயர்த்து மற்றுஉம் மயல் ஆகும் - (அஃதன்றி ஒன்றுயினும்) உடைமை (அத்தவத்தைப்) போக்குதலான் மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம்.

இழிவுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. நோன்பு என்பதூஉம், மயல் என்பதூஉம் - ஆகுபெயர். 'பெயர்த்தலான்' என்பது, திரிக்துநின்றது. நோன்பைப்பெயர்த்தலான் என வேற்றுமைப்படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும்விட்டு ஒருபொருளை விடாதவழியும், அதுசார்பாக விட்டன வெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கஞ்செய்யுமென்பது கருத்து.

இவைதான்குபாட்டானும்,எனதென்னும்புறப்பற்றுவிடுதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பற்றப்படுவது - விரும்பப்படுவது. இயல்பு - சுபாவகுணம். அஃதன்றி - அப்படியல்லாமல். ஒன்றுயினும் உடைமை - ஒருபொருளையாயினும் பற்றுவிடாமலுடைத்தாயிருத்தல். போக்குதலான் என்பதை 'பேர்க்குதலான்'என்று படித்தும் பொருள்கொள்ளலாம். மீண்டும்மயங்குதல் - மறுபடியும் அவித்யைக்கு உட்படுதல். இழிவுசிறப்பும்மை தொகுத்தல்விகாரப்பட்டது, 'ஒன்று' என்பதன் இறுதியில்; அது, அவ்வெண்ணினது சிறுமையை விளக்கிற்று. நோன்பு என்பது - தவத்தையுடையார்க்குப் பண்பாகுபெயரும், மயல் என்பது-மயங்குதற்குக்காரணமாயிருப்பதற்குக் காரியவாகுபெயருமாம்.இனி, 'நோன்பிற்கு இயல்பாகும்'என்பதற்கு-தவத்திற்கு இலக்கணமாகுமென்றுமாம். பெயர்த்து-பெயர்க்க: செய்வினைச்சத்தின் திரிபென்பார், 'பெயர்த்தலான்'எனப்பது திரிந்துநின்றது' என்று ரென்க. மயலாதற்குக் காரணம், பெயர்த்தல். பெயர்த்தலென்னும்வினைக்கு 'நோன்பை' என்று செயப்படுபொருள் சேர்க்க. நோன்பிற்கு என்பதனை மீட்டுங்கூட்டுகையில், இரண்டனுருபுகொடுத்துக்கூட்டுக என்பார், 'வேற்றுமைப்படுத்துக்கூட்டுக' என்றுரென்க, அதுசார்பாக - அந்தப்பொருள் ஆதாரமாக. விட்டனவெல்

லாம் - விட்டபொருள்களியாவும். இடையீடாய் - தடையாகி. எனதென்னும் புறப்பற்று - புறமாகியசெல்வத்தை என்னுடையதென்று அபிமானிக்கிற ஆசை. ஒன்று - எண்ணலளவாகுபெயர். ஒன்றென்பதனை உடைமையென்பதனோடுங கூட்டுக. மற்றுஎன்னும் இடைச்சொல், இங்கே பின் என்னும் பொருளது. நோன்பு - (எல்லாத்துன்பங்களையும்) பொறுத்தலையுடைய தெனத் தவத்திற்குக் காரணப்பெயர். (ச)

ஈசரி. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
இற்றூர்க் குடம்பு மிகை.

(இ - ள்.) பிறப்பு அறுக்கல் உற்றூர்க்கு - பிறப்பு அறுத்தலை மேற்கொண்டார்க்கு, உடம்புமிகை - (அதற்குக்கருவியாகிய) உடம்பும் மிகையாம்; (ஆனபின்), மற்றுமும் தொடர்ப்பாடு எவன் - அதற்குமேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பாடுஉளவாதல் என்னும்? (எ - று.)

'உடம்பு' என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும்; அவற்றுள், அருவுடம்பாவது - பத்துவகையிந்திரியவுணர்வோடும் ஐவகைவாயுக்களோடுங் காமவினைவிளைவுகளோடுங் கூடிய மனம்: இது, நுண்ணுடம்பெனவும்படும். இதன்கட்பற்று நிலையாமையுணர்ந்த நுணையான் விடாமையின், விடுதற்குஉபாயம்முன்னர்க்கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறுதலருதலுணர்ந்து இவற்றுன் ஆய கட்டினை இமைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், 'உடம்புமிகை' என்றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமை யெய்தலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும்.

இதனுன், அகப்பற்றுவிடுதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பிறப்பு அறுத்தலை மேற்கொண்டார்க்கு - மறுபடியும் பிறப்புத் தமக்கு இல்லாதபடி ஒழித்து முத்திபெறவேண்டுமென்னும் எண்ணத்தை முக்கியமாக ஏற்றுக்கொண்ட துறவறத்தார்க்கு. அதற்குக் கருவியாகிய - பிறப்பறுத்தற்குக் காரணமான; பிறப்பிற்குக் காரணமான என்றுங்கொள்ளலாம். மிகையாம் - மிகுதியாம்: அவசியமானதன்றும். அதற்குமேலே - அவ்வுடம்புமாத்திரமேயன்றி மேலும். இயைபில்லனவுஞ் சிலதொடர்ப்பாடு - சம்பந்தமில்லாத சிலபொருள்களும் விடாது தொடர்ந்து நிற்றல். என்னும் - தகுதியன்று என்றபடி. 'உடம்பு' என்ற பொதுமையான் - 'உடம்பு' எனப் பொதுப்படக்கூறியதனுல். உருவுடம்பு - ரூபமூர்த்த சரீரம்; அது-பஞ்சபூதசம்பந்தத்தாலாகி இருபத்துநான்குதத்துவங்களை யுடைய இவ்வுடம்பு: ஸ்தூலசரீர மெனப்படும். அருவுடம்பு - அரூபமானசரீரம்; ஸூக்ஷ்ம சரீரமெனப்படும்: அந்த அருவுடம்பில் பத்துவகையிந்திரியவுணர்வோடு மனமும் ஆன்மாவைப்பற்றியிருக்குமென்க. பத்துவகை இந்திரியவுணர்வு - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியமைந்து, வாக்கு பாணி பாதம் பாயுர் உபத்தம் என்னுங் கருமேந்திரியமைந்து இப்பத்தின் அறிவுகள். ஐவகை வாயுக்கள் - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்பன. "சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயு பிராணனெனப்படும்:

அஃது ஒன்றுயினும் உபாதிவேறுபாட்டால் பிராணன் அபானன் முதலிய பெயர்பெறும்'' என்றது, தருக்கசங்கிரகம். காமவினைவிளைவுகள் - ஆசையும் கருமபலன்களும். நுண்ணுடம்பு - சூக்குமசரீரம். ''ஞானேந்திரியகர்மேந்திரியங்கள் பத்து, பிராணன் ஐந்து, மனம் புத்தி இத்தப் பதினேழுடன்கூடியது சூட்சுமதேகம்'' என்கின்றது, சாரீரகோபநிஷத்து. இதன்கட் பற்று - இந்த நுண்ணுடம்பினிடத்து ஆசை. நிலையாமை யுணர்ந்த தூயோன் வீடாமையின் - யாக்கைநிலையாமையை அறிந்தமாத்திரத்தாலே நீங்காதாதலால். வீடுதற்குஉபாயம் முன்னர்க்கூறுப - இவ்வுடம்பினிடத்தும் பற்றுநீங்குதற்கு உபாயத்தை முன்னே சொல்லுவர். 'முன்னர்' என்றது, இவ்வதிகாரத்திற் பத்தாம்பாட்டை; அதில் இவ்வுபற்றுவிடுதற்கு உபாயங் கூறப்படுதல் காண்க. புறப்பற்றுவிடுதற்குஉபாயம் இவ்வதிகாரத்தின் மூன்றும்பாட்டிற் கூறப்பட்டது. இடையுறுது - நடுவில்நீங்காமல். இவற்றுள் ஆய கட்டினை - இவ்விருவகையுடம்புகளாலும் ஆகிய பந்தத்தை. வீட்டின்கண்ணே விரைதலின் - முத்திநெறியிலே தூரிதப்பட்டுச் செல்லவேண்டுதலால். இன்பதுன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின் - இன்பத்தையுந் துன்பத்தையும் அநுபவித்தலில் உடம்பு உயிருடன் ஒருமைப்பட்டிருத்தலால். தொடர்ப்பாடு - தொடர்ப்படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். உடம்பும், உம்மை - உயர்வுசிறப்பு. மிகுதலையுடையது, மிகை. (டு)

ஈசசு. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(இ - ள்.) யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - (தானல்லாத உடம்பை) யானென்றும் (தன்னுடனியைபில்லாதபொருளை) எனதென்றுங் கருதி (அவற்றின்கண்) பற்றுச்செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை எய்தும்; (எ - று.)

மயக்கம் - அறியாமை. அதனைக் கெடுத்தலாவது - தேசிகர்பாற்பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யான் எனது அன்மை தெளிந்து அவற்றின்கட்பற்றை விடுதல். சிறப்பும்மைவிகாரத்தால்தொக்கது.

இதனுள், இருவகைப்பற்றினையும்விட்டார்க்கே வீடுஉளதென்பது கூறப்பட்டது.

(சு - ரை.) இயைபு - சம்பந்தம். எனது - என்னுடையது. அவற்றின்கண் - உடம்பினிடத்துஞ் செல்வத்தினிடத்தும். மயக்கம் - அறிவுமயங்குதல். கெடுப்பான் - ஒழிப்பவன். வானோர்க்கும் எய்தற்கு அரிய - தேவர்களுக்கும் அடைதற்குமுடியாத. எய்தும் - அடைவான். புகும் - செய்யுமென்னும்முற்று, இங்கு ஆண்பாலுக்கு வந்தது. தேசிகர்பாற்பெற்ற உறுதிமொழிகளானும் - சிறந்தஞானசார்யர்களிடங்கேட்ட உபதேசவார்த்தைகளாலும். யோகப்பயிற்சி - யோகாப்பியாசம். அவை யான் எனது அன்மை தெளிந்து - அவ்வுடம்பும் செல்வமும் முறையே யானும் எனதும் ஆகாமையை ஐயக்திரிபில்லாமல் அறிந்து. சிறப்பும்மை - உயர்வுசிறப்புமை. அது தொகுத்தல்

விகாரப்பட்டது, 'வாளுேர்க்கு' என்னுமிடத்தில். இருவகைப்பற்று - அகப் பற்றுப் புறப்பற்றுக்கள். "கீர்நுமதென்றிவை, வேர்முதன் மாய்த்திறை, சேர்மி னுயிர்க்கத, னேர்நிறையில்லே" என்னும் பாசுரத்தின்பொருளே இங்கே உணர்க. எனது - குறிப்புவினேயாலணேயும்பெயர். (சு)

நூசஎ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினேப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(இ - ள்.) பற்றினே - இருவகைப்பற்றினேயும், பற்றி - இறுகப்பற்றி, விடாஅதவர்க்கு - விடாதாரை, இடும்பைகள் - பிறவித்துன்பங்கள், பற்றி - இறுகப்பற்றி, விடாஅ—; (எ - று.)

இறுகப்பற்றுதல் - காதல்கூர்தல். 'விடாஅதவர்க்கு' என்பது, வேற் றுமைமயக்கம்.

இதனுல், இவைவிடாதார்க்கு வீடில்லே யென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இறுகப்பற்றி - உறுதியாகப் பிடித்துக்கொண்டு. காதல்கூர் தல் - மிகுதியாக ஆசைசெய்தல். விடாதவர்க்கு - 'விடாதாரை' என இரண் டாம் வேற்றுமைக்குரிய செயப்படுபொருள்கொண்டது, உருபுமயக்கம்; இவை- இருவகைப் பற்றுக்கள். அளவெடைகள், செய்யுளோசைநிறைக்கவந்தன. (எ)

நூசஅ. தலேப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலேப்பட்டார் மற்றைய வர்.

(இ - ள்.) தீர துறந்தார் - மூற்றத்துறந்தார், தலேப்பட்டார் - (வீட் டினேத்) தலேப்பட்டார்; மற்றையவர் - அங்ஙனந்துறவாதார், மயங்கி வலே பட்டார் - மயங்கி(ப் பிறப்பாகிய) வலேயுட்பட்டார்; (எ - று.)

மூற்றத்துறத்தலாவது-பொருள்களேயும் இருவகையுடம்பினேயும் உவர் த்துப் பற்றறவிடுதல். அங்ஙனந் துறவாமையாவது - அவற்றுள் யாதானு மொன்றின்கட் றிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றி 'தலேப்பட்டார்' என்றும், பொய்ந்நெறிகண்டே பிறப்புவலேயுள் அகப்படுதலின் 'மயங்கி' என் றுங் கூறினர்.

(கு - ரை.) மூற்றத்துறந்தார் - பற்றுக்களே முழுவதும் விட்டவர். வீட் டினேத்தலேப்பட்டார் - மூத்திலேய அடைந்தவராவர். மயங்கி - அவிச்சைக்கு உட்பட்டு. பிறப்பைவலேயென்றது,உயிரை நீங்காமல் தன்னுள்ளே பந்தப்படுத் தலால். வலேயுட்பட்டார் - வலேயினுள் அகப்பட்டவராவர். இருவகையுடம்பு - உருவுடம்பும் அருவுடம்பும். உவர்த்து - வெறுத்து. தலேப்படுவார்என எதிர் காலத்தாற் சொல்லவேண்டியதை இறந்தகாலத்தாற் சொன்னது, தெளிவு [நிச்சயம்] பற்றிவந்த காலவழுவமைதி. தீர - மிச்சமில்லாமல் ஒழிய; நீங்க என்றுங் கொள்ளலாம். பொய்ந்நெறிகண்டே - பொய்வழியென்று அறிந்தே. பொய்ந்நெறி யென்றது, மூத்திக்கு வழியல்லாததனே. (அ)

நூசசு. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்றை
நிலேயாமை காணப் படும்.

(இ - ள்.) பற்று அற்றகண் ஏ - (ஒருவன்) இருவகைப்பற்றும் அற்றபொழுதே, பிறப்பு அறுக்கும் - (அப்பற்றறுதி) அவன்பிறப்பை அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அவை யருதபொழுது (அவற்றுற் பிறக்திறக்துவருகின்ற) நிலையாமை காணப்படும்; (எ - று.)

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாம் முறைமைபற்றி, 'பற்றற்றகண்ணே' என்றார்; "அற்றது பற்றெனி, லுற்றது வீடு" என்பதூஉம் அதுபற்றி வந்தது.

இவையிரண்டொட்டானும், அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

(கு - ரை.) அற்றபொழுதே-நீங்கின அக்காலத்திலேயே. அப்பற்றறுதி-அந்தப் பற்று நீங்குதல். அவன்பிறப்பை அறுக்கும் - அவனை முத்தியடைவிக்கும் என்றபடி. மற்று - இங்கே, எதிர்மறையானதை யுணர்த்திய தனால், வினைமாற்றுப் பொருளது. அவை - இருவகைப்பற்று. அவற்றால் - பற்றுக்களால். காணப்படும் - தோன்றும். நிலையாமை - யாக்கைநிலையின்மை. காரணம் பிறப்புக்குக்காரணம், பற்று. காரியம் - பற்றின்காரியமான பிறப்பு. "அற்றதுபற்றெனி, லுற்றதுவீடியிற்" என்னும்மேற்கோள் - திருவாய்மொழி, மூதற்பத்து, இரண்டாவது திருவாய்மொழியின் ஐந்தாம்பாட்டி லுள்ளது; பற்றுஅற்றதெனில் உயிர் வீடுஉற்றது-பற்றுநீங்கிற்றலின் உயிர் முத்தியடைந்தது என்பது பொருள். அதுபற்றி - அம்முறைமைபற்றி. அவ்விருமையும் - பற்றுவிட்டார்க்கு வீடு உண்டென்பதும், பற்றுவிடாதார்க்கு வீடு இல்லையென்பதுமாகிய அவ்விரண்டுதன்மையும். அற்றகண் - பெயரெச்சத்தொடர்: அதனால், அற்றக்கண் என வலி மிகவில்லை. கண் - இடம்; இடத்தையுணர்த்தினும் சொற்களெல்லாம், வேண்டியபோது காலத்தையும் உணர்த்தும். ஏகாரம் - விரைவுவிளக்கிநின்றது. 'மற்று நிலையாமை காணப்படும்' என்ற இரண்டாம்வாக்கியத்துக்கு - பற்றறுவிட்டாற் பிறப்பொழியா தென்பது கருத்து. முதல்வாக்கியத்தில், அறுக்கும் பயனிலை, பிறப்பு - செயப்படுபொருள், பற்றறுதி - தோன்றுவழுவாய். (கூ)

ஊரு. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ - ள்.) பற்று அற்றான் பற்றினை பற்றுக - (எல்லாப்பொருளையும் பற்றிநின்றே) பற்றற்ற இறைவன் (ஓதிய) வீட்டுநெறியை (இதுவேகன்னெறியென்று) மனத்துக்கொள்க; அ பற்றை பற்றுக பற்று விடற்கு - (கொண்டு) அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற்செய்க (விடாதுவந்த)பற்று விடுதற்கு.

கடவுள்வாழ்த்திற்கு ஏற்ப, ஈண்டும் பொதுவகையால் 'பற்றற்றான்' என்றார். 'பற்றற்றான்பற்று' என்புழி, ஆறாவது - செய்யுட்கிழமைக்கண் வந்தது. ஆண்டு 'பற்று' என்றது - பற்றப்படுவதனை. அதன்கண் உபாயமென்றது - தியான சமாதிகளை. விடாதுவந்த பற்று என்பது, அநாதியாய்வரும் உடம்பிற்பற்றினை.

அகப்பற்றுவிடுதற்கு உபாயம் இதனுள் கூறப்பட்டது.

(கு - சை.) எல்லாப்பொருளையும் பற்றினின்றே பற்றற்ற இறைவன் - உடம்பினு ளிருந்து தொழில்செய்விக்கின்ற உயிருக்கு அவ்வுடம்பின் குணமான கருமை செம்மை பெருமை சிறுமை வளர்ச்சி தேய்வு முதலிய வற்றின் தொடர்ச்சி இல்லாதவாறுபோல, அச்சீவான்மாவினு ளிருந்து தொழில் செய்விக்கின்ற பரமான்மாவுக்கும் அவ்வுயிரின் குணங்களாகிய நல்வினை தீவினை முதலியவற்றில் யாதொருசம்பந்தமு மில்லை யென அறிக; இவ்வுண்மை, "யாவையும் யவருந்தாமு யவரவர் சமயந்தோறும், தோய்விலன் புலனைந்துக்குஞ் சொலப்படா னுணர்வின்மூர்த்தி, யாவிசேருயிரி னுள்ளா லாதுமோர்பற்றிலாத, பாவனையதனைக்கூடி லவனையுங்கூடலாமே" என்ற திருவாய்மொழிப்பாசுரத்தாலும் விளங்கும்: "தோய்க்கும் பொருளனைத்துக் தோயாதுநின்ற சுடரே" எனக் கூறுவர் கம்பரும். இறைவன் ஓதிய - கடவுள் கூறின. வீட்டுநெறி - மோட்சமார்க்கம். அதன் கண் உபாயத்தை - அவ்விறைவனுலிற்கூறிய மூத்தியடையும் வழியை. இந்நூலின் முதலிற் கடவுள்வாழ்த்து எல்லாமதங்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்டதனை அவ்வதிகாரத்தில் வந்த "ஆதிபகவன்", "வாலறிவன்" முதலிய கடவுளின் திருநாமங்களாலும், அவற்றின் உரையாலும் அறிக. பற்றற் றுன்பற்று என்றவிடத்துத் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை - செய்யுட்கிழமையாகிய பிறிதின்கிழமைப்பொருளது; 'கபிலரகவல்', 'கம்பராமாயணம்' என்றவற்றிற்போல. இறைவனுரைத்திய வீட்டுநெறி - வைஷ்ணவத்திற் பாஞ்சராத்திரமும், சைவத்தில் ஆகமங்களும், ஜைனத்தில் பரமாகமமும் போல்வன. 'அப்பற்று' என்பதிலுள்ள பற்று - பற்றப்படுவதாகிய மூத்திநெறியைக் குறிக்கும். தியானம் - கடவுளை இடையறாது சிந்தித்தல். சமாதி - யோகத்தில் அசைவற்றிற்றல்; இவை - யோகத்தின் எட்டு அங்கங்களிற் சேர்த்தவை. ஐம்புலனடக்கி யோகஞ்சேர்தல்-தியானம்: இந்திரியம்முதலிய தத்துவசேஷ்டைகட்கு ஏதுவாய யாக்கையுள்ளின்று அவற்றைநீங்குகூடினும் அவற்றிற்பற்றின்றியிருக்கும் ஆன்மாவாகிய தன்னைக் காண்டல் - சமாதி என்பர். அநாதியாய்வரும்-பழமையாய்வருகிற. பரிமேலழகருரைப்படி இக்குறளில் அகப்பற்றுவிடுதற்குமாத்திரமே காரணங்கூறப்படுதலை, 'பற்றுவிடற்கு' என்பதற்கு-அநாதியாய்வரும் உடம்பிற்பற்றுவிடுதற்கு என்று உரைத்ததனாலறிக. ஆகவே, அகப்பற்றுஎன்றவிடத்து அப்பற்று என்றபாடம் சிறவாது. பற்றுவிடுதற்கு உபாயமாக அடையத்தக்கவன் என்ற கருத்துப்படக் கடவுளைப் பற்றற்றான் என்றது - கருத்துடையடைகொளியணி. இச்செய்யுளில், 'பற்று' என்ற ஒரு சொல் பலமுறை வந்தது, சொற்பின்வருநிலையணி. விடற்கு - எதிர்காலவினையெச்சம்: இதனைத் தொழிற்பெயர்மேல் வந்த நான்கனுருபாகக்கொள்ளலாகாது: ஒருகாலத்தைக் காட்டுதலால். பற்று என்றது - முத்திநெறியைக் குறிக்கும்போது, செயப்படுபொருள்விருதி புணர்ந்துகெட்ட பெயர்; விருப்பத்தைக்குறிக்கும்போது, முதனிலைத்தொழிற் பெயர். இக்குறளைச் சொற்செறிவுடைமையாற் சிலிட்டமென்னும் உயிருக்கு உதாரணங் காட்டினர், வீரசோழியவுரைகாரர். (கo)

நூ - ஆம் அதிகாரம்—மெய்யுணர்தல்.

அஃதாவது பிறப்புவீடுகளையும் அவற்றின்காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல்; இதனை வடநூலார் 'தத்துவ ஞானம்' என்ப. இதுவும் பற்றற்றான்பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றி, துறவின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பிறப்பு வீடுகள் - ஐம்மமும், முக்தியும். அவற்றின்காரணம்-பிறப்புக்குக்காரணமாகிய அவித்தையும், முத்திக்குக் காரணமாகிய ஞானமும். விபரீத ஐயங்களான் அன்றி - திரிபுசந்தேகங்களினு லல்லாமல்: திரிபு - ஒன்றை மற்றொன்றாக மாறுபடஅறிதல்: ஐயம் - இதுவோ அதுவோ என ஒருபொருளில் துணிவுபிறவாமலிருத்தல். இது-மெய்யுணர்ச்சி. பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவது - கடவுள்கூறின முத்திநெறியை விடாது கொண்டவிடத்து உண்டாவது. மெய்யுணர்தலாகியஇதுவும் துறவினைப்போலவே பற்றற்றான்பற்றினைப் பற்றுதலின் காரியமே[பயனே] யாதலால், இது அதன்பின் வைக்கப்பட்டதென்க. மெய்யுணர்தல்-மெய்யால்உணர்தல் என மூன்றும்வேற்றுமைத்தொகையாகவாவது, மெய்யாகியஅறிவு எனப் பண்புத்தொகையாகவாவது கொள்க;மெய்யையுணர்தல் என இரண்டாம்வேற்றுமைத்தொகையாகவுங் கொள்ளலாம். காரணவொற்றுமை-துறவுக்குப்போலவே மெய்யுணர்தலுக்கும் பற்றற்றான்பற்று காரணமாயிருக்கின்ற ஒற்றுமை: காரணமென்றது-இங்கே, மூவகைக்காரணங்களுள் நிமித்தகாரணத்தை.

நூநிக. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளாணு மாணப் பிறப்பு.

(இ - ள்.) பொருள் அல்லவற்றை - மெய்ப்பொருளல்லவற்றை, பொருள் என்று உணரும் - மெய்ப்பொருளென்று உணரும், மருளான் - விபரீதவுணர்வானே, ஆம் - உளதாம்: மாணு பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு.

அவ்விபரீதவுணர்வாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும்இத்தன்மையவுஞ்சொல்லும் மயக்கநூல்வழக்குகளை மெய்ந்நூல்வழக்கெனத் துணிதல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது: மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன - ஒருபொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப்பிறப்பினும் உள்ளது துன்பமேயாகலின், 'மாணுப்பிறப்பு' என்றார்.

∴ இதனான், பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - ரை.) விபரீதவுணர்வானே - திரிபறிவால். மயக்கநூல்வழக்குக்கள்-அறிவுக்கு மயக்கத்தைத் தரும் நூல்களின் கொள்கைகள். இத்தன்மையவும் என்று கூறியதில், 'ஆகாயமென்பது ஒன்றில்லையெனவும், பூதங்களின் கூட்டரவால் உயிரென்பதுஒன்றுதோன்றி அவற்றின்பிரிவாலழியுமெனவும், காட்சியன்றி வேறுஅளவை யில்லை யெனவும் பிறவும் கூறுதல் அடங்கும்.

மெய்ந்நூல் வழக்கு-தத்துவசாஸ்திரசித்தாந்தம். குற்றி-மரக்கட்டை. மகன் - மனிதன். ஒருபொருட்கிளவி - ஒருபொருளையே யுணர்த்துஞ்சொல். நரகர்-பாதாளலோகத்தில் நரகத்தில் வசிப்பவர். விலங்கு - மிருகங்கள்; இதில்-பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவும் அடங்கும். அதற்கு முதற் காரணம் - பிறப்புக்குப் பிரதானமான காரணம். மயக்கநூல் வழக்குக்கள் - உலோகாயதம் முதலிய பொய்ம்மதங்களின்சம்பந்தமான சாஸ்திரங்களின் கொள்கைகள். 'திரிபுணர்வும் உணர்வேயெனப்படும்: உணர்வென்னும்பொது மைநோக்கு: சந்தனமுங்காஞ்சிரையும் மரமெனப்பட்டதுபோல'என்பது நூற் கொள்கையாதலால், விபரீதவுணர்வெனப்பட்டது. "திரிவாக்கோடலொன் றையொன்றென்றல், விரிகதிரிப்பியைவெள்ளியென்றுள்ளல், தேராது தெளிதல்செண்டுவெளியில், ஓராதுதறியைமகனெனவுணர்தல்" என்பது, மணிமேகலை. (க)

உரை. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ - ள்.) மருள் நீங்கி - அவிச்சையின் நீங்கி, மாசு அறு காட்சியவர் க்கு - மெய்யுணர்வுடையராயினார்க்கு, (அம்மெய்யுணர்வு), இருள் நீங்கி இன் பம் பயக்கும் - பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்; (எ - று.)

இருள் - நரகம்; அஃது - ஆகுபெயராய், காரணத்தின்மேல் நின்றது. 'நீங்கி' எனத் தொடைநோக்கி மெலித்துநின்றது; நீங்க என்பதன் திரிபெனி னும் அமையும். 'மருள்நீங்கி' என்னும் வினையெச்சம், 'காட்சியவர்' என்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. 'மாசறுகாட்சி' என்றது,கேவலவுணர்வினை.

இதனுன், வீடாவது நிரதிசயவின்ப மென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் * கேவலப்பொருளுணர்வென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - ரை.) அவிச்சையின் - விபரீதஞானத்தினின்று. இருள் - அந்த காரமயமான அந்ததாமிஸ்ரம் எனப்படும் நரகம்: இக்குறளில், இருள் - நரகத் துக்குக் காரணமான பிறப்பிற்குக் காரியவாதுபெயர். நீங்கி - நீக்கியென் பதன் மெலித்தல்; இதனை நீங்கவென்னும்வினையெச்சந் திரிந்ததாகக் கொள் ளின், அச்செயவெனெச்சம் உடனிகழ்ச்சிப்பொருளதென்க. 'தொடை நோக்கி' என்றது, "இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி" என்றவிடத்து "ஒருஉவாமிருசீரிடையிட்டது" என்றபடி இருசீரிடையிட்டு முதற்சீரும் நான்காஞ்சீரும் எதுகைவாதத்தொடுத்த ஒருஉவெதுகைத்தொடை யா மாதலா லென்க. மாசு அறு காட்சி - குற்றமில்லாத அறிவு. 'மருணீங்கி' என்பதில், நீங்கி என்பதற்கு முடிக்குஞ்சொல் - 'காட்சியவர்' என்பதில் விரிகிற உடை யவர் என்பது; இனி, 'மாசறு' என்பதிலுள்ள அறு என்றலுமாம். கேவல வுணர்வு - பரம்பொருளறிவு. நிரதிசய வின்பம் - தனக்குமேம்பட்டதோரின் பத்தையுடைத்தாகாத பேரின்பம். நிமித்தகாரணம் - குடத்திற்குக் குயவன் போலக் காரியத்தில் அணுவர்த்தியில்லாத காரணம். கேவலப்பொருள்-பரம் பொருள். 'பயக்கும்' என்பதற்கு மாசறுகாட்சியவர் என்னுங் குறிப்புவினை யாலணையும்பெயரினின்று எடுத்துக்கொள்ளப்பட்ட மாசறுகாட்சியென்பது-

* பீ - ம்: கேவலப்பொருளென்பதூஉம்

எழுவாய். 'முதனிலையுமன்றித் தொழிற்பெயர் பிரிந்து வினைமுதலாதலுங் கொள்க; அது ''இருணீங்கியின்பம்பயக்குமருணீங்கி, மாசறுகாட்சியவர்க்கு'' —'அக்காட்சி' என்பதனைற் காண்க' என்பது இலக்கணக்கொத்துரை. (உ)

நூருநூ. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ - ள்.) ஐயத்தின் நீங்கி - ஐயத்தினின்று நீங்கி, தெளிந்தார்க்கு - மெய்யுணர்ந்தார்க்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து - (எய்தி நின்ற) நிலவுலகத்தினும் (எய்தக்கடவதாய) வீட்டுலகம் நணித்தாதலுடைத்து.

ஐயமாவது - பலதலையாய உணர்வு; 'அஃதாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ?'என ஒன்றில் துணிவுபிறவாது நிற்றல்: 'பேய்த்தேரோ புனலோ? கயிறே அரவோ?' எனத் துணியாதுநிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதம் கூளாந்து தம்மதநிறுத்தல் எல்லாச்சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாதுமெய்யென நிகழும் ஐயத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம்அனுபவத்தால் நீக்கி மெய்யுணர்வா ராகலின், அவரை 'ஐயத்தின்நீங்கித்தெளிந்தார்' என்றும்; அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டுவரவரப் பண்டையுலகியலுணர்வு தூர்ந்துவரு மாகலின், அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின்வான நணிய துடைத்து' என்றுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக்காரண மாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) ஐயம் - சந்தேகம். எய்தி - அடைந்து. எய்தக்கடவதாய - அடையப்போவதாகிய. நணித்தாதல் உடைத்து-சமீபத்தில் இருத்தலுடையது. பலதலையாய உணர்வு - பலவகைப்பட்ட அறிவு. 'ஐயம் என்பது - ஒருபொருள்மேல் இருபொருள் தன்மை கருதிவரும் மனத்தடுமாற்றம்' என்பர். ஒருவாற்றால் பிறர்மதம் கூளாந்து தம் மதம் நிறுத்தல் - ஒருவகையாலே அயலார்கொள்கையை மறுத்துத் தமது கொள்கையை நிலைநிறுத்துதல். எல்லாச் சமயநூல்கட்கும் - மதக்கிரந்தங்களெல்லாவற்றிற்கும். அவை- அந்தந்தச் சாஸ்திரங்கள். பொருள் - அர்த்தம். யாது மெய் என நிகழும் - 'எது உண்மையோ?'என்று உண்டாகிற. யோகமுதிர்ச்சியுடையார் - யோகப் பயிற்சியில் முதிர்ந்தவர். தம் அனுபவம் - யோகநிலையின் முதிர்ச்சியில் தாம் கண்ட காட்சி. அவரை - யோகமுதிர்ச்சியுடையாரை. அவர்க்கு - யோகமுதிர்ச்சியுடையார்க்கு. அடிப்பட்டுவரவர - நிலைபூன்றி வரவர. பண்டையுலகியலுணர்வு - பழமையான உலகநடவடிக்கையறிவு. தூர்ந்து வரும் - குறைவுபட்டுவரும். அதனைப் பயன்மேலிட்டு - முத்திஞானம் மிகுந்து இவ்வுலகஞானங் குறைதலே அதன்பயனுகிய இவ்வுலகம் தூரமாதலும் முத்திசமீபமாதலும் என்பதன்மே லேற்றி. ஐயத்தின் - இன்னுருபு, நீக்கம். வையத்தின் - இன்னுருபு, எல்லை. நணியது-ஒன்றன்பால் வினையாலணையும்பெயர். ''ஐய மென்ப தொன்றைநிச்சயியாது, மையிற் றறியோ மகனே வென்றல்'' என்பது மணிமேகலை. (ரு)

நூருசு. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு.

(இ - ள்.) ஐ உணர்வு - (செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான்) ஐந்தாகிய உணர்வு, எய்தியக்கண்உம் - (அவற்றைவிட்டுத்) தன்வயத்ததாய வழியும், பயம் இன்றுஏ - (அதனாற்) பயன் இல்லையேயாம்: மெய் உணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினைஉணர்தல் இல்லாதார்க்கு; (எ - று.)

ஐந்தாகிய உணர்வு - மனம்; அஃது எய்துதலாவது - மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கண் நிற்றல். அங்ஙனம் நின்றவழியும் வீடுபயவாமையின், 'பயமின்று' என்றார். சிறப்பும்மை, எய்துதற்கருமை விளக்கிநின்றது.

இவையிரண்டுபாட்டானும், மெய்யுணர்வுடையார்க்கே வீடு உளதென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) செல்லப்படுகின்ற - மனத்துக்குவிஷயமாய் அனுபவிக்கப் படுகிற. புலன்கள் வேறுபாட்டால் ஐந்தாகிய - ஓசைமுதலிய விஷயபேதங்க ளால் ஐந்துவகைப்பட்ட. அவற்றைவிட்டுத் தன்வயத்ததாயவழியும் - அப் புலன்களுக்கு வசப்படுதலை யொழிந்து தனக்கு வசப்பட்டதான விடத்தும். அஃது - மனம். மடங்கி ஒருதலைப்பட்டு - விஷயங்களிற் செல்லாமல் மீண்டு ஒருவழிப்பட்டு. தாரணை - யோகத்தின் ஒரு அங்கம்; அது - கண்டம், இத யம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுள் ஒன்றில் எப்பொழுதுஞ் சிந்தைவைத் திருத்தல். மெய்யுணர்வில்லாவிடின் மனம் வசப்பட்டுநின்றாலும் முத்தியுண் டாகா தென்க. சிறப்பும்மை - 'எய்தியக்கண்ணும்' என்பதிலுள்ளது. எய்து தற்கு அருமை - மனம்வசப்படுவது அருமை யென்பதை. உணர்வு-அறிதலை யுடைய மனத்திற்குத் தொழிலாகுபெயர். எய்தியக்கண் - எதிர்காலவினை யெச்சம். பயம்=பயன். ஏ - தேற்றம். (௪)

௩௫௫. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் எத்தன்மைத்து ஆயின்உம் - யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண் பது - (அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது) அப்பொருளின்கணின்று மெய்யாகியபொருளைக் காண்பதே, அறிவு - மெய்யுணர்வாவது; (எ - று.)

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டுவழங்குகின்ற கற்பனை களைக் கழித்து நின்றஉண்மையைக் காண்பது என்றவா றாயிற்று; அஃதா வது - 'கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சொலிரும்பொறை' என்றவழி, அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதோர் குடியும், வேழநோக்கினையுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோர் இயற் பெயரும், மாந்தரஞ்சொலிரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும் ஒரு பொருளின்கட் கற்பனை யாகலின், அவ்வாறு உணராது நிலம்முதல் உயி ரீறாகிய தத்துவங்களின்தொகுதி யென உணர்ந்து அவற்றை நிலமுதலா கத் தத்தங்காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரணகாரியங்க ளிரண்டு மின்றி முடிவாய்நிற்பதனை உணர்தலாம். 'எப்பொருள்' என்ற பொதுமையான், இயங்குதிணையும் நிலைத்திணையு மாகிய பொருள்களெல் லாம் இவ்வாறே உணரப்படும்.

இதனுன், மெய்யுணர்வினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) யாதொருபொருள் - ஏதேனும் ஒருபொருள். யாதோர் இயல்பிற்ருய்த்தோன்றினும் - எந்தத்தன்மையுடையதாய்க் காணப்பட்டாலும். அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது - அத்தோற்றத்தைக்கண்டு நீங்காமல். கற்பனை - இல்லதைஉள்ளதாய் உண்டுசெய்தல். கழித்து - ஒழித்து. கோ-ஈத்திரியசாதியான். சேரமான் - சேரர்குலத்திற்பிறந்தவன். யானைக் கட்சேஎய் - யானையினது கண்ணேக்கம்போலுங் கம்பீரமான பார்வையையுடைய சேயென்னும்பெயருடையான். மாந்தரஞ்சொலிரும்பொறை-மக்கள் புகழும் அழகியபுகழ்ச்சொல்லின் பெரியசுமையையுடையவன். 'மாந்தரஞ் சேரலிரும்பொறை' எனவும் படிக்கலாம்: அப்பொழுது மாந்தரஞ்சேரலென்றும், இரும்பொன்றையென்றும் இரண்டுபெயராக எடுக்கவேண்டும்; மாந்தரஞ் சேரல் என்பதற்கு - மனிதர்க்குள் அழகையுடைய சேர னென்பதும், இரும்பொறை என்பதற்கு - மிக்கபெருமைக்குணமுடையவனென்பதும் பொருள்போலும். சேரன்என்பது சேரல் என வழங்குதலே "குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" எனச் சிலப்பதிகாரத்திலுங் காண்க. இரும்பொறையென் பது சேரரில்ஒருசாராரார்க்குவழங்குதலேயும்அறிக. "வேழநோக்கின் விறல்வெஞ் சேஎய்" என்றும், "ஓம்பாதீயுமாற்றலெங்கோ, மாந்தரஞ்சொலிரும்பொறை" என்றும் புறநானூற்றிற் காண்க. ஒருபொருளின்கண் - ஒருயிரோடுகூடிய ஒருடம்பினிடத்து. நிலம் முதல் உயிர் ஈறுகிய தத்துவங்கள் - நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் பஞ்சபூதங்கள் முதலிய இவ்விருபத்தைந்து தத்துவங்கள்; இருபத்தைந்து மல்லது உலகெனப் பிறிதொன்று இல்லையென்பது உண்மையென்பார், 'தத்துவங்களின்தொகுதி யென உணர்ந்து' என்றார்; இதுபற்றியே, "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரி வான் கட்டே யுலகு" எனக் கீழ் 'நீத்தார்பெருமை' என்னும் அதிகாரத்திற் கூறியதும். ஆதியிற் பரமாத்மாவினிடத்தினின்று பிரகிருதியும் புருஷனும் உண்டாகிச் சேர, அப்பொழுது பிரகிருதியினின்று மகத்தத்துவமும், பின்பு அதினின்று அகங்காரமும், பின்பு அதினின்று சப்தமும், சப்தத்தினின்று ஆகாசமும், ஆகாசத்தினின்று ஸ்பர்சமும், ஸ்பர்சத்தினின்று வாயுவும், வாயுவினின்று ரூபமும், ரூபத்தினின்று அக்கினியும், அக்கினியினின்று ரசமும், ரசத்தினின்று ஜலமும், ஜலத்தினின்று கந்தமும், கந்தத்தினின்று பூமியும் உண்டாயினவென்றும், அகங்காரம்—சாத்துவிகம் ராஜஸம் தாமஸம் என மூவகைப்படுமென்றும், தன்மாத்திரைகளும் பூதங்களும்—தாமசாகங்காரத்தின் காரிய மென்றும், மனம்—சாத்துவிகாகங்காரத்தினின்று உண்டான தென்றும், பஞ்சஞானேந்திரியங்களும் பஞ்சகருமேந்திரியங்களும்—ராஜசாகங்காரத்தில் தோன்றியவை யென்றும் அறிக. இங்ஙனம் எந்தப்பொருளினின்று எந்தப்பொருள் உண்டாயிற்றே அந்தக் காரியப்பொருளைக் காரணப்பொருளில் அடக்கிக்கொண்டே சென்றால் எல்லாத்தத்துவங்களும் நீங்க, பெயர் சாதி முதலான கற்பனைகளில்லாமல் எப்பொழுது மிருத்தலேயே சுபாவமாக்கொண்டதாய், அறிதற்குரியதாய், ஞானசொரூபியாய், ஜீவாத்மா

வுக்கு மேற்பட்டதாய், எல்லாவற்றிற்கும் ஆகாரமான பரமாத்மாவின் சொரூபம் விளங்கக் காணலாம். இக்குறளே மேல் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் ''எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருள், மெய்ப் பொருள் காண்ப தறிவு'' என்பதனோடு ஒப்பிடுக. இக்குறளை, 'விழுமியதுபயத் தல்' என்னும் அழகுக்கு உதாரணங் காட்டினர், வீரசோழியவுரைகாரர். அறிவுக்கு மேற்கோளாகக்காட்டினர், இறையனாரகப்பொருளுரையில் நக்கீ ரர். ஐங்கமம் - இயங்குதிணை. (நு)

நூநுசு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ - ள்.) ஈண்டு - இம்மக்கட்பிறப்பின்கண்ணே, கற்று - (உபதேச மொழிகளே அனுபவமுடையதேசிகர்பால்) கேட்டு, மெய் பொருள் கண் டார் - (அதனால்) மெய்ப்பொருளை உணர்ந்தவர், மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர்-மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்; (எ - று.)

'கற்று' என்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டு' என்றதனால் வீடுபேற்றிற்குரியமக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற் றும். ஈண்டுவாராநெறி - வீட்டுநெறி.

வீட்டிற்குநிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை - கேள்வி, விமரிசம், பாவனை என்பன: அவற்றுள் கேள்வி இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) இம்மக்கட்பிறப்பின்கண்ணே - இத்தமனிதசன்மத்திலேயே. அனுபவம்-தாம் கண்டு பழகுதல். தேசிகர்பால் - ஆசிரியரிடத்தில். இப்பிறப் பின்கண் வாராத நெறி-மூத்திவழி. கற்று என்றதனால்-கற்று எனப் பொதுப் படக் கூறியதனால். பலர்பக்கலினும் - பலரிடத்தும். பயிறலும் - நூற்பொரு ளைக்கேட்டுப் பழகுதலும். ''அரிதரிதுமானிடராதலரிது'' என்றார் ஔவை யாரும். ''அரிதாற்,பெரியயோனிகள் பிழைத்திவண்மானிடம்பெறலே,'' ''அரு மையினெய்தும்யாக்கையும்'' என்ற சிந்தாமணியாலும் மக்கட்பிறப்புப் பெற லரியதாத லுணர்க. முதற்பொருள் - தலைமைப்பொருள். கேள்வியெனினும், சிரவணமெனினும் ஒக்கும். விமரிசம்-ஆராய்ச்சி. பாவனை-கண்டுதெளிதல்.(சு)

நூநுள. ஓர்த்துள்ள மூள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ - ள்.) உள்ளம் ஒருதலை ஆ ஓர்த்து உள்ளது உணரின் - (அங்ஙனங் கேட்ட உபதேசமொழிப்பொருளை) ஒருவனுள்ளம் (அளவைகளானும் பொரு ந்துமாற்றானும்) தெளிய ஆராய்ந்து (அதனால்) முதற்பொருளை உணரு மாயின், பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா-(அவனுக்கு) மாறிப் பிறப்பு(உள தாக) நினைக்கவேண்டா; (எ - று.)

ஒருதலையா ஓர்த்து என இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே உரைத்தாம்.

இதனால், விமரிசம் கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளம் - மனம். அளவைகளானும் - பிரதியக்ஷம் முதலிய பிரமாணங்களாலும். பொருந்துமாற்றானும் யுக்தியினாலும். அதனுன் - அவ் வாராய்ச்சியால். மாறி - மீண்டு. ஒருதலையா ஓர்த்து - நிச்சயமாக அறிந்து. இயையும் - தொடரும். 'அளவைகளும் பொருந்துமாறும் மேலேயுரைத்தாம்' என்றது - கீழ் 'அருளுடைமை' என்னும் அதிகாரத்தில் ''நல்லாற்றானுடி யருளாள்க'' என்றதன் உரையில். ஓர்த்து - இது, ஓர்ந்து எனவும் வரும். உள்ளது - அழிவற்றது; முதற்பொருள்; ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும் பெயர். உள்ள - செயவெனெச்சம். 'உள்ளவேண்டா' என்பதை ஒருசொல்லாகக்கொண்டு பிறப்பு என்பதை எழுவாயாக் கொள்க: இனி, உள்ளவென்னும் வினையெச்சத்தைத் தொழிற்பெயர்போலப் பாவித்து, 'வேண்டா' என்பதற்கு எழுவாயாக்கினுமாம். விமரிசமெனினும், சிந்தித்தலெனினும், மநநமெனினும் ஒக்கும். (எ)

நூநிஅ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம் பொருள் காண்பது - மீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்விய பொருளைக் காண்பதே, அறிவு - (ஒருவர்க்கு) மெய்யுணர்வாவது; (எ - று.)

'பிறப்பென்னும்பேதைமை'எனவும்'சிறப்பென்னுஞ்செம்பொருள்' எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக்குற்றங்களுள் அவிச்சை ஏனையநான்கிற்குங் காரணமாத லுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்கூறினர். எல்லாப்பொருளினுஞ்சிறந்ததாகலான், வீடு 'சிறப்பு' எனப்பட்டது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னைஒன்றுங்கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லாவற்றையுங் கலந்துநிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனை 'செம்பொருள்' என்றார்; மேல் 'மெய்ப்பொருள்' எனவும், 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இதுபற்றியென உணர்க. அதனைக் காண்கையாவது - உயிர் தன் அவிச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாதுபாவித்தல்; இதனைச் சமாதியெனவும், சுக்கிலத்தியானமெனவும் கூறுப. 'உயிர் உடம்பின்நீங்குங் காலத்து அதனுன் யாதொன்று பாவிக்கப்பட்டது,அஃது அதுவாய்த்தோன்றும்'என்பது எல்லாஆகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல்*வேண்டும்: அதனுன், அதனை முன்னேபயிறலாய இதனின் மிக்க உபாயமில்லை யென்பது அறிக.

இதனுன், பாவனை கூறப்பட்டது.

---

* பி - மீ: வேண்டுதலான், அதனை

(கு - ரை.) சிறப்பு - எல்லாவற்றினுஞ் சிறத்தலையுடைய வீட்டுக்குத் தொழிலாகுபெயர். பிறப்பென்னும்பேதைமை - பிறப்பிற்குக் காரணமான பேதைமை, சிறப்பென்னுஞ்செம்பொருள் - சிறப்புக்குக்காரணமான செம் பொருள். இவற்றில், பிறப்பு சிறப்புக்கள் - பேதைமை செம்பொருள்களின் பய ஞதலால் காரியம்: பேதைமையும் செம்பொருளுங் காரணம்: காரிய மாகிய பிறப்புக் காரணமாகிய பேதைமையாகவும், காரியமாகியசிறப்புக் காரணமாகிய செம்பொருளாகவும் கூறப்பட்டன. குற்றங்கள் ஐந்து, கீழ் அறன்வலியுறுத்தலில் "வீழ்தாள்" என்ற குறளினுரையிற் கூறப்பட்டன. இவற்றுள், அவிச்சை மற்றைநான்கிற்குங் காரணமாதல், மேல் "காமம் வெகுளி மயக்கம்" என்ற குறளினுரையில் விளங்கும்; மற்றைநான்கு - அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன. தோற்றக்கேடுகள் - பிறப்பு இறப்புக்கள். கோன்மை - அளவிறந்தபெருமை. மூதற்பொருள் - பரம்பொருள். விகாரமின்றி - வேறுபடுதலில்லாமல். மேல் - மூன்னிரண்டு பாடல்களில். உயிர் - சீவான்மா. அதனோடு - பரமான்மாவோடு. பாவித்த லெனினும், பாவனையெனினும், தெளிதலெனினும், நிதித்தியாசனமெனி னும் ஒக்கும். "இணரெரிமுழக்கமன்ன சுக்கிலத்தியானமென்னும், கணை யெறிந்துகைப்ப வீழ்ந்து காற்படைசூழப்பட்டார்" என்ற சீவகசிந்தாமணி காண்க. பாவிக்கப்பட்டது - இடைவிடாதுஎண்ணப்பட்டதோ. அஃது - அவ் வுயிர். அதுவாய் - அந்தப் பாவிக்கப்பட்டபொருளாய். ஆகமம் - கடவுள்வாக் காகிய சாஸ்திரங்கள். அக்காலத்து - மரணகாலத்தில். பிறப்பிற்கேதுவாகிய பாவனை - பிரபஞ்சநினைவு. கேவலப்பொருளையேபாவித்தல் - பரமாத்மாவி னையே தியானித்தல். அதனை - அப்பிரஹ்மபாவனையை. பயிறல்-பழகுதல்.

ஈருகூ. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(இ - ள்.) (ஒருவன்), சார்பு உணர்ந்து - (எல்லாப்பொருட்குஞ்) சார் பாய அச்செம்பொருளை உணர்ந்து, சார்பு கெட - இருவகைப்பற்றும் அற, ஒழுகின்-ஒழுகவல்லனுயின்,—சார்தரும் நோய்-(அவனை முன்)சாரக்கடவன வாய்நின்ற துன்பங்கள்,—அழித்து மற்று சார்தரா - (அவ்வுணர்வொழுக்க ங்களை) அழித்துப் பின் சாரமாட்டா; (எ - று.)

ஆருபெயரால், சாரும்இடத்தையும், சார்வனவற்றையும் 'சார்பு' என் ரூர். ஈண்டு, ஒழுக்கமென்றது - யோகமெறியொழுகுதலை; அஃது - இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும்: அவற்றின்பரப்பெல்லாம், ஈண்டு உரைப்பிற் பெரு கும்: யோகநூல்களுட் காண்க. மற்றுச்சார்தரா என இயையும். சாரக்கட வனவாய்நின்ற துன்பங்களாவன - பிறப்பு அநாதியாய்வருதலின் உயிரான் அளவின்றிஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்தஉடம்புகளான் அனு பவித்தனவும் பிறந்தஉடம்பான்மூகந்துநின்றனவும் ஒழியப் பின்னும் அனு பவிக்கக்கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின்முன் இருள்போல ஞான யோகங்களின்முன்னர்க் கெடுதலான், 'அழித்துச்சார்தரா' என்ரூர்; இதனை

ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப்பிற்குக்காரண மாகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது.

மேல் மூன்றுஉபாயத்தானும் பரம்பொருளை உணரப் பிறப்புஅறு மென்றார்; அஃதுஅறும்வழிக் கிடந்தது்பங்களெல்லாம் என்செய்யு மென்னுங் கடாவை ஆசங்கித்து, அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையஉயிரைச் சாரமாட்டாமையானும், வேறுசார்பின்மையானுங் கெட்டுவிடு மென்பது இதனாற் கூறப்பட்டது.

(சு - ரை.) சார்பாய - ஆதாரமான. அச்செம்பொருளை - அந்தப்பிரஹ்மத்தை. அற - நீங்க. மூன் - இனி. பின் - பின்பு. சார்பு என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - சார்தற்குரிய இடமாகிய பரம்பொருளையும், பின்னது - ஒருயிரைச்சார்தலையுடைய இருவகைப்பற்றுக்களையுங் குறித்தன; தொழிலாகுபெயர். யோகநெறியாகிய இயமம் முதலியவற்றைப்பற்றி "செயற்கரிய" என்ற குறளினுரைக்குறிப்பிற் கூறப்பட்டன: ஆங்குக் காண்க. இருப்பு ஆசனம் என்பனவும், உயிர்நிலை வளிநிலை பிராணயாமம் என்பனவும், மனவொருக்கம் தொகைநிலை பிரத்தியாகாரம் என்பனவும், தாரணை பொறைநிலை என்பனவும், தியானம் நினைதல் என்பனவும் ஒருபொருளன. அளவின்றி நாட்டப்பட்ட - அளவில்லாமற்செய்து சேர்க்கப்பட்ட. இவை - சஞ்சிதகர்ம மெனப்படும். மூஙந்துநின்றன-அனுபவிக்க ஏற்றுக்கொள்ளப்பட்டு நின்றவை; இவை - பிராரப்தகர்மமெனப்படும். பின்னும் - இனிவரும் உடம்புகளால். ஆருகதர் - அருகனேத்தெய்வமாகவுடையவர். இதனை - மெய்ப்பொருளை யறிந்து இருவகைப்பற்றுங்கெட நடப்பவனைப் பிராரப்தகர்மமொழிந்த கர்மங்கள் அணுகாதநிலையை. இங்கே நல்வினையென்றது, சுவர்க்க வின்பம் முதலிய காமியபலன்களைத் தருவனவான யாகம் முதலியவற்றை. அந்த நல்வினையும் தீவினையும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதலில், பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவா மென்க. நோய் என்பதில், புண்ணியம் பாவம் என்னும் இரண்டின்பயனும் அடங்கும். மேல் - முன்னையமூன்றுபாடல்களில். மூன்றுஉபாயம் - கேள்விமுதலியன. அஃது-பிறப்பு. கடாவை - வினாவை. ஆசங்கித்து - தானாக எழுப்பி. சார்பின்மையானும் - ஆதாரமில்லாமையானும். இச்செய்யுளில் மற்றென்னும் இடைச்சொல், பின் என்னும் பொருளது. (கூ)

நூசூ0. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்.

(இ - ள்.) காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின் நாமம் கெட - (ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு) விழைவு வெறுப்பு அவிச்சை என்னும்இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங்கூடக் கெடுதலான், நோய் கெடும் - (அவற்றின்காரியமாய) வினைப்பயன்கள் உளவாகா; (எ - று.)

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யான்என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டும்என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்

கட் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட்செல்லுங் கோபமும் என வடநூலார் குற்றம்ஐந்தென்றார்; இவர் அவற்றுள் அகங்காரம் அவிச் சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான், மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்களின் மூன்னர் இக்குற்றங்கள்மூன்றும் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்துய் போலு மாகலின், அம்மிகுதிதோன்ற, 'இவைமூன்றின்நாமங்கெட' என்றார். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெட என்பது - எச்சத்திரிபு. நோய் என்பது - சாதியொருமை.

காரணமாய * குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய வினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல்வரக்கடவ துன்பங்களும் இலவாகல் மெய்யுணர்வின்பய னாகலின், இவையிரண்டுபாட்டும் இவ்வதிகாரத்த வாயின. இவ்வாற்றானே, மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தஉடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம்.

(கு - ரை.) விழைவு - விருப்பு. அவற்றின் - இக்குற்றங்களின். அவா - விருப்பம். அதன் மறுதலைக்கண் - தான்விரும்பியதற்குஎதிராயிருப்பதில். இக்குற்றங்கள் - முறையே வடமொழியில் அவித்யா, அஸ்மிதா, ராகம், அபிநிவேசம், த்வேஷம் என்னும் பஞ்சகிலேச மெனப்படும். காமம், ஆசை, அபிநிவேசம் என்பனவும், வெகுளி கோபம் த்வேஷம் என்பனவும், மயக்கம், அவித்தை என்பனவும் - ஒருபொருளன. பஞ்சுத்துய் - பஞ்சிற்பிறுடர் நூனி. அம்மிகுதி - ஞானயோகங்களின் சிறப்புமிகுதியும், குற்றங்களின் இழிவுமிகுதியும். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது, நாமம் என்பதன் இறுதியில். கெட்டால்என்பது கெட எனத் திரிந்தது என்பார், 'கெட என்பது எச்சத்திரிபு' என்றார். வரக்கடவ துன்பங்கள், ஆகாமியமெனப்படும். இவையிரண்டுபாட்டும் - கூ, கo - ஆம் பாடல்கள். இவ்வாற்றானே - இந்தவழியால். நிற்பன - இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவனவாய்நிற்பன. அது - உடம்பு. அதுகொண்ட வினைப்பயன்களுமே - பிராரப்தகர்மமயனும் மாத்திரமே. மெய்யுணர்ந்தவர் இப்பிறப்பில் இனிக் கருமஞ்செய்யார்; அவர்க்கு மீண்டும் பிறப்பில்லை; முந்தியசன்மங்களிற் செய்த கருமங்களுள் முந்தின பிறப்புக்களில் அனுபவித்தவை முன்னமே கழிந்தன; அவைபோகமிச்சமாகவுள்ளவற்றுள் இப்பிறப்பில் அனுபவிக்க ஏற்பட்டவற்றில் மெய்யுணர்தற்குமுன் கழிந்தவைபோக மற்றவைமாத்திரமே மெய்யுணர்ந்தபின்பும் இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவனவாய்நிற்கும்; மற்றை யாவும் ஒழியும் எனக் கருத்தைத் தெளிக: (ஒழிவது, கல்வினை அவருடைய நண்பரையும் தீவினை அவருடைய பகைவரையுஞ் சேர்தலாலென்ப.) எனவே, சஞ்சிதம்கழிய, ஆகாமியம் இன்றாக, பிராரப்தம்மாத்திரமே நிற்கும் என்பது-தேர்ந்தபொருள். காமம் வெகுளி மயக்கம் - பெயர்ச்செவ்வெண்; இது, மூன்று என்னுந் தொகை பெற்றுவந்தது. காரணகாரியசம்பந்தம்பற்றி, மயக்கம் காமம் வெகுளி யென்பதே முறையாயினும், இங்குச்செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார். (கo)

* பி - மீ: அக்குற்றங்களைக்...இருவினைகளை.

ங.எ - ஆம் அதிகாரம்—அவாவறுத்தல்.

அஃதாவது - முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவு நின்றவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனை பற்றி ஒரோவழித் துறக்கப்பட்டபுலன்கள்மேற் பழையபயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே: அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வான் அறுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு - சஞ்சிதமும் ஆகாமியமுமாகிய கருமங்களின் சம்பந்தத்தை யொழித்தவர்க்கு. நடுவு நின்றவுடம்பும் அதுகொண்டவினைப் பயன்களும்-மெய்யுணர்ந்தகாலத்துள்ள இப்பிறப்பும், அதில் அனுபவிக்கவேண்டிய பிராரப்தகருமப் பயன்களும். வேதனைபற்றி-தீவினைப்பயனையனுபவித்தலினாலான துன்பத்தினால். வேதனை பற்றி நினைவுசெல்லும் என இயையும். ஒரோவழி - சிலசமயத்தில். பழைய பயிற்சிவயத்தான்-பழமையான பழக்கவசத்தால்; இது, வாசனையெனப்படும். அவிச்சையென-அவித்தையின்பாற்பட்டு. பிறவிக்கு வித்தாம்-பிறப்பிற்கு மூலகாரணமாம். மெய்ப்பொருளுணர்வு - பரம்பொருளைத் தியானித்தல். மெய்யுணர்தல் அவாவறுத்தற்குக் காரண மாதலின், அக்காரணகாரியமுறைபற்றி மெய்யுணர்வின்பின் அவாவறுத்தல் வைக்கப்பட்டதென்க. அவாவறுத்தல் - இரண்டாம்வேற்றுமைத்தொகை. 'அவாவாவது-பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல்நிகழும் ஆசை' என்பர்.

ங.சுக. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(இ - ள்.) எல்லா உயிர்க்குமெ எஞ்ஞான்றுமெ தவாஅ பிறப்பு ஈனும் வித்து - எல்லாவுயிர்கட்கும் எக்காலத்துங் கெடாதுவருகின்ற பிறப்பினை விளைக்கும் வித்து, அவா என்ப - அவா என்றுசொல்லுவர், (நூலோர்).

உடம்புநீங்கிப்போங்காலத்து அடுத்த வினையும், அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனை 'பிறப்பீனும்வித்து' என்றும்; கதிவயத்தானுள்ள தாய அவ்வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மைநிரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி என்னுங் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின், 'எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்' என்றும்; இஃது எல்லாச்சமயங்கட்கும் ஒத்தலான், 'என்ப' என்றுங் கூறினார்.

இதனான், பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) விளைக்கும்வித்து - உண்டாக்குகிற விதை; மூலகாரணம். 'நூலோர்' - தோன்றுமெழுவாய் அடுத்த வினையும் - வரும்பிறப்பில் அனுபவி

க்கவேண்டிய கருமமும். அது காட்டுங் கதிநியித்தங்களும் - அக்கருமம் காண் பிக்கிற மக்கட்கதி, விலங்குகதி முதலியனவும், அவற்றையடையுங்காரணங் களும். கதிக்கண்-கதியினிடத்து. முறையே - ஒன்றன்பின் ஒன்றாய். உதிப்ப- உண்டாக. மோகம் - இது, பொருளின்உண்மையையறைத்து விபரீதஞான மூண்டாக்குவது. ''ஆர்வவேராரிந் தச்சணந்திபோய்'' எனச் சிந்தாமணியாரும் ஆசையைப் பிறப்பிற்கு வேர் எனக் கூறியிருப்பதை அறிக. கதிவயத்தான் உளதாய அவ்வுயிர்வேறுபாட்டினும் - மக்கட்கதி முதலிய பலவகைப்பிறப்புக் களே யடைதலாற் பலவகைப்பட்ட எல்லாவுயிர்களினிடத்தும். அவை - அக் கதிகள். தன்மைதிரியும் - குணம்மாறுபடும். உற்சர்ப்பிணியாவது - உலகம் வாழ்நாள் போகம் முதலானவற்றுள் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவ சர்ப்பிணியாவது அவற்றுள் தேய்பிறைபோலச் சுருங்குங்காலம். 'காலம் நித் தியமாகையால் அழியாமலிருக்கும் இயல்பினையுடையதாகி உத்ஸர்ப்பிணிஅவ ஸர்ப்பிணிஎன்று இருவகைப்படும்; இவற்றுள், அவஸர்ப்பிணிகாலம்-நன்னற்கா லம்,நற்காலம்,நற்றீக்காலம், தீநற்காலம், தீக்காலம்,தீத்தீக்காலம் என்றுசொல் லப்பட்ட ஆறுவகையினை யுடையது; இப்படியே, உத்ஸர்ப்பிணிகாலமும் இந்த ஆறுவகையினைக் கீழ்மேலாகவுடையது; இந்த உத்ஸர்ப்பிணிகாலம், தீத்தீக்காலந்தொடங்கி நடக்கும்; இந்தக்காலத்தில் பிராணிகளுக்கு ஆயுளும் சரீரவுயர்வும் முதலியன சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல வளர்ந்துகொண் டேவரும்; நன்னற்காலந் தொடங்கி நடக்கும் அவஸர்ப்பிணிகாலத்திலோ வெனின், பிராணிகளுக்கு ஆயுளும் சரீரவுயர்வும் முதலியன அபரபட்சத் துச் சந்திரன்போலக் குறைந்துகொண்டேவரும்; இப்பொழுது நடக்கிறது, அவஸர்ப்பிணியின் ஐந்தாங்காலமாகிய தீக்காலம்; உத்ஸர்ப்பிணி யென்பதற்கு- வளருங்காலமென்றும், அவஸர்ப்பிணியென்பதற்கு - குறையுங்காலமென்றும் அருத்தமாம்; இவ்விரண்டுகாலமும் ஒருதரம் நடந்துமுடிந்தால், அதுஓர்யுக மாம்' என்பது - ஜைநசமயக்கொள்கை. அதுவித்தாதல்-அவா பிறப்பிற்குக் காரணமாதல். வேறுபடாமையின் - வித்திபாசப்படாததனால். இஃது-அவா பிறப்பிற்குவித்தென்பது. உம்மைகள் இரண்டும் - முற்றுப்பொருளன. தவா- றுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்; அளபெடை ஓசைநிறைத்தற்குவந்தது. அவாவைமாத்திரம் வித்தாகஉருவகப்படுத்தி, பிறப்பைப்பயிராக உருவகப் படுத்தாதது - ஏகதேசஉருவகவணி. (க)

நஉஉ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ - ள்.) வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - (பிறப்புத் துன்பமாத லறிந்தவன் ஒன்றை) வேண்டிற் பிறவாமையை வேண்டும்; அது வேண் டாமை வேண்ட வரும் - அப்பிறவாமைதான் (ஒருபொருளேயும்) அவாவா மையை வேண்ட (அவனுக்குத் தானே) உண்டாம்; (எ - று.)

அநாதியாகத் தான் பிறப்புப்பிணிமூப்புஇறப்புக்களால் துன்பமுற்றுவரு கின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணே யாகலின் 'பிற

வாமையையேண்டும்' என்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளே அவாவின் அது பிறப்பீனும்வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே வீளைத்தலின் 'அது வேண்டாமைவேண்ட வரும்' என்றுங் கூறினர். பிற வாமையின் சிறப்புக்கூறிப் பின் அதுவரும்வழி கூறத் தொடங்குகின்றமை யின், மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) வேண்டும் - விரும்புவான். அவாவாமை - ஆசைப்படாமை. இன்பத்தின்கண்ணே - இன்பத்தினிடத்திலேயே (உண்டாம்). ஈண்டைச் சிற் றின்பம்கருதி - இவ்வுலகத்து அற்பசுகத்தை ஒருபொருளாகநினைத்து. அவா வின் - விரும்பினால். வினைத்தலின் - உண்டாக்குதலால். அதுவரும்வழி - பிற வாமையுண்டாகும் உபாயம். கால்-காலம் என்பதன் கடைக்குறை. 'வேண்டும்' என்னுஞ் செய்யுமென்முற்றுக்கு - 'பிறப்புத்துன்பமாதலறிந்தவன்' என்பது- தோன்ற எழுவாய். சொற்பொருட்பின்வருநிலை. (உ)

ஈசுஈ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(இ - ள்.) வேண்டாமை அன்ன விழு செல்வம் - (ஒருபொருளேயும்) அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம், ஈண்டு இல்லை - (காணப்படுகின்ற) இவ்வுலகின்கண் இல்லை; (இனி, அவ்வளவேயன்றி), ஆண்டுமம் - (கேட்கப்படு கின்ற) துறக்கத்தின்கண்ணும், அஃது ஒப்பது இல் - அதனை ஒப்பது இல்லை.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேல்நோக்கக் கீழாதலுடை மையின், தனக்குமேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு இரண்டுலகினும் ஒப்பதில்லை யென்றுங் கூறினர். ஆகமவளவை போலாது காட்சியளவை எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது.

பிறவாமைக்குவழியாமெனவும் விழுச்செல்வமாமெனவும், வேண்டா மையின்சிறப்பு, இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) விழுமிய - சிறப்புடைய. கேட்கப்படுகின்ற - காணப்படாத என்றபடி. அதனை ஒப்பது - அவாவாமையையொக்கும் வேறுசிறந்தபொருள். மேன்மேல் நோக்க-ஒன்றுக்குமேல்ஒன்றைப் பார்த்துக்கொண்டேபோக. கீழா தல் உடைமையின்-தனக்குமேற்பட்டதற்குத் தான் கீழ்ப்படுத லுடைமையால். இரண்டுலகினும் - பூலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும். ஆகமவளவை போலாது - சாஸ்திரப்பிரமாணம்போலாகாமல். காட்சியளவை - பிரதியட்சப் பிரமாணம். தெளியப்படுதலின் - சந்தேகமில்லாமல் அறிந்தநம்பப்படுதலால். வகுத்து - பிரித்து. 'முற்கூறப்பட்டது' என்றது, 'ஈண்டில்லை' என்றதை. ஆண்டும், உம்மை - இறந்ததுதழுவிய எச்சம்; உயர்வு சிறப்பாகவுங் கொள்ள லாம். அஃது என்பதன் ஆய்தம், அங்கு உயிர்போல ஒலித்தது. (ஈ)

ஈசுஉ. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ - ள்.) தூஉய்மை என்பது அவாஇன்மை-(ஒருவர்க்கு) வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அது வாஅய்மை வேண்ட வரும் - அவ் வவாவில்லாமைதான் மெய்ம்மையைவேண்டத் தானேயுண்டாம்; (எ - று.)

வீடாவது உயிர்அவிச்சைமுதலிய மாசுநீங்குத லாகலின் அதனை 'தூய்மை' என்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்து 'தூய்மை யென்ப தவா வின்மை' என்றும், மெய்ம்மையையுடைய பரத்தை ஆருபெயரான் 'மெய் ம்மை' என்றுங் கூறினர். மற்று - மேலையதுபோல வினைமாற்றின்கண்வந் தது. வேண்டுதல் - இடைவிடாதுபாவித்தல்.

அவாவறுத்தல் வீட்டிற்குப்பரம்பரையானன்றிநேரேதுஎன்பதூஉம், அது வரும் வழியும் இதனுற் கூறப்பட்டன.

(கு - ரை.) தூய்மை - பரிசுத்தத்தன்மை; அதனையுடைய முத்திக்குப் பண்பாகுபெயர். வாய்மை, மெய்ம்மை - உண்மை; இவையும், உண்மையான தன்மையையுடைய பரம்பொருளுக்குப் பண்பாகுபெயர். வேண்ட - விரும் புதலால். தூய்மை - காரியம், அவாவின்மை - காரணம். 'தூய்மைக்குக்காரண மும் அவாவின்மை' என்று சொல்லவேண்டுவதை 'தூய்மையென்ப தவா வின்மை' எனக் காரணம் காரியமாகவே சொல்லப்பட்டது - உபசார வழக்கு. பரம் - கடவுள். மேலையதுபோல - இவ்வதிகாரத்தில் இரண்டாம் பாட்டிலுள்ளதுபோல. முதல்வாக்கியத்தில் முத்திக்குக்காரணம் இன்ன தென்றுகூறி, பின்வாக்கியத்தில் அக்காரணமுண்டாகும் உபாயம் கூறத் தொடங்குகின்றமையின், இடையில்வந்த மற்று என்னும் இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளதாம். பரம்பரையானன்றி - முறையே காரணமாவ தல்லாமல். அதுவரும்வழி - அவாவின்மையுண்டாகும் உபாயம். என்பது - செயப்படுபொருள் கருத்தாப்போலக் கூறப்பட்டது: செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளில்வந்ததென்க. இது "ஊரெனப்படுவது உறையூர்" என்பது போலச் சிறப்புத்தோன்ற நிற்கும். அளபெடை - இரண்டடியிலுஞ் செய்யு ளோசைநிறைப்பது: எதுகையில் அளபெடைவந்தது, அளபுத்தொடையாம்.

ஙசுஞி. அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர்.

(இ - ள்.) அற்றவர் என்பார் - (பிறவி) அற்றவரென்று சொல்லப்படு வார்,—அவா அற்றூர் - (அதற்கு நேரேதுவாகிய)அவா அற்றவர்கள்; மற் றையார் - (பிறவாதுக்களற்று) அஃதொன்றும் அறாதவர்கள், அற்று ஆக அற் றது இலர் - (அவற்றுற் சிலதுண்பங்கள் அற்றதல்லது) அவர்போற் பிறவி அற்றிலர்; (எ - று.)

இதனுன், அவாவறுத்தாரதுசிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத் தானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) அதற்கு - பிறவிக்கு. பிற எதுக்களற்று - மற்றை மண் பெண் பொன் முதலிய அவாவப்படும்பொருள்க ளொழிந்து; வெகுளிமுதலிய பிற

குற்றங்களொழிந்தென்றுங் கொள்ளலாம். அஃதொன்றும் - பொருள்களில் ஆசைமாத்திரம். அற்று ஆக - அவாவற்றவரைப்போன்ற அப்படிப்பட்ட தன்மை தம்மிடத்திலுள்ளதாக. அற்றது இலர் - பிறவியற்றதில்லாதவராவர். விதிமுகத்தானும் - உடன்பாட்டுவகையாலும். விதிமுகத்தாற் கூறினது - "அற்றவரென்பா ரவாவற்றூர்" என்ற முதல்வாக்கியம். எதிர்மறைமுகத்தாற் கூறினது - "மற்றையாரற்றாகவற்றதிலர்" என்ற இரண்டாம்வாக்கியம். அற்றவர் என்பது - தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. அற்றதிலர் - உயர்திணை தொடர்ந்த அஃறிணைத்தொழிற்பெயர் அவ்வுயர்திணைமுடிபையே கொண்டது, திணைவழுவமைதி; [நன். பொது. உசு.] அற்று - அவ்வளவினது: சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். (டு)

உசுசு. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ-ள்.) ஒருவனை-(மெய்யுணர்தல் ஈறுகிய காரணங்களெல்லாம் எய்தி அவற்றுன்வீடெய்தற்பாலனாய) ஒருவனை, வஞ்சிப்பது - மறவிவழியாற்புகுந்து (பின்னும் பிறப்பின்கண்ணேவீழ்த்துக்)கெடுக்கவல்லது, அவா—; அஞ்சுவதுஎ அறன் - (ஆகலான், அவ்வவாவை) அஞ்சிக்காப்பதே துறவறமாவது.

'ஒரும்' என்பன - அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மைவேண்டலை ஒழிந்து பராக்காற் காவாஞாயின், அஃது இடமாக அவன் அறியாமற் புகுந்து, பழையஇயற்கையாய்நின்று, பிறப்பினை உண்டாக்குதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். காத்தலாவது - வாய்மைவேண்டலை இடைவிடாதுபயின்று, அதுசெய்யாமற் பரிகரித்தல்.

இதனுன், அவாவின்குற்றமும், அதனைக்காப்பதே அறமென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) மெய்யுணர்தல் ஈறுகிய காரணங்களெல்லாம் எய்தி - நிலையாமையறிதல், துறவு, மெய்யுணர்தல் என்கிற முத்திபெறுதற்குரிய காரணங்கள்யாவும் பொருந்தி. மறவிவழியாற் புகுந்து - (அவன்) சோர்ந்திருக்கிறசமயம்பார்த்து நுழைந்து. காப்பதே - தடுப்பதே. ஒரும் என்பது அசைநிலையாய்வருதல், "இளந்தவல்லவேறுபிறதோன்றினுங், இளந்தவற்றியலாலுணர்ந்தனர்கொளலே" என்னுந் தொல்காப்பிய விடைச்சொல்லியற்புறனடைச்சூத்திரத்து உரையில் அமைக்கப்பட்டது. போந்த - வந்த. வாய்மைவேண்டலை ஒழிந்து - பாம்பொருளைவிரும்புதலை விட்டு. பிரபஞ்சவிஷயத்தில் அறிவுசெலுத்துதல், பராக்கு எனப்படும்: 'பராக்கால்'என்பதற்கு-கருத்துப்பொருளாக, சோர்வினால் அல்லது அஜாக்கிரதையினாலென்று உரைப்பர். காவாஞாயின் - அவ்வாசையைத் தடுக்காமற்போவாஞாஞல். அஃது இடமாக - அதுவேவழியாக. பழைய இயற்கையாய்நின்று - முன்னேயபடியாய்நின்று. அதனை - அங்ஙனம் அவா ஒருவனைக்கெடுக்கும்நிலையை. பயின்று - பழகி. அது செய்யாமல் பரிகரித்தல் - ஆசை தன்னைக்கெடாதபடி நீக்குதல். அதனைக்காப்பதே - ஆசையைத்தடுப்பதே. பிரிநிலையோடு தேற்றப்பொரு

ஞணர்த்தும் 'அறனே' என்னும் ஏகாரம், பிரித்து 'அஞ்சுவது' என்பதனோடு கூட்டப்பட்டது. இப்பாட்டில் முன்வாக்கியத்திற்கூறிய சித்தாந்தத்திற்குப் பின் வாக்கியம் காரணம். (சு)

நசுஎ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

(இ - ள்.) அவாவினை ஆற்ற அறுப்பின்-(ஒருவன்) அவாவினை (அஞ்சித்) துவரச்செடிக்கவல்லனுயின், தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - (அவனுக்குக்) கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான் விரும்புநெறியானே உண்டாம்; (எ - று.)

கெடாமை - பிறவித்துன்பங்களான் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது, மேற்சொல்லிய துறவறங்களை. வினை - சாதியொருமை. தான் விரும்பும்நெறி-மெய்வருந்தாநெறி. அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ்செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து.

இதனுன், அவாவறுத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) துவர-முழுவதும். கெடாமை - அழியாது முத்திபெறுதல். தான்விரும்புநெறியானே-அவன்வேண்டியவழியால்: மிகவளியவழியாய் என்றபடி. துறவறங்கள்-விரதமும் ஞானமும். மெய்வருந்தாநெறி-உடம்புவருந்த வேண்டாதவழி. முற்ற - முழுவதும். ஆற்ற - நன்றாய். (எ)

நசுஅ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேடற்
றவாஅது மேன்மேல் வரும்.

(இ - ள்.) அவா இல்லார்க்கு - அவாஇல்லாதார்க்கு, துன்பம் இல் ஆகும் - (வரக்கடவதொரு)துன்பமும் இல்லை; அஃது உண்டுஎல் - (ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாம்இன்றி)அஃதுஒன்றும் உண்டாயின், தவாஅது மேல்மேல் வரும் - (அதனுனே எல்லாத்துன்பங்களும்) முடிவின்றி இடைவிடாமல் வரும்; (எ - று.)

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்ட தாகலின், ஈண்டு 'துன்பம்' என்றது - இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. 'தவாஅது மேன்மேல் வரும்' என்றதனுன், மூவகைத்துன்பங்களுமென்பது பெற்றும்.

இதனுன், அவாவே துன்பத்திற்குக்காரணமென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறகாரணங்கள் - கோபம்முதலிய மற்றைப்பிறவிக்காரணங்கள். அஃதுஒன்றும் உண்டாயின் - ஆசையொன்றுமாத்திரம் இருக்குமாஞல். முடிவின்றி - ஒழிதலில்லாமல், எல்லையில்லாமல். முகந்துநின்ற துன்பம் - இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவதாக அமைந்த பிராரப்த கருமப்பயனுகிய துன்பம். முன்பே - முற்பிறப்பிலே. முன்பேசெய்துகொண்டதாகலின் - சஞ்சிதகருமத்திலிருந்து எடுத்துக்கொண்டதாதலால் என்றபடி. இது

பொழுது - இப்பிறப்பில். இதுபொழுதுசெய்துகொள்வன, ஆகாமியகர்மமாகும். ழவகைத்துன்பங்கள் என்றது சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம்என்பவற்றை. மூவகைத்துன்பம் என்பதற்கு ஆத்யாத்மிகம் முதலிய மூன்றுவகைப் பிறவித்துன்பங்களென்றலு முண்டு. அஃது - இங்கு ஆய்தம் மெய்போல் ஒலித்தது. தவாஅது - அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. மேன்மேல் - அடிக்கு, இடைவிடாமை குறிக்கும். இரண்டாம்வாக்கியத்திலுள்ள 'வரும்' என்பதற்கும், முதல்வாக்கியத்திலுள்ள 'துன்பம்'என்பதே எழுவாய்.

கூசுசூ. இன்ப மிடையரு நீண்டு மவாவென்னுங்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ - ள்.) அவா என்னும் - அவா என்று சொல்லப்படுகின்ற, துன்பத்துள் துன்பம் - மிக்கதுன்பம், கெடின் - (ஒருவற்குக்) கெடுமாயின், ஈண்டுஉம் இன்பம் இடை அரிது - (அவன் வீடுபெற்றவழியேயன்றி) உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையரிது; (எ - று.)

துன்பத்துள்துன்பம் - ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந் துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துள்துன்பம்' என்றும், அதுகெட்டார்க்கு மனந் தடுமாறுது நிரம்பிநிற்றலான் 'ஈண்டுமின்பமிடையரிது' என்றுங் கூறினர். இனி, 'ஈண்டும்' என்பதற்கு - பெருகும் என்று உரைப்பாரும் உளர்.

இதனுன், அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடுநின்றே எய்துவரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) ஈண்டும் - இம்மையிலும் என்றபடி. இடையரிது - நடுவில் நீங்காது. ஏனை - மற்றை. இன்பத்துக்குந் துன்பத்துக்கும் அனுபவத்தில் எவ்வளவு வித்தியாசமுண்டோ, அவ்வளவுபேதம் மற்றைத்துன்பங்களினும் இவ்வவாவாந்துன்பத்துக்குக் கொடுமையி லுள்ள தென்க. துன்பத்துள்துன்பம் - துன்பங்களுள்ளுங் கொடிய துன்பம். விளைவின்கண்ணே யன்றி - பயனனுபவிக்குமிடத்துமாத்திரமே யல்லாமல். தோற்றத்தின் கண்ணும்-தோன்றும்பொழுதும். மற்றையபிறவிக்காரணங்களெல்லாம் அப்பொழுதே [இம்மையிலே]துன்பந்தருவன வாகாமல், பின்பு [மறுமையில்] பயன் தரும்பொழுது துன்பமாய் முடியும்; இவ்வவாவோ தோன்றினதுமுதல் இம்மையிலேயே துன்பந்தருவ தென்க. இங்கு அவாவாகியகாரணம் துன்பமாகியகாரியமாக அபேதப்படக்கூறப்பட்டது, உபசாரவழக்கு. அது கெட்டார்க்கு-அவா அற்றவர்க்கு. தடுமாறுது - கண்டபொருள்களிலும் அலையாமல். நிரம்பிநிற்றலான் - திருப்தியடைந்துநிற்பதனால். முதலுரைக்கு, அரிது - எதிர்மறைவினைமுற்று: ஈண்டு - இகரச்சுட்டடியாப்பிறந்து ஏழாம்வேற்றுமையிடப்பொருள் குறிக்கும் இடைச்சொல்; உம்மை - எச்சப்பொருளது. இரண்டாமுரைக்கு, அரிது-எதிர்மறைவினையெச்சம்; ஈண்டும் - செய்யுமென்முற்று. வீட்டின்பம்

உடம்பொடு நின்றே எய்துவர் - முத்தியுலகத்து நிரதிசயப்பேரின்பத்தை இவ்வுடம்போடு கூடிநின்றபோதும் [இம்மையிலும்] அடைவர். துன்பத்துள் துன்பம் - "இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந், துன்பத்துள் துன்பங் கெடின்" என்பதிற்போலக் காண்க. (கூ)

ஈஎ0. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ - ள்.) ஆரா - (ஒருகாலும்) நிரம்பாத, இயற்கை - இயல்பினையுடைய, அவா - அவாவினை, நீப்பின் - (ஒருவன்) நீக்குமாயின், அ நிலைஏ பேரா இயற்கை தரும் - (அந்நீப்பு அவனுக்கு) அப்பொழுதே (எஞ்ஞான்றும்) ஒருநிலைமையனும் இயல்பைக் கொடுக்கும்; (எ - று.)

நிரம்பாமையாவது - தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல்வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்க தென்பது கருத்து. களிப்புக்கவர்ச்சிகளும் பிறப்புப்பிணிமூப்புஇறப்புக்களும் முதலாயின இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின், வீட்டினை 'பேராவியற்கை' என்றும்;அஃது அவா நீத்த வழிப்பெறுதல் ஒருதலையாகலின், 'அந்நிலையேதரும்' என்றுங்கூறினார்; "நன்றாஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா நீத், தொன்றாக்கிடந்தவரும் பெரும்பா ழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து, சென்றாங்கின்பத்துன் பங்கள் செற்றுக்களைந்துபசையற்று, லன்றேயப்போதேவீடு மதுவே வீடு வீடாமே" என்பதூஉம் இக்கருத்தேபற்றிவந்தது: இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்த னென்ப.

இதனுள்,வீடாவது இது வென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதா மென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - சை.) ஒருகாலும் நிரம்பாத - எப்பொழுதுந்திருப்தியடையாத. நீக்குமாயின் - நீக்குவானாஞல். அந்நீப்பு - ஆசையைநீக்கிநின்ற அந்நிலைமை. எஞ்ஞான்றும் ஒருநிலைமையனும் இயல்பை - எப்பொழுதும் மாறுபடாது அழிவின்றியிருக்கும் முத்திநிலையை. தாமே யன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய - செல்வந் தாமேயல்லாமல் அவற்றின்பயனாஞ சிற்றின்பங்களும் நிலைத்திராவாதலால் விரும்பத்தகாதவையான. பொருள்களில் ஆசைவைத்துக்கொண்டேபோஞல் எவ்வளவுபொருள் கிடைப்பினும் திருப்தியுண்டாகாதபடி அவ்வாசை மேன்மேல்வளர்தல்பற்றி அவ்வாசையின் முடிவு எப்பொழுதும் அத்திருப்தியே யாதலால், ஆசையை முதலிலேயே விட்டுவிடவேண்டு மென்பதாம். "களிப்புங்கவர்வு மற்றப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று, ஒளிக்கொண்டசோதியமா யுடன்கூடுவ தென்றுகொலோ" (திருவாய்மொழி, 2, 3, 10) என்றது கொண்டு "களிப்புக்கவர்ச்சிகளும்" என்ற வாக்கியம் தொடங்கியுள்ளது. களிப்பு - கருதிய விஷயம் கிடைத்தஞலான மகிழ்ச்சி. கவர்ச்சி - அதுகிடையாதபோது மனத்தைக்கவர்ந்த நிலை: துன்பமென்றபடி. பிறப்பு - களிப்புக்கவர்வுகட்குக் காரணமான

பிறவி. நிரதிசய இன்பத்ததாய் - தனக்குமேம்பட்ட இன்பமொன்றில் லாத பேரின்பத்தையுடையதாய். பேராவியற்கை - மாறுபடாத இயல்பு. அஃது - அம்முத்தியை. "நன்முஞானங்கடந்து" என்னும் மேற்கோள் - திருவாய்மொழி, 8, 8, 6. அறிவுக்குப்புலப்படுகிற ஐம்புலன்களையும் நன் முகக்கழித்துச் சென்று அவற்றிற்குக்காரணமான ஐம்பொறிகளையும் தலை யெடாதபடிசெய்து ஆன்மாவோடுஒற்றுமைப்பட்டுள்ள கடத்தற்காரிதான பரப்பையுடைய அழிதலில்லாத பிரகிருதியின்சொரூபத்தை மிக அறிந்து அதற்கும்அப்பாற்சென்று இன்பதுன்பங்களுக்குக்காரணமான புண்ணியபாப கருமங்களை விட்டொழித்து அவற்றிலுண்டான ருசிவாசனைகளும் ஒழிந்தால், அந்தாளிலே அம்முகூர்த்தத்தில்தானே முத்தியும் உண்டாய்விடுவது; அந்தப் பற்றறுதியே ஆத்மானுபவரூபமான மோகூமும். பகவதநுபவரூபமான மோகூமுமாகும் என்பது இதன்பொருள். சீவன்முக்தன் - பிழைத்திருக்கை யிலேயே முத்திபெற்றவன்; துறந்தஞானமடைந்து பிறப்பறுகிறவன். இது- இன்னது. அஃது - வீடு. அப்பொழுதே - அவாவறுத்தபொழுதே. அக் நிலையே, ஏகாரம் - காலதாமசமின்மையை விளக்கும்; தேற்றப்பொருளதாக வும், பிரிநிலைப்பொருளதாகவுங் கொள்ளலாம். (கo)

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றான், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறம் கூறினார்; இனி, பொருளும் இன்பமும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

(கு - ரை.) இவ்வாற்றான் - கீழ் மூப்பத்தைந்து அதிகாரங்களிற் கூறிய இவ்வகையால். மறுமை - இறந்தபின்வரும்நிலை. பயத்தல்-தருதல். கூறுவார்- சொல்லுபவர். அவற்றின் - பொருளின்பங்களின். ஊழ் - சஞ்சாந்தரகர்மம், பழவினை. வலி - உறுதி. "வீடொன்றுபாயிரகாண்குவிளங்கறம், நாடியழப் பத்து முன்றெளிநூழ்-****வள்ளுவர்சொன்னவகை" என்று திருவள்ளுவ மாலையிற் கூறிபிருத்தலால், கீழ் அதிகாரத்தோடு அறத்துப்பால் முற்றப் பெற்ற தென்றும், ஊழ் என்னும் இவ்வதிகாரம் அறத்துப்பாலிலும் பொருட் பாலிலும் சேராமல் இடையில் தனியேநிற்ப தென்றும் அறியப்படுகிறது; இனி, அந்நூலிலேயே "அறநான்கறிபொருளேழொன்று காமத், திறமூன் றெனப் பகுதிசெய்து" என்று கூறினபடி பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறத்துப்பாலினுட்பிரிவுகள் நான்காகக் கொள்ளுதலு மொன்று. இந்த ஊழ் என்ற அதிகாரம் அறத்துப்பாலிற்சேர்ந்த தென்பதே பரிமேலழ கர் கொள்கையென்பது, மேற் பெறப்படும்.

ஈஅ - ஆம் அதிகாரம்.—ஊழ்.

அஃதாவது-இருவினைப்பயன் செய்தவினையேசென்று அடைதற்கு ஏது வாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன- ஒருபொருட்கிளவி. இது - பொருளின்பங்க ளிரண்டற்கும் பொதுவாய்

ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடை மையானும், அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இருவினைப்பயன் - புண்ணியம் பாவம் என்னும் இரண்டு வகைக்கருமங்களின் பலன். அது செய்தவனையே விடாது சென்று அடை தலை "பல்லாவுளுப்புவிடினுங்குழக்கன்று, வல்லதாய் தாய்நாடிக்கோட லைத் - தொல்லைப், பழவினையுமன்னதைத்தே தற்செய்த, கிழவனைநாடிக் கொளற்கு" என்னும் நாலடியாரினாலும் அறிக. நியதி - தவறுமுறைமை. இது - ஊழ். இயைபு - சம்பந்தம். இறுதிக்கண் - முடிவில். ஒருவன்செய்த அறத்தால் விளையும் பயனும் ஊழ்வினை யாருதலால், 'அறத்தோடு இயைபு டைமையானும்' என்றது.

ஈஎக. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(இ - ள்.) (ஒருவற்கு), கை பொருள் ஆகு ஊழால் - கைப்பொருள் ஆதற்குக்காரணமாகிய ஊழால், அசைவு இன்மை தோன்றும் - முயற்சி உண்டாம்; போகு ஊழால் - (அஃது) அழிதற்குக்காரணமாகிய ஊழால், மடி தோன்றும் - மடிஉண்டாம்; (எ - று.)

ஆகூழ், போகூழ்என்னும் வினைத்தொகைகள் - எதிர்காலத்தான் விரிக்க ப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு - மடி. பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சிமடிகளையும் தானே தோற்றுவிக்கு மென்பது கருத்து.

(கு - ரை.) கைப்பொருள் ஆதற்கு - கையிற்பொருளுண்டாகி வளர் தற்கு. அஃது - கைப்பொருள். மடி, சோம்பல், அசைவு என்பன - ஒரு பொருட்சொற்கள். ஆகுஊழ் - ஆகுதற்குக் காரணமாகும் ஊழ்,போகுஊழ்- போகுதற்குக்காரணமாகும் ஊழ் என விரியும். ஆகூழ் - நல்வினைப்பயன். போகூழ்-தீவினைப்பயன். அசைவின்மை-சோம்பலில்லாமை. கைப்பொருள் என்பது, மத்திமதீபமாய் இரண்டுவாக்கியத்திலுஞ் சென்றுதொடரும். "புத் நிஃ கர்மாநுஸாரிணீ" என்றபடி அவ்வவ்வினைப்பயன்படி மடிமையின்மையி லும் மடிமையிலும் அறிவுசெல்லுமென்க. பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாகிய முயற்சி மடிகளையும்-பொருளின் ஆக்கத்துக்குக் காரண மான முயற்சியையும், பொருளின் அழிவுக்குக்காரணமான மடியையும் என்க. தானே - ஊழ்வினைதானே. (க)

ஈஎஉ. பேதைப் படுக்கு மிழவு ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

(இ - ள்.) இழவு ஊழ் (உற்றக்கடை) - (ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும்)கைப்பொருளிழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்தவிடத்து, அறிவு பேதைப்படுக்கும் - (அஃது) அதனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ் உற்றக்

கடை- (இனி அவனறிவுசுருங்கியிருப்பினும்) கைப்பொருள் ஆதற்குஏதுவாகிய ஊழ்வந்தவிடத்து, (அறிவு) அகற்றும் - (அஃது) அதனைவிரிக்கும்; (எ - று.)

'கைப்பொருள்' என்பது, அதிகாரத்தான்வந்தது. 'இழவூழ்,' 'ஆகலூழ்' என்பன இரண்டும்-வேற்றுமைத்தொகை. 'உற்றக்கடை' என்பது, மூன்றும் கூட்டப்பட்டது. இயற்கையாஞய அறிவினையும் வேறுபடுக்குமென்பதாம்.

(கு - ரை.) அஃது அதனைப் பேதையாக்கும்-அத்தீயூழ் அந்நல்லறிவை மந்தமாகச்செய்யும். அஃது அதனைவிரிக்கும் - அந்நல்லூழ் அச்சிற்றறிவைப் பெருகச்செய்யும். இவ்வதிகாரத்தின் முதற்பாட்டிலிருந்து 'கைப்பொருள்' என்பது, இரண்டாம்பாட்டிற்கு வருவிக்கப்பட்டது. இழவூழ், ஆகலூழ் - நான்காம்வேற்றுமை யுருபும்பயனுந்தொக்கதொகைகள். மூன்றும் கூட்டப்பட்டது - 'இழவூழ்' என்பதன் இறுதியிலும் எடுத்துச்சேர்க்கப்பட்டது. அறிவு - மந்திமதீபம். உற்றக்கடை - எதிர்காலவினையெச்சம். அகற்றும் - பரவச்செய்யும்: அகற்று - 'அகல்' என்பதன் பிறவினை. (உ)

கூஎஙு. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

(இ - ள்.) நுண்ணிய நூல் பல கற்பின்உம்- (பேதைப்படுக்கும்ஊழுடையான் ஒருவன்) நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையுங் கற்றாலுமினும், மற்றுஉம் தன் உண்மை அறிவே மிகும்-(அவனுக்குப்) பின்னுந் தன்னை ஆளாஞகிய பேதைமையுணர்வே மேற்படும்; (எ - று.)

பொருளின் நுண்மை, நூலின்மே லேற்றப்பட்டது. மேற்படுதல்-கல்வியறிவைப் பின்னிரங்குதற்கு ஆக்கிச் செயலுக்குத் தான் முற்படுதல். "காதன்மிக்குழிக் கற்றவுங் கைகொடா, வாதல் கண்ணகத் தஞ்சனம்போலுமால்" என்பதும் அது. செயற்கையான்ஆயஅறிவையுங் கீழ்ப்படுத்து மென்பதாம்.

(கு - ரை.) பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் - அறிவில்லாதவனாகச் செய்யும்விதி வந்து அடுத்தவனாகிய ஒருவன். பேதைமையுணர்வு-அறிவின்மை. மேற்படும் - அதிகப்பட்டுநிற்கும். நுண்ணியநூல் - பொருள்கள் நுட்பமாயிருக்கப்பெற்ற நூல்: இடத்துநிகழ்பொருளின்குணம் இடத்தின் மேலேற்றிக் கூறப்பட்டது. பின் இரங்குதற்கு ஆக்கி - ஒருகாரியத்தை ஆராயாது செய்துவிட்டபின்பு அதன்தகுதியின்மையை நினைத்து அறிந்து 'அந்தோ! இதுசெய்தோமே!' என்று மனந்தவித்தற்கு உபயோகப்படச்செய்து. பின் இரங்குதல் - கழிவிரக்கம்; பச்சாத்தாபம். செயலுக்குத் தான் முற்படுதல் - தொழில்செய்வதற்கு விதியறிவே காரணமாதல். "காதன்மிக்குழி" என்னும் மேற்கோள் - சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், எசு - ஆம் கவியிலுள்ளது; ஆசைமிக்கவிடத்து(த் தன்பத்திற்குத் துணையென்று) கற்ற கல்வியும் (பிறர்குற்றம் நீக்குதற்கு உதவுதலன்றி என்குற்றம் நீக்குதற்கு) உதவாதொழிதல் கண்ணினுட்கிடந்த அஞ்சனத்தை யொக்கும் என்று பொருள்: கண்ணினுட்கிடந்த அஞ்சனம் அதற்குப் பயன் கொடாததுபோல,

கல்வி நெஞ்சிற்கிடந்தும் பயன்தந்ததில்லே யென்க. இம்மேற்கோளில், காதலாகிய விதிவிவு முற்பட்டுக் கல்வியாகிய செயற்கையறிவு பிற்பட்டவாறு காண்க. செயற்கையாஞகிய அறிவு-கல்வியறிவு. கற்பினும், உம்மை-உயர்வுசிறப்பு. மற்றும், உம்மை - இறந்ததுதழுவியவெச்சம்; படித்தற்கு முன்னல்லாமற் பின்புமென்க. அறிவே, ஏ - பிரிநிலேயோடு தேற்றம். மேல் கல்வியென்னும் அதிகாரத்தில் ''தொட்டனேத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனேத் தூறு மறிவு'' என்பது ஊழ் மாறுகொள்ளாதபொழு தாகலின், அதனேடு இது முரண்படாதாம். (ரு)

ருஎச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(இ - ள்.) உலகத்து இயற்கை - உலகத்து (ஊழினுனைய) இயற்கை, இரு வேறு - இரண்டுகூறு; (ஆகலான்), திரு வேறு தெள்ளியர் ஆதல்உம் வேறு - செல்வமுடையராதலும்வேறு அறிவுடையராதலும்வேறு; (எ - று.)

செல்வத்தினேப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனேயார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்கு ஆகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது, செல்வமுடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது: என்றதாயிற்று. ஆகவே, செல்வஞ்செய்யுங்கால் அறிவாகிய துணேக்காரணமும் வேண்டா வென்பது பெற்றும்.

(கு - ரை.) கூறு - பகுப்பு. பயன்கோடல் - செல்வத்தாலாகும் பயனேக் கொள்ளுதல். அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே - அறிவுடையார்க்கு மாத்திரமே கூடிய காரிய மன்றே? வறியர் - பொருளில்லாதவர். ஏனேயார் - மற்றையோர்; இங்கு அறிவில்லாதவர். காண்டலான் - காணுதலால். செய்யுங்கால் - சம்பாதிக்குமிடத்து. அறிவுவேண்டாமை நல்லூழுடையானுக்கென்க. ஆதலும் என்ற உம்மை - இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. (ச)

ருஎந. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ - ள்.) செல்வம் செயற்கு - செல்வத்தை ஆக்குதற்கு, நல்லவை எல்லாம் தீயஆம் - நல்லவையெல்லாம் தீயவாய்அழிக்கும்; தீயஉம் நல்லஆம் - (அதுவேயன்றித்) தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும்: (ஊழ்வயத்தான்).

நல்லவை, தீயவை என்பன - காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. 'ஊழான்' என்பது, அதிகாரத்தாற் பெற்றும். அழிக்கும்ஊழ் உற்றவழிக் காலம்முதலிய நல்லவாயினும் அழியும்: ஆக்கும்ஊழ் உற்றவழி அவைதீயவாயினும் ஆகு மென்ப தாயிற்று. ஆகவே, காலம்முதலிய துணேக்காரணங்களேயும் வேறுபடுக்கு மென்பது பெற்றும்.

(கு - ரை.) ஆக்குதற்கு - சம்பாதித்தற்கு. ஊழ்வயத்தான் - விதிவசத்தால். அதிகாரத்தால்-இது ஊழ்என்னும் அதிகாரமாதலால். வேறுபடுக்கும் -

பேதப்படச்செய்யும். பெற்றும் - பெற்றேம். அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. உம்மை-இறந்ததுதழுவியஎச்சம். (இ)

கூஎசு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இ - ள்.) பால் அல்ல பரியின்உம் ஆகா ஆம் - (தமக்கு) ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும் (தம்மிடத்து) நில்லாவாம்; தம உய்த்து சொரியின்உம் போகா - (ஊழால்)தமவாகியபொருள்கள் (புறத்தே) கொண்டு போய்ச் சொரிந்தாலும் (தம்மைவிட்டுப்) போகா; (எ - று.)

பொருள்களின்நிலையும் போக்கும் ஊழினென்ஆவதல்லது காப்புஇகழ்ச்சி களான் ஆகா என்பதாம்.

இவைஆறுபாட்டானும்,பொருட்குக்காரணமாயஊழின்வலிகூறப்பட்டது.

(கு - ரை.) தமவாகிய - தமக்குஉரியனவான. புறத்தே - வெளியிலே. சொரிந்தாலும்-கொட்டிவிடப்பட்டாலும். நிலையும் போக்கும்-நிற்பதும் நீங்கு வதும். காப்பு - காத்தல். இகழ்ச்சி - காத்தலேயிகழ்தல்; காவாமை. பரியினும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு. சொரியினும் என்ற உம்மை - இழிவுசிறப்பு. பின்னே ஆம் என வந்ததனால், ஆகா என்பது - வினையாலணையும் பெயர். போகா என்பது - வினைமுற்று. தம - பலவின்பாற்குறிப்பு வினையாலணை யும்பெயர். அல்ல - பெயர். (சு)

கூஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(இ - ள்.) கோடி தொகுத்தார்க்குஉம் - (ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள்) கோடியை (முயன்று) தொகுத்தார்க்கும், வகுத்தான் வகுத்த வகை அல்லால் துய்த்தல் அரிது - தெய்வம்வகுத்தவகையானல்லது நுகர் தல் உண்டாகாது; (எ - று.)

ஓருயிர்செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ் வுயிர்க்கே வகுத்தலின், 'வகுத்தான்' என்றார். "இசைத்தலுமரியவேறிடத் தான"என்பதனுள் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத் தார்க்கும் என்றமையான், உம்மை - எச்சவும்மை. வெறுமுயற்சிகளால் பொருள்களைப் படைத்த லல்லது நுகர்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டு மென்பதாயிற்று.

(கு - ரை.) கோடியை முயன்று தொகுத்தார்க்கும் - மிகப்பலவற்றை முயற்சிசெய்து சேர்த்து வைத்தவர்களுக்கும். தெய்வம் வகுத்தவகையா னல்லது - விதிஏற்படுத்தினபடியா லல்லாமல், 'கைக்கெட்டினதும் வாய்க்கெட்

டாது' என்றபடி, "இசைத்தலும்" என்னும் இலக்கணவிதி, தொல்காப்பியத் துச் சொல்லதிகாரத்துக் கிளவியாக்கத்திலுள்ளது; "காலமுலகமுயிரே யுடம்பே, பால்வரைதெய்வம் வினையேயூதம், ஞாயிறு திங்கள்சொல்லென வரூஉம், ஆயீரைந்தொடு பிறவுமன்ன, ஆவயின் வரூஉங்கிளவியெல்லாம், பால்பிரிந்திசையாவுயர்திணைமேன" என்ற சூத்திரத்தால், காலம் முதலாகப் பால்வரைதெய்வம் இடையாகச் சொல் இறுதியாக இச்சூத்திரத்துக் கூறப் பட்ட பத்தும் அத்தன்மையன பிறவும் உயர்திணைப்பொருளின்மேல் நிற்பன வாயினும் சொல்லின்தன்மைபற்றி அஃறிணைப்பாலாயிசைக்கு மென்று பொதுவிதிகூறி, "இசைத்தலுமுரிய வேறிடத்தான" என்னும் இப்புற னடைச்சூத்திரத்தால், இச்சொற்கள் ஈறுதிரிந்துவாய்பாடுவேறுபட்டவிடத்து உயர்திணையா யிசைத்தலுமுரிய என்று கூறப்பட்ட சிறப்பு விதியின்படி, இங்கே விதித்தெய்வம் அஃறிணையாச்சொல்லப்படாமல், 'வகுத்தான்' என உயர்திணையாண்பாலாற் கூறப்பட்டதென்க. தொகுத்தார்க்கும் என்ற இடத்து உம்மை - இறந்தது தழுவிய எச்சவும்மை; இனி, உயர்வுசிறப் பாகவுங்கொள்ளலாம். பிரயத்தினமாத்திரத்தால் திரவியம் சம்பாதித்தல் மாத்திரம் ஒருகால் கூடினுங் கூடும்; அதனை யனுபவித்தலோ ஊழாலன்றிக் கூடாது என்பது கருத்து. இங்கே, 'பரிமேலழகர் பயன்வினை வெறுவினை என இரண்டுகொண்டு, பயன்வினையைப் பலவிடத்தினும் பலவாக விரித்து, வெறுவினையை "வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி" என்பதனுட் கொண்டார்' என்ற இலக்கணக்கொத்து உரையை அறிக. (எ)

உசஅ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின்.

(இ - ள்.) துப்புரவு இல்லார் - (வறுமையால்) நுகர்ச்சியில்லாதார், துறப்பார் - துறக்கும் கருத்துடையராவர்: உறற்பால ஊட்டா கழியும் எனின் - (ஊழ்கள்) உறுதற்பாலவாயதுன்பங்களே உறுவியாதொழியுமாயின்.

'துறப்பார்' என்பது, ஆற்று எதிர்காலமுற்றுச்சொல். தம்மால்விடப் பெறுவன தாமே விடப்பெற்றுவைத்துங் கருத்துவேறுபாட்டால் துன்பமுறு கின்றது ஊழின்வலியானென்பது எஞ்சி நிற்றலின், மன் - ஒழியிசைக்கண் வந்தது.

(கு - ரை.) வறுமையான் நுகர்ச்சியில்லாதார்-இல்லாமையாற் பொருளை யனுபவிக்குந்தன்மை யில்லாதவர். துறக்கும் - துறவறமடையும். உறுதற் பால வாய - அடைந்தேதீரவேண்டுவனவான. உறுவியாதொழியுமாயின் - அடைவிக்காமல் நீங்குமாஞல். எஞ்சிநிற்றலின் - குறைந்து நிற்றலால். தம் மால் விடப்பெறுவன - தாமே விடவேண்டியவையான செல்வம்முதலிய

பொருள்கள். தாமே விடப்பெற்றுவைத்தும் - வறுமையால் தாமேநீங்கியிருந்தும். கருத்து வேறுபாட்டால் - துறக்குங்கருத்து உண்டாகாமையால். துன்பம் உறுகின்றது - பிறவித்துன்பமடைவது. உலகத்தில் பொருளுள்ளவர்கள் அப்பொருளினிடத்திற்பற்றும் அப்பொருளாற் பயனனுபவித்தலில் விருப்பமும் உடையவர்களாயிருந்தாலும், இயற்கையிற் பொருளில்லாதவர்கள் அப்பொருளிற் பற்றும் இன்பநுகர்ச்சியில் விருப்பமுமில்லாமல் துறவறத்தையடைந்திருத்தல் கூடுமன்றோ? அங்ஙனம் உலகத்தில் வறியவரெல்லாரும் துறவாமைக்குக்காரணம் அவர்களறிவை அவர்கள்விதியானது துறவிற் செல்லவொட்டாது தடுத்துப் பொருட்பற்றிற் செலுத்தி அவர்களைப் பிறவித்துன்பமடைவிக்கின்றதென இங்ஙனம் ஒழியிசைப்பொருளின்கருத்தையுணர்க. ஒழியிசைக்கண்-ஒழியிசைப்பொருளில். துப்பு-அனுபவித்தல், உரவு-வலிமை; இவ்விருசொற்கள், வேற்றுமைத்தொகையால் தொடர்ந்து, துப்புரவு என ஒருசொல்தன்மைப்பட்டு, அனுபவித்தற்கேற்ற சிறப்புடையபொருள்களெனக் காரணக்குறியாய்நிற்கும்; ஊட்டா - ஊட்டாதனவாய்: எதிர்மறைப் பலவின்பால்வினைமுற்றுவினையெச்சம். (அ)

௩௭௯. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
வல்லற் படுவ தெவன்.

(இ - ள்.) நன்று ஆம் கால் நல்ல ஆ காண்பவர்-நல்வினைவிளையுங்கால் (அதன்விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன் நாடாது இவை) நல்லவென்று இயைந்து அனுபவிப்பார், அன்று ஆம் கால் அல்லல் படுவது-ஏனைத் தீவினைவிளையுங்கால் (அதன்விளைவாயதுன்பங்களையும் அவ்வாறு அனுபவியாது துடைக்குந்திறன்நாடி) அல்லலுழப்பது, எவன் - என்கருதி? (எ - று.)

தாமே முன் செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும்' இரண்டும் இயைந்து அனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்து அனுபவித்து ஏனையதற்கு அதுசெய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், இன்பதுன்பங்கட்குக்காரணமாய ஊழின் வலி கூறப்பட்டது.

(கு - ரை.) விளையுங்கால் - பயன்தருமிடத்து. அதன்விளைவாய - அந்நல்வினைப்பயனான. துடைக்குந்திறன் நாடாது - போக்கும்வகைதேடாமல். இயைந்து-சம்மதித்து. அவ்வாறு-துடைக்குந்திறன்நாடாது இயைந்து. அல்லலுழப்பது-மிகுந்ததுன்பப்படுவது. தாமே முன்செய்துகொண்டமை யானும்-நல்வினைபோலத் தீவினையும் முன் தம்மாலேசெய்து வைக்கப்பட்டதாதலாலும். ஊட்டாது கழியாமையானும்-விதிகள் தத்தம்பயன்களை அனுபவிப்பியா

மல் நீங்காவாதலாலும். இரண்டும் - இருவகைவினைப்பயனும். அனுபவிக்கற் பால - அனுபவிக்கத்தக்கன. ஒன்றற்கு - நல்வினைப்பயனுக்கு. ஏனையதற்கு - தீவினைப்பயனுக்கு. அது செய்யாது - இயைந்து அனுபவியாமல். (கூ)

கூ அ0. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ - ள்.) மற்று ஒன்று சூழின்உம் - (தன்னைவிலக்குதற்பொருட்டுத் தனக்கு) மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும், தான் முந்துறும் - தான் (அவ்வுபாயமேயானும் பிறிதொன்றனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின்) மூற்பட்டுநிற்கும்; (அதனால்), ஊழின் பெரு வலி யா உள - ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள? (எ - று.)

பெருவலி - ஆகுபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எண்ணுதல். செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடா தென்றமையின், உம்மை-எச்சவும்மை. எல்லாம்வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம்.

இதனால், அவ்விருவகைஊழின்வலியும் பொதுவாகக் கூறப்பட்டது.

(கு - ரை.) தன்னை - ஊழை. தனக்கு - ஊழுக்கு. மறுதலையாவது - எதிராகுவது. சூழினும் - ஆராய்ந்துசெய்தாலும். தான் - அவ்வூழ்தான். பிறிதொன்றனும் - வேறொருகாரியமாயினும். அச்சூழ்ச்சியின் - அவ்வாலோசனையின். யாவுள - எவையுமில்லையென, எதிர்மறைப் பொருள்குறிக்கும். பெருவலி - பெரியவலியை யுடையவற்றைக் குறித்தலால், அடையடுத்த பண்பாகுபெயர்; பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யெனினும் இழுக்காகாது: ஒருவகையால்அன்மொழித்தொகை ஆகுபெயரில் அடங்குவதுபற்றி, 'பெருவலி - ஆகுபெயர்' என்றார். சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லார்'அருந்திறல்-[இராமன்] அன்மொழித்தொகையாகுபெயர்' என்பதும் இதுபற்றியேயாதல்வேண்டும். பலருடனும் - உயர்ந்தவர்பலரோடும் என்க. பழுதற - குற்றமில்லாமல், ஐயந்திரிபொழிய வென்க. செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாது - அதைவிலக்கும் உபாயத்தைச் செய்வதற்குமாத்திரமே யல்லாமல் எண்ணுவதற்குஞ் சமயங்கொடாது. எச்சவும்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருள்தரும் உம்மை. எல்லாம் வழியாக - எல்லாவழியாலும். யா - அஃறிணைப்பன்மைவினாப்பெயர். ஊழின் - ஐந்தாம் வேற்றுமை, ஒப்புப்பொருள். ஒன்று - ஆகுபெயர். இருவகை ஊழ் - பொருட்குக்காரணமான ஊழும், இன்பத்துன்பங்கட்குக்காரணமான ஊழும். (கo)

அறத்துப்பால் முற்றிற்று.

திருக்குறள் அறத்துப்பாலின் செய்யுண் முதற்குறிப்பகராதி.

[எண் - பக்கவெண்.]

அஃகாமை 117
அஃகியகன் 116
அகரமுதல 6
அகழ்வாரை 102
அகனமர்ந்தீ 65
அகனமர்ந்து 61
அஞ்சுவதோரு 265
அடக்கமமர 84
அடல்வேண்டி 244
அந்தணரென் 30
அமிழ்தினு 50
அருங்கேட 138
அருட்செல்வ 164
அரும்பயனுயு 128
அருளல்லதி 174
அருளிலார் 169
அருள்கருதி 198
அருள்சேர்ந்த 166
அருள்வெஃகி 116
அல்லலருளாள்வா 168
அல்லவைதேய 67
அவாவில்லார்க் 266
அவாவினை 266
அவாவென்ப 261
அவிசொரிந் 177
அவ்வித்தழுக் 111
அவ்வியநெஞ்சத் 112
அழுக்கற்றகன்ரு 113
அழுக்காறவ 32
அழுக்காறுடையார்க் 109
அழுக்காறுடையான் 92
அழுக்காறெனு 111
அழுக்காற்றினல் 109
அளவல்லசெய் 200
அளவறிந்தார் 200
அளவின்க 198
அறங்கூரு 119
அறஞ்சொல்லு 122
அறத்தாறிது 34
அறத்தாற்றி 40
அறத்தான்வருவ 35
அறத்திற்கே 57
அறத்தினூஉ 31
அறவாழியந்தண 12
அறவினையா 224
அறனழீஇ 119
அறனறிந்து 118
அறனுக்கம் 109
அறனியலா 100
அறனெனப் 41
அறனேக்கி 124
அறன்கடை 97
அறன்வரையா 101
அறிவினுளுருவ 218
அறிவினுளெல் 132
அற்காவியல் 235
அற்றவரென் 264
அற்றுரழிபகி 151
அன்பகத்தில்லா 58
அன்பிலாரெல் 55
அன்பிற்கு 54
அன்பின்வழிய 59
அன்பீனுமார்வ 56
அன்புமறனு 39
அன்புற்றமர்ந்த 56
அன்போடியை 55
அன்றறிவா 33
ஆகூழாற் 270
ஆராவியற்கை 268
ஆற்றினெழுக்க 41
ஆற்றுவாராற்றல் 151
இடனில்பருவத் 144
இணரெரிதோய் 213
இயல்பாகு 245
இயல்பிலு 40
இரத்தலி 154
இருணீங்கி 252
இருந்தோம்பி 60
இருமைவகை 23
இருவேறுலகத் 272
இருள்சேரிரு 10
இலமென்னுவெஃ 115
இலர்பலராகிய 185
இலனென்றதீயவை 134
இலனென்னுமெவ் 148
இல்லதெனில்ல 43
இல்வாழ்வா 37
இறந்தாரிறந்தா 215
இறலீனு 118
இனியவுளவாக 69
இனைத்துணைத் 62
இன்சொலாலீர 64
இன்சொலினிதீன்ற 68
இன்பமிடையரு 267
இன்மையுளின்மை 103
இன்னுசெய்தார்க்கு 218
இன்னுதிரக்கப் 150
இன்னுவெனத் 219
ஈதலிசைபட 155
ஈத்துவக்கு 153
ஈன்றபொழுதிற் 52
உடைமையு 63
உண்ணுதுநோற்பார் 107
உண்ணுமையுள்ள 174
உண்ணுமைவேண்டு 176
உதவிவரைத் 72
உயிருடம்பினீக்கியா 231
உரனென்னுந் 23
உரைப்பாருரைப்ப 156
உலகத்தோடொட்ட 95
உள்ளத்தாலுள்ள 196
உள்ளத்தாற் 204
உள்ளியவெல்லா 214
உறங்குவது 241
உற்றநோய் 179
ஊருணிநீர் 142
ஊழிற்பெருவலி 276
எக்கன்றி 76
எப்பொருளெத் 254
எல்லார்க்குநன்ரும் 86
எல்லாவிளக்கும் 207
எழுபிறப்புந் 48
எழுமையெழுபிறப் 74
எளிதென 99
எள்ளாமை 194
எனைத்தானு 220
எனைத்துணைய 98
எனைப்பகையுற்ரு 136
என்பிலதனை 57
ஏதிலார்குற்ற 125
ஏரினுழாஅ 17
ஐந்தவித்தானுற்றல் 24

ஐயத்தினீங்கி 253
ஐயுணர்வெய்தியக் 253
ஒக்கத்தறிவா 141
ஒப்புரவினுன் 145
ஒருபொழுதும் 239
ஒருமையுளாமைபோ 87
ஒல்லும்வகையா 31
ஒழுக்கத்தினெய்து 93
ஒழுக்கத்தினெல்கா 93
ஒழுக்கத்துநீத்தார் 21
ஒழுக்கமுடைமை 91
ஒழுக்கமுடையவர்க் 94
ஒழுக்கம்விழுப்பந் 90
ஒழுக்காருக் 108
ஒறுத்தாரை 104
ஒறுத்தார்க் 105
ஒன்முகமல்லது 226
ஒன்முவுலகத் 157
ஒன்முனுக் 88
ஒன்னர்த்தெறலு 181
ஓர்த்துள்ள 256
கணைகொடிது 192
கண்ணின்று 121
கதங்காத்து 90
களவிலுலாகிய 197
களவின்கட் 198
களவென்னுங் 199
கள்வார்க்கு 201
கறுத்தின்னு 217
கற்றதனலாய 7
கற்றீண்டு 256
காக்கபொருளா 85
காமம்வெகுளி 259
காலத்தினுற் 71
குடம்பைதனித் 240
குணமென்னுங் 29
குழலினிதி 50
கூத்தாட்டவைக் 234
கூற்றங்குதித்தலும் 184
கெடுப்பதூஉங் 17
கெடுவல்யா 80
கெடுவாக 81
கேடும்பெருக்கமு 79
கைம்மாறவேண்டா 139
கொடுப்பதழுக்கறுப் 110
கொலைவினைய 231
கொல்லாமைமேற் 228
கொல்லான்புலாலை 178
கொன்றன்ன 75
கோளில்பொறியிற் 13
சமன்செய்து 81
சாதலினின்னுத 154
சார்புணர்த்து 258
சிறப்பீனுஞ்செல்வமு 30
சிறப்பீனுஞ்செல்வம் 214
சிறப்பொடு 19
சிறுமையுணீங்கிய 68
சிறைகாக்குங் 46
சிற்றின்பம் 114
சினத்தைப் 213
சினமென்னுஞ் 211
சீர்மைசிறப்பொடு 127
சுடச்சுடரும் 183
சுவையொளி 26
சேப்பமுடையா 78
செயற்கரிய 25
செயற்பால 36
செயிரிற்றலைப் 177
செய்யாமற்செய்த 70
செய்யாமற்செற்றூர்க் 217
செல்லாவிடத்துச் 209
செல்லிடத்துக் 209
செல்வீருங் 62
செறிவறிந் 85
சொல்லுகசொல்லி 129
சொற்கோட்ட 82
தகுதியென 77
தக்கார்தகவில 79
தந்தைமகற் 51
தம்பொருளென்ப 49
தம்மிற்றம் 51
தலைப்பட்டார் 248
தவஞ்செய்வார் 182
தவமறைந் 188
தவமுந்தவ 180
தற்காத்துத் 45
தனக்குவமையில்லா 12
தன்னுயிர்க்கின்னு 220
தன்னுயிர்தானறப் 184
தன்னுயிர்நீப்பினு 229
தன்னூன்பெருக்க 172
தன்னெஞ்சறிவ 203
தன்னைத்தான்காக் 210
தன்னைத்தான்காதல 137
தூவாற்றித் 140
தானந்தவ 19
தீநட்ல 105
தினற்பொருட்டாற் 175
தினைத்துணைநன்றி 72
நீப்பிலதான் 135
நீயவைசெய்தார் 136
நீயவைநீய 132
நீயினுற்சுட்ட 89
நிலினையாரஞ்சார் 131
நுப்பார்க்குத் 16
நுறந்தாரிற்நூய்மை 106
நுறந்தார்க்குத் 180
நுறந்தார்க்குந் 38
நுறந்தார்பெருமை 22
நுறப்பார்மற் 274
நுன்புநூலுந் 66
நுன்னியார் 123
நூஉய்மையென்ப 263
நெய்வந்தொழாஅள் 44
நெருளாதான் 170
நென்புலத்தார் 38
நோன்றிற் 160
நகையுமுவகை 210
நடுவின்றிநன் 114
நத்தம்போற் 159
நயனிலசொல் 128
நயனிலனென்பது 126
நயனீன்று 67
நயனுடையா 144
நயன்சாரா 127
நலக்குரியார் 101
நல்லவையெல்லாஅ 272
நல்லாரெனப்படுவ 227
நல்லாரெனினு 147
நல்லாற்முளுடி 165
நன்முகுமாக்கம் 230
நன்முங்கானல்லவாக் 275
நன்றிக்குவித் 94
நன்றிமறப்பது 75
நன்றேதரினு 78
நாச்செற்று 237
நாளெனவொன்று 236
நிலவரைநீள்புக 158

கிலேயஞ்சி 228
கிலேயிற்றிரியா 86
கில்லாதவற்றை 234
கிறைமொழி 28
கிறையுடைமை 104
நீரின்றமையா 20
நுண்ணியநூல் 271
நெஞ்சிற்நுறவார் 184
நெடுங்கடலுக் 18
நெருநலுள 238
நோயெல்லா 222
பகச்சொல்லி 123
பகுத்துண்டு 225
பகைபாவமச்ச 99
படுபயன் 114
படைகொண்டார் 173
பணிவுடைய 66
பயனில 126
பயனில்சொற் 128
பயன்மரமு 143
பயன்றூக்கா 71
பரிந்தோம்பிக் 91
பரிந்தோம்பிப் 63
பரியினுமாகா 273
பல்லார்முனிய 126
பழியஞ்சிப் 39
பற்றற்றகண்ணே 248
பற்றற்றேமென்பார் 189
பற்றிவிடாஅ 248
பற்றுகபற்றற்றான் 249
பாத்துண்மரீ இ 152
பிறப்பெண்ணும் 257
பிறர்க்கின்னு 221
பிறவிப்பெருங் 14
பிறன்பழிகூறுவான் 122
பிறன்பொருளாட் 96
பிறன்மனை 100
புகழ்படவாழாதார் 160
புகழ்புரிந் 46
புக்கிலமைந் 241
புத்தேளுலகத் 140
புறங்குன்றி 190
புறங்கூறிப் 120
புறத்துறுப்பெல்லா 58
புறந்தூய்மை 206
பெண்ணிற் 44
பெறுமவற்றுள் 48
பெற்றூர்பெறிற் 46
பேதைப்படுக்கு 270
பொய்ம்மையும் 203
பொய்யாமைபொ 206
பொய்யாமையன்ன 205
பொருடூர்ந்த 129
பொருணீங்கிப் 168
பொருளல்லவற்றை 251
பொருளற்றூர் 170
பொருளாட்சி 173
பொறிவாயி 11
பொறுத்தலிறப்பினை 103
மகன்றக்கைக் 52
மக்கண்மெய் 50
மங்கலமென்ப 47
மருந்தாகித் 143
மலர்மிசையேகினுன் 8
மழித்தலுநீட்டலு 192
மறத்தல்வெகுளி 209
மறந்தும்பிறன் 133
மறப்பினு 92
மறவற்கமாசற் 73
மற்றுந்தொடர்ப்பா 246
மனத்ததுமாசாக 191
மனத்துக்கண் 32
மனத்தொடு 205
மனைத்தக்க 42
மனைமாட்சி 43
மன்னுயிரோம்பி 167
மிகுதியான்மிக்கவை 106
முகத்தானமர்ந் 66
மோப்பக்குழையு 64
யாகாவாராயினு 88
யாதனின் 243
யாமெய்யாக் 207
யானெனதென் 247
வகுத்தான்வகுத்த 273
வசையிலாவண்பய 162
வசையென்ப 161
வசையொழிய 162
வஞ்சமனத்தான் 186
வருவிருந்து 61
வலியார்முற் 171
வலியினிலைமையா 187
வழியார்க்கொன் 146
வாணிகஞ்செய் 83
வாய்மையெனப் 202
வானின்றுலகம் 15
வானுயர்தோற்ற 186
விசும்பிற்றுளி 18
விண்ணின்று 16
வித்துமிடல் 61
விருந்துபுறத்ததா 60
விழுப்பேற்றி 108
விளிக்தாரின் 98
வீணுள்டடா 34
வேண்டற்க 117
வேண்டாமை 263
வேண்டியவேண்டி 182
வேண்டினு 243
வேண்டுங் 262
வேண்டுதல் 9
வையத்துள் 42

திருக்குறள் அறத்துப்பால்மூலமும்பரிமேலழகருரையும்

என்ற இவற்றின்

அரும்பதம் முதலியவற்றின் அகராதி.

[எண் - செய்யுளினெண்.]

அஃகாமை-சுருங்காமை, 178
அஃகி-நுண்ணிதாய், 175
அகங்காரம்அவிச்சையிலடங்கும், 360
அகப்பற்று, 21
அகழ்வாரைநிலந்தாங்குதல் × இகழ்வாரைத்தாம்பொறுத்தல், 151
அசைகிலை, 2
அசைவின்மை-முயற்சி, 371
அடிப்படுதல்-அப்பியசித்தல், 140
அணிமாமுதலியன, 9
அணியாவது பணிவும் இன்சொல்லுமே: அணிகலன் அணியாகா, 95
அண்ணுத்தல்-காய்திறத்தல், 255
அதுணர்வார்-ஆய்தம் விகாரத்தால் தொக்கது, 257
அமர்த்து-விரும்பி, 93
அமைந்தின்று, 340
அரிது-இல்லை, 7
அருங்கேடன், 210
அருத்தாபத்தி, 236, 242
அருவுடம்பு, 345
அருளல்லது-கொடுமை, 254
அருளறுதல் பொருளறுதலினும் கொடிது, 248
அருளற்றூர் அழித்தவரே, 248
அருளாட்சி ஊன்றின்பவர்க்கில்லை × பொருளாட்சிபோற்றுதார்க்கில்லை, 252
அருளாதான் அறஞ்செய்தல் × தெருளாதான் மெய்ப்பொருள் காணுதல், 249
அருளாள்வார்க்கு இம்மைத்துன்பம் இல்லை, 245
அருளிலார்க்கவ்வுலகமில் × பொருளிலார்க்கிவ்வுலகமில், 247
அருளுடையார்க்குநரகில்லை, 243
அருள்-துறவறம், 176
அருள்கருதியன்புடையாதல், 285
அருள்துணை, 242
அருள்பிறத்தற்கு உபாயம் வலியார்முன் தன்னை நினைத்தல், 250
அருள்பொருளீனுஞ்சிறந்தது, 241
அல்-வியங்கோளுடன்பாடு எதிர்மறைகளில்வரும், 196
அல்லசெயினும் புறங்கூறுனென்றல் இனிது, 181
அல்லசெய்வார்க்கும் பிறர்மனை நயத்தல் கூடாது: அல்ல-பாவம், 150
அல்லல்-துன்பம், 245
அல்லவை-கொடுமை, 246
அல்லவைதேய்தல், 96
அவசர்ப்பிணி, 361
அவம்-வீண், 262: கேடு, 266
அவாப்பிறப்பீனும்வித்து, 361
அவாய்நிலை, 15
அவாவற்றூரே பிறவியற்றூர், 365
அவாவில்லாவிடின் துன்பம் இல்லை, 368
அவாவுதல்ஆசைக்கண்ணடங்கும்,360
அவி, 259
அவிச்சை அகங்காரம் அவாமுதலியனான்கிற்குங்காரணம், 360
அவ்விந்து-பொருது: மனத்தைக் கோணுதல் செய்து: 167
அழுக்கறுப்பான் அறனுக்கம்வேண்டாதான், 163
அழுக்கறுப்பான்சுற்றமும்கெடும், 166
அழுக்காருமை, 17-அதி. அவதாரிகை
அழுக்காறிலாத வியல்பை ஒழுக்கம்போல் உயிரினும்மேலாகக்கொள்க, 161
அழுக்காறு-அழுக்கறுத்தல், 135, 163
அழுக்காறு இம்மையிலேயே செல்வத்தைக்கெடுக்கும், 168
அழுக்காறுடையான்கணுக்கமில்லை × ஒழுக்கமிலான்கணுயர்வில்லை, 135
அழுக்காறு பகைவரில்லாதார்க்கும் கேடு பயக்கும், 165

அழுக்காறெனவொருபாவி, 168
அளவு, 287
அளவை, 242
அளறு-நரகம், 255
அறங்காய்தல், 77
அறமாகத்திருவள்ளுவர் கொண்டது ஒழுக்கமே, உரைப்பாயிரம்.
அறமேபொன்றுத்துணை, 36
அறம்-அறநூல்கள், 183
அறம் இன்னதென்பது, உரைப்பாயிரம்.
அறம் ஈதலிலில்லை: முகனமர்ந்து இன்சொற்சொல்லின்கண்ணது, 93
அறம், ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைத்து: உரைப்பாயிரம்.
அறம் கற்றடங்கலாற்றுவான் செவ்வி பார்க்கும், 130
அறம் பொருளெனப்படுதல், 254
அறவாழியந்தணன், 8
அறவினைகொல்லாமை, 321
அறனழீஇ-அறனென்ப தொன்றில்லை யென்று அழித்துச்சொல்லி, 182
அறனெனப்பட்டதில் வாழ்க்கை, 49
அறனேக்கிப்போலும் வையம் புறங்கூறுவான் பொறையை ஆற்றுதல், 189
அறன்கடை நின்றூர் கால்வகையர்: அறன்கடை-பாவம், 142
அறிதற்கு அரியபயன்-வீடுபேறு மேற் செலவு முதலியன, 198
அறிவாலம்பொறியடக்கினவன் மோட்சமடைவன், 24
அற்கா-நில்லாத, 333
அற்றூர்-வறியார், 226: அழிந்தார், 248
அனிச்சம் மோப்பக்குழையும் × விருந்துமுகந்திரிந்து நோக்கக்குழையும், 90
அனுமானம், 1
அனுவாதம் வழிமொழிதலெனப்படும், 32
அன்பிலதனை யறங்காய்தல் × என்பிலதனைவெயில்காய்தல், 77
அன்பில்லாருடம்பு என்புதோல்போர்த்த: உயிருள்ளனவாகா, 80
அன்பில்லாவுயிர் இல்லறத்துவாழ்தல் × வன்பாற்கண் வற்றன்மரக்தளிர்த்தல், 78
அன்பிலுலருள்பிறத்தல், 8-அதி.அவதாரிகை. (அருள், அளி-பரியாயம்.)
அன்புகாட்சியளவைக்குஎய்தாது அனுமானவளவையான்வெளிப்படும், 71
அன்புக்கும் அருளுக்கும் வேறுபாடு உண்டு, 8-அதி. அவதாரிகை
அன்புசெய்தற்காகவே உயிர் உடலைப் பெற்றது, 73 [72
அன்புடையார்என்புமுரியர் பிறர்க்கு,
அன்புள்ளதே உடம்பு, 80
அன்பையடைக்குந்தாழ் இல்லை, 71
அன்மை-வேறுதல், நீக்குதல், 162
'அன்'விகுதி தனித்தன்மையினும் படர்க்கையொருமையினும்வருதல், 205
அன்று, 108
ஆகுபெயர்-66, 73, 75, 88, 90, 124, 141, 180, 183, (பின்-ஆகுபெயர்) 184: 204, 236, 247, 274, 277, 296, 334, 344, 352, 364, 380
ஆகுலம் - ஆடம்பரம், 34
ஆகூழ், 371
ஆக்கம்-மேன்மேலுயர்தல், 31: செல்வம், 112, 283: மறுமையிலடையும் பயன், 183
ஆங்கு-ழுறுதலைத் தொழிலுவமத்தின் கண்வந்த செரல், 15: அசை, 43
ஆட்சி பயன்கோடல், 252
ஆதல்-விருத்தியடைதல், 248
ஆமை அடக்கமுடையார்க்கு உபமானம், 126
ஆரா-கிரம்பாத, 370
ஆருயிர்-பிறப்பினது அருமை பிறந்த உயிரின்மேல் ஏற்றப்பட்டது, 73
ஆர்வம்-அன்புகூர்ந்தரப்படுவது, 74
ஆர்வலர்-அன்புடையார், 71
ஆல்-அசை: ("இன்சொலால்"-) 91
ஆறு-பயன், 37
ஆற்றல்-ஒத்தல், 101: வலிமை, 225, பெருமை, 287
ஆற்றின்-வழியில்: செய்தால்: 46
ஆற்றுதல்-பொறுத்தல், 189: வலியராதல், 225.
ஆனுருபு உடனிகழ்ச்சி, 39, 147: தொழப்பொருளது, 111

ஆன்ற-நிரம்பிய, 148
இசைபெருயாக்கையால் நிலம் பயன் குன்றும், 239
இசையில்லாமையே வசை, 238
இடத்துங்கிழ்பொருளின்தொழில் இடத்தின்மேலேற்றப்படுதல், 215, 239
இடவழுவமைதி - (வருவிருந்து) 86: (தருமென்பது) 183
இடன்-செல்வம், 218
இடும்பை-பிறவித்துன்பம், 4
இணரெரிதோய்வன்னவின்ஞ,(இணர்-கொத்தானசுடர்), 308 [25
இந்திரன் ஐந்தவித்தாஞற்றற்குக்காரி, இந்திரன் பிறர்மனைநயந்து சிறுமையெய்தியது, 144 [326
இம்மையிற்ருனே பயனனுபவிப்பார், இயலுதல்-இடையருது நடத்தல், 35
இரக்கப்படுதல் இன்ஞது, 224 [229
இரத்தலின் தமியருணல்இன்ஞது, இருபிறப்பாளர்மூவர், 7 அதி. அவதாரிகை.
இருமை-இரண்டு, 23
இருவகைப்பற்று, 246 [351
இருவினைக்குக்காரணம் அவித்தை, 5, இருவேறுலகத்தியற்கை, 374
இருளால் இருவினைசேரும், 5
இருள்-அவிச்சை, மயக்கம், 5, 227: நரகவிசேடம், 121: நரகம், பிறப்பிற்கு ஆகுபெயர்: 352
இருள்சேர்ந்த வின்ஞுலகம், 243
இலக்கணைவழக்கு, 272
இலமென்றுவெஃகுதல்செய்யார், 174
இலவாறுமை யுணர்த்தும் உரிச்சொல், 205
இலர்-வறியவர், 270
இல்-மனைவி, 143
இல்பொருளுவமை, 273
இல்லல்ல-இரண்டு எதிர்மறை உடன்பாடாதல், 115
இல்லறஞ்செய்வான் பிறனில் விழையாதானே, 147
இல்லறத்தார்க்குரியநற்குணங்கள், 51
இல்லறத்திற்கு இம்மைமறுமைப்பயன் புகழும் தேவருலகிற்போகமும், 240
இல்லறமே புறத்தாற்றினும் பயனுடைத்து, 46
இல்லறம் இன்னதென்பது, உரைப்பாயிரம்.
இல்லறம் வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இனிது நடவாது, 8-அதி. அவதாரிகை.
இல்லிருந்து வாழ்வது விருந்தோம்பி வேளாண்மைசெய்ய, 81
இல்லென்றல் பயன்படாமையால், 52
இல்வாழ்க்கைக்குப் பண்பு அன்பு, பயன் அறன், 45
இல்வாழ்வானடக்கம் மலையினுயர்ச்சியினும் மிக்கது, 124
இல்வாழ்வானஞ்செய்தற்கு இடம், தென்புலத்தார் முதலிய ஐந்து, 43
இல்வாழ்வானுக்கு மறுமைப் பயன் தேவகதியடைதல், 50
இல்வாழ்வான் மற்றைமூவர்க்கும் நல்லொழுக்கத்திற்குத்துணை, 41
இழவூழ்-போகூழ், 372
இழிந்தபிறப்பு-இழுக்கம், 133
இழுக்கா-கடிந்து, 35: தவறுத, 48
இழுக்காறு-தீநெறி, 164
இழுக்கு-குற்றம், 127
இறத்தல்-நெறிகடந்துசேறல், 145
இறந்தகாலவினையெச்சத்தால் இன்றியமையாவுறுப்பினைக்கூறுதல், 322
இறந்தாரை யெண்ணுதல் × துறந்தார் பெருமை துணைக்கூறுதல், 22
இறப்பு-வரம்புகடந்தசெயல், குற்றம், 152
இறல்-இறுதி, 180
இறுகப்பற்றுதல்-காதல்கூர்தல், 347
இனியவுளவாக இன்ஞதகூறல் × கனியிருப்பக்காய்கவர்தல், 100
இன்சொல் இருமையுந்தரும், 98
இன்பதூலுடையார் பிறர்மனைவிழைதலையுங்கொள்வர், 141
இன்முகமும் இன்சொல்லும் ஈகையின்ன்று, 92
இன்மை-வறுமை, 89
இன்மைக்குக்காரணம் சோலாமை,270
இன்மையுளின்மை, 153
இன்ஞசெய்தாரையொறுத்தல் நன்னயஞ்செய்தலே, 314
இன்ஞசெய்தார்க்கும் இன்ஞசெய்யாமை, 312

இன்னுச்சொற்பொறுப்பார் உண்ணுது
கோற்பாரினும் பெரியர், 160; துறக்
தார்போலத்தூயர், 159
இன்னுவென அறிந்தவற்றைப் பிறன்
கட் செய்யலாகாது, 316
ஈண்டுதல்-பெருகுதல், 369
ஈதல் நன்று: கொளல்தீது, 222
ஈரம்-அன்பு, 91
உடம்பும் மிகையாம் பிறப்பறுக்கலுற்
றூர்க்கு, 345
உடம்பொடுபுணர்த்தல், 27
உடலின்தன்மை, 260
உடல்கொடுத்தமைபற்றிவரும்புகழ்,
233
உடற்றும்-வருத்தும், 13
உடைமை மயல், 344
உடைமையுளின்மை விருந்தோம்ப
லோம்பாமடமை, 89
உடைமைவைத்திழப்பவர் ஈத்துவக்கு
மின்பமறியார், 228
உட்பகை-148
உண்டாகத்துறக்க, 342
உபசரித்தல், 89, 201, 287, 358,
364, 369
உபசாரவழக்கு - (பொருள்செய்தோ
ரைப் பொருளென்றது) 63, 73,
201, 254, 319
உபலட்சணம், 9
உயர்திணையில் வைத்துக்கூறுவது சிற
ப்பிஞல்: 12
உயற்பாலது-ஒழியற்பாலது, 40
உயிர்கொடுத்தமைபற்றிவரும்புகழ்,
233
உயிர்க்குணங்கள் காட்சியளவையா
னறியப்படா, 316
உயிர்நிலை - (உயிர்நின்ற) உடம்பு, 80,
290
உயிர் நீங்குங்காலத்து அதஞற்பாவிக்
கப்பட்டதாக அதுதோன்றும், 358
உயிர்முதலியவற்றையளத்தல், 286
உயிர்வாழ்வான் ஒத்ததறிவான், 214
உய்தி-பாவத்தினின்று நீங்கும்வழி,
பிராயசித்தம், 110
உய்த்துவிடும் ஒருசொல், 121
உய்யாவிழுமம், 313
உய்வு-பிராயச்சித்தம், 110
உரன்-திண்மை, அறிவு, 24
உரிமைப்பொருள்-முருகனது குறி
ஞ்சிநிலம், 63
உருபுமயக்கம், 167: ("தவ்வையைக்
காட்டி".)
உருவுடம்பு, 345 [233
உலகத்துப் பொன்றுதுறைபது புகழே,
உலகத்தோடொட்டவொழுகுதலைக் கல்
லாதார் அறிவிலார், 140
உலகம்-உயிர், 11
உலகவர்மறிவாளன்றிரு × நீர் நிறைந்த
ஊருணி, 25
உலகியல்-பொருளின்பங்கள், 20
உலகு-உயிர், 211 [281
உலோகாயதம் முதலிய சமயத்துநூல்,
உவர்ப்பு-வெறுப்பு, 21: மெய்ப்பொரு
ளை அறிந்து இருவகைப்பற்றும் அற்
றவனைப்பிரார்த்தமொழிய மற்றைக்
கருமங்கள் அணுகாதனிலை, 3[illegible]
உளதாகுஞ்சாக்காடு-புகழுடம்பு [illegible]க்கப்
பூதவுடம்பு இறத்தல், 235
உள்ளதுணர்வார்க்குப் பிறப்பு இல்லை,
(உள்ளது-முதற்பொருள்) 357
உள்ளத்தாற் பொய்யாமை யாவரும்
மதிப்பர், 294
உள்ளம், 309
உள்ளிய-நினைத்த, 309
உறுகண்-துன்பம், 261
உற்சர்ப்பிணி, 361
ஊக்காது-நோக்காது, 253
ஊங்கு-உயர்வுஇழிவு எல்லைப்பொரு
ளில் வரும் இடைச்சொல், 31
ஊதியம், 231
ஊழ்வலிது, 380 [251
ஊனுண்பார்க்கு அருள் தோன்றுது,
ஊன்றின்மை கொலைக்குக் காரணம்,
256 [251
எங்ஙனமாருமருள்-இகழ்ச்சிக் குறிப்பு,
எச்சத்திரிபு, 360
எச்சம்-சந்ததி, 112; மிஞ்சிநிற்பது, 238
எஞ்சல், 44
எடுத்துக்காட்டுவமை, 1, 153
எடுப்பது-காப்பது, 15
எண்குணத்தான், 9 [321
எதிர்மறைமுகத்தாலேது கூறுதல்,
எய்யாமை - வருந்தாமல், 296

எல்லா நூல்களினும் நல்லன வெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல், 322
எவன்-அஃறிணையிருபாலுக்கும்பொதுவான வினாப்பெயர் இன்மைகுறித்தது, 2
எவ்வம்-இளிவரவு, 223
எழிலி-மேகம், 17
எழுபிறப்பு, 62
எழுமை யெழுபிறப்பு, 107
ஏனப்படுவது, 291
ஏனைத்தானும்-சிறிதும், 317
என்பான்-செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது: செயப்பாட்டு வினைவிகுதி தொக்குவந்ததென்றலுமுண்டு; 41
என்பிலதனை வெயில்காய்தல் × அன்பிலதனையறங்காய்தல், 77
என்பு-உடம்புக்கு ஆகுபெயர், 72
ஏகதேசவுருவகம், 8, 24, 306
ஏதம்-குற்றம், 136
ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காணின் தீதில்லை, 190
ஏதுப்பெயர், 30
ஏமப்புணை-ஏமத்தை உபதேசிக்கும் புணை, 306 [126
ஏமாப்பு-வலியாதல், அரணாதல், 112
ஐந்தவித்தாலெழுக்கநெறி, 6
ஐந்தன்புலம், 343
ஐம்புலத்தாறு, 43
ஐம்பெருவேள்வி, 87
ஐயவுணர்வு பிறப்பிற்குக்காரணம், 353
ஐயுணர்வு, 354
ஐவகைக்குற்றம், 358 [தார்: 43
ஒக்கல்-மனமொத்திருப்பவர், சுற்றத்தார்
ஒட்ட-பொருந்த, 140
ஒப்புரவினால் வருங் கேடு கொள்ளத் தக்கது, 220
ஒப்புரவு, 22-அதி. அவதாரிகை.
ஒப்புரவுசெய்வார்க்கு அதனைச்செய்ய முடியாமை நல்குரவு, 219
ஓரால்-நீக்குதல், 153
ஒருகணப்போது வாழ்வோமென்பதும் தெரியாது, 337
ஒருதலையா-தெளிய, 357
ஒருதாமோயின்பம், 156
ஒல்கார்-தளரார், 218
ஒல்குதல்-சுருங்குதல், 136
ஒல்லுதல்-இயலுதல், 33
ஒழுக்கத்தின்கணின்று துறத்தல், 21
ஒழுக்கமின்னதென்பது உரைப்பாயிரம். [135, 137
ஒழுக்கமுயர்வுக்குக் காரணம், 131,
ஒழுக்கமுயிரினுமோம்பப்படும், 131
ஒழுக்கம் நன்றிக்கு வித்து, 138
ஒழுக்கி-நடக்கச்செய்து, 48
ஒழுக்கு-நீரோடி யொழுகுதல், நல்நடத்தை, 20
ஒளி-தேஜசு, அறிவு, 267
ஒறுத்தல்-தண்டித்தல், 155
ஒன்றனுடல் சுவையுண்டார்மனம் × படைகொண்டார் நெஞ்சம், 253
ஒன்றுகவையார், 155
ஒன்றே-எண்ணிடைச்சொல், 148
ஒன்னர்-பகைவர், 165
ஓத்து வேதம், 134
ஓம்பி-அடக்கி, 132
ஓம்புதல்-வழுவாமற் செய்தல், 43: குறிக்கொண்டு காத்தல், 322
ஓரும்-அசைநிலை, 40, 366
ஓர்த்து-ஆராய்ந்து, 357
ஔவையுண்டகெல்லிக்கனி, 100
கடப்பாடு - ஒப்புரவு, 211
கடல்நீர்மைகுன்றுதல் - நீர்வாழுயிர்கள் பிறவாமையும், முத்துமுதலியன பிறவாமையுமாம், 17
கடனறிகாட்சியவர், 218
கடை - வாயில், 142: இழிவு, 328
கடையிலாவறிவு முதலிய எட்டுக்குணங்கள், 9 [279
கணைகொடிது யாழ்கோடு செவ்விது,
கண் - எதிர், கண்ணோட்டம், 184
கதம் - கோபம், 130
கரி - சாட்சி, 245
கருதுபபல, 337
கருமை - அறியாமை, 277
களவல்ல மற்றையதேற்றாதவர் தீயநினைவால் வீவர், 289
களவறிந்தார் நெஞ்சிற்கரவு × அளவறிந்தார் நெஞ்சிலறம், 288
களவிலாலானவாக்கம் ஆவதுபோலக் கெடும், 283

கள்வுங் துறவும் ஒருங்கு கில்லா, 287
கள்வார்க்குயிர்கிலையும் தளரும், 290
கள்ளகினைத்தலும் தீது, 282
கறுத்து - கோபித்து, 312
கற்பனை: ஒருபொருளைப்பற்றிப் பல வழங்குதல், 355
கற்புடையார்க்குத் தெய்வம் ஏவல் செய்யும், 55
கற்றதனலாகியபயன் கடவுளின்நற் றாள் தொழுதல், 2
கனியிருப்பக் காய்கவர்தல் × இனிய வுளவாக இன்னுத கூறல், 100
கன்றிய - மிக்க, 284
காட்சி - அறிவு, 174
காட்டிவிடும் - இருசொல், 167
காட்டுதல் - பயனுணர்த்துதல், 28
காணப்படும் - உண்டாம், 298
காதலன் - விரும்புபவன், குறிப்பு வினையாலணையும்பெயர், 209
காத்தல் - தடுத்தல், 29 [228
காரணத்தின்கண்வந்த பெயரெச்சம், காரணப்பெயர் காரியத்தின்மேல் நிற் றல், 62, 65
காரறிவாண்மை, 287
காலத்தினுற் செய்தகன்றி, 102
காலம் நாளெனக்காட்டி உயிரீறும் வா ள், 334
குடம்பைக்கும் புட்குமுள்ளதொடர்பே உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொ டர்பு, 337
குடிமை-ஒழுக்கமுடைமை, 133
குணப்பெயர்குணியின்மேல்நிற்றல், 53
குதித்தல் - கடத்தல், 269
குறிப்புப்பெயர் - குறிப்பு வினையா லணையும்பெயர், 199
குறிப்பெச்சம், 66, 85, 117
குறியெதிர்ப்பை, 221
குற்றத்தை மறத்தல் பொறையினும் நன்று, 152
குற்றம் ஐந்து பஞ்சகிலேசம், 38, (குற் றம்மூன்று,) 360 [தல், 29
குன்றுகக் குணத்தை உருவகஞ்செய் குன்றிபுறங் கண்டனையர், 277
குன்றிமூக்கிலகங்காரியார், 277
கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேட மும்வேண்டா, 280
கூத்தாட்டவைக் குழாம் × பெருஞ் செல்வம், 332
கூற்றங்குதித்தலும்கூடும், 269
கூற்று கொல்லாமைமேற்கொண்டொ ழுகுவான் வாழ்நாள்மேற்செல்லா து, 326
கெடு - வறுமை, மூதனிலைத் தொழிற் பெயர், 117
கேடும்பெருக்கமும் பழவினையாலமைந் து கிடைப்பவை, 115
கேண்மை - நட்பு, 106
கேளிர், 187
கேள்வி, 356
கைம்மாறு, 211
கொடிதுசெல்விது கிலேடை, 279
கொலைவினையர் இம்மைக்கண்ணும் கீழ்மையெய்துவர், 329
கொல் - துணிவின்கண் சிறிது ஐயம் கினைத்தற்பொருளது, 340
கொல்லாமைக்குப்பின் தான் பொய்யா மை, 323
கொல்லாமையறமாவது விலக்கியதொ ழிதலும் அறமாதலால், 321
கொல்லுதல் - அழித்தல், 304: மிக்க துன்பங்களையுண்டாக்குதல், 305
கொன்றவர் மறுமையில் செயிருடம் பினரும் கீவாழ்க்கையினரு மாவர், 320
கொன்றன்னவின்னு, 109
கோச்சேரமான் யானைக்கட்சேய்மாக் தரஞ்சொலிரும்பொறை, 355
கோடு - (வீணை) தண்டம், 279
கோட்டம் - கோணுதல், 119
கோள் - கொள்ளுதல், 9
கோறல் - கொலை, 321
சமாதி, 358
சாக்காடு × உறங்குவது, 339
சாதல் ஈதலியையாதபோது இனிது, 230
சாதியொருமை, 29, 43, 122, 139, 321, 334, 360, 367
சார்பு - துணை, 76: செம்பொருள், இருவகைப்பற்று, 359
சாவாமருந்து, 82
சான்றோர்க்குக் கொன்றாரு மாக்கங் கடை, 328

சான்றோர்க்கு, கோடாமை முதலிய வற்றிற் கோல் உவமம், 118
சிபிசக்கரவர்த்திகதை, 72
சிமிழ்த்தல்-பிணித்தல், 274
சிறப்பீனுஞ்செல்வம் அணிமா முதலியன, 311
சிறப்பு-கைமித்திகவுத்ஸவம், 18 மோட்சம், வீடு, 31, 358; துறக்கவின்பம், 75; யோகம், 313
சிறுமை-நோய், துன்பம், 98
சிறைக்காப்பு - சிறையாற் காத்தல்; (சிறை-மதிலும் வாயில்காவலும்,) 57
சிற்றின்பம்-நிலையில்லாத இன்பம், 173
சினங்காத்தல்-தன்னைக்காத்தல், 305
சினத்தைக்கொண்டவன் கேடு × நிலத் தறைந்தான் கை நிலத்துறுதல், 307
சினந் தன்னையே கொல்லும், 305
சினந் துறந்தார் இறப்பும்றவர், 310
சினமென்னுங் குணத்தைப் பொரு ளென்றது, 307 [304
சினம் நகையும் உவகையுங்கொல்லும், சினம்பகை, 304 [310
சினம்மிக்கவர் இறந்தவரோடொப்பர், சீர்மை-புகழ், 123
சீவந்முத்தன், 370
சுக்கிலத்தியானம், 358
சுடச்சுடரும் பொன் × துன்பஞ்சுட நோற்கிற்பவர், 267
சுடும்-வருத்தும், 293
சுற்றம், 166
சூழ்தல்-கருதுதல், 324 [259
செருத்தல்-உடம்பினின்று ஒழித்தல், செத்தாருள் வைக்கப்படுவான் ஒத்த தறியான், 214
செப்பம்-நடுவுநிலைமை, 112 119
செம்பொருள்-அறம், 91: முதற் பொருள், 358
செம்மை-செப்பம், 277
செயப்பாட்டுவினை செய்வினையாகவரு வது, 123
செயற்கரிய, 26
செயற்கெளிய, 26
செயிர் குற்றம், 258
செயிருடம்பு, 320 [110
செய்க்கன்றி கோறலுக்கு உய்வில்லை, செய்யவள்-இலக்குமி, 167
செய்யாமற் செற்றோர், 313
செய்யாவென்னும் வாய்பாட்டுச்சொல் எழுவகையாகவரும், 203
செய்யாள்-இலக்குமி, 84
செய்யுட்கிழமை, 6
செருக்கு-செல்வம், ஆகுபெயர்: 180; அவிச்சை, மயக்கம், 201, 346
செல்லாவாழ்க்கை-வறுமை வாழ்க்கை, 330
செல்லிடத்துவெகுளி எழின் அதனிற் றீய பிறஇல், 302
செல்லிடம்-பலிக்குமிடம், 301
செல்வஞ்செய்தலில் நல்வினை தீயவினை மாறுபடுதல், 375 [333
செல்வம்பெற்றபோதே அறஞ்செய்க, செல்வம்வெஃகாதானுக்கு அஃகாது, 178
செல்வர்க்கே பணிவுசெல்வம், 125
செவ்வியான்கேடு நினைக்கப்படும், 169
செவ்வெண், 141
செறிவு-அடக்கம், 123
செறுவார்க்குந்தீய செய்யாமை தலையறிவு, 203
செற்றோர்-சினங்கொண்டவர், 313
செற்று-அடக்கி, 335
சேர்தல்-இடைவிடாதுநினைத்தல், 3
சேர்ந்தாரைக்கொல்லி, 306
சொல்-புகழ், 56
சொல்லெச்சம், 10, 37, 58, 171, 188, 194
சொற்குணம் இனிமை மெய்ம்மைமுதலியன, 194
சொற்பொருட்பின்வருநிலையணி, 200
சோகாதல்-துன்புறுதல், 127
சோர்வு-மறவி, 56
ஞாலம், 245
ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையானே இருவினைத்துன்பம் அணுகாது கெடும், 339
ஞானயோகங்களின்முன் காமம்முதலிய காட்டித்தீமுன்னர்ப் பஞ்சுத்துய்போலும், 360 [114
தகவிலர் - நடுவுநிலைமையில்லாதவர்; தகுதி-நடுவுநிலைமை, பண்பாகுபெயர், 111: பொறுமை, 158
தகை-நன்மை, 56

தக்கார் தகவிலரையறியும் உபாயம், 114 [17
தடிந்து-குறைத்து, முகந்து என்றபடி:
தண்டம் இன்னதென்பது, உரைப் பாயிரம்.
தத்துவஞானம், 36-அதி. அவதாரிகை
தத்துவம்இருபத்தைந்து, 27
தந்தைமகற்காற்றும்நன்றி, 67
தந்மாத்திரை, 27
தப்புதல்-பயன்படாமை, 217
தமசொரியினும்போகா, 376
தமியருணலின்னாது, 229 [237
தம்மைநோவாதுபிறரைநோவதெவன்,
தருமத்தியானம், 286
தலைப்படுவர்-அடைவர், 356
தலைப்பிரிந்த-நீங்கிய, 258
தலைப்பிரியா, 97 [266
தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்,
தவத்தால்ஒன்னாரைத்தெறலும் உவந்தாரையாக்கலுமாம், 264
தவத்திற்குரு-வேற்றுமைமயக்கம், 261
தவத்திற்குருஉற்ற நோய்நோன்றலும் உயிர்க்குறுகண்செய்யாமையும், 261
தவமறைந்தல்லவைசெய்தல் × புதன் மறைந்துபுட்சிமிழ்த்தல், 274
தவம்இத்தன்மைத்தென்றல், 19
தவம்தவமுடையார்க்காகும், 262
தவம்துறவறத்தின்மேலது, 19
தவாவினை-துறவறம், 367
தவ்வை-தமக்கை, 167
தள்ளுதல்-தவறுதல், 290
தன்னுயிர்போவதானாலும் பிறிதுயிரைக்கொல்லலாகாது, 327
தன்னை வைபவனையும் புறங்கூறலாகாது, 184
தாபதபக்கம், 26
தாழ்வு வறுமை, 117
தாள்-முயற்சி, 212
தானஞ்செய்வாரை வஞ்சித்தல், 276
தானந்தவஞ்செய்தலினும், உள்ளத்தொடு வாய்மைமொழிதல்தலை, 295
தானம் இத்தன்மைத்தெனல், (இங்குத் தானம் இல்லறத்தின்மேலது) 19
திரு-செல்வம், 168
திருவுக்கும் தெள்ளியராதற்குங் காரணம், 374
திரனல்ல-செய்யத்தகாதவை, 157
திறன்-கூறு, 179: வலிமையுடையவை, 186
தினை சிறுமைக்குக்காட்டும் அளவை, 104, 144
தீச்சொல், 128
தீப்பிணிப்பசி, 227
தீயநினைவுகள், 289
தீயவை-துன்பம், 62
தீயவை செய்தாரைக்கெடுத்தலில் தவறாது × நிழல்அடியில்தங்குதலில் தவறாது: 208
தீயவையிலனாதற்குக்காரணம், 205
தீயுழி-நரகம், 168 [206
தீவினைசெய்பவனைப் பாவங்கள் சுடும்,
தீவினை தீயினுமஞ்சப்படும், 202
தீவினையெண்ணலுமாகாது, 204
துச்சில்-ஒதுக்கு, 340
துணிவு-சித்தாந்தம், 21
துணை-அளவு, 22: தகுதி, 87
துப்பார்-உண்பார், 12
துப்பு-நன்மை, உணவு, 12: பற்றுக்கோடு, 106
துப்புரவு-அனுபவிக்கப்படுவன; உண்டிமுதலியன: நுகர்ச்சி: 263, 378
துவ்வாதவர்-நல்கூர்ந்தார், 42
துவ்வாமை-நல்குரவு, 94
துறக்கம்-சுவர்க்கம், 75
துறந்தார்-அகதிகள், 42: சாதல்நீங்கினவர், 310
துறந்தார்துணை - பன்மையொருமை மயக்கம், 310
துறந்தால்இம்மையில் இன்பம்பல, 342
துறவறம் அவாவையஞ்சுவதே, 366
துறவறம் கூடாவொழுக்கமில்லாத போது இல்லறத்தைப்போல் நல்லது, 49
துன்பத்துட்டுன்பம்அவா, 369
துன்பம்-சஞ்சிதம் முதலியன, 366
துன்னற்க-செய்யாதொழிக, 209
துன்னியார் நெருங்கினவர், 188
தூய்மை-மனமாசின்மை, 159
தூய்மையென்பதவாவின்மை; தூய்மை-வீடு: 364
தூற்றுதல்-பலருமறியப்பரப்புதல், 188
தெருளாதான் மெய்ப்பொருள் காணு

தல் × அருளாதான் அரஞ்செய்தல், 249
தெளிந்தாரிற் றீமைபுரிந்தொழுகுவார் விளிந்தாரே, 143
தெளிந்தார்க்குவானம் நணியது, 353
தென்புலத்தார், 43
தேவருலகத்து ஏற்பாரும் கொள்வாரு மின்றி எல்லாரும் ஒருதன்மைய ராவர், 213
தேற்றமை தன்வினை, 187 [றல், 345
தொடர்ப்பாடு - மனம் தொடர்ந்துநிற்
தொழுது - தொழாதின்று என்பதன் திரிபு; இதிற் பிரயோகவிவேகதூ லாரின்கருத்து வேறு, 55
தோற்றம்-உயர்ச்சி, 124: வேடம், 272
நடுவன்மைநாணுபவர் பண்பல்லசெய் யார், 172
நடுவு, நடு-நடுவுநிலைமை, 113, 117
நடுவுநிலைமைகோணுதல் கேட்டையறி விக்கும் உற்பாதம், 116
நட்பாடறேற்றுதவர் புறங்கூறிக்கேளி ர்ப்பிரிப்பர், 187
நத்தம்-ஆக்கம்: நத்துஎன்னும் முதனி லைத்தொழிற்பெயர் 'அம்'என்ற பகு திப்பொருள் விகுதிபெற்றது, 235
நயனுடையான்செல்வம் × உள்ளூர்ப் பழுத்தபயன்மரம், 216: நயன்-ஒப் புரவு.
நயன்-நீதி, (உலகத்தோடு பொருந்து தல், 97: அன்புள்ளசெய்கை, 103 வீருப்பம், 192
நலக்கு=நலத்துக்கு, 149
நல்கூர்ந்தான், 219 [96
நல்லவை-நன்மைபயக்குஞ் சொற்கள்,
நல்லாறு கொல்லாமைசூழ்தல், 324
நல்வினைக்குமகிழ்பவர் தீவினைக்குஎன் அல்லற்படுவது, 379
நன்றி-அறம், 97; உபகாரம், 102
நன்றிமறத்தலாகாது, 108
நன்றியுள்ளுதல் இன்னுதனமறக்கும் உபாயம், 109
நன்று-அறம், 38; நன்மை, 108: அரு ள், 253: இன்பம், 328.
நாமநீர்-கடல், 149
நிரப்பிய, 229
நிரனிறை, 45, 182
நிலத்தறைந்தான் கைநிலத்தையுறுதல் × சினங்கொண்டவன்கெடுதல், 307
நிலமுதலியபூதசுத்துவம், 355
நிலை - ஆச்சிரமம், 124: பிறப்புநின்ற நிலைமை, 325
நிலையில்லாததை நிலையினவென்றுணர் தல் புல்லறிவாண்மை, 331
நிறை-நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத் தல், 57: குணங்கள் நிறைந்திருக் கை, 154
நிறைமொழி-28
நீங்குதல்-செய்யாது தவிர்தல், 246
நீட்டல்-சடையாகத் திரித்தல், 280
நீத்தார்-துறந்தார், 325
நீந்தல்-கடத்தல், 8
நீராற்புறந்தூய்மை × வாய்மையாலகந் தூய்மை, 298
நீர்மை - தன்மை, 17: நீரின்றன்மை; தண்மை இனிமைமிகவுதவுகைஎன் பன, 195
நெஞ்சம் குற்றமுள்ளதாயின் வேடத் தாற்பயனில்லை, 272
நெஞ்சறிவது பொய்யற்க, 293
நெஞ்சுகரி, 293
நெடுநல், 336
நோ-துன்பம், 157 [360
நோய்-இன்னுதன,320: வினைப்பயன்,
நோன்பிற்கு இயல்பு ஒன்றின்மை,344
நோன்மை-பொறுமை, 48
நோன்றல்-பொறுத்தல், 261
பகச்சொல்வி, 187
பகவன் ஆறுகுணங்களையுடையவன், 1
பகுதி-பகுப்பு, 111
பகுதி வினையெச்சப்பொருள்படுதல், 3
பசிபாத்தூண்மரீஇயவனைத்தீண்டாது, 227
பசிமாற்றுவாராற்றலிற்பின் ஆற்றுவா ராற்றல், 225
பஞ்சக்கிலேசம் குற்றமைந்து, 38
படிறின்மை - வாய்மை, 91 [275
படிற்றொழுக்கம்-கள்ளவடத்தை, 271,
படின்-தாழின், 272
படுபாக்கு, 136, 164
படைகொண்டார் நெஞ்சம் × ஒன்றனு டல் சுவையுண்டார்மனம், (படை-கொலைக்கருவி) 253

பண்பிற்குப்பண்பு இல்லை, 168
பயனிலசொல்லல் கட்டார்கண் கயனில சொல்லுதலிற்றீது, 192
பயனிலசொல்லுவாரைப்பல்லார் முனிவர், 191
பயனில கயனிலவற்றினும்தீய, 197
பயனில்சொல் நன்மையினீக்கும், 194
பயன்-நன்மை, 97
பரகீயம், 141
பராக்கு, 366
பரிந்து-வருந்தி, 88
பருவந்து-வருந்தி, 83
பலவாயநினைவு, 337
பழி-அதருமம், தீவினை, 40: பாவம், 44: நிந்தை, 137
பற்றற்றகண்ணேபிறப்பறுக்கும், 349
பற்றற்றான் பற்று, (பற்று-அவா, பற்றப்படுவதாகிய முத்தி நெறி) 350
பற்றுஅற்றால் மோட்சம் கிடைக்கும், 346
பற்றுவிடார்க்கு இடும்பைவிடா, 347
பனுவல்-நூல், 21 [104
பனை-பெருமைக்குக் காட்டும் அளவை,
பன்மையாக்கூறுவது ஒன்றைத்துணியாதபோது,32-அதி. அவதாரிகைக் குறிப்பு.
பன்மையொருமை மயங்குதல் உயர்த்தற்கண், 144
பாத்து-பகுத்து, 44 [கல், 193
பாரித்துரைத்தல் - விரித்துச்சொல்லுபாலல்லவாகா, 376
பால்-முறைமை, 111 [பெயர், 78
பால்வினங்கா அஃறிணைப்படர்க்கைப் பாவனை, 358
பாழ்படுதல்-கெடுதல், 83
பிதிரர், 43
பிழையாதற்று, 307
பிறப்பு × வீழ்ப்பது, 339
பிறப்புக்குக்காரணம் மருள், 351
பிறப்புத்துன்பந்தரும், 325
பிறப்பென்னும் பேதைமை, 358
பிறர்மனைநோக்காமை அறனும் ஒழுக்கமும், 148 [362
பிறவாமை அவாவாமை வேண்டவரும்,
பிறவித்துன்பங்கள், மூன்று: (இவை தாபத்திரயமெனவும்படும்) 4, 246
பிறன்மனைசெல்வார்க்குவினை பகை முதலியன, 146
பிறிதினெய் தன்னெய்போற்போற்றுதலே அறிவு, 315
பீடு-பெருமிதம், 59
புகழில்லார் தோன்றுமை நன்று, 236
புகழுடையான் ஒருங்கே இவ்வுல கோடு மேலுலகும் எய்துவன், 234
புகழொடுதோன்றுக, 236
புகழ்க்கு ஈதல் சிறந்தகாரணம், 232
புகழ் பாட்டுஉரையுமென இருவகைப்படும், 232
புக்கில் - எஞ்ஞான்றும் இருப்பதோரில், 340
புணரின்-முடியுமாஞல், 308
புதன்மறைந்து புட்சிமிழ்த்தல் × தவமறைந்தல்லவைசெய்தல், 274
புத்தேளுலகு, 213, 290
புரிந்தார்-விரும்பினவர், 287
புரைதீர்ந்தநன்மை-அறம், 292
புலம்-ஐம்பொறி, 174
புலவரினும் புகழுடையார்மேம்படுவர்: புலவர்-ஞானிகள்; 234
புலாலுண்ணுது கொல்லாமலுயிருப்பவனே உயிரெல்லாந்தொழும், 260
புலால் பிறிதொன்றன்புண், 257
புறங்கூறி யுயிர்வாழ்தலின் சாதல் நன்று, 183
புறங்கூறுவான் பிறரால் உளையுமாறு பழிகூறப்படுவான், 186
புறஞ்சொல்வானுரையுங் கொள்ளப்படாது, 185
புறத்துறுப்பு-இடம் பொருள் ஏவல் செய்வார் முதலாயின, 79
புறப்பற்று, 21
புறன்-கேடினவளவு, 189
புன்மை-குற்றம், 174
பூசல்தருதல்-தூற்றுதல், 71
பூசனை-கித்தியோத்ஸவம், 18
பூதங்களைத்தோறும், 271
பூப்பர்-பொலிவர், 248
பூரியார்-இழிந்தார், 241
பெட்டு-விரும்பி, 141
பெண்-மனைவி, 54
பெண்டிர்கணவனைவழிபடுதலால்தேவலோகத்திற் சிறப்புப்பெறுவர், 58

பெருஞ்செல்வம் × கூத்தாட்ட வைக்குழாம், 332
பெருந்தகையான் செல்வம் × மருந்தாகித்தப்பாமரம், 217
பெற்றம் புலித்தோல்போர்த்து மேய்தல் × வலியின்னிலையான் வல்லுருவங்கொண்டு மனவழிப்படல், 273
பேதைமை பிறப்பிற்குக் காரணம்: (பேதைமை-அவிச்சை) 358
பேதைமையுணர்வு நூல் கற்பினும் போகூழால் மிகும், 373
பேராண்மை-காமத்தை யடக்கிவைக்கும் பெரிய ஆண்டகைமை, 148
பேராவியற்கை-மோட்சம், 370
பொச்சாத்தல்-மறத்தல், 199
பொச்சாந்தார், 246
பொச்சாப்பு-சோர்வு, 285
பொய்ம்மையும் வாய்மையாவது, 292
பொய்யாமை புகழ்க்காரணங்களிலடங்கிற்றது, 296
பொய்யாமை பொய்யாமையாற்றிற் பிறவறஞ்செய்யாமை கன்று என்று பிறதருமஞ் செய்யவேண்டாமென்ற மறையிற் கருத்தன்று; பொய்யாமையின்சிறப்பிற் கருத்து, 297
பொய்யாவிளக்கு, 299
பொருட்பெற்றிகூறுவார், ஈசர்-அதி. அவதாரிகை.
பொருந்துமாறு-யுக்தி, 242
பொருளல்லது-பாவம், 254
பொருளாட்சிபோற்றார்க்கில்லை × அருளாட்சி யுண்டின்பவர்க்கில்லை, 252
பொருளாள்-மனையாள், 141
பொருளாற்றலாற் கொள்ளுதல், 306
பொருளிலார்க்கு இவ்வுலகமில் × அருளிலார்க்கவ்வுலகமில், 247
பொருளின்பங்களைச் செய்பவர்அவஞ் செய்வார், 266
பொருளுடைமையாகாது விருந்தோரால், 153 [377
பொருளே நுகர்தற்கு ஊழ்வேண்டும்,
பொருளே விசேடித்துநின்ற பண்புகள் உவமைக்கண்ணும் செல்லுதல், 100
பொருள்-புருஷார்த்தம், உரைப்பாயிரம்: மெய்ம்மை, 5: உபமேயம், 100: அர்த்தம், 128: பொருணூல், அர்த்தசாஸ்திரம், 141: பயன், 199: அறம்: உறுதிப்பொருள், 246
பொருள்கருதிப்பொச்சாப்பார் அருள்கருதி அன்புடையராதலில், 285
பொருள்வெஃகி சூழக்கெடும், 176
பொருள்வைப்புழி அற்றுழிபசிதீர்த்தல், 226
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர், 155
பொறுத்தார்க்குப்புகழ், 156
பொறையுடைமையே குணம் நிரம்பியமையாகும், 154
பொன்றுது-அழியாது, 233
பொன்றி என்பதுபொன்ற எனத்திரிந்தது, 171
பொன்றுதல்-அழிதல், 36
போகூழ், 371
போல் உரையசை, 235
போற்றுதார்-பாதுகாவாதார், 252
மகனேச்சான்றோனெனக் கேட்டதாய் ஈன்றபொழிதினுவக்கும், 69
மகன்-மனிதன், 110
மகன்றந்தைக்குச்செய்யும் உதவி, 70
மக்கட்பதடி, 196
மக்கட்பேறு, 61
மக்கட்பேறு மனைமாட்சிக்குக்கலம், 60
மக்களறிவுடைமை தம்மினும் உலகோர்க்கு இனிது, 68
மக்களுயிர்க்கு ஊதியம் ஈதலும் இசைபடவாழ்தலும், 231
மக்கள் கையளாவியகூழ் அமிழ்திற்றினிது, 64
மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேல்நோக்கக் கீழாகும், 363
மக்கள் தம்பொருள், 63
மக்கள் மெய்ந்நீண்டல், 66
மடவார் - அறிவில்லாதவர் (மகளிரல்ல): 153
மடி-சோம்பேறித்தனம், 371
மயக்கநூல்வழக்கு, 351
மரீஇயவன், 227 [லுதல், 210
மருந்தோடுதல்-கொடுநெறிக்கட் செல்
மருவுக மாசற்றார்கேண்மை, 106
மருள்-மயக்கம், விபரீதவுணர்வு, 199, 351

மல்லல்-வளப்பம், 245
மழலை, 66
மழித்தல்-சிரைத்தல், 280
மறத்தல்-வியங்கோள், 303
மறத்தல் நன்று, 108, 152
மறத்திற்குத்துணையன்பு, 76
மறவற்கமாசற்றார் கேண்மை, 106
மறைமொழி-மந்திரம், 28
மற்றின்பம்=மற்றையின்பம், 173
மனத்துமாசாக நீராடிமறைந்தொழுகும் மாந்தர், 278
மனிதசன்மத்திற்குப்பயன் ஈந்துபுகழ் பெறுதலே, 231
மனைமாட்சி மங்கலம், 60
மனைவிக்குக் கற்புண்டாயின் மேம்பட்ட பொருள், 54
மனைவிபுகழற்றவளாயின் கணவற்குப் பெருமித நடையின்று, 59
மன்-ஒழியிசை, 378
மன்ற-நிச்சயம், 143
மன்னுயிர், 244
மாசறுகாட்சி-மெய்யறிவு,199. கேவலவுணர்வு, 352
மாசற்றார்கோள், 311, 312
மாணாப்பிறப்பு - (துன்பமேயுடைமையால்) மாட்சிமைப்படாதபிறவி,351
மாண்பு-நற்குணநற்செய்கை, 51 [158
மிக்கவை செய்தாரை வெல்லும்வழி,
மிசைதல்-உண்ணுதல், 85
மிசைநிலம்-வீட்டுலகு, 3
மிச்சில் மிச்சமானது, 85
முகனமர்தல்-முகமினியனாதல், 84
முதனிலைத்தொழிற்பெயர், 93, 117 177
முயல்வார்-வானப்பிரஸ்தர், 47
முருகனது குறிஞ்சிநிலம்-உரிமைப் பொருள், 63 [319
முற்பகற்செய்யிற்பிற்பகல் விளையும்,
முனிய-வெறுக்க, 191
மூவகைத்துன்பத்தது, 266
மெய்-மெய்ந்நூல், 300
மெய்ப்பொருள், 249, 355
மெய்ம்மை-பரம்பொருள், 364
மெய்யுணர்ந்தார்க்குநிற்பன, எடுத்த உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும், 360
மெய்யுணர்வு, 21
மேற்கொள்வது, 262
மேற்கோள்-பட்சம், சித்தாந்தம் 321
மேற்சேறல்-விரைதல், 335
யாக்கை, 239
யானெனதென்னுஞ் செருக்கு, 346
யோகவுறுப்பு எட்டு, 26
வகுத்தான், 377
வசை, 238
வரன்-சிறந்தது, 124 [150
வரைதல் - உரித்தாகக்கொள்ளுதல்,
வரையாள்-எல்லையிலிருப்பாள், 150
வலியில்நிலையான் வல்லுருவம் × பெற்றம்போர்த்த புலித்தோல், 273
வழக்கு இன்னதென்பது, உரைப்பாயிரம்.
வழங்கி-நிலைபெற்று, 11
வழங்குதல்-இயங்குதல், 245
வழி-சந்ததி, 44
வழுக்கி-மறந்து, 139
வளம்-பயன், 14: வருவாய், 51
வளி காற்று, 245
வறியவர்துறவாமைக்குக் காரணம் விதியே, 378
வற்றன்மரம், 78
வன்கணவர், 228
வன்கணார், 276
வன்பாற்கண் வற்றன்மாந்தளிர்த்தல் × அன்பில்லாவுயிர்இல்லறத்து வாழ்தல், (வன்பால்-பாலைநிலம்) 78
வன்மையுள்வன்மை அறியார் குற்றத்தைப்பொறுத்தல், 153
வாய்மையானகந்தூய்மை × நீராற்புறந்தூய்மை, 298
வாய்மையின் மிக்க அறமில்லை, 300
வாய்மையின்னதென்பது, 291
வாரி வருவாய், 14
வாலறிவன், 2 [240
வாழாதார் இசையொழியவாழ்வார்,
வாழ்க்கைத்துணைக்கு இலக்கணம், 51
வாழ்நாள்வழி - யாக்கையோடு கூடியிருக்கும் பிறப்படையும்வழி, 38
வாழ்பவர்வசையொழியவாழ்வார், 240
வாழ்வாங்கு=வாழ்வு ஆங்கு: வாழ்தற்கு உரிய அவ்வகை, 50
வானுயர் தோற்றம், 272

வான்-மழை, 11
விக்குள்மேல்வராமுன் கல்வினைசெய்ய வேண்டும், 335
விசும்பு-மேகம், 16
விண்பொய்த்தல், 13
விதப்பு, 306
விதிமுகத்தாற் கூறுவது, 365
விதிவிலக்குக்கள் தம்முள் மலையாமை விஷயபேதத்தால், 328
வித்தகர், 235
வித்து-காரணம், 138
விபரீதவுணர்வு, 351
விமரிசம், 357
விருந்து, 43
விருந்துக்குநன்மை ஞானவொழுக்கங்களானுயர்தல், 84
விருந்து பார்த்திருப்பவன் வானத்தவர்க்கு விருந்து, 86
விருந்து முகந்திரிந்துநோக்கக்குழையும் × அனிச்சம் மோப்பக்குழையும், 90
விருந்தோம்பாமடமை பேதையார்க ணுண்டு, 89
விருந்தோம்பாவிடின் பொருளாற்பயனில்லை, 89
விருந்தோம்பிமிசைவான்புலம் வித்தின்றியேவிளையும், 85
விருந்தோம்புவானுக்குப் பொருள்விளக்கும், 84
விருந்தோம்புவான் வாழ்க்கை பாழ்படாது, 83
விலக்கிய தொழிதலும் அறம், 321
விழுப்பம்-விழுமியபொருள், 21, சிறப்பு, 131
விழுப்பேறு-சிரியபேறு, 162
விழுமம்-துன்பம், 107
விழுமியார், 201
விளிதல் போதல், 332
விறல்-வெற்றி, 180
வினைகளதிருவகைப்பயன்-இன்பதுன்பம், 38
வினைக்குறிப்புப்பெயர், 99
வினைப்பகை பின்சென்றடும், 207
வினைப்பயன் எழுபிறப்புத்தொடரும், 107
வினைமாற்று, 65
வீடுஇன்னதென்பது, உரைப்பாயிரம்.
வீடுகாரணவகையாற் கூறப்படும், உரைப்பாயிரம்.
வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்தல், 369
வீயாது-நீங்காமல், 207
வெஃகாரை அறனென்று அறிந்து சேருவாரைத் திருச்சேரும், 179
வெஃகுதல், 172
வெகுளாமைக்கு இடம், 301
வெகுளியாற் றீய பிறச்சும், 303
வெகுளியுள்ளாதானுக்கு உள்ளிய வெல்லாமெய்தும், 309
வெகுளியையாவர்மாட்டும் மறக்க, 303
வெறிய-அறிவோடுபடாதவை, 175
வேண்டாதுகூறுதல் ஒன்றனையறிவிக்க: இது தாற்பரியமெனப்படும்; 91, 139, 159, 282, 309
வேண்டாமை இருமையிலும் விழுச்செல்வம், 363
வேண்டிய வேண்டியாங்குதவத்தாலெய்தலாகும், 265 [364
வேண்டுதல்-இடைவிடாதுபாவித்தல்,
வேளாண்மை-உதவி, 81, 212
வேள்வி-மறுஷ்யயஜ்ஞம், 87
வேள்வியாயிரத்தின் புலாலுண்ணுமை நன்று, 259
வேள்வியாற் செல்வம்பெரிதாம், 328
வேற்றுப்பொருள்வைப்பணி, 211
வேற்றுமைப்படுத்துக்கூட்டுதல், 344
வேற்றுமைமயக்கம், 102, 242, 294
வேற்றுமையணி, 90, 129
வைசேடிகர் பொருள்பண்பு முதலிய வற்றை அறுவகைப்பொருளென்பர், 307
வைப்பு-வைக்குமிடம்: உலகம், 24, 149
வையகம், 101
வையம், 22

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	36	என்பர்.	என்பர்
22	31	(இவ்வளவென்று)	இவ்வளவென்று
52	11	'தம்,மின்'	'தம்மின்'
96	29	நூல்ளுக்கு	நூல்களுக்கு
128	7	பபனில்	பயனில்
137	13	கருத்து	கருத்து.
138	35	சேர்கல்லா	சேக்கல்லா
145	21	(ஒருவனுக்கு)	(ஒருவனுக்கு),
164	30	முன் -	முற்பட -
212	15	சக்நி	சக்தி.
222	32	என்பது	
228	23	என்று	
241	35	உயிர்க்கு,—	உயிர்க்கு—,

மற்றும் காணப்படினும் திருத்திக்கொள்க.

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர், 17 - தெளிசிங்கப்பெருமாள்கோயில்தெரு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற் கிடைக்கும்.

			ரூ.	அ.	பை.
கம்பராமாயணம்:—					
பாலகாண்டம்	உரையுடன்	...	5	0	0
அயோத்தியாகாண்டம்	,,	...	5	0	0
ஆரணியகாண்டம்	,,	...	4	0	0
கிட்கிந்தாகாண்டம்	,,	...	4	8	0
சுந்தரகாண்டம்	,,	...	5	0	0
யுத்தகாண்டம் 2-வால்யும்	,,	...	10	0	0
பத்துப்பாட்டு:—					
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையுடன்		...	0	4	0
பொருநராற்றுப்படை	ஷை	...	0	4	0
சிறுபாணாற்றுப்படை	ஷை	...	0	4	0
பெரும்பாணாற்றுப்படை	ஷை	...	0	12	0
முல்லைப்பாட்டு	ஷை	...	0	3	0
நெடுநல் வாடை	ஷை	...	0	4	6
பட்டினப்பாலை	ஷை	...	0	4	0
நாலடியார் உரையுடன்		...	2	0	0
சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை உரையுடன்		...	0	2	0
நன்னூற்காண்டிகையுரை		...	1	8	0
திருக்குறள் பொருட்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்					
வில்லிபாரதம்:—					
சபாபருவம் உரையுடன்		...	3	0	0
வீட்டும துரோண கர்ண பருவங்கள் உரையுடன்		...	3	8	0
சல்லியசௌப்திக பருவங்கள் உரையுடன்		...	1	8	0
சடகோபரத்தாதி உரையுடன்		...	0	12	0
திருப்பாவை உரையுடன்		...	0	6	0
சரசுவதியந்தாதி உரையுடன்		...	0	3	0
திருவேங்கடத்தந்தாதி உரையுடன்		...	0	12	0
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அழகர்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
மதுரைக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அஷ்டப்ரபந்தம், விரிவுரையுடன்		...	3	8	0
நாலாயிரதிவ்யப்ரபந்தம் தனித்தனியாயிரமும் கிடைக்கும்.		...	3	8	0
பெரியபுராணத்துக் கண்ணப்பநாயனார் புராணவுரையும், கந்தபுராணத்து வள்ளியம்மைதிருமணப்படலவுரையும்			0	8	0
வசனம்.					
உதயணன் சரிதை	...	...	0	12	0
சந்திராபீட சரிதம்	...	...	0	5	0

ஸ்ரீ

திருக்குறள்

பொருட்பால் காமத்துப்பால்களின்

மூலமும்

பரிமேலழகருரையும்

குறிப்புரையுடன்



வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரால்

ஆர். ஜீ. அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1938

விலை. 3—8—0

பொருளடக்கம்.

1. முகவுரை. I

2. பரிமேலழகர் உரைத்தன்மை. IV

3. பொருட்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின் அட்டவணை. XIX

4. பொருட்பாலின் பிழைத்திருத்தம். XX

5. திருக்குறள் பொருட்பால் மூலமும் பரிமேலழக ருரையும் குறிப்புரையும். க

6. பொருட்பாலின் செய்யுண்முதற்குறிப்பகராதி. ரூo அ

7. பொருட்பாலின் அரும்பதவகராதி முதலியன. ரூகஉ

8. காமத்துப்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின் அட்டவணை.

9. காமத்துப்பாலின் பிழைத்திருத்தம்.

10. காமத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும் குறிப்புரையும். க

11. காமத்துப்பாலின் செய்யுண் முதற்குறிப்பகராதி. கரூஉ

12. காமத்துப்பாலின் அரும்பதவகராதி முதலியன. கரூசு

13. திருவள்ளுவமாலை உரையுடன். 1

முகவுரை.

அருந்தமிழன்பர்களே! சென்றயாண்டில் திருக்குறள் அறத்துப்பாலைப் பரிமேலழகருரையுடனும்(அடியேனுக்குத் தமிழாசிரியரான ஸ்ரீ.உ.வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்யஸ்வாமிகள்) குறிப்புரையுடனும் வெளியிட்ட போது, பொருட்பால் காமத்துப்பால்களுள் அப்பெரியாரின் குறிப்புரை கிடைக்கு மிடங்களில் அந்தக் குறிப்புரையோடும், கிடையாத பகுதிக்கு எனது சிற்றறிவிற்கு எட்டியமட்டில் உழைத்து ஓர் குறிப்புரையெழுதி அதனோடும் நூல் முழுவதையும் பூர்த்திசெய்து வெளியிடும் நோக்கமுடையே னென்பதை வெளியிட்டுள்ளேன். கடவுளருளால் அந்நோக்கம் முற்றுப்பெற் றுப் பொருட்பால் காமத்துப்பால்களும் வெளிப்படுங் காலம் நேர்பட்டது.

'திருவள்ளுவனார் நால்வகைப்பேறுகளுள் அறம்பொருளின்பம் என்ற மூன்று பேறுகளையே மூப்பாலாகக்கூறி, நான்காவது பேறுகிய வீட்டினைப் பற்றிக் கூறுதற்கு யாதுகாரணம்?' என்று மூப்பால்களைக் கற்போர்க்கு ஓரையங்தோன்றலாம். அங்ஙனம் தோன்றும் ஐயத்தைப் போக்க உரையாசிரி யர்கள் பிறிதுகாரணம் கூறினும், எனக்குத் தோன்றுவது ஒன்று: அதாவது—ஒவ்வொருசமயத்தவரும் வீட்டினைப்பற்றியும் அதனைப் பெறும் வாயிலைப்பற்றியும் ஒருதிறப்பட்டுக்கூறுது மாறுபட்டுப் பிணங்குவதனாலும், கூடியவரையில் பொதுநோக்கம்படக் கூறும் அந்தத் திருக்குறளாசிரியர்க்கு அந்தப்பிணக்கிற் சிக்கிக்கொள்ள விருப்பமிராதாகையாலும், யாவர்க்கும் ஒப்ப முடியுமாறு அவாவறுத்தல் மெய்யுணர்தல் என்ற அதிகாரங்களால் வீடுபேற் றிற்கு நிமித்தத்தைக் குறிப்பிட்டுவிட்டு அம்மட்டோடு நின்றனரென்பது: அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயனாயிருக்கவும், தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் புறத்திணையில் அறம்பொருள்களையும் அகத்திணையில் இன்பத்தையும் கூறி, நான்காவதுபேறுகவுள்ள வீட்டைப்பற்றி "பாங் கருஞ்சிறப்பிற் பலவாற்றானும், நில்லாவுலகம் புல்லியநெறித்தே" என்று வீடு பேற்றுக்கு நிமித்தமாகிய பல்வேறு நிலையாமையைக் கூறி, "காமஞ்சான்ற கடைக்கோட்காலை, யேமஞ்சான்ற மக்களொடுதுவன்றி, யறம்புரிசுற்றமொடு கிழவனுங்கிழத்தியுஞ், சிறந்ததுபயிற்ற லிறந்ததன்பயனே" என்பதனால் இல்லறநிகழ்த்துவதன்பயன் வீடுபேறே என்றுங்கூறி அம்மட்டோடு நிறுத் திய ஆசிரியர் தொல்காப்பியனார் இவர்க்கு வழிகாட்டியாவார். தம் நூல் பல்லர்க்கும் பயன்படவேண்டுமென்று கருதுவோர் பிணக்குள்ள கூறுகளில் தலையிடாது பொதுநோக்கம்படக் கூறுவதையே ஏற்ப தென்பது சிறிது ஆராய்வோர்க்கும் புலனாகும்: இதுகிற்க.

உலகத்திற்கேகண்ணனைத்தருந்த திருக்குறளென்ற கிகரற்ற உயரிய நூல் தக்க அறிஞர்களால் பலபட வெளியிடப்பட்டிருப்பினும், அவையாவும் கற்ற அறிஞர்க்கு அன்றிக் கற்கும்மாணவர்க்குப் பரிமேலழகருரையை உள்ள

படி முற்றும் உணர்வதற்கு ஏற்றனவாகா வென்பதைப் பலரும் நன்கறிவர். பரிமேலழகருரையையோதி அதன்பொருளைக் காணமாட்டாது இடர்ப்படும் பலமாணவர்களைக் கண்டுள்ளேன். அங்ஙன் இடர்ப்படாது பரிமேலழகருரையின் நுட்பமான கருத்துக்களையெல்லாம் அறியவேணுமென்னும் ஆர்வமுள்ளோர் யாவரும் இனிது கண்டறியவேணுமென்னும் நோக்கம் பெரிதுந்தூண்ட, யான் இத்துறையில் இயன்றமட்டும் வருந்திமுயன்று இப்பதிப்பை முற்றுவித்து வெளியிடலானேன். இப்பதிப்பு, தான் அமைக்திருக்கிற கிலையில், பரிமேலழகருரையின் நுண்ணியகருத்துக்களை அறியவேணுமென்னும் விருப்புடைய மாணவர்க்குக் கைகொடுத்து உதவுமென்றே நம்புகின்றேன். இத்தப்பதிப்பைப் படிக்க விரும்புவோர் முதலில் இதிற்காட்டியுள்ள பிழைத்திருத்தங்களைக் கவனத்தோடு பார்த்துத் திருத்திக்கொண்டு பிறகு படிக்கப்புகின் நலமாகு மென்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொருட்பாலில் முதல் தொடங்கி, இடையிலுள்ள பெண்வழிச்சேறல், வரைவின்மகளிர் என்ற இரண்டு அதிகாரங்கள் நீங்கலாக கஅக - ஆம் அதிகாரம் நன்றியில்செல்வம் இறுதியாக, அறுபத்தோரதிகாரங்கட்கு ஸ்ரீ.உ.வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்யஸ்வாமிகளுடைய குறிப்புரை இருந்தது: அத்தக்குறிப்புரையில் இலக்கணப்பகுதி மிகுதியாக இருந்தவற்றையடித்திட்டும், விளங்காதிருக்குமென்று தோன்றிய சிலஇடங்களை விளக்கியும், இங்ஙனம் சிலமாறுதல்களை அறத்துப்பாலிற் செய்ததுபோலவே இத்தப்பொருட்பாலிலும் செய்துள்ளேன். அந்த ஸ்வாமியின்குறிப்புரைகள் கிடைக்காதனவான ஒன்பது அதிகாரங்களும், காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களுமாகிய மூப்பத்துநான்கு அதிகாரங்கட்கும் புதிதாகக் குறிப்புரை எழுதிச்சேர்த்துள்ளேன். அறத்துப்பாலுக்குப்போலவே, பொருட்பாலினிறுதியிலும் காமத்துப்பாலினிறுதியிலும் செய்யுண் முதற்குறிப்பகராதி, அரும்பதவகராதி முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும், திருக்குறளின்பாயிரமென்னத்தக்க திருவள்ளுவமாலையும் இரண்டொரு திருத்தஞ்செய்யப்பெற்று, திருவாளர் சரவணப்பெருமாளையரவர்கள் உரையுடன் ஈற்றில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தக் குறட்பகுதியைப் பதிப்பிக்கும்போதும், அறத்துப்பாலைப்பதிப்பிக்கும்போது உதவிய பிரதிகளையெல்லாம்கொண்டு ஒப்புநோக்கிப் பாடபேதங்களைப் பெரும்பாலும் குறித்துள்ளேன். கஅடுஅ-ஆம் குறளுக்குப் பரிமேலழகர் கூறியுள்ள விசேடவுரையில் 'இனி, முற்றத் துறத்தலாவது-துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினுர் பின்அவற்றை 'மனத்தாற் றுறவாமை'என்றே எல்லாப்பிரதிகளிலும் காணப்பட்டமையால், அங்ஙனமே பதிப்பித்துள்ளேன்: அத்தப்பாடம் பொருளமைதிக்கு ஏலாமையால், குறிப்புரையில், மனத்தாற்றுறத்தல்' என்று இருக்கவேண்டுமென்று காட்டியுள்ளேன். கஉஅசு - ஆந் திருக்குறளின் விசேடவுரையில், 'மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்தலில்' என்றே பல

பிரதிகளிற் காணப்படினும், அது பொருளமைதிக்கு ஏற்றிராமையால், அந்தப்பாடத்தைப் பிரதிபேதமாகக் காட்டிவிட்டு, எமக்குக்கிடைத்த ஒருபிரதியிலுள்ளவாறு, 'மிகமுதிர்ந்திறுமெல்லத்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் இனிமைசெய்யாமையில்' என்ற பாடத்தைப் பிரதானமாகக் கொண்டுள்ளேன். பலவிடங்களிலும் நன்குபொருந்தும் பாடங்களையே தலைமையனவாகக் கொள்ளவேணுமென்று கருதி, மற்றைப்பாடங்களைப் பிரதிபேதமாகக் குறித்துள்ளேன்.

இங்ஙனம் பதிக்கப்பெற்ற இத்தப்பதிப்பில் என்னுடைய அறியாமையாலும் அறிவின் சோர்வினாலும் குற்றங்குறைகள் நேர்ந்திருக்கும். அங்ஙனம் நேர்ந்திருப்பின், அறிஞர் அவற்றைத் தம்முடைய இயற்கைக்குணத்தினாற்பொறுத்துக்கொள்வதன்றி அடியேனுக்கும் தெரிவித்தால் அவர்கள் நிறத்து நன்றியறிதலோடு அப்பிழைகளையுந் திருத்திக்கொள்வேன்.

இத்தத்திருக்குறளின் பொருட்பால் காமத்துப்பால் பதிப்புநடக்கும் போது உடனிருந்து ஒத்துப்பார்த்து உதவியவர் சிரஞ்சீவி. தூசி. கோ. ஜகந்நாதாசார்யர் M. A. என்பவர்: அன்னார்க்கு இறைவன் அறிவையும் ஆயுளையும் மற்றும் வேண்டும் நலன்களையும் அளிப்பானாக. அன்றியும் காமத்துப்பால் பதிப்பிக்கும்போது ஹிந்து ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீ. உ. வே. வித்வான் - கோ. அரங்கசாமியையங்கார்ஸ்வாமிகள் ஒருமுறைபார்த்து உதவினர்கள்: அவர்திறத்து என்பணிவு உரியதாகுக. இப்பதிப்பிற்கு உதவுமாறு தம்முடைய புத்தகங்களையளித்தும் எனக்கு ஊக்கமளித்தும் என்முயற்சிக்குத் தூண்டுகோலாக இருந்த நண்பர்கட்கெல்லாம் என்மனமார்ந்த பணிவு உரியதாகுக.

அடியேனைக்கொண்டு திருக்குறளைப் பரிமேலழகருரையுடனும் குறிப்புடனும் பதிப்பித்துவெளியிடுதலாகிய இத்தப்பெரும்பணியை முற்றுவிக்கத் தோன்றுத்துணையாயிருந்து அருள்சுரந்த எம்பெருமான் திருவடிகளை இடைவிடாது ஏத்துவேனாக.

பகுதானியவிலி
கார்த்திகைமீ

இங்ஙனம்
வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யன்,
17-தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி.

பரிமேலழகருரைத்தன்மை.

திருக்குறளுக்குப் பதின்மர் உரைகண்டாரென ஏற்படினும், எங்கும் பரவித்திகழ்வது பரிமேலழகருரையே யென்பது, யாவரும் அறிந்தவுண்மை யாகும். இவர், பரிபாடலுக்கு உரைகண்டதுபோல அருஞ்தொடர்க்குப் பொருள்காண்பது என்ற முறையைத் திருக்குறளுக்குக் கொள்ளவில்லை. திருக்குறளில் ஒவ்வொருபாடலுக்கும் பதத்தின்மேற் பொருள் விளங்குமாறு பொழிப்புரைகூறிப் பின்னர் அருஞ்தொடரைவிரித்தல் முதலியன செய்து போவர்: இப்போது அச்சிட்டபலபிரதிகளிலும் காணப்படுவதுபோலச் சொற் பொருளைப் பதவுரையாக அன்னர் கூறிற்றிலர்: பொழிப்புரையாகத்தான் சொற்பொருளைக்கூறினர்: ஆயினும், பின்புள்ளார்பலரும், கற்பார்க்குவிளங்க வேண்டிப் பதவுரையாக வெளியிடலாயினர். அம்முறையே எம்முடைய பதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டது.

பொழிப்புரைகூறியபின் விசேடவுரையில்தான், இந்தப்பரிமேலழகி யாரின் அறிவின்நுண்மையும், ஆழ்ந்து நோக்கும் மதிவன்மையும், தமிழ் மொழியிலும் வடமொழியிலுமுள்ள தேர்ந்தஅறிவும், பலபொருள்களையும் சீர்தூக்கிஆராயும்பண்பும், பசுமரத்துஆணிபோலத் தமதுகொள்கை கற்போ ருள்ளத்துப்பதியுமாறு ஏற்ற சொற்கொண்டு அமைக்குந் தன்மையும், முன் பின் முரணுதலாறு குறிக்கொண்டு நோக்குதலும், தொடர்ச்சிபடப் பொரு ளமைத்தலும் முதலிய திறனெல்லாம் இனிது விளங்கும். ஒன்றின் தன் மையை ஒன்றின்மேலேற்றிக் கூறுதல் முதலிய ஔபசாரிக பிரயோகங்களை யும், இலக்கணவழக்குக்களையும், ஏ, ஓ, உம், மன் முதலிய இடைச்சொற் களின் பொருளையும் இவ்வுரையாசிரியரைப்போல் கூர்ந்து ஆராய்ந்து கூறு பவர் எவருமிலர்: அன்றியும், சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய நூலழகுகளையும், பண்டைக்காலச் செய்யுள்களைத் தம்முடைய உரைநடையி லமைத்து எழுதுதலையும் இவருரையிற் காண்பதுபோல் வேறெவ ருரையி லும் காணவியலாது.

பரிமேலழகரின் விசேடவுரையிலிருக்குங் கூறுபாடுகள்—விளக்கவேண் டிய அருஞ்தொடரை விளக்கல், அங்ஙன் விளக்குமிடத்து அதனைநிலைநாட் டற்குவேண்டிய மேற்கோள்களை உரியவிடத்து அமைத்தல், தாம்கூறிய சொற்பொருளைப்பற்றிப் பிறர் ஐயங்கொள்ளக்கூடியஇடத்து அந்தச்சொற் பொருளை நிலைநாட்ட ஏற்ற மேற்கோள்காட்டுதல், இன்றியமையாவிடங்களி லெல்லாம் கருத்துக்கூறல், சிலவிடத்து ஒத்தபகுதிகாட்டல், உரியவிடத்து வருவித்தசொல் இன்னகாரணத்தால் வந்ததென்று நிரூபித்தல், வருவித்த சொல் விளக்கவேண்டியதாயின் அதனையும் விளக்குதல், சொல்லுக்கு இன்

ணது பொருள்என்று விளங்காவிடத்துச் சொற்பொருளே விளக்கிக்காட்டுதல், சொல்லுக்கு நேர்பொருள்கொள்வதில்முட்டுப்பாடிருப்பின் சொல்லுக்குத் தாம் கூறும்பொருள் வந்தவழி புலப்படுமாறு காட்டுதல்,சொற்பிரயோகத்துக்குப்பயன்கூறல், அரியவிடத்து முடிபுகாட்டுதல், தாம் கூறுவது விளங்க வேண்டிச் சிற்சிலவிடத்து ஏற்றஉபமானங்களையமைத்தல், ஆசிரியர் காட்டிய உபமானங்களே விரித்தரைக்கவேண்டிய விடத்து விரித்துரைத்தல், பொருளுரைக்கையில் அதிகாரத்திற்கு ஏற்பச் சொற்களைவருவித்தல், கூறும் பொருள் அவ்வதிகாரத்துக்கு ஏற்றிருக்கின்றதா என்பதைக் கனித்தல், முன்பின் முரணின்மையைக் காட்டல், சிலவிடத்து நூலாசிரியர் உட்கொண்டுகூறிய சரிதையைக் காட்டுவதன்றிப் பொருள்விளங்கவும் சரிதை காட்டல், பிறருரையைக்காட்டல், பிறர்கூறும் உரை பொருத்தமற்றதாயின் காரணங்காட்டிக்கண்டித்தல், பிறருடைய பாடங்களைக்காட்டுதல், பிறர் கொள்ளும் பாடத்தில் தவறு இருப்பதாகத்தோன்றின் காரணத்துடன் அப்பாடத்தைக்கண்டித்தல், பிறிதுமொழிதல் உருவகம் எடுத்துக்காட்டுவமை சொற்பொருட்பின்வருநிலை என்றாற்போன்ற பொருளணிகளைக் காட்டுதல், காட்சி மடல் தழிஞ்சி நூழிலாட்டு என்றாற்போன்ற அகத்துறை புறத்துறைகளே ஏற்றவிடத்துக் காட்டுதல், இத்தக்குறளால் இத்தப்பொருள் கூறப்பட்டதுஎனத்தனியாகவேனும் சிலபாடல்கட்குச்சேர்த்தேனும் கூறப்படும் பொருள்களைக் காட்டுதல், முதலியனவாம்.

இனி, இங்குக் காட்டிய கூறுகள், இத்தப் பரிமேலழகியாரின் விசேடவுரையில் அமைந்திருக்கின்றன என்பதை உதாரணங்கள்கொண்டு விளக்குவோம்:

விளக்கவேண்டிய அருந்தொடரை விளக்கல்:—387 - ஆங் குறளில் ''இன்சொலாலீத்தளிக்கவல்லார்க்கு'' என்றுள்ளது: இத்தொடரில், இன்சொல்என்றால் இனியசொல் என்றுதெரியும்: ஆனால், 'சொல்லுக்கு இனிமை எவ்வகையான்வரும்' என்று கற்போர்க்கு ஆசங்கைநிகழும்: 'ஆதலால், இங்குக் கேள்வியினும் வினாவினும் இனியவானசொல் என்று பொருள்விளக்கினர். அடுத்து உள்ள ஈத்து என்பதற்கு - கொடுத்து என்று பொருள் என்பதும் தெரியும்: ஆனால், 'யாருக்கு எதைக்கொடுப்பது?' என்பது விளங்காது: ஆகவே, 'ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவனகொடுத்தல்' என்றுவிளக்கினர்: இங்ஙனமே உரிய இடங்களிலெல்லாம் விளக்கிச்செல்வர்.

பொருள்விளக்கி ஏற்ற மேற்கோளைக் காட்டுதல்:—477 - ஆங் குறளினுரையில், அளவறிந்தீக என்ற தொடருக்குப் பொருள்கூறுமிடத்து எல்லையறிந்து அதற்குஏற்ப ஈக என்று உரைத்து, பிறகு, 'எல்லைக்கேற்ப ஈதலாவது ஒன்றனஎல்லையை நான்குகூறுக்கி, அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒன்றனை மேல்இடர்வந்துழி அதுதீர்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்ற ஒன்றனை ஈதல்' என்றார்: இங்கு நான்கில் ஒருபகுதி கொடுக்க

வேண்டுமென்று தாம் கூறியது மேற்கோள்கொண்டுதான் என்பது கற்பார்க்குத் தெரியுமாறு "வருவாயுட்கால்வழங்கிவாழ்தல்" என்ற திரிகடுகத்தைக் காட்டினார்: இங்ஙனம் ஏற்றபெற்றி மேற்கோளமைப்பர். இங்ஙன் ஒரு பொருளைச்சொல்லி அதனைநாட்ட மேற்கோள் காட்டுவ தன்றி, மேற் கோளின் மூலமாகவே பொருளை விளக்கிக்காட்டுவதும் உண்டு: "அற னிழுக்காது" என்றுதொடங்குங் குறளில், குற்றமாய மானத்தினீக்குதற்கு மறனிழுக்காமானமென்றார் என்று உரைத்து, அஃதாவது "வீறின்மையின் விலங்காமென மதவேழமுமெறியான், ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சி லென்றெறியான், மாறன்மையின்மறம்வாடுமென் றிளையாரையுமெறியான், ஆறன்மையின் மூதியாரையு மெறியானயிலுழவன்" எனவும் "அழியுநர் புறக்கொடை யயில்வாளோச்சான்"எனவும் சொல்லப்படுவது என்று மறனி ழுக்கா மானத்தை மேற்கோளின் மூலமாகவே விளக்கியிருத்தல் காண்க.

தாம் கூறும் சொற்பொருளை நிலைநாட்ட மேற்கோள் காட்டுதல்:— 401 - ஆங் குறளில் "அரங்கின்றிவட்டாடியற்றே" என்று வருகின்றது: இங்குள்ள அருஞ்சொற்களுக்கு எளிதிற்பொருள் விளங்காமையால் ஆசிரியர் பரிமேலழகர் 'அரங்கு-வகுத்ததானம்: கட்டாடல்-உண்டையுருட்டல்'என்று விளக்கி, இச்சொற்களுக்கு இப்பொருள்தான் என்று நிலைநாட்டவேண்டி "கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக் கல்லரச்சிறுசர் நெல்லிவட்டாடும்" என்று மேற்கோள் காட்டியமையும் காண்க.

தேர்ந்தகருத்தை விரித்தல்:—இதனைப் பலஇடத்துங் காணலாம்: ஆயி னும் "பானைச்சோற்றுக்குச் சிலஅவிழ்பதம்"என்றமுறைபற்றி [தாலீபுலாக னியாயத்தால்]இரண்டு இடம் காட்டுகின்றேம். "உவப்பத்தலைக்கூடி" (394) என்று தொடங்குங் திருக்குறளில் 'நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமும் உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வெதிர்வுகளின் இன்பம் பயத்தலானும் கற்றுர்மாட்டு எல்லாரும் அன்புடையராவர்' என்று கருத்துக் கூறியதும்; "செவிகைப்ப" (389) என்று தொடங்குங் திருக்குறளில், 'அற நீதிகளிற்றவறுமையின் மண்முழுதும் தானேயாளு மென்பதாம்' என்று கரு த்துக்கூறியதுங்காண்க. இன்னும் வேறுவகையாகவும் கருத்துரைப்பதை இவ் வுரையாசிரியரின் உரையிற்காணலாம்: அவற்றுட்சில:—509 - ஆங் குறளில் 'தேறற்கஎன்ற பொதுமையான்,ஒருவினைக்கண்ணுங் தெளியலாகாதென்பது பெற்றும். ஈண்டுத்தேறுக என்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின் மேல்நின்றது' என்றுற்போல உரைப்பது ஒருவகை: 707-ஆங்குறளில் 'உயிர் க்கேயறிவுள்ளது, ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கு இல்லை என்பாரைநோ க்கி,உயிரதுகருத்து அறிந்து அஃது உவக்குறின்மலர்ந்தும் காய்வுறின் கருகி யும்வரலான் உண்டு என மறுப்பார்போன்று குறிப்பறிதற்குக்கருவிகூறிய வாறு'என்றுற்போல உரைப்பது வேறொருவகை: 918-ஆங்குறளில் 'இவ்வுரு வகத்தான் அம்மூயக்கம் மூன் இனிதுபோன்று பின் உயிர்கோடல் பெற்றும்:

இதுநூலோர் துணிவு என்பதுதோன்ற அவர்மேல்வைத்து கூறினர்' எனவும், 931 - ஆங்குறனினுரையில் 'எய்தியபொருள் சூதாடுவார் கீங்காமைக்கு இட்டதோர் தூணெனபதூஉம், அதனுல் பின்தூயருழத்தலும் உவமையாற் பெற்றும்' எனவும், இங்ஙன் கூறுவது மற்றொருவகை. இங்ஙன் பலவாறுகத் தேர்ந்த கருத்து விரிக்கப்படும்.

ஒத்தபததிற்த மேற்கோள் காட்டுவது என்று இந்த உரையாசிரியர் எங்கும் தாம்வைத்துக் கொள்ளவில்லை: பெரும்பாலும் பொருள் நேரேவராது தாற்பரியத்தாற் பொருளைக் கொள்ளும்போது சிலவிடத்து அதுதான் அவ்விடத்துக்குப் பொருளென்று கற்போர் தெளியுமாறு மேற்கோள் காட்டுவர்: ''வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங் கோடா தெனின்'' என்ற குறளில், மன்னவன் செங்கோல் கோணுதலில்லாதிருப்பின் அதுவே வெற்றிதருவது என்று கூறியிருப்பதற்கு அன்னவன் அறநெறிவழுவாது அரசுபுரிவானுயின் அவனது அந்த அறநெறியே கொற்றம்விளைக்கு மென்று கருத்துப்பொருளாக ஏற்படுவதனுல், அதற்குஏற்ப, ''மாண்டஅறநெறி முதற்றே யரசின்கொற்றம் என்றுர் பிறரும்'' என்று மேற்கோள்காட்டினுர். இங்ஙனமே ''எண்பதத்தானேனு முறைசெய்யாமன்னவன், தண்பதத்தாற் றூனேகெடும்'' என்ற திருக்குறளில் முறைவேண்டினுர்க்குக் காண எளியனுய் அவர்வேண்டும் முறையை நூலோரோடும் ஆராய்ந்து உண்மையறிந்து எவன் நீதி நடத்தவில்லையோ அவ்வரசன்கெடும் என்றகூறி, அதன்கருத்து அறம் குறைவறநடவாது அறத்திற்குமாறுன தீச்செயலைநடக்க இடங் கொடுக்கும் மன்னவன் கெடுப்பாரின்றித் தானே கெடுமென்பது ஆதலால், அக்கருத்தை விளக்குமிடத்து, ''அல்லவைசெய்தார்க்கு அறங்கூற்றம் ஆகலின், பகைவரின்றியும் கெடுமென்றுர்'' என்று மேற்கோள் கொடுத்துக் கூறியிருப்பதுங் காண்க.

வருவிக்குஞ்சொல்லைக் காரணத்தோடு சேர்த்துக்கூறலும் வருவித்த சொல்லை விளக்கலும்:—நகூ - ஆங் குறளில் ''செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன்'' என்று உள்ளது: இதனில், செவி கைப்பச் சொல்லும் சொல்லைப் பொறுக்கவேண்டுமென்று கூறியிருப்பதனுல், 'அப்படிப்பட்டசொல்லைச் சொல்லுபவர் யாவர்?' என்று ஒருவர் மனத்து ஓராசங்கை நிகழுமன்றே? அதனை மனத்துட்கொண்டு உரையாசிரியர் 'செவிகைப்ப' என்றதற்கு ஏற்ப இடிக்குந்தூணையாரென்பது வருவிக்கப்பட்டதென்று கூறியிருத்தல் காண்க. நகூ0-ஆங் குறளில் ''கொடையளி செங்கோல் குடியோம்பல்'' என்று வந்துள்ளது: அரசனது தொழில் பாதுகாப்பதென்பது வெள்ளிடை மலையானபொருள்: அங்ஙனிருக்க, 'குடியோம்பல்' என்று கூறுவானேன்? குடியோம்பல் என்பதற்கு ஒவ்வொரு குடியையும் ஓம்புதல் என்று கொள்வோ மென்றுல், ஒவ்வொருகுடியையும் போய்க் கவனித்து ஓம்புதலென்பது முடியுமோ? முடியாதே: இங்ஙன் கற்பார்க்கு

ஆசங்கை தோன்றுவண்ணம் குடியோம்பல் என்பதற்குத் தளர்ந்த குடியை யோம்பல் என்று வருவித்துப் பொருளுரைத்து, 'குடியோம்பலென எடுத் துக்கூறினமையால் தளர்ச்சிபெற்றும்' என்று விசேடவுரையும் கூறினர்: பிறகு, தளர்ந்தகுடியை யோம்புவது எவ்வாற்றாலென்ற ஆசங்கை தோன்றா வண்ணம் 'அஃதாவது ஆறிலொன்றாய பொருடன்னையும் வறுமைநீங்கிய வழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம்' என்று விளக்கியிருத்தலுங் காண்க.

சொல்லுக்குப்பொருள் இன்னது என்று விளங்காவிடத்து விளக்கிக் காட்டுதல்:—சசுசு-ஆங்குறளில் இளிவு என்பதற்கு-இளிவரவுஎன்றுபொருள் கூறி, அதுவிளங்காமையின் 'தொடங்கின வினையாற் பின் அழிவு எய்திய வழி அதன்மேலும் அறிவும் மானமும்இலரென்று உலகத்தாரிகழும் இகழ்ச்சி' என்று விவரித்ததும், சஎடு-ஆம் திருக்குறளில், 'உம்மை - சாகாட்டத்துவலிச் சிறப்பேயன்றிப் பிறியது நொய்ம்மைச்சிறப்பும் தோன்றநின்றது' என்று கூறியதுங் காண்க.

சொல்லுக்கு நேரேபொருளைக்கொள்ளாவிடத்துப் பொருள்வந்தவழி புலப்படக்காட்டல்:—சஅடு-ஆங்குறளில் மலர்தலும் கூம்பலும் இல்லதறிவு என்றவிடத்து அறிவுக்குப்பயன் மலர்தலும் கூம்பலு மில்லாதிருத்தலன்றி அறிவே மலர்தலும் கூம்பலுமில்லாத தாகாதாதலால் அறிவு என்பதற்கு அறிவின்பயன் என்று பொருள்கொண்டார்: அது அச்சொல்லுக்குச் செம் பொருளல்லாமையால், மலர்தலும் கூம்பலுமில்லதறிவு என்ற தொடரை உபசரித்துக்கூறியது என்றதும், சசுo - ஆங்குறளில் அல்லற்படுப்பது என் பதற்குப் பகையென்று பொருள்கூறி ஏதுப்பெயரென்று கூறியதும்முதலி யன காண்க. சஉஅ - ஆங்குறளில் ''அஞ்சுவதஞ்சாமை பேதைமை யஞ்சுவ தஞ்சலறிவார்தொழில்'' என்றவிடத்து, அஞ்சாமையென்பதற்கு இடத்திற்கு ஏற்ப எண்ணுதுசெய்துநிற்றல் எனவும், அஞ்சுதல் என்பதற்கு எண்ணித் தவிர்த்தல் எனவும் பொருள்விரித்தது எத்துணை நுட்பமாகவுள்ளது! சகக - ஆங் குறளில் வாய்என்பதற்குப் பணிமொழியென்று பொருள்கூறி, 'வாய்' என்பது ஆகுபெயர் என்று அப்பொருள் கண்டதற்குக்காரணங்கூறியவாறுங் காண்க.

சொற்பிரயோகத்துக்குப் பயன்கூறுதலேப்பற்றிய உதாரணங்களைப் பலவிடத்துங்காணலாம்: ஆதலால், அதற்குஉதாரணம் காட்டவில்லை.

இத்தப் பரிமேலழகியார் சொற்பொருளை விளக்குவதிலும், நேரிதாகப் பொருள்சிறவாவிடத்து அச்சிறப்புப்பொருள் வந்தவழிதோன்றப் பொருளை விளக்குவதிலும், பதசாரம்கூறுவதிலும் மிக நுண்ணிதாகச் செல்லுகின்றவ ரென்பதும், மற்ற எந்தஉரையாசிரியரும் இத்தக் கூறுபாடுகளில் இவரளவுநு நுண்ணியராகச் செல்லவில்லை யென்பதும் அழுக்காறின்றிக் காண்பார் எவர்க்கும் செவ்வனே புலனாகும்.

முடிபுகாட்டுதல்:—சசஙூ - ஆங் குறளினுரையில், கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினைகொண்டது என்றதும், ஙிசஅ - ஆங் குறளினுரையில் 'எண்பதத்தான் என்னும் முற்றுவினையெச்சமும், ஓரா என்னும் வினையெச்சமும், செய்யா வென்னும் பெயரெச்சவெதிர் மறையுள் செய்தல் வினைகொண்டன' என்றதும், இத்தகையபிறவும், இலக்கணநெறியில் முடிபுகாட்டுதற்கு உதாரணங்களாம்.

ஏற்ற உபமானங்களை அமைத்தல்:—(ஙகஙூ-குறளில்) கரும்பயிறற்குக் கூலிபோல என்றும், (சஂச - இல்) ஏரலெழுத்துப்போல என்றும், (சசசு - இல்) மழைத்துளிபோல என்றும், (சஎஉ - இல்) குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல என்றும், (சஉடு-இல்) கயப்பூப்போல வேறு படாது கோட்டுப்பூப்போல என்றும், (சசஅ-இல்) பாகனில்லாதயானைபோல என்றும், (ஙுஎக - இல்) புலியையடைந்த புல்வாயினம்போல என்றும், (சுகஙூ - இல்) கடன்கொண்டான்தோன்றக் கடன்தோன்றுமாறுபோல என்றும், (எஙிஙி - இல்) பசமட்கலத்துள்நீர்போல என்றும், (எகஎ இல்) வெறி கமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோல என்றும், (கூ০০-இல்) திரிபுரம் போல என்றும் இவ்வாறெல்லாம் தாம் கூறுமவிஷயம் விளங்க உபமான மமைத்தலேயன்றி, (ஙுசச - இல்) கட்டியங்காரன்போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது அதனைக் குற்றமென்றெழுந்து தம்மியல்பில் நிற்பார் அரியராகலின் என்றும், (சுஂஎ-இல்) நெருப்பிற்கொடியது பிறிதின் மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற்போல என்றும், (கூடுடு-இல்) சேரசோழபாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம் பட்டுவருதல் என்றும் இவ்வாறுகக் குறட்பாவிற்கு ஏற்ப உபமானமமைத்தலும் இவ்வுரையிற் பலவிடத்துங் காணத்தக்கன.

இனி, ஆசிரியர் காட்டிய உபமானத்தின்கருத்தை விளக்குதற்கு உதாரணம்:—சஂசு - ஆங்குறளில், களர் தானும் பேணற்பாடழித்து உயிர்கட்கும் உணவுமுதலிய உதவாததுபோல, தாமும் கன்குமதிக்கற்பாடு அழித்து பிறர்க்கும் அறிவுமுதலிய உதவாரென்பதாம் என்றதும், சகஙூ - ஆங்குறளில் துன்பமறியாமையால் தேவரோடொப்பரென்றதும் முதலியன.

அதிகாரத்திற்கு ஏற்பச்சொற்களைவருவித்தல்:—ஙுஉஙூ - ஆங்குறளில் அளவளாவில்லாதான் என்பதற்குப்பொருள் கூறுமிடத்து, சுற்றத்தோடு நெஞ்சுகலத்தலில்லாதவன் என்றும், சுசக-ஆங்குறளில், அருமையுடைத்து என்பதற்கு நாம்இவ்வினைமுடிந்தால் அருமையுடைத்து என்றும் அதிகாரத்திற்கு ஏற்பவருவித்து உரைத்ததும் இவைபோல்வன பிறவுங்காண்க.

அதிகாரத்துக்குத் தாம் கூறிய பொருள் ஏற்றிருக்குமாறு பொருத்திக் காட்டுதல்:—சஂஙுடு-ஆங் குறளில் வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை என்பதற்கு-குற்றம்வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக்காவாத அரசன்

வாழ்க்கையெனப்பொருள்கூறி, தாம் அவ்வாறு பொருள்கூறியது அதிகாரத் திற்குஏற்பதாகுமென்பது விளங்க 'சூற்றமென்பது அதிகாரத்தான் வந்தது' என்று கூறியதும், கூடுடு-ஆங் குறளில், எற்றென்றிரங்குபவற்றை ஒருகால் மயங்கிச்செய்தாளுயின் பின்இரங்காமைஎன்று என்றுகூறியது வினைத் தூய்மையென்ற அதிகாரத்துக்குஎவ்வாறு பொருந்துமென்ற ஐயம் தோன் றுமைப்பொருட்டு 'இதுவும் வினைத்தூயார் செயலாகலின் உடன்கூறப்பட் டது' என்றுரைத்ததும், முதலியன காண்க.

முன்பின்முரண்படாமையைக் காட்டுதல்:—நகூக-ஆங் குறளினுரையில் "மாந்தர்க்குக்கற்றனைத்தூறுமறிவு" என்றார்: அவ்விடத்து "நுண்ணியநூல் பலகற்பினுமற்றுந்தன், னுண்மையறிவேமிகும்" என்று கீழ்க்கூறியதோடு இது மாறுகொளக்கூறலாகாதோ? (நூஎங) என்று கற்போர்க்கு ஓரையங் தோன்றுவண்ணம் 'இஃது ஊழ் மாறு கொள்ளாவழியாகலின் மேல் உண்மை யறிவேமிகு மென்றதனேடு மலையாமை யறிக' என்றதும், இறைமாட்சி யென்ற அதிகாரத்தில் "தூங்காமை கல்வி தணிவுடைமை யிம்மூன்று, நீங் காநிலனுள்பவற்கு" என்று கூறியஆசிரியர் வினைசெயல்வகையென்ற அதி காரத்தில் "தூங்குகதூங்கிச்செயற்பால" என்றார்: இங்ஙன்கூறியது ஒன்றே டொன்றுமாறுகொளக்கூறலாகுமேயென்று கற்போர்கருதாமைப் பொருட்டு 'மேல்தூங்காமையென்றார்: ஈண்டு அதனேப்பகுத்துக்கூறினர்' என்றதும் முதலியன காண்க.

நூலாசிரியர் உட்கோண்டுகூறிய சரிதையைக்காட்டுதல்:—"ஏந்திய கொள்கையார்" என்று தொடங்கும் அகூக - ஆவதுகுறளிலும், "கவறும்" என்றுதொடங்கும் கூஉடு - ஆங்குறளிலும்காண்க: இனி, குறளின்கருத்து விளங்க வேண்டிச் சரிதைகாட்டுதலை "பேராண்மை" (எஎங) என்று தொடங்கும் குறளினுரையிலும், "புணர்ச்சிபழகுதல்" (எஅடு) என்ற குறளி னுரையிலும் காணலாம்.

பிறதுரைகாட்டுதலை 602, 606, 627, 635, 645, 703, 799, 830, 887, 990, 1006, என்ற குறள்களினுரை முதலியவற்றிலும், தவறுண உரை யைக்கண்டித்தலை, 576, 632, 636, 660, 1043, என்ற குறள்களினுரை முதலியவற்றிலும், தவறுணபாடத்தைக் கண்டித்தலை 662, 979, 1011, 1058, என்ற குறள்களினுரை முதலியவற்றிலும், பாடாந்தரங்காட்டு தலை 419, 420, 437, 500, 539, 546, 639, 710, என்ற குறள்களினுரை முதலியவற்றிலும் காணலாம்.

உருவகத்தை, 505, 555, 567, 615, 627, 753, 796, 918, 919, 983, 989, 1030, 1032, 1068, 1147, 1227, முதலிய குறள்களி னுரையிலும், பிறிதுமொழிதலை, 475,476,495,496,500,599 முதலிய குறள்களினுரையி லும், எடுத்துக்காட்டுவமையை, 452, 481, 798-முதலிய குறள்களினுரை

யிலும், சொற்பொருட்பின்வருநிலையை, 320, 623, 645 முதலிய குறள் களினுரையிலும், சொற்பின்வருநிலையை 965 முதலிய குறள்களினுரையி லுங் காணலாம்.

அகத்திணைத்துறைகளாகிய காட்சிமுதலியனவும், புறத்திணைத்துறை களாகிய தழிஞ்சி முதலியனவும் உரையாசிரியராற் காட்டப்பெற்ற இடங் கள், 'அரும்பதவகராதி முதலியன' என்பவற்றிற் காட்டப்பட்டுள்ளன.

அவ்வக்குறளிற் கூறப்பட்ட பொருளே, ஒவ்வோரதிகாரத்திலும் சில விடத்துத் தொகுத்தும் சிலவிடத்துத் தனித்துங் கூறியிருப்பதை எங்குங் காணலாம்.

அன்றியும், ஒருபாலோடுமற்றொருபாலுக்குள்ள தொடர்பையும், அவ் வப்பாலுள் ஓரியலோடு மற்றோரியலுக்குள்ள இயைபையும், அவ்வவ்விய லுள் ஓரதிகாரத்தோடு மற்றோரதிகாரத்திற்குள்ள பொருத்தத்தையும் காட் டிச்செல்வதையும், ஆங்காங்குக் காணலாம்.

இங்ஙன், உரைவகுக்குமிடத்துப் பலவிடங்களிலும் தமது அறிவின் நுட்பமும் நிட்பமும் பல்கலைப்பயிற்சியும் தெளிவும் மிளிர்ந்து விளங்குமாறு எழுதப்பெற்ற பெரியாரான பரிமேலழகியார்மீது தமதுகருத்துக்கும் கொள்கைக்கும் இணங்க வலிந்தும் கலிந்தும் தவருகப் பொருள்கூறுகின்ற ரென்றுசில ஆராய்ச்சியாளர் குறை கூறுகின்றனர். பரிமேலழகியார்மீது குறை கூறுவது பெருந்தவறு என்று கொள்ளுங் கொள்கையுடையேனல்லேன். தமதுகொள்கை எப்படிப்பட்டவர்க்கும் தம்மை அறியாதும் வந்திடுமென்ப தும் யான்அறிந்த உண்மையே: அங்ஙனமெனும், குறைகூறுமவர்கள் தமிழ்மொழி யின்மீது தமக்கு உள்ள அன்பினுல் கூறவந்தவரென்பது கருதும்போது மகிழ்வுண்டாகுமெனினும், அவர் கூறும்வகையை நோக்குமிடத்து மனத்தில் ஒருவகைமாசுகொண்டு கூறுகின்றனரோ என்று அதை வெறுக்கின்றேன்: இனி, அவர் கூறும் வகைகளுட் சிலகாட்டி அவை எத்துணை யேற்புடையன என்பதைச் சிறிது ஆராய்வேன்:

தெய்வப்புலமைத் திருவள்ளுவனுர் கூறும் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்பன வடநூல்வழக்குப் பற்றியது என்பதும், தமிழுக்கே சிறப்பியல்பாகிய வழக்கினுற் கூறின் அகம் புறம் என்று பகுக்கப்பட்டிருக்கு மென்பதும், வடநூல்வழக்கையும் அறிந்து தமிழ்வழக்கையுந்தழுவி யாவர்க் கும் நல்லனவும் இனியனவுமானவற்றைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் திருக்குறளிற் கூறுகின்ருரென்பதும் பரிமேலழகர் கொள்கையாகக் கண்டனவை: இவற்றுல், தமிழ்மொழிக்கேனும் திருவள்ளுவர்க்கேனும் இழுக்கு ஏற்படுமோ? நூலாசிரியரொருவர் பலமொழிகளையும் கற்றுத்தேர்ந்து அந்தப் பிறமொழிகளிலுள்ளவற்றையும் தம்மொழிக்கும் கொள்கைக்கும் ஏற்ப அமை த்தாரெனின், அவ்வாசிரியர் இணற்றகத்துத்தேரைபோலாகாது பரந்த

அறிவினராய் மிகச்சிறப்புற்ப் பொருளைக்கூறியுள்ளாரென்று கற்போர்மனத்துப் பதிவதன்றி, அந்நூலாசிரியரைப் பற்றியாவது அவரியற்றிய நூலைப் பற்றியாவது குறைவானஎண்ணம் உண்டாகாதென்றே நினைக்கின்றேன். கம்பர் தாம் வால்மீகிகூறிய இராமாயணத்தைப் பின்பற்றிக் கூறினே னென்றல், அதனால் கம்பர் பெருமையாவது, அவரியற்றிய இராமாயணத்தின் பெருமையாவது குறைவுள்ளனவாகக் கருதப்படுமோ? இயற்கையான மனிதபாவமற்றவர் கம்பரென்றுவது எவரேனும் கருதுவரோ? 'ஷேக்ஸ்பியர் மில்ட்டனர் கூறியமுறை கம்பரிடத்திலுள்ளது, காளிதாசரிடத்திலுள்ளது' என்று ஆங்கிலமறிந்த அறிவாளிகள் கூறினால், அதற்காக எவரேனும் புக்கொள்பவருண்டோ?

இவ்வுரைகாரர் திருக்குறளாசிரியரைப்பற்றி வடநூலிலுள்ளவற்றை அவ்வாறே, மொழிபெயர்ப்பாகக் கூறியுள்ளாரென்று சொல்லவில்லையே: சிற்சிலவிடத்து வடநூற்பொருளைத் தம்கொள்கைக்கும் உலகநிலைக்கும் ஏற்பமாற்றிக்கூறியுள்ளாரென்று எழுதியிருப்பதையும் காணலாமே. இப்பரிமேலழகர் அறத்தின்பகுப்பைக்கூறி, 'இவற்றுள் வழக்குந்தண்டமும் உலகநெறிநிறுத்தற்பயத்தலாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற்சிறப்பிலவாதலானும்,.....அவற்றை யொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத்திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது: அதுதான் கால்வகைநிலைத்தாய் வருணத்தோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து,எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இருவகைநிலையாற்கூறப்பட்டது'எனவும், பின்னர் ஓரிடத்து 'இறப்பவருவழி இளிவந்தனசெய்தாயினும் உய்க என்னும் வடநூல்முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவைசெய்யற்க என்பதாம்' எனவும், இங்ஙன் எழுதியுள்ளாரே: இதனால், தமிழுலகுக்கு வேண்டுமவற்றையேயாராய்ந்து வடநூலிலுள்ள பல பொருள்களையும் விட்டிட்டு ஏற்றவற்றைக்கைக்கொண்டும் தம்மறிவாற்கண்டவற்றை உடன்சேர்த்தும் இத்திருக்குறள்நூலைத் தெய்வப்புலவர் யாத்திருக்கின்றா ரென்பதே பரிமேலழகர் கொள்கை யென்பது ஊன்றியறியும் அறிஞர்க்கெல்லாம் நன்குபுலனுமன்றே.

''இன்பமும் பொருளு மறனு மென்றாங், கன்பொடுபுணர்ந்தவைந் திணை'' ''அந்நிலமருங்கினறம்முதலாகிய, மும்முதற்பொருட்குமுரிய வென்ப'', என்று தொல்காப்பியத்திலும், ''ஆன்றசிறப்பினறம்பொருளின்ப மென, மூன்றுவகைநிலையிய லுலகம்'' என்று பன்னிருபடலத்தும் வந்திருக்க, ஆசிரியர் திருவள்ளுவநாயனார் அறம்பொருளின்பம் என்று பாகுபாடுசெய்து கொண்டு கூறியது தமிழ்நூல்வழக்குப்பற்றியேயன்றி வடநூல்வழக்குப்பற்றியன்றே. ஆகவே, வடநூல்வழக்குப்பற்றி மூப்பாலாகப்

பிரித்தாரென்றல் தவறன்றே? எனின்,—தமிழுக்குரிய சிறப்பு வழக்கு - அகம் புறம் என்றபாகுபாடு என்பதும், அறம்பொருளின்பம் என்ற பாகுபாடு தமிழ்மொழியிலும் ஏனைமொழியிலும் பயிலும் வழக்கமென்பதும், யாவர்க்கும் ஒப்பமுடிந்தபொருளாம். தமிழுக்கே சிறப்பான முறையிலுள்ள பாகுபாட்டை நூலாசிரியர் கைக்கொள்ளாது வடமொழியிலுமுள்ளபாகுபாட்டைக் கைக்கொண்டாரெனிற் குற்றமென்றே? தமிழ்மொழிக்குச் சிறப்பு வகையான அகம்புறம் என்ற பாகுபாடு இருக்கையில் அறம்பொருளின்பம் என்ற பாகுபாடும் தொல்காப்பியம் முதலிய நூல்களில்தான் ஏன் அமைக்கதது? தொல்காப்பியர்காலத்திற்கு முன்னரே தமிழ்மொழியில் வடமொழிப் பழக்கமும், வடநூலார்கொள்கையும் கலந்துள்ளன என்பது நடுவுநிலைமையோடுநோக்குவார்யாவரும் கண்ட மெய்ம்மைப்பொருளாகும். இக்கொள்கையை உடன்படுதற்கு விருப்பமில்லாத சிலர், "தொல்காப்பியத்தில் இடைச்செருகலாய்ப் பலசூத்திரங்கள் வடமொழியாளராற் புகுத்தப்பட்டன" என்றற்போன்று கூறுகின்றனர். இது கிற்க.

பரிமேலழகர் தாங்கூறிய உரைக்கு ஏற்ப,501-ஆங்குறளில்,நாயனூர் உபகையைப் பற்றிக்கூறுகின்றாரென்றார்: அங்ஙனம் கூறுமிடத்து அறவுபதை முதலியன இன்னவென்று மாணாக்கர்க்கு மனத்திற் பதியுமாறு முன்னோர் கண்டமுறையை யொட்டிப்பேசினார்: பரிமேலழகருரையைத்தவறென்னுங் கோட்டியைச் சேர்ந்தவர் இங்ஙனம் சோதிக்கும்முறை முற்காலத்து இருந்ததாகத் தெரியாமையால், தமிழ்மக்களால் அவைகொள்ளத்தக்கன அல்ல என்கின்றனர்: ஆனால், அவரும் சோதிக்கும் முறையுண்டென்று ஒப்புக்கொள்கின்றனர்: அங்ஙனம் ஒப்புக்கொள்பவர் தாமே ஒருமுறை கூறுகின்றனர்: அன்னூர் தாம் கூறியமுறையால் பண்டைக்காலத்துச் சோதனைகள் நிகழ்ந்தன என்ற தம்கொள்கையைப் பண்டைநூல்களைக் கொண்டு நிலைநாட்டாமலே இத்தப் பரிமேலழகர்மீது குற்றங்கூறுகின்றனர்: அன்னூர் அங்ஙனமே கூறிக்கொண்டு அகமகிழ்க.

காமத்துப்பாலில், 'ஐந்திணையாற் கூறுவது சிறப்புமுறையாயிருக்க, வடநூல் வழக்கையொட்டியும்,தமிழ்நூல்களோடு பொருந்தவும் ஸம்யோகம் விப்ரயோகம் எனப்படும் புணர்வுபிரிவுகளைக் களவு கற்புஎனப் பகுத்துக்கொண்டு ஆசிரியர் கூறியுள்ளார்' என்று பரிமேலழகர் கூறுகின்றனர்: இங்ஙனம் கூறியதில் என்ன தீமை வந்திட்டதோ? 'களவு கற்பு என்பது தமிழர்க்கே சிறந்தனவாயிருக்க, வடநூல்முறையையும் ஒட்டி எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்?' என்னலாம்: களவு கற்பு என்பன தமிழ்மொழியே யாயினும், புணர்வுபிரிவுகள் என்று வடமொழியாளர் பகுத்ததும் களவுகற்பு என்ற பாகுபாடும் ஒத்திருப்பனவென்பதையும், இவற்றிற் கூறப்படும் பொருள்களும் பெரும்பாலும் யாவர்க்கும் ஒத்தவையே யென்பதையும் கற்றறிந்தாராயின், அவ்வாறு அவர்கள் கூறுவதற்கு இடமிராது. தொல்

காப்பியனரே "பிரிவொடுபுணர்ந்த கற்பெனப்படுமே" என்று கூறியது இங்குக் கருதத்தக்கது.

இன்னும் அன்னர், பரிமேலழகர் தாம் கொண்டிருக்கும் சாதிப் பிரிவைத் திருவள்ளுவனர் திருக்குறளிலேறிட்டு, அதனால் பலதிருக்குறட்பாக்களுக்கும் ஆசிரியர்கொள்கைக்கு முரணுகப் பொருள் எழுதியுள்ளார்எனப் பரிமேலழகரைக் குற்றவாளியாக்குகின்றனர்: இக்காலத்துச் சில அறிஞர் பிரசங்கமேடையிலிருந்துகொண்டு, "சிலகுறுகிய அறிவாளிகள் பரந்த நோக்கமில்லாமையினால் பண்டைநூல்களிற் காணப்படும் பாக்களுக்குச் சாதிப்பிரிவினை தோற்றப் பொருளுரைக்கின்றனர்" என்று வசைமொழி கூறுவதையும் செவியேற்றுளேன். அங்ஙனம் கூறுபவர்கள், ஒருநூலாசிரியரின் கொள்கையைப்பற்றிக் கூறும்போது நூலாசிரியர் தாம்வாழ்ந்தகாலத்தில் எந்தக்கொள்கையினரா யிருந்தனரென்பதையும், அவர்காலத்து உலகம்எவ்வாறு இருந்ததென்பதையும், முதன்முதலிலாராய்ந்து கொள்ளவேண்டும். காலத்திற்கு ஏற்ப, இக்காலத்தார் பலர் 'ஒற்றுமையுடனிருக்கவேண்டும்: சாதிப்பிரிவினை கூடாது'என்றுற்போல வாயினற் சொல்லிக்கொண்டு, பிறசாதியாரிடத்துப் பகைமையும் பாராட்டுகின்றனர்: மிகச்சிலரே உள்ளும் புறமும் ஒத்துள்ளார்: முற்காலத்திலோ சாதிப்பிரிவினையிருந்தபோதிலும், கற்றோர்பலரும் மிகநட்புக் கொண்டு ஒருவயிற்றிற் பிறந்த சகோதரராகப்பாவித்து இகலற்றிருந்தனரென்பது பெறப்படுகின்றது: ஒருபால் சாதிப்பிரிவும், ஒருபால் சமரசமும் தோன்றக் கூறுவதைத் திருக்குறளாசிரியர் கைக்கொண்டாரென்பதில் யாதோரிழுக்குமில்லை: தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் காலத்துச் சாதிப்பிரிவினையிருந்ததென்பதை "மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்", "மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும், கற்றாரனைத்திலர்பாடு", "ஆபயன்குன்றுமவறுதொழிலோர் நூன்மறப்பர்" என்று இங்ஙன்வரும் குறள்பாக்கள் தெரிவிக்கும். ஆகவே, சாதிப்பிரிவினை திருக்குறளிற் பெறப்படாததென்றும், திருவள்ளுவர் காலத்தில் சாதிப்பிரிவினை இருந்ததில்லை யென்றும் ஒருசாரார் கூறுவது, தமது கருத்தை வலியத் திருவள்ளுவர் திருக்குறளில் அவர்கள் நுழைக்கப்பார்க்கின்றன ரென்றுசொல்ல இடங்கொடுக்குமேயன்றிப் பரிமேலழகர்மீது குற்றம்கூறச் சிறிதும் இடன் தராது.

இனி, பரிமேலழகருரையிற் குற்றங்கூறும் ஒருசாரார் புதல்வரைப் பெறுதல் என்று தலையங்கமுள்ள அதிகாரத்தைக் குறித்துப் பின்வருமாறு குறைகூறுகின்றனர்:—

அவர்கள் 'ஒவ்வோர் அதிகாரத்திலும் தலைப்பெயராய் அமைத்தசொற்களே அவ்வதிகாரத்திற் பல இடங்களில் அமைத்துச்சொல்லுதல் ஆசிரியரது இயற்கை; திருக்குறளில் எவ்வதிகாரத்தை எடுத்து ஆராய்ந்தாலும் அவ்வதிகாரத்தின் தலைப்பெயர் பலகுறட்பாக்களில் ஆளப்பட்டிருக்குந் தன்மை

நன்கு அறியப்படும்' என்று இங்ஙன் கூறி, இம்முறையிலே மக்கட்பேறு என்று ஆசிரியர் பெயரிட்டதை மாற்றிப் பரிமேலழகர் அமைவுடையதல்லாத 'புதல்வரைப்பெறுதல்' என்ற பெயரையிட்டனர் என்று தோன்றுமாறு எழுதுகின்றனர்: மக்கட்பேறு என்றுதான் ஆசிரியரிட்ட பெயராயிருக்க வேண்டு மென்பதைச் சாதிக்கக் கருதிக் காட்டிய இந்த முதற்காரணம் எவ்வளவு உண்மையென்று கற்றறிந்தோர் காணக்கடவர். திருக்குறளிற் பல அதிகாரங்கட்குத் தலைப்பெயராயமைந்தவை, அவ்வவ்வதிகாரத்து ஓரிடத்தோ பலவிடத்தோ அமைந்த சொல்லைக்கொண்டவை யென்பது திருக்குறளைக் கற்றுணர்ந்தவர் கண்ட பொருளாகும். அத்துணையேதவிர, அதிகாரத்தின் தலைப்பெயராயமைந்தவற்றை ஆசிரியர் அவ்வதிகாரத்துப் பலவிடத்திலும் எல்லா வதிகாரங்களிலும் அமைத்துள்ளாரென்பது, வானமலர் நுமணம் வீசுகின்றதென்பதுபோலும். திருக்குறளைமுழுதுஞ் செம்மையாகப்படித்தவர் இந்தக் காரணத்தை யேற்பரோ? திருக்குறளின் முதலதிகாரத்தின் தலைப் பெயர் கடவுள்வாழ்த்து என்பது. அந்த முதலதிகாரத்திற்குள் கடவுள் என்ற சொல்லாவது வந்துள்ளதோ? கூடாவொழுக்கம் வினைத்தூய்மை படைச்செருக்கு பொழுதுகண்டிரங்கல் என்றிற்போன்ற பல அதிகாரங்களில் அத்தொடர்கள் அவ்வவ்வதிகாரத்து எந்தக்குறளிலும் வந்தில என்பதை யாவரும்காணலாம். நீத்தார்பெருமை யென்ற அதிகாரத்தில் அத்தொடர் ஒருகுறளில்தான் வந்துள்ளது: மன்னரைச்சேர்ந்தொழுகல் என்ற தலையங்கம்பெற்ற ஓரதிகாரம் திருக்குறளில் உள்ளது: அவ்வதிகாரத்தின் முதற்குறள் "அகலாதணுகாது தீக்காய்வார்போல்க, விகல் வேந்தர்ச்சேர்ந் தொழுகுவார்" என்பது: இக்குறளில் வேந்தர்ச் சேர்ந்தொழுகுதல் என்பது வந்துள்ளது: அடுத்தகுறள் "மன்னர்விழைப விழையாமை மன்னரான், மன்னியவாக்கந்தரும்" என்பது: இக்குறளில் மன்னர் என்பது இருமுறை வந்தபோதிலும் சேர்ந்தொழுகுதல் என்பது காணேம்: இவ்வதிகாரத்தில் இவ்விரண்டு குறள்களில் தவிர, மற்றைக்குறள்களில் வேந்தர் மன்னர் என்ற பெயர்கள்தாமும் இல்லை: இவ்வதிகாரத்திற்கு மன்னரைச்சேர்ந்தொழுகல் என்ற தலையங்கம் எவ்வாறுவந்தது? குறள்முழுவதையும் ஒவ்வோரதிகாரத்தையும் ஊன்றிப்பார்த்தவர் தலையமைப்புச்சொல் அவ்வவ் வதிகாரத்துக் குறள்களில் வந்திடுவதாக எங்ஙனே கூற இயலும்?

"நன்கலநன்மக்கட்பேறு" என்றுநீதிகாரத்தில்தோற்றுவாய்செய்தவர் அடுத்த இக்கற்புதல்வரைப்பெறுதல் என்று பரிமேலழகர்கூறும் அதிகாரத்துக்கு அப்பெயரையேயிட்டாரென்றலே இயல்பு என்று வாதிக்கின்றனர்: அங்ஙனம் தோற்றுவாய்செய்த சொல்லையே யடுத்துவரும் அதிகாரத்திற்குத் தலையங்கமாகக்கொள்ளுதல் இயல்பாயின், "இருமனப்பெண்டிருங் கள்ளுங் கவறும்" என்று தோற்றுவாய்செய்த ஆசிரியர், கள்ளுண்ணுமைக்குப் பின்வரும் அதிகாரத்திற்கு 'கவறு' என்று ஏன் தலையங்கம் அமைக்கவில்லை? அன்றியும், புதல்வரைப்பெறுதல் என்ற அவ்வதிகாரத்தில் மக்களென்று

ஆசிரியர்கூறும் இடங்களிலெல்லாம் பரிமேலழகர் ஆண்மக்கள்என்று வலி
ந்து பொருள் கூறுகின்றாரென்றும் ''அமிழ்தினுமாற்றவினிதேதம் மக்கள்,
சிறுகையளாவியகூழ்'', ''மக்கள்மெய்தீண்டலுடற்கின்பம்மற்றவர்,
சொற் கேட்டலின்பம்செவிக்கு'', ''குழலினிதுயாழினிதென்பதம்மக்கள்,
மழலைச் சொற்கேளாதவர்'' என்று இவ்வாறு நாயனார் புனைந்துரைத்த கலமெல்லாம்
ஆண்மக்களிடமே அமைந்தனவாகக் கருதுவதற்குச் சிறிதும் இடமில்லை என்
றும்கூறி, அறிவு என்ற ஒருபொருளைப் பெற்றிருப்பவன் கனவிலும் சொல்ல
மாட்டாத பொருள்களைப் பரிமேலழகர் கூறியனவாகச் சொல்லுகின்றனர்.
பரிமேலழகர் இவ்வதிகாரத்தில் மக்கள் என்று வருமிடங்களிலெல்லாம் ஆண்
மக்கள் என்று எழுதியதாகத்தெரியவில்லை: அங்ஙனம் பரிமேலழகர் எழுதிய
தாகக்கூறுவது அப்பெரியார்மேல் வீண்பழியைச்சுமத்துவதேயாகும்: ஆனால்,
அறிவறிந்த மக்கட்பேறு என்ற இடத்தில் மாத்திரம் ஆண்மக்களென்றே
யுரைத்தனர். புதல்வரைப்பெறுதல் என்ற அதிகாரத்தின்பொருளை விவ
ரிக்குமிடத்துத் தென்புலத்தார் கடனிறுத்தற்பொருட்டு நன்மக்களைப்பெறுத
லென்று உரைத்தமையால், புதல்வரென்பது ஆண்மக்களையே காட்டுமன்றே
எனின்?—தென்புலத்தார் கடனையிறுப்பது ஆண்மக்களாலன்றிப் பெண்மக்க
ளாலும் தம்வழியால் இயலுமாதலாலும், இக்கருத்துப்பற்றியே வேதத்திலும்
''ப்ரஜயாபித்ருப்யஃ''என்று ஆண்பெண்மக்களுக்காட்டவல்ல பொதுச்சொல்
லாகிய ப்ரஜயா என்ற சொல்லாற் கூறியிருத்தலாலும், பரிமேலழகியாரும்
'அக்கடனிறுத்தற்பொருட்டு நன்மக்களைப்பெறுதல்' என்று பொதுவாகவே
கூறினர்.

பரிமேலழகர் புதல்வரைப்பெறுதலென்ற அதிகாரத்தின் முதற்குறளில்
மக்கள் என்பதற்கு ஆண்மக்களென்று பொருள் கொண்டதற்குக் காரணம்
என்னையெனின்?—'அறிவறிந்த' என்ற தொடரேயாகும். நாயனார் பொது
வறிவுள்ளாரைக் கூறவேண்டினராயின், அறிந்தமக்கள் என்று கூறியிருப்பர்:
அங்ஙனன்றி, அறிவு அறிந்த என்றனர். இங்கு அறிதலுக்குச் செயப்படு
பொருளாக அமைந்த அறிவு என்பது அறியவேண்டுவனவான சிறந்த நூல்
கள் என்ற பொருளது: ஆகவே, அறிவு அறிந்த என்றதொடர் அவ்வாறுள்ள
நூல்களை யோதுதற்கு ஏற்ற அறிவுபடைத்த என்றபொருளது; அவ்வாறான
நூல்களை யோதுதற்கேற்ற நுண்ணறிவாகியவுரிமை ஒருவரிடத்து அமைந்து
இருக்குமாயின் அவ்வறிவு அதன்பயனைத் தவறுதலிக்குமென்ற உண்மை
காட்சியளவைக்கு மாறுபடாததே. உலகத்திலே பெண்கல்வியைப் பெரிதும்
போற்றும் இக்காலத்திலும் கல்வியறிவு சிறந்து மேம்படுவோர் பெண்மக்களி
னும் ஆண்மக்களே மிகப்பலரென்பதில் ஐயமுண்டோ? இக்காலத்தில் தானே
இவ்வாறானால் அக்காலத்தில் அறிந்த பெண்மக்கள் மிகவும் அருகியேயிருப்ப
ரென்பது திண்ணமே: உலகத்து அக்காலத்து நிகழ்வையொட்டியே நாயனார்
நூலியாத்திருப்பரென்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டியவுண்மையே. 'பேதை
மையென்பதுமாதர்க்கு அணிகல மென்றும், பெண்மக்கள் அறியாமையென்

னும் இருளிலேயே ஆழ்ந்துகிடக்கவேணுமென்றும் வழங்குகின்ற கொள்கைகள்எல்லாம் பிற்காலத்தில் தமிழ்நாட்டிற்புகுந்த கொள்கைகளேயன்றி ஆசிரியர் திருவள்ளுவநாயனார்க்கு உடம்பாடான கொள்கைகள் அல்ல' என்கின்றனர். எக்காலத்தில் ஆண்மக்கள்போலவே பெண்மக்களெல்லாம் ஒத்த அறிவினராயிருந்தனர்? இரண்டொரு பெண்புலவரிருந்தமையாலேயே பெண்மக்களெல்லாம் புலவராயிருந்தாரென்று சொல்லஇயலுமோ! இரண்டொரு புலவர்பெயர் தமிழ்ப்பண்டைநூலிலிருப்பதுகொண்டு பண்டைக்காலத்தில் ஆண்மக்களெல்லாம் புலவராகத்திகழ்ந்தனரென்றுதான் சாதித்துவிடமுடியுமோ? 'முற்காலத்து ஆண்மக்களவ்வளவு பெண்டிர்களும் கற்றவராயிருந்தனர். பிற்காலத்திலேதான் அக்கிலேமாறியிட்டது' என்று சிலர் வாதிக்கின்றனரே: இந்தவாதம் சரிதவராப்சிகொண்டு மெய்ப்பித்தாலன்றி வலிவுறுமோ! இவ்வாறு இருப்பதுபற்றி, ஆசிரியர் தாம் இருந்தகாலநிலையையொட்டி அக்காலத்து மக்கட்குஏற்ப நூல்யாத்துள்ளாரென்றும், அதற்குஏற்பப்பரிமேலழகர் உரை கூறுகின்றாரென்றும் யாம் கூறுகின்றோம். இதனால் பரிமேலழகர் பெண்கல்விவேண்டாம்: பெண்கள் அறியாமையிருளிலேயே முழுகிகிடக்கவேணுமென்ற கொள்கையுள்ளாரென்றுவது,நாயனர் பெண்கல்வியை மறுத்தோ அல்லது பெரிதும் போற்றியோ இருக்கின்றாரென்றுவது சொல்ல இடமில்லை. திருவள்ளுவனார்காலத்துப் பெண்கல்வி மிக்கிருந்ததாயின்"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனை, சான்றோனெனக்கேட்டதாய்", "தந்தைமகற்காற்றும் நன்றி அவையத்துமுந்தியிருப்பச்செயல்" என்று கூறிய அந்நாயனர் "தன்மகனைச்சான்றோனெனக் கேட்டதாய்"என்றும், "மகட்காற்றும் நன்றியவையத்து முந்தியிருப்பச் செயல்" என்றும் இவ்வண்ணமாக ஏன்கூறவில்லை? இக்குப் புதல்வரைப்பெறுதல் என்ற அதிகாரத்தில் அறிவினுல் மேம்பாடு கூறுமிடம் நான்கு: அவற்றுள் இரண்டு இங்குக் காட்டியவை அவ்விரண்டில் நூலாசிரியர் மகனேடு அறிவைத்தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். மற்றொன்று "அறிவறிந்த மக்கட்பேறல்லபிற"என்பது: அங்கு 'அறிவு அறிந்த' என்று வருவதுபற்றியும், "தந்தைமகற் காற்றும் நன்றி" என்றும் "தன்மகனைச்சான்றோனெனக்கேட்டதாய்" என்றும் பின்னே வருபவற்றையொட்டியும், அக்காலத்தையநுசரித்து அறிவுநூல்களைக் கற்றல் ஆண்பாலாரிடத்தே மிகுதியாகக்காணப்பட்டிருக்கு மென்பதுபற்றியும் இவ்வோரிடத்து மக்கள்என்பதற்கு ஆண்பாலாரென்றனர்: பிறிதோரிடமாகிய "தம்மிற்றம்மக்களறிவுடைமை" என்றவிடத்து மக்களென்பதைப்பற்றி உரைகாரர்வேறுபடுத்துக் கூறவில்லை இதில் என்னதவறு?

அன்றியும், இக்குப்புதல்வரைப்பெறுதல் என்ற அதிகாரத்து "சான்றோனெனக் கேட்டதாய்" என்பதற்கு, பெண்ணியல்பால் தானாக அறியாமையின் 'கேட்ட' என்றுரைத்தும் பரிமேலழகியார் கூறுவதுபெருந்தவறு என்கின்றனர். இக்காலத்திலுங்கூட, தந்தையினும் மகனேச்சான்றோனெனத் தாய் தானே கண்டுஉவப்பதைவிட கேட்டு உவப்பதே இயற்கையாதலைக்

கண்கூடாகக் காணலாமே: இந்த உண்மையைப் பரிமேலழகர் கூறியது எங்ஙனம் தவறுகும்?

புதல்வரைப்பெறுதல் என்றது அமைவுடையதாகாது என்றும், மக்கட் பேறு என்பது அமைவுடைய தாகுமென்றும் அன்னர் கூறுகின்றனரே: இது எவ்வாறுஎன்பது விளங்கவில்லை. மக்கள்என்பதும் புதல்வர் என்பதும் பரியாயச்சொல் ஆகாது என்று அவர்கள் கருதுகின்றார்களா? புதல்வர் என்பது ஆண் பெண் என்ற இருபாலாருங் குழுவிய கூட்டத்தை ஏன் காட்டாது? இங்குக் கூறியவாற்றால் பரிமேலழகர் தாம் கூறிய பொருட்காகத் தலையங்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டிய காரணமேயில்லையென்பது போதரும்.

இனிஒருசாரார் திருவள்ளுவர் ஜைநராதலால் அந்தக்கொள்கையையே திருக்குறளிற் கூறியிருக்க, பரிமேலழகர் அக்கொள்கைக்கு மாறாக உரைகூறியுள்ளாராதலால், பரிமேலழகருரை ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்று கூறுகின்றனர். திருக்குறளாசிரியர் எந்தமதத்தவராகவேனும் இருக்கட்டும். பெரும்பாலும் பலர்க்கும் பயன்படுமாறு தமிழுலகத்துத் தமதுநூலைபாத்திருத்தலால், பொதுவாக உரைகூறுவதே ஆசிரியர்கருத்திற்கு ஏற்குமன்றி, ஒருசார்மதத்தார்க்கு ஏற்ப வலிந்துபொருள்கூறுதல் ஆசிரியர்கருத்திற்கேறு மாறுபடுமென்பது வெளிப்படை: அன்றியும்,ஜைநமதக்கொள்கைக்கு மாறான சிலபொருள்கள் திருக்குறளிற்காணப்படுகின்றன என்பது, அறத்துப்பாலின் முகப்பிற் காட்டப்பட்டது: ஆகவே, அவர்களுரைப்பதைத் தனியேமறுத்துக் கூறுதற்கு இங்கு அவகாசமெடுத்துக்கொள்ளவில்லை.

இப்போது ஒருகோட்டியார் பரிமேலழகருரையைத் தவறென்று கூறுவது பற்றிச் சில எழுதியது அன்னாரோடு வாதிக்க வேண்டுமென்ற கருத்தினாலன்று: அங்ஙன்குறைகூறுவார் தம் மனத்தில் வேறு என்னவோ எண்ணிக்கொண்டு எழுதுவதாகத் தோன்றுவதால், அவர்கள் அவ்வாறிருப்பின் அவர்கள்கருத்தை மாற்ற யான் வல்லேனல்லேன்: கல்விகற்கும் மாணாக்கர் அவ்வாறானகட்டுரைகளைப் படிப்பதனால் பரிமேலழகருரையைக் கற்பதற்கு முன்னரே அவ்வுரைமீது வெறுப்புக் கொண்டு நீங்காது, கற்றுப் பிறகு அவ்வுரையின்மீது ஒருசாரார்கூறும் குற்றம் எவ்வளவு அமைவுடைத்து என்று ஆராயவேண்டுமென்னுங்கருத்தே யான் இப்போது சிறிது எழுதியதற்குக்காரணம்: பரிமேலழகருரையிற் குற்றங் கூறுவோர் இன்னும்பல கூறியுள்ளாரெனினும் அவற்றுள் தலைமையானசிலவற்றைக் குறித்தே யெழுதி மற்றவற்றை விரிவஞ்சிவிட்டிட்டேன். அடியேன் விரிவஞ்சிச் சிறிதுஎழுதியதையும் மிகையென்று சிலஅறிஞர் கருதுவரோ என்ற அச்சமும் அடியேனுக்கு உள்ளது.

திருக்குறள் வாழ்க: பரிமேலழகருரைவாழ்க.

பொருட்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின்

அட்டவணை.

அரசியல்.

39. இறைமாட்சி	2	52. தெரிந்துவினையாடல்	115
40. கல்வி	12	53. சுற்றந்தழால்	125
41. கல்லாமை	21	54. பொச்சாவாமை	128
42. கேள்வி	32	55. செங்கோன்மை	135
43. அறிவுடைமை	41	56. கொடுங்கோன்மை	145
44. குற்றங்கடிதல்	48	57. வெருவந்துசெய்யாமை	152
45. பெரியாரைத்துணைக்கோடல்	57	58. கண்ணோட்டம்	159
46. சிற்றினஞ்சேராமை	66	59. ஒற்றுடல்	167
47. தெரிந்துசெயல்வகை	74	60. ஊக்கமுடைமை	173
48. வலியறிதல்	83	61. மடியின்மை	177
49. காலமறிதல்	91	62. ஆள்வினையுடைமை	185
50. இடனறிதல்	99	63. இடுக்கணழியாமை	192
51. தெரிந்துதெளிதல்	107		

அங்கவியல்.

64. அமைச்சு	188	80. நட்பாராய்தல்	332
65. சொல்வன்மை	207	81. பழமை	341
66. வினைத்தூய்மை	214	82. தீநட்பு	348
67. வினைத்திட்பம்	220	83. கூடாநட்பு	355
68. வினைசெயல்வகை	226	84. பேதைமை	361
69. தூது	231	85. புல்லறிவாண்மை	367
70. மன்னரைச்சேர்ந்தொழுகல்	239	86. இகல்	373
71. குறிப்பறிதல்	245	87. பகைமாட்சி	379
72. அவையறிதல்	255	88. பகைத்திறந்தெரிதல்	385
73. அவையஞ்சாமை	263	89. உட்பகை	390
74. நாடு	270	90. பெரியாரைப்பிழையாமை	395
75. அரண்	280	91. பெண்வழிச்சேறல்	402
76. பொருள்செயல்வகை	291	92. வரைவின்மகளிர்	408
77. படைமாட்சி	301	93. கள்ளுண்ணாமை	415
78. படைச்செருக்கு	311	94. சூது	421
79. நட்பு	324	95. மருந்து	427

ஒழிபியல்.

96. குடிமை	435	103. குடிசெயல்வகை	472
97. மானம்	441	104. உழவு	477
98. பெருமை	446	105. நல்குரவு	484
99. சான்றாண்மை	451	106. இரவு	489
100. பண்புடைமை	457	107. இரவச்சம்	496
101. நன்றியில்செல்வம்	462	108. கயமை	502
102. நாணுடைமை	468		

பொருட்பாலின் பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
8	37	கடிவாய	கடியவாய
38	21	முற்றவறிதால்	முற்றவறிதலால்
41	13	உண்டங்	உண்டாங்
45	27	அவற்	அவ்வாற்
47	16	(வரக்கடவதாகிய அதனை) முன்	வரக்கடவதாகிய அதனை (முன்
48	19	என்னும்	எனினும்
49	36	''என்றிவற்றை''	''என்றிவற்றை''
60	38	முதலியவற்றிக்கு	முதலியவற்றிற்கு
89	39	சிறிதாயிற்றானும்	சிறிதாயிற்றாயினும்
104	10	தழுவியதும்;	தழுவியது;
108	2	தெளிப்படுவா	தெளியப்படுவா
110	2	பிழைப்பை	பிழைப்ப
111	11	உள்ளீட்	உள்ளீ
155	2	நுசுசு	நுசுசு
164	21	உவமவுருபு.)	உருவுவமை.)
169	28	முன்னிதே''	முன்னினிதே''
175	29	மிக்கத்	மிக்க
184	31	ஒருமையாக	
194	23	மடித்து	மடித்த
214	25	மாக்குந்	மாக்கந்
216	33	பன்மையா,	பன்மையான்
266	14	என்றஇடத்து, 'தாம்'	
283	9	ப்படுவது	ப்படுவது
303	13	தொலைவுடம்	தொலைவிடம்
304	18	பட்டதாய்	படாததாய்
309	6	கருத்தாவனை	கருத்தாவான
310	2	எசுசு	எசுசு
343	37	வேற்றுமைத்	வேற்றுமை
351	20	கருங்குளமா''	கறங்குளமா''
361	3	லாதார்க்கு	லாதர்க்
396	8	காப்பார்)	)காப்பார்
404	30	ஆயண்	ஆண்
413	11	வான,	வான
426	20	கவில்'	கல்வி'
434	33	செய்பவன்: வைத்தியன்	அருகிருந்துதருபவன்
439	23	இழிக்கு	இழுக்கு
444	3	(இன்று)	இன்று:
454	34	உயர்ந்தவை	உயர்வை
473	25	தற்றுதல்	தறுதல்
478	30	கடைகே	கடைக்கே
489	23	றுரத்	றுறத்

409 - ஆம்பக்கத்து 26 - ஆம் வரியிலிருந்து 28 - ஆம் வரியில் இன் என்பது என்றவரையில், 'என்பது வெளிப்பட்டிருப்பதுபோலப் பொருள் என்பதன் பின்னும் ஏதுப்பொருளைக் காட்டும் 'இன்' என்பது வெளிப் பட்டுஇன்று பொருளின்விழையும் என்று இருந்தால்தான்'என்று திருத்துக.

திருக்குறள்.

பரிமேலழகருரை.

பொருட்பால்.

முதலாவது

அரசியல்.

இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமை யும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது-தன்னை க் காரணமாய அரசனீதி கூறவே அடங்கும். அரசனீதியாவது-காவலோடாத்தும் முறைமை. அதனை அரசியல். அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலையுலகிற்கு உயிரெனச்சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

(குறிப்புரை.) பொருட்பால்-பொருளியுணர்த்தும் பாகம்; வேற்றுமைப் புணர்ச்சி, இரண்டனுருபும்பயனும் உடன்தொக்க தொகை. இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் - இருவகை அறப்பகுதிகளுள் இல் லறப்பகுதியிற் சேர்வனவான பொருள் இன்பம் என்னும் இரண்டு புரு ஷார்த்தங்களுள். பொருளின்பங்களிற் பற்றுவிடுதலே துறவாதலால், இவை-துறவறத்தின் வழிப்படுவன வல்ல. இருமையும் பயப்பதாய-இம்மை மறுமை யென்னும் இரண்டையுந் தருவதான. தன் அனுபவத்தால் இம்மையையும் தானம் முதலியவற்றால் மறுமையையும் பொருள் கைகூட்டு மென்க. தன் - செல்வத்தின். அரசனீதி - ராஜதருமம். காவலோ-குடிகளைக் காக்குந்தொழிலே. அரசியல் - அரசனது தன்மையைக் கூறும்பாகம். அங்கவியல் - அரசனுக்கு அங்கமாகிய மந்திரிமுதலியோரின் தன்மையைக் கூறுவது: ஒழிபியல் - இவ்விரண்டு இயல்களிலும் அடங்காமல் ஒழிந்தவற்றது தன்மையைக் கூறு வது: இவையும், இரண்டாம்வேற்றுமையுருபும் பொருளு மூடன்தொக்க தொகையே. மலர்தலையுலகிற்கு - பரந்த இடத்தையுடைய உலகத்திற்கு. மலர்தலையுலகிற்கு உயிரெனச்சிறந்த அரசன்—"நெல்லுமுயிரன்றே நீரு முயிரன்றே, மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம், அதனால், யானுயிரென்ப தறிகை, வேண்மிகுதானே வேந்தர்க்குக்கடனே" என்பது, புறநானூறு. அறம்-இம்மைமறுமைவீடென்னும் மூன்றையுந் தருவதும், பொருள் இம்மை மறுமை இரண்டையுந் தருவதும், இன்பம்-இம்மையொன்றையே தருவதும் ஆகிய சிறப்பின்தகுதிபற்றி, அறம் முதலிலும், அதன்பின் பொருளும், அதன் பின் இன்பமும்நிறுத்தப்பட்டன: இவற்றுள் இரண்டாவதாகிய பொருள் முத லதான அறத்துக்கும் மூன்றாவதான இன்பத்துக்கும் காரணமாதல்பற்றிச் சிங்கநோக்காய் அவ்விரண்டனிடையில் வைக்கப்பட்டதென்க.

ஈக - ஆம் அதிகாரம்.—இறைமாட்சி.

அஃதாவது - அவன்தன் நற்குண நற்செய்கைகள். உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின், 'இறை' என்றார்; "திருவுடை மன்னரைக் காணில் திருமாலேக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார்.

(சு - ரை.) இறை - தலேவன், அரசன். மாட்சி - பெருமை. இறை மாட்சி - ஆறும்வேற்றுமைத்தொகை. அவன்தன் - அவ்வரசனுடைய. உலக பாலர் - உலகத்தை ஆள்பவர், அரசர். "காத்தற்றொழிற்குரிய கடவுளாகிய திருமால்தானே திக்பாலகர் வடிவமாகவும், அரசர்கள்வடிவமாகவும் நின்று, பிராணிகளேக் காத்தலாகிய தனதுதொழிலே நடத்துகின்றனன்" என்பது நூற்றுணிபாதலால், இறை என்னுங் கடவுளின் பெயர், இங்கே, உபசார வழக்காய் அரசன்மேல் நின்றதென்க. இனி, உலகபாலர் உருவாய் நின்று - உலகபாலகரின் அமிசத்தைப் பெற்று நின்று என்பாருமுளர்: "அஷ்டாபிர் லோகபாலாநாம் மாத்ராபிர்நிர்மிதோ நருபः [அரசன் திக்பாலகரின் எட்டு அமிசங்களால் நிருமிக்கப் பட்டுள்ளான்]" என்றது காண்க. "திருவுடைமன்னரை" என்னும்மேற்கோள், திருவாய்மொழி - நாலாம்பத்து - நான்காந்திரு மொழி எட்டாஞ்செய்யுளி லுள்ளது; இதற்கு - செல்வத்தையுடைய அரசர்க ளேக் கண்டால் திருமகள்கொழுநனை நாராயணமூர்த்தியையே கண்டே னென்று கூறுவள் (இம்மகள்) என்று பொருள். (இங்கு "நாவிஷ்ணு: ப்ருதிவீ பதிः" என்னும் வடநூல் மேற்கோளின் கருத்தையும் அறிக.) பெரியார் என்றது - திருவாய்மொழிநூலாசிரியராகிய சடகோபரென்னும் நம்மாழ் வாரை; இவர், மயர்வுமதிநலம் அருளப்பெற்ற பிரபக்நஜந கூடஸ்தராதலால் 'பெரியார்' என்ற திருநாமத்தாற் சிறப்பித்துக் கூறப்பட்டன ரென்க; இத னால், பரிமேலழகர்க்கு ஆழ்வார்பக்கலுள்ள அன்புமிகுதி புலப்படும். பணித் தார் - அருளிச்செய்தார். இறை - இறைவனுக்குப் பண்பாகுபெயர். மாட்சி - பண்புப்பெயர்: மாண்புடைய நற்குண நற்செய்கைகட்கு ஆகுபெயர்.

ஈஉக. படைகுடி கூழமைச்சு நட்பர ணிறு
மூடையா னரசரு ளேறு.

(இ - ள்.) படை - படையும், குடி - குடியும், கூழ்-கூழும், அமைச்சு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும், ஆறுஉம் - (என்றுசொல்லப் பட்ட) ஆறு அங்கங்களேயும், உடையான்-உடையவன், அரசருள் ஏறு-அரச ருள் ஏறுபோல்வான்; (எ - று.)

ஈண்டு, 'குடி' என்றது - அதனேயுடைய நாட்டினே. 'கூழ்' என்றது - அதற்கு ஏதுவாய பொருளே. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார். 'ஆறுமுடையான்' என்றதனால், அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றும்; வடநூலார் இவற்றிற்கு 'அங்கம்' எனப் பெயர் கொடுத்ததூஉம் அதுநோக்கி. 'ஏறு' என்பது - உபசாரவழக்கு.

இதனுன், அரசற்கு அங்கமாவன இவை யென்பதூஉம், இவைமுற்று முடைமையே அவன்வெற்றிக்கு ஏது வென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - சை.) படை - சேனை. குடி - குடியிருக்குஞ் சனங்களை யுடையநாடு: தானியாகுபெயர். கூழ் - உணவுக்குக்காரணமான செல்வம்: காரியவாகுபெயர்; என்றது, தனதானியங்களை. அமைச்சு - மந்திரித் தன்மை; மந்திரிக்குப் பண்பாகுபெயர். நட்பு - சினேகம்; தொழிற் பெயர். இங்கே சினேகிதர்க்குத் தொழிலாகுபெயர். அரண்-நாட்டிற்குக் காவ லாகிய மதில் முதலியன: ஸரணம் என்ற வடசொல்லின் சிதைவு. ஏறு-ஆண்சிங்கம். சிங்கம் மிருகங்களுட் சிறந்த தாதல்போல, இவன் அரசருட் சிறந்த வனென்க. காத்தல்தொழில்நடத்துவதில் அமைச்சன் அரச னுக்கு இணையாகின்றவ னுதலால், அவனை ஆறுஅங்கங்களுள் முதலிலும், அவ்வரசனுலும் அமைச்சனுலுங் காக்கப்படுவதாய் மற்றை அரண்முதலிய அங்கங்கள் நான்கிற்கும் ஆதாரமாகிற நாட்டை அதன்பின்னும், அந்நாட் டிற்கு உறுப்பாய்க் காவல்செய்வதான அரணை அதன்பின்னும், அந்நாட்டா லும் அரணலும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளை அதன்பின்னும், அப்பொருளால் வளர்வதாகிய படையை அதன்பின்னும், அப்படைபோல அரசனுக்குத் தொழிலில் உதவுவதான நட்பை அதன்பின்னும் வைத் துக்கூறுதல் முறையாமாறு காண்க; இம்முறைப்படியே மேல் அங்கவிய லில் அதிகாரங்களை அடைவுசெய்து கூறுமாற்றையும் அறிக. செய்யுள் நோக்கி - பாட்டின் இலக்கணத்துக்கு முரண்படாதபடி பொருத்தமாயிருத் தற்கு. அங்கம் - உறுப்பு. ஏறுபோல்பவனை ஏறு என, உபமேயத்தினிடத் தில் உபமானத்தின் தன்மையை ஏற்றி உபசரித்துக் கூறியபடி; இது உவமவாகுபெயரின்பாற் படும். ஏறு - ஆண்மைப்பெயர். படைமுதலிய பெயர்ச்செவ்வெண், இறுதியில் ஆறு என்னுந் தொகை பெற்றுவந்தது; உம்மை - இனைத் தென்றறிபொருளில் வந்த முற்றும்மை. இவை முற் றும் உடைமை - இவ்வங்கங்கள் ஆறையும் உடைத்தாயிருத்தல். இக்குறளில் 'உடையான்' என்பது - உயர்திணைச்சாதியொருமை யென்பர், இலக்கணக் கொத்து உரையில். (க)

கஉஉ. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ - ள்.) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது,—அஞ் சாமை - திண்மையும், ஈகை - கொடையும், அறிவு - அறிவும், ஊக்கம் - ஊக்கமும், இ நான்குஉம் - (என்னும்) இந் நான்கு குணமும், எஞ்சாமை - இடைவிடாதுநிற்றல்; (எ - று.)

ஊக்கம் - வினைசெய்தற்கண்மனவெழுச்சி. இவற்றுள் அறிவு, ஆறு அங்கத்திற்கும் உரித்து; ஈகை, படைக்குஉரித்து; ஏனைய, வினைக்குஉரிய. உயிர்க்குணங்களுள் ஒன்றுதோன்ற ஏனைய அடங்கிவரும்; அவற்றுள் இவை அடங்கின் அரசற்குக் கெடுவன பலவாம்; ஆகலின், இவை எப்பொழுதுந்

தோன்றிநிற்றல் இயல்பாகவேண்டு மென்பார், 'எஞ்சாமை வேந்தற்கு இயல்பு' என்றார்.

(கு - ரை.) திண்மை - மனவுறுதி; அஞ்சாதநெஞ்சுபடைத்தல். ஊக்கம் - உள்ளக்கிளர்ச்சி; உற்சாகம். எஞ்சாமை - குறையாமை, ஒழியாமை. வினைசெய்தற்கண் - ராஜாங்ககாரியம்நடத்துவதில். ஆறுஅங்கத்திற்கும் உரித்து - ஆறுஅங்கங்களையுங்கையாடுதற்குரியது. படைக்கு-சேனையைக் கையாளுதற்கு. வினைக்கு - போர்முதலிய தொழிற்கு. "அறிவுருளாசை யச்சமானம், நிறைபொறையோர்ப்புக் கடைப்பிடிமையல், நினைவு வெறுப்புவப்பிரக்க நாண்வெகுளி, துணிவழுக்காறன் பெளிமை யெய்த்தல், துன்பமின்ப மிளமைமூப்பிகல், வென்றி பொச்சாப்பூக்க மறமதம், மறவியி னையவுடல்கொளுயிர்க்குணம்", "துய்த்தல் துஞ்சல் தொழுதலணிதல், உய்த்தலாதியுடலுயிர்த் தொழிற்குணம்" என்று உயிர்க்குணம் கூறப்பட்டிருத்தல், இங்குக் கருதத்தக்கது. தோன்ற - தலையெடுக்க. கெடுவனபலவாம் - அநேககாரியங்கள் கெட்டுவிடும். இவை - அஞ்சாமை முதலிய இந்நான்கு குணங்களும். ஊக்கம்-தொழிற்பெயர்; ஊக்கு-பகுதி, அம்-விகுதி. (உ)

உடுஉ. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

(இ - ள்.) நிலன் ஆள்பவற்கு - நிலத்தினை ஆளுந் திருவுடையாற்கு,— தூங்காமை - (அக்காரியங்களில்) விரைவுடைமையும், கல்வி-(அவை அறிதற்கு ஏற்ற) கல்வியுடைமையும், துணிவு உடைமை - ஆண்மையுடைமையும், இ மூன்றுஉம் - (ஆகிய) இம்மூன்றுகுணமும், நீங்கா - (ஒருகாலும்) நீங்கா; (எ - று.)

கல்வியது கூறுபாடு, முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது - ஒன்றனையும் பாராது கடிதிற்செய்வது ஆகலின், அஃது ஈண்டு உபசாரவழக்கால் 'துணிவு' எனப்பட்டது. உம்மை - இறந்ததுதழீஇய எச்சவும்மை. இவற்றுள், கல்வி, ஆறு அங்கத்திற்கும் உரித்து; ஏனைய, வினைக்கு உரிய. 'நீங்கா' என்பதற்கு, மேல் எஞ்சாமைக்கு உரைத்தாங்கு உரைக்க.

(கு - ரை.) நிலத்தினை ஆளுந் திருவுடையாற்கு - பூமியை அரசாளுஞ் செல்வத்தையுடைய அரசனுக்கு. அக்காரியங்கள் - ராஜாங்கத் தொழில்கள். அவை - அக்காரியங்களே. துணிவு - தைரியம். ஆண்மை - பெளருஷமெனப்படும். கல்வியது கூறுபாடு-படிப்பின்பகுப்புக்கள். முன்னர்-இனி யென்றபடி; இங்கே இடமுன். 'முன்னர்க்கூறப்படும்'என்றது, அடுத்த 'கல்வி' என்னும் அதிகாரத்தின் தொடக்கத்தில், 'கற்றற் குரிய நூல்களாவன - அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் என்றிவற்றின் நூல்களும் முதலாயின' என உரைப்பதை; அங்கு 'மேல் "தூங்காமைகல்வி" எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக்கூறுகின்றமையின்' என இதனோடு சம்பந்தப்படுத்துவதுங் காண்க. ஒன்றனையும் பாராது - எந்தத்தடையையும் லக்ஷ்யஞ்செய்யாமல். கடிதின் - விரைவாக.

துணிதலின்பயனுகிய ஆண்மையை இங்கே 'துணிவு' என்றது, காரியத்தைக் காரணமாக உபசரித்துக் கூறியதாம்; இதனைக் காரணவாகுபெயரென்னலாம். மூன்றும் என்றஉம்மை - மூற்றுப்பொருளோடு, (கீழ்க்கவியிற் கூறிய குணங்களைத் தழுவுதலால்) இறந்ததுதழுவிய எச்சப்பொருளையு முடையது. கல்வியுடைமை, அங்கங்களாறையும் ஆளுதற்குப் பயன்படுவது; மற்றைத் தூங்காமையும், துணிவுடைமையும் - தொழில்செய்தற்குப் பயன்படுவன வென்க. மேல்எஞ்சாமைக்கு உரைத்தாங்கு - முன்பாட்டில் 'எஞ்சாமை' என்னுஞ் சொல்லுக்குப் பயன்கூறினதுபோல. 'உயிர்க்குணங்களுள் ஒன்றுதோன்ற ஏனைய அடங்கிவரும்; அவற்றுள் இவையடங்கின், அரசற்குக் கெடுவன பலவாம்; ஆகலின், தூங்காமை முதலிய இம்மூன்று குணங்களும் எப்பொழுதும் தோன்றிநிற்றல் இயல்பாகவேண்டு மென்பார் 'நீங்கா நிலனுள்வழிக்கு' என்றார் எனவுரைக்க. மூன்றுஎன்னும் பெயர், பன்மைகுறிப்பதாதலால், நீங்காஎன்னும் பன்மைமுற்றைக்கொண்டது. (ங)

ஙஉச. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(இ - ள்.) அறன் இழுக்காது - (தனக்கு ஓதிய) அறத்தின் வழுவாது ஒழுகி, அல்லவை நீக்கி - அறனல்லவை (தன் நாட்டின்கண்ணும் நிகழாமற்)கடிந்து, மறன் இழுக்கா - வீரத்தின்வழுவாத, மானம் - தாழ்வின்மையினை, உடையது - உடையான்,—அரசு - அரசன்; (எ - று.)

அவ்வறமாவது - ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம்பயிறல் பல்லுயிரோம்பல் பகைத்திறந்தெறுதல் என்னுஞ் சிறப்புத்தொழிலினும் வழுவாது நிற்றல்; "மாண்ட, அறனெறிமுதற் றே யரசின்கொற்றம்" என்பதனால், இவ்வறம் பொருட்குக் காரணமாதல் அறிக. அல்லவை - கொலை, களவு முதலாயின. குற்றமாய மானத்தின் நீக்குதற்கு, 'மறனிழுக்கா மானம்' என்றார்; அஃதாவது - "வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா, னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான், மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா, ஞறன்மையின் முதியாரையு மெறியா னயிலுழவன்" எனவும், "அழியுநர் புறக்கொடை யயில்*வா ளோச்சா"ன் எனவுஞ் சொல்லப்படுவது. அரசு - அரசனது தன்மை; அஃது - உபசாரவழக்கால், அவன்தன்மேல் நின்றது.

(கு - ரை.) ஓதியஅறத்தின் கூறப்பட்ட தருமவழியில். அறனல்லவை - அதருமங்கள். நிகழாமல் கடிந்து - நடவாதபடி நீக்கி. 'மானம்' என்னும் அதிகாரத்தில் அதன்தன்மை கூறப்படும். வேட்டல் - யாகஞ்செய்தல். ஓதல், வேட்டல், ஈதல் என்பவற்றைப் பொதுத்தொழில் என்றது, அவை அரசர்க்கு மாத்திரமே யன்றி அந்தணர்க்கும் வைசியர்க்கும் உரிய அறுதொழில்களிற் சேர்ந்தனவாதலின். படைக்கலம் பயிறல் - ஆயுதப்பயிற்சி. பல்

* பிரதிபேதம்: வேலோச்சான், வாளோச்சா.

உயிரோம்பல் - பலபிராணிகளையும் பாதுகாத்தல். பகைத்திறந்தெறுதல் - பகைவர்களின் பகுப்பைப் போர்செய்து அழித்தல். இவற்றைச் சிறப்புத் தொழில் என்றது, இம்மூன்றும் பிறர்க்கு உரியனவல்லாமல் அரசர்க்கேயுரியன வாதலால். இங்குக் காட்டிய ஆறும், அரசரது தொழிலாம். "மாண்ட, அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்ற மேற்கோள், புறநானூறு - நூறு - ஆம் பாட்டிலுள்ளது; மாட்சிமைப்பட்ட தருமவழியைக் காரணமாகவுடையது அரசனதுவெற்றி என்பது, இதன்பொருள்: மேல் 'செங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் "வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங் கோடாதெனின்" என்றதனாலும், அரசனது செங்கோலின் முறைமையே வெற்றிக்குக் காரணமாத லறியப்படும். குற்றமாய மானம் - துரகங்காரம். அஃதாவது - மறனிழுக்காமானமாவது. "வீறின்மையின்" என்னும் மேற்கோள், சீவகசிந்தாமணி - மண்மகளிலம்பகம் - கசுஂ - ஆம் பாட்டு; '(தனக்கு எதிர்ப்பாரின்மையின்) வேலுழவன் மதவேழத்தை யெறிந்தாலும் விலங்கையெறிந்தானென்பர் என்று நினைத்து அதனுலே வெற்றியின்மையின் வேழத்தையும் வெட்டானுய், மூன்புவெட்டுண்டவர் தனக்கு ஒப்பாராயினும் பிறர்படை தீண்டின எச்சிலென்று அவரையும் வெட்டானுய், தனக்கு இளையாரையும் நிகரன்மையின் மறம்வாடுமென்று வெட்டானுய், அறமன்மையின் தன்னின்மூத்தோரையும் வெட்டானுய் நின்ரு னென்க' என்பது, கச்சினூர்க்கினியருரை. "அழியுநர் புறக்கொடையில்வா ளோச்சா" என்ற மேற்கோள், புறப்பொருள் வெண்பாமாலை-வஞ்சிப்படலம் - உ0-ஆம் பாட்டு; (தழிஞ்சி.) "அழியுநர் புறக்கொடையில்வா ளோச்சாக், கழிதறுகண்மை காதலித்துரைத்தன்று" என்பதில் உள்ளது; (ஒருவீரன்) தனக்குக்கெட்டோடுவார் முதுகுபுறத்துக் கூரியவாளோச்சாத மிக்கமானப்பண்பை விரும்பிச்சொல்லியது என்று இதன்பொருள்: "காண்படு தீயிற்கலவார் தன்மேல்வரினும், தான்படை தீண்டாத் தறுகண்ணன்-வான் படர்தல், கண்ணிய பின்னன்றிக் கறுத்தார்மறந்தொலைதல், எண்ணியபின் போக்குமோ வெஃகு" என்பது - இதற்கு உதாரணம். "இன்றுபோய்ப் போர்க்கு, நாளைவாவெனநல்கினன் நாளிளங்கமுகின், வாளை தாவுறுசோல நாடுடைவள்ளல்" என்னுங் கம்பராமாயணமும் இதன்பாற்படும். அவன்தன்மேல் - அவன்மேல். அரசு - பண்பாகுபெயரென்க. முன்னே 'அறன்' என வந்ததனுல், அல்லவை - பாவமாயிற்று. மேல் 'குற்றங்கடிதல்' என்ற அதிகாரத்தில் 'மாட்சியான மானத்தின் நீக்குதற்கு, மாண்பிறந்த மான மென்ரூர்; அஃதாவது-அந்தணர் சான்ரோர் அருந்தவத்தோர் தம்முன்னோர். தந்தை தாய் என்றிவரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தேவிடுதலும் முதலாயின' என உரைப்பதை இங்கே யறிக. "அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர், முடிநிழல் முனிவரர் சரண மூழ்குமே" என்ற இதுபோல்வன, மறனிழுக்கா மானத்தின்பாற்படு மென்க. (சு)

ருஉரு. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ - ள்.) இயற்றல்உம் - (தனக்குப் பொருள்கள் வரும்வழிகளை மேல் மேல்) உளவாக்கலும், ஈட்டல்உம் - (அங்ஙனம்வந்தவற்றை) ஒருவழித்தொகுத்தலும், காத்தல் உம்-(தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற்) காத்தலும், காத்த வகுத்தல்உம் - காத்தவற்றை (அறம்பொருளின்பங்களின் பொருட்டு) விடுத்தலும், வல்லது - வல்லவனே,—அரசு - அரசன்; (எ - று.)

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற்கு ஏற்ப, இயற்றலென்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன - மணி, பொன், நெல் முதலாயின. அவைவரும் வழிகளாவன - பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன் நாடு தலையளித்தலும் முதலாயின. 'பிறர்' என்றது - பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினர். கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும் பகையொடுகூடலிற்பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற்பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களால் நுகர்வனவற்றிற்குங் கொடுத்தலை இன்பப்பொருட்டாகவுங் கொள்க. இயற்றல் முதலிய தவறுமற் செய்தல் அரிதாகலின், 'வல்லது' என்றார்.

இவை நான்குபாட்டானும், மாட்சியே கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருவழித் தொகுத்தல் - ஒருங்கு சேர்த்துவைத்தல். விடுத்தல் - செலவுசெய்தல். செயப்படுபொருள் - 'தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை' என்பது. மணி - இரத்தினம். திறைகோடல்-கப்பங்கொள்ளுதல். நாடு தலையளித்தல்-நாட்டிலுள்ளகுடிகளை நன்முறைப்பாதுகாத்தல். வினைசெய்வார் - தொழில்செய்யும் பரிவாரங்கள். கடவுளர் - தேவர். வறியோர்-ஏழைகள். படை-காலாட்சேனை; ஆயுதமென்றுங் கொள்ளலாம். பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார் - பகைவரோடு கூடியிருத்தலால் அங்ஙனங் கூடாதபடி பிரிக்கப்படுதற்கு உரியவர். தன்னிற்பிரிதலின் கூட்டப்படுவார்-தன்னை விட்டுநீங்குதலால் அங்ஙனம் நீங்காதபடி சேர்க்கப்படுதற்குரியவர். (''பகையுடன்கிடந்த நிலைபிரிவழக்கினைப், பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலும்'' என்பது, கல்லாடம்.) வாவி-நீர்நிலை. செய்குன்று-செயற்கை மலை; இயற்கைமலைகள்போலப் படைப்புக்காலத்திற் படைக்கப்பட்டன வல்லாமல் இடையிலே விளையாட்டின்பொருட்டு மலைபோலச் செய்யப்படுவது. இள மரக் கா - இளமையான மரங்களையுடையசோலை; உத்தியானவனம்: சிங்காரப்பூந்தோட்டம். ஐம்புலன்களான் நுகர்வன - சுவையினியநல்லுணவு, சுகந்த பூச்சு, இசைக்கருவி, பஞ்சணை, கண்ணுக்கினிய பொருள்கள் முதலியன. மாட்சியே - இறைமாட்சிமாத்திரமே; இவ்வேகாரம் - மேல் ஐந்தாகவினைகளில் பயனும் உடன்கூறப்படுவதினின்று நீக்குதற்கு வந்தது. இயற்றல் - இயலச் செய்தல்; இயலுதல்-உண்டாதல். காத்த-பெயர். அரசு என்பது - பொருளால் உயர்திணையாயினும், சொல்லால் அஃ

றிணையாதலால், வல்லது என்னும் அஃறிணைப்பயனிலை கொண்டது; இனி, உடையதும் வல்லதும் அரசிலக்கணம் எனவுங் கூறலாம்.

"ஐவகை மரபி னரசர் பக்கமும்" எனத் தொல்காப்பியப் பொருளதி காரத்துப் புறத்திணையியலிற் கூறியதும், உரையும் இங்கே அறியத்தக்கன: "அலப்தஞ்சைவலிப்ஸேத லப்தம்ரக்ஷேத்ப்ரயத்நதः—ரக்ஷிதம்வர்த்தயேச் சைவ வ்ருத்தம்பாத்ரேஷுநிக்ஷிபேத் [அரசன் அடையப்படாதபொருளை அடைய விரும்புக: அடைந்தபொருளை முயற்சியோடு காக்க: காத்தபொருளை வளர்க்க: வளர்த்தபொருளைச் சற்பாத்திரத்து வைக்க]" என்ற மநுதர்மசாஸ் திரம் இக்குறளோடு ஒப்புநோக்கத்தக்கது. (கு)

கூடிமு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ - ள்.) காட்சிக்கு-(முறைவேண்டினுர்க்கும் குறைவேண்டினுர்க்கும்) காண்டற்கு, எளியன் - எளியனுய், (யாவர்மாட்டும்), கடுஞ் சொல்லன் அல்லன் எல் - கடுஞ்சொல்ல னல்லனுமாயின்,—மன்னன்-அம்மன்னனது, நிலம்-நிலத்தை, மீக்கூறும்-(எல்லாநிலங்களினும்)உயர்த்துக்கூறும், (உலகம்).

முறைவேண்டினுர் - வலியரால் நலிவெய்தினுர். குறைவேண்டினுர் - வறுமையுற்று இரந்தார். காண்டற்கு எளிமையாவது - பேர் அத்தாணிக் கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனுயிருத்தல். கடுஞ்சொல் - கேள்வியினும் *வினையினும் கடியவாய சொல். நிலத்தை மீக் கூறுமெனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக் கூறு தல் - இவன்காக்கின்ற நாடு பசி பிணி பகை முதலிய இன்றி யாவர்க்கும் பேரின்பந்தருதலின் தேவருலகினும் நன்றென்றல். 'உலகம்' என்னும் எழு வாய் வருவிக்கப்பட்டது.

(கு - ரை.) முறை வேண்டினுர் - முறைகிகழ விரும்பி வந்தவர். காண் டற்கு எளியனுய் - எளிதிற் காணத்தக்கவனுய். யாவர்மாட்டும் - மந்திரி முத லிய தனது பரிவாரங்களிடத்தும், குடிகள் முதலியோரிடத்தும் என்றபடி. கடுஞ்சொல்ல னல்லன் - கடுமையான சொற் சொல்லாதவன். நிலத்தை - இராச்சியத்தை. எல்லாநிலங்களினும் உயர்த்துக் கூறும் உலகம் - மற்றை எல்லா விராச்சியங்களினும் மேம்படுத்திக் கூறுவர் உயர்ந்தோர். வலியரால் நலிவுஎய்தினுர் - தம்மினும் பலசாலிகளால் வருத்தமடைந்து வந்தவர். வறு மையுற்று இரந்தார் - தரித்திரத்தன்மை யடைந்து யாசிக்கவந்தவர். பேர் அத்தாணிக்கண் - பெரிய அரசாட்சிமண்டபத்திலே. அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு - பிராமணர் மற்றைச்சாதியிலுள்ளஅறிவால் நிறைந்தவர் முதலியோரோடு. செவ்வியுடையனு யிருத்தல்-யாவரும் வந்து தடையின் றித் தன்னைக்கண்டு பேச அவகாசமுடையவனுயிருத்தல். கேள்வியிற் கடி யவாய சொல் - கேட்பதற்கு இனியவல்லாத சொல்; வினையிற் கடிவாய

* பி - ம்: விஞைவினும்.

சொல்-தொழிலில் திமை பயப்பனவான சொல்: இப்படிப்பட்ட குற்றமற்ற அரசனது ராச்சியத்தை உயர்ந்தவர் மேம்படுத்துச்சொல்வர் என்றதனால், அவ்வரசனே மேம்படுத்துச்சொல்லுதல் அருத்தாபத்தியால் தானே பெறப்படுதல் காண்க. முதலிய - முதலானவை. உலகம் - தோன்றி எழுவாய். (சு)

ஈஉஎ. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.

(இ - ள்.) இன் சொலால் - இனியசொல்லுடனே, ஈத்து - ஈதலைச் செய்து, அளிக்க வல்லாற்கு - அளிக்கவல்ல அரசனுக்கு,—இ உலகு - இவ் வுலகம்,—தன் சொலால் - தன்புகழோடு மேவி, தான் கண்ட அனைத்து - தான் கருதிய அளவிற்றும்; (எ - று.)

இன் சொல் - கேள்வியினும் *வினையினும் இனியவாய சொல். ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் - தன்பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமற் காத்தல். இவை அரியவாகலின் 'வல்லாற்கு' என்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலின் 'இவ்வுலகு' என்றும் கூறினார். கருதிய அளவிற்றுதல் - கருதியபொருளெல்லாஞ் சுரத்தல்.

(கு - ரை.) அளிக்க - அருள்செய்ய, காக்க. மேவி - பொருந்தி. தான் கருதிய அளவிற்றும் - தான்நினைத்த அளவினையுடையதாம். இன்சொல் - கேட்பதற்கு இனியதும் நன்மைப்பயனே விளைப்பதுமான சொல். தன்பரிவாரம் நலிவுபடுத்தின் அகப்பகையும், பகைவர்நலிவுபடுத்தின் புறப்பகையுமாம். நலிவுபடாமல்-துன்பப்படாமல். மண்முழுதும்-பூலோக முழுவதையும். ஆளும் - ஆள்வான். சொல்லால் என்றவிடத்து, ஆல் உருபு - ஒடு வுருபின் பொருளது; "தூங்குகையா லோங்குதடைய" என்றவிடத்துப் போல. கண்டனைத்து - கண்டவனைத்து என்றதன் தொகுத்தல். சுரத்தல் - மேன்மேலுண்டாதல். (எ)

ஈஉஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ - ள்.) முறை செய்து - (தான்) முறைசெய்து, காப்பு ஆற்றும் - (பிறர் நலியாமற்) காத்தலையுஞ் செய்யும், மன்னவன் - அரசன், மக்கட்கு இறை என்று வைக்கப்படும் - (பிறப்பான் மகனேயாயினும் செயலான்) மக்கட்குக் கடவுளென்று வேறுவைக்கப்படும்; (எ - று.)

முறை - அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி. பிறர் என்றது, மேற் சொல்லியாரை. வேறுவைத்தல் - மக்களிற்பிரித்து உயர்த்துவைத்தல்.

(கு - ரை.) முறை செய்து - நீதியை நடத்தி. பிறர் - அகப்பகைவரும் புறப்பகைவரும். பிறப்பான் மகனேயாயினும் - ஜந்மத்தால் மனிதனேயாஞலும். செயலான் - தொழிலால். மக்கட்கு-மனிதர்க்கு. வேறுவைக்கப்படும்-தனியே சிறப்பித்து மதிக்கப்படுவான். அறநூல் - தருமசாஸ்திரம். நீதிநூல்-

* பி - ம்: வினைவினும்.

நீதிசாஸ்திரம். மேற்சொல்லியாரை என்றது,'தன்பரிவாரத்தானும் பகைவரானும்' என முன்பாட்டிற் கூறப்பட்டவரை. காப்பு ஆற்றும் - காத்தலைச் செய்யும். "அனேவோர்க்குந் தெய்வம், இலேமுகப் பைம்பூணிறை" எனப் பின்னுள்ளார்கூறியதுங் காண்க. இக் குறளின்கருத்து கௌடில்யர் அர்த்தசாஸ்திரத்தில் வந்துள்ளது. (அ)

கூஅக. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(இ - ள்.) சொல்-(இடிக்குந் துணேயாயினர்)சொற்களே, செவி கைப்ப-(தன்) செவி பொறுதாகவும், பொறுக்கும் - (விளேவுநோக்கிப்) பொறுக்கும், பண்பு உடை - பண்புடைய, வேந்தன் - அரசனது, கவிகை கீழ் - குடை நிழற்கண்ணே, தங்கும்—, உலகு - உலகம்; (எ - று.)

'செவிகைப்ப' என்றதற்கு ஏற்ப, 'இடிக்குந்துணேயார்' என்பது வருவிக்கப்பட்டது. நாவின் புலத்தைச் செவிமேல் ஏற்றி, 'கைப்ப' என்றார். பண்புடைமை - விசேடவுணர்வினலுதல். *அறநீதிகளில் தவறுமையின், மண்முழுதுந் தானே ஆளும் என்பதாம்.

(கு - ரை.) இடிக்குந் துணேயாயினர் சொற்களே - தன்னே நெருக்கித் தனக்கு அறிவுகூறுந் துணேவரான அமைச்சர் புரோகிதர் முதலிய பேரறிவுடையார் சொல்லும் வார்த்தைகளே; "இடிக்குந்துணேயாரை யாள்வாரை யாரே, கெடுக்குந் தகைமை யவர்" என்பர், மேல் பெரியாரைத்துணைக் கோடல் என்னும் அதிகாரத்தும். தன் செவி பொறுதாகவும் - தன்காது கேட்கச் சகியாததாகவும். விளேவுநோக்கிப் பொறுக்கும் - அவற்றலுண்டாகும் நற்பயனே நோக்கிக் கேட்டுப் பொறுக்கிற; இதனுல், "இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னுர், கனியுமொழியுங் கடுவே—அனல் கொளுந்தும், வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச், சிங்கி குளிர்ந்துங்கொலும்"என்றபடி இதமானவார்த்தை அப்பிரியமாயிருப்பினும் அதனைக்கொள்ளல் வேண்டுமென்க. பண்பு - நற்குணம். குடைநிழற் கண் 'என்றது, அரசாட்சியின்கீழென்றபடி. உலகம்-உலகமுழுவது மென்க. இடிக்குந்துணேயார் - உறுதிகூறுவோர். செவி வெறுப்ப என்ன வேண்டியவிடத்துச் செவிகைப்ப என்றது, ஒருவகை உபசாரவழக்கு. இதனுல், செவிபொறுதாக எனப்பட்டது. புலத்தை-உணர்ச்சியை. அறநீதிகளில் - தருமத்திலும் நீதியிலும். கவிகை - கவித்தலேயுடையது; குடைக்குத் தொழிலாகுபெயர். அரசாட்சியைக் குடையென்பது, கவிமரபு. 'மருளறு காரணங் காரியம் பேரொடு வந்தறமும், இருளறு மொண்குணப்பேர் குணிப்பேர் வினேயோடியையும், பொருள்வினே மற்றோர்பொருளினுந் தோன்றும் புலத்தொடுமாம், தெருளுறு பண்பு புலனிவை மாறியுஞ் சேர்ந்திடுமே" என்னும்

* பி - ம்: அறநீதிகளில் தவறுமையானும் இடிக்குந்துணேயாயினர் துணேயுடைமையானும்.

பிரயோகவிவேகவிதியையும், 'இன்சொல், வன்சொல், மதுரகவி, செவிகைப்பச் சொற்பொறுக்கும் என்னும் உபசாரங்களெல்லாம் பண்பு புலன்மாறிவந்தன' என்ற அதன் உரையின் பகுதியையும் இங்கே யுணர்க. "நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பது", "மைத்தாரை மாரி யொப்பார் மானுட நாற்றங் கேட்டு" என்பனவும் இதன் இனமாம். (கூ)

ங்கூ0. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானும் வேந்தர்க் கொளி.

(இ - ள்.) கொடை - (வேண்டுவார்க்கு வேண்டுவன) கொடுத்தலும், அளி - (யாவர்க்குந்) தலையளிசெய்தலும், செங்கோல் - முறைசெய்தலும், குடி ஓம்பல் - (தளர்ந்த) குடிகளைப் பேணலும், நான்கு உம் - (ஆகிய) இந்நான்குசெயலையும், உடையான் - உடையவன்,—வேந்தர்க்கு ஒளி ஆம்-வேந்தர்க்கெல்லாம் விளக்காம்; (எ - று.)

தலையளி - முகமலர்ந்து இனியகூறல். செவ்விய கோல் போறலின், செங்கோ லெனப்பட்டது. குடியோம்பல் என எடுத்துக் கூறினமையால், தளர்ச்சிபெற்றும்; அஃதாவது-ஆறில் ஒன்றாய பொருள்தன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், *இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின், 'விளக்கு' என்றார். ஒளி - ஆகுபெயர்.

இவையைந்துபாட்டானும், மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன.

(கு - ரை.) தலையளி - மிக்க அன்பு. முறை செய்தல் - நீதி தவறாது ஆளுகை செலுத்துதல். பேணல்-விரும்பிப்பாதுகாத்தல். பெயர்ச்செவ்வெண் நான்கு என்ற தொகை பெற்றது; உம்மை-முற்றுப்பொருளது. ஒளி-ஒளியையுடைய விளக்குக்குப் பண்பாகுபெயராய், விளக்குப்போன்றவ னென்ற பொருளில் உபசாரவழக்காம். விளக்கு பொருள்களைவிளங்கச்செய்வது போல, இவன் அரசச்சாதிமுழுவதையும் விளங்கச்செய்வ னென்க. இனிய - நல்வார்த்தைகளை. செவ்விய கோல் போறலின் - கோணலில்லாத கோல்போல இருத்தலால். செங்கோல் - உவமவாகு பெயர்; இதன் எதிர்மொழி - கொடுங்கோல்: அது - கோணியகோல் போல நீதி தவறுவது. 'செங்கோன்மையாவது - அரசனுற்செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை, ஒருபாற்கோடாது செவ்வியகோல் போறலின் செங்கோ லெனப்பட்டது; வடநூலாரும் தண்டம் என்றார்' எனவும், 'கொடுங்கோன்மையாவது - அம்முறையினது கோடுதற்றன்மை; ஈண்டும் உவமையின் பெயர் பொருள்மே லாயிற்று'எனவும், மேல் 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை' என்னும் அதிகாரங்களில் உரைப்பவற்றை அறிக. குறிக்கொண்டு பாதுகாத்தற்குரியது தளர்ந்த குடியே யாதலால், அவ்வடைமொழி வருவிக்கப்பட்டது. கீழ் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் "தென்புலத்தார்

* பீ-ம்: வறுமை நீங்காவழி இழத்தல் வேண்டின்.

தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றுங்கு, ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்றபடி பிதிருக்கள், தேவர்கள், விருந்தாளிகள், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐவர்க்குஞ் செய்யத்தக்க கடமைகளைச் செய்வதற்கு ஐந்துபாகம் வேண்டுதலால், குடிகளது வருவாய்ப்பொருளுள் ஆறிலொரு பாகமே அரசனுக்கு இறைப்பொரு ளாயிற்று; 'அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றுயிற்று, இவ்வைம்புலத்துக்கும் ஐந்துகூறுவேண்டுதலான் என் பதறிக' என்று அங்கு உரைத்துப்போந்தார். இங்கே ''ஆறிலொன் றற மென வருளினல்ல தொன்று, ஊறுசெய் தலகினினுவப்பதில்லையே'' என்ற சூளாமணியையும் உணர்க. ''குடிதளர்வுற்றகாலைக் கொள்பொரு ளாறிலொன்றும், விடுவது செய்து'' என்றது, விநாயக புராணம். கோடல்-கொள்ளுதல். மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன - இறைமாட்சியும் அதனுலாகும் பிரயோசனமும் ஒருங்கு சொல்லப்பட்டன. (கo)

சo - ஆம் அதிகாரம்.—கல்வி.

அஃதாவது - அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன - அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் என்றிவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனுயக்கால் தன் னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல்நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்ட தாயினும், யாவர்க்கும் உறுதிபயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றுர். மேல் ''தூங்காமை கல்வி'' எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக்கூறுகின்றமையின், இஃது இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) ஆயக்கால்-ஆனுல். மன் உயிர்க்கும்-(உலகத்தில்) நிலைபெற்ற பிராணிகட்கும். உறுதிபயத்தற் சிறப்பு-நன்மை விளைத்தலாகிய பெருமை. மேல் - மூன்னதிகாரத்தில் மூன்றுஞ்செய்யுளில். தோற்றுவாய்-தொடக்கம்.

நகூக. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(இ - ள்.) (ஒருவன்),—கற்பவை - கற்கப்படும் நூல்களை, கசடு அற - பழுதற, கற்க—; கற்றபின்-(அங்ஙனம்) கற்றால், அதற்குத் தக-அக்கல்விக்குத் தக, நிற்க - (அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே) நிற்க; (எ - று.)

'கற்பவை'என்றதனுன், அறம் பொருள் இன்பம் வீடுஎன்னும் உறுதிப் பொருள் உணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன சின்னுட்பல் பிணிச்சிற்றறிவினர்க்கு ஆகாவென்பது பெற்றும். கசடறக்கற்றலாவது - விப ரீதஜயங்களைநீக்கி மெய்ப்பொருளை நல்லோர்பலருடனும் பலகாலும்பயிறல். நிற்றலாவது - இல்வாழ்வுழி ''கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத், தருமமுந் தக்கார்க்கே செய்''தலினும், துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும் வழுவாமை.

சிறப்புடைமகற்காயின் கற்றல்வேண்டு மென்பதூஉம், அவனாற்கற்கப் படும் நூல்களும் அவற்றைக் கற்குமாறும், கற்றதனாற் பயனும் இதனாற் கூறப்பட்டன.

(கு - ரை.) கற்கப்படும் - கற்றற்குரிய. பழுது அற - குற்ற மில்லாமல். கற்க - படிக்கக்கடவன்; வியங்கோள். அக்கல்விக்குத்தக - அந்தக்கல்வியறி விற்குப் பொருந்த; அக்கல்வி ஏட்டுச்சுரைக்காயாய்விடாமலென்றபடி. அவை - அந்தச்சாஸ்திரங்கள். நெறிக்கண்ணே - சந்மார்க்கத்தில். உறுதிப் பொருள் - புருஷார்த்தம். பிறபொருளுணர்த்துவன - உறுதிப்பொருளை யுணர்த்தாத களவுநூல் காமநூல்போல்வன. சில் நாள் பல் பிணிச் சிற்றறி வினர் - சில வாழ்நாளையும் அவற்றிற் பலவகை நோய்களையும் குறைவான அறிவையுமுடையவர். இங்கே "கல்விகரையில கற்பவர்நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதி, னாராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழி யப், பாலுண்குருகிற் றெரிந்து" என்ற நாலடியார்ச்செய்யுளை யறிக. விபரீ தம் - திரிபுணர்வு: ஒன்றைமற்றொன்றாகமாறுபடஅறிதல். ஐயம் - சந்தேக வுணர்வு. பயிறல் -பயிலுதல், பழகுதல். இல்வாழ்வுழி-இல்லறத்தில்வாழ்கிற பொழுது. "கருமமு முள்படாப் போகமுந்துவ்வாத், தருமமுந் தக்கார்க்கே செய்யா" என்பது - நாலடியாரில் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தி லுள்ளது. (அறம் பொருள்களுக்குக் காரணமான) முயற்சிகளையும் உடன்பட் டுச் செய்து (அவற்றா லுள்ளனவாகும்) இவ்வுலக இன்பங்களையும் அனுப வித்து (த் தானம்முதலிய) அறத்தொழில்களையும் (அறிவொழுக்கங்களால்) தகுதியுடையவர்க்கேசெய்து என்பது, முன்னிரண்டடியின் பொருள். துறந்துழி - இல்வாழ்க்கையைத் துறந்தபொழுது. மெய் உணர்தல் - பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களால் அன்றி உண் மையால் உணர்தல்; இதனை, வடநூலார்'தத்த்வஞாநம்'என்பர். அவா அறுத் தல்-அத்தத்துவஞானத்தால் ஆசையை யொழித்தல். சிறப்பு உடை-பெருமை யுடைய: முத்தியடைதற்குஉரிய என்பாருமுளர். மகற்கு ஆயின்-மனிதனுக் கானால். கற்கும் ஆறு - படிக்கும் வழி; 'கசடற' என்றது. கற்றதனாற்பயன்- அறமாதியான உறுதிப்பொருளை யுணர்த்தும் நூல் கூறும் வழியிலே நிற்றல்.

௩௯௨. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ - ள்.) (அறியாதார்), எண் என்ப-எண்ணென்று சொல்லுவனவும், ஏனை எழுத்து என்ப - மற்றையெழுத்தென்றுசொல்லுவனவும், இ இரண்டு உம் - ஆகிய கலைகளிரண்டனையும்,—(அறிந்தார்),—வாழும் உயிர்க்கு - சிறப் புடையுயிர்கட்கு, கண் என்ப - கண்ணென்று சொல்லுவர்; (எ - று.)

எண் என்பது-கணிதம்; அது-கருவியும், செய்கையும் என இருவகைப் படும்: அவை ஏரம்பம் முதலிய நூல்களுட் காண்க. எழுத்து எனவே, அத னோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும் அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன. அவை

கருவியாதல் ''ஆதி முதலொழிய வல்லாதன வெண்ணி, னீதிவழுவா நிலை மையவான் - மாதே, யறமார்பொருளின்பம் வீடென்றிவற்றின், றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு,'' ''எழுத்தறியத்தீரு மிழிதகைமை தீர்ந்தான், மொழித்திறத்தின் முட்டறுப்பானுகு-மொழித்திறத்தின், முட்டறுத்த நல் லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடுபெறும்'' இவற்றுள் அறிக. 'என்ப' என்பவற்றுள், முன்னைய இரண்டும் - அஃறிணைப்பன்மைப் பெயர்; பின்னது - உயர்திணைப்பன்மையினை. அறியாதார், அறிந்தார் என் பன - வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயி ரென்றது, மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதியுடையதனை.

இதனுள், கற்கப்படும் நூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றி யமையாமையும் கூறப்பட்டன.

(கு - ரை.) அறியாதார் - ஆய்ந்து உணராதார். இப்படிப்பட்டவர்களுக் கும் எண்ணும் எழுத்தும் பிரசித்தமாகத்தெரியு மென்பதை விளக்குதற்கு, இதனை வருவித்தார். கலைகள் - சாஸ்திரங்கள், அறிந்தார் என வருவித்தது, அவர்கள்வார்த்தை எற்றுக்கொள்ளத்தக்க தென்பதற்கு. கருவி - காரண மாவது. செய்கை - காரியப்படுவது. இவ்விருதிறமும் அறமுதற்பொரு ளைக் காண்டற்குக் கருவியாகலின்-எண்ணும் எழுத்தும் தருமம் முதலிய புரு ஷார்த்தங்களைக் கண்டறிதற்கு உதவுதலால். ''கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை'' ஆதலால், கண்ணையே கூறினர். அவை-எண்ணும் எழுத்தும். மேற்கோட் செய்யுளிரண்டனுள், முதற்செய்யுளுக்கு - பெண்ணே! ஆதிப் பொருளால் [கடவுளால்] வெளியிடப்பட்ட முதனூலை [வேதத்தை]த் தவிர மற்றவற்றை யாராய்ந்தால் அவை நியாயத்தவறுகுந் தன்மையுடையன; ஆதலால், (முத னூலை ஆராயுமிடத்து) எண்ணென்கிற சாஸ்திரத்தை விட்டால் வேறுவழி யால் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் இவற்றின் நிலைத்த பகுப் புக்களை அறிய முடியுமோ? சொல்லு' என்று பொருள். மாதே - மகடூஉமுன் னிலை. ஓ-எதிர்மறை; அறியமுடியா தென்றபடி. இரண்டாஞ் செய்யுளுக்கு - 'எழுத்தென்னுஞ்சாஸ்திரத்தை யறிய அறியாமை நீங்கும், நீங்கினால் சொற் பகுப்புக்களின் குற்றத்தை யொழித்தவனவன்; அங்ஙனம் சொற்பகுப்புக் களின்குற்றத்தையொழித்த நல்லறிவுடையவன், ஆதியான வேதாகமங்களின் பொருளையறிந்து பாசபந்தத்தையொழித்து முத்திபெறுவான்' என்று பொருள். முதலடியில்என்ப-பலவின்பால் வினையாலணையும்பெயர். இரண்டா மடியில் என்ப-பலர்பால்வினைமுற்று. மக்கள் - மனிதர். இன்றியமையாமை-இல்லாமல் முடியாமை; அவசியமாதல். எனை-வேறென்னும் பொருள்தரும் இடைச்சொல். எண்ணென்பது - தருக்கநூலுக்கும், எழுத்தென்பது-இலக்கண நூலுக்கும் பெயராம்; (அதனை ''எண்ணு மெழுத்துங் கண்ணிவை யாய்ந் திந் நூற்பயனைக், கண்ணுக காண்பார்நற்கதி'', ''காண்டலனுமானங் கதையருத் தாபத்தியிவை, யீண்டிசைத்த வெண்ணெனவேயெண்,'' ''வழுப்பதத்தை வாக்கினுக்கு மாற்றி வரமாக்கும், எழுத்தெழுவாயைந்து மெழுத்து என்னும்

பரமததிமிரபானுத்திருக்குறள்களா னுணர்க.) "காணுதம் பாணினீயஞ்சு வர்வ ஸாஸ்த்ரோபகாரகம்" என்னும் வடநூன்மேற்கோளாலும், தர்க்கவியாகர ணங்கள் கற்கும் நூல்களெல்லாவற்றிற்கும் கருவியாதலே விளங்கவறிக. இங்ஙன் தருக்கமே பிரதானமாக இருப்பதால் தருக்கத்தைக் கணிதத்தி லடக்கி, எண்ணென்பது கணிதம் என்றுரைன்க. எண் - ஆராய்ச்சி, முதனி லைத்தொழிற்பெயர்: இது - ஆராய்தலையுடையதாலுக்கு ஆகுபெயர். எழுதப் படுவது, எழுத்து; இதுவும் - அதனிலக்கணத்துக்கு ஆகுபெயராம். காண் பது, கண். "எண்ணெழுத்திகழேல்", "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்" என்பன, ஔவையார் அமுதமொழி. (உ)

கூகூ. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ - ள்.) கண்உடையர் என்பவர் - கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார், கற்றோர் - கற்றவரே; கல்லாதவர் - (மற்றைக்) கல்லாத வர், முகத்து-முகத்தின்கண், இரண்டு புண் உடையர்—[கண்ணிலர்]; (எ-று.)

தேயமிடையிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றுரை 'கண்ணுடையரென்பவர்' என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றால் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே யுடைமையிற் கல்லாதவரை 'புண்ணுடையர்' என்றும் கூறினர்.

மேல் கண்ணன்மைஉணரகின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறிய வாற்றான், பொருள்நூல்களேயுங் கருவிநூல்களேயுங் கற்றாரது உயர்வும் கல் லாதாரது இழிவும் இதனுன் தொகுத்துக்கூறப்பட்டன.

(கு - ரை.) தேயம் இடையிட்டவற்றையும்-தாம் இருக்கும் இவ்விடத்தி லில்லாமல் வெவ்வேறிடத்தி லுள்ளவற்றையும்; எல்லாவிடத்துப்பொருள் களேயும் என்றபடி. காலம் இடையிட்டவற்றையும் - தாமுள்ள இக்காலத்தி லல்லாமல் வெவ்வேறு காலத்திலுள்ளவற்றையும்; எல்லாக்காலத்திலுள்ள வற்றையும் என்றபடி. ஊனக்கண், வடமொழியில் மாம்ஸசக்ஷுஸ் எனப் படும். மேல் - முன்பாட்டில். கண்ணன்மை உணரகின்ற - கண்ணல்லாத தன்மை தெரியகின்ற. மெய்ம்மை - உண்மையான தன்மை. பொருள் நூல் கள் - அறநூல் முதலியன. கருவி நூல்கள்-தருக்கம் முதலியன. தொகுத்து-சுருங்கச்சேர்த்து. என்பவர் என்பது, உயர்வுதோன்ற கின்றது. (கூ)

கூகூசு. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல
லினைத்தே புலவர் தொழில்.

(இ - ள்.) உவப்ப - (யாவரையும்) அவர் உவக்குமாறு, தலைக்கூடி - தலைப்பெய்து, உள்ள-(இனி இவரை யாம் எங்ஙனங் கூடுதும் என) நினையு மாறு, பிரிதல் - நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மைத்து, புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில்; (எ - று.)

தாம்நல்வழியொழுகல், பிறர்க்குஉறுதிகூறல் என்பன இரண்டும் தொழில்என ஒன்றாய் அடங்குதலின், 'அத்தன்மைத்து' என்றார். அத்தன்மை - அப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கங்காண்டலானும், தமக்கு மதுரமும் உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம்பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையராவ ரென்பதாம்.

இதனுள், கற்றாரதுஉயர்வு வகுத்துக்கூறப்பட்டது.

(கு - ரை.) அவர் உவக்குமாறு தலைப்பெய்து - அவர்கள்மகிழும்படி கலந்து அளவளாவி. எங்ஙனம் கூடுதும் - எவ்வாறு சேர்வோம்? எங்ஙனம் - எவ்விடத்தில், எப்பொழுது என்றுமாம். தாம்-(கற்றறிந்தாரான)தாம். உவப்பத்தலைக்கூடுதல் உள்ளப்பிரிதல் என்ற இரண்டும் தொழில் என ஒன்றில் அடங்குவதனால், அதற்கு ஏற்ப அனைத்து என ஒருமைமுடிபு கொடுக்கப்பட்டது. நல்லொழுக்கங் காண்டலானும் - (அவரது) நல்லொழுக்கத்தைக் காணுதலாலும். கூற்றுக்கள் - சொற்கள். பிரியமானவார்த்தை அப்பொழுது இன்பந்தரும்: இதமானவார்த்தை பிற்காலத்தில் இன்பந்தரும். வகுத்து - பிரித்தெடுத்து. உவப்ப, உள்ள என்னும் வினையெச்சங்கள் - காரியப்பொருளன வாதலின், எதிர்காலத்தன. ஏ - ஈற்றசை. தலைக்கூடி யென்பதில், 'தலை' என்பது - தமிழுபசர்க்கம். (சு)

நஉ. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(இ - ள்.) (''பிற்றைநிலைமுனியாது கற்றல் நன்று'' ஆதலால்), உடையார்முன் - செல்வர்முன், இல்லார்போல் - நல்கூர்ந்தார்(நிற்குமாறு)போல, ஏக்கற்றுமு - (தாமும் ஆசிரியர்முன்) ஏக்கற்றுநின்றும், கற்றார்—, (தலையாயினர்); கல்லாதவர் - (அங்ஙனமேக்குறாணிக்) கல்லாதவர், கடையர்எ-(எஞ்ஞான்றும்) இழிந்தாரேயாவர்; (எ - று.)

உடையார், இல்லார் என்பன - உலகவழக்கு. ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல். 'கடையர்' என்றதனுள், அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வி யிழந்தார் பின் ஒருஞான்றும் அறிவுடைய ராகாமையின், 'கடையரே' என்றார்.

இதனுள், கற்றாரதுஉயர்வும் கல்லாதாரதுஇழிவும் கூறப்பட்டன.

(கு - ரை.) ''பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று'' என்னும் மேற்கோள் - புறநானூறு, கஅஉ - ஆம் பாட்டி லுள்ளது; 'வழிபாட்டுநிலைமையைவெறாது கற்றல் (ஒருவர்க்கு) அழகிது' என்பது - இதன்பொருள். நல்கூர்ந்தார் - வறியவர். ஏக்கற்று - விரும்பிக் கீழ்ப்படிந்து; ஏக்கறு என்னும் பகுதி தன்னெற்றிரட்டி இறந்தகாலங்காட்டிய வினையெச்சம். அங்ஙனேக்கு - வழிபாடுசெய்யும்நிலைமைக்கு. நாணி - வெட்கமுற்று. உலகவழக்குப் பற்றி, உடையார்என்பது - பொருளுடையவர்மேலும், இல்லார் என்பது - பொருளில்லாதவர்மேலும் நின்றதென்க. 'கடையர்' என்றதனுள்-பின்வாக்கி

யத்தில் 'கடையர்' என வந்ததனால் என்றபடி; அதன்மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது - அதன்எதிர்மொழியாகிய தலையாயினுரென்பது முன்வாக்கியத்தில் வருவித்து முடிக்கப்பட்டது; இங்ஙனம் மறுதலைப்பெயர் வருவிக்கும் மரபை "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடிசேராதார்" என்ற குறளில் 'சேர்ந்தார்'என வருவித்ததனாலுங் காண்க. இது, சொல்லெச்சத்தின்பாற்படும். கற்றூர் தலையாயினுரென்ற விடத்து "கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத், தலைநிலத்து வைக்கப்படும்", "வேற்றுமைதெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனுமவன்கட் படுமே" என்பன காண்க. பொய்யாய - நிலையில்லாத. மெய்யாய - நிலையான. ஏ - தேற்றம். எக்கற்றும், உம் - இழிவுசிறப்பு. இனி, உடையார்முன் இல்லார்போல் எக்கற்றாலும், கற்றூர் கடையராவரோ? ஆகார்; ஏனைக் கல்லாதவரே கடையர் என்ற கருத்துப்பட உரைத்தலும் ஒன்று. "இல்லார், குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும், தலைவணங்கித் தாழப்பெறின்" என்றதை இக்குறளோடு ஒப்பிடுக. இக்குறளில் முரண்தோடை காண்க. (கு)

கூகூரு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(இ - ள்.) மணல் கேணி - மணலின்கட் கேணி, தொட்ட அனைத்து ஊறும் - தோண்டிய அளவிற்றாக ஊறும்; (அதுபோல), மாந்தர்க்கு அறிவு - மக்கட்கு அறிவு, கற்ற அனைத்து ஊறும் - கற்ற அளவிற்றாக ஊறும்; (எ-று)

ஈண்டு, 'கேணி' என்றது, அதன்கண் நீரை. 'அளவிற்றாக' என்றது அதனளவுஞ்செல்ல என்றவாறு. சிறிதுகற்றதுணையான் அமையாது, மேன்மேற் கற்றல்வேண்டுமென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் "உண்மையறிவே மிகும்" என்றதனோடு மலையாமை அறிக.

(கு - ரை.) கேணி-சிறுகுளம்; சிறுதளத்தைக்கேணியென்பது, கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் அருவாநாட்டில்வழங்குந் திசைச்சொல் என்பர்; [நன். பெயர். கசு.] ஊறும்-நீர்சுரக்கும். இங்கே கேணியென்பது-அதனிடத்திலுள்ள நீருக்கு இடவாகுபெயர். அதனளவுஞ்செல்ல-அந்தத்தோண்டிய வரையும் பொருந்த. தோண்டிய அளவுக்கேற்ப மணலில் நீர்சுரப்பதுபோல, படித்தவளவுக்கேற்ப மனிதரிடத்து அறிவு வளருமென்க. இதனை ஒருசாரார் எடுத்துக்காட்டுவமையணி யென்ப; தொடர்மொழிதுவமையணி அல்லது மறுபொருளுவமையணி என்ப மற்றொருசாரார். சிறிதுகற்றதுணையான் அமையாது-திருப்திப்படாமல் எனினுமாம். கீழ் "நுண்ணியநூல்பலகற்பினுமற்றுந், உண்மையறிவே மிகும்" என்ற குறளில் எவ்வளவுபடித்தாலும் விதிவசத்தாலாகிய அறிவே மேற்படும் என்று கூறியதனோடு, இங்கே படிக்கப்படிக்க அறிவு வளருமென்று கூறியது, மாறுகொளக்கூற லென்னுமீ குற்றத்தின்பாற் படாது பொருந்துமாறு எங்ஙனமெனின்,—ஊழ்வினை நல்லதாகவிருக்கிற

வரையில் படிப்புக்கேற்ப அறிவுவளர்தலேத்கூறியது இதுவென்றும், முன் கூறியது ஊழ் நல்லதல்லாவிடத்து உள்ளநிலைமை யென்றும் வேறுபாடு அறிக. இஃது - கல்வியறிவுமிகுதல். ஊழ்மாறுகொள்ளாவழி - விதிவிதி யாசப்படாதபோது. மேல் - ஊழ் என்னும் அதிகாரத்தின் மூன்றும் பாட் டில். மலையாமை - மாறுபடாமை. தொட்டவனேத்து, கற்றவனேத்து என்பவை-அகரம் தொக்கன. "தாங்கற்ற, நூலளவே யாகுமா நுண்ணறிவு" என்பதனோடு இக்குறட்பாவை ஒப்பிடுக. (கூ)

ருகூஎ. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ - ள்.) (கற்றவனுக்குத் தன்நாடும் தன் ஊருமேயன்றி), யாது ஆன் உம் நாடு ஆம் ஊர் ஆம் - யாதானும் ஒருநாடும் நாடாம் யாதானும் ஒருரும் ஊராம்; (இங்ஙனமாயின்), ஒருவன்—, சாம் துணேஉம் - (தான்) இறக்கு மளவும், கல்லாத ஆறு - கல்லாதகழிகின்றது, என் - என்கருதி? (எ - று.)

உயிரோடு சேறலின், 'சாந்துணேயும்' என்றார். பிறர்நாடுகளும் ஊர் களும் தமபோல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்துசெய்தற்கு ஏதுவாகலின், கல்விபோலச்சிறந்தது பிறிதில்லே, அதனேயே எப்பொழுதுஞ் செய்க என்பதாம்.

(கு - சை.) ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம். நாடாம் - சொந்த நாடாகும். ஊராம் - சொந்த ஊராகும். இங்ஙனம் ஆயின் - இப்படியிருக்க வும் என்றபடி. கல்லாதுகழிகின்றது - படியாமற்செல்கின்றது. உயிரோடு சேறலின் - கல்வியறிவு உயிருடன்செல்லுமாதலால்; செல்வப்பொருள் போலக் கல்விப்பொருள் உயிருடன்செல்லாமல் இங்கே தனித்துநிற்பதன் றென்க. தமபோலஉற்று - தம்முடையன போல இருந்து. பொருட்கொடை யும் - செல்வங்கொடுத்தலேயும். பூசையும் - உபசரணேயையும். உவந்து-மன மகிழ்ந்து. அதனேயே செய்க - படித்தலேயே செய்க. ஆல்இரண்டும் - அசை கள். என் - எவன்என்பதன்விகாரம். சாம்-சாகும் என்னுஞ்செய்யுமெனெச் சத்து ஈற்றுயிர்மெய் கெட்டது. சாந்துணேயும் என்றஉம்மை - இழிவையும் விளக்கும். 'உயிரோடுசேறலின்' என்றதன் கருத்து, அடுத்த கவியில் நன்கு விளங்கும். "ஆற்றவுங்கற்றூரறிவுடையா ரஃதுடையார், காற்றிசையுஞ் செல்லாத காடில்லே - அந்நாடு, வேற்றுநா டாகா தமவேயா மாயினு, லாற்றுணே வேண்டுவதில்," "மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்த்தக்கின், மன்ன னிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத், தன்தேசமல்லாற் சிறப் பில்லே கற்றோற்குச், சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்பவற்றோடு இக் குறட்பாவை ஒப்பிடுக. இக்குறளே 'விஞதல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணங்காட்டுவர், வீரசோழியவுரைகாரர். (எ)

ருகூஅ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, தான்—, ஒருமைக் கண்-ஒருபிறப்பின்கண், கற்ற—, கல்வி—, எழுமைஉம் - எழுபிறப்பினும் (சென்று), ஏமாப்பு - உதவுதலை, உடைத்து—; (எ - று.)

வினைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகு மாகலின், 'எழுமையு மேமாப்புடைத்து' என்றார். எழுமை, மேலே கூறப்பட்டது. உதவுதல் - நல்நெறிக்கண்உய்த்தல்.

(கு - ரை.) வினைகள்போல - கருமங்கள்போல. அது புக்குழிப் புகும்-உயிர் சென்றவிடத்துத் (தானும் விடாது) தொடர்ந்துசெல்லும்; கருமம் உயிர்புக்குழிப்புகுதலை "எனைப்பகையுற்றாரு முய்வர் வினைப்பகை, வீயாது பின்சென்றடும்" என்ற குறளாலும் அறிக. 'மேலே கூறப்பட்டது' என்றது-"எழுபிறப்புந் தீயவைதீண்டா" (62) என்ற இடத்துக் கூறப்பட்டதனை: இனி, ஒருசாரார் 'செய்ந்நன்றி' என்னும் அதிகாரத்தில் "எழுமையெழுபிறப்பு முள்ளுவர்" என்றவிடத்து 'எழுமையென்றது - வினைப்பயன் தொடரும் ஏழுபிறப்பினை; அது-வளையாபதியுட்கண்டது' என்று உரைத்துப் போந்ததனை யென்ப. இதனால், ஒருவன் ஒருசன்மத்திற் செய்த கருமம் பின் ஏழுசன்மம்வரையிலுந் தான் அவனுயிரைத் தொடர்தல்கூடும் என அறிக. உய்த்தல்-செலுத்தல். எழுமையும், உம்மை - முற்றும்மை. இங்கே எழுமை என்றது - ஏழின்தன்மையைக்குறியாமல் ஏழென்னும் எண்ணையே குறித்ததனால், இதிலுள்ள மைவிகுதி-தன்மைப்பொருள்விகுதியன்று; பகுதிப்பொருள் விகுதியாம்: இது-ஏழுபிறப்புக்கு எண்ணலளவையாகுபெயர்; ஒருமையென்பதும் இவ்வாறே. ஏமாப்புஎன்னுந் தொழிற்பெயரில், ஏமா - பகுதி; இது - அலமா, செம்மா, இறுமா, சோகா என்பனபோல ஒருசொல். இனி, ஏமம்ஆ அல்லது ஏமம்யா என்பது ஒருசொல்தன்மைப்பட்டு ஏமா என நின்றதென்றுங் கொள்ளலாம். ஏமமாதல் - உதவியாதல். ஏமம்யாத்தல்-உதவிபொருந்துதல். இக்குறட்பாவைக் கீழ் "ஒருமையுளாமைபோ லைந்தடக்கலாற்றின் எழுமையுமேமாப்புடைத்து" என்றதனோடு ஒப்பிடுக; 'ஒருமைக்கண் செய்த வினையின்பயன் எழுமைக்கண்ணுந்தொடரு மென்பது இதனானறிக' என்று அங்கு உரைத்தார். (அ)

௩௯௯. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ - ள்.) தாம் இன்பு உறுவது-தாம் இன்புறுதற்குஏதுவாகிய கல்விக்கு, உலகு இன்புற - உலகம்இன்புறுதலால், கண்டு - (அச்சிறப்பு) நோக்கி, கற்றறிந்தார்—, காமுறுவர் - (பின்னும் அதனையே)விரும்புவர்; (எ - று.)

தாம் இன்புறுத லாவது - நிகழ்வின்கண் சொற்பொருள்களின்சுவை நுகர்வானும், புகழ்பொருள்பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடுபயத்தலானும், அதனான் இடையறாத இன்பம் எய்துதல். உலகுஇன்புறுதலாவது - இம்மிக்காரோடுதலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்

றேமென்றும், "யாண்டுபலவாகநரையிலமாயினேம்" என்றும் உவத்தல். 'செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தல் என்றிவற்றால் துன்புறுதலும் பலரையும் பகையாக்கலும் உடைத்து' என அறிந்து அதனைக் காமுறுமையின் 'கற்றறிந்தார்' என்றும், கரும்பயிறற்குக் கூலிபோலத் தாமின்புறுதற்கு உலகின் புறுதல் பிறவாற்றான் இன்மையின் 'அதனையே காமுறுவர்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) தாம் - கற்றறிந்தாராகிய தாம். இன்புறுதற்கு - மகிழ்ச்சியடைதற்கு. அதனையே - அக்கல்வியையே. 'தமதுமனத்தை மகிழ்விக்குங் கல்வியைத் தாம் கற்றதுகுறித்து உலகம்மகிழும் உயர்வை உணர்ந்து' என்பது - முதலடியின் கருத்து. இகழ்வின்கண் - இம்மையில் என்றபடி. சொற் பொருள்களின் சுவை நுகர்வானும் - சொல்லின் இனிமையையும் பொருளின் இனிமையையுங் கண்டறிதலாலும். புகழ் பொருள் பூசை - கீர்த்தியையுஞ் செல்வத்தையும் மரியாதையையும். இங்கே "அறம்பொருளின்பமும் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும் - உறுங்கவலொன், றுற்றழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை, சிற்றுயிர்க்குற்றதுணை" என்றதன்பொருளே யறிக. எதிர்வின்கண் - மறுமையில் என்றபடி. அறம்வீடுபயத்தலானும் - புண்ணியத்தையும் முத்தியையுந் தருதலாலும். அதனான் - அக்கல்வியினால். எய்துதல் - அடைதல். இம்மிக்காரோடு தலைப்பெய்து - இந்த மேம்பட்டவருடன் கூடி. யாண்டுபலவாக நரையிலமாயினேம் - பிராயங்கள் மிக்கனவானபின்பும் மூப்பில்லாதவராஞேம்; என்றது, கல்வியறிவுடையாரோடு கலந்ததனு லுண்டாகும் உற்சாகம்பற்றிய தென்க. மகிழ்ச்சியால் நரையிலவாதல் நிகழ்தலையறிக. "யாண்டுபலவாக நரையிலவாகுதல், யாங்காகியரெனவினவுதிராயின், மாண்டவென்மனைவியொடு மக்களு நிரம்பினர், யான்கண்டனைய ரென்னினையரும் வேந்தனு, மல்லவைசெய்யான் காக்குமதன்றலை, யான்றவிந்தடங்கியகொள்கைச், சான்றோர்பலர்யான்வாழு மூரே" என்பது, புறநானூற்றுச்செய்யுள்; [இது, கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரை 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கு இல்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது.] அதனைக் காமுறுமையின் - செல்வப்பொருளே விரும்பாமையால். கரும்பு அயிறற்குக் கூலிபோல - தாம் கரும்பைத்தின்றுமகிழ்தற்குப் பிறர் கூலியுங்கொடுத்தால் அதுபோல. பிறவாற்றான் - வேறுஎந்தவகையாலும். இன்புறுவது என்ற இது - கல்வியாகிய காரணத்தின்மேல் நின்றது. உலகு-உலகத்தவர். காமுறு - காமமுறு என்பதன்விகாரம். (கூ)

399. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடு இல் விழு செல்வம் - அழிவில்லாத சீரிய செல்வமாவது, கல்வி—; மற்றையவை-அஃதொழிந்த மணியும் பொன்னும் முதலாயின, மாடு அல்ல - செல்வமல்ல; (எ - று.)

அழிவின்மையாவது - தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை-தக்கார்கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின், அவற்றை 'மாடல்ல' என்றார்.

இவையைந்துபாட்டானும், கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பை.) சீரிய - சிறப்புடைய. தாயத்தார் - பங்காளிகள். வழிபட்டார்க்கு - தம்மைஅனுசரித்தவர்க்கு. கொடுத்துழி - கற்றுக்கொடுத்தவிடத்து என்றபடி. "வைப்புழிக்கோட்படா வாய்த்தீயிற்கேடில்லை, மிக்கசிறப்பினரசர்செறின் வவ்வார், எச்சமென வொருவன் மக்கட்குச்செய்வன, விச்சை மற்றல்லபிற", "இம்மைபயக்குமாலீயக்குறைவின்றால், தம்மைவிளக்குமால் தாழுளராக்கேடின்றால், எம்மையுலகத்தும் யாங்காணேங் கல்விபோல், மம்மரறுக்கு மருந்து" என்னும் நாலடியார்ப்பாடல்களே இங்கேயறிக. தக்கார்கண்ணேநிற்றல் - தகுதியுடையவரிடத்தில் உண்டாகிநிலைபெறுதல். செல்வப் பொருள்—பங்காளிகளாற் பகுத்துக்கொள்ளப்படும், திருடராற் கவர்ந்து கொள்ளப்படும், வலியபகைவர்களாற் பகுத்துக்கொள்ளப்படும், கோபங் கொண்ட கொடுங்கோல்மன்னர்களால் எடுத்துக்கொள்ளப்படும், அனுசரித்தவர்க்குக் கொடுத்தாற் குறைவுபடும், பெரும்பாலும் யோக்கியரிடத்து உண்டாகி நிலைபெறாது; ஆதலால், 'மணி பொன் இவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின்' என்றார். இவ்விரண்டும்-அழிவின்மையும், சீர்மையும். கேடு-கெடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். விழு - விழுமம் என்னும் உரிச்சொல்லின் விகாரம். மற்றையவை - மற்றையென்னும் இடைச் சொல்லடியாப் பிறந்த பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்; "மற்றையதென்னுங்கிளவிதானே, சுட்டுநிலையொழிய வினங்குறித்தன்றே" என்பது தொல்காப்பியம். 'பொருளென்னும்பெயர் பொதுவாயினும், கல்விப்பொருளினோமாத்திரம் அங்ஙனம் கூறுது, நற்பொருள்***விழுமிய பொருள் முதலாக யாதானும் ஓரடை கொடுத்தே கூறுவர்: "கேடில் விழுச் செல்வங் கல்வி" எனச் சிறப்பான்மை பலவடையுங்கொடுத்துக் கூறுவர்: அக்கருத்துப் பண்டைநூல்களெல்லாவற்றுள்ளுங் காண்க' என்பது இலக்கணக்கொத்து. கலித்தொகையில் மருதக்கலியில் (உக) ஒருகாரணம்நோக்கி, செல்வப்பொருள் "வீதலறியாவிழுப்பொருள்" என்று கூறப்பட்டுள்ளது: அங்கு நச்சினார்க்கினியர் அதனை வழுவமைத்துள்ளார். (கo)

சக - ஆம் அதிகாரம்.—கல்லாமை.

அஃதாவது - கற்றலைச் செய்யாமை; என்றது, அதனின் ஆய இழிபினை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறிய தூணையான் முற்றுப் பெறுமை நோக்கி, எதிர்மறைமுகத்தானுங் கூறுகின்ற தாகலின், இது, கல்வியின்பின் வைக்கப்பட்டது.

(கு - பை.) 'கல்லாமை'என்றது - படித்தற்குரிய நூல்களைப் படியாமையினாலாகிய இழிவைக் கூறுவ தென்றபடி. கல்வியைக் கீழ் அதிகாரத்

தில் உடன்பாட்டுவழியால் கற்கவேண்டுவது அவசிய மென்று கூறி, அத் னோடு அக்கல்விச்சிறப்பு முடியாமையால், எதிர்மறைவழியால் கற்காமலிரு ப்பது தகுதியன்றென இவ்வதிகாரத்திற் கூறுகிறார். கல்லாமை - கல்வியெ ன்பதன் எதிர்மறை; அதனின் ஆய இழிபு - கல்லாமையினாலாகிய இழிவு. மேல் விதிமுகத்தாற் கூறிய தனையான் முற்றுப்பெறுமை நோக்கி - முன் உடன்பாட்டு வழியாற் சொன்னமாத்திரத்தால் முடிவு பெறுமையைக்கருதி. இது - கல்லாமை.

சுஉக. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(இ - ள்.) அரங்கு இன்றி-அரங்கினை இழையாது, வட்டு ஆடி அற்று-வட்டாடினாற்போலும்:—நிரம்பிய நூல் இன்றி - தான் நிரம்புதற்கு ஏதுவா கிய நூல்களைக் கல்லாது, கோட்டி கொளல் - (ஒருவன்) அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல்; (எ - று.)

அரங்கு - வகுத்த தானம்; வட்டாடல்-உண்டையுருட்டல்: இவை "கட் டளை யன்ன வட்டரங்கிழைத்துக், கல்லாச் சிறுஅர் நெல்லிவட்டாடும்" என் பதனுன் அறிக. நிரம்புதல்-அறியவேண்டுவனவெல்லாம்அறிதல். 'கோட்டி' என்பது - ஈண்டு, ஆகுபெயர்; "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங் கோட்டி" என்புழிப்போல. சொல்லும் பொருளும் நெறிப்படா வென்பதாம்.

(கு - ரை.) அரங்கினை இழையாது - உருட்டப்படுங்காய் சென்று நிற் றற்குஉரிய அறைகளை அமைக்காமல். அவையின்கண் - சபையிலே. ஒன் றனை - ஒருவிஷயத்தை. வகுத்ததானம் - உருட்டியகாய் சென்றுநிற்குமாறு குறிக்கப்பட்டஇடம். "கட்டளையன்ன" என்னும் மேற்கோள்-நற்றிணைநானூற் றில்(கூ) "ஈன்பருந் துயவும்வான்பொருநெடுஞ்சினைப், பொரியரைவேம்பின் புள்ளி நீழற், கட்டளையன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச்சிறுஅர் நெல்லி வட் டாடும், வில்லேருழவர் வெம்முனைச் சீறூர்ச், சுரன் முதல்வந்த வுரன் மாய்மாலை, புள்ளினெ னல்லலெ யானெயுள்ளிய, வினைமுடித்தன்ன வினி யோண், மனைமாண் சுடரொடு படர்பொழுதெனவே" என்பதி லுள்ளது; 'அரசனது கட்டளைபோலத் தவறுத உருட்டிய உண்டை போய்நிற்றற்கு உரிய இடத்தை அமைத்துப் படிப்பில்லாதசிறுபிள்ளைகள் நெல்லிக்காய்களைக் கொண்டு உண்டையுருட்டுதலாகிய விளையாட்டைச் செய்து வீண்காலங் கழிக்கும்' என்பது இம்மேற்கோளின்பொருள். இங்குக் கூறிய விளையாட்டு, கோலியாட்டம் போன்ற ஓர்விளையாட்டுஎன்க. கோட்டி - அங்குச்சொல்லப் படுஞ் சொல்லுக்கு, இடவாகுபெயர்; "புல்லா வெழுத்தின்" என்னும் மேற்கோள் - நாலடியாரில் 'மேன்மக்கள்' என்னும் அதிகாரத்தில் (கூ) உள் ளது: 'இலக்கணநூலோடு பொருந்தாததும் பொருட்சிறப்பில்லாமற்பாழ் பட்டதுமாகிய சபையிற் சொல்லும் ஒருவிஷயத்தை' என்று இம்மேற்கோ ளின் பொருள். ஈண்டு - இங்கு. என்புழி-என்றவிடத்து. சொல்லும் பொரு ளும் நெறிப்படா - படியாதவன்சொல்லும்வார்த்தையில் சொல்லும் சரியா

யிராது, பொருளும் சரியாயிராது என்க. அரங்கின்றி வட்டாடுதல்போல, நிரம்பியநூலின்றிக் கோட்டிகொளல் தகாதுதென்பது கருத்து. வட்டாடுதற்கு அரங்கு இன்றியமையாதவாறுபோல, சபையில் ஒன்றைச் சொல்லுதற்கு நூலறிவு இன்றியமையாத தென்க: தொழிலுவமையணி. அரங்கு - ரங்கம், கோட்டி - கோஷ்டீ; இவை-வடமொழித்திரிபுகள். ஆடினால் என்னும் எதிர்காலவினையெச்சம், ஆடிஎன இறந்தகாலவினையெச்சமாத் திரிந்து நின்றது; "சொல்திரியினும் பொருள்திரியா வினைக்குறை" என்றவிதியால். இனி, ஆடியதற்று என்பது, ஆடியற்றுஎனத் தொகுத்தல்விகாரப்பட்ட தென்றுங் கொள்ளலாம். அற்று - அன்என்னும் உவமவுருபிடைச் சொல்லடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று, எ - ஈற்றசை. நிரம்பிய நூல் - பெயரெச்சம், காரியப்பொருளது; "நோய்தீர்ந்தமருந்து" என்பதிற் போல. நூல் - உவமவாகுபெயர். நூலின்றி - நூலறிவில்லாமல் என்றபடி. இன்றி - எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம்; இன்மை - இல்லாமையெனக் கொண்டால், செயப்படுபொருள் குன்றியவினையும்; உடைத்தாகாமை யெனக்கொண்டால் செயப்படுபொருள் குன்றுதவினையும் ஆகுதலால், அரங்கின்றி, நூலின்றி என்பவற்றிற்கு - அரங்கினையிழையாது, நூல்களைக்கல்லாது எனச் செயப்படுபொருள் உள்ளவினையாக உரைக்கப்பட்டது. கோட்டியென்பது - ஆகுபெயராய்ச் சொல்லே யுணர்த்தினதனால், அதற்கு ஏற்ப, கொளல் என்பது - இலக்கணையாய்ச் சொல்லுதலாயிற்று. இங்ஙனஞ்செய்தல், சிறுவர்க்குரிய பேதைமையாகுமென்க. "கல்லாதுணீண்ட வொருவ னுலகத்து, நல்லறிவாளரிடைப்புக்கு—மெல்ல, இருப்பினு நாயிருந்தற்றே யிராஅ, துரைப்பினு நாய் குரைத்தற்று" என்பது நாலடியார். வட்டு-உருட்டும் உண்டையாதலால், "வட்டுஞ் சூதும் வம்பக்கோட்டியும்" என மணிமேகலையிலுங் காண்க. "தவலில்தண் கழகத்துத் தவிராது வட்டிப்ப" என்ற கலித்தொகையடியில் 'வட்டிப்ப' என்றதற்கு - உருட்டஎன்பது உரையாதலாலும் காண்க. கோட்டிகொளல் - சபையில் ஒன்றைச்சொல்லுதலாதலால் மேல் 'அவையஞ்சாமை' என்னும் அதிகாரத்தில் "தங்கணத்த நல்லார்முற் கோட்டி கொளல்" என்னுமிடத்தும் காணலாம். இத்திருக்குறளை விகற்பக்குறள்வெண்பாவுக்கு உதாரணங்காட்டினர் வீரசோழியவுரைகாரர்.

சஉ. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(இ - ள்.) கல்லாதான்-கல்வியில்லாதான் ஒருவன், சொல்-(அவையின் கண்ஒன்று) சொல்லுதலால், காமுறுதல் - அவாவுதல்,—முலை இரண்டுஉம் இல்லாதாள்-(இயல்பாகவே) முலையிரண்டும் இல்லாத ஒருத்தி, பெண்-பெண்மையை, காமுற்று அற்று - அவாவினுற்போலும்; (எ - று.)

"இனைத்தென அறிந்த தில்லை" ஆகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதாள் என்பதாம். அவாவியவழிக் கடைபோகாது: போகினும் நகையவிளக்கும் என்பதாயிற்று.

(கு - ரை.) அவாவுதல்-விரும்புதல். பெண்மையை-பெண்தன்மையை. ''இனைத்தென வறிந்த வினைமுதற் கிளவிக்கு, வினைப்படு தொகுதியினும்மை வேண்டும்'' என்ற தொல்காப்பியச்சூத்திரத்தால், 'இத்தனையென்று அறியப்பட்ட வினைப்பொருளுக்கும், முதற்பொருளுக்கும், முடிக்குஞ்சொல்லோடு படுத்தொகுதியில் முற்றும்மைகொடுத்துச் சொல்லவேண்டும்' என்பது விதியாமாறு அறிக; இரண்டு - தொகை. ''கண்ணுத் தோலு மூலையும் பிறவும், பன்மை சுட்டிய வினை நிலைக்கிளவி, பன்மைகூறுங் கடப்பாடிலவே, தம்வினைக்கியலு மெழுத்தலங்கடையே'' என்ற தொல்காப்பியவிதியால், கண்முதலியவை பலவாயினும் பன்மையாற்கூறப்படவேண்டுமென்னும் நியதி யில்லை யென அறிக; இது - பால்பகா வஃறிணைப்பெயரில் அடங்கும். சிறிதுமில்லாமையென்ற கருத்து, முற்றும்மையாற் கொள்ளப்பட்டது. தனஞ்சிறிதுமில்லாதவள் பெண்தன்மையை விரும்பினுல் அவ்விருப்பங் கடைகூடாது; கடைகூடினுலும் அது பரிகாசத்தை யுண்டாக்கும்: அதுபோல, படிப்புச் சிறிதுமில்லாதவன் சபையிற்பேசுதலை விரும்பினுல், அவ்விருப்பம் முடிவுபெறாது; முடிந்தாலும் பரிகாசத்தை யுண்டாக்குமென்பதாம்: **தொழிலுவமையணி.** உவமை கூறியது, கல்வியின் இன்றியமையாச்சிறப்பை விளக்குதற்பொருட் டென்க. மூலையிரண்டுமில்லாதாள்-ஆணுறுப்புக்குறைவுபட்டுப் பெண்ணுறுப்புச் சிறிதுள்ள பேடி. அவளதுபெண்மை இகழப்படுவதாதலை ''வேயே திரள்மென்தோள்வில்லே கொடும்புருவம், வாயேவளர்பவளம் மாந்தளிரேமாமேனி, நேயேமூலைசுமப்ப தென்னூர்க்கு அருகிருந்தார், எயேயிவளொருத்தி பேடியோ வென்னூர் எரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ வென்னூர்'' என்ற சிந்தாமணிச்செய்யுளாலும் அறிக. இங்ஙனம் பேடியை கல்வியறிவில்லாத பேதையனுக்கு உவமை கூறியவதனுல், அவன் பிறப்பில் ஆடவனுக இருப்பினும் குணஞ் செயல்களால் ஆடவனுக மதிக்கத்தக்கவனல்லன்: பெண்ணினுங் கடைப்பட்டவனுகக் கருதத்தக்கவன் என்ற கருத்துப் போதரும். இனி, மூலையிரண்டுமில்லாதாள்-தனம் உண்டாகப்பெறுத பேதைப்பருவத்தாளென்று கொள்வாரும் உளர். சொல் - சொல்லுதல்: முதனிலைத்தொழிற்பெயர். காமுறுதல்-காமமுறுதல் என்பதன் விகாரம்; காமம் - ஆசையை, உறுதல் - அடைதலென்க. பெண் - பெண்தன்மைக்கு முதலாகுபெயர். காமுற்றற்று என்பதற்கு, கீழ் ஆடியற்று என்பதற்கு எழுதிய இலக்கணமே கொள்க. பெள் என்னும்பகுதி-ஈறுதிரிந்து பெண் என்று ஆகி விரும்பப்படுந் தன்மையையுடைய மகளுக்குக் காரணப்பெயரா மென்றும், இங்ஙனமே ஆண் என்பதும் ஆள் என்னும் பகுதி ஈறுதிரிந்த காரணக்குறி யென்றும் கூறுவர். ''கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப்பாவித்துத் - தானுந்தன், பொல்லாச்சிறகை விரித்தாடினுற்போலுமே, கல்லாதான் கற்றகவி'' என்பர் ஔவையாரும். (உ)

சுஅசு. கல்லா தவரு நனிகல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ - ள்.) கல்லாதவர்உம் - கல்லாதாரும், நனி நல்லர் - மிகநல்லரா வர்:—(தாமே தம்மைஅறிந்து), கற்றார்முன் - கற்றாரவையின்கண், சொல் லாது இருக்க பெறின்-(ஒன்றையுஞ்) சொல்லாதிருத்தல்கூடுமாயின்; (எ-று.)

உம்மை - இழிவுசிறப்பும்மை. தம்மைத் தாம் அறியாமையின் அது கூடாது என்பார் 'பெறின்' என்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத் தாமையானும், பின் கல்வியை விரும்புவ ராகலானும் 'நனிநல்லர்' என்றுங் கூறினார்.

இவை மூன்றுபாட்டானும், கல்லாதார் அவைக்கண் சொல்லுதற்கு உரியரன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) தம்மை - தமது திறமையின்மையை. தம்மைத் தாம் அறி யாமையின் அது கூடாது-(படியாதவர்)தமதுநிலைமையைத் தாம் அறியாமை யால் படித்தவர்சபையில் யாதொன்றையுஞ்சொல்லாதிருத்தல் அரிது. பெறின் என்பது - பெறுதலின் அருமை தோன்ற நின்றது. கூடின் - அப் படி சொல்லாதிருந்தால். ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும் - அங்குத் தமது அறியாமையை வெளிப்படுத்தாததனாலும். "கற்பனவூழற் றார் கல்விக்கழகத்தாங், கொற்கமின்றூத்தைவா யங்காத்தல் - மற்றுத்தம், வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை, புல்லுரு வஞ்சுவபோல்", "வாக்குநயத்தானறிக கற்றவரை மற்றவரை, யாக்கைநயத்தாலறியலா காதே - காக்கையொடு, நீலச்சிறுகுயிலை நீடிசையாலன்றியே, கோலத்தறி வாரோ கூறு" என்றபடி, படியாதவன் சபையிற் பேசாமல் வாய்மூடியிருந் தால் இவனது உடம்பினமைதி உடையழகு என இவற்றைமாத்திரங் கண் டவர் இவனைக் கற்றவனாகவே கருதி இவனது அறிவின்மையை அறியாமல் இவனை நன்கு மதிக்கக்கூடும்: மௌனமாகஇராமல் ஏதாவதொன்றை உளறு வானானால் இவனது மடமையை எல்லோரும் விளங்க அறிந்து அவமதிப் பர்; இங்ஙனம் படித்தவர்க்கும் படியாதவர்க்கும் பேதம் வாயினின்று சொல் வெளிப்பட்டால்மாத்திரமே விளங்கும் ஆதலால், 'கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும்' எனப்பட்டது. 'பின் கல்வியை விரும்புவராக லானும்' என்றது - அறியாதவர் தாம் சபையில் ஒன்றை முதலில் எடுத்துச் சொல்லி அதை ஆபாசப்படுத்தாமல் அடங்கியிருந்து அங்குப் பிறர் சொல்லுந் தக்கவிஷயங்களைக் கேட்டு நெஞ்சில் ஊன்றவைப்ப ராயின், பின்பு தாமும் அவர்போலவே ஆகவேண்டுமென்று படிப்பை விரும்பக்கூடும் என்பதுபற்றி. நனி - மிகுதிப்பொருளுணர்த்தும் உரிச்சொல்; இங்கே நல்லர் என்னும் வினையை விசேடித்தது. நல்லர் - பண்படியாப் பிறந்த குறிப்புமுற்று. சொல்லாதிருக்க-ஒருசொல் தன்மைப்பட்டது. இருக்க என்பதைத் தொழிற் பெயராக்கி, அதனைப் பெறின் என்பதற்கு எழுவாயாக் கொண்டார். (௩)

சஎச. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ - ள்.) கல்லாதான்-கல்லாதவனது, ஒட்பம்-ஒண்மை, (ஒரோவழி), கழிய - மிக, நன்று ஆயின்உம் - நன்முயிருப்பினும், அறிவு உடையார்—, கொள்ளார் - (அதனை ஒண்மையாகக்) கொள்ளார்; (எ - று.)

ஒண்மை-அறிவுடைமை. அது நன்றுகாது; ஆயிற்றாயினும், *ஏரலெழுத்துப்போல்வதோர் விழுக்காடு: ஆகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியா ரென்பதாம்.

(கு - ரை.) ஒரோவழி-ஒரோவிடத்து; இது-அருமைவிளக்கும். அதனை-அக்கல்லாதவனறிவுடைமையை. கொள்ளார்-ஏற்றுக்கொள்ளார். ஏரலெழுத்து-நந்துவயலில் ஊர்ந்துசெல்லும்போது சிலவேளையில் கீற்றில் அ ஆ என் றாற்போலத் தோன்றும் வடிவெழுத்து:(ஏரல்-நத்தை.)"நந்து நாகுநீர் வண்டு சென் னடைவழியெழுத்தாய், வந்துவீழினும் வீழும்"என்றது இங்குக் காணத்தக்கது.ஏரலெழுத்து வடமொழியில் குணகூரமெனப்படும்.விழுக்காடு-வகையுடையது. மதியார் - கௌரவிக்கமாட்டார். ஒட்பம் - பண்புப்பெயர். கழிய-கழிவென்னும் உரிச்சொல்லடியாப்பிறந்த குறிப்புவினையெச்சம்; அவ்வுரிச்சொல் - மிகுதிப்பொருளுணர்த்துதலே "கூர்ப்புங்கழிவும் உள்ளதுசிறக்கும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. ஆயினும் என்ற உம்மை - ஆகாமை குறித்தலால், எதிர்மறைப்பொருளதாம்; உயர்வுசிறப்பெனினும் அமையும். உடையார் - பலர்பாற்குறிப்புவினையாலணையும் பெயர். நன்று - ஒன்றன் பாற்குறிப்புமுற்று. ஒண்மை - அறிவாதலே, மேல் 'புல்லறிவாண்மை' என்னும் அதிகாரத்தில் "ஒண்மையுடையம்யாமென்னுஞ்செருக்கு" என்பதிலுங் காண்க. (ச)

சஅடு. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ - ள்.) கல்லா ஒருவன் - (நூல்களைக்) கல்லாத ஒருவன், தகைமை-(யான் அறிவுடையேன் எனத் தன்னை மதிக்கும்) மதிப்பு, (அவற்றைக் கற்றவன்), தலைப்பெய்து - கண்டு, சொல் ஆட-உரையாட, சோர்வுபடும்-கெடும்.

'கற்றவன்' என்பது, வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுத்தூண்டுமே நிற்பது: சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்து விடுமென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், கல்லாதாரது இயற்கையறிவின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) அவற்றை - நூல்களை. கண்டுரையாட-சந்தித்துவார்த்தை சொல்ல. கற்றவன்என்றசொல், தருதிபற்றி வருவிக்கப்பட்டதென்க. சொல்லியவழி - சொன்னபோது. வழுப்படுதலின் - தவறு வருதலால். படியாதவன் தான் அறிவுடையவனென்று தன்னைத் தானே மதிக்கும் மதிப்பு, தன்னைவந்துகண்ட அறிவுடையவனெருவனுடே தான் எதாவது ஒருவார்த்தை

* நீர்மேலெழுத்து என்ற பாடம் சிறவாது.

சொல்லும் வரையிலுமே நிற்கும்; சொன்னுல் தனது அறியாமை வெளிப் பட்டு அம்மதிப்புத் தவறிவிடு மென்பதுகருத்து. ''எழுத்தறியார்கல்விப்பெரு க்கமனேத்தும், எழுத்தறிவார்க்காணி னிலேயாம் - எழுத்தறிவார், ஆயுங் கடவுளவிர்சடைமுன்கண்டளவில், வீயுஞ்சுரகீர்மிகை'' எனப் பின்னூலார் கூறியதுங் காண்க. கற்றவன் சொல்லுஞ் சொல்லுக்குக் கல்லாதவன் ஏற்ற உத்தரஞ்சொல்ல அறியாது விழிப்ப னென்க. ஆடஎன்னுஞ்செயவெனச் சம் - காரணப்பொருளதாதலின், இறந்தகாலம். சோர்வுபடும் - தானேதளர் தலே யடையும். (ங)

சoசு. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனேயர் கல்லா தவர்.

(இ - ள்.) கல்லாதவர்—,—(காணப்படுதலான்), உளர் என்னும் மாத் திரையர் அல்லால் - (இலரல்லர்) உளர் என்று (சிலர்) சொல்லுமளவின ராதலன்றி, (தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால்), பயவா களர் அனேயர்- விளேயாத களர்நிலத்தோடு ஒப்பர்; (எ - று.)

களர் தானும் பேணற்பாடு அழிந்து உயிர்கட்கும் உணவுமுதலிய உதவா ததுபோல, தாமும் நன்குமதிக்கற்பாடுஅழிந்து பிறர்க்கும் அறிவுமுதலிய உதவா ரென்பதாம்.

இதனுன், கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

(கு - ரை.) காணப்படுதலான்-(உலகத்தில் வடிவத்தோடு) பார்க்கப்படு தலால்; இதுவே, இலரல்லரென்பதற்கும் உளரென்பதற்குங் காரணம். இல ரல்லர் - இல்லாதவரல்லர். உளர் - உள்ளார். அவரதுவாழ்க்கையைப் பலர் ஒருவாழ்க்கையாகக் கருதா ராதலால், 'சிலர்' என ஏற்றசொல் வருவிக்கப் பட்டது. களர்நிலம் - விளேவுக்குஏலாதநிலம்; விதைத்தவிதையை முளேக்க வொட்டாமற்செய்யும்நிலம்: சவட்டுநிலம்; ஊகரபூமி. பேணற்பாடழிந்து - உழுதல்முதலிய தொழில்களால் விரும்பிச் சிறப்பிக்கப்படுதலில்லாமல். தாமும் - கல்லாதவரும். நன்குமதிக்கற்பாடு - கௌரவம். மாத்திரை-மாத்ரா என்னும்வடமொழியின்திரிபு. அல்லால் - எதிர்மறைக் குறிப்புவினேயெச்சம். பயனுவமையணி. கல்லாதவர்பிறப்பு எவ்வித்தத்திலும்பயனற்ற தென்பதாம்; ''பிறந்தும் பிறவாதாரில்'' என்பதுபோலக் கொள்க. (சு)

சoஎ. நுண்மா ணுழைபுல மில்லா னெறினல
மண்மாண் புனேபாவை யற்று.

(இ - ள்.) நுண் - நுண்ணிதாய், மாண்-மாட்சிமைப்பட்டு, நுழை-(பல நூல்களினுஞ்) சென்ற, புலம்-அறிவு, இல்லான்-இல்லாதவனுடைய, எழில் நலம்-எழிச்சியும் அழகும்,—மண் மாண் புனே பாவைஅற்று-சுதையால் மாட் சிமைப்படப் புனேந்த பாவையுடைய எழுச்சியும் அழகும் போலும்; (எ - று.)

அறிவிற்கு மாட்சிமையாவது-பொருள்களேக் கடிதிற்காண்டலும், மற வாமையும் முதலாயின. பாவை - ஆகுபெயர். ''உருவின்மிக்கதோருடம்பது

பெறுதலுமரிது'' ஆகலான், எழில்நலங்களும் ஓர்பயனே யெனினும், நூல நிவு இல்வழிச் சிறப்பில என்பதாம்.

இதனுன், அவர்வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது.

(கு - ரை.) நுண்ணிதாய் - சூட்சுமமானதாய். மாட்சிமைப்பட்டு - சிறப்புப்பெற்று; பக்குவமாய் என்றபடி. எழுச்சி - உடம்பின்வளர்ச்சி. சுதையால்- சுண்ணச்சாந்தினுல். மண் - சுதையாகுதலே ''மண்ணீட் டாளரும்'' என்ற சிலப்பதிகாரத்தாலும், மேல் ''மண்ணே டியைந்த மரத்தனேயர்'' என்ற குறளினுலுங் காண்க. ''நெடுநிலே மண்ணீடு நின்றகாயிலும்'', ''பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து'' என்ற மணிமேகலையடிகளிலும் மண் என்பது சுதையென்னும் பொருளதாம். புனைந்த - அலங்கரித்துச் செய்யப்பட்ட. பாவையுடைய - சித்திரப்பிரதிமையினுடைய. பொருள்களைக் கடிதின்காண்டல் - விஷயங்களே விரைவாக அறிதல். மறவாமை என்பதற்கும், பொருள்களே யென்பதே செயப்படுபொருள். 'முதலாயின' என்றதனுல், பிறர்க்குக்கற்பித்தல் பயன்தரும்நூல்களியற்றல் முதலியன கொள்க. பாவை என்பது - அதன்எழுச்சியழகுகளுக்கு முதலாகுபெயர். ''உருவின் மிக்கதோருடம்பது பெறுதலுமரிது'' என்ற மேற்கோள், சீவகசிந்தாமணி - மூத்தியிலம்பகம் - (பெறுதற்கருமை), (கதிசை) ''கருவிமாமழை கனைபெயல் பொழிந்தெனவழிநாள், அருவிபோற்றெரூடர்ந் தருகனைவரும்பிணியழலுட், கருவியிற்காய்த்திய கட்டளைப்படிமையிற் பிழையாது, உருவின் மிக்கதோருடம்பது பெறுதலு மரிதே'' என்ற செய்யுளில் உள்ளது; நல்வினைப்பயனுல் உறுப்புக்குறையின்றி அழகினுல்மிக்கதோருடம்பைப் பெறுதலும் அருமையானது என்பது, இம்மேற்கோளின் பொருள். எழில் நலங்களும் - எழுச்சியும் அழகும். இல்வழி - இல்லாதபொழுது. சிறப்பில - அவ்வெழில்நலங்கள் சிறப்புடையனவாகா. அவர் - கல்லாதவரது. ''குஞ்சியழகுங் கொடுந்தானைக்கோட்டழகும், மஞ்சளழகு மழகல்ல - நெஞ்சத்து, நல்லம்யாமென்னும் நடுவுநிலைமையாற், கல்வியழகேயழகு'', ''மயிர்வனப்புங் கண்கவரு மார்பின்வனப்பும், உயிர்வனப்புங் காதின்வனப்பும் - செயிர்தீர்ந்த, பல்லின்வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த, சொல்லின் வனப்பே வனப்பு'' என்பவற்றை இங்கே அறிக. நுண்புலம், மாண்புலம், மாண்பாவை - பண்புத்தொகைகள். நுழைபுலம், புனைபாவை - வினைத்தொகைகள். இல்லாளெழிலனம் - ஆறும்வேற்றுமைத்தொகை. எழில் நலம் - உம்மைத்தொகை. மண்புனை - மூன்றும்வேற்றுமைத்தொகை. பாவையற்று - இரண்டாம்வேற்றுமைத்தொகை. 'எழிலாவது - வளர்ந்தமைந்த பருவத்தும் இதுவளர்ந்துமாறியதன்றி இன்னும் வளரு மென்பது போன்று காட்டுதல்' என்றூர், பொருளதிகாரவுரையில். எழில் - தொழிற்பெயர். ''கவையாகிக்கொம்பாகிக் காட்டகத்தேநிற்கும், அவையல்ல நல்லமரங்கள் - சவைநடுவே, நீட்டோலைசியாகின்றூன் குறிப்பறிய, மாட்டாதவ னன் மரம்'' என்பது, மூதுரை. 'மண்மாண்புனை' என்றதில், மாண் என்றது -

மாட்சிமைப்படவென்று பொருள்பட்டு, பகுதி வினையெச்சமானது' என்பர், இலக்கணக்கொத்துடையார். (எ)

சுo௨. கல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ - ள்.) கல்லார்கண் - கற்றூர்மாட்டு, பட்ட - நின்ற, வறுமையின் - வறுமையினும், இன்னாது —: கல்லார்கண் - கல்லாதார்மாட்டு, பட்ட நின்ற, திரு - செல்வம்; (எ - று.)

இழிவுசிறப்புஉம்மை, விகாரத்தால் தொக்கது. தத்தம்நிலையினன்றி மாறிநிற்றலான் தாம் இடுக்கட்படுதலும், உலகிற்குத்துன்பஞ்செய்தலும் இரண்டற்கும் ஒக்கு மாயினும், திருக் கல்லாரைக் கெடுக்க, வறுமை கல்லாரைக் கெடாதுநிற்றலான், 'வறுமையினுந் திரு இன்னாது' என்றூர்.

இதனுன், அவர்திருவின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) கற்றூர்மாட்டு - படித்தவரிடத்தில். வறுமையின் - தரித்திரத்தன்மையினும். வறுமையாவது - அனுபவிக்கப்படும் பொருள் ஒன்றுமில்லாமை. இன்னாது - துன்பந்தருவது. இழிவுசிறப்பும்மை தொகுத்தல் விகாரப்பட்டது, வறுமையின் என்பதன் இறுதியில்; அது, செல்வமின்மையின் இழிவை விளக்கும். தத்தம்நிலையினன்றி மாறிநிற்றலான் - செல்வம் தனக்கு உரிய கற்றவரை விட்டு உரியரல்லாத கல்லாதவரிடத்திலும், வறுமை தனக்குஉரிய கல்லாதவரைவிட்டு உரியரல்லாத கற்றவரிடத்திலும் ஆக மாறிநிற்பதனால். தாம் இடுக்கட்படுதல் - செல்வமும் வறுமையும் துன்பப்படுதல். செல்வம் கல்லாதாரிடத்திலிடுக்கட்படுதல் - பிறர்க்கு உபகாரஞ் செய்தற்கு உரித்தாகாது போதல். வறுமை கற்றூரிடத்து இடுக்கட் படுதல் - கற்றூர் வருந்திச்செய்கின்ற பிறர்க்குஉதவி முதலியவற்றுல் வருத்தமுறுதலென்பர். இரண்டற்கும் - செல்வத்திற்கும், வறுமைக்கும். கல்லாதாரது செல்வம் உலகிற்குத் தீங்குசெய்தல் வெளிப்படை. கற்றூரது வறுமை உலகிற்குத் தீங்கு செய்தலாவது - ஐயோ! இக்கற்றவர் பிறர்க்குதவி முதலியவற்றைத் தம்விருப்பின்படி செய்யவொட்டாது வறுமை இவரை வாட்டுகின்றதே என்று உலகோரை மனவருத்தங் கொள்ளுமாறு செய்தல். அவர்- கல்லாதவரது. கல்லார் - குறிப்புவினையாலணையும் பெயர். இன்னாதே, ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம். செல்வத்தை ஈட்டலுங் காத்தலும் பயன்கொள்ளுதலும் அறிவுடையார்க்கே இயல்வனவாதலால் கற்றவரே செல்வத்திற்கு உரியவரும், ஈட்டுதல்முதலியன அறிவிலார்க்கு இயலாவாதலரல் அவரே வறுமைக்கு உரியவரும் ஆவ ரென்க. அங்ஙனமன்றிக் கற்றூர் வறியராயினும் ஒழுக்கம் முதலிய எவ்வகையிலுங் கெடார்; கல்லாதவரோ செல்வமுண்டையராயின் செருக்கு முதலியவற்றுற் பலவகையிலுங் கெடுவரென்பதாம். இத்திருக்குறளை "வள்ளன்மையில்லாதான் செல்வத்தின் மற்றை யோன், நல்குரவே போலு நனிநல்ல" என்பதனோடு ஒப்பிடுக. "பல்லான்ற

கேள்விப்பயனுணர்வார் பாடழிந்து, அல்லலுழப்பதறிதிரேல் - தொல்சிறப்பின், நாவின்கிழத்தி யுறைதலாற் சேராளே, பூவின்கிழத்தி புலத்து'' என்னும் நாலடியார்ச்செய்யுளோடு இதற்கு உள்ள ஒற்றுமைவேற்றுமை நயங்களை உய்த்துணர்க. (அ)

சுoகூ. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றோ ரனைத்திலர் பாடு.

(இ - ள்.) கல்லாதார்—, மேல் பிறந்தார் ஆயின்உம் - உயர்ந்தசாதிக்கட் பிறந்தாராயினும், கீழ் பிறந்துஉம் - தாழ்ந்த சாதிக்கட் பிறந்துவைத்தும், கற்றோர் - கற்றோரது, அனைத்து பாடு இலர் - பெருமையளவிற்றாய பெருமையிலர்; (எ - று.)

உடலோடுஒழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடுசெல்லுங் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்து என்பதாம்.

இதனுன், அவர்சாதியுயர்ச்சியாற் பயனின்மை கூறப்பட்டது.

(கு - ரை.) பிறந்துவைத்தும்-பிறந்திருந்தாலும். பெருமையளவிற்றாய பெருமையிலர் - மகிமையவ்வளவு மகிமையுடையவரல்லர். சாதி - உடற்குணமும், கல்வி - உயிர்க்குணமுமாம். உடலின்கண் வினைவயத்தால் வருகின்ற சாதி அவ்வுடலொழிந்தபோது தான் ஒழிவதன்றி உயிரோடுசெல்லாதாதலால் 'உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும்' என்றார். கீழ்க்கல்வியென்னும் அதிகாரத்தில் ''ஒருமைக்கண்தான் கற்றகல்வி யொருவற்கு, எழுமையுமேமாப்புடைத்து'' என்ற குறளால், கல்வி உடலோடு ஒழியாமல் உயிரோடுசெல்வதாதலை யறிக. அவர் - கல்லாதவரது. மேல், கீழ் என்பன - மேன்மையையும் கீழ்மையையு முடைய சாதிகளைக் குறிப்பதனால், பண்பாகுபெயர். ஆயினும், உம்மை - உயர்வுசிறப்பு. பிறந்தும், உம்மை - இழிவுசிறப்பு. பிறந்தும் என்பது, கற்றோர் என்பதனைக் கொள்ளும். கல்வியில்லாத வெறுஞ்சாதியுயர்வு பயனற்ற தென்பதாம். ''கடைநிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத், தலைநிலத்துவைக்கப்படும்,'' ''தோணியியக்குவான்தொல்லைவருணத்துக், காணிற்கடைப்பட்டானென்றிகழார் - காணுங், அவன்றுணையா வாறுபோயற்றே நூல்கற்ற, மகன்றுணையா நல்லகொளல்'' என்னும் நாலடியாரையும், ''வேற்றுமைதெரிந்தநாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனு மவன்கட்படுமே'' என்ற புறநானூற்றையும், ''நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன், கற்றிலனாயிற் கீழிருப்பவனே,'' ''எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்'' என்னும் நறுந்தொகையையும், ''ஆக்குமறிவானலது பிறப்பினுல், மீக்கொளுயர் விழிவுவேண்டற்க'' என்னும் நன்னெறியையும் இங்கே அறிக. (கூ)

சுகo. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றோரோ டேனை யவர்.

(இ - ள்.) விலங்கொடு - விலங்கோடுநோக்க, மக்கள் அனையர் - மக்கள் எத்துணைநன்மையுடையர் அத்துணைத்தீமையுடையர்: இலங்கு நூல் கற்றோரோடு - விளங்கிய நூலைக் கற்றோரோடு(நோக்க), ஏனையவர் - கல்லாதவர்.

*விலங்கு, நூல்-சாதிப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றோர்கண்ணே யாதலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பின ரல்லரென்பதாம். மயக்கநிரனிறை.

இதனால், அவர் மக்கட்பிறப்பாற் பயனெய்தாமை கூறப்பட்டது.

(கு - ரை.) விலங்கோடு நோக்க - மிருகங்களோடு ஒப்பிட்டுப்பார்க்க. மக்கள் - மனிதர். சாதிப்பெயர் - சாதியைக்காட்டும்பெயர்: சாதியொருமைப் பெயரென்பாருமுளர். (சாதியொருமைபாவது - ஒருசொல் ஒருமையீறு தோன்றநின்றும் தோன்றாதுநின்றும் பின் ஒருமைவினையீறாக மேல்வந்து முடிக்குஞ்சொல்லைப்பெற்றும் பெறாதும் தானே பன்மைப்பொருளுணர்த்துவது; இதனை வடநூலார் ஜாத்யேகவசநம் என்பர்.) இங்கே விலங்கு, நூல் என்பன தாமே விலங்குச்சாதியையும் நூற்சாதியையும் உணர்த்துதல் காண்க. மேம்படுதல் - (நூல்களுட்) சிறத்தல். அவரும் - கற்றவரும். மிருகங்களுக்கும் மனிதர்க்கும் உணவு தூக்கம் பயம் ஆசை முதலியபல பொதுப்பட்ட குணங்களாக இருப்பினும், மிருகங்களினும் மனிதர் சிறந்தவ ரென்றற்கு ஏற்ற விவேகமுதிர்ச்சி கல்விகற்றவர்க்கே உளதாவது என்க. ஒத்தபிறப்பின ரல்லர்-சமமானபிறப்புடையவராகார். படியாத மனிதர் மிருகத்தன்மையராய்நிற்க, படித்தவர் மனிதருட்சிறந்து விளங்குவ ரென்பதாம். மயக்கநிரனிறையெனினும் எதிர்நிரனிறையெனினும் ஒக்கும். இது - எட்டு வகைப்பொருள்கோள்களுள் நிரனிறைப்பொருள்கோளின்வகையிலொன்று; (மற்றொருவகை - முறைநிரனிறை யெனப்படும்.) முன்வைத்தசொற்களின் முறைமைக்கு மாறுபாடாக அதனோடுசம்பந்தப்பட்ட சொற்களைப் பின்னர் அடுக்கிவைப்பது, இதன்இலக்கணமாம்; "களிறுங் கந்தும்போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்" என்பது - இதற்கு உதாரணம்: [நன்-பொது - சூஉ.] இக்குறளில் உபமானத்தில் விலங்கு மக்கள் என்ற முறைமைக்குஏற்ப, உபமேயத்தில் கல்லார் கற்றோர் என நிறுத்தாது மாறுபடநிறுத்தியமை காண்க. அவர்-கல்லாதவர். மக்கட்பிறப்பால் - மனிதசன்மத்தால். பயனெய்தாமை - பிரயோசனமடையாமை. விலங்கு - குறுக்காக நிற்பதெனக் காரணப்பெயர்; இது - திர்யக் என்னும் வடமொழிப்பெயரின் கருத்துக்கொண்டது. இலங்குநூல் - 'விளங்கவைத்தல்' முதலிய அழகுடையநூ லென்றுமாம். ஏனையவர் - வேறுஎன்னும் பொருள்தரும் ஏனையென்னும் இடைச்சொல்லடியாப் பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். மிருகங்களினும் மனிதர் சிறப்படைதல்போல, கல்லாதமனிதரினுங் கற்றமனிதர் சிறப்ப

---

* இலங்குநூல் என்பது - சாதியொருமைப்பெயர் என்ற பாடம் சிறவாது.

டைவ ரென்பது கருத்து. 'விலங்கொடுமக்களனேயர்' என்பதை 'ஒப்பலொப்பு' என்பர், இலக்கணக்கொத்துடையாரும், பிரயோகவிவேகத்தாரும். (கo)

சூஉ - ஆம் அதிகாரம்.—கேள்வி.

அஃதாவது - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். கற்றவழி அதனின்ஆய அறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும், இது - கல்வி கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) கேட்கப்படும் - கேட்கத்தக்க. நூற்பொருள்களை - சாஸ்திரங்களின் சாரமான விஷயங்களை. கற்றறிந்தார்கூற-படித்தறிந்தவர்சொல்ல. கற்றவர்க்குக் கேள்வி அக்கல்வியாலாகிய அறிவை அபிவிருத்திசெய்யும், கல்லாதவர்க்குக் கல்வியறிவைப் புதிதாகஉண்டாக்கும் என்க. கேள்வி-தொழிற்பெயர். வலியுறுத்தல்-உறுதிப்படுத்தல். "கற்றானுங் கற்றார்வாய்க்கேட்டானு மில்லாதார், தெற்றவுணரார்பொருள்களை" என்ற பழமொழியினாலும் கல்விக்குங் கேள்விக்கு முள்ள சம்பந்தத்தை அறிக.

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ - ள்.) செல்வத்துள் செல்வம் - (ஒருவற்குச்) சிறப்புடைய செல்வமாவது, செவி செல்வம் - செவியான்வருஞ் செல்வம்: அச் செல்வம்—, செல்வத்துள் எல்லாம் - பிறசெல்வங்களெல்லாவற்றினும், தலை—: (ஆகலான்); (எ - று.)

செவியான்வருஞ்செல்வம் - கேள்வியான் எல்லாப்பொருளையும் அறிதல். பிறசெல்வங்கள் - பொருளான் வருவன. அவை நிலையாமையாலானும், துன்பவிளைவினவாகலானும், இது-தலையாயிற்று. 'அவற்றைஒழித்துஇதனையே செய்க' என்பது - குறிப்பெச்சம்.

(கு - ரை.) செல்வத்துள் செல்வம் - மற்றைச்செல்வங்களெல்லாம் வறுமையாமாறு வருஞ் செல்வம்: செல்வங்களெல்லாவற்றினுஞ் சிறந்த செல்வம். கீழ் 'அவாவறுத்தல்' என்னும் அதிகாரத்தில் "துன்பத்துள் துன்பம்" என்பதற்கு - 'ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந் துன்பம்' என்று உரைத்து மிக்கதுன்பமெனப் பொருள்கொண்டாற்போல, இங்கும் பொருள்கொள்க. தலை - மேலானது. பிறசெல்வங்கள்-உண்டி உடை பசு புலம் முதலாகப் பலபடியாக வுள்ள பொருட்செல்வங்கள். நிலையில்லாதனவும், துன்பத்தைவிளைப்பனவுமாகிய பொருட்செல்வங்களெல்லாவற்றினும், நிலைபேறுடையதும் இன்பம் விளைப்பதுமாகிய கேள்விச்செல்வம் சிறந்தது: ஆதலால் பொருட்செல்வங்களிற் பற்றைவிட்டு இக்கேள்விச் செல்வத்தையேவிரும்பிச் சம்பாதிக்கவேண்டுமென்க. குறிப்பெச்சம் - ஒருசொல்லின் குறிப்பால் வேறு சிலசொற்களை வருவித்துமுடிப்பது; இது - எஞ்சினின்றதனால், எச்சமெனப்பட்டது: எஞ்சுதல் - குறைந்துநிற்றல். தலை - தலைமையையுடைய

தென்றுவது, உத்தம அங்கமான தலைபோலப் பிரதானமானதென்றுவது பொருள்கொள்க. 'செல்வத்துளெல்லாந்தலை' - செல்வமெல்லாவற்றுள்ளுந் தலை என இதனை உருபுபிரித்துக்கூட்டலுக்கு உதாரணங்காட்டினர், பிரயோகவிவேக வுரையிலும், இலக்கணக்கொத்துரையிலும். (க)

சகஉ. செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ - ள்.) செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்குஉணவாகிய கேள்வி இல்லாதபொழுது, வயிற்றுக்குஉம் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்குஞ் சிறிதுஉணவு இடப்படும்; (எ - று.)

சுவைமிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வி உள்ளபொழுது வெறுக்கப்படுதலான் 'இல்லாதபோழ்து' என்றும், பெரிதாயவழித் தேடற்றன்மையன்றி நோயுங் காமமும் பெருகுதலான் 'சிறிது' என்றும், அதுதானும் பின் இருந்து கேட்டற்பொருட் டாகலான் 'ஈயப்படும்' என்றுங் கூறினர். ஈதல்-வயிற்றது இழிவு தோன்ற நின்றது.

இவையிரண்டுபாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - சை.) செவிக்குஉணவாகிய-காதினுல் உட்கொள்ளப்படுவதாகிய. சுவைமிகுதி - மிகுந்த ரசம். பிற்பயத்தல் - பின்பு பலபயன்களைத் தருதல். வெறுக்கப்படுதலால் - வாயுணவு வெறுக்கப்படுதலால். பெரிதாயவழி - அவ்வாயுணவு அதிகப்பட்டபொழுது. தேடற்றன்மையன்றி-அவ்வுணவுக்குரிய பொருள்களைச் சம்பாதிக்குந் தன்மைமாத்திரமே யல்லாமல். உணவுமிகுதியால் நோய்மிகுதலை, மேல் 'மருந்து'என்னும் அதிகாரத்தில் "தீயளவன்றித் தெரியான்பெரிதுண்ணின், நோயளவின்றிப்படும்" என்பதனுலும் அறிக. அதனுற் காமம்பெருகுதல், வெளிப்படை; "தூயிற்சுவையுந்தூநல்லார்தோட் சுவையுமெல்லாம், அயிற்சுவையினுகுவவென்றெண்ணி—அயிற்சுவையும், பித்துணுக்கொள்பபோற் கொள்ப பிறர்சிலர், மொத்துணுமொய்ம்பினவர்" என்ற நீதிநெறிவிளக்கத்தையுங் காண்க. அதுதானும் - அச்சிறிதுணவும். பின்இருந்துகேட்டற்பொருட்டு - இன்னுஞ் சிலகாலம் வாழ்ந்திருந்து நூற் பொருள்களைக் கேட்பதற்கு. துறவறத்திலுள்ளார் தவஞ்செய்தற்கு வேண்டிய இவ்வுடம்பு சிவித்திருத்தற்குப் போதுமானஅளவே உணவுகொள்ளுதல் மரபாதல்போல, மனிதர் நூற்பொருள்கேட்டற்பொருட்டுத் தாம் உயிர்வாழ்ந்திருத்தற்கு வேண்டுமளவே உணவுகொள்ளவேண்டும் என்க. "ஈயென்கிளவிஇழிந்தோன்கூற்றே" என்ற தொல்காப்பியத்தால் ஈ என்னும் வினைப்பகுதி இழிந்தோனேற்றற்குரிய சொல்லாத லறிக. 'ஈதல்-வயிற்றது இழிவுதோன்ற நின்றது' என்ற பரிமேலழகருரைநடையால், 'மூன்னிலேச்சொல்லாய் வருவழியல்லது பிறுண்டு இன்னசொல் இன்னுர்க்கு உரித்தென்னும் வரையறையில்லென்பது உணர்த்துதற்கு, ஈதா கொடு என முன்னிலைவாய்பாடுபற்றி யோதினுர்' என்ற சேனுவரையரது கொள்கை தகுதியன்றென அறியப்படும். உணவு - உண்ணப்படும் பொரு

ஞக்குத் தொழிலாகுபெயர். செவிக்கு உணவுஎன நாவின்புலத்தைச் செவி மேலேற்றிக் கூறினார்; கீழ் "செவிகைப்ப" என்றாற்போல. இது - "உண்டற்குரியவல்லாப்பொருளே, உண்டனபோலக்கூறலுமரபே" என்ற வழுவமைதியில் அடங்கும். போழ்து - பொழுது என்பதன் மரூஉ; போது என்றும் வரும். வயிற்றுக்கும், உம்மை-இழிவுசிறப்பும்மை; எச்சப்பொருளதென்றுங் கொள்ளலாம். வயிற்றது இழிவு - "ஒருநாளுணவை யொழியென்றாலொழியாய், இருநாளைக்கேலென்றாலேலாய் - ஒருநாளும், என்னைவறியாயிடும்பைகூரென்வயிறே, உன்னைவாழ்தலரிது" என்பதிலும் விளங்கும். கீழ்ப்பாட்டில், கேள்வி - அற இன்பங்களுக்குக் காரணமான செல்வத்தினுஞ் சிறந்த தென்று கூறி, இப்பாட்டில் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதஉணவினும் அது சிறந்த தென்றார்: ஒருவன் உணவைவிட்டாயினும் நூலைக்கேட்க என்றபடி. "பருகுவனன்னவார்வத்தனுகிச், செவிவாயாக நெஞ்சுகளனுக" உட்கொள்ளப்படுவதாதலின், கேள்வி செவிக்கு உணவெனப்பட்டது. (உ)

சகஈ. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

(இ - ள்.) செவி உணவின் - செவியுணவாகிய, கேள்வி - கேள்வியினை, உடையார்—, நிலத்து - நிலத்தின்கண்ணராயினும், அவி உணவின் - அவியுணவினையுடைய, ஆன்றாரோடு - தேவரோடு, ஒப்பர்—; (எ - று.)

செவியுணவு - செவியான்உண்ணும்உணவு. அல்வழிக்கண் வந்த இன்சாரியையது னகரம், வலிந்துகின்றது. அவியாகியஉணவு-தேவர்க்குவேள்வித்தீயிற் கொடுப்பன. அறிவால் நிறைந்தமையான் 'ஆன்றார்' என்றும், துன்பம்அறியாமையான் 'தேவரோடுஒப்பர்' என்றுங் கூறினார்.

இதனுன், அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நிலத்தின்கண்ணராயினும்-பூலோகத்திலுள்ளவராஞலும். அவியுணவினையுடைய - அவிசைஉண்ணுதலையுடைய. அவி - தீயிற்பெய்யும் நெய் பொரி சமித்து முதலியன: இது - ஹவிஸ் என்ற வடசொல்லின் திரிபு. அல்வழியில் வந்த இன்சாரியை யென்றது, உணவிற்கேள்வியென்ற இருபெயரொட்டுப்பண்புத்தொகையின் இடையி லுள்ளதை. வலிந்து - மெல்லெழுத்து வல்லெழுத்தாய்; இங்கே றகரமெய்யாய். "ணஃகான் றஃகான் நான்கனுருபிற்கு", "னகார லறநிவல்லெழுத்தியையின், றகாரமாகும் வேற்றுமைப்பொருட்கே"என்ற தொல்காப்பியச்சூத்திரங்களால் வேற்றுமைப்புணர்ச்சியிலே யன்றி, அல்வழிப்புணர்ச்சியில் இன்சாரியையின் னகரம் றகரமாதற்கு விதியின்மையால், 'உணவிற்கேள்வி' என்றவிடத்துத் திரிபு வலித்தல்என்னுஞ் செய்யுள்விகாரமாகக்கொள்ளப்பட்டது. வேள்வித்தீயில் - யாகத்துஓமஅக்கினியில். கொடுப்பன - கொடுக்கப்படும்நெய்ம்முதலியன. அதனை - கேள்வியை. நூற்பொருள்களைக் கேட்டவர் தேவலோகத்தின்பம் போன்ற இன்பத்தை இவ்வுலகிற்பெறுவ ரென்பதாம். "தவலருந்தொல்

கேள்வித்தன்மையுடையார், இகலிலரெஃகுடையார் தம்முட்குழீஇ, நக லினினிதாயிற்காண்பா மகல்வானத், தும்பருறைவார்பதி" என்னும் நாலடி யார்ப்பாட்டை இங்கே அறிக. (ரூ)

சகசு. கற்றில னுயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை.

(இ - ள்.) கற்றிலன் ஆயின்உம் - (உறுதிநூல்களைத் தான்) கற்றிலனு யினும், கேட்க - (அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக்) கேட்க: அஃது-அக்கேள்வி, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்கத்தின் - தளர்ச்சி வந்துழி, ஊற்று ஆம் துணை-பற்றுக்கோடாந் துணை, (ஆகலான்); (எ - று.)

உம்மை, கற்கவேண்டும் என்பது பட நின்றது. தளர்ச்சி - வறுமையா னுதல், அறிவின்மையானுதல் இடுக்கண்பட்டுழி மனந்தளர்தல். அதனைக் கேள்வியின் ஆய அறிவு நீக்கு மாகலின், 'ஊற்றுந்துணை' என்றார். 'ஊன்று' என்னும் ஆகுபெயரின் னகரம், திரிந்துநின்றது.

(கு - ரை.) உறுதிநூல்களை-அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புரு ஷார்த்தங்களைப்பற்றிக் கூறும் சாஸ்திரங்களை. கேட்க - கேட்கக்கடவன்; வியங்கோள்வினைமுற்று; வந்துழி - வந்தவிடத்து. பற்றுக்கோடாம் துணை - ஆதாரமாகுந் துணையாயிருப்பது. உம்மை - இழிவுசிறப்பு. வறுமையானு தல்-பொருளில்லாமையாலாவது. இடுக்கண்பட்டுழி-துன்பமடைந்தவிடத்து. கேள்வியின் ஆய - கேள்வியினலாகிய. ஊன்றுதலென்னும்பொருளைத்தரும் ஊன்றுவென்னும் முதனிலைத்தொழிற் பெயர், இங்கு ஆகுபெயராய், ஊன் றப்படுங்கோலை உணர்த்திற்று. இதன் னகரம் றகரமான து-மென்றொடர்வன் றொடரான புணர்ச்சிவிகாரமென்றுவது, மெலிவலியான செய்யுள்விகார மென்றுவது கொள்க. கற்றிலன் - ஆண்பால் எதிர்மறை இறந்தகாலமுற்று. அஃதொருவற்கு - இங்கே ஆய்தம் உயிர்போல் ஒலித்தது; மெய்போல் ஒலி யாமையை அலகிட்டுக் காண்க. ஒற்கம்-தொழிற்பெயர்; ஒல்கு - பகுதி. கற்றிலனுயினுங் கேட்க என்றதற்குக் காரணம், 'கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும்' என இவ்வதிகாரத்தின் அவதாரிகையில் விளக்கப் பட்டது. "முற்றப்பகலு முனியாதினிதோதிக், கற்றலிற் கேட்டலே நன்று" என்றார் பழமொழியிலும். (சு)

சகடு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ - ள்.) இழுக்கல் உடை உழி - வழுக்குதலையுடைய சேற்றுநிலத்து (இயங்குவார்க்கு), ஊற்றுக்கோல் அற்று - ஊன்றுகோல்போல் உதவும்: (காவற்சாகாடு உசைப்பார்க்கு): ஒழுக்கம் உடையார் வாய் சொல் - ஒழுக்க முடையார்வாயிற்சொற்கள்; (எ - று.)

அவாய்நிலையான்வந்த உவமையடையால், பொருளிடை வருவிக்கப் பட்டது. ஊற்றுகியகோல்போல் உதவுதல் - தளர்ந்துழி அதனை நீக்குதல்,

'கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர்வாய்ச் சொல் கேட்கப்படாது' என்பதுதோன்ற, 'ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்றார். 'வாய்' என்பது, தீச்சொல்அறியாமையாகிய சிறப்புஉணரநின்றது. 'அவற்றைக் கேட்க' என்பது - குறிப்பெச்சம்.

(கு - ரை.) வழுக்குதல் - சறுக்குதல். சேற்றுநிலம் - சேறுபட்ட தரை. இயங்குவார்க்கு - நடப்பவர்க்கு. காவற் சாகாடு உகைப்பார்க்கு - இராச்சியத்தைக்காத்தற்றொழிலாகிய வண்டியைச் செலுத்துபவர்களுக்கு; அரசர்க்கு. காவற்சாகாடு கைப்பார்க்கு என்றும் பிரிக்கலாம்: பொருள் இதுவே. சாகாடு-சகடம், பண்டி. உகைத்தல், கைத்தல் - செலுத்தல். ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் - நல்லொழுக்கத்தை யுடையவர்களது வாயிலிருந்து வருஞ் சொற்கள். அவாய்நிலை - ஒருசொல் மற்றொருசொல்லை வேண்டிநிற்றல்; அவாய் - அவாவி. அவாய்நிலையால் வருவித்துமுடிப்பதனை, வடநூலார் அத்யாஹார மென்பர். 'இழுக்கலுடையுழியூற்றுக்கோல்' என்ற உபமானத்தினிடையில் அவசியமாக வேண்டியதாதலால் வருவிக்கப்பட்ட 'இயங்குவார்க்கு' என்ற அடைமொழிக்கு ஏற்க, 'ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்' என்ற உபமேயத்திற்கும் 'காவற்சாகாடு உகைப்பார்க்கு' என்ற அடைமொழி வருவிக்கப்பட்டது; இவ்வதிகாரம் அரசியலாதலால்,இதுவே வருவிக்கவேண்டியதாயிற்று. உவமை உபமாநம் என்பனவும், அடைமொழி விசேஷணம் என்பனவும், பொருள் உபமேயம் என்பனவும்-ஒருபொருளன. அடை-முன்னே அடுத்துவருஞ் சொல். ஊற்றாகிய கோல்-ஊன்றப்படுவதாகிய கோல். தளர்ந்துழி - (வறுமையினாலாவது) அறிவில்லாமையினாலாவது துன்பம்நேர (அதனால்) மனம்தளர்ந்தபோது. அதனை - அத்தளர்ச்சியை. கல்விக்குப்பயன் நல்லொழுக்கமாதலை "கற்ககசடறக்கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்ற குறளாலும், கல்வியுடையோரும் ஒழுக்கமிலராயின் அறிவிலராதலை "உலகத்தோடொட்ட வொழுகல்பலகற்றுங்,கல்லாரறிவிலாதார்" என்ற குறளாலும் அறிக. ஒழுக்கமுடையார் வாய்ச்சொற்கள் யாவையும் நல்லவையாதலை "ஒழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய, வழுக்கியும்வாயாற்சொலல்" என்ற குறளால் அறிக. கீழ் 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் "ஒழுக்கமுடையவர்க்கு" என்ற குறளினுரையில், 'சொலல்-சாதியொருமை; சொலல் எனவே அமைந்திருக்க, வாயால் என வேண்டாதுகூறினார், நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டிய தன்சிறப்புமுடித்தற்கு: இதனைவடநூலார் தாற்பரியமென்ப' எனக்கூறியதை இங்கே அறிக. அவற்றைக்கேட்க - ஒழுக்கமுடையார் வாய்ச்சொற்களை விடாமற்கேட்கவேண்டும். இழுக்கல் - தொழிற்பெயர். உழி - இடத்து. ஊற்றுக்கோல்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை; சொல் சாதியொருமையாதலின், அற்று என்னும் ஒன்றன்பால் முற்றைக் கொண்டது. ஏ-ஈற்றசை, தேற்றமுமாம். பயனுவமையணி. காவற் சாகாடுகைப்பார்—"கால்பார் கோத்து ஞாலத்தியக்கும, காவற்சாகாடுகைப்போன் மாணின், ஊறின்றாகியாறினிதுபடுமே, உய்த்தல்தேற்றானாயின் வைகலும்,

பகைக்கூழள்ளற்பட்டு, மிகப்பஃறீநோய் தலைத்தலைத்தருமே'' என்பது புற நானூறு. (ஙூ)

சகசூ. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ - ள்.) (ஒருவன்), எனைத்து ஆன்உம் - சிறிதாயினும், நல்லவை கேட்க-உறுதிப்பொருள்களைக் கேட்க; (அக்கேள்வி), அனைத்து ஆன்உம்-அத்தனையாயினும், ஆன்ற பெருமை தரும் - நிறைந்தபெருமையைத் தரும், (ஆகலான்); (எ - று.)

'எனைத்து,' 'அனைத்து' என்பன-கேட்கும்பொருள்மேலும், காலத்தின் மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்துஈண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிது என்று இகழற்க என்பதாம்.

(கு - ரை.) அத்தனையாயினும் - அவ்வளவாகுலும். எவ்வளவுசிறிது பொருள் எவ்வளவு சிறிதுபொழுதிற் கேட்கப்பட்டாலும் அவ்வளவுக்கும் ஏற்ற பயனுண்டு என்க. மழைத்துளிபோல வந்து ஈண்டி - மழைநீர்த்துளி சிறிதுசிறிதாகச்சேர்ந்து பெருவெள்ளமாய்ப் பயன்தருதல் போல,இக்கேள்விகளும் சிறிதுசிறிதாகச்சேர்ந்து வளருமென்க. உள ஆக்கல் - உள்ளன வாகச்செய்தல். இகழற்க - இகழ்ச்சிசெய்யாதொழிக. எனைத்து, அனைத்து - எத்தனைத்து, அத்தனைத்து என்பவற்றின் மரூஉ. ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம். எனைத்து என்பதில், வினு - சிறுமைப்பொருள் குறித்தது. உம்மைகள் - இழிவுசிறப்புப்பொருளன. ஆன்ற, ஆன் - பகுதி; ஆன்றல் - நிறைதல். இங்குத் தரும் என்பது படர்க்கையிடத்துக்கு வந்தமையின், இடவழுவமைதி. பெருமை - பண்புப்பெயர். (சு)

சகள. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(இ - ள்.) பிழைத்து உணர்ந்தஉம் - பிறழ உணர்ந்த வழியும், பேதைமை - (தமக்குப்) பேதைமை பயக்குஞ் சொற்களை, சொல்லார்—: —இழைத்து உணர்ந்து - (பொருள்களைத் தாமும்) நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்து, ஈண்டிய - (அதன்மேலும்) ஈண்டிய, கேள்வியவர் - கேள்வியினையுடையார்; (எ - று.)

'பிழைப்ப' என்பது, திரிந்து நின்றது. பேதைமை - ஆகுபெயர். ஈண்டுதல்-பலவாற்றுன் வந்துநிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும் அவ்வாறல்லது சொல்லா ரென்பதாம்.

இவைதான்குபாட்டானும், கேட்டார்க்குவரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) பிறழ உணர்ந்தவழியும் - மாறுபாடாக அறிந்தபொழுதும். தமக்குப் பேதைமை பயக்கும்-தமக்கு அறிவின்மையைக் கொடுக்கும். பொருள்களை - நூற்பொருள்களை. நுண்ணிதாக-நுட்பமுடையதாக. அதன் மேலும்-

அதுவேயுமன்றி. ஈண்டிய - கூடின. பிழைத்து என்னுஞ் செய்தெனெச்சம் - உணர்ந்து என்னும் வேறுகருத்தாவின் வினையைக் கொண்டு முடிதற்குஏலாத தாதலால், அதனேப்பிறகருத்தாவின் வினையையுங் கொண்டு முடிதற்குஎற்ற'பிழைப்ப'என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபாகக்கொள்ள வேண்டியதாயிற்று; [நன் - வினை - உரி. உஎ.] பேதைமை - மடமையைத் தருஞ்சொற்களுக்குக் காரியவாகுபெயர். பலஆற்றுன் - பலவழிகளால்: தன்னேடொத்தார் ஆசிரியன் பெரியோர் இவர்களோடு பழகுதலால் வந்தகேள்வி யறிவுகளால். அறிந்தாரோடு ஒப்பிப்பதும் செய்தார் - கற்ற பெரியோரிடம் நூற்பொருள்களேக் கேட்டு அவற்றுடன் தாம் முன் அறிந்த நூற்பொருள்களே ஒத்திட்டுப்பார்த்தலுஞ் செய்தவர். கடவுள் ஒருவரெழியப் பிறரெல்லாம் மூக்குணவசப்பட்டவராதலின், 'தாமதகுணத்தான் மயங்கினராயினும்'எனப் பட்டது. தாமசம் - கோபம் முதலியவற்றிற்குக் காரணமாகுந் தீக்குணம். அவ்வாறல்லது சொல்லார் - அப்படி மயங்கினமாத்திரமேயொழிய நூற் பொருள்களுக்கு மாறுபாடானதைச் சொல்லமாட்டார். ''பொய்ம்மை மொழி புகன்றறியேம் புகலமனமெண்ணுகினும், மெய்ம்மையலதுரையாரா வேத நவில்பயிற்சியால்'' என்றுற்போல, கல்வி கேள்வி யறிவுகளேயுடையவரது மனம் தமோகுணவசத்தால் ஒருகாலத்திற் சிறிது மாறுபட்டாலும் அப் பொழுதும் அவர்வாயிலிருந்து அறிவுகேடான வார்த்தைகள் வாரா; முன் பயிற்சியினுல் நல்லுறுதிமொழிகளே வெளிப்படு மென்பதாம். ''இம்மூவுலகி னிருள்கடியு மாய்கதிர்போல், அம்மூன்று முற்றவறிதால் - தம்மின், உற ழாமையங்கியுறழினுமென்றும், பிறழாபெரியோர் வாய்ச்சொல்'' என்று புறப் பொருள் வெண்பாமாலே கூறுவதுங் காண்க. உணர்ச்சும், உம்மை - இழிவு சிறப்பு. (எ)

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ - ள்.) கேட்பின்உம் - (தம்புலமாய ஓசைமாத்திரத்தைக்) கேட்கு மாயினும், கேளா தகைய - செவிடாந் தன்மையவேயாம்:—கேள்வியால்—, தோட்கப்படாத - துளேக்கப்படாத, செவி - செவிகள்; (எ - று.)

ஏகாரம் - தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெய் தாமையின் 'கேளாத்தகைய' என்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழை தற்கு வழியாக்கலின் கேள்வியைக் கருவியாக்கியுங் கூறினர்; பழையதுளே துளேயன்று என்பதாம்.

(கு - ரை.) தம் புலமாய-தமது [காதுகளின்] உணர்ச்சியாகிய, செவிடு-ஓசையறியும்புலனற்றது. துளேக்கப்படாத - தடையின்றி நன்றுய் நுழை யப்படாத. தேற்றத்தின்கண் - உறுதிப்பொருளில். உறுதியெய்தாமையின் - சிறப்படையாததனுல். வழியாக்கலின் - வழியை உண்டுபண்ணுதலால். தோட்கப்படாத என்ற வினேக்கு ஏற்பக் கேள்வியை ஊசிமுதலிய துளேக் குங்கருவியாகக் கூறுமையால், இது ஏகதேசவுருவகம். பழையதுளே துளே

யன்று - காதில் இயற்கையாகவுள்ள துவாரம், நூற்பொருள் நுழைதற்கு வழியாகாத பொழுது தூலமெனச் சிறப்பித்துக்கூறத்தக்கதன்று என்க. கேட்பினும் என்றவும்மை - உயர்வுசிறப்பு. தகைய - பலவின்பாற் குறிப்பு முற்று. தோட்கப்படாத என்பதில், தோள் - பகுதி. செவி-பால்பகா அஃறிணைப்பெயர். செவிபடைத்ததற்குப் பயன் நூற்பொருள்கேட்டலே யென்பதாம். "இருடூர்விளக்கத்திமிழிசையார்கோவே, குருடேயுமன்றுநின்குற்றம்-மருடூர்ந்த, பாட்டு முரையும்பயிலாதனவிரண்டு, ஓட்டைச்செவியுமுள" என்ற ஔவையார் பாட்டையும், "இரும்பிற்போர்த்த, பழுதெண்ணும்வன்மனத்தா ரோட்டைமரச்செவியர் கேளார்" என்னுஞ் சிந்தாமணியையும், "திருமால்சீர்கேளாத செவியென்னசெவியே" என்ற சிலப்பதிகாரத்தையும் இதனோடு ஒப்பிடுக. "கேள்வியாளரிற், றோட்டசெவியையோகுவையாமெனின்," "அறச்செவிதிறந்துமறச்செவியடைத்து" என்ற மணிமேகலையடிகளில் இக்குறளின் பொருள் அமைந்திருத்தலுங் காண்க. (அ)

சகஙூ. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

(இ - ள்.) நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையரல்லாதார், வணங்கிய வாயினர் ஆதல்-பணிந்தமொழியினையுடையராதல், அரிது - கூடாது; (எ - து.)

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை, கேள்விமேல் ஏற்றப்பட்டது. வாய் - ஆகுபெயர். பணிந்த மொழி - பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையால் தம்மை வியந்துகூறுவரென்பதாம். 'அல்லால்' என்பதூஉம் பாடம்.

(கு - சை.) பணிந்த மொழி - விநயத்தோடுகூடின சொல். கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பத்தைக் கேள்வியின் மேலேற்றி 'நுணங்கிய கேள்வி' என்றது - உபசாரவழக்கு. வாய்-வாயாற்சொல்லுஞ்சொல்லுக்குக் கருவியாகுபெயர். பணிவைப் புலப்படுத்திய - வணக்கத்தைத் தெரிவிக்கிற. கேளாதார் உணர்வின்மையால் தம்மை வியந்துகூறுவர்-நூற்கேள்வியில்லாதவர் அறிவில்லாமையால் தம்மைத்தாமே சிறப்பித்துப் புகழ்ந்துபேசுவார்கள். "அல்லார்" என்ற இடத்து 'அல்லால்' என்பது பாடமாயின், 'பிறர்' என்பது வருவிக்கவேண்டும்; நுணங்கியகேள்வியர் வணங்கிய வாயினராதல் எளிதேயல்லாமல், பிறர் வணங்கியவாயினராதல் அரிதென்க. தமது நிலையையும் பிறரது நிலையையும் அறிவிக்குங் கல்விகேள்விகளையுடையவர் பிறரிடத்து வணக்கமாகப் பேசுவர்; அப்படிப்பட்டவரல்லாதவர் அங்ஙனம் பேசார் என்றபடி. "கற்றறிவார்கண்டதடக்க மடங்காதார், பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற, அறைகல்லருவியணிமலைநாட, நிறை குடநீர்தளும்பலில்" என்னும் பழமொழிச்செய்யுள் இங்கே அறியத்தக்கது. அரிது, அருமை - இன்மைமேல் நின்றது. (கூ)

சஉ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(இ - ள்.) செவியின் சுவை உணரா - செவியால் நுகரப்படுஞ்சுவைகளை உணராத, வாய் உணர்வின் மாக்கள் - வாயுணர்வினையுடைய மாந்தர், அவியினும் வாழினும் - சாவினும் வாழினும், என் - (உலகிற்குவருவது) என்னே? (எ - று.)

செவியால் நுகரப்படுஞ்சுவைகளாவன-சொற்சுவையும், பொருட்சுவையும்: அவற்றுள், சொற்சுவை-குணம், அலங்காரம் என இருவகைத்து; பொருட்சுவை - காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பதுவகைத்து: அவையெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும். 'வாயுணர்வு' என்பது - இடைப்பதங்கள்தொக்குநின்ற மூன்றும் வேற்றுமைத்தொகை; அது-வாயால் நுகரப்படுஞ்சுவைகளை உணரும் உணர்வு என விரியும்: *அவை-கைப்பு, †கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இத்திப்பு என ஆறும். செத்தால் இழப்பதும் வாழ்ந்தாற்பெறுவதும் இன்மையின், இரண்டும்ஒக்கும் என்பதாம். 'வாயுணவின்' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

இவை மூன்றுபாட்டானும், கேளாதவழிப்படுக்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) செவியால் நுகரப்படும் சுவைகள் - காதிஞற் கேட்டு அனுபவிக்கப்படும் ரசத்தையுடைய நூற்கேள்விகள். வாயுணர்வினையுடையமாந்தர்-வாயாலுண்ணப்படும் பொருள்களின் ருசிகளே மாத்திரமே அறிதலையுடைய மனிதர். அவியினும் வாழினும் - இறந்தாலும் வாழ்ந்தாலும். இப்படிப்பட்டவர் இறந்தால்வரும் நஷ்டமும், வாழ்ந்தால்வரும் இலாபமும் உலகத்திற்கு ஒன்றுமில்லையென்க. 'என்' என்ற குறிப்புமுற்று, இன்மைகுறித்து நின்றது; "கற்றதனலாயபயனென்கொல்" என்றதிற்போல. குணம்-செறிவு, தெளிவு சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனப் பத்தாம். இவற்றுள், செறிவு-சொற்கள்நெகிழ்ச்சிபெறாது கட்டாயிருத்தல். தெளிவு - பொருள் வெளிப்படையாகத் தோன்றுவது. சமநிலை - எல்லாத்தொடர்களும் ஒருபடிப்பட்டுத்தொடுப்பது. இன்பம்-சொல்லிற் சுவைதோன்றுவது. ஒழுகிசை - வெறுப்பாயிராமற் பிரியமாயிருக்கும் படியான ஓசை. உதாரம் - குறிப்பிஞல் ஓர்சிறப்புப்பொருளே விளைப்பது. உய்த்தலில்பொருண்மை - கருதியபொருள் புலப்படுதற்கு வேண்டியசொல்லுடைமை. காந்தம் - உலகஇயற்கைக்கு ஒத்துக்கூறுவது. வலி - தொகைநிலைத்தொடர்கள் மிகுதியாய்வருவது. சமாதி - ஒருபொருளில் மற்றொன்றன் தன்மையை ஆரோபித்தல். அலங்காரம் - பிராசம், மடக்குமுதலிய சொல்லணிகள். பிராசம் - வந்தஎழுத்தே மீண்டும்வருவது. மடக்கு [யமகம்]-எழுத்தின்கூட்டம் இடைவிட்டேனும் இடைவிடாதேனும் பொருள் வேறுபாட்டால் மீண்டுவருவது. தன்மை உவமை உருவகம் முதலாகப்பொருளணி

பி-ம்: *அவை. † காழ்ப்பு.

களும் பல உண்டு. குணத்துக்கும் அலங்காரத்திற்கும் வேறுபாடு யாதோ வெனின்;—'தொடைகளைப்பற்றிநின்று காப்பியத்திற்கு அழகுசெய்வது - குணம்: சொல்லையும் பொருளையும் பற்றிநின்று அழகுசெய்வது-அலங்காரம்' என்றும், குணங்கள்-இளமை முதலியனபோல ஒற்றுமைநயத்தில் நின்று அழகுசெய்வன: அலங்காரங்கள் - கடககுண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தில் நின்று அழகுசெய்வன' என்றும், 'காப்பியத்திற்கு அழகுசெய்வன - குணங்கள், அதிசயத்தைச்செய்வன - அணிகள்' என்றுங் கூறுவர். **போருட்சுவை**-ரஸம். சிருங்காரம், ஹாஸ்யம், கருணம், வீரம், ரௌத்திரம், பயாநகம், பீபத்ஸம், அத்புதம், சாந்தம் என்னும் நவரஸங்களுக்கும்-உவகை, நகை, அழுகை, பெருமிதம், வெகுளி, அச்சம், இளிவரல், மருட்கை, சமநிலை என்ற ஒன்பதும் முறையே சுர்ரணமாம். சிருங்காரம் - சிற்றின்பவிருப்பம். ஹாஸ்யம்-அங்கவிகாரம் முதலியவற்றைக்காணுதலால் உண்டங் களிப்பு. கருணம் - இஷ்டஜந மரணம் முதலியவற்றால் ஆகும் விசனம். வீரம்-செய்வினையில் மனத்துணிவு. ரௌத்திரம் - பிறர்செய்யுந் தீங்கினாலாகும் மனக்கொதிப்பு. பயாநகம்-எந்தக்காரணத்தினாலாவது பயந்தோன்றுதல். பீபத்ஸம்-அருவருப்புத்தோன்றுதல். அத்புதம் - அதிசயத்தைக்கண்டதனாலாகும் மனப்பரப்பு. சாந்தம் - பொருள்களிற் பற்றற்றுநிற்கும் நிலை. இவற்றின்வகைகளையும் விரிகளையும் இலக்கணங்களையும் உதாரணங்களையும் தண்டியலங்காரம் முதலிய அணிநூல்களிலும், வடநூல்களிலும் பார்க்கக் காணலாம்; தொல்காப்பியத்துப்பொருளதிகாரத்தில் "நகையே யழுகை யிளிவரல் மருட்கை, அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்று, அப்பாலெட்டே மெய்ப்பாடென்ப"என்பது முதலாக மெய்ப்பாட்டியலிலும், உவமவியலிலும் சுருக்கமாக்கூறப்படுவதுங் காண்க. ஈண்டு - இங்கு. உரைப்பின் - யாம் சொல்லப்புகுந்தால். விரியும் - உரைவளர்ந்துபோம். 'மற்றொன்றுவிரித்தல்' என்னுங் குற்றத்திற்கு அஞ்சி, இங்ஙனங் கூறினர். தொக்குநின்ற இடைப்பதங்கள் - 'நுகரப்படுஞ் சுவைகளையுணரும்' என்பன. வாயுணர்வு - மூன்றனுருபும் பொருளும் தொக்கதொகை. கார்ப்பு-காரம், உறைப்பு. உவர்ப்பு. உப்பு. கைப்பு முதலிய இவை அறுசுவையெனப்படும். இரண்டும் - இறப்பும் வாழ்க்கையும். 'வாயுணவின்' என்ற பாடத்துக்கு-வாயினால் உணவுகொள்ளுதலுமாத்திரமே யுடைய என்று பொருள். உம்மைகள் - எண்ணுப்பொருளன. செவியிற்சுவையுணரா வாயுணர்வினர் மக்களெனப்படாது மாக்களெனப்பட்டார். வாயுணர்வின் மாக்களென்பதை மத்தியமபதலோபனுக்கு உதாரணங் காட்டினர் பிரயோக விவேகத்தார். (கo)

சகூ - ஆம் அதிகாரம்.—அறிவுடைமை.

அஃதாவது-கல்விகேள்விகளின்ஆய அறிவோடு உண்மையறிவுடையனாதல். அதிகாரமுறைமையும், இதனானே விளங்கும்.

(கு - ரை.) உண்மையறிவு - நிச்சயஞானம்: ஐயந்திரிபில்லாதது: விவேகம். 'அறிவாவது - நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்

தல்' என்றார், பொருளதிகாரவுரையில். அதிகாரமுறைமை - கேள்வியென்னும் அதிகாரத்தின் பின்னே அறிவுடைமையென்னும் இவ்வதிகாரத்தை வைத்ததற்குக் காரணம். இதனுனே - இங்குக் கூறியவாற்றால். கீழ்க்கூறிய கல்விகேள்விகள் காரணமும் அறிவு அவற்றின் காரியமுமாதல், அதிகார முறைமைக்குக் காரணம். அறிவுடைமை இரண்டாம் வேற்றுமைத்தொகை.

சஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

(இ-ள்.) (அரசர்க்கு), அறிவு-அறிவென்பது,—அற்றம் காக்கும் கருவி-இறுதிவாராமற்காக்கும் கருவியாம்; (அதுவேயுமன்றி), செறுவார்க்கு-பகைவர்க்கு, அழிக்கல் ஆகா - அழிக்கலாகாத, உள்அரண்உம் - உள்ளரணுமாம்.

காத்தல் - முன்அறிந்து பரிகரித்தல். உள் அரண் - உள்ளாய அரண்: உள்புக்கு அழிக்கலாகா அரண் என்றுமாம்.

இதனுன், அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) இறுதி - கெடுதி; அழிவு. உள்ளரண்-உட்கோட்டை. முன்னறிந்துபரிகரித்தல்-(வருகிறதீமையை) முன்னமே அறிந்துவரவொட்டாமற் செய்தல். உள்புக்கு - உள்ளேபிரவேசித்து. செறுவார்க்கும் என்றவிடத்து உம்மையை எடுத்து அரண் என்பதனோடு கூட்டுக: அது - இறந்ததுதழுவிய எச்சவும்மை; உயர்வுசிறப்பு மாகலாம். அறிவுஎன்னும் எழுவாய்க்கு, கருவி, அரண் என்பன-பெயர்ப்பயனிலைகள்; இவற்றை வடநூலார் காரகக்கிரியை யென்பர். அற்றம் - தொழிற்பெயர். கருவி - உபகரணம், உபாயம். அறிவாகிய ஒருபொருளினிடத்தில், கருவியும் அரணுமாகிய பலபொருள்களின் தன்மையை ஏற்றிக்கூறியதனுல், பலபடப்புனைவணி; வடநூலார் உல்லேகாலங்கார மென்பர். (க)

சஉஉ. சென்ற விடத்தாற் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ - ள்.) சென்ற இடத்தால் செல விடா - (மனத்தை) அது சென்ற புலத்தின்கண் செல்லவிடாது, தீது ஒரீஇ-(அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து) தீயதனின் நீக்கி, நன்றின்பால் உய்ப்பது - நல்லதன்கண் செலுத்துவது, அறிவு—; (எ - ற்.)

வினைக்குஏற்ற செயப்படுபொருள், வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப் புலம்ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின், 'இடத்தால்' என்றார். 'விடாது' என்பது, கடைக்குறைந்துநின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேருக்கி மனத்தைப் புலமறிந்துசெலுத்துவது அறிவு என்றார், அஃது உயிர்க்குணமாகலின்.

(கு - ரை.) அதுசென்ற புலத்தின்கண் - அம்மனம்போன ஓசை ஊறு முதலிய ஐம்புலவழிகளிலே. வினைக்கு-செலவிடுதல் என்னுந் தொழிலுக்கு.

ஏற்றசெயப்படுபொருள்-மனத்தையென்பது. ஓசை - சப்தம், செவிப்புலன்; ஊறு - ஸ்பரிசம், மெய்ப்புலன்; ஒளி-ரூபம், கட்புலன்; சுவை-ரஸம், வாய்ப் புலன்; நாற்றம் - கந்தம், நாசிப்புலன். புலன்கள் ஐந்தாயிருக்கவும், இடத் தால்என ஒருமையாக்கூறியது, மனம் ஒருகாலத்திலே ஒருபுலத்திலேயே ஊன்றுமாதலின். விடா - ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; இதன்முன் பொதுவிதியால் வலிமிகு மாதலால், 'விடாதீதொரீஇ' என்ற இயல்பான பாடம் பொருந்தாது: வலிமிகாமைக்குச் சிறப்புவிதியின்மையை யுணர்க. வாதுவன் - குதிரைப்பாகன். வேறாக்கி - தன்விருப்பின்படி செல்லாத வாறு வேறுபடுத்தி. அஃது - அறிவு. இடத்தால் என்பதில், ஆல்என்னும் மூன்றனுருபு - ஏழாம்வேற்றுமை இடப்பொருளைத் தந்ததனால், வேற்றுமை மயக்கம். செல - தொகுத்தல். தீது - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணை யும்பெயர்; நன்று என்பதும் இவ்வாறே. ஒரீஇ=ஒருவி. (உ)

௪௨௩. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எ பொருள் - யாதொருபொருளை, யார் யார் வாய் கேட்பின் உம் - யாவர்யாவர்சொல்லக் கேட்பினும், அ பொருள் - அப்பொருளின், மெய் பொருள்-மெய்யாயபயனை, காண்பது-காணவல்லது, அறிவு-; (எ-று.)

குணங்கள்மூன்றும் மாறிமாறிவருதல் யாவர்க்கும்உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார்வாயினும் இழிந்தபொருள் உயர்ந்தார்வாயினும் உறுதிப் பொருள் பகைவர்வாயினும் கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான், 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார். அடுக்கு-பன்மைபற்றிவந்தது. 'வாய்' என்பது, அவர் அப்பொருளின்கண் பயிலாமை உணரநின்றது. மெய்யாதல்-நிலைபெறுதல். சொல்வாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பயன்நோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.

(கு-ரை.) காணவல்லது-ஆராய்ந்தறியவல்லது. குணங்கள் மூன்று-சத் துவம், ரஜசு, தமசு என்பன. "சத்துவம் ஞானமாம் தமம் அஞ்ஞானமாம், மத்திமம் [இராசசம்] கலப்பதாம்" என்றது ஈசுவரகீதை. யாவர்க்கும் உண்மை யின்-(கடவுள் ஒருவரன்றி மற்றை) எல்லார்க்கும் உள்ளதனால். உறுதிப்பொ ருள்-நன்மைதரும் விஷயம். கெடுபொருள் - தீமைதரும் விஷயம். நட்டார்- சிநேகிதர். ஒரோவழி - சிலவிடத்து. அடுக்கு - யார்யார் என்னும் அடுக்குத் தொடர்: அவர் அப்பொருளின்கண் பயிலாமை - அவ்விழிந்தார் முதலியவர் உயர்ந்தபொருள் முதலியவற்றில் இயற்கையிற் பழகியிராமையை. கொள்ளு தல் ஒழிதல் செய்வது-நல்லபயன்தருவதை அங்கீகரித்தலும், தீயபயன்தருவ தைத் தவிர்தலுஞ் செய்வது. கேட்பினும், உம்மை-சிறப்புப்பொருளது: முற் றுப்பொருளதென்பாருமுளர். கீழ் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தில் "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றதனோடு இதனை ஒப்பிடுக. யார்-வினாவடியாப்பிறந்த பெயர். (௩)

சஉச. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) தான்—, (சொல்லுஞ்சொற்களை), எண் பொருள ஆக - (அரியபொருளவாயினும் கேட்பார்க்கு)எளிய பொருளவாமாறு, செல-மனங் கொள், சொல்லி—,—பிறர் வாய் நுண் பொருள் - பிறர்வாய் (க்கேட்குஞ் சொற்களின்) நுண்ணியபொருள், (காணவரிதாயினும்), காண்பது - (அதனைக்) காணவல்லது, அறிவு—; (எ - று.)

உடையவன்தொழில், அறிவின்மேல் ஏற்றப்பட்டது. 'சொல்லுவன வழுவின்றி இனிதுவிளங்கச் சொல்லுக' என்பார் சொல்மேல்வைத்தும், 'கேட்பன வழுவினும் இனிதுவிளங்காவாயினும் பயனைக்கொண்டொழிக' என்பார் பொருள்மேல்வைத்தும் கூறினர்.

(கு - ரை.) அரியபொருளஆயினும் - அறிதற்குஅருமையான விஷயங்களை யுடையவையாஞலும். மனங்கொள - கேட்பவர்மனம் அறிந்துகொள்ளும்படி. உடையவன்தொழில் - அறிவுடையவனதுதொழிலாகிய சொல்லுதலும் காணுதலும்; இதனை அறிவின்மேலேற்றியது, குணிவினையைக் குணவினையாகக்கூறிய உபசாரவழக்கு. சொல்லுவன - சொல்லும்வார்த்தைகளை, வழுஇன்றி-தவறுகளில்லாமல். 'செலச்சொல்லி' எனச்சொல்மேல்வைத்தது. கேட்பன - பிறர்சொல்லத் தான்கேட்கும் பொருள்கள். வழுவினும் - தவறுபட்டாலும். பயனைக்கொண்டு ஒழிக-அச்சொற்களின் பயனைமாத்திரம் எடுத்துக்கொண்டு அச்சொற்களை நீக்குக.'நுண்பொருள்' எனப்பொருள்மேல் வைத்தது. எளிமைப்பொருளுணர்த்தும் எண்மையென்னும் பண்புப்பெயர், ஈறு போய் 'எண்' என நின்றது. பொருள-பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். ''வேட்பத்தாஞ்சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல், மாட்சியின் மாசற்றார்கோள்'' என்பர், மேல் 'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தும். உடையவன்தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது' என்றதனால், இங்ஙனம் காண்பவன் அறிவுடையவ னென்பதாம். (சு)

சஉடு. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(இ - ள்.) உலகம் - உலகத்தை, தழீஇயது - நட்பாக்குவது, ஒட்பம் - (ஒருவனுக்கு) ஒட்பமாம்; மலர்தல்உம் கூம்பல்உம் இல்லது - (அந்நட்பின் கண்) முன் மலர்தலும் பின் கூம்புதலும் இன்றி ஒருநிலையஞ்வது, அறிவு - அறிவாம்; (எ - று.)

'தழீஇயது,' 'இல்லது' என்பன-அவ்வத்தொழில்மேல் நின்றன. 'உலகம்' என்பது - ஈண்டு, உயர்ந்தோரை. அவரொடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல ஒருநிலையே நட்பாயிஞன் எல்லாவின்பமும் எய்தும் ஆகலின், அதனை 'அறிவு'என்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தின்மலர்தலும் கல்குரவிற் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்ப ஆதலால், உலகம் உயர்ந்தோரைக்காட்டிற்று. ஒட்பம்-ஒன்மை, அறிவுடைமை.மலர்தல்-முகம் மலர்தல். கூம்புதல்-முகம் வாடுதல். ஒருநிலையனுவது - எப்பொழுதும் ஒரேநிலைமையையுடையவனுயிருத்தல். தழீஇயது-தழுவியது;தொழிற்பெயர். இது-இங்கே இறந்தகாலங்குறியாமல் தன்மைகுறித்தது. இல்லது - இல்லாதிருத்தல். இல்லது என்னும் ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர், இங்கே தொழில்மாத்திரத்தை யுணர்த்திநின்றது. அவரொடு - உயர்ந்தோரோடு. கயப்பூப்போல வேறுபடாது - நீர்நிலையிலுண்டாகுந் தாமரைமுதலிய பூக்கள் ஒருகால் மலர்தலும் மீண்டுங்குவிதலுமாகத் தாம் அழிகிறவரையில் நிலைமாறுதல்போல, ஒருகால் முகமலர்தலும் மீண்டும் முகம்வாடுதலும் இல்லாமல். கோட்டுப்பூப்போல ஒருநிலையே நட்பாயினன் - மரக்கிளையிலுண்டாகும் புன்னைமுதலிய பூக்கள் ஒருகால் மலர்ந்தது மீண்டுங்குவியாமலே கழிதல்போல, ஒருகால் மலர்ந்தமுகம் மறுபடிவாடாமல் ஒரேநிலைமையனுய்க் கினேகித்தவன். "கோட்டுப்பூப்போல மலர்ந்து பிற்கூம்பாது, வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட, கயப்பூப்போல்முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை, கயப்பாரு நட்பாரும்மில்" என்னும் நாலடியார்ச்செய்யுளை இங்கே அறிக. எல்லா இன்பமும் எய்தும் - இன்பங்களெல்லாவற்றையும் அடைவான். உலகந் தழுவுதலாகிய ஒட்பத்தின்பயன் அதன்காரணமான ஒட்பமாகவும், மலர்தலுங் கூம்பலுமில்லாதிருத்தலாகிய அறிவின்பயன் அதன் காரணமான அறிவாகவும் கூறப்பட்டது, உபசாரவழக்கு. செல்வம் வந்தகாலத்து மகிழ்ந்திருத்தலும், வறுமைவந்தகாலத்து வருந்தியிருத்தலும் இல்லாதது அறிவென்பது, இரண்டாமுரையின் கருத்து. (கு)

சூஉக. எவ்வ துறைவ துலக மூலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(இ - ள்.) உலகம்—, எவ்வது-யாதொருவாற்றுன், உறைவது-ஒழுகுவதாயிற்று, உலகத்தோடு-அவ்வுலகத்தோடு (மேவி), (தானும்), அவ்வது-அவற்றுன், உறைவது - ஒழுகுவது,—அறிவு - (அரசனுக்கு) அறிவு; (எ - று.)

'உலகத்தை யெல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பாரில்லை' எனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியுமாம் ஆகலான், அவ்வாறு ஒழுகுதல் அறிவன்று என விலக்கியவாறுபிற்று.

இவையைந்துபாட்டானும், அதனது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) யாதொருவாற்றுன் - எத்தவழியால். ஒழுகுவது - நடப்பது. மேவி - ஒத்து. அவ்வாற்றுன் - அவ்வழியால். நியமித்தலான் - கட்டளை செய்தாளுதலால். ஒழுகின் - நடந்தால். அதனது-அறிவினது. மேல் 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் "உலகத்தோடொட்டவொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலாதார்" என்ற குறளையும், அதன் விசேடவுரையையும் இங்கே உணர்க. எவ்வது, அவ்வது - ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும் பெயர்கள்; இவற்றில், எ என்னும் வினவிடைச்சொல்லும், அ என்னும் சுட்

டிடைச்சொல்லும் முறையே பகுதிகள்; உறைவது என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - எதிர்காலவினையாலணையும்பெயர்; பின்னது-எதிர்காலத் தொழிற்பெயர். (சு)

சஉஎ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

(இ - ள்.) அறிவு உடையார் - அறிவுடையராவார், ஆவது அறிவார் - வரக்கடவதனை (முன்) அறியவல்லார்; அறிவு இலார் - அறிவிலராவார், அஃது அறிகல்லாதவர் - அதனை (முன்) அறியமாட்டாதார்; (எ - று.)

முன்அறிதல் - முன்னே எண்ணி அறிதல். அஃது அறிகல்லாமையாவது - வந்தால் அறிதல். இனி, 'ஆவது அறிவார்' என்பதற்கு - (தமக்கு) நன்மைஅறிவார் என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) அறிய-ஆராய்ந்தறிய. அதனை-இனிவரப்போவதை. முன் - வரும்முன்னமே. எண்ணி - ஆராய்ந்து. அஃது அறிகல்லாமை - அதனை அறியமாட்டாமை. இக்குறளில் ஆய்தம் மெய்போல ஒலித்தது; அலகிட்டுக் காண்க. இரண்டாமுரையில், அஃதறிகல்லாதவர் என்பதற்கும் - (தமக்கு) நன்மையை யறியாதவரென்று பொருள் கொள்க. (எ)

சஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(இ - ள்.) அஞ்சுவது - அஞ்சப்படுவதனை, அஞ்சாமை—, பேதைமை - பேதைமையாம்; அஞ்சுவது-அவ்வஞ்சப்படுவதனை, அஞ்சல்-அஞ்சுதல், அறிவார் தொழில் - அறிவார் தொழிலாம்; (எ - று.)

பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதி பற்றி 'அஞ்சுவது' என்றார். அஞ்சாமை - எண்ணுதுசெய்துநிற்றல். அஞ்சுதல் - எண்ணித்தவிர்தல். அது காரியமன்று என்று இகழப்படாது என்பார், 'அறிவார்தொழில்' என்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு, அஞ்சவேண்டுமிடம் கூறியவாறு.

இவையிரண்டுபாட்டானும், அதனை உடையாரது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) "அச்சக்கிளவிக்கு ஐந்தும் இரண்டும், எச்சமிலவேபொருள் வயினான" என்னுந் தொல்காப்பியவிதியால், அஞ்சுவதுஎன்பது - அஞ்சுவதை என இரண்டனுருபால் விரிக்கப்பட்டது; அஞ்சுவதனின்று என்று ஐந்தனுருபாலும் விரிக்கலாம்: இது - வடநூல்வழக்கைத் தழுவியது; அஞ்சுவதற்குஎன நான்கனுருபாகவிரித்தல், உலகவழக்காம். அஞ்சப்படுவதனை - பயப்படத்தக்க விஷயத்திற்கு என்றபடி. பேதைமை - அறிவின்மை. அறிவார்தொழில் - விவேகிகளது செய்கை. சாதிபற்றி - சாதியொருமையால். எண்ணுது செய்துநிற்றல் - ஆலோசியாமல் தகாத அக்காரியங்களைச் செய்துநிற்பது. எண்ணித் தவிர்தல் - ஆலோசித்து அக்காரியங்களைச் செய்யாதுவிலகல். அது - அஞ்சுவதஞ்சல். காரியமன்று - செய்யத்தக்கதன்று.

கீழ் 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தில் "அஞ்சாமையீகையறிவூக்கமிந் நான்கும், எஞ்சாமைவேந்தற்கியல்பு" என்ற குறளில், அஞ்சாமையென்பது அரசனுக்குரிய நற்குணநற்செய்கைகளுள் ஒன்றாகப்பொதுப்படச் சொல்லப்பட்டது - பழிபாவங்களையும் கெடுதியையும் தராதவழியால் பகைவர்பக்கல் அஞ்சலாகாது என்றகருத்துப்பற்றிய தென்றும், இங்கே அஞ்சலறிவார்தொழில் என்று சிறப்பாகக் கூறியது - பழிமுதலியவற்றைத் தரும் காரியங்களில் அஞ்சவேண்டு மென்பதுபற்றிய தென்றும் கொண்டு, இரண்டும் மாறுகொளக்கூறலாகாமை காண்க. அதனை - அறிவை. அஞ்சுவது - செய்வினை செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். 'இக்குறள், வருமொழியைநோக்காமலேதனக்கு உரிய ஒருமைப்பாலைவிட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால், அஃறிணைச் சாதியொருமையாயிற்று' என்பர், இலக்கணக்கொத்து உரையில். (அ)

௪௨௯. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(இ - ள்.) எதிரது ஆ - (வரக்கடவதாகிய அதனை) முன் (அறிந்து), காக்கும் - காக்கவல்ல, அறிவினார்க்கு - அறிவினையுடையார்க்கு, அதிர வருவது - (அவர்) நடுங்கவருவது, ஓர் நோய்-ஒருதுன்பமும், இல்லை—; (எ-று.)

'நோய்' என வருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனான், காக்கலாங்காலம் உணர்த்தப்பட்டது. காத்தல்-அதன்காரணத்தைவிலக்குதல்.

அவர்க்குத் துன்பமின்மை இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) வரக்கடவதாகிய அதனை-இனி வரவிருக்குந் தீங்கை. காக்கவல்ல - வராதபடி தடுத்து அதனினின்றுந் தம்மைப்பாதுகாத்துக்கொள்ளவல்ல. நடுங்க - அச்சத்தால் மனமும் உடம்பும் பதைக்கும்படி. வாளா எதிரதாஎன்றார் - நோய்எதிரதா என்னாமல் 'எதிரதா'என்றார் என்க. காத்தற்கு ஏற்றகாலம்-தீங்குவருவதற்குமுந்திய காலம். அதன்-துன்பத்தின். அவர்க்கு-அறிவுடையார்க்கு. எதிரது - எதிர்காலத்தது. ஆ - ஆக என்பதன்விகாரம். அதிர்வென்பது - நடுங்குதலென்னும்பொருளுணர்த்தும் உரிச்சொல்லாதலை "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ்செய்யும்" என்ற தொல்காப்பிய உரிச்சொல்லியற்சூத்திரத்தால் உணர்க. அங்கு, 'அதிரவருவதோர்நோய்' என்ற இதனையே உதாரணங்காட்டிப்போந்தனர், தொல்காப்பியவுரையாசிரியர்கள். (௯)

௪௩௦. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(இ - ள்.) அறிவு உடையார்—, எல்லாம் உடையார் - (பிறிதொன்றும் இலராயினும்) எல்லாம்உடையராவர்; அறிவு இலார் - அறிவிலாதார், என் உடையர் ஏன்உம் - எல்லாம்உடையராயினும், இலர் - (ஒன்றும்) இலராவர்.

செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவுங்காக்கவும்படுதலின், அஃது உடையாரை 'எல்லாமுடையார்' என்றும், அவையெல்லாம் முன்னே அமை

ந்து கிடப்பினும் அழியாமற்காத்தற்கும் தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவியுடைய ரன்மையின், அஃது இல்லாதாரை 'என்னுடைய ரேனுமிலர்' என்றுங் கூறினர். 'என்னும்' என்புழி, உம்மை - விகாரத்தால் தொக்கது.

இதனால், அவரது உடைமையும், ஏனையாரது இன்மையும் கூறப் பட்டன.

(கு - ரை.) பிறிதொன்றும் இலராயினும் - அறிவொழிந்த பிறபொருள் களுள் ஒன்றையும் உடையவரல்லராயினும். எல்லாம் - எல்லாப்பொருள் களையும். படைக்கவும் - சம்பாதிக்கவும். அவையெல்லாம் - அச்செல்வங்கள் யாவும். அமைந்துகிடப்பினும் - பொருந்தி யிருந்தாலும். தெய்வத்தான் அழிந்துழி - விதிவசத்தால் அச்செல்வங்கள் அழிந்துபோனவிடத்து. படைத் தற்கும் - மீண்டுஞ்சம்பாதித்தற்கும். இவற்றிற்கு ஏற்ற கருவி, அறிவு. எவ னென்னும்வினாப்பெயரின் விகாரமாகிய என்னென்பது - இங்கே எஞ்சாமை குறித்தது: அதன் இறுதியில் தொகுத்தல்விகாரப்பட்ட உம்மை - முற்றுப் பொருளது. என் - எந்தப்பொருளும். இனி, என்னென்பது அச்செல்வத்தின் உயர்வுதோன்ற நின்றதென்றுங் கொள்ளலாம். அவரது - அறிவுடையாரது. உடைமை-செல்வம். ஏனையாரது-மற்றையாரது; அறிவிலாதாரது. இன்மை-பொருளின்மை, வறுமை. எனும் - என்னும் என்பதன் மரூஉ: இதில், உம்மை - உயர்வுசிறப்பு. இக்குறட்பாவை "நுண்ணுணர்வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப்பணைத்தபெருஞ்செல்வம்" என்ற நாலடியார்ப் பாட்டோடு ஒப்பிடுக. (கo)

சச - ஆம் அதிகாரம்.—குற்றங்கடிதல்.

அஃதாவது - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள்ஆறனையும் அரசன் தன்கண்ணிகழாமற் கடிதல். இவற்றை வடநூலார் '*பகைவர்க்கம்'என்ப. †இவை குற்றமென்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப் பட்டது.

(கு - ரை.) குற்றங் கடிதல்-இரண்டாம்வேற்றுமைத்தொகை. இங்கே, காமம் - வரம்புகடந்த சிற்றின்பவிருப்பம். வெகுளி - காரணம்பற்றியாவது மடமையினாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவிடத்து உளதாகுந்தக்க கோபத்தை வரம்பின்றி மிகுதியாகக்கொள்வது. கடும்பற்றுள்ளம்-செல்வத்தை அவசியம் செலவிடவேண்டிய விஷயங்களிலும் செலவுசெய்யாமல் அப் பொருளினிடத்து மனத்தில் மிகுதியான பற்றுவைத்து இறுகப்பிடிப்பதா கிய லோபம். மானம் - மாத்ஸர்யம்; அதாவது - எப்பொழுதுந் தான் தாழா மல் பிறரையே தான் தாழ்த்தவேண்டு மென்னுங் கொடுங்கொள்கை. உவகை-மோகம்; அதாவது - மகிழத்தக்கனவல்லவற்றிற்கும் ராஜஸகுணத்தால் மிக

பி-ம்: * அரிவர்க்கம். † இவற்றை.

மகிழ்தல். மதம் - செல்வம் அதிகாரம் முதலிய சிறப்புக்களாலாகும் பெருஞ் செருக்கு. தன்கண் நிகழாமல் கடிதல் - தன்னிடத்துத் தோன்றாதபடி யொழித்தல். இவை-'அரிஷட்வர்க்கம்' எனப்படும். என்ப - என்று கூறுவர். அறிவுடைமையின்பின் குற்றங்கடிதலை வைத்ததற்குக் காரணம், அறிவுடை மையின்பயன் குற்றங்கடிதல் என்னுங் கருத் தென்க.

சஙக. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(இ - ள்.) செருக்குஉம் - மதமும், சினம்உம்-வெகுளியும், சிறுமைஉம்-காமமும், (ஆகிய குற்றங்கள்), இல்லார்-இல்லாதஅரசரது, பெருக்கம்-செல்வம்,—பெருமிதம் நீர்த்து - மேம்பாட்டுநீர்மையினையுடைத்து; (எ - று.)

மதம் - செல்வக்களிப்பு. சிறியோர்செயலாகலின், அளவிறந்தகாமம் 'சிறுமை' எனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார்செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறுமுடைமையின் மதிப்புடைத்து என்பதாம். மிகுதிபற்றி, இவை முற்கூறப்பட்டன.

(கு-ரை.) மேம்பாட்டுநீர்மையினையுடைத்து-மேன்மைப்படுந்தன்மையை யுடையது. சிறியோர்செயல் - அறிவிலும் ஒழுக்கத்திலும் பெருந்தன்மை யில்லாதவரும் பிராயத்திலும்முதிர்ந்தவரல்லாதவருமான இளையவரது செய்கை. அளவிறந்த - வரம்புகடந்த. நல்வழிப்பாடு சன்மார்க்கத்திற்செலவாதல். நிலைபேறு - அழியாமல் நிலைத்திருத்தல். மதிப்பு-கௌரவம். மிகுதிபற்றி - காமம்முதலியவான ஆறுதுர்க்குணங்களுள் செருக்குமுதலியஇத்துர்க்குணங் கள் பெரும்பாலும் அரசரிடத்தில் உண்டாகிமிகுதலால். உம்மைகள் மூன் றும் - எண்ணுப்பொருளன. பெருக்கம் - பெருகுதலையுடைய செல்வத்துக் குத் தொழிலாகுபெயர். 'எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற் றல் பெருமிதமெனப்படும்' என்பது, பொருளதிகாரவுரை. பெரு மிதம்-பெரி தாகிய அளவு. செருக்கு - தநமதம். (சு)

சஙஉ. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

(இ - ள்.) இவறல்உம் - வேண்டும்வழிப் பொருள்கொடாமையும், மா ண்பு இறந்த மானம்உம் - நன்மையின்நீங்கியமானமும், மாணா உவகைஉம் - அளவிறந்த உவகையும்,—இறைக்கு - அரசனுக்கு, ஏதம் - குற்றம்; (எ - று.)

மாட்சியான மானத்தின் நீக்குதற்கு, 'மாண்பிறந்தமானம்' என்றார்; அஃதாவது - "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர், தந்தை தாய் என்று இவ"ரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தேவிடுதலும் முதலாயின. அளவிறந்த உவகையாவது-கழிகண்ணோட் டம். பிறரும், "சினனே காமங் கழிகண்ணோட்டம் "என்றிவற்றை" அறந் தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீது" என்றார்.

இவையிரண்டுபாட்டானும், குற்றங்களாவன இவையென்பதுகூறப்பட்டது.

(கு - ரை.) வேண்டும்வழி - அவசியங் கொடுக்கவேண்டியவிடத்திலும். வேண்டும்வழிப் பொருள்கொடாமை-லோபம். பொருள்கொடுத்தற்கு இன்றியமையாத இடம் - யானை குதிரை படை நாடு அரண் என்ற இவற்றிற்கும், பகையொடுகூடலிற் பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற்பிரிதலிற் கூட்டப்படுவார்க்கும் அவசியம் கொடுக்கவேண்டுதல் போல்வனவாம். கீழ் 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தில் "காத்த, வகுத்தலும் வல்ல தரசு", "கொடையளிசெங்கோல் குடியோம்பல்நான்கும், உடையானாம் வேந்தர்க்கொளி" என்றவற்றால் கொடுத்தல் இறைமாட்சி யாகுதலால், அதற்கு எதிரான இவறல் குற்றமாம். "மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னார், உயிர்நீப்பர் மானம்வரின்", 'இளிவரின்வாழாத மான முடையா, ரொளிதொழுதேத்து முலகு" என்பன இறுதியாக மேல் 'மானம்' என்னும் அதிகாரத்தில் குடிப்பிறந்தார்க்கு உரிய குணங்களுள் முதலதாகக்கூறப்பட்ட நன்மைதரும் மான மன்று இது என்பார், 'மாண்பிறந்தமானம்' என்றார்; இதனால் கீழ் 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தில் "மறனிழுக்காமானமுடையதரசு" எனக் கூறியதனோடு இது மாறுபடாமையறிக. அங்குப் பரிமேலழகர் 'குற்றமாயமானத்தின் நீக்குதற்கு மறனிழுக்கா மான மென்றார்' என்று உரைத்துப்போந்ததையுங் காண்க. மாநம் - வடசொல். மாணாஉவகை-மோஹம். மாட்சியான-இறைமாட்சியின் பாற் பட்ட. "அந்தணர் சான்றோரருந்தவத்தோர் தம்முன்னோர், தந்தை தாயென்றிவர்க்குத்தார் வேந்தே - முந்தை, வழிநின்று பின்னை வயங்கு நீர்வேலி, மொழிநின்று கேட்டன்முறை" என்பது, புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௩. அந்தணர் - பிராமணசாதியார். சான்றோர் - பலநற்குணநற்செய்கைகளால் நிறைந்தவர். அருந்தவத்தோர் - பிறராற்செய்தற்கு அரிய தவத்தைத் தாம் செய்துள்ளவர். தம்முன்னோர் - தமக்குமுன்பிறந்த தமையன்மார்களும், தம்மினும்பிராயத்தின்மூத்த வயோவ்ருத்தரும். முடிக்கப் படாதாயினும்-நிறைவேற்றத் தகாத காரியமானாலும். கருதியது - செய்து முடிக்க எண்ணிய அக்காரியத்தை. "சினனேகாமங் கழிகண்ணோட்டம், அச்சம்பொய்ச்சொலன்பு மிகவுடைமை, தெறல் கடுமையொடு பிறவுமிவ்வுலகத்து, அறந்தெரிதிகிரிக்கு வழியடையாகும், தீதுசேணிகந்து நன்றுமிகப்புரிந்து" என்று பதிற்றுப்பத்தில் (22) வருகின்றது. கழிகண்ணோட்டம் - (அளவுக்கு) விஞ்சின தாக்ஷிண்யம். சினனேகாமம் கழிகண்ணோட்டம் என்றிவற்றை-கோபமும் காமமும் மோகமும் எனப் பட்ட இவற்றை. அறிந்தெரிதிகிரிக்கு வழியடையாகும் தீது - தருமத்தை யாராய்கின்ற ஆஜ்ஞாசக்கரத்தைக்கொண்ட அரசனுக்குச் செல்லும்வழியை மறுத்துத்தடுப்பதான குற்றம். இவறல் என்னுந்தொழிற்பெயரில், இவறு - பகுதி. உம்மைகள் - எண்ணுப்பொருளன. "அடிநிழலரசரையளிக்கு மாய்கதிர், முடிநிழல் முனிவரர் சரணமூழ்குமே" என்ற சூளாமணியாலும், செங்கோல்மன்னனுக்கு மாண்பிறந்தமான மின்மை காண்க. (௨)

௪௩௩. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(இ - ள்.) பழி காணுவார்-பழியை அஞ்சுவார்,—தினை துணை ஆம் குற்றம் வரின்உம்-(தங்கண்) தினையினளவாங்குற்றம் வந்ததாயினும், பனை துணை ஆ கொள்வர்-(அதனை அவ்வளவாகவன்றிப்) பனையின் அளவாகக் கொள்வர்.

'குற்றம்' - சாதிப்பெயர். தமக்கு ஏலாமையின், சிறிதென்று *பொருர்; பெரிதாகக் கொண்டுவருந்திப் பின்னும் அதுவாராமற் காப்பரென்பதாம்.

(கு - ரை.) பழியை அஞ்சுவார்-தமக்கு நிந்தனைநேருமேயென்று அதற்குப் பயப்படுவர். தங்கண் - தம்மிடத்து. தினை - ஒருவகைச்சிறுதானியம். அவ்வளவாக அன்றி - மிகச்சிறிதாக்கொள்ளாமல். பனையினளவாகக்கொள்வர் - மிகப்பெரிதாகக் கருதுவரென்றபடி. கீழ் "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரிவார்" என்றகுறளில் 'தினை பனை என்பன - சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சிலஅளவை' என்று கூறிப்போந்தார் பரிமேலழகர். காமம் முதலிய குற்றங்களாறையும் உட்படுத்துதற்கு, 'குற்றம் - சாதிப்பெயர்' என்றார்; அந்தவகைக்கெல்லாம் பொதுவானபெய ரென்றபடி. தமக்கு ஏலாமையின் - தமக்குத்தகாததனால். சிறிதென்று பொருர் - சிறியதென்றுகருதிப் பொறுக்கமாட்டார்கள். அது - குற்றம். காப்பர்-தடுத்துத்தம்மைப் பாதுகாப்பர். வரினும், உம்மை-இழிவுசிறப்பு.

சஙூச. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.

(இ - ள்.) அற்றம் தருஉம் - (தனக்கு) இறுதிபயக்கும், பகை—, குற்றமே—: (ஆகலான்), குற்றமே-அக்குற்றம் தன்கண் வாராமையே, பொருள் ஆக - பயனாகக்கொண்டு, காக்க - காக்கவேண்டும்; (எ - று.)

'இவைபற்றியல்லது பகைவர் அற்றந் தாராமையின், இவையே பகையாவன' என்னும் வடநூலார்மதம்பற்றி 'குற்றமே, அற்றந்தருஉம் பகை' என்றும், 'இவற்றது இன்மையே குணங்களதுஉண்மையாகக்கொண்டு' என்பார் 'பொருளாக' என்றுங் கூறினர். 'குற்றமேகாக்க' என்பது, "அரும்பண் பிணைத் தீமை †காக்க" என்பதுபோல நின்றது.

(கு - ரை.) இறுதிபயக்கும் பகை - தீங்கைவிளைக்கும் விரோதி. இவை பற்றியல்லது - தம்மிடத்து மிகும் காமம் முதலிய குற்றங்கள் காரணமாகவல்லாமல். அற்றம் தாராமையின் - கெடுதிவிளையாராதலால். மதம் - கொள்கை. இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக்கொண்டு-இக்குற்றங்கள் இல்லாதிருந்தால் அதுவே பெருங்குணமுடைமையா மென்று கருதி. "அரும்பண்பிணைத் தீமைகாக்க" என்னும் மேற்கோளுக்கு - தன்னிடம் தீங்குசேராதபடி அதனை அருமையானவகையால்தடுத்துத் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்க என்று பொருள்; அருமையான நற்குணநற்செயல்களையுடைமையால் தீமைவாராதபடி காக்க வென்றும் பொருள்கொள்ளலாம். ஏகாரம் - இரண்டிடத்தும் பிரிநிலை. தருஉம் - தரும்என்பது குறில் நெடிலாய்ச் செய்யுளோசைநிறைக்கவந்த அளபெடை. புறப்பகைவர் ஒரு

பி-ம்: * தேரூர் † காத்தவன்

வர்க்குத் தீங்கு செய்தற்குக் காரணம் அவரிடத்துநிகழும் மதம் மாற்சரியம் முதலிய அகப்பகைகளைக் கண்டவழியே என்னுங் கருத்துக்கொண்ட 'குற்றமேயற்றந்தரூஉம் பகை' என்ற இரண்டாம்வாக்கியம், 'குற்றமேகாக்கபொருளாக' என்ற முதல்வாக்கியத்துக்குக் காரணம்; ஆதலால், ஏதுவணி. (௪)

௪௩௫. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(இ - ள்.) வரும் முன்னர் காவாதான் வாழ்க்கை - (குற்றம்) வரக்கடவதாகின்றமுற்காலத்திலே (அதனைக்) காவாத அரசன்வாழ்க்கை,—(அது வந்தால்), எரி முன்னர் - எரிமுகத்து (நின்ற), வை தூறு போல-வைக்குவை போல, கெடும் - அழிந்துவிடும்; (எ - று.)

'குற்றம்' என்பது, அதிகாரத்தான் வந்தது. 'முன்னர்' என்றதன் ஈற்றது-பகுதிப்பொருள்விகுதி. 'வரும்' என்னும் பெயரெச்சம், 'முன்னர்' என்னுங் காலப்பெயர் கொண்டது; அதனால், காக்கலாங்காலம் பெறப்பட்டது. குற்றம் சிறிதாயினும் அதனாற் பெரியசெல்வம் அழிந்தேவிடுமென்பது உவமையாற் பெற்றாம்.

(கு - ரை.) வரக்கடவதாகின்ற முற்காலத்திலே - வருதற்கு முந்தியே என்றபடி. அதனைக்காவாத-அக்குற்றந்தைப் பரிகரித்தல்செய்யாத. அரசன் வாழ்க்கை - அரசனது செல்வவாழ்வு. அதுவந்தால் - குற்றம்வந்தால். எரி முகத்துநின்ற வைக் குவை போல - நெருப்பின்முன்பட்ட வைக்கோலின் போர்போல. அதிகாரத்தான் - இது 'குற்றங்கடிதல்' என்னும் அதிகாரமாதலால். என்றதன் ஈற்றது-என்றசொல்லின் இறுதியிலுள்ள 'அர்' என்பது: பகுதிப்பொருள்விகுதி - தனக்கு என்று வேறுஒருபொருளைத்தராமல் பகுதியின்பொருளையே யுணர்த்தும் விகுதி; முன்என்னும் இடைச்சொல், இங்கே காலப்பொருளதாய்ப் பெயர்ச்சொல்தன்மைப்பட்டு 'வரும்'என்னும்பெயரெச்சத்திற்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. அதனால் - வருமுன்னர் என்பதனால். காக்கலாங்காலம் குற்றம்வருதற்குமுந்தினபொழுது என்றபடி. சிறுகாரணத்தாற் பெரும்பொருளழிதலாகிய பயன்பற்றி வந்தது உவமையணி யென்க. நெருப்புச்சிறிதாயிருந்தாலும் அதனால் பெரிய வைக்கோற்போர் அழிந்து விடுவதுபோலக் குற்றஞ்சிறிதாயிருந்தாலும் அதனாற்பெரியசெல்வமும் அழிந்து விடுமென்க. காவாதான்வாழ்க்கை, எரிமுன்னர், வைத்தூறு - ஆறாம்வேற்றுமைத்தொகைகள். (௫)

௪௩௬. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

(இ - ள்.) (முன்னர்), தன் குற்றம் நீக்கி - தன்குற்றத்தைக் (கண்டு) கடிந்து, (பின்னர்), பிறர் குற்றம் காண்கிற்பின் - பிறர் குற்றங் காணவல்லனாயின், இறைக்கு - அரசனுக்கு, ஆகும் குற்றம் - ஆகக்கடவ குற்றம், என் - யாது? (எ - று.)

'அரசனுக்குத் தன்குற்றங்கடியாவழியே பிறர்குற்றங்கடிதல் குற்றமாம்; அதுகடிந்தவழி முறைசெய்தலாம்' என்பார், 'என்குற்றமாகும்?' என்றார்; எனவே, தன்குற்றங்கடிந்தவனே முறைசெய்தற்கு உரியவனென்பதாயிற்று.

இவைநான்குபாட்டானும், அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது; இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(சு - ரை.) காணல்வல்லுயின் - அறிந்து ஒழிக்க வல்லவனுனல். ஆகக்கடவ - விரிக்கடவதான. அரசனுக்காகக்கடவ என்றவிடத்து - 'அரசனுக்குக் காக்கக்கடவ' என்றும் பிரதிபேதம்; அதற்கு - அரசனுக்கு ஒழிக்கத்தக்க என்று பொருள். அது கடிந்தவழி - தன்குற்றத்தை ஒழித்தவிடத்து. முறை செய்தலாம் - அரசன் பிறர்குற்றத்தையொழித்தல் நீதிநூடத்துதலாம். அவற்றது கடிதற்பாடு - காமம் வெகுளிமுதலிய அக்குற்றங்களின் ஒழிக்கவேண்டுந்தன்மை. பொதுவகையால் - பலகுற்றங்களுக்கும் பொதுப்பட. சிறப்புவகையால் - தனித்தனி ஒவ்வொருகுற்றத்துக்கு உரியதாக. கூறுப - சொல்லுவர். குற்றம் ஆகும்என்பது - ஆகுங்குற்றம் என மொழிமாற்றப்பட்டது. இங்கே "மன்னிய பகைக்குழாமாறும் வையகம், துன்னியவரும்பகைத் தொகையுமின்மையால், தன்னேயும் பிறரையுங்காக்கு மென்பதம், மன்னவன்றிறத்தினிமருளவேண்டுமோ" என்ற சூளாமணிச்செய்யுளே உணர்க. (சு)

சஉ எ. செயற்பால செய்யா திவறியான் செல்வ
மூயற்பால தன்றிக் கெடும்.

(இ - ள்.) செயல் பால - (பொருளால் தனக்குச்) செய்துகொள்ளப்படுமவற்றை, செய்யாது - செய்துகொள்ளாது, இவறியான் - (அதன்கண்) பற்றுள்ளஞ்செய்தானது, செல்வம்—,—உயல்பாலது அன்றி - (பின்) உளதாம் பான்மைத்தன்றி, கெடும் - (விறிதே) கெடும்; (எ - று.)

செயற்பாலவாவன - அறம்பொருள் இன்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது-பெருக்குதல்; அது "பொன்னி னுகும் பொருபடை யப்படை, தன்னி னுகுந் தரணி தரணியிற், பின்னே யாகும் பெரும்பொரு ளப்பொருள், துன்னுங் காலத் துன்னுதன வில்லையே" என்பதனுன் அறிக. அறஞ் செய்யாமையானும் பொருள்பெருக்காமையானும் 'உயற்பாலதன்றி' என்றும், இன்பப்பயன் கொள்ளாமையின் 'கெடும்' என்றுங் கூறினர். 'உயற்பால தின்றி' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(சு - ரை.) பொருளால் - செல்வத்தைக்கொண்டு. பற்றுள்ளஞ் செய்தான் - உலோபஞ்செய்தவன். பின் உளதாம் பான்மைத்தன்றி-பின்பு இருக்குந் தன்மையுடைய தல்லாமல் [லோபஞ் செய்தவுடனே அழிதலுற்று]. விறிதே - வீணுப், பயனில்லாமல். செயற்பால என்றதனுற் குறிக்கப்பட்ட மூன்றுபுருஷார்த்தங்களுள் பொருளும் அடங்குதலால், பொருளாற் பொருள் செய்தலாவது இன்னதுஎன்று விளக்கினர். பெருக்குதல்-விருத்திசெய்தல். "பொன்னினுகும்" என்ற மேற்கோள் - சீவகசிந்தாமணி - விமலையாரிலம்பகம் - ஈந்; இதற்குப் பொருள் வருமாறு:—பொன்னின் - செல்வத்

தால், பொரு படை - போர்செய்தற்குரிய சேனை, ஆகும்-அபிவிருத்தியாம்; அப் படைதன்னின் - அந்தச்சேனையினால், தரணி-இராச்சியம், ஆகும் - அபிவிருத்தியாம்; தரணியின் - அவ்விராச்சியத்தால், பின்னை - அதன்பின்பு, பெரும்பொருள் - மிகுந்த செல்வம், ஆம் - திரளும்; அப் பொருள் தன்னும் காலை - அந்தப்பெரும்பொருள் ஒருவனுக்குக் கிடைக்கும்பொழுதில், தன்னுதன இல்லை - அவனுக்குக் கிடையாதன எவையுமில்லை என்பதாம். அறஞ் செய்யாமையானும் பொருள்பெருக்காமையானும் உயற்பாலதன்றி என்றும்- "தன்னுடுசெல்வது வேண்டினறஞ்செய்க" என்றபடி மறுமைக்கு உதவுவதான தருமத்தைப் பொருள்படைத்ததன்பயனுகச் செய்யாமையாலும் பொருளை அபிவிருத்தி செய்யாததாலும் உளதாம்பான்மைத்தன்றி என்றுரைன்க. இன்பப்பயன் கொள்ளாமையின் - இவ்வுலகத்துஇன்பமாகிய பிரயோசனத்தையுங் கொள்ளாமையால். 'உயற்பாலதன்றிக்கெடும்' என்றதனால், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுபுருஷார்த்தமும் லோபிக்குக் கைகூடா என்க. செயற்பால - செய்தலாகிய தன்மையை யுடையன; இவறியான் - இறந்தகாலவினையாலணையும்பெயர். பாலது - ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். உயல், உய் - பகுதி. 'உயற்பாலதின்றி' என்றபாடத்துக்கு - தப்பும்வழி யாவதொன்றுமில்லாமல் என்று பொருள். முதலுரையில், உயல் - வாழ்தல் என்றும், இரண்டாமுரையில், உயல்-தவறுதல் என்றும் பொருள். அன்றி, இன்றி என்பவற்றில் முறையே பகுதிகளாகிய அன்மை இன்மை என்பன - ஒருபொருளைமறுத்து அதற்குஇனமானதைச் சொல்லுதலும், ஒருபொருளின் இல்லாமையைச்சொல்லுதலும் ஆகிய பொருள்வேறுபாடு உடையன. (எ)

கூடி. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(இ - ள்.) பற்று உள்ளம் என்னும்-(பொருளை விடத்தகுமிடத்துவிடாது) பற்றுதலைச்செய்யும் உள்ளமாகிய, இவறன்மை-உலோபத்தினது தன்மை,—எற்றுள்ளும் - (குற்றத்தன்மைகள்) எல்லாவற்றுள்ளும்வைத்து, எண்ணப்படுவது ஒன்று அன்று - எண்ணப்படுவதொன்றன்று: [மிக்கது]; (எ - று.)

இவறலது தன்மையாவது - குணங்களெல்லாம் ஒருங்கு உளவாயினும் அவற்றைக்கீழ்ப்படுத்துத் தான் மேற்படவல்ல இயல்பு; ஒழிந்தன அதுமாட்டாமையின், 'எற்றுள்ளுமெண்ணப்படுவதொன்றன்று' என்றார். 'எவற்றுள்ளும்' என்பது, இடைக்குறைத்துநின்றது.

இவையிரண்டுபாட்டானும், உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச்செய்யும் உள்ளம் - செல்வத்தைச் செலவிடுதற்கு அவசியமானவிடத்திலுஞ் செலவு செய்யாமல் அதனை மிகவிரும்பி இறுகப்பிடித்தலைச்செய்யும் கருத்து. இதனால், பற்றுள்ளமென்பது - காரணப்பெயரென்றும், வினைத்தொகைநிலைத் தொடர்மொழியென்றும், இதில் பற்றுதல் என்னும் வினைக்குப் பொருளை

யென்னுஞ் செயப்படுபொருள் வருவித்தல்வேண்டுமென்றும் அறிக. ஒன்றன்று, மிக்கது - சாதாரணமான ஒருகுற்றமன்று, எல்லாக்குற்றங்களினும் மிகப்பெரிதான குற்றம். இவறலது-லோபஞ்செய்தலின். ஒருங்கு உளவாயினும் - ஒருசேரஉள்ளனவாஞலும். ஒழிந்தன - அரிஷட்வர்க்கங்களுள் உலோபம் ஒழிந்த மற்றைக்குற்றங்கள். அதுமாட்டாமையின்-பிறகுணங்களையெல்லாங் கீழாக்கித் தானே மேலாகமாட்டாமையால். எற்றுள்ளும் என்பது-எவற்றுள்ளும் என்பதன் விகாரம். உம்மை-முற்றுப்பொருளது. இவறன்மை-இவறல்என்னுந் தொழிற்பெயரின்மேல், மை - தன்மைப்பொருளுணர்த்தும் விகுதி. எண்ணப்படுவது - சமமாகக் கணக்கிட்டு மதிக்கப்படுவது. (அ)

சகூ. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(இ - ள்.) எ ஞான்றுஉம் - (தான்) இறப்ப உயர்ந்தஞான்றும், தன்னை வியவற்க - (மதத்தால்) தன்னை நன்குமதியாதொழிக; நன்றி பயவா வினை - (தனக்கு) நன்மைபயவாவினைகளை, நயவற்க-(மானத்தால்) விரும்பாதொழிக.

தன்னைவியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும் 'எஞ்ஞான்றும் வியவற்க' என்றும், 'கருதியதுமுடித்தேவிடுவல்' என்று அறம்பொருள் இன்பங்கள்பயவா வினைகளை நயப்பின் அவற்றுல் பாவமும் பழியும் கேடும் வருமாகலின் 'அவற்றை நயவற்க' என்றுங் கூறினார்.

இதனுன், மத மானங்களின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) இறப்ப உயர்ந்த ஞான்றும் - எல்லாரினும் மிக அதிகமாக மேன்மையடைந்தபொழுதும். தன்னை நன்குமதியாது ஒழிக - தன்னைத் தானே மேன்மையாக எண்ணுதிருக்கக்கடவன். "தன்னைவியப்பிப்பான்தற் புகழ்தல் தீச்சுடர், நன்னீர்சொரிந்து வளர்த்தற்றுல்—தன்னை, வியவாமையன்றே வியப்பாவ தின்பம், நயவாமையன்றேநலம்" எனப் பின்னுலாரும் இக்கருத்தை விளங்க உரைத்திருத்தல் காண்க. நன்மையபயவா வினைகளை - நன்மையைத்தராத காரியங்களை. வியந்துழி-(தன்னை) நன்குமதித்தவிடத்து. இடமும் காலமும் வலியும்-தான் வெல்லக்கூடிய இடமும் தன்னைப்பகைவன் வெல்லக்கூடும் இடமும், தான்வெல்லக்கூடிய காலமும். தன்னைப்பகைவன் வெல்லக்கூடுங் காலமும், சேனைமுதலிய தனது பலமும் பகைவனது அப்பலமும். தன்னைத் தானே நன்குமதித்தால், இடம்முதலியனவெல்லாம் தன்னிடம் குறைவாகவும் பிறரிடம் அதிகமாகவும் இருந்தாலும், அவ்வுண்மை தோன்றுமல் எப்பொழுதுந்தன்னிடத்திலே சிறந்திருப்பனவாகவும் பகைவர் முதலிய பிறரெல்லாரிடத்தும் குறைந்திருப்பனவாகவுந் தோன்று மாதலால் 'அறியப்படாமையானும்' என்றார். தூரகங்காரமுடையவர் தரும அர்த்தங்களை எப்பொழுதும் அலட்சியஞ்செய்வராதலால், 'அறனும் பொருளும் இகழப்படுதலானும்' என்றது. எஞ்ஞான்றும் - எப்பொழுதும். கருதியது முடித்தே விடுவல் - எண்ணினகாரியத்தை நிறைவேற்றியேவிடுவேன். அறம்

பொருள் இன்பங்கள் பயவா வினைகளே - திரிவர்க்கத்தில் ஒருபுருஷார்த்தத் தையாயினுங் கொடுப்பதல்லாத காரியங்களே. நயப்பின்-விரும்பினுல். பழி - நிந்தனே. கேடு-செல்வம்முதலியன அழிதல். மதமானங்களின்-மதம் மானம் என்பவற்றின். வியவற்க, நயவற்க-எதிர்மறைவியங்கோள்; விய, நய - பகுதிகள். (கூ)

குசo. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(இ - ள்.) காதல - (தான்) காதலித்த பொருள்களே, காதல் அறியாமை - (அவர்) அக்காதலறியாமல், உய்க்கிற்பின்-அனுபவிக்கவல்லுயின், ஏதிலார் நூல்-பகைவர் (தன்னே வஞ்சித்தற்கு எண்ணும்) எண்ணம், ஏதில-பழுதாம்.

அறிந்தவழி அவைவாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமல் உய்த்தால், வாயிலின்மையின் வஞ்சிக்கப்படானென்பதாம்.

காமம் வெகுளி உவகை என்பன மூற்றக்கடியுங் குற்றமன்மையின், இதனுன், பெரும்பான்மைத்தாகிய காமம்நுகரும்ஆறுகூறி, ஏனைச்சிறுபான்மைய வற்றிற்குப் பொதுவகைவிலக்கினையே கொண்டொழிந்தார்.

(கு - ரை.) காதலித்தபொருள்கள் - விரும்பின விஷயங்கள். அவர் அக் காதலறியாமல் - பகைவர் அந்தத் தனது விருப்பத்தை அறியவொண் ணுதபடி. பழுதாம் - பயன்படாமல் வீணுகும். அறிந்தவழி - தான் விரும் பியபொருளைப் பகைவர் அறிந்த விடத்து. அவைவாயிலாகப் புகுந்து - அவ்விரும்பியபொருள் வழியாகப் பிரவேசித்து. உய்த்தால் - அனுபவித் தால். வாயில் இன்மையின் - அவர்நுழைதற்கு வழியில்லாமையால். மூற்றக் கடியுங்குற்றம் அன்மையின் - அரசர்க்கு முழுதும்ஒழிக்கத்தக்க குற்ற மாகா ததனுல். பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு - பெரும்பாலும் அரசர்க்கு உளதாவதான காமத்தைப் பகைவர்க்குத் தெரியாதபடி நிறை வேறச்செய்து கொள்ளவேண்டும் வழி. ஏனைச்சிறுபான்மையவற்றிற்கு - அரசரிடம்சிறுபான்மையுண்டாகும் வெகுளி உவகை என்னும் மற்றைக்குற் றங்களுக்கு. பொதுவகைவிலக்கு - கீழ்ஆறுபாடல்களிற்கூறப்பட்ட விலக்கு. விலக்கு தகாதென்பது: இதன்உடன்பாடு-விதியெனப்படும். காதல - காதல் என்னும் பெயரினடியாப் பிறந்த பலவின்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். காமம்வெகுளி உவகையென்பன அரசருக்கு அடியோடுஒழிக்கவேண் டியகுற்றங்களல்லாமையால், இக்குறளால் அரசர்க்குப் பெரும்பான்மையான காமத்தைப் பகைவரறியாமல் நுகரும் வகையைக்கூறி மற்றைச்சிறுபான்மை யான வெகுளிஉவகைகட்கு "தினைத்துணையாம் குற்றம் வரினும்" என்ற குறள்முதல் நான்குகுறளாற் கூறிய பொதுவகைவிலக்கினையே கொண்டார்: இங்குக் கூறிய வகையால், அரசர் பகைவரறியாமற் காமத்தை நுகரவேண்டு மென்பதும், வெகுளிஉவகைகளைப் பெரும்பாலும் நீக்கவேண்டுமென்பதும் பெறப்படும். ஏதில-ஏது இல: யாதும்பயனுடையன அல்ல. ஏதிலார்-ஏது இலார்: யாதொருசம்பந்தமு மில்லாதவர்; எனவே, பகைவராம். நூல் -

முதனிலைத் தொழிற்பெயர்; நூற்றல் - மிகுதியாக எண்ணுதல். பிறர்க்குத் தெரியாமல் ஏகாந்தமாகத் தாம் விரும்பின பொருள்களைப் பெற்று அனுபவிக்க வல்லாரைப் பகைவரால் வெல்லமுடியா தென்பது இதன்கருத்து. (௧௦)

சரு - ஆம் அதிகாரம்.—பெரியாரைத் துணைக்கோடல்.

அஃதாவது - மூவிருகுற்றமும் முறைமையிற்கடிதலின் காவற்சாகாடு உகைத்தற்குஉரியனான அரசன் தீநெறிவிலக்கிநன்னெறிச்செலுத்தும்பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். பேரறிவுடையராவார்-அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக்குற்றங்கள்வாராமற் காத்தற்குஉரிய அமைச்சர், புரோகிதர்.

(கு - ரை.) மூவிரு குற்றமும் - காமம் முதலிய ஆறு குற்றங்களையும். முறைமையின் கடிதலின் - நீதிநூல்முறைமைப்படி ஒழித்ததனால். காவற்சாகாடு உகைத்தற்கு உரியன் ஆய - இராச்சியத்தை ஆளுதற்றொழிலாகிய வண்டியைச் செலுத்துதற்கு உரியவனான. சாகாடு-சகடம், பண்டி. பேரறிவு-சிறந்தபுத்தி. கோடல் - கொள்ளுதல், தொழிற்பெயர். அதிகாரமுறைமை - கீழ் 'குற்றங்கடிதல்' என்னும் அதிகாரத்தின்பின் இவ்வதிகாரத்தை வைத்ததற்குக் காரணம். இதனானே-இங்குக்கூறியவிதத்தால். குற்றங்களையொழித்து ஆளுகைநடத்தும் அரசன் அதற்கு உதவியாகப் பெரியாரைத் துணைக்கொள்ளவேண்டுமாதலால், குற்றங்கடிதலின் பின் பெரியாரைத்துணைக்கோடல் வைக்கப்பட்டது. அங்கங்கட்கும்-நாடுமுதலிய ஐந்திற்கும், மானுடத்தெய்வக் குற்றங்கள்—மானுடக்குற்றம் - பகைவர் கள்ளர் முதலியோரால் நேர்வன; தெய்வக்குற்றம் - மிக்கமழை மழையின்மை முதலியவற்றால் நேர்வன: அவற்றை இவ்வதிகாரத்தின் இரண்டாம்பாட்டின் உரையில் விரித்துக்கூறுவர். அமைச்சர் - மந்திரிகள். புரோகிதர்-வருங்காரியஞ் சொல்பவரும், கிருத்தியஞ்செய்விப்பவருமாகிய பிராமணர். மந்திரியர், புரோகிதர், சேனாபதியர் தூதர், ஒற்றர் என்பவர் - அரசர்க்கு 'ஐம்பெருங்குழு' எனப்படுவர். இனி, பெரியார் என்பதில் - பொதுவாக அறிவு, பிராயம், ஒழுக்கம் இவற்றில் முதிர்ந்த ஞானவ்ருத்தர், வயோவ்ருத்தர், சீலவ்ருத்தர் என இவர் என்னும் பொருளும் அமையும்.

சசக. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(இ - ள்.) அறன் அறிந்து-அறத்தினது நுண்மையை அறிந்து, மூத்த-(தன்னின்) மூத்த, அறிவு உடையார் - அறிவுடையாரது, கேண்மை - கேண்மையை, (அரசன்), தேர்ந்து - (அதனது அருமையை) ஓர்ந்து, திறன் அறிந்து - (கொள்ளுந்) திறம்அறிந்து, கொளல் - கொள்க; (எ - று.)

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின், 'அறனறிந்து' என்றார். மூத்தல்-அறிவானும், சீலத்தானும், காலத்தானும் முதிர்தல். அறிவுஉடையார்-நீதியையும் உலகியலையும் அறிதலை யுடை

யார். திறன் அறிதலாவது - நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வரைநிற்றல் என்பன முதலாக அவர்பிணிப்புண்ணுந் திறன் அறிந்து செய்தல்.

(சு - ரை.) அறத்தினது நுண்மையை அறிந்து-தருமத்தினது சூட்சுமத்தைச்சாஸ்திரவிதியாலும் உலகநடையாராய்ந்தறியும்பயிற்சியாலும் உணர்ந்து. மூத்த - மேம்பட்ட. கேண்மை - தூணைமை; (ஒருவர்க்கொருவர் யோக க்ஷேமசமாசாரங்களைக்) கேட்குந்தன்மையுடைமையால், கேண்மையென்ற தூணைமைக்குப்பெயர்; இதனை - வினைப்பகுதியடியாப்பிறந்த பண்புப்பெயராகக் கொள்ளவேண்டும். அதனது அருமையை ஓர்ந்து - அப்படிப்பட்டபெரியவர்சினேகம் கிடைப்பதற்கருமையானதென்று அறிந்து. கொள்ளுந்திறமறிந்து கொள்க - பெறும்வழியறிந்து பெறுக. அறநுண்மை-தருமசூட்சுமம். நூலானேயன்றி - சாஸ்திரங்களினால் மாத்திரமே யல்லாமல். உய்த்துணர்வானும் - ஊகித்தறியும்விதத்தாலும். சீலம் - நல்லொழுக்கம். காலம் - பிராயம். அறிவுமுதலியவற்றால் முதிர்தல் - ஞானவருத்தரும், வயோவருத்தரும், சீலவருத்தரு மாதல். உலகியலையும் - உலகநடக்கையையும். நன்குமதித்தல் - அவர்கள்பெருமையைத் தான் நன்றாகஅறிதல். உயரச்செய்தல்-அவர்களைத் தான் மேன்மைப்படுத்தி உபசரித்தல். அவர்வரைநிற்றல் - அவர்கள் கூறியஎல்லையில் தான் நிற்பது. 'முதலாக' என்றதனால், தவறியபோது கண்டிக்கப்பட்டாலும்பணிந்திருத்தல் முதலியன. அவர்பிணிப்புண்ணுந்திறன் அறிந்து செய்தல் - அவர்கள் தன்பக்கல் அன்புகொண்டு தன்னைவிட்டுநீங்காமற் கட்டுப்பட்டிருக்கும்வழியை அறிந்து செய்தல். அறன், திறன் - மகரனகரம் மாறிவருஞ் சொற்கள். 'அறிந்து'என்னும் வினையெச்சம் இரண்டனுள் முன்னது - 'மூத்த' என்பதை யாவது, 'உடையார்' என்பதை யாவது கொள்ளும்; பின்னது - 'கொளல்' என்பதைக் கொள்ளும். திறனறிந்து தேர்ந்து - தேர்ந்து திறனறிந்து என மொழிமாற்றுக. கொளல் - வியங்கோள். சிறந்தஅறிவுடைய அமைச்சர் புரோகிதர் என்பவர் எந்தவழியால் தன்னிடம் பாசபந்தங்கொண்டு தன்னின் நீங்காதிருப்பரோ, அந்தவழியால் அவர்தொடர்ச்சியை அடையவேண்டு மென்பது கருத்து. (க)

சஅஉ. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(இ - ள்.) உற்ற நோய் - (தெய்வத்தானுக மக்களானுகத் தனக்கு) வந்த துன்பங்களை, நீக்கி - (நீக்கும்ஆறுஅறிந்து)நீக்கி, உறுமை - (பின்அப் பெற்றியன)வாராவண்ணம், முன் காக்கும் - முன் (அறிந்து)காக்கவல்ல, பெற்றியார் - தன்மையினையுடையாரை, (அரசன்), பேணி கொளல் - அவர்உவப்பனசெய்து (தூணையாகக்) கொள்க; (எ - று.)

தெய்வத்தான்வரும் துன்பங்களாவன - மழையினது இன்மைமிகுதிகளானும், காற்றுத் நீப் பிணி என்றிவற்றானும் வருவன: அவை-கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களான் வரும் துன்பங்களாவன - பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார்

என்றிவர்களான் வருவன; அவை - சாமபேத தான தண்டங்களாகிய நால் வகை உபாயத்துள் ஏற்றதனுல் நீக்கப்படும். முற்காத்தலாவது - தெய்வத் தான்வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து அச்சாந்திகளாற்காத்தலும், மக்களான்வருவனவற்றை அவர்குணம் இங்கிதம் ஆகாரம் செயல் என்பவற் றுன் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றுற் காத்தலுமாம்: ஆகவே, புரோகித ரையும் அமைச்சரையுங் கூறியவாறுயிற்று. இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம் - குறிப்பின்றிநிகழும் வேறுபாடு. உவப்பன - நன்குமதித்தல் முதலியன.

இவை யிரண்டுபாட்டானும், பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக்கோடல்வேண்டு மென்பதூஉம், கொள்ளுமாறும் கூறப்பட்டன.

(கு - ரை.) தெய்வத்தானுக மக்களானுக - தெய்வத்தாலாவது, மனித ராலாவது. நீக்கும்ஆறு-ஒழிக்கும்வழி. பின்பு அப்பெற்றியனவாராவண்ணம் - பின்பு அவ்வகைப்பட்ட தீங்குகள் வராதபடி. முன் - அவைவருதற்குமுன். அவர்உவப்பனசெய்து-அப்பெரியோர்கள்விரும்பிமகிழத்தக்க காரியங்களைச் செய்து.மழையினது இன்மைமிகுதிகள்-அநாவிருஷ்டியும் அதிவிருஷ்டியும். மழையில்லாமை முதலிய தெய்வக்குற்றங்கள் அத்தேவர்களைக் குறித்தும் அந்தணர்முதலிய சான்றோரைக்குறித்துஞ் செய்யும் யாகம் திருவிழா விசேட பூசை தானம் முதலிய சாந்திகளால் ஒழிக்கப்படு மென்பது நூற்கொள்கை. கடவுளர் - தேவர். தக்கோர்-தகுதியுடையவர், சான்றோர். சாந்தி-தீவினைப் பரிகாரத்தின் பொருட்டுச்செய்யும் வைதிகச்சடங்கு. சுற்றத்தார்-உறவினர். வினைசெய்வார் - தொழில்செய்யும் பரிவாரசனங்கள். சாமம் - சமாதானத் தாற்காரியங்கொள்ளுதல். பேதம் - பிறரைப் பிரித்துக் காரியங்கொள்ளுதல். தானம் - பொருள்கொடுத்துக் காரியங்கொள்ளுதல். தண்டம் - சேனையையும் ஆயுதங்களையும் உபயோகித்துக் காரியங்கொள்ளுதல். இந்நான்குஉபாயமும் அரசர்க்கு இன்றியமையாதனவாம். ஏற்றதனுல் - இடத்திற்கும் காலத்திற்கும் காரியத்திற்குந் தக்க உபாயத்தால். உற்பாதம் - உத்பாதம்: பின் நிகழஇருக்குந் தீங்கை முன்அறிவிக்குந் தூர்நிமித்தம். தெய்வத்தால்வருந் துன்பங்களைச் சாந்திசெய்துநீக்குபவர் புரோகிதராயும், மக்களால்வருந் துன் பங்களை நால்வகை யுபாயங்களுள் ஒன்றுல் நீக்குபவர் அமைச்சர்களாயும் இருத்தலால் 'ஆகவே அமைச்சரையும் புரோகிதரையும் கூறியவாறுயிற்று' என்றது. குறிப்பால் நிகழும் உறுப்பின்தொழில் - முகம் கண் கை முதலிய உறுப்புக்களின் செய்கையால் குறிப்பாகத் தெரிவிப்பது. ஆகாரம்-அவரவரு டைய குறிப்பில்லாமலே தானுகவே முகத்திலும் உடம்பிலும் தோன்றும் வேறுபாடு. இங்கிதமறிதலினும் ஆகாரமறிதல் அரிது. நன்குமதித்தல் முதலி யன-கீழ்க்கவியுரையிற்கூறியவை. கொள்ளும்ஆறு - கொள்ளும் வழி. உரு அமையென்னும் எதிர்மறைவினையெச்சம், செய்யுளோசை நிறைத்தற்கு அளபெடுத்தது. முன் - காலமுன். பெற்றியார்ப்பேணி-உயர்திணையில் இரண்டனுருபு தொக்கது. திறனறிதலில் நன்குமதித்தல்இதனுற்கூறப்பட்டதென்ன லாம்.

சசஙூ. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(இ - ள்.) பெரியாரை - அப்பெரியவர்களை, பேணி - அவர் உவப்பன அறிந்துசெய்து, தமர் ஆ கொளல் - தமக்குச் சிறந்தாராகக்கொள்ளுதல்,—அரியவற்றுள் எல்லாம் அரிது-(அரசர்க்கு)அரியபேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது; (எ - று.)

உலகத்து அரியனஎல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்தது என்றது, இதனால் அவையெல்லாம் உளவாதல் நோக்கி.

(கு - ரை.) சிறந்தாராக-மேம்பட்ட துணைவராக. அரியபேறுகள்-கிடைத்தற்கு அருமையான பாக்கியங்கள். அரிது-அருமையானது. உலகத்து அரியனவெல்லாம் - உலகத்திலே பிறர்க்குப் பெறுதற்கருமையான பொருள்க ளெல்லாவற்றையும். இப்பேறு - பெரியாரைப்பேணித் தமராக்கொளலாகிய இத்தப்பாக்கியம். பெரியாரைப்பேணித் தமராகக் கொண்டால், கொள்வார்க்கு, உலகத்து அரிய பொருள்களெல்லாம் எளியனவாகு மென்பதாம். இக்குறளை 'நவின்றோர்க்கினிமை' என்னுந் தந்திரகுணத்துக்கு உதாரணங் காட்டினர், வீரசோழியவுரையில். நிறனறிதலில், உயரச்செய்தல் இதனுட் கூறப்பட்டதென்னலாம். (கூ)

சசஙூ. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(இ - ள்.) தம்மின் பெரியார் - (அறிவு முதலியவற்றால்) தம்மின்மிக்கார், தமர் ஆ - தமக்குச்சிறந்தாராக, ஒழுகுதல்-(தாம் அவர்வழிநின்று) ஒழுகுதல்,—வன்மையுள் எல்லாம் தலை - (அரசர்க்கு)எல்லாவலியுடைமையினுந் தலை; (எ - று.)

பொருள் படை அரண்களான்ஆய வலியினும் இத்துணைவலி சிறந்தது என்றது, இவர் அவற்றால் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்.

(கு - ரை.) தம்மின்மிக்கார் - தம்மைக்காட்டிலும் மேம்பட்டவர். சிறந்தாராக - சிறந்ததுணைவராகும்படி. அவர்வழிநின்றுஒழுகுதல் - அவர்கூறிய நல்வழியில் நடத்தல். வலியுடைமை - பலமுள்ள பொருள்கள். தலை - மேலானது. பொருள் - செல்வம். படை - சேனை; ஆயுதமுமாம். அரண் - கோட்டை மதில் அகழி முதலிய காப்புக்குரியன. இத்துணைவலி - பெரியாரைத் துணைக்கொள்ளுதலால் உளதாகும் இவ்வலிமை. இவர் - பெரியார். அவற்றால் - பொருள்முதலியவற்றால். மனிதராலுண்டாந்துன்பங்களோமாத்திரமே ஒழித்தற்குரிய பொருள்முதலியவற்றினும் தெய்வத்தாலுண்டாந்துன் பங்களையும் ஒழித்தற்குரிய பெரியவர் சிறந்தவரென்பதாம். அத்துன்பங்கள், சசஉ - ஆஞ் செய்யுளுரையிற் கூறப்பட்டன. வன்மை - வலிமையுடைய பொருள் முதலியவற்றிக்குப் பண்பாகுபெயர். இதனால், நிறனறிதலில் அவர்வரைநீற்றல் கூறப்பட்டதென்னலாம். (ஙூ)

சசரு. சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(இ - ள்.) சூழ்வார் கண் ஆக ஒழுகலான் - (தன்பாரம்) அமைச்சரைக் கண்ணுகக்கொண்டு நடத்தலான், —மன்னவன் - அரசன், —சூழ்வாரை - (அத்தன்மையராய) அமைச்சரை, சூழ்ந்து - ஆராய்ந்து, கொளல் (தனக்குத் துணையாகக்) கொள்க; (எ - று.)

இரண்டாவது, விகாரத்தால் தொக்கது. தானே சூழவல்லனாயினும் அளவிறந்ததொழில்களான் ஆகுலமெய்தும் அரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரா னல்லது இனிதுநடவாமைபற்றி, அவரைக் கண்ணுதக் கூறினார். ஆராய்தல்-அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தினரென்பதனை ஆராய்தல்.

இவைமூன்றுபாட்டானும், பெரியாரைத்துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) தன்பாரம் - தனதுராச்சியபாரம், அரசாட்சிப்பொறுப்பு. அத்தன்மையராய - எல்லாவுறுப்புக்களினுஞ்சிறந்த கண்போல எல்லா அங்கங்களுள்ளுஞ் சிறந்தவராய்த் தனக்கு இன்றியமையாத. இரண்டாம் வேற்றுமையுருபு தொகுத்தல் விகாரப்பட்டது, இக்குறளின்முதலில் 'சூழ்வார்' என்னும்உயர்திணைப்பெயரின் இறுதியில்: இனி, இதனை முதல்வேற்றுமையாகவேகொண்டு, சூழ்பவர்கள் தனக்குக் கண்ணுக இருக்கத் தான் நடத்தலால் என்றும் உரைக்கலாம். பிராணிகள் வழிமுதலியன அறிந்துநடத்தல்முதலிய தொழில்செய்தற்குக் கண்ணே சிறந்ததுணையாக இருத்தல்போல, அரசர் சாமம் முதலிய எற்றவுபாயமறிந்து பொருதல் முதலிய தொழில் செய்தற்கு அமைச்சரே சிறந்த துணைவ ரென்க. "ஒற்றர் தங்களை யொற்றினுய்த்தலும், கற்றமாந்தரைக்கண் ணெனக்கோடலும், சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலுஞ் சூதரோ, கொற்றங்கொள்குறிக்கொற்றவர்க்கென்பவே" என்பர் திந்தா மணியாரும். கண் தன்னை யுடைய பிராணியின் உடம்பைக் காத்தலில் மிக்க கவனமுடைத்தா யிருத்தல்போல, அமைச்சர் தம்மையுடைய அரசனைக் காத்தலில் மிக்கக்கருத்துடையவ ரென்க. சூழ-ஆலோசித்தறிய. அளவிறந்த தொழில்களான் ஆகுலம் எய்தும் அரசன் பாரம் - அளவில்லாத பல வேலைகளாற் கவலையடைகிற அரசனது இராச்சிய பாரம். அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது - ஆலோசித்தலேயே தமக்கு வேலையாகவுடைய மந்திரிகளா லல்லாமல். அவரை - மந்திரிகளை. அமைச்சியல் - மேல் சுச - ஆம் அதிகாரம்முதல் பத்துஅதிகாரங்கள். இலக்கணம் "கருவியுங் காலமுஞ்செய்கையுஞ் செய்யும், அருவினையு மாண்ட தமைச்சு" என்றது முதலியன. அவரை அரசர் ஆராயும்விதம், மேல் (நிக) 'தெரிந்துதெளிதல்'என்னும் அதிகாரத்திற் கூறப்படும். 'தெரிந்துதெளிதலாவது - அமைச்சர்முதலாயினரைப் பிறப்பு குணம் அறிவு என்பனவற்றையும், செயலையும், காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்துதெளிதல்'என்று உரைப்பர். சூழ்வார்-

ஆலோசிப்பவர்கள் என மந்திரிகளுக்குத் தெரிநிலைவினையாலணையும்பெயரர்கிய காரணக்குறி. 'இக்குறளில், சூழ்வார்கண்ணாக ஒழுகலேபொருளாகச் சூழ்வாரைச் சூழ்ந்துகொளல் என்று ஏதுநாட்டிச்சொன்னமையால், ஏது அலங்காரமாயிற்று; ஏதுவென்னும் அலங்காரமாவது - கூறியபொருளுக்குக் காரகம் ஞாபகம் ஆதியான ஏதுச்சொல்லுதல்: "இப்படியாதலின் இப்படியாயிற்று, என்னக்கிளப்பது ஏதுவாகும்" எனக்கொள்க' என்பது, வீரசோழியவுரை. (௫)

௪௪௬. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

(இ - ள்.) தக்கார் இனத்தன் ஆய் - தக்காராகிய இனத்தையுடையனாய், தான் ஒழுகவல்லானை - தானும் (அறிந்து) ஒழுகவல்ல அரசனை, செற்றார் - பகைவர், செய கிடந்தது - செய்யக்கிடந்தது ஒரு துன்பமும், இல் - இல்லை; (எ - று.)

தக்கார் - அறிவுஒழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல் - அறநீதிகளின் நெறி வழுவாமல் நடத்தல். 'வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறு பகைவிளைத்தல் என்றிவற்றானும் வலியானும் பகைவர் செய்யுந்துன்பங்கள் பலதிறத்தவாயினும், தானும் அறிந்து அறிவார்சொல்லுங்கொண்டு ஒழுகுவான்கண் அவற்றுள்ஒன்றும் வாராது' என்பார், 'செற்றார்செயக்கிடந்தது இல்' என்றார்.

(கு - ரை.) தக்காராகிய இனம் - தகுதியுடையவராகிய துணைவர். செற்றார் என்பதில், செறு - பகுதி: செறுத்தல் - பகைத்தல். அறநீதிகள் - தருமமும் நீதியும். நெறி வழுவாமல் - முறைமை தவறாமல். வஞ்சித்தல் - தமதுபொருள் ஆநிரை முதலியவற்றை வஞ்சனையாற் கவர்ந்துகொள்ளுதல். கூடினரைப் பிரித்தல் - தம்மோடுசேர்ந்து உதவியாகுபவரைத் தம்மைவிட்டுப் பிரியச்செய்தல்; பாரதத்திலே பாண்டவர்க்குப் போர்த்துணையாகவந்த அவர்மாமனான சல்லியனைத் துரியோதனன் தான் வஞ்சனையாக அன்னமிட்டு அவரினின்று பிரித்துத் தனக்குத் துணையாக்கிக்கொண்டதுபோல்வன. வேறுபகைவிளைத்தல் - வேறுசில பகைவர்களை யுண்டாகச்செய்தல்; துரியோதனன் பாண்டவர் கரந்துறைதலையறிதற் பொருட்டுப் போர்செய்யுமாறு திரிகர்த்தரைத்தூண்டியது போல்வன. வலி - தேகபலம், ஆயுதபலம், சேனாபலம், வரபலம், சகாயபலம் முதலியன. பலதிறத்த - பலவகைப்பட்டன. அறிவார்சொல்லும் கொண்டு ஒழுகுவான்கண் - நுண்ணறிவுடையபெரியாரதுசொல்லையுங்கேட்டு அங்கீகரித்துநடக்கும் அரசனிடத்து. அவற்றுள் - அத்துன்பங்களுள். (௬)

௪௪௭. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

(இ - ள்.) இடிக்கும் துணையாரை - (தீயனகண்டால்) நெருங்கிச்சொல்லுந் துணையாந்தன்மையையுடையாரை, ஆள்வாரை - (இவர் நமக்குச்சிறந்

தாரென்று) ஆளும்அரசரை, கெடுக்கும் தகைமையவர் - கெடுக்கும் பெருமை யுடையபகைவர், யார் - (உலகத்து) யாவர்? (எ - று.)

தீயன - பாவங்களும், நீதியல்லனவும். துணையாந்தன்மையாவது - தமக்கு அவையின்மையும், அரசன்கண் அன்புடைமையுமாம். அத்தன்மையுடையார் நெறியின் நீங்கவிடாமையின் அவரைஆளும்அரசர் ஒருவரானுங்கெடுக்கப்படாரென்பதாம். 'நெருங்கிச்சொல்லும் அளவினோரை' என்று உரைப்பாரும்உளர்.

இவையிரண்டு பாட்டானும், அதன்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) நெருங்கிச்சொல்லும் - வற்புறுத்திக்கூறும். ஆளும் - தமக்கு வேண்டியவராகக்கொள்ளும். தமக்கு அவையின்மை - தம்மிடம் அத்தீயவற்றை உடைத்தாகாமை. நெறியின் நீங்கவிடாமையின் - அரசரைச் சன்மார்க்கத்தினின்று நீங்கும்படி விட்டிடாராதலால். முதல் உரையில் 'துணை' என்பதற்கு உதவியென்ற பொருளும், இரண்டாம்உரையில் 'துணை'என்பதற்கு - அளவுஎன்றபொருளுமாகிய வேறுபாட்டைஅறிக. நெருங்கிச்சொல்லும் அளவினோரை - உறுத்திஉறுதிமொழி கூறுதல்மாத்திரத்தையுடையவரையென்றுபொருள்; இப்பெரியார் வேறுஓர் உதவியும் தம்செயலால் அரசர்க்குச்செய்யாராயினும், இங்ஙனம் சங்கடகாலத்தில் இடித்துக்கட்டுரைகூறுதல் மாத்திரமே அவரை காத்தற்கு அமையு மென்பார், 'அளவினோரை' என்றாரென்க. உரைப்பாரும் உளர்-உரைசொல்பவர்களும்உண்டு;என்றது,பிறஉரையாசிரியரை. அதன்பயன்-பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் பிரயோசனம். மேல் 'அமைச்சு'என்னும் அதிகாரத்தில் ''அறிகொன்றறியானெனினு முறுதி, யுழையிருந்தான்கூறல்கடன்'' என்பதனாலும், அரசன் அறிந்தார் சொல்லையுங்கேளாது தானும்அறியாதவனாயிருந்தாலும் அமைச்சர் விடாது உறுதியாயினகூறவேண்டுதல் முறைமையாதலை அறிக. யானை மதக்களிப்பு உடையதாய்த் தீவழிச்சென்றால் அதனை அங்குசம்இடித்து அவ்வழிவிலக்கி நல்வழிச்செலுத்தல்போல, அரசன் செல்வச்செருக்குடையனாய்க் கொடுநெறியொழுகினால் அவனை அமைச்சர் இடித்துப்புத்திசொல்லி அவ்வழிவிலக்கி நல்லநெறிச்செலுத்த வேண்டு மாதலால், 'இடிக்குந்துணையாரை' எனப்பட்டது. யார் என்ற வினாவினைக்குறிப்புமுற்று, எவருமில்லையென எதிர்மறைப் பொருள்விளக்கிற்று. (எ)

சசஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(இ - ள்.) இடிப்பாரை - கழறுதற்குஉரியாரை, இல்லாத-(தனக்குத்) துணையாகக் கொள்ளாமையின், ஏமரா - காவலற்ற, மன்னன் - அரசன், கெடுப்பார் இல் ஆன்உம்-(பகையாய்க்) கெடுப்பார் இல்லையாயினும், கெடும் - (தானே) கெடும்; (எ - று.)

இல்லாத, ஏமரா என்பன - பெயரெச்சவடுக்கு. கெடுப்பார்உளராவர் என்பது தோன்ற, 'இலானும்' என்றார். தானே கெடுதலாவது - பாகனில்லாத யானைபோல நெறியல்லாநெறிச்சென்று கெடுதல்.

(கு - சை.) கழறுதற்கு உரியார் - நெருக்கி உறுதிச்சொல் உரைக்கத் தக்க பெரியோர். காவலற்ற - தன்னைக்காவல்செய்பவ ரில்லாத. இல்லாத, ஏமரா என்னும் எதிர்மறைப்பெயரெச்சங்கள் இரண்டும், அடுக்கி, 'மன்னன்' என்னுங் கருத்தாப்பெயர் கொண்டன; "மூவா முதலா வுலகம்" என்னுஞ் சிந்தாமணியிற்போல. 'கெடுப்பாரிலானும்' என்றவும்மை உயர்வுசிறப்புப் பொருள்வகையால், இப்படிப்பட்டவனுக்குக் கெடுக்கும்பகைவர் பலர் உள்ளரா வரென்னும்எதிர்மறைக்கருத்தை விளக்கிற்று. அரசனுக்கு யானையையும் மந்திரிகளுக்குப் பாகனையும் உவமைகூறியதனால், மந்திரிகள் அரசனைத் தம்வழித்திருப்புதற்குக் கூறும் இடித்துரையைப் பாகன் யானையைத் தன் வழிப்படுத்தற்குஉபயோகிக்கும் அங்குசமாகக் கொள்க. நெறியல்லாநெறிச் சென்றுகெடுதல்- நல்வழியல்லாத கெட்டவழியிலே சென்று(பிறரையுங்கெடுத்துத்) தானும்அழிதல். இன்மை - செயப்படுபொருள்குன்றுவினையு மாகுதலால், 'இடிப்பாரையில்லாத' எனப்பட்டது. ஏமா என்னும் வினைப்பகுதியினின்று ஏமாத என்னும் எதிர்மறைப்பெயரெச்சம் பிறந்தது: ஏமாத்தல் - காவலுடைத்தாதல்; ஏமம் மருவு என்பன ஏமரு என மரூஉவிப் பகுதியாயிற் றென்றலும் உண்டு. 'இடிப்பாரையில்லாதவேமராமன்னன்' என்பதை மறையாயடுக்கலுக்கு உதாரணங்காட்டினர், இலக்கணக்கொத்து உரையில். (அ)

சசக. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(இ - ள்.) முதல் இலார்க்கு-முதற்பொருள் இல்லாத வணிகர்க்கு, ஊதியம் இல்லை-(அதனால் வரும்) ஊதியம் இல்லையாம்; (அதுபோல), மதலை ஆம் சார்பு இலார்க்கு - தம்மைத்தாங்குவதாந் துணையில்லாத அரசர்க்கு, நிலை இல்லை - (அதனால்வரும்) நிலையில்லை; (எ - று.)

முதலைப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டு மென்பதாம். நிலை - அரசர் பாரத்தோடு சலியாது நிற்றல்.

(கு - சை.) முதற்பொருள் - மூலதனம்: வியாபாரஞ்செய்தற்குமுதலிற் கொள்ளும் பொருள். வணிகர் - வியாபாரஞ்செய்பவர். அதனால் வரும் ஊதியம் - அம்முதற்பொருள் காரணமாக உண்டாகும் பொருளிலாபம். மதலை யென்றசொற்கு - தூணென்பது பொருள். அது இங்கே, இலக்கணையால் அதுபோலத் (தம்மைத்) தாங்குவ தென்றபொருளேஉணர்த்திற்று. அதனான் வருநிலை - அத்தூணவலியால் உளதாகும் உறுதிப்பாடு. இலாபப்பொருளுக்கு முதற்பொருள் இன்றியமையாத காரண மாமாறுபோல, அரசர்நிலைக்குப் பெரியார்தூணை இன்றியமையாதகாரணமென்க. பாரத்தோடு சலியாது நிற்றல் - இராச்சியபாரத்தைத்தாங்குதலுடனே சோர்வின்றிநிற்பது. சார்பு - சார்வதாகிய தூணுக்குத் தொழிலாகுபெயர்; இதில், பு - தொழிற்பெயர் விகுதி. நிலை - நில்என்பதன்மேல் 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெய ரென்றுவது, நிலைமை யென்னும் பண்புப்பெயரின்விகாரமென்றுவது கொள்க.

இப்பாட்டில், உபமானத்தையும் உபமேயத்தையுந் தனித்தனி வேவ்வேறு வாக்கியங்களாகக் கூறிநிறுத்தி இடையில் 'போல' முதலிய உவமவுருபு தொடாமற் கூறியது - எடுத்துக்காட்டுவமையணி. இப்பாட்டில், உபமானத்தால், வணிகர் இலாபத்தினும் முதலைப் பிரதானமாகக் கருதவேண்டுதல் போல, அரசர் தம்மிலையினுந் துணைவலியைப் பிரதானமாகக் கருதவேண்டுமென்னுங் கருத்துத் தொனிக்குமாறுங் காண்க. (கூ)

சருo. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(இ - ள்.) பல்லார் பகை கொளலின் - (தான் தனியனுய்வைத்துப்)பல ரோடும் பகைகொள்ளுதலின், பத்து அடுத்த தீமைத்து-பதிற்றுமடங்குதீமை யுடைத்து:—நல்லார் தொடர் கைவிடல் - (அரசன்) பெரியாரோடு நட்பினைக் கொள்ளாதொழிதல்; (எ - று.)

பலர் பகையாயக்கால் "மோதி முள்ளொடு முட்பகைகண்டிடல், பேது செய்துபிளந்திடல்" என்பவையல்லது*ஒருங்குவினையாக்குறித்துச் செய்தாலும், ஒருவாற்றுன் உய்தல்கூடும்; நல்லார்தொடர்கைவிட்டால் ஒருவாற்றுனும் உய்தல் கூடாமையின், இதுசெய்தல் அதனினுந் தீது என்பதாம். இவைமூன்றுபாட்டானும், அதுசெய்யாதவழிப் படுங்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) தனியனுய்வைத்து - துணையொருவருமில்லாமல் தனிப்பட்டவனுயிருந்து. பதிற்றுமடங்கு - பத்துப்பங்கு அதிகமான. பலர் பகையாயக்கால் - அநேகர் ஏகாலத்தில் விரோதிகளானால். "மோதிமுள்ளொடு" என்ற மேற்கோள் - சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், (கூஉ) "தீதியாலறுத்தந்நிதியீட்டுதல், ஆதியாயவரும்பகைநாட்டுதல், மோதிமுள்ளொடு முட்பகைகண்டிடல், பேதுசெய்துபிளந்திடல்பெட்டதே" என்ற செய்யுளிலுள்ளது; 'முள்ளைக்கொண்டு முள்ளைக்களையுமாறுபோலத் தமக்குப் பகைவராய் அவர்க்குள் ஒருவரோடு ஒருவர் உறவாயிருப்பவிருவரை மித்திரபேதஞ்செய்து அவர்களில் ஒருவரைக்கொண்டு மற்றொருவரை அழித்திடுதலும், ஒருவரோடொருவர் கூடிவந்து தம்முடன் எதிர்க்கத்தக்கவரைப் பிரித்துத் தம்மோடுசேர்த்துக்கொள்ளுதலும் அரசர் விரும்புங் காரியம்' என்பது, இம்மேற்கோளின்பொருள். என்பவையல்லது - என்கின்ற இவ்வகைகளாலல்லாமல். ஒருங்கு வினை ஆக் குறித்துச்செய்தாலும்-ஒரேசமயத்தில் அந்தப் பகைவரெல்லாரோடும் போர்த்தொழில் நடக்க ஆலோசித்துச் செய்தாலும். ஒருஆற்றுன் உய்தல்கூடும் - ஒரு வகையால்தப்பிப்பிழைக்கக்கூடும். இது செய்தல் - நல்லார்தொடர்கைவிடல். அதனினும் தீது - பல்லார்பகை கொளலினும் மிகத்தீயது. அதுசெய்யாத வழிப் படும் குற்றம்-பெரியாரைத் துணைக்கொள்ளாதவிடத்து உண்டாகுங்குற்றம். பகை - பகைமை என்னும் பண்பினடி; தொழிற்பெயராய், பகு ஐ எனப் பிரித்து, பகுதல் - மாறுபடுதலென்றுங் கொள்ளலாம். பத்துஎன்றது, இங்கே பலவென்றமாத்திரமாய்

* பீ - மீ: ஒருங்குவினையாக்குதல் தீது: செய்தாலும்

நின்றது. தொடர்-தொடர்ச்சி: முதனிலைத்தொழிற்பெயர். கைவிடல், கை தமிழ்உபசருக்கம். (கo)

சுசு - ஆம் அதிகாரம்.—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது - சிறியஇனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது - நல்லதன்நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும், விடரும், தூர்த்தரும், நடரும் உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத்துணைக்கோடல் பயனின்றுஎன்பது உணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) சிறியஇனத்தைப் பொருந்தாமை - அற்பசகவாசஞ்செய்யாமை. நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல் என்போர் - இயற்கையில் நல்லதாயுள்ள பொருளின் நன்மையையும் தீயதாயுள்ளபொருளின் தீமையையும் இல்லையென்று எண்ணுபவரும் சொல்லுபவரும். "நல்லத னலனுந் தீயதன்றீமையும், இல்லையென்போர்க்கினஞஇலியர்" என்பது, புறநானூறு, 29-இல் வருவது. விடர் - தீயொழுக்கமுடைய காமுகர். தூர்த்தர் - வஞ்சகர். நடர் - கூத்தர். உள்ளிட்டகுழு-இவர்களைஉட்கொண்ட கூட்டம்; இவர்களை முதலாகவுடைய சமூகமென்றபடி. அறிவைத் திரித்து - தமது நல்ல புத்தியைக் கெட்டபுத்தியாக வேறுபடுத்தி. இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய - இம்மைமறுமை யென்னும் இரண்டிடத்தும் தம்மைத் தீமையடையச்செய்யுந் தன்மையதான. அதனை - அத்தீயகூட்டத்தை. ஒருவன் பெரியாரைத்துணைவராகக்கொண்டாலும் ஒருபக்கத்தில் சிறிய இனத்தாரையுஞ் சேர்ந்திருப்பானுயின் அப்பெரியாரைத்துணைக்கொண்டதனலுண்டாகும்பயன் இல்லையாமென்பதை அறிவித்தற்கு, சிற்றினஞ்சேராமையென்னும் இவ்வதிகாரத்தைப் பெரியாரைத்துணைக்கோடலென்னும் அதிகாரத்தின் பின் வைத்தார். கீழ் அதிகாரத்தில் 'தக்காரினம்' என்றதற்கு இது எதிராம். மேல் "நகைவகையராகிய நட்பிற்பகைவராற், பத்தடுத்த கோடியுறும்"என வருங் குறளில் 'அந்நட்பாவது - விடமருந் தூர்த்தரும் வேழம்பரும் போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண்டு ஒழிவாரோடு உளதாயது' எனப் பரிமேலழகர் உரைப்பதும் அறிக. சிறுமை + இனம்=சிற்றினம்; பண்புப்பெயர், ஈறு போய்த் தன்னொற்றிரட்டிற்று.

சுடுக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(இ - ள்.) பெருமை - பெரியோரியல்பு,—சிறு இனம்-சிறியஇனத்தை, அஞ்சும் - அஞ்சாநிற்கும்; சிறுமை - (ஏனைச்) சிறியோரியல்பு,—தான் சுற்றம் ஆ சூழ்ந்துவிடும் - (அதுசேர்ந்தபொழுதே அதனைத்) தனக்குச் சுற்றமாக எண்ணித்துணியும்; (எ - று.)

தத்தம்அறிவுதிரியுமாறும் அதனுல் தமக்குவருந்துன்பமும் நோக்கலின் 'அறிவுடையார்அஞ்சுவர்' என்றும், அறிவொற்றுமையாற்பிறிதுநோக்காமை

யின் 'அறிவிலாதார் தமக்குச்சுற்றமாகத்துணிவர்' என்றும் கூறினார். பொருளின் தொழில்கள், பண்பின்மேல் நின்றன.

இதனுள், சிறியஇனம் பெரியோர்க்குஆகாது என்பது கூறப்பட்டது.

(சு - ரை.) ஏனை - மற்றை. அது - அச்சிறியஇனம். அதனை - அச்சிற்றினத்தை. சுற்றமாகஎண்ணித்துணியும் - இஷ்டபந்துவர்க்கமாக நிச்சயமாக்கருதும். அற்பசகவாசத்திற்கு அறிவுடையார் அஞ்சுதற்குக்காரணம், அவர்களறிவுகெட்டதும் தமது அறிவுகல்லதுமாய் வித்தியாசப்படுதலையும், அதனால் தமதுகல்லறிவு மாறிப்போகுமென்பதையும், அதனால் தமக்குத்துன்பமுண்டாகு மென்பதையும் அறிதல். அவ்வற்பசகவாசத்திற்கு அறிவிலாதார் அஞ்சாமைக்குக் காரணம், தமது அறிவும் அவர்களதுஅறிவும் இரண்டுங் கெட்டதேயாய்ப் பேதப்படாதிருத்தலும், அதனால் பேரினத்தின் பெருமையை அறியாமையும், சிற்றினச்சேர்க்கையாலுண்டாகுங் குற்றத்தை யுணராமையும். பெருமையுடையாரது தொழிலாகிய சிற்றினமஞ்சுதலைப் பெருமைமேலேற்றியும், சிறுமையுடையாரது இயல்பாகிய சுற்றமாச்சூழ்ந்துவிடுதலைச் சிறுமைமேலேற்றியும் இங்ஙனம் பண்பியின்தொழில் பண்பின்மேல்வைத்து உபசாரவழக்காகக் கூறப்பட்டதை 'பொருளின்தொழில்கள் பண்பின்மேல் நின்றன' என்றார். சிற்றினம் என்பதை எடுத்துப் பின்வாக்கியத்திலுங் கூட்டுக. சுற்றம்-உரியகாலங்களில் வந்து ஒருவனைச் சுற்றிநிற்பது என பந்துஜநத்திற்குக் காரணக்குறி: அம்-கர்த்தாப்பொருள்விகுதி. சூழ்ந்துவிடும்-ஒருசொல்; இதில், 'விடு' என்னுந் துணைவினை - துணிவுப்பொருளை விளக்கிற்று. சூழ்ந்து விடும் என இரண்டாப் பிரித்து, விடும் - பெரியோர்சேர்க்கையை நீங்கும் என்றும் உரைக்கலாம். (க)

சடுக. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(இ - ள்.) நிலத்து இயல்பான் - (தான் சேர்ந்த) நிலத்தினது இயல்பானே, நீர்—, திரிந்து-(தன்தன்மை)திரிந்து, அற்று ஆகும்-அந்நிலத்தின் தன்மைத்தாம்; (அதுபோல),மாந்தர்க்கு—, இனத்து இயல்பு-(தாம் சேர்ந்த) இனத்தினது இயல்பானே, அறிவு - அறிவும், அது ஆகும் - (தன்தன்மை திரிந்து) அவ்வினத்தின் தன்மைத்தாம்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கண் தன்தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனிநிலைக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிறஇனத்தோடு சேர்ந்தவழிக் காட்சிமுதலிய தொழில்கள் திரியும் என, இதனுள், அதனது காரணம் கூறப்பட்டது.

(சு - ரை.) தன்மை - குணங்கள். திரிந்து-மாறி. மாந்தர்-மனிதர். விசும்பின்கண் - மேகத்தில். தன்தன்மைத்தாய - நிலத்தின் சம்பந்தமின்றித் தன்னியற்கையாகவேயிருந்த. சுவை-ஊறு முதலிய என்றதனால், தண்மை, வெம்மை,ஆரோக்கியம்,ஆரோக்கியமின்மை இலேசு கனம்முதலியனகொள்க;

"அப்பென்றும் வெண்மையதாயினுமாங்கு நிலத்தியல் பாய்த், தப்பின்றியே குணவேற்றுமை தான்பலசார்தலினால்" என்றார் பட்டினத்தடிகள். தனிநிலைக் கண் - ஒருவரோடுஞ் சேராமல் தனித்திருக்கும்பொழுது. பிறஇனத்தோடு சேர்ந்தவழி - வேறுகூட்டத்தோடு சேர்ந்தவிடத்து. காட்சிமுதலிய தொழில்கள் - பொருள்களின் இயற்கையைக் காணுதல் கருதுதல் முதலிய தொழில்கள். திரியும் - மாறுபடும். இதனான் - இக்குறளால். அதனது காரணம் - சிற்றினஞ்சேர்தல் ஆகாதென்றதன் ஏது. இனி, இப்பாடலை ஒருவாக்கியமாக வேகொண்டு, மனிதர்க்குத் தாம்சேர்ந்த இனத்தின்தன்மையால் அப்படிப்பட்டதாக மாறுபடும் அறிவு தான்சேர்ந்தநிலத்தினது தன்மையால் நீர்மாறுபட்டாற்போன்றதா மென உவமையணியாகவும் உரைக்கலாம். (உ)

சருகு. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னு னெனப்படுஞ் சொல்.

(இ - ள்.) மாந்தர்க்கு—, உணர்ச்சி - பொதுவுணர்வு, மனத்தான்-(தம்) மனங் காரணமாக, ஆம் - உண்டாம்; இன்னுன் எனப்படும் சொல்-(இவன்) இத்தன்மைய னென்று (உலகத்தாராற்) சொல்லப்படுஞ் சொல், இனத்தான் - இனங்காரணமாக, ஆம் - உண்டாம்; (எ - று.)

இயற்கையாய புலனுணர்வுமாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின் அதனை 'மனத்தானும்' என்றும், செயற்கையாய விசேடவுணர்வுபற்றி நல்ல னென்றுகத் தீயனென்றுக நிகழுஞ் சொற்கு இனம் வேண்டுதலின் அதனை 'இனத்தானும்' என்றும் கூறினர்.

உவமையளவைகொள்ளாது 'அத்திரிபும் மனத்தானும்' என்பாரை நோக்கி, இதனான், அது மறுத்துக்கூறப்பட்டது.

(கு - ரை.) பொதுஉணர்வு - இயற்கையறிவு: ஐம்பொறியுணர்வு. சேர்க்கையாலுண்டாகும் விசேடவுணர்வினும் வேறுபடுத்தற்கு, பொதுவுணர்வு என்றார். புலனுணர்வு-பஞ்சஇந்திரிய விஷயங்களையறிதல். நல்லன்என்றுகத் தீயன் என்றுக நிகழும்சொல்-இவன்நல்லவனென்றுவது தீயனென்றுவது உலகத்துவழங்கும் வார்த்தை. உவமையளவை கொள்ளாது - கீழ்ப்பாட்டில் "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்" என உபமானமுகத்தால் விளக்கியதை அங்கீகரியாமல்;நிலமதத்தவர் உபமானப்பிரமாணத்தைச் சிறப்பாகக்கொள்வதில்லை. அத்திரிபும் மனத்தான் ஆம்-(சிற்றினஞ்சேர்தலாலுண்டாகுங்) அக்குணவேறுபாடும் மனநிலையிலேயே உண்டாகும். இதனான் - இக்குறளால். அது - அக்கொள்கை. (ங)

சருகு. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(இ - ள்.) அறிவு-அவ்விசேடவுணர்வு,—ஒருவற்கு—, மனத்து உள்ளது போல காட்டி - மனத்தின்கண்ணே உளதாவதுபோல(த் தன்னை)ப் புலப்படுத்தி, இனத்து உள்ளது ஆகும் - (அவன்சேர்ந்த) இனத்தின் கண்ணே உளதாம்; (எ - று.)

மெய்ம்மைநோக்காமுன் மனத்துஉளதுபோன்றுகாட்டியும் பின் நோக்கியவழிப் பயின்றஇனத்து உளதாயும் இருத்தலின், 'காட்டி' என இறந்த காலத்தாற் கூறினர்.

'விசேடவுணர்வுதானும் மனத்தின்கண்ணேயன்றே உளதாவது' என் பாரை நோக்கி, 'ஆண்டுப் புலப்படுத்துணையே உள்ளது: அதற்குமூலம் இனம்' என்பது இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) புலப்படுத்தி-வெளிக்காட்டி. மெய்ம்மை நோக்காமுன்-உண்மையை ஆராய்ந்துபாராதவிடத்து. பின் நோக்கியவழி-பின்பு ஆராய்ந்துபார்த்தபொழுது. பயின்ற இனத்து உளதாயும்-பழகியகூட்டத்தினுலுண்டாகியும். விசேடவுணர்வுதானும் மனத்தின்கண்ணேயன்றே உளதாவது-விசேடவுணர்வும் பொதுவுணர்வுக்குக் காரணமானமனத்தில்தானே உண்டாவதன்றோ? ஆண்டு-அவ்விடத்தில்; மனத்தில். புலப்படுத் துணையே - (விசேடவுணர்வு) வெளிப்படுகிற அவ்வளவு மாத்திரமே: உணர்வு வெளிப்படும்வாயில் மனமாதலால், பொதுவுணர்வு போலவே இவ்விசேடவுணர்வும் மனவாயிலாகவே வெளிப்படுகின்ற தென்றவாறு. அதற்கு மூலம்-அவ்விசேடவுணர்வுக்குக் காரணம்: இனம்-சேர்க்கை. சிறப்புணர்வுக்குக்காரணம் இனம்: அது வெளிப்படும் வாயில் மனமென்க. இதனுல் - இக்குறளால். இக்குறட்பாவை "நரளென வொன்றுபோற் காட்டியுயிரும், வாளதுணர்வார்ப்பெறின்" என்ற குறளின் வரய்பாடு கொண்டதெனக் காண்க. (சு)

சருரு. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

(இ - ள்.) மனம் தூய்மை - (அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கு இடனாய) மனந்தூயனுதல் தன்மையும், செய் வினை தூய்மை - செய்யும்வினை தூயனுதல்தன்மையும், இரண்டும் - (ஆகிய) இரண்டும்,—இனம் தூய்மை தூ ஆ வரும் - (ஒருவற்கு) இனந்தூயனுதல்தன்மை பற்றுக்கோடாக உளவாம்; (எ - று.)

மனந்தூயனுதலாவது - விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினைதூயனுதலாவது - மொழி மெய்களாற் செய்யும் நல்வினை உடையனுதல். 'தூ'என்பது அப்பொருட்டாதல் "தூவறத் துறந்தாரை" என்பதனுனும் அறிக.

'ஒருவன் இனந்தூயனுகவே, அதனேடு பயிற்சிவயத்தான் மனந்தூயனுய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு, அதனுற் சொல்லும் செயலும் தூயனும்' என, இதனுன், இனத்துஉள்ளவாமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) தூயன் - பரிசுத்தன். வினை - தொழில். இனம்தூயனுதல் தன்மை-நல்லசேர்க்கையை யுடையவனுயிருக்குந்தன்மை. பற்றுக்கோடாக - ஆதாரமாக. உளவாம் - உள்ளனவாம். மொழி மெய்களால் - வாக்கு, காயம் என்பவற்றால். தூவென்பது அப்பொருட்டாதல் - தூ என்னும்சொல் பற்றுக்

கோடென்னும் பொருளுடையதாதலே. "தூவறத்துறந்தார்" என்னும் மேற்கோள் - கலித்தொகை, நெய்தற்கலி முதற்பாட்டி லுள்ளது; இம்மேற் கோளுக்கு - 'நமக்கு ஒருப்பற்றுக்கோடும் இல்லேயாம்படி நம்மைவிட்டுப்பிரிந்த கொழுநரை' என்று பொருள். (அங்கு நச்சினர்க்கினியர் 'தூவற' என்று பாடங்கொண்டு,நமக்குவலியில்லேயாம்படி யென்று பொருளுரைத்துள்ளார்.) "தூயது ஊற்றம் பகை தசையுந் தூவே" என்னும் பிங்கலந்தையையுங் காண்க. அதனேடு பயிற்சிவயத்தான் - அப்பரிசுத்தமான நல்லினத்தோடு பழக்கஞ்செய்த காரணத்தால். அதன்கண் - மனத்தில். இதனுன் - இக்குற ளால். இனத்துள்ளவாமாறு - விசேடவுணர்வு இனத்தினுலுள்ளனவாகுந் தன்மை. மனத்தூய்மை செய்வினேதூய்மை யென்னும் பெயர்ச்செவ்வெண், 'இரண்டும்' எனத் தொகையோடு முற்றும்மை பெற்றது. செய்வினே - வினேத்தொகை. மனம் வாக்கு உடம்பு என்னுந் திரிகரணங்களுள் வாக்கி னது தன்மையாகிய சொல்லுதலேயும் வினேயில்அடக்கி 'மனத்தூய்மை செய் வினேதூய்மை யிரண்டும்' என்று ரென்க; அல்லது, முன்னதாய்க் காரண மாகிற மனமும் பின்னதாய்க் காரியமாகிற செயலுந் தூயனவல்லாவிட்டால் வெறுஞ்சொல் தூய்மைமாத்திரம் பயன்தராது என்ற கருத்தால், அதனே இங்கு ஒழித்ததாகவும் கொள்ளலாம். (கூ)

சருசூ. மனந்தூயார்க் கெச்சநன் ருகு மினந்தூயார்க்
கில்லேநன் ருகா வினே.

(இ - ள்.) மனம் தூயார்க்கு - மனந்தூயராயினுர்க்கு, எச்சம் நன்று ஆகும் - மக்கட்பேறு நன்ருகும்; இனம் தூயார்க்கு - இனந்தூயராயினுர்க்கு, நன்று ஆகா வினே - நன்ருகாதவினே, இல்லே - (யாதும்) இல்லே; (எ - று.)

காரியம் காரணத்தின் வேறுபடாமையின் 'எச்சம் நன்ருகும்'என்றும், நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலின் 'எல்லாவினேயும் நல்லவாம்' என்றும் கூறினுர்.

(கு - ரை.) மக்கட்பேறு - புத்திரபாக்கியம். 'மக்கட்பேறு நன்ருகும்' என்பதற்கு - நல்மனமுடையோர்க்குப் பிறக்கும் பிள்ளேகள் தமக்குக்காரண மான தந்தைதாயர்போலவே தாமும் நற்குணநற்செய்கை யுடையவராயிருப்ப ரென்றும், நல்மனமுடையோர்க்குச் சந்ததி அழியாது நிலேபெறுமென்றுங் கருத்துக்கொள்ளலாம்; "மகனுரைக்குந் தந்தைநலத்தை," "பழியின்மை மக்களாற் காண்க" என்பன முதற்கருத்துக்கும், "செப்பமுடையவனுக்கஞ் சிதைவின்றி, யெச்சத்திற்கேமாப்புடைத்து," "நன்றிப்பயன் றூக்கா ணாணி லியுஞ் சான்ருேர்முன், மன்றிற்கொடும்பா டுரைப்பானும் - நன்றின்றி, வைத்ததடைக்கலங்கொள்வானு மிம்மூவர், எச்சமிழந்துவாழ்வார்" என்பன இரண்டாவதுகருத்துக்கும் மேற்கோளாம். "தக்கார்தகவில ரென்பதவரவர், எச்சத்தாற்காணப்படும்" என்ற குறள் - (அதனுரையிற் பரிமேலழகர் 'தக் கார்க்கு எச்சமுண்டாதலும், தகவிலார்க்கு இல்லேயாதலும் ஒருதலேயாக லின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின' என்று உரைத்

திருந்தாலும்,) இரண்டுகருத்துக்கும் மேற்கோளாகலாம். இன்னும், நன்றாகும் என்பது - "பித்துமலடுமைமூடம்பேய்குருடுகூன்செவிடு" என்னும் மெய்த்துயர்நோயொன்றும் இன்றி வாழும் என்ற கருத்துடைய தெனவுங் கொள்ளலாம். நன்றாகாதவினை யாதும் இல்லை - எல்லாக்காரியங்களும் நல்லனவாகவே முடியும். காரியம் - பிள்ளைகள். காரணம் - தாய்தந்தையர். தந்தைதாயர் குணத்தினின்றும் மக்கள்குணம் வேறுபடாதிருத்தலே, காரணமாகிய பொன்வெள்ளிகளின் தன்மையினின்று காரியமாகிய ஆபரணங்களின் தன்மை வேறுபட்டாதவாறுபோலக் கொள்க. எண்ணி - ஆராய்ந்து. நல்ல - நல்லவை. எச்சம் என்பதற்கு - (தாய்தந்தையரின்பின்) சேடித்து நிற்பதென்று பொருள்; எஞ்சு - பகுதி, அம்-கர்த்தாப்பொருள்விகுதி, வலித்தல் - விகாரம்; எஞ்சுதல் - சேஷித்தல். "எச்சத்திற்கேமாப்புடைத்து" என்ற விடத்துப் பரிமேலழகர் 'தான் இறந்துழி எஞ்சிநிற்பதாகலின் எச்சமென்றார்' என உரைத்ததனாலும் அறிக. (சு)

சுருள. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

(இ - ள்.) மன் உயிர்க்கு - நிலைபெற்ற உயிர்கட்கு, மனம் நலம் - மனத்தது நன்மை, ஆக்கம்-செல்வத்தை, (தரும்)-கொடுக்கும்; இனம் நலம்-இனத்தது நன்மை, எல்லாம் புகழும் தரும் - (அதனோடு) எல்லாப்புகழையுங் கொடுக்கும்: (எ - று.)

'மன்னுயிர்' என்றது - ஈண்டு, உயர்திணைமேல்நின்றது. 'தரும்' என்னும் இடவழுவமைதிச்சொல், முன்னும் கூட்டப்பட்டது. உம்மை-இறந்தது தழீஇய எச்சவும்மை. மனம் நன்றுதல்தானே அறமாகலின் அதனை 'ஆக்கந் தரும்' என்றும், புகழ்கொடுத்தற்கு உரிய நல்லோர்தாமே இனமாகலின் 'இனநலம் எல்லாப்புகழுந் தரும்' என்றும் கூறினர்.

மேல் 'மனநன்மை இனநன்மைபற்றி வரும்' என்பதனை உட்கொண்டு 'அஃதியல்பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேண்டா' என்பாரை நோக்கி, 'அதுவேயன்றி அத்தன்மையபலவற்றையுந்தரும்' என அவர்க்கும் இது வேண்டுமென்பது, இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

(கு - ரை.) உயிர்கட்கு - பிராணிகளுக்கு: என்றது, இங்கே சிறப்பாய் மனிதரை உணர்த்தும். மன்னுயிர்-விளைத்தொகை. அதனோடு - ஆக்கந்தருதலோடு. மனத்தினது நன்மையையும் இனத்தினது நன்மையையும் உடைத்தாயிருத்தல் அஃறிணையுயிர்க்குஇல்லாமையால், மன்னுயிரென்பது உயர்திணைமேனின்ற தென்றார். "மக்கள் தேவர் நரகர் உயர்திணை". தரும் என்னுஞ்சொல் இடவழுவமைதியாதலைக் கீழ் சகசு - ஆம் செய்யுளினுரையிற் காண்க. 'கொடுக்கும்' என்பது இங்குவழங்கிலையானசொல். தருமென்பது முன்கூட்டப்பட்டது, ஆக்கம் என்றசொல்லுடனென்க. ஆக்கந் தருதலோடு என்னும் பொருளே விளக்கியதனால், புகழும் என்ற உம்மை-இறந்ததழுவிய எச்சப்பொருளதாயிற்று. மனம்நன்றுதல்தானே அறமாகலின் - திரிகரணஞ்

களுள் மற்றைக்காரணங்களின் செய்கைகளுக்கு மூலமாகிய மனம் பரிசுத்தமா யிருப்பதுவே தருமமாதலால். கீழ் அறன்வலியுறுத்த லென்ற அதிகாரத்தில் "மனத்துக்கண் மாசிலனுதல லனைத்தறன், ஆகுலநீர பிற" என்றதும், "மனவக மநுவஷ்யாணும் காரணம் பந்தமோட்சயோஃ" என்றதும் காண்க. புகழ்கொடுத் தற்குரியநல்லோர்தாமே இனமாகலின் - தம்மாற்சேரப்பட்டவர்களுக்குநற் குணநற்செய்கைகளை அபிவிருத்திசெய்து அதனால் அவர்களுக்குக்கீர்த்தியை உண்டாக்குதற்குரிய நற்குணநற்செய்கையையுடையவர்களே இனமெனச் சேரத்தக்கவ ராதலால். மேல் - இவ்வதிகாரத்து ஐந்தாங்குறளில். உட் கொண்டு - கருத்திற்கொண்டு. அஃது - மனநன்மையை. அதுவேயன்றி அத் தன்மைய பலவற்றையுந் தரும் - அம்மனநன்மையைத் தருதல்மாத்திரமேயல் லாமல் அப்படிப்பட்ட பலநிறப்புக்களையுங் கொடுக்கும். அவர்க்கும் - மனந் தூயார்க்கும். இது - இனநன்மை. ஆக்கம் - செல்வத்துக்குவழங்குகிற இப் பெயர், இங்கேஇலக்கணையாய்ச் சிறந்தஅறத்தைக் குறித்தது. எல்லாப்புகழும் என்றஉம்மை - எஞ்சாமைகுறித்தலால், முற்றுப்பொருளு மாகலாம். "இம் மையடக்கத்தைச் செய்துபுகழாக்கி, உம்மையுயர்கதிக்குய்த்தலான் - மெய்ம் மையே, பட்டாங்கறமுரைக்கும் பண்புடையாளரே, நட்டாரெனப்படுவார்" என்ற அறநெறிச்சாரச் செய்யுளாலும், இனநலம் எல்லாப்புகழும் தருவ தா தல் அறிக. (எ)

சருவ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்ரோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(இ - ள்.) மனம் நலம் - மனநன்மையை, நன்கு - (மூன்னே) நல்வினை யால், உடையர் ஆயின்உம் - (தாமே) உடையராயினும், சான்ரோர்க்கு - அமைந்தார்க்கு, இனம் நலம் - இனநன்மை, ஏமாப்பு உடைத்து - (அதற்கு) வலியாதலையுடைத்து; (எ - று.)

'நன்கால்' என்னும் மூன்றனுருபு, விகாரத்தால்தொக்கது. அந்நல்வினை உள்வழியும் மனநலத்தை வளர்த்துவருதலின், அதற்கு ஏமாப்புடைத் தாயிற்று.

(சு - ரை.) "தவமுஞ் தவமுடையார்க்காகும்" என்றபடி ஒருவர்க்கு மனத்திற் பரிசுத்தமுண்டாதற்குக் காரணம் அவர் பூர்வசன்மத்திற்செய்த புண்ணியமேயாதலால், 'மனநன்மையை முன்னேநல்வினையால்தாமே உடை யராயினும்' எனப்பட்டது. நன்குஉடையர் - மூன்றும்வேற்றுமைத்தொகை; தொக்குநின்ற மூன்றும்வேற்றுமை கருவிப் பொருளது. 'நன்கு' என்னும் பண்புப்பெயர்-இங்கே ஆகுபெயராய், நல்வினையைக் குறித்தது. தாமேஉடை யர் - நல்லினத்தோடு சேர்தற்குமுன்னமேயுள்ளவர். அமைந்தார்-பலகுணங் களாலும் நிறைந்தவர். சான்ரோர்என்ற இறந்தகாலவினையாலணையும்பெய ரில், மிகுதற்பொருளுணர்த்தும் சால்என்ற உரிச்சொல் - பகுதி. 'பலகுணங் களாலும்' என்பது, சாலுதற்றொழிலாற் பெறப்பட்டது. இச்சொல்லில் விகுதியீற்றயல் ஆகாரம் ஓவாயிற்று; [நன். பொது. உ.] அதற்கு - மனநலத்

திற்கு. வலியாதலையுடைத்து - உறுதிதருவதாதலையுடையது. உள்வழியும் - உள்ளபொழுதும். ஆயினும், உம்மை - உயர்வுசிறப்பு. மனநலத்தைவளர்த்து வருவது, இனநலம் என்க. நன்கு - மிகவும் என்றுமாம். (அ)

சசுக. மனநலத்தி னுகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(இ - ள்.) (ஒருவற்கு),—மனம் நலத்தின்-மனநன்மையானே, மறுமை-மறுமையின்பம், ஆகும் - உண்டாம்; மற்று அஃதுஉம் - அதற்கு அச்சிறப்புத்தானும், இனம் நலத்தின் - இனநன்மையான், ஏமாப்பு உடைத்து - வலி பெறுதலை யுடைத்து; (எ - று.)

'மனநலத்தின் ஆகும் மறுமை' என்றது, 'மறுமையயப்பது மனநன்மை தானே, பிறிதொன்றன்று' என்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு. மற்று - வினைமாற்று. உம்மை - இறந்ததுதழீஇயஎச்சவும்மை.

ஓரோவழித் தாமதகுணத்தான் மனநலந் திரியினும், நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமை பயப்பிக்கு மென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது.

இவையைத்துபாட்டானும், சிற்றினஞ்சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறு அறிக.

(கு - ரை.) மறுமை - இறந்தபின்வரும்நிலை. மறுமையின்பம் என்றது, சுவர்க்கம்முதலிய சிறந்தபதவிகளிற் புண்ணியவசத்தால்அடையும் இன்பத்தை; மறுபிறப்பிலடையும் இன்பத்தையு மாகலாம். அதற்கு - மனநலத்திற்கு. அச்சிறப்பு - மறுமையின்பம்பயக்கும் மகிமை. உடம்பட்டு - அங்கீகரித்து. முன்வாக்கியத்தில் ஒருவினையைக் கூறிப் பின்வாக்கியத்தில் மற்றொரு வினையைக் கூறுமிடத்துவந்ததனால், மற்றுஎன்ற இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளது. உம்மை-அஃதும் என்பதில் உம்மை; இது - முன்வாக்கியத்தின் பொருளைத் தழுவுதலால், இறந்ததுதழுவிய எச்சப்பொருளதாயிற்று. ஓரோவழி - ஒவ்வொருசமயத்தில். திரியினும் - வேறுபடுவதாலுலும். ஒப்ப நிறுத்தி - (அங்ஙனந்திரியாதபடி மனநலத்தைச்) சரியான நிலையிலே சலியாது நிற்கச்செய்து. மறுமையயப்பிக்கும் - மனநலமூலமாக மறுமையின்பமுண்டாகச்செய்யும். அது - இனநலம். நிலைபெறச்செய்யும்ஆறு - (மனநலத்தை) நிலைநிறுத்தும்விதம். 'நிலைபெறச்செய்யுமாறு' என்பதன்பின் 'இவ்விரண்டு பாட்டானும்' என்று சேர்க்க. சிற்றினஞ்சேராமை என்கிற அதிகாரம் எதிர்மறையாதலால், நல்லினஞ்சேர்தல் என்னும்உடன்பாடு அதற்கு எதிராயிற்று. இச்செய்யுளில், அஃது என்பதில் ஆய்தம் - மெய்போல் ஒலித்தது; அலகிட்டுக் காண்க. (கூ)

சசுO. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(இ - ள்.) (ஒருவற்கு), நல் இனத்தின்—, ஊங்கு - மிக்க, துணை உம்—, இல்லை—; தீ இனத்தின் (ஊங்கு) - தீயஇனத்தின் மிக்க, அல்லல் படுப்பதுஉம் - பகையும், இல் - இல்லை; (எ - று.)

ஐந்தனுருபுகள், உறழ்பொருவின்கண் வந்தன. 'ஊங்கு' என்பது பின்னுங்கூட்டி, உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் துயருறுமற்காத்தலின் அதனை 'துணை' என்றும், தீயினம் அறிவின் நீக்கித் துயருறுவித்தலின் அதனை 'பகை' என்றுங் கூறினார். 'அல்லற்படுப்பது' என்பது - ஏதுப்பெயர்.

இதனுள், விதி எதிர்மறைகள் உடன்கூறப்பட்டன.

(கு - ரை.) உறழ்பொரு - ஒன்றுக்குஒன்று ஒப்பிட்டுக்கூறுமிடத்தில் வரும்எல்லேப்பொருள்; இது - உறழ்பொருவு எனவும்படும். ஐந்தனுருபுகள்-நல்லினத்தின், தீயினத்தின் என்றவற்றிலுள்ள 'இன்' என்னும் உருபுகள். ஊங்குஎன்பது பின்னுங்கூட்டப்படுதல், 'தீயினத்தின்'என்பதனுடன் என்க. உம்மை மாற்றி உரைக்கப்பட்டது - 'நல்லினத்தினூங்கும்'என்ற உம்மையை எடுத்து 'துணையும்' எனச் சேர்க்கப்பட்டது. அறியாமையின் நீக்கித் துயருறுமற்காத்தலின் - (தம்மாற்சேரப்பட்டவரை) அறியாமையினின்றுவிலக்கி (இம்மைமறுமைகளில்) துன்பமடையாதபடி பாதுகாத்தலால். இதற்குஎதிர்மறை-'அறிவின்நீக்கித் துயர்உறுவித்தலின்' என்றது. அல்லற்படுப்பது என்பது-துன்பப்படுத்துவது என்ற காரணத்தாற் பகையைக்குறித்தலால், ஏதுப்பெயரெனப்பட்டது. ஏதுப்பெயர் - ஒருகாரணத்தால் வரும் பெயர். விதி எதிர் மறைகள்-தீயினஞ்சேர்தலாகாதென்ற உடன்பாடும், நல்லினஞ்சேர்தலென்ற எதிர்மறையும். நல்லினஞ்சேர்தல்என்பது விதியும், தீயினஞ்சேராமை என்பது எதிர்மறையுமாம் எனப்படாமையை, கீழ்ப்பாட்டினுரையில் 'நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறைமுகத்தால்' எனக் கூறியதனால் அறிக. படுப்பதும்என நிற்பினும் வெண்டளைதவறாமல் செய்யுளோசைகுன்றாதாயினும் அளபெடுத்தது, இன்னிசையளபெடை. (கo)

சஎ - ஆம் அதிகாரம்.—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது-அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்துசெய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத்துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடும் செய்யப்படுவ தாகலின், இது - சிற்றினஞ்சேராமையின் பின் வைக்கப் பட்டது.

(கு - ரை.) சிற்றினஞ்சேராமையென்னும் அதிகாரத்தின்பின் தெரிந்து செயல்வகைஎன்னும் அதிகாரம் வைக்கப்பட்டதற்குக் காரணம், அதற்கு முன் கூறப்பட்ட பெரியாரைத்துணைக்கோடல் சிற்றினஞ்சேராமையினாற் பயன்பட்ட பொழுதே அப்பெரியாருடன் காரியங்களையாராய்ந்து செய்யக்கூடுதல். செயல்வகை - செய்தலினது வகை என்க.

சசுக. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(இ - ள்.) அழிவது உம் - (வினைசெய்யுங்கால் அப்பொழுது அதனுல் அழிவதனையும், ஆவதுஉம் - (அழிந்தால் பின்) ஆவதனையும், ஆகி - ஆய்

நின்று, வழி பயக்கும் - பிற்பொழுது தரும், ஊதியம்உம் - ஊதியத்தையும், சூழ்ந்து - சீர்தூக்கி, செயல் - (உறுவதாயிற்) செய்க; (எ - று.)

உறுவதாவது - நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு, எதிர்வினும் அது வளர்ந்துவருதல். அழிவதின்மையின் எதிர்வின்கண் வரும் ஆக்கத்தை 'ஊதியம்'என்றார். எனவே, அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதும் தம்முள் ஒத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றும். இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்து செய்க என்பதாம்.

(கு - சை.) அரசன் ஒருதொழிலைச் செய்யத்தொடங்குகையில், அச் செயலால் முதலில்உண்டாகும் செலவையும், அங்ஙனஞ்செலவுசெய்தபிறகு உண்டாகும் வரவையும், அப்படி வரவாய்நின்று பிற்காலத்து அச்செயல் கொடுக்கும் இலாபத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்துபார்த்துத் தக்கதாயிருந்தாற் செய்யவேண்டு மென்பது - இப்பாட்டின்பொருள். தக்கதாயிருத்தலாவது - தற்காலத்திலே செலவினும் வரவு அதிகமாய்ப் பிற்காலத்திலும் அவ்வரவு அபிவிருத்திப்பட்டுவருதல்; இப்படிப்பட்டது, உத்தமமானகாரியம். ஊதிய மும் ஆவதாயிருந்தாலும் இக்குறளில் 'ஆவது'எனவும், 'ஊதியம்' எனவும் தனித்தனிச் சொல்லப்பட்டஇரண்டுக்கும் ஒன்றோடொன்று வேறுபாடு என்னவெனில்,—செலவு செய்ததற்கு ஈடாய்ச் செலவுசெய்தகாலத்தில் தானேவருவது - ஆவது என்றும், செலவுசெய்ததற்குமேல் பிற்காலத்தில் வருவது - ஊதியமென்றும் அறிக. ஆய்ந்தின்று - செலவுசெய்தது வந்திட்டு என்றபடி. அழிவதின்மையின் எதிர்வின்கண்வரும் ஆக்கம் - செலவு செய்தது அழியாமல் வந்துவிட்டதனால் அதன்மேல் பிற்காலத்தில் உண்டாகும் வரவு; இதற்காக வேறு செலவு இல்லையென்க. இது ஊதியம் என்ற சொல்லின் பொருளை விளக்கக்கூறியது. பிற்காலத்தில் லாபம்உண் டாவதாயிருந்தால், தற்காலத்திலே செலவும் வரவும் சமமாயிருந்தாலும் அக் காரியம் விடத்தக்கதன்று; இப்படிப்பட்டது மத்திமமான காரியம். தற் காலத்திலே செலவினும் வரவுகுறைவுபடுவது-அதமமானதாம்; இது விடத் தக்கதென மேல் மூன்றும்பாட்டில் விளங்கும். இரண்டுகாலத்தும் - நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும். நிகழ்காலத்துப் பயனுடைமை-செலவினும் வரவுமிகுதலும், செலவும் வரவும் ஒத்தலும். எதிர்காலத்துப் பயனுடைமை-வரவு மேன்மேலும் அதிகப்படுதல்; இலாபம். தெரிந்துசெய்க - இவற்றை ஆராய்ந்து பின்பு காரியத்தைத் தொடங்குக. மேல் வினைசெயல்வகை யென்னும் அதிகாரத்தில் (6) "முற்றியாங்கெய்தும், படுபயனும் பார்த்துச் செயல்" என்பர். அழிவதூஉம், ஆவதூஉம் என்பன-இன்னிசையளபெடை. உம்மைகள் மூன்றும் - எண்ணுப்பொருளன. வழி - அக்காரியத்தைச் செய்து முடித்தபின்பு என்க. செயல் - வியங்கோள். பிற்காலத்தில் லாபமில் லாமல் தற்காலத்தில் வரவுஞ்செலவும் ஒத்து முடியுங் காரியம் - பயனற்ற தாய் வீண்சிரமமாத்திரமாய் முடிதலால் அது செய்யத்தக்கதன் றென்றும், பிற்காலத்தில் லாபமில்லாததாயிருந்தாலும் தற்காலத்திற் செலவினும் வரவு

அதிகப்படுங் கர்ரிய்மும் தற்காலத்திற் செலவினும் வரவு குறைவுதாயிருந்தாலும் பிற்காலத்தில் லாபந்தருங்காரியமும் வணிகர்க்குச் செய்யத்தக்கனவாயினும் அரசர்க்குச் செய்யத்தகாதனவாம் என்றும் இப்பொருள்களே இக்குறளினின்று போந்த கருத்துக்களாகத் தொனிவகையாற் கொள்க. ''செய்யும் பொழுதே யழிபொருளிற் சிறப்பதொப்பதிரண்டனு ளொன்,றுய்யவுதவி வழிபயக்கு மொண்மைவினையைத் தேர்ந்துளத்தில், ஐயமகன்ற வினத்தோடு மாய்ந்துந் தனித்தும் புரிந்திடுக, வெய்யவாக்கங்கருதி முதல் விளிக்கும் வினையைப் புரியற்க'' என்றது, இங்கே காணத்தக்கது. (க)

சசூஉ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(இ - ள்.) தெரிந்த - (தாம்) தெரிந்துகொண்ட, இனத்தொடு - இனத்துடனே, தேர்ந்து - (செய்யத்தகும்வினையை) ஆராய்ந்து, எண்ணி - (பின் தாமேயும்) எண்ணி, செய்வார்க்கு - செய்துமுடிக்கவல்ல அரசர்க்கு,—அரும் பொருள் - (எய்துதற்கு) அரிய பொருள், யாது ஒன்றுஉம் இல் - யாதொன்றும்இல்லை; (எ - று.)

ஆராயப்படுவனஎல்லாம் ஆராய்ந்துபோந்த இனமென்றுமாம். செய்வார்க்கு என்றதனால்,'வினை'என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது - மேற்சேறல் முதல் வேறல் ஈறுய தொழில். பொருள்கட்கு ஏதுவாய அதனில் தவறுமையின், அரியபொருள்களெல்லாம் எளிதின் எய்துவரென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், செய்யத்தகும்வினையும், அதுசெய்யுமாறும் கூறப்பட்டன.

(கு - ரை.) தாம் தெரிந்து கொண்ட இனம் - தம்மால்ஆராய்ந்து சேர்த்துக்கொள்ளப்பட்ட நல்லினத்தவராகிய மந்திரிகளும், புரோகிதரும். இனத்துடனே ஆராய்ந்து என இயையும். பின் தாமேயும் எண்ணி - பின்பு தாம் தனித்தும் ஆலோசனைசெய்து. செய்துமுடிக்கவல்ல என்பதற்கும், செய்யத்தகும்வினையை யென்றதே செயப்படுபொருள். எய்துதற்குஅரிய - அடைவதற்கு அருமையான; பெறுதற்குக் கூடாத: கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமான. 'தெரிந்த' என்பதற்கு இருவகை உரை. முதலுரைக்கு, தெரிந்த - செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை; தெரியப்பட்ட இன மென்க. இரண்டாவதுஉரைக்கு, தெரிந்த என்பது - செய்வினை; எல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்த இன மென்க. செய்வார்க்கு என்றதனால் வருவிக்கப்பட்ட செய்யத்தகும் வினையென்பதே, எண்ணிஎன்பதற்கும் செயப்படுபொருள். மேற்சேறல் - பகைவர்மீது வெல்லுதற்குச்செல்லுதல். வேறல் - பகைவரை வெல்லுதல். ஈறு - முடிவு. முதல்என்றது - தன்அரண் காத்தல், பகையரண்வளைத்தல், பகைவரை யெதிர்த்தல், பொருதல், இடையிற்சாமதானபேததண்டங்களை உபயோகித்தல் முதலியவற்றை. பொருள்

கட்கு ஏதுவாய அதனில் தவறாமையின்-பொருள்களைப்பெறுதற்குக்காரணமான பகைமேற்செல்லுதல் முதலிய தொழிலை ஒழுங்காகச்செய்தலில் தவறாததனால். எளிதின்-சிரமமின்றி. அதுசெய்யும் ஆறும்-அத்தொழிலைச் செய்யும் வழியும். (௨)

௪௬௩. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(இ - ள்.) ஆக்கம் கருதி - (மேல்எய்தக்கடவ) ஊதியத்தினை நோக்கி, முதல் இழக்கும்-(முன்எய்திநின்ற)முதல்தன்னையும் இழத்தற்கு ஏதுவாய, செய் வினை-செய்வினையை, அறிவு உடையார்—, ஊக்கார்-மேற்கொள்ளார்.

'கருதி' என்னும் வினையெச்சம், 'இழக்கும்' என்னும் பெயரெச்சவினை கொண்டது. எச்சவும்மை, விகாரத்தால்தொக்கது. ஆக்கமேயன்றிமுதலையும் இழக்கும் வினைகளாவன - வலியும் காலமும் இடனும் அறியாது பிறர் மண் கொள்வான்சென்று தம்மண்ணும் இழத்தல்போல்வன. முன் செய்து போந்த வினையாயினும் என்பார், 'செய்வினை' என்றார்.

(கு - ரை.) மேல் எய்தக்கடவ ஊதியத்தினை நோக்கி - இனி வரத்தகுவதான லாபத்தை யெதிர்பார்த்து. முன்எய்திநின்ற முதல்தன்னையும் - முன்னே தன்னிடம்பொருந்தியிருந்த முதற்பொருளையும். மேற்கொள்ளார் - தொடங்கமாட்டார்; முன் தொடங்கியிருப்பினும் மேல் நடத்தமாட்டார். முதல் என்பதன் இறுதியில் தொக்குநின்ற உம்மை இனிவரும் இலாபத்தை மாத்திரமேயன்றி என்னும் பொருளைத் தருதலால், எதிரதுதழுவிய எச்சமாம்; இவ்வும்மையை உயர்வுசிறப்புப்பொருளதாகவுங் கொள்ளலாம். ஆக்கமேயன்றி - இலாபத்தைமாத்திரமேயல்லாமல். வலி கால இடன்களையறிதல்,மேல் மூன்றுஅதிகாரங்களிற் கூறப்படும். பிறர்மண்கொள்வான்சென்று-வேற்றரசரது இராச்சியத்தைத் தாம் கைக்கொள்ளுதற்பொருட்டுப் போய். செய்துபோந்த-செய்துவந்த. வினையென்றாலேஅமையுமாயினும், செய்வினையென்றது - ஏற்கவேசெய்துவந்த தொழிலென்றற்கு. ஊக்குதல்-முயலுதல். இங்கே "வாணிகமொன்றுந்தேற்றாய் முதலொடுங்கேடுவந்தால், ஊணிகந் தீட்டப்பட்ட வூதியவொழுக்கினெஞ்சத்து, ஏணிகந்திலேசுநோக்கி யிருமுதல் கெடாமைகொள்வர், சேணிகந்துய்யப்போநின்செறிதொடியொழிய வென்றார்" என்ற சிந்தாமணிச்செய்யுளின்பொருளை யுணர்க. (௩)

௪௬௪. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(இ - ள்.) தெளிவு இலதனை தொடங்கார் - (இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) துணிதலில்லாத வினையைத் தொடங்கார்:—இளிவு என்னும் ஏதம் பாடு அஞ்சுபவர் - (தமக்கு) இளிவரவென்னுங்குற்றம் உண்டாதலை அஞ்சுவார்; (எ - று.)

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், 'தொடங்கார்' என்றார். இளிவரவு - அவ்வினையாற் பின் அழிவுஎய்தியவழி, அதன்மேலும், அறிவும்

மானமும் இலரென்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி; அஃதுஉண்டார்தல் ஒரு தலையாகலின், தெளிவுஉள்வழித் தொடங்குக என்பதாம்.

(கு - ரை.) துணிதலில்லாத - நிச்சயிக்கப்படாத. இளிவரவு - அவமானம். தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின் - ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கிவிட்டால் அக்காரியம்முடிதற்குமுன்பு நடுவிலே அதனைவிட்டு மீளுதல் தகாதாதலால். பின் அழிவெய்தியவழி - பின்பு தாம் நஷ்டமடைந்த பொழுது. அதன்மேலும் - அந்நஷ்டத்தின்மேலும். அறிவும்மானமும் இலர் - காரியத்தை ஆராய்ந்துதொடங்கிநடத்திமுடிப்பதற்கு ஏற்ற அறிவும், எப் பொழுதும் தம்மிலையினின்று தாழாமையாகிய மானமும்இல்லாதவர். அஃது உண்டாதல் ஒருதலைபாகலின் - (ஆராய்ந்து நிச்சயியாது தொழில் தொடங் கினவர்க்கு) அவ்வவமானம் வருவது நிச்சயமாதலால். தெளிவு உள்வழித் தொடங்குக (ஆராய்ந்து செய்யலாமென்று) நிச்சயமுண்டானபொழுதுஆரம் பிக்கக்கடவர், தக்க காரியத்தைத் தொடங்காதிருத்தலும், தொடங்கிச்செய் கையில் இடையில்விடுதலும் தவறும்: தகாதகாரியத்தையோ தொடங்கா திருத்தலே மேல் என்க. இளிவு=இழிவு. ஏதப்பாடு - ஏதத்தினது படுதல்; பாடு - படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். (அ)

அசுரு. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(இ - ள்.) வகை-(சென்றுல்கிகழுச்)திறங்களை யெல்லாம், அற சூழாது -முற்ற எண்ணாது, எழுதல் - (சிலஎண்ணியதுணையானே அரசன் பகைவர் மேற்)செல்லுதல்,—பகைவரை - அவரை, பாத்தி படுப்பது ஓர் ஆறு-வளரும் நிலத்திலே நிலைபெறச்செய்வதொரு நெறியாம்; (எ - று.)

அத்திறங்களாவன - வலி காலம் இடன் என்றிவற்றுல் தனக்கும் பகை வர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினைதொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சிலஎஞ்சினும் பகைவர்க்கு இடனு மாகலான், முற்றுப்பெற எண்ணவேண்டு மென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், ஒழியக்கூறும் வினையும், ஒழியாவழிப் படும் இழுக்கும் கூறப்பட்டன.

(கு - ரை.) ஒருவன் தான் பகைவர்மேல் வெல்லுதற்குச்சென்றுல் உண் டாகும் விதங்களெல்லாவற்றையும் முழுவதும் ஆலோசியாமல் சிலவிதங்களை மாத்திரமே ஆலோசித்து அவ்வளவோடு பகைவர்மீது செல்லுதல்,பகைவரை அழிக்கமாட்டாமையோடு அவர்களை விருத்திசெய்யும்வழியுமாமென்பது இக் குறளின்பொருள்; எனவே, சும்மா இருந்தபகைவர்களைச் சிறிதுஎழுப்பிவிட் டால், அவர்கள் ஜாக்கிரதைப்பட்டுச் சேனைமுதலியவலிமைகளைச் சேர்த்துத் தம்மைத் தாம் அபிவிருத்திசெய்துகொள்வ ரென்பதாம். அவ்வாறு பகை வரை விருத்தியடையத் தண்டுதற்குக் காரணம் இவ்வரசனுடைய வகை

யறச் சூழாதெழுதலே யாதலால், அதனை எழுவாயாக்கிக் கூறினார். அதனால்-வெற்றியால். அவற்றுள் சில எஞ்சினும்-வலி காலம் இடன்முதலிய அத்திறங்களுள் சிலகுறைபட்டாலும். முற்றுப்பெற எண்ணவேண்டும் - முழுவதும் ஆலோசிக்க வேண்டும். பகைவர்க்கு இடனும் - பகைவர்க்குத் தம்மைவெல்ல இடங்கொடுக்கும். ஒழியத்தகும் வினை-செய்யாதுநீங்கத்தக்க காரியம். ஒழியாவழிப் படும் இழுக்கு-அவ்வினையை நீங்காதுசெய்தால் உண்டாகுங் குற்றம். வகை-வகுப்பு; தொழிலாகுபெயர். அற - மிச்சமில்லாமல்; முற்றும் என்ற படி. பாத்தி - வளரும்நிலம். (நி)

சகூசு. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(இ - ள்.) (அரசன்), செய்தக்க அல்ல - (தன்வினைகளுள்) செய்யத்தக்கனவல்லவற்றை, செய - செய்தலான், கெடும்—; (இனி அதனானேயன்றி), செய்தக்க - செய்யத்தக்கனவற்றை, செய்யாமையான்உம் - செய்யாமை தன்னானும், கெடும்—; (எ - று.)

செய்யத்தக்கனவல்லவாவன - பெரியமுயற்சியினவும், செய்தாற்பயனில்லனவும், அதுசிறிதாயினவும், ஐயமாயினவும், பின்துயர்விளைப்பனவும் என இவை. செய்யத்தக்கனவாவன-அவற்றின்மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான், அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகை ஆற்றலுள் பொருள் படை என இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனாகலான், இரண்டும் கேட்டிற்கு ஏதுவாயின.

இதனால், செய்வனசெய்து ஒழிவன ஒழிக என இருவகையனவும் உடன் கூறப்பட்டன.

(கு - ரை.) கெடும் - கெடுவான்; செய்யுமென்முற்று, ஆண்பாலுக்கு வந்தது. இதற்கு 'அரசன்' என்பது - தோன்றுஎழுவாய். அதனானேயன்றி-தகாதகாரியங்களைச் செய்தலால்மாத்திரமே யல்லாமல். பெரியமுயற்சியின - தமது நிலைமையினும் அதிகமான பிரயத்தனம் வேண்டியவை. அதுசிறிதாயின - பயன்குறைபட்டவை. ஐயமாயின - பயன்உண்டோ இல்லையோஎன்று சந்தேகத்துக்கு இடமானவை. அவற்றின் மறுதலையாயின - சிறியமுயற்சியினவும், செய்தாற்பயனுள்ளனவும், பயன்பெரிதாயினவும், பயனில் ஐயமற்றனவும், பின் இன்பம்விளைப்பனவும் என இவை. மறுதலை - எதிர். மூவகை ஆற்றல் - மூன்றுவிதமான சக்தி. பொருள் படை - செல்வமும் சேனையும். இரண்டும்-செய்தக்கவல்ல செய்தலும், செய்தக்க செய்யாமையும். செய்தக்க-செய்தற்குத் தக்கன; முதனிலைத்தொழிற்பெயரின்மேல்வந்த நான்காம்வேற்றுமைத்தொகை: செய்யாமையானும், உம்மை - முன்வாக்கியத்தைநோக்குதலால், இறந்ததழுவியஎச்சம். செய் என்னும் பகுதி செய்யவெனப் பொருள் பட்டு வினையெச்சமானதற்கு இக்குறளே உதாரணங்காட்டினர், இலக்கணக் கொத்துடையார். (கூ)

சகூஎ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(இ - ள்.) கருமம் - (செய்யத்தக்க) கருமமும், எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) எண்ணி, துணிக - தொடங்குக:—துணிந்த பின் எண்ணுவம் என்பது - தொடங்கிவைத்துப் பின் எண்ணக்கடவே மென்று ஒழிதல், இழுக்கு - குற்றம், (ஆதலான்); (எ - று.)

துணிவுபற்றி நிகழ்தலின், 'துணிவு' எனப்பட்டது. சிறப்புஉம்மை, விகாரத்தால்தொக்கது. 'உபாயம்' என்பது, அவாய்நிலையான் வந்தது; அது-கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால் வகைப்படும்: இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டம் என்ப. அவற்றுள், முன்னையஇரண்டும் - ஐவகைய; ஏனைய - மூவகைய: அவ்வகைகளெல்லாம் ஈண்டுஉரைப்பின் பெருகும். இவ்வுபாயமெல்லாம் எண்ணாது தொடங்கின் அவ்வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையின் ஒழிதலாகாமையானும், அரசன் துயருறுதலின், அவ்வெண்ணாமையை 'இழுக்கு' என்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடங்குக என்பதாம்.

(கு - ரை.) கருமமும் - காரியத்தையும். பின் எண்ணக்கடவேம் என்று ஒழிதல் - தொடங்கினபின்பு ஆராய்ந்துகொள்வோமென்று முன் ஆராயாது விடுதல். முன்வாக்கியத்துக்குப் பின்வாக்கியம் காரணம். காரியத்தைக் காரணமாக உபசரித்து, துணிதலின்பயனாகிய தொடங்குதலை இக்குறளில் 'துணிதல்' என்றார். துணிவுபற்றி நிகழ்தலின் - துணிதல்பற்றித் தொடங்குதல் உளதாதலால். சிறப்பும்மை - உயர்வுசிறப்புஉம்மை; அது தொகுத்தல் விகாரப்பட்டது, கருமம் என்ற சொல்லின் இறுதியில். 'துணிக' என்ற பயனிலைக்கு 'ஒருவன்' என்றாற்போன்ற எழுவாய் வருவிக்க. அவாய்நிலையான் - எண்ணி என்ற வினை ஒருசெயப்படுபொருளை வேண்டிநிற்றலால். அது - அவ்வுபாயம். வேறுபடுத்தல் - ஒருமிக்க சேர்ந்துவரும் பகைவரை அங்ஙனஞ் சேரவொட்டாதபடி பிரித்தல். ஒறுத்தல் - போரில் அழித்தல். 'சாமம் - இனிதாகக்கூறல், பேதம் - மென்மையானும் வன்மையானும் மனத்தினைப் பேதித்தல், தானம் - பகைவர்மனமகிழக்கொடுத்தல், தண்டம்-பின்பு அவர் ஆகாமல் அழித்தேவிடுதல்' எனஉரைத்தனர், நச்சினார்க்கினியர், சிந்தாமணியில். "தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்றுகின்றான்" என்றவிடத்தில். முன்னையஇரண்டு - தானமும், சாமமும். ஏனைய - பேதமும், தண்டமும். கிடைத்தற்குஅரியபொருளைக் கொடுத்தல், தனக்குத் தரும்பொருளை வாங்காதுவிடுதல், கொடுக்கவேண்டியபொருளைக் கொடுத்தல், பிறன்பொருள்கொண்டு கொடுத்தல், கப்பம்வாங்காதொழிதல் எனத் தானத்தின் வகைஐந்து. வணங்குதல், புகழ்தல், எதிர்கொள்ளல், நட்புக்கூறல், உறவுகூறல் எனச் சாமத்தின் வகை ஐந்து. நட்புஒழிதல், கூடினரைப் பிரித்தல், வேறுபகைவிளைத்தல் எனப் பேதத்தின் வகை மூன்று.

தன்பஞ்செய்தல், பொருள்கவர்தல், கொல்லுதல் எனத் தண்டத்தின் வகை மூன்று. இவ்வகைகளேயெல்லாம் காமந்தகம் சுக்கிரநீதி முதலிய வடநூல்களுள் விரிவாகக் காண்க. மாற்றுரைனுல்-பகைவனுல். ஒழிதலாகாமை-விடக்கூடாமை. துயர்உறுதலின் - துன்பமடைதலால். துணிந்தபின் - பின் என்னும்விகுதி பெற்றுவந்த எதிர்காலவினையெச்சம்; இதனை "பின்முன் கால்கடைவழியிட த்தென்னும், அன்னமரபிற்காலங்கண்ணிய, என்னகிளவியுமவற்றியல்பின வே" என்னும் தொல்காப்பியத்து வினையியற்சூத்திரத்தா லறிக. (எ)

சசுஉ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(இ - ள்.) ஆற்றின் - முடியும் உபாயத்தால், வருந்தா - (கருமத்தை) முயலாத, வருத்தம் - முயற்சி,—பலர் நின்று போற்றின் உம் - (துணைவர்) பலர் நின்று (புரைபடாமற்) காப்பினும், பொத்துப்படும் - புரைபடும்; (எ-று.)

முடியும் உபாயத்தான் முயறலாவது - கொடுத்தலேப் பொருள் நசை யாளன்கண்ணும்; இன்சொல்லேச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருதுநொந்தவன்என இவர்கண்ணும்; வேறுபடுத்தலேத் துணைப் படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதான் என இவர்கண்ணும்; ஒறுத் தலே இவற்றின்வாராதவழி இவர்கண்ணும், தேறப்படாத கீழ்மக்கள்கண் ணும் செய்து, வெல்லும் ஆற்றுன் முயறல். புரைபடுதல் - கருதியநன்மை யன்றிக் கருதாத தீமை பயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

(கு - ரை.) முடியும் - நிறைவேறும். துணைவர்-உதவியானவர். நின்று-உடனிருந்து. புரைப்படாமல் - கெடுதியுண்டாகாதபடி; ஜாக்கிரதையுடையரா யென்றபடி. காப்பினும் - பாதுகாத்தாலும். முயறல்=முயலுதல். நால்வகை உபாயங்களுள், தானத்தை உபயோகித்தற்கு இடமாகுபவன் - செல்வத்தி லாசையுடையவன் என்றும்; சாமத்திற்கு இடமாகுபவர் - மனந்திருந்தத்தக் கவனும், சோம்பலுடையவனும், முன் பிறருடன்போர்செய்து வருந்தியவ னும் என இவரென்றும்; பேதத்துக்கு இடமாகுபவர் - மூலபலம் முதலிய சொந்தச்சேனைகளேத் தனக்கென்று உடையவனல்லாமல் பிறரிடத்தினின்று துணையாய்வருஞ் சேனையையே எதிர்பார்ப்பவனும், மந்திரி சேனுதிபதி முத லிய தனது பரிவாரங்களோடு ஒற்றுமையில்லாதவனும் என இவரென்றும்; தண்டத்துக்கு உரியவர் - கீழ்க்கூறிய பொருளாசையுள்ளவன் மூதலியோர் தானம் முதலிய முதல்மூன்றுஉபாயங்களால் தனக்கு வசப்பட்டுக் கீழ்ப் படிந்து வாராதவிடத்து அவர்களும், எவ்விதத்திலும் நம்பத்தகாத கீழ்மக்க ளும் என இவரென்றும் அறிக. வெல்லும் ஆற்றுன்-சத்துருக்களே ஜயிக்கும் வழியால். கருதிய நன்மை அன்றி-எண்ணி எதிர்பார்த்த நன்மையைத்தராத தோடு. கருதாத தீமை பயத்தல்-எண்ணி எதிர்பாராத தீமையையுண்டாக்கு தல். உபாயத்தது - நால்வகையுபாயங்களின். போற்றினும், உம்மை-உயர்வு சிறப்பு. இதனுல், பலர்நின்று போற்றுவிடத்துப் பொத்துப்படுதல் தானே

விளங்கும். மனம்மெலிதலில்லாமல் தொழில் செய்தலில் சிரமப்படுவது முயற்சியாதலால், 'வருந்தாவருத்தம்' எனப்பட்டது. (அ)

சகூக. நன்றூற்ற லுள்ளுந் தவறுண் டவாவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(இ - ள்.) நன்று ஆற்றலுள் உம் - (வேற்றுவேந்தர்மாட்டு) நன்றான உபாயம் செய்தற்கண்ணும், தவறு உண்டு - குற்றம்உண்டாம்:—அவர் அவர் பண்பு அறிந்து ஆற்றுக்கடை - அவரவர் குணங்களே ஆராய்ந்து அறிந்து (அவற்றிற்கு இயையச்) செய்யாவிடின்; (எ - று.)

நன்றான உபாயமாவது - கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை - சிறப்பும்மை. அவற்றை அவரவர் பண்பு அறிந்து ஆற்றுமையாவது - அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல். தவறு - அவ்வினைமுடியாமை.

(கு - ரை.) வேற்றுவேந்தர்மாட்டு - பகையரசரிடத்து. அவற்றிற்கு இயைய - அக்குணங்களுக்குத் தக்கபடி. யாவர்கண்ணும்-எல்லோரிடத்தும். இனியவாதற்சிறப்பு-நல்லனவாகும் உயர்வு. சிறப்பும்மை-உயர்வுசிறப்பும்மை. எந்தஎந்தஉபாயத்தை உபயோகித்தற்குயார்யார்உரியவரோ, அவரவரிடத்து அந்தந்தஉபாயத்தைத் தகுதியறிந்துபயோகியாவிட்டால், காரியம் முடியாது கெடுமென்பதாம். இன்னுரின்னுரிடம் இன்ன இன்ன உபாயஞ் செய்யவேண்டுமென்று கீழ்க்குறளினுரையில் காட்டப்பட்டது: ஆற்றல் - தொழிற்பெயர். ஆற்றுக்கடை - 'கடை' விகுதிபெற்ற எதிர்மறை எதிர்காலவினையெச்சமென்றுவது, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தொகாகிலெத்தொடரென்றுவது கொள்க. அவரவர் - அடுக்கு, வகைபற்றியது. (கூ)

சஎo. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா லுலகு.

(இ - ள்.) (அரசர் வினைமுற்றுதற்பொருட்டு), தம்மொடு கொள்ளாத - தம்நிலைமையோடுபொருந்தாத உபாயங்களே(ச்செய்வராயின்), உலகு கொள்ளாது - உலகம் (தம்மை) இகழாநிற்கும்: (ஆகலான்), எள்ளாத - (அஃது) இகழாஉபாயங்களே, எண்ணி செயல் வேண்டும் - நாடிச்செய்க; (எ - று.)

'தம்' என்பது - ஆகுபெயர். தம்நிலைமையோடுபொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது - தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தல்முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவையிரண்டும் அறிவிலார்செய்வனவாகலின், 'உலகங்கொள்ளாது' என்றார். அஃது எள்ளாதனசெய்தலாவது-அவற்றைத் தத்தம் வண்மை மென்மைகட்கு ஏற்பச் செய்தல். மேல் இடவகையான் உரிமைகூறிய உபாயங்கட்கு வினைமுதல்வகையான் உரிமைகூறியவாறு.

இவைதான்குபாட்டானும், செய்வனவற்றிற்கு உபாயமும், அதனது உரிமையும் கூறப்பட்டன.

(கு - ரை.) தம்மை இகழாநிற்கும் - அவ்வரசரைப் பழிக்கும். அஃது இகழா - அவ்வுலகத்தவரால் இகழப்படாத. நாடிச்செய்க - ஆராய்ந்தறிந்து செய்யவேண்டும். தம்மன்பது - தமதுநிலைமையைக் குறித்ததனால், பொருளாகுபெயர். வலியராய்வைத்து - பகைவரினும் மிக்கவலிமையுடையவராயிருந்து. கொடுத்தல்முதலிய மூன்று - தான சாம பேதம். ஒறுத்தல் - தண்டோபாயம். இவையிரண்டும் - வலியரான தாம் மெலியார்செய்யவேண்டும் உபாயங்களைச் செய்ததலும் மெலியரான தாம் வலியார்செய்யவேண்டும் உபாயத்தைச் செய்ததலும். உலகம் கொள்ளாது - உயர்த்தோர் அங்கீகரியார். மேல் - இவ்வதிகாரத்து எட்டாங்குறளில். இடவகையான் உரிமைகூறிய - இன்ன இன்ன உபாயம் உபயோகிக்கப்படுதற்கு இடமாகுபவர் இன்னர் இன்னரென்று இடம்வகுத்துக்கூறப்பட்ட. வினை முதல்வகையான் உரிமை - இன்ன இன்ன உபாயத்தை இன்னரின்னர் செய்தற்குரியவரென்ற தகுதி. வினைமுதல் - கருத்தா, செய்பவன். செய்வனவற்றிற்கு - செய்யத்தக்ககாரியத்திற்கு. அதனதுரிமை - அவ்வுபாயத்தினது இடத்தகுதியும், வினைமுதல் தகுதியும். எள்ளாத, கொள்ளாத - எதிர்மறைவினையாலணையும் பெயர்கள். (க0)

சஅ - ஆம் அதிகாரம்.—வலியறிதல்.

அஃதாவது - *அவ்வுபாயங்களுள் ஒறுத்தல்குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதல். அதிகாரமுறைமையும், இதனுனே விளங்கும்.

(கு - ரை.) ஒறுத்தல் குறித்த - தண்டமென்னும் உபாயத்தை நடத்தக் கருதிய. நால்வகைவலி - இவ்வதிகாரத்தின் முதற்பாட்டிற் கூறப்படுவது. அளந்து - வரையறைசெய்து. ஈழ் அதிகாரத்தில் அரசன் தொழில்களை ஆராய்ந்துசெய்யும் உபாயங்களின் வகைகளைப் பொதுப்படக் கூறி, இவ்வதிகாரத்தில் அவ்வுபாயங்களுள் ஒன்றை [ஒறுத்தலை] உபயோகித்தற்கு வேண்டிய இலக்கணங்களைச் சிறப்பாகக் கூறத்தொடங்குதலால், இவ்வதிகாரம் தெரிந்து செயல்வகையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது. மெலியார்க்குரிய முதல் மூன்று உபாயங்களை விட்டு, வலியார்க்குரிய இறுதி உபாயத்தையே விவரிக்கத்தொடங்குகிறார், சிறப்புப் பற்றியும், அருமைபற்றியும்என்க.

சஎக. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(இ - ள்.) வினை வலிஉம் - (தான் செய்யக்கருதிய) வினைவலியையும், தன் வலிஉம் - (அதனைச்செய்துமுடிக்குந்) தன்வலியையும், மாற்றான் வலிஉம் - (அதனை விலக்கவுறும்) மாற்றான்வலியையும், துணை வலிஉம் - (இருவர்க்குந்) துணையாவார் வலியையும், தூக்கி - சீர்தூக்கி,—செயல் - (தன்வலிமிகுமாயின் அவ்வினையைச்) செய்க; (எ - று.)

* பி - ம்: அத்திறமுணர்ந்து வினைசெயக்குறித்த.

இக்கால்வகைவலியுள், வினைவலி - அரண்முற்றலும் கோடலும் முத்த வியதொழிலானும், ஏனைய - மூவகையாற்றலானும் கூறுபடுத்துத் தூக்கப் படும். 'தன்வலிமிகவின்கண்செய்க' என்ற விதியான், தோற்றல் ஒருதலை யாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிக என்பது பெற்றும்.

(கு - ரை.) விலக்கலுறும்-நீக்கவரும். மாற்றுன்வலி-பகைவனது பலம். இருவர்க்கும் - தனக்கும் பகைவனுக்கும். சீர்தூக்கி - மதிப்பிட்டுப்பார்த்து. அரண்முற்றல் - பகைவர்கோட்டையை வளைத்தல். கோடல் - அங்குள்ள ஆநிரைமுதலிய பொருள்களைக் கவர்தல். முதலிய என்றதனால், தம்மதிலைக் காத்தல் பகைவர்சூழ்ச்சிதலையெடுக்காவண்ணஞ்செய்தல் முதலியன. ஏனைய-மற்றைத் தன்வலிமுதலிய மூன்றும். மூவகையாற்றலான் - அறிவு [மந்த்ர சக்தி] ஆண்மை [உற்சாகசக்தி] பெருமை [ப்ரபுத்வசக்தி] என்னும் மூன்று சக்திகளால். கூறுபடுத்து - பகுப்பிட்டு. தூக்கப்படும் - ஆராய்ந்து மதிக்கப் படும். தன்வலிமிகவின்கண் செய்க - தனதுவலிமை அதிகமானபொழுது பகைவர்மேல் வெல்லுதற்குச்செல்லுதல் முதலிய தன்தொழிலைச் செய்ய வேண்டும். விதி-கட்டளை. தோற்றல் ஒருதலையாய - (தான்) தோல்வியடை தல் நிச்சயமான. குறைவின்கண்ணும் - (தன்வலிமை) குறைவுபட்டபொழு தும். வேறல் ஐயமாய - ஜயம் உண்டாகுமோ உண்டாகாதோ வென்ற சந் தேகத்திற்கிடமான. ஒப்பின்கண்ணும் - தன்வலிமையும் பகைவன்வலிமை யுஞ் சமமாக வுள்ளபொழுதும். ஒழிக-தான் செய்யக்கருதிய போர்வினையைச் செய்யாதுவிடுக. உம்மைகள் - எண்ணுப்பொருளன. செயல் - உடன்பாட்டு வியங்கோள். (க)

சஎஉ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லா தில்.

(இ - ள்.) ஒல்வது-(தமக்கு) இயலும்வினையையும், அறிவது-(அதற்கு) அறியவேண்டுவதாய வலியையும், அறிந்து—, அதன்கண் தங்கி-(எப்பொழு தும் மனமொழிமெய்களை) அதன்கண் வைத்து, செல்வார்க்கு - (பகைமேற்) செல்லும்அரசர்க்கு, செல்லாதது - மூடியாதபொருள், இல் - இல்லை; (எ-று.)

'ஒல்வது' எனவே வினைவலிமுதலாய மூன்றும் அடங்குதலின், ஈண்டு 'அறிவது' என்றது - துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளும் எய்துவர் என்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், வலியின் பகுதியும், அஃது அறிந்து மேற் செல்வார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

(கு - ரை.) இயலும் வினை - செய்யத்தக்ககாரியம். அதற்கு-அத்தொழி லுக்கு. வலி - இருவர்க்குந் தூணையாவார்வலிமை. மன மொழி மெய்கள் - திரிகரணம். அதன்கண்வைத்து-அந்நால்வகை வலியின்மேற்செலுத்தி. பகை மேல்-பகைவர்மேல். மனமொழிமெய்களை அதன்கண்வைத்தல்-அவ்வலிமை களைப்பற்றிச்சிந்தித்தும் நல்லினத்தோடு கலந்துபேசியும் காணுதல்முதலியன

செய்தல். ஒல்வது-செய்யத்தக்க தொழில்; இச்சொற்பொருளில், தொழில் என்றதில் வினைவலியும், செய்யத்தக்கஎன்றதில் தன்வலிமாற்றான்வலிகளும் இங்ஙனம் மூன்றும் அடங்குதல் காண்க. ஈண்டு - இங்கே. பகுதி - பகுப்பு. 'அதன்கண்' என்றது, சாதியொருமையால். (உ)

சஎந. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ - ள்.) உடை - (கருத்தாவாதலே) உடைய, தம் வலி - தம்வலியின் அளவு, அறியார் - அறியாதே, ஊக்கத்தின் - மனவெழுச்சியால், ஊக்கி - (தம்மின்வலியாரோடு) வினைசெய்தலைத்தொடங்கி, இடைக்கண் முரிந்தார் - (அவர் அடர்த்தலான் அது செய்துமுடிக்கப்பெறாது) இடையே கெட்ட அரசர், பலர் - (உலகத்துப்) பலர்; (எ - று.)

'உடைய' என்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகைஆற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவு உடையார் சிலராதலின், 'முரிந்தார்பலர்' என்றார். 'அதனால்,தம்வலிஅறிந்தே தொடங்குக' என்பது எஞ்சிநின்றது.

(கு - ரை.) கருத்தாவாதலேயுடைய தம் வலியின் அளவு அறியாதே - தொழில்களைச் செய்பவரிடத்திய தமது வலிமையின் அளவை ஆராய்ந்தறியாமலே. மனவெழுச்சியால் - உற்சாகத்தால். வினைசெய்தல்-போர்செய்யுந்தொழில். அவர் அடர்த்தலான் - அவ்வலியபகைவர்கள் மேலிட்டுப்பொருது முரியஅடிப்பதனால். அதுசெய்துமுடிக்கப்பெறாது - தாம்தொடங்கிய போர்வினையை வெற்றிபெறச் செய்துமுடிக்கக்கூடாமல். இடையே கெட்ட - தொடங்கியதை முடிப்பதற்குமுன்னமே அழிவடைந்த. உடையவென்னுங் குறிப்புப் பெயரெச்சம் தொகுத்தல்விகாரப்பட்ட உடையென்னும்பண்படி, ஒரு செயப்படுபொருளை வேண்டிநின்றதனால், 'கருத்தாவாதலே' என்பது வருவிக்கப்பட்டது. அறிவு ஆண்மை பெருமைஎன்ற மூவகையாற்றலுள்ளும் சிறப்புடைய அறிவு-மூவகைச்சக்திகளிற் சிறந்ததான மந்திரசக்தி. எஞ்சிநின்றது-குறைந்தது; இது - குறிப்பெச்சம். (ங)

சஎச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(இ - ள்.) ஆங்கு - அயல்வேந்தரோடு, அமைந்துஒழுகான் - பொருந்தி ஒழுகுவதுஞ் செய்யாது, அளவு அறியான் - (தன்) வலியளவு அறிவதுஞ் செய்யாது, தன்னை வியந்தான் - தன்னைவியந்து (அவரோடு) பகைத்த அரசன், விரைந்து கெடும் - விரையக் கெடும்; (எ - று.)

காரியத்தைக் காரணமாக உபசரித்து, 'வியந்தான்' என்றார். 'விரைய' என்பது, திரிந்துநின்றது. கட்பாய்ஒழுகுதல், வலியறிந்துபகைத்தல் என்னும் இரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடுசெயற்பாலது? இவையன்றித் தான் மெலியனாய்வைத்து அவரோடுபகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலைஇன்மையின், 'விரைந்துகெடும்' என்றார்.

இவையிரண்டுபோட்டானும், தன்வலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப் பட்டது.

(கு - ரை.) பொருந்தி ஒழுகுவதும் செய்யாது - சமாதானமாயிருத்த லுஞ்செய்யாமல். தன்வலியளவு அறிவதுஞ் செய்யாது - தனதுபலத்தின் வரையறையை ஆராய்ந்து அறிவதுஞ்செய்யாமல். தன்னேவியந்து - (தான் மற்றையரசரெல்லாரினும்மேம்பட்டவனுகத்) தன்னே(த்தானே)மெச்சி நன்கு மதித்து. அவரோடுபகைத்த - அயலரசர்களுடன் விரோதித்த. விரையக் கெடும் - விரைவிலே அழிவான். காரியம் - பகைத்தல்; காரணம் - வியத் தல்: தன்னேத் தானே சிறந்தவனுக மதித்துச் செருக்குக் கொள்ளுதலினுல் வேற்றரசருடன் பகைகொள்வானே, அதற்குக்காரணமாகிய 'தன்னேவியந் தான்' என்ற சொல்லாற் கூறியது - உபசாரவழக்கு. இங்கே விரைதல் கெடுதல்லினைக்கு உடன்நிகழ்கிறதாதலால், 'விரைந்து' என்னும் இறந்த காலவினேயெச்சத்தை அங்ஙனமே கொள்ளாமல், மூக்காலத்துக்குமுரிய 'விரைய' என்னுஞ் செயவெனெச்சந் திரிந்ததாகக் கொள்ளவேண்டியதா யிற்று. நட்பாய் ஒழுகுதல் - சமாதானமாயிருத்தல். வலியறிந்துபகைத்தல் - (வினேவலி முதலிய நான்குவலியையும் ஆராய்ந்து தன்) வலிமிகுதியாயிருத் தலே அறிந்து (வேற்றரசனுடன்) பகைத்தல். ஒன்றன்றே செயற்பாலது - ஏதாவதுஒன்றே செய்யத்தக்கது. அன்றே - அன்றோ; இது, தேற்றமுணர் த்திற்று. இவையன்றி - இவ்விரண்டனுள் ஒன்றுமல்லாமல் வேருக. தான் மெலியனுய்வைத்து - தான்வலியற்றவனுயிருக்கையில். அவரோடு - தன் னின்வலிய அயல்வேந்தருடன். ஒருபொழுதும் நிலேஇன்மையின் - சிறிது போதுகூட (அழியாது) நிற்றல் இல்லாமையால். தன்வலியறியாவழிப் படும் இழுக்கு - தனதுபலத்தை(த் தான்) அறியாதிருந்தால் உண்டாகுங் குற்றம். ஒழுகான், அறியான் - வினேமுற்று வினேயெச்சங்கள். (சு)

சுஎடு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(இ - ள்.) பீலி பெய் சாகாடுஉம்-பீலி ஏற்றிய சகடமும், அச்சு இறும்-அச்சு முரியும்:—அப் பண்டம்-அப் பீலியை, சால மிகுத்து-அது பொறுக்கு மளவன்றி மிகுத்து, பெயின் - ஏற்றின்; (எ - று.)

உம்மை-சாகாட்டது வலிச்சிறப்பேயுமன்றிப் பீலியதுநொய்ம்மைச்சிறப் புந் தோன்ற நின்றது. 'இறும்' என்னும் நிகழ்வினே, முதல்மேல்நின்றது. 'எளியரென்று பலரோடுபகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலிஅழியும்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது- 'பிறிதுமொழிதல்'என்னும் அலங்காரம்; இதனே 'துவலாதுவற்சி' என்பாரும், 'ஒட்டு' என்பாரும் உளர்.

'ஒருவன்* தொகுவார்பலரோடு பகைகொள்ளற்க' என்றமையின், இத

* பீ - டீ: ஒருவன் பலரோடு

ஞன், மாற்றான்வலியும் அவன் துணைவலியும் அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

(கு - ரை.) பீலியேற்றியசகடம் - மயிற்றோகைக்கண்களை நிரம்பஏற்றப் பெற்ற பண்டி. அச்சு - சக்கரங்கோக்கப்படுகிற வண்டியின் அடிமரம்; 'அச்சு - உருள்கோத்தமரம்' என்பர், மேல் "அச்சாணியன்ன ருடைத்து" என்னுமிடத்துப் பரிமேலழகர். அதுபொறுக்குமளவன்றி மிகுத்து ஏற்றின் - எவ்வளவு ஏற்றினுல் அவ்வண்டி சுமக்கக்கூடுமோ அவ்வளவல்லாமல் அதனினும் மிகுதியாக ஏற்றினுல். சாகாடும் என்றஉம்-ஒருபால் உயர்வுசிறப்போடு ஒருபால் இழிவுசிறப்புப்பொருளுமுடையது. சாகாட்டதுவலிச்சிறப்பேயுமன்றி-வண்டியின் வலிமைமிகுதியாகிய உயர்வுசிறப்புமாத்திரமே யல்லாமல். பீலியது நொய்ம்மைச்சிறப்பும் - மயிற்பீலியின் கனமில்லாமல் இலேசாயிருக்குந்தன்மையாகிய இழிவுசிறப்பும். சினை-ஒன்றற்கு உறுப்பாயுள்ளது. முதல்-சினையையுடையது. சினை உறுப்பு அவயவம் என்பனவும், முதல் உறுப்பி அவயவி என்பனவும்-தனித்தனி ஒருபொருளன. அச்சுஎன்னுஞ்சினையினது வினையாகிய இறுமென்பது, சாகாடு என்னும் முதலின்மேல் நின்றமை காண்க. அவர்தொக்கவழி வலிஅழியும் - அவர்கள் ஒருங்குசேர்ந்த விடத்துத் தான் வலிமையழிவான். உபமேயத்தைக்கூறாமல் உபமானத்தை மாத்திரங்கூறி அதனுல் உபமேயத்தைப்பெறவைத்தல், **'பிறிதுமொழிதல்'** என்னும்அணியின் இலக்கணம்; இதனை வடநூலார் 'அப்ரஸ்துதப்ரஶம்ஸாலக்காரம்' என்பர். 'ஒட்டெனினும், உள்ளுறையுவமமெனினும், உவமப்போலியெனினும், பிறிதுமொழிதலெனினும், நுவலாநுவற்சியெனினும் ஒக்கும்' என்பது, இலக்கணவிளக்கவுரை. இவ்வலங்காரத்தைச் சுருக்கணியென்பர், வீரசோழியநூலுடையார். வலிமையற்றவரேனும் பலர் ஒருங்குசேர்ந்தால் அவர்க்கு வலிமையுள்ளவனொருவன் ஈடுகொடுப்பது அரிதென்பதை விளக்கவந்தது, இவ்வுவமை. ஒருவன் தொகுவார்பலரோடு பகைகொள்ளற்கு-தனியே ஒருத்தன் ஒருங்குகூடும்பலருடன் விரோதங்கொள்ளாதிருக்கக் கடவன். என்றமையின் - என்றபொருளே விளக்கியதனுல். இதனுன் - இக்குறளால். சாகாடு, அச்சு - ஶகடம், அக்ஷம் என்னும் வடசொற்களின் சிதைவென்பர். மிகுத்து - மிகுத்தென்பதன்பிறவினை. (கு)

சஎசு. நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(இ - ள்.) கொம்பர் நுனி - (ஒருமரக்) கோட்டினது நுனிக்கண்ணே, ஏறினுர் - ஏறினவர், (தம்ஊக்கத்தால்), அஃது இறந்து - அவ்வளவினைக் கடந்து, ஊக்கின் - (மேலும் ஏற) ஊக்குவராயின், (அவ்வூக்கம்), உயிர்க்கு இறுதி ஆகிவிடும் - அவருயிர்க்கு இறுதியாய்முடியும்; (எ - று.)

'நுனிக்கொம்பர்' என்பது-'கடைக்கண்' என்பதுபோலப் பின்முன்னுகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. பன்மை, அறிவின்மைபற்றி இழித்தற்கண்வந்தது. இறுதிக்கு ஏதுவாவதனை 'இறுதி'என்றுர். 'பகைமேற்செல்

வான்தொடங்கித் தன்னுற்செல்லலாமளவுஞ் சென்றுநின்றான் பின் அவ் வளவில்நில்லாது மனவெழுச்சியால் மேலுஞ்செல்லுமாயின், அவ்வெழுச்சி, வினைமுடிவிற்கு ஏதுவாகாது அவனுயிர்முடிவிற்கு ஏதுவாம்' என்னும் பொருள்தோன்ற நின்றமையின், இதுவும் - மேலையலங்காரம்.

'அளவறிந்துநிற்றல்வேண்டும்' என்றமையின், இதனுன், வினைவலியறி யாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

(கு - ரை.) மரக்கோட்டினது-மரத்தின்கிளையினது. நுனிக்கண்ணே - நுனியிலே. ஊக்கம் - உள்ளக்கிளர்ச்சி. அவ்வளவினைக்கடந்து - எவ் வளவுவரையில் எறிச்சென்றால் அக்கிளை தன்வலியால் தம்மைத் தாங்கக் கூடுமோ அவ்வளவை மீறி. மேலும்ஏறஊக்குவராயின் - அதன்மேலும் ஏறு தற்குத் தைரியங்கொள்வராயின். இறுதியாய் - அழிவைச்செய்வதாய். கண் ணின்கடையென்னும் ஆறும்வேற்றுமைத்தொகை கடைக்கண்எனப் பின் முன்னுகமாறிநின்றபோல, கொம்பரின்நுனியென்னும் ஆறும்வேற்றுமைத் தொகை நுனிக்கொம்பர்எனப் பின்முன்னுக மாறிற்று; இது இலக்கணப் போலி. பன்மை, 'ஏறினூர்' என்ற சொல்லில் உள்ளது. இழித்தற்கண் - கீழ்ப்படுத்திக்கூறும்பொருளில். "ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியும், ஒன்றனைக் கூறும் பன்மைக்கிளவியும், வழக்கிலுகிய வுயர்சொற்கிளவி, இலக்கணமருங்கிற்சொல்லாறல்ல" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'தாம்வந்தார்தொண்டனூர் என்பது உயர்சொல் குறிப்புநிலையின் இழிபு விளக்கிற்று' என இதனை அடக்கியவாறு காண்க. உறுதியைத்தருவதை உறுதியென்பதுபோல, இறுதியைத்தருவதை இறுதியென்றது-காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. பகைமேற்செல்வான் தொடங்கித் தன்னுற் செல்லலாமளவுஞ் சென்று நின்றான் - பகைவர்மேல் அவரை வெல்லுதற்பொருட்டு எதிர்த்துச் செல்லத்தொடங்கித் தன்னுல் அத்தொழி லில் எவ்வளவுசெல்லக்கூடுமோ அவ்வளவும் போய்நின்றவன். பின் அவ் வளவில்நில்லாது மன வெழுச்சியால் மேலும் செல்லுமாயின் - பின்பு அவ் வெல்லையிலே நின்றிடாமல் உற்சாகத்தால் மேலும் மேலும் வரம்புகடந்து போய்க்கொண்டே யிருப்பானுனால். அவ்வெழுச்சி - அச்செல்லுதல்தொழில். வினைமுடிவிற்கு ஏதுவாகாது - தொழில்நிறைவேறுதற்குக் காரணமாகாமல். உயிர்முடிவு-உயிர் உடம்பைவிட்டு ஒழிதல்: மரணம். மேலையலங்காரம்-பிறிது மொழிதல். என்றமையின் - என்றபொருளை விளக்கியதனால். வினைவலி யறியாவழி - தொழிலின்வலிமையை அறியாவிட்டால். கொம்பர் - கொம்பு என்னும் மென்மரூடர்க்குற்றியலுகரத்துக்கு அர் போலி. அஃது என்பதன் ஆய்தம், இங்கு மெய்போலொலித்தது. (சு)

குளை. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

(இ - ள்.) ஆற்றின் - (ஈயும்) நெறியானே, அளவு அறிந்து - (தமக்கு உள்ளபொருளின்) எல்லையை அறிந்து, ஈக - (அதற்கு ஏற்ப) ஈக; அது -

அங்ஙனம் ஈதல், பொருள் போற்றி - பொருளைப் பேணிக்கொண்டு, வழங்கும் - ஒழுகும், நெறி - நெறியாம்; (எ - று.)

ஈயும்நெறி - மேல் இறைமாட்சியுள் "வகுத்தலும் வல்லதரசு" என்புழி உரைத்தாம். எல்லோக்கு ஏற்ப ஈதலாவது - ஒன்றுனை எல்லையை நான்கு கூறாக்கி அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒன்றனை மேல் இடர் வந்துழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்றவொன்றனை ஈதல்; பிறரும் "வருவாயுட் கால்வழங்கிவாழ்தல்" என்றார். பேணிக்கொண்டொழுகுதல் - ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டு ஒழுகுதல். முதலிற் செலவுசுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது என்பதாம்.

(கு - ரை.) ஈயும் நெறியானே - கொடுக்கவேண்டும்வழியாலே. எல்லை- அளவு. அதற்கு ஏற்ப ஈக - அந்த அளவிற்குத் தக்கபடி கொடுக்கக்கடவன். பொருளைப் பேணிக்கொண்டு ஒழுகும் நெறி - செல்வத்தைப் பாதுகாத்துக் கொண்டு நடக்கும்வழி. "இயற்றலுமீட்டலுங்காத்தலும் காத்த, வகுத்தலும் வல்லதரசு" என்பது - கீழ் இறைமாட்சி என்ற அதிகாரத்தின் ஐந்தாம்பாட்டு. என்புழி - என்னுமிடத்து. ஒன்றுன எல்லையை நான்குகூறாக்கி - தமக்கு வருவாயாக உள்ள பொருளின்கூட்டுத்தொகையைநான்குபாகமாகப்பகுத்து. அந்நான்கு பகுதியுள், இரண்டுபகுதி - தற்காலத்தில்தன்வாழ்க்கைமுதலிய வற்றிற்குவேண்டியசெலவிற்கும், ஒருபகுதி - பின்பு எக்காலத்திலாவது தமக்குப் பொருள்வரவிற்குத் தடையுண்டானபொழுது அத்தடையை இல்லையாக்குதற்கு (ஆஸ்தியாக)வைப்பதற்கும், மற்றொருபகுதி - பிறர்க்குக்கொடுத்தற்கும் உரியவா மென்க. வைப்புஆக்கி - ஆஸ்தியாக்கி. "வருவாயுள்" என்ற மேற்கோள் - திரிகடுகத்தில் (உக) "வருவாயுட்கால்வழங்கிவாழ்தல் செருவாய்ப்பச், செய்தவைதாடாச் சிறப்புடைமையெய்தப், பலராதரிக்கல்லவைகற்றலிம்மூன்றும், நலமாட்சிநல்லவர்கோள்" என்ற செய்யுளில் வுள்ளது. தமக்கு வருகிறபொருளில் நாலிலொருபாகத்தைப் பிறர்க்குத் தானஞ்செய்துவாழ்தலென்பது, இம்மேற்கோளின் பொருள். 'பிறரும்' என்றது, திரிகடுகநூலாசிரியராகிய நல்லாதனூரை. ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டு ஒழுகுதல் - எவருடனும் சினேகமாய் ஒற்றுமைப்பட்டு விட்டுநீங்காமல்நினைத்திராத இயல்பினதாகிய செல்வத்தைத் தம்மோடு சினேகமாய் ஒற்றுமைப்பட்டு விட்டுநீங்காமல் நினைத்திருக்கச்செய்தல். முதலிற் செலவு சுருங்கின் - முதற்பொருளினுஞ் செலவாகும்பொருள் குறைவாகவிருந்தால். இங்கு முதற்பொருளென்றது - வருவாயாகவுள்ள பொருள். ஆற்றின் - ஐந்தாம்வேற்றுமை: எதுப்பொருள். முன்வாக்கியத்திற்கூறிய காரியத்தின் பயனைத் தெரிவிப்பது, பின்வாக்கியம். (எ)

சஎஅ. ஆகா தளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(இ - ள்.) ஆகு ஆறு - (அரசர்க்குப் பொருள்) வருகின்ற நெறி, அளவு இட்டிது ஆயின் உம் - அளவுசிறிதாயிற்றாயினும், கேடு இல்லை - (அதனால்)

கேடில்லேயரம்:—போகு ஆறு - போகின்ற நெறி, (அளவு) அகலாக்கடை - (அளவு அதனிற்)பெருகாதாயின்; (எ - று.)

'இட்டிது' எனவும், 'அகலாது' எனவும் வந்த பண்பின் தொழில்கள், பொருள்மேல் நின்றன. 'பொருள்' என்பது அதிகாரத்தான் வருவித்து, 'அளவு' என்பது பின்னும்கூட்டி உரைக்கப்பட்டன. முதலும் செலவும் தம் மூல் ஒப்பினும் கேடு இல்லே என்பதாம்.

(கு - ரை.) பொருள்வருகின்ற நெறி - செல்வம்வருதற்குக் காரணமா யுள்ள வழி. அளவு சிறிதாதல் - அவ்வழியின் அளவு சிறியதாகுதல். கேடு - நீங்கு. போகின்ற - (செல்வஞ்) செலவாகிற. அதனிற்பெருகாதாயின் - பொருள் வரும்வழியினும் அதிகப்படாதாஞல். அளவு என்னும் பண்பின் தொழிலான சிறிதாதல் பெரிதாதல் என்பவை, அத்தொழில்களுக்கு உடைய தான ஆறு என்னும் பொருட்பெயரின்மேலேற்றிக் கூறப்பட்டன; இது - பண்பின்தொழிலேப் பண்பியின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு. அதிகாரத் தான் - இப்பாட்டையுடைய அதிகாரம் பொருட்பாலிலுள்ளதாதலா லென்க. அளவென்பது பின்னுங்கூட்டி யுரைக்கப்பட்டது, 'போகாறு அளவு அகலாக் கடை' என. தம்மூல் - தமக்குள்; ஒன்றேடொன்று. ஒப்பினும் - எற்றத்தாழ் வில்லாமற் சமமாயிருந்தாலும். இட்டிது - இட்டிமையின்மேற்பிறந்த ஒன்றன் பாற்குறிப்பு வினையாலணையும்பெயர். (அ)

சுஎக. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்.

(இ - ள்.) அளவு அறிந்து - (தனக்கு உள்ளபொருளின்)எல்லேயை அறி ந்து, வாழாதான் - (அதற்கு ஏற்ப) வாழமாட்டாதான், வாழ்க்கை-வாழ்க்கை கள்,—உள போல - உள்ளனபோல (த் தோன்றி), இல் ஆகி - (மெய்ம்மை யான்) இல்லேயாய், தோன்று - (பின்பு) அத்தோற்றமும் இன்றி, கெடும் - கெட்டுவிடும்; (எ - று.)

அவ்வெல்லேக்குஏற்ப வாழ்தலாவது - அதனின்* சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்தில் கேடு வெளிப் படாமையின், 'உளபோலத்தோன்றி' என்றார். முதலின் செலவு மிக்கால் வரும் ஏதம் கூறியவாறு.

(கு - ரை.) தனக்குஉள்ளபொருள் - தனக்குவருவாயாகவுள்ளசெல்வம். அதற்குஏற்ப - அவ்வளவிற்குஏற்றபடி (பிறர்க்குக்கொடுத்தும் தான் அனுப வித்தும்). வாழமாட்டாதான்வாழ்க்கைகள் - வாழத்திறமையில்லாதவனது வாழ்வுகள். தோன்றி - வெளிக்குக்காணப்பட்டு. மெய்ம்மையான் - உண் மையாகநோக்குமிடத்து. அத்தோற்றமும் - உள்ளதாகத்தோன்றும் அந்தத் தோன்றற்பாடும். அதனின்-வருவாயைக்காட்டிலும். சுருக்க-செலவுகுறைக்க. ஒப்பவாயினும் - வரவும் செலவும் ஒத்திருக்கும்படியாவது. ஈத்தும் - பிறர்க்

* பி - மீ: சுருங்கக்.

குக்கொடுத்தும். துய்த்தும் - தான்அனுபவித்தும். தொடக்கத்தில்-பொருட் செலவின்ஆரம்பகாலத்தில். வெளிப்படாமையின் - விளங்கக்காணப்படா மையால். முதலின் - வருவாயைக்காட்டிலும். ஏதம் - தீங்கு. இங்கே "ஆன முதலினதிகஞ்செலவானுன், மான மழிந்தமதிகெட்டுப்—போனதிசை, எல் லார்க்குங் கள்ளனு யேழ்பிறப்புந் தீயனுய், நல்லார்க்கும் பொல்லனு நாடு" என்ற ஔவையார்பாடலே உணர்க. (கூ)

சுஅ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

(இ - ள்.) உள வரை - (தனக்கு) உள்ளஅளவு, தூக்காத-தூக்காமைக்கு ஏதுவாய, ஒப்புரவுஆண்மை-ஒப்புரவாண்மையால்,—வளம் வரை-(ஒருவன்) செல்வத்தின்எல்லை, வல்லை கெடும் - விரையக் கெடும்; (எ - று.)

'ஒப்புரவேயாயினும் மிகலாகாது' என்றமையான், இதுவும் அது.

இவைஈன்குபாட்டானும், மூவகைஆற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்புநோக்கி வகுத்துக்கூறப்பட்டது.

(கு-ரை.) தனக்குஉள்ள அளவுதூக்காமைக்கு ஏதுவாயஒப்புரவாண்மை யால் - தனக்கு வருவாயாக இருக்கிற செல்வத்தின் அளவை ஆராய்ந்து நோக்காமைக்குக் காரணமான பிறர்க்கு உபகாரம்மிகுதியாகச்செய்யுந்தன்மை யால். ஒப்புரவு - உலகநடையை அறிந்து உதவிசெய்தல். ஒப்புரவுஆண்மை-ஒப்புரவைஆளுந்தன்மை. ஆண்மை - ஆள்என்னும் வினைப்பகுதியின்மேல் வந்த பண்புப்பெய ரென்றவது; ஆள்என்னும்முதனிலைத்தொழிற்பெயரின் மேல், மை - தன்மைப்பொருளுணர்த்தும் விகுதி யென்றவது கொள்க. ஒப்புரவேயாயினும் - உபகாரஞ்செய்தலே யாஞலும், மிகலாகாது - அள வுக்குமிஞ்சுதல் தகாது. 'இதுவும் அது' - தீழ்ப்பாட்டுப்போல இப்பாட்டும் முதலின்செலவுமிக்கால்வரும் ஏதங்கூறியவாறு. பெருமை - பிரபுசக்தி. பகுதியாய - பகுப்பாகிய. பெருமையின்பகுதி, பொருளும் படையும். சிறப்பு நோக்கி சிறப்புடைத்தாயிருத்தல்பற்றி. வகுத்து-விவரித்து. உள-உள்ள. உள வரை - குறிப்புப்பெயரெச்சத்தொடர். வளவரை - ஆரும்வேற்றுமைத் தொகை. (கo)

சுகூ - ஆம் அதிகாரம்.—காலமறிதல்.

அஃதாவது - வலியான் மிகுதியுடையனுய்ப் பகைமேற்சேறலுற்ற அர சன் அச்செலவிற்குஏற்ற காலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும், இத னுனே விளங்கும்.

(கு - ரை.) வலி - வினைவலி தன்வலி தூணைவலி என்ற மூவகையான வலிமை. சேறலுற்ற - செல்லத்தொடங்கின. அச்செலவிற்குஏற்ற - அங்ஙன மபகைவர்மேல் செல்லுதற்குத்தக்க. தொழில்செய்பவன் வலியறிதலின் காலமறியவேண்டுவனுதல், இக்கு அதிகாரமுறைமைக்குக் காரணம்.

சஅஆக. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(இ - ள்.) கூகையை - (தன்னின் வலிதாய) கூகையை, காக்கை—, பகல் - பகற்பொழுதின்கண், வெல்லும்-வெல்லாநிற்கும்; *(ஆதலான்), இகல் வெல்லும் வேந்தர்க்கு - (பகைவரது) இகலை வெல்லக்கருதும் அரசர்க்கு, பொழுது வேண்டும் - (அதற்குஏற்ற) காலம் இன்றியமையாது; (எ - று.)

எடுத்துக்காட்டுவமை, காலமல்லாவழி வலியாற்பயனில்லை யென்பது விளக்கிநின்றது. இனி, காலமாவது - வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முள் ஒத்து நோய்செய்யாது கண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானே வருந்தாதுசெல்லும் இயல்பினதாம்.

இதனுள், காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) கூகை - கோட்டான். இகலை-மாறுபாட்டை. 'இகலாவது-இருவர் தம்முட் பொருது வலிதெலைதற்கு ஏதுவாய மாறுபாடு' என உரைப்பர், மேல் 'இகல்' என்னும் அதிகாரத்திலும்; இனி, இகல் என்பதற்கு-போர்என்றும், வலிஎன்றும் பொருள்கொள்ளலாம். அதற்குஏற்ற - அவ்வெற்றிக்குத் தக்க. இன்றியமையாது - இல்லாமல்முடியாது; மிகஅவசியமாம். எடுத்துக்காட்டுவமை - இங்கு, எடுத்துக்காட்டிய உபமான மென்ற படி; திருஷ்டாந்தாலங்காரமேயாதன்று. 'பகல்வெல்லுங் கூகையைக்காக்கை' என்ற இவ்வுபமானமே 'வலியற்றவனும் தன்னுடைய பகைவனை அவனுக்குத் தக்ககாலமில்லாதபோது வெல்லவல்லவனாவான்' என்ற உபமேயக் கருத்தை விளக்குவது, பிறிதுமொழிதலென்னும் அலங்காரம்; இது - பிறின வாக்கியத்துக்கு ஏது. காலமல்லாவழி - தக்ககாலமல்லாதவிடத்து. தானை - சேனை. ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய சரற்காலத்திலும், சித்திரை வைகாசிமாதங்களாகிய வசந்தகாலத்திலும் பெரும்பாலும் அரசர் பகைவர்மீது பொருதற்குச் செல்லுதல், மரபு; இது, "கூதிர் வேனி லென்றிரு பாசறை" என்ற தொல்காப்பியங்கொண்டும் உய்த்துணரப்படும். கோட்டானுக்கு இரவில்மாத்திரங் கண்தெரியப் பகலிற் கண்தெரியாமையும், காக்கைக்குப் பகலில்மாத்திரங் கண்தெரிய இரவிற் கண்தெரியாமையும் இயல்பாதலால், காக்கைக்குக் கூகையை வெல்லுதற்கு ஏற்ற நல்லசமயம் பகலேயாயிற்று. கூகை, காக்கை - கூகம், காகம் என்னும் வடமொழிகளின் திரிபுகள்; கூ என்றும், கா என்றும் கத்துவ தென்னுங் காரணம்பற்றிவந்த பெயர்கள். "இடத்தொடு பொழுதுநாடி யெவ்வினைக் கண்ணுமஞ்சார், மடப்படலின்றிச் சூழுமதில்லார்க்கரிபதுண்டோ, தடத்திடைக் காக்கையொன்றே யாயிரங் கோடிகூகை, யிடத்திடையழுங்கச் சென்றுங்கின்னுயிர் செகுத்ததன்றே" என்ற சீவகசிந்தாமணி இங்குக் காணத்தக்கது. (க)

சஅஉ. பருவத்தோ டொட்ட வொழுகற் றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

* பி - ம்: (அதுபோல),

(இ - ள்.) பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - (அரசன்) காலத்தோடு பொருந்த (வினைசெய்து) ஒழுகுதல்,—திருவினை - (ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ்) செல்வத்தை, தீராமை ஆர்க்கும் - (தன்னின்) நீங்காமற் பிணிக்கும், கயிறு - கயிறும்; (எ - று.)

காலத்தோடுபொருந்துதல் - காலந்தப்பாமற் செய்தல். 'தீராமை'என்றதனான், தீர்தல்மாலைய தென்பது பெற்றாம். வினை வாய்த்துவருதலான், அதனின் ஆகுஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்கா தென்பதாம்.

(கு - ரை.) பிணிக்கும்-கட்டிவைக்கும். தீர்தல்மாலையது என்பது பெற்றாம் - நிலையில்லாமல் நீங்குந்தன்மையது செல்வம் என்ற பொருளைப் பெற்றோம்; "கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்குமதுவிளிந்தற்று," "அற்காவியல்பிற்றுச்செல்வம்" என்றார், கீழ் நிலையாமையென்னும் அதிகாரத்தில். வினை வாய்த்துவருதலான் - செய்யத்தொடங்கியதொழில் தவறாமற் பயன்பட்டுவரு மாதலால். அதனின் ஆகும் செல்வம் - அத்தொழிலால் உண்டாகிவளரும் பொருள். தீராமை - எதிர்மறைவினையெச்சம். இப்பாட்டில் உபமேயத்தை உபமானமாகவேகூறியது, காட்சியணி. இக்குறள் - ஒழுகல்என்பதை உடன்பாட்டுவியங்கோளாகத் தொழில்செய்துநடக்கவேண்டுமென்று பொருளுரைத்து, கீழ் அதிகாரத்தில்வந்த "ஆற்றினளவறிந்தீகவதுபொருள், போற்றிவழங்குநெறி" என்ற குறளின் வாய்பாட்டோடு ஒப்புடைய தென்றலு மொன்று. பர்வம் - வடசொல். (௨)

௪௮௩ அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(இ - ள்.) அரு வினை என்ப - (அரசராற் செய்தற்கு) அரிய வினைகளென்று சொல்லப்படுவன, உள ஓ—? கருவியான் - (அவற்றைமுடித்தற்கு ஏற்ற) கருவிகளுடனே, காலம் அறிந்து - (செய்தற்குஆங்) காலம் அறிந்து, செயின் - செய்வராயின்; (எ - று.)

கருவிகளாவன-மூவகை ஆற்றலும், நால்வகை உபாயங்களுமாம். 'அவை உளவாயவழியும் காலம்வேண்டும்'என்பது அறிவித்தற்கு, '*கருவியான்' என்றார். எல்லாவினையும் எளிதின்முடியு மென்பதாம்.

(கு - ரை.) உளவோ - இல்லை யென்றபடி; ஓ - எதிர்மறை. அவற்றை முடித்தற்கு ஏற்ற கருவிகள் - அத்தொழில்களை நிறைவேற்றுதற்கு ஏற்றவையாயமைந்த உபகரணங்கள். மூவகையாற்றல் - அறிவுமுதலாகவும், நால்வகையுபாயம் - தானம் முதலாகவும் கீழ்த் தெரிந்துசெயல்வகையிற் கூறப்பட்டவை. உளவாயவழியும் - உள்ளனவானபொழுதும். அரு வினை-பண்புத்தொகை. கருவியான் என்பதில் - ஆனென்னும் மூன்றனுருபு, ஒடுஉருபின் பொருளது; அடுத்த கவியில் 'இடத்தான்' என்பதிலும் இவ்வாறே. (௩)

---

* பி - ம்: கருவியாற் காலமறிந்துசெயின்

சஅஅ. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(இ - ள்.) ஞாலம் கருதின் உம் - (ஒருவன்) ஞாலம் (முழுதும் தானே ஆளக்) கருதினனாயினும், கைகூடும்-(அஃது அவன்)கையகத்ததாம்:—(அதற்குச் செய்யும்வினையை), காலம் கருதி - காலம் அறிந்து, இடத்தான் - இடத்தோடு (பொருந்த), செயின் - செய்வானாயின்; (எ - று.)

'இடத்தான்' என்பதற்கு மேல் 'கருவியான்' என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க; கைகூடாதனவுங் கைகூடு மென்பதாம்.

இவை மூன்றுபாட்டானும், காலம் அறிதற்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) ஞாலம் முழுதும் - பூலோகம் முழுவதையும். அஃது - அந்நிலவுலகம். அவன்கையகத்ததாம் - அவனதுகையிடத்திலுள்ளதாம்; தவறுது வசப்பட்டதாகும் என்றபடி. அதற்குச்செய்யும்வினையை - அங்ஙனம் உலகமுழுவதையும் வென்று தனதாக்கி ஆளுதற்குச் செய்யவேண்டுந் தொழிலே. இடத்தோடு பொருந்த - தான் வெல்லுதற்குரிய நிலத்துடனே பொருந்தும்படி. இதன்விவரத்தை, அடுத்துவருகிற 'இடனறிதல்' என்னும் அதிகாரத்திற் காண்க; அந்த அதிகாரத்துக்கு இவ்வதிகாரத்தில் தோற்றுவாய் செய்தவாறு. மேல் 'கருவியான்' என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க - மூன்றினகுறளில் 'கருவியான்' என்னுஞ் சொல்லுக்கு உரைத்ததுபோல உரைக்கவேண்டும்; அதனைமுடித்தற்காம் இடத்தோடு எனப் பொழிப்புரை கூறி, 'இடம் உள்ளதானவழியும் காலம்வேண்டு மென்பது அறிவித்தற்கு இடத்தான் என்றார்' என விசேடவுரையுங் கூறுக வென்றபடி. இங்ஙனங் கூறின இவ்விரண்டுபாடல்களாலும், முன் அதிகாரத்தில்வந்த வலிமைக்கும் பின் அதிகாரத்தில் வரும் இடத்திற்கும் இந்த இடையதிகாரத்திற் கூறப்பட்ட காலம் இன்றியமையாத தென்றும், அதுபற்றியே இது சிங்ஙனோக்காக இடையில் சிறுத்தப்பட்ட தென்றும் உணர்க. அறிதற்பயன் - அறிதலாலுண்டாகும் பிரயோசனம். கருதினும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு; அதனுடைய ஆற்றலால், ஞாலமென்பது முழுதுமாயிற்று. (சு)

சஅஉ. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(இ - ள்.) கலங்காது - தப்பாது, ஞாலம் - ஞாலமெல்லாம், கருதுபவர்-(கொள்ளக்)கருதும் அரசர்,—காலம் கருதி இருப்பர்-(தம்வலி மிகுமாயினும் அதுகருதாது அதற்குஏற்ற) காலத்தையே கருதி (அதுவருந்துணையும்) பகை மேற் செல்லார்; (எ - று.)

தப்பாமை - கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி, 'காலங்கருதி' என்றதனாற் பெற்றாம். அதுகருதாதுசெல்லின் இருவகைப்பெருமையுந் தேய்ந்துவருத்தமும் உறவராகலின், 'இருப்பர்' என்றார். இருத்தலாவது-நட்பாக்

கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறுயது.

இதனுன், காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

(கு - ரை.) தப்பாது - தவருமல். ஞாலமெல்லாம் கொள்ளக் கருதும் - பூமிமுழுவதையும் கைக்கொள்ள நினைக்கும். அதுகருதாது - தம்வலிமிகுதியை முக்கியமாக நினையாமல். அதற்கு ஏற்ற - ஞாலங்கொள்ளுதற்குத்தக்க. அது வருந்துணையும் - அந்த நற்காலம் வருமளவும். பகைமேல் செல்லார் - பகைவர்மேல் வெல்லுதற்குப் புறப்பட்டுச்செல்லாமற் காத்திருப்பர். கருதியவழியே - நினைத்தபடியே. வலியறிதலின்பின் அறியவேண்டிய கால மறிதல் 'காலங்கருதி' என்பதனுற் கூறப்படுதல்பற்றி, அதற்கு முன்னமே வலிமிகுதி அவரிடம் அமைந்துகிடந்த தெனப்பெறப்பட்டது. அதுகருதாது செல்லின் - காலத்தைப்பொருளாக நினையாமல் வேண்டியபொழுது வினை செய்தற்குச் சென்றுல். இருவகைப்பெருமை - பொருளும் படையும் எனக் கீழ்த் தெரிந்துசெயல்வகையிற் கூறப்பட்டவை. தேய்த்து - குறைத்து. உளுவர் - அடைவர். நட்பாக்கல்-நிலரைச்சினேகிதராகச்சேர்த்தல். பகையாக்கல்-நிலரைப் பகைவராகப்பிரித்தல். மேற்சேறல் - பகைவர்மீது வெல்லுதற்குச் செல்லுதல். இருத்தல்-அங்ஙனஞ் செல்லவேண்டிக் காலத்தைநோக்கிக் காத்திருத்தல். பிரித்தல் - தன்னிற்சேர்ந்தவருள் தகாதவரை நீங்கச்செய்தல். கூட்டல்-தன்னிற்சேராதவருள் தக்கவரைக் கூடச்செய்தல். இந்தஆறு குணங்களுள், நட்பாக்கலுக்குப் பகையாக்கலும், மேற்சேறற்கு இருத்தலும், பிரித்தலுக்குக் கூட்டலுமாக இங்ஙனம் இவ்வீரண்டு ஒன்றற்கொன்று மறுதலையானது. இங்கே மேற்செலவிற்கு மாறுயது, இருத்தல். வாராவழி - வராத பொழுது. செய்வது - செய்யவேண்டுவது; காத்திருக்கவேண்டுமென்பது. இங்கு "சீலமல்லனறிக்கிச் செம்பொற்றுலைத், தாலமன்ன தனிநிலைதாங்கிய, ஞாலமன்னற்கு நல்லவர்நோக்கிய, காலமல்லது கண்ணுமுண்டாங்கொலோ" என்ற கம்பராமாயணச்செய்யுளை அறிக. (கு)

சஅசூ. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(இ - ள்.) ஊக்கம் உடையான் - வலிமிகுதியுடைய அரசன், ஒடுக்கம் - (பகைமேற்) செல்லாது (காலம்பார்த்து) இருக்கின்ற இருப்பு,—பொருதகர்-பொருகின்ற தகர், தாக்கற்கு-(தன் பகைகெடப்) பாய்தற்பொருட்டு, பேரும்-பின்னே கால்வாங்கும், தகைத்து - தன்மைத்து; (எ - று.)

உவமைக்கண் 'தாக்கற்கு' என்றதனுன், பொருளினும் 'வென்றிஎய்தற் பொருட்டு' என்பது கொள்க.

இதனுன், அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பொருகின்ற தகர் - சண்டைசெய்கின்ற ஆட்டுக்கடா. தன் பகைகெட - தனக்குப் பகையாயிருக்கும் மற்றொன்று அழியும்படி. உவமைக்

கண் - உபமானத்தில். பொருளிலும் - உபமேயத்திலும். வென்றிஎய்தற் பொருட்டு - சயமடையும்பொருட்டு. அவ்விருப்பு - காலத்தை எதிர்நோக் கிக்காத்திருத்தல். பேரும் - பெயரும் என்பதன் மரூஉ. உவமையணி. இவ் வுபமானத்தால், பின்புவெற்றியெய்துதல் தவறு தென வினங்கும். (கூ)

கூஎ. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
தூள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(இ-ள்.) ஒள்ளியவர்-அறிவுடையஅரசர், *ஆங்கே-பகைவர் மிகைசெய்த பொழுதே, பொள்ளென - விரைவாக, புறம் வேரார்-(அவர்அறியப்)புறத்து வெகுளார்; காலம் பார்த்து - (தாம் அவரை வெல்லுதற்கு ஏற்ற)காலத்தினை அறிந்து, (அது வருந்துணையும்), உள் வேர்ப்பர்-உள்ளே வெகுள்வர்; (எ-று.)

'பொள்ளென' என்பது, குறிப்புமொழி. 'வேரார்,' 'வேர்ப்பர்' எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்ப ராகலின் 'புறம்வேரார்'என்றும், †வெகுளிஒழிந்துழிப் பின்னும்மிகைசெய் யாமல் அடக்குதல் கூடாமையின் 'உள்வேர்ப்பர்' என்றும் கூறினர்.

(கு - ரை.) மிகை - குற்றம். புறத்து வெகுளார்-வெளியிற்கோபங்காட் டார். உள்ளே வெகுள்வர் - மனத்திலேயே கோபத்தை வைத்திருப்பர். பொள்ளென-விரைவுக்குறிப்பு; இது இடைச்சொல்லாம். வேர்த்தல்-உடம்பு வியர்வையடைதல்: இது - கோபத்தின் காரியமாம்: இங்கே வேர்த்தலுக் குக்காரணமான கோபித்தலே வேர்த்தல்என்ற காரியச்சொல்லாற் கூறியது - உபசாரவழக்கு. அறியவெகுண்டுழி-(பகைவர்) அறியும்படி வெளிப்படையாகக் கோபங்கொண்டால். தம்மைக் காப்பர் - (பகைவர் மூன்ஜாக்கிரதைப்பட்டுத்) (தம்மைத் தாம்) பாதுகாத்துக்கொள்வர். மனத்திலும் கோபங்கொள்ளாமல் அரசர் கோபத்தைநீக்கியேயிருந்தால் பகைவர் அடங்காமல் மேல்மேலும் குற் றஞ்செய்துகொண்டேபோவதைத் தடுக்க வேறுவழியில்லாமையால், உள் வேர்த்தல் அவசியமாயிற்று. ஆங்கு-அங்கு என்பதன் நீட்டல். ஒள்ளியவர் - அறிவுடையார். (எ)

கூஅ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் ஜிழக்காந் தலை.

(இ - ள்.) (தாம் வெல்லக்கருதிய அரசர்), செறுநரை காணின் சுமக்க - பகைவ(ர்க்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவ)ரைக் கண்டாற் பணிக; (பணியவே), இறுவரை காணின்-(அக்காலம்வந்து) இறும்வழி, தலை கிழக்கு ஆம் - (அவர் தலைவின்றி இறுவர்; (எ - று.)

பகைமைஒழியும்வகை மிகவுந்தாழ்ந வென்பார் 'சுமக்க' என்றும், அங் ஙனந்தாழவே அவர் தம்மைக் காத்தலிகழ்வ ராகலின் தப்பாமற்கெடுவ ரென்பார், 'அவர்தலை கீழாம்'என்றும் கூறினர். தலைமேற்கொண்டதொரு

* பி - மீ: பொள்ளென ஆங்கே - பகைவர் மிகை செய்தபொழுதே
† பி - மீ: ஒன்றுஞ் செய்யாமலடக்குதல்.

பொருளைத் தள்ளுங்கால் அது தன்தலைகீழாக விழு மாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது.

இவையிரண்டுபோட்டானும், இருக்கும்வழிப் பகைமைதான்றுமலிருக்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இறுதிக்காலம்-ஒடுங்குதற்கு ஏற்ற சமயம். வருந்துணையும் - வருமளவும். பணிக - மிகவும் தாழ்ந்திருக்கக்கடவர். பணியவே - அங்ஙனந் தாழ்ந்திருக்கவே. இறும்வழி - அழியும்பொழுது. அவர் - பகைவர். தகை வின்றி இறுவர் - தடையில்லாமல்அழிவர். பகைமை ஒழியும்வகை - (தமக்கு அவர்மேற்) பகைமை சிறிதுமில்லை யென்று (அவர்கள் தம்மை) நம்பும்படி சுமத்தல் - தலைமேற்கொள்ளுதல்; இங்கே, மிகவணங்கியிருத்தற்கு இலக்கணை. தம்மைக் காத்தல்இகழ்வர் - பகையில்லை யெனக்கருதித் தம்மைத் தாம் பாது காக்குந் தொழிலில் அஜாக்ரதைப்படுவர். ஒருசுமையை அப்புறப்படுத்த வேண்டியவன் அதனைத் தலைமேற்சுமந்துகொண்டுபோய் அதற்குஏற்ற இடத் தையடைந்தபொழுதில் அதனைத் தலைகீழாகத்தள்ளுதல்போல. பகைவரை அழிக்கவேண்டியவர் அதற்குஏற்றகாலம் வாய்க்குமளவும் அவர்களைத் தலை மேற்கொண்டு கௌரவித்துக் காலம்வாய்க்கையில் அவரைத் தலைகீழாகத் தள்ளியழிப்ப ரென்க. இங்குப் பஞ்சதந்திரக்கதையில்வரும் நாகமொன்று தவளைகளைச் சுமந்துசென்றகதை கருதத்தக்கது. செறுநர் - பகைக்குந்தன்மை யர். இறு வரை காணின் - அழியும்எல்லை தோன்றினுல். கிழக்குஎன்பது - இங்கே திசையையுணர்த்தாமல் கீழ்என்னும்பொருளையுணர்த்திற்று;('மேற்கு' என்பதும் இவ்வாறு திசையையுணர்த்தாமல் மேலென்னும்பொருளை உணர்த் துவதுஉண்டு.)தலைகிழக்காம் - தோல்வியடைவ ரென்றபடி; தலைகீழாக அழிக் கப்பட்டு விழுந்து உருள்வ ரென்பதுமாம். (அ)

சுஅகூ எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ - ள்.) (பகையைவெல்லக்கருதும் அரசர்),—எய்தற்கு அரியது - (தம்மால்) எய்தற்கு அரிய காலம், இயைந்தக்கால் - வந்து கூடியக்கால், அ நிலையே - அதுநிலைமைதற்குமுன்பே, செய்தற்கு அரிய - (அதுகூடாவழித் தம் மாற்) செய்தற்கு அரிய வினைகளை, செயல் - செய்க; (எ - று.)

ஆற்றல்முதலியவற்றால் செய்துகொள்ளப்படாமையின் 'எய்தற்குஅரி யது' என்றும், அது தானேவந்துஇயைதல் அரிதாகலின் 'இயைந்தக்கால்' என்றும், இயைந்தவழிப் பின்நில்லாது ஓடுதலின் 'அந்நிலையே' என்றும், அது பெறுவழிச் செய்யப்படாமையின் 'செய்தற்குஅரிய' என்றும் கூறினர்.

இதனுன், காலம்வந்துழி விரைந்துசெய்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) கூடியக்கால் - அடைந்தால். அது - அக்காலம். அது கூடா வழித் தம்மாற் செய்தற்கரிய வினைகள் - அக்காலம் வந்துகூடாதபொழுது தாம்செய்துமுடித்தற்குக்கூடாத காரியங்கள். ஆற்றல்முதலியவற்றுற்செய்து

கொள்ளக்கூடாமையின் - தமதுவலிமைமுதலிய காரணங்களாற் காலமென் பது வருவித்துக்கொள்ளக்கூடாததாதலால். அது - அக்காலம். இயைந்தக் கால் என்பது, அக்காலம்வந்துஇயைதலின் அருமை தோன்ற நின்றதென்க. இயைந்தவழி - கூடியபொழுது. பின் நில்லாது ஓடுதலின் - காலம் என்பது நீடித்துநில்லாமல் விரைந்துசெல்லுந்தன்மைய தாதலால். அதுபெறுவழி - அக்காலத்தை அடையாதவிடத்து. வந்தழி - வந்தபொழுது. எய்தற்கு - எதிர்காலவினையெச்சம். எய்து - பகுதி. அந்நிலையே - அப்பொழுதே. ஏகா ரம் - சிறிதுந்தாமதஞ்செய்யலாகாமையை விளக்கும். அரிய-பெயர். செயல் - உடன்பாட்டு வியங்கோள். (கூ)

சகூ0. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(இ - ள்.) கூம்பும் பருவத்து - வினைமேற்செல்லாதிருக்குங்காலத்து, கொக்கு ஒக்க - கொக்குஇருக்குமாறுபோல இருக்க; மற்று சீர்த்த இடத்து - மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி, அதன் குத்து ஒக்க - அதுசெய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற் செய்துமுடிக்க; (எ - று.)

மீன்கோடற்கு இருக்கும்வழி அதுவந்துஎய்துத்துணையும் முன் அறிந்து தப்பாமைப்பொருட்டு உயிரில்லதுபோன்றிருக்கு மாகலானும், எய்தியவழிப் பின்தப்புவதற்குமுன்பே விரைந்து குத்து மாகலானும், இருப்பிற்கும் செய லிற்கும் *கொக்கே உவமையாயிற்று. 'கொக்கொக்க' என்றாராயினும் 'அது கூம்புமாறுபோலக் கூம்புக' என்றும், 'குத்தொக்க' என்றாராயினும் 'அது குத்துமாறுபோலக் குத்துக' என்றும் உரைக்கப்படும்; இது தொழிலுவம மாகலின். உவமைமுகத்தான் இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம்கூறிய வாறுயிற்று.

(கு - ரை.) வினைமேல்-போர்செய்தல்தொழிலின்மேல். வாய்த்தவழி-இடைத்தபொழுது. அதுசெய்து முடிக்குமாறுபோல - கொக்குத் தன்தொழி லுச்செய்துமுடிக்கும்விதம்போல. மீன் கோடற்கு இருக்கும் வழி - மீனைப் பிடித்துக்கொள்ளும்பொருட்டுக் காத்திருக்கும்பொழுது. அதுவந்து எய்துந் துணையும் - அம்மீன் வந்து சேருமளவும். வந்தெய்துந்துணையும் உயிரில்லது போன்றிருக்கு மென இயையும். முன் அறிந்து தப்பாமைப்பொருட்டு - (அத னைப்பிடிக்குந்தன்மையதான தான் இருத்தலை அம்மீன்) முன்னதாக அறிந்து (ஜாக்கிரதைப்பட்டுத்) தப்பியோடிப்போய்விடாமலிருப்பதற்காக. உயிரில்லது போன்றிருக்கும் - அசைவற்று நிற்கும். "மடைத்தலையி, லோடுமீனோடவும் மீன்வருமளவும், வாடியிருக்குமாங்கொக்கு" என்றார் ஔவையாரும். எய்திய வழி - மீன்வந்துசேர்ந்தபொழுது. தப்புவதற்கு - தப்பியோடிப்பிழைத்தற்கு. இருப்புக்குக் கொக்குவமை - முதல்வாக்கியம். செயலுக்குக் கொக்குவமை - இரண்டாம்வாக்கியம். அது கூம்புமாறுபோலக் கூம்புக - கொக்கு ஒடுங்கி யிருத்தல்போல ஒடுங்கியிருக்க. ஒக்க - வியங்கோள்முற்று. குத்துக - தப்ப

பி - மீ: * கொக்கு

வொண்ணாதபடி விரைந்துஅழிக்க. தொழிலுவமம் - செயல்பற்றிவந்த உபமானம். உவமைமுகத்தான் - உபமானங்காட்டுகிற மூலமாய். செயல்-பகைமேற் சென்று போர்புரிதலாகிய தொழில். மற்று - ஒன்றோடொன்று மாறுபட்ட வினைகளினிடையில் நின்றதனால், வினைமாற்றுப்பொருளது. குத்தொக்க - குத்தையொத்திருக்க. சீர்த்தல் - சிறப்புப்பெறுதல்; இங்கே, அதிகாரத்துக்கு ஏற்ப, செல்லுங்காலம் வாய்த்த லாயிற்று. குத்து-முதனிலைத்தொழிற்பெயர்.

௫௦ - ஆம் அதிகாரம்.—இடனறிதல்.

அஃதாவது - வலியும் காலமும் அறிந்து பகைமேற்செல்வான் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும், இதனானே விளங்கும்.

(கு - ரை.) நிலத்தினை இடத்தை. வலிமையையாராய்ந்து அறிந்துதொழில்செய்யத் துணிபவன் அதன்பின் காலத்தை யறியவேண்டுதலும், அங்ஙனங்காலத்தையும் ஆராய்ந்தறிந்து துணிந்தவன் அதன்பின் இடத்தையறிய வேண்டுதலும் இங்கே அதிகாரமுறைமைக்குக் காரணம்.

சகூக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(இ-ள்.) முற்றுஉம் இடம் கண்டபின் அல்லது-(பகைவரை) முற்றுதற்கு ஆவதோ ரிடம் பெற்றபின் அல்லது, (அவர்மாட்டு), எ வினைஉம்-யாதொரு வினையையும், தொடங்கற்க - தொடங்காதொழிக: எள்ளற்க-(அவரைச் சிறியரென்று) இகழாதொழிக; (எ - று.)

முற்றுதல்-வளைத்தல். அதற்கு ஆம் இடமாவது-வாயில்களானும்நூழைகளானும் அவர் புகலொடு போக்கு ஒழியும்வகை அரணினைச்சூழ்ந்து ஒன்றற்கு ஒன்று துணையாய்த் தம்முள்நலிவில்லாத பலபடை இருப்பிற்கும்,மதிலும் அகழும் முதலிய அரண் செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையும் நீரும் உடையது. அது பெற்றால் இரண்டுஞ் செய்க என்பதாம்.

(கு - ரை.) முற்றுதற்கு ஆவதோர்இடம் - வளைத்தற்குத் தக்கதோர் இடத்தை. பகைவரைவளைத்தல் - முற்றுகைசெய்த லெனப்படும். பெற்றபின் அல்லது - பெறுதற்குமுன்பு என்றபடி. அவர்மாட்டு - அப்பகைவரிடத்து. சிறியர் என்று - வலிமையிற்குறைந்தவரென்று. எவ்விதத்திலும் வெளியிற் போகாதபடி பகைவரை வளைத்துக்கொள்ளுதல், முற்றுகையெனப்படும். வாயில் - வாசல்: பலரும் வெளிப்படையாகக் கோட்டையினுட் போக்குவரவு செய்யும் வழி. நூழை - அந்தரங்கமாகவுள்ள சுரங்கவழி; கீழறை யென்பர். அவர் புகலொடு போக்கு ஒழியும் வகை - பகைவர்கள் வெளியே போதலும் உள்ளே புகுதலும் இல்லையாம்படி. அரணினைச் சூழ்ந்து - பகைவரது கோட்டையை முற்றுகைசெய்து. தம்முள் நலிவில்லாத பலபடை இருப்பிற்கும்-தமக்குள் ஒன்றையொன்று நெருக்குதலில்லாத தம் நால்வகைச்சேனையும்ஒருங்கு கூடித் தங்குதற்கும். அகழ் - அகழி. அரண்செய்யப்பட்ட - காப்புஅமைக்கப்

பட்ட. அரசிருப்பு - அரசனிருக்குமிடம். நிலக்கிடக்கை - இடத்தின் அமைதி; நிலப்பரப்பென்றுங் கூறுவர். சீர்என்றது, தூரவு இணறு சிறுகுளங்களே. சூழ்ந்தஎன்னும் வினையெச்சம், இருப்பிற்கு என்றதில் 'இரு' என்ற முதனிலை யோடு இயையும். "மணிநீரு மண்ணுமலையுமணிநிழலும், காடுமுடையதரண்" என மேற்கூறுவ ராதலால், மதிலும் அகழும் முதலிய அர ணெனப்பட்டது. அதுபெற்றால் - அப்படிப்பட்ட சகுதியுள்ள இடத்தைப் பெற்றால் அதன் பின்பு. இரண்டும் செய்க-பகைவர்மேல் வினைதொடங்குதல், இகழ்தல் என்ற இரண்டையுஞ் செய்யவேண்டும். தொடங்கற்க, எள்ளற்க - எதிர்மறைவியங் கோள். முற்றும் - பெயரெச்சம்.

சகூஉ. மூரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

(இ-ள்.) மூரண் சேர்ந்த-மாறுபாட்டோடுகூடிய, மொய்ம்பினவர்க்கும்-வலியினையுடையார்க்கும்,—அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் - அரணைச்சேர்ந்து ஆகின்ற ஆக்கம்,—பலவும் தரும் - பலபயன்களையுங் கொடுக்கும்; (எ - று.)

மாறுபாடாவது ஞாலம்பொதுவெனப்பொரு அரசர்மனத்தின்கண்நிகழ்வ தாகலானும், வலியுடைமைகூறிய அதனானும், இது-பகைமேற்சென்ற அரசர் மேற்றாயிற்று. உம்மை-சிறப்பும்மை. அரண்சேராது ஆம் ஆக்கமும் உண்மை யின், ஈண்டு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. 'ஆக்கம்' என்றது - அதற்கு ஏது வாய முற்றினை. அதுகொடுக்கும் பயன்களாவன-பகைவரால் தமக்கு நலிவின் மையும், தாம் நிலைபெற்றுகின்று அவரைநலிதலும் முதலாயின.

(கு - ரை.) மாறுபாடு - மனம்வேறுபடுதல், விரோதித்தல். மாறுபாட் டோடுகூடிய வலியினையுடையார் - பிறஅரசர்களோடு விரோதித்தலையும், அவரினும் தாம் அதிகவலிமையையும் உடையவர். அரணைச்சேர்ந்து ஆகின்ற ஆக்கம் - தக்ககாவலுள்ள இடத்தைத் தாம் அடைதலால் உண்டாகிற செல் வம். ஞாலம்பொதுவெனப் பொரு அரசர் மனத்தின்கண் நிகழ்வது - நில வுலகம்முழுவதும் பலஅரசர்க்கும் பொதுவாகவன்றித் தம்முடையதாகவே [தமக்குச் சிறப்பாகவே] இருக்கவேண்டும் எனக் கருதுகிற அரசர்களது மனத்திலுண்டாவது. வலியுடைமை - பிற அரசரினும் மிகுந்த பலத்தை யுடைத்தாயிருத்தல். இது - இக்குறளிற் சொன்னமுற்றுரை. பகைமேற்செ ன்ற அரசர்மேற்று ஆயிற்று - பகைவர்களின்மேல் வெல்லுதற்குப் படையெ டுத்துச்செல்லுகிற அரசர்கள்விஷயமாயிற்று. மொய்ம்பினவர்க்கும் என்ற 'உம்' - உயர்வுசிறப்புப்பொருளது. தாம் தகுதியான இடத்தில் இல்லாம லே தமது வலிமையாற் பகைவர்மேற் சென்று முற்றுகைசெய்தலும் உல கத்தில் உள்ளதாதலால், அதனை விலக்குதற்பொருட்டு, 'அரண்சேர்த்தாமாக் கம்' என ஆக்கத்திற்குத் தக்க அடைமொழி கொடுத்துக் கூறினர். செல்வ மென்னும் பொருளைத் தரும் 'ஆக்கம்' என்பது-இங்கே, அதற்குக்காரணமான பகைவரைமுற்றுகைக்குக் காரியவாகுபெயர். அதற்கு - செல்வத்திற்கு. முற் றினை - வினைத்தலை. அது - தாம் அரண்சேர்த்து பிறரை வினைத்தல். நலிவு

இன்மை - வருத்தம் உண்டாகாமை. அவரை - பகைவரை. நலிதல் - வருத்துதல். மொய்ம்பினவர்க்கும் என்ற உம்மையால், மொய்ம்பில்லாதவர்க்கு இவ்வரண்சேர்ந்தா மாக்கம் இல்லாமல்முடியாது என்பது தானே பெறப்படும். சேர்ந்து - காரணப்பொருளதாய்ப் பிறகருத்தாவின்வினையைக் கொண்டுமுடிதற்குஏற்ற செயவெனெச்சத்தின் திரிபு. (௨)

௪௯௩. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

(இ - ள்.) ஆற்றார்உம்-வலியரல்லாதாரும், ஆற்றி - வலியராய். அடுப - வெல்வர்:—இடன் அறிந்து - (அதற்குஏற்ற)இடத்தினை அறிந்து, போற்றி - (தம்மைக்)காத்து, போற்றார்கண் - பகைவர்மாட்டு, செயின் - (வினை) செய்வராயின்; (எ - று.)

'வினை' என்பதூஉம், 'தம்மை' என்பதூஉம், அவாய்நிலையான் வந்தன. காத்தல் - பகைவரான் நலிவுவாராமல் அரணானும் படையானுங் காத்தல். *இவ்வாற்றான் வினைசெய்வராயின், மேற்சொல்லிய வலி இன்றியும் வெல்வரென்பதாம்.

(கு - ரை.) அதற்கு-அங்ஙனம்ஜயித்தற்கு. போற்றுதல், செய்தல் என்ற வினைகள யாதாயினும் ஒருசெயப்படுபொருளை வேண்டிநின்றதனால், தம்மையென்றும் வினையென்றும் இடத்திற்கேற்ற செயப்படுபொருள்கள் வருவிக்கப்பட்டன. அரணானும் படையானும் காத்தல் - மதில்முதலிய காப்புக்களாலும் சேனைகளாலுந் தம்மைத் தாம் பாதுகாத்தல். இவ்வாற்றான் - இவ்வழியால்; இடமறிந்து தம்மைக்காத்துச்செய்யும் வழியால். மேற்சொல்லிய வலி - முந்தின குறளில் "முரண்சேர்ந்தமொய்ம்பினவர்" எனத்தொகுத்துக் கூறப்பட்டது; கீழ் 'வலியறிதல்' என்னும் அதிகாரத்தில் வகுத்துக்கூறப்பட்டவாறுங் காண்க. இதனான் வலிமையினும் இடம் முக்கியமென விளங்கும். ஆற்றாரும், உம்மை - இழிவுசிறப்பு. ஆற்றுதல் - வலிமையுடைத்தாதல். அடுப - (பகைவரை) அழிப்பரென்றபடி. போற்றார்-(தம்மை)வணங்கிப்புகழாதவர்; எனவே, பகைவராயிற்று. (௩)

௪௯௪. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(இ - ள்.) இடன் அறிந்து துன்னியார் - (தாம் வினைசெய்தற்குஏற்ற) இடத்தினை அறிந்து சென்ற அரசர், துன்னி செயின்-(அரணைப்) பொருந்தி நின்று (அதனைச்) செய்வராயின்,—எண்ணியார் - (அவரை வெல்வதாக) எண்ணியிருந்த பகைவர், எண்ணம் இழப்பர் - அவ்வெண்ணத்தினை இழப்பர்.

'அரண்'என்பது,அவாய்நிலையான் வந்தது. 'எண்ணம்'என்றது,எண்ணப்பட்ட தம்வெற்றியை. 'அதனைஇழப்பர்' என்றார், அவர் வினைசெய்யாமல் தம்மைக் காத்தமையின். இதனான், அவர்பகைவர் தோற்பரென்பதாயிற்று.

பி-ம்: * இவ்வாறு.

இவைகான்குபாட்டானும், பகைவரரணின்புறத்துஇறுப்பார் அதற்கு ஆம் இடம் அறிதல் கூறப்பட்டது.

(கு - ரை.) சென்ற - பகைமேற்சென்ற. அரணைப் பொருந்திநின்று - தாம் தக்கபாதுகாப்புள்ளஇடத்தை அடைந்திருந்து. அதனை-அவ்வினையை. துன்னியார் என்பதற்கு 'அரண்' என, இடத்திற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. எண்ணமென்னுந் தொழிற்பெயர் - எண்ணப்படுவதாகிய வெற்றிக்குத் தொழிலாகுபெயர். அவர் - இடனறிந்து துன்னியவர். வினை செய்யாமல் - பகைவர் தம்மேல் போர்முதலிய தொழில் செய்யக்கூடாதபடி. தம்மைக்காத்தமையின் - தம்மைத்தாம் பாதுகாத்துக்கொள்ளுதலால். இதனால் - 'எண்ணியாரெண்ணமிழப்பர்' என்றதனால். அவர்பகைவர் தோற்பர்-இடனறிந்து துன்னியவரதுவிரோதிகள் தோல்வியடைவர். வெல்லுமெண்ணத்தை யிழப்பதற்குக் காரணம், வந்தவர் தக்க காப்புடையவராயிருத்தல். வெல்லுமெண்ணத்தை யிழப்பர் என்றதனால் தோல்வியடைவரென்றகருத்துக்கொண்டது, அருத்தாபத்திவகையா லெனக் காண்க. பகைவர் அரணின் புறத்து இறுப்பார் - பகைவர்களது கோட்டையின் வெளியிற் படையுடன் சூழ்ந்துதங்குபவர். அதற்கு ஆம் இடம் அறிதல்-அம்முற்றுதற்கு ஏற்றதான இடத்தை அறிதல். எண்ணியார், துன்னியார்-இறந்தகாலவினையாலணையும் பெயர்கள். (ச)

சகூரு. நெடும்புனலுள் வெல்லு முதலை யடிப்புனலி
னீங்கி னதனைப் பிற.

(இ - ள்.) முதலை—, நெடும் புனலுள் - ஆழமுடைய நீரின்கணுயின், (பிற) வெல்லும் - பிறவற்றையெல்லாம் (தான்) வெல்லாநிற்கும்; புனலின் நீங்கின் - அப்புனலின் நீங்குமாயின், அதனை—, பிற அடும் - பிறவெல்லாம் வெல்லாநிற்கும்; (எ - று.)

எனவே, எல்லாரும் தம்நிலத்துவலியரென்பது கூறப்பட்டது. 'பிற' என்பது, மூன்றும் கூட்டப்பட்டது. 'நிலைப்படாநீரின்கண் * பிறநிற்றலாற்றுமையின், அவையெல்லாம் முதலைக்கு எளியவாம்; அவை இயங்குதற்குரிய நிலத்தின்கண் அஃது இயங்கலாற்றுமையின், அஃது அவற்றிற் கெல்லாம் எளிதாம்' என்றது - 'மேற்செல்லும் அரசர் பகைவர்நிற்றலாற்று இடன்அறிந்து செல்வராயின் அவர் தமக்கு எளியராவர்: அன்றி, தாம் நிற்கலாற்று இடத்துச் செல்வராயின் அவர்க்கு எளியராவர்' என்னும் பொருள் தோன்றநின்றமையின், இது 'பிறிதுமொழிதல்' என்னும் அலங்காரம். அவரை அவர் நிற்றலாற்றுவிடத்துச் சென்று வெல்க என்பதாம்.

(கு - ரை.) நீரின்கண் ஆயின் - நீரிலே தான்இருந்தால். அப்புனலின்-அந்த ஆழமுடைய நீரினின்றும். அதனை - முதலையை. பிறவெல்லாம் வெல்லாநிற்கும் - மற்றைஎளிபபிராணிகள் சயிக்கும். 'முதலை தன்னிடமாகிய நீரிலிருந்தால் மலையொத்த யானையையும் இழுத்துக்கொண்டுபோகிறது; அதுவே

பி-ம்: * பிறவெல்லாம்.

அந்தஇருப்பிடம்விட்டுப் பெயருமாயின், அதனை நாய்களும் இழுத்துக் கொண்டுபோகின்றன' என்பது,பஞ்சதந்திரம். முன்னும் - முதல்வாக்கியத்திலும். பிறஎன்னும் பலவின்பாற்பெயர் - முன்வாக்கியத்திற்குச் செயப்படு பொருளும், பின்வாக்கியத்திற்கு எழுவாயுமாம். நிலைப்படாநீரின்கண் - அதிக ஆழத்தால் நிலைகொள்ளாத ஜலத்தில். பிற - மற்றைப் பிராணிகள். நிற்ற லாற்றுமையின்-நிலைகொள்ளமாட்டாமையால். நீந்தியியங்குதலையே இயற்கை யாகவுடைய முதலைக்கு, அங்ஙனம் இல்லாத யானை முதலியன நீரில் வெல் லப்படுவனவா மென்க. அவை இயங்குதற்கு உரிய நிலத்தின்கண் - அந்தப்பிராணிகள் இயற்கையாய் நடந்து சஞ்சரித்தற்குஏற்ற தரையில். அஃது இயங்கலாற்றுமையின் - அம்முதலை இயல்பாய்ச் சஞ்சரிக்கமாட்டா மையால். அஃது - முதலை. அவற்றிற்கெல்லாம் - யானை முதலியமற்றைப் பிராணிகள் பலவற்றிற்கும். நிற்றலாற்று இடன் - நிலைநிற்கமாட்டாதஇடம். அவர் தமக்கு எளியராவர் - அப்பகைவர்கள் பகைமேற்சென்ற தங்கட்கு வெல்லப்படுபவராவர்: அன்றி-அங்ஙனல்லாமல். அவர்க்கு-பகைவர்க்கு. இது-இச்செய்யுள். அவரை-பகைவரை. அவர்-பகைவர். "தன்னிலத்தினிற் குறு முயல் தந்தியின்வலிதென்று, இந்நிலத்தினிற் பழிமொழியறிதி நீயிறைவ, எந்நிலத்தினு முனக்கெளிதாயினு மிவர்க்கும், நன்னிலத்தினில்வர வமர்தொ டங்குதல் நன்றால்" என்ற வில்லிபுத்தூரார்பாரதச்செய்யுளோடுங்காண்க. (இ)

சகூ. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(இ - ள்.) கால் வல் நெடுந் தேர் - (நிலத்தின்கண் ஓடுங்) கால்வலிய நெடிய தேர்கள், கடல் ஓடா-கடலின்கண் ஓடமாட்டா; (இனி), கடல் ஓடும் நாவாய்உம் - அக்கடலின்கண்ஓடும் நாவாய்கள்தாமும், நிலத்துஓடா-நிலத்தின் கண் ஓடமாட்டா; (எ - று.)

'கடல்ஓடா' என்ற மறுதலையடையான், 'நிலத்துஓடும்' என்பது வருவிக் கப்பட்டது. 'கால்வல்நெடுந்தேர்' என்பது- ஓடுதற்குஏற்ற காலும் பெருமை யும் உடையவாயினும் என்பதுபட நின்றது. 'மேற்சென்றார் பகைவரிடங்களை அறிந்து அவற்றிற்குஏற்ற கருவிகளான் வினைசெய்க' என்பது தோன்ற நின் றமையின், இதுவும் மேலையலங்கார மாயிற்று.

(கு - ரை.) கால் வலிய - சக்கரங்கள் வலியனவாகப்பெற்ற. கால் - சக் கரமாதலை "சகடக்கால்போலவரும்" என நாலடியாரிலுங் காண்க. நெடிய - பெரிய. நாவாய்கள்தாமும் - மரக்கலங்களும். மறுதலையடை-எதிரான அடை மொழி. அடையெனினும், அடைமொழியெனினும், விசேஷணமெனினும் ஒக்கும்; அடைகொளியெனினும், விசேஷ்யமெனினும் ஒக்கும். நிலத்துஓடா என்ற மறுதலையடையைப் பெற வைக்கப்பட்ட நாவாய் என்னும் விசேஷ்யத் திற்கு 'கடலோடும்' என்ற உடன்பாட்டு அடைமொழி கொடுக்கப்பட்டதற்கு ஏற்ப,கடலோடா என்ற மறுதலையடைமொழியைப்பெற வைக்கப்பட்ட 'தேர்' என்ற விசேஷ்யத்திற்கு 'நிலத்துஓடும்' என்ற உடன்பாட்டு அடைமொழி

வருவிக்கப்பட்டது. கால் வல் நெடு என்ற அடைமொழிகள், அத்தேரின் அமைதிச்சிறப்பை விளக்கின. இதற்கேற்ப, நாவாய் என்பதற்கும் பாய்மரம் பாய்சுக்கான் முதலிய அமைதிச்சிறப்பைக் கொள்க. மேற்சென்றூர்-பகைமேற் சென்ற அரசர். கருவிகள் - உபகரணங்கள். இதுவும் - இப்பாட்டும். மேலை அலங்காரம் - மேற்செய்யுளினுரையிற்கூறிய பிறிதுமொழிதல். இப்பாட்டாலும், எல்லாரும் தம்தம்நிலத்துவலிய ரென்ற கருத்தே வேறுதிருவுள்ளாந்த முகத்தாற் கூறப்பட்டது. கால்வல்தேர் - சினையின் குணம் முதலைக் கொண்டது. நாவாய் - கௌ ஃ என்னும்வடமொழியின்சம்பந்தமாக வந்ததென்பர். உம்மை - மூர்த்தினவாக்கியத்தை நோக்கியதனால், இறந்ததுதழுவியதும்; உயர்வுசிறப்பு ஆகக்கொள்ளின், முன்வாக்கியத்தில் தேர்என்பதனோடுங் கூட்டவேண்டும். இக்குறளைக் காண்டலென்னும் அளவைக்கு உதாரணங்காட்டினர் வீரசோழியவுரைகாரர். (கூ.)

சகூஎ. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ - ள்.) எஞ்சாமை எண்ணி - (பகையிடத்து வினைசெய்யுந் திறங்களையெல்லாம்) ஒழியாது எண்ணி, இடத்தான் செயின்-(அவற்றை அரசர்) இடத்தோடு பொருந்தச் செய்வராயின்,—(அச்செயற்கு), அஞ்சாமை அல்லால் - (தம்)திண்மையல்லது, துணை வேண்டா - (பிறிதொரு)துணை வேண்டுவதில்லை; (எ - று.)

'திண்ணியராய்நின்று செய்துமுடித்தலே வேண்டுவ தல்லது துணை வேண்டா' என்றார், அவ்வினை தவறுதற்கு ஏது இன்மையின்.

இவை மூன்றுபாட்டானும், வினைசெய்தற்குஆம்இடன் அறிதல் கூறப்பட்டது.

(கு - ரை.) சிறம் - வகை. ஒழியாதுஎண்ணி - விடாமல் ஆலோசித்து. அவற்றை - அத்திறங்களை. திண்மை - பகைக்கு அஞ்சாத மனவுறுதி; தைரியம். கீழ்இறைமாட்சியில் "அஞ்சாமையீகையறிவூக்கமிந்நான்கும், எஞ்சாமை வேந்தர்க்கியல்பு" என்ற குறளினும், அஞ்சாமையென்பது அரசர்க்குரிய மற்றைக்குணங்களெல்லாவற்றினும் முதலதாகக் கூறப்பட்டதுகாண்க. பிறிது - வேறு. திண்ணியராய்நின்றுசெய்துமுடித்தலே வேண்டுவதல்லது-தைரியசாலிகளாய்நின்றுபோர்த்தொழிலைச்செய்து நிறைவேற்றுவதேவேண்டுவதல்லாமல். எஞ்சாமை - எதிர்மறைவினையெச்சம். (எ)

சகூஏ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

(இ - ள்.) உறு படையான் - பெரும்படையுடைய அரசன், சிறு படையான் செல் இடம் சேரின் - ஏனைச்சிறுபடையுடையானை அழித்தல்கருதி அவன்புகலைச் (சென்று) சாருமாயின்,—ஊக்கம் அழிந்துவிடும் - (அவனுல் தன்) பெருமை அழியும்; (எ - று.)

'செல்இடம்' - அவனுக்குச் செல்லு மிடம். 'அழிந்துவிடும்' என்பது, 'எழுந்திருக்கும்' என்றாற்போல ஒருசொல். ஊக்கத்தின் அழிவு, உடையான் மேல் ஏற்றப்பட்டது. தன்படைப்பெருமைநோக்கி இடம்நோக்காது செல்வனாயின், அஃது - அப்படைக்கு ஒருங்குசென்று வினைசெயலாகாமையானாக, பயிற்சியின்மையானாக, அப்பெருமையாற் பயன்இன்றித் தான் அழிந்து விடுமென்பதாம்.

(கு - ரை.) ஏனை - மற்றை. அழித்தல்கருதி - அழிக்கநினைத்து. அவன் புகலை - அவன் தங்குமிடத்தை. சாருமாயின் - அடைவனானால். அவனுக்கு-சிறுபடையுடையானுக்கு. செல்லுமிடம் - அதிகாரம்முதலியன தடையின்றி நடக்குமிடம். எழுந்திருக்கும் என்பது - எழும் என்று பொருள்படுதல்போல, அழிந்துவிடும் என்பது-அழியுமெனப்பொருள்பட்டு ஒருசொல்லாகும்; இதில் விடும் என்பது - ஒருபொருளையுங்குறியாதுவந்த துணைவினையென்க. படையான் ஊக்கம் அழிந்துவிடும் - உயர்திணையோடு சேர்த்துச்சொல்லப்பட்ட குணமாகிய அஃறிணை, உயர்திணைமுடிபைக் கொண்டது; [நன். பொது. உசு.] இனி, உறுபடையானது ஊக்கமானது அழிந்தேதீரும் என்றும் பொருள் கொள்ளலாம்; அழிந்துவிடும் என்பதில், விடும் என்பது - துணிவுப் பொருள் காட்டிற்று. படைப்பெருமை-சேனையின்மிகுதி. அஃது-அச்செல்லுதல். அப்படைக்கு ஒருங்குசென்று வினைசெயல் ஆகாமையான் ஆக - அந்தத் தன்பெருஞ்சேனைக்கு ஒருமிக்கப்போய்த் தொழில்செய்யக் கூடாமையாலாவது. பயிற்சியின்மையான் ஆக-அப்படிப்பட்ட இடத்தில் முன்பழக்கமில்லாததனாலாவது. சிறுபடை-பண்புத்தொகை. செல்லிடம் - வினைத்தொகை.(அ)

சகூகூ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(இ - ள்.) சிறை நலன் உம் - அரண் அழித்தற்கு அருமையும், சீர் உம்-பெருமையாகிய ஆற்றலும், இலர் எனின் உம் - உடையரல்லராயினும், மாந்தர் - (வினைக்கு உரிய) மாந்தரை, உறை நிலத்தோடு ஒட்டல்-(அவர்) உறைகின்ற நிலத்தின்கட் சென்று தாக்குதல், அரிது—; (எ - று.)

'நிலத்தோடு' என்பது - வேற்றுமைமயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமைநோக்கி இருப்பின்கட் சென்றுதாக்கின், அவர் அதுவிட்டுப்போதல் துணிவினரன்றிச் சாதல்துணிவின ராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையு மென்பதாம்.

(கு - ரை.) அரண் அழித்தற்கு அருமை - தமதுகோட்டை பகைவரால் அழிப்பதற்குக் கூடாதபடியிருத்தல். பெருமையாகிய ஆற்றல்-மிக்கவலிமை: மூவகை ஆற்றலுள் ஒன்று என்பாருமுளர். வினைக்குஉரியமாந்தரை - போர் முதலிய தொழில்செய்தற்குரிய அரசர்களை. அவர் உறைகின்ற - அவர்கள் தங்குகிற. அரிது - அருமையானது. நிலத்தோடு என்னும் மூன்றனுருபு - நிலத்தில் என ஏழாம்வேற்றுமை யிடப்பொருள்தந்ததனால், வேற்றுமைமயக்கம். ஆண்மை உடையார் - பராக்கிரமமுடையவர்கள். சிறுமைநோக்கி-சிறை

நலனும் சீரும் இன்மையைப் பார்த்து. இருப்பின்கண் - அவர் இருக்குமிடத்திலே. அதுவிட்டுப்போதல் துணிவினர் அன்றி-அந்தத் தம் இருப்பிடத்தை விட்டுப்போகத்துணிவுடையவராகாமல். சாதல் துணிவினராவர் - தம்மால் ஆனவரையிலும் போர்செய்து இறக்கநிச்சயிப்பர். அவர்க்கு - இப்படிநிச்சயிப்பவர்க்கு. அவர்க்கு - அவரால் என்றபடி. பெரும் படைஉடையும்-பிறரது பெரியசேனையும் அழியும். சிறை - காப்புடையஇடம். (கூ)

குoo. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(இ - ள்.) கண் அஞ்சா - பாகர்க்கு அடங்காவுமாய், வேல் ஆள் முகத்த - வேலாட்களைக்கோத்த கோட்டவுமாய, களிறு - களிறுகளை,—கால் ஆழ் களரின் - (அவை)கால்ஆழும் இயல்பிற்றாய சேற்றுநிலத்து(ப் பட்டிழி), நரி அடும் - நரி கொல்லும்; (எ - று.)

'முகம்' - ஆகுபெயர். 'ஆண்மையும் பெருமையும் உடையாரும் தமக்கு ஏலாநிலத்துச் செல்லின் அவற்றாற்பயன் இன்றி மிகவும்எளியரால் அழிவர்' என்பது தோன்ற நின்றமையின், இதுவும் - அவ்வலங்காரம். 'வேலாழ் முகத்த' என்று பாடமோதுவாரும் உளர்; வேற்படைகுளித்த முகத்தவாயின் அதுவும் நரிஅடுதற்கு ஏதுவாய்முடிதலின், அது பாடமன்மை அறிக.

இவைமூன்றுபாட்டானும், பகைவரைச்சார்தலாகா இடனும், சார்ந்தழிப் படும் இழுக்குங் கூறப்பட்டன.

(கு - ரை.) கண் என்ற மூங்கிற்கணுவின்பெயர் - சினையாகுபெயராய் மூங்கிற்கோலை யுணர்த்தி, அது மறுபடி ஆகுபெயராய் அக்கோலையுடைய பாகரை யுணர்த்திய தெனக் கொள்ளலாம். கண்ணஞ்சா என்றதனால், மதயானை யென்றதாயிற்று; ஏனெனில்,—"தறுகண்யானை தான்பெரிதாயினுஞ், சிறுகண்மூங்கிற்கோற்கஞ்சுமே" என்பது இயல்பாதலால். மதயானை எதற்கும்அஞ்சாமையை "தூணும்விலங்குமுறிப்பது பாகுபரிக்கோல்யாவுந் தாரத்தே, காணினுநின்றுகொதிப்பது" என்னும் மகாபாரதத்திலுங் காண்க. இனி, கண்என்பதைப் பொருள்குறியாது வினைச்சொல்லோடுவந்த உபசர்க்கமெனக்கொண்டு, பாகர்க்குஎன வருவித்ததாகக் கொள்ளினும் அமையும். அடங்காவும் - அடங்காதவையும். வேலாட்கள் - வேலாயுதத்தையேந்தின வீரர்கள். இங்கே பிறஆயுதங்களைக்கூறாமல் வேலாயுதத்தைக்கூறினது, யானையோடு எதிர்க்கும் வீரர் வேலேந்தியிருத்தல் ஒருமரபென்பது பற்றிப் போலும்; இதனை "ஒன்றாயினும்பலவாயினுமோராச்சினுளெறிய, வென்றாயின மதவேழமுமுளவோவெனவினவிப், பொன்றாழ்வரைப்புலி போத்தெனப் புனைதார்மிளிராப்பச், சென்றான்பலகளிறாயிரமிரியச்சினவேலோன்" என்ற சிந்தாமணிச்செய்யுள்கொண்டும் உணர்க. கோட்டவும் - தந்தங்களுடையனவும். களிறு - யானையின் ஆண்மைப்பெயர். அவை காலாழும் இயல்பிற்றாய - அவ்யானைகள் கால்களழுந்திப்போகுந் தன்மையதான. பட்டிழி - அகப்பட்டபொழுது. முகம் - முகத்திலுள்ளகொம்புக்கு இடவாகு

பெயர். ஏலாஇலத்து - தகாதஇடத்தில், அவற்றால் - ஆண்மை பெருமை களால். அவ்வலங்காரம் - முற்கூறிய பிறிதுமொழிதல். 'வேலாழ்முகத்த' என்ற பாடத்துக்கு - வேலாயுதந் தைத்த முகத்தை யுடையனவானவெனப் பொருள்படுதலின், அங்ஙனமிருத்தலும் நரியடுதற்கு ஒருகாரணமாகுமாத லால், அப்பாடம் இடத்தின் பெருமையை உணர்த்தாததாய்ப் பொருட்சிறப் பின்றி இவ்வதிகாரத்துக்குப் பொருந்தாதொழிதலால், அதனைக் கொள்ள லாகா தென்பது, பரிமேலழகர்கருத்து. சார்தலாகா - (எதிர்த்தற்கு) அடை யத்தகாத. சார்ந்துழிப் படும் இழுக்கு - (தகாதவிடத்தில் எதிர்த்துச்)சேர்தலா லுண்டாகுங் குற்றம். களிறு என்னும் பால்பகாஅஃறிணைப்பெயரை இங்குப் பன்மையாக்கி, அதனால் தகாத நிலத்தின் மிக்கஇழிவை விளக்கத்தொடங்கி, அதனை நன்குதெரிவித்தற்பொருட்டு, 'அஞ்சாமுகத்த' என்பதைப் பய ரெச்சமாக்கொள்ளாமல் பலவின்பால்வினையாலணையும்பெயராக் கொண் டார். காலாழ் களர் - இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது. (கo)

நாக - ஆம் அதிகாரம்.—தெரிந்துதெளிதல்.

அஃதாவது - அமைச்சர் முதலாயினரை, பிறப்பு குணம் அறிவு என் பனவற்றையும் செயலையும், காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்துதெளிதல். வலிமுதல் மூன்றும் அறிந்து பகைமேற்செல்வானுக் குத் தானே வினையுற்றுச் செய்தற்பொருட்டும் அறைபோகாமைப்பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) 'முதலாயினர்' என்றது - படைத்தலைவர், தூதர், ஒற்றர், காவலாளர், நண்பர் முதலியோரை. பிறப்பு - சாதியும், குலமும். காட்சி கரு த்து ஆகமம் என்னும் அளவைகள் - பிரதியக்ஷம், அநுமானம், சப்தம் என் னும் பிரமாணங்கள். கீழ் உசஉ - ஆம் திருக்குறளி னுரையில் இவற்றைப்பற் றிக் கூறப்பட்டது. மணிமேகலையிற் சமயக்கணக்கர்தந்திறங்கேட்ட காதையி லும் பரக்கக் கூறப்பட்டுள்ளது. பிறப்பு முதலியவற்றை அளவைகளான் ஆராய்ந்து அமைச்சர் முதலாயினரைத் தெளிதல் என இயையும். தெளிதல் - நம்புதல். வலிமுதல் மூன்று - வலி காலம் இடம். தானே வினை உற்றுச் செய்தல் - சேனைதொழிலை ஊக்கத்தோடு செய்தல். அறைபோகாமை - கீழறுத்துச்செல்லாமை; அதாவது - தலைவனை வஞ்சித்து ஒழுகாமை: இதற்கு- பகைக்குஅஞ்சிக் கீழறையால் [சுருங்கைவழியாற்] போகாமை யென்றும், பகைவரால் வஞ்சிக்கப்பட்டு ஓடிப்போகாமை யென்றும் பொருள்கொள்வா ரும் உளர். இது வேண்டுதலின் - தெரிந்துதெளிதல் இன்றியமையாததா லால். அவற்றின்பின் - வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்பவற்றின் பின்; இம்மூன்றும் - முறையே கீழ் சஅ, சக, கo - ஆம் அதிகாரங்கள்.

நoக. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும்.

(இ - ள்.) (அரசனுல் தெளிப்படுவா னொருவன்),—அறம் - அறமும், பொருள் - பொருளும், இன்பம் - இன்பமும், உயிர் அச்சம் - உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் (என்னும்), நான்கின் - (உபதை) நான்கின், திறம் - திறத்து, தெரிந்து - (மனவியல்பு) ஆராய்ந்தால், தேறப்படும் - (பின்பு) தெளியப்படும்; (எ - று.)

அவற்றுள், அறவுபதையாவது - புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் 'இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும்உரிமையும்உடையானொருவனை வைத்தற்கு எண்ணினம்: இது தான் யாவர்க்கும் இயைந்தது; நின்கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது - சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரான் 'இவ்வரசன் இவறன்மாலைய னுகலின் இவனைப்போக்கிக் கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கு எண்ணினம்: இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின்கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது - தொன்று தொட்டு உரிமையொடு பயின்ற னொரு தவமுதுமகளை விட்டு, அவளால் 'உரிமையுள இன்னுள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டு மென்று என்னை விடுத்தாள்: அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின் பமேயன்றிப் பெரும்பொருளுங் கைகூடும்' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது-ஒருநிமித்தத்தின்மே லிட்டு ஓரமைச்சனுல் ஏனையோரை அவனில்லின்கண் அழைப்பித்து, 'இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினர்' என்று தான் காவல்செய்து, ஒருவனுல் 'இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசனொருவனைவைத்தல் வேண்டை யாவர்க்கும் இயைந்தது: நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனுயவழி எதிர்காலத்தும் திரிபில னெனக் கருத்தளவையால் தெளியப்படுமென்பதாம். இவ்வடநூற்பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது, பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்.

(கு - ரை.) உயிர்ப்பொருட்டான் வரும் அச்சம் - தனதுஉயிர்விஷயமாக உண்டாகும் பயம். உபதை - சோதனை. 'உபதா' என்ற வடசொல்லுக்குதரும முதலியவற்றுல் (அமைச்சர் முதலியோரை அரசன்) பரீட்சித்த லென்று வடமொழி அமரநிகண்டிற் பொருள்கூறப்பட்டுள்ளது. ஒருவரைச் சார்ந்து சோதித்தற்குக் கருவியான உபாயங்கள் உபதை யெனப்படு மென்றும், அதனுல் அரசன் அமைச்சர்முதலியோரைப்பரீக்ஷிக்கவேண்டுமென்றும், அங்ஙனம் பரிசோதிக்கப்பட்டவர் நம்புகைக்கு உரியரென்றும், வடமொழியிற் காமந்தகமும், சாணக்கிய அர்த்தசாஸ்திரமும் கூறுகின்றன. இதுதர்மோபதா, அர்த்தோபதா, காமோபதா, பயோபதாஎன நால்வகைப்படுமென வடநூல்கள் கூறும். (அர்த்தோபதை காமோபதைகளால் மனவிமக்

களையும், தருமோபதையால் அந்தணரையும், எல்லாவுபதைகளாலும் மந்திரிகளையும் பரிசோதிக்கவேண்டுமென்று காளிகாபுராணம் கூறுகின்றது.) அறவுபதை-தருமநெறியைக் கூறிச்சோதித்தல்;பிறவும் இங்ஙனே காண்க. திறம்-வகை; வல்லமையுமாம். அறவோர் - தருமவழிநடப்பவர். விட்டு - ஏவியனுப்பி. அறவோனன்மையின் - தருமமுடையவனல்லாததால். போக்கி - ஒழித்து. உரிமை - சுவதந்திரம். வைத்தற்கு - அரசனாக ஏற்படுத்த. இயைந்தது - சம்மதப்பட்டது. சூளுறவு - சத்தியஞ்செய்தல். இயைந்தார் - கூடினவர். இவறன்மாலையன் - உலோபகுணமுடையவன்; இவறல் - செல்வத்தை இறுக்கிப்பிடித்தல், ஆசைப்பெருக்கம்: மாலை - இயல்பு. தொன்று தொட்டு-பழமைதொடங்கி, நெடுநாளாக. உரிமையொடுபயின்றாள் - மனைவியோடு பழகியவள்; உரிமையொடு - சுவாதந்திரியத்தோடு என்றுங் கொள்ளலாம். தவமுதுமகள் - தவவேடம்பூண்ட வயதுமுதிர்ந்தவள்; முதுமகள்-கிழவி. உரிமையுள - அரசனுக்கு மனைவியாகும் உரிமையையுடைய. 'உரிமையுளின்னாள்' என்று சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகிறது; உரிமையுள் - மனைவியருள் என்க. வருத்தம்உற்று - காமவேதனைப்பட்டு. 'கூடுவிக்க' என்று பிரதிபேதம்; இதுவே பொருத்தம்: இரண்டு பிறவினை இங்கு வேண்டாமையின். விடுத்தாள் - அனுப்பினாள். பேர்இன்பம் - அதிகசுகம். ஏனையோர் - மற்றையோர். இல்லின்கண் - வீட்டில். அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினார் - அரசனை வஞ்சித்துச்செல்லுமாறு ஆலோசித்தற் பொருட்டுக் கூட்டங் கூடினார்கள். கொல்வான் சூழ்கின்றமையின் - கொல்ல ஆலோசிக்கிறதனால். அதனை - கொலையை. ஈண்டை - இவ்விடத்திலுள்ள; இப்பொழுது என்றுமாம். இந்நான்கினும் திரிபிலனாயவழி - இந்தநால்வகைச் சோதனையிலும் ஒருவன் மனம்மாறுபடாதவனாயிருந்தால். பொருண்மை - பொருள். தேறப்படும் - செய்யுமென்னும் வினைமுற்று, ஆண்பாலுக்கு வந்தது; இதற்கு, 'ஒருவன்' - தோன்றாஎழுவாய். 'அறம்பொருளின்பமுயிரச்சம்' என்ற பெயர்ச்செவ்வெண், 'நான்கு' என்னுந் தொகைபெற்று வந்தது; அறவுபதைமுதலிய நான்கையும்பற்றி விநாயகபுராணங் கூறுமாறு:—(அறவுபதை-) "அறவோர் புரோகிதரைவிடுத்திட்டவராலிந்தவரசன்றான், அறவோனல்லனிவற்போக்கி யறனோடுரிமையுடையானை, உறவேவைத்தற்கெண்ணினமீ தொத்ததெவர்க்கு நின்கருத்தென், உறவோதெனச் சூளுறவோடு மோர்ந்தேயொருவன்றனைத்தெளிக," (பொருளுபதை-) "சேனைத்தலைவனொடு மவனைச் சேர்ந்தாரையும் விட்டிவ்வரசன், ஈனப்பொருளாசையனிவனை யிழுக்கிக்கொடையோடுரிமையுடை, யானைப் புரத்தற்கெண்ணினமீ தமைந்ததெவர்க்குநின் கருத்தென், ஊனப்படாமையுரைத்தியெனச் சூளோடுரைப்பித்தேதெளிக", (இன்பவுபதை-) "தொன்றுதொட்டவுரிமையொடு சூழ்ந்ததவமூதாட்டியை விட்டு,ஒன்றுமுரிமைதனிலின்னாளுனைக் கண்டுயங்கியெனைவிடுத்தாள், சென்றங்கவளைக் கூடுதியேற் சிறந்தபொருளுங் கூடுநினக்கு, என்று தெளியச் சூளுறவோடிசைப்பித்திதனானுந்தெளிக," (அச்சவுபதை-) "ஒருநிமித்தமேலிட்டே யோரமைச்சாலவன்மனையிலேனையோரை, யொருமையுற

வழைப்பித்திங்கிவர் பிழைப்பைக்குழீஇயினரென்றுறுத்திக்காவல், ஒருவனி லிவ்வரசனம்மை யொறுக்கமுயன்றனிவனே யொறுத்துவேறே, ஒருவனே வைப்பதற்கிசைந்தே முன்கருத்தென்னெனச் சூளோடுரைப்பித்தோர்க.''(க)

நoஉ. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(இ - ள்.) குடி பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து, குற்றத்தின் நீங்கி- குற்றங்களினின்று நீங்கி, வடு பரியும்-'நமக்கு வடு வருங்கொல்' என்று அஞ்சாநிற்கும், நாண் உடையான் கட்டு ஏ-நாணுடையவன்கண்ணதே, தெளிவு- (அரசனது) தெளிவு; (எ - று.)

குற்றங்களாவன - மேல் அரசனுக்குச் சொல்லிய *பகை ஆறும், மடி மறப்பு பிழைப்பு என்றிவைமுதலாயவுமாம். நாண் - இழிதொழில்களில் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க்கேட்டலாகிய ஆகம வளவையால் தெரிவன. இந்நான்குமுடையவனையே தெளிக என்பதாம்.

(கு - ரை.) வடு வருங்கொல் - பழி வருமோ? அஞ்சாநிற்கும் - அஞ்சுகிற. நாண் - நாணம். உடையவன் கண்ணதே - உடையவனிடத்தில் மாத்திரம் உரியது. தெளிவு - நம்பிக்கை. மேல் - முன்பு; என்றது, கீழ் 'குற்றங் கடிதல்' என்ற அதிகாரத்தில் ''சேருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார், பெருக்கம் பெருமிதநீர்த்து,'' ''இவறலு மாண்பிறந்தமானமு மாணு, வுவகையு மேதகு மிறைக்கு'' என்ற திருக்குறள்களை. மடி-சோம்பல்; பிழைப்பு - காரியங்களில் தவறுதல். இவைமுதலாயின என்றதனால், கூடாநட்புகூடாவொழுக்கம் முதலியன கொள்க. 'நாணுவது-செயத்தகாதவற்றின்கண் உள்ளமொடுங்குதல்' என்பர் நச்சினார்க்கினியர். தக்கோர்வாய்க் கேட்டல் - பெரியோர்கள் வாயினின்று விஷயங்களைக்கேட்டல். இந்நான்கும் - குடிப்பிறப்பு, குற்றங் கடிதல், வடுவஞ்சுதல், நாணம் என்பன. கட்டு - கண்ணென்னும்பெயரடியாப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; டு - விகுதி. (உ)

நoஊ. அரியகற் றூசற்றூர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(இ - ள்.) அரிய - (கற்றற்கு) அரிய நூல்களை, கற்று—, ஆசு அற்றூர் கண்உம் - (மேற்சொல்லிய) குற்றங்க ளற்றூர்மாட்டும், தெரியும் கால் - (நுண்ணிதாக) ஆராயுமிடத்து, வெளிறு இன்மை - வெண்மையில்லாமை, அரிது—; (எ - று.)

வெண்மை - அறியாமை; அஃது அவர்மாட்டு உளதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழி யாகலின், 'தெரியுங்கால்' என்றூர். காட்சியளவையால் தெரிந்தால் அதுவும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது, குறிப்பெச்சம்.

* பி - ம்: வகையாறும்,

இவ்வளவைகளான் இக் குணமுங் குற்றமுந் தெரிந்து குணமுடையாரைத் தெளிக என்பது, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) அற்றார்மாட்டும் - இல்லாதவரிடத்திலும். நுண்ணிதாக - சூக்ஷ்மமாக. ஒரோவழி - ஒவ்வொருசமயத்தில். அதுவும் இல்லாதார் - அவ்வெளிறும் இல்லாதவர்; உம்மை-குற்றமில்லாமையைத் தழுவும். குறிப்பெச்சமாவது - வெளிப்படையாகச் சொல்லப்படாமல் எஞ்சிநின்ற பொருளே ஒரு சொல்லின் குறிப்பினாற் கொள்வது. தெரியுங்கால் - பெயரெச்சத்தொடர்; கால் - காலமென்பதன் கடைக்குறை. எ - தேற்றம். வெளிறு-அறியாமையாதலே, "வெளிறிலாக் கேள்வியான்" எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. வெளிறு - சாரமின்மை; அது - இங்கு, அறியாமைமேல் நின்றது. உள்ளீட்டில்லாதமரம் "வெளிற்றுமரம்" என்றும், உதிரங்கின்றஉடல் "வெளிற்றுடல்" என்றும் வழங்கப்படுதல் காண்க. மேல் "வெளியார்முன், வாள்சுதை வண்ணங்கொளல்" என்னுமிடத்துப்பரிமேலழகர், 'அவையறியாதபுல்லரை வெளியாரென்றது, வயிரமில்மரத்தை வெளிறென்னும் வழக்குப்பற்றி' என்பதும் நோக்கத்தக்கது. வெண்மைப்பண்பு-வெண்மேனிஎன நிறம்பற்றியன்றி, வெண்டாமரைக்கொடி எனச் சினையடியாக முதல்பற்றியும், வெள்ளறிவினர் என இழிப்புப்பற்றியும், வெண்களமர் எனச் சாதிபற்றியும், வெள்ளோட்டமெனப் புதுமைபற்றியும், வெண்டேர்எனப் பொய்ம்மைபற்றியும், வெளியார் என இயல்புபற்றியும், வெளிற்றுமரமென உள்ளீடின்மைபற்றியும், இன்னும் பிறவாற்றானும் வரும். (கூ)

ருoச. குணநாடிக் குற்றமூ நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(இ - ள்.) (குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்து இன்மையின்),—குணம் நாடி - (ஒருவன்) குணங்களேயாராய்ந்து, குற்றமும் நாடி - (ஏனைக்) குற்றங்களேயும் ஆராய்ந்து, (பின் அவ்விருபகுதியுள்ளும்), மிகை நாடி-மிக்கவற்றை யாராய்ந்து, மிக்க கொளல் (அவனை) அம்மிக்கவற்றானே அறிக; (எ - று.)

மிகையுடையவற்றை 'மிகை' என்றார்; அவையாவன - தலைமையாலுகப் பன்மையாலுக உயர்ந்தன அவற்றான் அறிதலாவது - குணம்மிக்கதாயின் வினைக்கு உரிய னென்றும், குற்றம் மிக்கதாயின் அல்ல னென்றும் அறிதல்.

குணமேயுடையார் உலகத்தரிய ராகலின், இவ்வகை யாவரையுந் தெளிக வென்பது இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) ஏனை - மற்றை. பகுதி - பங்கு. மிகை - மிகுதலுடையவற்றிற்குத் தொழிலாகுபெயர். இனி, மிக்கது மிகை என இயற்பெயராக் கொள்ளலுமொன்று. தலைமையாலுகப் பன்மையாலுக - தலைமைபற்றியாவது பன்மைபற்றியாவது: இதில், ஆக என்பது - விகற்பப்பொருளது; "ஒருபெயர்ப்பொதுச்சொல்" என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக் கிளவி

யாக்கச்சூத்திரத்தில், 'பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச்சேரியென்றல் உயர்திணைக்கட் டலைமைபற்றிய வழக்கு; எயினர்காடென்பது அத்திணைகட் பன்மைபற்றிய வழக்கு. பிறபுல்லுமரனு முளவேனும் கழுகுகுதோட்டமென்றல் அஃறிணைக்கட்டலைமைபற்றிய வழக்கு; ஒடுவங்காடென்பது அத்திணைக் கட் பன்மைபற்றியவழக்கு' என்று சேனாவரையர் கூறியது, இங்கு அறியத் தக்கது. மிக்க-பலவின்பால் வினையாலணையும்பெயர். கொளல்-உடன்பாட்டு வியங்கோள்: இதற்கு, 'அரசன்' - தோன்றுஎழுவாய். (ச)

ருoடு. பெருமைக்கு மேணைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(இ - ள்.) பெருமைக்குஉம் - (பிறப்பு குணம் அறிவு என்பனவற்றுள் மக்கள்எய்தும்) *பெருமையாகியபொன்னின் அளவுஅறிதற்கும், ஏணை சிறுமைக்குஉம் - மற்றைச் † சிறுமையாகியபொன்னின் அளவுஅறிதற்கும், கட்டளைக் கல் - உரைகல்லாவது, தத்தம் கருமம்ஏ - தாம்தாம்செய்யுங் கருமமே, (பிறிதில்லை); (எ - று.)

இஃது-ஏகதேசவுருவகம். மக்களதுபெருமையுஞ் சிறுமையுந்தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிறகருவிகளும் உளவாயினும் முடிந்தகருவி செயல் என்பது, தேற்றேகாரத்தாற் பெற்றாம்.

இதனுள், குணங்குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது.

(கு - ரை.) பிறப்பு - குடிப்பிறப்பு. மக்கள் எய்தும் - மனிதர் அடையும். கருமம் - தொழில்; கர்மம் என்ற வடசொல்லின் விகாரம். உபமேயத்தினிடத்து உபமானத்தின் ஒருபகுதியை உருவகப்படுத்தி மற்றொருபகுதியை உருவகப்படுத்தாது விடுவது, ஏகதேசவுருவகமாம்: இங்கே தொழிலே 'உரைகல்' என்றதற்கு ஏற்ப, பெருமை சிறுமைகளினிடத்துப் பொன்னின்தன்மையை ஏற்றிக்கூறுமை காண்க; பெருமைசிறுமைகளாகிய பொன்களின்மாற்றுவேற்றுமையை அவரவர் செய்தொழிலாகிய உரைகல்லைக்கொண்டு உணரலாமென்க. அறியல் உறுவார் - அறியத்தொடங்குபவர். முடிந்த கருவி-தேர்ந்த ஸாதனம். தேற்றேகாரம் - நிச்சயப்பொருளைக்குறிக்கும் ஏகார இடைச்சொல்: இங்கு, 'கருமமே' என்பதி லுள்ளது; இதனை, ஸாதனங்கள் பலவற்றுள்ளும் செயலைப் பிரித்தமையால், பிரிநிலைப்பொருளதென்றலும் பொருந்தும். மனிதரது பெருமை சிறுமைகளை அவரவர்தொழிலே தெளிவாக அறிவிக்குமென்பது கருத்து. தாம்தாம் என்ற அடுக்கின் விகாரமாகிய தந்தம்என்பது, தத்தம் என வலிந்துநின்றது. இனி, கட்டளைக்கல் - எல்லைவரையறுத்துக் காட்டுங் கல் என்றுங் கொள்ளலாம். "தருமம்பற்றிய தக்கவர்க்கெலாங், கருமங்கட்டளையென்றல் கட்டதோ" என்றது, இங்குக் காணத்தக்கது. (டு)

ருoசு. அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

பி-ம்: * பெருமைக்கும். †சிறுமைக்கும்.

(இ - ள்.) அற்றாரை - சுற்றமில்லாதாரை, தேறுதல் ஓம்புக-தெளிதலை யொழிக: அவர்—, பற்று இலர் - (உலகத்தோடு) தொடர்பிலர்; (ஆகலான்), பழி நாணார் - பழிக்கு அஞ்சார்; (எ - று.)

'பற்றிலர்' என்பதனால், 'சுற்றம்' என்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படா ரென்பதாம்.

(கு - ரை.) சுற்றம் - பந்துவர்க்கம். அவர்-சுற்றமில்லாதவர். தொடர்பு-சம்பந்தம். மற்று-அசைநிலை. உலகத்தில் உறவினரையுடையரல்லாதவர் பிறரிடத்துப்பற்றுக்கொள்ளும்இயல்புஇலராயிருப்ப ராதலால், அன்பும்அருளுங் கொண்டு உலகத்தாரோடு ஒத்துஒழுகாரென்பது, தாற்பரியம். இப்பாட்டின் முதல்வாக்கியத்திற்கு, 'அரசன்' - தோன்றாஎழுவாய். "சுற்றமிலரானவர்தம் மைச்சூழேல் பழிபாவமுநாணார், பற்றுமிலராகுவர் விடுக" என்பது, விநாயக புராணம். (௬)

௫௦எ. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(இ - ள்.) காதன்மை-அன்புடைமை, கந்து ஆ-பற்றுக்கோடாக, அறிவு அறியார் தேறுதல் - (தமக்கு) அறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல்,—பேதைமை எல்லாம் தரும் - (அரசனுக்கு) எல்லா அறியாமையையுங் கொடுக்கும்; (எ - று.)

தன்னோடு அவரிடைநின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார்மேல் வினையை வைப்பின், அஃது அவர் அறிவின்மையாற் கெடும்; கெட்டால், அவர்க்கு உளதேயன்றி, வினைக்கு உரியாரையறியாமை மேல்விளைவறியாமைமுதலாக அவனுக்கு அறியாமைபலவும் உளவா மென்பதாம்.

(கு - ரை.) பற்றுக்கோடு - ஆதாரம்; இங்கே, பிரதானகாரணம் என்றபடி. தன்னோடு அவரிடை நின்ற - தனக்கும் அவர்க்கும் உள்ள. அஃது - தொழில். அவர்க்குஉளதேயன்றி - அறியவேண்டுவன அறியாத அவரிடத்து அறியாமை உள்ளதாயிருத்தல்மாத்திரமல்லாமல். மேல் விளைவு - பின்புஉண்டாகும் பயன். 'முதலாக' என்றதனால் விளைவின்பின் உண்டாகுந்துன்பம் அறிவுடையாரால் பழிக்கப்படுதல் முதலியன கொள்க.அவனுக்கு-அரசனுக்கு. காதன்மை, மைவிகுதி - உடைமைப்பொருளது. கந்து - ஸ்கந்தம் என்னும் வடமொழியின் விகாரம்; மரக்கொம்பு. ஆக என்னுஞ் செயவெனெச்சம் ஈறு கெட்டு 'ஆ' என நின்றது. அறிவு - அறியவேண்டுவனவற்றுக்கு ஆகுபெயர். அறியார்த்தேறுதல் - உயர்திணையில் இரண்டனுருபு தொக்கது: இரண்டாம் வேற்றுமைத்தொகை யாதலின், இயல்பின்விகாரமாக உயர்திணைப்பெயர் முன் வலி மிக்கது; 'பேதைமையாவது யாதுமறியாமை' என்பர் மேல் பரிமேலழகர். (௭)

௫௦௮. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) பிறனே - தன்னைஒடுஇயைபுடைய னல்லாதானே, தேரான் - (பிறப்பு முதலியவற்றானும் செயலானும்) ஆராயாது, தெளிந்தான்-தெளிந்த அரசனுக்கு,—(அத்தெளிவு),—வழி முறை - தன்வழிமுறையினும், நீரா - நீங்காத, இடும்பை - துன்பத்தை, தரும் - கொடுக்கும்; (எ - று.)

இயைபு - தன்குடியொடு * கோடாமரபு; இதனானே, அதுவும் வேண்டு மென்பது பெற்றும். தெளிதல் - அவன்கண்ணே வினையை வைத்தல். அவ் வினை கெடுதலால், தன்குலத்துப் பிறந்தாரும் பகைவர்கைப்பட்டுக் கீழாய் விடுவ ரென்பதாம். நான்கனுருபு, விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) இயைபு - சம்பந்தம். பிறப்பு முதலியவற்றான்-குடிப்பிறப்பு குணம் அறிவு என்பவற்றால். வழிமுறை - பரம்பரை, சந்ததி. தன்குடியொடு கோடா மரபு - தான் பிறந்த குலத்தோடு மாறுபடாத முறைமை; தன் குடி-தனது நாட்டில் வாழ்கிற ஜனங்க ளெனினுமாம். அதுவும்-இயைபும். அவன் கண்ணே - அவனிடத்தில். நான்கனுருபு தொக்கது, 'தெளிந்தான்' என்ற தன் இறுதியில். தேரான் - எதிர்மறை முற்றெச்சம். இப்பாட்டில், தெளிந் தான் என்ற வினையாலணையும்பெயரினின்றுகொள்ளப்பட்ட 'தெளிவு' என் பது - எழுவாய். (அ)

௫0கூ. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(இ - ள்.) யாரைஉம் - யாவரையும், தேராது - ஆராயாது, தேறற்க - தெளியாதொழிக; தேர்ந்தபின் - ஆராய்ந்தபின், தேறும் பொருள்-தெளியும் பொருள்களே, தேறுக - ஐயுறுதொழிக; (எ - று.)

'தேறற்க' என்ற பொதுமையான், ஒருவினைக்கண்ணும் தெளியலாகா தென்பது பெற்றும். ஈண்டு 'தேறுக' என்றது - தாற்பரியத்தால், ஐயுறவி னது விலக்கின்மேல் நின்றது. 'தேறும்பொருள்' என்றது-அவரவராற்றற்கு ஏற்ற வினைகளே. 'பொருள்' - ஆகுபெயர்.

(கு - ரை.) ஆராயாது தெளியாதொழிக-ஆராய்ந்தேதெளிக. தெளியும் பொருள்கள்-தெளியப்படும்பொருள்கள். பொதுமையான்-இன்னதொழிலைத் தேறுதலொழிக என்று சிறப்பு வகையாற் கூறாமல் 'தேறற்க'எனப் பொதுப் படக் கூறியதனால். ஒரு வினைக் கண்ணும்-யாதொரு தொழிலிலும். ஈண்டு - இங்கு. தாற்பரியம்-கருத்துவகை; இது, பொருள்கொள்ளுங் காரணங்களுள் ஒன்றுமெனஅறிக. ஐயுறவினது விலக்கு-சந்தேகத்தின் ஒழிபு. ஆற்றற்கு - வல்லமைக்கு; செய்தற்கு எனினுமாம். பொருள் - பயன்; இது, இங்கே,பய னைத் தருவதாகிய தொழிலை யுணர்த்தியதனால், காரியவாகுபெயராம். தேறும் - செயப்பாட்டுவினைப்பொருளில் வந்தசெய்வினைப்பெயரெச்சம். அர சன் ஒருவனைஆராய்ந்து தொழிற்குரியவ னென்று அறிந்தபின்பு, அவ னதுதிறமைக்குஏற்றதொழிலை அவனிடம் ஒப்பிக்கிற விஷயத்திற் சந்தேகப் படலாகாதென்பது கருத்து. இங்ஙனங்கூறியது, மேல் 'தெரிந்துவினையா

* பி - மீ: தொடர்ந்த

டல்' என்னும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறு. இப்பாட்டிற்கு, 'அரசன்' - தோன்றுஎழுவாய். (கூ)

நூகo. தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணேயுறவுந்
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) (அரசன்), தேரான் தெளிவுஉம் - (ஒருவனை) ஆராயாது தெளிதலும், தெளிந்தான்கண் ஐயுறவுஉம் - ஆராய்ந்துதெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும், (இவ்விரண்டும்),—தீரா இடும்பை தரும்-(அவனுக்கு) நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்; (எ - று.)

வினைவைத்தபின் ஒருதலைறு காணுதலைவைத்து ஐயுறு மாயின், அதனை அவன் அறிந்து 'இனி இது நில்லாது' என்னுங் கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும்; அதுவேயன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும்படும்: ஆகலான், தெளிந்தான்கண் ஐயுறவும் ஆகாதாயிற்று. தெளிவிற்கு எல்லை கூறியவாறு.

இவையைந்துபாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற் படும் இழுக்கும், தெளிவிற்கு எல்லையும் கூறப்பட்டன.

(கு - ரை.) தெளிந்தவன் - தெளியப்பட்டவன். அவனுக்கு - அரசனுக்கு. வினை வைத்த பின் - தொழிலை அவனிடத்து ஒப்பித்தபின்பு. தலைறுகாணுதலைவைத்து - குற்றங்காணுமளிருக்கையிலே; 'வைத்து' - வாக்கியாலங்காரம். ஐயுறும் - சந்தேகப்படுவான். அதனை - அச்சந்தேகத்தை. அவன் - தொழிலேயேற்றுக்கொண்டவன். இது நில்லாது - இத்தொழில் (நம்மிடத்து) நிலைத்திராது. நெகிழ்த்துவிடும் - தளரவிடுவான். படும்இழுக்கு - உண்டாகுங் குற்றம். தெளிவிற்கு எல்லை, ஆராய்கிறவரையில் என்க. உம்மைகள் - எண்ணுப்பொருளன. (கo)

நூ - ஆம் அதிகாரம்.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது - அத்தெளியப்பட்டாரை, அவர்செய்யவல்ல வினைகளை யறிந்து அவற்றின்கண்ணே ஆளுந் திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) அவற்றின்கண்ணே - அத்தொழில்களிலே. தொழில்செய்தற்குஉரியாரைத் தெளிந்தபின்பு தொழில்களைத் தெளிந்து அவர்களிடம் ஒப்பிக்கவேண்டுவது, அதிகாரமுறைமைக்குக் காரணம். ஆடல் - ஆளுதல்; தொழிற்பெயர்.

நூகக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும்.

(இ - ள்.) (அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண் வைத்தால் அதன்கண்), நன்மைஉம் தீமைஉம் நாடி - ஆவனவும் ஆகாதனவும் ஆய செயல்களை ஆராய்ந்து அறிந்து; (அவற்றுள்), நலம் புரிந்த - ஆவனவற்றையே விரும்

பிய, தன்மையான் - இயல்பினையுடையான்,—ஆளப்படும் - (பின் அவனுல் சிறந்தவினைகளிலே) ஆளப்படும்; (எ - று.)

தன்னே உரிமையறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி அதன்கண் ஆஞ் செயல்களேயே செய்தவன், பின்னும் அவ்வியல்பின ஞதல்பற்றி, அகமாயவினைக்கண்ணே ஆளப்படுவனென்பதாயிற்று. 'புரிந்த'என்ற இறந்தகாலத்தான், முன் உரிமையறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும்.

(கு - ரை.) முதற்கண் - முதலில். தன்கண் - தன்னிடத்தில். அதன்கண் - அத்தொழிலில். ஆவன - நன்மையாவன. ஆகாதன - தீமையாவன. ஆய - ஆகிய. அவனுல் - அரசனுல். உரிமை - உரியனுந்தன்மை. உரிமையறிதல் - காரியத்தைச் செய்து முடித்தற்கு உரியவனென்றறிதல். அகம் - உள்; அந்தரங்கம். புறம் - வெளி; பகிரங்கம். வைத்தவழி - வைத்தால். ஆம் செயல்கள் - அரசனுக்கு நன்மைதருஞ் செய்கைகள். நலம் - நன்மை, பண்புப்பெயர்: நன்மைதருஞ்செயல்களுக்குக் காரியவாகுபெயர்; 'நன்மை', 'தீமை' என்றனவும் இவ்வாறே. (க)

ருகஉ. வாரி பெருக்கி வளம்படுத் தூற்றவை
யாராய்வான் செய்க வினை.

(இ - ள்.) வாரி - பொருள் வருவாயில்களே, பெருக்கி - விரியச்செய்து, வளம் படுத்து - (அப்பொருளாற்) செல்வங்களே வளர்த்து, உற்றவை - (அவ்வாயில்கட்கும் பொருட்கும் செல்வங்கட்கும்) உற்ற இடையூறுகளே, ஆராய்வான் - (நாடோறும்) ஆராய்ந்து நீக்கவல்லவன், வினை செய்க - (அரசனுக்கு) வினைசெய்க; (எ - று.)

வாயில்களாவன - மேல் இறைமாட்சியுள் "இயற்றலும்" என்புழி உரைத்தனவும், உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன - ஆண்டுப் பொருளும் இன்பமும் மாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன - அரசன்வினைசெய்வார் சுற்றத்தார் பகைவர் கள்வர் என்றிவரான் வரும் நலிவுகள்.

(கு - ரை.) பொருள் வரு வாயில்கள் - திரவியம்வரும்வழிகள். விரியச் செய்து - அதிகப்படுத்தி. அப்பொருள் - திரவியம். செல்வங்கள் - யானை முதலாகவும், மண்டபம் முதலாகவும் கீழ்க்கூறப்பட்டன. அவ்வாயில்கள் - பொருள்வரும் அவ்வழிகள். உற்றஇடையூறுகள் - நேர்ந்த தடைகள். மேல் - முன். இறைமாட்சி—ஊக - ஆம் அதிகாரம். அவ்வதிகாரத்தில் "இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த, வகுத்தலும் வல்ல தரசு" என்ற குறளில்,'இயற்றல்' என்பதற்கு - 'தனக்குப் பொருள்கள்வரும்வழிகளே மேன்மேல் உளவாக்கல்' என்று பொழிப்புரையும், 'பொருள்களாவன - மணி பொன் நெல் முதலாயின: அவைவரும்வழிகளாவன - பகைவரை யழித்தலும், திறைகோடலும்,தன்நாடு தலையளித்தலும் முதலாயின'என்று விசேடவுரையும் உரைத்தவாறு அறிக. என்புழி - என்றவிடத்து. வாணிகம் - வர்த்தகம். உழவு

பசுக்காவல் வாணிகம்என்பன வடமொழியில் 'வார்த்தா' எனப்படுமாதலால், 'உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தை' என்றார்: வார்த்தா வ்ருத்தி ஜீவநம் என்பன வடமொழியில் பரியாயச்சொற்கள். உழவுமுத லியமூன்றும் வைசியர்களுடைய சீவனோபாயமென நூல்கள்கூறும். ஆண்டு - அவ்விடத்தில்; "இயற்றலும்" என்றகுறளின் உரையில், யானை குதிரை படை நாடு அரண் முதலியன பொருளாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலியனவும் ஐம்புலன்களால் நுகரப்படுவனவும் இன்பமாக வும் கூறப்பட்டவாறு அறிக. அரசன்வினைசெய்வார் - ராஜகாரியஞ்செய்ப வர். என்றிவர் - என்ற இவர். நலிவு - உபத்திரவம். வருவது வாரியெனக் காரணப்பெயர். ஆராய்தலென்னுங்காரணம், நீக்குதலாகிய காரியத்தின்மேல் நின்றது; உபசாரவழக்கு. (உ)

ருகஙு. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(இ - ள்.) அன்பு - (அரசன்மாட்டு) அன்பும், அறிவு - (அவனுக்கு ஆவன அறியும்) அறிவும், தேற்றம் - (அவைசெய்தற்கட்) கலங்காமையும், அவா இன்மை - (அவற்றுற் பொருள் கையுற்றவழி அதன்மேல்) அவாவின் மையும், இ நான்குஉம் - (ஆகிய) இந்நான்குகுணங்களையும், நன்கு உடை யான்கட்டே - நிலைபெற உடையான்மேலதே, தெளிவு - (வினையை விட்டி ருக்குந்) தெளிவு; (எ - று.)

இந்நான்கும் நன்குடைமை, இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராயவேண்டுவதில்லை யென்று அரசன்தெளிதற்கு ஏது வாகலின்,* அவனை அதன் பிறப்பிடஞுக்கிக் கூறினர்.

இவைமூன்றுபாட்டானும், ஆடற்குரியானது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஆவன - அனுகூலமானவை. அவை செய்தற்கண் - அரச னுக்கு அநுகூலமானவற்றைச் செய்தலில். கையுற்றவழி-கையிலகப்பட்ட பொழுது. அவா-ஆசை. உடையான்மேலதே-உடையவனிடத்தில்தான் கொள் ளத்தக்கது. வினையை விட்டிருக்கும் தெளிவு - (அரசன்) தொழிலை ஒப்பித் திருக்கும் நம்பிக்கை. இந்நான்கு-அன்புமுதலாகக் கூறியவை. அதன்-தெளி வின். ஆடற்கு - ஆளுதற்கு. இந்நான்குகுணமுமுடையவனையே அரசன்நம்ப வேண்டும் என்பது கருத்து. முதலடியில், பெயர்ச்செவ்வெண் தொகைபெற் றது. தேற்றம்-தொழிற்பெயர். (ரு)

ருகச. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகு மாந்தர் பலர்.

(இ - ள்.) எனை வகையான் தேறியக்கண்உம் - எல்லாவகையானும் ஆராய்ந்துதெளிந்து வினைவைத்தபின்னும், வினை வகையான்-அவ்வினையின் இயல்பானே, வேறு ஆகும் - வேறுபடும், மாந்தர்—பலர்-(உலகத்துப் பலர்).

கட்டியங்காரன்போல அரசவின்பத்தினைவெஃகி விகாரப்படுவதல்லது அதனைக் குற்றமென்றொழித்து தம் இயல்பில்நிற்பார் அரிய ராகலின்,

* பி - மீ: அதனை அவன்.

'வேறுகு மாந்தர் பலர்' என்றார். வினைவைப்பதற்குமுன் எல்லாக்குணங்களுஞ் முடையராய் வைத்தபின்விகாரப்படுவாரை, இடையாயதொருவினையை வைத்து அறிந்து ஒழிக்க வென்பதாம்.

இதனுன், ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) கட்டியங்காரன் - சீவகசிந்தாமணியென்னும் பெருங்காப்பியத்தின் கதாநாயகனுன சீவகனது தந்தையாகிய சச்சந்தனென்னும் அரசனுடைய மந்திரிகளுள் ஒருவன். சச்சந்தன் தன்மனைவியாகிய விசயையினிடத்து அளவிறந்தகாதல்கொண்டு அவளோடு இடைவிடாது இன்பமுற்றிருக்க எண்ணி நிமித்திகன் முதலிய மந்திரிமார் கூறிய உறுதிமொழியைச் சிறிதுங் கொள்ளாமல் கட்டியங்காரனையே நம்பி அவனிடம் இராச்சியத்தை ஒப்பித்து அவனையே அரசனுக்கிவிட்டுத்தான் அந்தப்புரத்திற்சென்று சுகித்திருக்க, கட்டியங்காரன் அரசனைக்கொன்று இராச்சியமுழுமையுந் தானேயாளக்கருதி அறிவுடையோர் சொற்கேளாமல் தன் மைத்துனனுகிய மதனனுடனே ஆலோசித்து அரசனிருக்கும் அந்தப்புரத்தைச் சேனைகளோடு வளைத்து தனியனுன அரசனுடனே போர்வினைத்து அவனைக்கொன்றிட்டனனென்ற வரலாற்றைச் சீவகசிந்தாமணியில் நாமகளிலம்பகத்துப் பரக்கக்காண்க. வெஃகி - விரும்பி. விகாரப்படுவது - எண்ணம் சொற் செயல்கள் வேறுபடுவது. அதனை - அரசவின்பத்தை விரும்புதலை. இடையாயது - அகம் புறக்கட்கு நடுவாயது; இவ்வதிகாரத்து மூதற்குறளுரையிற் காண்க. தேறியக்கண் - 'கண்' விகுதி காலங் காட்டும் எதிர்காலவினையெச்சம்; இ, அ - சாரியைகள். (சு)

ருகடு. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(இ - ள்.) அறிந்து - (செய்யும்உபாயங்களை) அறிந்து, ஆற்றி - (செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கு அல்லால்-முடிவுசெய்யவல்லானை யல்லது, வினை தான்—, சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று - (இவன்) நம்மாட்டு அன்புடைய னென்று (பிறனொருவனை) ஏவும் இயல்புடைத் தன்று; (எ - று.)

'செய்கிற்பாற்கு' என்பது - வேற்றுமைமயக்கம்.

அறிவு ஆற்றல்களான் அல்லது அன்பான் முடியாது என இதனுன் வினையினது இயல்பு கூறப்பட்டது.

(கு - ரை.) பிறனொருவன்-உபாயமறிந்து சிரமம்பொறுத்துத் தொழிலை முடியச்செய்யவல்ல னல்லாதவன். வேற்றுமைமயக்க மெனினும் உருபுமயக்க மெனினும் ஒக்கும். செய்கிற்பாற்குஎன்பதில், கான்கனுருபு இரண்டனுருபின் பொருளில் வந்ததுகாண்க. ஆற்றல் - பொழுமை. கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை. சிறந்தான் என்று - அன்பிற்சிறந்தவ னென்றகாரணத்தால். ஏவற் பாற்று - ஏவுதலாகிய பான்மையுடையது. பாற்று - ஒன்றன்பாற்குறிப்புவினைமுற்று; இப்பாட்டில், வினை - எழுவாய். (ஞ)

ருகசூ. செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(இ - ள்.) செய்வானே நாடி - (முதற்கண்ணே) செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து, வினை நாடி - (பின் செய்யப்படும்) வினையினது இயல்பை ஆராய்ந்து, காலத்தோடு எய்த உணர்ந்து - (பின் அவனையும் அதனையுங்) காலத்தொடுபடுத்துப்பொருந்த அறிந்து, செயல் - (அவனை அதன்கண் ஆடலைச்) செய்க; (எ - று.)

செய்வானது இலக்கணமும், வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோடு எய்த உணர்தலாவது-இக்காலத்து இவ்விலக்கணமுடையான் செய்யின் இவ்வியல்பிற்றாயவினை முடியுமென்று கூட்டியுணர்தல்.

(கு - ரை.) அதனையும்-அவ்வினையையும்.. படுத்து-சேர்த்து. அதன்கண்-அவ்வினையில். செய்வானதுஇலக்கணம் இவ்வதிகாரத்து முதல்மூன்றுபாடல்களிலும், வினையியல்பு ஐந்தாவதுபாடலிலும் கூறப்பட்டமை காண்க. இவ்வியல்பிற்றாய - இத்தன்மையதான. எய்த - வினையெச்சம்; எய்து - பகுதி. (சூ)

ருகஎ. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

(இ - ள்.) இதனை - இவ்வினையை, இதனால்-இக்கருவியால், இவன்—, முடிக்கும் - முடிக்கவல்லன், என்று - எனக் கூறுபடுத்து. ஆய்ந்து - ஆராய்ந்து, (மூன்றும் தம்முள் இயைந்தவழி),—அதனை - அவ்வினையை, அவன்கண் - அவன்கண்ணே, விடல் - விடுக; (எ - று.)

கருவி - துணைவரும் பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினையும் தம்முள் இயைதலாவது - ஒரொன்றோடு ஏனைய இரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடுதல் - அதற்கு அவனை உரியனாக்குதல்.

(கு - ரை.) கூறுபடுத்து - பகுத்து. மூன்றும் - செய்பவனும், செய்யத்தக்க தொழிலும், செய்தற்கருவியும். 'இவன்' என்று வினைமுதல் கூறப்பட்டது. வினைமுதல் - செய்பவன். தம்முள் இயைந்தவழி - தமக்குள் மாறுபாடின்றிக் கூடியபொழுது. 'முதலாயின' என்றது, காலம் இடம் படை ஆகியவற்றை. அதற்கு - அத்தொழில் செய்தற்கு. (ஏ)

ருகஅ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

(இ - ள்.) (ஒருவனை அரசன்),வினைக்கு உரிமை நாடிய பின்றை-(தன்) வினைசெய்தற்கு உரியனாக ஆராய்ந்து துணிந்தால் பின், அவனை அதற்கு உரியன் ஆக செயல் - அவனை அதற்கு உரியனாறு (உயரச்) செய்க; (எ - று.)

உயரச்செய்தலாவது-அதனைத் தானேசெய்துமுடிக்கும் ஆற்றலுடையனாக்குதல். அது செய்யாக்காலும் கெடுமென்பது கருத்து.

(கு - ரை.) அதற்கு உரியனாறு - அத்தொழிலைச்சுதந்திரனாய் முடிக்க உரிமையுடையனாகுமாறு. அது செய்யாக்காலும் - அவனை அத்தொழிற்கு

ஏற்ற அதிகாரியாக்காவிட்டாலும். கெடும் - அத்தொழில் முடியாதொழியும். உரிமை - உரியனுயிருக்குந்தன்மை. (அ)

ருகக. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ருக
நினைப்பானை நீங்குந் திரு.

(இ - ள்.) வினைக்கண் - (எப்பொழுதும்) தன் வினையின்கண்ணே, வினை உடையான் - முயறலையுடையான், கேண்மை - (அவ்வுரிமையால் தனக்குக்) கேளாயொழுகுகின்ற தன்மையை;(அதுபொருதார்சொற்கேட்டு), வேறு ஆக நினைப்பானை-(அரசன்)மாறுபடக் கருதுமாயின் அவனை, திரு-திரு மகன், நீங்கும் - விட்டுநீங்கும்; (எ - று.)

கேளாய் ஒழுகுகின்ற தன்மையாவது - தான் பிறனுயில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவமதிப்பாகக்கொண்டு செறக் கருதுமாயின், பின் ஒருவரும் உட்பட்டு முயல்வா ரில்லையாம்; ஆகவே, தன்செல்வம் கெடு மென்பது கருத்து.

இக்நான்குபாட்டானும், ஆடற்குரியானை ஆளுந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) முயறல் - முயற்சிசெய்தல். உரிமையால் - சுதந்திரத்தால். அதுபொருதார் - கேளாய் நடப்பதைப்பொறுக்கமாட்டாதவர். கேள் ஆய் - அந்தரங்கனுய். கேளிர் - சுற்றத்தார். செற - வெறுக்க, விலக்க, தண்டிக்க. கருதுமாயின் - நினைப்பானுனுல். கேண்மையென்னுஞ்சொல்-ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களைக் கேட்குந்தன்மை யென்ற காரணத்தால், உறவு முறைமையைக் குறிக்கும். திரு நீங்கும் - செய்யுமென்முற்று, பெண்பாலுக்கு வந்தது. (கூ)

ருஉ0. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமைக் கோடா துலகு.

(இ - ள்.) வினை செய்வான்—, கோடாமை - கோடாதொழிய, உலகு கோடாது—; (ஆதலான்), மன்னன் - அரசன், (அவன்செயலை), நாள்தோறும்—, நாடுக - ஆராய்க; (எ - று.)

அஃதொன்றனையும் ஆராயவே, அதன்வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தாளும்; அதனுன், அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்து போதுக என்பதாம்.

இதனுன், ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது.

(கு - ரை.) கோடாதுஒழிய-(எண்ணஞ் சொற் செயல்களில்) மாறுபடாதிருக்க. உலகு கோடாது - உலகத்தாரியல்பு மாறுபடாதிருக்கும். அஃது ஒன்றனையும் - வினைசெய்வானது செயல்மாத்திரத்தை. அதன்வழித்து ஆய-அவ்வினைசெய்வானியல்பின் வழியிலே உள்ளதான. அவனுரிமையழியாமல் - வினைசெய்வானது சுவாதந்திரியம் அழியாமல். போதுக - ஒழுகுக. ஆண்டவழிச் செய்வது-அரசன் ஒருவனை ஒருதொழிலில் உரியனுக நியமித்த பின்பு செய்யவேண்டுவது. கோடாமை - எதிர்மறைவினையெச்சம். (கஎ)

நிந - ஆம் அதிகாரம்.—சுற்றந்தழால்.

அஃதாவது - அரசன் தன்கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச் சுற்றங் கூறுகின்ற ராகலின், இது, தெரிந்துவினையாடலின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) கிளைஞர் - உறவினர். தன்னின் - தன்னிடத்தினின்றும். சுற்றம் - (உரியகாலங்களில் வந்து) சுற்றிநிற்பது எனப் பந்துவர்க்கத்துக்குக் காரணப்பெயர். தழால் - தழுவுதல்; தொழிற்பெயர்: தழு - பகுதி; இதுவே உகரச்சாரியையைபெற்றுத் தழுவு என நிற்பது: இனி, தழுவு என்னும் பகுதி விகாரப்பட்ட தென்றலும் ஒன்று; ஆல் - தொழிற்பெயர்விகுதி.

நிஉக. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(இ - ள்.) பற்று அற்ற கண்ணும் - (ஒருவன்)செல்வம்தொலைந்து வறியனாயவழியும், பழமை பாராட்டுதல் - (விடாது தம்மோடு அவனிடைப்) பழமையை எடுத்துக் கொண்டாடும் இயல்புகள், சுற்றத்தார்கண்ண உள - சுற்றத்தார்மாட்டே உளவாவன; (எ - று.)

சிறப்பும்மை - வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கிநின்றது. பழமை-பற்றறுக்காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனோடு பற்றறுவ ராகலின், ஏகாரம் - தேற்றத்தின்கண் வந்தது.

இதனால், சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(சு - ரை.) வறியன்-தரித்திரன். தம்மோடு அவனிடைப் பழமை-தமக்கும் அவனுக்கும் இருந்த பழைய சம்பந்தம். சிறப்பு - இங்கே, இழிவு சிறப்பு. பாராட்டப்படாமை - பாராட்டுதலாகிது என்னுந் தன்மை யென்ற படி. பற்று அறுக்காலத்து - செல்வம் நீங்காதிருந்தகாலத்தில். பிறர் எல்லாம் - சுற்றத்தாரல்லாத மற்றையோர் யாவரும். அவன் பற்று அற்றபொழுது - அவன் செல்வமழிந்தகாலத்து. பற்று அறுவர் - தொடர்ச்சிநீங்குவர். பற்று - செல்வத்தையும், தொடர்ச்சியையும் குறிக்கும். ஏகாரம் - பிரிநிலைப்பொருள தெனினுமாம். அற்றகண் - தெரிநிலைப்பெயரெச்சத்தொடர். 'அற்றக்கண்' என்று இருப்பின், ஒருசொல்லாகக்கொண்டு எதிர்கால வினையெச்சமென்னலாம். பாராட்டுதல் என்னுந் தொழிற்பெயர் பால்பகாவஃறிணையின்பாற்படு மாதலால், 'உள' என்னும் பன்மைமுற்றைக் கொண்டது. "அற்றகுளத்தில்" என்ற மூதுரைப்பாடல், இங்கு நினைவுக்கு வருகின்றது. (க)

நிஉஉ. விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

(இ - ள்.) விருப்பு அறு - அன்பறுத, சுற்றம்—, இயையின்-(ஒருவற்கு) எய்துமாயின், (அஃது அவற்கு), அருப்பு அறு - கிலேசத்தல் அறுத, ஆக்கம் பலவும் - செல்வங்கள் பலவற்றையும், தரும் - கொடுக்கும்; (எ - று.)

உட்பகையின் நீக்குதற்கு 'விருப்பறுச் சுற்றம்' என்றும், தானே வளர்க்கும் ஒருதலையாய செல்வத்தின் நீக்குதற்கு 'அருப்பறுவாக்கம்' என்றும் விசேடித்தார். தொடைநோக்கி விகாரமாயிற்று. 'இயையின்'என்பது - அதனது அருமை விளக்கி நின்றது. 'ஆக்கம்'என்பது - ஆகுபெயர். 'பலவும்'என்றது, அங்கங்கள் ஆறனையும் நோக்கி. பலர் கூடி வளர்த்தலின் அவை மேன்மேற் கிளைக்கு மென்பது கருத்து.

(கு - ரை.) எய்துமாயின் - வாய்க்குமாஞல். அஃது-அச்சுற்றம். கிளைத்தல் - பலவாறு செழித்துவளர்தல். உட்பகையின் நீக்குதற்கு - சுற்றத்தவராயிருந்தே மனத்திற்பகைமைகொண்டு ஒழுகுந்தன்மை யில்லாமையைக்காட்டுதற்கு. தானே வளர்க்கும் ஒருதலையாய - தானே மேன்மேலும் வளரச்செய்யும் ஒப்பற்ற தலைமையுள்ள; ''நூற்றுக்குமேல் ஊற்று'' என்பது பணத்தின் வளர்ச்சி குறித்த பழமொழி. ஆகவே, ஆக்கமென்பது - இங்கே பணத்தைக் காட்டவில்லை; அரசனுடைய அங்கங்களைக் காட்டு மென அறிக. விசேடித்தார் - அடைமொழிகொடுத்துக் கூறினர்; விசேஷணம் - அடைமொழி. அருப்பு - அரும்பு என்னும் முதனிலைத்தொழிற்பெயர் எதுகைத்தொடைநோக்கி வலித்தல்விகாரமடைந்தது. பரிமேலழகர் 'தொடைநோக்கி' என்றதனால், முதலடியின் இறுதியிலே வந்த 'அருப்பறு' என்பது அவ்வடியின்முதலில் வந்த 'விருப்பறு' என்றதற்குஏற்ற எதுகைத்தொடையாகக் கொள்ளப்பட்ட தென அறிக; கீழ் ''இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி, மாசறு காட்சி யவர்க்கு''என்ற குறளில், 'நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்துநின்றது' என உரைத்ததுங் காண்க: தொல்காப்பியத்துச் செய்யுளியலில் ''ஆயிரு தொடைக்குங் கிளையெழுத்தாரிய'' என்ற சூத்திரத்தின் உரையில் பேராசிரியர் 'இஃது ஓரடிக்கண்வரினும் ஒக்கு மென்பது உய்த்துணர்க' எனக் கூறியதும் காண்க. ஓரடியில் இடையிருசீரொழித்து மற்றை முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் எதுகை வருவது ஒருஉவெதுகை யெனப்படுமாறும் உணர்க; ''இருசீரிடையிடி னெருஉவென மொழிப'' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். அதனது-இத்தன்மையதான சுற்றம் இயைதலினது. ஆக்கம் - விருத்தியாகுதல்; இது - அத்தன்மையையுடைய செல்வத்துக்குத் தொழிலாகுபெயர். இனி, ஆக்கம் என்பதை ஒருவன் செழித்திருத்தற்குக் காரணமானதெனச் செல்வத்துக்குக் காரியவாகு பெய ரெனினும் அமையும். அங்கங்கள் ஆறு=''படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்.'' 'பலர்' என்றது, சுற்றத்தாரை. அவை - அச்செல்வங்கள். விருப்பு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.இப்பாட்டில்,'இயையின்'என்ற எதிர்கால வினையெச்சத்தாற் பெறவைக்கப்பட்ட 'இயைதல்' என்பது-'தரும்' என்பதற்கு எழுவாய். (உ)

ருஉசு. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

(இ - ள்.) அளவளாவு இல்லாதான் வாழ்க்கை - (அச்சுற்றத்தோடு) நெஞ்சுகலத்த லில்லாதவன் வாழ்க்கை, குளம் வளா - குளப்பரப்பு, கோடு இன்றி - கரையின்றி, நீர் நிறைந்தற்று - நீர்நிறைந்தாற் போலும்; (எ - று.)

'சுற்றத்தோடு' என்பது, அதிகாரத்தான் வந்தது. நெஞ்சகலப்புத் தன்னளவும் அதனளவும்உசாவுதலான் வருவதாகலின், 'அளவளாவு' என்பது - ஆகுபெயர். 'வாழ்க்கை' என்றதூஉம், அதற்கு ஏதுவாய செல்வங்களே, நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின்தொழில், இடத்தின்மேல் நின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரின்மையிற் புறத்துப்போமென்பதாம்.

(கு - பை.) குளப் பரப்பு - குளத்தினது விசாலமான இடம். அதிகாரத்தான் - இவ்வதிகாரம் சுற்றத்தழா லாதலால். அதன் - சுற்றத்தின். 'அளவு'- இங்கே, யோகக்ஷேமசமாசாரங்களே. உசாவுதலான் - (ஒருவரை யொருவர்) விசாரித்துஅறிதலால். அளாவுதல் - விசாரித்தறிதல். அளாவு என்னும்பகுதியே அளாவுதலென்னுந்தொழிற்பெயர்ப்பொருளே யுணர்த்தியதனால், முதனிலைத்தொழிற்பெயர். அளவளாவு - இரண்டாம்வேற்றுமைத் தொகை. அளவையளாவுத லென்னுங் காரணம், அதனுள்ளடாகும் மனக்கலத்தலைக் குறித்தலால், அளவளாவு என்பது - காரணவாகுபெயராம். வாழ்க்கை - வாழ்தல்; இது - வாழ்வுக்குக் காரணமான செல்வத்தைக் குறித்ததனால், காரியவாகுபெயராம். குளப்பரப்பில் நீர்நிறைந்தாற்போலும் என்ற பொருள், குளப்பரப்பு நீர்நிறைந்தாற்போலும் எனக் கூறப்பட்டதனால், 'இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது' என்றார். நிறைந்தற்று - நிறையப்பெற்றாற்போலும். இடம் - குளப்பரப்பு. அங்கு நிகழ்பொருளின் தொழில் - நீரின் நிறைதல். அதனைக் குளப்பரப்பாகிய இடத்தின்மேல் ஏற்றிக் கூறியமை காண்க. பிரயோகவிவேகமென்னும் இலக்கணநூலில் "மருளறு காரணங்காரியம் பேரோடு வந்துறழும், இருளறுமொண்குணப்பேர் குணிப்பேர் வினையோ டியையும், பொருள்வினை மற்றோர்பொருளினுந் தோன்றும் புலத்தொடுமாம், தெருளுறு பண்பு புல னிவை மாறியுஞ் சேர்ந்திடுமே"என்னும் பாட்டி னுரையில், "'குளவளாக்கோடின்றிநீர்நிறைந்தற்று", 'இந்தப்பானை நாழுழியரிசி பொங்கும்' இவை புலமென்னும்இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல்நின்றன' என்றமை காண்க. இவையெல்லாம் இலக்கணநூலில் 'உபசாரவழக்கு' எனப்படும். தாங்குவாரின்மையின் - வெளிச்செல்லவொட்டாது தடுத்துப் பாதுகாப்பவரில்லாமையால். இல்லாதான் என்னுங் குறிப்புவினையாலணையும்பெயரில், இல்என்னும் பகுதியே எதிர்மறைகுறித்ததனால், ஆ - சாரியை. வளா - பரப்பு. நிறைந்தற்று-நிறைந்தாலற்று என எச்சத்திரிபாம்; நிறைந்ததற்று எனத் தொழிற்பெயர்விகாரமாகக்கொள்ளினும் அமையும். கரையில்லாத குளத்தில் நிறைந்த நீர் தடையில்லாமையால் வெளிச்சென்றுவிடுதல்போல, சுற்றமில்லாதவனிடத்தில் வாய்த்த செல்வம் பாதுகாப்பவரில்லாமையால் வெளிச்சென்றுவிடு மென்பது கருத்து; பயனீபற்றிவந்த உவமையணி. (கூ)

குஉச. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(இ - ள்.) செல்வம் பெற்றதால் - செல்வம் பெற்றவதனால், பெற்ற - (ஒருவன்) பெற்ற, பயன் - பயனுவது,—சுற்றத்தால் - (தன்) சுற்றத்தால், தான்—, சுற்றப்பட - சூழப்படும்வகை, ஒழுகல் - (அதனைத் தழீஇ) ஒழுகுதல்; (எ - று.)

பெற்ற என்பதனுள் அகரமும், அதனால் என்பதனுள் அன்சாரியையும், தொடைநோக்கி விகாரத்தால் தொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற்கு ஏது வாகலின், இதனைச் செல்வத்திற்குப் பய னென்றார்.

இவைமூன்றுபாட்டானும். சுற்றந்தழால் செல்வத்திற்கு ஏதுவும் அரணும் பயனும் ஆம் என்பது கூறப்பட்டது.

(கு - சை.) தழீஇ - தழுவி; அணைத்து. ஆதரித்து. பெற்றத்தால் என்பது பெற்றவதனால் என்பதன் தொகுத்தல்விகார மென்பது, பரிமேலழகர் கொள்கை. அது அல்லது அஃது என்ற சுட்டுப்பெயர் ஆல் என்னும் வேற்றுமையுருபு ஏற்கும்போது, 'அன்' சாரியைபெற்று 'அதனால்' என நிற்குமேயன்றி, சாரியைபெறாது 'அதால்' என நில்லா தென்பது, தொல்காப்பியத்தாற் போதரும். இனி, பெற்றதால் என்பது பெற்றத்தால் என விரித்தல் விகாரம் பெற்றதெனினுமாம். தொடை - இங்கே, எதுகைத்தொடை. இவ்வொழுக்கு - இவ்வாறு ஒழுகுதல்: சுற்றத்தாற் சூழப்பட வொழுகுதல். அரண் - பாதுகாப்பு. சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல்—"சுற்றத்திற்கு அழகு சூழவிருத்தல்" என்றார் பிறரும். (சு)

உஉ. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

(இ - ள்.) (ஒருவன்),—கொடுத்தல் உம் - (சுற்றத்திற்கு வேண்டுவன) கொடுத்தலேயும், இன் சொல்உம் - இன்சொற் சொல்லுதலேயும், ஆற்றின் - வல்லனையின்,—அடுக்கிய சுற்றத்தால் - (தம்மில்) தொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே, சுற்றப்படும் - சூழப்படும்; (எ - று.)

இரண்டும் அளவறிந்து ஆற்றுதல் அரிதென்பது தோன்ற, 'ஆற்றின்' என்றார். தம்மில்தொடர்தலாவது - சுற்றத்தது சுற்றமும், அதனது சுற்றமுமாய் அவற்றுள் பிணிப்புண்டுவருதல். இவ்வுபாயங்களே வடநூலார் தானமும் சாமமும் என்ப.

(கு - சை.) தம்மில் தொடர்ந்த-தமக்குள் உறவுமுறைமையால் ஒன்றையொன்றுதொடர்தலுடைய. இரண்டும் - வேண்டுவனகொடுத்தலும், இன்சொற்சொல்லுதலும். அளவு அறிந்து - செல்வம்முதலியவற்றிலே சுற்றத்தின் அளவையும் தன் அளவையும் அறிந்து. 'ஆற்றின்' எனக்கூறியது, அருமைவிளக்கு மென்க. அவற்றுள் பிணிப்புண்டு - கொடையாலும் இன்சொலாலும் அன்புபூண்டு. கொடுத்தல் தானமும், இன்சொல் சாமமுமாம். என்ப-என்று சொல்வர். 'இன்சொல்என்பது பண்புபுலன்மாறிவந்த உபசாரவழக்கு' என்பர் பிரயோகவிவேகநூலார். (இ)

௫உசு. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(இ - ள்.) (ஒருவன்). பெருங் கொடையான் - மிக்ககொடையையுடையனுமாய், வெகுளி பேணான் - வெகுளியைவிரும்பானுமாயின்,—அவனின்- அவன்போல, மருங்கு உடையார் - கிளையுடையார், மா நிலத்து இல் - இவ்வுலகத்து இல்லை; (எ - று.)

மிக்க கொடை - ஒன்றானும் வறுமையெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை-இஃது அரசர்க்குவேண்டுவதொன்றென்று அளவிறந்துசெய்யாமை.

(கு - ரை.) கொடை - கொடுத்தல், வெகுளி - கோபித்தல்; தொழிற்பெயர்கள். கிளை - சுற்றம். மா நிலம் - பெரியபூமி. ஒன்றானும் வறுமை எய்தாமல் - ஒருபொருளாலும் வறுமையடையாமல்; எல்லாப்பொருளாலும் நிறைந்திருக்கும்படி. விரும்பாமை - வெகுளியை விரும்பாமை. இஃது அரசற்கு வேண்டுவது ஒன்றுஎன்று அளவிறந்து செய்யாமை - கோபம் அரசனுக்கு இன்றியமையாத தென்ற காரணத்தால் அக்கோபத்தை வரம்புகடந்து கொள்ளாமை. அரசனுக்குக் காமமும் கோபமும் முனிவர்க்குப்போல முழுவதும் ஒழிக்கத்தக்க பெருங்குற்ற மல்ல வென்பது நூல்துணிபு; கீழ் 'குற்றங் கடிதல்' என்ற அதிகாரத்தின் இறுதியில் 'காமம் வெகுளி உவகையென்பன முற்றக்கடியுங்குற்றம் அன்மையின்' என்றும், மேல் 'பேதைமை' என்னும் அதிகாரத்தின் தொடக்கத்தில் 'முற்றக்கடியுங் குற்றமன்மையின் உளவாய வெகுளியானுங் காமத்தானும்' என்றும் பரிமேலழகர் கூறுதல் உணர்க: அவசியமான இடங்களிற் கோபமும், உரிமையிடத்துக்காமமும் கொள்வது அரசர்க்குமுறைமை. 'அரசர்க்கு' என்றவிடத்து, 'ஆதற்கு' என்று பிரதிபேதமுண்டு; தாம் விருத்தியடைதற்கு என்று பொருள். அவனின்— இன் - ஐந்தாமுருபு, ஒப்புப்பொருளது. மருங்கு - பக்கம்; இது - இலக்கணையால், பக்கங்களிற் சூழ்ந்துநிற்கும் உறவினரை உணர்த்திற்று. (சு)

௫உஎ. காக்கை கரவாக் கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

(இ - ள்.) காக்கை - காக்கைகள், (தமக்கு இரையாயின கண்டவழி), கரவா - மறையாது, கரைந்து - (இனத்தை) அழைத்து, உண்ணும் - (அதனோடுங் கூட) உண்ணாநிற்கும்; ஆக்கம்உம் - (சுற்றத்தான் எய்தும்) ஆக்கங்களும், அன்ன நீரார்க்குஎ - அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே, உள - உளவாவன; (எ - று.)

அவ்வாக்கங்களாவன - பகையின்மையும், பெருஞ்செல்வமுடைமையும் முதலாயின. எச்சவும்மையான், அறமும் இன்பமுமேயன்றிப்பொருளும் எய்து மென்பது பெறுதும். 'அப்பெற்றித்தாய இயல்பு' என்றது, தாம்நுகர்வன எல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

(கு - ரை.) கண்டவழி - பார்த்தபொழுது. மறையாது - ஒளிக்காமல். இனம் - தம் இனமாகிய பிறகாக்கைகள். சுற்றத்தான் எய்தும் ஆக்கம் - உற

வினரால் வரும் நன்மைகள். அப்பெற்றித்தஆய - அத்தன்மையதான். அப் பெற்றித்தாய இயல்பினையுடையார் - தாம் நுகரத்தக்கபொருள்கள் நேர்ந்த விடத்து ஒளிக்காமற் சுற்றத்தாரை யழைத்து அவரோடுங்கூட நுகர்பவர். உள-உள்ளன. ''காகமுறவுகலந்துண்ணக்கண்டீர்'' என்றார், தாயுமானவரும். எச்சவும்மை-'ஆக்கமும்' என்பதில் உள்ளது; இது-இறந்ததுதழுவிய எச்சம். பெறுதும்-பெறுவோம். நுகர்வனஎல்லாம் - அனுபவிக்கும்பொருள்களெல்லா வற்றையும். கரவா-ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம். கரவாக்கரைந்து என இதன்முன் வலிமிக்கது, பொதுவிதியால்; [நன். உயிர். கடி.] 'கரவாகரைந் துண்ணும்' என இயல்பான பாடத்துக்கு - மறைக்காதனவாய் என்று எதிர் மறைப் பலவின்பால் முற்றெச்சமாகக் கொள்க; அதன்முன் வலிஇயல்பாம்: [நன். உயிர். உக.] நீரார்க்கு - நீர்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோ யிற்று. ஏ - பிரிநிலை. உள - பலவின்பாற்குறிப்புமுற்று. (எ)

ருஉ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(இ - ள்.) பொது நோக்கான் - (எல்லாரையும்) ஒருதன்மையராக நோக்காது, வேந்தன் - அரசன், வரிசை ஆ நோக்கின் - (தத்தம்) தகுதிக்கு ஏற்ப நோக்குமாயின், அது நோக்கி வாழ்வார் - அச்சிறப்புநோக்கி (அவனை விடாது) வாழுஞ் சுற்றத்தார், பலர்—; (எ - று.)

உயர்ந்தார்நீங்குதல்நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடா தொழுகுதல்நோக்கி வரிசைநோக்கை விதித்தார்.

இங்ஙன்குபாட்டானும், சுற்றந்தழுவும் உபாயம் கூறப்பட்டது.

(கு - சை.) தத்தம் - அவரவரது. தகுதி - யோக்கியதை, கௌரவிக்கப் படும் நிலைமை. அதற்குஏற்ப நோக்குதல் - உபசரித்துஒழுகுதல். உயர்ந் தாரையும் தாழ்ந்தாரையும் சமமாகநடத்தினால், உயர்ந்தவர் தம்மை அவ மதித்ததாகக்கருதி அவனை நீங்குவ ராதலால், அங்ஙனம்பொதுப்படநோக்கு தல் ஆகாது. கபிலரென்னுஞ் சிறந்தபுலவர் மலையமான் திருமுடிக்காரி யென்னும் அரசனிடஞ் சென்றபோது அவ்வள்ளல் அவரதுபெருமைக்குத் தக்கபடி அவர்க்கு மிக்கபரிசுகொடாது மற்றையபுலவர்களோடொப்ப அவரை மதித்து ஏதோ சிறிதுகொடுத்தனனாக, அதுபற்றி அவர் அவனைநோக்கி ''ஒரு திசை யொருவனை யுள்ளி நாற்றிசைப், பலரும் வருவர் பரிசின் மாக்கள், வரிசையறிதலோ வரிதே பெரிதும், ஈத லெளிதே மாவண்டோன்றல், அது நற்கறிந்தனையாயின், பொதுநோக்கொழிமதி புலவர்மாட்டே'' என்று கூறிய செய்யுள், புறநானூற்றிற் காணத்தக்கது. விதித்தார் - வேண்டுமென்றார். நோக்கான் - எதிர்மறை முற்றெச்சம். ஆ - ஆக: விகாரம். (அ)

ருஉக. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(இ - ள்.) தமர் ஆகி - (முன்) தமராய்வைத்து, தன் துறந்தார் - (தன் னைத் அமராது யாதானுமொருகாரணத்தால்) தன்னைப் பிரிந்து போயவர்,

சுற்றம் - (பின்னும்வந்து) சுற்றமாதல்,—அமராமை காரணம் இன்றி - அவ்வமராமைக்காரணம் (தன் மாட்டு) இல்லையாக, வரும் - தானே யுளதாம்.

'அமராமைக்காரணமின்றி' என்றதனான், மூன் அஃது உண்டாய்த் துறத்தல் பெற்றும். அஃதாவது - அரசன் தான் நெறிகெடஒழுகல், வெறுப்பனசெய்தல் என்றிவை முதலியவற்றான் வருவது. ஆக்கம், வருவிக்கப்பட்டது. 'இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்கு, செயற்கையான் வந்த நீக்கம், அதனை யொழிய ஒழியும்; ஒழிந்தால், அவர்க்கு அன்பு செய்துகொள்ளவேண்டா: பழையஇயல்பாய் நிற்கும்' என்பார், 'வரும்' என்றார்.

(கு - ரை.) மூன் தமராய்வைத்து - மூன்பு தன்னையடுத்த சுற்றத்தவராயிருந்து. தன்னெடு அமராது - தன்னெடு மனங்கலந்திராமல். யாதானும் - யாதாயினும். அவ்வமராமைக் காரணம் தன்மாட்டு இல்லையாக - அங்ஙனம் அவர் தன்னெடுகலவாமற் பிரிந்துசென்றதற்குக் காரணமாகவுள்ள குற்றம் தன்னிடத்து நீங்க. மூன் அஃது உண்டாய்த் துறத்தல் - மூன்பு அவ்வமராமைக்காரணம் தன்னிடத்து உளதாயிருத்தலால் அவர்கள் தன்னைப்பிரிந்து செல்லுதல். அஃதாவது - அவ்வமராமைக் காரணமாவது. நெறிகெட ஒழுகல் - நல்லொழுக்கவழி விலகி நடத்தல்; அறநூல் பொருணூல் கூறிய வழிப்படி நடவாமல் தன் விருப்பின்படி நடத்தலெனினுமாம். வெறுப்பன செய்தல் - சுற்றத்தார் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்தல். 'முதலிய' என்றதனால் காமம் வெகுளி உவகைகளை அளவுகடந்து செய்தல், இடித்து மதிகூறும் அமைச்சர் புரோகிதர்களை ஆதரியாமை முதலியன கொள்க. ஆக்கம் - ஆதல்; இச்சொல் வருவிக்கப்பட்டது, 'சுற்றம்' என்றதன்பின். இயற்கையாகவே-ஸ்வபாவத்திலே; புதியகாரணமில்லாமலே என்றபடி. செயற்கையான் - காரணத்தால். நீக்கம் - பிரிவு. அதனை ஒழிய - அக்காரணத்தை நீங்க. தமர்-தாம் என்னும் பகுதியடியாப் பிறந்த இலேப்பெயர். தற்சுற்றத்தார் - இரண்டனுருபுத்தொகை. அமராமை - எதிர்மறைத்தொழிற்பெயர். அமராமைக் காரணம் - நான்காம்வேற்றுமைத்தொகை. இப்பாட்டில், 'சுற்றமாதல்' - எழுவாய். (கூ)

நூகூ. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(இ-ள்.) உழை பிரிந்து-(காரணமின்றித்) தன்னிடத்துநின்றும் பிரிந்து போய், காரணத்தின் வந்தானை - (பின்) காரணத்தான் வந்த சுற்றத்தானை, வேந்தன்-அரசன், இழைத்திருந்து எண்ணி கொளல் - (அக்காரணத்தைச்) செய்துவைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க; (எ - று.)

வாளா 'உழைப்பிரிந்து' என்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றும். வருதற்காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்து போய்ப் பகையோடு கூடுமாகலின் 'இழைத்திருந்து' என்றும், அன்பின்றிப் போய்ப் பின்னுங் காரணத்தான் வந்தமையின் 'எண்ணிக் கொளல்' என்றுங்கூறினார்.

பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமை செய்யப் போய் அதனை யொழிய வருவானும், அதுசெய்யாமற் போய்ப் பின் நன்மை செய்ய வருவானும் தழுவப்படு மாகலின், தழுவுமாறு; முறையே இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) உழை - இடம். உழைப் பிரிந்து - ஐந்தாம்வேற்றுமைத் தொகை. காரணத்தான் - யாதாயினுமோர் ஏதுவினால். வாளா - சும்மா; காரணங்கூறாமல் என்றபடி. வருதற்காரணம் - தன்னிடம் வந்து கூடுதற்கு வேண்டிய காரணம். செய்யாதவழி - தான் செய்யாமற்போனால். பகைபோடு கூடும் - பகைவருடன் சேர்வான். பிரிந்தவன் மனங்கலந்த நட்பினனல்லன்றிக் காரணத்தாற் கூடியவனாதலால், அவன் வந்து கூடுதலை ஆராய வேண்டுமென்றார். தீமைசெய்ய - அரசனுகியதான் தீங்குசெய்ததனால். அதனை யொழிய - தான் தீங்கு செய்தலை நீங்கியதனால். அது செய்யாமல் - தான் தீங்கொன்றுஞ்செய்யாமலிருக்கையில். நன்மை செய்ய-தான் நன்மை செய்ததனால். ஆறு - விதம். இழைத்திருந்து - ஒருசொல் தன்மைப்பட்டது. வந்தானைக் கொளல் என இயையும். 'வந்தானை' - செயப்படுபொருள். (கஅ)

ருச - ஆம் அதிகாரம்.—பொச்சாவாமை.

அஃதாவது - உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வு இல்வழியாகலின், இது, சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) உரு - வடிவழகு. திரு - செல்வம். ஆற்றல் - வலிமை. முதலாய என்றதனால், நாடு அரண்முதலியன கொள்க. மகிழ்ந்து செய்யாமை என இயையும். தன் காத்தல் - தன்னைப்பாதுகாத்துக்கொள்ளுதல். 'முதலிய'என்றதனால், தன்னேனை பகைவசமாகாது செய்தல், அமைச்சர் புரோகிதர் முதலியவரோடு கலந்தாலோசித்தல் முதலியனகொள்க. பயன் உள்ளது-பயனுண்டாவது. சோர்வு இல்வழி - தளர்ச்சியில்லாதவிடத்து. பொச்சாவாமை - மறவாமை, அஜாக்கிரதைப் படாமை; எதிர்மறைத்தொழிற்பெயர்: பொச்சா - பருதி; ஆ - எதிர்மறையிடைநிலை. மை - விகுதி. இதன் உடன்பாடு - பொச்சாப்பு.

ருஉக. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(இ - ள்.) சிறந்த உவகை மகிழ்ச்சியின் - மிக்க உவகைக்களிப்பான் (வரும்), சோர்வு - மறவி;—(அரசனுக்கு),—இறந்த வெகுளியின் தீது-அளவிறந்த வெகுளியினுந் தீது; (எ - று.)

மிக்கஉவகை - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்றிவற்றான் வருவது. அளவு - பகைவரையடர்த்தற்கும், கொடியோரையொறுத்தற்கும் வேண்டுவது. இறந்தவெகுளி ஒரோவழிப் பகைவரையும் கொல்லும்: இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினுந் தீதாயிற்று.

(கு - ரை.) உவகைக் களிப்பு - உட்பகைவர்க்கம் ஆறில் மோகத்தால் உண்டாகும் மதம்; இங்கே, உவகை - வரம்புகடந்த மகிழ்ச்சி; களிப்பு - அதனாலுண்டாகும் மதிமயக்கம். இவ்விரண்டும், பதினெண்குற்றங்களிலுஞ் சேர்ந்தவை. மறவி - மறதி. அளவுஇறந்த - வரம்புகடந்த. பேரின்பம்-அதிக சுகம். பெருமிதம்-கம்பீரத்தன்மை. அளவு-கோபத்திற்கு அளவாவது. அடர்த்தல் - அழித்தல். கொடியோரை ஒற்றுத்தல் - துஷ்டரைத் தண்டித்தல். ஓரோவழி - ஒருசமயத்தில். 'பகைவரையும்' என்ற உம்மையால், அளவிறந்த கோபம் தன்னையுங்கொல்லும் என்பது பெறப்படும். இஃது - சிறந்த உவகை மகிழ்ச்சியாலுண்டாகுஞ் சோர்வு. அன்னதுஅன்றி-அத்தன்மையதல்லாமல்: பகைவரையும் ஒருகால் அழித்தற்கு உதவாமல். தன்னையே கோறலின் - தன்னைமாத்திரமே அழிக்குமாதலால். அதனினும் - இறந்தவெகுளியினும். அளவுகடவாதவெகுளி அரசர்க்குவேண்டுவதொன் றுதலால், 'இறந்தவெகுளி' என்றார். இறந்த என்னும் பெயரெச்சத்தி லுள்ள இறத்தலென்னுஞ் செயப்படுபொருள்குன்றுவினை ஒருசெயப்படுபொருளை வேண்டிநின்றதனால், 'அளவு' என ஏற்றசொல் வருவிக்கப்பட்டது; இது - அவாய்நிலை யெனப்படும். வெகுளியின் - ஐந்தாமுருபு, எல்லைப்பொருளது. ஏ - தேற்றம். சிறத்தல் - இங்கே, அளவின் மிகுதல். மகிழ்ச்சியின், இன் - ஏது. உவகை, மகிழ்ச்சி, சோர்வு - தொழிற்பெயர்கள். (க)

ருஉ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(இ - ள்.) புகழை - (ஒருவன்) புகழினை, பொச்சாப்பு-(அவன்) மறவி, கொல்லும் - கெடுக்கும்: அறிவினை—, நிச்சம் நிரப்பு—, கொன்றாங்கு - கெடுக்குமாறுபோல; (எ - று.)

நிச்ச நிரப்பு - நாள்தோறும் இரவான்வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கணுண்டாயின், அவற்கு இளிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து, அவன் நன்குமதிப்பினை அழிக்கும்; அதுபோல, மறவியும் புகழுடையான்கணுண்டாயின், அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து, அவன் நன்குமதிப்பினை அழிக்கும் என்பதாயிற்று.

இவையிரண்டுபோட்டானும், பொச்சாப்பினது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) நிச்சநிரப்பு - நித்தியதரித்திரம். இரவான் - இரத்தலால். இளிவரவு - அவமானம். எள்ளற்பாடு - இகழப்படுந்தன்மை, நிந்தை. நன்குமதிப்பு-பெருமை, கௌரவம். தன் காவாமை-தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ளாமை. நிச்சம் - நித்யம் என்ற வடசொல்லின் சிதைவு; இது, நிச்சல் என்றும் வழங்கும். நிரப்பு - எல்லாப்பொருள்களும் நிரம்பியிருத்தல்; நிரம்பு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்: இது-எதிர்மறையிலக்கணையால், ஒருபொருளுமில்லாமையாகிய வறுமையைக் குறிக்கும்; (அரக்கரை 'புண்ய ஜநம்' என்றும், செல்வத்தை 'வெறுக்கை' என்றும், அறிவிலானை 'மூழ மகன்' என்றும், பொருமைப்படுதலை 'அழுக்காறுதல்' என்றும், அநித்ய

மாகிய உடம்பை 'மெய்' என்றும், செவ்வாய்க்கிழமையை 'மங்களவாரம்' என்றும் கூறுவனவெல்லாம் இத்தன்மையன.) கொன்றுங்கு - கொன்றலாங்கு, அல்லது கொன்றதாங்கு என்பது விகாரப்பட்டதென்க. ஆங்கு-உவமவுருபு. **தொழில்பற்றிவந்த உவமையணி.** வறுமை அறிவைக்கெடுத்தலை, "நீர்மையே யன்றி நிரம்பவெழுந்த தங், கூர்மையுமெல்லா மொருங்கிழப்பர்—கூர்மை யின், மூல்லையலைக்கு மெயிற்றுய் நிரப்பென்னு, மல்லலடையப்பட்டார்" என்ற நாலடியாரினாலும் அறிக. நிச்சநிரப்பு அறிவைக் கொல்லுமென்றது - நித்தியதரித்திரம் ஒருவனுக்கு அறிவுடைமையாலாகும் நன்குமதிப்பினைக் கெடுக்குமென்றவாறு: அறிவிருந்தும் வினைக்கமுறுமற்செய்வதால் நிச்சநிரப்பு அறிவைக் கொல்வதாயிற்று. (உ)

குஉக. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்குந் துணிவு.

(இ - ள்.) பொச்சாப்பார்க்கு - பொச்சாந்தொழுகுவார்க்கு, புகழ்மை இல்லை - புகழுடைமையில்லை; அது - அவ்வின்மை, (இந்நீதிநூலுடையார்க்கேயன்றி), உலகத்தா—, எ பால் நூலோர்க்குமும் - எவ்வகைப்பட்டநூலு டையார்க்கும், துணிவு - ஒப்பமுடிந்தது; (எ - று.)

அரசர்க்கேயன்றி அறம்முதலியநான்கினும்முயல்வார்யாவர்க்கும் அவை கைகூடாமையிற் புகழில்லை யென்பது தோன்ற, 'எப்பாலாலோர்க்குந் துணிவு' என்றார்.

(கு - ரை.) அவ்வின்மை - மறவியுடையார்கட்குப் புகழில்லையென்பது. அரசநீதிகூறிவருகிற சந்தர்ப்பமாதலால், 'இந்நீதிநூலுடையார்' என்றது - ராஜநீதிசாஸ்திரங்களெழுதியவர்களே. அறம்முதலியநான்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்கள். அவை-அப்புருஷார்த் தங்கள். புகழ்மை—மை - உடைமைப்பொருள்காட்டும்விகுதி. உம்மை - முற் றும்பொருளது. துணிவு - ஆட்சேபமில்லாமல் ஒரேவிதமாகநிச்சயிக்கப்பட்ட விஷயம்; தொழிலாகுபெயர். 'துணிபு' என்றும் பாடம். (கூ)

குஉச. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(இ - ள்.) அச்சம் உடையார்க்கு அரண் இல்லை - (காடு மலை முதலிய) அரண்களுள்ளே நிற்பினும் (மனத்தின்கண்) அச்சமுடையார்க்கு (அவற்றுற்) பயனில்லை; ஆங்கு - அதுபோல, பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை - செல்வமெல்லாம் உடையராயினும் (மனத்தின்கண்) மறவியையுடையார்க்கு (அவற்றுற்) பயனில்லை; (எ - று.)

நன்மைக்கு ஏதுவாகலின், 'நன்கு' என்றார். அச்சமுடையார் நின்ற அரண் அழியுமாறுபோல, மறவியுடையாருடைய செல்வங்களும் அழியும் என்பதாயிற்று.

(கு - ரை.) முதலிய என்றதனால், கடல், மதில், நிலம், படை என்ற இவைகளைக் கொள்க. அரண் - பாதுகாப்பு. அவற்றால் - அவ்வரண்களால்.

பின் உள்ள 'அவற்றால்' என்பதற்கு - அச்செல்வங்களால் என்று பொருள். நன்கு - நன்மையை விளைப்பதான செல்வத்துக்குக் காரியவாகுபெயர். உவமையணி. அரண் - 'ஸரணம்' என்ற வடமொழியின் திதவு. "வன்சார் புடையரெனினும் வலிபெய்து, தஞ்சார்பிலாதாரைத் தேசுன்றலாகுமோ - மஞ்சுசூழ் சோலைமலைநாடயார்க்காணும், அஞ்சுவார்க்கில்லையரண்" என்பது, பழமொழி. (ச)

ருஉ. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(இ - ள்.) (தன்னுற் காக்கப்படுந் துன்பங்களை), உற முன் காவாது - (அவை) வருதற்குமுன்னே (அறிந்து) காவாது, இழுக்கியான் - மறந்திருந்தான்,—பின் ஊறு - பின் வந்துஉற்றகாலத்து, (காக்கலாகாமையின்), தன் பிழை - அப்*பிழைப்பினை (நினைந்து), இரங்கிவிடும்—;(எ - று.)

காக்கப்படுந் துன்பங்களாவன - சோர்வுபார்த்துப் பகைவர்செய்வன. 'ஊற்றின்கண்' என்புழி உருபும் சாரியையும் உடன்தொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், 'இரங்கிவிடும்' என்றார்.

இவைமூன்றுபாட்டானும்,பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதம் கூறப்பட்டது.

(கு - ரை.) காத்தல் - இங்கே, தடுத்தல்; "செல்லிடத்துக் காப்பான்" என்ற குறளிற் போல. உற்றகாலத்து - துன்பங்கள்நேர்ந்தகாலத்தில். காக்கலாகாமையின் - தடுக்கமுடியாமையால். அப்பிழைப்பினை - வருமுன் தான் அறிந்து காவாதிருந்ததாகிய தன்குற்றத்தை. இரங்கிவிடும் - நிச்சயமாக அநுதாபப்படுவான்; 'விடு'என்னுந் துணைவினை, துணிவுப்பொருளை விளக்கிற்று. சோர்வு - ஏமாந்திருக்குஞ் சமயம். ஊறு என்றதன் ஈற்றில், தொக்க உருபு - 'கண்'; தொக்க சாரியை - 'இன்'. ஏதம் - துன்பம். 'முன்', 'பின்' என்னும் இடைச்சொற்கள், இங்கே காலங்குறித்தன. 'பிழை' என்பதை பிழைக்கு என விரிக்க. உறுத லென்னும் பொருளை யுணர்த்துகிற 'ஊறு'என்ற மூதனிலைதிரிந்ததொழிற்பெயர் - உறுங்காலத்தையுணர்த்தியதனால், தொழிலாகுபெயராம். வருமுன்காப்பவனுயிராமல் வந்தபின் காப்பவனுயிருப்பவன் வருத்தமுற்றுக் கழிவிரக்கமடைவ னென்பது கருத்து. (கி)

ருஊ. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்.

(இ - ள்.) (அரசர்க்கு), இழுக்காமை - மறவாமைக்குணம், யார்மாட்டு உம் - யாவர்மாட்டும், என்றுஉம் - எக்காலத்தும், வழுக்காமை வாயின் - ஒழிவின்றி வாய்க்குமாயின், அஃது ஒப்பது இல் - அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை; (எ - று.)

வினைசெய்வார் சுற்றத்தார் என்னும் தம்பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் 'யார்மாட்டும்' என்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்ப வேண்டுதலின் 'என்றும்' என்றும், எல்லாக்காரியங்களிலும் ஒப்ப

பி-ம்: * பிழையினை.

வேண்டுதலின் 'வழுக்காமை' என்றும் கூறினார். 'வாயின்' என்பதில் ஏழாவதனுருபு தொக்கு நின்றது. 'வாய்' என்பது - முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த வினையெச்சம்; வாய்த்தல் - நேர்படுதல்.

(சு - ரை.) யாவர்மாட்டும் - எல்லார்விஷயத்திலும். அதனை - அந்த மறவாமைக்குணத்தை. தம்பாலார்கண்ணும் - தம்மைச்சேர்ந்தவரிடத்திலும்; உம்மை - பகைவரிடத்து மாத்திரமேயன்றி என்ற கருத்தைத் தெரிவிக்கும். ஒப்ப வேண்டுதலின் - ஒருதன்மையாகவே வேண்டியிருத்தலால். பெருகிய ஞானமும் - (செல்வம் முதலியவற்றால்) அபிவிருத்தியடைந்தபொழுதும். சுருங்கிய ஞானமும் - (அவற்றால்) குறைவடைந்தபொழுதும். 'வாயின்' என்பதற்கு எழுதியுள்ள இலக்கணம், இக்காலவழக்கிற்கு ஏலாது; 'வாய்ப்பின்' என்றாவது, 'வாய்க்கின்' என்றாவது விகுதி யாதாயினும் ஓரெழுத்தை ஈர்ந்து வாராமையின், இங்ஙனங் கொள்ளப்பட்டது போலும்: இனி, 'வினைப்பகுதியெல்லாந் தொழிற்பெயர்ப் பொருள்பட்டு நிற்றலால், முதனிலைத்தொழிற்பெயரடியாக என்றார்' என்பாரு முளர். இழுக்காமை-தொழிற் பெயர். வழுக்காமை - வினையெச்சம். ஒப்பது-வினையாலணையும்பெயர். 'அது வொப்பது' என்று பாட மோதுவாருமுளர். (சு)

உக. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(இ - ள்.) அரிய என்று - (இவை செய்தற்கு) அரியனவென்று சொல்லப்பட்டு, ஆகாத - (ஒருவற்கு) முடியாத காரியங்கள், இல்லை—: பொச்சாவா கருவியான் - மறவாத மனத்தானே. போற்றி - எண்ணி, செயின் - செய்யப்பெறின்; (எ - று.)

'பொச்சாவாத' என்பதன் இறுதிநிலை, விகாரத்தால் தொக்கது. அந்தக் காரணமாகலின், 'கருவி'என்றார். இடைவிடாதசிந்தனையும் தப்பாதசூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதின்முடியுமென்பதாம்.

இவையிரண்டுபோட்டானும், பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

(சு - ரை.) இறுதிநிலை - இங்கே, தகரவெழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதி. அந்தக்காரணம் - அகக்கருவி. தப்பாத - தவறாத. சூழ்ச்சி - உபாயம், ஆலோசனை. அரிய, ஆகாத - 'அன்'சாரியை பெற்ற பலவின்பாற் பெயர்கள். 'என்று' - செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை. 'செயின்' என்றது, செய்தலின் அருமை விளக்கும். தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்து வினையியலில் ''நிலனும்பொருளும்''என்ற சூத்திரத்தின் உரையில், '''நின்முகங்காணுமருந்தினேன்'' என்புழி, காட்சியை மருந்தென்றார் ஆதலின், 'காணுமருந்து' என்பது - வினைப்பெயர்கொண்டதாம்; ''பொச்சாவாக்கருவியாற் போற்றிச்செயின்'' என்புழி 'பொச்சாவாக்கருவி' என்பதும் அது' எனச் சேனாவரையரும், '''பொச்சாவாக்கருவியாற் போற்றிச்செயின்''என்பது கருவிக்கண் அடங்கும்' என நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றை நோக்குமிடத்து, 'பொச்சாவாக்கருவி' என்பதற்கு-பொச்சாவாமையாகியகருவி என்று பொருள்கொண்டனர் அவ்வாசிரியர்களென்பது பெறப்படும். (எ)

௫௩௮. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(இ - ள்.) புகழ்ந்தவை - (நீதிநூலுடையார் இவை அரசர்க்குஉரியன என்று) உயர்த்துக்கூறிய செயல்களை, போற்றி செயல்வேண்டும் - கடைப் பிடித்துச் செய்க: செய்யாது இகழ்ந்தார்க்கு - (அங்ஙனஞ்) செய்யாது மறந் தவர்க்கு, எழுமைஉம் - எழுமையினும், இல்-(நன்மை) இல்லை, (ஆகலான்).

அச்செயல்களாவன-மூவகையாற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத் தொழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்துன்பமே யாகலின், 'எழுமை யும் இல்' என்றார். எழுமை - ஆகுபெயர்.

இதனான், பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன.

(கு - ரை.) கடைப்பிடித்து-மறவாமல் உறுதியாகப்பிடித்து. எழுமை - ஏழுபிறப்பு; ஒருவன் ஒருபிறப்பிற்செய்த கருமத்தின் பயன் ஏழுபிறப்பு வரையிலும் அவனுயிரைத் தொடர்தல் கூடும் என்பது, ஒருசார்நூல் துணிபு; கீழ் "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர்" என்ற குறளில் 'எழுமை யென்றது - வினைப்பயன் தொடரும் ஏழுபிறப்பினை; அது, வளையாபதியுட் கண்டது' என்றும், "ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின், எழுமையு மேமாப் புடைத்து" என்ற குறளில் 'ஒருமைக்கண் செய்த வினையின் பயன் எழுமையுந்தொடரு மென்பது, இதனான் அறிக' என்றும், "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்கு, எழுமையு மேமாப் புடைத்து" என்ற குற ளில் 'வினைகள்போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகு மாகலின், 'எழுமையுமேமாப்புடைத்து' என்றார்; எழுமை மேலே கூறப்பட்டது' என் றும் கூறிப்போந்தார் பரிமேலழகர். மூவகை ஆற்றல் - அறிவு ஆண்மை பெருமை என்னும் மூன்றுவிதமான சக்திகள்; ௪௬௬-ஆங் குறளி னுரையிற் கூறினர். நால்வகை உபாயம் - கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறு படுத்தல், ஒறுத்தல் என்பன; இவற்றை வடநூலார்தாந ஸாம பேத தண்டம் என்பர்; ௪௬௭ - ஆங் குறளி னுரையிற் கூறியதுஉணர்க. ஐவகைத்தொழில் - சிறியமுயறசியினவும், செய்தாற்பயனுள்ளனவும், பயன்பெரிதாயினவும், பயனில்ஐயமில்லாதனவும், பின்புஇன்பம்விளைப்பனவும் என இவை; ௪௬௬-ஆங் குறளி னுரைகொண்டு அறிக. தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தில் "ஐவகைமரபி னரசர் பக்கமும்" என்றதனாற் குறிக்கப்பட்ட ஓதல், வேட் டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய்தல் என்ற ஐந்துதொழில்களைக் கொண் டாருமுளர். இனி, ஐவகைத் தொழில் - மேல் 'வினைசெயல்வகை' என்னும் ௬௮ - ஆம் அதிகாரத்தில் "பொருள் கருவி காலம் வினை யிடனோ டைந்தும், இருடீர வெண்ணிச் செயல்" என்னுங் குறளிற் கூறும் பொருள் படை காலம் வினை இடம் என்னும் ஐந்தையும் தனித்தனி எண்ணிச்செய்யுஞ் செய்கை கள் என்று உரைத்தலும் சிறவாது. அறுவகைக்குணம் - நட்பாக்கல், பகை யாக்கல், மேற்செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்பன; ௪௮௫-

ஆங் குறளினுரையிற் கூறினர். வழீஇயோர்க்கு - தவறியவர்க்கு. நிரயம்-நரகம். எழுமை - ஏழுபிறப்பை யுணர்த்தியதனால், எண்ணலளவை யாகு பெயர். இங்கே 'எழுமை' என்றது - ஏழின் தன்மையைக் குறியாமல் ஏழென்னும்எண்ணையே குறித்ததனால். இதிலுள்ள 'மை'விகுதி - தன்மைப் பொருள்விகுதியன் றென்றும், தனக்கெனவேறுபொருளுணர்த்தாத பகுதிப்பொருள்விகுதியா மென்றும் அறிக. செயல்வேண்டும் என்பதை ஒரு சொல்லாகக் கொண்டு, செய்க வென்று உரைத்தார்; "ஓஒதல் வேண்டும்" என்னுங் குறளி னுரையில் 'ஓதல்வேண்டும் என்பது-ஒருசொல் நீர்மைத்து' என இலக்கணங் கூறுமாறு காண்க. இதற்கு, அரசன் - தோன்றுஎழுவாய். இனி, செயல் வேண்டும் என இருசொல்லாக்கொண்டு, செய்தல் இன்றியமையாதென எழுவாயும் பயனிலையுமாக உரைப்பினும் அமையும். இவ்வுரைக்கு, 'வேண்டும்' என்பது - ஒருவகைவியங்கோளாம். எழுமையும்— உம்மை - முற்றுப்பொருளது. 'இல்' என்னும் பயனிலைக்கு ஏற்ப, 'நன்மை' என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. "உற்றிடுமாற்றன்மூன்று முபாயங் கண்ணுறு நன்மை, பற்றியதொழில்களோந்தும் பண்புறுகுணங்களாறும், மற்றையவனைத்துங்கேடாம் வளர்பிறப்பேழன் கூறும், பற்றியநன்மையின் ரும் பாழ்த்த பொச்சாப்புச்சாரின்" என்றது இங்குக் காணத்தக்கது. (அ)

குகூ. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(இ - ள்.) (அரசர்),—தம் மகிழ்ச்சியில் - தம் மகிழ்ச்சிக்கண், தாம் மைந்துஉறும் போழ்து-தாம் வலியுறும்பொழுது, இகழ்ச்சியின் கெட்டாரை-(முற்காலத்துஅதனின் ஆய) சோர்வாற் கெட்டவர்களை, உள்ளுக - நினைக்க.

காரணங்களோடு அவர்க்குஉளதாய உரிமையை மகிழ்ச்சிமேல் ஏற்றி 'தம் மகிழ்ச்சியில்'என்றும், இகழ்ச்சியும் கேடும் உடன்தோன்று மாகலின் 'மகிழ்ச்சியின் மைந்துறும்போழ்து' என்றுங் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுது மென்று அதன்கண் மைந்துரு ரென்பது, கருத்து. 'எண்ணுக' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) தம் மகிழ்ச்சிக்கண் தாம் வலிஉறும்பொழுது-தமது செல்வம் முதலியவற்று லாகிய உவகைக்களிப்பில் தாம் மிக்குநிற்குங்காலத்திலே. அதனின் ஆய சோர்வால் - அம்மகிழ்ச்சியா லுண்டாகிய மறதியால். காரணங்களோடு - (மகிழ்ச்சிக்குக்) காரணமான செல்வம் இன்பம் வீரம் என்ற இவற்றோடு. மகிழ்ச்சியென்பது-உபசாரவழக்கு. அவர்க்கு-அரசர்க்கு. உரிமை-உரியசம்பந்தம். மகிழ்ச்சியில் மிக்குநிற்கும்போது, இகழ்ச்சியும் கேடும் உடன்தோன்று மென்க. உள்ளவே-நினைக்கவே. கெடுதும்-கெடுவோம். அதன்கண் மைந்துஉரூர் - மகிழ்ச்சியில் வலியுற்றுநில்லார். 'எண்ணுக' என்ற பாடத்துக்கும்-நினைக்கவென்றே பொருள்; அந்தப்பாடம், மோனைத்தொடைக்குச் சிறக்கும். இகழ்ச்சியின்—இன்-ஐந்தனுருபு, ஏது. மகிழ்ச்சியில்—இல்-ஏழனுருபு. மைந்து - வலிமை. இகழ்ச்சியிற்கெட்டார் - இரணியன், சூரபதுமன், இரா

வணன், துரியோதனன், சச்சந்தன் முதலியோர். "இகழ்ச்சியிற் கெடுவார் களே யெண்ணுக, மகிழ்ச்சியுண் மதி மைத்துறும்போ தெனப், புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள், திகழ்ச்சிசெல் பொன்மணிமுடி மன்னனே" என்பர் சூளாமணியிலும். (கூ)

நடுசo. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(இ - ள்.) (அரசனுக்கு), உள்ளியது எய்தல் - (தான் எய்த) நினைத்த பொருளை (அந்நினைத்தபெற்றியே) எய்துதல், எளிது மன் - எளிதாம்: மற்று உம் தான் உள்ளியது உள்ள பெறின் - பின்னும் அதனையே நினைக்கக்கூடு மாயின்; (எ - று.)

அது கூடாதென்பது ஒழிந்துநின்றமையின், மன் - ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது - மறவியின்றி அதன்கண்ணே முயறல்.

இவையிரண்டுபாட்டானும், பொச்சாவாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) எய்த - அடைய. நினைத்தபெற்றியே - எண்ணியபடியே. அதுகூடாது என்பது - அங்ஙனம்ஒருபொருளையே மறதியின்றி இடை விடாது ஞாபகத்திற்கொண்டுமுயலுத லரிது என்பது. ஒழியிசை-சொல்லப் படாமல் ஒழிந்துநின்ற பொருளைக் குறித்தல். மன் என்னும் இடைச்சொல் ஒழியிசைப்பொருளதாதலை, "கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென், றம் மூன்றென்ப மன்னேச்சொல்லே" என்ற தொல்காப்பியத்தால் அறிக. அதன் கண்ணே முயறல் - எய்தநினைத்த அப்பொருள் விஷயத்திலேயே முயற்சி செய்தல். உள்ளியது - வினையாலணையும் பெயர். (கo)

நடு - ஆம் அதிகாரம்.—செங்கோன்மை.

அஃதாவது - அரசனுற்செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை ஒருபாற்கோடாது செவ்வியகோல் போறலின், செங்கோ லெனப்பட்டது; வடநூலாரும் 'தண்டம்' என்றார். அது சோர்வில்லாத அரசனுற்செயற்பால தாகலின், இது, பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) முறை - நீதி. ஒருபால் கோடாமை - இராசநீதிக்கு ஒரு தலையிற் பக்ஷபாதங்கொள்ளாமையும், கோலுக்கு ஒருபக்கத்திற் கோணியிரா மையும் ஆம். செவ்வியகோல்போறலின் - நேர்மையுடைய கோலையொத்த லால். செங்கோல் - உவமவாகுபெயர்; மை - தன்மைப்பொருள்காட்டும் விகுதி. செங்கோலுக்கு எதிர்மொழி-கொடுங்கோல்; ஒருபக்கத்திற் கோணுத லுடைய கோல்போல ஒருபக்கத்திற் பக்ஷபாதமுடைய அரசாட்சி. தண்டம் - கோலின்பெயர், அரசாட்சிக்கு வந்தது.

நடுசக. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(இ - ள்.) (தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால்), ஓர்ந்து - (அக்குற்றத் தை) நாடி, யார்மாட்டும்-யாவர்மாட்டும், கண்ணோடாது—, இறை புரிந்து-

நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து - (அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும்) ஆராய்ந்து, செய்வஃதுஏ - அவ்வளவிற்றாகச் செய்வதே, முறை - முறையாம்; (எ - று.)

நடுவுநிற்றல் இறைக்குஇயல்பாகலின் அதனை 'இறை' என்றும், உயிரினுஞ்சிறந்தார்கண்ணும் என்பார் 'யார்மாட்டும்' என்றுங் கூறினார். இறைமை- இறை எனவும், செய்வது - செய்வஃது எனவும் நின்றன.

இதனான், செங்கோன்மையது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) நாடி - ஆராய்ந்தறிந்து. கண்ணோடாது - தாக்ஷிணியப்படாமல். கீழ் 'குற்றங்கடிதல்' என்ற அதிகாரத்தில் "மாணா, வுவகையு மேதமிறைக்கு" என்றவிடத்தில், 'அளவிறந்தஉவகையாவது - கழிகண்ணோட்டம்' என்றதனால், இராசநீதி செலுத்துகையில், தாக்ஷிணியப்படுதல் குற்றமெனக் கூறப்பட்டது. நடுவுநிலைமை - பக்ஷபாதமில்லாத தன்மை; மத்யஸ்தனாயிருத்தல். தண்டம் - தண்டனை. நூலோர்-சாஸ்திரங்களில்வல்ல மந்திரிகளும், புரோகிதர்களும். அவ்வளவிற்றாக - நூலோர் சொன்ன அளவினையுடையதாக. அதனை - நடுவுநிற்றலை. இறை - அரசன்; இச்சொல் - இங்கே அவன் தன்மையைக் குறித்தலால், இதனை 'இறைமை' என்பதன் விகாரமாகக்கொண்டார். இறை - தொகுத்தல்விகாரமும், செய்வஃது - விரித்தல் விகாரமுமாம். இனி, அரசனுக்கு உரிய குணமாகிய நடுவுநிலைமையை 'இறை' என்ற குணிப்பெயரால் இங்கே கூறியது, பண்பு பண்பியாகக் கூறப்பட்ட உபசாரவழக்கு எனினுமாம். கண்ணோடாது—கண்ணோடு - பகுதி. 'கண்ணோட்டமாவது - தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர்கூறியன மறுக்க மாட்டாமை;இஃது,அவர்மேற் கண் சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று' என மேற் கண்ணோட்டமென்னும் அதிகாரத்தில் உரைப்பது காண்க. புரிந்தியார் மாட்டும் - குற்றியலிகரம். ஏ - பிரிநிலை. (க)

௫௪௨. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(இ - ள்.) உலகு எல்லாம் - உலகத்து உயிரெல்லாம், வான் நோக்கி வாழும் - மழைஉளதாயின் உளவாகாநிற்குமே: (எனினும்), குடி - குடிகள், மன்னவன் கோல் நோக்கி வாழும்-அரசன்செங்கோல்உளதாயின் உளவாகாநிற்கும்; (எ - று.)

நோக்கி வாழ்தல் - இன்றியமையாமை. வானின்ஆய உணவை 'வான்' என்றும், கோலின்ஆய ஏமத்தை 'கோல்' என்றுங் கூறினார். அவ்வேமம் இல்வழி உணவு உளதாயினும் குடிகட்கு அதனாற் பயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) இன்றி அமையாமை - இல்லாமற் கூடாமை; அதியவசியமாகக் கொண்டிருத்தல். வானின் ஆய - மழையினா லுளதாகிற. கோலின் ஆய ஏமம் - அரசுமுறைமையா லுளதாகும் பாதுகாப்பு. உலகத்து உயிர்களெல்லாவற்றிற்கும் மழை இன்றியமையாதாதலை "வானின் றுலகம் வழங்கி வருதலால்" என்று தொடங்கி "நீரின்றமையாதுலகெனின் யார்யார்க்கும்,

வானின் றமையா தொழுக்கு'' என்பது இறுதியாகக் கீழ் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்திற் பரக்கக்கூறிப்போந்தார்; ''மழையின்றி மாநிலத் தார்க் கில்லே'' என்ற நான்மணிக்கடிகையையுங் காண்க. இப்பாட்டுக்கு - உலகமெல்லாம் வாழ்நெக்கிவாழ்தல்போல, குடிகள் செங்கோல்நோக்கி வாழும் என எடுத்துக்காட்டுவமைபட உரைத்தலும் பொருந்தும்; பின் நிறுள - ஆங் குறளி னுரையில் 'மேல் ''வாழுநெக்கிவாழும்'' என்றதனே எதிர் மறை முகத்தாற் கூறியவாறு' என உரைப்பது காண்க. ''கோனுநெக்கி வாழுங் குடியெல்லாந் தாய்மூலையின், பானுநெக்கி வாழுங் குழவிகள்-வானத், துளிநோக்கி வாழு மூலக முலகின், விளிநோக்கி யின்புறூஉங் கூற்று'' என்ற நான்மணிக்கடிகைச்செய்யுளையுங் காண்க. மன்னவன்கோல்நோக்கிக் குடிவாழ்தலேயும், வானுநெக்கி உலகெல்லாம் வாழ்தலேயும், குலசேகரர், ''தானுநெக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தன், கோனுநெக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே'' என்றும், ''எத்தனேயும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்'' என்றும் உவமை யாக எடுத்துக்கூறியுள்ளார். வான் என்னும் ஆகாயத்தின்பெயர் - அங்கு உள்ள மேகத்துக்கு இடவாகுபெயரும், பின்பு அதுபெய்யும் மழைக்குக் காரணவாகுபெயருமாய் இருமடியாகுபெயராம். நிலத்தையும் உயிர்களேயும் ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்கும் பலபொருளொருசொல்லாகிய 'உலகு' என்பது - இங்கு 'வாழும்' என்றதனுல், மண் ணுலகத்துவாழும் சீவான்மாக் களே யுணர்த்திற்று. 'உலகு'என்பது - பால்பகாஅஃறிணேப்பெய ராதலின், 'எல்லாம்'என்னும் பன்மைச்சொல்லோடு தொடர்ந்தது. (உ)

குசுக. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாகியாய்
நின்றது மன்னவன் கோல்.

(இ - ள்.) அந்தணர் நூற்குஉம் - அந்தணர்க்கு உரித்தாய வேதத்திற் கும், அறத்திற்குஉம் - (அதனுற் சொல்லப்பட்ட) அறத்திற்கும், ஆதி ஆய் - காரணமாய், நின்றது - நிலேபெற்றது, மன்னவன் கோல்-அரசனுற் செலுத் தப்படுகின்ற செங்கோல்; (எ - று.)

அரசர் வணிகர் என்னும் எனேயோர்க்கும் உரித்தாயினும், தலேமைபற்றி 'அந்தணர்நூல்' என்றார். மாதவர்நோன்பு மடவார்கற்பும், காவலன் *காவ லன்றித் தங்காவலான் ஆகலின், ஈண்டு 'அறம்' என்றது, அவையொழிந்த வற்றை. வேதமும் அறனும் அநாதியாயினும் செங்கோல்இல்வழி நடவா ஆகலின், அதனே அவற்றிற்கு ஆதி என்றும், அப்பெற்றியே தனக்கு ஆதியா வது: பிறிதில்லே யென்பார் 'நின்றது' என்றும் கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) அந்தணர் - பிராமணர்; அழகிய தண்மையை யுடையவரென் றும் காரணப்பொருள்படும். அம் - அழகு; தண் - தண்மை யென்னும் பண் புப்பெயரின் அடி: தண்மை - குளிர்ச்சி; இங்கே, அருள். இச்சொல்-அருளே

பி - ம்: * காவலன்றித் தங்கா, காவலிற்றங்கா

யுடைய பலர்க்கும் பெயராக வழங்கத்தக்கதாயினும், பிராமணர்கட்கே யுரிய தாக வழங்குதலால், காரணவிடுகுறிப்பெயராம். இப்பெயர்க்கு 'அந்தத்தை யணைவுவார் அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற் கொண்டு பார்ப்பார் என்றவாறு' என்று காரணங்கூறுவர் நச்சினார்க்கினியர். வேதத்தை ஓதுதல் ஓதுவித்தல் என்னும் இருதொழிற்கும் உரியவர் அந்த ணரே யாதலால், வேதம் 'அந்தணர்நூல்' எனப்பட்டது. அந்தணர் வேதிய ரென்றும், மறையோ ரென்றும், நான்மறையாளரென்றும் வழங்கப்படுதலுங் காண்க. உரித்து - உரியது. ஏனையோர் - மற்றையோர். தலைமை-முதன்மை; இங்கே, ஓதுதற்கும் ஓதுவித்தற்கும் அதிகாரமுடைமை. க்ஷத்திரியரும் வைசி யரும் ஓதுதற்கு மாத்திரமும், சூத்திரர் பொருள்கேட்டற்குமாத்திரமும் அதி காரிகளென்பது நூற்கொள்கை. "மாதவர் நோன்பு...காவல்" என்ற தொடர், மணிமேகலை உ-ஆவது காதையில் வருகின்றது: மாதவர்நோன்பும் மடவார்கற்பும் காவலன் காவலன்றித் தங்காவலாளுகலான் - பெருந்தவ முடையராய முனிவரது விரதாநுட்டானமும், மடமைக்குணமுடையராய மகளிரது கற்புநிலைமையும் என்னுமிரண்டும் அரசன் பாதுகாவலிஞல் அல் லாமல் தம்மனக்காவலிஞ லாகையால்: "சிறைகாக்குங்காப்பு எவன்செய்யும் மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" என்றதனுல், மகளிர் கற்புக்கு அவர் மனநிலையேயன்றிப் பிறகாவல்கள் தலைமையாகாமை கூறப்பட்டது; தவத் திற்கும் இங்ஙனமே காண்க. முனிவரொழுக்கமும், மகளிர் கற்பும் உண்டா தற்குக் காரணம் அவரவர்மனநிலையே யாதலின், அவை அரசனுலுகையால் உண்டாகமாட்டா என்க; என்றலும், அவை நிலைபெறுதற்கு உதவியாகமாத் திரம் அரசனுலுகை நிற்பதனுல் "அருந்திறலரசர் முறைசெயினல்லது, பெரும்பெயர்ப்பெண்டிர்க்குக் கற்புச்சிறவாது", "தவமும் அரசிலாரில் வழியில்லை" என்பவைமுதலாயின வந்துள்ளனவென்க. அவை யொழிந்த வற்றை - முனிவர்நோன்பும் மகளிர்கற்பும் தவிர மற்ற அறங்களை. அநாதி - மிகப்பழமையானது; தொன்றுதொட்டு உள்ளது. கடவா - பயிலவழங்கா. அப்பெற்றியே - வேதத்தையும் வேதத்தாற் கூறப்படுகின்ற அறத்தையும் நடத்துதலாகிய அத்தன்மையே, தனக்குஆதியாவது - அரசன் செங்கோலுக் குக் காரணமாவது: பிறிதுஇல்லை - வேறெருவகையாலில்லை. வேதத்தையும் வேதத்தான் கூறப்பட்ட அறத்தையும் நடைபெறச்செய்வது குறித்துச் செங் கோலை அவற்றிற்குக் காரணமென்றுரைன்க. (கூ)

ஞசசு. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(இ - ள்.) குடி-தன்குடிகளையும், தழீஇ - அணைத்து, கோல் ஓச்சும் - செங்கோலையுஞ் செலுத்தும், மா நிலம் மன்னன் - பெருநிலவேந்தன், அடி-அடியை, தழீஇ - பொருந்தி, நிற்கும் - விடார்: உலகு - உலகத்தார்; (எ-று.)

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற் செய்வான் நில

முழுதும் ஆளுமாகலின் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவன்மரட்டு யாவரும் நீங்காஅன்பினராவர் ஆகலின், 'அடிதழீஇ நிற்கு முலகு' என்றுங் கூறினார்.

(கு - ரை.) குடிகள் - நாட்டுச்சனங்கள். அணைத்து - அன்போடு ஆதரித்து. பெருநிலவேந்தன் அடியை - பெரியஇராச்சியத்துஅரசனது பாதங்களை. தளர்ந்தஉழி - தளர்ச்சியடைந்தவிடத்து. முதலாயின என்றதனால் கள்வர் முதலியோரால் தீங்குண்டாகாதவாறு காத்தலைக் கொள்க. நிலம்-பூலோகம். தழீஇ - தழுவி. சொல்லிசையளபெடை. (சு)

குசுரு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(இ - ள்.) பெயல்உம்-பருவமழையும், விளையுள்உம்-குன்றுத விளைவும், —தொக்கு - ஒருங்குகூடி, இயல்புஉளி - (நூல்கள் சொல்லிய) இயல்பால், கோல் - செங்கோலை, ஓச்சும் - செலுத்தும், மன்னவன்-அரசனது, நாட்ட-நாட்டின் கண்ணவாம்; (எ - று.)

'உளி' என்பது - மூன்றுதன் பொருள் படுவதோர் இடைச்சொல். வானும் நிலனும் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கும் என்பதாம்.

(கு - ரை.) பருவமழை - காலத்தவறுமற் பெய்கிற மழை. குன்றுத - குறையாத. நாட்டின்கண்ண - நாட்டில்உள்ளன. மூன்றுவதன் - மூன்றும் வேற்றுமையின். வான் தொழிற்படுதல் - மழைபெய்தல். நிலம் தொழிற் படுதல் - விளைதல். 'இயல்புளி' என்பதில், உளி என்பது - கருவிப்பொருளில்வந்த மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபின்பாற்படும்; 'கொண்டு, பொருட்டு, உடைய, உளி, மாறு, ஒடு, ஓடு, கண் முதலியனவும் உவமவுருபுகளும் சொல்லே உருபாஞற்போல வெண்க' என்ற இலக்கணக்கொத்துரையைக் காண்க. வான்தொழிற்பட்டு வளஞ்சுரத்தல் - மேகம் பெய்யவேண்டிய காலத்தில் தவறுது மழை பெய்தல். நிலம் தொழிற்பட்டு வளஞ்சுரத்தல் - வயல்கள் விளையவேண்டிய காலத்தில் நன்கு விளைதல். நாட்ட - பலவின் பாற் குறிப்புமுற்று. பெயல் - பெய்தல், விளையுள் - விளைதல். (கூ)

குசுசு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(இ - ள்.) மன்னவன் - மன்னவனுக்கு, வென்றி தருவது - (போரின் கண்) வென்றியைக் கொடுப்பது, வேல் அன்று-(அவன் எறியும்) வேலன்று: கோல்—; அதுஉம் - அஃதும், (அப்பெற்றித்தாவது), கோடாது எனின் - (தான்) கோடாதாயின்; (எ - று.)

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பது என்பார், 'வேலன்று' என்றார்; ''மாண்ட, அறநெறி முதற்றே அரசின்கொற்றம்'' என்றார் பிறரும். 'கோடான்' என்பது பாடமாயின், கருவியின்தொழில் வினைமுதல்மேல் நின்றதாக உரைக்க.

(கு - ரை.) கோல் - செங்கோல். அஃதும் அப்பெற்றித்து ஆவது - அச்செங்கோலும் அத்தன்மையது [வெற்றிதருந்தன்மையது] ஆவது. கோடாதாயின் - கோணுதிருக்குமாஞல். செவ்விதாயவழியே - நேராந்தா யிருந்தபொழுதே. வாய்ப்பது - வெற்றிதருவது. என்பார் - என்று சொல்ல வந்தவர். "மாண்ட; அறநெறி முதற்றே அரசின்கொற்றம்" என்பது - புற நானூற்று, நிடு - ஆம் பாட்டில் உள்ளது; மாட்சிமைப்பட்ட தருமமார்க்கத் தைப் பிரதானகாரணமாகவுடையது அரசரது வெற்றியென்று பொருள். இம்மேற்கோள், கீழ் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில் "அறனிழுக்கா தல்லவை நீக்கி" என்ற குறளின் உரையிலும் எடுத்து ஆளப்பட்டுள்ளது. கருவி - இங்கே, கோல். வினைமுதல் - கருத்தா; இங்கே, மன்னவன். 'வென்றிதருவது' என்பது - மத்திமதீபமாக, முன்னுள்ள 'வேலன்று' என் றதனேடும், பின் நிற்கும் 'மன்னவன்கோல்' என்பதனேடும் இயையும். 'அதுவும்' என்பது, 'அதூஉம்' என விகாரப்பட்டு ஆளபெடுத்தது, இன் னிசையளபெடை. (சு)

நுசள. இறைகாக்கும் வையக மெல்லா மவனே
முறைகாக்கு முட்டாச் செயின்.

(இ - ள்.) வையகம் எல்லாம் - வையகத்தை யெல்லாம், இறை காக் கும் - அரசன் காக்கும்; அவனே - அவன்தன்னே, முறை காக்கும் - (அவ னது) செங்கோலே காக்கும்: முட்டா செயின் - (அதனே *முட்டுவந்துழியும்) முட்டாமற் செலுத்துவனேயின்; (எ - று.)

முட்டாமற் செலுத்தியவாறு - மகனே முறைசெய்தான்கண்ணும், தன் கைகுறைத்தான்கண்ணுங் காண்க. 'முட்டாது' என்பதன் இறுதிநிலே விகார த்தால் தொக்கது.

இவை நான்குபாட்டானும், அதனேச் செலுத்தினுன் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) வையகம் - உலகம். அவன்தன்னே-அவனே. முட்டு வந்துழி யும் - தடை நேர்ந்தபோதும். முட்டாமல் - தடைப்படாதபடி. அதனேச் செலுத்துவனேயின் என இயைக்க.

மகனே முறைசெய்தான்கண்ணும் - நீதிதவறுது தன்புத்திரனே மரண தண்டனைசெய்த மனுநீதிச்சோழனிடத்தும். அவ்வரலாறு வருமாறு:— சோழநாட்டிலே திருவாரூரில் அரசியற்றிய மனுநீதிகண்டசோழனென்னும் அரசனது புத்திரன் [வீதிவிடங்கன்] இளம்பிராயத்தில் ஒருநாள் தேரிலேறி வீதியிற்செல்லுகையில், ஒருபசுக்கன்று துள்ளிவந்து அத்தேர்க்காலினடி யில் அகப்பட்டு இறந்தது; அதுகண்ட தாய்ப்பசு மிகவருந்திற்று; அதனே யறிந்தஇராசகுமாரனும் மிகவும்மனம்வருந்தினன்; இப்படியிருக்கையில், கன்றையிழந்த பசு, அத்துன்பம்பொறுக்கமாட்டாமற் கதறிக்கொண்டு கண் ணீர்பெருக ஓடிச்சென்று அரசனதுஅரண்மனேவாயிலிற் கட்டியுள்ள ஆரா

* பி - மீ: முட்ட

ய்ச்சிமணியைத் தன்கொம்பினால் அடித்தது; அவ்வொலிகேட்ட மன்னவன், விரைந்துவந்து, அங்கிருந்த ஒருமந்திரியால் நடந்தசெய்தியை அறிந்து, அந்தப்பசுவின்முகத்தைப் பார்த்துப்பார்த்து மனந்தளர்ந்து 'இதற்குப் பரிகாரம் யாது?' என்று மந்திரிகளைக் கேட்க, அவர்கள் 'கோவுதத்திற்குத் தருமசாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைக் குமாரனுக்குச் செய்விப்பதே தருமம்' என்றார். வேந்தன் 'இந்தப்பிராயச்சித்தம், கன்றையிழந்து அலறுகிற இப்பசுவின் துன்பத்திற்கு ஈடாகாது; இப்பசு தன் கன்றையிழந்து துயரடைதல் போல, நானும் என்மகனையிழந்து துயரடைவதே நீதி'என்றுசொல்லி, தனதுபுத்திரனை அங்குவரவழைத்து, ஒரு மந்திரியைநோக்கி 'இந்தப்பிள்ளையை வீதியிலே கிடத்தித் தேரை மேல்நடத்தக் கடவாய்' என்று கட்டளையிட்டான்; அந்தஅமைச்சன் அவ்வாறுசெய்யத் துணியாமல் அரசன்கட்டளைக்குஅஞ்சித் தன்னுயிரை விட்டனன்; அதனை யறிந்த மனுச்சோழன் தனது புத்திரனைத் தானே கொண்டுபோய் வீதியிற் கிடத்தித் தேரை மேலே யோட்டினனன்; இந்த அரியசெய்கையைக்கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்; தேவர்கள் பூமாரிபொழிந்தனர்; இவ்வரசனது தருமநெறியையும் நடுவுநிலைமை சிறிதுந்தவறுதபெருந்தன்மையையுங் கண்டு களித்துக் கடவுள் [சிவபிரான்] பிரதியக்ஷமாய்த் தரிசனந்தந்து பசுக்கன்று, இராஜகுமாரன், மந்திரி இம்மூவரையும் பிழைத்துஎழுந்திருக்கச்செய்தருளி மறைந்தனர் என்பதாம். (இதனை "சாலமறைத்தோம்பிச் சான்றவர்கைகரப்பக், காலைகழிந்ததன்பின்றையும் - மேலைக், கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையுமூர்ந்தான், முறைமைக்கு மூப்பிளமை யில்" என்ற பழமொழிப்பாடலாலும் அறிக. இக்கதை, பெரியபுராணத்தில் திருவாரூர்ச் சிறப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. "வாயிற் கடைமணி நடுநா நடுங்க, ஆவிற் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன், அரும்பெறற் புதல்வனை யாழியின்மடித்தோன்" என்பது, சிலப்பதிகாரத்து வழக்குரைகாதை. இவன், மனுமுறைகண்ட சோழனென்றும் வழங்கப்படுவன்.)

தன்கைகுறைத்தான் கண்ணும் - தனதுகையைத் தானேவெட்டிக்கொண்ட குலசேகரபாண்டியனிடத்திலும். அவ்வரலாறு வருமாறு:—குலசேகர பாண்டியன் ஒருநாளிரவில் மாறுவேடம்பூண்டு நகரசோதனை வருகையில், ஒருபிராமணன்வீட்டில் அழுகுரலுண்டானதைச்செவியுற்று அங்குச்சென்று மறைந்துநின்று உற்றுக் கேட்கலாயினன்; அப்பொழுது, அந்த வீட்டுக்கு உரிய அந்தணன் காசியாத்திரைசெல்ல உத்தேசித்ததை அவன்மனைவி அறிந்து 'என்னைத் தனியேவிட்டுப் போதல் தருமமா?' என்றுபுலம்பினள்; அதற்கு அப்பார்ப்பனன் 'நமதுஅரசன் மிகநீதிமான்: அவனே யாதொரு தீங்கும் நிகழாதவாறு உன்னைப் பாதுகாப்பன்' என்று சொல்லிப் போயினன்; அது கேட்டஅரசன், 'நம்மை இப்படிநம்பிச்சென்ற பிராமணனது மனைவிக்கு ஒரு குறையும் நேரிடாதபடி காப்பது நமதுகடமை' என்று கருதி, அன்றுமுதல் காள்தோறும் இரவில் மாறுவேடம்பூண்டு அவ்வீட்டினருகிற் காவல்காத்து வந்தான்; இங்ஙனம் பலநாள்கழிந்தபின் ஒருநாள் பகலில் அவள் கணவன்

மீண்டுவந்துசேர்ந்தனன்; அச்செய்தியை அறியாத அரசன், அந்நாளிரவில் அவ்வீட்டினுள் ஆடவரரவங்கேட்டு, யாரோ சோரநாயகன்போலு மென்று சங்கித்து, வாயிற்கதவைக் கையினுல் தட்டியவளவிலே, உள்ளிருந்த அவள் கணவன் 'யார்?' என்று வினவ, அரசன் அக்குரலால் அவனே அவள் கணவனேயென்று அறிந்து ஓடி மறைத்து, இங்ஙனம் நள்ளிரவிற் கதவிடித்தல் தினந்தோறும் இவள்சோரநாயக னியல்போ வென்ற சந்தேகம் அவ்வந்தணனுக்கு உண்டாகாமலிருத்தற்பொருட்டு, உடனே வீடுகள்தோறுங் கதவைத் தட்டிக்கொண்டே போய்விட்டான். மறுநாள் அந்தப் பிராமணனும் மற்றும் எல்லாருங் கூடி அரசன் முன்னிலையில் வந்து 'தங்கள்வீட்டு வாயிற்கதவை நடுநிசியில் தட்டிப்போன கள்வனைக் கண்டுபிடித்துத் தண்டனைசெய்யவேண்டும்' என்று முறையிட, அதுகேட்டு அரசன் 'இங்ஙனங் குற்றஞ்செய்தவனுக்கு உரிய சிட்சை யாது?' என்று மந்திரிகளை வினவவே, அவர்கள் 'அவன்கையைக் குறைத்துவிடுவதே முறைமை'என்றனர். அரசன், உடனே தன்கையைத்தறித்துக்கொண்டு, நடந்தசெய்தியைக்கூறி, பின்னர்க் கடவுளருளாற் பொற்கை யமையப்பெற்று 'பொற்கைப் பாண்டியன்' என்னும் பெயரோடு அரசுசெலுத்தின னென்பதாம். இவ்வரலாறு சிறிது வேறுபடுத்தியுங் கூறப்படுவதுண்டு. ("உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி, புதவக் கதவம் புடைத்தன னேர்கா, ளரசவேலியல்லதி யாவதும், புரைதீர்வேலி யில்லென மொழிந்து, மன்றத்திருத்திச் சென்றீ ரவ்வழி, யின்றவ்வேலி காவா தோவெனச், செவிச்சூட்டாணியிற் புகையழல் பொத்தி, நெஞ்சஞ் சுடுதலினஞ்சி நடுக்குற்று, வச்சிரத்தடக்கை யமரர்கோமா, னுச்சிப்பொன்முடியொளிவளை யுடைத்த கை, குறைத்த செங்கோற் குறையாக்கொற்றத்து, இறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்கமின்மை"என்ற சிலப்பதிகாரமும், "எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித், தனக்குக் காியாவான் றானுய்த் தவற்றை, நினைத்துத் தன் கைகுறைத்தான் தென்னவனுங் காணு, ரெனச் செய்யார் மானுவினே" என்ற பழமொழியும், "தீமைசெய்தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ" என்ற திருவிளையாடற்புராணமுங் காண்க.)

இறுதிநிலை - விருதி; பகுபதத்தின் ஈற்றில் நிற்பது. விகாரம்-இங்கே, தொகுத்தல். முட்டா என்பது - ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்ச மென்ற படி. அதனை - செங்கோலை. வை அகம் - (பொருள்களை)வைக்கு மிடம் எனப் பூமிக்குக்காரணப்பெயர். (எ)

உசஅ. எண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்
நண்பதத்தாற் றானே கெடும்.

(இ - ள்.) எள் பதத்தான் - (முறைவேண்டினர்க்கு) எளிய செவ்வியையுடையனுய், ஓரா - (அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும்) ஆராய்ந்து, முறை செய்யா - (நின்ற உண்மைக்கு ஒப்ப) முறைசெய்யாத, மன்னவன் - அரசன், தண் பதத்தால் - தாழ்ந்த பதத்திலே நின்று, தானே கெடும்—; (எ - று.)

'எண்பதத்தான்' என்னும்முற்றுவினையெச்சமும், 'ஓரா' என்னும்வினையெச்சமும் - 'செய்யா' என்னும் பெயரெச்ச வெதிர்மறையுள் செய்தல் வினை கொண்டன. தாழ்ந்தபதம்-பாவமும் பழியும் எய்திநிற்கும் நிலை. ''அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றம்'' ஆகலின், பகைவரின்றியும் கெடும் என்றார்.

இதனுள், முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

(கு - ரை.) முறை வேண்டினர்க்கு - (தமக்குப் பிறர்செய்த தீங்கைச் சொல்லி) நீதியை நடத்தும்படிவந்த சனங்களுக்கு; முறைவேண்டினர் - வழக்குஅறிவிப்பவர். எளிய செவ்வியை உடையனும் - அரிதாகவன்றி எளிதிற் காட்சிகொடுக்குஞ் சமயத்தையுடையவனும்; செவ்வி-சமயம். ''காட்சிக்கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல், மீக்கூறு மன்ன னிலம்'' என்ற குறளையும், 'முறைவேண்டினர்-வலியரால் நலிவெய்தினர். காண்டற்கு எளிமையாவது-பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனாயிருத்தல்' என்ற அதனுரையையும் காண்க. அவர் - முறைவேண்டினர். நூலோர் - சாஸ்திரங்களில் வல்ல அமைச்சர் முதலியோர். நின்ற - அவர் சொல்லியவற்றிலுள்ள. ஒப்ப - ஏற்றபடி. முறை செய்யாத - நீதிநடத்தாத. பதத்திலே - நிலைமையிலே. தானே கெடும் - (ஒருவர் கெடுக்கவேண்டாமல்) தானே அழிவான். 'எண்பதத்தான்' என்பது குறிப்புவினைமுற்று வினையெச்சப்பொருளில்வந்தது: [நன் - வினை - ஈஉ.] ஓரா - ஓர்ந்து; செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். செய்யா - செய்யாத; ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். ''அல்லவைசெய்தார்க்கு அறங் கூற்றம்'' என்னும் மேற்கோள்-ஈரண்மணிக்கடிகையில் ''கல்லாவொருவற்கு'' என்ற பாடலில் உள்ளது; தருமமல்லாத (பாவத்) தொழில்களைச் செய்தவர்க்குத் தருமதேவதையே யமனும் என்று பொருள். இம்மேற்கோள் ''என்பிலதனைவெயில்போலக் காயுமே, அன்பிலதனை யறம்'' என்ற குறளினுரையிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 'அல்லாதமாத்தர்க் கறங்கூற்றம்' என்ற ஔவையார் மூதுரையையுங் காண்க. ''அல்லவை செய்தார்க் கறங்கூற்றமா மென்னும், பல்லவையோர்சொல்லும் பழுதன்றே'' என்பது, சிலப்பதிகாரத்து வழக்குரை காதை. எண்பதம் - பண்புத்தொகை. பதம் - சமயம்: வட சொல். எளிமைப் பொருளுணர்த்தும் எண்மை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் நின்றது; மேல் 'பண்புடைமை' என்னும் அதிகாரத்தில் ''எண்பதத்தாலெய்தலெளிதென்ப'' என்பதுங் காண்க. தண்மை - இங்கே, தாழ்வு; கீழ்ப்பட்டசாதியார் 'தண்ணியர்' எனப்படுதலுங் காண்க. பதத்தால் என்பதில், ஆல் என்னும் மூன்றனுருபு பதத்தில் என ஏழாம்வேற்றுமையிடப் பொருளில் வந்தது, உருபுமயக்கம். (அ)

ருசகூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடிவன்று வேந்தன் றொழில்.

(இ - ள்.) குடி-குடிகளை, புறங் காத்து-பிறர் நலியாமற் காத்து, ஓம்பி-(தானும் நலியாது) பேணி, குற்றம் கடிதல்-(அவர்மாட்டுக்) குற்றம் (நிகழின்

அதனை ஒறுப்பான்) ஒழித்தல். வேந்தன் - வேந்தனுக்கு, வடு அன்று - பழியன்று: தொழில் - தொழிலாகலான்; (எ - று.)

தூண்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று; அவற்றுள், ஈண்டைக்கு எய்துவன முன்னைய என்பது 'குற்றங்கடிதல்'என் பதனுற் பெற்றும். 'தன்கீழ் வாழ்வாரை யொறுத்தல் அறனன்மையின் வடு வரும்' என்பதனை ஆசங்கித்து, 'அஃது ஆகாது, அரசனுக்கு அவரை அக்குற் றத்தின் நீக்கித் தூயராக்குதலும் சாதிதருமம்' என்றார்.

(கு - ரை.) 'பிறர்' என்றது-பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய் வார் முதலாயினுரை. கீழ் ஈஅஇ, ஈஅஅ, ஙகஉ - இக்குறள்களினுரையிற் காண்க. நலியாது - வருத்தாமல். பேணி - அன்புகொண்டு. அவர்மாட்டு - அக்குடிகளிடத்து. நிகழின் - உண்டானுல். ஒறுப்பான் - தண்டனையால். புறங்காத்து-சுற்றினும் [எல்லாப்புறத்தும்] பாதுகாத்து என்க. இனி, புறம்-தமிழுபசர்க்கமெனினுமாம். பொருட்கோடல் - செல்வத்தைப் பறித்துக் கொள்ளுதல். கோறல் - கொல்லுதல். ஒறுப்பு - தண்டமென்னும் உபாயம். இம்மூன்றும் - முறையே வடமொழியில், பரிக்லேசம், அர்த்தஹரணம், வதம் எனப்படும். ஈண்டைக்கு எய்துவன - இவ்விடத்துக்குப் பொருந்து வன. முன்னைய - தூண்பஞ்செய்தலும், பொருட்கோடலும். குற்றவாளிகளை யொழித்தலென்னுது 'குற்றத்தைக்கடிதல்' என்றதனுல், கோறலாகிய தண் டனை இங்கு விதிக்கப்படவில்லை யென்பது பெறப்படும். அறன் அன்மை யின் - தருமமல்லாமையால். வடு ஆம் - பழிப்பாருமோ. ஆசங்கித்து - ஆட் சேபங்கொண்டு. அஃது - வடு. தூயர் ஆக்குதல் - பரிசுத்தராகச்செய்தல். குற்றவாளிகள் அரசனுல் தண்டிக்கப்பட்டால், அக்குற்றந்தீர்ந்து சுத்தராய் விடுகின்றன ரென்பது, நூற்கொள்கை. வடுவன்று, வேந்தன்தொழில் என்ற இரண்டு பயனிலைகளுக்கும் 'குற்றங்கடிதல்' என்பதே எழுவாய். (கூ)

ருருஉ. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(இ - ள்.) வேந்து - அரசன், கொடியாரை - கொடியவர்களை, கொலை யின் ஒறுத்தல் - கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல்,—பைங்கூழ் களை கட்டதனொடு நேர் - (உழவன்) களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனொடு ஒக்கும்; (எ - று.)

'கொடியவர்'என்றது - தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல் வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில்விழைவார் என் றிவர் முதலாயினுரை; இவரை வடநூலார் ஆததாயிக ளென்ப. இப்பெற்றி யாரைக் கண்ணோடிக் கொல்லாவழி, புற்களைக்கு அஞ்சாகின்ற பைங்கூழ் போன்று நலிவுபல எய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதரும மென்பதாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந் தற்குத் தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பாலவல்ல வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) கொலையான் ஒறுத்து-கொலைசெய்தலாகிய தண்டனை விதித்து ஒழித்து. ஒறுத்தல் - நிக்கிரகித்தல். தக்கோர் - (காத்தற்குத்) தகுதியுடைய குடிகள். உழவன் - உழுதுபயிர்செய்பவன். களை - பயிர்க்குத்தடையாகிற புல்பூண்டுகள். பைங்கூழ் - பயிர். தீக்கொளுவுவார் - (வீடு முதலியவற்றில்) தீப்பற்றவைப்பவர். நஞ்சு இடுவார் - பிறர்க்கு விஷங்கொடுப்பவர். கருவியின் - ஆயுதங்களினால். ஆறு அலைப்பார் - வழிபறிப்பவர். சூறை கொள்வார் - கொள்ளையிடுவர். பிறனில்விழைவார் - அயலான்மனைவியை விரும்புபவர். ஆததாயி - வஞ்சகன்; பெருங்குற்றஞ் செய்பவன். அக்நிதன், கரதன், சஸ்த்ரோன்மத்தன், தநாபஹன், க்ஷேத்ரஹரன், தாரஹரன் என வடநூலிற் கூறப்பட்ட அறுவகை ஆததாயிகளில் அக்நிதனை 'தீக்கொளுவுவார்' என்றதனாலும், கரதனை 'நஞ்சிடுவார்' என்றதனாலும், சஸ்த்ரோன்மத்தனை 'கருவியிற்கொல்வார்' என்றதனாலும், தநாபஹனை 'கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார்' என்றவற்றாலும், க்ஷேத்ரஹரனையும், தாரஹரனையும் 'பிறனில்விழைவார்' என்றதனாலும் குறித்தார்; ஆதலால், 'பிறனில் விழைவார்' என்றதில், 'இல்' என்பதற்கு-இடமென்ற பொருளுங் கொள்க. இப்பெற்றியார் - இத்தன்மையார். கண்ணோடிக் கொல்லாவுழி - தாக்ஷிணியப்பட்டுக் கொலைசெய்யாமற்போனால். புற் களை - புல்லாகிய களை. அஞ்சாகின்ற - அஞ்சுகிற. நலிவு பல எய்தி - அநேகந் துன்பங்களை யடைந்து. இடர்ப்படுதலின் - வருந்துதலால். வெண்குடை - செவ்விய அரசாட்சிக்கு உறுப்பு. தீயார்மாட்டு - கொடியவரிடத்து. மூவகையொறுப்பு - துன்பஞ் செய்தல் பொருட்கோடல் கோறல் என்ற மூவகையான தண்டனை. கொலையின் ஒறுத்தல் என இயையும்; இனி, கொலையிற் கொடியார் என இயைத்து-கொலைத்தொழில்செய்யுங் கொடியார் என உரைப்பாரும் உளர். வேந்து - அரசத்தன்மை; இங்கே, அரசனுக்குப் பண்பாகுபெயர். 'கூழ்' என்னும் உணவின்பெயர் - காரியவாகுபெயராய், அதற்குக் காரணமான பயிரைக் குறிக்கும். பைங் கூழ்-பசிய பயிர்: பசுமை + கூழ்=பைங்கூழ்; [நன்.பத.கூ.] களை - கட்டற்கு உரியது. கட்டது - கள் என்னும் பகுதியடியாப் பிறந்த இறந்தகாலத் தொழிற்பெயர். இப்பாட்டு, உவமையணி; இதில், நேர் - உவமவுருபு. இக்குறளை எடுத்து 'இது தண்டம்' எனக் கூறியுள்ளார், தொல்காப்பியவுரையில். இக்குறட்பா, மநுதர்மசாஸ்திரத்தின் எ - ஆவது அத்தியாயத்து ககo - ஆவது சுலோகத்தின் மொழிபெயர்ப்பு எனத்தக்கது. (கo)

நசு - ஆம் அதிகாரம்.—கொடுங்கோன்மை.

அஃதாவது-அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும், உவமையின் பெயர் பொருள்மே லாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், இஃது, அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அம்முறை - அரசுமுறைமை. கோடுதல்-கோணுதல். ஈண்டும்-இங்கும்; செங்கோன்மை யென்னுமிடத்திற்போல என்றபடி. உவமை - உபமானம்; ஒருபக்கத்திற் கோணுதலுடைய கொம்பு. பொருள்-உபமேயம்;

ஒருபக்கத்திற் பகூபாதமுடைய அரசுமுறைமை. மாறு-எதிர். கல்வியென்னும் அதிகாரத்தின்பின் கல்லாமையென்னும் அதிகாரத்தை வைத்ததற்குக் காரணம், 'கல்விச்சிறப்பு மேல்விதிமுகத்தாற்கூறிய தூணையான் முற்றுப் பெறுமை நோக்கி எதிர்மறைமுகத்தானும் கூறுகின்ற தாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது' என்று பரிமேலழகர் உரைத்துள்ளதனால், இங்குச் செங்கோன்மையின்பின் கொடுங்கோன்மையை வைத்ததற்கும் அப் படிப்பட்ட காரணமே கொள்ளத்தக்கது.

நருக. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து.

(இ - ள்.) கொலை மேல் கொண்டாரின் - (பகைமைபற்றிக்) கொல்லுதல்தொழிலைத் தம்மேற் கொண்டு ஒழுகுவாரினும், கொடிது - கொடியன்: அலை மேல் கொண்டு - (பொருள்வெஃகிக் குடிகளை) அலைத்தற்றொழிலைத் தன்மேற்கொண்டு, அல்லவை செய்து ஒழுகும் - முறையல்லவற்றைச் செய்தொழுகும், வேந்து - வேந்தன்; (எ - று.)

அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன்செய்வது எப்பொழுதுந் துன்பமாம் என்பதுபற்றி, அவரினுங் கொடிய னென்றார். பான்மயக்குறழ்ச்சி. 'வேந்து'என்பது - உயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச் சொல். அலை கொலையினுங் கொடிது என்பதாயிற்று.

(கு - ரை.) தம்மேல் கொண்டு ஒழுகுவார்-தம்மீது ஏற்றுக்கொண்டுநடப்பவர். பொருள்வெஃகி-செல்வத்தை விரும்பி. அலைத்தல்-வருத்துதல். அவர்-கொலையாளிகள். உபமானமாகிய 'கொலைமேற்கொண்டார்' என்பது பன்மைப்பாலாகவும், உபமேயமாகிய 'அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து' என்பது ஒருமையைப்பாலாகவும் மாறிநின்றதனால் 'பால் மயக்கு' என்றும், இங்கு 'கொலைமேற்கொண்டாரிற்கொடிது' என்பது - கொலையாளிகள்போலக் கொடியன் எனஉவமப்பொருள்படாது கொலையாளிகளினும் கொடிய னென உறழ்ச்சிப்பொருள்பட்டதனால் 'பால்மயக்குறழ்ச்சி' என்றுங் கூறினர். உறழ்ச்சியாவது - திசை வழி காலம் குணம் முதலியவற்றின் அளவுபற்றி வரும் எல்லைப்பொரு ளன்றி உபமானஉபமேயசந்தர்ப்பத்தில் வரும் எல்லைப்பொருள். ['காக்கையிற் கரிது களம்பழம்' என உபமானமும் உபமேயமுமாக வருமிடத்தில், காக்கையின் - காக்கைபோல எனப் பொருள்கொண்டால், ஒப்புப்பொருள்; இதனை 'உவமப்பொருவு' என்பர். காக்கையின் - காக்கையைக்காட்டிலும் எனப் பொருள் கொண்டால், எல்லைப்பொருள்; இதனை 'உறழ்பொருவு' என்பர் என்று அறிக.] ''முதலுஞ் சினையுமென் றுயிருபொருட்கு, நுதலிய மரபி னுரியவை யுரிய'' என்னுந் தொல்காப்பியத்து உவமவியற்சூத்திரத்து உரையில் 'உரிய என்றது உரியவை யென்றதனால், திணையும் பாலும் மயங்கிவரும் உவமையும் கொள்ளப்படும்' என்றுகூறி, ''கடம்பமரெடுவேளன்ன மீளி, யுடம்பிடித்தடக்கை யோடாவம்பலர்'' என்பது ஒருமைப்பன்மை மயங்கிற்று' என உதாரணங்

காட்டியவாறும் உணர்க: ''மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறுபடுதலும் பாகுபாடுடைய'' என்ற தண்டியலங்காரமுங் காண்க. வேந்து - பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால், 'கொடிது' என்னும் அஃறிணைமுற்றுக் கொண்டது; ''குடிமை யாண்மை யிளமை மூப்பே, யடிமை வன்மை விருந்தே குழுவே, பெண்மை யரசே மகவே குழவி,.....உயர்திணை மருங்கி னிலையின வாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்'' என்ற தொல்காப்பியச்சூத்திரத்தையும், அதனுரையில் 'அன்ன பிறவும்' என்றதனால், 'வேந்து வேள் குரிசில் அமைச்சு புரோசு என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க' என்றதையுங் காண்க. அலைவருத்துதல்; முதனிலைத்தொழிற்பெயர். ஏகாரம் - தேற்றம். (க)

நூநூ. வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு.

(இ - ள்.) (ஆறலைக்கு மிடத்து), வேலொடு நின்ரூன் - (தனியே) வேல்கொண்டு நின்ற கள்வன், இடு என்றது போலும் - (ஆறுசெல்வானை 'நின்கைப்பொருள்) தா' என்று வேண்டுதலோடு ஒக்கும்: கோலொடு நின்ரூன் இரவு - ஒறுத்தற்ரொழிலோடு நின்ற அரசன் (குடிகளைப்) பொருள் வேண்டுதல்; (எ - று.)

'வேலொடுநின்ரூன்'என்றதனால் பிறரொடு நில்லாமையும், 'இரவு'என்றதனால் இறைப்பொருளன்மையும்பெற்ரும். தாராக்கால் ஒறுப்பலென்னுங் குறிப்பின ஞகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று.

இவை யிரண்டுபாட்டானும், கொடுங்கோன்மையது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஆறலைக்குமிடத்து - வழியடித்துப்பறிக்குமிடத்து. ஆறு செல்வானை - வழிப்பிரயாணியை. ஒறுத்தல் - வருத்துதல்; தண்டம். பிறரொடு நில்லாமை - தனியேநிற்றல்: 'வேலொடு நின்ரூன்' என்ற தொடரில் நிற்றலில் உடனிருப்பு வேலுக்குக் கூறியிருத்தலால் பிறரொடு நில்லாமை பெறப்படும். பிறரொடு நின்று 'இடு'என்று கேட்பின், இரப்பாளர் பலர் நின்றுகொண்டு யாசகஞ்செய்கின்ரூர்களென்பது ஏற்படும்: வேலொடுநிற்றலால், கொடாவிடின் இவ்வேலினுல் நின்னுயிரைமாய்ப்பே னென்பது, பெறப்படு மென்க. இறைப்பொருள் அன்மை - வரிப்பொருளல்லாத வேறு பொரு ளென்பது. தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினன் - கொடாவிட்டால் வருத்துவே னென்னுங் கருத்தைக் குறிப்பால் தெரிவிப்பவன். இரவால்கோடல் - யாசகம்போல வேண்டிப்பெறுதல். அதிகாரம் கொடுங்கோன்மையாதலாலும், கோ லென்னுஞ் சொற்பொருள் பற்றியும், இப்பாட்டில், 'கோல்' என்பது - தண்டனையாயிற்று. இரவு - இரத்தல். 'வேலொடு நின்ரூன்' என்பதை, 'ஒடு' உருபு - கொண்டென்னுமெச்சப்பொருளில் வருதற்கு உதாரணங்காட்டினர், பிரயோகவிவேகநூலார். ''உறையில் வாளொடு மாவுழங்குரு வனத்தோடி, மறவரேர் பொருடருகென விரத்

தலைமானும், இறைவன் வாழ்குடி தன்னிலொன்றெரு பொருளிரத்தல்" என்ற பிரபுலிங்கலீலை இங்கே காணத்தக்கது. (உ)

ருருக. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

(இ - ள்.) (தன்நாட்டு நிகழ்ந் தீமைகளை), நாள்தொறும்—, நாடி - ஆராய்ந்து; முறை செய்யா - (அதற்கு ஒக்க) முறைமையைச் செய்யாத, மன்னவன் - அரசன், நாள்தொறும்—, நாடு கெடும் - நாடிழக்கும்; (எ - று.)

அரசனுக்கு நாடு உறுப்புஆகலின், அதன்வினை அவன்மேல் நின்றது. இழத்தல் - பயனெய்தாமை. மன்னவனுடு நாடொறுங்கெடு மென்று உரைப் பாரு முளர்.

(கு - ரை.) நாட்டு-நாட்டில். அதற்கு ஒக்க-அவ்வாராய்ச்சிக்கு ஏற்றபடி. உறுப்பு - அங்கம். "படை குடி கூழமைச்சுநட்பரண்" என்ற ராஜாங்கங்கள் ஆறனுள் நாடும் ஒன்றுதல் காண்க. மன்னவன் நாடு கெடும் - வினைவினை முதல்மேல் நின்றது; இது, தீவினைவழமைத்தி. [நன் - பொது - உசு.] அரசன்நாடுகெடப் பெறுவான்: நாட்டைக் கொண்டிருத்தலாலாகிய பயனை இழக்கப் பெறுவா னென்றபடி. தொறு - தொழிற்பயில்வுபொருளில் வந்த இடைச்சொல். நாடி முறைசெய்யாத மன்னவனுடைய நாடு நாளுக்குநாள் ஈனஸ்திதியை யடையுமென்பது. இரண்டாவது உரையின் கருத்து; இது, வழாநிலை. முதலுரைக்குக் கெடுதல் மன்னவன் தொழிலும், இரண்டாமுரைக்கு நாட்டின் தொழிலுமாம். இரண்டாமுரைக்கு நாடோறும் சிறுதுசிறிதாக நாட்டை இழக்கப்பெறுவானென்று கருத்துக் கூறுவாருமுளர். "நாடோறு மன்னவனுட்டில் தவநெறி, நாடோறு நாடி யவநெறிநாடானேல், நாடோறு நாடு கெடு மூட நண்ணுமால், நாடோறுஞ் செல்வநரபதிகுன்றுமே" என்ற திருமந்திரச்செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. (கூ)

ருருச. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

(இ - ள்.) சூழாது - (மேல்வினைவது) எண்ணாது, கோல் கோடி செய்யும் - முறை தப்பச் செய்யும், அரசு-அரசன்,—(அச்செயலான்); கூழ்உம் - (முன் ஈட்டிய) பொருளையும், குடிஉம் - (பின்ஈட்டற்கு ஏதுவாகிய) குடிகளையும், ஒருங்கு இழக்கும் - சேர இழக்கும்; (எ - று.)

'கோட' என்பது திரிந்துநின்றது. முன் ஈட்டிய பொருள் இழத்தற்கு ஏது வருகின்ற பாட்டாற் கூறுப.

(கு - ரை.) மேல் வினைவது எண்ணாது-பின்புஉளதாகும்பயனை ஆலோசியாமல். ஈட்டிய - சேர்த்துவைத்த. கோலின் வினையாகிய கோடியென்னும் செய்தெனைச்சம், பிறகருத்தாவின் வினையையும் கொண்டுமுடிதற்கு ஏற்ற கோடவென்னுஞ் செயவெனைச்சமாகத் திரித்துக்கொள்ளப்பட்டது. [நன் - வினை - உடு, உஎ.] கூறுப - கூறுவர். "படைகுடிகூழமைச்சு" என்ற

குறளின் உரையில் 'கூழ் என்றது - அதற்குஏதுவாயபொருளை'என்று உரைத்துள்ளதனால், கூழ் என்னும் உணவின்பெயர் - காரியவாகுபெயராய், உணவிற்குக்காரணமான செல்வத்தை உணர்த்து மென்க. ஒருங்கு-இடைச் சொல். (சு)

நூநூ. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(இ - ள்.) அல்லல் பட்டு - (அரசன் முறைசெய்யாமையாற் குடிகள்) துன்பமுற்று, ஆற்றாது - (அதனைப்) பொறுக்கமாட்டாது, அழுத—, கண் ணீர் அன்றே—, செல்வத்தை தேய்க்கும் படை - அவன்செல்வத்தைக் குறைக்குங் கருவி; (எ - று.)

அழுத கண்ணீர் - அழுதலான்வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை யென்னுமையின், இஃது - ஏகதேசவுருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில், அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிது இன்மையின், செல்வம் கடிந்தின் றேயு மென்பது கருத்து.

(கு - ரை.) அதனை - அத்துன்பத்தை. அன்றே என்பது - விளிவகையால் தேற்றமுணர்த்திற்று. கருவி - ஆயுதம்; இங்கே, வாள். அழுதகண் ணீர் - பெயரெச்சம் காரணப்பொருளது; 'வந்த இளைப்பு, சங்குசுட்ட சுண் ணமபு' என்பவற்றிற்போல. அதற்கு ஏதுவாகிய - அல்லற்படுத்தியபாவம் வெளிப்படுதற்குக் காரணமான. அல்லற்படுத்தியபாவம் செல்வத்தைத்தேய்க் கும் படை யென்பார், 'அல்லற்பட்டாற்றாதழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படை' என உபசாரவழக்காற் கூறினர்: "அழக்கொண்டவெல்லா மழப்போம்" என்பர் பின்னும். "இருவர்தஞ்சொல்லையு மெழுதரங்கேட்டே இருவரும்பொருந்தவுரையாஞயின்,மனுமுறைநெறியின் வழக்கிழந்தவர்தாம், மனமுறமறுகி நின்றழுதகண்ணீர், முறையுறத்தேவர் மூவர் காப்பினும், வழி வழியீர்வதோர் வாளாகும்மே" என்றதூம் காண்க. (டு)

நூநூசு. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

(இ - ள்.) மன்னர்க்கு - அரசர்க்கு, (ஒளி) மன்னுதல் - புகழ்கள் தாம் நிலைபெறுதல், செங்கோன்மை (ஆம்)-செங்கோன்மையான் ஆம்; அஃது இன்றுஏல் - அச்செங்கோன்மை இல்லையாயின், மன்னர்க்கு ஒளி - அவர்க்கு அப்புகழ்கள்தாம், மன்னு ஆம் - உளவாகா; (எ - று.)

விகாரத்தால்தொக்க மூன்றுவதுவிரித்து, ஆக்கம் வருவித்து உரைக்கப் பட்டது. மன்னுதற்குஏது புகழாதல், "இந்நிலத்து,மன்னுதல்வேண்டினிசை நடுக" என்பதனானும் அறிக. மன்னுமை - ஒருகாலும் நிலையாமை. பழிக்கப் பட்டால் ஒளி மன்னுவாம்; ஆகவே, தாமும் மன்னுரென்பதாயிற்று. வென்றி கொடைமுதலிய ஏதுக்களால் புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மைஇல்வழி இலவாமென்பதாம்.

இவைநான்குபாட்டானும், கொடுங்கோலனாயினான் எய்துங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) மூன்றாமுருபு தொகுத்தல் விகாரப்பட்டதும், ஆக்கம் வருவித்துரைத்ததும் 'செங்கோன்மை' என்பதனிறுதியில். விரித்துச் சொல்ல வேண்டிய இடத்து உருபு இல்லாமையால் அம்மூன்றனுருபு தொகுத்தல் விகாரமடைந்ததாக் கூறினார். மன்னுதல்-நிலைபெறுதல். "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக" என்பது நான்மணிக்கடிகையில் "இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக - தன்னொடு, செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது, வேண்டின் வெகுளி விடல்" என்னும் பாட்டி லுள்ளது; இம்மேற்கோளுக்கு - இந்நிலவுலகத்தில் ஒருவன் என்றும் அழியாமல் நிலைத்திருத்தலை விரும்புவானானால் கீர்த்தியை நிலைநிறுத்தக்கடவன் என்பது பொருள். "ஒன்றாவுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்" என்ற குறளாலும், புகழின் அழிவின்மை விளங்கும். ஒருகாலும் - ஒருபோதும். ஒளி மன்னா - புகழ் உண்டாகி நிலைபெறா. மன்னார்-புகழுடம்பால் நிலைபெறார். முதலியஎன்றதனால், கல்வி ஆண்மைமுதலியன கொள்க.பகுதிப்படுதலின்-பல பகுப்பு உடைத்தாதலால். மன்னா என்பது பலவின்பாலாதலால், பன்மையாற் கூறினாரென்றார். (௬)

௫௫௭. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

(இ - ள்.) துளி இன்மை - மழையில்லாமை, ஞாலத்திற்கு - வையத்து வாழும் உயிர்கட்கு, எற்று - எவ்வகைத்துன்பம்பயக்கும்? அற்று-அவ்வகைத் துன்பம்பயக்கும்: வேந்தன் அளி இன்மை - அரசன் தண்ணளியில்லாமை, வாழும் உயிர்க்கு - (அவன்நாட்டு) வாழுங் குடிகட்கு; (எ - று.)

சிறப்புப்பற்றி, 'துளி' என்பது - மழைமேல்நின்றது; 'உயிர்' என்பது-குடிகள்மேல் நின்றது. மேல் "வானோக்கிவாழும்" என்றதனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு.

(கு - ரை.) வையத்து - பூலோகத்தில். பயக்கும் - தரும். தண் அளி - குளிர்ந்த கருணை. மழைக்குச் சிறப்பு - இன்றியமையாமையும், குடிகளுக்குச் சிறப்பு - அஃறிணையுயிர்களினும் மேம்பாடுடைத்தாய் அரசனது ஆறங்கங்களுள் ஒன்றாதலு மெனக் காண்க. மேல்-முன்பு. "வானோக்கிவாழும்"—௫௪௨-ஆவது குறள். ஞாலம் - பூமியில்வாழும் உயிர்கட்கு இடவாகுபெயர். துளியின்மை அளியின்மை என்று இருத்தலால், எதிர்மறைமுகத்தாற் கூறியதென்றார். எற்று, அற்று - எகரவினாவடியாகவும், அகரச்சுட்டடியாகவும் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்றுக்கள். ஏ - தேற்றம். (எ)

௫௫௮. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(இ - ள்.) முறை செய்யா - முறைசெய்யாத, மன்னவன் - அரசனது, கோல் கீழ்-கொடுங்கோலின்கீழ், படின்-வாழின்,—(யாவர்க்கும்),—இன்மையின் - (பொருளினது) இன்மையினும், உடைமை—, இன்னாது—; (எ-று.)

தனக்குஉரியபொருளோடுஅமையாது மேலும் வெஃகுவோனதுநாட்டுக் கைந்நோவயாப்புண்டல் முதலிய வருவது பொருளுடையார்க்கே யாகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், அவனாட்டுவாழ்வார்க்கு வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) பொருளினது இன்மை-வறுமை. உடைமை-செல்வமுடைமை. அமையாது - திருப்திப்படாமல். வெஃகுவோன் - ஆசைப்படுங்கொடுங் கோலரசன். கைந்நோவ யாப்புண்டல் முதலிய - கைகள்நோகும்படி கட்டப் படுதல் முதலிய கொடுமைகள். 'முதலிய'என்றதனால், அடியுண்ணல் சிறைக் குட்படுதல்முதலிய கொள்க. (அ)

௫௫௯. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(இ - ள்.) மன்னவன்—, முறை கோடி செய்யின் - (தான் செய்யும் பொருளை) முறைதப்பச் செய்யுமாயின், (அவன்நாட்டு), உறை கோடி-பருவ மழை இன்றாம் வகை, வானம் பெயல் ஒல்லாது - மேகம் பொழிதலைச் செய் யாது; (எ - று.)

இரண்டிடத்தும் 'கோட' என்பன திரிந்துநின்றன. உறைகோடுதலா வது - பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கு ஏது, வருகின்ற பாட்டாற் கூறுப.

(கு - ரை.) பொருள் - இங்கே, தொழில்: இனி, செய்யும் பொருள் என்றது-ஈட்டுகிற செல்வத்தை எனக் கொள்வாருமுளர். "கோணிலைதிரிந் திடிற் கோணிலைதிரியும், கோணிலைதிரிந்திடின் மாரிவறங்கூரும், மாரிவறங் கூரின் மன்னுயிரில்லை," "கோணிலைதிரிந்து நாழிகுறைபடப்பகல் கண் மிஞ்சி, நீணிலமாரியின்றி விளைவஃகிப்பசியுநீடிப், பூண்முலைமகளிர் பொற் பிற் கற்பிழந்தறங்கண்மாறி, யாணையிவ்வுலகுகேடா மரசுகோல்கோடினென் றான்" என்பன, இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. பருவமழை இன்றாம்வகை- காலந்தவறாத மழை யில்லையாம்படி. இரண்டிடத்தும் - முறைகோடி, உறை கோடி என்பவற்றில். அதற்கு - பெய்யாமைக்கு. உறை - மழைத்துளி. (௯)

௫௬௦. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(இ - ள்.) காவலன்-காத்தற்குஉரிய அரசன், காவான் எனின் - (உயிர் களைக்) காவானாயின், (அறனில்லாத அவனாட்டு), ஆ - பசுக்களும், பயன் குன்றும் - பால்குன்றும்; அறு தொழிலோர் - அந்தணரும், நூல் மறப்பர் - நூல்களை மறந்துவிடுவர்; (எ - று.)

ஆபயன் - ஆவாற் கொள்ளும் பயன். அறுதொழிலாவன - ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரம் கற்பம்

என்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லா தென்பதாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், அவளுட்டின்கண் நிகழுங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) காவலன் என்பது - காவல் அன் எனப் பிரிந்து, காத்தல் தொழிற்குரியவ னெனவும்; கா வலன் எனப்பிரிந்து, காத்தலில் வல்லவ னெனவும் பொருள்படும். அறுதொழிலோர் - ஆறுதொழிலையுடையவர். நூல் - வேதசாஸ்திரங்கள். க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் பிறசாதியார்க்கும் வெவ்வேறுவகைப்பட்ட அறுதொழில்கள் உளவாயினும் சிறப்புப் பற்றி 'அறுதொழிலோர்' என்றது, அந்தணர்மேல் நிற்கும்; "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்ற தொல்காப்பியத்தையும், "ஓதல் வேட்டல வைபிறர்ச்செய்தல், ஈதலேற்றலென் றாறுபுரிந்தொழுகு, மறம்புரி யந்தணர் வழிமொழி யொழுக்கம்" என்ற உதாரணச்செய்யுளையும் உணர்க. ஆவால் - பசுவினுல். வேட்டல் - யாகஞ்செய்தல். வேட்பித்தல் - யாகஞ் செய்வித்தல். ஏற்றல் - தானம்வாங்குதல். அவி - ஹவிஸ்; யாகங்களில் தேவர்க்குஇடும் உணவு. கற்பம் - வேதவிதிகளோடப்பிக்கும்முறைமை கூறும் நூல்; இது, வேதத்தின் அங்கங்கள் ஆறனுள் ஒன்று. 'போதாயநீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரேயம் முதலிய கற்பங்கள்' என்றார், தொல்காப்பியவுரையில் நச்சினார்க்கினியர். வேள்வி - யாகம். யாகம் மழைக்குக் காரணமாதலை "கருணையொடுக் தனதுபயகரமுதவும் பொருள்மழையில், அரணிய மந்திரவனல்க ளவை யுதவும் பெருமழையே" என்னுங் கலிங்கத்துப்பரணியாலும் அறிக. "நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்டா, லெல்லார்க்கும் பெய்யு மழை," "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையுந், தவமிலாரில் வழியில்லை தவமும், அரசிலாரில்வழியில்லை," 'ஆபயன்குன்றும்' என்னும் மூடிபை, கீழ் 'மன்னவன்நாடுகெடும்' என்றதுபோலக் கொள்க. "அறுவகைப்பட்ட" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில், நச்சினார்க்கினியர், இக்குறளை எடுத்து, 'இது காவல்கூறிற்று' எனக் கூறியுள்ளார். (கo)

நூல - ஆம் அதிகாரம்.—வெருவந்தசெய்யாமை.

அஃதாவது - குடிகள் அஞ்சுவதும், பகுதி அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆய தொழில்களைச் செய்யாமை. அவைசெய்தல் கொடுங்கோன்மைப் பாற் படுதலின், இஃது, அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பகுதி-ப்ரக்ருதி: மந்திரி முதலிய அங்கங்கள். கொடுங்கோன்மைப்பாற் படுதலின் - கொடுங்கோலின் தன்மையிற் சேர்தலால். வெருவந்த - வெருவு என்னும் பகுதியும் வா என்னுந் துணைவினையுஞ் சேர்ந்து விகாரப்பட்டு ஒருசொல்தன்மையுற்ற வெருவா என்பத னடியாப் பிறந்த இறந்தகாலப்பலவின்பால்வினையாலணையும்பெயர்; அஞ்சுவன என்றுபொருள். வெருவரல் - அஞ்சுதல்.

நேசுக. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(இ - ள்.) (ஒருவன் தன்னின் மெலியார்மேற் சென்றவழி அதனை), தக்காங்கு நாடி - நடுவாக நின்று ஆராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் - (பின்னும்) அதுசெய்யாமற் பொருட்டு, ஒத்தாங்கு ஒறுப்பது - (அவனை அக் குற்றத்திற்கு) ஒப்ப ஒறுப்பானே, வேந்து - அரசனுவான்; (எ - று.)

தக்காங்கு, ஒத்தாங்கு என்பன - ஒருசொல். தகுதியென்பது - நடுவு நிலைமையாதல் "தகுதி யெனவொன்று நன்றே" என்பதனாலும் அறிக. இதனானே, தக்காங்கு நாடாமையும், பிறிதோர் காரணம்பற்றி மிக வொறுத் தலும் குடிகள் அஞ்சும் வினை யாதல் பெற்றாம்.

(கு - ரை.) தன்னின் மெலியார்மேல் சென்றவழி-தன்னைக்காட்டிலும் எளியவர்மேற் சென்று வருத்தியபொழுது. அதனை-அக்குற்றத்தை. நடுவாக நின்று - பக்ஷபாதமில்லாமல் நின்று. பின்னும் அது செய்யாமற்பொருட்டு - மறுபடியும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதிருத்தற்காக. ஒப்ப - ஏற்ற படி. ஒறுப்பான் - தண்டிப்பவன். தக்காங்கு, ஒத்தாங்கு என்பவற்றைத் தக்கஆங்கு, ஒத்தஆங்கு என்பவற்றின் விகார மெனக் கொண்டு, தக்கபடி, ஒத்தபடி யென்றலும் ஒன்று. "தகுதியென வொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்" என்பது, கீழ் 'நடுவுநிலைமை' என்னும் அதி காரத்தின் முதற்குறள். பகைவர் நண்பர் அயலா ரென்னும் மூவகையோ ரிடத்தும் தன்மூறைமையை விடாது ஒழுகப்பெற்றால், நடுவுநிலைமை யென்று சொல்லப்படும் ஓரறமுமே நல்லது என்று பொருள். தலைச்செல் லாதல் - ஒருசொல்; "செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார்" என்ற குறளில் 'தலைப்பிரிவென்பது - ஒருசொல்' என்று கூறிப்போந்தார் பரிமேலழகர்: இவற்றில், தலையென்பதற்கு வேறுபொரு ளில்லாமையால், அதனைத் தமி ழாசிரியர்க்க மென்பர். தலைச்செல்லா வண்ணத்தால் - தொடங்காதவிதமாக என்று பொருள். (க)

நேசுஉ. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

(இ - ள்.) (அவ்வொறுத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால்), கடிது ஓச்சி - அளவிறப்பச் செய்வார்போல் தொடங்கி, (செய்யுங்கால்), மெல்ல எறிக - அளவிறவாமற் செய்க: ஆக்கம்—, நெடிது நீங்காமை - (தங்கண்) நெடுங்காலம் நிற்றலை, வேண்டுபவர் - வேண்டுவார்; (எ - று.)

கடிதோச்சல்-குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற்பொருட்டும், மெல்ல வெறிதல் - யாவரும் வெருவாமைப்பொருட்டும் ஆம். தொடங்கின அளவிற் குறைதல்பற்றி, மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல், எறிதல் என்பன இரண்டும் - உவமைபற்றி வந்தன.

இவை யிரண்டுபாட்டானும், குடிகள்வெருவந்தசெய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

(கு - ரை.) ஒத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால் - குற்றத்திற்கு ஏற்கத் தண்டிக்கத் தொடங்கும்பொழுது. அளவிறப்பச் செய்வார்போல்-அளவு கடந்து தண்டனைசெய்பவர்போல் உக்கிரமாக. இறவாமல் - கடவாமல். ஆக்கம் - செல்வம் முதலிய நன்மைகள். தங்கண் - தம்மிடத்து. அதனை - அத்தண்டனையை. வெருவாமை - அஞ்சாமை. 'தொடங்கினவளவிற் குறைதல்பற்றி, மென்மை கூறப்பட்டது' என்ற வாக்கியத்திற்குக் கருத்து - மெல்ல என்றது, தொடங்கினவளவினும் குறைவாகவென்றபடியேயன்றிக் குற்றத்தினளவினுங் குறைவாக என்றபடியன்று என்பதாம். அரசாட்சி கோல் என்றும் தண்ட மென்றும் உவமைப்பெயரால் கூறப்படுதல்பற்றி, அதற்கேற்ப, 'ஓச்சி யெறிக' என்றார். (உ)

ருசுரு. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னெருவந்த மொல்லைக் கெடும்.

(இ - ள்.) வெருவந்த செய்து ஒழுகும் - (குடிகள்) வெருவிய செயல்களைச் செய்து நடக்கும், வெம் கோலன் ஆயின் - வெங்கோலனுமாயின், (அரசன்), ஒருவந்தம் - ஒருதலையாக, ஒல்லை - கடிதில், கெடும்—; (எ - று.)

வெங்கோலன் என்பது-ஈண்டு, வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன-ஒருபொருட்கிளவி. அச்செயல்களும், கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

(கு - ரை.) வெருவிய - அஞ்சும்படியான. வெங்கோலன் - கொடுங்கோன்மையுடையவன். ஒருதலையாக - நிச்சயமாக; தவறுமல். கடிதில் - விரைவில். முன்னே 'வெருவந்தசெய்தொழுகும்' எனக் கொடுங்கோன்மை குறிக்கும் அடைமொழி வந்ததனால், 'வெங்கோலன்' என்பது, அரசனென்ற மாத்திரமாய் நின்றது என்க: மேல் "அடியளந்தான், ஞாலமெல்லா மொருங்கு" என்றவிடத்திலும், 'அடியளந்தான் என்றது - வாளாபெயராய் நின்றது' என வுரைப்பர். 'பணிபணம், கரிகரலீலை, வம்சகரீரம், கரிகலபம்' என்பன பூர்வபதமும் உத்தரபதமும் சமானார்த்தகமென்பார்க்கு "வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்," "அடியளந்தான், ஞாலமெல்லாம்", "கோடாத செங்கோல்" என்பனபோலக் கேவலபதமாத்திரையாய் நின்றனவென்க' என்பது, பிரயோகவிவேகவுரை. 'வாள்போலும் வேற்கண், கோடாத செங்கோல், வெருவந்தசெய்தொழுகும் வெங்கோலன், அடியளந்தான் தாஅயதெல்லாம் இவற்றுள், கண், கோல், கோலன், அடிஎனஒருசொல்லாகவே கொள்வர்' என்னும் இலக்கணக்கொத்து உரையையுங் காண்க. ஈண்டு-இங்கு. வாளா - சும்மா; இன்றியமையாததல்லாமல். ஒருபொருட்கிளவி - ஒருபொருளுள்ள பலசொற்கள். ஒருவந்தம் என்பது - ஒரு அந்தம்எனப் பிரிந்து, ஒருமுடி புடைய தெனப் பொருள்படும். அச்செயல்கள் - குடிகள் அஞ்சுஞ்செயல்கள். கேடுகள் - வெருவிய செயல்களைச் செய்தவனுக்கு அதனால்விளையுந் தீங்குகள். முன்னர் - அடுத்த நான்குகுறள்களில். (ரு)

நெசஉ. இறைகடிய னென்றுரைக்கு மின்னுச்சொல் வேந்த னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(இ - ள்.) இறை கடியன் என்று உரைக்கும் - (குடிகளால்) நம் இறைவன் கடிய னென்று சொல்லப்படும், இன்னு சொல் - இன்னுத சொல்லையுடைய, வேந்தன்—, உறை கடுகி - ஆயுளும் குறைந்து, ஒல்லை கெடும்-(செல்வமும்) கடிதின் இழக்கும்; (எ - று.)

நெஞ்சு நொந்து சொல்லுதலான் இன்னுமை பயப்பதாய சொல்லை 'இன்னுச்சொல்' என்றார். உறையென்பது - முதனிலைத் தொழிற்பெயர்; அஃது - ஈண்டு, ஆகுபெயராய், உறைதலைச் செய்யும் நாள்மேல் நின்றது; அது குறைதலாவது - அச்சொல் இல்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல்.

(கு - ரை.) இறைவன் - அரசன். கடியன் - கொடியவன். இன்னுத - இனிமையையுடையதல்லாத. உறை - உறைதல்; வாழ்தல்; இங்கே, வாழ்நாளுக்கு ஆகுபெயர். கடுகுதல் - சுருங்குதல். இன்னுமை பயப்பது - துன்பந்தருவது. முதனிலைத்தொழிற்பெயர் - பகுதிமாத்திரமே நின்று தொழிற் பெயர்ப்பொருளைத் தருவது; இதில் தொழிற்பெயர்விகுதி புணர்ந்துகெட்ட தென்பர். அது குறைதல் - ஆயுள்நாள் குறைதல். அச்சொல் இல்லாதார்க்கு உள்ளதின் சுருங்குதல் - குடிகள் வருந்திச்சொல்லும் இன்னுச் சொல்லை உடையரல்லாத அரசர்க்கு எவ்வளவு ஆயுள் உண்டோ அவ்வளவிற் குறைவடைதல். (சு)

நெசஎ. அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம் பேஎய்கண் டன்ன துடைத்து.

(இ - ள்.) அருஞ் செவ்வி - (தன்னைக் காணவேண்டுவார்க்குக்) காலம் அரியனுய், இன்னு முகத்தான் - (கண்டால்) இன்னுத முகத்தினை யுடையானது, பெருஞ்செல்வம் - பெரிய செல்வம், பேஎய் கண்டு அன்னது உடைத்து - பேயாற் காணப்பட்டாற் போல்வ தொரு குற்றமுடைத்து; (எ - று.)

எனவே, இவையிரண்டும் வெருவந்தசெய்தலாயின. இவை செய்வானைச் சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படா தென்பதுபற்றி, 'பேஎய் கண் டன்ன துடைத்து' என்றார். காணுதல்-தன்வயமாக்குதல்.

(கு - ரை.) காலம் அரியன் - பார்க்கச் சமயங்கிடைத்தற்கு அரியவன். இன்னுத - வெறுப்புக்காட்டுகிற. இவை இரண்டும் - காணவருவார்க்கு அவகாசங்கொடாமையும், முகமலர்ச்சியின்மையும். இவை செய்வானை - அருஞ் செவ்வியும் இன்னுமுகமு முடையவனை. தன்வயமாக்குதல் - தன்வசப் படுத்துதல். பேயினுற் கைக்கொள்ளப்பட்டபொருள், அதற்கும் பிறர்க்கும் பயன்படாதாம். 'பேஎய்கண்டு' என்றதில், அளபெடை - செய்யுளோசை நிறைக்க வந்தது; அலகிட்டுக் காண்க. (கூ)

ருசுசு. கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(இ - ள்.) (அரசன்), கடுஞ் சொல்லன் - கடிய சொல்லையும் உடையனுய், கண் இலன் ஆயின்-கண்ணோட்டமும் இலனுமாயின், நெடுஞ் செல்வம்-(அவனது) பெரிய செல்வம்,—நீடு இன்றி - நீடுதலின்றி, ஆங்கே - அப்பொழுதே, கெடும்—; (எ - று.)

"வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூது பொரு, ளீட்டங் கட் காம மோ டேழு" எனப்பட்ட விதனங்களுள் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்விருவந்தசெய்தலுள் அடக்கினர். கண் - ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடுஞ் சிறுமைத்து அன்றுயினும் என்பார், 'நெடுஞ்செல்வம்' என்றார். நீடுதல் - நீட்டித்தல்.

(கு - ரை.) நீடுதல்-நெடுங்காலம் நிலைநிற்றல். வேட்டம்-வேட்டையாடுதல். மிகுதண்டம் - அளவிறந்த தண்டனை. சூது - சூதாடுதல். பொருள் ஈட்டம் - திரவியஞ்சம்பாதித்தல். கள்-மதுபானம். விதனம்=வ்யஸநம்: அரசர்க்குத் துன்பந்தருஞ்செய்கை. ஒருவர்மேல் கண்ணோடுதலாலுண்டாகிறதாகுஷிணியத்தை 'கண்' என்றது-காரணவாகுபெயர். கெடும் சிறுமைத்து அன்று-அழியக்கூடிய சிறியஅளவை யுடையதன்று. நீடு-முதனிலைத்தொழிற்பெயர். ஏகாரம் - தேற்றவகையால், விரைவுகுறிக்கும். (சு)

ருசுஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(இ - ள்.) கடு மொழியும் - கடிய சொல்லும், கையிகந்த தண்டமும் - (குற்றத்தின்)மிக்க தண்டமும்,—வேந்தன் - அரசனது, அடு முரண் - பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினை, தேய்க்கும்—, அரம்-அரமாம்.

கடுமொழியால் தானையும், கையிகந்ததண்டத்தால் தேசமும் செட்டு முரண் சுருங்கி வருதலின், அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினும் தேயும் என்றற்கு அடுமுரணை இரும்பாக்கினர்; ஏகதேசவுருவகம். அரம் என்பதனைத் தனித்தனி கூட்டுக.

இவையைந்துபாட்டானும், செவ்வியின்மை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்ததண்டம் என்றிவைகள் குடிகளஞ்சும் வினை யென்பதூஉம், இவைசெய்தான் ஆயுளும் அடு முரணும் செல்வமும் இழக்கும் என்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) அரம்-இரும்பை அராவுதற்குரிய ஒருவகைக்கருவி. தானை-சேனை. கையிகந்த-வரம்புகடந்த. முரண்-வலிமை. கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும் அரமாக உருவகஞ்செய்ததற் கேற்ப அடுமுரணை 'இரும்பு' என்னுமையால், ஏகதேசருபகாலங்காரம். 'இக்குரளில் (இவ்வாறு) அரமென்னும் ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டிமுடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போல 'பிரத்தியேகபக்தாந்வயம்' என்பர் (வட

நூலார்). இதுவும் தூராந்வயத்துள் அடக்கிக்கொள்க' என்பது, பிரயோக விவேகவுரை. 'இதில் அரமென்பது ஒருசொல் நின்றே தனித்தனி உதவுதல் காண்க. முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகம் முதலாயினவும் அது' என்ற இலக்கணக்கொத்து உரையையும் காண்க. இழுக்கும் - இழுப்பான். அடிமுரண் - வினைத்தொகை. (எ)

குசுஉ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

(இ - ள்.) இனத்து ஆற்றி - (காரியத்தைப்பற்றி வந்த எண்ணத்தை) அமைச்சர்மேல் வைத்து, எண்ணுத - (அவரோடு தானும்) எண்ணிச் செய்யாத, வேந்தன்-அரசன், (அப்பிழைப்பால் தன்காரியந் தப்பியவழி), சினத்து ஆற்றி - (தன்னைச்) சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி, சீறின் - (அவரை) வெகுளுமாயின், திரு - (அவன்) செல்வம், சிறுகும் - நாடோறுஞ் சுருங்கும்; (எ - று.)

அரசர்பாரம்பொறுத்துய்த்தல்ஒப்புமையான் அமைச்சரை 'இனம்' என்றும், தான் பின் பிழைப்பாத லறிந்து அமையாது அதனை அவர்மேல் ஏற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப்பாரம் இனிதுய்க்குமாறும் இலனும் என்பது நோக்கி 'திருச்சிறுகும்' என்றுங் கூறினர்.

இதனுள், பகுதியஞ்சும்வினையும், அதுசெய்தான் எய்துங் குற்றமும் கூறப்பட்டன.

(கு - சை.) எண்ணம் - ஆலோசனை. எண்ணி - ஆலோசித்து. அப்பிழைப்பு - அந்தத்தவறு. அவரை வெகுளுமாயின் - மந்திரிகளைக் கோபிப்பானுளனல். இனம் - ஸஜாதி: ஒரேசாதியினர். அரசர்பாரம் பொறுத்து உய்த்த லொப்புமை - அரசரது இராச்சியபாரத்தைத் தாமும் உடனிருந்து வகித்துச் செலுத்துவதில் அரசர்க்கும் அமைச்சர்க்கும் ஒருவரோடொருவர்க்குள்ள சமானத்தன்மை. பின் பிழைப்பாதல் அறிந்து-பிழைப்பு ஆதல் பின்அறிந்து என்க; தவறிப்போனமையைப் பின்பு அறிந்து. அமையாது - அடக்கியிராமல். அதனை - அக்குற்றத்தை. அவர்மேல் - அமைச்சர்மேல். வெரீஇ - அஞ்சி. அப்பிழைப்புத் தீரும் ஆறு - அப்படிப்பட்டதவறு நீங்கும்விதம். அப்பாரம் இனிது உய்க்கும் ஆறு - அவ்விராச்சியபாரத்தை இனிமையாகச் செலுத்தும் விதம். பகுதி—அமைச்சர்முதலாகிய அங்கம். (அ)

குசுக. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

(இ - ள்.) சிறை செய்யா - (செரு வருதற்குமுன்னே தனக்குப் புகலாவதோர்) அரண் செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன்,—செரு வந்த போழ்தின் - அது வந்தகாலத்து, (ஏமம் இன்மையான்), வெருவந்து - வெருவி, வெய்து கெடும் - கடிதிற் கெடும்; (எ - று.)

பகையைவெருவி, சேர்ந்தார் நீங்குதலின், தமியனுய்த் தானும் வெருவி அப்பகைவயத்தனும் என்பதாம்.

இதனுன், தான்அஞ்சும் வினையும், அதுசெய்தான் எய்தும் பயனும் கூறப்பட்டன.

(சு - ரை.) செரு - போர். புகலாவது ஓர் அரண் - பாதுகாப்பாகச் சென்றசேரத்தக்க தொரு கோட்டை. அது - அப்போர். ஏமம் இன்மையான் - பாதுகாப்பில்லாமையால்; ஏமம் - ரக்ஷகம். வெருவி - அஞ்சி. பகையைவெருவிச் சேர்ந்தார்நீங்குதலின் - தன்னைச்சேர்ந்தவர்கள் பகைவர்க்கு அஞ்சித் தன்னைவிட்டு நீங்குதலால். தமியன் ஆய் - தனிப்பட்டவனுய். அப்பகை வயத்தனும் - அத்தப்பகைவர்க்கு வசப்பட்டவனுவன். தான் அஞ்சும் வினையென்றது - தனக்குப் புகலாவதோர் அரண்செய்துகொள்ளாது செய்யும் போராகிய வினை. அது - அஞ்சத்தக்க வினை. போழ்தின் கெடும் என இயையும். சிறை - இங்கே, காவலிட மென்ற மாத்திரமாய் நின்றது. (சு)

ருஎ0. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

(இ - ள்.) கடுங் கோல் - கடுங்கோலனுய அரசன், கல்லார் - (நீதிநூல் முதலிய) கல்லாதாரை, பிணிக்கும் - (தனக்குப் பகுதியாகக்) கூட்டாநிற்கும்; அது அல்லது - அக்கூட்டம்அல்லது, நிலக்கு பொறை - நிலத்திற்கு மிகையாய பாரம், இல்லை - பிறிதில்லை; (எ - று.)

கடுங்கோல் என்பது - ஈண்டு மிக்கதண்டத்தின்மேற்றன்றி அதனைச் செய்வான்மேற் ருயிற்று. அவன் அதுசெய்தற்கு இயைவாரையல்லது கூட்டாமையின் 'கல்லார்ப்பிணிக்கும்'என்றும், ஏனையவற்றையெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் 'நிலத்திற்குப்பொறை அதுவல்லதில்லை'என்றுங் கூறினர். நிலக்கு என்பது - செய்யுள்விகாரம்.

இதனுன், வெருவந்தசெய்தலின் குற்றம் கூறப்பட்டது.

(சு - ரை.) ஆய - ஆகிய. முதலிய - முதலியவற்றை. கல்லாதார்-படியாதவர். பகுதி - அங்கம். கூட்டாநிற்கும் - சேர்த்துக்கொள்வான். மிகை - மிகுதி. மிக்கதண்டத்தின்மேற்று அன்றி - மிகுந்ததண்டனையென்னும் பொருளைக் குறிப்பதல்லாமல். அவன் - கொடுங்கோலரசன். அதுசெய்தற்கு இயைவாரையல்லது கூட்டாமையின்-தான் அக்கொடுங்கோன்மை செலுத்துதற்குச் சம்மதிப்பவர்களையல்லது நல்லோர்பிறரைத் தனக்கு மந்திரிமுதலிய உறுதிச்சுற்றமாகச் சேர்த்துக்கொள்ளாதலால். எல்லாப் பாரங்களையும்பொறுத்தல் பூமிக்குஇயல்பாதலை 'ஸர்வம்ஸஹா'என்ற அதன் வடமொழிப்பெயராலும் அறிக. நிலத்துக்கு என்பதன் அத்துச்சாரியை தொக்கு நிலக்கு என நின்றது, தொகுத்தல்விகாரம். கல்லார்ப்பிணிக்கும் - உயர்திணையில் இரண்டனுருபு தொக, அவ்வுயர்திணைப்பெயரின்முன் வலியிரட்டிற்று. கல்லார்ப்பிணிக்கும் கடுங்கோல் - கடுங்கோலனது இயல்பைக் கடுங்

கோலின்மேல் ஏற்றிக்கூறியது, உபசாரவழக்கு. பொறை - பொறுக்கப்படுவ தெனச் சுமைக்குக் காரணப்பெயர். மலைமுதலிய பாரங்களையெல்லாம் பொரு ளாகக் கருதாது பொறுத்தலையே இயல்பாகவுடைய பூமிக்குப் பாவிகள் பொறுத்தற்கரிய பாரமாவர் என்பது நூல் துணிபு; கீழ் 'புறங்கூறுமை' என்ற அதிகாரத்தில் "அறனேக்கியாற்றுங்கொல் வையம் புறனேக்கிப், புன்சொலுரைப்பான் பொறை" என்றதுங் காண்க. (கo)

நிஅ - ஆம் அதிகாரம்.—கண்ணேட்டம்.

அஃதாவது - தன்னெஞ்சுபயின்றுரைக் கண்டால் அவர்கூறியன மறுக்க மாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வு தாகலின், அப்பெ யர்த்தாயிற்று. மேல் வெருவந்தசெய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப் பற்றி விரித்துக்கூறுகின்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பயின்றூர் - முன்புபழகியவர். கண் சென்றவழி-கண்பார்வை சென்றஇடத்தில். நிகழ்வது - உண்டாவது. கீழ் 'வெருவந்தசெய்யாமை' என்ற அதிகாரத்தில் "கடுஞ்சொல்லன் கண்ணில னாயின்" என்ற ஆறாவது குறளால், கண்ணேட்டமின்மை - வெருவந்தசெய்தல் எனப்பட்டமை காண்க. சிறப்பு - அரசர்க்குக் கண்ணேட்டம் இன்றியமையாமை. ஓட்டம் - ஓடுதல்; தொழிற்பெயர்.

நிஎக. கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(இ - ள்.) கண்ணேட்டம் என்னும் - கண்ணேட்டமென்று சொல்லப் படுகின்ற, கழி பெருங் காரிகை - சிறப்புடைய அழகு, உண்மையான் - (அர சர்மாட்டு) உண்டாகலான், இ உலகு - இவ்வுலகம், உண்டு - உண்டாகா நின்றது; (எ - று.)

'கழிபெருங்காரிகை' என்புழி, ஒருபொருட்பன்மொழி - இவ்வுயிரழ கது சிறப்பு உணர நின்றது. இவ்வழகு அதற்கு உறுப்பாகலின், 'உண்மை யான்' என நிலேபேறுங் கூறினர். இன்மை வெருவந்தசெய்த லாகலின், அவர்காட்டுவாழ்வார் புலியையடைந்த புல்வாயினம் போன்று ஏமஞ் சாராமை பற்றி, 'இவ்வுலகுண்டு' என்றார்.

(கு - ரை.) என்புழி - என்றவிடத்தில். ஒருபொருட்பன்மொழி - கழி பெரு என மிகுதியென்னும் ஒருபொருளைத்தரும் பலசொற்கள். "ஒருபொரு ளீருஞ்சொற் பிரிவில வையார்", "ஒருபொருட்பன்மொழி சிறப்பினின் வழா" என்பன - முறையே இவ்விலக்கணத்துக்குத் தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் விதிகளாம். 'இவ்வுயிரழகு' என்றது, கண்ணேட்டத்தை. உயி ரழகு - (அரசனது) உயிரின் அழகு. அதற்கு - அரசருயிர்க்கு. நிலேபேறு - நிலேபெற்றிருத்தல். இன்மை - கண்ணேட்டமின்மை. புல்வாய் இனம் போன்று - மான்கூட்டத்தை யொத்து. ஏமஞ்சாராமை-இன்பமடையாமை.

கழி - மிகுதி குறிப்பதோர் உரிச்சொல். உலகு என்றது, குடிகளை. அரசன் கண்ணோட்டமுடையனு மிருத்தலாலேயே உலகத்துக் குடிகள் வாழ்வுபெறுவ ரென்பது கருத்து. (க)

ருஎ. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

(இ - ள்.) உலகு இயல் - உலகநடை, கண்ணோட்டத்து உள்ளது - கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வது; (ஆகலான்), அஃது இலார் உண்மை - அக்கண்ணோட்டமில்லாதார் உளராதல், நிலக்கு பொறை - இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, (பிறிதொன்றற்கு அன்று); (எ - று.)

உலகநடையாவது - ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தனபொ றுத்தல் என்றிவை முதலாயின. அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் என்பதுபற்றி, 'நிலக்குப்பொறை' என்றார். 'ஆதற்கு' என்பது- சொல்லெச்சம்.

இவையிரண்டுபோட்டானும், கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பா.) உலகநடை - உலகத்தாரது நடத்தை. நிகழ்வது உள்ளது. ஒப்புரவு-உதவி. புறந்தருதல் - பிறரைப் பாதுகாத்தல். பிழைத்தன பொறுத் தல் - பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்தல். பொறையாதற்கு என்னவேண் டிய இடத்தில் பொறை என்றதனால், 'ஆதற்கு' என்றசொல் எஞ்சியதாகும் என்பார், ஆதற்கு-சொல்லெச்சம் என்றார்; சொல்லெச்சம்-சொல் குறைந்து நிற்பது: இதற்கு ''சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொளியற்கை, புல்லிய இனவி யெச்சமாகும்'' என்னுந் தொல்காப்பியச்சூத்திரம் விதி; இது, நன்னூ லில் 'இசையெச்சம்' எனப்படும். (உ)

ருஎக. பண்ணென்னும் பாடற் கிபைபின் மேறற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ - ள்.) பண் என் ஆம் - பண் என்னபயத்ததாம்? பாடற்கு இயைபு இன்றாயவ் - பாடற்றொழிலோடு பொருத்த மின்றாயின்; (அதுபோல), கண் என் ஆம் - கண் என்னபயத்ததாம்? கண்ணோட்டம் இல்லாத கண் - கண் ணோட்டமில்லாதவிடத்து; (எ - று.)

பண், கண் என்பன - சாதிப்பெயர். பண்களாவன - பாலையாழ் முத லிய நூற்றுமூன்று. பாடற்றொழில்களாவன - யாழின்கண் வார்தல் முத லிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாதவழிப் பண்ணுற் பயனில்லாதவாறு போல, கண்ணோட்டத்து இயையாதவழிக் கண்ணுற் பயனில்லை என்பதாம். கண்சென்றவழி நிகழ்தல் பற்றி, அதனை இடமாக்கினார். இறுதிக்கட் கண் என்பதனை ''கண்ணகன் ஞாலம்'' என்புழிப்போலக் கொள்க.

(கு - ரை.) பண் - இசை. பயத்தது - பயனையுடையது. சாதிப்பெயர் - அதன் இனத்தையெல்லாங் குறிக்கும் பெயர்ச்சொல். 'கோடிப்பாலை செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை மேற்செம்பாலை விளரிப்பாலை என்னும் இவ்வேழுபெரும்பாலையினையும் முதலடித்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும்; அவற்றுள், செம்பாலையுட் பிறக்கும் பண்கள் - பாலையாழ் நாகராகம் ஆகரி தோடி கௌடி காந்தாரம் செந்துருத்தி உதயகிரி என இவை; பிறவும் விரிப்பின் உரை பெருகு மாதலின், அவற்றை வந்தவழிக் கண்டுகொள்க. ''நாற்பெரும் பண்ணுஞ் சாதிகான்கும், பாற்படு திறனும் பண்ணெனப்படுமே'' என்றார்' என்றும், 'பண்ணிருபாலையின் உருத்தோண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமா மெனக் கொள்க' என்றும், 'பெருந்தானமெட்டினும் கிரியைகளெட்டாலும் பண்ணிப்படுத்தலாற் பண் என்று பெயராயிற்று' என்றுங் கூறினர், சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லார். யாழின்கண் - வீணையில். வார்தல் முதலிய எட்டு - வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்பன; இவை இசைக்கரண மெனப்படும். பண்ணல்முதலிய எட்டு - பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, வீளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்பன; இவை - கலைத் தொழி லெனப்படும். ''பண்ணல் பரிவட்டணை யாராய்தல் தைவரல், கண்ணியசெலவு வீளையாட்டுக் கையூழ், நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய, எண்வகையா லிசை யெழீஇப், பண்வகையாற் பரிவுதீர்ந்து,'' ''வார்தல் வடித்த லுந்த லுறழ்தல், சீருட னுருட்டல் தெருட்ட லள்ளல், எருடைப் பட்டடையென இசையோர் வகுத்த, எட்டுவகையி னிசைசக்கரணத்துப், பட்டவகை தன் செவியி னோர்த்து'' என்ற சிலப்பதிகாரத்தையும், 'பண்ணல் - பாடநினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெருந்தன்மைமாத்திரை யறிந்து வீக்குதல்; பரிவட்டணை - அவ்வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலுங் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல்; ஆராய்தல் - ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிவது; அநுசுருதி யேற்றுதல் - தைவரல்; ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல் - செலவு; பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல் - வீளையாட்டு; வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகப்பாடுதல் - கையூழ்; குடகச்செலவுந் துள்ளற்செலவும் பாடுதல் - குறும்போக்கு' என்ற சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரையையும், 'வார்த லென்பது - சுட்டுவிரற் செய்தொழில்; வடித்தலென்பது - சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்; உந்தலென்பது - நரம்புகளைத் தெறித்து வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டதும் என்றறிதல்; உறழ்த லென்பது - ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்; உருட்டலென்பது - இடக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும், சுட்டொடு பெருவிரல்கூட்டி யுருட்டலும், இருபெருவிரலும் இயைந்து உடனுருட்டலும் என வரும்; ''தெருட்டலென்பது செப்புங்காலை, யுருட்

டிவருவ தொன்றே மற்ற, வொன்றன் பாட்டுமடை யொன்றநோக்கின், வல்லோராய்ந்த நூலேயாயினும், வல்லோர் பயிற்றுங் கட்டுரையாயினும், பாட்டொழிந் தலகினி லெழுந்த செய்கையும், வேட்டதுகொண்டு வீதியுறாடி" என வரும்; இவை இசைத்தமிழ்ப் பதிணறுபடலத்துட் காணவோத்துட் காண்க,' 'பட்டடையென்பது - கரம்புகளில் இளிக்குப் பெயர்; என்னை? எல்லாப்பண்ணிற்கும் அடிமனையாதலின்' என்ற சிலப்பதிகார அரும்பதவுரையையுங் காண்க. மிடறு - கண்டத்தொனி; சாரீர ஓசை. "எடுத்தல் பாட்டு உச்சமாம் எண்படுத்தல் மந்தம், தடுத்து நலிதல் சமமாம் - தொடுத்தியன்ற, தள்ளாதகம்பிதந் தானடுக்கல் நற்குடிலம், உள்வாங்கிப் பாட லுணர்" என்ற சீவகசிந்தாமணியுரையிற் காட்டிய மேற்கோட்செய்யுள் இங்கு உணரத்தக்கது; எடுத்தல் முதலிய இவ்வைந்தும் கிரியைகளெட்டின்பாற் படுவன; அவ்வெட்டில், இங்குக் குறிக்கப்படாதவை - ஒலி, உருட்டு, தாக்கு என்ற மூன்றுமாம்; 'சொல்வகை, நான்குவகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என; சுண்ணம் - நான்கடியான் வருவது: சுரிதகம் - எட்டடியான் வருவது: வண்ணம் - நாலுன்கடியான் வருவது: வரிதகம்-மூப்பத்திரண்டடியான் வருவது; என்னை?—"சுண்ணநான்கடி சுரிதகமெட்டடி, வண்ணநாலுன்கு வரிதகமெண்ணுன்கென், றெண்ணியவடித்தொகை யெய்தவும் பெறுமே" என்றாகலின். வண்ணம் - ஒருவகையான் மூன்றுவகைப்படும்; பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ண மென; அவற்றுள், பெருவண்ணம், ஆறுய் வரும்; இடைவண்ணம் இருபத்தொன்றாய் வரும்; வனப்புவண்ணம் நாற்பத் தொன்பதாய் வரும்' என்பது, சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லாருரை. இங்குக்காட்டிய இசைத்தமிழ்ப்பகுதிகள் இக்காலத்துப் பயிலவழங்கா. கண் ணேட்டத்து இயையாதவழி - தாக்கணியத்தோடு பொருந்தாதவிடத்து. நிகழ்தல் - கண்ணேட்டமுண்டாதல். அதனை - கண்ணை. இடமாக்கியது கண் ணேட்டத்துக்கு என்க. இறுதிக்கட் 'கண்' - ஈற்றில் 'இல்லாதகண்' என்பதி லுள்ள கண். "கண்ணகல் ஞாலம்" என்பதற்கு - இடமகன்ற நிலவுலகம் என்று பொருள்; இம்மேற்கோள்-திரிகடுகத்துக் கடவுள்வாழ்த்தின் தொடக்கம். இல்லாத கண் என்பது - ஒருசொல்லன் றென்றும், கண் என்பது இட மென்ற பொருளுள்ளதென்றும் எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சத் தொட ரென்றும் கொள்க. பாடற்கு என்பதில், நான்கனுருபு மூன்றனுருபின்பொரு ளில் வந்தது; உருபுமயக்கம். இயைபு-தொழிற்பெயர். இன்று - எதிர்மறை யொன்றன்பாற் குறிப்புமுற்று. காண்பது கண்ணெனக் காரணக்குறி. இப்பாட்டு எடுத்துக்காட்டுவமையணி. (கூ)

நூசு. உளபோன் முகத்தெவன் செய்யு மளவிஞற்
கண்ணேட்ட மில்லாத கண்.

(இ - ள்.) முகத்து உள போல் - (கண்டார்க்கு) முகத்தின்கண் உள போல் (தோன்றல் அல்லது), எவன் செய்யும் - (வேறு) என்னபயனைச் செய் யும்? அளவினுன் கண்ணேட்டம் இல்லாத - அளவிறவாத கண்ணேடுதலை யுடையவல்லாத, கண் - கண்கள்; (எ - று.)

தோன்றல், அல்லது என்னுஞ் சொற்கள் - அவாய்நிலையான் வந்தன. கழிகண்ணோட்டத்தின் நீக்குதற்கு, 'அளவினன்' என்றார். 'ஒருபயனையுஞ் செய்யா' என்பது, குறிப்பெச்சம்.

(கு - ரை.) உளபோல் - உள்ளனபோல. அளவு இறவாத - வரம்புகடவாத. அவாய்நிலை-உள்ளசொற்கள் வேறுசொற்களே வேண்டிநிற்குந்தன்மை. அவாய்நிலையால் வருவித்துமுடிக்குஞ் சொல்லே வடநூலார் 'அந்யாஹாரம்' என்பர். இங்கு 'உளபோல்' என்பது - 'தோன்றலல்லது' என்பதை வேண்டிநின்றமை காண்க. கழிகண்ணோட்டம் - வரம்புகடந்த தாக்ஷிணியம்; இது அரசர்க்குக் குற்றமாதலை கீழ் 'குற்றங்கடிதல்' என்ற அதிகாரத்திலும் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்திலும் விளக்கினார். அளவினன் என்பதற்கு - அளவோடுகூடிய என்று பொருள்; இதில் 'ஆன்' என்னும் மூன்றனுருபு, 'ஒடு' உருபின் பொருளில் வந்தது. தூற்றுப்பேச்சுமாவது - சொல்லப்படாமல் எஞ்சிநின்ற பொருள் குறிப்பினால் பெறப்படுவது; இங்கு 'எவன்செய்யும்' என்ற வினாவின் குறிப்பால் 'ஒருபயனையுஞ் செய்யா' என்பது பெறப்பட்டமை காண்க. (சு)

நூஎடு. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

(இ - ள்.) கண்ணிற்கு - (ஒருவன்) கண்ணிற்கு, அணி கலம் - அணியும் கலமாவது,—கண்ணோட்டம்—; அஃது இன்றுஎல்-அக்கலம் இல்லையாயின், புண் என்று உணரப்படும் - (அஃது அறிவுடையாராற்) புண்ணென்று அறியப்படும்; (எ - று.)

வேறு அணிகலம் இன்மையின் 'கண்ணிற்கணிகலம்' என்றும், கண்ணுய்த்தோன்றினும் நோய்எளாணும் *புலன்பற்றலானுந் துயர்விளைத்தல்நோக்கி 'புண்ணென்றுணரப்படும்' என்றுங் கூறினர்.

இவைமூன்றுபாட்டானும், ஓடாதுநின்ற கண்ணின் குற்றம் கூறப்பட்டது.

(கு-ரை.) அணியும் கலம்-ஆபரணம். அஃது-கண். புலன்பற்றலானும்-பல பொருள்களையுங் காணுந் தன்மையைக் கொள்ளுதலாலும். புலன் - இந்திரியவுணர்ச்சி; கண் என்னும் பொறிக்கு உரிய புலன்-ஒளி. புண்-விரணம். ஓடாதுநின்ற - தாக்ஷிணியப்படாது நின்ற. கலமென்னும் பலபொருளொரு சொல், அணியென்ற அடைமொழியால், பொதுமைநீங்கி ஆபரணத்தின் மேல் நின்றது; மரக்கலம், படைக்கலம், உண்கலம், கொள்கலம் என வெவ்வேறு அடைமொழிகளோடு கூடி வெவ்வேறு பொருள்குறிக்கும். இப்பாட்டின் இரண்டாம் வாக்கியத்துக்கு, 'அக்கண்' என்பது - தோன்றுஎழுவாய். "கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்" என்று திரிகடுகத்திலும் வந்துள்ளது. (டு)

நூஎசு. மண்ணெண் டியைந்த மரத்தினையர் கண்ணெண்
டியைந்துகண் ணோடா தவர்.

---

* பி - மி: புனல்

(இ - ள்.) கண்ணெடி இயைந்து-(ஓடுதற்குரிய) கண்ணெடி பொருந்தி வைத்து, கண் ஓடாதவர் - அஃதுஓடாதவர், (இயங்காகின்றாராயினும்), மண்ணெடி இயைந்த மரத்து அனையர் - மண்ணெடிபொருந்திநிற்கின்ற மரத்தினை யொப்பர்; (எ - று.)

ஓடாதவர் என்புழி, சினைவினை முதல்மேல் நின்றது. மரமும் கண்ணெடியையந்து கண்ணெடாமையின், இது - தொழிலுவமம். இதனைச் சுதைமண்ணெடுகூடிய மரப்பாவையென்று உரைப்பாரு முளர்; அஃது உரையன்மை காணப்படும் கண்ணனன்றி அதனுள் மறைந்துநிற்கின்ற ஒருசாருள்ளீட்டாற் கூறினமையானும், ''மரக்கண்ணெ மண்ணுள்வார் கண்ணென், நிரக்கண்டாய்'' என்பதனை மறிக.

(கு - ரை.) ஓடுதற்கு - தாட்சிணியங்கொள்ளுதற்கு. அஃது ஓடாதவர் - அக்கண்ணெட்டமில்லாதவர். இயங்காகின்றார் - சஞ்சரிக்கிறவர். மண்ணெடி பொருந்தி நிற்கின்ற - தரையில் முளைத்து அவ்விடம்விட்டுப் பெயராது நிற்கின்ற. இது, மரத்தின் தாவரத்தன்மையைக்காட்டி அதனால் இழிவுவிளக்க வந்த அடைமொழி. 'கண்ணெடாதவர்' என்பதில், கண் என்னுஞ் சினையின் வினையாகிய ஓடுதல்இன்மை, முதலாகிய அரசர்மேல் நின்றது; கண்ணெடப்பெறாதவர் என்றுகருத்து. மரத்துக்குக் கண்ணெடி இயைதல் - கணுக்களோடி பொருந்துதல். தொழிலுவமம்-செய்கைபற்றிவந்த உவமை; இது-வினையுவமமெனவும் படும்; (மற்றவை-பயனுவமை, மெய்யுவமை, உவமவுருபு.) கண்ணெடி [கண்ணென்னும் இந்திரியத்தொடு] கூடியிருந்தும் கண்ணெடாதவர், கண்ணெடி [கணுவோடு] பொருந்தியிருந்தும் கண்ணெடாதிருக்கும் மரம்போல்வ ரென்றவாறு: கண் என்பது - சிலேடைப்பொருளது. ''நீட்டோலை வாசியாகின்றான் குறிப்பறியமாட்டாதவனன் மரம்'' என்றாற போலவந்தது, இது. சுதைமண்-சுண்ணும்புகலந்த மண். ''நெடுநிலைமண்ணீடு கின்றவாயிலும்,'' ''பாங்குற மண்ணீட்டிற் பண்புறவகுத்து'' என்ற மணிமேகலையடிகளிலும் 'மண்' என்றது-சுதையென்னும் பொருளதாம். பாவை - பதுமை. மரம் என்றது, மரப்பாவையென்றபொருளிற் கருவியாகுபெயராம். 'காணப்படும் கண்ணனன்றி அதனுண்மறைந்துநிற்கின்ற ஒருசாருள்ளீட்டாற் கூறினமையானும்'என்பதற்குக்கருத்து கண்குவிளங்கவில்லை; எமக்குக் காணக்கிடைத்த மூன்று எட்டுப்பிரதிகளுள் இரண்டில் இவ்வாக்கியம் இல்லை. 'காணப்படும் மண்ணனன்றி' என்று இருப்பின் ஒருவாறு பொருந்தும்; மரத்தையுள்ளேவைத்து மேலே சுதையிலமைக்கப்பட்ட பாவையைக் கீழ் 'கல்லாமை' என்ற அதிகாரத்தில் ''நுண்மாணுழைபுலமில்லா னெழினல, மண்மாண்புனைபாவையற்று'' என்றதில் 'மண்மாண்புனைபாவை' என்றதுபோலவும், சிலப்பதிகாரத்தில் பாவைசெய்வாரை ''மண்ணீட்டாளர்'' என்றது போலவும் 'மண்ணுலியைந்தபாவை' என்பதே போதுமானதாயிருக்க, 'மண்ணெடியைந்த மரப்பாவை' எனக்கூறுதல் 'வெற்றெனத்தொடுத்தல்' என்னுங் குற்றத்துக்கு இடமாமெனக் குறித்துப் பிறர்கூறும் உரையை மறுத்தவாறும்.

இனி; ஒருசாரார் காணப்படுங் கண்ணனன்றி என்றே பாடங்கொண்டு - காணப்படுகின்ற கண்ணிலனன்றி அக்கண்ணினுள் மறைந்துகிடக்கும் தாட்சிணியத்தைப்பற்றிக் கூறுவதாலும், மரக்கண்ணே என்று தொடங்குஞ் செய்யுளிலும் தாட்சிணியமில்லாதவர்கண்ணே மரத்தினுடைய கண்ணே [ஈணுவோ]? என்று கூறியிருப்பதாலும் மரப்பாவையென்றல் பொருந்தாதென்று பரிமேலழகர் மறுத்தன ரென்ப. அதனுள் - அம்மண்ணினுள். ஒருசார்உள்ளீடு-ஒருபுறத்தினுட் கிடக்கும்பொருள்; என்றது, மரத்தை. ''மரக்கண்ணே மண்ணுள்வார்கண்ணென், றிரக்கண்டாய்'' என்பதற்கு-மண்ணுலகத்தையாளும் அரசரது கண் மரக்கண்ணேவென்றுசொல்லி இரத்தல் செய்வாய் என்று பொருள்; இம்மேற்கோள் முத்தொள்ளாயிர மென்னும் நூலி லுள்ள தென்று தெரிகிறது: ''வரக்கண்டி நாணுதே வல்லேயா னெஞ்சே, மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென் - றிரக்கண்டாய், வாளு மூவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென், றேளுமுவந் தோன்றத் தொழு'' என்பது அதுவருஞ்செய்யுள். இதில், கண்ணோட்டமில்லாத கண் மரக்கண் ணெப்பட்டமைகாண்க. இங்ஙனம் கூறவே, கண்ணோட்டமில்லா தவர் மரமெனப்படுவ ரென்பதுபோதரும். இம்மேற்கோள், தமது உரையைத் தாபிக்கக் காட்டியவாறு. மரத்தின்கணு கண்ணெனப்படுதலே ''ஈருதவிளங் கமுகின் மரகதமணிக்கண்ணும்'' எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. (சு)

நேஎ. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

(இ - ள்.) கண்ணோட்டம் இல்லவர் - கண்ணோட்டமில்லாதவர், கண் இலர்-கண்ணுடையரு மல்லர்; கண் உடையார்-கண்ணுடையவர், கண்ணோட்டம் இன்மை உம் - கண்ணோட்டமில்லாதலும், இல் - இல்லை; (எ-று.)

கண்ணுடையராயின் காட்சிக்கண்ணே அஃதுஓடும் என்பதுபற்றி, 'கண்ணோட்டமில்லவர் கண்ணிலர்' எனக் கூறி, பின் அதனை எதிர்மறை முகத்தான் விளக்கினர். உம்மை - இறந்தது தழீஇய எச்சவும்மை.

இவையிரண்டுபாட்டானும், கண்ணோடாதாரது இழிபு கூறப்பட்டது.

(கு - ரை.) காட்சிக்கண்ணே-தன்னெதிரிபயின்றூரைப் பார்த்தவிடத்தே. அஃது ஓடும் - கண்ணோட்டமுண்டாம். கண்ணோட்டமில்லாதவரைக் குருட ரென இகழ்ந்தவாறு. கண்ணிலர் என்பதற்கு எதிர்மறை, கண்ணுடையர். 'கண்ணுடையார் கண்ணோட்டமின்மையுமில்' என்பது எதிர்மறைமுகத்தால் விளக்கியதாகும். (எ)

நேஎஅ. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(இ - ள்.) கருமம் சிதையாமல் - (முறைசெய்தலாகிய) தம்தொழில்அழி யாமல், கண்ணோட வல்லார்க்கு - கண்ணோடவல்ல வேந்தர்க்கு, உரிமை உடைத்து - உரித்தாந்தன்மையுடைத்து: இ உலகு - இவ்வுலகம்; (எ - று.)

தம்மொடுபயின்றூர் பிறரை இகக்கண்செய்துழி, அவரைக் கண்ணோடி ஒறுத்தார்க்கு முறைசிதைதல், மேல் ''ஓர்ந்துகண்ணோடாது'' என்ற முறை

யிலக்கணத்தானும் பெற்றும். முறை சிதைய வரும்வழிக் கண்ணோடாமையும், வாராவழிக் கண்ணோடலும் ஒருவர்க்கு இயல்பாத லருமையின் 'கண்ணோட வல்லார்க்கு' என்றும், அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேறலின் 'உரிமையுடைத்து' என்றுங் கூறினர்.

இதனுன், கண்ணோடுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) முறை செய்தல் - நீதிநடத்துதல். உரித்து - உரியது. இடுக்கண் செய்துழி - துன்பப்படுத்தின பொழுது. அவரை ஒருதார் என இயையும். ஒருதார் - தண்டியாதவர். முறைசிதைதல்-நீதிகெடுதல். "ஓர்த்து கண்ணோடாது" என்றது, கீழ் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தின்முதற் குறள். முறையிலக்கணம் - செங்கோன்மையின் லக்ஷணம். முறைசிதைய வரும்வழி - நீதிகெட நேருமிடத்து. வாராவழி - அங்ஙனம் நேராதவிடத்து. இயல்பாதல் அருமையின் - சுபாவமாதல் அரியதாதலின். நெடுங்காலம் சேற லின் - வெகுகாலம் வசப்பட்டு நடத்தலால். கண்ணோடும் ஆறு - கண்ணோட் டஞ்செய்யும்விதம். (அ)

ருஎகூ. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(இ - ள்.) ஒறுத்தாற்றும் பண்பினர்கண்உம்-(தம்மை) ஒறுக்கும் இயல் புடையாரிடத்தும், கண்ணோடி - கண்ணோட்டமுடையராய், பொறுத்தாற் றும் பண்புஏ - (குற்றத்தைப்) பொறுக்கும் இயல்பே, தலை - (அரசர்க்குத்) தலையாய இயல்பாவது; (எ - று.)

பண்பினர்என்றதனுன், அவர்பயிற்சிபெற்றும். ஒறுத்தாற்றும், பொறுத் தாற்றும் என்பன - ஈண்டு ஒருசொல்நீர.

(கு - ரை.) ஒறுக்கும்-வருத்தும். தலையாய-உத்தமமான. அவர் பயிற்சி- அவர் தம்மோடு பழக்க முடையா ரென்பது. ஈண்டு - இங்கு. ஒருசொல் நீர- ஒருசொல்தன்மை யுடையன. ஒறுத்தாற்றும்என்பது - ஒறுக்குமென்றும், பொறுத்தாற்றும் என்பது - பொறுக்குமென்றும் பொருள்பட்டதனுல், அவ ற்றை 'ஒருசொல் நீர' என்றார்; இவற்றில் ஆற்று - துணைவினையென் றவாறு. இனி, இரு சொல்லாக, ஒறுத்து ஒழுகும், பொறுத்து ஒழுகும்என்ற லும் ஒன்று. அன்றியும், ஒறுத்துஆற்றும் என்பதற்கு-(தம்மை) வருத்தி அவ் வருத்துதலைத் தொடர்ச்சியாகச் செய்யும் என்றும், பொறுத்துஆற்றும் என்ப தற்கு-(அக்குற்றத்தைப்)பொறுத்து மேலும் அவர்க்கு உதவிசெய்யு மென்றும் கொள்ளின், இக்குணம் உத்தமோத்தமமரம். பண்பினர்கண், கண்- ஏழனுருபு. உம் - இழிவுசிறப்பு. ஏ - பிரிநிலை. (கூ)

ருஅ0. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(இ - ள்.) நஞ்சு பெய கண்டுஉம் - (பயின்றார் தமக்கு) நஞ்சிடக் கண்டு வைத்தும், (கண்மறக்கமாட்டாமையின்), உண்டு-(அதனை) உண்டு, அமைவர்- (பின்னும் அவரோடு) மேவுவர்: நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்-(யாவரானும்) விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுபவர்; (எ - று.)

நாகரிகம்என்பது கண்ணோட்டமாதல் "மூன்தை யிருந்து நட்டோர் கொடுப்பி, னைஞ்சு முண்பர் நனிநாகரிகர்" என்பதனாலும் அறிக.

அரசர் அவரை ஒரு தா கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்துழி என்பது, இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) கஞ்சு இட - விஷங்கொடுக்க. கண்டுவைத்தும் - பார்த்திருந்தும். கண் மறுக்க மாட்டாமையின் - தாட்சிணியம் தள்ளக்கூடாமையால். மேவுவர் - பழகுவர். "மூன்தையிருந்து" என்ற மேற்கோளுக்கு-முன்பில் இருந்து சினேகிதர்கள் கொடுத்தால் விஷத்தையும் புசிப்பர் மிக்ககண்ணோட்ட முடையார் என்று பொருள்; 'இது, நற்றிணைநானூற்றில் கூடுநி-ஆவது அகவற்பாவி லுள்ளது. அவரை - நீங்குசெய்தாரை. தம்மாட்டுக் குற்றம் செய்தூழி - தமக்கு கேரில் குற்றஞ்செய்தவிடத்து மாத்திரமே: தம்முடைய அங்கங்கட்குக் குற்றஞ்செய்த இடத்தன் றென்க. பெய - பெய்ய, தொகுத்தல். கண்டும்—உம் - இழிவுசிறப்பு. நயத்தக்க என்பதில், நய என்னும் வினைப்பகுதியே நயக்க என வினையெச்சப்பொருள்பட்ட தென்றுவது, நயஎன்பது நயத்தல் என்னும்பொருள்தரும் முதனிலைத்தொழிற்பெயரென்றுவது கொள்ளத்தக்கது. நாகரிகம்என்பது-வடமொழியில் நகரசம்பந்தமான குண மெனப் பொருள்படும். (கஎ)

ருகூ - ஆம் அதிகாரம்.—ஒற்றுடல்.

அஃதாவது - பகை தொதுமல் நட்பு என்னும் மூன்றுதிறத்தார்மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை ஆளுதல். மேற்சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன்நாடு செலுத்துங்காலும் பிறர்நாடுகொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றார் நாகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.

(கு - ரை.) பகை - பகைவர். நட்பு - சினேகிதர். தொதுமல் - பகைவரும் நண்பரு மல்லாத பிறர்; இவர் வடமொழியில் உதாஸீநர் எனப்படுவர். நிறத்தார் - வகுப்பினர். நிகழ்ந்தன - நடந்த செயல்களை. ஒற்றர்-வேவுகாரர்; இவர் வடமொழியில் சாரர் எனப்படுவர்: இவர் தூதரினும் வேறுபட்டவர்; ஆங்காங்கு நடப்பவற்றை ஒற்றியறிந்துவருதலால், ஒற்றரெனப் பெயர் பெறுவர்: ஒற்றுதல் - அடித்துநின்று உண்மையைக் கிரகித்தல். ஆளுதல் - உபயோகித்தல். மேற்சொல்லிய இலக்கணத்தன் - இறைமாட்சிமுதல் கண்ணோட்டம் முடிய உள்ள அதிகாரங்களிற் கூறிய இலக்கணத்தையுடையவன். தன்நாடு செலுத்துங்காலும் - தனதுநாட்டை ஆளுகைசெய்யும் பொழுதும். கொள்ளும் - பிடிக்கும். கூறுகின்றார் - இதுமுதல் ஐந்துஅதிகாரங்களால் சொல்லுகிறார். அவ்விருமைக்கும் - தன்நாடு செலுத்துகைக்கும், பிறர்நாடு கொள்ளுகைக்கும். 'மூன்' என்றவிடத்து 'கண்ணோட்டத்தின்பின்' என்று பிரதிபேதம். ஒற்று-உயர்திணைப்பொருளில் வந்த அஃறிணைச்சொல்.

ருஅக. ஒற்று மூரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

(இ - ள்.) ஒற்றூஉம்—, உரை சான்ற நூல்உம்-புகழமைந்த நீதிநூலும் (ஆகிய), இவை இரண்டிஉம் - இவைஇரண்டனையும், மன்னவன் - அரசன், கண் - (தன்) இரண்டுகண்ணுமாக, தெற்றென்க - தெளிக; (எ - று.)

ஒற்றூ - தன்கண்செல்லமாட்டாத பரப்பெலாஞ் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல் - அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன் உணர்வுசெல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றனை 'ஒற்று' என்றூர், வேந்தனை "வேந்து" என்றூற்போல. தெற்றென்க என்பது - தெற்றென்னென்பது முதனிலையாக வந்த வியங்கோள்; அது 'தெற்றென்' என்னுஞ் செயவெனெச்சத்தான் அறிக.

இதனுன், ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - சை.) தன் கண் - அரசனது கண். பரப்பு - விசாலமான இடம். ஆண்டு - அங்கு. அந்நிகழ்ந்தவற்றிற்கு - அங்குநடந்தவைகளுக்கு ஏற்றபடி. வினை - தொழில். ஊனக்கண் - மாமிசமயமான புறக்கண். "உலக்கண் நீதி நூலாக ஒற்றேவெளிக்கண் எனவிடித்து" என்றது, விகாயக புராணம். தெற்றெனல் - தெளிதல். முதனிலை - பகுதி; பகுபதத்தின் முதலில் நிற்பது. உரை - பலராலும் நன்குமதித்துப் பேசப்படுந்தன்மை; எனவே, புகழாம். இப் பாட்டின் முதலடியில் எண்ணும்மை தொகைபெற்றது. பிராணிகளுக்கு எல்லாவுறுப்புக்களுள்ளும் கண் சிறந்த தாதல்போல, அரசர்க்கு எல்லா அங்கங்களுள்ளும் ஒற்றர் சிறந்தவரெனப் புகழ்ந்தவாறு. (க)

குஉ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(இ - ள்.) எல்லார்க்குஉம் நிகழ்பவை எல்லாம் - எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும், எஞ்ஞான்றுஉம்-நாள்தோறும், வல் அறிதல்-(ஒற்றூன்) விரைந்து அறிதல், வேந்தன் தொழில் - அரசனுக்குரிய தொழில்; (எ-று.)

எல்லார்க்கும்என்றது, மூன்றுதிறத்தாரையும். நாண்காவது, ஏழாவதன் பொருட்கண் வந்தது. நிகழ்வனஎல்லாம் என்றது, நல்லவுந் தீயவுமாயசொற் களேயுஞ் செயல்களேயும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத்தக்க * அளியாகத் தெறலாகச் செய்யவேண்டுதலின் 'வல்லறிதல்' என்றும், அவ்வீருதொழிற்கும் அறிதல் காரண மாகலின் அதனையே உபசாரவழக்கால் 'தொழில்' என்றுங் கூறினர். 'ஒற்றூன்' என்பது, அதிகாரத்தான் வந்தது.

இதனுன், ஒற்றினது பயன் கூறப்பட்டது. (உ)

(கு - சை.) ஒற்றூன் - ஒற்றரால். 'எல்லார்க்கும்' என்றது-எல்லாரிடத்தும்எனப் பொருள்பட்டதனால், உருபுமயக்கம். மூன்று திறத்தார் - பகை நொதுமல் நட்புஎன மூவகைப்பட்டவர். அவற்றிற்குத் தக்க - செய்தவை நல்

* வழியாகத் தேறுதலாக என்ற பாடம் இனிது பொருள்படாது.

லவையோ தீயவையோ அவைகளுக்கு ஏற்ற. அளி - அநுக்கிரகம். தெறல் - நிக்கிரகம். இவ்வாக்கியத்தில், ஆக என்பது - இடைச்சொல் தன்மைப்பட்டு, விகற்பப்பொருளுணர்த்திற்று. அவ்விருதொழில்-அளித்தல் தெறுதல்என்ற அந்த இருவகைத்தொழில். உபசாரவழக்கு-இங்கே அறிதலென்னுங்காரணம் தொழிலென்னுங் காரியமாக உபசரிக்கப்பட்டது. எங்கும்நடப்பவற்றை யெல்லாம் எப்பொழுதும் அரசன் ஒற்றரால் அறிதல் அவன்தொழில்செய்தற்குக் காரணமாமென்றவாறு. அதிகாரத்தான் - இவ்வதிகாரம் ஒற்றாடலாதலால். அதிகாரத்தால் வருவித்துமுடிப்பதனை வடநூலார் 'ஆநுஷங்கிகம்' என்பர். ஒற்றின் ஆய - ஒற்றலால் ஆகிற. வல் - இடைச்சொல். (௨)

௫௮௩. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(இ - ள்.) ஒற்றினான் - ஒற்றினானே, ஒற்றி-(எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை) ஒற்றுவித்து, பொருள் தெரியா - (அவற்றான்எய்தும்) பயனை ஆராயாத, மன்னவன் - அரசன், கொற்றம் கொள கிடந்தது - வென்றியடையக் கிடந்தது, இல் - வேறொருநெறி இல்லை; (எ - று.)

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்குஎளியனாதல் பிறிதின் தீராமையின், 'கொற்றங்கொளக் கிடந்ததில்' என்றார். இதற்கு - கொளக் கிடந்ததொரு வென்றி யில்லையென்று உரைப்பினும் அமையும்.

இதனான், அத்தொழில்செய்யாதவழி வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒற்றினானே - ஒற்றராலே. ஒற்றுவித்து-உள்ளபடி அறிந்து வரச்செய்து. அவற்றான் எய்தும் - அந்நிகழ்ந்தவற்றால் வரும். கிடந்தது - காரணமாய்ப் பொருந்தியது. நெறி - வழி. அறியாது - அறியாமையால் என்றபடி. பகைக்கு எளியனாதல்-பகைவர்க்கு வெல்ல எளியவனாய் விடுதல். பிறிதின் தீராமையின் - வேறொருஉபாயத்தால்நீங்காமையால். அத்தொழில் செய்யாதவழி - ஒற்றாளுதல் செய்யாமற்போனால். கொற்றம் - (பகைவரைக்) கொல்லுத லென்ற காரணத்தால், வெற்றியைக் குறிக்கும்; இதில், கொல் - பகுதி. "ஒற்றினாலொற்றிப் பொருடெரிதன் முன்னிதே" என்பது, இனியவைநாற்பது. (௩)

௫௮௪. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(இ - ள்.) தம்—, வினைசெய்வார்-காரியஞ்செய்வார், சுற்றம்-சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்ற ஆங்கு அனைவரைஉம்-என்றுசொல்லப்பட்ட அனைவரையும், ஆராய்வது - (சொற்செயல்களான்) ஆராய்வானே, ஒற்று - ஒற்றனாவான்; (எ - று.)

தம் என்றது, அரசனோடு உளப்படுத்தி. அவனுக்குக் காரியஞ்செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகைவர் தன் அற்றம் ஆராய்தலும் மேல்தேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவும் அறிந்து அவற்றிற்கு ஏற்றன செய்யவேண்டுதலின்,

இம்மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டு மென்பார் 'அனைவரையு மாராய்வ தொற்று' என்றார்.

(கு - ரை.) வினை செய்வார் - அரசன்காரியஞ்செய்யும் மந்திரிகள் சேனாபதிகள் முதலியோர். தம் - தனக்குரிய அரசனது என்றபடி. சொல் செயல்களான்-(அவரவரது)சொல்லையும் செயலையுங் கொண்டு. தன்னிடத்து-தன்னையனுப்பிய அரசனிடத்து. தன் அற்றம் ஆராய்தல் - தான்சோர்வடையுஞ்சமயத்தைத் தேடுதல். மேல் தேறப்படுதல் - பின்பு அச்சமயம் தெளியப்படுதல். முன்னிட்டு - தான் அவர்கள்பக்கல் வெல்லும்உபாயங்களைச் செய்யத்தொடங்குதற்கு முந்தி. செய்வன - செய்யும் உபாயங்கள். அவற்றிற்கு ஏற்றன - வினைசெய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற இவர்கள் செய்வனவற்றிற்குத் தக்கவைகளை. எஞ்சாமல் - ஒழிவில்லாமல். என்றாங்கு - என்றவென்னும் பெயரெச்சத்தின் அகரவீறு, தொகுத்தல்; ஆங்கு - அசை. என்றாங்கு - என்றவிடத்து எனினுமாம். 'தஞ்சுற்றம்' என்ற விடத்து 'சுற்றத்தார்' என்றும் பாடமுண்டு. (ச)

ருஅரு. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(இ - ள்.) கடா - (ஒற்றப்பட்டார் கண்டால்) ஐயுறாத, உருவொடு - வடிவோடு பொருந்தி, கண் அஞ்சாது - (அவர் ஐயுற்று அறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர்) கண்ணிற்கு அஞ்சாதுநின்று, யாண்டுஉம் உகாமை வல்லது ஏ - நான்குஉபாயமுஞ்செய்தாலும் (மனத்துக்கொண்டவற்றை) உமிழாமை வல்லவனே, ஒற்று - ஒற்றனாவான்; (எ - று.)

'கடா' என்பது - 'கடுக்கும்' என்னும் பெயரெச்சத்து எதிர்மறை. ஐயுறாதவடிவாவன - பார்ப்பார் வணிகர் முதலாயினார் வடிவு.

(கு - ரை.) ஐயுறாத - சந்தேகிக்கவேண்டாத. அறியலுறின் - தன்னை ஒற்றனென்று அறிந்துவிட்டால். செயிர்த்து நோக்கிய - கோபித்துப் பார்த்த. நான்கு உபாயம் - சாம தான பேத தண்டம். உமிழாமை-வெளிப்படுத்தாமை. கடுக்கும் என்னும் பெயரெச்சத்து-கடுக்கும் என்னும் உடன்பாட்டுப் பெயரெச்சத்தினது;கடுக்கும் என்பதற்கு-சந்தேகிக்கும் என்று பொருள்.'முதலாயினார்' என்றதனால், தீர்த்தயாத்திரைசெய்வார் தவஞ்செய்வார் முற்றத்துறந்தார் என்பவரைக் கொள்க. அளபெடைகள் செய்யுளோசை நிறைப்பன. உரு= ரூபம்: வடமொழியின் திரிபு. கண்அஞ்சாது-நான்காம்வேற்றுமைத்தொகை. அஞ்சாதியாண்டும் - குற்றியலிகரம்; இங்குக் குற்றியலிகரம் அலகுபெறவில்லை; இதற்கு விதி - "சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இ உ அளபோ, டாருமறிவரலகுபெறாமை," "தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே, குறுகிய விகரமுங்குற்றியலுகரமு, மளபெடையாவியு மலகியல்பிலவே" என்பன காண்க. அலகு பெற்றதாகக்கொள்ளின், வெண்டளை சிதைதலைத் தளையிட்டுக் கண்டுகொள்க. யாண்டும் - எப்பொழுதும். உகாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். ஏ - பிரிநிலை. கடா - கடாத என்பது ஈறுகெட்டது. (ரு)

ருஅசு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

(இ - ள்.) துறந்தார் படிவத்தர் ஆகி - முற்றத்துறந்தாராயும் விரதவொழுக்கினராயும், இறந்து - (உட்புகுதற்கு அரிய இடங்களெல்லாம்) உள்புக்கு, ஆராய்ந்து-(ஆராயவேண்டுவன) ஆராய்ந்துஅறிந்து, என் செயின்உம்-(ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து) எல்லாத்துன்பமுஞ்செய்து கேட்டாலும்; சோர்வு இலது - (தன்னை) வெளிப்படுத்தாதவனே, ஒற்று - ஒற்றனுவான்.

விரதவொழுக்கம் - தீர்த்தயாத்திரை முதலாயின. செயினும் என்பது-அறவோரென்று செய்வாரின்மை விளக்கிநின்றது. மேல் நால்வகையுபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்து, ஈண்டும் தண்டத்தைப் பிரித்துக் கூறியது, அதனது பொறுத்தற்கருமைச்சிறப்புநோக்கி. இதனுள் படிவம் என்றதனை வேடமாக்கி, 'துறந்தார்வேடத்தராகி' என்று உரைப்பாருமுளர்.

(கு - ரை.) முற்றத் துறந்தார் - சந்நியாசிகள். விரதவொழுக்கினர்-விரதானுட்டானமுடையவர். உட்புகுதற்கு அரிய இடங்கள் - அக்கப்புரம் ஆயுதசாலை பொக்கிஷசாலை மந்திராலோசனைச்சபை முதலியன. இறந்து - வரம்பு கடந்துசென்று என்றபடி. புக்கு - புகுந்து. ஆண்டையார் - அங்குள்ளவர். சோர்வு இலது - தளர்ச்சியடையாதவன். எல்லாத்துன்பமும் - விலங்கிடல் அண்ணந்தாளிடல் ஊசியேற்றுதல் முதலியன. தன்னை வெளிப்படுத்துதல் - தன்னை இன்னனென்று அறிவித்தல். தீர்த்தயாத்திரை - புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தற்குப் பிரயாணப்படுதல். அறவோர் என்று - இவர்களைத் தருமமார்க்கத்தில் நடப்பவ ரென்று கருதி, செய்வார் இன்மை - துன்பஞ்செய்பவரில்லாமையை. மேல் - முத்தினகுறளில் 'யாண்டு முகாமை' என்றவிடத்தில். ஈண்டும் தண்டத்தைப் பிரித்துக்கூறியது - 'என்செயினும்' என்றது. அதனது - அத்தண்டத்தினது. (சு)

ருஅஎ. மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

(இ - ள்.) மறைந்தவை - (ஒற்றப்பட்டார்) மறையச்செய்த செயல்களை, கேட்க வற்று ஆகி-(அவர்க்கு உள்ளாயினாற்)கேட்கவல்லனாய், அறிந்தவை-கேட்டறிந்தசெயல்களில், ஐயப்பாடு இல்லது ஏ-(பின்) ஐயப்படாது துணியவல்லவனே, ஒற்று - ஒற்றனுவான்; (எ - று.)

மறைந்தவை சொல்லுவாரை யறிந்து அவர்அயிராமற் சென்று ஓட்டித் தாமேசொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னேவிஓத்து அத்தொடர்பாற் கேட்குங்காலும் உறுதார்போன்றுநின்று கேட்கவேண்டுதலின் 'கேட்கவற்றாகி' என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்றுவந்து சொல்லின் அரசனுல் அவற்றிற்குஏற்ற வினை செய்யலாகாமையின் 'ஐயப்பாடில்லதே' என்றுங் கூறினர்.

இவைநான்குபாட்டானும், ஒற்றினது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒற்றப்பட்டார் - வேவுகாரரால் அடுத்து அறியப்பட்டார். மறைய - மறைவாக. அவர்க்கு உள்ளாயினாரால் - அவர்களுக்கு அந்தரங்கமானவர்களால். துணிய - ஒன்றைநிச்சயிக்க. மறைந்தவை - இரகசியமான விஷயங்கள். தாமே - அவர்களே. அவர் அயிராமல் - அவர்கள் தன்னிடத்துச் சந்தேகப்படாதபடி. ஒட்டி-அடுத்து விசாரித்து. சொல்லாகச்செயலாக முன்னே விளைத்து-சொல்லையாவது செயலையாவது முன்னே உண்டாக்கி. தொடர்பு - தொடர்ச்சி. உறாதார் - இரகசியத்தை அறியவேண்டாதவர். வற்று - வன்மையென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. ஐயப்பாடு - ஐயப்படுதல்; முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'ஐயமாவது - பலதலையாய உணர்வு' என்றார், கீழ் மெய்யுணர்தலில். (எ)

ரூஅஅ. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல்.

(இ-ள்.) ஒற்று-ஓரொற்றன், ஒற்றி தந்த-ஒற்றிவந்து அறிவித்த, பொருளைஉம் - காரியந்தன்னையும், மற்றுஉம் ஓர் ஒற்றினால் ஒற்றி - பிறனோரொற்றனாலும் ஒற்றுவித்து, கொளல் - (ஒப்புமைகண்டு) கொள்க; (எ - று.)

ஒற்றப்பட்டாரோடு ஒத்துநின்று மாறுபடக்கூறலுங் கூடு மாகலின், ஒருவன் மாற்றம் தேறப்படாது என்பதாம்.

(கு - ரை.) காரியந்தன்னையும் - காரியத்தையும். ஒற்றப்பட்டாரோடு ஒத்துநின்று - ஒற்றப்பட்டவர்களுக்கு உள்ளானவனாய்நின்று. மாறுபடக் கூறல் - நடந்ததை வித்தியாசப்படச் சொல்லுதல். ஒருவன் மாற்றம் தேறப்படாது-ஓரொற்றனது வார்த்தையை மாத்திரமே நம்பத்தக்கதன்று. பொருளையும்-உம்மை, உயர்வுசிறப்பு; எதிரதுதழுவிய எச்சமெனினும் அமையும். இப்பாட்டில் 'ஒற்றி' என வந்த சொல் இரண்டனுள், பின்னது-தன்வினை பிறவினைப்பொருளில்வந்தது; இதனைவடநூலார் 'அந்தர்ப்பாவிதணிச்' என்ப.

ரூஅகூ. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

(இ - ள்.) ஒற்று ஒற்று உணராமை ஆள்க-ஒற்றரை (ஆளுமிடத்து)ஒருவனையொருவன் அறியாமல் ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க-அங்ஙனம் ஆண்ட ஒற்றர்மூவரை ஒருபொருள்மேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனால் ஒத்தனவாயின், தேறப்படும்-(அது மெய்யென்று) தெளியப்படும்; (எ - று.)

'ஆயின்' என்பது வருவிக்கப்பட்டது. ஒருவனை யொருவன் அறியின் தம்முள் இயைந்து ஒப்பக்கூறுவ ராகலின் 'உணராமையாள்க' என்றும், மூவர்க்கும் நெஞ்சுஒற்றுமைப்படுதலும் பட்டால் நீடுநிற்றலும் கூடாமையின் 'தேறப்படும்' என்றுங் கூறினார். இதனானே அஃது ஒத்திலவாயின், பின்னும் ஆராய்க வென்பதூஉம் பெற்றாம்.

(கு - ரை.) ஆண்ட - உபயோகிக்கப்பட்ட. ஒருபொருள்மேல் - ஒரு காரியத்தின்மேல். வேறுவேறுவிட்டால்-தனித்தனி அனுப்பினால். 'ஆயின்'

என்பதை வருவித்தது, 'தொக்க' என்றதன் அவாய்நிலையால். தம்முள் இயைந்து - தமக்குள் கலந்து. ஒப்பக் கூறுவர் - ஒருவர்வார்த்தைக்கு ஒருவர் வார்த்தை ஒத்துவருமாறு கற்பித்துச்சொல்வர். பட்டால் - தற்செயலாக மனம்ஒன்றுபட்டால். நீடு நிற்றல் - அவ்வாறே நெடும்பொழுதுநிற்பது. அஃது ஒத்தில ஆயின் - (அம்மூவர்சொல்லும்) பயனுல் ஒத்திராதனவானுல். உடன்மூவர் - சமகாலத்தில் உபயோகிக்கப்பட்ட மூன்றுபெயர். தொக்க - தொகு என்னும் பகுதியின்மேற் பிறந்த இறந்தகாலப்பலவின்பால் வினையாலணையும்பெயர். உணராமை - எதிர்மறைவினையெச்சம். (கூ)

ருகூ0. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா ஞகு மறை.

(இ - ள்.) ஒற்றின்கண் - (மறைந்தவை அறிந்துகூறிய) ஒற்றின்கண், (செய்யும்), சிறப்பு - சிறப்பினை, (அரசன்), அறிய-(பிறர்) அறிய, செய்யற்க-செய்யாதொழிக; செய்யின் - செய்தாலுயின், மறை புறப்படுத்தான் ஆகும் - (தன்அகத்து அடக்கப்படும்) மறையைத் தானே புறத்திட்டானும்; (எ - று.)

மறையாவது - அவன் ஒற்றலுயதூஉம், அவன்கூறியதூஉ மாம். சிறப் புப்பெற்ற இவன் யாவனென்றும், இதுபெறுதற்குக்காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலா ராகலின், 'புறப்படுத்தானுகும்' என்றார்.

இவைமூன்றுபாட்டானும், ஒற்றரையாளுமாறும், அவரான் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தாற் சிறப்புச்செய்யுமாறும் கூறப்பட்டன.

(கு - சை.) மறைந்தவை - இரகசியங்கள். ஒற்றின்கண் - ஒற்றனுக்கு என்றபடி. சிறப்பு - வெகுமானம். பிறர் அறியச் செய்யாது ஒழிக-இரகசிய மாகவே செய்யவேண்டும். செய்தாலுயின்-பிறர் அறியச் செய்தால். அகத்து அடக்கப்படும் - மனத்தில் அடக்கிவைக்கவேண்டிய. மறை - இரகசியம். புறத்துஇட்டானும் - வெளியிட்டவனுவன். இறுப்பார் - உத்தரஞ்சொல்ப வர். அவரான் நிகழ்ந்தன அறியும் ஆறு - நடந்தவற்றை ஒற்றரைக்கொண்டு அறியும் விதம். மறை-மறைக்கப்படுவதென்றபொருளில் செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்ட பெயர். (கo)

கூ0 - ஆம் அதிகாரம்.—ஊக்கமுடைமை.

அஃதாவது - மனம்மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத் தாதல். ஒற்றரான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற வினைசெய்வானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

(கு - சை.) மெலிதல் - தளர்தல். கிளர்ச்சி - உற்சாகப்படுதல். இஃது-ஊக்கமுடைமை. ஊக்கம் - தொழிற்பெயர்; ஊக்கு - பகுதி. உடைமை-பண் புப்பெயர்.

ருகூக. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

(இ - ள்.) உடையர் எனப்படுவது-(ஒருவரை) உடையரென்றுசொல் லச் சிறந்தது, ஊக்கம்—; அஃது இல்லார்-அவ்வூக்கமில்லாதார்,-மற்றுஉடை யது உடையர்ஓ-வேறுஉடையதுதானும் உடைய ராவரோ? [ஆகார்]; (எ-று.)

வேறுடையது என்றது, முன்எய்திநின்ற பொருளை. உம்மை - விகாரத்தால் தொக்கது. காக்கும் ஆற்றல் இலராகலின், அதுவும் இழப்பர் என்பதாம்.

(கு - ரை.) சொல்லச் சிறந்தது - சொல்லுதற்குச் சிறந்தகாரணமாய் நிற்பது. ஊக்கம் - மனத்திட்பம். வேறு உடையது தானும் - மற்றும் அவர்கள் முன்பு உடையராயுள்ள செல்வத்தையும். உம்மை தொகுத்தல் விகாரப்பட்டது, 'உடையது' என்பதன் இறுதியில். காக்கும் ஆற்றல் - பாதுகாக்குந்திறமை. அதுவும் - செல்வத்தையும். ஓ - எதிர்மறை. மற்று - பிறிதென்னும்பொருளது. (க)

ருகூ. உள்ள மூடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(இ - ள்.) உள்ளம் உடைமை - ஊக்கமுடைமையே, உடைமை - (ஒருவனுக்கு நிலைநின்ற) உடைமையாவது: பொருள் உடைமை-மற்றைப் பொருளுடைமை, நில்லாது நீங்கிவிடும் - நிலைநில்லாது நீங்கிப் போம்; (எ - று.)

உள்ளம் - ஆகுபெயர். ஊக்கம் - உள்ளத்துப்பண்பு ஆகலின் அதற்கு நிலைகிற்றலும், பொருள்-உடம்பினும் வேறுய் அழிதன்மாலைத்தாகலின் அதற்கு நிலைநில்லாமையுங் கூறினர்; கூறவே, அஃது உடைமையன்று என்பது பெறப்பட்டது.

(கு - ரை.) உடைமை - சொத்து. பொருளுடைமை - செல்வமுடையராதல். உள்ளமென்னும் மனத்தின்பெயர், அதன்கிளர்ச்சியை உணர்த்தியதனால், இடவாகுபெயர். உள்ளத்துப்பண்பு - மனத்தின்குணம். அழிதல்மாலைத்து - அழியும் இயல்புடையது. அஃது-செல்வம். (உ)

ருகூ. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(இ - ள்.) ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - (இழந்தாராயினும் யாம்) கைப்பொருளே யிழந்தே மென்று அலமரார்: ஒருவந்தம் ஊக்கம் - நிலை பெற்ற ஊக்கத்தை, கைத்து உடையார்-கைப்பொருளாக உடையார்; (எ-று.)

ஆக்கம்-ஆகுபெயர். ஒருவந்தமாய ஊக்கம் என்க. கைத்து-கையகத்தாய பொருள்; "கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்" என்னும் பிறரும். அல்லாவாமைக்குவது, வருகின்ற பாட்டாற் கூறுப.

(கு - ரை.) இழந்தாராயினும் - செல்வத்தையிழந்தாலும். அலமரார் - மனங்கலங்கார். 'ஆக்கம்' என்னுஞ்சொல் ஆகுபெயராதல், கீழ்ச் சுற்றத்தழாலின் இரண்டாம்பாட்டி னுரைக்குறிப்பிற் கூறப்பட்டது. 'ஒருவந்தம்' என்பதற்கு - கீழ் வெருவந்தசெய்யாமையின் மூன்றும்பாட்டிற் காண்க. கையகத்து ஆய-கையினிடத்துள்ள. "கைத்துண்டாம்" என்று தொடங்கிய மேற்கோள், நாலடியாரில் "மற்றறிவா ரல்லரே யாமிளைய மென்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின், முற்றியிருந்த கனியொழியத்

தீவளியா,னற்காயுதிர்தலு முண்டு"என்ற செய்யுளில் உள்ளது.இதற்கு-கைப் பொருளுண்டாகும் பொழுதே அதனை மறைத்துவைக்காமல் தருமஞ்செய் யுங்கள் என்பது பொருள். 'பிறர்' என்றது, அச்செய்யுள்செய்த சமணமுனி வரை. அல்லாவாமை - மனங்கலங்காமை. அல்லாவார் என்னும் எதிர்ம றைத் தெரிநிலைப் பலர்பால்முற்றில், அல்லா - பகுதி; இது - ஒருசொல்: கீழ் 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்தில் 'அல்லாப்பர், செம்மாப்பர்என் பனபோலச் சோகாப்பர் என்பது ஒருசொல்'எனப் பரிமேலழகர் உரைத்தது கொண்டு உணர்க. கைத்து - ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்; கை - பகுதி, து - விகுதி. (௩)

௫௯௪. ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

(இ - ள்.) அசைவு இலா ஊக்கம் உடையானுழை-அசைவில்லாத ஊக்கத்தை உடையான்மாட்டு, ஆக்கம்-பொருள், அதர் வினாய் செல்லும்-(தானே) வழி வினவிக்கொண்டு செல்லும்; (எ - று.)

அசைவின்மை - இடுக்கண் முதலியவற்றால் தளராமை. வழிவினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாரும் என்பார், 'அதர்வினாய்ச் செல்லும்' என்றார்.

எய்திநின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது என் பது, இவைநான்குபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) அசைவில்லாத - தளர்தலில்லாத. எய்திநின்ற - கிடைத்து நின்ற. அதற்கு - செல்வத்துக்கு. வினாய்-வினாஎன்னும் பகுதியடியாப்பிறந்த இறந்தகாலவினையெச்சம்; ய் - காலங்காட்டும் எச்சவிகுதி. (௪)

௫௯௫. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு.

(இ - ள்.) வெள்ளத்து அனைய-(நின்ற) நீரின் அளவினவாம்: மலர் நீட் டம்-நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள்; (அதுபோல), மாந்தர்தம் உள்ளத்து அனையது-மக்கள்தம் ஊக்கத்தளவினதாம்: உயர்வு-(அவர்) உயர்ச்சி; (எ-று.)

மலர்-ஆகுபெயர். நீர் மிக்கத்துணையும் மலர்த்தாள் நீளுமென்பது பட, 'வெள்ளத்தனைய' என்றார். இவ்வுவமையாற்றலான், ஊக்கம் மிக்க துணை யும் மக்க ளுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல்-பொருள் படைகளான் மிகுதல்.

(கு - ரை.) நின்ற - நீர்நிலையில் நின்ற. அளவின - அளவையுடையன. தாள் - அடிக்காம்பு, நாளம். மலர் என்றது - அதன் சினையாகிய நாளத் தை யுணர்த்தினமையால், முதலாகுபெயராம்; தானியாகுபெய ரெனி னும் அமையும். மிக்கதுணையும் - எவ்வளவுமிகுகிறதோ அவ்வளவுவரையி லும். உவமையாற்றல் - உபமானத்தின்சக்தி. பொருள்படைகளால் மிகு தல் - செல்வம் சேனை என்பவற்றால் அதிகப்படுதல். வெள்ளம் தனைய, உள்

ளம் தனையது எனப் பதம்பிரித்தலு மொன்று; தனை - அளவு. நீட்டம்-தொழிற்பெயர்; நீடு-பகுதி. இப்பாட்டிலும், உள்ளம் - ஆகுபெயர். (சு)

சுகூசு. உள்ளுவ தெல்லா மூயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(இ - ள்.) உள்ளுவது எல்லாம் - (அரசராயினுர்) கருதுவ தெல்லாம், உயர்வு உள்ளல்-(தம்)உயர்ச்சியையே கருதுக; அது - அவ்வுயர்ச்சி, தள்ளின் உம் - (பால்வகையாற்) கூடிற்றில்லையாயினும், மற்று தள்ளாமை நீர்த்து - அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து; (எ - று.)

உம்மை, தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளியவழியும் தாளாண்மையில் தவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின் தள்ளாவியற்கைத்து என்பதாம். மேல் 'உள்ளத்தனைய துயர்வு' என்றதனையே வற்புறுத்தியவாறு.

(சு - ரை.) பால் வகையால் - விதிவசத்தால். அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து - தாம்உயரவேண்டுமென்ற அவ்வெண்ணம் ஒழிக்கப்படாத தன்மையுடையது. தள்ளாமை-(ஊக்கமுடையார்க்கு உயர்ச்சிஉண்டாவது) தவருமை. உம்மை - தள்ளினும் என்ற இடத்திலுள்ளது: இது - விகற்பப் பொருளது. தள்ளியவழியும் - உயர்ச்சி தவறியவிடத்தும். தாளாண்மையில் தவறு இன்றி - முயற்சியிற் பின்வாங்குதலில்லாமல். உயர்ச்சியிற் கருத்து இருபபின், அது கைகூடாவிடினும், உயர்ச்சி பெற்றாற்போல நல்லோரால் மதிக்கப்படுதலால், தள்ளாமை நீர்மைத்து என்ற தென்க. மேல் என்றது கீழ்க்குறளை. உள்ளுவது எல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். நீர்த்து - நீர்மையென்னும் பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. (சு)

சுகூஎ. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டின்றுங் களிறு.

(இ - ள்.) களிறு—, புதை அம்பின் - புதையாகிய அம்பால், பட்டு - புண்பட்டவிடத்து, பாடு ஊன்றும் - (தளராது) தன்பெருமையை நிலைநிறுத்தும்; (அதுபோல), உரவோர் - ஊக்கமுடையார், சிதைவுஇடத்து - (தாம் கருதிய உயர்ச்சிக்குச்) சிதைவு வந்தவிடத்து, ஒல்கார் - தளராது (தம் பெருமையை) நிலைநிறுத்துவர்; (எ - று.)

புதை - அம்புக்கட்டு; பன்மை கூறியவாறு. பட்டால் என்பது பட்டு எனத் திரிந்துநின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடூன்றுதல் உரவோருடனும் சென்று இயைந்தன. தள்ளினும் தவருது உள்ளியது முடிப்பர் என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(சு - ரை.) களிறு - ஆண்யானை. புதையம்பு - அம்புகளின் தொகுதியென்றபடி. சிதைவு - கேடு. பன்மை - பலஅம்புக ளென்பது. பட்டு - எச்சத்திரிபு. உபமேயத்தின் அடைமொழியாகிய ஒல்காமையை உபமானத்துக்

கும், உபமானத்தின் அடைமொழியாகிய பாடுன்றுதலே உபமேயத்துக்கும் எடுத்துக்கூட்டினர். தள்ளினும் - உயர்ச்சி தவறினாலும். தவறாது - முயற்சி தவறாமல் நின்று. உள்ளியது முடிப்பர் - நினைத்தகாரியத்தை நிறைவேற்றுவர். எடுத்துக்காட்டுவமையணி. உரவோர் - மனோபலமாகிய ஊக்கத்தினையுடையோர். ''வேழக்குரித்தே விதந்து களிறென்றல்'' என்பது, தொல்காப்பியம்; இதன் பெண்பால் - பிடி. (எ)

ருக்கூ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாத அரசர், உலகத்து - இவ்வுலகத்தாருள், வள்ளியம் என்னும் செருக்கு - (யாம்) வண்மையுடையேம் என்று தம்மைத் தாம் மதித்தலே, எய்தார் - பெறார்; (எ - று.)

ஊக்கம் இல்லையாகவே, முயற்சி பொருள் கொடை செருக்கு இவை முறையே இலவாம் ஆகலின், 'செருக்கு எய்தார்' என்றார். கொடைவென்றியினுய இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனுகாமையின், தன்மையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) வண்மை - ஈகைக்குணம். ஊக்கத்தினுல் முயற்சியும், முயற்சியால் பொருளும், பொருளால் கொடையும், கொடையால் செருக்கும் முறையே உளவாம்: ஊக்கமில்லாமற்போனுல், முயற்சி முதலியன அடைவே இல்லாமற் போமென்க. கொடை வென்றியின் ஆய - கேட்டவர்க்குக் கேட்டதை யெல்லாங் கொடுத்த லாகிய சயத்தா லாகிற. புலனுகாமை - வெளியாகாமை. தன்மை - வள்ளியமென்பது; இது-உயர்வுபற்றி வந்த தனித்தன்மைப்பன்மையாம். (அ)

ருக்கூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(இ - ள்.) பரியது-(எல்லாவிலங்கினும் தான்) பேருடம்பினது: (அதுவேயு மன்றி), கூர் கோட்டது-கூரியகோட்டையும் உடையது: ஆயினும்—, யானை—, புலி தாக்குறின் - (தன்னைப்) புலி எதிர்ப்படின், வெரூஉம் - (அதற்கு) அஞ்சும்; (எ - று.)

பேருடம்பான், வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியும் கருவிச்சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃது உடைய அதற்கு அஞ்சும் என்ற இது, பகைவரின்மிக்க மெய்வலியும் கருவிச்சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃதுடையஅரசர்க்கு அஞ்சுவ ரென்பது தோன்ற நின்றமையின், பிறிதுமொழிதல்.

(கு - ரை.) விலங்கு - மிருகம். கோடு - கொம்பு; தந்தம். மெய்வலி - தேகபலம். கருவிச்சிறப்பு என்றது, தந்தத்தின் கூர்மையை. அஃது உடைய-ஊக்கத்தையுடைய. அரசர்க்குக் கருவிச்சிறப்பு-ஆயுதபலம். உபமேயத்தைக் கூறாமல் உபமானத்தைமாத்திரங் கூறி அதனுல் உபமேயத்தைப் பெறவைத்தல், 'பிறிதுமொழிதல்' என்னும் அணியாம். பரியது என்னும் ஒன்றன்பாற்

குறிப்புவினையாலணையும்பெயரில், பருமை - பகுதி. கூர்ங்கோட்டது— கூர்மையதாகிய கோட்டையுடைய தென விரிதலால், பண்புத்தொகை. உம் - உயர்வு சிறப்பு. வெரூஉம்=வெருவும். தாக்குறும் என்பதில், உறு - துணைவினை. (கூ)

கூ00. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(இ - ள்.) ஒருவற்கு—, உரம்-திண்ணியஅறிவாவது,—உள்ளம் வெறுக்கை - ஊக்கமிருதி; அஃது இல்லார் - அவ்வூக்கமிருதியில்லாதார்,—மரம் - (மக்களாகார்) மரங்களாவார்; வேறு மக்கள் ஆதல் ஏ - (சாதிமரங்களோடு இம்மரங்களிடை) வேற்றுமைவடிவு மக்கள்வடிவே, (பிறிதில்லை); (எ - று.)

உரம் என்பது அறிவாதல் "உரனென்னுந் தோட்டியான்" என்பதனானும் அறிக. மரம் என்பது - சாதியொருமை. மக்கட்குஉள்ள நல்லறிவும் காரியமுயற்சியும் இன்மைபற்றி 'மரம்' என்றும், மரத்திற்குஉள்ள பயன்பாடின்மைபற்றி 'மக்களாதலே வேறு' என்றுங் கூறினர். பயன் - பழம்முதலியவும், தேவர்கோட்டம் இல்லம் தேர் நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய.

இவை மூன்றுபாட்டானும், ஊக்கமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

(கு - ரை.) திண்ணிய - வலிய. 'உள்ள வெறுக்கை' என்பது-உள்ளம் வெறுக்கை எனப் பிரித்து, உள்ளம் என்பது - ஆகுபெயரால் ஊக்கத்தையும், வெறுக்கையென்பது - வெறுக்கப்படுவதென்ற காரணப்பொருள்பற்றி மிகுதியையுங் குறிக்கும். மக்கள் ஆகார் - மனிதராகார். சாதிமரம் என்றது, சாதாரணவிருக்ஷங்களை. இம்மரங்களிடை என்றது, ஊக்கமில்லாதவர்க்கு என்றபடி. வேற்றுமை வடிவு-வித்தியாசங்காட்டும் வடிவம். மக்கள்வடிவே-மனுஷ்யரூபம் மாத்திரமே. ஊக்கமில்லாத மனிதர்க்கு மரத்தோடு ஒப்புமை கூறி, மரம்போல இவர் பயன்படாமையாகிய வேற்றுமையையும் தோன்ற வைத்ததனால், இது-வேற்றுமையணி. "உரனென்னுந் தோட்டியான்" என்பது, கீழ் நீத்தார்பெருமையில் நான்காம்பாட்டின் தொடக்கம்; அங்கு, 'திண்மையென்னுந் தோட்டியால்' என்றும், 'திண்மை - ஈண்டு அறிவின்மேற்று' என்றும் உரைத்துப்போந்தார் பரிமேலழகர். பயன்பாடு - பயன்படுதல். தேவர்கோட்டம் - தேவாலயம். இல்லம் - வீடு. நாவாய் - மரக்கலம். ஒருவற்கு உள்ள வெறுக்கை உரம் என்று எடுத்து-ஒருவனுக்கு நிலைபெற்ற செல்வமாவது ஊக்கம் என்றும் பொருள்கொள்ளலாம். ஏ - பிரிநிலை. வேறு - வேறுபாடு. (கஅ)

கூக - ஆம் அதிகாரம்.—மடியின்மை.

அஃதாவது-கருதியன செய்யுங்கால் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடிவருதல்நோக்கி, இஃது ஊக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) கருதியன செய்யுங்கால் - செய்ய நினைத்த காரியங்களைச் செய்யும்பொழுது. ஊக்கம் - மனம் மெலிதலில்லாமல் தொழில்செய்தலிற்

கிளர்தல், உற்சாகம். ஒரோவழி-ஒவ்வொருசமயத்தில். [ஒரோர்வழி என்பது ஒரோவழி என மருவியதுபோலும்; ஒரோவிடத்து முதலியவற்றையும் இங்ஙனமே கொள்க.] குணவயத்தான்-சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்னும் மூன்றுகுணங்களுக்கு வசப்படுதலால். வயம்=வசம். சோம்பல் - தாமசகுணத்தின் காரியம். ஊக்கமுடையார்க்குச் சோம்பலில்லாமை இன்றியமையாத தென்பது, அதிகாரமுறைமைக்குக் காரணம்.

சூ0க. குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

(இ - ள்.) குடி என்னும்-(தான் பிறந்த) குடியாகிய, குன்ற விளக்கம்-நந்தாவிளக்கு,—மடி என்னும் - (ஒருவன்) மடியாகிய, மாசு-இருள், ஊர - அடர, மாய்ந்து கெடும் - நந்திப்போம்; (எ - று.)

உலகநடை உள்ள துணையும் இடையறாது தன்னுட்பிறந்தாரை விளக்குதலின், குடியை 'குன்றுவிளக்கம்' என்றும்; தாமதகுணத்தான் வருதலின், மடியை 'மாசு' என்றும்; அஃது ஏனையிருள்போலாது அவ்விளக்கத்தைத் தான் அடர்ந்துமாய்க்கும் வலியுடைமையின், 'மாசூரமாய்ந்துகெடும்' என்றுங் கூறினர். கெடுதல் - பெயர்வழக்கமும் இல்லையாதல்.

(கு - ரை.) குடி - குடும்பம். நந்தாவிளக்கு - ஒளிமழுங்காத தீபம். ஒருவன் மடி - ஒருவனது சோம்பல். அடர - நெருங்குதலால். நந்திப்போம் - முன்னர் மழுங்கிவந்து பின்பு அழியும். உலகநடையுள்ளவளவும் - லோகத்தின் நிகழ்ச்சி உள்ளவரையிலும்; பிரளயகாலமளவும். இடை அறாது-இடைவிடாமல். விளக்குதல் - விளங்கச்செய்தல். தாமசகுணமெனினும் தமோகுணமெனினும் ஒக்கும். அக்குணம் - கருநிறமுடையதும் பொருள்களின் உண்மைநிலையைத் தோன்றுதபடி மறைப்பது மாதலால், அக்குணத்தின் காரியமாகிய சோம்பல், கருநிறமுடையதும் பொருள்களைமறைப்பதுமாகிய இருளெனப்பட்டது; காரணத்தின்தன்மை காரியத்திலுந் தொடருமென்பது, நூல்துணிபு. அஃது - சோம்பலாகிய இருள். ஏனை இருள்போலாது-மற்றை உலகத்துச் சாதாரண இருள்போல விளக்கொளியால் தான் அழிக்கப்படாமல். அவ்விளக்கத்தை - குடியாகிய விளக்கை. பெயர்வழக்கமும் இல்லையாதல் - அக்குடியின் பேர்மாத்திரமும் வழங்காமற்போகுதல். ஒருவனது குடிவாழ்க்கை சோம்பலுடைமையால் இருந்தவிடமுந் தெரியாமல் முற்றக்கெடுமென்பது கருத்து. குடியினிடத்து விளக்கின்தன்மையையும் மடியினிடத்து இருளின் தன்மையையும் ஏற்றிக்கூறியது உருவகவணி. அநித்தியமான மற்றைவிளக்குக்களினும் வேறுபாடுதோன்ற 'குன்றுவிளக்கு' என விசேடித்தும், விளக்கின்முன் வலியிலதான மற்றையிருளினும் வேறுபாடு தோன்ற 'மடியென்னுமாசு' என விதந்தும் கூறினர். (க)

சூ0உ. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

(இ - ள்.) குடியை-(தாம் பிறந்த) குடியை, குடி ஆக - (மேல்மேல்உயரும்) நற்குடியாக, வேண்டுபவர் - வேண்டுவார்,—மடியை மடிஆ ஒழுகல் - மடியை மடியாகவே (கருதி முயற்சியோடு) ஒழுகுக; (எ - று.)

'முயற்சியோடு' என்பது, அவாய்நிலையான் வந்தது. நெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி, 'நெருப்பை நெருப்பாகவேகருதுக' என்றாற்போல; மடியின் தீயது பிறிதின்மைபற்றி, பின்னும் அப்பெயர்தன்னையே கூறினார். 'அங்ஙனங்கருதி அதனைக்கடிந்து முயன்றுஒழுகவே தாம் உயர்வர்; உயரவே, குடிஉயரும்' என்பார், 'குடியைக் குடியாகவேண்டுபவர்' என்றார். அங்ஙனம் ஒழுகாக்கால் குடி அழியும் என்பது கருத்து. இனி, 'மடியா' என்பதனை வினையெச்சமாக்கி, கெடுத்தொழுகுக வென்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) நற்குடி ஆக வேண்டுவார் - நல்லகுடியாகும்படி (செய்ய) விரும்புபவர். ஒழுகுக - நடக்கக்கடவர். 'ஒழுகல்' என்ற வினை இங்கு ஒரு விசேடணத்தை வேண்டிநின்றமையால் 'முயற்சியோடு' என்பதுவருவிக்கப் பட்டது: இது, அவாய்நிலை: வடமொழியில் அத்யாஹாரம் எனப்படும்.நெருப்பின் - நெருப்பைக்காட்டிலும். மடியின்-மடியைக்காட்டிலும். பின்னும், 'அப்பெயர்தன்னையே கூறினார்' என்றது, பின்னும் மடி என்று கூறியதை. அதனைக் கடிந்து - மடியை ஒழித்து. அங்ஙனம் ஒழுகாக்கால் - சோம்பலையொழித்து முயற்சிசெய்து நடவாவிட்டால். மடி, குடி என்பன இரண்டிடத்தும் ஒரேபொருளில் வந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணியாகும். முதலுரைக்கு, மடியா என்றது தொடர்மொழியும், அதில் ஆஎன்பது ஆக என்பதன் விகாரமுமாம்; இரண்டாம் உரைக்கு, மடியா என்றது செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்த காலவினையெச்சம். ஒழுகல், அல்-விகுதி உடன்பாட்டு வியங்கோளில் வந்தது; "மக்கட்பதடியெனல்" என்ற விடத்திற்போல. ஆக - காரியப்பொருட் செயவெனெச்சம்; எதிர்காலம். (உ)

கூoஙூ. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

(இ - ள்.) மடி - (விடத்தகுவதாய) மடியை, மடி கொண்டு - தன்னுள்ளே கொண்டு, ஒழுகும்—, பேதை - அறிவில்லாதான்,—பிறந்த—,குடி—, —தன்னினும்-அவன்தன்னினும், முந்து மடியும்-முந்துற அழியும்;(எ - று.)

அழிவுதருவதனை அகத்தேகொண்டு ஒழுகுதலின் 'பேதை' என்றும், அவனுல் புறந்தரப்படுவதாகலின் 'குடி தன்னினும்முந்துறஅழியும்' என்றுங் கூறினார். ஆக்கத்திற் பிற்படினும் அழிவில் முற்படுமென்பதாம்.

(கு - ரை.) அவன்தன்னினும் முந்துற - அக்குடியிற்பிறந்தவனுடைய மடியைத் தன்னிடங்கொண்டொழுகும் பேதையான அவனிறத்தலினும் முன்னுக. அழிவுதருவதனை - தீங்குவிளைப்பதை; சோம்பலை. அகத்தே - தன்னிடத்திலே. புறந்தரப்படுவது - பாதுகாக்கப்படுவது. குடிவாழ்க்கை ஒருவனுற் பாதுகாக்கப்படுவ தாதலால் அதன் அபிவிருத்தி அவனது உற்பத்தியினும் பிற்பட்டதாகவே யிருக்கும்; அவன் அதனைப் பாது

க்காவாவிட்டாலோ, அதனழிவு அவனழிவுக்கு முற்பட்டுப்போம்: அதாவது - ஒருவன்பிறந்தபின் தலையெடுக்கிற குடி அவனதுசீவதசையிலேயே அழியுமென்க. முதலடியில் மடியெனவந்த சொல் இரண்டனுள், முந்தியது - சோம்பல்; பிந்தியது வயிற்றின் பெயர் - இலக்கணையால், உள்என்றபொருளில் வந்தது. இனி, மடிமடி என்பதனை வினைத்தொகையாகக் கொண்டு, அதற்கு - விடத்தகுவதாகிய சோம்பலென்று பொருள்கூறி, 'தன்னுள்ளே' என்பதனை வருவித்ததாக்குவாரும் உளர். (கூ)

கூ0ச. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(இ - ள்.) மடி மடிந்து - மடியின்கண்ணே வீழ்தலான், மாண்ட - திருந்திய, உஞற்று-முயற்சி, இலவர்க்கு - இலராயினார்க்கு,—குடி மடிந்து - குடியும்மடிந்து, குற்றம் பெருகும் - குற்றமும் பல்கும்; (எ - று.)

'மடிந்து'எனத் திரிந்துநின்ற வினையெச்சம், 'இலவர்' என்னுங் குறிப்பு வினைப்பெயர்கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப.

இவைநான்குபாட்டானும், மடியின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) மடியின்கண்ணே வீழ்தலான்-சோம்பலில் அழுந்தியதனால். திருந்திய - சீர்திருத்தமான. மடிந்து - கெட்டு. பல்கும் - மிகுதியாக உண்டாம். திரிந்துநின்ற வினையெச்சம் - மடிய என்னும் காரணப்பொருட்செய வெனெச்சம் திரிந்த தென்க; இது, 'மடிமடிந்து' என்றவிடத்தில் உள்ளது. வினைப்பெயர் - இங்கே வினையாலணையும்பெயர். முன்னர் - அடுத்த நான்கு குறள்களில். கூறுப - சொல்வர். 'குடிமடிந்து' என்றதில் உள்ள மடிந்து என்றதும் - செயவெனெச்சத்திரிபாம். (ச)

கூ0ரு. நெடுநீர் மறவி மடிதுயி லைன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(இ - ள்.) மடி - மடியும், நெடுநீர் - (விரைந்துசெய்வதனை) நீட்டித்துச் செய்யும் இயல்பும், மறவி-மறவியும், துயில்-துயிலும், நான்குஉம் - (ஆகிய) இந்நான்கும்,—கெடும் நீரார் - இறக்கும் இயல்பினையுடையார், காமம் - விரும்பியேறும், கலன் - மரக்கலம்; (எ - று.)

முன்னிற்கற்பாலதாய மடி, செய்யுள்நோக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு, அதன்கண்நிகழ்வதாய செயல்மேல் நின்றது. காலநீட்டத்தையுடைய செயல்முதல்மூன்றும், தாமதகுணத்தில் தோன்றி உடன்நிகழ்வனவாகலின், மடியொடு ஒருங்கு எண்ணப்பட்டன. இறக்கும்இயல்பு - நாள்உலத்தல். 'இவை, துன்புறுநீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர்விரும்பிக்கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், 'நாளுலந்தார்க்கு ஆக்கம்பயப்பதுபோன்று காட்டி அவர்விரும்பியேறியவழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினை யொக்கும்' என்னும் உவமைக்குறிப்பு, 'காமக்கலன்' என்னுஞ்சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு-'விரும்பிப்பூணும்ஆபரணம்' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யும் இயல்பு - காலதாமசஞ் செய்யுந் தன்மை: இது, வடமொழியில் 'தீர்க்கஸூத்ரதா' எனப்படும். மறவி - மறப்பு. துயில் - தூக்கம். முன்நிற்கற்பாலதாய - (இவ்வதிகாரம் மடியின்மையாதலால்)முதலில்வைத்தற்குத் தக்கதான. நீண்ட இயல்பு என நேரிற்பொருள்படும் நெடுநீர் என்றசொல்-காலநீட்டித்துச்செய்தலென்ற பொருளில் வந்ததற்குக் காரணங் கூறுகிறது, 'நெடுமையாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயல்மேல்நின்றது' என்ற வாக்கியம். காலப்பண்பு-காலத்திற்குரியகுணம். அதன்கண் - அக்காலத்தில். இது, காலத்தின்குணம் அதில்நிகழும் பொருள் மேல் ஏற்றிக் கூறப்பட்ட உபசாரவழக்காம். காலநீட்டத்தையுடையசெயல் - காலதாமதத்தையுடைய காரியம். செயல்முதல் மூன்று-நெடுநீர், மறவி, துயில் என்பன. உடன்நிகழ்வன-கூடவே நடப்பன. மடியென்பது-ப்ரஸ்துதம்: [சொல்லப்படவேண்டிய விஷயம்]: நெடுநீர் முதலிய மற்றை மூன்றும்-அப்ரஸ்துதம்: இவைகளே யெல்லாஞ் சேர்த்து 'நெடுநீரார் காமக்கலன்' என்று ஒரு பொதுத்தன்மை கொடுத்துக் கூறியது-தீவகவணியின்பாற் படும். நாள் உலத்தல் - ஆயுள்நாள்கழிதல். துன்புறுநீரார்க்குத்துன்பமனுபவிக்குந் தன்மையுடையவர்க்கு. விரும்பிக்கொண்டவழி-(இத்தீக்குணங்களை) விரும்பியேற்றுக்கொண்டபொழுது. வீழ்த்தலின்-தள்ளுதலால். நாள் உலந்தார்-வாழ்நாள் கழிந்தவர். ஆக்கம் பயப்பது-நன்மைதருவது. உவமைக்குறிப்பு - உபமானத்தைப்பற்றின விவரம். நெடுநீர் மறவி மடி துயில் நான்கும் காமக்கலன்போலு மென்னுது காமக்கலனென்று அபேதமாகக் கூறியது - காட்சியணி. (கூ)

கூஉசூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(இ - ள்.) படி உடையார் - நிலம்முழுதும் ஆண்டாரது, பற்று - செல்வம், அமைந்தக்கண்ணும் - தானேவந்து எய்தியவிடத்தும், மடி உடையார்—, (அதனால்), மாண் பயன்-மாண்டபயனை, எய்தல்-எய்துதல், அரிது-இல்லை.

உம்மை - எய்தாமைவிளக்கிநின்றது. மாண்பயன்-பேரின்பம். அச்செல்வம், அழியாமற் காக்கும் முயற்சி இன்மையின் அழியும்; அழியவே, தம்துன்பம் நீங்காது என்பதாம். இதற்கு - 'நிலம்முழுதும் உடைய வேந்தர்துணையாதல் கூடியவிடத்தும்' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) நிலம்முழுதும் ஆண்டார் - பூமிமுழுவதையும் அரசாட்சி செய்த சக்கரவர்த்திகள். எய்திய இடத்தும் - சேர்ந்தாலும். அதனால் - அச்செல்வத்தால். மாண்ட - சிறந்த. 'படியுடையார் பற்றமைந்தக்கண்ணும்' என்ற உம்மையால், சோம்பேறிகளுக்கு அப்படிப்பட்ட செல்வம் கிடைக்காதென்பது விளங்கும்; உயர்வுசிறப்பும்மை, எதிர்மறைகுறிக்கின்றது. உம்மை-உம் என்ற இடைச்சொல். எய்தாமை - கிடைக்காமை. பற்று - செல்வமும், துணையுமாம்; பற்றப்படுவதென்றகாரணம்பற்றிய பெயர்: பற்றுதல் - விரும்புதல், அடைதல். படியுடையார் பற்றமைந்தக்கண்ணும் என்ற இடத்து இர

ண்டுவகையாகக்கூறிய உரைகளைக் கவனிக்க. அமைந்தக்கண்-எதிர்காலவினையெச்சம். மாண்பயன் - பண்புத்தொகை. (கூ)

கூ0எ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றிலா வர்.

(இ-ள்.) மடி புரிந்து-மடியை விரும்புதலான், மாண்ட—, உஞற்று-முயற்சி, இலவர் - இல்லாதார்,—இடி புரிந்து - (தம்மட்டார் முன்) கழறுதலை மிகச்செய்து, (அதனைப் பயன்காணுமையின் பின்), எள்ளும் - இகழ்ந்து சொல்லும், சொல் - சொல்லை, கேட்பர்—; (எ - று.)

'இடி' என்னும் முதனிலைத்தொழிற்பெயரான், 'நட்டார்' என்பது பெற்றும். அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லும் ஆற்ற லின்மையின், 'கேட்பர்' என்றார்.

(கு - ரை.) மாண்ட - சிறந்த. நட்டார் - சினேகிதர். முன் - முன்பு; காலம். கழறுதலை மிகச்செய்து-இடித்திடித்து உறுதிமொழிகூறுதலை மிகுதியாகச்செய்து. அதனால் பயன்காணுமையின் - அந்த மிக்க உபதேசத்தால் இவர்களிடத்தில் யாதொருபிரயோசனமும் உண்டாகக் காணுமையால். 'காணுமையின்' என்றது, 'சொல்லும்' என்பதனோடு இயையும். முதனிலைத்தொழிற்பெயர் - பகுதியே தொழிற்பெயர்ப்பொருளில் வருவது; [முதனிலை - பகுதி: பகுபதத்தின் முதலில் நிற்பது.] முடிந்தது - அமைந்தது. மாறு சொல்லும் ஆற்றல் - பிரதியுத்தரஞ்சொல்லுந்திறமை. மடிபுரிந்து என்பதில், புரிந்து - எச்சத் திரிபு: இது 'இலவர்' என்றதைக் கொள்ளும்; கீழ் கூ0ச - ஆங் குற ளுரையிற் காண்க. சோம்பேறிகள் முதன்முதலில் தம்சினேகிதரால் இடித்திடித்து நன்மதி கூறப்பட்டு அதனால் ஒருபயனையும் காணுமையால் பின்பு அவராலேயே பழித்துக்கூறப்படுவ ரென்பதாம். (எ)

கூ0அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞென்ஞர்க்
கடிமை புகுத்தி விடும்.

(இ - ள்.) மடிமை - மடியினதுதன்மை, குடிமைக்கண் - குடிமையுடையான் கண்ணே, தங்கின்-தங்குமாயின், (அஃது, அவனை), தன் ஒன்ஞர்க்கு-தன்பகைவர்க்கு, அடிமை - அடியனுந்தன்மையை, புகுத்திவிடும் - அடைவித்துவிடும்; (எ - று.)

மடியினதுதன்மை-காரியக்கேடு. குடிமை-குடிசெய்தல்தன்மை. அஃது அதனையுடைய அரசன்மேற்றாதல், 'தன்ஞென்ஞர்க்கு' என்றதனால் அறிக. அடியனுந்தன்மை - தாழ்ந்துநின்று ஏவல்கேட்டல்.

இவைதான்குபாட்டானும், *அக்குற்றங்கள் கூறப்பட்டன.

(கு - ரை.) காரியக்கேடு - செய்தொழிலழிதல். குடிசெய்தல் - குடிவாழ்க்கையை விருத்திபண்ணுதல். 'குடிப்பிறப்புக்குத்தக்க ஒழுக்கம், குடிமை; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்ற ரென்பது' என்பதை,

* பி - மீ: மடிமைக்குற்றங்கள்

''பிறப்பே குடிமை'' என்ற தொல்காப்பியச்சூத்திரவுரையிற்காண்க. அஃது அதனையுடைய அரசன்மேற்றுதல் 'தன் ஒன்னார்க்கு'என்றதனால் அறிக. தன் பகைவர்க்குஎன வருதலால் குடிமையென்றசொல் குடிமையுடைய அரசனை யுணர்த்துதல் விளங்குமென்க. தாழ்ந்து - கீழ்ப்பட்டு, வணங்கி. எவ்வகேட்டல்-அவர் எவிய கட்டளையைக் கேட்டு அதன்படி நடத்தல். சோம்பலுடைய அரசன் பகைவர் வசப்படுவான் என்பது கருத்து. சுஅச-ஆம் குறளினுரையில் 'குற்றங்கள் முன்னர்க்கூறுப' என்று எழுதியதனால், மடிமைக் குற்றங்களே இங்கு அக்குற்றங்கள் என்று சுட்டினர்: அக்குற்றம் - சோம்பலாலுண்டாகிற குற்றம். மடிமை, குடிமை, அடிமை என்றவற்றில், மை - தன்மையுணர்த்தும் விகுதி. குடிமை-பண்பாகுபெயர்; இங்ஙனங்கொள்ளுதல், நச்சினர்க்கினியர்க்கு உடன்பாடன்று: ''குடிமை யாண்மை***, அஃறிணைமருங்கிற் கிளந்தாங்கியலும்'' என்ற தொல்காப்பியச் சூத்திர வுரையைக் காண்க. (அ)

சுஅகூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(இ - ள்.) ஒருவன்—, மடி ஆண்மை - (தன்)மடியாளுந்தன்மையை, மாற்ற - ஒழிக்கவே,—குடி ஆண்மையுள் வந்த குற்றம் - அவன்குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள், கெடும்—; (எ - று.)

மடியாளுந்தன்மை-மடியுடைமைக்கு ஏதுவாய தாமதகுணம்.'குடியாண்மை' என்பது - உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றம் என்றது, மடியான் அன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்கு மென்பதாம்.

(கு - ரை.) மடியாளுந்தன்மை-சோம்பலுடையவனுகும் இயல்பு. 'ஆண்மையாவது-ஆளுந்தன்மை; இவ்வாண்மை, ஆளுந்தன்மையேயன்றி ஆண்பாலாகிய தன்மையையும் உணர்த்தும்: இனி, ஆண்மையை ஆள்வினையென்றும் உரைப்ப'எனத் தொல்காப்பியவுரையில் நச்சினர்க்கினிய ருரைத்ததை இங்கே அறிக. குடியாண்மையுள் என்றதொடர் - குடியுள்ளும் ஆண்மையுள்ளும் என விரிதலால், உம்மைத்தொகை. மடியானன்றி - சோம்பலினாலல்லாமல். உயர்திணையும்மைத்தொகைக்குப் போல அஃறிணையும்மைத் தொகைக்குப் பன்மை விகுதிபெற்றே வரவேண்டு மென்னும் நியதி இல்லாமையால், 'குடியாண்மை' என ஒருமையாக நின்றது. (கூ)

சுஅகo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ஞாலத் தெல்லா மொருங்கு.

(இ - ள்.) அடி - (தன்) அடியளவானே, அளந்தான் - எல்லாவுலகையும் அளந்த இறைவன், தாயது எல்லாம்-கடந்த பரப்புமுழுவதையும்,—மடி இலா மன்னவன் - மடியிலாத அரசன்,—ஒருங்கு எய்தும் - (முறையான் அன்றி) ஒருங்கே எய்தும்; (எ - று.)

'அடியளந்தான்'என்றது, வாளா பெயராய் நின்றது. தாவியது என்பது இடைக்குறைந்துநின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயறலின், இடையீடின்றி எய்தும் என்பதாம்.

இவையிரண்டு பாட்டானும், மடியிலாதான் எய்தும் பயன் கூறப் பட்டது.

(கு - ரை.) அடியளவானே-காலினளவைக்கொண்டு. இறைவன்-தலை வன்; நிருமால்: திரிவிக்கிரமமூர்த்தி. கடந்த - தாவிஅளந்த. பரப்பு - விசாலமான இடம். பரப்புமுழுதையும் - உலகமனைத்தையும் என்றபடி. முறையான் அன்றி-ஒருபிறப்பில் ஒருலகையும் மற்றொருபிறப்பில் மற்றோரு லகையுமாக இங்ஙனம் முறைமையாலல்லாமல். ஒருங்கே எய்தும் - ஒருசேர அடைவான். பின்னே 'தாயதெல்லாம்' என வருதலால், முன்னே 'அடியளந் தான்' என்றது-அவ்வரலாற்றைக் குறிக்காமல் திருமாலென்றமாத்திரமாய் நின்ற தென்க. வாளா பெயராதல் - வெறும்பெயர்மாத்திரமாதல். 'தாவிய தென்பது' என்று தொடங்கிய வாக்கியத்தால், 'தாவுஎன்பதே பகுதி, தா என்னும்பகுதி உகரச்சாரியையைபெற்றதன்று' என்பது பரிமேலழகர்கொள்கை யெனத் தெரிகிறது. வினையின்கண்ணே முயறலின் - தொழிலில் முயற்சி செய்தலால். இடையீடு இன்றி - இடையில் விட்டிடுதலில்லாமல். மன்ன வன் எய்தும் - செய்யுமென்னும் வினைமுற்று ஆண்பாலிற் சென்றது. தாயது எல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். தாயது என்றது - சாதியொருமையாய் உலகங்களையுணர்த்து மென்க. இனி, எல்லாம் என்பது-இங்கே பொருளின் பன்மை குறியாது பொருளின் பலவிடங்குறித்ததென்றும், எஞ்சாமைப் பொருளில் வருவதோர் உரிச்சொலென்றுங் கொள்வதும் ஒன்று. தாஅயது - அளபெடை, செய்யுளோசைநிறைக்க வந்தது. (கo)

கூஉ - ஆம் அதிகாரம்.—ஆள்வினையுடைமை.

அஃதாவது-இடைவிடாத மெய்ம்முயற்சியுடையதுதல். அஃது, ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சி யானன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மெய்ம்முயற்சி - தேகபரிசிரமத்தாற் செய்யும் பிரயத்தனம். முயற்சியாகிய காரணத்தால் தொழிலையாளுந்தன்மை உண்டாதல்பற்றி, அந்தஆள்வினையென்ற காரியத்தின்பெயரால் முயற்சியைக் குறித்தது, காரி யப்பெயர் காரணப்பெயராகவந்த உபசாரவழக்கு. மடிகெடுத்தாலும் - சோம் பலையொழித்தாலும். ஆள் வினை - வினைத்தொகை.

கூக. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(இ - ள்.) (தம் சிறுமைநோக்கி), அருமை உடைத்து என்று-(நாம் இவ் வினை முடித்தல்) அருமையுடைத்து என்று கருதி, அசாவாமை வேண்டும் - தளராதொழிக; பெருமை - (அதுமுடித்தற்கேற்ற) பெருமையை, (தமக்கு), முயற்சி—, தரும் - உண்டாக்கும்; (எ - று.)

'சிறுமைநோக்கி' என்பது 'பெருமைதரும்' என்றதனானும், 'வினைமுடி த்தல்' என்பது அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. விடாதுமுயல, நாம் பெரிய ராவர்; ஆகவே, அரியனவும் எளிதின்முடியு மென்பதாம்.

(கு - ரை.) சிறுமை பெருமை என்றது-செல்வம் தூணை சேனைமுதலிய வற்று லாவதை. அதுமுடித்தற்கு ஏற்ற - அத்தொழிலைமுடிப்பதற்குத் தக்க. அதிகாரத்தானும்-அதிகாரம் 'ஆள்வினையுடைமை' என்பதாதலாலும். 'அசா வாமைவேண்டும்' என்பதை ஒருசொல்லாகக்கொண்டு, 'தளராதொழிக' என்று உரைத்தார். இதற்கு 'அரசர்' என்பது - தோன்றுஎழுவாய். இனி, அசாவாமை வேண்டும்என இருசொல்லாகக்கொண்டு, தளராமை இன்றிய மையாதது என எழுவாயும் பயனிலையுமாக வுரைப்பினும் அமையும. இவ் வுரைக்கு, வேண்டும்என்பது-ஒருவகைவியங்கோளாம்; இது, நச்சினர்க்கினி யர்கருத்து. இனி, வேண்டப்படும் என்னுஞ் செயப்பாட்டுவினை, அகரச்சாரி யையும் படுவிகுதியும் தொக்கு, வேண்டும் என வந்ததென்று கொள்ளுதலும் ஒன்று. "உண்டோ.....பார்மேல், முயன்றுன் முடியாப்பொருள்"என்றது, இங்குக் காணத்தக்கது. (க)

சுகஉ. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(இ - ள்.) வினை குறை தீர்ந்தாரின் - வினையாகிய குறையைச் செய் யாது விட்டாரை, உலகு தீர்ந்தன்று - உலகம் விட்டது; (ஆதலால்), வினைக் கண் - (செய்யப்படும்) வினைக்கண், வினைகெடல்-தவிர்ந்திருத்தலை, ஓம்பல் - ஒழிக; (எ - று.)

குறை - இன்றியமையாப்பொருள்; அது, "பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே" என்பதனுனும் அறிக. இதற்கு - 'வினை செய்யவேண்டுங் குறையை நீங்கினரின் நீங்கிற்று' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) உலகம் விட்டது-உலகத்தார் அங்கீகரியாமல் நீக்குவர்என்ற படி. வைசேடிகர், பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்பவற் றை அறுவகைப்பொரு ளென்றுற்போல, இங்கே, தொழில் பொருளெனப் பட்டது. அது - குறையென்னுஞ்சொல் செய்யவேண்டுந்தொழிலென்றபொ ருளே யுடையதாதலை. "பயக்குறையில்லை" என்ற மேற்கோள், "படைத்துப் பலபடைப்புப் பலரோ டுண்ணு, முடைப்பெருஞ் செல்வராயினு மிடைப் படக், குறுகுறுநடந்து சிறுசை நீட்டி, யிட்டுந்தொட்டுங் கவ்வியுந் தழந்து, நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்து, மயக்குறு மக்களை யில்லோர்க் குப், பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே" என்ற புறநானூற்றுச் செய்யுளி லுள்ளது. (இச்செய்யுளின் நான்கு ஐந்தா மடிகள், கீழ் "அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள், சிறுகையளாவிய கூழ்" என்ற குறளி னுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.) 'பயக்குறையில்லைத் தாம்வாழு நாளே' என்பதற்கு - 'பயனுகிய முடிக்கப்படும்பொரு ளில்லை, தாம் உயிர் வாழுநாளின்கண்' என்று பொழிப்புரை கூறி, 'குறையென்பது - முடிக்கப் படுங்கால் முடிக்கப்படும்பொருள்' என விசேடவுரையுங் குறித்துள்ளதை அந்நூலுரையிற் காண்க. இதற்கு-இக்குறளில் 'வினைக்குறைதீர்ந்தாரின் தீர்ந் தன் றுலகு' என்ற இரண்டாம் வாக்கியத்திற்கு. இவ்வுரைக்கு, 'குறை' என்

பதற்கு-நிறைவற்றதென்றும், 'நீங்கினாரின்' என்பதற்கு-நீங்கினவரினின்று என்றும் பொருள். இதற்கும், 'உலகு' என்பதே எழுவாய். 'வினை' என்பதை எழுவாயாகக் கொள்ளின், உலகு-உலகத்தில் என்க. 'தீர்த்தாரின்' என்பது-இரண்டாம் உரைக்கு ஐந்தாம்வேற்றுமைவிரியும், முதலுரைக்கு இன் சாரியை பெற்ற இரண்டாம்வேற்றுமைத்தொகையு மாம். ஓம்பல்-அல் ஈற்று உடன்பாட்டு வியங்கோள். தீர்ந்தன்று - உடன்பாட்டு ஒன்றன்பால்முற்று. 'ஓம்பல்' என்பதற்கு, 'அரசன்' - தோன்ற எழுவாய். (உ)

கூகஙூ. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) தாளாண்மை என்னும் - முயற்சியென்று சொல்லப்படுகிற, தகைமைக்கண் - உயர்ந்தகுணத்தின்கண்ணே, தங்கிற்று - நிலைபெற்றது: வேளாண்மை என்னும்-(எல்லார்க்கும்) உபகாரஞ்செய்தலென்னும், செருக்கு-மேம்பாடு; (எ - று.)

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்கு உரியார் முயற்சியுடையாரென்பார் அவ்வக்குணங்கள்மேல்வைத்தும், அது பிறர்மாட்டு இல்லை யென்பார் 'தங்கிற்றே' என்றுங் கூறினர்.

இவையூன்றுபாட்டானும், முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) கைகூடுதலான் - கிடைத்தலால். அவ்வக்குணங்கள்மேல் வைத்து-தாளாண்மையுடையாரே வேளாண்மையுடையவர்என்ற கருத்தைத் தாளாண்மையிலேயுள்ளது வேளாண்மை என அந்தந்தக்குணத்தின்மேல் ஏற்றி. அது பிறர்மாட்டு இல்லை - உபகாரியாந்தன்மை முயற்சியில்லாதவரிடத்து இல்லை. 'தங்கிற்றே' என்ற பிரிநிலையேகாரம், பிரித்து, 'தகைமைக்கண்' என்றதனோடு கூட்டப்பட்டது; இதனை 'குணத்தின்கண்ணே நிலை பெற்றது' என்ற உரையை நோக்கி யறிக. தாளாண்மை வேளாண்மை யென்பன இப்பொருளனவாதலை "தாளாளனென்பான் கடன்படாவாழ்பவன், வேளாளனென்பான் விருந்திருக்கவுண்ணான்" என்ற திரிகடுகத்திலும், "வேளாண்மைசெய்து விருந்தோம்பி வெஞ்சமத்து, வாளாண்மையாலும் வலியராய்த் - தாளாண்மை, தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்" என்ற பழமொழியிலுங் காண்க. செருக்கு - பெருமிதம். (கூ)

கூகச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(இ - ள்.) தாளாண்மை இல்லாதான்-முயற்சியில்லாதவன், வேளாண்மை - உபகாரியாந்தன்மை,—பேடி - (படை கண்டால் அஞ்சும்) பேடி, (அதனிடை), கை வாள் ஆண்மை போல - (தன்) கையில் வாளை யாளுதல் தன்மைபோல, கெடும் - இல்லையாம்; (எ - று.)

ஆள் என்பது - முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப் பணிகோடற்கருத்துடையளாயினும் அது தன் அச்சத்தால் முடியாதவாறுபோல,

முயற்சியில்லாதான் பலர்க்கும் உபகரித்தற்கருத்துடையனாயினும் அது தன் வறுமையான் முடியாது என்பதாம். 'வாளாண்மை' என்பதற்கு - வாளாற் செய்யும் ஆண்மை என்று உரைப்பாரும் உளர்.

இதனான், அஃது இல்லாதானது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) படை - சேனை. வாளையாளுதல் - வாளாயுதத்தை உபயோகித்தல்: வாட்படையைக்கொண்டு போர்த்தொழிலைச் செய்தல். ஆள் என்பது ஆளுதலென்னும்பொருள்பட்டு முதனிலைத்தொழிற்பெயராதல் 'வாளாண்மை' என்றவிடத்தி லென்க. பணிகோடற் கருத்து - தொழில்செய்ய வேண்டுமென்னும் எண்ணம். பணிகோடல் - உபயோகித்தல். இரண்டாம் உரைக்கு, ஆண்மை - ஆடவர்தன்மை, பௌருஷம், பராக்கிரமம். அஃது - முயற்சி. பேடி - பெண்ணுறுப்புமிக்கு ஆணுறுப்புக்குறைந்த நபும்சகம். (௪)

௬௧௫. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(இ - ள்.) இன்பம் விழையான் - (தனக்கு) இன்பத்தை விரும்பானாகி, வினை விழைவான் - வினைமுடித்தலையே விரும்புவான்,—தன் கேளிர் - தன் கேளிராகிய பாரத்தின், துன்பம் - துன்பத்தினை, துடைத்து - நீக்கி, ஊன்றும் - (அதனைத்) தாங்கும், தூண் - தூணாம்; (எ - று.)

இஃது - ஏகதேசவுருவகம். 'ஊன்றும்' என்றது அப்பொருட்டாதல், "மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு" என்பதனானும் அறிக. சுற்றத்தார் நட்டாரது வறுமையுந் தீர்த்து அவர்க்கு ஏமஞ்செய்யும் ஆற்றலையுடையனாம்; எனவே, தன்னைக் கூறவேண்டா வாயிற்று. காரியத்தைவிழையாது காரணத்தைவிழைவான் எல்லாப்பயனும்எய்தும்என்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும்எய்தான் என்பது பெற்றாம்.

இதனால், அஃது உடையானது நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) கேளிர் - சுற்றத்தாரும் நண்பரும். (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களைக்) கேட்பவ ரென்பது பற்றிய காரணப்பெயர்; இதனை 'கேண்மை' என்னும் பண்பினடியாப் பிறந்த தென்னலாம். அதனை - அக் கேளிராகிய பாரத்தை. இங்கே முயற்சியுடையானை 'தூண்' என்றதற்கு ஏற்ப, அவனுறவினரை 'பாரம்' என்னாமையால், ஏகதேசவுருவகம். அப்பொருட்டு - தாங்குமென்னும்பொருளை யுடையது. "மதலையாய்" என்ற மேற்கோள் "சிதலைதினப்பட்ட வாலமரத்தை, மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்குக், குதலைமை தந்தைகட் டோன்றிற் றான்பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்" என்ற நாலடியாரில் உள்ளது; இதில், இரண்டாமடிக்கு- அம்மரத்தின்விழுது தூணாய்நின்று தாங்கினாற்போல என்றுபொருள். அவர்க்கு - சுற்றத்தார் நட்டார் என்ற அவர்கட்கு. ஏமம்செய்யும் ஆற்றலை - பாது காப்புச்செய்யும் வலிமையை. தன்னைக் கூறவேண்டா - தன்னைப்பாது காத்துக்கொள்ளவல்லவ னென்பதைச் சொல்லவேண்டுவதில்லை. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் - முயற்சியின் பயனாகிய இன்பத்தை

விரும்பாமல் அதற்குஏதுவான முயற்சியையே விரும்புபவன். காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் - முயற்சியை விரும்பாமல் இன்பத்தை மாத்திரம் விரும்புபவன். யாதும் எய்தான் - ஒருபயனையும் அடையான். இங்ஙனம் பெற்றது, அருத்தாபத்தி. அஃது உடையான் - முயற்சியுடையவன். (௫)

௬௧௬. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(இ - ள்.) முயற்சி - (அரசர்மாட்டு உளதாய) முயற்சி, திருவினை ஆக்கும் - (அவரது) செல்வத்தினை வளர்க்கும்; முயற்று இன்மை-அஃது இல்லாமை, இன்மை புகுத்திவிடும் - வறுமையை யடைவித்துவிடும்; (எ - று.)

செல்வம் - அறுவகையங்கங்கள். வறுமை - அவற்றான் வறியராதல். அதனை அடைவிக்கவே, பகைவரான் அழிவரென்பது கருத்து.

(கு - ரை.) அரசர்மாட்டு - அரசரிடத்தில். அரசியலாதலால், 'அரசர் மாட்டு' என வருவிக்கப்பட்டது. அஃது இல்லாமை-முயற்சியின்மை. அறுவகை அங்கங்கள்-அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன; "படை குடி கூழமைச்சு நட்பரணாறு, முடையா னரசரு ளேறு" என்றார், கீழ் இறைமாட்சி என்ற அதிகாரத்திலும்; அங்கு, 'ஆறுமுடையான் என்றதனால், அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றாம்; வடநூலார் இவற்றிற்கு அங்கமெனப் பெயர்கொடுத்ததூஉம் அது நோக்கி' என உரைத்ததனால், இவற்றின் இன்றியமையாச்சிறப்பினை யறிக. அவற்றான் வறியராதல் - அவ்வங்கங்களாற் குறைவுபட்டவராதல். அதனை - வறுமையை. முயற்று-முயல் என்னும்பகுதி றுவிகுதிபெற்ற தொழிற்பெயர்.

௬௧௭. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்.

(இ - ள்.) மா முகடி-கரிய சேட்டை, மடி உளாள்-(ஒருவன்) மடியின் கண்ணே உறையும்; தாமரையினாள் - திருமகள், மடிஇலான் தாள் உளாள் - மடியிலாதானது முயற்சிக்கண்ணே உறையும்: என்ப - என்றுசொல்லுவர் (அறிந்தோர்); (எ - று.)

பாவத்தின்கருமை, அதன்பயனாய முகடிமேல் ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும்உடையார்மாட்டு நிலையை அவைதம்மேல்வைத்துக் கூறினார்.

இவையிரண்டுபாட்டானும், அவ்விருமைக்கும் ஏது கூறப்பட்டது.

(கு - ரை.) கரிய சேட்டை - கருநிறமுடைய மூதேவி. சேட்டை - ஜ்யேஷ்டா; மூத்தவள்: இதன் ஏதிர்மொழி-கனிட்டை, இளையவள்; திருப்பாற்கடல்கடைந்தபொழுது அதனினின்று முதலில்கருநிறமுடைய மூதேவியும், பின்பு செந்நிறமுடைய ஸ்ரீதேவியும் தோன்றின ராதலால், மூத்தாள் சேட்டை என்பன - மூதேவிக்கும், இளையாள் கனிட்டை என்பன - திருமகளுக்கும் பெயர்களாம். இங்கே, மடி - சோம்பல். உறையும்-தங்குவள். பாவத்

தைக் கருஞிறமுடைய தென்றும் புண்ணியத்தை வெண்ணிறமுடைய தென்றும் உருவமில்லாதவற்றிற்கும் நிறங் கற்பித்துக்கூறுதல், கவிமரபு. அதன் - பாவத்தின். 'மடியும் முயற்சியும்.....கூறினர்' என்ற வாக்கியத்தின் கருத்து - சோம்பலுள்ளவனிடத்து மூதேவியும், முயற்சியுள்ளவனிடத்து இலக்குமியும் தங்குவ ரென்ற தன்மையை, சோம்பலில் மூதேவியும், முயற்சியில் இலக்குமியும் தங்குவர் என்று கூறினு ரென்பது; இது-பண்பியின் தன்மையைப் பண்பின்மே லேற்றிக்கூறிய உபசாரவழக்கு. அவ்விருமைக்கும் ஏது-முயற்சியில்லாதானது குற்றத்திற்கும், முயற்சியுடையவனது நன்மைக்கும் காரணம். மா என்பது-கருமையென்னும்பொருளதாதலே "மாவே பெருமையுங் கருமையுஞ்சூதமும்" என்ற திவாகரத்தாலும் அறிக. தாமரையினுள்-செந்தாமரைமலரில் வாழ்பவள். தாமரை - தாமரஸ எ ன்னும் வடமொழியின் சிதை வென்பர். முகடியென்னுஞ்சொல் இப்பொருளதாதலே "சூதென்னும், முகடியான் மூடப்பட்டார்" என்னுங் குறளினுங் காண்க. (எ)

சூகஅ. பொறியின்மை யார்க்கும் பழியன்ற றிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(இ - ள்.) பொறி இன்மை-(பயனேத்தருவதாய) விதியில்லாமை, யார்க்குமும் பழி அன்று-ஒருவற்கும் பழியாகாது; அறிவு அறிந்து-அறியவேண்டுமவற்றை யறிந்து, ஆள்வினை இன்மை - வினைசெய்யாமையே, பழி - பழியாவது; (எ - று.)

அறியவேண்டுவன - வலி முதலாயின. 'தெய்வம் இயையாவழி ஆள்வினையுடைமையாற் பயனில்லை' என்பாரை நோக்கி, 'உலகம் பழவினைபற்றிப் பழியாது: ஈண்டைக்குற்றமுடைமைபற்றியே பழிப்பது' என்றூர்; அதனால், 'விடாதுமுயல்க' என்பது - குறிப்பெச்சம்.

(கு - ரை.) ஆய - ஆகிய. விதி - 'இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி;' ஊழ். வலி முதலாயின - வலியும் காலமும் இடனும் என்பன;' கீழ் சுசுஉ-ஆங் குறளினுரையையும், சுஅ, சுசு, ரூo - அதிகாரங்களையும் காண்க. தெய்வம் இயையாவழி - ஊழ்வினை அனுகூலியாதவிடத்து. உலகம் - உலகத்தார். பழவினைபற்றி - முன்செய்த நல்லூழ் இல்லாமைபற்றி. பழியாது - (அவ்விதியின்மையைப்) பழியார். ஈண்டைக்குற்றமுடைமை - இம்மையில் முயற்சிசெய்யாமையாகிய குற்றத்தையுடைத்தாயிருத்தல். குறிப்பெச்சம் - சொல்லப்படாமல் எஞ்சிநின்றபொருள் குறிப்பால் உணரப்படுவது. பொறியென்பது-விதியென்னும்பொருளதாதலே "ஆம்பொருள்களாகுமதுயார்க்கு மழிச்கொண்ணு, போம்பொருள்கள்போகுமது பொறியின்வகை வண்ணம்" என்ற சிந்தாமணியிலுங் காண்க. அறியவேண்டுவனவற்றை 'அறிவு' என்றது - ஆகுபெயர். ஆள்வினையின்மை - மொழிமாற்றி, வினையை ஆளுதலில்லாமை யென்க. அறிந்து என்ற வினையெச்சம் - ஆளுதலென்றதனையேனும் இல்லாமையென்றதனையேனும் கொண்டுமுடிதற்கேற்றது. ஆளுதலென்பதனைக் கொள்ளுமிடத்து அறிதலும்

முயலுதலும் ஆகிய இரண்டுமில்லையென்றும், இல்லாமையைக் கொள்ளுமிடத்து அறிவிருந்து முயற்சிமாத்திரமில்லையென்றுங் கருத்தாம்; இதனை நுட்பமாக நோக்குக. "எண்ணியொரு கருமம்யார்க்குஞ் செய்யொண்ணாது, புண்ணியம் வந்தெய்து போதல்லால்" என்பது, நல்வழி. (அ)

சூகூ. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(இ-ள்.) தெய்வத்தான் ஆகாது எனின்உம்-(முயன்ற வினை)பால்வகையால் கருதியபயனைத் தாராதாயினும், முயற்சி——, தன் மெய் வருத்தம் கூலி தரும் - தனக்கு இடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும் [பாழாகாது] ;(எ - று.)

தெய்வத்தான் ஆயவழித் தன் அளவின் மிக்கபயனைத் தரும் என்பது உம்மையாற் பெற்றும். இருவழியும் பாழாக லின்மையின், தெய்வம் நோக்கியிராது முயல்க என்பது கருத்து.

(கு - ரை.) பால்வகையால் - விதிவசத்தால். தனக்கு - அம்முயற்சிக்கு. பாழ் - வீண். தெய்வத்தான் ஆயவழி - விதி அநுகூலித்தபொழுது என்க. தன் அளவின் மிக்க - முயற்சியினளவினும் மிருந்தியான. இழிவுசிறப்பும்மையைக்கொண்டு இக்கருத்துக்கொள்ளப்பட்டது. இருவழியும் - தெய்வம் அனுகூலியாதபொழுதும், அனுகூலித்தபொழுதும். இருவழியும் பாழாகல்இன்மையின்என்றது-தெய்வத்தாலாகாதபொழுது சிறிதுபயன்தந்தும், தெய்வத்தாலாகியபொழுது பெரும்பயன்தந்தும் பலித்தலால். தெய்வம்நோக்கியிராது - ஊழ்வினையையே நம்பி யெதிர்பார்த்திராமல். (கூ)

சூஉO. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ - ள்.) ஊழைஉம் - (பயனைவிலக்குவதாய) ஊழினையும், உ பக்கம் காண்பர் - புறங்காண்பர்: உலைவு இன்றி - (அவ்விலக்கிற்கு) இளையாது, தாழாது உஞற்றுபவர் - (வினையைத்) தாழ்வறமுயல்பவர்; (எ - று.)

தாழ்வு அறுதல்-சூழ்ச்சியினும், வலி முதலிய அறிதலினும், செயலினும் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்கலாகாமையின் பலகால் முயல்வார் பயனெய்துவ ரென்பார், 'உப்பக்கங்காண்பர்' என்றார்.

தெய்வத்தான் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலதன்று என்பது, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) பயனை விலக்குவதாய ஊழ் என்றது-கொடுவிதியை. புறம் காண்பர் - முதுகுகொடுக்கப் பார்ப்பர்; தோல்வியடையச்செய்வர். தாழ்வு அற - தாழாமல். உப்பக்கம் - பின்பக்கம்; இதில், உகரச்சுட்டு -பின் என்னும் பொருளைக் குறித்தது: 'உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையுஞ் சுட்டுமெனக்காண்க. உகரம் அவ்வாறு சுட்டி நிற்பதை "ஊழையு முப்பக்கங் காண்பர்" என்பதற்குப் பின்பக்கமாய் முதுகுகாட்டிக் காண்பர்

என்று பொருள் கூறுதலால் காண்க' என்றது, ராமாநுஜகவிராயருரைநடை. சூழ்ச்சி - ஆலோசனை. இடுக்கண் - துன்பம். ஊழையும், உம் - உயர்வு சிறப்பு; அது - "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுஞ் தான்முந் துறும்" எனக் கூறிய அதன்வலிமையை விளக்கும். காண்பர் என்றதில், காணுதல்-செய்தலென்னுங் கருத்துடையது. உலகு - தொழிற்பெயர். கீழ் "ஆகூழாற்றோன்றுமசைவின்மை கைப்பொருள், போகூழாற்றோன்றுமடி", "பரியினுமாகாவாம் பாலல்ல", "வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என ஊழென்னும் அதிகாரத்தில் ஊழின் வலிமையை மிகவற்புறுத்திக்கூறிய ஆசிரியர், இங்கு இக்குறளாலும் கீழ்க் குறளாலும் அதனினும் முயற்சி வலிய தென்றது, முயற்சி இன்றியமையா தென்பதை உறுதிப்படுத்தும்பொருட்டுக் கூறியதே யென அறிக. இங்ஙனங் கொண்ட வழியே 'மாறுகொளக்கூறல்' என்னுங் குற்றம் இல்லாததாம். "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு" என்ற குறளினுரையில், பரிமேலழகர் 'இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் "உண்மையறிவே மிகும்" என்றதனோடு மலையாமை யறிக' என உரைத்தது காண்க. அன்றியும், மார்க்கண்டேயர்போல்வார் சிறுபான்மை முயற்சியால் ஊழை வென்றதுபற்றியு மாம்; "உலையாமுயற்சி கலைகணை ஆழின், வலிசிந்தும் வண்மையு முண்டே-யுலகறியப், பான்முளைதின்று மறலியுயிர் குடித்த, கான்முளையே போலுங் கரி" என்ற நீதிநெறிவிளக்கத்தை யறிக.

கூஙூ - ஆம் அதிகாரம்.—இடுக்கணழியாமை.

அஃதாவது - வினையின்கண் முயல்வான், தெய்வத்தானுங், பொருளின் மையானுங், மெய்வருத்தத்தானுந் தனக்குஇடுக்கண்வந்தழி அதற்கு மனங் கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) வினை-இங்கே, தொழில். ஆக-ஆவது: விகற்பப்பொருளில் வந்த இடைச்சொல். துன்பம்நேர்ந்தகாலத்தில் கண்இடுங்குதல்பற்றி, அதற்கு இடுக்கணென்று பெயர்; இடுங்குகண் என்பது, இடுக்கண் என விகாரப் பட்ட தென்க: காரியத்தின்பெயர், காரணத்தின்மேல் நின்றது; இதனைத் தொல்காப்பியவுரையில் 'இடுக்கணென்பது - மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம்பட வரும் இரக்கம்' என்றதுகொண்டு அறிக. வந்துழி - வந்தவிடத்து; வந்தவுழி என்பதன் தொகுத்தல். ஆள்வினை யுடையானுக்கு இடுக்கணுக்கு அழிதல்கூடா தென்பது, அதிகாரமுறைமைக்குக் காரணம். இதனானே - கீழ்க்கூறிய வாக்கியத்தால் என்றபடி. இடுக்கண் அழியாமை - நான்காம் வேற்றுமைத்தொகை. அழியாமை-எதிர்மறைத்தொழிற் பெயர்.

கூஉக. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(இ - ள்.) (ஒருவன்), இடுக்கண் வரும் கால்-(வினையால் தனக்கு) இடுக்கண் வருமிடத்து, நகுக - (அதற்கு அழியாது உள்) மகிழ்க: அதனை அடுத்து

ஊர்வது - அவ்விடுக்கணை மேன்மேல் அடரவல்லது, அஃது ஒப்பது இல் - அம்மகிழ்ச்சி போல்வது பிறிது இல்லை, (ஆகலான்); (எ - று.)

வினை இனிது முடிந்தழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்குஇடையே இடுக்கண்வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத் தள்ளி அக்குறைமுடிக்கும் ஆற்றலுடையனு மாகலின், 'அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்' என்றார்.

(கு - ரை.) வினை - இங்கே, விதி. அழியாது-மனங்கலங்காமல். உள் - மனம். அடரவல்லது - நெருக்கியழிக்கவல்லது. நிகழற்பாலது ஆய - உண்டாகத்தக்கதான. அதற்கு இடையே - வினை முடிவதன் மத்தியில். மன எழுச்சி - உற்சாகம்; எழுச்சி - கிளர்ச்சி. அதனைத் தள்ளி - இடுக்கணையொழித்து. அக்குறை - அந்தக்காரியக்குறைவை. கால் - காலமென்னும் வட சொல்லின் கடைக்குறை. வருங்கால் - எதிர்காலப்பெயரெச்சத்தொடர்; நகுக - வியங்கோள். (க)

கூஉஉ. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(இ - ள்.) வெள்ளத்து அனைய-வெள்ளம்போலக் கரையிலவாய, இடும்பை - இடும்பைகளெல்லாம், அறிவு உடையான் உள்ளத்தின் உள்ள கெடும்-அறிவுடையவன் தன்உள்ளத்தான் (ஒன்றனை) *நினைக்க (அத்துணையானே) கெடும்; (எ - று.)

இடும்பையாவது - உள்ளத்து ஓர்கோட்பாடே யன்றிப் பிறிதில்லை யென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்கு மென்பதூஉம் அறிதல் வேண்டுதலின் 'அறிவுடையான்' என்றும், அவ்வுபாயத்து எண்மை தோன்ற 'உள்ளத்தினுள்ள' என்றுங் கூறினார்.

இவையிரண்டுபாட்டானும், ஊழினுஞ்ய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) இடும்பை - துன்பம். உள்ளத்தான் - மனக்கிளர்ச்சியால் என்றபடி; மனோதைரியத்தா லென்க. ஒன்றனை - (அவ்விடும்பைக்கு மாறான) ஒருபொருளை. அத்துணையானே - அந்நினைவுமாத்திரத்தால். உள்ளத்து ஓர்கோட்பாடு - மனத்தின் ஒருகொள்கை; இங்ஙனமாதலை, 'மனமாவது - சுகம்முதலிய அனுபவித்தற்குக் கருவியாகிய இந்திரியம்' என்ற தருக்கசங்கிரக வாக்கியங்கொண்டும் உணர்க. அது-அவ்விடும்பை. மாறுபடக் கொள்ள-இன்பமாகநினைக்க. இங்ஙனம்நினைத்தல் சாத்தியமாதலை "வைததனையின் சொல்லாக் கொள்வானு நெய்பெய்த, சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய, கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர், மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்" என்றதிலுங் காண்க. உபாயத்து எண்மை-உபாயத்தினது செய்தற்கெளியதன்மை. உள்ள - காரணப்பொருட் செயவெனெச்சம். (உ)

---

* பி - ம்: நினைந்தத்துணையானே.

சூஉசு. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(இ - ள்.) (வினைசெய்யுங்கால் அதற்கு இடையேவந்த), இடும்பைக்கு-துன்பத்திற்கு, இடும்பை படாதவர் - வருந்தாதவர்,—இடும்பைக்கு - அத்துன்பந்தனக்கு, (தாம்), இடும்பை படுப்பர் - துன்பம் விளைப்பர்; (எ - று.)

வருந்துதல்-இளைத்து விடாநினைத்தல். மனத்திட்பமுடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே, எல்லாவிடும்பையும் இலவாம்: ஆகலின், 'இடும்பைக் கிடும்பைபடுப்பர்' என்றார். வருகின்ற பாட்டு இரண்டினும் இதற்கு இவ்வாறே கொள்க. சொற்பொருட்பின் வருநிலை.

(கு - ரை.) அதற்குஇடையே - அவ்வினைசெயற்கு நடுவே. விட - (அத்தொழிலை இடையிலே) விட்டிட. மனத்திட்பம் - நெஞ்சுறுதி. அடுத்த இரண்டு குறள்களிலும் "இடுக்க ணிடர்ப்பா டுடைத்து"; "இடுக்க ணிடுக்கட் படும்" என வருதல் காண்க. சொற்பொருட்பின் வருநிலை - ஓரணி; அதாவது-வந்த சொல்லும் பொருளும் மீண்டும் ஒரு செய்யுளில் வருவது: இதனை வடநூலார் உபயாவ்ருத்திதீபகம் என்பர். இக்குறளில், இடும்பையென வந்த சொல்லும், துன்பமென வந்த பொருளும் மீண்டும் பலகால்வந்தது காண்க. இடும்பைக்கு என்ற சொல் இரண்டனுள் பிந்தினது - சுட்டுப்பெயர்மாத்திரமாய் நிற்கும். (கூ)

சூஉச. மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(இ - ள்.) மடுத்து - விலங்கிய, வாய் எல்லாம் - இடங்களெல்லாவற்றினும், பகடு அன்னான் - (சகடமீர்க்கும்) பகடுபோல வினையையெடுத்துக் கொண்டு உய்க்கவல்லானை, உற்ற-வந்துற்ற, இடுக்கண்—,—இடர்ப்பாடு உடைத்து - (தானே) இடர்ப்படுதலை யுடைத்து; (எ - று.)

'மடுத்தவாயெல்லாம்' என்பது பொதுப்படநின்றமையின், சகடத்திற்கு அளற்றுநிலம் முதலிய வாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. பகடு மருங்குஒற்றியும் மூக்குஊன்றியும் தாள்தவழ்ந்தும் அரிதின் உய்க்கு மாறுபோலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன்றுய்ப்பான் என்பார் 'பகடன்னான்' என்றார்.

(கு - ரை.) விலங்கிய இடங்களெல்லாவற்றினும் - இனிது செல்லத் தகாதவழிகளு முட்பட எல்லாவிடத்தும். சகடமீர்க்கும் பகடுபோல - வண்டியையிழுக்கிற எருதுபோல. "நிரம்பாதநீர்யாற் றிடுமணலுளாழ்ந்து, பெரும்பாரவாடவர்போற் பெய்பண்டந்தாங்கி, மருங்கொற்றி மூக்கூன்றித் தாடவழ்ந்து வாங்கி" என்ற சிந்தாமணியும், அதனுரையும், இங்கு நோக்கத்தக்கன. வினையை எடுத்துக்கொண்டு உய்க்கவல்லான் - தொழிலைத்தொடங்கி யேற்றுக்கொண்டு நடத்தவல்லவன். வந்து உற்ற - வந்து சேர்ந்த. இடர்ப்படுதலை உடைத்து - துன்பப்படுதலை யுடையது. பொது

ப்பட - (உபமானத்துக்கும் உபமேயத்துக்கும்) பொதுவாக. அளற்று நிலம் - சேற்றுநிலம். முதலியன என்றதனால் - மணல்நிலம் செங்குத்தானநிலம் முதலிய கொள்க. இடையூறு - தடை. மருங்கு ஒற்றியும் - பக்கங்களில் உராய்ந்தும். மூக்கு ஊன்றியும்-நிலத்திலே மூக்கை யூன்றிக்கொண்டும். தாள்தவழ்ந்தும் - கால்களே மடியவைத்து இழுத்தும். அரிதின் உய்க்கும் ஆறு - அருமையாக வண்டியைச் செலுத்தும் விதம். பகடு - ஆண்பாற்பெயர்; இது பசுவின் ஆணுக்குரியதாதலே "யானேயுமெருமையும் பெற்றமுமற்றிவை, பான்மையி லுரைக்கிற் பகடென்றுமே" என்ற பிங்கலந்தையாலும் அறிக. (சு)

சூஉடு. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(இ - ள்.) அடுக்கி வரின்உம்-(இடைவிடாது) மேன்மேல் வந்தனவாயினும், அழிவு இலான் - (தன்) உள்ளக்கோட்பாடுவிடாதான், உற்ற—, இடுக்கண்—, இடுக்கண் படும் - (தாம்) இடுக்கணிலே பட்டுப்போம்; (எ - று.)

ஒன்றே பலகால்வருதலும் வேறுபட்டன விராய்வருதலும் அடங்க, 'அடுக்கிவரினும்' என்றார். 'அழிவு' என்னுங் காரணப்பெயர், காரியத்தின் மேல் நின்றது.

இவைமூன்றுபாட்டானும், தெய்வத்தானையதற்கு அழியாமை கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளக்கோட்பாடு விடாதான் - மனவுறுதி நீங்காதவன். ஒன்றே பலகால் வருதல்-ஒருவகைத்துன்பமே பலமுறை வருதல். வேறுபட்டன விராய் வருதல்-வெவ்வேறு வகைப்பட்ட பலதுன்பங்கள் கலந்து வருதல். அடங்க-அமைய. அழிவு-மனங்கலங்குதல்; அது - அதனாலாகிற தைரிய நீக்கத்தை உணர்த்துதலால், 'காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது' என்றார்; இது - உபசாரவழக்கு. தெய்வத்தான் ஆயதற்கு - விதியினாலாகிய துன்பத்துக்கு. அடுக்கிவரினும், உம்-இழிவுசிறப்பு. (சு)

சூஉசு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்றா தவர்.

(இ - ள்.) (வறுமைக்காலத்து), அற்றேம் என்று-(யாம்) வறியமாயினேமென்று, அல்லல் படுபவோ-(மனத்தால்) துயருழப்பரோ? (செல்வக்காலத்து), பெற்றேம் என்று - (இது)பெற்றேமென்று, ஓம்புதல்-இவறுதலே, தேற்றாதவர் - அறியாதார்; (எ - று.)

பெற்றவழி இவறுமை நோக்கி அற்றவழியும் அப்பகுதி விடா தாகலின் அல்லற்பாடு இல்லையாயிற்று.

இதனுன், பொருளின்மையான் ஆயதற்கு அழியாமையும், அதற்குஉபாயமும் கூறப்பட்டன.

(கு - ரை.) வறியம் - செல்வமில்லோம். துயர் உழத்தல் - துன்பமனுபவித்தல். இவறுதல்-மிக்கஆசைகொண்டு லோபஞ்செய்தல். பெற்றவழி இவறு

மைநோக்கி - அரசன் செல்வம்பெற்றபொழுது தம்விஷயத்தில் லோபஞ் செய்யாததைப் பார்த்து. அற்றவழியும் அப்பகுதிவிடாது - செல்வம் நீங்கிய பொழுதும் மந்திரி முதலிய அந்தப் பரிவாரம் விட்டுநீங்காது. அல்லற்பாடு - துன்பப்படுதல். ஆயதற்கு - ஆகிய துன்பத்திற்கு. அதற்கு - அழியாமைக்கு. அரசன்கையிற் பொருளிருந்தபொழுது, சிறிதும் லோபஞ்செய்யாமல் தன்னை அடுத்த பரிசனங்களுக்கு வரையாது கொடுத்துவந்தாலுயின், அவனை அப் பரிசனம் செல்வமழிந்தபொழுதும் பழைய அன்புடைமையால் விட்டுநீங்காது; ஆதலால் அங்ஙனமிருத்தல் செல்வமழிதலால் வருந்தாமைக்கு உபாயமென் பது கருத்து. (சு)

சூஉஎ. இலக்க மூடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல்.

(இ - ள்.) 'உடம்பு-(நாற்கதியினுமுள்ள) உடம்புகள், இடும்பைக்கு - இடும்பையென்னும் வாளுக்கு, இலக்கம் - இலக்கு,' என்று-என்றுதெளிந்து, கலக்கத்தை-(தம்மேல்வந்த)இடும்பையை, கையாறு ஆ-இடும்பையாக, கொள் ளாது - கொள்ளார்: மேல் - அறிவுடையார்; (எ - று.)

ஏகதேசவுருவகம். உடம்பு - சாதிப்பெயர். 'கலக்கம்' என்னும் காரியப் பெயர், காரணத்தின்மேல்நின்றது. 'கையாறு' என்பது, ஒருசொல்: இதற்கு 'ஒழுக்கநெறி' என்று உரைப்பாரும் உளர். இயல்பாகக்கொள்வரென்பது, குறிப்பெச்சம்.

(கு - ரை.) நாற்கதியினும் - (நரகர் விலங்கு மக்கள் தேவர் என்னும்) நால்வகைப் பிறப்பிலும். இலக்கு=லக்ஷ்யம்: குறி. நால்வகைக்கதி களும் துன்பத்திற்கு இடமாதலை "யாவதுந் துன்பம் மன்னு யாக்கை கொண்டவர்கட் கென்றுன்" என்ற சிந்தாமணியாலும் அறிக. இக்கதி ஒவ்வொன்றிலுமுள்ள துன்பங்கள், சிந்தாமணியில் முத்தியிலம்பகத்திலும், சூளாமணியில் துறவுச்சருக்கத்திலும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. தெளிந்து-நிச்சயமாக அறிந்து. உடம்பை இலக்கென்றதற்கு ஏற்ப, இடும்பையை வாள் என்னுமையால், ஏகதேசவுருவகவணி. கலங்குதல் என்னுங் காரியத்தின் பெயர், அதற்குக்காரணமான துன்பத்தை யுணர்த்தினது - உபசார வழக்கு. கையாறு - கையறு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; கையாறு என்பதற்கு - 'உயிர்ப்புமின்றி வினையொழிந்தயர்தல்' என்றும், 'மூர்ச்சித் தல்' என்றும் விவரண முரைப்பர். கை அறு என்ற இரண்டுசொற்கள் தொடர்ந்து, தொழிலொழிதல் எனப் பொருள்பட்டு, அக்காரியத்தின்பெயர் அதன்காரணமான துன்பத்தின்மேல் நின்ற தென்னலாம். பிறருரைக்கு, கை - ஒழுக்கம்; ஆறு - வழி. 'கையாறுக்கொள்ளாது' என்றதன் குறிப்பால். இயல்பாகக் கொள்வர் என்பது பெறப்படும். ஆம்-அசை. மேல் - மேன் மக்களுக்குப் பண்பாகுபெயர்; இது - ஆகுபெயர்ப்பொருளால் உயர்திணைப் பலர்பாலாயினும், சொல்லால் பால்பகா அஃறிணையாதலால், சாதியொரு மையாய் 'கொள்ளாது' என்னும் ஒன்றன்பால் முற்றைக் கொண்டது. ஊழ்

வினையை அனுபவிக்கும்பொருட்டு ஆகிய உடம்புக்குத் துன்பம் இயல்பு என்று எண்ணிப் பெரியோர் அதற்கு வருந்தா ரென்பது கருத்து. "இடும்பைக்கிடும்பை யியலுடம்பிதன்றே" என்றார், ஔவையாரும். (எ)

சூஉஅ. இன்பம் விழையா னிடும்பை பியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

(இ - ள்.) இன்பம் விழையான் - (தன்உடம்பிற்கு) இன்பமாயவற்றை விரும்பாதே, இடும்பை இயல்பு என்பான் - (வினையால்) இடும்பை (எய்துதல்) இயல்பென்று தெளிந்திருப்பான்,—துன்பம் உறுதல் இலன் - (தன் முயற்சியால்) துன்பமுறுதல்; (எ - று.)

இன்பத்தை விழையினும், இடும்பையை இயல்பென்னாது காக்கக்கருதினும், துன்பம்வினைதலின், இவ்விரண்டுஞ் செய்யாதானை 'துன்பமுறுத லிலன்' என்றார்.

(கு - ரை.) ஆயவற்றை - ஆனவைகளை. வினையால் - விதியால். விழையினும் - விரும்பினாலும். காக்க - தடுக்க. (அ)

சூஉக. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

(இ - ள்.) இன்பத்துள் இன்பம் விழையாதான் - (வினையால் தனக்கு) இன்பம் வந்துழி அதனை அனுபவியாதின்றே(மனத்தான்)விரும்பாதான்,—துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் - துன்பம்வந்துழியும் அதனை அனுபவியாதின்றே (மனத்தான்) வருந்தான்; (எ - று.)

துன்பம் - முயற்சியான்வரும் இடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக் கோடலின், பயன்களும் இலவாயின.

(கு - ரை.) வினையால் - தன்செயலால். அனுபவியாதின்றே - அனுபவித்துக்கொண்டே: அனுபவியாதின்று நிகழ்கால வினையெச்சம்: ஆதின்று - இடைநிலை. இரண்டையும் ஒருதன்மையாகக் கோடலின்-(இன்பம் துன்பம் என்னும்) இரண்டையுஞ் சமமாகக்கொள்ளுதலால். பயன்களும் - பிரயோசனத்திலுள்ள வேறுபாடுகளும். இன்பம், துன்பம் என்பன - ஆகுபெயராய், அவைவருங் காலத்தைக் குறித்தன. (கூ)

சூஉ0. இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு.

(இ - ள்.) இன்னுமை - (ஒருவன் வினைசெய்யுமிடத்து முயற்சியான் வரும்) துன்பத்தன்னையே, இன்பம் என - (தனக்கு) இன்பமாக, கொளின்-கற்பித்துக்கொள்வனையின்,—(அதனால்), தன் ஒன்னார்-தன்பகைவர், விழையும் - தன்குமதித்தற்கு ஏதுவாய, சிறப்பு-உயர்ச்சி, ஆகும்-உண்டாம்; (எ-று.)

துன்பந்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிகமாய் மனத்திடைநிகழ்வதோர் கோட்பாடாகலின், அதனைமாறுபடக்கொள்ளவே, அதற்கு அழிவின்றி, மனமகிழ்ச்சியுடையனாய் அதனால் தொடங்கியவினை முடித்தேவிடும் ஆற்றலுடையனும் என்பது கருத்து.

இவைநான்குபாட்டானும், மெய்வருத்தத்தாலையதற்கு அழியாமையும், அதற்கு உபாயமும் கூறப்பட்டன.

(கு - சை.) கற்பித்துக்கொள்ளுதல் - மனவுறுதியாற் பாவித்தல். நன்கு மதித்தல் - கௌரவித்தல். இயல்பு - சுபாவம். கணிகமாய் - கணப்பொழுது நிற்பதாய்; கணிகம்=க்ஷணிகம். நிகழ்வது - உண்டாவது. கோட்பாடு - கொள்கை. அதனை - துன்பத்தை. அதற்கு - துன்பத்துக்கு. அதனால் - மகிழ்ச்சியால். ஆயதற்கு - ஆகிய துன்பத்திற்கு. அதற்கு-அழியாமைக்கு.(க0)

அரசியல் முற்றிற்று.

இரண்டாவது

அங்கவியல்.

இனி, முறையானே, அரசியல்நடாத்துதற்கண் ஒன்றற்குஒன்று துணையாய அங்கங்களாறனது இயல்பு முப்பத்திரண்டு அதிகாரத்தாற் கூறுவான் எடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் காவற்சாகாடு உகைத்தற்கண் அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்துஅதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

(கு - சை.) அங்கவியல் - அரசனது அங்கங்களோப்பற்றிக் கூறும் பிரிவு. அரசியல் நடாத்துதல் - அரசாட்சியை நடத்துதல். கூறுவான் எடுத்துக்கொண்டு - சொல்லத்தொடங்கி. காவல் சாகாடு உகைத்தற்கண் - காத்தல் தொழிலாகிய வண்டியைச் செலுத்துதலில். "கால்பார்கோத்து ஞாலத்தியங்குங், காவற்சாகாடுகைப்போன் மாணின், ஊறின்றாகி யாறினிதுபடுமே, உய்த்தல்தேற்றாஞையின் வைகலும், பகைக்கூழள்ளற்பட்டு, மிகப்பசீஇநோய்தலைத்தலைத்தருமே" என்ற புறநானூற்றுச்செய்யுளில், உலகங்காத்தலை வண்டியாகவும், அதனை நடத்தும் அரசனை அவ்வண்டிசெலுத்துபவனாகவும், நீதிநெறியை நல்வழியாகவும், அந்நெறி தவறுதலை வழிதவறுதலாகவும், பகையைச் சேறாகவும், அதன்வசப்படுதலைச் சேற்றிலழுந்துதலாகவும் வருணித்துக் கூறியுள்ளதைக்கொண்டு, 'காவற் சாகாடு உகைத்தற்கண்' என்றார். இனை - சமம். காவற்சாகாடு உகைத்தற்கண் அரசனுக்கு அமைச்சன் இணையாதலை "வீங்குநீ ருலகங் காக்கும் விழுமுது மொருவனுலை, தாங்கலாந் தன்மைத் தன்று தனையவிழ் தயங்குதாரீர், பாங்கலார் பணியசூழ நூலவர் பாகமாகப், பூங்குலா மலங்கல்மாலைப் புரவலன் பொறுக்குமன்றே" என்ற சூளாமணியாலும் அறிக.

சுசு - ஆம் அதிகாரம்.—அமைச்சு.

அஃதாவது - அமைச்சனது தன்மை: என்றது - அவன்றன் குணங்களையும், செயல்களையும்.

(கு - சை.) அமைச்சன் - மந்திரி; அமாத்ய னென்னும் வடசொல்லின் திரிதவு; அவ்வடசொல், அருகிலுள்ளவனெனப் பொருள்படும்: அமா - சமீ

பம். இவ்வதிகாரத்தின் எட்டாங் குறளில் 'உழையிருந்தான்' என்ற பெயரையும், அதன் உரையையுங் காண்க. "உழையர்" என்பர் கம்பரும். அவன்தன் - அம் மந்திரியினது.

சூஙக. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(இ - ள்.) கருவிஉம் - (வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டுங்) கருவிகளும், காலம்உம் - (அதற்கு ஏற்ற) காலமும், செய்கைஉம் - (அது) செய்யுமாறும், செய்யும் அரு வினைஉம் - (அவ்வாற்றிற்) செய்யப்படும் அவ்வரிய வினைதானும், மாண்டது - வாய்ப்பஎண்ணவல்லவனே, அமைச்சு - அமைச்சனுவான்; (எ - று.)

கருவிகள் - தானையும், பொருளும். காலம் - அது தொடங்குங் காலம். செய்கை யெனவே, அது தொடங்கும்உபாயமும், இடையூறுநீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற் பெரிய பயன் தருவது என்பார், 'அருவினை' என்றார். இவையைந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்க மென்ப.

(கு - ரை.) வினை-(போர்முதலிய) தொழில். கருவி-சாதனம். அதற்கு - வினைசெய்தற்கு. அது - வினை. ஆறு - வழி. அவ்வாற்றின் - அவ்வழியில். வாய்ப்ப - பொருந்த, பலிக்க. எண்ண - ஆலோசிக்க. தானை - சேனை. பொருள் - செல்வம். அது - வினை. முடிவுபோக்குதல் - முற்றுப்பெற நடத்துதல். அரு வினை - பெறுதற்கரிய வினை யென்றபடி. இவையைந்தனையும் - தானை, பொருள், காலம், செய்யுமாறு, வினை என்னும் ஐந்தையும். மந்திரத்திற்கு - ஆலோசனைக்கு. என்ப - என்பர். இவை வடநூலில் மந்த்ர பஞ்சாங்க மெனப்படும்; தானை, உபாயம், தேசகாலவிபாகம், இடையூறு ழித்தல், காரியசித்தி என்ற ஐந்தையும் அங்கமென்பதும் ஒருசார் வடநூற் கொள்கையாம். 'கருவி' என்றதை இரண்டாகக் கொண்டமையின், இக்குறள் ஐந்தையுங் கூறுவதாயிற்று. இக்குறளில் எண்ணும்மை தொகை பெறாதவந்தது; [நன் - இடை - கக:] இதற்குத் தொகை, அடுத்த கவியிற் கூறப்படும். மாண்டது - மாட்சிமைப்பட்டது. வேந்து அரசு தூது ஒற்று என்பனபோல, அமைச்சு என்பது - உயர்திணைப்பொருளில் வரும் அஃறிணைச்சொல் லாதலால், 'மாண்டது அமைச்சு' என்றதற்கு - 'வாய்ப்ப எண்ணவல்லவனே அமைச்சனுவான்' என்று உரைக்கப்பட்டது; "அன்ன பிறவு மவற்றொடு சிவணி, மூன்னத்தினுணருங் கிளவியெல்லாம், உயர்திணை மருங்கி னீலையினவாயினும், அஃறிணைமருங்கிற் கிளக்தாங் கியலும்" என்றார், தொல்காப்பியனார். (க)

சூஙஉ. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(இ - ள்.) வன்கண்-(வினைசெய்தற்கண்) அசைவின்மையும், குடி காத்தல்-குடிகளைக் காத்தலும், கற்று அறிதல்-(நீதிநூல்களைக்) கற்று (ச்செய்வன

தவிர்வன) அறிதலும், ஆள்வினையோடு - முயற்சியும், ஐந்துடன் மாண்டது- (மேற்சொல்லிய அவ்வங்கங்கள்) ஐந்துடனே திருந்த உடையானே, அமைச்சு- அமைச்சனுவான்; (எ - று.)

எண்ணெழுது, நீண்டது. 'அவ்வைந்து' என, சுட்டு வருவிக்க. இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக்கூறியது - அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்படவேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந்தொகை பெறுதற்கும். இனி, இதனை ஈண்டு எண்ணியவற்றிற்கே தொகையாக்கி, குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனை ஒழுக்கத்தாற்காத்தலு மெனப் பகுப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலு மெனப் பகுப் பாரும் உளர்; அவர், உடனென்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடியென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப.

(கு-ரை.) வினை செயற்கண்-ஒருதொழிலைச் செய்தலில். அசைவின்மை- தளராமை; உறுதியாய்நிற்றல். திருந்த - செவ்வையாக. எண்ணெடு - எண் ணுப்பொருள் தரும் 'ஒடு' என்ற இடைச்சொல். மேல் கூறியவற்றோடு-மூந் தின குறளிற் சொன்ன கருவி முதலியவற்றுடன். அவற்றிற்கு-"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யுமருவினையும்" என்றவற்றிற்கு. இவை ஐந்தா தல், கருவியை இரண்டாகக் கொண்டதனால். இதனை-ஐந்துடன் என்றதை. ஈண்டு எண்ணியவற்றிற்கே - இக்குறளில் எண்ணுப்பொருள்படக் கூறிய 'வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினையோடு' என்றவற்றிற்கே. இடர்ப்படுப-துன்பப்படுவர். இதனால், பிறருரைகளுக்கு, 'க்லிஷ்டகற்பனை' [நலிந்து பொருள்கொள்ளுதல்] என்ற குற்றங் காட்டி அவற்றை மறுத்த வாறு. இங்குப் பிறருரையாகக் காட்டிய இரண்டனுள், 'கற்றறிதல்' என் பதனைக் கற்றலும் அறிதலும் எனப்பகுத்தல், பேராசிரியர்க்கு உடன்பாடு; அதனைத் தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தில் "பிறப்பே குடிமை" என்ற மெய்ப்பாட்டியற் சூத்திரவுரையில் 'உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினுனையினும், உருவு சிறப்புடைமையின், அதனை நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம் என்பது: என்னை? "வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினை யோ, டைந்துடன் மாண்டதமைச்சு" என்புழி, 'கற்றறிதல்' என்பதனை இரண்டாக்கி ஐந்தென்ப வாகலின்' என்றது காண்க. (இவ்வாறு வேறொன் றற்கு அடைமொழியாய் நிற்பதனைத் தனியே யெடுத்து ஒன்றாகக் கொள்வ தனை 'அவிம்ருஷ்டவிதேயாம்சம்' என்ற குற்றத்தின்பாற்படுத்துவர் வட மொழி அலங்காரநூலுடையார்.) உடன் என்னும் இடைச்சொல் முற்றும்மைப் பொருள தாதல் இரண்டுரைக்கும், குடியென்பது ஆகுபெயராதல் முத லுரைக்கு மாத்திரமு மென்க. உடன் என்பது மூன்றும்வேற்றுமைச்சொல் லுருபாதற்குப் பொருந்துவதா யிருக்க அதனையொழித்து அதற்கு முற்றும் மைப் பொருள் கற்பித்தலும், இயல்பிற் பொருள் படாத இடத்தில் இன்றி யமையாமையாற் கொள்ளவேண்டிய ஆகுபெயரிலக்கணத்தை இயற்பொருள் படக்கூடிய இவ்விடத்தில் 'குடி' என்பதன்மே லேற்றுதலும் நலிவாதல் நோக்குக. வன்கண் - வலியதன்மை. குடிகாத்தல் - இரண்டாம் வேற்றுமைத்

தொகை. இப்பாட்டில் ஓரிடத்தில் நின்ற 'ஒடு' என்னும் எண்ணிடைச்சொல் அவ்விடத்தினின்று பிரிந்து வன்கண்ணொடு, குடிகாத்தலொடு, கற்றறிதலொடு, ஆள்வினையொடு எனப் பிறவிடத்துஞ் சென்று பொருந்தும்; மேல் ''பொருள் கருவி காலம்'' என்ற சூவடி - ஆங்குறளி னுரையிற் பரிமேலழகர் 'எண்ணெடு பிறவழியுங் கூட்டப்பட்டது' என இலக்கணங்குறித்தலுங் காண்க. ''உம்மையென்றெனவொ, டிங்ஙான்கெண்ணு மஃதின்றியுமியலும்'' என்றதனால், இக்குறளில் எண்ணெடு தொகை பெறவில்லை. (உ)

சூசுஉ. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(இ - ள்.) (வினைவகுத்ழி),பிரித்தல்உம்-(பகைவர்க்குத்துணையாயினுரை அவரிற் பிரிக்கவேண்டின்) பிரித்தலும், பேணி கொளல்உம் - (தம்பாலாரை அவர் பிரியாமல் கொடை இன்சொற்களாற்) பேணிக்கொள்ளுதலும், பிரிந்தார் பொருத்தல்உம் - (முன்னே தம்மினும் தம்பாலாரினும்) பிரிந்தாரை (மீண்டும் பொருத்தவேண்டின்) பொருத்தலும், வல்லது - வல்லவனே, அமைச்சு - அமைச்சனுவான்; (எ - று.)

இவற்றுள் அப்பொழுதைநிலைக்கு ஏற்றசெய லறிதலும் அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாதல்நோக்கி, 'வல்லது' என்றார். வடநூலார் இவற்றுள் பொருத்தலை 'சந்தி' என்றும், பிரித்தலை 'விக்கிரகம்' என்றுங் கூறுப.

(கு-ரை.) வினை வகுத்ழி-காரியம் நேரிட்டபோது. அவரின்-அப்பகைவரிடத்தினின்றும். தம்பாலார்-தம்மைச்சேர்ந்தவர், தமக்குத் துணையாகுமவர். கொடை - வேண்டியபொருள் கொடுத்தல். பேணிக்கொளல்-விரும்பிப் பாதுகாத்துக்கொள்ளுதல். மீண்டும்பொருத்த வேண்டின்-மறுபடிசேர்க்கவேண்டினால். பொருத்தல் - சேர்த்தல். 'வல்லது' என அமைச்சன்தன்மையைப் பாராட்டிக்கூறியதன் கருத்தை விளக்குவது 'இவற்றுள்' என்று தொடங்கும் வாக்கியம். அப்பொழுதைநிலைக்கு - அந்தச்சமயத்தின் நிலைமைக்கு. அதனை - அச்செயலை. அவர் - பகைவர்க்குத் துணையாயினுரும், தம்பாலாரும், பிரிந்தாரும். கடைப்பிடித்தல் - உறுதியாகக் கொள்ளுதல். அரியவாதல் நோக்கி - அரியனவாகுதலையெண்ணி. கூறுப - கூறுவர். (ஈ)

சூசுச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(இ - ள்.) தெரிதல்உம்-(ஒரு காரியச்செய்கை பலவாற்றுல் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்து) அறிதலும், தேர்ந்து செயல்உம்-(அதுசெய்யுங்கால் வாய்க்குந் திறன்) நாடிச் செய்தலும், ஒருதலை ஆ சொல்லல்உம் - (சிலரைப்பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவேசெயற்பாலதென்று) துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும், வல்லது - வல்லவனே, அமைச்சு - அமைச்சனுவான்; (எ - று.)

தெரிதல், செயல்மேல தாயிற்று; வருகின்றது அதுவாகலின்.

(கு - ரை.) பலஆற்றால் தோன்றின் - பலவிதமாகத் தோன்றினால். ஆவது-செய்யத்தக்கதை. அது - அத்தொழிலே. வாய்க்கும்திறன் நாடி-பலிக்கும் விதத்தை ஆலோசித்து. செயற்கண் - செய்தலில். அவர்க்கு இதுவே செயற்பாலது - இன்னார்திறத்தில் இன்னதுதான் செய்யத்தக்கது. 'தூணிவு பிறக்கும் வகை' என்பதற்குமுன், 'அரசனுக்கு' என ஒருசொல் வருவிக்க. தூணிவு பிறக்கும்வகை - (சந்தேகமில்லாமல்) நிச்சயமுண்டாம்படி. தெரிதல் செயல்மேலதாயிற்று - தெரிதலென்ற வினைக்குச் செய்கையென்னுஞ் செயப்படுபொருளே வருவித்தது என்றபடி. இதற்குக் காரணம்:—'வருகின்றது அது வாகலின்'-அமைச்சனுக்கு ஆலோசிக்கநேர்வது செய்கையே யாதலால். ஒருதலையா - உறுதியாக. (ச)

கூகூ. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(இ - ள்.) அறன் அறிந்து - (அரசனுற் செய்யப்படும்) அறங்களே அறிந்து, ஆன்று - (தனக்குவற்ற கல்வியால்)நிறைந்து, அமைந்த சொல்லான் - அமைந்தசொல்லையுடையனும், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், திறன் அறிந்தான்-(வினைசெய்யுந்) திறங்களே யறிந்தான்,—தேர்ச்சி துணை - (அவற்குச்) சூழ்ச்சித்துணையாம்; (எ - று.)

தன் அரசன் சுருங்கியகாலத்தும் பெருகிய காலத்தும் இடைநிகராய காலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். சொல்லான் என்பதனை 'ஒடு' உருபின்பொருட்டாய ஆனுருபாக்கி உரைப்பாரும் உளர்.

இவையைந்துபாட்டானும், அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) அமைந்த சொல்லை-அடங்கிப்பேசும் பேச்சை. அவற்கு-அரசனுக்கு. சூழ்ச்சித்துணை - ஆலோசனைக்குவற்ற துணைவன்; தக்கமந்திரி. சுருங்கிய - செல்வம் சேனை முதலியவற்றாற் குறைவுபட்ட. பெருகிய-அவற்றால் அபிவிருத்தியடைந்த. இடைநிகர் ஆய - சுருக்கமும் பெருக்கமு மில்லாமல் நடுத்தரமாகவுள்ள. பிறருரைக்கு, 'சொல்லான்' என்பதில், ஆன் உருபு-அடைமொழிப் பொருளது: ஆனுருபு ஒடுஉருபின்பொருளில் வருதலை "தூங்குகையா னேங்கு நடைய", "உறழ்மணியா னுயர் மருப்பின" என்ற இடங்களிலும் காண்க. பரிமேலழகருரைக்கு-'சொல்லான்' என்பது-குறிப்பு முற்றெச்சம். (ரு)

கூகூ. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

(இ - ள்.) மதி நுட்பம் - (இயற்கையாகிய) நுண்ணறிவை, நூலோடு - (செயற்கையாகிய) நூலறிவோடு, உடையார்க்கு-உடையராய அமைச்சர்க்கு, அதி நுட்பம் முன் நிற்பவை-மிக்கநுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்நிற்பன, யா உள - யாவை உள? (எ - று.)

'மதிநுட்பம்' என்பது-பின்மொழிநிலையல். அது, தெய்வத்தாலாகாதெனின், முற்கூறப்பட்டது. 'நூல்' என்பதனாலும், 'அதிநுட்பம்' என்பதனாலும் -

ஆகுபெயர். 'அதி' என்பது - வடசொல்லுள் மிகுதிப்பொருளதோர் இடைச் சொல்; அது திரிந்து 'நுட்பம்' என்பதனோடு தொக்கது. மூன் நிற்றல்-மாற் றூர்சூழ்ச்சியாயின தம்சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி, 'அதிநுட்பம்' என்று பாடமோதி, அதனின் நுட்பம் யா என்று உரைப்பாரும் உளர்; அவர் சூழ்ச்சிக்கு இனமாய் மூன் சுட்டப்படுவ தொன்றுஇல்லாமையும், சுட்டுப்பெ யர் ஐந்தாம்உருபுஏற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர். பகைவர் சூழ்வனவற்றைத் தாம் அறிந்து அழித்து, அவர் அறிந்து அழியாதன தாம் சூழ்வர் என்பது கருத்து.

இதனுன், அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நுண் அறிவு - சூட்சுமபுத்தி. நூலறிவு - கல்விகற்றலாலாகிய அறிவு. மூன் நிற்பன - தடையாய் நிற்கும் பகைவரது தந்திரங்கள். யாவை உள்-எவையுமில்லை யென்றபடி; வினு, இன்மைகுறித்தது. 'பின்மொழிநிலை யல்' என்பதற்கு-இங்கே, பின்மூன்னுகத்தொக்க தொடர் என்று பொருள்; 'மதிநுட்பம்' என்றதை 'நுட்பமதி' என மூன்பின்னுகத்தொக்கபண்புத்தொ கையாகக்கொண்டமை காண்க. 'பின்மொழிநிலையல்' என்பது, தொல்காப் பியத்தில் தொகைச்சொல்லில் பின்மொழியிற் பொருள்நிறத்தல் என்ற கருத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது; "அவைதாம், மூன்மொழி நிலையலும் பின்மொழிநிலையலு, மிருமொழிமேலு மொருங்குடனிலையலு, மம்மொழிநிலை யா தன்மொழி நிலையலு, மந்நான்கென்ப பொருணெறி மரபே" என்றது காண்க. அச்சூத்திரவுரையில், 'அடைகடல்-பின்மொழிநிலையல். இது கடலா கியகரையெனக் கரைகூறுதலே கருத்தாகலின். இவை பண்புத்தொகை. இவை-இடம்பற்றிவந்த மூன்னும் பின்னுமாம்; காலம்பற்றிவருவனவும் வந்து ழிக்காண்க' என நச்சினுர்க்கினியரும், 'இனி, வரையறையின்மையாற் சிறு பான்மை மூன்மொழி பின்மொழியாகத் தொக்கதோர் ஆரும்வேற்றுமைத் தொகையெனவும் அமையும்' எனச் சேனுவரையரும் உரைத்ததை உணர்க. பரிமேலழகரும் கீழ் வலியறிதலென்ற அதிகாரத்தில் 'நுனிக்கொம்பர் என் பது,'கடைக்கண்'என்பதுபோலப் பின்மூன்னுகத்தொக்க ஆரும்வேற்றுமைத் தொகை' என உரைத்துப்போந்தார். இது - இலக்கணப்போலி யெனவும் படும். அது - இயற்கையாகிய நுண்ணறிவு. தெய்வம்தரவேண்டுதலின் - ஊழ்வினையால் உண்டாக்கப்படவேண்டுதலால். ஊழ் என்னும் அதிகாரத்தில் "பேதைப் படுக்கு மிழவூழ் அறிவகற்று, மாகலூழற்றக்கடை," "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன், உண்மையறிவே மிகும்" என்ற குறள்களைக் காண்க. மூற்கூறப்பட்டது - செயற்கையாகிய நூலறிவுக்கு மூன்னே நிறுத் தப்பட்டது. நூல் - (சாஸ்திரத்தைக் காட்டும்போது உவமையாகுபெயர்: பிறகு அது) அதனுலாகும் அறிவுக்குக் கருவியாகுபெயரும், அதிநுட்பம் - மிக்க நுட்பத்தையுடைய ஆலோசனைகளுக்குப் பண்பாகுபெயருமாம். ['நூலென்பதூஉ மதிநுட்பமென்பதூஉ மாகுபெயர்' என்ற வாக்கியத்தை நூலென்பதூஉம் மதிநுட்பமென்பதூஉம் ஆகுபெயர் எனப் பிரிப்பது,

வழுவாம்; மதிநுட்பம் என்ற தொடர் ஆகுபெயரல்லாமையும், நூலென் பதன்பின் நிறுத்தப்பட்டதும் இதனை அறியக் காரணமாம்.] இடைச் சொல்லே வடநூலார் 'அவ்யயம்' என்பர். 'அதி' என்றதை, திரிக் தது என்றது, ஒருபாஷையினின்று மற்றொருபாஷைக்கு வந்து 'நுட்பம்' என்ற தமிழ்மொழியோடு தொடர்தலையே: அன்றி, சொல்லில் எழுத்துமாறு பாடுஒன்று மில்லாமை காண்க. இங்ஙனம் ஆரியத்தினின்று தமிழ்க்கு வருதலையே வேறுபாடாகக்கொள்ளுதல், பண்டையோர்கருத்துப்போலும்; இதனை "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்றதொல்காப்பியச்சூத்திரத்துச் சேனாவரையருரையில் 'ஒருசொல்லாயினும் ஆரியமுந் தமிழு மாகிய இடவேற்றுமையான் வேறுபின வெனின்' என்று தொடங்கி உரையாசிரியர்கருத்தை மறுத்தலால் அறிக. இவ் விஷயத்திற் சேனாவரையர்கருத்தும், நச்சினார்க்கினியர்கருத்தும் பரிமேலழகர் கருத்துக்கு உடன்படா. தொக்கது - தொடர்ந்தது என்றபடி; அன்றி, 'அதி நுட்பம்' என்ற இடைச்சொற்றொகாநிலைத்தொடரில் ஒன்றுந் தொகாமை காண்க. 'வடநூலார் உபசர்க்கம் இருபது என்பர்; அதிலோகம், அதிஜயம் என்பன - வடமொழி உபசர்க்கம்: சிந்தாமணியாரும் "அதிலோபமாந்தர்" என்றார். அதிநுட்பம் என்பது - வினைப்பெயரோடும் வினைச்சொல்லோடும் சாமையின், அவ்யயீபாவம் என்க'என்பது, பிரயோகவிவேகவுரை. இதனை 'மூற்பதம் வடமொழியாகிய பண்புத்தொகைநிலைத்தொடர்' என்றும், 'இவை போல்வன-வடமொழிஅவ்யயம்வந்தன'என்றுங்கூறுவர் இலக்கணக்கொத்தில். மாற்றார்சூழ்ச்சியாயின - பகைவரது ஆலோசனைகள். அதனின் - மதிநுட்ப நூலோடுடைமையினும். நுட்பம் - சூக்ஷ்மமான பகைவர்சூழ்ச்சிகள். யா - யாவை. அவர் - அவ்வுரைகூறுபவர். சூழ்ச்சிக்கு இனமாய் - பகைவரது சூழ்ச்சிகளுக்கு இனமாய். மதிநுட்பநூலோடுடைமை குணமாகுமே யன்றிச் சூழ்ச்சிக்கு இனமாகாமையை நுண்ணிதின் நோக்குக. அது அல்லது அஃது என்னுஞ் சுட்டுப்பெயர் இன் என்னும் ஐந்தாம்வேற்றுமையுருபை யேற்கும்பொழுது, அன்சாரியைபெற்று அதனின் என நிற்குமேயன்றி, சாரி யைபெறுது அதின் என நில்லாதென்க; இது, உது, யாது என்பனவற்றிற் கும் இவ்வாறே. இதனை, தொல்காப்பியத்து உருபியலில் "சுட்டுமுதலுகர மன்னொடு சிவணி, யொட்டிய மெய்யொழித் துகரங்கெடுமே", "யாதெனிறு திபுஞ் சுட்டு முதலாகிய, வாய்தவிறுதிபு மன்னொடு சிவணும், ஆய்தங்கெடுத லாவயினான" என்ற சூத்திர விதிகளாலும், "யாதனின் யாதனி னீங்கியா னேனுத, லதனி னதனி னிலன்", "அதனினியற லதற்றகு கிளவி, யதன்வி னைப்படுத லதனினுதல், அதனிற்கோட லதனெடுமயங்கல்", "இதனினிற் றிது வென்னுமதுவே" என்ற பிரயோகங்களாலும் அறிக. சூழ்வனவற்றை - ஆலோசிப்பவற்றை. அழியாதன - அழிக்கமுடியாத உபாயங்களை. அவரது - அமைச்சரது. மதி - வடசொல். நுட்பம் - பண்புப்பெயர். அதிநுட்பம் என்பது - இடைச்சொல்தொட ராதலால், அன்மொழித்தொகையாகக் கொள்ள இடமில்லை; "ஐந்தாகை மொழிமேற்பிறவாக லன்மொழி". (சூ)

கூகூஎ. செயற்கை யறிந்தக் கடைத்து மூலகத்
தியற்கை யறிந்து செயல்.

(இ - ள்.) செயற்கை அறிந்தக்கடைத்தும் - (நூல்நெறியான்) வினை செய்யுந்திறங்களே அறிந்தவிடத்தும், உலகத்து இயற்கை அறிந்து - (அப் பொழுது நடக்கின்ற) உலகவியற்கையை அறிந்து, செயல்-(அதனோடு பொருந்தச்) செய்க; (எ - று.)

'கடைத்தும்' என்புழி, 'து' - பகுதிப்பொருள்விகுதி. நூல்நெறியேயாயினும் உலகநெறியோடு பொருந்தாதன செய்யற்க; செய்யின் அது பழிக்கும் என இயற்கையறிவாற் பயன் கூறியவாறு.

(கு - ரை.) நூல்நெறியான் - நீதிநூல்களிற்சொன்னவழியால். அறிந்தவிடத்தும் - அறிந்தாலும். அறிந்தக்கடை என்ற எதிர்காலவினையெச்சத்தின் மேல், து என்றது - ஒருபொருளையும் உணர்த்தாமையால், பதுதிப்பொருள் விதுதி யெனப்பட்டது; (இதனை, வடநூலார் ஸ்வார்த்தபாவதத்திதப்ரத்யய மென்பர்.) அது - உலகம். செயற்கை என்ற தொழிற்பெயரில், அல் - சாரியை. உம் - உயர்வுசிறப்பு. செயல் - வியங்கோள். "எவ்வது துறைவது லுலக முலகத்தோ, டவ்வது துறைவது தறிவு" எனக் கீழ் அறிவுடைமை யென்னும் அதிகாரத்திற் கூறியதற்கு ஏற்ப, இங்கு இவ்வாறு கூறப்பட்டது. "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லாரறிவிலாதார்" என ஒழுக்கமுடைமையிலும், "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத், தலகையா வைக்கப்படும்" என மேற் புல்லறிவாண்மையிலுங் கூறுதல் உணர்க. ஒழுக்கமுடைமையிற் பரிமேலழகர் 'அறநூல்சொல்லியவற்றுள், இக்காலத்திற்குஏலாதனவொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டுவருகலான் அவையும் அடங்க, 'உலகத்தோடொட்ட' என்றுகூறினார்' என உரைத்ததுங் காண்க. "உலகநூலுணர்ந்தோர்க்குரைப்பினுந்தெரியா, பேரறிவோர்வினையெனப்பேசுகவே, அறிவுநூலுணர்ந்தோர்க்கறையினுந்தெரியா, சிற்றறிவோர்வினையெனச்செப்புகவே, அவ்விருநூலையறிந்தார்தமக்கே, இவ்விருகூற்றெண்வினையிலங்கிடுமே" என்ற இலக்கணக்கொத்தை அறிக. (எ)

கூகூஅ. அறிகொன் றறியா னெனினு மூறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(இ - ள்.) அறி கொன்று - (அறிந்துசொல்லியாரது) அறிவையும் அழித்து, அறியான் எனின்உம் - (அரசன் தானும்) அறியானேயாயினும், (அக்குற்றம்நோக்கி ஒழியாது), உறுதி கூறல் - (அவனுக்கு) உறுதியாயின கூறுதல், உழையிருந்தான் கடன் - அமைச்சனுக்கு முறைமை; (எ - று.)

'அறி' என்பது - முதனிலைத்தொழிற்பெயர். கோறல் - தான் கொள்ளாமைமேலும் இகழ்ந்துகூறுதல். 'உழையிருந்தான்' எனப் பெயர்கொடுத்தார், 'அமாத்யர்' என்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதிகூறுக்கால் அவனது இறுதியெய்தற் குற்றத்தை உலகம் தன்மேல் ஏற்றும் என்பார், 'கூறல் கடன்' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், அவர்செயல் கூறப்பட்டது.

(கு - ரை.) சொல்லியாரது - சொன்னவருடைய. அழித்து-கேளாமல் அலட்சியஞ்செய்து; கொல்லுதல் - அழித்த லென்னும் பொருள தாதலை "உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற இடத்திலுங் காண்க. அக்குற்றம்நோக்கி ஒழியாது - அறிந்தோர்சொற்கேளாமையாகிய அரசனது குற்றத்தைப் பார்த்து அவனை விட்டிடாமல். உறுதியாயின - நன்மைதரும் வார்த்தைகள். அறி - அறிவு; பகுதியே தொழிற்பெயர்ப்பொருளை யுணர்த்திற்று. கோறல் - கொல்லுதல். அறிந்தாரது அறிவைக் கொல்லுதலாவது - தான் அதனை ஏற்றுக்கொள்ளாததோடு நில்லாமல் நிந்தித்தும் பேசுதல். உழையிருந்தான்-பக்கத்திலுள்ளவன். பொருண்மை-பொருள்; அர்த்தம். அது-பக்கத்திலுள்ளானென்பது. அரசன் கேளாவிட்டாலும் அமைச்சன் இடித்திடித்துக் கட்டுரைகூறாவிட்டால், பின்பு அரசனுக்கு அபாயம் நேர்ந்தால் அக்குற்றத்தை உலகத்தார் மந்திரியின்மேல் ஏற்றிக் கூறுவ ராதலால், தன் பழி கழித்துக் கொள்வதற்காகவும் அமைச்சன் உறுதிமொழி கூறவேண்டும். அவர்செயல் - அமைச்சர்செய்கை. எனினும், உம் - இழிவு சிறப்பு. உறுதி தருவனவற்றை 'உறுதி' என்றது - காரியவாகுபெயர். "மூரித்தேந்தாரினாய் நீ முனியினுமுறுதிநோக்கிப், பாரித்தேன் தருமநுண்ணூல் வழக்கதுவாதல் கொண்டே" என்ற சிந்தாமணியையும், "தம்முயிர்க்குறுதியெண்ணார் தலை மகன் வெகுண்டபோதும், வெம்மையைத்தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர், செம்மையிற்றிறம்பல்செல்லாத்தேற்றத்தார் தெரியுங்கால, மும்மையு முணரவல்லா ரொருமையேமொழியுநீரார்" என்ற கம்பராமாயணத்தையும் காண்க; "செவிசுடச்சென்றாங்கிடித்தறிவுமூட்டி, வெகுளினும் வாய்வெரீஇப்பேரா—கவிழ்மதத்த, கைம்மாவயத்ததேபாகு மற்றெத்திறத்து, மம்மாண் பினவே யமைச்சு" என்பர் நீதிநெறிவிளக்கநூலாரும். (அ)

௬௩௯. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

(இ - ள்.) பக்கத்துள் - பக்கத்து (இருந்து), பழுது எண்ணும் - பிழைப்ப எண்ணும், மந்திரியின்-அமைச்சனொருவனில், ஓர் எழுபது கோடி தெவ் - (அரசனுக்கு எதிர்நிற்பார்) ஓரெழுபதுகோடி பகைவர், உறும் - உறுவர்; (எ - று.)

'எழுபதுகோடி' என்றது, மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு. வெளிப்படநிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய்நிற்றலாற் காக்கப்படான் என்பதுபற்றி, இவ்வாறு கூறினார். 'எழுபதுகோடி மடங்கு நல்லர்' என்று உரைப்பாரும், 'எழுபதுகூறு தலை' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(கு - ரை.) பிழைப்ப எண்ணும் - (அரசனுக்குத்) தவறுசெய்ய நினைக்கும். உறுவர் - நல்லவராவர் என்றபடி. அவர் காக்கப்படுவர் - பகைவர் தடுக்கப்படுவர். உட்பகை-வெளித்தோற்றத்துக்கு வேண்டியவன்போலிருந்து உள்ளே பகைவனாயுள்ளவன்; அந்தச்சித்ரம். இங்கு, உட்பகையாயுள்ள மந்

திரியினது குற்றத்தால், தெவ்வரிடத்து நன்மை கூறியது - அகமலர்ச்சி யணி: ஒன்றினிடத்துள்ள குணத்தினுலேனும் குற்றத்தினுலேனும் மற்றொன் றற்கு நன்மையேனும் தீமையேனும் உளதாகக் கூறுதல், இதனிலக்கணம். 'எழுபதுகூறுதலே' என்றபாடத்துக்கு-எழுபதுமடங்கு மேலென்று பொருள். மந்த்ரம் - ஆலோசனை; அதனை யுடையவன், மந்த்ரீ எனக் காரணப்பெயர்; அவ்வடசொல், மந்திரியெனத் திரிந்தது. தெவ்-பகைமையுணர்த்தும் உரிச் சொல்; இது - இங்கே, பகைவர்க்குப் பண்பாகுபெயர். தெவ் என்பது - பொருளாற் பலர்பாலாயினும், சொல்லாற் பால்பகாஅஃறிணைப்பெய ராதலால், உறும் என்ற செய்யுமென்முற்றைக் கொண்டது. தெவ்வோர் என எடுத்துப் பகைவரென்று உரைத்தல், உறும் என்ற பயனிலைக்குப் பொருந் தாது; "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகுஞ் செயியுமென்முற்றே" ஆதலால். கோடி - வடசொல்; நூறுலக்ஷம். (சூ)

சூசo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(இ-ள்.) முறை பட சூழ்ந்துஉம்-(செய்யப்படும்வினைகளை முன்)அடைவு பட எண்ணிவைத்தும், முடிவு இல ஏ செய்வர் - (செய்யுங்கால் அவை) முடிவிலவாகவே செய்யாநிற்பர்: திறப்பாடு இலாதவர் - (முடித்தற்கு ஏற்ற) கூறுபாடு இல்லாதார்; (எ - று.)

அக்கூறுபாடாவன - வந்தவந்த இடையூறுகட்கு ஏற்றஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் திண்ணியராதலு மாம். பிழையாமல் எண்ணவல்ல ராய் வைத்தும் செய்து முடிக்கமாட்டாரும் உளர் என்பதாம்.

இவையிரண்டு பாட்டானும், அமைச்சருள் விடப்படுவாரது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) செய்யப்படும் வினைகளை - செய்யவேண்டுந் தொழில்களை. முன் அடைவுபட எண்ணிவைத்தும் - முன்பு கிரமமாக ஆலோசித்திருந்தும். செய்யா நிற்பர் - செய்வர். கூறுபாடு - வகைகள். இடையூறு - தடை. ஏற்ற ஏற்ற - அவ்வவற்றிற்குத் தக்க. திண்ணியர் - வலியர். பிழையாமல் எண் ணவல்லராய்வைத்தும் - தவறுமல் ஆலோசிக்கவல்லவராயிருந்தும். விடப் படுவார் - விடவேண்டியவர். கீழ்ப்பாட்டிலும் இப்பாட்டிலும் கூறியவாறு அமைச்சர் உட்பகை யுடையராஞலும், நன்முகஆராய்ந்து காரியத்தைத் தொடங்கியும் இடையூறுநேர்ந்தால் திண்ணியராய் ஏற்ற பரிகாரங்களைச் செய்யமாட்டாதவராஞலும் அன்னுரை அரசன் அமைச்சராக்கிக்கொள்ளாமல் விட்டிடவேண்டு மென்பதாம். சூழ்ந்தும், உம் - உயர்வுசிறப்பு. இலவே, ஏ - தேற்றம். அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. (கo)

சூடு - ஆம் அதிகாரம்.—சொல்வன்மை.

அஃதாவது - தான் கருதிய வினை முடியுமாற்றுல் *அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்லவல்ல ஞதல். மேல் "ஒருதலை

* பி - மி: வார்த்தை சொல்லவல்ல ஞதல்.

யாச் சொல்லலும் வல்லது'' என்றதனையே சிறப்புப்பற்றி விரித்து உரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) கருதிய வினை - நினைத்த காரியம். முடியும் ஆற்றால் - முடியும் வழியால். மேல் - சுஙச-ஆங்குறளில். 'மேல்' என்று தொடங்கும்வாக்கியம், அமைச்சு என்னும் அதிகாரத்தின்பின் 'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தை வைத்ததற்குக் காரணம் கூறுகின்றது. ௯)

சுசக. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

(இ - ள்.) (அமைச்சர்க்கு இன்றியமையாக்குணமாவது), நா நலம் என்னும்-(சான்றோரான்) நாநலமென்றுசிறப்பித்துச்சொல்லப்படும், நலம் - நலத்தினை, உடைமை - உடையராதல்: அந்நலம்—, (பிறர்க்கும்), யா நலத்து உள்ளதூஉம் அன்று - (பிறநலம்)எல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கது (ஆகலான்); (எ - று.)

நாவால் உளதாய நலம் என விரியும். 'இந்நலம், உலகத்தைத் தம்வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறாக வேண்டும்' என்னும் நீதிநூல்வழக்குப்பற்றி 'நாநலமென்னுநலன்' என்றும், பிறர்க்கும் இதுபோற் சிறந்தது பிறிது இன்மையான் 'அந்நலம் யாநலத்துள்ளதூஉமன்று' என்றுங் கூறினார். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழி லில்லாதார்க்கும் இஃது இன்றியமையாதாய பின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோ? என்பது கருத்து.

(கு-ரை.) நாநலம்-நாவினாற்பேசிக் காரியத்தை முடிக்குந் திறமை. பிறர்க்கும் - (பிரித்தல் பொருத்தல் முதலிய தொழிலில்லாத) அமைச்சரல்லாதவர்க்கும்: உம்மை - இழிவுசிறப்போடு எச்சப்பொருளது. நாநலம் - மூன்றாம் வேற்றுமை யுருபும்பயனுமுடன்தொக்கதொகை. வயத்தது-வசத்திலுள்ளது. வேறாக - தனிக்குணமாக; சிறப்பாக என்றபடி. வேண்டும் - இன்றியமையாதது. காமந்தக மென்னும் வடமொழிநீதிநூலில் மந்திரிகுண நிரூபணத்தில் ''வாக்மியாகவுள்ளவன் மந்திரியாக விருத்தற்குத் தக்கவன்''என்றது காண்க. பிறர்க்கும் இது சிறந்ததாதலை ''எத்துணையவாயினுங்கல்வி யிடமறிந், துய்த்துணர் வில்லெனி னில்லாகு-முய்த்துணர்ந்துஞ், சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற், பொன்மலர் நாற்றமுடைத்து'' என நீதிநெறி விளக்கநூலாரும் பாராட்டிக் கூறுவர். 'அத்தொழிலார்' என்றது, மந்திரிகளை. அந்நலம் - சுட்டிடைச்சொல்தொடர். யாநலம் - வினாவிடைச்சொல் தொடர். உள்ளதூஉம் - இன்னிசையளபெடை. (க)

சுசஉ. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(இ - ள்.) (தம் அரசற்கும் அங்கங்கட்கும்), ஆக்கம்உம் கேடுஉம் - ஆக்க வழிவுகள்,அதனால் வருதலால்-தம் சொல்லான் வருமாகலான்,—சொல்லின் கண் சோர்வு-(அப்பெற்றித்தாய) சொல்லின்கண் சோர்தலை, காத்து ஓம்பல்-(அமைச்சர் தங்கண் நிகழாமல்) போற்றிக்காக்க; (எ - று.)

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும், கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல் லையும், சொல்லாத லொப்புமைபற்றி, 'அதனால்' என்றார். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர்சோர்வுபோலாது உயிர்கட்கெல்லாம்ஒருங்கு வருதலால், 'காத்தோம்பல்' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், இஃது இவர்க்கு இன்றியமையாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) ஆக்க அழிவுகள் - நன்மை தீமைகள். அப்பெற்றித்து ஆய -அத்தன்மையதான. சோர்தல்-தளர்தல்; தவறுதல். தங்கண் நிகழாமல் - தம் மிடத்து உண்டாகாதபடி. போற்றி - கவனித்து; குறிக்கொண்டு. காக்க - காக்கக்கடவர். 'ஆக்கத்திற்கு' என்று தொடங்கிய வாக்கியம் - 'அதனால்' என்று ஒருமையாற் கூறியதன் காரணத்தை விளக்கும்; எனவே, இச்சொல் சாதியொருமை யென்றவாறாயிற்று. சாதியொருமை யாதற்குக் காரணம், 'சொல்லாதலொப்புமைபற்றி' என்பது. சொல்லாதலொப்புமைபற்றி-இரண் டும் சொல்லென ஒன்றாய் அடங்குதலால். உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் இரண்டிலும் சுட்டுப்பெயரை இயற்பெயரின் பின்னரே கூறுதல் வழாநிலையும், செய்யுளிற் சிறுபான்மை சுட்டுப்பெயரை இயற்பெயரின்முன் கூறுதல் வழுவமைதியும், வழக்கில் அங்ஙனங் கூறுதல் வழுவுமாம்; "இயற் பெயர்க்கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும், வினைக்கொருங்கியலுங் காலத் தோன்றின், சுட்டுப்பெயர்க்கிளவி முற்படக் கிளவார், இயற்பெயர் வழிய வென்மனார் புலவர்", "முற்படக்கிளத்தல் செய்யுளு ளுரித்தே" என்பன தொல்காப்பியவிதி. [நன் - பொது - சசூ.] 'காத்தோம்பல்' என வற்புறுத் திக்கூறியதற்குக் காரணம்—மற்றையோர்சோர்வு அவர்க்குமாத்திரமே தீங்கு தரும்; அமைச்சர்சோர்வோ, அரசனுக்கும் குடிகளுக்கும் எல்லார்க்கும் ஒரு சேரத் தீங்குவிளைக்கு மாதலால் என்க. இஃது - சோர்வுதீங்கிய சொல் வன்மை. இவர்க்கு - அமைச்சர்க்கு. ஆக்கம் - ஆகுதல், அபிவிருத்தி; தொழிற் பெயர். காத்தோம்பல் - ஓம்பிக்காத்தல் என விகுதி பிரித்துக் கூட்டுக; வியங்கோள். சோர்வு - தொழிற்பெயர். (உ)

சூசஎ. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(இ - ள்.) கேட்டார்-(நட்பாய்) ஏற்றுக்கொண்டாரை, பிணிக்கும்-(பின் வேறுபடாமற்)பிணிக்கும், தகை - குணங்களே, அவாய் - அவாவி,—கேளார் உம் - (மற்றைப் பகையாய்) ஏற்றுக்கொள்ளாதாரும், வேட்ப-(பின் அப்பகை மை யொழிந்து நட்பினை)விரும்பும்வண்ணம், மொழிவது-சொல்லப்படுவதே, சொல் ஆம் - (அமைச்சர்க்குச்) சொல்லாவது: (எ - று.)

அக்குணங்களாவன - வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதா தல், விழுப்பயன்தருதல் என்றிவை முதலாயின. அவற்றை அவாவுதலாவ து-சொல்லுவான்குறித்தனவேயன்றி வேறு துண்ணுணர்வுடையோர் கொள் பவற்றின்மேலும் நோக்கு உடைத்தாதல். 'அவாய்' என்னுஞ்செய்தெனெச்

சம், 'மொழிவது'என்னுஞ் செயப்பாட்டுவினை கொண்டது. இனி, 'கேட்டார் கேளார்' என்பதற்கு-நூல்கேட்டார் கேளாதார் எனவும், வினவியார் வினவாதார் எனவும் உரைப்பாரும் உளர். 'தகையவாய்' என்பதற்கு, எல்லாரும், 'தகுதியையுடையவாய்' என்று உரைத்தார்; அவர் அப்பன்மை மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர்.

இதனுன், சொல்லினது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) வேறுபடாமல் பிணிக்கும்-தம்மின் கீங்காதபடி வசப்படுத்துகின்ற. அவாவி - மேன்மேலுங்கொள்ளவிரும்பி. ஏற்றுக்கொள்ளாதாரும் - தமதுசொல்லை யங்கீகரியாதவரும். வழுவின்மை - சொற்பொருட் குற்றமில்லாமை. சுருங்குதல் - சொற்சுருங்குதல். விளங்குதல் - பொருள்விளங்குதல். விழுப் பயன் தருதல் - சிறந்தபொருளைக் கொடுத்தல். சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், கவின்றேர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், விழுமியதுபயத்தல் என்பன, நூலுக்குக் குணம்ஆமாறுங் காண்க. அவற்றை - வழுவின்மை முதலிய குணங்களை. சொல்லுவான் குறித்தன - சொல்ல உத்தேசித்தவை. நோக்கு உடைத்தாதல்-கவனமுடைமை, கருத்துடையதாதல், மொழிவது-செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை. நூல்கேட்டார்-சாஸ்திரங்களைப் பாடங் கேட்டவர். வினவியார் - கேள்விகேட்டவர். உடையவாய் - உடையனவாய். அப்பன்மை - 'தகைய' என்னும் பலவின்பால். நோக்கிற்றிலர் - கவனித்தாரில்லை. குற்றங் கூறப்பட்ட பிறருரைக்குத் தகையவாய் என்றபிரித்து, தகைய - பலவின்பாற்குறிப்பு வினையாலணையும் பெயரென்னவேண்டும். கேட்டார் - அங்கீகரித்தவர். கேட்டார்ப் பிணிக்கும்-உயர்திணையில் இரண்டாம்வேற்றுமையுருபு தொக, அதன்மூன் வலிமிக்கது; [நன் - உருபு-கசு.] தகை - தகுதி, குணம்; இது - தொழிலடியாப்பிறந்ததாயினும், பொருளாற் பண்புப்பெயர். அவாய் - அவாவு என்னும் பகுதியடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம். கேளாரும், உம் - இழிவுசிறப்பு; இறந்தது தழுவிய எச்சமுமாம். (கூ)

கூசூச. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(இ - ள்.) சொல்லை - (அப்பெற்றித்தாய) சொல்லை, திறன் அறிந்து-(அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவு மாய) திறங்களையறிந்து, சொல்லுக—: அதனின் ஊங்கு - அங்ஙனஞ் சொல்லுதற்கு மேம்பட்ட, அறனும் பொருளும்—, இல் - இல்லை: (ஆகலான்); (எ - று.)

அத்திறங்களாவன - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றுன் வருந் தகுதிவேறுபாடுகள். அவற்றை அறிந்து சொல்லுதலாவது-அவற்றுள் தமக்கும் அவர்க்கும் உளவாய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து அவ்வம்மரபாற் சொல்லுதல். அஃது, உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும் இனிமையையும் பயத்தலின், அறனுமாயிற்று; தம்காரியம் முடித்தலின், பொருளாயிற்று. 'அறனும் பொருளும்' எனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர்.

(கு - ரை.) அப்பெற்றித்தாய - முக்தினகுறளிற் சொன்ன கேட்டார்ப் பிணிப்பதாய்க் கேளாரையும் வேட்பிக்குந் தன்மையை யுடைய. திறங்கள் - தன்மைகள். குடிப் பிறப்பு - உயர்குடியிற் பிறத்தல். ஒழுக்கம் - நடத்தை. உருவம் - ரூபம். பருவம் - பிராயம். அவ்வம்மரபால் - அத்தந்தநிலைமைக்குத் தக்கபடி சொல்லவேண்டிய முறைமையால். பயத்தலின்-தருதலால். மூலத்தில் 'அறனும்பொருளும்' என்றது - அறத்துக்கும் பொருளுக்கும் காரணமென்றபடி; உபசாரவழக்கு. ஊங்கு-இடைச்சொல். அளபெடை, இன்னிசை நிறைப்பது. (சு)

சூசரு சொல்லுக சொல்லிப் பிறிதோர்சொ லச்சொல்லே
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ - ள்.) சொல்லே - (தாம் சொல்லக்கருதிய) சொல்லே, பிறிது ஓர் சொல் - பிறிதோர்சொல்லாய், வெல்லும் சொல் - வெல்லவல்லதொரு சொல், இன்மை - இல்லாமை, அறிந்து—, (பின்), அச்சொல்லே—, சொல்லுக—;

பிறிதோர்சொல் - மாற்றாரது மதத்தைச்சொல். வெல்லுதல் - சூணங்களான் மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக என்பதாம். இனி, பிறிதோர் சொல், வெல்லுஞ்சொல் எனச் செவ்வெண்ணுக்கி, ஒத்தசொல்லும் மிக்கசொல்லும் உளவாகாமற் சொல்லுக என்று உரைப்பாரும் உளர். இது - சொற் பொருட்பின்வருநிலை.

(கு - ரை.) பிறிதோர்சொல் - மாறுபட்ட ஒருசொல். அதுவே - தம் சொல்லே. செவ்வெண் - உம்மைதொக்குவருவது; பிறிதோர் சொல்லும் வெல்லவல்ல சொல்லும் என இங்கே, பெயர்ச்செவ்வெண். இது - இப் பாட்டு. (சு)

சூசசு. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றூர் கோள்.

(இ - ள்.) தாம் வேட்ப சொல்லி - (பிறர்க்குத்) தாம் (சொல்லுங்கால், அவர் பின்னுங்கேட்டலே) விரும்புமாறு சொல்லி, பிறர் சொல் பயன் கோடல் - அவர் (தமக்குச் சொல்லுங்கால் அச்) சொல்லின்பயனைக் கொண்டொழிதல், மாட்சியின் மாசு அற்றூர் கோள்-அமைச்சியலுட் குற்றமற்றூராது துணிபு; (எ - று.)

பிறர்சொற்களுட் குற்றமுளவாயினும் அவைநோக்கி இகழாரென்பதாம். வல்லாரை இகழ்தல் வல்லுநர்க்குத் தகுதியின்மையின், இதுவும் உடன் கூறினர்.

இவைமூன்றுபாட்டானும், அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) பயனைக் கொண்டு-பொருளைமாத்திரம் கிரகித்துக்கொண்டு. ஒழிதல் - சொற்குற்றத்தைப் பாராட்டாமை. அமைச்சுஇயல் - மந்திரிலக்ஷணம். துணிபு - நிச்சயம், சித்தாந்தம், தேர்ந்தபொருள். வல்லார் - வல்லவரல்லாதவர்: இது, செய்யுட்சொல்; சிறுபான்மை உரைநடையில் வந்தது.

"வேண்டுவனம்பி" என்ற சிந்தாமணிச் செய்யுளில், நச்சினார்க்கினியர் 'வல்லான், செய்யுளாய் மறையாகாது, வழக்காய் உடன்பாடுணர்த்திற்று; இது மேலும் கொள்க'என உரைத்ததுகொண்டு அறிக. வல்லுநர்க்கு - வல்லவர்களுக்கு. புறநானூற்றில் உள, நுஉ-ஆம் பாட்டுக்களில் "வல்லாராயினும் வல்லுநராயினும்" என வந்ததையும், அவற்றிற்கு உரைகாரர் 'ஒன்றை மாட்டாராயினும் வல்லாராயினும்' என்றும், 'யாதொருகல்வியை மாட்டாராயினும் அதனை வல்லாராயினும்' என்றும் உரைத்ததையும் காண்க. 'இவை சொல்லொன்றே விதிவினையும் மறைவினையு மாயின' என்பர், இலக்கணக்கொத்துடையார். இது எதிர்மறைப்பொருளுணர்த்துகையில், எதிர்மறையாகாரம் புணர்ந்துகெட்ட தென்றுவது, 'ர்' விகுதி யென்றுவது கொள்ளத்தக்கது. இதுவும் - சொற்குற்றம் பாராட்டாமையை. அதனை - சொல்லை. மாட்சி - அதனையுடைய அமைச்சியலுக்கு, இங்கே, பண்பாகுபெயர். கோள் - கொள்கை; கொள் என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (சு)

சுசஎ. சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மறிது.

(இ - ள்.) சொலல் வல்லன் - (தான் எண்ணியகாரியங்களைப் பிறர்க்கு ஏற்பச்)சொல்லுதல்வல்லனும், சோர்வு இலன்-(அவை மிகப்பலவாயவழி ஒன்றிலுஞ்)சோர்வு இலனும், அஞ்சான் - (அவைக்கு)அஞ்சானுமாயினன்(யாவன்), அவனை—, இகல் வெல்லல் - மாறுபாட்டின்கண் வெல்லுதல், யார்க்குமும் அரிது - யாவர்க்கும் அரிது; (எ - று.)

ஏற்பச் சொல்லுதல்-அவர்க்கு அவை காரியமல்ல வாயினும் ஆமெனத் துணியும்வகை சொல்லுதல். சோர்வு-சொல்லவேண்டுவதனை மறப்பான் ஒழிதல். இம்மூன்றுகுணமுமுடையானை மாற்றரசர்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வார் இல்லை என்பதாம்.

(கு - ரை.) அவை - அத்தொழில்கள். பலவாயவழி - அநேகங்களாக இருந்தபோதிலும். அவைக்கு - சபையார்க்கு. 'சுட்டிற்குமுன்னே விளுவர வேண்டும்' என்ற வடநூல் வழக்கை யொட்டி, 'அவனை' என்பதற்குமுன் 'யாவனை' என்று வருவித்தார். மாறுபாட்டின்கண் - சொற்போரில் என்றபடி. அவர்க்கு - தன்சொல்லைக் கேட்கும்பிறர்க்கு. அவை - தான்சொல்லுந் தொழில்கள். காரிய மல்ல - செய்யத்தகாதவை. ஆமெனத் துணியும்வகை - செய்யத்தக்கவையென்று நம்பும்படி. மறப்பான் ஒழிதல் - மறதியால் விடுதல். இம்மூன்றுகுணம் - சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை. மாற்றரசர்-பகைமைபாராட்டி யென்றபடி. (எ)

சுசஅ. விரைந்து தொழில்கேட்கு ஞாலநிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(இ - ள்.) தொழில் - (சொல்லப்படும்) காரியங்களை, நிரந்து - நிரல்படக்கோத்து, இனிது சொல்லுதல் வல்லார் - இனிதாகச்சொல்லுதல்வல்லார

மை, பெறின்—, ஞாலம்.உலகம், விரைத்து கேட்கும்-(அவற்றை) விரைத்து ஏற்றுக்கொள்ளும்; (எ - று.)

தொழில் - சாதியொருமை. நிரல்படக் கோத்தல் - முன்சொல்வனவும் பின்சொல்வனவும் அறிந்து அம்முறையேவைத்தல். இனிதாதல்-கேட்டார்க்கு இன்பம்பயத்தல். ''சொல்லுதல் வல்லான் நூறுயிரவருள் ஒருவன்''என்ற வடமொழிபற்றி, 'பெறின்' என்றார். ஈண்டும், கேட்டல்-ஏற்றுக்கோடல்.

இவையிரண்டுபாட்டானும், அவ்வாற்றாற் சொல்லுதல்வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - சை.) நிரல்படக்கோத்து-வரிசைப்படத் தொடுத்து. வல்லார்-வல்லவர். அவற்றை - அக்காரியங்களை. ''ஸுதேஷ்ணாஜாயதே ஸுகரஃ - ஸஹஸ்ரேஷ்வேக பண்டிதஃ, வக்தா ஸுதுஸ்ஹஸ்ரேஷ்வ - தாதா பவதி வா நவா' என்ற வடநூல்மேற்கோள் இங்குக் குறிக்கப்பட்டது. அம்முறையே - முன்பின்சொல்லவேண்டிய முறைப்படியே. ''நூற்றுவரிற் றேன்றுங் கறுகண் ணூறுயிரவ, நாற்றுவரித் தோக்க வலையகத்து - மாற்றத்தான், ஒன்று கொடுக்கு மகங்றேன்றுந் தேற்றப், பரப்புநீர் வையகந் தேரினு மில்லை, யிரப்பாரை யெள்ளா மகன்'' என்பது தகுரோயாத்திரை. ''ஆர்த்தசைவதூற்றெருவாயிரத்தொன்றும் புலவர், வார்த்தை பதினாயிரத்தொருவர் - பூத்தமலர்த், தண்டாமரைத்திருவே தாதா கோடிக்கொருவர், உண்டாயினுண்டென்றறு''என்ற தனிப்பாடலுங் காண்க. 'பெறின்'என எதிர்கால வினையெச்சத்தாற் கூறியது, பெறுதலின் அருமைவிளக்கும் என்றபடி. ஈண்டும் - இங்கும்; உம்மை, சூசஙூ-ஆம் குறட்பாவைக்குறிக்கும். இக்குறட்பாவைஎடுத்துக்காட்டி,சொல்வென்றியென்னுந் துறையென்பர், பொருளதிகார வுரையில். ஞாலம் - உலகத்தாரென்றபடி. (அ)

சூசஙூ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

(இ - ள்.) மாசு அற்ற சில-குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை, சொல்லல்-(அவ்வாற்றால்)சொல்லுதலை,தேற்றாதவர்-அறியாதார்,பலசொல்லபலவாயவார்த்தைகளை(த்தொடுத்துச்)சொல்ல,காமுறுவர்-விரும்புவர்;(எ-று.)

குற்றம் - மேற்சொல்லிய குணங்கட்கு மறுதலையாயின. இடைவிடாது பலசொல்லுதலையும் சொல்வன்மையென்று விரும்புவாரும் உளர்: அவர் இவ்வாறு சொல்லமாட்டாதாரே: வல்லார் அது செய்யார் என யாப்புறுப்பார், 'மன்ற' என்றார்.

(கு - சை.) அவ்வாற்றால் - கீழ்க்குறளிற்கூறியவகையால். மேற்சொல்லிய - சூசஙூ - ஆம் குறளி னுரையிற் கூறிய. மறுதலையாயின - எதிரிடையானவை; இங்கே, வழூஉச்சொற்புணர்த்தல், மிகைபடக்கூறல், மயங்கவைத்தல், செவிக்கு இன்னாதல், விழுப்பயன்தராமைமுதலியன. யாப்புறுப்பார்-உறுப்படுத்துபவர். மன்ற-உறுதிப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல்; ''மன்றவெண்கிளவி தேற்றஞ் செய்யும்'' என்பது, தொல்காப்பியம். காமுறுவர் - காமமுறுவர் என்பதன் விகாரம். அற்ற - பெயர்;பெயரெச்சமுமாம். (கூ)

சுருo. இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(இ - ள்.) கற்றது - கற்றுவைத்தநூலை, உணர-(பிறர்) அறியும்வண்ணம், விரித்து உரையாதார் - விரித்து உரைக்கமாட்டாதவர்;—இணர் ஊழ்த்தும் -கொத்தின் கண்ணே மலர்ந்துவைத்தும், நாறு - நாறுத, மலர் - பூவை; அனையர் - ஒப்பர்; (எ - று.)

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச் சூடப்படாதவாறு போல, நூலைக் கற்றுவைத்தும் சொல்லமாட்டாதார் கண்ணுமதிக்கப்படாரென்ற மையின், இது - தொழிலுவமையாயிற்று.

இவையிரண்டுபோட்டாலும், அதுமாட்டாதாரது இழிவு கூறப்பட்டது.

(கு - ரை.) கற்றுவைத்த - கற்றுள்ள. மலர்ந்துவைத்தும் - மலர்ந்திருந்தும். நாறுத - மணம்வீசாத. செவ்விபெற - அழகாக; காலம்வாய்க்க எனினுமாம். நாற்றமில்லாத - வாசனையில்லாத. நாற்றமில்லாதபூ நிர்க்கந்த குஸுமமெனப்படும். உவமையணி. அதுமாட்டாதார் - ஒழுங்காகச்சொல்லத் திறமற்றவர். ஊழ்த்து என்ற இறந்தகாலவினையெச்சத்தில், ஊழ் - பகுதி. உம் - உயர்வுசிறப்பு. (கo)

சுசுர் - ஆம் அதிகாரம்.—வினைத்தூய்மை.

அஃதாவது - செய்யப்படும்வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயக்துநல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றுகவேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வினைத்தூய்மை - செய்யுந்தொழில் சுத்தமானதாயிருத்தல். பொருளே யன்றி - செல்வத்தை யுண்டாக்குதல்மாத்திரத்தோடு நில்லாமல். பயந்து - உண்டாக்கி.

சுருக. துணைநல மாக்குந் தருவும் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

(இ - ள்.) (ஒருவனுக்கு),—துணை நலம் - துணையது நன்மை, ஆக்கம் தருவும் - செல்வமொன்றனையுங் கொடுக்கும்; (அவ்வளவன்றி), வினை நலம் - வினையது நன்மை, வேண்டிய எல்லாம் தரும் - (அவன்) வேண்டியன யாவற்றையுங் கொடுக்கும்; (எ - று.)

'வேண்டியவெல்லாம்' என்றது-இம்மைக்கண் அறம் பொருள் இன்பம் மூதலாயவற்றையும், மறுமைக்கண் தான்விரும்பிய பதங்களையும்.

இதனுன், காணப்படுங் துணைநன்மையினும் கருதப்படும் வினைநன்மை சிறந்தது என வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) துணையது நன்மை - துணைவர் நல்லவராயிருத்தல். ஒன்றனையும் - ஒன்று மாத்திரத்தை. அவ்வளவு அன்றி - செல்வமொன்றையுங் கொடுக்கும் என்ற அந்த அளவோடு நில்லாமல். பதம் - இடம், பதவி, உலகம். காணப்படுதல் - பிரதியக்ஷப்பிரமாணத்துக்கு இலக்காதல். கருதப்படுதல்-அது

மானப்பிரமாணத்துக்கு இலக்காதல். துணைநலம் இம்மைப்பயனுகிய செல்வ மொன்றையே தருதலால் 'காணப்படுந் துணை நன்மை' என்றும், வினை நலம் மறுமையையுந் தருதலால் 'கருதப்படும் வினைநன்மை' என்றுங் கூறினர்: செல்வந்தருதல் இம்மையிலேயே நேர்தலால் ப்ரத்யக்ஷப்ரமாணத்துக்கு விஷய மாதலும், மறுமையில் நற்பயனளிப்பது அநுமானத்தினுலேயே ஊகித்து உணரவேண்டிய தாதலுங் காண்க. துணை - பண்பாகுபெயர். ஆக்கம்-செல்வத்துக்கு, ஆகுபெயர். தரூஉம் - அளபெடை செய்யுளோசை நிறைத்தது. வேண்டிய - பெயரும், பெயரெச்சமுமாகக் கொள்ளத்தக்கது. (க)

சுருஉ. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(இ - ள்.) புகழொடு நன்றி பயவா வினை - (தம் அரசனுக்கு இம்மைக் கண்) புகழும் (மறுமைக்கண்) அறமும் பயவாத வினைகளை, (அமைச்சர்க்கு), என்றுஉம் ஒருவுதல் வேண்டும் - எக்காலத்தும் ஒழிதல் வேண்டும்; (எ - று.)

பெருகல் சுருங்கல் இடைநிற்றல் என்னும் நிலவேறுபாடு காலத்தான் வருதலின், 'என்றும்' என்றார். 'வேண்டும்' என்பது - ஈண்டு, இன்றியமையாது என்னும் பொருட்டு.

(கு - ரை.) இம்மைக்கண் - இப்பிறப்பில். மறுமைக்கண் - இறந்தபின் வரும் நிலையில். அறம் - இங்கே, புண்ணியம். பயவாத - உண்டாக்காத. பெருகல் சுருங்கல் இடைநிற்றல் - சுருஉ - ஆம் குறளின் குறிப்பிற் காண்க. பொருட்டு - பொருளது. (உ)

சுருஊ. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(இ - ள்.) ஆதும் என்னுமவர் - மேலாகக்கடவே மென்று கருதுவார், ஒளி மாழ்கும் வினை - தம் ஒளி கெடுதற்குக் காரணமாய வினையை, செய் - செய்தலை, ஓஒதல்வேண்டும் - தவிர்க; (எ - று.)

'ஓதல்வேண்டும்' என்பது - ஒருசொல் நீர்மைத்து; ஓவுதல் என்பது குறைந்துநின்றது. ஒளி-தாம் உளகாலத்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல். 'செய்' என்னும் முதனிலைத்தொழிற்பெயர், மாற்றப்பட்டது. அன்றி, செய்வினை என வினைத்தொகையாக்கியவழி, பொருளின்மை அறிக. ஒளி கெட வருவது ஆக்கமன்று என்பதாம்.

(கு - ரை.) நீர்மைத்து - தன்மையது. 'ஓதல்வேண்டும்' என்பதை ஒரு சொல்லாகக்கொள்ளுமிடத்து, 'என்னுமவர்' - எழுவாய்; இருசொல்லாகக் கொள்ளுமிடத்து, ஓதல்-எழுவாயும், வேண்டும்-பயனிலையு மாக, என்னுமவ ரென்றது ஓதல் என்றதனைக் கொள்ளும். 'ஓவுதலென்பது குறைந்துநின்றது' என்றவிடத்து, 'ஒருவுதல் என்பது ஆதிநீண்டு இடைக்குறைந்து நின்றது' என்று பிரதிபேதம். ஒளி - கௌரவ மென்றபடி. ஆதும் என்னுமவர் ஒளி மாழ்கும் வினைசெய்(தல்) ஓதல்வேண்டும் என அன்வயம் காண்க. செய்வினை என்பதை வினைசெய் என்று மாற்றிப் பொருளுரையாது, செய்வினை - செய்

யும்வினை எனவினைத்தொகையாகக் கொண்டால், பொருட் பொருத்தமில்லை யென்க. பொருளின்மை - ஒழுங்காகப் பொருள்படாமை. அளபெடைகள், செய்யுளோசை நிறைப்பன. ஆதும்-தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று.(கூ)

கூருச. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(இ - ள்.) இடுக்கண் படின்உம்-(தாம்) இடுக்கணிலே பட வரினும், இளிவந்த செய்யார் - (அதுதீர்தற்பொருட்டு முன்செய்தார்க்கு) இளிவந்த வினைகளைச் செய்யார்: நடுக்கு அற்ற காட்சியவர் - துவக்கமற்ற தெளிவினையுடையார்; (எ - று.)

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கண் நோக்கி எஞ்ஞான்றுங் கழியாத இளிவு எய்தற்பாலதன்று என்பதூஉம், அஃது எய்திஞலும் வருவதுவரும் என்பதூஉம் தெளிவர் ஆகலான், 'செய்யார்' என்றார்.

(கு - ரை.) பட-அகப்பட; அனுபவிக்க என்றபடி. அது தீர்தற்பொருட்டுச் செய்யார் என இயையும். இளிவந்த - இழிவு உண்டான காரியங்கள்: இறந்தகாலப் பலவின்பால்வினையாலணையும்பெயர். துளக்கம் - அசைவு, சஞ்சலம். கழிவதாய - நீங்குவதான. இடுக்கண்-துன்பம்; கண் இடுங்குதல் பற்றி வந்த பெயர்: காரியம் காரணமாக வந்த உபசாரவழக்கு; இஃது, இடுங்குகண் என்பதன் விகாரம். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். எய்தற்பாலதன்று - அடையத்தக்கதன்று. அஃது எய்திஞலும்-இளிவையடைந்தாலும். வருவது - விதிவசத்தால் வருந் தீங்கு. இளிவந்த என்பதில், இளி வா என்னும் இரண்டுந் தொடர்ந்த இளிவா - பகுதி. நடுக்கு - நடுங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். காட்சியென்ற தொழிற்பெயரில், காணுதல் - மனத்தால் ஆராய்தல். (சு)

கூருஉ. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

(இ - ள்.) எற்று - (யான் செய்தது) எத்தன்மைத்து என்று, இரங்குவ - (பின் தானே) இரங்கும் வினைகளை, செய்யற்க - (ஒருகாலும்) செய்யாதொழிக: செய்வான்எல்-(அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச்) செய்யுந் தன்மையனஞயினஞயின், மற்று - பின் (இருத்து), அன்ன - அவ்விரங்கல்களை, செய்யாமை - செய்யாதொழிதல், நன்று—; (எ - று.)

'இரங்குவ' என மூன்வந்தமையின், பின் 'அன்ன' எனச் சுட்டியொழிந்தார். அவ்வினைகளது பன்மையா , இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின் இருந்து இரங்குவனஞயின், அதுதீரும்வாயிலறிந்தில னெனவும், திட்பமிலனெனவும், பயனில்லனசெய்கின்ரு னெனவும், தன்பழியைத் தானே தூற்றுகின்ரு னெனவும் எல்லாரும் இகழ்தலின், 'பின் இரங்காமை நன்று' என்றார். இதுவும், வினைத்தூயார்செய லாகலின், உடன் கூறப்பட்டது. 'பின்தொடர்தற்குச் செய்வா னஞயின், அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்று' என, பிறரெல்லாம் இயைபு அற உரைத்தார்.

(கு - ரை.) பின் தானே இரங்கும்-பச்சாத்தாபப்படும்படியான. மயங்கி-மனந்தடுமாறி. முன்னே ஆலோசியாமல் யாதொருகாரியத்தையுஞ் செய்தல் கூடாது; ஏனெனில்,—சிலகாரியங்களைச் செய்துவிட்டால், பின்பு என்செய்தோமென்று அநுதாப முண்டாம்: தகாத தொழில்களை ஒருகால் செய்துவிட்டானாயின், அதற்காகப் பின்பு இரங்கிக் காலங்கழித்தல் தகுதி யன்று; "கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்" ஆதலால் என்க. அது தீரும் வாயில் - அச்செய்கையாலுண்டாகிற தீங்கினின்றும் நீங்கும்வழி. திட்பம்-நெஞ்சுறுதி. தூற்றுதல் - கூறிவெளிப்படுத்தல். இதுவும் - இரங்காமையும். வினைத்தூயார் - தொழில்சுத்தமானவர். பின்தொடர்தற்குச் செய்தல் - முன்செய்த தகாத செயல்களையே பிடிவாதத்தால் மேல்மேல் அடுத்தடுத்துச் செய்தல்; இது அவற்றைத் தக்கனவென்று சாதித்தற்பொருட்டு. சங்கத்துப்பிரதியில், பின்தொடர்தற்கு என்றஇடத்தில் 'பிற்றொடர்க்கு' என்று பாடம்: பிற்றொடர் என்றது - 'செய்வானேல் மற்றன்னசெய்யாமை நன்று' என்றதொடரை. இயைபுஅற - பொருத்தமில்லாமல். எற்று - வினாவடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று; று - விகுதி. இரங்குவ - பெயர். செய்யற்க - எதிர்மறை வியங்கோள். மற்று - இங்கே, பின் என்னும் பொருளது. பரிமேலழகருரைக்கு, அன்ன - அகரச்சுட்டடியாப்பிறந்ததும்; பிறருரைக்கு அன் என்னும் உவமவிடைச்சொல்லடியாப்பிறந்தது மாம். நன்று - முற்று. (ரு)

சுருசு. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(இ - ள்) ஈன்றாள் - (தன்னைப்) பயந்தாளது, பசி-பசியை, காண்பான் ஆயின்உம் - (வறுமையால்) கண்டுஇரங்குந்தன்மைய னாயினா னெனினும், (அதுசுட்டி), சான்றோர் பழிக்கும் வினை-அறிவுடையார் பழிக்கும் வினைகளை, செய்யற்க - (ஒருவன்) செய்யாதொழிக; (எ - று.)

'இறந்தமூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடைமனைவியும் குழவியும் பசியான்வருந்தும் எல்லைக்கண், தீயனபலவுஞ் செய்தாயினும் புறந்தருக' என்னும் அறநூற்பொதுவிதி, பொருள்நூல்வழியொழுகுதலும் அரசர்தொழிற்கு உரியராதலும் நன்குமதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கு எய்தாமைபற்றி இவ்வாறு கூறினார்.

இவையைந்துபாட்டானும், 'பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க' என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பயந்தாளது - பெற்றதாயினது. வறுமை-செல்வமில்லாமை; தரித்திரம். அது சுட்டி - அத்துன்பங் காரணமாக. இறந்த மூப்பினர் - மிக்க முதுமையுடையவர். இரு முது குரவர்-இரண்டு பழைய பெரியோர்; தாய்தந்தையர். கற்பு - பதிவிரதாதருமம். குழவி - குழந்தை. எல்லைக்கண் - சமயத்தில். புறந்தருக - பாதுகாக்க. அறநூல் - தருமசாஸ்திரம். "அப்யகார்யஶதம் க்ருத்வா - பர்த்தவ்யா மநுரப்ரவீத்" என்ற வடமொழிமேற்கோள் இங்குக் காணத்தக்கது. பொருள்நூல் - அர்த்தசாஸ்திரம்; இராசநீதி முதலியன.

ஒழுகுதல் - நடத்தல். மதிக்கற்பாடு - மதிக்கப்படுதல். எய்தாமை - பொருந்தாமை. இருமுதுமக்களுள் தந்தையினும் தாய் அன்பிலும் கடமையிலும் சிறத்தலால், அவளையே யெடுத்துக்கூறினர். (சு)

சுருஎ. பழிமலிந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ - ள்.) (சாலாதார் தீயவினைகளைச் செய்து அதனால்), பழி மலிந்து-பழியைத் தம்மேற்கொண்டு, எய்திய - பெற்ற, ஆக்கத்தின் - செல்வத்தின், சான்றோர்-(அதுமேற்கொள்ளாத) சான்றோர் அனுபவிக்கும், கழி நல்குரவே-மிக்கநல்குரவே, தலை - உயர்ந்தது; (எ - று.)

நிலையாதசெல்வத்தின் பொருட்டு நிலையினபழியை மேற்கோடல் சால் போடு இயையாமையின், 'சான்றோர்கழிநல்குரவே தலை' என்றார்.

(கு - ரை.) சாலாதார் - சான்றோரல்லாதவர்; முந்தின குறளில் 'சான்றோர்' என்பதற்கு - அறிவுடையா ரென உரைத்ததனால், அதன் எதிர்மறையாக, இதற்கு - அறிவில்லாதா ரென்க. அதுமேற்கொள்ளாத - தீவினை செய்து பழிப்போடு செல்வம்பெறுத. நல்குரவு - வறுமை; தொழிற்பெயர்: நல்கூர் என்னும் பகுதி குறுகிற்று; அ - சாரியை; நிலையாத - நிலைத்திராத. நிலையின - நிலையுள்ள; உலகமுள்ளவளவும் அழியாத. மேற்கோடல் - ஏற்றுக் கொள்ளுதல். சால்போடு இயையாமையின் - பெருமைக்குணத்துக்குத் தகாமையால். கழி - மிகுதியுணர்த்தும் உரிச்சொல். மலைதலெனினும் மிலைதலெனினும் ஒக்கும். அகமலர்ச்சியணி; இலக்கணம் முன்கூறப்பட்டது. எ - பிரிநிலை. (எ)

சுருஏ. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(இ - ள்.) கடிந்த-(நூலோர்) கடிந்த வினைகளை, கடிந்துஒரார்-(தாமும்) கடிந்து ஒழியாது, செய்தார்க்கு - (பொருள்நோக்கிச்) செய்த அமைச்சர்க்கு, அவை தாம் முடிந்தால்உம்-அவை (தூயவன்மையின் முடியா, ஒருவாற்றான்) முடியினும், (பின்), பீழை தரும்-துன்பத்தையே கொடுக்கும்; (எ - று.)

முடிதல் - கருதியபொருள் தருதல். பீழைதருதலாகிய பொருளின் தொழில், அதற்குக் காரணமாய வினைகள்மேல் ஏற்றப்பட்டது.

(கு - ரை.) நூலோர்-சாஸ்திரமறிந்தவர். கடிந்த-(செய்யலாகாதென்று) விலக்கிய. பொருள் நோக்கி-செல்வவருவாயை உத்தேசித்து. அவை- நூலோர் கடிந்த அவ்வினைகள். தூய அன்மையின் - சுத்தமானவையல்லாமையால். பொருளின் தொழில் - செல்வத்தின் காரியம். அதற்கு-செல்வத்திற்கு. காரியத்தின்தொழிலைக் காரணத்தின்மேல் ஏற்றிய உபசாரவழக்கு. அத்தொழில்கள் செல்வத்தை யுண்டாக்கி அதன்மூலமாகத் துன்பந்தருமென்க. கடிந்த - பெயர். ஒரார் - ஒருவார் என்னும் எதிர்மறைமுற்றெச்சம் விகாரப்பட்டது. 'முடிந்தாலும்' என்ற உம்மை - விகற்பப்பொருளை விளக்குவது. தாம்-அசை.

பீழை - பீடா என்னும் வடமொழியின் சிதைவு; பீழையென்றதன் இறுதியில், பிரிநிலே யேகாரம் விகாரத்தால் தொக்கது. (அ)

சூருக. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(இ - ள்.) (ஒருவன் தீயவினைகளைச்செய்து), அழ - (பிறர்) இரங்க, கொண்ட எல்லாம் - கொண்டபொருளெல்லாம், அழ-(இம்மையிலே அவன் தான்) இரங்க, போம் - போகாநிற்கும்; நல் பாலவை-(மற்றைத்) தூயவினையான்வந்த பொருள்கள், இழப்பின்உம் - (முன்) இழந்தாலுமினும், (அவனுக்கு), பின் பயக்கும் - பின்னர்வந்து பயன்கொடுக்கும்; (எ - று.)

'பின்' எனவே, மறுமையும் அடங்கிற்று. பொருள்களான், அவற்றிற்குக்காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

(கு - ரை.) கொண்ட - தான்கவர்ந்துகொண்ட. அவன் - அக்கொண்டவன். போகாநிற்கும் - அழியும். பொருள்களான்-பொருளின்நிலைமைகளால். இழப்பினும் என்ற இழிவுசிறப்பும்மை, இழவாமையையுங் குறிக்கும். பின் - இடைச்சொல்; காலம். நற்பாலவை - நல்லதன்மையையுடையவை. இம்மையிலே ஒருவன் இரங்க அவனைவிட்டுப் போம்பொருள்கள் தீயவினைசெய்து பிறர் இரங்கக்கொண்டவை என்றும், இழந்தாலும் பின்னர்வந்து பயன்தரும் பொருள்கள் தூயவினையால் வந்தவையென்றும் அறியலாமென்க. (கூ)

சூசுo சலத்தாற் பொருள்செய்தே மாக்கல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(இ - ள்.) (அமைச்சன்), சலத்தால்-தீயவினைகளால், பொருள்செய்து பொருள்படைத்து, *ஏமாக்கல் - (அதனால் அரசனுக்கு)ஏமஞ்செய்தல்,—பசுமண் கலத்துள் - பசியமட்கலத்துள்ளே, நீர் பெய்து-நீரைப் பெய்து, இரீஇ அற்று - (அதற்கு) ஏமஞ்செய்ததனோடு ஒக்கும்; (எ - று.)

முன் ஆக்கம்பயப்பனபோல்தோன்றிப்பின் அழிவேபயத்தலால், அவை சல மெனப்பட்டன. †'ஏமமாக்கல்' என்பது, ஏமாக்கல் என்று ஆயிற்று: ஏமத்தை அடையப்பண்ணுதல் என்றவாறு. இருத்துதல் - நெடுங்காலம் இருப்பச் செய்தல். அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம். பிறரெல்லாம் 'ஏமாத்தல்' என்று பாடமோதி, அதற்கு - மகிழ்தல் என்றும், 'இரீஇ யற்று' என்பதற்கு - வைத்தாற்போலும் என்றும் உரைத்தார்; அவர், அவை தன்வினையும் பிறிதின்வினையுமாய் உவமையிலக்கணத்தொடு மாறுகோடல் நோக்கிற்றிலர்.

இவைதான்குபாட்டானும், அதற்குக் காரணங் கூறப்பட்டது.

(கு - ரை.) பொருள் படைத்து - செல்வஞ்சம்பாதித்து. ஏமம் - காப்பு. பசிய மட்கலம்-சுடப்படாத மண்பாத்திரம்; பசுமை-ஈரத்தின்மேலது. சலம் -

பி - மீ: *ஏமார்த்தல் †ஏமமார்த்தல்.

சலம் [ஹஜம்]என்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு-வெளிக்கு ஒருவகை யாகக்காணப்பட்டு உள்ளே ஒருவகையாக இருப்பதென்று பொருள்: அரச னும் பொருளும் சேரப்போம் - நீர்பெய்த பசுமட்கலமும் அந்நீரும் சேரப்போ தல்போல எனக்கொள்க. பிறர் - மற்றையுரைகாரர். அவை தன்வினையும் பிறிதின்வினையுமாய் - மகிழ்தலென்ற உபமேயம் தன்வினையும் இருத்துத லென்ற உபமானம் பிறவினையுமாய். தன்வினை - தன்கருத்தாவின் புடை பெயர்ச்சியாய் நிகழுந் தொழில். பிறிதின்வினை - பிறகருத்தாவின் புடை பெயர்ச்சியாய்த் தொழிற்படுஞ்செயல். உவமையிலக்கணத்தோடு மாறுகோ டல் - மகிழ்தற்கு நீர்பெய்துவைத்தல் ஒப்பாகப் பொருந்தாமை யென்க. அத ற்கு - பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யலாகாதென்பதற்கு. மண், நீர் என்பன - ம்ருத், நீரம் என்னும் வடமொழிகளின் சிதைவென்பர். இரீஇ - இருவி அல்லது இருத்தி என்ற பிறவினைவினையெச்சம் விகாரப்பட்டு அள பெடுத்தது. உவமையணி. இக்குறட்பாவை, அனுமானமென்னும் அலங்கார மென்பர், வீரசோழியவுரையாசிரியர். (௧௦)

௬௭ - ஆம் அதிகாரம்.—வினைத்திட்பம்.

அஃதாவது - அத்தூயவினைமுடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண் மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) திண்மை-வலிமை. இதனானே-கீழ்வாக்கியத்தால். வினைத் திட்பம் என்றதொடர் - தூயவினைக்குவேண்டிய மனவுறுதி எனப்பொருள் பட்டு, நான்காம்வேற்றுமை யுருபும்பயனுமுடன் தொக்கதொகையா மென்க. இனி, வினைசெய்தலில்திண்மையெனஏழாம்வேற்றுமைத்தொகையாகவுமாம்.

௬௬௧. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

(இ - ள்.) வினை திட்பம் என்பது-வினைசெய்தற்கண் திண்மையென்று சொல்லப்படுவது, ஒருவன் மனம் திட்பம் - (அதனை முடித்தற்கு உரியான்) ஒருவன் மனத்தினது திண்மை; மற்றைய எல்லாம் - அஃது ஒழிந்தன எல் லாம், பிற - அதற்குத் திண்மையென்று சொல்லப்படா; (எ - று.)

ஒழிந்தனவாவன - படை அரண் நட்பு முதலியவற்றின் திண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் 'மற்றைய' என்றும், வேண்டினும் அஃது இல்வழிப் பயனிலவாகலின் 'பிற' என்றுங் கூறினார்.

இதனான், வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அதனை - தொடங்கியகாரியத்தை. முடித்தற்கு உரியான் - முடிக்கவேண்டியவன். அஃது - மனத்திட்பம். அதற்கு - தொடங்கிய காரி யத்தை முடித்தற்கு. படை - சேனை. அரண்-காப்பு; கோட்டை முதலியன. நட்பு - நண்பர். அதற்கு - வினைமுடித்தற்கு. வேண்டினும் - வினைமுடித்தற் குப் படைமுதலியவை வேண்டியிருப்பினும். அஃது இல்வழி - மனத்திட்ப மில்லாதவிடத்து. "மற்றையதென்பது சுட்டியதற்கினம்". பிற - பகுதியே

பலவின்பால்முற்றாய் வந்தது; அஃறிணைப்பன்மைவிகுதி புணர்ந்து கெட்ட தென்பர்: (௧)

௬௬௨. ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள்.

(இ - ள்.) ஆய்ந்தவர் கோள் - (முன் *நீதிநூல்) ஆராய்ந்த அமைச்சரது துணிபு,—ஊறு ஓரால் - பழுதுபடும்வினைகளைச் செய்யாமையும், உற்றபின்-(செய்யும்வினை தெய்வத்தான்) பழுதுபட்டவழி, ஒல்காமை-(அதற்குத்) தளராமையும், இ இரண்டின் - (ஆகிய) இவ்விரண்டின், ஆறு-வழி, என்பர்—, (நூலோர்); (எ - று.)

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபுதொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன்கூறினார். உறுதலுடையதனை முன் 'ஊறு' என்றமையின் 'உற்றபின்' என்றும், இவ்விரண்டின் கண்ணே பட்டது என்பார் 'இரண்டினாறு' என்றுங் கூறினார். 'ஊறொரார்' என்று பாடமோது வாருமுளர். அஃது 'ஒல்காமை' என்னும் எண்ணோடும், 'இரண்டு' என்னுந் தொகையோடும் இயையாமை அவர் அறிந்திலர்.

(கு - ரை.) தெய்வத்தான் - விதிவசத்தால். வியாழ வெள்ளிகள் - பிருகஸ்பதியும், சுக்கிரனும். பிருகஸ்பதி-தேவர்க்குக் குருவும் பிரதான மந்திரியும், சுக்கிரன் - அசுரர்க்குக் குருவும் பிரதானமந்திரியு மாவர். துணிபு - சித்தாந்தத்தை. தொகுத்து-ஒருங்குசேர்த்து. நீதிநூலுடையாரென்றது-சாணக்கியரையும் காமந்தகரையும் குறிக்குமென்பர். இனி, வெள்ளியினது துணிபைத் தொகுத்துக் கூறிய நூல் சுக்கிரநீதி என்றலும் ஒன்று. ஈண்டு-மனத்திட்பத்தைக்கூறும் இச்சந்தர்ப்பத்தில். 'வினைத்தூய்மையும் உடன் கூறினார்' என்றது,'ஊறொரால்' என்றதனாற் போந்ததனை. மனத்திட்பத்துடன் செய்யப்படுங் காரியம் தூயதாயிருக்கவேண்டுமென்பது,நீதிநூலோர்கருத்து: அதுவே இவ்வாசிரியர்க்குங் கருத்தென்க. உறுதல்-தடையாகநேர்தல். பழுதுபாடுடையதை ஊறென்றதற்கு ஏற்ப, பழுதுபடுதலை உறுத லென்றா ரென்க. இவ்விரண்டின்கண்ணே பட்டது - வினைத்தூய்மையும் வினைத்திட்பமு மாகிய இவ்விரண்டினிடத்தே அமைந்தது. 'ஊறொரார்' என்ற பாடத்துக்கு-பழுதுபடும் வினைகளை நீங்காராய்(ச் செய்து) என்பது பொருளும், ஓரார் என்பது-எதிர்மறைத்தெரிநிலை முற்றெச்சமு மாம். அஃது - 'ஊறொரார்' என்பது. எண் [செவ்வெண்] - எண்ணப்படுபொருள், உம்மை தொக்கசொல். பரிமேலழகர்பாடத்துக்கு, ஊறொரால் உற்றபின் ஒல்காமை என எண்ணும்மை தொக்க பெயர்ச்செவ்வெண் 'இரண்டு' என்னுந் தொகை பெறுதல் இனிது பொருந்துதல் காண்க. ஊறு என்றதை முதனிலைதிரிந்த தொழிலாகுபெயரென்றாவது; கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்ட விடத்துப் பகுதி முதல்நீண்ட பெய ரென்றாவது கொள்க. ஓரால் - தொழிற்பெயர்: ஒருவு என்னும் பகுதி ஈறுதொக்கது. (௨)

---

* பி - ம்: நீதி

சுசுஙூ. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்ற விழுமந் தரும்.

(இ - ள்.) கடை கொட்க - (செய்யப்படும்வினையை) முடிவின்கண் புலப்படும்வகை, செய் தக்கது - (முன்னெல்லாம் மறைத்துச்) செய்வதே, ஆண்மை - திட்பமாவது; இடை கொட்கின் - (அங்ஙன மன்றி) இடையே புலப்படு மாயின், (அப்புலப்பாடு), (செய்வானுக்கு), எற்ற விழுமம்-நீங்காத இடும்பையை, தரும் - கொடுக்கும்; (எ - று.)

மறைத்துச்செய்வதாவது - அங்கமைந்தும் எண்ணியவாறு பிறரறியாமலும், தான் அறிந்ததூஉம் தன் இங்கிதம் வடிவு செயல் சொற்களான் அவர் உய்த்துணராமலும் அடக்கிச்செய்தல். அத்திட்பம், ஆண்தன்மையான் வருதலின், 'ஆண்மை' எனப்பட்டது. எற்றுவிழுமமாவன-பகைவர் முன் அறிந்து அவ்வினையைவிலக்குதல் செய்வானேவிலக்குதல் செய்வ ராகலின், அவற்றுன் வருவன. விழுமம் - சாதிப்பெயர்.

இவையிரண்டுபாட்டானும், அதனது பகுதி கூறப்பட்டது.

(கு - சை.) முடிவின்கண் புலப்படும் வகை - காரியம் முடிந்த பின்பே இவன் இக்காரியத்தைச்செய்தா னென்று பிறர் அறியும்படி. புலப்பாடு - புலப்படுதல், வெளிப்படுதல். செய்வானுக்கு - தொழில்செய்பவனுக்கு. இடும்பை - துன்பம். அங்கமைந்தும் எண்ணிய ஆறு - சூஙூக - ஆங் குறளிற் கூறிய தானே பொருள் முதலிய ஐந்து அங்கங்களையும் பற்றித் தான் ஆலோசித்த விதத்தை. இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப்பின்தொழில். உய்த்து உணராமல் - ஊகித்தறிய வொட்டாமல். ஆண்தன்மையால் வருகிற திட்பத்தை ஆண்மையென்றது, கருவியாகுபெயரின்பாற்படும். செய்வானே விலக்குதல் - அவ்வினை செயபவனைத் தடுத்தல். விழுமம் என்றது-இங்கே, துன்பத்தின் வருக்கத்தையெல்லாம் உணர்த்தும். அதனது பகுதி - வினைத் திட்பத்தின் தன்மை. கொட்க என்னுஞ் செயவெனெச்சத்தில், கொட்கு - பகுதி. (கூ)

சுசுசு. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(இ - ள்.) சொல்லுதல் - (யாம் இவ்வினையை இவ்வாற்றால் செய்தும் என நிரல்படச்) சொல்லுதல், யார்க்குமெளிய-யாவர்க்கும் எளிய; சொல்லிய வண்ணம் செயல் - (அதனை) அவ்வாற்றானே செய்தல், அரிய ஆம் - (யாவர்க்கும்) அரியவாம்; (எ - று.)

சொல்லுதல், செயல் என்பன - சாதிப்பெயர். அரியவற்றை எண்ணிச் சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயறலின், 'எளிய' என்றார்.

இதனுன், அதனது அருமை கூறப்பட்டது.

(கு - சை.) இவ்வாற்றால் - இன்னவிதமாய். செய்தும் - செய்வோம். நிரல் பட - ஒழுங்காக. எளிய - எளியவையாம். சொல்லுதல், செயல் என்பன - சொல்லுதல்கள், செய்தல்கள் எனப் பன்மைப்பொருள்பட்டு, எளிய

அரிய என்ற பலவின்பால்முற்றுக்களைக் கொள்ளும். அரியவற்றை - செய்வதற்கு அருமையான தொழில்களையும். இயறலின் - கூடுதலால். அதனது-வினைத்திட்பத்தினது. ''உரைசெயற்கெளிதுமாகியரிது மாமொழுக்கு'' என இந்தச்குறளை யொட்டிக் கம்பர் கூறியுள்ளார். (ச)

கூகூடு. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்.

(இ - ள்.) வீறு எய்தி - (எண்ணத்தாற்) சிறப்புஎய்தி, மாண்டார்-(பிற இலக்கணங்களானும்) மாட்சிமைப்பட்ட அமைச்சரது, வினை திட்பம்—,—வேந்தன்கண் ஊறு எய்தி-வேந்தன்கண்ணே உறுதலே யெய்தலான், உள்ளப் படும் - (எல்லாரானும்) நன்குமதிக்கப்படும்; (எ - று.)

வேந்தன்கண் ஊறெய்தல் - எடுத்தவினை அதனுன் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அவன் கண்ணவாதல். 'எய்தலான்' என்பது திரிந்துநின்றது. உள்ளல் - மதிப்பான் மறவாமை.

இதனுன், அதன்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பிற இலக்கணங்களானும்-சொற்செயல்களின் அமைதிகளானும். எனவே, மனம் மொழி மெய் என்னும் திரிகரணத்தாலும் சுத்தரான என்க. வேந்தன்கண்ணே உறுதலே எய்தல் - அரசனிடத்திலே நல்லதாய்ப் பலித்தல். அதனுன் - மனத்திட்பத்தால். அவன்கண்ண ஆதல் - அரசனிடத்தன வாகுதல். மந்திரி முதலிய அங்கங்களின் தொழில்களா லாகுஞ் செல்வமும் புகழும் அரசனுக்கே யுரியனவாய் விளங்கும். காரணப்பொருளதாகிய எய்தவென்னுஞ் செயவெனெச்சம் எய்தியெனத் திரிந்த தென்பார், 'எய்தலான் என்பது திரிந்துநின்றது' என்றார்; இங்ஙனம் இலக்கணங்கூறுதல், பரிமேலழகர்வழக்கம்: ''நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை'' என்ற குறளில், 'இகத்தலான் என்பது இகந்து எனத் திரிந்துநின்றது' என இலக்கணங் குறித்தது காண்க. இங்கே எச்சத்திரிபாகக் கொண்டது, 'எய்தி' என வந்த சொல் இரண்டனுள் பிந்தியதை யென்க. மதிப்பான் மறவாமை - கௌரவபுத்தியோடு எப்பொழுதும் மறவாதிருத்தல். ஊறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். (டு)

கூகூசு. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(இ - ள்.) எண்ணிய - (தாம் எய்த) எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும், எண்ணி(ய) ஆங்கு - அவ்வெண்ணியவாறே, எய்துப - எய்துவர்; எண்ணியார் - எண்ணியவர்,—திண்ணியர் ஆக பெறின் - (அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கண்) திண்மையுடையராகப்பெறின்; (எ - று.)

எனிதின் எய்துப என்பார், 'எண்ணியாங்கு எய்துப' என்றார். அவர் அவ்வாறல்லது எண்ணுமையின் திண்ணியராகவே வினை முடியும்: அது முடிய அவை யாவையும் கைகூடும் என்பது கருத்து.

இதனுன், அஃதுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) எய்த - அடையும்படி. வாயில் - வழி, உபாயம். அவ்வாறு அல்லது-மனத்திட்பமுடையராகவன்றி; இனி அவ்வாறல்லது என்பதற்கு - காரியம் எளிதில் முடியும்படியாகவன்றி என்றும், தொடக்கத்தில் நினைத்த படியல்லாமல் என்றும் பொருள் கூறுகின்றனர். அது முடிய - காரியம் நிறைவேற. அவையாவையும் - நினைத்தபொருள்களெல்லாம். அஃது உடையார் - வினைத்திட்பமுள்ளவர். எண்ணிய-பெயர். எண்ணியாங்கு - எண்ணியவாங்கு என்பதன் தொகுத்தல் விகாரம். எய்துப-பலர்பால்முற்று.

சுசுஎ. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து.

(இ - ள்.) உருள் - உருளாகின்ற, பெரு - பெரிய, தேர்க்கு—, அச்சு ஆணி அன்னர்-அச்சின்கண் ஆணிபோல வினைக்கண் நிண்ணியாரை, உடைத்து—, (உலகம்); (அதனுல்), உருவு கண்டு எள்ளாமை வேண்டும்- (அவரை) வடிவின்சிறுமைநோக்கி இகழ்தலை ஒழிக; (எ - று.)

சிறுமை, 'எள்ளாமைவேண்டும்' என்பதனுலும், உவமையானும், பெற்றும். அச்சு - உருள்கோத்த மரம். ஆணி-உருள் கழலாது அதன் கடைக்கண் செருகுமது. அது, வடிவாற் சிறிதாயிருந்தே பெரியபாரத்தைக் கொண்டு உய்க்குந் திட்ப முடைத்து: அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரியவினைகளைக் கொண்டுஉய்க்குந் திட்பமுடைய அமைச்சரும் உளர்; அவரை அத்திட்பம்நோக்கி அறிந்துகொள்க என்பதாம்.

இதனுன், அவரை அறியும் ஆறு கூறப்பட்டது.

(கு - ரை.) உருளாகின்ற - உருள்கிற. சிறுமை - வடிவஞ் சிறியதாயிருத்தல். உவமை - அச்சாணி. உருள் - சக்கரம். அதன் கடைக்கண் - அச்சின் கோடிகளில். கொண்டு உய்க்கும் - நடத்திமுடிக்கிற. அவரை - வினைத்திட்பமுடையாரை. உருவு, அச்சு, ஆணி என்பன - ரூபம், அகூம், ஆணிஃ என்னும் வடசொற்களின் திரிபுகள். உருள் தேர் - வினைத்தொகை. "சில கற்றூர்க்கண்ணுமுளவாம் உருள் பெருந்தேர்க், கச்சாணி யன்னதோர் சொல்" என்பது பழமொழி: "மடல்பெரிது" "உடலின் சிறுமை" என்ற பாடல்கள் இங்கு நினைவுக்கு வருகின்றன. வீரசோழியவுரைகாரர் அலங்காரப்படலத்தில் இக்குறட்பாவை உதாரணங்காட்டி 'இது இழிந்தஉவமையின் உயர்ந்ததனைப் புகழ்ந்தமையால் இழிவுயர்ப்புப்புகழ்ச்சியுவமையாயிற்று' என்பர். (எ)

சுசுஅ. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(இ - ள்.) கலங்காது கண்ட - மனந்தெளிந்து செய்வதாகத்துணிந்த, வினைக்கண் - வினையின்கண், துளங்காது - பின் அசைதலின்றி, தூக்கம் கடிந்து - நீட்டித்தலை யொழிந்து, செயல் - செய்க; (எ - று.)

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோல் தோன்று மாகலின், தெளிந்து பலகால் *ஆராய்ந்து தாம்செய்வதாக ஓர்த்தவினையை 'கலங்காது கண்டவினை' என்றார். துளங்காமை - திட்பமுடைமை.

(சு - ரை.) அசைதலின்றி - சலித்தலில்லாமல். நீட்டித்தல் - காலதாமதஞ்செய்தல். கலங்கியவழி - மனங் கலங்கிவிட்டால். ஒழிவதும் - தவிரவேண்டிய தொழிலும். செய்வதுபோல் - செய்யத்தக்கதொழில்போல. ஓர்த்த - நிச்சயித்த. கண்ட - அறிந்த என்றபடி. தூக்கம் - தூங்கு என்னும் பகுதியடியாப் பிறந்த தொழிற்பெயர். செயல் - முற்று. (அ)

சூசுசுக. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

(இ - ள்.) (முதற்கண்), துன்பம் உற வரின்உம் - (மெய்ம்முயற்சியால் தமக்குத்) துன்பம் மிகவருமாயினும், (அதுநோக்கித் தளராது), இன்பம் பயக்கும் வினை - (முடிவின்கண்) இன்பம்பயக்கும் வினையை, துணிவு ஆற்றி - செய்க - திட்பமுடையராய்ச் செய்க; (எ - று.)

துணிவு - கலங்காமை; அஃது உடையார்க்கல்லது கணிகமாய முயற்சித் துன்பம் நோக்காது நிலையுதலுடைய பரிணமவின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின், 'துணிவாற்றிச் செய்க' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், அவர் வினைசெய்யுமாறு கூறப்பட்டது.

(சு - ரை.) முதற்கண் - முதலில். மெய்ம்முயற்சி-தேகபரிச்சிரமம். கணிகமாய - சிறிதுபொழுதே உள்ளதான; கணிகம் - கூணிகம். முயற்சித்துன்பம்-முயற்சியினாலாகுந் துன்பம். நிலையுதலுடைய - நிலைத்துள்ள. பரிணம இன்பம் - முடிவிலுளதாகுஞ் சுகம். செய்தல் கூடாமையின் - (முயற்சித்துன்பந் தரும்வினையைச்)செய்தல் அருமையாயிருத்தலால். அவர் - திட்பமுடையார். உற - மிகுதிப்பொருளுணர்த்தும் 'உறு' என்னும் உரிச்சொல்லடியாப் பிறந்த செயவெனெச்சம். உம் - இழிவுசிறப்பு. துணிவு ஆற்றி - கலங்காமையைக் கொண்டு: தளராது என்றபடி. (கூ)

சூஎ0. எணைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

(இ - ள்.) வினை திட்பம் - வினைத்திட்பத்தை, வேண்டாரை -(இது நமக்குச் சிறந்த தென்று) கொள்ளாத அமைச்சரை, எனை திட்பம்-ஒழிந்த திட்பங்களெல்லாம், எய்தியக்கண்உம்-உடையராயவிடத்தும், வேண்டாது -ஈன்கு மதியார்: உலகு - உயர்ந்தோர்; (எ -று.)

மனத்தின்கண் திட்பமில்லாதார்க்குப்படை அரண்நட்பு முதலியவற்றின் திட்பங்களெல்லாம் உளவாயினும் வினை முடியாதாம்; ஆகவே, அவையெல்லாங் கெடும் என்பதுபற்றி, 'உலகு வேண்டாது' என்றார்.

இதனுள், வினைத்திட்பமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

---

* பீ - மீ: ஆராய்ந்தாலும் செய்வதாக வொத்த வினையை.

(கு - சை.) அனையெல்லாம் - படைமுதலியன யாவும். எனை - எத்தனை என்பதன் மரூஉ: எனையென்னும் இடைச்சொல்லின் விகாரமுமாம். உம் - உயர்வுசிறப்பு. உலகு வேண்டாது - சொல்லியவேகோக்கிய முடிபு. (கo)

கூஅ - ஆம் அதிகாரம்.—வினைசெயல்வகை.

அஃதாவது - அத்திட்பமுடைய அமைச்சன் அவ்வினையைச் செய்யுந் திறம். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

(கு - சை.) வினைசெயல்வகை என்ற தொடரில், முன்னது-இரண்டாம் வேற்றுமைத்தொகையும், பின்னது-இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் ஆம். செயல் வகை - செய்தலாகிய வகை யென விரியும்: செய்தலினது வகையென விரித்து, ஆறும்வேற்றுமைத்தொகை யெனினும் அமையும்.

கூஎக. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத லீது.

(இ - ள்.) சூழ்ச்சி முடிவு-விசாரத்திற்கு எல்லையாவது;—துணிவு எய்தல் - (விசாரிக்கின்றுன் இனி இது தப்பா தென்னுக்) துணிவினைப் பெறுதல்; அ துணிவு - அங்ஙனந்துணிவுபெற்ற வினை, தாழ்ச்சியுள் தங்குதல் - (பின்) கீட்டிப்பின்கண் தங்குமாயின் அது, தீது-குற்றமுடைத்து; (எ-று.)

'சூழ்ச்சிமுடிவு துணிவெய்தல்' எனவே, துணிவெய்துமளவுஞ் சூழவேண்டு மென்பது பெற்றும். பின்னர் 'துணிவு' - ஆகுபெயர். கீட்டிப்பு-செய்யுங்காலத்துச் செய்யாமை: அஃது உள்வழி, காலக்கழிவாகலானும் பகைவர் அறிந்து அழித்தலானும் முடியாமையின், அதனை 'தீது' என்றுர்.

(கு - சை.) விசாரம்-ஆலோசனை. விசாரிக்கின்றுன் - ஆலோசிக்கின்றவன். இது-இக்காரியம். கீட்டிப்பின்கண் - காலதாமதத்தில்; செய்து முடிக்கவேண்டிய காலத்திற்குள் செய்துமுடிக்காமல் ஆலசியமாக. பின்னர்த் துணிவு - துணிவு என வந்த செரல் இரண்டனுட் பிந்தியது. துணிவு - நிச்சயித்தல்; அது - நிச்சயிக்கப்படுதலையுடைய வினையை யுணர்த்தியதனல் தொழிலாகுபெயராம். அஃது உள்வழி - கீட்டிப்பு உள்ள பொழுது. முடியாமையின் - (துணிவினைப் பெற்றவினையும்) நிறைவேறுதலால். (க)

கூஎஉ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

(இ - ள்.) தூங்கி செயல் பால-கீட்டித்துச்செய்யும்பகுதியவாயவினைகளுள், தூங்குக - கீட்டிக்க; தூங்காது செய்யும் வினை - கீட்டியாதுசெய்யும் வினைகளுள், தூங்கற்க - கீட்டியாதொழிக; (எ - று.)

இருவழியும் இதனிற்கண் தொக்க எழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும், வலியானும் காலத்தானும் அறியப்படும். மாறிச்செய்யின் அவை வாயா என்பது கருத்து. மேல் 'தூங்காமை' என்றுர், ஈண்டு அதனைப் பகுத்துக்கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், பொதுவகையால் வினைசெய்யுந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) பகுதியவாய - தன்மையையுடையவையான. கீட்டியாது - காலதாமதஞ்செய்யாமல். இருவழியும் - இரண்டுவாக்கியங்களிலும். இறுதிக்கண்தொக்க ஏழாவது - செயற்பால, செய்யும்வினை என்ற சொற்றொடர்களில் மறைந்துநின்ற ஏழாம்வேற்றுமையுருபு. வலி - தான்செய்யக்கருதிய தொழிலின் வலிமையும், அதனைச்செய்துமுடிக்குந் தனது வலிமையும், அதனை விலக்கத்தொடங்கும் பகைவனது வலிமையும், இருவர்க்கும் துணையாவோரது வலிமையும் என்னும் நால்வகை வலிமைகள்: காலம் - சாமம் முதலிய உபாயங்களை உபயோகித்தற்கு ஏற்ற சமயம். மாறிச்செய்யின் அவை வாயா - தாமதித்துச் செய்யவேண்டிய தொழிலை விரைந்து செய்தாலும், விரைந்து செய்யவேண்டிய தொழிலைத் தாமதித்துச் செய்தாலும் அவை பலிக்கமாட்டா. மேல் - மூன்: ஈரூ - ஆம் அதிகாரமாகிய இறைமாட்சியில் "தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று, நீங்கா நிலனாள்பவர்க்கு" என்ற குறளில். அங்கு, 'தூங்காமை' என்பதற்கு - 'அக்காரியங்களில் விரைவுடைமை' எனப் பொருளுரைத்தமையும், 'இவற்றுள் கல்வி ஆறு அங்கத்திற்கும் உரித்து, ஏனைய வினைக்கு உரிய' என விசேடவுரை குறித்தமையுங் காண்க. பொதுவகையால் வினைசெய்யுந்திறம் கூறப்படுதல் - வலியான் ஒப்பான் மெலியா னென மூவகையோரும் வினைசெய்யும்வகை சொல்லப்படுதல். இவ்வதிகாரத்தில் நான்காவது முதலிய ஏழுகுறள்களில், இத்திறம், சிறப்புவகையாற் கூறப்படுதல் காண்க. தூங்கி, தூங்காது என்ற வினையெச்சங்கள், செய்தலைக் கொள்ளும். செயற்பால-செய்தற் றன்மையுடையன.

சூஎஉ. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே மற்றொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

(இ - ள்.) (வினைசெய்யுங்கால்), ஒல்லும் வாய் எல்லாம் - இயலுமிடத்தெல்லாம், வினை நன்று - போராற் செய்தல் நன்று; ஒல்லாக்கால் - அஃது இயலாவிடத்து, செல்லும் வாய்நோக்கி-(ஏனை மூன்று உபாயத்துள்ளும் அது) முடிவதோர் உபாயம் நோக்கி, செயல் - செய்க; (எ - று.)

இயலும் இடம் - பகையின் தான் வலியுறை காலம். அக்காலத்துத் தண்டமே நன்று என்றார், அஞ்சுவது அதற்கே யாகலின். இயலா இடம்-ஒத்தகாலமும், மெலியகாலமும். அவ்விரண்டு காலத்தும் சாமதானபேதங்களுள் அது முடியும் உபாயத்தாற் செய்க என்றார், அவை ஒன்றற்கு ஒன்று வேறுபாடு உடையவேனும் உடம்படுத்தற்பயத்தால் தம்முள் ஒக்கு மாகலின்.

இதனுள், வலியான் ஒப்பான் மெலியான் என நிலை மூவகைத்து என்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

(கு - ரை.) இயலுமிடத்து - சாத்தியப்படுமிடத்து. அஃது - போராற் செய்தல். ஏனை மூன்று உபாயம் - சாம பேத தான மென்னும் மற்றை மூன்று உபாயங்கள். அது-தொழில். பகையின்-பகைவனிலும். தண்டம்-தான்காம் உபாயம். அது முடியும் - தொழில் நிறைவேறக்கூடிய. உடம்படுத்தற் பயத்தால் - சம்மதிக்கச்செய்யும் பிரயோசனத்தால். நன்றே, ஏ - ஈற்றசை;

தேற்றமாகவாவது, வினையே நன்று என மாறி இயைத்துப் பிரிநிலையாக வாவது கொள்ளினும் பொருந்தும். ஒல்லாக் கால் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தொடர். ஒல்லுதல் - இயலுதல். செல்லும்வாய் என்றதில், வாய் - வழி. செயல் - முற்று. (ங)

கூஎச. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(இ - ள்.) வினை - (செய்யத்தொடங்கிய) வினையும், பகை - (களையத் தொடங்கிய) பகையும், என்ற - என்றுசொல்லப்பட்ட, இரண்டின் - இரண்டனது, எச்சம் - ஒழிவும்,—நினையும் கால்-ஆராயுங்கால், தீ எச்சம் போல - தீயினது ஒழிவு போல, தெறும் - (பின் வளர்ந்து) கெடுக்கும்; (எ - று.)

'இனி இக்குறை என்செய்வது?' என்று இகழ்ந்தொழியற்க; முடியச் செய்க என்பதாம். பின்வளர்தலொப்புமைபற்றி, பகையெச்சமும் உடன் கூறினர்.

இதனுன், வலியான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) களைய - முழுவதும் அழிக்க. ஒழிவு-குறை, மிச்சம், சேடம். இனி - பெரும்பான்மை முடிந்தபின்பு. என் செய்வது - என்ன தீங்கு தர வல்லது? ஒழியற்க - விட்டிடாதிருக்கக்கடவன். வலியான் செய்யும் திறம், பகையை வேரோடு அழித்தல்வேண்டு மென்பது. என்றிரண்டு - என்ற இரண்டு என்பதன் தொகுத்தல். இனி, என்று என்பதை எண்ணிடைச் சொல்லாகக் கொண்டு, வினையென்று, பகையென்று என இரண்டிடத்தும் எடுத்துக்கூட்டி, அவ்வெண்ணிடைச்சொல் இரண்டு என்னுந் தொகை பெற்ற தெனக் கொள்ளுதலு மொன்று; [நன் - இடை - கo.] எச்சம் - எஞ்சுதலுடையது; எஞ்சுதல் - மிச்சப்படுதல், சேடித்தல். வினையொழிவாவது - செய்யவேண்டிய தொழிலின் மிச்சம். பகையொழிவாவது - பகைவர்பலரையழித்துச் சிலரை விட்டிடுவது. 'பகை, செய்தொழில், கடன், தீ, நோய் இவற்றின் சேஷத்தை அலட்சியஞ்செய்தலாகாது; செய்யின், அவை வளர்ந்து அழிவு செய்யும்' என்பது, நூல்துணிபு. உவமையணி. (ச)

கூஎடு. பொருள்கருவி காலம் வினையிடனெ டைந்து
மிருடூ வெண்ணிச் செயல்.

(இ - ள்.) (வினைசெய்யுமிடத்து);—பொருள் - பொருளும், கருவி - கருவியும், காலம் - காலமும், வினை - வினையும், இடனெடு-இடனும், ஐந்து உம்-(ஆகிய) இவ்வைந்தனையும், இருள் தீர எண்ணி-மயக்கம் அற எண்ணி, செயல் - செய்க; (எ - று.)

எண்ணெடு, பிறவழியும் கூட்டப்பட்டது. பொருள் - அழியும் பொருளும், ஆகும் பொருளும். கருவி - தன்தானையும், மாற்றூர்தானையும். காலம் - தனக்கு ஆங்காலமும், அவர்க்கு ஆங்காலமும். வினை-தான் வல்ல வினையும், அவர் வல்ல வினையும். இடம் - தான் வெல்லும் இடமும், அவர் வெல்லும்

இடமும். இவற்றைத் தான் வென்றியெய்துங் திறத்திற் பிழையாமல் எண்ணிச்செய்க என்பதாம்.

(கு - ரை.) பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடனெடு என, ஓரிடத்தில் நின்ற 'ஒடு' என்னும் எண்ணிடைச்சொல்லை எடுத்து எல்லாவற்றிற்கும் கூட்டுக; ''என்றும் எனவும் ஒடுவும் ஓரோவழி,நின்றும் பிரிந்தெண் பொருள்தொறு நேரும்''என்றார்,நன்னூலார். 'இதில் ஒடுஎன்பது ஒருசொல் நின்றே தனித்தனி உதவுதல் காண்க; முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகம்,முதலாயினவும் அது'என்பது,இலக்கணக்கொத்து உரை. இது, 'ஐந்து'என்னுந் தொகை பெற்றது. உம்மை - இனைத்தென்றறிபொருளில்வந்த முற்றும்மை. வென்றி எய்தும் திறத்தில் - வெற்றி பெறும் வகையில். பிழையாமல் - தவறுமல். இருள்-விபரீதஞானம்; ஒன்றை மற்றொன்றாக மாறுபட அறிதல்: இது, திரிபுணர்வு எனப்படும்.(கு)

கூஎசு. முடிவு மிடையூறு மூற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ - ள்.) முடிவு உம் - (வினைசெய்யுங்கால்) அது முடிதற்கு உளதாம் முயற்சியும், இடையூறு உம் - (அதற்கு வரும்) இடையூறும், மூற்றியாங்கு எய்தும் - (அது நீங்கி) முடிந்தால் (தான்) எய்தும், படு பயன் உம் - பெரும் பயனும், பார்த்து - சீர்தூக்கி, செயல் செய்க; (எ - று.)

முடிவு - ஆகுபெயர். முயற்சிஇடையூறுகளதுஅளவின் பயனதுஅளவு பெரிதாயிற் செய்க என்பதாம்.

(கு - ரை.) சீர்தூக்கி - ஒத்துப்பார்த்து ஆராய்ந்து உள்ளவாறு உணர்ந்து. முடிவு - முடிதற்குக்காரணமான முயற்சியைக் குறித்ததனால், காரியவாகுபெயர். முயற்சி யிடையூறுகளது அளவின் - முயற்சியின் அளவினும், இடையூற்றின் அளவினும். செய்க - (அத்தொழிலைச்) செய்க. மூற்றியாங்கு-மூற்றியவாங்கு என்பதன் விகாரமாகக்கொண்டு, முடிந்த அப்பொழுதில் என்க. (கூ)

கூஎஎ. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(இ - ள்.) செய் வினை செய்வான் - (அவ்வாற்றால்) செய்யப்படும்வினையைத் தொடங்கினன், செயல் முறை - செய்யும் முறைமையாவது,—அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனது உள்ப்பாட்டினையறிவான் கருத்தினை (த் தான்) அறிதல்; (எ - று.)

'அவ்வாறு' என்றது-பொருள் முதலிய எண்ணலையும், முடிவு முதலிய தூக்கலையும். உள்ளறிவான்-முன்செய்துபோந்தவன். அவன்கருத்து-அவன் செய்துபோந்த உபாயம். அதனை அறியவே, தானும் அதனைச் செய்து பயன் எய்தும் என்பதாம்.

இவை மூன்றுபாட்டானும், ஒப்பான் செய்யுந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்வாற்றால் - அவ்வகையால். அதனது உளப்பாட்டினை அறிவான் கருத்து - அவ்வினையின் உண்மைநிலையை முன்பு அறிந்து நடத்தியவனது கொள்கை. உளப்பாடு - மர்மம். எண்ணல் - சுஎஞஆம் குறளிற் கூறியது. தூக்கல் - சீர்தூக்கல். முடிவு முதலிய தூக்கல் - சுஎசுஆம் குறளிற் கூறியது. அதனால் - அவ்வுபாயத்தால். உள்ளம் - மனம்: அதன்கருத்தாக்கு, ஆகுபெயர்: இனி, உள்ளம் என்பது - உள் என்னும் வினைப்பகுதியினடியாப்பிறந்த தொழிற்பெயராயின், எண்ணம் எனப்பொருள்படும். (எ)

சுஎஅ. வினையான் வினையாக்கிக் கோடல் னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(இ - ள்.) வினையான் - (செய்கின்ற) வினையாலே, வினை - (அன்னது பிறிதும் ஓர்) வினையை, ஆக்கிக்கோடல் - முடித்துக்கொள்க; (அது),—நனைகவுள் யானையால் - (மதத்தால்) நனைந்த கபோலத்தினையுடைய யானையாலே, யானை - (அன்னது பிறிதும் ஓர்) யானையை, யாத்தற்று - பிணித்ததனைத்தொக்கும்; (எ - று.)

பிணித்தற்கு அருமை தோன்ற, 'நனைகவுள்' என்பது பின்னும் கூட்டப்பட்டது. தொடங்கியவினையானே பிறிதும் ஓர்வினையை முடித்தற்கு உபாயமாமாறு எண்ணிச் செய்க; செய்யவே, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியும் என்பதாம்.

(கு - ரை.) அன்னது பிறிதும் ஓர் வினையை-அப்படிப்பட்ட வேறொரு தொழிலை. கபோலம் - கன்னம். பிணித்தது - கட்டியது. பின்னும் - யானை யெனவந்தசொல் இரண்டனுட் பிந்தியதனுடனும். அதனைத்தும் 'நனைகவுள்' என்பது கூட்டப்பட்டதை, 'அன்னது பிறிதுமோர் யானையை' என்ற உரையால் அறிக. நனைகவுள் - வினைத்தொகை. யாத்தற்று - யாத்ததற்று என்பதன் விகாரம்: யாத்தலற்று என்பதன் திரிபாகக் கொள்ளினுமாம். (அ)

சுஎகo. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

(இ - ள்.) (வினைசெய்வானால்), நட்டார்க்கு-(தன்) நட்டார்க்கு, நல்ல-இனியவற்றை, செயலின் - செய்தலினும், விரைந்தது - விரைந்துசெய்யப்படும்: ஒட்டாரை ஒட்டிக்கொளல்-(தன்பகைவரோடு) ஒட்டாரை(த் தனக்கு) நட்பாக்கிக்கோடல்; (எ - று.)

அவ்வினைவாய்த்தற்பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன்மெலிவு புலனுவதன்முன்னே செய்க என்பார், 'விரைந்தது' என்றார். விரைந்துசெய்யப்படுவது என்றவாறு. வினைசெய்யுந் திற மாகலின், பகைவரோடுஒட்டாராயிற்று. தன்ஒட்டார் பிறருட்கூடாமல் மாற்றிவைத்தலெனினும் அமையும்.

(கு - ரை.) நட்டார்க்கு - நினைத்தார்க்கு. ஒட்டார் - சேராதவர். அவ்வினை வாய்த்தல் பயத்த ஆய - செய்யுந்தொழில் பலித்தலாகிய பயனைத் தருவனவான. இவ்விரண்டும் - நட்டார்க்கு நல்லசெயலும், ஒட்டாரை ஒட்டிக்

கொளலும். புலனுவது-வெளியாவது, தெரிவது. 'ஒட்டாரை' என்பதற்குப் பகைவரோ டொட்டாரை யென்று உரைத்ததன் காரணத்தைத் தெரிவிக்க வந்தது, 'வினைசெய்யுந் திற மாகலின்'என்பது. வினைசெய்யுந்திறமாகலின்-இவ்வதிகாரம் பகைவரோடு போர் முதலிய தொழிலைச் செய்யும் வகையைக் கூறுவ தாதலால். பிறருள் கூடாமல்-பகைவருடன் சேராமல். மாற்றிவைத் தல்-பேதமென்னும் உபாயம். ''நட்டார்க்கு நல்லசெயலினிதெத்துணையும், ஒட்டாரை யொட்டிக்கொளவதனின் முன்னினிதே''என்றது இங்குக்காண த்தக்கது. (கூ)

சூஉ0. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(இ - ள்.) உறை சிறியார் - ஆளும்இடஞ் சிறியராய அமைச்சர்,—(தம் மின் வலியார் எதிர்ந்தவழி), உள் நடுங்கல் அஞ்சி - தம் பகுதி நடுங்கலே அஞ்சி,—குறை பெறின் - (அந்நிலைக்கு) வேண்டுவதாய சந்து கூடுமாயின், பெரியார் பணிந்து கொள்வர்-அவரைத் தாழ்ந்து (அதனை) ஏற்றுக்கொள்வர்.

இடம் - நாடும், அரணும். அவற்றது சிறுமை, ஆள்வார்மேல் ஏற்றப் பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயைதல் அரி தாகலின், 'பெறின்' என்றார். அடியிலே மெலியராயினர் தம்பகுதியும் அஞ்சி நீங்கின் முதலொடும் கெடுவ ராகலின், அதுவாராமல் சிறிதுகொடுத்தும் சந்தினை யேற்றுக்கொள்க என்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத் தன்மை யின், 'கொள்வர்' என உலகியலாற் கூறினர்.

இவைமூன்றுபாட்டானும், மெலியான் செய்யுந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) பகுதி - சேனைமுதலிய அங்கங்கள். நடுங்கல் - மிக அஞ்சு தல்; அச்சத்தால் மனமும் உடம்பும் நடுங்கும். நடுங்கலே யஞ்சி - அந்தஅங் கம் நடுங்குதற்குத் தான் பயந்து. அந்நிலை - அப்பொழுதைநிலைமை. வேண் டுவது - அவசியமானது. சந்து - ஸந்தி, சமாதானம். கூடுமாயின் - நேர்வ தானால். அவரை வலியராய பகைவரை. அதனை - சந்தியை. 'உறைசிறி யார்' என்பது - உபசாரவழக்கு. அடியிலே - தொடக்கத்திலே. அது வாராமல் - அக்கேடு வராதபடி. சிறிது கொடுத்தல் - தானமென்னும் உபா யம். உலகியல் - உலகத்தாரது தன்மை. ''அச்சக்கிளவிக் கைந்து மிரண் டும், எச்சமிலவே பொருள்வயினான'' என்ற தொல்காப்பியவிதிபற்றி, 'நடுங் கலஞ்சி' என்றற்போல வருவதை - நடுங்கலே அஞ்சி, நடுங்கலினின்று அஞ்சி என இரண்டுவகையாகவும் விரிக்கலாம்; நடுங்கலினின்று அஞ்சி என ஐந்தாம் வேற்றுமையாக விரித்தல், வடநூல்வழக்கு: நடுங்கற்கு அஞ்சி என நான்காம் வேற்றுமையாக விரித்தல், உலகவழக்காம். (கo)

சூக - ஆம் அதிகாரம்—தூது.

அஃதாவது - சந்திவிக்கிரகங்கட்கு வேற்றுவேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் 'வினைசெயல்வகை' என்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. தான்வருத்துக்கூறுவான், கூறியது

கூறுவான் எனத் தூது இருவகைப்படும். அவருள், முன்னோன் அமைச்ச னோடு ஒப்பானகலானும், பின்னோன் அவனின் காற்கூறுகுணம் குறைந்தோ னாகலானும், இஃது அமைச்சியலாயிற்று.

(கு - ரை.) சந்தி விக்கிரகங்கள் - சுஙூ - ஆங் குறளிற் காண்க. சந்தி- பொருத்துதல். விக்கிரகம் - பிரித்தல். மேல் - மூன்றின அதிகாரத்தின் ஒன்பதாங் குறளில். தான்வகுத்துக்கூறுவான் - சந்தர்ப்பத்துக்கு ஏற்ற படி தானே தன் அறிவால் ஒழுங்குபடக் காரியங்களை எடுத்துச்சொல்லவல் லவன். கூறியது கூறுவான் - சொல்லிக்கொடுத்ததைக் கொண்டுபோய்ச் சொல்பவன்.

சுஙக. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(இ - ள்.) அன்பு உடைமை - (தன்சுற்றத்தார்மாட்டு) அன்புடையனா தலும், ஆன்ற குடி பிறத்தல் - (அமைச்சுப்பூணற்கு) அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர்சாதிவிரும்பும் பண்பு டையனாதலும், தூதுரைப்பான் பண்பு - தூதுவார்த்தைசொல்லுவானுக்கு இலக்கணம்: (எ - று.)

முன்னைய இரண்டனாலும், முறையே, சுற்றத்தார்க்குத் தீங்குவாராமல் தான் பேணியொழுகலும் தன்முன்னோர்தூதியல்கேட்டுஅறிதலும் பெற் றும். வேந்தவாம்பண்புடைமை, முன்னர் மன்னரைச்சேர்ந்தொழுகற்கண் பெறப்படும்: அதனால், வேற்றரசரும் அவன்வயத்தராதல் பெறுதும்.

(கு-ரை.) 'அன்பாவது-வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொ டர்புடையார்கட் காதலுடையனாதல்' என உரைத்துப்போந்தார், கீழ் அன்பு டைமையென்ற அதிகாரத்திற் பரிமேலழகர்; 'அன்பாவது - மனைவியர்கண் ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சிநிகழ் த்திப் பிணிப்பித்துநிற்கும் நேயம்' என நச்சினார்க்கினியரும், 'அன்பெனப்பட் டது - தான் வேண்டப்பட்டபொருளின்கண்தோன்றும் உள்ளநிகழ்ச்சி' என நக்கீரரும், 'அன்பாவது-தன்னுற் புரக்கப்படுவார்மே லுளதாகிய காதல்'எனப் புறநானூற்றுஉரையாசிரியரும் உரைத்தல் உணர்க. மாட்டு - இடத்து; ஏழாம் வேற்றுமையுருபு. அமைச்சுப்பூணற்கு - மந்திரியாயிருக்குந்தன்மையை ஏற் றுக்கொள்ளுதற்கு. பண்பு - நற்குணம். முன்னைய இரண்டு - அன்புடைமை யும், சிறந்தகுடிப்பிறப்பும். பேணி ஒழுகல் - பாதுகாத்துநடத்தல். தன்முன் னோர் தூதியல் கேட்டு அறிதல் - தான் பிறந்தகுலத்தில் தனது தாதை மூதாதை முதலிய முன்னையோர் தூதராயொழுகிய தன்மையைக் கேள்வியுற்று உணர்தல். முன்னர் - அடுத்ததாகிய; இங்கே, முன் - இடமுன். அதனால் - வேந்தவாம்பண்புடைமையால். மன்னரைச் சேர்ந் தொழுகல் - எ0 - ஆம் அதிகாரம். அவன்வயத்தர் ஆதல் பெறுதும் - அவனுக்குவசப்பட்டவராதலைப் பெறுவோம். வேந்து - இங்கே, சாதிப் பெயராய் நின்றது. அவாம் - அவாவும் என்னுஞ் செய்யுமெனெச்சத்தின்

விகாரம். 'பண்பாவது - பெருமைசான்ற குணமைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்தொழுகுதல்; "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும்' என உரைப்பர், மேல் பண்புடைமையென்ற அதிகாரத்தில். அவ்வதிகாரத்தில் "அன்புடைமை யான்ற குடிப் பிறத்தல் இவ்விரண்டும், பண்புடைமை யென்னும் வழக்கு" என்ற குறட்பா வையும் இங்கே யறிக. தன்சுற்றத்தாரிடத்திலே அன்பில்லாதவனுக்குப் பிறர்மேல் அன்பு உண்டாவது பெரும்பாலும் இயல்பன் றுதலின், அன்பு டைமை ஓரில்க்கணமாயிற்று; இக்கன்மையை, மேல் "அருளென்னு மன்பீன் குழவி" என்னுமிடத்து, 'தொடர்புபற்றுதே வருத்தமுற்றார்மேற் செல்வதாய அருள், தொடர்புபற்றிச் செல்லும் அன்புமுதிர்ந்துழி உளதா வது' என உரைப்பதுகொண்டு உணர்க. ஏற்றகுடியிற் பிறந்தவர் அதற்குத் தக்க நற்குணநற்செய்கைகளே யுடையராதல் இயற்கை யாகலின், குடிப் பிறப்பு இலக்கணமாம். இப்பாட்டில், பெயர்ச்செவ்வெண் தொகை பெறாது வந்தது. அடுத்த அதிகாரத்துக்கு இங்குத் தோற்றுவாயமைந்தமைகாண்க.(க)

கூஉஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(இ - ள்.) அன்பு - (தம் அரசன்மாட்டு) அன்புடைமையும், அறிவு-(அவ னுக்கு ஆவன அறியும்) அறிவுடைமையும், ஆராய்ந்த சொல் வன்மை - (அவ ற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால்) ஆராய்ந்துசொல்லுதல் வன்மையும், (என), தூது உரைப்பார்க்கு இன்றி அமையாத மூன்று - தூதுரைக்க உரி யார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று; (எ - து.)

ஆராய்தல் - அவற்றிற்குஉடம்படுஞ் சொற்களைத் தெரிதல். 'இன்றியமை யாத மூன்று' எனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங்களும் வேண்டு மென்பது பெற்றாம்.

இவையிரண்டுபாட்டானும், இருவகையார்க்கும் பொதுவிலக்கணங் கூறப்பட்டது.

(கு - பை.) முந்தினகுறளில் அன்பென வந்ததனோடு, இக்குறளிலும் அன்பு என்றது, கூறியதுகூற லென்னுங் குற்றமாகாமைப்பொருட்டு, அங்கு 'தன் சுற்றத்தார்மாட்டு அன்புடையனாதல்' என்றும், இங்கு 'தம் அரசன் மாட்டு அன்புடைமை' என்றும் வேறுபட உரைத்தார். ஆவன-அனுகூலமாகு மவற்றை. அவற்றிற்கு உடம்படும் சொற்கள் - அன்பு அறிவுடைமை என்ற அவற்றிற்கு ஏற்றசொற்கள்; தாம்சொல்லும் விஷயங்களுக்குக் கேட்பவர் உடன்படும்படியான சொற்களுமாம். அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங் கள் - கீழ் ஐந்து அதிகாரங்களிற் கூறப்பட்டவை. இருவகையார் - தான் வருத்துக்கூறுவானும், கூறியதுகூறுவானும். (உ)

கூஉஊ. நூலாரு ணூல்வல்ல ணுகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(இ - ள்.) வேலாருள் - வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று, வென்றி வினை - (தன் அரசனுக்கு) வென்றிதரும்வினையை, உரைப்பான் - சொல்லுவானுக்கு, பண்பு - இலக்கணமாவது,—நூலாருள் நூல் வல்லன் ஆகுதல்- நீதிநூலையுணர்ந்த அமைச்சரிடை(த் தான்) *அந்நூலை(க் கற்று)வல்லவனுதல்.

கோறன்மாலையென்பது தோன்ற'வேலார்' என்றும், தூதுவினை இரண்டும் அடங்க 'வென்றிவினை' என்றும் கூறினர். வல்லனுதல் - உணர்வுமாத்திரம் உடையராய அவர்முன் வகுக்கும் ஆற்ற லுடைய னுதல்.

(கு - ரை.) கோறல் மாலையர் - கொல்லும் இயல்பை யுடையவர். ''கையில் ஆயுதமுடையவனை நம்பலாகாது'' என்ற நீதிநூற்கொள்கையின்படி கையில் வேற்படையையுடையராகின்ற அரசர்முன் சென்று தன்காரியத்தைப் பற்றிப் பேசுவது அரி தென்பது தோன்ற 'வேலார்' என்னுஞ் சொல்லால் இங்கு அரசரைக் குறித்தா ரென்பது தாற்பரியம். தூதுவினை இரண்டு - சந்தியும், விக்கிரகமும்: இங்கே, தான்வகுத்துக் கூறுதலும், கூறியது கூறுதலும் அன்று; ஏனெனில்?—இதுமுதலிய ஐந்துபாடல்கள் தான்வகுத்துக்கூறுவானது இலக்கணமாதலின்; இதனை, இவ்வதிகாரத்தின் ஏழாங்குறளின் உரையிற் காண்க. தொல்காப்பியத்தில் ''பெரும்பகைதாக்கும் வேலினனும்'' என்ற விடத்து, 'காத்தல்தொழிலன்றி அழித்தல்தொழில்பூண்ட முக்கட் கடவுட்குச் சூலவேல் படை யாதலானும், முருகற்கு வேல் படை யாதலானும், சான்றோர் வேற்படையே சிறப்பப் பெரும்பான்மை கூறலானும், வேலைக் கூறி, ஏனைப்படைகளெல்லாம் 'மொழிந்தபொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் மூட்டின்று முடித்தல்' என்னும் உத்தியாற் பெறவைத்தார்' என உரைத்த விஷயம், இங்கே பிறபடைக்கலங்களாற் கூறாது 'வேலார்' என்றதற்குக் காரணமாக அறியத்தக்கது. நூலாருள், வேலாருள், உள் - ஏழனுருபு; [நன் - பெயர் - சூடு.] வெல்வது வேல் எனக் கருத்தாப் பொருள்விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதி முதல்நீண்ட பெயர். வென்றி - தொழிற்பெயர்; வெல் - பகுதி: இதனைப் பண்புப்பெயராகக்கொள்ள லாகாது; வினைப்பகுதியடியாகப் பிறந்ததனால். (கூ)

கூஉச. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

(இ - ள்.) அறிவு-(இயற்கையாகிய) அறிவும், உரு-(கண்டார்விரும்புந்) தோற்றப்பொலிவும், ஆராய்ந்த கல்வி - (பலரோடும் பலகாலும்) ஆராயப்பட்ட கல்வியும், (என), இ மூன்றன் - (நன்குமதித்தற்கு ஏதுவாய) இம்மூன்றனது, செறிவு-கூட்டத்தை, உடையான்—, வினைக்கு செல்க - (வேற்றுவேந்தரிடைத் தூது) வினைக்குச் செல்க; (எ - று.)

இம்மூன்றும் ஒருவன்பால் கூடுதல் அரி தாகலின், 'செறிவுடையான்' என்றார். இவற்றான் நன்குமதிப்புடைய னாகவே, வினை இனிதுமுடியும் என்பது கருத்து.

---

* பி - மீ: அந்நூலை வல்லனுதல்.

(கு - ரை.) தோற்றப் பொலிவு - வடிவத்தின் விளக்கம். கூட்டம் - சேர்க்கை. பெயர்ச்செவ்வெண் தொகை பெற்றது. (ச)

கூஉடு. தொகச்சொல்லித் தூவாத நீக்கிநகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

(இ - ள்.) தொக சொல்லி - (வேற்றரசர்க்குப் பலகாரியங்களைச் சொல்லுமுழிக் காரணவகையால்) தொகுத்துச்சொல்லியும், தூவாத நீக்கிநக சொல்லி-(இன்னுதகாரியங்களைச் சொல்லுமுழி) வெய்யசொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும், நன்றி பயப்பது - (தன் அரசனுக்கு) நன்மையைப் பயப்பவனே, தூது ஆம் - தூதனுவான்; (எ - று.)

பலகாரியங்கட்குஉடம்படாதார், பரம்பரையான் அவற்றிற்குக்காரண மாயதொன்றைச் சொல்ல, அதனுல் அவை வினையுமாறு உய்த்துணர அருமையானும் சுருக்கத்தானும் உடம்படுவர்: இன்னுதவற்றிற்குஉடம்படாதார், தம் மனம்மகிழச் சொல்ல, அவ்வின்னுமை காணுது உடம்படுவர்: ஆதலின், அவ் விருவாற்றானும் தன்காரியம் தவறுமல் முடிக்கவல்லா னென்பதாம். எண் ணும்மைகள், விகாரத்தால் தொக்கன.

(கு - ரை.) இன்னுத - இன்பந்தருவதாகாத; தீன்பந்தருகிற. வெய்ய சொற்கள் - கொடுஞ்சொற்கள். பரம்பரையான் - நேராகவன்றி: ஒன்றைப் பற்றி மற்றொன்று அதனைப்பற்றி வேறொன்று என்ற இவ்வாற்றால். அவற் றிற்குக் காரணமாயது - அப்பலகாரியங்களும் முடிதற்கு ஏதுவானது. அத னுல் அவைவினையும்ஆறு உய்த்து உணர அருமையானும் - ஒருகாரணத்தாற் பலகாரியங்களுண்டாகுந்தன்மை ஆலோசித்தறிய அரியதா யிருத்தலாலும். சுருக்கத்தானும் - சொன்னகாரியம் ஒன்றேயாய்ச் சுருங்கியிருத்தலாலும். உடம்படுவர் - அதற்கு ஒப்புக்கொள்வர். காணுது - அறியாமல். இருவாற் றானும் - (தொகச்சொல்லுதல் நகச்சொல்லுதல் என்ற) இரண்டுவகையாலும். 'சொல்லி' என்றசொல் இரண்டன் இறுதியிலும் எண்ணும்மைகள் தொகுத் தல்விகாரப்பட்டன. தூவாத - சுத்தமல்லாதவை; தூய்மையென்னும் பண் பினடியாப்பிறந்த எதிர்மறைப் பலவின்பால் வினையாலணையும்பெயர். தூது- தூதனென்ற வடசொல்லின் விகாரம்; உயர்திணைப்பொருளில் வந்த அஃறி ணைச்சொல் என்றலு முண்டு. (ஞ)

கூஉசு. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

(இ - ள்.) கற்று - (நீதிநூல்களைக்) கற்று, செல சொல்லி - (தான்சென்ற கருமத்தைப் பகைவேந்தர்) மனங்கொளச் சொல்லி, கண் அஞ்சான் - (அவர் செயிர்த்துநோக்கின்) அந்நோக்கிற்கு அஞ்சாது, காலத்தால் தக்கது அறிவது- காலத்தோடுபொருந்த அதுமுடிக்கத்தக்க உபாயம் அறிவானே, தூது ஆம் - தூதனுவான்; (எ - று.)

அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனுனன்றிப் பிறி தொன்றுன் முடியுங் காலம் வரின் அவ்வாறுமுடிக்கவேண்டுதலின் காலத் தால் தக்கது அறிதலும் இலக்கண மாயின.

(கு - ரை.) சென்ற கருமத்தை - நிறைவேற்றுமாறு உத்தேசித்துப் போனகாரியத்தை. செயிர்த்து நோக்கின் - கோபித்துப்பார்த்தால். அதனுன் அன்றிப் பிறிது ஒன்றுல் - நீதிநூலிற் கூறிய அவ்வுபாயத்தா லன்றி வேறோர் உபாயத்தால். காலத்தால் தக்கது - காலத்துக்குஏற்ற உபாயம். கண் அஞ்சான் - நான்காம் வேற்றுமைத்தொகை. அஞ்சான் - முற்றெச்சம். 'காலத்தான்' என்பதில், ஆனுருபு - உடனிகழ்ச்சிப் பொருளது. தக்கது - இறந்தகால வினையாலணையும் பெயர். கீழ் 'ஒற்றுடல்' என்ற அதிகாரத்தில் "கடாஅவுருவொடு கண்ணஞ்சாது" எனச் செயிர்த்துநோக்கிய பிறர்கண்ணிற்கு அஞ்சாது நிற்குந் தன்மை ஒற்றர்க்கும் இலக்கணமாக உரைக்கப்பட்டமை காண்க. "பகைப்புலனணுகியுய்த்தார்பகர்ந்ததுபகர்ந்து" என்றுர் கம்பராமாயணத்திலும். (கூ)

கூஉஎ. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(இ - ள்.) கடன் அறிந்து - (வேற்றரசரிடத்துத் தான்செய்யும்) முறைமையறிந்து, காலம் கருதி-(அவர்) செவ்வி பார்த்து, இடன் அறிந்து-(சென்ற கருமஞ் சொல்லுதற்கு ஏற்ற) இடம் அறிந்து, எண்ணி - (சொல்லும் ஆற்றை முன்னே) விசாரித்து, உரைப்பான் - (அவ்வாறு) சொல்லுவான்; தலை - (தூதரின்) மிக்கான்; (எ - று.)

செய்யும்முறைமையாவது-அவர்நிலையும், தன்அரசன்நிலையும், தன்நிலையுந் தூக்கி அவற்றிற்கு ஏற்பக் காணும் முறைமையும், சொல்லும் முறைமையும் முதலாயின. செவ்வி - தன்சொல்லை ஏற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி; அது காலவயத்த தாகலின், 'காலம்' என்றுர். இடம் - தனக்குத்துணையாவார் உடனுள்ள இடம். எண்ணுதல் - தான் அது சொல்லும் ஆறும், அதற்கு அவர் சொல்லும் உத்தரமும், அதற்குப்பின் தான் சொல்லுவனவும் ஆக இவ்வாற்றுன் மேன்மேல் தானே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலைகொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை இடை கடை என்று வகுத்துக் கூறினு ராகலின், அவர்மதமுந் தோன்ற 'தலை' என்றுர். தூது என்பது, அதிகாரத்தான் வந்தது.

இவை யைந்துபாட்டானும், தான்வகுத்துக்கூறுவானது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) செவ்வி-தன்மை, சந்தர்ப்பம். சொல்லும் ஆற்றை முன்னே விசாரித்து - சொல்லவேண்டும் விதத்தை முன்னமே ஆலோசித்து. மிக்கான் - சிறந்தவன். தூக்கி - சீர்தூக்கி, ஆராய்ந்து. காணும் - வேற்றரசரைப் பார்க்கிற. மனநிகழ்ச்சி - மனத்தின்தன்மை. காலவயத்தது - காலத்துக்கு வசப்பட்டது. ஒரு சமயத்தி லுண்டாகும் மனத்தியல்பை 'காலம்' என்ற சொல்லாற் குறித்தது, காலவாகுபெயர். உடன் ஆய - கூட இருக்கிற. அது - தான்சென்ற கருமத்தை. கற்பித்தல் - மனத்தால் தொடர்ச்சிப்பட நினைத்துக்கொள்ளுதல். "கற்றவன் கற்றவன் கருதுங்கட்டுரைக், குற்

றன வுற்றவுய்த்துரைக்கு மாற்றலான்" என்றூர் சூளாமணியாரும். இவ்விரு வகையார்-தான் வகுத்துக் கூறுவானும், கூறியதுகூறுவானும். தலே இடைகடை - உத்தம மத்யம அதமர்; தான்வகுத்துக்கூறுவான் உத்தமனும், கூறியதுகூறுவான் மத்யமனும் ஓலேகொடுத்துநிற்பான் அதமனும்எனக் காண்க. "தானறிந்து கூறுந் தலே மற்றிடையது, கோனறைந்த தீதென்று கூறுமால்-தானறியா, தோலேயே காட்டுங் கடையென் றிருமூன்று, மேலேயோர் தூதுரைத்தவாறு" என்ற பெருந்தேவனுர்பாரதம், இங்குக் காணத்தக்கது. அதிகாரத்தான் - அதிகாரம் தூதென்ப தாதலால். தலே - தலேமையானவனுக்கு, ஆகுபெயர். (எ)

கூஅஅ. தூய்மை துணேமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(இ - ள்.) வழி உரைப்பான் பண்பு - (தன் அரசன்வார்த்தையை அவன்) சொல்லியவாறே (வேற்றரசர்க்குச்) சென்றுசொல்லுவானது இலக்கணமாவன, - தூய்மை - (பொருள்காமங்களால்) தூயனுதலும், துணேமை - (தனக்கு அவரமைச்சர்) துணேயாந் தன்மையும், துணிவு உடைமை - துணிதலுடைமையும், இ மூன்றின் வாய்மை-இம்மூன்றோடு கூடியமெய்ம்மையும்,(என இவை).

பொருள்காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டுத் தூய்மையும், தன் அரசனுக்கு உயர்ச்சிகூறியவழி 'எம்மனேர்க்கு அஃது இயல்பு' எனக் கூறி அவர்வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணேமையும், இதுசொல்லின் இவர் எதஞ்செய்வர் என்று ஒழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவராலுந்தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப்பட்டன. 'இன்'-ஒடுவின் பொருட்கண் வந்தது.

(கு - ரை.) தூயன் - சுத்தன். பொருள் காமங்களால் தூயனுதல்-செல்வ விஷயத்திலாவது சிற்றின்பவிஷயத்திலாவது பற்றில்லாதவனுக இருத்தல். "பற்றூர், மிசைப்புலனடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட, தகைப்புலச் கருமத்தோர்" என்றூர், கம்பரும். அவரமைச்சர்-வேற்றரசரது மந்திரிமார். துணிதல்- மனேதைரியம். வந்த தூதன் வேற்றரசனிடத்தில் தன் அரசனது பெருமையை எடுத்துக்கூறுவானுயின் அப்பொழுது அவ்வேற்றரசனுக்கு அத்தூதன்மேல் உண்டாகுங் கோபத்தை, 'எம்போல்வார்க்கு அங்ஙனம் தம் அரசனேச் சிறப்பித்துக்கூறுதல் இயற்கை' என்று சமாதானஞ்சொல்லித் தணித்தல்; அன்புள்ள அமைச்சர்க்கு இயல் பென்க; இதனே, இராமதூதனுன அநுமானேக் கொல்லத்துணிந்த இராவணனே விபீஷணன் மறுத்ததும், பாண்டவதூதனுன கண்ணனேக் கொல்லத்துணிந்த துரியோதனனே விதுரன் மறுத்ததும் போலக் கொள்க. எதம் செய்வர்-நமக்குத் தீங்குசெய்வர். ஒழியாமைப்பொருட்டு-சொல்லாது விடாமைக்காக. தேறப்படுதல்-நம்பப்படுதல். 'மூன்றின்' என்றதில், இன் என்னும் ஐந்தாமுருபு, மூன்றும்வேற்றுமைக்குரிய உடனிகழ்ச்சிப்பொருளில் வந்த தென்பது, பரிமேலழகர்கொள்கை; எனவே, ஒருவேற்றுமையுருபு பிற்றற்கு உரிய இடத்தில் வேறு வேற்றுமை

யுருபு வந்த வேற்றுமைமயக்கம்; இது: "யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள்சென் மருங்கில்வேற்றுமைசாரும்" என்பது, விதி. இனி, இன் - சாரியையெனக்கொண்டு 'மூன்றின்வாய்மை' என்பதை மூன்றும்வேற்றுமை யுருபும்பயனுமுடன் தொக்க தொகை யெனினும் அமையும். (அ)

கூஅகூ. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(இ - ள்.) விடு மாற்றம் - (தன் அரசன் சொல்லி) விட்ட வார்த்தையை, வேந்தர்க்கு உரைப்பான் - வேற்றரசர்க்குச் சென்று சொல்ல உரியான்,— வடு மாற்றம் வாய் சோரா - (தனக்குவரும் ஏதத்திற்கு அஞ்சி அவனுக்குத்) தாழ்வானவார்த்தையை வாய்சோர்ந்துஞ்சொல்லாத, வன்கணவன் - திண்மை யையுடையன்; (எ - று.)

தாழ்வு சாதிதரும மன்மையின் 'வடு' என்றார். 'வாய்சோரா' எனக் காரி யம் காரணத்துள் அடக்கப்பட்டது.

(கு - ரை.) விட்ட-அனுப்பிய. ஏதம்-தீங்கு. அவனுக்கு-தன் அரசனுக்கு. வாய்சோர்ந்தும் - வாய்தவறியும். திண்மை - உறுதி. சாதிதரும மன்மை-அரசு சாதிக்கு உரியதன்மையல்லாமை. வடுவென்பது உடம்பிற்கு இயற்கையல்லா மல் செயற்கையா மாறுகாண்க. வடு - தழும்பு. காரியமாகிய வடுமாற்றஞ் சொல்லுதல், காரணமாகிய வாய்சோர்தலில் அடக்கப்பட்டது: காரியத்தைக் காரணத்தாற் கூறிய உபசாரவழக்கு. (கூ)

கூகூ0. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(இ - ள்.) இறுதி பயப்பின்உம்-*(வேற்றுவேந்தரிடைச்சொல்லும் அவ் வார்த்தை தன் உயிர்க்கு) இறுதி தருமாயினும், எஞ்சாது - (அதற்கு) அஞ்சி ஒழியாது, இறைவற்கு உறுதி பயப்பது - (தன் அரசன்சொல்லியவாறே) அவனுக்கு மிகுதியை (வேற்றரசரிடை)ச் சொல்லுவானே, தூது ஆம் - தூத னுவான்; (எ - று.)

'இறுதிபயப்பினும்' என்றதனால், ஏனையபயத்தல் சொல்லவேண்டா வாயிற்று.

இவைமூன்றுபாட்டானும், கூறியதுகூறுவானது இலக்கணம் கூறப் பட்டது.

(கு - ரை.) இறுதி - அழிவு. ஒழியாது - விடாமல். மிகுதியை - சிறப் பை. ஏனைய பயத்தல் - மற்றைத்தன்பங்களைத் தருதல். இறுதி-'தி' விகுதி பெற்ற தொழிற்பெயர். பயப்பினும், உம் - இழிவுசிறப்பு. (கo)

"அன்புடைமை யாய்ந்த வறிவுடைமை யிற்பிறப்பு, நன்குடைமை நல்ல நயனுடைமை-நன்கமைந்த, சுற்றமுடைமைவலிவுடைமை சொல்வன்மை, கற் றடங்கல் தூதின் கடன்," "தடுமாற்ற மின்றித் தகைசான்றசொல்லான், வடு மாற்றம் வாய்சோரா வாகி—விடுமாற்ற, மெஞ்சாதுகூறி யிகல்வேந்தன்

* வேற்றுவேந்தரிடைச்சொல்லும்என்பது பலபிரதிகளிலில்லை.

கிறுங்கா, லஞ்சா தமைவது தூது," "படையளவு கூழுர் பெரியார்முன் மாற்றூர், படையளவிற் றென்று வியவார்—கொடைவேந்த,னீத்ததுகண்டின்புரு ரேந்திழையார் தோள்சேரார், பார்த்திபர்து தாயடைந்தார் பண்பு" என்ற பெருந்தேவனுர் பாரதச்செய்யுள்கள் இவ்வதிகாரத்துக் குறட்பாக்களின் கருத்தைத் தொகுத்துக்கூறியனவாதல் காண்க.

எo - ஆம் அதிகாரம்.—மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது - அமைச்சர் அரசரைப் பொருந்தி ஒழுகுமாறு. இது "வேந்தவாம்பண்புடைமை"என மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மேலே - மூன்றின அதிகாரத்தின் முதற்குறளில்.

சுகூக. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

(இ - ள்.) இகல்-மாறுபடுதலேயுடைய, வேந்தர்-அரசரை, சேர்ந்து ஒழுகுவார் - சேர்ந்து ஒழுகும் அமைச்சர்,—அகலாது அணுகாது - (அவரை)மிக நீங்குவதும் மிகச்செறிவதுஞ் செய்யாது, தீ காய்வார் போல்க - தீக்காய்வார் போல (இடைநிலத்திலே) நிற்க; (எ - று.)

கடிதின் வெகுளுந்தன்மையர் என்பதுதோன்ற, 'இகல்வேந்தர்' என்றூர். மிக அகலின் பயன்கொடாது மிக அணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிக அகலின் குளிர்நீக்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழிலுவமம் பெறப்பட்டது.

(கு-ரை.) மாறுபடுதல்-முன்கொண்டிருந்த அன்பு மாறிவிடுவது. மிகச் செறிவது - அதிகமாக நெருங்குவது. தீக் காய்வார்-நெருப்பிலே குளிர்காய்பவர். இடை நிலம்-தீக்காய்வார்க்கு, மிக்கதூரமும் மிக்கசமீபமு மாகாத இடமும்: அமைச்சர்க்கு, மிகநீங்காமலும் மிகநெருங்காமலு மூள்ள நிலைமையுமாம். கடிதின் - விரைவில். அகலின் - விலகினால். அவமதிபற்றி - தம்மை அவமானப்படுத்தினதாக நினைத்து. தெறும்-அழிக்கும். உவமையணி. போல்க - இடைச்சொல்லடியாப்பிறந்த வியங்கோள்.''அழலி னீங்கா ணணுகா ணஞ்சி", என்றநன்னூற்பாயிரத்தில், இங்ஙனம் ஒழுகுதல் நல்மாணாக்கர்க்கு இலக்கணமெனப்பட்டமை காண்க. "அளியுறை பாம்பு மரசு நெருப்பும், முழையுறை தீயமு மென்றிவை நான்கு, மிளைய வெளிய பயின்றன வென்றெண்ணி,யிகழினிழுக்கந் தரும்" ஆதலால், 'மிக அணுகின் அவமதிபற்றித்தெறும் வேந்தர்' என்றூர். தொழிலுவமம் - தொழில்பற்றிய உவமம். "தீண்டினுர்தமைத் தீச்சுடு மன்னர்தீ, யீண்டு தங்கினேயோடு மெரித்திடும்" என்று சிந்தாமணியிலும் "மன்னரென்பா ரெரியனற்குரியாரென்றே யெண்ணுதி" என்று கம்பராமாயணத்திலும் அரசர்க்குத் தீயுவமைகூறியது காண்க. (க)

சுகூஉ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(இ - ள்.) மன்னர் - (தம்மாற் சேரப்பட்ட) மன்னர், விழைப - விரும்புவனவற்றை, விழையாமை - (தாம்) விரும்பாதொழிதல்,—(அமைச்சர்க்கு),—

மன்னராள் - அவராலே, மன்னிய ஆக்கம் தரும் - நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்; (எ - று.)

ஈண்டு 'விழைப' என்றது, அவர்க்குச் சிறப்பாக உரியவற்றை; அவை - நுகரப்படுவன, ஒப்பினை, மேன்மை என்றிவை முதலாயின. இவற்றை ஒப்பிற்கு அஞ்சித் தாம் விழையா தொழியவே, அவ்வச்சம்நோக்கி உவந்து அவர்தாமே எல்லாச்செல்வமும் நல்குவர் என்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பின் கேடுதரும் என்பதாம்.

(கு - ரை.) அவராலே - அவ்வரசர்களாலேயே. அவர்க்கு - அவ்வரசர்க்கு. நுகரப்படுவன - ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்கள். ஒப்பினை - அலங்காரம்: அணியப்படும் ஆபரணங்களும், உடுக்கப்படும் உடைகளும் இதில் அடங்கும். ஒப்பிற்கு அஞ்சி - தமது தலைவராகிய அரசரோடு அவர்க்கு அங்கமாகிய தாம் சமமாகத்தோன்றுதற்குப் பயந்து. அவர்தாமே - அவ்வரசர்களே. நல்குவர் - கொடுப்பர். அவற்றை - மன்னர்விழைபவற்றை. விழைப - பலவின் பால் வினையாலணையும்பெயர்; ப் - எதிர்கால இடைநிலை, அ - விகுதி. "கோல நேர்செய்யார்," "பெரியா ருவப்பன தாமுவவார்", "அறத்தொடு கல்யாண மான்வினை கூரை, யிறப்பப் பெருகியக் கண்ணும் - சிறப்பட்டார், மன்னரின் மேம்படச் செய்யற்க செய்பவேல், மன்னிய செல்வங் கெடும்" என்ற ஆசாரக் கோவையை இங்கே அறிக. (உ)

கூகூ. போற்றி னியியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(இ - ள்.) போற்றின் - (அமைச்சர் தம்மைக்) காக்கக்கருதின், அரிய வை போற்றல் - அரியபிழைகள் (தங்கண் வாராமற்) காக்க: கடுத்த பின் தேற்றுதல் யார்க்கும் அரிது - (அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர்) ஐயுற்றால் (அவரைப்) பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது (ஆகலான்).

அரியபிழைகளாவன - அவராற் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையொடு மருவல், அரும்பொருள்வெளவல் என்றிவை முதலாயின; அவற்றைக் காத்தலாவது - ஒருவன் சொல்லியக்கால், தகுமோ வென்று ஐயுறுது தகாதென்றே அவர் துணிய ஒழுகல். ஒருவாற்றால் தெளிவித்தாலும், கடன்கொண்டான்தோன்றப் பொருள் தோன்றுமாறுபோலக் கண்டுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின், 'யார்க்கும் அரிது' என்றார்.

இவைமூன்றுபாட்டானும், அது பொதுவகையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) தம்கண் - தம்மிடத்து. ஐயுற்றால் - சந்தேகப்பட்டால். அறைபோதல் - கீழறுத்துச்செல்லுதல்; அதாவது - தலைவனை வஞ்சித்து ஒழுகுதல்; இதற்கு - பகைவர்க்குஉடம்பட்டுநடத்த லென்னும் பொருளுண்டு: உரிமையொடு மருவல் - அரசனுக்குரியமகளிரோடுகூடுதல். அரும்பொருள் வெளவல் - அருமையான பொருளை அபகரித்தல். சொல்லியக்கால் - கோட்சொன்னால். தகுமோ என்று ஐயுறுது - இவனிடத்து இக்குற்றம் ஒருகால் உண்டாயிருக்குமோ என்ற சந்தேகமுங் கொள்ளாதபடி. தகாதென்றே அவர்துணியஒழுகல் -

நிச்சயமாகச்செய்யாரென்றே அரசர் துணிபுகொள்ளும்படி அப்பிழைநிறீஇ மிலராய் நடத்த லென்க. 'ஒருவாற்றால் தெளிவித்தாலும்' என்பதற்கு முன் 'ஐயுறப்பட்ட தன்னை இவன் அவ்வாறு தீத்தொழில் செய்யா னென்று' என வருவிக்க. தெளிவித்தாலும் - நம்புவித்தாலும். கடன்கொண்டான் - கடன்வாங்கினவன். தோன்ற-காணப்பட. பொருள் தோன்றுதல் - அவன் கடனைப்பெற்ற பொருள் ஞாபகத்துக்கு வருதல். கண்டழி - கண்டவிடத் தில். அவை - அவ்வரும்பிழைகள். அது - மன்னரைச் சேர்ந்தொழுகல். அடுத்தகான்குபாடலிற் சிறப்புவகையாற் கூறுவர். போற்றல் - வியங்கோள். கடுத்தபின் - சந்தேகித்தால் என்றபடி; இதனை, 'பின்' விகுதிபெற்ற இறந்த காலவினையெச்ச மென்பர்: எதிர்காலவினையெச்ச மென்றலு முண்டு. கடுத் தல் - சந்தேகித்த லென்னும் பொருள தாதலை, கீழ் ஐம்பத்தொன்பதாம் அதி காரத்தில் ''கடாஅ வுருவொடு'' என்றதிலும் காண்க; அங்கு, '(கண்டால்) ஐயுறுத வடிவோடு பொருந்தி)'என உரையும், 'கடாவென்பது-கடுக்கும் என் னும் பெயரெச்சத்து எதிர்மறை' என இலக்கணமும் கூறினர் பரிமேலழகர். இலப்பதிகாரத்தில் ''கடுக்குமென்னெஞ்சம்'' என்றவிடத்தில், அடியார்க்கு நல்லார், 'கடுக்கும் - ஐயுறும்; கடியென்னுமுரிச்சொல் ஈறுதிரிபு: ''போற்றி னியவை போற்றல் கடுத்தபின், றேற்றுதல் யார்க்கு மரிது'' என்றாற்போல; அது ''ஐயமுங் கரிப்பு மாகலு மூரித்தே'' என்பதனுள் முடிந்தது' என்று உரைத்ததை உணர்க. இப்பாட்டின் முதல்வாக்கியத்துக்கு 'அமைச்சர்'-தோன்ற எழுவாய்; அடுத்த நான்குபாடல்களுக்கும் இப்படியே. (ங)

கூகூச. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

(இ - ள்.) ஆன்ற பெரியார் அகத்து - அமைந்தஅரசரருகு (இருந்தால்), செவி சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - (அவர்காண ஒருவன்) செவிக்கண்சொல்லுதலையும்ஒருவன்முகம்நோக்கிநகுதலையும்தவிர்த்துஒழுகுக.

சேர்தல் - பிறனோடு சேர்தல். செய்தொழுகின் தம்குற்றம்கண்டுசெய் தனவாகக் கொள்வர் என்பது கருத்து.

(கு - பை.) அமைந்த - தம்மாற் சேரப்பட்ட; அன்றி, பெருமை நிறைந்த எனினுமாம். அரச ரருகு இருந்தால் - அரசரது சமீபத்தில் தாமிருக்கும் போது. ஒருவன் செவிக்கண் சொல்லுதல் - வேறொருத்தனது காதிலே இரக சியமாகப் பேசுதல். நகுதல் - சிரித்தல். தவிர்த்து - நீங்கி. ''செவிச்சொல் லும் கொள்ளார் பெரியாரகத்து'', ''பிறரொடு மந்திரங் கொள்ளார்'' என்ற ஆசாரக்கோவையை இங்கே அறிக. சொல் - முதனிலைத் தொழிற்பெயர். 'செவிசொல்லும்' என்றும் பாடமுண்டு. நகை - 'ஐ' விகுதிபெற்ற தொழிற் பெயர்; நகு - பகுதி: அன்றி, நகையென்னும் முதனிலையே தொழிற்பெயர்ப் பொருளை யுணர்த்தியது எனினுமாம். ஒழுகல் - வியங்கோண்முற்று. (ச)

கூகூடு. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.

(இ - ள்.) மறை-(அரசனுக்குப் பிறரோடு) மறை நிகழ்வுழி, எ பொருள் உம் ஓரார் - யாதொருபொருளையுஞ் செவிகொடுத்துக் கேளாது, தொடரார்-(அவனை) மூடுகிவினைவுவதுஞ் செய்யாது, அ பொருளை விட்டக்கால் கேட்க - அம்மறைப்பொருளை (அவன்தானே) அடக்காது சொல்லியக்கால் கேட்க.

ஓர்தற்கு எற்கும் பொருளாயினு மென்பார், 'எப்பொருளும்' என்றார். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) மறை நிகழ்வுழி - இரகசியம் நடக்கும்பொழுது. முடுகி - விரைவுகொண்டுவற்புறுத்தி. அவன் - அரசன். ஓர்தற்கு - தான் கேட்டு அறிந்துகொள்ளுதற்கு. வினைமாற்றின்கண் - வினைமாற்றுப்பொருளில். ஒன்றுக்கொன்று மாறுபட்ட எப்பொருளும் தொடராமை என்ற வினைக்கும், அப்பொருளைக்கேட்டலென்ற வினைக்கும் இடையில் வந்ததனால், மற்று-வினை மாற்றும்; இதன்தன்மை, இன்னும் பலவகைப்படும். மறை - மறைக்கப்படுவதென்ற பொருளில் செய்யப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயராம். "பெருந்தக்கார், சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டூக மீட்டும், விஞவற்க சொல்லொழிந்தக்கால்", "இறைவனைச், சாரார் செவியோரார் சாரிற் பிறி தொன்று, தேர்வார்போல் நிற்க திரிந்து" என்னும் ஆசாரக்கோவை, இங்கு அறியத்தக்கது. (நு)

கூகூ. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

(இ - ள்.) (அரசனுக்குக் காரியஞ் சொல்லுங்கால்);—குறிப்பு அறிந்து-(அப்பொழுது நிகழ்கின்ற அவன்)குறிப்பினை அறிந்து, காலம் கருதி-(சொல்லுதற்கு ஏற்ற) காலத்தையும் நோக்கி, வெறுப்பு இல வேண்டுப - வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை, வேட்ப - (அவன்மனம்) விரும்புமவகை, சொலல் - சொல்லுக; (எ - று.)

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளியுள்ளிட்டவற்றில் நிகழ்வுழியும் அதற்கு எலாக் காலத்தும்சொல்லுதல் பயனின் றாகலின் 'குறிப்பறிந்து காலங்கருதி' என்றும், அவன்உடம்படாதன முடிவுபோகாமையின் 'வெறுப்பில' என்றும், பயனில்லவும் பயன்சுருங்கியவஞ் செய்தல் வேண்டாமையின் 'வேண்டுப' என்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களாற் சொல்லுக வென்பார் 'வேட்பச் சொலல்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) குறிப்பு - எண்ணம். வேண்டுவன - விரும்பப்படுவன. காமவெகுளி உள்ளிட்டவற்றில் நிகழ்வுழியும் - சிற்றின்பவிருப்பம் கோபம் மூதையவற்றிற் பொருத்திய பொழுதும். அதற்கு ஏலாக் காலத்தும் - காரியஞ் செய்தற்குத்தகாத சமயத்திலும். பயன் இன்று ஆகலின் - பிரயோசனப்படாதாதலால். "என்குறை நீ வயவேந்தற் கியம்புதியேல் வடங்கிடந்து, பொன்பிதிர் மின்சுணங்கார்ந்த பெம்மலிளமுலையினர்பா, லன்புறு நல்லமய மதி லறையற்க வறைகுதியேல், நன்குறைதீங்கா மவர்பா ணயப்புற்றதன்

மையினால்,'' ''வேற்றரசர் திறைகொணரும் வேலையிலுஞ் சொல்லற்க, மாற்றரசர்பால் வெகுளுமமயத்தும் வகுத்துரையேல்; தேற்றமுடைய மதிவல்லோர் தேர்ச்சியிலுந் தெரிந்துரையேல், சாற்றி னுரைத்தனவெல்லாந் தவறாதலறிதியே'' என்ற நைடதச்செய்யுள்கள், இங்கு நோக்கத்தக்கன. முடிவு போகாமையின் - நிறைவேறாவாதலால். பயன் இல்ல - பிரயோசன மில்லாதவை. பயன் சுருங்கிய - அற்பமான பயனுள்ளவை. இல, வேண்டுப-பலவின்பாற் பெயர்கள். வேட்ப என்ற செயவெனெச்சத்தில், வேள் - பகுதி, அ - விகுதி, ப் - எழுத்துப்பேறு. வேண்டுப என்ற பெயரில், ப் - எதிர்கால விடைநிலை. சொலல் - முற்று. ''விரைந்துரையார் மேன்மேலுரையார் பொய்யாய, பரந்துரையார் பாரித்துரையார் - ஒருங்கெனைத்துஞ், சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தாற், சொல்லுக செவ்வி யறிந்து'' என்னும் ஆசாரக்கோவையை அறிக. ''காவன் மன்னவர் காய்வன சிந்தியார், நாவினும் முரையார் நவையஞ்சுவார்'' என்றார் சிந்தாமணியாரும். ''கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த, செவ்வி தெரியாதுரையற்க—ஒவ்வொருகா, லெண்மையனேனுமரியன் பெரிதம்மா, கண்ணிலனுள்வெயர்ப்பினான்'' என்பது, நீதிநெறிவிளக்கம்.

இங்கு ''குறிப்பறிந்து'' என்றது, மேல் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறாம். (சு)

சுகூஎ. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(இ - ள்.) வேட்பன - (பயன்பெரியனவுமாய் அரசன்) விரும்புவனவுமாயகாரியங்களை, சொல்லி - (அவன் கேட்டிலனாயினுஞ்) சொல்லி,—எஞ்ஞான்றும்—, வினை இல - பயனிலவாயவற்றை, கேட்பின் உம் - (தானே) கேட்டாலும், சொல்லா விடல் - சொல்லாது விடுக; (எ - று.)

'வினையில' எனவும் 'கேட்பினும்' எனவும் வந்த சொற்களான், அவற்றின் மறுதலைச்சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் 'வினை' என்றும், வறுமைக்காலமும் அடங்க 'எஞ்ஞான்றும்' என்றுங் கூறினார். சொல்லுவனவும் சொல்லாதனவும் வகுத்துக்கூறியவாறு.

இவைநான்குபாட்டானும், சிறப்புவகையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) பயன் பெரியன-பெரும்பயனுடையவை. தானே-அரசனே. மறுதலைச்சொற்கள் - எதிரானசொற்கள். வினையில என்றதற்கு எதிரானது - 'பயன்பெரியன'என்றது; கேட்பினும் என்றதற்கு எதிரானது-'கேட்டிலனாயினும்' என்றது. வினை யென்னுந் தொழிலின்பெயரால், அதனால் வரும் பயனைக் குறித்தது, காரணவாகுபெயர். சொல்லுவனவும், சொல்லாதனவும் - சொல்லத்தக்கவையும், சொல்லத்தகாதவையும். வேட்பன-'அன்' சாரியை பெற்ற பலவின்பால் வினையாலணையும்பெயர். கேட்பினும், உம்-உயர்வுசிறப்பு. சொல்லா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். விடல்-வியங்கோள்வினை முற்று. (எ)

௬௯௮. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

(இ - ள்.) இளையர் இன முறையர் என்று - (இவர் எம்மின்) இளையர் என்றும் (எமக்கு) இன்னமுறையினையுடையர் என்றும், இகழார் - (அரசரை) அவமதியாது, நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - (அவர்மாட்டு) நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்; (எ - று.)

ஒளி - உறங்காநிற்கவும் தாம் உலகங்காக்கின்ற அவர் கடவுள்தன்மை. அதனோடு பொருந்த ஒழுகுத லாவது - அவர் கடவுளரும், தாம் மக்களுமாய் ஒழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட இளமையும் முறைமையும் பற்றி இகழ்வராயின் தாமும் போக்கப்படுவர் என்பது கருத்து.

(கு - ரை.) இளையர்-பிராயத்திற் சிறியவர். முறை - உறவு முறைமை. உறங்காநிற்கவும் - தூங்குகையிலும். கடவுள் தன்மை - தெய்வத்தன்மை; "உறங்குமாயினு மன்னவன் தன்னொளி, கறங்குதெண்டிரை வையகங் காக்குமால்" என்ற சீவகசிந்தாமணியையும், 'மன்னவன் உறங்குமாயினும் அவனொளி உலகைக் காவாநிற்கும், என்ற அதன் உரையையும் உணர்க. அவர் கடவுளரும் தாம் மக்களுமாய் ஒழுகுதல்-தேவர்முன் மனிதர்போல அரசர்முன் அமைச்சர் பணிவோடு நடத்தல். போக்கப்படுவர்-அமைச்சுத் தொழிலினின்று விலக்கப்படுவர். இளையர் - இளமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் இடை அகரம் ஐயாயிற்று. இன - இன்ன என்னும் சுட்டடிப் பெயரெச்சத்தின் தொகுத்தல். இகழார் - முற்றெச்சம். 'ஒழுகப்படும்' என்பதில், 'ஒழுக' என்னும் வினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைபட்டு 'படும்' என்ற வினை முற்றிற்கு எழுவாயாய் நின்ற தெனக் கொள்ளுதல், எளிய வழி. இது செய்யுட்கண் வந்த பாவேப்ரயோகம். "அறிவறியாப், பிள்ளையேயானுமிழித்துரையார்" என்ற ஆசாரக்கோவை இங்குக் காணத்தக்கது. (அ)

௬௯௯. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

(இ - ள்.) கொளப்பட்டேம் என்று எண்ணி - (அரசனால் யாம்) நன்கு மதிக்கப்பட்டே மென்று கருதி, கொள்ளாத - (அவன்) விரும்பாதவற்றை, செய்யார்—: துளக்கு அற்ற காட்சியவர் - நிலைபெற்ற அறிவினையுடையார்; (எ - று.)

கொள்ளாதனசெய்து அழிவெய்துவார், கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறொருவராகக் கருதுவ ராகலின், முன்னைய ராகவே கருதி அஞ்சியொழுகுவாரை 'துளக்கற்ற காட்சியவர்' என்றார்.

(கு - ரை.) கொள்ளாதன - அரசன் விரும்பாதவற்றை. கொளப்பாட்டிற்குப்பின் - அரசனால் தாம் நன்குமதிக்கப்பட்டபின்பு. வேறொருவராக - முன்னினுஞ் சிறந்தவராக; இங்ஙனம் கருதுதல், உலக வியல்பு. துளக்கு அற்ற - சஞ்சலப்படாத. கொள்ளாத - பெயர். துளக்கு - துளங்கு என்னும்

மூதனிலை திரிந்த தொழிற்பெயர்: துளங்குதல் - சலித்தல். காட்சியென்னுந் தொழிற்பெயரில், சி - விகுதி. இதில், காணுதல் - அகக்கண்ணின் நோக்கம்.

எ00. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(இ - ள்.) பழையம் என கருதி - (அரசனுக்கு யாம்) பழைய மெனக் கருதி, பண்பு அல்ல செய்யும் - (தமக்கு) இயல்பல்லாதவற்றைச் செய்யும், கெழுதகைமை - உரிமை, கேடு தரும் - (அமைச்சர்க்குக்) கேட்டினைப் பயக்கும்; (எ - று.)

அவன் பொறாது செறும்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணேடாது உயிரை வௌவுதலான், அவன்வேண்டாதன செய்தற்கு ஏதுவாய கெழுதகைமை கேடுதரு மென்றார்.

இவை மூன்றுபாட்டானும், பொறுப்பரென்று அரசர் வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பழையம்-வெகுநாளாய்ப்பழக்கமுள்ளோம். இயல்பு அல்லாதவற்றை - தகாதவற்றை. அவன் - அரசன். செறும்பொழுது - கோபித்து அழிக்கும்பொழுது. கண்ணேடாது - தாக்ஷிணியப்படாமல். அரசர் வெறுப்பன - அரசர்வெறுக்குங்காரியங்களை, அல்ல-பெயர். 'கெழுதகைமையாவது-கூடியதகைமை,' 'கெழு.....உபசருக்கம்' என்பது பிரயோகவிவேகவுரை. "கழி நிழமை செய்யார்" என்ற ஆசாரக்கோவையைப் காண்க. "பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார், நிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன், காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு, மார்வ லரு மில்லை யவர்க்கு" என்பது, நீதிநெறிவிளக்கம். (கo)

எக - ஆம் அதிகாரம்.—குறிப்பறிதல்.

அஃதாவது - அரசர்கருதியவதனை அவர்கூறாமல் அறிதல்: இது, மன்னரைச்சேர்ந்தொழுகற்கு இன்றியமையாததாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) கருதியவதனை-சித்தவிஷயத்தை; காதிபற்றி, ஒருமையாற் கூறினர். அவர் - அவ்வரசர்கள். 'அவர்கூறாமல் அறிதல்' என்றது, அவர்களது முகம் கண் முதலிய உறுப்புக்களின் குறிப்பினால் அறிதல் என்றவாறு. இன்றியமையாது-இல்லாமல் முடியாதது, அவசியமானது. 'மன்னரைச்சேர்ந்தொழுகல்' என்னும் அதிகாரத்தின் பின் 'குறிப்பறிதல்' என்னும் இவ்வதிகாரத்தை வைத்ததற்குக் காரணம், அரசரையடுத்து நடத்தற்கு உரிய வகைகளுள் குறிப்பறிதல் முக்கியமாக வேண்டியிருத்த லென்றபடி. மன்னரைச்சேர்ந்தொழுகற்குக்குறிப்பறிதல் இன்றியமையாததாலே,"குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில, வேண்டிய வேட்பச் சொலல்" எனக் கீழ் அதிகாரத்திற் சொல்லிப்போந்தார்; ஆகலால், கீழ்அதிகாரத்தில் தொகுத்துச்சொல்லப்பட்ட தொரு பொருளையே சிறப்புப்பற்றி இவ்வதிகாரத்தில் விரித்துக்கூறுகின்றா ரென்க. குறிப்பறிதலென்பதற்கு-குறிப்பைப்பறிதலென இரண்டாம்வேற்றுமைத்தொகையாகவாவது, குறிப்பாலறிதல என மூன்றாம்வேற்றுமைத்தொகை

யாகவாவது பதப்பொருள் கொள்க. குறிப்பு - குறித்தல்: 'பு'விகுதிபெற்ற இது - நினைத்த லென்றும், அடையாளப்படுத்த [சுட்டியுணர்த்த] லென்றும் பொருள்படும்: இது - இங்கே, நினைத்தவிஷயத்தையும், அடையாளத்தையும் உணர்த்துமிடத்து, தொழிலாகுபெயராம்.

எ0ந. கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறுநீர் வையக் கணி.

(இ - ள்) குறிப்பு - (அரசனுற் குறித்த கருமத்தை, கூறுமை - (அவன்) கூறவேண்டாவகை, நோக்கி - (அவன்முகமானுங் கண்ணானும்) நோக்கி, அறிவான் - அறியும் அமைச்சன்,—எஞ்ஞான்றும் மாறு நீர் வையக்கு அணி- எஞ்ஞான்றும் வற்றுத நீராற் சூழப்பட்ட வையத்து உள்ளார்க்கு ஓர் ஆபரண மாம்; (எ - று.)

ஒட்பமுடையனுப் எல்லார்க்கும் அழகுசெய்தலான், 'வையக்கு அணி' என்றார். குறிப்பும், வையமும் - ஆகுபெயர். 'வையத்துக்கு' என்பது, விகாரப்பட்டுநின்றது.

(கு - ரை.) குறித்த - நினைக்கப்பட்ட. கருமம்-தொழில். முகமானுங்கண்ணானும் - முகத்தையாவது கண்ணையாவது. இது அமைச்சிய லாதலால், 'அறிவான்'எனப் பொதுப்படக்கூறியதற்கு,'அறியுமமைச்சன்' எனச் சிறப்பாக இடம்நோக்கி உரைக்கப்பட்டது. எஞ்ஞான்றும் - எந்நாளும்; 'எஞ்ஞான்றும் வற்றுத நீர்' என்றது, கடல். வையத்து - நிலவுலகத்தில். ஒட்ப முடையனுப் - ஞானவொளியையுடையவனுய். நினைத்தலென்னும்பொருள் தருகின்ற'குறிப்பு' என்னுஞ் சொல் - இங்கே நினைத்தகாரியத்தையும், பூமியென்னும்பொருள்தருகின்ற 'வையம்' என்னுஞ் சொல் - இங்கேபூமியிலுள்ளாரையும் உணர்த்துதலால், முறையே தொழிலாகுபெயரும் இடவாகுபெயருமென்க. 'வையத்துக்கு'என்பது, அத்துச்சாரியை தொக்கு, 'வையக்கு' என நின்றது,தொகுத்தலென்னுஞ் செய்யுள்விகாரம்:கீழ்''நிலக்குப்பொறை'' என்றவிடத்துப் பரிமேலழகர் 'நிலக்குஎன்பது - செய்யுள்விகாரம்' என்றதுங் காண்க; தொல்காப்பியத்தில் ''குற்றியலுகரக்கு இன்னே சாரியை'' என்றவிடத்து நச்சினர்க்கினியர் 'குற்றியலுகரக்கு-இதற்கு அத்து விரித்து முடிக்க' என்றதும் உணரத்தக்கது: 'மாடத்துக்கு=மாடக்கு என்றல் தொடக்கத்தனை, வேண்டியவழி இன்மையின், செய்யுள்விகாரமா மென்க' என்பர், நன்னூல் விருத்தியுரையாசிரியரும். ''மஃகான்புள்ளிமுனத்தேசாரியை'' என்ற தொல்காப்பியவுருபியற்சூத்திரத்தால், மகரமெய்யீற்றுச்சொல் வேற்றுமையுருபோடு புணரும்பொழுது அத்துச்சாரியைபெறு மென்ற விதி அமைத்ததனால், அத்தச் சாரியையில்லாதஇடத்தைஇங்ஙனம் செய்யுள்விகாரத்தின்பாற்படுத்த வேண்டியதாயிற்று. 'வையத்துக்கு' என்றவிடத்தில் 'வையத்திற்கு' என்றும், பிரதிபேதமுண்டு. அத்துச்சாரியைபோலஇன்சாரியை இன்றியமையாததன்மையாலும், இன்சாரியை அத்துச்சாரியைபற்றிவருவதே யாதலாலும், செய்யுள் விகாரமாகக்கொள்ளவேண்டுமிடத்தில் 'வையத்திற்கு' என்பது விகாரப்

பட்டதாகக் கொள்வதனினும் 'வையத்துக்கு' என்பது விகாரப்பட்டதாக்கொள்ளுதலே சிறப்பாதல்நோக்குக. தொல்காப்பியவுரையில் 'வடநூலுள் உலகமென்பது இருபொருட்கு மூரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதிபை புணர்த்தும்வழியும் உரிய பெயரே யாதலின், ஆகுபெயரன்று' என்று சேனாவரையரும், 'அங்ஙனம் மக்கட்டொகுதிபைபுணர்த்துங்கால் உரியபெயராயேயுணர்த்திற்று: ஆகுபெயரன்று' என்று கச்சினார்க்கினியரும் உரைத்தவற்றாலும், "லோகஸ்து புனர்தேஹே" என்ற வடநூல்மேற்கோளாலும், உலகமென்பது-இடத்தை யுணர்த்தும்பொழுதிற் போலவே இடத்திலுள்ளாரை யுணர்த்தும் பொழுதும் ஆகுபெயரன்றி இயற்பெயராகுதலால், அதன் பரியாயச்சொல்லாகிய 'வையம்' என்பதற்கு இங்கே 'வையத்துள்ளார்' எனப் பொருள்கொண்டதையும் ஆகுபெயரின்றி இயற்பெயரின்பாற்படுத்தலுங் கூடும். இனி, 'வையக்கு அணி' என்பதற்கு -உலகத்துக்கு ஓராபரணம்போல விளங்குவான் என்றே உரைப்பினுமாம். அணிபோல்பவனே 'அணி' என்றே கூறியது, உபசாரவழக்கு; "உடையா னரசரு ளேறு" என்றவிடத்தில், ஏறுபோல்வானை ஏறென்றல் உபசாரவழக்காயினுற்போல. இது உவமவருபு தொக்கு வந்ததனால், தொகையுவமையணி யென்னலாம்; ஆயினும், குறிப்பறிபவனிடத்து அணியின்தன்மையை ஏற்றிக் கூறியதனால், உருவகவணி யென்றலே மரபு. காட்சியணி யெனினும் இழுக்காது. இனி, 'வையம் கணி' எனப்பிரித்து, கூரு மற்குறிப்புநோக்கியறிபவன் உலகத்திலே ஒரு கணியாவான் என்றும் உரைக்கலாம்; கணி - நூல்வல்லவன், சோதிடன், நிமித்திகன். (க)

எ0உ. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ - ள்.) அகத்தது - (ஒருவன்) மனத்தின்கண் நிகழ்வதனை, ஐயப் படாது உணர்வானை - ஐயப்படாது [ஒருதலையாக] உணரவல்லானை, தெய்வத்தோடு ஒப்ப கொளல் - (மகனேயாயினும்) தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதிக்க; (எ - று.)

உடம்பு முதலியவற்றான் ஒவ்வானுயினும், பிறர்நினைத்தது உணருந் தெய்வத்தன்மை யுடைமையின், 'தெய்வத்தோடு ஒப்ப' என்றார்.

(கு - ரை.) ஒருவன்மனத்தின்கண் நிகழ்வதனை - ஒருவனது மனத்திற் பொருந்திய எண்ணத்தை. ஐயப்படாது - சந்தேகப்படாமல். ஒருதலையாக - நிச்சயமாக. மகனேயாயினும் - அவன் மனிதனுகவேயிருந்தாலும். கருவிற் சென்றுபிறத்தல், கண்இமைத்தல், கால்நிலத்தோய்தல், உடம்புவியர்த்தல், மாலைவாடுதல், ஆடைமாசுண்ணுதல், சாந்துபுலர்தல்முதலியன தேவர்க்கு இல்லாமையாலும், மனிதர்க்கு இருத்தலாலும், 'உடம்பு முதலியவற்றான் ஒவ்வானுயினும்' என்றார். ஒவ்வான் - ஒப்பாகமாட்டான். ஐயமாவது - பலதலையாய அறிவு: அதுவோ இதுவோ என ஒன்றில் துணிவுபிறவாமல் நிற்பது; இது, விபரீதவுணர்வுக்கும் உபலக்ஷணம்: அஃதாவது - ஒன்றை மற்றொன்றாக மாறுபடத் துணிந்தறிதல்; இவை, அறிவுக்குக் குற்றமாதலால், விலக்கப்பட்டன.

ஐயப்படாஅது, அவைபெடை - செய்யுளோசைநிறைக்க வந்தது; அலகிட்டுக் காண்க: மாத்திரை - மூன்று. அகத்தது - அகம் என்னும் பெயரினடியாப் பிறக்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்: அக மென்னும் உள்ளிடத்தின்பெயர், அங்குள்ள மனத்தைக் குறித்தலால், இடவாகுபெயராம். தெய்வம் தைவமென்னும் வடமொழியின் திரிபு. கொளல் 'அல்'ஈற்று உடன் பாட்டுவியங்கோள்; இதற்கு; உலகத்தவ ரென்றுவதது, அரச ரென்றுவதது தோன்ற எழுவாய் வருவிக்க. (உ)

எ0கூ. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(இ - ள்.) குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தம் குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனைப் பிறர்குறிப்பு அறியுந்தன்மையாரை, உறுப்பினுள் யாது கொடுத்தும்உம் கொளல் - (அரசர்) தம் உறுப்புக்களுள் அவர்வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும் (தமக்குத் துணையாகக்) கொள்க; (எ - று.)

உள்நிகழும் நெறி யாவர்க்கும்ஒத்தலின், பிறர்குறிப்பு அறிதற்குத் தம் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன - பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய புறத்துஉறுப்புக்கள். இதற்கு - 'பிறர்முகக்குறிப் பானே அவர் மனக்குறிப்புணர்வாரை' என்று உரைப்பாரும் உளர்.

இவைமூன்றுபாட்டானும், குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) தம் குறிப்பு நிகழும் ஆறு அறிந்து - தமது குறிப்பு நடக்கும் விதத்தை அறிந்து. உறுப்பு - அவயவம். உள் நிகழும் நெறி - உடம்பினகத்தே நிகழும் நிலை. கருவி - சாதனம். 'உறுப்புக்களாவன' என்று தொடங்கிய வாக்கியம் - இங்கே உறுப்பெனப்பட்டவை கண் கை கால் முதலிய அகத்துறுப்புக்களல்ல வென்பதைக் காட்டும். செல்வமும் நாடும் சேனைகளும் அரசனுக்கு ஆட்சியங்கங்களாதலால், புறத்துஉறுப்புக்களெனப்பட்டன. பிறர் முகக்குறிப்பானே - பிறரது முகக்குறிப்பைக்கொண்டு. ஆறுஅங்கங்களுள் ஓரங்கமாகிய மந்திரிக்குப் பொருள்முதலிய மற்றுஞ்சில அங்கங்களுள் ஒன்றைக் கொடுத்து இழத்தலால் தற்காலத்தில் உண்டாகின்ற நஷ்டத்தைக் காட்டிலும் அதனைப்பெற்றுமகிழ்கின்றஅச்சிறந்தஅமைச்சனால் பிற்காலத்தி லுண்டாகும் இலாபம் மிகப்பெரிதா மென்பது இக்குறளினூற் பெறப்படுதல் காண்க. குறிப்பின், இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. கொடுத்தும், உம்மை - உயர்வு சிறப்பு. யாது என்ற வினுப்பெயரால், மற்றையங்கங்களெல்லாம் அமைச்சனுகிய அங்கத்தினும் மேம்பட்டனவல்ல வென்பது புலப்படும். இப்பாட்டை, ''உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும், பெற்றி யார்ப் பேணிக்கொளல்'' என முன்வந்த குறளோடு ஒப்பிடுக. (கூ)

எ0ச. குறித்தது கூறுமைக் கொள்வாரொ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(இ - ள்.) குறித்தது - (ஒருவன்மனத்துக்) கருதியவதனை, கூறுமை - (அவன்) கூறவேண்டாமல், கொள்வாரொடு - அறியவல்லாரோடு, ஏனை -

மற்றை மாட்டாதார், உறுப்பு ஓர் அனையர் - உறுப்பால் ஒருதன்மையராக ஒப்பாராயினும், வேறு - (அறிவான்) வேறு; (எ - று.)

'கொள்ளாதார்' என்பதூஉம், * 'அறிவான்' என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. சிறந்தஅறிவு இன்மையின் விலங்கு என்னுங் கருத்தான்; 'வேறு' என்றார்.

(கு - ரை.) மாட்டாதார்-குறிப்பறியமாட்டாதவர். இங்கே, 'உறுப்பு'என்றது, உடம்பின் அவயவங்களை. அறிவான் - அறிவினால். வேறு - வேறுவர். கொள்ளாதார் - மாட்டாதார். அவாய்நிலை - ஒருசொல் மற்றொருசொல்லை வேண்டி நிற்றல்: இக்காரணத்தால் வருவித்துமுடிப்பதனை வடநூலார் 'அத்யாஹாரம்' என்பர்; 'அவாய்நிலை - ஒருபதம் தன்னைமுடிப்பதொரு பதம் இல்லாதவழி முடிவுபெறாது நிற்றல்' என்றார், தருக்கசங்கிரக நூலாரும்: "அதிகாரத்தாலவாய்நிலைதன்னால்,.....இன்னும்பலபல வேதுவினாலும், மொழிவருவித்து முடித்தனர் கொளலே"என்ற இலக்கணக்கொத்தும் காண்க. இங்கே 'ஏனை' என்பது 'கொள்ளாதார்' என்பதையும், 'வேறு' என்பது - 'அறிவான்' என்பதையும் வேண்டிநின்றமை நோக்குக. விலங்கு - மிருகப்பராமானவர். விலங்குகளினும் மனிதர்க்குச் சிறப்பாகவுள்ள நுண்ணுணர்வு இல்லாமைபற்றி, விலங்கெனப்பட்டன ரென்க; "ஜ்ஞாநேந ஹீநாः பஸு-பிர்ஸமாநாः" என்ற வடநூல்மேற்கோளுங் காண்க: "விலங்கொடு மக்களனைய நிலங்குநூல், கற்றூரோ டேனையவர்" என்ற குறளோடு இதனை ஒப்பிடுக; அக்குறளினுரையிற் பரிமேலழகர் 'விலங்கின்மக்கட்கு ஏற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது கற்றூர்கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லர் என்பதாம்' என்று உரைத்தவாறே, இங்கு, குறிப்புணரவல்லார்க்கும் குறிப்புணராமாட்டாதார்க்குங் கொள்க. குறித்தது - சாதியொருமை. உறுப்பு ஓரனையர் - மூன்றும்வேற்றுமைத்தொகை. ஆல்-அசை.

எ0டு. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.

(இ - ள்.) குறிப்பின் - குறித்ததுகாணவல்ல(தம்)காட்சியான், குறிப்புப்பிறர்குறிப்பினை, உணரா ஆயின் - உணரமாட்டாவாயின்,—உறுப்பினுள் - ஒருவனுறுப்புக்களுள், கண் - (சிறந்த) கண்கள், என்ன பயத்த ஓ - (வேறு) என்னபயனைச்செய்வன? (எ - று.)

முதற்கண் 'குறிப்பு'-ஆகுபெயர். குறிப்பறிதற்கண் துணையாதற்சிறப்புப் பற்றி, உயிரது உணர்வு கண்மேல் ஏற்றப்பட்டது. அக்கண்களாற்பயனில்லையென்பதாம்.

இவை யிரண்டுபாட்டானும், குறிப்பறியாரது இழிபு கூறப்பட்டது.

(கு - ரை.) குறித்தது காணவல்ல தம் காட்சி - பார்க்கும்படி உத்தேசிக்கப்பட்ட பொருளைப் பார்த்தற்குவல்ல தமதுபார்வை. கண் உறுப்புக்களுட் சிறந்ததாதலை "கண்ணிற்சிறந்த வுறுப்பில்லை," "மின்னுமணிப்பூணும் பிற

* ஆயினும்

வுறுப்புப்பொன்னே யதுபுனையாக், காணுங் கண்ணுக்குமோகாண்" என்ப வற்றாலும் அறிக; "ஸர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம்" என்பர் வடநூலா ரும். முதற்கண் குறிப்பு - இக்குறளிலுள்ள 'குறிப்பு' என்னுஞ்சொல் இரண் டனுள் முதலாவது; அது - 'குறிப்பின்' என்பதிலுள்ளது. குறிப்பிடத்தென் னும் பொருளையுணர்த்தும் 'குறிப்பு' என்னுந் தொழிற்பெயர்-இங்கு, குறிப் பிட்டபொருளைக்காணும் பார்வையை உணர்த்தியதனால், ஆகுபெயராம்; இத னைத் தொழிலாகுபெயரின் பாற்படுத்துவர். தினையாதற்சிறப்பு - தினையாத லாகிய சிறப்பு. குறிப்பறிகின்றவிஷயத்தில் உயிர்க்குக் கண் சிறந்ததினை யாதலால், அவ்வுயிரினது உணர்வைக் கண்ணின்மேல் ஏற்றி, 'உணரா வாயின் கண் என்னபயத்தவோ' என்றார்; இது, ஒருபொருளின் வினையை மற்றொருபொருளின்மேல் ஏற்றிய உபசாரவழக்கு. அக்கண்கள்-குறிப்பறிய மாட்டாதகண்கள். இப்பாட்டிலுள்ள 'குறிப்பு' என்னுஞ்சொல் இரண்டனுள் யிக்கினது ஆகுபெயராதல், இவ்வதிகாரத்து முதற்பாட்டிற் கூறியதனாற் பெறப்படுதலால், இங்கே 'முதற்கண்குறிப்பு - ஆகுபெயர்' என்றார். 'என்ன பயத்தவோ' என்றதில், என்னஎன்றவினை - இன்மைகுறித்துநின்றது; ஓ - அசை: இரக்கமுமாம். பயத்த - பயம் என்பதன்மேற் பிறந்து அன்சாரியை பெறுத பலவின்பாற் குறிப்புமுற்று; அத்து - சாரியை. கண்-பால்பகா அஃ றிணைப் பெயராதலால், 'பயத்த'என்னும் பலவின்பால்முற்றைக் கொண்டது.

எ0கூ. அடுத்தது காட்டும் * பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(இ - ள்.) அடுத்தது - (தன்னை) அடுத்தபொருளதுநிறத்தை, காட்டும்- (தானே கொண்டு) காட்டும், பளிங்கு போல் - பளிங்குபோல,—நெஞ்சம் கடுத்தது - (ஒருவன்) நெஞ்சத்து மிக்கதனை, முகம் - (அவன்) முகம், காட் டும் - (தானே கொண்டு) காட்டும்; (எ - று.)

'அடுத்தது' என்பது - ஆகுபெயர். 'கடுத்தது' என்பது - கடி என்னும் உரிச்சொலடியாய்வந்த தொழிற்பெயர். உவமை, ஒருபொருள் பிறிதொரு பொருளின் பண்பைக்கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றிவந்தது.

(கு - சை.) பொருளது - வஸ்துவினுடைய. பளிங்கு - ஸ்படிகமென் னும் வடசொல்லின்சிதைவு: ஒருவகைக்கண்ணுடி: ஒருவகைக்கல்லுமாம். ஒருவன்நெஞ்சத்து மிக்கதனை-ஒருவனதுமனத்தில் மிக்கசுணத்தை. அடுத்த பொருளைக் குறிக்கிற 'அடுத்தது' என்னும் ஒன்றன்பால் வினையாலணையும் பெயர் - இங்கே அப்பொருளின்சிறத்தைக் குறித்ததனால், முதலாகுபெயராம். பலபொருள் குறிக்கும் உரிச்சொல்லாகிய 'கடி' என்பது - இங்கே, மிகுதிப் பொருளையுணர்த்திற்று; "கடுங்கால்" என்னுமிடத்துப்போல. கடி என்பது- கடு என ஈறுதிரிந்தலை, தொல்காப்பியத்து உரிச்சொலியலில் உரைகாரர் 'கடுந்தேர்', 'கடும்பகல்', 'கடுமான்', 'கடுங்கால்', 'கடுஞ்சூட்பு', 'கடுஞ்சூன்', 'கடுத்தனள்' என்பனவற்றை உதாரணங்காட்டியதனாலும், 'இவ்வுரிச்சொல்

* பி - ம்: பளிங்கே

பெரும்பான்மை நிரிந்துநிற்கும்' என உரைத்ததனாலும் அறிக. இங்கே தொழிற்பெயரென்றது, வினையாலணையும்பெய ரென்னும் பொருளது; தொழிலேக்குறிக்குஞ் சொல்லாலாகிய பெயராதலால், தொழிற்பெயரெனப் பட்டதென்க: வினையாலணையும்பெயரைத் தொழிற்பெயரென்னும் மரபை, சிவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரையிலும் பலவிடத்துக்காணலாம். பண்பு - குணம். தோற்றுதல் - தோன்றுதல். பளிங்கு தன்னையடுத்தபொருளின் செம்மை முதலியநிறத்தைத் தன்னுள்ளேகொண்டு காட்டுதல்போல, முகமும் தன்னையடுத்த மனத்தின்குணத்தைத் தன்னுட்கொண்டு காட்டுமெனத் தொழில்பற்றியுவமைவந்தமையால், தொழிலுவமையணி. மனம் களிப்புடன் இருந்தால் முகம்மலர்ந்தும், மனம் துயருற்றிருந்தால் முகம்வாடியு மிருத்தலால், ''நெஞ்சங்கடுத்தது காட்டுமுகம்'' என்றது. ''ஒருவன், முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை'', ''மூன்னம், முகம்போல முன்னுரைப்பதில்'', ''அகத்தினழகு முகத்தில்தெரியும்''என்பன, இங்கு அறியத்தக்கன. பளிங்கு அடுத்ததுகாட்டுதலை, ''பளிக்கறைப் பவழப்பாவை பரிசனத் திகழுஞ் சாயல்'' என்ற சிந்தாமணியாலும், 'பளிக்குப்பாறையையடுத்த பவழப்பாவை இவளது தன்மை யெனத் திகழுஞ் சாயல்', 'இதற்கு, அடுத்ததுகாட்டும் பளிங்கைப் பவழம் தன் தன்மையாக்கினற்போல,' என்ற நச்சினார்க்கினியருரையாலும், ''பளிங்குப்போல, மையிநெடுங்கணேக்கம் படுதலுங் கருகி வந்து, கையுகிற் சிவந்து காட்டுங் கந்துகம்'', ''ஈர்ந்தநுண்பளிங்கெனத் தெளிந்த ஈர்ம்புனல், பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை, சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலான்'' என்ற கம்பராமாயணத்தாலும் காண்க.

எ0எ. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

(இ - ள்.) உவப்பின் உம் காயின் உம் - (உயிர் ஒருவனே) உவத்தலானும் காய்தலானும் உறின், தான் முந்துறும் - தான் (அறிந்து அவற்றின் கண் அதனின்) முற்பட்டுநிற்கும்: (ஆகலான்), முகத்தின் முதுக்குறைந்தது உண்டு ஓ - முகம்போல அறிவுமிக்கது (பிறிது) உண்டோ? [இல்லை];(எ-று.)

'உயிர்க்கே அறிவு உள்ளது: ஐம்பூதங்களான் இயன்ற முகத்திற்கு இல்லை' என்பாரை நோக்கி, 'உயிரது கருத்து அறிந்து அஃது உவக்குறின் மலர்ந்தும் காய்வுறின் கருகியும் வரலான், உண்டு' என மறுப்பார்போன்று, குறிப்பறிதற்குக் கருவி கூறியவாறு.

(கு - ரை.) உவத்தல் - விரும்புதல், மகிழ்தல். காய்தல் - வெறுத்தல், கோபித்தல். உவத்தலானும் காய்தலானும் உறின் - உவத்தலையாவது காய்தலையாவது அடைந்தால். (ஆனும் - ஆயினும்.) தான் - முகந்தான். அவற்றின்கண் - அவ் விருப்புவெறுப்புக்களே வெளியிடுதலில். அதனின் - அவ்வுயிரினும். ஐம்பூதங்களான் இயன்ற - நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலாகிய; இங்கே, பூதவுடம்பின் ஒருறுப்பாகிய என்றபடி. இல்லை - அறிவு இல்லை. அஃது உவக்குறின் மலர்ந்தும் காய்

வுறின் கருகியும் வரலான் - உயிர் மகிழ்ந்தால் தான் மலர்ச்சியடைந்தும் உயிர் வெறுத்தால் தான் வாடியும் வருதலால். உண்டு என மறுப்பார் போன்று - முகத்திற்கும் அறிவு உள்ளது என்று சொல்லி மறுப்பவர்போல. கருவி - இங்கே, முகம். குறிப்பு - மனத்திலுற் குறித்தது. முகத்தின் என் பதற்கு - எல்லேப்பொருளாக, முகத்தைக்காட்டிலும் எனப் பொருள்கொண் டால், முகம்போல அறிவுமிக்கது வேறொன்று உண்டு என்று பொருள்பட்டு, முகமாகியகருவியின்றிப்பைக் குறைத்திடு மாதலால், அங்ஙனங்கொள்ளாது முகம்போல வென்றே கொண்டார். முதுக்குறைந்தது, பேரறிவுடையது. இவ்வினையாலணையும்பெயரில், முதுக்குறை - பகுதி; இது, ஒருசொல். இத ற்கு, முதுக்கு - முதுமை, (கு - பண்பின்விகுதி,) உறைவு - அதில் இருத்தல்: இரண்டுமொழியும் ஒருமொழித்தன்மைப்பட்டது: (அறிவில்) மூத்திருத்தல் [சிறந்திருத்தல்] என்பது பொருள் எனக் காரணங்கூறுவர் ஒருசாரார்; மற் றொருசாரார், முதுமை - வன்மையாகிய அறியாமை, அல்லது, இயல்பிலுள்ள தான பேதைமை: குறைவு-நீங்குதல்: இரண்டுசொல்லும் ஒருசொல்தன்மைப் பட்டு, அறியாமைநீங்குதலென்ற எதிர்மறைப்பொருளால், கூரறிவுக்குஆயிற்று என்பர். ஓ - எதிர்மறை. உம்மைகள் - எண்ணுப்பொருளோடு விகற்பப் பொருளையுங் காட்டும். (எ)

எ0ஆ முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) (குறையுறுவானும்),—அகம் - (தன்) மனத்தை, நோக்கி - (குறிப்பான்) அறிந்து, உற்றது-(தான்)உற்றஅதனை, உணர்வார்-தீர்ப்பாரை, பெறின்—,—முகம் நோக்கி நிற்க அமையும் - (அவர் தன்முகம்நோக்கும் வகை தானும் அவர்)முகம்நோக்கி (அவ்வெல்லைக்கண்)நிற்க அமையும்;(எ-று.)

'உணர்வார்' எனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். அவ்வெல்லை யைக்கடந்து சொல்லுமாயின், இருவர்க்குஞ் சிறுமையாம்: ஆகலின், அது வேண்டா என்பதாம். குறையுறுவானியல்பு கூறுவார்போன்று கருவிகூறிய வாறு.

இவைமூன்றுபாட்டானும், குறிப்பறிதற்கருவி முகமென்பது கூறப் பட்டது.

(கு - ரை.) குறையுறுவான் - தான் ஒரு குறையுள்ளவனுய் அக்குறை யைத் தீர்க்கும்படி பிறரை வேண்டுபவன். தான் உற்ற அதனை - தான் அடைந்துள்ள அக்குறையை. நோக்கும்வகை - பார்க்கும்படி. அவர் முகம் நோக்கி - அவர்முகத்துக்கு எதிராக என்றபடி. அவ்வெல்லைக்கண் நிற்க அமையும் - அவ்வளவோடுநிற்றலே போதும். அறிந்து தீர்ப்பா ரென்ற பொருளில் 'உணர்வார்' என்றது, காரியத்தைக் காரணமாகக்கூறிய உபசார வழக்கு; அறிதல் - காரணமும், தீர்த்தல் - காரியமுமாம். அவ்வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் - அவ்வளவோடுநில்லாமல் தன்குறையை எடுத்து வாயினல் வெளிப்படையாகக் கூறுவதனல். இருவர்க்கும் சிறுமையாம்.

குறைவேண்டுவானுக்கும் குறைதீர்ப்பானுக்கும் கௌரவக்குறைவாம். குறைவேண்டுவானுக்குச் சிறுமை - தன்குறையை எடுத்துக்கூறும்பொழுது உண்டாகும் மானக்கேடும், குறைதீர்ப்பானுக்குச் சிறுமை - குறிப்பறிந்துசெய்யாமையாலாகும் பெருமைக்குறைவுமாம். "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல், குலனுடையான் கண்ணே யுள" என்ற இடத்தில் 'யான் வறியனென்று சொல்லும் இழிமொழியை ஒருவன் தன்னிடஞ்சொல்லவேண்டாதபடி முன்னமே அவன்குறிப்பறிந்துகொடுக்குந் தன்மை உயர்குடிப்பிறந்தானிடத்தே உண்டு' என்று ஒருரைகொண்டதனால், குறிப்பறிந்து உதவாமை குறைவாதல் அறிக. அது வேண்டா - சொல்லவேண்டுவதில்லை. 'பெறின்' என்றது, குறிப்பறிபவரது பெறுதற்கு அருமை தோன்ற நின்றது. 'முகனோக்கி,' 'அகனோக்கி' எனவும் பாடம் உண்டு. (அ)

எ௦௯. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின் வகைமை யுணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) கண்ணின் வகைமை உணர்வார் பெறின் - (வேந்தர் தம்) நோக்குவேறுபாட்டின் தன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின், பகைமை உம் கேண்மை உம் கண் உரைக்கும் - (அவர்க்கு மனத்துக்கிடந்த) பகைமையையும் (ஏனைக்) கேண்மையையும் (வேற்றுவேந்தர் சொல்லிற்றிலராயினும்) அவர்கண்களே சொல்லும்; (எ - று.)

இறுதிக்கண் 'கண்' - ஆகுபெயர். நோக்குவேறுபாடாவன-வெறுத்த நோக்கமும் உவந்தநோக்கமும். உணர்தல் - அவற்றை அவ்வக்குறிகளான் அறிதல்.

(கு - ரை.) தம் நோக்கு வேறுபாடு-தமது பார்வை விருப்புவெறுப்புக் காலங்களில் மாறுபடுதல். அவர்க்கு - அம்மந்திரிகளுக்கு. கிடந்த - பொருந்தின. ஏனை - மற்றை. கேண்மை - நட்பு. வேற்றுவேந்தர் - அயலரசர். சொல்லிற்றிலர் - சொல்லாதொழிவர். அவர்கண்கள் - அவ்வயலரசருடைய கண்கள். சொல்லும் - வெளியிடும். இறுதிக்கண் 'கண்' - கண் என்னுஞ் சொல் இரண்டனுள் பிந்தினது; 'கண்ணின்' என்பதி லுள்ளது. அது, கண்ணினதுபார்வையைக் குறித்ததனால், முதலாகுபெயராம். வெறுத்த நோக்கம் - வெறுப்பைக்காட்டும் பார்வை. உவந்த நோக்கம் - விருப்பைக்காட்டும் பார்வை. அவற்றை - வெறுப்பு விருப்புக்களை. அவ்வக்குறிகளான் - அததற்கு உரிய அடையாளங்களால். (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமசமாசாரங்களைக்) கேட்டலென்கிற காரணத்தால், கேண்மை யென்பது - நட்புக்குப் பெயராம்; இதனை, வினைப்பகுதியின்மேல் வந்த பண்புப்பெய ரென்னவேண்டும். கண் உரைக்கும்-பேசாதது பேசுவதுபோலச் சொல்லப்பட்டது; "கேட்குநபோலவும் கிளக்குநபோலவும், இயங்குநபோலவும் இயற்றுநபோலவும், அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" [நன் - பொது - ௫அ] என்பது காண்க: அச்சூத்திரவுரையில் இதுவே உதாரணங் காட்டப்பட்டுள்ளது; "வாராமரபின வரக்கூறுதலும், என்னாமரபின எனக்கூறுதலும், அன்னவையெல்லாம் அவற்

றவற்றியலான், இன்னவென்னுங் குறிப்புரையாகும்'' என்றூர் தொல்காப் பியனரும்: இது, மரபுவழுவமைதி. (க)

எக0. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

(இ - ள்.) நுண்ணியம் என்பார் - (யாம்) நுண்ணறிவுடையே மென்றி ருக்கும் அமைச்சர், அளக்கும் - (அரசர்கருத்தினை) அளக்கும், கோல்-கோலா வது,—காணும் கால் - ஆராயுமிடத்து, கண் அல்லது பிற இல்லை-(அவர்) கண் அல்லது பிற இல்லை; (எ - று.)

அறிவின் நுண்மை, அஃதுடையார்மேல் ஏற்றப்பட்டது. இங்கிதம் வடிவு தொழில் சொல் என்பன முதலாகப் பிறர்கருத்தளக்கும்அளவைகள் பல: அவையெல்லாம் முன் அறிந்தவழி அவரான் மறைக்கப்படும்; நோக்கம் மனத்தொடுகலத்தலான் ஆண்டுமறைக்கப்படாது என்பதுபற்றி, அதனையே பிரித்துக்கூறினர். இனி, 'அலைக்குங் கோல்' என்று பாடமோதி, 'நுண் ணியமென்றிருக்கும் அமைச்சரை (அரசர்) அலைக்குங் கோலாவது கண்' என உரைத்து, தம்வெகுளிநோக்கால் அவர்வெகுடற்குறிப்பறிக வென்பது கருத்தாக்குவாரும் உளர்.

இவையிரண்டுபாட்டானும், நுண்கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) கோல் - அளவுகோல். அவர்கண்ணல்லது - அரசருடைய கண்ணன்றி. அறிவின்நுண்மை அஃதுடையார்மேல் ஏற்றப்பட்டது-பண் பின்தன்மையைப் பண்பியின்மேல் ஏற்றிய உபசாரவழக்கு. நுண்மை -நுட் பம், சூக்ஷ்மம். அஃது உடையார் - அறிவுடையவர். வடிவு - ஆகாரம். முன் ''உற்ற நோய் நீக்கி'' என்ற குறளி னுரையிற் பரிமேலழகர் 'மக்களான்வரு வனவற்றை அவர்குணம் இங்கிதம் ஆகாரம் செயல் என்பனவற்றால் அறிக்து' என்றும், 'இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப்பின்தொழில்; ஆகா ரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு' என்றும் உரைத்தவை, இங்கு உணரத் தக்கன. ஒருவன் அறியாமலே அவனிடத்துநிகழும் முகவேறுபாடு முதலி யன - ஆகார மென்றும், புத்திபூர்வமாகச் செய்யும் கை கண் முதலிய அவய வங்களின் சைகை - இங்கித மென்றும் வடநூலாரும் வேறுபாடு கூறுவர். முதலாக என்றதனால், குணத்தையுங் கொள்க. அளக்கும் - ஆராய்ந்து அறி யும். அளவை - அளக்குங்கருவி. முன் அறிந்தவழி அவரால் மறைக்கப் படும் - தம்குறிப்பைப் பிறர் அறியவந்தாளரென்று முன்னமே ஒருவர்க்குத் தெரிந்தால் அவரால் அவை மறைக்கப்படுதல் கூடும். நோக்கம் - பார்வை. மனத்தொடுகலத்தல் - மனத்தோடு ஒற்றுமைப்பட்டிருத்தல். ஆண்டு - அவ் வாறு: நோக்கம் மனத்தொடுகலக்த அப்போதே எனினுமாம். அதனையே - நோக்கத்தையே. அலைக்கும் - வருத்தும், சஞ்சலப்படுத்தும். தம்வெகுளி நோக்கால்-தம்கண்ணின் கோபப்பார்வையால். அவர் வெகுடற்குறிப்பு-அவ ரது கோபக்கருத்து. நுண்கருவி - குறிப்பறிதற்கு நுட்பமான சாதனம். கண் ணினிடத்து அளவுகோலின் தன்மையை ஏற்றியதற்கு ஏற்ப, அரசர்கருத்தி

னிடத்து நிலத்தின் தன்மையை எற்றிக்கூறுமையால், ஏகதேசவுருவகவணி. காணுங் கால் - பெயரெச்சத்தொடர்; 'கண்டக்கால்' என்பதுபோல ஒரு சொல்அன்று. கண்ணல்லது பிற இல்லை - இரண்டு எதிர்மறைமுகத்தாற் கூறினது, வற்புறுத்தும்பொருட்டென்க. பிறருரைக்கு 'என்பாரை' என்னும் இரண்டனுருபு தொக்க தென்க. (கo)

எஉ - ஆம் அதிகாரம்.—அவையறிதல்.

அஃதாவது-அரசனோடிருந்த அவையினது இயல்பை அறிதல். காரியஞ் சொல்லுங்கால் அவன்குறிப்பறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அவை - சபை; ஸபா என்னும் வடசொல்லின் திரிபு. அவன் - அரசனுடைய. இதுவும் - அவையறிதலும். இஃது - அவையறிதல். அதன்பின் - குறிப்பறிதலின்பின்னே. குறிப்பறிதலையடுத்து அவையறிதலைவைத்த அதிகாரமுறைமைக்குக் காரணம், மன்னரைச்சேர்ந்து ஒழுகுவார்க்கு இரண்டும் அவசியம்வேண்டியிருத்தல். அவை யென்பது - சபையிலுள்ளாரது தன்மையைக் குறித்ததனால், இருமடியாகுபெயர்.

எகக. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றிறமுகையறிந்த தூய்மை யவர்.

(இ - ள்.) சொல்லின் தொகை - சொல்லின் குழுவினை, அறிந்த—, தூய்மையவர்-தூய்மையினையுடையார், (தாம் ஒன்று சொல்லுங்கால்), அவை அறிந்து - (அப்பொழுதை) அவையினை அறிந்து, ஆராய்ந்து சொல்லுக—.

'சொல்லின் குழு' எனவே, செஞ்சொல் இலக்கணைச்சொல் குறிப்புச்சொல் என்னும் மூவகைச்சொல்லும் அடங்கின. தூய்மை - அவற்றுள் தமக்கு ஆகாதன ஒழித்து ஆவன கோடல். 'அவை' என்றது, ஈண்டு அதன் அளவை; அது - மிகுதி ஒப்பு தாழ்வு என மூவகைத்து. அறிதல் - தம்மொடுதூக்கி அறிதல். ஆராய்தல் - 'இவ்வவைக்கண் சொல்லுங் காரியம் இது: சொல்லும் ஆறு இது: சொன்னால் அதன்முடிவு இது' என்று இவை உள்ளிட்டன ஆராய்தல்.

(கு - ரை.) சொல்லின் குழு - சொற்களின் கூட்டம். தூய்மை-பரிசுத்தகுணம். அப்பொழுதை அவை - அச்சமயத்திலுள்ள சபையாரது தன்மை. செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என்பவற்றை, முறையே, வடநூலார் வாசகம், லக்ஷகம், வ்யஞ்சகம் என்பர்; அச்சொற்கள் பொருளுணர்த்தும் வகை - அபிதாலக்ஷணை வ்யஞ்ஜநாவிருத்தி எனப்படும்: பிரயோகவிவேகவுரையில் 'இனி அலங்காரதூலார் அபிதை இலக்கணை வியஞ்சநாவிருத்தி என மூன்றுவகையாக்குவர்: அவர்மதம்பற்றிப் பரிமேலழகரும் ''சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்'' என்னுந் திருவள்ளுவர்குறளுள் செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என்பர்' என்றதுங் காண்க. செஞ்சொல் - வெளிப்படைச்சொல்; உரியபொருள் தருவது: நிலம், நீர்

என்றாற்போல்வன. இலக்கணச்சொல்-ஆக்கச்சொல்; உரியபொருளைவிட்டு அப்பொருளோடு சம்பந்தப்பட்ட பிறிதொருபொருளை உணர்த்துவது: ஊர் அடங்கிற்று என்பதில் ஊர் என்பது - ஊராரை உணர்த்துதல் போல்வன. குறிப்புச்சொல் - வெளிப்படையாலன்றிக் குறிப்பினுற்பொருளுணர்த்துஞ் சொல்; "உவர்க்கடலன்ன செல்வர்" என்பது - பிறர்க்குப் பயன்படாத செல்வமுடைய லோபிகளையும், "ஐவரையடைத்த முனி" என்பதில், ஐவர் என்பது - ஐம்பொறிகளையும் உணர்த்துதல் போல்வன. அவற்றுள் - அச் சொற்களுள். ஆவனகோடல் - உபயோகமாகுபவற்றைக் கொள்ளுதல். ஈண்டு - இங்கு. தம்மினும் மேம்பட்ட சபை, தமக்குச்சமமான சபை, தம்மி னுந்தாழ்ந்த சபை எனச் சபையின் அளவு மூன்றுவகையுள்ளதாம். தம் மொடு தூக்கி - தமதளவோடு ஒப்பிட்டுப்பார்த்து. இவ்வவைக்கண் - இந்த ச்சபையிலே. சொல்லும் ஆறு - சொல்லும் விதம். அதன்முடிவு இது - அதனுல்வரும்பயன், இன்னது. உள்ளிட்டன - முதலியவை. "உண் பொழுது நீராடி யுண்டலும்" என்பதில், 'நீராடி' என்பதுபோல, இங்கு 'ஆராய்ந்து' என்ற வினையெச்சம் - ஆராய்ந்தே சொல்லவேண்டுமெனத்தேற் றப்பொருள்தருமாறு காண்க. தொகை - தொகுதி. "தொகைபடுசெஞ்சொ லிலக்கணச்சொல்லே சூழ்ந்திடுங்குறிப்புச்சொன் மூன்றின், வகையறிந்துயர் ந்தோ ரொத்தவர் தாழ்ந்தோர் மருவுமூன்றவையுமாராய்ந்து, தகையறவுணர் ந்தோ ரவையின் முந்துரையார் சமத்தி னெவ்வாற்றினுங்கிளப்பர், நகைபடு தாழ்வி னொன்றையு மொழியார் நவைபடாச் சொற்பொருளாய்ந்தோர்" என்ற விநாயகபுராணம், இக்குறளின் பரிமேலழகருரையை அடியொற்றியது.

எகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி னடைதெரிந்த நன்மை யவர்.

(இ - ள்.) சொல்லின் - சொற்களின், நடை - நடையினை, தெரிந்த - ஆராய்ந்தறிந்த, நன்மையவர் - நன்மையினையுடையார்,—(அவைக்கண் ஒன்று சொல்லுங்கால்), இடை தெரிந்து - (அதன்) செவ்வியை ஆராய்ந்து அறிந்து, நன்கு உணர்ந்து - (வழுப்படாமல்)மிகவுந்தெளிந்து, சொல்லுக—; (எ - று.)

சொற்களின் நடையாவது - அம்மூவகைச்சொல்லும்,செம்பொருள் இலக் கணைப்பொருள் குறிப்புப்பொருள் என்னும் பொருள்களைப் பயக்குமாறு. செவ்வி-கேட்டற்கண் வீருப்புடைமை. வழு-சொல்வழுவும், பொருள்வழுவும்.

இவையிரண்டுபாட்டானும்,ஒன்றுசொல்லுங்கால்அவையறிந்தேசொல்ல வேண்டுமென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) நடை - போக்கு; பொருள்தரும்வகை. நன்மை - நல்லறிவு. அவைக்கண் - சபையில். அதன் - அந்தச் சபையின். செவ்வி - உரியசமயம் பக்குவமானநிலைமை. வழு - தவறு. தெளிந்து - நிச்சயித்து. செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருள் என்பவற்றை, முறையே, வட நூலார் வாச்சியம், லக்ஷ்யம், வ்யங்க்யம் என்பர். செஞ்சொல் முதலியவற்றுள் முறையே உணர்த்தப்படும் பொருள் செம்பொருள் முதலியனவாகும். பயக்

கும் ஆறு - தரும் விதம். கேட்டற்கண் விருப்புடைமை - தாம்சொல்லும் வார்த்தையைக் கேட்பதில் விருப்பமுடைத்தாயிருத்தல். சொல்வழு - இலக்கணப்பிழைகள். பொருள்வழு - குன்றக்கூறல் முதலியன. (உ)

எகூ. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

(இ - ள்.) அவை அறியார் - அவையினது அளவை அறியாது, சொல்லல்-(ஒன்று) சொல்லுதலை, மேற்கொள்பவர்-தம்மேற்கொள்வார், சொல்லின் வகை அறியார் - அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார்: வல்லதூஉம் இல்-(கற்று) வல்ல கலையும் (அவர்க்கு) இல்லை; (எ - று.)

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல்வகைமை கேட்பாரது உணர்வுவகைமைபற்றி வருதலான் 'சொல்லின் வகை யறியார்' என்றும், அஃதறியார் யாதும்அறியா ரென்று எல்லாரானும் இகழப்படுதலின் 'வல்லதூஉ மில்' என்றுங் கூறினார்.

இதனால், அவையறியாக்கால் வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் - சொல்ல உடன்பட்டுத் தொடங்குபவர். கூறுபாடு - வகை. கலை - கல்வி. கேட்பாரது உணர்வு வகைமை-தமதுசொல்லைக்கேட்குஞ் சபையாரது அறிவுவேறுபாடுகள். 'சொல்லுதல்வகைமை கேட்பாரது உணர்வுவகைமைபற்றி வருதலான், சொல்லின் வகையறியார் என்று கூறினார்' - பேசுந்திறம் கேட்பவரறிவின் திறத்துக்கு ஏற்றபடியே பயன்படுதலால், கேட்குஞ்சபையின் இயல்பை யறியாதவர் சொல்லுந்திறமறியாதவரேயாவ ரென்க. அஃது அறியார் - அதனையறியாதவர்; அவையையறியாதார். அவையறியாக்கால் - சபையினியல்பை அறியாவிட்டால். 'அறியார்' என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - எதிர்மறைத்தெரிநிலை முற்றெச்சம், பின்னது - முற்று. வல்லதூஉம் - இன்னிசையளபெடை. உம்மை - இறந்தது தழுவியது. (கூ)

எகச. ஒளியார்மு ணெள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

(இ - ள்.) ஒளியார்முன் - (அறிவால்) ஒள்ளியார் அவைக்கண், ஒள்ளியர் ஆதல்-(தாமும்) ஒள்ளியராக: வெளியார் முன்- (ஏனை) வெள்ளோகளவைக்கண், (தாமும்), வால் சுதை வண்ணம்-வாலிய சுதையின் நிறத்தை, கொளல்-கொள்க; (எ - று.)

'ஒள்ளியார்' என்றது - மிக்காரையும், ஒத்தாரையும்; அது, விகாரத்தால் 'ஒளியார்' என நின்றது. ஒள்ளியராதல் - தம்நூலறிவும் சொல்வன்மையுந் தோன்றவிரித்தல். அவையறியாத புல்லரை 'வெளியார்' என்றது, வயிரமில் மரத்தை 'வெளில்'என்னும் வழக்குப்பற்றி. அவர் மதிக்கும்வகை அவரினும் வெண்மையையுடையராக என்பார், 'வான்சுதைவண்ணங்கொளல்' என்றார்.

அவையளவறிந்தார் செய்யுந் திறம், இதனால் தொகுத்துக்கூறப்பட்டது, முன்னர் விரித்துக் கூறுப.

(கு - ரை.) அறிவால் ஒள்ளியார் அவைக்கண் - அறிவினுல் ஒளியை யுடையவரது சபையில்; இங்கே, ஒளி-சிறப்பு. ஒள்ளியர் ஆகன்றுரைப்பேஇ வெளிப்பட்டு விளங்குபவராகுக. வெள்ளைகள்-அறிவிலாதார். வாலிய சுதை யின்நிறத்தைக்கொள்க-வெண்ணிறமான சுண்ணும்பின் தன்மையைக் கொண் டிருக்கக்கடவர்: என்றது, வான்சுதை வண்ணமாகிய வெண்மையை யுடைய ராகுக என்றபடி; அறியாமையை மேற்கொள்ளக்கடவர் என்பதாம். வெண்மை-அறிவின்மை: ''வெண்மை யெனப்படுவதி யாதெனி னெண்மை, யுடையம் யாமென்னுஞ் செருக்கு'' என்னுங் குறளில், 'வெண்மை' என்பதற்கு - புல் லறிவுடைமை யென்றும், அறிவுமுதிராமை யென்றும் பொருள் கூறுமாறு உணர்க. மிக்கார் - தம்மினும் மேம்பட்டவர். 'அது' - ஒள்ளியார் என்பது. நூலறிவு-சாஸ்திரஞானம். சொல்வன்மை - பேசுந்திறம். தோன்ற-வெளிப் பட. விரித்தல் - வெளியிடுதல்; பேசிவிளக்குதல். 'அவையறியாத' என்ப தற்கு - கீழ்க்கூறிய நூலறிவு சொல்வன்மை என்னும்அவற்றை யறியாத என்றுவது, சபையின்தன்மையை யறியாத என்றுவது பொருள்கொள்க. புல்லர் - அற்பர்: சிறப்பில்லாதவர். வெளியார் என்பது - வெள்ளியா ரென் னும் பலர்பாற்பெயரின் தொகுத்தல். வயிரம் - உள்ளீடு. உள்ளீடில்லாத மரம், வெளிற்றுமர மெனப்படும். அவர் மதிக்கும்வகை - அவ்வறிவிலாதார் கொண்டாடும்படி. அறிவில்லார்க்குத் தம்மினும் அறிவில்லாரைக் கண்டாற் கொண்டாட்ட மாதலால், 'அவர்மதிக்கும்வகை அவரினும் வெண்மையுடைய ராக' என்றார். முன்னர் - முன்னே; அடுத்த ஆறுசெய்யுட்களில். கூறுப - சொல்லுவர். முன் - இங்கே, இடமுன். ஆதல் - தல்விகுதிபெற்ற வியங் கோள். ''இன்மையினிதே வெளிறு,'' ''மேனியிற்காட்டி வெளுத்ததே'', ''விளையுமாற்றின் திருவடிவினு மிக வெள்ளையாகியது'', ''வெண்மையில்லை பல் கேள்வி மேவலால்'', ''வெள்ளியையாதல் விளம்பினே'', ''வெள்ளைமை கலந்த நோக்கின்'', ''வெண்மையுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்'' என்ற இடங்களில், வெண்மையென்பது - பேதைமையெனப் பொருள்படு தல் காண்க. சிந்தாமணியில், உதிரம் நீங்கிய உடல் ''வெளிற்றுடல்'' எனப்பட்டவாறும், குற்றமில்லாத நூற்கேள்விகளை யுடையவன் ''வெளிறி லாக்கேள்வியான்'' எனப்பட்டவாறுங் காணத்தக்கன. பொருள்நயமில்லாத சொல், வெளிற்றுரை யெனப்படும். சிலப்பதிகாரத்தில் ''வெள்ளைக்கோட்டி'' என்பது - பயனில் சொற் பேசுஞ் சபை யென்றும், மணிமேகலையில் ''வெள்ளைமகன்'' என்பது - பயனில்லாத சொல்லை யுடையவ னென்றும் பொருள்படுதலும் உணர்க. வால் + சுதை = வான்சுதை; நிலைமொழியீற்று லகரம் வலிவரச் சிறுபான்மை னகரமாத் திரிந்தது: [இதனை ''குறில்செறியா ளள'' என்னுஞ் சூத்திரத்து 'பிற' என்றதனுல் அமைத்துக்கொள்க.] சுதை, வண்ணம் - ஸுதா, வர்ணம் என்ற வடசொற்களின் திரிபு. 'வண்ணம் என்பது - இயற்சொல்; வருணம் என்பது - வடமொழித்திரிபு' என்பது - நச்சினார்க்கினியர்கொள்கை. வான் சுதை வண்ண மென்பது-வெண்மையை யுணர்த்தி, அது அறியாமையைக் குறித்தது: ''எட்டிமேடிராண்டு'' என்

பது - பத்தையுணர்த்திப் பக்தியைக் குறித்தல்போல; இப்படிப்பட்டதை, வடநூலார் 'லக்ஷித லக்ஷணை' என்பர். அறியாமையை மேற்கொள்ளுக என்னுங்கருத்தை 'வான்சுதைவண்ணங் கொளல்' என வேறுவகையாக் கூறியதனால், இது - பிறிதினவிற்சியணி. (சு)

எகடு. நன்றென்ற வற்றுள்ளு நன்றே மூதுலருண்
முந்து கிளவாச் செறிவு.

(இ - ள்.) (ஒருவர்க்கு), நன்று என்றவற்றுள்உம்-(இது) நன்று என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்க ளெல்லாவற்றுள்ளும், நன்றே—: மூதுவருள் - (தம்மின்)மிக்காரவைக்கண், முந்து - (அவரின்)முற்பட்டு, கிளவா - (ஒன்றனைச்) சொல்லாத, செறிவு - அடக்கம்; (எ - று.)

தம்குறைவும் அவர்மிகுதியும் முந்துகிளத்தாற் படும் இழுக்கும் கிளவாக்கால் எய்தும் நன்மையும் அறிந்தே அடங்கினமையின், அவ்வடக்கத்தினை 'நன்றென்றவற்றுள்ளு நன்று' என்றார். முன்கிளத்தலேயே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலும் ஆம் என்பது பெற்றாம்.

இதனுள், மிக்காரவைக்கண் செய்யுந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) குறைவு - அறிவின்குறைவு. நன்று-நல்லது. அவரின் முற்பட்டு - அவர்பேசுதற்கு முந்தி. மிகுதி - உயர்வு. முந்துகிளந்தால் படும் இழுக்கு-அவர்பேசுதற்குமுன்னே தாம் பேசினால் உண்டாகுங் குற்றம். கிளவாக்கால் எய்தும் நன்மை - முந்திப்பேசாவிடின் உளதாகும் நன்மை. முன்கிளத்தல் - முந்திப்பேசுதல்; உடன்கிளத்தல் - உடனேபேசுதல். 'நன்று' என்ற சொல் இரண்டனுள், முன்னது - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; பின்னது - முற்று. உம்மை - முற்றுப்பொருளோடு உயர்வுசிறப்புப் பொருளு முடையது. எ-தேற்றம். மூதுவர்-மூதுமையுடையோர்; மூதுமை - இங்கே, மேன்மை. முந்து - இடைச்சொல்; வினைப்பகுதியே முந்தி யென வினையெச்சப்பொருள்பட்ட தென்னலுமாம். (நி)

எகஙு. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

(இ - ள்.) (வீடுஎய்தற்பொருட்டு நன்னெறிக்கண் நின்றான் ஒருவன்), ஆற்றின் - அந்நெறியினின்றும், நிலை தளர்ந்து அற்று - நிலைதளர்ந்து வீழ்ந்தாலொக்கும்: வியல் புலம் - அகன்ற நூற்பொருள்களை, ஏற்று - உட்கொண்டு, உணர்வார் முன்னர் - (அவற்றின் மெய்ம்மை) உணர வல்லாரவைக்கண், (வல்லானொருவன்), இழுக்கு - சொல்லிழுக்குப்படுதல்; (எ - று.)

நிலைதளர்ந்து வீழ்தல்-உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காத்து ஒழுகியான் பின் இழுக்கிக் கூடாவொழுக்கத்தனைதல். பயனிழத்தலேயன்றி இகழவும்படுமென்பதாம்.

இதனுள், அதன்கண் இழுக்கியவழிப் படுங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) வீடு எய்தற்பொருட்டு-முத்திபெறுதற்காக. நல்நெறிக்கண்-நல்லவழியில்: சன்மார்க்கத்தில்; என்றது, யோகம் ஞானம் பக்தி பிரபத்தி முத

லிய முத்திபெறுதற்கு உரிய உபாயங்களுள் ஒன்றில் என்றபடி. நிலைதளர்ந்து வீழ்ந்தால் ஒக்கும் - உறுதிநிலை சோர்ந்து தவறினால் அதுபோலும். அகன்ற நூற்பொருள்களை உட்கொண்டு - பரந்த சாஸ்திரார்த்தங்களைக் கிரகித்து. மெய்ம்மை - உண்மையான கருத்து. "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு" ஆதலால், 'உணர்வார்' என்பதற்கு - மெய்ம்மையுணரவல்லா ரென்று பொருள்கூறினர். சொல்இழுக்கு - சொற்குற்றம்; "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற குறளில் 'சொல்லிழுக்கு' என்பதற்கு-'சொல்லின்கண் தோன்றுங் குற்றம்' எனப் பொருள் விரித்துரைத்தது அறிக. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காத்து ஒழுகியான்-தனது வலிய அறிவாகிய அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானையைந்தையும் தம்தமக்கு உரிய புலன்களின்மேற் செல்லவொட்டாதபடி தடுத்துநடந்தவன்; பஞ்சேந் திரியநிக்கிரகஞ்செய்து நல்லொழுக்கத்தில் நின்றவன். "உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான், வரனென்னும் வைப்பிற் கோர் வித்து" என்பது, நீத்தார்பெருமை யென்னும் மூன்றும்அதிகாரத்தின் நான்காவது குறள். உரனைத் தோட்டியென்றதற்கு ஏற்ப, ஓரைந்து - யானைகளெனக் கொள்ளப்பட்டது. ஐம்பொறிகள் - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்பன; அவற்றிற்கு உரிய புலன்கள் - முறையே ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை யென்பன. பின் இழுக்கி - பின்பு அந்நல்லொழுக்கத்தினின்று தவறி. கூடாவொழுக்கத்தனுதல் - தனது துறவறவழிக்குத் தகாத காமவழியொழுகுதலை யுடையவனுதல். பயனிழத்தலேயன்றி இகழவும்படும் - பயனை யிழப்பதுமாத்திரமே யல்லாமற் பலராலும் இகழ்ச்சிசெய்யவும்படு மென்பதாம். ஒழுக்கந்தவறியவனுக்குப் பயனிழத்தல், தான் குறித்த பிரயோசனமாகிய முத்தியைப் பெறுமை; சொல்தவறியவனுக்குப் பயனிழத்தல் - ஓரரசனிடத்துத் தான் விரும்பிய பிரயோசனமாகிய காரியம் கைகூடப்பெறுமை. அதன்கண் இழுக்கியவழிப் படும் குற்றம் - தன்னினும்மேலோர்சபையிற் சொல்தவறினு லுண்டாகுங் குற்றம். தளர்ந்து - தளர்ந்தால் என்னும் எச்சத்தின் திரிபு. வியல் - விசாலமென்னும் பொரு ளுணர்த்துவதோர் உரிச்சொல்; "வியலென்கிளவி யகலப்பொருட்டே" என்பது, தொல்காப்பியம். வியல் + புலம்=வியன் புலம்: நிலைமொழியீற்று லகரம் றகரமாயிற்று: அகல் + புனம்=அகன்புனம் என்பதிற் போல. ஏற்று, எல் - பகுதி. உவமையணி. (சு)

எகஎ. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

(இ - ள்.) கசடு அற - வழுப்படாமல், சொல் தெரிதல் வல்லார் அகத்து - சொற்களை ஆராய்தல்வல்லா ரவைக்கண், (சொல்லின்), கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - (பலநூல்களையுங்) கற்று (அவற்றின் ஆய பயனை) அறிந்தாரது கல்வி (யாவர்க்கும்) விளங்கித்தோன்றும்; (எ - று.)

'சொல்லின்' என்பது, அவாய்நிலையான் வந்தது. ஆண்டேசொல்க என்பதாம்.

(கு - ரை.) வழுப்படாமல் - தவறுமல். அவற்றின் ஆய-அந்நூல்களிலு லாகிய. 'அகத்து' என்பது 'சொல்லின்' என்பதை வேண்டிநின்றமை காண்க. ஆண்டே சொல்க - அவ்விடத்திலேயே சொல்லவேண்டும்; கசடறச் சொல்தெரிதல்வல்லார் கூடிய சபையிலே பேசக்கடவ னென்க. 'கற்று' என்னுமிடத்து 'பலநூல்களையும்' எனச் சிலசொற்கள் வருவித்ததை இசை யெச்ச மென்பர். 'தெரிதல் வல்லார்' என்பதை, இரண்டாம்வேற்றுமைத் தொகையாகவாவது, ஏழாம்வேற்றுமைத்தொகையாகவாவது கொள்க. (எ)

எகஉ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

(இ - ள்.) உணர்வது உடையார் முன் - (பிறர் உணர்த்தலின்றிப் பொருள்களைத் தாமே) உணரவல்ல அறிவினையுடையா ரவைக்கண், சொல்லல் - (கற்றுர் ஒன்றனைச்) சொல்லுதல்,—வளர்வதன் பாத்தியுள்-(தானே) வளர்வ தொரு பயிர் நின்ற பாத்திக்கண், நீர் சொரிந்து அற்று - நீரினைச் சொரிந் தாற்போலும்; (எ - று.)

தானேயும் வளர்தற்கு உரிய கல்வி மிகவளரும் என்பதாம்

இவையிரண்டுபாட்டானும், ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ் சொல்லுக வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) உணர்த்தல் - அறிவித்தல். பொருள்களை - விஷயங்களை. பாத்திக்கண் - பாத்தியில். எவ்வழியும் - எவ்விதத்திலும்; அல்லது, எப் பொழுதிலும். உணர்வது - எதிர்காலவினையாலணையும்பெயர்; அல்லது, உணர்வு என்பதன்மேல் 'அது' என்பது - பகுதிப்பொருள்விகுதி யெனினு மாம். உவமையணி. (அ)

எகக. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(இ - ள்.) நல் அவையுள் - நல்லாரிருந்த அவைக்கண், நன்கு - நல்லபொருள்களை, செல - அவர்மனங்கொள்ள, சொல்லுவார் - சொல்லுதற்கு உரியார்,—புல் அவையுள் - (அவையறியாத) புல்லர் இருந்த அவைக்கண், (அவற்றை), பொச்சாந்து உம் - மறந்தும், சொல்லற்க - சொல்லாதொழிக.

சொல்லின், தம் அவையறியாமையை நோக்கி நல்லவையும், பொருளறி யாமையாற் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டு அவைக்கும் ஆகார் என் பது கருதி, 'பொச்சாந்துஞ் சொல்லற்க' என்றார்.

(கு - ரை.) மனங்கொள்ள - அங்கீகரிக்க. அவையறியாத - நற்பொருள் களை யறியாத. அவற்றை - நல்விஷயங்களை. கற்றறிந்தவர் அறிவில் லார்சபையிற் பேசினால் அதற்காக அவரைச் சபையின்தன்மையறிந்தில ரென்று நல்லோர் இகழ்வர்: அவர்சொல்லும்பொருள்களை அறியமாட்டாமை

யாற் புல்லோர் அலக்ஷ்யஞ்செய்வர்; ஆகவே, இருதிறத்தாரது அமைதிப்புக்கும் இடமாவர் என்க. சொல்லின் - பேசினால். தம் - பேசுபவரது. ஆகார் - உதவார். புல்லவையின் தன்மையைப்பற்றி, ''அவையின்றிமமறியாராய்ந் தமைத்து சொல்லார், நவையின்றித்தாமுரையார் நாணுர் - சுவையுணரார், ஆயகலெதிரியா ரஞ்சாரவரன்றே, தீயவவையோர்செருக்கு'' என்று கூறியிருப்பதுகாண்க. நல்லவையாவது-''புகழும் தருமநெறிநின்றோர் பொய்காமம், மிகழுஞ்சினஞ் செற்றமில்லோர் - நிகழ்ச்சிலகள், எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றே, நல்லாரவைக்கு நலம்'' என்பதனால் அறிக. புல்லவை, நல்லவை என்பவற்றில், சபையிலிருந்தாரது புன்மையும் நன்மையும் சபையின்மேலேற்றிக் கூறப்பட்டன; இது - இடத்திலிகழ்பொருளின் தன்மையை இடத்தின்மேல் ஏற்றிக்கூறிய உபசாரவழக்கு: அதிக அதிகாரத்தின் முதற்குறளில் 'வல்லவை' என்றவிடத்து, 'இருந்தாரது வன்மை, அவையமேல் ஏற்றப்பட்டது' என உரைப்பது காண்க. ''கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறிவாளர்முன், சொல்ஞானஞ் சோரவிடல்'' என்ற நாலடியாரையும், ''வெள்ளக்கோட்டியும் வீரகினி லொழிமின்'' என்ற சிலப்பதிகாரத்தையும் அறிக.

எஉ0. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றுற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ - ள்.) (நல்லார்),—தம் கணத்தர் அல்லார் முன் - தம் இனத்தல்லாதார ரவைக்கண், கோட்டி கொளல் - ஒன்றையுஞ் சொல்லற்க; (சொல்லின் அது), அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று - (தூய்தல்லாத) மூற்றத்தின்கண் உக்க அமிழ்தினை யொக்கும்; (எ - று.)

'கொள்' என்னும் முதனிலைத்தொழிற்பெயர், முன்நின்று, பின் எதிர்மறை 'அல்' விகுதியோடு கூறி, ''மகணெணல்'' என்பதுபோல நின்றது. 'சொல்லின்,' 'அது' என்பன - அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாம், 'கொளல்' என்பதனைத் தொழிற்பெயராக்கி உரைத்தார்; அவர், அத்தொழில் அமிழ்து என்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவா மருந்தாதலறிந்து நுகர்வார்கையினும் படாது அவ்வங்கணத்துக்கும் இயைபின்றிக் கெட்டவாறு தோன்ற, 'உக்க அமிழ்து' என்றார். அச்சொல் பயனில் சொல்லாம் என்பதாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், தாழ்த்தாரவைக்கண் ஒருவழியுஞ் சொல்லற்க என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இனி, ''ஊரங்கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்கால்'' என்ற நாலடியாரிற் போல, இங்கும் 'அங்கணம்' என்பதற்கு - சலதாரையெனப் பொருள் கொள்ளினுமாம்; சேறென்றலுமாம்; ''அங்கணம் சேறு மூற்ற மாஞ் சலதாரைக்கும் பேர்'' என்பது, நிகண்டு. நல்லார் - நல்லறிவுடையார். தம் இனத்தர் - தம்மோடு ஒத்த நல்லவர். சொல்லின் அது - சொன்னூல் அச்சொல். தூய்து அல்லாத - பரிசுத்தியுடையதல்லாத. மூற்றத்தின்கண் - மூற்றத்தில். உக்க - சிந்தின. முதனிலைத்தொழிற்பெயர் என்றது, இங்கே

வினைப்பகுதி யென்றபடி; முன் ''இழுக்காமை யார்மாட்டும்'' என்ற குறளின்கீழ்ப் பரிமேலழகர் 'வாயின் என்பது - முதனிலைத்தொழிற்பெயரடியாக வந்த வினையெச்சம்' என்று இலக்கணமெழுதிய இடத்திலும், வினைப்பகுதி முதனிலைத் தொழிற்பெய ரெனப்பட்டவாறு உணர்க: வினைப்பகுதியெல்லாம் தொழிற்பட்டு நிற்றலால். அதனை முதனிலைத்தொழிற்பெயரென்று ரைக்க. அல் விகுதி - உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு வியங்கோள் வினைமுற்றிற்கும் உரியதாய் வருகின்றது; ''மகனெனல்'' என்பது - பயனில சொல்லாமை யென்னும் ௨0-ஆம் அதிகாரத்து ஆரம்பாட்டாகிய ''பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல், மக்கட் பதடி யெனல்'' என்பதில் உள்ளது; அங்கு 'மகனெனல்' என்பதற்கு - மகனென்று சொல்லற்க என்பது பொருளும், 'அல்விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும் பின் உடன்பாட்டினும் வந்தது' என்று இலக்கணமும் கூறிப்போந்தார். 'அங்கணத்துளுக்க அமிழ்தற்று' என்ற உபமானம் 'சொன்னுல் அது' என்ற உபமேயத்தைக் வேண்டிநிற்றல் காண்க. 'பிறர்' என்றது, மற்றை யுரையாசிரியர்களை. 'கொளல்' என்பதைத் தொழிற்பெயராகக் கொள்ளும்பொழுது, 'கோட்டி கொளல்' என்பதற்கு - ஒன்றைப்பேசுத லென்று பொருள். அவர் - அவ வுரையாசிரியர்கள். அத்தொழில் அமிழ்தென்னும் பொருளுவமையோடு இயையாமை - கொள்ளுதலென்னுந் தொழிலாகிய உபமேயத்துக்கும், அமிழ்தென்னும் பொருளாகிய உபமானத்துக்கும் ஒற்றுமையில்லாமை. பரிமேலழகருரையில் 'அது' என வருவிக்கப்பட்டதனுற் கொண்ட 'சொல்லுதல்' என்றதே உபமேய மாதலால், பொருளாகிய உபமேய உபமானங்கள் தம்மில் ஒன்றியிருத்தல் காண்க. நோக்கிற்றிலர் - ஆராய்ந்தாரில்லை. சாவாமருந்தாதல் அறிந்து நுகர்வார் கையினும் படாது - அமிருதமென்பது மரணத்தை யொழிக்கும்மருந்தா மென்பதையறிந்து அதனை விரும்பி யுண்பவரது கையிற் சேராமல். இயைபு இன்றி - ஏற்றதல்லாமல். கெட்ட ஆறு - கெட்டவிதம். அச்சொல் - இழிந்தார்சபையிற் சொல்லுஞ் சொல். ஒருவழியும் - ஒருவிதத்திலும்; அல்லது, ஒருபொழுதிலும். அங்கணம் - வடசொல். ஆல் - ஈற்றசை. கணம் - இனம்; வடசொல். கோட்டி-கோஷ்டி என்னும் வடசொல்லின் திரிபு; சபையின் பெயர் - ஆகுபெயராய், அங்குப்பேசுதலைக் குறித்தது. ''அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய, நூலின்றிக் கோட்டி கொளல்'' என்ற குறளில் பரிமேலழகர் 'கோட்டிகொளல்' என்பதற்கு - 'அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல்' என்று பொருளும், 'கோட்டி என்பது - ஈண்டு ஆகுபெயர்; ''புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி'' என்புழிப் போல' என்று இலக்கணமும் எழுதியமை காண்க. உவமையணி. (கo)

எஉ - ஆம் அதிகாரம்.—அவையஞ்சாமை.

அஃதாவது - சொல்லுதற்குரிய அவையினை அறிந்து சொல்லுங்கால் அதனை அஞ்சாமை. அதிகாரமுறைமையும், இதனுனே விளங்கும்.

(கு - ரை.) சொல்லுதற்கு உரிய அவை - பேசுதற்கு ஏற்ற சபை. சொல்லுங்கால் - பேசும்பொழுது. அதனை - அச்சபையை. அவையறிதலின்பின் அவையஞ்சாமையை வைத்தற்குக் காரணம், வெளிப்படை: சபையினது தன்மையை முன்பு அறிந்து பின்பு அதிற் பேசும்பொழுது அதற்குப்பயப்படவாகாதென்றுகூறுதலின். அவையஞ்சாமை-இரண்டாம்வேற்றுமைத்தொகை: நான்காம் வேற்றுமையாக விரித்தல், உலகவழக்கு; "அச்சக்கிளவிக்கு ஐந்தும் இரண்டும், எச்சமிலவே பொருள்வயினான" என்ற தொல்காப்பியச்சூத்திரத்திற்கு ஏற்ப, அவையை அஞ்சாமை என இரண்டாம்வேற்றுமையாக விரிக்க: ஐந்தாம்வேற்றுமையாக விரித்தல், வடநூல்வழக்குக்கும் ஒத்தது. அவையச்சம், வடமொழியில் 'ஸபாகம்பம்' எனப்படும்.

எஉக. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

(இ - ள்.) வகை அறிந்து - (கற்றுவல்லஅவை அல்லாஅவை என்னும்) அவைவகையினை அறிந்து, வல் அவை - வல்ல அவைக்கண், (ஒன்று சொல்லுங்கால்), வாய் சோரார் - (அச்சத்தான்) வழுப்படச்சொல்லார்: சொல்லின் தொகை அறிந்த - சொல்லின்தொகையெல்லாம் அறிந்த, தூய்மையவர் - தூய்மையினையுடையார்; (எ - று.)

இருந்தாரது வண்மை, அவைமேல் ஏற்றப்பட்டது. 'வல்லவை' என்பதற்கு - தாம் கற்றுவல்ல நூற்பொருள்களை யென்று உரைப்பாரும் உளர். 'அச்சத்தான்' என்பது, அதிகாரத்தான் வந்தது. 'சொல்லின்தொகை,' 'தூய்மை' என்பனவற்றிற்கு, மேல்உரைத்தாங்கு உரைக்க.

(கு - ரை.) அல்லா அவை - கல்விகற்றுவல்லதல்லாத சபை. இருந்தார் - சபையிலிருந்தவர். வல்லவைஎன்றஇடத்து அவையிலுள்ளாரின் வண்மையை அவையின்மேலேற்றிக்கூறியதனால், இது-இடத்துநிகழ்பொருளின்பண்பை இடத்தின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்காம். 'வல்லவை' என்பது - பரிமேலழகருரையின்படி, பண்புத்தொகைநிலைத்தொடர்: அதனிறுதியில் ஏழாம்வேற்றுமையுருபு தொக்கது; 'வாய்சோரார்' என்பதற்கு, 'ஒருசொல்லே' எனச் செயப்படுபொருள் வருவித்தல்வேண்டும். பிறருரைக்கு, 'வல்லவை' என்பது - வண்மையென்னும் பண்பினடியாப் பிறந்த பலவின் பாற்குறிப்பு வினையாலணையும்பெயராய், இரண்டாம்வேற்றுமைத் தொகையாக, 'வாய்சோரார்' என்பதற்குச் செயப்படுபொருளாம். அதிகாரம் அவையஞ்சாமை யாதலால் 'அச்சத்தான்' என்பது, வருவித்துஉரைக்கப்பட்டது என்க; அதிகாரத்தால் வருவித்துமுடிப்பதனை, வடநூலார், ஆநுஷங்கிக மென்பர். மேல் உரைத்தாங்கு உரைக்க - முன்சொன்னபடி உரைத்துக் கொள்க; மேல் என்றது, எகக - ஆம் திருக்குறளை. வாய்சோரார் - வாய்தவறார்; சொல்வழுப்படார் என்றபடி. (க)

எஉஉ. கற்றருட் கற்ற செனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(இ - ள்.) கற்றருள் கற்றூர் எனப்படுவர் - கற்றுரெல்லாரினும் (இவர் நன்கு)கற்ற ரென்று (உலகத்தாராற்)சொல்லப்படுவார், கற்றார்முன் - கற்ற ரவைக்கண், (அஞ்சாதே), கற்ற - (தாம்) கற்றவற்றை, செல - அவர்மனங் கொள்ளும்வகை, சொல்லுவார் - சொல்லவல்லார்; (எ - று.)

உலகம் அறிவது அவரையே யாகலின், அதனைப் புகழப்படுவாரும் அவர் என்பதாம்.

(கு - ரை.) உலகம் - உலகத்தார். அவரையே - அவையச்சமின்றிப் பேசுபவர்களேமாத்திரமே. அதனால் - அவ்வுலகத்தால். அவர் - பேசுபவர். கற்றருள் என்பது - ஏழாம்வேற்றுமை; கற்றுரெல்லாரைக்காட்டிலும் எனப் பொருள்பட ஏழனுருபு ஐந்தனுருபின்பொருளில் வந்த உருபுமயக்க மென் பாருமுளர். 'கற்றுரெனப்படுவர்' என்பது - கற்றுரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவா ரெனச்சிறப்புப்பொருள் தோன்ற நின்றது. கற்ற - இறந்த காலப் பலவின்பால் வினையாலணையும்பெயர். (உ)

எஉக. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

(இ - ள்.) பகையகத்து - பகையிடை, (அஞ்சாதுபுக்கு), சாவார் - சாவ வல்லார், எளியர் - (உலகத்துப்)பலர்; அவையகத்து அஞ்சாதவர் - அவை யிடை அஞ்சாதுபுக்குச் சொல்லவல்லார், அரியர் - சிலர்; (எ - று.)

அஞ்சாமை 'சாவார்' என்பதனோடுங் கூட்டி, அதனால் 'சொல்லவல் லார்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

இவைமூன்றுபாட்டானும், அவையஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பகையிடை - பகைவர்கூட்டத்தின்நடுவில். 'அஞ்சாதவர்' என்பதிலுள்ள அஞ்சாமை யென்னும் வினையை 'சாவார்' என்பதனோடு கூட்டி, அதற்கு ஏற்ப, ('சாவார்' என்னுமிடத்திலுள்ள சாதலென்னும் வினையை அஞ்சாதவரென்னுமிடத்துங் கூட்டி, அதன்கருத்தாக) 'சொல்ல வல்லார்' என வருவித்துக்கொண்டார். எளியர் - கிடைத்தற்கு எளிமை யானவர். அரியர்-கிடைத்தற்கு அருமையானவர். பகை-பகைமையென் னும் பண்பினடி; பகைவர்கட்குப் பண்பாகுபெயர். சாவார் - உடன்பாட்டு எதிர்காலவினையாலணையும்பெயர்: இச்சொல், காலமுணர்த்தாததன்மை யுணர்த்திற்று. பகைவர்குழாத்தினிடையிற் புக்கு அஞ்சாது இயன்றவளவு போர்செய்து இறத்தலினும் அரியது, கற்றவர்குழாத்தினிடையிற் புக்கு அஞ்சாது பேசுதலென்பதாம். 'பேசப்போகிறீரோ, சாகப்போகிறீரோ?' என்று உலகவழக்கிலுள்ளதொரு பழமொழியையுங் காண்க. அவைக்கு அஞ்சாதவர்க்குப் பகைக்கு அஞ்சாதாரை ஒப்புமை கூறத்தொடங்கி, அவருள் உபமானமாகியபகையஞ்சாரினும் உபமேயமாகிய அவையஞ்சார்க்குக் கிடைத் தற்கருமைமுகத்தாற் சிறப்புக்கூறுகிற **வேற்றுமையணி** இப்பாட்டில் தொனிக்குமாறு அறிக. (கூ)

எஉச. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(இ - ள்.) கற்றார் முன் - (பலநூல்களையுங்) கற்ற ரவைக்கண், (தாம்) கற்ற - தாம் கற்றவற்றை, செல சொல்லி - அவர்மனங் கொள்ளுமாற்றாற் சொல்லி,—தாம் கற்ற மிக்க - அவற்றின் மிக்க பொருள்களை, மிக்காருள் - கொளல் - அம்மிக்கக்கற்றாரிடத்து அறிந்துகொள்க; (எ - று.)

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறாய கல்வியுடையார் பலர் இருந்த அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவ ராகலான், ஏனைக் கற்கப்பெறுதன கேட்டறியலா மென்பதாயிற்று.

இதனுன், அதனது ஒருசார்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) மனங்கொள்ளும் ஆற்றுன்-நிரங்கும் விதமாக. 'தாம் கற்ற' என்பது - சுட்டுமாத்திரமாய் நின்றதனால், தாம்கற்ற என்ற இடத்து, 'தாம்' என்பதற்கு - 'அவற்றின்' எனப் பொருளுரைத்தார். அவற்றின் - தாம் படித்தவற்றினும். அவர்க்கு - அச்சபையார்க்கு. அவை எல்லாம் - தாம் தாம் கற்ற வெவ்வேறுவகைக் கல்விகளையெல்லாம். ஏனைக் கற்கப்பெறுதன - தாம் படித்தறியாத மற்றைநூற்பொருள்களை. அதனது - அவையஞ்சாது பேசுதலினது. ஒருசார்பயன் - ஒரோவிடத்துப் பிரயோசனம்: ஒருவகைப்பிரயோசனமெனினுமாம். பிற இடத்தும் "அவ்வினையாளரொடு பயில்வகை யொருகால், செவ்விதி னுரைப்ப அவ்விருகாலும், மையறுபுலமை மாண்புடைத்தாகும்" எனக் கல்விநிரம்புமாறு கூறியமை காண்க. (சு)

எஉரு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(இ - ள்.) ஆற்றின் - சொல்லிலக்கணநெறியானே, அளவு - அளவை நூலை, அறிந்து கற்க - (அமைச்சர்) உட்பட்டுக் கற்க: அவை - வேற்றுவேந்த ரவையிடை, அஞ்சா - அஞ்சாது, மாற்றம் கொடுத்தற்பொருட்டு - (அவர் சொல்லிய சொற்கு) உத்தரஞ் சொல்லுதற்பொருட்டு; (எ - று.)

அளவைநூல் சொல்நூல்கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு அஃது ஆறெனப்பட்டது. அளக்குங்கருவியை 'அளவு' என்றார், ஆகுபெயரான். அவர்சொல்லே வெல்வதொருசொல் சொல்லலாவது, நியாயத்து வாத செற்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கற்றார்க்கே யாகலின், அவற்றைப் பிழையாமற் கற்க என்பதாம்.

இதனுன், அதன்காரணம் கூறப்பட்டது.

(கு-ரை.) சொல்லிலக்கணநெறியானே-வியாகரணசாஸ்திரவழியாலே. அளவை நூலை - பிரதியக்ஷம் முதலிய பலவகைப்பிரமாணங்களைப்பற்றிச் சொல்லுகிற தர்க்கசாஸ்திரத்தை. உட்பட்டு - மனமிணங்கி. வேற்றுவேந்தர் அவையிடை - அயலரசர்சபையில். அவர் - அவ்வரசரும் சபையாரும். சுற்ற

சாஸ்திரமாகிய வியாகரணங்கற்று அதன்கோட்பாடுகளே யறிந்தபின்பே அர்த்தசாஸ்திரமாகிய தருக்கங் கற்றல் தகுதி. அதற்கு-அளவைநூற்கு. அஃது - சொல்நூல். ஆறு - வழி. அளத்தல் - ஆராய்ந்து வரையறுத்து அறிதல்; அதற்குக் கருவியாகிய பிரமாணங்களைப் பற்றிக் கூறுகின்ற சாஸ்திரத்தை 'அளவு' என்றது - இருமடியாகுபெயராம். அளவைகளின் விவரமெல்லாம், அருளுடைமையென்ற அதிகாரத்து இரண்டாங்குறளினுரையிற் கூறப்பட்டன. நியாயம் - தர்க்கசாஸ்திரம். வாதம் செற்பம் விதண்டை சலம் சாதி என்பன - இவற்றின் உண்மையறிவான் வீடடைதல் உளதா மென நியாய நூலிற் கூறிய பதினறு பதார்த்தங்களின்பாற் பட்டன. இவற்றுள், வாதமாவது - உண்மையுணர்தல்வேட்கையோன்கதை. செற்பமாவது - சாதகமிரண்டுள்ளதன்கண் வெல்லும் வேட்கையுடையான் கதை விதண்டையாவது-தன்கோட்பாட்டை நிலைபெறுத்தாது பிறரைவெல்லுங்கதை. [கதை-கூறுவார் பலருள்ளதாய்ச் சங்கையுத்தரங்களைப் பயக்குந் தொடர்மொழியின் கோவைப்பாடு.] சலமாவது - ஒருகருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு வேறு பொருள் படைத்திட்டுக்கொண்டு பழித்தல். சாதியாவது - போலியுத்தரம்; அது - பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்த்துரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு, அடையாமை, பிரசங்கம், வேறு திருஷ்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலப்தி, அநுபலப்தி, காரணம், நித்தியம், அநித்தியம், காரியம் இவற்றின் சமமென்க. 'முதலிய' என்றதனுல் தோல்வித்தானமுங் கொள்ளப்படும்: அஃதாவது-வாதம்பேசுவார் தோல்வியுறுதற்கு ஏது; அது - மேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோள்மாறுபாடு, மேற்கோள்விடுதல், வேற்றேது, வேற்றுப்பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம்பெறுமை, குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், பிற்கூற்றின்மை, அறியாமை, விடைதோன்றுமை, வேறுகாரணங் கற்பித்து வாதமொழிதல், தன்கோட்குற்றமகற்றுது பிறன்கோட்குற்றங் கூறல், பிறன்தோல்வியை யுணர்த்தாமை, உடன்படற்பாலதல்லதனை உடன்படுதல், சித்தாந்தப்போலி, ஏதுப்போலி என்பனவாம். இவை, தருக்க சங்கிரகதீபிகையிற் கண்டவை. ஜல்பம், விதண்டா, சலம், ஜாதி-வடசொற்கள். முதலிய-முதலானவற்றை. சொல்லலாவது, முதலிய கற்றூர்க்கேளனக் கூட்டிப்பொருள்கொள்க. அவற்றை - கீழ்க்கூறிய வாதம்முதலியவற்றை. பிழையாமல் - தவறுமல். அதன் காரணம் - அவையஞ்சாமைக்கு ஏது. (டு)

எஉசு. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடெ
ணுண்ணவை யஞ்சு பவர்க்கு.

(இ - ள்.) வன்கண்ணர் அல்லார்க்கு - வன்கண்மையுடைய ரல்லாதார்க்கு, வாளொடு என் - வாளோடு என்ன இயைபு உண்டு? (அதுபோல), நுண் அவை அஞ்சுபவர்க்கு - நுண்ணியாராது அவையை அஞ்சுவார்க்கு, நூலொடு என் - நூலோடு என்ன இயைபு உண்டு? (எ - று.)

இருந்தாரது நுண்மை, அவைமேல் ஏற்றப்பட்டது. நூற்கு உரியரல்லர் என்பதாம்.

(கு - ரை.) வன்கண்மை - அஞ்சத்தக்கவற்றைக் கண்டவிடத்தும் அஞ்சாத நெஞ்சுறுதி: வலிய தன்மை. ''வன்கண் குடிகாத்தல்'' என்றவிடத்து, 'வன்கண்' என்றதற்கு-'வினைசெய்தற்கண் அசைவின்மை' என்று பொருள் கூறியதும் அறிக. வாள் - இங்கே, ஆயுதமென்னுமாத்திரமாய் நின்றது. இயைபு - சம்பந்தம், பொருத்தம், தகுதி. நுண்ணியாரது - சூக்ஷமபுத்தியையுடையவர்களது. நூல் - சாஸ்திரம். இருந்தாரது நுண்மை - சபையிலுள்ளாரது அறிவின் நுட்பம். 'நூற்குரியரல்லர்' என்பதற்கு, 'அவையஞ்சுபவர்' என்ற எழுவாய் வருவிக்க. (சு)

எஉஎ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சுமவன் கற்ற நூல்.

(இ - ள்.) பகையகத்து பேடி கை ஒள் வாள் - (எறியப்படும்) பகைநடுவண் (அதனை அஞ்சும்)பேடி பிடித்த கூர்வாளை ஒக்கும்: அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல் - (சொல்லப்படும்) அவைநடுவண் (அதனை) அஞ்சுமவன் கற்ற நூல்; (எ - று.)

பேடி - பெண்ணியல்புமிக்கு ஆணியல்பு முடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்தேயாயினும் பிடித்தவள்குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினுற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்தே யாயினும் கற்றவன்குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று.

(கு - ரை.) எறியப்படும் பகை நடுவண்-வாள்வீசிவெட்டப்படுதற்குரிய பகைவரது நடுவில். அதனை அஞ்சும் - பகைக்குஅஞ்சுகின்ற. பேடி - ஆண்தன்மைகுறைந்து பெண்தன்மைமிக்க நபும்சகம். பெண்தன்மை குறைந்து ஆண்தன்மைமிக்க நபும்சகம் அலி யெனப்படு மென்றும், பேடு என்பது 'நபும்ஸகம்' என்ற வடசொற்போல இவ்விருவகைக்கும் பொதுப்பெய ரென்றும் அறிக. ''ஆண்மைவிட்டு அல்லதவாவுவ பெண்பால்'' ஆதலால், பேடியைப் பெண்பாலாற் கூறினர். அவைநடுவண் - சபைநடுவில். அதனை அஞ்சுமவன் - சபைக்கு அஞ்சுபவன். களம் - இடம்; என்றது, போர்க்களத்தை. வாய்த்து - கிடைத்து. தானும் - வாள்தானும். நன்று - கூரியது. தானும் - நூல்தானும். கை - கையிற்பிடித்த என்றவாறு. உவமவுருபுதராமல் உபமான உபமேயங்களுக்கு ஐக்கியத்தை ஆரோபித்துக் கூறியது—, காட்சியணி. (எ)

எஉஏ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(இ - ள்.) நல் அவையுள் - நல்லாரிருந்த அவைக்கண், நன்கு - நல்ல சொற்பொருள்களை, செல சொல்லாதார்-(தம்அச்சத்தான் அவர்க்கு) ஏற்பச் சொல்லமாட்டாதார்,—பல்லவை கற்றுஉம் - பல்நூல்களைக் கற்றாராயினும், பயம் இலர் ஏ - (உலகிற்குப்) பயன் படுதலிலர்; (எ - று.)

அறிவார்முன் சொல்லாமையின், * கல்வியினுண்மையறிவாரில்லை யென்பதாம். இனி, 'பயமிலர்' என்பதற்கு - கல்விப்பயனுடையரல்லர் என்று உரைப்பாரும் உளர்.

(சு-ரை.) அறிவார்முன் சொல்லாமையின்-தமதுகல்வியின் அருமையை அறியவல்லாரது முன்னிலையிற் சொல்லமாட்டாமையால். கல்வியின் உண்மை - தம்மிடத்துக் கல்வியிருத்தலே; கல்வியின் நுண்மை யென்று பிரித்துப் பொருள் கொள்ளினுமாம். பல்லவை - பன்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த பலவின்பால் வினையாலணையும்பெயர். உம் - உயர்வுசிறப்பு. ஏ-தேற்றம். நல்லவை - பண்புத்தொகை. நன்கு - ஆகுபெயர். (அ)

எஉக. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(இ - ள்.) கற்று - (நூல்களைக்) கற்றுவைத்தும், அறிந்து - (அவற்றுற் பயன்) அறிந்துவைத்தும், நல்லார் அவை அஞ்சுவார் - நல்லாரிருந்த அவையினை அஞ்சி ஆண்டுச்சொல்லாதாரை, கல்லாதவரின் கடை என்ப - (உலகத்தார்) கல்லாதவரினும் கடைய ரென்று சொல்லுவர்; (எ - று)

அக்கல்வியறிவுகளாற் பயன் தாமும்எய்தாது பிறரையெய்துவிப்பதுஞ் செய்யாது கல்வித்துன்பமே எய்திநிற்றலின், 'கல்லாதவரிற்கடை' என உலகம் பழிக்கும் என்பதாம்.

(சு - ரை.) கற்றுவைத்தும் - கற்றிருந்தும்; அறிந்துவைத்தும் என்பதற்கும் இவ்வாறே. பயன் - அறிவு, புகழ் முதலியன. ஆண்டு - அவ்விடத்தில். கடையர் - கீழ்ப்பட்டவர்; அதமர். எய்தாது - அடையாமல். எய்துவிப்பது - அடைவிப்பது. கல்வித்துன்பமே எய்திநிற்றலின் - வெகுகாலம் சிரமப்பட்டுக் கற்றதனாலாகிய துன்பத்தைமாத்திரமே அடைந்துநின்றதனால். கல்லாதவர்க்குக் கல்வித்துன்பம் இல்லாதுநிற்க, கற்றறிந்த அவைக்கோழையர்க்குக் கல்வித்துன்பமும் உள்ளதனால், அவரினும் இவர் கீழோராவர்; கல்விப்பயனையடையாமையில் இருவரும் ஒப்பராயினும், அவர்க்கு இல்லாத துன்பம் இவர்க்கு உளதாதல், கீழ்மைக்குக்காரணம். கடை-கடையர்க்குப் பண்பாகுபெயர். என்ப - என்பர்: இதற்கு, 'உலகத்தார்' என்பது - தோன்று எழுவாய். கற்றும், அறிந்தும் என்ற எண்ணும்மைகள் தொக்கன; வினைச்செவ்வெண்: அறிந்தும்என்று பிரிப்பினுமாம். அவை அஞ்சுவார் - இரண்டாம்வேற்றுமைத்தொகை. இனி, 'என்ப' என்பதை, செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை யெனக்கொண்டு, அவையஞ்சுபவர் கல்லாதவரினுங் கடைய ரென்று சொல்லப்படுவர் என்று முடித்தல், நேராம். (க)

எஉ0. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(இ - ள்.) களன் அஞ்சி - அவைக்களத்தை அஞ்சி, கற்ற - (தாம்) கற்றவற்றை, செல சொல்லாதார்-(அதற்கு) ஏற்பச் சொல்லமாட்டாதார்,—உளர்

* பி - மீ: கல்வியுண்மை.

எனின் உம் - உயிர்வாழ்கின்றாராயினும், இல்லாரொடு ஒப்பர் - (உலகத்தாரால் எண்ணப்படாமையின்) இறந்தாரோடு ஒப்பர்; (எ - று.)

ஈண்டு 'களன்' என்றது, ஆண்டு இருந்தாரை.

இவையைந்து பாட்டானும், அவையஞ்சுவாரது இழிபு கூறப்பட்டது.

(கு - ரை.) அச்சத்தாற் சபையிற் பேசமாட்டாதவர் ஜீவித்திருந்தும் பயனில்லை யென்பதாம்; அவர், நெட்டுயிர்ப்போடுற்றபிண மென்றும் நடைப்பிணமென்றும் பலவாறு இகழப்படுவ ரென்க. அவைக்களம் - சபையினிடம்; என்றது, அங்கு உள்ளாரை. எண்ணப்படாமையின் - ஒருபொருளாக மதிக்கப்படாமையால். களன் - மகரனகரம் பெறுஞ்சொல். (கo)

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

எச - ஆம் அதிகாரம்.—நாடு.

இனி, அவ்வரசனுலும் அமைச்சனுலும் கொண்டு உய்க்கப்படுவதாய் ஏனை அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச்சிறப்பிற்றாய நாடு ஓரதிகாரத்தாற் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும். *

(கு - ரை.) கொண்டு உய்க்கப்படுவதாய் - ஆளுமாறேற்றுக்கொண்டு நடத்தப்படுவதாய். ஏனை அரண் முதலிய அங்கங்கள் - அரண், பொருள், படை, நட்பு என்னும் மற்றை நான்கு அங்கங்கள். இன்றி அமையாமை - இல்லாமல் முடியாமை: அவசியம்வேண்டுதல். சிறப்பிற்று - சிறப்பையுடையது. நாடு - நாட்டின்தன்மை.

இவ்வதிகாரமும் அடுத்த அதிகாரமாகிய அரண் என்பதும் ஆகிய இவ்விரண்டும், 'அரணியல்' எனப்படும்; இதனை, திருவள்ளுவமாலையில் தொடித்தலை விழுத்தண்டினூர் "அறம்நான்கு அறிபொருள் ஏழ் ஒன்றுகாமத், திறம் மூன்று எனப் பகுதிசெய்து - பெறலரிய: நாலும்மொழிந்த பெருநாவலரே நன்குணர்வார், போலும் ஒழிந்த பொருள்" என இந்நூற் பாலியலதிகாரத் தொகையைத் தொகுத்துக்கூறியதுகொண்டும், போக்கியார் "அரசியல்ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து, உருவல் அரண் இரண்டு ஒன்று ஒண் கூழ்-இருவியல், திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று, எண்பொரு ளோழாமிவை" எனப் பொருட்பாலியலதிகாரத்தொகையை வகுத்துக்கூறியதனுலும் அறிக. "அரசியலையைந்து" என்ற பாட்டின் உரையில், 'பிற்காலத்தார் அமைச்சு முதலிய ஐந்தினையும் அங்கவியல் என ஓரியலாக்கியும் வழங்குப' என்பதனுல், இது அங்கவியலின்பாற்படுதல் விளங்கும்.

அங்கவியலில் அமைச்சியல் முற்றுப்பெற்றதும் அரணியலின்முதலில் நாட்டை வைத்ததற்குக் காரணம்—நாடு, அமைச்சனுற்பாதுகாக்கப்படுதற்கு உரியதாதலும், அரண்முதலியவற்றுக்கு இடமாதலும்பற்றியாம்.

---

* இந்தவாக்கியம், ஒருபிரதியிலுள்ளது

தொல்காப்பியவுரையில் 'நாடு அரண் முதலாகக்கூறுவன வெல்லாம் திருவள்ளுவப்பயனிற் காண்க' என்றதனாலும், இந்நூலில் இவ்விராசாங்கங்களின் தன்மை நன்குகூறப்பட்டிருக்குமாறு வெளியாம்.

எஙக. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(இ - ள்.) தள்ளா விளையுள்உம் - குன்றுத விளையுளைச் செய்வோரும், தக்கார்உம் - அறவோரும், தாழ்வு இலா செல்வர்உம்-கேடில்லாத செல்வமுடையோரும், சேர்வது - ஒருங்குவாழ்வதே, நாடு - நாடாவது; (எ - று.)

மற்றை உயர்திணைப்பொருள்களோடும் சேர்தல் தொழிலோடும் இயையாமையின், 'விளையுள்' என்பது-உழவர்மேல் நின்றது. குன்றுமை - எல்லா உணவுகளும் நிறைய உளவாதல். இதனுன், வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் - துறந்தோர், அந்தணர் முதலாயினுர்; "நற்றவஞ் செய்வார்க் கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" என்றுர் பிறரும். இதனுன், அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை-வழங்கத்தலையாமை. செல்வர் - கலத்தினும் காலினும் அரும்பொருள்தரும் வணிகர். இதனுன், அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள்வாய்த்தல் பெறப்பட்டது.

(கு - ரை.) குன்றுத - குறையாத. விளையுள் - பயிர்விளைச்சல். அதனைச் செய்வோர் - உழுதுபயிர்செய்பவர். அறவோர்-தருமமார்க்கத்தில் நடப்பவர்; 'அறன்வலியுறுத்தல்' என்ற இடத்திற்போல, இங்கு 'அறம்'என்றது-இல்லறம் துறவறம் என்ற இரண்டையும் உணர்த்திற்று. கேடு - குறைதல். ஒருங்கு - ஒருசேர. வாழ்வது - வாழ்தற்கு இடமாவது. 'மற்றை உயர்திணைப் பொருள்கள்' என்றது - தக்காரையும், செல்வரையும். 'செம்பொருள்கொள்ளுதற்குப்பொருத்தமில்லாதவிடத்துமாத்திரமே ஒருசொல்லுக்கு ஆக்கப்பொருள் கொள்ளவேண்டும்' என்ற இலக்கணமுறைமைப்படி, தக்கார் செல்வர் என உடன் எண்ணப்பட்ட பொருள்களோடும், சேர்தல் என்ற தொழிலோடும், பயிர்விளைவையுணர்த்தும் 'விளையுள்' என்ற அஃறிணைப்பெயர் பொருந்தாமையால், அதற்கு, ஆகுபெயராக, விளையுளைச்செய்வோரெனப் பொருள் கொண்டனர். 'விளையுள்' என்னுந் தொழில் - அதனைச்செய்பவர்க்கு ஆதலால், காரியவாகுபெயர். வாழ்வார்க்கு - நாட்டில் வாழ்பவர்களுக்கு. வறுமை - தரித்திரம். துறந்தோர் - சந்நியாசிகள். இங்கே, 'அந்தணர்' என்றது, இல்லறத்துவேதியரை. 'முதலாயினுர்' என்றதனால், பிறசான்றோரையுங் கொள்க; "அறஞ்செய்மாக்கள் புறங்காத்தோம்புநர், நற்றவஞ்செய்வோர் பற்றறமுயல்வோர்" என்பது, மணிமேகலை. "நற்றவஞ்செய்வார்க்கிடம்" என்று தொடங்கிய மேற்கோள், சீவகசிந்தாமணி - நாமகளிலம்பகம் ஈஅ - ஆஞ் செய்யுளில் உள்ளது: 'அது [ஏமாங்கதமென்னும்நாடு] வீடுபெறத்தவஞ் செய்வார்க்கு இடம்; மறுமைகருதி இல்லறம்நடத்துவார்க்கும் இடம்' என இவ்விடத்துக்கு நச்சினுர்க்கினியர் உரைகூறியுள்ளார்; இதில், நற்றவமெனப்பட்டது-துறவறவொழுக்கமும், தவமெனப்பட்டது - இல்லற

வொழுக்கமுமாம். 'பிறர்' என்றது, சீவகசிந்தாமணி நூலாசிரியராகிய திருத்தக்கதேவரை. அழிவின்மை-குடிவளங்குறையாமை. வழங்கத்தொலையாமை-செலவுசெய்யச்செய்யக் குறைவுபடாமை. கலத்தினும் காலினும் அரும் பொருள்தரும் வணிகர் - மரக்கலமேறித் துவீபாந்தரஞ்சென்று அவ்வகையாலும் தரைவழியாக வேறுநாடுகளுக்குச் சென்று அவ்வகையாலும் வர்த்தகஞ்செய்து அருமையான பொருள்களைக் கொணர்கிற வைசியர்; "உரைசால் சிறப்பி னரசுவிழை திருவிற், பரதர் மலிந்த பயங்கெழு மாநகர், முழங்குகடல் ஞால முழுவதும் வினும், வழங்கத் தவாஅ வளத்த தாகி, அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎம், ஒருங்குதொக்கன்ன வுடைப் பெரும் பண்டம், கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக், குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்" என்பது, சிலப்பதிகாரத்து மனையறம்படுத்தகாதை. அந்நூலுரையில் 'அரும்பொருளாவன - "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், காலின் வந்த கருங்கறி மூடையும், வடமலைப்பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த ஆரமுமகிலும், தென்கடல்முத்தும் குணகடல் துகிரும், கங்கை வாரியுங் காவிரிப் பயனும், ஈழத்துணவுங் காழகத் தாக்கமும், அரிய வும்பெரியவும்" எனப் பட்டினப்பாலையுட் சொன்னவும் பிறவும். "இரு வகைப்பிரிவு, நிலைபெறத் தோன்றினும், உரியதாகு மென்மனூர் புலவர்" என்பதனால், 'கலத்தினுங் காலினும்' என்றார். கலம் - மரக்கலம். கால் - வட்டை. இதனானே, பின்ன ரிருமரபோருங் கலத்தொடுசேறல் பின்ன ரூழிக்குமரபெனக்கொள்க' என உரைத்தவை, உணரத்தக்கன. பொருள் வாய்த்தல் - செல்வம் மிகுதியாகப்பொருந்துதல். ஒழிவற விளைவுசெய்யுங் குடிகளும், துறவற இல்லற வொழுக்கங்களில் தவறுத யோக்கியரும். பல வகையாலும்பொருளீட்டும்வணிகருங் கூடிவாழ்வதே நாடாகு மென்க. (க)

எஉ. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(இ - ள்.) பெரும் பொருளால் - அளவிறந்த பொரு ளுடைமையால், பெள் தக்கது ஆகி - (பிறதேயத்தாரானும்) விரும்பத்தக்கதாய், அருங் கேட் டால் - கேடின்மையோடு கூடி, ஆற்ற விளைவது - மிகவிளைவதே, நாடு - நாடாவது; (எ - று.)

அளவிறப்பு - பொருள்களது பன்மை மேலும், தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது - மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட் டில், கிளி, அரசண்மை என்றிவற்றுள் வருவது; "மிக்க பெயலோடு பெயலின்மை யெலி விட்டில் கிளி, யக்கணரசண்மையோடாறு:" இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுள் முன்னையவற்றது இன்மை அரசனதுத் தானும், பின்னையது இன்மை அவன் மறத்தானும் வரும். இவ்வின்மைக ளான் மிக விளைவதாயிற்று.

(கு - ரை.) அளவிறந்த பொருளுடைமை - வரம்பில்லாத பொருள்களை யுடைத்தாயிருத்தல். பொருள்கள் - பொன் மணி நெல் முதலியன. கேடு -

தீங்கு. அளவிறப்பு - வரம்பில்லாமை. பொருள்களது பன்மைமேலும் தனித் தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது - பலவகைப்பொருள்களுள் ஒவ் வொன்றும் மிக அதிகமாக இருத்தலைக் குறிக்கின்றதென்க. அவற்றின் - பொருள்களின். மிக்க பெயல் - அதிகமழை. பெயலின்மை - மழையில் லாமை. விட்டில் - ஒருவகைப்பறவை. அரசு அண்மை - அரசர் மிக நெருங் குதல். என்றிவற்றுள் வருவது - என்ற இவைகளால் உண்டாவது. அக் கண் - அவ்விடத்து. ஆறு - ஆறுகுற்றங்களாம். அதிவ்ருஷ்டி, அநாவ்ரு ஷ்டி, மூஷிகம், சலபம், சுகம், அத்யாஸந்நரான ராஜாக்கள் என்னும் ஆறும் வடநூல்களில் ஈதிபாதை யெனவும், தேசவ்யஸந மெனவும் படும்; ஈதி - உபத்திரவம். இவை, தமிழில், நாட்டுக்குற்ற மெனப்படும். (மிக்கமழை முத லிய எட்டை நாட்டுக்குக் கே டென்றலு முண்டு; "கிளிவளர் பூமரு தணிந்து கேடிலா, வளவயல்" என்ற சிந்தாமணிச்செய்யுளில் நச்சினார்க்கினியர் 'கேடு- "விட்டில் கிளி நால்வாய் வேற்றரசு தன்அரசு, நட்டம் பெரும்பெயல் கால் எட்டு" என உரைத்ததனலும், "விட்டில் தன்அரசு நால்வாய் மிகுமழை மிகுகாற்றேடே, நட்டம் வேற்றரசு கிள்ளை நாடுறுங் கே டெட்டாமே" என்ற நிகண்டினலும் காண்க.) இவற்றுள் - இத்தக்கேடுகளுள். முன்னையவற்றது இன்மை - முன்னுள்ள 'மிக்கபெயல்' முதலிய ஐந்தும் இல்லாமை. அரசன் அறம் - ராஜனது தருமம்; நீதிதவறுமை. பின்னையது இன்மை - பின் னுள்ளதான அரசண்மை இல்லாமை. அவன் மறம் - அவனது பராக்கிர மம். இவ்வின்மைகளான் - நாட்டுக்குற்றம் ஆறும் இல்லாமையால்.

பெட்டக்கது - பெட்கத்தக்கது: பெள் தக்கது எனப் பிரிக்க; பெள் - விரும்புதலுணர்த்தும் வினைப்பகுதி: இதனடியாக, பெட்டல், பெட்பு, பெ ட்ட, பெட்டு என்பவை முதலாக வினைவடிவங்கள் உண்டாகும். 'அருங்கேட் டால்' என்பதில், 'ஆல்' உருபு - 'ஓடு' உருபின்பொருளில் வந்தது. அருங் கேடு என்பதை, கேடருமை என விகுதிபிரித்துக் கூட்டிக்கொண்டார்; இதில், அருமை - இன்மைமேல் நின்றது. ஆற்ற - ஆற்று என்னும் வினைப் பகுதியடியாப் பிறந்த செயவெனெச்சம். வினைவது - வினையும் இட மாகு வது; வினைமுற்றுப்பெயர் [வினையாலணையும்பெயர்] இடப்பொருள் படு தற்கு 'வினைவது நாடு' என்பதை உதாரணங்காட்டினர், இலக்கணக்கொத் துடையார். இன்னும் அந்நூலில் 'வினைவதுநாடு - இது, வருமொழியை நோக்காமலே தனக்கு உரிய ஒருமைப்பாலைவிட்டுப் பன்மைப்பாலையே விளக் குதலால், அஃறிணைச்சாதியொருமையாயிற்று' என்றதும் உணர்க. (உ)

எஙூ. பொறையொருங்கு மேல்வருங்காற் றுங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(இ - ள்.) பொறை - (பிறநாடுகள்) பொறுத்த பாரமெல்லாம், ஒருங்கு- ஒருங்கே, மேல் வரும் கால் - தன்கண் வருங்கால், தாங்கி - (அவற்றைத்) தாங்கி,—(அதன்மேல்), இறைவற்கு - தன் அரசனுக்கு, இறை ஒருங்கு - இறைப்பொருள் முழுதையும், நேர்வது - உடம்பட்டுக் கொடுப்பதே,—நாடு- நாடாவது; (எ - று.)

பாரங்கள்-மக்கள்தொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல்-அவை தத்தம்தேயத்துப் பகை வந்து இறுத்ததாக, அரசு கோல்கோடியதாக. உணவின்மையாலுகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங் கூவப்போல இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடுத்தாது தானேகொடுப்ப தென்பார், 'இறையொருங்கு நேர்வது' என்றார்.

(கு - ரை.) அயல்நாடுகள் பலவற்றினின்று பலகாரணங்களால் எத்தனை பிராணிசமூகம் வந்து சேர்ந்தபொழுதிலும் அவை யாவும் தம்தம்நாட்டிற் சுகமாக இருத்தல்போலத் தங்கும்படி அவற்றிற்கு வேண்டும் இடப்பரப்பையும் பொருள்வளத்தையும் மிகுதியாகவுடையதாய், தன் அரசனுக்கு இறை செலுத்துவதிற் சிறிதும்வெறுப்பின்றி, அரசன்வருத்திவாங்கவேண்டாதபடி பொருள்வளமுடைமையால் மிக்கமகிழ்ச்சியோடு தானே இறைப்பொருளைக் கொண்டுசெலுத்தித் தன்மையதே நாடாகு மென்க.

பொறுத்த - தரித்த. தன்கண் வருங்கால் - தன்னிடத்துவரும்பொழுது. தாங்கி - இடமாகி, காத்து. அதன்மேல் - அத்தன்மையோடும். இறைப் பொருள் - வரிப்பணம். உடம்பட்டுக்கொடுப்பது - தடையின்றிக் கொடுக்கும்படியான வளமுள்ளது. மக்கள்தொகுதி - மனிதர்கூட்டம். ஆன் - பசு. விலங்குத்தொகுதி - மிருகசமூகம். தத்தம் தேயத்துப் பகை வந்துஇறுத்ததாக - தங்கள் தங்கள் தேசங்களிற் பகைவர்கள் வந்துதங்கி நெருக்கியதனாலாவது. அரசுகோல்கோடியதாக - அரசன் செங்கோன்மை தவறிக் கொடுங்கோன்மை செலுத்தியதனாலாவது. உணவின்மையாலுக - உண்ணப்படும் பொருள்களில்லாமல் வறுமையடைந்ததனாலாவது. இறையை-குடியிறைப் பொருளை.

பொறை - பொறுக்கப்பட்டது, இறை - இறுக்கப்படுவது; பொறு, இறு - பகுதிகள்: ஐ - செயப்படுபொருள்விகுதி. இறுத்தல் - செலுத்தல். ஒருங்கு - இடைச்சொல். நாட்டிலுள்ளார்விரோயை நாட்டின்மே லேற்றி, 'இறையொருங்குநேர்வது நாடு' என்றார். 'இறைவற்கு இறையொருங்கு நேர்வது' என்றவிடத்து இறைக்குரியவனுக்கு இறைமுழுவதையுங் கொடுப்ப தென்ற பொருள் தொனிக்கும். கால் - காலமென்பதன் விகாரம். (கூ)

எஙூ. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

(இ - ள்.) உறு பசிஉம் - மிக்க பசியும், ஓவா பிணிஉம் - நீங்காத நோயும், செறு பகைஉம் - (புறத்துநின்று வந்து) அழிவுசெய்யும் பகையும், சேராது - இன்றி, இயல்வது - இனிது நடப்பதே, நாடு - நாடாவது; (எ-று.)

உறுபசி, உழவருடைமையானும் ஆற்றவிரோதலானுஞ் சேராதாயிற்று. ஓவாப்பிணி, தீக்காற்றும் மிக்க குளிர்வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையும் இன்மையின் சேராதாயிற்று. செறுபகை, அரசனுற்றலும் நீலப் படையும் அடவியும் அரணும் உடைமையின் சேராதாயிற்று.

(கு-ரை.) புறத்துநின்று-வெளியிலிருந்து. உழவருடைமை-உழுதுபயிர் செய்பவர்களே உடைத்தாயிருத்தல். மிக்க குளிர் வெப்பங்கள் - மிகுதியான குளிர்ச்சியும், மிகுதியான சூடும். நுகரப்படுமவற்றது-உண்ணப்படும்பொருள் களினது. அரசன் ஆற்றல் - அரசனது அறிவு ஆண்மை பெருமை என்னும் மூன்றுவகைவலிமைகள். நிலைப் படை - எப்பொழுதும் மாறுபடாமல் நிலைத் திருக்குஞ் சேனை. அடவி - காடு; என்றது, செறிந்த வனத்திஞற் சூழப் பட்டிருத்தலாகிய காட்டரணை. 'அடவி' என முன்னர்க்கூறியதனால், பின் னர் 'அரண்' என்றது - காட்டரண் நீங்கலான கீரரண், நிலவரண், மலை யரண் என்றவற்றை. (ச)

எஉடு. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங் கொல்குறும்பு மில்லது நாடு.

(இ - ள்.) பல் குழுஉம் - (சங்கேதவயத்தான் மாறுபட்டுக்கூடும்) பல கூட்டமும், பாழ் செய்யும் உள் பகைஉம் - (உடன் உறையாகின்றே) பா ழாகச்செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்புஉம்-(அளவு வந்தால்) வேந்தனை அலைக்குங் கொல்வினைக்குறும்பரும், இல்லது - இல்லாத தே, நாடு - நாடாவது; (எ - று.)

சங்கேதம் - சாதிபற்றியும், கடவுள்பற்றியும் பலர்க்கு உளதாம் ஒருமை. உட்பகை - ஆறலைப்பார், கள்வர், குறளைகூறுவார் முதலிய மக்களும்; பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை, குறும்பு என்பன-ஆகுபெயர்.

இம்மூன்றும் அரசனும் வாழ்வாரானுங் கடியப்பட்டு நடப்பதே நாடு என்பதாம்.

(கு - ரை.) வயத்தான் - வசத்தால். உடன் உறையாகின்றே-கூடவசித் துக்கொண்டிருந்தே. பாழாகச்செய்யும் - அழியச்செய்கின்ற. உட்பகையை, வடநூலார் 'அந்தஶ்சித்ரம்' என்பர். அளவு வந்தால் - சமயம் நேர்ந்தால். அலைக்கும் - வருத்துகின்ற. கொல்வினைக் குறும்பர் - கொலைத்தொழிலை யுடைய சிற்றரசர். குறும்பர் - குறுநிலமன்னர்; வேடர்களும். துச்சனருமாம். ஸங்கேதம் - கட்டுப்பாடு. கடவுள்பற்றி-தம்தம்வழிபடுகடவுளே சிறந்ததென் றும், மற்றையதெய்வங்கள் சிறந்தனவல்லவென்றுந் தாபிக்கின்ற நிமித்த மாக; மதம்பற்றி யென்றபடி. உளதாம் ஒருமை-உண்டாகும் ஒற்றுமை. ஆறு அலைப்பார் - (பிரயாணிகளை) வழியில் உபத்திரவித்துப் பொருள்கவர்பவர். கள்வர் - திருடர்; பிறருடைமையாயிருப்பதொருபொருளை அவரைவஞ்சித் துக் கொள்பவர். குறளை கூறுவார் - கோள்சொல்பவர். 'முதலிய' என்றதனால், இச்சகம்பேசிப் பொருள்பறிப்பார், முன்னொன்றுகூறிப் பின்னொன்று கூறுவார், பொய்ச்சாக்ஷிகூறுவார், மித்திரபேதஞ்செய்வார் முதலியவர்களைக் கொள்க. மக்கள் - மனிதர். விலங்கு - மிருகம். பகை என்பது - பகைமை யுடைய பிராணிகளையும், குறும்பு என்பது - குறும்பரையுங் குறித்தலால், பண்பாகுபெயராம்; பகை - பகைமை. குறும்பு - குறுநில ஆட்சி; சிறுமைக் குணமுமாம். கடியப்பட்டு நடப்பது-ஒழிக்கப்பட்டுப் பொருந்துவது. சங்கேத

வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டங்கள், சனங்களுக்குள் உள்ள பொதுவொற்றுமையைக் கெடுத்து மாறுபாட்டைவிளைத்து ஒரோவழி அரசனுடு எதிர்த்தற்குங் காரணமாகு மாதலால், அவை ஒழிக்கத்தக்கனவென்க.

உட்பகை - உள்ளே நின்றபகை என ஏழாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கதாகை. வேந்து - அரசத்தன்மை: அரசனுக்குப் பண்பாகு பெயர்; இதனை, பரிமேலழகர் 'உயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச் சொல்' என்பர்: அரசு, அமைச்சு, நாடு, ஒற்று, பாகுஎன்பனவும் இவ்வாறே. அலைக்கும் - பிறவினைப்பெயரெச்சம். கொல் குறும்பு - வினைத்தொகை. (சு)

எங. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்ற
நாடென்ப நாட்டிற் றலை.

(இ - ள்.) கேடு அறியா - (பகைவராற்) கெடுதலறியாததாய், கெட்ட இடத்துஉம் வளம் குன்ற - (அரிதின்) கெட்டதாயினும் அப்பொழுதும் தன் வளங்குன்றுத, நாடு - நாட்டினை, நாட்டின் தலை என்ப - எல்லாநாட்டினும் தலையென்று சொல்லுவர், (நூலோர்); (எ - று.)

அறியாத, குன்றுத என்னும் பெயரெச்சங்களின் இறுதிநிலைகள் விகாரத்தால் தொக்கன. கேடு அறியாமை, அரசனுற்றலானும் கடவுட்பூசை அறங்கள் என்றிவற்றது செயலானும் வரும். வளம் - ஆகரங்களிற் படுவனவும், வயலினும் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றுமை-அவை செய்யவேண்டாமல் இயல்பாகவே உளவாயும் முன் ஈட்டப்பட்டும் குறைவறுதல்.

இவையாறுபாட்டானும், நாட்டது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) கெடுதல் அறியாததாய்-எப்பொழுதும் அழிவடையாததாய் என்றபடி. அரிதின் கெட்டதாயினும்-அருமையாக [ஒருபொழுது] அழிவடைந்ததானலும். வளம் குன்றுத - வளப்பங்குறையாத. தலை - மேலானது, உத்தமம். நூலோர் - சாஸ்திரமறிந்தவர்; இங்கு, 'நூல்' என்றது, பொருள்நூல. இறுதிநிலை - விகுதி; பகுபதங்களின் ஈற்றில் நிற்பது; தகர வெழுத்துப்பேற்றைடுகூடிய அகரவிகுதி செய்யுள்விகாரத்தால் தொக்கதென்க. அறியா, குன்று - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சங்கள்: இவ்விரண்டும் அடுக்கி 'நாடு' என்னும் பெயர் கொண்டன: [நன் - பொது - சு.] ''மூவா முதலா வுலகம்'' என்பதிற் போல. கடவுட்பூசை - தெய்வங்களைப் பூசித்தல். இவற்றது செயல் - இவற்றைச்செய்தல் என்றபடி. ஆகரங்களில் படுவன - உரியஇடங்களில் உண்டாகின்ற பொன் மணி முத்து பவழம் முதலியன; ஆகரம் - தோன்றுதற்குரிய இடம். வயல் - கழனி. தண்டலை-சோலை. வயலினும் தண்டலையினும் விளைவன - தானியங்கள் காய்கனிகள் முதலியன. ''கதிர்படுவயலினுள்ள கடிகமழ்பொழிலினுள்ள, முதிர்பலமரத்தினுள்ள முதிரைகள் புறவினுள்ள, பதிபடுகொடியினுள்ள படிவளர்குழியினுள்ள, மதுவனமலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்'' என்ற கம்பராமாயணச்செய்யுள், இங்கு அறியத்தக்கது. அவை - அவ்வளங்கள். செய்யவேண்டாமல் - புதிதாகச் சம்பாதிக்கவேண்டாதபடி. முன் ஈட்டப்பட்

டும் - முன்னே கொணர்ந்து சேர்க்கப்பட்டும். குறைவறுதல்-குறைவில்லாமலிருத்தல். நாட்டது இலக்கணம் - நாட்டினது லக்ஷணம்.

'கெட்டவிடத்து' என்பதை, கெட்டால் எனப் பொருள்படும் எதிர்கால வினையெச்சமென்னலாம்; உம் - இழிவுசிறப்பு. என்ப - பலர்பால் வினைமுற்று; ப - பலர்பால் விகுதி: [நன் - வினை - அ.] இவ்விகுதியே இங்கு எதிர்காலங் காட்டிற்று; [நன் - பத - கஅ.] நாட்டின் - ஐந்தாம்வேற்றுமை விரி யென்றுவது, ஏழாம்வேற்றுமைவிரி யென்றுவது கொள்க. தலை - தலைமையானது, தலைபோன்றது, முதன்மைபெற்றது; ஆகுபெயர். 'என்ப' என்னும் முற்றுச்சொல், 'தூலோர்' என்னும் பெயர் தொக்குநின்றதனோடு முடியும். (சு)

எஙஎ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(இ - ள்.) இரு புனல்உம் - கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட தன்கண்நீரும், வாய்ந்த மலைஉம் - வாய்ப்புடைத்தாய மலையும், வரு புனல்உம் - (அதனினின்றும்) வருவதாய நீரும், வல் அரண்உம் - அழியாத நகரியும், நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கு அவயவமாம்; (எ - று.)

ஈண்டு 'புனல்' என்றது, தூவுகேணிகளும் எரிகளும் ஆறுகளு மாகிய ஆதாரங்களை; அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றுன், வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி ஒருபுடையதாதலும், தன்வளந் தருதலும், மாரிக்கண் உண்ட நீர் கோடைக்கண் உமிழ்கலும் உடைமைபற்றி, 'வாய்ந்த மலை' என்றார். அரண் - ஆகுபெயர்.

இதனுன், அதன் அவயவம் கூறப்பட்டது.

(கு - ரை.) கீழ்நீர் - கிணறு குளங்கள். மேல்நீர் - எரி ஆறுகள். தன்கண் நீர் - தன்னிடத்து நீர். வாய்ப்பு உடைத்தாய - ஏற்றவிடத்தில் அமைதியையுடைய. நகரி - இங்கே, கோட்டை; நகரமுமாம். கேணி-குளம்: ஆதாரங்கள்-ஜலாதாரங்கள்: நீர்நிலைகள். அவயவமாதற்கு - நாட்டிற்கு உறுப்பாவதற்கு. அவையே-தூவு கேணி முதலியவைகளே. அவற்றுன்-தூவுமுதலிய நீர்நிலைகள் அமைந்திருத்தலால். வானம் வறப்பினும் வளன் உடைமை - மேகம் மழைபெய்யாது வறந்தாலும் தன்வளங்குறையாதிருத்தல். இடையதுஅன்றி ஒருபுடையதுஆகல் - நாட்டின்நடுவிலுள்ளதாகாமல் ஒருபக்கத்திலுள்ளதாதல்; இங்ஙனம் ஒருபுறத்து விலகியிருத்தலே மலைக்கு நல்ல வாய்ப்பாதல் பற்றி, அதற்கு 'விலங்கல்' என ஒருபெயர் வழங்குதலுங் காண்க. 'தன்வளம்' என்றது, மலைவளத்தை; அவ்வளம் - அகில், மிளகு, கோட்டம், தக்கோலம், குங்குமம், சந்தனம், பொன் முதலியன. மாரிக்கண் உண்ட நீர் கோடைக்கண் உமிழ்தல் - மழைக்காலத்தில் உட்கொண்ட நீரை வெயிற்காலத்தில் வெளிப்படுத்தல். 'அரண்' என்னும் பாதுகாப்பின்பெயர், அதனையுடைய கோட்டையைக் குறித்தலால், ஆகுபெயராம். அதன் - நாட்டின்.

இரு புனல் - இரண்டுவகை நீர்; பண்புத்தொகை. (மிக்கபுனலென்னும்பொருளில் 'இரும்புனல்' என வரும்; இருமை - பெருமை.) வரு புனல்-வினைத்தொகை. மலை-மலையப்படுவ தெனக் காரணம்பற்றிய பெயரென்னலாம்; மலைதல் - கண்டவர் அஞ்சுதல்: செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்ட தென்க. (எ)

எஙஉ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(இ - ள்.) பிணி இன்மை - நோயின்மையும், செல்வம் விளைவு இன்பம் ஏமம் - செல்வம் விளைதல் இன்பம் காவல் என்றிவையுடைமையும் ஆகிய, இஐந்து - இவ்வைந்தினையும், நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற்கு அழகென்றுசொல்லுவர், (நூலோர்); (எ - று.)

பிணியின்மை, நிலநலத்தான் வருவது. செல்வம் - மேற்சொல்லியன. இன்பம் - விழவும் வேள்வியும் சான்றோரும் உடைமையானும், நுகர்வன உடைமையானும், நிலநீர் களது நன்மையானும், வாழ்வார்க்கு உள்நிகழ்வது. 'காவல்' எனவே, அரசன்காவலும் வாழ்வோர்காவலும் அரண்காவலும் அடங்கின.

பிறதேயங்களினுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக்கு ஏதுவாய அதன் அழகு இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) விளைதல் - நெல்முதலிய விளைவு. "செல்வம் விளையுள் பல்வளஞ் செங்கோல், கொல்குறும்பின்மை கொடும்பிணியின்மை யென், றிவ்வகை யாறு நன்னுட்டமைதி" என்று பிங்கலந்தையிற்கூறப்பட்ட அறுவகை நாட்டமைதிகள் இங்கு அறியத்தக்கன. நிலநலம்-அந்தந்தப் பூமியின் நன்மை. மேல்-மூன். 'மேற்சொல்லியன' என்றவை, இவ்வதிகாரத்தின் ஆரூஞ்செய்யுளிற் சொல்லப்பட்ட 'வளம்' என்றதன் பொருளாகிய 'ஆகரங்களிற்படுவன' முதலியன. இனி, செல்வம் - கலத்தினும் காலினும் வணிகர் தரும் அரும்பொருளுமாம்; இவ்வதிகாரத்தின் முதற்குறளைக் காண்க. விழவு-திருவிழா; தெய்வங்களுக்குச் செய்யும் உற்சவங்கள். வேள்வி-கலியாணம், யாகம் சான்றோர்-பலநற்குணங்களாலும் நிறைந்த பெரியோர். நுகர்வன உடைமை - ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களை யுடைத்தாயிருத்தல். உள்நிகழ்வது - மனத்தில் உண்டாவது. அரண் காவல் - அரணினலுண்டாகும் பாதுகாப்பு. விழைந்து - இக்நாட்டை விரும்பி. பின் - இங்குவந்த பின்பு. அவை உள்ளாமை - தம்தம்தேயங்களை நினைத்தலுஞ்செய்யாமை. அதன் - நாட்டின். அழகைத்தருவதை 'அழகு' என்றது, காரிய வாகுபெயர். இனி, அணி - ஆபரண மென்றுமாம்: அழகுதருதல் பற்றிய உவமை. (அ)

எஙக. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(இ - ள்.) நாடா வளத்தன - (தங்கண் வாழ்வார்) தேடி வருந்தாமல் (அவர்பால்) தானேயடையுஞ் செல்வத்தை யுடையவற்றை, நாடு என்ப - (நூலோர்) நாடென்று சொல்லுவர்; (ஆதலால்), நாட வளம் தரும் நாடு - தேடிவருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள், நாடு அல்ல - நாடாகா; (எ - று.)

நாடுதல், இருவழியும் வருத்தத்தின்மேல் நின்றது. ''பொருள்செய்வார்க்கு மஃதிடம்'' என்றார் பிறரும். நூலோர்விதிபற்றி, எதிர்மறைமுகத்தாற் குற்றங் கூறியவாறு. இவ்வாறன்றி, 'என்ப' என்பதனைப் பின்னுங் கூட்டி இருபொருள்பட உரைப்பின், அநுவாதமாம்.

(கு - ரை.) தங்கண் - தம்மிடத்து. அவர்பால்-தங்கண் வாழ்வாரிடத்து. நாடுதல்-தேடுதல். இருவழியும்-'நாடா வளத்தன', 'நாட வளந்தரும்' என்னும் இரண்டிடத்தும். தேடுதலாகிய காரணத்தைக் குறிக்குஞ்சொல்லால் வருத்தலாகிய காரியத்தைக் குறித்தது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசார வழக்கு. ''பொருள்செய்வார்க்கு மஃதிடம்'' என்ற மேற்கோள், இவ்வதிகாரத்து முதற்குறளின் குறிப்பிற் காட்டப்பட்ட ''நற்றவஞ் செய்வார்க்கிடம்'' என்ற சிவகசிந்தாமணிச் செய்யுளி லுள்ளது: பொருளீத்தேடுவார்க்கும் அந்நாடு இட மென்பது, இதன்பொருள்; இம்மேற்கோள் இங்கு எடுத்துக்காட்டியது, நாடு பொருள்தேடுபவர்க்கு இடமாம் என்பதைக் காட்டுதற்கு. நூலோர்விதிபற்றி - சாஸ்திரமுணர்ந்தோர் 'இத்தன்மையுள்ள தே நாடு' என்று விதித்திருத்தல்பற்றி. எதிர்மறைமுகத்தால் - பெறப்படுங் கருத்தை 'நாடவளத்தருநாடு நாடல்ல' என எதிர்மறைமுகமாகக் கூறுதலால். இனி, நூலோர்விதிபற்றி - நூலோரின் முறைமையையொட்டி எனப் பொருளுரைத்து, ஒருபொருளே வற்புறுத்துதலின்பொருட்டு உடன்பாட்டாற்கூறியதனை எதிர்மறைமுகத்தாற் கூறுவதும் நூலோர்முறைமையெனினுமாம். பின்னும் கூட்டுதல் - 'நாடவளத்தருநாடு நாடல்ல என்ப' எனப் பின்னுள்ளவாக்கியத்தோடுஞ் சேர்த்தல். 'இருபொருள்பட உரைப்பின்' என்றது, இரண்டுவிஷயங்கள் தனித்தனிதோன்ற இரண்டுமுடிபாக்கி உரைகூறினால் என்றபடி. முதலிற்கூறிய உரைப்படி, 'நாடவளத்தருநாடு நாடல்ல' என்ற பிரதானவாக்கியத்தால் நாட்டின்குற்ற மொன்றே கூறப்பட்டதாக, 'நாடா வளத்தன நாடென்ப' என்றது, அக்கொள்கையைச்சாதித்தற்கு மேற்கோளெடுத்துக்காட்டிய ஏதுவாக்கியமாய் அப்பிரதானமாதலும்; இரண்டாவது கூறிய உரைப்படி 'நாடாவளத்தனநாடென்ப' என்ற முதல்வாக்கியம் நாட்டின் குணத்தையும், 'நாடவளத்தருநாடு நாடல்ல என்ப' என்ற இரண்டாம் வாக்கியம் நாட்டின்குற்றத்தையுங் கூறி இரண்டும்பிரதானவாக்கியமாதலுமாகிய வேறுபாட்டை நுட்பமாக நோக்குக: ஓரிடத்து ஒருவிஷயமே விதிக்கப்படவேண்டுமென்றும், இரண்டுவிதி ஓரிடத்து இருப்பின் வாக்கியபேதமென்னுங் குற்றமாமென்றும் கூறுகிற நூன்முறைமையையொட்டி இரண்டுவிதி கொள்ளற்பாலவல்ல என்று, இருபொருள்படவுரைப்பின் அநுவாதமாமென்றார். அநுவாதமாவது - 'யாதானும் ஓர் நிமித்தத்தால் ஒன்றனை முற்

கூறி வேறொருநிமித்தத்தால் அதனையே பின்னுங்கூறுதல்' என்பது, இலக்கணக்கொத்துரை; தமிழில், வழிமொழிதலெனப்படும். குடிகள் தேடிவருத்தமடையாதபடி அவர்கட்கு எல்லாவளங்களையும் எளிதிற்கொடுப்பவையே நாடாகும் என்க. 'ஒருபொருளை முன்னரெடுத்துக்கூறுவது, புரோவாதம்; அதனை ஒருநிமித்தத்தாற் பின்னரும் எடுத்துக்கூறுவது, அநுவாதம்' என்பது, பிரயோகவிவேகவுரை. (௯)

எசo. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ - ள்.) வேந்து - வேந்தனோடு, அமைவு இல்லாத - மேவுதலில்லாத, நாடு—, ஆங்கு அமைவு எய்தியக்கண் உம் - மேற்சொல்லியகுணங்களெல்லாவற்றானும் நிறைந்திருந்ததாயினும், பயம் இன்று - (அவற்றாற்) பயனுடைத்தன்று; (எ - று.)

'வேந்தமைவு' எனவே, குடிகள் அவன்மாட்டு அன்புடையராதலும், அவன்தான் இவர்மாட்டு அருளுடையனாதலும் அடங்கின. அவை இல்வழி வாழ்வோர் இன்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், அதன்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) மேவுதல் - பொருந்துதல், ஒற்றுமைப்படுதல். மேற்சொல்லிய குணங்கள் - தள்ளாவிளையுள் என்பதுமுதல் நாடாவளத்தன என்பது வரை இவ்வதிகாரத்துக்கூறிய நாட்டின்குணங்கள். ஆங்கு - அவ்வாறு: கீழ்க்கூறியபடி. அமைவு எய்தியக்கண்ணும் - நிறைவடைந்தாலும். அவன் மாட்டு - அரசனிடத்தில். அன்பு - பிரீதி; அவன் - அரசன். இவர்மாட்டு - குடிகளிடத்தில். அருள் - கருணை. அவை இல்வழி - குடிகளுக்கு அரசனிடத்தில் அன்பும், அரசனுக்குக் குடிகளிடத்தில் அருளும் இல்லாதவிடத்தில். அதன் - நாட்டின். எவ்வளவு குணங்கள் நிறைந்துள்ள நாடாயினும் அரசனுக்கும் குடிகளுக்கும் ஒற்றுமையில்லாவிட்டால் இனிதுவாழ்தற்கு இடமாகாதாதலால், அவ்வொற்றுமையின்மை நாட்டுக்குக் குற்றமா மென்க.

எரு - ஆம் அதிகாரம்.—அரண்.

இனி, அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும் பகைவரால் தொலைவு வந்துழி அதுதனக்கும் அரசன்தனக்கும் ஏமமாதற் சிறப்புப்பற்றிப் பிறிதோரங்கமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும். *

(கு - ரை.) அடங்கும் - நாட்டின் இலக்கணஞ்சொன்னதிலேயே அடங்கிவிடும்; இங்ஙனம் அரண் நாட்டில் அடங்குதலை, கீழ் "வல்லரணு நாட்டிற் குறுப்பு" என்றதிற் காண்க. படை குடி கூழ் அமைச்சு நட்பு என்ற உறுப்புக்கள்போலப் பிறிதின்கிழமைப்பொரு ளாக அல்லாமல் தற்கிழமைப்பொருளதா யிருப்பினும் என்ற கருத்துப்பற்றி, 'நாட்

* இந்தவாக்கியம் பலபிரதிகளில் இல்லை.

டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும்' என்றுகூறினரெனக் கொள்ளலாம். தொலைவு வந்துழி - அழிவுநேரிடும்பொழுது. அதுதனக்கும் - அந்நாட்டிற்கும். அரசன்தனக்கும் - அரசனுக்கும். ஏமமாதற்சிறப்பு - பாதுகாப்பாதலாகிய சிறப்பு. அரண் - கோட்டை. நாடென்னும் அதிகாரத்தின்பின் அரணென்னும் அதிகாரத்தை வைத்த காரணம், வெளிப்படை; நாடு உறுப்பியும், அரண் உறுப்பு மாதல் காண்க. அரண் - ஸ்ரானமென்னும் வடசொல்லின்விகாரம், காப்பதென்று பொருள். 'முழு அரணுவது - மலையுங் காடும் நீரு மல்லாத அகநாட்டுச் சேம அருமதில்; அது வஞ்சனைபலவும் வாய்த்துத் தோட்டிமுள் முதலியன பதித்த காவற்காடும் அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய இடங்கும் புறஞ்சூழ்ந்து, யவனரியற்றிய பலபொறிகளும் ஏனைப் பொறிகளும் பதணமும் ஏப்புழைஞாயிலும் எனையபிறவும் அமைந்து, எழுவும் சீப்பும் முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற்கோபுரமும் பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம். இனி, மலையரணும் நிலவரணுஞ் சென்றுசூழ்ந்து நேர்தலில்லாது வார்ந்து அமைந்தனவும், இடத்தியற்றிய மதில்போல வடிச்சிலம்பின் அரணமைந்தனவும், மீதிருந்து கணை சொரியுமிடமும் பிறவெந்திரங்களும் அமைந்தனவு மன்றி, காட்டரணும் நீரரணும் அவ்வாறு வேண்டுவனவும் அமைந்தனவாம்' என்று தொல்காப்பியவுரையில் உரைத்தது இங்கு அறியத்தக்கது.

எசக. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

(இ - ள்.) ஆற்றுபவர்க்கு உம் - மூவகை யாற்றலும் உடையராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும், அரண்—,பொருள் - சிறந்தது; அஞ்சி தன் போற்றுபவர்க்குஉம் - (அவையின்றித் தம்மேல்வருவார்க்கு) அஞ்சித் தன்னையே அடைவார்க்கும், (அரண்) பொருள் - அரண் சிறந்தது; (எ - று.)

பிறர்மேற்செல்லுங்கால்*உரிமை பொருள் முதலியவற்றைப் பிறனொருவன் வௌவாமல்வைத்துச் செல்லவேண்டுமாகலானும், அப்பெருமைதொலைந்து இறுதிவந்துழிக் கடல்நடுவண் உடைகலத்தார்போன்று ஏமங்காணாது இறுவராகலானும், ஆற்றுபவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிற்று. †அரண் இல்வழி அழியும்பால ராகலின், அவரை முற்கூறினர்.

இதனால், அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மூவகை ஆற்றல் - அறிவு ஆண்மை பெருமை என்பன; சசுசு - ஆங் குறளுரையிற் கூறிப்போந்தார்: இவற்றில், பெருமை-பொருள், படை [சேனை] என இருவகையதாம். பிறர்மேற் செல்வார் - பகைவர்மேல் எதிர்த்துப் போர்க்குச்செல்பவர். அவை இன்றி - அவ்வாற்றல்கள் இல்லாமல். தம்மேல் வருவார் - தம்மையெதிர்த்துவரும் பகைவர். 'தன்னையே' என்றது, அரணை. இனி, 'தன் போற்றுபவர்' என்பதற்கு - தம்மைத் தாம் பாதுகாத்துக்கொள்ள முயல்பவர் என்று பொருள்கொண்டால், 'போற்று

* பி - மீ: உரிமைப்பொருள். † ஆற்றலுடையராயினும் அரண்.

பவர்' என்னும் பன்மையோடு 'தன்' என்ற ஒருமை மயங்கியதாம். உரிமை - தனக்கு உரிய பொருள்; மனைவி முதலியன. வௌவாமல் - அபகரித்துக் கொள்ளலாகாதபடி. இறுதி வந்துழி - அபாயம் நேர்ந்தபொழுது. கடல் நடுவண் உடை கலத்தார் போன்று - கடலின்நடுவிலே உடைந்துபோன மரக்கலத்தில் உள்ளவர்போல; இவ்வுவமை, பலநூல்களிலும், பெருந்தீங்குஅடைதற்கு எடுத்துக்காட்டப்படும். ஏமம் காணாது இறுவர் - பாதுகாக்குமிடத்தைப்பெறாமல் அழிவர். வலிமையுடையார்க்கு அரண் சிறந்ததாதற்குக் காரணம் - ஒருவன்மேற் போர்க்குச் செல்லும்பொழுது தம்முடைய உரிய பொருள்களைப் பிறனொருவன் கவராதபடி வைத்துச்செல்லுதற்குப் பாதுகாப்புள்ள இடம் வேண்டியிருத்தல். வலிமையில்லார்க்கு அரண் சிறந்ததாதல், பகைவர்க்கு அஞ்சி உள்ளிருத்தற்குத் தக்க இடம் வேண்டியதாதலின். அரண் இல்வழி அழியும்பாலராகலின் அவரை முற்கூறினர் - ஆற்றலில்லாதவர் அவ்வின்மையினாலேயே அழியுந்தன்மையர்: அவர் அழிதற்குக் காரணம், அரணில்லாமைமாத்திர மன்று: ஆற்றலுடையவர் அழிதற்கு வேறு காரணமில்லை யாதலால், அரணின்மைமாத்திரமே அவரழிதற்குக்காரணமாம்; ஆதலால், அரண், அஞ்சித் தற்போற்றுபவர்க்குப் பொருளாதலினும் ஆற்றுபவர்க்குப் பொருளாதல் முன் கூறப்பட்ட தென்க. வலிமையுடையராய் வெளிச்சென்று பிறரையெதிர்க்கும் அரசர்க்கும், வலிமையிலராய்ப் பிறர்க்கு அஞ்சி உள்தங்கும் அரசர்க்கும் அரண் இன்றியமையாத தென்பதாம்.

'அரண்' என்பதனைத் தனித்தனி கூட்டுக. உம்மைகள் இரண்டனுள், முன்னது - உயர்வுசிறப்போடு எதிரதுதழுவிய எச்சமும், பின்னது - இழிவு சிறப்போடு இறந்ததுதழுவிய எச்சமுமாம்; பொருள் - சிறந்தபொருளாகக் கொண்டாடத்தக்க தென்றபடி. (க)

எஉ. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

(இ - ள்.) மணி நீர்உம் - மணிபோலுநிறத்தினையுடைய நீரும், மண்உம் - வெள்ளிடை நிலமும், மலைஉம்—, அணி நிழல் காடுஉம் - குளிர்ந்த நிழலையுடைய காடும், உடையது - உடையதே, அரண் - அரணவது; (எ-று.)

எஞ்ஞான்றும் வற்றுத நீரென்பார் 'மணிநீர்' என்றும், நீரும் நிழலும் இல்லா மருநிலமென்பார் 'மண்' என்றும், செறிந்தகாடென்பார் 'அணிநிழற் காடு' என்றுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம், பகைவர் அரண்பற்றுமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையுஞ் செயற்கையு மாய இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரணென்பதாம்.

(கு-ரை.) மணி - நீலமணி; முத்துமாம்: தொகுதியாக நோக்குமிடத்துக் கறுத்தும், பகுதியாகநோக்குமிடத்து வெளுத்தும் காணப்படுதல், நீரின் இயல்பு. வெள்ளிடை நிலம் - யாதொருபொருளுமில்லாமல் வெட்டவெளியாகவுள்ள நிலம்; இது, வடநூலில் 'மருபூமி' எனப்படும்: மரு என்ற வட சொல்லுக்கு - (பிராணிகள்தாஹதாபங்களால்) மரணமடையத்தக்கஇடமென்

பது, காரணப்பொருள். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். செறிந்த - அடர்ந்த. மதிலின் வெளிப்புறத்தில் வெகுதூரம் மருபூமி இருக்குமாயின், பகைவர்கள் சேனையோடு தங்கித் தொழில்செய்தற்கு இடமின்றா மாகவே, அவர்கள் இம்மதிலரணைமுற்றுகைசெய்து கைப்பற்றிக்கொள்ள முடியா தாதலால், அது ஓரரணாகு மென்க. நிலவரணும், மலையரணும் - இயற்கை; நீரரணும், காட்டரணும் - செயற்கை: ஒரோவிடத்து நீரரண் இயற்கையாக அமைந்திருத்தலும் உண்டு; நிலவரணைச் செயற்கை யென்பாரும் உளர். நான்கு அரணும் சூழப்படுவது - நான்கு அரண்களாலுஞ் சூழ்ந்திருக்கப்படுவது. நீரரண் முதலியன, முறையே வடமொழியில் ஜலதுர்க்கம், ஸ்தலதுர்க்கம், பர்வததுர்க்கம், வநதுர்க்கம் எனப்படும். இந்தக்கருத்தைக் காட்டும்ஸ்லோகம், மநுஸ்மிருதி எ-ஆம் அத்தியாயத்து எழுபதாவதாகவுள்ளது.

நிழலுக்கு அணியாவது குளிர்ச்சியென்ற கருத்தால், 'அணிநிழல்' என்பதற்கு - 'குளிர்ந்தநிழல்' என்று பொருள்கூறினார்; செறிந்த நிழலுமாம். மணிநிழல் என்று எடுத்தால், முதலடி - முற்றுமோனையாம். உடையது - குறிப்பு வினையாலணையும்பெயர். (உ)

எசஙு. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

(இ - ள்.) உயர்வு அகலம் திண்மை அருமை இ நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையும் என்றுசொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண் என்று உரைக்கும் - அரணென்று சொல்லுவர்: நூல் - நூலோர்; (எ - று.)

'அமைவு,' 'நூல்' என்பன - ஆகுபெயர். உயர்வு, ஏணிஎய்தாதது. அகலம் - புறத்தோர்க்குஅகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்றுவினை செய்யலாந் தலையகலமும். திண்மை - கல்இட்டிகைகளாற்செய்தலின், குத்தப்படாமை. அருமை - பொறிகளா னணுகற்கு அருமை. பொறிகளாவன - "வளைவிற் பொறியு மயிற்செறி நிலையுங், கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங், காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந், தூண்டிலுந் துடக்கு மாண்டலை யடுப்புங், கவையுங் கழுவும் புதையும் புழையு, மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ், சென்றெறி சிரலும் பன்றியும் பணையு, மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங், கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும்" என்றிவை முதலாயின.

(கு - ரை.) அகலம் - பரப்பு. திண்மை - வலிமை. அருமை - அரியதாதல். மிகுதியுணர்த்தும் 'அமைவு' என்பது - மிகுதியையுடைய மதிலுக்கும், சாஸ்திரத்தைக்குறிக்கும் 'நூல்' என்பது - நூல்வல்லோர்க்கும் ஆகுபெயராம். ஏணிஎய்தாதது - ஏணிக்கு எட்டாதது; ஏணியின் உதவியைக் கொண்டு ஏறிக் கடக்க முடியாதது. புறத்தோர்க்கு அகழல் ஆகா - வெளியார்க்கு வெட்டித்தோண்டிவிட்டுஉள்ளேவரமுடியாத. அடிஅகலம் - கீழிடப்பருமை. அகத்தோர்க்கு நின்று வினைசெய்யல் ஆம் - உள்ளேயுள்ளவர்

கள் மேல்நின்று போர்த்தொழில்செய்தற்கு ஏற்ற. தலை அகலம் · மேலிடப் பரப்பு. கல்இட்டிகைகளால் - கருங்கற்களாலும் செங்கற்களாலும். இஷ்டிகா - வடசொல். பொறிகளான் அணுகற்கு அருமை - யந்திரங்களையுடைமையாற் பகைவர் சமீபித்தற்குங் கூடாதபடி யிருத்தல்; நணுகற்கு என்றும் பிரிக்கலாம்.

"வளைவிற் பொறியும்" என்று தொடங்கிய மேற்கோள் - சிலப்பதிகாரத்து அடைக்கலக்காதையின் (உ0எ - உகசு) வரிகள். இங்குக்காட்டிய வற்றின் முதலடி "இலையுங் கிடங்கும் வளைவிற் பொறியும" என்றும், ஈற்றடி "கோலுங் குந்தமும் வேலும் பிறவும்" என்றும் வழங்கப்படும்; சிலப்பதிகாரவுரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் கொண்ட பாடம் அதுவே. இவற்றுக்கு அடியார்க்குநல்லாருரை வருமாறு:—'வளை வில் பொறியும் - வளைந்து தானேயெய்யும் எந்திரவில்லும், கரு விரல் ஊகமும் - காரிய விரலையுடைய குரங்குபோ லிருந்து சேர்த்தாரைக் கடிக்கும் பொறியும், கல் உமிழ் கவணும் - கல்லையுமிழுங் கவணும், [கவண் - கல்லெறிகயிறு.] பரிவுஉறு வெம் நெயும் - காய்ந்து இறைத்தலாற் சேர்ந்தாரை வருத்துவதாய நெய்யும், பாகுஅடு குழிசியும் - செம்புருக்கும், (அன்றி, அங்ஙனம் இறைத்தற்குப் பாகு காயும் குழிசிகளுமாம். குழிசி - பானை.) காய் பொன் உலையும் - உருகக்காய்ச்சி யெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும், கல் இடு கூடையும் - இடங்கணிப் பொறிக்குக்கல்லிட்டு வைக்குங்கூடையும்,[இடங்கணிப்பொறி-வந்தோர்மேற் கல்லெறியுஞ் யியந்திரம்.] தூண்டிலும் - தூண்டில்வடிவாகப்பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்கு நீங்கி மதில்பற்றுவாரைக் கோத்து வலிக்குங் கருவியும், தொடக்கும் [தொடக்கும்]-கழிகோல்போலக் கழுத்திற் பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், (கயிற்றுத்தொடக்குமாம்) ஆண்டலை அடுப்பும் - ஆண்டலைப்புள்வடிவாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக்கொத்தி மூளையைக்கடிக்கும் பொறிகளும், [ஆண்டலைப்புள் - ஆண்மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒரு வகைப்பறவை; கோழியென்பாரு முளர்.] கவையும் - கிடங்கிலேறின் மறியத் தள்ளும் இருப்புக்கவையும், [கவை - மரக்கப்புப்போன்றது.] கழுவும் - கழுக்கோலும், [கழுக்கோல் - இருப்புமுட்கோல்.] புதையும் - அம்புக்கட்டும், புழையும் - எவ்வறைகளும், [எவ்வறை - மறைந்துநின்று அம்புதொடுத்தற்கு உரிய இடம்.] ஐயவித் தூளாமும் - பற்றுக்கை தூக்கிப் போகட்ட விட்டமும், [பற்றுக்கை - அம்புகட்டுங்கயிறு; விட்டம் - உத்திரம்.] (அன்றி, கதவை யணுகாதபடி கற்கவிதொடங்கிநாற்றுந் தூளாமுமாம். சாணம்புக்கூடென்பாரும், சிற்றம்புகள்வைத்தெய்யும் இயந்திர மென்பாரும் உளர்.) [கற்கவி - நிலையின்மேலே போடப்பட்டிருக்கும் பாவுகல்.] கையெயர் ஊசியும் - மதில்தலையைப்பற்றுவாரைக் கையைப்பொதிர்க்கும் ஊசிப்பொறிகளும், (இனி, கதவொடு சேராதபடி வைத்த நிரைக்கழு வெனினும் அமையும்.) [பொதிர்க்கும் - பொத்திக்கொள்ளும்.] சென்று எறி சிரலும் - மாற்றூர்மேற் சென்று கண்ணைக்கொத்துஞ் சிச்சிலிப்பொறியும், [சிச்சிலிப்பொறி - சிச்சிலியென்னும் பறவைவடிவான யந்திரம்.] பன்றியும் - மதில்தலையிலேறினூருட

லக் கோட்டாற்கிழிக்க இரும்பாற்செய்துவைத்த பன்றிப்பொறியும், பணையும் - வேய்வடிவாகப் பண்ணி அடிக்கத்தக்கமைத்த பொறியும், [வேய் - மூங்கில்.] எழுவும் சிப்பும் - கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலே வீழ விடு மரங்களும், (திறக்குங்காலத்து மேலேயெழுப்புகையால், 'எழுவுஞ்சிப்பும்' என்றார். இனி, சிப்பு - அகப்படக்குறுக்கே போடக்கடவ மரமுமாம்.) முழு விறல் கணையமும் - கணையமரமும், [முழுவிறல் - பூர்ணபலம். கணையம் - குறுக்கேபோகடும் மரம்.] கோலும் - விட்டேறும், [விட்டேறு - ஒருவகையீட்டி.]குந்தமும் - சிறுசுவளமும், [இதுவும் ஒருவகையீட்டியே.] வேலும் - வல்லையமும், [வல்லையம் - எறியீட்டி.] (ஈட்டி முதலியனவுமாம்.) பிறவும் - சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும்பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி என்பனவும். (சதக்கினி - நூற்றுவரைக் கொல்லி.) "மாற்றவர்மறப்படை மலைந்துமதில்பற்றின், நூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறிபொறியும், தோற்றமுறுபேய்களிறு தூற்றுபெரும் பாம்பும், கூற்றமனகழுகு தொடர் குந்தமொடு கோண்மா" எனவும், "விற் பொறிகள் வெய்யவிடுகுநிரை தொடரயில்வாள், கற்பொறிகள் பாவையன மாடமடுசெந்தீக், கொற்புனைசெய்கொள்ளி பெருங்கொக் கெழில்செய் கூகை, நற்றலைகள் திருக்கும்வலிநெருக்கு மரிலையே" எனவும், "செம்புருகுவெங் களிகளுமிழ்வதிரிந்தெங்கும், வெம்புருகுவட்டுமிழ்வ வெந்நெய்முகந்துமிழ்வ, அம்புமிழ்வவேலுமிழ்வகல்லுமிழ்வ வாகித், தம்புலங்களால்யவனர்தாட்படுத்த பொறியே" எனவும், "கரும்பொனியல்பன்றி கதகாகம் விடுசகடம், குரங்கு பொருதகரிஞெடு கூர்ந்தரிவதுண்ணூல், பரந்தபசும்பொற்கொடிகள்பதாகை யொடுகொழிக்குங், திருந்துமதில்தெவ்வர்தலை பனிப்பத்திருந்தினே" என வுஞ் சொன்னூர் சிந்தாமணியிலும்' எனக் காண்க.

'மயிற் செறி நிலை' என்பது - மயில்வடிவமானயந்திரமென்று பொருள் படும்; அயில் என எடுத்து உரைப்பினுமாம்.

திருவிளையாடற்புராணத்துத் திருநகரப்படலத்தில்

"மழுக்கள்வீசுவன" என்று தொடங்கி "வெறிகொளோம்பொறி" என்பதுவரையுள்ள செய்யுட்கள், இங்கு உணரத்தக்கன.

"சினத்தயில்கொலைவாள்சிலைமழுத்தண்டுசெக்கரக்தோமரமுலக்கை
கனத்திடையுருமின்வெருவருங்கவண்கலென்றிவைகணிப்பிலகொதுகி
னினத்தையுமுவணத்திறையையுமியங்குங்காலையுமிதமலநினைவார்
மனத்தையுமெறியும்பொறியுளவென்றுன் மற்றினியுணர்த்துவதெவனே"
என்றார் கம்பரும். (ங)

எசஅ. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(இ - ள்.) சிறு காப்பின் - காக்கவேண்டும்இடம் சிறிதாய், பேர் இடத்தது ஆகி - அகன்ற இடத்தை யுடைத்தாய், உறு பகை ஊக்கம் அழிப்பது -

(தன்னை) வந்துமுற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே, அரண்-அரணுவது; (எ - று.)

வாயிலும்வழியும்ஒழிந்தஇடங்கள் மலை காடு நீர்நிலை என்றிவற்றுள் ஏற்பன உடைத்தாதல்பற்றி 'சிறுகாப்பின்' என்றும், அகத்தோர் நலிவின்றி யிருத்தல்பற்றி 'பேரிடத்த தாகி' என்றும், தம்வலிநோக்கி இதுபொழுதே அழித்துமென்று வரும் பகைவர் வந்துகண்டால் அவ்வூக்கம் ஒழிதல்பற்றி 'ஊக்கமழிப்பது' என்றுங் கூறினார்.

(கு-ரை.) காக்கவேண்டும் - பாதுகாக்கப்படவேண்டிய. அகன்ற-பரந்த. முற்றிய-வெல்லும்பொருட்டுச் சேனைகளோடு சூழ்ந்த: முற்றுகைசெய்த. மன எழுச்சி - மனக்கிளர்ச்சி; உற்சாகம். 'வாயில்' என்றது, பகிரங்கமாகப் போக்குவரவுசெய்யப்படுகின்ற கோபுரவாயில்களை. 'வழி' என்றது, அந்தரங்கமாகப் போக்குவரவுசெய்தற்கு உரிய சுரங்கவழியை. 'நீர்நிலை' என்றது, அகழியை. ஏற்பன - பொருந்துபவற்றை. அகத்தோர் - உள்ளேயிருப்பவர். நலிவு இன்றி - இடநெருக்கத்தாற் சங்கடப்படுதலில்லாமல். தம்வலிநோக்கி-பிறரது வலிமையை ஒருபொருளாகப் பாராட்டாமல் தமதுவலிமையையே பெரிதாகக்கருதி. இதுபொழுதே அழித்தும் என்று வரும் - இப்பொழுதே அழித்துவிடுவோ மென்று வருகின்ற. கண்டால் - அக்கோட்டையைப் பார்த்தால். அவ்வூக்கம் - யாம் அழித்துவிடுவோ மென்ற அந்த ஊக்கம். சுற்றிலு முள்ள இடத்திற் பெரும்பான்மையான பகுதி மலையரண் காட்டரண் நீரரண் என்பவற்றாற் சூழப்பட்டிருத்தலின், வாயிலும் வழியுமாகிய சிறுபான்மையான பகுதியே காவலாளராலும் சேனைகளாலும் பாதுகாக்கப்படவேண்டுவ தாதலும், எவ்வளவுபேர் தங்கவேண்டுமாயினுந் தங்கும்படி உள்ளிடம் விசாலமாக இருத்தலும், கீழ்க்கூறிய உயர்ச்சி முதலியவற்றாற் பகைவர் வெல்லுதற்கு அரிதாய் அவர்க்கு அச்சந்தரவல்லதாதலும், கோட்டைக்கு உரிய இலக்கணங்க ளென்க.

சிறு காப்பின் - சிறிய காக்கவேண்டுமிடத்தை யுடையதாய்; இது, காப்புச்சிறிதாய் என மொழிமாற்றி யுரைக்கப்பட்டது. இங்ஙனமே 'பேரிடத்த தாகி' என்பதையும் இடம்பெரியதாகி என்று விகுதிபிரித்துக்கூட்டி யுரைக்கலாம். சிறுகாப்பு, பேரிடம் - பண்புத்தொகைகள். காப்பு என்னும் தொழிற் பெயர், ஆகுபெயராய், காத்தற்கு உரிய இடத்தை யுணர்த்திற்று. உறு பகை - உற்றபகை; நெருங்கிய பகைவர்: இறந்தகாலவினைத்தொகை. பகை - பகைவர்க்குப் பண்பாகுபெயர். ஊக்கம் - ஊக்குதல், கிளர்தல்; இப்பாட்டின் முதலடியில், 'சிறு', 'பேர்' எனப் பொருள்மாறுபாடுடைய சொற்கள் வந்தது, முரண்தொடையாம். (சு)

எசறு. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(இ - ள்.) கொளற்கு அரிது ஆய் - (புறத்தாராற்) கோடற்கு அரிதாய், கொண்ட கூழ்த்து ஆகி - உட்கொண்ட (பலவகை) உணவிற்றாய், அகத்தார்

நிலைக்கு - அகத்தாரது போர்நிலைக்கு, எளிது ஆம் - எளிதாய, நீரது - நீர்மை யை யுடையதே, அரண் - அரணுவது; (எ - று.)

கோடற்கு அருமை - இளைகிடங்குகளானும் பொறிகளானும் இடங் கொள்ளுதற்கு அருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவும் அடங்கின. நிலைக்கு எளிதாம் நீர்மையாவது - அகத்தார் விட்ட ஆயுதம் முதலிய புறத்தார்மேல் எளிதிற் சேறலும், அவர்விட்டன அகத்தார்மேற் செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின.

(கு - ரை.) புறத்தாரால் - கோட்டைக்கு வெளியிலுள்ளாரால், பகைவ ரால். கோடற்கு - தங்கள்வசப்படுத்திக்கொள்ளுதற்கு. உணவிற்று ஆய் - உண்ணப்படும் பொருள்களை யுடையதாய். போர்நிலைக்கு -நிலைத்துப் பகைவ ரோடு யுத்தஞ்செய்தற்கு. நீர்மை - தன்மை. இளை - காவற்காடு: என்றது, காட்டரண்; அன்றி, இருப்புமுட்களைச் சுற்றிலும்பதித்த வேலியுமாம். கிடங்கு - அகழி. "இளையுங் கிடங்கும்" என்றார் சிலப்பதிகாரத்தும். பொறிகள் - யந்திரங்கள். நுகரப்படுவன - அனுபவிக்கப்படும்பொருள்கள். 'உணவு தலைமைபற்றி' என்று தொடங்கிய வாக்கியத்தின் கருத்து - 'கூழ்' என்னும் உணவின் பெயர், இங்கே, மற்றை நுகரப்படுவனவற்றிற்கும் உப லக்ஷணமென்பது: நுகரப்படுமவற்றுள் உணவே பிரதான மாதலால் அத னையே யெடுத்துக்கூறினரென்பது, 'உணவு தலைமைபற்றிக் கூறினமையின்' என்றதனால் விளங்கும். விட்ட - பிரயோகித்த. முதலிய - முதலானவை. எளிதிற் சேறல் - சுலபமாகச்செல்லுதல். அவர் விட்டன - புறத்தார் பிர யோகித்தவை. பதணப்பரப்பு - மதிலுண்மேடையின் விசாலம். முதலாயின என்றதனால் மதில்பறித்து விடமுடியாதபடி அடியகலமுடைமை முதலியன கொள்வர். பலவகைக் காவல்மிகுதியை யுடைமையால் பகைவர் சுவாதீனப் படுத்திக்கொள்ள முடியாதபடி யிருத்தலும், எதிர்பாராமற் சடக்கெனப் பகை வர் நெருக்கித் தன்னுளிருப்பவர் வெளிச்செல்லவொண்ணாதபடி சூழ்ந்து போர்செய்யத் தொடங்கிவிடுவராயினும் பலநாள் வருத்தமில்லாமல் தன்னு ளிருப்பவர் உண்ணுதற்குவேண்டிய பண்டங்களை மிகுதியாக வுடைமையும், தன்னுளிருப்பவர் வெற்றிபெறும்படி போர்செய்தற்கு ஏற்ற இடவமைதியை யுடையதா யிருத்தலும் கோட்டைக்கு உரிய இலக்கணங்க ளென்க. மது-எ-எசை, எடு ஒப்புநோக்குக.

கூழ் - இங்கே, ஒருவகையிழியுணவின்பெயராகாது, உணவென்னுமாத் திரமாய் நின்றது. இளையை மிளையென்றும் ஓதுப. (நி)

எசசு. எல்லாப் பொருளு மூடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(இ - ள்.) எல்லாம் பொருள் உம் உடைத்து ஆய் - (அகத்தோர்க்கு வேண்டும்) பொருள்க ளெல்லாவற்றையும் (உள்ளே) உடைத்தாய், இடத்து உதவும் நல் ஆள் உடையது - (புறத்தோரால் அழிவெய்தும்) எல்லாக்கண் (அஃது எய்தாவகை) உதவிக் காக்கும் நல்ல வீரரையும் உடையதே, அரண்- அரணுவது; (எ - று.)

அரசன்மாட்டு அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்கள் உடைமைபற்றி, 'நல் ஆள்' என்றார்.

(கு-ரை.) அழிவு எய்தும் எல்லைக்கண் - அபாயம்நேருமளவில். அஃது எய்தாவகை உதவி - அவ்வழிவுநேரிடாதபடி உதவிசெய்து. அரசன்மாட்டு-அரசனிடத்தில். மறம் - பலபராக்கிரமங்கள். சோர்வு இன்மை - தளர்ச்சியில்லாமை; சோர்வு - அஜாக்கிரதையும், சோம்புதலுமாம். முதலிய என்றதனால், கல்வியறிவொழுக்கமுடைமை, நல்லோரிணக்கமுடைமை, தெய்வசிந்தையுடைமை முதலியனகொள்க. ஆள் - வீரன்; இது சாதிப்பெயராதலால், இதற்கு - வீரரென்று பன்மையாகப் பொருளுரைக்கப்பட்டது. இடத்து - சமயத்தில்; 'இடப்பொருளுணர்த்துஞ்சொற்கள் காலப்பொருளுணர்த்துதலும் உண்டு.' தன்னுள்ளேயிருப்பவர்கட்கு வேண்டிய சகலபதார்த்தங்களும் நிறையப்பெற்றிருத்தலும், சமயத்திற் பின்வாங்காது போர்செய்யவல்ல வீரர்களை யுடைமையும், கோட்டைக்கு உரிய இலக்கண மென்க. (கூ)

எசஎ. மூற்றியு மூற்ரு தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(இ - ள்.) மூற்றிஉம் - (புகலொடு போக்கு ஒழியும்வகை நெருங்கிச்) சூழ்ந்தும், மூற்ரு தெறிந்துஉம் - (அங்ஙனஞ்) சூழாது (நெகிழ்ந்தஇடன் நோக்கி) ஒருமுகமாகப் பொருதும், அறைப்படுத்துஉம்-(அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக்) கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கு - (புறத்தோராற்) கொள்ளுதற்கு, அரியது - அரியதே, அரண் - அரணுவது; (எ - று.)

இம்மூன்று உபாயத்துள்ளும் முதலது எல்லாப்பொருளும் உடைமையானும், ஏனைய நல்லாளுடைமையானும் வாயாவாயின.

(கு - ரை.) புகலொடுபோக்குஒழியும்வகை - முன்புவெளியில்வந்தவர் பின்புஉள்ளே செல்லுதலும், உள்ளேயுள்ளவர் வெளியிற்செல்லுதலுங் கூடாதபடி. நெருங்கிச் சூழ்ந்து - இடைவிடாமல்எங்குஞ்சூழ்ந்துகொண்டு. நெகிழ்ந்தஇடன் நோக்கி - காப்புத்தளர்ந்தஇடத்தை அல்லது காப்புத்தளர்ந்த காலத்தைக் குறிப்பிட்டுப்பார்த்து அதனையே பிரதானமாகக் கொண்டு. ஒருமுகமாகப் பொருது - ஒருங்குவந்துநெருங்கிப் போர்செய்து. அவர்தெளிந்தோரை விட்டு - அவர்கள்நம்பும்படியானவர்களை ஏவி, அவர்களைக்கொண்டு: (இங்கு அவர்என்றது- உள்ளிருந்தோரை.) கீழறுத்துத் திறப்பித்தும் - தம் அரசனைவஞ்சித்துஒழுகி வேற்றரசர்க்கு அந்தரங்கராய்நிலைமாறிக் காவல் கெடும்படி செய்தும். கொள்ளுதல் - பிடித்துக்கொள்ளுதல். மூன்றுஉபாயம்- மூற்றிப்பற்றுதல் முதலியன. முதலது - முதலாவது; மூற்றிப்பற்றுதல். ஏனைய - மற்றையவை; மூற்ரு திருந்து பற்றுதலும், அறைப்படுத்துப் பற்றுதலும். வாயாவாயின - பயன்படாதவையாயின. வாயா - பலிப்பனவல்ல. பகைவர் நெருங்கிச்சூழ்ந்தாலும் அகத்தார் பசிமுதலியவற்றால் வருந்தாதபடி எல்லாப்பொருள்களையு முடையதும், பகைவர்க்குஓரிடத்தேனும்நெகிழ்ச்சி கொடாதபடி கொடும்போர்செய்யும்வன்மையையும் பகைவர்க்குவசப்படாமை

லொழுகும் இராசவிசுவாசத்தையுமுடைய வீரர்களையுடையதுமாய், பகைவ ரால் எவ்வகையுபாயத்தாலும் கைக்கொள்ளமுடியாதபடியிருத்தல், கோட் டைக்கு உரிய இலக்கண மென்க.

முற்றி, எறிந்து, அறைப்படுத்து என்ற வினையெச்சங்கள், அடுக்கி, 'பற்ற' என்னும் வினையைக் கொள்ளும். இவ்வினைகட்கெல்லாம் கருத்தா - புறத்தார். (எ)

எசஅ. முற்றூற்றி முற்றி யவரையும் பற்றூற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

(இ - ள்.) முற்று ஆற்றி முற்றியவரைஉம் - (தானைப்பெருமையாற்) சூழ்தல்வல்லராய் வந்துசூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் - (தன்னைப்) பற் றிய அகத்தோர், பற்று ஆற்றி வெல்வது - (தாம்) பற்றிய இடம் விடாதே நின்றுபொருது வெல்வதே, அரண் - அரணவது; (எ - று.)

உம்மை - சிறப்புமை. பற்றின்கண்ணே ஆற்றி என வினையும். பற்று - ஆகுபெயர். 'வெல்வது' என, உடையார்தொழில் அரண்மேல்நின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்துநிற்குந்துணையேயன்றி வெல் லும் இயல்பினது என்பதாம். இதற்குப் பிறிதுரைப்பாரும் உளர்.

இவையேழுபாட்டானும், அதனது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) தானைப்பெருமை-சேனைமிகுதி. தன்னைப் பற்றிய - தன்னை இடமாகக்கொண்ட. தாம்பற்றிய-தாம் கொண்ட. வெல்வது - வெல்ல இட மாவது. சிறப்பு - இங்கே, உயர்வுசிறப்பு. பற்றின்கண்ணே ஆற்றி - தாம் கொண்ட இடத்திலே வலியராய்நின்று. கொள்ளுதலென்னும் பொரு ளுணர்த்தும் 'பற்று' என்னும் முதனிலைத்தொழிற்பெயர், தொழிலாகுபெய ராய், கொண்டஇடத்தை உணர்த்தியதனால், 'பற்று - ஆகுபெயர்' என்றார். அரணை இடமாகவுடைய வீரரது வெற்றித்தொழிலை அரண்மேல்ஏற்றி 'வெல்வ தரண்' என்றது, உடையாரதுதொழிலை உடைமை மேலேற்றிக் கூறிய உபசாரவழக்கு. பொறுத்துநிற்குந் துணையே யன்றி - எதிர்த்துத் தடுத்துத் தற்காத்துநிற்பதுமாத்திரமே யல்லாமல். பொறுத்து - தரித்து. இதற்குப் பிறிதுரைப்பாரும் உளர் - இக்குறட்பாவிற்கு வேறுவகையுரை கொள்பவரும் உண்டு: பற்றியார் - (தன்னிடத்துப்) பொருந்திய வீரர், பற்று ஆற்றி - (தமதுஅரசனிடத்து) அன்பை மிகுதியாகக்கொண்டு, (அதனால்), முற்றியவரையும் முற்று ஆற்றி வெல்வது - (தன்னை) முற்றுகை செய்த பல ரையும் முடியச்செய்து [அழியச்செய்து] வெல்லுதற்கு இடமாவதே, அரண்- அரணும் என வேறுவகையாகவும் இப்பாட்டுப் பொருள்படும். அதனது - அரணினது.

முற்று - முதனிலைத்தொழிற்பெயர்; முற்றுஆற்றி - முற்றல்வல்லராய் என்க; இனி, முற்றஆற்றி என்பதன் தொகுத்தலாக் கொண்டு, சூழவல்ல ராய் என்றும் உரைக்கலாம். வெல்வதுஎன்பதற்கு, வெல்லுதற்குக்கருவியா

வதுஎன்றும் உரைக்கலாம். வினைமுற்றுப்பெயர் கருவிப்பொருள்படுதற்கு 'வெல்வது அரண்' என்பதை உதாரணங் காட்டினர், இலக்கணக்கொத்துடையார். 'பற்றியார்வெல்வதரண், ஆற்றவினைவது நாடு, யாமிருப்பது உறையூர் இம்மூன்றும் அதிகரணமான கிருதந்தம்' என்பது, பிரயோகவிவேகவுரை. முற்றுற்றமென்பதற்குக் கருத்தா - முற்றியவர். பற்றுற்றல், வெல்லுதல் என்பவற்றுக்குக் கருத்தா - பற்றியார். பெருஞ்சேனையோடு வலியராய்வந்து சூழ்ந்த பகைவர்க்குப் பின்வாங்கித் தம்இடத்தை விட்டிடாமல் அவர்களை வென்று தம்இடத்தைப் பாதுகாத்துக்கொள்ளத்தக்க வலிய வீரர்களை யுடைமை, கோட்டைக்குஉரிய இலக்கண மென்க. (அ)

எசக. மூனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

(இ - ள்.) மூனை முகத்து - போர்தொடங்கின அளவிலே, மாற்றலர் - பகைவர், சாய - கெடும்வண்ணம், வினை முகத்து வீறு எய்தி - (அகத்தோர் செய்யும்) வினைவேறுபாடுகளான் வீறுபெற்று, மாண்டது - (மற்றும்வேண்டும்) மாட்சியையுடையதே, அரண் - அரணுவது; (எ - று.)

தொடக்கத்திற் கெட்டார் பின்னும் கூடிப்பொருதல் கூடாமையின், 'மூனை முகத்துச்சாய' என்றார். வினைவேறுபாடுகளாவன - பகைவர்தொடங்கிய போரினை அறிந்து, எய்தல் எறிதல் குத்துதல் வெட்டுதல் என்றிவை முதலாயின வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல். 'மற்றும்வேண்டும் மாட்சி' என்றது, புறத்தோர் அறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலாயின உடைமை.

(கு - ரை.) வினை வேறுபாடுகள் - பலவகைப் போர்த்தொழில்கள். வீறு பெற்று - சிறப்புப் பெற்று; மாட்சி - பெருமை. தொடக்கத்திற் கெட்டார் - ஆரம்பத்தில்தோற்று அழிந்தவர். பின்னும் கூடிப் பொருதல் - மீண்டுத் தம்மில் திரண்டு போர்செய்தல். எய்தல் - பாணங்களைப் பிரயோகித்தல். எறிதல் - கைவேல், சக்கரம் முதலியவற்றை மேல்வீசுதல். குத்துதல் - ஈட்டி முதலியவற்றால் ஊறுபடுத்தல். வெட்டுதல் - வாளினால் துணித்தல். அதனைச் சாய்ப்பன - பகைவரதுபோரை அழித்தற்கு வேண்டியவற்றை. கண்ட - செய்த. சுருங்கைவழி - சுரங்கவழி; கோட்டையினுள்ளே அமைத்துள்ள கள்ளவழி. முகமென்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - தொடக்கமென்னும் பொருளையும், பின்னது - விகற்பமென்னும் பொருளைத் தந்தது. சாய என்னுஞ் செயவெனெச்சம் - காரியப்பொருள தாதலால், எதிர்காலம்; இது, 'செய்யும்' என வருவிக்கப்பட்ட பெயரெச்சவினையைக் கொள்ளும்: அன்றி, சாய வீறெய்தி என இயைப்பினுமாம். பகைவர் எளிதிலழியும்படி பலவாறு நன்கு போர்செய்து வெல்லும் வல்லமையையுடைய வீரர்களோடு கூடிச் சிறப்புற்றதே நல்லரணென்பதாம். (கூ)

எறுo. எனைமாட்சித் தாகியக்கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்லை தரண்.

(இ - ள்.) அரண்—,எனை மாட்சித்து ஆகியக்கண் உம் - (மேற்சொல்லப் பட்ட) மாட்சியெல்லாம் உடைத்தாய இடத்தும், வினை மாட்சி இல்லார் கண் -வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு, இல்லது - (அவை) இலதாம்.

வாளாஇருத்தலும் அளவறியாதுசெய்தலும் ஏலாததுசெய்தலும் எல் லாம் அடங்க 'வினைமாட்சியில்லார்' என்றும், ஏற்ற வினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியு மென்பார் '*அவை யுடைத்தன்று' என்றும் கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், காப்பாரை யின்றி யமையா தென்பது கூற ப்பட்டது.

(கு - ரை.) மேல் - முன். வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு - போர் முதலிய வெல்லும் உபாயவகைகளைச் செய்தலில் திறமையில்லாதவர் களிடத்தில். அவை இலதாம் - முன்சொல்லப்பட்ட மாட்சிமைகளையெல் லாம் பெற்றிருந்தும் பயனின்மையாற்பெறுதேபோலும் என்றபடி. வாளா இருத்தல் - வெல்லத்தக்க உபாயங்களைச் செய்யாமற் சும்மா இருந்துவிடுதல். அளவறியாதுசெய்தல் - எதிர்ப்பவருடைய அளவையும் தன் அளவையும் ஆலோசித்தறியாது மிகவும் குறையவுஞ் செய்தல். ஏலாதது செய்தல் - வெற்றிப்பயனைவிளைத்தற்கு ஏற்றதல்லாத உபாயத்தைச் செய்தல். இங்குக் காட்டிய மூன்றும், வெல்லத்தக்க உபாயங்களல்ல. காவாக்கால் - பாதுகாவா விட்டால். அம்மாட்சிகள் - கீழ்க்கூறிய சிறப்புக்கள். 'அழியும்' என்பதற் குக் கருத்தா - 'அரண்.' காப்பாரை இன்றியமையாது - பாதுகாக்கும் வீரர் அவசியம் வேண்டும். எனை - எத்தனை யென்பதன் மரூஉ; இனி, எனை என் பதை ஏனை என்பதன் தொகுத்த லெனக் கொண்டு, மற்றைமாண்புகளை யுடைத்தாயவிடத்தும் வினைமாண்பில்லாதவரிடத்து அரண் பயன்படாது என உரைப்பினுமாம். இதனோடு அங்கவியலில் அரணியல்முடிந்தது. (கo)

எசு - ஆம் அதிகாரம்—பொருள்செயல்வகை.

இனி, பெரும்பான்மையும் நாட்டானும் அரணனும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் திறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார். †

(கு - ரை.) நாட்டால் ஆக்கவும் அரணால் காக்கவும் படுவதாகிய செல் வம் என முறைநிரனிறையாகப் பொருள்கொள்க. ஆக்கவும் - உண்டாக்க வும், வளர்க்கவும். பொருளைச் செய்தல் - செல்வத்தைச் சம்பாதித்தல். திறம் - வகை, விதம். இவ்வதிகாரத்தை நாடு அரண் என்னும் அதிகாரங் களின்பின் வைத்த முறைமைக்குக் காரணம், வெளிப்படை; பொருள் உண் டாகிவளர்தற்கும் காக்கப்படுதற்கும் நாடும் அரணும் காரண மாதலால், காரண காரியமுறைப்படி வைத்தனரென்க. இவ்வதிகாரம்ஒன்றும், அங்கவியலில்

---

* பி - மீ: 'அவையிலதாம்' or 'இல்லதரண்'

† அஃதாவது இன்னதென்பதூஉம், அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்என்று சங்கப்பிரதியில் ஒருவாக்கியம் இங்குக்காணப்படுகின்றது.

'பொருளியல்' எனப்படும்: ''ஒன்று ஒண்கூழ்'' என்று போக்கியார் கூறியிருத்தல் காண்க. பொருள்செயல் வகை என்ற தொடரில், முன்னது-இரண்டாம்வேற்றுமைத்தொகையும், பின்னது - ஆறாம்வேற்றுமைத்தொகையுமாம்.

எருக. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(இ - ள்.) பொருள் அல்லவரை - ஒருபொருளாகமதிக்கப்படாதாரையும், பொருள் ஆகசெய்யும் - *மதிக்கப்படுவாராகச்செய்யவல்ல, பொருள் அல்லது - பொருளே யொழிய, பொருள் இல்லை - (ஒருவனுக்குப்) பொருளாவது இல்லை.

மதிக்கப்படாதார் - அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் - அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற் சென்று நிற்கப் பண்ணுதல். அதனால், ஈட்டப்படுவது அதுவே; பிறிது இல்லை என்பதாம்.

(கு - ரை.) பொருளாக - வஸ்துவாக. மதிக்கப்படுவாராக - ஒருபொருளாக மதிக்கப்படுபவராக. பொருளேயொழிய - செல்வத்தைத் தவிர. பொருளாவது - பாராட்டிச் சம்பாதிக்கத்தக்க வஸ்துவாகுவது. இழிவுசிறப்பும்மை தொகுத்தல் விகாரப்பட்டது, 'பொருளல்லவரை' என்பதன் இறுதியில். அவர்பால் - அறிவில்லாதவரும் இழிகுலத்தவருமான செல்வமுடையவரிடத்தில். அதனால்-ஆதலால். ஈட்டப்படுவது-சம்பாதிக்கவேண்டுவது. அதுவே - செல்வமே. பிறிது - மற்றொன்று. இக்குறட்பாவில், 'பொருள்' என்ற சொல் வெவ்வேறுபொருளில் வந்ததனால், சொற்பின்வரு நிலையணி. ''பூரியர்தமை வேந்தாக்கும் புவிபுரப்பிக்குந் துய்க்குஞ், சீரியவுண்டிசேர்க்குந் தேவர் தமுலகம்போக்குங், காரியமனைத்துங் கூட்டுங் கருதலர்தம்மை வாட்டுங், கூரியதிதன்மேலில்லை கொழும்பொனீர் கொண்மினென்றூர்'', ''என்சொலினும், கைத்துடையான் காற்கீழ் ஒதுங்குங் கடன்ஞாலம்'' என்றூர் பிறரும்.

அல்லது-எதிர்மறைக் குறிப்புவினையெச்சம்; அ-சாரியை, து-விகுதி. (க)

எருஉ. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(இ - ள்.) இல்லாரை - (எல்லாநன்மையும்உடையராயினும்) பொருளில்லாரை, எல்லார்உம் எள்ளுவர் - யாவரும் இகழ்வர்; (எல்லாத் தீமையும் உடையராயினும்), செல்வரை - அஃதுஉடையாரை, எல்லார்உம் - யாவரும், சிறப்பு செய்வர் - உயரச்செய்வர்; (எ - று.)

உயரச்செய்தல் - தாம் தாழ்ந்துநிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகைவர் நட்டார் நொதுமலர் என்னும் மூவகையாரும் ஒத்தலின், 'யாவரும்' என்றார். பின்னும் கூறியது, அதனை வலியுறுத்தற்பொருட்டு.

(கு - ரை.) நன்மை - நற்குணம். தீமை - தீக்குணம். அஃது உடையார் - பொருளுடையவர். உயரச்செய்வர்-மேம்படுத்துவர். தாழ்ந்து-

* பி - ம்: படுவாராகச்.

பணிக்கு. இகழ்தற் கண்ணும் - இகழ்தலிலும். தாழ்தற்கண்ணும் - கீழ்ப் படிந்திருத்தலிலும். நட்டார் - நினைஇதர். நொதுமலர் - அயலார்; பகை வரும் நண்பரு மல்லாதவர்: இவர், உதாசீந ரெனப்படுவர். பொருளில்லாத வரைப் பகைவர் நண்பர் அயலார் என்னும் மூவரும் இகழ்ந்துபேசுவர் என் றும், பொருளுடையவரிடம் அம்மூவகையோரும் தாழ்ந்துநிற்பர் என்றுங் கொள்க. 'பின்னுங்கூறியது' என்றது, ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்'' என்று மேற்கூறியதனோடு அமையாது, மீண்டும் 'செல் வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு' என்று கூறியதை. அதனைவலியுறுத் தற்பொருட்டு - அப்பொருளின் சிறப்பை உறுதிப்படுத்திக்காட்டுதற்காக வென்க: இவ்வாறுகூறுவது, அநுவாதத்தில் அடங்கும். செல்வத்தின் தன் மையை எதிர்மறைமுகத்தாலும் உடன்பாட்டுமுகத்தாலும் இரண்டு வாக் கியங்களால் இக்குறளில் விளக்கினர். பொருளுடையவர் மதிப்பையும், பொருளில்லாதவர் அவமதிப்பையும் அடைவ ரென்க. செல்வத்தவர் என் பது செல்வர் என அத்துச்சாரியை முதலியன தொக்குநின்ற தென்பர். 'சிறப்புச்செய்வர்' என்றது, ஒருசொல்தன்மைப்பட்டு, 'செல்வரை' என்ற செயப்படுபொருளுக்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. இனி, 'செல்வரை' என் பதைச் செல்வர்க்கு என உருபுமயக்கமாகக்கொள்ளுதலு மொன்று. ''நல் லாவின் கன்றுயி ரூகும் விலைபெறூஉம், கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற் செல்லும், புல்லீரப்போழ்தி னுழவேபோன் மீதாடிச, செல்லாவா நல் கூர்ந்தார் சொல்'' என்ற நாலடியாரையும், ''கல்லானே யாளுங் கைப் பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல் லானே, இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்'' என்ற நல்வழியையும் இங்கே அறிக. இக்குறள், சேர மான்பெருமாள்நாயனரது திருக்கைலாயஞானவுலாவென்னுந் திருவாதியுலா வில் எடுத்தாளப்பட்டுள்ளது. (உ)

எருஉ. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(இ - ள்.) பொருள் என்னும் - பொருளென்று (எல்லாராலுஞ்) சிறப் பிக்கப்படும், பொய்யா விளக்கம் - கந்தாவிளக்கு,—(தன்னைச் செய்தவர்க்கு), எண்ணிய தேயத்து சென்று - அவர் நினைத்த தேயத்துச் சென்று, இருள் அறுக்கும் - (பகையென்னும்) இருளைக் கெடுக்கும்; (எ - று.)

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய்வருதல்பற்றி 'பொ ய்யாவிளக்கம்' என்றும், ஏனவிளக்கோடு இதனிடை வேற்றுமைதோன்ற 'எண்ணியதேயத்துச்சென்று' என்றுங் கூறினர். ஏகதேசவுருவகம்.

இவைமூன்றுபாட்டானும், பொருளதுசிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) கந்தா விளக்கு - அழியாத தீபம்; தூண்டவேண்டாத சுடர்ப் பிழம்பு. தன்னைச் செய்தவர்க்கு - தன்னைச் சம்பாதித்தவர்க்கு. ஏன விளக்கோடு இதனிடை வேற்றுமை - மற்றைச் சாதாரணவிளக்குக்களோடு இப்

பொருள்விளக்குக்கு உள்ள வேறுபாடு. ஒருவர் எடுத்துக்கொண்டுபோன இடத்திலேமாத்திரம் சென்று நின்று இருளேயொழிக்கின்றவிலக்கினும், அவர்நினைத்ததேயங்களிலெல்லாஞ் சென்று பகையிருளேயறுக்கின்ற இப்பொருள்விளக்குக்கு உள்ள விசேடந் தோன்ற, 'எண்ணிய தேயத்துச் சென்று' என்ற ரென்க. 'பொருளென்னும் விளக்கம்' என்று பொருளினிடத்து விளக்கின் தன்மையை ஏற்றியதற்கு ஏற்ப, 'பகையென்னுமிருளுக்கும்' என்று பகையினிடத்து இருளின் தன்மையை ஏற்றிக்கூறுமல் சும்மா 'இருளறுக்கும்' என்றதனால், ஏகதேசஉபகாலங்கார மாயிற்றென்று இங்கு ஒருசாரார் விவரிக்கின்றனர். இது, தவறு: இவ்விடத்து ஏகதேசவுருவகம் என்பது - பிற்காலத்து அறியாதவாறு செருகப்பட்டதாதல் வேண்டும்: இங்கே, பகையறுக்குமென்றுகூறுது பகையை இருள் என்ற உருவகச்சொல்லாயே கூறியிருத்தலால், இது ஏகதேசவுருவகமாகாது: முற்றுருவகமே: உபமேயத்தை உபமானச் சொல்லாலேயே கூறுவதும், வடநூலார்க்கு உடன்பாடே. விளக்குத் தான் உள்ளவிடத்து இருளைப் போக்குதல் போல, பொருள் தன்னையுடையானுக்கு எங்கும் பகையை யொழிக்குமென்பது, தேர்ந்த பொருள். இங்கு, விளக்காகிய உபமானத்தினும் பொருளாகிய உபமேயத்திற்குச் சிறப்பிருத்தலைக் காட்டுகின்ற வேற்றுமையணி தொனிக்குமாறு அறிக. (கூ)

எருஉ. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(இ - ள்.) திறன் அறிந்து-(செய்யுந்)திறத்தினை அறிந்து, தீது இன்றி-(அரசன்) கொடுங்கோன்மையிலனாக, வந்த - உளதாய, பொருள்—,—அறன் ஈனும்-(அவனுக்கு) அறத்தையும் கொடுக்கும்; இன்பம் உம் ஈனும் - இன்பத்தையுங் கொடுக்கும்; (எ - று.)

செய்யுந் திறம் - தான்பொருள்செய்தற்கு உரிய நெறி. 'இலனாக' என்பது, 'இன்றி' எனத் திரிந்துநின்றது. 'செங்கோலன்' என்று புகழப்படுதலானும் கடவுட்பூசைதானங்களாற் பயன் எய்தலானும் 'அறனீனும்' என்றும், நெடுங்காலம் நின்று துய்க்கப்படுதலான் 'இன்பமுமீனும்' என்றும் கூறினர். அதனால், அத்திறத்தான் ஈட்டுக என்பதாம்.

(கு - பை.) செய்யுந் திறம் - பொருள்சம்பாதிக்கின்ற வகை. கொடுங்கோன்மையிலனாக - நீதிதவறுதலனுயிருக்க. மூக்காலத்துக்கும் பொதுவாகிய இன்றியென்னும் எதிர்மறைக்குறிப்புவினையெச்சத்துக்கு, இல்லாமலிருத்தலால் என்று தெரிநிலைச்செயவெனெச்சத்துக்கு உரிய காரணப்பொருள் கொண்டா ராதலால், 'இலனாகவென்பது, இன்றியெனத்திரிந்துநின்றது' என்றார். செங்கோலன் - நீதிதவறுதவன். கடவுட்பூசைதானங்களால் பயன் எய்தல் - தேவபூசையுந் தானமுஞ் செய்து அறத்தின்பயனை யடைதல். நெடுங்காலம் நின்று துய்க்கப்படுதலான் - வெகுகாலம் அழியாது நின்று அனுபவிக்கப்படுதலால். அதனால் - ஆதலால். அத்திறத்தான் ஈட்

டுக - நீதிநெறிதவறுமற் பொருள்சம்பாதிக்கும்வழியை யறிந்து அவ்வழியாற் சம்பாதிக்கவேண்டும். தானதருமங்களைச் செய்து புகழும் புண்ணியமும் பெறுதலும், தான் அனுபவித்துச் சுகம்பெறுதலும் பொருளுடையானுக்கே ஆகு மென்க; "வடுவிலாவையத்து மன்னியமூன்றி,னடுவணைதெய்த விருதலை யுமெய்தும்," "அருள்கொண்டியற்றும் அறமும் அறநெறியாய்ந்தமென்பூச், சுருள்கொண்டகோதையர்தோள்புணரின்பமும் சூழ்சுரும்பு, மருள்கொண்டு பாடுமதுமலர்ச்சோலையிலனேயாய், பொருள்கொண்டொழியமுற்று தென்று ஞாலம் புகலு மன்றே", "இல்லார் இருமையும் நல்ல எய்தார்", "வறியார் இருமையறியார்" என்றார் பிறரும். (சு)

எருடு. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

(இ - ள்.) அருளொடு உம் - (தாம் குடிகண்மாட்டுச் செய்யும்) அருளோடும், அன்பொடு உம் - (அவர் தம்மாட்டுச் செய்யும்) அன்போடும், வாரா - கூடிவாராத, பொருள் ஆக்கம் - பொருளீட்டத்தை, (அரசர்), புல்லார் - பொருந்தாது, புரள விடல் - கழியவிடுக; (எ - று.)

அவற்றோடுகூடி வருத லாவது, ஆறிலொன்றுய்வருதல். அவ்வாறுவாராத பொருளீட்டம் பசுமட்கலத்துள்நீர்போலச் செய்தானேயுங் கொண்டு இறத்தலின், அதனை 'புல்லார்' என்று ஒழியாது 'புரளவிடல்' என்றுங்கூறினர்.

(கு - ரை.) தாம் - அரசர்தாம். இங்கே, அருள் - தம்மினுந் தாழ்ந்தவரிடத்துச்செய்யும் நேயம். அவர் - அக்குடிகள். இங்கே, அன்பு - தம்மினும் உயர்ந்தவரிடத்துச் செய்யும் நேயம். பொருளீட்டம் - செல்வச்சம்பாதிப்பு. அவற்றோடு - அருளன்புகளோடு. ஆறி லொன்றுய் வருதல் - குடிகள் சம்பாதிக்கும்பொருளில் ஆறிலொருபாகமாகப்பெறுதல்; "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றுங்கு, ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை" என்றபடி பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தான் என்னும் ஐந்து இடத்திற்கும் இல்வாழ்வான் பகுத்துக்கொடுக்குங் கூறுகளுள்ளுடன் ஒன்றுய் வருதல்: "ஆறிலொன் றறமென வருளி னல்லதொன், றூறுசெய் தூலகினி னுவப்ப தில்லையே" என்ற சூளாமணியையுங் காண்க. பசுமட்கலம் - சுடப்படாத பச்சைமண்பாத்திரம்; பசுமை - ஈரத்தின்மேலது. பசுமட்கலத்துள் நீர்போலச் செய்தானேயுங் கொண்டு இறத்தலின் - பசுமட்கலத்துள்ளேபெய்துவைத்த நீர் அக்கலத்தோடு தானும் ஒருசேர அழிதல் போல, நீயவழியாற்சம்பாதித்துச் சேர்த்துவைக்கப்பட்ட பொருள் அச்சம்பாதித்தவனோடு தானும் ஒரு சேர அழிந்திடு மாதலால்: "சலத்தாற் பொருள் செய்தேமாக்கல் பசுமட், கலத்துள் நீர்பெய் திரீஇயற்று" என்பது, வினைத்தூய்மையென்னும் அதிகாரத்து ஈற்றுச்செய்யுள்; அக்குறளினுரையில் 'அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம்' எனப் பரிமேலழகர் உரைத்ததை அறிக. அதனை - அவ்வகையான திரவியசம்பாத்தியத்தை. புல்லார்என்று

ஒழியாது-புல்லார் என்றவளவோடு நிறுத்தாமல். 'புல்லார்' என்றும், 'புரள விடல்' என்றும் இருவகையாகக்கூறி மறுத்தது, வற்புறுத்துதற்கென்க. (நி)

எடுகூ. உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னெஞ்ஞர்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(இ - ள்.) உறு பொருள் உம் - (உடையார் இன்மையின் தானேவந்து) உற்ற பொருளும், உல்கு பொருள் உம் - சுங்கமாகிய பொருளும், தன் ஒன்ஞர் தெறு பொருள் உம் - தன்பகைவரைவென்று திறையாகக்கொள்ளும் பொருளும்,—வேந்தன் பொருள் - அரசனுக்கு உரிய பொருள்கள்; (எ - று.)

உறு பொருள் - வைத்தார்இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டு எடுத்ததூஉம், தாயத்தார்பெறுதலூஉமாம். சுங்கம் - கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறு பொருள்- தெறுதலான் வரும் பொருள் என விரியும். ஆறிலொன்று ஒழியவும் உரியன கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், அஃது ஈட்டும்நெறி கூறப்பட்டது.

(கு - ரை.) உடையார் இன்மையின் - சொந்தக்காரர் இல்லாமையால். உற்ற - அடைந்த; கிடைத்த என்றபடி. சுங்கம் - ஆயம்; தீர்வை. திறை- அரசிறை, கப்பம். வைத்தார் - சம்பாதித்துவைத்தவர். நிலத்தின் கட் கிடந்து - தரையின்கீழ்ப் புதையலாய்ப்பொருந்தியிருந்து. தாயத்தார் பெறு தலூஉம் - பங்காளிகள் அடையாததும். ஒருவன்சம்பாதித்த சொத்துக்கு, முதலில் அவன் சந்ததியாரும், அவர்இல்லாவழிப் பின்பு பங்காளிகள் இருப் பின் அவரும், அவரும் இல்லாவிடின் அப்பால் அரசனும் உரிய ரென்க. கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது - மரக்கலமார்க்க மாகவும் தரைவழியாகவும் வெளியூர்களிலிருந்து கொணரப்படுகின்ற வர்த்த கப்பொருள்களுக்கு வரியாக விதித்துவாங்கும் பொருள். தெறுதலான் வரும் - பேர்ச்செய்துவெல்லுதலால் வருகின்ற. ஆறிலொன்று ஒழியவும் உரியன கூறியவாறு-குடிகளிடத்து வாங்கும் ஆறிலொருபொருளல்லாமலும் மற்றும் அரசனுக்கு உரியவை சொல்லியபடி; ஆறிலொன்று உரியதாதல் மூன் றினகுறளாற் பெறப்பட்டதனால், மற்றும் உரியவற்றை இதிற் கூறினு ரென்க. அஃது ஈட்டும் நெறி - பொருள் சம்பாதிக்கின்ற வழி.

போர்வீரர் தாம்வென்ற பொருள்களிற் பிறந்தவற்றைத் தம் அரசனுக் குக் கொடுத்தல்வேண்டு மென்பது, வேதமொழி. உடையவனறியப்படாத பொருள் அகப்பட்டால் அதனை அரசன் மூன்றுவருஷகாலம் பாதுகாத்து வைத்திருந்து அதற்குள் உடையவன் வந்துபெற்றுக்கொள்ளாவிடின் பின்பு அதனைத் தனதாக்கிக்கொள்க. பிறன் இழந்தபொருள் அகப்பட்டால் அரசன் அதனைப் பாதுகாத்துவைத்து, தான் பாதுகாத்துவைத்ததற்காக அதில் ஆறிலொருபகுதியையாவது, பத்திலொருபகுதியையாவது பன்னி ரண்டிலொருபகுதியையாவது அப்பொருளுக்கு உடையவனது தகுதிக்கு

ஏற்றவாறு நல்லோர்முறைமைப்படி எடுத்துக்கொண்டு மற்றதை உடையவனுக்குக் கொடுத்திடவேண்டும். ஒருவன் தான் கண்டெடுத்த புதையலோ யாவது, பிறன்கண்டெடுத்த புதையலோயாவது, தனக்குச்சேர்தற்கு உரிய தென்று சத்தியமாக நிலைநாட்டுவானாயின், அரசன் அதில் ஆறிலொரு பகுதியையாவது பன்னிரண்டிலொருபகுதியையாவது எடுத்துக்கொண்டு மற்றதை அவனுக்குக் கொடுத்திடவேண்டும். முன்னோரால் வைக்கப் பட்டதும், உடையவனுணரப்படாததுமான புதையலே அரசன் தான் கண்டெடுத்தால் அதில் அந்தணர்க்குப் பாதிகொடுத்து மற்றதைத் தன் கிரவியசாலையிற் சேர்க்கவேண்டும். இங்ஙனம் அடைதற்குக் காரணம், அரசன் பூமிக்குத் தலைவனாதல். கலத்தினுங் காலினும் வரும் பண்டங்களினுல் வணிகர்க்கு வரும் இலாபத்தில் இருபதிலொருகூறு அரசன் வாங்கிக்கொள்ள வேண்டும்'' என்று மனு - எ - கூஎ, அ - கூ0, கூக, கூடு, கூஅ, கூக, கூகஅ - ஸ்லோகங்களிற் கூறியவை இங்குக் காணத்தக்கன.

உல்கு பொருள் - பண்புத்தொகை. உல்கு - ஸுல்க மென்னும் வட சொல்லின் விகாரம்: இதுவே, சுங்கமெனச் சிதைவதும். ஒன்னார்த் தெறு-உயர்திணையில் ஐயுருபு தொக்கது; தகரம்இரட்டிற்று: ''இயல்பின்விகாரம்''. தெறுபொருள் - காரணப்பொருளில்வந்த இறந்தகாலவினைத்தொகை. (மூதனிலைத்தொழிற்பெயரின்மேல் வந்த மூன்றும்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கதொகை யாயின், 'தெறுப்பொருள்' என நிற்கும்.) செய்யுளின் பம் நோக்கி 'தெறுபொருள்' என இயல்பாயிற்றென்றலும் ஒன்று. (கூ)

எருஎ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(இ - ள்.) அன்பு ஈன் - அன்பினுல் ஈனப்பட்ட, அருள் என்னும் குழவி—,—பொருள் என்னும் - பொருளென்று உயர்த்துச்சொல்லப்படும், செல்வம் செவிலியால் - செல்வத்தையுடைய செவிலியான், உண்டு-வளரும்.

தொடர்புபற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவ தாகலின், அதனை 'அன்பீன் குழவி' என்றும், அது வறியார்மேற்செல்வது அவ்வறுமை களையவல்லார்க்கு ஆகலின் பொருளை அதற்கு 'செவிலி' என்றும், அஃதுலகிற்செவிலியர் போலாது தானே எல்லாப்பொருளும் உதவிவளர்த்தலின் 'செல்வச்செவிலி' என்றுங் கூறினர்.

(கு - சை.) ஈனப்பட்ட - பெறப்பட்ட. குழவி - குழந்தை. பொருளென்னுஉயர்த்துச்சொல்லப்படுஞ் செவிலியென இயையும். 'செல்வத்தையுடைய' என்பதற்கு - வேண்டும் பொருள்களைக் கொடுக்குந்தன்மையுடைய என்று கருத்து; அது, விசேடவுரையில் 'தானே எல்லாப்பொருளும் உதவி வளர்த்தலின், செல்வச்செவிலி யென்று கூறினர்' என்பதனுல் விளங்கும். செவிலி - வளர்க்குந்தாய். தொடர்புபற்றுதே - யாதொரு சம்பந்தமும் மில்லாமலே. 'வருத்தமுற்றூர்' என்று சிறந்தஉயர்திணையாற் கூறினராயினும், வருத்

தமுற்ற அஃறிணைப்பிராணிகளும் உபலக்ஷணத்தாற் கொள்ளத்தக்கன. தொடர்புபற்றி - உறவுமுறை இனேகம் உரிமை முதலிய யாதாயினும் ஒருசம் பந்தத்தால். கீழ் அன்புடைமை யென்ற அதிகாரத்தில் 'அன்புடைமையாவது - வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனுதல்' என்றும், அருளுடைமை யென்ற அதிகாரத்தில் 'அருளாவது - தொடர்புபற்றுது இயல்பாக எல்லாவுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை' என்றும் பரிமேலழகர் கூறிப்போந்தவற்றாலும், அன்புக்கும் அருளுக்கும் உள்ள வேறுபாடு விளங்கும். முன் "அன்பீனுமார்வமுடைமை யதுவீனு, கண்பென்னு நாடாச்சிறப்பு" என்ற குறளில் 'ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத் தரும்' என்றதனாலும், அன்பு அருளுக்குக் காரணமாதல் அறிக. தொல்காப்பியவுரையில் 'அன்பாவது - மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சிநிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம்' என்றும், 'அன்பென்பது - அருட்குமுதலாகி மனத்தில் நிகழும் நேயம்: அஃதுடையார்க்குப் பிறர்கண் துன்பங்கண்டவழிக் கண்ணீர்விழு மாகலின், அவ்வருளானே அவ்வன்புடைமை விளங்குமென்பது' என்றும், 'அளியாவது - அன்புகாரணத்தால் தோன்றும் அருள்' என்றும் உரைத்தவை உணரத்தக்கன. 'அருளாவது - ஒன்றின் துயர்கண்டால் காரணமின்றித் தோன்றும் இரக்கம்; அன்பாவது - தன்னுற்புரக்கப்படுவார்போல் உளதாகிய காதல்' என்பர், புறநானூற்றுரையாசிரியரும். முதிர்ந்துழி - மிக்கவிடத்து. அதனை - அருளை. அது - அருள். வறுமை கலையவல்லார் - பிறரது வறுமையை நீக்கவல்ல செல்வர். அதற்கு - அருளுக்கு. அஃது - செல்வம். உலகிற்செவிலியர்போலாது - உலகத்திலுள்ள சாதாரண செவிலித்தாயர்போ லாகாமல். இச்செய்யுள், இயைபுருவகவணி; அதன் இலக்கணம் - உபமானத்தையும் உபமேயத்தையும் வேற்றுமையொழித்து ஒற்றுமைதோன்றக் கூறுகையில், பலபொருள்களை ஒன்றுக்குஒன்று இயைபுடையனவாக நிறுத்துவது; இங்கு, 'ஈன்' என்ற வினைப்பகுதியின் ஆற்றலால், அன்பு தாயாதல் பெறப்படும். (எ)

எருஅ. குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.

(இ-ள்.) தன் கைத்து-தன்கையதாகிய பொருள், உண்டாக—, ஒன்று செய்வான் - ஒருவினையைஎடுத்துக்கொண்டான், வினை - (அதனைச்) செய்தல்,—குன்று ஏறி யானை போர் கண்டு அற்று - (ஒருவன்) மலைமேல் ஏறி நின்று யானைப்போரைக் கண்டா லொக்கும்; (எ - று.)

கைத்துஉண்டாக ஒன்றுசெய்வா னெனக் கூட்டுக. 'ஒன்று' என்பது - வினையாதல், 'செய்வான்' என்றதனாற் பெற்றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமும்இன்றி நிலத்திடை யானையும் யானையும் பொரு போரைத் தான் இனிது இருந்து காணுமதுபோல, கைத்துஉண்டாக வினையைமேற்கொண்

டானும் அச்சமும்வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிதுஇருந்து முடிக்கு மென்பதாம்.

(கு - ரை.) கையது - கையிலுள்ளது; சொந்தமானது என்றபடி. எடுத்துக்கொண்டான் - செய்ய உடன்பட்டவன்; 'மேற்கொண்டான்' என்பதற்கும் இதுவே பொருள். அதனை - அத்தொழிலை. யானைப்போர் - யானைகள் ஒன்றோடொன்றுசெய்யும் போர். ஒன்று - ஒருதொழிலுக்கு, எண்ணலளவையாகுபெயர்; 'ஒன்று இரண்டு என்னுந்தொடக்கத்து எண்ணுப்பெயர்கள், ஆகுபெயராகாது உரியபெயராகவே எண்ணப்படுபொருளின்மேலும் நிற்கும்' என்பர், சேனாவரையர். குன்று ஏறியான் - மலைமேல் ஏறியவன். வருத்தமுமின்றி இனிதிருந்துகாணுமது என இயையும். பொரு போர் - செய்கின்ற சண்டை. வல்லாரை ஏவி - தான் தொடங்கிய தொழிலைச் செய்து முடிக்க வல்லவர்களை நியமித்து. முடிக்கும் - நிறைவேற்றுவான். யானைப் போர் - யானைகளது போர். கண்டற்று - கண்டாலற்று என்பதன் விகாரம்; இனி,கண்டதற்று என்பது கண்டற்று எனத்தொகுத்தல்விகாரப்பட்டதென்றலும் ஒன்று. ஆல் - அசை. கைத்து - கையிலுள்ளது; பொருள்.

இச்செய்யுளின் பொழிப்புரையின்பின் 'கைத்து உண்டாக ஒன்றுசெய்வான் எனக் கூட்டுக' என்று அந்வயத்தை விளக்குகின்ற வாக்கியம், அச்சுப் பிரதிகளி லில்லை யாயினும், பல ஏட்டுப்பிரதிகளில் உள்ளது. இச்செய்யுளில், தன்கைத்துண்டாக ஒன்றுசெய்வான் வினை என உபமேயமும், குன்றேறி யானைப்போர் கண்டு என உபமானமும், அற்று என உவமவுருபும் விரிந்துநிற்க, அச்சமும்வருத்தமுமின்றி இனிதிருந்துமுடித்தலாகிய பொதுத்தன்மை யொன்றும் தொக்குவந்ததனால், இது - பொதுத்தன்மைத்தோகையுவமையணி; வடநூலார் தர்மலுப்தோபமா என்பர். இவ்வுவமை, தொழில் பற்றி வந்தது. (அ)

எருசு. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

(இ - ள்.) (தமக்கு ஒன்று உண்டாகக் கருதுவார்), பொருளை செய்க - பொருளை உண்டாக்குக; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு - (தம்)பகைவர் தருக்கினை அறுக்கும் படைக்கலம், (அதுவாம்); அதனின் கூரியது இல்-(அதற்கு) அதுபோலக் கூரியபடைக்கலம் (பிறிது) இல்லை; (எ - று.)

'அதுவாம்', 'அதற்கு' என்பன, அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே, பெரும்படையும் நட்பு முடைய ராவர்; ஆகவே, பகைவர் தருக்கு ஒழிந்து தாமே அடங்குவர் என்பார் 'செறுநர்செருக்கறுக்கு மெஃகு' என்றும், எனை எஃகுகள் அதுபோல அருவப்பொருளை அறுக்கமாட்டாமையின் 'அதனிற்கூரியது இல்' என்றும் கூறினர்.

(கு - ரை.) ஒன்று உண்டாகக் கருதுவார் - ஒருஉண்மை உண்டாகும்படி நினைப்பவர். உண்டாக்குக - சம்பாதிக்கக்கடவர். பகைவர்தருக்கு - பகைவரது களிப்பு. படைக்கலம் - ஆயுதம்; போர்க்கருவி. அதுவாம் - செல்வ

மாம். அதற்கு - பகைவர்செருக்கை யறுத்தற்கு. அதுபோல - செல்வம் போல. கூரிய - கூர்மையுள்ள. நட்பு - நண்பர். ஏனை எஃகுகள் - மற்றை ஆயுதங்கள். அதுபோல - செல்வம்போல. அருவப்பொருள் - உருவமில் லாதபொருள். அருவம் - அரூபம்: இங்கே, அருவப்பொருள் - தருக்கு. வைசேடிகரது மதம்பற்றி, தருக்காகிய குணம் பொருளாகக்கூறப்பட்டது; "கினத்தைப் பொருளென்று கொண்டவன்" என்ற குறளின் உரையிற் பரி மேலழகர் 'வைசேடிகர் பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்பவற்றை அறுவகைப்பொருளென்றாற்போல, ஈண்டுக் குணம் பொரு ளெனப்பட்டது' என்றனர். எஃகு - எஃகினுற்செய்யும் ஆயுதத்துக்கு, கரு வியாகுபெயர். கூரியது - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்: இ, அ - சாரியைகள். பொருளினிடத்துப் படைக்கலத்தின் தன்மையை ஏற்றிக் கூறியதனால், உருவகவணி. செல்வத்தைக்கொண்டு சேனையையும் நண்ப ரையுஞ் சேர்த்துப் பகைவரை அடக்குதல்போல மற்றொன்றால் அடக்கமுடி யாமையால், செல்வம் அவசியம் அரசரால் சம்பாதிக்கத்தக்கது என்பதாம். "செய்கபொருள்யாருஞ் செறுவாரைச்செறுகிற்கு, மெஃகுதுபிறிதில்லை யிருந் தேயுயிரையுண்ணும், ஐயமிலை யின்பமறனே டெவையுமாக்கும், பொய்யில் பொருளேபொருள் மற்றல்லபிறபொருளே" என்ற சிந்தாமணி இங்கு நோக்க த்தக்கது. (கூ)

எகூ0. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(இ - ள்.) ஒள் பொருள் - நெறியான்வரும் பொருளை, காழ்ப்ப இயற்றி யார்க்கு - இறப்பமிகப்படைத்தார்க்கு,—ஏனை இரண்டுஉம்-மற்றை அறனும் இன்பமும், ஒருங்கு - ஒருங்கே, எள் பொருள் - எளியபொருள்களாம்;(எ-று.)

காழ்த்தல் - மூதிர்தல். பயன்கொடுத்தல்லதுபோகாமையின் 'ஒண் பொருள்' என்றும், ஏனையிரண்டும் அதன் விளைவாகலின் தாமே ஒருகாலத் திலே உளவா மென்பார் 'எண்பொருள்' என்றுங் கூறினர்.

இவை நான்குபாட்டானும், அதனான் வரும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) நெறியான் - நல்லவழியால். இறப்ப மிகப் படைத்தார் - வெகு அதிகமாகச் சம்பாதித்தவர்கள். ஒண்மை - ஒளி; பொருளுக்கு ஒண்மை-நெறியால் வருதலும், பயன்கொடுத்தலில் தவறுமையு மென்க. அறம் பொருள் இன்பம் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள் பொருளை மூன் னர்ப் பிரித்தமையால், மற்றை அறமும் இன்பமும் 'ஏனையிரண்டு' எனப் பட்டன. அதன் விளைவு - செல்வத்தினாலுண்டாகும் பயன். ஒருகாலத் திலே - ஒரேகாலத்தில், ஏககாலத்திலே. அதனான் - பொருளால்.

காழ்ப்ப - காழ் என்னும் வினைப்பகுதியினடியாப் பிறந்த செயவெ னெச்சம். ஏனை, ஒருங்கு - இடைச்சொற்கள். இவ்வதிகாரத்தின் நான்காங் குறளுக்கும் இக்குறளுக்கும் உள்ள ஒற்றுமைவேற்றுமைநயங்களை உய்த் துணர்க. "அறத்தி னீட்டிய வொண்பொருள்" என்ற மணிமேகலையும்,

''தீவினைவிட் டுட்டல் பொருள்'' என்ற ஔவையார்பாடலும், ''சிறப்புடை மரபிற் பொருள்'' என்ற புறநானூறும் இங்கு அறியத்தக்கன. அங்கவியலில் பொருளியல் முற்றும். (கo)

எஎ - ஆம் அதிகாரம்.—படைமாட்சி.

இனி, அப்பொருளினுன் ஆவதாய் வெல்வதாய படை இரண்டு அதிகாரத்தாற் கூறுவான்தொடங்கி முதற்கட் படைமாட்சி கூறுகின்றார்; அஃதாவது - படையினது நன்மை. அதிகாரமுறைமை இதனுள் விளங்கும் *

(கு - ரை.) படை-சேனை: (பகைவரைப்)படுப்ப தெனக் காரணப்பெயர். படுத்தல் - அழித்தல்: படு - பகுதி, ஐ - கருத்தாப்பொருள்விகுதி. பொருள் காரணமும், படை காரியமு மாதல் அதிகாரமுறைமைக்குக் காரணம்.

இதுவும்,அடுத்தஅதிகாரமும், அங்கவியலில் 'படையியல்' எனவும்படும்.

எஙூக. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(இ - ள்.) உறுப்பு அமைந்து - (யானை முதலிய நான்கு) உறுப்பானும் நிறைந்து, ஊறு அஞ்சா - (போரின்கண்) ஊறுபடுதற்கு அஞ்சாது நின்று, வெல் - (பகையை) வெல்வதாய, படை—,—வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை-அரசன் செல்வங்களெல்லாவற்றுள்ளும் தலையாய செல்வம்;(எ-று.)

ஈண்டு 'படை' என்றது, அந்நான்கன் தொகுதியை. ஊறுஅஞ்சியவழி வேறல்கூடாமையின் 'ஊறஞ்சா' என்றும், ஒழிந்தஅங்கங்கட்கும் அரசன் றனக்குங் காவலாகலின் ''வெறுக்கையுளெல்லாந் தலை' என்றுங் கூறினார்.

(கு - ரை.) நால்வகைஅங்கங்களோடு கூடியதும், பகைவராற் புண்படுதற்கு அஞ்சிப் பின்னிடாது நிலைத்துநிற்பதும், பகையை வெல்லவல்லதுமாகிய சேனை, அரசனுக்கு மற்றையங்கங்களினுஞ் சிறந்தது என்பதாம்.

யானை முதலிய நான்கு உறுப்பு - யானை தேர் குதிரை காலாள் என்னுஞ்சதுரங்கங்கள்; ''கச ரத துரகமாக் கடல்கொள் காவலன்'' என்றார் கம்பரும். போரின்கண் ஊறுபடுதற்கு - யுத்தத்தில் விரணப்படுதற்கு. நின்று - நிலைத்து. தலையாய - முதன்மையான. ஈண்டு - இங்கு. அந்நான்கன் - யானை முதலியவற்றின். ஊறு அஞ்சியவழி - விரணப்படுதற்கு அஞ்சினுல். வேறல் கூடாமையின் - (பகையை) வெல்லுதல் முடியாமையால் ஒழிந்த அங்கங்கள் - அமைச்சு, நாடு, அரண், பொருள், நட்பு என்பவை. ஒழிந்த - சேனைநீங்கலான. அரசன்தனக்கும் - அரசனுக்கும். இப்பொருள் கட்கெல்லாம்பாதுகாவலாவது அரசன்சேனை யென்க. 'வெறுக்கையுளெல்லாந் தலை' என்றவிடத்து 'உள்' என்ற ஏழனுருபு - கூட்டிப்பிரித்தற்பொருளில் வந்தது; ''உடையா னரசரு ளேறு'' என்றவிடத்துப் போல. (க)

எஙூஉ. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

---

* இந்தவாக்கியம் பல பிரதிகளிலில்லை.

(இ - ள்.) தொலைவு இடத்து - தான்சிறிதாயவழியும், உலைவு இடத்து- (அரசற்குப் போரின் கண்) உலைவு வந்தால், ஊறு அஞ்சர - (தன்மேல்) உறுவதற்கு அஞ்சாதுநின்று தாங்கும், வன்கண் - வன்கண்மை,—தொல் படைக்கு அல்லால் - அவன்முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கு அல்லது, அரிது - உளதாகாது; (எ - று.)

இழிவுசிறப்புஉம்மை, விகாரத்தால் தொக்கது. மூலப்படை கூலிப் படை நாட்டுப்படை காட்டுப்படை துணைப்படை பகைப்படை என்னும் அறுவகைப்படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படை யாகலான், அதனை அரசன் ''வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங், கொல்களிறு மாவுங் கொடுத்தளிக்க'' என்பது, குறிப்பெச்சம்; இப்படையை வட நூலார் 'மௌலம்' என்ப.

(கு-ரை.)தான் சிறிதாய வழியும்-சேனை தான் பகைவரால் அழிக்கப்பட்டுச்சுருங்கியபொழுதும். உலைவு-அழிவு; அபாயம். உறுவதற்கு-புண்படுவதற்கு. தாங்கும்-பகைவரை எதிர்த்துத் தம் அரசனைக் காக்கின்ற. வன்கண்மை-வலியதன்மை;சௌரியம். அவன்முன்னோர் - அவ்வரசனதுதாதை மூதாதைமுதலிய முந்தினபரம்பரையார். முன்னோரைத் தொடங்கி வரும் படை - மூலப் படை;மற்றையபடைகள், அப்பொழுதப்பொழுது அரசனுற்சேர்க்கப்படுவன. விகாரத்தால் - செய்யுள்விகாரத்தால். இழிவுசிறப்புஉம்மை தொகுத்தல் விகாரப்பட்டது, 'தொலைவிடத்து' என்பதன் இறுதியிலென்க. மூலப் படை - தொன்றுதொட்டுப் பரம்பரையாக வருகின்ற சேனை. கூலிப் படை - வேண்டியபொழுது கூலிகொடுத்துச்சேர்க்குஞ் சேனை. நாட்டுப் படை - நாட்டிலுள்ள வீரர்களைப் போரின்பொருட்டுத் தொகுப்பது. காட்டுப் படை - காட்டிலுள்ள வேடர் முதலிய போர்வல்லாரைத் துணையாகச் சேர்ப்பது. துணைப் படை - தமக்குநண்பரான அரசரால் உதவியாக அனுப்பப்பட்ட சேனை. பகைப் படை - பகைவர்களை வென்று அவர்களிடத்தினின்று திறையாகக்கொணர்ந்த சேனை. ''உறவின்மிக்கவர் பகையினெய்த்தவருதவுமப்படை குடைநிழற், செறிதலத்தினில்வளர்நகர்ப்படை திரள் வனப்படை பொருள்விலைத்,தறுகண்மெய்ப்படை யுறுதியிற்பொருதமதகப் படை யெனவிராய், அறுவகைப்படைகளும் வகுத்தன அணிகள்'' என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தையும், ''சுத்தமூலம் கான் கூலி துணை பகை நாட்டொ டாறே'' என்ற சூடாமணிநிகண்டையும், இவற்றில் மூலபலத்தை'உறுதியிற்பொருதமதகப்படை' என்றும் 'சுத்தமூலம்' என்றும் அடைமொழி கொடுத்து மற்றவற்றினுஞ் சிறப்பித்து முறையே இறுதியிலும் முதலிலும் நிறுத்தியவாற்றையும் அறிக. ''வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும், கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான் - பல்புரவி, நன்மணித் திண்டேர் நயவார் தலேபனிப்பப், பன்மணிப்பூணன் படைக்கு'' என்பது, புறப்பொருள்வெண்பாமாலை, தும்பைப்படலம் - உ - ஆம்பாட்டு: இது, தும்பையரசு மென்னுந் துறை கூறியது; அதன்பொருள்-சிறந்த அரசன் தனது

சேனைக்கு மிக்க அருள்செய்வது: "பொன்புனைந்த கழலடியோன், தன் படையைத் தலையளித்தன்று" என்றகொளுவினை அறிக. "வெல்பொறியும்" என்று தொடங்கிய மேற்கோள்வாக்கியத்தின் பொருள்:—வெல் பொறியும்-போர்வெற்றிக்குரிய அடையாளங்களையும் [பட்டப்பெயர் விருது முதலிய வற்றையும்], நாடுஉம்-நாட்டின் பாகத்தையும், விழுப் பொருள்உம்-சிறந்த செல்வத்தையும், தண் நடைஉம் - குளிர்ந்ததன்மையையுடைய கழனிகளையும், கொல் களிறுஉம்-(பகைவரைக்) கொல்லவல்ல யானைகளையும், மாஉம் - குதிரைகளையும், கொடுத்து - (பரிசு) கொடுத்து, அளிக்க - அருள்செய்க. தன்பக்கல் மெய்யன்பு உடையராகிய அவர் வேண்டுவனவற்றை அரசன் தானும் அருளோடுகொடுத்து அவரைக் காப்பாற்றவேண்டும் என்றவாறு. மௌலம்=மூலபலம். உலைவு, தொலைவு - தொழிற்பெயர்கள். உலைவிடம், தொலைவுடம் - உலைவுநேருங்காலம், தொலைவுநேருங்கால மென்க. (உ)

எகூரு. ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(இ - ள்.) எலி பகை - எலியாய பகை, உவரி ஒலித்தக்கால் - (திரண்டு) கடல்போல ஒலித்தால், என் ஆம் - (நாகத்திற்கு) என்னஏதம் வரும்? நாகம் உயிர்ப்ப - அந்நாகம் உயிர்த்ததுணையானே, கெடும் - (அது தானே) கெடும்.

உவமைச்சொல், தொக்குநின்றது. இத்தொழிலுவமத்தால், திரட்சி பெற்றும். வீரரல்லாதார்பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான், அவன்கிளர்ந்ததுணையானே அவர்தாம் கெடுவரென்பது தோன்ற நின்றமை யின், இது-பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். வீரரல்லாதார்பலரினும் வீரனொருவனே ஆடல் நன்று என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், முறையே அரசனுக்குப் படை ஏனை அங்கங் களுட் சிறந்தது என்பதூஉம், அது தன்னுள்ளும் மூலப்படை சிறந்ததென்ப தூஉம், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தா னென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) ஆய-ஆகிய. திரண்டு-கூட்டமாகக்கூடி. நாகத்திற்கு-பாம் பிற்கு. ஏதம்-தீங்கு. என்ன ஏதம் வரும் - ஒருதீங்கும்வரா தென்றபடி. உயிர்த்த துணையானே - மூச்சுவிட்ட அவ்வளவினாலே. அது-அவ்வெலிப்பகை. உவ மைச்சொல்-போலவென்னும் உவமவுருபு; அது தொக்கது, 'உவரி' என்பதன் இறுதியில். இத்தொழிலுவமம் என்றது, உவரி யொலித்தலைக் கூறியதை. திரட்சி - கூட்டங்கூடுதல். ஆர்த்தால் - ஆரவாரித்தால். அதற்கு - அவ்வார வாரத்திற்கு. அவன் கிளர்ந்த துணையானே - அவ்வீரன் ஊக்கங்கொண்டு போர்க்கு எழுந்தமாத்திரத்தாலே. அவர் - வீரரல்லாதபலர். பிறிதுமொழித லணியின் இலக்கணம் - உபமேயத்தைக் கூறாமல் உபமானத்தைமாத்திரங் கூறி அதனால் உபமேயத்தைப் பெறவைத்தல்; இவ்வணி - ஒட்டு, உவமப் போலி, நுவலாநுவற்சி, புனைவிலிபுகழ்ச்சி எனவும் பெயர்பெறும்: "கருதிய பொருள்தொகுத் தது புலப்படுத்தற், கொத்ததொன் றுரைப்பி னஃ தொட் டெனமொழிப" என்பது, தண்டியலங்காரம். இதனைச் சுருக்கணி யென்பர்,

வீரசோழியநூலுடையார்; "வீவில் கவிதான் கருது பொருளே வெளிப்படுத்தற்கு, ஓவியமே சுருக்கா மறைசொல்லினுரைத்திடினே" என்பது காண்க. இதற்குத் தொகைமொழி யென்றும் ஒருபெய ருண்டு. ஆடல் - ஆளுதல், தொழில்கொள்ளுதல். அதுதன்னுள்ளும் - அப்படையினுள்ளும். அதுதன்னுள்ளும் - அந்த மூலப்படையினுள்ளும். இச்செய்யுளின் கருத்தேபற்றி, "எலி யெலா மிப்படை யரவம் யானென" எனக் கம்பராமாயணத்திலும், "உரககண்ணி, யருளுடைமைந்த னெண்ணிலாயிரமூருவமாகி, யிருபுடை யினும் போர்வேந்த ரெலிகள்போ லேங்கி யம்பாற், பொருபடையுருண்டு போகப் பொருவில்வெம்பூசல்செய்தான்" என வில்லிபுத்தூரார் பாரதத்திலும் வருவன காண்க. என் என்ற வினுப்பெயர், இங்கு, இடம்நோக்கி, தீங்கைக் குறித்தது. உவரி என்பதில், உவர் - பகுதி, இ - உடைமைப்பொருளுணர்த்தும்பெயர் விகுதி. நாகம் - நகத்தில் வாழ்வது என்று காரணப் பொருள்படும்; நகம் - நடவாதது: மலையும், மரமும். (கூ)

எகூச. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(இ - ள்.) அழிவு இன்று - (போரின்கண்) கெடுத லின்றி, அறைபோகாது ஆகி - (பகைவரால்) கீழறுக்கப்பட்டதாய், வழி வந்த - தொன்று தொட்டுவந்த, வன்கணது ஏ - தறுகண்மையையுடையதே, படை - (அரசனுக்குப்) படையாவது; (எ - று.)

அழிவின்மையான் மறமானங்களுடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை - "கன்னின்ரு னெந்தை கணவன்கஞப்பட்டான், முன்னின்றுமொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன்மேலோடி, யெய்போற் கிடந்தானென் னேறு" என்பதனுன் அறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது; இது, வருகின்ற பாட்டுள்ளும் ஒக்கும்.

(கு - ரை.) போரின்கண் கெடுதல் - யுத்தத்தில் தோற்றல். கீழறுக்கப்படாததாய் - வஞ்சனைவழியில் வசப்படுத்திப்பிரிக்கமுடியாததாய். தொன்று தொட்டுவந்த தாதை மூதாதை முதலாகப் பரம்பரையாய் வந்த. மற மானம்-பராக்கிரமமும் பெருமையும். அறைபோகாமை-பகைவரான் வஞ்சித்துப்பிரிக்கப்படாமை. அரசன்மாட்டு-அரசனிடத்து. "கன்னின்ரு" என்றுதொடங்கிய மேற்கோள், புறப்பொருள்வெண்பாமாலை - வாகைப்படலம் - உஉ - ஆம் பாட்டு: இதன்பொருள் வருமாறு:— எந்தை - (எனது) தகப்பன், கல் நின்ரு - கல்லிலே பொருந்திநின்ரு; கணவன் - (எனது) கணவன், களம்பட்டான் - போர்க்களத்திலே இறந்தான்; என் ஐயர் - எனது தமையன்மார், முன் நின்று - (பகைவரது) முன்னே நின்று எதிர்த்து, மொய் அவிந்தார் - போரில் விழுந்தார்; என் ஏறு - எனது மகன், பின் நின்று - (தனது சேனை அழிந்த) பின்பும் (தான் கலங்காது) நின்று, கை போய் கணை உதைப்பு-

தன்கைசென்று அம்புகளைச்செலுத்தி, காவலன் மேல் ஓடி - பகையரசன் மேல் எதிர்த்துச்சென்று, எய்போல் கிடந்தான் - (அவன் எய்த அம்புகளால் தன் உடம்புமுழுவதுந் தைக்கப்பட்டு) முள்ளம்பன்றிபோலக் கிடந்தான் என்க. இது, வாகைத்திணையில் ஏருண்முல்லையென்னுந் துறை: அதாவது - எதிரில்லாமலெழியும்படி சினம் மிகுகின்ற மேன்மேலேருகின்ற ஆண்மைத் தன்மையையுடைய குடியொழுக்கத்தை உயர்த்துச் சொல்லுதல்; அரிய போரைப் பரம்பரையாச்செய்துவிரணப்பட்ட பெரியகுடியின் பராக்ரமத்தைச் சொல்லுத லென்னுங் கூறுவர். "மாறின்றி மறங்கனலும், ஏருண்குடி யெடுத்துரைத்தன்று" என்ற புறப்பொருள்வெண்பாமாலைக்கொளுவையும், "அருஞ்சமம் வழிவழியாற்றியேறுண்ட, இருங்குடிமறம்புக லேருண்முல்லை யும்" என்ற இலக்கணவிளக்கத்தையுங் காண்க. போரிற் பின்னிடாது பகை வனை யெதிர்த்து அவனால் விழுப்புண்பட்டுக் கிடக்கின்ற ஒருவனது தாயின் வார்த்தையாகக் கூறியது, இப்பாட்டு. கல்நின்ருன் - போரில் இறந்து கல் லிலே பெயரும் பெருமையும் பொறிக்கப்பட்டுப் பிரசித்திபெற்றுநின்ருன்; கல்லில் தெய்வவடிவமாக ஆவேசித்துநின்ருன் என்றவாறுமாம்; இதன் விவ ரம், எஎக - ஆங் குறளில் "கல்நின்றவர்" என்றவிடத்து விளக்கப்படும்; இறந்தவருடம்பைப் புதைத்தவிடத்திற் கல்நாட்டுதல், மரபு. போய் - புடை பெயர்ந்து; விரைந்து தொழில்செய்யத்தொடங்கி யென்றபடி. உடம்புமுழுவ தும் முட்களையுடைய எய்ப்பன்றி, உடம்புமுழுவதும் அம்பு தைக்கப்பட் டிருக்கின்ற நிலையிலுள்ள வீரர்க்கு உவமை.

வன்கணது + ஏ = வன்கணதே எனக் குற்றியலுகரத்தின்முன் உயிர் வந்தபொழுது வருமொழிமுதலுயிரேறி முடியற்பாலது, இடையில் வகர வுடம்படுமெய் பெற்று 'வன்கணதுவே' என்று வந்தது, விரித்தல்விகாரத் தின்பாற்படு மென்க; இது வருகின்றபாட்டுள்ளும் ஒக்கும். இவ்விலக்கணம் அடுத்தகுறளில் 'ஆற்றலதுவே' என்பதற்கும் பொருந்தும். இன்று - இன்றி யென்னும் எதிர்மறைக் குறிப்புவினையெச்சம் ஈறுதிரிந்தது; "இன்றியென் னும் வினையெஞ்சிறுதி, நின்றவிகர முகரமாதல், தோன்றியன்மருங்கிற் செய் யுளு ளுரித்தே" என்ற தொல்காப்பியத்தைக் காண்க. வழியென்பது வம்ச பரம்பரையாதலை 'வழித்தோன்றல்' என்பதிலுங் காண்க. வன்கணது - ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். (சு)

எசுடு. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(இ - ள்.) கூற்று - கூற்றுவன்தானே, உடன்று - வெகுண்டு, மேல் வரின் உம் - மேல் வந்தாலும், கூடி எதிர் நிற்கும் - நெஞ்சு ஒத்து எதிர்நின்று தாங்கும், ஆற்றலது ஏ - ஆற்றலையுடையதே, படை - படையாவது;(எ-று.)

மருந்தில்கூற்றுகலின், உம்மை - சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சு ஒத்த தற்குக் காரணம், அரசன்மேல் அன்பு. ஆற்றல் - மனவலி.

(கு - ரை.) கூற்றுவன் - யமன். மேல்வருதல் - எதிர்த்துப்போரிட வருதல். நெஞ்சு ஒத்து - மனம் இணங்கி. தாங்கும்=தடுக்கும். ஆற்றல் - வல்லமை. 'மருந்து இல் கூற்று' என்பதற்கு - எவ்வித்தத்தாலும் தடுக்கமுடியாத யம னென்று கருத்து; "மருந்தில்கூற்றத்தருந் தொழில்சாயா" என்பது புறநானூறு. "மாற்றருங்கூற்றம்" என்றார் தொல்காப்பியனாரும். மருந்து - இங்கே, பரிகாரமென்ற மாத்திரமாய்நின்றது. சிறப்பு - உயர்வுசிறப்பு. உம்மை-'வரினும்' என்றவிடத்திலுள்ளது. மனவலி=மநோபலம், தைரியம். கூற்று - (பிராணிகளின் உடம்பையும் உயிரையும் வெவ்வேறுபிரித்துக்) கூறுக்குபவன் என்பதுபற்றிய காரணப்பெயர்; (காலத்தை இன்ன இன்ன பிராணிக்கு இவ்வளவு இவ்வளவென்றுவரையறைசெய்து) கூறுபடுத்தி நடத்துபவ னென்றலும் ஒன்று: 'கூற்றுவது - வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையாற் கூறுபடுத்துங் கடவுள்; அதனைத் தான் பேரூர்க்கூற்றம் போலக் கொள்க' என்ற தொல்காப்பியவுரை அறியத்தக்கது. (சு)

எசுசு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(இ - ள்.) மறம் - தறுகண்மையும், மானம் - மானமும், மாண்ட வழி செலவு - முன் வீரராயினர்சென்ற நன்னெறிக்கண் சேறலும், தேற்றம் - (அரசனல்)தேறப்படுதலும், என நான்கு ஏ - என இந்நான்குகுணமுமே, படைக்கு ஏமம் - படைக்கு அரணாவது; (எ - று.)

இவற்றான், முறையே, பகைவரைக் கடிதிற் கொன்றுநிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமற் காத்தலும், அழியுநர்புறக்கொடை அயில்வாளோச்சாமை முதலியவும், அறைபோகாமையும் ஆகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகா ராகலின், வேறரண் வேண்டா என்பதாம்.

(கு - ரை.) தறுகண்மை - அஞ்சாதுபொரும்வீரகுணம். நல்நெறிக்கண் சேறல் - நல்வழியிற்செல்லுதல்: முன்வீரராயினர் சென்றநன்னெறிக்கட்சேறலாவது - தருமயுத்தஞ்செய்தல். தேறப்படுதல் - நம்பப்படுதல். அரண் - பாதுகாவல்; அழியாமைக்குக் காரண மென்றபடி. கடிதின்-விரைவாக. தாழ்வு-அவமானம். அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாமை - (ஒருவீரன் தன் எதிரில்) தோற்றுஓடுபவரது முதுகுபுறத்திலே கூரிய ஆயுதத்தை எடுத்து வீசாமை: இது, தழிஞ்சியென்னும் புறப்பொருள்துறையின்பாற் படும்; [தழிஞ்சியாவது—எஎ - ஆம் குறளின் குறிப்பிற் காண்க.] "அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக், கழிதறுகண்மை காதலித் துரைத்தன்று" என்ற கொளுவையும், ('அழிகுநர்' என்பதும் பாடம்.) "கான்படு தீயிற் கலவர் தன்மேல்வரினுந், தான்படைதீண்டாத் தறுகண்ணன் - வான்படர்தல், கண்ணியபி னன்றிக் கறுத்தார் மறந்தொலைத, லெண்ணியபின் போக்குமோ வெஃகு" என்ற செய்யுளையும் புறப்பொருள்வெண்பாமாலை வஞ்சிப்படலத்

திற் காண்க. மறங்கூறியதனுல் பகைவரை விரைவிற் கொல்லுதலும், மானங்கூறியதனுல் தன் அரசனுக்கு அவமான முண்டாகாதபடி பாதுகாத்தலும், மாண்டவழிச்செலவுகூறியதனுல் புறங்கொடுப்பவர்மேற் படைக்கலம் வழங்காமையும், தேற்றம்கூறியதனுல் பகைவர்க்கு வசப்பட்டுத் தன் அரசனை வஞ்சியாமையும் பெறப்படு மென்க. தொல்காப்பியப்பொருளதிகார வுரையில் 'சிறப்புடை அரசியலாவன - மடிந்தஉள்ளத்தோனையும் மகப்பெறு தோனையும் மயிர்சூலைத்தோனையும் அடிபிறக்கிட்டோனையும் பெண்பெய ரோனையும் படையிழந்தோனையும் ஒத்தபடையெடாதோனையும் பிறவும் இத் தன்மையுடையோரையும் கொல்லாதுவிடுதலும், கூறிப்பொருதலும் முதலிய னவாம்' என்றது, இங்குஅறியத்தக்கது. இச்செய்கையார் - இத்தொழில் கனையுடையவர். நணுகார் - நெருங்கமாட்டார்: சமீபத்தில்வருதற்கும் அஞ்சுவ ரென்க.

இப்பாட்டில், எனவென்னும் எண்ணிடைச்சொல், மறமென மானமென மாண்டவழிச்செலவென தேற்றமென என்று, ஐந்தவிடத்துப்பிரிந்து, பிறஇடத்துஞ்சென்று பொருந்திற்று; [நன் - இடை - கo.] எனவென்பது, நான்குஎன்னுந் தொகைபெற்றது; [நன். இடை - கூ.] மாநம் - வடசொல். தேற்றம் - தேறுதல்: தேறப்படுதலெனச் செய்வினை செயப்பாட்டுவினைப் பொருளில்வந்தது. ஏ - பிரிநிலை. ஏமம் - கேமமென்னும் வடசொல்லின் சிதை வென்பர். (சு)

எசுஎ. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

(இ - ள்.) தலை வந்த போர் - (மாற்றரான் வகுக்கப்பட்டுத்)தன்மேல் வந்த படையின் போரை, தாங்கும் - விலக்கும், தன்மை அறிந்து - வகுப்பு அறிந்து வகுத்துக்கொண்டு, தார் தாங்கி-அவர்தூசியைத் (தன்மேல்வாராமல்) தடுத்து, செல்வது - (தான் அதன்மேற்) செல்வதே, தானை - படையாவது.

படைவகுப்பாவது - வியூகம்; அஃது - எழுவகையுறுப்பிற்றாய், வகையால் நான்காய், விரியால் மூப்பதாம். உறுப்பு ஏழாவன-உரம் முதல் கோடி ஈறாயின. வகை நான்காவன - தண்டம் மண்டலம் அசங்கதம் போகம் என இவை. விரி மூப்பதாவன - தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்தும் என இவை. இவற்றின்பெயர்களும் இலக்கணமும் ஈண்டுஉரைப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க.

இவை நான்குபாட்டானும், படையினது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) மாற்றரான் வகுக்கப்பட்டு - பகைவரால் அணிவகுக்கப்பட்டு. விலக்கும் வகுப்பு - தடுக்கும் விதம்; வகுப்பு - வகை: அணிவகுப்புமாம். வகுத்துக்கொண்டு - அமைத்துக்கொண்டு. அவர் தூசி - பகைவர்களது படைவகுப்பு. அதன்மேல் - அவரது படைவகுப்பின்மேல். தூசி - முன்தொற்றுப் பொருபடையுமாம்: இதற்கு - தாரென்றும், கொடிப்படையென்றும், முன்

ணணிச்சேனையென்றும் பெயர்கள் உண்டு. 'தார்' என்பது முந்துற்றுப் பொருபடையாதலை, 'தார்நிலை' என்னும் புறப்பொருள்துறைப்பெயரினுங் காண்க. படைவகுப்பு - சேனை ஒருவடிவமமைய ஒழுங்குபட நிறுத்தப்படுவது; இதனை வடநூலார் வ்யூஹ மென்பர். எழுவகை உறுப்பிற்று - எழுவகை அவயவங்களையுடையது. வகை-பிரிவு, பகுப்பு. வினி - முழுத்தொகை. உரம் முதல் கோடி ஈறுயின - மார்பு, இரண்டுஇறகுகள், இடை, பின்புறம், பிரதிக்கிரகம் [முற்செல்லுஞ் சேனையின்பின்னே அதற்குப் பாதுகாவலாக இருநூறு விற்கிடை தூரத்தி லுள்ள தணிச்சேனைக்குப் பிரதிக்கிரகமென்னு பெயர்], கோடி என இவை. உரம்முதலிய ஏழும், வியூகத்துக்கு ஸப்த அங்கங்களென்று சொல்லப்படும். இது, தேவகுருவாகிய பிருகஸ்பதியின் மதம்; (இறகுகளை நீக்கி ஐந்து அங்கங் கொள்வர், அசுரகுருவாகிய சுக்கிராசாரியர்.) தண்டமாவது - சேனையைக் குறுக்காக நிறுத்துவது. மண்டலமாவது - பாம்பு மண்டலமிடுவதுபோலச் சேனையை வளைவாகநிறுத்துவது. அசங்கதம் - அஸம்ஹதம் என்ற வடசொல்லின் திரிபு: அஸம்ஹதமாவது - சேனையை வேறுவேறுக நிறுத்துவது. போகமாவது - சதுரங்கசேனையை ஒன்றன் பின் ஒன்றுக நிறுத்துவது. இங்ஙான்கும், ப்ரக்ருதிவ்யூஹபேத மெனப்படும். தண்டவினி - தண்டமென்னும் வகுப்பின் விஸ்தாரம்; தண்டவினி பதினேழாவன - பிரதரம், திருடகம், சியாவஸ்தம், குகுஷி, பிரதிஷ்டம், சுப்பிரதிஷ்டம், சியேநம், விசயம், சஞ்சயம், விசாலம், நிசயம், சூசீ, ஸ்தூணை, கர்ணம், சமூமுகம், ரதாஸ்யம், வலயம் என இவை. மண்டலவினி - மண்டலமென்னும் வகுப்பின் விஸ்தாரம்; மண்டலவினி இரண்டாவன - ஸர்வதோபத்ரம், தூர்ஜயம் என இவை. அசங்கதவினி - அசங்கதமென்னும்வகுப்பின் விஸ்தாரம்; அசங்கதவினி ஆறுவன - அர்த்தசந்த்ரகம், சிருங்காடம், வஜ்ரம், கர்க்கடசிருங்காரி, காகபாதி, கோதிகா என இவை. போகவினி - போகமென்னும் வகுப்பின் விஸ்தாரம்; போகவினி ஐந்தாவன - கோமூத்ரிகை, அபிசாரி, சகடம், மகரம், பதந்தகம் என இவை. இவற்றை, காமந்தகம், சுக்ரநீதி முதலிய வடநூல்களிற் காணலாம். தன்மேல் எதிர்த்துவருகின்ற பகைவர்சேனையைத்தடுத்தற்கு உரியபடி அணிவகுத்துக்கொண்டு சென்று பொருது வெல்லுதல் சேனைக்கு இலக்கண மென்க; நாற்புறத்தும் அச்சமுண்டாம்பொழுது தண்டவியூகத்தாலும், பின்னேபயமுண்டாம்பொழுது சகடவியூகத்தாலும், இருபக்கத்தும் பயமுண்டாம்பொழுது வாராகம் காருடம் என்னும் வியூகங்களாலும், முன்னும்பின்னும்பயமுண்டாம்பொழுது மகரவியூகத்தாலும், முன்னேபயமுண்டாம்பொழுது சூசிகாவியூகத்தாலும் எதிர்க்க வேண்டு மென்று மநுதர்மசாஸ்திரவியாக்கியானம் கூறுகின்றது.

இனி, 'தார்தாங்கிச் செல்வது' என்பதற்கு - பகைவரோடு போர்செய்தற்கு வஞ்சிப்பூமாலையைச் சூடிக்கொண்டு செல்வ தென்று உரைத்தலு மொன்று; "வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம், வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் - உட்காது, எதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி, அது வளைத்த லாகு முழிஞை-யதிரப், பொருவது தும்பையாம் போர்க்களத்தும்பி

கோர், செருவென்றது வாகையாம்'' என்றதனால், இன்ன இன்னசமயத்தில் இன்ன இன்ன பூமாலை வீரர்க்கு உரிய தென்பதை அறிக. 'தார்தாங்கிச் செல்வது தானை' என்பதை, வினைமுற்றுப்பெயர் வினைமுதற்பொருள்படுதற்கு உதாரணங்காட்டினர் இலக்கணக்கொத்துடையார். 'தார்தாங்கிச் செல்வது தானை என்பது - அஃறிணையிற்கருத்தாவன க்ருதந்தமென்னும் வினைமுற்றுப்பெயர்' என்பது, பிரயோகவிவேகவுரை. (எ)

எசுஅ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

(இ - ள்.) தானை—, அடல் தகை உம் - (பகைமேல் தான்சென்று) அடுந் தறுகண்மையும், ஆற்றல் உம் - (அது தன்மேல்வந்தாற் பொறுக்கும்) ஆற்றலும், இல் எனின் உம் - இல்லையாயினும், படைத் தகையால் - தன் தோற்றப்பொலிவானே, பாடு பெறும் - பெருமையெய்தும்; (எ - று.)

'இல்லெனினும்' எனவே, அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது. 'படைத்தகை' என்றது, ஒருபெயர்மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது - அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும், பதாகை கொடிகுடை பல்லியம் காகளம் முதலியவற்றுடனும் அணிந்துதோன்றும் அழகு. பாடு - கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

(கு-ரை.) அடும்-கொல்லும், அழிக்கும். அது-பகைவர்சேனை. பொறுக்கும்-விலக்கும்; அல்லது, சகிக்கும். தோற்றப்பொலிவு-காட்சியின் அழகு. பெருமை எய்தும்-பெருமையை யடையும். 'இல்லெனினும்' எனவே அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது - அடல்தகையும் ஆற்றலும் இல்லையாயினும் என்று இழிவுசிறப்பும்மை கொடுத்துக்கூறியதனால் அவ்விரண்டுகுணங்களும் அவசியம் வேண்டுமென்பது விளங்குகின்றதென்க. 'படைத் தகை' என்ற தொடர்மொழி - ஆறும்வேற்றுமைத்தொகையாய், சேனையின் தகுதியென்று பொருள்படுவது; அது-இங்கே, முன்னே 'தானை'என வந்ததனால், தகுதியென்றமாத்திரமாகி, தனது தோற்றப்பொலி வெனப் பொருள்பட்டது பற்றி, 'படைத்தகை யென்றது ஒருபெயர்மாத்திரமாய்நின்றது' என்றார். பதாகை - பெருங்கொடி. பல் இயம் - பலவகைவாத்தியங்கள்; கொட்டுவன, ஊதுவன முதலிய. காகளம் - எக்காள மென்னும் ஊதுகுழல்; சிறப்புப்பற்றி, காகளத்தைத் தனியே யெடுத்துக்கூறினார்: ''காகளமும் பல்லியமுங் கனைகடலின் மேன்முழங்க'' எனக் கம்பர் கூறுதலுங் காண்க. அணிந்து - அணிவகுக்கப் பெற்று. கண்ட அளவிலே - பார்த்தமாத்திரத்திலே. அடல் தகை - அடுதற்குரிய தகைமை யென நான்கனுருபும்பயனுமுடன் தொக்கதொகையாக விரிக்க. அடல் - தொழிற்பெயர். உம்மைகள் மூன்றனுள், பின்னது - இழிவுசிறப்புப்பொருளது; மற்றவை - எண்ணுப்பொருளன. சேனை பல பராக்கிரமங்களிற் குறைவுடையதாயினும், கம்பீரமான காட்சியை யுடையதாயிருப்பின், அதனைக்கண்டு பகைவர் அஞ்சுவரென்பது, இக்குறளின் கருத்து. (அ)

எகூகூ. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(இ - ள்.) சிறுமை உம் - (தான் தேய்ந்து) சிறிதாகலும், செல்லா துனி உம் - (மனத்தினின்று) நீங்காத வெறுப்பும், வறுமை உம் - நல்குரவும், இல் ஆயின் - (தனக்கு) இல்லையாயின், படை வெல்லும் - படை (பகையை) வெல்லும்; (எ - று.)

விட்டுப்போதலும், நல்கூர்தலும் - அரசன் பொருள்கொடாமையான் வருவன. செல்லாத்துனியாவது - மகளிரைவெளவல், இளிவரவாயின செய்தல் முதலியவற்றான் வருவது. இவை உள்வழி அவன்மாட்டு அன்பு இன்றி உற்றுப்பொராமையின், 'இல்லாயின் வெல்லும்' என்றார்.

(கு - ரை.) தேய்ந்து - குறைந்து. நல்குரவு - வறுமை; அனுபவிக்கப் படும்பொருள்க ளில்லாமை. விட்டுப்போதல் - அரசனே நீங்கிச் செல்லுதல். நல்கூர்தலென்றவிடத்து 'நின்றது நல்கூர்தல்' என்று சிலபிரதிகளிற் காணப் படுகின்றது; அப்பொழுது, 'நின்றது' என்பதற்கு - விட்டுப்போகாமல் நின்ற சேனையென்று பொருள். நல்கூர்தல் - வறுமைப்படுதல். மகளிரைவெள வல் - பிறர்க்குரிய ஸ்திரீகளை அரசன் அபகரித்தல். இளிவரவு - இழிவு. இளிவரவாயின செய்தல் - அவமானத்தையுண்டாக்குந்தொழில்களைச் செய் தல். 'முதலிய' என்றதனால், ஆறிலொன்றற்குமேலிறைவாங்குதல், தண் டிக்கவேண்டியவர்களைத் தண்டியாமை, தண்டிக்கத்தகாதவர்களைத் தண்டித் தல், பலவகைக்கடுந்தீர்வைவிதித்தல் முதலியனகொள்ளப்படும். இவை உள் வழி - சிறுமைமுதலியன உண்டானபொழுது. அவன்மாட்டு அன்பு இன்றி- அவ்வரசனிடத்து அன்பில்லாமையால். உற்றுப்பொராமையின் - மனம் பொருந்திப் போர்செய்யாமையால். (கூ)

எகo. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

(இ - ள்.) நிலை மக்கள்- (போரின்கண்) நிலையுடைய வீரரை, சால உடைத்து எனின் உம் - மிக உடைத்தேயாயினும், தலைமக்கள் இல் வழி - (தனக்குத்) தலைவராகிய வீரர் இல்லாதவழி, தானை இல் - தானைநில்லாது.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயின், காண்போர் இல் லெனப் பொராது தானும் போம் என்பார், 'தலைமக்களில்வழியில்' என்றார்.

* இவை மூன்றுபாட்டானும், முறையே, படைத்தகையின்மையானும், அரசன்கொடைத்தாழ்வுகளானும், தலைவரின்மையானும் தாழ்வு கூறப்பட் டது.

(கு - ரை.) சிறந்த வீரர்கள் எவ்வளவுபேர் இருந்தாலும் சேனைத்தலைவ ரில்லாவிடின் சேனை நிலைத்திராது என்பது, இக்குறளின்கருத்து. நிலையு

* பி - மீ: இவைமூன்றுபாட்டானும், முறையே, படைத்தகையானும் அரசன்கொடைதழுவல்களானும், தலைவரானும் தாழ்வின்மை கூறப்பட்டது

டைய - பிற்படாது முன்நிற்குந்தன்மையுள்ள. மிக உடைத்து - மிகுதியாக வுடையது. இல்லாதவழி - இல்லாமற்போனால். படைத்தலைவர் - சேனை பதிகள். நிலையுடையரன்றிப் போதல் - உறுதிநிலையில்லாம லொழிதல். காண்போர் இல் என - தான் போர்செய்தலைக் குறிக்கொண்டுகாண்பவர் எவருமில்லை யென்று எண்ணி. பொராது - போர்செய்யாமல். படைத்தகை யின்மை - கம்பீரமானதோற்றமில்லாமை. அரசன் கொடைத் தாழ்வுகள் - அரசன் பொருள்கொடுத்தற்குறைவும், அவன்செய்யும் அவமதிப்பும். (கo)

எஅ - ஆம் அதிகாரம்.—படைச்செருக்கு.

அஃதாவது - அப்படையது மறமிகுதி. அதிகார முறைமையும் இத னானே விளங்கும்.

(கு - ரை.) மறமிகுதி-மிக்கவீரத்தனம். சேனையின் நன்மையைக் கூறிய பின்பு அதன்செருக்கைக் கூறுதலாகிய அதிகாரமுறைமையின் காரணம் வெளிப்படையாக விளங்குதலால், 'அதிகாரமுறைமையும் இதனானேவிளங் கும்' என்றார். படைமாட்சி, படைச்செருக்கு என்பன-ஆறும்வேற்றுமைத் தொகைகள்.

எஎக. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

(இ - ள்.) தெவ்விர் - பகைவீர்! என் ஐ முன் நின்று - (இன்று இங்கு) என்தலைவனெதிர் (போரேற்று) நின்று, (அவன்வேல் வாய் வீழ்ந்து), கல் நின்றவர் பலர் - (பின்) கல்லின் கண்ணே நின்ற வீரர் பலர்; (நீவிர் அதன் கண்இன்றி நும்உடற்கண் நிற்றல் வேண்டின்), என் ஐமுன் நில்லன்மின் - என் தலைவனெதிர் (போரேற்று) நிற்றலையொழிமின்; (எ - று.)

'என்ஐ' எனத் தன்னொடு தொடர்பு படுத்துக்கூறினமையின், அவன் வேல்வாய்வீழ்தல் பெற்றாம். கல் - நடுகல். "நம்பன் நிலைவாய் நடக்குங் கணை மிச்சி லல்லா, லம்பொன் முடிப்பூ ணரசும் மிலை" எனப் பதுமுகன் கூறினாற்போல, ஒருவீரன் தன்மறம் அரசன்மேல்வைத்துக் கூறியவாறு.

இப்பாட்டு - நெடுமொழிவஞ்சி.

(கு - ரை.) பகைவர்களே! எனது தலைவனெதிரிற் போரில்நின்று வெல்ல மாட்டாமற் பலவீரர் இறந்தனர்; ஆதலால், நீங்கள் உயிரோடிருக்க விரும்புவீராயின், எனது தலைவனெதிரிற் போர்க்குநில்லாது நீங்கிச் செல் லுங்க ளென்றன னென்று ஒருவீரன் தனதுவீரத்தைத் தனது தலைவ னுடையதாகக்கூறியது, இது. பகைவீர் - பகைவர்களே! இன்று இங்கு என் தலைவன்எதிர் போரேற்று நின்று - இன்றைக்கு இவ்விடத்திலே எனது தலைவனுடைய முன்னிலையில் எதிர்த்துப் போர்செய்துநின்று. அவன் வேல் வாய் வீழ்ந்து - அவனதுவேலாயுதம்பட்டு அதனால் இறந்துகீழ்விழுந்து. பின் - பின்பு. கல்லின்கண்ணே நின்ற - கல்லிலே பெயர்பொறிக்கப்பட்டு நின்ற, கல்லில் தெய்வவடிவமாய் ஆவேசித்து நின்ற. 'பலர்'என்பதன்பின்

'ஆதலால்' என வருவிக்க. அதன்கண் இன்றி-அக்கல்லிலே நிற்ற லில்லாமல். நும் உடற்கண் நிற்றல் வேண்டின் - உங்களுடைய உடம்பில் நிற்றலே விரும்பு வீராஞல்: உயிர்வாழ்த்திருக்கவேண்டு மென்றூல். தொடர்பு படுத்து - சம் பந்தப்படுத்தி. சேனையின் வீரத்தின் மிகுதியைக் கூறுகின்ற இவ்வதிகாரத் தினுட்பட்ட இப்பாட்டு, மிக்க வீரமுடையா ஞருபோர்வீரனது வார்த்தை யாகக் கூறிய தாதலால், இதில் அரசனதுபராக்கிரமத்தைக் கூறுகிற மூல மாகத் தனதுவீரத்தை வெளியிடுகின்றவன் அவ்வரசனைத் தன்ஞேடுசம்பந் தப்படுத்தி எனதுதலைவனென்று கூறியது, அவனது ஆயுதம்பட்டுப் பகை வர் அழிந்தன ரென்று சூசிப்பித்தற்குக் காரணமாகு மென்றூர். ஆயுதங்க ளுள் வேல் சிறத்தலால், இங்கே, வேலெனக் கொள்ளப்பட்ட தென்ப; ('காத்தற்றொழிலன்றி அழித்தற்றொழில் பூண்ட மூக்கட்கடவுட்குச் சூல வேல் படை யாதலானும், முருகற்கு வேல் படையாதலானும், சான்றூர் வேற்படையே சிறப்பப் பெரும்பான்மை கூறலானும், வேலெக் கூறி, ஏனைப் படைகளெல்லாம் மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை யும்முட்டின்றுமுடித்த லென்னு முத்தியாற் பெறவைத்தார்,' 'வாளினே வாகைத்தினையிற்கூறுது ''பெரும்படை தாங்கும் வேலினுனும்'' என்று வேலிற்கே வாகைகூறியது காவற்றொழில்பூண்ட மாயோ னம்படையும் போலாது அழித்தற்றொழிலோர்க்கே யுரித்தாய் மூக்கட்கடவுளும் முருகனுங் கூற்றுமஃதி வெற்றிபெறுதற்குச் சிறந்த தென்பதுபற்றி யெனப் புறத் தினையியலுட் கூறினமையால், ஈண்டும் வேலினே வியந்து மண்ணுரோட் டினவெற்றியைக் கண்டோர் புகழ்தலின், புகழ்வேல் என்றூர்' என்ற உரைவாக்கியங்கள் அறியத்தக்கன.)

'நடுகல் - கல்லினே நடுதலும், அக்கல்லின்கண் மறவனேநடுதலு மென இருவகையாம்; (உதாரணம்) ''கீர்த்த துகளிற்றூய்த் தெய்வச் சிறப்பெய்த, நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப் - போர்க்களத்து, மன்னட்ட வென்றி மற வோன் பெயர்பொறித்துக், கல்நட்டார் கல்சூழ் கடத்து''—இது, கல்நாட் டியது,' '''கோள்வாய்த்த சீயம்போற்கொற்றவர்தம் மாவெறிந்து,வாள்வாய்த் தது வீழ்ந்த மறவேலோய்-நாள்வாய்த்,திடைகொளலின்றி யெழுத்துடைக் கல்வாய், மடைகொளல் வேண்டு மகிழ்ந்து''—இது, மறவனே நாட்டியது' என்ற தொல். புறத். நூ-உரையால், நடுகல்லினிலக்கண மறிக. இது,பொது வியலென்னும் புறத்திணைத்துறைகளுள் ஒன்றும்; இதற்கு, 'கல்நடுதல்' என்றும் பெயர் வழங்கும். 'கல்நடுதல்:—''அவன்பெயர் கன்மிசைப் பொறித் தக், கவின்பெறக் கன்னுட்டின்று.''வரலாறு—''மாலேதுயல மணியெறிந்து மட்டுருத்துப், பீலி யணிந்து பெயர் பொறித்து - வேலமரு, ளாண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று, காண்டக நாட்டினூர் கல்''என்ற புறப்பொருள் வெண்பாமாலேயும் அறியத்தக்கது. பராக்கிரமத்துடனே பொருது பட்டபோர் வீரனது ஞாபகசின்னமாகக் கல்நடுதல், மரபு. பின்னிடாமற் போர்செய்து இறந்த வீரசுவர்க்கமடைந்த வீரனைத் தெய்வமாகப்பாவித்து,அவன்பெயரை யும் பெருமையையும் ஒருகல்லில்எழுதி, அக்கல்லே நட்டு, அதனிடத்து அவனே

வழிபடுவர். அக்கல் வீரக்கல்லென்றும், அத்தெய்வம் வீரனென்றும் வழங்கப் படும். கல்கெழுசூரத்திற் கல்லேக் கண்டு பட்டவனுக்குத் தக்கது இது வென்று தூதித்துக் கழல்வீரர் அக்கல்லினேக் கொண்டுவந்து நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், உணவும் மலரும் மதுவும் முதலியன கொடுத்துப் பீலிமாலேயும் மலர்மாலேயும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழாச்செய்து அக்கல்லில் வீர னுடைய பெயரும்பெருமையும் எழுதி நடுதலும், அங்ஙனம் நாட்டிய கல்லே அவனுருவமாகக்கொண்டு அதற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக்களும் படைத்து 'இக்கல் நெடிதுவாழ்க: இதன்கண் அவ்வீரன் நின்று நிலவுக'என வாழ்த்துதலும் முதலிய இயல்புகளேப் புறப்பொருளிலக்கிய விலக்கணங்களிற் பரக்கக்காணலாம். இங்ஙனங் கல்நாட்டுதல், சேனையிற் புறங்கொடாது முன்நின்றுபொருது பகைவரால் இறந்து சுவர்க்கம்பெற்ற வீரனுக்குப் பின்பு அரசன் நடத்துஞ் சிறப்பாம்.

"நம்பன்சிலேவாய்" என்று தொடங்கிய மேற்கோள் - சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ஈகஎ - இல் உள்ளது. இம்மேற்கோளுக்குப் பொருள்:—நம்பன் - சீவகனது, சிலேவாய் - வில்லினின்று, நடக்கும் - பிர யோகிக்கப்பட்டுவருகின்ற, கணே - அம்புகளின், மிச்சில் அல்லால் - எச்சிலல் லாமல், அம் பொன் மூடி பூண் அரசும் இலே - அழகிய பொன்மயமான கிரீ டத்தையும் மற்றையாபரணங்களேயு முடைய அரசரு மெவருமில்லேயென்க. கணே மிச்சில் - அம்புகளால் முன்னமே வாய்வைக்ப்பட்ட உச்சிட்ட மென்ற படி. 'அரசும்' என்ற உம்மை - முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்ட யானே தேர் குதிரை காலா ளென்னுஞ் சதுரங்கசேனேத்தொகுதியைத் தழுவும். காந்தருவதத்தை சீவகனுக்குமணமாலேசூட்டியதுகண்டு பொறுமைகொண்ட கட்டியங்காரனுல் தூண்டப்பட்ட அரசர்களுக்கும், தோழரோடுகூடிய சீவக னுக்கும் நடந்த போரில், சீவகன்தோழர்நால்வரில் ஒருவனுன பதுமுகனென் பவன், பகைவர்மேலும் அவர்சேனேகளின்மேலும் பலஅம்புகளேத் தொடுக் கின்றபொழுது, முன்னமே அவ்வெதிரிகளின்மேற் சீவகனம்புகள்பல தைத் துக்கிடப்பதைக் கண்டு, சீவகனம்புக்கு இலக்காகாதது இல்லேயென்று வியந்து, 'யாம் இனிப் போர்செய்யவேண்டுவது என்?' என்று பகைவரை நோக்கிப் பரிகசித்துக் கூறியது, இது. இங்ஙனம் தனது தலேவனுன சீவக னது பராக்கிரமத்தை யெடுத்துக்கூறியதுமூலமாகத் தனதுவீரத்தையும் புலப்படுத்தின னென்க.

நெடுமொழிவஞ்சியென்பது - வஞ்சியென்னும் புறப்பொருள் திணேயின் துறைகளுள் ஒன்று: அதாவது - ஒருவீரன் தனதுபகைவர்களுடைய சேனேயைக் கிட்டித் தன்னுடைய ஆண்மைத்தன்மையை உயர்த்திச் சொல்வது; "ஒன்னுதார் படைகெழுமித், தன்னுண்மை யெடுத்துரைத் தன்று" என்ற கொளுவையும், "இன்ன ரெனவேண்டா வென்னே டெதிர் நீறி, முன்னர் வருக முரணகலு—மன்னர், பருந்தார் படையமருட் பல்லார் புகழ, விருந்தா யடைகுதுவார் விண்" என்ற வெண்பாமாலேயையும் அறிக,

ஐஎன்பது - தலைவனாதலை "ஐ அழகு இடைச்சொல்கோழை அரசனோடு இருமல்சாமி" என்ற நிகண்டினாலும் அறிக. -(௧)

எஎஉ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(இ - ள்.) கானம் - கானத்தின்கணோடும், முயல் - முயலை, எய்த - (பிழையாமல்)எய்த, அம்பினில் - அம்பை யேந்தலினும், —யானை பிழைத்த- (வெள்ளிடைநின்ற) யானையை யெறிந்துபிழைத்த, வேல் - வேலை, ஏந்தல் - ஏந்துதல், இனிது - நன்று; (எ - று.)

'கானமுயல்' என்றதனால் 'வெள்ளிடைநின்ற' என்பதும், 'பிழைத்த' என்றதனால் 'பிழையாமல்' என்பதும், முயற்குத்தக 'எய்த' என்றதனால் யானைக்குத்தக எறிதலும் வருவிக்கப்பட்டன இது, *மாற்றரசன்படை யொடு பொருதானோர் வீரன் அது புறங்கொடுத்ததாக நாணிப் பின் அவன்றன் மேற் செல்ல லுற்றானது கூற்று.

(கு - ரை.) கானத்தின்கண் - காட்டில். பிழையாமல் - தவறாமல். ஏந்தலினும் - ஏந்துதலைக்காட்டிலும். வெள்ளிடை-காடல்லாதவெளிநிலத்தில். பிழைத்த - தவறிய. தக - தகுதியாக; அம்பிற்குத்தக 'எய்த' என்றதற்கு ஏற்ப, வேலிற்குத்தக 'எறிந்து' என்பது வருவிக்கப்பட்ட தென்று அறிக. யானையையெதிர்த்துப் போர்செய்வார் பெரும்பாலும் வேலினாற் பொரு மியல்பு மரபாதலால், 'யானைபிழைத்தவேல்' என்றார்; இத்தன்மையை "விழித்து மேற்சென்றவேழம் வேலினால் விலக்கி நிற்பார்", "விரும்புவார் வேழ வேற்போர்" என்ற சிந்தாமணி வாக்கியங்களாலும், "ஒன்றாயினும் பலவாயினுமோரோச்சினு ளெறிய, வென்றாயின மதவேழமு முளவோவென வினவிப், பொன்றாழ்வரைப் புலிப்போத்தெனப் புனைதார்மிஞி றார்ப்பச், சென்றான் பல களிறாயிர மிரியச் சினவேலோன்" என்ற சிந்தாமணிச்செய் யுளி னுரையில் நச்சினார்க்கினியர் 'அயிலுழவன் வேலோன் என்றது, யானை யிலிருந்து பொருமிடத்து வேல் வேண்டு மென்று கருதி' என்றதுகொண்டும் அறிக. முயல் மிகவிரைந்து ஓடிப் புதர்களினுள் நுழைந்து செல்லுந் தன் மைய தாதலால், அதன்மேல் அம்பெய்தல் தகுதியாம். விருட்சங்கள் புதர்கள் சூழ்ந்தஇடத்தில் அம்புகளாற் போர்செய்யவேண்டுமென்பது, மநு, எ-௧௯௨. இது - இப்பாட்டு. மாற்றரசன்படையொடுபொருதானோர்வீரன் அது புறங்கொடுத்ததாக நாணிப் பின் அவன்தன்மேற் செல்லலுற்றானது கூற்று - ஒரு வீரன் பகையரசனதுசேனையோடு போர்செய்துகொண்டிருக்கையில் அச்சேனை முன்நிற்கும்வலியிலதாய் முதுகுகொடுக்க அதுகண்டு அங்ஙனந் தோற்ற அதனோடு மேலும் போர்செய்தற்கு வெட்கிப் பின்பு அவ்வரசன் மேல் எதிர்த்துச்செல்லத்தொடங்கிய அவ்வீரனது வார்த்தை.

இக்குறளிற் கூறிய உபமானவாக்கியம், வலியிலாதாரை எதிர்த்துக் கொன்றுதீர்த்தலைக்காட்டிலும் வலியுடையானை வெல்லமுடியாவிடினும் எதி

* பி - ம்: வேற்றரசன்,

ர்த்தல்மாத்திரமே சிறப்பா மென்ற உபமேயத்தை விளக்கியதனால், **பிறிது மொழிதல்** என்னும் அலங்காரம்; "விசையின் நிரைமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ, அரிமாப் பிழைப்பெய்த கோல்" என்ற நாலடியாரோடு இத்திருக்குறளை ஒப்பிடுக. சந்தர்ப்பத்தால், முயல்பல வென்றும், யானை ஒன்று என்றும் கொள்ளலுமாம். தன்மூன்வலியிழந்தாரை அழித்திடத் துணியாமல் வலியிழவாதவன்மேற் செல்பவன்வார்த்தை யாதலால், இப்பாட்டு, தழிஞ்சி யென்னும் புறப்பொருள்துறையின்பாற் படும்; இதனை, அடித்தகுறளின் உரையினால் அறிக. யானைபிழைத்த - யானையினின்றுதவறிய என ஐந்தாம் வேற்றுமைத்தொகை. (உ)

எஉ. பேராண்மை யென்ப தறுகணொண் றுற்றக்கா
லூராண்மை மற்றது னைஃகு.

(இ - ள்.) தறுகண் - (பகைவர்மேற் கண்ணோடாது செய்யும்)மறத்தை, பேர் ஆண்மை என்ப - (நூலோர்) மிக்க ஆண்தன்மையென்று சொல்லுவர்; ஒன்று உற்றக்கால் ஊர் ஆண்மை - (அவர்க்கு) ஒருதாழ்வுவந்ததாயின் (கண்ணோடி அதுதீர்த்துக்கோடற்பொருட்டு) ஊராண்மைசெய்தலே, அதன் எஃகு (என்ப) - *(நூலோர்) அதற்குக்கூர்மை யென்றுசொல்லுவர்; (எ - று.)

'என்ப' என்பது, பின்னும் இயைந்தது. ஊராண்மை - உபகாரியாந் தன்மை; அஃதாவது - இலங்கையர்வேந்தன் போரிடைத் தன்தானைமுழு தும்படத் தமியனு யகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியரிறை மேற்செல்லாது 'இன்றுபோய் நாளை நின்தானையோடு வா' என விட்டாற் போல்வது.

இவையிரண்டுபாட்டும் - தழிஞ்சி.

(கு - ரை.) தாட்சிணியமின்றிப் பகைவரையழித்தல் தகுதியாயினும் அப் பகைவர்க்குப் போரில் துன்பம்நேர்ந்த இடத்து அவரை அழித்திடாமல் அன்போடுவிடுதல், வீரனது மிக்க பராக்கிரமத்தை விளக்கு மென்பது, இக் குறளின்கருத்து.

பகைவர்மேல் - பகைவரிடத்து. கண்ணோடாது - தாட்சிணியங்கொள் ளாமல். மறத்தை - வீரத்தை. அவர்க்கு - அப்பகைவர்க்கு. அது தீர்த்துக் கோடற்பொருட்டு - அத்தாழ்வை அப்பகைவர்கள் தீர்த்துக்கொள்ளுதற்காக. ஊராண்மை-உதவி. அதற்கு - அந்த மிக்க ஆண்தன்மைக்கு. என்ப என்பது பின்னும் இயைந்தது-'ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகுஎன்ப' என்று இரண்டாவதுவாக்கியத்தின் இறுதியிலும் 'என்ப' என்பது எடுத்துக் கூட்டப்பட்டது. உபகாரி - உதவிசெய்பவன். இலங்கையர் வேந்தன்-லங்கா புரியிலுள்ளார்க்கு அரசன்; இராவணன். பட - அழிய. தமியன் - தனிப் பட்டவன். அயோத்தியர் இறை - அயோத்தியாநகரத்திலுள்ளாரது அரசன்; இராமபிரான். மேற் செல்லாது - பகைவனுடைய அவன் சோர்ந்த அச்சமயம் நோக்கிப் பின்னும் அவன்மேல் எதிர்த்துச்சென்று அவனை யழித்திடாமல்.

* நூலோர் என்பது சிலபிரதிகளிலில்லை.

இலங்கையில்நடந்த ராமராவணயுத்தத்தில் முதல்நாட்போரிலே இராமனம்புகளால் இராவணன் கிரீடங்களையும் ஆயுதங்களையும் சேனைகளையும் இழந்து சோர்ந்து வெள்கி முகங்கறுத்துத் தலைகுனிந்து நின்ற சமயத்தில், இராமபிரான், இப்படியாவுமிழந்திருக்கின்றவனை இப்பொழுது கொல்லலாகாதென்று திருவுள்ளம்பற்றி, அவனைநோக்கி 'தனியனாய் வெறுங்கையுடனிருக்கின்ற உன்னை இப்பொழுது நான் கொல்வேனல்லேன்; நீ இன்று உயிர்தப்பிச் சென்று சேனைகளையும் ஆயுதங்களையும் சித்தஞ்செய்துகொண்டு நாளைக்குப் போர்க்குப் பிரிய மிருந்தால் வா' என்று பலவாறு இரக்கத்தோடு சொல்லி அனுப்பியருளின னென்பது, பிரசித்தம். இராவணன்நிலைமையை, "அறங்கடந்தவர் செயலிதென்றுலகெலாமார்ப்ப, நிறங்கரிந்து கானிலம் விரல்கிளைத்திடநின்றான். இறங்குகண்ணினனெல்லழிமுகத்தினன்றலையன், வெறுங்கைநாற்றினன் விழுதுடையாலன்னமெய்யன்" என்றதனால் அறிக. அங்கனம் வெறுங்கைநாற்றியவனை இராமன் அருள்கூர்ந்து 'இன்றுபோய் நாளைவா' என்றதை "ஆளையாவுனக்கமைந்தன மாருதமறைந்த, பூளையாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு, நாளை வா வென நல்கினன் நாகிளங்கமுகின், வாளைதாவுறு கோசல நாடுடை வள்ளல்" என்று கம்பராமாயணத்திலும், "எட்டுமத, மாவென்றுவந்தான் வர நாளைவா வின்று, போவென் றுவந்தான்" எனத் திருவேங்கடமாலையிலும் வருவனவற்றாலும் அறியலாம். பாரதயுத்தத்திற் பதினாறாநாட்போரில் அருச்சுனன் கர்ணனை வென்று கொல்லாமல் உயிரோடுவிட்டதும் இத்திறத்ததே; அத்தன்மையை "அன்று போர்புரி சேனையின்பதியானவீரனை நீ, இன்றுபோ யினி நாளைவா வென இனிதியம்பினனால், வென்றிகூர்வரிவின்மையா லடல்வெவ்வரக்கரை முன், கொன்ற காளையை யொத்த பேரிசைகொண்ட வாண்மையினான்" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தால் உணர்க. தழிஞ்சி யென்பது - வஞ்சி யென்னும் புறப்பொருள்திணைக்கு உரிய துறைகளில் ஒன்று; அதாவது - பகைவரைத்தழுவுதல்: என்றது, ஒருவீரன் தன்எதிரில் தோற்றவர்மேல் ஆயுதஞ்செலுத்தாத மிக்கசௌரியத்தைக் கூறுதலாம். இதன்தன்மை, எசுசு ஆந் திருக்குறளின் குறிப்பிலுங் கூறப்பட்டது. "அழியுநர் புறக்கொடையயில்வா ளோச்சாக், கழிதறுகண்மைத் தழிஞ்சி" என்ற இலக்கணவிளக்கமுங் காண்க. 'தழிச்சுத லெனினும், தழுவுதலெனினும், தழிஞ்சி யெனினும் ஒக்கும்; தழிச்சுதல், தழிஞ்சியாயிற்று: "பொருகணை தழிஞ்சிய புண்தீர் மார்பின்" என்றாற்போல' என்ற தொல்காப்பியவுரையையும், 'தழிஞ்சி - தழுவல்' என்ற இலக்கணவிளக்கவுரையையுங் காண்க. இத்துறைக்கு இலக்கணங்கூறலில் தொல்காப்பிய வுரைகாரர் கருத்து வேறுபடும்; அதனை, தொல்காப்பியத்தில் "அழிபடைகட்டோர் தழிஞ்சி" என்பதற்கு - 'அங்ஙனம் வென்றுந் தோற்றும் மீண்ட வேந்தர், தம்படையாளர் முன்பு போர்செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்டு அழிந்தவர்களைத் தாம்சென்றும் பொருள்கொடுத்தும் வினாவியுந் தழுவிக்கோடல்' என்று பதவுரையும், 'இத்தழிஞ்சியை அழியுநர்புறக்

கொடையயில்வாளோச்சாமை யெனின், அது ஒருவன்தாங்கிய பெருமைப் பாற் படும்' என்று விசேடவுரையுங் கூறியவாறுகொண்டு உணர்க.

பேராண்மை - சிறப்பாகிய ஆண்தகைமை யெனப் பண்புத்தொகை. ஊராண்மை - ஊரையாளுந்தன்மை; இது, பலர்க்கு உதவும் இயல்புக்கு வழங்கும். மற்று - அசை; வினைமாற்றுமாம். ஊராண்மையைக் கூர்மை யென்றதற்கு ஏற்ப, தறுகண்மையை ஆயுதமென்றதது, ஏகதேசவுருவக வணியின்பாற் படும். இங்கே, கூர்மையென்றது, அதன் சிறப்பை. (ஈ)

எஎச. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(இ-ள்.) கை வேல்-(தன்)கைப்படையாய வேலை, களிற்றொடு போக்கி-(தன்மேல் வந்த) களிற்றோடு போக்கி, வருபவன் - வருகின்றகளிற்றுக்கு வேல்நாடித் திரிவான்,—மெய் வேல் பறியா - (தன்) மார்பின்கண்நின்ற வேலைக்கண்டு பறித்து, நகும் - மகிழும்; (எ - று.)

களிற்றொடு போக்கல் - களிற்றினது உயிரைக் கொடுபோமாறுவிடுதல். மகிழ்ச்சி, தேடியது எய்தலான். இதனுள், களிற்றையல்லது எறியானென் பதூஉம், சினமிகுதியான் வேல் இடைபோழ்ந்ததுஅறிந்திலனென்பதூஉம், பின்னும் போர்மேல்விருப்பினனென்பதூஉம் பெறப்பட்டன. நூழிலாட்டு.

(கு - ரை.) சிறந்தவீரனுகவுள்ளான், பகைவராற்புண்படுதற்கு அஞ்சாமையால், கையில்ஆயுதமில்லாதபொழுது, பகைவரால் தன் உடம்பிற் செலுத்தப்பட்டுத் தைத்துள்ள ஆயுதத்தையே பறித்தெடுத்துப் பகைவர்மேற் பிரயோகிப்பன் என்பதுஇக்குறளின்கருத்து. கைப்படை-கையிலுள்ள ஆயுதம். தன்மேல் வந்த-தன்னை யெதிர்த்த. களிற்றோடு-ஆண்யானையுடன். போக்கி-(எறிந்துசெலுத்துதலால்) இழந்துவிட்டு. வருகின்ற - (தன்மேல்) எதிர்த்து வருகின்ற. வேல் நாடித்திரிவான் - வேறொரு வேலாயுதத்தைத் தேடித்திரிபவன். நின்ற - நுழைந்திருக்கின்ற. பறித்து - பிடுங்கி. மகிழும் - மகிழ்வான். கொடுபோமாறு - கவர்ந்து கொண்டுபோம்படி. விடுதல் - எறிதல். தேடியது எய்தலான் - தான் தேடினபொருளாகிய ஆயுதம் கிடைக்கப்பெற்றதனால். இதனுள் - இப்பாட்டில். களிற்றையல்லது எறியான் என்பதூஉம்-எப்பொழுதும் யானையையே எதிர்த்துப் போர்செய்யுந் திறமுடையவனென்பதும். சினமிகுதியால் அறிந்திலனென்க. வேல் இடைபோழ்ந்தது-பகைவனெறிந்தவேலாயுதம் தன்மார்பினிடையே பிளந்து புதைந்திருத்தலை.

நூழிலாட்டு என்பது - தன் உடம்பிற் புதைந்த ஆயுதத்தைப் பறித்தெடுத்துப் பகைவர்மேற் பிரயோகித்தல்; "களங்கழுமிய படையிரிய, உளங்கழிந்த வேல் பறித்தோச்சின்று" என்ற கொளுவையும், "மொய்யகத்து மன்னர் மூரணினி யென்னுங்கொல், கையகத்துக் கொண்டான் கழல்விடலை - வெய்ய, விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த, படுசுட ரெஃகம் பறித்து" என்ற புறப்பொருள்வெண்பாமாலையையுங் காண்க. இது, தும்பையென்னும் புறப்பொருள்திணையின் துறைகளுள் ஒன்றும். "நேரலர் பனிப்ப நெ

ஞ்சிடைக் குளித்த, கூரயில் பறித்துக் கைக்கொண்ட நூழிலும்'' என்ற இலக்கணவிளக்கத்தால், இது சிறுபான்மை நூழிலெனப்படுதலு முண்டென்றுதெரிகின்றது. ''கையில்வாளி தெரிலேந்தபின் காய்ந்ததம், மெய்யில் வாளிகள் வாங்கி வில்வாங்கினர், பொய்யிலாமொழிப்பூபதிசேனையின், மையி லாண்மையினர் சிலமன்னரே'' என்ற வில்லிபுத்தூரார் பாரதமும், ''நேர் மூனையிற் முடுத்த பகழிகள் நேர்வலிவிற் சுழற்று மளவினில், மார்பிடை யிற்குளித்த பகழியை வார்சிலையில் தொடுத்து விடுவரே'' என்ற கலிங்கத்துப் பரணியும், ''அள்ளினண் பறிக்குந் தன்பே ராகமே யாவ மாக, வள்ளல்மே லனுமன்றன்மேல் மற்றையோர் மற்றிண்டோள்மே, லுள்ளுறப் பகழிதூவி யார்த்தன னெவரு முட்க'' என்ற கம்பராமாயணமும் இதன்பாற்படும். இத் திருக்குறள், போர்த்தொழிலால் தானைநிலை [ஒரு தும்பைத்துறை] வருதற்கு உதாரணங்காட்டப்பட்டுள்ளது; ''தானையானை''என்ற தொல்காப்பியப் புறத் திணையியற்சூத்திரத்தின்கீழ்க் காண்க.

கைவேல், மெய்வேல் - ஏழனுருபும் பயனுந் தொக்க தொகைகள். (சு)

எஎடு. *விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி*
னேட்டன்றே ரு வன்க ணவர்க்கு.

(இ - ள்.) விழித்த கண் - (பகைவரை வெகுண்டு) நோக்கிய கண், வேல் கொண்டு எறிய - (அவர்) வேலைக்கொண்டு எறிய, (அஃது ஆற்றாது), அழித்து இமைப்பின் - (அந்நோக்கை) அழித்து இமைக்குமாயின்; (அது), வன்கண வர்க்கு - வீரர்க்கு, ஓட்டு அன்றே - புறங்கொடுத்தலாம்; (எ - று.)

அவ்வெகுளிநோக்கம்மீட்டலும் போரின்கண்மீட்சி யெனக் கருதி அது வுஞ் செய்யாரென்பதாம்.

(கு - ரை.) பகைவர் தம்மேற் படைக்கலம்பிரயோகிக்கையிற் சிறிது கூசிக் கண் இமைப்பராயின் அதுவும் வீரர்க்குத் தோல்விக்குறியென்று துணி யப்படு மென்பதாம். சிந்தாமணியில் ''ஆரமரு ளாண்டகையும் அண்ணலகை வீழும், வீரரெறி வெம்படைகள் வீழ இமையாளுப், பேரமரு ளன்று பெ ருந்தாதையோடும் பேராப், போரமருள் நின்ற இளையோனிற் பொலிவுற் றான்'' என்ற செய்யுளில் 'இமையாளுப்' என்றதும் இதுபற்றியே. மற்றும் சிந்தாமணியில் ''ஏந்தல்தன் கண்கள் வெய்ய விமைத்திட வெறிதலோம்பி, நாந்தகவுழவ னுணி நக்கு நீ யஞ்சல் கண்டாய், காய்ந்திலே னென்று வல்லே கலினமாக்குன்றிற்பொங்கிப், பாய்ந்ததோர்புலியின் மற்றோர்பகட்டின்மேற் பாய்வித்தானே'', ''வேந்தன், வெல்வது விதியினுகும் வேல்வரினிமைப் பேனுயிற், சொல்லி நீ ருகவும்பெற்றுய் தோன்றல் மற் றென்னையென்றான்'' என்பனவும், சூளாமணியில் ''ஏற்றவ ரிமைப்பினு மிகழ்ந் தெறிதல் செய்யார்'' என்பதும் இங்கு நோக்கத்தக்கன. இத்தன்மை, உலகவழக்கிலும் சிறுவர்விளையாட்டி லுள்ளது.

வெகுண்டு நோக்கிய - கோபித்துப்பார்த்த. அவர் - அப்பகைவர். வேலைக்கொண்டு எறிய - வேலினால் வீச. அஃது ஆற்றாது - அவ்வேலைத்தி

தலைப் பார்த்துப் பொறுக்கமாட்டாமல். அந்நோக்கை அழித்து - அந்தக் கோபப்பார்வையை மாற்றி. இமைக்குமாயின் - இதழ்கள் குவியுமானால். இதழ் - கண்ணிமை. அது - அவ்விமைத்தல். புறங்கொடுத்தல் - முதுகு காட்டியோடுதல்; தோல்வி யென்றபடி. வெகுளிநோக்கம் மீட்டலும் - கோபப்பார்வையைப் பின்வாங்கச்செய்தலும்; மீட்டல் - மாற்றுதல். மீட்சி - தாம்தோற்று மீளுதல், பிற்படுதல், முன்வைத்தகாலைப் பின்வாங்குதல். அதுவும் செய்யார் - வெகுளிநோக்கத்தை மீட்டிடவும் மாட்டார்; இதற்கு எழுவாய் - வீரர்.

வேல்கொண்டுஎறிய விழித்தகண்அழித்து இமைப்பின் (அது) வன்கண வர்க்கு ஓட்டன்றே என இயையும். 'அது' என்பது, அவாய்நிலையான் வந்தது. வேல்கொண்டு, கொண்டு - மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபு; பிரயோகவிவேகவுரையில், 'விழித்த கண் வேல்கொண் டெறிய என்பது ஆனென்னும் மூன்றும்வேற்றுமைப் பொருளாயினவாறு காண்க; இதனைத் தொல்காப்பியர், ''வேற்றுமைப்பொருள்வயி னுருபாகுவும்'' என்பர்: அது சேனாவரையருரையானுங் காண்க' என்றமை அறியத்தக்கது. ஓட்டு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். (ங)

எஎசு. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாள யெடுத்து.

(இ - ள்.) தன் நாளை எடுத்து - தனக்குச்சென்ற நாள்களை எடுத்து எண்ணி, விழுப்புண் படாத நாள் எல்லாம் - (அவற்றுள்) விழுப்புண்படாத நாள்களையெல்லாம், வழுக்கினுள் வைக்கும்-பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும், (வீரன்); (எ - று.)

விழுப் புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர்பெற்றிருக்கவும், அதுபெறுத நாள்களோடுங் கூட்டு மென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், ஊறஞ்சாமை கூறப்பட்டது.

(கு - ரை.) சுத்தவீரர், தாம் கல்லபோரிற் சிறந்தவிரணப்படாத நாள்களை வீணைகழிந்தநாள்களாக எண்ணி வருந்துவரென்பது இக்குறளின் கருத்து. தனக்குச் சென்ற நாள்களை-தன்னுடைய ஆயுளிற் கழிந்த தினங்களை. அவற்றுள்-அந்நாள்களுள். விழுப் புண்-சிறந்த புண்; சிறப்பையுணர்த்துகின்ற விழுமம் என்னும் உரிச்சொல் விகாரப்பட்டு 'விழு' என நின்றது: ''வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து'' என்னு மிடத்திலும் காண்க. விழுப்புண்என்பது-சீரிய புண் எனப் பொருள்படுதலை ''பெருந்தகை விழுப் புண்பட்ட மாறே,'' ''போரடுதானை யெவ்விமார்பின், எஃகுறுவிழுப்புண் பலவென'' எனப் புறநானூற்றிலும் காண்க. நாளுள்ளே வைக்கும் - நாள்களாகக் கருதுவான் என்றபடி. விழுப்புண்படாதபடி போர்நேர்ந்த நாள்களைப் போர்நேர்ந்த நாள்களாகக் கருதா னென்க. அதுபெறுத-போர்பெறுத. ஊறு அஞ்சாமை - எதிரிகளாற் புண்படுதற்குப் பயப்படாமை. தமிழ்மொழி விதியால் நிலைமொழியும் வருமொழியுந் திரியாது தம்முள் நிலைமாறுதற்கு

"வைக்குந் தன்னாளை யெடுத்து" என்றதை உதாரணங்காட்டினர், இலக்கணக்கொத்துடையார். (௬)

எஎஎ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(இ - ள்.) சுழலும் இசை வேண்டி - (துறக்கத்துத் தம்மொடுசெல்லாது வையத்தைச்) சூழ்ந்துநிற்கும் புகழை வேண்டி, வேண்டா உயிரார் - உயிர்வாழ்தலை வேண்டாத வீரர், கழல் யாப்பு - கழல்கட்டுதல், காரிகை நீர்த்து - அலங்கார நீர்மையையுடைத்து; (எ - று.)

'வையத்தைச் சூழும்' எனவே, அதன்பெருமை பெற்றாம். செயப்படுபொருள், வருவிக்கப்பட்டது. சூழ்தல் - அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதின்எய்துவ ராகலின், ஆபரணமாவது அதுவே என்பதாம்.

(கு - ரை.) துறக்கத்துத் தம்மொடு செல்லாது-(புறங்கொடாது போர் செய்து பகைவரால் இறத்தலால் இவ்வுலகைவிட்டு) வீரசுவர்க்கமடைகின்ற தம்மோடு இவ்வுலகத்தைவிட்டு அவ்வுலகத்துக்குவந்திடாமல். வையத்தைச் சூழ்ந்து நிற்கும் - நிலவுலக முழுவதும் பரவி நிலைபெறுகின்ற. 'புகழாவது - இம்மைப்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தி' என்றார், கீழ்ப்புகழென்றஅதிகாரத்திற் பரிமேலழகர். 'புகழாவது-தாம் இறந்துழியும் தாம்நிகழ்த்தியவாறு உலகம்உயர்த்திக்கூற நிலைபெறுவது' என்றலும் உண்டு. வேண்டி - விரும்பி. கழல் - வீரர் தமதுவீரத்திற்கு அறிகுறியாகத் தமது காலில் அணிவ தோர் ஆபரணம்; (இது தியாகத்திற்காக அணியப்படுதலும் உண்டு. "ஆடவர் கொடையால் வீரத்தா லணி, பாதத்தணியே கழலணி யென்ப" என்ற பிங்கலந்தையையுங் காண்க.) அலங்காரநீர்மையை உடைத்து - அழகுசெய்யுந்தன்மையை யுடையது. அதன் பெருமை-புகழின் மகிமை; கீர்த்திமிக்குப்பரவுதல். சூழு மெனப் பொருள் படுகின்ற 'சுழலும்' என்ற பெயரெச்சம் யாதாயினும் ஒருசெயப்படுபொருளை வேண்டிநின்றதனால், 'வையத்தை' என்பதை வருவித்துக்கொண்டார்; அவாய்நிலை. அகத்திடல் - உட்படுத்தல்; கவிந்துகொண்டு முழுவதும்பரவுதல். புகழையே விரும்பி உயிர்வாழ்க்கையை விரும்பாத வீரர், சுவர்க்கலோகத்தையும் புகழையும் எளிதில் அடைவ ராதலால், அவர்கள் காலிற் கட்டுங் கழலே அணிகலமென்று நன்குமதிக்கத்தக்கதா மென்பது, இறுதிவாக்கியத்தின் கருத்து. இனி, இக்குறள் - புகழைப்பெற்று உயிர்வாழ விரும்பாதவர் [தம் உயிர்வாழ்க்கையின்பொருட்டுப் போரிற்புறங்கொடுத்து மானங்கெட்டுப் புகழையிழப்பவர்] காலில் வீரக்கழலணிதல் வெறும் அலங்காரமாத்திரமாகுந்தன்மையுடையது [வீரத்திற்கு அறிகுறியா மென்று நன்குமதிக்கத்தக்கதன்று] என்று வேறும் ஒருபொருள் கொள்ள இடங்கொடுத்தலை நுட்பமாக நோக்குக.

'வேண்டாஉயிரார்' என்பதனை "அருங்கேடன்" என்பதுபோலக் கொள்க; இது, வடமொழிநடை: 'இனி, சொற்கள் இங்ஙனந் தமிழ்மொழி விதியால் நிலைமாறுதலு மன்றி, வடமொழிவிதியால் நிலைமாறுதலும் உள;

(உதாரணம்.) செய்தவேள்வியர், எய்தியசெல்வத்தர், கழிந்த உண்டியர், வேண்டாஉயிரார், அருங்கேடன், கொண்டகூழ்த்தாகி, கூப்பிய கையினர், வெறுத்த ஆசையர், பொறுத்த சடையர், கெட்ட வறுமையர், விட்ட அவாவினர்.....என வரும்' என்ற இலக்கணக்கொத்துரை அறியத்தக்கது. இதனை, உயிர்வேண்டாதார் என விகுதிபிரித்துக்கூட்டல், பிரயோகவிவேக நூலார்கொள்கை. கழல் யாப்பு - கழலே யாத்தல் என இரண்டாம்வேற்றுமைத்தொகை. யாப்பு-'பு' விகுதி பெற்ற தொழிற்பெயர். காரிகை நீர்த்து-அழகைச்செய்யுந்தன்மையது என இரண்டனுருபும்பயனும்தொக்க தொகை.

எஅ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(இ - ள்.) உறின் - (போர்) பெறின், உயிர் அஞ்சா - (தம்) உயிர்ப் பொருட்டு அஞ்சாது (அதன்மேற்) செல்லும், மறவர் - வீரர்,—இறைவன் செறின்உம் - (தம்) இறைவன் (அதுவேண்டாஎன்று) முனியினும், சீர் குன்றல் இலர் - அவ்வீரமிகுதி குன்றார்; (எ - று.)

போர்பெற்றுஅறியாமையின், அதுபெற்றால் அரசன்தடுப்பினும் நில்லா ரென்பதாம். பிறரும், ''போரெனிற் புகலும் புனைகழன்மறவர்'' என்றும், ''*புட்பகைக், கேவா லுகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப'' என்றுங் கூறினர்.

(சூ-ரை.) வீரர் தம்அரசன்தடுத்தாலும் போரைநிறுத்துதல் அரிது என்பது இக்குறளின்கருத்து. பெறின்-பெற்றால். தம்உயிர்ப்பொருட்டு-தமதுஉயிரை உடம்பைவிட்டுநீங்காமற்பாதுகாக்கும்பொருட்டு. உயிர்ப்பொருட்டு என்றது, 'அஞ்சாது' என்பதில் 'அஞ்சு' என்னும் வினைப்பகுதியைக் கொள்ளும். அதன்மேற்செல்லும் - அப்போரின்மேற் செல்லுகின்ற. இறைவன் - தலைவன், அரசன். அது வேண்டா - அப்போர் வேண்டுவதில்லை. முனியினும்-கோபித்தாலும், வெறுத்தாலும். குன்றார் - குறையார். போர் பெற்று அறியாமையின் - (தமக்குவிருப்பமான) போர் பலநாளாகக் கிடைக்கப்பெறுமையால். அது - போரை. இங்குக் காட்டிய இரண்டுமேற்கோள்களுள், முன்னது - புறநானூறு ஈக-ஆஞ்செய்யுளிலும், பின்னது - புறநானூறு ஈஅ-ஆஞ் செய்யுளிலும் உள்ளன. 'பிறர்' என்றது, அப்பாடல்களைச் செய்தவராகிய கோவூர்கிழாரை. இவற்றின் பொருள்:—போர் எனின்-போர்நேர்வதென்று கேள்விப்பட்டால், புகலும் - விரும்பிமகிழ்கின்ற, புனை கழல் மறவர் - அணிந்த வீரக்கழலையுடைய வீரர்கள் என்றும்; புண் பகைக்கு - புண்படுத்தவல்ல பகைவரிடத்து, எவன் ஆகலின் - (எம்மைப் போர்க்கு அரசன்) செலுத்தாஞ்தலால், யாம் சாவேம் - நாம் (நமக்குட் போர்செய்து) இறக்கக்கடவோம், என - என்று, நீங்கா மறவர் - நீங்காதவீரகுணத்தையுடைய வீரர் [மறம்நீங்காதவர்], வீங்கு தோள் புடைப்ப - (தமது) பூரித்த தோள்களைக் கைகளால் தட்ட என்றும் காண்க. பின்னதற்குக் கருத்து - பகைவரோடு போர்செய்

* பி - மீ: புட்பகத் தேவனுகலின்

தற்கு எம்மை அரசன் எவாமையால் [போர்நேராமையால்] நாம் நழுக்குட் போர்செய்தாயினும் அழிவோ மென்று அதிகபராக்கிரமமுடைய வீரர்கள் (போர்த்தினவுமிக்குப்) போரின்பொருட்டுத்தோள்புடைப்பாராயினர் என்க. புள் பகைக்கு என்றுபிரித்து - பக்ஷிசகுனம்மாறுபடுகின்றஇடத்தில் என்ற லுமாம். இவையிரண்டும், சோழன்நலங்கிள்ளியின் சேனையிலுள்ள வீரரது யுத்தாவேசமிகுதியைப் பற்றியவை. (அ)

எஎகூ. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

(இ - ள்.) இழைத்தது - (தாம்) கூறின வஞ்சினம், இகவாமை தப்பா மைப்பொருட்டு, சாவாரை - (சென்று) சாவவல்ல வீரரை, பிழைத்தது - (அது)தப்பியவாறு (சொல்லி), ஒறுக்கிற்பவர் - எள்ளுதற்குரியார், யார் - யாவர்? (எ - று.)

இழைத்தல் - இன்னதுசெய்யேனுயின் இன்னனுகுக வெனத் தான் வகுத்தல். 'சொல்லி' என்பது, அவாய்நிலையான் வந்தது. வஞ்சினம் முடிப் பான்புக்கு முன்னே சாவினும் தொலைவன்மையின் அதுமுடித்தாராவரென, சாதற்சிறப்புக் கூறியவாறு.

(கு - ரை.) வஞ்சினம் - சபதவார்த்தை. சென்று-போர்க்குச் சென்று. அதுதப்பியவாறுசொல்லி எள்ளுதற்கு உரியார் யாவர் - அச்சபதந்தப்பிய விதத்தைக் கூறி எவரும் இகழமாட்டார். இன்னனுகுக - இத்தன்மையனு வேன். வகுத்தல்-அமைத்துக்கூறுதல். 'பிழைத்தது' என்ற செயப்படுபொ ருள், யாதாயினும் ஒருமுடிக்குஞ்சொல்லே வேண்டினின்றதனுல், 'சொல்லி' என வருவித்தார். ஒருவர் தாம் கூறிய சபதத்தை நிறைவேற்றும்பொருட்டுப் போர்க்குச்சென்று அதனைநிறைவேற்றுதற்குமுன்னமே அப்போரிற் பகை வராலிறந்தாலும் அது தோல்வியாகாமையால் அவர் சபதத்தை நிறைவேற் றின சிறப்புடையராகக் கொண்டாடத்தகுவ ரென்க. முடிப்பான் - முடித் தற்கு. முன்னே - காலமுன். சாவினும்-இறந்தாலும். தொலைவு அன்மை யின் - தோல்வியாகாமையால். அது - சபதம். இழைத்தது - வினையாலணை யும்பெயர். பிழைத்தது-தொழிற்பெயர். இகவாமைக்கு என நான்கனுருபு தொக்கதாகவிரிக்க;வினையெச்சமாகக்கொண்டு இகவாதபடி எனினும் அமை யும்; 'இகவாமல்' என்றும் பாடம் உண்டு.

''சிந்துபதியாகிய செபத்திரதனைத்தே, நுந்தமரில் நாளை யுருமேறென வுடற்ரு,அந்திபடு மவ்வளவி லுவிகவரேனேல்,வெந்தழலின்வீழ்வனிதுவேத மொழி யென்ரூன்'' என்றபடி 'நாளைப்பகற்பொழுதிற்குள் நான் பகைவ னைக் கொல்லேனுயின் அக்கினிப்பிரவேசஞ்செய்து இறப்பேன்'என்று பார தத்தில் அருச்சுனன் சபதஞ்செய்தாற்போலச் சபதஞ்செய்தவீரர் அச்சபத வகையிரண்டனுள் முதலதாகியபகைவனுயிர்போக்குதலே நிறைவேற்றமுடி யாதவிடத்து மற்றொருவகையாகிய தன்னுயிர்போக்குதலைச் செய்திடுவரா யின் அப்பொழுது அவரைச் சபதந்தப்பினவ ரென்று இகழக்காரணமில்லை

யென்னுங் கருத்துப்பட இப்பாட்டுக்கு உரைகொள்ளினுமாம்; சபதம்நிறை வேற்றுமைப்பொருட்டுச் சாகும் வீரரை அதுதவறியவராகச்சொல்லி இகழத் தணிவார்இல்லையெனஉரைகாண்க.இது ஒருசாராரார்கருத்து: அதனை, ''கூதிர் வேனில்'' என்ற தொல்காப்பியப்புறத்திணையியற் சூத்திரத்தில் ''ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச், சொல்லிய வகையி னொன்றொடு புணர்ந்து, தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்'' என்றதற்கு, 'பகைவர்நாணும்படி யாக உயர்ந்தோரான் நன்குமதித்தலைக்கருதி இன்னதுசெய்யேனுயின் இன் னதுசெய்வலெனத் தான்கூறிய பகுதி இரண்டனுள் ஒன்றனோடே பொருந் திப் பலபிறப்பினும் பழகிவருகின்ற உயிரை அங்கியங்கடவுட்குக்கொடுத்த அவிப்பலியானும்' என்று உரைகூறியவர் '''எம்பியை வீட்டுதலெம்மனைக்கா யான்படுதல், வெம்பகலின் முன்னிளைப்ப னென்றெழுந்தான் - தம்பி, புற வோரிற்பாணிப்பப் பொங்கெரிவாய் வீழ்ந்தா, னறவோன் மறமிருந்த வாறு'' —இப்பாரதத்துள் ஒருவன் இன்னதுசெய்வலென்று அதுசெய்யமுடியாமை யின் அவிப்பலிகொடுத்தவாறு காண்க:''இழைத்த நிகவாமைச் சாவாரை யாரே, பிழைத்த தொறுக்கிற்பவர்''—இதுவுமது' என்று இத்திருக்குறளை உதாரணங் காட்டியமைகொண்டு உணர்க. (கூ)

எஅ0. புரந்தார்கண் ணீர்மல்கச் *சாகற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ - ள்.) புரந்தார் கண் - (தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து) ஆண்ட அரசர்கண்கள், நீர் மல்க-நீர் மல்கும்வகை, சாகற்பின்-(போரிடைச்) சாவுப்பெறின்,—சாக்காடு-அச்சாக்காடு,—இரந்து கோள் தக்கது உடைத்து-இரந்தாயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து; (எ - று.)

மல்குதலாகிய இடத்துநிகழ்பொருளின்தொழில், இடத்தின்மேல் நின் றது. நிலைஅழ இல்லிடை நோயால் விளிவார் பழவினைப்பயனே யெய்தலின் அடுத்தவினையால் துறக்கமெய்துஞ் சாதலை 'இரந்துகோட்டக்கதுடைத்து' என்றார்.

இவைநான்குபாட்டானும், உயிரோம்பாமை கூறப்பட்டது.

(கு - ரை.) தமக்குச்செய்த நன்றிகளை நினைந்து-தமக்குப் படைவீரர் முன்புசெய்த உபகாரங்களை யெண்ணி; அரசர்கண்கள் நீர் மல்கும்வகை என இயையும். 'சாவப்பெறின்'என்பதனோடு இயைத்தால், தமக்கு அரசர் முன்பு செய்தஉபகாரங்களை மறவாமல் மனத்திற்கொண்டு வீரர் இறந்தால் என்க. ஆண்டஅரசர் - தமக்குத்தலைவரானவரசர். கண்கள் நீர்மல்கும்வகை-கண்கள் நீர்வழியப்பெறும்படி. சாவப்பெறின் - இறக்கநேர்ந்தால். சாக்காடு - சாவு, மரணம். இரந்து-யாசித்து, வேண்டி. கண்ணுகிய இடத்தில் நிகழ்பொருளான நீரினது தொழிலாகிய மல்குத லென்பது, இடமாகிய கண்ணின்மேல் ஏற்றிக்கூறப்பட்டுநின்றது; இது, ஒருவகை உபசாரவழக்கு: இதற்கு ''குள வளாக்,கோடின்றி நீர்நிறைத் தற்று'','இந்தப்பானை நாளுழி அரிசி பொங்கும்'

* பி - ம்: சாகிற்பிற்

என்பவற்றை உதாரணங்காட்டினர், பிரயோகவிவேகநூலார். இனி, புரந்தார் கண் நீர்மல்க - அரசரது கண்களிலே நீர்பெருகும்படிஎன ஏழாம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்கொள்ளுதல், எளியவழியாம். கிளை அழ - உறவினர் புலம்ப. இல்லிடை-(தமது)வீட்டில். விளிவார்-இறப்பவர். பழவினைப் பயனே எய்தலின்-முன்புசெய்தகருமத்தின் பலத்தையே அடைதலால். அடுத்த வினையால் துறக்கம் எய்தும் சாதல் - அப்பொழுதைக்கருமத்தின் பயனுக வீரசுவர்க்கமடையும்படியான மரணம்; என்றது, போரிற்புறங்கொடாது பகைவரா லிறத்தலே. உயிர் ஓம்பாமை - தம் உயிரை விரும்பிப் பாதுகாக்கக் கருதாமை. அங்கவியலில் படையியல் முற்றிற்று. (கo)

எக - ஆம் அதிகாரம்.—நட்பு.

இனி, அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும், பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார்; அஃதாவது இன்னதென்பதூஉம், அதிகாரமுறைமையும் இதனுள் விளக்கும்.

(கு - ரை.) வினையிடத்து - தொழிலில். நட்பு - சிநேகிதவர்க்கம். விதிமுகத்தானும் - உடன்பாடாகவும்; நட்பைக்கூறும்விதத்தாலும். எதிர்மறைமுகத்தானும் - நட்பிற்கு எதிரான பகையைக் கூறுகிற விதத்தாலும்; மேல் அசு - ஆம் அதிகாரத்தின் முதலில் 'இனி அந்நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறிய தொடங்கினர்' என விவரிக்குமாறு காண்க. விதிமுக அதிகாரம் ஐந்து - நட்பு, நட்பாராய்தல், பழமை, தீநட்பு, கூடாநட்பு என்பன. பகைமுக அதிகாரம் பன்னிரண்டு - பேதைமை முதல் மருந்து ஈறுயினவாம். ஆக, இந்தப்பதினேழதிகாரம் அங்கவியலுள் நட்பியல் என ஒரு சாராரால் வழங்கப்படுமென்று அறிக. அஃதாவது - நட்பாவது. இதனுள் - இங்குக்கூறியவகையில். அதிகாரமுறைமைக்குக் காரணம், படைபோல நட்பும் அரசனுக்கு ஆட்சிநடத்துந்தொழிலில் உதவுவதாதல். நட்பு - நட்டல், சிநேகம்: தொழிற்பெயர்.

ஏஅக. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

(இ - ள்.) நட்பின் - நட்புப்போல, செயற்கு அரிய - செய்துகோடற்கு அரிய பொருள்கள், யா உள - யாவை உள? அது போல் - (செய்துகொண்டால்) அதுபோல, வினைக்கு அரிய காப்பு - (பகைவர்செய்யும்) வினைக்குப் புகற்கரிய காவலாவன, யா உள - யாவை உள? (எ - று.)

நட்புச்செய்தற்கு ஆவாரைப் பெறுதலும், பெற்றுச் செய்யும் உபாயமும், செய்தால் திரிபின்றிநிற்றலும் முதலிய அரியவாகலின் 'நட்பிற் செயற்கரியன இல்லை' என்றும், செய்தாற் பகைவர் அஞ்சி வினைதொடங்காராகலின் 'அதுபோல வினைவாராமைக்கு அரியகாவல் இல்லை' என்றும் கூறினர்.

நட்புத்தான் இயற்கை செயற்கை என இருவகைப்படும்; அவற்றுள் இயற்கை - பிறப்புமுறையான் ஆயதூஉம், தேயமுறையான் ஆயதூஉம், என இருவகைப்படும்: அவற்றுள், முன்னையது சுற்ற மாகலின், அது சுற்றந் தழாலின் அடங்கிற்று; ஏனையது பகையிடையிட்டதேயத்த தாகலின், அது 'துணைவலி' என வலியறிதலுள் அடங்கிற்று: இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த உதவிபற்றி வருஞ் செயற்கையே யாகலின், அதன் சிறப்பு இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) செய்துகோடற்கு - சம்பாதித்துக்கொள்ளுதற்கு. உள - உள்ளன. அதுபோல - நட்புப்போல. புகற்கு அரிய - பிரவேசிக்கமுடியாத. காவல் - பாதுகாப்பு. நட்புச்செய்தற்கு - சிநேகஞ்செய்யப்படுதற்கு. ஆவாரை- அநுகூலரானவர்களை; தக்கவரை. பெறுதல் - கிடைக்கப்பெறுதல். பெற்றால் செய்யும் உபாயம் - அப்படிப்பட்டவர் நேரிடப்பெற்றால் அவர்களைச்சிநேகித ராக்கிக்கொள்ளுதற்குச் செய்யும் வகை. செய்தால் திரிபு இன்றி நிற்றல் - சிநேகஞ்செய்துகொண்டபின்பு மாறுபாடில்லாமல் ஒருநிலையில் நிற்றல். முதலிய - முதலானவை. அரிய - அருமையானவை. நட்பின் - நட்புப்போல. வினை வாராமைக்கு - பகைவர் வெல்லுதற்குச் செய்யுந் தொழில் அரசனிடம் வந்திடாமைக்கு. வடநூலார் இயற்கையை 'ஸஹஜம்' என்றும், செயற்கையை 'க்ரித்ரிமம்' என்றுங் கூறுவர். பிறப்புமுறையான் ஆயது - உறவு முறைமையா லாகியது: பிறப்புமுறை - தேகசம்பந்தம். தேயமுறை - தேசத்தின்நிலை. நட்பு, பகை என்றவற்றில் ஒவ்வொன்றும், ஸஹஜம் ப்ராக்ருதம் க்ரித்ரிமம் என மூன்றுவகைப்படும்; அவற்றில், ஸஹஜம் - பிறப்பு முறையால் ஆகியது. சிறியதாயார்பிள்ளை, பெரியதாயார்பிள்ளை, அத்தை பிள்ளை முதலியோர் - இயல்பில் நண்பர். சிற்றப்பன், பெரியப்பன், அவர் கள்பிள்ளைகள் முதலியோர் - இயல்பிற் பகைவர். ப்ராக்ருதம் - தேசமுறை யால் ஆகியது. ஒவ்வோர் அரசனுக்கும் அடுத்தநாட்டவன் பகையென்றும், அதற்கு அடுத்தநாட்டவன் நண்பனென்றும், அதற்கும் அப்பாலுள்ளநாட்ட வன் நொதுமலென்றும் உணர்க. க்ரித்ரிமம் - உபகாரஞ்செய்யப்பெற்றத னாலாகும் நண்பும், அபகாரஞ்செய்யப்பெற்றதனாலாகும் பகைமையுமாம். இந்த இராஜநீதி, இங்கே முக்கியமாக உணரத்தக்கது. இவற்றில் முந்தின இரண்டும் இயற்கையென்றும், பிந்தினது செயற்கையென்றுங் கூறப்பட்டது. முன்னையது - பிறப்புமுறையாலாயது. சுற்றம் - பந்துவர்க்கம். சுற்றந் தழால் ௫௩ - ஆம் அதிகாரம். ஏனையது - மற்றது; தேயமுறையால் ஆயது. பகை இடையிட்ட தேயத்தது - தன்துநாட்டிற்கு அடுத்ததான பகைவனது நாட்டுக்கு அப்பாலுள்ளது. துணை வலி - அரசனுக்குத்துணையாகுமவரது வலிமை. வலியறிதல் - ௪௮ - ஆம் அதிகாரம்; துணைவலி வலியறிதலுள் அடங்கினமையை "வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந், துணைவலி யுந் தூக்கிச் செயல்" என்ற அவ்வதிகாரத்துமுதற்குறளிற் காண்க. அதன்- செயற்கைநட்பின். இதனால் - இக்குறட்பாவினால். (௧)

எஉஉ. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(இ - ள்.) நீரவர் கேண்மை - அறிவுடையார்நட்புக்கள், பிறை நிறை நீர - பிறை நிறையுந்தன்மை போல நாடோறும் நிறையுந்தன்மையவாம்; பேதையார் நட்பு - மற்றைப்பேதைமையுடையார்நட்புக்கள், மதி பின் நீர - நிறைந்தமதி பின் குறையுந்தன்மை போல நாடோறுங் குறையுந்தன்மை யவாம்; (எ - று.)

'நீரவர்' என்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன - ஒரு பொருட்கிளவி. செய்தாரது பன்மையான், நட்பும் பலவாயின. அறிவுடை யாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின்பெருகற்கும், பேதை யாரும் பேதையாருஞ் செய்தன முன்பெருகிப் பின்சுருங்கற்கும் காரணம், தம்முள் முன்அறியாமையும், பின் அறிதலு மாம்.

(கு-ரை.) அறிவுடையார் நட்பு-புத்திமான்களது சிநேகம். பிறை-இளஞ் சந்திரன். நிறைந்த மதி - பூர்ணசந்திரன். ''பெரியவர் கேண்மை பிறை போல நாளும், வரிசை வரிசையா கத்தும் - வரிசையால், வானூர் மதியம் போல் வைகலுக் தேயுமே, தானே சிறியார் தொடர்பு'' என்ற நாலடியா ரோடு இதனை ஒப்பிடுக. (மற்றைப்புலவர்க்கு நான்கடியிலடங்குகின்ற விஷ யம், பெருநாவலராகிய திருவள்ளுவர்க்கு இரண்டடியினுள்ளே அடங்குகின்ற திறத்திற்கு இக்குறட்பா ஏற்ற உதாரண மாகும்: எனவே, சுருங்கச்சொல்ல லென்னும் அழகு இந்நூலிலே நன்கு அமைந்துள்ள தென்றவாறும்.) நீரவர்-நீரின்தன்மையையுடையவர்: எனவே, இனியவ ரென்றவாறு; ''நீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில, நீர்மை யுடையார் சொலின்'' என்ற குறளில், 'நீர்மையுடையார்' என்பதற்கு - பரிமேலழகர் 'இனியநீர்மையுடையார்' என்று பொருளும், 'நீர்மை - நீரின்தன்மை' என்று விசேடவுரையும் கூறிய வாற்றை இங்கே அறிக. ஒருபொருட்கிளவி - ''ஒருபொருள் குறித்தபல சொல்''. இவை அமைந்தது, **பொருட்பின்வருநிலையணியின்பாற்படும்.** செய்தன - செய்தநட்புக்கள். தம்மில் ஒவ்வொருவரிடத்துமுள்ள நற்குணம் முன்பு அறியப்படாமலிருந்து பரிசயம் முதிரமுதிரப் பரஸ்பரம் நன்கு அறி யப்படுதலால், அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்த நட்பு சுக்கிலபட் சத்துச்சந்திரன்போல நாளடைவில் விருத்தியாம்; இங்ஙனமே, அறிவிலா ரும் அறிவிலாருஞ்செய்த நட்பு அவர்களில் ஒவ்வொருவரிடத்து முள்ள தீக் குணம் முன்புஅறியப்படாமலிருந்து பரிசயம்முதிரமுதிர நன்குவிளங்குத லால் கிருஷ்ணபட்சத்துச்சந்திரன்போல முதலிற்பெரிதாயிருந்து வரவரக் குறையுமென்பதாம்.

நிறைநீர - விசேடத்தொகை. நீர - நீர்மை யென்னும் பண்பி னடியாப் பிறந்த பலவின்பாற்குறிப்புமுற்று. நீரவர் - நீரென்னும் பெயரின்மேற்பிறந்த பலர்பாற்பெயர்; இதனையும், நீர்மை யென்னும் பண்பி னடியாப் பிறந்ததாக்கி உரைக்கலாம்; அப்பொழுது, தன்மையுணர்த்தும் நீர்மையென்னும்

பொதுப்பெயர் அடைமொழிகொடாது கூறப்பட்டதனால், இங்கே இனிய தன்மையையுணர்த்திற் றென்க; குடிப்பிறந்தார், குணமுளோன், ஒழுக்க முடையார் முதலியவற்றில், குடி, குணம், ஒழுக்கம் முதலிய பொதுப்பெயர் கள் - உயர்குலம், நற்குணம், நல்லொழுக்கம் என நற்பொருளின்மேல் நிற் றல் காண்க: அடுத்தகுறளில் 'பண்புடையாளர்' என்பது நற்குணமுடையவ ரெனப் பொருள்படுதலும் நோக்குக. பிறப்பது பிறை யெனக் காரணப்பெய ரென்பர். மதி - (யாவராலும்) மதிக்கப்படுவ தெனக் காரணப்பெயர். மதி பின் நீர - மதியின்பின்னுள்ள நீர்மை போன்ற நீர்மை யுடையன வென விவரிக்க. கேண்மை, நட்பு என்பன - பால்பகா அஃறிணைப்பெயர்க ளாத லால், 'நீர' என்னும் பலவின்பால்முற்றைக் கொண்டன. கேண்மை - (ஒரு வர்க்கொருவர் யோகக்ஷேமங்களைக்) கேட்குந் தன்மை; எனவே, நட்பாம். உவமையணி. (௨)

எ௮௩. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

(இ - ள்.) பண்பு உடையாளர் தொடர்பு - நற்குணமுடைய மக்கள் (தம் முள் செய்த) நட்பு, பயில் தொறு உம் - பயிலுந்தோறும், (அவர்க்கு இன்பஞ் செய்தல்),—நூல் நவில் தொறு உம் நயம் போலும் - நூற்பொருள் கற்குந் தோறும் (கற்றார்க்கு) இன்பஞ்செய்தலை ஒக்கும்; (எ - று.)

நயத்தினைச்செய்தலான், நயமெனப்பட்டது. இருமையினும் ஒருகாலை க்கு ஒருகால் மிகும் என்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், அச்சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது.

(கு-ரை.) மக்கள் - மனிதர். தம்முள் - தங்களுக்குள்; ஒருவரோடொருவர். நயம் - இன்பம். நயஞ்செய்தலை 'நயம்' என்றது, காரியத்தைக் காரணமா கக்கூறிய உபசாரவழக்கு. இருமையினும் - உபமானம் உபமேயம் என்னும் இரண்டிலும். அச்சிறப்பிற்கு ஏது - நட்பின் சிறப்புக்குக் காரணம். கல்வி கற்கக்கற்க இன்பந்தருதல்போல, நற்குணமுடையார் நட்புப் பழகப்பழக இன்பந்தரு மென்பதாம்; பயன்பற்றி வந்த உவமையணி. நவில்தொறும், பயில்தொறும் என்பவற்றில், தொறு இன்னும் இடைச்சொல் பெயர்ச்சொல் தன்மைப்பட்டதனால், நவில் பயில் என்ற வினைத்தொகைகள் அதனை விசே டித்தன வென்க. (௩)

எ௮௪. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(இ - ள்.) நட்டல் - (ஒருவனோடு ஒருவன்) நட்புச்செய்தல், நகுதல் பொருட்டு அன்று - (தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி) நகையாடற் பொருட்டன்று; மிகுதிக்கண் - (அவர்க்கு) வேண்டாதசெய்கை உளதாயவழி, மேல் சென்று இடித்தல் பொருட்டு-முற்பட்டுக் கழறுதற்பொருட்டு; (எ-று.)

பழியும்பாவமுந்தருஞ்செய்கை துன்பமேபயத்தலான் வேண்டப்படுவ தன்மையின் அதனை 'மிகுதி' என்றும், அதுசெய்தற்குமுன்னே மீட்டல்வே

ண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு மீளாமையின் 'இடித்தற் பொருட்டு' என்றுங் கூறினர்.

இதனுன், நட்பின் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) நகுதற்கு இயைந்தன - சிரித்துமகிழ்தற்கு ஏற்றவற்றை நகையாடல் - சிரித்துமகிழ்தல். அவர்க்கு - தம்மில் ஒருவர்க்கு. வேண்டாத செய்கை உளதாயவழி - விரும்பத்தகாத தீச்செய்கை உண்டானபொழுது. கழறுதல் - கண்டித்துப் புத்திசொல்லுதல். பயத்தலான் - தருதலால். வேண்டப்படுவது அன்மையின் - விரும்பப்படுவதல்லாமையால். அதனை - பழி பாவத்தருஞ்செய்கையை. மிகுதி - அவசியமல்லாதது; தன் அளவுக்குத் தகாமல் மிக்கது; வரம்புகடந்தது. அது - பழிபாவந்தருஞ் செய்கையை. மீட்டல் வேண்டுதலின் - செய்யாதபடி திருப்பவேண்டுதலால். (ச)

எஅரு. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(இ - ள்.) (ஒருவனுடு ஒருவன் நட்பாதற்கு), புணர்ச்சி பழகுதல் - புணர்ச்சியும் பழகுதலு மாகிய காரணங்கள், வேண்டா - வேண்டுவதில்லை; உணர்ச்சி தான் - (இருவர்க்கும் ஒத்த) உணர்ச்சிதானே, நட்பு ஆம் கிழமை தரும் - நட்பாம் உரிமையைக் கொடுக்கும்; (எ - று.)

புணர்ச்சி-ஒருதேயத்தாராதல்; "இன்றேபோல்க நும் * புணர்ச்சி" என்றதும் அதனை. பழகுதல் - பலகாற் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சிஒப்பின் அதுவே, உடன்உயிர்நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம்.

நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல்,உணர்ச்சியொத்தல் என்னுங் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) புணர்ச்சி-சேர்க்கை. ஒத்தஉணர்ச்சி - அறிவுஒத்திருத்தல்; அபிப்பிராய பேதப்படாமை. நட்பாம் உரிமையைக் கொடுக்கும் - சிநேக சம்பந்தத்தையுண்டாக்கும். "இன்றேபோல்க" என்னும் மேற்கோள், புறநானூறு ஙஅ - ஆம் பாட்டிலுள்ளது; இதற்கு-நுமதுசேர்க்கை இன்று போலவே என்றும் இருக்க என்றுபொருள்; [இது, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனுர் பாடியது.] புணர்ச்சியென்பது ஓரிடத்திலிருத்த லென்று பொருள்படுதற்கு இது மேற் கோளாகக் காட்டப்பட்டது. அதனை - ஒருதேயத்தாராதலை. பலகால் - பலதரம். சொல்லாடி - பேசி. மருவுதல் - கலத்தல். இவ்விரண்டும் இன்றி - புணர்ச்சியும் பழகுதலும் இல்லாமல்.

கோப்பெருஞ்சோழன் - சோழநாட்டில் உறையூரில் இருந்து அரசாண்ட ஒரு சோழராசன்;செய்யுள்செய்தலில்வல்லவன்;பிசிராந்தையார்க்கும்

* பி - மீ: புணர்ச்சிதானே

பொத்தியார்க்கும் மற்றுஞ்சிலபுலவர்க்கும் உயிர்நண்பன். இவன், தன்பின்னோ களிருவரோடு பகைமைகொண்டு போர்செய்தற்கு எழுந்தபொழுது, புல் லாற்றூ ரெயிற்றியனு ரென்னும் புலவராற் சமாதானஞ்செய்யப்பட்டு, பின்பு எல்லாவற்றையுந்துறந்து வடக்கே சென்று சேர்கையில், நண்பினுல் தன் னுடனிறத்தற்குவந்த பொத்தியாரை நோக்கி 'புதல்வனைப் பெற்றபின் வருக' என்று கூறி அனுப்பிவிட்டு, அவர்வருதற்குமுன்னமே உயிர்நீத்தனன்; இவன் சொன்னபடி உறையூர்க்குச் சென்ற பொத்தியார், தமக்குச் சந்ததி யுண்டான பின்பு மீண்டுவந்து, இவன் முன்னமே உயிர்நீத்தமையையறிந்து வருந்தி, அவனிறந்தவிடத்து நாட்டப்பட்டிருந்த கல்லை நோக்கி 'எனக்கு இடந் தா' என்று கேட்டு, அங்ஙனமே அந்நடுகல் இடங்கொடுக்கப் பெற்று வியப்புற்று இவனைப் பாடித் தாமும் அங்கு உயிர்நீத்தனர்.

பிசிராந்தையார் - ஒருபுலவர்; பாண்டியநாட்டி லுள்ள பிசி ரென்னும் ஊரி லுள்ளவர்: 'ஆந்தை' என்பது, இவரது பெயர்; இவர், அறிவுநிரம்பிய மனைவியையும், மக்களையும், தன்கருத்தின்படி தவறுமலொழுகும் ஏவலாள ரையு முடையவர்; சான்றோர்பலரோடு சேர்க்கையுள்ளவர்; வாய்மை முத லிய பல நற்குணம் வழுவாதவர்; பிராயம் மிகமுதிர்ந்தபின்பும் நரையில்லா தவர். வேற்றுநாட்டவராகிய இவர், கோப்பெருஞ்சோழனைப்பற்றிக் கேள் விப்பட்டிருத்தலே யொழிய நேரில் அவனை ஒருபொழுதுங் கண்டு பேசிப் பழகாதிருந்தும் அவனிடத்து உயிர்நண்புடையராயிருந்தார்: இங்ஙனமே கோப்பெருஞ்சோழனுக்கும் இவரிடத்தில் மிக்க நண்பு நிகழ்ந்துவந்தது; இவர், அவனிடத்து மிக்கஅன்புபொருந்திய உரிமையால், தம்பெயரைப் பிறர்க்குச்சொல்லும்பொழுது 'என்பெயர் சோழன்' என்று அவன்பெயரைத் தம்பெயராகச்சொல்லும் இயல்புடையவராயிருந்தனர். இவர்பெயர் இரும் பிசிராந்தையா ரென்றும் வழங்கும். அவன், துறந்து வடக்கே சென்று சேர்ந்தபொழுது, தனதுநட்பாளராகிய பிசிராந்தையார் தன்நிலைமையைக் கேட்டுத் தாமுமல் இப்பொழுது தன்னிடம் வரக்கூடு மென்று நிச்சயித்து அவ்வுறுதியைத் தன்னுடனிருந்தசான்றோர்க்குச் சொல்லி அவர்க்காகஇட மொழித்துவைக்க வென்றுங் கூறி இவர்வரவை எதிர்பார்த்திருக்குமளவில், அவன்செய்தியைக்கேள்விப்பட்ட இவர், மனம்பொறாது உடனே தாமுந் துறந்து அவனிருந்தவிடத்தே சென்று அவன்உயிர்நீத்தபொழுது தாமும் உடன் உயிர்நீத்தனர்.

இங்குக் குறித்த விவரம், புறநானூற்றுச் செய்யுட்களால் விளங்கும்: தொல்காப்பியப் பொருளதிகார வுரையில் "தோழிதாயே" என்ற கற்பியற் சூத்திரத்தின்கீழ் 'இதற்குக் கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தை யாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தா ரென்றுகூறும் புறச்செய்யுட்கள் உதாரணம் என்றவாறு' என்று எழுதியதும் அறிக. "பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய, மாமலை பயந்த காமரு மணியும், இடைபடச்சேயரா யினுந் தொடைபுணர்ந்து, அருவிலை நன்கலம் அமைக்கும் காலை, ஒருவழித்

தோன்றி யாங்கு என்றுஞ் சான்றோர், சான்றோர் பால ராப, சாலார் சாலார் பால ராகுபவே'' என்று வடக்கிருந்த பிசிராந்தையாரைக் கண்ட கண்ணகனார் பாடிய புறநானூற்றுச் செய்யுளிலும் இக்குறளின் கருத்து விளங்குதல் காண்க.

அது - உணர்ச்சியொத்தல். உடன் உயிர்நீங்கும் உரிமைத்து ஆய-கூட உயிர்விடும் உரிமையை யுடையதான. பயக்கும்-தரும்; உண்டாக்கும். பின்னது - உணர்ச்சியொத்தல். புணர்ச்சி பழகுதல் - உம்மைத்தொகை. (இ)

எஅசு. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

(இ - ள்.) முகம் நக - (கண்டவழி அகம்ஒழிய) முகம்மாத்திரமே மலரும் வகை, நட்பது - நட்குமது, நட்பு அன்று-நட்பாகாது; நெஞ்சத்து-அன்பால், அகம் நக - அகமும் மலர, நட்பது - நட்குமதே, நட்பு - நட்பாவது; (எ-று.)

நெஞ்சின்கண் நிகழ்வதனை 'நெஞ்சு' என்றார். இறந்ததுதழீஇயஎச்சவும்மை, விகாரத்தால் தொக்கது; *அதனால், இரண்டும் ஒருங்கேமலரவேண்டுமென்பது பெற்றாம்.

(கு - ரை.) கண்டவழி - பார்த்தபொழுது. அகம்ஒழிய - மனம்மகிழாமல். நட்குமது - சிநேகிப்பது. நெஞ்சிற்பொருந்தும் அன்பை 'நெஞ்சு' என்றது-இடவாகுபெயர். இறந்ததுதழுவியஎச்சவும்மை தொகுத்தல்விகாரப்பட்டது, 'அகம்' என்பதன் இறுதியிலென்க. அதனால் - அவ்வும்மையால். அது; 'முகம்' என்றதைத் தழுவிநின்றது. இரண்டும் - முகமும், அகமும். ''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து'' என்னுமாறு முகமலர்ச்சியில்லாமைகாணுமிடத்து விருந்தினர்க்கு உண்டாகும் வாட்டம் நண்பர்க்கும் பொருந்துவ தாதலால், நட்புக்கு அகமலர்ச்சியோடு அதன் அறிகுறியான முகமலர்ச்சியும் வேண்டுவ தாயிற்று. 'முகம்' என்பதன் இறுதியில் பிரிநிலையேகாரம் விகாரத்தால் தொக்கது. நட்பது - எதிர்காலத்தொழிற்பெயர்; காலமுணர்த்தாது தன்மையுணர்த்திற்று. நெஞ்சத்து - மூன்றும்வேற்றுமைத்தொகை: 'அகநக நட்பதே நட்பு' என்றும் பாட முண்டு. (சு)

எஅஎ. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணில்ல லுழப்பதா நட்பு.

(இ - ள்.) அழிவின் அவை நீக்கி-கேட்டினைத்தரும் நீநெறிகளை(ச் செல்லுங்கால்) விலக்கி, ஆறு உய்த்து-(ஏனை) நன்னெறிகளை (ச் செல்லாக்காற்) செலுத்தி, அழிவின்கண் - (தெய்வத்தாற்) கேடுவந்துழி, (அது விலக்கப்படாமையின்), அல்லல் - அத்துன்பத்தை, உழப்பது - உடன் அனுபவிப்பதே, நட்பு ஆம் - (ஒருவனுக்கு) நட்பாவது; (எ - று.)

'ஆறு' என வருகின்றமையின், 'அழிவினைத் தரும் அவை' என்றுழிஞ்தார். ''தெருண்டவறிவினவர்'' என்புழிப்போல, இன்சாரியை நிற்க இர

* பி - மீ:—இதனால்,

ண்டனுருபு தொக்கது. இனி, 'நவை' என்று பாடமோதி, அதற்கு - போ ரழிவினுஞ் செல்வவழிவினும் வந்த துன்பங்க ளென்றும், 'அழிவின்கண்' என்பதற்கு - யாக்கையழிவின்கண் என்றும் உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) செல்லுங்கால் - அவற்றிற் செல்லும்பொழுது. செல்லாக் கால் - அவற்றிற் செல்லாதபொழுது. தெய்வத்தால் - விதிவசத்தால். வந் தழி - வந்தவிடத்து. அது - அக்கேடு. ஆறு - வழி. அடைமொழியின்றிக் கூறுமிடத்துப் பொதுப்பெயர்கள் பெரும்பாலும் நல்லவற்றையேகாட்டுதல் இயல்புஆதலால், ஆறு - நல்லாறுஆயிற்று. பின்னே 'ஆறு' என வருவத னால், முன்னே 'அழிவினவை' என்றது - கேட்டைத்தரும்வழிகளே உணர்த் திற்றென்க; ''செய்யுட்குஏற்புழி'' [நன் - பொது - சூத்.] என்றபடி, செய் யுளாதலால் 'அவை' என்னுஞ் சுட்டுப்பெயர் 'ஆறு' என்னும் இயற்பெயர் முன் வந்து வழியை யுணர்த்திற்று; இது, வழுவமைதி. அழிவினைத் தரும் அவை யென்று ஒழிந்தார் - அழிவினைத்தரும்நெறிகளே யென்னாது அழி வினைத்தரும்அவை யென்று சுட்டியமாத்திரத்தோடு நிறுத்தினர். ''தெருண் டவறிவினவர்''என்ற மேற்கோள், நாலடியார் - இரவச்சம் - (க) ''நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றுந், தம்மாலா மாக்க மில ரென்று - தம்மை, மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந், தெருண்ட வறிவி னவர்'' என்ற செய்யுளி லுள்ளது. 'தெருண்டவறிவினவர்' என்பதற்கு - தெளிந்த அறி வையுடைய அவர்கள் [நல்கூர்ந்தார்] என்று பொருள். என்புழி - என்ற விடத்து. அழிவின் அவை-இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. 'நவை என்று பாடமோதி' என்றது, 'அழிவினவை' என்றதை அழிவின் அவை யென்று கொள்ளாமல் அழிவின்நவை யென்று பிரித்துக்கொண்டு என்றபடி. அதற்கு - 'அழிவின் நவை' என்பதற்கு. போர்அழிவினும்-போரில் தோற்ற லாலும். செல்வஅழிவினும் - பொருளழிதலாலும். இப்பொருள்களில், 'அழிவின்' என்பது - ஐந்தாம்வேற்றுமைவிரி; 'வந்த' என்பது, அவாய்நிலே யால் வருவிக்கப்படும். யாக்கையழிவின்கண் - உடம்புஅழிந்தபோது. பிற ருரைக்குக் கருத்து - தம்மிலொருவர்க்குப் போரில் தோற்றபொழுதாவது செல்வமழிந்தபொழுதாவது நேரிட்ட துன்பங்களே ஒழித்து நல்வழிச்செலுத் தித் தம்மிலொருவர்க்கு மரணம்நேருமாயின் அதற்காக அம்மரணத் துன் பத்தைப்பெறுவதே சிநேகதருமமென்பதாம். (எ)

எஅஅ. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

(இ - ள்.) உடுக்கை இழந்தவன் கை போல - (அவையிடை) ஆடை குலைந்தவனுக்கு (அப்பொழுதே) கை (சென்றுஉதவி அவ்விளிவரல் களையு மாறு) போல, இடுக்கண் ஆங்கு ஏ களைவது - (நட்டவனுக்கு) இடுக்கண்(வந் தழி) அப்பொழுதே (சென்று உதவி அதனைக்) களைவதே, நட்புஆம்-எட்பா வது; (எ - று.)

அற்றங்காத்தற்கண் கை தன்மனத்தினும் முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்குஒத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடையவன்தொழில், நட்பின்மேல் ஏற்றப்பட்டது.

(கு - ரை.) பலர்கூடியஇடத்தில் ஒருவனுக்கு உடுத்தஆடை சடக்கென நெகிழ்ந்துவிட்டால் அப்பொழுது அவன்கை விரைவில் அவ்வாடையை உடுத்தி அவனது மானத்தைக் காத்தல்போல, தம்மில்ஒருவனுக்குத் தீங்கு நேரும்பொழுது உடனேஉதவிசெய்து அத்தீங்கைஒழிப்பதே நிகேகதருமமென்க. நட்பாய்உதவித் துயர்தீர்த்தற்குக் கை உவமைகூறப்படுதலை "தோளுற்றெர் தெய்வந்துணையாய்த் துயர்தீர்த்த வாறும்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. "எனது தோள்களி லிலையவன்தனக்கு வேறுயா தெனு மெண்ணுடை மனத்தான்," "ராமஸ்ய தக்ஷிணோ பாஹுः" என்றஇடங்களில், வேண்டுவனசெய்யுந் தம்பி கையெனப்பட்டவாறுங் காண்க. ஆடைநெகிழ்ந்தவனுக்குமறைத்து மானங்காக்கவேண்டியஉறுப்பைத் தானே சென்று மறைத்து மானங்காத்தல்பற்றிக் கை உவமைகூறப்பட்ட தென்னலுமாம்.

அவையிடை - பலர்கூடியசபையினிடத்தில். குலைந்தவன் - நெகிழப் பெற்றவன். அவ்விளிவரல் களையுமாறு - அந்தஅவமானத்தை நீக்கும்விதம். நட்டவனுக்கு - நிகேகித்தவனுக்கு. இடுக்கண் - துன்பம். அதனைக் களைவது - அத்துன்பத்தைத் தீர்ப்பது. அற்றம் காத்தற்கண் - (அவமானம் நேராதபடி) சமயத்திற் பாதுகாத்தலில். அற்றம் என்பதற்கு - சோர்வு அல்லது அவமானம் என்னும் பொருள்கொள்ளலுமாம். களைவுழியும் - தீர்க்கும்பொழுதும். அதற்கு ஒத்த - இடுக்கண்களைதற்கு உபமானமான. 'அதற்குஒத்த தொழிலுவமை' என்றது, 'அப்பொழுதேசென்று உதவி அவ்விளிவரல்களைதல்' என்றதை. உடையவன்தொழில் - நட்புடையானதுதொழில்; இடுக்கண்களைதல். அதனை நட்பின்மேல் ஏற்றி 'இடுக்கண்களைவதாம் நட்பு' என்றது, உபசாரவழக்கு: குணிவினை குணவினையாகக் கூறப்பட்டது. 'உடையவன்தொழில் நட்பின்மேல் ஏற்றப்பட்டது' என்றது, முந்தின இரண்டுகுறள்களுக்கும் பொருந்தும்.

உடுக்கை - உடுக்கப்படுவ தென ஆடைக்குக் காரணப்பெயர்: உடு - பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி, கு - சாரியை, க் - சந்தி; இதனை, 'கை' விகுதிபெற்ற தொழிலாகுபெயராகவுங் கொள்ளலாம். துன்பம் நேர்ந்தகாலத்திற் கண் இடுங்குதல்பற்றி, துன்பத்துக்கு இடுக்கணென்று ஏதுப்பெயர்; இடுங்குசண் என்பது இடுக்கண் என்று விகாரப்பட்டதென்க: காரியத்தின்பெயர், காரணத்தின்மேல் நின்றது. இதனை, தொல்காப்பியவுரையில் 'இடுக்கண் என்பது - மலர்ந்தநோக்கமின்றி மையல் நோக்கம்பட வரும் இரக்கம்' என்றதுகொண்டு அறிக. உவமையணி. (அ)

ஏஅக. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

(இ - ள்.) நட்பிற்கு வீற்றிருக்கை யாது எனின் - நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின்,—கொட்பு இன்றி - (அஃது எஞ்ஞான்றும்) திரிபு இன்றி,

ஒல்லும் வாய் - இயலுமெல்லையெல்லாம், ஊன்றும் - (அறம்பொருள்களில்) தளராமைத் தாங்கும், நிலை - திண்மை; (எ - று.)

ஒருஞான்றும் வேறுபடாது மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம்பொருள்களில் தளர்ந்துழி அத்தளர்ச்சிநீக்கி அவற்றின்கண்நிறுத்துதற்குமேல் ஒருசெயலும் இன்மையின், அதனை 'நட்பிற்கு மூடிந்த எல்லை' என்றார்.

(கு - ரை.) அரசு இருக்கை - அரசாட்சிசெய்து வீற்றிருத்தல்: என்றது - இங்கே, மிக மேம்பட்டநிலைமை யென்றபடி. அஃது - நட்பு. எஞ்ஞான்றும் திரிபு இன்றி - எந்நாளும் மாறுபடாமல். இயலும் எல்லை யெல்லாம் - கூடும் இடங்களிலெல்லாம். தளராமை - தளராதபடி. தாங்கும் திண்மை - நன்றாக உதவும் வலிமை. ஒருஞான்றும் - ஒருபொழுதும். வேறுபடாது நிறுத்துதற்கு எனக் கூட்டுக. மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம்பொருள்கள் - மறுமைப்பயன்விளைத்தலில் மிகவுறுதியான் அறமும், இம்மைப்பயன்விளைத்தலில் மிகவுறுதியானபொருளும் என முறையே கொள்ளலாம்; அறம் இம்மைக்கும், பொருள் மறுமைக்கும் உறுதியாதலும் உண்டு. மறுமை - இப்பிறப்பொழிந்தபின் வரும்நிலை. இம்மை - இப்பிறப்பு; இவ்வுலகம். அறம் பொருள்களில் தளர்ந்த உழி - அறத்தைச் செய்தலிலும் பொருளைத் தேடுதலிலுஞ் சோர்ந்தபொழுது. அவற்றின்கண் - அறம்பொருள்களில். அதனை - அங்ஙனம் நிறுத்துதலை. முடிந்த எல்லை - பூர்ணமாகிய நிலைமை. வீற்றிருக்கை - வீற்றிருத்தல்; வீறு - மிக்க சிறப்பு. கொட்பின்றி ஊன்றும் என்க. (கூ)

எகூ. இனைய நிலரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

(இ - ள்.) 'இவர்—, எமக்கு - நமக்கு, இனையர் - இத்துணையன்பினர்யாம்—, இன்னம் - (இவர்க்கு) இத்தன்மையம்,' என்று—, புனையின் உம் : (ஒருவரை யொருவர்) புனைந்துசொல்லினும், நட்பு—,புல்லென்னும் - புல்லிதாய்த் தோன்றும்; (எ - று.)

'இவர்க்கு' என்பது, வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும்வேற்றுமை இன்றி *வைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமை உண்டாமாகலின் 'நட்புப்புல்லென்னும்' என்றார்.

இவையைந்துபாட்டானும், நட்பினது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) இத்துணை அன்பினர் - இவ்வளவு அன்புடையவர். இத்தன்மையம் - இவ்வளவு அன்புடையேம். புனைந்துசொல்லுதல் - இங்கே, ஒழுங்காக அலங்கரித்துக்கூறிச் சிறப்பித்தல். புல்லிது - அற்பமானது. 'எமக்கு' என்றதற்கு ஏற்ப, 'இவர்க்கு' என்பதை வருவித்தார். வேற்றுமையின்றி வைத்து - வேறுபாடில்லாமலிருந்து. புனையினும், உம் - உயர்வு சிறப்பு. புல்லென்னல்-பொலிவுகெடுதல்; புன்மை யெனப்படுதல். (கo)

* பி - ம்: வைத்தும் புனைந்துரைப்பின்.

அ0 - ஆம் அதிகாரம்.—நட்பாராய்தல்.

அஃதாவது - மேற்சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்கவேண்டுதலின், அவரை ஆராயுந் திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) மேல் சொல்லிய - முந்தின அதிகாரத்திற் சொல்லப்பட்ட. இலக்கணத்தார் - நட்பிலக்கணமுடையவர். நட்க - சிநேகிக்க. அவரை - நட்புக்கு உரியாரை. நட்பின்தன்மை இன்ன தென்றதன்பின், நட்புக்கு உரிய சிறந்த இலக்கணமுடையாரை இன்னரென்று ஆராயும் விதத்தைக் கூறுதல், அதிகாரமுறைமைக்குக் காரணம். 'நட்பு' என்பது - ஆகுபெயராய், நட்பினர்மேல் நின்றது.

எகூக். நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(இ - ள்.) நட்பு ஆள்பவர்க்கு - நட்பினை விரும்பி (அதன்கண்ணே) நிற்பார்க்கு, நட்ட பின் - (ஒருவனைத்) நட்புச்செய்தபின், வீடு இல்லை-(அவனை) விடுதல் உண்டாகாது; (ஆகலான்), நாடாது நட்டலின் - ஆராயாதுநட்புச் செய்தல்போல, கேடு - கேடுதருவது, இல்லை - (பிறிது) இல்லை; (எ - று.)

ஆராய்தல்-*குணஞ்செய்கைகளது நன்மையை ஆராய்தல். கேடு - ஆகுபெயர். நட்கின் தாம் அவர் என்னும் வேற்றுமையின்மையின் 'வீடில்லை' என்றும், அவ்வேற்றுமையின்மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங்கெடுவ ரென்பதுநோக்கி 'நாடாதுநட்டலிற் கேடில்லை' என்றுங் கூறினர்.

(கு - ரை.) அதன்கண்ணே - அந் நட்பிலே. ஆகலான் - ஆதலால். குணஞ்செய்கைகளது-குணமுஞ் செய்கையும் என்னு மிவற்றினுடைய. கேடு தருவதை, 'கேடு' என்றது-காரியவாகுபெயர். நட்கின்-சிநேகித்தால். வேற்றுமை - வேறுபாடு, வித்தியாசம், பேதம். அவன்கட் பழிபாவங்கள் தமவாம் - எனைகித்தவனிடத்துள்ள பழியும் பாவமும் தம்முடையவையாம். இருமையும் - இம்மை மறுமை யென்ற இரண்டிலும்: பழியால் இம்மையிலும் பாவத்தால் மறுமையிலுங் கெடுவ ரென்க. "பெரியோர், நாடி நட்பினல்லது, நட்டுநாடார்தம்மொட்டியோர்நிறத்தே" என்ற நற்றிணையும், "இன்னுசெயினுமினிய வொழிகென்று, தன்னையே தானேவினல்லது - துன்னிக், கலந்தாரைக்கைவிடுதல் கானகநாட, விலங்கதற்கும் வில்லாலரிது" என்ற நாலடியும் இங்குஒப்புநோக்கத்தக்கன. (க)

எகூஉ. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ - ள்.) ஆய்ந்து ஆய்ந்து - (குணமும் செய்கையும் நல்லனென்பதும் அல்ல னென்பதும்) பலகால் ஆராய்ந்தும் பலவாற்றுன் ஆராய்ந்தும், கேண்

* பி - ம்:—குணச்செய்கைகளது.

மை கொள்ளாதான் - (ஒருவனோடு) நட்புக்கொள்ளாதவன்,—கடைமுறை - முடிவில், தான் சாம் துயரம்-தான் சாதற்குஏதுவாய துன்பத்தினை, தரும் - (தன்மாற்றார் விளைக்கவேண்டாமல் தானே) விளைக்கும்; (எ - று.)

'கடைமுறைக்கண்' என இறுதிக்கண்தொக்க ஏழாவது விரிக்க. குணமுஞ் செயலுந் தீயானொடு கொள்ளின் அவற்கு வரும் பகைமையெல்லாம் தன்மேலவாய்ப் பின் அவற்றான் இறந்துவிடு மென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், ஆராயாவழிப்படும்இழுக்குக்கூறப்பட்டது.

(கு - ரை.) அல்லன் - நல்லவனல்லாதவன்; தீயவன். பலகால் - பலதரம். பலஆற்றான்-அநேகவழிகளால். மாற்றார் விளைக்கவேண்டாமல்-பகைவர் உண்டாக்கவேண்டாமலே. விளைக்கும் - உண்டாக்கிக்கொள்வான். இறுதிக்கண் தொக்க ஏழாவது-ஈற்றில் மறைந்த ஏழாம்வேற்றுமையுருபு. 'கடைமுறை' என்பதன் இறுதியில் தொக்குநின்ற 'கண்' என்னும் ஏழனுருபை விரித்து 'கடைமுறைக்கண்'என்று கொள்க. குணமும் செயலும் தீயான்-தீய குணமுந் தீயசெயலு முடையவன். கொள்ளின்-நட்புக்கொண்டால். அவற்கு-அத்தீயவனுக்கு. தன்மேல ஆய்-தன்மேல்வருவனவாக. அவற்றான்-அப்பகைமைகளால். ஆராயாவழிப் படும் இழுக்கு - நட்பாராயாவிடின் உண்டாகுங் குற்றம். கேண்மை கொள்ளாதான் என மாறுக. கொள்ளாதான் என்ற ஆண்பால்எழுவாய், தரும்என்னுஞ்செய்யுமென்முற்றைக் கொண்டது. பலதரம் பலவிதத்தால் ஆராயாமல் தகுதியல்லாதஒருத்தனைச் சிநேகஞ்செய்துகொண்டவன், பின்பு அவன்பகையால் தான் அழியநேரும். இனி, ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் ஒருவனோடு செய்யுங் கேண்மை, முடிவில் அவனுக்குத் தான் சாதற்குஏதுவாகிய துன்பத்தை யுண்டாக்கு மென நேரேகூட்டவுமாம். கடைமுறை - இறுதியெல்லை. (உ)

எகூ௩. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.

(இ - ள்.) குணன்உம் - (ஒருவன்) குணத்தினையும், குடிமைஉம் - குடிப்பிறப்பினையும், குற்றம்உம் - குற்றத்தினையும், குன்றா இனன்உம்-குறைவற்ற சுற்றத்தினையும், அறிந்து - ஆராய்ந்துஅறிந்து, நட்பு யாக்க - (அவனோடு) நட்புச்செய்க; (எ - று.)

குற்றமில்லாதார் உலகத்துஇன்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர்நட்பு விடற்பாற்றன்று என்பார் 'குற்றமும்' என்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டுவருதலின் 'குன்றாஇனனும்' என்றும், விடப்படின் தம்குறையா மென்பார் 'அறிந்தியாக்க' என்றுங் கூறினார்.

(கு - ரை.) சுற்றம் - பந்துவர்க்கம். இன்மையின் - இல்லாமையால். உள்ளது - உள்ளகுற்றம். பொறுக்கப்படுவது - பொறுக்கத்தக்கது. விடற்பாற்று அன்று - விடுதற்குரிய தன்மையையுடைய தன்று. சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலின்-உறவினரோடு மனமொத்

திருப்பவர் அப்பயிற்சியால் நினைத்தாரோடும் மனமொத்து நடக்கக்கூடு மாதலால். 'தெரிந்துதெளிதல்' என்னும் அதிகாரத்தில் "அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர், பற்றிலர் நாணுர் பழி" என்றதும், அக்குறட்பாவின் உரையிற் பரிமேலழகர் 'உலகத்தார்பழிப்பனவொழிதற்கும் புகழ்வனசெய்தற் கும்ஏதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்குஇன்மையின் அவர் தெளியப்படாரென்பதாம்' என்றதும், சுற்றமில்லாதவர் உலகத்தாரோடு தொடர்பிலராதலாற் பழியஞ்சாமைபற்றி அவர் தெளியத்தகாதவ ரென்பதை விளக்குதல் காண்க. விடப்படின் தம்குறையாம்-நினைக்கத்தக்கவர் நினை யாது விடப்பட்டால் விட்டவரது குற்றமாம்; தகாதவரைச்சினைத்தல் போலவே தக்கவரைச்சினையாதொழிதலும் குற்றமா மென்க. குணம் குற் றம் குலம் உறவினம் என்னும் இவற்றை ஆராய்ந்து, குற்றமில்லாதவனேடும், குற்றம்மிகச்சிறிதேயிருக்கப் பெருநற்குணங்களையுடையவனேடும், உயர்குடிப் பிறந்தவனேடும், உறவினருடன்ஒற்றுமையுடையவனேடும் நினைகஞ்செய்ய வேண்டு மென்பதாம். (ங.)

எகூச. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(இ - ள்.) குடி பிறந்து - உயர்ந்தகுடியின்கட் பிறந்து, தன்கண் பழி நாணுவானை - தன்மாட்டு (உலகர்சொல்லும்) பழிக்கு அஞ்சுவானை, கொடுத் தும் - (சில) கொடுத்தாயினும், நட்பு கொளல் - நட்புக்கோடல், வேண்டும்- சிறந்தது; (எ - று.)

குடிப்பிறப்பால் தான் பிழைசெய்யாமையும், பழியை யஞ்சலாற் பிழை த்தனபொறுத்தலும் பெற்றும். இவையிரண்டும் உடையானைப் பெறுத லரு மையின், அவன்நட்பை விலைகொடுத்துங் கொள்க என்பதாம்.

(கு - ரை.) குடியின்கண் - குலத்தில். தன்மாட்டு - தன்னிடத்து. உல கர் - உலகத்தார். சில - அவன்விரும்பும் பொருள்கள் சிலவற்றை. நட்புக் கோடல் - நினைத்தனுக்கிக்கொள்ளுதல். உயர்குடிப்பிறந்தவன் தான் பிழை செய்யாமையை "அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார், குன்றுவ செய்த லிலர்" என்பது முதலாக மேல் 'குடிமை' என்னும் அதிகாரத்துக் கூறுவத னாலும் உணர்க. நண்பர்செய்தபிழையைப் பொறுத்திடாளுயின் அதுபழிப்பா மாதலால், பழியை அஞ்சுபவன் நட்பிற்பிழைபொறுத்திடுவனென்க. பிழைத்தன - பிறர் செய்த குற்றங்களை. "அஃதொருவன், விற்றுக்கோட் டக்க துடைத்து" என்றாற்போல, 'கொடுத்துங்கொளல்வேண்டும்' என்றார்.

எகூரு. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(இ - ள்.) அல்லது - (தாம்) உலகவழக்கல்லது(செய்யக்கருதின்), அழ சொல்லி - சோகம்பிறக்கும்வகை சொல்லி(விலக்கி)யும், இடித்து - (செய்தக் காற் பின்னுஞ்செய்யாவகை) நெருக்கியும், வழக்கு அறிய - அவ்வழக்குச்

செய்யாவழிச் செய்விக்கவும், வல்லார் - வல்லாரை, ஆய்ந்து - ஆராய்ந்து, நட்புகொளல் - நட்புக்கொள்க; (எ - று.)

'அழச்சொல்லி', 'இடித்து' என வந்த பரிகாரவினைகளான், அவற்றிற்கு ஏற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். * தம்மொடுநட்டாரும் அறியும்வகை அறிவித்தல் அரிதாகலின், 'அறியவல்லார்' என்றார்; இரண்டாவது, இறுதிக்கண் தொக்கது.

(கு - ரை.) உலகவழக்கு அல்லது - லோகத்தாரது நடத்தைக்கு மாறுபட்டதை, சோகம் பிறக்கும்வகை - துக்க முண்டாம்படி. செய்தக்கால்-உலகவழக்கல்லாததொழிலைச் செய்துவிட்டால். பின்னும் செய்யாவகை - மீளவுஞ்செய்யாதபடி. நெருக்கியும் - கண்டித்தும், நிர்ப்பந்தித்தும். அவ்வழக்கு - உலகவழக்கத்தோடு ஒத்த தொழில். செய்யாவழி - செய்யாவிட்டால். குற்றவினைகள் - செய்யக்கருதின், செய்தக்கால் என்பன. அடிப்படச் செய்துபோந்த செயல் - தொன்றுதொட்டுச் செய்துவந்த செய்கை. இரண்டாம் வேற்றுமையுருபுதொக்கது, 'வல்லார்' என்பதன் ஈற்றில் என்க. தாம் மனமொழிமெய்களால் தீயன தொடங்கும்பொழுது தமக்கு இடித்திடித்துக்கட்டுரைகூறி அவற்றை விலக்கித் தம்மைக்கொண்டு நல்லன செய்விக்க வல்ல அறிவும் அன்பும் திறமையும் உறுதியும் உடையவர் சினேகிக்கத்தக்கவரென்பதாம்.

அறிய = அறிவிக்க; பிறவினைப்பொருளில்வந்த தன்வினை: செய்விக்க என்ற பொருளில் 'அறிய' என்றது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. இக்குறளில், 'அல்லது' என்பது - மத்திமதீபமாய், முன்னும் பின்னும் இயைந்தது. (ரு)

எகூசு. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(இ - ள்.) கிளைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல் - (ஒருவனுக்குக்கேடு என்பது) தன் நட்டாராகிய புலங்களை எஞ்சாமல் அளப்பது ஓர்கோல்: (ஆகலின்), கேட்டின்உம் ஓர் உறுதி உண்டு-அதன்கண்ணும் அவனுற்பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு; (எ - று.)

தத்தம் நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமாறுபோந்தார் பின்கேடுவந்துழிச் செயல்வேறுபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படுமென்பதுபற்றிக் கேட்டினைக் கோலாக்கியும், அதனால் அவரை அளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை 'உறுதி' என்றுங் கூறினர். கிளைஞர் - ஆகுபெயர். இஃது - ஏகதேசவுருவகம்.

இவைநான்குபாட்டானும், ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவரென்பதூஉம் கூறப்பட்டன.

* பி - மீ: தாம்அறிதலேயன்றித் தம்மொடுநட்டாரும் அறியும்வகை.

(கு - ரை.) ஒருவனது சிநேகத்தின் தன்மையை, மற்றொருவன், தனக்கு ஆபத்து நேர்ந்தகாலத்து அவன் உதவுதலும் உதவாமையுங் கொண்டு, தெளிவாக அறியலா மென்க. இங்ஙனம், ஒருவனுக்குக்கேடுநேர்தல் அவன் தனது சிநேகிதரின் அளவை ஐயந்திரிபற நன்குஅறிதற்குக் கருவியாகின்ற தென, தீயதனிடத்து நன்மையுண்மையைக் கூறுதலால், இலேசவணியாம்; அதாவது-குணத்தைக் குற்றமாகவும், குற்றத்தைக் குணமாகவுங் கற்பித்தல்.

கேடு - செல்வஅழிவு. புலம்-நிலம். எஞ்சாமல்-மிச்சமில்லாமல். கோல்-அளவுகோல். அதன் கண்ணும் - அக்கேட்டிலும். தத்தம் நட்பு எல்லை - தம் தமதுசிநேகத்தின் அளவு. செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமற் போந்தார் - ஒருவர் செல்வமுடையராயிருந்தகாலத்தில் தாம் உண்மையற்ற சிநேகமுடையவ ரென்று வெளிக்காணவொண்ணாதபடி மிக்கசிநேகிதர் போல வெளிக்காட்டி நடந்தவர். செயல் வேறுபடுதல் - சிநேகத்துக்கு உரிய தன்மைகள் குறைதல். அவை - அந்நட்பெல்லைகள். வரையறுக்கப்படும் - அளவிட்டறியப்படும். அதனுல் - கேடாகிய கோலினுல். ஆவாரையே கோடலின் - தக்கவரையே நட்பாக்கொள்ளக்கூடு மாதலால். உறுதி - நன்மை தருவது. 'கிழவனுர்' என்றது - இங்கே, அவரது நட்பெல்லைகளைக் குறித்தலால், பொருளாகுபெயராம். கேட்டை 'கோல்' என்றதற்கு ஏற்ப, கிழவனுரை 'புலம்' என்னுமையால், ஏகதேசவுருவகவணி. ஆராயும் ஆறு - ஆராயும் விதம். உம்மை - இழிவுசிறப்பு. உறுதிதருவதை, உறுதியென்றது - ஆகுபெயர். 'கேட்டின்' என வருதலால், 'கோல்' என்ற பெயர்ப்பயனிலைக்கு, 'கேடு' என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. (சு)

எகூஎ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு. ஊதியம் என்பது - பேறு என்று சொல்லப்படுவது, பேதையார் கேண்மை ஒரீஇ விடல் - அறிவிலாரோடு நட்பு(க்கொண்டாளுயின் அதனை) ஒழிந்து (அவரின்) நீங்குதல்; (எ - று.)

நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் வெறிகமழ்சந்தனமும் வேங்கையும் வேமாறு போலத் தீங்குவருதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித் தீங்கொழி தலேயன்றி இருமையின்பத்திற்கு உரிமையெய்தலு மூடைமையின் அதனை 'ஊதியம்' என்றுங் கூறினர்.

(கு - ரை.) பேறு - லாபம். அதனை - அந்நட்பை. அவரின் நீங்குதல் - அவரைவிட்டுப் பிரிதல். நீங்காக்கால் - (அவரைவிட்டுப்) பிரியாவிட்டால். வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போலத் தீங்குவருதலின் - வாசனைவீசுகின்ற சந்தனமரமும் வேங்கைமரமும் (மூங்கிலின் சேர்க்கையால்) வெந்து அழிவதுபோல அறிவிலாரது சேர்க்கையால் தனக்குத் தீமையுண்டாகுமாதலால்: "மனத்தான் மறுவில செனுந் தானஞ் சேர்ந்த, இனத்தா லிகழப்படுவர் - புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனத்தீப்பட்டக் கால்" என்பது, நாலடியார் - நல்லினஞ்சேர்

தல் - க0. "சந்தனத்தைச் சேர்ந்துவுந் தக்க மணங்கமழுஞ், சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற - அத்தவனந், தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வ தன்றித், தானுங் கெடச்சுடுமே தான்" எனப் பின்னோர் கூறுவதுங் காண்க. நீங்கியவழி - பிரிந்தவிடத்து. இருமை யின்பத்திற்கு உரிமை எய்தல் - இம்மை மறுமையின்பங்கட்கு உரிய தன்மையை யடைதல். 'என்பது' எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது; செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய்வினையென்க. ஓரீ இ-ஒருவியென்னும் வினையெச்சம் விகாரப்பட்டு அளபெடுத்தது; சொல்லிசையளபெடை: மாத்திரைமூன்று.(எ)

எகூ௨. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணூற்றறுப்பார் நட்பு.

(இ - ள்.) உள்ளம் சிறுகுவ - (தம்) ஊக்கம் சுருங்குதற்குக் காரணமாய வினைகளை, உள்ளற்க - செய்ய நினையாதொழிக; (அதுபோல), அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்பு - (தமக்கு) ஒருதுன்பம்வந்துழிக் கைவிடுவார் நட்பினை, கொள்ளற்க - கொள்ளாதொழிக; (எ - று.)

உள்ளஞ் சிறுகுவ வானை - தம்மின் வலியாரோடு தொடங்கியனவும், பயனில்லனவுமாம். 'ஆற்று' என்பது - முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியராவார்போன்று ஒழிதலின், '* ஆற்றறுப்பார்' என்றார். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிந்தேவிடுமென்பதாம்.

(கு - ரை.) ஊக்கம் - மனவெழுச்சி; உற்சாகம். தம்மின் வலியாரோடு தொடங்கியன - தம்மைக்காட்டிலும் வலிமையுடையவரோடு செய்யத்தொடங்கிய போர்த்தொழில்கள். பயன் இல்லன - பிரயோஜனமில்லாதவை. ஆற்று=ஆற்றல்; ஆற்றுதல்: வலிமையாய் உதவுதல்; அதனையொழிப்பவர், ஆற்றறுப்பார். முதனிலைத்தொழிற்பெயர் - பகுதியே தொழிற்பெயர்ப் பொருளையுணர்த்துவது: [முதனிலை - பகுபதத்தின்முதலில் நிற்பது, பகுதி;] இதில், தொழிற்பெயர்விகுதி புணர்ந்து கெடும். முன் எல்லாம் வலியரரவார் போன்று - துன்பம்வருதற்கு முன்பெல்லாம் வலிமையுடையராய் உதவுபவர் போலிருந்து. ஒழிதலின் - துன்பம்வந்தவிடத்து வலிமையுடையராய் உதவாமையால். 'உள்ளற்க உள்ளஞ்சிறுகுவ' என்ற உபமானவாக்கியத்திற்கும், 'கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார்நட்பு' என்ற உபமேயவாக்கியத்திற்கும் இடையில் உவமவுருபுகொடாமற் கூறியதனால், எடுத்துக்காட்டுவமையணி; இதனை வடநூலார் திருஷ்டாந்தாலங்கார மென்பர். மனந்தளர்தற்குக் காரணமானதொழில் செய்யநினைத்தற்குத்தகாதவாறுபோல, ஆபத்துக்காலத்தில் உதவாதவரதுநட்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்பதாம். கொள்ளின் - துன்பம்வந்தபொழுது கைவிடுபவரதுநட்பைக்கொண்டால். அழிந்தேவிடும் - கொண்டவன் தவறாமல் அழிந்தேவிடுவன். (அ)

எகூகூ. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

---

* பி - மீ:—'வலியறுப்பார்'

(இ - ள்.) கெடும் காலை கைவிடுவார் கேண்மை - (ஒருவன்) கெடுங்காலத்து (அவனை விட்டு) நீங்குவார் (முன் அவனோடுசெய்த) நட்பு,—அடும் காலை உள்ளின் உம் - (தன்னைக்கூற்று) அடுங்காலத்து (ஒருவன்) நினைப்பினும், உள்ளம் சுடும் - (அந் நினைத்த) உள்ளத்தைச் சுடும்; (எ - று.)

நினைத்ததுணையானே இயைபில்லாதபிறனுக்கும் கூற்றினுங்கொடிதாமென, கைவீடெண்ணிச்செய்தநட்பின் கொடுமை கூறியவாறு. இனி, அவன் தானே ஆக்கிய கேடு தன்னை அடுங்காலை உள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென்று உரைப்பாரும் உளர்.

இவைமூன்றுபாட்டானும், ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருவனைத் துன்பம்வந்தகாலத்தில் அவனதுசிநேகிதர்கள் அடுத்துஉதவிப் பாதுகாவாமல் விட்டுநீங்கினரென்ற தன்மையை யாதொரு சம்பந்தமுமில்லாத அயலானொருவன் கேள்விப்பட்டிருந்து அத்தன்மையை அவன் தன்மரணகாலத்தில் நினைப்பானாயினும் அது அப்பொழுது அம்மரணவேதனையினும் அவன்மனத்தை மிகவருத்துமென்பதாம். இங்ஙனம் ஒருவனைச் சிநேகிதர் சமயத்திற் கைவிட்டகொடுமை நண்பனல்லாதநொதுமலனை நெடுநாள்கழித்தபின்பும் நினைத்தமாத்திரத்திலும் கூற்றினுங்கொடிதாய் வருத்தும் என்றதனால், அது அவனை அக்காலத்தில் இன்னபடி வருத்துமென்றல் கூறவேண்டாதாயிற்று.

கெடுங் காலத்து - துன்பமடையும் பொழுது. கூற்று அடுங்காலத்து - யமன்கொன்றுவருத்துங்காலத்து; மரணவேதனைப்படுங்காலத்தில் என்றபடி. ஒருவன் - அயலானொருத்தன். சுடும் - மிகவருத்தும் என்றபடி. நினைத்ததுணையானே - நினைத்தமாத்திரத்தாலே. இயைபுஇல்லாத-சம்பந்தமில்லாத. கூற்றினும் கொடிது - யமனைக்காட்டிலுங் கொடியது. கைவீடு எண்ணிச் செய்த நட்பு - ஆபத்துக்காலத்தில் தாம்விட்டுவிடநினைத்து முன்பு செய்த சிநேகம்.

இனி, இரண்டாவதுஉரைக்குக்கருத்து:—ஒருவன் துன்புறுங்காலத்து அவனைக் கைவிடுபவர் முன் அவனோடுசெய்த சிநேகம், அவன் தானேதனக்குச் செய்துகொண்ட தீங்கு தன்னையழிக்குங்காலத்துநினைத்தாலும், அத்தீங்கினும் மிகவருத்தும் என்பதாம்; ஒருவன் வரைபாய்ந்தும் நீரிலேனும் நெருப்பிலேனுங்குதித்தும் தற்கொலைசெய்துகொள்ள முயன்றமுயற்சி தன்னைக் கொல்லும்பொழுது நினைத்தாலும் அவ்வருத்தத்தினும் மிகவருத்துவது, கெடுங்காலைக்கைவிடுவார்கேண்மை யென்க. ('அவன் தானே' என்பதற்கு - கெடுங்காலத்துக்கைவிட்டவன்தானே யென்று பொருள்கொள்ளலாகாது; மூலத்தில் "கெடுங்காலைக் கைவிடுவார்" என்று பன்மையாகவுள்ளதனோடு மாறுபடுதலால்.)

இனி, இக்குறளுக்கு, கெடுங்காலைக்கைவிடுவாரதுகேண்மை அது கொண்டவனுக்குத் தன்னைக் கூற்றுவன் அடுங்காலத்து நினைப்பினும் அந்நி

ஊனத்த உள்ளத்தை அக்கூற்றுவனினுங் கொடிதாய்வருத்து மென்று பொருள் கொள்ளுதல், எளியவழியாம். (கூ)

அ00. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

(இ - ள்.) மாசு அற்றார் கேண்மை - (உலகோடு ஒத்துக்) குற்றமற்றார் நட்பினையே, மருவுக - பயில்க; ஒப்பு இலார் நட்பு - உலகோடு ஒத்தலில்லார் நட்பினை, (அறியாது கொண்டாராயின்), ஒன்று ஈத்து உம் ஒருவுக - (அவர் வேண்டியது) ஒன்றனைக் கொடுத்தாயினும் விடுக; (எ - று.)

உலகோடுஒத்தார்நட்பு இருமையின்பமும்பயத்தலின் 'மருவுக' என்றும், அதனோடுமாறுயினுர்நட்புத் துன்பமேபயத்தலின் அதன் ஒழிவை 'விலை கொடுத்துங் கொள்க' என்றுங் கூறினர்.

இதனுன், அவ்விருமையுந் தொகுத்துக்கூறப்பட்டன.

(கு - ரை.) உலகோடு - உலகத்தவரோடு; உயர்ந்தவரொழுக்கத்தோடு எனினுமாம். ஒத்து - மாறுபடாமல். பயில்க - ஏற்றுக்கொண்டு பழகவேண்டும். கொண்டாராயின் - கொண்டாராஞல். உலகோடுஒத்தார்நட்பு இருமையின்பமும் பயத்தல், அவரிடத்துப் புகழும் புண்ணியமும் தமவா மாகலான். "புத்தேளுலகத்து மீண்டும் பெறலரிதே, ஒப்புரவி னல்ல பிற" என்றதனுலும், உலகத்தோடொத்தசெயலின்சிறப்பை யுணர்க. அதனோடு மாறுயினுர் - உலகத்தோடு மாறுபட்டவர். அதன் ஒழிவை - அச்சினேகத்தின் நீக்கத்தை. அவ்விருமையும் - அவ்விரண்டும்; ஆராய்ந்தால் நட்கப்படுவா ரிவ ரென்பதும், ஆராய்ந்தால் நட்கப்படாதா ரிவ ரென்பதும். கீழ் எகூச - ஆங் குறளில் நல்லவர்நட்பை 'கொடுத்துங் கொளல்வேண்டும்' என்றுற்போல, இங்கே தீயவர்நட்பை 'ஒன்றீத்தும் ஒருவுக' என்றார். வலிய ஒழிக்கத்தக்கது என்பதாம்.

ஈத்து - ஈந்து என்பதன் முதற்சொரூபம்; இதுவே, ஈந்து என மெலிவது. 'ஈத்து' என்பதும், 'ஈந்து' என்பதுபோலவே இலக்கியங்களிற் பயின்றுவரும்; "ஈத்துவக்கு மின்பம்" என்றார், ஈகையென்றஅதிகாரத்திலும். 'ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்று' எனத் தொல்காப்பியவுரையில் நச்சினர்க்கினியர் உரைத்தது கொண்டு, ஈத்து என்றதை ஈந்துஎன்பதன் வலித்த லென்றல் பழையஇலக்கணநூற்கொள்கைக்குச் சிறவா தென்று தெரிகின்றது. (அன்றியும், "வலித்தல் மெலித்தல்" என்னுஞ்சூத்திரத்து 'வேண்டுழி' என்றதனுல் எதுகை தூமுதலிய யாப்பிலக்கணத்திற்கு இன்றியமையாதவிடத்துமாத்திரமே செய்யுள்விகாரம் ஒருதற்கு உரிய தென்பதும், அப்படிப்பட்டஅவசியம் ஒன்றும் இல்லாத இடத்திலும் 'ஈத்து' எனச் சான்றோர்செய்யுள்களிற் பிரயோகமுள்ளதென்பதும், இக்குறளிலும் அங்ஙனமே யென்பதும் அறிக.) (கo)

அக - ஆம் அதிகாரம்.—பழமை.

அஃதாவது - நட்டாரது பழையராந்தன்மை பற்றி அவர்பிழைத்தன பொறுத்தல்; காரணப்பெயர், காரியத்திற்கு ஆயிற்று. ஆராய்ந்து நட்கப்

பட்டா ரெனினும் பொறுக்கப்படுங்குற்றமுடையராகலானும் ஊழ்வகையர் ணும் நட்டார்மாட்டுப் பிழையுளதா மென்பது அறிவித்தற்கு, இது நட்பா ராய்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) நட்டார்-நண்பர். அவர்பிழைத்தன-அவர்கள்செய்த பிழை களே. பழமையாகிய காரணப்பெயர், அதுபற்றிச் செய்யப்படும் பிழைபொ றுத்தலாகிய காரியத்திற்கு ஆகுபெயர்; காரணவாகுபெயர். நாலடியாரில் நட்பாராய்தலென்னும்அதிகாரத்தின்பின் அந்நண்பரிடத்துஉள்ளனவாகும் பிழைகளைப் பொறுத்தல் நிகேகதருமமா மென்று கூறும் அதிகாரத்திற்கு 'நட்பிற்பிழைபொறுத்தல்' என்று பெயர். ஊழ்வகையானும் - விதிவசத்தா லும். நட்டார்மாட்டு-நினேகிதரிடத்தில். இது-பழமையென்ற அதிகாரம்.

அ0க. பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(இ - ள்.) பழமை எனப்படுவது யாது எனின் - பழமையென்று சொ ல்லப்படுவது யாதென்று வினவின்,-(அது),—கிழமையை - (பழமையோர்) உரிமையாற் செய்வனவற்றை, யாதுஉம் கீழ்ந்திடா - சிறிதும் சிதையாது (அவற்றிற்கு) உடம்படும், நட்பு—; (எ - று.)

கிழமை - ஆகுபெயர்; 'கெழுதகைமை' என வருவனவும் அது. உரிமை யாற்செய்வனவாவன - கருமமாயினசெய்யுங்காற் கேளாதுசெய்தல், கெடும் வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவுச்சங்களின்மை என்றிவை முதலாயின. சிதைத்தல் - விலக்கல்.

இதனுல், 'பழமையாவது - காலஞ்சென்றதன்று: இப்பெற்றித்தாய நட்பு' என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) வினவின் - கேட்டால். அது - அப்பழமை. சிதையாது - விலக்காமல். உடம்படும் - சம்மதித்திருக்கின்ற. கிழமை - உரிமை; இங்கே, உரிமையாற் செய்வனவற்றிற்கு, காரணவாகுபெயர். உரிமைகுறிக்கின்ற 'கெழுதகைமை' என்ற சொல் இங்ஙனங் காரணவாகுபெயராதலே, அடுத்த இரண்டுகுறள்களிற் காண்க. ஆனதுபற்றியே, 'வருவன' என்று பன்மை யாற் கூறினுர். அது - ஆகுபெய ரென்றபடி. கருமமாயின - காரியங்கள். இப்பெற்றித்து ஆய - இப்படிப்பட்டதான. செய்யுங்கால்-செய்யும்போது. கோடல் - கொள்ளுதல். பணிவு அச்சங்கள் இன்மை - வணக்கமும் பயமும் இல்லாமை. நெடுநாளாகஉடந்துஉருகிறபழக்கம்மாத்திரமே பழமையெனத் தக்கதன்று: அப்பழக்கத்தால் நட்பிற்பிழைபொறுத்தலே பழமையெனத்தக் கது என்பதாம். (க)

அ0உ. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(இ - ள்.) நட்பிற்கு—, உறுப்பு-அவயவமாவன;—கெழுதகைமை - (நட் டார்) உரிமையாற்செய்வன; (அதனுல்), அதற்கு - அவ்வுரிமைக்கு, உப்பு ஆதல் - இனியராதல், சான்றோர் கடன்-அமைச்சார்க்கு முறைமை; (எ-று.)

வேறன்மை தோன்ற, 'உறுப்பு' என்றார். 'உறுப்பு' என்பது - ஈண்டு, இலக்கணையடியாகவந்த குறிப்புச்சொல். அவயவமாதலறிந்தே இனியராவ ரென்பது தோன்ற, சான்றோர்மேல் வைத்தார்.

(கு - ரை.) உறுப்பு-அங்கமென்பதுபோலக் கொள்க. உப்பு-இனிமை; இனியவர்க்குப் பண்பாகுபெயர். சான்றோர் - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் முதலிய பலகுணங்களாலும் நிறைந்தவர். முறைமை - நீதி. வேறுஅன்மை-வேறல்லாமை; நட்பிற்கும் நட்டார்உரிமையாற்செய்வனவற்றிற்கும் உள்ள ஒற்றுமை. ஈண்டு - இங்கு. இலக்கணை - ஆகுபெயர்; வடமொழி - லக்ஷணை. உறுப்புப்போல்வதை 'உறுப்பு' என்றது - உவமவாகுபெயர். பொருட்குக் கூறும் உறுப்பை இங்கே பண்பிற்குக் கூறியதனால், 'இலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல்' என்றார். ஒன்றற்குஉரியதை மற்றொன்றுக்கு அமைப்பது, இலக்கணையாம். குறிப்புச் சொல் - குறிப்பாற்பொருளுணர்த்துஞ் சொல். ஆகுபெயர் குறிப்புச்சொற்களிலொன்றுவதை "ஒன்றொழிபொதுச்சொல் விகாரந் தகுதி, ஆகுபெய ரன்மொழி வினைக்குறிப்பே, முதல் தொகை குறிப் போ டின்னபிறவும், தறிப்பிற்றநுமொழி அல்லன வெளிப்படை" என்னும் நன்னூலாலும் உணர்க. அவயவமாதல் - நண்பர் உரிமையாற்செய்வன உறுப்பாயிருத்தல். இனியராவர் - அவ்வுரிமைக்கு உடம்பட்டுமகிழ்வரென்ற படி. நண்பர் உரிமையாற்செய்யுஞ் செயல்கள் நண்பிற்கு அங்க மாதலால், அங்ஙனஞ்செய்தவற்றை வெறுக்காமல் அவற்றிற்கு மகிழ்தல் பெரியோ ரியல்பு என்பதாம். (உ)

அ0ரு. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

(இ - ள்.) கெழுதகைமை - (தாம் உடம்படாதனவேனும் நட்டார்) உரி மையாற்செய்தனவற்றிற்கு, செய்து ஆங்கு அமையாக்கடை - (தாம்) செய் தாற்போல உடம்படாராயின், பழகிய நட்பு எவன் செய்யும் - (அவரோடு) பழையதாய்வந்த நட்பு என்னபயனைச் செய்யும்? (எ - று.)

செய்தாற்போல உடம்படுதலாவது - தாமும் அவரிடத்துஉரிமையால் உடன்படுதல்.

இவையிரண்டுபாட்டானும், பழமையான்வரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) உடம்படாதனவேனும் - சம்மதியாதகாரியங்களா யிருந்தா லும். தாம் செய்தாற்போல - தாமே அக்காரியங்களைச் செய்ததுபோலப் பாவித்து. 'எவன்செய்யும்' என்றது. யாதொருபயனையுஞ்செய்யாது என இன்மைகுறித்துநின்றது. செய்து—செய்தால்: எச்சத்திரிபு. ஆங்கு - உவம வுருபு. அமையாக்கடை - எதிர்மறைவினையெச்சம்; கடை-விகுதி: இதுவே எதிர்காலங்காட்டும். கெழுதகைமை - இறுதியில் நான்காம்வேற்றுமைத் தொக்குள்ளது. (ரு)

அ0ச. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(இ - ள்.) (தம் கருமத்தை), நட்டார்—, கெழுதகையான்-உரிமையால், கேளாது செயின் - கேளாதுசெய்தாராயின், விழை தகையான் - (அச்செய லது) விழையப்படுந்தன்மைபற்றி, வேண்டியிருப்பர் - (அதனை) விரும்புவர், (அறிவுடையார் ; (எ - று.)

ஒருவர்க்குத் தம்கருமம் தாம்அறியாமல் மூடிந்திருத்தலினுங்கு நன்மை இன்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறு அறிந்துவிரும்புதல் அறிவுடையார்க்கல்லதுஇன்மையின், அவர்மேல்வைத் துக்கூறினார். 'வேண்டியிருப்பர்' என்பது - 'எழுந்திருப்பர்' என்பது போல ஒருசொல்நீர்மைத்து.

இதனால், கேளாதுசெய்தழி அதனைவிரும்புகவென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) விழையப்படும் · விரும்பப்படும். அதனை - அச்செயலை. மூடிந்திருத்தலின் ஊங்கு-மூடிந்திருத்தலைக்காட்டிலும் மேலான. அவ்வாறு அறிந்து - விரும்பத்தக்கதாகஅறிந்து. அவர்மேல் - அறிவுடையார்மேல்; 'அறிவுடையார்' என்ற தோன்றுஎழுவாய் வருவித்ததற்குக் காரணங்காட்டி யவாறு. நீர்மைத்து - தன்மையது. 'எழுந்திருப்பர்' என்பது-எழுவர் என்று பொருள்படுமிடத்து,ஒருசொல்லின் தன்மையது; அவ்வாறே, 'வேண்டியிருப் பர்' என்பது - வேண்டுவரென்றுபொருள்பட்டதனால், ஒருசொல்தன்மைய தாயிற்று. செய்தழி - செய்தஉழி: செய்தவிடத்து. அதனை-அச்செயலை. (ச)

அ0ரு. பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(இ - ள்.) நோ தக்க - (தாம்) வெறுக்கத்தக்கனவற்றை, நட்டார்—, செயின் - செய்தாராயின்,-(அதற்குக் காரணம்),-பேதைமை ஒன்று ஓ பெருங் கிழமை என்று உணர்க - ஒன்றிற் பேதைமையென்றுதல் ஒன்றில் மிக்க உரிமையென்றுதல் கொள்க; (எ - று.)

'ஒன்றே' என்பது - எண்ணிடைச்சொல். 'செயின்' எனவே, தம் இயல்பாற் செய்யாமை பெற்றும்; இது, வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழ வூழான் வரும் பேதைமை யாவர்க்கும்உண்மையின் தமக்குஏதங்கொண்டா ரென்றுதல், ஊழ்வகையான் எம்மின் வரற்பாலது ஒற்றுமைமிகுதி பற்றி அவரின்வந்த தென்றுதல் கொள்வதல்லது, அன்பின்மையென்று கொள் ளப்படா தென்பதாம்.

கெடும்வகை செய்யின், அதற்குக் காரணம் இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) பேதைமை - அறியாமை. ஒன்றில்-ஒருபக்கத்தில். ஆதல் - ஆவது: விகற்பப்பொருளது. உணர்க - அறியக்கடவர். இது - இயல்பாற் செய்யாமை. வருகின்றவற்றுள்ளும்-மேல் 7, 8-திருக்குறள்களிலும்: தொலைவு வந்தவிடத்தும் என்றதையும் 'வருகின்றவற்றுள்ளும்' என்பது குறிக்குமென்

பாருமூளர். இழவூழ் - இழவுஊழ்: கேடுறுதற்குக் காரணமாகிய வினைப்பயன். இழவூழான் வரும் பேதைமை - கீழ் 'ஊழ்' என்ற அதிகாரத்தில் "பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும், ஆகலூழ் உற்றக்கடை" என வந்தமை யுணர்க. உண்மையின் - உளதாதலால். எதம்கொண்டார் - தீங்குசெய்தார். ஆதல் - ஆவது. எம்மின் வரற்பாலது - எம்மால் வரக்கடவது. அவரின் - அந்நண்பரால். 'ஒன்றே' என்ற எண்ணிடைச்சொல்லைப் பெருங்கிழமையென்பதனோடுங் கூட்டி, பேதைமையும் பெருங்கிழமையும் என்று உணர்க எனக் கொள்ளவேண்டும். இதனை விகற்பப்பொருளதென்றலும் பொருந்தும். இவ்வகைப்பிரயோகத்தை "பொய்படு மொன்றே புனை பூணுங் கையறியாப், பேதை வினைமேற் கொளின்" என்னுந் திருக்குறளிலும், "காவலன் மக்களாக்கங்கண்டு கண்குளிர்த்துநோக்கி, ஏவலா னரசனொன்றே விருபிறப்பாள னல்லார்க், காவதன் றின்னமாட்டி" எனச் சிந்தாமணியிலுங் காண்க. இனி, 'ஒன்றே' என்பதற்கு - ஒன்று மாத்திரமோ என்றுங் கொள்ளலாம். (டு)

அ0சு. எல்லைக்க ணின்றூர் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றூர் தொடர்பு.

(இ - ள்.) எல்லைக்கண் நின்றூர் - நட்புவரம்பு இகவாது அதன்கண்ணே நின்றவர்,—தொல்லைக்கண் நின்றூர் தொடர்பு - (தம்மோடு) பழமையின் திரியாது நின்றூரது நட்பினை, தொலைவு இடத்துஉம் - (அவரால்) தொலைவு வந்தவிடத்தும், துறவார் - விடார்; (எ - று.)

பழமையின் திரியாமை - உரிமையொழியாமை. தொலைவு - பொருட்கேடும், போர்க்கேடும்.

(கு - ரை.) இகவாது - கடவாமல். அதன்கண்ணே - அந்நட்பின்வரம்பிலே. பழமையின் திரியாது - பழமையினின்றுவேறுபடாமல். பொருட்கேடு - செல்வவழிவு. போர்க் கேடு - யுத்தத்தில் தோல்வி. (சு)

அ0எ. அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(இ-ள்.) (நட்டார்), அழி வந்த-(தமக்கு) அழிவு வந்தவற்றை, செய்யின் உம் - செய்தாராயினும், அன்பு அரூர் - (அவர்மாட்டு) அன்பு ஒழியார்; அன்பின் - அன்புடனே, வழி வந்த-பழையதாய் வந்த, கேண்மையவர்-நட்பினையுடையார்; (எ - று.)

அழிவென்பது - முதனிலைத்தொழிற்பெயர்; *அழிவு - மேற்சொல்லிய கேடுகள்.

இவையிரண்டுபாட்டானும், கேடுசெய்தற்கண்ணும் நட்புவிடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது.

(கு-ரை.) அவர்மாட்டு - அந்நண்பரிடத்தில். 'அழி' என்ற பகுதிதானே 'அழிவு' என்ற தொழிற்பெயர்ப்பொருளை யுணர்த்தியதனால், முதனிலைத்

* பி - ம்: அது.

தொழிற்பெயராயிற்று. மேற்சொல்லிய கேடுகள் - முந்தின குறளினுரையிற் கூறிய பொருட்கேடும், போர்க்கேடும். கேடுசெய்தற்கண்ணும் - கெடுதி செய்தவிடத்தும். 'கேடுசெய்தக்கண்ணும்' என்று பிரதிபேதமுண்டு. விடற் பாற்று அன்று - விடத்தக்கதன்று.

'வந்த' என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - 'அன்' சாரியை பெறாத அஃறிணைப்பன்மைப்பெயர்; பின்னது - பெயரெச்சம். 'அன்பு' என்னும் அஃறிணையெழுவாய், 'கேண்மையவர்' என்னும் உயர்திணையெழு வாயின் பயனிலையாகிய 'அறார்' என்னும் உயர்திணைவினையைக் கொண்டு முடிதலால், திணைவழுவமைதி; [நன் - பொது - உசு.] உம் - இழிவுசிறப்பு. 'அன்பின்' என்பதில், 'இன்' என்ற ஐந்தனுருபு - மூன்றனுருபின் பொரு ளில் வந்தது; இன் - சாரியையுமாம். (எ)

௮௦௮. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

(இ - ள்.) கேள் இழுக்கம் கேளா - நட்டார் (செய்த) பிழையை (த் தா மாகவேயன்றிப் பிறர்சொன்னாலுங்) கொள்ளாத, கெழுதகைமை வல்லார் க்கு - உரிமை அறியவல்லார்க்கு, நட்டார் இழுக்கம் செயின் - அவர் பிழை செய்வாராயின், (அது), நாள் - (பயன்பட்ட) நாளாம்; (எ - று.)

பிழையாவன - * சொல்லாது நற்பொருள்வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல் - உட்கோடல். 'கெழுதகைமைவல்லார்' என்பது - ஒருபெயராய், 'கேளாத' என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. செய்துபோந்துழியல்லது †அவ்வன்மை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின.

இதனால், பிழைபொறுத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) கொள்ளாத - மனத்திற்கொள்ளாத. 'நட்டார்' என்றது - சுட்டுப்பெயர்மாத்திரமாய் முதலடியிற்சொன்ன கேளிரையே குறித்தது. அது - பிழைசெய்த அந்தநாள். சொல்லாது நல் பொருள் வெளவல் - தம் மிடஞ்சொல்லி அநுமதிபெற்றுக்கொள்ளாமலே தம்மிடமுள்ளசிறந்தபொருளை எடுத்துக்கொள்ளுதல்; 'தமக்குவேண்டியன தாமேகோடல்' என்று இவ்வதி காரத்து முதற்குறளினுரையிற்கூறியதும் இது. அங்கு 'பணிவு அச்சங்களின் மை' என்றதையே, இங்கு 'பணியாமை அஞ்சாமை' என்று விவரித்தார். பணியாமை - வணக்கமில்லாமை. 'முதலாயின' என்றதனால், மேற்கொண்ட காரியத்தைக்கெடும்படிசெய்தல், கேளாமலே ஒருகாரியத்தைத்தொடங்கிச் செய்தல் முதலாயின கொள்க. உட்கோடல் - மனத்திற் கொள்ளுதல். எச்சம் - இங்கே பெயரெச்சம். முடிபு - முடிக்குஞ்சொல். 'கேளா' என்ற ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம், 'கெழுதகைமைவல்லார்' என்னும்

---

* பி - ம்: மேற்சொல்லிய சொல்லாது நற்பொருள் வெளவல்

† அவ்வுரிமை

பெயரைக்கொண்டுமுடிந்த தென்க. செய்துபோந்துழி யல்லது - (பிழை) செய்த விடத்தல்லாமல். அவ்வன்மை - அக்கெழுதகைமையறியும் வல்லமை. செய்யாதன - நண்பர் பிழைசெய்யாத நாள்கள். நாளல்ல - பயன்படு நாளல்லன: இதனை "விழுப்புண்படாதநாளெல்லாம் வழுக்கினுள், வைக்குந் தன்நாளே யெடுத்து" என்றதுபோலக் கொள்க. கேள் - கேண்மை யென்ற பண்பின் அடி; இங்கே, கேளிர்க்குப் பண்பாகுபெயர். இழுக்கம் - தொழிற் பெயர்; இழுக்கு - பகுதி, அம் - விகுதி. கேளிழுக்கம் - கேளிரது இழுக்க மென ஆறும்வேற்றுமைத்தொகையாக வாவது, கேளிராற்செய்யப்பட்ட இழுக்கம் என மூன்றும்வேற்றுமையுருபும் பயனு முடன்தொக்க தொகை யாக வாவது கொள்ளத்தக்கது. 'நட்டார் இழுக்கஞ்செயின்' என்றதனால், 'அது' என்ற தோன்று எழுவாய் வருவிக்கப்பட்டது. (அ)

அ0கூ. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு மூலகு.

(இ - ள்.) கெடாஅ - (உரிமை) அறாது, வழி வந்த - பழையதாய் வந்த, கேண்மையார் - நட்பினையுடையாரது, கேண்மை - நட்பினை, விடாஅர் - (அவர்பிழைநோக்கி) விடுதல்செய்யாதாரை, உலகு - உலகம், விழையும் - (நட்புக்குறித்து) விரும்பும்; (எ - று.)

'கெடாது' என்பதன் இறுதிநிலை, விகாரத்தால் தொக்கது. விடாதாரை யெனவே, விடுதற்காரணங் கூறப்பட்டது. நம்மாட்டும் இவர் இத்தன்மைய ராவ ரென்று யாவரும் தாமேவந்து நட்பாவ ரென்பதாம். 'கெடாஅர்' என்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகி யென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) அறாது - நீங்காமல். கெடா - ஈறுகெட்ட எதிர்மறை வினை யெச்சம். இறுதிநிலை - விகுதி; பகுபதத்தின் இறுதியில் நிற்பது: இங்கே 'து' என்பது. விகாரத்தால் - தொகுத்தலென்னுஞ் செய்யுள்விகாரத்தால். விடுதற் காரணம் - 'அவர்பிழைநோக்கி' என்பது. 'கெடாஅர்' என்ற பாடத்திற்கு, பலர்பால் முற்றெச்சம். கெடாஅ, விடாஅர் - செய்யுளிசைநிறைக்கவந்த அளபெடைகள். கேண்மையார்கேண்மை - ஆறும்வேற்றுமைத்தொகை. விடாஅர் விழையும் - இரண்டாம்வேற்றுமைத்தொகை. (கூ)

அ0ஙo. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(இ - ள்.) பழையார்கண் - பழையநட்டார் (பிழைசெய்தாராயினும்) அவர்மாட்டு, பண்பின் தலைப்பிரியாதார் - தம் பண்பில் நீங்காதார்;—விழை யார் விழையப்படுப - பகைவரானும் விரும்பப்படுவர்; (எ - று.)

தம் பண்பாவது - செய்யாதமுன்போல அன்புடையராதல். மூன்றனுரு பும் சிறப்பும்மையும், விகாரத்தால் தொக்கன. அத்திரிபின்மைநோக்கிப் பகைவரும் நட்டாராவ ரென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், பழமையறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு-ரை.) பண்பில்-குணத்தினின்று. பண்பு-குணம்; இப்பொதுப்பெயர்; இங்கு,அதிகாரத்தால்,நட்பிற்பிழைபொறுத்தலைக் குறித்தது. செய்யாதமுன்-பிழைசெய்தற்குமுன். மூன்றனுருபும், சிறப்புமையும் - 'விழையாராணும்' என்னுமிடத்தில் உள்ளன. சிறப்பு - இழிவுசிறப்பு. அத்திரிபு இன்மை - பிறர்பிழைசெய்தபோதும் தமதுகுணம்மாறுபடாமை. எய்தும் - அடையும்.

'பழையார்' என்றதில், பழமை யென்ற பண்புப்பகுதி ஈறுபோய் இடை அகரம் ஐகாரமாயிற்று. பண்பின் - பண்பினின்று; ஐந்தனுருபு, கீக்கப்பொருளது. தலைப்பிரிவு என்பது-ஒருசொல்; "செயிரிற் றலைப்பிரிந்த காட்சியாருண்ணு, ருயிரிற்றலைப்பிரிந்த வூன்" என்ற குறளில் இங்ஙனமேயுரைத்தனர் பரிமேலழகர்; தலை - உபசர்க்கம். (கo)

அஉ - ஆம் அதிகாரம்.—தீநட்பு.

இனி, பொறுக்கப்படாத குற்ற முடைமையின் விடற்பாலதாய நட்பு, நட்பாராய்தற்கட் சுருங்கச்சொல்லியதுணையான் அடங்காமையின், அதனை இருவகைப்படுத்து இரண்டு அதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் தீநட்புக் கூறுகின்றார்; அஃதாவது - தீக்குணத்தாரோடு உளதாய நட்பு: குணத்தின் தீமை, ஒற்றுமைபற்றி உடையார்மேற்றாய், அது பின் அவரோடு செய்த நட்பின்மேற்றாயிற்று. அதிகார முறைமை, கூறுமையே விளங்கும்.

(கு - ரை.) உடைமையின் - உடைமையால். விடற்பாலதாய-விடத்தக்கதான. நட்பாராய்தற்கண் - கீழ் அo-ஆம் அதிகாரத்தில். சுருங்கச்சொல்லிய துணையான் - சுருக்கமாகச் சொன்னமாத்திரத்தால். அங்கே சுருங்கச்சொன்னமை - "ஊதியமென்ப தொருவற்குப் பேதையார், கேண்மை யொரீஇ விடல்", "உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க, அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு", "கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை, யுள்ளினு முள்ளஞ் சுடும்", "ஒன்றீத்து, மொருவுக வொப்பிலார்நட்பு" எனக் காண்க. அதனை - விடத்தக்க நட்பை. இருவகைப்படுத்து - தீநட்பு, கூடாநட்பு என இரண்டுபகுப்பாக்கி. அஃதாவது - தீநட்பாவது. தீநட்பு-பண்புத்தொகை. தீமை யென்ற அடைமொழியை நட்பிற்குக்கொடுத்தது உபசாரவழக்கா மென்பது, 'குணத்தின் தீமை' என்றுதொடங்கிய வாக்கியத்தின் கருத்து. உடையார்மேற்றாயது என்று பிரித்து-அத்தீக்குணத்தையுடையவர் களின்மேல்ஆயினது என்று பொருள்கொள்ளினுமாம். [மேற்று-மேலது.]நட்பிற்பிழைபொறுத்தலாகிய பழமையின்பின், பொறுக்கப்படாமல் விடத்தக்க நட்பைக் கூறுதல், அதிகாரமுறைமையின் காரணம்.

அக. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(இ - ள்.) பருகுவார் போலின்உம் - (காதல்மிகுதியால்) பருகுவார் போன்றாராயினும், பண்பு இலார் கேண்மை - தீக்குணமுடையார் நட்பு, பெருகலின் - வளர்தலின், குன்றல் - தேய்தல், இனிது - நன்று; (எ - று.)

"பருகு வன்ன வருகா நோக்கமொடு" என்றார் பிறரும். நற்குணமில்லா ரெனவே, தீக்குணமுடையா ரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகிலுல்வருங் கேடு குன்றினுல் வாராமையின், 'குன்ற லினிது' என்றார்.

இதனுல், தீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது; இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(கு - ரை.) காதல் - ஆசை. பருகுதல் - குடித்தல். பருகு அன்ன அருகா நோக்கமொடு - (தன்னுற் கண்ணுற்) பருகுந்தன்மையை யொத்த கெடாதபார்வையாலே. இம்மேற்கோள் - பொருளாற்றுப்படை, எஎ - ஆம் வரி. 'பிறர்' என்றது - அந்நூலாசிரியராகிய மூடத்தாமக்கண்ணியாரை. "பருகுவான்போல நோக்கி" என்ற சிந்தாமணியும், "பருகுவனன்ன வார் வத்தனுகி" என்ற நன்னூலும் இங்கு நோக்கத்தக்கன. அர்த்தாபத்தியாவது - ஒருபொருளைக் கூறியமாத்திரத்தால் அதன் குறிப்புக்கொண்டு மற் றொருபொருள் அறியப்படுதல். இது, எட்டுவகைப் பிரமாணங்களில் ஒன்று; 'பகலுண்ணுன் பருத்திருப்பான்' என்றவிடத்து 'இரவில் ஒளித்துண்பான்' என உணர்தலே இதற்கு உதாரணங்காட்டுவர்; 'இராமன் வென்றான்' என்றல் 'இராவணன் தோற்றான்' எனக் கொள்ளப்படுவதும் அது; 'இங்ஙன மன்றயின் இதுகூடா தென்று உணரும் அருத்தாபத்தி' என்றனர் உஅஉ - ஆங் குறளின் உரையிற் பரிமேலழகர். பண்புஇலார் - நற்குணமில்லாதவர். வளர்தலின் - வளர்தலேக்காட்டிலும். குன்றல் - குறைதல். 'இனி'-அடுத்த குறள்முதலாக ஒன்பதுகுறள்களில். கூறுப - கூறுவர். சிறப்புவகையாற் கூறுதல்-இன்ன இன்னவகையான தீயவரோடு கட்புக் கூடா தென்றல். (க)

அகஉ. உறினட் டறிஞரு மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

(இ - ள்.) உறின் - (தமக்குப்) பயன் உள்வழி, நட்டு - நட்புச்செய்து, அறின் - (அஃது) இல்வழி, ஒருஉம் - ஒழியும், ஒப்பு இலார் - ஒப்பிலாரது, கேண்மை - நட்பினை, பெறின்உம் இழப்பின்உம் என் - பெற்றால் ஆக்கம் யாது? இழந்தாற் கேடி யாது? (எ - று.)

தமக்குஉற்றனபார்ப்பார் பிறரோடுபொருத்தமில ராகலின், அவரை 'ஒப்பிலார்'என்றார். அவர்மாட்டு நொதுமல்தன்மையே அமையுமென்பதாம்

(கு - ரை.) உள்வழி - உளதாம்பொழுது. அஃதுஇல்வழி - (தமக்குப்) பயன் இலதாம்பொழுது. ஒழியும் - நண்புநீங்கும், விட்டு விலகும். ஒப்பு இலார் - ஒற்றுமையில்லாதவர்; ஒப்பு - ஒத்தல், கலப்பு, பொருத்தம். ஆக்கம் - இலாபம். கேடு - நஷ்டம். தமக்கு உற்றன பார்ப்பார்-தமக்கு வரும் பயன்களையே பார்ப்பவர். அவர்மாட்டு - அவர்விஷயத்தில். நொதுமல் தன்மை - நண்பும் பகைமையும் இன்றி அயலாயிருத்தல். அமையும் - தகுதியாம். ஒருஉம் - ஒருவும்; சொல்லிசையளபெடை; 'ஒருஉம்' என்பது, ஒப்பிலார்க்கு அடைமொழி. பெறினும், உம் - உயர்வுசிறப்பு. இழப்பினும்,

உம் - இழிவுசிறப்பு. இரண்டையும் எண்ணுப் பொருளனவாகக் கொண்டாலுங் குற்றமில்லை. (உ)

அகஙூ. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

(இ - ள்.) உறுவது சீர்தூக்கும் - (நட்பளவுபாராது அதனால்) வரும் பயனளவு பார்க்கும், நட்புஉம் - நட்டாரும், பெறுவது கொள்வார்உம் - (கொடுப்பாரைக் கொள்ளாது) விலையைக் கொள்ளும் பொதுமகளிரும், கள்வர்உம் - (பிறர்கேடுநோக்காது அவர்சோர்வுநோக்குங்) கள்வரும், நேர் - (தம்முள்) ஒப்பர்; (எ - று.)

நட்பு - ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்தொழுகலின், கணிகையர் கள்வர் என்றிவரோடு ஒப்ப ரென்பதாயிற்று.

இவையிரண்டுபாட்டானும், தமக்கு உறுவதுபார்ப்பார்நட்பின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) நட்பு அளவு பாராது - சிநேகத்தின் அளவை முக்கியமாகக் கொள்ளாமல். அதனால் - நட்பினால். கொடுப்பாரை - (தமது இன்பத்திற்கு விலையாகப்) பொருள்கொடுக்கும் ஆடவரை. கொள்ளாது - உள்ளன்புடன் ஏற்றுக்கொள்ளாமல். விலையைக் கொள்ளும் - அப்பொருளையே முக்கியமாகக்கொண்டொழுகுகின்ற. "அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா, ரின்சொ லிழுக்குத் தரும்" முதலியவாக மேல் 'வரைவின்மகளிர்' என்னும் அதிகாரத்தில் விலைமகளிரின் தீமை கூறப்படுதல் காண்க. பொதுமகளிர் - போகத்தின்பொருட்டு விலையாகப் பொருள்கொடுப்பவர்க்கெல்லாம் பொதுவாயிருக்கும் வேசையர். பிறர்கேடு நோக்காது-பிறர் நஷ்டமடைவரேயென்று அவரது நஷ்டத்தைப்பற்றிச் சிந்தியாமல். அவர் சோர்வு நோக்கும்-அவர் அஜாக்கிரதைப்பட்டு நிற்கின்ற சமயத்தையே கவனித்துப்பார்க்கின்ற. நட்பு-நட்பினர்க்குப் பண்பாகுபெயர்; தொழிலாகுபெயரெனினுமாம். கணிகையர் - வேசையர். உறுவது சீர்தூக்கும்நட்பினரும், வேசையரும் திருடரும் நேரென்றதனால், அவர்கள் தயைதாட்சிணியமின்றியொழுகும் வஞ்சக ராதலால் வெறுக்கத்தக்கவ ரென்பதாம். உறுவது - வருவது; லாபம். பெறுவது - பெறப்படுகின்ற விலைப்பொருள். 'நேர்வர்' என்னும் முற்று, இடைநிலையோடு விகுதி கெட்டு, 'நேர்' என நின்றது. (௩)

அகச. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

(இ - ள்.) அமர் அகத்து - அமர் (வாராதமுன் னெல்லாந் தாங்குவது போன்று) வந்துழி, (களத்திடை), ஆற்று அறுக்கும் - வீழ்த்துப்போம், கல்லாமா - கல்வியில்லாத புரவி, அன்னார் - போல்வாரது, தமரின் - தமர்மையின், தனிமை—, தலை - சிறப்புடைத்து; (எ - று.)

கல்லாமை கதி ஐந்தும், சாரி பதினெட்டும், பொருமுரணாற்றலும் அறியாமை. துன்பம் வாராத முன் னெல்லாந் துணையாவார்போன்று, வந்

தழிவிட்டு நீங்குவ ரென்பது, உவமையாற் பெற்ரும். அவர் தமராலுல் வரும் இறுதி தனியாலுல் வாராமையின், தனிமையைத் தலே யென்ரூர்; எனவே, அதுவுக் தீதாதல் பெறுதும்.

(கு - ரை.) போன்று - போலிருந்து. வந்துழி - வந்தவுழி: போர்கோர்ந்த பொழுது. களத்திடை - போர்க்களத்தில். வீழ்த்துப்போம் - தள்ளிவிட்டுப் போகின்ற. புரவி - குதிரை. தமர்மையின் - நண்பராந்தன்மையைக்காட்டிலும். தனிமை - தனியாயிருத்தல். கதி - நடை. கதியைந்து - பஞ்ச தாரைகள்: அவையாவன - ''விக்கிதம் வற்கிதம் வெல்லு மூபகண்ட, மத்தி மஞ் சாரியோ டைந்து'' என்பன; ஆஸ்கந்திதம், தோரிதகம், ரேசிதம், வல்கி தம், புலுதம் எனவும் படும்: அவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமு மாகாமற் சமமான கதி, ஆஸ்கந்திதம்; அதைக்காட்டிலும் அதிகமாய்ச்சதர மான கதி, தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்ட நடை, ரேசிதம்; வேகத் தினுலே மூன்னங்காலேத் தூக்கிவரும்நடை, வல்கிதம்; அவ்வவ்வு வேகமாக வும் சமமாகவும் போகுகை, புலுதம்: இனி, மல்லகதி, மயூரகதி, வியாக்கிர கதி, வானரகதி, விருஷபகதி என்பனவுமாம். 'விக்கிதம் வற்கிதம் உபகண்டம் ஜவம் மாஜவம் என்னும் இப்பஞ்சதாரை' என்பர் புறப்பொருள்வெண்பா மாலேயுரையாசிரியர். சாரி - மண்டலமாயோடல். புறப்பொருள்வெண்பா மாலேயில் 'குதிரைவென்றி' என்னுக் துறையின் இலக்கியச்செய்யுளில் ''ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியுங், கந்து மறமுங் கருங்குளமா'' என்ற விடத்து 'பதினெட்டுச் சாரி' என்பதற்கு 'பதினெட்டு வகைப்பட்ட சுற்று வரவு' என்று உரைகூறியிருக்கின்றனர். அவை - வலசாரி, இடசாரி, மண் டலம், பவரி முதலாகக் காண்க. சாரிகையெனவும் படும். பொருமுரண் ஆற்றல் - போர்செய்யும் வலிமைத்திறம். போன்று - போலிருந்து. வந்துழி - துன்பம்வந்தவிடத்து. உவமையால் - 'அமரகத்து ஆற்றலுக்குங் கல்லாமா' என்ற உபமானத்தினுல். அவர் - கல்லாமாவன்னூர். இறுதி - அழிவு. அது வும் - தனிமையும். பெறுதும் - பெறுவோம். அமர் அகத்து - போரில் போர்செய்யுமிடத்தில்; போர்க்களத்தில்: என்றுங் கொள்ளலாம்; 'அகத்து' என்றது - ஏழனுருபு. ஆற்றறுத்தல் - வலியறச்செய்தல். மா - பொதுப் பெயர், சிறப்புப்பொருளில் வந்தது. தமர் - தமர்மைக்கு ஆகுபெயர். முதலடி - உவமையணி. (கூ)

அகடு. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(இ - ள்.) செய்து - செய்துவைத்தாலும், ஏமம் சாரா - அரணுகாத, சிறியவர் புல் கேண்மை - கீழ்மக்களது நீநட்பு, எய்தலின் - (ஒருவர்க்கு) உண்டாதலின், எய்தாமை - இல்லையாதல், நன்று—; (எ - று.)

சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. அரணுகாமை - தொலேவின் கண் விட்டுநீங்குதல். 'எய்தலி னெய்தாமை நன்று'என்பதற்கு, மேல் உரைத் தாங்கு உரைக்க. 'சாராத' என்னும் பெயரெச்சம், 'கேண்மை' என்னும்

பெயர் கொண்டது; 'சிறியவர்' என்பதனைக் கொள்ளின், 'செய்து' என்பது நின்று வற்றும்.

இவையிரண்டுபாட்டானும், தொலைவில் துணையாகாத நட்பின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) அரண் - பாதுகாவல். சிறப்பு - உயர்வுசிறப்பு. உம்மை தொக்கது, 'செய்து' என்பதில். தொலைவின்கண் - தொலைவில்; அழிவுநேர்ந்த விடத்து. மேல் உரைத்தாங்கு - முந்தினகுறளில் ''தமரிற் றனிமை தலை'' என்றதற்கு விசேடவுரை கூறியதுபோல: செய்தும் ஏமஞ்சாராத சிறியவர் புன்கேண்மை ஒருவர்க்கு உண்டாஞல் வரும் அழிவு அவர்சினேகத்தைக் கொள்ளாமல் தனியாயிருந்தால் வாராமையால், எய்தாமையை நன்றென்றார் என்று உரைத்துக்கொள்க. நின்று வற்றும் - இருந்தும் பயன்படாமற் போம். 'நின்று பயனின்மை' என்பது, நூற்குற்றம் பத்தினுள் ஒன்று; அதாவது - சொல் இருந்தும் அகற்கு யாதொருபிரயோசனமும் இல்லாதொழிதல். (நு)

அகசு. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

(இ - ள்.) பேதை - அறிவிலானது, பெருங் கெழீஇ நட்பின் - மிகச் செறிந்த நட்பின்,—அறிவு உடையார் ஏதின்மை - அறிவுடையான தபகைமை,—கோடி - கோடிமடங்கு, உறும் - நன்று; (எ - று.)

'கெழீஇய' என்பதன் இறுதிநிலை, விகாரத்தால் தொக்கது. பன்மை, உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான்பகைமை ஒருதீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத்தீங்கும்பயத்தலானும், 'கோடியுறும்' என்றார். 'பெருங்கழிநட்பு' என்று பாடமோதுவாரு முளர்.

(கு - ரை.) செறிந்த-நெருங்கிய. இறுதிநிலை-ஈற்றெழுத்து: 'ய'என்பது. கெழுவிய அல்லது கெழுமிய என்பது, கெழீஇயவென விகாரப்பட்டு அளபெடுத்தது, சொல்லிசையளபெடை. 'பெருங்கழிநட்பு' என்ற பாடத்துக்கு, கழியென்பது - மிகுதிப்பொருள் குறிக்கும் உரிச்சொல்லாய், பெருங்கழி யென்பன - ஒருபொருட்பன்மொழி யென்க. மிக அதிகமான சினேகமென்று பொருளாம். பன்மை உயர்த்தற் கண்வந்தது - 'பேதை' என்றதற்கு ஏற்ப 'அறிவுடையான்' என ஒருமையாற் கூறாமல் 'அறிவுடையார்' எனப் பன்மையாற்கூறியது, அறிவுடையவனது உயர்வை விளக்குதற்பொருட்டு என்க; ''ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியும், ஒன்றனைக்கூறும் பன்மைக்கிளவியும், வழக்கிலுகியவுயர்சொற்கிளவி'' என்ற தொல்காப்பியத்தைக் காண்க: [நன் - பொது - உஅ.] இதனை வடநூலார் 'பூஜாயாம் பஹுவசநம்' என்பர். ஏதின்மை - ஒருபற்றுமில்லாமை. கோடி - நூறுலக்ஷம்; மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு: அடுத்தகுறளில் ''பத்தடுத்த கோடி'' என்பதும் இவ்வாறே. இனி, 'அறிவுடையார்' என்பதனைப் பன்மையாகவே கொண்டு, அறிவில்லாலொருவனது நட்பினும் அறிவுடையார்

பலரதுபகைமை பலமடங்கு நல்ல தென்று பொருள்கொள்ளலுமாம். பேதை-பேதைமையுடையானுக்குப் பண்பாகுபெயர். கோடி - வடசொல். ''தெளிவிலார் நட்பிற் பகை நன்று'' என்ற நாலடியார் இங்கு அறியத்தக்கது. (கூ)

அகள. நகைவகைய ராகிய நட்பிற் பகைவரார்
பத்தடுத்த கோடி யுறும்.

(இ - ள்.) நகை வகையர் ஆகிய நட்பின் - (தாம் அறிதல்வகையராகாது) நகுதல்வகையராதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரான் - பகைவரான் (வருவன), பத்து அடுத்த கோடி உறும் - பத்துக்கோடி மடங்கு நல்ல; (எ - று.)

நட்பு - ஆகுபெயர். அந்நட்பாவது - விடமரும், தூர்த்தரும், வேழம்பரும் போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண்டொழிவாரோடு உளதாயது. 'பகைவரான்' என்பது அவாய்நிற்றலின், 'வருவன' என்பது வருவிக்கப்பட்டது. பத்து அடுத்த கோடி - பத்தாகத் தொகுத்த கோடி. அந்நட்பான்வரும்இன்பங்களின் அப்பகைவரான்வரும் துன்பங்கள் இறப்பநல்ல வென்பதாம். இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார்.

(கு - பை.) அறிதல்வகையராகாது - அறிவுடையாராதற்கு ஏது வல்லாமல்; நகுதல் - பரிகசித்தல்; விளையாட்டுச்சிரிப்புக் கொள்ளுதல். நட்பு-இனேகம்; இங்கு, அதனுல்வரும் இன்பங்களைக் குறித்தலால், காரணவாகுபெயர். விடமர் - விஷமர்; கோரானநெறி யில்லாதவர். தூர்த்தர் - காமுகர். விடமர் - விடரென்றும், தூர்த்தர் - வஞ்சகரென்றும் கொள்ளுதலு மொன்று; விடர் - தீயொழுக்கமுடைய காமுக ரென்பாரு மூளர். வேழம்பர் - கழைக்கூத்தாடிகள். கீழ்ச் சிற்றினஞ்சேராமை யென்ற அதிகாரப்பெயரின் கீழ்ப் பரிமேலழகர் 'சிறியஇனமாவது - நல்லதன்நலனும் தீயதன்தீமையும் இல்லென்போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட கூழ். அறிவைத்திரித்து இருமையுங்கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின்' என்றதும், அவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் ''தீயினத்தின், அல்லற்படுப்பதூஉ மில்'' என்றதும், மணிமேகலையில் ''விடருந் தூர்த்தரும் விட்டேற்றாளரும், நடவைமாக்களும் நகையொடு வைகி, வட்டுஞ் சூதும் வம்பச்சோட்டியும், முட்டா வாழ்க்கை முறைமைய தாக'' என்றதும் இங்கு நோக்கத்தக்கன. நகுவித்துச்சிரிப்புவிளைத்து, மகிழ்ச்சிமூட்டி. தாம் பயன்கொண்டு ஒழிவார் - தாம் இவரால் இலாபமடைந்து பிறகு கைவிட்டுச்செல்பவர். அவாய் - (ஒருசொல்லே) வேண்டி. இறப்ப - மிகவும். இதற்கு - இக்குதலுக்கு. பிறர் - மற்றை உரைகாரர். ''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென்றிடித்தற் பொருட்டு'' என்றார், முன் நட்பு என்ற அதிகாரத்தில். (எ)

அகஉ. ஒல்லுங் கருமம் முடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(இ - ள்.) ஒல்லும் கருமம்-(தம்மால்)முடியுங் கருமத்தை, உடற்றுபவர்-*முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட, கேண்மை - நட்பினை,—(அது கண்டால்), சொல்லாடார் - (அவரறியச்) சொல்லாதே, சோரவிடல் - சோர விடுக; (எ - று.)

முடியாதாக்குதல் - †முடியாதாக நடித்தல். சோரவிடல் - விடுகின்ற வாறு தோன்றுமல் ஒருகாலைக்குஒருகால் ஓயவிடுதல். அறியச் சொல்லி னும், விடுகின்றவாறு தோன்றினும், அதுபொழுது பரிகரித்துப் பின்னும் நட்பாயொழுகக் கருதுவ ராதலின், 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்' என்றுங் கூறினர்.

இவைமூன்றுபாட்டானும், முறையே பேதையார், நகுவிப்பார், இயல் வதுசெய்யாதார் என்றிவர்கள் நட்பின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை.) கருமத்தை - காரியத்தை. அதுகண்டால் - தம்மால்முடியுந் தொழிலைத் தம்மால்முடியாததாக அவர்கள் வெளிக்குக்காட்டிச் செய்யாது விடுதலைப் பார்த்தால். சோர . தளர. முடியாதாக நடித்தல் - முடியாதது போல வெளிக்குக்காட்டுதல். ஓயவிடுதல் - தளரவிடுதல். அதுபொழுது - அச்சமயத்தில். பரிகரித்து - அதற்குஏற்ற பரிகாரத்தைச் செய்து. இயல் வதுசெய்யாதார் - தாம்செய்யக்கூடியஉதவியைச் செய்யாதுவிடுபவர். (அ)

அகக. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(இ - ள்.) வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையும் சொல்லும் (ஒவ்வாது) வேறுவேறுயிருப்பார் நட்பு, கனவின்உம் இன்னாது - (நனவின்கண்ணேயன்றிக்) கனவின்கண்ணும் இன்னாது; (எ - று.)

வினைசொற்களது ஒவ்வாமை, முதல்மேல் ஏற்றப்பட்டது. அஃதா வது - வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின் கண் உளதாயிருத்தலால், 'கனவினும்இன்னாது' என்றார். உம்மை - எச்ச வும்மை; இழிவுசிறப்பும்மையுமாம். மன்னும், ஓவும் - அசைநிலை.

(கு - ரை.) வினை - செயல். நனவு - விழிப்பு: ஜாக்கிரावத்தை. கன வின்கண்ணும் இன்னாது - சொப்பனத்திலுந் துன்பந்தருவது. வினையுஞ் சொல்லுமாகிய சினைகளின் ஒற்றுமையில்லாதிருத்தல், 'வினைவேறுசொல் வேறுபட்டார்' என, நீநட்பினராகிய முதலின்மேல் ஏற்றிச்சொல்லப்பட்டது; இது, சினைவினையை முதலின்மேல் ஏற்றிக்கூறிய உபசாரவழக்கு. முதல் - அவயவி. அஃதாவது - வினைசொற்களின் ஒவ்வாமையாவது. நிகழ்வின்கண் உளதாயிருத்தலால் - கனவு நடக்குங் காலத்து உண்மைபோலிருத்தலால். எச்சவும்மை, நனவிலன்றி என்று இறந்ததுதழுவியது. (கூ)

அஉ0. எணைத்துங் குறுகுத லோம்பன் மணைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

பி - ம்: * முடியாதாகச்செய்தாரொடு. † முடியாதாகக் கடத்தல்.

(இ - ள்.) மனை - (தனியே)மனைக்கண்(இருந்துழி), கெழீஇ - நட்பாடி, மன்றில் - (பலரோடு)மன்றின்கண் (இருந்துழி), பழிப்பார் - பழிகூறுவார், தொடர்பு - நட்பு, எனைத்து உம் - சிறிதாயினும், குறுகுதல் - (தம்மை)நணுகுதலை, ஓம்பல் - பரிகரிக்க; (எ - று.)

மனைக்கண் கெழுமலும், மன்றின்கண் பழித்தலும் தீதாகலின், அவர் ஒருகாலும் தம்மை நணுகாவகை குறிக்கொண்டுகாக்க வென்பார், அவர் நட்பின்மேல்வைத்துக் கூறினார்.

இவையிரண்டுபாட்டானும், வஞ்சர்நட்பின் தீமை கூறப்பட்டது.

(கு - ரை) மனைக்கண் - வீட்டில். இருந்துழி - இருந்தபொழுது. நட்பு ஆடி - சிநேகம்பாராட்டி. மன்றின்கண - சபையில். எனைத்தும் - எவ்வளவும். நணுகுதல் - சமீபித்தல். பரிகரிக்க - நீக்குக. அவர் - அத்தீயவர். ஒருகாலும் - ஒருபோதும். குறிக்கொண்டு - கவனம்வைத்து. மனைக்கண்கெழுமி மன்றிற்பழிப்பவரது நட்பை எவ்வளவுசிறிதாயினுந் தம்மைச் சேரலாகாத படி நீக்குக என்றதன் கருத்து, அவர்களை ஒருபொழுதுந்தம்மைச்சேராத படி நீக்குக வென்பது. மனைக்கெழீஇ-ஏழாம்வேற்றுமைத்தொகை. கெழீஇ - கெழுமி யென்பது விகாரப்பட்டு அளபெடுத்தது; சொல்லிசையளபெடை.

௮௩ - ஆம் அதிகாரம்.—கூடாநட்பு.

இனி, ஏனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது - பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந் துணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

(கு - ரை.) ஏனை - விடத்தக்கதான நட்பின் வகை யிரண்டனுள் தீநட்புத்தவிர மற்றொன்றாகிய என்றபடி. அகத்தாற் கூடாதிருந்தே - மனத்தில் நட்பில்லாமலிருந்துகொண்டே. வாய்க்கும் இடம்-தீங்குசெய்யவாய்க்குஞ் சமயம். பெறுந்துணையும் - பெறுமளவும். புறத்தான் - வெளியிலே; சொற்செயல்களால் என்றபடி. கூடாமை யென்னுந் தொழில், ஒற்றுமைபற்றி அத்தொழிலுடையார்மேலதாகி, பின்பு, அவரோடுசெய்த நட்பின்மேலதாயிற்று.

௮௨௧. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(இ - ள்.) நேரா - கூடாதிருந்தே, நிரந்தவர் - (தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையுங்) கூடியொழுகுவார். நட்பு—,சீர் இடம் காணின் - அது பெற்றால், எறிதற்கு - (அற) எறிதற்கு (த்துணையாய), பட்டடை - பட்டடையாம்; (எ - று.)

எறியுமெல்லைவாராமுனெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து வந்துழி அற எறிவிப்பதாகிய பட்டடைக்கும், அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழிலொப்புமை உண்மையான், அதுபற்றி, அந்நட்பினைப் பட்டடையாக உபசரித்தார். 'தீர்விடம்' என்று பாடமோதி, முடிவிட மென்று உரைப்பாருமுளர்.

(கு - ரை.) சீரிடம் - சிறப்பான இடம். அது - வாய்க்குமிடம். எல்லை - சமயம். அற எறிதற்கு - (பொன்முதலியவற்றை வேறுகருவிகள்) நன்றாக வெட்டுவதற்கு. பட்டடை - பொற்கொல்லர் பொன்முதலியவற்றை வைத்து அடிப்பதற்கும்வெட்டுதற்கும் ஆதாரமாயிருப்பதொரு கருவி. சீவகசிந்தாமணியில் "ஊனமர்குறடுபோலவிரும்புண்டு" என்றதற்கு நச்சினார்க்கினியர் 'இறைச்சிகொத்தும் பட்டடைமரம்போல இரும்புமேய்ந்து' என்று உரை கூறியதை நோக்குமிடத்து, ஊன்வெட்டுதற்கு ஆதாரமாகின்ற இரும்புவேய்ந்தமரத்துக்கும் பட்டடையென்றுபெயருண்டெனத்தெரிகிறது. உண்மையான் - இருத்தலால். பட்டடைபோன்றதைப் பட்டடையென்றே கூறியது, உபசாரவழக்கு; பட்டடைபோலுமென்னுமல் 'பட்டடை' என உபமேய உபமானங்களுக்கு ஐக்கியந்தோன்றச்சொல்லியிருத்தலால், தொழிலுவமை பற்றிவந்த காட்சியணி யென்றலுமாம். முடிவிடம் - அபாயமடைகின்ற சமயம். நேரா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். (க)

அஉஉ. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

(இ - ள்.) இனம் போன்று - (தமக்கு) உற்றூர்போன்று, இனம் அல்லார்-உறுதாரோடு (உளதாய), கேண்மை - நட்பு, (இடம்பெற்றால்),—மகளிர் மனம் போல - பெண்பாலார் மனம்போல, வேறுபடும்—; (எ - று.)

அவர்மனம் வேறுபடுதல், "பெண்மனம் பேதின் றொருப்படுப்பே னென்னு, மெண்ணி லொருவன்" என்பதனானும் அறிக. நட்புவேறுபடுதலாவது - பழைய பகையேயாதல்.

இவையிரண்டுபோட்டானும், கூடாநட்பினது குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) உற்றூர் - நண்பர், வேண்டியவர். உறுதார் - வேண்டாதார், பகைவர். இடம் - வாய்க்குமிடம். பெண்மனம் - மகளிரதுமனத்தை, பேது இன்று - வேறுபடுதலில்லாமல், ஒருப்படுப்பேன் - ஒருதன்மையதாயிருக்கச் செய்வேன், என்னும் - என்றுசொல்லுகின்ற, எண் இல் ஒருவன்-ஆராய்ச்சியில்லாத ஒருத்தன் என்பது, மேற்கோளின் பொருள்; இது, "தெண்ணீர் பரந்து நிசைதொறும் போய்க்கெட்ட, வெண்ணெய்கொண் டூட்ட விவறுதலென்னெஞ்சும், பெண்மனம் பேதின் றொருப்படுப்பேனென்னு, மெண்ணி லொருவ னியல்பெண்ணு மாறே" என்ற வஞ்சியாபதிச் செய்யுளி லுள்ளது. "பேணுணைப்படுவ கேண்மோ பீடில பிறப்புநோக்கா, உண்ணிறை யுடையவல்ல வோராயிரமனத்தவாதும்" என்ற சிந்தாமணியும் இங்குநோக்கத்தக்கது. உவமையணி. (உ)

அஉங. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணாக் கரிது.

(இ - ள்.) பல நல்ல - நல்லன பலநூல்களே, கற்றக்கடைத்தும்-கற்ற விடத்தும், (அதனால்), மனம் நல்லர் ஆகுதல் - மனந்திருந்திநடப்பாதல், மாணாக்கு - பகைவர்க்கு, அரிது - இல்லை; (எ - று.)

நல்லன் - மனக்குற்றங் கெடுப்பன. 'மனநல்லர்' எனச் சினைவினை முதல்மேல் நின்றது. நல்லராகுதல் - செற்றம்விடுதல். உள்ளே செற்ற முடையாரைக் கல்வியுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம்.

(கு - ரை.) நல்லன - நல்லவையாகிய. கற்றவிடத்தும் - படித்தாலும். மனமாகிய சினையினது நன்றாதலாகிய வினை, பகைவராகிய முதலின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. செற்றம் - வைரம், தணியாக்கோபம்.

பல, நல்ல - பலவின்பாற் பெயர்கள். கற்றக்கடைத்து - எதிர்கால வினையெச்சம்; கல் - பகுதி, து அ - சாரியைகள், கடை-வினையெச்சவிகுதி, அதன்மேல் 'து' - பகுதிப்பொருள்விகுதி: மற்றவை - சந்தி. உம் - உயர்வு சிறப்பு. மாணார் - மாட்சிமையில்லாதவர்; அன்பரல்லாதவ ரென்றபடி. (௩)

௮௨௪. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

(இ - ள்.) முகத்தின் இனிய நகாஅ - (கண்டபொழுது) முகத்தால் இனியவாகச் சிரித்து, அகத்து இன்னா - (எப்பொழுதும்) மனத்தால் இன்னாராய, வஞ்சரை—, அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும்; (எ - று.)

நகையது வகைபற்றி 'இனிய' என்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் 'வஞ்சர்' என்றும், அச்செற்றம் குறிப்பறிதற்கருவியாய முகத்தானுந் தோன்றாமையின் 'அஞ்சுதல் செய்யப்படும்' என்றுங் கூறினார்.

இவையிரண்டுபாட்டானும், குற்றத்திற்கு ஏதுவாய அவர்கொடுமை கூறப்பட்டது.

(கு - ரை.) இன்னார் ஆய - இனியரல்லாதவரான. வஞ்சர் - வஞ்சகர். "எள்ளலிளமை பேதைமை மடனென், றுள்ளப்பட்ட நகை நான்கென்ப" என்ற தொல்காப்பியத்தால், நகைப்பின்வகைகளை யுணர்க. அகத்து - மனத்தில். நிகழ - தோன்றாநிற்க. மறுதலை - எதிர். விளைத்தலின் - காட்டுதலால். குறிப்பறிதற் கருவி - ஒருவர்நினைத்ததை அவர்சொல்லாமற் குறிப்பால் அறிவதற்குச் சாதனம். முகம் குறிப்பறிதற்கருவியாதலை, கீழ் 'குறிப்பறிதல்' என்ற அதிகாரத்தில் "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டு முகம்" என்றது முதலாகக் கூறியவாற்றாலும், "முன்னம், முகம்போல முன்னுரைப்ப தில்," "முகனுரைக்கு முண்ணின்றவேட்கை" என்பவற்றாலும் அறிக. அவர் - கூடாநட்பினர். (௪)

௮௨௫. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று.

(இ - ள்.) மனத்தின் - மனத்தால், அமையாதவரை-(தம்மொடு) மேவாதாரை, எனைத்து ஒன்றுஉம் - யாதொரு கருமத்திலும், சொல்லினால்-சொல்லால், தேறல்பாற்று அன்று-தெளிதன்முறைமைத்தன்று, (நீதிநூல்);(எ-று.)

'நீதிநூல்' என்பது, அவாய்நிலையான் வந்தது. பகைமைமறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச செவ்விய சொல்லெனக் கருதி அவரைக் கருமங்களில்தெளிதல் நீதிநூல் முறைமையன் றென்பதாம்.

(கு - ரை.) மேவாதார் - பொருந்தாதவர். கருமத்தில் - காரியத்தில். தெளிதல் முறைமைத்து அன்று - நம்பும்முறைமையுடையதன்று. இந்த முற்றிற்கு 'நீதிநூல்'என்ற தோன்றுஎழுவாய் வருவிக்கப்பட்டது. நீதிநூன் முறைமையன்றென்பார், அதன்மேல்வைத்துக் கூறினர். இனி, 'முறைமைத்தன்று என்று சொல்லும் நீதிநூல்' என்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. அவரை - கூடாநட்பினரை. செவ்விய - நல்ல; வஞ்சனையில்லாத.

அஉசு. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

(இ - ள்.) நட்டார் போல் - நட்டாரைப் போன்று, நல்லவை சொல்லின்உம் - நன்மைபயக்குஞ் சொற்களைச் சொன்னராயினும், ஒட்டார்சொல் - பகைவர்சொற்கள் (அது பயவாமை), ஒல்லை உணரப்படும் - அச் சொல்லிய பொழுதே அறியப்படும்; (எ - று.)

'சொல்லினும்' எனவே, சொல்லாமையே பெற்றாம். ஒட்டாராதலால் தீமைபயத்தல் ஒருதலையென்பார், 'ஒல்லை உணரப்படும்' என்றார்.

(கு - ரை.) ஒட்டார் - மனம்பொருந்தாதவர்; எனவே, பகைவராவர். ஒல்லை - விரைவு. சொல்லாமை - பகைவர் நல்லவைசொல்லாமை. ஒருதலை - நிச்சயம். பயக்கும் - விளைக்கும். அது பயவாமை - நன்மையை விளைக்காமை. சொல்லினும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு; ஒருசார் எதிர்மறையென்னலாம். ஒல்லை - விரைவுகுறிப்பதோர் இடைச்சொல். (சு)

அஉஎ. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

(இ - ள்.) வில் வணக்கம் - வில்லினது வணக்கம், தீங்கு குறித்தமையான் - (ஏற்றவர்க்குத்) தீமைசெய்தலைக் குறித்தமையால்,—ஒன்னார்கண் சொல் வணக்கம் - பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும், கொள்ளற்க - (தமக்கு நன்மைசெய்தலைக் குறித்ததென்று) கருதற்க.

தம்வணக்கமன் றென்பது தோன்ற 'சொல்வணக்கம்' என்றும், வில் வணக்கம் வேறுயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன்குறிப்பை ஏதுவாக்கியுங் கூறினர். வில்லியதுகுறிப்பு, அவனிளைய வில்வணக்கத்தின்மேல் நிற்றலான், ஒன்னரது குறிப்பும் அவரிளைய சொல்வணக்கத்தின் மேலதாயிற்று. இதுவுந் தீங்குகுறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், அவரைச் சொல்லால் தெளியற்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) எற்றவர்க்கு - எதிர்த்தவர்க்கு. தம் வணக்கம் அன்று - வணக்கமென்பது புறத்தே சொல்லினிடத்து மாத்திரமுள்ளதன்றி அந்தப் பகைவரிடத்து இல்லையென்றபடி. வணக்கம் வேறுயினும் - வில்வணக்க மென்பது வில்லின்முனைநிமிர்ந்திராமல் தாழ்ந்திருக்குந்தன்மையென்றும், சொல்வணக்கமென்பது - சொல்லிற்காட்டும்பணிவு என்றும் இங்ஙன் ஈரிடத்துள்ள வணக்கம் வெவ்வேறுபொருள்கொண்டதாயினும். வணங்குதலொப் புமைபற்றி என்பதன்பின் 'இரண்டுவணக்கத்தையும் ஒன்றாகக்கொண்டு' என வருவிக்க. குறிப்பு - நீங்கு குறித்தல். வில்லி - வில்லையேந்தியவன். வில்லியதுகுறிப்பு அவனிளைய வில்வணக்கத்தின்மேல்நிற்றலான் ஒன்னாரது குறிப்பும் அவனிளைய சொல்வணக்கத்தின்மேலதாயிற்று என்பதன்பொருள்- வில்லையேந்தியவன் நீங்குகுறித்தலை அவனுலாகிய வில்வணக்கத்தின் மேலேற்றி வில்வணக்கம் நீங்குகுறித்தமையான் என்றுகூறியதனால் அதற்கு ஏற்ப, ஒன்னார்நீங்குகுறித்ததை அவர்களாலாகிய சொல்வணக்கத்தின்மே லேற்றி ஒன்னார்கட்சொல்வணக்கங்கொள்ளற்க என்று மறுத்துக்கூறியது என்பது. இதுவும் - சொல்வணக்கமும். காக்க - (தம்மைப்)பாதுகாத்துக் கொள்ளக்கடவர் (அரசர்) என்க. அவரை - கூடாநட்பினரை. தெளியற்க - நம்பாதிருக்கக்கடவர். ஏதுவணி. (எ)

அஉஅ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு
ரழுதகண் ணீரு மனைத்து.

(இ - ள்.) (ஒன்னார்குறிப்பை உணரவல்லார்க்கு),—ஒன்னார் தொழுத கையுள்உம் - அவர் தொழுத கையகத்தும், படை ஒடுங்கும் - படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண் நீர்உம் - (அவர்)அழுத கண்ணீரும், அனைத்து- அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனும்; (எ . று.)

தாம் நட்பென்பதனைத் தம் கையானும் கண்ணானும் தேற்றிப் பின் கோறற்கு வாங்கவிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்று கின்றபொழுதே அவற்றுள்ளே தோன்று மென்பார் 'ஒடுங்கும்' என்றார். பகைவர் தம் மெண்மை காட்டித் தொழினும் அழினும் அவர்குறிப்பையே நோக்கிக் காக்க வென்பதாம்.

இதனால், அவரைச் செயலால் தெளியற்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அவர் - அப்பகைவர். தொழுத - அஞ்சலிசெய்த, கூப்பிய. கையகத்தும் - கைகளினுள்ளும். படைக்கலம் - ஆயுதம். அது - அவ்வாயுதம். கையானும் கண்ணானும் - கைகளாலும் கண்களாலும். தேற்றி - நம்புவித்து. கோறற்கு - கொல்லுதற்கு. வாங்க - எடுக்க. உய்த்து உணர்வுழி - ஆலோசித்து அறியுமிடத்து. அவற்றுள்ளே - தொழுதகையிடத்தும் அழுதகண்ணீரிடத்தும். மெண்மை - தளர்ச்சி. தொழினும் அழினும் - தொழுதாலும் அழுதாலும். காக்க - (தம்மைப்)பாதுகாத்துக்கொள்க. அவரை - கூடாநட்பினரை.

அழுத கண்ணீர்-அழுதலாலாகிய கண்ணீர் எனப் பெயரெச்சம்காரணப் பொருளது.

''தொழுத தங் கையினுள்ளுந் துறுமுடியகத்துஞ் சோர, வழுதகண் ணீரினுள்ளும் அணிகலத்தகத்து மாய்ந்து, பழுதுகண்ணரிந்துகொல்லும் படையுடனெழுடுங்கும் பற்ரு, தொழிகயார்கண்ணுந்தேற்றந் தெளிகுற்றூர் விளிகுற்றூரே'' என்ற சிந்தாமணிச்செய்யுளும், அதனுரையில் நச்சினர்க்கினி யர் 'அரசர்க்கு ஓர்துன்பம் வந்தவிடத்து அவர் நட்புடையோர்போல அழுத கண்ணீரும் கொலைசூழ்தலின், கண்ணிலும் படை யொடுங்கிற்றும்; ''ஒன் ஞர், அழுத கண்ணீருமனைத்து'' என்ரூர் தேவரும்' என்று உரைத்ததும் இங்கு உணரத்தக்கன. ''தொழுத கையுளும் படையுள சூழ்ச்சியும் பெரி தால்'' என்ரூர், வில்லிபுத்தூராரும். 'அழுகள்ளன்', 'தொழுகள்ளன்', 'சூம் பிடுகள்ளன்' என்னும் வழக்கு நோக்கத்தக்கது. (அ)

நூஉகூ. மிகச்செய்து தம்மெள் ளுவாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(இ - ள்.) மிக செய்து - (பகைமைதோன்றுமற் புறத்தின்கண் நட்பினை) மிகச்செய்து, தம் எள்ளுவாரை - (அகத்தின்கண்) தம்மை யிகழும் பகை வரை,—நட்பினுள் - (தாமும்) அந்நட்பின்கண்ணே (நின்று), நக செய்து - (புறத்தின்கண் அவர்)மகிழும்வண்ணஞ் செய்து, சா புல்லல் பாற்று - (அகத் தின்கண் அது) சாம்வண்ணம் பொருந்தற்பான்மையுடைத்து, (அரசநீதி).

'நின்று'என்பதூஉம், 'அரசநீதி' என்பதூஉம், அவாய்நிலையான் வந்தன. அகனெனன்று புறனென்றுதல் ஒருவற்குத் தகாதே யெனினும் பகைவர்மாட் டாயின் தகு மென்பது நீதிநூல்துணி பென்பார், அதன்மேல் வைத்துக் கூறினர். 'சாவ' என்பதன் இறுதிநிலை, விகாரத்தால் தொக்கது; ''கோட் டின்வாய்ச்சாக்குத்தி'' என்புழிப் போல. எள்ளுவாரைப் புல்லல் எனக் கூட்டுக.

(கு - ரை.) வெளிக்கு அதிகசினேகங்காட்டி உள்ளே தம்மையிகழ்ந்தொ ழுகும் பகைவரைத் தாமும் அவ்வாறு சினேகித்தொழுகவேண்டு மென் பதாம்.

அந்நட்பு-அகத்தின்கண் இகழ்ந்து புறத்தேமிகச்செய்யும் அப்படிப்பட்ட சினேகம். அவர் - பகைவர். அது சாம்வண்ணம் - அம்மகிழ்ச்சி அழியும்படி. பான்மை - தன்மை. துணிபு-தேர்ந்தகொள்கை, சித்தாந்தம். ''கோட்டின் வாய்ச் சாக்குத்தி''—கலித்தொகை, முல்லைக்கலி - நு; (தம்மைத்தழுவ வரு வாரை எருதுகள்) கொம்பினிடத்தே சாகும்படி குத்தியென்பது இதன் பொருள். சாப்புல்லல் - ''சாவ வென்னுஞ் செயவெனச்சாத்து, இறுதி வக ரங் கெடுதலு மூரித்தே'' என்ற தொல்காப்பியத்தைக் காண்க. ''மெல்லிய கல்லாருள் மென்மை யகலிறங்து, ஒன்னருட்கூற்றட்கு மூட்குடைமை யெல்லாம், சலவருட் சாலச் சலமே நலவருள், நன்மைவரம்பாய் விடல்'' என்ற நாலடியாரினுலும், அயோக்கியரிடத்து அயோக்கியமாயும் யோக்கியரி டத்தில் யோக்கியமாயும் நடப்பது தகுதி யென்று அறிக. ''மாதர்க் கிதத் தவிவாணர்க்குச் சாலவணக்கங் குரு, நாதர்க்கு நீதியெரடாசாரம் நண்பினையர்

தவர்க்குக், கோதற்றவாசகம் பொய்க்கப் பொய் கோளுக்குக் கோளறிவி, லாதார்க்கிரட்டிப் பறிவுடையோர்செய்யுமாண்மைகளே" என்பதன் காண்க. அதன்மேல் - நீதிநூலின்மேல். இக்குறளுக்கு, 'நீதிநூல்' என்பது-தோன்ரு எழுவாய். புல்லல் பாற்று - புல்லுதல் தகுதியுடையது என எழுவாய்பய னிலைகளாக முடித்தலுமாம்; கீழ் அஃறி - ஆங் குறளிலும், தேறல் பாற்று அன்று - தெளிதல்முறைமையுடையதன்று என எழுவாய்பயனிலைகளாக்கி முடிக்கலாம். இறுதிநிலை-கடைசியெழுத்து; வகரவுடம்படுமெய்யோடுகூடிய அகரவிகுதி யென்க. (கூ)

அசுo பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

(இ - ள்.) பகை - (தம்)பகைவர், நட்பு ஆம் காலம் - (தமக்கு) நட்டாரா யொழுகுங் காலம், வருங்கால்-வந்தால்,—முகம் நட்டு - (தாமும் அவரோடு) முகத்தால் நட்புச்செய்து, அகம் நட்பு ஒரீஇ - அகத்தால் அதனைவிட்டு, விடல் - (பின் அதுவுந்) தவிர்க; (எ - று.)

அக்காலமாவது - தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத அளவு. இதனுனே, ஆமளவெல்லாம் நீக்குக வென்பது பெற்ரும்.

இவையிரண்டுபாட்டானும், அந்நட்பிடை ஒழுகுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) பகைவர் நண்பர்போன்றுஒழுகினலும் அவர்நட்பைத் தம்மா லானவரையிலும் நீக்கவேண்டு மென்பதாம். அகத்தால்-மனத்தால். அதனை-சினேகத்தை. அதுவும் - முகநட்பையும். தம்மானும் - தம்மாலும். ஆமளவு எல்லாம் - கூடியவரையிலும். அந்நட்பிடை ஒழுகும்ஆறு - கூடாநட்பினரிடத்து நடக்கவேண்டியவிதம். அளவு - சமயம். (கo)

அச - ஆம் அதிகாரம்.—பேதைமை.

இனி, அந்நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறிய தொடங்கினர். அப்பகைதான், முற்றக்கடியுங்குற்றமன்மையின் உளவாய வெகுளியானும் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளிபான்வருவன ஐந்துஅதிகாரத்தானும் காமத்தான்வருவன ஐந்துஅதிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து, இரண்டுஅதிகாரத்தாற் கூறுவான்தொடங்கி, முதற்கண் பேதைமை கூறுகின்ரூர். அஃதாவது-யாதும் அறியாமை.

(கு - ரை.) இனி, என்றதன்பின் நட்பைப்பற்றி, நட்பு நட்பாராய்தல் பழமை நீநட்பு கூடாநட்புஎன்று உடன்பாட்டுமுகத்தால் ஐந்துஅதிகாரங் களாற் கூறியபின் என வருவிக்க. கூறிய-சொல்ல. முற்றக்கடியுங் குற்ற மன்மையின் உளவாய - முழுவதும் நீக்கத்தக்க குற்றமல்ல வாதலால் உள்ள னவான; பகைவர் பக்கலிலும் தம் மனைவியர்பக்கலிலும் முறையே வேண்டுத லால், இல்லறத்தாரான அரசர்க்குக் கோபமும் காமமும் முற்றக்கடியுங்குற்ற மல்லவாயின. அவ்விரண்டற்கும் - வெகுளி காமம் என்ற அந்த இரண்டு குற்றங்கட்கும். பகைதான் வெகுளியானும் காமத்தானும் வருவதாம்என

மூடியும். அடி - காரணம். மனுதருமசாஸ்திரம் எ - ஆம் அத்தியாயத்தில், கோபத்தால், கோள் தணிவு துரோகம் பொருமை பிறன்குணத்தைச்சகியாமை ஒருவன்பொருளேயபகரித்தல் காரணமின்றியடித்தல் திட்டுதல் என எட்டுத்துக்கங்கள்உண்டாகுமென்றும், காமத்தால், 'வேட்டை சூது பகற்றூக்கம் வம்பளப்பு ஸ்திரீலோலதை குடி பாட்டு கூத்து வாத்தியம் பயனற்றதிரிச்சல் என்ற பத்துத்துக்கங்களுண்டாகுமென்றும் கூறியுள்ளது. இருவகைப்படுத்து - பேதைமை, புல்லறிவாண்மை என்று இரண்டுவகைப்படுத்தி. கூறுவான் - சொல்ல. அஃதாவது - பேதைமையாவது. யாதும்அறியாமை - செய்வன தவிர்வன அறியாமை.

அஞ்சுக. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் டீதியம் போக விடல்.

(இ - ள்.) பேதைமை என்பது - பேதைமையென்று சொல்லப்படுவது, ஒன்று-(ஒருவனுக்கு ஏனைக்குற்றங்களெல்லாவற்றிலும்மிக்கது) ஒன்று;யாது எனின் - (அதுதான்) யாதென்று வினவின்,—ஏதம் கொண்டு - (தனக்குக்) கேடுபயப்பனவற்றைக் கைக்கொண்டு, ஊதியம் போக விடல் - ஆக்கம்பயப்பனவற்றைக் கைவிடுதல்; (எ - று.)

கேடு - வறுமை பழி பாவங்கள். ஆக்கம் - செல்வம் புகழ் அறங்கள். தானே தன் இருமையுங் கெடுத்துக்கோட லென்பதாம்.

(கு - ரை.) பேதைமையாவது, தனக்குத்தீமைதருமவற்றைக் கைக்கொண்டு தனக்குநன்மைதருமவற்றைக் கைவிடுதல் என்பதாம்.

கேடு - தீங்கு. இம்மையிற்கேடுபயப்பன - வறுமையும்பழியும்: மறுமையிற்கேடுபயப்பன - பாவங்கள். ஆக்கம் - நன்மை, இலாபம். இம்மையில் ஆக்கம்பயப்பன-செல்வமும்புகழும். மறுமையில்ஆக்கம்பயப்பது-அறம். போக விடல் - அழியவிடுதல். தானே தன் இருமையுங் கெடுத்துக்கோடலென்பதாம் - 'ஏதங்கொண்டுஊதியம்போகவிடல் பேதைமை' என்றதனால் ஒருவன் இம்மைமறுமையென்ற இரண்டிடத்திலும் தனக்குத் தீமைதருவனவற்றைக் கைக்கொண்டு நன்மைதருவனவற்றைக் கைவிடுதலே பேதைமையென்பதாம். ஏதம்,ஊதியம் என்பன-அவற்றைத் தருஞ் செய்கைகட்குக் காரியவாகுபெயர்.

அஞ்சுஉ. பேதைமை யுள்ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்.

(இ - ள்.) (ஒருவனுக்கு), பேதைமையுள் எல்லாம் பேதைமை - பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது,—கை அல்லதன்கண் - (தனக்கு) ஆகாதஒழுக்கத்தின்கண், காதன்மை செயல்-காதன்மை செய்தல்.

இருமைக்கும்ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தலென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், பேதைமையது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) காதன்மை - விருப்பம். இருமைக்கும் - இம்மைமறுமையிரண்டுக்கும். நூலோர் - சாஸ்திரமுணர்ந்தவர். கடிந்த - விலக்கிய. விரும்பிச்

செய்தலென்றதன்பின், பெரும்பேதைமையென்று வருவிக்க. காதல்-ஆசை; அதன்மேல், மை - பகுதிப்பொருள்விகுதி. கை - ஒழுக்கம். (உ)

அஉஊ. நாணுமை நாடாமை நார்ன்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

(இ - ள்.) நாணுமை - (நாணவேண்டுமவற்றிற்கு) நாணுமையும், நாடாமை - (நாடவேண்டுமவற்றை) நாடாமையும், நார் இன்மை - (யாவர்மாட்டும்) முறிந்த சொற்செயலுடைமையும், யாது ஒன்றுஉம் பேணுமை - (பேணவேண்டுமவற்றுள்) யாதொன்றனையும் பேணுமையும், பேதை தொழில் - பேதையது தொழில்; (எ - று.)

நாணவேண்டுமவை - பழி பாவங்கள். நாடவேண்டுமவை - கருமங்களிற் செய்வன, தவிர்வன. மூறிதல் - கண்ணழுதல். பேணவேண்டுமவை - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம் முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றும் இயல்பாய் வருதலின், 'தொழில்' என்றார்.

(கு - பை.) பேதை - மூடன். நாணுதல் - வெட்கப்படுதல், லஜ்ஜை. 'தமக்குஒவ்வாத கருமங்களில் நாணுதல்' என்றும், 'செயத்தகாதவற்றின்கண் உள்ளமொடுங்குதல்' என்றுங் கூறுவர். நாடுதல் - ஆராய்தல். முறிந்த - மாறுபட்ட. சொற் செயல் - சொல்லுஞ் செயலும். பேணுதல் - விரும்பிக் காத்தல். செய்வன தவிர்வன - விதி விலக்குக்கள். கண்ணழுதல் - தாட் சிணியமின்மை. நார்ன்மை - கண்ணோட்ட மில்லாமை; நார் - அன்பு. நாணுமை முதலிய நான்கும் - பெயர்ச்செவ்வெண். நாணுமை, நாடாமை பேணுமை-எதிர்மறைத்தொழிற்பெயர்கள். நாணுமைமுதலியவை, பேதைமையைப் புலப்படுத்து மென்க. (ஈ)

அஉச. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ - ள்.) ஓதி(உம்)-(மனமொழி மெய்கள் அடங்குதற்கு ஏதுவாய நூல்களை) ஓதியும், உணர்ந்துஉம் - (அவ்வடக்கத்தான் வரும் பயனை) உணர்ந்தும், பிறர்க்கு உரைத்துஉம் - (அதனை அறியலுறப்) பிறர்க்கு உரைத்தும், தான் அடங்கா - தான் (அவை)அடங்கி ஒழுகாத, பேதையின் - பேதைபோல, பேதையார்—, இல் - (உலகத்து) இல்லை; (எ - று.)

உம்மை, முன்னுங் கூட்டப்பட்டது. இப்பேதைமை, தனக்கு மருந்தாய இவற்றுல் நீராமையானும், வேற்றுமருந்து இன்மையானும், 'பேதையிற் பேதையாரில்' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், பேதையதுதொழில் பொதுவகையாற் கூறப்பட்டது; இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(கு - பை.) மன மொழி மெய்கள் - மநோ வாக் காயங்கள்; இவையே திரிகரணம். ஓதி - படித்து. அதனை - அடக்கத்தால்வரும் பயனை. அறியலுற - அறியும்படி. அவை-அம் மனமொழிமெய்கள். 'உணர்ந்தும்' என்பதிலுள்ள உம்மை, 'ஓதியும்' என முன்னுங் கூட்டப்பட்டது. தனக்கு-பேதை

மைக்குணமாகிய தனக்கு. மருந்து-பரிகாரம். இவற்றுள் - ஒதுதல் முதலிய வற்றுள். 'இனி' - அடுத்த ஆறுசெய்யுள்களிலும். (சு)

அநூரு. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

(இ - ள்.) பேதை - பேதையாயினுன்,—எழுமை உம் - வரும்பிறவிக ளெல்லாம், தான் புக்கு அழுந்தும்—, அளறு - நிரயத்தினே, ஒருமை - இவ் வொருபிறப்புள்ளே, செயல் ஆற்றும் - செய்துகொள்ள வல்லனும்; (எ - று.)

எல்லாப்பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். * அழுந்துதற்கு இடனுய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களி னும் கொடுவினேவயத்தால் அந்நிரயத்துன்பமே உழந்து வருதலின், 'எழு மையுந்தான்புக் கழுந்து மளறு' என்றார். முடிவில்காலமெல்லாந் தான்நிரய த்துன்ப முழுத்தற்கு ஏதுவாங் கொடுவினைகளையே அறிந்து சிலகாலத் துள்ளே செய்துகோடல் பிறர்க்கு அரிதாகலின், 'ஆற்றும்' என்றார்.

இதனுல், அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது.

(கு - ரை.) பிறவிக ளெல்லாம் - பிறப்புக்களி லெல்லாம். எழுமை - எழுவகைப்பிறப்புக்கள்; பிறப்பேழாவன - தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. நிரயம் - நரகம். முற்றும்மை, 'எழுமையும்' என்பதில். இங்கே, முற்றும்மை - இனைத்தென்றறிபொருளில் வந்தது: [நன் - பொது - சஅ.] அழுந்துமளறு என்ற இடத்து 'அழுந்தும்' என்ற பெயரெச்சம், அழுந்துதற்கு இடனுய அளறு என இடப்பெயர்கொண்டு முடியுமென்பார் 'அழுந்துதற்கு இடனுய நிரயம்' என்றார். ஈண்டைப்பிறப் புக்கள் - இவ்வுலகத்துப்பிறவிகள். கொடுவினைவயத்தால் - கொடியகரும வசத்தால். உழந்து - அனுபவித்து. அவன் - பேதையாயினுனது. மறுமை - இறந்தபின்புவரும்நிலை; அதற்கு உரியசெயல் - மறுமைச்செயல். பேதை ஆற்றும் - செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது; [நன் - வினை - உசு.] இவ்வுலகத்தில் ஒருபிறப்பிலே இருந்து அவ்வுடலைவிட்டபின்பு நரகலோகத் திற்சென்று துன்பமடைதே யன்றி அடுத்தபடியாக இவ்வுலகத்திலே எடுக் கும் பிறப்பிலும் நரகவேதனைக்குச்சமமான கொடுந்துன்பங்களையே பாபவசத் தால் அனுபவிப்ப னென்பது, 'எழுமையும் தான்புக்கழுந்து மளறு' என்ற தொடரால் விளங்கிற்று. அளறு - குழைசேறு; அதன்மயமாகச் சிலநரகங்கள் இருத்தலால், நரகத்திற்கு 'அளறு' என்று ஒருபெய ராயிற்று: ''இருள்'' என்பது போல. (ரு)

அநூசு. பொய்படு மொன்றே புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(இ - ள்.) கை அறியா பேதை - செய்யுமுறைமை யறியாத பேதை, வினை - ஒருகருமத்தை, மேற்கொளின் - மேற்கொள்வனையின், பொய் படும் ஒன்றே புனை பூணும்-(அதுவும்) †புரைபட்டுத் (தானும்) தளை பூணும்; எ-று.)

பி-பீ: *அழுந்துநிரயம்-அழுந்துதற்கு இடனுயநிரயம். † புரைபடும்:

புரைபடுதல் - பின் ஆகாவகை உள்ளழிதல். 'ஒன்றோ' என்பது - எண்ணிடைச்சொல். அதனையுங் கெடுத்துத் தானுங் கெடு மென்பதாம்.

இதனால், அவன் * செல்வம்படைக்குமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) மூடன் தான்மேற்கொண்டகாரியத்தைக்கெடுப்பதோடு தன்னையுங் கெடுத்துக்கொள்வ னென்பதாம்.

மேற்கொள்ளுதல் - தான்செய்வதாக ஏற்றுக்கொண்டு தொடங்குதல். அதுவும் - அத்தொழிலும். தளை பூணும் - பந்தப்படுவான். புனை - விலங்கு. 'ஒன்றோ' என்பதைப்பற்றி அ௦௫ - ஆங் குறளின் உரைக்குறிப்பில் எழுதப் பட்டது. பின்ஆகாவகை - (மேற்கொண்டகாரியம்) பின்பு ஒருகாலும் முடியாதபடி. அதனையும்-அத்தொழிலையும். பொய்படும் ஒன்றோ - (அத்தொழில் முழுவதுங்) கெட்டுவிடுதல்மாத்திரமோ என்றபடியுமாம். அவன் - பேதை. செல்வம் படைக்கும் ஆறு - பணம்சம்பாதிக்கும் விதம். (௬)

௮௩௭. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(இ - ள்.) பேதை-பேதையாயினான், பெருஞ் செல்வம் - பெரிய செல்வத்தை, உற்றக்கடை - (தெய்வத்தான்) எய்தியவழி,—ஏதிலார் ஆர - (தன்னொடு) ஓரியைபுமில்லாதார் நிறைய, தமர் பசிப்பர் - (எல்லாஇயைபுமுடைய) தமராயினார் பசியாநிற்பர்; (எ - று.)

எல்லாநன்மையுஞ் செய்துகோடற்கருவி யென்பது தோன்ற 'பெருஞ் செல்வம' என்றும், அதனைப் படைக்குமாற்ற லில்லாமை தோன்ற 'உற்றக் கடை' என்றும், எல்லாம்பெறுதல் தோன்ற 'ஆர' என்றும். உணவும் பெறாமை தோன்ற 'பசிப்பர்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) அறிவீனனுக்குச் செல்வங்கிடைத்தால், அயலார் அதனைப் பெற்றுஅனுபவித்து மிக்க சுகமடைய, அவன்சுற்றத்தார் ஒன்றும் பெறாது மிகவருந்துவ ரென்பதாம். தெய்வத்தான் - விதிவசத்தால். எய்தியவழி - அடைந்தபொழுது. தன்னோடு-அவனுடன். இயைபு -சம்பந்தம். நிறைய-திருப்தியடைய. வயிறாரஎன்னாது 'ஆர' என்று பொதுவாகச்சொன்னமையால் எல்லாம்பெறுதல் தோன்று மென்க. தமர் - உறவினரும், நண்பரும்; தாம்என்பதன்அடியாகப்பிறந்த கிளைப்பெயர். அதனைப் படைக்கும் ஆற்றல் - செல்வத்தைச் சம்பாதிக்கும் வல்லமை.

ஏதுஇலார்-யாதொருதொடர்பும்இல்லாதவர்; எனவே, பிறராவர். (எ)

௮௩௮. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

(இ - ள்.) பேதை - பேதையாயினான், தன் கை - தன் கைக்கணணே, ஒன்று - ஒன்றனை, உடைமை - உடைமையாக, பெறின் - பெற்றானாயின், (அவன் மயங்குதல்),—மையல் ஒருவன் - (முன்னே) பித்தினையுடையானொ

பீ - ம்: *வினைசெய்யுந்திறம் கூறப்பட்டது.

ருவன், களித்தஅற்று - (அம்மயக்கத்தின்மேலே) மதுவுண்டு மயங்கினாற் போலும்; (எ - று.)

'பெறின்' எனவே, தெய்வத்தானன்றித் தன்னாற் பெருமை பெற்றும். பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன்செய்வன, மையலும் மதுகளிப்பும் ஒருங்குடையான்செய்வனபோல் தலைதடுமாறு மென்பதாம்.

இவையிரண்டுபோட்டானும், அவன் செல்வமெய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) மூடன் பணங்கிடைக்கப்பெற்றால், பைத்தியக்காரன் கள்ளையுங் குடித்தாற்போல மிகமயங்கித் தாறுமாறுகத் தொழில்செய்வனென்பதாம். உவமையணி. ஆல் - அசை. கைக்கண்ணே - கையிலே. அவன் - அப்பேதை. பித்து - பித்தம், பைத்தியம். மது - கள். தெய்வத்தான் - விதிவசத்தால். செய்வன - செய்யுஞ்செயல்கள். மதுக்களிப்பு - கட்குடித்ததனாலாகிய மயக்கம். தலைதடுமாறும் - ஒழுங்குகெடும், முறைபிறழும். செல்வச்செருக்குக் களிப்பாகுதலே 'தருமதம்'என வழங்குதலினாலும் உணர்க; "கழிபெருஞ்செல்வக் கள்ளாட்டயர்ந்து, மிக்கநல்லறம் விரும்பாது வாழும், மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ" என்ற மணிமேகலையையுங் காண்க. (அ)

அஞகூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(இ - ள்.) பிரிவின்கண் - (பின்) பிரிவு வந்துழி, தருவது பீழை ஒன்று இல் - (அஃது இருவர்க்குந்) தருவதொரு துன்பம் இல்லை; (ஆதலால்), பேதையார் கேண்மை - பேதையாயினார் (தம்மூட்கொண்ட) நட்பு, பெரிது இனிது - மிக இனிது; (எ - று.)

நாடொறுந் தேய்ந்துவருதலின், துன்பந் தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு.

இதனால், அவரது நட்பின்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) அஃது - அப்பிரிவு. பீழை - பீடா என்னும் வடசொல்லின் சிதைவு. பேதையாயினார்நட்பு நாள்தோறுந்தேய்ந்துவருதலே, "மதிப், பின்னீர பேதையார்நட்பு" என்றதனாலும் அறிக; "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல, லினைத்தே புலவர் தொழில்" என்றவாறு பிரியுங்காலத்து உளதாகுந் துன்பத்தைப் பேதையாயினார் தம்மூட்கொண்டநட்புத் தாராதாகலின் அந்நட்புக் கற்றறிந்தார்தம்மூட்கொண்ட நட்பினும் மிக இனிது என்று புகழ்பவர்போன்று, பேதையார் நட்பு நாடோறுந் தேய்ந்துவருதலாற் பயனற்ற தென்னும் பழிப்புத் தோன்றக் கூறியதனால், இது வஞ்சப்புகழ்ச்சியணி; இதனை வடநூலார் வ்யாஜஸ்துதியலங்கார மென்பர். "பழிப்பிற்புகழ்ச்சி புகழ்ச்சியிற்பழிப்புப்,புகழ்ச்சியிற்புகழ்ச்சி யென மூப்பாலாப்,போந்தது வஞ்சப்புகழ்ச்சியாகும்" என்று சந்திராலோகத்துக்கூறப்படும் மூன்றுவகையால்,

பழிப்பிற்புகழ்ச்சி யிது; இனி, ஒன்றன் பழிப்பைப் புகழ்வதாகக்கற்பிக்கும் இதனை இலேசவணியின்பாற்படுத்துக் கூறுவர் ஒருசாரார்: "புகழ்வதுபோலப் பழித்திறம்புனைதலும், பழிப்பதுபோலப் புகழ்புலப்படுத்தலும், அவையுமன்னவென் றறைகுரு ளரோ" என்ற தண்டியலங்காரத்தைக் காண்க. அவரது - பேதையாயினரது. (கூ)

அசo. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றூற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

(இ - ள்.) சான்றோர் குழாஅத்து - சான்றோர்அவையின்கண், பேதை புகல் - பேதையாயினன் புகுதல்,—கழாஅ கால் - தூயவல்லமிதித்த காலை, பள்ளியுள் வைத்து அற்று - (இன்பந்தரும்) அமளிக்கண்ணே வைத்தாற் போலும்; (எ - று.)

கழுவாக்கால் என்பது - இடக்கரடக்கு. அதனால் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல, இவனால் அவ்வவையும் இழிக்கப்படு மென்பதாம்.

இதனால், அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) சான்றோர் அவையின்கண் - பெரியோர்கூடியசபையில். தூயவல்ல - அசுத்தமானவற்றை. அமளிக்கண்ணே - படுக்கையிலே. இடக்கரடக்கு - சொல்லத்தகாததை மறைத்துச்சொல்வது; இங்கே, மிதித்த மலங்கழுவாத காலை 'கழுவாக் கால்' என்றது; [நன் - பெயர் - கo.] இடக்கர்ச் சொல்லே "அவையல் கிளவி" என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். அஸபீயம் என்ற வடசொல்லின் பொருள் அது; சபையிலே [நன்மக்களிடத்தே] கூறப்படுவதல்லாத சொல்லை அவ்வாய்பாடுமறைத்துப் பிறவாய்பாட்டாற் கூறுகவென்னும் விதியை "அவையல்கிளவி மறைத்தனர்கிளத்தல்" என்றதனால் உணர்க. அதனால் - கழுவாத காலினால். இதனால் என்ற பாடத்துக்கு - பேதையாயினன் சான்றோர்குழாஅத்துப்புகுந்ததனால் என்க. குழாம் - கூட்டம். உவமையணி; இது, அபரிசுத்தமாதலை விளக்கும் உவமை. "கல்லாது நீண்ட வொருவ னுலகத்து, நல்லறிவாளரிடைப்புக்கு - மெல்லவிருப்பினு நாயிருந்தற்றே யிராஅ, துரைப்பினு நாய் குரைத்தற்று" என்றார் நாலடியாரிலும். 'படுக்கும்பொழுது கால்கழுவித் துடைத்துக்கொண்டு ஈரம் உலர்ந்தபின்னரே படுக்கையிற் படுத்துக்கொள்ள வேண்டும்' என்பது, சயனவிதி.

அரு - ஆம் அதிகாரம்.—புல்லறிவாண்மை.

இனி, ஏனைப் புல்லறிவாண்மை கூறுகின்றார்; அது, புல்லிய அறிவினை ஆடற்றன்மை யென விரியும். அஃதாவது - தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர்கூறும் உறுதிச்சொற் கொள்ளாமை.

(கு - ரை.) புல்லிய - இழிந்த. ஆடல்-ஆளுதல். ஆண்மை யென்பதில், ஆள் - பகுதி, மை - தன்மைப்பொருள் விகுதி.

அசக. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), இன்மையுள் - இல்லாமை பலவற்றுள்ளும், இன்மை - (மிக்க) இல்லாமையாவது, அறிவு இன்மை - அறிவில்லாமை: பிறிது இன்மை - மற்றைப் பொருளில்லாமையோ வெனின், (அதனை), இன்மை ஆ வையாது - (அப்பெற்றித்தாய) இல்லாமையாகக் கொள்ளார், உலகு - உலகத்தார்; (எ - று.)

அறிவென்பது - ஈண்டு, தலைமைபற்றி நல்லறிவின்மேல் நின்றது. புல்லறிவாளர் செல்வமெய்தியவழியும் இம்மைமறுமைப்பய னெய்தாமையின் அதனை 'இன்மையுளின்மை' என்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழியும் அஃது இழவாமையின் அதனை 'இன்மையா வையாது' என்றுங் கூறினர்.

இதனுல், புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) அதனை - பொருளில்லாமையை. பண்புஎன்பது அடை மொழிகொடாது கூறப்படின் தலைமைபற்றி நற்பண்பையேகாட்டுவதுபோல, 'அறிவு' என்பது நல்லறிவு புல்லறிவு என்ற இரண்டற்கும்பொதுவாயினும், தலைமையினுல் நல்லறிவைக்காட்டுமென்றுகூறினர். எய்தியவழியும் - பெற்றாலும். எய்தாமையின்-பெறுமையால். அஃது-அவ்விம்மைமறுமைப் பயன். உலகென்பது - பொருளால் ஈயர்திணையாயினுஞ் சொல்லால் அஃறிணையாதலால், வையாதென்னும் அஃறிணைவினைகொண்டு முடிந்தது. ''நுண்ணுணர்வின்மை வறுமை யஃதடைமை, பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்'' என்ற நாலடியாரை இங்கே அறிக. இன்மையென்பது ஒருபொருளிற் பன்முறைவந்தது - சொற்பொருட்பின்வருநிலையணி. (க)

அசஉ. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

(இ - ள்.) அறிவு இலான்-புல்லறிவுடையான்,—(ஒருவனுக்கு), நெஞ்சு உவந்து - மனம்உவந்து, ஈதல் - (ஒன்று) கொடுத்தல், (கூடிற்றுயின், அதற்குக் காரணம்), பெறுவான் தவம் - பெறுகின்றவன் நல்வினையே; பிறிது யாதுஉம் இல்லை - வேறொன்று மில்லை; (எ - று.)

'ஒரோவழி நெஞ்சு உவந்து ஈதல் கூடலின், 'புல்லறிவாளரும் நல்வினைசெய்ப' என்பார்க்கு, 'பெறுவான் வீழ்பொருளெய்தியான் போல்வதல்லது, இம்மைநோக்கியாக மறுமைநோக்கியாக ஈகின்றாரல்லர்' எனக் கூறியவாறு. 'கூடிற்றுயின், அதற்குக்காரணம்' என்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன.

இதனுல், அஃதுடையார் தம்மாட்டு நல்லனசெய்தலறியாமை கூறப்பட்டது.

(கு - ரை.) கூடிற்றுயி னென்னவே, கூடுதலருமைகூறப்பட்டது. ஒரோவழி நெஞ்சுஉவந்து ஈதல் கூடலிற் புல்லறிவாளரும் நல்வினைசெய்ப என்பார்க்கு - (புல்லறிவாளர் நல்வினையைச்செய்வதேயில்லை யென்பதைமறுத்துச்) சிலவேளைகளில் (சிலர்க்கு) மனமுவந்து கொடுத்தலாற் புல்லறிவாளரும்

மனப்பூர்வமாய் நல்வினையைச்செய்பவர்கள்தாம் என்பாரை நோக்கி. வீழ் பொருளெய்தியான்போல்வதல்லது - கீழ்விழுந்திருப்பதொருபொருளே (நல் வினைப்பயனல்) அடைபவன்போன்று (இப்புல்லறிவாளரிடத்தினின்றும் தனதுநல் வினைப்பயனைப் பொருளைப்பெறுகின்றானே) அல்லாமல். ஆக-ஆவது; விகற்பப்பொருளது.ஈகின்றாரல்லரென்பதற்குஏதுவாய் - புல்லறிவாளர்.

அசஉ. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(இ - ள்.) அறிவு இலார்-புல்லறிவுடையார், தாம் - தாமே, தம்மை—, பீழிக்கும் - வருத்தும், பீழை - வருத்தம், செறுவார்க்குஉம் - (அதுசெய்தற்கு உரியராய தம்) பகைவர்க்கும், செய்தல் அரிது—; (எ - று.)

பகைவர் தாம் அறிந்ததொன்றனைக் காலம்பார்த்திருந்து செய்வதல்லது வறுமை பழி பாவம் முதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்யமாட்டா மையின், அவர்க்குஞ் செய்தலரி தென்றார்.

இதனால், அவர் தம்மாட்டுந் தீயனசெய்தலறிவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அறிவில்லாதவர் தமதுஅறிவின்மையாற் பகைவராலுஞ் செய்தற்குமுடியாத பெருந்துன்பங்களைத் தாமே யுண்டாக்கிக்கொள்ளுவ ரென்றவாறு. பீழித்தல் - பீடித்தல். அது - அவ்வருத்தத்தை. அறிந்த தொன்று - செய்ய அறிந்ததொரு தீமை. உம் - இழிவு சிறப்பு. (ங)

அசஊ. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) வெண்மை எனப்படுவது - புல்லறிவுடைமையென்று சொல் லப்படுவது, யாது எனின் - யாதென்றுவினவின்,—(அது),—யாம் ஒண்மை உடையம் என்னும் - (தம்மைத் தாமே) யாம் நல்லறிவுடையமென்று நன்கு மதிக்கும், செருக்கு - மயக்கம்; (எ - று.)

வெண்மை - இளமை; அஃதாவது - அறிவுமுதிராமை. ஒண்மையென க்காரியப்பெயர் காரணத்திற்கு ஆயிற்று. உலகத்தாரிகழ்த லறிந்துவைத் தும் அவ்வாறு மதித்தலான், மயக்க மென்றார்.

(கு - ரை.) ஒண்மை - புகழ்; இங்கே, அதற்குக் காரணமான நல்லறி விற்கு ஆகுபெயர். அறிவின்மையை வெண்மை யென்றது, வைரமின்மரத் தை வெளிற்றுமரமென்னும் வழக்குப்பற்றி; "வெளியார்முன், வான்சுதை வண்ணம் கொளல்" என்றதுங் காண்க. உலகத்தாரிகழ்தலையறிந்திருந்தும் யாம் ஒண்மையுடையம் என்று கருதுகின்ற செருக்கு மயக்கத்தின்காரியமாத லால், அம்மயக்கத்தைச் செருக்கு என்றேகூறினார்: இது, காரணத்தாற் காரி யத்தைக்கூறிய உபசாரவழக்காம். (ச)

அசஎ. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

(இ - ள்.) (புல்லறிவாளர்),—கல்லாத - (தாம்) கல்லாத நூல்களையும், மேற்கொண்டு - (கற்றாராகத் தாம்) மேலிட்டுக்கொண்டு, ஒழுகல் - ஒழுகுதலும்,

கசடு அற வல்லது உம் - கசடறக்கற்றதொரு நூல் உண்டாயின் அதன்கண்ணும், ஐயம் தரும் - (பிறர்க்கு) ஐயத்தை விளைக்கும்; (எ - று.)

வல்லது என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'உண்டாயின்' என்பது, அவாய்நிலையான் வந்தது. ஐயம் - அதுவல்ல ரென்பதூஉம் இவ்வாறு கொல்லோ வென்பது.

(சு - ரை.) புல்லறிவாளர் தாம் படியாதநூல்களேயும் படித்தனவாகப் பேசித் தாம் படித்த நூலைப் பற்றியும் 'இவர் இந்நூலைப்படித்தாரோ? இல்லையோ?' என்று பிறர்சந்தேகிக்குமாறு நடந்துகொள்வரென்றவாறு. கசடறக்கற்றலாவது - விபரீதஐயங்கள் இலவாகப் படித்தல். உண்டாயினென்பது, பெரும்பாலும் உண்டாகாமை உணர்த்திநின்றது. ஏழாவது - 'வல்லதில்' என்னும் ஏழனுருபு. அதுவல்லரென்பதூஉம் இவ்வாறுகொல்லோ - இவர் அத்தநூலிலே வல்லவ ரென்று சொல்லுவதும் இங்ஙனந்தா னிருக்குமோ? கல்லாத - பெயர். அளபெடை, இன்னிசைதருதற்பொருட்டு வந்தது. (கூ)

அசசு. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

(இ - ள்.) (புல்லறிவாளர்), தம்வயின் குற்றம் - தங்கண்ணிகழுங் குற்றங்களை, மறையாவழி - (அறிந்து) கடியாராயின், அற்றம் மறைத்தல்ஓ-(ஆடையால்) அற்றம்மறைத்தாராக(த் தம்மைக்) கருதுதலும், புல் அறிவு - புல்லறிவாம்; (எ - று.)

குற்றம் மறைத்தலாவது - அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்ததொன்றனையே மறைத்து அவ்வளவால் தம்மையும் உலக மொழுக்கினராக மதித்தலும் புல்லறிவு என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், அவர் தம்மையியத்தற்குற்றங் கூறப்பட்டது.

(சு - ரை.) அற்றம் - மறைக்கத்தக்க அவயவம். இலவாக்குதல் - இல்லாமற்போகச்செய்தல். மறைக்கப்படுவன - பிறர்காணமுடியாதவாறு இல்லாமற் போக்கவேண்டியகுற்றங்கள். தாழ்ந்ததொன்று - தாழ்மையுள்ளதான ஓரவயவம். வியத்தல் - கொண்டாடுதல். ஓ - தெரிநிலை. (சு)

அசஎ. அருமறை சோரும் மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ - ள்.) அரு மறை - (பெறுதற்கு) அரிய உபதேசப்பொருளை, (பெற்றாலும்), சோரும் - (உட்கொள்ளாது)போக்கும், அறிவு இலான் - புல்லறிவாளன்,—(அவ்வுறுதி அறியாமையால்), தானே—, தனக்கு—, பெரு மிறை - மிக்க வருத்தத்தை, செய்யும் - செய்துகொள்ளும்; (எ - று.)

சோரும் என இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது. மிக்க வருத்தம் - பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி, 'அருமறை சோரும்' என்பதற்கு - பிறரெல்லாம், உள்ளத்து அடக்கப்படும் எண்ணத்தை

வாய்சோர்ந்து பிறர்க்கு உரைக்கும் என்று உரைத்தார்; அது, பேணுமை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மையன்மை அறிக.

(கு - ரை.) பெரியோர்கூறிய உபதேசப்பொருளை உறுதியாகக்கொண்டு நடவாமையால், புல்லறிவாளன் தனக்குத்தானே வருத்தத்தையுண்டாக்கிக் கொள்வானென்பதாம். அவ்வுறுதி - அவ்வுபதேசத்தாற் பெறும் நன்மை. புல்லறிவாளராகிய இடத்திலே நிகழ்கின்ற மறையாகிய பொருளினது சோர்தலாகியதொழில், அவ்வறிவிலாளுகிய இடத்தின்மேல் நின்றது. மறை-பிறரறியாமல் மறைக்கப்படுவதாகிய உபதேசவார்த்தையும், உள்ளத்து அடக்கப்படும் எண்ணமும். பிறரெல்லாம் உரைத்தார் என இயையும். முதலுரையில், சோர்தல் - மனத்திற்கொள்ளாது விட்டிடுதல்; இரண்டாமுரையில், வாய்விட்டுச்சொல்லுதல் என்க. (எ)

அதி. ஏவவுஞ் செய்கலான் முன்றேறு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

(இ - ள்.) (புல்லறிவாளன்), ஏவலும் செய்கலான் - (தனக்கு உறுதியாயவற்றை அறிவுடையார்) சொல்லாநிற்கவுஞ் செய்யான்: தான் தேறுன் (அதுவன்றித்) தானுகவும் (இவை செய்வன வென்று) அறியான்; அ உயிர்—, போஒம் அளவுமும் - (யாக்கையின்) நீங்குமளவும், ஓர் நோய் - (நிலத்திற்குப் பொறுத்தற்கரியது) ஒரு நோயாம்; (எ - று.)

உயிர் தான் உணர்தற்றன்மைத்தாயிருந்தும் நின்ற யாக்கையத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் 'அவ்வுயிர்' என்றும், அதனின் நீங்கிய பொழுதே அதற்கு இரண்டனுள் ஒன்று கூடுதலின் 'போஒமளவும்' என்றும், குலமலைமுதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் தன்பஞ்செய்தலின் 'ஓர்நோய்' என்றுங் கூறினர்.

(கு - ரை.) உணர்தற்றன்மைத்து - இயற்கையில் அறியுந் தன்மையது. நின்ற யாக்கையத்தான் - வினையினுற்பெற்றுநின்ற உடம்பின்வசத்தினுல். மருடல் - மயங்குதல், இரண்டனுள் ஒன்று - ஏவச்செய்தல், தான்தேறுதல் என்னுந்தொழில்களுள் ஏதாயினும் ஒன்று. குலமலை - குலபர்வதங்கள். பொறை - பாரம். இங்கே பழிப்பினுல் உயர்திணை அஃறிணையாயிற்று; உயர்திணை - புல்லறிவாளன்; அஃறிணை - அவ்வுயிர்: உடலையும் உயிரையுந் தனித்தனி பிரித்துக்கூறினுல் அவை அஃறிணையாம். அதனின்நீங்கியபொழுதே - வினையத்தாற்பெற்றுநின்ற அவ்வுடலினின்று நீங்கியபோதே. பாவயாக்கை - பாவஞ்செய்த உடம்பு: இது, பூமிபாரம் எனப்படும். 'ஸர்வம்ஸஹா' என்ற வடமொழிப்பெயரின்படி எல்லாவற்றையும் பொறுப்பதாகிய பூமியும் பாவிகளைப் பொறுக்கமாட்டாமல் அவர்களே அதிபாரமாகக்கருது மென்பதையறிக. போஒம் - அனுபடை, செய்யுளோசை நிறைக்கவந்தது. செய்கலான், கு - சாரியை, அல் - எதிர்மறையிடைநிலை. (அ)

அதி. காணுதாற் காட்டுவான் முன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

(இ - ள்.) காணுதான் - (தன்னே எல்லாம் அறிந்தாளுக மதித்தலால் பிற ரால் ஒன்று) அறியுந் தன்மை யிலாதானே, காட்டுவான் - அறிவிக்கப்புகுவான், தான் காணுன் - (அவனுற் பழிக்கப்பட்டுத்) தான் அறியாளுய் முடியும்: காணுதான் - (இனி) அவ் வறியுந்தன்மை யில்லாதான், (கொண்டது விடாமையால்), தான் கண்ட ஆறு - தான் அறிந்த ஆற்றல், கண்டான் ஆம் - (அதனை) அறிந்தாளுய் முடியும்; (எ - று.)

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்ருனும் இயைவதன் றென்பதாம்.

(கு - ரை.) கொளுவுதல் - கொள்ளச்செய்தல். ஒருவாற்ருனும் இயைவ தன்று - ஒருவழியாலுங்கூடாது. சொற்பொருட்பின்வருநிலையணி. புல்லறி வாளனுக்கு உறுதியானவைகளைச் சொன்னலும் அவன் கொண்டதுவிடாத குணமுடையவனுதலால், உறுதிப்பொருள்சொல்பவனே அப்புல்லறிவாளனுற் பழிக்கப்பட்டு அவமானமடைவான்; ஆகவே, புல்லறிவாளனுக்கு நல்லறிவை வருவித்தல் ஒருவகையாலும் முடியாதென்பதாம். "கற்றன கல்லார் செவி மாட்டிக் கையுறுஉங், குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந், தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா, ஏதிலரைநோவ தெவன்" என்பர், நீதிநெறி விளக்கத்தும். (கூ)

அருo. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(இ - ள்.) உலகத்தார் - உயர்ந்தோர் (பலரும்), உண்டு என்பது - உண் டென்பதோர் பொருளே, இல் என்பான்-(தன் புல்லறிவான்) இல்லையென்று சொல்லுவான், (மகனென்று கருதப்படான்); வையத்து அலகை ஆவைக்கப் படும் - வையத்து(க் காணப்படுவதோர்) பேயென்று கருதப்படும்; (எ - று.)

கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென் பன பலவேனும், சாதிபற்றி 'உண்டென்பது' என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின், தன்யாக்கை கரந்து மக்கள்யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை யென்றுங் கூறினர்.

இவை நான்குபாட்டானும், உறுதிச்சொற் கொள்ளாமையது குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை) மகன் - மனிதன். அவர் - உலகத்தார். என்பது - சாதி யொருமை. தானே வேண்டியகூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் - பேயும்உலகத்தாருண்டென்பதை இல்லையென்பவனும்தானே வேண்டியவற்றைச் சொல்லுதலால் ஒத்திருத்தலும் வடிவம்வேறுபடுதலால் ஒவ்வாதிருத்தலும் உடையராயிருத்தலால். தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள்தோன்றுதல்வல்ல அலகை - தன்னுடம்பை மறைத்து மனித ருடம்பிலே தோன்றுதல் வல்ல பேய். வையம் - பொருள்களை வைக்குமிடம்.

அசு-ஆம் அதிகாரம்—இகல்.

இனி, அவற்றுன் வரும் வெகுளிகாமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும் பான்மைத்தாகலின் அதனுன் வருவன கூறுவான் தொடங்கி, முதற்கண் இகல்கூறுகின்றுர்: அஃதாவது - இருவர் தம்முள் பொருது வலிதொலைதற்கு ஏதுவாய மாறுபாடு.

(கு - ரை.) அவற்றுன் - கீழ்க்கூறிய பேதைமை புல்லறிவாண்மை களால்; காமம் வெகுளி மயக்கம் என்னுங் குற்றங்கள் மூன்றனுள் வெகுளி காமங்களுக்குக் காரணம் மயக்கமாதலாலும், அம்மயக்கத்தைப் பேதைமை புல்லறிவாண்மை என இருவகைப்படுத்துக் கீழ் இரண்டதிகாரங்களாற் கூறி னுராதலாலும், 'அவற்றுன்வரும் வெகுளி காமங்கள்' எனப்பட்டது. வெகுளி - கோபம். பெரும்பான்மைத்து - பகைவர்கள் குற்றவாளிகள் முத லியோர்பக்கல் மிகுதியாய் வரக்கூடிய தன்மையையுடையது. அதனுன் வரு வன - வெகுளியால்வரும் பகைகளை. தம்முள் பொருது - தமக்குள்ளே [ஒருவரோடொருவர்] போர்செய்து. வலிதொலைதற்கு - பலம் அழிதற்கு. ஏது - காரணம். இகல் - முதனிலைத்தொழிற்பெயர்.

அறிக. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(இ - ள்.) எல்லா உயிர்க்குமும் - எல்லாவுயிர்கட்கும், பகல் என்னும் - (பிற உயிர்களொடு) கூடாமை யென்னும், பண்பு இன்மை - நீக்குணத்தை, பாரிக்கும் - வளர்க்கும், நோய் - குற்றம்,—இகல் என்ப - இகலென்று சொல் லுவர் (நூலோர்); (எ - று.)

மக்களேயும் விலங்குகளோடு ஒப்பிப்ப தென்பது தோன்ற 'எல்லாவுயிர் க்கும்' என்றும், *பகுதிக்குணத்தை இடைநின்று வினைத்தலின் 'பகலென் னும் பண்பின்மை' என்றுங் கூறினுர். †நற்குணமின்மை, அருத்தாபத்தி யால் நீக்குணமாயிற்று.

இதனுன், இகலது குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) நூலோர் - சாஸ்திரமறிந்தவர்கள். மக்கள் - மனிதர். விலங்கு கள் - மிருகங்கள். ஒப்பிப்பது - சமானமாக்குவது. 'மக்களுயிர்க்கு' என்னுமல் 'எல்லாவுயிர்க்கும்' என்றது - இகல் தான் நல்லறிவுடைய மக்களேயும் அவ் வறிவில்லாத விலங்குகளோடு ஒப்பாகச் செய்துவிடு மென்பதுபற்றி யென்று கருத்து. பகுதி - பிரிவு. பண்பின்மை - நல்லகுணமில்லாமை. பகுதலென் பது நீக்குணத்தாலன்றிக்கூடாமையின், பண்பின்மையென்பது நீக்குணத் தைக்காட்டிற்றன்க. அருத்தாபத்தியாவது - ஒருபொருளைக் கூறியமாத் திரத்தால் அதன்குறிப்புக்கொண்டு கூறப்படாத மற்றிருபொருளை அறிதல். இகலது - மாறுபாட்டினது. என்ப - இடைச்சொல்லடியாப்பிறந்த பலர் பாற்படர்க்கை யெதிர்காலவினைமுற்று; 'என்ப' என்னும் முற்றுச்சொல்,

---

பி - ம்: *பகுதி நீக்குணத்தை இடையின்றி வளர்த்தலின் †குண மின்மை.

'நூலோர்' என்னும் பெயர் தொக்குநின்றதனோடுமுடியும்; தோன்றா எழுவாயுமாம். எல்லாமென்பது, இருதிணைக்கும் பொது. உயிர்க்கும், உம்மை - முற்றுப்பொருளது. பகல் - தொழிற்பெயர்; பகு - முதனிலை. துன்பத்தை உண்டாக்குதல்பற்றி, குற்றம் நோயெனப்பட்டது. (௧)

௮௫௨. பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி
யின்னா செய்யாமை தலை.

(இ - ள்.) பகல் கருதி - (தம்மொடு) கூடாமையைக் கருதி, பற்றா செயின் உம் - (ஒருவன்) வெறுப்பன செய்தானாயினும், இகல் கருதி - (அவனோடு) மாறுபடுதலைக் குறித்து, இன்னா செய்யாமை - (தாம் அவனுக்கு) இன்னாதவற்றைச் செய்யாமை, தலை - உயர்ந்தது; (எ - று)

செய்யின் பகைமைவளரத் தாந் தாழ்ந்துவரலானும், ஒழியின் அப்பற்றாதன தாமே ஓய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும் 'செய்யாமை தலை' என்றார். 'பற்றாத' என்பது, விகாரமாயிற்று.

(கு - ரை.) வெறுப்பன - வெறுக்கத்தக்க தீச்செய்கைகள். இன்னாதவற்றை - துன்பந்தருஞ் செய்கைகளை. ஒருவன் ஒருகூட்டத்தாரோடு கூடாமையைநினைந்து பிறர்வெறுக்குந்தொழிலைச் செய்தானாயினும், அவர்கள் அவனுக்குப் பிரதியாக இன்னாசெய்யாமலிருத்தலே உத்தமமென்றவாறு: இதற்குக் காரணம்கூறுவது 'செய்யின்பகைமைவளர.....என்றார்' என்றவாக்கியம். செய்யின் - இன்னாதவற்றைச் செய்தால். தாம் - செய்தவர். தாம் தாழ்ந்துவரலானும் - தாம்பெருமைகுன்றியவராதலாலும். ஒழியின் - அச்செய்தலை ஒழிந்தால். அப்பற்றாதன - அவன்செய்ததீங்குகள். தாமே ஓய்ந்துபோக- ஒழிப்பாரில்லாமலே வரவர ஒழிந்துபோய்விட. தாம் - ஒழிந்தவர். ஓங்கி - உயர்ந்து. விகாரம் - தொகுத்தல். பற்றா - விரும்பாதவை; எனவே, அருத்தாபத்தியால் வெறுப்பனவாயிற்று: இது, ஈறுதொக்க அஃறிணை எதிர்மறைப் பன்மை வினையாலணையும் பெயர்; 'இன்னா' என்பதும் இது. வெறுப்பன செய்யாதானோடு மாறுபடலாகாமை சொல்லவேண்டாதாயிற்று. வெறுப்பன செய்யாதானுக்கு இன்னாதன செய்தல் கடையென்றும், செய்தவனுக்குச் செய்தல் இடையென்றும், செய்தவனுக்குஞ் செய்யாமை தலையென்றுங் கூறியவாறும். (௨)

௮௫௩. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

(இ - ள்.) இகல் என்னும் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற, எவ்வம் நோய் - துன்பத்தைச்செய்யும் நோயை, நீக்கின் - (ஒருவன் தன்மனத்தினின்று) நீக்குமாயின்,—(அவனுக்கு அந்நீக்குதல்),—தவல் இல்லா - (எஞ்ஞான்றும்) உளனாதற்கு ஏதுவாய, தா இல் விளக்கம் - புகழை, தரும் - கொடுக்கும்; (எ - று.)

தவலில்லாமை - அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில் விளக்கம் - வெளிப்படை. யாவரும் நண்பராவர்: ஆகவே, எல்லாச்செல்வமும் எய்திக் கொடைமுதலிய காரணங்களாற் புகழ்பெறு மென்பதாம்.

(கு - ரை.) தன்மனத்தினின்று நீக்கும் - எண்ணுமலே விடுவான். எஞ்ஞான்றும் - எக்காளும். உளனுதல் - அழிவில்லாதவனுயிருத்தல். பூதவுடம்பு அழியினும் புகழுடம்பு அழியாது நிலைநிற்றலால், 'எஞ்ஞான்றும் உளனுதற்கு ஏதுவாய புகழ்' எனப்பட்டது. தவலில்லாமையென்பதற்கு அழிதலில்லாமையென்றுபொருளாதலாலும், எஞ்ஞான்றும் உளனுதலென்பதில்லாவிடின் அழிதலில்லாமையென்பது சித்தியாதாதலாலும், எஞ்ஞான்றும் உளனுதலைத் தவலில்லாமையென்றது, அருத்தாபத்தியாற்கிடைத்தபொருளாம். அப்பொருட்டு-அந்த [எக்காளும் உள்ளவனுதலென்னும்] பொருளது. விளக்கம்-பொருள்களை விளங்கச்செய்வதற்குக் கருவியாவது; அம்-கருவிப்பொருள் விகுதி. தா இல் விளக்கம் - கெடுதலில்லாத விளக்கு: எனவே, புகழென விளங்குகிறது; இது, சீவகசிந்தாமணியில் "பூண்முலைப்பிடி," கல்லாடத்தில் "திருநுதற்கொடி" என்பனபோல வெளிப்படைச்சொல்: அதாவது-அடைமொழியாற் பொருள் விளங்கி நிற்கும் மொழி. உலகத்து எவ்விடத்தும் எக்காளும் அழியாது நிலைநிற்றல்பற்றியும், அவியுறுதன்மையனவாகிய மற்றைவிளக்குக்களினும் இப்புகழ்விளக்குக்கு உள்ள விசேடந் தோன்றவும் 'தாவில்விளக்கம்' என்றார்; "ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்ரூது நிற்பதொன்றில்," "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநாடுக," "நிற்பதேதுகொ னீடிசை யொன்றுமே நிற்கும்" என்பன காண்க. எய்தி - பெற்று. கொடை - கொடுத்தல்; தானம். 'முதலிய' என்றதனால், கல்வி ஆண்மை முதலியவைகளையும் கொள்க. புகழ்பெறும் - மாறுபாடு நீக்கினவன் கீர்த்தியைப் பெறுவான். புகழ் பெரும்பான்மையும் ஈதல்பற்றிவருதலால், 'கொடைமுதலிய காரணங்களாற்புகழ்பெறும்' எனப்பட்டது. தவல்-தொழிற்பெயர்; தவு - முதனிலை. தரும் - இடவழுவமைதி. (கூ)

அநிசை. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ - ள்.) இகல் என்னும் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற, துன்பத்துள் துன்பம் - துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம், கெடின் - (ஒருவனுக்கு) இல்லையாயின், (அவ்வின்மை அவனுக்கு), இன்பத்துள் இன்பம் - இன்பங்களெல்லாவற்றினும் மிக்க இன்பத்தினை, பயக்கும் - கொடுக்கும்; (எ - று.)

துன்பத்துள் துன்பம் - பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கும் எளியனுப்உறுவது; அதனை இடையின்றியே பயத்தலின், 'இகலென்னும்' என்றார். இன்பத்துள் இன்பம் - யாவரும்கட்பாகலின் எல்லாப்பயனும் எய்தி உறுவது.

(கு-ரை.) அவ்வின்மை-இகலென்னும்மிக்கதுன்பமில்லாமை. பொருது-போர்செய்து. வலிதொலைதலான் - பலம் அழிதலால். உறுவது-பொருந்துவது. இகல் தான் துன்பத்துட்டுன்பத்தை இடைவிடாது தருதலால், 'இக

லென்னுந் துன்பத்துட்டுன்பம்' எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். கெடின் என்றது, கெடுதலின் அருமை குறித்து நின்றது. (சு)

ஆருரு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(இ - ள்.) இகல் - (தம்உள்ளத்து) மாறுபாடு (தோன்றியவழி), எதிர் சாய்த்து ஒழுக வல்லாரை - (அதனை) ஏற்றுக்கொள்ளாது சாய்ந்து ஒழுகவல் லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் - வெல்லக் கருதுந் தன்மையுடையார், யாரே - யாவர்? (எ - று.)

இகலே ஒழிந்து ஒழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் 'வல் லாரை' என்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக்கருதுவார் யாவரும் இல்லை யென்றுங் கூறினர்.

இவைநான்கு பாட்டானும், இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளத்து - மனத்தில். தோன்றிய வழி - உண்டானபொ ழுது. சாய்ந்து - தாழ்ந்து. ஒழுகவல்லார் - நடக்கவல்லவர். வேந்தர்-அ சர். எவ்வாற்றானும் - எவ்விதத்தாலும். அரிது - அருமையானது. அவரை- மாறுபாடுகொள்ளாது ஒழுகவல்லவரை. யாவர்க்கும் - பகைவர்க்கு முட்பட. இகலாதார் - மாறுபடாதவர். யார் என்னும் வினாப்பெயர், இங்கு இன்மை குறித்து நின்றது. ஏகாரம் - அசை; தேற்றமாகவுங் கொள்ளலாம். உள் ளத்துமாறுபாடுதோன்றும்போது அதற்குஇடங்கொடுக்காமல் அவ்விகலுக்கு மாறுபாடாகத்தாழ்ந்துநடக்கவல்லவர் யாவர்க்கும் நண்பராவராதலால்,அவரை வெல்லக்கருதுவார் எவருமிலரென்பதாம். எதிர்சாய்தல்-எதிர்தலையொழிதல்.

ஆருசு. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(இ - ள்.) இகலின் - (பிறரொடு) மாறுபடுதற்கண், மிகல் - மிகுதல், இனிது என்பவன்-(எனக்கு) இனிதென்று (அதனைச்) செய்வானது, வாழ்க் கை-உயிர்வாழ்க்கை,—தவலும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக் கெடுதலுஞ் சிறிதுபொழுதுள் உளவாம்; (எ - று.)

மிகுதல் - மேன்மேல் ஊக்குதல். 'இனிது' என்பது - தான் *வேறலைக் குறித்தது. பிழைத்தல் - வறுமையான் †இன்னுதாதல். முற்றக்கெடுதல் - இறத்தல். இவற்றோடு 'நணித்து' என்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மை களை எதிரதும் இறந்ததுந் தழீஇய எச்சவும்மையாக உரைக்க. பொருட்கே டும் உயிர்க்கேடும் அப்பொழுதே உளவா மென்பதாம்.

(கு - ரை.) மாறுபடுதற்கண்-மாறுபடுதலில். பிழைத்தல்-பொருட்கேடு. முற்ற-முழுதும். முற்றக்கெடுதல் - உயிர்க்கேடு. சிறிதுபொழுதுள் - விரை வில். ஊக்குதல் - கருதி முயலுதல். வேறல் - வெல்லுதல். வறுமை - நுகரப்படுவனயாவும் இல்லாமை. இன்னுதாதல் - துன்பப்படுதல். இவற் றோடு நணித்தென்பதனைத் தனித்தனிகூட்டி - தவலும் நணித்து, கெடலும்

* பி - ம்: வேறல் குறித்தல். † இன்னுனுதல்.

நணித்து என இயைத்து. தவலும், உம்மை - கெடலும் நணித்தா மென்னும் பொருளைத் தருதலால், எதிரதுதழுவிய எச்சம்: கெடலும், உம்மை - தவல் நணித்தானன்றி யென்னும் பொருளைத் தருதலால், இறந்ததுதழுவிய எச்சம். நணித்து - உடனே உண்டாவது; ஒன்றன்படர்க்கை முற்று. இகலில் மிகுதல் நல்லதுஎன்றுகருதி ஒருவன் மேன்மேற்செய்தால் அவனுக்குப் பலரும் பகைவராய்விடுவராதலால் அன்னவனுக்குச் செல்வக்கேடும் உயிர்க்கேடும் விரைவில்உளவாகுமென்க. 'இகலின் மிகலினிது' என்பது தனக்கு வெற்றியேகிடைக்குமென்ற காரணத்தினலாகும். (சு)

அருள. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு நிகன்மேவ
லின்ன வறிவி னவர்.

(இ - ள்.) இகல் மேவல் - இகலொடு மேவுதலையுடைய, இன்ன அறிவினவர் - இன்னுந அறிவினையுடையார்,—மிகல் மேவல் - வெற்றிபொருந்துதலையுடைய, மெய் பொருள் - நீதிநூற்பொருளை, காணர் - அறியமாட்டார்; (எ - று.)

இன்ன அறிவு-தமக்கும் பிறர்க்குந் தீங்குபயக்கும் அறிவு. வெற்றி-வழி நின்றூர்க்குஉளதாவது. காணப்படும் பயத்த தாகலின், 'மெய்ந்நூல்' எனப் பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், 'காணர்' என்றூர்.

இவைஇரண்டுபாட்டானும், இகலினூர்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

(கு - சை.) மேவுதல் - பொருந்துதல். இன்னுத - துன்பஞ்செய்கின்ற: வழி நின்றூர் - நீதிநூல்வழியே நடப்பவர். காணப்படும் பயத்தது - பிரதியக்ஷமாகத் தோன்றும் பயனையுடையது. இகலினூர் - மாறுபட்டவர். மெய்-நூலுக்கு ஆகுபெயர். (எ)

அருஅ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனே
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(இ - ள்.) இகலிற்கு எதிர் சாய்தல் - (தன் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி) அதனை எதிர்தலை ஒழிதல், ஆக்கம் ஆம்-(ஒருவனுக்கு) ஆக்கமாம்; (அதுசெய்யாது), அதனை மிகல் ஊக்கின் - அதன்கண் மிகுதலை மேற்கொள்ளுமாயின், கேடு ஊக்கும் - கேடுந் தன்கண்வருதலை மேற்கொள்ளும்.

எதிர்தல் - ஏற்றுக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், 'சாய்தல் ஆக்கம்' என்றூர். 'இகலிற்கு' எனவும், 'அதனை' எனவும் வந்தன-வேற்றுமை மயக்கம்.

(சு - சை.) அதனை - அவ்விகலை. எதிர்தல்-எதிர்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல். ஆக்கம் - நன்மை. அதுசெய்யாது - ஏற்றுக்கொள்ளாமையைச் செய்யாமல்; ஏற்றுக்கொண்டு என்றபடி. அதன்கண் - அம்மாறுபாட்டிலே. மாறுபாடு ஒழிந்த பொழுதே ஆக்கம் வருதலால், 'இகலிற்கெதிர்சாய்தல் ஆக்கம்' எனக் காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. 'இகலிற்கு' என்பதில் இகல் - செயப்படுபொருளாய் நிற்றலால் குவ்வுருபை ஐயுரு

பாகவும், 'அதனை' என்பதில் அது - இடப்பொருளாய் நிற்றலால் ஐயுருபைக் கண்ணுருபாகவுந் திரித்துக்கொள்க என்றபடி. எதிர் - முதனிலைத் தொழிற் பெயர். ஆம்-ஆகும்; செய்யுமென்முற்று, ஈற்றுயிர்மெய்சென்று நின்றது: இது ஆக்க மென்பதனோடு கூட்டப்பட்டது: இனி, அசையாகவுங் கொள்ளலாம்.

௮௫௯. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

(இ - ள்.) (ஒருவன்), ஆக்கம் வருங்கால் - (தன்கண்) ஆக்கம் வரும்வழி, இகல் காணான் - (காரணம் உண்டாயினும்) இகலை நினையான்; கேடு தரற்கு- (தனக்குக்) கேடுசெய்துகோடற்கண், அதனை மிகல் காணும் - (காரணம் இன்றியும்) அதன்கண் மிகுதலை நினைக்கும்; (எ - று.)

இகலான்வருங்கேடு பிறரான் அன்றென்பது தோன்ற, 'தரற்கு' என்றார். நான்காவதும், இரண்டாவதும் - ஏழாவதன்கண்வந்தன. ஆக்கக்கேடு கட்கு முன் நடப்பன, இகலினது இன்மை உண்மைக ளென்பதாம்.

(கு - ரை.) வரும்வழி - வரும்போது. கேடுசெய்துகோடற்கண் - கெடுதி செய்துகொள்ளுமிடத்து. அதன்கண் - இகலில். தன்மைக்குச் சிறந்த தரலென்னுஞ் சொல்லாற் கூறினதனால், தனக்குத்தானே கெடுதியை உண்டாக்கிக்கொள்ளுதற் கென்று பொருள். 'தரற்கு' என்னும் நான்காம்வேற்றுமையும், 'அதனை' என்னும் இரண்டாம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையின் இடப்பொருளில் வந்தன. இகல் இல்லையாயின் ஆக்கமும், இகல் உண்டாயின் கேடும் உண்டா மென்பதாம். காணும் - செய்யுமென்முற்று, உயர்திணை ஆண்பாலிற் சென்றது. (௯)

௮௬௦. இகலானா மின்னாத வெல்லா நகலானா
நன்னய மென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), இகலான் - மாறுபாடு ஒன்றானே, இன்னாத எல்லாம் - இன்னாதனவெல்லாம், ஆம் - உளவாம்; நகலான் - நட்பு ஒன்றானே, நல் நயம் என்னும் செருக்கு - நல்ல நீதியென்னும் பெருஞ் செல்வம், ஆம் - உளதாம்; (எ - று.)

இன்னாதன - வறுமை, பழி, பாவம் முதலியன. நகல் - மகிழ்தல். அதுவும் செருக்கு என்பதும் - தத்தங் காரணங்கட்கு ஆயின. 'நயமென்னுஞ் செருக்கு' எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

இவைமூன்றுபாட்டானும், அவ்விருமையுங் கூறப்பட்டன.

(கு - ரை.) மகிழ்ச்சியென்னும் பொருளதாகிய நகலென்பது - அதற்குக் காரணமாகிய நட்புக்கும், களிப்பென்னும் பொருளதாகிய செருக்கென்பது - அதற்குக் காரணமாகிய செல்வத்துக்குங் காரியவாகுபெயர். காரியமாகிய செல்வம், அதற்குக் காரணமாகிய நீதியாக உபசரிக்கப்பட்டது. இருமை - இகலாதார்க்கு வரும் நன்மையும், இகலினார்க்கு வருந் தீமையும். இகலான், நகலான் - ஆன், மூன்றனுருபு. இன்னாத - பெயர். (௧௦)

அஎ - ஆம் அதிகாரம்.—பகைமாட்சி.

அஃதாவது - அறிவின்மைமுதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின், மேற் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலே ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றார் ஆகலின், இஃது, அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) கூடாமை - முடியாமை. ஈண்டு - இவ்வதிகாரத்தில். விதித்தல் - நியமித்துக் கூறுதல். இஃது - இவ்வதிகாரம். அதன்பின் - இகலென்னும் அதிகாரத்தின்பின். 'இகல்கூடாது' என்று கீழதிகாரத்திற் பொதுவாக விலக்கப்பட்டதனை இன்ன இன்ன இடத்துக்கூடும் என்று விதித்தலால் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலைச் சிறப்புவகையான் விதிக்கின்றார் என்றார். பகைமாட்சியென்பது - அறிவில்லாமை முதலிய குற்றங்களையுடைய பகைவர்களை நன்றாக ஆராய்ந்தறிந்து அவர்களோடு பகைமை கொள்ளுத லென்றபடி.

அஊக. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ - ள்.) வலியார்க்கு - (தம்மின்)வலியார்க்கு, மாறு ஏற்றல் - பகையாய் எதிர்தலை, ஓம்புக - ஒழிக: மெலியார்மேல் - (ஏனை) மெலியார்க்கு, பகை - பகையாதலை, ஓம்பா - ஒழியாது, மேக - விரும்புக; (எ - று.)

'வலியார்' என்புழித் துணைவலியும்அடங்கலின், 'மெலியார்' என்புழித் துணைவலியின்மையுங் கொள்ளப்படும்; அத்துணைதான் - படை பொருள் முதலிய வேற்றுமைத்துணையும், நல்லறிவுடைமை *நீதிவழியொழுகல் முதலிய ஒற்றுமைத்துணையும் என இரண்டாம். அவ்விரண்டும் இல்லாரை வெல்வார்க்கு வலிதாலெளியாமையின், அவரோடுபகைத்தல் விதிக்கப்பட்டது.

சிங்கநோக்காகிய இதனுள், பகைமாட்சி பொதுவகையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) தம்மின் வலியார் - தாஞ்செய்யக்கருதிய வினைவலியையும் அதனைச் செய்துமுடிக்குந் தம்வலியையுந் துணையாவார்வலியையுந் தம்மினும் மிகுதியாகவுடையவர். ஒழிக - நீங்கக்கடவர். ஏனை - மற்றை. மெலியார் - அவ்வலிமைகளில் தம்மினும் எளியவர். ஒழியாது - நீங்காமல். என்புழி - என்றவிடத்து. படை - சேனை. பொருள் - செல்வம். வேற்றுமைத்துணை - தன்னினும் வேறுகிய துணை. ஒற்றுமைத்துணை - அபேதமாகிய [தன்னினும் வேறுகாத] துணை. சிங்கநோக்காகிய இதனுள் - முன்னும்பின்னும் பார்க்கின்ற சிங்கத்தினது பார்வையைப்போல முன்னதிகாரத்தையும் பின்னதிகாரத்தையும் நோக்குகின்ற இத்திருக்குறளில். 'மெலியார் மேல் மேக பகை' எனப் பொதுப்படக் கூறப்பட்டது; இனி, பகைமாட்சி சிறப்புவகையாற் கூறப்படும். ஏற்றல், ஏல் - முதனிலை. ஓம்புக, மேக-விதித்தற்பொருளில் வந்த வியங்கோள்.

(க)

பி - ம்: *நீதிநூல்வழி.

அசுஉ. அன்பில னுன்ற துணையிலன் முன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(இ - ள்.) (ஒருவன்), அன்பு இலன் - (தன் சுற்றத்தின்மேல்) அன்பி லன்; (அதுவேயன்றி), ஆன்ற துணை இலன் - வலிய துணையிலன்; (அதன் மேல்), தான் துவ்வான் - தான் வலியிலன்; (அப்பெற்றியான்), எதிலான் துப்பு-(மேல்வந்த) பகைவன்வலியினை, என்பரியும்-யாங்ஙனந் தொலைக்கும்?

சுற்றமும் இருவகைத்துணையுந் தன்வலியும் இலனாகலின் அவன்மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாதென்பதாம். துவ்வான் - துவ்வினைச் செய்யான்.

(கு - ரை.) சுற்றம் - உறவினர். அன்பாவது - தொடர்புடையாரிடத் துக் காதலுடையவனுதல். அப்பெற்றியான் - அப்படிப்பட்டவன். மேல் வந்த - தன்மேல் எதிர்த்துவந்த. பகைவன்வலி - பகைவனது வலி. யாங் ஙனந்தொலைக்கும் - எவ்வாறு அழிப்பான். இருவகைத்துணை - கீழ்க்கூறிய வேற்றுமைத்துணையும், ஒற்றுமைத்துணையும். செல்வார் - படையெடுத்துப் போருக்குப் போவார். துவ்வினை-வலிமையை. அன்பிலன், துணையிலன் என்பவற்றில் அன்பு, துணை என்னும் அஃறிணை எழுவாய்கள்-ஒருவனென் னும் உயர்திணைத் தோன்றுஎழுவாயின் பயனிலையாகிய இலனென்னும் உயர்திணையைக்கொண்டுமுடிதலால், திணைவழுவமைதி. ஆன்ற, ஆன் - முதனிலை. எவனென்னும் வினாப்பெயர் - என் என்று ஆய், இங்கு இன்மை குறித்து நின்றது. (உ)

அசுஊ. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(இ - ள்.) (ஒருவன்), அஞ்சும் - (அஞ்சவேண்டாதவற்றிற்கு) அஞ்சா நிற்கும்; அறியான் - (அறியவேண்டுமவற்றை) அறியான்; அமைவு இலன் - (பிறரோடு) பொருத்தமிலன்; (இவற்றின்மேலும்), ஈகலான் - (யாவர்மாட் டும்) இவறன்மாலையன்; (இப்பெற்றியான்), பகைக்கு - பகைவர்க்கு, தஞ் சம் எளியன் - மிக எளியன்; (எ - று.)

தஞ்சம் எளியன் என்பன - ஒருபொருட்பன்மொழி; இக்கான்கு குற் றமு முடையான் பகையின்றியும் அழியுமாகலின், 'தஞ்சமெளியன்' என்றார்.

(கு - ரை.) "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்" என்னுமிடத்து 'பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படு வன பலவற்றையும் அஞ்சி எண்ணித் தவிர்தல்வேண்டும்' என்றாராதலின், 'அஞ்சும்' என்பதற்கு - 'அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும்' என்று உரைக்கப்பட்டது; "அஞ்சாமை பீடை யறிவுக்க மிக்கான்கு, மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு" என்றவிடத்து, அஞ்சாமைமுதலியன இறைமாட்சியா கச் சொல்லினமை காண்க. 'அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும்' என்றதனால், அதன் எதிர்மறையாகிய அஞ்சவேண்டுவனவற்றை அஞ்சா து

எண்ணுதுசெய்துமிற்பா னெண்பதுங் கொள்ளலாம். பொருத்தம்-சேர்க்கை. இவற்றின்மேலும் - இவைமாத்திரமேயன்றி யென்றபடி. யாவர்மாட்டும் - எல்லாரிடத்தும். இவறன்மாலையன் - லோபகுணமுடையவன். எளியன்-எளியனுவான். தஞ்சம்-எளிமைப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல்; "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே" என்றார் தொல்காப்பியனார். ஒரு பொருட்பன்மொழி - ஒருபொருளைக் குறித்துவந்த பலசொற்கள்; இது, மிகுநிற்பொருளது. பகையின்றியும் அழியும - தனக்குத்தானே அழிவான். பகையின்றியே அழியவல்லவன் பகைவரால் அழிதற்கு ஐயமின் றென்பது கூறவேண்டாதாயிற்று. பகை - பகைவர்க்குப் பண்பாகுபெயர். (ரூ)

அரூச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(இ - ள்.) (ஒருவன்), வெகுளி நீங்கான் - வெகுளியின் நீங்கான்; நிறை இலன் - (அதுவேயன்றித் தான்) நிறையுடையனல்லன்; (அவன்மேற் சேறல்); எஞ் ஞான்றும் - எக்காலத்தும், யாங்கண்ணும் - எவ்விடத்தும், யார்க்கும்—, எளிது—; (எ - று.)

நிறை - மறைபிறரறியாமை. வெகுடன்மாலைய ஞகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியும் அறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி, 'இனிது' என்று பாடமோதி, அவன்பகைமை இனிதென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) சேறல் - பகைத்துச்செல்லுதல். மறைபிறர்அறியாமை - மறைத்ததொருகாரியம் பிறர்அறியாமல் ஒழுகுதல். "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை" என்றார் கலித்தொகையிலும் (நெய்தல், சசு). நிறையின்மை - மனத்து அடக்கற்பாலனவற்றை அடக்கமாட்டாது வாய்விடுதல். வெகுடன்மாலையன் - கோபிக்குந்தன்மையுடையவன். மறை - இரகசியம். காலம் - வெல்லுதற்கு ஏற்ற காலம். இடன் - வெல்லுதற்குஏற்ற இடம். வலி - வினைவலி, தன்வலி, மாற்றுன்வலி, துணைவலி என்னும் நால்வகை வலிகள். அவர்களே எப்பொழுதும் எவ்விடத்தும் யாவர் எதிர்த்தாலும் வெற்றிபெறலா மென்றபடி. நிறை - தொழிற் பெயர்; நிறு-முதனிலை: இது நில்லென்பதன் பிறவினை யென்பர். எஞ்ஞான்றும், யாங்கணும், யார்க்கும் எகரவிஞைவும், யாவிஞவும் - எஞ்சாமைப்பொருளன; உம்மைகள்-முற்று. (சு)

அரூரு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(இ - ள்.) (ஒருவன்), வழி நோக்கான் - நீதிநூலை ஓதான்; வாய்ப்பன செய்யான் - (அது) விதித்ததொழில்களைச் செய்யான்; பழி நோக்கான் - (தனக்குவரும்) பழியைப் பாரான்; பண்பு இலன் - (தான்) பண்புடையனல்லன்; பற்றார்க்கு இனிது - (அவன்) பகைவர்க்கு (அப்பகைமை) இனிது.

தொல்லோர் அடிப்பட வழங்கிவந்த தாகலான் 'வழி' என்றும், தப்பாது பயன்படுதலின் 'வாய்ப்பன' என்றும், இக்குற்றங்களுடையான் தானே அழிதலின் 'பற்றார்க்கினிது' என்றுங் கூறினர்.

(கு - ரை.) ஓதான் - படியான். புண்பு - நற்குணம். அப்பகைமை - அப்படிப்பட்டவனோடு கொண்டபகைமை. தொல்லோர் அடிப்பட வழங்கிவந்தது - முன்னோர்முதலாக நடந்துவந்தது. வாய்ப்பன - தவறாது பயன்படுந் தொழில்கள். பண்பாவது - உலகவொழுக்கமறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப் படுவதுபாடறிந்தொழுகுதல்" என்றார் கலித்தொகையிலும். பற்றார் - தன்னோடு பொருந்தாதவர்; எனவே, பகைவர். வழிநோக்காமைமுதலிய தீக்குணங்களையுடையவனை யழிப்பதில் வருத்தமொன்றுமில்லாமையால், அவன் பகைமை இனிதெனப்பட்டது: இனிது - போக்கற்குளியது. (இ)

அசுசு. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும்.

(இ - ள்.) காணு சினத்தான் - (தன்னையும் பிறரையுந் தான்) அறியாமைக்கு ஏதுவாய வெகுளியையுடையான் யாவன், கழி பெரு காமத்தான் - மேன்மேல்வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், பேணுமை - (அவரது)பகைமை, பேணப்படும் - விரும்பிக் கொள்ளப்படும்; (எ-று.)

காணுதசினமென்பது, விகாரமாயிற்று. மூன்னோனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனோனுக்குக் காரியந்தோன்றுமையானுந் தாமே அழிவரென்பது பற்றி, 'இவர் பேணுமை பேணப்படும்' என்றார்.

(கு - ரை.) முன்னோன் - முன்சொல்லப்பட்டவன்; சினத்தான். ஏனோன் - மற்றையோன்; காமத்தான். காரியம் - செய்யவேண்டுந்தொழில். தோன்றுமையான் - மனத்திற்படாமையால். காணு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; காணுச்சினம் - பெயரெச்சம், காரியப்பொருளது. பேணுமை - விரும்பாமை; எனவே, பகைமை. கழி பெரு - ஒருபொருட்பன்மொழியாகவுங் கொள்ளலாம். (சு)

அசுஎ. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

(இ - ள்.) அடுத்து இருந்து மாணுத செய்வான் பகை - (வினையைத்) தொடங்கியிருந்து (அதற்கு) ஏலாதன செய்வான்பகைமையை, கொடுத்தும் - (சிலபொருள் அழியக்) கொடுத்தாயினும், கொளல் - கோடல், மன்ற - ஒருதலையாக, வேண்டும்---; (எ - று.)

ஏலாதன - மெலியனுய்வைத்துத் துணிதலும், வலியனுய்வைத்துத் துணிதலும் மூதலாயின. அப்பொழுது அதனுற் சிலபொருள் அழியினும் பின் பலபொருள் எய்தற்கு ஐயமின்மையின், 'கொளல்வேண்டு மன்ற' என்றார்.

இவை ஆறுபாட்டானும், அது சிறப்புவகையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) வினை - தொழில். ஏலாதன - தகாதவை. ஒருதலையாக-நிச்சயமாக. மெலியனாய்வைத்துத்துணிதல் - தான் வலிகுறைந்தவனாயிருந்தேயும் போர்க்கு நிச்சயித்தல். வலியனாய்வைத்துத் தணிதல் - தான்வலிமிகுந்தவனாயிருந்தேயும் போர்க்குச்செல்லாமல் அடங்குதல். முதலாயின என்றதனால்,தம்போர்வீரரிடத்து ஐயுறுதல் தக்கபடிபொருள்தாராமை முதலியன கொள்க. அப்பொழுது - பொருள்கொடுத்துக் கொள்ளும்பொழுது. அதனால்-அக்கொடையால். எய்தற்கு-பெறுதற்கு. ஐயம்-சந்தேகம். அது-பகைமாட்சி. கொடுத்தும், உம்மை - உயர்வுசிறப்பு. "அன்பிலன்" (அசுஉ) முதலாகத் தனித்தனியே கூறியதனால், சிறப்புவகையாயிற்று. மாணாத - பெயர். (எ)

௮௬௮. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து.

(இ - ள்.) குணன் இலன் ஆய் - (ஒருவன்) குணனொன்றும் இலனாய், குற்றம் - (உடைய) குற்றம், பல ஆயின் - பலவாயவழி, இனன் இலன் ஆம்-(அவன்) துணையிலனாம்; (அவ்விலனாதல்தானே), மாற்றார்க்கு - (அவன்) பகைவர்க்கு, ஏமாப்பு உடைத்து - துணையாதலையுடைத்து; (எ - று.)

குணம் - இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம் - இவ்வதிகாரத்துச் சொல்லியனவும், மற்றும் அத்தன்மையனவும். துணை - சுற்றம், நட்பு, பொருள், படை முதலாயின. பகைவர்க்கு இவற்றான் உளதாம் பயன் தானே உளதா மாகலின், 'ஏமாப்புடைத்து' என்றார். 'இலனாய்' என்னுஞ் செய்தெனெச்சம், 'உடைய' என வந்த பெயரெச்சக்குறிப்புக் கொண்டது.

(கு - ரை.) இலன் - இல்லாதவன். உடைத்து - உடையது. இறைமாட்சி - முப்பத்தொன்பதாம்அதிகாரம்; அதிற்சொல்லிய குணங்கள் - அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, மானமுடைமைமுதலாயின. இவ்வதிகாரத்துச் சொல்லியன - அன்பின்மை முதலியன. மற்றும் அத்தன்மையன - வேறும் அவைபோன்றவை. அவை - பிறர்மனைவௌவல் பிறர்பொருள்கவ்வல் துணையாகாரைத்துணையாக்கொள்ளுதல் முதலியன. பகைவர்க்கு இவற்றானுளதாம்பயன் தானே உளதாம் - குணம் குற்றமின்மை துணை இவை இல்லாதிருந்தும், இருந்தால் உண்டாகும் பயனாகிய வெற்றி இத்தன்மையானோடு பகைமைகொண்ட மாத்திரத்தால் தானே உண்டாகு மென்பதாம். செய்தெனெச்சம் - இறந்தகாலவினையெச்சம். குணன், இனன் - மகரனகரம்மாறி வருஞ்சொல். மாற்றார் - எதிராய் நிற்பவர். சோகாப்பர், அல்லாப்பர், செம்மாப்பர் என்பனபோல 'ஏமாப்பு' என்பது - ஒருசொல்; இனி, ஏமம்யாப்பென்பதன் மரூஉவாகவுங் கொள்ளலாம். (அ)

௮௬௯. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(இ - ள்.) அறிவு இலா - (நீதியை) அறிதல் இல்லாத, அஞ்சும்—, பகைவர் - பகைவரை, பெறின் - பெற்றால்,—செறுவார்க்கு - (அவரைச்) செறுவார்க்கு, சேண் இன்பம் - உயர்ந்த இன்பங்கள், இகவா - நீங்கா; (எ - று.)

உபாயமறிதலும் அறிந்தாற் செய்துமுடிக்குந் திண்மையும் இல்லாதாரே பகைவராதல் கூடாமையின் 'பெறின்' என்றும், அவரை அறிந்து மேற் சென்றபொழுதே பகையின்மையுஞ் செல்வமும் ஒருங்கே எய்தலின் 'சேணுடையின்பங்கள் இகவா' என்றும் கூறினர்.

(கு - ரை.) செறுவார் - பகைவர். அஞ்சுவதற்கு அஞ்சல் அறிவார்தொழிலாதலால், அஞ்சும் என்பது - அஞ்சவேண்டாததற்கு அஞ்சுகின்ற என்ற பொருளது. உபாயம் - சாம பேத தான தண்டங்கள். திண்மை - வலிமை. கூடாமையின் - கிடைத்தலருமையால். ஒருங்கே - ஒருசேர. சேணுடை - உயர்வுடைய. சேணின்பம் - இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகை. இகவா - அஃறிணைப்பன்மை எதிர்மறைமுற்று. பகைவர்ப்பெறின் - ஐயுருபு, உயர்திணையிடத்தே தொக்கது; வல்லொற்று மிக்கது, இயல்பின் விகாரம். நீதிநூலோதிய நால்வகையுபாயங்களை யறிதலும், அறிந்துமேற் கொண்டசெயலை முடிக்கும் மனவுறுதியும் இல்லாதபகைவருடன் போர்புரியச்சென்றபோதே அப்பகையழிதலும் செல்வமும் ஒருங்கேகிடைக்கச் சேணின்பமடையலா மென்றவாறு. (கூ)

அஎ0. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லாதே யொல்லா தொளி.

(இ - ள்.) கல்லான் - (நீதிநூலைக்) கல்லாதானெடு, வெகுளும்-பகைத்தலான்வரும், சிறு பொருள் - எளிய பொருளை, ஒல்லானே - வேவாதானை, எஞ்ஞான்றும்—, ஒளி - புகழ், ஒல்லாது - மேவாது; (எ - று.)

சிறுபொருள் - முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் அதுமாட்டாதானை வெற்றியான்வரும்புகழ் கூடா தென்பதாம்; ஆகவே, இச்சிறியமுயற்சியாற் பெரியபயனெய்துக வென்றவாறாயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஒருபொருட்டொடர்புபடாமல் உரைத்தார்.

இவை மூன்றுபாட்டானும், அதனினைய பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) 'நீதிநூலை' என்பது இசையெச்சம். எளியபொருள் - சிரமப்படாமற் சுலபமாகக்கிடைக்கும்பொருள். மேவாதான் - விரும்பி அடையாதவன். வேறல் - வெல்லுதல். முயற்சி சிறிதாயபொருள் - பொருள் அதிகமாயினுஞ் சிறியமுயற்சியால் அடையப்படுவது. அதுமாட்டாதான் - வெல்லமாட்டாதவன். பிறர் - மற்றை உரையாசிரியர்கள். ஒருபொருட்டொடர்புபடாமல் - அர்த்தசம்பந்தமொன்றுமில்லாமல். அதனின் - பகைமாட்சியால். கல்லான்வெகுளும் - மூன்றும்வேற்றுமைத்தொகை. வெகுளும் பொருள் - பெயரெச்சம், காரணப்பொருளது. புகழ் அதுபெற்றவனை உலகமுழுவதும் எக்காலத்தும் விளங்கச்செய்தலால், ஒளி யெனப்பட்டது. (கஉ)

அஅ - ஆம் அதிகாரம்.—பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது - மாணாத பகையை ஆக்குதற்குற்றமும், முன் ஆகின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வதும், ஏனைக் களைதற்பாலதன்கட் செய்வனவும், களையும்பருவமும், களையாக்காற்படும் இழுக்கும் என்று இத்திறங்களே ஆராய்தல். 'இரட்டுற மொழிதல்' என்பதனால், பகையது திறமும், பகையிடத்து ஆக்குந் திறமும் என விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணாப்பகையவாகலின், இது பகை மாட்சியின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மாணாத - மாட்சிமைப்படாத; தனக்கு நன்மையைத் தராத. மாணாதபகையை ஆக்குதற்குற்றம் - அறிவின்மைமுதலிய குற்றங்களில்லாதாரோடு பகைகொள்ளுதலால் வருங் குற்றம். நொதுமலாக்கற்பாலது - நட்பும் பகையும் ஆகாமல் அயலாக விட்டுவைக்குந் தன்மையது. அவற்றின்கண்-நட்பாக்கற் பாலதனிடத்தும், நொதுமலாக்கற் பாலதனிடத்தும். ஏனை - மற்றை. களைதற்பாலது - அடியோடு அழித்தற்குரியது. களையாக்காற்படும்இழுக்கு-அழிக்காவிடின் உளதாகுங் குற்றம். இரட்டுறமொழிதல் - ஒருவாக்கியத்தை இரண்டுபொருள்படச் சொல்லுதல். பகைத்திறமென்பதனை - முறையே பகையதுதிறமென ஆறும்வேற்றுமைத் தொகையாகவும், பகையிடத் தாக்குந்திறம் என ஏழாம்வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவுங் கொள்க. மாணாப்பகைய - மாட்சிமையில்லாத பகையினிடத்தன.

அஅக. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

(இ - ள்.) பகை என்னும் - பகையென்று சொல்லப்படும், பண்பு இலதனை - நீமைபயப்பதனை, ஒருவன்—, நகை ஏ உம் - விளையாட்டின்கண்ணேயாயினும், வேண்டல் பாற்று அன்று - விரும்புதலியற்கைத்தன்று, (நீதிநூல்); (ஏ - று.)

மாணாத பகையை ஆக்கிக்கோடல் எவ்வாற்றானுங் நீமையே பயத்தலின் 'பண்பிலது' என்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ் செற்றமே விளைத்து மெய்யா மாகலின் 'நகையேயும்' என்றும், வேண்டாமை தொல்லையோரது துணிவென்பார் நீதிநூல்மேல்வைத்துங் கூறினர். அப்பெயர், அவாய்நிலையான் வந்தது.

(கு - ரை.) விரும்புதலியற்கைத்து - விரும்புந் தன்மையை யுடையது. செற்றம் - கோபம். தொல்லையோர் - முன்னோர், பெரியோர். அப்பெயர்-நீதிநூலென்னும் பெயர். நகையேயும், ஏகாரமும் உம்மையும் - இழிவு சிறப்பு. (க)

அஅஉ. வில்லை குழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லை குழவர் பகை.

(இ - ள்.) (ஒருவன்), வில் ஏர் உழவர் - வில்லே ஏராகவுடைய உழவ ரொடு, பகை கொளின்உம் - பகைகொண்டானுயினும், சொல் ஏர் உழவர் - சொல்லே ஏராகவுடைய உழவரொடு, பகை கொள்ளற்க - பகை கொள்ளா தொழிக; (எ - று.)

சொல் - ஆகுபெயராய், நீதிநூன்மேல் நின்றது. வீரம் சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமே உடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலை யன்று; வந்ததாயினுந் தனக்கே ஆம்: ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயின் தன்வழியினுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அதுகொள்ளினும் இது கொள் ளற்க வென்றார். உம்மையான், அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொள்ளலாகாமை சொல்லவேண்டாதாயிற்று. உருவக விசேடம்.

(கு - ரை.) வில் - வாள் வேல் முதலிய ஆயுதங்களுக்கும் உபலக்ஷணம். ஏர்-உழுபடை, கலப்பை. வில்லே ஏராகவுடைய உழவர் - வீரரென்றபடி. சொல்லே ஏராகவுடைய உழவர்-ஆலோசனை புடையோர்: மந்திரிமாரென்ன லாம். சொல்-நீதிநூலுக்குக் கருவியாகுபெயர். சூழ்ச்சி-ஆலோசனை. ஆற்றல்-வலிமை. தனக்கே-தானொருவனுக்கு மாத்திரமே. தன்வழியி னுள்ளார்-தன் வம்சத்தவர். உம்மையான்-'கொளினும்' என்ற இடத்து உள்ள உயர்வு சிறப் புப்பொருளோடு எதிர்மறைப்பொருளதாகிய உம்மையால். அதுவும் - வீரர் பகைமையும். பெறுதும்-பெறுவோம். இரண்டும்-வீரமும், சூழ்ச்சியும். கொள்ள லாகாமை-பகைகொள்ளலாகாமை. சொல்லவேண்டாதாயிற்று-அருத்தாபத்தி யால் தானே பெறப்பட்டது. வில்லேருழவர்-பகைவராகிய விளைநிலத்தே வில் லாகிய ஏரைக்கொண்டு உழுது அம்புகளாகிய விதைகளை விதைத்து வெற்றி யாகிய பயனைக் கொள்பவர். உருவகவிசேடம் - ஒருவகைரூபகாலங்காரம்; (இதனைச் சிறப்புருவக மென்பாருமுளர்.) உருவகவணியாவது - உபமானப் பொருளையும் உபமேயப்பொருளையும் வேறுபாடுஒழிவித்து ஒன்றென்பதோர் உணர்வு தோன்ற ஒற்றுமைகொளுத்தி வைப்பது. இத்திருக்குறள், தண்டி யாசிரியர் மதத்தின்படி ஏதுவுருவகத்தின்பாற் படும்; [ஏதுவுருவகமாவது - காரணத்தைக்காட்டி உருவகப்படுத்துவது.] இது, வில்லினை ஏராக வுடைய உழவ ரென்றுஞ் சொல்லினை ஏராகவுடைய உழவ ரென்றும் உருவக மாக்கி இருவரையும் பொருட்டெளிவால் உவமித்ததனால், உருவகவுவமை யென்பர் வீரசோழிய நூலுடையார்: [உருவக வுவமை யாவது - உருவகஞ் செய்த பொருளைத்திரும்பவும் ஓர்விசேடத்தினால் ஒன்றோடு ஒப்புமைப்படுத்து வது.] கொள்ளற்க - எதிர்மறைவியங்கோள். (உ)

அஎஊ. ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(இ - ள்.) தமியன் ஆய் - (தான்) தனியனுய்வைத்து, பல்லார் பகை கொள்பவன் - பலரோடு பகை கொள்வான், ஏமுற்றவரின்உம் - பித்து உற் றாரினும், ஏழை - அறிவிலன்; (எ - று.)

தனிமை - சுற்றம் நட்பு படை முதலிய இன்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனால் தீங்குஎய்தாமையின், தீங்குஎய்துதலும் உடைய இவனே 'அவரினும் ஏழை' என்றார். தீங்காவது - துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க, அஃது இன்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருங்குபொருதற்கண்ணும் அழிந்தே விடுதல்.

இவைமூன்றுபாட்டானும், பகைகோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது.

(கு - ரை.) தனியனுய்வைத்து - தனியனுயிருத்துகொண்டு. முதலிய என்றதனால், தக்கஅரண் தக்கஅமைச்சர்சூழ்ச்சி முதலியன கொள்க. மயக்கத்தால் ஒப்பாராயினும் - புத்திமயங்குதலென்ற செயலிற் பல்லார் பகைகொள்பவரும் பித்துக்கொண்டாரும் ஒப்பாராயினும். பித்துற்றார் - பைத்தியம்பிடித்தவர். தீங்கு - இன்கு, அபஜயம். இவனே - தமியனுய்ப் பல்லார்பகைகொள்பவனே. ஐயம்-சந்தேகம். அஃது இன்றியும் - அத்துணையில்லாமலும். பொதுவிற்கூறப்பட்டது, முதற்பாட்டில். சிறப்பிற்கூறப்பட்டது, இரண்டு மூன்றும் பாடல்களில். ஏமுறு - ஏமமுறு என் பதன் விகாரம்: காமுறு, ஐயுறு என்பனபோல. உற்றவரின்-ஐந்தாம் வேற்றுமை, உழற்பொருவு. ஏழைமை-அறிவின்மை; ஏழை-பண்பாகுபெயர். (கூ)

அளஅ. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு.

(இ - ள்.) பகை நட்பு ஆ கொண்டு-(வேண்டியவழிப்) பகையை (வேறுபடுத்துத் தனக்கு) நட்பாகச் செய்துகொண்டு, ஒழுகும்—, பண்பு - இயல்பினை, உடையாளன் - உடைய அரசனது, தகைமைக்கண் - பெருமையுள்ளே, தங்கிற்று - அடங்கிற்று, உலகு - இவ்வுலகு; (எ - று.)

வேண்டியவழி யென்பது, ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் - பகைநிலைமையின் நீக்குதல். ஒழுகல் - நீதிவழி யொழுகல். பெருமை-பொருள், படை என இருவகைத்தாய ஆற்றல். அதன்வழித்தாதற்கு எஞ்ஞான்றுந் திரிபின்மையின், அத்துணிவுபற்றி, 'தங்கிற்று' என்றார்.

(கு-ரை.) வேறுபடுத்து-மாற்றி. அடங்கிற்று-சுவாதீனப்பட்டது. ஆக்கத்தான் வருவிப்பதனை வடநூலார் ஆகாங்க்ஷையென்பர். அதன்வழித்து - பெருமையின் வழியது. திரிபு - மாறுபாடு. தங்கிற்று - துணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. துணிவு-தெளிவு.

அளரு. தன்றுணை யின்றுற் பகையிரண்டாற் றுணைருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.

(இ - ள்.) தன் துணை இன்று - தனக்கு உதவுந் துணையோ வெனின் இல்லை; பகை இரண்டு - (நலிவுசெய்யும்) பகையோ வெனின் இரண்டு; (அங்ஙனமாய்ந்தவழி), ஒருவன் தான் : ஒருவனுயிய தான், அவற்றின் -

அப்பகையிரண்டனுள், ஒன்று - பொருந்தியதொன்றை, இன் துணை ஆ - (அப்பொழுதைக்கு) இனிய துணையாக, கொள்க - செய்துகொள்க; (எ - று.)

பொருந்தியது - ஏனையதனை வேறற்குஏற்றது. அப்பொழுது - அவ்வெல்லும்பொழுது. திரிபின்றாகச்செய்துகொள்க வென்பார். 'இன் துணையா' என்றார். ஆல்கள் - அசை.

இவை இரண்டுபாட்டானும், நட்பாக்கற்பாலது கூறப்பட்டது.

(கு - ரை.) நலிவு - வருத்தம். ஏனையதனை - பகையிரண்டனுள் மற்றொன்றை. திரிபு இன்றாக - மறுபடியும் வேறுபடாமல், தன்னைவிட்டு நீங்காமல். ஆல்கள் - இன்றால், இரண்டால் என்பவற்றில் உள்ளன. கொள்கவற்றின் - வியங்கோள், உயிர்முதன்மொழிமுன் அகரந்தொக்கு நின்றது: இது, செய்யுள்விகாரம். (௫)

௮௭௬. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்.

(இ - ள்.) தேறின்உம் - (பகைவனை முன்) தெளிந்தானாயினும், தேறாவிடின்உம் - தெளிந்திலனாயினும், அழிவின்கண் - (தனக்குப் புறத்து ஒரு வினையால்) தாழ்வு வந்துழி, தேறான் பகாஅன் விடல் - கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க; (எ - று.)

முன்தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிக வென்றது - உள்ளாய்நின்று கெடுத்தல் நோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்காதொழிக வென்றது - அவ்வழிவிற்குத் துணையாதல் நோக்கி.

இதனான், நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது.

(கு - ரை.) தெளிதல் - பகைவனன்றெனத் தேர்தல். தாழ்வு - தோல்வி. கூடாது நீக்காது - கூடானாகியும் நீக்கானாகியும். இடையே விட்டு வைத்தல் - நொதுமலாக்குதல். உள்ளாய் - உட்பகையாய். அவ்வழிவிற்குத் துணையாதல் - தனக்கு வேறொருதொழிலாலுண்டாகுந் தாழ்வுக்குத் துணையாய்த் தன்னை நன்றாய் அழித்தல். தேறினுந் தேறான், தேறாவிடினும் பகாஅன் என இயைந்து நிற்றலால், முறைநிரனிறைப்பொருள்கோள். விடல் - விதித்தற்பொருளில்வந்த அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். அரசன் தனக்கு ஒருதாழ்வுநேர்ந்தபோது உட்பகையென்று கருதப்பட்டவருடன் கூடாமலும் மாறுபட்டு நீங்காமலும் அவரை நடுவானநிலையில் வைக்கக்கடவனென்பது, இதன் கருத்து. (௬)

௮௭௭. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

(இ - ள்.) நொந்தது அறியார்க்கு - (நொந்ததனைத் தாமாக) அறியாத நட்டார்க்கு, நோவற்க - (தன்) நோவு சொல்லற்க; பகைவர் அகத்து - (வலியின்மைபார்த்திருக்கும்) பகைவர்மாட்டு, மென்மை - அவ்வலியின்மையை, மேவற்க - மேலிட்டுக்கொள்ளற்க; (எ - று.)

நோ என்னும் மூதனிலைத்தொழிற்பெயர், ஈண்டு அதுசொல்லுதற்கண் ஆயிற்று. பகைவர்கண் தவிர்வது கூறுவார், நட்டார்கண் தவிர்வதும் உடன் கூறினர்.

இதனுன், அவ்விருபகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது.

(கு - ரை.) தாமாக - தொந்தவன் சொல்லாமல். "தோழனேடும் ஏழை மைபேசேல்" என்றார் ஔவையாரும். இங்குக் கூறிய நட்டாரும் பகைவரும்- முன் ஆகிநின்ற பகையுள் நட்பாக்கப்பட்டவரும், நொதுமலாக்கப்பட்டவ ரும் என்பர் ஒருசாரார். மேலிட்டுக்கொள்ளுதல் - தன்னிடத்து இருப்பதா கக் காட்டுதல். மூதனிலைத்தொழிற்பெயராவது-தொழிற்பெயர் விகுதி புணர் ந்து கெட்டுப் பகுதிமாத்திரையாய் நின்றாலும் விகுதியோடு நின்றற்போல வே தொழிற்பெயர்ப்பொருளே உணர்த்துவது; அது - நோவு. தவிர்வது - விலக்கத்தக்கது. இருபகுதி - நண்பரும்பகைவரும்: இனி, உட்பகைவராயிரு ந்து நட்பாக்கப்பட்டாரும் நொதுமலாக்கப்பட்டாருமென்பாருமுளர். (எ)

அஎஅ. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(இ - ள்.) வகை அறிந்து - (தான் வினைசெய்யும்) வகையை அறிந்து, தன் செய்து - (அதுமுடித்தற்கு ஏற்பத்) தன்னைப் பெருக்கி, தன் காப்ப - (மறவிபுகாமல்) தன்னைக் காக்கவே, பகைவர்கண் - (தன்)பகைவர்மாட்டு, பட்ட - உளதாய, செருக்கு - களிப்பு, மாயும் - கெடும்; (எ - று.)

வகை - வலியனுய்த் தான் எதிரேபொருமாறும், மெலியனுய அளவிற் போர்விலக்குமாறும் முதலாயின. பெருக்கல் - பொருள்படைகளாற் பெரு கசெய்தல். களிப்பு - இவற்றான் வேறு மென்று எண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுதலறிந்து தாமே அடங்குவ ரென்பதாம்.

இதனுன், களைதற்பாலதன்கண் செய்வன கூறப்பட்டன.

(கு - ரை.) அதுமுடித்தற்குஏற்ப - அத்தொழிலே முடிக்குமாறு. மறவி புகாமல் - மறதி [சோர்வு] அடையாமல். பொரும் ஆறு - போர்செய்யும் விதம். போர்விலக்கும் ஆறு - போரை ஒழியும் விதம். முதலாயின என்ற தனுல், இருபகைவரில் ஒருபகைவரைத் தனக்குத்துணையாகக்கொள்ளுதலும், பகைவரிடத்துத் தனதுவலியின்மைகாட்டாமை முதலியனவும். இவற்றான்- தம்மிடத்து உள்ள பொருள்படைகளால். வேறும் - வெல்வோம். இவ்விறுகு தல் - இந்த [வகையறிந்து தற்செய்து தற்காக்குங்] கட்டுப்பாடு: அழுத்தம். 'காப்ப' என்னுஞ் செயவெனெச்சம், காரணப்பொருளதாய் இறந்தகாலத்தில் வந்தது. (அ)

அஎக. இலைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(இ - ள்.) முள் மரம் - (களையவேண்டுவதாய) முண்மரத்தை, இலைது ஆக - இலைதாய நிலைமைக்கண், கொல்க - களைக; (அன்றியே), காழ்த்த

இடத்து - முதிர்ந்த நிலைமைக்கண் (களையலுறின்), களையுநர் கை - களைவார் கையினை, கொல்லும் - (அது தான்) களையும்; (எ - று.)

'களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாயகாலத்தே களைக; அன்றியே, வலிதாயகாலத்துக் களையலுறின் தம்மை அதுதான் களையும்' என்பது தோன்ற நின்றமையின், இது, பிறிதுமொழிதல்.

இதனான், களையும் பருவங் கூறப்பட்டது.

(கு - ரை.) முதிர்தல் - வைரம்பற்றுதல். களையலுறின் - அழிக்கத் தொடங்கினால். களையும்-போக்கும். இது - இத்திருக்குறள். இளைது-இளமையென்னும் பண்படியாப் பிறந்த குறிப்புமுற்று. முண்மரம் - முட்களையுடைய மரம். களையுநர், உகரம் - சாரியை; நகரஒற்று - பெயரிடைநிலை. (௯)

௮௮௦. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

(இ - ள்.) செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - (தம்மொடு) பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க (இகழ்ச்சியான்) அதுசெய்யாத அரசர்,—உயிர்ப்ப உளர் அல்லர் மன்ற - (பின்) உயிர்க்கும் மாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக; (எ - று.)

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவரென்பதாம். அவர் உயிர்த்த துணையானே தாம் இறப்ப ரெனினும் அமையும்.

இதனான், களையாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

(கு - ரை.) தருக்கு - களிப்பு. இகழ்ச்சி - அலட்சியமாக நினைத்தல். அது செய்யாத - கெடுக்காத. மூச்சுவிடும் காலவளவிற்கும் இருக்கின்றவரல்லர்; இறப்ப ரென்றபடி. அவர்-பகைவர். உயிர்த்ததுணையானே - மூச்சுவிட்டமாத்திரத்தாலே: உயிர்த்தலென்றதனால், பாம்பின்தன்மைபெறப்படுமென்ப. தாம் - முன்சிதைக்காதவர். முதலுரைக்குக்கருத்து - பகைவர் வலியரானபின்பு தம்மையழித்தல் நிச்சயமாதலால் மெலிதாயபோதுபகையைக் களையாதவர் இறந்தவரேயாவரென்பது. இரண்டாவது உரைக்குக் கருத்து-வலிமையடைந்தபகைவர் மூச்சுவிட்டமாத்திரத்து அவரால் [மிகஎளிதில்] அழிக்கப்படுவ ரென்பதாம். முதற்பொருளில் 'உயிர்ப்பவும்' என்னும் இழிவு சிறப்பு உம்மை, விகாரத்தால் தொக்கது. 'உயிர்ப்ப' என்னுஞ் செயவெனெச்சம் - இருவகைப்பொருள்களிலும் முறையே காரியப்பொருளதாய் எதிர்காலத்திலும், காரணப்பொருளதாய் இறந்தகாலத்திலும் வந்தது. சிதைக்கலாதார் - சிதையென்னுந் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலை, இங்குப் பிறவினைப்பொருளைத்தந்ததனால் வல்லெழுத்து மிக்குவந்தது; தன்வினையிற் சிதைகலாதாரென்று வரும். (௧௦)

௮௯ - ஆம் அதிகாரம்.—உட்பகை.

அஃதாவது - புறப்பகைக்கு இடனாக்கிக்கொடுத்து அதுவெல்லுந்துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதுவுங் களையப்படுவதன்பாலதாகலின், பகைத்திறந்தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) புறப்பகை - வெளிப்பகை. இடனுக்கிக்கொடுத்து - இடங் கொடுத்து. அது - புறப்பகை. வெல்லுந்துணையும் - சயிக்குமளவும். உள் ளாய் நிற்கும் - நண்பாயிருக்கும். கலையப்படுவதன்பாலது - நீக்கத்தக்கதிற் சேர்ந்தது. உட்பகையை வடநூலார் அந்தசசித்ர மென்பர்.

அஅக. நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(இ - ள்.) நிழல் நீர்உம் - (ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவனவாய) நிழலும் நீரும், இன்னுத - (முன் இனியவேனும் பின்)நோய்செய்வன, இன்னு - இன்னுவாம்; (அதுபோல), தமர் நீர்உம்-(தழுவவேண்டுவனவாய) தமரியல்புகளும், இன்னு செயின் - (முன் இனியவேனும் பின்) இன்னுசெய் வன, இன்னு ஆம்—; (எ - று.)

நோய் - பெருங்கால் பெருவயிறு முதலாயின. 'தமர்' என்றதனால், உட் பகையாதற்கு உரியராய ஞாதிய ரென்பது அறிக. இன்னுசெயல் - முன் வெளிப்படாமை நின்று தீமைபெற்றவழிக் கெடுத்தல்.

(கு - ரை.) தமர் - தம்மவர்; தாம் - பகுதி. பெருங்கால் - யானைக்கால் எனப்படும். பெருவயிறு - மஹோதரம். ஞாதியர் - தாயத்தார். நிழல்நீர்- உம்மைத்தொகை. உம்மை - உயர்வுசிறப்பு. இன்னுத - பெயர். இன்னு என்னுஞ்சொல் மூன்றனுள், முன்னைய இரண்டும் - முற்று; பின்னது - பெயர். இன்னு என முன்னர்வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிட த்து ஒருங்கு வந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணி: இதனை வட நூலார் உபயாவருத்திதீபக மென்பர். (க)

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(இ - ள்.) வாள் போல் பகைவரை-வாள்போல(எறிதும் என்று வெளிப் பட்டு நிற்கும்) பகைவரை, அஞ்சற்க - அஞ்சாதொழிக; கேள் போல் பகை வர் தொடர்பு - (அங்ஙனம் நில்லாது) கேள்போல (மறைத்துநிற்கும்) பகை வர் நட்பினை, அஞ்சுக—; (எ - று.)

முன்னே அறிந்து காக்கப்படுதலான் 'அஞ்சற்க' என்றும், அங்ஙனம் அறியவுங் காக்கவும் படாமையின் கெடுதல் ஒருதலையென்பதுபற்றி 'அஞ்சுக' என்றுங் கூறினர். பின்செய்யும் பகையினுங் கொடிதாகலானும், *காக்குங்கா லம் அதுவாகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர் பாயிற்று.

இவைஇரண்டுபாட்டானும், உட்பகைஆகாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) எறிதும் - வெட்டுவோம். கேள் - உறவினர்; கூடமசமாசா ரங்களைக் கேட்பவர். அவர் - உட்பகைவர். தொடர்பு - நட்பு. உட்பகை வர் வெளிப்பட்டபகைவர்போன்று முன்அறியப்பட்டுக் காக்கப் படாமையால் அப்படிப்பட்ட உட்பகைவரோடு பின்புநேரும் பகையைக் காட்டிலும் நண்பு

* பி - மீ: காக்கலாகாததாகலானும்.

கொடிது ஆகையாலும், அவரால் நீங்குதேரோது காக்கவேண்டிய காலம் அவரோடு கினேகமாயிருக்கும்பொழுதே யாதலாலும் அஞ்சுதற்குரியது உட்பகைவரின் நட்பேயா மென்க. (உ)

அஅஙூ. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(இ - ள்.) உள் பகை - உட்பகையாயிஞரை, அஞ்சி—, தன் காக்க - தன்னைக் காத்துக்கொண்டுஒழுகுக; (அங்ஙனம் ஒழுகாதவழி), உலைவு இடத்து - (தனக்கு ஓர்)தளர்ச்சி வந்தவிடத்து, மண் பகையின் - (குயவன்) மட்கலத்தை அறுக்குங் கருவிபோல, மாண தெறும் - (அவர்) தப்பாமற் கெடுப்பர்; (எ - று.)

காத்தல் - அவர் அணையாமலும் அவர்க்கு உடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்குங் கருவி, 'மட்பகை' எனப்பட்டது. பகைமை தோன்றுமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின் கெடுதல் தப்பா தென்பதாம்.

(கு - ரை.) மட்கலம் - மண்பாத்திரம். கருவி - ஆயுதம். அவர் - உட்பகையாளேர். அணையாமல் - தம்மிடத்துச்சேராமல். அவர்க்குஉடம்படாமலும் - அப்பகைவரின்செயல்களுக்கு உட்படாமலும். பரிகரித்தல் - நீக்குதல். மட்பகை - காரணப்பெயர்; இது, ஊகியெனப்படுமென்பர்; ஐ - கருவிப்பொருள் விகுதி: இன் உருபு - உவமப்பொருவு. உள்ளாயிருத்து - நட்பாயிருத்து. கீழறுத்தல் - சூழ்ச்சிசெய்துகெடுத்தல். மாண - கன்றுக. (ஙூ)

அஅசு. மனமாணு உட்பகை தோன்றி னினமாணு
வேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) மனம் மாணு - (புறந் திருந்தியது போன்று) அகந்திருந்தாத, உள் பகை—, தோன்றின் - (அரசனுக்கு) உண்டாவதாயின், (அஃது அவனுக்கு), இனம் மாணு - சுற்றம் வயமாகாமைக்கு ஏதுவாகிய, ஏதம் பலஉம்- சுற்றம் பலவற்றையும், தரும் - கொடுக்கும்; (எ - று.)

அவை - சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்தலும், அதனுல் அவர் வேறுபட்டவழித் தான் தேறுமையும்,பின் அவற்றுன் விளேவனவுமாம்.

(கு - ரை.) புறந்திருந்தியதுபோன்று அகந் திருந்தாத - வெளியில் நட்பானதுபோலிருந்து மனத்தில் நட்பாகாத. உள்ளாய் - நட்புஆய். அதனுல்- வேறுபடுத்தியதனுல். வயமாகாமை - வசப்படாமை. வேறுபடுத்தல் - ஒற்றுமையில்லையாக்குதல். தான் தேறுமை - அரசன் தெளியாமை. அவற்றுன் விளேவன - வேறுபடுத்தலாலும், தேறுமையாலும் உண்டாவன. பலவும், உம்மை - முற்று. (சு)

அஅஞ. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) உறல் முறையான் - (புறத்தில்) உறவுமுறைத்தன்மையோடு (கூடிய), உள் பகை—, தோன்றின்-(அரசனுக்கு) உண்டாவதாயின், (அஃது

அவனுக்கு), இறல் முறையான் - இறத்தல்முறையோடு (கூடிய), ஏதம் பல உம் - குற்றம் பலவற்றையும், தரும் - கொடுக்கும்; (எ - று.)

அவை - புறப்பகைத்துணையாய்நின்றே அது தோன்றாமல் கோறல் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறுப்புக்களைத் தேய்த்தலும் முதலாயின.

(கு - ரை.) உறவுமுறைத்தன்மை - பந்துத்துவம். இறத்தல்முறை - சாகுந்தன்மை. அவை - அக்குற்றங்களாவன. புறப்பகைத்துணையாய் - புறப்பகைக்குத் துணையாய். அது தோன்றாமல் - அப்படி துணையாய் நிற்பது வெளிக்குத்தெரியாமல். கோறல் - கொல்லுதல். அமைச்சர் முதலிய உறுப்புக்கள் - ஆறு அங்கங்களும். தேய்த்தல் - வரவரக் குறையச்செய்தல். (௫)

அஅகூ. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது.

(இ - ள்.) ஒன்றாமை - பகைமை, ஒன்றியார்கண் - (தனக்கு) உள்ளாயினார்மாட்டே, படின் - பிறக்குமாயின், (அரசனுக்கு), பொன்றாமை ஒன்றல் - இறவாமை கூடுதல், எஞ்ஞான்றும் அரிது—; (எ - று.)

பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெரியனாயகாலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார்.

இவைநான்குபாட்டானும், அதனால் தனக்குவருந் தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெருகியிருந்தானாயினும் அரசனுக்கு உட்பகையிருப்பின் அவனுக்கு மரணம்நேர்வது நிச்சயமென்பது, இக்குறளின்கருத்து. பிறக்குமாயின் - உண்டானால். 'முதலிய' என்றதனால், நட்புங்கொள்க. பெரியன் - மிகுந்தவன். அதனால் - உட்பகையால். ஒன்றியார் - சேர்ந்தவர்; இறந்தகால வினையாலணையும் பெயர். (௬)

அஅஎ. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(இ - ள்.) செப்பின் புணர்ச்சி போல் - செப்பினது புணர்ச்சி போல, கூடின்உம் - (புறத்து வேற்றுமைதெரியாமற்) கூடினாராயினும், உள் பகை உற்ற குடி - உட்பகை உண்டாகிய குடியிலுள்ளார், கூடாது - (அகத்துத் தம்முள்) கூடார்; (எ - று.)

செப்பின் புணர்ச்சி - செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையின், புறப்பகைபெற்றுழி வீற்றுவீற்றாவரென்பதாம். குடி கூடாது என்பதனை 'நாடுவந்தது' என்பதுபோலக் கொள்க. உட்பகை தான் உற்ற குடியொடு கூடா தென்றும், உட்பகையுண்டாய குடி அப்பகையொடு கூடா தென்றும் உரைப்பாரு முளர்.

(கு - ரை.) செப்பு - செம்பினாலியன்ற சிமிழ். புணர்ச்சி - சேர்க்கை: வேற்றுமை - வேறுபாடு. மூடி - மேன்மூடி. பெற்றுழி - நேர்ந்தபொழுது. வீற்றுவீற்றாவர் - தனித்தனியாப்பிரிவர். குடி - குடும்பம்; இங்கு, அதிலுள்

ளார்க்கு இடனாகுபெயர்: இது, பொருளால் உயர்திணையாயினுஞ் சொல்லால் அஃறிணையாதலால் அஃறிணைவினைகொண்டு முடிந்தது; ஊரடங்கிற்று, உலகம்புகழ்ந்தது என்பனவுங் காண்க. தான் உற்ற - தானுள்ள. ஏகாரம் - தேற்றம். ஒருகுடியிலிருக்கும் உட்பகையுள்ளார் வெளிப்பார்வைக்கு எவ்வளவு ஒற்றுமையுடையராகத்தோன்றினுலும் மனத்தினுல் தம்மூட்சேரா ரென்பது முதலிற் கூறியபொருள்; இனி, இக்குறட்கு வேறுஇரண்டுபொருள் வருமாறு:—உட்பகையுடையான் தானுள்ளகுடியாரோடு கூடானென்பதும், உட்பகையுண்டாகிய குடியிலுள்ளார் அப்பகையாரோடு கூடாரென்பதுமாம். (எ)

அஅஅ. அரம்பொருத பொன்போலத் தேயு மரம்பொரு
துட்பகை யுற்றகுடி.

(இ - ள்.) (முன் வளர்ந்துவந்ததாயினும்), உள்பகை உற்ற குடி - உட்பகையுண்டாய குடி, அரம் பொருத பொன் போல - அரத்தாற் பொரப்பட்ட இரும்பு போல, பொருது - (அதனுல்) பொரப்பட்டு, உரம் தேயும் - வலி தேயும்; (எ - று.)

'பொருது' என்னுஞ் செயப்பாட்டு வினையெச்சம், 'தேயும்' என்னும் வினை கொண்டது; அஃது, உரத்தின்தொழிலாயினும் குடிமேல் ஏற்றுதலின் வினைமுதல்வினையாயிற்று. காரியஞ்செய்வதுபோன்று பொருத்தி மெல்ல மெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்துவிடு மென்பதாம்.

இவை இரண்டுபாட்டானும், அவன்குடிக்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

(கு - பை.) அரம் - வாள்விசேடம். பொரப்பட்ட - அராவப்பட்ட. அதனுல் - உட்பகையால் பொரப்பட்டு - கீழறுக்கப்பட்டு. தேயும் - குறையும். பொருத எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது; இது, செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை; பொரப்பட்ட. என்பது - அகரச்சாரியையும் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதியுந் தொக்குப் பொருத என நின்ற தென்று கொள்வாரு மூளர்; பொருது என்பதனையும் இவ்வாறே கொள்க. அஃது - தேயுமென்பது. உரமென்பது குடியென்பதன் பயனிலையாகிய தேயு மென்னும் வினையைக் கொண்டு முடிந்தது, வழுவமைதி. பிரிவித்தலான் - வேறுபடுத்தலால். அரமென்பதன் குறிப்பால், பொன் - கரும்பொன். (அ)

அஅக. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(இ - ள்.) உள் பகை - (அரசனது) உட்பகை, (அவன்பெருமையை நோக்க), எள் பகவு அன்ன-எள்ளின்பிளவையொத்த, சிறுமைத்து ஏ ஆயின் உம் - சிறுமை யுடைத்தே யாயினும், கேடு உள்ளது ஆம் - (பெருமையெல்லாம் அழியவருங்) கேடு அதனகத்ததாம்; (எ - று.)

எத்துணையும் பெரிதாய கேடு, தனக்கு எல்லாவருத்துணையும் எத்துணையுஞ்சிறிதாய உட்பகையுள்ளே அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம்.

இதனுன், அது சிறிதென்று இகழப்படா தென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பெருமையெல்லாம் - அரசன்பெருமையெல்லாம். அதனகத்தது - அத்தச்சிறிய உட்பகையினிடத்தது. எத்துணையும் - மிகவும். எல்லை - வெளிப்படுங்காலம். அது - உட்பகை. ஆயினும், உம்மை - இழிவுசிறப்பு. பகவு - பிளவுபடுண்டத்துக்குத் தொழிலாகுபெயர்; பகு - பகுதி. தனக்குக் காலம்வருமளவும் மிகவுஞ்சிறிதாகத்தோன்றுகின்ற உட்பகையினிடத்து மிகவும்பெரிதாகிய கேடு அடங்கியிருந்து காலம்வந்தால் வெளிப்பட்டிடுமென்பதாம். (கூ)

அகூ0. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

(இ - ள்.) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தமில்லாதாரோடு (கூட ஒருவன்) வாழும் வாழ்க்கை, குடங்கருள் - ஒருகுடிலுள்ளே, பாம்போடு—,உடன் உறைந்து அற்று - கூடஉறைந்தாற் போலும்; (எ-று.)

'குடங்கம்' என்னும் வடசொல், திரிந்துநின்றது. இடச்சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால், அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலை யென்பது பெற்றும்.

இதனுன், கண்ணேடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) குடில் - குடிசை. உறைதல் - வசித்தல். குடங்கம் - குடங்கர்; காமம் - காமர் என்றுற்போல. பயிற்சி - பழக்கம். கோட்படல் - கடிக்கப்படுதல். இறுதி - முடிவு. கண்ணேடாதவர் - இங்கு மனப்பொருத்தமில்லாதவர். கடிக - விலக்குக. உடம்பாடெனினும், உடன்பாடெனினும் ஒக்கும். உடனுறைதல் - பயின்றுவாழ்தல். அற்று - அன் என்னும் உவமவுருபிடைச்சொல்லடியாப் பிறந்த குறிப்புமுற்று. உவமானமும் உவமேயமும் உவமையுருபும் விரிந்துநிற்க, உயிர்க்குஇறுதிவருதலாகிய பொதுத்தன்மையொன்றுந தொக்குவந்ததனுல், பொதுத்தன்மைத்தோகையுவமையணி: இதனை வடநூலார் லுப்தோபமாலங்கார மென்பர். (கo)

கூ0 - ஆம் அதிகாரம்.—பெரியாரைப் பிழையாமை.

அஃதாவது - பெரியராயினுரை அவமதித்து ஒழுகாமை. 'இரட்டுற மொழிதல்' என்பதனுல், பெரியாரென்பது - ஆற்றலாற்பெரியாராய வேந்தர்மேலும், தவத்தாற்பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேல் சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது, வெகுளியான்வருனவற்றது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பெரியார்என்பது - ஆற்றலாற்பெரியராகிய அரசரையும் தவத்தாற்பெரியராகிய இருடியரையுங் காட்டும். இங்ஙன்இரண்டுபொருள்

ஒருங்குகொள்ள உரைப்பது - இரட்டுறமொழித லெனப்படும். மேற்சொல்லாது எஞ்சின்றது - முன்சொல்லாமல் மிகுத்தது.

அகூக. ஆற்றுவா ராற்ற விகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(இ - ள்.) ஆற்றுவார் - (எடுத்துக்கொண்டனையாவும்) முடிக்கவல்லாருடைய, ஆற்றல் - ஆற்றல்களை, இகழாமை - அவமதியாமை, போற்றுவார் போற்றலுள் எல்லாம் - (தங்கண் தீங்குவராமல் காப்பார்) செய்யுங் காவல்கள் எல்லாவற்றினும், தலை - மிக்கது; (எ - று.)

ஆற்றலென்பது - பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலின், சாதியொருமை. இகழ்ந்தவழிக் கலையவல்லா ரென்பது தோன்ற 'ஆற்றுவார்' என்றும், அரண் படை பொருள் நட்பு முதலிய பிறகாவல்கள் அவரான் அழியு மாகலின் அவ்விகழாமையைத் *தலையாயகாவ லென்றுங் கூறினர்.

பொதுவகையால், அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனுள் கூறப்பட்டது.

(கு - ரை.) எடுத்துக்கொண்டனை - தொடங்கின காரியங்கள். பெருமை அறிவு முயற்சி என்னும் மூவகை ஆற்றல்களை, முறையே வடநூலார் ப்ரபுஶக்தி மந்த்ரஶக்தி உத்ஸாஹஶக்தி என்பர். சாதிஒருமை - சாதிபற்றிவந்த ஒருமை. கலையவல்லார்-இகழ்ந்தவர்களை அழிக்கவல்லார். அரண் - காவலாக இருக்கும் மதில் அகழி மலை காடு வெளிநிலம் என்பன. அவரான்-ஆற்றலுடையவரால். இருதிறத்தார் - இருவகைப்பெரியோர்; ஆற்றலாற்பெரியாராய வேந்தரும், தவத்தாற்பெரியாராய முனிவரும். ஆற்றலென்பது பெருமை முதலிய மூன்றைக்காட்டுமென்று வேந்தர்க்கு ஏற்பக்கூறினாராயினும், முனிவர்க்குஏற்பத் தவத்தையும் கொள்ளவேணும். (க)

அகூஉ. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

(இ - ள்.) பெரியாரை - (ஆற்றல்களால்) பெரியராயினோரை, பேணுது ஒழுகின் - (வேந்தர்) நன்குமதியாது [அவமதித்து] ஒழுகுவாராயின், (அவ்வொழுக்கம்), பெரியாரால் - அப்பெரியாரால், பேரா இடும்பை - (அவர்க்கு எஞ்ஞான்றும்) நீங்காத துன்பங்களை, தரும் - கொடுக்கும்; (எ - று.)

அத்துன்பங்களாவன - இருமையினும் இடையறாதுவரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்துகொள்ளுகின்றனரென்பது தோன்ற ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும், பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர்.

பொதுவகையால் அவரைப் பிழைத்தற் குற்றம், இதனுள் கூறப்பட்டது. இனி, சிறப்புவகையாற் கூறுப.

---

* பீ - மீ: தலையென்றும்.

(கு - ரை.) நன்கு மதியாது-கௌரவியாமல். இருமை-இம்மை மறுமை. இடையூறு - ஓயாமல். மூவகைத் துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிறஉயிர்களைப்பற்றி வருவனவும்; தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகைப்படும் பிறவித் துன்பங்கள்; இவற்றை முறையே ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிக மென்பர். வினைமுதல் - எழுவாய். பெரியாரை அவமதித்தொழுகுவார்க்கு இடும்பைவருதற்கு முக்கியகாரணம் அவரைப்பேணுதொழுகியமையேயாதலால், அவ்வொழுக்கத்தைக் கருத்தாவாக்கி, அப்பெரியாரை இடும்பைதருதற்குக் கருவியாக்கினு ரென்க. அவரைப் பிழைத்தற் குற்றம் - அவ்விருவர்க்கும் பிழைசெய்வதனு லுண்டாங் குற்றம். சிறப்புவகையாற் கூறுப - தனித்தனியே சொல்லுவர். (உ)

அகூக. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னுற்று பவர்க ணிழுக்கு.

(இ - ள்.) அடல் வேண்டின் - (வேற்று வேந்தரைக்) கோறல் வேண்டியவழி, ஆற்றுபவர்கண் - (அதனே அப்பொழுதே) செய்யவல்ல வேந்தர் மாட்டு, இழுக்கு - பிழையினை, கெடல் வேண்டின் - (தான்) கெடுதல் வேண்டினுனுயின், கேளாது செய்க-(ஒருவன் நீதிநூலைக்) கடந்து செய்க; (எ - று.)

அப்பெரியாரை "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலினடு தானே விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடுஉம் வெல்போர் வேந்தர்" என்னூர் பிறரும். நீதிநூல் செயலாகாதென்றுகூறலின், 'கேளாது' என்னூர்.

(கு - ரை.) வேற்று வேந்தர் - பகையரசர்கள். நீதிநூலைக் கடந்து-நீதி சாஸ்திரத்திற் சொல்லியபடி நடவாமல். அதனே - அக்கோறலை. "காலனுங்காலம்பார்க்கும்" என்னும் மேற்கோள், புறநானூறு - சக-இல் உள்ளது; இதற்கு - யாவரையுங் கொல்லுகின்ற யமனும் அக்கொலைக்கு ஏற்ப விதித்த காலம் வருந்துணேயும் எதிர்பார்த்து நிற்பன்: அங்ஙனங் காலத்தை எதிர்பாராமல் தமக்கு வேண்டியபொழுதே வேல்முதலிய ஆயுதங்களாற் போர்செய்கின்ற சேனேயையுடைய சிறந்த அரசர்கள் அழியும்படி கொல்லுகின்ற வெல்லும் போரினேயுடைய அரசரென்பது பொருள். செயலாகாது-இத்தன்மையாரிடத்துப் பிழைசெய்யக்கூடாது. (ஊ)

அகூச. கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்
காற்றுதா ரின்னு செயல்.

(இ - ள்.) ஆற்றுவார்க்கு - (மூவகை) ஆற்றலு முடையார்க்கு, ஆற்றுதார் - அவையில்லாதார், இன்னு செயல் - (தாம் முற்பட்டு) இன்னுதவற்றைச் செய்தல்,—கூற்றத்தை - (தானேயும் வரற்பாலனுய) கூற்றுவனே, கையால் விளித்து அற்று-(அதற்குமுன்னே) கைகாட்டி அழைத்தாலொக்கும்.

கையால் விளித்தல் - இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர்முதலிய கோடற்குஉரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையுங் கூறியவாறு.

இவை இரண்டு பாட்டானும், வேந்தரைப்பிழைத்தலின் குற்றங் கூறப் பட்டது.

(கு - ரை.) அவை-அவ்வாற்றல்கள். வரற்பாலன்-வருந்தன்மையன். கூற்றுவன் - யமன். ஒருவனே 'நீ என் மீதுவா: பார்ப்போம்' என்று வலிய அழைப்பது அவனிடத்துள்ள அமைதிப் பற்றிநிகழ்வதாதலால், அத்தன் மையை யமனிடத்துஎற்றி அவனைக்கையால்விளித்தல் அக்கூற்றுவனிடத் துத் தனக்குள்ள இகழ்ச்சிபற்றியதாகு மென்பார், கையால்விளித்தல் 'இகழ்ச் சிக் குறிப்பிற்று' என்றார்: பிறர் வலியறியாமல் அவரை வலியப்போருக்கு அழைத்தல் தீங்குக்கே காரணம்என்க. குறிப்பிற்று - குறிப்பினையுடையது. 'முதலிய' என்பதனால், இடம் பொருள் ஏவல்களுங் கொள்க. இறப்பு - மர ணம். உண்மை - தவறுமை. அண்மை - சமீபித்த தன்மை. ஆல் - அசை. கூற்றத்தை உவமை கூறியதனால், தடுக்கலாகாமை விளங்குகின்றது. (ச)

அகூஉ. யாண்டுச்சென் றியாண்டு மூளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட் டவர்.

(இ - ள்.) வெம் துப்பின் - (பகைவர்க்கு) வெய்தாய வலியினையுடைய, வேந்து - வேந்தனால், செறப்பட்டவர்-செறப்பட்ட அரசர், யாண்டு சென்று (உளர்) - (அவனைத் தப்பி)எங்கேபோய்(உளராவர்?)யாண்டுஉம் உளர் ஆகார்- ஓரிடத்தும் உளராகார்; (எ - று.)

இடைவந்த சொற்கள், அவாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தா கலால், தம்நிலம்விட்டுப் போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை; உளராயின், இவர் இனி ஆகா ரென்பது நோக்கி, அவனைஞடு நட்புக்கோடற்பொருட்டும் தாமே வந்தெய்திய அவருடைமையை வௌவுதற்பொருட்டுக் கொல்வர்; அன்றெனின், உடனே அழிவர் என்பன நோக்கி, 'யாண்டுச்சென் றியாண்டு மூளராகார்' என்றார்.

இதனால், அக்குற்றமுடையார் ''அருமை யுடைய அரண் சேர்ந்தும் உய் யார்'' என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) வெய்தாய - வெம்மை யுடையதாகிய: கொடுமை யுடைய தாகிய. செறப்பட்ட - கோபிக்கப்பட்ட. இடைவந்தசொற்கள்-அவனைத்தப்பி, உளராவர் என்பன. உளராயின் - இடங்கொடுப்பவருண்டானால் அவர். இவர் இனி ஆகாரென்பது நோக்கி - வெந்துப்பின் வேந்தாற் செறப்பட்ட இவர் இனி நன்மைபெறு ரென்பதுகருதி. அவனைஞடு நட்புக்கோடற் பொருட்டு - வெந்துப்பின் வேந்தோடு வலியச் சினைகளுஞ் செப்துகொள்ளுதற் பொருட்டு. எய்திய - அடைந்த. உடைமை - சொத்து. வௌவுதல் - அப கரித்துக் கொள்ளுதல். அக்குற்றம் - பெரியாரைப் பிழைத்தற்குற்றம். அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யார் - அழித்தற்கு அரிய காவலிடத் தைச் சேர்ந்திருந்தாலும் பிழைக்கமாட்டார்; இது, நாலடியார் - பெரியாரைப் பிழையாமை - ச - இல் உள்ளது. சென்றியாண்டும் - குற்றியலிகரம்,

அலகுபெறாது நின்றது உம்மை - முற்று. வேந்து - பண்பாகுபெயர். "வேந்தொடுமாறுகோடல் விளிகுற்றூர் தொழிலதாகும்" என்ற சிந்தாமணி இங்குக் கருதத்தக்கது. (கு)

அகூகூ. எரியாற் சுடப்படினு மூய்வுண்டா மூய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(இ - ள்.) எரியால் சுடப்படின்உம் - (காட்டிடைச் சென்றுவிளைருவன் ஆண்டைத்) தீயாற் சுடப்பட்டானெயினும், உய்வு உண்டாம் - (ஒருவாற்றான்) உயிருய்தல் கூடும்; பெரியார் பிழைத்து ஒழுகுவார் (தவத்தாற்) பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார், உய்யார் - (எவ்வாற்றானும்) உயிருய்யார்; (எ - று.)

தீ முன் உடம்பினைக்கதுவி அதுவழியாக உயிர்மேற்சேறலின் இடையே உய்யவுங் கூடும்; அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தான் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்குங் காத்தலரிதாகலின் அது கூடாதாகலான், அதற்கு ஏதுவாய பிழை செய்யற்க வென்பதாம்.

(கு - ரை.) ஆண்டைத்தீ - அக்காட்டிடத்துள்ள தீ. ஒருவாற்றான்-ஒரு வழியால். உயிருய்தல் - பிழைத்தல். தீ முன் உடம்பினைக்கதுவி-தீயானது முதலிலே உடம்பிற்பற்றி. அதுவழியாக - உடம்பின்வழியே. அருந்தவர் - பிறராற் செய்தற்கு அரிய தவமுடைய முனிவர். அன்னதன்றி - அப்படிப் பட்டதல்லாமல். தான் நிற்பது - தானுள்ள அளவு. கணம்-கூணப்பொழுது. காத்தலரிது - தடுத்தற்கரியது. அஞ்தியாய் வருகின்றவாறு பற்றி ஒரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் 'நிற் பதுகணமாய்' என்றும், நிறைமொழிமாந்தராகலின்'யாவர்க்குங் காத்தலரிது' என்றுங் கூறினர்; "குணமென்னுங்குன்றேறி நின்றூர் வெகுளி, கணமேயுங் காத்தலரிது" என்றூர், நீத்தார்பெருமையில். சுடப்படினும், உம்மை-உயர்வு சிறப்பு. இங்குத் தவத்தாற் பெரியாராகிய உபமேயத்திற்கு எரியாகிய உப மானத்தினும் சிறப்புத்தோன்றக் கூறியது-வேற்றுமையணியின்பாற்படும்.

அகூஎ. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுஞ்
தகைமாண்ட தக்கார் செறின்.

(இ - ள்.) தகை மாண்ட தக்கார் - (சாபஅருள்கட்கு ஏதுவாய) பெரு மை மாட்சிமைப்பட்ட அருந்தவர், செறின் - (அரசனை) வெகுள்வராயின், வகை மாண்ட வாழ்க்கைஉம் - உறுப்பழகுபெற்ற அவனரசாட்சியும், வான் பொருள்உம் - (ஈட்டிவைத்த) பெரும்பொருளும், என் ஆம்-என்பட்டுவிடும்!

உறுப்பு - அமைச்சு நாடு அரண் படை என இவை. 'செறின்' என்பது-அவர் செறுமை தோன்ற நின்றது; இவ்வெச்சத்தான் முன்வருவனவற்றிற் கும் இஃது ஒக்கும். அரசர் தஞ் செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப்பிழை செய்வாராயின், அச்செல்வம் அவர்வெகுளித்தீயான் ஒரு கணத்துள்ளே வெந்துவிடு மென்பதாம்.

(கு - ரை.) சாபம் - சபிப்பு; வெகுண்டு கூறும் மொழி. அருள் - அநுக் ரகம்; அருளிக்கூறும்மொழி. உறுப்பழகுபெற்ற - அங்கங்கள்நன்கமைந்த.

ஈட்டிவைத்த - சம்பாதித்துவைத்த. என்பட்டுவிடும் - எப்படியாய்விடும்; அடியோடு அழிந்துபோய்விடும். இவ்வெச்சம் - செறினென்னும் வினையெச்சம். முன்வருவனவற்றிற்கும் - மேற்குறள்களில் வரும் 'மதிப்பின்', 'சீறின்,' 'செறின்' என்னும் எதிர்கால வினையெச்சங்களுக்கும். இஃது - அவ்வாறுசெய்யாமை தோன்ற நிற்பது. வெகுளித்தீ-கோபாக்கினி. மாண்ட, மாண் - முதனிலை; [இறந்த என்னும் பொருளில், மாள் - முதனிலை.] (எ)

அகூஅ. குன்றன்னர் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னர் மாய்வர் நிலத்து.

(இ - ள்.) குன்று அன்னர் - குன்றத்தை யொக்கும் அருந்தவர், குன்ற மதிப்பின்-கெடநினைப்பாராயின், (அப்பொழுதே), நிலத்து நின்று அன்னர்-இந்நிலத்து நிலைபெற்றுப்போலுஞ் செல்வர், குடியொடு - (தங்) குடியொடும், மாய்வர்—; (எ - று.)

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின், 'குன்றன்னர்' என்றார்; "மல்லன் மலையனைய மாதவர்" என்றார் பிறரும். நிலைபெற்றுப்போறலாவது - இறப்பப்பெரியராகலின், இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லை யென்று கண்டாராற் கருதப்படுதல்.

(கு - ரை.) குன்றம் - மலை. சலியாமை - அசையாமை. உள்ளிட்ட குணங்கள் - அளவுசெய்யப்படாத பெருமையும், பலவகைப்பொருளுடைமையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், எப்பொழுதும் பயன்கொடுக்குந் தன்மையும், அழித்தற்கு அருமையும் முதலியன. "மல்லல்" என்னும் மேற்கோள், சிவகசிந்தாமணி - முத்தியிலம்பகம் ககக - இல் உள்ளது; இதற்கு - அளவுசெய்யப்படாத பலவளக்கலையுடைய மலைபோல யாவராலும் அசைக்கப்படாத மிக்க தவத்தையுடைய முனிவ ரென்பது பொருள். இறப்பப்பெரியர் - (மூவகையாற்றலால்) மிகவும்பெரியவர். இவர்க்கு - இச் செல்வர்க்கு. (அ)

அகூகூ. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ - ள்.) ஏந்திய கொள்கையார் - (காத்தற்கு அருமையான்) உயர்ந்த விரதங்களையுடையார், சீறின் - வெகுள்வராயின், (அவராற்றலான்), வேந்தன்உம் - இந்திரனும், இடை வேந்து முரிந்து - இடையே (தன்) பதம் இழந்து, கெடும்—; (எ - று.)

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்றார் பிறரும். நகுடனென்பான் இந்திரன்பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்புமிகுதியான் அகத்தியன்வெகுள்வதோர் பிழை செய, அதனைச் சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தா னென்பதனை உட்கொண்டு, இவ்வாறு கூறினார்.

இவைநான்கு பாட்டானும், முனிவரைப்பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) விரதங்களாவன -விஜயமாசு தீர்ந்து அந்தக்கரணம் பரிசுத்த மாதற்பொருட்டு இன்ன அறஞ் செய்வேனெனவும், இன்ன பாவஞ் தவிர்வே னெனவுந் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொண்டு துறந்தோராற் காக் கப்படும் அருளுடைமை முதலியன. "வேந்தன்மேய" என்னும் மேற்கோள், தொல்காப்பியம் - பொருளதிகாரம் - அகத்திணையியல், நு - ஆம் சூத்திரத் தில் உள்ளது; இதற்கு-இந்திரன் காதலித்த தன்புனல்காடென்று பொருள்: இம்மேற்கோள், வேந்தனென்னுஞ் சொல் தேவேந்திரனென்னும் பொரு ளில் வருதற்கு எடுத்துக்காட்டப்பட்டது. பதம் - பதவி. வேந்தனும், உம்மை- உயர்வுசிறப்பு. சகுஷனென்னுஞ் சந்திரகுலத்து அரசன், நூறு அசுவ மேதயாகஞ்செய்து இந்திரபதம்பெற்றுச் சிவிகையேறிச் செல்கின்ற காலத்து, இந்திராணிமேல்வைத்த காதல்மிகுதியால், தன்சிவிகைதாங்கிச் செல்கிற எழுமுனிவர்களுள் குறுமுனிவராதலால் மெதுவாய் நடந்த அகத்தி யரைநோக்கி விரைவிற்செல்க வென்பான் 'ஸர்ப்ப ஸர்ப்ப [ஓடு ஓடு]' என்று கூறினனாக, அகத்தியர் வெகுண்டு 'நீ ஸர்ப்பமாகுதி' என்று சபிக்க, அவன் அவ்விந்திரபதமிழந்து உடனே பாம்பாகி நிலத்திற் கிடந்தா னென்பது, வர லாறு. வேந்து-தேவேந்திரபதவி: இச்சொல்லின்பொருளே இவ்வாறுகொள்ள மாட்டாத ஒருசாரார் 'வேந்தனும் வெந்துகெடும்' என்றுபடிப்பர். அது பரி மேலழகர்க்குக் கருத்தன்மை ஊன்றியுணர்வார்க்குப் புலனும். புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சிப்படலத்தில் "துன்னருந்துப்பின்" என்ற பாட லின் உரையில் அதன்உரையாசிரியர் "'ஏந்தியகொள்கையார் சீறினிடை முரிந்து, வேந்தனும்வேந்து கெடும்" என்பதனால், வேந்து - இராச்சியமென் றுமாம்' என்று எழுதியிருப்பதும் இங்குக் காணத்தக்கது. (கூ)

கூ00. இறந்தமைந்த சார்புடைய ராயினு மூய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

(இ - ள்.) சிறந்து அமைந்த சீரார் - கழிய மிக்க தவத்தினை யுடையார், செறின் - வெகுள்வராயின், (அவரான் வெகுளப்பட்டார்),—இறந்து அமை ந்த சார்பு உடையர் ஆயின்உம்-கழியப்பெரிய சார்புடையராயினும், உய்யார்- (அதுபற்றி) உய்யமாட்டார்; (எ - று.)

சார்பு - அரண் படை பொருள் நட்பு என இவை; அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்போல அழிந்துவிடு மாகலின், 'உய்யார்' என்றார். சீருடையது, சீரெனப்பட்டது.

இதனால், அக்குற்றமுடையார் சார்புபற்றியும்உய்யா ரென்பது கூறப் பட்டது.

(கு - ரை.) கழிய மிக்க - மிகவும் அதிகமான. சார்பு - துணையாய அங் கங்கள். திரிபுரம் - இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில்களையுடைய மூன்று பட்டணங்கள்: திரிபுரமழிந்தது, வெகுண்டசிவபிரானது ஆற்றலால். சீர் - சிறப்பு; தவத்துக்குப் பண்பாகுபெயர். அக்குற்றம் - பெரியாரைப் பிழைத்தலாகிய குற்றம். (கo)

கூக - ஆம் அதிகாரம்.—பெண்வழிச்சேறல்.

இனிக் காமத்தான்வருவன நேரே பகையல்லவாயினும், ஆக்கஞ்சிதைத்தல் அழிவுதலைத்தருத லென்னுந் தொழில்களாற் பகையோடொத்தலின் பகைப்பாற் படுவனவாம்: ஆகலான், அவற்றைப் பகைப்பகுதியது இறுதிக்கட் கூறுவான் றொடங்கி, முதற்கட் பெண்வழிச்சேறல் கூறுகின்றார். அஃதாவது - தன்வழியொழுகற்பாலளாய இல்லாள்வழியே தான் ஒழுகுதல்.

(கு - ரை.) 'காமத்தான்வருவன நேரே பகையல்ல வாயினும்' என்பது - வெகுளியான் வருவன வாகிய இகல் முதலியன நேரே பகையாமென்பதைக் குறிப்பிக்கும். ஆக்கஞ்சிதைத்தல் - பொருளைச்சிதைத்தல்: பெருக்கஞ் சிதைத்த லென்பாருமுளர். அழிவு தலைத்தருதல் - அழிவை விளைத்தல். அவற்றை - காமத்தால் வருவனவற்றை. தன்வழியொழுகற் பாலளாய - தான்போகின்ற வழியே தானும்நடத்தற்குரியவளாகிய. இல்லாள் - மனைவி. ''தன்னுலாளப்படுமனைவி தன்னு லாளப்படுவானேல், அன்னுற் கறனும் பொருளுமூள வாகா தொல்லைப் பொருளானும், மன்னு பயன்கள் வினைமுடியா மறுமையணுகா தெப்பிழையும், முன்னும் பின்னும் பெருகாணு மூவாப்பழியு மறிமைந்தா'' என்ற விநாயகபுராணம் இங்குக் காணத்தக்கது.

கூஅக. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

(இ - ள்.) (இன்பம் காரணமாக), மனை விழைவார் - (தம்) மனையாளை விழைந்து (அவடன்மையராய்) ஒழுகுவார், மாண் பயன் - (தமக்கு) இன்றுணையாய அறத்தினை, எய்தார்—:(இனி), வினைவிழைவார் - பொருள்செய்தலை முயல்வார், வேண்டா - (அதற்கு இடையீடென்று) இகழும், பொருள் உம்—, அது - அவ்வின்பம்; (எ - று.)

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர். அவ்வின்பம் - அவடன்மையராதற்கு ஏதுவாய இன்பம். அஃது, அவளாற் பயனுய அறத்தினும் அவ்வறத்திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும் செல்ல விடாமையின், விடற்பாற் றென்பதாம்.

(கு - ரை.) மாண்பயன் - பண்புத்தொகை: மாட்சிமைப்பட்ட பயனையளித்தலால், இன்றுணையாய அறத்தை 'மாண்துணை' என்றார். வினை - பொருளைச் சம்பாதித்தலாகிய தொழிலைக் காட்டிற்று. மனையென்ற இடத்தின்பெயர் - அங்கு இருத்தற்குரிய மனைவிக்கு ஆகியதனால், இடவாகுபெயர். விழைவார் என்ற காரணப்பெயர் - அதன்காரியமாகிய விழைந்து அவள் தன்மையராய் நடத்தலை மேற்கொள்வதைக் காட்டுவதனால், காரணவாகுபெயர். பயன் என்ற காரியத்தின்பெயர்-அதற்குக் காரணமாகிய அறத்திற்கு ஆகியதனால், காரியவாகுபெயர். அஃது - அவ்வின்பம். இல்லறத்தானுக்குப்பயனுய அறத்திற்கு மனையாள் துணையாயிருத்தலால், 'அவளாற்

பயனாய அறத்தினும்'எனப்பட்டது. இல்லறத்தானுக்குப் பயன்-அறம்: அந்த அறத்திற்குத் துணையாகுபவள்-மனைவி. அந்த அறத்தையும் தன்னதிகாரத்தையும் விளைப்பது - பொருள்: பெண்வழிச்சேறலாற் பெறப்படும் இன்பம் இல்லறத்திற்குப் பயனாகிய அறத்திற்கும், அறம் அதிகாரம் இவற்றை விளைக்கக்கூடிய பொருளைத் தேடுவதற்கும் இடையூறாக முடிதலால், அந்த இன்பம் ஓராண்மகனால் விரும்பி மேற்கொள்ளத்தக்கதன்று: இகழ்ந்துவிடத்தக்க தென்றவாறு. மனையாள் வழியே நடப்பவர் தருமத்தைப்பெறாமையோடு பொருளையும் பெறா ரென்பது கருத்து. (௧)

௯௦௨. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

(இ - ள்.) பேணாது - (தன்) ஆண்மையைவிட்டு, பெண் விழைவான் - (மனையாளது) பெண்மையை விழைவானெய்திநின்ற, ஆக்கம் - செல்வம், (இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம்), பெரியது ஓர் நாண் ஆக - பெரியதோர் நாணுண்டாக, (தனக்கும்), நாணு தரும் - நாணுதலைக் கொடுக்கும்.

எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனாகலின். அச்செல்வத்தால் ஈதலும் துய்த்தலும் முதலிய*பயன்கள் அவளளவு ஆகலின், அவ்வாண்மைச் செய்கை அவள் கண்ணதாயிற்றென்று ஆண்பாலார்யாவரும் நாண, அதனால் தன்ஆண்மையின்மை யறிந்து பின் தானும் நாணு மென்பது நோக்கி, 'பெரியதோர்நாணாக நாணுத்தரும்' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், மனைவிழைதற்குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) எய்திநின்றசெல்வம் என்று பொருள்கூறியது, பெண்வழிச்சேர்பவனுக்குப் பொருளை மேன்மேலுந்தேடும் வல்லமை நீங்குதலால் அவன் தேடியதன்றி அவன்முன்னோராற் பெற்றுநின்ற செல்வமே யுள்ள தென்பதனா லாகு மென்பார் 'எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனாகலின்' என்றார். அச்செல்வத்தால் - தன்முயற்சியாற் சம்பாதித்ததன்றி முன்னரே யடைந்துநின்ற செல்வத்தினால். அவள் - மனையாள். அளவு-அதீனம். ஆண்மைச்செய்கை யென்றது - பொருளைப் பிறர்க்குஈதல் துய்த்தல் முதலியவற்றை. அவள் கண்ணது - மனையாளிடத்தது. (௨)

௯௦௩. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

(இ - ள்.) (ஒருவன்), இல்லாள்கண் - இல்லாண்மாட்டு, தாழ்ந்த-தாழ்தற்கு ஏதுவாய, இயல்பு இன்மை - அச்சம்,—நல்லாருள் - (அஃதிலராய) நல்லாரிடைச்செல்லுங்கால், நாணு - நாணுதலை, (அவனுக்கு), எ ஞான்று உம் - எக்காலத்தும், தரும் - கொடுக்கும்; (எ - று.)

அவடான் அஞ்சியொழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மை யாயிற்று. அங்ஙனம் அஞ்சியொழுகுதலின், அவளை நியமிப்பா

---

* பி - ம்: பயன்கொள்வாள் அவளாகலின்,

ரில்லையாம்: ஆகவே, எல்லாக்குற்றமும் வினையு மென்பதுநோக்கி, 'எஞ்ஞான்றும் நாணுத்தரும்' என்றார்.

(கு - ரை.) இல்லாண்மாட்டு - மனையாளிடத்தில். தாழ்தற்கு எதுவாய-ஒடுங்கிநடத்தற்குக்காரணமாகிய. அஃது - ஒடுங்கிநடத்தல். நல்லாரிடை-நற்குணமுடைய பெரியாரிடத்து. அவடான் - மனையாள். மனையாள் கணவனிடத்து ஒடுங்கிநடப்பது இயல்புஆக இருக்க அதற்குமாறுகக் கணவன் மனையாளிடம் ஒடுங்கிநடப்பானுயின் அது இயல்பல்லாத செயலாதலால், அச்செயலை 'இயல்பின்மை' என்று கூறினுரென்று விவரிப்பது 'அவடான்..... இயல்பின்மையாயிற்று' என்ற வாக்கியம். அஞ்சியொழுகுதலின் என்பதற்கு 'கணவன்' என்ற எழுவாய் வருவிக்க. நியமிப்பார் - இதுசெய்யக்கூடாது என்றுகட்டுப்படுத்தியடக்குபவர். எல்லாக்குற்றமும்-கற்புக்கேடு உட்பட எவ்வகைக்குற்றமுமென்றபடி. (சு)

கூoச. மனையாளை யஞ்சு மறுமை யிலாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(இ - ள்.) மனையாளை அஞ்சும் - (தன்)மனையாளை யஞ்சியொழுகுகின்ற, மறுமை இலாளன் - மறுமைப்பயனில்லாதானுக்கு, வினை ஆண்மை-வினையையாளுந்தன்மை, (உண்டாயவழியும்), வீறு எய்தல் இன்று - (நல்லோராற்) கொண்டாடப்படாது; (எ - று.)

'உண்டாயவழியும்' என்பது, அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ்செய்தற்குரிய நன்மை யின்மையின், 'மறுமையிலாளன்' என்றும், வினையையாளுந்தன்மை தன்றன்மையில்லாத அவனுன் முடிவு போகாமையின், 'வீறெய்தலின்று' என்றுங் கூறினர்.

(கு - ரை.) உண்டாயவழியும் - உண்டானபோதிலும். வினையாண்மை வீறெய்தலின்று என்பது இன்னபோதில் என ஒன்றை வேண்டியிருத்தலால், அதற்கு ஏற்ப, உண்டாயவழியும் என்பது வருவித்துரைக்கப்பட்டது. இல்லாளையஞ்சுபவன், இல்லறத்திற்குப்பயனுகிய அறனைத் தான் சுதந்திரமாகச்செய்யமாட்டாமையால் அவனை மறுமையிலாளனென்றது என்பார் 'இல்லறஞ்செய்தற்குரிய நன்மையின்மையின் மறுமையிலாளன் என்றும்' என்றார். தன்தன்மை - ஆண்மை: மனைவியையடக்கியாளுந்திறம். அவனுல் - மனையாளையஞ்சுபவனுல். வீறு எய்தல் இன்று - பெருமையையடைதல் இல்லையென்பது, சொற்பொருள்: இதன்கருத்தாக, நல்லோராற் கொண்டாடப்படாது என்று பரிமேலழகர் கூறியுள்ளார். வீறெய்தாமைக்குக் காரணம், அவனெடுத்தகாரியம் முடிவுபோகாமை யென்க. (சு)

கூoடு. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(இ - ள்.) இல்லாளை - (தன்) மனையாளை, அஞ்சுவான்---,---(தான் தேடிய பொருளேயாயினும், அதனுல்), நல்லார்க்கு---, நல்ல செயல்-நல்லனசெய்தலை, எஞ் ஞான்றும்---, அஞ்சும் - அஞ்சாதிற்கும்; (எ - று.)

நல்லார் - தேவர் அருந்தவர் சான்றோர் இருமுதுகுரவர் முதலாயினரும், நல்விருந்தினரும். நல்லனசெய்தல் - அவர்விரும்புவனகொடுத்தல். அது செய்யவேண்டும்நாள்களினு மென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். "இல்லாளே யஞ்சி விருந்தின்முகங்கொன்ற நெஞ்சிற், புல்லாளனுக" என்றார் பிறரும்.

(கு - ரை.) சான்றோர் - தவசியராயிராவிடினும் கல்விகேள்விகளால் மிக்க பெரியோர். இருமுதுகுரவர் - தாய்தந்தையர். முதலாயினரும் என்றதனுல், நட்பினர் குலகுருமார் முதலியோரைக் கொள்க. அது - தேவர் முதலியோர்விரும்புவன கொடுத்தல். தேவர்முதலியோர்க்கு விரும்புவன கொடுக்கவேண்டிய நாள்களாவன - பிரார்த்தனைசெலுத்தவேண்டியநாள் சிராத்தநாள் முதலாயின. "இல்லாளேயஞ்சி" என்று தொடங்கும் மேற்கோள், சீவகசிந்தாமணி மண்மகளிலம்பகம் - உகள - இல் உள்ளது: இதன் பொருள்:—இல்லாளே அஞ்சி - (தன்) மனைவிக்குஅஞ்சி, விருந்தின் - விருந்தினரின், முகம் - முகத்தை, கொன்ற-மகிழ்ச்சிசெய்யாதுவிட்ட, நெஞ்சின்-மனத்தினையுடைய, புல்லாளன் - அற்பத்தன்மையுடையவனுக, ஆக-ஆகக் கடவேன் என்பது. மனையாளுக்கு அஞ்சுவோனுல் நல்லார்க்குஉதவிசெய்ய இயலாதென்பது, கருத்து. (இ)

கூ0சு. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(இ - ள்.) இல்லாள் - (தம்) இல்லாளுடைய, அமை ஆர் தோள் - வேய் போலுந் தோளினை, அஞ்சுபவர் - அஞ்சுவார்,—(வீரத்தால் துறக்கமெய்திய), இமையாரின் - அமரர்போல, வாழின்உம் - (இவ்வுலகத்து) வாழ்ந்தாராயினும், பாடு இலர் - ஆண்மையிலர்; (எ - று.)

அமரர்போல வாழ்தலாவது - பகைத்தவீரர்தோள்களேயெல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின் 'வாழினும்' என்றார். அமையார்தோளெனவே, அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர்தோள்களேவென்றாயினும் இல்லாடோள்களேயஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம்.

இவை நான்குபாட்டானும், அவளே யஞ்சுதற்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) வேய் - மூங்கில். வீரத்தால் - பராக்கிரமகுணத்தைக்காட்டிப் பொருததனுல். துறக்கம் - சுவர்க்கம். தம் ஆண்மையாற் போர்க்களத்தில் பகைவர்க்குப் பின்னிடாது போர்புரிந்து மடிந்தவர் தேவராகி வீரசுவர்க்கத்தையடைவ ரென்ற தூற்றுணிபு இங்குக் கருதத்தக்கது. தோள்களேயெல்லாம்வேறலான் - தோள்வலிமையை யோங்கவிடாது கீழ்ப்படுத்திச் செயித்தலால். அது - வீரகுணத்தால் நன்குமதிக்கப்பட்டுவாழ்தல். வாழினும், உம்மை - எதிர்மறைப்பொருள்து. தோளுக்கு 'அமையார்' என்ற அடைமொழிகொடுத்தது - அது அஞ்சுதற்கு உரியது அன்று என்று அதன் எளிமையைப் புலப்படுத்தும். மூலத்தில், பாடு என்பது - பெருமையின்

ணும்பொருளது: இங்குவீரகுணத்தாலாகிய பெருமையைக் காட்டுமென்பார், அதனை ஆண்மையென்றார். (சு)

கூoஎ. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி ஞணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

(இ - ள்.) (நாணின்றி) பெண் - (தன்) இல்லாளது, ஏவல் - ஏவற் றொழிலை, செய்து ஒழுகும் - செய்துதிரிகின்றவனது, ஆண்மையின் - ஆண் டன்மையின், நாண் உடை - நாணினையுடைய, பெண் ஏ - (அவள்) பெண் டன்மையே, பெருமை உடைத்து - மேம்பாடுடைத்து; (எ - று.)

'நாணுடைப்பெண்' என வேண்டாகூறியது - அவளேவல்செய்வானது நாணின்மை முடித்தற் காதலின், அம்மறுதலைத்தொழில் வருவிக்கப்பட்டது. ஏவல் - ஆகுபெயர். இறுதிக்கட் பெண்ணென்பதூஉம் அது. ஏவல்செய் வித்துக் கோடற்சிறப்புத்தோன்றப் பெண்ணே யெனப் பிரித்தார்.

(கு - ரை.) பெண்ணென்றமாத்திரத்தில் நாணுடைமை பெறப்படுமாத லால், பெண்ணென்றசொற்கு 'நாணுடை' என்ற அடைமொழி வேண்டுவ தன்று: வேண்டாத ஒன்றைக் கூறுதல் தாம் வேண்டியதொன்றைப் பெற வைத்தற் காகு மாதலால், 'பெண்ணேவல்செய்வான்' என்றவிடத்து 'நாணின்றி' என்று நாணுடைமைக்கு மறுதலைத்தொழில் வருவித்துக்கூறப் பட்ட தென்க: மறுதலை - எதிர்த்தட்டானது. ஏவல் என்பது - ஏவியதொழி லைக் காட்டுவதனால், தொழிலாகுபெயராம். இறுதிக்கட் பெண் - இச்செய் யுளிலுள்ள பெண் என்ற சொல் இரண்டனுள் பின்னது. அவ்விடத்துப் பெண் என்பது - பெண்தன்மையைக்காட்டிற்று: பொருளாகுபெயரின்பாற் படும். ஆண்மகனைக்கொண்டு தான் ஏவிய தொழிலைச் செய்வித்துக்கொள்ள வல்ல சாமர்த்தியமுடையாளென்று அச்சிறப்புத்தோன்ற 'பெண்ணே' என்று பிரிநிலையேகாரம் கொடுக்கப்பட்ட தென்க. (எ)

கூoஅ. நட்டார் குறைமுடியார் நன்றூற்றூர் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

(இ - ள்.) (தாம் வேண்டியவாறன்றி), நல் நுதலாள் - தம்மனையாள், பெட்ட ஆங்கு - வேண்டியவாறு, ஒழுகுபவர் - ஒழுகுவார்,—நட்டார் - (தம் மொடு) நட்புச்செய்தாருற்ற, குறை—; முடியார்-முடிக்கமாட்டார்: (அதுவே யன்றி), நன்று ஆற்றூர் - (மறுமைக்குத் துணையாய) அறஞ்செய்யவும் மாட் டார்; (எ - று.)

நன்னுதலாளென்பதனை, "அமையார்தோள்" என்புழிப் போலக் கொள்க. அவடானே யறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம்.

(கு - ரை.) நல்நுதலாள் என்பது - அழகியநெற்றியையுடையா ளென்று பொருள்படும். இவ்வதிகாரத்து ஆறாவது குறளில் அமையார் தோள் என்று அஞ்சுதற்குக் காரணமானதன் எளிமையைக் கூறினாற்போல, இக்குறளில்

அஞ்சுதற்குக்காரணமானதன் எளிமையை நன்னுதலாள் என்று கூறினாரென்க. என்புழி - என்றவிடத்து. அவடானே - அம்மனைவியே. ஏவலும் - நட்டாரின்குறையையறிந்து அதனை முடிக்குமாறு தன்கணவனை ஏவுதலும். பொருள்கொடுத்தலும் - மறுமைக்குத் துணையாகிய அறம் இன்னதென்று அறிந்து அதைச்செய்யும்படி ஏற்றபொருளைக் கணவனிடத்துக் கொடுத்தலும். நட்டார்குறையை முடியாமையால் இம்மைப்பயனையும், நன்று ஆற்றுமையால் மறுமைப்பயனையும் பெண்வழிச்செல்வோர் அடையமாட்டாரென்க. நட்டார் - 'நள்' என்ற வினைப்பகுதியினடியாகப்பிறந்த வினையாலணையும் பெயர். நன்று - நன்மையையுடைய அறத்துக்குப் பண்பாகுபெயர். (அ)

கூoகூ. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

(இ - ள்.) அறம் வினைஉம் - அறச்செயலும், ஆன்ற பொருள்உம்-அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும், பிறவினைஉம் - (அவ்விரண்டின்) வேறுய இன்பச்செயல்களும், பெண் ஏவல் செய்வார் கண் - (தம்)மனையாள் ஏவல்செய்வார் மாட்டு, இல் - உளவாகா; (எ - று.)

புலன்களைந்தாகலின் 'பிறவினை' எனப் பன்மையாயிற்று. அவை நோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னேயொழிந்தார்க்குத் தலைமை அவள்கண்ண தாகலின், பின் அவைதாமும் இலவாயின என்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக்கூறினார்.

இவை மூன்றுபாட்டானும், அவளேவல்செய்தற்குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்விரண்டின் - அறச்செயல் பொருட்செயல் என்ற அவ்விரண்டைக்காட்டிலும். 'பிற' என்பது பலவின்பாலாதலால், இன்பத்தை 'பிறவினை' என்று கூறினாரென்றார்: பிறவினை என்று பன்மையாற் கூறியதற்குக் காரணம் - 'புலன்களைந்தாகலின்' என்பது: புலன்கள் - ஐம்பொறிகளால் நுகரப்படும் விஷயங்கள்: ஐம்பொறிகளால் கண்டு கேட்டுற்று மோந்துண்ணுதற்குரியவாகி நுகரப்படும்புலன்கள் ஐவகையாயிருத்தல்பற்றி, இன்பம் பலவாமென்க: பிற என்பதற்கு ஒருமை - பிறிது என்பது. அவை நோக்கி - அவ்வின்பங்களைநோக்கி. பெண்வழிச்சேறலுக்குக் காரணம் அவளால் இன்பம்பெறவேணுமென்னும் விருப்பமே யாதலாலும், அந்தப்பெண்வழிச் சேறலால் அறச்செயல் பொருட்செயல்களை முன்னே யொழிந்தாராதலாலும், 'அவைநோக்கி அறச்செயல் பொருட்செயல்களை முன்பேயொழிந்தார்க்கு' என்றது. தலைமை - அதிகாரம். அவள்கண்ணது - அந்த இல்லாளிடத்திலுள்ளது. அவற்றைப் பிரித்துக்கூறினார்-அவ்வின்பங்களைப் பிறவினை என்று பிரித்துக்கூறினாரென்றபடி. அவள் - மனையாள். ஆன்றபொருள் - (அறம்) அமைவதற்குக் காரணமாய பொருள். (கூ)

கூகo. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(இ-ள்.) எண் சேர்ந்த - கருமச் சூழ்ச்சிக்கட் சென்ற, நெஞ்சத்து-நெஞ் சத்தினையும், இடன்-(அதனினுய) செல்வத்தினையும், உடையார்க்கு-உடைய ராயவேந்தர்க்கு, பெண் சேர்ந்து ஆம் பேதைமை - மனையாளைச்சேர்தலான் வினையும் பேதைமை, எ ஞான்று உம் - எக்காலத்தும், இல் - உண்டாகாது.

''இடனில்பருவத்தும்'' எனவும், ''இடனின்றியிரந்தோர்க்கு'' எனவும் வந்தமையான், இடனென்பது அப்பொருட்டாதலறிக. இளமைக்காலத்து மென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். அப்பேதைமையாவது-மேற்சொல்லிய விழைதல் அஞ்சல் எவல்செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயது.

எதிர்மறைமுகத்தான் அம்மூன்றும் இதனைற் றொகுத்துக் கூறப்பட்டன.

(கு - ரை.) கருமச்சூழ்ச்சி - வினைசெய்வதில் ஆராய்ச்சி. அதனினுய - அங்ஙனஞ்சூழ்ந்து வினைசெய்தலால் தோன்றிய. இடன் என்ற சொல் - செல்வமென்னும் பொருளில்வருதற்கு மேற்கோள்கள் - ''இடனில்பருவத் தும்,'' ''இடனின்றியிரந்தோர்க்கு'' என்ற இரண்டும்: முதல்மேற்கோள் - திருக்குறளில் (உசுஅ) ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தில் எட்டாங்குறளி லுள்ளது: இதன்பொருள்:—இடன் இல் பருவத்துஉம்-செல்வமில்லாத [வறு மைக்]காலத்திலும் என்பது. இரண்டாம்மேற்கோள்-கலித்தொகையில் பாலைக் கலியில் மூதற்பாடலிலுள்ளது: இதன்பொருள்:—இடன் இன்றி - (தம்மு டைய இல்வாழ்க்கைக்குவேண்டிய)பொருளில்லாமல், இரந்தோர்க்கு-யாசித்த வர்க்கு என்பது. அப்பொருட்டாதல் - செல்வம் என்ற அருத்தத்தையுடைய தாதல். இளமைக்காலத்தும்-யௌவனபருவத்திலும். அப்பேதைமை - பெண் சேர்ந்தாம் பேதைமை. மேற்சொல்லிய - இவ்வதிகாரத்து முதற்குறள் முதல் சொல்லிய. விழைதல் - மனையாளின்பத்தைவிரும்பி அவள்வழியே நடத்தல். அஞ்சல்-(மனையாளை) அஞ்சுதல். எவல்செய்தல்-மனையாள் ஏவியதைச்செய் தல். இதுவரையில் பெண்வழிச்சேறலால் வினைவன கூறி, இந்தக்குறளில், எண்சேர்ந்த நெஞ்சத்தினையும் அதனுலாகிய செல்வத்தையுமுடையார்க்கு பெண்சேர்ந்தாம் பேதைமையில் என்று எதிர்மறைமுகத்தால் பெண்வழிச் சேர்தலின் குற்றத்தைத் தொகுத்துக்கூறினர். அம்மூன்று - விழைதல் அஞ் சுல் எவல்செய்தல் என்பன. இம்மூன்றையும் 'பெண்சேர்ந்தாம்பேதைமை' என்றுகூறியதனுல், தொகுத்துக்கூறப்பட்டன என்றார். (சுஐ)

கூஉ - ஆம் அதிகாரம்.—வரைவின்மகளிர்.

அஃதாவது - தங்கலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவுஇலாத மகளிரது இயல்பு. ஆத லால், தமக்குரிய மகளிரான் வரும் குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தங்கலம்-தமது இன்பம். ஆவார் - தக்கவர். ஆகாதார் - தகா தவர். வரைவு - எல்லை, வரம்பு வரைவின்மகளிரின்தன்மையை ''இழிபவர் மூத்தோரினையவர் கழியா நோயாற், கழிபவர் யாவரேனுங் கண்ணஞ்சப்பட்டு நெஞ்சம், அழிபவர் பொருள் தொண்டெள்ளுக் கெண்ணெய் போலளந்து

காட்டிப், பழிபடுபோகம் விற்பார்" எனக் கூறியிருத்தல் காண்க. தமக்குரிய மகளிரான் வருக்குற்றம் - தாம்மணந்து கொண்ட பெண்ணின் வழிச்சேற லால் வினையுந் தவறு. வரைவில் என்பது - எழுவாய்த்தொடர்: இன்மகளிர் - பண்புத்தொகை. வரைவின் மகளிரென்பது - அவரது தன்மையைக் கூறும் அதிகாரத்திற்கு, ஆகுபெயராயிற்று. முற்காலத்துத் தமிழகத்தில் தமக் கென்று நிலமனைவியரை மணந்தும், ஆடவர் பரத்தையர்பாலுங் காதல் செலுத்திப்போந்துவந்த குற்றத்தைக் கருதி, திருவள்ளுவர் அவ்வொழுக் கத்தினிழுக்கத்தை வரைவின்மகளி ரென்ற அதிகாரத்தால் வற்புறுத்த லாயின ரென்க.

கூகக. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(இ - ள்.) (ஒருவனை), அன்பின் விழையார்-அன்புபற்றி விழையாது, பொருள் விழையும் - பொருள்பற்றி விழையும், ஆய் தொடியார் - மகளிர், (அதுகையுறுத்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும்),இன் சொல்-இனிய சொல், (அவனுக்கு), இழுக்கு தரும்-(பின்) இன்னுமையைப் பயக்கும்; (எ - று.)

பொருள் என்புழி 'இன்' விகாரத்தாற் றொக்கது. ஆய்ந்த தொடியினை யுடையா ரென்றதனானும் இனிய சொல் என்றதனானும், அவர்கருவி கூறப் பட்டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமைபயத் தலின், அது கொள்ளற்க வென்பதாம்.

(கு - ரை.) விழையாது - விரும்பாது. இன்னுமை - தீங்கு. பயக்கும் - உண்டாக்கும். ஆய்தொடியார் - ஆய்ந்து செய்யப்பட்ட தொடியினை யணிந் தவர்: எனவே, மகளிரைக் காட்டும். தொடி - கையிலணியும் ஓரணிவிசே டம். 'அன்பின் விழையார்' என்ற இடத்து ஏதுப்பொருளைக் காட்டும் 'இன்' என்பது, வெளிப்பட்டு நின்று 'பொருளின்விழையும்' என்று இருந்தால் தான் இருப்பதுபோல,பொருள் என்பதன்பின்னும் ஏதுப்பொருளைக் காட்டும் 'இன்' என்பது பொருள்பற்றி விழையும் என்ற பொருள் தெளிவாகக் கிடைக்கும்: ஆதலால், 'பொருள் என்புழி இன்விகாரத்தாற் றொக்கது' என் றார். என்புழி-என்ற இடத்து. அவர்கருவி-அந்த வினைமகளிருடைய பொரு ளைப்பறிக்கும் கருவி. அவை-அந்த வினைமகளிரின் தொடியும் இன்சொல்லு மென்க. தொடியைக் கூறியது - பிற பூண்கட்கும் உபலட்சணம். வினைமகளி ரின் சொல் அவர்கூறும்போது இனியதுபோன்று தோன்றினும், பிறகு வறு மையை விளைத்தலால், அதனைக் கொள்ளற்க என்றவாறு. (க)

கூகஉ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(இ - ள்.) பயன் தூக்கி - (ஒருவனுக்குஉள்ள) பொருளை யளந்தறிந்து, (அதனை எய்துத்துணையும்), பண்பு உரைக்கும் - (தம்) பண்புடைமைசொல்

லும், பண்பு இல் மகளிர் - பண்பில்லாத மகளிரது, நயன் - ஒழுகலாற்றினை, தூக்கி-ஆராய்ந்தறிந்து, நள்ளாவிடல்-(அவரைப்) பொருந்தாதுவிடுக; (எ-று.)

பண்பு சொல்லின்கணல்லது தங்கட் கிடவாமைதோன்ற 'பண்பின்மகளிர்' என்றும், அவர்க்கு அது சாதிதரும மாதல் நூலானேயன்றி அவர்செயலானும் அறிந்தென்பார் 'நயன் றூக்கி' என்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாய மென்பது தோன்றப் பின் 'நள்ளாவிடல்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) பொருள் - செல்வம். அஃது - அந்தச்செல்வம். எய்துந் தூணையும் - (தாம்) அடையுமளவும். 'பண்பையுரைக்கின்ற பண்பில்லாத மகளிர்' என்று வேசையரைச் சொன்னதனால், பண்பு அவருடையஉரையி லன்றி அவரிடத்து இல்லை யென்பது பெறப்படு மென்கிறார். அவர்க்கு - அவ்வேசையர்க்கு. அது-பண்பில்லாமை. சாதிதருமம்-அவருடைய சாதிக்கு உரிய தன்மை. அவ்வறிவு - விலைமகளிர்க்குப் பண்புஇல்லாமை சாதிதரும மாகஇருத்தலை நூலினுலன்றி அவரதுநடத்தையினுலும் அறிந்த அறிவு. வேசையர் பணம்பறித்தற்காகவே இன்சொல்பேசுவ ரென்று அவருடைய நடவடிக்கையாலறிந்து அவரைப் பொருந்தாதிருக்கவேண்டு மென்றவாறு.(உ)

கூகசு. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

(இ - ள்.) (கொடுப்பாரை விரும்பாது), பொருள் பெண்டிர் - பொருளையே விரும்பும் பொதுமகளிரது, பொய்ம்மை - பொய்ம்மையையுடைய, முயக்கம்—,—(பிணமெடுப்பார்); இருட்டு அறையில்-இருட்டறைக்கண்ணே, ஏது இல் பிணம் - முன்னறியாத பிணத்தை, தழீஇ அற்று - தழுவினாற் போலும்; (எ - று.)

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமு மொவ்வாதானே முயங்குங்கால், அவர்குறிப்பு, கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாததோர்பிணத்தை எடுக்குங்கால் அவர்குறிப்போ டொக்கு மெனவே, அகத்தால் அருவராகின்றும் பொருளைக்கிப் புறத்தாற் றழுவுவர்: அதனை யொழிக வென்பதாம்.

இவை மூன்றுபாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பொருட்பெண்டிர் என்று பொதுமகளிர்க்குப் பெயர் கொடுத்தது - பொருளினிடத்து விருப்பத்தால் முயங்குபவரேயன்றிப் பொருள்கொடுப்பானிடத்து விருப்பத்தால் முயங்குபவ ரல்ல ரென்பதைப் புலப்படுத்தும்: இது பொருளையே விரும்பும் பெண்டிரென்று விரிதலால், இரண்டனுருபும் பயனுத்தொக்க தொகையாம். கருத்துஞ் செயலும் ஆராயாது-முயங்கப்படுவானது எண்ணத்தையாவது செய்கையையாவது ஆலோசியாம லென்றபடி. அவர் குறிப்பு - பொதுமகளிரின் எண்ணம். இயைபு இல்லாதது - சம்பந்தமில்லாதது. அவர் குறிப்பு-பிணமெடுப்பவர் குறிப்பு. அகத்தால் - மனத்தால். அருவரா தின்றும் - அருவருத்தும். அதனை - பொதுமக

ளிரின் தழுவுதலே. கூலிக்குப் பிணமெடுப்பார் இதற்குமுன் தம்மாற் காணப் படாததோரிடத்துத் தமக்குச் சம்பந்தமில்லாத தொருபிணத்தை யெடுக்கும் போது அவர் அகத்தால் அருவரா நின்றாலும் பொருளுக்காக அந்தப்பிண மெடுத்தற்றொழிலைச் செய்வாராவது போல, பணத்தை விரும்பிச் சாதியும் பருவமும் மொவ்வாதாரை முயங்கும் பொதுமகளிரும் அகத்தால் அருவரா நின்றாலும் புறத்தால் தழுவுவ ரென்று உவமைக் கருத்தை விரித்துக் காண்க. (கூ)

கூகச. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

(இ - ள்.) (இன்பமாகியபொருளே யிகழ்ந்து), பொருள் பொருளார் - பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது, புல் நலம் - புல்லிய நலத்தை, அருள் பொருள் - அருளொடுகூடிய பொருளை, ஆயும் - ஆராய்ந்து செய்யும், அறிவினவர் - அறிவினையுடையார், தோயார் - தீண்டார்; (எ-று.)

அறமுதலிய நான்கும் பொரு ளெனப்படுதலின், 'பொருட்பொருள், அருட்பொருள்' என விசேடித்தார். புன்மை - இழிந்தார்க்கே யுரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர்மெய்ந்நலம் மறுதலை யாகலின், தோயா ரென்பதாம்.

(கு - ரை.) அறம் முதலிய நான்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்பன. இவைநான்கும் பொருளெனப்படுமாதலால், பொருளைச் சேர்ந்த பொருளைப் பொருட்பொருள் என்றும், அறத்தைச்சேர்ந்த அருளை அருட் பொருள் என்றும் கூறினர். பொருள் என்பது பலவற்றிற்கும்பெயரென்பது பெறப்படுதலால், இன்னவகையான பொருள் என்பது விளங்க, இந்தச்செய் யுளில் 'பொருட்பொருள், அருட்பொருள்' எனக் கூறப்பட்ட தென்றவாறு. விசேடித்தல் - அடைமொழிகொடுத்துக்கூறல். இழிந்தார் - சாதியாலிழிந் தார் ஒழுக்கத்தாலிழிந்தார் என இருவகையர். அவர் மெய்ந்நலம்-அப்பொது மகளிரை முயங்கிப் பெறும் இன்பம். மறுதலை - எதிர்த்தட்டானது. அருளை நாடும் அறிஞர் வேசையரைத்தீண்டாரென்பதாம். (ச)

கூகடு. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

(இ - ள்.) மதி நலத்தின்-(இயற்கையாகிய) மதிநன்மையால், மாண்ட - மாட்சிமைப்பட்ட, அறிவினவர் - செயற்கையறிவினையுடையார்,— பொது நலத்தார் - (பொருள்கொடுப்பார்க்கெல்லாம்) பொதுவாய ஆசையினையுடைய மகளிரது, புல் நலம் - புல்லிய நலத்தை, தோயார் - தீண்டார்; (எ - று.)

மதிநன்மை - முற்பிறப்புக்களிற்செய்த நல்வினைகளான் மனக்தெளி வுடைத்தாதல். அதனை னன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் 'மதி நலத்தின்மாண்டவறிவினவர்' என்றும், அவ்வறிவுடையார்க்கு * அவராசை

* பீ-ப்: அவராசையது பொய்ம்மையும் மெய்ந்நலத்தது பொதுமையும்,

யதுபொதுமையும் மெய்ந்நலத்ததுபுன்மையும் விளங்கித்தோன்றலின், 'தோயார்' என்றும் கூறினர்.

(கு - ரை.) மதிநன்மை - புத்தியின்தெளிவு. செயற்கையறிவு - கல்வி கேள்விகளாலாகிய அறிவு. அதனுனன்றி - இயற்கையறிவினுலன்றி. மாட்சிமைப்படாமை-சிறப்புரூமை. அவ்வறிவு உடையார்க்கு-இயற்கையறிவோடு கூடிய செயற்கையறிவையு முடையார்க்கு. அவராசை - அப்பொதுமகளிரி னுசை. இயற்கையறிவோடு செயற்கையறிவுமுடையார்க்கு அந்தப்பொது மகளிரின் ஆசையின்பொதுமையும் அன்னர் உடம்பினுல்தரும் இன்பத்தின் புன்மையும் விளங்கித் தோன்று மாதலால், அன்னர் பொதுமகளிரைத் தீண்டா ரென்க. (ஙு)

கூகசு. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

(இ - ள்.) தகை - ஆடல் பாடல் அழகு என்பனவற்றுல், செருக்கி - களித்து, புல் நலம் - (தம்) புல்லிய நலத்தை, பாரிப்பார் - (விலைகொடுப்பார் யாவர்மாட்டும்) பரப்பும் மகளிர், தோள்-தோளினை, தம் நலம்-(அறிவொழுக் கங்களாலுய) தம் புகழை, பாரிப்பார் - (உலகத்துப்) பரப்புதற்குரிய உயர்ந் தோர், தோயார் - தீண்டார்; (எ - று.)

ஆடன்முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின், 'தகை' என்றும்,தோயின் அறிவொழுக்கங்கள் அழியு மாகலின் அவற்றுற் புகழ்பரப்பு வார் 'தோயார்' என்றும் கூறினர். 'தந்நலம்' - என்புழி, நலம் - ஆகுபெயர்.

இவை மூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டா ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) ஆடன்முதலிய மூன்று - ஆடல் பாடல் அழகுஎன்னும் மூன்று. அவர்க்கு - பொதுமகளிர்க்கு. மேம்பாடு - சிறப்புக்குக் காரண மானது. தகையென்பதற்கு-மேம்பாடு என்றுபொருளாம்: ஆடல்முதலியன பொதுமகளிரின்மேம்பாட்டுக்குக் காரண மாதலால், அவை 'தகை' எனப்பட் டன என்க. அவற்றுல்-அறிவொழுக்கங்களினுல். அறிவொழுக்கங்களாற் புகழைப் பரப்பவிரும்புவோர் அவ்வறிவொழுக்கங்களே யழிப்பதபற்றி, புன் னலம்பாரிப்பார்தோளைத் தோயா ரென்க. நலம்என்பது - நலத்தாலாய புக ழுக்கு ஆதலால், கருவியாகுபெயராம். "எழிலாற் பாடலாடலினு லிச்சை பெருக்கி யுளமொவ்வா, மொழியாற்செயலால் வசமாக்கி மூற்றும்பொருளைப் பறித்துவிடும், பழிஞாணுதபரத்தையரைப் பற்று ராய்ந்த பண்புடையார்" என்றது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. (சு)

கூகள. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

(இ - ள்.) நெஞ்சின் - நெஞ்சினுல், பிற-பிறவற்றை, பேணி - ஆசைப் பட்டு, (அவைகாரணமாக), புணர்பவர் - (கொடுப்பாரை மெய்யாற்) புணரும்

மகளிர், தோள் - தோள்களே, நிறை நெஞ்சம் இல்லவர்-நிறையாற்றிருந்திய நெஞ்சமில்லாதார், தோய்வர்—; (எ - று.)

பொருளும் அதனுற்படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின் மேல தாகலின், புணர்வது உடம்புமாத்திர மென்ப தறிந்து அதுவழி யோடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் 'தோய்வர்' என்றார்.

(கு-ரை.) பிறவற்றை-பொருளையும் அதனுற்படைக்கப்படுவனவற்றையும். நிறை-கண்டபடியோடாது நிறுத்தப்படுதல்: சஞ்சலமின்மை. நிறைநெஞ்சம்-மனவடக்கம். அவற்றின் - பொருளும் அதனுலுண்டாக்கிக்கொள்ளப்படுவனவாய்ப் போகத்திற்குரியனவான, நறுமலர் சந்தனம் அணிகலம் முதலியவற்றின். புணர்வது உடம்புமாத்திரம்-பொதுமகளிரின்புணர்ச்சி மனப்பூர்வமாக வன்று என்றபடி. அது வழி-பொதுமகளிரின்புணர்ச்சியின்வழி. அஃதிலார் - நிறைநெஞ்சமில்லாதவர். (எ)

கூகஎ. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

(இ - ள்.) மாயம் மகளிர் - (உருவு சொற் செயல்களால்) வஞ்சித்தலே வல்ல மகளிரது, முயக்கு - முயக்கத்தை, ஆயும் - (அவ்வஞ்சனை) ஆராய்ந்தறியும், அறிவினர் அல்லார்க்கு - அறிவுடையரல்லார்க்கு, அணங்கு என்ப-அணங்குதாக்கென்று சொல்லுவர் (நூலோர்); (எ - று.)

அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளுந் தெய்வமகள். தாக்கு-தீண்டல். இவ்வுருவகத்தான், அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல் பெற்றும். இது நூலோர் துணி வென்பது தோன்ற, அவர்மேல் வைத்துக் கூறினர். அப்பெயர், அவாய்நிலையான் வந்தது.

(கு - ரை.) உருவு - வடிவம். சொல்-இனிய சொல். செயல்-செய்கை, செய்கின்ற உபசாரம். முயக்கத்தை-தழுவுதலே. மாயமகளிரின் முயக்கத்தை அணங்கு என்று உருவகித்ததனலும், முயக்கம் என்பது தழுவுதலாகிய தொழிலைக் காட்டுதலாலும், அணங்கு என்ற சொற்கு - அணங்குதாக்கென்றுபொருளுரைக்கப்பட்டது: ஆகவே, அணங்கு என்பது - அணங்கினுடைய தாக்கிற்கு ஆகுபெயர். மனவடக்கமில்லாது காமசிந்தனையுடைய இளைஞர்களே மோகினியென்னும் பெண்தெய்வம் பிடித்துக்கொண்டு கனவிலே கட்டழகையுடைய மங்கைபோல்வந்து புணர்ந்து உடம்பை நாளடைவிலொடுங்கச்செய்து கொல்லு மென்பது, இங்குக் கருதத்தக்கது. இந்த நூலிலேயே "தாக்கணங்கு" (1082-ஆம் குறள்) என்று வந்திருப்பதும், அதற்குப் பரிமேலழகர் 'தானே தாக்கிவருத்துவதோர் அணங்கு'என்று உரை கூறியிருப்பதும் காண்க. இவ்வுருவகத்தான் - மாயமகளிரின் முயக்கத்தை அணங்கு தாக்கு என்று உருவகஞ்செய்த இதனுல். அம்முயக்கம் - மாயமகளிரின் முயக்கம். "ஆமாபோனக்கி யவர்கைப்பொருள் கொண்டு, சேமப்போற்குப்புறுஞ் சில்லுக்க ணன்பினை, ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே,

தாமாம் பலரால் நகை" என்ற நாலடி, இங்கு ஒருசார்ஒப்பு நோக்கத்தக்கது. இது - மாயமகளிரின் முயக்கு முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல். நூலோர்மேல்வைத்துக் கூறியது, 'என்ப' என்றதனால். அப்பெயர் - நூலோரென்ற பெயர். (அ)

கூகக. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

(இ - ள்.) வரைவு இலா மாண் இழையார் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது (விலைகொடுப்பார் யாவரையும்) முயங்கும் மகளிரது, மெல் தோள்- மெல்லிய தோள்கள், புரை இலா-(அக்குற்றத்தையறியும்) அறிவு இல்லாத, பூரியர்கள் - கீழ்மக்கள், ஆழும் - புக்கழுந்தும், அளறு - நிரயம்; (எ - று.)

உயர்தற்கேதுவாகலின், 'புரை' எனப்பட்டது. சாதியா னிழிந்தாரி னீக்குதற்கு 'புரையிலாப் பூரியர்கள்' என்றும், அவர் ஆழ்தற்கு ஏது உருவ முதலிய மூன்று மென்பது தோன்ற 'மாணிழையார் மென்றோள்' என்றும், அவர்க்கு அளற்றினை இடையின்றிப் பயக்கு மென்பது தோன்ற உருவக மாக்கியுங் கூறினர்.

(கு - ரை.) முயங்கும் - தழுவும். அக்குற்றத்தை - யாவரையுந்தழுவுங் குற்றத்தை. புரை என்பதற்கு - உயர்வு என்பது பொருள்: அச்சொல் - உயர்வுக்கு ஏதுவாகிய அறிவைக் காட்டிற்று: காரியவாகுபெயர். பூரியர்கள் - கீழோர்: அறிவினுற்கீழோரும் சாதியினுற்கீழோரும் என அந்தக்கீழோர் இருவகைப்படுவ ராதலால், இங்குப் பூரியர்களென்றது - பிறப்பினுற் கீழோரையன்று என்பதற்காக, 'புரையிலா' என்று அந்தப்பூரியர்க்கு அடைமொழி கொடுக்கப்பட்டதென்க. அவர் - அறிவில்லாத கீழோர். அறிவில்லாதவர் பொதுமகளிரின் உருவம்முதலிய மூன்றினாலுமே மனந்தாழ்கின்றன ரென்பது தோன்ற, 'மாணிழையார்மென்றோள்' என்றார்: இத்தொடரில் மாணிழையாரென்று உருவத்தையும் அவர்கள் தம்மையலங்கரித்துக்கொண்டிருத்தலையுங் கூறியது, அன்னார் இன்சொற்கூறுவதற்கும் உபலட்சண மென்க. பொதுமகளிரின்தோள் அறிவில்லாப்பூரியர்க்கு நரகத்தைத் தவறுதலொடுக்கு மென்பது விளங்குவதற்காகவே, அத்தோளை அளறு என்று உருவகமாகக் கூறினர். அளறுநிறைந்துள்ள நரகு, 'அளறு' என்றே கூறப்பட்டது. அளறு- சேறு. (கூ)

கூஉ0. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(இ - ள்.) இரு மனம் பெண்டிர்உம் - கவர்த்த மனத்தினையுடைய மகளிரும், கள்ளும்—,கவறுஉம் - சூதும், (என இம்மூன்றும்),—திரு - திருமகளால், நீக்கப்பட்டார் - துறக்கப்பட்டார்க்கு, தொடர்பு - நட்பு; (எ - று.)

இருமனம் - ஒருவனேதுபுணர்தலும் புணராமையும் ஒருகாலத்தேயுடைய மனம். கவறு - ஆகுபெயர். ஒத்தகுற்றத்த ஆகலின், கள்ளுஞ்

சூதும் உடன்கூறப்பட்டன. வடநூலாரும் *இக்கருத்தான் விதனமென உடன்கூறினர். வருகின்ற அதிகாரமுறைமையும் இதனை னறிக. தினை விராயெண்ணியவழிப் பன்மைபற்றி முடிபு கோடலின், ஈண்டு அஃறிணை யாற் கொண்டது. திரு ரீக்கப்பட்டமை, இக்குறிகளான் அறியப்படு மென் பதாம்.

இவைநான்குபாட்டானும், சேர்வார் இழிந்தோ ரென்பது கூறப் பட்டது.

(கு - ரை.) கவர்த்த - இரண்டாகப்பிரிவுபட்ட. ஒருவனுடு - செல் வங்கொடுத்த ஒருத்தனுடு. புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தே யுடைய - உடல்மாத்திரத்தாற்புணர்தலும் மனம்பொருந்தப் புணராமை யும் ஆகிய இரண்டையும் ஒருசமயத்திற்றானே யுடைய. சூதாடுகருவி யென்று பொருளுள்ள கவறு என்பது - அதுகொண்டுஆடப்படுஞ் சூதினைக் காட்டியது: கருவியாகுபெயர். ஒத்த குற்றத்த - (சூதாடல் கட்குடித்தல் வேசையரைச்சேர்தல்என்ற மூன்றும்) ஒருநிகரான குற்றத்தையுடைய. வித னம் எழுதினைக் கூறுமிடத்து இம்மூன்றையும் வடநூலார் சேர்த்துக்கூறியுள் ளார்: விதனங்களேழாவன - "வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூது பொருளீட்டங் கட்குடி காமமோ டேழு" என்பன. இவ்வதிகாரத்தையடுத் துக் கள்ளுண்ணுமை என்பதனையும், அதனையடுத்துச் சூதுஎன்பதனையும் வைத்ததும் விதனம் ஆதலிலொப்பேயென அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க. "பலவயினுனு மெண்ணுத்தினைவிரவுப்பெயர், அஃறினைமுடிபின செய்யுளுள்ளே" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தினுல், இருமனப்பெண்டி ரும் கள்ளும்கவறும் என உயர்திணையோடு அஃறிணைவிரவி, மிகுதியினுல், தொடர்பு என்னும் அஃறிணைமுடிபைக் கொண்டது. விலைமகளிரைச் சேர் வோர் இழிந்தோரே யென்று இவைநான்குபாட்டானுங் கூறப்பட்டதென்க.

கூஉ - ஆம் அதிகாரம்.—கள்ளுண்ணுமை.

இனி, ஒழுக்கமும் உணர்வும் அழித்தற்கண் அவ்வரைவின்மகளிரொடு ஒப்பதாய கள்ளினை யுண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் கூறு கின்றார்.†

(கு - ரை.) ஒழுக்கம் - நன்னடக்கை. அழித்தற்கண் - அழிப்பதில். கள்ளினை யுண்ணுமையதுசிறப்பு எதிர்மறை முகத்தாற் கூறுகின்றார் - கள் ளினையுண்ணுதல் கூடாது ஆதலால், அக்கள்ளுண்டலின் இழிவை எடுத்துக் கூறுமாற்றுல் கள்ளுண்ணுமையின் சிறப்பைத் தெரிவிக்கின்ற ரென்க.

கூஉக. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

---

* காமந்தகம் - 11—ஆம் அத்தியாயத்தில் 124-ஆவது ஸ்லோகம்.

† இந்த வாக்கியத்தின்பின் சில பிரதிகளில் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும் என்ற வாக்கியம் காணப்படுகின்றது.

(இ - ள்.) கள் - கள்ளின்மேல், காதல் கொண்டு ஒழுகுவார் - காதல் செய்து ஒழுகும் அரசர், எஞ்ஞான்றும்—, உட்கப்படார் - (பகைவரான்) அஞ்சப்படார்; (அதுவேயன்றி), ஒளி இழப்பர் - (முன் எய்திநின்ற) ஒளி யினையும் இழப்பர்; (எ - று.)

அறிவின்மையால், பொருள் படை முதலியவற்றாற் பெரியராய காலத் தும் பகைவர் அஞ்சார்: தம்முன்னோரான் எய்திநின்ற ஒளியினையும் இகழற் பாட்டான் இழப்பரென்பதாம்.

இவை யிரண்டானும் அரசு இனிதுசெல்லா தென்பது இதனாற் கூறப் பட்டது.

(கு - ரை.) காதல்செய்து - விருப்பம்வைத்து. ஒளி - தாம் உள்ள காலத்தில் மிக்குத்தோன்றுதலுடைமையாகிய மதிப்பு. கள்ளுண்பார் அறிவை யிழத்தலால், அவர்கள் பொருள் படை முதலியவற்றாற் பெரியவராய காலத்தும் அவருக்குப் பகைவர் அஞ்சார்: அன்றியும், அவர்கள் பிறரால் இகழப்படுதலால், தம்முன்னோரால் தமக்குக்கிடைத்துள்ள ஒளியினையும் இழப்ப ரென்பதாம். இகழற்பாட்டான் - இகழப்படுத்தன்மையால். அரசு - அரசாட்சி. இவை இரண்டானும் - (கள்ளுண்பார்க்குப்) பகைவரால் அஞ்சப் படாமை மதிப்பிழத்தல் என்ற இவ்விரண்டினாலும். இதனால் - இக்குறளால். (க)

கூஉ. உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்.

(இ - ள்.) (அறிவுடையராயினார்), கள்ளை உண்ணற்க - (அஃதிலரா தற்கு ஏதுவாய) கள்ளினை உண்ணுதொழிக; (அன்றியே), உணில் - உண் ணல்வேண்டுவாருளராயின், சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் - கல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார், உண்க—; (எ - று.)

பெறுதற்கு அரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளான் அழித்துக் கொள்வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணுராக லின், 'சான்றோரா னெண்ணப்பட வேண்டாதா ருண்க' என்றார்.

(கு - ரை.) பெறுதற்கு அரிய அறிவு - பகுத்தறிவு. அஃது இல்லாத - அறிவு இல்லாத. கள்ளுண்பார்க்குப் பகுத்தறிவு அழிதலால், அன்னார் சான்றோரால் மதிக்கப்படா ரென்றவாறு. (உ)

கூஉக. ஈன்றுள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(இ - ள்.) ஈன்றாள் முகத்து ஏ உம் - (யாதுசெய்யினும் உவக்குந்) தாய் முன்பாயினும், களி - (கள்ளுண்டு)களித்தல், இன்னாது - இன்னாதாம்: மற்று- ஆனபின், சான்றோர் முகத்து என் - (குற்றம்யாதும்பொறாத) சான்றோர் முன்பு களித்தல் (அவர்க்கு) யாதாம்? (எ - று.)

மனமொழிமெய்கள் தம்வயத்த அன்மையான் நாண் அழியும்: அழியவே, ஈன்றாட்கும் இன்னுதாயிற்று: ஆனபின், கள் இருமையுங் கெடுத்தலறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்றோர்க்கு இன்னுதாதல் சொல்ல வேண்டுமோ என்பதாம்.

(கு - ரை.) உலக்கும் - மகிழும். இன்னுது - இனியதன்று. இருமை - இம்மை மறுமைகள். சேய்மைக்கண்ணே - தூரத்திலே. கடியும் - வெறுத்து விலக்கும். மூகத்தேயும், எ - அசை: உம் - உயர்வு சிறப்பு. ஆல்-ஈற்றசை. மற்று - வினைமாற்று. களி - முதனிலைத்தொழிற்பெயர். (ங)

கூஉச. நாணெண்ணு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.

(இ - ள்.) கள் என்னும் பேணு பெரு குற்றத்தார்க்கு - கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவரும்இகழும் மிக்ககுற்றத்தினையுடையாரை, நாண் என்னும் நல்லாள்-நாணென்றுசொல்லப்படுகின்ற உயர்ந்தவள்,(நோக்குதற்கு அஞ்சி), புறங்கொடுக்கும் - (அவர்க்கு) எதிர்முகமாகாள்; (எ - று.)

காணுதற்கும் அஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவ ராகலின் 'பேணு' என்றும், பின் ஒருவாற்றானுங் கழுவப்படாமையின் 'பெருங்குற்றம்' என்றும், இழிந்தோர்பால் நில்லாமையின் 'நல்லாள்' என்றுங் கூறினார். பெண்பாலாக்கியது, வடமொழிமுறைமைபற்றி.

இவை மூன்றுபாட்டானும், ஒளியிழத்தற்காரணங் கூறப்பட்டது.

(கு - ரை.) பேணு - விரும்பப்படாத. கழுவப்படாமையின் - எவ்வகைப் பிராயச்சித்தத்தாலும் போக்கப்படாமையால். நாணென்ற பொருளைக் கொண்ட 'லஜ்ஜா' என்பது வடமொழியில் ஸ்த்ரீலிங்கமாதலால், அதனை நல்லாளெனப் பெண்பாலாற் கூறியது. (ச)

கூஉரு. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

(இ - ள்.) (ஒருவன்), பொருள் கொடுத்து - விலைப்பொருளைக் கொடுத்து, மெய் அறியாமை கொளல் - (கள்ளால் தனக்கு) மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல், கை அறியாமை உடைத்து-(அவன்பழவினைப்பயனை) செய்வ தறியாமையை(த் தனக்குக் காரணமாக) உடைத்து; (எ - று.)

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தனயாவும் அறியாமை சொல்ல வேண்டாவாயிற்று. கை - அப்பொருட்டாதல், "பழனுடைப்பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று" என்பதனானும் அறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றனைக்கொள்ளுங்கால் தீயதுகொள்ளாமையின், மெய்யறியாமைகொளல் மூன்னையறியாமையான்வந்தது என்பதாம்.

(கு - ரை.) மெய்ம்மறப்பு - தேகம்பரவசப்படுதல். அப்பொருட்டு-செயலென்னும் பொருளது. கையென்பது செயலென்னும் பொருளினையுடைய தாதற்கு மேற்கோள், "பழனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று"

என்பது: இது, புறநானூற்றில் உ௦௯—இல் உள்ளது. இதன் பொருள்:—பழன் உடை - பழங்களையுடைய, பெருமரம் - பெரியமரம், வீழ்ந்(த)து என - பழுத்துமாறியதென்று, (பறவைகள்), கைஅற்று - செயலொழிந்து என்பது. அறிவார் - அறிவுபடைத்தவர். கொள்ளுங்கால் - கொள்ளும்போது. மெய்யறியாமைகொளல்-உடல் பரவசப்படுதலைக் கொள்வது. பொருள்கொடுத்துக் கள்ளைவாங்கிப் பருகி மெய்ம்மறத்தல், அறியாமையின் செயலே யென்க.(௫)

௯௨௬. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(இ - ள்.) துஞ்சினார் - உறங்கினார், செத்தாரின் வேறு அல்லர் - செத்தாரின் (வேறாதலுடையரேனும் அக்காலத்து அறிவின்மையான்) வேறெனப் படார்: (அவ்வாறே), கள் உண்பவர் - கள்ளுண்பார், எ ஞான்றுஉம் நஞ்சு உண்பார் - (நஞ்சுண்பாரின் வேறாதலுடையரேனும்) எக்காலத்தும் (அறிவின்மையான்) வேறெனப்படார், அவர்தாமேயாவர்; (எ - று.)

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை, உயிர்ப்புநிற்றல். வேறாதலும் வேறன்மையு முடைமை காட்டற்கு* உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரனிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண்பாரும் ஒப்பர்: கைவிடப்படுதலால் செத்தாரும் கள்ளுண்பாரும் ஒப்பர் என்று உரைப்பாரும் உளர்; அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதும் இயைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரனிறைக்கு ஏலாமையானும், அஃதுஉரையன்மை அறிக.

இவை யிரண்டுபாட்டானும், அவரது அறிவிழத்தற்குற்றங் கூறப் பட்டது.

(கு - ரை.) அக்காலத்து - உறங்குங் காலத்து. வேற்றுமை-வேறுபாடு. உயிர்ப்புநிற்றலால் வாசியிருந்தபோதிலும், எப்படித் துஞ்சினாரோடு செத்தார்க்கு அறிவிழத்தலில் வாசியில்லையோ, அப்படியே கள்ளுண்பார்க்கு உயிர்ப்புநிற்றலால் நஞ்சுண்பாரோடு வாசியிருந்தபோதிலும், அறிவுஇழத்தலில் எப்போதும்வாசியில்லை யென்பதாம்: ஆகவே, இச்செய்யுள்-எடுத்துக்காட்டுவமையணி. உயிர்ப்பு நிற்றலால் வேறாதலையும், அறிவின்மையால் வேறன்மையையும் இவ்வுவமை காட்டுவது காண்க. புணர்க்கப்பட்டது-பொருத்தப்பெற்றது:

---

* "நங்இவயுக்தம் அந்யஸத்ருஶே தயாஹ்யர்த்தஶதிஃ [அன்மைப் பொருளையுடைய சொல்லோடும் உவமவுருபோடும் சேர்ந்த சொல் அதைக் காட்டிலும் வேறாய் அதைப்போன்ற பொருளைக் காட்டும்: பொருண்முறை அதுவன்றோ]" என்ற நியாயம், இங்கு அறியத்தக்கது: ஒருவனைப்பார்த்து 'கள்வனல்லன்' என்றால், அவன் கள்வனிலும் வேறானவன்: ஆனாற் கள்வனென்று ஐயுறுதற்கு ஏற்றகாரணம் அவனிடத்து உண்டு என்றுபெறப்படுதலும்; 'முகம் சந்திரன்போலும்' என்றால், முகமானது சந்திரனினும் வேறுபட்டது: ஆனால், மகிழ்ச்சியைத்தருதல் முதலிய சந்திரனுடையகுணங்கள் அதனிடத்து வேறுபடாதுள்ளன என்று பெறப்படுதலுங் காண்க,

சேர்க்கப்பெற்றது. கள்ளுண்பவர்க்கும் நஞ்சுண்பார்க்கும் வேற்றுமை யிருக்க, நஞ்சுண்பார் கள்ளுண்பவர் என்று ஐக்கியப்படுத்திக்கூறியது - காட்சியணியாகும். நிரல் நிறை - பெயரும் வினையுமாகிய சொல்லையும் அவைகொண்டு முடியுஞ்சொல்லையும் வேறு வேறாக நிறுத்தி முறையே பொருள் கொள்ளவைப்பது. திரிக்கப்படுதல் - நிலைமாற்றப்படுதல். கை விடப்படுதலால் - விட்டிடுதற்கு உரியராயிருத்தலால். இயைபு-சம்பந்தம். சொற் கிடக்கை - சொற்கள் இருக்கிற நிலை. ஏலாமை - பொருந் தாமை. இனி, இக்குறளை முறைநிரனிறைப்பொருள்கோளாக்கி, (மனித னுடைய நிலைமை மாற்றப்படுதலால்) துஞ்சினார் எஞ்ஞான்றும் நஞ்சுண் பவரே: கைவிடப்படவேண்டியவராயிருத்தலால் கள்ளுண்பவர் செத்தாரின் வேறல்லர். [கள்ளுண்பார் செத்தவரோடொப்பர்] எனப் பொருள் கூறு வாரு முளர்: இப்பொருளில், கள்ளுண்ணாமையைப்பற்றிய இவ்வதிகாரத் தின் பொருள் பின்வாக்கியத்தி லிருக்க, யாதொருதொடர்புமில்லாத நஞ் சுண்பார்க்குத் துஞ்சினரை உவமைபுணர்த்து இங்குக்கூறுதலில் யாதொரு பயனும் இல்லையாதலாலும், துஞ்சினர் செத்தாரின்வேறல்லர் என்றுஒரு வாக்கியமாகவும் 'எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' என்று மற் றொருவாக்கியமாகவும் இருப்பதன்றி 'நல்லரசன் பகைவர்க்கும் நண்பர்க் கும் துன்பமும் இன்பமும் செய்வான்' என்றாற்போன்று சொற்கிடக்கை நிரனிறையாகக்கொள்ளுமாறு அமையாமையாலும், அவ்வுரை பொருந்துவ தன்றுமென்பது, பரிமேலழகர் காட்டிய இரண்டாவது உரையின் பொரு ளும் அதன் மறுப்பும். (சு)

கூஉள. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ தெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(இ - ள்.) கள் - கள்ளை, ஒற்றி - மறைத்து உண்டு, (அக்களிப்பால்), கண் சாய்பவர் - (தம்) அறிவு தளர்வார்,—உள்ளூர் - உள்ளூர்வாழ்பவரான், உள் ஒற்றி - உண்ணிகழ்கின்றது உய்த்துணர்ந்து, எஞ்ஞான்றும்—, நகப்படுவர் . நகுதல்செய்யப்படுவர்; (எ - று.)

உள்ளூர் - ஆகுபெயர். 'உண்டு' என்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்து உணர்தல் - தளர்ச்சியாற் களிப்பினையுணர்ந்து அதனாற் கள்ளுண் டது உணர்தல்.

(கு - ரை.) கண் - ஞானக்கண். உள் நிகழ்கின்றது உய்த்துணர்தல் - மறைவாக நிகழ்ந்த செய்தியை ஊகித்தறிதல்: கள்ளுண்டாரின் சோர்வினாற் களிப்பினையறிந்து அதனாற் கள்ளுண்டதை யறிதல். நகுதல் - பரிகசித்தல்: இகழ்ந்து சிரித்தல். ஊருள் என்பது - உள்ளூர் என்று மாறிவந்தது - இலக் கணப்போலி: உள்ளூரென்பது - அங்கு இருப்பவர்க்கு ஆகிவந்தது, இட வாகுபெயராம். தளர்ச்சி - அறிவு சோர்தல். உள்ளொற்றி யென்றவிடத்து 'உள்' என்ற இடப்பெயர் - இடத்தில் நிகழுஞ்செயலுக்கு ஆகிவந்ததும் இட வாகுபெயரே. (எ)

கூஉஅ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(இ - ள்.) (மறைத்து உண்டுவைத்து), களித்து அறியேன் என்பது - (யான்) கள்ளுண்டறியேனென்று (உண்ணுதபொழுது) தம்மொழுக்கங்கூறு தலை, கைவிடுக - ஒழிக: ஆங்கே - அவ்வுண்டபொழுதே, நெஞ்சத்து ஒளித்த துஉம் - (பிறர் அறியின் இழுக்கா மென்று முன்) நெஞ்சத்து ஒளித்த குற்ற மும், மிகும் - (முன்னேயளவின்) மிக்கு வெளிப்படுதலான்; (எ - று.)

'களித்தறியேன்' எனக் காரணத்தைக் காரியத்தாற் கூறினர்.

இவையிரண்டுபொட்டானும், அது மறைக்கப்படாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இழுக்கு - குற்றம். 'நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கேமிகும்' என்பதன் கருத்து, ஒருவர் கள்ளுண்டு பரவசப்பட்டபோது பிறரறியா மல் இரகசியமாகச்செய்து அவர் மனமறிந்த குற்றம் யாவும் வெளிப் பட்டுவிடுமென்பது. கள்ளுண்டறியேன் என்று காரணத்தாற் கூறாது,'களித் தறியேன்' என்று கள்ளுண்டதைக் காரியத்தாற் கூறினர்: கள்ளுண்டல் காரணமும், களித்தல் அதன்காரியமுமாதல் காண்க. ஆங்கே-அப்பொழுதே. "காணுமையுண்ட கடுங்கள்ளேமெய்கூர, ஈணுதுசென்று நடுங்கவுரைத்தா ங்கு" என்ற கலித்தொகை இங்குக் காணத்தக்கது. (அ)

கூஉகூ. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(இ - ள்.) களித்தானை - கள்ளுண்டுகளித்தானொருவனை, (இஃதாகா தென்று), காரணம் காட்டுதல்-(பிறனொருவன்) காரணங்காட்டித் தெளிவித் தல், நீர் கீழ் குளித்தானை - நீருள்மூழ்கினானொருவனை, (பிறனொருவன்), தீ துரீஇ அற்று - விளக்கினால் நாடுதலேயொக்கும்; (எ - று.)

'களித்தானை' என்னும் இரண்டாவது "அறிவுடை யந்தண னவலைக் காட்டென்றனே" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற் போல, அவன்மனத்துக் காரணஞ் செல்லா தென்பதாம்.

இதனால், அவனைத்தெளிவித்தல் முடியாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) நீரினுள் விளக்குச் செல்லாதவாறுபோல, கள்ளுண்பா னுடைய மனத்துக் கள்ளுண்டலாகா தென்பதற்குச் சொல்லுங் காரணம் செல்லா தென்பது, கருத்து. துரீஇ=துருவி. நாடுதல் - தேடுதல். செல்லா தாற்போல-செல்லாதவாறு போல. களித்தானை என்ற இடத்து இரண்டாம் வேற்றுமை "அறிவுடையந்தண னவலைக் காட்டென்றனே" (மருதம் - 7) என்ற கலித்தொகையிற்போல நான்கனுருபின் பொருளில் வந்தது. இங்குக் காட்டிய மேற்கோளின் பொருள் வருமாறு:—அறிவு உடை-அறிவு உடைந்த [அழிந்த], அந்தணன் - பிராமணன், அவலை - அவளுக்கு, காட்டு - காணச் செய், என்றனே - என்று சொன்னானே? என்பது. (கு)

கூகூ0. கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

(இ - ள்.) (கள்ளுண்பானெருவன்),—கள் உண்ணு போழ்தில் - (தான்) அஃது உண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண், களித்தானை - (உண்டு) களித்த பிறனை(க் காணுமன்றே!) காணுங்கால்—, உண்ட தன் சோர்வு - தான் உண்டபொழுது உளதாஞ் சோர்வினை, (அவன் சோர்வால்), (அதுவும் இற்றென்று), உள்ளான்கொல் - கருதான்போலும்; (எ - று.)

சோர்வு - மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல்.

கருதலளவையான் *அதன் இழுக்கினை உய்த்துணரின் ஒழியுமென, இதனால், அஃது ஒழிதற்காரணங் கூறப்பட்டது.

(கு - பை.) காணுமன்றே - காண்பானன்றே? சோர்வு - மனம்மொழி மெய்கள் தன்வயத்தன அல்ல ஆதல். 'எங்கு எங்குக் கள்ளுண்டலென்பது உண்டோ, அங்கு அங்குஎல்லாம் சோர்வுஉண்டாகுமன்றே: கள்ளுண்டாற் சோர்வு உண்டாமென்பதை இத்தப்பிறரிடத்துக்காண்கின்றே மன்றே; ஆகையால், யாமும் கள்ளுண்டால் சோர்வுடையவராவோம்' என்று இங்ஙனம் ஆராய்ந்து கள்ளுண்பதன் இழிவை ஒருவன் உய்த்துணர்வானாயின், கள்ளுண்டல் ஒழியு மென்றவாறு: இங்ஙனம் உய்த்துணர்வது-கருதலளவை யென்னும் அனுமானபிரமாணமாகும்: புகையைக் கண்டு நெருப்பு உண்டு என்று உய்த்துணர்தல் போல்வது, இது. (கo)

கூசு - ஆம் அதிகாரம்.—சூது.

இனி, அக்கள்ளுண்டல்போல அறம்பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலுங் கூறுவான் தொடங்கி, முதற்கண் சூதினது இயல்பு கூறுகின்றார்.†

(கு - பை.) இடையீடு - தடை. பிணிபுழத்தல் - நோயனுபவித்தல்.

கூஉக. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉங்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(இ - ள்.) வென்றிடின்உம்-(தான்) வெல்லும் ஆற்றலுடையனாயினும், சூதினை - சூதாடலை, வேண்டற்க-விரும்பாதொழிக: வென்றதூஉம்-(வென்று பொருளாய்ந்துவார் உளராலெனின்) அவ் வென்றபொருள்தானும், தூண்டில்பொன் - (இரையான் மறைத்த) தூண்டி ரும்பினை, (இரையெனக் கருதி), மீன்—, விழுங்கி அற்று - விழுங்கினாற்போலும்; (எ - று.)

வேறல் ஒருதலை யன்மையின் 'வென்றிடினும்' என்றும், கருமங்கள் பலவுங் கெடுதலின் 'வேண்டற்க' என்றுங் கூறினார். எய்தியபொருள்

---

* பி - மீ: அவனிழுக்கினை † சிலபிரதிகளில், அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும் என்ற வாக்கியம் இவ்வாக்கியத்தின்பின் காணப்படுகின்றது.

சூதாடுவார் நீங்கள்மக்கு இட்டதோர் தளை யென்பதூஉம், அதனால் பின் துயருழத்தலும் உவமையாற் பெற்றும்.

(கு - ரை.) ஆற்றல் - திறமை. உளரால் - உள்ளாரன்றே? தூண்டிற் பொன் - தூண்டிலாகிய பொன் என இருபெயரொட்டு. விழுங்குதல்-வாயினுட்கொள்ளுதல். வேறல் - வெல்லுதல். ஒருதலையண்மையின்-நிச்சயமல்லாமையால். தளை-பந்தம். ஒருவன் சூதுஆடுவதிற் சமர்த்தனுயிருந்து அதனால் அவனுக்குப்பொருள் கிடைப்பினும் அப்பொருள் பலதீங்குக்கும் காரணமாயிருத்தலால், அப்பொருளில் விருப்பங்கொள்ளாது சூதாடுதலை யொழிந்திடுக என்றவாறு. சூதினால் வென்றுபண்டைத்த பொருளுக்கு மீன்விழுங்கும் தூண்டிற்பொன்னே உவமைகூறியதனால், சூதினாற்கிடைத்த அப்பொருள் சூதாடுவார் அதனினின்று நீங்காமைக்கு இட்டதோர் தளையாகுமென்பதும், அப்பொருளினால் பிறகு துயரம் சேருமென்பதும் பெறப்படும். சூதில்வெல்லுதல் நிச்சயமன்று என்பதை புலிவித்தற்கு, 'வென்றிடினும்' என்று ஐயவும்மை கொடுத்தார். வேண்டற்க - எதிர்மறைவியங்கோள் வினைமுற்று. (க)

கூஉ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(இ - ள்.) ஒன்று எய்தி - (அத்தூண்டிற்பொன்போன்ற) ஒன்றினை முன்பெற்று, நூறு இழக்கும்-(இன்னும் பெறுது மென்னுங் கருத்தால்) நூற்றினையிழந்து வறியராம், சூதர்க்கும்—, நன்று எய்தி-(பொருளால்) அறனும் இன்பமும் எய்தி, வாழ்வது ஓர் ஆறு - வாழ்வதொரு நெறி, உண்டு ஆம் கொல் - உண்டாமோ? [ஆகாது]; (எ - று.)

அவ்வாற்றூற் பொருளிழந்தே வருதலான் அதனுலெய்தும் பயனும் அவர்க்கு இல்லை யென்பதாம்.

(கு - ரை.) பெறுதும் - பெறுவோம். உம்-இழிவுசிறப்பு. 'கொல்'-வினவகையால் எதிர்மறை குறிக்கும். ஒன்று, நூறு-எண்ணலளவை யாகுபெயர்.

கூஉஉ. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போலூப்பு புறமே படும்.

(இ - ள்.) உருள் ஆயம் - உருளுங்கவற்றின்கட் பட்ட ஆயத்தை, ஓவாது கூறின் - இடைவிடாது கூறிச் சூதாடுமாயின்,—பொருள் - (அரசன் ஈட்டிய) பொருளும், ஆயம்-(அவன்) பொருள்வருவாயும், போய் - (அவனை விட்டுப்) போய், புறம் ஏ படும் - பகைவர்கண்ணே தங்கும்; (எ - று.)

கவற்றினது உருட்சியை அதனினுய ஆயத்தின்மேல் ஏற்றியும், சூதாடலை அதுகூறலாகிய காரணத்தின்மேல் இட்டும் கூறினர். பொருளாயம் என்பது - உம்மைத்தொகை. ஆயம் - வடமொழித் திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்தில னாகலின், அவையிரண்டும், பகைவர் பாற் செல்லும் என்பதாம்.

(கு - ரை.) கவற்றின்கண் - சூதாடுகருவியில். பட்ட - உண்டான. ஆயம் - ஆதாயம்: பந்தயலாபம். பொருள்வருவாய் - பொருள்வரும்வழி.

சூதாடுகருவியாகிய கவற்றின் உருட்சியை அதனினாற்பெறுகின்ற ஆயத்தின்மே லேற்றி, 'உருளாயம்' என்றது, கருவிக்குஉரிய அடைமொழியைப் பயன்மேலேற்றிக் கூறிய உபசாரவழக்கு. 'சூதாடின்' என்ற பொருளில் 'கூறின்' என்றது, காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டவாறும். ஆயம் என்றவடமொழி யாதொரு திரிபுமின்றித் தமிழில்வந்துவழங்கிய தற்சமமே யாகவும் அதனை 'வடமொழித்திரிசொல்' என்றது - ஒருபாஷையினின்று மற்றொரு பாஷைக்கு வருதலையே திரிபெனக்கொண்டவாறும்; அன்றி, அச்சொல்லில் எழுத்துமாறுபாடு ஒன்றில்லாமைகாண்க. ௬௩௬ - ஆங் குறளின்கீழ் 'அதி என்பது - வடசொல்லுள் மிகுதிப்பொருளதோர் இடைச்சொல். அது திரிந்து நுட்பம்என்பதனோடு தொக்கது' என்று பரிமேலழகர் உரைத்ததுங் காண்க. இங்ஙனம் ஆரியத்தினின்று தமிழுக்குவருதலையே திரிதலாகக்கொள்ளுதல், ஒருசார் பண்டையோர்கருத்து: "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத்தோடுபுணர்ந்த சொல்லாகும்மே" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தையும் அதற்கு உரையாசிரியர்கூறிய உரையையுங் காண்க. இவ்விஷயத்தில் சேனாவரையர்கருத்தும் நச்சினார்க்கினியர்கருத்தும் மாறுபடும். ஆயம் என்ற வடசொல் - முதலில் கெலிப்புப்பொருள் என்ற அர்த்தத்தையும், பிறகு பொருள்வருவாய் என்ற அர்த்தத்தையும் காட்டிற்று. காத்தல் - பொருளைக்காத்தல். இயற்றல் - பொருளை யீட்டுதல். அவையிரண்டும் - பொருளும் பொருள்வருவாயும். பொருளைக் காப்பதிலும், மேன்மேற்சம்பாதித்தலிலும் சூது ஆடும் அரசனுக்குக் கருத்துச் செல்லாது ஆதலால், அவையிரண்டும் பகைவரிடத்துச் செல்லுமென்பதாம். ஓயாமற் சூதாடுவோரின் பொருள் விரைவில் ஒழியுமென்பது, கருத்து. (௩)

௬௩௪. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(இ - ள்.) சிறுமை பல செய்து - (தன்னை விழைந்தார்க்கு முன் இல்லாத) துன்பங்கள் பலவற்றையும் விளைத்து, சீர் அழிக்கும் - (உள்ள) புகழையுங்கெடுக்கும், சூதின்-சூதுபோல், வறுமை தருவது-நல்குரவினைக் கொடுக்க வல்லது, ஒன்று - பிறிதொன்று, இல் - இல்லை; (எ - று.)

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால், 'சீரழிக்கும்' என்றார்; வறுமைக்கு எல்லையாவரென்பதாம்.

(கு - ரை.) விழைந்தார் - விரும்பினவர்: விரும்பியாடினவரென்க. நல்குரவு - தரித்திரம். முன்னர்க்கூறுப - இனிச்சொல்வர்: ௬௩௬-முதல் நான்கு கவிகளிற் காண்க. நல்இனம் - நல்லோர்சேர்க்கை. தீ இனம் - தீயோர் சேர்க்கை. வறுமைக்குஎல்லையாவர் - மிக்கவறுமையை யடைவரென்றபடி. எல்லை - முடிவெல்லை: முதிர்ச்சி. (௪)

௬௩௫. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்,

(இ - ள்.) இல் ஆகியார் - (முற்காலத்துத் தாம் உளராகியே) இலராகி யொழிகினர்,—கவறும் - கவற்றினையும், கழகமும் - (அஃது ஆடுங்) களத்தினையும், கையும் - (அவ்வாடற்குவேண்டுங்) கைத்தொழிலினையும், தருக்கி-மேற்கொண்டு, இவறியார் - கைவிடாத வேந்தர்; (எ - று.)

கைத்தொழில் - கெல்லும் ஆயம் படப் பிடித்து எறிதல். * அவ்விவறுதலால் பாண்டவர் தம் அரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினரென அனுபவங் காட்டியவாறு.

இவை யைந்து பாட்டானும், அதனது வறுமைபயத்தற் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) களம் - இடம். ஆயம் பட - பந்தயலாபம் உண்டாக. இவறுதல் - இறுகப்பிடிக்கை: கைவிடாமை. ஆண்டு - ஒருவருஷகாலம்: அவ்வாறுஎன்றும் அதன்பின்பு என்றும் கூறுவாருமுளர். மறைந்தொழுகல் - அஜ்ஞாதவாசம். கவறு முதலியவற்றை விரும்பியதனால், பாண்டவர் தம் முடைய இராச்சிபத்தை யிழந்து பன்னிரண்டியாண்டு காட்டிலுறைந்து ஓரியாண்டு காட்டில் மறைந்தொழுகினரென அனுபவங்காட்டியவாறு. (கூ)

கூஉசு. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

(இ - ள்.) (தன் பெயர்சொல்லல் மங்கலமன்மையின்), சூது என்னும்-சூதென்று சொல்லப்படும், முகடியான்—, மூடப்பட்டார் - விழுங்கப்பட்டார்,—அகடு ஆரார் - (இம்மைக்கண்) வயிறு ஆரப்பெறார்; அல்லல் உழப்பர் - (மறுமைக்கண்) நிரயத்துன்பமுழப்பர்; (எ - று.)

செல்வங்கெடுத்து கல்குரவு கொடுத்தற்றொழில் வேறுபடாமையின் 'சூதென்னு முகடி' என்றும், வெற்றி தோல்விகள் நோக்கி ஒருபொழுதும் விடா ராகலின் 'ஈண்டு அகடாரார்' என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்கள் ஈட்டலின் 'ஆண்டு அல்லலுழப்பர்' என்றுங் கூறினர். யிராமை சொல்லவே, ஏனைப்புலன்கள் நுகரப்பெறுமை சொல்லவேண்டா வாயிற்று. உழப்பர் என்பது - எதிர்காலவினைச்சொல்.

(கு - ரை.) முகடி - மூதேவி: பாற்கடல்கடைந்தகாலத்தில் திருமகளுக்கு மூன் தோன்றியவள்: முகடு - மூன்: பகுதி, இ - பெண்பால்விகுதி: முகடியான் விழுங்கப்பட்டார் - முகடிக்கு முற்றும்வசப்பட்டவர். ஆரப்பெறார் - நிரம்பப்பெறார். நிரயம் - நரகம். உழப்பர் - அனுபவிப்பர். ஈண்டு - இவ்வுலகில். ஆண்டு - அவ்வுலகில். ஏனைப்புலன்கள் நுகரப்பெறுமை - மற்றை யிந்திரியங்கள் விஷயங்களையனுபவிக்கப்பெறுமை. வினைச்சொல் - இங்கு வினைமுற்று. சூதென்னும்முகடியென்பது - அபநுதியணி. (கூ)

கூஉஎ. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

---

* பீ - ம்: அவ்வாயத் தவறுதலால்

(இ - ள்.) காலை - (அறம்பொருளின்பங்கட்கு அடைத்த) காலம், கழகத்து புகின் - (அரசனுக்குச்) சூதாடுகளத்தினிடம் கழியுமாயின்,—(அக் கழிவு), பழகிய செல்வம்உம்-தொன்றுதொட்டுவந்த (அவன்) செல்வத்தினையும், பண்புஉம் - நற்குணங்களையும், கெடுக்கும் - போக்கும்; (எ - று.)

'பழகிய' என்பது, பண்புடனும் இயையும். தான் செய்துகொள்ளும் அறம்முதலியவேயன்றி முன்னோரைத் தொடங்கி வருகின்ற செல்வமும், முன்செய்த கல்வினையின் பயனுய பண்பும் இலவா மென்பதாம்.

(கு - ரை.) அடைத்த - உரியதாக அமைக்கப்பட்ட. கழகத்துக்காலை புகின் என்பதற்கு - சூரிபவுதயமானவுடன் சூதாடுகளத்துக்குச்செல்வானுயின் என்றலும் ஒன்று. தான் தேடிச் சம்பாதிக்கின்ற அறம்முதலியனவேயன்றி முன்னோர்தொடங்கி வருகின்ற செல்வமும்,முன்செய்த கல்வினையின் பயனுகிய பண்பும் சூதாடுவதனுல் இல்லாமற்போமென்பதாம். (எ)

கூஙூ. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

(இ - ள்.) சூது—, பொருள் கெடுத்து - (தன்னைப் பயின்றவன்) பொருளைக் கெடுத்து, பொய் மேற் கொளீஇ - பொய்ம்மையை மேற்கொள்ளப்பண்ணி, அருள் கெடுத்து - (மனத்துஎழும்) அருளைக் கெடுத்து, அல்லல் உழப்பிக்கும் - (இவ்வாற்றுன் அவனை இருமையினும்) துன்பமுறுவிக்கும்.

இத்தொழில்கள்மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி வெற்றி செற்றம் என்பன முறையே கருவிகளாகவுங் கொண்க. மூன்னதனுன் இம்மையினும், ஏனையவற்றுன் மறுமையினுமாம். 'பொருள்கொடுத்து' என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு: 'மேற்கொளீஇ' என்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை.

(கு - ரை.) பயின்றவன் - பழகினவன். இத்தொழில்கள் மூன்று - பொருள்கெடுத்தல் பொய்யைமேற்கொள்ளப்பண்ணுதல் அருளைக்கெடுத்தல் என்ற இந்த மூன்றுசெயல்கள். வினைமுதல் - கருத்தா. செற்றம் - பகைமை. தோல்வியாற் பொருளைக்கெடுத்தலையும், வெற்றியாற் பொய்யைமேற் கொள்ளப்பண்ணுதலையும், கோபத்தா லருளைக்கெடுத்தலையும் சூது தோற்றுவிக்குமென்றவாறு. மூன்னதனுன் - பொருள்கெடுத்தலால். ஏனையவற்றுன்-பொய்யைமேற்கொள்ளப்பண்ணுதல் அருளைக்கெடுத்தல் என்பவற்றால். ஆம்-துன்பமுண்டாக்குவதாமென்க. முடிவு-முடிக்குஞ்சொல். மேற்கோடல்-மேற் கொள்ளுதல். பொருள்கெடுத்து என்ற இடத்துப் பொருள்கொடுத்து என்று பாடமாயின், கொடுத்து என்ற வினையெச்சம், மேற்கொளீஇ என்றவிடத்துள்ள மேற்கொள்ளுதலென்ற வினைமுதல்வினையோடு இயையு மென்றூர்: வினைமுதல் வினை - சூதாடுபவனதுதொழில்: சூதாடுபவன் தன்பொருளைக் கொடுத்துப் பொய்யை மேற்கொள்ளுகின்று னென்க. (அ)

கூஙூ. உடைசெல்வ மூண்ணளி கல்வியென் றைந்து
மடையாவா மாயஞ் கொளின்.

(இ - ள்.) ஆயம் கொளினின் - (அரசன்) சூதினை (த் தனக்கு வினைதத் தொழிலாக) விரும்புமாயின்,—(அவனை), ஒளி - ஒளியும், கல்வி - கல்வியும், செல்வம் - செல்வமும், ஊண் - ஊணும், உடை - உடையும், என்று ஐந்து உம் - என்று இவ்வைந்தும், அடையா ஆம் - சாராவாம்; (எ - று.)

ஆயம் - ஆகுபெயர். இச்சிறப்புமுறை, செய்யுள்நோக்கிப் பிறழ்ந்தது. செல்வம் - அறுவகை யுறுப்புக்கள். ஊண் உடை என்பனவற்றால், துப்புரவுகளெல்லாம் கொள்ளப்படும். காலமுங் கருத்தும் பெருமையின், இவை உளவாகா என்பதாம்.

இவை நான்குபாட்டானும், சிறுமைபலசெய்து அவற்றான் இருமையுங் கெடுத்தல் கூறப்பட்டது.

(கு - ரை.) வினைதத்தொழில்-உற்சாகத்தோடு போதுபோக்குஞ்செயல். விரும்பும் - விரும்புவான். உடை - ஆடை. ஆயம் என்ற சொல் - சூதாடு கருவியினுற் பெறப்படும் பத்தயமாகிய தாயம்: இது - சூதுக்கு ஆயினமையால், காரியவாகுபெயர். ஒளி - மதிப்பு. மதிப்பு உண்டாயின், கல்வி சிறக்கும்: கல்வியிருப்பின், செல்வம் சிறக்கும்: செல்வமிருப்பின் ஊணும் உடையும் சிறக்கும்: இங்ஙனம் மதிப்புமுதலியன தோன்றிக் கல்வி முதலியவற்றைச் சிறக்க வைத்தலால், ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று அமையவேண்டியிருக்க, செய்யுளாதலின் 'உடைசெல்வமூணொளி கவில்' என்று முறைபிறழ்ந்த தென்க. செல்வம் என்பது - அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன. துப்புரவு - அனுபவித்தற்குரிய பொருள்கள். என்று என்னும் எண்ணிடைச்சொல் - நின்ற விடத்துப்பிரிந்து பிறவிடத்தும் சென்றுபொருந்தி, 'ஐந்து'என்னுந் தொகை பெற்றது. இனி, என்ற ஐந்து என்பன என்றைந்தெனத்தொக்கனவெனலும் ஒன்று. மதிப்பு முதலியவற்றைப் பெறுமாறு முயலவேண்டிய காலத்து அச்செயலை யொழிந்து சூதாட்டத்தின்மேற் கருத்துச்செல்லுதலால், ஒளி செல்வம் முதலியன சூது ஆடுவோர்க்கு உளவாகா என்பதாம். (கூ)

கூசo. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
மூழத்தொறூஉங் காதற் றுயிர்.

(இ - ள்.) இழ தொறூஉம் - (சூதாடலான் இருமைப்பயன்களையும்) இழக்குந்தோறும், காதலிக்கும் - (அதன்மேற்) காதல்செய்யும், சூதுபோல் - சூதன் போல,—துன்பம் உழ தொறூஉம் - (உடம்பான் மூவகைத்) துன்பங் களையும் அனுபவிக்குந்தோறும், காதற்று - (அதன்மேற்) காதலையுடைத்து, உயிர்—; (எ - று.)

சூது - ஆகுபெயர். உயிரினது அறியாமை கூறுவார்போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இதன் எதிர்மறைமுகத்தால், சூதினை வெறுத்தொழி வானை யொக்கும் உடம்பினை வெறுத்தொழியும் உயிர் எனவுங் கொள்க.

இதனுன், அஃது ஒழிதற்கு அருமையும், ஒழிந்தாரது பெருமையுங் கூறப்பட்டன.

(கு - ரை.) இருமைப்பயன் - இம்மை மறுமைகளிலனுபவிக்குஞ் சுகாநுபவம். அதன்மேல் - அச்சுதின்மேல். காதல்செய்யும் - விருப்பங் கொள்ளும். மூவகைத்துன்பங்கள், முன் கூறப்பட்டன. அதன்மேல் - அவ் வுடம்பின்மேல். சூது என்பது - அதனையாடுவோனுக்கு ஆகிவந்ததனுல், பண்பாகுபெயர். இக்குறள்-உயிரின் அறியாமையைக் கூறுவதுபோன்று சூத னுடைய அறியாமையைக் கூறுதலேயே கருத்தாகக்கொண்ட தாகலின், உப மேயமாகக்கூறவேண்டிய இடத்துச் சூதனது அறியாமையை யாப்புறுத்தற் [யாப்புறுத்தல் - வற்புறுத்தல்.] பொருட்டு, 'இழத்தொறுங் காதலிக்குஞ் சூது போல்' என உபமானமாக்கிக் கூறினர்: உபமானம் உபமேயத்தினும் சிறந் திருக்கு மென்பது, அலங்காரநூலார்கொள்கை: உபமான உபமே யங்களே மாற்றிச்சொல்லியதால், இது-விபரீதவுவமையணி: எதிரிலேயணி யென்பதும் இது: "பொருளே உவமஞ்செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பினஃதுவமமாகும்" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தையும் அறிக. சூதாடுவோன் இருமைப்பயன்களையும் தான் இழத்தலையறியாது அதனையே விரும்புவா னென்பது, கருத்து. (கo)

கூடு - ஆம் அதிகாரம்.—மருந்து.

பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதம்முதலிய பிணிகள் வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன்கழிவின்கணல்லது தீரா மையின் அவைஒழித்து ஏனைக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுகின்றார். காரணங்களாவன-உணவு செயல்களது ஒவ் வாமை; ஆகலின், பிணிகளும் காரணத்தான் வருவனவாயின.

(கு - ரை.) பழவினை - முற்பிறவியிற்செய்த தீவினை. காரணங்களான்- பிறகாரணங்களால்: காரணங்கள் - உணவுசெயல்கள் என்னும் இவற்றின் ஒவ்வாமை. வாதம் முதலிய பிணிகள் - வாதம் பித்தம் சிலேட்டுமம் என்னும் இவற்றின்மாறுபாட்டினுல் வினையும் வியாதிகள். கழிவின்கண் - நீக்கத்தில். அவை - பழவினையான்வருவன. ஏனை - பழவினையின்வேறுன. திறம் - கூறுபாடு.

கூசக. மிகினும் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(இ - ள்.) மிகின்உம் - (உணவும் செயல்களும் ஒருவன்பகுதிக்கு ஒத்த வளவினவன்றி அதனின்) மிகுமாயினும், குறையின்உம் - குறையுமாயினும், நூலோர் - ஆயுள்வேதமுடையாரால், வளி முதல் ஆ எண்ணிய - வாதம்முத லாக எண்ணப்பட்ட, மூன்று - மூன்றுநோயும், நோய் செய்யும் - (அவனுக் குத்) தன்பஞ்செய்யும்; (எ - று.)

'நூலோர் எண்ணிய'எனவே, அவர்*அவ்வாற்றுன் வருத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெற்றும். அவற்றிற்குஉணவு ஒத்தலாவது - சுவைவீரியங்களானும், அளவானும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது-மனமொழிமெய்களாற் செய்யுந் தொழில்களே அவை வருந்துவதற்குமுன்னே ஒழிதல்.இவையிரண்டும் இங்ஙனமன்றி மிகுதல்குறைதல் செய்யின் அவை தத்தம்நிலையில் நில்லாவாய் வருத்து மென்பதாம். காரணமிரண்டும், அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

இதனுல், யாக்கைகட்கு இயல்பாகிய நோய் மூவகைத்து என்பதூஉம், அவை தூன்பஞ்செய்தற்காரணம் இருவகைத்து என்பதூஉம் கூறப்பட்டன. இன்பஞ்செய்தற்காரணம் முன்னர்க் கூறுப.

(சு - ரை.) பகுதி - தேகத்தின்கூறுபாடு. ஆயுள்வேதம் - வைத்திய சாஸ்திரம். வாதம் - வாயு. ஐ - சிலேஷ்மம். பகுதிப்பாடு - பகுப்பு. பெற்றும் - பெற்றேம். சுவைவீரியங்கள் - ருசியும் சத்தும். இவையிரண்டும் - உணவுஞ் செயலும். அவை - வாதம்முதலியன. காரணம் இரண்டு - உணவு செயல் என்பன. மிகினும்குறையினும் என்பவற்றிற்கு 'உணவும் செயலும்' என்ற எழுவாய்கள், அவாய்நிலையால்வந்தன: அவ்வுணவுசெயல்களின் மிகுதியும் குறைவுமே நோய்க்குக் காரணங்களென்க. முற்றும்மை விகாரத்தால்தொக்கது 'மூன்று' என்பதில்: ''இனேத்தென்றறிபொருள்...வினேப்படுத்துரைப்பின் உம்மைவேண்டும்''என்பது விதியாதலால், அஃது இல்லாமையை விகாரத்தால்தொக்கதென்றூர். முன்னர்க்கூறுப - இனிக்கூறுவர்: அடுத்த கவிமுதற் காண்க. (க)

கூசஉ. மருந்தெனவேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
தற்றது போற்றி யுணின்.

(இ - ள்.) (ஒருவன்), அருந்தியது - முன்உண்டது, அற்றது - அற்றபடியை, போற்றி - (குறிகளால்) தெளியஅறிந்து, உணின் - (பின்) உண்ணுமாயின், —யாக்கைக்கு - (அவன்) யாக்கைக்கு, மருந்து என வேண்டா ஆம்-மருந்தென்று (வேறு) வேண்டாவாம்; (எ - று.)

குறிகளாவன - யாக்கைநோய்மை, தேக்கின் தூய்மை, காரணங்கள் தொழிற்குஉரியவாதல், பசிமிகுதல் என இவை முதலாயின. பிணிகள் யாக்கைய வாகலின், 'யாக்கைக்கு' என்றூர். 'உணின்' என்பது, அதன் அருமை தோன்ற நின்றது.

(சு - ரை.) உண்டது - உண்டவுணவு. அற்றபடி - சீரணித்ததன்மை. குறிகளாவன-(உண்டது அற்றதற்குக்) குறிகளாவன. யாக்கை நோய்மை-உடம்பு இலேசாகஇருத்தல். தேக்கின் தூய்மை - ஏப்பம் அஜீர்ணத்தைக் குறிப்பிக்கும் தூர்க்கந்தமில்லாமல் சுத்தமாய்வருதல். காரணங்கள் - உறுப்புக்கள். யாக்கைய - உடம்பிற்கு உரியவை. முதலிய என்றதனுல், மனம் மொழிகள் தம்வயத்தவாதல் சோம்புதலின்மை முதலியன கொள்க. நோய்

* பி - மீ: அவற்றுன்

கள் யாக்கைக்கு வருவன ஆதலால், 'யாக்கைக்கு மருந்து வேண்டா' என்ற ரென்க. 'உணின்' என்ற எதிர்காலம், அங்ஙன் உண்ணுதலின் அருமை தோன்றநின்றது. (உ)

கூசஉ. அற்ற லளவறிந் தூண்க வஃதுடம்பு
பெற்ற னெடிதுய்க்கு மாறு.

(இ - ள்.) அற்றல் - (முன்உண்டது) அற்றல், அளவு அறிந்து - (பின் உண்பதனை) அறும் அளவு அறிந்து, உண்க - (அவ்வளவிற்றாக) உண்க; உடம்பு பெற்றான் - (இறப்பவும் பலவாய பிறயாக்கைகளிற் பிழைத்துப் பெறற்கு அரிய இம்மானுட) யாக்கையைப் பெற்றான், நெடிது உய்க்கும் ஆறு - (அதனை) நெடுங்காலம் கொண்டுசெலுத்தும் நெறி, அஃது - அது (ஆகலான்); (எ - று.)

இம்மைமறுமைவீடுபேறுகள் எய்தற்பாலது ஈதொன்றுமே யாகலின் 'உடம்புபெற்றான்' என்றும், அது நெடிதுநின்றழி அவை பெருகச்செய்து கொள்ளலா மாகலின் 'நெடிதுய்க்குமாறு' என்றும் கூறினர். 'பெற்றல்' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(கு - ரை.) அற்றல் - சீரணித்தால். அறும் - சீரணிக்கும். அவ்வளவிற்று ஆக-சீரணிக்கும் அளவையுடையதாக. இறப்பவும்-மிகவும். பிழைத்துதப்பி. ''புன்மர நெளிபுழுப் புள்விலங்கெனும், பன்மையதுயர்செயும் பவங்கடப்பியே, வன்மைகொணிலமிசை மக்களாகுதல், நன்மைகொளுயிர்க்கலா லரிது'' என்றதுங் காண்க. மானுடயாக்கை - மநுஷ்யசரீரம். அதனைநெடுங்காலங்கொண்டுசெலுத்தும்நெறி - யாக்கையைக்கொண்டு நெடுநாள்சீவித்திருக்குமுபாயம். அது ஆகலான் - அளவறிந்துண்ணுதலாதலால். எய்தற்பாலது - அடையத்தக்கது. ஈது ஒன்றுமே-இந்த மனிதப்பிறப்பு ஒன்றினால் மாத்திரமே. பெற்றான் என்றது-பெறுதலின் அருமைதோன்றநின்றது. அது நெடிதுநின்றழி - அம்மனிதவுடம்பு நெடுநாள் அழிவின்றி நின்றால். அவை-இம்மைமறுமை வீடுபேறுகளை. பெற்றலென்றுபாடமோதுவாருமுளர் என்பதன்கருத்து - பெற்றால் என்ற பதம்பிரித்துப் பொருள்சொல்வாரு முளரென்பது. (ங)

கூசச. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(இ - ள்.) அற்றது அறிந்து - (முன்உண்டது) அற்றபடியை அறிந்து, துவர பசித்து - பின் மிகப்பசித்து, மாறு அல்ல - (உண்ணுங்கால்) மாறு கொள்ளாத உணவுகளை, கடைப்பிடித்து துய்க்க - குறிக்கொண்டு உண்க.

'அற்றதறிந்து' என்னும் *பெயர்த்துரை, அதனை யாப்புறுத்தற் பொருட்டு. உண்டதுஅற்றாலும் அதன்பயனுகிய இரதம் அற்ற தாகலான் அதுவும் அறல்வேண்டு மென்பார், 'மிகப்பசித்து' என்றார். பசித்தல்வினை,

* பி - ம்: பெற்றதன்பெயர்த்துரை

ஈண்டு, உடையான்மேல் நின்றது. மாறுகொள்ளாமையாவது - உண்பான் பகுதியொடு மாறுகொள்ளாமையும், காலவியல்பொடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன - முறையே வாதபித்தஐகளான் ஆய பகுதிகட்கு அடாதவற்றைச் செய்வன வாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்னுங் காலவேறுபாடுகளுள் ஒன்றற்கு ஆவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் *ஒத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம் பட்டவாற்றுல் தூய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், 'கடைப் பிடித்து' என்றார்.

(சு - ரை.) குறிக்கொண்டு - கவனித்து. பெயர்த்துரை - முன் கூறியதையே மீண்டுங் கூறுதல்: இது பயன்கருதிக் கூறிய தாதலால், கூறியதுகூறலென்னுங் குற்றமாகாது: அநுவாதம் [வழிமொழிதல்] என்னுங் குணமாம். "அற்றுலளவறிந்துண்க" என்ற கீழ்க்கூறியதனுல், இங்கு 'அற்ற தறிந்து' என்பது பெயர்த்துரையாம். அதனை-அற்றதறிதலை. யாப்புறுத்தல்-வற்புறுத்தல். இரதம் - சாரம். பசித்தலென்ற ஒனப்பெயராகியவயிற்றின் வினை, இங்கே அந்தவயிற்றையுடையானுகிய முதலின்மேல் ஏற்றிக்கூறப் பட்டது: உபசாரவழக்கு. தம்முள்-ஒன்றோடொன்று. அவையாவன - மாறு கொள்வனவாவன. அடாதவற்றை - பொருந்தாதவற்றை. பெரும்பொழுது - இளவேனில் முதுவேனில் கார் கூதிர் முன்பனி பின்பனி என்னும் ஆறுபரு வங்கள்: சித்திரைமுதலாக இவ்விரண்டுமாதங்கள் முறையே இவ்வாறு பரு வங்கட்கு முரியனவாம். சிறுபொழுது-காலே நண்பகல் எற்பாடு மாலே யாமம் வைகறை என்று ஆறுபிரிவாம்: இவை சூரிய உதயகாலமுதல் ஒவ்வொன்று பப்பத்துநாழிகையாக முறையே அமையும். தம்முள் ஒத்து - சமபாகமாகக் கலந்து. மனம்பட்ட ஆற்றுல் தூய்ப்பின் - மனம்விரும்பியபடி யுண்டால்.(சு)

கூசடு. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) மாறுபாடு இல்லாத உண்டி - (அம்மூவகை) மாறுகொள்ளும் இல்லாத உணவை, மறுத்து உண்ணின் - தன்உள்ளம்வேண்டியவளவினுன் அன்றி (ப் பிணிவாராவளவினுல் ஒருவன்) உண்ணுமாயின், உயிர்க்கு - அவ னுயிர்க்கு, ஊறுபாடு இல்லை-(பிணிகளால்) துன்பம்வினைதல் உண்டாகாது.

உறுவதனை 'ஊறு' என்றார்: அஃது இன்பத்திற் செல்லாதாயிற்று, †இல்லையென்பதனேடு தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரே யாகலின், அதன்மேல் வைத்துக் கூறினர். மாறுபாடுஇல்வழியும் குறைதல் நன்று என்பதாம்.

இவைதான்குபாட்டானும், உண்ணப்படுவனவும், அவற்றது அளவும், காலமும், பயனும் கூறப்பட்டன.

பி - ம்: * அளவொத்து. † இல்லேஎன்பது.

(கு - ரை.) மூவகைமாறுகோள்-பகுதிபற்றியும், காலவியல்புபற்றியும், சுவைவீரியங்கள்பற்றியும் மாறுபடுகை. உறுவதாகியதுன்பத்தினை 'ஊறு' என்றார்: இச்சொல் வினைமுதற்பொருள்விகுதிபுணர்ந்துகெட்டு முதல்நீண்ட பெயராம். உறுவது என்ற காரணம்பற்றி வந்த இத்தப்பெயர்ச்சொல், இன்பமும் உறுவதேயாயினும் அதன்மேற்செல்லாது துன்பத்தின்மேலேயே செல்லுவதாயிற்று: இதற்குக்காரணம்-இல்லையென்பதனோடு தொடர்புபட்டிருத்தலாலும், அதுவே வேண்டப்படாததாதலாலுமாமென்க. துன்பமுறுவது உயிரேயாதலின் அதன்மேல்வைத்துக்கூறினார் - பிணிஉடம்பைப்பற்றியதேயாயினும் அந்தப்பிணியால் துன்பம் உறுவது உயிரே யாதலால், உயிரின் மேல்வைத்து 'ஊறுபாடில்லையுயிர்க்கு' என்றார். குறைதல் நன்று - குறைவாகவுண்ணுதல் நன்று என்றவாறு. (கு)

கூசசு. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

(இ - ள்.) இழிவு அறிந்து-அக்குறைதலை (தன்றென்று) அறிந்து, உண்பான்கண்-(அவ்வாறே) உண்பவன்மாட்டு, இன்பம் போல்-இன்பம் (நீங்காது நிற்குமாறு) போல,—கழி பேர் இரையான்கண் - மிகப்பெரியஇரையை விழுங்குவான்மாட்டு, நோய்—, நிற்கும் - நீங்காதுநிற்கும்; (எ - று.)

அவ்வாறே உண்டல் - உண்ணலாமளவிற் சிறிதுகுறைய உண்டல். இன்பமாவது - வாதம்முதலிய மூன்றும் தத்தம்நிலையிற் றிரியாமையின் மனமொழிமெய்கள் அவன்வயத்தவாதலும், அதனுன் அறம்முதலிய நான்கும் எய்தலுமாம். இரையை அளவின்றியெடுத்து அதனுன் வருந்தும் விலங்கொடு ஒத்தலின், 'இரையான்' என்றார். விதியெதிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது, இரண்டானும் பெறுதற்கு.

(கு-ரை.) அக்குறைதலை-மாறுகோளில்லாவிடத்தும் உணவுகுறைதலை. உண்பவன்மாட்டு-உண்பவனிடத்தில். தம்தம்நிலையின் திரியாமையின் - தம்தமக்குரியநிலைமையினின்று மாறுபடாமையால். எய்தல்-அடைதல். இரை-விலங்கு உட்கொள்ளும் உணவு. உணவை அளவின்றி மிகுதியாக உண்பவன் அதனுல் வருந்தும் மிருகத்தோடுஒப்பா னென்ற காரணத்தினுல், அவனை 'இரையான்'என்றது. குறைவாக வுண்ணவேண்டுமென்பது பெறப்படுதலால், 'இழிவறிந்துண்பான்கணின்பம்' என்பது, விதி: மிகுதியாக உண்ணலாகாது என்பதுபெறப்படுதலால், 'கழிபேரிரையான்கணோய்' என்பது, எதிர்மறை: விதி யெதிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு-விதியாயுள்ளதை 'இழிவறிந்துண்பான்கணின்பம்போல்' என்று உபமானமாகவும் எதிர்மறையாயுள்ளதை 'நிற்கும் கழிபேரிரையான்கணோய்' என்று உபமேயமாகவும் கூறியது, மாறுபாடில்லாத உணவை உண்ணலாமளவிலே சிறிது குறைய உண்டால் இன்பமுண்டாமென்றும் மிருகம்போல் அளவுகடந்து மிகப்பெரிய இரையை விழுங்கினுல் நோயுண்டாமென்றும்

உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கருதிய விஷயம் பெறப்படுதற்கு என்ற வாறு. கழி - உரிச்சொல். உவமையணி. (சு)

கூசஎ. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
ஞேயள *வின்றிப் படும்.

(இ - ள்.) தெரியான் - (தன்பகுதியும் அதற்குஏற்றஉணவும் காலமும்) ஆராயாது, (வேண்டியதோருணவை வேண்டியதோருகாலத்து), தீ அளவு அன்றி - வயிற்றுத்தீயளவன்றி, (ஒருவன்), பெரிது உண்ணின் - மிகஉண்ணு மாயின், நோய் அளவு இன்றி படும் - (அவன்மாட்டு) நோய்கள் எல்லையற வளரும்; (எ - று.)

தெரியாமையினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய் - சாதியொருமை.

இவையிரண்டுபாட்டானும், அவ்வகைஉண்ணுவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

(கு - ரை.) வயிற்றுத்தீ - பசிக்கனல்: ஜாடராக்நி: சீரணசக்தி யிதனுல் தான் உண்டாவது. அவன்மாட்டு - அவனிடத்தில். தெரியாமையினைக்கு, உண்பானுடையசரீரத்தின் பகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் என் னுஞ் செயப்படுபொருள்கள், 'மருந்து' என்னும் இவ்வதிகாரத்திற்கு ஏற்ப வந்தன என்க. நோய்-சாதியொருமை. அவ்வகை உண்ணுவழிப்படும் இழுக்கு- தீயளவுதெரிந்து குறைவாக உண்ணுவிட்டால் உண்டாகும் குற்றம். (எ)

கூசஅ. நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(இ - ள்.) (மருத்துவனுயினுன்), நோய் நாடி - (ஆதுரன்மாட்டு நிகழ் கின்ற) நோயை (அதன்குறிகளான் இன்னதென்று) துணிந்து, நோய் முதல் நாடி - (பின்) அதுவருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் நாடி - (பின்) அதுதீர்க்கும்உபாயத்தினை அறிந்து, வாய்ப்ப செயல் - (அதனைச்செய்யும்வழிப்) பிழையாமற் செய்க; (எ - று.)

காரணம் - உணவு செயல் என முற்கூறியஇரண்டும். அவற்றை ஆயுள் வேதமுடையார் நிதானமென்ப. அவைநாடுதற்பயன் - நோயினையும் வாயி னையும் ஐயமறத் துணிதல். மருந்துசெய்தல், உதிரங்கழலுதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, 'அதுதணிக்கும்வாய்' என்றார்; "கழுவாயுமுள" என்றார், பிறரும். பிழையாமை - பழைய மருத்து வர் செய்துவருகின்ற முறைமையின் தப்பாமை.

(கு - ரை.) மருத்துவன் - வைத்தியன்: மருந்துதருபவன். ஆதுரன் - நோயால் வருந்துவோன். அதனை - தீர்க்கும் உபாயத்தை. பிழையாமல் - தவறுமல். நிதானம்-காரணம். 'நோய்முதல்' என்றது-நிதானத்தை. அவை - அவ்வுணவுசெயல்களை. வாய் - நோயைத்தீர்க்கும் உபாயம்: முதலிய என்றது

* பி - ம்: அன்றி

னல் பற்றுப்போடுதல் கலிக்கமிடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்கும். உதிரங்களேதல் - இரத்தத்தைவெளிப்படுத்தல். வாய் என்றது-வழி அல்லது உபாயமென்றபொருளில் வருதலே ''கழுவாயுமுளை'' என்ற இடத்தும் காண்க: இது - புறநானூறு ஈசை - ஆம்பாடலிலுள்ளது. கழுவாய் என்பதற்கு-கழுவும் [போக்கும்]வழி அல்லது உபாயம்என இதற்குப் பொருள் காண்க. கழுவாய்= பிராயச்சித்தம். பிறர் என்றது - அச்செய்யுளேயியற்றிய ஆலத்தூர்கிழாரை. வாய்ப்ப - பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமைக்கு ஏற்ப. செயல்- உடன்பாட்டு வியங்கோள்முற்று. (அ)

கூசகூ. உற்ற னளவும் பிணியளவுங் காலமும்
கற்றன் கருதிச் செயல்.

(இ - ள்.) கற்றன் - (ஆயுள்வேதத்தினைக்) கற்ற மருத்துவன், (அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால்), உற்றன் அளவுஉம் - ஆதுரன் அளவினையும், பிணி அளவுஉம்-(அவன்கண்ணிகழ்கின்ற) நோயின் அளவினையும், காலம்உம்-(தன்செயற்குஏற்ற) காலத்தினையும், கருதி - (அந்நூல்நெறியால்) நோக்கி, செயல் - (அவற்றோடு பொருந்தச்) செய்க; (எ - று.)

ஆதுரன்அளவு - பகுதி பருவம் வேதனை வலிகளின் அளவு. பிணியளவு - சாத்தியம் அசாத்தியம் யாப்பியம் என்னும் சாதிவேறுபாடும், தொடக்கம் நடு ஈறு என்னும் அதன்பருவவேறுபாடும், வன்மைமென்மைகளும் முதலாயின. காலம் - மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் நூல் நெறியானும் உணர்வுமிகுதியானும் ஆராய்ந்து செய்க வென்பார், 'கற்றன் கருதிச் செயல்' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், அவ்விழுக்குப்பட்டுழி மருத்துவன் தீர்க்குமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) அந்நூனெறியாளேக்கி - வைத்தியசாஸ்திரத்திற் கூறிய முறைப்படி யாராய்ந்து. அவற்றோடு - உற்றனளவு பிணியளவு காலம் என்பவைகளுடன். உற்றன் - நோயுற்றவன். பருவம் - பிராயம்: இளமை முதுமைமுதலியன. வேதனை - துன்பம். வலி - உடல்வலிமை. சாத்தியம் - மருந்தினால் தீர்க்கக்கூடியநோய்: அசாத்தியம் - மருந்தினால் தீர்க்கக்கூடாத நோய்: யாப்பியம் - அறத்தீர்க்கமுடியாது காலங்கழித்தற்கு உரியது. அதன் - நோயின். காலம் கூசை - ஆங் குறளினுரையிற் கூறப்பட்டன. அவ்விழுக்குநீயினளவறிந்து குறைவாகவுண்ணுமையால் நேர்ந்த நோயாகிய குற்றம். பட்டுழி - உண்டானஇடத்து. கற்றன் - வினைமுதல். உற்றனளவு பிணியளவு காலம் என்ற இம்மூன்றும் பிழையாமல் சாஸ்திர வழியினாலும் தன்னுணர்வுமிகுதியினாலும் மருத்துவன் ஆராய்ந்து பரிகாரஞ்செய்யவேண்டுமென்பதாம். (கூ)

கூருO. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலற் கூற்றே மருந்து.

(இ - ள்.) மருந்து - (பிணிக்கு) மருந்தாவது;—உற்றவன் - (அதனை) உற்றவன், தீர்ப்பான் - (அதனைத்) தீர்க்கும் மருத்துவன், மருந்து - (அவ

னுக்குக் கருவியாகிய) மருந்து, உழைச்செல்வான் - (அதனைப் பிழையாமல்) இயற்றுவான், என்ற அப்பால் நால் கூற்று - என்றுசொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்குநிறத்தது; (எ - று.)

நான்குஎன்னும் எண் வருகின்றமையின், அதுநோக்கி 'அப்பால்'என்று ஒழிந்தார். 'நாற்கூற்றது' என்பது, விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன் வகை நான்காவன - பொருளுடைமை, மருத்துவன்வழிநிற்றல், நோய்நிலை யுணர்த்தல்வன்மை, மருத்துத்துன்பம்பொறுத்தல் என இவை. தீர்ப்பான் வகை நான்காவன - *நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனை †வழிபட்டு ஒதிய கல்வியும் நுண்ணறிவு முடைமை, பலகாலும் தீர்த்துவருதல், மன மொழிமெய்கள் தூயவாதல் என இவை. மருத்தின்வகை நான்காவன - பலபிணிகட்கும் ஏற்றல், சுவைவீரியம்விளைவு ஆற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுநியோடுபொருந்துதல் என இவை. இயற்று வான்வகை நான்காவன - ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனமொழிமெய் கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல்வன்மை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடியவழியல்லது பிணி தீராமையின், இத் தொகுதியையும் 'மருந்து' என்றார். ஆயுள்வேதமுடையாரும் இவை கால் களாகநடக்கு மென்பதுபற்றி 'பாதம்' என்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமா மென்றுங் கூறினர்.

இதனால், அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டன.

(கு - ரை.) உற்றவன் - நோயுற்றவன். உழைச்செல்வான் என்றது - நோயாளியின் அருகேயிருந்து அவனிடத்துப்போய்த் தக்ககாலத்தில் மருந்து முதலியன கொடுப்பவனை. அப்பால் - அந்தப்பகுதி: அதாவது நான்குபகுதி. நான்குஎன்னும்எண் மேலே வருகின்றதனால், அதுநோக்கி, நான்கு என்று கூறவேண்டுவதை 'அப்பால்' என்று சுட்டிக்கூறியொழிந்தார்: சுட்டுமுன் வந்தது, செய்யுளாதலின். 'நான்கு பகுதியையுடைய நான்கு நிறத்தது' எனவே, உற்றவன் முதலிய நான்குநிறத்தில் ஒவ்வொன்றிலும் நான்கு பகுதி யிருத்தல் அறிக. நாற்கூற்றது என்பது - நாற்கூற்றுஎன்று விகாரப் பட்டுவந்தது. மருத்துவன் வழிநிற்றல்-வைத்தியன் சொன்னபடி நடத்தல். மருத்துத் துன்பம் - மருந்தினாலாகுந் துன்பம். விளைவு - பயன். ஆற்றல் - நோயைத் தீர்க்குந் திறம். பகுதி-உடலின் இயல்பு. இயற்றுவான்-மருந்து செய்பவன்: வைத்தியன். இவையெல்லாம் கூடினாலல்லாமல் நோய் தீராமை யால் இந்நான்குஞ்சேர்ந்த தொகுதியை 'மருந்து' என்றாரென்க. அதனை - நோயை. என்ற அப்பால் என்பன, என்றப்பாலனைத் தொக்கன. அங்க வியலில் நட்பியல் முற்றிற்று. (கo)

அங்கவியல் முற்றிற்று.

---

* பி-ம்: பலபிணிநோய் காண்டற்கு அஞ்சாமை, † வழிபட்டு எய்திய.

ஒழிபியல்.

இனி, அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்காதொழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் குடிமை கூறுகின்றார்.

(கு - ரை.) ஒழிபு-(கூறப்படாமல்) ஒழிதல்: கூறப்படாமலொழிந்த விஷயத்திற்கு ஆகுபெயர். இத்தொடர்-ஒழிபைப்பற்றிய இயல் என இரண்டனுருபும் பயனுந் தொக்கதொகையாக விரியும். போக்கியார்பாடலே நோக்குமிடத்து இந்த ஒழிபியலுக்குக் குடியியல் என்று பெயர் வழங்கியதாகத்தெரிகின்றது.

கூசு - ஆம் அதிகாரம்.—குடிமை.

அஃதாவது - உயர்ந்தகுடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர்ந்தகுடிப் பிறப்பு நல்வகைவருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப் பற்றி, இது முன்வைக்கப்பட்டது.

(கு - ரை.) உயர் குடிப்பிறப்பென்பது பிரமகூத்திரிய வைசிய சூத்திரரென்கிற நல்வகைவருணத்தார்க்கும் இன்றியமையாதாதலால், அச்சிறப்புப்பற்றி, மானம் பெருமை முதலிய மற்றைய குணங்களுக்கு முன் இக்குடிமை வைக்கப்பட்டதென்க.

கூருக. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(இ - ள்.) செப்பமும் நாண்உம்-செம்மையும் நாணும், ஒருங்கு - சேர, இல் பிறந்தார்கண் அல்லது - குடிப்பிறந்தார்மாட்டல்லது, (பிறர்மாட்டு), இயல்புஆக இல்லை - இயற்கையாக உளவாகா; (எ - று.)

'இல்,' 'குடி' என்பன - ஈண்டு, உயர்ந்தவற்றின்மேல. செம்மை - கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுகாமை. நாண்-பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின், ஒருவர் கற்பிக்கவேண்டாமல் தாமே உளவாம்; பிறர்க்காயின், கற்பித்தவழியும் நெடிதுநில்லாவென்பதாம்.

(கு - ரை.) ஈண்டு - இவ்வதிகாரத்தில். 'இல்' என்று அடைமொழியின்றிக் கூறப்பட்டதாயினும், உயர்ந்ததையே காட்டும்: குடியென்பது உயர்ந்ததைக் காட்டுவதை மேலே காணலாம். செப்பமாவது - திரிகரணங்களும் ஒற்றுமைப்பட்டிருத்தல். மடங்குதல் - கூசுதல். "கருமத்தாலுணுதல் நாணு"என நாணுக்கு இலக்கணத்தை நாலாசிரியரே கூறுவர். செப்பம் நாண் என்ற இவ்விரண்டும், உயர்குடிப்பிறந்தார்க்கு ஒருவர் கற்பிக்காமல் தாமாகவே உண்டாகும்: உயர்குடிப்பிறவாதார்க்கோ இவை கற்பிக்கப்படினும் நெடிதுநில்லா வென்பது கருத்து. (க)

கூருஉ. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) குடி பிறந்தார் - உயர்ந்தகுடியின்கட் பிறந்தார்,—ஒழுக்கம் உம் வாய்மைஉம் நாண்உம் இ மூன்றுஉம் - (தமக்குரிய) ஒழுக்கம் மெய்ம்மை

நாண் எனப்பட்ட இம்மூன்றன்கண்ணும், இழுக்கார் - (கல்வியானன்றித் தாமாகவே) வழுவார்; (எ - று.)

ஒழுக்கம்முதலியன மெய்ம்மொழிமனங்களின வாகலின், அம்முறைய வாயின. இழுக்குதல் அறியாதுவருகின்றமையின், 'இழுக்கார்' என்றார்.

(கு - ரை.) கல்வியானன்றி - கல்வியினுற் சோர்வுபடாதிருத்தல் மாத்திரமல்லாமல். இச்செய்யுளிற் கூறப்பட்ட ஒழுக்கம் வாய்மை நாண் என்பன- உடல் மொழி மனம் என்பவற்றிற்கு உரியவைக ளாதலால், அம்முறையில் வைக்கப்பட்டன. இழுக்குதல் என்பது - தம்மையுமறியாது தவறுதல். தம்மையறியாமலும் ஒழுக்கம் முதலியவற்றினின்று தவறு ராதலால், 'குடிப் பிறந்தார் இழுக்கார்' என்றார். ஒழுக்கமென்பது - அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று வழுவாது நடத்தல். (உ)

கூற்று. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(இ - ள்.) வாய்மை குடிக்கு - (எக்காலத்தும்) திரிபில்லாத குடியின் கட் பிறந்தார்க்கு,—நகை-(வறியார்சென்றவழி) முகமலர்ச்சியும், ஈகை-உள்ளனகொடுத்தலும், இன் சொல் - இன்சொற்சொல்லுதலும், இகழாமை - இகழாமையும், நான்குமும் - ஆகிய இந்நான்கும், வகை என்ப - உரிய கூறு என்று சொல்லுவர் (நூலோர்); (எ - று.)

பொய்ம்மை திரிபுடைமையின், திரிபின்மையை 'வாய்மை' என்றும்; "இல்லாரை எல்லாரும் எள்ளுவ" ராகலின், இகழாமையை அவர்கூறுக்கியுங் கூறினர். குடி - ஆகுபெயர். 'நான்கின்வகை' என்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின்வேறுபடு இந்நான்கான் உளதாமென்று உரைக்க.

இவைமூன்றுபாட்டானும், குடிப்பிறந்தார்து இயல்பு கூறப்பட்டது.

(கு - ரை.) திரிபு - வேறுபடுகை. பொய்ம்மை யென்பது வேறுபடுதலுடைமை யாதலால், வேறுபடாமையை 'வாய்மை' என்றார். "இல்லாரை" என்று தொடங்கும் வாக்கியத்தின் கருத்து - "இல்லாரை எல்லாருமெள்ளுவர்" என்றபடி பொருளில்லாதவரை இகழ்வது உலகத்தார்க்கு இயற்கையாயினும் குடிப்பிறந்தார் அங்ஙனஞ் செய்யா ரென்பார், இகழாமையை அக்குடிப்பிறந்தாரின் செயலாக்கிக் கூறினரென்பது. "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்" என்ற இம்மேற்கோள் - திருக்குறள், எகு - அதி. உ - ஆஞ் செய்யுளிலுள்ளது. 'குடி' என்பது - உயர்குடிப் பிறந்தவர்க்கு இடவாகு பெயர். 'நான்கும் வகை' என்பதற்குப் பதிலாக 'நான்கின்வகை' என்று பாடமாயின், 'வாய்மையுடைய குடிப்பிறந்தவர்க்கு மற்றவர்களினும் வேறுந்தன்மை நகை ஈகை இன்சொல் இகழாமை என்னும் இந்நான்கினலுண்டாகும் வகையாம்' என்று பொருளுரைத்துக் கொள்க. (உ)

௯௫௪. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(இ - ள்.) அடுக்கிய - பலவாக அடுக்கிய, கோடி - கோடியளவிற்றாய பொருளை, பெறின் உம் - பெற்றாராயினும், குடி பிறந்தார் - உயர்ந்தகுடியின் கட் பிறந்தார்,—குன்றுவ - (தம் ஒழுக்கங்) குன்றுந்தொழில்களை, செய்தல் இலர் - செய்யார்; (எ - று.)

'அடுக்கியகோடி' என்பது, ஈண்டு எண்ணப்படுபொருள்மேல் நின்றது. குன்றுந்தொழில்கள் - குன்றுதற்கு ஏதுவாய தொழில்கள்.

(கு - ரை.) கோடி என்பது - அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகிவந்ததனால், எண்ணலளவையாகுபெயர். குன்றுதற்குக் காரணமான தொழில்களை 'குன்றுவ' என்றே கூறினார்; இது, ஒருவகையுபசாரவழக்கு. குன்றுவ - பலவின்பால் வினையாலணையும் பெயர். இதனால், பெருஞ்செல்வம்படைத்தாலும் குடிப்பிறந்தார் தம் ஒழுக்கங்குன்றா ரென்பது, கூறப்பட்டது. (௪)

௯௫௫. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(இ - ள்.) பழங் குடி - தொன்றுதொட்டுவருகின்ற குடியின்கட் பிறந்தார், வழங்குவது - (தாம்)கொடுக்கும்பொருள், உள் வீழ்ந்தக்கண்உம் - (பண்டையிற்) சுருங்கியவிடத்தும், பண்பின்-(தம்) பண்புடைமையின், தலைப் பிரிதல் இன்று - நீங்கார்; (எ - று.)

தொன்றுதொட்டு வருதல் - 'சேரசோழபாண்டியர்' என்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல். அவர்க்கு நல்குரவாவது - வழங்குவது உள்வீழ்வது: ஆகலின், அதனையே கூறினார்.

(கு-ரை.) பண்டையின்-முன்னிருந்த அளவினும். பண்புடைமை இன்னதென்பதை க௦௦—ஆம் அதிகாரத்தின் அவதாரிகையிற் காண்க. வழங்குவது-பெயர். பழங்குடிக்கு நல்குரவாவது - தாம் வழங்குவது உள்வீழ்வதே யாதலால், நல்குரவை யடைந்தவிடத்தும் என்ற பொருளில் 'உள்வீழ்ந்தக் கண்ணும்'என்றார். வீழ்ந்தக்கண்-எதிர்காலவினையெச்சம். வறுமைக்காலத்திலும் குடிப்பிறந்தவர் தம் குணத்தினின்றுங் குறையா ரென்றவாறு; "உடுக்கையுலறியுடம்பழிந்தக் கண்ணும், குடிப்பிறப்பாளர் தம் கொள்கையிற் குன்றார்" என்பது, நாலடி. (௫)

௯௫௬. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(இ - ள்.) 'மாசு அற்ற குலம் பற்றி-வசையற்றுவருகின்ற தம்குடிமரபினோடு ஒத்து, வாழ்தும்-வாழக்கடவேம்', என்பார் - என்றுகருதி (அவ்வாறு) வாழ்வார், (வறுமையுற்றவழியும்), சலம் பற்றி - வஞ்சனையைப்பொருந்தி, சால்பு இல - அமைவிலவாய தொழில்களை, செய்யார்—; (எ - று.)

அமைவின்மை = அம்மரபிற்கு ஏலாமை.

இவைமூன்றுபாட்டானும், அவர் வறுமையுற்றவழியும் அவ்வியல்பின் வேறுபடா ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) வகை - பழிப்பு. குடிமரபு - குலத்தின்முறைமை. அமைவு இல ஆய - தகுதியற்றனவான. சலம் - வஞ்சனையென்ற பொருளைக் காட்டும் வடசொல். அவர்-குடிப்பிறந்தார். உயர்குடியிற்பிறந்து தம்முன்னோர் கொண்டிருந்த முறைமையைக் கைவிடாது வாழவேண்டு மென்பவர், வறுமையிலும் தகாத செயலைச் செய்யா ரென்றவாறு. (சு)

கூஉஎ. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(இ - ள்.) குடி பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்தகுடியின்கட் பிறந்தார்மாட்டு உளதாம் குற்றம், (தான் சிறிதேயாயினும்), விசும்பின்-விசும்பின் கண், மதிக்கண் மறு போல் - மதியினிடத்து மறுப்போல, உயர்ந்துவிளங்கும்-ஓங்கித்தோன்றும்; (எ - று.)

உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்புமுதலிய உவமை வகை ஒத்துப் பரல்மாறுபட்டது. குடியது உயர்ச்சியானும், மதிபோன்ற அவர்தற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படு மென்பதாம்.

(கு - ரை.) விசும்பு - வானம். மதி - சந்திரன். மறு - களங்கம். ஓங்கி - மிக்கு. பொருள் வகை - உபமேயத்தின் வகைகள். இச்செய்யுளில், உயர்ந்த குடிக்கு விசும்பும், அக்குடிப்பிறந்துள்ளோர்க்கு - விசும்பிற்றோன்றும் மதியும், அவர் குற்றத்துக்கு - மதியினிடத்துள்ள களங்கமும் உபமானம். 'மதி' என்னும் ஒருமைப்பால் உபமானத்திலும் 'பிறந்தார்' என்னும் பன்மைப்பால் உபமேயத்திலும் வந்தமையால், இவ்வுவமையணி, பால் மாறுபட வந்ததாம்: இவ்வாறு வருவதனை, "மிகுதலும் குறைதலுந் தாழ்தலுமுயர்தலும், பால் மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்று தண்டியலங்காரஞ்சூலார் அமைப்பர். பிறந்த குடியினதுமேன்மையாலும், சந்திரன்போன்ற அவருடைய நற்குணங்களோடு மாறுபடுதலாலும், குடிப்பிறந்தாரின் குற்றம், உலகெங்கும் பரந்து வெளிப்படு மென்பதாம். "அங்கண்விசும்பினகனிலாப் பாரிக்கும், திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன் - திங்கள், மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து, தேய்வரொருமாசுறின்" என்பது, ஒருசார் நோக்கத்தக்கது. "பெருவரைநாட பெரியார்கட்டீமை, கருவரைமேற் சூடேபோற்றோன்றும் - கருவரையைக், கொன்றன்ன வின்னுசெயினுஞ் சிறியார்மே, லொன்றுரைத் தோன்றுக்கெடும்," "கன்றிமுதிர்ந்த கழியப்பன்னூள் செயினும், ஒன்றுஞ் சிறியார்க ணின்றுரைத் தோன்றுவாம், ஒன்றுரைவிடினு முயர்ந்தார்ப்படுங் குற்றம், குன்றின்மேலிட்ட விளக்கு" என்பனவும் காண்க. (எ)

கூஉஅ. நலத்தின்க ணுரின்மை தோன்றி னவரைக்
குலத்தின்க ணேயப் படும்.

(இ - ள்.) நலத்தின் கண்-குலநலமுடையனுய்வருகின்றவன் கண்ணே, நார் இன்மை தோன்றின் - ஈரமின்மைஉளதாமாயின்,—அவனே—, குலத்தின்கண் - அக்குலப்பிறப்பின்கண்ணே, ஐயப்படும்—, (உலகம்); (எ - று.)

நலமும், குலமும் - ஆகுபெயர். நாரின்மையால், கொடாமையும் கடுஞ்சொல்லும் முதலிய பெற்றமும். தோன்றின் என்பது, தோன்றுமை விளக்கி நின்றது. நலனுடையனுய்வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. 'உலகம்' என்பது, அவாய்நிலையான் வந்தது. 'ஐயப்படல்' என்பது பாடமாயின், ஐயப்படுக என விதியாக்கி உரைக்க.

இவையிரண்டுபாட்டானும், வேறுபட்டவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

(கு - ரை.) குலநலம் - குலத்தின் நன்மை: உயர்குடிப் பிறப்பு. ஈரம் - அன்பு. ஐயப்படும் உலகம் - உலகத்தவர் சந்தேகிப்பர் என்றபடி: உயர்குடிப் பிறந்தும் அக்குடிப்பிறப்பிற்குரிய ஈகை முகமலர்ச்சியுடைமை முதலிய குணமில்லாமற் போமாயின், அவனை, 'அக்குடிப்பிறந்தவனே? அன்றே?' என்று உலகத்தார் ஐயப்படுவ ரென்றவாறு. நலம் என்னும் பண்புப்பெயர் - அதனையுடையோனுக்கு ஆதலால் பண்பாகுபெயரும், குலமென்னும் இடப்பெயர் - அங்குத்தோன்றிய பிறப்பிற்கு ஆதலால் இடவாகுபெயரு மாம். 'நாரின்மை தோன்றின்' என்று நாரின்மையைக்கூறியது - அதனுல்விளையும் கொடாமை முகமலர்ச்சியின்மை கடுஞ்சொல் முதலியவை தோன்றின் என்ற பொருளைக் காட்டும்: உபசாரவழக்கு. நலன் - குலநன்மை. இவை - ஈரமின்மையும், கொடாமையும், கடுஞ்சொல்லும் முதலியன. உள்ளது - உண்டாவது. ஐயப்படல் - உடன்பாட்டு வியங்கோள். வேறுபட்ட வழிப்படும் இழிக்கு - (உயர்குடிப் பிறந்தவர்தம் இயல்பினின்று) வேறுபட்டால் உண்டாகும் குற்றம்.(அ)

கூருகூ. நிலத்திற் கிடந்தமை காற்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(இ - ள்.) நிலத்தில் கிடந்தமை - நிலத்தின்இயல்பை, கால் - (அதன் கண்முளைத்த) முளை, காட்டும்—; (அதுபோல), (குலத்தின்இயல்பை), குலத்தில் 'பிறந்தார் வாய் சொல் - அதன்கட் பிறந்தார் வாயிற்சொல், காட்டும்—; (எ - று.)

கிடந்தமை - உள்ளபடி. முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், இலைமுதலிய கூறுராயினுர். ஆகவே, பொருளினும் செயல் முதலியன வேண்டாவாயின. குலத்தியல்புஅறிதற்கருவி கூறுவார் போன்று, இன்சொல்வேண்டு மென்றவா றுயிற்று.

(கு - ரை.) முளைமாத்திரத்தாலே நிலத்தின் நன்மையும் தீமையுந் தெரிதலால், இலை முதலியன கூறுராயினுராதலால், உபமேயத்திலும் குடிப்பிறந்தார் கூறும் சொல்மாத்திரத்தாலே அவர் பிறந்த குலத்தினது நன்மையுந் தீமையுந் தெரிதலால், குலத்தியல்பையறிதற்கு அவரது செயல்

முதலியவை வேண்டா வென்று கூறுராயினுரென்க. 'குலத்தியல்பு' என்று தொடங்கும் வாக்கியத்தின் கருத்து - குலத்தியல்பை யறிதற்குச் சாதனமாகிய சொல்லேப்பற்றிக் கூறுவார் போன்று, குடிப்பிறந்தார்க்கு இன்சொல் வேண்டு மென்று கூறினுராயிற்றென்பது: "வடுப்படவைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார், காணுர்தம்வாயிற் சிதைந்து" என்றது, நாலடி. 'நிலத்திற் குரிய தன்மையைக் கால் காட்டும்' என்னும் உபமான வாக்கியத்தையும், 'குலத்தை அதிற்பிறந்தார் வாய்ச்சொல் காட்டும்' என்னும் உபமேய வாக்கியத்தையும் தனித்தனி நிறுத்தி, 'அதுபோல' என்ற உவமையுருபு தொடாமற் பிம்பபிரதிபாவம் தோன்றக்கூறினமையால், இச்செய்யுள்—எடுத்துக் காட்டுவமையணியாம். (க)

கூசo. நலம்வேண்டி ஞணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

(இ - ள்.) (ஒருவன்), நலம் வேண்டின் - (தனக்கு) நலனுடைமையை வேண்டுவனுயின், நாண் உடைமை வேண்டும் - (தான்) நாணுடையனுதலை வேண்டுக: குலம் வேண்டின் - குலனுடைமையை வேண்டுவனுயின், யார்க்கு உம் பணிவு வேண்டுக-(பணியப்படுவார்) யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக.

நலம் - புகழ்புண்ணியங்கள். வேண்டு மென்பது - விதிப்பொருட்டாய் நின்றது: "வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்" என்புழிப் போல. "அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்மூன்னேர், தந்தை தாயென்றிவர்" எல்லாரும் அடங்க, 'யார்க்கும்' என்றுர். பணிவு - "இருக்கையெழலும் எதிர்செலவும்" முதலாயின.

இவையிரண்டுபாட்டானும், குடிமைக்குவேண்டுவன கூறப்பட்டன.

(கு - ரை.) பணியப்படுவார் - வணங்கி யுபசரிக்கத்தக்கவர். விதிப்பொருட்டு - விதித்தற்பொருளது. "இனைத்தெனவறிந்த சினைமுதற்கிளவிக்கு, வினைப்படுதொகுதியினும்மை வேண்டும்" என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், கூசு - ஆஞ் சூத்திரம். இத்தனையென்று அறியப்பட்ட சினைப்பொருளை யுணர்த்துஞ் சொல்லுக்கும் முதற்பொருளை யுணர்த்துஞ் சொல்லுக்கும் முடிக்குஞ்சொல்லோடு கூட்டிச்சொல்லும்போது முற்றும்மைகொடுத்துச் சொல்லுக என்பது பொருள். வேண்டுமென்பது - ஒருவகைவியங்கோள்வினைமுற்று. "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்மூன்னேர், தந்தை தாயென்றிவர்க்குத் தார்வேந்தே,—மூந்தை, வழிநின்று பின்னை வயங்குசீர்வேலி, மொழிநின்று கேட்டல் முறை" என்பது, புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், கூசு. அந்தணர் - பிராமணர். சான்றோர்-பெரியோர். அருந்தவத்தோர் - முனிவர். தம்மூன்னேர் - தமையன்மார். பணிவாவது-தம்மைகாடி ஒருவர் வந்தபொழுது, தம்மிருக்கையினின்றெழுதலும் எதிர்செல்லுதலும் முதலியன: "இருக்கையெழலு மெதிர்செலவு மேனை, விடுப்ப வொழிதலோடின்ன - குடிப்பிறந்தார், குன்றூ வொழுக்க மாக் கொண்டார்" என்பது, நாலடியார், குடிப்பிறப்பு, கூ. இருக்கையெழல்-

இருக்குமிடத்தைவிட்டு எழுதல். எதிர்செலவு - எதிர்கொண்டு செல்லுதல். இது - எடுத்துக்காட்டுவமையணி. (கo)

கூஎ - ஆம் அதிகாரம்.—மானம்.

இனி, குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் தொடங்கி, முதற்கண் மானங் கூறுகின்றார். அஃதாவது - எஞ்ஞான்றும் தம்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது அக்குடிப்பிறப்பினை நிறுத்துதலுடைமையின் அச்சிறப்புப்பற்றி முன்வைக்கப் பட்டது.

(கு - ரை.) நிலையின் - நிலைமையினின்று. தெய்வம் - ஊழ்வினை.

கூசூக. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(இ - ள்.) இன்றி அமையா - செய்யாதவழித் தாம் அமையாத, சிறப் பின ஆயின் உம் - சிறப்பினையுடையவையெனினும், குன்ற வருப - (தம்குடிப் பிறப்புத்)தாழ வருஞ்செயல்களை, விடல் - ஒழிக; (எ - று.)

அமையாமை - இறத்தல். 'குடிப்பிறப்பு' என்பது, அதிகாரமுறைமை யான் வந்தது. 'இறப்பவரும் வழி இளிவந்தன செய்தாயினும் உய்க' என் னும் வடநூல்முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவைசெய்யற்க என்பதாம்.

(கு - ரை.) அமையாத - இறத்தற்குக் காரணமான: அமைதல் - உயி ரோடு பொருந்துதல். குடிமையென்ற அதிகாரத்திற்குப்பின் மானமென்ற இவ்வதிகாரமுள்ளதனால் அவ்வதிகார முறைமைபற்றி, குன்றவரும் என்ற விடத்து குடிப்பிறப்பென்பது, வருவிக்கப்பட்டதென்க. இறப்பவரும் வழி - இறக்கநேருமிடத்து. இளிவந்தன - இழிவுதருஞ்செயல்கள். ''ஜீவிதாத்யய மாபன்நோ,யோந்நமத்தியதஸ்தத:-ஆகாஸமிவபங்கேந,ந ஸ பாபேந லிப்யதே,'' ''அப்யகார்யஸதம் க்ருத்வா - பர்த்தவ்யாமநுரப்ரவீத்'' முதலியன காண்க. 'இறக்கும்படி நேர்ந்தபோது இழிதொழிலைச் செய்தாயினும் உயிர்பிழைக்க' என்று வடநூலில் தருமசாத்திரம் கூறினும், அம்முறைமையை மறுத்து, உடம்பினது நிலையில்லாமையையும் மானத்தினுடைய நிலையுடைமையையும் நோக்கி, 'இளிவந்தவற்றைச் செய்யாதொழிக' என்று இதனால் கூறுகின்றார். சிறப்பின - 'சிறப்பு' என்ற பகுதியினடியாகப்பிறந்த பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். (க)

கூசூஉ. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ - ள்.) சீரின் உம்-புகழ்செய்யுமிடத்தும், சீர் அல்ல-(தம்) குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகளை, செய்யார்—; சீரோடு-புகழுடனே, பேர் ஆண்மை - மானத்தை (நிறுத்துதலை), வேண்டுபவர் - விரும்புவார்; (எ - று.)

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்பற்றி, 'பேராண்மை' எனப்பட்டது. நிலையுடைய புகழின் பொருட்டாகவும் செய்யாரென்பதாம்.

(கு - ரை.) புகழ்செய்தல் - புகழையுண்டாக்குதல். 'சீர்' என்னுஞ் சொல் மூன்றனுள், இரண்டாவது தகுதியென்னும் பொருளது. மானத்தைப் பேராண்மையென்றது - காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது. செய்யார்-தகுதியல்லாத காரியங்களைச் செய்யமாட்டார். உம்மை - உயர்வுசிறப்பு.

கூசுஙூ. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு மூயர்வு.

(இ - ள்.) (குடிப்பிறந்தார்க்கு), பெருக்கத்து - நிறைந்த செல்வம் உளதாயவழி, (யாவர்மாட்டும்), பணிதல் - பணிவு, வேண்டும்—; சிறிய சுருக்கத்து-குறைந்த நல்குரவு உளதாயவழி, உயர்வு - பணியாமை, வேண்டும்—.

பணியாமை-தாழ்வுவராமற்பழையவுயர்ச்சிக்கண்ணேநிற்றல். செல்வக்காலை அஃது உயர்ச்சிசெய்யத் தாம் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வு செய்யத் தாம் உயர்தலும் வேண்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும், தாம் தாழ்தற்கு எதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) குறைந்த - இழிவான. செல்வக்காலை - செல்வமுண்டான பொழுது. அஃது - அச்செல்வம். அல்லற்காலை - வறுமைத்துன்பம் வந்த பொழுது. அது - அத்துன்பம். செல்வமுண்டான காலத்தில் அச்செல்வம் உயர்ச்சி செய்தலால் தாம் தாழ்தலும், செல்வம் சுருங்கிய வறுமைக்காலத்தில் அவ்வறுமை தாழ்வை வினைத்தலால் தாழ்வு வராதபடி தாம் பழைய வுயர்ச்சியில் நிற்றலும் வேண்டுமென்பதாம். (கூ)

கூசுச. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(இ - ள்.) மாந்தர் - (குடிப்பிறந்த) மாந்தர், நிலையின் இழிந்தக்கடை - (தம்) உயர்ந்த நிலையை விட்டு (அதனினின்றும்) தாழ்ந்தவழி, தலையின் இழிந்த மயிரனையர்-தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

அந்நிலையை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும் உவமையாற் பெற்றாம்.

(கு - ரை.) தாழ்ந்தவழி - தாழ்ந்தபொழுது. பேணப்படுதல் - விரும்பிப் பாராட்டப்படுதல். உவமையணி. தமது உயர்ந்தநிலையை விட்டிடாமல் இருந்த போது யாவராலும் விரும்பி மரியாதை செய்யப்படுதலும், தம்நிலையை விட்டுத் தாழ்ந்தபோது எவராலும் அலட்சியஞ் செய்யப்படுதலும் உவமையாற் பெறப்படுமென்க. மயிர் தலையிலிருக்கும்போது பேணப்படுதலும், ஆங்கு நின்று வீழ்ந்திடின் அப்பாலெறியப்படுதலுங் காண்க. (ச)

கூசுடு. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்,

(இ - ள்.) குன்றின் அனையார் உம்-(குடிப்பிறப்பான்) மலைபோல உயர்ந் தோரும்,—குன்றுவ - தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களே, குன்றி அனைய செயின்-ஒருகுன்றியளவாயினும் செய்வராயின், குன்றுவர்-தாழ்வர்; (எ-று.)

'குன்றியனையும்' என்னும் இழிவுசிறப்பு உம்மை, விகாரத்தால் தொக் கது. தாழ்தற்கு ஏதுவாய செயல்களாவன-இளிவந்தன. சொற்பின்வருநிலை.

(கு - ரை.) குன்றி-குன்றிமணி: சிறுமைக்கு எடுத்துக்காட்டப்பட்டது. 'குன்றியனைய' என்பதன்பின் இழிவுப்பொருளைக் காட்டும் உம்மை, விகாரத் தால் தொக்கது. இளிவந்தன - பழிக்கத்தக்கவை. குன்றுவ, அனைய-பெயர் கள்: 'அனைய' என்பதைக் குறிப்புமுற்று வினையெச்சப்பொருளில் வந்ததாக வுங் கொள்ளலாம். ''குன்றன்னர்'' என்றார், கீழும். (கூ)

கூகூசு. புகழின்றூற் புத்தேளுட் டெய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(இ - ள்.) (மானத்தைவிட்டு), இகழ்வார் பின் - (தன்னை) அவமதிப்பார் பின்னே, (ஒருவன்), சென்று நிலை-சென்று நிற்கின்றநிலை,—புகழ் இன்று-(இவ்வுலகத்துப்) புகழ் பயவாது; புத்தேள் நாட்டு உய்யாது - (ஏனைப்) புத்தே ளுலகத்துச் செலுத்தாது; மற்று என் - இனி (அவனுக்கு அது செய்வது) யாது? (எ - று.)

புகழ்பயப்பதனை 'புகழ்' என்றார். பயனுய இவ்விரண்டும் இன்றிக் கொன்னே மானங் கெடுகின்றது என்னே! என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், அவைசெய்தற்குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) பயவாது - தாராது. ஏனை - மற்றை. புத்தேளுலகம் - தேவ லோகம். புகழ்இன்று - புகழ்தருவதில்லை. புகழ்தருவதென்னும் பொருளில் 'புகழ்' என்றது - காரியப்பொருள் காரணமாக உபசரிக்கப்பட்டது. பயனுய இவ்விரண்டும் இன்றி - இம்மை மறுமைப் பயன்களாகிய புகழும் தேவலோக வாழ்வுமில்லாமல். கொன்னே - வீணுய். அவை - இளிவந்தன. மற்று-வேறு என்னும் பொருளது. (கூ)

கூகூஎ. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னஃதிலே
கெட்டா னெனப்படுத லன்று.

(இ - ள்.) ஒட்டார் பின் - (தன்னை) இகழ்வார்பின்னே, சென்று—, (பொருள்பெற்று), (அதனால்), ஒருவன்—, வாழ்தலின்-உயிர் வாழ்தலின், அ நிலேஎ கெட்டான் எனப்படுதல் - அதுசெய்யாது இறந்தா னென்று சொல் லப்படுதல், அன்று - (அவனுக்கு) அன்று; (எ - று.)

ஒட்டுதல் - பொருந்துதல். 'அஃதிலையே' என்றது, செல்லாத முன்னே *நிலைக்கண்ணே நின்று என்றவாறு; அப்பொழுதே என்றுமாம். 'புகழும் புத்தேள்நாடும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வாம்' என்பாரை நோக்கிக் கூறியது.

---

* பி - ம்: நிலைக்கண்ணே யென்றும்,

(கு-ரை.) செல்லாதமுன்னே நிலைக்கண்ணே நின்று-தன்னையமதிப்பார் பின்னே செல்லாத முன்னைநிலையிலே (நின்று) இனி, அந்நிலையே - பிறர் பின்னேசென்று பொருள்பெறவேண்டிய நிலைமை யேற்பட்ட அப்போதே யெனினுமாம். 'புகழும்'என்று தொடங்கும் வாக்கியத்தின்பொருள்-இம்மைப் பயனுகிய புகழும் மறுமைப்பயனுகிய மேலுலகமும் பெருமற்போலுலும், மானத்தையிழப்பதாற்பொருள்பெற்று உயிர்வாழ்வோ மென்பாரை நோக்கிக் கூறியது, இது என்பது. மானத்தையிழந்து பொருள்பெற்று வாழ்வதைக் காட்டிலும், மானத்தை யிழவாது உயிர்விடுதலே நன்றென்றவாறு. (எ)

கூகூஉ. மருந்தோமற் றூனும்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

(இ - ள்.) பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பு, பீடு - (தன்)வலியாகிய மானம், அழியவந்த இடத்து - அழிய வந்துழி, (இறத்தலொழிந்து), ஊன் ஓம்பும் வாழ்க்கை-(பயனில்லாத) உடம்பினைக் காக்கும் வாழ்க்கை,—மற்று - பின்னும், மருந்துஓ - (இறவாமைக்கு) மருந்தாமோ? (எ - று.)

'மற்று' என்பது - மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. நற்குணங் கட்கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றி 'பெருந்தகைமை' என்றும், அவை யெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப்பற்றி 'பீடு' என்றும், அஃது அழித்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை 'ஊன்' என்றும், பின்னும் இறத்தல் ஒருதலை யென்பார் 'மருந்தோ' என்றுங் கூறினர். மானத்தின்தொழில் அதற்குஇடனுகிய குடிப்பிறப்பின்மேல் நின்றது.

(கு - ரை.) வந்துழி - வந்தவிடத்து. பின்னும் - மீண்டும். அவை - அந் நற்குணங்கள். அதற்கு - உயர்குடிப்பிறப்புக்கு. பீடு - வலிமைதரும் மானம். அஃது - மானம். வெற்றுடம்பு-மானத்தையிழந்த உடம்பு. ஒருதலை-நிச்சயம். 'மற்று' என்னும் இடைச்சொல் - "ஒட்டார்பின்" என்னுங் கீழ்க்குறளிற் சொல்லிய கெட்டானெனப்படுதல் [இறத்தல்] என்ற தொழிலினை மாற்றி, இறவாமையென்னும் வினையைத் தந்துநிற்றலால், வினைமாற்றும். உயர் குடிப்பிறப்பிற்கு உரிய மானத்தின் தொழிலாகிய அழிவை அம்மானத்திற்கு இடனுகிய குடிப்பிறப்பின்மேலேற்றி,'பெருந்தகைமை பீடழிய'என்று கூறிய இது-இடத்து நிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேலாகிய உபசாரவழக்கு நின்பாற்படுமென்க. மானம் கெட்டாயினும் உயிர்வாழ்வது என்றும் இறவா மைக்கு மருந்தாமெனின், அவ்வாறு மானத்தை யிழந்தாலும் இழக்கலாம்: அங்ஙனம் இல்லாமையால், நிலையற்ற உடலுக்காக நிலையான மானத்தை யிழப்பது, நன்றன்றென்பதாம். "மான வருங்கல மீக்கி யிரவென்னு, மீன விளிவினுல் வாழ்வேன்மன்—ஈனத்தால், ஊட்டியக்கண்ணு முறுதிசேர்ந்திவ் வுடம்பு, கீட்டிடத்து நிற்குமெனின்"என்பது, இக்குறளின்கருத்தைக்கொண்டு வந்தது. (அ)

கூகூக. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(இ - ள்.) மயிர் நீப்பின் - (தன்மயிர்த்திரளின்) ஒருமயிர் நீங்கினும், வாழா - உயிர் வாழாத, கவரிமா - கவரிமாவை, அன்னார் - ஒப்பார், மானம் வரின் - (உயிர் நீக்கத்தான்) மானமெய்து மெல்லை வரின், (அதனைத் தாங்காது), உயிர் நீப்பர் - இறப்பர்; (எ - று.)

இழிவுசிறப்பு உம்மை, விகாரத்தால் தொக்கது. உயிரும் மானமும் உடன் நில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை எய்துவரென்பதாம். உவமை, அவர்க்கு அஃது இயல்பு என்பது விளக்கிநின்றது.

(கு - ரை.) கவரிமா - ஒருசாதி மான்: வடமொழியில் 'சமரம்' எனப்படும். உயிர் நீக்கத்தான் மானம் எய்தும் எல்லைவரின் - (தமது) உயிரைவிட்டால்(தமது)மானம் அழியாதுநிலைபெறுஞ் சமயம் வாய்த்தால்.அதனைத் தாங்காது - அவ்வுயிரை வைத்திராது. 'நீப்பின்' என்றதன்பின், இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மானங்கெடாமலிருப்பதற்காக உயிரை விடுதல் உயர்குடிப் பிறந்தார்க்கு இயற்கை யென்பது, கவரிமானின் உவமையாற் பெறப்படு மென்க. (௯)

௯௭௦. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

(இ - ள்.) இளி வரின்-(தமக்கு ஓர்) இழிவு வந்தவழி, வாழாத-(பொறுத்து உயிர்)வாழாது (அதனை)நீத்த, மானம் உடையார் - மானமுடையாரது, ஒளி - புகழ் வடிவினை, தொழுது ஏத்தும்-(எஞ்ஞான்றும்)தொழுது துதியா நிற்பர்: உலகு - உலகத்தார்; (எ - று.)

"புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி யெய்து"வ ராகலின், துறக்கச்செலவு சொல்லவேண்டாவாயிற்று.

இவை நான்குபாட்டானும், மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) அதனைநீத்த - உயிரைவிட்ட. புகழ்வடிவு - புகழுடம்பு: புகழினாற் பெயர் நிலைபெறுதல். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி, எய்துப" என்ற மேற்கோள், புறநானூறு உஎ-ஆம் பாட்டி லுள்ளது. இதன் பொருள்:—புலவராற் பாடப்படும் புகழை யுடையோர் ஆகாயத்தினிடத்துப் பாகனாற்செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவர் என்பது. இதனால், ஒளியுடையார் சுவர்க்கலோகத்தை யடைவ ரென்பது பெறப்படும். இம்மேற்கோள் "நிலவரை நீள் புகழாற்றிற் புலவரைப், போற்றாது புத்தேளுலகு" என்ற உ௩௪-ஆங் குறளினுரையிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. வானவூர்தி - ஆகாயத்திற்செல்லுந் தன்மையை யுடைய வாகனம். துறக்கச் செலவு - (மானமழியாது) புகழ்பெற இறந்தவர் சுவர்க்கலோகத்துக்குச் செல்லுதல். மானப்பொருட்டுஆய - மானத்தைப் பாதுகாத்தற்பொருட்டு அடைகிற. (௧௦)

கூஅ - ஆம் அதிகாரம்.—பெருமை.

அஃதாவது - செயற்கு அரிய செய்தல், தருக்கு இன்மை, பிறர்குற்றங் கூறுமை என்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினும் மேன்மேல் உயர்த்தற்பயத்தவாய இவை உளவாவது நிலையிற்றாழாமை உள்வழியாகலின், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தருக்கு இன்மை-செருக்கு இல்லாமை. உயர்த்தற் பயத்தவாய - உயர்த்துதலாகிய பயனை யுடையனவான. உள்வழி - உள்ளவிடத்து.

கூஎக. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒளி - ஒளியாவது,— உள்ளம் வெறுக்கை - (பிறராற் செயற்கரிய செய்வே மென்று கருதும்) ஊக்கமிருதி; ஒருவற்கு - ஒருவனுக்கு, இளி - மாசாவது,—அஃது இறந்து வாழ்தும் எனல்-அச்செயலை யொழிந்து உயிர்வாழக்கடவே மென்று கருதுதல்; (எ-று.)

ஒளி - தான் உளனுயகாலத்து மிக்குத் தோன்றுத லுடைமை; "ஒளி நிறு னேங்குபுகழ் செய்யான்" என்றார் பிறரும். மேலும் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினுன் ஆய பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு 'உள்ளவெறுக்கை' என்றும், அதுதன்னையே அதன்காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினார். இவ்வாறு அதன் எதிர்மறைக்கண்ணும் ஒக்கும்.

இதனுல், பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

. (கு - ரை.) செயற்குஅரிய - செய்யமுடியாதவற்றை. ஊக்கம் - மனக்கிளர்ச்சி. மாசு - விளக்கமின்மை, பிரகித்தியில்லாமை. அச்செயலை - செயற்கரிய செய்யக்கருதலை. "ஒளிநிறுனேங்குபுகழ் செய்யான்" என்னும் மேற்கோள், நாலடி, செல்வநிலையாமை கூ - ஆம் பாட்டிலுள்ளது. இதன் பொருள்:—ஒளி நிறுன் - (தனது) விளக்கத்தை நிலை நிறுத்தான்: ஓங்கு புகழ்செய்யான் - சிறந்த கீர்த்தியைச் சம்பாதியானென்பது. மேலும் - முன்னும். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது - திருக்குறள், நீத்தார் பெருமை, சு - ஆம் பாட்டிலுள்ளது: 'இயமம் நியமம் முதலிய செய்தற்கரியவைகளைச் செய்பவர் பெரியவர்' என்பது அதன்பொருள். நீத்தார் பெருமையில் இயமம் முதலிய செய்வார் பெரியோரென்ற கருத்தினுல், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றாராயினும், இல்லறத்தார்க்குப் பெருமையையுண்டாக்குவன அளவிறந்த உதவி ஈகைமுதலியனவேயா மென்க. ஈண்டு - இங்கே. அவை - செயற்கு அரியன. ஒப்புரவு-உலக நடையை யறிந்து செய்யும் உபகாரம். உள்ளவெறுக்கை - மனச்செல்வம்: மனவெழுச்சி: மனவெழுச்சியாற் செய்யப்படுவதாகிய அளவிறந்த உபகாரம், ஈகை முதலியவற்றினுலாகிய பெருமையைக் காட்டியதால், இது - காரணத்தாற் காரியப்பொருளைக் கூறிய உபசாரவழக்கு: உள்ளவெறுக்கை - காரணமும், பெருமை - அதன்காரியமு மாதல் காண்க. உபசாரவழக்காற் பெருமை

யென்ற பொருளே முடிவாகக் காட்டும் உள்ளவெறுக்கையையும், அப்பெருமையின் காரியமாகிய ஒளியையும் ஒற்றுமைப் படுத்தி,'ஒளியொருவற் குள்ள வெறுக்கை' என்றார்: பெருமையால் ஒளியுண்டா மென்க. தான் உளனுய காலத்து - (இவ்வுலகத்தில்) தான் சீவித்திருக்கும்போது. இவ்வாறு இதன் எதிர்மறைக்கண்ணும் ஒக்கும் - 'ஒளியொருவற்குள்ளவெறுக்கை' என்ற முதல் வாக்கியத்திற்கு எதிர்மறையாகவுள்ள 'இளியொருவற்கு அஃதிறந்து வாழ்தலெனல்' என்ற இரண்டாம்வாக்கியத்திலும் இவ்வாறுவந்துள்ளது; இளிவை அதன்காரணத்தின்மேலிட்டு 'அஃது இறந்து வாழ்தலெனல்' என்றும், அதனையே அதன்காரியமாகிய இளியாக்கியும் கூறினமைகாண்க. ஊக்கமிகுதி யில்லாமையாற் பெருமையில்லாதவர்க்கு ஒளியின்றி இளியே யுண்டாகு மென்பது, இரண்டாம் வாக்கியத்தின் கருத்து. (க)

கூஎஉ. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(இ - ள்.) எல்லா உயிர்க்குமும் - எல்லாமக்களுயிர்க்கும், பிறப்பு ஒக்கும்- (பொதுவாகிய) பிறப்பியல்பு ஒக்குமேயெனினும், சிறப்பு ஒவ்வா - (பெருமை சிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள் ஒவ்வா: செய் தொழில் வேற்றுமையான் - (அவை)செய்யுந் தொழில்களது வேறுபாட்டான்; (எ - று.)

வேறுபாடு - நல்லனவும் தீயனவும் இரண்டுமாயினவும் இரண்டு மல்லவாயினவு மாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தாற் பஞ்சபூதபரிணமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன்பயனனுபவித்தல் எல்லாவருணத்தார்க்கும் ஒத்தலின் 'பிறப்பொக்கும்' என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் 'சிறப்பொவ்வா' என்றுங் கூறினர்.

(கு - சை.) வினைவயத்தால் - கர்மவசத்தால். பஞ்சபூதபரிணமம்-நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் ஐம்பெரும்பூதங்களின் விகாரப்பாட்டினுலாகியது. அதன்-கருமத்தின். கட்டளைக்கல் - உரைகல். ''பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தங், கருமமே கட்டளைக்கல்'' என்றார், தெரிந்து தெளிதலென்ற அதிகாரத்தில். மனிதரடையும் பெருமையையும் மற்றைச்சிறுமையையும் தப்பாமல் அறிவிக்குங் கருவி அவரவர்செய்தொழிலே யென்பது, இதன்பொருள். ஏதுவணி. (உ)

கூஎந. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(இ - ள்.) மேல் அல்லார் - (செயற்கரியசெய்கலாது)சிறியராயினுர், மேல் இருந்தும் - உயர்ந்த அமளி முதலியவற்றின்மிசை இருந்தாராயினும், மேல் அல்லர் - பெரியராகார்: கீழ் அல்லவர் - (அவைசெய்து) பெரியராயினுர்,—கீழ் இருந்தும்-தாழ்ந்த வறுநிலத்து இருந்தாராயினும், கீழ் அல்லார்- சிறியராகார்; (எ - று.)

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ் களாற் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன.

இவையிரண்டுபாட்டானும், முறையே குடிமைமாத்திரத்தானும் செல்வ மாத்திரத்தானும் அஃது உளதாகாமை கூறப்பட்டது.

(சு - ரை.) செய்கலாது - செய்யமாட்டாமல். அமளி - படுக்கை; ஆசனம். மிசை - மேல். அவைசெய்து - செய்தற்கு அரியவற்றைச்செய்து. வறுநிலம்-அமளிமுதலியன இல்லாத வெறுந்தரை. அஃது-பெருமை. உம்மைகள்-முறையே உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும். முரண்வினைந்தழிவணி. (சூ)

கூஎச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(இ - ள்.) ஒருமை மகளிர் ஏ போல-கவராதமனத்தினையுடைய மகளிர் (நிறையின்வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு) போல, பெருமையும் - பெருமைக்குணனும்,—தன்னை தான் கொண்டு ஒழுகின் - (ஒருவன் நிறையின்வழுவாமல்) தன்னைத் தான் காத்துக்கொண்டு ஒழுகுவாயின், உண்டு - (அவன்கண்) உண்டாம்; (எ - று.)

பொருளின்தொழில், உவமையினும் வந்தது. கற்புஉண்டாதல்தோன்ற நின்றமையின், உம்மை - எச்சவும்மை. ஒழுகுதல் - மனமொழிமெய்களை யொடுக்கி ஒப்புரவுமுதலிய செய்துபோதல்.

இதனால், அஃது உளதாமாறு கூறப்பட்டது.

(சு - ரை.) கவராத - சஞ்சலப்படாத: பலரிடத்துஞ்செல்லாத. நிறை-நெஞ்சை நல்லநெறியில் நிறுத்தல். பொருள் - உபமேயம். உபமேயத்தின் தொழிலான 'தன்னைத்தான் கொண்டொழுகின்' என்பது, 'ஒருமைமகளிர்' என்ற உபமானத்திற்குங் கூட்டப்பட்டது; ஒருமைமகளிர்க்குத் தம்மைத் தாம் காத்துக்கொண்டொழுகலாவது - கற்புடையரென்ற தம்பேர் நிலைநிற்குமாறு அக்கற்பைக் குறிக்கொண்டு பாதுகாத்தல்: பெருமையுடையார்க்குத் தம்மைத் தாம் காத்துக்கொண்டொழுகுதலாவது - பெரியாரென்ற தம்பெயருக்கேற்ப மனமொழிமெய்களை யொடுக்கி உபகாரம் கொடை முதலியன செய்து போதல். 'பெருமையும்' என்றவிடத்து உம்மை, கற்புண்டாதல் தோன்றநின்றமையின், எச்சவும்மையாம். அஃது - பெருமை. உவமையணி.

கூஎடு. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

(இ - ள்.) பெருமை உடையவர் - (அவ்வாற்றால்) பெருமையுடையராயினார்,(தாம் வறியராயவழியும்),அருமை உடைய செயல்-(பிறராற்செய்தற்கு) அரியவாய(தம்)செயல்களை (விடாது), ஆற்றின்-(அவைசெய்யும்) நெறியால், ஆற்றுவார் - (கடைபோகச்செய்தலை) வல்லராவர்; (எ - று.)

'வறியராயவழியும்' என்பது, முன்செய்துபோந்தமை தோன்ற 'பெருமையுடையவர்' என்றதனானும், 'ஆற்றுவார்' என்றதனானும் பெற்றாம்.

இதனால், அதனையுடையார்செய்தி கூறப்பட்டது.

(கு - சை.) அவ்வாற்றால் - கீழ்க்கூறியவகையால்: தம்மைத்தாம் கொண்டொழுகுதலால். ஆற்றின் - வழியால். கடைபோக - முற்றமுடிய. அதனை - பெருமையை. (இ)

கூஎசு. சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(இ - ள்.) பெரியாரை - (அப்பெற்றியராய) பெரியாரை, பேணி - வழிபட்டு, கொள்வேம் - (அவரியல்பினை யாம்)கோடும், என்னும்—, நோக்கு - கருத்து,—சிறியார் உணர்ச்சியுள் - (மற்றைச்) சிறியராயினுர்மனத்தின்கண், இல்லை - உளதாகாது; (எ - று.)

குடிமை செல்வம் கல்வி என்றிவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு,அவை நமக்கு இயல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடா தென்பதாம்.

(கு - சை.) அப்பெற்றியர்-அத்தன்மையர்: தம்மைத்தாம் கொண்டொழுகிப் பெருமைபெற்றுப் பிறராற்செயற்கரியவற்றை வறுமையிலும் கடைபோகச்செய்யவல்லவர். கோடும் - கொள்வோம். உண்மை - இருத்தல். வியந்து - நன்குமதித்து. தம்மையியந்து - செருக்கியென்றபடி. அவை-குடிமை முதலியன. அமைத்து - அடங்கி. வழிபட்டு - நன்குமதித்துப்பணிந்து உபசரித்து. வழிபட்டு என்றதன்பின் 'அதன்மூலமாக' என்று வருவித்துக்கொள்ளின் நலம். அஃது - பெருமை. (சு)

கூஎள. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

(இ - ள்.) சிறப்பு தான்உம் - (தனக்குஒக்கும்பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய) சிறப்புத்தானும்,—சீர் அல்லவர்கண் படின் - (தனக்குஒவ்வாத) சிறியாரிடத்துப் படுமாயின், இறப்பு எ புரிந்த தொழிற்று ஆம்- (அதனையொழிந்து) தருக்கின்கண்ணே மிக்க செயலை யுடைத்தாம்; (எ - று.)

தருக்கினே மிகச்செய்யு மென்பதாயிற்று. சிறப்பு - குடிமைசெல்வங் கல்விகளினுய மிகுதி.

இவையிரண்டுபாட்டானும், அஃதிலார்செய்தி கூறப்பட்டது.

(கு - சை.) தனக்கு ஒக்கும் - தான் இருத்தற்கு ஏற்ற இடமான. அமைந்திருத்தல் - அடங்கியிருத்தல். படும் - உண்டாகும், அமையும். அதனை - அமைதியை. இறப்பு - வரம்புகடத்தல், தருக்கு: செருக்கு. புரிதல் மிகுதலாதலை "வனப்புப்புரிந்ததகையினுன்" என்ற பரிபாடலிலும் காண்க. எ-பிரிநிலை. தொழிற்று - ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர்: உம் - உயர்வு சிறப்பு. அஃது இலார் - பெருமையில்லாதவர். (எ)

கூஎஉ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

இ - ள்.) பெருமை - பெருமையுடையார், என்றும்உம் பணியும் - அச் சிறப்பு உண்டாய ஞான்றும் (தருக்கின்றி) அமைந்தொழுகுவர்; சிறுமை-மற் றைச் சிறுமையுடையார், (என்றும்) - அஃது இல்லாதஞான்றும், தன்னே வியந்து அணியும் - தம்மை வியந்து புனையாகிற்பர்; (எ - று.)

பொருளின்தொழில்கள், பண்பின்மேல் ஏற்றப்பட்டன: இஃது "அற்ற மறைக்கும் பெருமை" என்புழியும் ஒக்கும். 'என்றும்' என்பது பின்னும் வந்துஇயைந்தது. 'ஆம்' என்பன இரண்டும் - அசை. புனைதல் - பிறரின் தமக்குஓர்மிகுதியை ஏற்றுக்கோடல். இதற்கு - உயர்ந்தார் தாழ்வார், தாழ்ந் தார் உயர்வார், இஃது ஒரு விரோதம் இருந்தவாறு என்! என உலகியலே வியந்துகூறிற் றுக்குவாரும் உளர்.

(கு - ரை.) அச்சிறப்பு - கீழ்க்கவியிற்கூறியது. உண்டாய ஞான்றும் - உண்டானகாலத்தும். அஃது - அச்சிறப்பு. பொருள் - பண்பியென்றபடி. பெருமையுடையாரின் தொழிலாகிய பணிதலும், சிறுமையுடையாரின் தொழிலாகிய அணிதலும், 'பெருமைபணியும், சிறுமை யணியும்'எனப் பண் பின்மேலேற்றிக் கூறப்பட்டன; இவை, பண்பியின் வினைகளைப் பண்பின் வினைகளாகக் கூறிய உபசாரவழக்குகளாகும். இவ்வதிகாரத்துப் பத்தாங்குற ளில் "அற்றமறைக்கும் பெருமை" என்பதும், இவ்வாறுண உபசாரவழக்கே. இஃது-இவ்விலக்கணவமைதி. முதல் வாக்கியத்திலுள்ள 'என்றும்' என்பது, இரண்டாவதுவாக்கியத்திலும் எடுத்துக் கூட்டப்பட்டது. அசை - பொருளே யுணர்த்தாதசொல். பிறரின்-அயலாரைக் காட்டிலும். ஏற்றுக்கோடல்-ஏறிட் டுக்கொள்ளுதல். இனி, இக்குறளுக்கு,—பெருமை - உயர்ந்தார், என்றும்-எந் நிலையிலும், பணியும்-தாழ்வார்: சிறுமை-தாழ்ந்தாரோ, என்றும்—, தன்னே வியந்து-தம்மைமேம்படுத்தி, அணியும் - உயர்குவர்: (இஃது ஒரு விரோதம் இருந்தவாறு என்னே!)என, உலகியலேவியந்து கூறியதாகப் பொருள் காண் பாருமுளர்."தாழ்ந்தோருயர்வரென்று மிகவுயர்ந்தோர் தாழ்வரென்றுமறஞ் சூழ்ந்தோருரைக்குமுரை கண்டாம்" என்ற பிரபுலிங்கலீலையும் காண்க. (அ)

கூஎக. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

(இ - ள்.) பெருமை - பெருமைக்குணமாவது, பெருமிதம் இன்மை - (காரணமுண்டாயவழியும்அஃதுஇயல்பாதல்நோக்கித்) தருக்கின்றியிருத்தல்; சிறுமை - சிறுமைக்குணமாவது, பெருமிதம் ஊர்ந்து விடல்- - (அஃதுஇல் வழியும்அதனையேற்றுக்கொண்டு) தருக்கின்மூடிவின்கண்ணே நின்றுவிடுதல்.

அளவறத் தருக்குத லென்பதாயிற்று. 'விடும்' என்று பாடமோதுவா ரும் உளர்; முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முள் இயையாமை யின், அது பாடமன்மை அறிக.

(கு-ரை.) காரணம் - பெருமைபாராட்டுதற்குக்காரணமான உயர்குடிப் பிறப்பும் கல்விப்பொருளும் செல்வப்பொருளும். அஃது - அப்பிறப்புமுதலிய வற்றினமைதி. ஏற்றுக்கொண்டு - உளதாகக் கற்பித்துக்கொண்டு. முடிவு -

முடிந்த எல்லே. பெருமிதமூர்ந்துவிட லென்பதன்கருத்து, அளிவறத் தருக்குதலென்பது. முற்றுத்தொடர் - முதல்வாக்கியம்: அதில் பெருமையென்னும் பெயர்ப்பயனிலே பெருமிதமின்மையென்னும் எழுவாயோடுதொடர்ந்தது. எழுவாய்த்தொடர் - இரண்டாம்வாக்கியமாகிய'சிறுமைபெருமிதமூர்ந்துவிடும்' என்பது: அதில் சிறுமையென்னும் எழுவாய் ஊர்ந்துவிடும் என்னும் முற்றைக்கொண்டு முடிதல் காண்க. இந்த இரண்டுவாக்கியங்களும் ஒருவழிப்படாமல் மாறுபடுதல் ப்ரக்ரமபங்கம் [எடுப்பழிவு] என்னுங் குற்றமாகு மாதலால், 'தம்முளியையாமையின் அஃது பாடமன்மையறிக' என்றார். பெருமிதமூர்ந்துவிட லென்ற பாடத்தில் இரண்டு வாக்கியமும் எழுவாய்த்தொடராம். பெருமிதம் - எல்லாரோடும் ஒப்பநில்லாது மேலெல்லையாகநிற்றல். ஊர்ந்து - மேற்கொண்டு. (கூ)

கூஉ0. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(இ - ள்.) பெருமை - பெருமையுடையார், அற்றம் மறைக்கும் - (பிறர்மானத்தையே கூறி) அவமானத்தை மறையாகிற்பர்; சிறுமை - மற்றைச் சிறுமையுடையார், குற்றம் ஏ கூறிவிடும் - (பிறர்குணத்தைமறைத்துக்) குற்றத்தையே கூறிவிடுவர்; (எ - று.)

மறைத்தலும், கூறலும், ஏனையிடத்தும் இயைந்தன. அற்றம் - ஆகுபெயர். தான் என்பது - அசைநிலே.

இவைமூன்றுபாட்டானும், இருவர்செயலும் ஒருங்குகூறப்பட்டன.

(கு - ரை.) மானம் - பெருமைக்குணம். ஏனையிடத்தும் - மற்றையிடத்திலும்: 'மறைத்தல்' என்பது - சிறுமை யென்றவிடத்தும், 'கூறல்' என்பது-பெருமை யென்றவிடத்துமாக இயைதல் காண்க. அற்றம் - சோர்வு; சோர்வினாலுளதாகும் அவமானத்தை 'அற்றம்' என்றது - கருவியாகு பெயர். ஏ - பிரிநிலே. 'விடு' என்பது துணிவுப்பொருளே யுணர்த்தும்; மூன்றினகுறளிலும் இது. இருவர் - பெருமையுடையாரும், சிறுமையுடையாரும்.பண்பியின்தொழில் பண்பின்மேல் ஏற்றிக்கூறப்பட்ட உபசாரவழக்கை, 'பெருமை அற்றமறைக்கும்: சிறுமைகுற்றமே கூறிவிடும்' என இத்தக்குறளிலும் காண்க. அசையெனினும், அசைநிலேயெனினும் ஒக்கும். (கo)

கூகூ - ஆம் அதிகாரம்.—சான்றாண்மை.

அஃதாவது - பலகுணங்களாலும் நிறைந்து அவற்றை ஆடல்தன்மை. 'பலகுணங்களாலும்' என்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், 'அவற்றை' என்பது வருவிக்கப்பட்டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) சான்று ஆண்மை யென்பதற்கு - நிறைந்து ஆளுந்தன்மை என்று பொருளாதலாலும், நிறைதலென்னும் பொருளுள்ள 'சாலுதல்' என்

னுந்தொழிலாற் பலகுணங்களானுமென்று பெறப்படுதலாலும், ஆளுகலென்ற தொழிற்கு இயைய அப்பலகுணங்களே யென்ற செய்ப்படுபொருள் வருவிக்கப்பட்டது. தொகுத்து - ஒருசேர அடக்கி. இஃது - இவ்வதிகாரம். அதன் பின் - பெருமையென்னும் அதிகாரத்திற்குப்பின்.

கூஅக. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு.

(இ - ள்.) கடன் அறிந்து - (நமக்குத்)தகுவது (இது)வென்று அறிந்து, சான்ருண்மை மேற்கொள்பவர்க்கு-சான்ருண்மையை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு, நல்லவை எல்லாம் கடன் - நல்லனவாயகுணங்களெல்லாம் இயல்பாயிருக்கும், என்ப - என்றுசொல்லுவர், (நூலோர்); (எ - று.)

சிலகுணங்கள் இலவாயவழியும், உள்ளன செய்துகொண்டனவாயவழியும் சான்ருண்மையென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறுகூறுவ ரென்பதாம்.

(கு - ரை.) கடன் - கடமை. நூலோர் - சாஸ்திரமுணர்ந்தவர். உள்ளன செய்துகொண்டன ஆயவழியும் - உள்ளகுணங்கள் இயல்பிலுலமையாமற் செயற்கையாக ஏற்றுக்கொண்டனவானபொழுதும். சொற்பொருள் - சொல்லின்பொருள். கூடாமையின் - பொருந்தாதாதலால். இவ்வேதுப்பெயர் - சான்ருண்மையென்னுங் காரணப்பெயர். சான்றோர்க்கு நல்லனவாகிய குணங்களெல்லாம் இயல்பாயிருக்கு மென்றபடி. (க)

கூஅஉ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

(இ - ள்) சான்றோர் நலன் - சான்றோர்நலமாவது, குணம் நலம் ஏ - குணங்களான் ஆய நலமே; பிற நலம் - (அஃது) ஒழிந்த உறுப்புக்களான்ஆய நலம், எ நலத்துஉம் உள்ளது அன்று - ஒருநலத்தினும் உள்ளதன்று; (எ-று.)

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தை 'பிறநலம்' என்றும், அது குடிப்பிறப்புங் கல்வியும் முதலாக நூலோர்எடுத்த நலங்களுட் புகுதாமையின் 'எந்நலத்துள்ளதூஉ மன்று' என்றுங் கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், சால்பிற்குஏற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன.

(கு - ரை.) உறுப்புக்கள் - அவயவங்கள். நலம் - அழகு. அகநலம் - மனத்தின்நன்மை. குணநலமேயென்றதனால், அகநலம் பிரிக்கப்பட்டதென்க. ஏ - பிரிநிலை. புறநலம் - உடம்பினழகு. அது - புறநலம். புகுதாமையின் - சேராதாதலால். சால்பு - சான்ருண்மை. அளபெடை - இன்னிசைநிறைவந்தது. (உ)

கூஅங. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

(இ - ள்.) அன்பு - (சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாய அன்பும், நாண் - (பழிபாவங்களின்) நாணலும், ஒப்புரவு - (யாவர்மாட்டும்)

ஒப்புரவுசெய்தலும், கண்ணோட்டம் - (பழையார்மேல்) கண்ணோடலும், வாய்மையொடு - (எவ்விடத்தும்) மெய்ம்மைகூறலும் என, சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பென்னும்பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து; (எ-று.)

எண்ணொடு, முன்னவற்றோடுங் கூடிற்று. இக்குணங்கள் இல்வழிச் சால்பு நிலைபெறாமையின், இவற்றை 'தூண்' என்றார். ஏகதேசவுருவகம்.

(கு - ரை.) சுற்றத்தார் - உறவினர். பழையார்மேற் கண்ணோடல் - முன் பரிசயமுடையவரிடத்தில் தாட்சிணியப்படுதல். முன்பு கண்ணோட்டமென்னும் அதிகாரத்தில் 'அஃதாவது - தன்னொடு பயின்றாரைக்கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை: இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று' என உரைத்தது உணரத்தக்கது. எண் ஒடு - எண்ணுப்பொருள்தருவதாகிய 'ஒடு' என்னுஞ்சொல். அது அன்பொடு நாணொடு ஒப்புரவொடு கண்ணோட்டத்தொடு என நின்றவிடத்துப்பிரிந்து பிறவிடத்துஞ்சென்று பொருந்தியமை காண்க. இக்குணங்கள் - அன்பு முதலிய குணங்கள். அன்பு முதலிய குணங்களைத் தூணாக உருவகஞ் செய்தவர், அதற்கேற்பச் சால்பினைப் பாரமாக உருவகஞ் செய்யாமையால், இஃது - ஏகதேசவுருவகம். (௩)

௯௮௪. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(இ - ள்.) (பிறஅறங்களும் வேண்டுமாயினும்), நோன்மை - தவம், கொல்லா நலத்தது - (ஒருயிரையுங்) கொல்லாத அறத்தின்கண்ணதேயாம்; (அதுபோல), (பிறகுணங்களும் வேண்டுமாயினும்), சால்பு—, பிறர் தீமை சொல்லா - பிறர்குற்றத்தைச் சொல்லாத, நலத்தது - குணத்தின்கண்ணதேயாம்; (எ - று.)

நலம் என்னும் ஆகுபெயர்ப்பொருள் இரண்டனையும் தலைமைதோன்ற இவ்விரண்டற்கும் அதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லாவறம் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றஞ்சொல்லாக்குணம் சிறந்தது என்பதாம்.

(கு - ரை.) பிறஅறங்களை உஎ - ஆவது அதிகாரத்தின் அவதாரிகையிற் காண்க. அறத்தின்கண்ணதே - அறத்தினிடத்திலேயே யுள்ளது. "நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக், கொல்லாமைசூழ்வான்றலை" என்றார், கீழ்க்கொல்லாமையென்ற அதிகாரத்தும். பிறகுணங்கள் - அன்பு நாண் ஒப்புரவு முதலானவை. 'நலத்தது' என்னுஞ் சொற்களிலுள்ள 'நலம்' என்பன - பண்பாகுபெயரால், முறையே, நலத்தையுண்டாக்கும் அறம் குணம் என்ற பொருளைக் காட்டும். ஆகுபெயர்ப்பொருளிரண்டு - அறமும் குணமும். இவ்விரண்டற்கும் - தவத்துக்கும் சால்புக்கும். அதிகாரம் - முக்கியஸ்தாநம். தவத்தில் கொல்லா வறத்திற்கும், சால்பில் பிறரதுதீமை சொல்லாக் குணத்திற்கும் உள்ள தலைமை தோன்ற, 'நோன்மை கொல்லாநலத்தது', 'சால்பு பிறர்தீமைசொல்லாநலத்தது' என

நோன்மைசால்புகட்குக் கொல்லாநலத்தையும் பிறர்தீமைசொல்லாநலத்தையும் முறையே இடமாக்கிக் கூறினரென்றவாறு. (சு)

கூஅடு. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

(இ - ள்.) ஆற்றுவார்-(ஒருகருமத்தைச்) செய்துமுடிப்பாரது, ஆற்றல்-ஆற்றலாவது, பணிதல் - (அதற்குத் துணையாவாரைத்)தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்: சான்றோர் - (இனி) சால்புடையார், மாற்றுரை - (தம்)பகைவரை, மாற்றும் - பகைமையொழிக்கும், படை - கருவியும், அது - அதுவே.

ஆற்றல்-அதுவல்லராந் தன்மை. இறந்ததுதழீஇயஎச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. சால்பிற்குஏற்ற பணிதற்குணத்தது சிறப்புக் கூறுவார், ஏனையதும் உடன்கூறினர்.

(கு - ரை.) கருமம் - தொழில். அதற்கு - கருமத்தைச்செய்துமுடித்தற்கு. அது - பணிவு. அதுவல்லர் - தொழில்செய்துமுடிக்கவல்லர். படையென்பதன்பின், இறந்தது தழுவிய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. ஏனையது-மற்றொன்று: மாற்றுரைமாற்றும்படை அப்பணிவு என்பது. சான்றுண்மையைச்சார்ந்த பணிவைக் கூறுமிடத்துப் பகைவரைமாற்றும் படையென்பது ஏனையதாத லறிக. மாற்றுர் - மாறுபாடுடையோர். (கூ)

கூஅசு. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேர்ந்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

(இ - ள்.) சால்பிற்கு - சால்பாகிய பொன்னின் அளவு அறிதற்கு, கட்டளை - உரைகல்லாகிய செயல், யாது எனின்—, (அது), தேர்வி-(தம்மின் உயர்ந்தார்மாட்டுக்கொள்ளுந்) தேர்வியை, துலை அல்லார்கண்உம் - இழிந்தார்மாட்டும், கொளல் - கோடல்; (எ - று.)

துலை - ஒப்பு. எச்சவும்மையான், இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல் - வெல்லும் ஆற்ற லுடையராயிருந்தே ஏற்றுக் கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக்கொள்ளாது தேர்வியான் அவரினும் உயர்வராயின், அதனால் சால்பளவு அறியப்படுமென்பதாம்.

(கு - ரை.) அளவு - மாற்று. தேர்வி-பணிவு, கீழ்ப்படிதல். 'துலையல்லார் கண்ணும்' என்ற இடத்துள்ள இழிவு சிறப்புப் பொருளோடு இறந்தது தழுவிய எச்சப்பொருளையுமுடைய உம்மையினால், உயர்ந்தார் இழிந்தார் என்ற இருவரிடத்தும் தேர்வி வேண்டுதல் பெறப்படு மென்க. ஒப்பித்துக்கொள்ளுதல் - சமமாக்கிக்கொள்ளுதல். தேர்வியான் உயர்ந்தவராயின் என இயையும்: தேர்வியான் உயர்தல் - மிக்கபணிவுகாட்டுதல். அவரினும் - துலையல்லாரைவிட. சால்பு அளவு - சால்பினளவு. துலையல்லார் கண்ணும் தேர்விகொள்ளுதலைக் கட்டளையென்றதற்கு ஏற்ப, சால்பைப் பொன்னென்ஞமையால், இஃது ஏகதேசஉருவகம். (சு)

கூஉஎ. இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

(இ - ள்.) இன்னு செய்தார்க்குமும் - (தமக்கு) இன்னுதவற்றைச் செய்தார்க்கும், இனியஎ செய்யாக்கால் - (சால்புடையார்) இனியவற்றைச் செய்யாராயின், சால்பு என்ன பயத்தது - அச்சால்பு வேறு என்னபயனை யுடைத்து? (எ - று.)

சிறப்பு உம்மை, அவர் இன்னு செய்தற்கு இடனுதல் விளக்கிநின்றது. ஓகாரம்-அசை. வினு-எதிர்மறைப்பொருட்டு. தாமும் இன்னுசெய்வராயின், சால்பால் ஒருபயனும் இல்லை யென்பதாம்.

இவையெந்துபாட்டானும், சிறப்புவகையாற் கூறப்பட்டன.

(கு - ரை.) 'இன்னுதவற்றை - துன்பந்தருவனவற்றை. 'இன்னு செய்தார்க்கும்' என்ற இடத்துள்ள இழிவுசிறப்பும்மை, தம்மால் இன்னுசெய்தற்கு உரியவர் அவர் என்பதை விளக்கிநின்றது. 'என்ன' என்ற வினு - எதிர்மறைப் பொருளது; சால்புடையவர் இன்னுசெய்தார்க்குத் தாமும் இன்னுதவற்றைச் செய்வராயின், இவரிடத்துள்ளசால்பால் ஒருபயனு மில்லை யென்பதாம். சால்பாவது - குணங்களால் நிறைந்திருக்குந்தன்மை. "கறுத்தின்னு செய்தவக்கண்ணு மறுத்தின்னு, செய்யாமை மாசற்றார்கோள்", "இன்னு செய்தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்" என்பன இங்குக்காணத்தக்கன. சிறப்புவகையாற்கூறப்பட்டன, சால்பிற்குஎற்றகுணங்கள்.

கூஉஅ. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) சால்பு என்னும் திண்மை-சால்புஎன்று சொல்லப்படும் வலி, உண்டாகப்பெறின்—, ஒருவற்கு - ஒருவனுக்கு, இன்மை-நல்குரவு, இளிவு அன்று - இளிவாகாது; (எ - று.)

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான்வருவதனை இன்மைதானுக உபசரித்துக்கூறினுர். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடைய ரென்பதாம்.

(கு - ரை.) சால்பென்பது எந்நிலையிலும் ஒருவனைத் தளரவொட்டாமல் நிலைநிறுத்துதலால், வலியாமென்க. வலி - வலிமை. இளிவு - தாழ்வுவிளைப்பது. இளிவு=இழிவு. இன்மை - பொருளின்மை. இன்மைதானுக - இன்மையாகவே. பொருளில்லாமையால் வருகிற வறுமையை இன்மையாகவே உபசரித்துக் கூறியது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. சால்புடையவர் வறுமையையடைந்தாலும், அதனுல் இழிவடையாது மேம்படுதலுடையவராவ ரென்பதாம். (அ)

கூஉகூ. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ - ள்.) சான்றாண்மைக்கு-சால்புடைமையாகிய கடற்கு, ஆழி எனப் படுவார் - கரையென்றுசொல்லப்படுவார்,—ஆழி பெயரின்உம்-(ஏனைக்கட லும் கரையுள்நில்லாமல்) காலந்திரிந்தாலும், தாம் பெயரார் - தாம் திரியார்.

சான்றாண்மையது பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும், அத னைத் தாங்கிக்கொண்டுநிற்றலின் அஃதுடையாரைக் கரையாக்கியுங் கூறி னார்; "பெருங்கடற்கு ஆழி யனையன் மாதோ" என்றார் பிறரும். ஏகதேச வுருவகம்.

(கு - ரை.) சால்புடைமையாகிய கடற்குக் கரையென்றுசொல்லப்படு வார் - சான்றாண்மைக்குவரம்பாய் நிற்பவர்; சான்றாண்மைதவறுதவர். ஏனைக் கடல் - இயற்கையானகடல். காலந்திரிந்தாலும் - பிரளயம்நேர்ந்தாலும்: திரி தல் - மாறுபடுதல். தாம் திரியார் - தாம் நிலைமாறார். சால்புடையார் எப்போ தும் தம் நிலையினின்றும் மாறுபடாரென்க. "உறையார்விசும்பி னுவரமதி போல, நிறையாநிலவுதலன்றிக்-குறையாத, வங்கம்போழ் முந்நீர்வளம் பெறி னும் வேறுமோ, சங்கம்போல் வான்மையார் சால்பு" என்பது, இங்கு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது. சான்றாண்மையின் பெருமைதோன்ற அத னைக் கடலாக்கியும், அச் சான்றாண்மையைத் தாங்கிநிற்றலாற் சான் றாண்மையுடையாரைக் கரையாக்கியுங் கூறினார். 'ஆழி' என்பது-கரையென் னும் பொருளில் வருதற்கு "பெருங்கடற் காழி யனையன் மாதோ" என்ற மேற்கோள் புறநானூறு ஙஙo - ஆம் பாடலிலுள்ள அடி: இதன்பொருள்:— பெரியகடலுக்குக் கரைபோல்வானென்பது. 'பிறர்' என்றது, அப்பாடல் செய்தவரான மதுரைக் கணக்காயனாரைமேல்நிற்கும். சான்றாண்மையுடையா ரைக் கரையாக உருவகஞ் செய்ததற்கேற்பச் சான்றாண்மையைக் கடலாக உருவகஞ் செய்யாதது - ஏகதேசவுருவகவணி. (கூ)

கூகo. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
குன்காது மன்னோ பொறை.

(இ - ள்.) சான்றவர் - பலகுணங்களானும் நிறைந்தவர், சான்றாண்மை குன்றின் - (தம்) தன்மை குன்றுவராயின், இரு நிலம் தான் பொறை தாங் காது - மற்றைஇருநிலந்தானும் தன்பொறையைத் தாங்காதாய் முடியும்.

'தானும்' என்னும் எச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்றுமையும், அதற்கு அதுதாங்கலும் இயல்பாகலான், அவை எஞ் ஞான்றும் *உளவாகாநின்றன என்பது தோன்ற நின்றமையின், மன் - ஒழி யிசைக்கண் வந்தது. ஓகாரம் - அசை. இதற்கு - இருநிலம் பொறைதாங் குவது சான்றவர் துணையாக வருதலான் அதுவும் அதுதாங்கலாற்றாது என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்றுபாட்டானும், அவற்றால் நிறைந்தவரது சிறப்புக் கூறப் பட்டது.

பி - ம்: உளவாதா என்பது.

(கு - ரை.) இருநிலம் - பெரியபூமி: பண்புத்தொகை. பொறையை - பாரத்தை. எச்சவும்மை - சான்றவர் சான்றாண்மை குன்றியதன்றி என்ற பொருளைத் தருதலால், இங்கே இறந்ததழுவிய எச்சம். 'இருநிலந்தான்' என்ற இடத்து இருக்க வேண்டிய எச்சவும்மை, செய்யுள் விகாரத்தாற் றொக்கதென்றார். சான்றவர்க்குச் சான்றாண்மைகுன்றாமையும் நிலத்திற்குப் பொறையைத்தாங்குதலும் இயற்கை யாகையால், அவைகள் எஞ்ஞான்றும் உளவாகின்றன என்பது தோன்ற நின்றமையால், மன் - ஒழியிசைக்கண் வந்ததாம். ஒழியிசையாவது - சொல்லப்பட்ட பொருளே யொழியச் சொல்லாதுஒழிந்துநின்றபொருளுந் தோன்ற நிற்பது. அவற்றுல்-சால்பிற்குஏற்ற குணங்களால். மூதலுரையின்கருத்து - பூமியானது பாரத்தைச்சுமப்பது போலச் சான்றோர் சான்றாண்மையை வகிப்பரென்பது. இனி, இக்குறட்குக் கூறிய வேறுரை:—இருநிலம் பொறைதாங்குவது சான்றவர் துணையாக வருதலாலாகும்: ஆதலால், சான்றவர் சான்றாண்மை குன்றின் அவ்விருநிலந்தானும் பொறை தாங்கமாட்டாது என்பது. (க0)

க00 - ஆம் அதிகாரம்.—பண்புடைமை.

அஃதாவது - பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாதுநின்று எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து *ஒழுகுதலுடையதுதல்;''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) ''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' என்ற மேற்கோள் கலித்தொகை நெய்தற்கலி கசு - இல் உள்ளது: மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலகவழக்கம் அறிந்து ஒழுகுதலென்பது, இதன்பொருள். பெருமைசான்றாண்மைகளே யுடையார்க்குப் பண்புடைமை வேண்டுமென்பதுபற்றி, அவற்றின்பின் பண்புடைமை வைக்கப்பட்டதென்க.

கூகூக. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ - ள்.) யார்மாட்டும் - யாவர்மாட்டும், எண் பதத்தால் - எளிய செவ்வியராதலால், பண்பு உடைமை என்னும் வழக்கு எய்தல் - (அரிதாய) பண்புடைமையென்னும் நன்னெறியினை எய்துதல், எளிது—, என்ப-என்று சொல்லுவர், (நூலோர்); (எ - று.)

குணங்களால் நிறைந்து செவ்வியெளியருமாயக்கால் பண்புடைமை தானே உளதா மாகலின், 'எண் பதத்தா லெய்த லெளிது' என்றும், அஃது உலகத்தையெல்லாம் வசிகரித்தற்பயத்ததாகலின் அதனைத் தொல்லோர் சென்ற நன்னெறி யாக்கியும், அதனை எளிதின்எய்துதற்கு இது நூலோர் ஓதிய உபாய மென்பார், அவர்மேல்வைத்துங் கூறினர்.

(கு-ரை.) யாவர்மாட்டும்-எல்லோரிடத்தும். எளிய செவ்வியராதலால் - தம்மிடத்து எளிதில்வந்து தம்மைக்கண்டுபேசும்படி சமயமளிக்குந் தன்

* பி - மி: ஒழுகுதல்;

மையையுடையராகுதலால். எண் - எளிமை: பதம் - சமயம்: எண்பதம்-பண்புத்தொகை. வழக்கு - வழங்குதற்கு உரியது: வழங்குதல் - செல்லுதல்: எனவே, சன்மார்க்கமாயிற்று. அஃது - பண்புடைமை. வகிகரித்தற்பயத்தது - வசப்படுத்தலாகிய பயனையுடையது. தொல்லோர் - தொன்றுதொட்டுள்ளவர். அதனை - பண்புடைமையை. இது - செவ்வியெளிமை. (க)

கூகூஉ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ - ள்.) அன்பு உடைமை - (பிறர்மேல்) அன்புடையனாதலும், ஆன்ற குடி பிறத்தல் - உலகத்தோடுஅமைந்த குடியின்கண் பிறத்தலும், இ இரண்டு உம் - ஆகியஇவ்விரண்டும்,—பண்பு உடைமை என்னும் வழக்கு - (ஒருவனுக்குப்) பண்புடைமையென்று (உலகத்தார்) சொல்லும் நன்னெறி; (எ - று.)

அமைதல் - ஒத்துவருதல். 'குடிப்பிறத்தல்' என்றது, பிறந்தார்செயலே. தனித்தவழி ஆகாது இரண்டுங்கூடியவழியே ஆவது என்பது தோன்ற, முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக உபசரிக்கப்பட்டன.

இவையிரண்டுபோட்டானும், பண்புடையராதற்காரணங் கூறப்பட்டது.

(கு - சை.) அன்புடைமை குடிப்பிறத்தல் என்ற இரண்டும் கூடியிருக்கும்போதே பண்புடைமை உண்டாவ தென்பார், 'இவ்விரண்டும்' என முற்றும்மை கொடுத்துக் கூறினார்: "அன்புடைமையான்ற குடிப்பிறத்தல் வேண்தவாம், பண்புடைமை தானுரைப்பான் பண்பு" என்றது இங்கு ஒருசார் நோக்கத்தக்கது. அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் என்ற இவ்விரண்டும் பண்புடைமை யென்னும் வழக்கிற்குக்காரணம் என்று கூறவேண்டிய விடத்து, அன்புடைமை ஆன்றகுடிப்பிறப்பு என்ற இவற்றையே பண்புடைமையென்னும்வழக்கு என்றது - காரணங்களே காரியமாக ஒற்றுமைப் படுத்துக் கூறிய உபசாரவழக்காம். (உ)

கூகூங. உறுப்பொத்தன் மக்களொப் பன்மை வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

(இ - ள்.) உறுப்பு ஒத்தல் - (செறியத்தகாத) உடம்பால் ஒத்தல், மக்கள் ஒப்புஅன்று-(ஒருவனுக்கு)நன்மக்களோடு(ஒப்பாகாமையின் அது)பொருந்துவ தன்று; (இனி), ஒப்பது ஆம் ஒப்பு-பொருந்துவதாய ஒப்பாவது, வெறுத்தக்க பண்பு ஒத்தல் - செறியத்தக்க பண்பால் ஒத்தல்; (எ - று.)

வடநூலார் 'அங்கம்' என்றமையின், 'உறுப்பு' என்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது, உயிரின்வேறாய் நிலையுதலில்லா வுடம்பு ஒத்தல் அன்று: வேறன்றி நிலையுதலுடைய பண்பு ஒத்தல்: ஆகலான், அப்பெற்றித்தாய அவர்பண்பினை யுடையனாக என்பதாம்.

(கு - சை.) செறியத்தகாத - உயிரோடு ஒற்றுமைப்படாத. அது - உடம்பாலொத்தல். செறியத்தக்க - உயிரோடு ஒற்றுமைப்படுகிற. அங்கம் என்ற வடசொல் உறுப்பையும் உறுப்புக்களையுடைய உடலையும் உணர்த்துதல்போல உறுப்பு என்ற தமிழ்ச்சொல்லும் இரண்டையும் உணர்த்தும். அது; இங்கு

உடம்பையுணர்த்திற்று: "அங்கங் குலைவதறிவு" என்று உடலை அங்கமென்று பின்னுள்ளார் கூறியதுங் காண்க. நிலையுதல் - நிலைத்தல். வேறு அன்றி-உயிரோடு ஒப்புமைப்பட்டு என்றபடி. அப்பெற்றித்தாய - அத்தன்மையதான. அவர்பண்பு - நன்மக்களதுபண்பு. மக்கள் - மனிதர். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறும் ஒப்பாவது உயிரின் வேறாய் நிலைபெறாத உடம்பு ஒத்தலாகாது உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிலைபெறுதலுடைய பண்பினால் ஒத்தலேயாதலால், அப்படிப்பட்ட அந்த நன்மக்களின் பண்பையுடையவனாகுக என்பதாம். குணமே ஆன்மாவோடு நெருங்கியுள்ள தாதலால், "வெறுத்தக்க பண்பு" என்றார்: வெறுத்தல் - நெருங்குதலென்னும் பொருளதாதலை "விறப்பு முறப்பும் வெறுப்பும் செறிவே" என்ற தொல்காப்பியத்தாலுமறிக.

௯௯௪. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

(இ - ள்.) நயனொடு - நீதியையும், நன்றி - அறத்தையும், புரிந்த - விரும்புதலால், பயன் உடையார் - (பிறர்க்கும் தமக்கும்), பயன்படுதலுடையாரது, பண்பு - பண்பினை, உலகு பாராட்டும் - உலகத்தார்கொண்டாடாநிற்பர்.

'புரிந்த' என்னும் பெயரெச்சம் - ஈண்டு, காரணப்பொருட்டு. நயனொடு நன்றிபுரிதலும், பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், 'அதனைப் பாராட்டும்' என்றார்.

(கு - ரை.) 'புரிந்த' என்ற பெயரெச்சம், இங்குப் புரிதலாலெனக் காரணப்பொருளதாதல்காண்க. அதனை - பண்பை. பண்புடையார் நீதியையும் தருமத்தையும் விரும்புதலாலும், அக்காரணத்தாற் பயன்படுதலாலும், அவர்பண்பை உலகத்தார் கொண்டாடாநிற்ப ரென்பது. கருத்து. (௪)

௯௯௫. நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(இ - ள்.) இகழ்ச்சி - (தன்னை) இகழ்தல், நகையுள்உம் இன்னாது - (ஒருவற்கு) விளையாட்டின்கண்ணும் இன்னாது; (ஆகலால்); பாடு அறிவார் மாட்டு - பிறர்பாடு அறிந்து ஒழுகுவார்மாட்டு, பகையுள்உம் - பகைமையுள் வழியும், பண்பு உள-(அஃதுஉளதாகாது இனியவாய)பண்புகளே உளவாவன.

'பாடறிவார்' எனவே, அவ்வின்னாமையறிதலும் பெற்றாம். அதனையறிந்தவர் பின் அதுசெய்யார், இனியவே செய்வார் என்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டுதொடரும் தம்முள் இயையாமல் உரைப்பாரும், 'இன்னாது' என்னுஞ் சொற்குப் பிறவாது என்று உரைப்பாரு மாயினார்.

(கு - ரை.) தன்னையிகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது - ஒருவன் தான் பிறரால் விளையாட்டுவகையாக இகழப்பட்டாலும் அவ்விகழ்ச்சி அவனுக்கு மனவருத்தத்தைவிளைப்பதாம். பிறர்பாடு - பிறரியல்பு. அஃது - இகழ்ச்சி. அவ்வின்னாமையறிதல் - தன்னைப்பிறரிகழ்தல் தனக்கு இன்னாதாதல்போலத் தான் பிறரை இகழினும் அது அவர்க்கு இன்

ஞதாகுமென்னும் இயல்பை யறிதல். அதனை - அவ்வின்ஞமையை: பிற ரியல்பை என்பாருமுளர். அதுசெய்யார் - இகழார். உம்மைகள் - சிறப்புப் பொருளன. (ரு)

கூகூசு. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(இ - ள்.) பண்பு உடையார் பட்டு - பண்புடையார்கண்ணே படுதலால், உலகம் - உலகியல், உண்டு-(எஞ்ஞான்றும்) உண்டாய்வாராநின்றது: இன்று ஏல் - (ஆண்டுப்) படுதல் இல்லையாயின், அது—, மண் புக்கு - மண்ணின் கட்புக்கு, மாய்வது - மாய்ந்துபோவதாம்; (எ - று.)

'பட' என்பது, திரிந்துநின்றது. உலகம் - ஆகுபெயர். மற்றைப் பண் பில்லார் சார்பன்மையின் ஓர்சார்புமின்றி மண்ணின்கட்புக்கு மாயுமது வேண்டாவாயிற்று என்பதுபட நின்றமையின், மன்-ஒழியிசைக்கண்வந்தது.

இவைதான்குபாட்டானும், அதனையுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) ஆண்டுப்படுதல் - அப்பண்புடையாரிடத்தே பொருந்துதல். உலகியல் - உலகவொழுக்கம். 'பட்டு' என்பது - 'உண்டு' என்னும் வேறு வினைமுதல் வினையைக்கொண்டுமுடிதலால், அதற்கு ஏற்ப 'பட' என்ற செயவெனெச்சத்தின் திரிபு என்க. உலகம் என்பது - உலகியலைக் காட்டுத லால், இடவாகுபெயர். பண்பில்லாரோ உலகியல் நிற்பதற்குச் சார்பு ஆகா ராதலால், அவ்வுலகியல் பண்புடையாரிடத்துப் படாவிடின் தனக்கு ஓரா தாரமுமில்லாமையால் மண்ணின்கட் புக்கு மாயும்; அது வேண்டா வாயிற் றென்ற ஒழிந்த பொருளைத் தந்தமையின், மன் - ஒழியிசைக்கண் வந்த தாம்: "உண்டாலம்ம விவ்வுலகம் ****,தமக்கெனமுயலாநோன்தாட், பிறர்க் கென முயலுநருண்மையானே" என்பது, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. சார்பு- ஆதாரம். வேண்டாவாயிற்று - விரும்பப்படாதாயிற்று. என்பது பட - என்ற பொருள்தோன்ற. அதனை - பண்பை. (சு)

கூகூஎ. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(இ - ள்.) மக்கள் பண்பு இல்லாதவர் - நன்மக்கட்கேயுரிய பண்பு இல் லாதவர்,—அரம் போலும் கூர்மையர் என்உம்-அரத்தின் கூர்மைபோலும் கூர்மையை யுடையரேயாயினும், மரம் போல்வர் - (ஓரறிவிற்குய) மரத்தினை யொப்பர்; (எ - று.)

அரம் - ஆகுபெயர். ஓரறிவு - ஊற்றினையறிதல். உவமையிரண்ட னுள், முன்னது - தான் மடிவின்றுத் தன்னையுற்ற பொருள்களை மடிவித்த லாகிய தொழில்பற்றி வந்தது: ஏனையது, விசேடவறிவின்மையாகிய பண்பு பற்றி வந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனுய மக்கட்பண்பு இன்மையின் அதுதானும் இல்லையென்பதாயிற்று.

(கு - ரை.) அரம் - ஒருவகை வாள். கூர்மையையுடையர் - அறிவின் கூட்பத்தோடு செயல்நுட்பத்தையு முடையவர். அரம் - அரத்தின் கூர்

மைக்கு, ஆகுபெயர். மரத்திற்கு உள்ள ஓரறிவாவது - ஊற்றினை [ஸ்பர்ஶத்தை] யறிதல். அரத்திற்குமடிவு - கூர்மைமழுங்குதல்: தன்னையுற்ற பொருள்களை மடிவித்தல் - தன்னிடம் அராவப்பட்டபொருள்களைத் தேயச் செய்தல். மனிதர்க்குமடிவு - சோர்தல்: தன்னையுற்ற பொருள்களைமடிவித்தல் - தன்னை எதிர்த்தவரைக் கெடுத்தல். ஏனையது - மற்றையது; இரண்டாவது உவமை. விசேடவறிவு இன்மை - விவேகமில்லாமை. மக்கட்பண்பு- நன்மக்கட்குரிய பண்பென்னும் குணம். அதுதானும்-விசேடவறிவும். இல்லை- பயனற்றதென்றபடி. உவமையணி. (எ)

௯௯௮. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை.

(இ - ள்.) நண்பு ஆற்றார் ஆகி - (தம்மொடு) நட்பினைச் செய்யாது, நயம் இல செய்வார்க்குஉம் - பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும், பண்பு ஆற்றார் ஆதல் - தாம் பண்புடையராய் ஒழுகாமை, கடை - (அறிவுடையார்க்கு) இழுக்காம்; (எ - று.)

நயம் - ஈரம். சிறப்புஉம்மை, அவர்பண்பாற்றாமைக்கு இடனாதல் தோன்ற நின்றது. அதனைச் செய்யின் தாமும் அவர்தன்மையராவ ரென்பார், 'கடை' என்றார்.

(கு - ரை.) இழுக்கு - குற்றம். ஈரம் - அன்பு. அவர் - நயமிலசெய்வார். இடனாதல் - விஷயமாதல். அதனைச்செய்யின் - பண்பாற்றாமையை மேற்கொண்டால். அவர் - நயமிலசெய்வார். (அ)

௯௯௯. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(இ - ள்.) நகல் வல்லர் அல்லார்க்கு - (பண்பின்மையான் ஒருவரோடுங் கலந்து) உண்மகிழ்தல்மாட்டார்க்கு, மா இரு ஞாலம் - மிகவும் பெரிய ஞாலம், பகல்உம் - (இருளில்லாத) பகற்பொழுதினும், இருள்பால்-இருளின் கண், பட்டன்று - கிடந்ததாம்; (எ - று.)

எல்லாரோடுங் கலந்துஅறியப்பெறாமையின் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாது என்பார் 'உலகம் இருளின்கட் பட்டது' என்றார். 'பாழ்பட்டன்றிருள்' என்றுபாடமோதி, 'இருள்நீங்கிற்றன்று' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) உண்மகிழ்தல் - மனம்மகிழ்தல். மாயிரு என்றுபுணர்ந்தது- உரிச்சொற்புணர்ச்சியாதலால். பாற் பட்டன்று என்ற இடத்து 'பாழ் பட்டன்று' என்று பாடம் ஓதி—ஞாலம் பகலிலும், இருள் பாழ்பட்டன்று - இருள் நீங்கியதன்று என்று உரைப்பாருமுளர். பட்டன்று என்பது பரிமேலழகருரையில் உடன்பாட்டிறந்தகாலமுற்றும், பிறருரையில் எதிர்மறையிறந்தகாலமுற்றுமாம். (௯)

௧௦௦௦. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(இ - ள்.) பண்பு இலான் பெற்ற பெரு செல்வம் - பண்பில்லாதவன் (முன்னைநல்வினையான்) எய்திய பெரிய செல்வம், (அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்),—நல் பால்-நல்ல ஆன்பால், கலம் தீமையால் - (ஏற்ற) கலத்தின் குற்றத்தால், (இன்சுவைத்தாகாது), திரிந்து அற்று-கெட்டாற் போலும்; (எ - று.)

கலத்தீமை யென்பது, மெலித்து நின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. படைக்கும் ஆற்றலிலனுதல் தோன்ற 'பெற்ற' என்றும், எல்லாப்பயனுங் கோடற்கு ஏற்ற இடனுடைமை தோன்ற 'பெருஞ்செல்வம்' என்றுங் கூறினர். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனுன், வருகின்ற அதிகாரப் பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது.

இவைநான்குபாட்டானும், அஃதில்லாரது இழிவு கூறப்பட்டது.

(கு - ரை.) முன்னைநல்வினை - முற்பிறப்பிற்செய்த புண்ணியம். அக்குற்றத்தால் - பண்பின்மையால். ஆன்பால் - பசுவின்பால். ஏற்ற - பெய்த. கலம் - பாத்திரம். பொருளின்கண் - உபமேயத்தில். ஒத்த தொழில் - 'அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்' என்பது. படைக்கும் ஆற்றலிலனுதல் - தானே சம்பாதிக்கும் வல்லமையில்லாதவனென்பது. வருகின்ற அதிகாரப்பொருண்மை - நன்றியில் செல்வத்தினியல்பு. தோற்றுவாய் செய்தல் - தொடங்குதல். அஃது இல்லார் - பண்பில்லாதவர். கலத்தீமை யென்பது - கலத்தீமை யென மெலித்தல் விகாரம் பெற்றுவந்தது. இது - தொழிலுவமமாதலால், 'கலத்தீமையால் பால் திரிதல்போல்' என்ற உபமானத்திற்கு ஏற்ப, உபமேயமாகிய முதல்வாக்கியத்தில், 'பண்பிலாக் குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாதுகெடுதல்' என்ற ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வமும் பயன்படாதென்ற இதனுல், அடுத்து வருகின்ற அதிகாரமாகிய 'நன்றியில் செல்வம்' என்பதற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. (கo)

கoக - ஆம் அதிகாரம்.—நன்றியில் செல்வம்.

அஃதாவது - ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினது இயல்பு. உடையானது குற்றம், செல்வத்தின்மே லேற்றப்பட்டது. அதிகாரமுறைமை, மேல் தோற்றுவாய்செய்த வதனுற் பெற்றும்.

(கு - ரை.) ஈட்டியாற்கும் - சம்பாதித்தவனுக்கும். செல்வமுடையவனது குற்றமாகிய நன்றியின்மையைச் செல்வத்தின்மே லேற்றி, நன்றியில் செல்வமென்றது - உபசாரவழக்கு. நன்றி - பயன்படுதல். செல்வம் பயன்படுதலில்லாமற்போவது பண்பில்லாமையா லாதலால் இந்தநன்றியில்செல்வம் பண்புடைமையென்ற அதிகாரத்தின்பின் வைத்தற்கு உரியது என்பது, பண்பிலான்பெற்ற பெருஞ்செல்வம் என்று கீழ்க்கூறியதனுல் பெறப்படுதல் காண்க.

கooக. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணுன்
செத்தான் செயக்கிடந்த தில்.

(இ - ள்.) வாய் சான்ற பெரு பொருள் - (தன்) மனையகலமெல்லாம் நிறைதற்கு ஏதுவாய பெரும்பொருளை, வைத்தான் - ஈட்டிவைத்து, அஃது உண்ணுன் - (உலோபத்தால்) அதனை உண்ணுதவன், செத்தான் - (உளனுயினும்) செத்தானும்; செய கிடந்தது இல் - (அதன்கண் அவனுற் செயக் கிடந்ததோ ருரிமை யின்மையான்: (எ - று.)

வைத்தான் என்பது முற்றெச்சம். உண்ணுதல்-அதனுன் ஐம்புலன்களையும் நுகர்தல். வாய்சான்றபெரும்பொருளை வைத்தா னெருவன் அதனையுண்ணுது செத்தவழி அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோருரிமையில்லை யாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்க வென்று உரைப்பினும் அமையும்; இதற்கு 'செத்தான்' என்பது - எச்சம்.

இதனுல், ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

(கு - ரை.) வாய் - இடம்: இங்கே, வீட்டினகலம். ஈட்டிவைத்து - சம்பாதித்துவைத்து. உலோபம் - பணத்தின்மேலாசை: அது இறுகப்பிடிக்குந் தன்மையைக் காட்டும். அதன் கண்-அப்பொருளினிடத்து. உரிமை-சுதந்திரம். வைத்தான் என்ற வினைமுற்று, வைத்து என எச்சப்பொருள்படுதல்காண்க. அதனுன் - அப்பொருளினுல். ஐம்புலன்களையும் நுகர்தல் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்பொறிகட்கு உரிய ஐந்துவிஷயங்களையும் அனுபவித்தல். இக்குறளுக்கு இரண்டாவது உரைவருமாறு:— வாய் சான்ற - மனையினிடமெல்லாம் நிறைதற்குக் காரணமாகிய, பெரும்பொருள்வைத்தான்—, அஃது உண்ணுன் - அதனையுண்ணுது, செத்தான் - செத்தவழி, அதன்கண் அவனுற்செயக்கிடந்தது இல் என்பது: இப்பொருளில், வாய்சான்ற பெரும் பொருள்வையாது பெற்றபொழுதே நுகர்க என்பது, குறிப்பெச்சம். இப் பொருளில், செத்தான் என்பது செத்து எனப் பொருள்படுதலால், முற்றெச்சமாம். இங்கு ஆய்தம் மெய்போல ஒலித்தது. (க)

கoo உ. பொருளான மெல்லாமென் றீயா திவறு
மருளான மாணப் பிறப்பு.

(இ - ள்.) பொருளான - பொருள் ஒன்றும் உண்டாக அதனுல், எல்லாம் ஆம் என்று - எல்லாம் உண்டாம் என்று அறிந்து (அதனை ஈட்டி), ஈயாது இவறும் - (பின் பிறர்க்கு) ஈயாது பற்றுள்ளஞ்செய்யும், மருளான - மயக்கத்தாலே, மரண பிறப்பு ஆம் - (ஒருவனுக்கு) நிறைதலில்லாத பேய்ப் பிறப்பு உண்டாம்; (எ - று)

இருமையினும் எய்தும் இன்பங்கள் பலவும் அடங்க 'எல்லாம்'என்றும், ஈட்டுதற்குமுன் உண்டாய அறிவு பின் மயங்குதலின் 'மருள்' என்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசிகண்டிருந்த தீவினைபற்றி உணவுகளுளவா யிருக்கப் பசித்துவருந்தும் பிறப்பு உளதா மென்றும் கூறினுர்.

(கு - ரை.) பொருள் ஒன்றும் - பொருள்மாத்திரம். பற்றுள்ளம் - உலோபம். நிறைதலில்லாத - திருப்தியுண்டாகாத. பொருளாலும் எல்லாம் - "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, நீதின்றி வந்தபொருள்," "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு எண்பொரு, ளேனை யிரண்டு மொருங்கு" என்றமை காண்க. (உ)

கஂஂசூ. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ - ள்.) ஈட்டம் இவறி - (யாம் பிறரின் மிக ஈட்டுதும் என்று பொருளீனது) ஈட்டல்மாத்திரத்தையே விரும்பி, இசை வேண்டா - (அதன் பயனை) புகழை விரும்பாத, ஆடவர் - மக்களது, தோற்றம்-பிறப்பு, நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரமாம் அத்தனையே; (எ - து.)

இசை இருமைக்கும் உறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல்செய்யாது ஈட்டல்துன்பத்தையுங் காத்தல்துன்பத்தையும் வேண்டிய அறிவின்மை பற்றி, 'நிலக்குப் பொறை' என்றார். 'பிறப்பு' என்றது அதற்கு உரிய உடம்பினை.

(கு - ரை.) பிறரின் மிக ஈட்டுதும்-அயலாரினும் அதிகமாகச்சம்பாதிப்போம். அதன்பயன் - பொருளின்பயன். அத்தனையே - அவ்வளவே. உறுதியாய அறமாகலின் என்றவிடத்து, உறுதியாதலினென்று பாடமிருப்பின் நலம். இசை இருமைக்கும் உறுதியாதலை "நிலவரை நீள்புக ழாற்றின் புலவரைப், போற்றாது புத்தேளுலகு" என முன்பு விளக்கினார். தோற்றம் - தோன்றுதல்: பிறப்பு. நிலக்குப்பொறை-பூமிபாரம்: புகழென்ற அதிகாரத்தில் "இசையிலா யாக்கை பொறுத்த நிலம்" என்றதையும் அதனுரையையும் காண்க. நிலக்கு - அத்துச்சாரியைதொக்கது, விகாரம். (ஊ)

கஂஂசு. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

(இ - ள்.) (ஒருபொருளும் ஈந்தறியாமையின்), ஒருவரால்-ஒருவராலும், நச்சப்படாதவன் - நச்சப்படுதலில்லாதவன், எச்சம் என்று - (தான் இறந்த வழி ஈண்டு) ஒழிந்துநிற்பதாக, என் எண்ணும் கொல்-யாதனைக் கருதுமோ?

ஈண்டு ஒழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக்கு அதனைநீடு யாதும் இயைபில்லை யென்பார், 'என்னெண்ணுங்கொல்லோ' என்றார். ஓகாரம் - அசை.

இவைமூன்றுபாட்டானும், பிறர்க்குப்பயன்படலின்மை கூறப்பட்டது.

(கு - ரை.) நச்சப்படுதல் - விரும்பப்படுதல். ஈண்டு ஒழிந்து நிற்பது - இவ்வுலகில் மிச்சமாய்நிற்பது. புகழுண்டாதற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவாயினும் ஈதலே சிறந்த தென்பதை, "ஈதலிசைபட வாழ்தல்," "இரப்பார்க்கொன் றீவார்மே னில்லும்புகழ்" என்பவற்றாலுணர்க. அவனுக்கு - ஈயாதவனுக்கு. அதனைநீடு - புகழோடு. ஈண்டு ஒழிந்து நிற்கு

மது புகழேயென்பது "ஒன்றுவுலகத்துயர்ந்த புகழல்லாற், பொன்றுதுநிற்ப தொன்றில்;" "இந்நிலத்துமன்னுதல்வேண்டி னிசைநடுக" என்றவற்றுல் விளக்கும். எஞ்சுவது [ஒழிந்துநிற்பது] எச்சம்: அம்-வினைமுதற்பொருளது.

கooடு. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினு மில்.

(இ - ள்.) கொடுப்பதுஉம் துய்ப்பதுஉம் இல்லார்க்கு - (பிறர்க்கு) ஈவதூம் (தாம்) நுகர்வதுமாய இரண்டுசெய்கையும் உடையரல்லாதார்க்கு, அடுக்கிய கோடி உண்டாயின்உம் - பலவாக அடுக்கிய கோடிப்பொருள் உண்டாயினும், இல் - ஒன்றுமில்லை; (எ - று.)

இன்பத்தினும் அறம்சிறத்தமையின், கொடுத்தல்தொழில் முற்கூறப்பட்டது. 'அடுக்கியகோடி' என்றது, ஈண்டு எண்ணப்படும் பொருள்மேல் நின்றது. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டும் இழத்தலின், 'இல்' என்றுர்.

(கு - ரை.) துய்ப்பதாலுண்டாகும் இன்பத்தினும், கொடுப்பதாலுண்டாகும் அறஞ் சிறத்தலால்,'கொடுப்பதூஉம்' என்று முற்கூறப்பட்டதென்க. கோடி - எண்ணலளவையாகுபெயர். ஒன்றுமில்லார் - பொருள் சிறிதுமில்லார். பயனிரண்டும் - அறப்பயனும் இன்பப்பயனும். (டு)

கooசு. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன் றீதலியல்பிலா தான்.

(இ - ள்.) தான் துவ்வான்-தான் நுகராஞய், தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான் - (அதன்மேலும்) தகுதியுடையார்க்கு அவர் வேண்டிய தொன்றனை ஈதலியற்கையிலனுயினுன்,—பெரு செல்வம் - இரண்டுஞ் செய்தற்கு இடனுடைத்தாய செல்வத்திற்கு, ஏதம் - ஒருநோய்; (எ - று.)

தகுதி - தானங்கோடற்கு ஏற்புடைமை. ஏதம் - ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலு மாகிய தொழிற்கு உரியதனை அன்றுக்கினமையின், 'நோய்' என்றுர். ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்றுல் துன்பமேயா மென்று உரைப்பாரும் உளர்.

இவையிரண்டுபாட்டானும், அவ்விருமையும் உடன் கூறப்பட்டன.

(கு - ரை.) அதன்மேலும் - தான் நுகராமலிருப்பதற்குமேலும். ஈதலியற்கை-ஈதலாகிய இயல்பு. இரண்டு-தான் நுகர்தலும் தகுதியுடையார்க்கு ஈதலும். தானங்கோடல் - கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளுதல். ஏதம் - துன்பம்: இங்கே, துன்பந்தரும் நோயையுணர்த்தியதனுல், காரியவாகுபெயர். தொழிற்குரியதல்லதாகச்செய்தல் நோயின்தன்மையாதலறிக. அவ்விருமை - ஈட்டினவனுக்குப்பயன்படுதலின்மை, பிறர்க்குப் பயன்படுதலின்மை. முதலுரையில் செல்வத்தைத்துய்த்தல் ஈதல் இலனுயினுனைச் செல்வத்திற்கு நோய் போல்வானென்னுது நோயென்று அபேதமாகக்கூறியது - காட்சியணியாம். இரண்டாமுரையிலும், ஈயுமியல்பிலாதானுக்குச் செல்வம் நோய்போலுமென்னுது செல்வத்தை நோயாகக்கூறியது - காட்சியணியே. "ஈட்டலுந் துன்பு

மற்றீட்டிய வொண்பொருளைக், காத்தலுமாங்கே கடுந்துன்பம் - காத்தல், குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப்பொருள்" என்ற நாலடி, இங்குக் காணத்தக்கது. (௬)

௧௦௦௭. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ *மிகுநலம்
பெற்றா டமியண்மூத் தற்று.

(இ - ள்.) அற்றார்க்கு - (ஒருபொருளும்) இலராயினார்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றனை, ஆற்றாதான் - கொடாதானது, செல்வம்—, (கொன்னேகழிதல்),—மிகு நலம் பெற்றாள் - (பெண்டிரின்) மிக்க நலத்தினைப் பெற்றா ளொருத்தி, (கொடுப்பாரின்மையின் கொழுநனின்றி), தமியள்- தமியளாய், மூத்த அற்று - மூத்ததன்மைத்து; (எ - று.)

நலம் - வடிவின்நன்மையும், குணத்தின்நன்மையும். இரண்டும் ஒருங்கு பெறுதல் அரிதாகலின், 'பெற்றாள்' என்றார். கொடுப்பாருங் கொழுநனுமே யன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடு உவமை கூறினமையின், தானும் ஏற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியு மென்பதாயிற்று.

(கு-ரை.) கொன்னே-வீணாய்; பயன்படாமல். பெண்டிரின்-பெண்டிர்க்குரிய: மகளிருள் எனினுமாம். கொழுநன் இன்றி - கணவனில்லாமல். தமியளாய்-தனியளாய். கன்னிகாதானஞ்செய்வதனால் ஒருவகைப் புண்ணியமுண்டாகுமென்ற நூற்கொள்கைபற்றி, 'கொடுப்பாரும் பயனிழந்து' என்றது. குமரி-கன்னிகை. "குமரிமூத்த வென்பாத்திரம்" என்றும், "குமரிமூத்தவக் கொடுங்குழைநல்லாள்" என்றும் மணிமேகலையில் வருதல் காண்க. தான் - செல்வமுடையான். ஏற்பான் - இரப்பான். (எ)

௧௦௦௮. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

(இ - ள்.) (வறியார்க்கு அணியனாயிருந்தும் ஒன்றுங்கொடாமையின்), நச்சப்படாதவன்-(அவரால்) நச்சப்படாதவன், செல்வம்-செல்வமெய்துதல், ஊர் நடுவுள் நஞ்சு மரம் - ஊரிடைநிற்பதோர் நச்சுமரம், பழுத்து அற்று - பழுத்தாற்போலும்; (எ - று.)

'நடுவூர்' என்பது - பின்முன்னாகத்தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை. அண்மைஉடைமைகளாற் பயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) அணியன் - சமீபத்திலுள்ளவன். நச்சுமரம்=நஞ்சு + மரம்; விஷத்தன்மையையுடையமரம்: எட்டிபோல்வது. நடுவூர்=ஊர்நடு: இதனை யிலக்கணப்போலியென்பர். அண்மை - சமீபித்ததாதல். உடைமை - பொருளுடைமையும் பழமுடைமையும். உவமையணி. "பயன்மரமுள்ளூர்ப் பழுத்தற்றாற்செல்வ,நயனுடையான்கட்படின்"என்ற திருக்குறளில் இதன் எதிர்மறைப்பொருளை விளக்கியமை காண்க. (அ)

௧௦௦௯. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

---

* சிலபிரதிகளில் 'மிகநலம்' என்று காணப்படுகின்றது.

(இ - ள்.) (ஒருவன்), அன்பு ஓரீஇ - (கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் ஈட்டார்கண்) அன்புசெய்தலே யொழித்து, தன் செற்று - (வேண்டுவன நுகராது) தன்னைச் செறுத்து, அறம் நோக்காது - (வறியார்க்குஈதல் முதலிய) அறத்தை நினைப்பதுஞ்செய்யாது, ஈட்டிய—, ஒள் பொருள் - ஒள்ளிய பொருளை, கொள்வார்-கொண்டுபோய்ப் *பயன்பெறுவார், பிறர்—; (எ-று.)

பயனுய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளால் உள்ளது ஈட்டற்றுன்பமே யென்பது தோன்ற 'ஈட்டிய' என்றும், அவன் வழியினுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்ற 'பிறர்' என்றுங் கூறினர்.

(கு - ரை.) நட்டார் - சினேகித்தவர். செறுத்து - வருத்தி. வறியார் - தரித்திரர். நோக்கல்-கருத்திலுல்நோக்குதல். பயன் ஆய-பொருளினுற் பெறக்கூடிய பிரயோசனமாகவுள்ள. அவன்வழியினுள்ளார் - அவன்சந்ததியார். பிறர் - கள்ளர் முதலியோர். (கூ)

கஅகஅ. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(இ - ள்.) சீர் உடை செல்வர் - புகழுடைத்தாய செல்வத்தினையுடையவரது, சிறு துனி - நிற்குங்காலஞ்சிறிதாய வறுமை, மாரி - (உலகத்தையெல்லாம் நிலைநிறுத்தும்)மேகம், வறம் கூர்ந்துஅனையதுடைத்து-வறுமை மிக்காற் போல்வதோர் இயல்பினை யுடைத்து; (எ - று.)

துனி - வெறுப்பு; அதனைச்செய்தலால், துனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிந்நீங்குதலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவ ரென்பது, உவமையாற் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாதசெல்வம் எஞ்ஞான்றும் பயன்படா தென்பதாயிற்று. இதற்கு - சீருடைச்செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங்கூர்ந்தனையதன்மையையுடைத்து என அதிகாரத்தோடு பொருந்தாமைமேலும் ஓர்பொருட்டொடர்புபடாமல் உரைப்பாரும் உளர்.

இவைநான்குபாட்டானும், அச்செல்வத்தது குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) நிற்குங் காலஞ் சிறிது ஆய - சிறிதுகாலமேநிற்பதான. மேகத்திற்கு வறுமைமிகுதல்-நீரில்லையாதல். துனி - வெறுப்பையுண்டாக்குவதான வறுமைக்குக் காரியவாகுபெயர். மேகம்மழைபொழிதலால் நீரற்றவிடத்தும் மீண்டும் அந்நீரைப்பெற்றுப் பொழியுமியல்பினதாதல்போல, சீருடைச்செல்வர் பிறர்க்குப்பயன்படுதலால் வறியராயினும் விரைவில் அவ்வறுமைநீங்கிப் பயன்படுவ ரென்பது, மாரியுவமையாற் பெறப்படும்: இதனுல், அதிகாரத்திற்கு ஏற்பச் சீரில்லாச்செல்வரின்பொருள் எப்போதும் பயன்படாதென்பது பெறப்படுதல் காண்க. இனி, இக்குறளுக்கு, சீருடைச் செல்வரின் (பொருளின்மையால் இரவலரோடுவெறுக்கும்) வெறுப்பு, மாரி வறங்கூர்ந்தனையதுடைத்து எனப் பொருள்கூறுவாரு மூளர்: அப்பொருள்

* பி - ம்: பயன்கொள்வார்.

நன்றியில்செல்வம் என்ற அதிகாரத்திற்குப்பொருந்துவது அன்று: அன்றியும், சீருடைச்செல்வர்க்கு இரவலரோடு வெறுப்பு ஒருபோதும் உண்டாகாதாதலால், அங்ஙனம் வெறுப்பு உளதாகவைத்துக்கூறுவது பொருள்தொடர்பு படாததாகும். (௧௦)

௧௦௨ - ஆம் அதிகாரம்.—நாணுடைமை.

அஃதாவது - மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்குஒவ்வாத கருமங்களில் நாணுத லுடையராந் தன்மை: அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு-ரை.) ஒவ்வாத-தகாத. உயர்ந்தோர் நன்றியில்செல்வத்தைக் குறித்து நாணுவராதலால், நன்றியில்செல்வத்தின்பின் நாணுடைமை வைக்கப்பட்டதென்க.

௧௦௧௧. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

(இ - ள்.) நாணு - (நன்மக்கள்) நாணுவது, கருமத்தால் நாணுதல்-இழிந்த கருமங் காரணமாக நாணுதல்; பிற - அஃதன்றி மனமொழிமெய்களது ஒடுக்கத்தான் வருவனவோவெனின் அவை,(அவரளவல்ல): திரு நுதல் நல்லவர் நாணு - அழகியநுதலினையுடைய குலமகளிர் நாண்கள்; (எ - று.)

'பிற குலமகளிர்நாண்' என்றதனால் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும், 'நாணுதல்' என்றதனால் கருமத்தது இழிவும் பெற்றாம். 'திருநுதல் நல்லவர்' என்பது, புகழ்ச்சிக்குறிப்பு. ஏதுப்பன்மைபற்றி, 'பிற' என்றார். இனி, அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணோடு ஒக்கு மென்று உரைப்பாரும் உளர்; அவர்க்கு நாண் கேடுபயக்கும் என விலக்கப்பட்டமையானும், *அவர்பெயராற் கூறப்படாமையானும், அஃது உரையன்மை யறிக.

இதனான், நாணினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) நன்மக்கள் - ஸத்புருஷர். அஃது அன்றி - இழிந்தகருமங் காரணமாக நாணுதலல்லாமல். அவர் அளவு அல்ல - அந்நன்மக்கட்கு உரியன வல்ல. நுதல் - நெற்றி. ஏனையது - இழிகருமத்தால்நாணுதல். கருமம் என்ற பொதுச்சொல் - நாணுதல் என வருதலால், இழிந்தகருமத்தின் மேலது. புகழ்ச்சிக்குறிப்பு - புகழ்ச்சிகுறித்துவந்த சொல். ஏதுப்பன்மை- ஏதுக்கள்பலவாதல்; அவை-மனவொடுக்கம், மொழியொடுக்கம், மெய்யொடுக்கம் என்பன. இனி வேறோருரை:—பிற - அற்றமறைத்தல்முதலியன, திருநுதல் நல்லவர் நாணு - பொதுமகளிர் நாணோடொக்கும் என்பது: பொதுமகளிர்க்கு நாண் கேடுதருமென்று நூல்கள் விலக்குவதாலும், 'திருநுதல்நல்லவர்'என்ற தொடர் மகளிரைப் பொதுவாகக் காட்டக்கூடியதன்றிச்சிறப்பாகப் பொதுமகளிரைக்காட்டா தாதலாலும், அவ்வுரை கொள்ளத்தக்கதன்றென்று மறுத்தார். பொதுமகளிர்க்கு நாண் கேடுதரு மென்பதை "மானமுறும் வேசை

* பி - ம்: அவர்பெயர் பொதுப்பெயராற் கூறப்படாமையானும்,

யரும், ஈனமுறுவார்" என்றதனாலும் அறியலாம். அற்றம்மறைத்தல்-மறைக்கத்தக்க அவயவத்தை மறைத்தல். பொதுமகளிர்-விலைமாதர். பயக்கும்-தரும்.

கoகஉ. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(இ - ள்.) ஊண் - ஊணும், உடை - உடையும், எச்சம் - அவையொழிந்தனவும், உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல - மக்களுயிர்க்கெல்லாம் பொது: மாந்தர் சிறப்பு - நன்மக்கட்குச் சிறப்பாவது, நாண் உடைமை - நாணுடைமையே: (அவையல்ல); (எ - று.)

அவை ஒழிந்தன - உறக்கமும், அச்சமும், காமமும். சிறப்பு - அவ்வுயிர்களின் வேறுபாடு. 'அச்சம்' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(கு-ரை.) ஊண்-உணவு. உடை-ஆடை. அவை-ஊண் உடை முதலியன. அவ்வுயிர்களின் வேறுபாடு-மற்றையுயிர்களினும் இவர்கட்குள்ளவித்தியாசம்.

கoகஊ. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(இ - ள்.) உயிர் எல்லாம் - எல்லாவுயிர்களும், ஊனை - உடம்பினை, குறித்த - (தமக்கு) நிலைக்களனாகக் கொண்டு அதனை விடா: (அதுபோல), சால்பு—, நாண் என்னும் நன்மை குறித்தது - நாணென்னும் நன்மைக்குணத்தை(த் தனக்கு) நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது; (எ - று.)

உடம்பு என்பது - சாதியொருமை. நன்மை - ஆகுபெயர். உயிர் உடம்பொடு கூடியல்லது பயனெய்தாதவாறுபோல, சால்பு நாணைடுகூடியல்லது பயனெய்தாது என்பதாம். 'ஊனைக்குறித்த'என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(கு - ரை.) நிலைக்களன் - தங்குமிடம். ஊன் - உடம்பு. நன்மை - நற்குணத்துக்கு ஆகுபெயர். 'ஊனைக்குறித்த' என்ற பாடத்துக்கு - (எல்லாவுயிர்களும்) உணவையே (தமக்கு) ஜீவநாதாரமாகவுடையன என்று பொருள்.

கoகச. அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றே பீடு நடை.

(இ - ள்.) சான்றோர்க்கு—, நாண் உடைமை—, அணி அன்று-ஆபரணமாம்; அஃது இன்று எல் - அவ்வாபரணம் இல்லையாயின், பீடு நடை - (அவர்) பெருமிதத்தையுடைய நடை, பிணி அன்று - (கண்டார்க்குப்) பிணியாம்; (எ - று.)

அழகுசெய்தலின் 'அணி' என்றும், பொறுத்தற்கு அருமையின் 'பிணி' என்றுங் கூறினர். ஓகார இடைச்சொற்கள், எதிர்மறைக்கண் வந்தன.

இவைமூன்றுபாட்டானும், அதன்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பெருமிதத்தையுடையநடை - கம்பீரமானநடை. அன்று ஓதேற்றம்: இரண்டு எதிர்மறைச்சொற்கள்தொடர்ந்து உடன்பாட்டுப்பொருளையுணர்த்தித் தேற்றக்கருத்தை விளக்கின. அதன் - நாணின். (ச)

கoகடு. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

(இ - ள்.) பிறர் பழிஉம்-பிறர்க்குவரும் பழியையும், தம் பழிஉம்-தமக்கு வரும் பழியையும், (ஒப்பமதித்து), நாணுவார் - நாணுவாரை, உலகு - உலகத்தார், நாணுக்கு—, உறை பதி என்னும் - உறைவிட மென்று சொல்லுவர்.

ஒப்பமதித்தல் - அதுவுந் தமக்குவந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர்யாவரும் புகழ்வரென்பதாம்.

இதனால், அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பை.) உறைவிடம் - தங்குமிடம். ஒப்ப - ஒருங்காக. அதனை - நாணினை. (டு)

கoகசு. நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

(இ - ள்.) மேலாயவர் - உயர்ந்தவர்,—வேலி நாண் கொள்ளாது - (தமக்கு) ஏமமாக நாணினைக் கொள்வதன்றி, வியல் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்; (எ - று.)

பழிபாவங்கள் புகுதாமற் காத்தலின், 'வேலி' என்றார். நாணும் ஞாலமும் தம்முள் மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுதும் நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பா ரென்பதாம். மன்னும், ஓவும் - அசை. நாணுகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பா ரென்று உரைப்பாரும் உளர்.

(கு - பை.) ஏமம் - இரட்சகம்: பாதுகாப்பு. ஞாலம் - உலகம். அவை புகுதும் நெறி - பழிபாவங்கள் புகும் வழி. ஞாலத்தினும் நாணினை மேலாகக்கொள்வ ரென்பது, மூதலுரையின்கருத்து. இக்குறளுக்கு வேறோருரை வருமாறு:— மேலாயவர் - மேலோர், நாண் வேலி - நாணுகிய வேலியை, கொள்ளாது - பெற்றுலல்லாமல், வியல் ஞாலம் - பெரிய வுலகத்தை, பேணலர் - பெறவிரும்பாரென்பது: நாணுடனேதான் ஞாலத்தைப் பெறவிரும்புவ ரென்பது இவ்வுரையின் கருத்து. வியல் - அகலமென்னும்பொருளுணர்த்தும் உரிச்சொல். (சு)

கoகஎ. நாண ுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர்.

(இ - ள்.) நாண் ஆள்பவர் - நாணினதுசிறப்பு அறிந்து அதனைவிடாது ஒழுகுவார், (அந்நாணும் உயிரும் தம்முள் மாறுயவழி), நாணுல் - நாண்சிதையாமைப்பொருட்டு, உயிரை துறப்பர் - உயிரை நீப்பர்; உயிர்பொருட்டு - உயிர்சிதையாமைப்பொருட்டு, நாண் துறவார் - நாணினை நீக்கார்; (எ - று.)

உயிரினும் நாண் சிறந்தது என்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், அவர்செயல் கூறப்பட்டது.

(கு - பை.) நாணும் உயிரும் தம்முள்மாறு ஆயவழி - நாண் உயிர் என்ற இரண்டனுள் ஏதாவதொன்றை நீக்கநேர்ந்தபோது என்றபடி. நீப்பர் - விடுவர். அவர் - நாணுடையவர். நாணுல் - நாணின்பொருட்டு: மூன்றும்வேற்

மை நான்காம்வேற்றுமைக்குரிய பொருட்டுப்பொருளில் வந்தது. பொருட்டால், ஆல் - அசை. உயிரைக்காட்டிலும் நாணே சிறந்த தென்பது, இக்குறளின் கருத்து: "உயிரினுஞ்சிறந்தன்று நாணே" என்று, தொல்காப்பியத்துப் பொருளதிகாரக் களவியலில் வருகின்றது. (எ)

கoகஉ. பிறர்நாணத் தக்கது தாணுணு ணுயி
னறநாணத் தக்க துடைத்து.

(இ - ள்.) பிறர் - கேட்டாரும் கண்டாரும், நாண தக்கது - நாணத்தக்க பழியை, (ஒருவன்), தான் நாணுன் ஆயின் - தான் நாணுது செய்யுமாயின், (அந்நாணுமை), அறம் நாணத்தக்கது உடைத்து-(அவனை) அறம்விட்டுநீங்கத் தக்க குற்றத்தினை யுடைத்து; (எ - று.)

தான் எனச் செய்வானைப் பிரிக்கின்ற ராகலின், 'பிறர்' என்றார். நாணுடு இயைபில்லாதானை அறம் சாராது என்பதாம்.

(கு - ரை.) செய்வானை - கண்டாரும்கேட்டாரும் நாணத்தக்க பழியைச் செய்பவனை. பிறர் - கண்டாரும் கேட்டாரும். இப்பாட்டில், உடைத்து என்ற முற்றுக்கு, அந்நாணுமை என எழுவாய் வருவிக்க. நாண என்பது - விட்டு நீங்க என்றபொருளது: இலக்கணை. (அ)

கoகக. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

(இ - ள்.) கொள்கை பிழைப்பின் - (ஒருவனுக்கு) ஒழுக்கம் பிழைக்குமாயின், (அப்பிழைப்பு), குலம் சுடும் - அவன்குடிப்பிறப்பு ஒன்றனையுங் கெடுக்கும்; நாண் இன்மை நின்றக்கடை - (ஒருவன்மாட்டு) நாணின்மை நின்றவழி, (அந்நிலை), நலம் சுடும் - அவன்நலம்யாவற்றையுங் கெடுக்கும்.

நிற்றல் - ஒருபொழுதும் நீங்காமை. நலம் - சாதியொருமை: ஆகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்றிவற்றுன் வந்தனவெல்லாம் கொள்ளப்படும். ஒழுக்கவழியினும் நாணழிவு இறப்பத் தீது என்பதாம்.

(கு - ரை.) பிழைக்கும் - தவறும். பிழைப்பு - தவறுதல். குடிப்பிறப்பு ஒன்றனையும் - குடிப்பிறப்பைமாத்திரம். இறப்ப - மிகவும். (க)

கoஉo. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று.

(இ - ள்.) அகத்து - (தம்)மனத்தின்கண், நாண் இல்லார்-நாணில்லாத மக்கள், இயக்கம் - உயிருடையார்போன்று இயங்குகின்ற இயக்கம்,—மரம் பாவை-மரத்தாற்செய்த பாவை, நாணுல் - (இயந்திரக்)கயிற்றினுலுய (தன்) இயக்கத்தால், உயிர் மருட்டி அற்று - உயிருடைத்தாக மயக்கினாற்போலும்.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம் போல்வதல்லது உயிரியக்கமன்று என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், நாணில்லாரது இழிவு கூறப்பட்டது.

(கு - ரை.) இயக்கம் - புடைபெயர்ச்சி. மரப்பாவையென்பது கயிறு கொண்டு ஆட்டுவோர் பிறரைமயக்குதற்குக் கருவியாவதல்லது கருத்தாவாதா

தாயினும், இங்கு பாவை மருட்டியற்று என்று பாவையைக் கருத்தாவாகக் கூறியிருத்தலால், 'கருவியே கருத்தாவாயிற்று' என்றார். "செயப்படு பொருளே" என்ற சொல்லதிகாரச்சூத்திரவுரையில், 'ஒன்றெனமுடித்தலால், இவ்வாளெறியும் எனக் கருவியைத் தானேசெய்வதாகக் கூறுங் கருவிக்கருத்தாவுங் கொள்க' என்று நச்சினார்க்கினியர் கூறியது இங்குக் காணத்தக்கது. (கருத்தா - கருவிமுதலியகாரணங்களைத் தொழிற்படுத்துவது: கருவி - வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருட்க ணுய்ப்பது.) மயக்குதல் - அப்பாவை தானே ஆடுவதென்று காண்பவர் நினைக்கும்படிசெய்தல். நாண் - வெட்கமும், கயிறும். உவமையணி. நாணைப்பெற்றிராத மக்களியக்கம் சூத்திரக்கயிறுள்ள மரப்பாவையின் இயக்கம்போலுமே யல்லாமல், உயிர்ப் பயனைப்பெற்றுள்ள இயக்க மாகா தென்றவாறு. (கo)

கoசு. ஆம் அதிகாரம்.—குடிசெயல்வகை.

அஃதாவது - ஒருவன் தான் பிறந்த குடியை யுயரச்செய்தலின் திறம். இது, தாழ்வின்கண் நாணுதலுடையார்க்கு உளதாவதாகலின், நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தாழ்வின் கண் - தாழ்வுநேர்ந்தபோது. குடிசெயல்வகை - (தான் பிறந்த)குடியை (மேம்படச்)செய்வதன்விதம் எனப் பதப்பொருள் காண்க. குடியை மேம்படச்செய்யும்வகையில் முயல்வது நாணமுடையார்க்கே யுளதாய ஒருகுண மாதலால், நாணமுடைமையின்பின் குடிசெயல் வகை வைக்கப்பட்ட தென்க.

கoஉக. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(இ - ள்.) (தன் குடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமையின்), கருமம் செய - (எண்ணிய) கருமஞ்செய்தற்கு, (யான்), கைதூவேன் - கையொழியேன், என்னும்—, பெருமையின் - (ஆள்வினைப்) பெருமைபோல, ஒருவன்-ஒருவனுக்கு, பீடு உடையது-மேம்பாடுடைய பெருமை, இல் - பிறிதில்லை; (எ று.)

குடிசெய்தற்கென்பது, அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச் செயலாற் செல்வமும் புகழு மெய்திக் குடியுயரு மாகலின், 'பீடுடையதில்' என்றார். குடிசெய்தற்கருமமே நடத்தலால், 'தன்கருமஞ்செய்ய' என்றும், 'பிறர்கருமஞ்செய்ய' என்றும் உரைப்பாரு முளர். தன்கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல்செய்தல் தலைமையன்மையானும் அவை யுரையன்மையறிக.

(கு - ரை.) கையொழியேன் - விட்டிடேன். இது குடிசெயல்வகையென்ற அதிகாரமாதலால், அதற்கு ஏற்ப, 'தன்குடிசெய்தற்பொருட்டு' என்பது வந்ததென்க. கருமஞ்செய என்பதற்கு - தன் கருமஞ்செய்ய என்று உரைப்பாரும், பிறர்கருமஞ்செய்ய என்று உரைப்பாரும் உளர்: அதன் மறுப்பு:—தன்கருமம் என்பது குடியையுயரச்செய்யுங் கருமமே யாதலால்,

எண்ணியகருமஞ்செய்தற்கு என்று கூறியதைவிட இது வேறுபொருளாகாது என்பது: தன்குடியுயரச்செய்யுங் கருமத்தைவிட்டுப் பிறரேவிய வேறுகருமத் தைச்செய்தல் குடிசெய்வார்க்குச் சிறந்த தாகாது ஆதலால் அவ்வுரையுங் கொள்ளத்தக்கதன்று என்பது. (சு)

கoஉஉ. ஆள்வினையு மான்ற வறிவு *மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(இ - ள்.) ஆள்வினை உம் - முயற்சியும், ஆன்ற அறிவு உம் - நிறைந்த அறிவும், என-என்று (சொல்லப்பட்ட), இரண்டின்-இரண்டினையுமுடைய, நீள் வினையான்-இடையறாத கருமச்செயலால், குடி நீளும் - (ஒருவன்) குடி யுயரும்; (எ - று.)

நிறைதல் - இயற்கையறிவு செயற்கையறிவொடுகூடி நிரம்புதல். ஆள் வினை, மடிபுகுதாமற் பொருட்டு. ஆன்றவறிவு, உயர்தற்கேற்ற செயல்களும் அவைமுடிக்குந்திறமும் பிழையாம லெண்ணுதற்பொருட்டு.

இவையிரண்டுபாட்டானும், அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது.

(கு - ரை.) மடி - சோம்புவதாகிய தூக்கணம். ஆள்வினையென்பதன் பொருள் - முயற்சியென்பது. அவை - உயர்தற்கேற்ற செயல்களே. அச் செயற்கு - பிறந்த குடியை யுயரச்செய்யுஞ் செய்கைக்கு. (உ)

கoஉஊ. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(இ - ள்.) 'குடி செய்வல் - (என்)குடியினை யுயரச்செய்யக்கடவேன்,' என்னும்-என்றுகொண்டு (அதற்குஏற்ற கருமங்களின்) முயலும், ஒருவற்கு - ஒருவனுக்கு, தெய்வம்—, மடி தற்று-ஆடையைத் தற்றுக்கொண்டு, தான்—, முந்துறும் - முந்துற்றுநிற்கும்; (எ - று.)

முயற்சியை அதன்காரணத்தாற் கூறினர். தற்றுதல் - இறுகவுடுத்தல். முன்னடப்பார்செயல், தியதிமே லேற்றப்பட்டது.

(கு - ரை.) தெய்வம் - ஊழ். ஒருகாரியத்தில் முயல்பவர் ஆடையை யிறுகவுடுத்து முற்படுவ ராதலால், ஆடையை யிறுகவுடுத்து முற்படுதல் - முயற்சிக்குக்காரணமாம்: இங்கு, முயலுமென்பதை மடிதற்றுமுந்துறுமென் றது-காரியத்தைக் காரணத்தாற் கூறினதாம். மடி - ஆடை. குடியையுயரச் செய்யக்கருதி அதற்கு ஏற்ற காரியங்களில் முன் னடப்பவரது செயல், அவரதுசெயலுக்குக் காரணமான தெய்வத்தின்மே லேற்றிக் கூறப்பட்டது: இஃது ஒன்றின்செயல் மற்றொன்றன்மேலாகிய உபசாரவழக்கு. தியதி-ஊழ்: தெய்வம். (ரு)

கoஉசு. சூழாமற் றூனே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துளைற்று பவர்க்கு.

---

* 'எனுமிரண்டின்' என்று பாடமிருக்குமோ என்று ஓரையம் தோன்று கின்றது.

(இ - ள்.) தம் குடியை - தங் குடிக்காம்வினையை, தாழாது-விரைந்து, உஞற்றுபவர்க்கு-முயல்வார்க்கு, (அவ்வினைமுடிக்குந்திறம்), சூழாமல்-(அவர்) சூழவேண்டாமல், தானே—, முடிவுஎய்தும்—; (எ - று.)

குடி - ஆகுபெயர். தெய்வ முந்துறுதலாற் பயன்கூறியவாறு.

இவையிரண்டுபாட்டானும், அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) தாழாது என்பதன்கருத்துப்பொருள், விரைந்து என்பது. குடி•என்பது - குடியையுயரச்செய்தற்குக் காரணம்ஆம் வினை என்ற பொருளில் வந்தது: கருவியாகுபெயராம். கீழ்ச்செய்யுளில், குடியுயரமுயல்வார்க்குத் தெய்வம்முந்துறுமென்ற ஆசிரியர், இச்செய்யுளில் அங்கனம் தெய்வம் முந்துறுதலாற் றேன்றும் பயனைக் கூறினரென்க. (சு)

கஅஉடு. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

(இ - ள்.) குற்றம் இலன் ஆய் - குற்றமாயினசெய்யாது, குடி செய்து - (தன்) குடியை யுயரச்செய்து, வாழ்வானை - ஒழுகுவானை, சுற்றம் ஆ-(அவனுக்குச்)சுற்றமாகவேண்டி, சுற்றும் -(தாமே சென்று) சூழ்வர், உலகு - உலகத்தார்; (எ - று.)

குற்றமாயின - அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்தல்நோக்கி யாவருஞ் சென்றுசார்வ தென்பதாம்.

(கு - ரை.) ஒழுகுவான் - நடப்பவன். அறநீதிகட்கு - தருமத்திற்கும் நீதிநூலுக்கும். மறுதலையாய-எதிர்த்தட்டான. தாமும்-சூழும் உலகத்தாரும்.

கஅஉசு. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, நல் ஆண்மை என்பது-நல்ல ஆண்மையென்று உயர்த்துச்சொல்லப்படுவது, தான் பிறந்த—, இல் - குடியினை, ஆண்மை-ஆளுந்தன்மையை, ஆக்கிக்கொளல்-(தனக்கு) உளதாக்கிக்கோடல்.

போர்த்தொழிலினீக்குதற்கு 'நல்லாண்மை'என விசேடித்தார்.குடியினை யாளுந்தன்மை-குடியிலுள்ளாரை யுயரச்செய்து தன்வழிப்படுத்தல்: அதனைச் செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும்.

(கு - ரை.) ஆண்மைக்கு 'நல்' என்று அடைமொழிகொடுத்து 'நல்லாண்மை' என்றுகூறியது, போர்த்தொழிலிற்காட்டும் ஆண்மையை நீக்குதற்கு ஆகும்: அது, பொல்லாதஆண்மை யாதலால், நல்லென்ற அடைமொழி அதனை நீக்குமென்க. அதனை-தன்வழிப்படுத்தலை. வழிப்படுத்தல்-தன்விருப்பின்படி நடக்கச்செய்தல். (சு)

கஅஉஎ. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(இ - ள்.) அமரகத்து - களத்தின்கண், (சென்றுபலராயினும் போர் தாங்குதல்), வன்கண்ணர் (மேற்றே) போல - வன்கண்ணர் (மேலதாஞற்

போல, தமரகத்துஉம் - குடியின்கண், (பிறந்தார்பலராயினும்), பொறை - (அதன்) பாரம் பொறுத்தல், ஆற்றுவார் மேற்றுஎ-(அது) வல்லார்மேலதாம்.

* பொருட்கொக்க, வேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. நன்குமதிக்கப்படுவார் அவரே யென்பதாம்.

இவை, மூன்றுபாட்டானும், அதுசெய்வா ரெய்துஞ் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - சை.) களத்தின்கண் - போர்செய்யுமிடத்தில். வன்கண்ணர் - அஞ்சாத்தன்மையுள்ள சுத்தவீரர். அது - பாரம்பொறுத்தலை. பொருட்கு ஒக்க - 'தமரகத்தும் ஆற்றுவார்மேற்றே பொறை' என்னும் உபமேயத்திற்கு ஏற்க. வேண்டுஞ் சொற்கள் - 'சென்றூர்பலராயினும் போர்தாங்குதல், மேல தானைற்போல்' என்பன. உவமைக்கண் - அமரகத்து வன்கண்ணர்போல என்ற உபமானத்தினிடத்தில். அவரே - குடியின்பாரம்பொறுப்பவரே. அது செய்வார் - தாம் பிறந்தகுடியை உயரச்செய்வார். (எ)

க0உ அ. குடிசெய்வார்க் கில்லைப் பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(இ - ள்.) (தம் குடியினை யுயரச்செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தைநோக்கி), மடி செய்து - மடியினைச் செய்துகொண்டு, மானம் - மானத்தையும், கருத-கருதுவராயின், கெடும் - (குடி) கெடும்: (ஆகலான்), குடி செய்வார்க்கு - அவர்க்கு, பருவம் இல்லை - காலநியதி யில்லை; (எ - று.)

காலத்தைநோக்கிமடிசெய்தல்-வெயில் மழை பனியென்ப உடைமை நோக்கிப் பின்னர்ச்செய்துமென்று ஒழிந்திருத்தல். மானங்கருதுதல் - 'இக் குடியிலுள்ளார்யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன்யானே?' என்று உட்கோடல். மேல், ''இகல்வெல்லும்வேந்தர்க்கு வேண்டும்பொழுது'' என்றதுஉட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ?' என்று கருதினும், அது கருதற்க என்று மறுத்தவாறு.

(கு - சை.) மடியினை - சோம்புவதை. பின்னர் - வெயில்தாழ்ந்தபின் மழைநீங்கியபின் பனியற்றபின், செய்தும் - (குடியை யுயரச்செய்யுந்தொழி லினைச்) செய்வோம். ஒழிந்திருத்தல் - (வெயில் மழை பனி உள்ளகாலத்துக் குடியையுயரச்செய்யுந் தொழிலைச்செய்யாது) தவிர்ந்திருத்தல். மானம்-தன் பெருமை. உட்கோடல் - மனத்துக்கொள்ளுதல். ''இகல்வெல்லும்'' என்னும் மேற்கோள் இந்நூலின் சமக - இல் உள்ளது: இதன்பொருள்:—பகை வரின்வலிமையை வெல்லநினைக்கும் அரசர்க்கு அதற்குஏற்ற காலம் வேண்டு மென்பது. இவர்க்கும் வேண்டுமோ என்றுகருதினும் அது கருதற்க - (பகை வரின்வலிமையை வெல்லநினைக்கும் அரசர்க்கு அதற்குஏற்ற காலம் நோக்கி யிருப்பதுபோலக்) குடிசெய்வார்க்கும் (காலத்தைநோக்கி ஒருகால் சோம்பி யிருத்தல்) வேண்டுமோ என்று மனங்கருதினாலும், அந்தமானத்தைக் கருத

* பி - ம்: பொருட்கேற்க,

வேண்டா. கருதினும் என்ற உம்மை காலம்நோக்கிச் சோம்பக்கருதுதலும் கூடா தென்பதை விளக்கிநின்றது. (அ)

௧௦௨௯. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

(இ-ள்.) குடும்பத்தை-(மூவகைத்துன்பமுமுறற்பாலதாய தன்) குடியை, குற்றம் மறைப்பான் - அவையுறாமற் காக்கமுயல்வானது, உடம்பு—, இடும்பைக்கு ஏ - (அந்தமுயற்சித்) துன்பத்துக்கே, கொள்கலம் கொல் - கொள்கலமாம் அத்துணையோ? (அஃதொழிந்து இன்பத்துக்கு ஆதலில்லையோ?)

"உறைப்பெய லோலைபோல, மறைக்குவன் பெருமநிற் குறித்துவருவேலே" என்புழியும், மறைத்தல் - இப்பொருட்டாயிற்று. என்குடிமுழுதும் இன்புற்றுயரவே, நான் இருமையும் எய்துதலான், இம்மெய்வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலும் அறிவுடையான் அஃது ஒருஞான்றும் ஒழியாமைநோக்கி, 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றார்: இது, குறிப்புமொழி.

இவையிரண்டுபாட்டானும், அவர் அதுசெய்யுமியல்பு கூறப்பட்டது.

(கு-ரை.) மூவகைத் துன்பங்கள்-தன்னைப்பற்றிவருவன முதலியவை: இந்நூலின் ச - ஆங் குறளினுரையிற் கூறப்பட்டன. உறற்பாலது - அடையக்கூடியது. அஃது ஒழிந்து - முயற்சித்துன்பத்திற்குக் கொள்கலமாதல் நீங்கி. "உறைப்பெயல்" என்று தொடங்கும் மேற்கோள், புறநானூறு உகூ௦-இல் உள்ளது: இதன்பொருள்:—உறை பெயல் - மழைபெய்தலை, (மேல்விழவொட்டாது தடுக்கும்), ஓலை போல - ஓலைக்குடையைப்போல, பெரும - பெருமானே! நின் குறித்து வரு வேல் - உன்னை இலக்காகக்கொண்டுவருகின்ற வேற்படையை, மறைக்குவன் - (உன்மேற்படவொட்டாது) காப்பேன் என்பது. இப்பொருட்டு - காத்தலென்னும்பொருளது. அஃது - தன் குடியுயருமாறு தான் மெய்வருந்துதல். ஒருஞான்றும் - ஒருபோதும். குறிப்புமொழியென்பது - குறிப்பாற் பொருளுணர்த்தும் மொழி. 'இடும்பைக்குக் கொள்கலங்கொல்லோ' என்ற இது - குடும்பத்தைக் குற்றமறைப்பானுடம்பு இடும்பைக்குக் கொள்கலமாயினும், இருமையின்பமடைதற்குக் காரண மாதலால் இனிமையா மென்ற பொருளைக் குறிப்பித்தல் காண்க. (குறிப்புமொழியென்பது - கீழ் ௩௩அ - குறளினுரையிலும் வந்துள்ளது.) அவர்-குடிசெய்வார். அது - குடிசெய்தல். (௯)

௧௦௩௦. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

(இ - ள்.) இடுக்கண்-துன்பமாகிய நவியம் (புகுந்து), கால் கொன்றிட-(தன்)முதலை வெட்டிச்சாய்க்க, வீழும்-(ஒருபற்றின்றி) வீழாநிற்கும்: அடுத்து-(அக்காலத்துப்) பற்றாவனகொடுத்து, ஊன்றும்-தாங்கவல்ல, நல் ஆள்-நல்ல ஆண்மகன், இலாத - பிறவாத, குடி - குடியாகியமரம்; (எ - று.)

முதல் - அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப்பெற்றுழி வளர்ந்து பயன் படுதலும் அல்லாவழிக் கெடுதலு மூடைமையின், மரமாக்கினர். "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன, ஓங்குகுல மையவத னுட்பிறந்த வீரர், தாங்கல்கட னஞ்சுதலை சாய்ப்பவரு தீச்சொ, னீங்கன்மடவார்கள்கட னென் றெழுந்து போந்தான்" என்னும், பிறரும். இது - குறிப்புருவகம்.

இதனுன்; அவரில்லாதகுடிக்கு உளதாங் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) கயியம் - கோடரி. பற்றின்றி - ஆதாரமில்லாமல். அக்கா லத்து - வீழுங்காலத்து. பற்றுவன - விழாது தாங்கவல்ல முட்டுக்கள். முதல் - அடி: ஆதாரம். குடியை மரமென்றமையால், முதலென்றது அதன் வழிக்கு உரியாரை: அதன்வழி - அத்தக்குடும்பத்தின்பரம்பரை. மரம்போல வளர்ப்பாரைப்பெற்றபோது வளர்தலும், வளர்ப்பாரைப் பெறுதபோது கெடு தலுமுடைமையால், குடியை மரமாக்கினு ரென்க. "தூங்குசிறை" என்ற மேற்கோள் சிவகசிந்தாமணியில், காந்தருவதத்தையாரிலம்பகத்தின் ஆறுவது பாடல்: இதன்பொருள்:—தூங்குசிறை - தொங்கிய சிறகுகளையுடைய, வாவல் - வெளவால், உறை - வாழ்கின்ற, தொல் மரங்கள் என்ன - ஆல மரங்கள் (தாம் கெட அவைகெடாதபடி அவற்றள்தோன்றிய விழுது தாங்கி னுற்) போல, ஓங்கு குலம் கையு - உயர்ந்த (தமது)குலமானது தளர்ச்சி யடைய, அதனுள் பிறந்த-அத்தக்குலத்தில் தோன்றிய, வீரர்—, தலைசாய்ப்ப வரு தீசசொல் - (இவன்பிறக்க இக்குலங்கெட்ட தென்று உலகத்தில் நாணத்தால்) தலைகவிழுமாறு (உலகத்தார்)தோன்றும் வசைச்சொல் (பிறவாத படி), தாங்கல் - காப்பது, கடன் - கடமையாகும்: மீங்கல் - (தமதுகுலத் தைத்), தாங்காதபோதல், மடவார்கள் கடன் - மூடரதுகடமையாகும்; (ஆத லால் யானும்முயன்று பொருள்தேடி என்குலத்தைத் தாங்குவேன்), என்று- என்றுசொல்லி, எழுந்துபோந்தான் - எழுந்துபோனன் சீதத்த னென்க. 'அடித்தூண்றும் கல்லாள்' என்று கூறியதனுல், இடுக்கணைக் கோடரியாகவும், குடியை மரமாகவும் ஊகிக்குமாறுவைத்ததனுல், இக்குறள் குறிப்புருவகம் ஆயிற்று. அவர் - குடியைத்தாங்குவார். "சிதலை தினப்பட்ட ஆலமரத்தை, மதலையாய் மற்றதன் வீழுன்றியாங்கு, குதலைமை தந்தைகட்டோன்றிற் றுன்பெற்ற, புதல்வன் மறைப்பக்கெடும்" என்ற நாலடி, இக்குக் காணத்தக் கது. கால் - அக்குடியின்சுற்றத்திற்கு உரியவர். (கo)

கoச - ஆம் அதிகாரம்.—உழவு.

அஃதாவது - சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளா ளர்க்கு முரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங்கால் ஏனையோர்க்கு முரித்து. இது, மேல் குடியுயர்தற்குஎது என்ற ஆள்வினைவகை யாதலின், குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) "வேளாண்மாந்தர்க் குழுதூண்நல்லது, இல்லெனமொழிப பிறவகை நிகழ்ச்சி" என்னுந் தொல்காப்பியமரபியற்சூத்திரத்தி னுரையில், 'வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்தசெய்தி யெனலாகிய, உழவுத்

தொழிலும் நிரைகாத்தலும் வாணிகமுமென்பன. ஒத்தசிறப்பினவன்றி அவற்றுள்ளும் ஒரோவொன்று ஒரோர்வருணத்தார்க்கு உரியனவாம். ஆகலானும், ஈண்டு அவை விதத்துகூறினுரென்பது. நிரைகாவலும் உழவுத் தொழிலும் வணிகர்க்கும் வேளாளர்க்கும் தடுமாறுதல்போலாது, வாணிக வாழ்க்கை வேளாண்மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும் உழுதுண்டல் பெருவரவிற் றெனவும், உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவரவிற் றெனவும் எண்வகைக்கூலத்தொடுபட்டதே பெருவரவிற்றெனவும் கூறினுர்இச்சூத்திரவுரை யாலென்பது' என்று கூறியிருப்பது காண்க. செய்விக்குங் கால்-(தாமேசெய்யாது பிறரால்) செய்விக்கப்படுமாயின். ஏனையோர்க்கும் - அந்தணர்முதலிய மற்றையோர்க்கும். இது - உழவு. ஆள்வினைவகை - முயற்சியின் ஒருவகை.

கo௩க. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
இழந்து முழுவேவ தலே.

(இ - ள்.) (உழுதலான்வரும் மெய்வருத்தம் நோக்கி), சுழன்றும்-(பிறதொழில்களைச் செய்து; திரிந்தும், ஏர் பின்னது - (முடிவில்) ஏருடையார் வழியதாயிற்று; உலகம்—: அதனால் - ஆதலால், உழந்தும் - எல்லாவருத்தமுற்றும், தலை - தலையாயதொழில், உழவு ஏ—; (எ - று.)

ஏர் - ஆகுபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின் பொருட்டு உழுவார்கட் செல்ல வேண்டுதலின், 'சுழன்றுமேர்ப்பின்னதுலகம்' என்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர 'உழந்து முழுவேதலை' என்றுங் கூறினுர்.

இதனுன், உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பிற தொழில் - நிரைகாத்தல் வாணிகம் முதலியன. ஏருடையார் - உழவர். வழியது - அதினைத்தது. எல்லாவருத்தம்உற்றும் - எல்லா [பலவகை] வருத்தமும் அடைந்தாலும். தலையாய-சிறந்த. ஏர் என்பது-கலப்பையை: அது-அதனையுடையார்க்கு ஆகிவந்ததனுல், ஆகுபெயராம். எய்திய வழியும்-அடைந்தபோதிலும். உணவின்பொருட்டு - உணவுக்குஉரிய தானியத்தைப்பெறுதலின்பொருட்டு. கடை - அதமம். இங்கு, ''வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும், ஓதுவாரெல்லாரும் உழுவார்தந்தலைக் கடைகே'' என்ற எழெழுபது கருத்தத்தக்கது. (க)

கo௩உ. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

(இ - ள்.) அஃது - அவ்வுழுதலை, ஆற்றாது - செய்யமாட்டாது, எழுவாரை எல்லாம்-(பிறதொழில்கண்மேற்) செல்வார் யாவரையும், பொறுத்துதாங்குதலால், உழுவார் - அதுவல்லார், உலகத்தார்க்கு - உலகத்தாராகிய தேர்க்கு. ஆணி - அச்சாணியாவர்; (எ - று.)

''காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு'' என்றுற்போல உழுவாரென்றது - உழுவிப்பார்மேலுஞ் செல்லும். உலகத்தாரென்றது - ஈண்டு அவரையொழிந்தாரை. கலங்காமனிறுத்தற்கண் ஆணிபோறலின் 'ஆணி' என்றுர்.

பொறுத்தலானென்பது திரிந்துநின்றது. ஏகதேசவுருவகம். 'அஃதாற்றூர் தொழுவாரேயெல்லாம் பொறுத்து'என்று பாடமோதி, அது மாட்டாதார் புரப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரே யாவ ரென் றுரைப்பாரு முளர்.

(கு - ரை.) அது வல்லார்-உழுதற்றொழிலில்வல்லவர். "காடுகொன்று" என்று தொடங்கும் மேற்கோள், பத்துப்பாட்டுள் பட்டினப்பாலையில் உஅந, உஅச - வரிகளில் உள்ளது. இம்மேற்கோளின்பொருள்—காடு கொன்று - காட்டைஅழிப்பித்து, நாடு ஆக்கி - நாட்டை யுண்டாக்குவித்து, குளீஇ தொட்டு - குளத்தைத் தோண்டுவித்து என்பது. இந்தஇடத்து, கொன்றுமுதலியன தன்னுற்செய்யப்படாது பிறரைக்கொண்டு செய்வித்து என்ற பொருளைத் தருதல்போல, உழுவார் என்பது - உழவுதொழிலைச்செய்வாரைக் காட்டுவதன்றி, உழவுதொழிலைச் செய்விப்பாரையும் காட்டுமென்க. உலகத்தவரில் உழுவாரும் சேர்ந்தாராயினும், உழுவார்க்கு உழுவாரேயாணிவேனின் பொருந்தா தாதலால், உலகத்தாரென்பது-உழுவாரொழிந்த பிறரையே காட்டிற் றென்றுரை. அவரை - உழுவாரை. கலங்காமல் நிறுத்தற்கண் - கலங்காமல் நிலைநிறுத்துதலில். ஆணி - அச்சாணி; "ஆணிபிவ்வுலகுக்கெல்லாம்" என்ற இடத்திலும் ஆணி இப்பொருளில் வருதல் காண்க. பொறுத்து என்பது காரணப்பொருளது என்பார் பொறுத்தலான் என்பது திரிந்துநின்ற தென்றுரை. உழுவாரை அச்சாணியாக உருவகஞ்செய்தவர் அதற்குஏற்ப உலகத்தாரைத் தேராக உருவகஞ்செய்யாமையால், இஃது ஏகதேசவுருவகம். அது மாட்டாதார் - அவ்வுழவுத் தொழிலைச் செய்யமாட்டாதார். புரப்பார் - காப்பவரான உழவர்: அரசர் என்பாருமுளர். பரிபவம்-அவமானம்: பிறதொழிலைப்பற்றி ஏளனமாகப் பேசுவதனு லானது. பொறுத்து-சகித்துக்கொண்டு. அவரை - உழுவாரை. "உழுங்குலத்திற் பிறத்தாரே உலகுய்யப் பிறத்தாரே" எனக் கம்பர் தமதுஏரெழுபதில் வேளாளரைப் புகழ்ந்திருத்தலும், "எண்பதனும், தத்துநீ ரார்க்குங் கடல்வேலித் தாயர்போல்,வித்தித் தருவான் வியோவு" என்ற உழவன்வென்றித்துறை (புறப்பொருள்வெண்பாமாலை, ஒழிபு - ச) யும் ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கன. (உ)

கஅஙூ. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(இ - ள்.) உழுது - (யாவருமுண்ணும்வகை)உழுதலைச்செய்து, உண்டு-(அதனுல் தாமும்) உண்டு, வாழ்வார் ஏ - வாழ்கின்றாரே, வாழ்வார் - (தமக்குரியராய்) வாழ்கின்றவர்: மற்று எல்லாம்-மற்றையாரெல்லாம், தொழுது-(பிறரைத்)தொழுது, உண்டு-(அதனுல்தாம்)உண்டு, பின்செல்பவர்-அவரைப் பின்செல்கின்றவர்; (எ - று.)

மற்று என்பது வழக்குப்பற்றிவந்தது. தாமும் மக்கட்பிறப்பினராய் வைத்துப் பிறரைத்தொழுது அவர் சில கொடுப்பத் தம்முயிரோம்பி அவர் பின்செல்வார் தமக்குரியரல்ல ரென்பது கருத்து.

(கு - ரை.) அதனால் - அவ்வுழுதலால். பிறரையென்றது, உழுவோரைக் குறிக்கும். மற்று என்பது வினைமாற்றிலேனும் அசையிலேனும் வராமல், உலகவழக்குப்பற்றி, மற்றையார் என்ற பொருளில் வந்ததென்க. மக்கட்பிறப்பினராய்வைத்து - மனிதராய்ப் பிறந்திருந்தே. உயிரோம்பி - உயிரைப்பாதுகாத்து. செல்வார் - செல்பவர்: வினையாலணையும்பெயர். செல்வாரென்ற எழுவாய், உரியரல்லர் என்ற பயனிலையோடு முடியும். "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைகண்டீர், பழுதுண்டுவேறோர் பணிக்கு" என்றது இங்கு நோக்கத்தக்கது, "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும், தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில், எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலுமிது, பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே' என்றார் கம்பரும். (௩)

௧௦௩௪. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(இ - ள்.) அலகு உடை - (உழுதற்றொழிலான்) நெல்லினையுடையராய, நீழலவர் - தண்ணளியுடையார்,—பல குடைநீழல் உம் - பலவேந்தர் குடைநிழலதாய மண்முழுதினையும், தம் குடைக்கீழ் - தம்வேந்தர்குடைக்கீழே, காண்பர்—;(எ - று.)

அலகு - கதிர்: அஃது ஈண்டு ஆகுபெயராய், நென்மேலதாயிற்று. உடைய என்பது குறைந்துநின்றது. நீழல்போறலின், நீழலெனப்பட்டது. நீழலவரென்றது - இரப்போர்க்கெல்லாம் ஈதனோக்கி. ஒற்றுமைபற்றி 'தங்குடை' என்றார். குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர். "ஊன்றுசான் மருங்கினீன்றதன்பயனே" என்றதனால், தம்மரசனுக்குக் கொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம்: "இரப்போர்சுற்றமும் புரப்போர்கொற்றமு, முழவிடைவிளைப்போர்" என்றார், பிறரும்.

(கு - ரை.) தண்ணளி - குளிர்ந்த அருள். கதிரென்னும்பொருளையுடைய அலகு என்பது-கதிரிலுள்ள நெல்லைக் காட்டுதலால், ஆகுபெயராயிற்று. அலகுடை என்றவிடத்துள்ள உடையென்பது, உடைய என்பதன் விகாரம். நிழலைப்போற் குளிர்ந்திருத்தலால், நீழல் என்பது உவமவாகுபெயரால், தண்ணளியைக் காட்டிற்று. இரப்போர்க்கெல்லாம் - யாசிப்பவருக்கெல்லாம். உழுவார்க்கும் அவ்வுழுவாரின்வேந்தர்க்குமுள்ள ஒற்றுமைபற்றி, அத்தலைவரின்குடை 'தங்குடை' என்றார். குடைநீழல் என்னுந் தானத்தின் பெயர் அக்குடைநீழலிலுள்ள பூமியைக் காட்டுதலால், தானவாகுபெயராம். "ஊன்றுசால்" என்ற மேற்கோள், புறநானூறு ௩௫ - இல் உள்ளது: இதன் பொருள்:—பொரு படை தரூஉம் கொற்றம்உம் - போர்செய்கின்ற சேனை தருகின்ற வெற்றியும், ஊன்று சால் மருங்கின் - (உழுகின்ற கலப்பை நிலத்தினிடத்தே) ஊன்றிய சாலினிடத்து, ஈன்றதன் - விளைந்தநெல்லின், பயனே என்பது. "இரப்போர்" என்றுதொடங்கும் மேற்கோள், சிலப்பதிகாரம், நாடுகாண்காதை கசகூ, கரு௦ - அடிகளி லுள்ளது. இவ்வடிகளின்

பொருள்:—இரப்போர் சுற்றம்உம் - இரப்பவருடைய சுற்றத்தாரையும், புரப்போர் - (தம்மைக்) காக்கும் அரசருடைய, கொற்றம்உம்-வெற்றியையும், உழவிடை - உழவினிடத்தே, விளைப்போர் - உண்டாக்குவோரென்பது. பிறரென்றது - சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகளை. "குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி, படையாளு மிவைநான்கும் படைத்துடைய ரானாலென், மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்அலப், படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே" என்ற ஏரெழுபதும் காண்க. (௪)

௧௦௩௫. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ - ள்.) கை செய்து - (தம்)கையாலுழுது, ஊண் - உண்டலை, மாலையவர் - இயல்பாகவுடையார்,—இரவார் - (பிறரைத் தாம்) இரவார்: இரப்பார்க்கு-(தம்மை) இரப்பார்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றனை, கரவாது—, ஈவர் - கொடுப்பர்: (எ - று.)

செய்தென்பதற்கு உழுதலையென வருவிக்க. கைசெய்தூண்மாலையவரென்பது, ஒருஞான்றும் அழிவில்லாதசெல்வமுடையரென்னும் ஏதுவையுட்கொண்டு நின்றது.

(கு - ரை.) கரவாது - ஒளியாமல். ஊண் - உண்ணுதல்: முதனிலை திரிந்த தொழிற்பெயர். செய்து என்பதற்கு ஏற்க, உழுதலையென்ற செயப்படுபொருள் வருவிக்கவேண்டுமென்றார். ஒருஞான்றும் - ஒருபோதும். கைசெய்தூண்மாலையவர் என்பது-ஒருபொழுதும் அழிவில்லாதசெல்வத்துக்குக் காரணமான செயலைக் கொண்டவரென்று தெரிவிக்கும் ஏதுவை [காரணத்தை] யுட்கொண்ட விசேடியம் என்க: எனவே, இது - கருத்துடையடை கொளியணியாம். (௫)

௧௦௩௬. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

(இ - ள்.) உழவினார் கை - உழுதலையுடையார் கை, மடங்கின் - (அதனைச் செய்யாது)மடங்குமாயின்,—'விழைவதுஉம்-(யாவரும்)விழையும் உணவும், விட்டேம் - (யாம்) துறந்தேம்,' என்பார்க்கு—, நிலை - (அவ்வறத்தின் கண்) நிற்றலும், இல்லை - உளவாகா; (எ - று.)

உம்மை, இறுதிக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால் தாம் உண்டலும் இல்லறஞ்செய்தலும் யாவர்க்கும் இல்லையாயின. அவருறுப்பு மாத்திரமாய கை வாளாவிருப்பின், உலகத்து இம்மை மறுமை வீடு என்னும் பயன்கள் நிகழா என்பதாம். ஒன்றனை மனத்தான் விழைதலுமொழிந்தேமென்பார்க்கு என உரைப்பாரு முளர்.

இவையைந்துபாட்டானும், அதனைச்செய்வாரதுசிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மடங்குதல் - தொழில்செய்யாதொழிந்துநிற்றல். அவ்வறத்தின்கண் - துறவறத்தில். விழைவதூஉம் என்ற இடத்திலுள்ள உம்மை,

நிலை என்பதிலும் சேர்தற்கு உரியது என்பார் 'உம்மை இறுதிக்கண்ணும் வந்தியைந்தது' என்றார். உழுபவரின்கை மடங்கினால் உணவுவிளையா தாகையால், உணவு இல்லையாம்: உணவு இல்லாமையால் உலகத்தோர்யாவர்க்கும் தாம் உண்ணுதலும் இல்லறம்நடத்தலும் இல்லையாம்: இல்லறத்தோர் தமது அறத்தைச்செய்யாதுபோகவே, துறவோர்க்கு உண்டிமுதலியன ஈபவர் இலராவர்: (துறந்தார்க்குந் துவ்வாதவர்க்குமிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான்றுணை" என்ற குறளையும் நோக்குக.) ஆகவே, அவர் துறவறமும் நடவாதென்க. விட்டேமென்பாரென்று கூறியது - துறவியர் என்பதன் பொருளைப்பற்றி. அவருறுப்புமாத்திரமாய கை வாளாவிருப்பின் - உழவோரின் ஒருறுப்புமாத்திரமான கை உழவுத்தொழிலைச்செய்யாது வெறுமனேயிருந்தால். விழைவதூஉம் என்பதற்கு-யாவரும் விழையும் உணவு என்றுகூறாது, ஒன்றனை மனத்தினால் விரும்புவதையும் என்றுஉரைத்தலும் உண்டு என்று வேறோருரை கூறினார்: இவ்வுரையில் உம்மை யிறுதிக்கண் இயையவேண்டுவதின்று. அதனை - உழவை. (௬)

௧௦௩௭. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(இ - ள்.) (ஒருநிலத்தினை யுழுதவன்), தொடி புழுதி-ஒருபலப்புழுதி, கஃசுஆ - கஃசு ஆம்வண்ணம், உணக்கின் - (அதனைக்) காயவிடுவானாயின், (அதன்கட்செய்த பயிர்), பிடித்து - ஒருபிடியின்கணடங்கிய, எருவும்—, வேண்டாது - இடவேண்டாமல், சால படும்-பணைத்து விளையும்; (எ - று.)

பிடித்து - பிடியின்கண்ணது: பிடித்த என்பதன் விகாரமென்பாருமுளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்து நின்றன.

(கு - ரை.) தொடி - பலம். கஃசு - காற்பலம். அதனை - நிலப்புழுதியை. அதன்கண் - அந்நிலத்தில். பணைத்து - பருத்து: செழுமையாகவளர்ந்து என்றபடி. பிடித்து - பிடி என்ற பகுதியினடியாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்: பிடியளவிலுள்ளது என்று பொருள். பிடித்த எரு என்பது பிடித்தெரு என்று விகாரப்பட்டதெனின், அப்போது, பிடித்த என்பது - இறந்தகாலப்பெயரெச்சமாம். வேண்டாது என்பது முற்றுப்பொருள்படாமல் எச்சப்பொருள்பட்டதனால், வேண்டாமல் என்பது திரிந்ததாகக் கூறினார்: பதிற்றுப்பத்தின் ௬௮ - ஆம்பாட்டில் "உண்ணாதடுக்கிய பொழுதுபலகழிய" என்பதற்கு, 'உண்ணாதென்றதனை உண்ணாமல் எனத் திரித்து அதனை அடுக்கிய என்னும் வினையொடுமுடித்து' எனவும், எக-ஆம் பாடலில் "தோன்றலீயாது தம்பழியூக்குநர்" என்பதற்கு, 'தோன்றலீயாது என்றது தோன்றாது என்னும் வினையெச்சத்திரிசொல்: தோன்றலீயாமல் எனத்திரிக்க' எனவும் பழையவுரையில் எழுதியிருப்பது காண்க: இங்ஙனம் கொள்வது-பண்டைக்காலத்து ஒருசாராரின் கொள்கைபோலும். சால என்பதற்குப் பணைத்து எனப் பொருள்கூறியதனால், அதனை சான்று என்பதன் திரிபு என்றார். (எ)

௧௦௩௮. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.

(இ - ள்.) (அப்பயிர்க்கு), ஏரின்உம் - அவ்வுழுதலினும், எரு இடுதல் - எருப்பெய்தல், நன்று—: கட்டபின் - (இவ்விரண்டுஞ்செய்து)களைகட்டால், அதன் காப்பு-அதனைக் காத்தல், நீரின்உம் - (அதற்கு) நீர்கால்யாத்தலினும், நன்று—; (எ - று.)

ஏர் - ஆகுபெயர். காத்தல் - பட்டிமுதலியவற்றானழி வெய்தாமற் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால்யாத்தல், காத்தல் என்று இம்முறையவாய இவ்வைந்தும் வேண்டு மென்பதாம்.

(கு - ரை.) ஏர் என்னுங் கருவியின்பெயர் - அதனாலாகிய உழவுக்கு ஆகுதலால், கருவியாகுபெயர். பட்டி - பட்டிமாடு: திருட்டுத்தனமாகச் சென்று தன் விருப்பின்படியே பயிர்முதலியவைகளை மேயும் மாடு. அழிவு எய்தாமல் - இட்டபயிர் அழிந்திடாமல். நீர்கால்யாத்தல் - (கால்வாயினின்று) நீர்பாய்ச்சுதல். பயிருக்குச் செய்யவேண்டுவன உழுதல்முதலிய ஐந்தாமென்க.

௧௦௩௯. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

(இ - ள்.) கிழவன் - (அந்நிலத்திற்கு) உரியவன், செல்லான் இருப்பின் - (அதன்கண் நாடொறுஞ்) சென்றுபார்த்து அடுத்தனசெய்யாது மடிந்திருக்குமாயின், நிலம் - அஃது, இல்லாளின் - அவனில்லாள்போல, புலந்து - (தன்னுள்ளே)வெறுத்து, (பின் அவனோடு), ஊடி விடும்—: (எ - று.)

செல்லுதல் - ஆகுபெயர். பிறரை யேவியிராது தானே சேறல்வேண்டுமென்பது போதர 'கிழவன்' என்றார். *தன்கட்சென்று வேண்டுவனசெய்யாது வேறிடத்திருந்தவழி மனையாளூடுமாறுபோல என்றது, அவன் போகமிழத்தல் நோக்கி.

இவை மூன்றுபாட்டானும், அதுசெய்யுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) அதன்கண் - அந்தநிலத்தினிடத்தில். அடுத்தன - செய்யவேண்டுமவை: எருப்பெய்தல்முதலியன. செய்யாது - செய்யவேண்டிய பருவத்திற் செய்யாமல். மடிந்திருக்குமாயின் - சோம்பியிருப்பானானால். செல்லுதல் - போய்ப்பார்த்து வேண்டியனசெய்தலென்ற பொருளைத் தந்ததனால், காரணவாகுபெயர். தானே - நிலத்திற்கு உரியவனே. மனையாளையென்ற உவமையைநோக்க, போகமிழத்தல் என்பது-இன்பத்தையிழத்த லென்றும், உபமேயமாகிய நிலத்தைநோக்க,விளைவையிழத்த லென்றும் சிலேடையினால் இருபொருளைத் தரும். அது - உழவு. (௯)

௧௦௪௦. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(இ - ள்.) இலம் என்று - (யாம்) வறியேமென்றுசொல்லி, அசைஇ இருப்பாரை - மடிந்திருப்பாரை, காணின் - கண்டால்,—நிலம் என்னும் நல்

* பி - ம்:—அதன்கட்சென்று

'லாள் - நிலமகளென்று உயர்த்துச்சொல்லப்படுகின்ற நல்லாள், நகும் - (தன்னுள்ளே) நகாநிற்கும்; (எ - று.)

உழுதன்முதலியசெய்வார்யாவர்க்குஞ் செல்வங்கொடுத்துவருகின்ற வாறு பற்றி 'நல்லாள்' என்றும், அதுகண்டுவைத்தும் அவைசெய்யாது வறுமையுறுகின்ற பேதைமைபற்றி 'நகும்' என்றுங் கூறினர். இரப்பாரையென்று பாட மோதுவாரு மூளர்.

இதனுன், அதுசெய்யாதவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகாரமுறைமைக்குக் காரணமும் இது.

(கு - ரை.) வறியேம் - தரித்திரராக இருக்கிறோம். மடிந்திருப்பாரை - சோம்பியிருப்பாரை. நகாநிற்கும்-பரிகாசச்சிரிப்புச்செய்வாள். பூமிதேவியின் சிரிப்பு, உழவுத்தொழில்செய்யாதாரது பேதைமையைக் கண்டதனுற் பிறந்ததாகும். அதுகண்டுவைத்தும் - (உழுதல் முதலியன செய்வார்யாவர்க்குஞ்) செல்வங்கொடுப்பதைப் பிரதியட்சமாகப்பார்த்தும். அது - உழவு. ஒருசாரார், இருப்பாரை யென்ற விடத்து இரப்பாரையென்று பாடம் ஓதுகின்றனர். செல்வமுண்டாதற்கு முக்கியகாரணமாகிய உழவுகூறியபின் அதுசெய்யாமையால் விளையும் நல்குரவுகூறுகின்றுரென்று வருகின்ற அதிகாரம் இந்த உழவை யடுத்து நிற்பதற்குக் காரணங் காண்க. (கo)

கoடு - ஆம் அதிகாரம்.—நல்குரவு.

அஃதாவது - நுகரப்படுவனயாவுமிலாமை.

(கு - ரை.) நுகரப்படுவன - அனுபவிக்கப்படுவன. 'கொடுப்பதைப் பெற்றுக்கொள்' என்ற பொருளுள்ள 'நல்கு ஊர்' என்ற இரண்டுசொற்கள் சேர்ந்து, கொடுத்தலேப்பெற்றுக்கொள்ளுதலாகிய தொழிற்குக் காரணமான 'தரித்திரத்தைப்படு' என்ற பொருளைக் காட்டிற்று: காரியச்சொல் காரணப் பொருளைக் காட்டிய உபசாரவழக்கு. நல்கூர் என்றபகுதியின் தொழிற்பெயர், நல்குரவு என்பது.

கoசக. இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது.

(இ - ள்.) (ஒருவனுக்கு), இன்மையின்-வறுமைபோல, இன்னுதது—, யாது எனின் - யாதென்றுவினவின்,—இன்மையின் - வறுமைபோல, இன்னுதது—, இன்மைஎ - வறுமையே: (பிறிதில்லை); (எ - று.)

இன்னுதது-துன்பஞ்செய்வது. ஒப்பதில்லை யெனவே, மிக்கதின்மை சொல்லவேண்டாவாயிற்று.

(கு - ரை.) வறுமை - துன்பம். ஒப்பதேதிடையாதபோது மிக்கது திடைக்க வழியில்லை யென்க. வறுமையையொப்பது வேறில்லையென்ற கருத்துத் தோன்ற, இன்மையைப்போல் இன்னுதது இன்மையே யென, இயைபின்மையணி தோன்றக் கூறினர்: இதனை, வடநூலார் அநந்வயாலங்கார மென்பர். 'இன்னுததியாதெனின்' என்ற இடத்துக் குற்றியலிகரம் அலகு பெறவில்லை; அலகுபெற்றதாயின், வெண்டளை பிறழும். (க)

கoசஉ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(இ - ள்.) இன்மை என - வறுமையென்னு (சொல்லப்படுவது), ஒரு பாவி—, (ஒருவனுழை வருங்கால் அவனுக்கு), மறுமை உம் - மறுமையின்பமும், இம்மை உம்-இம்மையின்பமும், இன்றி-இல்லையாக, வரும்—; (எ-று.)

இன்மையெனவொருபாவியென்பதற்கு, மேல் ''அழுக்காறெனவொரு பாவி'' என்புழி யுரைத்தாங்கு உரைக்க. மறுமை, இம்மை என்பன - ஆகு பெயர். ஈயாமையானும் துவ்வாமையானும் அவை யிலவாயின. 'இன்றி விடும்' என்று பாடமோதி, பாவியால் என விரித்துரைப்பாரு முளர்.

(கு-பை.) ஒருவனுழை-ஒருவனிடத்து. இன்மையென்பது-பண்பு ஆதலால், அதனைப் பாவமுடையதெனக் கூறலாகாது: பண்புக்குப் பண்பு இல்லை யென்பது நூல்வழக்கு ஆதலால்; ஆகவே, அழுக்காற்றின் கொடுமையை விளக்க 'அழுக்காறெனவொரு பாவி' என்று சொன்னதைப்போல, இங்கும் இன்மையின் கொடுமையைவிளக்க 'இன்மையென வொருபாவி' என்று கூறியதென்க. என்புழி - என்றவிடத்து. உரைத்தாங்கு-சொன்னவகையாக. மறுமையென்பது-மறுமையின்பத்தையும், இம்மையென்பது-இம்மையின்பத்தையுங் காட்டுவதால், இடவாகுபெயர். ஈயாமையால் மறுமையின்பமும், துவ்வாமையால் இம்மையின்பமும் ஒருவற்கு இல்லையாம். துவ்வாமை-அனுபவியாமை. இன்றி வருமென்ற இடத்து 'இன்றிவிடும்' என்று பாடமாயின், பாவியென்பதைப் பாவியால் என்று மூன்றனுருபு விரிப்பரென்றார். (உ)

கoசஊ. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

(இ - ள்.) நல்குரவு என்னும் நசை - நல்குரவென்றுசொல்லப்படும் ஆசை,—(தன்னைப் பற்றப்பட்டாருடைய), தொல்வரவு உம்-பழைய குடிவர வினையும், தோல்உம்-(அதற்கு) ஏற்ற சொல்லினையும், தொகை ஆக-ஒருங்கே, கெடுக்கும்—; (எ - று.)

நசையில்வழி நல்குரவும்இல்லை யாகலின், நல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியிற்றொல்லோர்க்குஇல்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையும் உளவாக்கலான் அவ்விரண்டனையும் ஒருங்குகெடுக்கு மென்றார்: ''குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்'' என்றார், பிறரும். தோலாவது - ''இழுமென்மொழியான்விழுமிய துறுவல்'' என்றார், தொல்காப்பிய னாரும்: இதற்குஉடம்புஎன்று உரைப்பாரு முளர்: அஃது அதற்குப் பெயராயினும், உடம்புகெடுக்கும்என்றற்கு ஓர் பொருட்சிறப்பில்லாமை யறிக.

(கு - பை.) பற்றப்பட்டார் - கொள்ளப்பட்டார். நசை - வேண்டுமென்ற ஆசை. ஆசையே நல்குரவென்றும் உள்ளதுகொண்டு போதுமென்ற மனநிறைவே செல்வமாவ தென்றும் அறிக. குடிவரவு-குடிப்பிறப்பு. ''குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்'' என்னும் மேற்கோள், மணிமேகலையில், பாத்திரம் பெற்ற காதையில், எசு-ஆவது அடி: இதன் பொருள்:—குடிப்

பிறப்பு அழிக்கும் - (பசிப்பிணியானது தன்னாற் பற்றப்பட்டாருடைய)உயர் குடிப்பிறப்பினை யழிக்கும்: விழுப்பம் கொல்லும் - (அக்குடிக்கு இருந்த சிறப்பையும்) ஒழிக்கும் என்பது. தோலாவது - "இழுமென்மொழியால் விழுமியது நுவறல்" என்றார், தொல்காப்பியனார்: (பொருளதிகாரம், செய்யுளியல், உ௩௯). இதன்பொருள் - மெல்லென்ற சொல்லாற் சிறந்த நால் வகைப்புருஷார்த்தமும் உண்டாகுமாறு சொல்லுத லென்பது.ஆகவே, தோல் என்பது - அந்தத் தொல்காப்பியத்தையொட்டி, குடிப்பிறப்பிற்குஏற்ற விழுமியசொல் என்ற பொருளில் இங்கு வந்ததென்க. இனி, தோல் என்பதற்கு- உடம்பு என்று ஒருசாரார் பொருள்கூறுவ ராயினும், உடம்பைக்கெடுக்கு மென்று கூறுவதிற் பொருட்சிறப்பு இல்லாமையால், அப்பொருள் கொள்ளத்தக்கதன்று என்பது, பரிமேலழகர் கொள்கை. (௩)

௧௦௪௪. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(இ - ள்.) இற் பிறந்தார்கண் ஏ உம் - (இளிவந்தசொல் பிறவாத)குடிப் பிறந்தார்மாட்டேயும், இளிவந்த சொல் - அது, பிறக்கும்-பிறத்தற்குஏதுவாகிய, சோர்வு - சோர்வினை, இன்மை-நல்குரவு; தரும்-உண்டாக்கும்; (எ-று.)

சிறப்பும்மை, அவர்மாட்டு அது பிறவாமை தோன்ற நின்றது. இளிவந்த சொல் - இளிவருதற்கேதுவாகிய சொல்; அஃதாவது, எமக்கு ஈய வேண்டு மென்றல். சோர்வு - தாம்உறுகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம் பிறப்பினைமறந்து அதுசொல்லுவதாக நினைத்தல்.

(கு - ரை.) இளிவந்த - இழிவு பொருந்திய. குடிப்பிறந்தார் மாட்டேயும் - குடிப்பிறந்தாரிடத்தும். அது - இளிவந்தசொல். சிறப்பும்மை - இளிவந்தார் கண்ணேயும் என்ற இடத்திலுள்ளது. அது - இளிவந்தசொல். இளிவருதற்கு - இழிவுவருதற்கு. ஏது - காரணம். உறுகின்ற - அடைந்திருக்கின்ற. ஒரோவழி - சிலவேளை. அது - இளிவந்தசொல். (௪)

௧௦௪௫. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(இ - ள்.) நல்குரவு என்னும் - நல்குரவென்றுசொல்லப்படும், இடும்பையுள் - துன்பமொன்றனுள்ளே, பல் துன்பங்கள்-பலதுன்பங்களும், சென்று படும் - வந்துவிளையும்; (எ - று.)

குரை - இசைநிறை. செலவு * வரவின்கண் வந்தது. துன்பமுந்தானும் உடனிகழ்தலின், நல்குரவைத் துன்பமாக்கியும், அத்துன்பமடியாகச் செல்வர்கடைநோக்கிச் சேறற்றுன்பமும்,அவரைக் காண்டற்றுன்பமும், கண்டான் மறுத்துழி நிகழுந் துன்பமும், மறுவழியும் அவர்கொடுத்தது வாங்கற்றுன்பமும், அதுகொடுவந்து நுகர்வனகூட்டற்றுன்பமும் முதலாயின நாடொறும் வேறு வேறாக வருதலின், எல்லாத்துன்பங்களுமுளவா மென்றுங் கூறினார்.

இவையைந்துபாட்டானும், நல்குரவின்கொடுமை கூறப்பட்டது.

---

* பி - ம்: விரைவின்கண்.

(கு-ரை.) இசைநிறை-செய்யுளில் ஓசையை நிறைக்கவருவது. "ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலே" என்பது, தொல்காப்பியத்து இடைச்சொல் லியற்சூத்திரம். சென்று என்பதற்கு வந்து என்று பொருள் கூறியதனுல், செலவு வரவின்கண் வந்தது என்றார். நல்குரவு உள்ளபோது துன்பமும் உடனிருத்தலால், 'நல்குரவென்னுமிடும்பை' என்று இரண்டையும் அபேத மாக்கிக் கூறினர். கடை - வாசல். மறுத்துழி - பொருளே ஈயவேணுமென்று இரக்க அவர் கொடாது மறுத்தால். கூட்டல் - சேர்த்தல். (இ)

கoசசு. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருட் சோர்வு படும்.

(இ - ள்.) நல் பொருள்-மெய்ந்நூற்பொருளே, நன்கு உணர்ந்து-தெளிய வறிந்து, சொல்லின் உம் - சொன்னுராயினும்,—நல்கூர்ந்தார்—, சொல் - (சொல்லிய) சொல், பொருள் சோர்வு-பொருளின்மையை, படும்-தலைப்படும்.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது - 'யாம் இவர் சொல்லியன விரும்பிக்கேட்டுமாயிற் கண்ணேடி இவர் உறுகின்ற குறைமுடிக்கவேண்டும்' என்று அஞ்சி யாவருங்கேளாமையிற் பயனில்சொல்லாய்முடிதல். கல்வி யும் பயன்படா தென்பதாம்.

(கு - ரை.) தலைப்படும்-பொருந்தும். கேட்டுமாயின்-கேட்டோமாயின். கண்ணேடி - தாட்சிணியப்பட்டு. மெய்ந்நூற்பொருளே நல்கூர்ந்தார் சொல் லக்கேட்பின், பின்பு அவர் தங்குறையைக் கூறினுராயின் அவர்திறத்துத் தாட்சிணியத்தால் அக்குறையையும் முடிக்கும்படிவருமே யென்றஞ்சி எவரும் அவர் கூறுவதைக் கேளாரென்க. பயன் இல்சொல்-பயனற்றசொல்: கேட்பா ரில்லாமையால், நல்கூர்ந்தார்சொல் பயனிலதாமென்க. "எனைத்துணைய வேனு மிலம்பாட்டார்கல்வி, தினைத்துணையுஞ் சீர்பாடிலவாம்" என்றது, இங்குக் காணத்தக்கது. (சு)

கoசஎ. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(இ - ள்.) அறம் சாரா - அறத்தைத்தொடியையில்லாத, நல்குரவு - நல்குரவு டையான்,—ஈன்ற தாயான் உம்-(தன்னை) ஈன்ற தாயானும், பிறன்போல-பிறனைக் கருதுமாறுபோல(க்கருதி), நோக்கப்படும்—; (எ - று.)

அறத்தைத்தொடு கூடாமை - காரணகாரியங்களுரு *ளொன்முனு மியை யாமை. நல்குரவு-ஆகுபெயர். சிறப்புமை, அவளதுஇயற்கையன்புடைமை விளக்கிநின்றது. கொள்வதின்முதலேயன்றிக் கொடுப்பதுண்டாதலு முடை மையின், அதுநோக்கிச் சுற்றத்தார்யாவருந் துறப்ப ரென்பதாம்.

(கு - ரை.) செல்வத்தினுல் விளையக்கூடியது - தருமம்: நல்குரவினுல் விளையக்கூடியது - அதருமம்: ஆகவே, நல்குரவினுல் அறத்தைச் செய்ய முடியாது. எனவே, நல்குரவு அறத்திற்குக் காரணமாகாதாம்: இனி, தருமஞ் செய்வார்க்குச் செல்வமுண்டாகும்: அதருமஞ்செய்வார்க்கு நல்குரவு உண்டா

* பி - ம்: ஒன்முயியையாமை.

கும்: எனவே, நல்குரவு அறத்தின்காரியமுமாகாதாம்: ஆதலால், நல்குரவுக்கு 'அறத்தொடு கூடாமை-காரணகாரியங்களு ளொன்றும் இயையாமை'என்றார். நல்குரவு-இங்கு அதனையுடையாளைக்காட்டுதலால், ஆகுபெயராம். 'தாயாலும்'என்ற இடத்துள்ள உயர்வுசிறப்பும்மை, பெற்றமைத்தனிடத்து இயல்பாக அன்புடையாள் அவள் என்பதைத் தெரிவிக்கும். கொள்வது இன்று - (தரித்திரனிடத்துக்) கொள்ளத்தக்கபொருள் ஒன்றுமில்லை. கொடுப்பது- (கைவிடாவிட்டால் நல்கூர்ந்தானுக்குத் தாங்கள்) கொடுக்கவேண்டிய பொருள். உண்டாதலும் - உளதாதலும். அதுநோக்கி - பொருள்கொடுக்க வேண்டியதாயிருத்தலைநோக்கி. தாறப்பர்-நீங்கிவிடுவர். "இல்லானை, யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லாதவன்வாயிற் சொல்," "தாயும்பகை கொண்டபெண்டிர் பெரும்பகை தன்னுடைய, சேயும் பகை யுறவோரும்பகையிச் செகமும்பகை, ஆயும்பொழுதி லருஞ்செல்வநீங்கின்" என்பன காண்க. (எ)

கஅசஅ. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

(இ - ள்.) நெருநல் உம் - நெருநற்றும், கொன்றது போலும் - கொன்றது போன்று (எனக்கு இன்னுதவற்றைச்) செய்த, நிரப்பு - நல்குரவு, இன்றுஉம் —, வருவது கொல் ஓ - (என்பால்) வரக்கடவதோ? [வந்தால் இனியாதுசெய்வேன்]? (எ - று.)

அவ்வின்னுதனவாவன - மேற்சொல்லிய துன்பங்கள். நெருநல் மிக வருந்தித் தன்வயிறுநிறைத்தானெருவன் கூற்று.

(கு - ரை.) நெருநல், நெருநற்று - நேற்று. மேற்சொல்லிய - இவ்வதிகாரத்து ஐந்தாங்குறளினுரையிற் கூறிய. நெருநல் - முன்னுள். தன் வயிறு நிறைத்தான் - தன்வயிற்றை நிரப்பிய தரித்திரன். கூற்று - சொல். ஒரு பொருளும் இல்லாமையையுடைய வறுமையை, நிரம்பியிருப்பது என்ற பொருளுள்ள 'நிரப்பு' என்ற சொல்லாற் கூறியது, எதிர்மறையிலக்கணை.(அ)

கஅசக. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்டா டரிது.

(இ - ள்.) (மந்திரமருந்துகளான்), (ஒருவனுக்கு), நெருப்பினுள்-நெருப்பிடையே, துஞ்சல் உம் ஆகும் - கிடந்துறங்கலுமாம்: நிரப்பினுள் - நிரப்புவந்துழி, யாது ஒன்று உம் - யாதொன்றாலும், கண்பாடு - உறக்கம், அரிது- இல்லை; (எ - று.)

நெருப்பினும் நிரப்புக்கொடிதென்றவாறாயிற்று. இதுவும், அவன்கூற்று. இவைநான்குபாட்டானும், நல்கூர்ந்தார்க்குளதாங்குற்றங்கூறப்பட்டது.

(கு-ரை.) மந்திரசக்தியாலும் மருந்தின்வன்மையினாலும் நெருப்பிற்குள் துங்கலா மென்பர். அவன் - நல்கூர்ந்தான். (கூ)

கஅடுஅ. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(இ - ள்.) துப்புரவு இல்லார் - நுகரப்படும்பொருள்க ளில்லாதார், (தம் மாற் செயற்பாலது முற்றத்துறத்தலேயாகவும்), துவர துறவாமை - அது செய்யாதொழிதல்,—(பிறரில்லினுளவாய), உப்பிற்கும்—, காடிக்கும்—, கூற்று - கூற்றும்; (எ - று.)

மானமழியாமையிற் செயற்பாலது அதுவே யாயிற்று. முற்றத்துறத் தல் - சுற்றம் தானே விட்டமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயினுர், நின்ற தம்முடம்பினையும் துறத்தல். அதுசெய்யாதுகொண்டிருத்தல் இரண்டனை யும் மாளப்பண்ணுதலின், அதனை, அவற்றிற்குக் கூற்று என்றார். இனி, முற்றத்துறத்தலாவது - துப்புரவில்லாமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயி னுர் பின் அவற்றை மனத்தாற் றுறவாமை யென்று உரைப்பாரு முளர்.

இதனுன், அஃது உளதாயவழிச் செய்வது கூறப்பட்டது.

(கு-ரை.) முற்றத்துறத்தல்-இறத்தல். ஒருவாற்றுல் துறந்தாராயினுர்-ஒருவகையாற் சன்னியாசிபோலானவர்: (சந்நியாசிகள் சுற்றத்தாரையும் பொருளையும் துறப்பவரென்பது, இங்குக் கருதத்தக்கது.) பொருள்நீங்கிய நல்கூர்ந்தாரைச் சுற்றத்தார் தாமே துறக்கின்றனர்: இனி, இவர்க்குத் துறக்க வேண்டியதாகவுள்ளது-உயிரேயென்க. உயிரைவிடத்துணியாவிடின் உயிரை யோம்புதற்காக மானத்தைவிட்டுப் பிறரிடத்துக் காடியையும் உப்பையும் இரந்து பெறவேண்டியிருத்தலால், 'துவரத்துறவாமை உப்பிற்குங் காடிக்குங் கூற்று' என்றார். அதனை - துவரத்துறவாமையை. அவற்றிற்கு - காடிக்கும் உப்புக்கும். மாளப்பண்ணுஞ்செயல் ஒத்திருத்தலால், 'துறவாமையைக்கூற்று' என்றது. பரிமேலழகருரையில் - 'இனி, முற்றத்துறத்தலாவது****மனத் தாற்றுறவாமை'என்பது 'இனி, முற்றத்துறத்தலாவது****மனத்தாற்றாத் தல்' என்று இருக்கவேண்டுமெனத் தோன்றுகின்றது. துவரத்துறவாமை - சுற்றமும் பொருளும் தாமே நீங்கினும், தாம் அவற்றை மனத்தால் வெறுத்து விட்டிடாமல் அவற்றின்கட் பற்றுச்செய்தல் என்பது வேறுரை. அஃது - நல்குரவு. (கo)

கoசூ - ஆம் அதிகாரம்.—இரவு.

இனி, மானங்தீரா இரவு இரவாமையொடொத்தலின், அதனுனும் வீடெய்தற்பயத்ததாய உடம்பு ஓம்பப்படு மென்னும் அறநூல்வழக்குப்பற்றி, மேலெய்திய துவரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்றார். அதிகாரமுறைமையும் இதனுனே விளக்கும்.

(கு - ரை.) மானம் - பெருமை. தீரா - நீங்காத. இரவு - யாசகத் தொழில். ஓம்பப்படும் - பாதுகாத்தற்கு உரியதாம். அறநூல் - தருமசாஸ்தி ரம். மேலெய்திய - மேலதிகாரத்தில் [நல்குரவு என்ற அதிகாரத்தில்] பெறப்பட்ட. துவரத் துறத்தல் - உயிரைவிடுதல். நல்குரவினுல் உயிர் போகாதகாலத்தின், மானம்போகாத இரவினுல் உயிரை ஓம்புதல் தரும் என்று

இவ்வதிகாரத்தாற் பெறப்படுவதனால், இது நல்குரவு என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்ட தென்க.

கoடுக. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(இ - ள்.) (நல்கூர்ந்தார்);—இர தக்கார் - இரத்தற்குஏற்புடையாரை, காணின்—, (அவர்மாட்டு), இரக்க—: (இரந்தால்), கரப்பின்-(அவர்) கரந்தாராயின், அவர் பழி - அவர்க்குப் பழியாவது (அல்லது), தம் பழி அன்று - தமக்குப் பழியாகாமையான்: (எ - று.)

'இர' என்னும் முதனிலைத்தொழிற்பெயரதிறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இரத்தற்குஏற்புடையராவார் - உரையாமைமுன் உணரும் ஒண்மையுடையராய் மாற்றாதீவார். அவர் உலகத்தரிய ராகலின் 'காணின்' என்றும், அவர்மாட்டு இரந்தார்க்கு இரவான்வரும் இழிவு இன்மையின் 'இரக்க' என்றும், அவர் ஈதலிற் குறை காட்டாமையின்,'கரப்பின்' என்றும்,காட்டுவராயின் அப்பழி தூவெள்ளறுவைக்கண்மாசுபோல அவர்கட் கடிதுசேறலின் 'அவர்பழி'என்றும், ஏற்பிலார்மாட்டு இரவு அன்மையின் 'தம் பழியன்று' என்றும் கூறினார்.

(கு - ரை.) இரத்தக்கார் என்றதொடரில், 'இர' என்ற முதனிலைத் தொழிற்பெயரினிறுதியில், இரத்தற்கு என்று பொருள்தரவேண்டிய நான்கனுருபு தொக்க தென்க. இரத்தற்கு ஏற்புடையராவார் - யாரிடத்து எனக்கு ஈவாய் என்றுசொல்லி இரத்தல்தொழிலச்செய்தால் தகுமோ, அப்படிப்பட்டவர். உரையாமைமுன் - (யாசகன் எனக்கு இன்னது ஈவாய் என்று வாய்திறந்து) சொல்லுதற்குமுன். ஒண்மை - நுண்ணறிவு. மாற்றாது-இல்லையென்றுசொல்லாமல். "முகநோக்கிநிற்கவமையுமகநோக்கி, யுற்றதுணர்வார்ப் பெறின்"என்ற குறளின்கருத்தும்,"ஏற்றகைமாற்றுமை யென்னுந் தரம்வரையா,ராற்றுதார்க்கீவதா மாண்கடன்"என்ற நாலடியாரின்கருத்தும் இங்கு அறியத்தக்கன. 'காணின்' என்றதனால், அப்படிப்பட்ட கொடையாளியைக் காணுதலரிது என்னுங் கருத்துப் பெறப்படும். அவரீதலிற் குறைகாட்டாமையின்-அப்படிப்பட்டவர் ஈதலச்செய்தலிற் குறைகாட்டாராதலால். தூவெள்ளறுவை-பரிசுத்தமாய் வெண்ணிறமாகவுள்ள ஆடை. மாசு-அழுக்கு. கடிது - விரைவாக. ஏற்பிலார்மாட்டு-தகாதவரிடத்துச்செய்த, இரவு - யாசகம், அன்மையின் - அல்லவாதலால். (க)

கoடுஉ. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப மூறுஅ வரின்.

(இ - ள்.) ஒருவற்கு—, இரத்தல் - இரத்தல்தானும், இன்பம் - இன்பத்திற்கு ஏதுவாம்; இரந்தவை - இரந்தபொருள்கள், (ஈவாரதுஉணர்வுடைமையான்), துன்பம் உறுஅ - (தான்) துன்புறுமல், வரின்-வருமாயின்; (எ - று.)

இன்பம் - ஆகுபெயர். உறுமல்என்பது, கடைக்குறைந்து நின்றது. துன்பம் - சாதியொருமைப்பெயர். அவையாவன-ஈவார்கட் காலமும் இட

னும் அறிந்துசேறலும், அவர்குறிப்பறிதலும், அவரைத் தன்வயத்தராக்கலும், அவர்மனம்நெகிழ்வன நாடிச்சொல்லலும் முதலியவற்றால் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம். அவையுறாமல் வருதலாவது - அவர் முன்னுணர்ந்தீயக்கோடல்.' இரந்தவர் துன்பமுறாவரின்' என்றுபாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மைமுதலியவற்றாற் றுன்புறாது எதிர்வந்தீவராயின் என்று உரைப்பாரு முளர்.

இவையிரண்டுபாட்டானும், நல்குரவானுயிர்நீங்குமெல்லைக்கண் இளிவில்லாஇரவு விலக்கப்படா தென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இன்பம் என்னுங் காரியத்தின்பெயர் - அதன்காரணத்திற்கு ஆகுதலால், காரியவாகுபெயர். 'உறாஅவரின்' என்றவிடத்து உறாமல் என்பது இறுதியிலுள்ள 'மல்' என்பது குறைந்து அளபெடுத்து 'உறாஅ' என நின்ற தென்க. துன்பம் என்பது பன்மையீறுதோன்றாதுநின்று பல வகைத்துன்பங்களையும் காட்டுதலால், சாதியொருமை யென்றார்: பால்பகா வஃறிணைப்பெயர் இங்குப் பன்மையையுணர்த்திற்று என்று கூறாமைக்குக் காரணம், இது பன்மையென்று தீர்மானித்தற்குரிய அடையாளமொன்றும் வராமையாலாகும். அவையாவன-அத்துன்பங்களாவன. ஈவார்கண்-கொடுப்பவரிடத்து. மனம் நெகிழ்வன - மனம் தன்னிடத்து இரங்கக்கூடியமொழிகளை. நாடி - ஆராய்ந்து. மறுத்துழி - (ஈவார் இரப்போனாகியதான் வேண்டுவதைக் கொடுக்காமல்) மறுத்தபோது. அவை யுறாமல் - அவ்வகைத்துன்பங்கள் (இரப்பாற்கு)நிகழாமல். அவர் முன்னுணர்ந்து ஈயக் கோடல் - கொடுப்போர் (இரப்பான்கருத்தை) முன்னமேயறிந்து தரப்பெற்றுக்கொள்ளுதல். இரந்தவையென்றவிடத்து இரந்தவர் என்று பாடம் ஓதுவாருமுளர். இரக்கப்பட்டவர்=ஈவார். உயிர்நீங்கும் எல்லைக்கண் - உயிர்போவதாக இருக்கும் போது. இளிவில்லா - இழிவுபடுதலில்லாத. (உ)

௧௦௫௩. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

(இ - ள்.) கரப்பு இலா - கரத்தலில்லாத, நெஞ்சின்-நெஞ்சினையுடைய, கடன் அறிவார் - மானமறிவார், முன்நின்று - முன்னர்நின்று, இரப்புஉம் - (அவர்மாட்டுஒன்று) இரத்தலும், (நல்கூர்ந்தார்க்கு), ஓர் ஏர் உடைத்து-ஓரழகுடைத்து; (எ - று.)

''சிறியசுருக்கத்துவேண்டுமுயர்வு'' என்றதனால் அவர்க்கு அது கடனெனப்பட்டது: அதனை யறிதல் - சொல்லுதலுற்று உரைக்கலாகாமைக்கு ஏதுவாய அதனியல்பினை யறிதல்: அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றல்மாத்திரமே யமைதலின் 'முன்னின்று' என்றும், சொல்லுதலான் வருஞ் சிறுமை எய்தாமையின் 'ஓரேஎ ருடைத்து' என்றுங் கூறினார். உம்மை - அதனிழிபு விளக்கிநின்றது.

(கு - ரை.) கரத்தல் - (தம்மிடத்துப்பொருளிருக்கவும் இல்லையென்று) ஒளித்தல். அவர்மாட்டு - கரப்பிலாநெஞ்சுள்ள ஈவாரிடத்து. ''சிறியசுருக்

கத்துவேண்டுமுயர்வு'' என்ற மேற்கோள், கீழ் மானம் என்ற அதிகாரத்து ஈ - ஆம் பாடலி லுள்ளது. குறைந்தநல்குரவில் பணியாமைவேண்டுமென்று குடிப்பிறந்தார்க்குக் கூறியிருத்தலால், அதனையுணர்ந்த குடிப்பிறந்தாராகிய ஈவார், குடிப்பிறந்தாராகிய இரப்பார் தம்மிடத்துப் பணியாதிருத்தலைக் கொண்டு கரவா ராதலால், அப்படிப்பட்ட ஈவாரை 'கடனறிவார்' என்றார். சொல்லுதலுற்று உரைக்கலாகாமை - (தம் இளிவைச்) சொல்லத்தொடங்கி (அதனை)ச்சொல்லமாட்டாமை. அதனியல்பினை - மானத்தினியல்பை. அவ்வறிவுடையார்க்கு - மானத்தினியல்பையறியும் அறிவை யுடையவர்க்கு. உம்மை, இரப்பும் என்ற இடத்து உள்ளது. (ஈ)

கஅருச. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவினுந் தேற்றாதார் மாட்டு.

(இ - ள்.) கரத்தல் - (தமக்குஉள்ளது) கரத்தலே, கனவின்உம் - கனவின்கண்ணும், தேற்றாதார்மாட்டு - அறியாதார்மாட்டு, இரத்தல்உம்-சென்று (ஒன்றை) இரத்தலும், (அறியார்க்கு), ஈதல் போலும்---; (எ - று.)

உம்மை - ஈண்டும் அவ்வாறு நின்றது. தான் புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின் 'ஈதலேபோலும்' என்றார். ஏகாரம் - ஈற்றசை.

(கு - ரை.) தமக்கு உள்ளது கரத்தலே - (இரப்பார் 'எனக்கு ஈ' என்று கேட்கும்போது) தம்மிடத்துள்ளபொருளே இல்லையென்று ஒளித்துக்கூறுதலே. ஈண்டும் - இக்குறளிலும். அவ்வாறு நின்றது-முன்குறளிற்போலவே இழிவு கிடப்புப்பொருளதாய்நின்றது. ஈதலே, எ - ஈற்றசை: வாக்கியத்திலன்றிச் சொல்லினீற்றிலிருப்பதும், ஈற்றசையேயா மென்க. (ஈ)

கஅருடு. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

(இ - ள்.) கண் நின்று - (சொல்லுதல்மாட்டாது) முன்நிற்றன்மாத்திரத்தான், இரப்பவர்-இரப்பார், (உயிரோம்பற்பொருட்டு), மேற்கொள்வது - (அதனை) மேற்கொண்டுபோதுகின்றது,—கரப்பு இலார்-(அவர்க்குஉள்ளது) கரவாதுகொடுப்பார்(சிலர்), வையகத்து உண்மையான் - உலகத்து உளராயதன்மையானே, (பிறிதொன்று னன்று); (எ - று.)

அவரில்லையாயின், மானநீக்கமாட்டாமையின், உயிர்நீப்ப ரென்பதாம்.

(கு - ரை.) அதனை - இரத்தற்றொழிலை. அவர்க்கு - இரப்பார்க்கு: உள்ளது கரவாது - தம்மிடத்து உள்ளதை ஒளிக்காமல்: இனி, அவர்க்கு உள்ளது - கொடுப்பவராகியதமக்கு உள்ளதைக் கரவாது என்பாரு மூளர். மேற்கொள்வது என்ற எழுவாய்க்கு 'ஆகும்' என ஒருமுற்று வருவிக்க. கண் - கண்ணுக்குத்தெரியும் எதிரிடத்துக்கு இலக்கணை. 'நின்று' என்றவினையெச்சம், 'இரப்பவர்' என்பதன்முதனிலையான இரத்த லென்பதனோடாவது, 'மேற்கொள்பவர்' என்பதன் முதனிலையான மேற்கொள்ளுதற்றொழிலா

டாவது இயைதற்கு உரியது. அவர் - கரப்பிலார். உயிர்நீப்பரென்பதற்கு இரப்பவரென்ற எழுவாய் வருவிக்க. (௫)

௧௦௫௬. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

(இ - ள்.) கரப்பு இடும்பை - (உள்ளது) கரத்தலாகிய நோய், இல்லாரை—, காணின் - கண்டால், (மானம் விடாது இரப்பார்க்கு),—நிரப்பு இடும்பைஎல்லாம் - நிரப்பான்வருந் துன்பங்களெல்லாம், ஒருங்கு கெடும் - சேரக் கெடும்; (எ - று.)

கரத்தல் ஒருவர்க்குவேண்டுவதொன்றன்மையின், அதனை 'நோய்' என்றும், அஃதுஇல்லாத இரக்கத்தக்காரைக் கண்ட பொழுதே அவர் கழியுவகையராவ ராகலின்,'எல்லாமொருங்குகெடும்'என்றும் கூறினார். இடும்பை- ஆகுபெயர். முழுதுங்கெடு மென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) உள்ளதுகரத்தல் - (தம்மிடத்து) இருக்கும்பொருளை இல்லையென்று சொல்லி ஒளித்தல். நிரப்பை இடும்பையாகக்கருதுபவர் மானம் விடாதிரப்பவரே யாதலால், 'மானம்விடாதிரப்பார்க்கு' என வருவித்தார். நிரப்பு - வறுமை. ஒருங்கு என்பதன்பொருள், 'சேர' என்பது. அதனை - கரத்தலை. அஃது - கரப்பு. இரக்கத்தக்கார் - யாசித்தற்குத்தக்கார்: கொடுப்போர். அவர் - இரப்போர். கழியுவகையர் - மிக்கமகிழ்ச்சியையுடையவர். இடும்பையென்பதற்குப் பொருள் - துன்பமென்பது: அச்சொல் - துன்பத்தையுண்டாக்கும் நோயைக் காட்டுவதால், காரியவாகுபெயர். ஒருங்குகெடும் என்றவிடத்துப் பாடாந்தரம், 'முழுதுங்கெடும்' என்பது. எஞ்சாமல் - குறையாமல்: இது முழுதும் என்பதன்பொருள்; "முழுதென்கிளவி எஞ்சாப் பொருட்டே" என்பது, தொல்காப்பியத்து உரியியற்சூத்திரம். (௬)

௧௦௫௭. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

(இ - ள்.) இகழ்ந்து - (தம்மை) அவமதித்து, எள்ளாது - இழிவுசொல்லாது, ஈவாரை - பொருள்கொடுப்பாரை, காணின் - கண்டால்,—உள்ளம் - (அவ்விரப்பாரது) உள்ளம், மகிழ்ந்து—, உள்ளுள் - உள்ளுள்ளே, உவப்பது உடைத்து - உவக்குந்தன்மையதுடைத்து; (எ - று.)

'இகழ்ந்தெள்ளாது' எனவே நன்குமதித்தலும் இனியவைகூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி, ஐம்புலன்களானும் பேரின்பமெய்தினா ராகக் கருதலான் 'உள்ளுளுவப்பதுடைத்து' என்றார்.

இவையைந்துபாட்டானும், அவ்விரத்தக்காரதியல்பு கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளுள்ளே - மனத்திற்குள்ளேயே. இகழ்ந்தெள்ளாது என்ற இடத்து எதிர்மறை 'இகழாது எள்ளாது' என ஈரிடத்தும் சேருதலால், இகழாது என்பதனால் நன்குமதித்தலும், எள்ளாது என்றதனால் இனியவைகூறலும் பெறப்படும். பெறுதும் - பெறுவோம். ஈவாரைக்கண்டபோதே இரப்பார்க்கு நிரப்பிடும்பை [வறுமைத்துன்பம்] கெடுதல்மாத்திர

மன்றி, அக்கொடையாளரால் தாம் பெரும்பொருள்பெறலாமென்ற கருத்தி னால் மெய்வாய்முதலிய பஞ்சேந்திரியங்களும் பேரின்பத்தைப்பெற்றன வாகவே அவராற் கருதப்படுமென்க. ஐம்புலன்களானும்=ஐம்பொறிகளா லனுபவித்தற்குரிய ஐந்துவிஷயங்களாலும். அவ்விரத்தக்கார் - இரப்போரை நன்குமதித்து இன்சொற் சொல்லிக் கரவாது ஈயுமவர். (எ)

கo௫௮. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

(இ - ள்.) இரப்பார் - (வறுமையுற்று) இரப்பார், இல் ஆயின் - இல்லை யாயின், ஈர் கண் மா ஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய பெரியஞாலத் துள்ளார், (செலவுவரவுகள்), மரம் பாவை - (உயிரில்லாத) மரப்பாவை, சென்று வந்து அற்று-(இயந்திரக்கயிற்றால்)சென்று வந்தாற்போலும்;(எ-று.)

ஐகாரம் - அசைநிலை. ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவ மையோ டொத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது- அவரை யொழிந்தாரை: அவர்க்கு ஈதலைச்செய்து புகழும்புண்ணியமும் எய் தாமையின், உயிருடைய ரல்ல ரென்பதாம். "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரேவன்கணவர்" என்றார் பிறரும். இத்தொடையின்பம் நோக்காது 'இரப்பவரில்லாயின்' என்று பாட மோதுவாருமுளர்.

(கு - ரை.) இயந்திரக்கயிறு - மரப்பாவையை யாட்டுவிக்குஞ் சூத்திரக் கயிறு. 'இரப்பாரை'என்ற இடத்திலுள்ள ஐகாரம் அசைநிலையாகும். ஞாலம்- ஞாலத்திலுள்ளார்க்கு இடவாகுபெயர். ஞாலத்துக்கு உவமை, மரப்பாவை. மரப்பாவையாகிய உவமையில் 'சென்றுவந்தற்று' என்று செலவு வரவுகள் கூறப்பட்டிருத்தலால், உபமேயமாகிய ஞாலம் என்பதற்கும் - ஞாலத்தி லுள்ளாரது செலவுவரவுகள் என உரைக்கப்பட்ட தென்க. அவரை யொழிந் தாரை - இரப்பவரையொழிந்தவரை: இரப்பாரைத் தனியே கூறிவிட்டத னால், அவரையொழிந்தாரைக்கொள்வதே ஏற்புடையதாகுமென்க. மானிட ராக உயிர்படைத்ததற்குப்பயன் புகழும்புண்ணியமுமே யாதலாலும், இரப்பா ரில்லாவிடின் கொடுத்தலா லடைய லாகும் புகழும் புண்ணியமும் அடைய முடியா வாதலாலும், மானிடப்பிறவியின்பயனேயற்றதாகுதலால், இரப்பா ரைப்பெறாத அப்போது செல்வர்களியக்கம் உயிரற்ற மரப்பாவையியக்கம் போலு மென்றார். "ஈவாரும்" என்றுதொடங்கும் மேற்கோள் உள்ள இடம் விளங்கவில்லை: இதன்பொருள்:—ஈவாரும் - கொடுப்பவரும், கொள்வாரும் - பெற்றுக்கொள்பவரும், (என்னும் இருவரையும்), இல்லாத - பெற்றிராத, வானத்து - சுவர்க்கலோகத்து, வாழ்வாரே - வாழ்பவரே, வன்கணவர் - கொடுமையையுடையோர் என்பது. "புத்தேளுலகத்து" (உகஙூ) என்னுங் குறளி னுரையில்,"ஈவாரும் ஏற்பாருமின்றியே எல்லாரும் ஒருதன்மையராத லின்"என்று பரிமேலழகரே உரைத்திருப்பது இங்குக் கருதத்தக்கது. 'இரப் பாரை...மரப்பாவை' என்ற பாடத்தைவிட்டு 'இரப்பவர்...மரப்பாவை' என்றுபாடங்கொள்ளின், எதுகைத்தொடையின்பம் கெடுதல் காண்க. (அ)

கoடுகூ. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா நிலாவக் கடை.

(இ - ள்.) இரந்துகோள் - (அவர்பாற்சென்று ஒன்றனை) இரந்துகோடலை, மேவார் - விரும்புவார், இலாவக்கடை - இல்லாவழி, ஈவார்கண்-கொடுப்பார்மாட்டு, என் - என்ன, தோற்றம் - புகழ், உண்டாம்—? [யாதுமில்லை].

தோற்றம் - ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல்வண்மை வெளிப்படாமையின் அதனைப் புகழெய்தா ரென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், உலகிற்கு இரப்பார்வேண்டு மென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அவர்பால் - ஈவாரிடத்து. தோற்றம் - விளங்கிக்காணப்படுதல்: அங்ஙன் விளங்கிக் காணப்படுதலையுடைய புகழுக்கு, ஆகுபெயர். செய்யுளில் மேவார் என்றது - மேவுவாரென்பதன் விகாரமான சொல். கொடுத்தல்வண்மை-கொடுக்கின்ற உறுதி: கொடுத்தல்வண்மை என்றபாடமுமுண்டு. அதனால் - கொடுத்தலினால். (கூ)

கoகூo. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

(இ - ள்.) (ஈவானுக்குப் பொருளுதவாவழி 'இவன் எனக்கு ஈகின்றிலன்' என்று அவனை), இரப்பான்—, வெகுளாமை - வெகுளாதொழிதல், வேண்டும்—; (அது வேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டா): நிரப்பு இடும்பை - நிரப்பாகிய தன்னிடும்பை, தானே உம்—, கரி - சான்றுதல், சாலும் - அமையும்; (எ - று.)

யாவர்க்கும் *தேடவேண்டுதலும் நிலையின்மை முதலிய பிறசான்று முண்டு என்பதுபட நின்றமையின், உம்மை - எச்சவும்மை. தனக்கேயன்றி, மற்றை யிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள்கடைக்கூட்டற்கு அவனுறுந் துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானுறுந் துன்பம் தானறிந்து வெகுளாதற்க வென்பதாம்.

இதனால், அவற்கு இன்றியமையாததோரியல்பு கூறப்பட்டது.

(கு - ரை.) ஈவானுக்கு - கொடுப்பவனுக்கு. பொருள் உதவாவழி-பணம் (கையிற்கிடைக்காமையால்) உதவாதிருக்கும்போது, அவனை - பொருள் (உதவாமையால் கொடுக்கமாட்டாத) ஈவானை. அது - பொருள். சான்று - சரட்சி. அமையும் - பொருந்தும். யாவர்க்கும் - எத்துணைச்செல்வர்க்கும். தேடவேண்டுதலும்-பொருள் சிலகாலத்தில் கையிற்கிடையாமையால் தேடவேண்டியிருத்தலும். நிலையின்மை - பொருளின்தன்மை நிலைத்திராதாதல். தானேயும் என்ற இடத்து உம்மை யாவரிடத்தும் தேடவேண்டுதலும் நிலையின்மை முதலிய பிறசான்றுமுண்டாயினும் என்பதுபட நின்றமையால், எச்சவும்மையாம்: இறந்ததுதழுவிய [எச்சமென்னலாம்; எதிரதுதழுவியது என்பாருமுளர். கடைக்கூட்டல் - முயன்றுசேர்த்தல். அவனுறுந்துன்பம் -

* பி - ம்: வேண்டுதலும் நிலையின்மையும்

ஈவான் அடையும் முயற்சிவருத்தம். தனக்கேயாகவைத்து - தனக்கேவந்தாகவைத்து: தன்பொருட்டேபடுவதாகவைத்து என்பாருமுளர். அவற்கு - யாசகனுக்கு. இயல்பு - தன்மை. ''புள்ளும்பொழுதும் பழித்தலல்லதை, யுள்ளிச்சென்றோர்ப்பழியலர்'' என்ற புறநானூறும், ''பிச்சைபுக்குண்பான்பிளிறுமைமுன்னினிதே''என்ற இனியவைநாற்பதும் ஈண்டுஅறியத்தக்கன.(கo)

கoஎ - ஆம் அதிகாரம்.—இரவச்சம்.

அஃதாவது - மானந் தீர வரும் இரவினை யஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) மானந்தீர - மானம் விட்டுநீங்க. இரவினை - பிச்சையெடுத்தல்தொழிலுக்கு.

கoஊக. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(இ - ள்.) கரவாது - (தமக்குள்ளது) கரவாது, உவந்து - (இவர் வரப்பெற்றே மென்று) உண்மகிழ்ந்து, ஈயும் - கொடுக்கும், கண் அன்னார் கண் உம் - கண்போலச் சிறந்தார்மாட்டும், இரவாமை - இரவாதே (ஒருவன்) வறுமைகூர்தல், கோடி உறும் - (இரந்துசெல்வமெய்தலிற்) கோடிமடங்கு நன்று; (எ - று.)

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகா தென்பதுபட நின்றமையின், உம்மை - உயர்வுசிறப்பின்கண்வந்தது. அவ்விரவான் மானந்தீரா தென்னுந் துணையல்லது அதற்குமிகுதி கூடாமையின், வல்லதோர்முயற்சியான் உயிரோம்பலே நல்லதென்பது கருத்து.

(கு - ரை.) இவர்-இவ்விரப்பவர். உண்மகிழ்ந்து-மனமகிழ்ந்து. செல்வமெய்தலின் - பணம் அடைவதைக்காட்டிலும். நல்குரவு - [தன்] வறுமையை. நட்டார் - நினைகிதர். ஆகாது என்பதற்கு 'இரவு' என்னும் எழுவாய் வருவிக்க. ''ஏற்பதிகழ்ச்சி'' என்றதும் இங்குநோக்குக. 'கண்ணன்னர்கண்ணும்' என்ற இடத்து உம்மை, உயர்வுசிறப்பில்வந்தது. மானம்தீராதென்னுந்துணையல்லது-மானம்போகாதென்ற அவ்வளவுமாத்திரமன்றி. அதற்குமிகுதி-அதனினும்மிக்கது. வல்லது - (தான்) செய்யத்தக்கது. (க)

கoஊஉ. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(இ - ள்.) உலகு இயற்றியான் - இவ்வுலகத்தைப் படைத்தவன், (இதன்கண்வாழ்வார்க்கு முயன்று உயிர்வாழ்தலேயன்றி), இரந்தும்—, உயிர் வாழ்தல்-உயிர்வாழ்தலே, வேண்டின்-வேண்டிவிதித்தானாயின், (அக்கொடியோன் தானும்), பரந்து-(அவரைப்போன்று)எங்கும் அலமந்து; கெடுக-கெடுவானாக.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்குவேண்டுவதாய உண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினைவயத்தாற் கருவொடு கலந்தன்றே அவன் கற்பிக்கு மன்றே? அவற்றுட் சிலவுயிர்க்கு இரத்தலேயும் ஒரு

செய்தொழிலாகக் கற்பித்தா னுயின், அத்தீவினையால் தானும் அத்துன்ப முறல் வேண்டுமென்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், அவ்விரவின்கொடுமை கூறப்பட்டது.

(சு - ரை.) இதன்கண் - இவ்வுலகில். விதித்தான் - எற்படுத்தினான். 'அக்கொடியோன்தானும்' என்று பிரமனைக் கூறியது - இரந்தேவாழவேணு மென்று விதித்தானென்று அவன்மீதுகொண்ட சினம்பற்றி. அவரை - அவ் விரப்போரை. அலமந்து - சுழன்று: திரிந்து என்றபடி. கெடுக - வியங் கோள்: சபித்தற்பொருளது. அதற்கு - வாழ்தாளுக்கு. உண்டி - உணவு. அதற்கு - உணவிற்கு. கருவொடு கலந்த அன்றே - கருப்பத்திற்சேர்ந்த அன் றைக்கே. அவன் - உலகியற்றியான்: பிரமன். கற்பிக்கும் - உண்டாக்கிவைப் பான். அத்தீவினையால் - (இலர்க்கு இரத்தலேயும் உண்டிக்கு ஏதுவான செய் தொழிலாகச்செய்த) அத்தத்தீவினையின்பயனால். தானும் - பிரமனும். (உ)

கoசுரு. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ - ள்.) இன்மை - வறுமையான் வரும், இடும்பை - துன்பத்தை, (முயன்று நீக்கக்கடவேமென்றுகருதாது): 'இரந்து—, தீர்வாம் - நீக்கக்கட வேம்', என்னும் - என்றுகருதும், வன்மையின் - வன்மைபோல, வன்பாட் டது - வலிமைப்பாடுடையது, இல் - பிறிதில்லை; (எ - று.)

நெறியாய முயற்சி நிற்க, நெறியல்லாத இரவால் தீர்க்கக்கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு - முருட்டுத்தன்மை; அஃதாவது - ஓராது செய்துநிற்றல்.

இதனுன், வறுமைதீர்தற்குநெறி இரவன் றென்பது கூறப்பட்டது.

(சு - ரை.) இரந்து - யாசித்தல்தொழிலேமேற்கொண்டு. வன்மை - கொடுமை. நெறியாய முயற்சி நிற்க - நேர்வழியான முயற்சியிருக்க. இர வால்-யாசகத்தால். ஓராது-ஆராய்ச்சியில்லாமலே: பிடிவாதமாகவன்றபடி.

கoசுச. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

(இ - ள்.) இடம் இல்லாக்கால்உம் - நுகரவேண்டுவனவின்றி நல்கூர்ந்த வழியும், இரவு-(பிறர்பாற்சென்று) இரத்தலே, ஒல்லா-உடம்படாத, சால்பு - அமைதி,—இடம்எல்லாம்-எல்லாவுலகும், கொள்ளா-(ஒருங்குஇயைந்தாலும்) கொள்ளாத, தகைத்து எ - பெருமையுடைத்து; (எ - று.)

அவ்விரத்தலேச் சால்பு விலக்கு மாகலின், இரவொல்லாமை அதன்மே லேற்றப்பட்டது.

இதனுன், அந்நெறியல்லதனைச் சால்புடையார்செய்யாரென்பதுகருத்து.

(சு - ரை.) நுகரவேண்டுவன - அனுபவிக்க உரியன. நல்கூர்ந்தவழி யும் - தரித்திரப்பட்டபோதும். பிறர்பால் - அயலாரிடத்து. சால்பு - அடங் கியதன்மை. இரத்தலேச் சால்பு விலக்கு மாதலால், இரவொல்லாமையையும் சால்பையும் அபேதப்படுத்தி 'இரவொல்லாச்சால்பு' என்று கூறினார்: காரி

யத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கின் பாற்படும். அக்நெறியல்ல தனை - பிழைப்புக்கு நேர்வழியாகாத அந்த இரத்தல்தொழிலை. (ச)

கoசூடு. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

(இ - ள்.) தாள் - (நெறியாய) முயற்சி, தந்தது - (கொடுவந்து) தந்தது, தெள் நீர் - தெளிந்தநீர்போலும், அடு புற்கை ஆயின்உம்-அடு புற்கையே யாயினும், உண்ணலின் - (அதனை) உண்டற்கு, ஊங்கு - மேல், இனியது இல்- இனியதில்லை; (எ - று.)

தாள்தந்தகூழ் செறிவின்றித் தெண்ணீர்போன்றதாயினும், இனிவாய இரவான் வந்த தன்றித் தம்மூடைமை யாகலின், அமிழ்தத்தோடொக்கு மென்பதாம்.

இதனுன், நெறியினு னுயது சிறிதேனும், அதுசெய்யுமின்பம் பெரிதென் பது கூறப்பட்டது.

(கு - ரை.) அடுபுற்கை - சமைத்தகூழ். தாள்தந்த கூழ் - முயற்சியினுற் கிடைத்த கூழ். செறிவின்றி - கெட்டியாக இல்லாமல். தம்மூடைமை - தம் முயற்சியாற்பெற்ற பொருள். சிறிதேனும் - அற்பமானபொருளேயாயினும். அது - அச்சிறுபொருள். (கு)

கoசுசு. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னினிவந்த தில்.

(இ - ள்.) ஆவிற்கு - (தண்ணீர்பெறுது இறக்குநிலைமைத்தாயதோர்) ஆவினை(க் கண்டு), நீர்என்று-(அதனைக்கி இதற்குத்) தண்ணீர் (தரல்வேண் டும்) என்று, இரப்பின்உம் - இரந்துசொல்லுங்காலும், இரவின் - அவ்விரவு போல, நாவிற்கு - (ஒருவன்) நாவிற்கு, இளிவந்தது—,இல் - பிறிதில்லை.

ஆ காத்தோம்பல் பேரற மாகலின் 'ஆவிற்கு' என்றும், பொருள் கொடு த்துக்கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் 'நீர்'என்றும், இரக்கின்றனுக்கு இளிவு அச்சொல்லளவே யாகலின் 'நாவிற்கு' என்றும், அதுதான் எல்லா இளிவினும் மேற்படுதலின் 'இளி வந்தில்' என்றுங் கூறினர்.

இதனுன், அறனும் முயன்றுசெய்வதல்லது இரந்துசெய்யற்க வென் பது கூறப்பட்டது.

(கு - ரை.) இறக்குநிலைமைத்து - சாகின்ற நிலைமையையடைந்தது. அறனெக்கி - (இந்த ஆவிற்கு நீர்வார்க்குமாறுசெய்தால் பசுவின் உயிரைக் காத்த) அறப்பயனுண்டாமென்று நினைத்து. ஆவையெடுத்தது, அதனைக் காத்தல் பேரறமாதலால். பொருள்கொடுத்துக் கொள்ளவேண்டாத - பணங் கொடுத்து வாங்கவேண்டியதாகாத. எண்மைத்து - சுலபமாகக் கிடைக்கக் கூடியது. இரக்கின்றனுக்கு இளிவு அச்சொல்லளவே யாகலின் - ஆவிற்கு நீரிரப்பவன் இளிவுபடச் சொல்லவேண்டுவது 'ஆவிற்குநீர்கொடு' என்ற அளவேயாதலால்: வேறு இல்லையென்க. அதுதான்-அச்சொல்லே. முயன்று-முயற்சியினுற் பொருளீத்தேடி. "தளர்வொடு மெலிந்தும் வையந் தனிக்

குடை நிழற்றும் பைம்பொற், கிளரொளிப் பூணன் வீமன்பாவையைக் கேட்டல்செய்யா, னளியென வுயிரை யுண்மை யறத்தினே யற விட்டாலு, மிளிவென வெண்ணி மானம் பூண்டவ ரிரப்பர் கொல்லோ" என்ற நைடத மும் ஈண்டுக் காண்க. (சு)

கoசுஎ. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(இ - ள்.) இரப்பாரை எல்லாம்—, இரப்பன்-(யான்) இரவாதின்றேன்: (யாதுகொல்லியெனின்), 'இரப்பின் -(நுமக்கு) இரக்கவேண்டுமாயின், கரப் பார் - (தமக்குள்ளது) கரப்பாரை, இரவன்மின்-இரவாதொழிமின்,' என்று என்றுசொல்லி; (எ - று.)

இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட் டியவழியும் உடம்பு நில்லா தாகலின், இது வேண்டாவென்பது தோன்ற 'இரப்பன்' என்றார்.

இதனுன், மானக்கீர வரு மிரவு விலக்கப்பட்டது.

(கு - ரை.) இரண்டாவது தொக்கது - 'கரப்பார்' என்றதன்பின்னுகும். இவ்விளிவந்தசெயலான் - இழிவுபொருந்திய இந்தயாசகத்தொழிலால். ஊட் டியவழியும் - இவ்வுடலுக்கு உணவைத்தேடிக்கொடுத்தாலும். இது - இரவு. "மானவருங்கலநீக்கியிரவென்னு, மீனவிளிவினுல்வாழ்வேன்மன்-ஈனத்தா, லூட்டியக்கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு, கீட்டித்துநிற்குமெனின்" என்ற நாலடி இங்குக் காணத்தக்கது. (எ)

கoசுஉ. இரவென்னு மேமாப்பி றேணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

(இ-ள்.) (இவ்வறுமையென்னுங்கடலை இதனைக் கடத்துமென்று கருதி ஒருவனேறிய), இரவுஎன்னும்—, ஏமாப்பு இல் - சேமமற்ற, தோணி—,— (அதன்கணேறுங்கால்), கரவுஎன்னும் - கரத்தலென்னும், பார் தாக்க-வன்னி லத்தைத் தாக்குமாயின், பக்குவிடும் - பிளந்துபோம்; (எ - று.)

முயற்சியாற் கடப்பதனை இரவாற் கடக்கலுற்றுன் அதன்கரைகாணுமை யின் 'ஏமாப்பிறேணி' என்றார். ஏமாப்பின்மை, தோணிமேலேற்றப்பட் டது. அது கடத்தற்கேற்றது அன்மையானும், நிலமறியாதுசெலுத்தியவழி யுடைதலானும் அதன்கணேறற்கவென்பதாம். இஃது - அவயவவுருவகம்.

(கு - ரை.) இதனுல் - இரவினுல். இரவைத்தோணியென்றதற்கு ஏற்ப, இரவாளனை அத்தோணியின்மீது ஏறியவனுகக் கொண்டார். அதன்கண் - வறுமையென்னுங்கடலில். வன்னிலம் - பாறையான இடம். முயற்சியாற் கடப்பதனை - முயற்சியினுற் கடந்திடவேண்டிய வறுமையென்னுஞ் சமுத்தி ரத்தை. அதன் - அந்தவறுமைக்கடலின். இரவினுல் வறுமைக்கடலைக் கடக்க முடியாதென்றகாரணத்தினுல்; இரவென்னும் ஏமாப்பில்தோணி என்றார். ஏமாப்பின்மை இரவுக்கு அடையாகவேண்டியிருக்க, 'ஏமாப்பிறேணி' என்று

தோணிக்கு அடைமொழியாகக்கூறியதனால், ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டதென்றார். அது கடத்தற்கு ஏற்றது அன்மையானும் - அந்த இரவு வறுமையைக் கடத்தற்கு உரியதல்லாமையாலும். நிலம் - செல்லும் இடம். கரத்தலையுடையாரிடத்து இரத்தல் வறுமையைப்போக்க உதவாமையால் 'நிலமறியாதுசெலுத்தியவழி உடைதலான்' என்றது. அதன்கணேறற்க-வறுமையை இரத்தலாற்கடந்துவிடலாமென்று அத்தொழிலைக் கொள்ளற்க என்றபடி. அவயவவுருவகமாவது - அவயவியை உருவகப்படுத்தாது அவயவத்தை மாத்திரம் உருவகஞ் செய்வது. முக்கியமான வறுமையைக் கடலென்று உருவகஞ்செய்யாது, இரவு கரவுகளை தோணி பார்என்று உருவகஞ் செய்தமையால், இது - அவயவவுருவகம். பார் - வன்னிலம். (அ)

௧௦௬௯. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(இ - ள்.) (உடையார்முன் இல்லார் சென்று), இரவு - இரந்துநிற்றலின்கொடுமையை, உள்ள - நினைந்தால், உள்ளம் - எம்முள்ளம், உருகும் - கரைந்துருகாநிற்கும்; (இனி அந்நிலையைக் கண்டுவைத்தவர்), கரவு - இல்லையென்றலின் கொடுமையை, உள்ள - நினைந்தால், உள்ளதுஉம் - அவ்வுருகு மளவு தானும், இன்றி—, கெடும் - பொன்றிவிடும்; (எ - று.)

"இரவினை, யுள்ளுங்காலுள்ளமுருகுமாலென்கொலோ, கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு" என்றார், பிறரும். இரவினுங் கரவு கொடிதென்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ளம் உருகு மென்று உரைத்தார்.

(கு - ரை.) உடையார் - பொருளுள்ளவர். இல்லார் - வறியவர். "உடையார்முனில்லார்போலேக்கற்றும்" என்பது, திருக்குறள், கல்வி, ௫. அந்நிலையை - இரப்பவரிருக்கின்றநிலைமையை. கண்டுவைத்தவர்-செல்வர். அச்செல்வர் இல்லையென்று சொல்லுங் கொடுமையை நினைந்தால் எம்மனம் அழிந்தேவிடும் என்றபடி. பொன்றுதல் - அழிதல். "இரவினை" என்று தொடங்கும் மேற்கோள், நாலடி, இரவச்சம், ௫ - இல் உள்ளது: இதன்பொருள்:—இரவினை - யாசித்தல்தொழிலை, உள்ளுங்கால் - நினைக்குமிடத்து, உள்ளம் - மனம், உருகும்—: கொள்ளுங்கால்-(பிறரிடத்து ஒன்றனைப்) பெறும்போது, கொள்வார் குறிப்பு-பெற்றுக்கொள்ளும்யாசகரின் எண்ணம், என் கொலோ - எவ்வாறு இருக்குமோ? இரத்தலைநினைக்கும்போதே நமது உள்ளம் உருகுகின்றதே! இரந்துபெறும் யாசகர்மனம் எவ்வாறு இருக்குமோ என்றபடி: இனி, என்கொலோ கொள்ளுங்கால் கொள்வார்குறிப்பு என்பதற்கு - பிறர்வருந்திச் சம்பாதித்த பொருளைத் தாம் ஒருமுயற்சியுமின்றி யாசகத்தாற் பெறுபவரது எண்ணம் என்னவோ? அந்த எண்ணம் இகழத்தக்கதேயென்றுமாம். இதற்கு - இரவுள்ள உள்ளமுருகும் என்பதற்கு. இரக்கின்றவருள்ளமுருகும்என்று பிறரெல்லாங்கூறியது சிறக்குமாறில்லையென்க.

௧௦௭௦. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

(இ - ள்.) (கரப்பார்), சொல்ஆட-(இல்லையென்று) சொல்லாடியதுணையானே, இரப்பவர் - இரப்பார்க்கு, உயிர் போம்-உயிர்போகாகின்றது: கரப்பவர்க்கு-(இனிச்)சொல்லாடுகின்றஅவர்தமக்கு, (உயிர்பின்னும்நிற்றலால்அப்பொழுது), யாங்கு-எப்புரையுள், ஒளிக்கும் கொல்லோ - புக்கொளித்துநிற்கும்?

உயிர்போகலாவது-இனி யாம் என்செய்தும் என்று எங்ஙிச் செயலற்றுநிற்றல்: "அந்நிலையே - மாயாஜைமாற்றிவிடின்" என்றார், பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொல்,சொல்வாரைக்கோறல் சொல்லவேண்டாவாயினும், அது காண்கின்றிலம்: இஃது என்னே! என்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர் போம்; ஆனபின், மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாது எங்கே யொளித்துநிற்கும்? இரண்டானும் போமேயன்றே! என இரவஞ்சினை னெருவன் கூற்றாக்கி யுரைப்பாரு முளர்.

இவைமூன்றுபாட்டானும், அவ்விரவின்குற்றமும் கரவின்குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

(கு - சை.) சொல்லாடிய துணையானே - பேசியமாத்திரத்தாலே. அப்பொழுது - கரப்பார் தம்மிடத்து இல்லையென்றுபேசும்போது. எப்புரையுள் - எந்த (உள்ளிருக்குந்)தொழையில். உயிர்போகலாவது என்பதற்குமூன் 'இரப்பார்க்கு' என்று வருவிக்க. பிறரிடத்துயாசிக்குமிடத்து இரப்போர்க்கு மரணவேதனைபோன்ற வேதனையுண்டாகுமென்றவாறு. என்செய்தும்-(பிழைக்க) என்ன உபாயஞ்செய்வோம்? "அந்நிலையே" என்ற மேற்கோள், காலடி, இரவச்சம், அ-ஆம் பாட்டி லுள்ளது: இதன்பொருள்:—மாற்றிவிடின் - (இரப்பவன் 'எனக்கு ஈவாய்' என்றுகேட்கும்போது செல்வமுடையான் தன்னிடமுள்ளதைக் கரத்து இல்லையென்று) மறுத்துவிட்டானுயின், அந்நிலையே-அப்போதே, (இரப்பாளன்), மாயாஜை - மரணவேதனையடையானே? மரணவேதனையடைவானே! என்று இரங்கியவாறு. கேட்டாரை - இல்லையென்ற சொல்லைக்கேட்ட இரப்பாளரை. கொல்லவற்றாய - கொல்லும் வல்லமையுள்ளதாகிய. கோறல் - கொல்வது. அது - சொல்வாரைக்கொல்வதை. இஃது என்னே - இது என்னவியப்போ! வறுமையுற்றுழி - தரித்திரப்பட்டபோது. இந்தமுதலுரையை, யாசகனெருவனது பரிதாபநிலையைக்கண்டவன் கூற்றாகக் கொள்க: இனி, இரவஞ்சினைன் கூற்றாக [சொல்லாக] வேறோருரை வருமாறு:—(யாசித்தற்குரிய சுற்றத்தார்க்கும்), இரப்பவர் - யாசகர், சொல்லாட - (தம் வறுமையையறையாமல்) சொல்ல, உயிர்போம்—: (அப்படியிருக்க), கரப்பவர்க்கு-(வறுமையைச் சொல்லாமல்) மறைத்தற்குரியவராகிய பிறரிடத்தில், சொல்லாட - (தமது வறுமையைச்) சொல்லுமாறுசேர்ந்தால், உயிர்-(அங்ஙனம் தம்வறுமையைச்சொல்லுகின்ற இரப்பவரின்) உயிர், யாங்கு ஒளிக்கும் கொல் - (சொல்லாடியக்காற் போகாது) எங்கேயொளிக்குமோ? [சுற்றத்தார் மற்றையார் என்ற இருவரிடத்தும் சொல்லாட உயிர்போயே தீரும்] என்பது.

(கo)

க0அ - ஆம் அதிகாரம்.—கயமை

அஃதாவது - மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கும் எய்த வைத்தமையின் ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும், ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக்கூறியனவுமாய குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை. அதனால், இஃது எல்லாவற்றிற்கும்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) ஏற்புடையன - தக்கவை. குறிப்பினால் யாவர்க்கும் எய்த வைத்தமையின் - எல்லார்க்கும் வேண்டியனவென்று குறிப்பாக அறியும்படி கூறியிருத்தலால். ஈண்டு ஒழிபியலுள் - இந்நூலில் ஒழிபியலில். ஒழிபியலுள் கூறியவை - குடிமை முதல் கயமையீறானவை: இவற்றுள் கொள்ள வேண்டுவன தள்ளவேண்டியன என்ற இரண்டும் உள்ளன: உதாரணமாக, குடிமை கொள்ள வேண்டியது, நல்குரவு தள்ளவேண்டியது எனக் காண்க. கயமை - இருக்கவேண்டிய நற்குணமொன்றும் இல்லாமையாற் கீழ்மைப் பட்டோரின் தன்மை. எல்லாவற்றிற்கும் - ஒழிபியலிலுள்ள அதிகாரங்கள் யாவற்றிற்கும்.

க0எக. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(இ - ள்.) மக்கள்ஏ போல்வர் - (வடிவான்முழுதும்)மக்களையொப்பர், கயவர்—:அவர் அன்ன ஒப்பாரி - அவர்மக்களையொத்தாற்போன்ற ஒப்பு, (வேறிரண்டுசாதிக்கண்), யாம்—, கண்டது இல் - கண்டதில்லை; (எ - று.)

முழுதுமொத்தல், தேற்றேகாரத்தாற் பெற்றாம். அவரென்றது - அவர் மாட்டுளதாயவொப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒத்தலின், குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமை யறியப்படாதென்பதாம்.

இதனான், கயவரதுகுற்றமிகுதி கூறப்பட்டது.

(கு - ரை.) கயவர் - கீழோர். மக்கட்சாதி கயச்சாதி என்ற இரண்டு சாதிக்கணுள்ள ஒற்றுமைபோல, வேறுஎந்தஇரண்டுசாதிக்கண்ணும் ஒப்புமை கண்டோமில்லை யென்க. மக்களேபோல்வர் என்ற இடத்திலுள்ளது, தேற்றேகாரம். தேற்றேகாரம்-துணிவுப்பொருளுள்ள 'ஏ' என்னும் இடைச்சொல். அவர் என்றது - அவரிடத்திலுள்ள ஒப்புமை என்ற பொருளில் வந்ததென்க: அங்ஙனங் கொள்ளாவிடின், ஒப்பாரி என்பதனோடு இயையாது. ஒப்பாரி - ஒப்பு. அவரென்றது கயவரை. முழுதும் - சிறிதிடமும் மிச்சமில்லாமல் என்றபடி. வடிவால் மக்களும் கயவரும் ஒப்பரென்றதனால், அவர்கள் குணங்களால் தம்முள் ஒவ்வாரென்பது பெறப்படுமாறு அறிக. (க)

க0எஉ. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(இ - ள்.) நன்று - (தமக்கு) உறுதியாவன, அறிவாரின்—, கயவர் - (அவை யறியாத) கீழ்மக்கள், திரு உடையர் - நன்மை யுடையர்: (அவர்

போல அவைகாரணமாக), நெஞ்சத்து - (தம்)நெஞ்சத்தின்கண், அவலம் இலர் - கவலையிலர்: (ஆகலான்); (எ - று.)

நன்றென்பது - சாதியொருமை. உறுதிகளாவன - இம்மைமறுமைவீடு கட்குரியவாய புகழ் அறஞானங்கள். இவற்றை யறிவார், இவைசெய்யா கின்றே மிகச்செயப்பெறுகின்றிலே மென்றும், செய்கின்ற இவைதமக்கு இடையூறுவருங்கொ லென்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவமறியாமை யென்பனவற்றுள் யாதுவினையுமோ வென்றும், இவ்வாற்றுற் கவலை யெய்து வர்: கயவர், அப்புகழ்முதலியவொழித்துப் பழிமுதலியசெய்யாகின்றும் யாதுங் கவலையுடையரல்ல ராகலான், 'திருவுடையர்' எனக் குறிப்பா லிகழ்ந்த வாறு.

இதனுன், பழிமுதலியவற்றை யஞ்சா ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அவர் - நன்றறிவார். அவை - தமக்குஉறுதியாவன. நன்று என்றது - உறுதியான புகழறஞானங்கள் என்ற பன்மைப்பொருளைத் தந்த தனுல், சாதியொருமை யாயிற்று. இம்மைக்கு உரியது புகழென்றும், மறுமைக்கு உரியது அறமென்றும், வீட்டிற்கு [மோட்சலோகத்திற்கு] உரி யது ஞான மென்றும் அறிக. "ஞானஞ் மோட்சஃ" என்றது இங்குக் காணத்தக்கது. இவற்றை - புகழற ஞானங்களை. இவை செய்யாகின்றே - புகழறஞானங்களைப் பெற முயற்சிசெய்துகொண்டிருந்தே. புகழுக்கு மறு தலை, பழி; அறத்துக்கு மறுதலை, பாவம்: ஞானத்துக்கு மறுதலை, அறியாமை. இவ்வாற்றுல்-இவ்வாறு கருதுமவகையால். கயவரைத் திருவுடைய ரென்று புகழ்ந்தாற்போல, இகழ்ந்த இது - **வஞ்சப்புகழ்ச்சியணி** யெனப்படும். கயவர் திருவுடைய ரென்பதை, 'நெஞ்சத்தவலமிலர்' என்ற பின்வாக்கியம் சமர்த்தித்து நிற்பது - **தொடர்நிலைச்செய்யுட்குறியணி**. பாம். அஞ்சாரென்ப தற்கு, கயவரென்ற எழுவாய் வருவிக்க. (உ)

கoஎசூ. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(இ - ள்.) தேவர் அனையர் கயவர் - தேவரும் கயவரும் ஒருதன்மையர்: (அஃது யாதினு னெனின்), (தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றி), அவர்உம் - கயவரும், தாம்—, மேவன - விரும்புவனவற்றை, செய்து ஒழுக லான்—; (எ - று.)

உயர்ச்சியும் இழிவு மாகிய * தம்காரணவேறுபாடு குறிப்பாற்றோன்ற நின்றமையின், இது, புகழ்வார்போன்று பழித்தவாறுயிற்று.

இதனுல், விலக்கற்பாடின்றி வேண்டியசெய்வா ரென்பது கூறப் பட்டது.

(கு - ரை.) நியமிப்பார் - ஒருவரையறைக்கு உட்பட்டிருக்குமாறு கட் டளையிடுபவர். தேவர் உயர்ந்தோராதலால் அவரைக் கட்டளையிடுபவரில்லை: கயவரோ அடங்காப்பிடாரியாய் இழிந்தோராதலால் அவரையும் நியமிப்பா

* பி - மீ: அதன்காரணவேறுபாடு.

நில்லை: இங்ஙன் நியமிப்பாரில்லாமை இருவர்க்கும் ஒத்திருப்பினும், தேவர்க்கு நியமிப்பாரின்மை அவருடைய உயர்ச்சியாலும், கயவர்க்கு நியமிப்பாரின்மை அவருடைய இழிவினாலும் ஆகியன என்பது குறிப்பாகவிளங்குவது காண்க: இங்கு 'தேவரனையர் கயவர்' என்று புகழ்வார் போன்று குறிப்பாற்பழித்தவாறு காண்க: இதுவும்-வஞ்சப்புகழ்ச்சியணியே. விலக்கற்பாடு-தவிர்க்கப்படுதல். மேவன=மேவுவன: விரும்பியவை: பலவின்பால் வினையாலணையும் பெயர். (கூ)

கoஎச. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(இ - ள்.) கீழ் - கீழாயினுன், அகம் பட்டி ஆவாரை - (தன்னிற்) சுருங்கிய பட்டியா யொழுகுவாரை, காணின் - கண்டானுயின், (அவ்வொழுக்கத்தின்கண்), அவரின் மிகப்பட்டு - அவரின் (தான்) மேம்பட்டு, செம்மாக்கும்-(அதனுல் தன்மிகுதிகாட்டி) இறுமாக்கும்; (எ - று.)

அகப்பட்டி - அகமாகிய பட்டி. பட்டிபோன்று வேண்டியவாறே யொழுகலின், 'பட்டி'என்றார்; "நோதக்கசெய்யுஞ் சிறுபட்டி" என்றார், பிறரும்.

இதனுல், அவர்மேம்பாடு கூறப்பட்டது.

(கு - ரை.) அகம் பட்டி - (தனக்கு) உட்பட்டதாகிய, அதாவது தன்னினும் குறைந்த பட்டி: பட்டி-தன்விருப்பின்படியே அடக்கமின்றித் திரிவது, தான் வேண்டியவாறே திரியும் பிராணியைப் பட்டி யென்று வழங்குவதற்கு மேற்கோள் "நோதக்கசெய்யுஞ் சிறுபட்டி" என்பது: இம்மேற்கோள், கலித்தொகையில் குறிஞ்சிக்கலி கடு - இல் உள்ளது: இதன்பொருள்:—சிறுபட்டி-சிறுமையையுடைய காவலில்லாதான், நோதக்கசெய்யும்-நோவத்தக்க தொழில்களைச் செய்வான் என்பது. அவர் - கயவர். கயவர் மேம்படுவது, அயோக்கியத்தனத்திலேயே யென்க. (கூ)

கoஎடு. அச்சமே கீழ்களது ஆசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(இ - ள்.) கீழ்களது - கயவரதாய, ஆசாரம்—, (கண்டதுஉண்டாயின்), (அதற்குக்காரணம்), அச்சம் எ - (அரசனுன் ஏதம்வருமென்றுஅஞ்சும்) அச்சமே: எச்சம் - (அஃது) ஒழிந்தால், அவா-(தம்மால்) அவாவப்படும் பொருள், உண்டெல் - (அதனுல்) உண்டாமாயின், சிறிது உண்டுஆம் - சிறிதுண்டாம்.

ஆசாரத்தின்காரணத்தை 'ஆசாரம்' என்றும், அவாவப்படுவதனை 'அவா' என்றுங் கூறினுர். எச்சத்தின்கணென்னு மேழாவது, இறுதிக்கட்டொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு: இவ்விரண்டானு மன்றி இயல்பாக உண்டாகாதென்பதாம்.

வேண்டியசெய்தலே இயல்பு, ஆசாரஞ்செய்தல் இயல்பன்றென்பது இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) ஆசாரம் - நல்லொழுக்கம். ஏதம் - துன்பம். கீழோர் அரசனிடத்து அச்சத்தினுலோ, தாம் விரும்பும் பொருளைப்பெறலாமென்ற எண்ணத்தினுலோ ஆசாரத்தை மேற்கொள்வ தன்றி, காரண

மின்றி இயல்பாக ஆசாரத்தை மேற்கொள்ளாரென்றவாறு. ஆசாரத்திற்குக் காரணம் அச்சமென்னாது ஆசாரத்தையே அச்சம் என்று ஒற்றுமைப்படுத்துக் கூறியது - காரணம் காரியமாகிய உபசாரவழக்கு. அவாவப்படு பொருளை அவா எனத் தொழிற்பெயராகக் கூறியது-தொழிலாகுபெயராம். எச்சம் என்பது - (அச்சம்)ஒழிந்த நிலையில் என்று பொருள்படுதலால், 'எச்சத்தின்கண்' என்றிருக்கவேண்டிய ஏழனுருபு தொக்கதென்றார். இயல்பாக உண்டாகாது என்றஇடத்து 'கயவர்க்கு ஆசாரம்' என்றுவருவித்து உரைக்க. வேண்டிய செய்தலே - (ஒருகட்டுக்கு அடங்காமல் தாம்) விரும்பியவற்றைச் செய்வதே.

௧௦௭௬. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(இ - ள்.) தாம் கேட்ட—, மறை-மறைகளை, உய்த்து - (இடந்தொறுந்) தாங்கிக்கொண்டுசென்று, பிறர்க்கு—, உரைக்கலான்-சொல்லுதலான்,—கயவர்—, அறை-அறையப்படும், பறை - பறையினை, அன்னர்-ஒப்பர்; (எ-று.)

மறை - வெளிப்படிற் குற்றம்விளையு மென்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர் - அம்மறைத்தற் குரியார். உய்த்தென்றார், அவர்க்கது பெரும்பாரமாத னோக்கி. பறை, ஒருவன் கையாற் றன்னை யறிவித்ததொன்றனை இடந்தொறுங் கொண்டுசென்று யாவரையும் அறிவிக்குமாகலின், இது, தொழிலுவமம்.

இதனால், அவரது செறிவின்மை கூறப்பட்டது.

(கு - ரை.) மறைகளை - இரகசியங்களை. பறை - கொட்டப்படுந் தோற்கருவி. உய்த்து என்பதற்குத் தாங்கிக்கொண்டு என்றுபொரு ளாதலால், அந்தமறை அக்கயவர்க்குப் பெரும்பாரமாதல் பெறப்படும். கையால் இடந்தொறும் கொண்டுசென்று என இயையும். பறையென்பது கையால் இடந்தோறும் சுமந்துகொண்டு சென்று ஒருவன்சொல்லிய விஷயத்தை யாவருக்கும் அறிவிப்பதுபோன்று, கீழ்மக்கள் தாம் கேட்ட இரகசியத்தை யுட்கொண்டுசென்று பிறருக்குச் சொல்லுவரென்றதனால், தொழிலுவமமாயிற்று. செறி வின்மை - அடக்கமின்மை. (௬)

௧௦௭௭. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

(இ - ள்.) கயவர்—, கொடிறு உடைக்கும் - (தம்)கதுப்பினை நெரிப்பதாக, கூன் கையர் அல்லாதவர்க்கு - வளைந்த கையினை யுடையவரல்லாதார்க்கு,—ஈர்ங் கை - (தாம்)உண்டு பூசிய கையை, விதிரார் - (தெறித்தல் வேண்டுமென்று இரந்தாலும்) தெறியார்: (எ - று.)

வளைந்த கை - முறுக்கிய கை. மெலிவார்க்கு யாதும் கொடார்: நலிவார்க்கு எல்லாங் கொடுப்ப ரென்பதாம்.

(கு - ரை.) கதுப்பினை - கன்னத்தை. 'ஈர்ங்கை' என்பதன் பதப்பொருள் - ஈரமுள்ள கை யென்பது: இங்கு, உண்ட உணவின் ஈரம் பூசப்பெற்றுள்ள கை யென்ற பொருளது என்பார், 'தாமுண்டு பூசிய கையை' என்று விவரித்தார்: 'எச்சிற் கையால் காக்கையையும் ஓட்டான்' என்று

உலோபியைப்பற்றிக் கூறுவதும், இங்கு அறியத்தக்கது. "தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா, வுளிரீரர் மாதோ கயவர் - அளிரீரார்க், கென்னனுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே, இன்னங்கு செய்வார்ப் பெறின்," "பெற்றூர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகி, லுற்றூருகந்தா ரென வேண்டார் - மற்றேர், இரணங்கொடுத்தா லிடுவ ரிடாரே, சரணங் கொடுத்தாலுந் தாம்", "பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையிலே, போடுவார்க்கீவர்பொருள்" என்பன, இங்குக் காணத்தக்கன. (எ)

கo௭அ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(இ - ள்.) சொல்ல - (மெலியார்சென்று தங்குறையைச்) சொல்லிய துணையானே, பயன் படுவர் - (இரங்கிப்)பயன்படுவர், சான்றோர் - மேலாயினர்; கீழ் - மற்றைக்கீழாயினர்,—கரும்பு போல் - கரும்புபோல, கொல்ல - (வலியார்) நைய நெருக்கியவழி. பயன் படும் - பயன்படுவர்: (எ - று.)

பயன்படுதல் - உள்ளதுகொடுத்தல். கீழாயினரது இழிவுதோன்ற, மேலாயினரையும் உடன்கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) நைய - நைந்து போகும்படி. வலியார் நெருக்கியவழி என இயையும். உள்ளது கொடுத்தல் - தம்மிடத்துள்ளபொருளைக் கொடுத்தல். இது, கயமையென்னும் அதிகார மாதலால், அதிகாரத்திற்கு ஏற்பக் கயவர் குணமே இதிற் கூறத்தகுவ தன்றி, ஏனைமேலாயினர் குணம் கூறத்தகுவ தொன்று அன்றே என்று எழும் வினாவை யுட்கொண்டு, கீழாயினரது இழிவுதோன்ற, மேலாயினரையும் உடன்கூறினு ரென்றார்: மேலாயினருடைய தன்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கீழாயினரின் இழிதன்மை நன்குபுலனுதல் காண்க. அவர் - கீழாயினர். "துச்சனைப் பொன்னேத் துடியைத் தரகத்தை, யச்சமற மூன்கிற்கு மாயிழையை-நச்சரவைக், கண்டித்த எள்ளைக் கரும்பை இளநீரைத், தண்டித்தார்க்கல்லோசயம்" என்ற பாடல் இங்குக் காணத்தக்கது. (அ)

கo௭க. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றூங் கீழ்.

(இ - ள்.) உடுப்பதூஉம் - (பிறர் செல்வத்தால் பட்டும் துகிலும்) உடுத்தலையும், உண்பதூஉம்-(பாலொடு அடிசில்) உண்டலையும், கீழ் - கீழாயினன், காணின் - காணுமாயின், (அவற்றைப்பொறாது), பிறர்மேல் - அவர்மாட்டு, வடு காண - வடு (இல்லையாகவும்) உண்டாக்க, வற்று ஆகும் - வல்லனும்.

உடுப்பதுஉண்பதுஎன்பன - ஈண்டு அவ்வத்தொழின்மேனின்றன. அவற்றுள், பூண்டல் ஊர்தல் முதலிய பிறதொழில்களும் கொள்ளப்படும். அவற்றைக் கண்ட துணையானே பொறுமையில்லாமையின் 'காணின்' என்றும், கேட்டார் இதுகூடுமென்று இயையப் படைத்தல் அரிது ஆகலின் 'வற்றூகும்' என்றும் கூறினர்.

இதனால், பிறர்செல்வம் பொறுமை கூறப்பட்டது.

(கு-ரை.) உடுப்பதும் உண்பதும் என்று தனியே எடுத்து ப்ரஸ்தாவிக்கப் படுதலால், அதற்கு ஏற்ப, பட்டுந் துகிலுமுடுத்தலையும், பாலொடு அடிசிலுண்டலையும் காட்டு மெனக்கொண்டு உரைக்கின்றார். அவற்றை - உடுத்தல் உண்டல்களை. அவர்மாட்டு - செல்வத்தால் பட்டுந்துகிலுமுடுத்துப் பாலொடடிசிலுண்ணுஞ் செல்வரிடத்து. வடு - குற்றம். உடுப்பது உண்பது என்று செய்யுளில் வந்தவை - உடுக்கப்படும்ஆடை உண்ணப்படும்உணவுப் பொருள் என்று வினையாலணையும்பெயராகாமல், உடுத்தல் உண்ணுதல் எனத் தொழிற் பெயர்ப்பொருளனவா மென்பார், தொழின்மேனின்றன என்றார். உடுத்தல் உண்ணுதலைக் கூறியது - பூண்டல்முதலியவற்றிற்கும் உபலட்சணமாம். பூண்டல் - ஆபரணங்களை யணிதல். ஊர்தல் - குதிரையானை தேர் என்ற இவைகளின்மீது ஏறிச்செல்லுதல். அவற்றை - உடுத்தல் முதலியவற்றை. கண்ட துணையான் - பார்த்த மாத்திரத்தில். கேட்டார் இது கூடும் என்று இயைய - (கயவன் பொறாமையினாற் கற்பித்துச் செல்வரான பிறர்மீது வடுச்சொல்லைச் சொல்லுகையில், அச்சொல்லைக்) கேட்டவர் (அப்பிறரைப்பற்றிய)வடுச்சொல் அவர்க்கு ஏற்கும் என்று உடன்படுமாறு. வற்று-வல்லமையுடையது: வன்மையென்ற பகுதியினடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. கீழ் - பண்பாகுபெயர்: கீழ் என்பதற்கு ஏற்ப, வற்று என்ற பயனிலைவந்தது. (௯)

௧௦௮௦. எற்றிற் குரியர் கயவ ரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(இ - ள்.) கயவர்—,—ஒன்று - (தம்மை யாதானும்) ஒருதுன்பம், உற்றக்கால்—,—(அதுவேபற்றுக்கோடாக), விரைந்து—, விற்றற்கு-(தம்மைப் பிறர்க்கு) விற்றற்கு, உரியர்—: (அதுவன்றி), எற்றிற்கு - (வேறு) எத்தொழிற்கு, உரியர்—? (எ - று.)

உணவின்மையாக பிறிதாக ஒன்றுவந்து உற்ற துணையா னென்பது தோன்ற 'ஒன்றுற்றக்கால்' என்றும், கொள்ளுகின்றார் தம்கயமையறிந்து வேண்டா என்றற்குமுன்னே விற்றுநிற்றலின் 'விரைந்து' என்றும் கூறினார். ஒருதொழிற்கும் உரியரல்ல ரென்பது, குறிப்பெச்சம்.

இதனான், தாம் பிறர்க்குஅடிமையாய் நிற்ப ரென்பது கூறப்பட்டது.

(கு-ரை.) விற்றற்குரியரென்பதனால், அடிமையாவரென்றுகூறியவாறு. அடிமைவழக்கம் திருவள்ளுவர் காலத்திலிருந்தமை, இதனாலும் பெறப்படும். உணவு இன்மை ஆக - உணவில்லாமையாலாவது. பிறிது ஆக-வேறு காரணத்தாலாவது. உற்றதுணையான் - நேரிட்டவளவால். கயமை-கீழ்மை. வேண்டா என்றற்குமுன்னே - விற்கப்படுகின்ற இவர் எமக்கு வேண்டா என்றுவாங்குபவர் சொல்வதற்குமுன்னே. ஒருகாரியத்துக்கும் கயவர் உதவா ரென்பது, இங்குப்பெறப்படும் குறிப்பெச்சமாகிய பொரு ளாம். (௧௦)

ஒழிபியல் முற்றிற்று

பொருட்பால் முற்றிற்று.

அகடாரா 424
அகப்பட்டி 504
அகலாதணுகா 239
அங்கணத்து 262
அச்சமுடை 130
அச்சமேகீழ்க 504
அஞ்சாமைய 104
அஞ்சாமையீ 3
அஞ்சுமழியா 380
அஞ்சுவதஞ்சாமை 46
அடற்றகை 309
அடுக்கியகோடி 437
அடுக்கிவரினு 195
அடுத்ததுகா 250
அணியண்மே 469
அத்தணர்நூற் 137
அமரகத்தாற் 350
அமரகத்து 474
அமைந்தாங் 85
அரங்கின்றி 22
அரம்பொருத 394
அரம்போலுங் 460
அரியகற்றாசற் 110
அரியவற்று 60
அரியவென்ற 132
அருஞ்செவ்வி 155
அருமறை 370
அருமையு 185
அருவினையெ 93
அருளென் 297
அருளொடு 295
அல்லற்பட் 149
அவையறிந் 255
அவையறியார் 257
அழக்கொண்ட 219
அழச்சொல்லி 336
அழிவதூஉ 74
அழிவந்த 345
அழிவினவை 330
அழிவின்ற 304
அளவளாவில் 122
அளவறிந்து 90
அறஞ்சாரா 487
அறம்பொரு 107
அறவினையு 407
அறனறிந்தா 202
அறனறிந்து 57
அறனிழுக்கா 5
அறனீனு 294
அறிகொன் 205
அறிந்தாற்றி 118
அறிவற்றங் 42
அறிவிலார்தா 369
அறிவிலானெ 368
அறிவின்மை 367
அறிவுடையாரா 46
அறிவுடையாரெ 47
அறிவுருவா 234
அறைபறை 505
அற்றதறிந்து 429
அற்றமறைக்கு 451
அற்றமறைத்த 370
அற்றுரைத்தே 112
அற்றூர்க்கொ 466
அற்றூலளவறி 429
அற்றேமென் 195
அன்பறிவாரா 233
அன்பறிவு 117
அன்பிலரு 380
அன்பின்விழை 409
அன்புடைமை-லி 458
அன்புடைமை-ல் 232
அன்புஈனு 452
அன்பொரீஇ 466
ஆகாதளவிட் 89
ஆக்கங்கருதி 77
ஆக்கமதர்வி 175
ஆக்கமிழந் 174
ஆக்கமூங் 208
ஆங்கமை 280
ஆபயன் 151
ஆயுமறிவி 413
ஆய்ந்தாய்ந் 334
ஆவிற்குரீரெ 498
ஆள்வினெ 473
ஆற்றுருமா 101
ஆற்றினளவறிந்து 266
ஆற்றினளவறிந்தீ 88
ஆற்றினிலேத 259
ஆற்றின்வருந் 81
ஆற்றவர்க் 281
ஆற்றுவாராற்ற 396
ஆற்றுவாராற்ற 454
இகலானு 378
இகலிற்கெ 377
இகலின்மிக 376
இகலெதிர் 376
இகலென்ப 373
இகலென்னு 374
இகல்காணு 378
இகழ்ச்சியிற் 134
இகழ்ந்தெள்ளா 493
இடமெல்லா 497
இடிக்குந்துணை 62
இடிபுரிந்தெள் 183
இடிப்பாரை 63
இடுக்கட்ப 216
இடுக்கண்கால் 476
இடுக்கண்வருங் 192
இடும்பைக்கி 194
இடும்பைக்கே 476
இடைதெரிந் 256
இணரூழ்த்து 214
இதனையிதனு 119
இமையாரின் 405
இயல்புளி 139
இயற்றலு 6
இரக்கவிரத்தக் 490
இரத்தலுமீ 492
இரந்துமுயிர் 496
இரப்பனிரப் 499
இரப்பாரை 494
இரப்பான்வெ 495
இரவாரிரப்பார் 481
இரவுள்ள 500
இரவென்னு 499
இருபுனலும் 277
இருமனப்பெ 414
இலக்கமூடம் 196
இலமென்ற 483
இல்லாரை 292
இல்லாரேயஞ் 404
இல்லாள்கட் 403
இவறலுமாண் 49
இழத்தொறூஉ 426
இழிவறிந்தூண்பா 431
இழுக்கலுடை 35
இழுக்காமை 131

இழைத்தநிக	322	உயிர்ப்ப	390	எண்ணென்ப	13
இளிவரின்	445	உரமொரு	178	எண்பதத்தாலெ	457
இளைதாக	389	உருவுகண்	224	எண்பதத்தாலே	142
இளையரின	244	உருளாய	422	எண்பொருள	44
இறந்தலமந்த	401	உலகத்தாரு	372	எதிரதாக்காக்கு	47
இறந்தவெ	128	உலகந்தழீஇய	44	எப்பொருளு	241
இறப்பேபுரிந்த	449	உலவிடத்	301	எப்பொருள்யார்	43
இறுதிபய	238	உவப்பத்	15	எய்தற்கரிய	97
இறைகடிய	155	உழவினுர்	481	எரியாற்சுட	399
இறைகாக்கு	140	உழுதுண்டு	479	எல்லாப்பொ	287
இற்பிறந்தார்கண்ணெ	435	உழுவாரு	478	எல்லார்க்குமெ	168
இற்பிறந்தார்கண்	486	உழைப்பிரிந்து	127	எல்லைக்கணி	345
இனத்தாற்றி	157	உளபோன்	162	எவ்வதுறைவ	45
இனம்போன்	356	உளரெனினு	269	எள்ளாத	82
இனையரிவ	333	உளரென்னு	27	எற்றிற்கு	507
இன்சொலாலே	9	உளவரை	91	எற்றென்	216
இன்பத்துபய	375	உள்ளமிலா	177	எனைத்தானு	37
இன்பத்துவி	197	உள்ளமுடை	174	எனைத்திட்ப	225
இன்பமொருவற்	490	உள்ளற்க	339	எனைத்துங்	354
இன்பம்விழையாரி	197	உள்ளியதெய்த	135	எனைமாட்சி	290
இன்பம்விழையான்	188	உள்ளுவதெல்	176	எனைவகை	117
இன்மையிடும்பை	497	உள்ளொற்றி	419	என்னுமொ	215
இன்மையினின்னுத	484	உறன்முறை	392	என்னைமுன்	311
இன்மையினின்னுது	150	உறினட்ட	349	ஏதம்பெருஞ்	465
இன்மையென	485	உறினுயிர	321	ஏதிலாரார	365
இன்மையொரு	455	உறுபகியு	274	ஏந்தியகொ	400
இன்றியமையாச்	441	உறுபொருளு	296	ஏமுற்றவரி	386
இன்றும்வருவது	488	உறுப்பமைந்	301	ஏரினுநன்று	483
இன்னுசெய்தார்க்	455	உறுப்பொத்தன்	458	ஏவவுஞ்செய்	371
இன்னுமை	197	உறுவதுசீர்	350	ஐயப்படா	247
ஈட்டமிவறி	464	உறைசிறியா	231	ஒட்டார்பின்	443
ஈர்ங்கைவி	505	உற்றநோய்	58	ஒண்பொருள்	300
ஈவார்கணெ	495	உற்றவன்	443	ஒருமைக்கட்	18
ஈன்றணமு	416	உற்றுனளவும்	433	ஒருமைச்	364
ஈன்றுள்பெ	217	ஊக்கமுடை	95	ஒருமைமக	448
உடம்பாடி	395	ஊணுடை	469	ஒவித்தக்கா	303
உடுக்கையி	331	ஊதியமென்	338	ஒல்லுங்கரு	353
உடுப்பதூஉ	506	ஊழிபெயரி	455	ஒல்லும்வாயெ	227
உடைசெல்வ	425	ஊழையு	191	ஒல்வதறிவ	84
உடைத்தம்	85	ஊறெரா	221	ஒழுக்கமும்	435
உடையரெ	173	ஊனைக்குறித்த	469	ஒளியார்மு	257
உடையார்மு	16	எச்சமென்	464	ஒளியொருவ	446
உட்கப்படாஅ	415	எட்பகவ	394	ஒறுத்தாற்	166
உட்பகைய	392	எண்சேர்ந்த	407	ஒற்றினுலெ	169
உணர்வது	261	எண்ணித்துணிக	80	ஒற்றுமுறை	167
உண்ணற்க	416	எண்ணியவெ	223	ஒற்றுறுற்றி	172
உயர்வகலந்	283	எண்ணியா	101	ஒற்றுறுற்றுண	172

ஒன்ரூமை 395
ஒன்றெய்தி 422
ஓஓதல்வே 215
ஓதியுணர்ந் 363
ஓர்ந்துகண் 135
கடலோடா 103
கடனறிந்து 236
கடனெண்ப 452
கடாஅவுரு 170
கடிதோச்சி 153
கடிந்தகடிந் 218
கடுஞ்சொல் 156
கடுமொழியுங் 156
கடைக்கொட்க 222
கண்ணிற்கணி 163
கண்ணுடைய 15
கண்ணேட்டத் 160
கண்ணேட்டமி 165
கண்ணேட்டமெ 159
கரப்பவர்க் 500
கரப்பிடும்பை 493
கரப்பிலாதெ 491
கரப்பிலார் 492
கரவாதுவக் 496
கருமஞ்சிதை 165
கருமஞ்செய 472
கருவத்தாலு 468
கருவியுங்கா 199
கலங்காது 224
கல்லாதமே 369
கல்லாதவரிற் 269
கல்லாதவரு 24
கல்லாதாரெனை 25
கல்லாதான் 23
கல்லார்ப் 158
கல்லாவொரு 26
கல்லான்வெ 384
கவலுங்கழக 423
கழாஅக்கால் 367
களித்தறியே 420
களித்தானை 420
கள்ளுண்ணுப் 421
கற்கசடற 12
கற்றறிந்தார் 260
கற்றருட் 264
கற்றூர்மூற் 266
கற்றிலனெயினு 35
கற்றுக்கண் 235
கனவினுமி 354
காக்கைகர 125
காட்சிக்கெ 8
காணுச்சினத் 382
காணுதாற் 371
காதலகாத 56
காதன்மை 113
காலங்கருதி 94
காலாழ்களரி 106
கானமுயலெ 314
குடிசெய்வ 473
குடிசெய்வார் 475
குடிதழீஇ 138
குடிபுறங்காத் 143
குடிப்பிறந்தார்க 438
குடிப்பிறந்துகு 110
குடிப்பிறந்துத 336
குடிமடிந்து 181
குடியாண்மை 184
குடியென்னுங் 179
குணநலஞ் 452
குணநாடிக் 111
குணனிலஞ்ஞ் 383
குணனுங்குடி 335
குலஞ்சுடுங் 471
குறித்தது 248
குறிப்பறிந்து 242
குறிப்பிற் - ரா 249
குறிப்பிற் - ர் 248
குற்றமிலனெய் 474
குற்றமேகாக்க 51
குன்றன்னூர் 400
குன்றினனே 442
குன்றேறி 298
கூழுங்குடியு 148
கூறுமைமோ 246
கூற்றத்தை 397
கூற்றுடன்று 305
கெடல்வேண்டி 397
கெடாஅவழி 347
கெடுங்காலை 339
கேடறியாக் 276
கேடில்விழுச் 20
கேட்டார்ப் 209
கேட்டினு 337
கேட்பினுங் 38
கேளிழுக்கங் 346
கையறியாமை 417
கைவேல் 317
கோக்கோக்க 98
கொடுத்தலு 124
கொடுத்துங் 382
கொடுப்பதூஉ 465
கொடையளி 11
கொலைமே 146
கொலையிற் 144
கொல்லாநலத்தது 453
கொளப்பட் 244
கொளற்கரி 286
சலத்தாற் 219
சலம்பற்றி 437
சால்பிற்குக் 454
சான்றவர் 456
சிதைவிடத் 176
சிறப்பறிய 173
சிறியாருணர்ச்சி 449
சிறுகாப்பிற் 285
சிறுபடையான் 104
சிறுமைபல 423
சிறுமையுஞ் 310
சிறைநலனு 105
சிற்றின 66
சீரிடங்கா 355
சீரினுஞ் 441
சீருடைச்செ 467
சுழலுமிசை 320
சுழன்றுமேர்ப் 478
சுற்றத்தாற் 123
சூழாமற்றூ 473
சூழ்ச்சிமுடிவு 226
சூழ்வார்கண் 61
செப்பின்புணர்ச்சி 393
செயற்கரியயா 324
செயற்கைய 205
செயற்பாலசெ 53
செய்கபொ 299
செய்தக்க 79
செய்தேமஞ் 351
செய்வினை 119
செய்வினை 229
செருக்குஞ் 49
செருவந்த 157
செல்லான் 483

செல்வத்துட்	32	தேவரனையர்	503	நிழனீருமின்	391
செவிகைப்ப	10	தேறற்க	114	நிறைநீர	326
செவிக்குண	33	தேறினுந்	388	நிறைநெஞ்ச	412
செவிச்சொல்	241	தொகச்சொல்	235	நீங்கான்வெகுளி	381
செவியிற்சுவை	40	தொடங்கற்க	99	நுணங்கியகே	39
செவியுணவி	34	தொடிப்புழுதி	482	நுண்ணியமெ	254
செறுநரை	96	தொட்டனைத்	17	நுண்மாணு	27
செறுவார்க்கு	383	தொல்வரவுந்	485	நுனிக்கொம்	87
சென்றவிட	42	தொழுதகை	359	நூலாருணூல்	233
சொலல்வல்	212	நகல்வல்ல	461	நெடுநீர்மறவி	181
சொல்லப்ப	506	நகுதற்பொரு	327	நெடும்புனலு	102
சொல்லுக	211	நகையீகைய	436	நெருப்பினுட்	488
சொல்லுதல்	222	நகையுள்ளு	459	நோய்நாடி	432
சொல்வணக்க	358	நகைவகை	353	நோவற்க	388
ஞாலங்கருதி	94	நச்சப்படாத	466	பகல்கருதி	374
தக்காங்கு	153	நட்டார்குறை	406	பகல்வெல்	92
தக்காரினத்	62	நட்டார்க்கு	230	பகைநட்பாக்	387
தந்நலம்	412	நட்டார்போ	358	பகைநட்பாங்	361
தமராகித்	126	நட்பிற்குவீ	332	பகைமையு	253
தம்மிற்பெரியார்	60	நட்பிற்குறு	342	பகையகத்துச்	265
தலையினிழிந்த	442	நண்பாற்றா	461	பகையகத்துப்	268
தள்ளாவிளையு	271	நயனொடு	459	பகையென்	385
தன்குற்றநீக்கி	52	நலத்தின்க	438	படியுடையார்	182
தன்றுணையின்	387	நலம்வேண்டி	440	படைகுடி	2
தாமின்புறுவ	19	நல்குரவென்னு	486	பணியுமாமெ	449
தார்தாங்கி	307	நல்லாண்மை	474	பண்ணென்	160
தாளாண்மையில்	187	நல்லார்கட்	29	பண்பிலான்	461
தாளாண்மையென்	187	நல்லினத்தி	73	பண்புடையார்	460
திறனறிந்து	210	நவிறொறு	327	பயன்றூக்கி	409
தினைத்துணையாங்	50	நற்பொரு	487	பரியதுகூர்	177
தீயளவன்றி	432	நன்மையுந்	115	பருகுவார்	348
துஞ்சினார்	418	நன்றறிவாரிற்	502	பருவத்தோ	92
துணைநலமா	214	நன்றாற்ற	82	பலகுடைநீ	480
துப்புரவில்லார்	488	நன்றென்	259	பலசொல்லக்	213
துளியின்மை	150	நாடாது	334	பலநல்லகற்	356
துறந்தார்படிவ	171	நாடென்ப	278	பல்குழுவு	275
துன்பமுறவ	225	நாடொறுநாடி	148	பல்லவை	268
தூங்காமை	4	நாடொறுநாடு	120	பல்லார்பகை	65
தூங்குக	226	நாணகத்தில்லா	471	பழகியசெல்வ	424
தூய்மை	237	நாணாமை	363	பழகியநட்	343
தெண்ணீரடு	498	நாணாலு	470	பழமையென	342
தெய்வத்தா	191	நாணென்னு	417	பழிமலைந்	218
தெரிதலுந்	201	நாண்வேலி	470	பழுதெண்ணு	206
தெரிந்தவினத்	76	நாநல	208	பழையமெனக்	245
தெளிவிலதனை	77	நிலத்தியல்பா	67	பற்றற்றகண்	121
தேரான்பிற	113	நிலத்திற்	439	பற்றுள்ள	54
தேரான்றெ	115	நிலைமக்கள்	310	பிணியின்மை	27[illegible]

பிரித்தலும்	201	மடியுளா	189	யாண்டுச்செ	398
பிழைத்துணர்	37	மடியையடியா	179	யாதானு	18
பிறப்பொக்கு	447	மடுத்தவா	194	வகைமாண்ட	399
பிறர்நாணத்	471	மணிநீரும்மண்	282	வகையறச்	78
பிறர்பழியுங்	469	மண்ணெண்ணெடியை	163	வகையறிந்து	389
பீலிபெய்	86	மதிநுட்ப	202	வகையறிந்துவ	264
புகழின்றூற்	443	மயிர்நீப்பின்	444	வருமுன்னர்	52
புகழ்ந்தவை	133	மருந்தென	428	வரைவிலா	414
புணர்ச்சிபழ	328	மருந்தோமற்	444	வலியார்க்கு	379
புரந்தார்கண்	323	மருவுகமாசற்	341	வழங்குவ	437
புல்லவையுட்	261	மறமானமா	306	வழிநோக்கா	381
பெண்ணேவல்	406	மறைந்தவை	171	வன்கண்	199
பெயக்கண்டு	166	மனத்தானு	68	வாரிபெருக்கி	116
பெரிதினிது	366	மனத்தினமை	357	வாளொடென்	267
பெரியாரைப்	396	மனத்துளது	68	வாள்போல்	391
பெருக்கத்து	442	மனநலத்தி	73	வானேக்கி	136
பெருஞ்கொ	125	மனநலநன்கு	72	விடுமாற்ற	238
பெருமைக்கு	112	மனநலமன்	71	வியவற்க	55
பெருமைபெரு	450	மனந்தூயார்க்	70	விருப்பறுச்	121
பெருமையுடையவ	448	மனந்தூய்மை	69	விரைந்து	212
பெரும்பொரு	272	மனமாணு	392	விலங்கொடு	30
பேணுதுபெண்	403	மனையாளை	404	வில்லேருழவ	385
பேதைபெருங்	352	மனைவிழைவார்	402	விழித்தகண்	318
பேதைமையு	362	மன்னர்க்கு	149	விழுப்புண்	319
பேதைமையெ	362	மன்னர்விழைப	239	விழைதகை	344
பேதைமையோ	344	மாறுபாடில்	430	விழையார்	347
பேராண்மை	315	மிகச்செய்து	360	வினைக்கண்வினைசெ	186
பொச்சாப்பார்	130	மிகின்மேவன்	377	வினைக்கண்வினையு	120
பொச்சாப்புக்	129	மிகினுங்குறையி	427	வினைக்குரிமை	119
பொதுநலத்தார்	411	முகத்தினினிய	357	வினைசெய்	169
பொதுநோக்கான்	126	முகத்தின்மு	251	வினைத்திட்	220
பொய்படுமொ	364	முகநகநட்ப	330	வினைபகை	228
பொருட்பெண்டிர்	410	முகநோக்கி	252	வினையான்	230
பொருட்பொருளார்	411	முடிவுமிடை	229	வினைவலியு	83
பொருளல்லவரை	292	முதலிலார்க்	64	வீறெய்தி	223
பொருளாஞ	463	முயற்கிதிரு	189	வெண்மை	369
பொருளென்	293	முரண்சேர்ந்த	100	வெருவந்த	154
பொருள்கருவி	228	முறைகோடி	151	வெள்ளத்தனைய	175
பொருள்செலுத்து	425	முறைசெய்து	9	வெள்ளத்தனைய	193
பொள்ளென	96	முறைப்பட	207	வேட்பத்தா	211
பொறியின்மை	190	முற்றற்றி	289	வேட்பன	243
பொறையொ	273	முற்றியுமுற்	288	வேண்டற்க	421
போற்றினிய	240	முனைமுகத்	290	வேலன்று	139
மக்களேபோல்வர்	502	முன்னுறக்கா	131	வேலொடு	147
மடிமடிக்	180	மேலிருந்து	447	வைத்தான்	463
மடிமைகுடி	183	மேற்பிறந்தா	30		
மடியிலா	184	மையலெருவ	365		

பொருட்பாலின் அரும்பதவகராதி முதலியன.

[எண் - பாட்டெண்.]

அகடார்தல் - வயிறுநிரம்புதல், 936
அகத்தார் - உள்ளிருப்பவர், 745
அகப்பட்டி - சுருங்கியபட்டி, 1074
அகமலர்ச்சியணி, 639
அகலுன்று புறனுன்றுதல் தகுமிடம், 829
அங்கணத்து ளுக்க வமிழ்து × தங்கணத்தரல்லார்மூற் கோட்டி கொளல், 720
அங்கமைந்து-பொருள், காலம், செய்யுமாறு, செய்யப்படும்வினை, தானை என்ற மந்திராங்கமானவை, 663
அங்கம், 381
அசங்கத வினியாறு, 767
அசாத்தியம், 949
அசாவாமை - தளராமை, 611
அசை-819, 875, 980, 1004, 1016
அசைதல் - சோம்புதல், 1040
அசைவின்மை-மனந்தளராமை, 594
அச்சமுடையார்க் கரணில்லை × பொச்சாப்புடையார்க்கு நன்கு இல்லை, 534
அச்சவுபதை, 501
அச்சாணியன்ஞர், 667: அச்சு-உருள் கோத்தமரம்.
அஞ்சாமை-திண்மை, அஞ்சாத மனவுறுதி, 382, 497: எண்ணுது செய்து கிற்றல், 428
அடல் - கொல்லுதல், 893
அடற்றகை, 768
அடிமை புகுத்தல், 608
அடிமையாதல், 1080
அடியளந்தான், 610
அடுக்கியசுற்றம்-525
அடுக்கு பன்மைபற்றிவரல், 423
அடுபுற்கை - சமைத்தகூழ், 1065
அணங்கு, 918
அணிகலம், 575
அணிநிழற்காடு, 742
அதர் - வழி, 594
அதிகாரத்தான்வருதல், 435, 478, 523, 582, 611, 687, 721, 947, 1021
அதிர்தல் - நடுங்குதல், 429
அதுவாதம், 739, 753
அந்தணர் சான்றோ ருருத்துவத்தோர், (புறப். வெண்.) 432, 960
அமரகத்தாற்றறுக்கும் மா × துன்பத்துட் கைவிடுந் தமர், 814
அமராமை - கலவாமை, 529
அமாத்தியர், 638
அமைச்சரதுகுணத்தன்மை, 631-5
அமைச்சரது சிறப்பு, 636
அமைச்சருள் விடப்படுவாரது குற்றம், 639, 640
அமைச்சர்க்கு நாவன்மை சிறந்தது, 641, 642
அமைச்சர்செயல், 442, 637-8
அமைதல் - அடங்குதல், 635: ஒத்துவருதல், 992
அமைந்து - சமாதானப்பட்டு, 474
அமையாமை - இறத்தல், 961
அமையார்தோள், 906
அயோத்தியரிறை-இராமபிரான், 773
அரங்கின்றி வட்டாடுதல் × நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல், 401
அரசர் கண்ணேடற்பால இடங்கள், 579, 580
அரசர்க்கு அங்கம், 381
அரசர்க்கு இயல்பானகுணம் நான்கு, 382
அரசர்க்குரிங்கத்தகாதகுணம், 383
அரசர்க்குப் பொருள்வரும் வழிகள், 385, 756
அரசர்க்குரிய அரியபேறு, 443
அரசர்க்குரிய மூவகையாற்றல் முதலியன, 538
அரசவாதம், 384. (இது பொருட்குக் காரணம்.)
அரசனீதி பொருட்குத் துணைக்காரணம், பொருட். உரைப்.
அரசனுக்குச் சிறப்புத்தொழில், 384
அரசனுக்குப் பொதுத்தொழில், 384
அரசன் கூழோதற்பாலதன்கட் செய்வன, 878
அரசன் காண்டற்கெளியனாதல், 386

அரசன் தெய்வமாதல், 698
அரசன் பகைவனை நாதுமலாக்கல், 876
அரசன் பகை களையும் பருவம், 879
அரசன் பிழைசெய்யத்தகாதவேந்தர், 893, 894
அரசன் வல்லதொழில்கள் இயற்றல் முதலியன, 385
அரசு, 384, 385
அரணினிலக்கணம், 742-48
அரணின் சிறப்பு, 741
அரண், 381, 492
அரண் காப்பாரை யின்றியமையா மை, 749 - 50
அரம், 567
அரம் × கூர்மையுடையபொருள், 997
அரம் பொருத பொன் × உட்பகை யுற்றகுடி, 888
அரியவரண்சார்ந்தும் பெரியாரைப் பிழைத்தாருய்யார், 895
அருட்பொருள், 914
அருத்தாபத்தி, 811, 851, 853
அரும்பண்பிஞ்ஞீமைகாக்க, 434
அருளன்புகட்கு வேறுபாடு, 757
அருள் அன்பிலூலுண்டாகிச் செல் வத்தால் வளரும், 757
அலகு - நெல், 1034
அலங்காரம், 475, 476, 763
அலை-அலைத்தல், 551
அல்லல் - துன்பம், 555, 626, 798
அல்லற்கணைற்றறுப்பார் நட்புக்கொள் ளுதல் × உள்ளஞ் சிறுகுவ உள்ளு தல், 798 [551
அல்லவை, 384: முறையல்லாதவை,
அல்லாத்தல்-மனங்கலங்குதல், 593
அல்வழிக்கண் இன்சாரியை, 413
அவர்வரை நிற்றல் பெரியோர்பிணிப் புண்ணுந்திறன், 441
அவலம்-கவலை, 1072
அவயவ வுருவகம், 1068
அவா-அவாவப்படுவது, 1015
அவாய் - தழுவி, 643
அவாய்நிலை, 415, 473, 493, 514, 602, 704, 717, 720, 759. 779, 817, 825, 829 842. 845, 871, 895. 904, 918, 927, 941
அவி, 413, 560
அவிதல் - சாதல், 420
அவியுணவினுன்னூர், 413
அவையமூவகைத்து, 711
அவையஞ்சாமைக் காரணம், 725
அவையஞ்சாமையின் பயன், 724
அவையஞ்சாரது சிறப்பு, 721-3
அவையஞ்சுமவன் கற்ற நூல் × பேடிகையாள், 727
அவை யஞ்சுவார தொழிபு, 726-30
அவை யளவறிந்தார்செய்யுந் திறம், 714
அவையறிந்தே யொன்று சொல்ல வேண்டும், 711-2,
அவையறியாக்கால்வருங்குற்றம்,713
அழ - இரங்க, 659
அழி - அழிவு, 807
அழிந்துவிடும் - எழுந்திருக்கும் என் பதுபோல ஒருசொல், 498
அழியுநர்புறக் கொடையயில்வா ளோ ச்சான், 384, 766
அழிவு - தாழ்வு, 876
அழுக்காறென வொருபாவி, 1042
அழுதகண்ணீர், 555
அளவளாவில்லாதான் வாழ்க்கை × கோடின்றி நீர்நிறைந்தகுளவளா, 523
அளவு - எல்லை, 477, 479 அளவை நூல், 725
அளவைகள், 501
அளவைகள் சொன்னூல் கற்றே கற் றல், 725
அளறு, 835, 919 [465
அறச்சூழ்தல் - முற்ற எண்ணுதல்,
அறநுண்மை, 441
அறநூல், 388
அறநூற்பொதுவிதி, 656
அறம்பொரு ளின்பங்களின் பொரு ட்டுப் பொருள்விடுத்தல், 385
அறம் முயன்றுசெய்தலல்லது இர ந்துசெய்தல்கூடாது, 1066
அறி - அறிவு, 638
அறிவித்ததொன்றனை இடந்தோறுங் கொண்டறிவிப்பது பறை, 1076
அறிவிலானீதல் பெறுவான் றவம், 842
அறிவில்லான் × மண் மாண்புனைபா வை, 407

அறிவிற்குமாட்சிமை, 407
அறிவுடையார் பிணிப்புண்ணுங் திற ன், 441
அறுசுவை, 420
அறுதல் - பொருளில்லாஞதல், 626: ஜீர்ணித்தல், 942
அறுதொழில், 560
அறுவகைக்குணம், (அரசர்க்குரிய து), 485, 538
அறுவகைப்படை, 762
அறுவகையுறுப்பு, 939
அறைபறை × கயவர், 1076
அறைபோதல்-கீழறுத்துப் போதல், 693: வஞ்சனையாற் பிரிக்கப்படு தல், 764
அறைபோவான்-வஞ்சித்துச் செல்லு மாறு, 501
அறைப் படுத்தல் - வஞ்சித்து கிலை மாறச் செய்தல், 747
அற்றம் - மறைக்கத்தக்க அவயவம், 846: அவமானம், 980: இறுதி, 421, 434
அற்றூர் - சுற்றமிலாதார், 506
அன்பு இன்னதென்பது, 681
அன்றே, 1014
ஆ-பசு, 560, 1066
ஆகமவளவை, 502
ஆகாரங்களிற்படுவன, 736
ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேழ பாடு, 442
ஆகாறு - வருவாய், 478
ஆகுபெயர், 390, 401, 407, 1056
ஆக்கத்தின் நல்குரவேதலே, 657
ஆக்கம் - நன்மை, 527, 642: ஊதி யம், 463: சிறந்த அறம், 457: மூற் றுகை, 492: அரசனுக்குரிய அங் கம், 522
ஆங்கு-உவமவுருபு, 534
ஆசாரம் - ஒழுக்கம்: 1075
ஆசு - குற்றம், 503
ஆடல்பாடல் அழகுசெய்துகொள்ளல் வரைவின்மகளிர்க்குரியன, 916
ஆண்மை-துணிவு, 383: ஆஞதற்றன் மை, 609: திட்பம், 663
ஆணி, 667, 1032
ஆதரதாயிகள், 559
ஆதி - காரணம், 543
ஆதரனளவு, 949
ஆம் - அசை, 978
ஆயம்-கெலிப்புப் பொருள், பொருள் வருவாய், 933; சூது, 939
ஆயுள் வேதமுடையார், 941, 948
ஆய்ந்தவர், 662
ஆய்ந்துநட்புக்கொள்ளவேண்டும், 791
ஆர்தல் - நிறைதல், 837
ஆவது-வரக்கடவது, நன்மை: 427; வருவது, 461 [1066
ஆவிற்கு கீரென்றிரத்தலும் இளிவே,
ஆழி - கரை, 989
ஆழ்மளறு, 919
ஆஞதற்குரியான நிலக்கணம், 511
ஆள்வினை - முயற்சி, 1022
ஆறங்கங்கள், 381,
ஆறும்வேற்றுமை பின்முன்னுகத் தொகல், 476, 1008
ஆறிலொன்று ஒழியவும்உரியன, 756
ஆறிலொன்று அரசற்கு, 390
ஆறு - நெறி, 716, 725
ஆற்றலின் மூவகை, 466
ஆற்றறுத்தல் - வலியறச் செய்தல், வீழ்த்துப் போதல், 814
ஆற்றூர் - வலியில்லாதார், 493
ஆற்றி - வலிமைபெற்று, 493: வை த்து, செலுத்தி, 568
ஆற்றினிலே தளர்தல் × புலமேற் றுணர்வார் முன்னரிழுக்கு, 716
ஆற்று-துணைவினை, 579
ஆற்றுதல் - வல்லஞதல், 525, 748: வலிமையாயுதவுதல், 798
ஆற்றுவார் - முடிக்கவல்லார், 891
ஆற்றுவார்க்கின்ஞ செயல் × கூற்றத் தைக் கையால் விளித்தல், 894
ஆன்றமைந்த, 635
இகத்தல் - மிகுதல், 567: தப்புதல், 779: நீங்குதல், 869
இகலாதார்க்கு வரும் நன்மை, 8525-
இகலினார்க்கு வருந்தீங்கு, 856, 857
இகல் - மாறுபாடு, 481
இகல்நோய், 851
இகழ்ச்சி - சோர்வு, 539
இகழ்ச்சிக்குறிப்பு, 894
இகழ்ந்தார் - மறந்தார், 538
இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப் பின் தொழில், 442

இசைக்கரணம், 573
இடக்கரடக்கு, 840
இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது - 523, 780, 847
இடம் - நுகரவேண்டும் பொருள், உலகு, 1064
இடன் - செல்வம், 910
இடி - இடித்துக்கூறுதல், கழறுதல், 607
இடிக்குந் துணையார் - உறுதிகூறுவோர், 389
இடிப்பார் - நெருங்கி உறுதிச் சொல்கூறுவோர், 448
இடுக்கண், 621, 654, 788, 1030
இடும்பை-துன்பம், 623: நோய், 1056
இடும்பை உள்ளத்து ஓர் கோட்பாடு, 622, 630
இடை-உரியசமயம், 712
இடைக் குறைதல், 438; 610
இடை முரிதல், 899
இட்டிகை, 743
இட்டிது - சிறிது, 478
இணர் - கொத்து, 65
இந்திரியம் ஒருகாலத்து ஒன்றன்கண்ணேயே சேறல், 422
இந்நிலத்து மண்ணுதல் வேண்டினிசை நடுக, 556
இமையார், 906
இயக்கம் - புடைபெயர்ச்சி, 1020
இயல்வது செய்யாதார் கட்பின்றீமை, 818
இயல்பின்மை - அச்சம், 903
இயற்கை நட்பு இருவகை, 781
இயற்கையறிவு செயற்கையறிவிற்குக்காரணம், 915
இரக்கத்தக்கவர தியல்பு, 1053-7
இரட்டுறமொழிதல், 88 - அவ, 90-அவ, 1001
இரண்டனுருபு இறந்திக்கட்டொகல், 795
இரண்டனுருபு விகாரத்தாற்றொகல், 1067
இரதம், 944
இரத்தக்கார், 1051
இரத்தலின்பம், 1052
இரத்தலின் துன்பங்கள், 1052
இரத்தலுமீதல் போலும், 1054
இரப்பாருலகிற்குவேண்டும், 1058-9
இரப்பார்க்கின்றியமையாத இயல்பு, 1060
இரப்புமேருடைத்து, 1053
இரப்போர் சுற்றமும், புரப்போர் கொற்றமும், 1034
இரவினே யுள்ளவுள்ளமுருகும், 1069
இரவின் குற்றமும் கரவின்குற்றமும், 1068 - 70
இரவின் கொடுமை, 1061-2
இரவு - யாசித்தல், 552
இராமன், இராவணன், 773
இரீஇ-இருக்கவைத்து, 660
இருட்டறையிலேதில் பிணந் தழுவல் × பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம், 913
இருபுனல், 737
இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம், (அரசர்க்கு உரியது) 490
இருமனப் பெண்டிர்-வேசையர், 920
இருவகைப்பெருமை, 466, 485, 874
இருள்-மயக்கம், 675
இரை-விலங்கிற்குரியது, 946,
இலக்கணைச்சொல், 771
இலக்கணை யடியாகவந்த குறிப்புச்சொல், 802
இலக்கம் - குறி, 627
இலங்கையர்வேந்தன், 773
இல் - குடி, 1026
இல்லாகியார், 935
இல்லாண்மையே நல்லாண்மை, 1026
இல்லாளே யஞ்சி விருந்தின் முகங்கொன்ற, 905
இவறல், 432, 437, 935, 1002
இவறன்மாலையன், 863
இவறன்மை, 438
இவறுதல் - விரும்புதல், உலோபஞ்செய்தல், 1002,
இழத்தொறூஉம், 940
இழிவறிந் துண்பான்க ணின்பம் × கழிபேரிரை யான்கணேய், 946
இழிவு - அளவுகுறைதல், 946
இழிவுசிறப்பும்மை, 403, 819
இழிவுசிறப்பும்மை தொகல், 408, 751, 762, 965, 969
இழுக்கம் - பிழை, 808

இழுக்கலுடையுழி யூற்றுக் கோல் × ஒழுக்க முடையார் வாய்ச்சொல், 415, (இழுக்கல் - வழுக்கல்)
இழுக்காது - வழுவாது, 384
இழுக்காமை - மறவாமைக்குணம், 536
இழுக்கியான் - மறந்திருப்பவன், 535
இழுக்கு - குற்றம், 467, 893
இழைத்தது - வகுத்தசபதம், 779
இழைத்துணர்தல் - நுண்ணிதாக ஆராய்தல், 417
இளி - தாழ்மை, 971
இளிவரவு - அவமானம், 464, 532
இளிவு - இழிவு, 464, 988
இளை - காட்டரண், 745
இறத்தல் - ஒழிதல், 971
இறந்தகாலப்பெயரெச்சம் பொருள் பெறுதல், 511
இறந்ததுதழீஇய எச்சவும்மை, 383, 457, 459, 577, 856
இறந்து - உட்புக்கு, 586
இறப்பு - தருக்கு, 977
இறல் - இறத்தல், 885
இறுகுதல், 878
இறுதிநிலை விகாரத்தாற்றொகல், 537, 547, 809, 816, 829
இறுவரை - அழியுமளவும், 488
இறை - கடவுள், 388: அரசன், 547: நடுவு நிலைமை, 541: வரிப்பணம், 733
இறையென்று அரசனைச் சொல்லக் காரணம், 39, அதி. அவ.
இனத்தியல்பா லறிவுதிரிதல் × நிலத்தியல்பால் நீர்திரிதல், 452
இனன் - சுற்றம், 793, துணை, 868
இனைத்தெனவறிந்தசினை, 402,
இன்ஒடுவின் பொருட்கண், 688
இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொகல், 787
இன்சொல், 387
இன்சொற் சொல்லல் - சாமம், 467
இன்பவுபதை, 501
இன்மை - நல்குரவு, 988
இன்மையினுடைமை யின்னாது, 558
இன்மையென வொருபாவி, 1042
இன்றியமையாத மூன்றென்பது பிறவும்வேண்டுமென்பதுகாட்டும், 682
இன்றேபோல் நரும்புணர்ச்சி, 785,
இன்னாச்சொல் - இன்னாமையைப் பயக்கும் சொல்லின்மேலேற்றிச் சொல்லியது: இன்சொல் என்ற இடத்தும் இவ்வாறே: 564
ஈட்டம் - சம்பாதித்தல், 1003
ஈட்டல் - தொகுத்தல், 385
ஈண்டுதல் - பலவாற்றானும் நிறைதல், 417
ஈதற்சொல் இழிவின்கண், 412
ஈதிகள், 732
ஈத்து, 387
ஈத்தொருவுக ஒப்பிலார் நட்பு, 800
ஈயுநெறி, 477
ஈர்ங்கை விதிர்த்தல், 1077
ஈன்றாள், 923: ஈன்றாள் பசிகாண்பினும் பழிவினைசெய்யற்க, 656
உ, 620
உகாமை - வெளிப்படாமை, 585
உஞற்று - முயற்சி, 604
உடம்பாடிலாதவர்வாழ்க்கை × குடங்கருட் பாம்போடுடனுறைதல், 890
உடம்பு, 943, 1029: உடம்பு இடும்பைக்கு இலக்கம், 627
உடற்றுபவர், 818
உடன், 589, 890
உடன்கூறுதல் இழிவுதோன்றற்கு, 1078
உடன் முற்றும்மைப்பொருட்டாக்கியிடர்ப்படுதல், 632
உடுக்கை யிழந்தவன்கை × நட்பு, 788
உடுப்பதுண்பதென அவ்வத்தொழின் மேல் நிற்றல், 1079
உடை, 1012,
உடைக்கும், 1077
உடைத்தம்வலி, 473
உடைமை, 838
உடைய என்பது குறைதல், 1034
உடையார் முனில்லார்போல், 395
உட்கப்படுதல் - அஞ்சப்படுதல், 921
உட்பகை × மட்பகை, 883: உட்பகை ஆறலைப்பார் முதலியவர்களும், பன்றி கரடிமுதலிய விலங்குகளும், 735, உட்பகை யுற்றகுடி × அரம் பொருதபொன், 888
உணக்குதல் - காயவிடுதல், 1037
உணர்ச்சிமனத்தானும், 453

உணர்ச்சியொத்தல், 785
உணவின் மூவகைமாறுபாடு, 944
உணவுசெபலொவ்வாமை பிணிக்குக் காரணம், 941
உணர்வுடையார்முன்சொல்லல் × வளர்வதன் பாத்தியுள் நீர்சொரி உதிரங்கலத்தல், 948 [தல், 718
உபதைதரான்கும் அவற்றினிலக்கண மும், 501
உபசாரவழக்கு, 381, 383, 384, 582
உபதேசப்பொருள், 847
உபாயம்தான்கு, 467 [தல், 620
உப்பக்கங்காணுதல் - முதுகு காணு
உப்பு - இனிமை, 802
உம்மை, 414, 872, 1053, 1037
உம்மைத்தொகை, 933
உயரச்செய்தல் - தாம்தாழ்ந்து நிற் றல், 752
உயர்சூடி, 96 - அதி. அவ
உயர்திணைச் சாதியொருமை, 381
உயர்வு - மேன்மை, 595
உயர்வுசிறப்பும்மை, 1061
உயிரினும் காண் சிறந்தது, 1017
உயிர் உடம்பொடுகூடியே பயனெய் தும் × சால்பு நாணினுலேயே பய னெய்தும், 1013
உயிர்க்குணங்கள், 382
உயிர் தன்பமுழத்தொறும் உடன் மேற்காதற்று × நூதன் இழத்தொ றும் நூதைக் காதலிக்கும், 940
உயிர்போகலாவது, 1070
உயிர்ப்ப, 880 [தல், 1076
உய்த்தல்-அநுபவித்தல், 440: செலுத் உரம்-திண்ணியஅறிவு, 600: வலி, 888
உரவோர்சிறை விடத்தொல்கார் × களிறு புண்பட்டும் பாடேன்றும், 597
உரிச்சொல் லடியாகவந்த தொழிற் பெயர், 706
உரிமை - மனைவி, 693, 741
உரிமையாற் செய்வன, 801
உரு - தோற்றப் பொலிவு, 684
உருதிருவாற்றல், 54-அதி.அவ. உரு புஞ்சாரியையும் உடன் றொகல், 535
உருபுபிரித்துக் கூட்டல் 'செல்வத்து ளெல்லாத்தலை', 411
உருவகம், 918 - 9; 1068
உருவகவிசேடம், 872
உருவின் மிக்கதோருடம்பு, 407
உருவு, 667
உரை - புகழ், 581
உருள்பெருந்தேர், 667
உரைகல்லாகிய செயல், 986
உரையாமைமுன்னுணருமொண்மை, 1051
உலகத்தியற்கை, 637
உலகத்தோடொட்ட வொழுகல், 644
உலக பாலருரு அரசன், 39, இறை மாட்சி, உரைப்பா.
உலகம், 426
உலகியலாற்கூறினர், 680
உலகியல், 572, 996
உலகியற்றியான், 1062
உலகிற்கு உயிர் அரசன், பொருட். உரைப்பா. [883
உலவு-இலேப்பு, தளர்ச்சி 620, 762,
உலோபத்தின் தன்மை, 438
உல்கு பொருள், 756
உவகைமகிழ்ச்சி - உவகையாலுணர் வழிதல், 531
உவமைக் குறிப்பு, 605
உவமைதொழில் பற்றிவருதல், 706
உவமை புணர்த்தல் வேறுதலையும்வே றன்மையையும் காட்டும், 926
உவமை மாறுபடுதல், 660
உவமை முகத்தால் இலக்கணம், 490
உவமை யடையாற் பொருளடைவரு வித்தல், 415
உவமையணி, 974
உவரி, 763
உழத்தல்-வருந்தல், உழவின்சிறப் பு, 1031
உழவு செய்யாத வழிப்படுங் குற்றம், 1040
உழுதல், 1038
உழுவார் உலகத்தார்க் காணி, 1032
உழை - இடம், 530
உழைச்செல்வான்-நோயாளிக்கு அரு கிலிருந்து பணி செய்வான், 950
உழையிருந்தான்-அமைச்சன், 638
உளப்பாடு - மர்மம், 677
உளி - மூன்றுவதன் பொருள்படுவ தோரிடைச் சொல், 545
உள்வீழ்தல்-முன்பிற்சுருங்குதல், 955

உள்ளஞ் சிறுகுஞ் செயல், 798
உள்ளஞ் சிறுகுவ வுள்ளுதல் × அல்லற்கணாற்றறுப்பார் நட்புக் கொள்ளுதல், 798
உள்ளத்தனைய துயர்வு × வெள்ளத்தனையது மலர் நீட்டம், 595
உள்ளம் - ஊக்கம், 592, 595, 798
உள்ளுதல் - நினைத்தல், 622
உள்ளூர், 927
உறழ் பொருவு, 460
உறன்முறை - உறவுமுறை, 885
உறுதிகள் - புகழ்அறம் ஞானங்கள், [1072
உறு பசி, 734
உறுபொருள், 756
உறுப்பு, 802: உடம்பு 993
உறுவது - இலாபம், 813
உறை-ஆயுள், 564: ஆளுமிடம், 680
உறைகோடுதல் - மழைபெய்யுங்காலத்துப் பெய்யாமை, 559
உறைதல் - ஒழுகுதல், 426
உறைப் பெயலோலை போல, 1029
உற்றக்கடை, 837
உற்பாதம். 442
உற்றவை - இடையூறுகள், 512
ஊக்கத்தால் முயற்சி பொருள் கொடை செருக்கு உண்டாகும், 598
ஊக்க மில்லாதாரிழிபு, 598-600
ஊக்கம் மனவெழுச்சி,382, 473,591
ஊக்குதல்-வினைசெய்தல், 473:கருதுதல்,855, மேற் கொள்ளுதல்,463, 858
ஊங்கு-மிக்க, 460: மேற்பட்ட, 644 மேல், 1065
ஊதியம்-இலாபம், 449, பேறு, 797
ஊராண்மை - உதவுந்தன்மை, 773
ஊர், 397
ஊர்தல் - அடர்த்தல், நெருக்கி யழித்தல், 601, 621
ஊழி, 989
ஊழோடு கூடாமுயற்சி கூலியேனுந் தருதல், 619
ஊழ், 620
ஊழ்த்து நாறாமலர் × கற்றும் நூலை விரித் துரையாதார், 650
ஊழ்மாறு கொள்ளாவழியே கல்வியறிவுமிகும், 396
ஊறு-உற்றகாலம், 535, புண், 761: பழுதுபடும்வினை, 662
ஊறுபாடு, 945 [665
ஊறெய்தல்-நல்லதாய்ப் பொருந்தல்,
ஊற்று - பற்றுக் கோடு, 414
ஊற்றுக்கோல், 415
ஊன் - உடம்பு, 968
ஊன்றுதல்-நிலைநிறுத்தல், 597: தாங்குதல், 615, 789
எஃகு, 759, 773
எச்சத்திரிபு, 996, 1032, 1037
எச்சம்-எஞ்சிநிற்பது, 1004, மிச்சம், 674, மக்கட்பேறு, 456
எச்சவும்மை, 527, 577, 819, 974, 986, 990, 1060
எஞ்சாமை-ஒழியாமை, 497,
எஞ்சாமை-இடைவிடாதிருத்தல்,382
எஞ்ஞான்றும்-நாடோறும், 582
எட்பகவு × உட்பகையின் சிறுமை, 889
எடுத்துக்காட் டுவமை 452, 798: எடுத்துக் காட்டின உவமை, 481
எண்-எளிமை, 991: கருமச் சூழ்ச்சி, 910,
எண்ணிடைச்சொல், 805, 836
எண்ணியார்-பகைவர், 494
எண்ணு மெழுத்தும் அறமுதற் பொருள்களைக்காண்டற்குக்கருவி, 392
எண்ணும்மைதொகல், 685
எண்ணொடு, 632, 675, 983
எண்பதம் - எளிதாகக் காட்சி கொடுக்குஞ் சமயம், 548, 991
எண்பொருள்-எளிய பொருள், 424, 760
எதிரது-வரக்கடவது, 429
எதிரதுதழீஇய எச்சவும்மை, 856
எதிர்சாய்தல்-எதிராகத்தாழ்தல், அல்லது எதிர்தலை யொழிதல், 855, 858
எதிர்தல் - ஏற்றுக்கோடல், 858
எதிர்மறை முகத்தால் விளக்கியது, 577: எதிர்மறைமுகத்தாற் கொள்ளுதல், 940
எதிர்மறை யீரிடத்தும் சேரும், 1057
எதிர்மறை யோகாரம், 1014
எரிமுன்னர்வைத்தூறு + வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கை,435
எரியாற் சுடப்படினுமுய்வர், 896

எரு, 1037-38 [763
எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்,
எல்லாரோடுங்கலத்தல், 999
எல்லை - வரம்பு, 806
எல்லைக்கேற்ப ஈதல், 477
எவ்வது-எவ்வாற்றான், 426
எவ்வநோய், 853
எழில்நலமும் பயனே, 407
எழுத்து, 392,
எழுத்தறியத் தீருமிழிதகைமை, 392
எழுந்திருக்கும் - ஒருசொல், 498
எழுபதுகோடி, 639
எழுமை, 398, 538, 835
எழுவாய்த் தொடர், 979
எழுவாய்வருவித்தல், 386,
எள்ளாமை - இகழாமை, 667
எறிதல்-பொருதல், 747
எற்று-எத்தன்மைத்து, 655
எற்றுதல்-நீங்குதல், 663
என்ப - அஃறிணைப்பன்மைப் பெயரும், உயர்திணைப்பன்மை வினையும், 392
ஏகதேசவுருவகம்-418, 627
ஏகாரந்தேற்றம், 418,
ஏக்கறுதல்-ஆசையால் தாழ்தல், 395
ஏதப்பாடு-குற்றமுண்டாதல், 464
ஏதம்-நோய், 1006
ஏதிலார், 837
ஏதில், 913, ஏதுப்பெயர், 460
ஏதுவையுட் கொண்டு நிற்றல், 1035
ஏமப்புணை, 738,
ஏமம்-பாது காவல், 738, 815
ஏமரா-காவலற்ற, 448
ஏமாக்கல்-நன்மை செய்தல், 660
ஏமாப்பு-வலிபெறுதல், 459, உதவுதல், 398, துணையாதல், 868, சேமம், 1068
ஏமுற்றவர்-பித்தர், 873
ஏயும், 1060
ஏரம்பமுதலிய கணித நூல், 392
ஏரலெழுத்து, 404
ஏர்-அழகு, 1053
ஏழாவது இறுதிக்கட்டொகல், 845
ஏழை-அறிவிலான், 873
ஏற்றல்-எதிர்தல், 861
ஏற்றியுரைத்தல், 389, 419, 424, 617, 705
ஐ-தலைவன், 771: அசைநிலை, 1058
ஐந்தனுருபு உறழ்பொருவு, 460
ஐம்புலன், 422,
ஐப்பகுதி, 941
ஐயுறாதவடிவு, 585
ஐவகைத் தொழில், 538
ஒடுநீடல், 632
ஒட்டல்-தாக்குதல், 499
ஒட்டார்-பகைவர், 679: இகழ்வார், 967
ஒட்டு, 475
ஒட்பம்-அறிவுடைமை, 425
ஒண்பொருள் - நன்னெறியால்வரும் பொருள், 760
ஒண்மை - அறிவுடைமை, 404
ஒத்தவலியுடையான் செயுந் திறம், 675-77
ஒத்தாரவை, 717-8
ஒப்பாரி-ஒப்பு, 1071
ஒப்பனை, 692
ஒப்பிலார்-மனம் பொருந்துதலில்லாதவர், 812
ஒப்புரவு-உதவுகை, 971, 974, 983, 480
ஓரால்-செய்யாமை, 662
ஒருசொல், 561, 627,
ஒருமை-ஒருபிறப்பு, 835
ஒருபொருட்கிளவி 563
ஒருபொருட்பன்மொழி, 863
ஒருமைமகளிர் - கற்புடைமகளிர், 974
ஒருவந்தம்-ஏகாந்தம்,563, நிலைபேறு, 593
ஒருவுதல்-ஒழிதல், 652
ஒரூஉவெதுகைத்தொடை, 522
ஒல்குதல் - தளர்தல், 597, 662
ஒல்லாக்கால், 673
ஒல்லுதல் - உடம்படுதல், 1064
ஒல்லும்வாய் இன்னது, 673
ஒல்லும்வாய்-இயலுமிடம், 673, 789
ஒல்லை - கடிதின், 564, 826
ஒல்வது, இயல்வது, செய்தக்க தொழில்: 472 (இதில் துணைவலிதவிர மற்றை மூன்றுவலிமைகளும் அடங்கும்.
ஒழியத்தகும்வினை, 463-65
ஒழுகுதல் - நடத்தல், 444
ஒழியிசை, 540

ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் × இழுக்கலுடையுழி பூற்றுக்கோல், 415
ஒளி-புகழ், தாமுளராயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை, 556, 653, 971, 870: புகழ்வடிவு, 970
ஒளியார் - அறிஞர், 714
ஒளியின்னது, 698, 971
ஒள்ளியவர் - அறிவுடையர், 487
ஒறுத்தாற்றும் - வருத்தும், 579
ஒறுப்பு மூவகை, 549, 550
ஒற்கம் - தளர்ச்சி, 414
ஒற்றர்மூவரை ஒருபொருள்மேல் விடுதல், 589,
ஒற்றுடல், 589
ஒற்றி - மறைந்துண்டு, உய்த்துணர்ந்து: 927
ஒற்றுமைத்துணை, 861
ஒற்றும் நூலும் மன்னவன்கண், 581,
ஒன்றல் - கூடுதல், 886
ஒன்றன்வினை · பிறிதொன்றன்மேலேற்றப்படுதல், 944
ஒன்றுமை - பகைமை, 886
ஒன்றியார் - உட்பட்டார், 886
ஒன்று கூறுவார்போல ஒன்று கூறுதல், 940
ஒன்றே, 805, 836
ஒன்னார் - பகைவர், 608, 630
ஓதல் - 653
ஓசாரம்-அசைநிலை, 987, 990
ஓட்டு-புறங்கொடுத்தோடுகை, 775
ஓச்சுதல், 544
ஓம்புதல் - ஒழிதல், 506, 612, 861: உலோபஞ் செய்தல், 626
ஓர்தல் - ஆராய்தல், 541
ஓவாப் பிணி, 734
கஃசு-காற்பலம், 1037
கசடறக்கற்றல், 391
கசடு, 717, 845
கடவுட் பூசை, 736
கடன்-இயல்பு, 981
கடன்கொண்டான் தோன்றப் பொருள் தோன்றும், 693
கடா - ஐயுறுதல்: கடுக்குமென்பதன் மறை: 585
கடிதல் - விலக்குதல், 658
கடிதோச்சல், 562
கடுகி - குறைந்து, 564
கடுஞ்சொல், 386
கடுத்தது-மிக்கது, 706: (கடி-பகுதி.)
கடுத்தபின்-சந்தேகித்தால், 693, (கடி-பகுதியென்பர் அடியார்க்கு நல்லார்.)
கடுத்தல்-ஐயுறல்: "கடா"-585
கடுமொழி, 567
கடை-முடிவு, 663: இழுக்கு, 998
கடைக்குறைதல், 422, 1052
கடைக்கூட்டல்-முயன்று சேர்த்தல், 1060
கடைக்கொட்கச் செய்தல் இன்னவாறென்பது, 663
கடைத்தும் - 'து' பகுதிப்பொருள் விகுதி, 637
கடைபோதல், 402
கடைப்பிடித்து, 944
கடைமுறை-முடிவு, 792
கட்டளை-உரைகல், 986, கட்டளைக்கல்-உரைகல், 505, 972
கட்டளையன்னவட்டாரங்கு, 401
கட்டியங்காரன், 514
கணிகம், 630
கணிகையர், 813
கணிதம், 392
கண் - கண்ணோட்டம், 566: எதிர், 1055: கணு, 576: இடம், 573
கண்சாய்தல் - அறிவுதளர்தல், 927
கண்ட - செய்யத் துணிந்த, 668
கண்ணஞ்சா, 500
கண்ணறுதல்-தாட்சிணிய மின்மை, 833
கண்ணன்னார், 1061
கண்ணிமைத்தல் தோற்புக்குறி, 775
கண்ணீருட் படை யொடுங்கும், 828
கண்ணோடாதார திழிபு, 576-77
கண்ணோட்டத்தோ டியையாதகண் பயனில்லை × பாடற் றொழிலோ டியையாதபண் பயனில்லை, 573
கண்பாடு - உறக்கம், 1049
கதியைந்து, 814
கதவுதல், 896
கந்து-பற்றுக் கோடு, 507
கயப்பூப்போல வேறுபடுதல், 42
கயவர் × அறைபறை, 1076
கயவர் குற்றமிகுதி 1071

கயவர் கொடுக்கும்விதம், 1077-8
கயவர் பழிமுதலியவற்றிற்கு அஞ்சார், 1072 [1079
கயவர் பிறர்செல்வங்கண்டு பொரூர், கயவர் வேண்டிய செய்வர், 1073
கரப்பிடும்பை, 1056
கரவு, 1068
கருதலளவை, 930
கருத்தளக்கும் அளவைகள், 710
கருமமுமுள்படா, 391: கருமம்-தொழில், 578, 818, 1021
கருவியின்றெழில் வினைமுதல்மேல், 546
கருவியேகருத்தாவாவது, 1020
கலக்கம் - துன்பம், 627
கலத்தினும் காலினும், 731
கலந்தீமையால் பால்திரிதல் × பண்பிலான் பெற்றசெல்வம் கெடுதல், 1000
கல்லாதமேற் கொண்டொழுகல், 845
கல்லாதவர் × களர், 406
கல்லாதவர் கடையர், 395
கல்லாதவர்கண் புண், 393
கல்லாதவன் தகைமை சொல்லாடலாற் கெடும், 405
கல்லாதான் சொற்காமுறுதல் × முலையிரண்டு மில்லாதாள்பெண்காமுறுதல், 402
கல்லாமா, 814
கல்லார்கட் பட்டதிரு, 408
கல்வி - 383
கல்வி எழுமையு முதவும், 398
கல்வியால் உலகும் தாமும் இன்புறுவது, 399
கவரிமா × மானம்வரின் உயிர் நீப்பவர், 969
கவறு-சூதாடு கருவி, 935: சூது, 920
கவிகை, 389
கவுள், 678
கழகம் - சூதாடுங் களம், 935
கழல், 777
கழறுதல், 448, 784
கழாக்கால்பள்ளியுள்வைத்தல் × சான்றோர் குழாத்துட் பேதைபுகல், 840
கழி - மிக்க, 657
கழிகண்ணோட்டம், 432
கழிபேரிரையான்கணை × இழிவறிந்துண்பான்க ணின்பம், 946
கழிய - மிக, 404
களரின் நரி களிறுகளை அடும், 500
களர் × கல்லாதவர், 406: சேற்று நிலம், 500
களன், 730
களி - கள்ளுண்டு களித்தல், 923
களித்தானுக்குக் காரணங் காட்டுதல் × ரீருள்மூழ்கினுனைத் தீத்துரு வுதல், 929
களிறு, 500, 774: களிறு புண்பட்டாலும் பாடுன்றும் × உரவோர் ஏதைவிடத் தொல்கார், 597
கள்ளுண்பார் கஞ்சுண்பவர் × தஞ்சினர் செத்தாரின் வேறல்லர், 926
கள்ளைச் சான்றோரா லெண்ணப்பட வேண்டாதாருண்க, 922
கற்பவை, 391
கற்றற்குத்தகநிற்றல், 391
கற்றாரோ டேனையவர் × விலங்கொடு மக்கள், (மறுதலையுவமை) 410
கன்னின்றுனைந்தை, 764
காக்கை கூகையைப் பகலில்வெல்லும், 481
காக்கைகரவரக்கரைந்துண்ணும், 527
காடி, 1050
காடுகொன்றுநாடாக்கி, 1032
காட்சி - தெளிவு, 654
காட்சி கருத்து ஆகமம், 51 அதி-அவ.
காட்டுப்படை, 762
காண்டலென்னும் அளவை - 496
காணுச்சினம், 866
காணுதல் - தன் வயமாக்குதல், 565
காத்தல்-முன்னறிந்து பரிகரித்தல், 421
காதன்மை - அன்புடைமை, 507
காப்பாற்றும், 388
காமக்கலன் - விரும்பியேறும் மரக்கலம், 605
காமம் வெகுளி உவகை மூற்றக் கடியுங்குற்றமல்ல, 440
காமராதிகள், 44 - அதி.
காமுறுதல் - விரும்புதல், 399
காய்தல் - கோபித்தல், 707 [625
காரணங் காரியத்தின்மே னிற்றல், காரணத்தாற்கூறல், 1023

காரணத்தின்மேலிடல், 933
காரணப்பெயர் காரியத்திற் காதல், 81 அதி-அவ.
காரிகை - அலங்காரம், 777
காரியங்களில் உத்தமமத்திம அதமங்கள், 461 [627
காரியங் காரணத்தின்மே னிற்றல் - காரியங் காரணத்து ளடக்கப்படுதல், 689
காரியத்தாற்கூறுதல், 928
காரியத்தைக் காரணமாக்கல், 708
காலத்தைநோக்கி மடிசெய்தல்வேண்டா, 1028
காலத்தோடெய்த வுணர்தல், 516
காலமறிதற் பயன், 482-84
காலனுங் காலம் பார்க்கும், 893
கால் - சக்கரம், 496: மூலை, 959: மூதல், 1030
காவற் சாகாடுகைப்பார், 415
காவலன், 560
காழ்த்த - முதிர்ந்த, வைரங் கொண்ட, 879; காழ்த்தல் - முதிர்தல், மிக அதிகமாதல், 760
கானமுயலெய்த அம்பு, 772
கீடத்தமை, 959
கிழக்கு - கீழ், 488
கிழமை-உரிமையாற் செய்தவை, 801
கிழவன், 1039
கிளத்தல், 715
கிளைஞர், 796
கீழறுத்தல், 883
கீழ் × கரும்பு, 1078
கீழ்களின் ஆசாரத்திற்குக் காரணம் அச்சம் அல்லது அவா, 1075
கீழ்நீர், 737: கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரு வுதல் × களித்தானைக் காரணங் காட்டுதல், 929
கீழ்நிடா-தெதையாது, 801
கூடங்கர்-குடில், 890
குடி-குடும்பம், 601: காடு, 381
குடிகளஞ்சுமவினை செய்வான் ஆயுள் முதலியன இழத்தல், 564,
குடிகளையணைத்தல், 544
குடிசெய்தல் - குடியை யுயரச்செய்தல், 1025
குடிசெய்வாரிலாத குடியின்குற்றம், 1030
குடிசெய்வார்க் கில்லைப்பருவம்-1028
குடிதீஞ்தல்-குடியுயருதல், 1022
குடிப்பிறந்தாரியல்பு, 951-3
குடிப்பிறந்தார்கட் குற்றம் × விசும்பின்மதிக்கண்மறு, 957
குடிபிறந்தார் கோடிபெறினும் குன்றுவசெய்யார், 954
குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும், 1043
குடிமடிதல், 604
குடிமை-குடிப்பிறப்புக்குத்தக்க ஒழுக்கம், 608
குடியோம்பல்இன்னதென்பது, 390
குணங்குற்றங்களோகாடற்கருவி, 505,
குணம், 420
குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன், 422
குரை - இசைகிறை, 1045
குலத்தியல்பு வாய்ச்சொல்காட்டும் × நிலத்தியல்பு மூலைகாட்டும், 959
குலமலை, 848
குழவி, 757
குழாம், 840
குறிப்பறிதற்கருவி, 706-8
குறிப்பறியாரதிழிபு, 704-5
குறிப்பறிவாரது சிறப்பு, 701-3
குறிப்பாலிகழ்தல், 1072
குறிப்புச்சொல், 711
குறிப்புமொழி, 487, 1029
குறிப்புருவகம், 1030
குறிப்பெச்சம், 411, 415, 503,574, 618, 627
குறும்பு, 735
குறை - இன்றியமையாப் பொருள், 612: குறை-வேண்டுவதாய சக்தி, 680
குறைவேண்டினூர், 386
குற்றங்களாறு, 44 அவ.
குற்றமறைத்தல்-குற்றத்தையில்லாதாக்குதல், 846
குற்றமறைப்பானுடம்பு இடும்பைக்குக் கொள்கலம், 1029
குற்றமாயமானம், 384
குன்ற-கெட, 898
குன்றண்ணூர்-அருந்தவர், 898
குன்றுவிளக்கம்-ஈத்தாவிளக்கு, 601
குன்று, 965

குன்றினேயார், 965
குன்றேறியானேப்போர் காணுதல் × தன்கைத் தொன் றுண்டாக வினை செய்தல், 758
கூகை, 481
கூடாநட்பிடை யொழுகுமாறு, 830
கூடுதல் - சென்சொத்தல், 765
கூம்புதல்-மூகம்வாடுதல், 425
கூர்ங்கோடு, 599
கூலி, 619
கூலிப்படை, 762
கூழ்-பொருள்,554,381: உணவு,745
கூறவேண்டுமோ, 641
கூற்றத்தைக் கையால் விளித்தல் × ஆற்றுவார்க்கின்னு செயல், 894
கூற்று - மாளப்பண்ணுவது, 1050
கூன்கையர், 1077 [601
கெடுதல்-பெயர் வழக்கமில்லேயாதல்,
கெழுதகைமை - உரிமை, 700: உரிமையாற்செய்வன, 802
கெழுமல் - நட்பாடல், 820
கேட்டல்-உட்கோடல், 808: ஏற்றுக் கோடல், 648
கேட்டாரைப் பிணிக்குங் குணங்கள், 643
கேட்டினுமுண்டோருறுதி, 796
கேணி, 396
கேண்மை - நட்பு, 709, 782, 809
கேளார் - பகைவர், 643
கேள் - நட்டார், 808: அந்தாங்கன், 519
கேள்போற் பகைவர், 882
கேள்வி தளர்ச்சிக் கூன்றுகோல், 414: கேள்வியால் தோட்கப்படாத செவி, 418
கேள்வியுடையார் × தேவர், 413
கை - கைத்தொழில், 935: செயல், 925: ஒழுக்கம், 832
கைகூடுதல், 484,
கைசெய்து - கையால் தொழில்செய்து, 1035
கைதூவுதல் - கையொழிதல், 1021
கைத்து - கையிலுண்டாய பொருள், 593
கைப்ப - பொறுதாக, 389
கையறுதல், 836, 925
கையாறு - இடும்பை, 627
கையிகந்த - மிக்க, 567
கொக்கின்குத்து × பகைவர்மேல் தப்பாமற் செல்லுதல், கொக்கு கூம்புதல் × மாற்றரசர் மேற்செல்லாதிருத்தல், 490
கொடாதான் செல்வம் × தமியளாய் மூத்தாளின் மிகுநலம், 1007
கொடியவர்=ஆதாயிகள், 550
கொடியாரைக் கொலேயா லெறுத்தல் × பயிர்க்குக் களேகட்டல்,550
கொடிறு - கதுப்பு, 1077
கொடுங்கோலனுட்டில் வாழுங் குற்றம், 557-58
கொடுங்கோன்மைக்குற்றம், 551-52
கொடுத்தல் - தானம், 467 [867
கொடுத்துங் கொளல்வேண்டும்,794,
கொட்க - புலப்பட, 663
கொட்பு - திரிபு, 789
கொம்பர், 476
கொல்லும்-களேயும், 879
கொள்கலம், 1029
கொளப்படுதல் - நன்கு மதிக்கப்படுதல், 699
கொள்கை - ஒழுக்கம், 1019
கொற்றம் - வெற்றி, 583
கொன்றிட - வெட்டிச்சாய்க்க, 1030
கொன்று - அழித்து, 638
கோடியுண்டாயினுமில், 1005
கோடியுறும், 1061
கோடின்றி நீர்நிறைந்த குளவளா × அளவளாவில்லாதான் வாழ்க்கை, 523
கோடு - கரை, 523
கோடுதல் - மாறுபடுதல், 520
கோட்டிகொளல்-சபையிற் சொல்லுதல், 401, 720
கோட்பாடல் - கடிக்கப்படல், 890
கோப்பெருஞ்சோழன், 785
கோலொடு நின்றிரவு × வேலொடு நின்றனிடுவெனல், 552
கோல்-தண்டனே, 552: முறை, 554
கோள் - துணிபு, 646
கோளேக்கி வாழுங்குடி × வாளேக்கி வாழுமூலகு, 542
சங்கேதம்-சாதிகடவுளேப்பற்றிப் பலர்க்கு உளதாம் ஒற்றுமை, 735
சந்தி=பொருத்தல், 633

சந்திவிக்கிரகங்கள், 69அதி.அவ.
சலசாதிகள், 725
சலத்தாற் பொருள்செய் தேமாக்கல், 660
சலம் - தீவினை, 660: வஞ்சனை,956
சாகாடு - வண்டி, 475
சாக்காடு இரந்து கோட்டக்கது, 780
சாதிதருமம், 549
சாதிபற்றி ஒருமையாற் கூறல், 850
சாதிப்பெயர், 410, 433, 573, 627, 663, 664
சாதி யுயர்ச்சி யுடலோ டொழிதல், 409 [1052
சாதியொருமைப் பெயர், 600, 648,
சாத்தியம், 949
சாந்தி-தீவினைப் பரிகாரமான வைதிகச்சடங்கு, 442
சாப்புல்லல், 829
சாமதானங்கள் ஐவகைய, 467
சாமமுதலிய உபாயங்கட்கு இடமாகு பவர்இன்னாரின்னா ரென்பது,470
சாரி பதினெட்டு, 814 [449
சார்பு-அரண்முதலியன,900: துணை,
சார்புபற்றினும் பெரியாரைப்பிழைத் தாருய்யார், 900
சால்பு-அமைதி, 1064
சால்புநாணினால்தான் பயனெய்தும் × உயிர் உடம்பினால்தான் பயனெய்தும், 1013
சால்பு பிறர்தீமை சொல்லா நலத்தது ×நோன்மை கொல்லா நலத்தது, 984
சால்பூன்றியதூணைந்து, 983
சான்றாண்மை × கடல், 989
சான்று-சாட்சி, 1060
சான்றோர்-அறிஞர், 657
சான்றோர் குழாத்துட் பேதைபுகல் × கழாக்காற் பள்ளியுள் வைத்தல், 840
சிங்கநோக்கு, 861
சிதைவு-அழிவு, 597
சிறத்தல்-அளவின் மிகுதல், 531
சிறப்பு-வெகுமானம், 590
சிறப்பும்மை, 469, 492, 521, 748
சிறுபொருள் - முயற்சி சிறிதாய பொருள், 870
சிறுமை-காமம், 431: துன்பம்; 934
சிறை-அரண், 569
சிறைநலம்-அரணினமைதி, 499
சிற்றினம், 46-அதி.
சினனே காமங் கழி கண்ணோட்டம், 432
சினைவினை முதன்மேனிற்றல், 475, 576, 823
சின்னாட்பல்பிணிச்சிற்றறிவினர்,391
சீரார்-தவர், 900
சீடம்-வாய்த்த இடம்,சீரி, 821
சீர்-புகழ்,தகுதி,934,962: வீரமிகுதி, 778: பிரபுசக்தி, 499
சீறுதல், 899
சுங்கம், 756
சுட்டுப்பெயர் அதின் என நிற்காமை, 636
சுதைவண்ணம், 714
சுமத்தல், 488
சுருக்கம், 963
சுருங்கைவழி, 749
சுழலும்-சூழ்ந்து நிற்கும், 777
சுழன்றும்-திரிந்தும், 1031
சுற்றந் தழுவுதல், 53-அதி.
சுற்றமிலாரை நம்பலாகாது, 507
சூதினால் வென்ற பொருள் × மீன் விழுங்கிய தூண்டிற் பொன், 931
சூது-சூதன், 940
சூழ்ச்சி-விசாரம், ஆலோசனை, 671
சூழ்தல்-ஆலோசித்தல், 1024
சூழ்வார்-அமைச்சர், 445
செங்கோல், 390
செங்கோல் செலுத்தினா னெய்தும் பயன், 544-47
செஞ்சொல், 711
செப்பம்-நேர்மை, 951
செப்பின் புணர்ச்சி × உட்பகையுற்ற குடி கூடியது, 887
செம்பொருள், 712
செம்மல்-தருக்கு, 880
செம்மாத்தல் - இறுமாத்தல், 1074
செயற்கை-வினைசெய்யுந் திறம், 637
செயப்படு பொருள் வருவித்தல்,777
செயப்பாட்டுவினையெச்சம் வினைகோடல், 888
செயிர்ப்பவர்-பகைப்பவர், 880
செய்வினை தூய்மைக்கு மனந்துய்மையே காரணம் 455

செரு - போர், 569 [பு, 878
செருக்கு-பெருஞ்செல்வம்,860:களிப்
செலவுவுரவின்கண் வருதல்-1045
செல்லிடம்-அதிகாரம் நடக்குமிடம், 498
செல்லுதல் - நீங்குதல், 769
செல்வக்களிப்பு, 431
செல்வத்துட் செல்வம்,411 [க்கு,389
செவிமைப்ப - புலன் மாறிவந்த வழ
செவிக்குணவு, 412 [411
செவிச்செல்வம் செல்வத்துள் தலை,
செவியாற் சுவையுணர்தல், 420
செவிலி, 757
செவ்வி - (கேட்டற்றகுஏற்ற காலம், 565, 712
செவ்விய கோல்போறலிற் செங்கோல், 55-அதி. அவ.
செவ்வெண், 645 [டம், 1076
செறிவு - அடக்கம், 684, 715: கூட்
செறுநர் - பகைவர், 488 [ருள், 759
செறுநர் செருக்கறுக்கும் எஃகு பொ
செறுபகை, 734
செறுவார் பகைவர், 421, 843, 869
செற்றம், 823
செற்றார் - பகைவர், 446
செற்று - வருத்தி, 1009
சேட்டை - மூதேவி, 617
சேணின்பம் - உயர்ந்த இன்பம், 869
சொல்நூல் - இலக்கணநூல், 725
சொல்லின் மூவகை, 711
சொல்லுதல் மாட்டாமைதிழிப்பு,649 50
சொல்லுதல் வல்லாரது சிறப்பு, 647-58
சொல்லினிலக்கணம், 643
சொல்லெச்சம், 572
சொல்லேருழவர், 872
சொல்வணக்கம், 827
சொல்வென்றி, 648
சொற்களின்கடை - சொற்கள் பொருள்தரும்வகை, 712
சொற்சுவை, 420
சொற்பின்வருநிலை, 965 [645
சொற்பொருட்பின் வருநிலை, 623,
சோர்வு-சொல்லவேண்டுவதை மறப்பாலொழிதல், 647
சோர்வு-தன்வயத்தவல்லாமை,930
சோர்வுபடும் - கெடும், 405
ஞாலம், 648, 1016, 1058
ஞான்று-பொழுது, 864
தகர், 486
தகுதிவேறுபாடு குடிப்பிறப்புமுதலிய வற்றுள்வரும், 644
தகை-மேம்பாடு: அழகு ஆடல் முதலியன, 916: பெருமை, 897:குணம், 643
தகைமை - மதிப்பு, 405: பெருமை, 874
தக்காங்கு - ஒருசொல், 561
தங்கணத்தால்லார்முன் கோட்டிகொளல் × அங்கணத்து ஞக்கவமிழ்து, 720
தஞ்சமெளியன், 863
தண் - இழிவு, 548 [467
தண்டம்-தண்டனை, 567: ஒறுத்தல்,
தண்டம் படைவகுப்பின்வகை நான்கனுள் ஒன்று: (மற்றவைமண்டலம் அசங்கதம் போகம் என்பன;) 767
தண்டவிரி பதினேழு, 767
தண்டோபாயஞ்செய்யுங்காலம்,673
தண்பதம்-தாழ்ந்தபதவி, 548
தமக்குப்பயனுள்வழி நட்புச்செய்வார் தீமை, 812,
தமர், 529, 837
தமர்மை, 814
தமியளாய் மூத்தாளின் மிகுநலம் × கொடாதார் செல்வம், 1007
தம்மவர்பகைப்பின் தீமைசெய்தும்அது தீர்க்கல் அறநூல் துணிவு, 656
தருக்குதல் - மேற்கோடல், 935
தருசொல் தன்மையுணர்த்துதல், 859
தரும்-இடவழுவமைதி, 457, 853
தலைக்கூடுதல், 394
தலைச்செல்லுதல்-தொடங்குதல்,561
தலைப்பிரிதல்-நீங்குதல், 810
தலைப்பெய்து-சேர்த்து, 394: கண்டு, 405
தலைமக்கள், 770
தலைமைபற்றிப் பொதுச்சொல் ஒன்றன்மேல் நிற்றல், 841
தலையளி-முகமலர்ந்தினியகூறல்,390
தலையாய காவல், 891
தலையினிழிந்த மயிர் × நிலையினிழிந்த மாக்தர், 964
தலைவருதல், 767

தவமுதுமகள், 501
தவம், 842
தவல்-அழிதல், 853
தழிஞ்சி, 773
தளர்ந்தகுடிகளிடம் அரசன்செய்யும் முறை, 390
தள்ளா-குறையாத, 731 [596
தள்ளுதல்-தவறுதல், கூடாதிருத்தல், தறுகண்-அஞ்சாதவீரம், 773
தறுதல்-இறுகவுடுத்தல, 1023
தற்செய்தல்-தன்னைப் பெருக்குதல், 878
தன்மையாற் கூறியது பிறர்க்குப் புலனுகாமையால், 598
தன்வலியறியாவழிப் படும் இழுக்கு, 473-4
தாக்குறும் எதிர்ப்படும், 599
தாங்குதல்-தடுத்தல், 767
தாமரையினுள், 617
தாம் தாழ்தற்கு ஏதுவாவன செய்யாமைச் சிறப்பு, 964
தார், 767
தாவில், 853
தாழ்ச்சி-காலதாமதம், 671
தாளாண்மை-முயற்சி, 613
தாளாண்மையில்லாதான் வேளாண்மை × பேடிகைவாளாண்மை, 614
தாள்-முயற்சி, 617, 1065
தாற்பரியம், 509
தானசாமங்கள் ஐவகைய, 467
தானஞ்சும்மினே, 569
தானடங்காப்பேதை, 834
தீணைவிராய் எண்ணப் படுதல், 920
திண்மை-வலிமை, 988
திரிபுரமழித்தமை, 900
திரு-அறுவகையங்கம், 616:செல்வம், 568: இலக்குமி, 920
திருவுடைமன்னரைக் காணில், 39-அதி. அவ.
திறப்பாடு-கூறுபாடு, 640
திறம்-தகுதி, வேறுபாடு, 644
திறனறிந்து சொல்லுதல் அறனும் பொருளுமாம், 644
தினை, 433
தீ-வயிற்றுத்தீ, 947
தீக்காய்வார் × வேந்தர்ச்சேர்ந்தொழுகுவார், 691
தீங்கலத்துப்பால் × பண்பிலார் செல்வம், 1000
தீநட்பினது ஆகாமை, 811
தீமை-குற்றம், 984 [674
தீயெச்சம் × வினைபகை யெச்சங்கள்,
தீர்தன் மாலையது, 482
தீர்த்தயாத்திரை முதலியன விரதவொழுக்கத்திற்சேர்ந்தவை, 586
தீர்ந்தார், 612
துணிவு-ஆண்மை, (உபசாரவழக்கு), 383:சித்தாந்தம்,662: கலங்காமை, 669
துணை-சுற்றம் நட்புமுதலாயின, 868
துணைவலியிருவகை, 861
துப்பு-வலிமை, 895 [1050
துப்புரவு - நுகரப்படும் பொருள்கள்,
துயில், 605
துய்க்க, 944
துரவு, 737
துருவுதல், 929
துலை, 986
துவர-முற்றவும், 944, 1050
துவ்வான்-வலியிலன், (துவ்வு-வலிமை), 862
துளக்கு-சலனம், 699
துளங்காது-சலியாது, 668
துளி-மழை, 557
துனி-வறுமை, 1010, வெறுப்பு, 769
துன்பத்துட் கைவிடுந் தமர் × அமரகத்தாற்றறுக்கும் கல்லாமா, 814
துன்பம் - முயற்சியான்வரும் இடுக்கண், 629
துன்னுதல்-நெருங்குதல், பொருந்துதல், 494
தூ-பற்றுக்கோடு, 455
தூக்கம்-காலநீட்டிப்பு, 668
தூக்குதல்-ஆராய்தல், 480
தூங்காமை - காரியங்களில் விரைவுடைமை, 383
தூங்குசிறைவாவலுறை, 1030
தூங்குதல்-காலநீட்டித்தல், 672
தூண் × வினைவிழைவான், 615
தூண்டில், 931
தூது இருவகை, 69 அதி. அவ.
தூதுமூவகை-வடநூலார்மதம், 687
தூர்த்தர் - காமுகர், வஞ்சகருமாம்: 817, 46-அதி. அவ.

தூவாத-வெய்ய, 685
தூவெள்ளறுவை, 1051
தூறு, 435
தெய்வத்தான் வருந் துன்பங்களும் நீக்கும்வழியும், 442
தெய்வம்-ஊழ், 619, 1023
தெரிந்து செயல்வகை, 47-அதி.
தெரிந்து தெளிதல், 51-அதி.
தெரிந்துவினையாடல், 52-அதி.
தெருண்டவறிவினவர், 787
தெவ், 639
தெளியப் படாதாரைத் தெளிதலாலி ழுக்கு, 506-10
தெளிவு-நம்பிக்கை, 502
தெறல்-கிக்கிரகம், 582
தெறுபொருள், 756
தெற்றெனல் - தெளிதல், 581
தேக்கின் றூய்மை, 942
தேயமிடையிட்டவற்றை,393
தேர், 496, 667
தேர்ச்சி - சூழ்ச்சி, 635
தேவர் × கயவர், 1073: × கேள்வி யுடையார், 413
தேறற்க, 509
தேறுக-ஐயுறவில்லாதிருக்க, 509
தேறுதல்-நம்புதல், 506 [படுதல்,766
தேற்றம் - கலங்காமை, 513: தேறப்
தேற்றேகாரம், 1071 505, 521
தேனும்நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல், 944
தொகுதல்-ஒருங்குகூடுதல், 545
தொகை-கூட்டம், 711
தொகையாக-ஒருங்கே, 1043
தொகையொடுமுற்றும்மை, 402
தொடர்-நட்பு, 450
தொடர்பு-நட்பு, 806
தொடி-பலம், 1037
தொடைநோக்கிவிகாரம், 522, 524
தொடைநோக்காத பாடம், 1058
தொலைவு-கேடு, 806
தொல்காப்பியனார், 1043
தொல்லை-பழமை, 806
தொழிலுவமம்-490,571,1000,1076
தொழுதகையுட்படை, 828
தோட்கப்படுதல், 418
தோய்தல், 917 [1043
தோல் - குடிவரவுக்கு ஏற்றசால்,
தோல்வி, 986
தோற்றம்-புகழ்,1059: உடம்பு,1003
தோற்றுவாய்செய்தல், 1000
நகல்-நட்பு, 860
நகுக-மகிழ்க, 621
நகுடன், 899
நகுவிப்பாரதுநட்பின்றீமை, 817
நகை-விளையாட்டு, 871
நகைவகையர், 817
நசை-ஆசை, 1043
நச்சப்படாதவன் செல்வம் × நடுஜூ ருள் நச்சுமரப்பழம், 1008
நச்சுதல், 1004
நஞ்சு, 580, 926
நடர், 46-அதி. அவ.
நடுகல், 771
நடுக்கு, 654
நடுஜூருள் நச்சுமரப்பழம், 1008
நடை-போக்கு, 712
நட்டபின்வீடில்லை, 791
நட்டல் மிகுதிக்கண் இடித்தற்பொரு ட்டு, 784
நட்பிற்குக்காரணம் ஒத்த உணர்ச்சி, 785
நட்பு × உடுக்கையிழந்தவன்கை, 788
நட்பு அகநகநட்பது, 786
நட்புப்பகைவர்விளைக்குக்காப்பு, 781
நட்புவகை, 781
நம்பன் சிலவாய், 771
நயத்தக்க-விரும்பத்தக்க, 580
நயமில-பகைமை, நயம்-ஈரம், அன்பு, 998
நயம்-நீதி,860:இன்பஞ்செய்தல்,783
நயன்-ஒழுகலாறு, 912
நரி, 500
நலம்-குலநலம், 958: புகழ், 916
நல்குரவிற்றுன்பம், 1045
நல்குரவு, 1043
நல்குரவுடையான் தாயானும்பி றன் போல நோக்கப்படும், 1047
நல்லதனலனும் தீயதன்றீமையும்இல் லையென்போர், 46-அதி. அவ.
நல்லவை, 719
நல்லார்-தேவர் அருந்தவர் முதலாயி னோர், 905
நல்லார் கட்பட்டலறுமை, 408
நல்லார்தொடர்கைவிடல் தீது, 450

நல்லாள் - சிறந்தவீரர், 746: உயர்ந்த குணமுடையாள், 924, 1040
நவரசங்கள், 420
நவியம்-கோடாரி, 1030
நவிலல்-கற்றல், 783
நள்ளாவிடல்-பொருந்தாதுவிடுக, 912
நற்பாலவை - தூயவினையான் வந்தவை, 659
நற்றவஞ்செய்வார்க்கிடம், 731
நனைகவுள்யானை, 678
நன்கு-நல்வினை, 458: செல்வம், 534: நல்லபொருள்கள், 719
நன்மை தீமைகள் இகலாதார்க்கும் இகலினர்க்கும் முறையேவருதல், 850
நன்முனஉபாயம், 469
நன்றி-நன்மை, 685: அறம், 994
நன்றியில் செல்வம், 101-அதி. [1072
நன்று அறம், 908: உறுதியாவன,
நன்னுதலாள், 908
நா, 641, 1066
நாகரிகம்-கண்ணோட்டம், 580
நாடாதுநட்டலாகாது, 791
நாடாவளம், 739
நாடிய-ஆராய்ந்துணர்ந்த, 518
நாட்டிற்கணி ஐந்து, 738
நாட்டின்குற்றம், 739 40
நாட்டுக்குக்கேடு, 732
நாட்டுப்படை, 762
நாணில்லாமக்களியக்கம் × நாணுடைப்பாவையியக்கம், 1020
நாணில்லாதிழிவு, 1018-20
நாணென்னு நல்லாள், 924
நாண்இன்னாது, 951
நாநலம், 641
நாரின்மை, 958
நார்-அன்பு, 833
நால்வகையுபாயங்கள், 442
நால்வகைவலி, 471
நாவாய், 496
நாள், 520, 553, 776, 808
நாற்கதி, 627
நீச்சநிரப்பு அறிவினைக் கொல்லுதல் × பொச்சாப்புப் புகழினைக் கொல்லுதல், 532
நிச்சம்-நித்தியம், 532
நிதானம், 948
நியதி, 1023
நியாயம்-தர்க்கசாஸ்திரம், 725
நிரத்தல்-நிரல்படக்கோத்தல், 648
நிரப்பு-வறுமை, 532, 1048
நிரம்பியநூலின்றிக் கோட்டிகொளல் × அரங்கின்றிவட்டாடுதல், 401
நிரனிறை, 926
நிலக்குப் பொறை, 570, 572, 1003
நிலத்தியல்பால் நீர்திரிதல் × இனத்தியல்பாலறிவு திரிதல், 452
நிலத்தியல்பு கால்காட்டும் × குலத்தியல்புவாய்ச்சொல் காட்டும், 959
நிலம் × இல்லாள், 1039
நிலவரண், 742
நிலை-திண்மை, 789
நிலைமக்கள், 770 [னிழிந்தமயிர், 964
நிலையினிழிந்த மாந்தர் × தலையினிழல், 742
நிறை - மறைபிறரறியாமை, 864
நிறைபிறை நீர்மை × நீரவர்கேண்மை, 782
நின்றுவற்றுதல், 815
நீடு-நீட்டித்தல், 566
நீதிநூல், 388
நீரரண், 742
நீரவர்கேண்மை × நிறைமதி, 782
நீர்-ஜலம், இயல்பு, 881
நீழல்-தண்ணளி, 1034
நுணங்கியகேள்வி, 419
நுண்மாணுழைபுலம், 407
நுதல்-நெற்றி, 1011
நுவலாநுவற்சி, 475
நுனி, 476
நூல்-சாஸ்திரம், 401: எண்ணம், 440
நூழிலாட்டு, 774 [தொடர்பு, 783
நூற்பொருள் × பண்புடையாளர்
நெஞ்சம், 706
நெஞ்சு, 1053 [605
நெடுநீர்-நீட்டித்துச்செய்யும் இயல்பு,
நெடுமொழிவஞ்சி, 771
நெருநல், 1048
நெருப்பினும் நிரப்புக்கொடிது, 1049
நெருப்பைநெருப்பாகவேகருதுக: 602
நெறியல்லாஇரவு, 1064
நேரா - கூடாமல், 821
நேர்-உவமவுருபு, 550 [733
நேர்வது - உடன்பட்டுக்கொடுப்பது,

நோதுமல் - பகையும் நண்புமாகாத பிறர், 59-அதி.
நோக்கு-கருத்து, 976
நோதக்க-வெறுக்கத் தக்கனவற்றை, 805
நோதக்கசெய்யுஞ்சிறுபட்டி, 1074
நோயாளியுழைச் செல்வான் வகை நான்கு, 950
நோயுற்றவன்வகை நான்கு, 950
நோய்-துன்பம், 429
நோய்க்குக்காரணம், 948
நோய்தீர்ப்பான்வகை நான்கு, 950
நோய்தணிக்கும்வாய், 948
நோவற்கநொந்ததறியார்க்கு, 877
நோன்மை கொல்லாநலத்தது, 984
பகடு-எருது, 624
பகலிற்கூகையைக்காக்கைவெல்லும், 481
பகல் - கூடாமை, 851
பகுதி-பிரிவு,851: அமைச்சர் முதலாகிய அங்கம், 568
பகுதிப்பொருள் விகுதி, 637
பகுதியஞ்சும்வினை, 568
பகுதி வினையெச்சப்பொருள்படுவது, 466
பகுதி வினையெச்சமானது - 'மாண்' 407
பகை களையாவழிப் படு மிழுக்கு, 880
பகைவரகத்துமென்மைமேவற்க, 877
பகைவர்க்கம், 44-அதி.அவ.
பகைவர் செய்யுந் துன்பங்கள், 446
பகைவர்மாட்டு அகமும்புறமும் வேறுதல் தகும், 829
பக்குவிடுதல், 1068
பசி, 734
பசுமட்கலத்துள்நீர்பெய்துஏமஞ்செய்தல் × சலத்தாற் பொருள் செய்துஏமாக்கல், 660
பஞ்சபூத பரிணமம் யாக்கை, 972
படியுடையார்-பூமிமுழுதும் ஆண்டவர், 606
படிவம், 586
படுதல்-புண்படுதல், 597
படுபயன்-பெரும்பயன்,676 [762
படைகளுள் மூலப்படை நிறத்தல், படைத்தகை - படையின் தோற்றப் பொலிவு 768
படைமுதலிய ஆறங்கங்கள், 381
படையரசரங்கங்களுட் சிறந்தது,762
படையறுவகை, 762
படைவகுப்பு, 767
பட்டடை × நேரா நிரந்தவர்கட்பு:821
பட்டி, 1074
பணிதல் மாற்றுரை மாற்றும் (சான்றோரின்) படை, 985
பண்கள் தூற்றுமூன்று, 573
பண்டம், 475
பண்ணல் முதலிய எட்டு, 573
பண்பிலான் செல்வம் × தீங்கலத்துப்பால், 1000
பண்பு-நற்குணம், 783
பண்புடையாளர் தொடர்பு × நூற்பொருள், 783
பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல், 100-அதி. அவ.
பதணப்பரப்பு, 745
பதம் - செவ்வி, சமயம், 548, 991: பதவி, 651
பத்தடுத்த தீமை, 450
பதுமுகன், 771
பயக்குறையில்லை, 612
பயிருக்குச் செய்யவேண்டுந் தொழிலைந்து, 1038
பரந்து-திரிந்து, 1062
பரிகாரவினை, 795
பரிணமவின்பம், 669 [502
பரிதல்-தொலைத்தல்,862: அஞ்சுதல், பருகுவன்னவருகாலோக்கமொடு811
பருவம்-காலநியதி,1028: காலம்,482
பல்லவை, 728
பழகிய-தொன்றுதொட்டுவந்த, 937
பழங்குடி, 955
பழமை - பற்றறுக்காலத்துச் செய்த உபகாரம், 521
பழவினையான் வரும் பிணிகள் தீராமை, 95 அதி.அவ.
பழி, 506, 865
பழுது, 639
பளிங்கு அடித்ததுகாட்டும் × முகம் நெஞ்சங்கடித்ததுகாட்டும், 706
பள்ளி, 840
பறை, 1076
பற்றல் - கொள்ளுதல், 747
பற்றறுத்தல்-தரித்திராதுதல், 521

பற்ரு-வெறுப்பன, 852
பற்ரூர்-பகைவர், 865
பற்று - தொடர்பு, 506: செல்வம், தூணை, 606: பற்றிய இடம், 748
பற்றுள்ளம், 438
பனை, 433
பன்மை இழித்தற்கண் வந்தது, 476
பாட்டற்கியையாதபண் × கண்ணேட்டமில்லாத கண், 573
பாடற்ரொழில்கள் இன்னவை, 573
பாடு-பெருமை, 409, 597: இயல்பு, 995
பாத்தி-வளரும் நிலம், 465, 718
பாம்போடு குடங்கருளுறைதல் × உடம்பாடிலாதவரோடுவாழ்க்கை, 890
பாரிப்பார்-பரப்புபவர், 916
பார்-வண்ணிலம், 1068
பாலையாழ், 573
பாவத்தின்நிறம் கருமை, 617
பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க, 652-6
பாவை, 407
பான்மையக் குறழ்ச்சி, 551
பிசிரந்தையார், 785
பிடித்து-பிடியின்க ணுள்ளது, 1037
பிணம், 913 [570
பிணித்தல் - கூட்டிவைத்திருத்தல், பிணியளவு, 949
பித்தப்பகுதி, 941
பிரத்தியேக பந்தாந்வயம், 567
பிழைத்தல், 417, 772, 779, 896, 1019
பிறப்பு, 835, 1002
பிறிதினவிற்சியணி, 714
பிறிது மொழிதல், 475, 476, 495, 496, 500, 599, 763, 879
பிறை, 782
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று, 395
பீடு வலிமை,968: பெருமிதம், 1014: மேம்பாடு, 1021
பீலி, 475
பீழித்தல்-வருத்தல், 843
பீழை-துன்பம், 658: வருத்தம், 843, 839
புகழ் ஈவார்கண்ணது, 1004
புகழ்ச்சிக் குறிப்பு, 1011
புகழ்மை, 533
புகழ்வது போலப் பழித்தல், 839, 1073
புட்பகைக் கேவாஞகலின், 778
புணர்ச்சி-ஒருதேயத்தராதல், 785
புண், 575, 776
புதை-அம்புக்கட்டு, 597
புத்தேளுலகு - தேவலோகம், 966
புரந்தார்-காத்தவரசர், 786
புரளவிடல், 755
புரிதல், 541, 607: மிகுதல், 977
புருஷார்த்தம்-உறுதிப்பொருள், 391
புரை-உயர்வு,அறிவு, 919: துவாரம், 1070
புரோகிதர், 442
புலம்-அறிவு,407: நூற்பொருள்,716
புலவர், 394
புலவர்பாடும் புகழுடையார், 970
புலன் மாறிவந்த வழக்கு, 389
புலி, 599
புலியையடைந்த புல்வாயினம், 571
புல்லவை யின்ன தென்பது, 719
புல்லறிவாளர், 842
புல்லறிவின் குற்றம், 841
புல்லா வெழுத்தின், 401
புல்லென்னும் - புல்லியதாகும், 790
புழுதி, 1037
புறங்காத்தல், 549
புறங்கொடுத்தல்-முதுகு காட்டுதல்: எதிர்முகமாக நில்லாமை, 924
புனல், 495, 737
புனை-விலங்கு, 836
புன்கேண்மை, 815
பூரியர்களாழுமளறு × வேளையர் தோள், 919
பெட்டக்கது, 732
பெட்டாங்கு, 908
பெண்டிர், 913, 920
பெண்ணேவல் செய்வார்க்கு அறம் முதலிய இல், 909
பெண்மனம்பேதின் ரொருப்படுப்பே னென்னும், 822
பெயரெச்சவடுக்கு, 448
பெயர்த்துரை, 944
பெரியார்ப் பிழைத்தொழுகுவார் உய்யார், 896
பெருகும்-மிகும், 604

பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பு, 968 [431
பெருமிதம் - மேம்பாடு, பெருமதிப்பு,
பெருமை,பொருள்படை என இருவகைத்து, 466,874 [ளிர்,974
பெருமை யுடையார் × ஒருமைமக
பெறுவது கொள்வார்-பொதுமகளிர்: (பெறுவது - விலை),813
பெற்றத்தால், 524
பேடிகை வாளாண்மை × தாளாண்மை யில்லாதான் வேளாண்மை, 614
பேடிகை வாள் × அவையஞ்சுமவன் கற்ற நூல், 727
பேணுமை-பகைமை, 866 [தல், 633
பேணிக் கொளல் - தழுவிக்கொள்ளு
பேணுதல் நன்குமதித்தல், 892
பேததண்டங்கள்மூவகைய, பேதம் - வேறு படுத்தல், 467
பேதை தன்கையொன் றுடைமை பெறுதல் × மைய லொருவன் களித்தல், 838
பேதையார்நட்பு மதிப்பின்னீர,782
பேய்கண்ட செல்வம் × வெருவந்த செய்வான் செல்வம், 565
பேய்ப்பிறப்பு உணவுகளுளவாகப்பசித்து வருந்துவது, 1002
பேரத்தாணி, 386
பேராண்மை-மிக்கஆண்தன்மை,773: மானம், 962
பேரிரையாளன், 946
பைங்கூழ் களைகட்டல் × கொடியரைக் கொலையி னொறுத்தல்: 550
பொச்சாத்தல்-மறத்தல், 719
பொச்சாப்புப் புகழினைக் கொல்லுதல் × நிச்சநிரப்பு அறிவினைக் கொல்லுதல், (பொச்சாப்பு)-மறவி, 532
பொச்சாவாமை - சோர்வுசெய்யாமை 54-அதி.
பொதுநோக்கு - ஒரு தன்மையராக நோக்கும் நோக்கம், 528
பொதுவுணர்வு, 453
பொத்துப்படுதல் - புரை படுதல், கெடுதியுண்டாதல், 468
பொய்படுதல்-கெடுதல், 836
பொருட்சுவை-காமம்மூத்லிய ஒன்ப [ரு, 420
பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்கம் × இருட்டறையிலேதில் பிணந்தழுவுதல், 913
பொருட்பொருளார், 914
பொருணூல், 656
பொருண்மை-பொருள், 638
பொருளாற்பொருள்செய்தல், 437
பொருளின்பங்கள் இல்லறத்தின் வழிப்படுவன,பொருட்.உரைப்பா.
பொருளின்றொழில்கள் பண்பின் மேலேற்றப்படுதல், 778
பொருளுபதை, 501
பொருளோச்செய்க, 759,
பொருள்-விஷயம், பயன்,423: சிறத்தது, 741: பண்பி, 974: உபமேயம், 957
பொள்ளென-விரைவாக, 487
பொறி-விதி, 618 [இன்னவை, 743
பொறிகள் - இயந்திரங்கள்: அவை
பொறை-பாரஞ்சுமத்தல், 1027
பொற்கைப் பாண்டியன் வரலாறு, 547
பொன்-இரும்பு, 931
பொன்றுமை-இறவாமை, 886
போகம்-சேனைவகை, 767
போகமிழத்தல், 1039
போகாறு-செலவழியும் வழி, 478
போற்றல்-காத்தல், 693
போற்றார்-பகைவர், 493
போற்றுதல்-தெளிய அறிதல், 942
போற்றுவார்-காப்பார், 891
மகளிர்மனம் × இனம்போன்று இனமல்லார்கேண்மை, 822
மகனேமுறைசெய்தான், 547
மக்கட்பண்பில்லார் × மரம், 997
மக்களான்வருந்துன்பங்களும் நீக்கும் வழியும், 442
மடங்கு, 1036
மடி-வயிறு, உள், 603: சோம்பல், 601: ஆடை, 1023
மடிமை-காரியக்கேடு, 608
மடுத்த-விலகிச்சென்ற, 624
மட்பகை × உட்பகை, 883
மணற்கேணி தொட்ட அளவிற்றூர ஊறுதல் × அறிவு கற்றனைத்தாக ஊறுதல், 396
மணி, 742

மண்டபம் வாவிசெய்குன்று இளமரக் காமுதலியசெய்தல், 385
மண்டலவிரி, 767
மண் மாண்புஇ பாவை × நுண்மா ணுழைபுலமில்லான், 407
மதம்-செல்வக்களிப்பு, 431
மதமானங்களின்தீமை, 439
மதலை-தூண், தாங்குவது, 449 [615
மதலையாய்மற்றதன் வீழுன் றியாங்கு,
மதி-சந்திரன், 957
மதிநன்மை, 915
மந்திரங்கற்பம்என்பன ஓதுதல், 560
மந்திரத்திற்கு அங்கம் ஐந்து, 631
மந்திரி, 639
மயக்கஇரணிறை, 410
மயிர், 964
மயிர்நீப்பின் வாழாக்கவரிமா × மான மம்வரின் உயிர்விடும்மக்கள், 969
மரக்கண்ணேமண்ணுள்வார்கண்,576
மரப்பாவை யியக்கம் × நாணில்லா மக்களியக்கம், 1020
மரப்பாவையின் செலவு வரவுகள் × இரப்பாரை யில்லா ஞாலத்தின் செலவுவரவுகள், 1058
மரம் × ஊக்கமில்லாதவர், 600
மருங்கு-கிளை, 526
மருந்தில்கூற்று, 765
மருந்துகாற்கூற்று, 950
மருந்தோ, 968
மருவுக-பழகுக, 800
மருளான்மாணப்பிறப்புஆம், 1002
மலர்தலையுலகிற்குயிரரசன், அரசிய ல். அவ.
மலை, 737, 742
மலைதல்-மேற்கொள்ளுதல், 657
மழைக்குவேள்விவேண்டும், 560
மழைத்துளிபோல வந்தீண்டல், 416
மறம்-தறுகண்மை, 78-அதி. அவ.
மறவி, 605
மறனிழுக்காமானம், 384
மறன்-வீரம், 384
மறுதலைப்பெயர்வருவித்தல், 395
மறுதலையடை, 496
மறை-இரகசியம், 590, 695: உபதே சப்பொருள், 847
மறைத்தல்-படவொட்டாமற்காத்தல், 1029: கடிதல், 846
மறைந்தவை - மறையச் செய்த தொழில்கள், 587
மற்றெல்லாம் - மற்றையாரெல்லாம், 1033
மனத்திட்பம், 661
மனந்தூய்மைக்கு இனந்தூய்மையே காரணம், 455
மனுச்சோழன்வரலாறு, 547
மனையாளதுஏவல்செய்தல், 907
மனையாளேயஞ்சுதல், 903
மன்-ஒழியிசை, 540, 990, 996
மன்ற-ஒருதலையாக,நிச்சயமாக, 867, 880
மன்று-பலர் கூடுஞ்சபை, 820
மன்னர்விழைப, 692
மன்னவன் கண், 581
மன்னுயிர், 457
மா-கருமை, 617
மாசு-இருள், 601: குற்றம், 800
மாட்சி-பெருமை: அமைச்சியலுக்குப் பண்பாகுபெயர், 646
மாடு-பொருள், 400
மாண-தப்பாமல், 883
மாணாத-ஏலாதன, 867
மாணாதபகை, 88 அதி. அவ.
மாணாப்பிறப்பு-பேய்ப்பிறப்பு, 1002
மாணார்-பகைவர், 823
மாணாதல்-திருந்தாதல், 604
மாண்பயன்-பேரின்பம், 606: அறம், 901
மாண்பு இறந்த மானம், 432
மாதவர்நோன்பும்மடவார்கற்பும்,543
மாத்திரையர், 406
மாந்தர், 396, 452
மாயமகளிர்முயக்கு அறிவினரல்லார் க்கு அணங்குதாக்கு, 918
மாய்ந்து கெடும், 601
மாரி, 1010
மாலை-இயல்பு, 863, 864, 1035
மாழ்குதல்-கெடுதல், 653
மாரூநீர்-வற்றுதநீர், 701
மாறு-பகை, 861
மாறுகொள்ளா வுணவு, 944
மாற்ற ஒழிக்க, 609
மாற்றம் உத்தரம், 725
மாற்றலர்-பகைவர், 749
மானங்கருதல், 1028

மானந்தீரவரும் இரவுகூடாது, 1067
மானம்வரி னுயிர் நீப்பவர் × கவரிமா, 969
மிகலூக்குதல் - வெல்லக் கருதுதல், 855, மிகுதலை மேற்கொள்ளுதல், 858
மிகல்-வெற்றி, 857
மிகுதல் - மேன்மேலூக்குதல், 856
மிகுதி- வேண்டாத செய்கை, 784
மிகை - மிக்கன, 504
மிக்க பெயல், 732
மிக்கவுவகைக் காரணம், 531
மிடற்றின்கண் எடுத்தல் முதலிய ஐந்து, 573
மிறை-வருத்தம், 847
மீக்கூறு மன்னனிலம், 386
மீன்விழுங்கிய தூண்டிற் பொன் × ஒருவன் சூதினால்வென்றபொருள் 931
முகடி-மூதேவி, 617, 936
முகம்-தந்தம்,ஆகுபெயர், 500: வேறுபாடு or விகற்பம், 749
முடித்தல், 517
முடுகிவினவுதல், 695
முட்டா-தவறாமல், 547
முதல்-மூலதனம், 449
முதனிலைத் தொழிற்பெய ரடியாக வந்த வினையெச்சம், 536
முதனிலைத் தொழிற்பெயர், 607
முதுக்குறைந்தது - அறிவுமிக்கது, 707
முதுவர்-தம்மின் மேம்பட்டவர், 715
முந்து, 603
முந்தையிருந்து நட்டோர்கொடுப்பின், 580
முயக்கம், 913
முயல், 772
முயற்று, முயற்சி, 616
முரண்-வலிமை, மாறுபாடு, 567
முரண்தொடை, 395
முரிந்து-இழந்து, 899
முலையிரண்டு மில்லாதாள் பெண் காமுறுதல் × கல்லாதான்சொற்கா முறுதல், 402
முள்ளொடு முட்பகைகண்டிடல், 450
முறை-கிரமம், 640
முறைசெய்து, 388
முறை செலுத்தாதானதுகேடு, 548
முறை வேண்டினார், 386
முற்றத் துறத்தல்-இறத்தல், 1050
முற்றியவர் - முற்றுகை செய்தவர், 748
முற்று-சூழ்தல், 748
முற்றுதல் வளைத்தல், 491
முற்றுதற்கா மிடம், 491
முற்றும்மை, 992
முற்றெச்சம், 1001
முனிவரைப் பிழைத்தற்குற்றம்,896-9
முனைமுகம்-போர்த் தொடக்கம், 749
முன் பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை- 'நுனிக்கொம்பர்' 476
மூதேவி கருநிற முடையவள், 617
மூத்த அறிவுடையார், 441
மூலப் படை, 762
மூவகைச் சொல், 711
மூவகைத்துன்பம், 892, 940, 1021
மூவகை யாற்றலும் நால்வகை யுபாயங்களும் வினைக்குக் கருவி, 483
மெய்ப்பொருள் - நீதிநூற் பொருள், 857
மெய்யறியாமை-தேகம் பரவசமாதல், 925
மெய்யாதல்-நிலைபெறுதல், 423
மெலியான் செய்யுந் திறம், 678-80
மெல்லவெறிதல், 562
மேலாயவர்க்குவேலி நாண், 1016
மேல்நீர், 737
மேவார்=மேவுவார்: விகாரம், 1059
மேற்கொளீஇ, 938
மேற்பிறந்தார், 409
மைந்து வலி, 539
மையலொருவன் களித்தல் × பேதை தன்கையொன்று உடைமைபெறுதல், (மையல்-பித்து), 838
மோதிமுள்ளொடு முட்பகை கண்டிடல், 450
மௌலம், 762
யாக்கை, 942
யாண்டுபலவாகநரையில மாயினேம், 399
யாப்பியம், 949
யாப்பு-கட்டுதல், 777
யானைபிழைத்தவேல், 772
யானைபலிக்குஅஞ்சும், 599

யானையால் யானையாத்தல் × வினையால் வினையாக்கிக்கோடல், 678
யானைவீரர்வேலேந்தியிருப்பர், 772
வகுத்தல்-பிரித்துவிடுத்தல், 385
வகை-உரியகூறு, 953: உறுப்பழகு, 897 [709
வகைமை-வேறுபாட்டின் தன்மை,
வகையறச் சூழ்தல், 465
வஞ்சப்புகழ்ச்சியணி, 1072, 1073
வஞ்சர், 824
வஞ்சினம் முடிப்பான்புக்கு முன்னே சாவினுந் தோல்வி யாகாமை, 779
வடசொற் றிரிபு, 636, 890
வடநூலார், 381,467,525,550,631, 732, 687, 762, 993
வடநூற் பொருண்மை, 501
வடநூன் முறைமை, 924, 961
வடு-பழி, 502, 549, 1079 [689
வடுமாற்றம் - தாழ்வான வார்த்தை,
வட்டாடல்-உண்டை யுருட்டல், 401
வணக்கம், 827
வண்ணங்கள் எழுபத்தாறு, 573
வரிசை நோக்கு-அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்குதல், 528
வருத்தம்-முயற்சி, 468 [த்தல், 623
வருத்துதல்-இளைத்து விட்டிடனினை
வருமுன்னார்க் காவாதான் வாழ்க்கை × எரிமுன்னர்வைத்தூறு,435
வருவாயுட் கால் வழங்குதல், 477
வரைவிலா மாணிழையார், 919
வரைவின் மகளிர் தோள் × பூரியர்களாழு மளறு, 919
வலி நான்கு, 471
வலியது சிறப்பு, 673
வல்லறிதல்- விரைந்தறிதல், 582
வழக்கு- நன்னெறி, 991
வழங்குவது-கொடை, 955
வழி-பின், 461: நீதிநூல், 865
வழிபட்டார்- அனுசரித்தவர், 400
வழிப்படுதல் - சேர்தல், பொருட். உரைப்.
வழிமுறை-பரம்பரை, 508
வழியுரைப்பான், 688
வழிவந்த - தொன்றுதொட்டுவந்த, 807
வழுக்காமை-ஒழிவின்றி, 536
வழுக்கு-பயன்படாதது, 776
வளம்-செல்வம், 480
வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிதல் × உணர்வதுடையார்முன் சொல்லல், 718
வளர-பரப்பு, 523 [941
வளி முதலா வெண்ணிய மூன்று,
வளைத்தகை-முறுக்கியகை, 1077
வறம் - பெய்யாது வறுமைப் படுதல், 1010
வறுமை அறிவைக் கெடுக்கும், 532
வறுமையினும்செல்வமின்னாது, 408
வன்கணவன்-திண்மை யுடையவன், 689
வன்கண்ணரல்லார்க்கு வாளாற் பயனில்லை × அவையஞ்சுபவர்க்கு நூலாற் பயனில்லை, 726
வன்கண்ணர்-அஞ்சாத்தன்மையுள்ளசுத்தவீரர்: × ஆற்றுவார்: 1027
வன்பாடு-முரட்டுத்தனம், 1063
வாணிகர்க்குச் சிறுபான்மை உரிய உழவு, 104-அதி. அவ.
வாத செற்பவித்தண்டைகள், 725
வாதுவன், 422
வார்த்தை, 512
வாயின்-வாய்த்தல், 536 [420
வாயுணர்வு - மத்தியமபதலோபன்,
வாய்-உபாயம், 673, 948:இடம்,624
வாய்சோர்தல்-வழுப்படச்சொல்லல், 721
வாய்ந்தமலை, 737
வாய்மை-வேறுபடாமை, 953
வாரி-பொருள்வரும்வழி, 512
வாழ்க்கை-செல்வம், 523
வாளாபெயர், 563, 610
வாள்போற்பகைவர், 882
வானம்-மேகம், 559
வாளெக்கிவாழு முலகு × கோளெக்கி வாழுங்குடி,542: (நோக்கல் நோக்கத்து இரண்டாவதேயன்றிமூன்று ஐந்தாம்வேற்றுமைகளும் வருதற்கு உதாரணம்: தொல். சொல். 93 - சேனாவரையம்)
வான்சுதை வண்ணம் - அறியாமை: (லட்சிதலட்சணை), 714
விக்கிரகம்-பிரித்தல், 633
விசும்பின் மதிக்கண் மறு × குடிப்பிறந்தார்கட்குற்றம், 957 [ம்: 817

விடமர்-நேர்நெறியற்றவர்: விடருமா
விடர், 46-அதி. அவ.
விடுதல்-வெளிப்படுத்தல், 695
விடுமாற்றம் - சொல்லிவிட்ட வார்த்தை, 689
விதனம், 566, 920
விதிப்பொருட்டாதல், 960
விதிமுகத்தாற்கூறியது மும்முப்பெரும லெதிர்மறைமுகத்தாற்கூறல், 41-அதி. அவ.
வியல்-அகலம், 716
வியாழவெள்ளிகளது துணிபு தொகுத்துக்கூறினர், 662
விரதவொழுக்கம்-தீர்த்த யாத்திரை முதலாயின, 586
விருப்பு-அன்பு, 522
விலங்கொடு மக்கள் × கற்றூரோ டேனையவர், (மறதலேயவமை) 410
வில்வணக்கம், 827
விழித்த கண், 775
விழுச்செல்வங்கல்வி, 400
விழுப்புண், 776
விழுமம்-துன்பம், 663 [804
விழைதகை-விழையப்படுந் தன்மை,
விழைதல்-நன்குமதித்தல், 630
விழையார்-பகைவர், 810
வீயுள் உழவர்மேல் நின்றது, 731
விற்றற்குரியராதல் - அடிமையாதல், 1080
வினை-போர், 673 [612
வினைகெடல்செயல்-தவிர்ந்திருத்தல்,
வினைசெய்வார்-பரிவாரம், 385
வினைபகையெச்சம் × தீயெச்சம், 674
வினைமாட்சியில்லாமை, 750
வினையால் வினையாக்கிக் கோடல் × யானையால் யானையாத்தல், 678
வினையில-பயனில்லாதவை, 697
வினையுடையான்-முயல்பவன், 519
வினையுயிர்புக்குழிப்புகும், 398
வினையெச்சம் பெயரெச்சவினைகொண்டது, 463
வினைவிழைவார் - பொருள்செய்தலே முயல்வார், 901
வினைவிழைவான் × தூண், 615
வினைவேறுசொல்வேறுபட்டார், 819
வீடெய்துநன்னெறி 716
வீறு-சிறப்பு, 749: பெருமை, 904
வீற்றிருக்கை-அரசிருக்கை, 789
வெகுளுதல்-பகைத்தல், 870
வெண்மை - அறிவுமுதிராமை, 844
வெய்து-வீரைவில், 569
வெருவரல்-அஞ்சுதல், 57-அதி. அவ.
வெல்வதாண், 748
வெளிப்படை, 853
வெளியார்-அறிவற்றவர், 714
வெளிறு-அறியாமை, 503
வெள்ளத்தனைய மலர்நீட்டம் × உள்ளத்தனையதுயர்வு, 595
வெள்ளத்தனையவீடும்பை, 622
வெள்ளை-அறிவில்லான், 714 [ம், 761
வெறுக்கை-மிகுதி, 600, 971: செல்வ
வெறுக்கையுள் - ஏழனுருபு கூட்டிப் பிரித்தற்பொருளது, 761 [993
வெறுத்தக்க - நெருங்குதற்கு ஏற்ற,
வெற்றிக்குச் செங்கோலே காரணம், 546
வேட்டம்-566
வேட்டல்-விரும்பல், 643 [தற்கு, 907
வேண்டாகூறல், வேண்டியது முடித்
வேண்டாவுயிரார், 777
வேந்தற்குஇயல்பானகுணங்கள், 382
வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார் × தீக்காய்வார், 691
வேந்தன்-இந்திரன், 899
வேந்து-இந்திரபதம், 899: அரசு, 681
வேரார்-வெகுளார், 487
வேலார், 683
வேலாள், 500
வேலி-பாதுகாவல், 1016
வேல் யாரைப்போர்க்குரியது, 772
வேழம்பர், 817 [613
வேளாண்மை - உபகாரஞ் செய்தல்,
வேறல்ல-பொது, 1012
வேற்றுமை-வேறுபாடு, 972
வேற்றுமைத்துணை, 861
வேற்றுமையமக்கம், 499, 515
வேற்றுமையணி, 600
வையகம், 547

காமத்துப்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின்

அட்டவணை.

களவியல்.

109.	தகையணங்குறுத்தல்	2	113.	காதற்சிறப்புரைத்தல்	31
110.	குறிப்பறிதல்	10	114.	நாணுத்துறவுரைத்தல்	37
111.	புணர்ச்சி மகிழ்தல்	17	115.	அலரறிவுறுத்தல்	44
112.	நலம்புனைந்துரைத்தல்	25			

கற்பியல்.

116.	பிரிவாற்றுமை	51	125.	நெஞ்சொடுகிளத்தல்	104
117.	படர்மெலிந்திரங்கல்	59	126.	கிறையழிதல்	109
118.	கண்விதுப்பழிதல்	65	127.	அவர்வயின்விதும்பல்	114
119.	பசப்புறுபருவரல்	70	128.	குறிப்பறிவுறுத்தல்	122
120.	தனிப்படர்மிகுதி	77	129.	புணர்ச்சிவிதும்பல்	126
121.	கினைந்தவர்புலம்பல்	81	130.	நெஞ்சொடுபுலத்தல்	132
122.	கனவுகிலையுரைத்தல்	87	131.	புலவி	136
123.	பொழுதுகண்டிரங்கல்	93	132.	புலவிநுணுக்கம்	141
124.	உறுப்புநலனழிதல்	99	133.	ஊடலுவகை	147

காமத்துப்பாலின் பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
32	34	அவன்மனத்தின்க	அவண்மனத்தின்க
52	34	தஞ்சைவாணனுரை	தஞ்சைவாணன்கோவையுரை
57	1	ககள	ககசு
75	14	வசை	வகை
85	14	எண்ணபடி	எண்ணப்படி
113	36	யழிதலாலும்	யழிதலாதலாலும்
122	13	அவன்	அவள்
123	28	(முகிழ்ப்பினுளதாய்ப்)	முகிழ்ப்பினுளதாய்ப்
125	31	மேன்மேலு	மென்மேலு
133	33	(முன்	(முன்)
,,	34	டாக்கி),	டாக்கி,
145	12	மீண்டும்.	மாற்றி

திருக்குறள்.

பரிமேலழகருரை.

காமத்துப்பால்.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய இன்பங் கூறுவா னெடுத்துக்கொண்டார். ஈண்டு இன்ப மென்றது - ஒருகாலத்தொருபொருளான் ஐம்புலனு நுகர்தற்சிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும் 'சுவைபல வென்று கூறுவார் கூறுக; யாங் கூறுவது இன்பச்சுவை யொன்றினையுமே' என இதனையே மிகுத்துக்கூறினான். இது, புணர்ச்சி பிரிவென இருவகைப் படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடலென்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றி யோதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்க ணடக்கினா ரென்க.

(சு - ரை.) காமத்துப்பால் என்பது - காமத்தைப்பற்றிய பகுதி என இரண்டனுருபும் பயனுந்தொக்க தொகையாக விரியும். காமமாவது-பொருள் துணைக்காரணமாக ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலன்களும் நுகர்தற் சிறப்புடைத்தாய இன்பம்.காமவின்பமென்பதனைக் காமமாகிய இன்பமெனக் கொள்ளாது காமத்தாற் பெறலாகு மின்ப மென்றுகொண்டு, காமமென்பது- மனத்துநிற்குங் காத லென்றலும் உண்டு. ஶ்ருங்காரம் வீரம் கருணம் அத் புதம் ரௌத்ரம் ஹாஸ்யம் பீபத்ஸம் வத்ஸலம் பயாநகம் ஶாந்தம் என்று ஒரு சார் அணியியலில்வல்லோரால் பத்துச்சுவைகள் [சுவை - ரஸம்.] கூறப்பட் டுள்ளன: (இவை - முறையே தமிழில் உவகை பெருமிதம் அழுகை மருட்கை வெகுளி நகை இளிவரல் அன்பு அச்சம் அமைதி எனப் பெயர்பெறும்.)இவற் றுள் வத்ஸலமென்பது பெரும்பாலாராற் கூறப்படவில்லை. "ஶ்ருஜ்ஜார வீரகருணாத்ஜுத ரௌத்ர ஹாஸ்ய - ஸீஹத்ஸவத்ஸஜுஹயா நக ஶாந்தநாமாந: ஆமாஸிஷுத்ஶரஸாநவரெவயஞ்ஜு- ஶ்ருஜ்ஜாரமெவரஸநாத்ரஸமாமநாம:" என்பது, போசமகாராசன் இயற்றிய ஶ்ருங்காரப்ரகாஶமென்ற நூலில் முதல்ப்ரகாஶத்திலுள்ளஶ்லோக மாகும். இது சிருங்காரம். புணர்ச்சியை ஸம்போகம் என்றும், பிரிவை-விப்ர யோகம் அல்லது விப்ரலம்பம் என்றும் கூறுவர். ஏனை-(முதற்பொருள் கருப் பொருள் உரிப்பொருள் என்னும்மூன்றனுள் உரிப்பொருளைச்சேர்ந்த புணர் ச்சிபிரிவுகள்தவிர)மற்றையனவான.'பொருட்பாகுபாட்டினை அறம்பொருள் இன்பம் என வடநூல்வழக்குப்பற்றி யோதுதலான்' என்றது-தென்மொழி வழக்குப்பற்றிக்கூறின், இன்பம் அகம் என்றும், ஏனை அறம்பொருள்கள் புறம் என்றும் இங்ஙன் பாகுபடுத்துக் கூறத்தக்கன ஆதலால் அங்ஙன் கூறாமையால் என்ற கருத்தது. அவ்வாறே-வடநூல் வழக்குப்பற்றிக் கூறிய அவ்வகையாகவே. அவற்றை - இருத்தல் இரங்கல் ஊடல் என்றவற்றை.

மறைமலையடி MARAIMA LIBR MA

முதலாவது

களவியல்.

இனி, அவைதம்மையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற் றைச் சுவை மிகுதிபயப்ப உலகநடையோடு ஒப்பும் ஒவ்வாமையு முடையவாக் கிக் கூறுகின்றார். அக்கைகோளிரண்டனுள்ளும் களவாவது பிணிமூப்பிறப்பு க்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் பருவமும் குலனும் குணனு மன்பும் முதலியவற்றாற் றம்மொளாப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவுமன்றிப் பால்வகையால் தாமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது. அதனை, ஏழதிகாரத்தாற் கூறு வான் றொடங்கி, முதற்கண் தகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

(கு - ரை.) களவியலென்பது - களவைப்பற்றிய இயலென்று விரியும். அவை தம்மையே - புணர்ச்சிபிரிவுகளையே. களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் எனப் பெரும் பாலும் புணர்ச்சியே வருதலும், கற்பொழுக்கத்தில் பொருட்பிரிவு ஓதற்பிரிவு காவற்பிரிவு பகைதணிவினைப்பிரிவு வேந்தற்குற்றுழிப்பிரிவு பரத்தையிற் பிரிவு என அறுவகைப்பிரிவு வருதலும் அறிக: தொல்காப்பியனாரும் கற்பைப் பற்றிக் கூறும்போது "பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே" எனக் கூறியதுங் காண்க. ஆண்பெண்களாகிய இருவர் கண்டு காதலித்தல் என்பது, உலகத் தோடொத்தது. கூர்வேலிளைஞர் சூழவும் ஆயவெள்ளஞ் சூழவும் தலைவனும் தலைவியும் ஓர்பொழிலிடத்துச் சேர்தலும், கூர்வேலிளைஞரும் ஆயமும் வெவ் வேறு தொழிலிற் செல்லுதலும், அதனால் இவர் தனிப்படலும் முதலியன - ஒவ்வாதது என்னலாம். கைகோள் இரண்டு-களவு கற்பு என்பன. (கை என் றால் ஒழுக்கம்: கோள்-கொள்ளுதல்: எனவே, கொள்ளப்படும் ஒழுக்க மென் பது கைகோளென்பதன் பொருள். கோள் - தன்மையுமாம்.) கொடுப்பவும் அடுப்பவும் அன்றி- பெற்றோர்முதலியோர் கொடுப்பதும், உறவினர் நண்பர் முதலியோர் அடுத்திருத்தலும் என்ற இவை நோமலிருக்க. பால்வகையால்- ஊழ்வினையால். இங்ஙனந் தாமே கூடும் கூட்டத்தினைக் களவு என்பது - பெற்றோராற் கொடுத்தற்குரிய தலைவியை அவர் கொடுப்பத் தலைவன் கொள் ளாது இருவருங் கரந்த உள்ளத்தோடு புணர்வதாலாகும்: இது முதலிற் பிற ரறியாமையிருந்து கற்பின்வழி நின்று விளங்குதலாற் குற்றமின்றா மென்ப.

கoகூ - ஆம் அதிகாரம்.—தகையணங்குறுத்தல்.

அஃதாவது-பொழில்விளையாட்டுவிருப்பான் ஆயநீங்க அதன்கட்டமிய ளாய் நின்றாளை, வேட்டலிருப்பான் இளையார்நீங்கத் தமியனெய்வந்து கண் ணுற்ற தலைமகன் அவள் மனப்புத் தன்னே வருத்தமுறுவித்தலைச் சொல்லு தல். இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

(கு - சை.) மாணுக்கர் அகப்பொருளைப்பற்றித் தெரிக்துகொள்ளுமிடத்து முதன்முதலில் ஒருசரித்திரம்போல அறிந்துகொள்வது கலம். அது ஒரு மாறு:—ஓர்உத்தமபுருஷன் பரிவாரத்துடன் வேட்டையாடுதற்குப் புறப்பட்டுக் குறிஞ்சிநிலத்துச்சென்றனன, ஓர்உத்தமகன்னிகையும் தோழியருடன் பூக் கொய்து விளையாடுதற்கென்று அந்நிலத்து ஓர் பூஞ்சோலையிற்சேர்ந்தாளாக, அத்தலைவிசேர்ந்த அளவிலே, ஒவ்வொருகாரணமாகத் தோழியர் பிரிய, அக் கன்னிகை அங்குத்தனித்துநின்ற சமயத்திலே ஒவ்வொருவியாஜத்தாற் பரிவாரங்கள் பிரியத் தனிப்பட்டவளைப் அப்புருஷன் அங்கு வந்துசேர, இருவரும் ஊழ்வினைவசத்தால் இங்ஙனம் தற்செயலாய் ஓரிடத்திலே சந்தித்து, ஒருவரை யொருவர்கண்டு காதல்கொண்டு காந்தருவமணத்தாற் கூடுவர்: (இது, இயற்கைப்புணர்ச்சி முன்னுறுபுணர்ச்சி தெய்வப்புணர்ச்சி காமப்புணர்ச்சி என்ற பெயரால் வழங்கப்படும்.) இங்ஙனம் இயற்கைப்புணர்ச்சி நிகழ்தற்கு முன் தலைவனிடம் காட்சி ஐயம் தெரிதல் தேறல் என்ற நான்கு செய்திகள் நிகழும்: இவை-கைக்கிளையெனப்படும்: (கையென்பது-சிறுமை; கிளையென் பது - உறவு: ஆகவே, கைக்கிளையென்பது ஒருமருங்கு பற்றிய கேண்மை: அதாவது-ஒருதலைக்காமம்.) இத்தக்கைக்கிளையின் பின்னரே களவுப்புணர்ச்சி நிகழுமென்பதை "மெய்க்கிளையாழோர் வேண்டும்புணர்ச்சி முன், கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப" என்பதனாலும் அறியலாம்.

தகை - அழகு, அணங்குறுத்தல் - வருத்தமுறச்செய்தல்: இது ஒரு அகப்பொருட்கிளவியாதலால், அணங்குறுத்தலென்பது-அணங்குறச்செய்த தைச் சொல்லுதலைக் காட்டிற்று. ஆயம்-தோழியர்கூட்டம். அதன்கட்டமிய ளாய் - அச்சோலையில் தனிப்பட்டவளாய்: வேட்டவிருப்பான்-வேட்டையாடு வதிலுள்ள விருப்பத்தால். இளையார் - தோழரான கூர்வே லிளைஞர். கண் ணுற்ற-கண்ட. தலைமகன் தலைமகளைக் கண்ட காட்சியில் தகையணங்குறுத் தல் நிகழ்வதாதலால், களவியலில் முதலில் இது கூறப்பட்டதென்று அதி காரமுறைமைக்குக் காரணங் காண்க.

கoஅக. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

தலைமகளுருவு முதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது.

(இ - ள்.) கனம் குழை - இக்கனவியகுழையையுடையாள், அணங்கு கொல்-(இப்பொழிற்கணுறைவாளோர்) தெய்வமகளோ? ஆய் மயில் கொல் - (அன்றி) ஒருமயில் விசேடமோ? மாதர் கொல் - (அன்றி) ஒருமானுடமாத ரோ? என் நெஞ்சு மாலும்-(இவளையின்னவென்று துணியமாட்டாது) என் னெஞ்சு மயங்காநின்றது; (எ - று.)

ஓ - அசை. ஆய்மயில் - (படைத்தோன் விசேடமாக) ஆய்ந்துபடைத்த மயில்; மயிற்சாதியுள் தெரிந்தெடுத்த மயிலென்றுமாம். கனங்குழை ஆகு பெயர். கணங்குழையென்று பாடமோதி, பலவாய்த்திரண்ட குழையென்று

உரைப்பாருமுளர். எழுதலாகா வுருவுந் தன்வருத்தமும் பற்றி 'அணங்கு கொல்' என்றும், சாயலும் பொழில்வயினிற்றலும்பற்றி 'ஆய்மயில் கொல்' என்றும், தன்னெஞ்சஞ் சென்றமையும் அவளெதிர்நோக்கியவாறும் பற்றி 'மாதர்கொல்' என்றும் கூறினான்.

(கு - ரை.) களவுப்புணர்ச்சிக்குமுன் காட்சிமுதலிய கைக்கிளை நிகழுமென்று கூறினோமன்றோ: அவற்றுள் காட்சியென்பது - தலைவனுந் தலைவியும் தெய்வவசத்தால் எதிர்ப்பட்டு தம்முட் கண்ணுறுவது. ஐயமென்பது - காட்சிக்குப்பின், 'இங்ஙனந்தோன்றாநின்ற மாது திருமகள்முதலாகிய தெய்வமோ? அன்றி, மக்கட்பிறப்பினளோ?என்று ஐயுற்றுக்கூறுவது. இந்தச்செய்யுள் அங்ஙன்வந்த ஐயமாம் என்க. கனவிய - பாரமுள்ள, குழை - காதணி வகை. 'ஆய்மயில்கொல்லோ' என்ற இடத்து, 'கொல்' என்பது வினாப் பொருளைத் தந்திட்டதனால், ஓ-அசையாகும். ஆய்மயில் என்பதற்கு இரண்டு வகையாகப்பொருள்கூறுகிறார்: முதலது - ஆய்ந்துபடைத்தமயிலென்பது: இரண்டாவது - (மயிற்சாதியிலிருந்து) ஆராய்ந்தெடுத்த மயிலென்பது: இரு வகைப்பொருளிலும், ஆய்மயிலென்பது - வினைத்தொகையே. கனங்குழையென்பது - கனமாதலையுடைய குழையையுடையாள் எனப் பொருள்படும். கனங்குழையென்ற இத்தொடரில், கனம்என்ற அடைமொழியையடுத்த குழையென்பது-குழையைப்பூண்டாளைக் காட்டுவதால், ஆகுபெயர்எனப்பட்டது: அடியார்க்குநல்லார் 'அருந்திறல்'என்பதை அன்மொழித்தொகையாகு பெயரென்று உரைத்ததும் ஈங்குக் காணத்தக்கது: சேனாவரையரும் இங்ஙனமே கூறுவர். இவ்வாறுள்ளவற்றை அன்மொழித்தொகையென்னவேண்டுமேயன்றி ஆகுபெயரென்னலாகாதுஎன்று நச்சினார்க்கினியர் மறுத்துரைப்பதை, "முதலிற்கூறுஞ் சினையறிகிளவியும்"என்ற வேற்றுமைமயங்கியற்சூத்திரத்தினுரையிற் காணலாம். கணங்குழைஎன்றபாடத்தில், கணம் - திரளுதலையுடைய குழை என்க. அணங்குக்குஉரியகுணம் எழுதலாகாவுருவமுடைமையோடு வருத்தந்தருந் தன்மையென்றும், மயிலுக்குரியகுணம் சாயலுடைமையும் பொழில்வயினிற்றலும் என்றும், பெண்மகளுக்குரியகுணம்-ஆடவர்மனம் தன்னிடத்துச் செல்லுமாறு இருத்தலும் எதிர்நோக்குதலும் என்றும் அறிக. அவ்வக்குணங்களுடைமையான், தலைவியைத் தலைமகன் அணங்குமுதலியனவாக ஐயமுற்றான்: ஐயவணி. (௧)

௧௦௮௨. நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

மானுடமாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினாலாய
வருத்தங் கூறியது.

(இ - ள்.) நோக்கினாள் - (இப்பெற்றித்தாய) வனப்பினையுடையாள், நோக்கு - என்னோக்கிற்கு, எதிர்நோக்குதல்,— தாக்கு அணங்கு - தானே தாக்கி வருத்துவதோரணங்கு, (தாக்குதற்கு), தானை கொண்டு அன்னது உடைத்து - தானையையுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையையுடைத்து.

மேலும் 'அணங்குகொலாம்மயில்கொல்' என்றமையான், இகரச்சுட்டு வருவிக்கப்பட்டது. 'எதிர்நோக்குதலென்றமையின்' அது குறிப்புநோக்காயிற்று. வனப்பால் வருந்துதன்மேலுங் குறிப்புநோக்கால் வருந்துதல் கூறியவாறு. நோக்கினுளென்பதற்கு - என்னுளேநோக்கப்பட்டாளென்றுரைப்பாருமுளர்.

(கு-ரை.) தான் காட்சியிற்கண்டவோ மானுடமென்றுதெளிந்து துணிவுகொண்டதலைவன்கூற்று: அடுத்துவருஞ்செய்யுள்களும் இவ்வாறுனையே. இப்பெற்றித்தாய - ('அணங்குகொல்' என்பதுமுதலியவாக) இப்படிச்சந்தேகித்தற்குஏற்றதன்மையுள்ள. வனப்பினை - அழகை. தானை-சேனை. மேலும் - மூன்னும். கீழ்ச்செய்யுளில், "அணங்குகொல்" என்று கூறி, இச்செய்யுளில் நோக்கினுள் என்றது அந்த அணங்கையே சுட்டவல்ல தென்ற கருத்தால், அதற்கு இப்பெற்றித்தாயவனப்பினையுடையாள் என்று சுட்டாகப் பொருள்கூறினர். குறிப்புநோக்கு - மனக்கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கும் பார்வை. கீழ்ச்செய்யுளில் தான் கண்ட மாதராளின் வனப்பால் தான்வருந்தியமை கூறிய தலைமகன் இக்குறளில் அதற்குமேல் அம்மாதராளின் குறிப்புநோக்கினுல் வருந்தியமையைத் தெரிவிக்கின்றனென்க. நோக்கினுள்என்பதற்கு முதலுரை-வனப்பினையுடையாளென்பது: இரண்டாமுரை - (என்னுல்) நோக்கப்பட்டவ ளென்பது. இக்குறளை, 'புகுமுகம் புரிதல்' என்ற மெய்ப்பாட்டின தென்றனர், நச்சினர்க்கினியர். (உ)

கஅஉக. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

இதுவுமது.

(இ - ள்.) கூற்று என்பதனை - கூற்றென்று நூலோர்சொல்வதனை, பண்டு அறியேன் - பண்டு (கேட்டறிவதல்லது) கண்டறியேன்; இனி அறிந்தேன்-இப்பொழுது கண்டறிந்தேன்: (அது), பெண்தகையான் - பெண்டகையுடனை, பேர் அமர்க்கட்டு-பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து; (எ-று.)

பெண்டகை - நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னுங் குணங்கள். அவை அவ்வக்குறிகளா னறியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல்; பெயரடியாய வினை. பெண்டகையால் இன்பம் பயத்தலு முண்டேனும், துன்பம் பயத்தன்மிகுதிபற்றிக் கூற்றுக்குக் கூறினுன்.

(கு-ரை.) இச்செய்யுளும் முன்செய்யுள்போலவே நோக்கினுளை வருத்தங்கூறுவது என்பது, இதுவும் அது என்பதன்பொருள். பெண்டகை-பெண்மைக்குரியகுணம்: அவை - நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன: அவற்றுள் நாணமாவது-தகாதவற்றின்கண் உள்ளமொடுங்குதல்: மடமாவது - தெரிஞ்சுத்தக்கதொண்டுகொண்டதுவிடாமை. அச்சம்-அபூர்வமானபொருளைக்காணுதல் முதலிய நிகழும்போது அஞ்சுதல்:பயிர்ப்பு-பயிலாதபொருட்கண் அருவருத்து நிற்கும்நிலை. பெண்டகையான் என்ற இடத்து ஆனுருபு "தூங்குகையானேங்குகடையு"என்ற இடத்துப்போல உடனிகழ்ச்சிப்பொருளது.காட்சியில்

தானே கூடல் நிகழ்தற்குமுன்பும் பெண்டகைமையால் இன்பம்பயத்தலுண்டேனும், மாதரார் பெருவருத்தம் விளைத்தலே மிகுதியாயிருத்தல்பற்றி, 'கூற்றென்பதனை யினியறிந்தேன் பெண்டகையாற் பேரமர்க்கட்டு' என்கின்றான் தலைமக னென்க. கூற்று-யமன். அமர்க்கண்-அமரைச்செய்யவல்லகண்: வேற்றுமைத்தொகை: (வினைத்தொகையாயின் 'அமர்கட்டு' என்று இருக்க வேண்டும்.) கட்டு - 'கண்' என்ற பகுதியின்மேல்வந்த ஒன்றன்பாற்குறிப்பு முற்று. (௩)

௧௦௮௪. கண்டாருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

இதுவுமது.

(இ - ள்.) பெண் தகை - பெண்தகையையுடைய, பேதைக்கு - இப்பேதைக்கு உளவாய, கண் - கண்கள், கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான்-(தம்மைக்) கண்டாருயிருண்ணுந் தோற்றத்துடனே கூடி, அமர்த்தன-அமர்த்திருந்தன; (எ - று.)

அமர்த்தல்-மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியவாயிருந்தன வென்பதாம்.

(கு - ரை.) பெண்டகை - பெண்மைக்குணம்: அவை - நாண் மடம் அச்சம் பயிர்ப்பு எனக் கீழ்க்கூறப்பட்டன. அமர்த்தல் - போர்செய்யுங் குணத்தினைப்பெறுதல்: எனவே, மாறுபடுதலாயிற்று. ஏலாது - பொருந்தாதபடி. கொடியவாதல் பெண்மைக்குந்தகாது; பேதைமைக்குந் தகாதென்க.(௪)

௧௦௮௫. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர
னோக்கமிம் மூன்று முடைத்து.

இதுவுமது.

(இ - ள்.) கூற்றம் ஓ (என்னை வருத்துதலுடைமையாற்) கூற்றமோ? கண்ஓ - (என்மேலோடுதலுடைமையாற்) கண்ணோ? பிணைஓ - (இயல்பாக வெருவுதலுடைமையாற்)பிணையோ? (அறிகின்றிலேன்): மடவரல் நோக்கம்-இம்மடவரல் கண்களினோக்கம், இம்மூன்றுஉம்-இம்மூன்றன்றன்மையையும், உடைத்து - உடைத்தாயிராநின்றது; (எ - று.)

இன்பமுந் துன்பமும் ஒருங்கு செய்யாநின்றதென்பதாம். தொழில் பற்றிவந்த ஐயநிலையுவமம்.

(கு - ரை.) மடவரல் - மடமைக் குணம் வரப்பெறுதலை யுடையவள்: வேற்றுமைத் தொகையன்மொழி. மூன்றன்தன்மை—கூற்றத்தின் தன்மை-வருத்துதல்: கண்ணின்தன்மை - தாட்சிணியமுடையதாதல்: பிணையின் தன்மை - வெருவுதலுடைமை. வருத்துதலால் துன்பத்தையும், தன்மேலோடுதலுடைமையும் வெருவுதலுடைமையும்பற்றி இன்பமும், ஆக இரண்டையும் ஒருங்கே விளைக்கின்றன கண்கள் என்க. கூற்றமுதலியன கண்கட்கு ஒப்பாவது வருத்துதல்முதலிய தொழிலா லாதலால், இது தொழிலுவம

மாம். கூற்றமோ கண்ணே பிணையோ என்று ஐயவோகாரம்பெய்துகூறுதலால், ஐயநிலையுவமம். மாதரார்கண்ணுக்கு வெருவுதல்தன்மையால் பிணையின்கண்ணே உவமை கூறப்படுதலால், பிணையென்பது - இலக்கணையால், பிணையின்கண் என்ற பொருளதா மென்க. (ரு)

கoஅசு. கொடும்புருவங் கோடா மறைப்பி னெடுங்களூர்
செய்பல மன்னிவள் கண்.

இதுவுமது.

(இ - ள்.) கொடு புருவம் - (பிரியா நட்பாய) கொடும்புருவங்கள்தாம், கோடா மறைப்பின் - செப்பமுடையவாய் விலக்கினவாயின்,—(அவற்றைக் கடந்து), இவள் கண் - இவள் கண்கள், (எனக்கு), நடுங்கு அஞர் செய்பல - நடுங்குந்துயரைச் செய்யமாட்டா; (எ - று.)

நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ் செம்மையுடையராதல் வேண்டலின் 'கோடா' என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடைநின்று விலக்குங்காலுஞ் சிறிது இடைபெறின் அதுவழியாக வந்து அஞர் செய்யுமாகலின் 'மறைப்பின்' என்றுங் கூறினன். நடுங்கஞர்-நடுங்கற்கேதுவாய அஞர். தாம் இயல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுதிக்கண்மேற்சென்று இடிக்கமாட்டாவாயின என்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

(கு - ரை.) பிரியாநட்பு - விட்டுப்பிரியாதகண்பு. செப்பம் - நேர்மை: இது, வடிவினுலும் குணத்தினுலுங் கொள்ளப்படும். அவற்றை - அப்புருவங்களை. புருவங்கள் இப்போது இருப்பனபோலவளைவாயிருப்பனவன்றி, நேர்மையாக இருப்பின் அப்போது அவை கண்களின்பார்வையை என்மேல் நேரேபடவொட்டாது விலக்கு மென்க. நட்டார் - தினேகிதர். கழறுதல் - இடித்துப்புத்திமதிகூறுதல். நட்டார்க்குப் புத்திமதிகூறுவோர் முதலில் தாம் செம்மையுடையவராக இருக்கவேண்டும்: செம்மை - நேர்மைக்குணம்: இச்சொல்-இலேடையால், வளைதலில்லாத்தன்மை என்ற பொருளையும் காட்டும். செய்கின்ற என்பதற்குச் செயப்படுபொருள் 'நடுங்குஅஞர்' என்பது. அவற்றிற்கும்-அக்கண்கட்கும். உறுகின்ற-நடுங்குஞரையடைகின்ற. அதுவழியாக-பெற்ற அந்தச் சிறியஇடத்தின்மூலமாக. நடுங்குதலாகிய காரியச்சொல், அஞர் என்னும் காரணப்பெயரைக் கொண்டதென்க. அஞர்-துன்பம். தாம்-புருவங்கள். கோடுதல்-நேர்மைதவிர்தல், வளைதல் என்ற இருபொருளது. அவற்றை - கண்களை. மிகுதிக்கண் - தகாதசெயலுண்டானபோது. மேற்சென்று இடிக்கமாட்டா - முற்பட்டுக் கண்டித்துப் புத்திமதிசொல்லும் வன்மையில்ல. (சு)

கoஅள. சுடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ மூலிமேற் றுகில்.

அவள்முலைகளினைய வருத்தங் கூறியது.

(இ - ள்.) மாதர் - இம்மாதர், படா முலைமேல் - படாமுலைகளின் மேலிட்ட, துகில்—,—(அவை கொல்லாமற் காத்தலின்), கடாம் களிற்றின் மேல் - (கொல்வதாய)மதக்களிற்றின்மேலிட்ட, கண் படாம்-முகபடாத்தினை யொக்கும்; (எ - று.)

கண்ணை மறைத்தல்பற்றி 'கட்படாம்' என்றான். துகிலான் மறைத்தல் காணுடை மகளிர்க்கு இயல்பாகலின், அத்துகிலுடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்துணையாற்றலுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய்வில வெனக் கருதி 'படாமுலை' என்றான். உவமை, சிறிதுமுறையாவழி உவை கொல்லுமென்பது தோன்ற நின்றது.

(கு - ரை.) இம்மாதர் - இந்த அழகிய பெண். படா முலை - முகஞ் சாயாத [நெறித்துள்ள] கொங்கை. அவை கொல்லாமல் - அம்முலைகள் என்னைக் கொல்லாமல். யானையின் முகபடாத்தை 'கட்படாம்' என்றது, அந்த முகபடாம் யானையின் கண்ணையும் மறைத்தலாலாகும். (படாம்= படம்: வஸ்திரம்.) நாணத்தினால் கொங்கையை மாதர் துகிலிட்டு மறைப்பர்: அங்ஙனம மறைக்கப்பட்ட கொங்கையைத் துகிலின்வழியாகக் கண்ட தலைவன் கூற்று, இது. அவற்றின் - அக்கொங்கைகளின். வெம்மை-கொடிய தன்மை: விருப்பமுமாம். பெருமை - பருத்திருக்குந்தன்மை. மதயானையின் கண்ணைப் படாமிட்டுமறையாவிட்டால் அதுபாய்ந்துகொல்லுமாறுபோல முலைக்கண்மேற் படாமிட்டுமறைக்காவிட்டால், அம்முலைகள் என்னைக்கொல்லும் என்பது தோன்றக் கூறுகின்றான், தலைமகளின்கொங்கையி லீடுபட்ட தலைமகனென்க. உவை - இடைப்பட்ட இடத்திலிருப்பவை. துகில் படாம் போலுமென்னுது துகிலேயே கட்படாமெனக்கூறியது-காட்சியணியாம். (எ)

கஅஅ. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.

நுதலினைய வருத்தங் கூறியது.

(இ - ள்.) ஞாட்பினுள் நண்ணுர்உம்-போர்க்களத்து வந்து நேராதபகை வரும், (நேர்ந்தார்வாய்க்கேட்டு), உட்கும்-அஞ்சுதற்கேதுவாய, என் பீடு-என் வலி, ஒள்நுதற்கு ஓ உடைந்தது-(இம்மாதரது)ஒள்ளிய நுதலொன்றற்குமே அழிந்துவிட்டது! (எ - று.)

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுளென்றதனாற் பகை வராதல் பெற்றும். பீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங் கொள்க. ஓ வென்னும் வியப்பின்கட்குறிப்பு, அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையுந் தோன்ற நின்றது. கழிந்ததற்குஇரங்கலிற் றற்புகழ்த லென்றுமியற்று.

(கு - ரை.) தகையணங்குறுத்தலென்ற அதிகாரம்பற்றி, ஒண்ணுதற்கு என்றவிடத்து மாதரின் என்று வருவிக்கப்பட்டதென்க. ஞாட்பினுள்

கண்ணுர் எனவே, பசைவரென்பது பெறப்படும். பீடு என்பது - எல்லா வலிமையும் காட்டும் பொதுப்பெய ராதலால், மனவலி காயவலி என இரு வகை வலிமையையும் காட்டும். ஓ உடைந்ததே என்ற இடத்துள்ள ஓ என்ற குறிப்பிடைச்சொல்-உடைதற்கு அரிய மனவலி காயவலிகளின் பெருமையையும் அவற்றையுடைக்கும் நுதலின் சிறுமையையும் குறித்து வியப்பதைத் தெரிவிக்கும். நுதல் - நெற்றி. 'என்பீடு' என்று தன்னைப்புகழ்தல் தகுமோ எனின்,—தன்னைவிட்டுக் கழிந்திட்ட வலிக்கு இரங்கும் இடமாதலால், தகுமென்க; கழிந்ததற்கு இரங்கும்போது அதன் மேன்மைதோன்றக் கூறுவது உலகவியற்கையே யென்க. (அ)

கoஅகூ. பிணையேர் மடநோக்கு நாணு மூடையாட்
கணியெவனோ வேதில தந்து.

அணிநலந்தானைய வருத்தங் கூறியது.

(இ - ள்.) பிணை ஏர் - (புறத்து) மான்பிணையொத்த, மடம்நோக்குமும் மடநோக்கினையும், நாண்உம் உடையாட்கு - (அகத்து) நாணினையுமுடைய ளாய இவட்கு, (ஒற்றுமையுடைய இவ்வணிகளே யமைந்திருக்க), எதில தந்து அணி எவன்-வேற்றுமையுடைய அணிகளைப் படைத்தணிதல் என்ன பயனுடைத்து? (எ - று.)

மடநோக்கு - வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம்.

(கு - ரை.) ஏர்தல் - ஒத்தல். படைத்து - புதிதாகச்செய்து: இது, தந்து என்பதன்பொருள். இம்மாதர்க்கு மடநோக்கமும் நாணமும் ஆகிய இவை அணிகலனுகி அழகுசெய்யாநிற்கையில், மேலும் அணிகலனைப் பூட்டியது - இவட்குப் பாரமாதலையும் எனக்கு வருத்தஞ்செய்தலையு மன்றி, அழகாதற்றன்மையை விளைக்கா: ஆதலால், தாம் கருதிய பயனே விளைக்கா தென்பதனை ஆராயாது அணிகலனைப் பூட்டியவர் அறிவிலரே யென்க. எதிலதந்து அணியெவனோ என்றமையால், மடநோக்கும் நாணும் எதில வாகாமல் ஒற்றுமையுடையனவா மென்பது பெறப்படும். (கூ)

கoகூo. உண்டார்க ணல்ல தடுகறுக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

தலைமகள் குறிப்பறிதலுற்றன் சொல்லியது.

(இ - ள்.) அடு கறு - அடப்படும்கறு,—உண்டார்கண் அல்லது - (தன்னை) உண்டார்மாட்டு (மகிழ்ச்சியைச்செய்வது) அல்லது,—காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்த லுடைத்தன்று; (எ - று.)

அடுகறு - வெளிப்படை. காமமென்றது - ஈண்டு அது நுகர்தற்கிடனுகி யாரை. கண்டார்கணென்னும் ஏழாவது, இறுதிக்கட் டொக்கது. மகிழ் செய்தற்கட் காமம் நறவினுஞ் சிறந்ததே யெனினும், இவள் குறிப்பாராய்ந்

தறியாமையின் யான் அது பெற்றிலே னெனக் குறிப்பெச்சம் வருவித் துரைக்க;"அரிமயிர்த்திரண்முன்கை"என்னும்புறப்பாட்டிற் குறிப்புப்போல.

(கு - ரை.) நரு - கள். இங்கு நறவினும் காமத்திற்குக் கண்டார்மாட்டு மகிழ்ச்சிசெய்தலாகிய சிறப்புத்தோன்றக் கூறியது - வேற்றுமையணி. நரு என்று ஒருசெடியும் இருத்தலால், அதனை விலக்கிக் கள்ளென்ற பொருளைத் தர 'அடு' என்று அடைமொழி கொடுத்துக் கூறினமையால், அடுநறு என் பது - கள்ளுக்கு வெளிப்படை யாயிற்று. கள்ளை யடுத லுண் டென்பதை "ஆடுறுதேறல்" என்பதனாலும் அறிக. அது நுகர்தற்கு இடனுகியாரென்பது - மகளிரை. கண்டார் என்ற வினையாலணையும்பெயரி னிறுதியில் ஏழாவது தொக்க தென்க. குறிப்பு - மனோபாவம். அது-மகிழ்ச்சி. "அரிமயிர்த்திரண் முன்கை" என்று தொடங்குவது, புறநானூறு, 11-ஆம் பாடலாகும்: அப்பாட லின் உரையில், 'பாடினி இழைபெற்றாள்: பாணன் பூப்பெற்றான்: யான் அது பேறுகின்றிலேன்' எனக் குறிப்பெச்சம் வருவித்து உரைக்கப்பட்டிருத் தல் காண்க: அதுபோன்று இங்கும் குறிப்பெச்சம் வருவித்து உரைக்கப் பட்ட தென்க. (கo)

ககo - ஆம் அதிகாரம்.—குறிப்பறிதல்.

அஃதாவது - தலைமகன் தலைமகள்குறிப்பினை யறிதலும், தோழி குறிப் பினை யறிதலும், அவடான் அவ்விருவர்குறிப்பினையு மறிதலுமாம். தகை யணங்குற்ற தலைமகன் றலைமகளைக் கூடுங்கால் இது வேண்டு மாகலின், தகை யணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) குறிப்பு-மனத்தினெண்ணம். அவ்விருவர்-தலைவன் தலைவி என்ற அந்த இருவர். தலைமகளின் கண் கொங்கை நுதல் முதலியவற்றின் வனப்பினுல் வருத்தப்பட்டுக் கூறுதலுற்ற தலைமகன் தலைமகளைக் கூடும் போது குறிப்பறித லென்ற இது வேண்டு மாதலால், குறிப்பறிதலென்ற இந்த அதிகாரம் தகையணங்குறுத்தலென்ற அதிகாரத்தின்பின் வைக்கப் பட்ட தென அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க.

கoகூக. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

தலைமகன் தலைமகளுள்ப்பாட்டுக்குறிப்பினை அவள்நோக்கினு னறிந்தது.

(இ - ன்.) இவள் உண் கண் உள்ளது-இவளுடைய உண்கணகத்தாய நோக்கு,-(இதுபொழுது), இரு நோக்கு - (என்மேலிரண்டு) நோக்காயிற்று; ஒரு நோக்கு நோய் நோக்கு - (அவற்றுள்) ஒருநோக்கு என்கண்நோய்செய் யும்நோக்கு: ஒன்று அ நோய் மருந்து - ஏனையது அந்நோய்க்கு மருந்தாய் நோக்கு; (எ - று.)

உண்கண் - மையுண்டகண். நோய்செய்யும்நோக்கு-அவண்மனத்தினுய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு - தன்கண் நிகழ்கின்ற அற்புநோக்கு. நோய்செய்யும் நோக்கினைப் பொதுநோக் கென்

பாருமூளர்: அது நோய்செயிற் கைக்கிளையாவ தல்லது அகமாக்காமை யறிக. இவ்வருத்தக் தீரும் வாயிலு முண்டாயிற் றென்பதாம்.

(கு - ரை.) கண்அகத்ததாய-கண்ணிலுள்ள. நோக்கு - பார்வை. உண் என்பது செயப்படுபொருளுள்ள வினை யாதலால், அதற்கு ஏற்ப, மையென்ற செயப்படுபொருளை வருவித்தார். மையுண்ட கண் - மைதீட்டிய கண். அவளுடைய ஒருநோக்கு, அன்னளுடைய காமக்குறிப்பினை வெளிப்படுத்தித் தன்திறத்தில்தான் ஆகிய தென்பதனைப் புலப்படுத்தாமையால், நோய்செய்யும் நோக்காகும்: "ஒண்டொடிநோய் நோக்கிற்பட்ட வென்னெஞ்சநோய்" என்றதுங் காண்க. தலைவிக்குநேர்ந்த காமக்குறிப்பு தன்மீது அன்பு செய்யும் பொருட்டே என்பதைப் பெறவைத்தலால், மற்றெருநோக்கு, மருந்தாய நோக்கு எனப்பட்டது. 'நோய்செய்யும் நோக்கு' என்பதற்குப் பரிமேலழகர் கொண்டபொருள், காமக்குறிப்பினைப் புலப்படுத்தும் பார்வையென்பது: பிறர் கூறுவது - காமக்குறிப்பின்றிப் பொதுவாகப்பார்க்கும் பார்வையென்பது: அங்ஙனம் கூறின், 'அந்நோய்மருந்து' என்று பின்னுற் கூறப்படும் நோக்கு - காமக்குறிப்பினைக்காட்டும் நோக்கு என்ன வேண்டும்: அவ்வாறு கொள்ளின், இப்பாடலில் தலைவிக்கு யார்மாட்டோ காதலுள்ளது என்ற பொருள் வெளியாவதால், இது - தன்மாட்டு அத்தலைவி காதல்குறிப்போடு பார்த்தாளென்ற பொருளைத் தெரிவிக்கும் அகப்பொருட்டு அங்கமாகிய கைக்கிளையாகாது, ஒருதலைக்காமமாகிய புறக்கைக்கிளையே யாகுமென்று அவ்வுரைக்குக் குற்றங் கூறியவாறு. அகப்பொருட் கைக்கிளையில் காட்சி முதலியநான்கும் நிகழுமென்பதனை "காட்சியையத்துணிவு குறிப்பறிவென, மாட்சிநான்கு வகைத்தே கைக்கிளை" என்பதனாலும் அறியலாம். கைக்கிளையென்பது - ஒருபக்கத்துக்கேண்மை யென ஏழாம்வேற்றுமையாகவிரியும். காட்சி முதலிய இவற்றைக் கைக்கிளையென்பது, கூட்டம் இன்னும் நிகழாமையாலாகும். "அரிவைநாட்டமகத்துநிகழ் வேட்கை, தெரிய வுணர்த்துங் குரிசிற்கென்ப," "நாட்டமிரண்டு மறிவுடம் படுத்தற்குக், கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்," "இப்பேதை தன்பார்வை பெருவினையே, னெண்ணிற் சிறந்த விருத்துயர்நோய் தனக்கின் மருந்தாய்," "பிணியு மதற்குமருந்தும் பிறழப் பிறழமின்னும், பணியும் புரைமருங்குற் பெருந்தோளி படைக்கண்களே" என்றவை இங்குக் காணத்தக்கன. (க)

கo கூ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

இதுவுமது.

(இ - ள்.) கண் களவுகொள்ளும் சிறு நோக்கம் - (இவள்) கண்கள் யான்காணுமல்என்மேலுக்குகின்ற அருகிய நோக்கம், காமத்தில் செம்பாகம் அன்று-மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவன்று: பெரிது - (அதனினும்) மிகும்; (எ - று.)

தாழ்ந்தகியவழி நாணி யிறைஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலால் 'களவுகொள்ளும்' என்றும், அஃதுளதாங்காலஞ் சிறிதாகலின்

'சிறுநோக்கம்' என்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் ஒருதலை யென்பான் 'செம்பாகமன்று பெரிது' என்றுங் கூறினான்.

(கு-ரை.) 'களவுகொள்ளும்' என்பதனை 'யான்காணாமல் என்மேனோக்கு கின்ற' என்பதனால் விவரித்தார். அருகிய - சிறிதுகாலமேயுள்ள. கண் களவு கொள்ளுஞ்சிறுநோக்கமென்பது உள்ளப்புணர்ச்சியையும், காமமென்பது மெய் யுறுபுணர்ச்சியையும் காட்டும்: புணர்ச்சி இருவகைப்படுமென்பதை "உள்ளப் புணர்ச்சியு மெய்யுறுபுணர்ச்சியுங், கள்ளப்புணர்ச்சியுட்காதலர்க் குரிய" என்ற நம்பியகப்பொருளிலுங் காண்க. மெய்யுறுபுணர்ச்சியாவது - உடலைத் தொட்டுப்புணரும்புணர்ச்சி: உள்ளப்புணர்ச்சியாவது - தலைவன் தலைவிஎன்ற இருவர்கருத்தும் ஒத்துநிற்பது. அஃது-களவுகொள்ளும் சிறுநோக்கம். உளப் பாடு - மனத்தினாற்றுமைப்பாடு. உள்வழி - இருக்கும்போது. ஒருதலை - நிச்சயம். செம்பாகம் என்றசொல்-சரிபாதியென்றுபொருள்படும். பெரிது - செம்பாகத்தினும் மிக்கது என்பது, பொருள். தலைவியின் களவுகொள்ளுஞ் சிறுநோக்கம் மெய்யுறுபுணர்ச்சி பாதி நிகழ்ந்ததனினும் மிக்க மகிழ்ச்சியை விளைக்கின்ற தென்பது, இக்குறளின்பொருள். (௨)

௧௦௯௩. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

நோக்கினாலும் நாணினாலும் அறிந்தது.

(இ - ள்.) நோக்கினாள் - (யான் நோக்காவளவில் தான் என்னை அன் போடு)நோக்கினாள்: நோக்கி இறைஞ்சினாள் - நோக்கி(ஒன்றனையுட்கொண்டு நாணி) இறைஞ்சினாள்: அஃது - அக்குறிப்பு, யாப்பினுள்-(இருவேமிடையுந் தோன்றிய) அற்புப்பயிர்வளர அதன்கண், அவள் அட்டிய நீர்-அவள்வார்த்த நீராயிற்று; (எ - று.)

அஃதென்னுஞ் சுட்டுப்பெயர். அச்செய்கைக்கேதுவாய குறிப்பின்மே னின்றது. யாப்பினானாயதனை 'யாப்பு' என்றார். ஏகதேசவுருவகம்.

(கு - ரை.) தலைவியின் அன்போடு உள்ள நோக்குதலாலும், நாணத் தாலும் அவளது உள்ளக்குறிப்பினைத் தலைவன் அறிந்தமை கூறியது, இது. நோக்காவளவில் - பாராதபோது. ஒன்றனை - மெய்யுறு புணர்ச்சியை. அக் குறிப்பு என்றது - நோக்கியிறைஞ்சியதை. இருவேமிடையும் - தலைவன் தலைவி என்ற எங்கள் இருவேங்களிடத்தும். அதன்கண் - அந்த அற்பாகிய பயிரில். அச்செய்கைக்கு - நோக்கித் தலைகுனிதலாகியசெயலுக்கு. யாப்பு - பிணிப்பு: மனப்பிணிப்பினாலாவதனால், அன்பினை யாப்பென்றா ரென்க. குறிப்பை நீரென்றதற்கு ஏற்ப, யாப்பைப் பயி ரென்னாமையால், ஏகதேச வுருவகமாம். (௩)

• ௧௦௯௪. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிந்தது.

(இ - ள்.) யான் நோக்கும் காலை-யான்(தன்னை)நோக்குங்கால், (தான்), நிலன் நோக்கும் - (எதிர்நோக்காது இறைஞ்சி) நிலத்தை நோக்காநிற்கும்:

நோக்காக்கால் - (அஃதறிந்து) யான் நோக்காக்கால், தான் நோக்கி - தான் என்னை நோக்கி, மெல்ல நகும் - தன்னுள்ளே மகிழாநிற்கும்; (எ - து.)

மெல்ல - வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப்பு இனிது விளங்கும். மெல்லநகு மென்பதற்கு முறுவலிக்குமென்றுரைப்பாரு முளர்.

(கு - ரை.) தான் - தலைவி. தலைவி எதிர்நோக்காமைக்குக்காரணம், நாணமாகும். அஃது அறிந்து - தலைவி என்னைநோக்கிற்கு எதிர்நோக்காமையை யறிந்து. மெல்ல என்பதன்பொருள் - நகுவது வெளிக்குத்தெரியாம லென்பது. புணர்தற்குறிப்பு - புணரவிருப்புள்ளதென்ற எண்ணம். வறிது நகைதோற்றல் என்ற தலைப்பில் 'நகைதோற்றல்-நகைவெளியாய்த்தோன் றியது என்னல் பொருந்தாது. என்னை? தலைவன்முன் நாணுடையளாத லின் பல்தோன்றச் சிறுமுறுவல்தோன்றலும் அமையாது: அமையாதாயின், வறிதுநகைதோற்ற லென்னும் கிளவிப்பொருள் பொய்க்குமேயெனின்?— அற்றன்று; "முல்லைமொக்குளுள்ளது நாற்றம் போற் பேதை, நகை மொக்குளுள்ள தொன்றுண்டு" என்பதனால் நகை வெளித்தோன்றுதென்பது கூறியவாறு உணர்க. நகைதான் தோன்றுமாறென்னையெனின்?—தலைவன் சொற்கு வேட்கையாலுடன்பட்ட மகிழ்ச்சியான் முகம் மலர்ந்தது; அம்மலர்ச்சி குறிப்பினுன் நகையெனத் தோற்றுவித்தவாறென்றுணர்க' என்று தஞ்சை வாணன்கோவையுரைகாரர் கூறியது ஈண்டு நோக்கத்தக்கது. முறுவலிக் கும் - புன்சிரிப்புச்செய்வாள். "பல்லூழ்பெயர்ந் தென்னைநோக்கு மற்றியா னெனக்கின்னு மெல்லவிறைஞ்சுத் தலை," "தன்னையான்முகத்தைநோக்கிற் றான் முலை முகத்தை நோக்கும்" என்பன, இங்கு ஒப்புநோக்கத்தக்கன. இக்குறளை 'புகுமுகம் புரிதல்' என்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகக் காட்டியுள் ளார் பேராசிரியர். (சு)

க0கூடு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

இதுவுமது.

(இ - ள்.) குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக் கொண்டு நோக்காத்துணையல்லது, ஒரு கண் சிறக்கணித்தாள் போல - ஒரு கண்ணைச் சிறங்கணித்தாள்போல, (என்னை நோக்கி), நகும் - (பின் தன் னுள்ளே) மகிழாநிற்கும்; (எ - து.)

சிறக்கணித்தாளென்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல் - சுருங்கு தல். அதுதானும் வெளிப்பட நிகழாமையின், 'போல' என்றான். நோக்கி யென்பது சொல்லெச்சம். இனி யிவளே யெய்துதல் ஒருதலையென்பது குறிப்பெச்சம்.

(கு - ரை.) நேரேகுறிக்கொண்டு - நேரே (இலக்காகும் என்னைக்)குறிப் பிட்டு. நோக்காத்துணையல்லது - பார்க்கவில்லை யென்ற அவ்வளவேயன்றி. சிறங்கணித்தாள்போல - சுருங்கினாள்போல. அதுதானும் - சிறங்கணித் தலும். நோக்கி என்றசொல் எஞ்சினின்ற தென்க. நோக்கி என்பது எஞ்சி

நிற்றலால், அதற்கு ஏற்ப, என்னே யென்பது வந்தியையும். குறிக்கொண்டு நோக்காவிடினும் சிறக்கணித்தாள்போன்று நகுதலால் அவள்குறிப்பு என்னிடத்த தென்பது பெறப்படுமென்க. இனி இவளையெய்துதல் ஒருதலை யென்பது, இச்செய்யுளினாற் பெறப்படும் குறிப்பெச்சமாம். இவளை யெய்துதல் - இத்தலைவியைப்பெறுதல். ஒருதலை - நிச்சயம். (கு)

கoகூசு. உரூஉ தவர்போற் சொலினுஞ் செரூஉ அர்சொ
லொல்லை யுணரப் படும்.

தோழி சேட்படுத்தவழி அவளீதுறிப்பறிந்த தலைமகள்
தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) உரூதவர் போல் சொலின் உம்-(புறத்து)நொதுமலர்போலக் கடுஞ்சொற்சொன்னாயினும்,—செரூர் சொல்-(அகத்துச்) செறுதலிலாதார் சொல், (பிற்பயத்தல்), ஒல்லை உணரப்படும்-(குறையுற்றாற்) கடிதினறியப் படும்; (எ - று.)

கடுஞ்சொலென்பது-'இவ்விடங் காவன்மிகுதியுடைத்து: வரற்பாலிரல்லீர்' என்றன். முதலாயின. செரூரெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பா னறிந்து, உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது, வருகின்ற பாட்டிற்கு மொக்கும்.

(கு - ரை.) சேட்படை யென்பது - பாங்கியிற் கூட்ட வகையிற் சேர்ந்தது: திருக்கோவையாருரையில், 'சேட்படை யென்பது-தலைமகளைக் குறை நயப்பித்துத் தன்னினைய கூட்டம் கூட்டலுறுந் தோழி தலைமகளது பெருமையும் தனது முயற்சியதருமையும் தோன்றுதல் காரணமாகவும், இத்தனை யருமையுடையாள் இனி நமக்கு எய்துதற்கு அருமையுடையளென, இதுவே புணர்ச்சியாக மீட்டியாது விரையவரைந்து [மணஞ்செய்து] கோடல் காரணமாகவும், தலைமகனுக்கு இயைய மறுத்துக் கூறுகின்றல்' என்று உள்ளது. (சேண் - அகறல்: படை-நிகழ்த்தல்: எனவே, காப்புமிகுதி சொல்லித் தலைவனை அகலுமாறு செய்தல்: இது - சேட்படை யென்பதன்பொருள்.) அவள் குறிப்பு - தோழியின் எண்ணம். இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னர்த் தலைவியின்குறிப்பை யறிதலை முதலிரண்டு பாடல்கள் கூறின: எட்டாம்பாடலும் அன்னதன்மையதே. ஆறு ஏழாம் பாடல்கள் - தோழியின் குறிப்பைத் தலைமகனறிதலையும், ஒன்பது பத்தாம் பாடல்கள் - தோழி இருவரின்குறிப் பறிதலையும் கொண்டு வருவன என்க.

நொதுமலர் - நண்பரும் பகைவருமாகாமல் நடுநிலையாயுள்ளவர்: இது - உரூதவரென்பதன்பொருள்: உரூதவர் - யாதொரு சம்பந்தமும் இலாதவர்: உதாசீனர். செறுதல்-கோபித்தல். சேட்படுக்கின்றமை-காப்புமிகுதி முதலிய வற்றால் தலைவி அணுகற்கரியள் என்று கூட்டத்திற்குரியையாது மறுத்துக்கூறித் தலைவனை யகற்றுதல். 'தோழி கடுஞ்சொல்லால் மறுக்கின்ற ளென்றலும் அகத்துச் செறுதலில்லாமையால் இவள்சொல் விரைவிற் பயனே

விளக்கு மென்பது குறையுற்ற என்போன்றவரா லுணரப்படும்' என்று கூறுது உலகவழக்கத்தைக் கூறுவதுபோல 'செறுஅர் சொல் ஒல்லை யுணரப் படும்' என்று கூறியதனால், உலகியன்மேலிட்டுக் கூறியவாறு என்றது. சிறப்பாகக் கூறவேண்டிய இடத்து உலகியலில்வைத்துப் பொதுவாகக் கூறுவ தனை மேற்செய்யுளிலுங் காணலாம். (சு)

கoகஎ. செறுஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னேக்கு
முறுஅர்போன் றுற்றார் குறிப்பு.

இதுவுமது.

(இ - ள்.) செறு சிறு சொல்லும் - பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்லும், செற்றார் போல் நோக்குமும்-(அகத்துச் செறுதிருந்தே புறத்துச்) செற்றார்போன்ற வெகுளிநோக்கும், உறுஅர் போன்று உற்றார் - நொதுமலர் போன்று நட்பாயினார்க்கு, குறிப்பு - ஒருகுறிப்புப்பற்றி வருவன; (எ - று.)

குறிப்பு - ஆகுபெயர். இவை உள்ளே ஒரு பயன்குறித்துச் செய்கின்றன: இயல்பல்ல: ஆகலான், இவற்றிற்கு அஞ்சவேண்டாவென்பதாம்.

(கு - ரை.) செறுதசொல் சிறுசொல் என இயையும்: செறுதசொல் - சினமில்லாதசொல்: எனவே, இனிதாய சொல்லாம்: சிறுசொல் எனவே, இன்னுதாய சொல்லாம்: ஒருசொல் இனிதும் இன்னுதுமாவது காலவேற்றுமையா லென்பார் 'பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்' என்றார். செற்றார் - சினந்தவர். குறிப்பு என்ற சொல் - குறிப்புப்பற்றி வருவனவற்றைக் காட்டுவதால், கருவியாகுபெயராம். (எ)

கoகூ. அசையியற் குண்டாண்டோ ரேளர்யா னேக்கப்
பசையினள் பைய நகும்.

தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக்கண்டு தலைமகன் கூறியது.

(இ-ள்.) யான் நோக்க-(என்னையகற்றுகின்ற சொற்கு ஆற்றாது) யான் (இரந்து) நோக்கியவழி, பசையினள்-(அஃதறிந்து) நெகிழ்ந்து, பைய நகும்-உள்ளே மெல்ல நகாநின்றாள்: (அதனால்), அசை இயற்கு - நுடங்கிய இயல்பினையுடையாட்கு, ஆண்டு - அந்நகையின்கண்ணே (தோன்றுகின்றது), ஓர் ஏர் - ஓர் நன்மைக் குறிப்பு, உண்டு—; (எ - று.)

ஏர் - ஆகுபெயர். அக்குறிப்பு இனிப் பழுதாகா தென்பதாம்.

(கு - ரை.) சொற்கு ஆற்றாது - சொல்லப்பொறாமல். அஃது - யான் இரந்து நோக்கியதை. ஏர்-அழகு: இது நன்மையிலுள்ளதாதலால் தானியாம்: இத்தத்தானியின்பெயர்-அதற்குத் தானமாகிய நன்மையைக் காட்டுதலால், தானியாகுபெயராம். அக்குறிப்பு-நகையினிடத்தே தோன்றுகின்ற நன்மைக் குறிப்பு: அதாவது, அகற்றுவது கூட்டல்நிகழ்வதன்பொருட்டே யென்பது. இங்கும் அகற்றுதல் வருவதனால், இதுவும் சேட்படையிற் சேர்ந்ததே. (அ)

கoகூக. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) ஏதிலார் போல - முன்னறியாதார்போல, பொதுநோக்கு நோக்குதல் - (ஒருவரையொருவர்) பொதுநோக்கத்தா னோக்குதல், காதலார் கண்ஏ உள - இக்காதலையுடையார்கண்ணே யுளவாகாநின்றன; (எ - று.)

பொதுநோக்கு - யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற் றொழில் ஒன்றேயாயினும் இருவர்கண்ணும் நிகழ்தலானும், ஒருவர்கட்டா னும் குறிப்பு வேறுபாட்டாற் பலவா மாகலானும், 'உள'எனப் பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத் துள்ளேமகிழ்"தலின் அதுபற்றி 'காதலார்' என்றும், அது புறத்து வெளிப் படாமையின் 'ஏதிலார்போல' என்றுங் கூறினாள்.

(கு - ரை.) மதியுடம்பாடு - தோழி தலைவனுக்குந் தலைவிக்கும் கூட்ட முண்டானமையைத் தன்னுணர்வினாலாராய்ந்து அறிதல். அங்ஙனம் அறிந்த தோழி தலைவன்தலைவியரதுபொதுநோக்கை வியந்து கூறியது இது. இது- பாங்கற்கூட்டத்தின்பின் நிகழ்வதாகும். ஒருவர்கட் டானும் - ஒருவரிடத் திலே தோன்றும் நோக்கும். குறிப்பு - அந்நோக்கங்கொண்டுள்ள குறிப்பு. 'நோக்குதல் உளது'என்று ஒன்றன்பாலாற்கூறாமல் 'நோக்குதல்உள' என்று பலவின்பாலாற்கூறியதற்குக் காரணம், தலைவன் தலைவியர்என்ற இருவரி டத்தும் நோக்குதல் இருத்தலாலும், அன்றியும் தலைவன் தலைவிஎன்ற இவ் விருவரிடத்தும் தனித்தனியே நோக்குதல் குறிப்புவேறுபாட்டாற் பலவா மாகலானும் என்க. நோக்கம் வெவ்வேறு குறிப்புக்கொண்டிருப்பினும் நுட்ப மாய் நோக்குமவர்க்கன்றி மற்றையோர்க்குப் புலனாகாமையால், 'பொது நோக்கு' என்றது. இருவரும் - தலைவனும் தலைவியும். "தம்முண், மது மறைந்துண்டோர்மகிழ்ச்சிபோல, உள்ளத்துள்ளேமகிழ்ப, சொல்லுமாடுப கண்ணினானே"என்று தொல்காப்பியத்துக் களவியல் (உ௩-ஆம் சூத்திரத்து) உரையில் மேற்கோட்செய்யுளில் வந்துள்ளது. அது - மகிழ்ச்சி. (௯)

௧௧00. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க ளென்ன பயனு மில.

இதுவுமது.

(இ - ள்.) கண்ணொடு கண் இணை - (காமத்திற்குரியஇருவருள்)ஒருவர் கண்களோடு ஒருவர்கண்கள், நோக்கு ஒக்கின் - நோக்காலொக்குமாயின்,— வாய் சொற்கள் என்ன பயன்உம் இல - (அவர் வாய்மைதோன்றச் சொல்லு கின்ற) வாய்ச்சொற்கள் ஒருபயனு முடையவல்ல; (எ - று.)

நோக்காலொத்தல் - காதனோக்கினவாதல். வாய்ச்சொற்கள் - மனத் தின்கணின்றி வாயளவிற் றோன்றுகின்ற சொற்கள். இருவர்சொல்லுங் கேட்டு உலகியன்மேல்வைத்துக் கூறியவாறு. இருவர்சொல்லுமாவன - அவள் புனங்காவன்மேலும், அவன் வேட்டத்தின் மேலுஞ் சொல்லுவன. பயனில் சொற்க ளாகலின், இவை கொள்ளப்படா வென்பதாம். இவை புணர்தனிமித்தம்.

(கு - ரை.) தலைவி தான் புணங்காவல் செய்வதாகச் சொல்லுவது: தலைவன் தான் வேட்டையாட அவ்வழிப்போத்தாகச் சொல்லுவது: இவ்வணம் தலைவி தலைவன் என்ற இருவரும் தாம் வெவ்வேறுதொழில் நிகழ்த்துவதாகச் சொல்லினும், இவர்களின் கண்பார்வைகள் காமக்குறிப்பை வெளிப்படுத்தலால், இவர்கள் வாய்ச்சொற்கள் உண்மையெனக் கொள்ளப்படா என்றவாறு. உலகியலேக்கூறுவதுபோல இருப்பினும், தலைவன் தலைவியரின் குறிப்பை யறிந்து தோழி கூறுகின்றாளாக இச்செய்யுளுக்குக் கருத்துக் காண்க. இவை-குறிப்பறிதல் என்ற இந்த அதிகாரத்தில் வந்த செய்யுட்கள்: இருவர்சொற்களும் ஒத்தநோக்கங்களும் எனக் கொள்வாரு முளர். தலைவன் தலைவி என்ற இருவர் கண்களும் தம்முளொத்துவிடின், வாய்விட்டுத் தம் காதலை யொருவர்க்கொருவர் சொல்லவேண்டுமென்பதில்லை யென்று இக்குறட்குக் கருத்துக்காணினுமாம்: "ஒருவன்,...தொடைமாண்ட, கண்ணியன் வில்லன் வருமென்னேநோக்குபு, முன்னத்திற்காட்டுத லல்லது தானுற்ற, நோயுரைக்கல்லான் பெயருமற் பன்னுளும், பாயல்பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற், சேயேன்மன் யானுந் துயருழப்பேன்" என்ற கலித்தொகை இங்குக் காணத்தக்கது. (கo)

ககக - ஆம் அதிகாரம்.—புணர்ச்சிமகிழ்தல்.

அஃதாவது - அங்ஙனங்குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்துகூறல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

(கு - ரை.) குறிப்புஅறிந்து - தலைமகளின்நினைவு தன்மீது அன்புகூர்ந்திருத்தலையறிந்து. குறிப்பறிதல் நிகழ்ந்தபின்பு, அத்தலைவியைப்புணர்ந்து அம்மகிழ்ச்சியைக்கூறுதல் முறைமையாதலால், குறிப்பறிதலின்பின், இது வைக்கப்பட்ட தென்க.

ககoக. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

இயற்கைப்புணர்ச்சி யியுதிக்கட் சொல்லியது.

(இ-ள்.) கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்உம் - கண்ணுற்கண்டும் செவியாற்கேட்டும் நாவாலுண்டும் மூக்கான்மோந்தும் மெய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும், ஒண்டொடிகண் ஏ - இவ்வொள்ளிய தொடியையுடையாள்கண்ணே, உள-உளவாயின; (எ - று.)

உம்மை - முற்றும்மை. தேற்றேகாரம், வேறிடத்தின்மை விளக்கிநின்றது. வேறுவேறுகாலங்களில் வேறுவேறு பொருள்களா னனுபவிக்கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணே யனுபவிக்கப்பட்டன வென்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளாகச் சொல்லிய புணர்ச்சித்தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன.

(கு - ரை.) ஐம்புலனும் - சுவைஒளிஊறுஓசைநாற்றம்என்னும் ஐம்பொறிகளுக்குரிய ஐந்துவிஷயங்களும்: இதில், உம்மை - இனைத்தென்றறி பொருளில்வந்ததனால், முற்றும்மையாம். ஒண்டொடிகண்ணேஎன்ற இடத்

திலுள்ள ஏகாரம் - தெளிவுப்பொருளது: தெளிவு - நிச்சயம்: இவ்வொண் டொடியாளிடத்திலேதான் ஐம்புலனும் உள்ளன என்று தெளிவுபடக்கூறிய மையால், பிறிதோரிடத்து ஒருங்கே ஐம்புலனும் அனுபவிக்குமாறு இல்லை யென்பது விளங்குமாறு அறிக. வடநூலார் இடக்கர்ப்பொருளவாகச்சொல் லிய புணர்ச்சித்தொழில்கள் - பயோதரங்களை வருடல், நகக்குறியமைத்தல், இதழ்சுவைத்தல்முதலியன: இவற்றின் விவரங்களை வாத்ஸ்யாயனம்முதலிய வற்றுட் காணலாம். தத்துவநூலாகிய திருவாய்மொழியையருளிச்செய்த நம் மாழ்வார், ஐம்புலன்களும் தமக்குஅடையப்படுபொருளாகிய திருமாலினிடத் தேஉள்ளன என்ற கருத்தை யமைத்து, இந்தக்குறளையொட்டி "கண்டுகேட் டுற்றுமோந்துண்டுழலுமைங் கருவி,கண்டவின்பம்தெரிவரியவளவில்லாச்சிற் றின்ப,மொண்டொடியாள்திருமகளுரியமேனிலா நிற்பக்,கண்ட சதிர்க்கண்டொ ழிந்தேனடைந்தேனுன் திருவடியே" என்று அருளிச்செய்துள்ளார். சேர மான்பெருமாணயனார் இத்திருக்குறளைத் திருக்கைலாயஞானவுலாவில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். ஒண்டொடி - பண்புத்தொகையன்மொழி.

கக0உ. பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.

(இ - ள்.) பிணிக்கு மருந்து பிற-(வாதம் முதலிய) பிணிகட்கு மருந்தா வன (அவற்றிற்கு நிதானமாயினவன்றி) மாறுபலியல்பினையுடையனவாம்; (அவ்வாறன்றி), அணியிழை - இவ்வணியிழையினையுடையாள், தன் நோய்க்கு - தன்னிறைய பிணிக்கு, மருந்து தான்எ - மருந்துந் தானே யாயிருள்.

இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன்வருந்திஞ ஞகலின்,'தன்னோய்' என்றும், அவ்வருத்தந் தமியாளை யிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தா ஞகலின் 'தானே மருந்து' என்றும் கூறினன். இப்பிணியும் எளியவாயவற்றுற் றீரப் பெற்றில மென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

(கு - ரை.) இடந்தலைப்பாடு என்பது - தலைவன் முன்னுட்கூடின இடத்திலேவந்து தலைவியை யெதிர்ப்படுதலென்று பொருள்படும். இது இயற்கைப்புணர்ச்சிக்குப் பின் நிகழுங் கூட்ட மென்பது தொல்காப்பியனார் கொள்கை: இதனை "காமப்புணர்ச்சியு மிடந்தலைப்பாடும், பாங்கொடுதழாஅ லுந் தோழியிற்புணர்வுமென்று, ஆங்கதால் வகையினு மடைந்த சார்பொடு, மறையென மொழிதன் மறையோராறே" என்ற தொல்காப்பியச்(செய். 498) சூத்திரத்தா லறிக. இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்து தலைவனும் தலைவியும் பிரிந்தபின்னர் ஆற்றாது வருந்திநின்ற தலைமகன் தலைவியை மறுநாளுங்கூட எண்ணி, 'விதியாலே அவளையெய்தினு யான் அவ்விதி தருமேல் இன்றுங் காண்பேன்' என்று முன்னுளில் அவளைக் கண்ணுற்ற பொழிலிலே புக்கானுக, தலைவியும் தன்ஆயவெள்ளத்தோடும் விளையாடி ஆங்குவருகின்றவள் ஆயங் கள் முன்னுளிற்போலவே பிரிய, நெருநலில்தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளேபோலப் பரவசமாக நின்றாளாக, தலை

மகனுக் தனியளாய்நின்ற தலைமகளை யெதிர்ப்பட்டுப் புணர்வனென்க. இதுவே, இடந்தலைப்பாட்டுப் புணர்ச்சியாகும். இவ்விடந்தலைப்பாடு, தலைவன் தானேசென்றுகூடுவது, பாங்கனுற்றலைவன்முற்குறித்த இடந்தலைப்பட்டுப் புணர்வது என இருவகைப்படு மென்றும், தானே சென்றுகூடுவதே சிறக்கு மென்றும் கொள்வர் ஒருசாரார்: இனி, வேறொருசாராசிரியர் இடந்தலைப்பாடு நிகழின் பாங்கற்கூட்டம் நிகழாது: பாங்கற்கூட்டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழாது என்று கொள்வர். நிதானம் - ஆதிகாரணம். தன்னெய் - தன்னுல் வந்த நோய்: தான்என்றது-தலைவியை. தமியாளை - தனிப்பட்ட தலைவியை. வருத்தந்தீர்ந்தான் என இயையும். இப்பிணி - தலைவியினுய நோய். எளிய வாயவற்றுல்-எளிமையாகக் கிடைக்கக்கூடிய பிறமருந்துகளால். "நின்முகந் தான் பெறினல்லது கொன்னே, மருந்து பிறிதியாதுமில்" என்ற கலித் தொகை இங்குக் காணத்தக்கது. அணியிழை-வினைத்தொகையன்மொழி.(உ)

கக0ஈ. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
ருமரைக் கண்ணு னுலகு.

'நிரதிசயவின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இன்னேயாதல் தகாது' என்ற பாங்கற்குச் சொல்லியது.

(இ-ள்.) (ஐம்புலன்களையும் நுகர்வார்க்கு), தாம் வீழ்வார் மெல் தோள் துயிலின்-தாம் விரும்பும் மகளிர் மெல்லியதோளின்கட் டுயிலுந்துயில்போல, இனிதுகொல்-வருந்தாமலெய்தலாமோ? தாமரைக்கண்ணன் உலகு - (அவற் றைத் துறந்த தவயோகிகளெய்துஞ்) செங்கண்மாலுலகம்? (எ - று.)

ஐம்புலன்களையும் நுகர்வாரென்னும்பெயர், அவாய்நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலெவிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம்மனேர்க்கு ஆகாதென்னுங் கருத்தால் 'இனிதுகொல்' என்முன். இந்திர னுலகென்றுரைப்பாரு முளர்: தாமரைக்கண்ணனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன்மை யறிக.

(கு - ரை.) இது பாங்கற்கூட்டத்தில், கிழவோன் கழற்றெதிர்மறுத்து லெனப்படும். பாங்கற்கூட்டம் என்பதைப் பாங்களுல் தலைவன் தலைவியைச் சென்றெய்துதல் என்பர் ஒருசாரார்: மற்றொருசாரார் தோழியிற்கூட்டம் போலப் பாங்கன் தலைவனுக்கு இடைநின்று உரையாடிக் கூட்டாமையின், அது பொருளன்று: இடந்தலைப்பாட்டிற்குப்பின்பு தலைமகன்பாங்களைக்கூடுங் கூட்டம் என்பர்: தலைமகன் இடந்தலைப்பாட்டில்தலைவியைக்கூடிப்பிரிந்தவன் தலைமகளைப்பற்றிய நினைவினுல் வருந்திநின்றுழுகை, இந்நிலைமையில் பின்னாள் சென்று எதிர்ப்பட்ட பாங்கன் தலைவனை அடிமுதல் முடிகாறும் நோக்கி, 'எம்பெருமாற்குத் திருவொளிமழுங்குமாறு நேர்ந்த வரட்டம் என்னே?'என்று வினவ, இவ்வகைவினவிய தோழனுக்குத் தலைவன் நிகழ்ந்தவாறாறெல்லாங் கூறினுன்: கேட்ட பாங்கன் தலைவனிடத்துத் தீயனகண்டால் இடித்துக் கூறுமவனுதலால் 'அன்பனே! நின்னுள்ளம் உன்னளவன்றிக் கைம்மிக் கோடுமே யெனின் உன்னைத் தெளிவிப்பார் யார்? இது உன்கல்வியறிவிற்குத் தகாது' என்று கழறி [இடித்து]க் கூறினுன்: இவ்வன் பாங்கன் கூறவும்,

வேட்கைவயத்தனாகிய தலைவன் 'என்னாற் காணப்பட்ட வடிவை நீ கண்டிருப்பாயாயின் இங்ஙன் கழறாய்' என்னுங் கருத்துப்பட, அந்தப்பாங்கன் கழறியதை மறுத்துரைக்குங் கிளவி இது என்க.

வீழ்வார்என்றசொல், விரும்பப்படுபவரென்றபொருளது. விரும்பும் மகளிரின்தோளில்துயிலுதலினும் மோட்சலோகம் இனிதாகாதென்று பாங்கனுக்குத் தலைவன் கழற்றெதிர்மறுத்தவாறு; பொதுவாகக்கூறிச் சிறப்புப் பொருளைப்பெறவைத்தது இது. இப்பெற்றித்தாய - இப்படிப்பட்டதன்மையையுடைய: எளிதிற்கிடைப்பதாயஎன்றபடி.'இனிதுகொல்'என்ற வினாவிற்குக் காரணம் 'தவயோகங்களான்வருந்தவேண்டுதலின்' என்பது. தாமரைக் கண்ணானுலகுஎன்பதற்கு - இந்திரலோகமாகிய சுவர்க்கம் என்று ஒருசாரார் பொருள்கூறுவர்: அது பொருந்தாது: தாமரைக்கண்ணானென்று இந்திரனுக்குப் பேரின்மையால் என்று அவ்வுரையை மறுத்தனர். இனி, தாமரைக் கண்ணான்என்பதற்கு - அடியாரின் இதயத்தாமரையிடத்துவீற்றிருக்குங் கடவுள்எனப் பொதுவாகக் கடவுளைக் காட்டுமென்பாருமுளர். மகளிர்தோளில் துயிலுதல் கூறப்படுவதனை "வரிக்குழை, வேயுறு மென்றோட்டுயில்பெறும்" என்ற கலித்தொகையிலும் காண்க. (௩)

௧௧௦௪. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.

பாங்கற்கூட்டத்திறுதிக்கட் சொல்லியது.

(இ-ள்.) நீங்கின் - (தன்னை) அகன்றுழி, தெறூஉம்-சுடாநிற்கும்: குறுகுங்கால்-அணுகுழி, தண்ணென்னும்-குளிராநிற்கும்: தீ-(இப்பெற்றித்தாய) தீயை, (என்கண்தருதற்கு), இவள்—, யாண்டு-எவ்வுலகத்து, பெற்றாள்—?

கூடாமுன் துன்புறுதலின் 'நீங்கிற்றெறூஉம்' என்றும், கூடியபின் இன்புறுதலின் 'குறுகுங்காற்றண்ணென்னும்' என்றும், இப்பெற்றியதோர் தீ உலகத்தில்லையா மாகலின் 'யாண்டுப்பெற்றாள்' என்றுங் கூறினான். தன் காமத்தீத்தன்னையே அவள்தந்தாளாகக் கூறினான், அவளான் அது வெளிப்படுதலின்.

(கு - ரை.) பாங்கற்கூட்டத்திறுதியில் தலைவியின் கலவியைப் பெற்ற தலைவன் அக்கலவியைப் புகழ்ந்து கூறிய கிளவியாகும் இது. கூடாமுன் - புணர்தற்குமுன்னம். காமத்தீ - விருப்பமாகியதீ. காமம் என்பது தலைவியாலேயே தனக்குஉண்டானதாகையால் அக்காமத்தீயை அத்தலைவி தந்தாளெனத் தலைவன் கூறுகின்றான்: உலகத்துத்தீயை யணுகினால் சுடும்:நீங்கினாற் சுடாது நிற்கும்: இந்தக்காமத்தீயோ இவளையணுகினால் தண்ணென்றிருந்து நீங்கினாற் சுடுகின்றதே! இதுஎன்னே என்று காமத்தீயின் விபரீதத்தன்மையை வியந்தவாறு. வேற்றுமையணிபடவந்த உருவகம். "காமநோய்போல, விடிற்சுடலாற்றுமோ தீ"என்று மேலே கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

௧௧௦௫. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.

தோழியிற் கூட்டத்திறுதிக்கட் சொல்லியது.

(இ - ள்.) (மிகவினியவாய பொருள்களைப் பெறுது), வேட்ட பொழுதின் - (ஆவற்றின்மேல்) விருப்பங்கூர்ந்தபொழுதின்கண், அவை அவை போலும்-அவையவை (தாமே வந்து இன்பஞ்செய்யுமாறு) போல இன்பஞ் செய்யும்: (எப்பொழுதும் பெற்றுப்புணரினும்), தோடு ஆர் கதுப்பினுள் தோள்-பூவினை யணிந்த தழைந்த கூந்தலினையுடையாள்தோள்கள்; (எ-று.)

தோடு - ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ்வாராமைபற்றி இவ்வாறுகூறினான். தொழிலுவமம்.

(கு - ரை.) தோழியிற்கூட்டத்து இறுதிக்கண் தலைவியைப்புகழ்ந்த தெளிவியாகும், இது. பாங்கற்கூட்டம் நிகழ்ந்தபின்பு, இடந்தலைப்பாட்டினாலோ பாங்கனாலோ மீண்டும் தலைவியைக் கூட முயலாமல், முன்னர்த் தலைவியைத் தலைவன் தோழியர்திராளிற் செலுத்தினபோது அவள் காதற்றோழியைக் குறிப்பாலறிந்தவனுதலின், அத்தோழியை இரந்து குறையுற்று அவள்வாயிலாக இடையீடின்றித் தலைவியைக்கூட எண்ணி அதற்குஏற்பழயன்று பாங்கியால் தலைவியைக்கூடுதல், தோழியிற்கூட்டமெனப்படும். (இக்கூட்டம் - மதியுடம்பாடு மடல்விலக்கல் குறியிடஞ்சேர்தல் வரைவுகடாதல் அறத்தொடு நிற்றல் உடன்போக்கு என வகைப்படுத்துக் கூறப்படும்.)

விருப்பம்கூர்ந்த - விருப்பம்மிகுந்த. அவையவை - விரும்பப்பட்ட அவ்வப்பொருள்கள். தோடு - இதழ்: இதழினையுடைய மலருக்குச் சினையாகு பெயர். இயற்கைப்புணர்ச்சி முதலிய மூன்றிலும் கூட்டம் நிகழ்ந்திருக்க என்க. நெஞ்சம் பிணித்தலின் - தலைவனதுநெஞ்சத்தைப் பிணித்தலால்: பிணித்தலுக்கு எழுவாய், தோள். ஆராமை-விருப்பந்தணியாமை. இயற்கைப் புணர்ச்சி முதலிய மூவகைக்கூட்டத்திலும் தலைவியைப் புணர்ந்திருந்தாலும், விருப்பந்தணியாது நெஞ்சம்பிணிப்புண்டதனால் புதியவாய்க்கண்டனபோலத் தோள்களைப் பாராட்டுகின்றான், தலைவனென்க.வேட்டபொழுதில் வேட்கப் பட்டவை வந்து இன்பஞ்செய்தல்போலக் கதுப்பினுள்தோளும் வந்து இன்பஞ்செய்யுமென்றுகூறியதால், இது-தொழிலுவமமாயிற்று. "வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோள்,பூட்டார் சிலேநுதலாள் புல்லா தொழிவேனே" என்ற சிந்தாமணி இங்கு ஒப்புநோக்கத்தக்கது. "கொடியிடைதோள்,புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ்புரிகுழலாளல்குல்போலவளர்கின்றதே" என்றார், திருக்கோவையாரிலும். (நு)

ககஎசு. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைதன்
கமிழ்தி னியன்றன தோள்.

இதுவுமது.

(இ - ள்.) உயிர் - (தன்னைப்பெறுது வாடிய) என்னுயிர், உறு தோறு-(பெற்று) உறுந்தோறும், தளிர்ப்ப - தளிர்க்கும்வகை, தீண்டலால் - தீண்டுத

லான்,—பேதைக்கு - இப்பேதைக்கு, தோள்-தோள்கள், அமிழ்தின் இயன்றன - தீண்டப்படுவதோ ரமிழ்தினுற் செய்யப்பட்டன; (எ - று.)

ஏதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்கு மெய்திற்று. வாடியவுயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி, அவை அமிழ்தினியன்றன என்றான். தளிர்த்தல் - இன்பத்தால் தழைத்தல்.

(கு-ரை.) இதுவும், தோழியிற்கூட்டம் நிகழ்ந்த பின், தலைமகன் தலைவியொடு நிகழ்ந்த புணர்ச்சியைப் புகழ்ந்துகூறியதாகும். பெற்றுறுந்தோறும் - பெற்ற ஊற்றின்பத்தையடையுந்தோறும். உயிர்தளிர்ப்பதற்கு அமிழ்தினுலியன்றமை ஏதுவாவதுபோல, தீண்டப்படுதலும் ஏதுவாக அமைதலால், அவ்வமிழ்திற்குப் பருகப்படுந் தன்மையேயன்றித் தீண்டப்படுந்தன்மையும் கொள்ளவேண்டுவதாயிற் றென்பது, 'ஏதுவாதலால் தீண்டல் அமிழ்திற்கும் எய்திற்று' என்றதன்பொருள். (சு)

ககஅ. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றே
லம்மா வரிவை முயக்கு.

இவளோ நீ வரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து
தமது பாத்துண்ணு மில்லறத்தோடு படலீவேண்டுமென்ற
தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையது முயக்கம், (இன்பம் பயத்தற்கண்), தம்இல் இருந்து-தமக்குரிய இல்லின்கணிருந்து, (உலகோர்), தமது-தந் தாளான் வந்தபொருளை, பாத்து உண்டு அற்று - (தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப்)பகுத்து(த் தங்கூற்றை) உண்டாற்போலும்; (எ - று.)

தொழிலுவமம். இல்லறஞ்செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக்கு இப்புணர்ச்சியே தரு மென வரைவுடன்படான் கூறியவாறுமாயிற்று.

(கு.- ரை.) தோழியிற்கூட்டத்தால் தலைவன் தலைவியினிடத்துக் களவொழுக்கத்தை நிகழ்த்திவந்தானுக, தோழி 'களவொழுக்கத்தைத் தவிர்ந்து வரைந்து இல்லறம்நடத்துக'என்ன, வரைதலை யுடம்படானுய்த் தலைவன் சொன்னது இது. அரிவை - பெண். முயக்கம் - தழுவுகை: புணர்ச்சியென்ற கருத்தது. பயத்தற்கண் - உண்டாக்குதலில். இல்லின்கண் - வீட்டில். தம் தாளான் - தமதுமுயற்சியால். தென்புலத்தார் - பிதிரர். ஒக்கல்-சுற்றத்தார். பகுத்து - பிரித்துக்கொடுத்து. தங்கூற்றை - தமதுபகுதியை. தம்மிலிருந்து தமதுபாத்துண்டற்றேழிலை அரிவை முயக்கிற்கு உவமையாகக்கூறியதனுல், இது-தொழிலுவமமாயிற்று. இனி, தம்மிலிருந்து பாத்துண்டலாற் பெறலாகுஞ் சுவர்க்கவின்பம் இவ்வரிவைமுயக்கத்திலேயே எனக்கு உள்ளது என்று கூறியதாக் கருதுமிடத்து, இதனைப் பயனுவமமென்னலா மென்று தோன்றுகின்றது. துறக்கத்தின்பம் - சுவர்க்கலோகத்தின்பம். வரைவுடன்படான் - மணந்துகொள்ளச் சம்மதியாதவன். (எ)

ககஅ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

ஒத்த அன்புடைய நுமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியதென வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்.) (நீ சொல்லுகின்றதொக்கும்): வளி இடை போழப்படா-(ஒருபொழுதும் நெகிழாமையின்) காற்றால் இடையறுக்கப்படாத, முயக்கு-முயக்கம், யீழும் இருவர்க்கு-(ஒருவரையொருவர்) விழைவாரிருவர்க்கும், இனிதே—.

முற்றும்மை, விகாரத்தாற்றொக்கது. ஏகாரம், தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவரில்லை: இன்மையான், இஃதொவ்வாதென்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

(கு-ரை.) இதுவும் வரைவுடம்படாதான் கூறிய கிளவியேயாகும். ஒருபொழுதும் விடாமுயக்கமே யினிய தெனச்சொல்லி வரைவுகடாய தோழிக்குக் கருத்து-களவொழுக்கத்தால் தலைவியை முயங்குவது இடையீடுபடுமாதலால் இக்களவொழுக்கத்தைத் தவிர்த்து தலைவியை வரைவாயாக என்பது. வரைவுகடாய - வெளிப்பட மணந்துகொள்ளும்படி வற்புறுத்திக்கூறிய.

நீ சொல்லுகின்றது ஒக்கும் என்பது - தோழியின் பேச்சிற் பாதிப் பகுதியை யுடன்பட்டதைக் குறிப்பிக்கும். ஒருபொழுதும் நெகிழாமையால்-ஒருபொழுதும் முயங்கிய கையைத் தளரவிடாமையால். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது 'இருவர்க்கு' என்பதனீற்றில். இனிதே என்ற ஏகாரம் தெளிவைக் காட்டுதலால், தேற்றேகாரம். ஈண்டு - இப்போது, இங்கே. இருவர் இல்லை - நான் இவள் என்று பிரித்துச் சொல்லும்படி இருவராக இல்லை: ஒருவரே யென்னும்படி ஒற்றுமைப்பட்டுள்ளோ மாதலால், நீ சொல்லுவது எம்நிறத்துக்கு ஏலாது என்பது கருத்து. (அ)

ககoகூ. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

காரத்தல்வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப்பயனுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.

(இ - ள்.) ஊடல் உணர்தல் புணர்தல் இவை - (புணர்ச்சிபிணிதாதற் பொருட்டு வேண்டுவதாய) ஊடலும் அதனை யளவறிந்து நீங்குதலும் அதன்பினிகழ்வதாய அப்புணர்ச்சிதானுமென இவையன்றே, காமம் கூடியார் பெற்ற பயன்-(வரைந்துகொண்டு) காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன்கள்? (எ - று.)

ஆடவர்க்குப் பிரிவென்பதொன்று உளதாதன்மேலும் அதுதான் பரத்தையர் மாட்டாதலும், அதனையறிந்து மகளிரூடினிற்றலும், அவ்வூடலைத் தவறுசெய்தவர்தாமே தந் தவறின்மைகூறி நீக்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்த அன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைதெய்தினர் பெற்ற பயன்; அப்பயன் இருதலைப்புள்ளிலொருயிராய உழுவலன்புடைய எமக்கு வேண்டாவென அவ்வரைதெய்தலை யிகழ்ந்து கூறியவாறு.

(கு - ரை.) காரத்தல் வேண்டாமையின் - மறைக்கப்படுதல் வேண்டாமையால்: களவொழுக்கத்திற்குக் காரத்தல் வேண்டுமென்றபடி. இடை

யறவு - நடுவில் தடைப்படுதல். வரைந்தால் இடைமீடின்றிக் கூட்டம் பெறலா மாதலால் 'வரைந்தெதொள்க' என்று கூறிய தோழிக்கு, வரைவு உடன்படாத தலைவன் கூறியது இது என்க. வரைந்தெய்தியவர் எய்து வது ஊடல் முதலியவற்றாலாகும் இன்பப்பயனே யாதலால், ஒருயிராய இருதலைப்புள் போன்றுள்ள எமக்கு அந்த இன்பம் வேண்டா என்று வரை தலிலுள்ள குறைவை யெடுத்துக்காட்டி யிகழ்ந்தவாறாகும். ஊடலென் பது - தலைவனும் தலைவியும் ஒத்துக்கூடுங் காலத்து மனத்திற்கு ஒவ்வாத பரத்தையிற்பிரிவுபோன்ற செய்தி நடந்தனவாகத் தலைவன்மீது ஐயப் பட்டதனால் தலைவி மனம்வேறுபட்டிருத்தல். உணர்தலென்பது - ஊடியத னைத் தணிக்கக்கருதிய தலைவன், காரணங் காட்டியேனும் வேறுவகையாலே னும் தெளிவிக்கத் தலைவி தெளிதலாம். ஊடலும் உணர்தலும் நிகழ்ந்தபின் கூடல் நிகழும். கூடல் - புணர்ச்சி. இருதலைப்புள் - இரண்டு தலையையுடைய தொருபுள். உழுவலன்பு - எழுமையுந்தொடரவல்ல அன்பு. (கூ)

ககக0. அறிதோ றறியாமை கண்டற்றூற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

புணர்ந்து உடன்போகின்றன் தன்னுள்ளோ சொல்லியது.

(இ - ள்.) அறிதோறு - (நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள் களை) அறியவறிய, அறியாமை கண்டற்று - முன்னேயறியாமை காண்டற் போலக் காணப்படாநின்றது: சேயிழைமாட்டு செறிதோறும்-சிவந்த இழை யினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய, காமம் - இவண்மாட்டுக் காதல்; (எ - று.)

களவொழுக்கத்திற் பல இடையீடுகளா னெய்தப்பெறாது *அவாவுற் றான் இதுபொழுது நிரந்தரமாக எய்தப் பெற்றமையின், 'செறிதோறும்' என்றான். அறிவிற்கெல்லையின்மையான் மேன்மேலறிய வறிய முன்னே யறிவு அறியாமையாய் முடியுமாறுபோலச் செறிவிற் கெல்லையின்றி மேன் மேற் செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியாநின்ற தெனத் தன்னாராமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கும் உண் டேனும் அவண்மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்றா னிகழாமை யறிக.

(கு - ரை.) புணர்ந்து-களவொழுக்கத்தாற்கூடி. உடன் போகின்றான்- பாங்கியினுரைப்படி தலைமகளை இரகசியமாக இட்டுக்கொண்டு தன்னூருக் குச் செல்லுந் தலைமகன். உடன்போக்குவருமாறு:—களவொழுக்கத்து ஒழுகா நின்ற தலைமகன் தலைவியைத் தோழியிற்கூட்டத்தாற் கூடி இன்புற்று வரு நாளில், பெற்றோர் அயலானுக்குத் தம்மகளை மணம் பேசினும், தலைவனைத் தலைமகள் காணப்பெறுவண்ணம் கடிகாவற் படுத்தினும், தலைவிக்கு ஆற் றாமை மீதூர்ந்து துயரம் பெருகும்: பெருகவே, அதுகண்ட தோழி கவன்று தலைவனை யெதிர்ப்பட்டுச் செய்தியுரைப்பள்: தலைவன் சூழ்ந்து தன் காதலி யைத் தன்னூர்க்கு உடன்கொண்டுபோக வலித்தமையைத் தெரிவித்துத்

* பி - ம்: வருத்தமுற்றான் இதுபொழுது தீர்ந்தானாக

தலைவியை உடன்படுத்தத் தோழியை வேண்டும்; தோழியும் தலைவிக்கு அதனை மெல்ல உணர்த்த,அதுகேட்ட தலைவி ''உயிரினுஞ்சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்தன்று'' என்றதற்கு ஏற்பத் தன் நாண் அழிய வரினும் கற்புக்கெடாதிருத்தற்பொருட்டு உடன்போக்குக்கு ஒருப்பட்டமையைக் குறிப்பிப்பள்: பின்னர்த் தோழி அத்தலைவி வெளியேறுதற்கு வேண்டுவன புரிந்து ஒருவரும் அறியாவகை அவளைக் குறியிடத்துக் கொண்டு தலைவன்பாற்சேர்த்து ஓம்படைகூறி வழிவிடுப்பள்: தலைவன் தலைவியுடன் தன்னூர் நோக்கிச் செல்லும் என்பது.

பொருள்களை - அர்த்தங்களை. சிவந்த-செம்பொன்னிழையின்ற என்றபடி. இழை-ஆபரணம். இடைவிடாது-ஒருகணப்பொழுதும் விடாமல். செறியச்செறிய - புணரப்புணர. இவண்மாட்டு - இத்தலைவியினிடத்து. இடையீடுகள்-தடைகள். எய்தப்பெறுது - (தலைமகளைக் கூடுமாறு) அடையப்பெறுமல். நிரந்தரமாக-இடையீடின்றி. களவொழுக்கத்தில் இடையீடுபடும் புணர்ச்சி உடன்போக்கில் இடையீடின்றி நிரந்தரமாகப் பெறப்படுதலால் முன்னைய புணர்ச்சி நிகழாததுபோலவே தோன்றுதற்கு, மேன்மேல் அறியவறிய முன்னைய அறிவு அறியாமையே போலுதலை உவமை கூறினன். ஆராமை-விருப்பம் அடங்காமை. புணர்ச்சி மகிழ்தலில் தலைவியின் கூற்றாகக் களவி வராமைக்குக் காரணங்கூறுவது - 'இப்புணர்ச்சி மகிழ்தல்' என்று தொடங்கும் வாக்கியம்: ''காமத்தினையிற் கண்ணின்றவரூம், நாணும் மடனும் பெண்மையவாதலிற், குறிப்பினுமிடத்தினுமல்லது வேட்கை, நெறிப்படவாராவள்வயினனை'' என்ற தொல்காப்பியத்துக் களவியற்சூத்திரமுங் காண்க. (கo)

ககஉ - ஆம் அதிகாரம்.—நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது-தலைமகன் றலைமகணலத்தைப் புனைந்துசொல்லியது. இது, புணர்ச்சிமகிழ்ந்துழி நிகழ்வ தாகலின், புணர்ச்சிமகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) நலத்தை - அழகை. புனைந்து - அலங்காரித்து: அழகுபட என்றவாறு. மகிழ்ந்துழி - மகிழ்ந்தபோது.

ககஉக. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட் சொல்லியது.

(இ - ள்.) அனிச்சமே - அனிச்சப்பூவே! வாழி-வாழ்வாயாக: நல்நீரை-(மென்மையால் நீ யெல்லாப்பூவினும்)நல்ல இயற்கையை யுடையை:(அங்ஙனமாயினும்), யாம் வீழ்பவள் - எம்மால் விரும்பப்பட்டவள், நின்னினும்—, மெல் நீரள் - மெல்லிய இயற்கையை யுடையள்; (எ - று.)

அனிச்சம்-ஆகுபெயர். வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு: இனி, 'யானே மெல்லியன்' என்னுந் தருக்கினை யொழிவாயாகவென்பதாம். அது பொழுது உற்று அறிந்தாலுகலின், ஊற்றினினிமையையே பாராட்டினன். இன்னீரளென்று பாடமோதுவாருமுளர்.

(கு - ரை.) "ஞாயிறுதிங்க ளறிவேஞாணே" என்று தொடங்குந் தொல் காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தில், "சொல்லுநபோலவுங் கேட்குநபோல வும், சொல்லி யாங்கமையு மென்மனோர்புலவர்" என்றதனால், அனிச்சமலர் கேட்பனபோல வைத்துக் கூறப்பட்டது. "மோப்பக்குழையுமனிச்சம்" என் றதனால், அனிச்சப்பூ மிகவும்மென்மையதாதல் பெறப்படும். அனிச்சம் என்ற முதலின் பெயர்-மலரைக் காட்டுதலால், முதலாகுபெயர். வாழி என்ற உடன் பாட்டுவியங்கோள்-'இன்னிலும் மெல்லியதன்மையையுடையாள் யாம் விரும் பியவளாதலால், இனி மென்மையாலான தருக்கை நீ ஒழியவேண்டுவதே' என்றகருத்தைக் குறிப்பிப்பதனால், 'வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு' எனப்பட்டது. தருக்கினே - கர்வத்தை. அதுபொழுது-அப்போது. உற்றறிந் தான் - தலைவியை உற்றதனால் [தலைவியின் ஊற்றின்பத்தைப்பெற்றதனால்] அவள்மென்மையை யறிந்தான். மென்னீரள் என்ற இடத்து 'இன்னீரள்' என்று பாடம் ஓதுவாருமுளர். நீரை - முன்னிலையொருமைக்குறிப்புமுற்று.

ககஉ. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

இடந்தலைப்பாட்டின்கட் டோல்லியது.

(இ - ள்.) நெஞ்சே—! இவள் கண் - (யானே காணப்பெற்ற) இவள் கண்களே, பலர் காணும் பூ ஒக்கும் என்று - பலராலுங் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதி, மலர் காணின் மையாத்தி-(தாமரை குவளே நீலம்முத லிய) மலர்களைக்கண்டால் மயங்காதின்றாய்: (நின்னறிவிருந்தவாறென்)?

மையாத்தல் - ஈண்டு, ஒவ்வாதவற்றை யொக்குமெனக்கோடல்: இது மாத்தல் செம்மாத்தலென்பனபோல ஒருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கம் முதலாகத் தலைமகள்கண்களைக் காணப்பெறுமையின் அவற்றோடொருபுடை யொக்கும் மலர்களைக் கண்டுழியெல்லாம் அவற்றின்கட் காதல்செய்து போந் தான், இதுபொழுது அக்கண்களினலமுழுதுந் தானே தமியளே யிடத் தெதிர்ப்பட்டனுபவித்தா னாகலின், அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமை கருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு.

(கு - ரை.) தலைவன் இடந்தலைப்பாட்டில் தனியளாயிருந்த தலைவியின் கண்ணழகிலே ஈடுபட்டுச்சொல்லிய இளவி இது. பலர்காணும் பூ என்ற தனால், இவள்கண் யாவரானுந்தானேகாணுமது என்பது பெறப்படுவதோடு, மலர்கட்குப் பலராற்காணப்படுவது இழுக்கா மென்பதையும் குறிப்பிக்கும். மையாத்தி என்பதன்பொருள் - மயங்காதின்றாய் என்பது. மையாத்தல் - மயங்குதல்: இங்கே, ஒவ்வாதவற்றை ஒக்குமெனக் கொள்ளுதல். மையாத் தல் என்றசொல்லே நோக்குமிடத்து, மை யாத்தல் எனப் பிரித்தற்கு உரியது போலத்தோன்றுதலால், பிரித்தலாகாதென்பார் 'மையாத்தல் ஒருசொல்' என்றார். இயற்கைப்புணர்ச்சிநீக்கம் - இயற்கைப்புணர்ச்சியில் தலைவியைக் கூடியபின் அவளைப்பிரிந்த பிரிவு. அவற்றோடு - தலைவியின் கண்களோடு.

ஒருபுடை - ஒருசார்: முற்றிலுமன்றியென்றபடி. கண்டுழியெல்லாம்-பார்த்த போதெல்லாம். இடத்தெதிர்ப்பட்டு - இடந்தலைப்பாட்டிலெதிர்ப்பட்டு. (உ)

ககஙஉ. மூறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் தலைமகளதியல்பு கூறியது.

(இ - ள்.) வேய் தோளவட்கு-வேய்போலுந் தோளினையுடையவட்கு, மேனி முறி - நிறம் தளிர்நிறமாயிருக்கும்: முறுவல் முத்தம்-பல்லு முத்தமா யிருக்கும்: நாற்றம் வெறி - (இயல்பாய)நாற்றம் நறுநாற்றமாயிருக்கும்: உண் கண் வேல் - உண்கண்கள் வேலாயிருக்கும்; (எ - று.)

பெயரடையானும் ஓரியல்பு கூறப்பட்டது. முறி, முறுவலென்பன - ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரையாயிற்று. கின்ஞற் கருதப்பட்டாளை யறியேனென்ஞ சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉமாம்.

(கு - ரை.) மேனி - உடல்நிறம். வேய்த்தோளவள் என்ற பெயரில், வேய் என்பது பெயர்ச்சொல்லாகிய அடை: (அடை - விசேஷணம்:) அதனு லும், தலைவியின் இயல்புகூறப்பட்டதாகும்: தலைவியின் தோள்கள் அளவி னலும் வடிவினலும் பசுமைநிறத்தினலும் மூங்கிலையொத்திருக்குமென்ற வாறு: ''அளவெவடிவொப்பதன்றியே பச்சை, யிளவேய்நிறத்தானுமேய்க் கும்'' என்றது காண்க. முறி-தளிர்: இங்குத் தளிரின்நிறம் என்ற பொருளில் வந்தது: பொருளாகுபெயரின்பாற்படும். முறுவல் - சிரிப்பு: இது, அதனைக் கொண்ட பல்லுக்கு ஆகிவந்தது:பண்பாகுபெயரின்பாற்படும். பாங்கனைப் பற் றித் தலைவியைக் கூட்டியவனுக்குக் கூறுதல் அத்தூணையாகச் சிறவாது என்ற கருத்தினுல், இந்தக்குறளுக்கு இரண்டாவதாக வேறொருவிளக்கமுறை கூறப் படுகின்றதென்னலாம். (கூ)

ககஙச. காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று.

பாங்கற்கூட்டத்துச்சென்று சார்தலுறுவான் சொல்லியது.

(இ - ள்.) குவளை-குவளைப்பூக்கடாமும்,—காணின்-காண்டற்றொழிலை யுடையவாயின்,—மாண் இழை கண் ஒவ்வேம் என்று-மாண்ட இழையினை யுடையாள்கண்களை(யாம்)ஒவ்வே மென்று கருதி, கவிழ்ந்து-(அந்நாணினுல்) இறைஞ்சி, நிலன் நோக்கும் - நிலத்தினை நோக்கும்; (எ - று.)

பண்பாளனையன்றித் தொழிலானும் ஒவ்வாதென்பான் 'காணின்' என் றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாமென்பது தோன்ற 'கவிழ்ந்து' என்றுங் கூறினன். காட்சியு நாணு மின்மையிற் செம்மந்து வானை நோக்கின வென்பதாம்.

(கு - ரை.) பண்பாளை-வடிவு நிறம் என்கிற இக்குணத்தால். 'குவளை காணுதல்தொழிலையுடையவாயின் நாணத்தால் கவிழ்ந்து நிலனேக்கும்' என்ற இதில், 'குவளைக்குக் காணுதலென்ற தொழில் இல்லாமையால்தான்;

நாணமின்றிச் செம்மாந்து வானைநோக்கின' என்று, குவளைகள் இயற்கை யின் வானோக்கிமலர்ந்துநிற்பதற்குக் காரணங் கற்பித்துக் கூறியவாறு; ஏதுத் தற்குறிப்பேற்றவணி. காட்சி - காணுதற்றொழில். செம்மாந்து - கருவங் கொண்டு. (௪)

கககரு. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.

(இ - ள்.) (இவள் தன்மென்மைகருதாது), அனிச்சப்பூ - அனிச்சப் பூவை, கால் களையாள் பெய்தாள் - முகிழ்களையாது சூடினாள்: நுசுப்பிற்கு - (இனி) இவளிடைக்கு, நல்ல பறை படா - நல்லபறைகளொலியா; (எ - று.)

அம்முகிழ்ப்பாரம் பொறாமையின் இடை முரியும்: முரிந்தால், அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவ தென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக்குறிப்பால் நுசுப்பின்மே லேற்றப்பட்டன.

(கு - ரை.) பகற்குறியென்பது - தலைமகளைத் தழையேற்பித்த தோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கண் தலைப்பெய்வியாநிற்றல் என்பர், திருக்கோவையாரிற் பேராசிரியர். கால் - காம்பினடி. முகிழ்ப்பாரம் - காம்பி னடிச்சுமை. இடை - இடுப்பு. நெய்தற்பறை சாப்பறை யெனப்படுதலால், 'செத்தார்க்குரிய நெய்தற்பறை' என்றது. படுவது - ஒலிப்பது. சாக்காடு - மரணம்; பறைபடுதல் - (நெய்தற்) பறையொலித்தல்: மரணம் சாப்பறை கொட்டல் இவையிரண்டும் மானுடர்க்கு உரியன: இவற்றை மானுடரின் உறுப்பாகிய நுசுப்பிற்கு ஏற்றி, 'நுசுப்பிற்குநல்லபடாஅ பறை' என்றார்: இது, இலக்கணைக்குறிப்பு=லக்ஷணாமூலத்வநி: நல்லபறைபடா என்றதனால், தீயபறைபடும் என்பது குறிப்பாற்கிடைக்கும்: தீப்பறையொலிப்பது மானுட ரின் மரணகாலத்தது: ஆகவே, 'நுசுப்பு முரியும்' என்ற இலக்கணைப்பொரு ளைத் தருமாறு, சாப்பறையொலித்தலை நுசுப்பிற்கு ஏற்றி 'நுசுப்பிற்குநல்ல படாஅ பறை' என்றது: ஆதலால், இது, இலக்கணை யடியாகவந்த குறிப்புப் பொரு ளாயிற்று. (௫)

கககசு. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.

(இ - ள்.) மீன் - (வானத்து) மீன்கள்,—(வேறுபாடுபெரிதாகவும்), மதி உம் மடந்தைமுகன் உம் அறியா-(தம்)மதியினையும் (எம்) மடந்தைமுகத்தினை யும் (இது மதி இது முகம்என்று) அறியமாட்டாது,—பதியில் - (தம்) நிலையி னின்றும், கலங்கிய - கலங்கித்திரியாநின்றன; (எ - று.)

ஓரிடத்து நில்லாது எப்பொழுதும் இயங்குதல்பற்றி 'பதியிற்கலங்கிய' என்றான். வேறுபாடு, வருகின்ற பாட்டாற் பெறப்படும். இனி, இரண்டனை யும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கினமீன்கள் அறியாவென்று உரைப்பினு மமையும்.

(கு - ரை.) இரவுக்குறி யென்பது - தலைவன் தலைவியை இரவுப் பொழுதில் குறிக்கப்பட்ட இடத்திற்கூடுதல். தலைவன் இரவுக்குறிக்கட் செல்லுங்கால், நடுயாமத்தில் தலைவியது மனையெல்லைக்கட்சென்று மரங் களில் வதியும் மயில் அன்னம் முதலிய பட்சிகளை யெழுப்பல் புன்னைக்காய் களை நீரிலிடுதல் போன்ற செயல்களால் தான் வந்தமையைக் குறிப்பிக்க, அதனையுணர்ந்த தோழி, தாய்முதலியவரின் துயில்கையை ஆராய்ந்தறிந்த பின் தலைவியைக்கொண்டு சென்று குறியிடத்திலுய்த்து, பூக்கொய்தல் முத லிய வியாஜத்தாற் பிரிந்து செல்ல, தலைவன் தலைவியைச் சார்வனென்ப. வேறுபாடு - இங்கே, சந்திரனுக்கும் மடந்தைமுகத்துக்கு மூள்ள வித்தியா சம். பெரிதாகவும் - மிகுதியாக இருக்கவும். தம்மதியென்றது - சந்திரன் வானமீன்களுக்குப் பதியென்று சொல்லப்படுவ ஞதலால். வானமீன்கள் மதியினையும் மடந்தைமுகத்தையும் ஒப்புமை வேறுபாடு அறியமாட்டாமற் கலங்கின என்று கூறியது - பொதுவணி யெனப்படும் ஸாமான்யாலங்கார மாம். நட்சத்திரங்கள் ஓரிடத்தில் நில்லாது சஞ்சரித்தற்கு, முகமதிகட்கு வேறுபாடு அறியமாட்டாமையாலுண்டான கலக்கத்தைக் காரணமாகக் கற் பித்துக் கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணியின்பாற் படும். தங்கிலை - தாம் நிற்கும் இடம்: இது, பதியென்ற சொல்லின் பொருள். இயங்குதல் - சஞ்சரித்தல். வேறுபாடு-முகத்திற்கும் சந்திரனுக்குமுள்ள வேறுபாடு: அது, வளர்ந்து தேய்தலும் மறுவுடைமையுமென்று மேற்செய்யுளில் விளங்கும். 'இனி' என்பது தொடங்கி இப்பாடலுக்கு கேரூருரை: இரண்டனையும் - (மதி முகம் என்ற) இரண்டையும். முதலுரையில், அறியமாட்டாதனவாய் மீன்கள் கலங்கின என்றபொருள்படுதலால், அறியா என்பது - பலவின்பா லெதிர்மறை வினையாலணையும்பெயரும், கலங்கிய என்பது - பலவின்பா லிறந்தகாலவினைமுற்றுமாம்; இரண்டாவதுரையில்,(தம்மிலேயிற் கலங்காத மீன்கள் அறியுமல்லது) தம்மிலேயிற்கலங்கியமீன்கள் அறியமாட்டா என்று பொருளாதலால், அறியா என்பது - பலவின்பாலெதிர்மறை வினைமுற்றும், கலங்கிய என்பது - இறந்தகாலப்பெயரெச்சமு மாம். (கூ)

ககஎ. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

இதுவுமது.

(இ - ள்.) (அம்மீன்கள் அங்ஙனங் கலங்குதற்குக் காரணம் யாது? அறு வாய் நிறைந்த அவிர் - முன்குறைந்தவிடம் வந்துநிரம்பியே விளங்கும், மதிக்கு போல - மதிக்கட்போல, மாதர் முகத்து மறு உண்டுஓ - இம்மாதர் முகத்து மறுவுண்டோ? (எ - று.)

இடம் - கலை. மதிக்கென்பது-வேற்றுமைமயக்கம். தேய்தலும், வளர்த லும், மறுவுடைமையும் இன்மைபற்றி வேறுபாடு அறியலாயிருக்க அறிந்திலவெண இகழ்ந்துகூறியவாறு.

(கு - ரை.) அறுவாய் என்றது - அற்ற இடம்: அதாவது-தேய்ந்த கலை யென்க. மதிக்கு என்பது - மதிக்கண் என்று ஏழாம்வேற்றுமையாகப்

பொருள் படுதலால், வேற்றுமைமயக்கம். இன்மைபற்றி-(முகத்திற்கு) இல்லாதிருத்தலால். அறிந்திலை என்பதற்கு எழுவாய், வானமீன்கள் என்பது. (எ)

ககக2. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி.

இதுவுமது.

(இ - ள்.) மதி - மதியே! வாழி-வாழ்வாயாக;—மாதர் முகம்போல் ஒளிவிட வல்லைஎல் - இம்மாதர்முகம்போல (யான் மகிழும்வகை) ஒளிவீசவல்லையாயின், காதலை - (நீயும் என்)காதலையுடையையாதி; (எ - று.)

மறுவுடைமையின் அது மாட்டாய்; மாட்டாமையின் என்னுற் காதலிக்கவும்படாயென்பதாம். வாழியென்பது, இகழ்ச்சிக்குறிப்பு.

(கு-ரை.) காதலையுடையை யாதி-என்விருப்பத்தைப் பெற்றவளுவாய்: என்னலீ விரும்பப்படுவா யென்றபடி. காதலை - 'காதல்' என்ற பெயர்ச் சொல்லினடியாகப் பிறந்த முன்னிலை யொருமைக்குறிப்பு முற்று: வல்லை என்பதும், 'வன்மை' என்ற பண்பினடியாப்பிறந்த அவ்வகை விகுதிமுற்றே. ஏல்-என்னில் என்பதன் மரூஉ. 'மாதர் முகம்போல் ஒளிவிடமாட்டாத நீ இருந்து யாதுபயன்?'என்ற பொருளைக் குறிப்பித்தலால்,'வாழியென்பது இகழ்ச்சிக்குறிப்பு' என்றது. இச்செய்யுள், தலைவியாற் பெரும் புணர்ச்சிவகையை விரிக்கும்போது பொய்யாராட்ட லென்பதற்கு உதாரணமாக நம்பியகப் பொருளுரையிற் காட்டப்பட்டுள்ளது. (அ)

ககக3. மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றல் மதி.

இதுவுமது.

(இ-ள்.) மதி-மதியே!—மலர் அன்ன கண்ணுள் முகம் ஒத்திஆயின்-இம்மலர்போலுங் கண்ணினையுடையாள் முகத்தை (நீ) ஒக்கவேண்டுதியாயின்,—(இதுபோல யான் காணத்தோன்று:) பலர் காண தோன்றல் - பலர்காணத் தோன்றுதொழி; (எ - று.)

தானே முகத்தின் நலமுழுதுங்கண்டு அநுபவித்தானுகலின், ஈண்டும் பலர்காணத்தோன்றலை யிழித்துக்கூறினான்: தோன்றின், தினைக்கு அவ்வொப்பு உண்டாகாதென்பதாம்.

(கு - ரை.) இதுபோல-இம்முகத்தைப்போல. யான்காண-யான்மட்டும் காண. நலம் முழுதும் - அழகுமுழுவதையும். ஈண்டும் - இந்தச்செய்யுளிலும்: இவ்வதிகாரத்தின் இரண்டாஞ் செய்யுளில் 'பலர்காணும் பூவொக்கும்' என்று பலர்காண்பதை இழித்துக்கூறியமை காண்க. தோன்றின் - பலர் காணத் தோன்றினால். தோன்றல் - எதிர்மறைமுற்று. (கூ)

ககஉ0. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனதருமைகூறி மறுத்தது.

(இ - ள்.) அணிச்சம்பும் அன்னத்தின் தூவிபும் - (உலகத்தாரான் மென்மைக்கு எடுக்கப்பட்ட) அணிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகிய இரண்டும், மாதர் அடிக்கு—, நெருஞ்சிப்பழம் - நெருஞ்சிப்பழம்போல வருத்தஞ்செய்யும்; (எ - று.)

முள் வலிதாதலுடைமையிற் பழமென்றான். இத்தன்மைத்தாய அடி "பாத்தியன்ன குடுமிக்கூர்ங்கற்" களை உடைய வெஞ்சுரத்தை யாங்ஙனங் கடக்கு மென்பது குறிப்பாற் பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப் பொருளும் அடி நலனழியாமை யாகலின், இதுவும் இவ்வதிகாரத்தது யிற்று.

(கு - ரை.) உடன்போக்கு என்பது - தலைவன் தன்னுடன் தலைவியை ஊர்க்கு அழைத்துக் கொண்டு போதல்: இத்துறையில், அருமையுரைத்தல் என்பது ஒருகிளவி: அதனை, 'குறிப்புரைத்துப் போக்குடம்படுத்திய தோழிக்கு, கொங்கை பொருது நடுங்காநின்ற இடையினை யுடையாளது மெல்லிய அடிக்கு யான்செல்லும் வெஞ்சுரம்தகாது: அதன்மேலும் எம்பதியும் சேய்த்து: அதனுள்,ஈ கருதுகின்ற காரியம் மிகவும் அருமை யுடைத்தெனத் தலைமகன் போக்கருமை கூறு நிற்றல்' என்று திருக்கோவையா ருரையிற் பேராசிரியர் விவரித்துள்ளார். அதனது - உடன்போக்கினது. இங்ஙனம் உடன்போக்கினருமையைக் கூறும் முகத்தால் தலைவன் தலைவியின் அடிகளுடையமென்மையைப் புகழ்ந்து கூறுகின்றான். நெருஞ்சிச் செடியின் முள்ளினும் அதன் பழத்தின்முள் வலிதாயிருக்கு மாதலால், அணிச்சத்தையும் அன்னத்தின் தூவியையும் நெருஞ்சிப்பழம் என்றார். "பாத்தியன்னகுடுமி" என்பது, அகநானூறு, களிற்றியானைநிரையில் ஙூ-ஆவது பாடலில் வருவதாகும்: இதன்பொருள்:—பாத்தி அன்ன-பாத்தியிட்டாற் போன்ற, குடுமி-உச்சியையுடைய, கூர்ங்கற்கள் என்க. இச்செய்யுளில்,தலைவியின் பாதத்திற்கு அணிச்சம் அன்னத்தின்தூவி இவை நெருஞ்சிப்பழம் போலும் என்பது, செம்பொருள்: இதனாற் பெறப்படுங் குறிப்புப்பொருள்-இங்ஙன் மெல்லிய அடி கடுஞ்சுரத்தை எவ்வாறு கடக்கும்? என்பது. செம்பொருளோடு இதில் தோன்றுங் குறிப்புப்பொருளும் தலைவியின் அடிகளுடைய நலனைக் குறைக்காது விளக்குவதனால், இக்குறள் நலம்புனைந்துரைத்த லென்ற இவ்வதிகாரத்தி லிருத்தற்கு ஏற்றதேயாம். (கo)

ககஙூ - ஆம் அதிகாரம்.—காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது-தலைமகன் தன்காதன்மிகுதிகூறலும், தலைமகள் தன்காதன்மிகுதிகூறலு மாம். இது, புணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந்துரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) காதன் மிகுதி - அன்பின் மிகுதி.

ககஉக. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட் டலைமகன் தன் நயப்பு உணர்த்தியது.

(இ - ள்.) பணி மொழி - இம்மெல்லியமொழியினையுடையாளது, வால் எயிறு ஊறிய-வாலிய எயிறு ஊறிய, நீர்—, பாலொடு தேன் கலந்தற்று-பாலுடனே தேனைக் கலந்த கலவைபோலும்; (எ - று.)

கலந்தற்றென்பது விகாரமாயிற்று: கலக்கப்பட்டதென்றவாறு. பாலொடு தேனென்றவதனால், அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத்தென்பதாயிற்று. எயிறூறியவென இடத்து நிகழ்பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது. வேறுவேறு அறியப்பட்ட சுவையவாய பாலும் தேனும் கலந்தழி அக்கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது, பொருளாகிய நீர்க்கும் எய்துவிக்க.

(கு - ரை.) நயப்பு - அன்பு. வாலிய எயிறு - வெண்ணிறமுள்ள பல். கலக்கதற்று என்பது கலக்கற்று என விகாரமாயிற்று. கலக்கது - கலக்கப்பட்டதென்றபொருளது. அதன் - கலக்கப்பட்டவதன். ஊறுதல் என்ற தொழில் நீருக்கு உரியது: பல்லுக்கு உரியதன்று: இங்ஙனமெனவும் எயிறூறிய என்று ஊறுதல்தொழிலைப் பல்லுக்குக் கூறியது, இடத்து நிகழ்பொருளாகிய நீரின்தொழிலை இடத்தின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்காமென்க. சுவையவாய - சுவையையுடையனவான. அது - இன்னதென்றறியலாகாத சுவை. பொருளாகிய - உபமேயமாகிய. நீர் - எயிறூறிய நீர். பணிமொழியாளின் எயிற்றிலூறிய நீர் இன்னதென்றறியலாகாத இன்சுவைத்து என்று தலைவியினிடத்து அன்பால் தலைவன்கூறியது, இது. "இவள் செங்கனிவாயாருந் தொறு மினிதாயமிழ்தாமென தாருயிர்க்கே" என்றதுங் காண்க. (க)

கக2உ. உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

பிரிவச்சங்கூறியது.

(இ-ள்.) உடம்பொடு உயிரிடை என்ன அன்ன-உடம்பொடு உயிரிடையுளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய, மடந்தையொடு எம்மிடை நட்பு - இம்மடந்தையொடு எம்மிடையுளவாய நட்புக்கள்; (எ - று.)

என்னவெனப் பன்மையாற் கூறியது - இரண்டுந் தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்துவருதல், இன்பதுன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமை யென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகியாள் பின் உடையளாமன்றே; ஆயவழி, இவன் யாவன்கொலெனவும் என்கண் அன்புடையன்கொலெனவும் இன்னும் இவனைத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும் அங்ஙனமனத்தினெணிகழும்; அந்நிகழ்வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீரக் கூறியவாறு. எங்ஙனையென்று பாடமோதுவாரு முளர்.

(கு-ரை.) இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் தலைவிக்குப்பிரிவினைப்பற்றிய அச்சம் நிகழ,அத்தலைவியைத் தேற்றுமாறு தலைவன்சொல்லியகிளவி; இது. உயிரிடை - உயிரினிடத்து. என்ன என்று பலவின்பாலாற் கூறியது -

தொன்றுதொட்டுவேற்றுமையின்றிக் கலந்துவருதல்முதலிய காரணம்பற்றி யென்க. இரண்டும்-உயிரும் உடம்பும். "குடம்பைதனித்தொழிய" என்று தொடங்குங் குறளை இதனோடு ஒத்துவைத்துக்கவனிக்க. வேற்றுமையின்றி - வேறுபடுதலின்றி, ஒன்றுக. ஒக்க அநுபவித்தல் - ஒருசமமாக அநுபவித்தல். தலைவன் தலைவியைப்புணர்ந்தது தெய்வப்புணர்ச்சியாதலால், தலைவன் கலந்த அப்போது தன்வசந்தப்பிய தலைவி பிறகு தன்னுணர்ச்சிபெறுவா ளென்க. ஆயவழி - உணர்ச்சியுடையளாய அப்போது. என்கண் - என்னிடத்து. தலைப்பெய்தல் - சேர்தல். கூடுங்கொல் - நேர்படுமோ. அவைதீர - அவ்வெண்ணங்கள்தீர. (உ)

ககஉஙூ. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

இடந்தலைப்பாட்டின்கண் தலைமகணோக்கந்துச் சொல்லியது.

(இ - ள்.) கருமணியில் பாவாய்-(என்கண்ணிற்)கருமணியின்கண்ணுறையும் பாவாய்! நீ—, போதாய் - (அங்குநின்றும்) போதருவாயாக; (போதராதிருத்தியாயின்),யாம் வீழும் திருநுதற்கு-எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு, இடம் இல்லை - (இருக்க) இடமில்லையாம்; (எ - று.)

யான் காணுது அமையாமையின் இவள் புறத்துப் போகற்பாலளன்றி என்கண்ணு ளிருக்கற்பாலள்; இருக்குங்கால் நின்னெடொருங்கிருக்க இடம் போதாமையின் நின்னினுஞ் சிறந்த இவட்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக வென்பதாம்.

(கு - ரை.) நீக்கத்து-பிரியும்போது. உறையும்-வசிக்கின்ற. போதருவாயாக - போய்விடுவாயாக. நீயும் இருந்து என்காதலியும் தங்கியிருக்கக் கண்ணில் இடம்போதாதாகையால், என்காதலிக்கு இடந்தருமாறு நீபோதுக என்கின்றான், தலைவன். வீழும்-விரும்புகின்ற. திருநுதல்-அன்மொழித்தொகை. காணுதமையாமையின் - காணமல் இருக்கமுடியாதாகையால். இருக்கற்பாவள் - இருத்தற்கு உரியள். (ங)

ககஉச. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

பகற்குறிக்கட் புணர்ந்துநீங்குவான் சொல்லியது.

(இ - ள்.) ஆய் இழை - தெரிந்த இழையினையுடையாள்,—(எனக்குப் புணருமிடத்து),உயிர்க்கு வாழ்தல் அன்னள்-உயிர்க்கு (உடம்போடுகூடி)வாழ்தல் போலும்; நீங்குமிடத்து - பிரியுமிடத்து, அதற்கு சாதல் அன்னள் - அதற்கு அதனினீங்கிப் போதல்போலும்; (எ - று.)

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழுங்காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும்,சாங்காலத்து வருத்தஞ் செய்தலானும், அவற்றை அவள்புணர்வுபிரிவுகட்கு உவமையாக்கினான்.

(கு - ரை.) உயிர்க்குவாழ்தலாவது - உடம்போடுகூடியிருத்தலேயாம். 'காதற்சிறப்புரைத்தல்' என்பது அதிகாரமாதலாலும், 'நீங்குமிடத்து' எனை

அடுத்தவாக்கியத்து வருதலாலும் அவற்றிற்கு ஏற்ப, 'எனக்கு, புணருமிடத்து' என்பன, அவாய்நிலையால்வந்தன. வழிநிற்றல்-அடங்கியிருத்தல். அவற்றை-வாழ்தலையும்சாதலையும். இந்தத்திருக்குறளை, "பிரிந்தவழிக்கலங்கலும்" என்ற இடத்து 'வழி' என்றதனாற் பிரியலுறாவான்கூறுவனவும் உண்டு என்று கொண்டு, உதாரணங்காட்டினர் தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர்: அன்றியும், பாங்கற்கூட்டத்தின்பகுதியிற் சேர்த்தெனவும் கொண்டுள்ளார். (சு)

ககஉரு. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
ஞெள்ளலமர்க் கண்ணுள் குணம்.

ஒருவழித்தணந்துவந்த தலைமகன் 'நீயிர் தணந்தஞான்று எம்மையுள்ளியு மறிதிரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) ஒள் அமர் கண்ணுள் குணம்-ஒள்ளியவாய் அமரைச்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களே, யான் மறப்பின் - யான் மறத்தலுயின், உள்ளுவன் - நினைப்பேன்; மறப்பு அறியேன்-(ஒருபொழுதும்) மறத்தலையறியேன்: (ஆகலான் நினைத்தலையுமறியேன்); (எ - று.)

மன் - ஒழியிசைக்கண்வந்தது. குணங்கள் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்தலைவியுற் தலைமகன்கூற்று; மேல் தலைமகள்கூற்று.

(கு - ரை.) ஒருவழித்தணத்தலாவது - தலைமகளைக் களவொழுக்கத்தால் தலைமகன் புணர்ந்துவாராநிற்கையில் அவர் [அலராவது - களவுப் புணர்ச்சியைப்பலரறிந்து பேசுதல்] எழுந்ததாக, அந்த அலரடங்கச் சிலநாள் தலைமகன் ஓரிடத்தில் தலைமகளைப்பிரிந்து உறைதலாகும். தணந்தஞான்று - பிரிந்திருந்தபோது. உள்ளியும் - நினைத்தும். உள்ளுவன்மன் என்ற இடத்து 'மன்' என்பது உள்ளுவேனல்லேன் என்ற பொருளைத் தந்ததனால், ஒழியிசையாயிற்று. மறந்ததையே யுள்ளுவதுமுடியும்: ஒருபோதும் மறவாதிருப்பின் அப்பொருளை யுள்ளுவது எப்படிமுடியும்? முடியாதன்றே? ஆகையால், யான் தலைவியையுள்ளுவேனல்லேனென்று தலைவன் தலைவியை உள்ளாமைக்குக் காரணம் கூறுகின்றான். கூற்று - பேச்சு. (ரு)

ககஉசு. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

ஒருவழித்தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்குமென்றஞ்சி அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) (தாம் காணுமைபற்றிச் சேய்மைக்கட்போயினரென்று கருதுவார் கருதுக): எம் காதலவர்-எம்முடைய காதலர், கண் உள்ளின் போகார் - (எம்)கண்ணகத்தினின்றும் போகார்: இமைப்பின் பருவரார் - (யாம்அறியாது) இமைத்தேமாயின் அதனால் வருந்துவதுஞ்செய்யார்: நுண்ணியர்-(ஆகலால்) காணப்படா நுண்ணியர்; (எ - று.)

இடைவிடாத நினைவின்மூதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னேதோன்றலின் 'கண்ணுள்ளிற் போகார்' என்றும், இமைத்துழியும் அது கிற்றலான் 'இமைப்பிற் பருவரார்' என்றும் கூறினாள்.

(கு - ரை.) இயற்பழித்த லென்பது - (தலைமகனது) தகவின்மையைக் கூறுதலாம்: இயல் - தன்மையை, பழித்தல் - பழிப்புள்ளதெனக் கூறுத லென்க. காணப்படா நுண்ணியர் - பிறரால் அறியமுடியாத நுட்பத்தன்மை யுடையார். முன்னேதோன்றலின் - கண்ணுக்கு எதிரிலே தோன்றுவதால்: ஒன்றை இடைவிடாதுநினைப்பின் அது நினைவின்முதிர்ச்சியால் கண் முன்னே நிற்பதுபோலத்தோன்று மென்க. இமைத்துழி-இமைத்தபொழுது. அது - அத்தோற்றம். பருவரார் என்பது - 'பருவா' என்ற பகுதியினடியா கப் பிறந்த எதிர்மறைப் பலர்பால்வினைமுற்று. (சு)

கக௨எ. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

இதுவுமது.

(இ - ள்.) காதலவர் கண் உள்ளார் ஆக-காதலர் (எப்பொழுதும்) எங் கண்ணினுள்ளாராதலான், கண் உம் எழுதேம் - கண்ணினை அஞ்சனத்தா லெழுதுவதுஞ் செய்யேம்: கரப்பாக்கு அறிந்து-(அத்துணைக்காலமும் அவர்) மறைதலையறிந்து; (எ - று.)

இழிவுசிறப்பும்மை, மாற்றப்பட்டது. கரப்பாக்கென்பது-வினைப்பெயர்: வருகின்ற வேபாக்கென்பதும் அது.யான் இடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறு என்னே? என்பது குறிப்பெச்சம்.

(கு - ரை.) அஞ்சனமெழுதாமைக்குக் காரணம், அஞ்சன மெழுதும் போதெல்லாம் அக்காதலர் கண்ணின்மறைவ ரென்பது கருதியாமென்கிறாள். கண்ணும் என்ற இடத்துள்ள உம்மையைப் பிரித்து, எழுதுதலேச்செய்யேம் என்று பொருளுள்ள எழுதேம் என்ற இடத்து எழுது என்ற பகுதியின் பின்னே கூட்டி எழுதுதலுஞ் செய்யே மென்று உரைக்கப்பட்டது. கரப் பாக்கு-தொழிற்பெயர்: கரத்தலென்பது பொருள். வருகின்ற - அடுத்தபாட் டிலே வருவதான. வேபாக்கு என்பது வேதலென்று பொருள்படுவதால், அது 'வே' என்ற பகுதியினடியாகப் பிறந்த தொழிற்பெயராகுமென்க. இடையீடுஇன்றி-இடைவிடாமல். இடையீடின்றிக் காதலரைக்காண்பதனால் சொல்லாதுஎங்கேயோ போய்விட்டாரென்று அத்தக்காதலரையியற்பழித்தல் தகா தென்று தோழிக்குக் கேட்கும்படி தலைவி சொல்லியவாறு. "கண்ணு ளார்நுங்காதலாரொழிகாமமீங்கெனு"என்ற சிந்தாமணி இக்குக் கருதுதற்கு உரியது. (எ)

கக௨ஏ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

இதுவுமது.

(இ - ள்.) காதலவர் நெஞ்சத்தார் ஆக - காதலர் எந்நெஞ்சினுள்ளாராக லான், வெய்து உண்டல் அஞ்சுதும் - (உண்ணுங்கால்) வெய்தாக உண்டலை யஞ்சாநின்றேம், வேபாக்கு அறிந்து - (அவர் அதனுள்) வெய்துறலையறிந்து.

எப்பொழுதும் எந்நெஞ்சின்கணிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருது மாறு என்னே? என்பது குறிப்பெச்சம்.

(கு - ரை.) வெய்தாக - வெம்மையுள்ளதாக. உண்டலை - (சோறு நீர் கறி முதலியவற்றை) உட்கொள்ளுதலை. அஞ்சுதும்-தனித்தன்மைப்பன்மை. வேபாக்கு - வேதல்: வெப்பத்தையடைதல். (அ)

ககஉகூ. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

வரைவிடைவைத்துப் பிரிவின்கட் டலைமகளாற்றுதற்பொருட்டுத்
தோழி தலைமகனையியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது.

(இ-ள்.) இமைப்பின்-(என்கண்) இமைக்குமாயின், கரப்பாக்கு அறிவல்-(உள்ளிருக்கின்ற காதலர்) மறைதலையறிந்து இமையேன்; அனைத்திற்கு ஏதிலர் என்னும் இ ஊர் - அவ்வளவிற்கு (அவரைத் துயிலாநோய்செய்தார்) அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர்; (எ - று.)

தன் கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து 'இவ்வூர்' என்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையல்லை யென்பதாம்.

(கு - ரை.) வரைவிடைவைத்துப்பிரிவு என்பது-கலியாணஞ்செய்து கொள்ளுவதாகிய சடங்கை இடையே வைத்துக்கொண்டு அதற்குவேண்டும் பொருளைத் தேடப்பிரிதலாம். தலைவன் வரைதற்குக் காரணமாகப் பொருள் தேடப் பிரிந்தானென்றால் வறியனென்று ஏற்படுமே யெனின்?—ஏற்படாது: முன்னோர் தேடிவைத்த பொருள் மிகுதியாக இருப்பினும் அதனை நுகர்வோன் சிறியோனென்றும், முயற்சியில்லாத சோம்பேறி யென்றும் இகழப்படுவானாதலாலும்,தான் முயன்று தேடிய பொருளை நுகர்தலே உத்தமமாதலாலும் பொருள்தேடப் பிரிவனென்க. அவள்-தலைவி. இயல்-நல்லதன்மை. அறிவல் என்பதற்குப் பயனாக, அறிந்து இமையேன் என்று இலக்கணையாற் பொருள் கூறப்பட்டது. நான் கண்ணிமையாமைக்குக் காரணம், துயிலாமையன்று: உள்ளிருக்குங்காதலர் மறைவரென்ற எண்ணமே: அவ்வாறு நான் கண்ணிமையாமைமாத்திரத்தைக்கொண்டு என்காதலரை ஏதிலரென்று இவ்வூர் கூறுகின்றது: அது தகுதியன்று என்றவாறு: ஏதிலரென்பதன் கருத்துப் பொருள்,பிரியாநோய்செய்தாரன்பிலரென்பது.தன்கருத்து அறியாமைபற்றித் தோழியைப் புலந்து சொல்லுபவள் - தலைவி. புலந்து - (பாங்கிமீது)வெறுப்புக்கொண்டு.இவ்வூர்என்றது, இங்குத் தோழியைக்காட்டுமென்க. பழிக்கற்பாலையல்லை-பழித்தற்றன்மையை விடுவாய் என்றபடி. (கூ)

ககஙஂ. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

இதுவுமது.

(இ - ள்.) (காதலர்), என்றுஉம் - எஞ்ஞான்றும், உள்ளத்துள்-உவந்து உறைவர்-என்னுள்ளத்துள்ளே யுவந்துறையாநிற்பர்: (அதனையறியாது அவரை), 'இகந்து உறைவர்-பிரிந்துறையாநின்றார்: ஏதிலர் - அன்பிலர்:' என்னும் - என்று சொல்லாநிற்கும்: இவ்வூர்—: (எ - று.)

உவந்துறைவரென்றதனுல் அன்புடைமை கூறினுள். பிரியாமையும் அன்பும் உடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லே யென்பதாம்.

(கு - ரை.) உவந்துறைதல் அன்பின்செயலேயாதலால், உவந்துறைவ ரென்றதனுல், காதலரின் அன்புடைமையைக் கூறினு ளென்றூர். உவத்தலால் அன்பும், உறைதலாற் பிரியாமையும் காதலர்க்கு ஏற்படுவது காண்க. இல ரென - அன்பும் பிரியாமையும் இல்லாதவர் என்று. (கo)

ககச - ஆம் அதிகாரம்.—நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது-சேட்படுக்கப்பட்டு ஆற்றுனைய தலைமகன் தோழிக்குத் தன் நாண்துறவு உரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன் நாண்துறவுரைத்தலுமாம். இது;காதன்மிக்குழி நிகழ்வு தாகலின்,காதற் சிறப்பு உரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) சேட்படுக்கப்பட்டு - தோழியால்) தலைவி களவொழுக்கிற் கிட்டுதற்கு அரியளென்று மறுத்து அகற்றப்பட்டு. ஆற்றுனைய - தலைமகளைப் பிரிந்திருக்கப்பொறாதவனுன. நாண்துறவுரைத்தல் - 'மடன்மாவேறுவேன்' என்றற்போன்று நாணைத்துறந்தமைதோன்றும் பேச்சுக்களைப் பேசுதல். அறத்தொடு நிற்பிக்கலுற்ற - தருமத்தோடுபொருந்துமாறு செய்விக்கலுற்ற: அதாவது-களவொழுக்கத்தை வெளிப்படுத்தாவிட்டால் தலைவியின் நிலையை யுணராத பெற்றோர் அத்தலைவியை வேறொருத்தனுக்கு வாழ்க்கைப்படுத்தி னுல் அப்போது கற்புஆகியஅறம் தலைவிக்குப் பழுதுறுமாதலால், அங்ங னம் பழுதுறுமைக்காகக் களவொழுக்கத்தை முறையேவெளிப்படுத்தி நிற்கத் தொடங்கிய என்க. "அறத்தோடுநிற்றலாவது-களவை முறையே வெளிப் படுத்திநிற்றல்: முறையே வெளிப்படுத்திநிற்றலாவது - தலைவி பாங்கிக்கு அறத்தொடுநிற்கும்: பாங்கி செவிலிக்கு அறத்தொடுநிற்கும்: செவிலி நற் ருய்க்கு அறத்தொடுநிற்கும்: நற்ருய் தந்தைதன்னையர்க்கு அறத்தொடுநிற்கு மென்றுகொள்க.....இப்பொருள் எவ்விடத்திற்கு மாகாது: இவ்விடத்திற்கு மாத்திரமென்றுகொள்க" என்று தஞ்சைவாணன்கோவையுரையிற் கூறியுள் ளது. அவட்கு - தோழிக்கு.

ககஙக. காம முழந்து வருந்தினுர்க் கேம
மடலல்ல தில்லே வலி.

சேட்படுக்கப்பட்டு ஆற்றுனைய தலைமகன் சொல்லியது.

(இ - ள்.) காமம் உழந்து - (அரியராய மகளிரோடு) காமத்தையனு பவித்து, வருந்தினுர்க்கு-(பின் அதுபெறுது) தன்புற்ற ஆடவர்க்கு, (பண் டும்), ஏமம் - ஏமமாய் வருகின்ற, மடல் அல்லது-மடலல்லது, வலி இல்லே-(இனி எனக்கு) வலியாவதில்லே; (எ - று.)

ஏமமாதல் - அத்தன்ப நீங்கும்வகை அவ்வனுபவத்தினைக் கொடுத்தல். வலி-ஆகுபெயர். பண்டும் ஆடவராயினுர் இன்பமெய்தி வருகின்றவாறிற்க, நின்னே அதற்குத்துணே யென்றுகருதிக் கொன்னே முயன்ற யான் இது

பொழுது அல்லாமையை யறிந்தேன்: ஆகலான், இனி, யானும் அவ்வாற்றான் அதனை யெய்துவ லென்பது கருத்து.

(கு - ரை.) அதுபெறாது - காமவின்பத்தைப்பெறாது. ஆடவர்க்கு - புருஷர்கட்கு. பண்டும் - முன்பும். ஏமமாய் - துன்பத்தைப்போக்கி இன்பத்தைக்கொடுப்பதாய். மடலாவது - தலைவியைக் களவுப்புணர்ச்சிபுணர்ந்து பிரிந்த தலைமகன் பாங்கியையிரந்து தன்குறைபெறாது சேட்படுக்கப்பட்டுப் பிரிவுத்துயராலாற்றாமைவிஞ்சி அதனால் நாணம்முதலியன அழிந்து தலைவியின்வடிவையும் ஊரையும் பேரையும் தனது ஊரையும் பேரையும் ஒரு படத்திலெழுதி அந்தச்சித்திரப்படத்தைக் கையிற்கொண்டு பனைமடலினால் ஒருகுதிரையுருச்செய்வித்து அதன்மீது தான் ஏறி அதனைப்பிறராலிழுப்பித்து வீதிவழியே பலருங்கூடும் பொதுவிடங்களிற் செல்லுபவனாவது: இது, மடலூர்தலெனவும், மடன்மாவேறுதலெனவும் சொல்லப்படும்: இதற்குப்பயன்-தலைவனது இக்கடுந்தொழிலைக்கண்டு இதனால் இவனதுபெருவேட்கையை யுணர்ந்த உறவினராலாயினும், சான்றோராலாயினும் அரசனாலாயினும் வெளிப்படையாக மணஞ்செய்விக்கப்பெறுதலென்ப. ஏமமாதல் என்பதற்குப் பொருள், இரட்சகமாதலென்பது. இங்கே, தலைவியையனுபவிக்கப் பெறாமையாலான அத்துன்பம் நீங்கும்படி அந்தத்தலைவியின் காமவனுபவத்தைக் கொடுத்தலாம். வலியென்ற பண்புப்பெயர், வலிமையைத்தரும் பொருளுக்கு ஆயினது - பண்பாகுபெயராம். எய்திவருகின்ற ஆறு - அடைந்துவருகின்ற விதம். அதற்கு - இன்பமனுபவித்தற்கு. கொன்னே - பயனின்றி. அல்லாமையை - நீ துணையாகாமையை. அவ்வாற்றான் - முன்னும் ஆடவர் மடன்மாவேறுதலாகியவழியால். அதனை - அந்தக்காமவனுபவத்தை. "சான்றீருமக்கொன்றறிவுறுப்பேன்மான்ற, துளியிடைமின்னுப்போல் தோன்றியொருத்தி, ஒளியோடுருவென்னைக் காட்டியளியளென், நெஞ்சாறுகொண்டா ளதற்கொண்டுந்துஞ்சேன், அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின், பிணையலங்கண்ணி மிலைந்துமணியார்ப்ப, ஓங்கிரும்பெண்ணை மடலூர்ந்தென்னெவ்வநோய், தாங்குதறேற்றாவிடும்பைக்குயிர்ப்பாக, வீங்கிழைமாதர் திறத்தொன்றுநீங்காது, பாடுவேன்பாய்மாநிறுத்து:.....காமக்கடும்பகையிற்றோன்றினேற்கேம, மெழினுதலீத்தவிம்மா:.....என், துயர்நிலைதீர்த்தல் நுந்தலைக்கடனே" என்ற கலித்தொகை இங்குக் காணத்தக்கது. (க)

ககஙஉ. நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல் விலக்கலுற்றுட்குச் சொல்லியது.

(இ - ள்.) நோனா உடம்புஉம் உயிர்உம் - (அவ்வருத்தத்தினை) பொறாத உடம்பும்உயிரும், மடல் ஏறும் - (அதற்கேமமாய) மடன்மாவினையூரக் கருதாநின்றன: நாணினை நீக்கி நிறுத்து-(அதனைவிலக்குவதாய) நாணினையகற்றி.

வருந்தினுர்க்கென மேல்வந்தமையின், செயப்படுபொருள் ஈண்டுக் கூறு ராயினுர். மடல் - ஆகுபெயர். நீக்கிநிறுத்தென்பது, ஒரு சொன்னீர்மைத்து. அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும், நாண் நீங் காது நின்றது: அதுவும் இதுபொழுது நீங்கிற்றென்பான், 'உடம்புமுயிரும்' என்றுன். அவைதாந் தம்முணீங்காமற்பொருட்டு மடலேறுமென்றது, அவள் தன்னுற்றுமை யறிந்து கடிதிற் குறைநேர்தலேக்கி.

(கு ரை.) நாணையுடைய நுமக்கு அந்தமடன்மாவேறுதல் முடியாது என்று மடல்விலக்குதலுற்ற பாங்கிக்குத் தலைமகன்சொல்லியது, இது. நோனுஎன்பதற்கு வருத்தத்தினையென்ற செயப்படுபொருள் கூறவேண்டிய தாகவும் கூறுதது, கீழ்ச்செய்யுளில் வருந்தினுர்க்குஎன்றுவந்திருத்தலால், அந்த அதிகாரம்பற்றி வருத்தத்தினையென்ற செயப்படுபொருள் தானே கிடைக்குமென்பதனுலாகும். அதற்குஏமமாகிய-அந்தப்பிரிவுத்துயர்க்கு இரட் சகமாகிய. மடலென்பது-பனைமடலினுலியன்ற குதிரைக்குஆகியதனுல், கார ணவாகுபெயராம். நீக்கிநிறுத்து என்பது இரண்டுசொல்லாய் இருபொரு ளேத்தாராமல் அகற்றியென ஒருபொருளேயே தந்ததனுல், ஒருசொல் என் றுர்: ஆகவே, நீக்குஎன்பது நிறுஎன்றதுணைவினை பெற்றதென்க. அறிவு என்பது - ''எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பது''. நிறையென்பது - காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். ஓர்ப்புஎன்பது - ஒருபொருளேஆராய்ந்துணர்தல். கடைப்பிடி யென்பது - கொண்டபொருளேமறவாமை. அவைதாம் - உடலும் உயிரும். அவள் - தோழி. குறை நேர்தல் - குறையைப்போக்க உடன்படுதல். (உ)

ககஙூ. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்று ரேறு மடல்.

நாணையன்றி நல்லாண்மையு முடைமையின் முடியாதென்றுட்துணி
சொல்லியது.

(இ - ள்.) நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்க ஆண்டகைமையும் (யான்) பண்டு உடையேன்: (அவை காமத்தானீங்குத லான்), காமுற்றுர் ஏறும் மடல் இன்று உடையேன் - அக்காமமிக்காரேறும் மடலினை இன்றுடையேன்; (எ - று.)

நாண் - இழிவாயினசெய்தற்கண் விலக்குவது. ஆண்மை - ஒன்றற்குந் தளராதுநிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளது இதுவேயாகலிற் கடி தின் முடியு மென்பதாம்.

(கு - ரை.) நல்லாண்மையுமுடைமையின் - நல்லஆண் தன்மையையும் நீ உடையஆகஇருத்தலால். முடியாது - மடலேறுதலென்பது கூடாது. 'நல்லாண்மையையும் நாணையும் உடையா யாதலால் மடலேறுதல் நினக்கு ஒல்லாது' என்ற பாங்கிக்குத் தலைவன்சொல்லியது, இது. பண்டுடையேன் என்றதனுல், இன்று அவை என்னைவிட்டுக் காமத்தால் விலகின என்பது, பெறப்படும். இழிவாயினசெய்யக்கருதுமிடத்துச் செய்யவொட்டாது விலக்

குந் தன்மையது நாண்என்க. இதுவே - மடலே. கடிதின் முடியும் என்ப தற்கு, மடலேறுதல் எழுவாயாம். (௩)

கக௩௪. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.

'நாணும்நல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப் புணையாகலின்
அதனால் அவை நீங்குவன வல்ல' என்றாட்குச் சொல்லியது.

(இ - ள்.) நாணொடு நல்லாண்மை என்னும் புணை-(யான் தன்னைக் கடத் தற்குக் கொண்ட) நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை, (என்னிற் பிரித்து), காமம் கடும்புனல் உய்க்கும் - காமமாகிய கடிய புனல் கொண்டு போகாநின்றது; (எ - று.)

அதுசெய்யமாட்டாத ஏனைப்புனலினீக்குதற்கு 'கடும்புனல்' என்றான். இப்புனற்கு அவை புணையாகா, அதனான் அவைநீங்குமென்பதாம்.

(கு - ரை.) காமவெள்ளத்திற்குப்புணை - காமமாகியகடலினைக் கடத்தற் குத்தெப்பம் போல்வது. அதனால் - காமவெள்ளத்தினால். அவை நாணும் நல் லாண்மையும். தன்னை - காமக்கடும்புனலை. புனல்வெள்ளம், மிகவும்அதிகரிக் குமாயின் அது புணையையும் அடித்துக்கொண்டுபோய் விடுந்தன்மைய தென்க. அது செய்யமாட்டாத-புணையைஅடித்துக்கொண்டு போகமாட்டாத. இப்புனற்கு-காமக்கடும்புனற்கு. அவை-நாணும் நல்லாண்மையும். அதனான்- காமக்கடும்புனலால். காமம் ஆண்தன்மையை உடைத்திடு மென்பதைக் "காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தே, னாணெழின் முற்றியுடைத்துள் ளழித்தரு, மாணிழை மாதராளேஎ ரெனக்காமன, தாணையால் வந்தபடை" என்றதனாலும் அறிக. (௪)

கக௩௫. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

'இவ்வாற்றமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன' என்றாட்குச்
சொல்லியது.

(இ-ள்.) மாலை உழக்கும் துயர் மடலொடு-மாலைப்பொழுதின்கண் அனு பவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும், (முன்னறியேன்): (இது பொழுது எனக்கு), தொடலை குறுந்தொடி-மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாள், தந்தாள்—; (எ - று.)

காமம் ஏனைப்பொழுதுகளினும் உளதேனும் மாலைக்கண் மலர்தலுடை மையின் 'மாலையுழக்குந்துயர்' என்றும், மடலும் அதுபற்றி வந்த தாகலின் அவ்விழிவும் அவளாற்றரப்பட்டதென்றும், அவடான் நீ கூறியதே கூறும் இளமையளென்பது தோன்ற 'தொடலைக்குறுந்தொடி' என்றுங் கூறினான். அப்பெயர் - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த வன்மொழித்தொகை. இவை அவடந்தனவாகலின், நின்னால் நீங்குமென்பது கருத்து.

(கு - ரை.) இதுவும், தலைவன் பாங்கியினிடம் கூறிய கிளவி. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலருமிந்நோய்" என்ற குறளாலும்

மாலைக்காலத்துக் காமநோய் மலருந்தன்மையதாதல் புலனும். அதுபற்றி - காமம்பற்றி. அவ்விழிவும் - மடலேறும்இழிவும். குறுந்தொடிஎன்பது - பண்புத்தொகையாயினும், தொடலைக்குறுந்தொடியென்ற தொடரில், தொடலையென்பது, குறுந்தொடி யென்பதனோடு உவமைத்தொகைப்பொருளில் தொடர்ந்து அன்மொழியாய் வந்ததனால், அத்தொடர் - உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாம். தலைவிதந்தனவே துயரும் மடலுமாதலால், அவளுடைய பாங்கியான உன்னால்தான் இவை நீங்கு மென்கின்றான். "படரும் பனையீன்றமாவுஞ் சுடரிழை, நல்கியாணல்கியவை" என்ற கலித்தொகை, இங்கு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது. (௫)

ககஙகூ. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

* மடலூரும் பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றட்குச் சொல்லியது.

(இ - ள்.) பேதைக்கு என் கண் படல் ஒல்லா - (நின்)பேதைகாரணமாக என் கண்கள் ஒருகாலுந் துயிறலைப்பொருந்தா;(அதனால்),யாமத்துஉம் மன்ற மடல் ஊர்தல் உள்ளுவேன்-(எல்லாருந்துயிலும்) இடையாமத்தும் (யானிருந்து) மடலூர்தலையே கருதாநிற்பேன்; (எ - று.)

பேதையென்றது பருவம்பற்றியன்று, மடமைபற்றி. இனிக் குறை முடிப்பது நாளையென வேண்டா வென்பதாம்.

(கு - ரை.) துயிறலை - தூங்குதலென்றசெயலை. பேதை - இங்கே அறியாமை யுடையாள்: தன்னோயையறிந்து தணிக்கா திருத்தல்பற்றி, தலைவியைப் பேதையென்கின்றான். பேதையென்பது பருவப்பெயராக வருவது உண்டு: அப்பருவத்திற்கு வயதெல்லை, ஐந்து முதல் ஏழு வரையிலும். என் கண்கள் பேதைக்காகப்படலொல்லா என்றமையால், என்குறையை உடனே முடிக்கவேண்டுமேயன்றி, நாளையென்று சொல்லி நாளைக்கடத்தலாகாதென்பது, பெறப்படும். (௬)

ககஙஎ. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

பேதைக்கு என்கண் படலொல்லா வென்பதுபற்றி, 'அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய ஆடவரன்றே ஆற்றற்பாலர்' என்றட்குச் சொல்லியது.

(இ - ள்.) கடல் அன்ன காமம் உழந்துஉம் மடல் ஏறா பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினையனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல, பெருந்தக்கது - மிக்க தகுதியினையுடைய பிறப்பு, இல் - உலகத்தில் இல்லை; (எ - று.)

பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகாநின்றது: நீ யஃதறிகின்றிலை யென்பதாம். இத்துணையுந் தலைமகன்கூற்று: மேற்றலைமகள் கூற்று.

---

* பி - ம்: மடலூரும்பொழுதை இற்றைக்கொழிந் தூரென்றாட்கு.

(கு - ரை.) கீழ்ச்செய்யுளில், தலைமகன் 'என்கண்படல் ஒல்லா' என்றான்: அதுபற்றி, பாங்கி 'அறிவிலராகியமகளிரினும் அஃதுடைய ஆடவரன்றே ஆற்றுதற்கு உரியவர்' என்றாளாக, 'மடலேறுதன்மை பெண்டிரிடமே யிருத்தலால் ஆடவரினும் அவரே ஆற்றுபவர்: அவர்பிறப்பே தகுதியுடையது' என்று தலைவன்கூறுகின்றகிளவி, இது. மடலூர்தலென்பது ஆடவர்க்கேயுரியதென்றும், மடலூர்வேனென்று சொல்லுதலோடுநிற்பது மகளிர்க்குரிய தென்றும் அறிக. "ஊர்வேன்மடலேயொழிவேன்மடநாணம்," "உலகறியவூர்வன்நான், முன்னிமுளைத்தெழுந்தோங்கியொளிபரந்த, மன்னியபூம்பெண்ணைமடல்," "பெருந்தெருவே, யூராரிகழிலுமூராதொழியேனான், வாராரும்பெண்ணைமடல்" என்பனமுதலனவாக இலக்கியங்கள் வருவனவும், "எத்திணை மருங்கினு மகடூ மடன்மேற், பொற்புடை நெறிமையின்மையான" என்ற தொல்காப்பியச்சூத்திரமும், அங்கு, 'கடலன்னகாமத்தராயினும் பெண்டிர், மடலூரார்மைந்தர்மேலென்ப - மடலூர்தல், காட்டுகேன்வம்மின் கவிவஞ்சியார்கோமான், வேட்டமாமேற் கொண்டபோழ்து என்றாலோவெனின், இது மடலேற்றன்று: ஏறுவ லெனக் கூறிய தோணேயோம்' என்ற நச்சினார்க்கினியருரையும் காண்க. இனி,பன்னிருபாட்டியலுடையார் மகளிர்மடலேறுரென்றும், ஆனால், கடவுளரைத் தலைவராகவைத்துப்பாடுமிடத்து அவர் மடலேறுவதாகக் கூறப்படுமென்றும் சொல்லுவர்: இதனை "மடன்மாப்பெண்டிரேறு மேறுவர், கடவுளர் தலைவராய்வருங்காலே" என்பதனாலறிக. பிறப்பு விசேடத்தால் - ஆணுய்ப்பிறந்திருத்தலினாலென்றபடி. அவ்வடக்கம் - மகளிர்க்கு உள்ளதான மடலேறுமிலிருத்தலாகிய அடக்கம். "எண்ணில்காமமெரிப்பினு மேற்செலாப், பெண்ணின்மிக்கதுபெண்ணலதில்லையே" என்ற சிந்தாமணி, இச்செய்யுளோடு ஒப்புநோக்கத்தக்கது. முதல் ஏழுபாடல்கள் தலைமகன் கூற்றும், இனிமூன்றுபாடல்களும் தலைவிகூற்றுமாம். (எ)

ககஙூ. நிறையரியர் மன்னளிய ரென்னுது காம
மறையிறந்து மன்று படும்.

காப்புச்சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.

(இ - ள்.) நிறை அரியர் (என்னுது)-(இவர்) நிறையால் (நாம்)மீதூர்தற்கரியரென்று அஞ்சுதல்செய்யாது, மன் அளியர் என்னுது-மிகவும் அளிக்கத்தக்காரென்று நிரங்குதல் செய்யாது,—காமம்-மகளிர் காமமும், மறை இறந்து-(அவர்) மறைத்தலைக்கடந்து, மன்றுபடும் - மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது; (எ - று.)

* என்னுதென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை, விகாரத்தாற்றொக்கது. மன்றென்பது, தந்தைதன்னையரை நோக்கி. உலகத்துப் பெண்பாலார்காமத்தியல்பு கூறுவாள்போன்று, தன் காமம் பெருகிய வாறும், இனி அறத்தொடுநிற்றல்வேண்டுமென்பதும் குறிப்பாற் கூறியவாறுயிற்று.

(கு - ரை.) காப்புச்சிறை - காவலாகிய சிறை. சிறையாவது-ஒருவரை அவர்விருப்பின்படிசெல்லாது தடுத்துவைப்பது. சிறை - மனவடக்கமென்னுங் குணம். சிறையிக்கவராதலால் நம்மால் மீதூர்தற்காரியரென்றும், மிகவும் அளிக்கத்தக்காரென்றும் கருதாமையால், காமமானது மகளிராலே மறைக்கப்படுந்தன்மையைக்கடந்து மன்றில்வெளிப்படுவதாய்விட்டதென்று, தன்காமம் மிக்கதன்மையைக் கூறுகின்றாள். அளியரென்னுது என்ற இடத்திலுள்ள என்னுது என்பது சிறையியரென்னுது என்று முன்னும் கூட்டப்பட்டவாறு காண்க. காமம் என்பதன்முன் மகளிரென்பது வருவிக்கப்பட்டது. மகளிர் என்றுவருவிக்கப்பட்டதனோடு தொடர்ந்த காமம் என்பதன்பின் 'ஆடவர்காமமேயன்றி' என இறந்ததுதழுவிய எச்சப்பொருளைத்தருகிற உம்மை விகாரத்தால்தொக்கதென்க. மன்று என்பது - சபையாதலால், தோழிமார்முதலியவரோடு அடங்கிநில்லாமல், இனி, தந்தைதன்னையரும் உணரவேண்டிய தன்மையைப்பெறுமென்பாள் 'மன்றுபடும்' என்றாள். தன்னையர் - தன் உடன்பிறந்தார். தோழி அறத்தொடுநிற்கவேண்டுமிடம் இன்னவையென்பதை "காப்புக்கைமிக்குக் காமம்பெருகினும், நொதுமலர் வரையும் பருவமாயினும், வரைவெதிர் கொள்ளாது தமரவண்மறுப்பினு, மவணுறஞ்சுங்காலமாயினும், அந்நாலிடத்து மெய்ந்நாணீஇ, யறத்தொடு நிற்ற றோழிக்குமுரித்தே" என்பது, இறையனாரகப்பொருள். (அ)

ககஙக. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

இதுவுமது.

(இ - ள்.) 'எல்லார்உம் அறிகிலார் - (யான் முன் அடங்கிநிற்றலான்) எல்லாரும் (என்னை) அறிதலிலர்: (இனியவ்வாறு நில்லாது யானே வெளிப்பட்டறிவிப்பல்)', என்று - என்றுகருதி,—என் காமம்—, மறுகில்-(இவ்வூர்) மறுகின்கண்ணே, மருண்டு மறுகும் - மயங்கிச் சுழலாநின்றது; (எ - று.)

மயங்குதல் - அம்பலாதல். மறுகுதல் - அலராதல். அம்பலுமலருமாயிற்று: இனி, அறத்தொடுநிற்றல்வேண்டு மென்பதாம். அறிவிலாரென்பதூஉம் பாடம்.

(கு - ரை.) அறிகிலாரெல்லாருமென்று மறுகும் என்றதனால், இனி அவ்வாறுநில்லாதபடி யானே வெளிப்பட்டறிவிப்பேனென்று கருதினமை பெறப்படும். மறுகு-வீதி. "அம்பலுமலருங்களவு" என்ற களவியற்சூத்திரத்தினுரையில், "அம்பலென்பது-சொல்நிகழாதே முகிழ்முகிழ்த்துச்சொல்வதாயிற்று; இன்னதன்கண்ணதென்பது அயலறியலாகா தென்பது. அலரென்பது-இன்னோனோடு இன்னாளிடை இதுபோலும்பட்டதென வீளங்கச் சொல்லிநிற்பது. அம்பலென்பது-பெரும்போதாய்ச் சிறிதுநிற்க அலருமெனநிற்பது: அலரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும்வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை" என்றுகூறியிருப்பதும், "சிலரறிந்து புறங்கூறலும் பழியும்அம்பல்", "பலரறிந்தலர் தூற்றல்...அலர்" என்று பிங்கலந்தை கூறுவதும் காண்க. (கூ)

ககசo. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

செவிலிக்குஅறத்தொடுநின்றுவைத்து, 'யான்நிற்குமாறென்னை' என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) யாம் கண்ணின் காண - யாம் (கேட்குமாறுமன்றிக்) கண்ணாற் காணுமாறு, (எம்மை), அறிவில்லார் நகுப-அறிவிலார் நகாநின்றார்: (அவரங்ஙனஞ் செய்கின்றது), யாம் பட்ட - யாமுற்ற நோய்கள், தாம் படா ஆறு - தாமும் உறாமையான்; (எ - று.)

கண்ணினென்றது, முன் கண்டறியாமையுணரநின்றது. அறத்தொடு நின்றமையறியாது வரைவுமாட்சிமைப்படுகின்றிலளெனப் புலக்கின்றாளாகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்குந்தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற்கு ஏலாமை யறிக.

(கு - ரை.) செவிலி - தலைமகளை வளர்த்த தாய். பாங்கி செவிலிக்கு அறத்தொடு நின்றாளென்க. [அறத்தொடுநிற்றல் - தலைவியின் களவொழுக்கத்தைத்தெரிவித்தல்.] அங்ஙன் செவிலிக்கு அறத்தொடுநின்றமையை யறியாத தலைவியினிடம் 'நான் நிற்கவேண்டியவிதம் யாது?'என்று பாங்கி நகையாடினாளாக,அந்தப்பாங்கியைநோக்கித் தலைவி'இவள் வரைவுமாட்சிமைப்படுகின்றிலள்'என்று மனப்பிணக்குக்கொண்டு கூறிய கிளவி, இது.[வரைவுமாட்சிமைப்படுதல்-வரைவுநிகழுமாறு அதற்குஏற்றசெயலில் மிக்கவூக்கங்கொண்டிருத்தல்.] அறிவில்லார் நகுப என்று இந்தக்குறளிற் கூறியது-பாங்கி நகுவதைச் சுட்டியாகும்: பாங்கியின்மீது மனப்பிணக்குக்கொண்டு தலைவி கூறுவதனால், அந்தப்பாங்கியை அயலாரைக் கூறுவதுபோல 'அறிவில்லார்' என்று கூறுகின்றாள். இதுவரையிற் பாங்கி தன்கண்ணெதிர்நின்று பரிகாசச்சிரிப்புச் சிரித்திராமையால், தன்னெதிரில் பரிகாசச்சிரிப்புச் சிரித்ததை'கண்ணிற் காண நகுப' என்று தலைவி யெடுத்துக்கூறுகின்றாள். இனி இந்தக்குறளைத் தலைவனைச்சேட்படுக்கும் [சேட்படுக்கும் - களவுக்கூட்டத்துக்கு இயையாது அகற்றுகின்ற] பாங்கியைநோக்கி, தலைவன், 'இவள் என்னைப்பற்றிச்சிரியாநின்றாள்' என்று கூறிய கிளவியாகக் கொள்ளின், நாணுத்துறவுரைத்தல் என்ற இந்த அதிகாரத்துக்கு அது பொருந்தா தென மறுக்கின்றனர். (கo)

ககரு - ஆம் அதிகாரம்.—அலரறிவுறுத்தல்.

அஃதாவது - களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர்கூறுகின்றஅலர் தனக்குஆகின்றவாற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும்,வரைவாக உடன்போக்காக ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை அவன்றனக்கு அறிவுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வ தாகலான், நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பிறர்கூறுகின்ற அலர் தனக்கு ஆகின்றவாறு - தலைவியைப் பற்றிப் பிறர்சொல்லிக்கொள்கின்ற தூற்றும்பழிமொழி தனக்கு அனுகூலமாக வாவதை: விரைவில் வெளிப்படையாகத் தலைவியை மணக்கலாமென்ற

காரணத்தால், அந்த அலர் தலைமகனுக்கு அனுகூலமான தாகும். வரைவையோ அல்லது கணவனுடன் அவன் ஊர்க்குச் செல்வதையோ இவற்றுள் ஒன்றை வேண்டினர் தலைமகளும் தோழியும் என்க. அவ்வலரை - ஊரில் அலர்பரக்திருக்கின்றது என்ற அவ்விஷயத்தை. அதிகாரமுறைமைக்குக் காரணம், நாணுத்துறந்தவழியே அலரறிவுறுத்தல் நிகழு மென்பது.

ககசக. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

அல்லதுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

(இ - ள்.) (மடந்தையொடெம்மிடை நட்பு), அலர் எழ - (ஊரின்கண்) அலரா யெழுதலான், ஆர் உயிர் - (அவளைப்பெறாது வருந்தும் என்) அரிய உயிர், நிற்கும்-(பெற்றதுபோன்று) நிலைபெறும்; அதனை - அந்நிலைபேற்றை, பாக்கியத்தால் - தெய்வத்தால், (யாமே யறிவதல்லது), பலர்-(கூறுகின்ற) பலரும், அறியார்—; (எ - று.)

அல்லகுறிப்பட்டுத் தலைமகளை எய்தப்பெறுத வருத்தமெல்லாந்தோன்ற 'அரியவுயிர்'என்றும், அங்ஙனம் அரியாளை எளியளாக்கியெடுக்கின்றமையின், அஃது அவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாகநின்ற தென்பான் 'அலரெழவாருயிர்நிற்கும்' என்றும், பற்றுக்கோடாதலை அவ்வேதிலாரறியில் தூற்றுதொழிவர், ஒழியவே ஆருயிர்போமாகலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தா லென்றுங் கூறினன். முற்றும்மை, விகாரத்தாற்றொக்கது.

(கு - சை.) அல்லதுறிப்படுதல் - குறியல்லாதகுறியிலே மயங்குதல். தலைமகன் இரவுக்குறியிலே தலைமகளுடையகூட்டத்தை நாடிவருமிடத்துப் பற்பல அடையாளங்கள் தலைவனுல் நிகழ்த்தப்படும்: அவை - புனலொலிப் படுத்தல் புள்ளெழுப்புதல் முதலியன. இங்ஙனம் தலைவன் தன்வரவை அறிவிக்கச்செய்யுங் குறிகள் அத்தலைவன்செய்கையாலன்றி முதிர்ந்தகாய்கனிகள் காற்றுல்வீழ்ந்து நீரில் ஒலியெழும்பல், வேற்றுப்புட்கள்வந்த அச்சத்தாற் பறவைகள்கலைதல் முதலியவைகளால் நிகழுமிடத்தும் அவைகளைத் தலைமகன்வரவு குறிப்பனவாகக் கொண்டு தோழி தலைமகளைக்குறியல்லாத அவை நிகழ்ந்தபோது குறியிடத்துச்செலுத்தித் தவறுதலும் உண்டு: இதுவே அல்ல குறிப்படுத்தலாம்: இங்ஙன் அல்லகுறிகளால்தவறிய தோழி அவனிரு காமை யுணர்ந்துபோந்து மனையகம் புக்கபின்னை அவன் வந்து அக்குறி செய்யும்: செய்தக்கால் இரண்டாவது கொண்டுபோகல் ஆகாதன்றே: என்னை? சிறிது முன்னுகப்போனரன்றே: அக்கை [அவ்விடத்துப்] புடைபெயராமைப் போகின்றரென்று உற்றூர்பின்நின்று ஆராய்தலா னென்பது. பிற்றை ஞான்று - மறுநாள். நிலைபேற்றை - உடம்புவிட்டுநீங்காது உயிர்நிலைத்திருப் பதை. எடுக்கின்றமையின்-பலருமுரக்கக்கூறுவதனுல். அஃது-அடைதற்கரிய வளை எளியளாக்கி ஊராரலரெடுத்துக்கூறுதல். பற்றுக்கோடு-ஆதாரம். பலர் என்பதன்பின் முற்றும்மைவிகாரத்தால் தொக்கதென்க. அலர்தூற்றுபவரின்

எண்ணம் வருத்தவேண்டுமென்பதே யாதலால், அது உயிர்நிற்றற்குப்பற்றுக் கோடாதலறிந்தால்துற்முதொழிவ ரென்க.பாக்கியத்தாலென்பதன்பொருள், தெய்வத்தால் என்பது. (க)

ககசஉ. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

இதுவுமது.

(இ - ள்.) மலர் அன்ன கண்ணுள் அருமை அறியாது - மலர்போலுங் கண்ணையுடையாளது எய்தற்கருமையறியாது,—இ ஊர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் (அவளையெளியளாக்கி அவளோடு) அலர்கூறலை எமக்கு உபகரித்தது; (எ - று.)

அருமை, அல்லகுறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்த தென்முன், தனக்குப் பற்றுக்கோடாகலின். அலர்கூறுவாரை அவர்செய்த உதவிபற்றி 'இவ்வூர்' என்முன்.

(கு - ரை.) அல்லகுறிப்படுதலும் களவுப்புணர்ச்சிக்கு இடையீடேயாத லால், இடையீடுகளானும் என்பதற்கு - தாய்துஞ்சாமை நாய்துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர்கடுகுதல் நிலவுவெளிப்படுதல் முதலிய வேறுஇடை யூறுகளானும் என்க:இவை, வருந்தோழிற்கருமை யெனப்படும். "அல்லகுறி வருந்தொழிற்கருமையென்முங்கு, எல்லிக்குறியிடை யீடிருவகைத்தாகும்" என்பதனுல், இரவுக்குறியிடையீடு இருவகையதாதலறிக. அல்லகுறியில் தாம் குறியிடத்துவந்துநின்றும் தலைவியும் தலைவனும் தம்மூட் சந்தியாமற் போவ ரென்றும், வருந்தோழிற்கருமையில் குறியிடத்து அவரதுவருகையே நிகழாது என்றும் இவ்விரண்டற்கும் வேறுபாடு உணர்க. ஈந்தது என்று இழிந்தோர்க்கு மிக்கோர் உபகரித்ததாகக் கூறியது, தன்னுயிரைத்தாங்குத லற்கு அது பற்றுக்கோடாதலா லாகும். அலர்கூறுவாரை இவ்வூர் என்றது - மகிழ்ந்துகூறுவதாகும்: இது, சொல்லுவான் குறிப்பினைக் கொண்ட கருத்து.

ககசஊ. உரூஉதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெரூஉது பெற்றன்ன நீர்த்து.

இதுவுமது.

(இ - ள்.) ஊர் அறிந்த கௌவை உரூஉ-(எங்கட்குக் கூட்டமுண்மை) இவ்வூரறிதலான்வினைந்த அலர் (எனக்கு) உறவதொன்றன்றே! அதனை பெரூது பெற்ற அன்ன நீர்த்து - (அதுகேட்ட என்மனம்)அக்கூட்டத்தைப் பெரூதிருந்தே பெற்றாற்போலும் நீர்மையையுடைத்து ஆகலான்; (எ - று.)

பெற்றன்ன நீர்மை-பெற்றவழியுளதா மின்பம்போலுமின் பமுடைமை. நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

(கு - ரை.) உறுவதுஒன்றன்றே-தக்கதொன்றன்றே. பெற்றுஅன்ன-பெற்றால் (அதை) ஒத்த. நீர்த்துஎன்ற வினைமுற்றிற்குஏற்ப, 'என்மனம்' என்ற எழுவாய், வருவிக்கப்பட்ட தென்க. (ஊ)

ககசஎ. கவ்வையாற் கவ்வித காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

இதுவுமது.

(இ - ள்.) காமம் கவ்வையால் கவ்வித-(என்)காமம்(இவ்வூரெடுக்கின்ற) அலராலே அலர்தலையுடைத்தாயிற்று; அது இன்று எல் - அவ்வலரில்லையாயின், தன்மை இழந்து-தன்னியல்பிழந்து, தவ்வென்னும்-சுருங்கும்; (எ-று.)

அலர்தல் - மேன்மேன் மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வியதென்றாற்போல, கவ்வையுடையதனை 'கவ்வித' என்றார். இயல்பு - இன்பம்பயத்தல். 'தவ்வென்னும்' என்பது குறிப்புமொழி; "நூல்கால் யாத்த மாலைவெண்குடை, தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப" என்புழியும் அது.

(கு - ரை.) செவ்வியதுஎன்பதைச் செவ்வையென்றத னடியாப்பிறந்ததாகக்கொண்டனராதலால், செவ்வையென்பதனடியாகச் செவ்வித என்ற குறிப்புமுற்று வருதல்போல, கவ்வையென்பதனடியாகக் கவ்வித என்ற குறிப்புமுற்று வந்ததாகக்கூறினர். இப்போது அலருக்கு இயல்பாவது-இன்பம்பயத்தலாகுதல். தவ்வென்னுமென்பது, சுருங்குதலேக்காட்டும் குறிப்பு மொழி. "நூல்கால்யாத்த" என்னும் மேற்கோள், பத்துப்பாட்டினுள்ஒன்றாகிய நெடுநல்வாடையில் 184, 185-வரிகளாக அமைந்தது: மேற்கோளின் பொருள்:—நூல் - நூலாலே, கால் யாத்த - சட்டத்தைக் கட்டின, மாலை - முத்துமாலையையுடைய, வெண்குடை—,—தவ்வென்று-சுருங்கி, அசைஇ - அசைந்து, தாழ் துளி - பெய்கின்ற மழையை, மறைப்ப - மேல்விழவொட்டாததடுக்க என்பது: (தவ்வென்று என்பதற்கு - தவ்வென்று ஓசைப்பட்டு என்றுபொருள் கூறினர், நச்சினார்க்கினியர்.) என்புழியும் - என்ற இடத்தும். அது - தவ்வென்பது சுருங்குதலாகிய குறிப்பையுணர்த்துவது. (ச)

ககசஅ. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

இதுவுமது.

(இ - ள்.) களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - (கள்ளுண்பார்க்குக்) களிக்குந்தோறுங் கள்ளுண்டல் இனிதாமாறுபோல,—காமம் வெளிப்படுந் தோறும் இனிது - (எனக்குக்) காமம் அலராந்தோறும் இனிதாகாநின்றது.

வேட்கப்பட்டற்றாலென்பது, வேட்டற்றாலெனநின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்ற தென்பதாம்.

(கு - ரை.) வேட்ட - வேட்கப்பட்ட: செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை. வேட்டஅற்று - வேட்கப்பட்ட [விரும்பப்பட்ட]து அத்தன்மையது; வேட்டுஅற்றுஎன்று பிரிப்பினுமாம். வேட்கைமிகுதியால் - அவாவின் மிகுதியினால். (ரு)

ககசஆ. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

இடையீடுகளானும் அல்லதறியானுந் தலைமகனையெய்தப்பெறுத தலைமகள் அவன் சிறைப்புறத்தானுகத் தோழிக்குச்சொல்லுவாளாய் அலராறிவுறீஇ வரைவுகடாயது.

(இ - ள்.) கண்டது ஒருநாள் - (யான் காதலரைக்)கண்ணுறப்பெற்றது ஒருஞான்றே; அலர் திங்களை பாம்புகொண்டற்று - (அதனினை) அலர் (அவ் வளவிற்றன்றித்) திங்களைப் பாம்புகொண்டஅலர் போன்று உலகெங்கும் பரந்தது; (எ - று.)

காரியத்தைக் காரணமாக வுபசரித்து 'பாம்புகொண்டற்று' என்ருள். இருவழியும், மன்னும் உம்மையும் அசைகளே. காட்சியின்றியும் அலர்பரக் கின்றஇவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்துகோடல்வேண்டு மென்பதாம்.

(கு - ரை.) தலைமகனைத் தலைவி எய்தப்பெறுமைக்கு அல்லகுறியோ, அல்லதுவேறுஇடையீடோ; இவ்விரண்டில் ஒன்றுகாரணமாம். சிறைப்புறம்- தோழி தலைவியர்க்குள் நிகழுஞ்செய்திகளைத் தலைவன் மறைந்தறிதற்கு அணு கூலமாய்க் காவல்மனைப்புறமாயுள்ள ஒதுக்கிடம். பாம்புகொள்ளுதல் - காரணம்: அதனுல்தோன்றிய அலர் பரத்தல் - காரியம்: இங்கே, பாம்புகொண் டற்று என்பது பாம்புகொண்டதனுலான அலர் பரந்தாற்போலும் என்ற காரியத்தைத் தெரிவித்தலால், இது காரியத்தைக் காரணமாக உபசரித்த தாம். அலர் - பழிச்சொல். பூமியின்நிழல் சந்திரன்மீது சில காலத்துவிழுவ தனைப் பாம்புகொண்டதாகக்கூறுதல், புராணவழக்கு. இருவழியும்-கண்டது மன்னும் அலர்மன்னும் என்ற இரண்டிடத்தும். காட்சிஇன்றியும்-(தாம்)கண் ணுற்காணுதல் இல்லையாகவும். (சு)

ககசஎ. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்.

வரைவுநீட ஆற்றளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானுதலறிந்த தோழி 'ஊரவரலரும் அன்னைசொல்லும் நோக்கி யாற்றல்வேண்டும்'எனச் சொல்லேடுப்பியவழி, அவள் சொல்லியது.

(இ - ள்.) இ நோய் - இக்காமநோயாகிய பயிர்,—ஊரவர் கௌவை எரு ஆக - இவ்வூரின்மகளிரெடுக்கின்ற அலர் எருவாக, அன்னை சொல் நீர் ஆக- (அதுகேட்டு) அன்னை(வெகுண்டு)சொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, நீளும்- வளராநின்றது; (எ - று.)

ஊரவரென்பது தோழிலான் ஆணெழித்துநின்றது. ஏகதேசவுருவகம். சுருங்குதற்கு ஏதுவாவன தாமே, விரிதற்கேதுவாகாநின்றன வென்பதாம். வரைவாளுதல் பயன்.

(கு - ரை.) வரைவுநீட - தலைவன்வரைந்துகொள்வது காலதாமதப்பட. ஆற்றுளாய - பொறுதலுளான. சொல் எடுப்பியவழி - சொல்லே எடுத்துரை லாற் கூறியபோது. 'ஊரவர்' என்பது-ஆண்பால் பெண்பால் என்ற இரண்டு பாற்கும் பொதுவாயினும், கௌவையெடுத்தலென்ற தொழில் மகளிர்க்கே யுரியதாதலால், ஆண்களையொழித்து மகளிரையே காட்டிற்று: ஒன்றெழி போதுச்சொல். ஊரவர்கௌவையை எருவாகவும், அன்னைசொல்லை நீராக வும் உருவகஞ்செய்ததற்கு ஏற்ப, காமநோயைப் பயிராக உருவகஞ்செய்யா

மையால், இது - ஏகதேசவுருவகமாகும்: ஊரவர்கௌவையினாலும் அன்னை யின் வெஞ்சொல்லினாலும் என்காமநோய் சுருங்கவேண்டியிருக்க, அவை என்காமநோய்மிகுதற்கே காரணமாயின என்று, தன்கருத்தைச் சிறைப்புறத் தானைய தலைவன்கேட்கத் தலைவி கூறுகின்ற ளென்க. இங்ஙனங் கூறுவதன் பயன், விரைவில் தலைமகன் வரைவாளுதலென்பது. ஊரவர் கவ்வை சிலநாள் நிகழும்: எருவும் சிலகால் இடப்படும்: நீர் அடிக்கடி பாய்ச்சப்படும்: அன்னை அடிக்கடி வெகுண்டு வெஞ்சொல் கூறுவள்: ஆதலால், ஊரவர் கௌவையை யெருவாகவும், அன்னைசொல்லை நீராகவும் உருவகஞ்செய்தன ளென்க. "ஊரவர்கௌவையெருவிட்டு அன்னைசொன்னீர்ப்படுத்து, ஈர நெல்வித்திமுளைத்தநெஞ்சப்பெருஞ்செய்யுள், பேரமர்காதல்கடல்புரையவிளை வித்த, காரமர்மேனி நங்கண்ணன் தோழீகடியனே" என்ற நம்மாழ்வார் பாசுரத்தில், இத்தக்குறளின் சொல்லும் பொருளும் அமைதலோடு பின்னும் விஸ்தரித்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. (எ)

ககசஉ. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றூற் கௌவையாற் காம நுதுப்பே மெனல்.

இதுவுமது.

(இ-ள்.) கௌவையால் காமம் நுதுப்பேம் எனல்-(எதிலாரெடுக்கின்ற) அலரால்(நாம்)காமத்தை யவித்து மென்று கருதுதல்,—நெய்யால் எரி நுதுப் பேம் என்ற அற்று-நெய்யாலெரியையவித்துமென்று கருதுதலோ டொக்கும்.

மூன்றனுருபுகள் கருவிக்கண் வந்தன. இளர்த்தற்காரணமாய அலரால், அவித்தல்கூடா தென்பதாம்.

(கு - ரை.) உவமை இளர்த்தல்மூடியுமேயன்றி அவித்தல்மூடியாதென் பதை, விளக்கிற்று. நெய்யால் கௌவையால் என்ற இடங்களில் மூன்ற னுருபுகள், கருவிப்பொருளனவென்க. (அ)

ககசக. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர் பலர்நாண நீத்தக் கடை.

வரைவிடைவைத்துப் பிரிவின்க ணற்றாளாய தலைமகள், அவன்வந்து சிறைப்புறத்தானதுதலறிந்து 'அலராஞ்சியாற்றல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) அஞ்சல் ஓம்பு என்றூர் (தம்மை யெதிர்ப்பட்டஞான்று 'நின் னிற்பிரியேன்) அஞ்சலோம்பு' என்றவர் தாமே, பலர்நாண-(இன்றுகண்டார்) பலரும் நாணும்வகை, நீத்தக்கடை - (நம்மைத்) துறந்தபின், அலர் நாண ஒல் வதூஉ-(நாம் எதிலார் கூறும்) அலருக்கு நாணக்கூடுமோ? கூடாது; (எ-று.)

நாணவென்னும் விகாரயெச்சம், ஒல்வதென்னுஞ்தொழிற்பெயருள் ஒல்லு தற்றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுகிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையதென்பதாம்.

(கு - ரை.) வரைவிடைவைத்துப்பிரிவு - வரைதலையிடையிலேயிட்டுப் பொருள்தேடும்நிமித்தம்பிரிந்த பிரிவு. அலராஞ்சி யாற்றல்வேண்டுமென்று தோழி தலைவிக்குக் கூறினு ளென்க. எதிர்ப்பட்டஞான்று - சந்தித்த அப்

போது. நின்னிற்பிரியேன் என்று தலைவன்கூறினுன்: இங்ஙனம் கூறுவது, பிரிவு என்பது ஒன்று உண்டு என்று தலைமகளுக்கு உணர்த்தவேண்டியென்பர். தஞ்சைவாணன் கோவை உரைகாரர் 'பிரியேன்' என்னுங் கிரியையில் 'தரியேன் நிற்பிரியினும்' என்று கூறியவா றென்னையெனின்,—இங்ஙனங் கூறிவிடின், 'பிரிந்து வருகென்றல்' என்று அடுத்த இளவி வருதலின், பிரியேனென்று முன்சொல்லி உடனே பிரிந்துவருகேனெனக்கூறின், தலைவன் பொய்யனைத் தோன்றித் தலைவியிறந்துபடும். அதனுல், பிரியே னென்றவுடனே பிரிவையும் அறிவுறுத்திக்கூறினுனென்பது' என்று கூறியது ஈண்டு நோக்குக. கண்டார்பலரும்நாண - என்னிலையைக்கண்ட அருளுடையரான பலரும் மனமொடுங்கிநிற்க. அஞ்சலோம்பென்றார்-"நின்னிற்பிரியலெனஞ்சலோம் பென்னும், நன்னர்மொழி" என்பது, கலித்தொகை. நீத்தக்கடை-எதிர்கால வினையெச்சம். ஒல்வது என்பதை ஒன்றன்பால்முற்றாக்கொள்ளாமல் வினையாலணையும்பெயராகக்கொண்டனர் பரிமேலழகர். எதிர்காலவொன்றன்பால் முற்று செய்யுமென்னும் வாய்பாட்டால்தான் வரு மென்பது ஒருசாரார் கொள்கை யெனத் தோன்றுகின்றது. தொழிற்பெயரென்பது - தொழிலடியாகப்பிறந்த பெயரென்ற காரணத்தால், வினையாலணையும்பெயரைக் காட்டும். நிலைமையமாய-நிலையையுடையோமாகிய. யாண்டையது-எங்கு உள்ளது? நாணுதல்நம்மிடத்து இல்லையென்றவாறு. (கூ)

கசரு0. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர்.

தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலராறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது.

(இ - ள்.) யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - (உடன்போகற் கேதுவாகனெக்கி)யாம்(பண்டே)விரும்புவதாய அலரை இவ்வூர் தானேயெடாநின்றது: காதலர்தாம் வேண்டின் நல்குவர் - இனிக் காதலர்தாமும் யாம் வேண்டியக்கால் (அதனை) இனிதின்நேர்வர்: (அதனுல் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது); (எ - று.)

எச்சவும்மை, விகாரத்தாற்றொக்கது. நங்கட்காதலுடைமையின் மறு ரென்பதுதோன்ற'காதலர்'என்றுரை. இவ்விருபதுபாட்டும் புணர்தனிமித்தம்.

(கு - ரை.) உடன்போக்குநயப்ப - உடன்போக்கைவிரும்பும்படி. அலர் உடன்போக்குக்கு ஏதுவா மென்க. பண்டே - முன்பே. அதனை-அவ்வுடன் போக்கை. நேர்வர்-உடன்படுவர். தாம் என்பதனீற்றில் யாமேயன்றிக் காதலரும் என்ற பொருள்தரும் எதிரதுதழுவியஎச்சவும்மை விகாரத்தால்தொக்கதென்க. இங்கு 'காதலர்' என்பது - நமதுவேண்டுகோளே மறுமைக்கேற்ற பண்பையுடையவர் என்ற சுருத்தைக் குறிப்பதனுல், கருத்துடைபடைகொளியாம்.இவ்விருபதுபாட்டு - "காமமுழந்து" என்பதுமுதலாகவுள்ள இருபது பாடல்கள். (கo)

அலரறிவுறுத்தல் முற்றிற்று.

களவியல் முற்றிற்று.

இரண்டாவது

கற்பியல்.

இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற் கட் பிரிவாற்ருமை கூறுகின்ருர்.

(கு - ரை.) கீழ் ஏழதிகாரத்திற் களவுப்புணர்ச்சியைப்பற்றிக் கூறிய ஆசிரியர், இதுமுதற் பதினெட்டதிகாரங்களால் கற்பைப்பற்றிக் கூறுகின்ருரென்க. அகப்பொருள், களவு கற்பு என்னும் இந்த இரண்டு கைகோள்களாக வுள்ளமை யறிக. கற்பியலென்பது - கற்பைப்பற்றிய இயலென்று விரியும். கற்பாவது-கொண்டானிற்சிறந்த தெய்வம் இன்று எனவும் அவனே இன்னவாறு வழிபடுக எனவும் இருமுதுகுரவர் [பெற்ருேர்] கற்பித்தலானும், அந்தணர் சான்ருேர் அருந்தவத்தோர் கடவுளர் இவர்களிடத்து ஒழுகும் ஒழுக்கத்தைத் தலைமகன் கற்பித்தலானும், வேதத்தினும் சடங்கினும் விதித்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்துச் செல்லுந் துணையும் இல்லறம் நிகழ்த்துதலானும், கொண்டதலைவனே இன்னவாறு பாதுகாப்பாயெனவும் அவற்கு நீஇன்னவாறு குற்றேவல்செய்தொழுகு எனவும் அங்கியங்கடவுள் சான்ருக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலானும், கற்பு எனப்படுவதாயிற்றென்பர். "முற்படப்புணராத சொல்லின்மையிற், கற்பெனப்படுவது களவின்வழித்தே" என்று கூறுவதனுல் இந்தக்கற்பு களவுப் புணர்ச்சிக்குப் பின்பு நிகழ்வதாகவே புலனெறிவழக்கம் [புலன் நெறி வழக்கம் - நூல் நெறிகளால் வழங்குவது] செய்யப்படுமென்று தெரிகின்றது. கற்பில் பெரும்பான்மை பிரிவே நூல்களிற் கூறப்படுவதனுல், முதலிற் பிரிவாற்ருமையைப்பற்றிக் கூறுகின்ருரென்க.

ககசு - ஆம் அதிகாரம்—பிரிவாற்ருமை.

அஃதாவது-வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவளாற்ருளாந் தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழிகூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன்குறிப்பா னுணர்ந்துகூறலும், பிரிவுணர்த்தியவழிக் கூறலும், தலைமகன் பிரிந்தழி ஆற்றுவிக்குந்தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலும் என நால்வகையாற் கூறப்படும்.

(கு - ரை.) பிரிவாற்ருமை யென்பது - பிரிவினை யாற்ருளாந்தன்மை யென்று பொருள்படும்: இரண்டாம்வேற்றுமைத் தொகை. வரைந்து எய்திய பின் - மணஞ்செய்துகொண்டு (தலைவியை) அடைந்தபின். ஓதற்பிரிவு காவற் பிரிவு பகைதணிவினைப்பிரிவு துணைவயிற்பிரிவு பொருள்வயிற்பிரிவு பரத்தையிற்பிரிவு என்ற கற்பில்நிகழும்பிரிவு ஆறனுள் முதலநான்கும் அறத்தின் பொருட்டும், பொருள்வயிற்பிரிவு - பொருளின்பொருட்டும், பரத்தையிற் பிரிவு-இன்பத்தின்பொருட்டும் நிகழ்வனவாம். பொருளின்பொருட்டுப் பிரி

தல் - தான் தேடிய பொருளைக்கொண்டு இல்லறம் நடத்துதலே உத்தம மாதலாலென்க. 'இன்பத்தின் பொருட்டுப் பரத்தையிற்பிரிதல்-தலைமகளை வரைந்தெய்தியபின்னர் வைகலும் பாலை நுகர்வான் இடையே புளிங்காடி. யையும் நுகர்ந்து அதனினிமையை யறிந்தாற்போல அவள் நுகர்ச்சி யினிமை அறிதற்குப் புறப்பெண்டிர்மாட்டுப் பிரியாதிற்றல்: அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயினகாட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால், தான் எல்லார்க்குந் தலைவனுதலின் அவர்க்கும் இன்பஞ்செய்யப் பிரியாதிற்ற லென்றுமாம்' என்பர் பேராசிரியர். 'பரத்தையிற்பிரிவு என்பது தலைவன் பரத்தையின்மேற் காதலாய்த் தலைவியைப்பிரிந்து பரத்தையர்சேரியிற் போதல்: பரத்தையிற் பிரிவு என்று ஓதவே, ''பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின், மாண்டவறிவினவர்'' என்பதனால் தலைவன் அறி வில்லனும்: தலைவியிடத்து அன்பும் இல்லனும்: பெருமையும் இல்லனும்: பட்டியு மாம் எனின்,—அற்றன்று; அரசுரிமையனுதலின், அவ்வரசுரிமைக்குப் பரத் தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கும் முறைமையரா யும் வரையாத உரிமையராய்ச் சேரியின்கணுறைவாரு மாகி அவரும் பிறந்த ஞான்று தொட்டு இவற்கு என வரித்திருக்கப் படுதலானும், அவரைநீக்குதல் தகுதியின்மையானும், பரத்தையிற்பிரிதல் குற்றம் அன்று எனக் கொள்க. அன்றியும் காலைக்கடன்கழித்தலும், உலகத்திருந்து நாடுகாவற்றொழில் செலுத்தலும், விருந்துடன் அடிசில் கைதொடலும், நாவலரோடு கல்வியயிற லும், ஆடல்பாடல்களிற் களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயி லுணர்ந்து தேவர்ப்பராவலுமாகிய காலவரையறை யெட்டினுள் ஆடல்பாடற் காலம் ஒன்று ஆதலானும், அதற்குரியர் பரத்தையராதலானும், அதற்குரிய காலத்தில் அவரிடத்தில் மனஞ்செல்லுதல் இயல்பு ஆதலானும், பரத்தையிற் பிரிதலாற் குற்றமின்று எனக் கொள்க. ஆயின், பரத்தையர்சேரியிற் செல்லு மாறு என்னையெனின்,—அவர்பலரோடும் விளையாடற்பொருட்டும், அவருட் புணர்தற்குரியாரைப் புணர்தற்பொருட்டும் பரத்தையர்சேரியிற் செல்லு மென்றுணர்க', 'புறத்தொழுக்கு என்பதற்குப் பொருள் - பரத்தையரிடத்து ஒழுகும் ஒழுக்கம்.....டைநூலார் புறத்தைப் பரமென்று கூறுவராதலால, பரத்தையரென்னுஞ் சொற்குப் புறமுடையவரென்னும் பொருள்கூற நின்ற வாறு உணர்க. புறமுடைய ரென்பது என்னையெனின், இவரின்பம் இன்ப மன்று என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வரைவின்மகளிரீ என்னும் அதிகாரத்தால் இன்பத்திற்குப் புறம் இவரின்பமென்று கூறியவாற்றா லுணர்க' என்று தஞ்சைவாணனுரைகாரர்கூறியனவும் இங்குக் காணத்தக் கன. சேயிடை-வெகுதூரம்: ஆயிடை - அவ்விடம்: அண்மையான இடம். அறம்பொருள்களின் பொருட்டுப் பிரிவது சேயிடையென்றும், இன்பம் பொருட்டுப் பிரிவது ஆயிடையென்றும் கொள்க. இவை பிரிந்தபின்செல்லு மிடத்தைக்காட்டும். செல்லுஞான்று - செல்லும்போது. அவடனக்கு - தோழிக்கு.

ககருக. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

'பிரிந்து கடிதின்வருவல்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

(இ-ள்.) செல்லாமை உண்டு ஏல்-(நீ) எம்மைப் பிரியாமையுண்டாயின், (அதனை), எனக்கு உரை - எனக்குச்சொல்: மற்று - அஃதொழிய, நின் வல்வரவு-(பிரிந்துபோய்) நின்விரைந்து வருதல், (சொல்வையாயின்),(அதனை), வாழ்வார்க்கு உரை - (அப்பொழுது) உயிர்வாழ்வார்க்குச் சொல்; (எ - று.)

தலைமகளையொழித்து 'எனக்கு'என்றாள், 'தான் அவள்'என்னும்வேற்றுமையின்மையின். அக்காலமெல்லாம் ஆற்றியிருந்து அவ்வரவு காணவல்லளல்லள்: பிரிந்தபொழுதே இறந்துபடு மென்பதாம். அழுங்குவித்தல், பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைப்பாரு முளர்.

(கு-ரை.) செல்லாமை-(பிரிந்து) போகாமை: எனவே, பிரியாமையாம். வல்வரவு - விரைந்து (மீண்டு) வருகை. தலைமகளுக்கு என்ன வேண்டிய இடத்து 'தான் அவள்' என்ற வேறுபாடுஇல்லாமல் கூறுவது தோழிக்கு இயல்பு ஆதலால், தலைமகளுக்கு என்னாது 'எனக்கு என்றாள்' என்றார்: 'தலைவரும் விழுமநிலையெடுத்துரைப்பினும்,.....ஒன்றித்தோன்றுந தோழி மேன'' என்ற இலக்கணம்பற்றிவந்தது, இது. அக்காலம் எல்லாம் - நீ பிரிந்துசென்றிருக்கப் போகும் அந்தக்காலவரையறை முழுதும். அவ்வரவு - தலைமகனான நீ மீண்டுவரும் அவ்வருகை. வாழ்வார்க்கு என்றமையால் இவள் அத்துணைக்காலம் வாழ்ந்திருக்கமாட்டாளென்ற கருத்துத்தொனிக்கு மென்பார், பிரிந்தபொழுதேயிறந்துபடு மென்பதாமென்று கருத்துக்கூறினார். இந்தக்குறளில், தலைவன் பொருளீட்டச் சென்று விரைவில் மீண்டு வருவேனென்றபோது நீ செல்லவேண்டா என்று வெளிப்படையாக மறுத்துச் சொல்லாமல், 'வல்வரவுவாழ்வார்க்குரை' என்று உடன்பாட்டுவினைமூலமாகப் பெறவைத்தது - விலக்கணி யாகும்: தண்டியாசிரியர் முன்னவிலக்கணியிற்கூறிய நால்வகை விலக்கில், இதனைக் காரியவிலக்கு என்னலாம். வடநூலார் ஆட்சேபாலங்கார மென்பர். இங்ஙன்குறிப்பாற் கூறுதற்குப் பயன், தலைவன் செயலை அழுங்குவித்தல் [விலக்குதல்] ஆகும்: பிரிந்தால், தலைவியிறப்பாள் என்பதை ''எந்நாளோ நெடுந்தகாய்நீசெல்வது, அந்நாள் கொண்டிறக்குமிவ ளரும்பெறலுயிரே'' என்ற கலித்தொகையடிகள் கூறுவதுங் காண்க. தலைமகளின் கூற்று [பேச்சு] ஆக்கி உரைத்தலும் உண்டு என்க.(க)

ககருஉ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

பிரிவு தலைமகன்குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) அவர் பார்வல் - (தழையுங்கண்ணியுங்கொண்டு பின்னின்றஞான்று) அவர்நோக்குமாத்திரமும், இன்கண் உடைத்து - (புணர்ச்சி குறித்தமையான் நமக்கு) இன்பமுடைத்தாயிருக்கும்: புணர்வு - (இன்று அப்

புணர்ச்சிதான் நிகழாநிற்கவும்) அது, பிரிவு அஞ்சும் புன்கண் உடைத்து - பிரிவரென்றஞ்சும் அச்சத்தினையுடைத்தாயிற்று:(அவரன்பின்நிலைமை இது).

பார்வலென்றதனைப் புணர்ச்சிபெறுத பின்னிலைக்காலம் பெறப்பட்டது புன்கணெண்ணுங் காரியப்பெயர், காரணத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினை யுடைத்தாதலாவது - ''முள்ளுறழ் மூளையெயிற் றமிழ்தூறுந் தீஞ்சீரைக், கள்ளினு மகிழ்செய மெனவுரைத்து மமையாரென், வெள்ளிழை திருத்து''ம் பண்டையிற் சிறப்பால், அவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்தலுடை மை. அழுங்குவித்தல், பயன்.

(கு - ரை.) தழை - இலைதளிர் முதலியவற்றாலியன்ற உடை விசேடம். கண்ணி-முடிமாலை. அவர்நோக்கு-அந்தத்தலைவரின்பார்வை. பின் புணர்வு என வருவதனால், முதலிலுள்ள பார்வல் என்பது - தழையும் கண்ணியுங் கொண்டு தன்குறைதோன்றப் பின்னின்ற பின்னிலைக் காலத்துப்பார்வை யைக் காட்டும். பிரிவச்சந்தோன்றுங் காலத்து மலர்ந்தநோக்கமின்றிக் கண் கள் புல்லியவாய்க் காணப்படுமாதலால், புன்கண் - காரியப்பெயர்: அது, புல்லியவாய்க் கண்கள் தோன்றக் காரணமான அச்சத்தைக் காட்டிற்று: ஆகவே, காரியப்பெயர் காரணத்தைக் காட்டிய உபசாரவழக்கின்பாற்படும். ''முள்ளுறழ்''என்று தொடங்கும் அடிகள், கலித்தொகையில் பாலைக்கலி - ஈ - ஆம் பாடலிலுள்ளது: இதன்பொருள்:—(காதலர்),—முள் உறழ் - முள் போடுமாறுபடுகின்ற மூளையினையுடைய, மூளை எயிறு - (காணலின்) மூளை போலும் பற்களிடத்து, ஊறும்-(விடாமல்) சுரக்கின்ற, அமிழ்து - அமிருதம் போலும், தீ நீரை-இனிய நீரைக்குறித்து, கள்ளின்உம் மகிழ்செயும் என உரைத்துஉம்-(இதைப்பருகினால் இது)கள்ளைக்காட்டிலும் மகிழ்ச்சியைத் தரும் என்று சொல்லியும், அமையார்ஆய் - வேட்கைதணியப்பெறுதவராய், —என் ஒள் இழை திருத்தும் - என்னுடைய ஒள்ளிய பூண்கள் நிலைகுலைந்த வற்றைப் பழையநிலைகளிலே கிடக்கும்படிதிருத்துகின்ற என்பது. பண்டை யின் சிறப்பால் - முன்னிருந்த நிலைமையினும் (அன்பு) மேம்பட்டுள்ளதனால். முன்னிருந்ததை விடமிக்கு அன்புகாட்டினானென்பது வேறு ஒருகருத்தைக் கொண்டதாகி, பிரிதலைக்குறிப்பித்துத் தலைவிக்கு அச்சஞ்செய்யு மென்க. பண்டையில்சிறப்பால் என்றபாடத்துக்கு - முன்புஇல்லாத சிறந்த தன்மை யினால் என்க. (உ)

ககடுக. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோரிடத்தண்மை யான்.

இதுவுமது.

(இ - ள்.) அறிவு உடையார் கண உம்-(பிரியேனென்ற தஞ்சொல்லும் நம்பிரிவாற்றுமையும்) அறிதலுடையராய காதலர்கண்ணும், ஓர் இடத்து பிரிவு உண்மையான் - ஓரோவழிப் பிரிவு நிகழ்தலான்,—தேற்றம் - (அவர் சொல்லும் தலையளியும் பற்றி நம்மாட்டுஅன்புடையரெனத் தேறுந்) தேற்றம், அரிது - அரிதாயிருக்கது; (எ - று.)

அரோ - அசைநிலை. உம்மை - உயர்வுசிறப்பின்கண் வந்தது.

(கு - ரை.) அறிவுடையாரென்றது - காதலரை. அறிவு - அறிதல்: இது செயப்படுபொருளை வேண்டியிருத்தலால், பிரியேனென்ற தஞ்சொல்லையும் நமக்குள்ள பிரிவுபொறுக்கமாட்டாமைக் குணத்தையும் என்ற செயப்படுபொருள் வருவித்துக்கொண்டார். நம்முடைய நிலையையும் அறிந்து பிரியேனென்று தாமும் சொல்லியிருந்தும் இப்போது அவர்பிரிவரென்பது குறிப்பாற் பெறப்படுதலால், அவரை நம்மிடத்து அன்புடையரென்று நம்புவது கூடாததாயிருக்கின்ற தென்கின்றாள் தலைவியென்க. தலையளி - உத்தமமான அன்பு: முகமலர்ந்து இனியன கூறவல்ல அன்பு. (கூ)

ககருசு. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

இதுவுமது.

(இ - ள்.) அளித்து - (எதிர்ப்பட்டஞான்றே) தலையளிசெய்து, அஞ்சல் என்றவர் - (நின்னிற்பிரியேன்) அஞ்சலென்றவர்தாமே, நீப்பின்-பின் பிரிவராயின், (அவர்க்கன்றி), தெளித்த சொல்-(அவர்)தெளிவித்தசொல்லை, தேறியார்க்கு - (மெய்யெனத்)தெளிந்தார்க்கு, தவறு உண்டோ - குற்றமுண்டோ? (எ - று.)

தேறியாரென்பது - தன்னைப் பிறர்போற் கூறல். சொல்லுஞ் செயலுமொவ்வாமைக்குற்றம், அவர்க்கு எய்தும்: அஃது எய்தாவகை யழுங்குவியென்பது கருத்து.

(கு - ரை.) எதிர்ப்பட்டஞான்றே - எதிர்ப்பட்ட அப்போதே. "நின்னிற் பிரியலெனஞ்சலோம்பென்னும், நன்னர்மொழியும்" என்பது கலித்தொகை. பிரியேனென்று சொன்னவர் பிரிந்தால், பிரிந்தவர்மீது குற்றம் நிற்குமேயன்றி அவர்சொல்லை நம்பியவர்க்குக் குற்றமில்லை யென்க. தேறியேற்கு எனத் தன்மையிடத்தாற் சொல்லவேண்டியிருக்க, தேறியார்க்கு என்று படர்க்கையாற்கூறியதனால், தன்னைப் பிறர்போற் கூறுதலென்றார். தேறியார்க் குண்டோதவறு என்ற வினு, 'அவர் சொல்லியசொல்லும் அவர் செய்கையும் ஒன்றொடொன்று ஒவ்வாதுமாறுபடுகின்ற குற்றம் அவர்க்கு வந்திடுமாதலால், அக்குற்றம் அவரைச் சேர்ந்திடாது: அவரைச் செலவழுங்குவி' என்று, தோழியினிடம் தலைவி கூறியதாகக் கருத்துக் காண்க. (சு)

ககருரு. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

இதுவுமது.

(இ - ள்.) ஓம்பின்-(என்னுயிரைச் செல்லாமற்)காத்தியாயின், அமைந்தார்-(அதனையாளுதற்கு)அமைந்தாருடைய, பிரிவு-செலவினை, ஓம்பல்-அழுங்குவிப்பாயாக; மற்று அவர் நீங்கின்-அழுங்குவிப்பாரின்றி அவர்செல்வராயின், (அவராலானப்பட்டவுயிருஞ் செல்லும்: சென்றால் பின்), புணர்வு அரிது - (அவரைக்) கூடுதல் (எனக்கு) அரிதாம்; (எ - று.)

ஆஞதற்கமைதல் - இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையராதல் மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) அழுங்குவிப்பாயாக - விலக்குவாயாக. இறைவராதற்கு - தலைவராதற்கு. மற்று என்பது - அழுங்குவிப்பதற்குமாறாக நிகழும் நீங்குதற் பொழிலேப்பற்றிச் சொல்லும்போது வந்ததனால், வினைமாற்றும். (நி)

ககருசு. பிரிவுரைக்கும் வன்கண்ணா யாயினரிதவர்
நல்குவ ரென்னு நசை.

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்.) அவர்-(நம்மவுக்கடுமையறிந்த) தலைவர்தாமே, (நம்முனின்று), பிரிவு - தம்பிரிவினை, உரைக்கும் - உணர்த்தும், வன்கண்ணர் ஆயின்-வன்கண்மையுடையராயின்,—(அத்தன்மையர் பின்பு நம்மாற்றுமையறிந்து வந்து), நல்குவர் என்னும் நசை-தலையளிசெய்வரென்றிருக்கு மாசை, அரிது-விடப்படும்; (எ - று.)

அருமை - பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரிவெண்ணுதலும் உணர்த்தலும் வல்லராயினர் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்துநல்குதல் யாண்டைய தென்பதாம். அழுங்குவித்தல், பயன்.

(கு - ரை.) கவவுக்கடுமை - விருப்பத்தின்முதிர்வு. முயக்கத்தின்கண் ஊற்றம் என்றலும் உண்டு. தலையளி - மிக்க அன்பு. வன்கண்மை-கொடுமை. 'அருமை' என்று எடுத்தது - 'அரிது' என்று வந்துள்ள குறிப்புமுற்றின் பகுதியாகும்: இதன்பொருள், பயன்படுதலின்மையென்பது: எனவே, நல்குவரென்னும் நசைஅரிது - நல்குவரென்று அவரைப்பற்றி எதிர்பார்த்திருப்பது பயனின்று என்றவாறு. கூடியிருக்கும்போதே பிரிவுகருதி அதனை யுணர்த்துதற்கும் ஏற்ற மனவலிமைபடைத்தவர் பிரிந்தபின்பு அன்பு கொண்டு நம்மை நினைந்து மீண்டுவந்து அருள்புரிவரென்று கருதுவதிற் பயனில்லை யென்க. நல்குதல் - அருள்செய்தல். யாண்டையது - எங்கேயுள்ளது? இல்லையென்றபடி. (சு)

ககருஎ. துறைவன் துறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை.

இதுவுமது.

(இ - ள்.) துறைவன்—, துறந்தமை-(என்னைப்) பிரியலுற்றமையை, (அவனுணர்த்தாமல் தானேயுணர்ந்து), முன் கை இறை - (என்) முன்கையினிறையினின்றும், இறவாநின்ற வளை - கழலாநின்ற வளைகள், (எனக்கு), தூற்றுகொல்-அறிவியாவோ? (அவனுணர்த்தவுணர்ந்துவந்து நீ யறிவித்தல் வேண்டுமோ?) (எ - று.)

முன்னேநிகழ்ந்தமையின் 'துறந்தமை'என்றும், கேட்ட துணையான் மெலிந்து ஆற்றுமையின் 'இறவாநின்ற' என்றும் கூறினள். அழுங்குவித்து

வந்து கூறற்பாலையல்லையாய நீயும் இவ்வாளைகள் செய்தனவேசெய்தாயெனப் புலந்து கூறியவாறு.

(கு - ரை.) துறைவன்-கடல்துறைக்குரியவன்: இது,நெய்தனிலத்துத் தலைவனைக் காட்டும். இது இரங்கற்பொருள தாதலால், 'துறைவன்' என்றது. இறை - முன்னங்கையில் வளையல்தங்கும் இடம். கைவளை கழலுதற்குமுன் தலைவர் தன்னைவிட்டு நீங்குவது நிகழ்தலால், 'துறந்தமை'என்று இறந்தகாலத்தாற் கூறியது. கேட்ட தோழியான் - தலைவனுடைய பிரிவைக் கேட்டஅளவாலே. செலவழுங்குவித்து வந்து கூறற்பாலை அல்லையாய நீ - தலைமகனைச் செலவழுங்குவித்தல் செய்யவேண்டுமேதவிர, அவன்செல்வதாகக்கூறியதை இங்குவந்து கூறத்தக்கவளல்லையாகிய நீ என்று தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்றாள். தலைவன் பிரிவுணர்த்தினால் அவனைச் செலவழுங்குவியாது என்ற ஆளைகள் என்முன்னங்கையைவிட்டு நீங்குதல் மூலமாக அவன் பிரிவை யுணர்த்துகின்றன: அதுபோலத்தான் நீயும் செய்தாயென்று தலைவி பாங்கியின்மீது பிணக்கந்தோன்றக் கூறுகின்றாள். (எ)

ககடுஉ. இன்ஞ தினனில்லூர் வாழ்த்த லதனினு
மின்ஞ தினியார்ப் பிரிவு.

இதுவுமது.

(இ-ள்.) இனன் இல் ஊர் வாழ்தல்-(மகளிர்க்குத் தங்குறிப்பு அறியுந்) தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தல், இன்ஞது—; (அதன்மேலும்), இனியார் பிரிவு-(தம்) காதலரைப்பிரிதல், அதனினும் இன்ஞது—; (எ-று.)

தலைவன் செலவினையழுங்குவித்து வாராது உடன்பட்டுவந்தமைபற்றிப் புலக்கின்றாளாகலின், 'இனனில்லூர்'என்றாள். உலகியல் கூறுவாள்போன்று தனக்கு அவ்விரண்டு முண்மை கூறியவாறு.

(கு - ரை.) செலவினை அழுங்குவித்து - செல்லுவதை விலக்கி. உடம்பட்டு-பிரிதற்கு இணங்கி. இனன்-இனமாயிருப்பவர்: குறிப்பறிந்து தொழில் புரிபவர். அவ்விரண்டும் - இனனில்லூர் வாழ்தலாலாகிய இன்ஞமை, இனியார்ப்பிரிதலாலாகிய இன்ஞமை. (அ)

ககடுக. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

'காமம் தீயேபோன்று தான்நின்றவிடத்தைச் சுடுமாகலான்
நீயாற்றல்வேண்டும்'என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) தீ—, தொடின் சுடின் (சுடல்) அல்லது - (தன்னைத்) தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது, காமம் நோய்போல - காமமாகியநோய்போல, விடின்-(தன்னை) அகன்றால், சுடல் ஆற்றும் ஓ - (தப்பாது)சுடுதலை வற்றோ? [மாட்டாது;] (எ - று.)

சுடுமாயினென்பது, மந்திரமருந்துகளால் தம்பிக்கப்படாதாயினென்றவாறு. காமத்திற்கு அதுவுமில்லையென்பாள்,வாளா 'சுடல்'என்றாள். அகறல்-

நுகராமை. சுடலென்பது முன்னுங் கூட்டப்பட்டது. தீயினுங்கொடியதனை யான் ஆற்றுமாறென்னை யென்பதாம்.

(கு - ரை.) சுடுதலை வற்றோ - சுடுதற்கு ஏற்ற வல்லமையுடையதோ? என்றபடி. தொடினல்லது என்றாலே போதுமாயிருக்க, தொடிற் சுடினல்லது என்றுகூறியது - சுடுவதானாற் சுடுமென்ற கருத்தது என்றார்: சுடுமாயின்என்று சுடுதலைப்பற்றி ஐயப்படவேண்டிய காரணம், தீ மந்திரத்தாலும், மருந்துகளாலும் சுடாமல் தடுக்கப்படுதலுண்டு என்பதாகும். தம்பிக்கப்படாதாயின் - தடுக்கப்படாதாயின். அதுவும்-மந்திரமருந்துகளால் தம்பிக்கச்செய்தலும். அகறல் என்பது 'விடின்' என்பதன் பகுதியாகிய விடு என்பதன் பொருளாகும்: இங்கே, விடுதல் - நுகராதிருத்தல் என்பது. இரண்டாம் அடியிலுள்ள சுடல்என்பது, முதலடியிலும் 'சுடின் சுடல் அல்லது' என்று கூட்டப்பட்டது. "நீங்கிற்றெறூஉம்...தீ" என்று கீழேகூறியிருத்தலும் காண்க. விடிற்சுடுந்தன்மைய தாதலால், காமத்தைத் தீயினும் கொடியது என்றது. ஆற்றுமாறு - பொறுக்கும் விதம். (௯)

௧௧௯௦. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

'தலைவியர்பலரும் பிரிவாற்றியிருப்பர்: அது நீ செய்கின்றிலை' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) (நீ சொல்லுகின்றதொக்கும்): அரிது ஆற்றி-பிரிவுணர்த்தியவழி அதற்கு உடம்பட்டு, (பிரியுங்கால் நிகழும்); அல்லல் நோய் - அல்லல் நோயினையும், நீக்கி—, பிரிவு ஆற்றி-(பிரிந்தால்) அப்பிரிவுதன்னையும்ஆற்றி, பின்இருந்து-பின்னுமிருந்து, வாழ்வார்-உயிர்வாழும் மகளிர், பலர் - (உலகத்துப்) பலர்; (எ - று.)

பண்டையிற்சிறப்பத் தலையளிபெற்று இன்புறுகின்ற எல்லைக்கண்ணே அஃதுஇழந்துதுன்புறுதற்குஉடம்படுதல் அரியதொன்றாகலின் அரியதனைச் செய்தென்றும், செல்லுந்தேயத்து அவர்க்குயாது நிகழுமென்றும், வருந்துணையும் யாமாற்றியிருக்குமாறென்னென்றும், அவ்வரவுதான் எஞ்ஞான்று வந்தெய்துமென்றும், இவ்வாற்றானிகழுங் கவலை மனத்து நீங்கா தாகலான் 'அல்லனோய் நீக்கி' என்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழுங் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்றலென்றிவைமுதலாக வந்து அதனை வளர்ப்பனவும் ஆற்றல்அரியவாகலின் 'பிரிவாற்றி' என்றும், தங் காதலரை இன்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லையென்பது குறிப்பாற்றோன்ற 'பின்னிருந்துவாழ்வார்பலர்' என்றுங் கூறினாள். அரிதென்பது-வினைக்குறிப்புப் பெயர். பிரிவின்கணிகழ்வனவற்றைப் பிரிவென்றாள். செய்து, நீக்கி, ஆற்றி யென்பன - ஓசைவகையான், அவ்வவற்றதருமை யுணர நின்றன. சிறப்பும்மை, விகாரத்தாற்றொக்கது. யானும் இறந்துபடுவலென்பது கருத்து.

(கு-ரை.) நீ சொல்லுகின்ற தொக்கும் என்பது, பாதியுடன்பாட்டைத் தெரிவிப்பதென்று முன்னரே எழுதப்பட்டது. பிரிவுணர்த்தியவழி அதற்கு

உடன்பட்டு என்பது - அரிதாற்றி என்பதன் பொருள். உடன்பட்டு - சம்மதித்து. அல்லல்நோய் - கவலையையுண்டாக்கும் மனோவியாதி. பண்டையிற் சிறப்ப - முன்னினும் மிகுதியாக. தலையளி - தலைமகனுடைய உத்தமமான அன்பு. இன்புறுகின்ற-இன்பத்தைப்பெறுகின்ற. எல்லைக்கண்-காலத்திலே. அஃது-இன்பத்தையனுபவித்தலே. அல்லல்நோயை விவரிப்பது - 'செல்லுந் தேயத்து' என்று தொடங்கி 'மனத்து நீங்காதாகலான்' என்பதுவரையில். செல்லுந்தேயத்து-(பிரிந்ததலைவர்) செல்லுகின்றதேசத்திலே. அவர்க்கு யாது நிகழும் - அத்தலைவர்க்கு என்னநேருமோ? வருந்துணையும் - தலைவர் மீண்டு வரும் வரையும். ஆற்றியிருக்கும் ஆறு - பிரிவுத்துன்பத்தைப் பொறுத்திருக்கும்வகை. அவ்வரவு - தலைவர் மீண்டுவருகை. பிரிந்தோர்க்கு அகத்துக் காமவேதனையும்,புறத்தே மதிமுதலிய காமோத்தீபகப்பொருள்கள் செய்வனவும்,ஆற்ற அரியன என்க: ஆதலால், அவற்றை யாற்றுத லரியன என்பார் 'பிரிவாற்றி' என்றுரைன்க. முதலாகஎன்பதனால், மாலைக்காலம் கடலோசை முதலியனகொள்க. (''தென்றற்கும் வீணைக்கும் சேமணிக்குங் கோகிலத்துக், கன்றிற்கமைக்காழிக்கம்புலிக்கு—நின்றரற்றும், அன்னைக்கு மாறற்கயர்ந்தா ளென்றன்னமே, யென்னைக்குமாறற்கியம்பு'' என்ற இரத்தினச்சுருக்கம் இங்குக் காணத்தக்கது.) அதனை - காமத்தை. இன்றியமையா - பிரிந்திருக்க மாட்டாத என்றபடி. வினைக்குறிப்புப் பெயர் - குறிப்பு வினையாலணையும் பெயர். ''பிரிவாற்றி'' என்ற இடத்து பிரிவு என்பது - பிரிவில் அகத்து நிகழும் காமவேதனையையும், புறத்தே துன்புறுத்தும் தென்றல் முதலியனவற்றையும் காட்டுதலால், தொழிலாகுபெயர். அரிது ஆற்றி என்பதற்கு - அரியவற்றைச் செய்து என்று பொருளாதலால், ஆற்றி யென்பதற்குப் பதிலாக, செய்து என்றார். ஆற்றி நீக்கி ஆற்றிஎன்பன ஓசைவேறுபாட்டால், ஆற்றுதல் முதலியவை செய்தற்கு அரியன என்ற பொருளே யுணர்த்தின. 'வாழ்வார்பலர்'என்ற தொடரும், ஓசைவேறுபாட்டால், ஒருவருமில்லை யென்ற பொருளைக் குறிப்பிக்கும். பிரிவு என்பதற்குப்பின், அது மிகவும் ஆற்றுதற்கு அரியது என்னும் உயர்வுசிறப்புப்பொருளைத்தரவல்ல உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. (கo)

ககள - ஆம் அதிகாரம்.—படர்மெலிந்திரங்கல்.

அது படரான்மெலிந்திரங்கலென விரியும். அஃதாவது - பிரிவாற்றாளாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அந்நினைவான் மெலிந்திரங்குதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு-ரை.) படர் - துன்பம்: இங்குத் துன்பத்தை எப்பொழுதும்நினைத்தலென்ற பொருளது. பிரிவாற்றுமை கூறியபின், அப்பிரிவாற்றாத துன்பத்தினைநினைந்து மெலிந்திரங்குவதைக் கூறுகின்றாரென்று அதிகாரமுறைமையையுணர்க.

ககசுக. மறைப்பேன்மன் யானிஃதேநோ யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.

காமநோயை வெளிப்படுத்தல் நின்நாணுக்கேலாதென்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) நோயை யான் மறைப்பேன் - இந்நோயை(ப்பிறரறிதலஞ்சி) யான் மறையாகின்றேன்; (நிற்பவும்), இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்-இஃது(அங்ஙனமன்றி நில்லாது நீர் வேண்டுமென்று)இறைப்பவர்க்கு ஊற்றுநீர்மிகுமாறுபோன் மிகாகின்றது; (எ - று.)

'அம்மறைத்தலாற் பயனென்?' என்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க்கொத்தினென்யான்" என்புழிப் போல ஈண்டுச் சுட்டுப்பெயரீறு திரிந்துநின்றது. இஃதோர் நோயையென்று பாடமோதுவாருமுளர்; அது பாடமன்மை யறிக. இனி, அதற்கடுத்தது நீ செயல்வேண்டுமென்பதாம்.

(கு - பை.) அறிதலஞ்சி - அறிதற்குக்கூசி. நாண்வரை-நாணினெல்லையில். நில்லாது - அடங்கி நில்லாமல். இறைக்க இறைக்க ஊற்று நீர் சுரப்பது போல மறைக்கமறைக்கக் காமநோய் மேன்மேலுந் தோன்று மென்றவாறு. மன் என்பது - (மேன்மேன்மிகுதலால்) மறைப்பதிற் பயனில்லையென்னும் பொருளைத் தருதலால், ஒழியிசைப்பொருளது. "இஃதோ செல்வர்க்கொத்தினென்யான்" என்ற மேற்கோளுள்ள இடம், விளங்கவில்லை. இஃதுஎன்னுஞ் சுட்டுப்பெயர் இஃதோ என்று திரிந்துவருதற்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: இதன்பொருள்:—இஃது-இவ்விஷயத்தில், யான் செல்வர்க்கு ஒத்தினென் என்பது. ஒன்று என்ற எண்ணுப்பெயர்முன் மெய்யெழுத்துவரின் 'ஒரு' என்று ஆகுமென்பது "முதனிலை யெண்ணின்முன்"என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் பெறப்படுதலால், "இஃதோர்நோயை" என்பதைப் பாடமன்மையறிக என்று கண்டிக்கின்றார். அதற்கு அடுத்தது - மேன்மேல்மிகும் நோயைப் போக்குதற்கு ஏற்ற செயலே. (க)

கசசுஉ. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.

'ஈண்டையாரறியாமன் மறைத்தல்,ஆண்டையாரறியத்தூதுவிடுதல் என்னும் இரண்டனுள் ஒன்றுசெயல்வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) இந்நோயை கரத்தல் உம் ஆற்றேன் - இந்நோயை (ஈண்டையாரறியாமல்)மறைத்தலும் வல்லேனாகின்றிலேன்; (ஆகாக்கால்),நோய் செய்தார்க்கு உரைத்தல்உம் நாணு தரும்-நோய்செய்தவர்க்குரைக்க வெனின் அதுவும் (எனக்கு)நாணினைத் தாராகின்றது: (இனி என்செய்கோ?) (எ - று.)

ஒருகாலைக் கொருகான் மிகுதலின் 'கரத்தலுமாற்றேன்' என்றும், சேயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னுமிருந்தே னென்பது பயக்குமென்னுங் கருத்தால் 'நாணுத்தரும்' என்றுங் கூறினாள்.

(கு-பை.) ஈண்டையார்-இங்குள்ளார்: ஊரவர். ஆண்டையார்-அங்கிருப்பவர்: தலைவர். மறைத்தலும் - மறைத்தலையும்: மறைத்தற்கும் என்றபடி. ஒருகாலைக் கொருகால் - ஒருவேளைக்கு ஒருவேளை. சேயிடைச் சென்றவர்க்கு -

(என்னைப் பிரிந்து) வெகுதூரஞ் சென்றிருப்பவர்க்கு. இது - காமநோயை. பயக்கும் - பெறப்படும். (௨)

ககசூ௩. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து.

இதுவுமது.

(இ - ள்.) காமம்உம் நாண்உம் - காமநோயும் (அதனைச்செய்தவர்க்கு உரைக்க லொல்லாத) நாணும், நோனா-(தம்மைப்) பொறாத, என் உடம்பின் அகத்து - என்னுடம்பின்கண்ணே, உயிர் காஆ தூங்கும்-உயிர்காத்தண்டாக (அதனிருதலையினுந்) தூங்காநின்றன; (எ - று.)

பொறாமை, மெலிவானாயது. தூங்குமென்பது, ஒன்றினொன்று மிகாது இரண்டும் ஒத்தசீர வென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முளொத்து உயிரினை இறுவியாநின்றன: யான் அவற்றுள் ஒன்றின்கண் நிற்கமாட்டாமையின், இஃது இற்றேவிடு மென்பதாம்.

(கு - ரை.) என்னுடலால் தாங்கமாட்டாதநிலையில் உயிரே காவடித் தண்டாகக்கொண்டு அதன் ஒருபுறத்துக் காமமும் மற்றொருபுறத்து நாண மும் தொங்குகின்றன என்கிறாள். பொறாமை - தாங்கமுடியாமை: இது மெலிவினால் ஆகியது. ஒத்தசீர - ஒத்த அளவின என்றபடி. தூதுவிடப் பண்ணும், காமம்: அதனை ஒழியச்செய்யும், நாண்: இறுவியாநின்றன-பாரத் தால் முறியும்படி அழுத்துகின்றன: இஃது - உயிர். இற்றேவிடும்-முறிந்தே விடும்: அழிந்திடுமென்றபடி. "நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ், வலிதி னுயிர்காவாத் தூங்கி யாங்கென்னை, நலியும் விழும மிரண்டு" என்ற கலித்தொகை, இங்குக் காணத்தக்கது. (௩)

ககசூ௪. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

தலைவியர் 'காமக்கடற்படார்: படினும், அதனை ஏற்றபுணையால் நீந்திக் கடப்பர்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) உண்டு காமம்கடல்ஏ - (யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ் விரண்டனுள்ளும் எனக்கு)உண்டாகின்றது காமக்கடலே; அது நீந்தும் ஏமம் புணை - அதனை நீந்தும் அரணாகிய புணை, இல் - இல்லை; (எ - று.)

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணை யாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை யென்பது கருத்து.

(கு - ரை.) யாவர்க்கும் - பிரிந்தநிலையிலுள்ள எல்லாத்தலைவியர்க்கும். இவ்விரண்டனுள் - காமக்கடல், அதனை நீந்தும்புணை என்ற இவ்விரண்டற் குள்ளே. அரண் - பாதுகாவல். இதற்கு - இந்தக் காமக்கடலைக் கடத்தற்கு. புணையில்லை யென்றதனால், தூதாகச் செல்லுதற்கு உரிய நீயும் இக்காலத்து உதவுகின்றாயில்லையென்பது, இந்தக் குறளின் கருத்து. (௪)

ககசுரு. துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பிணு ளாற்று பவர்.

தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.

(இ - ள்.) நட்பினுள் துயர் வரவு ஆற்றுபவர்-இன்பஞ்செய்தற்குரியநட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர், துப்பின் எவன் ஆவர் கொல்-(துன்பஞ்செய்தற்குரிய) பகைமைக்கண் என்செய்வர்கொல்லோ? (எ - று.)

துப்புப் பகையுமாதல் "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மைய, னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை யண்மையன்" என்பதனுனு மறிக. அப்பகைமை ஈண்டுக்காணுமையின் அவர்செய்வதும் அறியப்பெற்றிலேமென்பதுபடகின்றமையின்,'மன்'ஓழியிசைக்கண் வந்தது. துயர்வருதலே விலக்கலாயிருக்க அதுசெய்கின்றிலே யெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியுங் கூறினுள்.

(குறி- ரை.) துப்பு என்பது இங்குப் பகை என்ற பொருளில் வருதற்கு "துப்பெதிர்ந்தோர்க்கே" என்று தொடங்கும் மேற்கோள் காட்டப்பட்டது. இம்மேற்கோளில், மேல் நட்பெதிர்ந்தோர்க்குஎன வருவதனுல், முதலில் வந்துள்ள துப்பெதிர்ந்தோர்க்கு என்பதில், துப்' என்பது நட்புக்குமாறுன பகைமையென்ற பொருளுதாதல் பெறப்படும்: இம்மேற்கோளின் பொருள்:—துப்பு - பகைமையோடு, எதிர்ந்தோர்க்கு-எதிரிட்டவர்க்கு, உள்ளா-மனத்தினுல்நினைக்கவும் முடியாத, சேய்மையன்-வெகுதூரமான இடத்திலுள்ளவன் [கிட்டுதற்கு அரியவன்]: நட்பு - தினைகத்தோடு, எதிர்ந்தோர்க்கு - எதிரிட்டவர்க்கு, அம் கை அண்மையன் - உள்ளங்கைபோலச் சமீபத்திலுள்ளானென்பது. தோழியினிடம் பகைமையில்லாமையால், 'அப்பகைமை ஈண்டுக் காணுமையின்' என்றது. அவர் - பகைவர். தோழியைத் துயர்வரவு செய்தவளென்று கூறியதற்குக்காரணம், துயர்வருதலே அவள் விலக்கவேண்டியவளாயிருக்க அதுசெய்யாமையா லென்க. புலக்கின்றமையின் - தினைத்து கூறுவதனுல். இன்பஞ்செய்தற்கு உரிய நட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர் என்று படர்க்கையாகக் கூறியது - தோழியைச் சுட்டும்: அது பற்றியே 'பிறளாக்கியும்' என்றது. (கு)

ககசுரு. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

'காமத்தானீன்பழற்றீர்த்து அதனினுய துன்பழம் வருஉம்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்.) காமம் இன்பம் கடல்-காமம் (புணர்வாலின்பஞ்செய்யுங்கால்) அவ்வின்பம் கடல்போலப் பெரிதாம்; மற்று அஃது அடும் கால் - இனி அது தானே (பிரிவால்) துன்பஞ்செய்யுங்கால், துன்பம்-அத்துன்பம், அதனின் பெரிது - அக்கடலினும் பெரிதாம்; (எ - று.)

மற்று, வினைமாற்றின்கண் வந்தது. அடுங்காலென வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடொத்துவரின் ஆற்றலாம்; இஃது அதனதளவன் றென்பது கருத்து.

(கு - ரை.) அதுதானே - அந்தக்காமமே. அக்கடலினும்-அந்தக் கடல் போன்ற இன்பத்தைக் காட்டிலும். மற்று என்பது முதலிற்கூறிய இன்பம் கடலின் பெரிதாதலென்பதை மாற்றியதனால், வினைமாற்றும். மறுத்தலெயெச்சம் - இன்பஞ்செய்யுங்கால் என்பது. இஃது - இத்துன்பம். (சு)

ககசுள. காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

'காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படும்' என்றஞ்சி சோல்லியது.

(இ - ள்.) காமம் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமமாகிய கடலை (நீந்தாதேனல்லேன்) நீந்தியும் (அதற்குக்) கரைகாண்கின்றிலேன்: (அக்காணமைக்காலந்தான் எல்லாருந் துயிலும் அரையிருளாயிற்று):யாமத்தும் - அவ்வரையிருட்கண்ணும், யான்ஏ உளேன் - (அதற்குஒரு துணையின்றி) யானே (யாயினேன்: ஆயும் இறந்தபட்டுய்ந்து போகாது) உளேஎனாநின்றேன்: (ஈதொரு தீவினைப்பயனிருந்தவாறென்:) (எ - று.)

கடுமை, ஈண்டு மிகுதிக்கணின்றது. உம்மை, முன்னுங்கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது நீ துணையாயிற்றிலேயென்னுங் குறிப்பிற்று.

(கு - ரை.) அதற்கு - அந்தக்காமக்கடற்கு. ஆயும்-யான்ஒருத்தியாகவே யிருந்தும். இறந்தபட்டு உய்ந்துபோகாது - இறந்தொழிந்து காமக்கடலினின்று தப்பிப்போகாமல். கடும்புனலென்ற இடத்து, கடுமை-மிகுதியென்ற பொருளது. யாமத்தும் என்ற இடத்து உம்மை, நீந்தியும் என்று முன்னரும் கூட்டப்பட்டமை காண்க. யாமத்தும்யானேயுளேன் என்று கூறுபவளின் குறிப்பு, அந்தக்காலத்து நீ துணையாயிற்றிலே யென்பது. (எ)

ககசூ. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லே துணை.

இரவின்கொடுமைசொல்லி யிரங்கியது.

(இ - ள்.) இரா அளித்து - இவ்விரா அளித்தாயிருந்தது;மன் உயிர் எல்லாம் துயிற்றி - உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான், என் அல்லது துணை இல்லே-என்னேபல்லது வேறு துணையுடைத்தாயிற்றில்லே; (எ - று.)

துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம், அவாய்நிலையான்வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோடொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடுமெல்லையேனைய என்னையே துணையாகக்கோடலின் அறிவின்றென்பதுபற்றி 'அளித்து' என்றாள்; இகழ்ச்சிக்குறிப்பு.

(கு - ரை.) துயிற்றி என்பது வேறுவினைமுதல் வினையைக்கொண்டு முடிதலால் திரிந்துநின்ற வினையெச்சமென்றார்: துயிற்ற என்பதன் திரிபு என்க. அது துணையென்பதன்பின் அவாய்நிலையான்வந்த உடைத்தாயிற்று என்பதில் 'உடைத்தா' என்ற வினைப்பகுதியோடு முடியும். துணையோடு ஒன்றுகின்ற - துணையோடுபொருந்துகின்ற: என்றது, ஆணும்பெண்ணுமா

கிக் கூடியுள்ள என்றவாறு. அளித்து என்பதன்பொருள் - அளிசெய்யத்தக்கது என்பது. இறந்துபடும் நிலைமையிலுள்ளதன்னைத் துணையாகக் கொண்ட அறிவின்மைபற்றி, இருளை 'அளித்து' என்கிறாள். இது இகழ்ச்சியைப் புலப்படுத்தும். (அ)

௧௧௬௯. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

இதுவுமது.

(இ - ள்.) (காதலரொடு நாம் இன்புற்றமுன்னாள்களிற் குறியவாய்), இ நாள் - (அவர்பிரிவு ஆற்றேமாகின்ற) இந்நாள்களிலே, நெடிய கழியும் - நெடியவாய்ச்செல்கின்ற, இரா-கங்குல்கள்,—கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக்கொடியாரது கொடுமைக்குமேலே தாம் கொடுமைசெய்யா நின்றன; (எ - று.)

தன்னாற்றாமை கருதாது பிரிதலின், 'கொடியார்' என்றாள். கொடுமை - கடிதின்வாராது நீட்டித்தல். அவர்பிரிவானும் நீட்டிப்பானு முளதாய ஆற்றாமைக்குக் கண்ணோடாமைமேலும், பண்டையின் நெடியவாய்க் கொடியவாகா நின்றனவென்பதாம்.

(கு - ரை.) இந்நாள்களிலே - காதலரைப்பிரிந்த இந்தநாள்களிலே. கொடியாரென்று கணவரைக்கூறியது - தலைவியின் ஆற்றாமையைப்பற்றிச் சற்றுங்கருதாமல் அவர்பிரிந்ததனால்: அக்கொடியாரிடத்துள்ள கொடுமைச் செயல் - காலநீட்டித்தல். கடிதின் - விரைவில். கொடியார் கொடுமையின் இராக்கொடியஎன்றது - கணவரைப்பிரிந்ததனாலும் அவர் கடிதின்வராமல் நீட்டித்தலாலும் எனக்குத்தோன்றிய ஆற்றாமைக்குக் கருணைசெய்யவேண்டியிருக்க அதனைச்செய்யாமையோடு தான் முன்னிலும் நீட்டிப்பது பற்றியாகும். பிரிந்துவருந்தும் நாள்கள்பலவாதலால் 'இரா கொடிய' என்று பன்மையாற்கூறியது. கண்ணோடாமை-தாட்சிணியங்கொள்ளாமை. பிரிந்தார்க்கு இரவு நீட்டித்துத்தோன்றுமாதலால் 'நெடியகழியுமிரா' என்றதென்க: "இற்றை நீடிரவொன்று அஞ்சுகந்தத்தைவிளைக்கும்"என்ற திருவேங்கடத்தந்தாதியையும், "ஊழிபல வோரிரவாயிற்றோ வென்னும்" "கொடிதிரா வென்னும்" என்னும் நளவெண்பாவையும் காண்க. (௯)

௧௧௭௦. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

'நின்கண்கள் பேரழகு அழிகின்றனவாகலின் அழற்பாலையல்லை'
என்றாட்குச் சொல்லியது.

(இ - ள்.) உள்ளம் போன்று - மனம்போல, உள்வழி - காதலருள்ள தேயத்து, செல்கிற்பின் - (கடிதிற்) செல்லவல்லனவாயின்,—என் கண் நீர் வெள்ளம் நீந்தல - என் கண்கள் (இங்ஙனம்) வெள்ளமாகிய தந்நீரை நீந்தா.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலேயுள்ளதென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவாவது

நினைவேயாகலின் 'உள்ளும்போன்று' என்றும், மெய்க்கு நடந்துசெல்லவேண்டுதலிற் கண்கள் அதனொடுசென்று காதலரைக்காண்டல் கூடாதென்னுங் கருத்தால் 'செல்கிற்பின்' என்றும் கூறினள். இதனால், வருகின்ற அதிகாரமுந் தோற்றுவாய் செய்யப்பட்டது.

(கு - ரை.) மனமானது காதலர் சென்றவிடத்துச்செல்லவல்லது: கண் என்பது உடலைவிட்டுச் செல்லவல்லதன்று: ஆகவே, உடலுள்ளவிடத்தே இடந்துவருந்தவேண்டுவதே கண்ணுற் செயக்கூடிய தென்கிறாள். காதலர் - அன்பிற்குப்பாத்திரமான கணவர். அது - காதலருள்ளதேயத்துக் கடிதிற் செல்லுதலை. மாட்டாமையின் - செய்யமாட்டாமையால். அவற்றிற்கு - கண்களுக்கு. உள்ளத்திற்கு உள்வழிச் செலவாவது - அவர்சென்ற தேயத்தை நினைப்பது. அதனொடு - அவ்வுடலோடு. வருகின்ற அதிகாரம் - கண்விதுப் பழிதல். பிரிவுத்துயரினை நினைத்தலால் மெலிந்திரங்குந் தலைவி கணவனைக் காணும் வேட்கையாலழிகின்றாளென்று அடுத்துக்கூறுவது அதிகார முறைமை யென்பது இங்குத்தோன்றுமாறு காண்க. (கo)

ககஅ - ஆம் அதிகாரம்.—கண்விதுப்பழிதல்.

அஃதாவது-கண்கள் தங்காட்சிவிதுப்பான் வருந்துதல். காட்சிவிதுப்பு-தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான்மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) விதுப்பு - இங்கு, வேட்கையால் விரைதல். கண்கட்கு விதுப்பு - கணவரைக் காணவேண்டுமென்றுகொண்டு விரைதலாம். கண் விதுப்பு - ஆறும்வேற்றுமைத்தொகை. விதுப்பு - 'விதும்பு' என்ற முதனிலை அடியாகப்பிறந்த தொழிற்பெயர். (விதும்புதல் - விரைதல் ஆசைப்படுதல் நடுங்குதல் என்ற பொருளது.) பிரிவுத்துயரால் பிரிந்தபொருளை இடைவிடாது நினைந்து மெலிந்திரங்குவார்க்கு, அப்பொருளைக் காணவேண்டுமென்று கண்வேட்கைகொண்டுவிரைதலினால் வருந்துதல் நிகழுமாதலால், இது, படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது என்க.

ககஎக. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

'நின்கண்கள் கலுழ்ந்து தம்மழத இழவாநின்றன: நீ ஆற்றல்வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) தண்டா நோய் யாம் கண்டது-இத்தணியாநோயை யாமறிந்தது, தாம் காட்ட - தாம் (எமக்குக் காதலரைக்)காட்டலானன்றே? கண்-(அன்று அத்தொழிலவாய)கண்கள், கலுழ்வது - (இன்று எம்மைக் காட்டச் சொல்லி) அழுகின்றது, எவன் கொல் - என்கருதி? (எ - று.)

காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுந் தாமே காட்டுதலல்லது யாம் காட்டுதல் யாண்டைய தென்பதாம்.

(கு - ரை.) தணியாநோய்என்றது - தண்டாநோய் என்பதன்பொருள். முதலிலுள்ள தாம்-அசை. இரண்டாவதாக வந்துள்ள தாம்-கண்கள், அன்று-

காதலர் எதிர்ப்பட்ட அந்நாள். அத்தொழிலவாய - காட்சித்தொழிலே யுடையனவான. காட்ட என்றதற்கு ஏற்றசெயப்படுபொருள் 'காதலரை' என்பது. கண்டது என்பதன் பொருள், அறிந்தது என்பது. இன்றும்-இப்பொழுதும். காட்சியென்பது கண்ணுகிய பொறியின்மூலமாகவே நிகழ்வதாதலால், யாம் அக்கண்கட்குக் கணவரைக் காட்டுவது எங்ஙன்நிகழும்? நிகழாதன்றே! என்றவாறு. (க)

ககஎஉ. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன்.

இதுவுமது.

(இ - ள்.) தெரிந்து உணரா - (மேல்விளைவதனை) ஆராய்ந்தறியாது, நோக்கிய-(அன்று காதலரை)நோக்கினின்ற, உண் கண்-உண்கண்கள், பரிந்து உணரா - (இன்று இது நம்மால்வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக்) கூறுபடுத்துணராது, பைதல் உழப்பது-துன்பமுழப்பது, எவன்-என்கருதி?

விளைவது-பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்குஅரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அதுகாவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றே யுள்ளது: அதுவுஞ் செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கை யென்பதாம்.

(கு - ரை.) இன்று - கணவரைப்பிரிந்துள்ள இக்காலத்து. இது - இவ்வருத்தம். கூறுபடுத்துணராது - பகுத்தறியாது. துன்பம் உழப்பது - வருத்தம் அனுபவிப்பது. பிரிந்துபோயவர் - பிரிந்துபோன காதலர். அது - அவ்வருத்தம். கழிமடம்-மிக்கஅறியாமை. ஒருசெயலை நிகழ்த்தும்போது அதனுல் விளையக்கூடியபயனை ஆராய்ந்துசெய்யவேண்டும்: அங்ஙன் ஆராய்ந்து செய்யாது அதனுல் தீப்பயன்விளைந்தபோது அதற்குவருந்துவது மிக்கமடமைச் செயலாதலால், 'பரிந்துணராப்பைதலுழப்பதெவன்' என்றது: (பரிந்துணர்தல் - பகுத்துணர்தல்.) "எற்றென்றிரங்குவ செய்யற்க செய்வானேல், மற்றன்னசெய்யாமைநன்று" என்றது, இங்குக் கருதத்தக்கது. (உ)

ககஎந. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

இதுவுமது.

(இ - ள்.) தாம்-இக்கண்கள், கதுமென நோக்கி - (அன்று காதலரைத் தாமே)விரைந்துநோக்கி, (இன்றும்), தாமே கலுழும்-தாமேயிருந்தழுகின்ற, இது—, நக தக்கது உடைத்து-(நம்மாற்)சிரிக்கத்தக்க வியல்பினையுடைத்து.

கண்களென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது - மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது, வருமுன்னர்க் காப்பார்க்கு நகைவிளைக்குமாகலான், 'நகத்தக்கதுடைத்து' என்றுள்.

(கு - ரை.) அதிகாரத்தான் - இது, கண்விதுப்பழிதல் என்ற அதிகாரமாதலால். மேற்கூறிய - இந்தக்குறளில் இது என்ற சுட்டிற்கு முன்னே கூறிய. இது என்ற சுட்டு, கதுமெனத் தாம் நோக்கித் தாமே கலுழ்தலாகிய

கழிமடச்செய்கையைக் குறிக்கும்: இரண்டாஞ்செய்யுளி னுரையிற்கூறிய கழிமடச்செய்கையைக் குறிக்குமென்பாருமுளர். காமப்பித்துக் கொண்டு சொல்பவளின் பேச்சுஆதலால், கண்ணேயும் தன்னேயும் வேறுபடுத்தி, தான் வருமுன்னர்க்காப்பா ளாகவும், கண் அவ்வாறுள்ளதன்றுகவும் கொண்டு கூறுகின்றுளென்க. (ஙூ)

ககஎசு. பெயலாற்று நீருலந்த வுண்க ணுயலாற்று
வுய்விலே யென்க ணிறுத்து.

இதுவுமது.

(இ - ள்.) உண் கண் - உண்கண்கள்,—(அன்று), உயல் ஆற்று - (யான்) உய்யமாட்டாமைக் கேதுவாய, உய்வு இல் நோய் - ஒழிவில்லாத நோயை, என்கண் நிறுத்து - என்கண்ணே நிறுத்தி,—(தாமும்), பெயல் ஆற்று - அழுதலேமாட்டாவண்ணம், நீர் உலந்த-நீர் வற்றிவிட்டன; (எ-று.)

நிறுத்தல் - பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனல் நிலைபெறச் செய்தல். முன் எனக்கு இன்னுதனசெய்தலால், பின் தமக் கின்னுதன தாமே வந்தன வென்பதாம்.

(கு - ரை.) உய்யமாட்டாமைக்கு - உயிரோடுபிழைத்திராமைக்கு. தாமும் - கண்களும். பிரிந்தால் விரைவிற் கூடுவாரைக் காட்டினுல், பிரிவு நோய் நிலைத்திராது: அங்ஙனன்றிப் பிரிந்து பின் கூடாமையுமுடையாரைக் கண்கள் காட்டி, அதனுற் பிரிவுநோயை ஒழியாவண்ணம் நிலைநிறுத்தின: இப்படி முன்னே எனக்குத் தீங்குசெய்யவே, அத்தீப்பயனுல் இப்போது அக்கண்களே அழவும்முடியாதவாறு நீர்வற்றிக்கிடக்கின்றன என்று கண்க ளைப் பழிக்கின்றுள்: ''பிறர்க்கின்னுமுற்பகல் செய்யிற்றமக்கின்னு, பிற்பகல் தாமேவரும்'' என்பது முதலியன காண்க. (சு)

ககஎடு. படலாற்று பைதல் நுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண்.

இதுவுமது.

(இ - ள்.) (எனக்கு), கடல் ஆற்று - கடலுஞ்சிறிதாம்வண்ணம் பெரி தாய, காமம் நோய் - காமநோயை, செய்த—, என் கண்-என்கண்கள், (அத் தீவினையால்), படல் ஆற்று - (தாமுந்) துயில்கிலவாய், பைதல் உழக்கும் - துன்பத்தையு முழவாநின்றன; (எ - று.)

காமநோய் காட்சியான்வந்த தாகலின், அதனைக் கண்களே செய்ததாக் கிக் கூறினுள். துன்பம் அழுதலா னுயது.

(கு - ரை.) கடல் ஆற்று - கடலுந்தாங்கமாட்டாத: எனவே, கடலினும் மிக்கஎன்றுபொருளாம்: அக்கருத்தையொட்டி 'கடலும் சிறிதாம்வண்ணம்' என்றது. காட்சி - தலைமகனைக்காணுதல்: காணுதற்குக் காரணம் கண்ணே யாதலால், காமநோய் அதன்மூலமாகவே வந்ததாம். பைதலென்பதன் பொருள் - துன்பம்: கண்கட்குத் துன்பம், அழுதலாலானதாகும். (ஙூ)

கஎஎசு. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

இதுவுமது.

(இ - ள்.) எமக்கு இ நோய் செய்த-எமக்கு இக்காமநோயினைச் செய்த, கண் தாம் - கண்கடாமும், இதன் பட்டது-இத்துயிலாதழுதற் கண்ணே பட்டது, ஓஒ இனிதே - மிகவும் இனிதாயிற்று; (எ - று.)

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல் தம்மால் வருத்த முற்ற எமக்கு அது தீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

(கு - ரை.) தம்மால் - கண்களால். எமக்குமுன்னே வருத்தத்தை யுண்டாக்கின கண்கட்கு இப்போது துயிலாது அழுகை நேர்ந்தது கருக, என் வருத்தந்தீர்ந்தாற்போல் இனிதாகின்றதென்கிறள். தீங்கு இழைத்தவர்க்குத் தீங்குசெய்தால் அதனால் தம்தீங்கு நீங்கிஞற்போன்றுமகிழும் உலகவழக்கு இங்குக் கருதத்தக்கது. (சு)

கஎஎஅ. உழந்துழந் தூண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

இதுவுமது.

(இ - ள்.) விழைந்து—, இழைந்து - உண்ணெகிழ்ந்து, வேண்டி - விடாதே, அவர் கண்ட - (அன்று) அவரைக் கண்ட, கண்-கண்கள், (இன்று இத்துயிலாதழுங்கலாய தன்பத்தினை), உழந்து உழந்து—, உள்நீர் அறுக - தம்மகத்துள்ள நீர் அற்றேபோக; (எ - று.)

அடுக்கு, இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்துநிகழ் பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது.

(கு - ரை.) வேண்டிக்கண்டவென்பதன் கருத்து - இடைவிடாதேகண்ட என்பது: ஒருபொருளினிடத்து விருப்பம் மிக்கிருந்தால், அப்பொருளை இடைவிடாதே காணுதல் இயல்பாதலறிக. அழுங்கலாய-வருத்துவதாகிய. அடுக்கு-'உழந்துழந்து' என்ற இடத்திலுள்ளது. கண்ணுகிய இடத்து நிகழ்பொருளாகிய நீரின் தொழிலான அறுதலைக் கண்ணின்மேலேற்றி, 'கண் அறுக' என்றது: இது, இடத்துநிகழ்பொருளின் தொழிலை இடத்தின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்காம். அறுக என்ற வியங்கோள்-சபித்தற்பொருளில் வந்தது.(எ)

கஎஎஆ. பேணுது பெட்டார் புளர்மன்னே மற்றவர்க்
காணுத மைவில கண்.

'காதலர் பிரிந்துபோயினாரல்லர்; அவர் ஈண்டுளார்: அவரைக்காணுமளவும் நீ ஆற்றல்வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) பேணுது பெட்டார் உளர்-(நெஞ்சால்) விழையாதுவைத்துச் (சொன்மாத்திரத்தால்) விழைந்தவர் (இவ்விடத்தே)உளர்;(அவ்வுண்மையாற் பயன் யாது?) அவர் - அவரை, கண் - கண்கள், காணுத அமைவில-காணுதமைகின்றன வில்லையாயின; (எ - று.)

செயலாற்பிரிந்து நின்றமையின் 'பேணுது' என்றும், முன்நலம்பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங் கூறினு ராகலின் 'பெட்டார்' என்றுங் கூறினுள். மன்-ஒழியிசைக்கண் வந்தது. மற்று, வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம்-அசைநிலை. யான் ஆற்றவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாநின்றன வென்பதாம். இனிக்கொண்கனேயென்று பாடமாயின், என்கண்கள் தம்மைக்காணுதலைமகின்ற கொண்கனைத் தாம் காணுதலைமகின்றனவில்லை: இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாம் அவரைவிழைந்தார் உலகத்துளரோ என்றுரைக்க. இதற்கு, மன் - அசைநிலை.

(கு - ரை.) தலைவியைத் தேற்றுதற்காகத் தோழி தலைமகனைப்பற்றி 'பிரிந்து வெகுதூரஞ் சென்றாரல்லர்: அண்மையிடத்தேதான் உள்ளார்: ஆதலால், விரைவில் வந்திடுவர்' என்ற கருத்தால், இவ்விடத்தே உளரென்றாளென்க. பெட்டாருளர் என்ற சொற்சேர்க்கையால், இவ்விடத்தே யென்பது கருத்துப்பொருளாகப் பெறப்படும். விழையாது-விரும்பாதிருத்தல்: வைத்துதுணைவினை. அமைகின்றனவில்லை சாந்தமாகஅடங்கி நிற்பனவல்ல: மிகவும் வருந்துகின்றன என்றபடி. நலம்பாராட்டல்-தலைமகளைப்புணர்ந்தபின், புணராதமுன்நின்ற வேட்கை அதிகரித்தலால் தலைமகளின் அழகைப்பாராட்டிக் கூறும் ஓர் அகத்துறை. பிரிவச்சம் - பிரிவினையஞ்சுதல்: அது - தலைமகன் தான் பிரிய அஞ்சுவதும், தலைமகளைப் பிரிவு அஞ்சுவித்தலும். இது ஓர் அகத்துறை. தலைமகன் 'நின்னிற்பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்று இவ்வாறு பிரிவச்சத்தை யுணர்த்துமென்ப. வன்புறையென்பது - 'தலைமகன்பிரிந்திடுவனோ?'என்று தலைமகள்ஐயுற்றபோது, தலைமகன் அவளது ஐயந்தீர வற்புறுத்துக்கூறும் அகத்துறை. நலம்பாராட்டல் முதலிய கூறியதனுல், தலைவரைச் சொன்மாத்திரத்தாற் பெட்டாரென்றது. உளர்என்பதன்பின் உள்ள 'மன்' என்பது - அவர் அண்மையிலிருந்தும் பயனில்லை யென்ற பொருளைக் குறிப்பித்தலால், ஒழியிசையாம். மற்று என்பது-உளர் என்னும் வினையைமாற்றி எம்வரையில் இலர் என்ற பொருளைத் தந்ததனுல், வினைமாற்றுயிற்று. யான் ஆற்றவும் - தலைவரைப்பிரிந்த நான் பொறுத்திருத்தலாகவும். மற்றவர் என்ற இடத்துக் கொண்கனே யென்றுபாடமாயின், அப்போது, கொண்கனைக் காணுது அமைகில: (இங்ஙன்), பேணுது - (ஒருவர் தம்மை) விரும்பாதிருக்க, பெட்டார்உளர்ஓ - (தாம் அவரை) விரும்புபவர் (உலகத்து) உளரோ? என்று உரையாம்: இதற்கு - இவ்விரண்டாமுரைக்கு.

கக எக. வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

'நீயும் வூற்றி நின்கண்களுந் துயில்வனவாதல்வேண்டும்' என்ற தோழிக்குத் சொல்லியது.

(இ - ள்.) வாரா கால் துஞ்சா-(காதலர்) வாராதஞான்று (அவர் வரவு பார்த்துத்) தூயிலா: வரின் துஞ்சா-வ்ந்தஞான்று(அவர்பிரிவஞ்சித்) துயிலா:

(ஆகலான்), ஆயிடை - அவ்விருவழியும், கண் - (என்)கண்கள், ஆர் அஞர் உற்றன - பொறுத்தற்கரிய துன்பத்தினையுடைய; (எ - று.)

ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி, அவற்றிற்குத் தூயில் ஒரு ஞான்றுமில்லை யென்பதாம்.

(கு - ரை.) அவ்விருவழியும்-வாராதகாலம் வந்தகாலம் என்ற இரண்டு காலத்தும். (கூ)

ககஅ0. மறைபெற வூரார்க் கரிதன்ரு லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து.

'காதலரைஇவ்வூர் இயற்பழியாமல், அவர்கொடுமையைமறைக்கவேண்டும்' என்ற தோழிக்குத் சொல்லியது.

(இ - ள்.) எம்போல் அறைபறை கண்ணார் - எம்மைப்போலும் அறை பறையாகிய கண்ணினையுடையார், அகத்து-(தம்)நெஞ்சின்கணடக்கிய,மறை பெறல் - மறையையறிதல், ஊரார்க்கு - இவ்வூரின்கணுள்ளார்க்கு, அரிது அன்று - எளிது; (எ - று.)

மறையென்றது,ஈண்டு மறைக்கப்படுவதனை.அகத்துநிகழ்வதனைப் புறத் துள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை யுண்மையின், 'அறை பறையாகிய கண' என்றுள். இங்ஙனஞ் செய்யுள்விகாரமாக்காது, 'அறை பறைக் கண்ணார்'என்று பாடமோதுவாரு முளர். யான் மறைக்கவும், இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.

(கு - ரை.) அறை பறைஆகிய - அறையப்படும் பறையின் தன்மையை யுடையதாகிய. பறையென்பது - அகத்துநிகழும் விஷயத்தை யாவர்க்கும் தெரிவிப்பதுபோல் உள்ளேநிகழ்ந்த இரகசியத்தைக் கண்கள் வெளிப் படுத்துமென்க. கண்ணே அறைகின்றபறையோடு அபேதப்படுத்தி அறை பறைகண் என்றது, பறையின்தன்மை கண்ணிடத்தும் இருத்தலால். பறை கண்என்பது-இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாதலால், 'பறைக்கண்' என்று மிகவேண்டும்: அங்ஙன் மிகாதது - செய்யுள் விகாரம்: இச்செய்யுள் விகாரத்தைக் கொள்ளாது 'பறைக்கண்' என்று வலிமிகப் பாடங் கொள்வாரு முளரென்றுரை. (கo)

ககக - ஆம் அதிகாரம்.—பசப்புறுபருவரல்.

அது பசப்புற்ற பருவரலென விரியும். அஃதாவது பசப்புறுதலாலுய வருத்தம். இதனை ''பந்தெறிந்தவயா'' என்பதுபோலக் கொள்க. பசப்பா வது-பிரிவாற்றுமையான்வருவதோர் நிறவேறுபாடு.இது,தலைமகனைக்காணப் பெறுதவழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பசப்பைபுறுதலாலான துன்பம் என்று பொருள். உறுபரு வரல் - வினைத்தொகை: காலங்கரந்த பெயரெச்சமாகிய 'உறு' என்பதனை விரிக்கும்போது உற்ற என்று விரியும்: பந்து எறிந்த அயா என்பது - பந்தை எறிந்ததனாலான தளர்ச்சி எனக் காரணப்பொருட்டாயிருப்பதுபோல், காலங்

கரந்தபெயரெச்சமாகிய'உறு'என்பதும்உறுதலாலான எனக்காரணப்பொருட்டாம். "விண்டோய் வரைப்பக் தெறிந்த வையாவிட" என்று, கலித்தொகையில் குறிஞ்சிக்கலியில் நான்காவதுபாடலில் வந்துள்ளது. தலைவி தலைவனைக் காணுமையாற் பசப்புற்று அதனால் ஆன பருவரலைக் கூறும் இந்த அதிகாரம், தலைவனைக் காணுதஇடத்து நிகழும் கண்விதுப்பழிதலின்பின் இருத்தற்கு ஏற்கும்.

ககஉக. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.

(இ-ள்.) நயந்தவர்க்கு - (என்னை)நயந்தவர்க்கு, நல்காமை நேர்ந்தேன் - (அதுபொழுது) பிரிவையுடம்பட்ட நான், பசந்த என் பண்பு-(அதனை யாற்றாது இதுபொழுது) பசந்த என் னியல்பினை, யார்க்கு உரைக்குஓ - யார்க்குச் சொல்வேன்? (எ - று.)

பிறவென்பது,அசைநிலை. உடம்படாவழி ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவரன்புடைய ரென்னுங் கருத்தான் 'நயந்தவர்' என்றும், இதுவேயுடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னுங் கருத்தான் 'நல்காமை' என்றும், மூன்னருடம்படுதலும் பின்னராற்றாது பசத்தலும் பிறர்செய்தனவல்ல வென்பாள் 'பசந்தவென்பண்பு' என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனி யொருவருக்குச்சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் 'யார்க்குரைக்கோ' என்றுங் கூறினாள்.

(கு - ரை.) அஃது ஆற்றாது - பிரிவைத்தாங்கமாட்டாமல். பசந்தவழி-நிறவேறுபாட்டையடைந்தபோது. உடம்படாவழி-பிரிவுக்குச் சம்மதியாவிட்டால். ஒழிதல்-உயிரொழிதல். பெருமகிழ்ச்சியை இடைவிடாது நிலைப்பின், அதனையும் உயிர் தாங்கமாட்டாதென்பர். மேலும் பிரிவுநிகழும் - பின்னும் தலைவருடைய பிரிவுத் தொடர்ச்சிப்பட்டிருக்கும். அருளாமை என்ற பொருளையுடைய நல்காமை யென்பது-இங்கு அதன் காரியமாகிய பிரிவைக் காட்டிற்று: காரணப்பெயர் காரியப்பொருளில்வந்த உபசாரவழக்கு என்னலாம். பண்பியார் - குற்றியலிகரம்; அலகுபெறுது வந்தது. (க)

ககஉஉ. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

ஆற்றுளெனக்கவன்ற தோழிக்கு 'ஆற்றுவல்' எனிபதுபடச் சொல்லியது.

(இ - ள்.) (யான் ஆற்றியிருளெனவும்),—பசப்பு-இப்பசப்புத்தான்,—தந்தார் அவர் என்னும் தகையால்-(என்னை)உண்டாக்கினார் அவரென்னும் பெருமிதத்தான், என் மேனிமேல் இவர்தந்து ஊரும் - என்மேனியை மேற்கொண்டு செலுத்தாநின்றது; (எ - று.)

''குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தன்மா விவர்ந்து செல்ல'' என் புழியும் இவர்தல் இப்பொருட்டாத லறிக. இஃது உரிமைபற்றி யூர்கின்றது, இதற்கு நீ கவலல்வேண்டா வென்பதாம்.

(கு-ரை.) தந்தாரென்பதன் பொருள், உண்டாக்கினரென்பது. என்னை யென்ற தன்மை, பசப்பைக் காட்டும். தகை-தருக்கு இவர்தந்து-ஒருசொல்: இதில், தா - துணைவினை. ''குருதிகொப்புளிக்கும்'' என்று தொடங்கும் மேற் கோள், சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், க - இல் உள்ளது. இதன் பொருள்:—குருதிகொப்புளிக்கும் - (பகைவரின்) இரத்தத்தை வெளிக்கக்கு கின்ற, வேலான்-வேற்படையையுடைய சீவகன், கூந்தல் - (பிடரியின்கண்) மயிரையுடைய, மா - குதிரையை, இவர்ந்துசெல்ல - மேற்கொண்டுசெல்ல என்பது: இம்மேற்கோளிலும் இவர்தலென்பது மேற்கொள்ளுதலென்ற பொருளையுடையதாதல் காண்க. இஃது - பசப்பு. உரிமைபற்றி - சுதந்திரம் பாராட்டி. (உ)

கக உரு. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

'அழகும் நாணும் அழியாமல் நீ யாற்றல்வேண்டும்' என்ற
தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) கைம்மாறு - (பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்குந்) தலை மாறுக, நோய் உம் - இக்காமநோயினையும், பசலை உம்-பசலையையும், தந்து-(எனக்குத்) தந்து,—சாயல் உம் - (என்) மேனியழகினையும், நாண் உம் - நாணினையும், அவர் கொண்டார் - அவர் கொண்டுபோயினர்; (எ - று.)

எதிர்நிரனிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலை மாறுபிற்று. இனி, அவர் தந்தாரல்லது அவை யுளவாகலும் இவை யிலவாக லுங் கூடாவென்பதாம்.

(கு - ரை.) பிரிகின்ற ஞான்றே - பிரிகின்றபொழுதே. அவ்விரண்டற் கும் - அழகு நாண் என்ற அந்த இரண்டுக்கும். தலைமாறுக-பிரதியாக. பசலை-பசப்பு: பிரிவுத்துயரினால் உடலில் தோன்றும் நிறவேறுபாடு. நாணைக் கொண்டு அதற்குப்பதிலாகக் காமநோயையும் சாயலைக்கொண்டு அதற்குப் பதிலாகப் பசலையையும் தந்தார் என்று முதலடியில் நிற்கும் பெயர்கள் பின் னிரண்டடிகளில் நிற்கும் பெயர்களோடு மாறி இயைதலால், எதிர்நிரனிறைப் பொருள்கோளாம். சிறந்த இரண்டுபொருளைக்கொண்டு அதற்குமாறாக இர ண்டு இழிபொருளைக் கொடுத்ததாக, இந்தக்குறளிற் கூறியிருப்பது, பரிவருத் தனேயணி யெனப்படும் மாற்றுநிலையணியாம். பசலையென்பது உடலின் நிற வேறுபாடு ஆதலால் அழகுக்கு அது மாறுபட்டதாகலாம்: நோய் நாணுக்கு எப்படி மாறுபட்டதாகலாமென்னின்?—நாணத்தால் காமநோயை அடக்குந் தோறும் அஃது மிகுதலால், நாண் காமநோய்க்கு மாறுனதாகும். (ஊ)

கக உசு. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

'பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும்
அறிதியாகலின் நீட்டியாது வருவர்' என்றவழிச் சொல்லியது.

(இ-ள்.) (அவர்சொற்களை), யான்—, உள்ளுவன்-(மனத்தால்) நினையாகிற்பேன்: உரைப்பது-(வாக்கால்)உரைப்பதும், அவர் திறம் - அவர் நற்றிறங்களையே; (அங்ஙனஞ் செய்யாகிற்கவும்), பசப்பு - பசப்பு (வந்துநின்றது): கள்ளம் - (இது) வஞ்சனையாயிருந்தது; (எ - று.)

'பிற'வும் 'ஓ' வும்-அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின் அதன்கண்ணும் வரற்பாற் றன்றுயிருக்க வந்தமையின், இதன் செயல் கள்ளமாயிருந்ததெனத் தானுற்றுநின்றமை கூறியவாறுயிற்று.

(கு - ரை.) என்றவழி - என்று தோழி சொல்லியபோது. சொல்லியது என்பதற்கு. 'தலைவி' என்று எழுவாய் வருவிக்க. 'உள்ளுவன்' என்பதற்கு ஏற்ற செயப்படுபொருளாகிய 'அவர் சொற்களை' என்பது, வருவிக்கப்பட்டது. 'மன்' என்பது - உள்ளுவதாற்பயனில்லை யென்றவருத்தத்தைத் தோற்றுவித்தலின், ஒழியிசைப்பொருளதென்னலாம். திறம் - குணம். ஆல்-தேற்றப்பொருளது. மனத்தினுல் தலைவர்சொற்களை நினைத்தலும் வாயால் அவர்திறத்தை யுரைத்தலும் செய்யாகிற்க, அம்மனோவாக்குக்களின் அதீனமாகவுள்ள மெய்யில்[உடம்பில்]பிரிவினுலாகிய பசப்பு வரக் காரணமில்லையே: அது வந்தது என்னையோ? என்கிருள்: இதனுல், தலைவி தான் ஆற்றுகின்றமையைப் புலப்படுத்துகின்றுளென்க. அதன்கண்ணும் - உடம்பினிடத்தும்; வரற்பாற்றன்று-வருதற்கு உரியதன்று: வந்தமையின் என்பதற்குமுன் 'பசப்பு' என வருவிக்க. இதன் - இந்தப்பசப்பின். தான் - தலைவி. (சு)

ககஉரு. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணெண்
மேனி பசப்பூர் வது.

'காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலே' என்ற
தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.

(இ - ள்.) எம் காதலர் - (பண்டும்) நங்காதலர், உவக்காண் செல்வார் - உங்கேசெல்வாராக, என் மேனி பசப்பு ஊர்வது—, இவக்காண் - இங்கேயன்றே! (அப்பெற்றியது இன்று பிறிதொன்றுமோ?) (எ - று.)

'உவக்காண்', 'இவக்காண்' என்பன - ஒட்டிநின்ற இடைச்சொற்கள். தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின்செலவும் வரவும்போல்வது அறிந்துவைத்து, அறியாதாய்போல நீ சொல்லுகின்ற தென்னே யென்பதாம்.

(கு - ரை.) அணித்தாயிருக்கவும் - சமீபமான இடத்திலிருக்கவும். பண்டும் - முன்பும். உங்கே - வெகுதூரமும் வெகுசமீபமுமாகாத நடுத்தரமான இடம். இங்கே - இவ்விடத்தே. உவக்காண், இவக்காண் என்பன - 'உ', 'இ' என்ற சுட்டிடைச்சொற்களை யொட்டித்தோன்றிய இடைச்சொற்கள்: இவற்றுள், காண் - முன்னிலையசையென்னலாம். உவக்காண் என்பது - வெகுதூரமல்லாதவிடத்தே என்ற தேயத்தின் அண்மைப்பொருளது: அதனுல்,

அத்தலைவர் பிரிந்து வெகுகாலமாகவில்லை யென்ற கருத்தும் பெறப்படு மென்றூர். பகல்போக இரவுவர இடையிட்டகாலம் எத்துணைச் சிறியதோ, அத்துணைச் சிறியதே அவர்பிரிதற்கும் மேனியில் பசப்புவருதற்கும் இடைப்பட்ட காலம் என்க. (நு)

ககஉசு. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

இதுவுமது.

(இ - ள்.) விளக்கு - விளக்கினது, அற்றம் பார்க்கும் - மெலிவுபார்த்து நெருங்கிவரும், இருளே போல்-இருளேபோல, கொண்கன் முயக்கு-கொண் கன் முயக்கினது, அற்றம் பார்க்கும்-மெலிவுபார்த்து நெருங்கிவரும், பசப்பு-இப்பசப்பு; (எ - று.)

பார்க்குமென்பன, இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்கவுந் தனக்கு அவகாசம்பார்த்து வரும் பசப்புப் பிரிவுபெற்றூல் என்செய்யாதென்பதாம்.

(கு - ரை.) மெலிவு-சோர்ந்தன்மை. இருளுக்கும் பசப்புக்கும் பார்த்த லென்பது நிகழா தாதலால், 'பார்க்கும்' என்பது இரண்டிடத்தும் இலக் கணைச்சொல் எனப்பட்டது: பெற்றிட்டதனூல் தோன்றும் என்றபொருளது என்னலாம். அவகாசம் - ஏற்ற இடம். இச்செய்யுளில், அற்றம் என்பது - சோர்ந்தநிலை யென்ற பொருளது: முயக்கந் தளர்ந்தநிலையிலும் வரும் பசப்பு, பிரிவே நிகழின் என்னபாடுபடுத்தாது என்பது, இக்குறளின் கருத்தென்க.

ககஉஎ. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

இதுவுமது.

(இ - ள்.) புல்லிக் கிடந்தேன் - (முன்னொரு ஞான்று காதலரைப்) புல் லிக்கிடந்த யான், (அறியாது), புடைபெயர்ந்தேன்—: அவ்வளவில் - அப் புடைபெயர்ந்தவளவிலே, பசப்பு—, அள்ளிக்கொள்வற்று - அள்ளிக்கொள் வதுபோல வந்து செறிந்தது; (எ - று.)

*கொள்வதென்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொள்வது - அள்ளிக் கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறுயது, இப்பிரிவின்கணுமாறு சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(கு - ரை.) புல்லிக்கிடந்த - தழுவிக்கிடந்த. புடைபெயர்தல்-அம்முயக் கம் சற்று விலகப்பெறுதல்: தழுவியது சிறிதுநெகிழுமிடத்து இறுகத்தழுவக் கையையெடுத்து மீண்டும் தொழில் நிகழ்த்தவேண்டுதலால் இவ்வாறு கூறி யது. கொள்வது என்பது-கொள்வெனக்குறைந்து நின்றது: 'அள்ளிக்கொள் வது'என மேல்வருதலால், கொள்வெனக் குறைந்துநின்றது கொள்வதென்ற சொல் என்பது பெறப்படும். ஊன்றிநோக்க, இந்தக் கொள்வது - வினையா லணையும் பெயராத லறியலாம். இனி, ஒருசாரார் கொளவென்பது குறைந்து நின்றது என்றுபாடம் ஓதுவர்: அதற்குக் கொளவற்றுஎன்பது கொள்வற்று

* பி - ம்;—கொள்வெனக்குறைந்து நின்றது.

என்று அகரங் குறைந்துவந்ததென்க: இப்பாடத்தில், கொளஎன்பது-கொள்வதுஎன்ற தொழிற்பெயர்ப் பொருளதென்க: ''அறஞ்செயவிரும்பு'' என்பதில், செயஎன்பது செய்வது என்று பொருள்படுதல் போல. மற்றிரண்டுசாரார் கொளலென்பது குறைந்து நின்றதெனப் பாடம் ஓதுவர்: அதற்குப்பொருள்-கொள்என்ற பகுதியினடியாப் பிறந்ததொழிற்பெயர்ச்சொல் குறைந்துவந்ததென்பது. இத்தத்திருக்குறளில், பின்வரும் ஐதிகியம், மாணாக்கர் கவனித்தற்குரியது: அது வருமாறு:—நஞ்சீயர் முதலிய அடியார்கள் பலருடனே பட்டர் பெரியதிரு வோலக்கமாக வீற்றிருந்து திருவாய்மொழி வியாக்கியானம் உபந்யசிக்கிறபோது ''என்னீர்மை கண்டிரங்கி யிது தகாதென்னுத, என்னீலமுகில்வண்ணற்கு'' என்ற இடம் வந்தவளவிலே, ஒரு புலவர் ''தலைவன் தலைவியைப் பிரியாதிருக்கிறநிலையில் அவள் வருந்தாளாதலாலும், அவன் அவளைப் பிரிந்திருக்கின்றபொழுது அவள் படும் வருத்தத்தை அவன் காண வசையில்லை யாகையாலும், 'என்னீர்மைகண்டிரங்கி' என்றல் பொருந்துமோ? 'என் னீர்மைநோட்டிரங்கி' என்றுலன்றே பொருந்துவது?'' என்று ஆக்ஷேபிக்க, அதற்குப் பட்டர் தோட்ட கை விட்டவாவிலே தலைவியின் உடம்பு நிறம்மாறி வேறுத்தலைக் கண்டால், தலைவன், இவளைத் தான் பிரியத்தகா தென்று நினைக்கவேண்டாவோ? ''ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க, பாசி யற்றே பசலை காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்தலானே'' என்பதுபோன்றுள்ள தமிழ்வழக்குக்களை அறியீரோ?'என்று விடைகூறி அந்த ஆசங்கையை நீக்கியருளினரென்பது. (எ)

ககஉஅ. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

'நீ இங்ஙனம் பசக்கற்பாலையல்லை' என்ற தோழியோடு புலத்து சொல்லியது.

(இ - ள்.) இவள்—, பசந்தாள் என்பது அல்லால் - (ஆற்றியிராது) பசந்தாளென்று (என்னைப்) பழிகூறுவதல்லது, இவளை—, அவர்—, துறந்தார் - துறந்துபோயினர், என்பார் இல் - என்று (அவரைக்) கூறுவாரொரு வருமில்லை; (எ - று.)

என்பாரென வேறுபடுத்துக்கூறினாள், தன்னையே நெருங்குதல் பற்றிப் புலக்கின்றமையின்.

(கு - ரை.) புலத்து-பிணக்குக்கொண்டு. அவரைக்கூறுவார்-தலைவரைப் பழிகூறுவார். 'தோழியைக்குறித்துச் சொல்லும்போது துறந்தாரவரென்பா ரென்று பிறரைக் கூறுமாறுபோல வேறுபடுத்தலாமோ?'என்று ஓர் வினாவை யெழுப்பி அதற்குச் சமாதானம் 'தன்னையே நெருங்குதல் பற்றிப்புலக்கின்றமையின்' என்பதனால் கூறுகின்றார். தோழி தலைவியைப் பழிமொழி கொண்டு நெருங்குகின்றாளென்க. (அ)

ககஉக. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.

இதுவுமது.

(இ-ள்.) நயப்பித்தார்-(இப்பிரிவை யானே) உடம்படும்வகை சொல்லியவர், நல் நிலையர் ஆவர் எனின்-(இன்று நின்கருத்தான்) நல்ல நிலையினராவராயின்,—என்மேனி—, பட்டாங்கு பசக்க-பட்டதுபடப் பசப்பதாக; (எ-று.)

நன்னிலையராதல் - நன்மைக்கண்ணே நிற்றலையுடையராதல். பட்டாங்காகவென ஆக்கம் *விரித்துரைக்க. 'முன் இப்பிரிவின் கொடுமையறியாத என்னை இதற்குடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவது: என் மேனியும் பசப்பும் யாதுசெய்யினென்?' என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது.

(கு - ரை.) நயப்பித்தார்-நயக்க [விரும்ப]ச் செய்தவர்: உடம்படும்வகை சொல்லியவர் என்றபடி. 'பசக்கமன் பட்டாங்கு என்மேனி' என்றஇடத்து நீ வேண்டுவது என்னைப் பிரிவையுடம்படுத்தியவர் நல்லவராகவேண்டுவது ஒன்றே: அது கைகூடின், பின்னை என்உடம்போ அல்லது பசப்போ எப்படியாயின் உனக்குஎன்? அதைப்பற்றி யாதும் கவலை உனக்கு இல்லை யென்னுங் கருத்துப்படுவதால், மன்-ஒழியிசைப்பொருளது. பட்டாங்கு என்பதன்பின் 'ஆக' என்று ஆக்கச்சொல் வருவிக்கப்பட்டது. (கூ)

ககூ0. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்று மெனின்.

தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனையிற் பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது.

(இ - ள்.) நயப்பித்தார்-(அன்று தாங்)குறைநயப்பித்துக் கூடினவர்க்கு, நல்காமை - (இன்று) நல்காமையை, தூற்றுர் எனின் - (நட்டார்) தூற்றுராயின்,—பசப்பு என பேர்பெறுதல் நன்று-(பசப்புஉற்றுளென வேற்றுமையானன்றிப்) பசப்புத்தானுயினுளென (ஒற்றுமையால் தாஞ்சொல்ல) அப்பெயரைப் பெறுதல் (எனக்கு) நன்று; (எ - று.)

நட்டாரென்பது, அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொருது புலக்கின்றுளாகலின், இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினுள். அவரை அருளிலரென்னுது இன்னும்பசந்தாளிவளென்கையே யான் ஆற்றும் நெறியாவதென்பதாம்.

(கு - ரை.) குறைநயப்பித்து-தம்குறைகளேயேற்குமாறு சொல்லி. தலைவரைத்தூற்றுவிட்டால், எனக்கும் பசப்புக்கும் பேதமாகப் பசப்புடையவள் என்று என்னைக்கூறுது, பசப்புக்கும் எனக்கும் வேறுபாடு இன்றி பசப்பு என்றே என்னைப் பேரிட்டுக்கூறினும் நன்றே யென்கிறுள் தலைவி. தூற்றுர் என்ற முற்று எழுவாயை வேண்டுதலால், நட்டார் என்பது வருவிக்கப்பட்டது. இயற்பழிக்கும் தோழியின்மீது புலந்து 'தூற்றுர்' என்று தலைவி கூறுதலால், அதற்கு ஏற்ற எழுவாய் அத்தோழியின் இகழ்ச்சியைப் புலப்படுத்தும் 'நட்டார்' என்பதே. அவரியல்பைப் பழித்துக்கூறுது பசந்தாளென்று என்மீதுகுறைகூறின், அதுவே யான் பிரிவுத்துயராற்றும் வழியென்பதாம். (கo)

* பி - மீ:—வருவித்துரைக்க.

கஉ0 - ஆம் அதிகாரம்.—தனிப்படர்மிகுதி.

அது தனியாகிய படர்மிகுதியென விரியும். அஃதாவது - படர்மிகுதி தலைவன்கணின்றித் *தன்கண்ணேயாதல் கூறுதல். அறமும் பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்கு உரியதாகலின், பசப்புறுபருவரலின்பின் வைக்கப்பட்டது.

(கு-ரை.) படர்மிகுதி-பிரிவுத்துயர்மிகுவன. 'தனி'என்பதன் பொருள்-தலைவன்கணின்றியென்பது. தன்கண்ணே - தன்னிடத்தே. தனிப்படர்மிகுதியென்ற தொடர், தனிமையாகிய படர்மிகுதியைக்கூறும் அதிகாரத்திற்குஆகிவந்தது ஆகுபெயர். அறநோக்கிப் பிரிவு-கற்பில் தலைவனுக்கு நிகழும் அறவகைப்பிரிவுகளில் ஓதற்பிரிவு பொருள்வயிற்பிரிவு பரத்தையிற் பிரிவு என்பனதவிர, மற்றை காவற்பிரிவு பகைதணிவினைப்பிரிவு வேந்தற் குற்றுழிப் பிரிவு என்றமூன்றும் அறநோக்கிப்பிரியும் பிரிவுஆம்: ஓதற்பிரிவு-அறமும் பொருளும் நோக்கிப்பிரியும் பிரிவு ஆம். பொருள்வயிற்பிரிவு-பொருளோநோக்கிப் பிரியும் பிரிவு ஆம். பரத்தையிற்பிரிவு - இன்பம்நோக்கிப் பிரியும் பிரிவு ஆம்.

கஉகூக. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே
காமத்துக் காழில் கனி.

'காதலரும் நின்னினுமாற்றாராய்க் கடிதின்வருவர்: நீஅவரோடு
போன்பம்நுகர்தி' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) தாம் வீழ்வார் தம் வீழ பெற்றவர் - தம்மாற்காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர்,—பெற்றூர்ஏ - பெற்றூரன்றே: காமத்து - காமநுகர்ச்சியென்னும், காழ் இல் - பரலில்லாத, கனி - கனியை; (எ - று.)

காமம்-ஆகுபெயர். அத்து, அல்வழிக்கண் வந்தது. முன்னே நல்வினை இல்வழிப் பெறப்படாமையின் 'பெற்றூர்' என்றும், அவராற் றடையின்றி நுகரப்படுதலின் 'காழில்கனி' என்றுங் கூறினார். நங்காதலர் பிரிதலேயன்றிப் பின் வாராமையு முடைமையின், அக்கனி யாம் பெற்றிலே மென்பதாயிற்று.

(கு - ரை.) நின்னினும் ஆற்றூராய் - உன்னைக்காட்டிலும் பிரிவுத்துயரைத் தாங்கமாட்டாதவராய். தாம் வீழ்வார் தம் வீழப்பெற்றவர் - எவரை விரும்புகின்றூர்களோ விரும்பப்பட்ட அவரால் காதலிக்கப்படும் மகளிர். காமம் என்பது - காமநுகர்ச்சிக்கு ஆகுபெயர். காமத்துக் காழில்கனி என்ற விடத்துக் காமமாகிய காழில்கனி என்று விரிதலால், காமத்து என்றஇடத்து அத்துச்சாரியை அல்வழிப்புணர்ச்சியில் இருபெயரொட்டில் வந்த தென்க. 'பெற்றூர்' என்று பெறுதலின் அருமை தோன்றக் கூறியது, தாம் விரும்புமவரால் காதலிக்கப்படுதலென்பது, முன்னே நல்வினையிலுலேயே முடியுமாதலால். அவரால் - தாம் விரும்பிய புருஷரால் விரும்பப்பெற்ற மகளிரால்.

* பி - மீ:—தன்கண்ணதே

காழில்கனி, நுகர்தற்கு இடையீடில்லை யென்பதை விளக்கும்உவமை. 'பெற்றாரே' என்றது, தனக்கு நுகர அது கிடைக்கவில்லை யென்ற குறையைக் குறிப்பிக்கும். (௧)

௧௧௯௨. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி.

இதுவுமது.

(இ-ள்.) வீழ்வார்க்கு-(அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை) இன்றியமையா மகளிர்க்கு, வீழ்வார் - (அவரை) இன்றியமையாக்கணவர், அளிக்கும் - (அளவறிந்து வந்து) செய்யும், அளி-தலையளி,—வாழ்வார்க்கு - (தன்னையே நோக்கி) உயிர்வாழ்வார்க்கு, வானம்—, பயந்து அற்று-அளவறிந்து பெய்தாற்போலும்; (எ - று.)

நங்காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளி யில்லை யாகலான், மழைவறந்துழி அதனான் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள்ளதென்பதாம்.

(கு - ரை.) தம்மை இன்றியமையா மகளிர் - பிரிந்த அக்கணவரை வேண்டிநிற்கும் மகளிர். தன்னையே - வானத்தையே. அதனான் - மழையால். 'அதனான் வாழாதார்போல' என்றுபாடமாயின், அதனான் - மழைவறத்தலால் என்க. (௨)

௧௧௯௩. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.

இதுவுமது.

(இ - ள்.) வீழுநர் - (தாம்) விழையுங் கணவரான், வீழப்படுவார்க்கு - விழையப்படுமகளிர்க்கு, அமையுமே - ஏற்புடைத்து: வாழுநம் என்னும் செருக்கு - (காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாம் இன்புற்று) வாழ்துமென்றிருக்குந் தருக்கு; (எ - று.)

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடென்பதாம்.

(கு-ரை.) வீழப்படுவார்க்கமையுமே என்றதனால், அங்ஙனம் நாம் காதலரால்வீழ [விரும்ப]ப் படவில்லை யாதலால், வாழுநமென்னுஞ் செருக்கின்றி, இறந்துபாடே நமக்கு அமைவதா மென்கிறாள். (௩)

௧௧௯௪. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

'காதலரை யியற்பழித்தலையஞ்சி அவரருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினை யாகலிற் கற்புடைமகளிரால் நன்கு
மதிக்கப்படுதி' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) வீழப்படுவார்-(கற்புடைமகளிரால்) நன்குமதிக்கப்படுவாரும், தாம் வீழ்வார் - தாம் விரும்புங்கணவரான், வீழப்படார் எனின் - விரும்பப்படாராயின், கெழீஇஇலர் - தீவினையாட்டியர்; (எ - று.)

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெழீஇயின்மை-கல்வினையின்மை: அஃது அருத்தாபத்தியாற் றீவினையுடைமையாயிற்று. தீவினையுடையேற்கு அந்நன்குமதிப்பாற் பயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) கணவன் பிரிவுத்துயருறுத்தவும் அக்கணவனை இயற்பழித்தற்கு அஞ்சி அவர் இப்போது அருளுண்மையால்தான் பிரிந்துள்ளார் என்று இங்ஙன்கூறுகின்ற நீ தெய்வக்கற்புடையாயெனக் கற்புடைமகளிரால் நன்கு மதிக்கப்படுவாயென்றதோழிக்கு, தலைவி, 'நான் காதலித்த கணவரால் விரும்பப்பெறுத தீவினையாட்டி'என்று தன்னைவெறுத்துக் கூறுகின்றாள். வீழப்படுவார் என்றது-கற்புடையவரால் மதிக்கப்படும் மகளிரை. இதன்பின் உயர்வு சிறப்புப் பொருளைத் தரும் உம்மை தொக்கது. கெழி - நல்வினை: இச்சொல் இன்னிசைதர நீண்டு அளபெடுத்தது: கெழியிலர் - நல்வினையில்லாதவர்: எனவே, அருத்தாபத்தியால் தீவினையுடையா ரென்றாயிற்று. படர்க்கையாற் சொல்லினும், தலைவி தன்னைப்பற்றியே கூறுவதால், கணவனுல் வீழப்படாமையால் கற்புடையார்மதிப்பால் எனக்குப் பயனில்லையென்ற கருத்துப்படக் கூறுகின்றாள். (சு)

ககஉரு. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

'அவர்மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்தாற்றினீர்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) நாம் காதல் கொண்டார் - நம்மாற்காதல்செய்யப்பட்டவர், நமக்கு எவன் செய்ப-நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர்? தாம் காதல் கொள்ளாக் கடை-(அவ்வாறே) தாமும் (நங்கட்)காதல் செய்யாவழி: (எ-று.)

எச்சவும்மை, விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம்.

(கு - ரை.) நாம் எவ்வாறு அவரிடத்துக் காதல்கொண்டுள்ளோமோ, அவ்வாறே அவரும் நம்மிடம் காதல்கொண்டிருப்பின், இங்ஙன் பிரிவுத்துயர் நலியவிடார்: அங்ஙன் அவர் காதல்கொள்ளாமையால், அவர்மீது நமக்குள்ள காதலால் நாம் துன்பமே பெறுமாறு ஆயிற்றென்றவாறு. 'தாம்' என்பதன்பின் நாமேயன்றி அவர் தாமும் என்ற பொருள் தரும் இறந்தது தழுவிய எச்சவும்மை விகாரத்தால் தொக்கதென்க. (சு)

ககஉசு. ஒருதலையா னின்னது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

இதுவுமது.

(இ - ள்.) (மகளிர் ஆடவரென்னுமிருதலையினும்), காமம் - வேட்கை, ஒரு தலையான் இன்னது - ஒருதலைக்கண்ணேயாயின் (அஃது) இன்னது; காபோல-காவினது பாரம்போல, இருதலையான்உம் இனிது-இருதலைக்கண்ணு மொப்பின் (அஃது) இனிது; (எ - று.)

மூன்றனுருபுகள், ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா - ஆகுபெயர் என்மாட்டுண்டாயவேட்கை அவர்மாட்டுமுண்டாயின், யான் இவ்வாறு துன்ப முழத்தல் கூடுமோ வென்பதாம்.

(கு - ரை.) இருதலையினும் வேட்கை-ஈரிடத்தும் ஒத்திருக்கவேண்டிய காதல். 'தலையான்' என்றவற்றிலுள்ள மூன்றனுருபுகள், ஏழனுருபு ஆகப் பொருள்படுவதால், வேற்றுமைமயக்கம். கா என்பது - காத்தண்டின்பாரத் துக்கு ஆகியது, இடவாகுபெயர். துன்பமுழத்தல் கூடுமோ - துன்பத்தை யனுபவித்தல் நிகழுமோ? (௬)

௧௧௯௭. பருவரலும் பைதலுங் காணான்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான்.

இதுவுமது.

(இ - ள்.) (காமநுகர்தற்குரிய இருவரிடத்தும் ஒப்பநிற்றலொழிந்து), ஒருவர்கண்நின்று-ஒருவரிடத்தேநின்று, ஒழுகுவான்-பொருகின்ற, காமன்-காமக்கடவுள், பருவரல்உம்- அவ்விடத்துப்)பசப்பானாய பருவரலும், பைதல் உம் - படர்மிகுதியும், காணான்கொல் - அறியான்கொலோ! (எ - று.)

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணும் நிகழ்ந்தனவறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான்:இனி யானுய்யுமா றென்னையென்பதாம்.

(கு - ரை.) ஒழுகுவான் - தன் காரியத்தை நடத்துபவன். விழைவு - விருப்பம். காமன் பருவரலும் பைதலும் அறிந்திருப்பின், என்னைத் துய ருறுத்துவது போல அவரையும் துயருறுத்துவனே: அங்ஙன் துயருறுத்த லிலனே யென்றவாறு. (எ)

௧௧௯௮. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

தலைமகன் தூதுவரக்காணாது சொல்லியது.

(இ-ள்.) வீழ்வாரின்-(தம்மால்) விரும்பப்படுங் காதலர்திறத்து நின்றும், இன்சொல் பெறாது - ஓரின்சொல்லளவும்பெறாதே, வாழ்வாரின் - (பிரி வாற்றி) உயிர்வாழ்கின்ற மகளிர்போல, வன்கணார்-வன்கண்மை யுடையார், உலகத்து இல் - இவ்வுலகத்தில்லை; (எ - று.)

காதலர்திறத்துச்சொல் யாதானும் எனக்கு இனிதென்னுங் கருத்தால், 'இன்சொல்' என்றாள். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் வன் கண்ணேனாகலின், அதுவும் பெறாது உயிர்வாழாநின்றே னென்பதாம்.

(கு - ரை.) காதலர்திறத்து நின்றும் ஓர் இன்சொல் - காதலரிடத்து நின்றும் வரும் ஓர்இனியசொல். வன்கண்மை - கொடுமை. இன்சொல் என்பதன்பின் இழிவுசிறப்பும்மை தொக்கதென்க. வன்கண்ணேன் - கொடுமையுடையேன். அதுவும் - இன்சொல்லும். (அ)

௧௧௯௯. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

இதுவுமது.

(இ - ள்.) நசைஇயார் - (என்னுல்) நச்சப்பட்டகாதலர், நல்கார் எனின் உம்-(என்மாட்டு)அன்பிலரேயாயினும்,—அவர்மாட்டு இசைஉம்-அவர்திறத்து யாதானுமோர்சொல்லும், செவிக்கு இனிய - (என்)செவிக்கு இனியவாம்.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரலரென்னுஞ் சொல்லாயினும் அமையு மென்பதுபட நின்றது. அதுவும் பெற்றிலேனென்பதாம்.

(கு - ரை.) இசை - சொல்: இது இப்பொருளில்வருதலை "இசைதிரிந் திசைப்பினும்" என்ற தொல்காப்பியத்துப் பொருளியலிலுங் காண்க. இசை யென்றதன்பின், உம்மை-இழிவுசிறப்புப்பொருளது. வாரலரென்னும் சொல் லாயினும் - வரமாட்டாரென்ற சொல்லாவது. (கூ)

கஉ00. உரூஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செரூஅய் வாழிய நெஞ்சு.

தலைமகன் தூதுவரப்பெறாது தான் தூதுவிடக்கருதியாள்
நெஞ்சோடு சொல்லியது.

(இ - ள்.) உரூர்க்கு - (நின்னோடு) உரூதார்க்கு, உறு நோய்-(நின்) உறு நோயை, உரைப்பாய்-உரைக்கலுற்ற, நெஞ்சு-நெஞ்சே!—(நீஆற்றுமாயினும் அரிதாய அதனையொழித்து), கடலை செரூய் - (நினக்குத் துயரஞ்செய்கின்ற) கடலைத் தூர்க்கமுயல்வாயாக: (அஃதெளிது); (எ - று.)

உரைக்கலுற்றது அளவிறந்தநோயாகலானும், கேட்பார் உறவிலராகலா னும், அது முடிவதொன்றன்று,முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது முயலாநின்றுயென்னுங் குறிப்பான் 'வாழிய' என்றாள்.

(கு - ரை.) பிரிந்துசென்ற தலைமகன்,தான், 'இன்னபோது மீண்டு வரு வேன்' என்று தூதுமூலமாகவும் அறிவிக்காத நிலையில் அவனிடத்துத் தூது விடக்கருதிய தலைவி தன்நெஞ்சொடுகூறியது இது. உரூதார்க்கு-உறவில்லா தார்க்கு. உறுநோய்-மிக்கநோய்: இதனையே அளவிறந்தநோய் என்று விளக்கி கின்றார். அது - அந்நோய் உரைப்பது. அது முடிந்தாலும் பயனில்லை என்பதை, 'கடலைத்தூர்க்க முயல்வாயாக' என்பதனுற் பெறவைத்தார். தூதாகப்போய் நோய்சொல்லி முடிப்பதனைவிடத் தன்பஞ்செய்யுங்கடலைத் தூர்ப்பது எளிது என்கிறாள்.

கஉக - ஆம் அதிகாரம்—நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது - முன்கூடியஞான்றை யின்பத்தினை நினைந்து தலைமகள் தனிமையெய்தலும், பாசறைக்கண் தலைமகன் றனிமையெய்தலுமாம். இவ் வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கும் உரித்தாகலின், அவ் வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) முன்கூடியஞான்றை இன்பத்தினை-முன்னேகூடியபோது பெற்ற இன்பத்தை. தனிமையெய்தல்-தனிமையாலான துன்பத்தை யடை தல். தனிமை-ஆகுபெயர். 'புலம்பேதனிமை' என்ற தொல்காப்பிய வரியியற்

சூத்திரத்துக்குவற்ப,புலம்பல் என்பதற்குத் தனிமையெய்த லென்று பொருள் கூறப்பட்டது. பாசறை-படைவீடு: பகைமேற் சென்றோருறையுமிடம். 'மூன்கூடிய ஞான்றை இன்பத்தினேநினைந்து' என்ற தொடர், பாசறைக்கண் தலைமகன் என்றதன் மூன்னும் இயையும். தலைவன் ஒப்பிகந்தவனெனப்படுதலால் இவனுக்குப் பகையாவாரின்மையால், இத் தலைவன் பாசறைக்கட் சென்று னெனின், இப்பிரிவு, துணைவயிற்பிரிவு ஆகவேண்டும்: துணைவயிற் பிரிவுகுறித்துத் தஞ்சைவாணன்கோவை யுரைகாரர் கூறுவது:—'கண்பாகிய வேந்தனுக்குப் பகைவேந்தராலிடையூறுற்றவழி அவ்விடையூறுதீர்த்தற்குத் தலைமகன் துணையாகப்பிரிதல். தன்னுழையரில் ஒருவனைப் படைகூட்டிச் செல்லவிடாது தான் போதல்வேண்டு மென்பது என்னெயனின்,—நட்பு மிக்கால் தானே அவனுயிருத்தலின் அவன்கருமம் தன்கருமமா யெண்ணி விரைவினெழுந்து அப்பகைநீக்கத் தானேபோயினனெனக்கொள்க'என்பது. நினைந்தவன்புலம்பல் அல்லது நினைந்தவர் புலம்பல் என்று ஒருமைப் பாலாற்கூறுது நினைந்தவர்புலம்பல் என்று பன்மைப்பாலாற் கூறியது - இப்புலம்பல் தலைவன் தலைவி என்ற இருபாலார்க்கும் பொதுவாதலா லாகும். இது - நினைந்தவர் புலம்பல். படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த - தன்பம் மிகுதல் தன்னிடத்தில்தான் உள்ளதாகக்கருதிய. தனிப்படர்மிகுதி தன்னிடத்தேயுள்ளதாகக்கருதும் தலைவிக்கும் இந்த நினைந்தவர்புலம்பல் என்பது உள்ளதனுல், அவ்வியைபுபற்றி, இது தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்ட தென, அதிகாரமுறைமைக்கு இயைபு காண்க.

கஉ0க. உள்ளினுக் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

தூதாயீச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.

(இ - ள்.) உள்ளின் உம் - (முன்கூடியஞான்றை யின்பத்தினைப் பிரிந்தழி) நினைந்தாலும், தீரா - (அதுபொழுது பெற்றுற்போல) நீங்காத, பெருமகிழ் செய்தலால் - மிக்கமகிழ்ச்சியைத் தருதலால்,—கள்ளின் உம் - (உண்டழியல்லது *மகிழ் செய்யாத) கள்ளினும், காமம்—, இனிது - இன்பம் பயத்தலுடைத்து; (எ - று.)

தன்றனிமையுந் தலைமகளே மறவாமையுங் கூறியவாறு.

(கு - ரை.) தூதாய்ச்சென்ற - தூதாய்ச் செல்லப்போகின்ற: விரைவிற் செல்வானென்பதுபற்றி இறந்தகாலத்தாற் கூறியது. பிரிந்தழி - பிரிந்த போது. உண்டழி - பருகியபோது: 'உண்' - இங்கே பொதுவினை. (க)

கஉ0உ. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

இதுவுமது.

(இ - ள்.) தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படுவாரை, நினைப்ப-(பிரிவின்கண்) நினைத்தால், †(அந்நினைவார்க்கு அப்பிரிவான்), வருவது ஒன்று

* பி - ம்: மகிழ்ச்சி † அந்நினைந்தவர்க்கு

இல் - வருவதோர் துன்பமில்லையாம்; (அதனால்), காமம்—, எனைத்து - எத்துணையேனும், இனிது ஒன்றேகாண்—; (எ - று.)

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப வினிதென்பான், 'எனைத்துமினிது' என்றான். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தான் ஆற்றியவகை கூறியவாறு.

(கு - ரை.) 'எனைத்தொன்றினிது' என்று தலைவன் கூறியது, புணர்ந்த போதன்றிப் பிரிந்தபோதும் விரும்பப்படுவாரை நினைத்தால் பிரிவுத்துன்பம் வாராது இன்பமே யுண்டாவதால் என்க. (உ)

கஉ0ங. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

தலைமகனைநினைந்து வருந்துகின்றதலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) தும்மல் - (எனக்குத்) தும்மல், சினைப்பது போன்று-எழுவது போன்று, (தோன்றி), கெடும் - கெடாநின்றது: (அதனால்), நினைப்பவர் போன்று - (காதலர் என்னை) நினைப்பார்போன்று, நினையார் கொல் - நினையாராகல் வேண்டும்; (எ - று.)

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்ம றோன்றுமென்னு முலகியல்பற்றி, தலைமகனெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமை யுணர்ந்தாள் சொல்லியதாயிற்று.

(கு - ரை.) சேய்மைக் கண்ணராய - வெகுதூரத்தி லிருப்பவராகிய. கேளிர்-சுற்றத்தார். நினைந்துழி-நினைந்தபோது. வெகுதூரஞ்சென்ற சுற்றத்தார் நினைப்பின், நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றுமென்ப. எடுத்துக்கொண்ட - மேற்கொண்ட. தும்மல் வருவதுபோன்ற குறிகள் தோன்றியும் அது வராமையால், தலைமகன் மேற்கொண்டவினை முடிவதுபோலத் தோன்றியும் இன்னும் முடியாமையை யுணர்ந்தாள். முடிந்தால், நம்மை நினைந்து மீண்டுவருவான் தலைவன்: இன்னும் முடிவதுபோன்று முடிந்திடாமையால், சினைப்பதுபோன்று தும்மல் கெட்டது என்கிறாள். (ங)

கஉ0ச. யாமு *முளங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

இதுவுமது.

(இ - ள்.) எம் நெஞ்சத்து - எம்முடைய நெஞ்சத்து, அவர் ஓ உளர் ஏ - அவர் எப்பொழுதும்உளரேயாயிராநின்றார்;(அவ்வகையே), அவர் நெஞ்சத்து - அவருடைய நெஞ்சத்தும், யாம் உம் உளம் கொல் - யாமும் உளமாதுமோ? (ஆகேமோ?) (எ - று.)

ஓகாரவிடைச்சொல், ஈண்டிடைவிடாமை யுணர்த்திநின்றது. உளமாயும் வினைமுடியாமையின் வாராராயினாரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினாரோவென்பது கருத்து.

---

* பி - ம்: உளேங்கொல்

(கு - ரை.) கொல் - ஐயம். உளம்ஆதுமோ - இருப்போமாவோமோ? ஓகாரம் - 'எந்நெஞ்சத்தோ' என்ற இடத்திலுள்ளது. எப்பொழுதும் என்பது, 'ஓ' என்பதன்பொருள். ஒன்று இன்னும் வினைமுடித்திடாமையா யிருக்கவேண்டும்: அன்றி, எம்மைப்பற்றிய எண்ணமே அவருக்கு இல்லாம லிருக்கவேண்டும்: இவ்விரண்டில் ஒன்றுதான் தலைவர் வாராமைக்குக் காரணமாகவேண்டு மென்கிறாள். இலமாகலின் - யாம் அவர்நெஞ்சத்து இல்லாமையால்: எம்மைப்பற்றித் தலைவர் மறந்திட்டதனால் என்றபடி. (சு)

கஉ0டு. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

இதுவுமது.

(இ - ள்.) தம் நெஞ்சத்து-தம்முடைய நெஞ்சின்கண்ணே, (யாஞ்செல் லாமல்), எம்மை கடி கொண்டார்-எம்மைக் காவல்கொண்ட காதலர், (தாம்), எம் நெஞ்சத்து-எம்முடையநெஞ்சின்கண், ஓவா வரல் - ஒழியாது வருதலை, நாணுர்கொல் - நாணுர்கொல்லோ? (எ - று.)

ஒருவரைத் தங்கண்வருதற்கு ஒருகாலும் உடம்படாது தாம் அவர்கட் பலகாலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின், 'நாணுர்கொல்' என்றாள்.

(கு - ரை.) நெஞ்சின்கண்ணே யாம் செல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர் - எம்மைச்சிறிதும் தம்மனத்தாற் சிந்தியாத கணவர் என்ற படி. தான் காதலரை இடைவிடாது எண்ணமிடுதலை, 'எந்நெஞ்சத்து ஓவா வரல்' என்கிறாள் தலைவி. தங்கண் வருதற்கு-தம்மிடத்தில் வருவதற்கு. ஒரு காலும் உடம்படாது - ஒருபோதுஞ் சம்மதியாமல். சேறல் - செல்லுதல்.(கு)

கஉ0சு. மற்றியா னெண்ணுளேன் மன்னோ வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

'அவரொடு புணர்ந்தஞான்றைபின்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தாதின்றும்: அது மறத்தல்வேண்டும்' என்றுட்கச் சொல்லியது.

(இ - ள்.) யான்—, அவரொடு—, உற்ற நாள் - புணர்ந்த ஞான்றை யின்பத்தை, உள்ள - நினைதலான், (இத்துன்பவெள்ளத்தும்), உளேன் - உயிர்வாழ்கின்றேன்; மற்று யான் என் உளேன் - அது இன்றுயின் வேறுஎத் தால் உயிர்வாழ்வேன்? (எ - று.)

நாள் - ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுளை, அவைபெற்றிலேனென் பதுபட நின்றமையின், மன் - ஒழியிசைக்கண் வந்தது. அவை அவன்றூது வருதல், தன்றூதுசேறன் முதலாயின. அவையாவுமின்மையின், இதுவல் லது எனக்குப் பற்றுக்கோடில்லை யென்பது கருத்து.

(கு - ரை.) புணர்ந்தஞான்றை இன்பத்தை - புணர்ந்தபோது தோன் றிய சுகத்தை. அது - புணர்ந்தபோதைய இன்பத்தை நினைத்தல். என் உளேன் - எதனால் உளனாவேன்? நாள் என்பது - அந்நாளைய இன்பத்தைக் காட்டுதலால், ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறு உபாயம் பெற்றிலே னென்ற கருத்தை 'மன்' என்பது தெரிவிப்பது காண்க: அங்ஙன்தெரிவிக்

கும்பொருள், ஒழியிசையாகும். இதுவல்லது - புணர்ந்தகாலைய இன்பத்தை நினைப்பதல்லது. (சு)

கஉ0ள. மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

இதுவுமது.

(இ - ள்.) மறப்பு அறியேன் - (அவ்வின்பத்தை) மறத்தலறியேனாய், உள்ளின் உம்-(இன்று) உள்ளாகிற்கவும், (பிரிவு), உள்ளம்சுடும்-(என்) உள்ளத்தைச்சுடாகின்றது: (அங்ஙனம் பிரிவாற்றுத யான்), மறப்பின் - மறந்தால், எவன் ஆவன் - (இறந்துபடாது) உளேனுவது எத்தால்? (எ - று.)

*செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. மன் - ஈண்டும் அதுபடகின்று, ஒழியிசையாயிற்று. கொல் - அசைநிலை.

(கு - ரை.) அவ்வின்பத்தை - முன்கூடிய ஞான்றை யின்பத்தை. செயப்படுபொருள் - (பாங்கியின் எண்ணபடி மறத்தற்கு உரிய) இன்பத்தை யென்பது. இந்த அதிகாரம், முன்கூடிய ஞான்றை யின்பத்தினை நினைந்து தலைவன்தலைவியரென்ற இருவரும் புலம்பலாகிய [தனிமையாகிய] நினைந்தவர்புலம்ப லென்பது ஆகலால், அதற்கு ஏற்ப, மறப்பறியேன் என்பதற்கு - முன்கூடிய ஞான்றையின்பத்தைச் சுட்டும் 'அவ்வின்பத்தை' என்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'ஈண்டும்'என்றது, கீழ்க்குறளிற்போல என்ற குறிப்பினது. அதுபட - 'உயிர்வாழ்தற்கு வேறு உபாயங்களுமுள: அவை பெற்றிலேன்' என்ற பொருள்பட. (எ)

கஉ0ஏ. எனைத்து நினைப்பினுங் காயா ரெனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

'இத்துன்பமறிந்துவந்து காதலர் நினைந்துஇன்பஞ்செய்வர்'
என்றுட்குச் சொல்லியது.

(இ - ள்.) எனைத்து - (தம்மை யான்) எத்துணையும், நினைப்பின் உம் - (மிக்)நினைந்தாலும், காயார் - (அதற்கு) வெகுளார்; காதலர் செய்யும் சிறப்பு - காதலர்(எனக்குச்)செய்யுமின்பமாவது, அனைத்து அன்றே - அவ்வளவன்றே?

வெகுளாமை-அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல் தனக்கு அவ்வின்பத்திற் சிறந்ததின்மையின், அதனை'சிறப்பு'என்றாள்: 'காதலர் நம்மாட்டருள்' என்றும், 'செய்யுங்குணம்' என்றும் பாடமோதுவாருமுளர். தோழி கூறிய அதனைக் குறிப்பான் இகழ்ந்து கூறியவாறு.

(கு-ரை.) இத்துன்பம்-பிரிவினால் நீபடுகின்ற இத்தத்துன்பம். அதற்கு-அங்ஙனம் யான் மிக நினைத்தற்கு. அவ்வின்பத்தின் - தன்நெஞ்சில் காதலர் இடைவிடாது சிற்றலாகிய அந்த இன்பத்தைவிட. சிறப்பு என்பது - சிறத்தலையுடைய இன்பத்துக்கு, ஆகுபெயரென்க. 'காதலர் செய்யுஞ் சிறப்பு' என்ற விடத்து, ஒருசாரார் 'காதலர் நம்மாட் டருள்'என்றும், வேறொருசாரார்

* பி - மீ: மறக்கப்படுவது

'காதலர் செய்யுங் குணம்' என்றும் பாடமோதுவர். காதலர் இத்துன்ப மறிந்துவந்து இன்பஞ்செய்வரென்ற தோழியை நோக்கி, தலைவி, 'நம்காதலரை யான் எத்துணை நினைத்தாலும் காயாமல் [கோபியாமல்] இருக்கின்றாரே: இதுவே, அவர் நமக்குச் செய்கின்ற சிறப்பு' என்று அவள்பேச்சைக் குறிப்பாக இகழ்ந்து கூறுகின்றாளென்க. (அ)

கஉ0கூ. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

தலைமகன்றூது வரக் காணாது வருந்துகின்றாள்
வற்புறுத்துத் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) வேறு அல்லம் என்பார் - (முன்பெல்லாம் நாமிருவரும்) வேறல்லமென்று சொல்லுவாரது, அளிஇன்மை - அளியின்மையை, ஆற்ற நினைந்து - மிகவும் நினைந்து,—என் இன் உயிர்-எனது இனியவுயிர், விளியும் - கழியாநின்றது; (எ - று.)

அளியின்மை - பின்வருவராகலுமாய்ப் பிரிதலும், பிரிந்துவாராமையும், ஆண்டுநின்றுழித் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல்வேண்டுமென வற்புறுத்தாட்கு 'என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று, அவரன்பின்மைக்கு' என எதிரழிந்து கூறியவாறு.

(கு - ரை.) வற்புறுத்தும் - 'தலைவர் விரைவில் வருவர்: நீ ஆற்றியிரு' என்று உறுதியாகச் சொல்லுகிற. 'ஆற்றியிரு'என்று வற்புறுத்துக் கூறுவதும் வன்புறை யெனப்படும். "எல்லாவாயிலுங் கிழவோன்பிரிவயிற், பல்லாற்றானும் வன்புறை குறித்தன்று" என்ற களவியற்சூத்திரமுங் காண்க. தலைமகன்தூது வரக்காணாது வருந்துகின்றாளாய தலைவி தோழிக்குச் சொல்லியது என்க. சொல்லுவாரது - சொல்லுந்தன்மையராயிருந்த கணவருடைய. அளியின்மை - கருணையில்லாமை. பின்வருவராகலுமாய்ப் பிரிதல்-பின்னே வருவேனாவே னென்று சொல்லிப்பிரிதல். ஆண்டு நின்றுழி - சென்ற தேயத்துத் தங்கியபோது. 'பிரிவாற்றல்வேண்டும்' என்று வற்புறுத்திய தோழிக்கு, 'யான்பிரிவாற்றித் தான் இருக்கின்றேன்: பிரிவிற்கு அன்று என் உயிர் கழிகின்றது: அவருடைய அன்பு இன்மைக்காகத்தான் கழிகின்றது' என்று, தலைவி, எதிராக மனமழிந்து கூறியகிளவி இது. "பண்டுநாம், வேறல்ல மென்பதொன்றுண்டால்" என்ற கலித்தொகை, முதலடியிற் காணத்தக்கது. (கூ)

கஉக0. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.

வன்புறையெதிரழிந்தாள் காமமிக்க கழிபடராற் சொல்லியது.

(இ - ள்.) மதி - மதியே! விடாது - (என்நெஞ்சின்) இடைவிடாதிருந்தே, சென்றாரை - விட்டுப்போயினாரை, கண்ணினால்-(யான் என்)கண்ணளவானாயினும், காண-எதிர்ப்படும்வகை,படாதி-(நீ)படாதொழிவாயாக; (எ-று.)

கண்ணளவா னெதிர்ப்படுதலாவது-மதி இருவரானும் நோக்கப்படுதலின் இருவர்கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கொற்றுமை யுண்மையின்'சென்றூரைக் காண'என்றும்,குறையுறுகின்றாளாகலின் 'வாழி' என்றுங் கூறினாள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிலைடக்கண்ணினாற் காணுமாறு மதிபடுகின்றதில்லை யென அதனாற் றுயில்பெறாது வருந்துகின்றாள் கூற்றாக்குக. இப்பொருட்கு, வாழியென்பது-அசைநிலை.

(சு - சை.) தோழியின் வன்புறைக்கு எதிரழிந்த தலைவியின் காமமிக்க கழிபடர் கிளவியாகும், இது. காமம் மிக்க-(பிரிவினால்) காதல்வினஞ்சுவதனால், கழி - மிக, படர் - துன்புறுகின்ற, கிளவி யென்க. 'காமமிக்க கழிபடர் கிளவியென்பது தலைமகனைக் காணலுற்று வருந்தாகின்ற தலைமகள் தனது வேட்கைமிகவாற் கேளாதவற்றைக் கேட்பனவாகவினித்து...கூறுகிற்றல்' என்பர், பேராசிரியர். கண்ணினாற் காணுதல் - கண்ணினாலெதிர்ப்படுதல்: அதாவது - கனவனது கண் பதிந்த மதியினிடத்தே தலைவியின்கண்ணும் சேர்தல்: நேரே தலைவன் தலைவியர் இருவரும் காணவிட்டாலும், சந்திரன் மூலமாக இருவர் கண்களுக்கும் சேர்க்கை நிகழ்தலறிக: ஸ்ரீவால்மீகிபகவானும் ஸ்ரீராமாயணத்தில் ''சந்த்ரே த்ருஷ்டி ஸமாகமஃ' [சந்திரன்மூலமாகக் கண்களுக்குக் கலவி]''என்று பிரிந்தார்வார்த்தையில் அருளியிருத்தல் காண்க. முதலென்றது - தலைவனை: சினை யென்றது - அவனுடையகண்களை. அவனுடைய கண் பட்ட சந்திரனது இடத்துத் தலைவியின் கண் படுவதுமூலமாகத் தலைவன்கண்ணோடு தலைவியின்கண்ணுக்குச் சம்பந்தம் நிகழ்தலால்,'சென்றூர் [தலைவர்] கண்ணினைக் காண' என்று ஒருவாறு கூறலாம்: அங்ஙனன்றி, 'சென்றூரைக்காண'என்றே கூறியது, முதலோடு சினைக்கு உள்ள ஒற்றுமை யாலென்க. குறையுறுகின்றாள் - குறைபெறுமாறு வேண்டுகின்றாள். படாதி-அஸ்தமியாதிருப்பாயாக. 'படாதி' என்ற இடத்து, படாது என்று பாடமாயின், சென்றூரை, கண்ணினால் காண - (கனவிலே) கண்ணினாற் காணுமாறு, மதி படாது - சந்திரன் அஸ்தமியாம லிருக்கின்றா னென்று பதப்பொருள். சந்திரன் அஸ்தமியாது காமோத்தீபகப்பொருளாய் வாட்டுவதனால், நான் துயில்பெறுவதில்லை: அதனால், கனவிடையாவது காணக் கூடிய காதலரைக் காணாது வருந்துகின்றே னென்று தலைவி கூறியதாகக் கொள்க. கூற்று - பேச்சு. இந்தப்பாடத்தில், மதியென்ற சொற்கு ஏற்ப, படாது என்ற ஒன்றன்பான்மூற்று அமைந்தது. (கo)

கஉஉ - ஆம் அதிகாரம்.—கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது-தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கண் நிகழ்வதியாற் கண்டதாகலின், இது, நினைந்தவர்புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

(சு - சை.) கனவு - சொப்பனசூழ்த்தியவஸ்தைகளுக்கு வேறுகிய சாக்கிராவஸ்தை: (இதற்கு எதிர்த்தட்டானது - கனவு.) கனவிற்கண்டன, நினைப்பின்மிகுதியாற் கனவிற் காணப்படும்: ஆகவே, நினைப்பின் மிகுதியாற்

காணும் கனவுநிலையுரைத்தல், நினைந்தவர்புலம்பலின்பின் வைக்கப்பட்டதென, அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க.

கஉகக. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

தலைமகன்றூது வரக்கண்டாள் சொல்லியது.

(இ - ள்.) காதலர் தூதொடு - (யான் வருந்துகின்றதறிந்து அது தீரக்) காதலர் விடுத்த தூதுகொண்டு, வந்த-என் மாட்டுவந்த, கனவினுக்கு—, விருந்து யாது செய்வேன்-(யான்) விருந்தாக யாதனைச் செய்வேன்? (எ-று.)

விருந்தென்றது விருந்திற்குச்செய்யும் *உபசாரத்தினை. அது கனவிற்கு ஒன்று காணுமையின், 'யாது செய்வேன்' என்றாள்.

(கு - ரை.) தலைமகன் தூதுவரக் கண்டாள் - தலைமகன் தூதுவரக் கனவு கண்டவள், புதுமையென்ற பொருளுள்ள விருந்து என்பது - இங்கு, புதியராகவந்தார்க்கு ஆகி, பிறகு அவர்க்குச்செய்யும் உபசாரத்திற்கு ஆயிற்று: இருமடியாகுபெயர். அது - விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம். 'கனவிற்கு ஒன்று'என்ற இடத்து 'கனவிலொன்றுகாணுமையான்'என்றும் பாடமுண்டு.

கஉகஉ. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

தூதுவிடுக்குந்தியாள் சொல்லியது.

(இ - ள்.) கயல் உண் கண்-(துஞ்சாது வருந்துகின்ற என்)கயல்போலுமுண்கண்கள், யான் இரப்ப துஞ்சின் - யான் இரந்தால் துஞ்சுமாயின்;—கலந்தார்க்கு - (கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால்) அவர்க்கு, உயல் உண்மை - (யான்) ஆற்றியுளேனென்ற தன்மையை, சாற்றுவேன் - (யானே) விரியச்சொல்வேன்; (எ - று.)

'கயலுண்கண்' என்றாள், கழிந்த நலத்திற்கிரங்கி. உயல் - காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாம் அடக்குவனவும், சொல்லுவனவற்றுள்ளுஞ் சுருக்குவனவற்றின் பரப்பும் தோன்றச் சொல்வேனென்னுங் கருத்தால் 'சாற்றுவேன்' என்றாள். இனி, அவையுந்துஞ்சா சாற்றலுங்கூடாதென்பதுபட நின்றமையின், 'மன்'-ஒழியிசைக்கண் வந்தது. முன்னுங் கண்டாள் கூற்றுகலின், கனவுநிலையுரைத்தலாயிற்று.

(கு - ரை.) தலைவி பிரிந்தநிலையிற் புன்கண்மைபடைத்துள்ள தன்கண்களை 'கயலுண்கண்' என்று கூறுவதாலால், 'கழிந்த நலத்திற்குஇரங்கி, கயலுண்கண்' என்றாளென்றார். கழிந்த நலம் - (கண்களுக்குக் கணவரைக்கூடிய நிலையில் இருந்தகாய்ப் பின் பிரிவினற்)போய்விட்ட அழகு. 'சாற்றுவேன்' என்ற சொல்லின் ஆற்றலால், தூதரிடம் சொல்லாது அடக்குவனவும் தூதரிடம் சுருக்கிச்சொல்பவற்றின் பரப்பும் தோன்றுமாறு கூறுவேனென்பது பெறப்படுமென்க. அவையும் - கண்களும். சாற்றலும்-யான் பொறுத்திருக்

* பி - மீ:—உபகாரத்தினை.

கின்ற தன்மையைத் தலைவர்க்குச் சொல்லுதலும். இந்தச்செய்யுள் - கனவு நிலையுரைத்தல் ஆமாறு என்னை? தஞ்சிறுல் சாற்றுவேன் என்று அன்றே இதிலுள்ளது எனின்,—முன்னே கனவுகண்டுள்ளாளான தலைவியின் இளமை யாதலால், இதுவும் கனவின்நிலையுரைத்தலிற்சேர்ந்ததேயா மென்று சமா தானங் கூறியமை காண்க. (உ)

கஉகஙு. நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர்.

ஆற்றலைனைக் கவன்றுட்து 'ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது.

(இ - ள்.) நனவினுன் - நனவின்கண்வந்து, நல்காதவரை - தலையளி செய்யாதாரை, கனவினுல் காண்டலின் - (யான்) கனவின்கட்கண்ட காட்சி யானே, என் உயிர் உண்டு - என்னுயிருண்டாகா நின்றது; (எ - று.)

மூன்றனுருபுகள், ஏழன்பொருண்மைக்கண் வந்தன. அக்காட்சியானே யானுற்றியுளைனின்றேன், நீ கவலல் வேண்டா வென்பதாம்.

(கு - ரை.) ஆற்றுளைனைக் கவன்றுட்கு - தலைவி பிரிவுத்துயரை யாற்ற மாட்டாளென்று வருந்திய தோழிக்கு. ஆற்றுவல் - துயர்தாங்குவேன். நன வினுல், கனவினுல்என்ற இடங்களிலுள்ளன, மூன்றும்வேற்றுமையுருபுகள்: இவைகள் ஏழாம்வேற்றுமைப் பொருளில்வந்தன ஆதலின் வேற்றுமை மயக்கம். அக்காட்சியானே - கனவிற்கண்ட அத்தக் காட்சியால் தான். (ஙு)

கஉகச. கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தரற்கு.

இதுவுமது.

(இ - ள்.) நனவினுன்-நனவின்கண்வந்து, நல்காரை-தலையளிசெய்யா தாரை, (அவர்சென்றுழி), நாடி - நாடிக்கொண்டுவந்து, (கனவு), தரற்கு - தருதலான்,—கனவினுன் - அக்கனவின்கண்ணே, காமம் உண்டாகும் - (எனக்கு) இன்பமுண்டாகாநின்றது; (எ - று.)

காமம் - ஆகுபெயர். நான்காவது, மூன்றன்பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்துசென்று கொண்டுவந்து தந்து நல்குவித்த கனவால் யான் ஆற்றுவ லென்பதாம்.

(கு - ரை.) நனவின்கண்வந்து காதலர் தலைவளிசெய்தல், பிரிவுக்கு முன்புஎன்க. சென்றுழி - சென்றஇடத்து. காமம் என்பது - இங்குப் புணர்ச்சியின்பத்தைக் காட்டுதலால், ஆகுபெயர். தரற்குஎன்றஇடத்து நான் கனுருபு தரலாலென மூன்றனுருபின்பொருளில் வந்தமை காண்க: இது, வேற்றுமைமயக்கம். இயல்பான் - தம்மூடைய நல்ல சுபாவத்தினுல். நல்கு வித்த - அருள்புரியுமாறுசெய்வித்த. ஆற்றுவல்-பிரிவுத்துயர் பொறுப்பேன்.

கஉகடு. நனவினுற் கண்டாரூ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

இதுவுமது.

(இ - ள்.) நனவினுன் கண்டது உம் (இனிது) ஆங்கே - (முன்) நனவின்கண் (அவரைக்) கண்டு நுகர்ந்தஇன்பத்தானும் இனிதாயிற்று அப்பொழுதே:கனவுஉம் தான் கண்ட பொழுதுஎ இனிது-(இன்று)கனவின்கட் கண்டு நுகர்ந்த வின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று; (அதனுன் எனக்கு இரண்டும் ஒத்தன); (எ - று.)

இனிதென்பது முன்னுங் கூட்டப்பட்டது. கனவு-ஆகுபெயர். முன்னும் யான் பெற்ற இவ்வளவே: இன்னும் அதுகொண்டாற்றுவ லென்பதாம்.

(கு - ரை.) இனிது என்று இரண்டாமடியிலுள்ள மூற்று, நனவினுற் கண்டதூஉம் இனிது என முன்னுங்கூட்டப்பட்டது. இரண்டும் - நனவும் கனவும். 'கனவிற்கண்டதும் இனிது; நனவிற்கண்டதும் இனிது' என்று கூறியதற்குக் கருத்து, எனக்குக் கனவோடு நனவோடுவாசியில்லையென்பது. கனவு என்பது - இங்கே கனவிற்கண்டு நுகர்ந்த இன்பம் என்ற பொருளைத் தருதலால், ஆகுபெயராம். முன்னும் - காதலர் என்னைப்பிரியாதமுன்பும். இவ்வளவே - இவ்வளவு இன்பமே. இன்னும் - காதலரைப்பிரிந்த இனியும். அதுகொண்டு - அவ்வளவான இன்பத்தைக்கொண்டு. (கூ)

கஉகசு. நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன்.

இதுவுமது.

(இ - ள்.) நனவு என-நனவென்று சொல்லப்படுகின்ற, ஒன்று - ஒருபாவி, இல்லையாயின்—,—கனவினுல்-கனவின்கண்வந்துகூடிய, காதலர்—, நீங்கலர் - (என்னைப்) பிரியார்; (எ - று.)

ஒன்றென்பது, அதன்கொடுமை விளக்கிநின்றது. அஃது இடையே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்த தென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற்று ஆற்றுகின்றமை கூறியவாறு.

(கு - ரை.) ஒன்று - கொடுமையிலொப்பற்றது என்னுங் குறிப்பினது. அதன் - நனவின். அஃது - நனவு. கனவிற்பெற்று - கனவிலே காதலரைக் கூடுவதைப்பெற்று. கனவினுல் - கனவின்கண் என்ற ஏழன்பொருளில் வந்ததால், வேற்றுமை மயக்கம். (கூ)

கஉகள. நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது.

விழித்துழிக் காணுளாயினுள்
கனவிற்கூட்டம்நீனைந்து ஆற்றளாயிச் சொல்லியது.

(இ - ள்.) (ஒருஞான்றும்), நனவினுன் - நனவின்கண்வந்து, நல்கா - தலையளிசெய்யாத, கொடியார் - கொடியவர்,—கனவினுன் - (நாடோறும்) கனவின்கண்வந்து, எம்மை பீழிப்பது - நம்மை வருத்துவது, என் - எவ்வியைபுபற்றி? (எ - று.)

பிரிதலும் பின் நினைந்துவராமையும்நோக்கி 'கொடியார்' என்றும்; கனவிற்றோண்மேலராய் விழித்தழிக் காத்தலின் அதனுனுந் துன்பமாகா கின்றதென்பாள் 'பீழிப்பது' என்றுங் கூறினுள். *நனவினில்லது கனவினு மில்லையென்பர், அதுகண்டில மென்பதாம்.

(கு - ரை.) ஒருஞான்றும் - ஒருபோதும். எவ்வியைபுபற்றி - என்ன சம்பந்தத்தினுல். காதலரைக் கொடியாரென்றது - பிரிதல்நோக்கியும், பிரிந்த பின் தன்னை நினைந்துவராமைநோக்கியும். பீழிக்கும்விதத்தை விளக்குவது, 'கனவிற்றோண்மேலராய்' என்பது முதலுள்ள சொற்றொடர். "தஞ்சுங்காற் றோண்மேலராகி" என்று மேற்குறளில் கூறியிருத்தலுங் காண்க. "நீணகர் நிறையாற்று ணீனையுநள் வதிந்தக்கால், தோண்மேலாயெனின்னே மதிக்கு மன்மதித்தாங்கே,நனவெனப் புல்லுங்காற் காணலாய்க் கண்டது,கனவென வுணர்ந்துபிற் கையற்றுக் கலங்குமே" என்ற கலித்தொகையும் இங்குக்காணத் தக்கது. பீழிப்பது=பீடிப்பது. நனவின் இல்லது-நனவிற் காணப்படாதது. நனவில் காதலர் தலையளிசெய்தலிலர்: கனவில் தோண்மேலராய்க் கூடித் தலையளிசெய்கின்றூர்: அதனுல், நனவிலில்லாதது கனவிற்காண்டலில்லை யென்று உலகோர் சொல்வது என்மட்டும் காணப்படவில்லையென்று ஆற்ற ளாய தலைவி கூறுகின்றுள். (எ)

கஉகஉ. தஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

தான் ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனையியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.

(இ-ள்.) (என்நெஞ்சுவிடாதுறைகின்ற காதலர்), தஞ்சுங்கால்-(யான்) தஞ்சும்பொழுது வந்து, தோள் மேலர் ஆகி-(என்) தோண்மேலராய், விழிக் குங்கால்-(பின்)விழிக்கும்பொழுது, விரைந்து—, நெஞ்சத்தர் ஆவர்-(பழைய) நெஞ்சின்கண்ணராவர்; (எ - று.)

கலவிவிட்டு மறையுங் கடுமைபற்றி 'விரைந்து' என்றுள். ஒருகாலும் என்னின் நீங்கியறியாதாரை நீ நோவற்பாலையல்லை யென்பதாம்.

(கு - ரை.) தான் - தலைவி. இயற்பழித்தல் - காதலர் அன்பிலரென்று பழித்துப்பேசுதல். தலைவியாற்றுதற்குத் தோழி இயற்பழித்தா ளென்க. இயற்பழித்தான் - பாங்கி. நனவில் நெஞ்சிலுள்ளார்: கனவில் தோண்மேலர்: இப்படி கனவு நனவுஎன்ற இரண்டிலும் என்னைவிட்டு நீங்காத காதலரை நீ நோதற்கு உரியாயல்லையென்கின்றுள்: "ஓஓ கடலே, தெற்றெனக் கண் ணுள்ளே தோன்றவிமையெடுத்துப், பற்றுவே னென்றியான் விழிக்குங் கான் மற்றுமென், நெஞ்சத்துளோடி யொளித்தாங்கே தஞ்சாநோய், செய்யுமறனில்லவன்" என்ற கலித்தொகை, இங்குக்காணத்தக்கது. (அ)

கஉகக. நனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர்.

---

* பி - மீ: நனவினல்லது

இதுவுமது.

(இ - ள்.) கனவிலுன் காதலர் காணுதவர்-(தமக்கு ஒரு காதலரின்மையின் அவரைக்) கனவிற்கண்டறியாத மகளிர்,—நனவிலுன் - (தாம் அறிய) நனவின்கண் வந்து, நல்காரை - நல்காத நங்காதலரை, நோவர் - (அன்பிலரென) நோவாகிற்பர்; (எ - று.)

• இயற்பழித்ததுபொறுது புலக்கின்றூளாகலின், அயன்மைதோன்றக் கூறினுள். தமக்குங் காதலருளராய் அவரைக் கனவிற் கண்டறிவாராயின், நங்காதலர் கனவின்கணுற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம்.

(கு - ரை.) கனவிற்கண்டறியாத மகளிர் என்றது - பாங்கியை. பாங்கியை, 'காதலர்க்காணுதவர்' என்று உலகியலில் வைத்துக் கூறியதனால், அயன்மைதோன்றக் கூறினுள் என்றூர். இனி, நன்மைதோன்றக் கூறினுள் என்றபாடத்துக்கு 'நனவினுல் நல்காரை நோவர்' என்ற தொடரில், காதலர் கனவில் எனக்குநல்குகின்றூர் என்பது பெறப்படுதலால், நன்மைதோன்றக் கூறினுளென்றூர் என்க. 'பன்மைதோன்றக் கூறினுள்' என்று இங்குப்பாடமோதுவாருமுளர்: அந்தப்பாடத்திற்கு, 'மகளிர்' என்று பாங்கியொருத்தியைப் பன்மைவாய்பாடு வெளிப்படக் கூறியது, செறலினுலாகுமென்க: "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பாலிதிணையிழிக்கினுமியல்பே" என்பர், நன்னூலார். (கூ)

கஉஉ0. நனவினு னங்நீத்தா ரென்பர் கனவினுற்
காணர்கொ லிவ்வூ ரவர்.

இதுவுமது.

(இ - ள்.) இ ஊரவர் - இவ்வூரின் மகளிர், நனவினுன்-நனவின்கண், நம் நீத்தார் என்பர் - நம்மை நீத்தாரென்று (நங்காதலரைக் கொடுமை) கூறுகிற்பர்: கனவினுல் - (அவர்) கனவின்கண் (நீங்காதுவருதல்), காணர்கொல்-கண்டறியாரோ? (எ - று.)

என்னெடு தன்னிடை வேற்றுமையின்றுயின் யான் கண்டது தானுங் கண்டு அமையும்: அதுகாணுது அவரைக் கொடுமைகூறுகின்றமையின் அயலாளேயா மென்னுங் கருத்தால், 'இவ்வூரவர்' என்றூள்.

(கு - ரை.) பாங்கிக்குத் தலைவியோடு வேற்றுமையில்லையாயின், தலைவி கனவிற் கண்ட காதலர் வருகையை அவளுங் கண்டு அடங்கியிருத்தல் கூடும்: அது காணுமையால், பாங்கியை அயலாளாகக்கொண்டு, புலவிதோன்ற 'இவ்வூரவர்' என்று தலைவி கூறுகின்றூளென்க. (கo)

கஉக - ஆம் அதிகாரம்.—பொழுதுகண்டிரங்கல்.

• அஃதாவது - மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகளிரங்குதல். "கனுமுந்துறுத வினையில்லை" என்பதுபற்றிப் பகற்பொழுதாற்றியிருந்தாட்கு உரியதாகலின், இது கனவுநிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பொழுது - இங்கே, மாலைப்பொழுது. வந்துழி - வந்தபோது. கனுமுந்துறுதவினையில்லையென்பது, "கல்லாதான் கண்ட கழிநுட்

பங்கற்றூர்முற், சொல்லுங்காற் சோர்வு படுதலால்-நல்லாய், விளுமுந்துறுத வுரையில்லேயில்லேக், கனுழந்துறுதவினை'' என்ற பழமொழிப்பாடலில் உள் ளது. ''இதன்பொருள் - கனுவின்மூற்படாத காரியமில்லே யென்பது: பின் னுல் நிகழுமது கனுவில் முந்துறத்தோன்றும் என்பது, இதன்கருத்து. மேல் நிகழுமது கனுவில் தெரியு மாதலால், அக்கனவிற்குரிய இராப்போது வரும் வரையில் தலைவி ஆற்றியிருந்தாளென்க. கனவுநிலையுரைத்தல் பகற்பொழு தில் நிகழ, அதன்பின் மாலேப்பொழுது வர, அது கண்டு இரங்குவாள் என் பது பற்றி, கனவுநிலையுரைத்தலின்பின் பொழுதுகண்டிரங்கல் வைக்கப் பட்டதென அதிகாரமுறைமை காண்க.

கூஉஉக. மாலேயோ வல்லே மணந்தா ருயிருண்ணும்
வேலேநீ வாழி பொழுது.

பொழுதோடு புலந்து சொல்லியது.

(இ - ள்.) பொழுது - பொழுதே! நீ—, மாலேஎ அல்லே - (முன்னுள் களின்வந்த) மாலேயோவெனின் அல்லே; மணந்தார் உயிர் உண்ணும் வேலே- (இருந்தவாற்றுன் அந்நாட் காதலரை)மணந்த மகளிருயிரையுண்ணும் இறுதி க்காலமாயிருந்தாய்; (எ - று.)

முன்னுள் - கூடியிருந்த நாள். அந்நாண்மணந்தாரெனவே, பின்பிரிந்தா ராதல் பெறுதும். வாழியென்பது-குறிப்புச்சொல். ''வாலிழை மகளிருயிர்ப் பொதி யவிழ்க்குங் காலே'' என்றுற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட் டது. *மாலேநீயல்லே எனவும் பாடம். வேலேயென்பது - ஆகுபெயர். வேலே யென்பதற்கு வேலாயிருந்தாயென்பாரு முளர்.

(கு - சை.) பொழுதோடு - மாலேப்பொழுதோடு. புலந்து - மாறுபாடு கொண்டு. இருந்த ஆற்றுன் - நீ இருந்தநிலேமையைக் கருதுமிடத்து. அந் நாள் காதலரை மணந்த - கணவரைமுன்பு கூடி இப்போது பிரிந்துள்ள என்றபடி. பிரிந்தாருயிருண்ணும் நீ ஒழியவேணுமென்ற குறிப்புப்பொருள் தோன்ற, வாழி என்றதனுல், 'வாழியென்பது குறிப்புச்சொல்' என்றுர். ''வாலிழை'' என்று தொடங்கும்மேற்கோள், கலித்தொகை, நெய்தற்கலி, 2-ஆஞ் செய்யுளிலுள்ளது: இதன்பொருள்:—வால்இழை மகளிர் - தூய்மை யான அணிகலேயணிந்த மகளிரின், உயிர் - உயிரை, பொதி அவிழ்க்கும் - (அவ்வுயிரைப்) பொதிந்துள்ள உடலினின்று போக்குகின்ற, காலே - காலம் என்பது. இதில், மாலேக்காலத்தைக் காலமென்றுபொருளுள்ள பொதுப் பெயராற் கூறியதுபோல, இந்தக் குறளிலும் மாலேக்காலத்தைப் பொதுப் பெயராகிய 'பொழுது' என்ற சொல்லாற் கூறினரென்க. வேலே - வேலா என்ற வடசொல்லின் திரிபு: எல்லேயென்ற பொருளது: இது-மகளிருயிர்க்கு இறுதிக்காலமாகிய எல்லேக்காலத்தைக் காட்டுதலால், ஆகுபெயர்: இடவாகு

* மாலேநீயல்லே யெனவும் பாடம் என்ற இந்தவாக்கியம், மதுரைத் தமிழ்ச்சங்கப் பத்திராசிரியர் பதிப்பிற் காணப்படுவது.

பெயரென்னலாம். முடிவு என்ற பொருளதான வேலையென்னுங் காரியப் பெயர் அதற்குக்காரணமான காலத்திற்கு ஆகுதலால், காரியவாகுபெயரென் பாருமுளர்: இனி, வேலையென்பதை 'வேல்'என்ற பகுதியினடியாகப்பிறந்த முன்னிலைக்குறிப்புமுற்றாகக் கொள்ளின், வேலாய் [வேற்படைபோன்று துன்பஞ்செய்வதாகி] இருந்தாயென்று பொருளாம். (க)

கஉஉஉ. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

(இ - ள்.) மருள் மாலை - மயங்கியமாலாய்! புன்கண்ணை - (நீயும் எம் போலப்)புன்கணுடையையாயிருந்தாய்: நின் துணை-நின்றுணையும், எம்கேள் போல் - எந்துணைபோல, வன்கண்ணதோ - வன்கண்மையுடையதோ? [கூறுவாயாக]; (எ - று.)

மயங்குதல் - பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல்; கலங்குதலுந்தோன்ற நின்றது. புன்கண் - ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை,விகாரத்தாற் றொக்கது. எமக்குத் துன்பஞ்செய்தாய், நீயுமின்பமுற்றிலையென்னுங் குறிப்பால் 'வாழி' என்றாள்.

(கு - ரை.) தன்னுட்கையாற்றை - தன்னிடத்துள்ள செயலற்ற தன்மையை: கையாறு - செயலறுந்துன்பம். அதன்மேல் - மாலைப்போதின்மேல். மயங்கிய - (பகலும்இரவும்) கலந்த. மாலைச்சந்தி காலைச்சந்தியென்ற இரண்டு சந்திகளும், பகலும் இரவும் சந்திக்குங் காலமாதலறிக. விரவுதல்-கலத்தல். மருளுதலென்பதன்பொருள் மயங்குதலென்பது: அச்சொல்லுக்குக் கலங்குதலென்றும் பொருளுண்டாதலால், கலங்குதலுந் தோன்றநின்ற தென்றார்: கலங்குதல் - தெளிவின்றியிருத்தல். புன்கண்ணை - புன்கண்ணையுடையாய்: ஒளியிழத்தலையுடையா யென்றபடி: முன்னிலையொருமைக் குறிப்பு முற்று. மாலைக்குத் தன்போல் புன்கணுடைமை கூறியதனால், அதற்குத் தன்னைப் போல் துணையுடைமையையும் உண்டாக்கி, 'நின்துணை எம்துணைபோல வன்கண்ணதோ' என்றும் வினவுகின்றாள். வன்கண்ணது-வன்கண்மையென்பதனடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று: வன்கண்மை - கொடுமை. ''புன்கண்கூர்மாலைப் புலம்புமென் கண்ணேபோல், துன்பமுழவாய் துயிலப் பெறுதியால்'' என்ற சிலப்பதிகாரம், ஈண்டு நோக்கத்தக்கது. (உ)

கஉஉஊ. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) பனி அரும்பி-(காதலர்கூடிய நாளெல்லாம் என்முன்) நடுக்கமெய்தி, பைதல்கொள் - பசந்துவந்த, மாலை—, துனி அரும்பி -.(இந்நாள் எனக்கு) இறந்துபாடு வந்துதோன்றி, துன்பம் வளர - (அதற்குளதாந்)துன்பம் (ஒருகாலைக்கொருகால்) மிக, வரும் - வாராநின்றது; (எ - று.)

குளிர்ச்சிதோன்ற மயங்கிவரு மாலையென்னுஞ் செம்பொருள்,*ஈண்டுக் குறிப்புணர நின்றது. துனி - உயிர்வாழ்தற்கண் வெறுப்பு. அதனால், யான் ஆற்றுமாறென்னை யென்பது, குறிப்பெச்சம்.

(கு - ரை.) ஆற்றவேண்டுமென்ற பாங்கிக்கு, என்னால் பிரிவுத்துயர் ஆற்றமுடியாதென்றுகூறிய கிளவி, இது. நடுக்கமெய்திஎன்பது-பனியரும்பி என்பதன்பொருள். அதற்கு-இறந்துபாட்டுக்கு. பனிஅரும்பி பைதல் கொள் மாலை என்றதொடர்க்கு-குளிர்ச்சிதோன்ற மயங்கிவருதலைக்கொண்ட மாலைக் காலம்என்பது, நேர்மையானபொருள்: இந்தப்பனியரும்பிப் பைதல்கொள் மாலை என்ற தொடரிற் பெறப்படுங் குறிப்புப்பொருள் - (யான் காதலரோடு கூடிய நாளெல்லாம் என்முன்)நடுக்கமெய்திப் பசந்து[நிறம்வேறுபட்டு] வந்த மாலை யென்பது; இப்பொருளும், இத்தொடரில் தோன்றுதல் காண்க. உயிர் வாழ்தலில் வெறுப்புஎன்ற பொருளுள்ள துனியென்பது, இலக்கணையால், இறந்துபாடு என்ற பொருளது. அதனால் - இறந்துபாட்டுத் துன்பம்வளர மாலைக்காலம் வருவதனால். (௩)

கஉஉச. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

இதுவுமது.

(இ - ள்.) (காதலருள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்த), மாலை—, காதலர் இல் வழி - அவரில்லாத இப்பொழுது, (அஃதொழிந்து நிற்றலேயன்றி),கொலைக்களத்து ஏதிலர் போல-கொல்லுங்களரியிற் கொலை ஞர் வருமாறுபோல, வரும்-(அவ்வுயிரைக்கோடற்கு)வாராநின்றது; (எ-று.)

ஏதிலர் - அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன் பஞ்செய்து வந்த பொழுதும், இன்று என்மேற்பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது: இனி யான் ஆற்றுமாறென்னை யென்பதாம்.

(கு - ரை.) 'காதலரில்வழி மாலை கொலைக்களத்தேதிலர்போலவரும்' என்றதனால், அந்தமாலைப்போது காதலர் பிரியாதிருந்தநிலையில் என்னுயிர் தளிர்ப்பவரும் என்பது பெறப்படுமாறு அறிக. அஃதுஒழிந்து-உயிர்தளிர்ப்ப வருதலொழிந்து. கொல்லுங்களரி - கொலைக்களம். இன்பஞ் செய்துவந்த பொழுதும் - இன்பம் செய்துவந்த மாலைக்காலமும். (௪)

கஉஉ௫. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

இதுவுமது.

(இ - ள்.) (காலையும் மாலையும் அவர் கூடியஞான்றுபோலாது இஞ் ஞான்று வேறுபட்டு வாராநின்றன: அவற்றுள்), யான்—, காலைக்கு செய்த நன்று என் - காலைக்குச் செய்த உபகாரம் யாது? மாலைக்கு செய்த பகை எவன் - மாலைக்குச்செய்த அபகாரம் யாது? (எ - று.)

---

* பி - ம்; இக்குறிப்புணரநின்றது.

கூடியஞான்று பிரிவரென்றஞ்சப்பண்ணிய காலை அஃதொழிந்து இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்றதென்னுங் கருத்தால் 'நன்றெனகொல்' என்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃதொழிந்து இஞ்ஞான்று அளவிறுன்பஞ்செய்யாநின்றதென்னுங் கருத்தால் 'பகையெவன் என்றுங் கூறினள். பகை - ஆகுபெயர். தன்னொடொத்த காலை பேசலாது மாலை தன்கொடுமையாற் துன்பஞ்செய்யாநின்ற தென்பதாம்.

(கு - ரை.) கூடியஞான்றுபோலாது - கூடியிருந்தசமயத்திலிருந்ததை யொத்திராமல். இஞ்ஞான்று - (பிரிந்துள்ள) இப்போது. கூடியஞான்று, காலை காதலர் பிரிவரென்றஞ்சப்பண்ணிற்று: மாலை இன்பம் பயந்தது: பிரிந்த இப்போது காலை அச்சமுண்டாக்குதலைத் தவிர்ந்து அளவிறந்த துன்பஞ்செய்யுங் கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய்நின்று உதவுகின்றது: மாலைக் காலமோ காலைபோலவன்றி அளவில்லாத துன்பஞ்செய்கின்றது: மாலை மாறுபட்டமைபற்றி, என்னுல் பிரிவுத்துயராற்றமுடியாதென்று தலைவி கூறுகின்றுளென்க. பகை - பகைவர்செய்யும் அபகாரத்திற்கு ஆனது, காரணவாகுபெயர். இத்தக்குறளின் கருத்து 'தன்னொடொத்த' என்று தொடங்கும் வாக்கியத்திலுள்ளது. கொல் இரண்டும் அசை. (ஙு)

கஉஉசு. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்.

'இன்று இன்னையாகின்ற நீ, அன்று அவர்பிரிவிற்கு உடம்பட்டதென்னை?' என்றட்துச் சொல்லியது.

(இ - ள்.) மாலை - (முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து போந்த) மாலை, நோய் செய்தல் - (இன்று பகையாய்த்) துன்பஞ்செய்தலை, மணந்தார் அகலாத காலை - காதலர் பிரிதற்குமுன்னே, அறிந்தது இலேன் - அறியப்பெற்றிலேன்! (எ - று.)

இங்ஙனம் வேறுபடுத லறிந்திலேன்: அறிந்தேனையின், அவர்பிரிவிற்கு உடம்படே னென்பதாம்.

(கு - ரை.) இன்னையாகின்ற - இப்படிப்பட்டவளாகின்ற: பிரிவுத்துயருக்கு ஆற்றுதவளாகின்ற: இங்ஙனம்வேறுபடுதல் - காதலர்கூடியகாலத்து எனக்குநட்பாய்இன்பஞ்செய்த மாலைப்போது பிரிந்தகாலத்துப் பகையாய்த் துன்பஞ்செய்யுமாறு இங்ஙன் நிலைமாறுதல். (சு)

கஉஉஎ. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

'மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணமென்னை?' என்றட்துச் சொல்லியது.

(இ-ள்.) இந்நோய்-இக்காமநோயாகிய பூ,—காலை அரும்பி-காலைப்பொழுதின்கணரும்பி, பகல் எல்லாம் போது ஆகி-பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் (முதிர்ந்து), மாலை மலரும் - மாலைப்பொழுதின்கண் மலராநிற்கும்.

துயிலெழுந்த பொழுதாகலிற் கனவின்கட்கூட்ட நினைந்தாற்றுதல் பற்றி 'காலையரும்பி' என்றும், பின் பொழுது செலச்செல அதுமறத்து பிரிவுள்ளி யாற்றுளாதல்பற்றி 'பகலெல்லாம் போதாகி'என்றும், தத்தந்துணையை யுள்ளிவந்துசேரும் விலங்குகளையும் மக்களையுங்கண்டு தான் அக்காலத்தின் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றுமைமிகுதிபற்றி 'மாலைமலரும்'என்றுங் கூறினாள். பூப்போல இன்நோய் காலவயத்த தாகாகின்றதென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. ஏகதேசவுருவகம்.

(சு - ரை.) இனையையாதற்கு - இங்ஙனம் ஆற்றுதவளாதற்கு. கனவின்கட்கூட்டம் - கனவிலே கணவனுடனேசேர்தல். பிரிவுள்ளி - பிரிவைநினைந்து. ஆற்றுளாதல் - ஆற்றுமையையுடையவளாதல். தத்தம் துணையை யுள்ளி - தம்தமக்குத் துணையாகவுள்ள மனைவியை நினைந்து. வந்துசேரும் - இருப்பிடத்திற்கு வந்துசேர்கிற. அக்காலத்தில் நுகர்ந்தஇன்பம் - கணவனுடனேகூடியிருந்த காலத்திலனுபவித்த இன்பம். ஆற்றுமை - பிரிவுத்துயரைத்தாங்கமாட்டாமை. மிகுதி - மிகுதல். காலவயத்தது - காலத்தின் வசப்பட்டது. பூ காலையில் அரும்பிப் பகலிற் பெரும்போதாகி மாலை மலரும் இயல்பினதாதலால், காலவயத்ததாம். இன்நோய் - காமநோய். காமநோய்க்கு அரும்பு ஆதல் பெரும்போதுஆதல் மலராதல் என்ற நிலைகள் கூறியதற்குஏற்ப, அந்நோயைப் பூ என்றுதது - ஏகதேசவுருவகமாம். (எ)

கஉஉ அ. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

இதுவுமது.

(இ - ள்.) (முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த), ஆயன் குழல்—, (இதுபொழுது) அழல் போலும் மாலைக்கு-அழல்போலச்சுடுவதாய மாலைக்கு, தூதுஆகி-தூதுமாய், (அது வந்தென்னைக்கொல்வுழி),—கொல்லும் படை - கொல்லும் படையுமாயிற்று; (எ - று.)

பின்னின்ற போலுமென்பது, உரையசை. முன்னரே வரவுணர்த்தலிற் றூதாயிற்று; கோறற்கருவியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்ல மாலை, இத்துணையும் பெற்றுழ் என்செய்யாதென்பதாம்.

(சு - ரை.) முன்னெல்லாம் - காதலரோடுகூடியிருந்தபோதெல்லாம். இதுபொழுது - பிரிந்துள்ளஇப்போது. அது - மாலைக்காலம். கொல்வுழி - கொல்லும்போது. போலும் என்றசொல் இரண்டனுள், முன்னது - உவமவாசகம்: பின்னது - உரையசை: வாக்கியாலங்காரம். ஆயன்குழல் மாலைக்காலத்தொடக்கத்தே ஊதப்படுதலால், மாலைக்காலம்வருதலை யுணர்த்துந் தூதாகிப் பிரிந்தாரை வருத்தும் காமோத்தீபகமாகும்: "தீங்குழலீருமாலோ" என்பது, நம்மாழ்வார்பாசுரம்; "ஆயர்வாய்வேயோவுழல்" என்றதும் காண்க. தலைவியாகிய தன்னுயிரை வாட்டுதற்குக் கருவியாயிருத்தலால், கொல்லும் படையென்றது. கோறற்கருவி - கொல்லும்ஆயுதம். இத்துணையும் - ஆயன் குழலாகிய துணையையும். (அ)

கஉஉகூ. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

இதுவுமது.

(இ - ள்.) (இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந்தேன்); மதி மருண்டு - (இனிக் கண்டாரும்) மதிமருளும் வகை, மாலை—,படர்தரும் பேழ்து - வரும்போது, பதி - இப்பதியெல்லாம், மருண்டு-மயங்கி, பைதல் உழக்கும் - நோயுழக்கும்; (எ - று.)

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினு ளாகலின் 'மாலை படர்தரும்போழ்து' என்றுள் யான் இறந்து படுவலென்பதாம். மாலை மயங்கிவரும்போழ்து என்மதி நிலைகலங்கி நோயுழக்குமென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) இதற்குமுன்னெல்லாம் - மாலைக்காலம்வருதற்கு முன்னிருந்த காலமெல்லாம். யானே - நான்தனியேயென்றபடி. பதி - இவ்வூரி லுள்ளார்; என்றது, தன்னிடம் அன்புள்ள ஊராரை: ஊரார் தன்புறக்கார ணம், தலைவியாகிய இவள் இறந்துபடுதலாலென்க. மாலைவருவதை ஒரு கூற் றம் [கூற்றம் - யமன்] வருவதாகக் கருதினு ளாதலால், அக்குறிப்புத் தோன்ற மாலைப்போழ்தென்ஞுது 'மாலை படர்தரும் போழ்து' என்கின்று ளென்க. இக்குறளின் கருத்துக்கூறுவது 'யான் இறந்துபடுவலென்பதாம்' என்ற வாக்கியம். இறந்துபடுவல் - இறந்தொழிவேன். இனி, இக்குறளுக்கு வேறுரு ரைவருமாறு:—மாலை - மாலைப்போது, மருண்டு - மயங்கி, படர் தரும் போழ்து - வரும் போழ்து, மதி - (என்) புத்தி, பதி மருண்டு - நிலை கலங்கி, பைதல்உழக்கும் - நோயையனுபவிக்குமென்பது. நிலைகலங்கியென் பது - பதி மருண்டு என்பதன்பொருள். பதி யென்பது நிலையென்னும் பொருளை தாதலை "பதியிற் கலங்கியமீன் (ககசு)" என்ற குறளடியிலுங் காண்க. (கூ)

கஉஉ0. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

இதுவுமது.

(இ - ள்.) (காதலர்பிரிவைப் பொறுத்து), மாயா என் உயிர் - இறந்து படாதிருந்த என்னுயிர்,—(இன்று),பொருள் மாலை ஆளரை - பொருளியல்பே தமக்கியல்பாகவுடையவரை, உள்ளி - நினைந்து, மருள் மாலை - இம்மயங்கு மாலைக்கண்ணே, மாயும் - இறந்துபடாநின்றது; (எ - று.)

குறித்தபருவங் கழியவும் பொருண்முடிவுநோக்கி வாராமையிற் சொல் வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல் பாயினர்: காலம் இதுவாயிற்று: இனி நீ சொல்கின்றவாற்றுற் பயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) குறித்தபருவம் - என்னைப்பிரியும்போது இன்னகாலத்து வருவேனென்று குறிப்பிட்டுக் கூறிய காலம். கழியவும் - நீங்கவும். பொருள்

மூடிவு - இவ்வளவுபொருள்சம்பாதிக்கவேண்டுமென்று தம்மனத்துக் குறித்த பொருளினல்லையளவு. குறித்தபருவங்கழியவும் காதலர் பொருளீட்டுதலிற் காலங்கழித்துக்கொண்டு மீண்டு வராதிருத்தல்பற்றி, காதலரை, சொற்பிற ழாமையாகிய தம்மியல்பு ஒழிந்தவராய்ப் பொருளியல்பானவர் என்றது. பொருளியல்பு - பொருளோடீட்ட மேன்மேல் முயலும் இயல்பு. "மாலை யியல்பே" என்பது தொல்காப்பியத்து உரியியற் சூத்திரம். காலம் இது ஆயிற்று - அவர் குறித்த பருவம் போய் வேறொருபருவமும் வந்திட்டது என்றபடி. (கo)

கஉச - ஆம் அதிகாரம்.—உறுப்புநலனழிதல்.

அஃதாவது-தலைமகள்தன் கண்ணும் தோளும் நுதலும் முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது இரக்கமிக்குழி நிகழ்வதாகலின், பொழுது கண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) உறுப்பு - அவயவம். நலன் - அழகு. இரக்கம் - தலைவன் பிரிவிற்கு இரங்குதல்; பிரிவினுலான இரக்கம் மிகுந்த பொழுது உறுப்பு நலனழியுமாதலால், 'உறுப்புநலனழிதல்'என்ற இவ்வதிகாரம் பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது என அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க.

கஉஙக. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண்.

ஆற்றுமைமிதுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

(இ - ள்.) சிறுமை நமக்கு ஒழிய - இவ்வாற்றுமை நமக்கண்ணே நிற்ப, (தாம்),சேண் சென்றூர்-சேணிடைச்சென்ற காதலரை,உள்ளி-(நீ) நினைந்தழுதலால்,—கண் - (நின்) கண்கள், (ஒளியிழந்து), நறு மலர் நாணின - (முன்நமக்கு நாணிய)நறுமலர்கட்கு(இன்று தாம்) நாணிவிட்டன; (எ - று.)

நமக்கென்பது, வேற்றுமைமயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காய வாகு பெயர். 'இவைகண்டார் அவரைக் கொடுமைசூழ்வர்: நீ யாற்றல் வேண்டும்' என்பது கருத்து.

(கு - ரை.) 'நறுமலர்க்குக் கண் நாணின' என்ற வாக்கியத்தினுல், முன்பு கண்கட்கு அவை நாணின என்ற பொருள் தொனித்தல் காண்க. மற்றும், கீழ் 'நலம்புனைந்துரைத்தல்'என்ற அதிகாரத்து "நாணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு, மாணிழைகண் ணெவ்வே மென்று" என்ற குறளும் நோக்கத்தக்கது. நமக்கு என்ற நான்கனுருபு-நம்மிடத்து என்று ஏழனுருபின் பொருளில் வந்ததனுல், வேற்றுமைமயக்கமாம். தன்வினைமுதல் வினையோடு முடிதற்குரிய 'உள்ளி' என்ற வினையெச்சம், பிறவினைமுதல் வினையான 'நாணின' என்றதனோடு இயைதலால், பிறவினைமுதல்வினையோடும் இயைதற்குரிய 'உள்ள'என்ற செயவெனெச்சத்தின் திரிபு எனப்பட்டது. உள்ளுத

லென்பது உள்ளியழுதல் என்று உள்ளுதலின்காரியமான அழுதலைத் தெரிவித்தலால், காரணம் காரியத்திற்கு ஆகிவந்தது: பகுதியாவும் தொழிற் பெயர்ப் பொருளன என்ற கொள்கைபற்றியும், உள்ளி யென்ற வினையெச் சத்தில் தொழிற்பெயர்ப்பொருளதான உள்ளென்ற பகுதியே காரியப் பொருட்டு ஆவதுபற்றியும், காரணப்பெயர் காரியத்திற்கு ஆய ஆகுபெய ரென்றது. இவை - நின்கண்கள் ஒளியிழந்ததும், நறுமலர்க்கு நாணியது மாகிய இச்செய்கைகள். "திருநலந்தோற்றூஉ, இகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாய்" என்ற கலித்தொகைப்பகுதி, இங்குக் கருதத்தக்கது. அவரைக் கொடுமைகூறுதல் - தலைமகனைப்பற்றி 'தயை யில்லாதவன்: நம்பவைத்து ஏமாற்றுபவன்' என்றாற் போன்ற கொடுஞ்சொற்களைச் சொல்லுதல். (க)

கஉடூஉ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

இதுவுமது.

(இ - ள்.) பசந்து - பசப்பெய்தன்மேல், பனிவாரும் - நீர்வார்கின்ற, கண் - (நின்) கண்கள்,—நயந்தவர்-(நம்மால்)நயக்கப்பட்டவரது, நல்காமை-நல்காமையை, சொல்லுவ போலும்-(பிறர்க்குச்) சொல்லுவபோலாகின்றன, (இனி நீ யாற்றல் வேண்டும்); (எ - று.)

சொல்லுவபோறல் - அதனை அவருணர்த்தற்கு அனுமானமாதல். நயந்தவர்க்கென்று பாடமோதுவாரு மூளர்.

(கு - ரை.) பசப்பெய்தல் - இங்கே, பிரிவாற்றுமையான் அடைந்த நிற வேறுபாட்டால் ஒளியிழத்தலைப்பெறுதல். நீர்வார்கின்ற - நீர்பெருகுகின்ற. நல்காமை - அருள்புரியாமை. அவர் - பிறர். பசந்த கண்களினின்று நீர்வார்தல், காதலர் அருள்செய்யாமையை ஊகித்தறிதற்கு ஏதுவாதலால், பசந்து பனிவாருங்கண் நயந்தவர் நல்காமை சொல்லுவபோலு மென்றார்: தன்மைத் தற்குறிப்பேற்றவணி. பரிமேலழகருரையில், அனுமானம், ஏது என்னும் பொருளது. நயந்தவரென்றவிடத்து 'நயந்தவர்க்கு' என்ற பாடத்தில், நல் காமை - காதலரருளாமையை, நயந்தவர்க்கு - (நம்மிடத்து) அன்புடைய சுற்றத்தார்க்கு, சொல்லுவபோலு மென்க. (உ)

கஉடூக. *தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

இதுவுமது.

(இ - ள்.) மணந்த நாள் - (காதலர்) மணந்தஞான்று, வீங்கிய - (இன்ப மிகுதியாற்)பூரித்த, தோள் - (நின்)தோள்கள்,—தணந்தமை - (இன்று)அவர் பிரிந்தமையை, சால அறிவிப்பபோலும்-விளங்க உணர்த்துவபோல மெலியா கின்றன: (இது தகாது); (எ - று.)

அன்றும் அவ்வாறு பூரித்து இன்றும் இவ்வாறு மெலிந்தால், இரண்டுங் கண்டவர், கடிதினறிந்து அவரைத் தகவின்மை கூறுவ ரென்பதாம்.

---

* தணந்தநாள் என்று பாடங்கொண்டாரு மூளர்.

(கு - ரை.) தணந்தமை - பிரிந்தமை. மணந்தஞான்று - கூடியபோது. மணந்தநாளீ வீங்கியதோளீ தணந்தமை சாலவறிவிப்பபோலும் என்றதனால், தோள்கள் தணந்தமையறிவிப்பது மெலிவினாலென்க. இரண்டும் - பூரித்தல் மெலிதல் இரண்டும். அவரை - காதலரை. தகவின்மை - தகுதியின்மை; உயர்குணமின்மை. இதுவும், தன்மைத்தற்குறிப்பேற்றவணியே. ''வண்ணம் பசந்து புலம்புறுகாலை, புணர்ந்தபோலவுறுப்பினைக் கிழவி, புணர்ந்தவகையிற்புணர்க்கவும் பெறுமே'' என்ற தொல்காப்பியப் பொருளியற் சூத்திரத்தில் இக்குறள் உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (உ)

கஉஉச. பணிநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

இதுவுமது.

(இ - ள்.) (அன்றும்), துணை நீங்கி - துணைவர்நீங்குதலான், (அவராற் பெற்ற செயற்கையழகேயன்றி), தொல் கவின் வாடிய - பழைய இயற்கையழகும்இழந்த, தோள் - இத்தோள்கள்,—(இன்று அதற்குமேலே), பணை நீங்கி - (தம்)பெருமையிழந்து, பைந்தொடி சோரும் - வளை கழலாநின்றன: (இவை இங்ஙனஞ் செயற்பாலவல்ல); (எ - று.)

பெருமையிழத்தல் - மெலிதல். பைந்தொடி - பசிய பொன்னாற்செய்த தொடி. சோருமென்னும் வினைத்தொழில், தோண்மேனின்றது. அன்றும் பிரிந்தானென்று அவரன்பின்மையுணர்த்தி, இன்றுங் குறித்தபருவத்து வந்திலரென்று அவர் பொய்ம்மை யுணர்த்தாநின்றன; இனி அவற்றைக் கூறுகின்றீர்மேற் குறையுண்டோ வென்பதாம்.

(கு-ரை.) தொல்கவின்வாடிய என்றதனால், அவராற்பெற்ற செயற்கையழகு அழிந்தமையும் பெறப்படும். அதற்குமேலே-அழகையிழந்ததற்குமேலும். பணை - பருத்திருக்குந்தன்மை. தோள் தொடி சோரும் - இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது: உபசாரவழக்கு. அவற்றை - தலைவருடைய அன்பு இல்லாமையையும் பொய்ம்மையையும். தொல்கவின்வாடிய தோள்கள் அவரன்பின்மையையும், அத்தோள்கள் பணை நீங்கித் தொடிசோர்தல் அவர் பொய்ம்மையையும் முறையே யுணர்த்துதல் அறிக. (ச)

கஉஉரு. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

இதுவுமது.

(இ - ள்.) (கவவுக்கை நெகிழினும் ஆற்றுதாட்கு இக்காலநீட்டித்து என்னுமென்று நினையாத), கொடியார் - கொடியாரது, கொடுமை - கொடுமையை, உரைக்கும்-(தாமே) சொல்லாநின்றன: தொடியொடு தொல் கவின் வாடிய-வளைகளுங் கழன்று பழைய இயற்கையழகுமிழந்த, தோள்-இத்தோள்கள்; (இனி, அதனை யாம் மறைக்குமாறென்னை?) (எ - று.)

உரைக்குமென்பது, அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு, வேறுவினைக்கண் வந்தது. அவரொடுகலந்த தோள்களே சொல்லுவன வாதலால், அயலார்சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(கு - ரை.) கவவுக்கை-தழுவிய கை. தொடியொடு கவின் வாடிய தோள் என்றதனால், தொடிகழன்று அழகுகெட்ட தோள் என்று உரைக்கப்பட்டது. அதனை-கொடியாரது கொடுமையை. தோளுக்கு உரைத்தலென்பது இல்லாமையால், உரைக்கும் என்பது - வாய்விட்டுச்சொன்னற்போ லறிவிக்கும் என்ற பொருளில் வந்தது: அதனால் அச்சொல்லை,'அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல்' என்றார். தொடிவாடுதல் - தொடிகழலுதல்: கவின் வாடுதல் - அழகுகெடுதல்: ஆகவே, வாடுதல் தொடிக்கு வேறுபடுதலால், தொடியொடு என்ற இடத்து ஒடு-ஒரே வினையினுடனிகழ்ச்சியில் வாராமல் வேறுவினைக்கண் வந்த தென்றார். தொடிகழன்று அழகிழந்த தோள்களே அக் காதலரின்கொடுமையை யுரைக்குமென்றதனால், 'அயலார் அவரதுகொடுமை சொல்லுதல் சொல்லவேண்டுமோ?' என்றபொருள், கைமுதிகநியாயத்தாற் பெறப்படுமாறு அறிக. [கைமுதிகநியாயமானது - (மலையைவிழுங்கின மகாதேவன் கதவைவிழுங்கினனென்பது கூறவேண்டுமோ? என்றாற்போல) ஒரு பொருளைக்கூறியதனால் மற்றொருபொருள் எளிதிற்சித்தித்தலைத்தெரிப்பது.] ''கொடியோர் கொடுமைசுடும்'' என்று தொல்காப்பியத்துக் கற்பியலில் வருகின்றது. (சு)

கஉஙூ. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற லெந்து.

தான்ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) (யான் ஆற்றவும் என்வயத்தவன்றி), தொடியொடு தோள் நெகிழ - தொடிகள் கழலுமாறு தோள்கள்மெலிய,—(அவற்றைக் கண்டு நீ), அவரை—, கொடியர் என கூறல் நொந்து - கொடியரெனக் கூறுதலைப் பொறாது, நோவல் - (யான் என்னுள்ளே) நோவாநின்றேன்; (எ - று.)

ஒடு-மேல்வந்தபொருண்மைத்து. யான் ஆற்றேனாகின்றது அவர் வாராமைதற்கன்று, நீ கூறுகின்றதற் கென்பதாம்.

(கு - ரை.) தான் - தலைவி. மேல்வந்த - கீழ்க்குறளில்வந்த. இங்கும் ஒடு - வேறுவினையொடு. தொடிச்சு நெகிழ்தல் கழலுதல்: தோளுக்கு நெகிழ்தல் மெலிதல். என்னுடைய ஆற்றாமைக்குக் காரணம் நீ அக்காதலரைக்குறித்து இயற்பழித்துக்கூறுதலே: அக்காதலர் வாராமையன்று என்பது, இக்குறளின் கருத்து. (சு)

கஉஙஎ. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூசல் உரைத்து.

அவ்வியற்பழிப்புப் பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சே-! கொடியார்க்கு - (இவள்) கொடியரென்கின்றவர்க்கு, (நீ சென்று), என் வாடு தோள் பூசல் - என் மெலிகின்ற தோளி

னால் விளைகின்ற ஆரவாரத்தை, உரைத்து - சொல்லி, பாடு பெறுதி ஓ - ஒருமேம்பாடெய்தவல்லையோ?(வல்லையாயின் அதனையொப்பதில்லை);(எ-று.)

கொடியார்க்கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச் சொல்.வாடுதோளென்பதும்,அவை தாமே வாடாநின்றனவென்பது தோன்ற நின்றது. பூசல் - ஆகுபெயர். அஃது, அவள் தோள்நோக்கி யியற்பழித்தன் மேலும், அதனால் தனக்காற்றாமைமிகன்மேலும் நின்றது. நின்னுரைகேட்டலும் அவர் வருவர்: வந்தால் இவையெல்லாம்நீங்கும்: நீங்க, அஃதெனக்குக் காலத்தினாற்செய்த நன்றியா மாகலின் அதன்பயனெல்லா மெய்துதி என்னுங் கருத்தாற் 'பாடுபெறுதியோ' என்றாள்.

(கு - ரை.) பொறாது - பொறுக்காமல். வாடு தோள் - மெலிகின்ற தோள். கொடியார்க்கு என்று இங்குத் தலைவி காதலரைக் கூறுவது - 'பிறர் கொடியாரென்று என்காதலரைக் கூறுகின்றனர்: அவர் இயற்கையிற் கொடியரல்லர்' என்ற குறிப்பினது என்க. வாடு தோள் - காதலரின் பிரிவால் வாடியதன்று: இயற்கையாகவே வாடியது என்பது தோன்ற நின்றது: இவ்வாறுகொண்டது, சொல்லுவாளின் குறிப்புப்பற்றியாகும். பூசல் - ஆரவாரம்: இங்கே, ஆரவாரத்திற்குக் காரணமான இயற்பழித்தலையும், ஆற்றாமை மிகலையும் காட்டுதலால், காரியவாகுபெயர். இவையெல்லாம் - தலைமகனையியற்பழித்தல், தோள்வாடுதல், கண்கள்அழுதல், நாணுதல் என்பன. அதன்பயன் - அந்நன்றியின்பயன். (எ)

கஉ௩௮. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து
தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) முயங்கிய கைகளை-(தன்னையிறுக)முயங்கிய கைகளை, ஊக்க-(இவட்கு நோமென்று கருதி ஒருஞான்றுயான்)நெகிழ்ந்தேனாக,—(அத்துணையும் பொறாது), பைந் தொடி பேதை-பைந்தொடிகளை யணிந்த பேதையது, நுதல்—, பசந்தது—: (அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கு யாது செய்யுமோ?) (எ - று.)

இனிக் கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து.

(கு - ரை.) ஊக்க - நெகிழ்த்த. அத்துணையும் - அச்சிறுகாலவளவு பிரிவினையும். நுதல் - நெற்றி. பசந்தது - ஒளியிழந்தது. கடிதில் - விரைவில். கீழ் 'பசப்புறு பருவரல்' என்ற அதிகாரத்துத் தலைவிகூற்றாகவந்த ஏழாம் குறளும் அதன் உரையும் ஈண்டு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கன. (அ)

கஉ௩௯. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

இதுவுமது.

(இ - ள்.) (அங்ஙனங் கைகளை யூக்குதலான்), முயக்கிடை - அம்முயக்கிடையே, தண் வளி-சிறுகாற்று, போழ-நுழைந்ததாக,—(அத்துணை யிடை

யீடும் பொருது), பேதை - பேதையுடைய, பெரு மழை கண் - பெரியமழைக் கண்கள், பசப்புற்ற - பசப்புற்றன; (அத்தன்மையனவான கண்கள் மலைகளும் காடும் நாடுமாய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன!)

தண்மை - ஈண்டு மென்மைமேனின்றது. போழ்வென்றது, உடம்பிரண்டும் ஒன்றுணதுதோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

(கு - ரை.) முயக்கு - தழுவுகை. ஊக்குதலால் - நெகிழ்த்தலால். இடையீடு - நடுவில் உள்ளபொருள்: செயலுக்குத் தடையாவது. ஒன்றுயிருந்த தலைவன் தலைவியரின் உடம்பிடையே புகுந்ததனால் 'போழ்' என்றது. மலைகளும் காடும் நாடுமாய இடையீடுகள் என்றது - தலைவன் பலமலைகளையும், காடுகளையும், நாடுகளையும் கடந்து வினைமுடிக்கச் சென்றுஞ்தலால். (கூ)

கஉசo. கண்ணின் பசப்பீபோ பருவர லெய்தின்றே
பொண்ணுதல் செய்தது கண்டு.

இதுவுமது.

(இ - ள்.) (தண்வளிபோழவந்த), கண்ணின் பசப்பு—, பருவரல் எய்தின்று - துன்பமுற்றது: ஒள் நுதல் செய்தது கண்டு - (தனக்கயலாய) ஒண்ணுதல் வினைத்த பசப்பைக் கண்டு; (எ - து.)

அது கைகளையூக்க அவ்வளவிற் பசந்தது: யான் கைகளையும்ஊக்கி மெய்களும்மீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந்துணையும் பசந்திலனெனத் தன்வன்மையும், அதன்மென்மையுங் கருதி வெள்கிற்றென்பதாம்: ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றிலொன்று முற்பட்டு நலனழியும், யாங்கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று.

(கு-ரை.) கைகளையூக்க அவ்வளவில் அது பசந்தது என இயைக்க: அது-நுதல். இதனைக் கீழ் எட்டாம் குறள் நோக்கியறிக. 'யான்...சிறுகாற்று ஊடறுக்குந்துணையும் பசந்திலன்' என்பது, கண்ணினுடைய உட்கோள். இதனைக் கீழ்க்குறளினு லறிக. யாம் கடிதிற்சேறும் என்று தலைமகன் தன்னுள்ளத்தை நோக்கிக் கூறுகின்றுனென்க. சேறும் - செல்லுவோம். ஒள் நுதல் - ஒள்ளிய நெற்றி. ஓ - அசைநிலை. (கo)

கஉடு - ஆம் அதிகாரம்.—நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது-ஆற்றுமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சொடு செய் திறனறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக்கள் தந்தலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்புநலனழிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) ஆற்றுமை மீதூர - ஆறியிருக்கமாட்டாத நிலைமைமிக. பற்றுக்கோடு - ஆதரவு. செய் திறன் - செய்யவேண்டிய வகை. இஃது - நெஞ்சொடுகிளத்தல்.

கஉசக. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து.

தன்னாற்றாமை தீருந் திறன் நாடியது.

(இ - ள்.) நெஞ்சே—!எவ்வம் நோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ்வெவ்வநோயினைத் தீர்க்கும்மருந்தாவதொன்றனை, (யான் அறியு மாற்றலிலன்): எனைத்து ஒன்றுஉம் நினைத்து சொல்லாய் - எத்தன்மையது யாதொன்றாயினும் (நீ) அறிந்து (எனக்குச்) சொல்; (எ - று.)

எவ்வம் - ஒன்றானுந் தீராமை. உயிரினுஞ்சிறந்த நாணினைவிட்டுச் செய்வது யாதொன்றாயினு மென்பாள், 'எனைத்தொன்றும்' என்றாள்.

(கு - ரை.) திறன் நாடியது - வகையை யாராய்ந்தது. எத்தன்மையது யாதொன்றாயினும் - எப்படிப்பட்ட தன்மையையுடையதாயினும் யாதாவது ஒன்றை. இங்கு 'எனைத்து' என்றது - நோய் தீர்க்கும்மருந்து எப்படிப்பட்ட தன்மையையுடையதா யிருந்தாலும் என்றபடி: உயிரினுஞ்சிறந்த நாணை விட்டிட்டுச் செய்வதாயினும் அதுவும் ஏற்குமென்ற கருத்தது. "தாயிற்சிறந்தன்று நாண் தையலாருக் கந்நாண்டகைசால், வேயிற்சிறந்த மென்றோளி திண்கற்பின் விழுமிதன்று" என்ற திருக்கோவையாரும், "நாணுகற்பு என்னும் இரண்டல்லவே அவள் கண்ணுள்ள: அவற்றுள், நாணிற் கற்பு வலியுடைத்து: என்னை வலியுடையவாறு எனின்?—உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர்காட்சிக் கற்புச்சிறந்தன்று என்பவாகலான், நாண் அழியினும் கற்பழியாமை நினைக்கும்" என்ற களவியலுரையும் இங்குக்காணத்தக்கன. (க)

கஉசஉ. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

தலைமகனைக் காண்டற்கண் வேட்கைமிகுதியாற் சொல்லியது.

(இ ள்.) என் நெஞ்சு - என்னெஞ்சே! வாழி - வாழ்வாயாக: அவர் காதல் இலர்ஆக - அவர்(நங்கட்)காதலிலராகவும், நீ நோவது-நீ (அவர்வரவு நோக்கி)வருந்துதற்கேது, பேதைமை - (நின்)பேதைமையே: (பிறிதில்லை).

நம்மை நினையாமையின், நங்கட் காதலில ரென்ப தறியலாம்: அஃதறியாமை மேலும், அவர்பாற்செல்லக் கருதாது அவர்வரவுபார்த்து வருந்தாநின்றாய்: இது நீ செய்துகொள்ளுகின்ற தென்னும் கருத்தால் 'பேதைமை' என்றாள். வாழி-இகழ்ச்சிக்குறிப்பு. யாம் அவர்பாற்சேறலே அறிவாவதென்பதாம்.

(கு - ரை.) வேட்கை - விருப்பம். பேதைமை - அறியாமை. அஃது - தலைவர் நம்மிடத்துக் காதலில ரென்பதை. நீ செய்துகொள்ளுகின்றது - நீயே உனக்கு விளைத்துக்கொள்கின்ற தீங்குஎன்றபடி. பேதைமையை நெஞ்சுக்குக்கூறி, அடுத்து வாழியென்றது - பேதைமையையுடைய நீ வாழ வேண்டுவது அவசிய மென்று இகழ்ச்சியைக் குறிக்கும்.காதலர் வராமைக்கு நோவது பேதைமை யென்றதனால், நாம் அவரிடத்துச்செல்லுதலே அறிவு என்பது பெறப்படுதல் காண்க. (உ)

கஉசரூ. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.

இதுவுமது.

(இ - ள்.) நெஞ்சே—! இருந்து - (அவர்பாற்செல்வதுஞ்செய்யாது ஈண்டிறந்துபடுவதுஞ் செய்யாது) இருந்து, உள்ளி - (அவர்வரவு) நினைந்து, பரிதல் என் -(நீ)வருந்துகின்றதென்னை? பைதல் நோய் செய்தார்கண் - இப்பையுணோய் செய்தார்மாட்டு, பரிந்து உள்ளல் - (நமக்கு) இரங்கி(வரக்)கருதுதல்; இல் - உண்டாகாது; (எ - று.)

கும்மாட்டருளுடையரன்மையிற் றுமாக வாரார்: நாஞ் சேறலே இனித் தகுவதென்பதாம்.

(கு - ரை.) இருந்து என்பதன் கருத்துப்பொருள் - 'அவர்பாற் செல்வதுஞ் செய்யாது ஈண்டுஇறந்துபடுவதுஞ்செய்யாதிருந்து' என்பது. உள்ளி யென்பதற்கு 'அவர்வரவு' என்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பையுணோய் - துன்பநோய்: பைதல் - துன்பம். வரக்கருதுதல்-(நாம் உள்ள இடத்து அவர்) வருமாறு நினைத்தல். (கூ)

கஉசச. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.

இதுவுமது.

(இ - ள்.) நெஞ்சே—! (நீ அவர்பாற் சேறலுற்றாயாயின்), கண்உம் கொள சேறி - இக்கண்களேயும் உடன்கொண்டுசெல்வாயாக; (அன்றி நீயே சேறியாயின்), இவை—, (தாம் காட்சிவிதுப்பினால்), அவர் காணல் உற்று - அவரைக் காண்டல்வேண்டி, என்னை தின்னும் - (நீ காட்டென்று) என்னைத் தின்பனபோன்று கலியாநிற்கும்: (எ - று.)

கொண்டென்பது கொளவெனத் திரிந்துநின்றது. தின்னுமென்பது, இலக்கணைக்குறிப்பு. அங்ஙலிவு தீர்க்கவேண்டுமென்பதாம்: என்றது, தான் சேறல் குறித்து.

(கு - ரை.) சேறலுற்றாயாயின்-போகப்பொருந்தினையாஞல். சேறி-செல்வாய். இவை - கண்கள். காட்சி விதுப்பினால் - காதலரைக்காணுதலிலுள்ள விரைவினால். கண்ணுக்குத் தின்பதென்ற தொழிலில்லாமையால், தின்னுமென்பது - அத்தின்னுதலைச் செய்யுமென்றபொருளைக் காட்டாமல் தின்பதுபோன்ற கலிவு செய்யுமென்னும் பொருளை இலக்கணையாற் குறித்தலால், இலக்கணைக்குறிப்பு என்றார். அங்ஙலிவு - கண்கள்செய்யுந் துன்பத்தை. என்றது - அங்ஙலிவு நீ தீர்க்கவேண்டும் என்று கூறியது. குறித்து - கருதி. ''உண்டற்குரிய வல்லாப் பொருளை, யுண்டனபோலக் கூறலுமரபே'' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் 'உம்மையாற் பிறதொழில்பற்றி வருவனவுங் கொள்க' என்றுகூறி, இக்குறள் ஆங்குக் காட்டப்பட்டுள்ளது. (சு)

கஉசடு. செற்று ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
மூற்று லுறுஅ தவர்.

இதுவுமது.

(இ - ள்.) நெஞ்சே—! யாம் உற்றால் - யாம் (தம்மை) உற, உறுதவர் - (தாம்) உறுத லங்காதலரை, செற்றார் என் - வெறுத்தாரென்றுகருதி, கைவிடல் உண்டுஓ - (புலந்து) கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ? (இல்லை); (எ - று.)

உறுதல் - அன்புபடுதல். அவ்வலியின்மையின் அவர்பாற் செல்வதே நமக்குத் தகுவதென்பதாம்.

(கு - ரை.) தம்மையுற - காதலராகிய அவரிடத்து அன்புற்றிருக்க. புலந்து - பிணக்கங்கொண்டு. (டு)

கஉசசு. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.

தலைமகன் கொடுமைநினைந்து சேலவு உடன்படாத நெஞ்சினைக் கழறியது.

(இ - ள்.) என் நெஞ்சு - என்னெஞ்சே! கலந்து உணர்த்தும் காதலர் கண்டால் - (யான் தம்மொடு புலத்தால் அப்புலவியைக்) கலவிதன்னுனே நீக்கவல்ல காதலரைக் கண்டால், புலந்து-(பொய்யேயாயினும் ஒருகாற்) புலந்து, உணராய்-(பின் அதனை) நீங்கமாட்டாய்; பொய் காய்வு காய்தி-(அதுவும் மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியரெனப்) பொய்க்காய்வு காயாகின்றாய்: (இனி இதனை யொழிந்து அவர்பாற்செல்லத் துணிவாயாக); (எ - று.)

கலத்தலாவனென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனுணர்த்தலாவது-கலவியின்பத்தைக் காட்டி அதனுண்மயக்கிப் புலவிக்குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு - நிலையில் வெறுப்பு. கண்டால் மாட்டாத நீ, காணுதவழி வெறுக்கின்றதனுற் பயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) நெஞ்சினைக் கழறியது - நெஞ்சைத் தலைவி யிடித்துக் கூறியது. கலந்துணர்த்தும் - கலவியாற்போக்குகிற என்றபடி. 'பொய்க்காய்வு காய்தி' என்று மேல்வருவதால், புலந்து என்பது பொய்யாகப் புலந்து என்பதைக் காட்டிற்று. அதுவுமாட்டாத - பொய்யாகவும் புலக்கமாட்டாத. இதனை - பொய்க்காய்வை. கலந்து - பிறவினைமுதல்வினையைக் கொண்டு முடிதற்கு ஏற்ற 'கலக்க' என்பதன் திரிபு. புலவிக்குறிப்பு - ஊடற்குறிப்பு. கண்டால் - கணவரைநேரிற்கண்டபோது. மாட்டாத-பொய்யாகவும் புலக்க மாட்டாத. காணுதவழி - கணவரைக் காணுதபோது. (சு)

கஉசஎ. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யாஞ்செ பொறேனிவ் விரண்டு.

நாண் தடுத்தலின் அச்சேலவுழிவாள் சொல்லியது.

(இ - ள்.) நல் நெஞ்சே - நல்லநெஞ்சே! ஒன்று காமம் விடு - ஒன்றின் (நாண்விடமாட்டாயாயிற்) காமவேட்கையை விடு: (ஒன்று) நாண் விடு - ஒன்றின் (அது விடமாட்டாயாயின்) நாணினை விடு: (அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின்), இரண்டு யான் ஒ பொறேன்-(ஒன்றற் கொன்று மறுதலையாய) இவ்விரண்டனையும் உடன்றாங்கும் மதுகை யான் இலன்.

யாளுவென்னும் பிரிநிலை, நீ பொறுப்பினு மென்பதுபடநின்றது. நன் னெஞ்சேயென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்த லின், நல்லையென்னுங் குறிப்பிற்று: அது நன்றே யெனினும் என்னுயிருண் டாதல் சாலாமையின், அதற்கு ஆகின்றிலே னென்பதாம். மூற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

(கு - ரை.) அச்செலவு - கணவனைநோக்கித் தான் செல்லுதல். அது - காமவேட்கை. இரண்டும்-காமவேட்கை நாண் என்ற இரண்டையும். உடன் தாங்கும் - ஒருசேரத் தாங்கவல்ல. மதுகை-வலிமை. நீ யென்றது - நெஞ்சை. இரண்டையும் - காமவேட்கை நாண் என்ற இரண்டனையும். அது - இரண் டையும் விடாமலிருப்பது. உயிருண்டாதல் - உயிர் உடலிலே இருப்பது. சாலாமையின் - அமையாமையினால். அதற்கு - காமவேட்கை நாண் என்ற இரண்டையும் ஒருசேரக்கொண்டிருத்தற்கு. ஆகின்றிலேன் - ஏற்றவளாகின்றி லேன். மூற்றும்மை, இவ்விரண்டு என்றதன்பின் தொக்க தென்க. (எ)

கஉசஉ. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) என் நெஞ்சு - என்னெஞ்சே! அவர் பரிந்து நல்கார் என்று - அவர் (இவ்வாற்றுமையையறியாமையின்) நொந்துவந்து தலையளிசெய்யா ராயினுரென்று கருதி; (அஃதறிவித்தற் பொருட்டு), பிரிந்தவர் பின் ஏங்கி செல்வாய் - (நம்மைப்) பிரிந்துபோயவர்பின் ஏங்கிச்செலலுற்ற நீ, பேதை - யாதுமறியாய்; (எ - று.)

ஆற்றுமைகண்டுவைத்தும் நல்காதுபோயினரைக் காணுதவழிச் சென்று அறிவித்தலுணையானே நல்கவருவ ரென்பது கருதினமையின் 'பேதை' என்றாள்.

(கு - ரை.) அஃது - ஆற்றுமையை. ஆற்றுமைகண்டுவைத்தும்-பிரிவி லாதியிருக்கமாட்டாமையை நேரே பார்த்திருந்தும். காணுதவழி - ஆற்றுமை யைக் காணுதவிடத்து. அறிவித்த துணையானே - அறிவித்த அளவில். (அ)

கஉசக. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) என் நெஞ்சு - என்நெஞ்சே! காதலவர் உள்ளத்தார் ஆக - காதலர் நின்னகத்தாராக, (மூன்பெல்லாங் கண்டுவைத்து), (இப்பொழுது), நீ—, உள்ளி யாருழை சேறி - புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து?

உள்ளமென்புழி, அம் - பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்திருக்கின்ற வரை அஃதறியாது புறத்துத்தேடிச் சேறல் நகையுடைத்து: அதனை யொழி யென்பதாம்.

(கு - ரை.) யாருழைச் சேறி-கணவரிடத்துச் செல்லவேணுமென்றால், அவர் உள்ளத்துள் இருக்கின்றாரே: வெளியே அவரைத் தேடிச்செல்வது

எவ்வாறு என்றபடி. உள் என்பதே மனத்தைக் காட்டலால், உள்ளம் என்பதில், அம் - பகுதிப்பொருள்விகுதி யென்றார். (௯)

க௨௫௦. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபடச் சொல்லியது.

(இ - ள்.) துன்னா துறந்தாரை - (நம்மைக்) கூடாவண்ணந் துறந்து போயினாரை, (நாம்), நெஞ்சத்து உடையேம்ஆ - நம்மகத்துடையேமாக, இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினுமிழப்பேம்; (எ - று.)

"குன்றி, னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" என்புழிப்போல, நெஞ்சென்பது-ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத் துன்னாமற் றுறந்தாராகவும், நாம் அவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க் கவினேயன்றி நின்ற நிறையு மிழப்பே மென்பதாம்.

(கு - ரை.) மறந்து ஆற்றல்-மறந்து ஆறியிருத்தல். 'நெஞ்சத்துடையேமா இன்னும் கவினிழத்தும்' என்றதில், மறந்தால் இனிக் கவினிழவோமென்பது பெறப்படுதலால், இக்குறள், அவரை மறந்தாற்றல் வேண்டுமென்பதுபடச் சொல்லியதாம். புறக்கவின் - உடம்பினழகு. அகக்கவின் - நிறை. "குன்றின்"என்று தொடங்கும் மேற்கோள், குறுந்தொகை, கடவுள்வாழ்த்திலுள்ளது: இதன்பொருள்:—குன்றின் - கிரௌஞ்சமலையின், நெஞ்சு - உள்ளிடம், பக - பிளவுபட, எறிந்த-வீசிய, அம் சுடர்-அழகிய ஒளியையுடைய, நெடுவேல் என்க. துன்னாமல்-நெருங்காமல். நெருங்காமல் துறந்தவராயிருந்தும் அவரை நாம் மறக்கமாட்டாமற்போனால், முன்னர்ப்போன மெய்க் கவினேயன்றி, உள்ளத்தின் கவினாகிய நிறையும் போமென்பதாம்: (கவின் - அழகு.) மேல் நிறையழிதல் என்பதற்குத் தோற்றுவாய் செய்தவாறு காண்க. இழத்தும் - தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று. (௧௦)

க௨௬ - ஆம் அதிகாரம்.—நிறையழிதல்.

அஃதாவது - தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கைமிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்: "நிறையெனப்படுவது மறை பிறரறியாமை"என்றார்,பிறரும். அஃது அழிதற்காரணம் நெஞ்சொடுகிளந்தமையின், இது நெஞ்சொடுகிளத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வேட்கைமிகுதியான்-காதல் விஞ்சியதனால். "நிறையெனப்படுவது மறை பிறரறியாமை"என்ற மேற்கோள், கலித்தொகை, நெய்தற்கலியில், 16-ஆம் பாடலிலுள்ளது. இதன்பொருள்-நிறையென்று சொல்லப்படுவது, மறைந்ததொருகாரியம் பிறரறியாமலொழுகுதல்: நிறை - மனோதைரியமெனவும்படும்; அத்தன்மையழிதல், நிறையழிதலாம், அஃது - நிறை. ஆற்றாமை மீதூர நெஞ்சொடு சொல்லுபவள் வேட்கைமிகுதியால் நிறையழிந்துகூறுவ ளென்ற காரணம்பற்றி, நெஞ்சொடுகிளத்தலின்பின், நிறையழிதல் வைக்கப்பட்டதென்று அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க.

௧௨௫௧. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

'நாணும் நிறையுமழியாமை நீயாற்றல் வேண்டும்' என்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) நாணு தாழ் வீழ்த்த - நாணாகிய தாழினைக் கோத்த, நிறை என்னும் கதவு - நிறையென்னுங் கதவினை, காமம் கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது: (இனி அவை நிற்றலுமில்லை: யான் ஆற்றலுமில்லை); (எ - று.)

கணிச்சி - குந்தாலி. நாணுள்ளதுணையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர்கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்கலின் தன்காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினாள்.

(கு - ரை.) தாழ் - தாழ்ப்பாள். கணிச்சி - குந்தாலி: மரம் முதலியவற்றைப் பிளக்கக்கூடிய ஒருவகை இரும்புப்படை. அவை - நாணும் நிறையும். அதனை - நாணை. உருவகவணி. (௧)

௧௨௫௨. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

'நெஞ்சின்கட்டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படும்'
என்றாட்குச் சொல்லியது.

(இ - ள்.) யாமத்துஉம்-(எல்லாருந் தொழிலொழியும்) இடையாமத்தும், என் நெஞ்சத்தை—, (ஒறுத்து), தொழில்ஆளும் - தொழில்கொள்ளாநின்றது: (ஆகலால்), காமம் என ஒன்று - காமமென்று சொல்லப்பட்டவொன்று, கண் இன்று - கண்ணோட்ட மின்றாயிருந்தது; (எ - று.)

ஓவென்பது, இரக்கக்குறிப்பு. தொழிலின் கண்ணேயாடல் - தலைமகன் பாற்செலவிடுத்தல். *தாயைப் பணிகோடல் உலகிய லன்மையின் 'காமமெனவொன்று' என்றும், அதுதன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் 'கண்ணின்று' என்றுங் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு.

(கு - ரை.) 'ஆளும்' என்பதற்கும் 'காமம்' என்பது எழுவாய். தொழிலாடல் - தொழிலின் கண்ணே செலுத்துதல். காமம் என்பது நெஞ்சத்தினின்று தோன்றியதாதலால், காமத்துக்கு நெஞ்சம் தாயாகும். தாயை வேலை வாங்குதல் உலகியலன்று ஆதலால், உலகியலுக்கு மாறாகத் தாயைப் பணிகொள்ளும் காமத்தின் கொடுமைதோன்ற 'காமமெனவொன்று' என்றார். காமம் நெஞ்சைக் கணவனிடம் செலுத்துவதால், அது, தாயைப்பணிகொள்வதாகும். அதுதன்னைக் கொள்ளுகின்றது-நெஞ்சைப்பணிகொள்வது. அது - காமம், தன்னை - நெஞ்சையென்றலும் உண்டு. காமத்தின் அடக்கப்படாத்தன்மை, இக்குறளிற் கூறப்பட்டது. (௨)

---

* பி - ம்: தாதையைத் தொழில் கோடல்

கஉருங. மறைப்பேன்மற் காமத்தை யாளே குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.

'மகளிர்காமம் மறைக்கப்படும்' என்றட்குச் சொல்லியது.

(இ - ள்.) காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யான் (என்னுள்ளே) மறைக்கக்கருதுவேன்; (அதனால்), குறிப்பு இன்றி - (இஃது என்) கருத்தின் வாராது, தும்மல்போல்—, தோன்றிவிடும்-வெளிப்பட்டோவிடாநின்றது; (எ - று.)

மன் - ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் - இரங்கற்கண் வந்தது. தும்மலடங்காதாற்போல, அடங்குகின்ற தில்லை யென்பதாம். *

(கு - ரை.) மறைப்பேன்மன் என்றவிடத்து, 'மன்' என்பது - யான் மறைக்கக்கருதினேனுயினும் அது என்னால் முடியவில்லை யென்று ஒழிந்த பொருளைத் தருதலால், ஒழியிசை. இரங்கற்கண் வந்தது என்றவிடத்துப் பிரிநிலைக்கண்வந்தது என்றும் பாடமுண்டு: இந்தப்பாடத்துக்கு—யாளே என்ற இடத்து ஓகாரம், மற்றையோரினும் தன்னைப்பிரித்தலால், பிரிநிலை யென்க: 1247-ஆம் குறளினுரையில் 'யாளே என்னும் பிரிநிலை' என்றதும் காண்க. காமம், தும்மல்போலவே அடங்காது வெளிப்பட்டுவிடுகின்ற தென்றவாறு.

கஉருச. நிறையுடையே னென்பேன்மன் யாளேவென் காம
மறையிறந்து மன்று படும்.

இதுவுமது.

(இ-ள்.) (இன்றினூங்கெல்லாம்), யான் நிறை உடையேன் என்பேன்-யான் (என்னை) நிறையுடையேனென்று கருதியிருந்தேன்: † அதனாலென்?) இன்று என்காமம்—, மறை இறந்து - மறைத்தலைக் கடந்து, மன்று படும் - மன்றின்கண் வெளிப்படா நின்றது; (எ - று.)

மன்னும் ஓவும், மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல் பலருமறிதல். இனி என்வரைத்தன்றென்பதாம்.

(கு - ரை.) இன்றினூங்கெல்லாம் - இதற்குமுன்பெல்லாம். மேலவற்றின்கண் - மேற்குறளில் [மூன்றுங்குறளில்] வந்த ஒழியிசை இரங்கல் அல்லது பிரிநிலைப்பொருள்களில். நிறையுடையேனென்பேன் மன் என்ற இடத்து 'மன்' - நிறையுடையே னல்லேனென்ற பொருளைத் தெரிவித்தலால், ஒழியிசை. என்வரைத்தன்று-என் எல்லைக்கு உட்பட்டதன்று: என்னை மீறிவிட்டது என்றவாறு. (சு)

கஉருஉ. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்று மறிவதொன் றன்று.

'நம்மைமறந்தாரை நாமும் மறக்கற்பாலம்' என்றட்குச் சொல்லியது.

(இ - ள்.) செற்றார் பின் செல்லா-தம்மையகன்றுசென்றார் பின் செல்லாது (தாமும்) அகன்றுநிற்கும், பெருந்தகைமை-நிறையுடைமை,—காமநோய்

* இங்கே நிறுப்பன் மன் என்றும் பாடம் என்று சிலபிரதிகளில் ஒரு வாக்கியம் காணப்படுகின்றது.

† பி - மி: (அதனால்),

உற்றூர் அறிவது ஒன்று அன்று-காமநோயினே(யுறுதார் அறிவதொன்றன்றி) உற்றூர் அறிவதொன்றன்று; (எ - று.)

இன்பத்தொடுகழியுங்காலத்தைத் துன்பத்தொடுகழியுமாறு செய்தலின் 'செற்றூர்'என்றூள். பின்சேறல்-மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை - ஈண்டாகுபெயர். காமநோயுறுதார் - மானமுடையார். நன்றென வுணர்ந்தார்மாட்டுஞ் சென்றேநிற்கும் யான் அறிவதொன்றன் றென்பதாம்.

(கு - ரை.) மறக்கற்பாலம் - மறத்தற்குரியோம். என்றூட்கு - என்று கூறியபாங்கிக்கு. தலைவிசொல்லியது, இது. கோபிப்பவர் என்ற காரணம் பற்றி, 'செற்றூர்'என்பது பகைவரைக் காட்டும். பின்செல்லாது என்று வருவதனால், செற்றூர் என்பதற்குப் பகைவரென்ற பதப்பொருளைக் கூறுது 'தம்மை யகன்றுசென்றூர்' என்றது. 'காதலரைச் செற்றூரென்னலாமோ?' என்று ஓராசங்கைதோன்ற, அதற்குப்பரிகாரமாக, 'இன்பத்தொடு கழியுங் காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலிற் செற்றூரென்றூள்'என்றது. பெருந்தகைமை - பெருமைக்குணம்: அப்பண்பைக்கொண்ட நிறையுடைமைக்கு ஆகியதனால், பண்பாகுபெயராம். நன்று என உணர்ந்தார்மாட்டும் - நன்மையென்பதை உணராதவரிடத்தும். செற்றூர் பின்செல்லுதலால், தலைவி, தன்னை 'நன்றென வுணர்ந்தார்மாட்டுஞ் சென்றே நிற்கும்யான்' என்றூள். அறிவதொன்றன்று என்பதற்குமூன்; 'நிறையுடைமை' என்பதனை வருவிக்க. (ரு)

கஉருசு. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

இதுவுமது.

(இ-ள்.) செற்றவர்பின்-(என்னை) அகன்று சென்றூர் பின்னே, சேறல் வேண்டி - (யான்) சேறலேவேண்டுதலான்,—என்னை உற்ற துயர்—,எற்று-எத்தன்மையது! அளித்து - சாலகன்று; (எ - று.)

செற்றவரென்றது,ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது, இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவுங் கேட்கவுமாவதொன்றன்று, சாலக்கொடிதென்பதாம்.

(கு - ரை.) இந்தக்குறளில், துயர் என்றது - காமநோயை. அப்பொருட்டு - பகைவர் என்னும் பொருளது. துயரை 'அளித்து' என்றது - இகழ்ச்சியைப் புலப்படுத்தலால்; இகழ்ச்சிக்குறிப்பு ஆகும். அரோ - ஈற்றசை. (சு)

கஉருஎ. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

பாத்தியிற்பிரிந்துவந்த தலைமகனுடு நிறையழிவாற் கூடிய தலைமகள் 'நீ புலவாமைக்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்.) பேணியார்-(நம்மால்)விரும்பப்பட்டவர்(வந்து), காமத்தால்—, பெட்ப செயின் - (நாம்) விரும்பியவற்றைச் செய்யுமளவில், நாண் என ஒன்றூஉ அறியலம் - நாணென்றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம்.

பேணியாரென, செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன - வேட்கைமிகவினாற் கருதியிருந்த கலவிகள். காண் - பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவுசிறப்பும்மை, விகாரத்தாற்றொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன் குற்றம் நோக்கி, அவளையு முளப்படுத்தாள்.

(கு - ரை.) நிறையழிவான் - உள்ளத்திலுள்ள விஷயங்களைப் பிறரறியாமலடக்குங் குணங்கெடுதலால்: மனோதைரியத்தை யிழந்ததனால் என்றபடி. கூடிய-புலவிகொள்ளாமற் கூடப்பெற்ற. பேணியார் என்பது-பேணப்பட்டவரைக் காட்டுதலால், செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டதென்றது. 'விரும்பியன' என்பது 'பெட்ப' என்பதன் பொருளின் அநுவாதம். பரத்தையர் தோய்ந்த - வேசியரைச் சேர்ந்த. ஒன்று என்றதன் பின் இழிவுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கதென்க. ஓ-அசை: தெரிநிலையென்பாருமுளர். அறியல னென்னுது அறியலம் என்றது - தான் நிறையழிவினால் அக்காதலனிடத்துப் புலவிகொள்ளாது கூடிய குற்றத்திற்குத் துணையாகப் பாங்கியையும் உளப்படுத்தும்பொருட்டு. (எ)

கஉருஉ. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

இதுவுமது.

(இ - ள்.) நம் பெண்மை உடைக்கும் படை - நம்நிறையாகியஅரணை யழிக்குந் தானை,—பல் மாயம் கள்வன்-பல பொய்களேவல்ல கள்வனுடைய, பணிமொழி அன்றே - தாழ்ந்தசொற்களன்றே! (ஆனபின் அதுநிற்குமாறு என்னே?) (எ - று.)

பெண்மை, ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக் கடவேமென்றும், புலந்தால் அவன்சொற்களானுஞ் செயல்களானும் நீக்கேமென்றும், இவை முதலாக எண்ணிக்கொண்டிருந்தனயாவுங் காணுது கலவிக்கண் தன்னினும்முற்படும் வகை வந்துதோன்றிஞ னென்பாள், 'பன்மாயக் கள்வன்' என்றாள். பணிமொழி-நம்மினுந் தான் அன்புமிகுதியுடையனைச் சொல்லுஞ் சொற்கள். அவன் அத்தன்மையனைச்சொற்கள் அவையாக, நந் நிறை அழியாதொழியுமோ வென்பதாம்.

(கு - ரை.) அரண் - காவலாகிய மதில். தானை - சேனை: இது, படை என்பதன் பொருள். மாயம் என்பதன் பொருள் - பொய்கள் என்பது. பணிமொழி - பணிவுதோன்றக்கூறும் மொழி: அதனை 'தாழ்ந்தசொற்கள்' என்று விளக்கினார். அது-நிறை. பெண்மை-மகடூஉக்குணம்: நாண் மடம் அச்சம் முதலாகப் பெண்குணம் பலவாக இருப்பினும், தலைமைபற்றியும் அதிகாரம் நிறையழிதலாலும் பெண்மையென்பது-இங்கே, நிறையைக் காட்டிற்று. நீங்கேம் என்பதற்கு 'புலவியை' என்ற செயப்படுபொருளைக் கூட்டிக்கொள்க. காணுது-(பிரிந்தகாதலர் வந்தபோது) எதிர்நில்லாமல். தன்னினும் முற்படும் வகை - காதலராகிய அவர்தன்னினும் யான் முற்படும்படி. அவன் - தலைவன். அத்

தன்மையனாக - பன்மாயக்கள்வனாக. சொற்கள்-அத்தலைவன் கூறுஞ் சொற்கள். அவையாக - பணிமொழியாக. பணிமொழி - வினைத்தொகை. இக்குறளில், பணிமொழியைப் படையாக உருவகஞ்செய்ததற்கு ஏற்க, பெண்மையையரணாக உருவகஞ் செய்யாததனால், ஏகதேசவுருவகம். (அ)

கஉருக. புலப்ப லெனைச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

இதுவுமது.

(இ - ள்.) புலப்பல் என சென்றேன் - (அவர் வந்தபொழுது) புலக்கக் கடவேனென்று கருதி (முன் நில்லாது பிறிதோரிடத்து)ப் போயினேன்; (போயும்), நெஞ்சம் - (என்) நெஞ்சம், (நிறையினில்லாது அறைபோய்), கலத்தல் உறுவது கண்டு - (அவரோடு) கலத்தலொடங்குதலையறிந்து, புல்லினேன் - (இனி அது வாயாதென்று) புல்லினேன்; (எ - று.)

வாயாமை புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய் நிற்றலின், அது முடியாமை.

(கு - சை.) புலப்பலெனச் சென்றேன் என்றதனால், அவர்முன் நில்லாது வேற்றிடத்துக்குப்போனமை பெறப்படும். அறைபோய் - கீழறுக்கப்பட்டு: தலைவர்வசப்பட்டு. அது-புலத்தல். வாயாது - முடியாது. "புலப்பேன் யானென்பேன் மனக்கிலேயேயவற் காணிற், கலப்பே னென்னு மிக்கையறு நெஞ்சே" என்ற கலித்தொகை, இங்குக் காணத்தக்கது. (கூ)

கஉகூ. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

இதுவுமது.

(இ-ள்.) நிணம் தீயில் இட்டு அன்ன நெஞ்சினார்க்கு - நிணத்தைத் தீயின் கண்ணேயிட்டால் (அஃது உருகுமாறு போல)த் தங்காதலரைக் கண்டால் நிறையழிந்துருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு, புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் - (அவர்) புணர (யாம்) ஊடி (ப்பின்பு உணராது அந்நிலையே) நிற்கக் கடவேமென்று கருதுதல், உண்டொ - உண்டாகுமோ? (ஆகாது); (எ - று.)

புணர்தல் - ஈண்டு மிக நணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணர வென்பது புணர்ந்தெனத் திரிந்துநின்றது. யான் அத்தன்மையே னாகலின், எனக்கு அஃதில்லையாயிற் றென்பதாம்.

(கு - சை.) நிணம் - உடலிலுள்ள எழுவகைத் தாதுக்களில் ஒன்று: கொழுப்பு என்பர். உணராது - ஊடல்நிலையினின்று நீங்காது. நணுகுதல் - சமீபித்தல். அத்தன்மையேன் - நிணத்தைத் தீயிலிட்டன்ன நெஞ்சினேன். அஃது - ஊடிநிற்பேமெனல். (கo)

கஉஎ - ஆம் அதிகாரம்.—அவர்வயின்விதும்பல்.

அஃதாவது - சேயிடைப்பிரிவின்கண் தலைமகனுந் தலைமகளும் வேட்கை மிகவினனா ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலை

மகளாற்றுமையும் அதிகாரப்பட்டுவருகின்றமையின், இருவரையுஞ்சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினர். பிறரெல்லாம் இதனைத் தலைமகனேனைந்து தலைமகள்விதுப்புறலென்றார்: சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு*கூடிய பொருளுணர்த்துவதல்லது தான் ஒன்றற்குப் பெயராகாமையானும், கவிக்கூற்றுய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற்பன்மையாற் கூறப்படாமையானும், அஃது உரையன்மை யறிக. இதனுள் தலைமகள்கூற்று நிறையழிவால் நிகழ்ந்த தாகலின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அவர்வயின்-தலைவன் தலைவியென்னும் அவர் இருவரிடத்தும் நிகழ்கின்ற, விதும்பல் - வேட்கையால் தோன்றும் விரைவு. சேயிடைப் பிரிவின்கண் - வெகுதூரஞ்சென்றிடுவதனால் நேர்ந்த பிரிவில். இந்தக் கற்பியலில் முதல்தொடங்கி பிரிவும் ஆற்றுமையுமே அதிகாரங்களில் தொடர்ச்சியாய்ச் சொல்லப்பட்டுவருதல் காண்க. இருவரையுஞ்சுட்டிப் பன்மைப்பாலாற் கூறியதென்றது-'அவர்வயின்'என்பதனை. 'அவர்'என்பது ஒருவர்க்குப் பெயராகாமை யறிக. அதிகாரப்பெயர் கவியாலிடப்பட்ட தாதலால் 'கவிக்கூற்றுய அதிகாரத்து' என்றது. அவர் என்று தலைமகனை உயர்த்தற்கண் கவி பன்மையாற் கூறினதாகக் கொள்ளலாமென்பின்,--பொதுப்படக் கூறவேண்டிய இடத்து உயர்த்தற்குக் காரணமில்லாமையாற் பொருந்தாதா மென்றார். இவ்வதிகாரத்தில் தலைமகள்கூற்று தலைமகன் கூற்று என்ற இரண்டும் வரினும் முதலில் வரும் தலைமகளின் கூற்று நிறையழிவால் நிகழ்வ தாகையால், நிறையழிதலின்பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டதென அதிகாரமுறைமைக்குக் காரணங் காண்க.

கஉசுக. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

தலைமகள் காண்டல்விதுப்பிலுற் சொல்லியது.

(இ - ள்.) அவர் சென்ற நாள் ஒற்றி-அவர்(நம்மைப் பிரிந்து)போய நாள்கள்(சுவரின்கணிழைத்தவற்றைத்)தொட்டு எண்ணுதலான், விரல் தேய்ந்த - (என்) விரல்கள் தேய்ந்தன; (அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த்து), கண் உம் வாள் அற்று புற்கென்ற - (என்)கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின; (இவ்வாருயும் அவர்வரவு உண்டாயிற்றில்லை); (எ - று.)

நாள் - ஆகுபெயர். புல்லியவாதல் - நுண்ணியகாணமாட்டாமை, ஒற்ற வென்பது ஒற்றியெனத் திரிந்துநின்றது. இனி யான் காணுமாறென்னை யென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப்பாயிற்று.

(கு - ரை.) சுவரின்கணிழைத்தவற்றை-சுவரிலிட்ட அடையாளங்களை. கணவனைப்பிரிந்தமகளிர் கணவன் தம்மைவிட்டுச்சென்ற நாட்களைக் குறியிட்டுக் கணக்கிடும் வழக்கம் பண்டைக்காலத்திருந்த தென்பதை "நெடுஞ்சுவர்

* பி - ம்: கூடிப்

நாள்பலவெழுதிச், செவ்விரல்சிவந்த வவ்வரிக்குடைச்சூல், அணங்கெழி லரி வையர்" என்ற பதிற்றுப்பத்தினாலும், "பண்ணீர்மொழியிவளைப் பையுளெய்தப் பனித்தடங்க, ணுண்ணீருக வொளிவாடிட நீடுசென்றார் சென்றநாள், எண்ணீர்மையி னிலனுங் குழியும் விர விட்டறவே" என்ற திருக்கோவையாரினாலும் அறியலாம். இச்செய்யுளில், நாள் - அந்நாளிற் சுவரிற்செய்த அடையாளங்களைக் காட்டுதலால், ஆகுபெயர். புற்கென்ற - பலவின்பால் வினைமுற்று. ஒற்றியென்பது, பிறவினைமுதல்வினையான தேய்தலோடு இயைதலால், அதற்குஏற்ற ஒற்ற எனச் செயவெனெச்சத்திரிபுஎனக் கொள்ளப்பட்டது. கண்கள் வாளற்றுப்புற்கென்றுஆனமையால், காணும்வகையேயற்ற தென்றது என்க. இடையின்றி - தொழிலற்றவேளையில்லாமல்: எப்போதும் என்றபடி. விதுப்பு - விரைதல். (௧)

௧௨௬௨. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

'ஆற்றாமைமிகுதலின் இடையின்றிநினைக்கற்பாலையல்லை: சிறிது மறக்கல்வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) இலங்கு இழாய் - விளங்காநின்ற இழையினையுடையாய்! இன்று மறப்பின் - (காதலரை) இன்று (யான்) மறப்பேனாயின்,—மேல் - மேலும், காரிகை நீத்து - காரிகை(என்னை) நீப்ப, என் தோள்—, கலம் கழியும் - வளை கழல்வனவாம்; (எ - று.)

இலங்கிழாயென்பது, இதற்கு நீ யாதும் பரியலையென்னுங் குறிப்பிற்று. இன்று-யான் இறந்துபடுகின்றவின்று. மேலும்-மறுபிறப்பினும். எச்சவும்மை, விகாரத்தாற்றொக்கது. நீப்பவென்பது நீத்தெனத் திரிந்துநின்றது. கழியுமென்னும் இடத்துநிகழ்பொருளின்றொழில், இடத்தின்மேனின்றது. இவ்வெல்லைக்கணினைந்தால் மறுமைக்கண் அவரையெய்தி யின்புறலாம், அதனான் மறக்கற்பாலனல்லே னென்பதாம்.

(கு - ரை.) இழை - ஆபரணம். காரிகை - அழகு. நீப்ப - விட்டுநீங்க. இதற்கு - அழகுநீங்கத் தோள்வளை கழலுதற்கு. இலங்கிழாய் என்பதற்கு- விளங்குகின்ற ஆபரணங்களையுடையவளே! என்று பொருளாதலால், அத்தொடர், 'நான் பிரிவுத்துயர்கொண்டு வருந்தாநிற்க, நீ ஆபரணம்பூண்டு விளங்குகின்றாயே! என்துயர்க்குப் பரியவேண்டாவோ!' என்ற பொருளைக் குறிப்பிக்கு மென்கிறார். இன்றுஎன்று கீழ்வந்ததைத் தழுவும் இறந்தது தழுவிய எச்சவும்மை 'மேல்' என்பதன்பின் தொக்க தென்க. நீத்து=நீப்ப: எச்சத்திரிபு. தோள் என்ற இடத்தில் நிகழும்பொருளாகிய கலம் [வளை] என்பதன் தொழிலாகிய கழியு மென்பதை, தோளின்மே லேற்றி, 'தோள் கலங்கழியும்' என்றது. இங்கு, 'தோள்' என்பது "தோளுற்றார் தெய்வம்" என்ற இடத்துப்போலக் கையென்ற பொருளதென்னலாம். இன்று காதலரை மறந்தேனாயின் மறுபிறப்பினும் அக்காதலரை எய்தமுடியாது: இம்மைக்கண் நினைந்தாலே மறுமைக்கண் அவரைப் பெற்று இன்புறலா

மாதலால், அவரை மறக்ககில்லே னென்பதாம். "தீவினைவந்திடிற் சென்று சென்று, பிறப்பானடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியரே" என்று திருக்கோவையார் கூறுவது, இங்கு அறியத்தக்கது. (௨)

க௨௬௩. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்.

இதுவுமது.

(இ - ள்.) உரன் நசைஇ-(இன்பநுகர்தலை நச்சாது)வேறலை நச்சி, (நாம் துணையாதலையிகழ்ந்து), உள்ளம் துணை ஆக - (தம்)ஊக்கந்துணையாக, சென்றார் - போயினார், வரல் நசைஇ - (அவற்றையிகழ்ந்து ஈண்டு) வருதலை நச்சுதலான், இன்னும் உளேன்-(யான்)இவ்வெல்லையினு முளேனாயினேன்; (எ-று.)

உரனென்பது - ஆகுபெயர். அந்நசையா னுயிர்வாழாநின்றேன்: அஃதில்லையாயின் இறந்துபடுவலென்பதாம்.

(கு - ரை.) எல்லை - காலவெல்லை. வலிமையென்னும் பொருளுள்ள உரனென்பது, அதனாலாகும் வேறலைக் காட்டுதலால், காரணவாகுபெயர்: வேறல்-பகை வெல்லுதல். அவற்றை - வேறலையும் ஊக்கத்தையும். நச்சுதல் - விரும்புதல். (௩)

க௨௬௪. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) (நீங்கியகாமத்தராய்), பிரிந்தார்-(நம்மைப்)பிரிந்துபோயவர், (மேல்), கூடிய காமம் - கூடிய காமத்துடனே, வரவு - (நங்கண்) வருதலை, உள்ளி-நினைந்து,—என் நெஞ்சு—,(வருத்தமொழிந்து), கோடு கொடு ஏறும்-(மேன்மேற்) பணைத்தெழாநின்றது; (எ - று.)

வினைவயிற்பிரிவுழிக் காமவின்பம்நோக்காமையும் அது முடிந்துழி அதுவே நோக்கலுந் தலைமகற்கு இயல்பாகலின், கூடியகாமமொடென்றாள். ஒடுவுருபு, விகாரத்தாற்றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்தது தொழில், நெஞ்சின்மே லேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்து நின்றது. அஃது உள்ளிற்றிலே னாயின், இறந்துபடுவ லென்பதாம்.

(கு-ரை.) வினைவயிற்பிரிவுழி - போரின்பொருட்டுப் பிரியும்போது அதுவே - காமவின்பத்தையே. 'ஒடு' உருபு தொக்கது, 'காமம்' என்பதனீற்றில். கோடுகொண்டேறல் - பணைத்தெழுதல்: இது மரத்தின்தொழில்: இது நெஞ்சின்மேலேற்றிக்கூறப்பட்டது:ஒன்றன்தொழிலை மற்றொன்றன்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு எனப்படும். கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். அஃது உள்ளிற்றிலேன் ஆயின்-பிரிந்தவரின்வரவை நினையேனாயின்.(௪)

க௨௬௫. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

தலைமகன்வரவுகூறி 'ஆற்றயாயீப் பசக்கற்பாலையல்லை' என்ற தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) கண் ஆர கொண்கனே காண்க - (என்) கண்கள் ஆரும் வகை (என்) கொண்கனே (யான்) காண்பேனாக: கண்டபின் - (அங்ஙனம்) கண்டபின், என் மெல் தோள் பசப்பு நீங்கும் - என் மெல்லியதோளின்கட் பசப்பு (த் தானே) நீங்கும்: (எ - று.)

காண்கவென்பது, ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அது வேண்டுமென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. கேட்ட துணையான் நீங்காதென்பதாம்.

(கு - ரை.) ஆரும் வகை - நிரம்பும்படி: திருப்தியடையும்படி. காண்க வென்பது - வியங்கோள்: அது, வேண்டிக்கோடற்பொருளில் வந்ததென்க. கேட்டதனைத நில்லாது காணவும்வேண்டுமென்ற பொருளைத் தருவதனால், 'மன்' - ஒழியிசையாம். கேட்டதுணையான் - கேட்டமாத்திரத்தால். நீங்காது என்பதற்கு 'பசப்பு' என எழுவாய் வருவிக்க. (நு)

கஉசுசு. வருகமற் கொண்க னெனநாட் பருகுவன்
பைதலென் யெல்லாங் கெட.

இதுவுமது.

(இ - ள்.) கொண்கன் ஒருநாள் வருக - (இத்துணைநாளும் வாராக்) கொண்கன் ஒருநாள் (என்கண்) வருவானாக: பைதல் நோய் எல்லாம் கெட பருகுவன் - (வந்தாற்) பையுளைச்செய்கின்ற இந்நோயெல்லாங்கெட (அவ் வமிழ்தத்தை வாயில்க ளேந்தானும்) பருகக்கடவேன்; (எ - று.)

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறே கொள்க. அக்குறிப்பு, அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக்கடவ நோய்களுங் கெடுப்ப லென்பதாம்.

(கு-ரை.) என்கண்-என்னிடத்து. பையுள்-துன்பம். இந்நோயென்பது-காமநோயை. அவ்வமிழ்தத்தையென்பது - கணவனை. வாயில்களேந்தானும்-ஐம்பொறிகளானும். மேல்என்றது - ஐந்தாவதுகுறளில் என்றவாறு. வருக என்ற வியங்கோள் ஈண்டும் வேண்டிக் கோடற்பொருட்டு என்க. கேட்டதனைத நில்லாமல், வரவும்வேண்டுமென்ற கருத்தை விளக்கியதனால், இந்தக் குறளிலும் 'மன்' - ஒழியிசையாம். அக்குறிப்பு - ஒருநாள்வருகவென்ற குறிப்பு.

கஉசுள. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

இதுவுமது.

(இ - ள்.) கண் அன்ன கேளிர் வரின் - கண்போற்சிறந்த கேளிர் வருவராயின்,—புலப்பேன்கொல்-(அவர்வரவு கீட்டித்தமைநோக்கி யான்) புலக்கக் கடவேனே? புல்லுவேன்கொல்-(அன்றி என்னுற்றமை நோக்கிப்) புல்லக் கடவேனே? கலப்பேன்கொல்-(அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விரு செயல்களையும்) விரவக்கடவேனே? (யாது செய்யக்கடவேன்?) (எ - று.)

புலவியும் புல்லலும் ஒருபொழுதின்கண் விரவாமையின் 'கலப்பேன் கொல்' என்றார். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொலென்பதற்கு *ஒருபுதுமைசெய்யாது பிரியாதகாட் போலக் கலந்தொழுகுவேனோ என்று உரைப்பாரு மூளர்.

(கு - ரை.) வரவு நீட்டித்தமை - வரைக் காலந் தாழ்த்தமை. புலக்க - பிணக்கங்கொள்ள. புல்ல - தழுவிக்கொள்ள. அவ்விருசெயல்களை - பூலத்தல் புல்லல்என்னும் இரண்டு செய்கைகளையும். விரவ - (ஒன்றுகக்) கலந்து செய்ய. புலத்தல் புல்லல்என்ற இரண்டுசெயல்களும் ஒரேவேளையில் கலந்து நிகழாவாகையால், 'கலப்பேன்கொல்' என்று ஐயப்பட்டுக்கூறவேண்டுவதா யிற்று. ஒருபுதுமை - ஒருவேறுபட்டதன்மை: ஊடலுடையாள் போன்று நடித்த லென்பர். (எ)

கஉசூஅ. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவுநீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) வேந்தன் வினை கலந்து வென்றீக-வேந்தன் வினைசெய்தலைப் புரிந்து வெல்வானாக: மனை கலந்து மாலை விருந்து அயர்கம்-(யாமும்) மனைவி யைச் சென்றுகூடி (ஆண்டை) மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வேமாக; (எ-று.)

மனையென்பது - ஈண்டாகுபெயர்: "மங்கல மென்ப மனைமாட்சி" என் புழிப்போல. வினைசெய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்காரித்தல் முதலிய இன்மையின், 'மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கம்' என்றான். நான்கனுருபு, விகாரத்தாற்றொக்கது. இது வினைமுடியாமுன்கூற லான், விதுப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைத் தார்: தலைமகனைக் கூறாது வேந்தன்வெல்க என்றும், மனைகலந்து என்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கம் என்றும் வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் காரியாயிற்று.

(கு-ரை.) வேந்தற்குற்றுழி-ஒருவேந்தன் மாற்றானைவேந்தனால் வருத்த மூற்றுவந்து அடைந்தபோது. வினைமுடிவு - போர்முடித்தல். நீட்டித்துழி - காலதாமதமானபோது. வென்றீக=வெல்க: வியங்கோள் வினைத்திரிசொல். விருந்தயர்கம் - விருந்துகொண்டாடுவேம், தன்மைப் பன்மைமுற்று. மனை யென்பது - மனையிலிருப்பாளைக் காட்டியதனால், இடவாகுபெயர். மனை யென்பது மனைவியைக் காட்டுவதற்கு மேற்கோள், "மங்கலமென்ப மனை மாட்சி" என்பது: இது, இந்தத்திருக்குறளில், வாழ்க்கைத்துணைநல மென் னும் அதிகாரத்தின் 10 - ஆம் பாடலி லுள்ளது: இதன் பொருள்:—மனையா ளின் நற்குணநற்செய்கைகளை (ஒருவனுக்கு) நன்மையென்று சொல்லுவர். வினைசெய்தற்கண்-போர்வினை நிகழும்போது. வினைமுற்றி வென்று மீண்டு வந்தால், அங்ஙனம் மீண்டுவருபவரை எதிர்கொள்ளுதலும், நகருக்கு அலங்க

* பி - மி: ஒருமை புதுமைசெய்யாது.

ரித்தலும் கிகழுமென்க. மாலை விருந்தயர்கம் என்றவிடத்து, மாலைக்கு விருந் தயர்கம் என்றுபொருள்படுவதனால், நான்கனுருபு விகாரத்தால்தொக்க தென் றூர். மாலைக்கு விருந்தினைச் செய்தல் - மாலைப்பொழுதிற்கு நேற்றுஇல்லாத புதுமையைச் செய்தல். போர்வினைமுடியுமுன் கூறுவதால், விதுப்பு ஆகும். தலைமகள் கூற்றுயின், தலைமகன் வெல்க என்றல்லதுவேந்தன்வேல்க என்றும், மனை(வி)யுடன் கலந்து மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கம் என் றும் வருதற்குப் பொருத்தமில்லை யாதலால், அங்ஙன்வந்ததே இது தலைமக வின் கூற்று அன்று என்பதற்குஏற்ற சான்று மென்க. அது - தலைமகன் கூற்றென்பது. கரி - சாட்சி. ''தூதுவந்தன்றே தோழி, துயரறிவிலையோ டயர்ந்தீகம் விருந்தே'' என்ற கலித்தொகை, ஒருசார் நோக்கத்தக்கது. (அ)

கஉசுக. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்றூர்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

இதுவுமது.

(இ-ள்.) சேண் சென்றூர் - சேணிடைச்சென்ற(தங்)காதலர், வரு நாள்- மீண்டுவரக்குறித்த நாளை, வைத்து-உட்கொண்டு, ஏங்குபவர்க்கு-(அது வருந் துணையும் உயிர்தாங்கி)வருந்தும் மகளிர்க்கு,—ஒருநாள் எழுநாள்போல் செல் லும் - ஒருநாள் பலநாள்போல நெடிதாகக்காட்டும்; (எ - று.)

ஏழென்பது, அதற்குமேலாய மிக்க பன்மை குறித்துநின்றது: ''ஒருவர் கூறை யெழுவ ருடுத்து'' என்றூற்போல. தலைமகள்வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனால், இதுவுந் தலைமகள் கூற்றுகாமையறிக. இருநா னென்று பாடமோதுவாரு முளர்.

(கு - ரை.) சேணிடை - வெகுதூரமான இடத்தில். அது - மீண்டுவரக் குறித்தநாள். வருந்துணையும் - வருமளவும். எழுநாள் என்றது - மிக்க பலநா னென்பதைக் குறிப்பிக்குமென்க. எடுத்தமேற்கோளின்பொருள்:—ஒருவர் கூறை யெழுவருடுத்து - ஒருத்தராடையைப் பலருடுத்து என்பது: இம்மேற் கோளுள்ளஇடம் விளங்கவில்லை. சென்றூர் வருநாள் வைத்தேங்குபவர்க்கு ஒருநாள் எழுநாள்போற்செல்லும் என்று பிறர்மேலிட்டுக் கூறினாலும், தலைமகள் வருத்தமே இதில் விளங்கும். தலைமகள்வருத்தத்தைத் தலைவன் கூறுகின்றூனென்றுகொள்வதே இங்குப் பொருத்தமாதல் காண்க. எழுநாள் என்பதற்குப் பதிலாக, 'இருநாள்' என்று பாடமோதுவாருமுளர். இருநாள் - பெரிதாகத்தோன்றுகின்ற நாள். (கூ)

கஉஎ0. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால்.

இதுவுமது.

(இ - ள்.) (காதலி நம் பிரிவினையாற்றூது), உள்ளம் உடைந்து உக்கக் கால் - உள்ளமுடைந்து இறந்துபட்டவழி, பெறின் என்-(நம்மைப்)பெறக்கட வளாஞலென்? பெற்றக்கால் என் - (அதுவன்றியே) பெற்றூலென்? உறின் என் - (அதுவன்றியே) மெய்யுறக்கலந்தாற்றூனென்? (இவையொன்றூனும் பயனில்லை); (எ - று.)

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்துக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னே வழக்குண்மையின். அதற்கு முன்னே யான் செல்லவேண்டுமென்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றுவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமை யறிக.

(கு-ரை.) தலைவி இறந்துபடுவதை வெளிப்படையாகக் கூறாமல்; 'உள்ளமுடைந்துக்கக்கால்' என்பதனாற் குறிப்பித்தானென்க. இந்தக்குறளின் விசேடவுரையில், 'இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்துக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னே வழக்குண்மையின்'என்றசொற்றொடர்க்குப் பொருள் விளங்காமையால், பாஷாகவிசேகரர் - சேதுஸம்ஸ்தான வித்வான். ஸ்ரீ. உ. வே. ரா. ராகவய்யங்கார் ஸ்வாமிகளே வினவ, அத்ஸ்வாமி அருளிய விடை வருமாறு:—"குறளில், உக்கக்கால் என்பதற்கு - இறந்துபட்டவழி என்றதனால், உள்ளது உடம்புதான் என்று கருதி, 'பெறினென், பெற்றக்கால் என், உறின்என்' என்ற இம்மூன்றும் உடம்பொடு சேர்த்துக் கூறப்பட்டன எனக் கொண்டவராவர்: 'அதன்மேலும் முன்னே வழக்குண்மையின்' என்புழி, அதன்மேலும்என்றது அவ்வுடம்பின்மேலும்என்றவாறு: முன்னே வழக்குஎன்பது உயிருள்ளபோழ்தின்வழக்குஎன்றவாறு: உண்மையின் என்பது நூலினும்உலகத்தினும்உண்டாதலால் என்றவாறு: 'உயிர்நீத்தொருமகன் கிடந்தானெனவும்', "படுமகன்கிடக்கைகாணூஉ" எனவும் வருவன காண்க. இக்குறளில் இறந்துபட்டவழிப் பெறக்கடவனாலெ என்றுகூறினாதலால்,இக்கருத்து எளிதிலறியலாம். இறந்துபட்டவழி உடம்புபெறக்கடவதாஞல்என்பதன்றே இயைபுடைத்தாஞின்,—அற்றன்று: அவ்வுடமபின்மேலும் இறத்தற்குமுன்னே வழக்கு நிகழ்தலுண்டென்று விளக்கினனென்க. என்னிடமுள்ள பரிமேலழகருரைப்பதிப்பில், **உடம்போடுகூறப்பட்டன** என்றேயுள்ளது. இதனால், இம்மூன்று உத்தியன்று என்பது தெளியப்படும். என் ஏட்டில், உறினென் என்பதற்கு - மெய்யுறக் கலந்தாற்றான் என்? மெய்யுறக் கலவாதொழியினென்? என்று கூறப்பட்டுள்ளது"என்பது. இனி, ஒருசாரார் இக்குறளில் அசைநிலையாகிய 'ஆம்' என்பது மூன்றுவகுத்திருப்பதைச் சமர்த்திக்கவந்தது இத்தவாக்கியமென்பர். அவர் உரைக்குமாறு ஆமென்பது மூன்றும் ஒருகுறட்பாவிற் கூறப்பட்டன: மூன்றற்குமேலும் ஓர் அசைச்சொல்லைச் சேர்த்துக்கூறலும் செய்யுள்வழக்கிலுண்டு என்பது. மற்றொருசாரார், உத்தியாகவேகொண்டு பொருள் கூறுவது பொருத்தமா என்பதனையும் ஆராய்க.

உள்ளமுடைந்துக்கக்கால் தலைமகள் பெறக்கடவளாதல் முதலியவற்றுற் பயனின்று ஆதலால், அதற்குமுன்னமே செல்லவேண்டுமென்றனென்க: இதில் காட்சிவிரைவு விளங்குதலால், இது விதுப்பாகும். இவனன்றி, தலைவி தலைமகனைப்பற்றிக் கூறியதாகக் கொள்ளின், 'உள்ளமுடைந்துக்கக்கால் பெறினென்னும்' எனக் கூறுதல், இரங்குதலிற்சேர்வதன்றி விதுப்பாகாமை காண்க: ஆகவே, இப்பாடலையும் கீழிரண்டுபாடல்களைப் போலவே தலைவன்கூற்றுக்கொள்ளுவதே பொருத்தமாம். (கo)

கஉஅ - ஆம் அதிகாரம்.—குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது-தலைமகன் தலைமகள் தோழி என்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கு அறிவுறுத்தல். இது பிரிந்துபோய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவ்வியல்விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) என்றிவர் - என்றஇவர். அறிவுறுத்தல் - தெரிவித்தல். இக் குறிப்பறிவுறுத்தல் பிரிந்துபோனதலைமகன் விதுப்புக்கொண்டு வந்து கூடியபோதுநிகழ்வதாதலால், அவ்வியல்விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

கஉஎக. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினுற் புதுவது பன்னாளும் பாராட்ட, தலைமகள் 'இது ஒன்னலு உடைத்து' என அஞ்சியவழி அதனை அவன்தறிப்பானறிந்து அவன் அவட்குச் சொல்லியது.

(இ-ள்.) கரப்பின்உம் - (நீ சொல்லாது) மறைத்தாயாயினும், ஒல்லா - (அதற்கு) உடம்படாதே, கையிகந்து-(நின்னைக்) கைகடந்து, நின் உண்கண்-நின்னுண்கண்களே, (எனக்கு), உரைக்கல் உறுவது ஒன்று - சொல்லலுறுவ தொரு காரியம், உண்டு-உண்டாயிராநின்றது: (இனி அதனை நீயே தெளியச் சொல்வாயாக); (எ - று.)

கரத்தல் - நாணுடைக்குதல். தன்கட் பிரிதற்குறிப்புளதாகக் கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன் பிரியாமைக் குறிப்பறிவுறுத்தவாறு.

(கு - ரை.) வேட்கைமிகவினுல் - ஆசையின்மிகுதியினுல். புதுவது பல நாளும் பாராட்ட - பலநாள்களும் (புணர்ச்சித்தொழிலைப்) புதிது புதிதாகப் பாராட்ட. இது - இங்ஙன் (இத்தலைவன்) பாராட்டுவது. ஒன்று உடைத்து-(பிரிதலாகிய) ஒருகருத்தையுடையதுபோலும். அதற்கு உடம்படாதே-அந்த மறைத்தற்றொழிற்கு உடம்படாமலே. அறிவுறுத்தவாறு - அறிவுறுத்தியபடி. மறைக்கும் பிரிவுத்தியைக் கண்கள் புலப்படுத்து மென்பதனை "எவ்வநோ யென்னையு மறைத்தாண்மன், வென்றவே னுதியேய்க்கும் விறனல னிழந் தினி, நின்று நீருகக்கலுழு நெடும்பெருங்கணல்லாக்கால்" என்ற கலித் தொகையாலும் அறிக. (க)

கஉஎஉ. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

நாணுல் அவள் அதுசொல்லானாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) கண் நிறைந்த காரிகை - (என்) கண்ணிறைந்த அழகினையும், காம்பு ஏர் தோள் - வேயையொத்த தோளினையுமுடைய, பேதைக்கு-(நின்) பேதைக்கு, பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை (அவ்வளவன்றி) மிகுந்தது; (எ - று.)

இலதாயபிரிவினைத்தன் கணேற்றி அதற்கு அஞ்சுதலான், இவ்வாறுகூறினன்.

(கு - ரை.) அது - பிரிவச்சத்தை. தன்கண் - (தலைவனுகிய) தன்னிடத்து. அதற்கு - பிரிவிற்கு. பெண்பாலார்க்கு மடமை இயற்கையென்பதை "நுண்ணுணர்வுடையோர் நூலொடுபழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்றதனாலும் அறியலாம். இந்தத்திருக்குறளை "களவுவராயினும்" என்றுதொடங்கும் தொல்காப்பியக்களவியற்சூத்திரத்தில் "அளவுமிகத்தோன்றினும்" என்பதற்கு உதாரணமாக எடுத்துக்காட்டி, 'இது, கதிர்ப்புக்கண்டு செவிலி தானேகூறியது' என்றனர், நச்சினார்க்கினியர். (உ)

கஉஎங. மணியுட் டிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியுட் டிகழ்வதொன் றுண்டு.

இதுவுமது.

(இ - ள்.) மணியுள் திகழ்தரும் நூல்போல் - (கோக்கப்பட்ட) பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப்புலனும் நூல்போல, மடந்தை அணியுள் திகழ்வது - இம்மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப்புலனுகின்றது, ஒன்று உண்டு - ஒரு குறிப்புண்டு; (எ - று.)

அணி - புணர்ச்சியானுய அழகு. அதனகத்துக் கிடத்தலாவது, அதனோடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனை யான் அறிகின்றிலேன், நீ யறிந்துகூறல்வேண்டுமென்பது கருத்து.

(கு-ரை.) பாடலிலுள்ள அணிஎன்பதற்கு - புணர்ச்சியானுய அழகுஎன விரிவுகூறியவாறு. உடன்நிகழ்தற்பாலதன்றி வைத்து - உடன் நிகழ்தற்கு உரியதாகாதிருந்தே. இத்தப்பாடலை, 'இது, காமத்தால் நிகழ்ந்த பொலிவினைச் செவிலி தானே கூறியது' என்றனர் நச்சினார்க்கினியர்: (தொல். களவி-115). 'மணியிற்றிசழ்தரு', 'அணியிற்றிகழ்வது' என்றும் பாடமுண்டு.

கஉஎச. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

இதுவுமது.

(இ - ள்.) முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகையது (முகிழ்ப்பினுளதாய்ப்) புறத்துப்புலனுகாத நாற்றம்போல,—பேதை - (நின்) பேதை, நகை மொக்குள் உள்ளது - (என்னுடு நகக்கருதும்) நகையது முகிழ்ப்பினுளதாகிப் புறத்துப்புலனுகாதது, ஒன்று உண்டு - ஓர் குறிப்புண்டு; (எ - று.)

முகிழ்ப்பு - முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை - புணர்ச்சியின்பத்தானிகழ்வது.

(கு - ரை.) முகை - பூவின்மொட்டு. புடைபடுதல்-(மலர்தற்குமுன்னே) பருத்துநிற்கும்நிலை. இத்தக்குறள் தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலில் நகுநயமறைத்தலென்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது: நகுநயமறைத்தலாவது - தலைமகன்கட்டோன்றிய குறிப்புக்களான் அதற்கு ஏதுவாகிய நயனுடைமை மனத்திற்பிறத்தவழியும் நகாதுநிற்றல்.(ச)

கஉஎடு. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

இதுவுமது.

(இ - ள்.) செறி தொடி - நெருங்கிய வளைகளையுடையாள், செய்து - (என் கணில்லாததொன்றினை) உட்கொண்டு, (அதுகாரணமாக), இறந்த கள்ளம்-(என்னை) மறைத்துப்போன குறிப்பு, உறு துயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து-(என்) மிக்கதுயரத்தைத் தீர்க்கும் மருந்தாவதொன்றினையுடைத்து.

உட்கொண்டது-பிரிவு. கள்ளம் - ஆகுபெயர். மறைத்தற்குறிப்பு-தானும் *உடன்போக்குட் கொண்டது. உறுதுயர் - நன்றுசெய்யத் தீங்கு விளைதலானும் அதுதான் தீர்தறிம் பெருமையானும் உளதாயது. மருந்து - அப்பிரிவின்மை தோழியாற்றெளிவித்தல். நீ அதுசெய்தல்வேண்டுமென்பதாம்.

(கு-ரை.) செறி தொடி-வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. செய்து - ஐயத்தைச்செய்து: பிரிவையெண்ணியென்க. இங்கு, குறிப்பு-உடன்போகற்குறிப்பு. கள்ளம் என்பது கள்ளத்தினால் நிகழுங் குறிப்பைக் காட்டுதலால், ஆகுபெயர். தானும் உடன்போக்கு உட்கொண்டது-'இவ்விடத்தைவிட்டு நீங்கிச்செல்வதாயிருந்தால் என்னைவிட்டு அகலாதே: நானும் உன்னுடன் வருவேன்' என்று உடன்போக்குக்கு ஒருப்பட்டிருத்தலையுட் கொண்டது. வேட்கைமிகவினாற் புணர்ச்சியைப்பாராட்ட அதுகாரணமாகப் பிரிவச்சம் விளைதலைக்கருதி, நன்றுசெய்யத் தீங்குவிளைதல் என்றது. அதுதான் - பிரிவச்சந்தான். அதுசெய்தல்-தலைவியைப்பிரிவின்மைதெளிவித்தல்.

கஉஎசு. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

தலைமகன்குறிப்பறிந்த தலைமகள், அதனை, அதுதெளிவிக்கச் சென்ற தோழிக்கு அறிவுறுத்தது.

(இ - ள்.) (காதலர் வந்து தம்பிரிவினையை துன்பத்தினை), பெரிது ஆற்றி - மிகவுமாற்றி, பெட்ப - (நாம்)மகிழும்வண்ணம், கலத்தல்-கலக்கின்ற கலவி,—(இருந்தவாற்றை), (மேலும் அச்துன்பத்தினை), அரிது ஆற்றி - அரிதாகவாற்றியிருந்து, அன்பு இன்மை - அவரன்பின்மையை, சூழ்வது உடைத்து - நினையுந்தன்மையுடைத்து; (எ - று.)

பிரிதற்குறிப்பினாற் செய்கின்ற தாகலான், முடிவில் இன்னாதாகாகின்ற தென்பதாம்.

(கு - ரை.) தலைமகன்குறிப்பு - பிரிதற்குறிப்பு. அதனை - அத்தத்தலைமகன்குறிப்பினை: இது, அறிவுறுத்தது என்பதனோடு இயையும். அது தெளிவிக்க - அப்பிரிவின்மையைத் தெளிவிக்க. மிகவும் ஆற்றி - மிகவும் தணித்து. அத்துன்பத்தினை - அப்பிரிவுத்துன்பத்தினை. பிரிதற்குறிப்பினால் செய்கின்றது என்பது கலவியை. 'இன்னாதாகாகின்றது' என்பதற்கு எழுவாய், நாம் மகிழும்வண்ணங் கலக்கின்ற கலவியென்பது. (சு)

கஉஎஎ. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

* பி - மீ: தானும் உடன்போதற்குக் கொண்டது.

இதுவுமது.

(இ - ள்.) தண்ணந் துறைவன் தணந்தமை-குளிர்ந்த துறையை யுடையவன் (நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற்) பிரிந்தமையை, (அவன் குறிப்பானறிதற்குரிய), நம்மினும்—, வளை முன்னம் உணர்ந்த - இவ்வளைகள் முன்னேயறிந்தன; (எ - று.)

கருத்துநிகழ்ந்த தாகலின் 'தணந்தமை' என்றும், யான் தெளியவுணர்தற்குமுன்னே தோள்கண் மெலிந்தன வென்பாள் அதனை வளைமேலேற்றி அதுதன்னை யுணர்வுடைத்தாக்கியுங் கூறினள்.

(கு - ரை.) கருத்து நிகழ்ந்ததாகலின் - பிரியவேணுமென்ற எண்ணம் தோன்றியுள்ளதாதலால். தெளிய-நிச்சயமாக. அதுதன்னை-அவ்வளையை. வளையை உணர்ச்சியையுடைய பொருளாகக் கூறிய நயங்காண்க. (எ)

கஉஎஅ. நெருநற்றுச் சென்றூரெங் காதலர் யாமூ
மெழுநாளே மேனி பசந்து.

இதுவுமது.

(இ - ள்.) எம் காதலர்—, சென்றூர் நெருநற்று - பிரிந்துபோயினூர் நெருநற்றே. யாம் உம் மேனி பசந்து எழுநாளேம் - (அப்பிரிவிற்கு) யாமும் மேனிபசந்து ஏழுநாளுடையமாயினேம்; (எ - று.)

நெருநற்றுச்செய்த தலையளியாற் பிரிவு தணியப்பட்ட தென்பாள் 'நெருநற்றுச் சென்றூர்' என்றும், அதனை யையுற்றுச்செல்கின்றது ஏழுநாளுண்டாகலின் அன்றே மேனிபசந்த தென்பாள் 'மேனிபசந்தெழுநாளேம்' என்றுங் கூறினள். இவ்வாற்றாற் றலைமகனது பிரிதற்குறிப்பினையுணர்த்தி நின்றது.

(கு - ரை.) நெருநற்றே - நேற்றே. இன்னுந் தலைவர் பிரிந்துசெல்லவில்லையாகவும், அவர்செய்த தலையளிபால் இனி விரைவிற் பிரிவ ரென்று முன்னமே தலைவி தெளிந்திட்டா ளாதலால், அத்தெளிவை விளக்க 'நெருநற்றுச் சென்றூர்' என்ற தென்க. பிரிவைப்பற்றி ஐயுற்று எழுநாளாயிற் றென்பதை விளக்க, 'யாமூமெழுநாளேம் மேனிபசந்து' என்ற தென்றூர். மேனி, தான் பசந்ததனால் தலைவன் பிரிவுக்குறிப்பை எழுநாள்கட்குமுன்னமே யுணர்த்தி நின்ற தென்க. (அ)

கஉஎக. தொடிநோக்கி மேன்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

தலைமகள்துறிப்பு அறிந்த தோழி அதனைத் தலைமகற்கு அறிவித்தது.

(இ-ள்.) (யான் அதுதெளிவித்தவழித் தெளியாது),—தொடி நோக்கி-(அவர் பிரிய யான் ஈண்டிருப்பின் இவைகில்லா எனத் தன்)தொடியை நோக்கி, மெல் தோள் உம் நோக்கி - (அதற்கேதுவாக இவைமெலியுமெனத் தன்) மென்றோள்களையும் நோக்கி, அடி நோக்கி-(பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்துகாத்தல்வேண்டு மெனத் தன்) அடியையும்நோக்கி, ஆண்டு அவள் செய்தது அஃது - அங்ஙனம் அவள்செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது; (எ - று.)

செய்தகுறிப்பு - செய்தற்கேதுவாய குறிப்பு. அஃதென்னுள் "செறி தொடி செய்திறந்தகள்ளம்" என்னுங்கலின். பிரிதற்குறிப்புண்டாயின், அஃது தழுங்குதல் பயன்.

(கு - ரை.) தலைமகள் குறிப்பு-தலைவனுடன் செல்வது. அதனை-உடன் போக்கை. அது-பிரிவச்சம். தொடியை முதலில்நோக்கியது - யான் பிரிந்து இங்குத்தானே யிருப்பின் இவை நில்லாவென்பதையும், தோளை நோக்கியது - தொடி நிற்காதபடி தோள்கள் மெலியு மென்பதையும், தன் அடி நோக்கியது - வலைகழலாமலும் தோள்மெலியாமலுமிருத்தற்கு கீவிர் கணவனுடன் செல்லுவதே நல்ல உபாயம், நடந்துசெல்லும் இவ்வுதவியுரிய வேண்டும் என்பதையும் குறிப்பிக்கு மென்க. "செறிதொடி செய்திறந்த கள்ளம்" என்று கீழ் 5 - ம் குறளில் உடன்போக்குக் கூறப்பட்டமையால், அதனை "அஃது" என்று இங்குச்சுட்டினர். அஃது அழுங்குதல் - பிரிதற்குறிப்பு உண்டாகதவண்ணம் தலைமகனைத் தடுத்தல். இங்குத் தலைவன்பிரிவையுணர்ந்து அதனைத்தடுக்கக் குறிப்பாலுணர்த்தியதாகவந்தது - காவுவெளிப்படுப் பணி: பிஹிதாலங்கார மெனப்படும். (கூ)

கஉஅ0. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுற்
காமநோய் சொல்லி யிரவு.

தலைமகன் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கறிவுறுத்தது.

(இ - ள்.) (மகளிர்), காமநோய் - (தங்) காமநோயினை, (தோழியர்க்கும் வாயாற்சொல்லாது), கண்ணினுல் சொல்லி—, (அது தீர்க்க வேண்டுமென்று அவரையிரவாது), இரவு-(உடன்போதல்குறித்துத் தம்மடியினை) இரத்தல்,— பெண்ணினுல் பெண்மை உடைத்து என்ப - (தமக்கியல்பாகிய) பெண்மை மேலும் ஓர் பெண்மையுடைத்தென்று சொல்லுவர் (அறிந்தோர்); (எ - று.)

தலைமகளது உடன்போதற்றுணிபு தோழியாற் றெளிந்தானுகலின், தன் பிரிவின்மைக்குறிப்பினை யறிவுறுப்பான், அவள்பெண்மையினைப் பிறர்மேலிட்டு வியந்துகூறியவாறு.

(கு - ரை.) தலைமகன் பிரியாமைக் குறிப்பு - பிரிந்து தான் தனியே செல்லாமல் தலைவியையும் உடனழைத்துக்கொண்டே போதற்குறிப்பு. அது-காமநோய். அவரை - தோழியரை. துணிபு - உறுதி. தலைவி உடன்வருதற்கு இசைந்து இருத்தலைத் தோழியால் உணர்ந்த தலைவன், தன்னுடன்தலைவி வருதற்கு இசைதலால் தன் பிரியாக்குறிப்பினை அறிவிக்க "பெண்ணினுற் பெண்மையுடைத்தென்ப" என்று அவள்பெண்மையை வியக்கின்றனென்க.

கஉக - ஆம் அதிகாரம்.—புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது - தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சிமிகுதிபற்றித் தலைமகன் பிரிதற்குறிப்பறிவுறுத்தத் தலைமகள் அவன்மாட்டேகிகழாது வேட்கை மிகவினுற் பின்னுந் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மேல் - முன்னைய அதிகாரத்தில்: அதாவது கஉஅ - ஆவது அதிகாரத்தில். அறிவுறுத்த - அறிவிக்க. அவன்மாட்டே நிகழாது - தலைவனிடத்து நிகழும் பிரிதற்குறிப்பைக்கருதாது. தன்கண்ணே நிகழ்தலால்-தன் கண்ணுள்ள புணர்ச்சிவிதும்பலிலே கருத்துச்செல்லுதலால்.

கஉஅக. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

'பிரிதற்குறிப்பினையுடையனாதலை நீ புலவாமைக்குக் காரணம் யாது?' என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) உள்ள களித்தல் உம்-நினைந்துணர்தலே களிப்பெய்தலும், காணமகிழ்தல்உம் - கண்டதுணர்தலே மகிழ்வெய்தலும், கள்ளுக்கு இல் - கள்ளுண்டார்க்கில்லை: காமத்திற்கு உண்டு - காமமுடையார்க்குண்டு; (எ-று.)

களித்தல் - உணர்வழியாதது. மகிழ்தல் - அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டுழியல்லதின்மையின் 'கள்ளுக்கில்' என்றார். உண்டென்பது, இறுதி விளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான், புலத்தல் யாண்டைய தென்பதாம்.

(கு - ரை.) பிரிதற் குறிப்பினையுடையவனை தலைவனென்று. உணர்வழியாது உள்ளங்கிளர்தல் களித்தலென்றும், உணர்வழிய உள்ளங்கிளர்தல் மகிழ்தலென்றும், களித்தல் மகிழ்தல் என்ற இரண்டற்கும் வேறுபாடு காட்டுகின்றார்; இவ்விரண்டும் - களித்தலும் மகிழ்தலும். உண்டுழியல்லது - கள்ளைப்பருகியபோது அல்லாமல். உண்டு என்று இறுதியில் நிற்குஞ்சொல், இந்தக்குறளுக்குப் பொருளுரைக்கும்போது காமத்திற்கு உள்ளக்களித்தலும் உண்டு, காணமகிழ்தலும் உண்டு என்று இடையே சென்று இயைந்ததனால், இறுதிவிளக்கு என்றார்: இது, விளக்கணியின்வகையாகும், வடமொழியில், இந்த விளக்கணி, தீபகாலங்காரமென்பபடும். அப்பெற்றித்தாய - உள்ளக்களித்தலும் காணமகிழ்தலு முடையதாகிய. (க)

கஉஅஉ. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.

இதுவுமது.

(இ - ள்.) (மகளிர்க்கு), காமம்—, பனை துணை உம் - பனையளவினும், நிறைய வரின் - மிகவுண்டாமாயின், (அவரால்), (தங்காதலரோடு), தினை துணைஉம் - தினையளவும், ஊடாமை-ஊடுதல்செய்யாமை, வேண்டும்-வேண்டப்படும்; (எ - று.)

பனைத்துணையுமென்புழி, ஐந்தனுருபு விகாரத்தாற் றொக்கது. ஊடின் வருத்தமிகுமெனப்பிறர்க்குறுதிகூறுவாள்போன்று,தன்விதுப்புக்கூறியவாறு.

(கு - ரை.) அவரால் - மகளிரால். தினை பனை என்பன, அளவைக் காட்டும். பனைத்துணையினும் என்று வைத்துக்கொண்டு பொருள்கூறியதால், பனைத்துணையு மென்புழி, ஐந்தனுருபு விகாரத்தால் தொக்கதென்றார். 'ஊடாமை வேண்டும்' என்றதனால், ஊடின் வருத்தம் மிகுமென்பது பெறப்

பதிமாதலால், ஊடின் வருத்தமிகுமெனப் பிறர்க்குறுதி கூறுவாள்போன்று தன் விதுப்புக் கூறியவாறென்றதது. (உ)

கஉஅங. பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணுந் தகையல கண்.

இதுவுமது.

(இ - ள்.) பேணுது பெட்பவ செய்யின்உம்-(நம்மை) அவமதித்து (த்தான்) வேண்டியனவே செய்யுமாயினும், கொண்கனை—, கண் - (என்) கண்கள், காணுது அமையல - காணுதமைகின்றனவில்லை; (எ - று.)

தன்விதுப்புக் கண்கண்மே லேற்றப்பட்டது. *அத்தன்மையேன் அவனெடு புலக்குமாறென்னை யென்பதாம்.

(கு-ரை.) பேணுது என்பதன்பொருள் 'அவமதித்து' என்பது. கொண்கன் - கணவன். தன்விதுப்பை - தன்விரைவை. 'கொண்கனைக் காணுதமையல கண்' என்றதனால், தலைவி தன்னுடைய விதுப்பைக் கண்களின்மேலேற்றிக் கூறியதென்றார்: முதலின் தொழிலைச் சினைமேலேற்றிக்கூறிய உபசார வழக்கின்பாற்படும். அத்தன்மையேன் - கண்களாற்காணுது அமைகில்லாதேன். ''நீ, மாணுசெயினு மறுத்தாங்கே நின்வயிற், காணினெகிழு மென்னெஞ்சாயினென்னுற்றாய், பேணுய்நீ பெட்பச்செயல்'' என்ற கலித்தொகையடிகள், இக்குறளில் சோக்கத்தக்கன. (ங)

கஉஆ. ஊடற்கட் சென்றேனமற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) தோழி - தோழீ! ஊடற்கண் சென்றேன் - (காதலரைக் காணுமுன் அவர்செய்த தவற்றைத் தன்னெஞ்சினைந்து யான்அவரோடு) ஊடுதற்கண்ணே சென்றேன்: (கண்டபின்), என்நெஞ்சு—, அது மறந்து-அதனை மறந்து, கூடற்கண் சென்றது - கூடுதற்கண்ணே சென்றது; (எ - று.)

சேறனிகழ்தல் நினைத்தநெஞ்சிற்கு மொத்தலின், 'அதுமறந்து' என்றாள். அச்செலவாற் பயனென்னென்பதுபட நின்றமையின், மன் - ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்ததில்லை யென்பதாம்.

(கு - ரை.) தன்னெஞ்சினைந்து-நெஞ்சினைநெடு சூழ்ந்து. அதனைமறந்து-முன்னர் ஊடுதற்குச்சூழ்ந்ததை மறந்து என்றபடி. சேறல் - கூடுதற்குச் செல்லுதல். 'சென்றேன்மன்' என்ற இடத்துள்ள 'மன்'-என்சேறலிற் பயனில்லையென்ற பொருளைக் குறிப்பித்தலால், ஒழியிசையாமென்க. அவ்வெல்லையில் - பிணங்கும்போது. அறைபோகலின் - வஞ்சனைவழியாற் பிரிக்கப்பட்டு அவர் வசமாதலால். அது - பிணங்குதல். ''புலப்பேன் யானென்பேன் மனக்கினியே யவக்காணிற், கலப்பேனென்னுமிக் கையறு நெஞ்சே'', ''ஊடுவே னென்பேன் மன் அக்கினியேயவர்காணிற், கூடுவேனென்னுமிக் கொள்கையினெஞ்சே'' என்ற கலித்தொகையடிகள், இங்குக் காணத்தக்கன.

* பி - ம்: அத்தன்மையாலெடு

கஉஏடு. எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

இதுவுமது.

(இ - ள்.) (முன்னெல்லாங் கண்டிருந்தும்), எழுதும் கால் - எழுதுங் காலத்து, கோல் - அஞ்சனக்கோலினியல்பு, காணு-காணமாட்டாத, கண்ணே போல் - கண்ணேபோல, கொண்கன் பழி - கொண்கனது தவறு, (காணுத விடத்தெல்லாங் கண்டிருந்து), கண்டவிடத்து காணேன்-(அவனைக்) கண்ட விடத்துக் காணமாட்டேன்; (எ - று.)

கோல் - ஆகுபெயர். இயல்பு - கருமை. என்னியல்பு இதுவாகவின், மேலும் அது முடியாதென்பதாம்.

(கு - ரை.) எழுதுதல் - (கண்ணுக்கு) மையிடுதல். அஞ்சனக்கோல் - கண்ணிற்கு மைதீட்டுங்கோல். காணுத இடத்தெல்லாம்-கணவனைக் காணுத பொழுதெல்லாம். கோல் என்பது கோலினியல்பைக்காட்டுதலால், ஆகுபெயர்: இது, முதலாகுபெயரிலடங்கும். மேலும் - கண்டபின்பும். அது-கணவனோடு பிணங்குதல். (டு)

கஉஏசு. காணுங்காற் காணேன் றவறுய காணுக்காற்
காணேன் றவறல் லவை.

இதுவுமது.

(இ - ள்.) காணுங்கால் - (கொண்கனே யான்) காணும்பொழுது, தவறு ஆய (அவன்) தவருயவற்றை, காணேன் - காண்கின்றிலேன்: காணுக்கால் - காணுதபொழுது, தவறு அல்லவை-அவையேயல்லது பிறவற்றை, காணேன் - காண்கின்றிலேன்; (எ - று.)

செயப்படுபொருள், அதிகாரத்தான் வந்தது. முன்பு நான் கின்னொடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம்.

(கு - ரை.) அவையேயல்லது-தவற்றையல்லது. காணுங்கால், காணுக் கால் என்றவற்றிற்குச் செயப்படுபொருள், கொண்கனேயென்பது; இது, கீழ்க் குறளில் 'கொண்கன் பழிகாணேன்' என்று கொண்கனது பழிகாணுமை அதிகாரப்பட்டு நிற்றலால், அவ்வதிகாரம்பற்றி வந்ததென்க. இதுபொழுது-கணவனைக்கண்ட இப்போது. கணவனோடு புலவாமைக்குக் காரணம், சொல்லிய தவறுகளைக் கணவனைக்கண்டபோது காணுமையென்க. (சு)

கஉஏஎ. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

இதுவுமது.

(இ - ள்.) உய்த்தல் அறிந்து - (தம்மை) ஈர்த்துக்கொண்டுபோத லறிந்துவைத்து, புனல் - ஒழுகுகின்ற புனலுள், பாய்பவர் போல் - பாய்வார் செயல்போல, பொய்த்தல் அறிந்து - (புலவி) முடிவுபோகாமை யறிந்து வைத்து, புலந்து என் - (கொண்கனோடு) புலந்துபெறுவதென்? (எ - று.)

பாய்பவரென்பது-ஆகுபெயர். பொய்த்தல் - புரைடுதல். புலந்தாலும் பயனில்லையென்பதாம். பொய்த்தலறிந்தேனென்பது பாடமாயின், உய்த்தலறிய ஓடுநீருட் பாய்வார்போல,முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடியாமையறிந்தேன்: இனி அது செயற்பாற்றன்றென வுரைக்க.

(கு-ரை.) ஈர்த்துக்கொண்டுபோதல்-இழுத்துக்கொண்டுபோதல். ஒழுகுகின்ற-பெருக்கெடுத்திருக்கின்ற. புனலுள்-வெள்ளநீரில். பாய்பவரென்பது அவரதுசெயலைக் காட்டுதலால், பொருளாகுபெயர். புரைபடுதல் - பழுதுபடுதல். முடிவறிய - புலவியின் முடிவையறியுமாறு. அது-புலவி முடிவறிய முயலுதல். (எ)

கஉஅ. இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

தலைமகள் புணர்ச்சிவிதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

(இ-ள்.) கள்வ - வஞ்சகா! களித்தார்க்கு - (தன்னையுண்டு) களித்தார்க்கு, இளித்தக்க இன்னசெயின் உம்-*இளிவரத்தக்க இன்னதவற்றைச் செய்யினும், (அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய), கள் அற்று - கள்ளுப் போலும், நின்மார்பு - (எங்கட்கு) நின்மார்பு; (எ - று.)

அவ்வின்னதன - நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மையென்றிவை முதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும், எங்களால் மேன்மேல் விரும்பப்படா நின்றதென்பதாம். கள்வவென்றதும் அதுநோக்கி.

(கு - ரை.) இளிவரத்தக்க இன்னதவற்றைச் செய்யினும் மேன்மேல் விரும்பப்படுதலில், மார்பிற்குக் கள் உவமை. இளிவரத்தக்க - எளிமையுண்டாகத்தக்க. 'இளித்தக்க இன்ன' என்று மூலபாடத்தில் வந்ததை விவரிக்கின்றார் 'அவ்வின்னதன' என்று தொடங்கி. விரும்பப்படாநின்றது என்பதற்கு எழுவாய், மார்பு என்பது. இளித்தக்க இன்னசெயினும் மேன்மேல் விரும்பப்படுதல் நோக்கி, 'கள்வ' என்று விளித்தது. (அ)

கஉஆ. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

உணர்ப்புவயின்வாராவூடற்கட் டலைமகன் சொல்லியது.

(இ - ள்.) காமம் - காமவின்பம், மலரின்உம் மெல்லிது-மலரினும்மெல்லிதாயிருக்கும்: (அங்ஙனம் மெல்லிதாதலையறிந்து), அதன்செவ்வி - அதன் செவ்வியை, தலைப்படுவார் - பெறுவார், சிலர் - (உலகத்துச்)சிலர்; (எ - று.)

தொட்டதுணையானே மணச்செவ்வியழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. 'குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒருகாலத்தின்கண்ணே யொத்து நுகர்தற்குரியார் இருவர் அதற்கேற்ற இடனும் காலமும் உபகரணங்களும்

* பி - மீ: இளிவாகத்தக்க

பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் 'அதன்செவ்வி தலைப்படுவார் சிலர்' என்றும், அவற்றுள் யாதானுமொன்றனுற் சிறிது வேறுபடினும் வாடுதலின் 'மலரினுமெல்லிது' என்றுங் கூறினுன். குறிப்பு ஒவ்வாமையின் யான் அது பெறுகின்றிலேனென்பதாம். தலைமகளுடல்தீர்வது பயன்.

(கு - ரை.) உணர்ப்புவயின் வாரா ஊடல் - தலைவனுல் தெளிவிக்கப் படுந் தன்மைக்கணில்லாத ஊடல். "உணர்ப்பு வயின் வாரா வூடலுற்றோள் வயின், உணர்த்தல்வேண்டிய கிழவோன்" என்று தொல்காப்பியத்துக் கற் பியலில் கூ - ஆஞ் சூத்திரத்தில் வருகின்றது. "உணர்ப்புவரை யிறப்பினுஞ் செயற்குறி பிழைப்பினும், புலத்தலுமூடலுங் கிழவோற்குரிய" என்ற தொல் காப்பியச் சூத்திரப்படி புலத்தல்தோன்றக் கிழவன் [தலைமகன்] கூறுகின் றுன்: அடுத்தசெய்யுளும் இத்தன்மையதே. "உணர்ப்புவயின் வாரா வூட றோன்றிற், புலத்தறானே கிழவற்கும் வரையார்" என்ற இறையனாரகப் பொருட் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக. அதன்செவ்வி-காமவின்பத்தின் நலனே. தொட்ட தூணையானே - தொட்ட மாத்திரத்தால். உம்மை, 'மலரி னும்' என்ற இடத்து உள்ளது. குறிப்பு-மனக்கருத்து. உபகரணங்கள்-வேண் டிய கருவிகள்: அவை-மெல்லனை மலர் சாந்து தென்றற்காற்று நிலா என்ற இவை போன்றவை. அவற்றுள்-இடம் முதலியவற்றுள். குறிப்பு ஒவ்வாமை யின் - தலைமகன் எண்ணம் ஏற்றிராமையால். அது - காமவின்பம். (கூ)

க்உகூ0. கண்ணிற் றுனித்தே கலங்கினுள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

இதுவுமது.

(இ - ள்.) (காதலி முன்னொருஞான்று புல்லல்விதுப்பினுற்சென்ற என்னெடு), கண்ணின் துனித்து - (தன்)கண் மாத்திரத்தானூடி, புல்லுதல் என்னின்உம் தான் விதுப்புற்று-புல்லுதலே என்னினுந் தான் விதும்பலால், (அது தன்னையும் அப்பொழுதே மறந்து), கலங்கினுள்-கூடிவிட்டாள்; (அத னுல், யான் இத்தன்மையேனுகவும் விதுப்பின்றி யூடிநிற்கின்ற இவள் அவ ளல்லள்); (எ - று.)

கண்மாத்திரத்தானூடல்-சொன்னிகழ்ச்சியின்றி அது சிவந்ததுணையே யாதல். அவளாயின், இங்ஙனமூடற்கண் நீடாளென்பது பயன்.

(கு - ரை.) காதலி - மனைவி. புல்லல்விதுப்பினுல் - தழுவுகையிலுள்ள விரைவினுல். விதும்பலால் - விரைதலால். அதுதன்னையும்-கண்மாத்திரத்தா னூடியதையும். இத்தன்மையேனுகவும் - இப்படி வருத்தமுற்றிருப்பவனுக இருக்கவும். விதுப்பின்றி-புணர்ச்சிவிரைவுஇல்லாமல். சொல்நிகழ்ச்சியின்றி-வெகுண்டுகூறுஞ் சொல் நிகழ்தலில்லாமல். அது-கண். புல்லுதலில் என்னி னுந்தான் விதுப்புறுதலால், 'கண்ணிற்றுனித்தே கலங்கினுள்' என்று இங்குத் தலைவியின் முன்னையநிலையைத் தலைவன் கூறியது-அவளாயின் ஊடற்கண் நீடாள் என்று தெரிவித்தல்மூலமாகத் தலைவியின்பிணக்குத் தீர்க்கவேண்டி.

கஙO - ஆம் அதிகாரம்.—நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது - காரணமுண்டாயவழியும் புலக்கக்கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்

(கு - ரை.) நெஞ்சொடு-(புணர்ச்சி விதும்புகின்ற) நெஞ்சுடனே. புலத்தல் - புலவிகொள்ளுதல். நெஞ்சின் புணர்ச்சிவிதும்பல் கீழ்க்கூறப்பட்டதனால், அங்ஙனமான நெஞ்சுடனே புலத்தல் அதன்பின் கூறப்பட்டதென அதிகாரமுறைமை காண்க.

கஉகூக. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

தலைமகன்கட் டவறுண்டாயவழியும் புலவிகருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சே—! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும்-அவருடையநெஞ்சு (நம்மை நினையாது) அவர்க்குஆய்நிற்றல் கண்டுவைத்தும், நீ எமக்கு ஆகாதது எவன் - நீ எமக்காய்நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது? (எ - று.)

அவர்க்காதல் - அவர்கருதியதற்கு உடம்படுதல். எமக்காகாதென்றது, புலவிக்குடம்படாமையை. ஒருகருமத்தைத் தாமாகஅறிந்துசெய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர்: நீ அதுவுஞ்செய்கின்றிலையென்பதாம்.

(கு - ரை.) அவர்கருதியதற்கு - அவர் நினைத்தசெயலுக்கு: பொருள் வயிற்பிரிவு என்றுற்போன்றவற்றிற்கு. தலைவர் நெஞ்சு அவர்க்கு ஆதலைக் கண்டுவைத்தும் பின்னும் எமக்கு நீ ஆகின்றிலையே யென்று தன் நெஞ்சொடு கூறுகின்றா ளென்க. (க)

கஉகூஉ. உறுஅ தவர்க்*கண்ட கண்ணு மவரைச்
செறுஅரெனச் சேறியென் னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) என்நெஞ்சு - என்நெஞ்சே! (மேலும்), உறுதவர் கண்ட கண்உம் - (நம்மாட்டு)அன்புடையராகாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும், செறுர் எனை-(நாஞ் சென்றால்)வெகுளாரென்பதுபற்றி, அவரை சேறி-(நீ)அவர்மாட்டுச் செல்லாகின்றாய்:(இப்பெற்றியதுமேலும் ஓரறியாமையுண்டோ)? (எ-று.)

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணேட்டம்பற்றி வெகுளாரென்பது கந்தாகச் †சென்றாய்; நீ கருதியது முடியுமோவென்பதாம்.

(கு - ரை.) மேலும்-அவர்நெஞ்சு அவர்க்காதல்மேலும். அவரை என்ற இரண்டாம்வேற்றுமை - அவர்மாட்டு என்று ஏழாம்வேற்றுமைப்பொருளைத் தருதலால், வேற்றுமைமயக்கமாம். பழங்கண்ணேட்டம் - பழையதோட்சினியம். கந்தாக - பற்றுக்கோடாக. கருதியது - நினைத்தது: அவரைக் கூடுதலென்பது; சென்றுற் கோபியாரென் றெண்ணியது என்றலும் உண்டு. (உ)

* பி - ம்: கண்டக்கண் என்று பாடமிருக்கலாம். † சென்றால்,

௧௨௯௩. கெட்டார்க்கு நட்டாரில லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

இதுவுமது.

(இ - ள்.) நெஞ்சே—!(என்மாட்டுநில்லாது), நீ—,பெட்டாங்கு-விரும்பியவாறே, அவர்பின் செலல் - அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்,—கெட்டார்க்கு நட்டார் இல் என்பது ஓ - கெட்டார்க்கு நட்டார் (உலகத்து) இல்லையென்னும் நினைவோ? (நின்னியல்போ? கூறுவாயாக); (எ - று.)

என்னைவிட்டு அவர்மாட்டுச் சேறல் நீ பண்டேபயின்றதென்பாள் 'பெட்டாங்கு' என்றும், தான் இதுபொழுது மானமிலளாகலின் 'கெட்டார்க்கு' என்றுங் கூறினாள். பின்னென்பது,ஈண்டு இடப்பொருட்டு. செலலென்பது-ஆகுபெயர். "ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்பு" ஆயிற்று, நின்றொடர்பென்பதாம்.

(கு-ரை.) என்மாட்டு-என்னிடத்து. பெட்டாங்கு என்பதன் பொருள் - விரும்பியவாறே என்பது: பெட்ட ஆங்கு எனப்பிரிக்க. நட்டார்-நண்பர். பண்டேபயின்றது - முன்னரே பழகினது. இதுபொழுது - இப்போது. மானம்-மனத்துமேம்பாடு: நாமென்று தன்னைச் சிறப்பாகஎண்ணும் எண்ணம். அவர்பின் என்ற இடத்துள்ள 'பின்' என்பது - இங்கே பின்னிட மென்ற பொருளது: இது, காலப்பொருட்டாயும் வரும். செலல் என்னுங் காரியப் பெயர்-செல்லுதற்குக் காரணமென்னும் பொருளைத் தந்ததனால், காரியவாகு பெயர். "ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்பு" என்று, கலித் தொகை, பாலைக் கலி, உச-ஆம் பாட்டில் வந்துள்ளது. இதன்பொருள்:—ஒல்கு இடத்து - தளர்வுநேர்ந்தபோது, உலப்பு இலா - உதவுதலில்லாத, உணர்வு இலார் - அறிவில்லாருடைய, தொடர்பு-உறவு என்பது. "முட்டின்றொருவருடைய பொழுதின்கண், அட்டிற்றுத் தின்பவராயிரவராபவே, கட்டலர்தார்மார்ப கலி யூழிக்காலத்துக், கெட்டார்க்கு நட்டாரோ வில்" என்பது, பழமொழிப் பாடல்: 'கெட்டார்க்கு நட்டாரில்' என்ற பழமொழியைத் தலைவி எடுத்துக் காட்டுகின்றாளென்க. (௩)

௧௨௯௪. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

இதுவுமது.

(இ - ள்.) நெஞ்சே—! (நீ அவரைக் கண்டபொழுதே இன்பநுகரக் கருதுவதல்லது அவர்தவறு நோக்கி), துனி செய்து - (முன் புலவியையுண்டாக்கி),மற்று துவ்வாய்-(அதனையளவறிந்து பின்)நுகரக்கருதாய்:(ஆகலான்), இனி—, அன்ன - அப்பெற்றிப்பட்டவற்றை, நின்னொடு சூழ்வார் யார் - நின்னோடெண்ணுவார் யார்? (யான் அதுசெய்யேன்); (எ - று.)

அப்பெற்றிப்பட்டன - புலக்குந் திறங்கள். காணென்பது, உரையசை. மற்று - வினைமாற்றின்கண்வந்தது. முன்னெல்லாம் புலப்பதாகவெண்ணியிருந்து பின் புணர்ச்சிவிதும்பலின், இவ்வாறு கூறினாள்.

(கு-ரை.) கணவனைக் கண்டபோது புலவிகொண்டு அப்புலவியை அள்வறிந்து செலுத்திப் பின் இன்பத்தை துகரவேண்டுவது முறைமையாயிருக்க, தன்நெஞ்சு கணவனைக் கண்டபோதே முன்புலப்பதாகக்கருதியதை மறந்திட்டு இன்பம்நுகரக் கருதுவதனால் அதனோடு பிணங்கிக்கூறுகின்றுளென்க. மற்று என்பது - துனிசெய்தலென்னும் வினையையொழித்துத் துனி செய்யாமை யென்னும் வினையைத் தந்து நிற்றலால், வினைமாற்றும். முன்னெல்லாம் - கணவனைக் காண்பதற்குமுன்னே யெல்லாம். புணர்ச்சிவிதும்பல் - புணர்ச்சிக்கு விரைதல். (ச)

கஉகூடு. பெறுஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறுஅ விடும்பைத்தென் னெஞ்சு.

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.

(இ-ள்.) பெறுமை அஞ்சும் - (காதலரைப் பெறுத ஞான்று) அப்பெறுமைக்கு அஞ்சாநின்றது: பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற்கு அஞ்சாநின்றது: (ஆகலான்), என் நெஞ்சு - என் னெஞ்சம், அறு இடும்பைத்து - (எஞ்ஞான்றும்) நீங்காதவிடும்பையை யுடைத்தாயிற்று; (எ - று.)

காதலரைப் பெற்றுவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வாயில் நேர்கின்றுளாகலின் 'பெறுமையஞ்சும்' என்றும், கலவியாராமையின் இன்னும் இவர்பிரிவராயின் யாது செய்துமென்பது நிகழ்தலின் 'பெறிற்பிரிவஞ்சும்' என்றும், இவ்விரண்டுமல்லது பிறிதின்மையின் 'எஞ்ஞான்றும் அறுவிடும்பைத்து' என்றுங் கூறினுள். (கு - ரை.) "கொலைவல்பாணன் பாடினி கூத்தர், இளைஞர் கண்டோரிருவகைப்பாங்கர், பாகன் பாங்கி செவிலியறிவர், காமக்கிழத்தி காதற் புதல்வன், விருந்தாற்றுமை என்றிவை யூடல், மருந்தாய்த் தீர்க்கும் வாயில்களாகும்" என்ற நாற்கவிராஜநம்பியகப் பொருள்விளக்கச் சூத்திரத்தினுள், ஊடலில் வாயிலாதற்குரியாரை யறிக. இடும்பை - துன்பம். வாயில் நேர்கின்றுள் - வாயிற்கு உடன்படுகின்றுள். ஆராமையின் - திருப்திபிறவாமையால். இரண்டுமல்லது - காதலரைப் பெறுமைக்கஞ்சுதல் காதலரைப்பெற்றக்கால் அவர் பிரிவிற்கஞ்சுதல் என்ற இரண்டுமல்லாமல். (கு)

கஉகூசு. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் நெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) என் நெஞ்சு இருந்தது - என்னெஞ்சு ஈண்டிருந்தது,— தனிவ இருந்து - (காதலரைப்) பிரிந்திருந்து, நினைத்தக்கால் - (அவர் கொடுமைகளே யான் தன்னெஞ்சோடு) நினைத்தக்கால், (அவ்வளவறிந்து), என்னை தினிய - என்னைத் தின்பதுபோன்று துன்பஞ்செய்தற்கே; (எ - று.)

என்மாட்டிருந்தது,அன்று அவர்கொடுமைகளே யுட்கொண்டு எனக்காற் றுமைசெய்தற்கே;இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென்பதாம்.

(கு-ரை.) ஈண்டு இருந்தது-இங்கே [என்னுடலில்] இருந்தது. அன்று-பிரிந்த அப்போது. இன்று - கணவர்வந்துள்ள இப்போது. அவை - அக் கொடுமைகளே. (சு)

கஉகூஎ. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு.

இதுவுமது.

(இ - ள்.) அவர் மறக்கல்லா-(தன்னைமறந்த) காதலரை(த் தான்)மறக்க மாட்டாத, என் மாணு மடநெஞ்சில் - என்மாட்சிமையில்லாத மடநெஞ் சுடனே, பட்டுகூடி, நாண் உம் மறந்தேன் - (என்னுயிரினுஞ்சிறந்த) நாண் தன்னையும் மறந்துவிட்டேன்; (எ - று.)

மாணுமை - ஒருநிலையினில்லாமை. மடமை-கண்டவழி நினைந்து காணு வழி மறக்குந் தவற்றைக் காணுவழிநினைந்து கண்டவழி மறத்தல். நாண் - எஞ்ஞான்றுங் கூடியொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்று ஒடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சிவிதும்பலின், அதனையுமறந்தேனென்றாள்.

(கு-ரை.) நெஞ்சுக்கு ஒருநிலையில் நில்லாமை-காதலரைக்காணுதபோது அவருடைய கொடுமைகளைநினைந்து அவர்மீதுசினத்தலும் கண்டபோது அவற்றை மறந்து அவரைக் கூடநினைத்தலும். அதனை - நாணை. (எ)

கஉகூஅ. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

இதுவுமது.

(இ - ள்.) உயிர் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலையுடைய (என்) நெஞ்சு, எள்ளின் - (நம்மை யெள்ளிச்சென்றுரென்று நாமும்) எள்ளுவே மாயின், இளிவு ஆம் என்று எண்ணி - (பின் நமக்கு) இளிவாமென்று கருதி, அவர் திறம் உள்ளும் - அவர்திறத்தினையே நினையாநின்றது; (எ - று.)

எள்ளுதல் - வாயின்மறுத்தல். இளிவு - வழிபடாமையானும், பிரிவாற் றுமையானும், நாணும் நிறையும் முதலிய இழத்தலானும் உளதாவது. திறம்-வாயினேர்தலும் வருதலும் கூடலும் முதலாயின. இளிவிற்நஞ்சுதலானும் இறந்துபடமாட்டாமையானும் கூடக் கருதாநின்ற தென்பதாம்.

(கு - ரை.) எள்ளி - இகழ்ந்து, உபேட்சித்து. வழிபடாமை - அனுசரித்து நடவாமை. திறம் - செயல். 'உயிர்க்காதல் நெஞ்சு' என்றதனால், இறந்துபடமாட்டாமையானுங் கூடுதற்குக் கருதாநின்றதென்கிறாள்.

கஉகூக. தன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

உணர்ப்புவயின்வாரா ஊடற்கூட் டலைமகன் சொல்லியது.

(இ - ள்.) துன்பத்திற்கு - (ஒருவர்க்குத்) துன்பம் வந்துழி அது நீக்குதற்கு, தாம் உடைய நெஞ்சம் - தாம் உரித்தாகப் பெற்ற (தம்முடைய) நெஞ்சம், துணை அல்வழி-துணையாகாவழி, துணை ஆவார் யாரே - (வேறு) துணையாவார் ஒருவருமில்லை; (எ - று.)

•ஈண்டுத் துன்பமாவது-ஊடலுணர்ப்புவயின் வாராமை: அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவது-அவ்வியன்பிலனென்றொழியாது கூடற்கண்ணே விதும்பல். ஒருதுணையுமின்மையின், இஃதுஉற்றுவிடுதலேயுள்ளதென்பதாம்.

(கு - ரை.) துன்பம் வந்துழி - துன்பம்நேரிட்டபோது. உரித்தாக - உரிமையுடையதாக, சுவாதீனமாக. துணையாகாவழி - துணையாகாவிட்டால். உணர்ப்புவயின்வாரா ஊடல் - தீர்க்கமுடியுமாறு சிகழா [தீர்க்கமுடியாத] ஊடல். இஃது - இத்துன்பம். உற்றுவிடுதலே - அனுபவித்தலே. ''உணர்ப்புவயின்வாரா வூடலேன்றிற், புலத்தலுனே கிழவற்கும் வரையார்'' என்ற இறையனாரகப்பொருள், இங்குக் காணத்தக்கது. ''உடனிகழ்கின்ற சகார்த்தாதி'' என்ற பிரயோகவிவேகப்பாவின் உரையில் 'ஆதிசத்தத்தால், பூவிற்குச்சென்றான், துன்பத்திற்கு யாரேதுணையாவார், மறத்திற்கு மஃதேதுணை, பிணிக்குமருந்து என்பவற்றின்கண் பறிக்க நீக்க என நடுவேபெய்து பொருளைத்தந் தமர்த்தம் என்பதுங்கொள்க' என்றது, இங்கேயறிக. குற்றியலிகரம் அலகுபெறாது வந்தது. (கூ)

கஙூ00. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

இதுவுமது.

(இ-ள்.) தாம் உடைய நெஞ்சம் தமர் அல் வழி-தாம் உரித்தாகவுடைய நெஞ்சம் (ஒருவர்க்குத்) தமரல்லாவழி,—ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ? (எ - று.)

பிறளொருத்தியைக் காதலி யென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தாகின்றபின், அப்பிறள் புலக்கின்ற தெளிதென்பதாம்.

(கு - ரை) தமர்-சுற்றம். பிறள் - ஊடலினுல் தன்மை வேறுபட்டவள். காதலி-நம்மிடம் விருப்பமுள்ளவள். ''தஞ்சக்கிளவி யெண்மைப்பொருட்டே'' என்ற தொல்காப்பியத்து இடையியற் சூத்திரத்தால், தஞ்சம் என்பது எளிது என்ற பொருளதாதல் வெளியாம்: ஆதலால், தமரல்லராதல் தஞ்சம் என்பதற்கு-தமரல்லராவது எளிது என்று பொருளாமாதலால், அப்பொருளின் நீருத்தாக, 'தமரல்லராதல் சொல்லவேண்டுமோ?' என்றார். (கo)

கஙூக - ஆம் அதிகாரம்.—புலவி.

அஃதாவது-இருவர்நெஞ்சும் புணர்ச்சிவிதும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல். அதிகாரமுறைமையும், இதனுனே விளங்கும்.

(கு - ரை.) இருவர்-தலைவன் தலைவி என்ற இவ்விருவருடைய. வீதும் பாது - விரையாமல். புலக்க-பிணக்குக்கொள்ள. கருதியவழி-நினைந்தபோது.

கஙஏக. புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லலுள்ளப் காண்கஞ் சிறிது.

வாயிலாகச்சென்ற தோழி தலைமகள் வாயினேர்தற்பொருட்டு அவளோடு நகையாடிச் சொல்லியது.

(இ - ள்.) அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் - (அங்ஙனம் புலத்தாற்) காதலரெய்தும் அல்லல் நோயினை (யாம்)சிறிது காணக்கடவேம்; புல்லாது இரா - (நீ அவரை விரைந்துசென்று)புல்லாதே (இத்தொழிலை மேலிட்டுக்கொண்டு) இருந்து, புலத்தை - புலப்பாயாக; (எ - று.)

அல்லல்நோய் - துன்பத்தைச் செய்யும் காமநோய். சிறிதென்றுள், புலவியை நீளவிடலாகாதென்பதுபற்றி. புலத்தை யென்புழி ஐகாரம்,"கடம்பூண் டொருகானீவந்தை" என்புழிப்போல முன்னிலைவினை விகுதி. புலத்தி யென்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக் கண்டு அவள்வழியளாய்நின்று, 'நாமுற்ற வருத்தம் அவருஞ் சிறிதுற்றறிதல் வேண்டும்'என நகையாடி நேர்வித்தவாறு.

(கு-ரை.) வாயிலாக-கணவனுடைய தலைவியைப் பொருந்தவிடுதற்கு உரிய தூதாக. இத்தொழிலை - புணர்ச்சிக்கு இடங்கொடாமையாகிய இச்செயலை. நீள - வெகுகாலம் இருக்க. "கடம் பூண்டு" என்று தொடங்கும் மேற்கோள், கலித்தொகை, குறிஞ்சிக்கலி, உள - இல் உள்ளது: இதன்பொருள்:—கடம் பூண்டு - கடனுகப்பூண்டு, ஒருகால்—, நீ வந்தை - நீவருவாய் என்பது: இந்த வந்தையென்பது-வருவாயென்று பொருள்பட, அதில் ஐ என்பது முன்னிலை விகுதியாவதுபோல, புலத்தை யென்பது புலப்பாயென்று பொருள்பட, ஐ விகுதி-முன்னிலைக்கண் வந்ததென்க. வாயிலாகவந்த பாங்கி, வாயில் நேர்வித்தற்காக, தலைவியின் புலவிக்குறிப்புக்கண்டு அவள்வழியளாய் நிற்பவள் போலப் பாவித்து நாம் உற்றவருத்தம் அத்தலைவரும் அடையவேண்டுமென்று சொல்லி நின்று நகையாடினு ளென்க. நேர்வித்தல் - உடன்படுவித்தல். (க)

கஙஏஉ. உப்பமைந் தற்றூற் புலவி யதுசிறிது
மிக்கற்று நீள விடல்.

புலவியோழிந்து வாயினேருமவகை அவள் சொல்லியது.

(இ - ள்.) புலவி—, (கல்வி இன்பஞ்செயற்கு வேண்டுமளவிற்றுதல்), உப்பு அமைந்(த)து அற்று-உப்பு(த் தூய்ப்பனவற்றை இன்சுவைய வாக்கற்கு) வேண்டுமளவிற்றுதல்போலும்; சிறிது நீளவிடல் - (இனி அதனை யவ்வளவிற்) சிறிது மிகவிடுதல், அது மிக்கு அற்று - அவ்வுப்பு அளவின் மிக்காற்போலும்; (எ - று.)

நீளவிடல்-*அளவறிந்துணராது கலவிமேலெழுந்த குறிப்பு அழுங்குமளவுஞ் †செய்தல். சிறிது நீளவிடலாகாதென்றுள், நேர்விக்கின்றுளாகலின். உப்பு மிக்கவழித் தூய்ப்பது சுவையின்றுஞற்போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமின்று மென்றமையின், இது பண்புவமை.

பி - ழ்: * அளவறிந்தொழியாது †செலுத்தல்.

(கு - ரை.) தாய்ப்பனவற்றை-உண்ணும் உணவுகளோ. அழுங்குமளவும் - கெடுமளவும். உப்பின்சுவையையும் சுவைகெடுதலையும் உவமையாகக் கூறியதனால், இது, பண்புவமை. (உ)

கஉ0ங. அலந்தாரை யல்லனெய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

பரத்தையரிடத்தினின்றும் வந்த
தலைமகனைத் தலைமகள் புலந்து சொல்லியது.

(இ - ள்.) தம்மை புலந்தாரை-தம்மைப்பெரிது புலந்தமகளினை, புல்லாவிடல் - புலவி நீக்கிக் கலவாது (ஆடவர்) சேறல்,—அலந்தாரை-(பண்டே) துன்பமுற்றழிந்தாரை, அல்லல் நோய் செய்து அற்று-(அதன்மேலும்) மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும்; (எ - று.)

பிறர்பாற்சேறலின் நும்மைப்பெரிது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப்போய்ப் புலவிநீக்கிப் புல்லீராயின், அவராற்றா ரென்பதாம்.

(கு - ரை.) தம்மை - தலைவரை. சேறல் - வேற்றிடத்துச்செல்லுதல். பிறர் என்றது-தலைமகளாகிய தன்னை. புல்லீராயின்-தழுவாது விட்டீராயின். அவர்-பரத்தையர். உம்மைப் பெருமையாற் பிணங்கிய பரத்தையரின் பிணக்கைத்தீர்த்துப் புணராது எம்பாற்சேறல் தகாதென்று தலைவி புலந்து சொல்லுகிறா ளென்க. (ங)

கஉ0ச. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

இதுவுமது.

(இ - ள்.) ஊடியவரை உணராமை - (நும்மோடு) ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல்,—வாடிய வள்ளி - (பண்டே நீர்பெரிது) வாடிய கொடியை, முதல் அரிந்து அற்று - அடியிலேயறுத்தாற்போலும்.

நீர் பரத்தையரிடத்தி ராயவழி எம்புதல்வரைக் கண்டு ஆற்றியிருக்கற் பாலமாய யாம் நும்மோடூடுதற்குரியமல்லம்: அன்மையின், எம்மையுணர்த்தல்வேண்டா; உரியராயுடிய பரத்தையரையே உணர்த்தல்வேண்டுவது: அதனால், ஆண்டுச்சென்மி னென்பதாம்.

(கு - ரை.) நீர்பெரிது-தண்ணீர் பாய்ச்சப்பெறுமல். இடத்தில்-இடத்திலேயிருப்பவர். உணர்த்தல்-புலவிநீக்குதல். ஆண்டு-அங்குத்தானே. வள்ளி-வல்லியென்ற வடசொல்லின் திரிபு. (ச)

கஉ0ரு. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து.

தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) நலம் தகை நல்லவர்க்கு ஏர்-நற்குணங்களாற் றகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது,—பூ அன்ன கண்ணுர் அகத்து புல தகை-தம் பூவன்னகண்ணுர் நெஞ்சின்கண் நிகழும் புலவிமிகுதியன்றே; (எ - று.)

சிறப்பும்மை, விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவிஇனிதென்பான், 'நலத்தகை நல்லவர்க்கும்' என்றான். அழகு - இன்பப்பயனைத் தலைப்படுதல். தான் நுகர்ந்தவீன்பத்திற்கேதுவாகியபுலவியை வியந்துகூறியவாறு.

(கு - ரை.) கல்லவர்க்கு என்பதன்பின் உயர்வுசிறப்புப்பொருளைத் தரும் உம்மை, செய்யுள்விகாரத்தால் தொக்க தென்க. தவறு - தலைவியின் திறத்துப் பிழை. தலைப்படுதல்-பெறுதல். இன்பஞ் சிறந்துதோன்றுதற்குக் காரணம் புலவியே யாதலால், இன்பத்திற்கு எதுவாகிய புலவி யென்றது. புலத் தகை - புலவிமிகுதி: புல - முதனிலைத் தொழிற்பெயர். (நி)

கங்கூகூ. தினையும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

இதுவுமது.

(இ - ள்.) தினைஉம் புலவிஉம் இல் ஆயின் - முதிர்ந்த கலாமாகிய தினையும் இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின், காமம்—,—கனிஉம் கருக்காய் உம் அற்று - செவ்விமுதிர்ந்தபழமும் இளங்காயும்போலும்; (எ - று.)

மிகமுதிர்ந்திறுமெல்லத்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் *இனிமை செய்யாதாசலிற் றினையில்லையாயிற் கனியற்றென்றும், கட்டிளமைத்தாய காய் நுகருஞ்செவ்வித்தன்றுகலிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங் கூறினன். இவ்விரண்டும் வேண்டுமென்று வியக்து கூறியவாறு.

(கு - ரை.) கனி - அளவுக்கு விஞ்சிக் கனிந்தபழம். இனிமைசெய்யும் முதிர்ந்தகலாமாகிய தினையாக இல்லையானால், காமவின்பம் பக்குவத்திற்கு மேற்பட்டுப் பழுத்திட்ட கனியைப்போன்று இன்பம் பயவாதாம்: அவ்வாறே இன்பஞ்செய்கின்ற புலவி யில்லையாயின், அக்காமவின்பம் நுகருஞ்செவ்வித்தல்லாத கருக்காய்போன்று இன்பஞ்செய்யாதா மென்றவாறு. இறும் எல்லத்து - பதனழியும் பருவத்திலுள்ளது. கட்டிளமைத்தாய - மிகவும் இளமையுடையதாகிய: முதிராத என்றபடி. செவ்வி-பக்குவநிலை. கருக்காய்-பிஞ்சாயிருக்கின்ற காய். இவ்விரண்டும் - (முதிராத) தினையும் (முதிர்ந்த) புலவியும்; 'முதிர்ந்த தினையாயவழித் துன்பம்பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம்பயவாமையானும், இரண்டற்கு மிடையாகிய வளவறிந்து'என்று ''ஊடுதல்'' (கஉஉ0)என்ற குறளிற் கூறுவதுங் காண்க. (சு)

கங்0எ. ஊடலி னுண்டாங்கொர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

இதுவுமது.

(இ - ள்.) புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - (இனிப்) புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதலான், ஊடலின் ஓர் துன்பம் உண்டு - (இன்பத்திற்கு இன்றியமையாத) ஊடலின்கண்ணேயும் ஒருதுன்பம் நிகழும்; (எ - று)

என்றென்னுமெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனும் கூட்டுக. ஆங்கென்பது, அசைநிலை. ஊடல், கூடற்கண்விரைவித்தல் கூறியவாறு.

* இனிமைசெய்தலின் என்றபோடம் அமைவுறுவதாகத் தோன்றவில்லை.

(கு - ரை.) என்று என்பது சொல்லெச்சமாதலால், என்று கருதலான் என்று உரைக்கப்பட்டது. ஊடலின் என்பதன் பின் உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கதென்க. அன்றுஎன்பதன்பின்உள்ள 'கொல்' என்பது,'நீடுவது கொல், அன்று கொல்'என இரண்டிடத்தும் கூட்டப்பட்டது காண்க. புணர்ச்சி நீட்டிக்கும் - புணர்ச்சிநிகழுங்காலம் நீட்டிக்குமோ என்ற வாறு. புணர்ச்சி நீட்டிக்குமோ என்று ஓரையந்தோன்றுவதால்தான் ஊடலினும் ஓர் தன்பமுண்டென்றது. (எ)

கஙூ0ஆ. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி,

உணர்ப்புவயின்வாரா வூடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

(இ - ள்.) (இவர் நம்பொருட்டாக), நொந்தார்என்று—, அஃது - அந்நோவினை, அறியும்—, காதலர்-அன்புடையாரை, இல்லாவழி-பெறுவழி,—நோதல் மற்று எவன் - (ஒருவர்) நோகின்றதனாற் பயனென்? (எ - று.)

அறிதல் - ஈண்டு ஊடலையினிதுணர்தல். மற்று, வினைமாற்றின்கண்வந்தது. 'இவள் நங்காதலியல்லள்: அன்மையின் இந்நோவறியாள்: அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லை' எனத் தன்னுற்றுமை யுணர்த்தியவாறு.

(கு - ரை.) உணர்ப்புவயின்வாரா ஊடல் - நீக்குவித்தாலும் நீங்காத ஊடல். நம்காதல்நோயை யறிவதற்குத்தக்கவாறு காதலைத் தலைவி கொள்ளாவிட்டால், அத்தலைவியை நோவதனாற் பயனென்? அவள் நம்மாட்டுக் காதலுடையவளல்லவே என்று புலந்துகூறியவாறு. மற்றுஎன்பது-நோதல்என்ற வினையைத்தவிர்த்து நோவாமையென்ற வினையைத் தழுவுதலால், வினைமாற்றும். (அ)

கஙூ0கூ. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

இதுவுமது.

(இ - ள்.) நீர்உம் நிழலது ஏ இனிது-(உயிர்க்கு இன்றியமையாத)நீரும் நிழலின்கண்ணதே இனிதாவது: (ஏனை வெயிலின்கண்ணது ஆகாது); (அதுபோல),புலவி உம் - (கலவிக்கு இன்றியமையாத) புலவியும், வீழுநர்கண் ஏ இனிது-அன்புடையார்கண்ணே இனிதாவது: (ஏனையன் பிறார்கண் ஆகாது).

நிழற்கணிருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர், ஆற்றுமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையு முடையராவார்: இவள் நம்மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப்புலவிதானும் இன்னுதாகா நின்றதென்பதாம்.

(கு - ரை.) அவ்விரண்டும் - ஆற்றுமைக்குநோதலும், கூடுதற்கண் வேட்கையும். இன்னுதாகாநின்றது - துன்பந்தரத்தக்கதாயிருந்தது. (கூ)

கஙூ0ஏ. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மெல்ப தவா.

இதுவுமது.

(இ-ள்.) ஊடல் உணங்க - (தாம்) ஊடற்கண்ணே மெலியாநிற்கவும், விடுவாரோடு - விட்டிருக்கவல்லாரோடு, கூடுவேம் என்பது என் நெஞ்சம் - கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது, அவா - (தன்) அவாவே: (பிறிதில்லை); (எ - று.)

அன்புமருளுமில்லாதாரை உடையரென்றும் அவரோடியாங் கூடுவ மென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றூர்செய லாகலின், 'கூடுவே மென்பதவா' என்றான்; காரியம் காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட் டம், முடியாதென்பதாம்.

(கு - ரை.) தாம்-தலைவி. ஊடற்கண்ணே மெலியாநிற்கவும் - ஊடலே மேற்கொண்டதனால் மெலிவைக் கொண்டவளாக இருக்கவும். விட்டிருக்க வல்லார் - கணவனைச்சேராது பிரிந்திருக்கவல்ல மகளிர்: மகளிர் என்றது - இங்கே, தலைவியை. கூடுதலில் அவாவுற்றூர்செயலாகிய கூடுவேமென்பதனை அதற்குக்காரணமாகிய அவாவாகவே கொண்டு, 'கூடுவேமென்பது அவா' என்று கூறியமையால், இது, காரியங் காரணமாக உபசரிக்கப்பட்டதாம். அவா - பேராசை. (கo)

கஉ - ஆம் அதிகாரம்.—புலவி நுணுக்கம்.

அது, புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது-தலைமகனுந் தலை மகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற்காரணமில்லை யாகவும் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாக வுட் கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல் காரணத்தினுணுக்கம் காரியத்தின்மேனின்றது. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) ஓர் அமளிக்கண் - ஒருபடுக்கையில். புலத்தல் - பிணக்கங் கொள்ளுதல். கைம்மிகுதலால் - எல்லைகடந்திருத்தலால். நுண்ணியகாரணம்- சூட்சுமமாகக்கவனித்தால் புலத்தற்குரியதான காரணம். உட்கொண்டு-நினைத்து. அதனை - அக்காரணத்தை: அவன்மேலேற்றி - அந்தக்காதலன் செய் தானெக் கற்பித்து. புலவி - காரியம்: புலத்தற்குக்காரணம் காதலன்மேலேற் றிய நுண்ணிய தவறு: அக்காரணத்தின் நுணுக்கத்தைக் காரியமாகிய புலவி யின்மே லேற்றி, 'புலவிநுணுக்கம்' என்றது: இது, காரணத்தின்பண்பைக் காரியத்தின்மேலேற்றிக் கூறிய உபசாரவழக்காம்.

கஉகக. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நுண்ணேன் பரத்தநின் மார்பு.

உலாப்போய்வந்ததலைமகன் பள்ளியிடத்தானுகத் தலைமகள் சொல்லியது.

(இ - ள்.) பரத்த-பரத்தமை யுடையாய்! (நின்னை), பெண் இயலார் எல்லார் உம் - பெண்ணியல்பினையுடையார் யாவரும், கண்ணில் - (தங்)கண் ணால், பொது உண்பர்-பொதுவாகவுண்பர்: (அதனால்), நின் மார்பு - (அவர் மிச்சிலாய) நின்மார்பினை, நுண்ணேன் - பொருந்தேன்; (எ - று.)

கற்பு நாண் முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கைமாத்திரமேயென்னுங் கருத்தால் 'பெண்ணியலார்' என்றாள்.

பொதுவாகவுண்டல் - தஞ்சேரிச்செலவின் முறையானன்றிஒருகாலத்தொரு ங்கு நோக்குதல்: அதுவும் ஓர் குற்றம். தான் நோக்கியின்புற்றவாறே அவரும் நோக்கியின்புறுவ ரென ஆசங்கித்து அவர்பாற் பொருமையெய்துதலின், நுணுக்கமாயிற்று.

(கு - ரை.) உலாப்போய்வந்த தலைமகன் படுக்கையில் வந்திருக்கையில் தலைமகள் புலந்துசொல்லியது, இது. மகளிர்க்கு இருத்தற்குரிய உத்தம குணங்களாகிய கற்பு நாண் முதலியன இன்றி, பரத்தையரிடத்து பெண் தன்மைமாத்திரம் இருக்கின்ற தென்ற கருத்து, அவர்களைப் பெண்ணியலா ரென்றதனாற் பெறப்படும். பொதுவாகக் கண்ணுலுண்டல் - பரத்தையர்சேரி யில் தலைவன் உலாப்போம்போது யாவரும் ஒருங்கேபார்த்தல். அங்ஙனம் அவர்கள்கண்டது தலைவற்குக்குற்றமாகஎறிட்டுச்சொல்லுகின்றுள். தலைவனை நோக்கித் தலைவி எவ்வாறு இன்புற்றாளோ, அவ்வாறே அந்தப்பரத்தையரும் தலைவன்மார்பைப் பார்த்து இன்புறுவரென்று ஆசங்கித்து [=சங்கித்து] அவர்களிடம்பொருமையடைந்து கூறியதாதலால், இது புலவிநுணுக்கமாம்.

கருகஉ. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத்
தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

(இ-ள்.) ஊடி இருந்தேம் ஆ - (யாம் தம்மோடு) ஊடியுரையாடா திருந் தேமாக, தும்மினார்- காதலர்) தும்மினார்: யாம் தம்மை நீடு வாழ்க என்பாக்கு அறிந்து - (அது நீங்கித்) தம்மை நீடுவாழ்கென்றுரையாடுவேமாகக் கருதி.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற் றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோட லின், நுணுக்கமாயிற்று.

(கு - ரை.) தலைவி தன்னைச் செருக்குத்தோன்ற யாம் என்கின்றுள். தம்மோடு - தலைவரோடு. படுக்கையில் யான் தலைவரோடு ஊடிப்பேசாதிருக் கையில் பேசவேணுமென்று கருதித் தும்மினார்: இது தலைவர்செய்த குற்ற மென்கிறுள்: இங்ஙன் தலைவி கூறுதலால், புலவிநுணுக்கமாம். ஒருவ ரெதிரில் அன்பிற்குரியார் தும்மும்போது மற்றவர் 'நீர்க்காயுசு' என்று கூறு தல், இக்காலத்திலும் மரபாகவுள்ளது: அதன்பொருள் நீடுவாழவேணுமென் பது. இந்தமரபு, இங்கே அறியத்தக்கது. (உ)

கருகக. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

தலைமகளது புலவித்தறிப்பினைக் கண்டு 'நீயிர்கூடியோழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

(இ-ள்.) (யான்), கோடு பூ சூடின் உம்-கோடுதலைச்செய்யும் மாலையைச் சூடினேனுயினும்,—ஒருத்தியை காட்டிய சூடினீர் என்று-(தும்மாற்)காதலிக் கப்பட்டா ளொருத்திக்கு இப்பூவணிகாட்டல்வேண்டி சூடினீரென்று, காயும். வெகுளாநிற்கும்; (இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ?) (எ - று.)

கோடென்பது, முதனிலைத் தொழிற்பெயர். பூ - ஆகுபெயர். வலையமாகச் சூடினுமென்பதாம்; "கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்" என்றார் பிறரும். இனி அம்மருதநிலத்துப்பூவன்றி வேற்றுநிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினேனையினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப் பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளு மெனினு மமையும்.

(கு - ரை.) கூடியொழுகாநிற்கவும்-சேர்ந்திருக்கையிலும். இது-புலவி) கோட்டுப்பூ - கோடுதலைச்செய்யும் மாலை: வலையமாலை யென்றபடி. வலைய மாலையை யான் சூடினேனையினும் பூவணியை நும்மாற் காதலிக்கப்பட்டாட்குக் காட்டவே யான்சூடினேனென்று ஊடுகின்றா ளென்கிறான். கோடு என்ற பகுதியே தொழிற்பெயர்ப்பொருளையுடையதாய், கோடுதல் [வளைதல்] என்ற பொருளைத் தந்தது. பூ என்பது - பூவினாலியன்ற மாலைக்குக் காரணவாகுபெயர். கோடு - வலையமென்றபொருளில் வருதற்கு மேற்கோள் "கோட்டங்கண்ணியும் கொடுந்திரையாடையும்" என்பது: இத்தமேற்கோள் புறநானூற்றில் உவரி - இல் உள்ளது. இதன்பொருள், கோட்டங்கண்ணியும் - வலையமாகிய மாலையும், கொடுந்திரையாடையும் - வளைந்த திரையாடையும் என்பது. இனி இத்தக்குறளில் வேறோருரை:—கோட்டுப்பூ சூடின் உம்-(மருதநிலத்துப்பூவன்றி வேற்று நிலத்து) மரத்தின்கிளையில் தோன்றிய பூவைச்சூடினாலும் என்பது. பூ-கோட்டுப்பூ நீர்ப்பூ நிலப்பூ கொடிப்பூ என்று நால்வகைப்பட்டிருக்கும்: மருதநிலம் நீர்ப்பூ மிக்கது என்பது, இங்கே கருதுதற்கு உரியது. மருதநிலத்துப் பூவன்றி என்றது, அதிகாரம் புலவிநுணுக்கமாதலாலென்க: மருதத்திற்கு ஊடல் உரிப்பொருளாதலறிக. ஈண்டையாள்-இங்கேயிருப்பவள். (கூ)

கஉகச. யாரினுங் காதல மென்றெனை யூடினாள்
யாரினும் யாரினு மென்று.

இதுவுமது.

(இ - ள்.) யாரின்உம் காதலம் என்றேன்ஆ-(காமநுகர்தற்குரிய இருவராயினுள் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி) யாரினும் காதலமென்றே னாக,—(நின்றோழி அதுகருதாது),(என்னைக்காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கட்காதலுடையே னென்றேனாக்கருதி), யாரின் உம் யாரின்உம் என்று ஊடினாள் - (அம்மகளிர்) யாரினும் யாரினும் (எங்கண் காதலுடையராயினீர்) என்று சொல்லிப் புலந்தாள்; (எ - று.)

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யான் அன்புமிகுதியாற்சொல்லியதனைக் கருத்துவேறுபடக்கொண்டதல்லது பிறிதுகாரணமில்லை யென்பதாம்.

(கு - ரை.) நின்றோழி யென்றது - தலைவியை. யாரினும் காதலம் என்று தலைவன்சொன்னது - உலகத்துக் காமவின்பம் நுகர்தற்குரிய ஆண் பெண்களாகி இரட்டையராய யாவரினும் இரட்டையராகிய நாம் மிக்க அன்புடையேம் என்ற பொருளது. தலைவி அதற்குக் கொண்டபொருள் - நான் காமித்த பெண்பாலார் பலருள்ளும் உன்னிடத்து மிக்க காதலுடையேனென்

பது. ஆகவே, தலைவிகொண்டபொருளில், காதலம் என்றஇடத்துப் பன்மை உயர்ச்சிபற்றிவந்ததாகும். யாரினும் காதலம் என்பதற்கு வேறு பொருள் கொண்டதனற்பிணங்கினளென்று, பாங்கிக்குத் தலைவன் அறிவிக்கின்றான். யாரினும் என்ற அடுக்கு, புலந்தமை காட்டும். (ச)

கஙஉகடு. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

இதுவுமது.

(இ-ள்.) (காதன்மிகுதியான்), இம்மை பிறப்பில் பிரியலம் என்றேன் ஆ-இம்மையாகிய பிறப்பின்கண்(யாம்)பிரியேமென்று சொன்னேனாக, (அதனான் ஏனைமறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனாகக் கருதி), கண் நிறை நீர் கொண்டனள்-(அவள் தன்) கண்ணிறைந்த நீரினைக் கொண்டாள்; (எ - று.)

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது, என் பாற் றவறில்லை யென்பதாம்.

(கு - ரை.) வெளிப்படுசொல் - வேறு குறிப்புப்பொருளைக் கொள்ளாத சொல்: அது இங்கே, இம்மைப்பிறப்பிற் பிரியலன் என்றது: அச்சொற் றொடரை மறுமைப் பிறப்பிற் பிரிவேன் என்று குறிப்புப்பொருள்கொண்டுள்ளதாக என்மீது குற்றங்கற்பித்து, கண்ணிறைய நீரைக்கொண்டனள் உன்தோழி யென்று தலைவன் பாங்கியிடம் சொல்லுகிறான். பிரியலம்-தனித் தன்மைப்பன்மை. (ரு)

கஙஉகசூ. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

இதுவுமது.

(இ - ள்.) உள்ளினேன் என்றேன் - (பிரிந்தகாலத்து நின்னை யிடையின்றி நினைந்தேனென்னுங்கருத்தால் யான்)உள்ளினேனென்றேன்; (எனை, அதனை ஒருகால் மறந்து பின் நினைந்தேனென்றதாகக்கருதி), மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள்-என்னை(இடையே)மறந்தீ ரென்று சொல்லி முன் புல்லுதற்கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற் கமைந்தாள்; (எ - று.)

மற்று,வினைமாற்றின்கண்வந்தது. அருத்தாபத்திவகையான், மறத்தலை யுட்கொண்டு புலந்தாளென்பதாம்.

(கு-ரை.) உள்ளினேன் என்பது-சிந்தித்துக்கொண்டே யிருந்தேனென்றும், மறந்துபோக மீண்டும் நினைந்தேனென்றும் இருபொருள்தரற்கு உரியது. புல்லுதற்கு-தழுவுதற்கு. மற்றுஎன்பது உள்ளினேன் என்ற வினையை மாற்றி மறத்தல்தொழிலைக் காட்டுவதால், வினைமாற்றும். உள்ளினேன்என்பதற்கு நினைத்தேனென்று பொருள்கொள்ளுமிடத்து மறந்ததையே நினைக்க வேண்டுமாதலால், மறந்தமை அருத்தாபத்தியாற் பெறப்படும். (சு)

கஙஉகஎ. வழுத்தினு மும்மினே னாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

இதுவுமது.

(இ - ள்.) (கூடியிருக்கின்றவள்!), தும்மினேன் ஆக-யான் தும்மினேனாக, வழுத்தினாள்-(தன்னியற்கைபற்றி) வாழ்த்தினாள்: அழித்து (அங்ஙனம் வாழ்த்தியதானே) மறித்து, யார் உள்ளி தும்மினீர் என்று அழுதாள் - (நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள்) யாவர் நினைத்தலாற் தும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள்; (எ - று.)

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், 'அழித்து' என்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மலுண்டாமென்பது மகளிர் வழக்கு. இல்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம்.

(கு - ரை.) தும்மும்போது வாழ்த்துதல் மரபு என்பது, முன்னரே கூறப்பட்டது. மறித்து-மீண்டும். அன்புடையார் நினைந்தால் தும்மல் தோன்றும் என்கின்ற ஓர் கொள்கைபற்றி, தலைமகன் தும்மியபோது நும்மாற் காதலிக்கப்பட்டாருள் யாவள் உம்மை நினைந்தாளோ என்றுசொல்லிப் புலத்தாள் தலைவி யென்றனன். இல்வழக்கு-உண்மையான கொள்கையல்லாதது:வேறு காரணத்தாலும் தும்மல் தோன்றுமாதலால் இங்ஙனம்கூறியது. (எ)

கூடீஅ. தும்மூச் செறுப்ப வழுதா ணுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

இதுவுமது.

(இ-ள்.) தும்மு செறுப்ப-(எனக்குத் தும்மல்தோன்றியவழி யாருள்ளித் தும்மினீரென்று புலத்தலையஞ்சி) அதனை (யான் அடக்கினேன்; அங்ஙனம்) அடக்கவும்,— நுமர் உள்ளல்-நும்மை நினைத்தலை, எம்மை—, மறைத்திர்ஓ என்று - மறைக்கலுற்றீரோவென்று சொல்லி, அழுதாள் - புலந்தழுதாள்; (எ - று.)

தும்முவென்பது, முதனிலைத் தொழிற்பெயர். செறுப்பவென்புழி இறந்தது தழீஇயவெச்சவும்மை, விகாரத்தாற்றொக்கது. எம்மையென்பது நும்மோடு யாதுமியைபில்லாத வெம்மை என்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகுவென்ப. தும்மினுங்குற்றம், ஒழியினுங் குற்ற மாயக்காற் செயற்பாலது யாதென்பதாம்.

(கு - ரை.) தும்மூச் செறுப்ப-தும்மலை வெளிப்படாமல் யான் அடக்க: அடக்கியதற்குக்காரணம், யார் நும்மை நினைத்தலால் தும்மினீரோ என்று தலைவிபுலப்பாளே யென்பதனாலாகும். அதையுணர்ந்து நும்மைச் சேர்ந்த மகளிர் நும்மைநினைத்தலை மறைக்கவே தும்மலையடக்கினீ ரென்று புலந்தாளென்க. 'செறுப்ப' என்ற இடத்து எஞ்சிநின்ற எச்சவும்மை, தும்மினது பொருட்டு அழுததேயன்றி எனக் கீழ்க்குறளிற்கூறியதைத் தழுவுதலால், இறந்ததுதழுவிய எச்சமாம். எம்மையென்பது சொல்லுவான்குறிப்பினால் தும்மோடியையில்லாத எம்மைக்குறித்து என்று பொருள்தந்ததனால், இசையெச்சம்:"'ஆக்கும்பிரதிபத்துடனே''என்று தொடங்கும் பிரயோகவிவேகச் செய்யுளில், ''இனி அலங்காரநூலார் இசையெச்சத்தைக் காகு என்பர்: அதற்கு உதாரணம் நுமருள்ளலெம்மைமறைத்திரோ என்பதாம். அது, சொல்லுங்கால், முகவிகாரமாதல் சொல்விகாரமாதல் தோன்ற நிற்கும்'' என்று கூறியுள்ளது.

கஙுகசூ. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரின்னீர ராகுதி யென்று.

இதுவுமது.

(இ-ள்.) தன்னை உணர்த்தின் உம் காயும்-(இவ்வாற்றானுடைய) தன்னை (யான் பணிந்து)உணர்த்துங்காலும் வெகுளாதிற்கும்: பிறர்க்குமும் நீர் இ நீரர் ஆகுதிர் என்று-பிறமகளிர்க்கும் அவரடியவழி இவ்வாறே பணிந்துணர்த்தும் நீர்மையையுடையீராகுதிரென்று சொல்லி; (எ - று.)

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன்: பணிய, அதுதானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது: இனி யிவண்மாட்டுச் செய்யத்தகுவதியா தென்பதாம்.

(கு - ரை.) பணிந்து உணர்த்துங்காலும் - வணங்கிப் பிணக்கு நீக்கப் பார்த்தாலும். தலைவன் பணிவனென்பதை - "மனைவியுயர்வுங் கிழவோன் பணிவு நினையுங்காலைப் புலவியுளுரிய" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும் அறிக. "தப்பினேனென்றடி சேர்தலுமுண்டு" என்ற கலித்தொகையையும், "சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத், தொல்லை மணிமுடிமேற் சூட்டினேன்" என்ற நளவெண்பாவையும், "ஓங்கிய வேலான் பணியவும்" என்ற புறப்பொருள் வெண்பாமாலையடியையும் காண்க. (கூ)

கஙுஉ0. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

இதுவுமது.

(இ - ள்.) இருந்து - (என்சொற்களுஞ் செயல்களும்பற்றித் தான் வெகுடலான் அவற்றை) ஒழிந்திருந்து, நினைத்து நோக்கின் உம் - (தன்னை யவங்களதொப்பின்மையை) நினைந்து அவற்றையே நோக்கினும், காயும் - (என்னை) வெகுளாதிற்கும்; அனைத்துமும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - என்னவயவமனைத்தும் நோக்கினீர் (அவற்றதொப்புமையான்) எம் மகளிரை நினைந்தென்று சொல்லி; (எ - று.)

யான் எல்லாவவயவங்களானும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்றுலொருவராகப் பலரையும் நினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யான் அறியச்சொல்லுமினென்னுங் கருத்தால் 'அனைத்துநோக்கினீர் யாருள்ளி' என்றாள். வாளாவிருத்தலுங் குற்றமாயிற்றென்பதாம்.

(கு - ரை.) தன் அவயவங்களது - தலைவியின் உறுப்புக்களினுடைய. பிரிந்தோர் ஒப்புமைப்பொருளைப்பார்த்து ஆற்றியிருத்தலும் உண்டு ஆதலால், தும்மாற்காதலிக்கப்பட்ட மகளிரின் அவயவத்தை ஒக்குமென்றகாரணத்தாலேயே நோக்கினீர் என்று சொல்லி ஊடினாள். ஒன்றுலொருவராகப்பலரை நினைக்கவேண்டும்-கண்ணுல்ஒருத்தியோடு ஒப்பேன்: மூக்கால் ஒருத்தியோடு ஒப்பேன், வாயால் ஒருத்தியோடு ஒப்பேன்: இங்ஙன் என்னுறுப்புக்களனைத்தையும் நோக்கிநோக்கிப் பலரையும் நினைந்தீராகவேண்டும் என்றபடி. நீர் நினைந்த பலமகளிரையும் கூறுகென்று புலந்துகூறினளென்க. வாளாவிருத்தலும் - சொற்களும் செய்லும் இன்றி வெறுமனேயிருத்தலும். (கo)

கஙஙு - ஆம் அதிகாரம்.—ஊடலுவகை.

அஃதாவது - அப்பெற்றித்தாய ஊடலால் தமக்குக்கூடலின்பஞ் சிறந்துழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமகனுவத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) அப்பெற்றித்தாய - ஏறிட்டசிறியதவற்றைக் காரணமாகக் கொண்டு பிணக்குக் கொள்ளுந்தன்மையதாகிய.

கஙஉக. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்டதோழி
அங்ஙனம் நீ புலக்கின்றதென்னையென்றாட்கு அவள் சொல்லியது.

(இ - ள்.) அவர்க்கு தவறு இல்லை ஆயின் உம்-அவர்மாட்டுத்தவறில்லையாயினும்,—அவர் அளிக்கும் ஆறு-(நமக்கு) அவர் தலையளி செய்கின்றவாறு, ஊடுதல் வல்லது - (அவரோடு) ஊடுதலை விளைக்க வற்றாகின்றது; (எ - று.)

அவர்க்கென்பது, வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தராகலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாருமெய்துவரெனக்கருதி அது பொறாமையான் ஊடல்நிகழாநின்றதென்பதாம்.

(கு - ரை.) தலையளி - மிக்கஅன்பு. அவர்க்குஎன்பது - அவர்மாட்டு என்றுஏழனுருபுப்பொருளைத் தந்ததனால்,வேற்றுமைமயக்கமாம். ஒழிந்தாரும்-என்னைத்தவிர்ந்த மகளிரும். கருதி - ஐயப்பட்டு. (க)

கஙஉஉ. ஊடலிற் றோன்றுஞ் சிறிதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

'புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து
புலவியான் வருந்துவதென்னை?' என்றாட்கு அவள் சொல்லியது.

(இ - ள்.) ஊடலின் தோன்றும் சிறு துனி - ஊடலேதுவாக (நங்கண்) தோன்றுகின்ற சிறியதுனிதன்னால், நல் அளி வாடின் உம்-(காதலர் செய்யும்) நல்லதலையளி வாடுமாயினும், பாடு பெறும் - பெருமையெய்தும்; (எ - று.)

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமுநில்லாதென்பாள் 'சிறுதுனி' என்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனான் நல்லளி வாடாதென்பாள் 'வாடினும்'என்றும், பின்னே பேரின்பம்பயக்குமென்பாள் 'பாடுபெறும்' என்றுங் கூறினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம்.

(கு - ரை.) கீழ்ச்செய்யுளில், அவரளிக்குமாறு ஊடுதல் வல்லது என்றதொடரில், ஊடுதல் அவரைத் தலையளிசெய்யுமாறு வல்லதுஎன்றபொருளைத் தருவதாகக்கொண்டு, பாங்கி மீண்டும் வினாவ, தலைவி கூறுகின்றாளென்க. புலவாக்காலும் - புலவிகொள்ளாவிட்டாலும். தவறின்றி - தலைவரிடத்தில் தவறில்லாதிருக்க. ஆராமை - காதலடங்காமை. வாடினும், உம்மை - ஐயப்பொருளது. அது - சிறுதுனி. (உ)

கஙஉஙு. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

இதுவுமது.

(இ - ள்.) நிலத்தொடு நீர் இயைந்து அன்னாகத்து - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டு, புலத்தலின் - புலத்தல் போல,—புத்தேள் நாடு உண்டு ஓ-(நமக்கு)இன்பந்தருவதொரு புத்தேளுலக முண்டோ? (இல்லை); (எ - று.)

நீர்தான் நின்றநிலத்தியல்பிற்றுமாறுபோலக் காதலருந் தாங் கூடிய மகளிரியல்பினராகலான் அதுபற்றி அவரோடு புலவிநிகழுமென்பாள் 'நிலத்தொடுநீரியைந்தன்னராகத்து' என்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றதென்பாள் 'புலத்தலிற் புத்தேணுண்டோ' என்றுங் கூறினாள். உவமம், பயன்பற்றி வந்தது.

(கு - ரை.) நீர் நிலத்தியல்பாயிருப்பதுபோலத் தலைவரும் தாம் கூடும் மகளிரியல்பினரென்பது, 'நிலத்தொடு நீரியைந்தன்னர்' என்பதன் கருத்து. நமக்கும்அன்னர் - நம்மோடு கூடும்பொழுதும் நம்மியல்பினர். நிலத்தொடு சேர்ந்த நீரும் நிலத்தின் தன்மையதாதல்போல மகளிரொடுகூடிய தலைவரும் அம்மகளிரினியல்பினரென்றுகூறிய இந்த உவமை,பயன் விளைத்தல்பற்றிவந்த தாதலால், பயனுவமம். புத்தேள்நாடு - தேவருலகு. (ங)

கஙஉச. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

'அப்புலவி இனி யாதானீங்கும்?' என்றுட்தூ சொல்லியது.

(இ-ள்.) புல்லி-(காதலரைப்) புல்லிக்கொண்டு, விடா-(பின்) விடாமைக் கேதுவாகிய, புலவியுள் - அப்புலவிக்கண்ணே, தோன்றும் - உளதாம்: என் உள்ளம் உடைக்கும் படை-(அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைக்) கெடுக்கும் படைக்கலம்; (எ - று.)

புலவியுளென்னுமேழாவது, வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ள முடைக்கும் படைக்கலமென்றது, வணக்கத்தையும் பணிமொழியையும். படைக்கலம் என்றாள், அவற்றுன் அப்புலவியுள்ள மழிதலின். புலவி நீங்குந் திறங் கூறியவாறு.

(கு - ரை.) புலவி கலவியின்பத்தை மிகுவிக்கு மாதலால், அந்தப்புல வியை, 'புல்லிவிடாப் புலவி' என்றது. புலவியுண்டாம்போது புலவியிற் சென்ற மனத்தை யுடைக்கும் படையும் உடன்தோன்று மென்கிறு ளென்க. புலவியென்பதன் ஈற்றில் ஏழனுருபு தொக்குள்ளது: இதன்பொருளே வினை நிகழ்ச்சியென்றார். படைதோன்றுதலாகிய வினைநிகழ்வது புலத்தல்தொழில் நிகழும்போது ஆதலால், இது வினைநிகழ்ச்சியெனப்பட்டது. இங்ஙன் வருவது வடமொழியில் சதிசத்தமி யெனப்படுமென்ப: ''உடனிகழ்கின்ற'' என்று தொடங்கும் பிரயோகவிவேகச் செய்யுளினுரையில், ''சதிசத்தமியைத் தொல்காப்பியர் வினைசெய்யிடமென்பர்: பரிமேலழகர் வினைநிகழ்ச்சியென் பர்'' என்று கூறியதும், தொல்காப்பியவுரையில் ''வினைசெய்யிடத்தினின்'' என்பதற்குத் தட்டுப்புடைக்கண் வந்தான் என்று உதாரணங்காட்டியிருப்ப துங்காண்க. புலவிநீங்குந்திறம் - புலவிநீங்கும்வகை. (ச)

கஙஉடு. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து.

தலைமகளையூடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) தவறு இலர் ஆயின் உம்-(ஆடவர் தங்கண்)தவறிலராயினும், (உடையார்போல ஊடப்பட்டு), தாம் வீழ்வார் மெல்தோள் அகறலின் - தாம் விரும்பும் மகளிருடைய மெல்லியதோள்களைக் கூடப்பெறாத வெல்லைக்கண், ஆங்குஒன்றுஉடைத்து-(அவர்க்கு)அப்பெற்றியதோரின்பம்பயத்தலுடைத்து.

உடையராயக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமும்எய்துவராகலின் அது மிக நன்று: மற்றையிலராயக்காலும் வருமின்பத்தை யிகழ்ந்ததில்லை யென்னுங் கருத்தால், தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றான். ஊட லினாயவின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றிய தொன் றென்றான். தவறின்றியூடியதூஉம் எனக்கின்பமாயிற்றென்பதாம்.

(கு-ரை.) கழியுவகை-மிக்கமகிழ்ச்சி. கூடப்பெறாத எல்லைக்கண்-கூடப் பெறாத நிலையேற்பட்டவிடத்து. இன்பம்பயத்தலுடையது, அவ்வூடலின்பின் கூடிய கூடலென்க.மேற்குறளில் புணர்தலினூடலினிதுஎன்பதை விவரிக்கு மிடத்து அகன்று கூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாம் என்று விவ ரங்கூறுவதும், அதற்கு உபமானம் அமைந்திருக்கும்வகையும் நோக்குக. உடையராயக்கால் - தவறுடையரானால். இறந்த இன்பம் - கழிந்த இன்பம். இலராயக்காலும்-தவறில்லாதபோதும். வருமின்பத்தை - தவறுடையார்க்கு வரும் இன்பத்தை. அப்பெற்றியதொன்று-அப்படிப்பட்டதொன்று. இன்ன படியுள்ளதென்று வாயாற்கூறமுடியாத தொன்று. (௫)

கங௨௬. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.

இதுவுமது.

(இ - ள்.) (உயிர்க்கு), உணலின் உம் - மேலுண்பதனினும், உண்டது அறல் - முன்னுண்டதறுதல், இனிது - இன்பந்தரும்; (அதுபோல), காமம்- காமத்திற்கு, புணர்தலின்-மேற்புணர்தலினும், ஊடல்-(முன்னைத்தவறுபற்றி) ஊடுதல், இனிது - இன்பந்தரும்; (எ - று.)

காமத்திற்கென்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தாற்றொக் கன. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாம்: அதுபோல, அகன்று கூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாமெனத் தன்னனுபவம் பற்றிக்கூறியவாறு.

(கு - ரை.) அறுதல்-ஜீரணித்தல். காமம்=காமத்திற்கு: இங்கே, இன் சாரியையும், நான்கனுருபும் தொக்கனவென்க. ஆராததுமாய்-போதுமென்ற திருப்திபிறவாததாய். (௬)

கங௨௭. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

இதுவுமது.

(இ - ள்.) (காமநுகர்தற்குரிய இருவருள்), ஊடலில் தோற்றவர் - ஊடலின்கட்டோற்றவர், வென்றார் - வென்றாராவர்; அது கூடலில் காணப் படும் - அஃது (அப்பொழுதறியப்படாதாயினும் பின்னைப்) புணர்ச்சியின்கண் (அவரால்)அறியப்படும்; (எ - று.)

தோற்றவர்-எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்ப மெய்தலின் வென்றாராயினார். மன்னும் உம்மும், அசைநிலை. யான் அது பொழுது சாய்தலின், இதுபொழுது பேரின்பம்பெற்றேனென்பதாம்.

(கு - ரை.) அவரால்-ஊடலில்தோற்றவரால். எதிர்தலாற்றாது சாய்ந்தவர் - எதிர்த்துநிற்கமாட்டாமற் பணிந்தவர். அதுபொழுது - ஊடல்நிகழ்ந்த பொழுது. இதுபொழுது - கூடல் நிகழ்ந்தபொழுது. (எ

௧௩௨௮. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

இதுவுமது.

(இ - ள்.) (இதுபொழுது இவள்), நுதல் வெயர்ப்ப-நுதல் வெயர்க்கும் வகை, கூடலில் தோன்றிய-கலவியின்கணுளதாய, உப்பு-இனிமையை, ஊடி பெறுகுவம் கொல் ஓ - (இன்னுமொருகால்)இவளூடி யாம்பெறவல்லேமோ?

கலவியது விசேடம்பற்றி 'நுதல்வெயர்ப்ப' என்றான். இனிமை-கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறிதலானாய வின்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு.

(கு - ரை.) இனிமை-இங்கே, ஐம்பொறிகளாலும் நுகரப்படும்இன்பம்: அதனைத்தெரிவிக்கவே, கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறிதலினாலாய இன்பம் என்றாராயிற்று. "கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும்" என்பது, கீழ் 1101-ஆம் குறளிலுள்ளது. நுதல் வெயர்த்தல், 'புருஷாயிதம்' எனப்படும் புணர்ச்சியிற் பிறக்குமென்பர். அப்பேறு - அவ்வினிமையைப்பெறுதல். (அ)

௧௩௨௯. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

இதுவுமது.

(இ-ள்.) ஒளி இழை-ஒளியிழையினையுடையாள், ஊடுகமன்-(இன்னும் எம்மோடு)ஊடுவாளாக;(அங்ஙனம் அவளூடி நிற்றற்கும்), (அதனை யுணர்த்து தற்பொருட்டு), யாம் இரப்ப யாம் இரந்து நிற்றற்கும், (காலம்பெறும்வகை), இரா நீடுக மன் - இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக; (எ - று.)

ஊடுக நீடுகவென்பன, வேண்டிக்கோடற்பொருள். மன்னிரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள், அசைநிலை. கூடலின் ஊடலேயமையுமென்பதாம்.

(கு - ரை.) வியங்கோள்கள், வேண்டிக்கோடற்பொருளன. "கழிவே யாக்கமொழியிசைக்கிளவியென், றம்மூன்றென்ப மன்னைச் சொல்லே" என்பது, தொல்காப்பியம். மன்-ஆக்கப்பொருளதாதலால்தான், ஊடுக என்பது ஊடுவாளாக எனவும், நீடுகஎன்பது நீள்வதாகஎனவும் பொருள்பட்டன என்க. மன் என்பவற்றின் பின்னுள்ள ஓகாரங்கள் அசைநிலைப் பொருளன என்றார். (௯)

௧௩௩௦. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

இதுவுமது.

(இ-ள்.)காமத்திற்குஇன்பம் ஊடுதல்-காமநுகர்ச்சிக்கின்பமாவது(அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்முளூடுதல்; அதற்கு இன்பம் - அவ்

ஊடுதற்கின்பமாவது, கூடி முயங்க பெறின் - (அதனையளவறிந்து நீங்கித் தம்மூட்)கூடி முயங்குதல் கூடுமாயின், (அம்முயக்கம்); (எ - று.)

கூடுதல்-ஒத்தவளவினராதல். முதிர்ந்ததனியாய வழித் துன்பம்பயத்தலானும், முதிராதபுலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்குமிடையாகிய அளவறிந்து நீங்குத லரி தென்பதுபற்றி 'கூடிமுயங்கப் பெறின்' என்றார். அவ்விரண்டின்பமும், யான் பெற்றே னென்பதாம்.

(கு - ரை.) அதனை - அக்காமவின்பத்தை. ஆராமை - அடங்காமை. அதனை-அப்பிணக்கை. அளவறிந்துநீங்கி-கொள்ளவேண்டிய அளவுகொண்டு மிகாதபடி அப்பிணக்கைநீங்கி. புலவி - முதிராதஊடல். முதிர்ந்த ஊடல் - தனி: இவ்விரண்டற்கும் இடைப்பட்டநிலைமையில் ஊடல் நிகழவேண்டுமென்க. அவ்விரண்டின்பம் - காமவின்பம், ஊடலின்பம் என்பன. (கo)

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவியென நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றாமை யுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதலீறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின்விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்பலீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தன்முதல் ஊடலுவகையீறாயவற்றுள்ளுங் கண்டுகொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்தினையு மீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாரெனின்,—அஃது அறம் பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவன்மையானும், முனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத்துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டொழிக்கப்பட்டதென்க.

(கு - ரை.) பிரிவு-விப்ரலம்பஸ்ருங்காரம்: அதனை, வடநூலார் நான்காகப்பகுத்துள்ளார்: அவற்றுள் செலவு என்பது-ப்ரவாஸம் எனவும், புலவி - ஈர்ஷ்யாஎனவும், விதுப்பு-அ[ஹி]லாஷமெனவும், ஆற்றுமை-விரஹம் எனவும்படும்: ஒருசாரார் ஆற்றுமையைக் கருணமென்பர். பிரிவினைக்கூறும், கற்பியலுள், செலவு-பிரிவாற்றுமையென்ற ஓரதிகாரத்தாலும், ஆற்றுமை-படர்மெலிந்திரங்கல்முதல் நிறையழிதலீறுகிய பத்து அதிகாரங்களாலும், விதுப்பு-அவர்வயின் விதும்பல்முதல் புணர்ச்சிவிதும்பலீறுகிய மூன்றதிகாரங்களாலும், புலவி - நெஞ்சொடுபுலத்தல்முதல் ஊடலுவகையீறுகவுள்ள நான்கு அதிகாரங்களாலும் கூறப்பட்டன என, பிரிவு, செலவுமுதலிய நான்கனுள் அடங்கும்வகையைக் காட்டினர் பரிமேலழகர்.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருக்குறள் முற்றிற்று.

திருக்குறள் காமத்துப்பாலின் செய்யுண் முதற்குறிப்பகராதி.

அசையியற் 15
அணங்குகொல் 3
அரிதரோதேற்ற 54
அரிதாற்றி 58
அலந்தாரை 138
அலரேழ 45
அலர்நாண 49
அவர்தந்தா 71
அவர்நெஞ் 132
அழல்போலு 97
அளித்தஞ்ச 55
அறிகிலா 43
அறிதோறறியாமை 24
அறுவாய்நி 29
அனிச்சப்பூ 28
அனிச்சமு 30
இமைப்பிற்கரப் 36
இம்மைப்பிறப்பிற் 144
இருநோக்கிவ 10
இருத்துள்ளி 105
இலங்கிழா 116
இல்லேதவறவர்க் 147
இளித்தக்க 130
இனியன்ன 133
இன்கணுடைத் 53
இன்பங்க 62
இன்னுயிர் 57
உடம்பா 32
உணலினு 149
உண்டார்க 9
உப்பமைத்தற்றுற் 137
உய்த்தலறிந்து 129
உரனசைஇ 117
உவக்காணெங் 73
உவந்துறைவ 36
உழந்துழந்து 68
உள்ளக்களித்த 127
உள்ளத்தார் 108
உள்ளம்போன்று 64
உள்ளிலுங் 82
உள்ளினே 144
உள்ளுவன்மன்யானு 72
உள்ளுவன்மன்யான் 34
உறுஅதவர்க் 132
உறுஅதவர்போ 14
உறுஅதோ 46
உறுஅர்க்கு 81
உறுதோறு 21
ஊடலிற்றோற் 149
ஊடலிற்றோன்றுஞ் 147
ஊடலினுண்டாங் 139
ஊடலுணங்க 140
ஊடலுணர்த 23
ஊடறகட் 128
ஊடிப்பெறுகுவங் 150
ஊடியவரை 138
ஊடியிருந்தேமா 142
ஊடுகமன் 150
ஊடுதல் 150
ஊரவர்கௌவை 48
எழுதுங்காற் 129
எள்ளினிளிவா 135
எனைத்துநினைப்பி 85
எனைத்தொன் 82
எதிலார்போல 15
ஒண்ணுதற் 8
ஒருதலையா 79
ஒருநாளெழு 120
ஓஒவினிதே 68
ஒம்பினமைந் 55
கடலன்ன 41
கடாஅக்களிற்றின் 7
கண்களவு 11
கண்டதுமன் 47
கண்டாங்க 65
கண்டாருயி 6
கண்டுகேட் 17
கண்ணிறைந்த 122
கண்ணிற்றுனித்தே 131
கண்ணின்பசப்போ 104
கண்ணுங்கொளச் 106
கண்ணுள்ளார் 35
கண்ணுள்ளிற் 34
கண்ணெதிரே 16
கதுமெனத் 66
கயலுண்கண் 88
கரத்தலு 60
கரப்பினுங் 122
கருமணியிற் 33
கலக்குணர்த்துங் 107
கவ்வையாற் 47
களித்தொறுங் 47
கனவினுளுண் 89
காணிற்குவளை 27
காணுங்காற் 129
காண்கமற் 117
காதலவரில்வழி 95
காதலர்தூதொடு 88
காதலவரி 105
காமக்கடன் 61
காமக்கடு-லு 40
காமக்கடு-னீ 63
காமக்கணிச்சி 110
காமமுநாணு 61
காமமுழந்து 37
காமமென 110
காமம்விடு 107
காலைக்குச் 95
காலையரும்பி 96
குறிக்கொண் 13
கூடியகாமம் 117
கூற்றமோ 6
கேட்டார்க்கு 133
கொடியார்கொடுமை 64
கொடியார்கொடுமை 101
கொடும்புருவங் 7
கோட்டுப்பூ 142
சாயலுநாணு 72
சிறுமைநமக் 99
செல்லாமை 53
செறுஅச்சிறு 15
செறிதொடி 123
செற்றவர்பின் 112
செற்றென 106
செற்றார்பின் 111
தஞ்சந்தம 136
தணந்தமை 100
தண்ணந்துறைவன் 124
தந்நெஞ்சத் 84
தம்மிலிருந்து 22
தவறிலரா 148

தனியேயிருந்து 134
தன்னேயுணர்த்தினு 146
தாம்வீழ்வார்தம் 77
தாம்வீழ்வார்மென் 19
தாம்வேண்டி 50
தினைத்துணேயு 127
துஞ்சுங்காற் 91
துப்பினெவ 62
தும்முச்செறுப்ப 145
துறைவன் 56
துனியும் 139
துன்பத்திற் 135
துன்னுத் 109
தெரிக்துணர 66
தொடலைக் 40
தொடிநோக்கி 125
தொடியொடு 102
தொடிற்சுடி 57
நசைஇயார் 80
நயந்தவர்க்கு 71
நயந்தவர்நல்காமை 100
நலத்தகை 138
நனவினுற் 89
நனவினுஞ்சீத்தா 92
நனவினுனல்காக் 90
நனவினுனல்காத 89
நனவினுனல்காரை 91
நனவென 90
நன்னீரை 25
நாங்காதல் 79
நாணுமறந்தே 135
நாணென 112
நாணெடு 39
நிணந்தீயி 114
நிறையரியர் 42
நிறையுடையே 111
நினைத்திருந்து 146
நினைத்தொன்று 104
நினைப்பவர் 83
நீங்கிற்றெறுழ 20
நீருநிழல 140
நெஞ்சத்தார் 35
நெய்யாலெரி 49
நெருநற்றுச் 125
நோக்கினுணோக்கி 12
நோக்கினுணோக்கெ 4
நோதலெவன் 140
நோனுவுடம்பு 38
பசக்கமற் 75
பசந்தாளி 75
பசப்பெனப் 76
படலாற்று 67
பணைதோள்குப் 101
பண்டறியேன் 5
பதிமருண்டு 98
பரிந்தவர்நல் 108
பருவரலும் 80
பனியரும்பி 94
பன்மாயக்கள்வன் 113
பாடுபெறுதி 102
பாலொடு 31
பிணிக்கு 18
பிணையேர் 9
பிரிவுரைக்கும் 56
புலத்தலிற் 147
புலப்பலென 114
புலப்பேன் 118
புல்லாதிராஅப் 137
புல்லிக்கிடந்தேன் 74
புல்லிவிட்டாஅப் 148
புன்கண்ணே 94
பெண்ணியலா 141
பெண்ணினுற் 126
பெயலாற்று 67
பெரிதாற்றி 124
பெரு அமையஞ்சும் 134
பெறினென் 120
பேணுதுபெட்டா 68
பேணுதுபெட்பவே 128
பொருண்மாலை 98
மடலூர்தல் 41
மணியுட் 123
மதியுமடந்தை 28
மலரன்ன-ண் 30
மலரன்ன-ள் 46
மலரினுமெல்லிது 130
மலர்காணின் 26
மறப்பினெவ 85
மறைபெற 70
மறைப்பேன்மற் 111
மறைப்பேன்மன் 59
மற்றியா 84
மன்னுயிரெல் 63
மாதர்முகம் 30
மாலைதோய் 96
மாலையோவல்லை 93
முகைமொக்கு 123
மூயக்கிடை 103
மூயங்கிய 103
மூறிமேனி 27
யாங்கண்ணிற் 44
யாமுமூளேம் 83
யாரினுங் 143
யாஞைக்குங் 12
வருகமற் 118
வழுத்தினு 144
வாராக்காற் 69
வாழ்தலுயிர் 33
வாழ்வார்க்கு 78
வாளற்றுப் 115
விடாஅது 86
விளக்கற்றம் 74
விளியுமெனின் 86
வினைகலக்து 119
வீழப்படுவார் 78
வீழுநர்வீழ 78
வீழுமிருவர்க் 22
வீழ்வாரினின் 80
வேட்டபொழுதி 20

அசை - 1146, 1164, 1184, 1327
அசையியல், 1098
அஞர்-துன்பம், 1086, 1179 [1177
அடுக்கு இடைவிடாமை யுணர்த்தல்,
அடுகூரு-வெளிப்படை, 1090
அட்டுதல்- வார்த்தல், 1093
அணங்கு, 1081 [1207
அதிகாரத்தான்வருதல், 1088, 1173,
அத்துச்சாரியை யல்வழிக்கண்வருத
அநுமானம், 1232 [ல், 1191
அந்தியகீபம், 1281
அமர்த்தல் - அமர்செய்தல், மாறுபடு
தல், 1083, 1084
அம்பல், 1139
அயர்கம், 1268
அரிது-விலக்குறிப்புப்பெயர், 1160
அரிமயிர்த் திரண்முன்கை, 1090
அரிவைமுயக்கு × தமதுபாத்துண்
ணல், 1107
அருத்தாபத்தி. 1194, 1316
அலந்தார்-துன்பமுற்றழிந்தார், 1303
அலரெழவுயிர்கிற்கும், 1141
அலர், 1139, 1146, 1149
அல்லகுறிப்படுதல், 1141
அல்லலேய், 1301
அவாய்நிலை, 1103, 1124
அழித்து-மறித்து, 1317 [1256
அளித்து இகழ்ச்சிக்குறிப்பு, 1168,
அளியளித்தல்-அளிசெய்தல், 1192
அள்ளிக்கொள்வற்று, 1187
அறத்தொடுநிற்றல், 114-அதி. அவ.
அறல்-சீரணித்தல், 1326
அறிவில்லாரெம்மைநகுதல்யாம்பட்ட
தாம்படாமையால், 1140
அறுவாய்-குறைந்தஇடம், 1117
அற்றம்-மீக்குகை, 1186
அனிச்சம், 1111, 1115
அன்புடையார் நினைத்தவழித்தும்மல்
தோன்றுதல், 1317
அன்மொழித் தொகை, 1135
ஆகுபெயர், 1105,1206,1214,1268
ஆக்கம் வருவித்தல், 1189
ஆங்கு-அசைநிலை, 1307 [றல், 1133
ஆண்மை-ஒன்றற்குந் தளராது நிற்
ஆயன்குழல், 1228
ஆயிடையெனச் சுட்டுநீளல், 1179
ஆயிழைபுணர்ச்சி உயிர்க்குஉடலோடு
கூடிவாழ்தல்போலும், 1124
ஆஃதோ செல்வர்க் கொத்தனென்,
இகரச் சுட்டுவருவித்தல், 1082[1161
இகத்தல், 1130
இகழ்ச்சிக் குறிப்பு, 1168, 1256
இசையெச்சம், 1318
இடக்கர்ப்பொருளாவாகச் சொல்லிய
புணர்ச்சித் தொழில்கள், 1101
இடத்தலேப்பாடு, 1102
இடும்பை, 1295
இயற்கைப்புணர்ச்சி, 109-அதி. அவ.
குறிப்புரை.
இயற்கைப்புணர்ச்சிக்குமுன் கைக்
கிளைநிகழும்: 109-அதி.அவ.குறிப்
இயற்படமொழிதல், 1129 [புரை.
இயற்பழித்தல், 1129
இரவுக்குறி, 1116 [லன்பு, 1109
இருதலேப் புள்ளிலேருயிராய உழுவ
இருள்விளக்கற்றம்பார்க்கும் × பசப்பு
கொண்கன் முயக்கற்றம்பார்க்கும்,
1186
இலக்கணைக் குறிப்பு, 1115, 1244
இவக்காண், 1185
இவர்தல், 1182
இழிவு சிறப்பும்மை, 1127, 1199
இளித்தக்க, 1288
இளிவு, 1298
இறத்தல் - கடத்தல், 1254
இறுதி விளக்கு, 1281
இறுமாத்தல், 1112
இறுவியாகின்றனை, 1163
இறை - மூன்னங்கையில் வளையல்
தங்குமிடம், 1157
இறைஞ்சுதல், 1093
இனி-இப்பொழுது, 1083
இன்கண்-இன்பம், 1152
இன்பதுன்பங்கள், 1122
இன்றிளுங் கெல்லாம், 1254
உக்கக்கால், 1270
உடம்பொடுபுணர்த்து, 1270
உடன்பாட்டுக் குறிப்பு, 1111
உடன்போக்கு, 1110, 1120
உட்குதல், 1088

உண்ங்குதல் - மெலிதல், 1310
உணராமை-புலவிநீங்காமை, 1304
உணர்தல், 1109, 1246
உணர்த்துதல் - நீக்குதல், 1246
உணர்ப்புவயின் வாராவூடல், 1299
உணலினுமுண்டதறலினிது × காமம் புணர்தலி னூடலினிது, 1326
உபசரித்தல், 1146
உப்பு × புலவி, 1302: இனிமை, 1328
உம்மைசிறப்பின்கண், 1289
உயர்வுசிறப்பும்மை, 1153
உயல், 1212
உயிருடம்புகளின் நட்பு, 1122
உயிர்தளிர்த்தல், 1106
உய்த்தல்-ஈர்த்துக்கொண்டு போதல், 1287
உய்வில்நோய், 1174: உய்வு-ஒழிவு.
உரன், 1263
உருவகத்தாற் பெறப்படும் பொருள், 1227
உருவகவகையாற் கூறப்படுவதுபுனைந்துரை, 1113
உரையசை, 1228
உலகியலன்மை, 1252
உலகியல், 1203
உலகியன்மேலிட்டுக்கூறுதல், 1096
உலப்பு-உதவுதல், 1293
உவக்காண், 1185
உவமம்பயன்பற்றிவருதல், 1323
உழுவலன்பு, 1109
உவமை, 1087
உள்ளம்என்பதில் அம்மு - பகுதிப் பொருள்விகுதி, 1249
உள்ளமுடைக்கும்படை புலவியுள் தோன்றும், 1324
உள்ளி-தேடி, 1249
ஊக்குதல்-நெகிழ்த்தல், 1238
ஊடலிற்றோற்றவர்வென்றூர், 1327
ஊடல்முதலியன காமங் கூடியார் பெற்றபயன், 1109 [1143
ஊரறிந்தகௌவை உறவுதொன்று, ஊர், 1129, 1142, 1158
ஊற்றுநீர், 1161
எச்சத்திரிபு, 1244, 1260
எச்சவும்மை, 1138
எதிர்கிரணிறை, 1183
எத்தாலியர்வாழ்வேன், 1206
எயிறு, 1121 [1241
எவ்வநோய்-ஒன்றுனுந் தீராதநோய்,
எழுதுங்கால் கோல்காணுக்கண் × கொண்கனைக்கண்டவிடத்து அவன் பழிகாணுதலிலி, 1285
எள்ளி-இகழ்ந்து, 1298
எற்று-எத்தன்மைத்து, 1256
ஏகதேசவுருவகம், 1093, 1147, 1227
ஏங்குதல்-1248
ஏங்குபவர்க்கொருநாளெழுநாள் போல் செல்லும், 1269
ஏதிலர், 1129, 1130, 1224
ஏமப்புணை, 1164
ஏழாவது வினைகிழச்சிக்கண் வருவது, 1324
ஏழுநாளாகப் பிரிவை ஐயுற்றது, 1278
ஏழென்பது மிக்கபன்மை குறிப்பது, 1269
ஏர்தல்-ஒத்தல், 1089
ஐகாரம் முன்னிலையொருமைவிகுதி, 1301
ஐம்புலனு மொண்டொடி கண்ணேயுள, 1101
ஐயம், 1081
ஒடுஉருபு விகாரத்தாற்றோகல், 1264
ஒடு-வேறு வினைக்கண் வருதல், 1235
ஒட்டிநின்ற இடைசசொல், 1185
ஒத்தி - ஒத்திருக்க விரும்புகின்றாய், 1119
ஒருசொன்னீர்மை, 1112, 1132
ஒருவர்கூறையெழுவருடுத்து, 1269
ஒருவழித்தணத்தல், 1125
ஒல்கிடத்து - தளர்வுவந்த இடத்து, 1293
ஒல்லுதல்-உடம்படுதல், 1271
ஒல்லை விரைவில், 1096
ஒல்வதென்னுந்தொழிற்பெயர், 1149
ஒழியிசை, 1125, 1161, 1178
ஒன்றென்பது கொடுமைவிளக்கல், 1216: சிறுமைவிளக்கல், 1257
ஒன்றோ, 1257
ஓ-பிரிநிலை, 1247: இரக்கக்குறிப்பு, 1252: வியப்பின்கட்குறிப்பு, 1088
ஓகாரம்-அசைநிலை, 1178, 1329
ஓகாரவிறுதிச்சொல் இடைவிடாமையுணர்த்தல், 1204

ஓசைவகையா னருமை யுணர்த்தல், 1160
ஓர்ப்பு, 1132
கடம்பூண்டொருகானீவந்தை, 1301
கடலன்னகாமம், 1137
கடலாற்றுக்காமநோய், 1175
கடாம், 1087
கடும்பூனல்-கடல்: × காமம், 1167
கடைப்பிடி, 1132
கட்டு-கண்ணியுடையது, 1083
கட்படாம், 1087
கணிச்சி, 1251
கண்ணுள்ளார்காதலவர், 1127
கதுப்பிளுள், 1105
கதுமென-விரைவாக, 1173
கந்து, 1292
கயலுண்கண், 1212 [1129
கரப்பாக்கு - வினைப்பெயர், 1127,
கரப்பினும்-அடக்கினும், 1271
கருக்காய் × புலவியில்லாக் காமம்,
கருமணியிற்பாவாய், 1123 [1306
கலந்துணர்த்தல் - கலவியால்நீக்கு
கலம்-ஆபரணம், 1262 [தல், 1246
கலுழ்தல்-அழுதல், 1173 [1156
கவவுக்கடுமை - முயக்கத்தின் மிகுதி,
கவவுக்கை, 1235 [அவ.
கவிக்கூற்றுகிய அதிகாரம், 127 அதி.
கவின்-அழகு, 1234
கவ்வித-கவ்வையையுடையது, 1144
கவ்வை-அலர், 1144
கழறுவார்-இடித்துக்கூறுவார், 1086
கழற்றெதிர்மறுத்தல், 1103
கழிந்ததற்கிரங்கல் தற்புகழ்தலன்று, 1088
கழிமடச்செய்கை, 1172
கழியும்-கழலும், 1262
களரி-இடம், 1224
களவுகொள்ளுதல், 1092
களித்தல், 1281
களித்தார், 1288
கூளித்தொறும் கள்ளுண்டல்வேட்டல் × காமம் வெளிப்படுத்தோறு மினிதாதல், 1145
களிறு, 1087
கள் × கள்வன்மார்பு, 1288
கள்ளுக்கும்காமத்திற்குமுள்ள வேறுபாடு, 1090, 1281
கள்ளுண்டார்க்கு வரும் இளித்தக்க இன்னுதன, 1288
கள்வன்மார்பு × கள், 1288
கனங்குழை, 1081 [அவ.
கனைமுந்துறுதவினையில்லை, 123 அதி.
கா - காவடி, 1196
காகு, 1318
காட்சி, 1081, 1114
காண்-உரையசை, 1294
காண்கம், 1301
காத்தண்டு, 1163
காமத்தீ நீங்கிற்றெறாஉங் குறுகுங் காற் றண்ணெண்ணும், 1104
காமநுகர்தற்குரியாரிருவர் குறிப்பு முதலிய ஒருகாலத்தே யொத்து இடன்முதலியபெற்றுக் காமநுகர்தல், 1289
காமநோய், 1159, 1175, 1255, 1280
காமநோய்க்கு ஊரவர்கௌவை எருவன்னசொல் நீர், 1147 [1252
காமமெனவொன்றே கண்ணின்று,
காமம்ஒருதலையானின்றுது, இருதலையானும் இனிது, 1196
காமன், 1197
காய்தல்-வெறுத்தல், 1208: கோபித்தல், 1319
காரணங் காரியத்தின்மேல் சிற்றல், 132 அதி. அவ.
காரிகை, 1262, 1272
கால்களைதல் - காம்புகளைதல், 1115
காழில்கனி × காமநுகர்ச்சி: (காழ் - பரல்), 1191
காணம், 1125
குருதி காப்புளிக்கும்வேலான், 1182
குவளை, 1114
குழல் × மாலைக்குத் தூதாகித் தலைவியைக்கொல்லும்படை, 1228
குறிக்கொண்டு-குறிப்பிட்டு, 1095
குறிப்பு, 1097
குறிப்புச்சொல், 1235, 1237, 1315
குறிப்பெச்சம், 1090, 1223
குன்றினெஞ்சுபகவெறிந்த, 1250
கூடல், 1284, 1327, 1328
கூற்று, 1083
கெட்டார்க்கு நட்டாரில், 1293
கெழீஇயின்மை - நல்வினையின்மை, 1194

கேளிர்-நினைந்துழிநினைக்கப்பட்டார்க்குத் தும்மல்தோன்றும், 1203
கைகடந்து-மீறி, 1271
கைகோள்-களவியல்: உரைப்பா.
கைம்மாறு-பிரதி, 1183
கொண்கன்-கணவன், 1265
கொலைக்களம், 1224
கொல்-அசைநிலை, 1207
கொள்வுற்று, 1187
கோடு-வளைதல், 1313
கோடுகொடேறுதல், 1264
கோட்டங் கண்ணியும் கொடுந்திரையாடையும், 1313
கோட்டுப்பூ, 1313
கௌவை, 1150
கௌவையற் காமநுதுப்பால் × நெய்யால் எரிநுதுப்பல், 1148
சாபம் பிரிவுவகையுளொன்றுகக்கூட்டப்படுதல், 1330
சாயல்-மேனியழகு,1183[கல், 1326
சாரியையுமுருபும் விகாரத்தாற் றொகாற்றுதல்-விரியவுணர்த்தல், 1212
சிறக்கணித்தல்-சிறந்தகணித்தல்,1095
சிறுசொல்-இன்னுதசொல், 1097
சிறுமை-ஆற்றுமை, 1231 [1161
சுட்டுப்பெயர்இஃதோவென்றுதிரிதல், சுட்டுப் பெயர் சொல்லுவான் குறிப்பொடுகூடிய பொருளுணர்த்தும், 127-அதி. அவ.
சேம்பாகம் - ஒத்தபாதி, 1092
செம்பொருள், 1223
செயப்படுபொருளே வினைமுதல் போலக்கூறுதல், 1257
செய்தெனெச்சம் செயவெனெச்சமாதல், 1229, 1231
செலவு ஆற்றுமை விதுப்புப் புலவிகள்-பிரிவின்வகை, 1330
செல்லாமை-பிரியாமை, 1151
செவி, 1199
செறுஅ, 1097
செறுஅய், 1200
செறுதசொல்-இனியசொல், 1097
செறூர், 1096
செறுப்ப அடக்க, 1318 [1256
செற்றவர் - பகைவர், அகன்றவர், செற்றூர்-வெறுத்தார், 1245: அகன்றூர்: பகைவர், 1255
சேட் சென்றூர்-வெகுதூரஞ் சென்ற சேட்படை, 1096 [வர், 1231
சொல்லெச்சம், 1095
ஞாட்பு-போர்க்களம், 1088
தகை-தருக்கு, 1182
தகைபிறசொல்லடுத்து வரல்:—நலத்தகை, புலத்தகை, 1305
தஞ்சம்-எளிமை, 1300
தணத்தல், 1233, 1277
தண்டாநோய்-தணியாநோய், 1171
தண்ணந்துறைவன், 1277
தண்மை-மென்மை, 1239
தலைப்படுதல்,1289 [1268
தலைமகள் கூற்றுதல் பொருந்தாது, தலைமாறு-கைம்மாறு, 1183 [1258
தலைமைபற்றி ஒன்றன்மேல் நிற்றல், தலையளி, 1153
தவறு தலைவனேக்கண்டவழிநினைந்து காணுவழி மறத்தல், 1297
தவ்வெனல், 1144
தன்னேப்பிறர்போற்கூறுதல், 1154
தன்னெய்க்குத்தானேமருந்து, 1102
தாமரைக்கண்ணன், 1103
தாயைப் பணிகோடல் உலகியலன்தானே, 1082 [மை, 1282
திங்களைப்பாம்பு தீண்டுதல், 1146
திருமால், 1103
தினைய, 1296
தினை, 1282
தீயிலிட்ட நிணம் × கணவரைக் கண்டாலுருகு நெஞ்சினராய மகளிர், தீண்டுதல், 1106 [1260
துஞ்சுதல், 1179
துணை-அளவு,1282: துணைவர், 1234
துப்பு-பகைமை: "துப்பெதிர்ந்தோர்க்கேயுள்ளாச்சேய்மையன்" (புறநானூறு: 380), 1165
தும்மியச்சால்வாழ்த்துதல்மரபு,1312
தும்மல் × காமம், 1253[றம், 1317-8
தும்மினூலுங்குற்றம், ஒழிந்தாலுங்குற்
துறந்தார்-வீட்டுச்சென்றவர், 1250
துறைவன், 1157, 1277
துனி-முதிர்ந்தகலாம், 1306
துனித்தல்-ஊடுதல், 1290 [1299
துன்பத்திற்கு யாரே துணையாவார், துன்னு-கூடாவணணம், 1250
தூது, 1228

தூவி, 1120
தூற்றுதல், 1157
தெறூஉம், 1104
தேற்றம், 1153
தோடூ, 1135
தொழிலான் ஆணெழித்தல், 1147
தோழியிற்கூட்டம், 1105
தோள்கலங்கழியும், 1262
தோற்றம், 1084
நகுதல், 1094
நசை, 1156
நட்டார்-நண்பினர், 1293
நண்ணூர், 1088
நயத்தல்-விரும்புதல், 1181
நயப்பு-அன்பு, 1121
நலம்பாராட்டல், 1178
நல்காமை-பிரிவு, 1181
நல்குதல், 1156
நல்லபறைபடுதல், 1115
நல்லாண்மை, 1133
நறூ, 1090
நனவு, 1213, 1214 [பிற்று, 1247
நன்னெஞ்சே-நல்லையென்னும் குறிப்
நாடித்தரல்-தேடித்தரல், 1214
நாணம்மடம் அச்சம்பயிர்ப்பு பெண்டகை, 1083, 1125
நாணுத்தாழ்வீழ்த்ததவு, 1251
நாளொற்றிவிரல்தேய்தல், 1261
நாற்றம்மூகைமொக்குளுள்ளது × ஒருகுறிப்பு பேதைநகைமொக்குள்
நாற்றம்வெறி, 1113 [உள்ளது,1274
நிதானம்-காரணம், 1102
நிலத்தொடு நீரியைதல் × காதலர் மகளிரியலபினராதல், 1323
நிரதிசயவின்பம், 1103
நீத்தார்-பிரிந்துசென்றவர், 1220
நீர்த்துமேம்பூணை, 1164
நீரும் நிழலின்கண்ணேயினிது × புலவியும்வீழுநர்கண்ணேயினிது,1309
நீரை, (நீர்-குணம்) 1111
நுசுப்பு-இடை, 1115 [அதி
நுணுக்கம் (புலவிநுணுக்கம்), 132 -
நுதல், 1238
நுதுப்புதல்-அவித்தல், 1148
நூல் கால்யாத்த மாலை வெண்குடை, 1144
நெஞ்சு-மனம்,1246,உள்ளிடம்,1250
நெய்தற்பறை செத்தார்க்குப்படுவது; 1115
நெய்யால் எரிநுதுப்பல் × கௌவை யாற் காமநுதுப்பல், 1148
நெருஞ்சிப்பழம், 1120
நெருநற்று, 1278
நேர்தல்-உடம்படுதல், 1181
நோக்கம், 1085, 1092 [1099
நோக்கு அழகு,1082:பார்வை,1089,
நோய், 1091, 1102
நோய்செய்யு நோக்கினைப் பொது நோக்கென லாகாது, 1091
நோனு, 1132, 1163
பகற்குறி, 1115
பகை-அபகாரம், 1225
பசப்புறுபருவரல், 119-அதி. அவ.
பசைதல்-நெகிழ்தல், 1098
படர்தருதல்-வருதல், 1229
படர்மெலிந்திரங்கல், 117-அதி.
படல்-உறங்கல், 1175
படாம், 1087 தல், 1210
படுதல்-ஒலித்தல், 1115, அஸ்தமித்
படை, 1258, 1324
பட்டாங்கு-பட்டவகை, 1189
பணிமொழி பெண்மை யுடைக்கும்
பணை-பெருமை, 1234 [படை,1258
பண்டு, 1083, 1133
பண்டையிற்சிறப்பு, 1152
பண்பு, 1181
பண்புவமை, 1302
பதி-நீலை, 1116: ஊர்-1229
பந்தெறிக்தவயா, 119-அதி-அவ.
பரத்தன், 1311
பரிதல்-இரங்குதல், 1248
பருகுதல், 1266
பருவரல்-துன்பம், 1240
பழிகாணுமை, 1285
பறை, 1115
பனியரும்பல்-நடுக்கமெய்தல், 1223
பூை, 1282
பாகம், 1092
பாக்கியம், 1141
பாங்கறகூட்டம், 1103
பாடு-மேம்பாடு,1237:பெருமை,1322
பாத்தல் - பகுத்தல், 1107
பார்வல், 1152
பாவை, 1123

பிணிக்குமருந்துபிற, 1102
பிணை, 1085, 1089
பிரிவச்சம், 1178
பிரிவு, 1152
பிரிவு கால்வகை: ஐவகை யென்பர் ஒருசார்வடநூலார், 1330
பிற-அசைநிலை, 1181
பிறப்பு, 1315
பின்-இடப்பொருட்டு, 1293 [1160
பின்னிருத்தல் - பின்னுமிருத்தல்,
பீடு-வலி, 1088
பீழித்தல் வருத்துதல், 1217
புடைபெயர்தல், 1187
புணர்ச்சித்தொழில்கள், 1101
புணர்ச்சிபிரிவெனக்காமவின்பம்இரு வகைப்படுதல், காமத்துப்பால், உரைப்பா. [லுமாம், 1260
புணர்தல்-மிகநணுகுதல், எதிர்ப்பட
புணர்வு, 1152
புதை, 1134
புத்தேணாடு, 1323
புருவம், 1086
புரைபடுதல்-பழுதுபடுதல், 1287
புல-புலவி, 1305
புலத்தை-புலப்பாய், 1301
புலந்துகூறுகையில் தோழியைவேறு படுத்துக்கூறுதல், 1129
புலப்பல், 1259
புலவி × உப்பு: 1302
புல்லிவிடாப்புலவி, 1324
புல்லுதல், 1259, 1301
புறக்கவின்-உடம்பினழகு, 1250
புற்கெனல், 1261
புன்பாய்பவர், 1287
புன்கண்-அச்சம், 1152
பூ, 1313
பூசல்-ஆரவாரம், 1237
பேட்பமிழை, 1257, 1276 [1258
பெண்மை - பெண்தன்மை, நிறை,
பெண்மையுடைக்கும் படைபணிமொழி, 1258
பெயரடியாயவினை, 1083
பேணியார் - விரும்பியவர், 1256
பேதை - பருவப்பெயரன்றி மடமை பற்றிவந்தபெயர், 1136
பேதைக்குத் தோள் அமிழ்தினியன் பைதல்-துன்பம், 1172 [றன, 1106
பைந்தொடி, 1234 [கிலை, 1091
பொதுநோக்கு நோய்செய்யிற் கைக்
பொதுமையாற்கூறல், 1221
பொதுவணி, 1116
பொய்க்கரவு, 1246[படுதல், 1287
பொய்த்தல் - முடிவுபோகாமற் புரை
பொய்பாராட்டல், 1118
பொருண்மாலையாளர், 1230
போசராசன், காமத்துப்பாலின் உரை
போது-பேரரும்பு, 1227 [ப்பாயிரம்.
போல, 1095, 1099, 1117, 1159, 1161, 1196, 1224 [யசை, 1228
போலும், 1105, 1232, 1233: உரை
போல், 1090, 1096, 1097, 1118, 1180, 1186, 1222, 1253, 1269, 1273, 1274, 1285, 1287
போன்று, 1097, 1203
மகளிர்நாலே விரலொற்றியெண்ணும் வழக்கு, 1261
மகளிர்வழக்கு, (நினைக்கப்பட்டார்க்கு த்தும்மல் தோன்று மென்பது,)
மகிழ்தல்-உணர்வழிதல், 1281[1317
மடநோக்கு - வெருவுத லுடைய நோக்கு, 1089
மடந்தையொடெம்மிடை நட்பு × உடம்பொடுயிரிடைநட்பு, 1122
மடமை, 1297
மடல், 1131, 1133
மடவரல், 1085
மணியுட்டிகழ்தரு நூல் × மடந்தை யணியுட்டிகழ்தரு மொருகுறிப்பு, 1273
மதக்களிற்றுக்குக் கட்படாமிடல் × மாதர் முலைக்கட் டுகிலிடல், 1087
மதியின்மூலமாய் இருவர்கண்ணுஞ் சேர்தல், 1210
மதியுடம்பாடு, 1099 [ல, 1099
மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சிபோ
மந்திரமருந்துகளால்நீத்தம்பிக்கப்படுதல், 1159
மயில், 1081
மரத்தின்றொழில் நெஞ்சின்மேலேற்றியது, கோடுகொடேறு மென்னெஞ்சு என்றஇடத்து: 1264
மருண்மாலை, 1230
மருளுதல்-மயங்குதல், 1139
மருந்து, 1102, 1241, 1275

மலரினுமெல்லிதுகாமம், 1289
மலர் தொட்டதுணையான் மணச் செவ்வியழிவது, 1289
மழை-குளிர்ச்சி, 1239
மறித்து-மாற்றி, 1317
மறுகுதல்-சுழலுதல், 1139
மறுகு-தெரு, 1139
மறுத்தலெயெச்சம் வருவித்தல், 1166
மறை-மறைத்தல், 1254, 1138
மற்று-வினைமாற்று, 1155
மனை, 1268
மன்-ஒழியிசை, 1102, 1216, 1253: ஆக்கம், 1329: அசைநிலை, 1327
மன்மதன்-யாவரிடத்தும் நிகழ்வன வற்றை விருப்பு வெறுப்பின்றி யறியுங்கடவுள், 1197
மன்ற, 1136
மன்று, 1138
மன்றுபடுதல்-பலருமறிதல், 1254
மன்னுயிர், 1168
மா-மாமை, 1107
மாதர், 1081
மாயக்கள்வன் (மாயம்-பொய்), 1258
மார்பு × கள், 1288
மாலை-அந்தி, 1135 × கொலைக்களத் தேதிலர், 1224: இயல்பு, 1230
மாற்றுகிலையணி, 1183 [86
மீகுதிக்கண்மேற்சென்றிடித்தல், 10
மீன்-நட்சத்திரம், 1116
முகம், 1118
முகை, 1274 [ஓடுபுனல்பாய்தல், 1287
முடிவறியப்புலத்தல் × உய்த்தலறிய
முதலொடுசினைக்கொற்றுமை, 1210
முதனிலைத் தொழிற்பெயர், 1313,
முத்தம் × முறுவல், 1113 [1318
முயக்கு, 1107, 1108
முலை, 1087
முள்ளூறழ்முலையெயிறு, 1152
முறி × மேனி: முறுவல் × முத்தம், 1113
மூற்றுமை, 1101
மூற்றுமை விகாரத்தாற் றொகல், 1108, 1247
மூன்னிலைவினைவிகுதி, 1301
மேனி, × முறி, 1113
மையாத்தல்-மயங்குதல், 1112
மொக்குள்-முகிழ்ப்பு, 1274
யாப்பு-அன்பு, 1093
யாமம்-நடுரோத்திரி, 1252
வடநூலார், 1318, 1330
வடநூல், 1330
வரைவிடைவைத்துப்பிரிவு, 1129
வல்வரவு-விரைந்துவருகை, 1151
வழிபடாமை - அனுசரித்து நடவா
வழுத்துதல், 1317 [மை, 1298
வளி-1108, 1239
வள்ளிவாடியதை முதலாகிதல் × ஊடி யவரை யுணராமை, 1304
வறிதுநகைதோற்றல், 1094
வன்கண்ணர், 1156
வன்புறை, 1178
வாய்விடுதல், 126-அதி. அவ.
வாழி-அசைநிலை, 1210, இகழ்ச்சிக் குறிப்பு, 1242, உடன்பாட்டுக் குறிப்பு, 1111: குறிப்புச்சொல், 1221
வாழ்வார்க்கு வானம் பயத்தல் × வீழ்வார்க்குவீழ்வாரளியளித்தல், 1192
வாளற்றுப்புற்கென்றகண், 1261
விதும்புதல்-விரைதல், 1290
வியங்கோள்வேண்டிக்கோடற்பொரு
வரல், 1261 [ட்டு, 1265, 1266
விலக்கணி, 1151
வினைக்குறிப்புப்பெயர், 1160
வினைநிகழ்ச்சி யென்று பரிமேலழகர் கூறியதைத்தொல்காப்பியர் வினை செய்யிடமென்பர், 1324
வினைப்பெயர், 1127
வீழ்தல்-விரும்புதல், 1108, 1198
வீழ்வார்க்கு வீழ்வாரளியளித்தல் × வாழ்வார்க்கு வானம் பயத்தல், 1192
வெளிப்படுசொல், 1315 [1192
வெளிப்படை - 'அடுஞரு', 1090
வெள்ளம், 1170
வெறி, 1113
வேட்கைமிகவு, 1257, 1271
வேட்டற்றொல், 1145
வேந்தன், 1268
வேபாக்கு, 1128
வேய், 1113
வேலை, 1221
வேல், 1113
வேற்றுமை மயக்கம், 1231, 1292

திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகிய

திருவள்ளுவ மாலை.

க.—அசரீரி.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்மர் எனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

(இ - ள்.) திரு தகு தெய்வம் - அருட்செல்வத்தையும் (அதற்குத்) தக்க தெய்வத்தன்மையையு முடைய, திருவள்ளுவரோடு—, உருதகு நல் பலகை - (அவரிருத்தற்குத் தனது) உருவத்தினுலே தக்க நல்ல சங்கப்பல கையிடத்து, உருத்திரசன்மர்—, ஒக்க இருக்க என உரைத்து - சமானரா யிருக்கக்கடவரென்றுசொல்லி, வானில் - ஆகாசத்திலிருந்து, ஒருக்க - (அவ் விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம்) ஒற்றுமைசெய்யும்படி, ஓர் சொல் - ஒருவாக்கியம், ஓவென்றது - ஓவென்று இரைந்தெழுந்தது; (எ - று.)

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்பவாகலின், திருவென்ற தற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை - தெய்வத்தினவதார மாய் விளங்குகை. தெய்வத்தன்மை இல்லார்க்கு அருளுளதாயினும் அத னுலே பெரும்பயன் விளையாமையின், தகுதிசொல்லப்பட்டது. திருவள்ளுவ ரென்னும் பெயருள் திருவென்பது உயர்வையும் வள்ளுவரென்பது வண் மையையுடையரென்பதையும் விளக்கிநின்றனவாகலின், அது வேதத்தில் இலேமறைகாய்கள்போற் பலவிடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களேயெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்னுங் காரணம்பற்றிவந்த பெயராயிற்று. வள்—முதனிலே, அர் இறுதிநிலே, உ - சாரியை. அம்முதனிலேக்குப் பொருள் - ஈகை. உருத்திர சன்மர் - உருத்திரனுல் அடைந்த ஜந்மத்தை யுடையவரென வீரியும்: அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூங்கைப் பிள்ளையார். அசரீரி - அருவமாயெங்கு நிறைந்துள்ள முதற்றெய்வம். அரங் கேற்றத் தொடங்கியகாலத்துத் தெய்வப்புலவரோடு ஒப்பவிருந்து கேட்டற் குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி, இவ் வசரீரி வாக்கியம் பிறந்தது. என்றதெனப் படர்க்கை வினையாகக் கூறலின், ஆண்டு நின்றுகேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தன ரென்றறிக.

உ.—நாமகள்.

நாடா முதலுன் மறைநான் முகனுவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(இ - ள்.) கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற-பகை வரை (ப்புறங்கொடுக்கச்செய்து) இகழ்ந்தவெற்றியை உண்டாக்கி விளங்கா நின்ற இலைபோலுந் தகட்டுவடிவாயுள்ள வேற்படையையுடைய பாண்டிய ராசனே! நாடா - (உலகத்தார் விதிவிலக்குகளே அறிந்து உய்யும்வழியை) நாடி, முதல் - படைப்புக்காலத்திலே, நான்முகன் நாவில் - பிரமனது நாவி லிருந்து, நான்மறை பாடா-இருக்குமுதலாகிய நான்கு வேதங்களையும் பரடி, இடை - (இதற்கும் அதற்கும்) நடுவானகாலத்திலே, பாரதம் பகர்ந்தேன் - பாரதமாகிய வேதத்தைச்சொல்லினேன்: பின் - (அதற்குப்) பிற்பட்ட இக் காலத்திலே, என் வாக்கு—,வள்ளுவன் வாயது - (திருக்குறளாகிய வேதத் தைச் சொல்லி) வள்ளுவன்வாயின் கண்ணதாயிற்று; (எ - று.)

வேதமும் சந்தோரூபமாகையால் பாடா என்றாள். தன்கணவனுகலின் நான்முகனுவி லிருந்தென்றும், அவனவதாரமாகலின் வள்ளுவன் வாயதென் வாக்கு என்றும் கூறினாள். பாரதம் வியாசரைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனுல், நான்மறை - பூர்வவேதமும், பாரதம் மத்தியவேதமும், திருக்குறள்- உத்தரவேதமும் என்றதாயிற்று. பூர்வவேதம் பின் வியாசரலே நான்காக வகுக்கப்பட்டமைபற்றி நான்மறையெனப்பட்டது. அன்றி நானெனப் பிரித்து எழுவாயாக்கினுமாம். வேதம் மூவகைத்தென்பதூஉம், இவற்றது தோற்றமுறையால் இது வாக்கியப்பிரமாணத்திற் சிறப்புடைத்தென்பதூஉம் சொல்லியபடி. (உ)

ஈ.—இறையனூர்.

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(இ-ள்.) மன் புலவன் வள்ளுவன் வாய்சொல் - புலவர்க்கரசனுகிய வள் ளுவன்வாயிற் பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர் புலராது-எக்காலத் தும் தன்னழகுகெடாமல், நாள் செல்லுகினும் நின்று அலர்ந்து-நெடுங்காலம் கழியினும் நிலைபெற்று மலர்ந்து,தேன் பிலிற்று நீர்மையதாய்-தேனைச்சொரி கின்ற குணமுடையதாய் (விளங்குமாதலால்), குன்றுத செந்தளிர் கற்பகத் தின்-குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தினது, தெய்வத் திரு மலர்போன்ம்-தெய்வத்தன்மைபொருந்திய உயர்வாகியமலர்போலும்; (எ-று.)

திருக்குறளுக்கு, அழகு - சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், அலர்தல் - எங்கும் பரவுதலும், தேன் பிலிற்றல் - இருமையின்பங்களும் விளைத்தலுமாம். சொல்—ஆகுபெயர். இறையனூர் கடவுளாகலின், இனி இதிற் சிறப்பதொன் றுளதாவதின் றென்னுந் துணிவு தோன்ற என்றும் என்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு நாட்செல்லுகினுஞின்று என்றும் வாழ்த்துப்பொருள்பட இவ்வாறு கூறினர். இஃதழியாது கின்று பெருகிப் பயன்படுமாறு சொல்லியபடி. (ஈ)

ச.—உக்கிரப்பெருவழுதியார்.

நான்மறையின் மெய்ப்பொருளை மூப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனுத் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(இ - ள்.) வள்ளுவனுய்—, தான்மறைந்து - தனது திருமேனியை மறைத்து, நான்மறையின் மெய்ப்பொருளை - நான்கு வேதங்களின் னுண்மைப் பொருளை, தந்து - (இவ்வுலகத்திலே) கொணர்ந்து, மூப்பொருள்ஆ - (அறம் பொருளின்பமென்னு) மூப்பாற்பொருளதாக, நான்முகத்தோன்-பிரமனுல், உரைத்த - திருவாய்மலர்ந்தருளப்பட்ட, நூல் - நூலினது, முறையை - புத்தகத்தை, சென்னி வந்திக்க - (எனது)தலையானது தொழக்கடவது: வாய் வாழ்த்துக - வாயானது வாழ்த்தக்கடவது: நல் நெஞ்சம் சிந்திக்க - நல்ல மனமானது நினைக்கக்கடவது: செவி கேட்க - காதுகளானவை கேட்கக் கடவன; (எ - று.)

மூப்பொருள்—ஆகுபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ் சொல்லியோனுலேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர்களாலும், பிறராலும் ஒன்றற்கொன்று மாறுகக்கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வ தன்றென்பது தோன்ற மெய்ப்பொருள்என்றார். கலியுணர் புலமையிற் றலைமையோனுகி விதிமுறைவழாது முதனிலம்புரக்கும் பெருந்தகையுக்கிரப்பெருவழுதி யென்னுந் தன்னிகரில்லாமன்னவர்பெருமான் தான் மேற்கொண்டசிறப்பைப் பலரும் அறிந்துமேற்கொள்ள இவ்வாறு வழிபாடு கூறினுன், "மன்னனெப்படி மன்னுயிரப்படி" ஆகலின். இப்புத்தகத்தை முன்னே பூசித்து மெய்ம் மொழி மனங்களால் வணக்கஞ்செய்து பின் கேட்க வேண்டுமென்று சொல்லியபடி. (ச)

ரு.—கபிலர்.

நிலையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பலையளவு காட்டும் படித்தான்—மலையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனுர்
வெள்ளைக் குறட்பா வினிர்.

(இ - ள்.) மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளம் நாட - மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே! வள்ளுவனூர் வெள்ளைக் குறட்பா விரி - திருவள்ளுவரால்அருளிச்செய்யப்பட்ட குறள்வெண்பா (மிகப்பெரியபொருளைத்) தன்னுட்கொண்டு காட்டுதல்,—தினை அளவு போதா சிறு புல் நீர் - தினையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கணுள்ள பனி நீரானது, ஞெண்ட பனை அளவு காட்டும் படித்து - உயர்ந்த பனையினளவான அதன் சாயையைத் தன்னுட்கொண்டுகாட்டுங் குணம்போலுள்ள குணத்தை யுடைத்து; (எ - று.)

பனை—ஆகுபெயர். ஆல் - அசை. பறவை-கிளிமுதலியவை. உலக்கைப் பாட்டு - மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி-விரித்தல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப்பெரிய பனைமரத்தின்சாயை அடங்கிவிளங்குகின்றதோ, அப்படியே மிகச்சிறிய இக்குறள்வெண்பாவில் மிகப்பெரிய பொருள் அடங்கிவிளங்குகின்றதென்பதாம். இது சுருங்கியிருந்தும் விரிவானபொருளை விளக்குமாறு சொல்லியபடி. இதுமுதலியன சங்கத்துப்புலவராலே பாடப்பட்டன. (நி)

கூ.—பரணர்.

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது மகந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(இ - ள்.) மாலும் - திருமாலும், குறள்ஆய் - குறளாய்ப்பிறந்து, வளர்ந்து—,இரண்டுமாண் அடியால்-இரண்டுபெரிய அடிகளால்,ஞாலம் முழுதும்-உலகமனைத்தையும், மகந்தளந்தான் - விரும்பி அளந்தான்: வால்அறிவின் வள்ளுவரும் - மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும், தம் குறள்வெண்பா அடியால் - தம்மினின்றுந்தோன்றி (அங்கிலேகித்கின்ற) வெண்பாக்குறளின் (இரண்டுசிறிய) அடிகளால், வையத்தார் உள்ளுவ எல்லாம் - அவ்வுலக மனைத்தினுமுள்ளோரால் நினைக்கப்பட்டவற்றை யெல்லாம், ஓர்ந்து அளந்தார் - ஆராய்ந்து அளந்தார்; (எ - று.)

உம்மையிரண்டும்-முறையே தேவரிற்பெரியோனுமெனவும், மனிதரிற்சிறியராய்க்காணப்பட்ட வென்றும் பொருள்படநின்றன. உவமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால் உவமேயத்திலே அவற்றுக்கு முரணுகிய நிலைநிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத் தானே குறளாதலும் பின்பு அங்கிலேகில்லாதுவளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தையளத்தலும்,திருவள்ளுவருக்குத் தம்மினின்றுங் குறளே உண்டாக்குதலும், அது தன்னிலேநிற்றலும், அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களே அளத்தலும் சொல்லப்படுதலால் வேற்றுமையறிக. நினைக்கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளவுசெய்யப்பட்டமை சொல்லியபடி.

எ.—நக்கீரர்.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று.

(இ - ள்.) தானே முழுதுணர்ந்து - தாமே (வேதப்பொருள்) அனைத்தையும் அறிந்து, தண் தமிழின் - தண்ணிய தமிழின்கண், வெண்குறளால் - குறள்வெண்பாக்களால், ஆனு அறம் முதல் ஆம் அந்நான்கும் - விட்டுநீங்கு தல்கூடாத அறம் முதலாகிய அந்நான்கு பொருள்களையும், ஏனோருக்கு - அவற்றையறியாதவர்களுக்கு, (அவர் எளிதினறிய), ஊழின் - முறையால், உரைத்தாற்கும் - சொல்லியருளிய திருவள்ளுவர்க்கும், ஒள் நீர் முகிலுக்கும் - ஒள்ளிய நீரைத்தந்த மேகத்துக்கும், உலகு - இவ்வுலகமானது, மற்று என் ஆற்றும் - எதிர்நன்றியாது செய்யும்? (செயக்கிடந்தது ஒன்றும் இல்லை; வாழி - (அவரும் அதுவும்) வாழ்க; (எ - று.)

ஆனுமை - நீங்காமை. தானே முழுதுணர்ந்தனவே ஆசாரியராயிருந்து பிறாறிவிக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுதுமென்னு மும்மை தொக்கது. ஒண்மை - இனிமைமேல் நின்றது. முறை - நூலின் முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. நாயனர் கொடைச்சிறப்புச் சொல்லியபடி. (எ)

அ.—மாழலனார்.

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்.) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின் திறம் - அறமுதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப்பொருள்களாகிய நான்கனது கூறுபாட்டையும், தெரிந்து-அறிந்து, செப்பிய-(உலகத்தார்க்குச்) சொல்லிய, தேவை-தேவனே, மறந்தேயும்-மறந்தாயினும், வள்ளுவன் என்பான் - (ஒருமனிதனுக உட்கொண்டு) வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனுயின் அவன், பேதை-அறிவில்லாதவனுவன்: அவன் வாய் சொல்-அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை, அறிவுடையார்—,கொள்ளார் - கொள்ளமாட்டார்; (எ-று.)

அறமுதலியவற்றின் கூறுபாடு - அவற்றினது தொகைவகைவிரிகள், மறந்தேயும் என்றதனுல், நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையனென்றதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படி நன்கு யோசித்து உயர்த்திச்சொல்லப்படுதலால், ஒருமனிதனுக வுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது: அன்றி, ஒலிக்குறிப்பினுலே, சாதியிலிவுதோன்ற வள்ளுவனென்பா னெனினு மமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காகுசரமென்பர். தெய்வப்புலவரை அவமதிப்பினிழிவு சொல்லியபடி. (அ)

கூ.—கல்லாடர்.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவருரு மியைபவே வள்ளுவனார்
மூப்பான் மொழிந்த மொழி.

(இ - ள்.) ஆறு சமயத்தார் - அறுவகைமதத்தோருள், ஒன்றே பொருள் எனின் - (ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய) பொருள்கள் ஒன்றேயென்று நாட்டுவராயின், வேறு என்ப - (மற்றொருமதத் தோர் தமது நூலிலே அதனை மறுத்து அவை) வேறுமென்று நாட்டுவர்: வேறுஎனினும் - (அப்படி) வேறென்றுநாட்டின், அன்று என்ப-(பின்னொரு மதத்தோர் அதனை) அன்றென்றுமறுப்பர்: (ஆதலால் சமய நூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன : வள்ளுவனார் முப்பான் மொழிந்த மொழி - திருவள்ளுவரிடமே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை, நன்று என - நன் றென்று கொள்ளுதற்கு, எப்பாலவரும் - எவ்வகைப்பட்ட பகுதியோரும், இயைப - உடன்படுவர், (எ - று.)

மொழி - ஆகுபெயர். ஆறுமதமாவன - வியாசமதம், சைமினிமதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவமுதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாருமென்னாது எப்பால வரும் என்றதனால், வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம், முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவப்படுதலறிக. இதுவே பொது வேத மென்றபடி. (கூ)

கo.—சீத்தலைச் சாத்தனார்.

மும்மலையு முந்நாடு மூன்நதியு முப்பதியு
மும்மரசு முத்தமிழு மூக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

(இ - ள்.) வள்ளுவர்-திருவள்ளுவரது, பா முறை தேர் முப்பால்-பாக்க ளின் (மூன்பின்) முறைதெரிதற்கிடனுகிய திருக்குறளானது,—மும்மலையும்- (கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற) மூன்றுமலைகளையும், முந்நாடும் - (குடநாடு புனனாடு தென்னாடு எனப்படுகின்ற) மூன்றுநாடுகளை யும், முந்நதியும்-(பொருனைநதி காவிரிநதி வையைநதி எனப்படுகின்ற)மூன்று நதிகளையும், முப்பதியும்-(கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற) மூன்று பதிகளையும், மும்முரசும் -(மங்கலமுரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப் படுகின்ற) மூன்று முரசுகளையும், முத்தமிழும் - (இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற) மூன்றுதமிழ்களையும், மூக்கொடியும் - (வில் கொடி புலிக்கொடி மீன்க்கொடி எனப்படுகின்ற) மூன்று கொடிகளையும்,

மும்மாவும் - (கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற) மூன்று குதிரைகளையும், தாம் உடைய மன்னர் - தாம்முறையேயுடைய(சேரசோழபாண்டியர் எனப்படுகின்ற) மூவரசருடையவும், தட முடிமேல் - பெரிய முடிகளின் மேலே (கொள்ளப்பட்ட), தார் அன்றே - மாலையன்றே? (எ - று.)

அன்றேவென்றது பலரறிதேற்றம். மும்பால் - ஆகுபெயர். மும்மூரசும் முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும் இம்முறையுரிமை அவர் குடிமரபிற் கியைந்தனபோலும். அரசர்மூவரும் மேற்கொண்ட சிறப்புச் சொல்லியபடி. (கo)

கக.—மருத்துவன்றமோதரனார்.

சீந்திநீர்க் கண்டஞ் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குங் கலிக்குத்தில்—காந்தி
மலிக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலிக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

(இ - ள்.) காந்தி மலி குத்து மால் யானை - (தன்பகையென) வெகுண்டு மலையைக்குத்துகின்ற பெரிய களிறுபோலுள்ள வரசனே! சீந்தி நீர்க்கண்டம் - சீந்திநீர்ச் சருக்கரையையும், தெறி சுக்கு - சிதைக்கப்பட்ட சுக்கையும், தேன் அளாய் - தேனோடு கலந்து, மோந்தபின்—,(அதனால்), யார்க்கும் - (தலைக்குத்துடையோர்)யாவர்க்கும், தலைக்குத்து—,இல் - இல்லையாகும்: வள்ளுவர் முப்பாலால்—,சாத்தற்கு - சீத்தலைச்சாத்தனார்க்கு, தலைக்குத்து—,தீர்வு - இல்லையாயிற்று; (எ - று.)

யானைபோல்பவனை யானை யெனலால் ஆகுபெயர். முன் கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பலசொற்குற்றங்களும் பொருட்குற்றங்களும் கண்டு பொருமல் தலையில் அறைந்துகொண்டு வந்தமையால் புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் ஓர் குற்றமுங் காணப்பெறுமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம்மூன்று சரக்கும் அதற்குமருந்தாமோ, அப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயின வென்பதாம். தீர்வென்னுந் தொழிற்பெயர் முற்றுப்பொருளில் வந்தது. இதன் குற்றமற்று விளங்குகை சொல்லியபடி. (கக)

கஉ.—நாகன் றேவனார்.

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார்.

(இ - ள்.) தாள் ஆர் மலர்பொய்கை - தாளத்தோடுபொருந்திய தாமரை மலர்களையுடைய ஒருகுளத்து நீரின்கண்ணே, குடைவார் - மூழ்குவோர், தாம்-,தண்ணீரை - (வேறு)தண்ணீரை, வேளாது ஒழிதல் - விரும்பாதொழிதல், வியப்பு அன்று - வியப்பைச் செய்வதன்று: வள்ளுவனார் முப்பால்

மொழி-திருவள்ளுவரது முப்பால்களையுடைய நூலின் கண்ணே, மூழ்குவார்—, தாம்—, வாளா - வீணாக, அப்பால்—, ஒருபாவை - ஒருநூலை, ஆய்பவோ - விரும்புவாரோ? (விரும்பார் ஆதலின் இதுவே வியப்பைச்செய்வதாம்); (எ-று.)

தாளார் மலரெனலால், தாமரைமல ரெனப்பட்டது. வியப்பைச்செய்வதை வியப்பு என்றார். மூழ்குதல் - இங்கே கருத்துமுழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி - ஆகுபெயர். ஓகாரம் - எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோ எனக் காரியமாக உபசரித்தார். அதுவியப்பன்று என்றமையாலே, இது வியப்பென்றதாயிற்று. உயர்வானபொருள் பெற்றோர்க்கு அதினிழிவான பொருளையும் பெறவிரும்புதல் இயல்பாயிருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமணமுதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக் குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனாற்றானே அமைதிபெற்று வேறுதண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று. ஆயினும் இதுகாறும் ஒருநூலைக் கற்றோர்க்கு வேறுநூலைக்கற்க விரும்புதலன்றி விரும்பாமை யில்லாதிருக்க இப்போது உளதாகலின் இதுவே பெருவியப்பைச் செய்வதென்ற தாயிற்று. இதனால் இந்நூலகத்து எந்நூற் பொருளும் அடங்கியிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது. பல நூல்களையும் கற்கவிரும்புவோர்க்கு இஃதொன்றே அமைதல் சொல்லியபடி. (௧௨)

௧௩.—அரிசில்கிழார்.

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(இ - ள்.) பரந்த பொருள் எல்லாம் - (வேதத்திலே) ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும், பார் அறிய - இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு, வேறு தெரிந்து - வேறாகப்பிரித்து, திறம் தொறும் சேர - (அது அது தனது தனது) வகையோடு சேரும்படி, சுருங்கிய சொல்லால் - சில சொற்களால், பொருள் விளங்க - கருத்துத்தோன்றும்படி, விரித்துச் சொல்லுதல் - விரியும்படி வைத்துச்சொல்லுதல், வல்லார் - வல்லவர், வள்ளுவர் அல்லால்-, ஆர்-, (ஒருவரும்? இல்லை); (எ - று.)

பார் - ஆகுபெயர். திறம் - அறம்முதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தன்முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ, அப்படி பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும் நாயனார்க்கும் தகுதி சொல்லியபடி. (௧௩)

௧௪.—பொன்முடியார்.

கானின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுன்
கூநின் றளந்த குறளென்ப—நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தாநின் றளந்த குறள்.

(இ - ள்.) கான் நின்ற தொங்கலாய் - மணந் தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டியராசனே! மூன் - முற்காலத்திலே, காசிபனுர் தந்தது - காசிபராலே தரப்பட்டகுறளை, கூ நின்று-மண்ணின்கண்ணே நின்று; அளந்த - (உலகத்தை) அளந்த, குறள் என்ப - குறளென்று சொல்லுவர்: தாம் நின்று - தாம் (இங்கே) எழுந்தருளி, வள்ளுவனுர் அளந்த குறள் - திருவள்ளுவராலே தரப்பட்டகுறள், நூல் முறையான் - நூலின்முறையோடு கூடி, வான் நின்று - விண்ணின்கண்ணே நின்றும், மண் நின்று - மண்ணின் கண்ணே நின்றும், அளந்தது - (உலகத்தை) அளந்தது; (எ - று.)

கு-கூவன நீண்டது. ஆனுருபு ஒடுவுருபின்பொருளில்வந்தது. அக்குறள் வஞ்சித்துப் பெற்றளத்தலால் நூன்முறையோடு கூடாததாயிற்று. இக் குறளுக்கு ஓலிவடிவும் வரிவடிவுமென இரண்டு வடிவுண்மையால், ஓலிவடிவுக்கிடம் வாஞதலின் வானின்று என்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுதலின் மண்ணின்றுஎன்றும் கூறினுர். இக்குறளுக்கு நூன்முறையோடு கூடலும் வானிற்றலும் மிகுத்துச்சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது. மூன்மாலும் என்னும் பாட்டிலே நாயனுர்க்கும் மாலுக்கும், இப்பாட்டிலே திருக்குறளுக்கும் மாலவதாரக்குறளுக்கும் ஒப்புமை குறித்துச் சொல்லலால் வேறு பாடாம். உலகத்துப் பொருளெல்லாம் இஃதளத்தற்சிறப்புச் சொல்லியபடி.

கரு.—கோதமனுர்.

ஆற்ற லழியுமென் றந்தணர்க ணூன்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுரரும் வல்லாரும் வள்ளுவனுர் மூப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(இ - ள்.) அந்தணர்கள்—, நான்மறையை - நான்கு வேதங்களையும், உரைத்து - வாய்ப்பாடமாக, போற்றி-காப்பாற்றி, ஆற்றல் அழியும் என்று - (ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவராதலின் இவற்றின்) வலிமைகுறையுமென்று, ஏட்டின்புறத்து - ஏட்டின்கண், எழுதார் - எழுதார்கள்: வள்ளுவனுர் மூப்பாலை - திருவள்ளுவரது திருக்குறளை, ஏட்டு எழுதி - ஏட்டின்கணெழுதிவைத்து, வல்லுரரும் - வலியுடையவரும், வல்லாரும் - வலியில்லாரும், சொல்லிடினும் - ஓதினுலும், ஆற்றல் சோர்வு இன்று - வலிமைகுறைதலில்லை; (எ - று.)

அவ்வேதத்துக்கு உதாத்தம் அனுதாத்தம் சுவரிதமென்னுஞ் சுரங்களின் வழுவாம லோதல்வேண்டுமென்னும் விதியுளதாதலின், அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதிகாரிகளாயினுர்; இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்றறிக. சொல்லிடினும் என்றதனுல் பொருளுணர்ச்சிக்கும் இதற்கும் வலிமை வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆற்றல்-சொற் செறிவின்றிப்பம். இங்ஙனங்கூறவே அவ்வேதம் சொல்லின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம் இவ்வேதம் பொருளின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம் பெறப்பட்டன. ஓதப்படுதலின் அவ்வேதத்தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி. (கரு)

கசு.—நத்தத்தனார்.

ஆயிரத்து மூந்நூற்று மூப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(இ - ள்.) பாயிரத்தினோடு - பாயிர நான்கதிகாரங்களோடு, ஆயிரத்து மூந்நூற்று மூப்பது அருங்குறளும் - (சேர்த்து தொகையாகிய) அரிய ஆயிரத்து மூந்நூற்றுமூப்பது குறள் வெண்பாக்களையும், பகர்ந்ததற்பின் - ஓதி யுணர்ந்தபின்பு,—போய் ஒருத்தர் வாய்-போய் ஒருவரது வாயாலே, கேட்க - கேட்டறிதற்கு, நூல் உளவோ - வேறுநூல்கள் இருக்கின்றனவோ? [இல்லை என்றபடி]: மன்னு தமிழ்ப்புலவர்ஆய் - நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகி, கேட்க-(பிறர் தம்மிடத்துவந்து) கேட்கும்படி, வீற்றிருக்கல் ஆம் - சிறப்போகவிருக்கலாம்; (எ - று.)

வீற்றிருத்தல் - ஒரு சபைகடுவிலே உயர்வாகிய ஆசனத்தில் எறியிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கி நிற்றலின், கேட்கநூலுளவோ என்றார். புலவராய்ளனவே, புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து மூந்நூற்று மூப்பதுகுறள்களும் போதுமென்பது பெறப்பட்டது. ஓதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி. (கசு)

கஎ.—முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
மூப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

(இ - ள்.) வள்ளுவனார் மூப்பாலின் மிக்க - திருவள்ளுவரது திருக்குறளின்மேற்பட்ட, மொழி - நூலொன்று, உண்டு என பகர்வார் - உளதென்று சொல்லவல்லவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட புலவருள்ளும், இல் - இல்லை: (ஆதலால்), செயற்பால - (நாம் இந்நூலைக்குறித்துச்)செயக்கடவன, உள்ளுதல் - (நாம் இதன்பொருளைச்) சிந்தித்துக்கொள்ளுதலும், உள்ளி உரைத்தல் - சிந்தித்து (ப் பிறர்க்கு அதனை) ச்சொல்லுதலும், உரைத்த அதனை தெள்ளுதல் அன்றே - (பிறராலே) சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே; (எ - று.)

மொழி—ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்க மொழியென்றும், தமிழின்மாத்திரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள புலவரையுந் தழுவுதற்கு எப்பாவலரினும் என்றும், அறிவொப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதல் என்றும் கூறினர். உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறெழுதலும் அடங்கின. இது பயிற்சி செய்தொழுகுமாறு சொல்லியபடி. (கஎ

கஅ.—ஆசிரியர் நல்லந்துவனார்.

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
மூப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

(இ - ள்.) சாற்றிய பல்கலையும் - (அறிவுடையோரால்) சொல்லப் பட்ட பலநூல்களாலும், தப்பா அரு மறையும் - தப்பாத அரிய வேதத்தி னாலும், போற்றி - காப்பாற்றிவைத்திருந்து, உரைத்த - (உலகத்தார்க்குச்) சொல்லப்பட்ட, பொருள் எல்லாம் - விடயங்களெல்லாம், தோற்ற - (தன் னிடத்தே) காட்டும்படி, மூப்பால் மொழிந்த - திருக்குறளைச்சொல்லிய, முதற்பாவலர் ஒப்பார் - திருவள்ளுவரை யொப்பவர், எப்பாவலரினும் - எவ் வகைப்பட்ட பாவலருள்ளும், இல் - இல்லை; (எ - று.)

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுறுமையால் தப்பா என்றும், பொருளுணர்த்தற்கே யன்றி ஓதுதற்கும் எளிதன்றுதலின் அரு என்றும் விசேடணஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில் - இதற்கு முன்னுரைக்கப் பட்டபடியே கொள்க. முதற்பாவலர் - முதன்மையையுடைய பாவலர்; நால் வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள்வெண்பாவும் தலைமை பெற்றுநிற்றலின், அக்குறள்வெண்பாவால் நூல்செய்த வல்லமை யுடையரென்றுமாம். புலமையிலே நாயனாருக்கு ஒப்பின்மை சொல்லியபடி.

கக.—கீரந்தையார்.

தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாடலினுன்
மூப்பாலி னூற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(இ - ள்.) எப்பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி - எவ்விடத்திலும் கூர்மைவைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டியராசன், மனம் மகிழ - மனங்களிக்க, தப்பா - (சொல்லப்பட்டபொருள்) வழுவாமல், முதற் பாவால்-முதன்மையுடைய பாவாகிய குறள்வெண்பாக்களாலே, தாம் மாண்ட பாடலினுல் - தாம் மாட்சிபெற்ற பாடற்றொழிலினுலே, மூப்பாலின்-மூன்று பால்களிலே, நாற்பால் - (அறம்முதலிய) நான்கு பகுதிப்பொருள்களையும், மொழிந்தவர் - திருவாய்மலர்ந்தவர், தெய்வத்திருவள்ளுவர்-தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனார்; (எ - று.)

கூர் - சிறப்பு. நான்களுள் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான் கடங்காணுமையின், வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும் அதனுல் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி. (கக)

கூ0.—சிறுமேதாவியார்.

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றிரண்டு—கூடுபொரு

எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(இ - ள்.) வள்ளுவர் சொன்ன வகை - திருவள்ளுவராலே சொல்லப் பட்ட திருக்குறளின் அதிகாரவகை, பாயிரம் நான்கு—பாயிரம் நான்கதி காரத்தையுடையது: அறம் மூப்பத்து மூன்று - அறம் மூப்பத்து மூன்றதி காரத்தை யுடையது: ஊழ் ஒன்று - ஊழ் ஓரதிகாரத்தை யுடையது: பொருள் எழுபது - பொருள் எழுபததிகாரத்தை யுடையது: இன்பம் இரு பதிற்றைந்து - காமம் இருபத்தைந் ததிகாரத்தை யுடையது; (எ - று.)

அறத்துப்பாலுளடங்காது அதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்றுபாயிரமென்றும், இம்மை மறுமை வீடுமூன்றும் பயத் தற் சிறப்பிற்றாய் மூன்றனுண் முதனிற்றலின் விளங்கதமென்றும், யாவர்க் கும் பொதுப்படநாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாக லின் நாடிய மூப்பத்திமூன்றுஎன்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய் நிற்றலின் கூடுபொருள்என்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளிலெழு பதுஎன்றும் கூறினர். எள்ளல் - இகழ்தல். சில பழைய நூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்த லால் அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்று ஆசங்கித்து இதனதிகாரங்களுக்கு இங்ஙனந் தொகைசெய்தார். பின் இவ்வாறு தொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக் கொள்க. மூப்பால் களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி. (உ)

உக.—நல்கூர்வேள்வியார்.

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

(இ - ள்.) உப்பக்கம் நோக்கி - வடதிசை குறித்துச்சென்று, உபகேசி தோள் மணந்தான் - நப்பின்னைப் பிராட்டியினது தோளைமணந்த கண்ண பிரானை,உத்தரம் மா மதுரைக்கு-வடமதுரைக்கு, அச்சுஎன்ப-ஆதாரமென்று சொல்லுவர்: இப்பக்கம் - இப்பக்கத்தைக்குறித்து, மாதானுபங்கி - மாதானு பங்கி யெனப்படுகின்ற,மறுஇல் புலம்-குற்றமற்ற புலமையாகிய(தேனைச்சொரி கின்ற), செந்நாப் போதார் - செவ்விய நாவாகிய மலரையுடையவர், புனல் கூடற்கு-நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு, அச்சு-ஆதாரமாவர்; (எ - று.)

உபகேசி யென்பதற்கு ஈண்டியையுநோக்கி நப்பின்னைப்பிராட்டி யென்று பொருளுரைக்கப்பட்டது. உபகேசி—கூந்தலழகுடையாள். நேமி நாத வுரையாசிரியர் ''பலதே திணையே'' என்னுஞ் செய்யுளில் ''உபகேசி யாவாள் — நப்பின்னைப் பிராட்டியார்'' என்றனர். இப்பிராட்டியார் கண் ணன் மனைவியர்களுள் ஒருவர். மாதா அனுபங்கி - மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினனெனப்படுதலின், அவள் பின்னேமே லருள்

செய்தல் போல் இவர் உலகத்தார்மேல் அருள்செய்தல் சொல்லப்பட்ட தாயிற்று. மாதானுபங்கி என்று தொடர்க்கு - செருக்கை எப்போதும் ஒழிந்த வன் என்றும் கூறுவர். நாப்போ தென்றதற்கேற்பப் புலமையிலே தேன் ஊரோபிக்கப் பட்டது. அச்சுபோற் றுங்குதலால் அச்சுவன்றூர். நாயனாரிலே திங்கட் குடையுடைச் சீர்சால் வழுதியும் சங்கப்புலவருந் தழைத்தினி தோங்கிய மதுரைக்கு உண்டான சிறப்புச்சொல்லியபடி. (உக)

22.—தோடித்தலை விழுத்தண்டினூர்.

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே னன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

(இ - ள்.) அறம் (திறம்) நான்கு - (பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ் என) அறப்பாலி னுட்பிரிவுகள்நான்கும், அறி பொருள் (திறம்) ஏழ்-(அரசு அமைச்சு அரண் கூழ் படை நட்பு ஒழிபு என) அறியப்பட்ட பொருட்பாலி னுட்பிரிவுகள் ஏழும், ஒன்று - பொருந்திய, காமம் திறம் மூன்று என பகுதி செய்து - ஆண்பால் பெண்பால் அவ்விருபால்என காமத்துப்பாலினுட்பிரிவு கண் மூன்றுமாகப் பகுதிசெய்து, பெறல் அரிய நாலும்-பெறுதற்கரிய (அறம் பொரு ளின்பம்வீடு எனப்படுகிற) நான்கு பொருள்களையும், மொழிந்த - சொல்லிய, பெருநாவலரே—,ஒழிந்த பொருள் - (அவற்றுள் அடங்காது) ஒழிந்தபொருள் (உளதாயின் அதனை), நன்கு உணர்வார்போலும் - நன்றாக அறியவல்லவர்போலும்; (எ - று.)

திறமென்றது - அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. நாவலரே என்றமையால், பிறரால் அறியப்படுவ தன்றென்றதாயிற்று. மூப்பாலியற் றுகையும் இவற்றினடங்காதது ஒன்றில்லையென்பதும்சொல்லியபடி.(உஉ)

23.—வேள்ளி வீதியார்.

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

(இ - ள்.) செய்யா மொழிக்கும் - (ஒருவராலே) செய்யப்படாத மொழி யாகிய வேதத்துக்கும், திருவள்ளுவர் மொழிந்த - திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட, பொய்யா மொழிக்கும் - (தன்வழியி னொழுகுவோர்க்குப் பயன்விளைவிலே) பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும், பொருள் ஒன்றே—:ஆராயின் - ஆராயுமிடத்து, செய்யா அதற்கு உரியர் - செய்யப் படாத அவ்வேதமோதுதற்குரியவர், அந்தணரே—: ஏனை இதற்கு உரியர் அல்லாதார் - பொய்படாத இத்திருக்குறளோதுதற்கு உரியவரல்லாதவர், இல் - (உலகத்தில்) இல்லை; (எ - று.)

பூர்வவேதத்தை நித்தியமென்பார்மதம்பற்றிச் செய்யாமொழி என்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்றும் சில வேறுபாடுடையன

போற் றேன்றினும் நுண்ணுணர்வா லேக்குவார்க்குக் கருத்து வேறுபடா மையின், பொருளொன்றேஎனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறினர். செய்யாமொழி, பொய்யாமொழி—அன்மொழித்தொகைகள். இதற்குரிய ரல்லாதா ரில்லென்றதனாலும் பொதுவேதமாத லறிக. அதற்கும் இதற்கும் பொருள் வேறேவென்றும் இதனையோதற் கதிகாரிகளாவார் யாவரோவென் றும் நிகழ்கின்ற ஐய மொழித்தபடி. (உங)

உச.—மாங்குடி மருதனார்.

ஓதற்கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றே
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(இ - ள்.) வள்ளுவர் வாய்மொழி - திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது, மாண்பு - மாட்சியைச் சொல்லின், (அது), ஓதற்கு எளிதாய் - ஓதப்படுதற்கெளிய சொற்களே யுடையதாகியும், உணர் தற்கு அரிதாகி - அறியப்படுதற்கரிய பொருள்களே யுடையதாகியும், வேதம் பொருள் ஆய் - வேதமெனப்படுகின்ற பொருளாகியும், மிக விளங்கி- (அவ்வேதத்தின்) மிகவிளங்கி, தீது அற்றோர் - குற்றமற்றோர்கள், உள்ளு தொறு உள்ளுதொறு - நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், உள்ளம் - (அவர்களுடைய) மனத்தை, உருக்கும் - கரைக்கும்; (எ - று.)

ஓதற்கெளிதாய் எனவே கவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல் களும், உணர்தற்கரிதாகி எனவே ஆழமுடைமையும், வேதப்பொருளாய் எனவே விழுமியது பயத்தலும் பிறவுமாகிய அழகுகளி னமைதி சொல்லப் பட்டதாயிற்று. தீதற்றோர் - பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடையோர். உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளமுருக்கும் எனவே, முன் காணப்பட்டதினும் பின் காணப்படும் பொருள் சிறந்தும் விரிந்துந் தோன்றுதலுடைமை பெறப் பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச் சொல்லியபடி.

உரு.—எறிச்சலூர் மலாடனார்.

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—வாய
* அறத்துப்பா லல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(இ - ள்.) வள்ளுவனார்—, ஆய்ந்து - (அவ்வேதத்தின் கருத்துக்களே) ஆராய்ந்து, நூலின்திறத்து - (தம்மாலே செய்யப்பட்ட) நூலினது திறத் திற்குத்தக்க, பால் - தன்மையுடைமையால், தேர்ந்து-(இவையே உரியவை யென்று) தெரிந்து, பாயிரம் நான்கு - பாயிரம் நான்கதிகாரமும், இல்லறம் இருபான் - இல்லறவியல் இருபதிகாரமும், துறவறம் பன்மூன்று - துற வறவியல் பதின்மூன்றதிகாரமும், ஊழ் ஒன்று ஆக - ஊழ் ஓரதிகாரமும்ஆக,

* பி - மீ: அறத்திற்பான் மூப்பாலெட்டா மென்றுரைத்தார்

ஆய - கூடிய, நால்வகை ஆ - (பாயிரமுதலிய) நால்வகையுடைத்தாக, அறத்துப்பால் - அறத்துப்பாலே, உரைத்தார் - கூறினர்; (எ - று.)

மூப்பாற் பொருள்களினும் மூத்திக்குக் காரணமாதற் சிறப்புடைமையின் தாயதுறவறம் என்றார். துப்பு-நன்மை. அது எல்லா வருணச்சிரமங்களுக்கும் பொதுவாயிருக்கை. அறப்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி. (உரி)

உசு.—போக்கியார்.

அரசிய லேயைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண் டொன் றெண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின் மூன்
றெண்பொரு ளேழா மிவை.

(இ - ள்.) அரசு இயல்—,ஐயைந்து-இருபத்தைந்து: அமைச்சு இயல்—, ஈரைந்து-பத்து: அரண் இரண்டு—: கூழ் ஒன்று—: திண்படை இரு இயல்—: நட்புப்பதினேழ்—: குடிபதின்மூன்று—: எண்பொருள் - எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு, இவை ஏழாம் - இவ்வியல்களேழாம்; (எ - று.)

இத்தொகைகளோடு அதிகாரமுடையதென்பது கூட்டுக. அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லரண் என்றும், பொருளுடையார்க்கே ஒளி அமைவதாதலின் ஒண்பொருள் என்றும், படைக்குக் கடும்போரிற் பின் கொடாததிண்மை யுரித்தாதலின் திண்படை என்றும் கூறினர். பிற்காலத்தார் அமைச்சுமுதலிய வைந்தனையும் அங்கவியலென ஓரியலாக்கியும் வழங்குப. பொருட்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி. இத்தப்பாட்டு, நுண்பொருண்மாலையில், "அரசியலேயைந் தமைச்சியலீரைந், துரை நாடரண் பொருளொவ்வொன் றுரைசால், படையிரண்டு நட்புப் - பதினேழ் பன்மூன்று, குடியெழுபான் றொக்கபொருட் கூறு" எனக்காணப்படுகின்றது.

உஎ.—மோசிகீரனார்.

ஆண்பாலே ழாரிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. *

(இ - ள்.) ஆண்பால் ஏழ்—: பெண்பால் ஆறிரண்டு—: அடுத்து அன்பு பூண் பால் - (ஒருவரையொருவர்) அடுத்து அன்பைப்பூணுதற்பகுதியுடைய, இருபால் - அவ்விருபால், ஓர் ஆறு ஆக—, மாண்பு ஆய காமத்தின் பக்கம் - மாட்சியான காமத்துப்பாலி னியல்கள்,ஒரு மூன்று ஆக—,நாமத்தின்-பெயர் பெற்ற, வள்ளுவனார்—,நன்கு கட்டுரைத்தார் - நன்கு கூறினர்; (எ - று.)

இவையே பொருளிலக்கணத்துக்கமையக் களவியல் கற்பியலென விரண்டாக்கப்பட்டன. இத்தொகைகளுக்கும் முன்கூறப்பட்டது கொள்க. காமத்துப்பா லியலதிகாரத் தொகை சொல்லியபடி. (உஎ)

* இப்பாட்டை யடுத்துப் பின்வரும்பாடல் நுண்பொருண்மாலையில் எழுதப் பட்டுள்ளது: வருமாறு:—புணர்தல்பிரிதற் பொருள் களவுகற்பென், றுணருமிருகூறுமுரைக்கிற் - புணருங், களவேழறுமூன்றுகற்பிவையை யைந்தா, அளவுறுகாமத்துப்பாலாம்.

உஅ.—காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனூர்.

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெங்கி
யந்தா மரைமேல யன்.

(இ - ள்.) அதிகாரம்—,நூறும் ஐயாறு மூன்றும்ஆ— நூற்று மூப்பத்து மூன்றாக, மெய்யாய வேதப்பொருள்—,பொய்யாது விளங்க - பொய்யுறாது விளங்கும்படி, அம் தாமரைமேல் அயன் - அழகிய தாமரைமலர்மேல் வீற் றிருக்கின்ற நான்முகக்கடவுள், தான் வள்ளுவன் ஆகி—,உலகிற்கு தந் தான் - உலகத்தார்க்குத் (தமிழிற் செய்து) தந்தான்; (எ - று.)

உலகு - இங்கே மக்களே யுணர்த்திநின்றது. மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்கவெனவே, இதற்குமுன் மெய்யாய பொருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாயபொருள் மெய்யாய் விளங்கியும் கிடந்தமை சொல்லப் பட்டதாயிற்று. அதிகாரத்தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லியபடி.

உக.—மதுரைத் தமிழ் நாகனூர்.

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனூர்
சுரந்தபா வையத் துணை.

(இ - ள்.) எல்லாப்பொருளும் - (பலவகை நூல்களாலுஞ் சொல்லப் பட்ட) எல்லாப்பொருளும், இதன்பால் உள - இந்நூலகத்தடங்கி யிருக்கின் றன: இதன்பால் இல்லாத எப்பொருளும் - இதனிடத்தில்லாத யாதொரு பொருளும், இல்லை - (எந்நூலகத்தும்) இல்லை: (ஆதலால்), சொல்லால் பரந்த பாவால் - சொல்லளவினாலே விரிந்தநூல்களால், பயன் என் - பயன் யாது? வள்ளுவனூர் சுரந்த பா - திருவள்ளுவராலே தரப்பட்ட இந்நூலொன்றே, வையத்துணை - மண்ணுலகத்தாருக்குத் துணையாதலையும்; (எ - று.)

எல்லாப்பொருள்களுமாவன - முதல் வழி சார்பென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்றிற் செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருளென இம்மூவகையாற் சொல்லக்கிடந்த காட்சிப்பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம்: தொழிலும் பண்பும் ஓரோ வழிப்பொருளெனற் கேற்புடைமையின் அவையும் இவற்றுள் அடங்குமா றறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லை என்றார். சொல்லாற்பரந்த எனவே அவைபொருளாற் பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் - பதினாயிரம் நூறுயிரம்முதலிய கிரந்தவளவையால் விரிதல். சொல்லாற் பரந்த நூல்களே ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல் போல் மிகவருந்திச் சிறுபயன் கொள்ளுதலால் என்பயன் என்றார். ஆல் - அசை. பா, வையம் - ஆகுபெயர்கள். இன்னுட் பல்பிணிச் சிற்றறிவுடை யோர்க்கு விதிவிலக்குகள்மூற்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டு

தெளியுமாறு உணர்த்தித் தடுமாற்றந் தீர்த்தலின், வையத்துணை என்றார். முற்றொருங்குணரவிழைவார்க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற்றென்றபடி.

௩௦.—பாரதம்பாடியபெருந்தேவனார்.

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர் தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

(இ - ள்.) † பாரதம் சீராமகதை - பாரதம் பழைய சீராமகதையையும், மனு பண்டைமறை - மனுஸ்மிருதி பழைய வேதத்தையும், நேர்வன-ஒப்பனவாகும்: எப்பொருளும் - எவ்வகைப்பட்ட பொருள்களையும், யாரும்-எவ்வகையோரும், இயல்பின் - (அவற்றின்) தன்மையோடு, அறிவுற-அறிய, செப்பிய-(அவர்க்குச்) சொல்லும்படிக்கு, வள்ளுவர்-திருவள்ளுவர், செப்ப வரு-சொல்லலால்வந்த, முப்பாற்கு - திருக்குறளுக்கு, நிகர் - உவமானமாகத்தக்கது, இல்லை - ஒன்றில்லை; (எ - று.)

மற்று-அசை. அறிதற்கரிய வேதாந்தப்பொருளு மென்றற்கு எப்பொருளும் என்றும், உயர்குலத்தாரேயன்றி ஏனையோருமென்றற்கு யாரும் என்றும், ஐயந்திரிபின்றி யறியவென்றற்கு இயல்பினறிவுற என்றும், இதுவே சுருதி குரு இரண்டுமாமென்றற்கு செப்பிய என்றும் கூறினார். பண்டை என்பது சீராமகதைக்குங் கூட்டுக: கதாரூபமாயிருந்து பாரதராமாயணமெனவும், விதிரூபமாயிருந்து சுருதிஸ்மிருதி யெனவும் கூட்டிச்சொல்லப்படுதலால், உவமான உபமேயங்களாத லறிக. எப்பொருளும் யாருமியல்பினறிவுறச் செப்புதல் வேதத்திற் கின்மையால், முன் முப்பாலின் மிக்கமொழி என்ற அதனாற் பெறப்பட்ட வேதத்தினொப்புமையை மறுத்தபடி. (௩௦)

௩௧.—உருத்திரசன்மகண்ணார்.

மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

(இ - ள்.) மணல் கிளைக்க - மணலைத் தோண்டுந்தோறும், நீர் ஊறும் - நீர்பெருகும்: மைந்தர்கள் வாய் வைத்து உண - புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும், தாய் முலை - தாயினது முலைக்கண், ஒள் பால் சுரக்கும் - நல்லபால்பெருகும்: (அவைபோல), பிணக்கு இலா வாய் மொழி - பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய, வள்ளுவர் முப்பால் - திருவள்ளுவரது திருக்குறளை, ஆய்தொறும் - ஆராயுந்தோறும், மதி புலவோர்க்கு-அறிவுடைய புலவர்க்கு, அறிவு ஊறும் - அறிவுவளரும்; (எ - று.)

† பாரதமும் சீராம கதையும் மனுதருமசாஸ்திரமும் பழையவேதமும் முப்பாலுக்கு ஒப்பாவனவாம்; வேறு நூல்கள் ஒப்பாதலில்லை என்று பொருள் கூறுவாரு முண்டு.

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலாவாய்மொழி என்றார். மதிப்புலவோர்க் கறிவூறும் எனவே, அவர் அவ்வறிவைக்கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குச்சொல்லிக் கற்பித்தல்வேண்டு மென்றதாயிற்று. இதனைச் சிலகாற் பயிற்சினமையாது பலகாலும் பயிற்சி செயல்வேண்டு மென்றபடி. (கக)

கஉ.—பெருஞ்சித்திரனார்.

ஏதமில் வள்ளுவ னின்குறள்வெண் பாவினை
லோதிய வொண்பொரு ளெல்லா முரைத்ததனாற்
றுதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

(இ - ள்.) தாது அவிழ் தார் மாற - பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே! ஏதம் இல் வள்ளுவர்-குற்றமில்லாத திருவள்ளுவர், இன் குறள் வெண்பாவினால் - இனிய குறள்வெண்பாக்களாலே, ஓதிய-(நான்குவேதங்களாலுஞ்) சொல்லப்பட்ட, ஒள் பொருள் எல்லாம் - ஒள்ளிய பொருள்களேயெல்லாம், உரைத்ததனால் - சொல்லினமையால், மேதக்கன - மேம்பாட்டுக்குத்தக்கவை, தாமே - அக்குறள் வெண்பாக்களோ? தமை பயந்த வேதமே - (முதனூலாய் நின்று) அவற்றைப் பயந்த வேதங்களோ? (நீ சொல்வாயாக); (எ - று.)

தாம் தம்மை எனப்பட்டவை, அவை அவற்றை என்னும் பொருளோத்திந்து நின்றன. ஏகாரம் இரண்டும் வினை. பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவை ரெதிரிகளாலே மறுக்கப்பட்டு வருங் குற்றம்போல்வது இவற்கு இல்லையென்றற்கு ஏதமில் வள்ளுவர் என்றும், தாங் குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமைபற்றி இன்குறள் என்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்குணமுடைமைபற்றி ஒண்பொருள் என்றும் கூறினார். நூலாசிரியர்க்கும் நூலுக்கும், நூனுதலிய பொருளுக்கும், தருதிதோன்றச் சொல்லப்பட்ட விசேடணகுணங்களாலே இவ்வேதம் அவ்வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி. (கஉ)

கங.—நரிவெருஉத்தலையார்.

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
மூன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(இ - ள்.) இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் - இன்பம் முதலிய இந்நாற்பொருளியல்புகளையும், மன்பதைகட்கு - மக்கட் பரப்புக்கு, முன்பு - அக்காலத்தில், அறியச்சொன்ன - அறியும் வண்ணஞ் சொல்லப்பட்ட, முது மொழி நூல் - பழமொழிவேதமானது, உள்ள அரிது என்று - ஓதியுணரப்படுதற் கரிதென்று, வள்ளுவர்—, அவை -

அவற்றை, உலகம் கொள்ள - உலகத்தார் எளிதினுணரும்படி, குறள் - திருக்குறளை, மொழிந்தார் - சொல்லினார்; (எ - று.)

முன்பறிய எனவே உற்சர்ப்பிணியாகலின் அக்காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தன வென்பதூஉம், அவசர்ப்பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவையிலவென்பதூஉம், பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன் முதற் பாட்டுரையிற் கண்க. தேயவழக்கிற்படாததும் வ்ருத்திக்கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லா மொழிகட்கும் மூற்பட்டுக் கடவுண்மொழியாய் நிற்றலின், முதுமொழி என்றார். அறமுதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றுமையை யுடைத்தாதலின் உள்ளதரிதாயிற்று. பழையவேதமுளதாகவும் வேறுசொல்லுதற்குக் காரண முணர்த்தியபடி. (கூ)

கூ.—மதுரைத்தமிழாசிரியர் செங்கன்னார்க்கிழார்.

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லேக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லேக்கும் பெயர்.

(இ - ள்.) பூமேல் - பூவுலகின்கண்ணே, புலவர் திருவள்ளுவர்அன்றி - புலவரெனத் திருவள்ளுவரையன்றி, சிலவர் புலவர் என செப்பல் - வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதல்,—மாலை - மாலையென்பது, நிலவு பிறங்கு ஒளி மாலேக்கும் பெயர் - நிலவால் விளங்குகின்ற ஒளியையுடைய அந்திக்கும் பெயராக, மற்றும்—, கறங்கு இருள் மாலேக்கும் பெயர்-சூழ்கின்ற விருளையுடைய அந்திக்கும்பெயராக, செப்பல்-சொல்லுதல்போலும்; (எ-று.)

செப்பல் என்றது, பின்னுங் கூட்டப்பட்டது. புலமையாவது-பலவேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளே யெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமையாம். உயர்வொப்பற்ற இவரது புலமையைக்குறித்து நோக்குங்கால் ஏனையோர் புலமை புலமையன்றாய் முடிதலின் இவ்வாறு கூறினர். புலவரென்பது, நாயனார்க்கே காரணப்பெயரா மென்றபடி. (கூ)

கூ.—மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்.

இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
பன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

(இ - ள்.) இன்பமும் துன்பமும் என்னும் இவை - (பின்வரக்கடவனவாய) சுகமுந் துக்கமுமெனப்பட்ட இவற்றினுடைய, இரண்டும்-இருவகைக் காரணங்களையும், உள்ளி உணர - ஆராய்ந்தறியவும், அன்பு ஒழியாது - (தம்மேல்) அன்பு நீங்காமல், மனம் மகிழ - உள்ளங்களிகூரவும், மன்பதைக்கு எல்லாம் - மக்கட் பரப்புக்கெல்லாம், ஓது சீர் வள்ளுவர் - புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர், வாயுறைவாழ்த்து - வாயுறைவாழ்த்தாக, உரைத்தார் - (திருக்குறளைச்) சொல்லினார்; (எ - று.)

இன்பத்தின் காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின் காரணம் விலக்குக்குறளாலும் சொல்லப்பட்டன. முன்பறிதற்குப்பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலுமாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்த்தலின் மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம்போலாது பலர்க்கும் உபயோகியாகச் சொல்லலின் மன்பதைக்கெல்லாம் என்றார். வாயுறைவாழ்த்தினியல்பு "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின், வேம்புங்கடுவும் போல வெஞ்சொற், றூங்குத லின்றி வழிநனி பயக்குமென், றேம்படைக் கிளவியின் வாயுறத் தற்றே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தாலறிக. எதிர்காலவினோவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி. (கூடு)

கூசு.—கவிசாகரப்பெருந்தேவனார்.

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக் கமரும்ப
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(இ - ள்.) பூவிற்கு தாமரை - மலர்களுக்குள்ளே தாமரைமலரும், பொன்னுக்கு சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், ஆவிற்கு அருமுனி ஆ-பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைக்கு அம(ர)ர் உம்பல் - யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவில் திருமால் என - தேவர்களுக்குள்ளே திருமாலும்போல, பாவிற்கு வள்ளுவர் வெண்பா - நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள்வெண்பா, சிறந்தது---, என்ப - என்று (அறிவுடையோர்) சொல்லுவர்; (எ - று.)

எ - அசை. பா - ஆகுபெயர். பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாகலின் அருமுனியா என்றார். உவமானமுதத்தால், இஃது பலநூல்களினும் சிறந்துநிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி.. (அமரும்பல் - தொகுத்தல். அமரரும்பலென்று பாடமோதுவாரு முளர்.) (கூசு)

கூஎ.—மதுரைப்பெருமருதனார்.

அறமூப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனு
ரோதவழுக் கற்ற துலகு.

(இ - ள்.) அறத்திறம் - அறத்தின் கூறுபாடு, மூப்பத்தெட்டால் - மூப்பத்தெட் டதிகாரங்களாலும், பொருள் திறம்-பொருட்கூறுபாடு, எழுபதால்-எழுபது அதிகாரங்களாலும், இன்பத்திறம் - காமத்தின் கூறுபாடு, இருபத்தைந்தால் - இருபத்தைந் ததிகாரங்களாலும், தெளிய - தெளியும்படியாருட்டு, முறைமையால் - (காரணகாரிய) ஒழுங்கால், வேதம் விழுப்பொருளே - வேதத்தினுயர்வாகிய பொருளே, வெண் குறளால் - குறள்வெண்பாக்களால், வள்ளுவனுர்—, ஓத - ஓதலால்,—உலகு - உலகமானது, வழுக்கு அற்றது-வழுவுதலினின்றும் நீங்கிற்று; (எ - று.)

திறமும் ஆலும் முன்னுங்கூட்டப்பட்டன. உயர்வாகியபொருள் - கரும காண்டம் பிரமகாண்ட மிரண்டினுள்ளுஞ் சிறந்தபொருள். வழுக்குதல் - விதியை விலக்கென்றும் விலக்கை விதியென்றும் கோடல். உலகு - மக்களை யுணர்த்தி நின்றது. துணிவுபற்றி, அற்றது என இறந்தகாலத்தாற் கூறினார். முன்னதின்வேறுபட்ட முப்பால்களி னதிகாரத்தொகைகளோடு உலகிற்கு விளையும் நன்மை சொல்லியபடி. (௩௭)

௩அ.—கோவூர்க்கிழார்.

அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

(இ - ள்.) அறம் முதல் நான்கும் - அறம்முதலிய நான்குபொருளையும், அகல் இடத்தோர் எல்லாம்-பரந்த மண்ணுலகத்திலுள்ளோரெல்லாம், திறம் உற தேர்ந்து - வகைப்பட ஆராய்ந்து, தெளிய - கலக்கந்தீர, குறள் வெண்பா பன்னிய-குறள்வெண்பாக்களாலே சொல்லப்பட்ட,வள்ளுவனார்-திருவள்ளுவ நாயனாரது, பால் முறை - முப்பால்களையுடைய புத்தகத்தின்கண்ணே, முன்னை முதுவோர் மொழி - முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு, நேர் ஒவ்வாது - நேர்தல் பொருந்தாது; (எ - று.)

மொழி - ஆகுபெயர். பெரியோராவார் - வடமொழியிலும் தென்மொழியிலும் பிறமொழிகளிலும் நூல்செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந்நூல்களாவன - மனுமுதலியோராலே செய்யப்பட்ட அறநூன் முதலியன. இதன் புத்தகத்தில் முன்னூல்களி லொன்றும் சேர்க்கப்படுதற்குத்தகுவதன்றென்று சொல்லியபடி. (௩அ)

௩௯.—உறையூர்*முதுகூற்றனார்.

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

(இ - ள்.) தேவில் சிறந்த திருவள்ளுவர் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது, குறள்வெண்பாவில் சிறந்திடு - குறள்வெண்பாக்களோடு கூடிச் சிறந்துதோன்றாநின்ற, முப்பால்-முப்பால்களையும், பகரார்-ஓதாரது, நாவிற்கு - வாக்கிற்கு, உயல் இல்லை - (இன்சொற்சொல்லி) வாழ்தலுண்டாகாது: சொல்சுவை ஓர்வு இல்லை - (மனத்திற்குச்) சொற்களின் சுவையை அறிதலுண்டாகாது: மற்றும்-இவையன்றியும், செயல் இல்லை-(காயத்துக்கு) நல்லசெய் லுண்டாகாது,என்னும் திரு-என்றுநினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள்; (எ - று.)

சுவையோர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும் காயமும் வருவிக்கப்பட்டன. திருமகள் சேராமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

* பி - ம்: முதுகூத்தனார்.

ஓதார்க்குளவாசாமை கூறவே, ஓதுவோர்க்கு இவையுளவாதலின் வாக்கிற்குக் கடுஞ்சொல் பொய் கோள் பயனில்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல் பிறன்பொருள்விழைதல் பிறன்பொருட்குக் கேடெண்ணல் பிறவுயிர்க்கிறுதி யெண்ணல்களும், காயத்திற்குப் பிறன்மனைபுணர்தல் உயிர்க்கொலை செய்தல் பழிபூணுணல் பிறர்பொருள் வௌவல்களும் ஆகிய குற்றங்களெல்லாம் நீங்குமென்பதும் பெறப்பட்டது. அறவின்பங்கட்குக் காரணமாதற் சிறப்புடைய பொருட்பேறு இஃதோதலின் உளதா மென்றபடி. (ஈக)

சஂ.—இழிகட் பெருங்கண்ணனூர்.

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினரின் குறள்வெண் பர.

(இ - ன்.) இம்மை மறுமை இரண்டும் - இகபரங்கட்காவனவிரண்டையும், எழுமைக்கும் - (வினைப்பயன்றொடர்தற்குரிய) எழ்பிறப்பிற்குமாக, செம்மை நெறியின் - செவ்வையான வழியால், தெளிவு பெற - (யாவரும்) தெளிவு பெறவும், மும்மையின் - (அறம்பொருளின்பமென்னு) முப்பால்களுள், அவற்றின் - அம்முப்பாற்பொருள்களோடு, வீடு-வீடுமாகிய, நான்கின் விதி - நாற்பொருள்களது விதிகளும், வழங்க - வழங்கவும், வள்ளுவனார்—, இன்குறள் வெண்பா - இனியகுறள்வெண்பாவை, பாடினர்—; (எ - று.)

செவ்வையானவழி - விதியும், பத்தியும், ஞானமும், நோயாளிக்கு மருந்தும் அநுபானமும் பத்தியமும் போல் ஒன்றற்கொன்று மூலனுது கூடிநிற்கும்வழி. வீட்டுவிதி துறவறத்திற் காண்க. இம்மை, மறுமை, வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி. (சஂ)

சஆ.—செயிர்க்காவிரியார்மகனூர் சாத்தனூர்.

ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(இ - ள்.) (மக்களுக்கு), ஆவனவும் - ஆவனவற்றையும், ஆகாதனவும் - ஆகாதவற்றையும், அறிவு உடையார் யாவரும்—, எடுத்து இயம்ப - (இனி இதிலிருந்து) எடுத்துச்சொல்லுதற்கு, வல்லார் - வல்லவராவார்: (ஆதலால்), தேவர் திருவள்ளுவர் - தேவராகிய திருவள்ளுவராலே, செப்பியவே-சொல்லப்பட்டவற்றையே, பொருவுஇல் ஒழுக்கம் பூண்டார் - ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர், செய்வார்—; (எ - று.)

இங்ஙனங்கூறவே அவ்வேதத்திலிருந்துள்ளவர் தெடுத்துச்சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால் ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற் செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம் - அசைகள். ஆவன - இன்பத்தைத்தருவன. ஆகாதன - துன்பத்தைத்

தருவன. ஒப்பில்லாத வொழுக்கம் - கொல்லாமைமுதலியன. போதகாசிரியருக்கும், கேட்டொழுகுவோர்க்கும் வரும் நன்மை சொல்லியபடி.

சஉ.—செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.

வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(இ - ள்.) வேதப்பொருளை—, உலகோர் ஓத - உலகத்தார் ஓதியுணரும்பொருட்டு, விரகால் உபாயத்தால், விரித்து—, தமிழால் - தமிழ் மொழியினாலே, உரைசெய்தார் - சொல்லியருளினார்: ஆதலால்—, உள்ளுநர் உள்ளும் பொருள் எல்லாம் - நினைப்பவர் நினைக்கும்பொருள்களெல்லாம், வள்ளுவர் வாய்மொழி மாட்டு-திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின்கண்ணே, உண்டு என்ப - உண்டென்று (அறிவுடையோர்) சொல்லுவர்; (எ - று.)

உபாயத்தால் விரித்தல் - சொற்சுருக்கத்தால் ஓதற்கெளிதென மனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற் கேற்பப் பொருளளவு விரியவைத்தல். நினைக்கப்படும் பொருள்களெல்லாம் இதன்கண்ணே இக்காரணத்தால் தோன்றாநின்றன வென்றுகூறியபடி. (சஉ.)

சஙு.—வண்ணக்கஞ்சாத்தனார்.

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா—லாரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா
ரோது குறட்பா வுடைத்து.

(இ - ள்.) ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து-வடமொழியையும் தென்மொழியையு மாராய்ந்து, இதனின் இது சீரியது என்று-இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று, ஒன்றை செப்ப அரிது - ஒன்றைத் தெரிந்து சொல்லுதல் கூடாது: ஆரியம் - வடமொழி, வேதமுடைத்து—: தமிழ்—, திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து—:(ஆதலால்); (எ - று.)

ஆல் - அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள்போலாது பாணினியாரும் அகத்தியனாரு முதலாகிய முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கணநூல்களாலே சீர்திருந்திநிற்றல் முதலிய குணங்களுடைமையாலும், அது பிராகிருத முதலியவற்றுக்குப் போல் இஃது ஆந்திரமுதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்கொன்று குறைபாடுடைத்தன்றேனும் வேதமுடைமைபற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனி யில்லையென்றற்கு இதனினிது சீரியதென் றொன்றைச் செப்பரிது என்றார். இத்திருக்குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு ஒப்புமைநிறைவு சொல்லியபடி. (சஙு)

சச.—களத்தூர்க்கிழார்.

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதனான்குஞ் சாலு—மருமறைக

ளைந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

(இ - ள்.) அருமறைகள் ஐந்தும் - (இருக்குமுதற் பாரதமீறாகிய) அரிய வேதங்களைந்தும், சமயநூல் ஆறும் - (அவ்வேதத்தின் வழிப்பட்ட) சமய நூல்களாறும், நம் வள்ளுவனார் - நம்முடைய திருவள்ளுவரால், புந்தி மொழிந்த பொருள் - (உலகத்தார்க்குப்) புத்தியாகச் சொல்லப்பட்ட நூலிலடங்கும்: (ஆதலால்), ஒருவர்—, இருகுறளே - (ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய) இருவகைக் குறள்களையுமே, முப்பாலின் - முப்பால்களில், ஓதும்-அத்தியயனஞ்செய்து அறியப்படுகின்ற, தருமம் முதல் நான்கும் - அறமுதலிய நாற் பொருள்களும், சாலும் - (அவருக்குப்) போதும்; (எ - று.)

ஒருவனுக்கே ஐந்தும் ஓதியுணர முடிவுபோகாது வேறுவேறான அதிகாரிகளுடையைபற்றி அருமறைகளைந்தும் என்றார். சமயநூலாறும் ஒன்றே பொருள் என்னும் பாட்டுரையிற் காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங் கொளுத்தி நல்வழிப்படுத்தவந்த பரமாசாரியர் இவரேயென்னு முரிமை தோன்றற்கு நம்வள்ளுவனார் என்றார். மறைகளைந்துஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனார் புந்திமொழிந்த பொருள் எனலால், அவை பலவற்றினும் வேறு வேறு வகைப்பட்டுச் சிறந்துநின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொரு நூற் கண்ணே அடங்கிநிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள் - ஆகு பெயர். ஒருவரெனப் பொதுப்படக்கூறலால் இதனை யோதுதற்குப் பெண் பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்டது. இவ்வொரு நூலோதி யுணர்ந்தோர் அருமறைகளைந்துஞ்சமயநூலாறும் ஓதியுணர்ந்தோ ராவ ரென்றபடி. (சச)

சரு.—நச்சுமனார்.

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண—மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள்வெண் பா.

(இ - ள்.) எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்குஇல் வனப்பு அணி வண்ணம் - எழுத்து முதல் வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள், இழுக்கு இன்றி - வழுவுதலில்லாமல், என்று எவர் செய்தன - எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, எல்லாம் - அவை யெல்லாம், இன்று இவர் இன் குறள்வெண்பா - இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள்வெண்பாக்களில், இயம்பின - சொல்லப்பட்டன; (எ - று.)

வனப்பு - அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு. அணி - சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம் - குறிலகவற்றூங்கிசை வண்ணமுதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்தினாலே சிறந்து விளங்க நூல் செய்தனர். இவரோ

வெனின், எல்லாக்குணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கச்செய்தமையின் இவ்வாறு கூறினர். இதன் பாக்களின் சிறப்புச்சொல்லியபடி. (சஞ)

சசு.—அக்கூரக்கனிநச்சுமனூர்.

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர் மூப்
பானூ னயத்தின் பயன்.

(இ - ள்.) (மதியமும் முப்பானூலும்), கலை - பதினாறுகலைகளாலும் அறுபத்துநாலு கலைகளாலும், நிரம்பி - நிறைந்து, காண்டற்கு - நோக்குதற்கு, [ஆராய்ச்சி செய்தற்கு என்றபடி], இனிதாகி—, கண்ணின் நிலை - முகக் கண்ணினிலையில் (அகக்கண்ணினிலையில்), நிரம்பும் - நிரம்புகின்ற, நீர்மைத்து எனினும் - தன்மையுடைத்தாயினும் [குணமுடைத்தாயினும்], வள்ளுவர் மூப்பரல் நூல்-திருவள்ளுவரது மூப்பால்நூலினது, நயத்து - நயத்தால் விளைவதாகிய, இன் பயன் - இனியபயனுனது, தொலைவு இலான் ஊர் மதியம் தனக்கு - ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து, உண்டோ—? (எ - று.)

மதியந்தனக்கென்றது வேற்றுமை மயக்கம். ஓகாரம்-எதிர்மறை. ஆதாரமாகக்கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாத வானே ஆதாரமாகக் கோடலின் இழிவுதோன்ற, தொலைவிலா வானூர் மதியம் என்றார். நயம் - மறுப்படாமை மழுங்காமை குறைவுறுமை முதலியன. பயன் - இம்மை மறுமை வீட்டின் பங்கள். ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால் ஏனைப் பொருள் பலவற்றினுஞ் சிறந்த மதியையாயினுஞ் சொல்லுது மெனப் புகின் அதுவும் இதனுல் தகுவதன்றென்றபடி. (சசு)

சஎ.—நப்பாலத்தனூர்.

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனு ரேற்றினூர் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு ணீக்கும் விளக்கு.

(இ - ள்.) அறம்—, தகளி - அகலும், பொருள்—, திரி - திரியும், இன்பு—, நெய் - நெய்யும், செஞ்சொல்—, தீ - நெருப்பும், குறும்பா - குறட்பா, தண்டு - தண்டும், ஆ - ஆக, வள்ளுவனூர்—, வையத்து வாழ்வார்கள் - பூமியின்கண்ணே வாழ்வோரது, உள் இருள் - அகத்திருளை, நீக்கும் - ஒழிப்பதாகிய, விளக்கு—, ஏற்றினூர்—; (எ - று.)

ஆன்றல் - மேம்படுதல். அகத்திருள் - அஞ்ஞானம். தீச்சுடர் - தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளைக்கெடுத்தலைப்படியோ அப்படி ஞானது திருவாயிற் பிறந்த செஞ்சொல் அற முதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின் இங்ஙனம் உருவகஞ் செயலாயிற்று. மனையகத் தேற்றப்படுகிற விளக்கு அம்மனையகத் துள்ளார்க்கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்லது அன்மையாலும் இஃது உலகத்து

வாழ்வோர் பலர்க்கும் உபயோகியரே நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலர் லும், அதனின் இது பலகோடிமடங்கு மிக்குச்சிறந்து நிற்கின்றமை யுணர்த் தியபடி. (சஎ)

சஅ.—தலபதிந்ராயனூர்.

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்—வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

(இ - ள்.) உள்ளக்கமலம் மலர்த்தி - நெஞ்சமாகிய தாமரைமலரை மலர் த்தி, உளத்து உள்ள - (மக்களது) அகத்திலுள்ள, தள்ளற்கு அரிய இருள் - (பிறிதொன்றனாலே) நீக்கப்படாத அஞ்ஞான விருளை, தள்ளுதலால் - நீக்கு தலால், வள்ளுவனூர் வெள்ளைக் குறட்பாவும் - திருவள்ளுவரது குறள்வெண் பாவும், வெம் கதிரும் - (புறத்துத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற) சூரியனும், குணத்தைக்கொண்டு - அச்செய்கையைக்கொண்டு, ஒக்குமெனக்கொள்ளத்தகும்—; (எ - று.)

செயலும் தொழிற்பண்பெனப்படுதலின், குணமெனப்பட்டது; அது மலர்த்தலும்,தள்ளுதலுமாம். குணத்தைக்கொண்டெனவே செயப்படுபொரு ளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத்தகாதென்றதாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை யொப்பாமென்றபடி. (சஅ)

சகூ.—தேனீக்குடிக்கீரனூர்.

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின பொய்யல்லா
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—மூப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(இ - ள்.) தெய்வத் திருவள்ளுவர்—, மூப்பாலின் - மூன்றுபால்களு டையதாக, செப்பிய குறளால் - சொல்லப்பட்ட குறள்நூலைக் கேட்டறித லால், வையத்து வாழ்வார் மனத்து—, பொய்ப்பால - பொய்யின் பகுதியிற் பட்டவை யெல்லாம், பொய்யே ஆய்போயின—:பொய் அல்லா பொய்ம்மை யல்லாத, மெய்ப்பால - மெய்யின் பகுதியிற்பட்டவை யெல்லாம், மெய்யே யாய் விளங்கின—; (எ - று.)

குறளால் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யே யாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை தணியப்படா மையின் பொய்ப்பால மெய்ப்பாலபோன் மேற்கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பாலபோற் கைவிடப்பட்டும் மயங்கிக்கிடந்தன வென்றதாயிற்று. இதன் மெய்யுணர்வு பயத்தற் சிறப்புச் சொல்லியபடி. (சகூ)

ரு0.—கோடிஞாழன் மாணி பூதனூர்.

அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தேம் வீடு தெளிந்தே—மறனறிந்த

வாளார் நெடுமாற வள்ளுவனுர் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(இ - ள்.) மறன் எறிந்த வாளார் நெடுமாற - பகைவரையெறிந்த வாட்படை தங்கிய வீரரேங்கும் பாண்டியனே! வள்ளுவனுர்தம் வாயால்—, கேளாதனவெல்லாம் - (இதற்குமுன்) கேட்கப்பட்டிலாதவை யெல்லாம், கேட்டு - (இப்போது)கேட்டு, அறன் திறமறிந்தேம்—: ஆன்ற-சிறந்த, பொருள் திறம் அறிந்தேம்—:இன்பின் திறன் அறிந்தேம்—: வீட்டுத் திறன் தெளிந்தேம்—.

திறன் - கூறுபாடு: அஃது அறம்முதலியவற்றேடுங் கூட்டப்பட்டது. மறன்-ஆகுபெயர். கேளாதன - பிறநூலாசிரியர்க் கெல்லாம் அறிந்து சொல்லுதற்கு எட்டாதிருந்த அறமுதலியவற்றி னுட்பங்கள். இம்மை மறுமை வீடு களேக்குறித் துணர்த்தற்குரிய உறுதிப்பொருணன்கு முணர்தலின் இளி யாதொன்றினுங் குறைவில்லே யென்றபடி. (நிம)

நுக.—கவுணியனுர்.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனுர்
பன்னிய வின்குறள் வெண்பா.

(இ - ள்.) முந்திய நல் நெறி - முற்பட்டதாகிய நல்வழியை,நாமறிய—, நாப்புலமை வள்ளுவனுர் - நாவால்விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவநாயனுரால், பன்னிய - சொல்லப்பட்ட, இன் குறள் வெண்பா - இனிய குறள் வெண்பாக்கள், சிந்தைக்கு இனிய - (நினைத்தால்) மனத்திற்கின்பஞ்செய்வன: செவிக்கு இனிய - (கேட்டால்) காதுக்கின்பஞ் செய்வன: வாய்க்கு இனிய - (ஓதினுல்) வாய்க்கின்பஞ்செய்வன: வந்த இரு வினைக்கு-தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்கு, மாமருந்து - பெரிய மருந்துகளாவன; (எ - று.)

குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்ற வினேயை நோயென்ணுமையால், ஏகதேசரூபகம். நல்வினேயும் பிறவிக்கு ஏதுவாகலால் இருவினே என்றார். முற்பட்டநல்வழி - நன்மக்களுக்கு அநாதியா யமைந்துள்ளது: அது சமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனேயினுலே மறைபட்டு நின்றமையின் நாமறிய என்றார். இந்நூலின் பாக்களேச்சிந்தித்தல் முதலியன செய்யுங்காலும் சொற்பொருள் நயங்களாலே இன்பம் விளேத்துத் தெய்வத்தன்மையால் வினேத்துயரும் ஒழிக்கு மென்றபடி. (நுக)

நுஉ.—மதுரைப் பாலாசிரியனுர்.

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(இ - ள்.) வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெள் திங்கள் - சுக்கிரன் குரு சூரியன் சந்திரன் எனப்படுகின்ற இவ்வொளிகள், புற இருளை—, பொள்ளென நீக்கும்-விரைவிலே நீக்கும்;(ஆதலின் இவை புறவிருணீக்குதற்கு உண்டாகிய ஒளிகளாம்): தெள்ளிய - மூற்றுணர்ந்த, வள்ளுவர் இன் குறள் வெண்பா - திருவள்ளுவநாயனாரது இனியகுறள் வெண்பா, அகிலத்தோர் - உலகத்தோரது, உள் இருள் நீக்கும்-உள்ளிருளை நீக்குதற் குண்டாகிய, ஒளி - ஒளியாம்; (எ - று.)

இங்ஙனங்கூறவே புறத்திருளுக்கு அவை பலவுள, அகத்திருளுக்கு இஃதொன்றே யுளதென்றதாயிற்று: அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்திருளை நீக்கவல்லதாதலின் இதற்கு எவ்வாற்றானும் ஒப்பதொன்றின் றென்றபடி. (நுஉ)

நுஉ.—ஆலங்குடிவங்கனார்.

"வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
மூண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

(இ-ள்.) வள்ளுவர் பாட்டின் வளம்-திருவள்ளுவரது பாட்டினது தீஞ் சுவையை, உரைக்கின் - சொல்லுமிடத்து, வாய் மடுக்கும் தெள் அமுதின் - உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது, தீம் சுவைஉம் - தித்திப்பாகிய சுவையும், ஒவ்வாது - ஒப்பாகாது: தெள் அமுதம் உண்டு - அத்தெள்ளிய அமுதையுண்டு, அறிவார் - (அதன் சுவையை) அறிபவர், தேவர்—, வள் தமிழின் - வளம்பொருந்திய தமிழின் கண்ணதாகிய, முப்பால் - முப்பாலாகிய அதின் மும்மடி சிறந்தபாலை, மகிழ்ந்து—, உலகு அடைய - எல்லா வுலகத்தாரும், உண்ணும் - உண்டு தீஞ்சுவையறிவார்; (எ - று.)

வளம் - ஆகுபெயர். ஆல் - அசை. அவ் வமிர்தம் வாயுட்பெய்தவழி நாவிற் பட்ட சிறிது பொழுதளவே தீஞ்சுவைபயப்பது. இப்பாட்டு நெஞ் சின்கணிலேபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவைபயத்தலின் ஒவ்வாது என்றார். முப்பால் - சிலிவ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்கும் கருமபூமியாகிய இவ் வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின் உலகடைய உண்ணும் என்றார். அன்றி அவ்வுலகத்துத் தேவர் களும் தமது மேற்பட்ட வறிவினுலே இதனது உயர் வொப்பற்ற குணத் தை அறிந்து முக்கிய பிரமாணமாகக்கொண்டு மகிழ்கூர்வரென்பதுபற்றி அங்ஙனங் கூறினுரெனினுமமையும். இஃது இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ் வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி. (நுஉ)

திருத்தணிகைச் சரவணப் பெருமாளைய ரியற்றிய உரையுடன்
திருவள்ளுவமாலை முற்றிற்று.

ஆர். ஜீ. பிரஸ், ஜீ. டி. மதராஸ்

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS